SAPTARIṢI NĀḌI

VOLUME 5

(SIMHA LAGNAM)

CRITICALLY EDITED WITH NOTES

BY

R. V. RAJAGOPALA AIYANGAR
(President, Panchayat Board, Rayampettai)

AND

C. G. RAJAN, B.A., (MATHS.)
(Retired Tahsildar and Taluk Magistrate, Madras)



GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS

1956

Price Rs. 27-0-0

b9c1c

PRINTED AT THE
RATHNAM PRESS (BRANCH)
MADRAS-1

INTRODUCTION

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May, 1948. Important Manuscripts Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government, in their Memorandum No. 34913/48-10, Education, dated 4-4-1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following persons were appointed as members of the Committee :—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.
2. ,, R. P. Sethu Pillai, B.A., B.L.
3. ,, C. M. Ramachandra Chettiar, B.A., B.L.
4. ,, R. Krishnamoorthy, (Kalki).
5. Dr. N. Venkataramanayya, M.A., Ph. D.
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A.
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao, M.A.
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masti Venkatesa Ayyangar.
11. ,, M. Mariappa Bhat, M.A., L.T.
12. Dr. C. Achyuta Menon, B.A., Ph. D.
13. Dr. C. Kunhan Raja, M.A., D. Phil. (oxon.)
14. ,, A. Sankaran, M.A., Ph.D., L.T.

15. Sri Polakam Rama Sastri.
16. ,, S. K. Ramanatha Sastri.
17. Dr. M. Abdul Haq, M.A., D. Phil., (Oxon.)
18 Sri Afzul-ul-Ulama Hakim Khader Ahamed.
19. Sri P. D. Joshi.
20. ,, S. Gopalan, B.A., B.L.
21. ,, T. Chandrasekharan, M.A., L.T.

With the exception of Sri Masti Venkatesa Ayyangar, and Dr. C. Kunhan Raja, the above members continued to be members of the Expert Committee for 1950-51 also to which the following gentlemen were added in Government Memorandum 7297-E. 150-3, Education dated 19th May 1950, and Government Memorandum No.15875-E 150-4, Education 7th September 1950.

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph. D.,
2. Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar-at-law.
3. Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B., and C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A Ph. D.,
5. Sri T. V. Subba Rao, B.A., B.L.,
6. Principal, College of Indian Medicine, Madras.

In Government Memorandum No. 18947/E 52-2, Education dated 7th August 1952, a fow charges were made in the personnel of the Expert Committee.

The names of the following memebers were deleted :—

1. Sri V. Prabhakara Sastri.
2. ,, C. Achyuta Menon.
3. Dr. M. Abdul Huq.

The following gentelmen were inculded as members of the Expert Committee :—

1. Sri M. Somasekhara Sarma.
2. Dr. V. Raghavan, M.A., Ph. D.
3. ,, R. Nagaraja Sarma, M.A., Ph. D.
4. ,, S. Krishnan Nayar, M.A. Ph. D.
5. Prof. S. A. Bukhari Sahib, M.A.

In G. O. Ms. No. 1819 Edn., dated 8-11-1955, the Government reconstituted the Expert Committee with the following members :—

SANSKRIT

1. Dr. A. Sankaran, M.A., Ph. D., L.T.
2. Sri P. S. Rama Sastri.
3. Dr. V. Raghavan, M.A., Ph. D.
4. ,, R. Nagaraja Sarma, M.A., Ph. D., L.T.
5. Sri K. Balasubrahmania Iyer, B.A., B.L., M.L.C.

TAMIL

6. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L., M.L.C.
7. ,, R. P. Sethu Pillai, B.A., B.L.
8. ,, C. M. Ramachandran Chettiar, B.A. B.L.
9. ,, T. P. Meenakshisundaram Pillai, M.A., M.O.L.
10. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph. D.
11. Sri N. T. Viswanathan, B.A., B.L.

KANNADA

12. Captain G. Srinivasamurthi, B.A., B.L., M.B. & C.M.
13. Sri M. Mariappa Bhat, M.A., L.T.
14. ,, H. Sesha Ayyangar.

MALAYALAM

15. Dr. S. Krishnan Nayar, M.A., Ph. D.

MARATHI

16. Sri P. D. Joshi.

ISLAMIC LANGUAGES

17. Professor S. A. W. Bukhari Sahib, M.A., L.T.
18. Dr. Mohammed Abdul Huq , M.A., D. Phil (Oxon).
19. Sri S. M. Fuzlullah, M.A., L.T.

OTHERS

20. Sri S. K. Ramanatha Sastri, Sanskrit and Malayalam.
21. ,, T. V. Subba Rao, B.A., B.L., Music in all languages.
22. The Principal, College of Indigenous Medicince, Medicine in all languages.
23. Sri S. Gopalan, B.A., B.L., Sanskrit, Tamil and Telugu.
24. ,, T. Chandrasekharan, M.A., L.T., all languages (Secretary of all the Committees).

The members of the Committee met at Madras and at Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government and they decided to call these publications as the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES," and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications under this series.

The following manuscripts were taken up for publication till now :—

"A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

TAMIL

1. Kappal Śāttiram
2. Anubhava Vaiddiya Muṟai. Vols. I and II.
3. Āttānakōlākalam
4. Upadēśa Kāṇḍam
5. Cōḷaṉ Pūrva Paṭṭayam
6. Śivajñāna Dīpam
7. Daṭcanāyaṇār-Vaiddiya-Aṭṭavaṇai
8. Vaiddiya-k-kalañciyam
9. Anubhava Vaiddiya Muṟai, Vol. III.
10. Saptariṣināḍi Vol. I-Mēṣa Lagna.
11. Karnāṭakarājākkaḷ Savistāra Caritram.

12. Bharata Siddhāntam
13. Pillai-p-piṇivākaṭam, Vol. I
14. Anubhava Vaiddiya Muṛai Vol. IV
15. Māṭṭuvākaṭam
16. Saptariṣināḍi Vol. II-Viruṣabha Lagna.
17. Temple Inscriptions of South India. Vol. I.
18. Saptariṣināḍi, Vol. III-Mithuna Lagna.
19. Temple Inscriptions of South India, Vol. II.
20. Piḷḷai-p-piṇivākaṭam, Vol. II.
21. Saptariṣināḍi, Vol. IV-Kaṭaka Lagna.
22. Pērūr-k-kōvai.
23. Siddhāntaviḷakkam.
24. Sāmudrikālakṣaṇam.
25. Ānandaraṅga-k-kōvai.
26. South Indian Temple Inscriptions, Vol. III, Part I.
27. Saptariṣināḍi Vol. V-Simha Lagna.
28. Māghasnānapurāṇa Ammāṇai.
29. Kōlācala Sthala Purāṇam.
30. Dina Kavitai.
31. South Indian Temple Inscriptions Vol. III, Part II.

SANSKRIT

1. Viṣanārāyaṇīyam—(Tantrasārasaṅgraha)
2. Bhārgava Nāḍikā
3. Hariharacaturaṅgam
4. Brahmasūtravṛtti—Mitākṣarā
5. Nyāyasiddhānta Tattvāmṛtam
6. Ārogyacintāmaṇi
7. Tattvasāra with Ratnasāriṇī
8. Sūtrārthāmṛtalaharī
9. (a) Ratnadīpikā
   (b) Ratnaśāstra

10. Devakeralam—Candrakalā Nāḍi Vol. I
11. Pātañjala Yogasūtra Bhāṣya Vivaraṇa of Sri Śaṅkarācārya
12. Nyāyaratnam with the commentary Dyutimālikā.
13. Cikitsātilakam.
14. Nṛttaratnāvali.
15. Daivajñābharaṇa.
16. Ābhoga,—Kalpatāru Vyākhyā.
17. Aumāpatam.
18. Mahābhāskarīyam.
19. Devakeraḷam—Candrakalā Nāḍi, Vol. II.
20. Nayadyumṇi.
21. Bhāvabodha—Tattvaprakaśikā Vyākhyā.

TELUGU

1. Auṣadha Yōgamulu
2. Vaidya Nighaṇṭuvu
3. Dhanurvidyā Vilāsamu
4. Yōga Darśana Viṣayamu
5. Khaḍga Lakṣaṇa Śirōmaṇi
6. Saivācārasaṅgrahamu
7. Anubhava Vaidyamu
8. Abhinayadarpaṇamu
9. Brahmavidyā Sudhārṇavamu
10. Rāgatāḷacintāmaṇi
11. Vaidyacintāmaṇi
12. Kumārarāmuni Kathā
13. Kāṭamarāju Kathā
14. Śārīramu.
15. Bharataśārasaṅgraha.
16. Bobbiliyuddhakathā.
17. Haidarcaritramu.
18. Āryabhaṭiya Siddhāntam.

MALAYĀLAM

1. Garbha Cikitsa
2. (a) Vāstulakṣaṇam
   (b) Śilpaviṣayam
3. Mahāsāram
4. Kaṇakkusāram
5. Kriyākramam
6. Kaṇakkusāram—(Bālaprabōdham)
7. Asvacikitsa
8. Phalasārasamuccaya
9. Kiḷivaṇḍusamvādam.
10. Advaita Vēdāntam.
11. Bārhaspatyasūtra WITH Malayālam commentary.
12. Karaṇapaddhati.
13. Vidyāmādhavīyam.
14. Sarvasādhāraṇa Cikitsa.
15. Viṣa Cikitsa AND Viṣappāṭṭusāram.
16. Jñānapīyūṣam.
17. Vētālapañcavimśati.
18. Yudhiṣṭhiravijayam.
19. Kathakaḷimañjari.
20. Vaidyagrantham.

KANNADA

1. Lōkōpakāram
2. Raṭṭamatam
3. Aśvaśāstram
4. Vividha Vaidya Viṣayagaḷu
5. Saṅgītaratnākara
6. Sūpaśāstra
7. Vaidyasāra Saṅgraha Vol. I.
8. Sadgururahasyam

9. Vaidyasāra Saṅgraha Vol. II
10. Manmathavijaya.
11. Abhidhānaratnamālā.
12. Vyavahāraganita.
13. Jīvasambōdane.
14. Kāmandakanītisāra.

ISLAMIC LANGUAGES

PERSIAN

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4. Safinat-Al-Najat
5. Baharisthan-i-Sukhan.
6. Nuskha-e-Shajahani.
7. Tufa-E. Khani.
8. Ruqa'at-e-Walajahi.

ARABIC

1. Shawakil-Ul-Hur.

"B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATHI MAHAL LIBRARY, TANJORE

TAMIL

1. Śarabendra Vaidya Murai (Diabetes)
2. Do. (Eyes)
3. Do. (Anaemia)
4. Do. (Svāsakāsam)
5. Agastiyar 2000
6. Koṅkaṇarśarakku Vaippu
7. Tirucciṟṟambalakkovaiyār with Padavurai
8. Tālasamudram

9. Bharatanāṭyam
10. (a) Paṇḍikōḷi Vilāsa Nāṭakam
    (b) Purūrava Cakravarti Nāṭakam
    (c) Madana Sundara Vilāsa Nāṭakam
11. Percy Macqueen's Collection of Folklore in the Madras University Library
12. Rāmaiyaṉ Ammāṉai

TELUGU

1. Kāmandakanītisāramu
2. Tāladaśāprāṇapradīpikā
3. Raghunātha Nāyakābhyudayamu
4. Rājagōpāla Vilāsamu
5. Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju

MAHRATHI

1. Nāṭyaśāstra Saṅgraha
2. (a) Book of Knowledge
    (b) Folk Songs
    (c) Dora Darun Veṇi Paddhati
    (d) Asvasa Caṭula Dumāni
3. (a) Pratāpasimhendra Vijaya Prabandha
    (b) Sarabhendra Tīrthāvaḷi
    (c) Lāvaṇi
4. Devendra Kuravanji
5. Bhakta Vilāsa
6. Śloka Baddha Rāmāyana

SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour illustrations
2. Rājamṛgānka
3. Ānandakaṇdam

4. Āyurvedamahodadhi
5. Gīta Govinda Abhinaya
6. (a) Coḷacampū
   (b) Sahendra Vilāsa
7. Dharmākūtam—Sundara Kāṇḍa
8. Jātakasāra
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā
10. Sangīta Darpaṇa

The Government in their G. O. Ms. No. 1820, Education, dated 4th August 1952, sanctioned a grant of rupees 9,000 to the Dr. V. Swaminatha Iyer's Tamil Library, Adyar, towards the publication of the following manuscripts as part of the "Madras Government Oriental Series":—

1. Tiruvācaka Vyākhyānam
2. Mahābharata Cūḍāmaṇi

It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next few years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editors have, however, tried their best to suggest correct readings. The wrong readings are given in round brackets and the correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the footnote except in the case of a few books in which the correct readings have been given in the footnote or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the

press. The various presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

The present edition of the Simha Lagna of the Saptariṣi Nāḍi is based on a palm leaf manuscript described under R. No. 305 Vol. V Containing 343 folios and a restored copy of the above bearing R. No. 3042, (paper) containing 1457 pages with 20-24 lines on a page. This volume contains 140 horoscopes in Simha Lagna.

The first 82 Horoscopes were edited by Sri R. V. Rajagopal Iyengar giving the meaning of the verses and the planetary positions, while the same was done in respect of the other horoscopes by Sri C. G. Rajan.

Madras,
10—3—1956

T. CHANDRASEKHARAN,
General Editor,
Madras Government Oriental Series.

ஸப்தரிஷி நாடி

சிம்ம லக்னம்

ஜாதகம் 1

1. சந்திரன் ராகு மேடம் சனிவீணை சேயுஞ் சீயம்
புந்தியுங் கேது தூக்கம் புகர்கன்னி இரவி தேளில்
மந்திரி சாடி யாக வருஞ்ஜன்ம மரியு மாக
இந்தவாறு கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே;

1. சந்திரன் ராகு மேஷத்திலும், சனி மிதுனத்திலும், செவ்வாய் சிம்மத்திலும், புதன் கேது துலாத்திலும், சுக்கிரன் கன்னியிலும், சூரியன் விருச்சிகத்திலும், குரு கும்பத்திலும் நின்று, ஜன்ம லக்கினம் சிம்மமாக இருப்பின் பலனைக் கூறுங்கள்;

கிரகநிலை

	சந்திரன் ராகு		சனி
குரு	இராசி சக்கரம்		
			லக்கினம் செவ்வாய்
	சூரியன்	புதன் கேது	சுக்கிரன்

ஜாதகனது குலம்: வீட்டின் நிலை

2. உமையவள் கேட்கும் போது
உரைக்கிரூர் அத்திரி தாமும்
அமைந்திடும் ஆண்பால் ஜன்மம்
அறைகிரூ மில்லந் தானும்
எமன்வாடை கிழ்மேல் வீதி
இந்திரன் திசையில் மாயோன்
நவனியில் வடகீழ் தன்னில்
சாமனி ஈசன் கோட்டம்.

2. (என) பார்வதிதேவி கேட்கும்போது, அத்திரி முனிவர் கூறுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகம். அவன் பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுகிறோம். அது, கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு வரிசையிலுள்ள வீடாகும். கிழக்குத் திக்கில் திருமாலின் ஆலயம் உள்ளது. வடகிழக்கில் சிவபெருமான் ஆலயம் உண்டு.

3. இதுவலால் கணேசன் மாரி இருக்குமே வடமேல் திக்கில்
நதிகரை மேற்கில் தங்கும் நாட்டுவோம் வயல்க ளோடை
பதிக்குமே மேற்கில் தங்கும் பகருவோம் சிற்றூர் தன்னி
லதிபனுங் கங்கை வம்சம் மன்னவ னுதிப்பா னென்றோம்.

3. இவையல்லாமல் வடமேற்குத் திக்கில் விநாயகர் ஆலயமும் மாரியம்மன் கோவிலும் இருக்கும். வீட்டுக்கு மேற்குப் பக்கத்தில் ஓர் ஆறும், வயல்களும் நீரோடையும் உள்ள ஒரு சிற்றூரில் இந்த ஜாதகன் வேளாளர் குலத்தில் பிறப்பான் என்று சொல்லுகின்றோம்.

4. இன்னவன் ஜனன யோகம்
எழில்பெருந் தந்தை யோகம்
மன்னிய தாயின் யோகம்
வரும்புத்திர களத்திர யோகம்
தன்னிலே முன்பின் சென்மம்
சாற்றுவோ மிந்நூல் தன்னில்
அன்னையே யாங்கள் சொல்லு
மருள்மொழி குன்று வென்றோம்.

4. ஜாதகனுடைய பிறப்பு, யோகம், அழகிய தந்தை தாய் யோகங்கள், புத்திர பாக்கியம், மனைவியினது யோகம், முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகிய இவற்றைப் பற்றிய வரலாறுகள் முதலியவைகளை இந்த ஜோதிட நூலில் கூறுகின்றோம். தாயே! நாங்கள் சொல்லுகின்ற அருள்வாக்கியங்கள் பொய்யாகா.

தந்தையின் வரலாறு

5. தந்தையின் குணத்தைக் கேளாய் சமதேகன் சிவந்த [மெய்யன்
பந்தமாய்ச் சமதே கத்தன் பாரினில் கீர்த்தி யுள்ளான்
நொந்திடும் பேரைக் காப்பான் நுவலுப தேசங் [கொள்வன்
சிந்தையில் கபடு மில்லான் சீலவான் அன்ன மீவன்.

5. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கேளுங்கள். சம மான சரீர அமைப்புள்ளவன். சிவந்த மேனியன். உலகில் புகழ் அடைவான். ஏழைகள், கஷ்டமடைந்தவர்கள் முதலானவர்களை ஆத

ரிப்பான். பெரியோர்களிடம்உபதேசம் கேட்பான். மனத்தில் கபட மில்லாதவன். நல்லொழுக்கமுள்ளவன். அன்னமளிப்பவன்.

தந்தையின் குணங்கள்

6. அதிகார மூடைய னாகும் அவன்கிராம செட்டுச் செய்வன்
கதிநெய்பா லிஷ்டங் கொள்வான் சகலர்க்கு நல்லோ [னவன்
சதியிலா மனத்த னாகும் தன்மனை யாளால் யோகம்
நிதிமிக இல்லா னாகும் நிமலியே மேலுங் கேளே.

6. அதிகாரம் உடையவன். கிராம வியாபாரம் செய்து வருவான். தயிர் நெய் பால் இவைகளின்மீது விருப்பமுள்ளவன். எல்லோருக்கும் நல்லவனாக இருப்பான். தீங்குகள் எண்ணாத மனத்தினன். தன் மனைவியால் யோகம் அடைபவன். அதிகமான பொருட் செல்வம் இல்லாதவன். தாயே! மேலுங் கேளுங்கள்.

7. ரோமங்கள் நீட்சி யில்லான் நுவலுப தேசங் கொள்வன்
தீமையை விரும்பா னாகும் சிரசினில் வடுவு முள்ளான்
தாமதக் குணத்தா னாகும் தங்கிடு மூலச் சூடு
பூமியும் பரிபா லிப்பான் புண்ணிய மனத்த னென்றோம்.

7. குட்டையான ரோமங்கள் உள்ளவன். பெரியோர்கள் கூறும் உபதேசத்தைப் பெறுவான். தீச்செயல்களை விரும்பாதவன். தலையில் ஒரு வடு உள்ளவன். தாமதமான குணங்கள் உள்ளவன். மூலச் சூட்டுத் தேகமுள்ளவன். பூமியால் ஜீவனம் செய்து வருவான். புண்ணியம் செய்யும் மனமுடையவன்.

ஜாதகன் பிறப்பு

8. இவனுடை வர்க்கந் தம்மை இயம்புவோம் நான்க தாகும்
அவனியில் மூத்தோர் காணும் ஆணது ஒரு ருண்டு
பவமுள எட்டாஞ் ஜன்மம் பாலக னுதிப்பா னென்றோம்
தவசியே இவன்கு ணத்தைச் சாற்றுவோம் கேளு மம்மா.

8. ஜாதகனுடைய வர்க்கத்தாரைப்பற்றிச் சொல்லுகின்றோம். நால்வராம். ஜாதகனுக்கு முன் பிறந்தவர் இல்லை. ஆண் சகோதரர்கள் உண்டு. ஜாதகன் தன் தந்தைக்கு எட்டாமவனாகப் பிறப்பான். தவம் செய்பவளே! தாயே! ஜாதகனுடைய குணத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேளுங்கள்.

ஜாதகனின் குணங்கள்

9. மாநிறம் ஒடிசல் தேகி மருமவான் அடக்க முள்ளான்
தேன்மொழி வார்த்தை கூறுவான் சிலசில நிந்தை
[யுள்ளான்
ஆனவர் நேசம் கொள்வன் அதிகார முடைய னுகும்
ஈனரைச் சேரா னென்றேரும் இன்பமாய் வார்த்தை
[சொல்வன்.

9. மாநிறமுள்ளவன். மெல்லிய தேகமுடையவன். இரகசிய முள்ளவன். அடக்கமுள்ளவன். இனிய வார்த்தைகளையே பேசுவான். சிற்சில அபவாதங்களுள்ளவன். பெரியவர் நட்புடையவன். அதிகாரம் உள்ளவன். தாழ்ந்தவரைச் சேராதவன். பிறர் ரசிக்கும்படியான பேச்சுக்களையே பேசுபவன்.

10. அன்னிய ஞர்ஜி தங்கள் அணுகிடும் சுகமு முள்ளான்
பன்னியே யுரைக்க வல்லான் பாரபட் சங்க ளுள்ளான்
முன்னமே கோபம் கொஞ்ச மெய்திடும் சுகபு சிப்பன்
தன்னிலே பித்தச் சூடு தங்கிடு மிவனுக் கேதான்.

10. பிறரால் தேடப்பட்ட சொத்துக்கள் இவனிடம் வந்து சேரும். சுகமுள்ளவன். பன்னிப் பன்னிப் பேசுபவன். பட்சபாதமுள்ளவன். சிறிது முன்கோபி. சுக போஜனம் செய்பவன். பித்தச்சூட்டு தேக முள்ளவன்.

பத்மரேகை—சுழி

11. கரமதில் கமல ரேகை கனத்திடு சுழியு முள்ளான்
உறன்முறை பகைய தாகும் ஒண்டொடி யார்க்கு நேயன்
திரமிலா வார்த்தை யுள்ளான் சேயர்க ளில்லா னுகும்
சிரமுக வடிவு முள்ளான் செய்நிலம் விருத்தி செய்வன்.

11. கையில் பத்மரேகை உள்ளவன். ஆழ்ந்த சுழியும் உடைய வன். தன் சொந்தக்காரர்கள் பகையாவர். அழகிய ஸ்திரீகளுக்குப் பிரியமானவன். ஸ்திரமில்லாத வார்த்தைகளையே பேசுபவன். புத்தி ரர்கள் இல்லாதவன். அழகான முகம் தலை இவைகள் உள்ளவன். விளைநிலங்களைப் பெருக்குவான்.

ஜாதகனின் உடன்பிறப்பு

12. இவனுடைத் துணைவர் தம்மை
இயம்புவே மெழுவ ராகும்
அவனியி லாண்பா லொன்று
அறைகுறேரும் பெண்பால் ரண்டு

இவர்களும் விருத்தி யென்றேரும்
இவர்பகை யாகி வாழ்வார்
தவமுடை யோரைக் காக்குந்
தயாபரி மேலுங் கேளே.

12. ஜாதகனுடைய உடன்பிறப்பைப் பற்றிக் கூறுகின்றேரும். எழுவர் தோன்றுவர். ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் தீர்க்க மாயிருப்பர். (மற்றவர் நிலையார்.) உடன்பிறந்தவர்களும் ஜாதகனுடன் விரோதம் கொண்டு வாழ்ந்து வருவார். தவங்கள் இயற்றுபவரைக் காக்கும் தயாநிதியே! கேளுங்கள்.

ஜாதகனில் மணத்தின் காலம்

13. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோ மிருபா லலில்
கன்னிகை யுள்ளூர் தன்னில் காதலி வருவ ளாகும்
அன்னவள் சிவந்த மேனி அழகுளாள் மூர்க்கம் கொஞ்சம்
பன்னியே யுரைக்க வல்லாள் பந்துவு மெச்ச வாழ்வள்.

13. ஜாதகனுடைய திருமணக் காலத்தைக் கூறுகின்றேரும். அவனுடைய இருபத்து நான்காம் வயதில் மனைவி உள்ளூரிலிருந்தே வருவாள். அவள் சிவந்த உடலுள்ளவள். அழகி. சிறிது மூர்க்க குணமுடையவள். பன்னிப் பன்னிப் பேசும் இயல்பினள். உறவினர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள்.

மனைவியின் குணங்கள்

14. பித்தமாம் தேக முள்ளாள் புத்திர தாப முள்ளாள்
சுத்தநன் மனத்த ளாகும் சுந்தரி யோக சாலி
வித்தகி வந்த பின்பு வரனுக்கு யோகம் வாய்க்கும்
நித்தியம் சீல முள்ளாள் நிமலியே மேலுங் கேளே.

14. பித்த தேகமுள்ளவள். புத்திரர்களுக்காக ஏங்குவாள். சுத்த மான நல்ல மனமுடையவள். அழகி. அதிருஷ்டசாலி. இவளை மணந்த பின்பு ஜாதகனுக்கு அதிருஷ்டம் ஏற்படும். நல்லொழுக்கமுள்ளவள். தாயே! மேலுங் கேளுங்கள்.

புத்திர பாக்கியம்

15. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணேும்
அத்திரி சொல்லும் போது அம்மனும் கேட்க லுற்றாள்
வித்தகன் தனக்குப் புத்திரர் விளங்காது என்று
[சொன்னீர்
குத்தத்தைச்சொல்லு மென்ன கூறுவார் அத்திரி தாமும்.

15. ஜாதகனுகுப் புத்திரபாக்கியம் உண்டு என்று கூறக் கிரக பலமில்லை என அத்திரி முனிவர் சொல்லும் போது, பார்வதி தேவி கேட்கலானுள். ஜாதகனுக்குப் புத்திரபாக்கியம் இல்லை என்று சொல்லுகிறீர்களே; அதற்குக் காரணம் யாது என்று வினவினுள். அத்திரி முனிவர் சொல்லுகின்றார்.

புத்திர தோஷம் : கிரகநிலை

16. அஞ்சினிற் கஞ்சில் ராகு அமிர்ந்திட வைந்தாம் வீட்டை
மிஞ்சிய சனியும் பார்க்க விளங்காது என்று சொன்னேம்
தஞ்சமாய்ப் புயண்டர் சொல்வார் சத்தமம் குருவு நிற்கக்
கொஞ்சிடு மதலை யென்றேங் குலவினுஞ் சேத மாமே.

16. புத்திர ஸ்தானமாகிய தனுசிற்கு (ஐந்தாமிடத்திற்கு) ஐந்தாமிடமாகிய மேஷத்தில் ராகு இருப்பதாலும், புத்திர ஸ்தானத்தைச் சனி பார்த்தலாலும் புத்திர பாக்கியம் இல்லை என்றார். அதற்குப் புஜண்ட முனிவர் மறுத்துச் சொல்லுகிறார். இலக்கினத்திற்கு ஏழாமிடமாகிய கும்பத்தில் குரு இருப்பதால் நிச்சயமாய்க் குழந்தை தோன்றும். ஆனல் நிலையாது.

17. சேதமா மென்று சொன்ன சேதியைச் சொல்லு மென்ன
நீதியாய்க் கருமத் தோனும் நீச்சனு யிரண்டில் நிற்க
ஓதினேன் முன்னுழ்ச் சாப முறைத்ததால் மதலை
[தோஷம்
பாதகன் செய்த ஊழைப் பகருவீர் முனியே என்ருள்.

17. புத்திரன் இறந்து விடுவான் என்று கூறக் காரணம் என்ன என்று சொல்லுங்கள், என்று கேட்க, கருமஸ்தானுதிபதியாகிய (பத்தாம் வீட்டுக்குரிய) சுக்கிரன் நீசனுகி இரண்டாம் வீட்டில் கன்னியில் இருப்பதாலும், முற்பிறப்பில் செய்த தீவினை சேர்ந்ததாலும் புத்திர தோஷம் ஏற்பட்டது. ஜாதகன் செய்த தீவினையைக் கூறுங்கள், முனிவரே ! என்ருள் பார்வதி.

ஜாதகனின் முற்பிறவி : தீவினை

18. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகிறே மவ்வூர் கீழ்ப்பால்
தன்னிலே நதியின் பக்கல் சாற்றினேம் சிற்றூர் தன்னில்
இன்னவன் வீர சைவ னகியே மனைவி மைந்தர்
நன்னய யாச கத்தால் நாயகன் ஜீவித் தானும்.

18. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். அவன் பிறந்த ஊருக்குக் கிழக்குப் பக்கத்திலுள்ள ஒரு நதிக்கு அருகில் உள்ள சிற்றூரில் ஜாதகன் வீரசைவனுகத் தோன்றினன். மனைவி மக்கள்

இவர்களை யடைந்து நல்விதமான யாசகம் செய்து (பிச்சை யெடுத்து) ஜீவனம் நடத்தி வந்தான்.

தீவினை

19. ஜீவிக்கு நாளி லேதான் செய்தவூழ் வினையைச்
[சொல்வேன்
தாவிய மதுபு லாலும் தானவ னுண்டு வந்தான்
மேவிய வர்லயங்கள் விருத்தியுஞ் செய்வே னென்று
தீவினில் சென்று மேதான் சிலசில பொய்கள் சொல்லி ;

19. ஜீவனம் செய்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேன. ஜாதகன்களைக் குடித்து புலால் உணவு சாப்பிட்டு வந்தான். ஆலயத்திருப்பணி செய்வதாகச் சொல்லி யாசகம் செய்து வந்தான். தீவுகளுக்கு (சிங்கப்பூர், இலங்கை) முதலிய இடங்கட்குச் சென்று அங்குள்ள மக்களிடம் சிற்சில பொய்கள் சொல்லி;

20. பெருள்களை வாங்கி வந்து புத்திரர் மனைவி யோர்க்கு
வரும்பந்து இவர்க ளுக்கும் வழங்கினன் பொருளைத்தானும்
திறமையாய்க் கடவுள் பேரில் சிந்தையு மில்லா னாகி
அருமையாய் வாழ்ந்தா னென்றே மம்பிகை யாளே
[கேளாய்.

20. பொருள்கள் வாங்கிச் சேகரித்து, (அப்பொருளை ஆலயத் திருப்பணிக்கென்று சொன்ன பிரகாரம் உபயோகியாமல்), தன் மனைவி மக்களுக்கும் சுற்றத்தாருக்கும் கொடுத்துவிட்டான். தவிர, கடவுள் மீது நினைவே இல்லாமல் வாழ்ந்து வந்தான் என்று சொன்னேம். தாயே ! கேளுங்கள்.

மற்றொரு தீவினை

21. இதுவலா லின்னுமொன்று இயம்புவேன் கேளுமம்மா
சதிசெயு மதர்வ ணத்தைத் தானவன் கற்றுக் கொண்டு
விதவித மந்திரஞ் செய்து வித்தகன் வாழு நாளில்
மதிறுதல் மாதொ ருத்தி வடிவமா யிருந்தா னென்றோம்.

21. இதுவன்றி வேறு ஒன்றும் சொல்லுகின்றோம், கேளுங்கள், தாயே ! சதி (தீங்குகள்) செய்யக்கூடிய அதர்வண வேத மந்திரங்களை ஜாதகன் (முற்பிறவியில்) கற்றுக்கொண்டு விதவிதமான மந்திரங்களை உபயோகித்து ஜீவித்து வருங்காலத்தில் மிக்க அழகுள்ள பெண்ணொருத்தி மூலம் எதிர்ப்பட்டாள்.

பெண்மீது பிசாசை ஏவுதல்

22. அவள்பேரில் மோகம் கொண்டு அருகினில் சென்று [இன்னன்
நயமான வார்த்தை கூற நங்கையு மிசையா ளாக
இவனுமே சாத்தான் தன்னை யேவினன் அவளின் பேரில்
தவசியே பெரும்பா டாகச் சார்ந்தது அம்மா துக்கு.

22. அந்தப் பெண்மீது மோகம்கொண்டு அவளிடம் சென்று இவன் நயமாகப் பேசினன். அப்பெண்ணும் இவனுடைய கருத்தை யறிந்து இவனது இஷ்டத்துக்கு உடன்படவில்லை. ஜாதகன் அவள் மீது குட்டிச்சாத்தானை ஏவி விட்டான். தாயே! அந்தக் குட்டிச்சாத் தான் அப்பெண்ணுக்குப் பெரும் உபத்ரவமாக வந்து சேர்ந்தது.

பெண் சாபம்

23. நரகவே தனையும் பட்டு நங்கையுஞ் சொல்லு கின்றாள்
திறமையா யென்மேல் குற்றம் செய்திடு பாவிக் கேதான்
மறுஜன்மம் தோன்றி யேதான் மாநில நிந்தை பாகிப்
பெரும்புதல் வர்கள் தோஷம் பலர்களும் பகையே யாகி.

23. நரக வேதனைப்பட்டு அப்பெண் சொல்லுகின்றாள்:—என் மீது வேண்டுமென்றே தீங்கு செய்த பாவிக்கு மறுபிறப்பில் உலகில் அவமானம் ஏற்பட்டு, அடையும் புத்திரர்கட்குத் தோஷமுண்டாகி, எல்லோரும் பகைவராகி (விடுவர்).

24. மங்கையும் சொல்லி யேதான் மறலியின் பதிக்குச் [சென்றாள்
சங்கையாய் அந்தச் சாபம் சார்ந்தது இவனுக் கேதான்
பொங்கிய செல்வம் நீங்கிப் புத்திரர் யாவு மற்று
இங்கிவன் மரண மாகி இக்குல முதித்தா னென்றோம்.

24. என்று கூறிவிட்டு இறந்தாள். அந்தச் சாபம் ஜாதகனைத் தொடர்ந்தது. அளவுகடந்த செல்வங்கள் யாவும் நீங்கி, புத்திரர்கள் மடிந்து, மரணமாகி, இந்தக் குலத்தில் ஜாதகன் பிறந்தான் என்று சொன்னோம்.

உயர்குலப் பிறவி

25. முன்ஜன்மம் அநேக நிந்தை
யெய்தியே யிச்சென் மத்தில்
கங்கைதன் குலமு தித்த
காரணம் சொல்லு மென்னப்

பொங்கமாய் முன்ஜன் மத்தில்
பிறைசூடி பகவான் பூசை
இன்னவன் செய்த புண்ணிய
மெய்திஞ னிவனே என்ரோம்.

25. முற்பிறவியில் அநேகவிதமான பழிகளை அடைந்து இப் பிறவியில் வேளாளர் குலத்தில் பிறந்த காரணம் என்னவென்று சொல் லுங்கள் என்று கேட்க, முற்பிறவியில் சந்திரனை முடியில் தரித்த சிவ பெருமானைப் பூசைகள் செய்த புண்ணியத்தால் அடைந்தான் என்று கூறினர்.

26. இந்திட முதித்த தென்ன இயம்புவீர் முனியே யென்ரூள்
தந்தையின் பக்கல் சென்று தனமதைப் பெற்றுக்
[கொண்டு
பிந்தியு மீயா ஞகிப் பிறந்தனன் கடைசி ஜன்மம்
கந்தனைப் பெற்ற மாதே கழறுவோம் கேட்டி டாயே.

26. இவ்விடத்தில் உதித்த காரணம் என்னவென்று கூறுங்கள், முனிவரே! என்ரூள். ஜாதகன் தன் தந்தையினிடம் பொருளைப் பெற்றுக்கொண்டு பிறகு அதைத் திருப்பிக் கொடுக்காததால் ஜாதக னுடைய தந்தைக்குக் கடைக் குழந்தையாகப் பிறந்தான். முருகப் பிரானைப்பெற்ற தேவியே! கூறுகின்ரோம். கேளுங்கள்.

புத்திரதோஷம் நீங்கச் சாந்தி இல்லை

27. இந்ததோர் ஜன்மம் தன்னி லிலகிற்று முன்னூழ்த்
[தோஷம்
மைந்தர்க்குத் தோஷ முண்டா மறைகுவீர் கிரியை
[யொன்று
எந்தச்சாந் திகள்செய் தாலு மிலகாது மதலை என்ரோம்
தந்திமா முகனைப் பெற்ற தையலே கேட்டி டாயே.

27. இப்பிறவியில் பூர்வ ஜன்ம பாவம் தொடர்ந்தது. அதனால் புத்திரதோஷம் ஏற்பட்டது. அது தீரச் சாந்தி யொன்று கூறுங்கள், என வினவ, முனிவர்கள் உரைக்கின்றனர். எவ்விதமான சாந்திகள் செய்தாலும் புத்திரர் தோன்ரூர். யானை முகக்கடவுளைப் பற்ற பார் வதிதேவியே! கேளுங்கள்.

மறுமனைக்கும் புத்திரர் இல்லை : ஈமக்கடன்

28. மறுமனை நேர்ந்த தானல் மங்கைக்குப் புத்திர னுண்டோ
அறைகிரோம் கேளுந் தாயே அதற்குமே மதலை காணன்
திருமக னுக்குக் கர்மம் செய்வரா மெவர்கள் சொல்வாய்ப்
பெருமையா யிவன்முன் வந்தோன் புத்திரன் செய்வரா
[னமே.

28. ஜாதகனுக்கு இரண்டாம் மனைவி ஏற்பட்டால் அந்த மனைவிக்குப் புத்திரபாக்கியம் உண்டோ! என்று பார்வதிதேவி வினவ, முனிவர்கள் கூறுகின்றனர். தாயே! கேளுங்கள். அப்பெண்ணுக்கும் புத்திரர் தோன்றுவர். ஜாதகனுக்கு ஈமக்கடன்கள் யார் செய்வார்கள்? என்று கேட்க, ஜாதகனுடைய அண்ணன் மகன் செய்வான் என்றனர்.

ஜாதகனுக்குக் கர்மம் செய்பவனின் விவரம்

29. அவனுக்குத் துணைவ ருண்டோ அறிவிப்பீர் முனியே
[என்றாள்
நவனியில் ஆண்பா லில்லை நாயகி உண்டு என்றோம்
இவன்தந்தை தாய்க்குக் கர்மம் எவர்களே செய்வார்
[சொல்வீர்
பவமுள இவனே செய்வான் பார்வதி கேட்டி டாயே.

29. ஜாதகனுடைய அண்ணன் மகனுக்குச் சகோதரர் உண்டோ? கூறுங்கள், முனிவரே! என்று பார்வதிதேவி கேட்டாள். சகோதரன் இல்லை. சகோதரி ஒருத்தி யுண்டு என்றார். அவனுடைய தாய் தந்தையருக்கு ஈமக்கடன்கள் யார் செய்வார்கள்? சொல்லுங்கள். ஜாதகனுடைய அண்ணன் மகன் தானே தன் தாய்தந்தையருக்கும் செய்வான். தேவியே! கேளுங்கள்.

30. மனையவள் வர்க்கத் தாலே வருகாதோ கர்மந் தானும்
அனையவே வராது கண்டாய் அதுவொரு காலம் வந்தால்
பினையாகு நசித்துப் போகும் பூமியிற் சீர ணிக்கும்
கனமத யானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

30. மனைவியின் வர்க்கத்திலிருந்து யாராவது வந்து ஈமக்கடன்களைச் செய்யாரோ? செய்யமாட்டார். அது நேராது. அப்படி ஒரு சமயம் நேர்ந்தாலும் அப்பிள்ளையும் இறந்து விடும். பூமியும் குறைந்து போகும். பெரிய மதயானையைப் போன்ற முகத்தையுடைய விநாயகரைப்பெற்ற தேவியே! கேளுங்கள். (மனைவி வர்க்கத்திலிருந்து பிள்ளையைத் தத்தாகவோ அபிமானமாகவோ, கருமத்தை உத்தேசித்து எடுத்துக்கொண்டால், அந்தப்பிள்ளையும் தீர்க்கமாயிராது. நசித்து விடும் என்பது குறிப்பாகச் சொல்லப்படுகிறது).

தாயின் வரலாறு

31. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாநிறம் சமேத கத்தாள்
பாதக மில்லா ளாகும் பரங்களுக் கன்ன மீவள்
நீதியாய் நடக்கை யுள்ளாள் நிதானமாய் வார்த்தை
[சொல்வாள்
கோதிலா வாயு ரோகி கூறுவோ மேலுங் கேளே.

31. ஜாதகனுடைய தாயின் குணத்தைச் சொல்லுகின்றோம். மாநிறமுள்ளவள் சமமான உடலமைப்புள்ளவள். கெட்ட எண்ணங்களில்லாதவள். ஏழைகட்கு அன்னமளிப்பவள். நேர்மையுடனே நடப்பவள். நிதானமாகப் பேசுபவள். வாயுரோக முடையவள். தாயே! மேலுங் கேளுங்கள்.

தாயின் மரணம்

32. அவளுடைத் துணைவர் தம்மை அறையவே பலத்தைக்
[காணும்
நவனியில் இவர்கள் காலம் நாட்டுவோம் கேளு மம்மா
அவனியில் மூப்பா லுலில் ஐப்பசி மாதந் தன்னில்
பவமுள மாது ருக்குப் பகருவோம் கண்டந் தானே.

32. ஜாதகனுடைய தாயின் சகோதரபாவத்தைக் கூற, கிரக பலமில்லை. தாயே! ஜாதகனுடைய தாயின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய மூப்பத்துநான்காம் வயதில் ஐப்பசி மாதத்தில் தாய்க்குக் கண்டம் நேரிடும் என்று சொல்லுகின்றோம்.

தந்தையின் மரணகாலம்

33. அதற்குமேல் மூன்று ஆண்டில் அன்புள தேவின் மாதம்
விதிக்கின்றோம் தந்தைக் கேதான் விளம்புவோம்
[ஜாதகர்க்குச்
சதியிலுல் நாற்பா னெட்டில் சாற்றினே மார கங்கள்
வதிட்டரும் கேட்க லுற்றார் மாரகம் எவலுல் நேரும்.

33. அதற்குமேல் மூன்றுவது வருஷ கர்த்திகை மாதத்தில் ஜாதகனுடைய தந்தைக்கு மரணம் ஏற்படும் என்று கூறுகின்றோம். ஜாதகனுக்கு நாற்பத்தெட்டாம் வயதில் மரணம் நேரும். வசிஷ்ட முனிவர் கேட்கலானார். மாரகம் யாரால் நேரும்? எந்தத் தசையில் நடக்கும்?

ஜாதகனுடைய மரணகாலம்

34. கரும்பாம்பு தசையி லேதான் கனகனும் பொசிக்கு ளளில்
உரைக்கிறோ மார கங்கள் உரைத்ததை மறித்துச்
[சொல்வார்
விரையத்தோன் மதியே யாகி விடராகு கூடி பாக்கியம்
திறமூட னிருப்ப தாலே செல்லாது அவர்த சைக்கு.

34. ராகு மகாதசையில் குரு புக்தியில் மரணம் ஏற்படும் என்று கூறியதை மறுத்துச் சொல்லுகின்றார். விரயஸ்தானத்துக்குரியவன் சந்திரன் ஆகி, அவனுடன் (விஷமாகிய) ராகு பாக்கியஸ்தானத்தில் கூடியிருப்பதால் ராகுமகாதசையில் மரணம் ஏற்படாது.

35. மறையவன் புத்தி தன்னில் மன்னரால் கலக முண்டு
விரையங்கள் கொஞ்ச நேர்ந்து விலகிடும் கோள்கள்
[தாமும்
தரையினில் அட்ட மத்தோன் சப்தமத் தினிலே நிற்க
உரைக்கின்றே மவர்கா லத்தில் உடலுமே வாடு மென்றே.

35. குரு புத்தியில் அரசாங்கத்தாரால் சிறிது கலகம் ஏற்படும். செலவுகள் கொஞ்சம் ஏற்படும். தீய கிரகங்கள் விலகும். எட்டாம் வீட்டிற்குரிய குரு ஏழாம் வீட்டில் (ஆயுஸ்தானத்துக்குப் பன்னிரண்டில்) இருப்பதால் அவருடைய தசை காலத்தில் ஜாதகனுடைய சரீரத்துக்குத் தீங்குநேரும் (மரணம் ஏற்படும்).

ஜாதகனது மரணகால வயது

36. அறுபத்து ஐந்து ஆண்டில் அணுகிய மேட மாதம்
குறைபக்கம் சட்டி தன்னில் கூறுவோங் கண்டம் தானும்
மறுஜன்மம் அவனூர் மேற்கில் மாரணு மிக்கு லத்தில்
பெருமையா யுதிப்பா னுகும் பேசுவோ மேலுங் கேளே.

36. ஜாதகனுடைய அறுபத்தைந்தாம் வயதில் சித்திரை மாதம் கிருஷ்ணபட்சம் சஷ்டி திதியில் மரணம் ஏற்படும் என்று கூறுகின்றோம். மறுபிறவி அவன் பிறந்த ஊருக்கு மேற்கில் இதே குலத்தில் பிறந்து பெருமை யடைவான். தாயே! மேலுங்கேள்.

தந்தையின் முற்பிறப்பு

37. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் கர்ஞ்சி
[தன்னில்
வந்தசெங் குந்த வம்ச மரபினி லுதித்து மேலும்
மூந்திய தனங்கள் பெற்று முயற்சியாய்க் குடும்பி யாகி
வந்தவர் தமக்கு அன்னம் வகையுட னளித்து வந்தான்.

37. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சீபுரத்தில், செங்குந்த மரபினனுகப் பிறந்து, பிதுரார்ஜித மான பொருட்செல்வம் பெற்று, உழைப்பாளியான குடும்பியாக இருந்து, தன்னைத் தேடி வந்தவர்கட்கு அன்புடன் அன்னம் அளித்து வந்தான்.

38. அந்தியக் காலந் தன்னில் அனுயாச மரண மாகி
வந்தவ னிவனே என்றே மறைகிறோம் பின்ஜன்
[மத்தைச்
சந்ததங் காசி பக்கல் தானவன் பிரம்ம சேயாய்
மூந்தவே வுதிப்பா னென்றே மொழிகிறே மேலுங்
[கேளே.

38. ஜாதகனின் தந்தை தன் கடைசிக் காலத்தில் அனுயாச மரணமடைந்து, இப்பிறவியில் பிறந்தவன் என்றேம். அவனுடைய மறு பிறவியைக் கூறுகின்றேம். காசியின் பக்கத்தில் அந்தண குலத்தவனுகப் பிறப்பான் என்றேம். தாயே! மேலுங் கேளுங்கள்.

தாயின் முற்பிறவி

39. மாதுரு முன்ஜன் மத்தை வறைகிறேம் [1]பட்சி மேல்பால்
மேதினில் பேரூர் தன்னில் விளங்கிஞ ளிக்கு லத்தில்
போதவே தனங்கள் பெற்றுப் புத்திர ஞள்ளா ளாகி
நீதியாய் வாழு நாளில் நிகழ்த்துவோம் கேளு மம்மா.

39. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். திருக்கழுக்குன்றத்துக்கு மேற்கில் உள்ள ஒரு பெரிய ஊரில் இதே குலத்தில் பிறந்து, மிகுந்த செல்வமுடையவளாக இருந்து, புத்திர பாக்கியம் பெற்று, நேர்மையுடன் வாழ்ந்து வரும் நாளில், ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். கேளுங்கள், தாயே!

பட்சிக் கூட்டைக் கலைத்தல்

40. தன்னுடைக் கிருகம் தன்னில் தங்கிற்றுப் பட்சி தானும்
அன்னவள் கூண்டை நீக்கி அண்டத்தை அழித்தா
[லென்றேம்
பன்னிய பட்சி தோஷம் பாவையைப் பற்றி னத்தால்
இந்ததோர் ஜன்மந் தன்னில் இலகிற்று அந்தப் பாவம்.

40. ஜாதகனுடைய தாய் தன் வீட்டில் கட்டியிருந்த பட்சியின் கூட்டைக் கலைத்து விட்டு, அதிலிருந்த குஞ்சு முட்டைகளை அழித்து விட்டாள் என்றேம். அந்தப் பட்சி தோஷம் இவளைப் பற்றியது. இந்தப் பிறவியில் அந்தப் பாவம் இவளைத் தொடர்ந்தது.

41. பாவத்தால் துணைவர் தோஷம் பற்றிற்று வேறு இல்லை
மேவிய பின்ஜன் மத்தை விளம்புவோம் காஞ்சி தன்னில்
ஓவிய பிரம்ம வம்ச முதிப்பளா மென்று சொன்னேம்
தாவிய மனைவி ஜன்மம் சாற்றுவோம் கேளு மம்மா.

41. அந்தப் பாபத்தால் ஜாதகனுடைய தாய்க்குச் சகோதர தோஷம் ஏற்பட்டது. வேறு தோஷமில்லை. இனி ஏற்படும் மறு பிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சிபுரத்தில் வேதம் ஓதும் அந்தண குலத்தில் பிறப்பாள் என்று கூறுகின்றேம். ஜாதகனுடைய மனைவியின் வரலாற்றைச் சொல்லுகின்றேம். கேளுங்கள். தாயே!

---

1. திருக்கழுக்குன்றம்

மனைவியின் வரலாறு

42. உவரிக்கு மேற்கி லேதான் ஓதூரு தலத்தி லேதான்
பவமுள தீயின் வம்சம் பாவையு முதித்து மேலும்
நவனியில் சுதர்க ளுண்டாய் நற்பணி யுள்ளா ளாகி
அவனியில் வாழு நாளில் அறைகிறே மூழி தானே.

42. சமுத்திரத்துக்கு மேற்கிலேயுள்ள ஓதூர் என்ற ஸ்தலத்தில், நல்ல செழிப்புள்ள வன்னிய குலத்தில், அப்பெண் பிறந்து, புத்திர பாக்கியத்தைப் பெற்று, நற்காரியங்களே செய்து, வாழ்ந்து வருங் காலத்தில், ஏற்பட்ட தீவினையைக் கூறுகின்கிறும்.

ஏழைக்குழந்தைக் கன்னமிடாதது

43. ஏழையாய்ப் பெண்ணும் ஓர்நாள்
இவள்பக்கல் சென்று மேதான்
தாழ்வாக வார்த்தை சொல்லித்
தாகமும் கேட்டா ளென்றேரும்
தோழியு மனவெ றுப்பால்
சுதர்க்கன்ன மில்லை யென்றுள்
ஏழையும் பசிநோ யாலே
இயம்புவாள் சாபம் தானே.

43. ஏழைப்பெண் ஒருத்தி ஒருநாள் ஜாதகனின் மனைவியினிடம் (முற்பிறவியில்) சென்று, மிகவும் பணிவுடன் தன் குழந்தையின் பசிக்கு அன்னம தருமாறு கெஞ்சிக் கேட்டாள். இவளும் வெறுப்படைந்து, குழந்தைக்கு அன்னமில்லை என்றுள். ஏழைப்பெண்ணும் குழந்தைப் பசியைத் தாங்காமல் சாபமிடுகிறுள்.

44. பாலகன் தனக்குத் தாகம் பகராத பாவிக் கேதான்
கோலமாய் மறுஜன் மத்தில் குழவிகள் தோஷ முண்டாய்
ஞாலமேல் வருவா ளென்றும் நவின்றுமே சொன்ன
[ளென்றேரும்
வேல்விழி மாது வுக்கு வந்தது அந்தத் தோஷம்.

44. குழந்தைக்குப் பசிக்குப் பால் தராத பாவிக்கு, ஏற்படும் அடுத்த பிறவியில் துன்பமாகப் புத்திரர் தோஷம் உண்டாகி, உலகில் அவஸ்தைப்படுவாள் என்று கூறினுள். வேலைப்போன்ற விழிகளை யுடைய பெண்ணுக்கு அந்தத் தோஷம் ஏற்பட்டது.

45. அந்தியக் காலம் தன்னில் அருணைக்குச் செல்லும் போது
பந்தமாய்ப் பேதி கண்டு பத்தினி மாண்டா ளென்றேரும்
சந்ததம் உரிமை செய்யத் தன்புத்திர ரில்லா ளாகி
வந்தவர் செய்தா ரென்றேரும் மங்கையே மேலுங் கேளே.

45. தன் கடைசிக்காலத்தில் திருவண்ணாமலைக்குச் செல்லும் போது பேதி கண்டு அதனால் ஜாதகனின் மனைவி மாண்டாள் என்று சொன்னேம். அவளுக்கு ஈமக்கடன்கள் செய்யப் புத்திரர்கள் ஒருவரு மில்லாததால் அங்கு வந்திருந்தவர் செய்தார் என்று கூறினேம். தாயே ! கேளுங்கள்.

சாந்தி செய்தும் பலனில்லை

46. பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தவ ளிவளே யென்றேரும்
அறைகிறே மிச்சென் மத்தி லவளுக்குச் சுதர்கள் தோஷம்
உறைந்திடு மென்று சொன்னே முரைப்பீர்கள் சாந்தி
[யொன்று
திற்மூட னெந்தச் சாந்தி செய்தாலும் சுதர்கள் காணுள்.

46. மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்து ஜாதகனின் மனைவியானாள். இப்பிறவியில் புத்திர தோஷம் தொடரும் என்று கூறுகின்றோம். சாந்தியொன்று கூறுங்கள் என, என்ன சாந்திகள் செய்தாலும் பலனில்லை. புத்திரர் தோன்றார்.

ஜாதகனுடைய மனைவியின் மறுபிறப்பு

47. இன்னவள் மறுபி றப்பு
இயம்புவோம் துவாரை தன்னில்
மன்னர்கள் மரபில் தோன்றி
மகிழ்வுடன் வாழ்வ ளாகும்
அன்னமே யிவனின் யோகம்
அறைகிறோம் சுகமு முள்ளான்
பன்னுமை யையாண் டின்மேல்
பாலகன் மரண மட்டும் ;

47. ஜாதகனின் மனைவியினுடைய மறு பிறப்பைச் சொல்லு கின்றோம். துவாரகையில் அரச குலத்தில் தோன்றி, சந்தோஷமாக வாழ்ந்து வருவாள். தாயே ! இவனுடைய (ஜாதகனுடைய) யோகத் தைச் சொல்லுகின்றோம். சுகமுள்ளவன். இவனுடைய இருபத் தைந்தாம் வயதுக்குமேல் மரணகாலம் வரையில் ;

யோகம்

48. காரைபோல் யோகம் வாய்க்கும்
பேசுவோ மரசு விருத்தி
குறைவிலாச் செல்வ முண்டு
கூறுவோம் பொருள்மே லிச்சை

அறைகிறேரும் தரித்திர மில்லான்
அவன்பூமி சேர்ப்பா னுகும்
தரைமன்னர் நேசங் கொள்வான்
சல்லிய மில்லா னென்றேரும்.

48. யோகம் விருத்தியாகும். அரசாங்கத் தொழில் புரிந்து விருத்தி ஏற்படும். அழிவில்லாத செல்வம் கிடைக்கும். பொருள் களின்மீது ஆசையுள்ளவன். தரித்திரமில்லாதவன் என்று சொல்லு கின்றேரும். ஜாதகன் பூமியைப் பெருக்குவான். அரசரிடம் நட்புக் கொள்ளுவான். திரவியமில்லா உபத்திரவம் இல்லாதவன் என்று உரைப்போம்.

கிரகநிலை—குரு 7-இல் இருப்பதின் பலன்

49. சத்தமம் குருவு கிற்கச் சாற்றுவீர் பலனை யென்றூர்
சித்தமாய் விரோதம் சேரில் சிதறிடு முடனே தானும்
நித்தமும் யோக மூண்டு நேமியில் நேர்த்தி கொள்வன்
சத்தமா யறுபான் மூன்றும் துலங்கிடு மரசு தானே.

49. ஜாதகனுக்கு 7-ஆம் வீட்டில் குரு இருப்பதால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள், என்று (பார்வதி) கேட்க, எந்தவிதமான விரோதம் ஏற்பட்டாலும் உடனே விலகி விடும். தினமும் நல்ல யோகம் உண்டு. உலகில் சுகமுடைவன். அறுபத்துமூன்று வயது வரையில் யோகம் விருத்தியாகும்.

ஜனனகால தசை

50. ஜனித்திடு காலந் தன்னில் செம்பாம்பு தசையி லேதான்
குனித்திடு மாண்டு மொன்று கூறுவோம் திங்கள்மூன் றும்
சினமான ரோக மூண்டு சிலசில கலகம் நேரும்
அனையவே காலி சேதம் அறைகிறே மேலுங் கேளே.

50. ஜாதகன் பிறக்கும்போது கேது மகாதசையில் சென்றது போக இருப்பு, ஒரு வருடம் மூன்று மாதமுமாம். வருந்தத்தக்க நோய் பீடிக்கும். சிற்சில சிறு கலகங்கள் ஏற்படும். கால்நடைகட்குப் பீடை யுண்டு. தாயே! மேலும் சொல்லுகின்றேரும், கேளுங்கள்.

அடுத்த தசையின் பயன்

51. புகர்தசை பலனைக் கேளாய்ப் பூமியும் சேரு மென்றேரும்
தகமையாய்க் காலி சேரும் தானியம் விருத்தி யாகும்
பகையவ ரறவே யாவர் பந்துபூ சிதங்க ளுண்டு
ஜகமதில் சுகமாய் வாழ்வான் தேவியே மேலுங் கேளே

51. சுக்கிர மகாதசையின் பலனைக் கேளுங்கள். விலை நிலங்கள் பெருகும் என்று சொல்லுகிறேம். கால்நடைகள் விருத்தியாகும். தானியங்களும் பெருகும். விரோதிகள் ஒழிந்து விடுவர். பந்துக்களால் பூசிக்கப்படுவான். உலகில் சுகமாய் வாழ்ந்து வருவான். தாயே! மேலுங்கேள்.

சுக்கிரன் நீச்சனுதன் பயன்

52. தனத்தினில் புகரு நீசம் சாற்றுவீர் பலனைத் தானே
தனமது விரய மாகும் சல்லியம் சேரு மென்றேரும்
இனமது பகையு மூண்டு இடருகள் தந்தைக் கேதான்
கனமுடன் வந்து நீங்கும் கழறுவோ மிரண்டி லேதான்.

52. தனஸ்தான (இரண்டாமிட)த்தில் சுக்கிரன் நீசனைக இருப்ப தன் பலனைக் கூறுங்கள். பணச்செலவு அதிகமாம். சில கடன் உபத்திரவம் ஏற்படும். தன் சுற்றத்தார் விரோதம் உண்டு. தன் தந்தைக்குத் துன்பம் ஏற்படும். பிறகு நீங்கும். மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேரும்.

ஜாதகம் 2

1. [1]மறைசனி [2]சேல தாக மங்கலன் புந்தி தேளில்
பரியும் ராகு வில்லில் புகர்[3]சுரு சிகியும் வீணை
[4]இராமன்ன னரியில் புக்க இன்பமாய் ஜன்மம் சிம்ம
மறைகுவீர் பலனை நீங்கள் மாமுனி கூறு கின்றார்.

1. குருவும் சனியும் மீனத்திலும், செவ்வாய் புதன் விருச்சிகத்திலும், சூரியன் ராகு தனுசிலும், சுக்கிரன் மகரத்திலும், கேது மிதுனத்திலும், சந்திரன் சிம்மத்திலும் நிற்க, பிறந்த இலக்கினம் சிம்மமாக இருந்தால், ஏற்படும் பலன்களைக் கூறுங்கள் (என்று பார்வதிகேட்க), முனிவர்கள் சொல்லுகின்றனர்.

கிரகநிலை

குரு சனி			கேது
	இராசி சக்கரம்		
சுக்கிரன்			லக்கினம் சந்திரன்
சூரியன் ராகு	செவ்வாய் புதன்		

ஜாதகன் பிறந்த இடம்

2. ஆணது ஜனன மாகு மறைகிரே மில்லந் தானும்
காணவே கீழ்மேல் வீதி [5]காலன்தன் வாச லாகும்
தோணெதி ரில்ல மில்லை தும்பியு மாரி மேற்கில்
வேணுகோ பாலன் கோஷ்டம் விளங்காது அக்கினி
[தன்னில்.

2. இஃது ஆண் மகனின் ஜாதகம். இவனுடைய வீட்டைப் பற்றிச் சொல்லுகிறோம். கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. எதிர்ப்பக்கத்தில் வீடு இல்லை. மேற்குப் பக்கத்தில் விநாயகர் கோயிலும் மாரியம்மன் கோவிலும் உள்ளன.

---

1. குரு
2. மீனராசி
3. மகரம்
4. சந்திரன்
5. எமன்திசை; தெற்கு

வடகிழக்குத் திக்கில் சிதைந்ததான கிருஷ்ணன் கோயில் ஒன்று இருக்கும்.

வீட்டின் அடையாளங்கள்

3. ஈசனும் காளி கீழ்ப்பால் இலகிடும் தென்மேல் திக்கில்
நேசமாம் சந்தி மாரி நிகர்சூழி யருகில் தங்கும்
வாசமாம் சிற்றூர் தன்னில் மருவிய கெட்டி வீட்டில்
பாசமிவ் வடையா ளத்துள் பாலகன் வாழ் வானுமே.

3. சிவபெருமான் ஆலயமும் காளி கோவிலும் கிழக்குப் பக்கத்திலும், தென்மேற்குப் பக்கத்தில் ஒரு சந்தியும் மாரியம்மன் கோவிலும் ஒரு கோட்டையும் உள்ள ஒரு சிற்றூரில் இவ்வித அடையாளங்களுடனிருக்கும், ஒரு பலமுள்ள வீட்டில் ஜாதகன் வாழ்ந்து வருவான்.

தந்தைதாய் யோகம்

4. தந்தையின் மாதா யோகம் சகோதரர் களத்திர புத்திரர்
வந்தவன் யோகம் தானு மறைகிறேம் முன்பின் ஜன்மம்
பிந்திய ஊழி தானும் பேசுவோ மிந்நூல் தன்னில்
கந்தனைப் பெற்ற தாயே கழறுவோ மேலுங் கேளே.

4. ஜாதகனுடைய தாய் தந்தையர் யோகம், உடன்பிறந்தவர் மனைவி மக்கள், ஜாதகன் இவர்களுடைய யோகங்கள், முற்பிறவி மறுபிறவி ஆகிய இவற்றையும் முன்பின் ஏற்படும் திவினைகளையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேம். முருகக்கடவுளைப்பெற்ற தேவியே! கூறுகிறேம். கேளுங்கள்.

ஜாதகனுடைய தந்தையின் விவரம்

5. தந்தையின் வர்க்கம் தன்னைச்
சாற்றுவோம் பதினொன் றாகும்
நொந்திடுஞ் சிலவே யென்றோம்
நுவலுவோ மாண்பால் மூன்று
வந்திடும் கன்னி யிவ்வாறு
வகையுடன் விருத்தி யென்றோம்
சந்ததம் பிதாகு ணத்தைச்
சாற்றுவோங் கேளு மம்மா.

5. ஜாதகனுடைய தந்தைக்கு உடன்பிறந்தவர்கள் பதினொருவர். அவர்களில் சிலர் இறந்து விடுவர். மூன்று சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் நிலையானவர் என்று கூறுகின்றேம். ஜாதகனுடைய தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றேம். கேளுங்கள். தாயே!

6. மால்நிறம் சமதே கத்தன் மருமமில் லாத நெஞ்சன்
சீலவான் அன்ன மீவன் செப்புவான் சிலேடை யாக
ஞாலமேல் தைரிய முள்ளன் நற்குணன் கிருஷி யுள்ளான்
கோலமாய்ப் பித்த தேகன் கூறுவோ மீகை யாளன்.

6. கரிய நிறமுடையவன். சமமான உடலமைப்புள்ளவன். இரகசியமில்லாத மனத்தினன். நல்லொழுக்கமுள்ளவன். அன்ன மளிக்கும் இயல்பினன். இரு பொருள்படும்படி பேசுபவன். உலகில் தைரியமான மனத்தினன். நற்குணமுடையவன். கிருஷி செய்து வருவான். பித்த தேகம் உள்ளவன. கொடையாளி என்று சொல்லு வோம்.

7. சூதுகள் விருப்ப முள்ளான் துணைவரை யிஷ்டம் [கொள்வன்
பாதக மில்லா நெஞ்சன் பந்துவு மெச்ச வாழ்வன்
மேதினி லடக்க முள்ளான் விரும்புவான் சுகபு சிப்பு
மாதவ ரிஷ்டம் கொள்வன் வாக்குகள் தப்பா னுமே.

7. சூது விளையாட்டுகளில் விருப்பமுடையவன். தன் சகோ தரர்மீது பிரியமுள்ளவன். தீதுகள் இல்லாத மனத்தினன். உற வினர்கள் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். அடக்கமுள்ளவன். சுகமாகச் சாப்பிடுவதில் பிரியமுடையவன். தவமுடைய பெரியோர் களிடம் (இஷ்டம்) நட்பு உடையவன். சொன்ன சொற்கள் தவறுதவன்.

8. உண்டியும் வெகுவா யுண்பன் உறைப்பொடு புளிப்பி [லிச்சை
தண்டமிழ்க் கல்வி யுள்ளான் சன்மார்க்கன் தெய்வ பக்தி
வண்டிவா கனமு முள்ளான் மானிலம் விருத்தி செய்வன்
குண்டுணி கலகம் கூறுவன் கோக்களின் விருத்தி [யென்றேரும்.

8. அதிகமாகச் சாப்பிடுவான். காரத்துடன் புளிப்புச் சேர்ந்த பண்டங்களில் விருப்பம் அதிகம் உள்ளவன். இனிய தமிழ்க்கல்வியில் தேர்ந்தவன். நேர்வழியில் செல்பவன். தெய்வபக்தி யுடையவன். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். விளைநிலங்களைப் பெருக்குவான். கோள் சொல்லுபவன். பசுக்கள் விருத்தியடையும் என்றேரும்.

9. மூலநோ யுடைய னுகும் முனிவுளன் நாபி நோயன்
பாலர்மேல் பிரிய னுவன் பந்துவோ டிஷ்ட னுவன்
காலத்தை யறிய வல்லான் கதித்திடு குணமு மாவன்
வேலுடைக் கடவுள் பத்தி விரும்புவா னிவனே [யென்றேரும்.

9. மூலச் சூட்டு நோயுள்ளவன். முன் கோபி. வயிற்றுவலி யுடையவன். குழந்தைகள்மீது பிரியமுள்ளவன். பந்துக்களிடம் பிரிய முள்ளவன். வருங் காலத்தை யறிந்து கொள்ள வல்லவன். கோபங் கொள்ளும் இயல்பினன். முருகக்கடவுள்மீது பக்தியுடையவன் (ஜாதகனின் தந்தை) என்றேும்.

ஜாதகனின் குணம்

10. இத்தகை யுடையா னுக்கு இவனுமே உதிப்பா
[னென்றேும்
சித்தமா யவன்கு ணத்தைச் செப்புவோ மானி றத்தான்
சத்தியே யுயர மில்லான் தக்கதோர் கல்வி மானும்
உத்தம குணத்தா னகு முரைக்கின்றே மேலுங் கேளே.

10. இவ்விதக் குணங்களோடிருப்பவனுக்கு ஜாதகன் பிறப்பான் என்று கூறுகின்றேும். அவனுடைய குணத்தைச் சொல்லுகிறேும். கரிய நிறமுடையவன். தேவியே! உயரமில்லாதவன். தக்க கல்வியறி வுடையவன். நல்ல குணங்களையுடையவன். மேலும் சொல்லுகின்றேும். கேளுங்கள்!

11. ரோமங்கள் நீட்சி யுள்ளான் நுண்ணிய புத்தி யுள்ளான்
சேமமாம் குடும்ப முள்ளான் சிரமுக வடிவு முள்ளான்
தாமத மன்ன ரிஷ்டம் சத்தான குணத்தா னகும்
நேமியோர் மெச்ச வாழ்வன் நிதானமாய் வார்த்தை
[கூறுவன்.

11. நீண்ட ரோமங்களை யுடையவன். கூர்மையான புத்தியறிவுள்ள வன். சுகமான குடும்பமுடையவன். தலைமுகம் இவைகள் அழகாக இருக்கும். அரசாங்க உத்தியோகஸ்தர்கட்குப் பிரியமானவன். நல்ல குணங்களுள்ளவன். உலகத்தவர் கொண்டாடும்படி வாழ்ந்து வரு வான். மெதுவாகப் பேசும் இயல்பினன்.

12. தந்தையி னஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வான்
சிந்தையில் தவறு மில்லான் சீக்கிர நடையு முள்ளான்
நொந்திடும் பேரைக் காப்பன் நுகருவான் சுகபு சிப்புச்
சந்ததம் பால்நெய் யிஷ்டன் சங்கரி மேலுங் கேளே.

12. ஜாதகன் தன் தந்தையின் ஆஸ்திகளைப் பெருக்குவான். மனத்தில் தவறுகள் இல்லாதவன். வேகமாக நடக்க வல்லவன். கஷ்டம் அடைந்தவர்களைக் காத்து உதவி புரிவான். சாப்பாட்டில் பிரியமுள்ளவன். பால் நெய் இவைகளைச் சதா சாப்பிடுவதில் பிரிய முடையவன். பார்வதி தேவியே! மேலும் கேளுங்கள்.

13. உதார குணமு டையன் உத்தமர் நேசம் கொள்வன்
செபம்செய்வன் சுபங்கள் பாடும் தீர்த்தயாத் திரைகள்
[செல்வன்

தபசிக ளுறவு கொள்வான் தாட்சிண்ய னுகசாலி
அபயங்கள் காப்பா னுகும் அம்மணி மேலுங் கேளே.

13. தாராள சிந்தையுள்ள குணவான். நல்லவர்கள் நட்புக் கொள்ளுவான். ஜபம் முதலியன செய்பவன். பெரியோர்கள் கூறிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் சென்று நீராடுவான். தவம் செய்பவர் உறவு கொள்ளுவான். தாட்சிண்ய மனப்பான்மை உடையவன். ஊக முள்ளவன். தன் உதவியை நாடி வந்தவர்கட்கு உதவி செய்யும் இயல் பினன். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதர நிலை

14. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மூத்தோர்
[காணேம்

நவினியில் இளையோன் ஒன்று நவிலுவோம் தீர்க்க மாக
அவனியில் மற்ற வெல்லாம் அழிந்திடு மென்று
[சொன்னேம்

தவநிலை யோரைக் காக்குந் தயாபரி மேலுங் கேளே.

14. ஜாதகனுடைய உடன்பிறந்தவர்களை நோக்கின், மூத்தசகோ தரனில்லை. இளைய சகோதரன் ஒருவன் நீண்ட ஆயுளுள்ளவன். மற்ற சகோதரர்கள் எல்லாரும் நிலையார் என்று சொன்னேம். தவம் செய்வதே உயர்ந்தது என்று நினைப்பவர்களைக் காக்கும் தயாநிதியே! மேலுங் கேளுங்கள்.

ஜாதகனது திருமண காலம்

15. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருபான்
[ரண்டுஞ்

கன்னிகை கிழக்குத் திக்கில் காதலி வருவா ளாகு
மன்னிய குணத்தைக் கேளாய் மருமமு மில்லா ளாகும்
துன்னிய துணைவ ராண்பால் தோன்றுமே யென்று
[சொன்னேம்.

15. ஜாதகனுடைய திருமணக் காலத்தைக் கூறுகின்றேம். இருபத்திரண்டாம் வயதில் கிழக்குத்திக்கிலிருந்து மனைவி வருவாள் என்றேம் அப்பெண்ணின் குணத்தைக் கேளுங்கள். மனத்தில் ஒளிவில்லாதவள் என்றேம். அவளுக்கு உடன் பிறந்த சகோதரர் தோன்றுவர் என்று சொல்லுகின்றேம்.

ஜாதகனுடைய மனைவியின் விவரம்

16. இருநிற முடைய ளாகும் இன்பமாய் வார்த்தை கூறுவள்
திருமக ளொப்ப தாகும் செல்வியு மதிர்ஷ்ட சாலி
வறுமையு மில்லா ளாகும் மங்கைநன் னடக்கை யுள்ளாள்
பெரியவர்க் கன்ப ளாகும் பேணுவாள் தரும சிந்தை.

16. கரிய நிறமுள்ளவள். இன்பமாகப் பேசுபவள். இலக்குமியை யொத்த அழகியும் செல்வியுமாகும். அதிருஷ்டமுள்ளவள். தரித்திர மில்லாதவள். நன்னடத்தையுள்ளவள். பெரியவர்களிடம் பிரியமாக நடந்து கொள்ளுவாள். தரும சிந்தையுடையவள்.

இருதாரத்திற்குரிய கிரகநிலை

17. வயதுமே தீர்க்க மாகும் வதிஷ்டரும் தடுத்துச் சொல்வார்
தயையுள யேழோன் தானும் சனியாகி எட்டில் நிற்க
நயமான புகரு மாறில் நல்கியே யிருப்ப தாலே
வியமாகுந் தார மென்றேரும் மேவிடு மிரண்டா மாது.

17. நீண்ட வயதுள்ளவள். வசிஷ்ட முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். ஏழாம் வீட்டுக்குரியவன் சனியாகி எட்டாம் வீட்டில் இருக்க, சுக்கிரன் ஆருமிடத்தில் இருப்பதால் மனைவி இறந்து விடுவாள். பிறகு இரண்டாவது பெண் ஒருத்தியை மணப்பான் என்றார்.

ஒரே மனைவிக்குரிய கிரகநிலை

18. அத்திரி சொல்லு கின்றார் ஆயு மாட்சி யாகச்
சுத்தமா யேழோ னோடு சுரர்குரு சேர்ந்து ஆட்சி
பெத்ததால் மனைவி தீர்க்கம் பேசினேம் தாரம் ஒன்றே
வித்தகன் தனக்குப் புத்திரர் விளம்புவோம் கேளு மம்மா.

18. அத்திரி முனிவர் கூறுகின்றார். செவ்வாய் ஆட்சியாக இருப்பதாலும், ஏழாம் வீட்டுக்குரிய சனியுடன் குரு சேர்ந்து ஆட்சி யாக மீனத்தில் இருப்பதாலும் மனைவி ஒருத்தியே நீண்ட ஆயுள் உள்ளவள் என்று சொன்னார். ஜாதகனது புத்திரபாவத்தைக் கூறு கின்றேம். தாயே ! கேளுங்கள்.

புத்திரபாவம்

19. மதலைகள் ஆண்பால் ரெண்டு
வறைகின்றே பெண்பா லவ்வாறு
சதமாகும் தீர்க்க மென்றேஞ்
சாற்றுவார் புயண்டர் தாமும்

எதுவிதக் காரணத்தால்
இயம்பினீர் புத்திர விருத்தி
விதங்களைச் சொல்லு மென்ன
விளம்புவார் முனிவர் தாமே.

19. ஜாதகனுக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுளுள்ளவர்கள் என்றேரும். புயண்ட முனிவர் சொல்லுகின்றார். எந்தக்காரணத்தால் புத்திரவிருத்தி யுண்டு என்று சொல்லுங்கள், என வினவ, முனிவர் கூறுகின்றார்.

புத்திரபாவத்திற்குரிய—கிரகநிலை

20. அஞ்சவ னுட்சி யாக அதற்கைந்தோன் ஆட்சி யாயும்
மிஞ்சியே இருந்த தாலே விளம்பிடினும் தீர்க்க மாகத்
தஞ்சமா யஞ்சில் ராகு தபனனனும் கூடி நிற்கத்
துஞ்சிடு மதலை யென்றேரும் சுந்தரி கேட்டி டாயே.

20. ஐந்தா மிடமாகிய புத்திரஸ்தானத்துக்குரிய குரு ஆட்சி யாகவும், அந்தஸ்தானத்துக்கு ஐந்தாமிடமாகிய மேஷத்தில் செவ்வாய் ஆட்சியாகவும் இருப்பதால், அவ்வாறு திடமாகச் சொன்னேம். ஆனால் புத்திரஸ்தானத்தில் ராகுவும் சூரியனும் கூடி இருப்பதால் குழந்தை இறந்துவிடும் என்றேரும். அழகியே! கேளுங்கள்.

முற்பிறவி தோஷ கிரகநிலை

21. இதுவன்றி அஞ்சோ னுடே யேழுளோன் சேர்ந்து [எட்டாம்.
பதியி னிலிருப்ப தாலே பாலகன் முன்னூழ் தன்னில்
வதையாகும் மதலை யென்றேரும் வரைகுவீ ரந்தச் சேதி
மதயானை தன்னைப் பெற்ற மங்கையே மேலுங் கேளே.

21. இது வல்லாமல், ஐந்தாம் வீட்டுக்குரிய குருவுடன் ஏழாம் வீட்டுக்குடைய சனி சேர்ந்து எட்டாம் வீடாகிய மீனத்தில் இருப்பதாலும், ஜாதகனுக்கு முற்பிறவியில் எற்பட்ட வினையாலும் குழந்தைகளுக்குத் தோஷம் உண்டு என்றேரும். அந்த விவரத்தைச் சொல்லுங்கள். மதயானையைப் போன்ற முகத்தையுடைய விநாயகரைப்பெற்ற தேவியே! மேலும் கேளுங்கள்.

22. இன்னவன் முன்ஜன் மத்தை யியம்புவோம் தில்லை [தன்னில்
பன்னுகோ வைசிய னுகிப் பாலக னுதித்து மேலும்
நன்னிய செட்டுச் செய்து நாடெலாங் கீர்த்தி யாகி
அன்னவன் வாழு நாளில் அறைகிறே மூழி தானே.

22. ஜாதகன் முற்பிறவியில் தில்லைமாநகரில் வைசிய குலத்தவனாகப் பிறந்து, நல்லிதமாக வியாபாரம் செய்து, நாடெல்லாம் புகழ் அடைந்து வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம்.

ஏழைகளது கணக்கில் மோசம்

23. ஏழைகள் தமக்கு மேதான் இவனுமே பொருளு மீந்து
வாழ்கின்ற நாளி லேதான் வந்தது கணக்கில் மோசம்
தாழ்வது செய்தா னப்போ சாற்றி னரவரே தாமும்
சூழவே ஜனனந் தோறும் சுதர்களுந் தோன்றி மாய.

23. இந்த ஜாதகன் ஏழைகளுக்குச் சிறிது பொருள் கொடுத்து வாங்கி வரும் காலத்தில், எழுதும் கணக்கில் மோசம் செய்தான். அந்தத் தவறை ஏழைகள் கண்டு சாபமிட்டனர். ஒவ்வொரு பிறப்பு தோறும் புத்திரர்கள் பிறந்து மாண்டு;

ஏழைகளின் சாபம்

24. வம்சமு நாச மென்றே மறைந்தனர் ஏழை தாமும்
தன்மையா யந்தி யத்தில் சந்ததி தோஷ மாகித்
துன்பங்கள் அதிகம் நேர்ந்து தொல்லுல கினிலே நிந்தை
செம்மையாய் நேர்ந்த தென்றும் செப்புவோ மிதுவல்
[லாமல்.

24. வம்சம் பெருகாமல் நாசமடையும் என்று சாபமிட்டனர் மனமுடைந்த ஏழைகள். அதேபோல் ஜாதகன் (முற் பிறவியில்) தன் கடைசிக் காலத்தில் புத்திர தோஷம் அடைந்து பூவுலகில் அவமானத்தை யடைந்தான் என்றும். இதுவன்றி வேறு ஒன்றும் கூறுகின்றோம்.

ஸர்ப்பத்தைக் கொன்ற தோஷம்

25. ஆலயந் தன்னி லேதான் அணுகிய நாகம் ஒன்று
சூலைய மாக வந்து தோன்றிற்று அதனைக் கண்டு
பாலக னடித்து விட்டான் பருகிற்று வந்தத் தோஷம்
சாலவே யிரண்டு தோஷம் தங்கிற்று அச்சென் மத்தில்.

25. ஒரு சமயம் கோவிலில் வாழும் ஸர்ப்பம் ஒன்று தெரிந்தது. அதைக் கண்டு ஜாதகன் அடித்துக் கொன்றுவிட்டான். அந்தத் தோஷம் இவனைப் பற்றிக்கொண்டது. ஆகவே இருவிதத் தோஷம் முற்பிறவியில் ஏற்பட்டது.

26. அந்திய காலம் தன்னில் அன்னங்கள் வெறுப்புண் டாகி
இந்தவாறு மன்னன் தானும் எமபதம் சேர்ந்த பின்பு
சந்ததம் சின்னுள் சென்று சதுர்மறை யோரா லேதான்
முந்தியே வரையப் பட்டு முயன்றவ னிவனே யென்றோம்.

26. தன் கடைசிக் காலத்தில் சாப்பாட்டில் வெறுப்பு ஏற்பட்டுப் பிறகு இறந்தான். பின்பு சின்னுட்கள் சென்றதும் நான்கு வேதங்கள் உணர்ந்த பிரமதேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன் என்று சொன்னேம்.

புத்திரன் ஜனிப்பதற்குரிய சாந்தி

27. இருவிதத் தோஷந் தானும் இலகிற்று இச்சென் மத்தில்
பெரும்புதல் வர்கள் தோஷம் பேசுவோம் கிரியை தானும்
அறைகுறோம் சாந்தி யொன்று அருணமா நகர்க்கு
[மேதான்
இருவரும் சென்று மேதான் ஈசனுக் கபிடே கித்து ;

27. இருவிதத் தோஷங்களாலும் இப்பிறவியில் தோன்றும் புத்திரர்கள் ஒருவரும் நிலையார். அந்தத் தோஷம் தீரச் சாந்தியொன்று கூறுகின்றோம். ஜாதகன் தன் மனைவியுடன் திருவண்ணுமலைக்குச் சென்று சிவபெருமானுக்கு அபிஷேகம் முதலியன செய்து ;

28. வில்வத்தால் அர்ச்சித் தேத்தி
விடம்புஷ்பம் கந்தத் தோடு
நல்லதோர் பொருளுஞ் சேர்த்து
நான்மறை யோர்க்கு மீந்து
அல்லலைப் பொறுத்தே னென்று
அவர்வாக்கால் ஆசீ ரேற்றி
இல்லறம் தன்னைச் சேர்ந்து
இயம்புவோ மேலுங் கேளே.

28. வில்வதளங்களால் அருச்சனை செய்து துதித்து சந்தனம் புஷ்பம் முதலியவைகளுடன் தட்சிணையும் சேர்த்து அந்தணர்களுக்குக் கொடுத்து அவர்களிடம் தீர விணையைச் சொல்லி அவர்கள் வாயால் 'குற்றம் பொறுத்தோம்' என்று சொல்லப்பட்டு ஆசீர்வாதங்களுடன் தன் சொந்த வீட்டையடைந்து, தாயே! மேலுங் கேளுங்கள்.

29. மண்டல மரசு சுற்றி மாதமோர் கார்த்தி கைக்கு
விண்டதோர் பரங்கட் கன்னம் விமலனு மளிப்பா ஞகில்
எண்டிசை தன்னில் புத்திரர் இலகிடும் தீர்க்க மாகத்
துண்டமாய்ச் செய்யா ஞகில் சுதர்களுந் தோஷ
[மென்றோம்.

29. ஒரு மண்டலம் அரச மரத்தை வலம் வந்து, ஒவ்வொரு கார்த்திகை தினத்தன்றும் முற்றும் துறந்த பரதேசிகட்கு ஜாதகன் அன்னம் அளித்தாலுலல், தீர்க்க ஆயுளுடையவனை புத்திரன் தோன்றுவான். செய்யாது அலட்சியமாக விருந்தால் புத்திர தோஷம் உண்டு என்றும்.

தாயின் வரலாறு

30. மாதுரு குணத்தை யாங்க ளறைகிறேம் சிவந்த மேனி
நீதிலாக் குணத்தா ளாகும் நீங்குக ளெண்ணு ளாகும்
பாதக மில்லா ளாகும் பஞ்சைகட் கன்ன மீவள்
மேதினில் நேத்திர தோஷ மேவிடு மென்று சொன்றேம்.

30. ஜாதகனுடைய தாயின் குணத்தைச் சொல்லுகின்றேம். சிவந்த உடலுடையவள். நீமையில்லாத குணமுள்ளவள். பிறருக்குத் துன்பம் செய்ய மனமில்லாதவள். நீய எண்ணங்களற்றவள். ஏழை களுக்கு அன்னமிடுபவள. கண்களில் சிறிது தோஷம் ஏற்படும் என்று கூறுகின்றேம்.

தாயின் குணங்களும் ,உடன்பிறப்பும்

31. அடக்கமு முடைய ளாகும்
அவளுநன் னடக்கை யுள்ளாள்
துடுக்கெனக் கூறு ளாகும்
சோம்பிடாள் காரி யத்தில்
மடக்கொடி துணைவர் தம்மை
யறைகிறே மாண்பா லொன்று
திடத்துடன் பெண்பா லவ்வார்
செப்பிறேங் கேளு மம்மா.

31. அடக்கமுடையவள். நல்வழியே நடப்பவள். துடுக்காகப் பேசாதவள். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவள். ஜாதக னுடைய தாயின் உடன்பிறப்பைப் பற்றிச் சொல்லுகின்றேம. சகோ தரன் ஒருவனும் திடமான சகோதரி ஒருத்தியும் உண்டு என்று சொல்லுகிறேம். தாயே! கேளும்.

நேத்ர தோஷத்திற்குரிய கிரகநிலை

32. என்னகா ரணத்தி னலே இவளுக்கு நேத்திர தோஷம்
வந்ததைச் சொல்லு மென்ன [1]மாதுரு தானத் துக்குப்
பன்னிய ரண்டி லேதான் பானுவும் ராகு கூடி
முன்னமே இருப்ப தாலே மொழிந்திட்டோம் விழிக்கு
[ஊனம்.

1. இலக்கினத்துக்கு நான்காமிடம். ரண்டு, துலாம்.

32. என்ன காரணத்தால் ஜாதகனின் தாய்க்கு நேத்திர தோஷம் ஏற்பட்டது என்று வினவ, (முனிவர் கூறுகின்றார்) மாதுருஸ்தானத்துக்கு (நான்காமிடத்துக்கு) இரண்டில்[1] சூரியனும் ராகுவும் சேர்ந்து இருப்பதால் தாய்க்கு நேத்திர தோஷம் ஏற்பட்டது என்றோம்.

கிரகநிலை

33. மதிக்குமே விரயம் தன்னை மந்தனும் பார்த்த தாலே
விதிக்கிறே முன்னூழ் தன்னில் வித்தகி நேத்திர தோஷம்
அதுதோஷம் சொல்லு மென்ன.....
அறைகிறேரும் கேளு மம்மா..... .....

33. சந்திரனிருக்குமிடத்துக்குப் பன்னிரண்டாம் இடத்தைச் சனி பார்த்ததால் ஜாதகனின் தாய்க்கு முற்பிறவியில் செய்த தீவினையால் நேத்திர தோஷம் ஏற்பட்டது. அந்தத் தோஷத்தைச் சொல்லுங்கள் என..... .....கூறுகின்றோம். கேளுங்கள், தாயே!

ஜாதகனுடைய தாயின் முற்பிறவி

34. இன்னவள் முன்னன் மத்தை யிசைக்கின்றோரும்
[தணிகை கீழ்ப்பால்
பன்னிய ரெட்டி வம்சம் பாவையு முதித்து மேலும்
சின்னவ ளிருக்கும் போது செய்ததோர் வினையைக்
[கேளாய்
உன்னதத் தவளை தன்னை உத்தமி பிடித்து மேதான்;

34. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருத்தணிக்குக் கிழக்கில் ரெட்டியின் மரபில் பிறந்தாள். சிறியவளாக இருக்கும்போது செய்த வினையைக் கேளுங்கள். ஒரு தவளையை இப் பெண் பிடித்து;

35. நேத்திரம் தன்னைக் குத்தி
நிமலியும் தீபம் ஏத்தி
சூத்திரம் செய்தா லென்றோரும்
தோன்றிற்று அந்தத் தோஷம்
சாத்திரை மந்தி யத்தில்
தன்நேத்திரம் தோஷ முண்டாய்க்
கூற்றன்றன் பதிக்குச் சென்று
குறைதலைக் கஞ்சன் தன்னால்;

35. அத்தவளையின் கண்களைக் குச்சியால் குத்தி விளக்கு ஏற்றி குடலைக் கயிறுபோல் திரித்து விளையாடினாள். அந்தத் தோஷம்

1. இரண்டாமிடம் = நேத்திரஸ்தானம்

ஏற்பட்டது. அப்பிறவியில் கடைசியில் தன் கண்களுக்கு ஊனமுண்டாகி, பிறகு இறந்தாள். மீண்டும் பிரமதேவனுல் ;

சாந்தி இல்லை

36. வரையவே இக்கு லத்தில் வந்தவ ளிவளே யென்றேரும்
அறைகிறே மிச்சென் மத்தில் அவள்நேத்திர தோஷ [முண்டு
உரைப்பீர்கள் அதற்குச் சாந்தி உணரவே மாட்டோ [மம்மா
மறுபிறப் பதனை யாங்கள் வரைகிறே மிவளுக் கேதான்.

36. படைக்கப்பட்டு இந்தக் குலத்தில் ஜாதகனின் தாயாகப் பிறந்தாள். இப்பிறவியில் அவளுக்குக் கண்பார்வை தோஷம் உண்டு என்று கூறுகின்றேரும். அது நீரச் சாந்தி சொல்லுங்கள். சாந்தி கூறவேமாட்டோம். தாயே! அவளுடைய மறுபிறப்பை நாங்கள் கூறுகின்றேரும்.

தாயின் மறுபிறவி உயரக்காரணம்

37. பின்ஜன்மம் தில்லை தன்னில்
பிராமணக் குலமு திப்பாள்
அன்னையுங் கேட்க லுற்றாள்
அவளுமே விச்சென் மத்தில்
என்னபுண் ணியங்கள் செய்தா
ளியம்புவீ ரென்று கேட்க
மன்னிய இச்சென் மத்தில்
மனமது தர்ம சிந்தை ;

37. தாயின் மறுபிறவியில் தில்லைமாநகரில் அந்தண குலத்தில் தோன்றுவாள். பார்வதிதேவி கேட்கலானுள். ஜாதகனின் தாய் இப்பிறவியில் செய்த நற்காரியங்கள் என்னவென்று சொல்லுங்கள். இப்பிறவியில் தர்மசிந்தை யுள்ளவளாயும் ;

தந்தையின் முற்பிறவி

38. இருப்பதால் மறுஜன் மத்தில்
இலகுவாள் பிரம்ம சேயாய்
உரைக்கிறேரும் தந்தைக் கேதான்
உரைத்திடு முன்ஜன் மத்தைத்
திருபரங் குன்றத் தில்தான்
செங்குந்தர் மரபில் வந்து
பெரும்பொருள் அதிகம் பெற்றுப்
பலமுள குடும்பி யாகி ;

38. இருப்பதால் மறுபிறவியில் அந்தண குலத்தவளாகப் பிறப் பாள் என்று சொல்லுகின்றோம். ஜாதகனுடைய தந்தையின் முற் பிறவியைச் சொல்லுங்கள். திருப்பரங்குன்றத்தில் செங்குந்தர் மரபில் தோன்றி பெரும் செல்வவானாக இருந்து செயல் உள்ள குடும்பத் தனாகி ;

நற்செயல்கள்

39. அறுமுகற் கன்பு பூண்டு அழகுப்பூஞ் சோலை வைத்துத் திருப்பணி யதிகம் செய்து சேதுவில் தீர்த்தம் தோய்ந்து குறைவிலா சிலவே தீர்த்தம் கொண்டவ னுள்ளூர்
[சென்று ;
சரிவரச் சிலநாள் சென்று தந்தையு மரண மானான்.

39. ஆறுமுகக் கடவுளுக்குப் பக்தி செய்து அவருடைய சேவைக் காகப் புஷ்பத்தோட்டம் வைத்து தெய்வத்திற்குத் திருப்பணிகள் அதிகம் செய்து சேதுவிற்குச் சென்று புண்ணிய தீர்த்தத்தில் நீராடி னான். அதுவும் தவிர, வேறு சில புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, உள்ளூர்சென்று சின்னாட்கள் சுகமாக இருந்து விட்டு மரணமானான்.

40. வந்தவ னிவனின் தந்தை வறைகிரு ளம்மன் தாமும் முந்துசெங் குந்த வம்ச முயன்றவ னிச்சென் மத்தில் கங்கைதன் குலமு தித்த காரணம் சொல்லு மென்ன இந்தவன் சேது தீர்த்தம் இலகின தாலே தானும் ;

40. (மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு)ப் பிறந்தவன் ஜாதகனுடைய தந்தை என்றார். பார்வதிதேவி கேட்கலானாள். சென்ற பிறவியில் செங்குந்த மரபில் பிறந்தவன், இப்பிறவியில் வேளாளர் குலத்தில் பிறந்த காரணங்களைக் கூறுங்கள் என்று வினவ, ஜாதகனுடைய தந்தை சேது தீர்த்தம் ஆடியதால் ;

குலம் உயர்வானது

41. கங்கையின் புண்ணி யந்தான் காராள குலமு தித்தான் மங்கையே யிவன்பின் ஜன்மம் விரிஞ்சிநா டதற்கு
[மேல்பால்
பொங்கிய பேரூர் தன்னில் பிறப்பனு மிக்கு லத்தில் இங்கிவர் சொல்லும் போது ஈச்வரி கேட்க லுற்றாள்.

41. ஏற்பட்ட புண்ணியத்தால் (கங்கை குலம்) வேளாள குலத் தில் பிறந்தான். ஜாதகனின் தந்தை மறுபிறவியில் விரிஞ்சி நாட்டிற்கு மேற்கில் உள்ள ஒரு பெரிய ஊரில் இதே குலத்தில் பிறப்பான் என்று (முனிவர்கள் சொல்லும்போது) பார்வதிதேவி கேட்கலானாள்.

சூதாட்டம்

42. இச்சென்மம் நல்லோ ஞக இசைத்துளீர் பின்ஜன் மங்கள்
மிச்சமாய்ச் செல்லா மல்தான் இக்குல முதிப்ப தென்ன
கச்சணி மாதே சொல்வேன் காளாயு மிச்சென் மத்தில்
நச்சுபோல் சூது மேலே நாயகன் விருப்பங் கொண்டு ;

42. இப்பிறவியில் நல்லவனுக வாழ்ந்து வருவான் என்று கூறி னீர்களே. இனி ஏற்படும் மறுபிறவியில் உயர்ந்த குலத்தில் பிறவா மல் இதே குலத்தில் பிறக்குங் காரணங்களைச் சொல்லுங்கள். கச்சை யணிகின்ற தேவியே ! சொல்லுகின்றேம். ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் விஷம்போல் கொடிய சூதாட்டத்தில் விருப்பங் கொண்டு ;

43. அனுஷ்டானம் சிலது வேளை அவனுமே மறுத்த தாலும்
இனமதில் கலகம் செய்து இருப்பதால் மறுபி றப்புத்
தனையனு மிக்கு லத்தில் சாருவான் குடும்பி யாகி
மனையிலா வாழ்வா ஞகும் வித்தகி மேலும் கேளே.

43 அனுஷ்டானம் செய்யாமல் (தினந்தோறும் செய்ய வேண் டிய கடமைகளை) சிற்சில சமயங்களில் மறுத்துவிட்டதாலும் உற வினர்களுக்குள் கலகம் விளைவித்து வந்ததாலும் மறுபிறப்பில் இதே குலத்தில் பிறப்பான். பிறந்து வீடு இல்லாமல் வாழ்ந்து வருவான். தாயே ! கேளுங்கள்.

தாய் தந்தையரது மரணகாலம்

44. இவர்கள்தம் காலம் தன்னை இயம்புவோ மூப்பா
[னெட்டில்
அவனியில் மகர மாதம் ஆனதால் தந்தை வீழ்வன்
நவனியில் அதற்கு மேலாய் நாற்பத்து ஓராண் டில்தான்
கனமுடன் தனுசு மாதம் காதலி வீழ்வா ளென்றேம்.

44. ஜாதகனுடைய தாய் தந்தையரின் மரண காலத்தைக் கூறுகின்றேம். இவனது முப்பத்தெட்டாம் வயதில் தை மாதத்தில் தந்தை இறந்து விடுவான். அதற்குப் பிறகு ஜாதகனுடைய நாற்பத் தொன்றும் வயதில் மார்கழி மாதத்தில் தாய் மரணமடைவாள் என்று கூறுகின்றேம்.

ஜாதகனது மரணகாலம்

45. ஜாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபா னேழில்
மேதினில் [1]கூனி மாதம் வளர்பிறை துவாதசி தன்னில்
போதவே யிரவு காலம் பிரிந்திடு முடலம் தானும்
ஓதுவேன் பின்ஜன் மத்தை உத்தமி கேட்டி டாயே.

1. பங்குனி

45. ஜாதகனுடைய மரண காலத்தைக் கூறுகின்றேம். அவனுடைய அறுபத்தேழாம் வயதில் பங்குனி மாதத்தில் வளர்பிறை துவாதசி திதி இரவில் மரணமடைவான். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனது மறுபிறவி

46. மறுஜன்மம் வெ.....தி யூரில் மறைக்குல முதித்து [மேதான்
பெருமையா யன்னிய பாஷை பெற்றுமே வரசர் பக்கல்
திறமையாய் ஜீவிப் பானும் ஜகமதில் கீர்த்தி யேற்பன்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்மணி மேலுங் கேளே.

46. ஜாதகனுடைய மறுபிறவியில்.....ஊரில் அந்தண குலத்தில் பிறந்து அன்னிய பாஷையில் தேர்ச்சி பெற்று அரசாங்க உத்தியோகம் ஏற்றுத் திறமையுடன் ஜீவித்து வருவான். உலகில் மிகுந்த புகழை அடைவான். ஆறுமுகக் கடவுளைப்பெற்ற அம்பிகையே! கேளுங்கள்.

ஜாதகனது யோகச்செய்தி

47. ஜாதகன் யோகச் செய்தி சாற்றுவோம் சுகமு முள்ளான்
மேதினில் கீர்த்தி கொள்வன் விளைபுலம் விருத்தி [செய்வன்
பாதக மில்லா நெஞ்சன் பந்துக்கு மேலாய் வாழ்வன்
மாதவர் தமைத்து திப்ப னரசர்கள் பேட்டி பூண்பன்.

47. ஜாதகனுடைய யோகச் செய்திகளைக் கூறுகின்றேம். உலகில் சுகமாயிருப்பவன். புகழுடன் ஜீவித்து வருவான். விளை நிலங்களைப் பெருக்குவான். தீய எண்ணங்களில்லாத மனத்தன். உறவினர்கட்கு மேன்மையாக வாழ்ந்து வருவான். மிகுந்த தவம் இயற்றியவர்களை (திருமாலை)த் துதி செய்து வருவான். அரசர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவான்.

48. சுகமுளான் சல்லிய மில்லான்
சுவாமிமேல் பக்தி பூண்பான்
வகையான குடும்ப முள்ளான்
வண்டிவா கனமு முள்ளான்
பகையிலான் பொருள்கள் சேர்ப்பான்
பஞ்சைகட் குதவி செய்வான்
ஜகமதில் நல்லோ ருகச்
செப்புவா ரிவனை யென்றேம்.

48. சுகமுள்ளவன். கடன் உபத்திரவம் இல்லாதவன். தெய்வ பக்தி யுள்ளவன். செயலான குடும்பத்தை அடைவான். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். விரோதிகள் அற்றவன். பொருள்களைச் சேர்ப்பான். ஏழைகட்கு உதவி புரிவான். இவனை, உலகில் நல்லவன் என்று எல்லோரும் கூறுவார்கள்.

ஜனனகாலதசை

49. பாலகன் ஜனிக்கும் காலம் பரிதிபின் தசையி லேதான்
கோலமா யிருப்பு ஆண்டு கூறுவோம் நான்க தாகும்
ஞாலமேல் மாத மொன்பான் நாட்டுவோம் பலனை
[யாங்கள்
சிலமும் சுபமு முண்டு சோதரம் விருத்தி யாகும்.

49. ஜாதகனது ஜனன காலத்தில் சூரிய மகாதசையில் சென்றது போக இருப்பு நான்கு வருடங்களும் ஒன்பது மாதங்களுமாம். அக் காலத்திய பலன்களைச் சொல்லுகின்றோம். வீட்டில் சுபகாரியங்கள் நடைபெறும். சகோதர விருத்தி ஏற்படும்.

50. பந்துவில் சூத முண்டு பருகின காலி சேதம்
எந்தையே ஜாத கர்க்கு இலகிடுங் கண்டம் போலே
வந்திடும் ரோகம் தானும் அவன்தந்தை பிணியு முண்டு
சந்ததம் பின்பா கத்தில் சாற்றுவோம் விவர மாக.

50. பந்துக்களுக்கு அசுபம் நிகழும். இருக்கின்ற கால்நடை கட்குச் சேதம். தாயே! ஜாதகனுக்கு ஒரு கொடிய நோய் கண்டம் போல் வந்து சேரும். ஜாதகனுடைய தந்தைக்கும் நோய் வரும். மற்ற விஷயங்களைப் பின் பாகத்தில் சொல்லுகின்றோம்.

பாகப்பிரிவினை

51. அத்திரி முதலா யுள்ள அறுமுனி யிவ்வா றுகூற
வித்தகர் புயண்டர் தாமும் விளம்புவார் சங்கை யொன்று
சித்தசன் குடும்பத் துக்குச் சிலுகது எந்தக் காலம்
சுத்தமாய்ச் சொல்லு மென்ன சொல்லுவார் முனிவர்
[தாமே.

51. அத்திரி முதலாகவுள்ள முனிவர் அறுவர் இவ்விதம் சொல்ல, புஜண்ட மாமுனிவர் ஒரு சந்தேகத்தைக் கூறுகிறார். ஜாதகனது குடும்பத்துக்கு எந்தக் காலத்தில் சிதைவு (பாகப்பிரிவினை) ஏற்படும்? திண்ணமாகக் கூறுங்கள், முனிவரே! என்று வினவ, முனிவர் சொல்லுகின்றார்.

52. முப்பத்து எட்டாண் டில்தான் எய்திடும் குடும்பம் வேறு
செப்புவோம் அந்தக் காலம் சிந்தையில் கலக்க மின்றித்
தப்பித மில்லா மல்தான் சாற்றுவோ மிவனுக் கேதான்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுவே.

52. ஜாதகனுடைய முப்பத்தெட்டாம் வயதில் குடும்பம் வேறு கும். அக்காலத்தில் மனத்தில் ஒருவருக்கும் கலக்கம் சண்டை இவை கள் நேராமல் நேர்மையுடன் பாகப்பிரிவினை ஏற்படும். கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

ஜாதகம் 3

1. ஆதவன் புகர்மால் ராகு அணுகிட [1]சாடி தன்னில்
வேதியன் [2]வருடை யாக மிக்கசேய் தேள தாகப்
பாதியு மதியும் கன்னி பரிதியின் மைந்தன் வண்டி
நீதியாய் ஜன்மம் சிம்மம் நிகழ்த்துவீர் பலனைத் தானே ;

1. சூரியன் சுக்கிரன் புதன் ராகு கும்பத்திலும், குரு மேஷத்திலும், செவ்வாய் விருச்சிகத்திலும், சந்திரன் கன்னியிலும், சனி கடகத்திலும், கேது சிம்மத்திலும் இருக்க, ஜன்மம் சிம்ம லக்கினமாதலால்; ஏற்படும் பலனைக் கூறுங்கள் ;

கிரகநிலை

	குரு		
சூரியன் சுக்கிரன் புதன் ராகு	இராசி சக்கரம்		சனி
			லக்கினம் கேது
	செவ்வாய்		சந்திரன்

ஜாதகனின் வீடு

2. உத்தமி கேட்கும் போது உரைக்கிறார் புயண்டர் தாமும்
சித்தஜ னணம் ஜன்மம் ஜனித்தயில் கீழ்மேல் வீதி
உத்தரம் வாடை யாகும் ஓடையும் வயல்கள் தெற்கில்
பத்தினி மாரி மேற்கில் பகருவோ மாயோன் கீழ்ப்பால்.

2. என்று பார்வதி தேவி கேட்கும்போது புஜண்ட முனிவர் கூறுகின்றார். இவன் ஆண்மகனைப் பிறந்தவன். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு வரிசையிலுள்ளது. வீட்டுக்குத் தெற்கில் வயல்களும் ஓர் ஓடையும் உள்ளன. மாரியம்மன் கோவில் மேற்குப் பக்கத்தில் இருக்கும். திருமாலின் ஆலயம் கிழக்கில் உள்ளது.

---

1. கும்பராசி
2. மேஷம்

3. இதுவன்றி வடகீழ் தன்னி லிலகிடு மீசன் காளி
துதிசெயும் கணேசன் மாரி சொல்லுவோம் வடமேல்
[திக்கில்
அத்தியே அடையா ளத்துள் அணுகிய சிற்றூர் தன்னி
லதிபனும் கங்கை சேயாய் வருவனு மிவனே யென்றோம்.

3. இதுவல்லாமல் வடகிழக்குத் திசையில் சிவபெருமான் ஆலயமும் காளிகோயிலும் எல்லோராலும் துதி செய்யப்படும் விநாயகர் ஆலயமும் உள்ளன. வடமேற்குத் திக்கில் மற்றொரு மாரியம்மன் கோயில் இருக்கும். தாயே! இவ்வித அடையாளங்களுள்ள சிற்றூரில் இந்த ஜாதகன் வேளாள குலத்தவனுகப் பிறப்பான் என்று கூறுவோம்.

4. மாதுரு தந்தை யோகம் வரும்புத்திர களத்திர யோகம்
மேதினில் துணைவர் யோகம் விளங்கிஞ னிவனின் யோகம்
போதவே மூன்பின் ஜன்மம் புகலுவோ மிந்நூல் தன்னில்
தீதிலாச் சொல்லு கின்றேன் தேவியுன் னருளி னலே.

4. தாய் தந்தையர் பெரும் புத்திரர்கள் மனைவி இவர்களின் யோகத்தையும் சகோதர பாவம், ஜாதகனுடைய யோகம், மூற்பிறவி மறுபிறவி முதலியவற்றையும் இந்தச் சோதிட நூலில் தவறில்லாமல் உன் அருளால் சொல்லுகின்றோம். தேவியே!

தந்தையின் வரலாறு

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மெழுவ
[ராகும்
பந்தமா யாண்பால் காணும் பத்தினி மார்க ளென்றோம்
நொந்திடும் சிலவே தாமும் நுவலுவோம் பிதாகு
[ணத்தைச்
சந்ததம் சிவந்த மேனி சமதேகம் கபடு மில்லான்.

5. ஜாதகனுடைய தந்தையின் உடன் பிறந்தவர்களைக் கூறுகின்றோம். அவர் எழுவராவர். ஆனல் அவர்களில் சகோதரன் எவனும் இல்லை. எல்லோரும் சகோதரிகளே. அவர்களில் சிலர் இறப்பர். ஜாதகனின் தந்தையின் குணத்தைக் கூறுகின்றோம். சிவந்த உடலுடையவன். சமமான உடலமைப்புள்ளவன். கபடமில்லாதவன்.

6. அன்னங்கள் போட வல்லான் அவனுக்கு மாமி ரண்டு
தன்னிலே கிருஷி செய்வன் சன்மார்க்கன் வறுமை
[யில்லான்
பன்னியே பேச வல்லன் பந்துவு மெச்ச வாழ்வன்
முன்னமே ரோக முண்டு மூலநோ யுடைய னுமே.

6. ஏழைகட்கு அன்னம் அளிப்பவன். அவனுக்கு மனைவியர் (மாமியார்கள்) இருவர் என்று சொல்லுவோம். விவசாயம் செய்து வரு

வான். நல்வழி நடப்பவன். தரித்திரமில்லாதவன். பன்னிப் பன்னிப் பேசுபவன். தன் உறவினர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். முன்னதாகவே ரோகமுள்ளவன். மூலச்சூட்டு நோயுடையவன்.

7. காலிகள் விருத்தி யுள்ளான் காலாட்கள் சேர்ப்ப ஞகும்
சீலவான் பந்து சேர்ப்பன் ஜனவுப காரி முள்ளான்
ஞாலமேல் பொறுமை யுள்ளான் நாயகி விருப்பங்
[கொள்வன்
சாலவே யீகை யுள்ளான் சத்தியே மேலுங் கேளே.

7. கால் நடைகள் அதிகமுள்ளவன். பணியாட்களைச் சேர்ப்பான். நல்லொழுக்கமுள்ளவன். பந்துக்களை ஆதரிப்பான். ஜனங்களுக்கு உபகாரி. பொறுமையுடையவன். பெண்டாட்டிமீது பிரியமுள்ளவன். கொடையாளி. தாயே! மேலுங் கேளுங்கள்.

ஜாதகனது சகோதரபாவம்

8. இக்குண முடையோ னகி இவனுக்குத் தாரம் ரண்டில்
தொக்கவே யிளையாளுக்குத் தோன்றிய னிரண்டாம்
[ஜன்மம்
மிக்கவே துணைவர் தம்மை விளம்புவோ மூத்தோ னுண்டு
தக்கவே யிவனின் சேதி சாற்றுவோம் கேளு மம்மா.

8. இவ்விதமான குணங்களுள்ளவனுக்கு ஏற்பட்ட மனைவியர் இருவரில் இளைய மனைவிக்கு இரண்டாம் புத்திரனாக ஜாதகன் பிறந்தான். இவனுடைய சகோதர பாவத்தைச் சொல்லுகின்றோம். மூத்த சகோதரன் ஒருவனுண்டு. அவனுடைய செய்தியைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். தாயே!

ஜாதகனுடைய மூத்த சகோதரனது குணங்கள்

9. தீரமா நெஞ்சு முள்ளான் சிவந்திடு மேனி யாவன்
பாருகள் விருத்தி செய்வன் பகருவான் சிலேடை யாக
யாரையு முறவு கொள்வான் நற்கல்வி ஊகை சாலி
வீரியன் வெகுளி யென்றும் மேதினில் தியாகி யாவன்.

9. தைரியமுடைய நெஞ்சமுடையவன். சிவந்த நிறமுள்ளவன். விளைநிலங்களைப் பெருக்குவான். இருபொருள் படும்படி பேசுபவன். எவரிடத்திலும் நட்புக்கொள்ளுவான். கல்வியறிவுள்ளவன். ஊக முடையவன். வெகுளியான மனத்தன். தியாகமனப்பான்மையுள்ளவன் என்று சொல்லுவோம்.

10. சாத்வீகம் கொஞ்ச முண்டு கடவுள் மேல் பக்தி கொள்வன்
பாதக மில்லா ஞகும் பருத்ததோர் காபி யுள்ளான்
மேதினில் பித்த தேகி வீணப வாத முள்ளான்
சாதிப்பான் சிலவே சங்கை சத்தியே மேலுங் கேளே.

10. சாத்விகமானவன். தெய்வபக்தியுள்ளவன். தீய எண்ணங்களில்லாதவன். பெரிய நாபிப் பிரதேசங்களை யுடையவன். பித்த சரீரி. வீண் அபவாதங்களை யடைவான். சில சந்தேகங்களை நிவிர்த்தி செய்வான். தாயே! மேலுங் கேளுங்கள்.

சகோதரனுடைய களத்திரபாவம்

11. மனைவியு மொருத்தி யாகும் மதலைகள் மூன்று விருத்தி
சதமாகும் பெண்பால் ரண்டு சாராது ஆண்பா லுந்தான்
அனையவே வயது தீர்க்கம் அவனுமே ஒன்றாய் வாழ்வன்
இணையிலா இவன்தன் சேதி இயம்புவோம் கேளு மம்மா.

11. மனைவி ஒருத்தியே யாவள். மூன்று குழந்தைகள் தோன்றும். இரு பெண்கள் மாத்திரம் நிலையாயிருக்கும். மற்ற ஆண் குழந்தை நிலையா. நீண்ட வயதுள்ளவன். அவன் ஜாதகனுடன் ஒன்றுகவே வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய செய்திகளைக் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் குணங்கள்

12. முன்கோபம் பொறுமை யுண்டு முகமதில் வடுவு காணும்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பான் கட்டு [வார்த்தை
அன்னவன் தீர நெஞ்சம் அவன்காலி லூனம் காணும்
பன்னியே யுரைப்பா னுகும் பட்சபா தகமாய்ச் சொல்வன்.

12. முன்கோப முடையவன். பொறுமைப்படுபவன். அழகான முகத்தைப் பெற்றவன். (முகத்தில் வடு உள்ளவன்). தன்னுடைய வார்த்தைகளே மேன்மை யுள்ளவை என்று சாதிப்பான். வார்த்தைகளைப் புனைந்து பேசும் இயல்பினன். தைரியமுள்ள மனத்தினன். அவனுடைய காலில் சிறிது ஊனமுண்டு. பன்னிப் பன்னிப் பேசும் வழக்கமுள்ளவன். ஒருதலைப் பட்சமாகப் பேசுபவன்.

13. உண்டியும் சுகமாய்க் கொள்வன்
உண்மையா மனத்தா னுகும்
அண்டினோர்க் குதவி செய்வன்
ஆள்காரர் சேர்ப்பா னென்றோம்
துண்டனுங் குணத்த னுகும்
சொல்லுவோம் கண்டம் ரண்டு
துன்பமா யுயரத் தாலும்
சலத்தாலும் சுரத்தி னாலும்;

13. சுகமாய்ச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். உண்மையுள்ள மனத்தினன். தன்னைத் தேடிவந்தவர்கட்கு உபகாரி. பணியாட்கள்

உள்ளவன். கண்டித்துப்பேசும் குணமுள்ளவன். இருவிதமான கண்டம் நேரிடும். திதாக உயரத்தாலும் ஜலத்தாலும் சுரத்தினாலும்;

15. தத்துகள் நேரு மென்றேரும் சல்லிய மில்லா னுகும்
வித்தகன் கிருஷி செய்வன் விளைபுலம் விருத்தி செய்வன்
பத்தினி நேய னுகும் பஞ்சைமே லிரக்கம் கொள்வன்
நித்தியம் சில னுவன் ரோமங்கள் நீட்சி யுள்ளான்.

14. கண்டங்கள் ஏற்படும். கடன் உபத்திரவம் இல்லாதவன். ஜாதகன் விவசாயம் செய்து வருபவன். விளை நிலங்களைப் பெருக்குவான். தன் மனைவிக்குப் பிரியனுக இருப்பான். ஏழைகளின் மீது இரக்கம் கொள்ளுவான். நல்லொழுக்கம் உள்ளவன். நீண்ட ரோமங்களை யுடையவன்.

15. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவா ரம்மன் தாமும்
கனமுடன் முதல்தா யார்க்குக் காளைக ளுண்டோ [சொல்வாய்
அனையவே மதலை நான்கு அணுகிடும் சிலவே துன்பம்
இணையிலா ஆண்பா லொன்று எய்திடுந் தீர்க்க மாக.

15. முனிவர்கள் இங்ஙனம் சொல்லும்போது பார்வதிதேவி கேட்கின்றாள். ஜாதகனுடைய முதல் தாய்க்குப் புத்திரர்கள் உண்டோ? உண்டு. நான்கு குழந்தைகள் தோன்றும். அவைகளில் சில நஷ்டமாம். ஒரு புத்திரன் நீண்ட ஆயுள் உள்ளவனுக இருப்பான்.

ஜாதகனின் மூத்த சகோதரனது குணங்கள்

16. மதலைக ளில்லா னுகும் மனைவிக ளிரண்டே யாகும்
பதியது வேறூர்ச் செல்வன் பாக்கிய முடைய னுகும்
நதிபல தீர்த்தம் தோய்வன் நாதனர் பத்தி கொள்வன்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

16. புத்திரபாக்கிய மில்லாதவன். இருமனைவியரை உடையவன். வேறு வீட்டுற்குச் சென்று வசித்து வருவான். பாக்கியசாலி. பற்பல புண்ணிய நதிகளில் நீராடுவான். சிவபெருமான் மீது பக்தியுள்ளவன். கதியற்றவரை ஆதரித்து வரும் தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் திருமணக்காலம்

17. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மிருபான் [மூன்றில்
மேதினில் உத்த ரத்தில் வித்தகி வருவா ளாகும்
போதவே யிருநி றத்தாள் புகலுமூன் கோபி யாவள்
நீதியாய்ப் பித்த வாயு நேர்ந்திடு மிவளுக் கேதான்.

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
6901a

17. ஜாதகனுடைய மணத்தின் காலத்தைச் சொல்லுகின்றேரும். இருபத்து மூன்றும் வயதில் வடக்குத்திக்கிலிருந்து மனைவி வருவாள் என்றேரும். அவள் கருமையும் செம்மையும் கலந்த நிறமுடையவள். கூறுவதற்கு முன் கோபங்கொள்ளுவாள். பித்தவாயுரோகமுடைய சரீர முள்ளவள்.

மனைவியினது குணங்கள்

18. மனவர்மம் கொஞ்ச முண்டு வரனுக்கு நேய ளவள்
இனத்துக்கு நல்லோ ளாவ ளின்பமாய் வார்த்தை
[சொல்வள்
வினையிலா வடக்க முள்ளாள் மேதினிநன் னடக்கை
[யுண்டு
குணமது இரண்டு மாகும் கூறுவோ மேலுங் கேளே.

18. மனத்தில் வர்மம் சிறிதுடையவள் தன் கணவனுக்குப் பிரியமானவள். தன் சுற்றத்தாருக்கு நல்லவள். தீமையில்லாத அடக்கமான குணங்கள் உள்ளவள். நன்னடத்தையுடையவள். இரு விதமான குணங்கள் உள்ளவள். மேலும் சொல்லுகின்றேரும். கேளுங்கள்.

புத்திரபாவம்

19. அவனுக்குப் புத்திர பாவம அறைகிறே மாண்பா
[லொன்று
நவனியில் கன்னி மூன்று நான்குமே தீர்க்க மென்றேரும்
பவமுள மற்ற வெல்லாம் பருகாவே யென்று சொன்னேம்
சிவன்தனைப் பூசை செய்யும் தேவியே கேட்டி டாயே.

19. ஜாதகனது புத்திரபாவத்தைச் சொல்லுகின்றேரும். ஒரு புத்திரனும் மூன்று புத்திரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். பிறக்கும் மற்ற குழந்தைகள் நிலையா என்று சொல்லு வோம். சிவபெருமானுக்குப் பூசை செய்யும் தேவியே! கேளுங்கள்.

தாயின் வரலாறு

20. மாதுரு குணத்தை யாங்க ளறைகிறேரும் சிவந்த மேனி
மேதினில் யோக சாலி வித்தகி பொறுமை யுள்ளாள்
தீதான நிந்தை யுள்ளாள் ஜனஉப காரம் செய்வள்
சூதிலாள் வாத தேகி செப்புவோ மேலுங் கேளே.

20. ஜாதகனுடைய தாயின் குணத்தை நாங்கள் கூறுகின்றேரும். சிவந்த உடலுள்ளவள். அதிருஷ்டசாலி. பொறுமையுடையவள். கெட்ட பழியுள்ளவள். ஜனங்களுக்கு உபகாரி. சூதில்லாதவள். வாயு ரோகமுடைய சரீரத்தினள். மேலுங் கூறுகின்றேரும். கேளுங்கள்.

தாயின் சகோதர பாவம்

21. அவளுடைத் துணைவர் தம்மை அறைகிறே மீரஞ் சாகும்
நவனியில் சிலவே சேதம் நாயக னெருவன் தீர்க்கம்
பவமுள குடும்பம் தானும் பாரினி லலைச்ச லாகும்
இவனுமே பிறந்த பின்பு இளம்பிறை போல யோகம்.

21. ஜாதகனுடைய தாயின் சகோதரர்களைப்பற்றிக் கூறுகின்றோம். அவர் பதின்மர் ஆவார். அவர்களில் சிலர் இலையார். ஒரு சகோதரன் நீண்ட ஆயுள் உடையவன். குடும்பம் மிக்க துன்பத்தையடையும். ஒருவருக்கும் சுகமில்லை. ஜாதகன் பிறந்த பிறகு வளர்பிறைச் சந்திரன்போல் யோக முண்டாகும்.

22. வந்திடு மென்று சொன்னேம் மாதரு தமக்கு மேதான்
சொன்னதோர் மாதர் பூர்வம் சொல்லுவோம் [கேளு மம்மா
சந்ததம் முன்பு கீழ்ப்பால் சாற்றிய பேரூர் தன்னில்
பந்தமாய்ச் சூத்திர வம்சம் பாவையு முதித்தா ளென்றோம்.

22. வரும் என்று சொன்னேம். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். தாயே! கீழே கூறிய ஊருக்குக் கிழக்கில் உள்ள ஒரு பெரிய ஊரில் நான்காம் வருணத்தவளாகப் பிறந்தாள் என்றோம்.

தாயின் முற்பிறவி

23. புத்திர ருள்ளா ளாகிப் பூஷண மதிக முண்டாய்ப்
பத்தியு முள்ளா ளாகிப் பஞ்சைகட் கன்ன மீந்து
வித்தகி தலங்கள் சென்று மேவிய தீர்த்தம் தோய்ந்து
சித்தமா யால யத்தில் தீபங்கள் வைத்தா ளென்றோம்.

23. புத்திரர்களை யடைந்து அதிகமான ஆபரணங்களைப் பெற்று பகதியுள்ளவளாயிருந்து ஏழைகளுக்கு அன்னமளித்து வந்து பற்பல புண்ணியதலங்களுக்குச் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் நீராடித் தவறாமல் ஆலயத்தில் திருவிளக்குக் கைங்கர்யம் செய்துவந்தாள் என்றோம்.

விளக்கெண்ணெயைத் தீபத்துக்கு விட்டது

24. அந்ததோர் காலந் தன்னில் அறைந்தன மூழி தானும்
இந்தவார் மாது தானும் இயல்முத்து எண்ணெய் கொண்டு
முந்திய தீபம் வைத்தாள் மூண்டது வந்தத் தோஷம்
சந்ததம் வரனின் முன்னே சத்தியு மாண்டா ளென்றோம்.

24. அந்தக் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். தீப கைங்கர்யம் செய்த காலத்தில் விளக்கெண்ணெயால் தீபம்

ஏற்றிவைத்தாள். அதுவும் ஒரு தோஷமாயிற்று அவளும் தன் கண வனுக்கு முன்பாகவே மரணமடைந்தாள் என்றேரும்.

25. பிரமனுல் வரையப் பட்டுப்
பிறந்தன ளிவளே யென்றேரும்
அறைகிறேரு மிச்சென் மத்தில்
அவள்வரன் சுகங்கு றைச்சல்
விரைவினி லிரண்டாங் தார
மேவினு ளிவளே யென்றேரும்
உரமுட னிவள்பின் ஜன்மம்
உரைக்கிறேரும் கேளு மம்மா.

25. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவள் ஜாதக னுடைய தாய் என்று சொன்னேம். இப்பிறவியில் அவளுடைய கண வனுக்கு உடல் நலக் குறைவேற்பட்டது. இவளே இரண்டாம் பார்யை யாக மணந்தான் என்றேரும். இவள் மறுபிறப்பு வரலாற்றைக் கூறு கின்றேரும். கேளுங்கள். தாயே!

தாயின் மறுபிறவி

26. வேதங்கள் மலைக்குக் கீழ்ப்பால் விளங்கிய போரூர்
[தன்னில்
சூதான வைசிய வம்சம் சுந்தரி யுதிப்ப ளாகும்
பாதக மில்லா ளாகும் பரங்கட்கு அன்ன மீவள்
மாதவர் துதிக்கா நின்ற மங்கையே மேலுங் கேளே.

26. வேதகிரிக்குக் கிழக்கில் (திருக்கழுக்குன்றம்) உள்ள திருப் போரூரில் சூதுகள் செய்யும் வைசிய குலத்தவளாகப் பிறப்பாள் என்று சொல்வோம். தீமைகள் இல்லாதவள். பரதேசிகட்கு அன்னமளிப் பவள். தவம் செய்பவர் துதிக்கும் தாயே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

27. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் காஞ்சி
[மேல்பால்
வந்ததோர் சிற்றூர் தன்னில் வணிகர்தங் குலமு தித்துச்
சந்ததம் சேலை செய்து தனமது வுள்ளா ஞகிப்
பந்தமாய் மனைவி மைந்தர் பாரினி லுள்ளா ஞனுன்;

27. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின் றேரும். காஞ்சிபுரத்துக்கு மேற்கில் உள்ள ஒரு சிற்றூரில் வணிகர் குலத்தில் பிறந்து நெசவுத்தொழில் புரிந்து வந்து மிக்க செல்வவானுக மனைவி மக்களையுமடைந்து வாழ்ந்து வந்தான்.

தீவினை

28. வந்த வூழ் தன்னைச் சொல்வே னேழையின் மணத்துக்
[காகச்
சொந்தமங் கிலியந் தானம் செய்துமே தருவா யென்ன
இந்தவார் மன்னன் தானும் ஈகுவே னென்று சொல்லி
அந்திய காலம் தன்னில் அவனுமே இல்லை யென்றான்.

28. அப்போது ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். ஓர் ஏழை கல்யாணத்துக்காக திருமங்கல்யம் (தானமாக) செய்து கொடுக்கக் கேட்டபோது இவரும் தருவேன் என்று ஒப்புக்கொண்டு கடைசிக் காலத்தில் முடியாது என்று சொல்லிவிட்டார்.

ஏழையின் சாபம்

29. பின்பவர் வேறு காலி பெற்றுமே மணமு டித்தார்
துன்பமா யந்தத் தோஷம் சுதனையே பற்றி னத்தால்
இருந்தோர் ஜன்மம் தன்னி லிலகிற்று அந்தத் தோஷம்
சந்தத மிரண்டு மாது சாற்றினே மிவனுக் கேதான்.

29. ஏழைகள் வேறு ஒரு திருமங்கல்யம் வாங்கி மணத்தை முடித்துவிட்டனர். இல்லையென்றதால் ஜாதகனின் தந்தைக்குத் தோஷமாயிற்று. அந்தத் தோஷம் இப்பிறவியில் தொடர்ந்தது. அதனால் இரு மனைவியர் ஏற்பட்டனர் என்று கூறுகின்றோம்.

தந்தையின் மறுபிறவியும் ஜாதகனின் முற்பிறவியும்

30. மறுஜன்மம் விருஞ்சி மேல்பால் மன்னர்தங் குலமு
[தித்துப்
பெருமையாய் வாழ்வா னுகும் பேசுவோம் ஜாத கர்க்கு
அறைகிறோம் பூர்வ ஜன்மம் ஆலங்கா டதனி லேதான்
தெரியவே கௌரி வம்சம் செல்வனு முதித்தா
[னென்றோம்.

30. மறுபிறவியில் விரிஞ்சி நாட்டிற்கு மேற்குப் பக்கத்தில் அரச குலத்தில் பிறந்து பெருமையுடன் வாழ்ந்து வருவான் என்றோம். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருவாலங் காட்டில் கௌரீகர் வம்சத்தில் பிறந்தவன் என்று கூறுகிறோம்.

31. உதித்துமே அரசர் பக்கல் உயரதி காரம் பெற்றுச்
சதியிலா மனைவி மைந்தர் தன்பந்து மேலாய் வாழ்ந்து
பதியினில் திருவு மூண்டாய்ப் பலருக்கும் நல்லோ னுகி
விதியினால் மரண மாகி விளங்கினு னிவனே யென்றோம்.

31. பிறந்து அரசாங்க உத்தியோகம் ஏற்று அதிகாரம் உடைய வனுகத் தீதுகளில்லாத மனைவி மக்களோடைந்து தன் சுற்றத்தாருக்கு

மேலாக வாழ்ந்து வந்தான். இவன் வீட்டில் இலக்குமி வாசம் செய்தாள். எல்லோருக்கும் நல்லவனாக வாழ்ந்து விதி வசத்தால் மரணமடைந்து பிறகு இப்பிறவியில் பிறந்தவன் ஜாதகன் என்றோம்.

ஜாதகனது மறுபிறவி

32. பின்ஜன்மம் காஞ்சி தன்னில் பலமுள்ள வைசிய வம்சம்
தன்னிலே யுதித்து மேலும் தானவன் செட்டுச் செய்து
அன்னவன் கீர்த்தி மானுய் யாவர்க்கு நல்லோ னாகிப்
பின்னமில் லாமல் வாழ்வன் பார்வதி கேட்டி டாயே.

32. ஜாதகன் மறுபிறவியில் காஞ்சீபுரத்தில் செல்வாக்குள்ள வைசிய குலமொன்றில் பிறந்து வியாபாரம் செய்து வந்து புகழடைந்து எல்லோருக்கும் நல்லவனாகித் தீங்குகளில்லாமல் வாழ்ந்து வருவான். பார்வதி தேவியே! கேளுங்கள்.

தாய்தந்தையரின் மரணகாலம்

33. தந்தையின் மரண காலம் சாற்றுவோ மிரண்டா மாண்டில்
பிந்திய மாதுர் காலம் பேசுவோம் நாற்பான் மூன்றில்
சந்ததம் கண்டம் நேரும் ஜாதகன் தனக்கு மேதான்
எந்தையே சொல்லு கின்றேன் ஈச்வரி கேட்டி டாயே;

33. ஜாதகனுடைய தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகனின் இரண்டாம் வயதில் தந்தைக்கு மரணம் நேரிடும். பிறகு தாயின் மரணம் நாற்பத்துமூன்றும் வயதில் ஏற்படும் என்று சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனது மரணகாலம்

34. அறுபத்து எட்டு ஆண்டில் அன்புள மேட மாதம்
குறைபக்கம் சதுர்த்தி தன்னில் கூறிய சூலை யாலே
திருமக னுடலம் வாடும் செப்புவோ மிதற்கு மேலே
உரைக்கிறோம் யோகச் சேதி உத்தமி மேலுங் கேளே.

34. ஜாதகன் தனது அறுபத்தெட்டாம் வயதில் சித்திரை மாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தியில் வயிற்றுநோயால் மரணம் அடைவான். இதற்குமேல் யோகச்சேதியைக் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள்.

35. தந்தையி னஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
முந்திய காலா னுள்ளான் முயற்சியாய்க் குடும்பி யாவன்
சந்ததம் ருணங்க ளில்லான் சௌக்கிய முடைய னாகும்
பந்துவு மேலாய் வாழ்வன் பாக்கிய முடைய னாமே.

35. ஜாதகன் தன் தந்தையின் ஆஸ்தியைப் பெருக்குவான். பணியாட்கள் உள்ளவன். உழைப்புள்ள குடும்பியாக இருப்பான். கடன்

உபத்ரவம் இல்லாதவன். சௌக்கியம் உடையவன். தன் சுற்றத் தாருக்கு மேலாக வாழ்ந்து வருவான். பாக்கியசாலி.

36. *கதிநெய்பா லிஷ்டம் கொள்வன் சஞ்சல மனத்தா னகும்*
நிதியின்மேல் ஆசை யுள்ளான் நினைத்தகா ரிய முடிப்பன்
பதியினில் திருவு முள்ளான் பகைவரை ஜயிப்பா னகும்
சத்திய நன்ம னத்தான் சத்தியே மேலுங் கேளே.

36. பால் தயிர் நெய் இவைகளில் விருப்பமுடையவன். அலைபாயும் மனமுள்ளவன். பொருளில் ஆசையுடையவன். எண்ணிய காரியத்தை முடிக்கும் ஆற்றல் உள்ளவன். இவன் வீட்டில் இலக்குமி வாசம் செய்வாள். விரோதிகளை வெல்வான். நல்ல, உண்மையான மனமுடை யவன். தேவியே! மேலும் கேளுங்கள்.

குடும்பச் செய்தி

37. *இவனுடைக் குடும்பச் சேதி இயம்புவீர் முனியே என்றாள்*
அவனியில் குடும்பம் வேறு அந்தணன் தசையி லேதான்
பவமுள மூத்தோ னுக்குப் பாலராண் இல்லை யென்றீர்
நவனியில் கருமம் செய்வார் நாட்டுவீர் முனியே யென்றாள்.

37. ஜாதகனுடைய குடும்பச்செய்தியைச் சொல்லுங்கள். முனி வரே! என்று பார்வதி தேவி கேட்க, குருமகாதசையில் குடும்பம் வேறாகும். ஜாதகனுடைய மூத்த சகோதரனுக்குப் புத்திர பாக்கியம் இல்லை என்றீர்களே. அவனுக்கு ஈமக்கடன்கள் யார் செய்வார் கூறுங் கள், முனிவரே! என்றாள்.

38. *தௌகித்ரன் செய்வா னகும் சார்ந்திடு மந்தப் பாகம்*
பவமுள அதற்கு நேராய்ப் பகைவரு மென்று
[சொன்னேம்
இவனுக்குப் பாதி பாக மெய்திடும் கால்பா கந்தான்
தௌகித்ர னடைவா னகும் சத்தியே மேலுங் கேளே.

38. தௌஹித்ரன் (பெண்ணின் மகன்) செய்வான் என்று சொன்னேம். அந்தப் பாகமும் இவனைச் சேரும் என்றோம். அதற்காக விரோதம் ஏற்படும் என்றோம். ஜாதகனுக்குப் பாதிப் பாகமும் தௌகித்ரனுக்குக் கால்பாகமும் கிடைக்கும் என்று சொல்லுகிறோம். தாயே! மேலும் கேளுங்கள்.

39. *புத்திர னெந்தக் காலம் பொருந்திடும் முனியே யென்றாள்*
வித்தக னந்தி யத்தில் மேவிடு மாண்பா லுந்தான்
சத்திமார் முதலில் தோன்றும் சாற்றினேம் கேளு மம்மா
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தன மொழிகுன் றுவே.

39. எந்தக் காலத்தில் புத்திறன் பிறப்பான்? முனிவரே! என்று பார்வதி கேட்டாள். ஜாதகனுடைய கடைசிக் காலத்தில் ஆண் சந்ததி பிறக்கும். முதலில் பெண் குழந்தை பிறக்கும் என்று சொல்லுவோம். விநாயகரைப்பெற்ற தாயே! கேளுங்கள். நாங்கள் கூறியவை பொய்யாகா.

ஜனனகாலதசை

40. பாலகன் ஜனன காலம் பரிதியின் தசையி லேதான்
கோலமா யாண்டு வொன்று கூறினேம் மிருபா லுளும்
சாலவே பலனைச் சொல்வேன் ஜாதகன் தனக்கு ரோகம்
ஞாலமேல் தோன்றி னலும் நாடாது ரோகம் தானே.

40. ஜாதகனது பிறப்புக் காலத்தில் சூரியம்காதசையில் ஒரு வருடமும் இருபது நாட்களும் மீதமாம். அக்காலத்திய பலனைச் சொல்லுகின்றோம். ஜாதகனுக்கு நோய் ஏற்படும்போல் தோன்றினும் வியாதி வராது.

சந்திர மகாதசையின் பலன்

41. மதிதசை யொருபா லுண்டு வரும்தந்தை கண்ட மாகும்
விதியினல் சாத கர்க்கு விஷம்போலே ரோகம் வாய்க்கும்
நதிபயம் உயரம் வீழ்வன் நலமுள குடும்ப லேச்சல்
சதியிலா விவரம் யாவும் சாற்றுவோமி ரண்டி லேதான்.

41. சந்திரமகாதசை பத்து வருடங்களில் தந்தைக்கு மரணம் நேரிடும். முற்பிறவி விதியினல் கொடிய ரோகம் ஒன்று ஏற்படும். ஆற்றில் விழும் கண்டமுண்டு. உயரத்திலிருந்து வீழ்ந்து விடுவான். குடும்பத்தில் அலேச்சல் உண்டு. மற்ற விவரங்களோ இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 4

1. பரிதிசேய் மதியும் புந்தி பனிரண்டில் ராகு லாபம்
அரியினில் மூடவன் தங்க அந்தணன் கேது வில்லில்
எருதினில் குருடன் தங்க இதுஜன்மம் சீய மாக
உரைப்பீர்கள் பலனை யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சூரியன் செவ்வாய் சந்திரன் புதன் இவர்கள் லக்கினத்துக்குப் பனிரண்டாமிடமாகிய கடகத்திலும், ராகு லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், சனி சிம்மத்திலும், குரு கேது தனுசிலும் சுக்கிரன் ரிஷபத்திலும் இருந்து, இலக்கினம் சிம்மமானால், ஏற்படும் பலனைக் கூறுங்கள் என்று உத்தமியாகிய பார்வதி தேவி கேட்டாளாம்.

கிரகநிலை

		சுக்கிரன்	ராகு
	இராசி சக்கரம்		சூரியன் செவ்வாய் சந்திரன் புதன்
			லக்கினம் சனி
குரு கேது			

ஜாதகி பிறந்தவீடு

2. இந்தசேய் பெண்பா லாகு மிசைக்கிரூர் பராசர் தாமும்
தந்தையி னில்லம் தன்னைச் சாற்றுவோம் வடதென் வீதி
சந்ததம் கிழக்கு வாடை தந்தியும் மேற்கில் தங்கும்
எந்தையே வடமேல் திக்கில் இலகிடும் பந்தம் தாமே.

2. இந்த ஜாதகம் பெண்ணினுடையது. பராசர முனிவர் சொல்லுகின்றார். தந்தையின் வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றோம். அது தெற்கு வடக்கான வீதியில் கிழக்கு வரிசையிலுள்ளது. விநாயகர் ஆலயம் மேற்கில் உள்ளது. தாயே! வடமேற்குத் திக்கில் அடைப்புக்கள் சில உள்ளன என்றும் கூறுகின்றோம்.

3. மாரியு மாயோன் தங்கும் வடக்கினி லீசன் கோவ்டம்
சீரிய காளி தென்கீழ் சிறந்திடு மிதுவல் லாமல்
பாரிய தந்தி சூழி யருமுனி யம்மன் தெற்கில்
வாரிய சோலை யுண்டு மேவிய சமவூர் தன்னில்;

3. மாரியம்மன் கோவிலும் திருமாலின் ஆலயமும் வடக்குத் திக்கில் சிவபெருமான் ஆலயமும் உள்ளன. கோபமுற்ற காளி தேவி தென்கிழக்குத் திசையில் கோயில் கொண்டுள்ளாள். இதுவன்றிப் பெரிய விநாயகர் ஆலயமும் முனீச்வரன் கோவிலும், திரௌபதியம்மன் கோவிலும் உள்ளன. தெற்குப் பக்கத்தில் ஒரு பெரிய தோட்டம் சூழ்ந்த சமநிலையான ஊரில் ;

ஜாதகியின் தந்தை விவரம்

4. பலஜாதி யவ்வூர் வாசம் பகருவோம் கௌரி வம்சம்
குலவுவான் தந்தை யென்றேம் கூறுவோ மிவளின் [யோகம்
நலமுள தூணைவர் புத்திரர் நன்மாதுர் முன்பின் ஜன்மம்
நிலைமையாய்ச் சொல்லு கின்றேன் நிமலியே கேட்டி [டாயே

4. பல ஜாதி மக்கள் அவ்வூரில் வாழ்ந்து வருவார்கள். ஜாதகியின் தந்தை கௌரீகர் குலத்தில் பிறப்பான் என்று சொன்னேம். இவனுடைய யோகத்தையும் உடன்பிறந்தவர்கள், புத்திரர், தாயின் முற்பிறவி, மறுபிறவி, ஆகிய இவைகளையும் நிச்சயமாகக் கூறுகின்றேம். தாயே ! கேளுங்கள்.

தந்தையின் குணங்கள்

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோ [மிருநி றத்தான்
முந்திய யூகை சாலி முயற்சியாய்க் குடும்பி யாவன்
வந்தவர்க் கன்ன மீவன் வணிபங்கள் செய்வா னுதும்
தன்தன முடைய னுவன் தாட்சண்யன் கல்வி யுள்ளான்.

5. ஜாதகியின் தந்தையின் குணத்தைச் சொல்லுகிறோம். இருவித நிறமுள்ளவன். நன்றாக ஊகித்தறிபவன். செல்வாக்குள்ள குடும்பியாயிருப்பான். பசித்து வந்தவர்கட்கன்னமளிப்பவன். வர்த்தகம் புரிந்து வருவான். தன்னால் சம்பாதிக்கப்பட்ட பொருள் உடையவன். தாட்சிண்ய மனப்பான்மையுள்ளவன். கல்வியறிவுடையவன்.

6. சங்கீதப் பிரிய னுவன் சாதுர்ய வார்த்தை சொல்வன்
மங்கையர் மோக னுவான் மறுமொழி யதிகம் கூறுவன்
தங்கமா மனத்தா னுகும் துராசையு மில்லா னென்றேம்
எங்களுக் கன்ப னுகு மெழிலுப தேசம் செய்வன்.

6. சங்கீதத்தில் விருப்பமுள்ளவன். சாமர்த்தியமாகப் பேசுபவன். பெண்கள்மீது மோகமுடையவன். எதிர்த்துப்பேசும் இயல்பினன். தங்கத்தைப்போன்ற பரிசுத்தமான மனமுள்ளவன். கெட்ட

ஆசைகளில்லாதவன். எங்களைப் போன்றவர்களுக்கு அன்பு உண்டாக்கும் தூய்மையான ஞானோபதேசங்களைச் செய்பவன்.

7. கல்வியும் விருத்தி செய்வன் காலாள்க ளுடைய னுகும்
இல்லையென் றுரைக்க மாட்டான் ஈகைவான் எவர்க்கு
[நண்பன்
நல்லவ னுகி வாழ்வன் நடனசங் கீதமி ஷ்டன்
தொல்லையு முடைய னுவன் சுந்தரி மேலுங் கேளே.

7. கல்வியைப் பெருக்குவான். ஏவலாட்கள் உள்ளவன். யாசிப்பவர்கட்கு இல்லை யென்று சொல்லாதவன். கொடையாளி. எல்லோருக்கும் நண்பனுவன். நல்லவனுக வாழ்ந்து வருவான். நடனத்திலும் சங்கீதத்திலும் பிரியமுள்ளவன். சிறிது தொல்லைகள் உடையவன். தாயே! அழகியே! மேலுங் கேளுங்கள்.

8. சுகபுசிப்புடைய னுவன் சுத்தநன் மனத்தா னென்றும்
பகைவரை வசியம் கொள்வன் பகருவான் சிலேடை
[வார்த்தை
அகமது புதிதாய்ச் செய்வன் அவனிள மனமு முள்ளான்
முகமதில் வடிவு முள்ளான் முன்கோபம் பின்பு சாந்தம்.

8. சுகமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். சுத்தமான மன முடையவன். விரோதிகளையும் வசம் செய்வான். இருபொருள் படும்படிப் பேசுவான். புதிதாக வீட்டைக் கட்டுவான். இளகிய மன முடையவன். முகத்தில் லட்சணம் உள்ளவன். சற்று முன்கோபமும் உடனேயே சாந்தமுமடையும் இயல்பினன்.

9. பொய்யுரை பகரான் மிஞ்சி புத்திநல் லறிவு முள்ளான்
மெய்யது பித்தச் சூடு மூலமு டைய னுகும்
கையதில் கமல ரேகை கரமதி லூன முள்ளான்
ஐயமே லிச்சை யுள்ளா னவன்தைரிய முடைய
[னென்றும்.

9. பொய் பேசாதவன். விசாலமான புத்தியையுடையவன். நல்லறிவு உள்ளவன். சத்தியத்தையே பேசுபவன். பித்தச்சூட்டு நோயும் மூலச்சூட்டு நோயும் உடையவன். கையில் பத்மரேகை உள்ளவன். சிறிதூனமான கையையுடையவன். தருமம் செய்வதில் பிரிய முடையவன். தைரியமுள்ள மனத்தினன்.

10. இக்குண முடையோன் பாலன் இவனுக்குத் தாரம்
[ரண்டில்
மிக்கவே யிளையா னுக்கு மேவினு ளிவளே யென்றும்
தக்கவே யிவள்கு ணத்தைச் சாற்றுவோ மாகி றம்தான்
பக்குவ மான வார்த்தை பகருவாள் கல்வி மானும்.

10. இவ்விதக் குணங்களுடையவனுக்கு ஏற்பட்ட மனைவிமார் இருவரில் இளைய மனைவிக்குப் புத்திரியாகப் பிறப்பாள் இந்த ஜாதகி என்றேரும். இவளுடைய குணத்தைக் கூறுகின்றேரும். மானிறமுள்ள வள். பக்குவமாகப் பேசுபவள். கல்வியறிவுடையவள்.

ஜாதகியின் குணங்கள்

11. பொறுமையும் பெருமை யுள்ளாள் புருடனுக் கினிய
[ளாகும்
திருமகள் வாச முள்ளாள் தேன்மொழி கூறு வாளாம்
சிறுமைக ளில்லா ளாகும் செல்விநன் னடக்கை
[யுள்ளாள்
நறுமலர்ப் பிரிய முள்ளாள் நாயகி சீலி யென்றேரும்.

11. பொறுமைசாலி. பெருமையுடையவள். தன் கணவனுக்குப் பிரியமானவள். இவளிடம் இலக்குமி வசித்து வருவாள். இனிய வார்த்தைகளையே பேசுபவள். சிறுமைகள் இல்லாதவள். நன்ன டத்தையுள்ளவள். வாசனையுள்ள புஷ்பங்கள்மீது பிரியப் படுபவள். நல்லொழுக்கமுள்ளவள் என்று சொன்னேம்.

12. அவசர வார்த்தை சொல்வ ளவள்மனம் வெகுளி யாவள்
நவனியில் இவள்தன் னலே நாயகன் யோக வானும்
இவள்மனக் கபடு மில்லாள் யாவர்க்கு நல்லோ ளாவள்
தவசிகட் கன்பு பூண்பள் தயாளமாங் குணத்தா ளாமே.

12. அவசரமாகப் பேசும் இயல்பினள். வெகுளியான மனமுடைய வள். இவளை மணந்த பிறகு இவளால் கணவனுக்கு அதிருஷ்டம் பெருகும். மனத்தில் கபடமில்லாதவள். எல்லோருக்கும் நல்லவளாக இருப்பாள். தவமுடையவர்களிடத்தில் அன்புள்ளவள். தயாள மன முடையவள்.

ஜாதகியின் சகோதர பாவம்

13. அவளுடைத் துணைவர் தம்மைஅறைகிறேரும் ஐந்து ஆகும்
நவனியில் ஆண்பா லொன்று நாயகி யவ்வா ருகும்
ஐயமுனி இதனைக் கேட்டுத் திடுக்கென உரைக்க லுற்றார்
இவளுக்குத் துணைவர் ரண்டு எப்படிச் சொன்னீ ரையா.

13. ஜாதகியினுடைய சகோதரபாவத்தைச் சொல்லுகின்றேரும். அவர் ஐவர் ஆவர். அவர்களில் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளுள்ளவர்கள். (மற்றவர்கள் நிலையார்.) ஐய முனிவர் இதைக்கேட்டுத் திடீரென்று சொல்லலானர். ஜாதகிக்குச் சகோதர சகோதரிகள் இருவர் என்று எப்படிக் கூறுகின்றீர்? ஐயா!

சகோதரபாவத்திற்குரிய கிரகநிலை

14. மூணுக்கு மூன்றில் மன்னன் மேயதால் துணைவர் விருத்தி
காணினும் தீதே யாகும் கதிர்மகன் மூன்றைப் பார்க்கத்
தோணினும் தோஷ மென்றேரும் சொல்லுவா யந்தச்
[சங்கை
[1]ராணது லாப மேற நற்புகர் மூணுக் கெட்டில்;

14. மூன்றுமிடத்துக்கு மூன்றில் குரு இருப்பதால் சகோதர விருத்தியுண்டு. பிறந்தாலும் தோஷமுண்டு (என்று ஒருவர் கூற,) சனி மூன்றுமிடத்தைப் பார்க்க, பிறந்தாலும் தோஷம் ஏற்படும் என்று சொன்னார்; அந்தத் தோஷத்தைச் சொல்லுங்கள் என்று வினவ, ராகு லாப ஸ்தானத்தில் இருந்து சுக்கிரன் 3-ஆம் இடத்துக்கு எட்டாமிடத்தில்,

தந்தையின் முற்பிறவி

15. இருப்பதால் தந்தை யாலே யிலகிற்றுப் பூர்வ தோஷம்
உரைப்பீர்கள் முன்னூழ் தன்னை உமையேகேள் தந்தை
[பூர்வம்
திருப்பனங் காட்டி லேதான் செல்வனும் வைசிய வம்சம்
பெருமையா யுதித்தா னென்றேரும் பிரபலச் செட்டு ஒங்கி;

15. இருப்பதாலும் ஜாதகியினுடைய தந்தை முற்பிறவியில் செய்த தீவினையாலும் தோஷம் ஏற்பட்டது. முற்பிறவியின் தீவினையைச் சொல்லுங்கள் என்று கேட்க. உம்மாதேவியே! கேளுங்கள். தந்தை முற்பிறவியில் திருப்பனங்காட்டில் வைசிய குலத்தில் பிறந்தான். பிரபலமான வர்த்தகம் உயர்ந்து பெருமையுடன்;

16. பூமியும் பரிபா லித்துப் புகழுண்டாய் மதலை யுண்டாய்
நேமியோர்க் குதவி செய்து நிதானமாய் வாழு நாளில்
தீமையாய் வந்த ஊழைச் செப்புவோம் விவர மாகத்
தாமத குணத்தா னவன் சதுர்குலத் தோனும் ஒருவன்;

16. பூமியையும் பயிர்செய்து கீர்த்தி பெற்று புத்திரர்களையடைந்து உலகிலுள்ளோர்கட்கு உதவிசெய்து நிதானமாக வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேரும். தாமத குணமுடைய நான்காம் வருணத்தவன் ஒருவன்;

நண்பன்மனைவிமீது மோகம்

17. நேசங்கள் வெகு நாளாக நிமலன்பால் செய்து வந்து
பாசமா யிருக்கு நாளில் பாரியை அவள்மேல் மோகம்
ஆசைகள் மிகவே கொண்டு அவளுக்குப் பணிகள் சேலை
காசுமே இவனு மீந்து கலந்தனர் சிலநாள் சென்று;

---

1. நாண் - இராகு.

17. வெகுநாட்களாக நேசமாக இருந்து ஜாதகியுடைய தந்தைக்குப் பணிகள் செய்து பிரியமாக இருந்து வந்த காலத்தில் அந்த நண்பனுடைய மனைவிமீது மோகங்கொண்டு ஆசையுடன் அவளுக்கு ஆபரணங்கள் சேலை பொருள் முதலியன கொடுத்து இன்பம் அனுபவித்து வந்தான். சின்னாட்கள் சென்றதும்,

18. பலருமே தெரிந்து கொண்டு பாவையை விலக்க லுற்றார்
தலைவியும் வைசியன் பக்கல் தானவள் செல்ல லுற்றாள்
நலமென சூத்திரன் தானும் நவிலுவான் மனவெ றுப்பால்
சிலநாட்கள் சினேகம் செய்தென் தேவியைக் கெடுத்த
[பாவி.

18. இவ் விஷயத்தை எல்லோரும் தெரிந்துகொண்டு அப் பெண்ணை ஒதுக்கி விட்டனர். நண்பனுடைய மனைவி, (ஜாதகனுடைய தந்தையான) வைசியனிடம் சென்று விட்டாள். அதுவே நன்மை என்று நண்பன் மன வெறுப்படைந்து சொல்லுகின்றான். சிலநாட்கள் சிநேகமாயிருந்து என் மனைவியைக் கெடுத்த பாவியே!

நண்பனுடைய சாபம்

19. உன்னுடைச் செல்வம் நீங்கி உலகினில் வசையு மாகி
உன்மனை புத்திர ரெல்லாம் உறைகுவ ரெமப திக்குப்
பின்வரும் ஜன்மம் தன்னில் பேதைய ரிருவ ராயும்
கன்மங்கள் செய்ய வேண்டிக் காளைக் ளில்லா மல்தான்;

19. உன்னுடைய செல்வங்கள் யாவும் நீங்கி உலகில் எல்லோராலும் நிந்திக்கப்பட்டு, மனைவி, புத்திரர்களை இழந்து, அடுத்துவரும் பிறவியிலும் இருமனைவியரையடைந்து இறுதிக்கடன் செய்வதற்குப் புத்திரர் இல்லாமல்,

20. வாழ்குவா யென்று சொல்லி வசனித்தான் நேசன்
[தானும்
சூழ்ந்தது வந்தத் தோஷம் செப்புவோ மின்னுங் கேளு
ஆழியில் அபிமா னப்பெண் அவள்மன வெட்கம்
[கொண்டு
ஏழைக்கு இவ்வா றுகுற்ற மிலகிற்றுத் தனவா னேகேள்.

20. வாழ்ந்து வருவாய் என்று கூறி வருத்தப்பட்டான் நண்பன், அந்தத் தோஷம் பற்றியது. இன்னமும் சொல்லுகின்றேம். கேளுங்கள். (இதையறிந்த) இஷ்ட மனைவியாகிய நண்பன் மனைவி மனத்தில் வெட்கமடைந்து ஏழையாகிய எனக்கு இவ்வாறு தீங்கு நேரிட்டது. செல்வவானே! கேளும்.

21. உன்னுடை மதியால் கெட்டே னுலகினில் வசையு
[மானேன்
என்னயான் செய்யப் போறேன் என்றுமே வாடும் போது
என்னுடை ஆயுள் மட்டும் இடைவிடே னுன்னை யானும்
பன்னியே பலவாய்ச் சொல்லிப் பாவையைக்
[காக்க லுற்றான்.

21. உன்னுடைய ஆசை வார்த்தைகளால் நான கெட்டுப் போனேன். உலகில் அவமானத்தையும் நிந்தையையும் பெற்றேன். இனி நான் என்ன செய்வேன் என்று ஏங்கும்போது (ஜாதகியின் தந்தை சொல்லுகின்றான்). நான் என்னுடைய ஆயுள் பரியந்தம் உன்னைக் கைவிடமாட்டேன்" என்றும் இன்னும் பலவிதமாகவும் சொன்னான். அதைப்போலவே காத்தும் வந்தான்.

கருவழித்த தோஷம்

22. அப்படிச் சிலநாள் சென்று அவளுக்குக் கருவு தங்கிச்
செப்புவேன் பண்டி தத்தால் சிலசில ஔழ்த மீந்து
ஒப்புடன் கருவு நீக்கி உத்தமி மாண்டா ளென்றேரும்
மெய்ப்புடன் அந்தத் தோஷம் மேவிற்று இவனுக்
[கேதான்.

22. அப்படிச் சின்னாட்கள் சென்றதும் அப்பெண்ணுக்குக் கரு வேற்பட்டது. அதை அழித்துவிட சிற்சில மருந்துகளைக் கொடுத்தான். கருவும் நீங்கியது. ஆனால் அப்பெண்ணும இறந்து விட்டாள். அதனால் அந்தத் தோஷம் ஜாதகியின் தந்தைக்கு ஏற்பட்டது.

23. அந்திய காலம் தன்னி லவன்செல்வம் குறைவு நேர்ந்து
வந்திடு மனைவி மாண்டு மறலியின் பதிக்குச் சென்று
முந்திய பிரம னுலே மேதினில் வரையப் பட்டு
வந்தவ னிவளின் தந்தை யறைகிறே மிச்சென் மத்தில்.

23. தன் கடைசிக் காலத்தில் செல்வங்கள் குறைந்து மனைவியை இழந்து இறந்தான். மீண்டும் பிரமதேவனால் இவ்வுலகில் படைக்கப் பட்டுப் பிறந்தவன், இந்த ஜாதகியின் தந்தை என்று சொன்னோம். இப் பிறவியில்,

24. மனைவிக்குத் தோஷ முண்டு மறுமனை யிவளின் மாதா
அனையவே ஆண்பால் தோஷம் அணுகினும் தீதே யாகும்
பிணையான தோஷம் தீரப் புகலுவோம் சாந்தி தானும்
பனிவரை மகளாய் வந்த பார்வதி கேட்டி டாயே.

24. மனைவிக்குத் தோஷம் ஏற்பட்டது. ஜாதகியின் தாய், தந்தையின் இரண்டாம் மனைவி என்றோம். சகோதரருக்குத் தோஷ

முண்டு. பிறந்தாலும் நிலையார். இத்தீங்கான தோஷம் நீங்கச் சாந்தி யொன்று கூறுகின்றோம். இமயமலையரசின் மகளாய்ப்பிறந்த பார்வதி தேவியே! கேளுங்கள்.

புத்திரதோஷம் தீரச் சாந்தி

25. தந்தையும் தாயு மாகச் சக்கரத் தோனும் வாழும்
முந்திய வள்ளூர் சென்று முகுந்தனை அர்ச்சித் தேத்தி
இந்தவாறு ஏழு திங்கள் இடைவிடாச் சென்று மேதான்
சந்ததம் ரஜதம் தன்னில் சுதனைப்போல் செய்து
[யின்னேன்;

25. ஜாதகியின் தாயும் தந்தையும் சேர்ந்து சக்கரத்தைக் கையி லுடைய திருமால் எழுந்தருளியிருக்கும் புண்ணிய க்ஷேத்திரமாகிய திருவள்ளூருக்குச் சென்று அங்குள்ள திருமாலை அருச்சித்து துதித்து வந்து இதேபோல் ஏழு திங்கட்கிழமைகள் (மாதங்கள்) இடைவிடாமல் போய் வந்த பிறகு, வெள்ளியால் குழந்தைபோல் உருச் செய்து;

26. விடம்புஷ்பம் கந்தத் தோடு விப்பிர மனைக்கு ஈந்து
அடவுடன் முன்னூழ் தன்னை அவருடன் ஓதி யேதான்
திடமுடன் பொறுத்தே னென்று திருவாக்கா
[லாசி ரேற்று
உடனேதான் உள்ளூர் சென்று ஓராண்டு ஏகா தசியும்;

26. ஜாதகியின் தந்தை, புஷ்பம் சந்தணம் முதலியவற்றை ஓர் அந்தணன் வீட்டில் கொடுத்து முற்பிறவியில் செய்த தீவினையை அவரிடம் சொல்லி அவரும் பொறுத்தேன் என்று கூறியபின் அவரது ஆசீர்வாதத்தைப் பெற்று உடனே உள்ளூருக்குத் திரும்பி ஒரு வருடம் ஏகாதசி;

27. விரதமே கொள்வா னெனில் விளங்கின சுதராண் தீர்க்கம்
குறைளன்று செய்யா னெனில் குழவிகள் பிறக்கில் தீகாம்
பெருமையாய்ச் சொற்போல் செய்யில் பேசுவோ
[மாண்பா லொன்று
கூறுவோம் பெண்பா லொன்று செப்புவோம் தீர்க்க
[மாக.

27. விரதம் இருந்தால் பிறக்கும் ஆண் குழந்தை நீண்ட ஆயு ளுள்ளதாக இருக்கும். அலட்சிய மனப்பான்மையுடன் செய்யாவிடில் குழந்தைகள் தோன்றினும் நிலையா. நம்பிக்கையுடன் செய்து வந்தாலெனில் ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழவியும் தோன்றித் தீர்க்கமாக இருக்கும்.

ஜாதகியின் புத்திரபாவம்

28. ஜாதகி தனக்குப் புத்திரர் சாற்றுவோம் நவம தாகும்
மேதினி லாண்பா லிரண்டு விளங்கிடும் பெண்பால் மூன்று
தீதாகு மற்ற வெல்லாம் சொல்லுவோ மிவளுக் கேதான்
போதக வாணி பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

28. ஜாதகியினுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். அவர் ஒன்பதின்மர் ஆவர். இரு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுள் உள்ளவையாக இருக்கும். மற்ற குழந்தைகள் நிலையா என்று சொல்லுகின்றோம். விநாயகக் கடவுளைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

தாயின் வரலாறு

29. அன்னையும் சிவந்த மேனி அவளுமூன் கோபம் கொஞ்சம்
நன்னிய ஒடிசல் தேகி நாயகி மூர்க்க முள்ளாள்
பன்னியே யுரைக்க வல்லாள் பந்துவும் பகைய தாகும்
தன்தந்தை குலத்தில் குற்றம் சகோதர வர்க்கம் குற்றம்.

29. ஜாதகியினுடைய தாய் சிவந்த உடலுள்ளவள். சிறிது முன் கோபம் உடையவள். மெல்லிய சரீரி. மூர்க்க குணமுள்ளவள். பன்னிப் பன்னிப் பேசும் இயல்பினள். சுற்றத்தாரிடம் விரோதம் கொள்ளுவாள். அவளுடைய தந்தை வர்க்கத்திலும் நிந்தையுள்ளவள். சகோதரவர்க்கத்திலும் குற்ற முடையவள்.

தாயின் சகோதரபாவம்

30. துணைவர்க ளிருநான் காகும் சொல்லுவோ மாண்பால் [ரண்டு
அணையவே பெண்பா லவ்வாறு அறைகிறோம் தீர்க்க மாக
பிணையாகு மற்ற வெல்லாம் பேசுவோ மிவளுக் கேதான்
கனமுடன் துணைவர் மூத்தோன் காவலன் சேதி கேளாய்.

30. ஜாதகியின் தாய்க்கு உடன் பிறந்தவர்கள் எட்டுப் பேராவர். அவர்களில் இருசகோதரர்களும் இருசகோதரிகளும் நிலையானவர். மற்றவர்கள் தீர்க்கமில்லை என்று சொன்னோம். மூத்த சகோதரனின் செய்தியைச் சொல்லுகின்றோம். கேளுங்கள்.

31. இளமன துடைய னுவன் ஈகைவான் சோம்ப லுள்ளான்
கலவர புத்தி யுள்ளான் காவலன் வேரூய்ச் செல்வன்
இவளுமே பிறந்த ஆண்டில் இசைந்திடு மனைவி தானும்
நலமிலா மனைவி யென்றோம் நாயகி குலத்தில் குற்றம்.

31. இளைய மனமுடையவன். கொடையாளி. சோம்பலுள்ளவன் கலவர மடையும் மனமுடையவன். அவன் தனியாகச் சென்றுவிடுவான்.

ஜாதகி பிறந்தவருடத்தில் அவனுக்கு மனைவி வருவாள். அவளும் நேர்மையில்லாதவள் என்று சொன்னேம். அவள் குலத்தில் (நிந்தை) குற்றம் உள்ளவள்.

32. பரவச முடைய ளாகும் பாவையும் வேறுய்ச் செல்வள்
உரைக்கிறேம் மறும னேதா னுறைந்திடு மவனுக்
[கேதான்
திறமையா யிளையோன் சேதி செல்வதி யொன்றே யாகும்
அறைகிறேம் தாய்தந் தைக்கு அவன்குண வாளு
[மென்றேம்.

32. பிறர் வசமானவள். அவளும் தன் கணவனிடமிருந்து வேருகச் செல்லுவாள். ஜாதகியின் தாயின் மூத்த சகோதரனுக்கு இரண்டாம் மனைவி வாய்த்துவிடுவாள். இளைய சகோதரனைப்பற்றிச் சொல்லுகின்றேம். அவன் தன் தாய்தந்தையருக்குக் குணமான மகன் என்று சொல்லுகின்றேம்.

தாயின் முற்பிறவி

33. இன்னமும் சிலவே சேதி யியம்புவோம் விவரம் ரண்டில்
அன்னையின் பூர்வம் தன்னை யறைகிறேம் மினிமே லாக
மன்னவன் பதவி சேர்ந்த மாபலி நகரம் தன்னில்
உன்னத கோகு லத்தி லுதித்தவ னிவனே யென்றேம்.

33. இன்னும் சில விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேம். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். மகாபலிச் சக்கரவர்த்தி முக்தியடைந்த மகாபலிபுரத்தில் இடையர் மரபில் பிறந்தவள் ஜாதகியின் தாய் என்றேம்.

34. புத்தியும் பெருமை யாகப் புத்திர ருள்ளா ளாகி
உற்றோர்கள் மெச்ச வாழ்ந்து உலகுக்கு நல்லோ ளாகி
வித்தகி வரனின் முன்னே மேவினு ளெமப திக்குப்
பத்திய பிரமன் தன்னுல் பாரினில் வரையப் பட்டு;

34. நல்ல புத்தியுள்ளவளாயும பெருமையான புத்திரர் உடைய வளாகவும் தன் சுற்றத்தார் கொண்டாடும்படியும் வாழ்ந்து உலகத்துக்கு நல்லவளாகி வாழ்ந்து வந்து தன் கணவனுக்கு முன்பாகவே மரண மடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இவ்வுலகில்;

மறு பிறவி

35. வந்தவ னிவளே யென்றே மறைகிறேம் மிவள்பின்
[ஜன்மம்
சந்ததம் வள்ளூர் தன்னில் தானவள் பிரம்ம வம்சம்
முந்தியே உதித்து மேலும் முயற்சியால் குடும்பி யாகி
பந்தமாய் வாழ்வா ளென்றேம் பார்வதி கேட்டி டாயே.

35. பிறந்தவள் ஜாதகியின் தாய் என்று சொன்னேம். அவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். திருவள்ளூரில் அந்தண குலத்தவளாகப் பிறந்து சொந்த முயற்சியால் நல்ல குடும்பத்தை யடைந்து வாழ்ந்து வந்தாள் என்றேம். பார்வதி தேவியே! கேளுங்கள்.

ஜாதகியின் முற்பிறவி

36. உதித்தவள் பூர்வம் தன்னை உரைக்கிறேம் காஞ்சி
[தன்னில்
சதியிலாக் கங்கை வம்சம் தானவ ளுதித்தா ளென்றேம்
பதியினில் திருவு முண்டாய்ப் பாக்கிய மதிகம் பெற்றுச்
சதியுடன் மதலை யின்றித் தக்ஷிணம் தீர்த்தம் தோய்ந்து ;

36. ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சீ புரத்தில் தீங்குகளில்லாத வேளாளர் குலத்தில் பிறந்தவள் என்று சொன்னேம். வீட்டில் லட்சுமீ கடாட்சம் ஏற்பட்டு பாக்கியங்களு மிகுதியாக அடைந்து தீவினையால் புத்திர பாக்கிய மில்லாமல் தெற்குத்திக்கிலுள்ள பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி;

37. தேவதா பத்தி கொண்டு தேவியும் விரதம் பூண்டு
மேவியே வாழும் நாளில் விளங்கிற்றுச் சுதர்க
[ளென்றேம்
ஆவலாய் மரண மாகி அரிமகன் வரையப் பட்டுத்
தாவிய இக்கு லத்தில் சார்ந்தன ளிவளே யென்றேம்.

37. தெய்வபக்தியுடன் ஜாதகி விரதம் எடுத்துக் கொண்டு இருந்து வாழ்ந்து வருங்காலத்தில் புத்திரர்கள் தோன்றுவர். ஆவலுடன் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப் பிறவியில் பிறந்தவள், இந்த ஜாதகி என்று சொன்னேம்.

ஜாதகியின் மறுபிறவி

38. இவளுடைப் பின்னை மத்தை இயம்புவோம் காஞ்சி
[தன்னில்
சிவமதம் சைவ வம்சம் ஜனித்துமே பெருமை பூண்டு
நவனியில் வாழ்வா ளாகும் நாட்டினில் கீர்த்தி யேற்பள்
தவமுடை யோரைக் காக்கும் தயாபரி கேட்டி டாயே.

38. ஜாதகியினுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சீபுரத்தில் வீர சைவ குலத்தில் பிறந்து பெருமையடைந்து வாழ்ந்து வருவாள். உலகில் புகழை அடைவாள். தவங்களை யியற்று பவரைக் காக்கும் தயாநிதியே ! கேளுங்கள்.

தந்தையின் சகோதரபாவம்

39. தந்தையின் துணைவ ராண்பால் சாற்றுவோ மிரண்டு
[மாகும்
வந்திடும் கன்னி மூன்று வறைந்தன மிவருக் கேதான்
நொந்திடு மற்ற வெல்லாம் நுவலுவோ மவர்கள் சேதி
எந்தையே யிரண்டில் சொல்வேன் ஈச்வரி கேட்டி டாயே.

39. ஜாதகியின் தந்தையின் சகோதர நிலையைச் சொல்லுகின்றோம். அவருக்கு இரு சகோதரர்களும் மூன்று சகோதரிகளுமாவர். மற்றவர் நிலைத்து இரார். அவர்களுடைய செய்திகளை, தாயே! இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம். ஈச்வரியே! கேளுங்கள்.

தந்தைதாயரின் மரணகாலம்

40. இவள்பிதா மரண கால மியம்புவோ மிருபா லுலில்
அவனியில் தேளின் மாத மறைகிறோம் கண்டம் தானே
நவனியில் மாதா வுக்கு நாட்டுவோம் முப்பான் மூன்றில்
ஆவணிமாதம் தன்னில் தவறியே கண்ட மென்றோம்.

40. ஜாதகியின் தந்தையின் மரண காலத்தைச் சொல்லுகின்றோம். இருபத்துநான்காம் வயதில் கார்த்திகை மாதத்தில் கண்டம் நேரும். தாய்க்கு முப்பத்துமூன்றும் வயதில் ஆவணி மாதத்தில் மரணம் நேரிடும். தாயே! மேலுங் கேளும்.

ஜாதகியின் மரண காலம்

41. இன்னவள் மரண கால மியம்புவோ மன்பா லுலில்
தன்னிலே சாடி மாதம் சாற்றுவோம் கண்டம் தானே
மன்னிய இவளின் யோக மறைகிறோம் சுகமு முள்ளாள்
உன்னத பணியு முள்ளாள் தங்கிடும் செல்வம் தானே.

41. ஜாதகியின் மரண காலத்தைச் சொல்லுகின்றோம். ஐம்பத்துநான்காம் வயதில் மாசி மாதத்தில் மரணம் நேரிடும். இவளுடைய யோகத்தைச் சொல்லுகின்றோம். சுகமுடையவள். உயர்ந்த ஆபரணங்கள் உள்ளவள். செல்வம் நிலைத்து இருக்கும்.

42. அன்னைக்கு மேலாய் வாழ்வள் யாவர்க்கு நல்லோ ளாகும்
சொன்னசொல் பிசகா ளாகும் தூரனர் நேசம்
[கொள்ளாள்
இன்னமும் சிலவே யோகம் இயம்புவோ மிரண்டி
[லேதான்
தந்தியைப் பெற்ற மாதே தயாபரி கேட்டி டாயே.

42. தாய்க்கு மேலாக வாழ்ந்து வருவாள். எல்லோருக்கும் நல்லவளாகி இருப்பாள். சொன்னசொல் தவறுதவள். கெட்ட ஜனங்களிடம் நட்புக் கொள்ளாதவள். இன்னமும் சில யோகங்களோ

இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம். யானைமுகக் கடவுளைப் பெற்ற தாயே! தயாநிதியே! கேளுங்கள்.

ஜாதகியின் ஜனனகாலதசை

43. பிறந்தவள் ஜனன காலம் புததசை தனிலி ருப்புச்
சிறந்திடு மாண்டு பத்தும் திங்களு மைந்த தாகும்
நிறைந்திடு நாள்களீரேழ் நிகழ்த்துவோம் பலனி யாங்கள்
விரைந்திடும் துணைவர் விருத்தி வாராது நஷ்ட மாகும்.

43. ஜாதகியினுடைய ஜனன காலத்தில் புதமகா தசையில் இருப்பு பத்து வருடங்களும் ஐந்து மாதங்களும் பதினைந்து நாட்களு மாம். அக்காலத்திய பலனை நாங்கள் கூறுகின்றோம். சகோதர விருத்தி ஏற்படாமல் நஷ்டமாகும்.

44. தந்தையின் துணைவர் சேதம் சல்லிய மிகவே நேரும்
சொந்தமாய்க் கிரகம் செய்வன் சுகதுக்கம் கலந்து [வாழ்வன்
எந்தையே செலவ னேகம் இவன்பந்து விரோத முண்டு
கந்தனைப் பெற்ற தாயே கழறுவோம் சித்தி ரங்கள்.

44. ஜாதகியின் தந்தைக்குச் சகோதர தோஷம் ஏற்படும். துன்பங்கள் அதிகமாக நேரும். தந்தை சொந்தத்தில் வீடு கட்டுவான். சுகதுக்கம் கலந்து வாழ்ந்து வருவான். தாயே! செலவு அதிகமாக ஏற்படும். தந்தைக்குச் சுற்றத்தாரிடம் பகை ஏற்படும். முருகக் கடவுளைப் பெற்ற தாயே! துன்பங்கள் ஏற்படும் என்று கூறுகின்றோம்

ஜாதகம் 5

1. சிங்கலக் கினம தாகச் சேய்மதி யெட்டி லாகப்
[1]பங்குபொன் புகரு மொன்பான் புதன்பானு கேது
[பத்தில்
இங்கிவை கிரகம் நின்று ரேவதி கடைப்பா தத்தில்
சங்கையைச் சொல்லு மென்னச் சடைமுனி புகலு
[கின்றார்.

1. செவ்வாய் சந்திரன் எட்டாமிடமாகிய மீனத்திலும், சனி சுக்கிரன் குரு ஒன்பதாமிடமாகிய மேஷத்திலும், புதன் சூரியன் கேது ரிஷபத்திலும் இருந்து, (ராகு விருச்சிகத்திலும்) இலக்கினம் சிம்மமாக இருக்க ரேவதி நட்சத்திரம் கடைசி பாதத்தில் பிறந்தவனுடைய பல னைச் சொல்லுங்கள் என்று (தேவி கேட்க) சடைமுனிவர் சொல்லுகிறார்.

கிரகநிலை

சந்திரன் செவ்வாய்	சனி குரு சுக்கிரன்	புதன் சூரியன் கேது	
	இராசி சக்கரம்		
			லக்கினம்
	ராகு		

2. இந்தசே யாணும் ஜன்மம் இல்லமும் கீழ்மேல் வீதி
தென்வாசல் வடபால் காளி சிரமற்றோன் ஈசன் தங்கும்
பிந்தின ஊரே யாகும் பேசின வடையா ளத்துள்
அந்தவ னுதிப்பா னாகும் அப்பாலன் ஜென்ட னாகும்.

2. இந்த ஜாதகம் ஆண்மகனுடையது. அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு நோக்கியுள்ள் வாயிலையுடையது. வடக்குப் பக்கத்தில் காளி கோயிலும், அரவான் கோயிலும் சிவபெருமான் ஆலயமும் உள்ள பிற்போக்கான ஊரில் முற்கூறிய அடையாளத்துடன் ஜாதகன் பிறந்தவன். அவன் மூத்த புதல்வனுவான்.

ஜாதகனின் வீட்டு நிலை

3. பாலகன் யோகச் சேதி பெற்றதாய் தந்தை யோகம்
சாலவே துணைவர் யோகம் தன்மனை புத்திர யோகம்
ஏலவே முன்பின் ஜன்ம மியம்புவோ மிந்நூல் தன்னில்
ஆலத்தை யுண்டான் தேவி அறிவிப்போம் பிதாகு
[ணத்தை.

1. பங்கு = சனி.

3. ஜாதகனுடைய யோகச்சேதி, பெற்ற தாய்தந்தையர் சகோதரர் மனைவி புத்திரன் இவர்களுடைய யோகம், இவர்களின் முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றை இந்த ஜோதிட நூலில் சொல்லுகின்றோம். விஷத்தை யுண்ட நீலகண்டனின் தேவியே! ஜாதகனுடைய தந்தை யின் குணத்தைச் சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய தந்தையின் வரலாறு

4. தாதைக்குத் தாரம் ரண்டில் தரித்திடு மூதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின்
[தந்தை
ஓதுவே னிவன்கு ணத்தை உறுதிபில் லாதா ஞகும்
வேதனை ஒருவர்க் கெண்ணன் வெஞ்சினம் வெளிக்காட்
[டாதான்.

4. தன் தந்தைக்கு ஏற்பட்டிருந்த இரு மனைவியாரில் மூத்த மனைவியின் மகன் இந்த ஜாதகனின் தந்தை என்றோம். இவனுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். திடமில்லாத மனமுள்ளவன். ஒரு வருக்கும் தீங்குகள் எண்ணுத மனத்தினன். கோபத்தை வெளி யிடாதவன்.

ஜாதகனுடைய தந்தையின் குணம்

5. மானிறம் சமதே கத்தான் மாதரு சுகமில் லாதான்
வானவர் பூசை பூணன் வடுவுகள் தீயால் நேரும்
ஊனமா மிடக்க ரத்தி லுகமையாய் வார்த்தை சொல்வன்
ஈனரைச் சேரா ஞகும் இதிகாச மறியா ஞகும்.

5. மாநிறமுள்ளவன். சமமான சரீர அமைப்புள்ளவன். தாயின் சுகமில்லாதவன். தெய்வ பக்தியில்லாதவன். தீப்புண்ணால் வடுக்கள் இருக்கும். இடது கையில் சிறிது ஊனமுள்ளவன். உவகை யுண்டாகப் பேசுபவன். தரம்தவரைச் சேராதவன். புராணங்கள் அறியாதவன்.

6. தந்தையி னர்ஜி தத்தைத் தானவ னடையா ஞகும்
வந்திடும் மனைவி யாலே மானிலம் சேர்த லுண்டு
நந்தியா விருத்தி யுண்டு நாட்டினில் நிந்தை யேற்பன்
பிந்தினள் யோக முள்ளான் பித்தச்சூ டுடைய ஞகும்.

6. தன் தந்தையினால் சம்பாதிக்கப்பட்ட ஆஸ்தியை அடையாத வன் ஆவான். தனக்கு வரும் மனைவியால் விரோதங்கள் சேரும். பசு எருது முதலிய கால்நடைகள் விருத்தியாம். உலகில் பழிகளை அடை வான். பிந்தியகாலத்தில் யோகமுள்ளவன். பித்தச்சூடு உள்ளவன்.

7. சிலர்க்குஆ பத்தைக் காப்பன்
சிலவேநாள் வனவா சங்கள்
நிலையத்தைக் காப்பா னுகும்
நீள்நில மதனு லுய்வன்
விலைமாதர் மோகம் கொள்ளான்
விசனமுஞ் சுகமு மேற்பன்
நலமதை யெவர்க்கும் செய்வன்
நல்லோர்க்கு நல்ல னுவன்.

7. சிலருக்கு ஆபத்தைக் காப்பான். சின்னுட்கள் வனவாசம் செய்வான். தன் நிலையைக் காத்துக்கொள்வான். மிகுதியான நிலங் களைப் பயிர் செய்து நலம் அடைவான். வேசையர்மீது விருப்பமில் லாதவன். சுக துக்கம் சிறிது கலந்து வாழ்வான். எல்லோருக்கும் நலத்தையே செய்து வருவான். நல்லவர்கட்கு நல்லவனுவன்.

ஜாதகனுடைய தந்தையின் சகோதரபாவம்

8. தன்துணை காணு னுகும் ஐயமுனி மறுத்துச் சொல்வார்
பின்னன்னை தனக்குப் புத்திரர் பேசுவீர் முனியே
[நீர்தாம்
மன்னன்போல் ஆண்பால் ரண்டு மாதுவு மவ்வா றுகும்
அன்னவர் தந்தை ஆஸ்தி அணுகியே உய்வா ராகும்.

8. ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதரர் இல்லை. ஐயமுனிவர் தடுத்துக் கூறுகின்றார். இரண்டாம் தாயாருக்குப் புத்திர பாவத்தைச் சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். அரசனைப்போல் இரு சகோதரர் களும் இரு சகோதரிகளும் உள்ளனர். அவர்கள் தன் தந்தையின் ஆஸ்தியால் ஜீவித்து வருவார்கள்.

ஜாதகனது குணம்

9. உத்தர பாகம் தன்னி லுரைக்கிறே மவர்கள் சேதி
இத்தகை குணத்தா னுக்கு இப்பாலன் உதிப்பா னுகும்
வித்தகன் சேதி சொல்வேன் விளைபுலம் விருத்தி
[செய்வன்
சத்திய மென்றுல் அச்சம் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு.

9. அவர்களுடைய செய்தி அடுத்த பாகத்தில் சொல்லுகின் றோம். இத்தகைய குணங்களுடையவனுக்கு ஜாதகன் பிறப்பான் என்றோம். ஜாதகனுடைய செய்தியைச் சொல்லுகின்றோம். விளை நிலங்கள் பெருக்குவான். சத்தியத்திற்குப் பயப்படுவான். கால்கடை கள் பெருக்கம் உள்ளவன்.

10. காரக தேக ஞகும் கண்முகம் வசிய முண்டு
தீரவா ஞக சாலி செய்ந்நன்றி மறவா ஞகும்
காரியர் தம்மால் யோகம் நடையது துருசு மாகும்
காரிய சமர்த்த ஞகும் கல்வியும் சமம தாகும்.

10. காரக நேரய் உடைய சரீர முள்ளவன். கண் முகம் இவை வசிகரமானவை. தைரியமுள்ளவன். ஊக முடையவன். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். மனைவியால் யோகம் உள்ளவன். வேக மாக நடப்பவன். காரியங்களை முடிப்பதில் சமர்த்தன். சமமான கல்வியுள்ளவன்.

11. சல்லிய மினத்தால் காண்பான் சாதமும் குறைவு ருதான்
இல்லையென் றுரைக்க மாட்டான் இதிகாச மறியா ஞகும்
வெல்லுவான் துட்டன் தன்னை விகடங்கள் கூரு ஞகும்
புல்லிய புத்தி கொஞ்சம் புலிபோலே கோப மேற்பான்.

11. பந்து ஜனங்களால் துன்பமடைவான். ஒருகாலும் குறை வில்லாதவன். யாசித்தவர்கட்கு இல்லை என்று கூறுதவன். இதிகாச புராணங்கள் அறியாதவன். அயோக்கியர்களை ஜயிப்பான். அடா வடியாகப பேசாதவன். அற்ப புத்தி சிறிதுடையவன். புலிபோல் சீற்றம் கொள்ளுவான்.

ஜாதகனது சகோதரபாவமும் விவாகமும்

12. [1]தன்துணை ஆண்பால் ரண்டு சத்தியும் ஒருத்தி தீர்க்கம்
அன்னவர் சேதி பின்பு அறிவிப்போம் விவர மாக
இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருபத் தேழில்
கன்னிகை அன்னை வர்க்கம் கலப்பளாம் குணத்தைச்
[சொல்வேன்
மன்னவன் மனத்துக் கேற்றோள் மானிறம் சமதே
[கத்தாள்.

12. ஜாதகனுக்கு உடன்பிறந்தவர்களில் இரு சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். அவர்களின் விவரத் தைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகிறோம். இருபத்தேழாம் வயதில் தன் தாயின் வர்க்கத்திலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைக் கூறுகின்றோம். ஜாதகனது மனத்துக்கு ஏற்றவள். மாநிறமுடைய வள். சமமான உடலமைப்புள்ளவள்.

---

1. இப்பாடலில் ஓர் அடி மிகுந்துளது.

மனைவியின் குணங்கள்

13. பால்பாக்கிய முடைய ளாகும் பசித்தோர்க்குத் தாக [மீவள்
சீலியாம் விரத மேற்பள் செய்ந்நன்றி மறவா ளாகும்
வேல்விழி நடக்கை நன்மை விசனமெப் போதும் காணுள்
மால்மனை யொப்ப தாகும்.....

13. பால் பாக்கியமுள்ளவள். பசித்தவர்கட்கு அன்னமளிப்பவள். கல்லொழுக்கமுடையவள். நோன்புகள் ஏற்பாள். பிறர் செய்த உதவியை மறவாதவள். வேலைப்போன்ற கூர்மையான விழிகளையுடையவள். நன்னடத்தையுள்ளவள். துன்பம் ஒரு போதும் அடையாதவள். இலக்குமியைப் போன்றவள்.....

இருமனைவியர் ஏற்படக் கிரகநிலை

14. ஜயமுனி புகலு கின்றார் தேவிமா ரிருவ ராகும்
பயமிலாச் சொன்ன சங்கை பகருவீர் முனியே நீர்தாம்
நயமிலாப் பணியு ளெலில் நற்சனி நீச மாக
வியமாகு முதல்ம னைதான் மேவிடு மிரண்டாம் பாரி.

14. ஜயமுனிவர் கூறுகின்றார். ஜாதகனுக்கு மனைவிமார் இருவர் என்றோம். நான் கூறுவதில் தவறில்லை. எதனால் என்று கூறுங்கள், முனிவரே! நீங்கள். நான்காமிடத்தில் ராகு இருப்பதாலும் சனி நீசனுக மேஷத்தில் இருப்பதாலும் முதல் மனைவி மாண்டிடுவாள். ஜாதகனுக்கு இரண்டாம் மனைவி வருவாள்.

மறுப்பு : கிரகநிலை

15. அப்படிச் சொல்லொ ணாது அந்தணன் காரி புகரும்
மெய்ப்புடன் நவத்தி லாக மேவாது தாரம் ரண்டு
ஒப்புடன் தாரம் ஒன்றே உரைக்கிறோம் புத்திர பாவம்
அப்பணி சடையோன் தேவி யருளிய மொழிகுன் றுவே.

15. அப்படிச் சொல்ல முடியாது. குருவும் சுக்கிரனும் சனியும் ஒன்பதாமிடத்தில் இருப்பதால் இரு மனைவியர் ஏற்பட நியாயமில்லை. ஒரே தாரம் உண்டு என்கிறோம். அவனுடைய புத்திர பாவத்தைச் சொல்லுகின்றோம். கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

புத்திரபாவமும் முற்பிறப்பும்

16 சுதர்களு மாண்பால் ரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
இதுநிற்க உதித்தோன் பூர்வ மியம்புவோ மினிமே லாக
அதிதிவா ழருணை நாட்டி லணுகினன் வன்னிய சேயாய்ப்
பதியினில் திருவு முண்டாய்ப் பாலகன் வாழு நாளில்;

16. இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் நிலையாக இருப்பர். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். பெரியோர்கள் வாழ்ந்து வரும் திருவண்ணுமலையில் வன்னிய குலத்தவனுகப் பிறந் தான். இவனுடைய வீட்டில் இலட்சுமீகடாட்சம் ஏற்பட்டு மங்கள மாக வாழ்ந்து வருங் காலத்தில் ;

தாயாரைக் காலால் உதைத்த தோஷம்

17. பாரியின் வார்த்தை யாலே பெற்றமா தாவை யெத்தக்
கூறுவா ளன்னை சாபம் குலவும்பின் ஜன்மம் தன்னில்
காரக ரோகம் காலில் கண்டிடும் இது வல்லாமல்
காரியால் அன்னை யாலும் நடுங்கிடும் பூமி தானும்.

17. மனைவியின் பேச்சைக் கேட்டுப் பெற்ற தாயாரைக் காலால் உதைத்தான். தாயார் சாபமிட்டாள். இனி ஏற்படும் பிறவியில் காலில் காரகநோயை அடைவாய். இதுதவிர, மனைவியாலும் தாயாலும் திடுக்கிடும்படியான சம்பவங்கள் நிகழும்.

18. இன்னமும் பலவார் சொன்னு ளெய்திற்று அந்தச் சாபம்
மன்னவன் அந்தி யத்தில் வாயுவால் மரண மாகிப்
பொன்னவன் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
அன்னையின் சாபத் தாலே அவன்காலில் ஊன மாகும்.

18. என்று கூறி இன்னும் பலவிதமாகச் சாபமிட்டாள். அந்தச் சாபத்தை யடைந்து ஜாதகன் கடைசிக் காலத்தில் வாயு ரோகத்தால் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறப்பான். தாயாரின் சாபத்தால் அவனுக்குக் கால் ஊனமாகும்.

தாயாரின் சாபத்தின் பலன்

19. தந்தையி னுஸ்தி காணன் தாய்வர்க்கம் தன்னுல் உய்வன்
இந்தவன் யோகச் சேதி இயம்புவோ மினிமே லாகத்
தன்தன முடைய னுகும் தரணியில் பலித முண்டு
நிந்தைகள் ஏற்கா னுகும் நேமியில் சல்லியம் காணன்.

19. தன் தந்தையின் ஆஸ்தியைப் பெறுதவன். தன் தாய் வர்க்கத்தாரால் வாழ்ந்து வருவான். இவனுடைய யோகச் செய்தி களை இனிக் கூறுகின்றேம். தன்னுல் சம்பாதிக்கப்பட்ட பொருள் உடையவன். பூமியில் விளைச்சல் அதிகம் அடைவான். பழிகள் அடையான். கடன் உபத்ரவமில்லாதவன்.

20. காரக ரோக மெய்தும் காலத்தைப் புகலு மென்னத்
தீரமா யிருபத் தேழில் ஜனித்திடும் காலி லேதான்
மாரிடும் சிலவே நாளில் மருந்துபின் உண்ணத் தீரும்
காரியச் சமர்த்த னுகும் காலிகள் பலித மெய்தும்.

20. காரகநோயை அடைவான். அந்தக் காலத்தைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி வினவ, திண்ணமாக ஜாதகனுடைய இருபத்தேழாம் வயதில் காலில் நோய் ஏற்படும். சின்னட்கள் மருந்து சாப்பிட்டபின், நோய் தீர்ந்து போம். காரியங்கள் செய்வதில் சமர்த்தன். கால்நடைகள் விருத்தியாம்.

பொதுப்பலன்

21. இருபத்தெட் டாண்டு தன்னில் எய்திடும் திறமாய்ப் பூமி
பெருகிடும் நாட்கு நாளாய்ப் பூமியில் வறுமை காணுன்
மறையவர் பூமி சேரல் வயதுமே தீர்க்க மெய்தும்
பொருளது பெருக்க மாகும் பூமியில் வறுமை காணுன்.

21. ஜாதகனுடைய இருபத்தெட்டாம் வயதில் பூமி வாங்குவான். நாளுக்குநாள் விருத்தியாகும். உலகில் தரித்திரம் இல்லாதவன். அந்தணர்களுடைய பூமியைப் பெறுவான். நீண்ட ஆயுள் உள்ளவன். பொருள்கள் விருத்தியாகும். உலகில் தரித்திரம் அடையாதவன்.

அன்னையின் குணங்கள்

22. அன்னையின் குணத்தைச் சொல்வேன்
அழகுளாள் பெருமை சாலி
தன்சொல்லே மேன்மை யாகச்
சாதிப்பாள் கோபம் கொஞ்சம்
மன்னவன் மனத்துக் கேத்தோள்
வருவோரை யாத ரிப்பள்
பொன்பணி சேர்ப்பா ளாகும்
பிறர்குற்றம் புகலா ளாகும்.

22. ஜாதகனுடைய தாயாரின் குணத்தைச் சொல்லுகின்றேன். அழகுள்ளவள். பெருமையுடையவள். தன் வார்த்தைகளே மேன்மையானவை என்று சாதிப்பாள். சிறிது கோபங் கொள்ளுவாள். தன் கணவன் மனத்துக்கேற்றவள். தன்னிடம் வருபவரை ஆதரித்து வருவாள். பொன் ஆபரணங்களைச் சேர்த்து வருவாள். பிறர்மீது குறை கூறுதவள்.

23. மங்கைபாட் டாளி யாகும் மருவிடும் பித்த வாயு
பொங்கிய குடும்ப மேற்பள் பேதைக்குத் துணைப்பெண் [காணுள்
தங்கிடும் ஆண்பால் ரண்டு சந்ததி ஒருவன் காணுன்
சிங்கம்போல் ஒருவன் தீர்க்கம் சல்லிய மதையு மேற்பன்.

23. உழைப்பாளி என்றேரும். பித்த வாயுநோயுமுள்ளவள். செழிப்புள்ள குடும்பத்தை அடைவாள். சகோதரிகள் இல்லாதவள்.

இரு சகோதரர்கள் உண்டு. ஒரு சகோதரன் இறந்து விடுவான். ஒரு வன் நீண்ட ஆயுள் உள்ளவன். அவன் கடன் உபத்ரவங்களை யடை வான்.

தாயின் முற்பிறவி

24. பின்பக்கம் விபர மாகப் பேசுவோம் அவர்கள் சேதி
அன்னையின் முன்ஜன் மத்தை அறிவிப்போ முனியே
[கேளு
பெண்ணையாம் நதியின் பக்கல் பேரூரில் கர்ண சேயாய்
உன்னதக் குடும்பி யாகி உத்தமி வினையில் லாமல்;

24. அவர்களுடைய செய்தியை விவரமாகப் பிற்பாகத்தில் கூறு கின்றேம். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேன். கேட்பீராக பெண்ணையாற்றுக்கருகில் உள்ள பேரூரில் கருணீகர் குலத்தவளாகப் பிறந்து உயர்ந்த குடும்பியாக வாழ்ந்து தீவினைகளில்லாமல்;

தாயின் மறுபிறவி

25. தென்திசைக் கால னடி சென்றுமே பிரம்ம வர்க்கம்
கன்னிகை யுதித்தா ளென்றோரும் பகருவோம்
[இவள்பின் ஜன்மம்
பொன்முக னற்றி னோரம் பேரூரில் இக்கு லத்தில்
அன்னவ ளுதிப்பா ளாகும் அம்பிகை யாளே கேளாய்.

25. இறந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந் தாள் என்று சொன்னோம். இவளுடைய மறுபிறவியைச் சொல்லு கின்றோம். பொன்முகியாற்றின் ஓரமாக உள்ள பேரூரில் இதே குலத் தில் ஜாதகனின் தாய் பிறப்பாள் என்றோம். தாயே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

26. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் கீழ்ப்பாக்
[கத்தில்
இந்தகோர் குலமு தித்து எழிலான குடும்பி யாகி
அந்தவன் வாழு நாளில் அணுகின வினையைக் கேண்மோ
நிந்தைகள் ஓர்பெண் மேலே நிர்மித்து விலக்கும் போது;

26. தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கீழ்ப்பாக் கத்தில் இதே குலத்தில் பிறந்து செயலான குடும்பியாகி வாழ்ந்து; வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு பெண்மீது அடாத வார்த்தைகளைக் கூறி அவளை விலக்கி விட்டான். அப்போது

பெண் சாபம்

27. மாதுவும் திகில டைந்து வரைந்தசா பத்தைக் கேண்மோ
ஓதினுய் பழியு மென்மே லுதிக்கும்பின் ஜன்மம் தன்னில்
மாதாவின் சுகமு மின்றி வனவாசம் மறுவூர் வாசம்
போதவே தந்தை யாஸ்தி பொருந்தாமல் துணையு மின்றி;

27. அப்பெண்ணும் கலவரமடைந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். என்மீது அபவாதங்கள் கூறினையே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் தாயாரின் சுகமில்லாமல் வனவாசம்போல் வேறூர் சென்று வாழ்ந்து தந்தையின் ஆஸ்தியைப் பெறுமல் சகோதரர்கள் இன்றி வாழ்வாய்.

28. இன்னமும் பலவாறு சொல்லி இறைத்தனள்
[தெருத்தூள் வாரித்
துன்மையா யந்தச் சாபம் சேர்ந்தது என்று சொல்வோம்
மன்னனுக் கிச்சென் மத்தில் மாதுவின் சாபத் தாலே
தன்துணை காணு ஞரும் தந்தையார் ஜிதமும் வேண்டான்.

28. என்றும் இன்னும் பலவிதமாகக் கூறித் தெருமண்ணை வாரி யிறைத்தாள். நீங்காக அந்தச் சாபம் இவனைச் சார்ந்தது என்று சொல்லுகின்றோம். ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் பெண் சாபத்தால் உடன்பிறந்தவர்களின்றி யிருப்பான். தந்தையரஸ்தியும் வேண்டாதவன்.

29. வனவாச மாகும் சின்னுள் மனைவியால் பெருமை யுண்டு
தனயன்பின் ஜன்மம் சொல்வேன் தக்கோலம்
[தன்னி லேதான்
கனதன முடையோ னுக்குக் கலப்பனும் சத்திரிய சேயாய்
வினையிலாத் தவங்கள் செய்யும் வித்தக கேட்டி டாயே.

29. வனவாசத்தைப்போல் சின்னுட்கள் வாழ்ந்து வருவான். தன் மனைவியால் பெருமையடைவான். ஜாதகனுடைய தந்தையின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம். தக்கோலத்தில் உள்ள ஒரு தனவானுக்குப் புத்திரனுக க்ஷத்திரிய குலத்தில் பிறப்பான் என்றும். தவங்களை யியற்றும் தேவியே! கேளுங்கள்.

தாய்தந்தையரின் மரணகாலம்

30. மூப்பது எட்டு ஆண்டில் விளம்புவோம் தந்தை கண்டம்
தப்பிதம் நாற்ப தாண்டில் தாய்க்குமே மார கங்கள்
ஒப்புடன் அறுபா னெட்டில் உயர்மீன மாதம் தன்னில்
மெய்ப்புடன் உடல மேகும் வித்தக னென்று
[சொல்வோம்.

30. முப்பத்தெட்டாம் வயதில் ஜாதகனுடைய தந்தை மரண மடைவான். நாற்பதாம் வயதில் தாய்க்கும் கண்டமேற்படும். ஜாதகன் தன்னுடைய அறுபத்தெட்டாம் வயதில் பங்குனி மாதத்தில் மரணமடைவான் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய மறுபிறவி

31. மறுஜன்மம் கலிங்க நாட்டில் வருவனும் சைவச் சேயாய்ப்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா னுகும்
திருமகன் ஜனன காலம் [1]தேர்ப்பாகன் தசைமூன்
[றாண்டும்
மருவிடும் திங்க ளேழு மறைந்தனம் பூர்வ பாகம்.

31. ஜாதகன் மறுபிறவியில் கலிங்க தேசத்தில் சைவ குலத்தவனுகப் பிறந்து அதிகமான பொருட்செல்வத்தைப் பெற்று கீர்த்திமானுக வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய ஜனன காலத்தில் புத மகாதசையில் இருப்பு மூன்று வருடங்களும் ஏழு மாதங்களுமாம். இதுவரை முதற்பாகம் சொன்னேம்.

---

1. புதன்

ஜாதகம் 6

1. மந்திரி சனியும் சீயம் மங்கலன் [1]கெண்டை யாகச்
சந்திரன் புகரு மேடம் தனுசினில் கருங்கோள் நிற்கப்
புந்திபான் சிகியு வீன புனிதனும் ஜன்மம் சிம்மம்
வந்ததால் பலனை நீங்க ளறைகுவீர் பலனைத் தானே.

1. குரு சனி சிம்மத்திலும், செவ்வாய் மீனத்திலும், சுக்கிரன் சந்திரன் மேடத்திலும், ராகு தனுசிலும், சூரியன் புதன் கேது மிதுனத்திலும் நின்று, ஜன்ம லக்கினம் சிம்மமாக இருந்தால் பலனைச் சொல்லுங்கள்.

கிரகநிலை

செவ்வாய்	சந்திரன் சுக்கிரன்		புதன் சூரியன் கேது
	இராசி சக்கரம்		
			லக்கினம் குரு சனி
ராகு			

ஜாதகன் பிறந்த வீட்டின் நிலை

2. வந்தவ ளுணும் ஜன்மம் வந்தயில் கீழ்மேல் வீதி
எந்தையே எதிர்வீ டில்லை எமன்வாசல் பார்வை யாகும்
முந்திய மாரி மேற்கில் முயற்சியாய்க் கணேச னுண்டு
நந்திவா கனத்தோன் காளி கவிலுவோம் கிழக்கில்
[கோஷ்டம்.

2. பிறந்தவன் ஆண்பிறப்பு. அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. எதிரில் வீடில்லை. மேற்கில் மாரியம்மன் கோவில் உண்டு. விநாயகர் ஆலயமும் இருக்கும். கிழக்குப் பக்கத்தில் சிவபெருமான் ஆலயமும காளி கோவிலும் உள்ளன.

ஜாதகனது குலம்

3. மாலவன் தென்கீழ் தன்னில் மாரியும் தென்மேல் தங்கும்
சீலமாங் குணமு முண்டு தந்ததியு நிற்கு மென்றோம்
சாலவே சிற்றூர் தன்னில் சலகுல தன்னி லேதான்
பாலனு முதிப்பா னென்றோம் பகருவோம் தந்தை யில்லம்.

1. மீனம்

3. திருமாலின் ஆலயம் தென்கிழக்கிலும் மாரியம்மன் கோவில் தென்மேற்குத் திக்கிலுமுள்ளது. நல்லொழுக்கமுள்ள குணத்தவர் வசிக்குமூராகும் அது. அருகில் விநாயகர் ஆலயமும் உள்ள ஒரு சிற்றூரில் வேளாளர் குலத்தில் ஜாதகன் பிறப்பான் என்றும், ஜாதகன் தன் தந்தையின் வீட்டில் பிறப்பான் என்றும்.

4. உதித்தஇப் பால னுக்கு உறுந்தந்தை தாயின் யோகம்
மதித்திடத் துணைவர் யோகம் மனைவியர் புத்திர யோகம்
சதியிலா முன்பின் ஜன்மம் சாந்தியு மிந்நூல் தன்னில்
விதிக்கின்றே முனிவர் யாங்கள் வித்தகி கேட்டி டாயே.

4. அவ்விதம் பிறந்த இந்த ஜாதகனுடைய தந்தை தாய் இவர்களின் யோகம், சகோதரர் மனைவி மக்கள் இவர்களின் யோகம், முற்பிறவி மறுபிறவி சாந்திகள் முதலிய இவற்றை இந்த ஜோதிட நூலில் சொல்லுகின்றோம், முனிவர்களாகிய நாங்கள். தாயே! கேளுங்கள்.

5. தாதையும் தவங்கள் செய்து ஜன்மித்தா னிவனின் [தந்தை
மேதினில் துணைவர் தம்மை யியம்பவே பலத்தைக் [காணும்
ஓதுவே னவன்கு ணத்தை உத்தமன் கிருஷி செய்வன்
சூதுக ளில்லா னுகும் சுத்தமாய்க் கருதி றத்தன்.

5. பாட்டனார் பல நல்வினைகள் தவங்கள் செய்து பிறகு ஜாதகன் தகப்பன் பிறந்தான். அவனுக்குச் சகோதரர் உண்டு என்று சொல்லக் கிரக பலமில்லை. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். அவன் விவசாயம் செய்து வருவான். சூதுகள் செய்யாதவன். நல்ல கருப்பு நிறமுடையவன்.

தந்தையின் குணங்கள்

6. தேவதா பக்தி கொள்வன் சிந்தையில் கபடு மில்லான்
ஆவலா யடுத்தோர் தம்மை அன்புடன் காக்க வல்லன்
தாவிய பூமி சேர்ப்பன் சகலர்க்கு நல்லோ னுவன்
பாவங்கள் செய்யா னுகும் பந்துவை யாத ரிப்பன்.

6. தெய்வபக்தியுள்ளவன். மனத்தில் கபடமில்லாதவன். தன்னை அண்டி வந்தவர்களைப் பிரியத்துடன் காப்பாற்றுவான். விளைநிலங்களைப் பெருக்குவான். எல்லோருக்கும் நல்லவனாக இருப்பான். தீய காரியங்களைச் செய்யாதவன். தன் சுற்றத்தாரை ஆதரித்து வருவான்.

7. குருவுப தேசம் கொள்வன் [1]குஞ்சர நடையு மாவன்
பெருமவர் நேசம் கொள்வன் புத்திர பாச முள்ளான்
விரைவினில் கோபம் கொஞ்சம் விசித்திர வீடு செய்வன்
நிறைந்திடும் செல்வ முள்ளான் நிமலியே மேலுங் கேளே.

7. குருவிடம் உபதேசங்கள் கேட்பான். யானையைப்போன்ற கம்பீரமான நடையையுடையவன். பெரியோர்களிடம் கட்புக் கொள்ளுவான். பிள்ளைகளிடம் பிரியமாக இருப்பான். சீக்கிரத்தில் கோபங் கொள்ளுவான். அழகான வீட்டைக் கட்டுவான். நிறைந்த செல்வ முள்ளவன். தாயே! மேலுங் கேளுங்கள்.

ஜாதகனுடைய உடன்பிறப்பு

8. இப்படி யிருக்குந் தந்தை இவனுக்குப் பத்தாம் ஜன்மம்
ஒப்புட னுதிப்பா ளுகும் உரைக்கிறேம் துணைவர்
[தம்மைச்
செப்புவோம் பதினென் ருகும் சேதங்கள் சிலவே யாகும்
மெய்ப்புட ணெண்பால் மூன்று மேதினில் கன்னியவ் வாறு;

8. இவ்விதமுள்ள தந்தைக்கு ஜாதகன் பத்தாமவளுகப் பிறப்பான். அவனுடைய சகோதர பாவத்தைச் சொல்லுகின்றேம். அவனுக்கு உடன்பிறந்தவர் பதினெரு பேர். அவர்களில் சிலர் நிலையார். மூன்று சகோதரர்களும் மூன்று சகோதரிகளும்;

ஜாதகனுடைய குணங்கள்

9. தீர்க்கமா மென்று சொன்னேம் செப்புவோ மிவன்கு
[ணத்தை
ஏற்கவே மால்நி றத்தான் இருவிதச் சொல்லு முள்ளான்
காரப்பனும் ஏழை யைத்தான் காலாட்க ளுடைய ளுகும்
மூர்க்கமும் கொஞ்ச முள்ளான் முன்கோபம் வர்ம முண்டு.

9. தீர்க்கமாயிருப்பார் என்று சொல்லுகின்றேம். ஜாதகனுடைய குணத்தைச் சொல்லுகிறேம். கரியநிறமுடையவன். இருவிதமாகப் பேசுபவன். ஏழைகளை ஆதரிப்பான். பணியாட்கள் உள்ளவன். சிறிது மூர்க்கருணமுமுடையவன். முன்கோபி. பழி வாங்கும் எண்ணமுள்ளவன்.

10. சொன்னசொல் கேட்பா ளுகும் தோத்திரப் பிரிய ளுவன்
அன்னியர்க் குதவி செய்வா னவன்துணை யுறவு
[கொள்வான்
பன்னியே பேச வல்லான் பஞ்சைமே லிரக்க முள்ளான்
தன்னிலே சூடு முள்ளான் சகடுவா கனங்க ளுள்ளான்.

1. யானை

10. பிறர் சொல்லுவதைக் கேட்டுக் கொள்ளுபவன். தோத்திரம் செய்யப்படுவதில் பிரியமுள்ளவன். பிறருக்கு உதவி செய்பவன். தன்னுடைய சகோதரரிடம் உறவு கொண்டாடுவான். பன்னிப்பன்னிப் பேசும் இயல்பினன். ஏழைகளின்மீது இரக்கமுள்ளவன். சூட்டுத் தேகமுள்ளவன். வண்டி முதலிய வாகன வசதிகளுடையவன்.

11. குடும்பத்தை யாத ரிப்பன்
குத்திரம் பேசு வானும்
அடைவுடன் பொய்கள் சொல்வன்
அவனுக்குக் காலி விருத்தி
தடபுடல் செய்கை யுள்ளான்
சன்மார்க்கன் கபடு முள்ளான்
மடையரை நேசம் கொள்ளான்
வாக்குச்சொல் லிரண்டு முள்ளான்.

11. குடும்பத்தை ஆதரித்து வருவான். பிறரைப்பற்றிக் கோள் வார்த்தைகளையே பேசுபவன். பொய்களைத் திட்டமிட்டுப் பேசுபவன். கால்நடைகள் பெருகும். ஆடம்பரச் செய்கைகளையுடையவன். நல் வழியில் நடப்பவன். கபடமுள்ளவன். மூடர்களுடன் நட்புக் கொள் ளாதவன். இருவிதமாகப் பேசுபவன்.

ஜாதகனுடைய திருமணக் காலம்

12. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருபா
[னென்றில்
கன்னிகை யுத்த ரத்தில் காதலி வருவா ளாகும்
சொன்னதை மாறி யேதான் ஜயமுனி சொல்லு கின்றார்
பன்னிய யேழோன் காரி பகர்ந்ததால் பலன்சொல் வீரே.

12. ஜாதகனது திருமணக் காலத்தைச் சொல்லுகிறோம். இருபத்தோராம் வயதில் மனைவி வடக்குத் திக்கிலிருந்து வருவாள் என்று சொன்னதை மறுத்து ஜயமுனிவர் கூறுகின்றார். ஏழாம் வீட்டுக்குரியவன் சனியாக இருப்பதால் ஏற்படும் பலனைச் சொல் லுங்கள்.

13. அன்னவன் குடும்பச் சேதி யறைகிறோம் விவர மாக
இன்னவன் உத்த ரத்தி லிலகியும் தந்தை தானும்
தென்மேற்கிற் செல்வா ளாகும் தந்தையி னஸ்தி போக்கி
உன்னத வறுமை யுண்டாய் உறைகுவா னென்று
[சொன்னோம்.

13. ஜாதகனுடைய குடும்பச் செய்தியை விவரமாகக் கூறுகின் றோம். ஜாதகனும் அவன் தந்தையும் வடக்காகச் சென்று பிறகு

அவ்விடத்திலிருந்து தென்மேற்கில் செல்வார்கள். தந்தையினுடைய ஆஸ்தியைச் செலவு செய்து வறுமையடைந்து ஜாதகன் வாழ்ந்து வருவான் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகன் மனைவியின் குணங்கள்

14. அத்திசை தனிலி ருந்து அம்மாது வணுகு மென்றோம்
பத்தினி குணத்தைச் சொல்வேன் பாரினில் ஒடிச்சல் [தேகி
நித்தியம் சீல முள்ளாள் நிகர்மாது ரிரண்டே யாகும்
வித்தகி யிருகி றத்தாள் விலத்தியாய்த் தந்த முள்ளாள்.

14. அந்தப் பக்கத்திலிருந்து மனைவி வருவாள் என்று கூறுகின்றோம். ஜாதகனின் மனைவியின் குணத்தைச் சொல்லுகின்றோம். மெல்லிய சரீரமுடையவள். நல்லொழுக்கமுடையவள். இரு தாய்மார் களை யுடையவள். கருமை கலந்த சிவந்த நிறமுடையவள். ஒன்றுக் கொன்று விலகிய பற்களை யுடையவள்.

15. சத்தான வஸ்து கொள்ளாள்
தர்மத்தில் இச்சை கொஞ்சம்
புத்தியில் கபடு கொஞ்சம்
பூஷணம் பொருள்மே லிச்சை
சுத்தநன் னடக்கை யுள்ளாள்
சுகமுளாள் வரனு லேதான்
வித்தகி கோப முள்ளாள்
மெல்லிநன் டைக்கை யென்றோம்.

15. புஷ்டிதரும் வஸ்துக்களைச் சாப்பிடாதவள். தரும சிந்தை சிறிது உடையவள். மனத்தில் சிறிது கபடமுமுள்ளவள். ஆபரணங் கள் செல்வம் இவற்றின்மேல் விருப்பமுடையவள். நன்னடத்தை யுள்ளவள். தன் கணவனுல் சுகம் பெறுவாள். கோபமுடையவள். நன்னடத்தை யுள்ளவள்.

புத்திரபாவம்

16. மதலைகள் சேதி தன்னை யறைகிறோம் பலத்தைக் [காணும்
சுதர்களும் தோன்றி னாலும் துன்பமா மென்று [சொன்னோம்
நதிசடை முனிவர் சொல்ல நாயகி கேட்க லுற்றாள்
எதுவிதக் கார ணத்தால் இலகாரே புத்திர ரென்றீர்.

16. ஜாதகனது புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். பல மில்லை. குழந்தைகள் தோன்றினாலும் நிலையா என்று கூறுவோம்.

இங்ஙனம் சடைமுடியையுடைய முனிவர் கூற பார்வதிதேவி கேட்க லானுள். எந்தக் காரணத்தால் புத்திரர்கள் இல்லை என்று சொன்னீர்கள் ?

புத்திரதோஷத்திற்குரிய கிரகநிலை

17. ராகுவு மைந்தில் நிற்க ரவிபுதன் தன்னைப் பார்க்கப்
பாகமா யுதித்தி டாது பிறக்கினுந் தீதே போகும்
தோகையே முன்னூழ் தன்னுல் சுதர்களும் தோஷ
[மென்றோரும்
வாகையாய் முன்னூழ்ப் பாவம் வருவிப்பீர் முனியே
[யென்றுள்.

17. ராகுவும் புத்திரஸ்தானத்தில் இருந்து சூரியன் புதன் இவர்களைப் பார்ப்பதாலும் புத்திரர்கள் தோன்றார். பிறந்தாலும் நிலையார். தாயே ! முற்பிறவியில் செய்த தீவினையால் புத்திரர்களுக்குத் தீங்கு ஏற்படும். முற்பிறவியில் செய்த தீவினையைக் கூறுங்கள். முனிவரே ! என்றார்.

ஜாதகனுடைய முற்பிறவி

18. இன்னவன் முன்ஜன் மத்தில் இவனூர்க்கு வுத்த ரத்தில்
தன்னிலே சிற்றூர் தன்னில் தானவ னிக்கு லத்தில்
அன்னவ னுதித்து மேலும் அவனியில் கிரிஷி செய்து
உன்னத வால யங்கள் உயர்திருப் பணியும் செய்தான்.

18. ஜாதகனுடைய முற்பிறவியில் இவன் ஊருக்கு வடக்கில் உள்ள சிற்றூரில் இதே குலத்தில் பிறந்து விவசாயம் செய்து வந்து பெரிய ஆலயங்கள் கட்டுவது முதலிய திருப்பணிகளைச் செய்து வந்தான்.

வேலைக்காரனுக்குக் கூலிகுறைத்தல்

19. திருப்பணி செய்யும் காலம்
சேர்ந்ததோர் ஊழி சொல்வேன்
தரையினில் வேலைக் காரர்
சுமைக்கூலி தராம லின்னேன்
குறையாகப் பொருளும் தந்தான்
கூறுவார் ஏழை தாமும்
மறுபிறப் பினிலே நீயும்
மானிட ஜனன மாகி ;

19. ஆலயத்திருப்பணி செய்துவரும் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். (தன் கீழே) வேலை செய்த பணியாட்களுக்குரிய கூலியைத் தராமல் குறைத்துக்கொடுத்தான். ஏழைகள் பின் வருமாறு கூறினர் :—அடுத்த பிறவியில் நீ மனித ஜன்மம் எடுத்து ;

ஏழைகளது சாபம்

20. மதலைகள் ஜனித்துப் பின்பு மாண்டிடு முந்த னுக்குக்
குதர்க்கமாய்க் கூலி தன்னைக் குறைத்திட்டா யென்று
[சொல்லிப்
பதிக்குமே செல்ல னூற்றூர் பஞ்சைகள் சாபம் சூழ்ந்து
இதுஜன்மந் தன்னி லேதான் இலகிடு மந்தச் சாபம்.

20. புத்திரர்கள் பிறந்த பிறகு அவர்கள் இறந்து போவார்கள். நீமையாக எங்களுக்குத் தரவேண்டிய கூலியைக் குறைத்து விட்டாய் என்று கூறித் தம் வீட்டுக்குச் சென்றனர். ஏழைகள் சாபம் இவனை வந்தடைந்தது. இப்பிறவியில் அந்தச் சாபம் தொடர்ந்தது.

புத்திரதோஷம் நீங்கச் சாந்தி

21. சாபத்தால் மதலை தோன்ற
ஜீரண மென்று சொன்னேம்
மேவிய பெண்பா லுண்டு
விருத்தியா மிவனுக் கேதான்
பாவத்தால் முன்பால் தோஷம்
பகருவோஞ் சாந்தி யொன்றும்
தோகையுந் தானு மாகத்
தணிகையின் மலைக்குச் சென்று;

21. முற்கூறிய சாபத்தால் குழந்தைகள் தோன்றிப் பிறகு மரண மடையும் என்றேம். ஒரு பெண் குழந்தை பிறந்து இவனுக்கு விருத்தியடையும் என்று சொன்னேம். முற்பிறவியில் செய்த தீவினையால் ஏற்பட்ட புத்திரதோஷம் நீங்கச் சாந்தியொன்று கூறுகின்றேம். ஜாதகன் தன் மனைவியுடன் திருத்தணிக்குச் சென்று;

இதுவுமது

22. அறுமுகர்க் கைந்து கார்த்தி அன்புட னர்ச்சித் தேத்தி
உரகனும் ரஜதத் தாலே உத்தமன் செய்து மேதான்
மறையவர் தமக்குக் கந்தம் விடம்புஷ்பம் இதனைச்
[சேர்த்துக்
குறையதைப் பொறுங்க ளென்று குணமுட னவர்க்கு
[ஈந்து;

22. ஆறுமுகக் கடவுளுக்கு ஐந்து கார்த்திகைகள் பக்தியுடன் அர்ச்சனைசெய்து துதித்து வெள்ளியால் பாம்புபோல் உருச்செய்து அந்தணர் ஒருவருக்கு சந்தனம், புஷ்பம், தட்சிணை முதலியவைகளுடன் கொடுத்து எங்களுடைய பிழைகளைப் பொறுத்தருளுங்கள் என்று பணிவுடன் கேட்டுக்கொண்டு;

23. வாக்கினு லாசி ரேத்தி யடியார்கள் தசத்துக் கன்னம்
போக்கிய மாக ஈந்து உத்தம னுள்ளூர் மீண்டு
தீர்க்கமாய்க் கார்த்தி கைக்குச் சிவனடி யார்க்கு அன்னம்
ஏற்கவே செய்து வந்தா லிலகிடும் மதலை தீர்க்கம்.

23. அவர்கள் வாயால் பொறுத்தாம் என்று ஆசீர்வதிக்கப் பட்டு, ஈசனடியார் பத்துப்பேருக்கு அறுசுவையுடன் உணவளித்து, பிறகு உள்ளூருக்குத் திரும்பி, ஒவ்வொரு கார்த்திகைக்கும் சிவனடி யார்கட்கு அன்னம் அளித்து வந்தால் குழந்தைகள் தோன்றும். அவை தீர்க்கமாம்.

ஜாதகன் தாயினதுகுணம்

24. மாதுரு குணத்தைக் கேளாய் மர்மமில் லாத நெஞ்சம்
பாதக மில்லா ளாகும் பரமர்க்கு அன்பு பூண்பள்
கோதிலா வரனுக் கேதான் குணமுடன் நடக்க வல்லாள்
மேதினில் கீர்த்தி யேற்பள் மெல்லியும் சிவந்த மேனி.

24. ஜாதகனுடைய தாயின் குணத்தைச் சொல்லுகின்றோம். மர்மமில்லாத மனமுடையவள். தீதுகள் செய்யாதவள். சிவபக்தி யுள்ளவள். தன் கணவன் மனங்கோணுமல் நடப்பவள். உலகில் புகழை அடைவாள். சிவந்த உடலுடையவள்.

25. பொறுமையும் சோம்ப லில்லாள் புண்ணிய மனத்தா [ளாகும்
சிறுமையு மாதி யில்தான் செறிந்திடு மிவளுக் கேதான்
அறநெறி பூண்ப ளாகும் அன்னங்கள் போட விச்சை
வரவரச் செல்வ முண்டாம் மங்கையே மேலுங் கேளே.

25. பொறுமையுடையவள். சோம்பலில்லாதவள் புண்ணிய மான மனமுடையவள். ஆதிகாலத்தில் சிறுமை யடைவாள். தர்ம வழிப்படி நடப்பவள். அன்னமளிப்பதில் விருப்பமுடையவள். வர வரச் செல்வம் விருத்தியடையும். தாயே! மேலுங் கேளுங்கள்.

தாயின் முற்பிறவி

26. இவளுடை முன்ஜன் மத்தை
இயம்புவோம் காஞ்சி யுத்தரம்
அவனியில் பேரூர் தன்னில்
அவள்வன்னிய வம்சம் தோன்றி
நவனியில் மதலை யுண்டாய்
நற்பொரு ளுள்ளா ளாகிச்
சிவனடி யார்க்குத் தொண்டு
செய்தன ளிவளே யென்றோம்.

26. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சீபுரத்திற்கு வடக்கில் உள்ள பெரிய ஊரில் வன்னிய குலத்தில் பிறந்து குழந்தைகளே யடைந்து பொருட் செல்வம் உள்ளவளாகி சிவனடியார்கட்குத் தொண்டுகள் செய்து வந்தாள் என்றோம்.

27. வருவோர்க்குத் தாக மீந்து வளமுள தலங்கள் சென்று
பெருமையாய்த் தீர்த்தம் தோய்ந்து புருடர்க்கு முன்னே [மாண்டு
பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தவ ளிவளே யென்றோம்
உரைக்கிறே மிவள்பின் ஜன்மம் உத்தமி கேட்டி [டாயே.

27. அண்டி வந்தவர்கட்கு அன்னபானங்களளித்துப் பல பிரபல புண்ணிய தலங்களுக்குச் சென்று அங்குள்ள தீர்த்தங்களில் நீராடி தன் கணவனுக்கு முன்பாகவே மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தவளிவளே என்றோம். இவளுடைய மற்றுபிறவியைச் சொல்லுகின்றோம். உத்தமியே! கேளுங்கள்.

28. காசியின் நதியின் பக்கல் கனத்ததோர் பிரம்ம வம்சம்
நேசமா யுதிப்பா ளாகும் நிமலிக்கு மணமில் லாமல்
பாசமாய் மரண மெய்திப் பரமன்தன் பாதம் சேர்வள்
தூசுபோல் மனத்த ளான சுந்தரி கேட்க லுற்றாள்.

28. காசி க்ஷேத்திரத்தில் கங்கா நதியின் அருகில் ஓர் உயர்ந்த அந்தணர் குலத்தில் பிறப்பாள் என்றோம். அவளும் மணம் செய்து கொள்ளாமல் மரண மடைந்து இறைவனடிகளே அடைவாள். தூய்மையான மனத்தையுடைய பார்வதிதேவி கேட்கலானாள்.

29. இச்சென்மம் தன்னி லேதான் இவள்புண்ணியம் என்ன [செய்தாள்
உச்சித மறுஜன் மத்தில் உறைகுவாள் பிரம்ம வம்சம்
அச்சுதன் தங்கை கேட்க அம்முனி கூறு கின்றார்
கச்சணி மாது தானும் கவடுக ளில்லா ளாகி ;

29. இப்பிறவியில் ஜாதகனின் தாய் செய்த நற்காரியங்கள் என்ன வென்று கூறுங்கள். மறு பிறவியில் அந்தணர் குலத்தில் பிறக்கும் காரணங்களென்ன என்று கண்ணபிரானின் தங்கையாகிய பார்வதிதேவி கேட்க, அம்முனிவர்கள் சொல்லுகின்றனர். கச்சினை யணியும் பெண்மணியாகிய ஜாதகன் தாய் மனத்தில் வஞ்சனையில்லாதவளாய் ;

உயர்குலம் : நற்செயல்கள்

30. தாகமு மன்ன மீந்து சகலர்க்கு நல்லோ ளாகிப்
பாகமாய்ப் பலதீர்த் தங்கள் பத்தினி பெற்ற தாலும்
ஆகிய புண்ணி யத்தால் அறுமறை குலமு திப்பாள்
தோகையும் சுருக்கி லேதான் தோன்றுவாள் தேவ னுக ;

30. அன்புடன் அன்னமளித்து, எல்லோருக்கும் நல்லவளாகிப் பற்பல புண்ணிய நதிகளில் நீராடி வந்ததால் ஏற்பட்ட புண்ணியத் தினால் அந்தண குலத்தில் பிறப்பாள் என்றும். அவளும் விரை விலேயே தேவதையாவாள்.

மறுபிறவி

31. மறுஜன்ம மறைக்கு லத்தில் மாதுவு முதிப்ப தென்ன
உரைப்பீர்கள் முனியே என்றுள் உத்தமி ஆதியில்தான்
புருடன்சொல் தடுத்துச் சொன்னுள் பூவையு மந்தத்
[தோஷம்
உறைகுவாள் பிரம்ம வம்ச முறைந்துபின் தேவ ராவாள்.

31. மறுபிறவியில் அந்தண குலத்தில் பிறக்கும் காரணங்கள் என்ன ? முனிவரே ! என்றுள். உத்தமியாகிய அப்பெண் ஆதிகாலத் தில் தன் புருடன் சொல்லைத் தடுத்துக் கூறினுள். அப்பெண்ணும் அந்தத் தோஷத்தால் அந்தணர் குலத்தில் பிறந்து பின்பு மரண மடைந்து தேவதையாவாள்.

தந்தையின் முற்பிறவி

32. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோ மருணை
[யுத்தரம்
முந்திய பேரூர் தன்னில் முயற்சியாய் வைசிய வம்சம்
வந்துமே செட்டுச் செய்து வறுமுகர்க் கடிமை பூண்டு
சந்தத மடியா ருக்குச் சதாவுமே வன்ன மீந்து ;

32. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திரு வண்ணுமலைக்கு வடக்கில் உள்ள ஒரு பெரிய ஊரில் செல்வாக்குள்ள ஒரு வைசிய குலத்தில் பிறந்து வர்த்தகம் புரிந்து ஆறுமுகக் கடவு ளிடம் பக்தி பூண்டு சதாகாலமும் சிவனடியார்கட்கு அன்னமளித்து ;

33 சுதர்களு மில்லா னுகிச் சுந்தரன் அருணை தன்னில்
பதியது மடம்போல் செய்து பலர்களும் வாச மாகச்
சதியிலாத் தாகப் பந்தல் தானவன் வைத்தா னென்றும்
விதியினுல் மரண மாகி வித்தகன் யிச்சென் மத்தில் ;

33. புத்திரபாக்கிய மில்லாமல் திருவண்ணுமலையில் சத்திரம் போல் பெரிய வீடொன்று கட்டிப் பலபேர்கட்குத் தங்க வசதி செய்து

தண்ணீர்ப்பந்தல் ஒன்றும் ஏற்படுத்தினன். விதியால் மரணமடைந்து ஜாதகன் இப்பிறவியில் ;

தந்தையின் மறுபிறவி

34. இக்குலம் தன்னி லேதான்
இவனுமே வந்தா னென்றோம்
மிக்கவே இவன்பின் ஜன்மம்
விளம்புவோம் தேவ ராகத்
தக்கவே விமான மேறிச்
செல்லுவான் இவனே யென்றோம்
சிவபிரான் மனையாள் கேட்பாள்
நாயகன் இச்சென் மத்தில் ;

34. இக் குலத்தில் பிறந்தான் இவன் என்று சொன்னேம். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகிறோம். தேவனுகித் தகுதியாக விமானத்தில் ஏறிச்செல்வான் என்றோம். சிவபெருமான் மனைவியாகிய பார்வதிதேவி வினவுகின்றாள். ஜாதகனின் தந்தை இப்பிறவியில் ;

35. செய்தபுண் ணியங்க ளென்னச் செப்புவீர் முனியே
[என்றாள்
வையமேல் அரன்தன் பூசை வண்மையாய்ச் செய்த
[தாலும்
நையவே யுரைக்க மாட்டன் நாட்டினில் நல்லோ னுகி
அய்யங்கள் செய்த தாலும் அறுமுகர்க் கன்ப னுயும் ;

35. செய்த புண்ணியங்கள் என்ன சொல்லுங்கள் ? முனிவரே ! என்றாள். உலகில் சிவபெருமானுக்குப் பூசை பக்தியுடன் செய்து வந்ததாலும் பிறர் மனம் புண்படும்படிப் பேசாமல் உலகிலுள்ளவர் கட்கு நல்லவனுகயிருந்து பலருக்கு உணவளித்துக் காத்துவந்ததாலும், ஆறுமுகக் கடவுளிடம் பக்திசெய்து ;

தந்தையின் மரணம்

36. இருந்ததால் மறுஜன் மங்கள் இவன்தேவ ராவா
[னென்றோம்
சிறந்திடு மிவர்கள் காலம் செப்புவோம் கேளு மம்மா
பொருந்திடு மிருபா னேழில் போற்றினேம் தந்தை
[கண்டம்
திருவெனு மாதுர் வுத்திச் செப்புவோம் கேளுந் தாயே.

36. இருந்து வந்ததாலும் மறுபிறவியில் இவன் தேவனுவான் என்றோம். இவர்களுடைய இறுதிக் காலத்தைச் சொல்லுகின்றோம்.

கேளுங்கள் தாயே ! இருபத்தேழாம் வயதில் தந்தை மரணமடைவான். இலக்குமியைப்போன்று அழகுடைய தாயின் மரணக்காலம் சொல்லுகின்றோம். கேளுங்கள் ! தாயே.

தாயின் மரணமும் ஜாதகன் வயதும்

37. முப்பது எட்டு ஆண்டி லெய்திடு மார கங்கள்
செப்புவோம் ஜாத கர்க்குச் சிறந்ததோர் அறுபான்
[மூன்றில்
ஒப்புடன் தேனின் மாதம் உயர்பரு வத்தி லேதான்
மெய்ப்புடன் மரண மாகி விளம்புவோ மிவன்பின்
[ஜன்மம் ;

37. ஜாதகனுடைய முப்பத்தெட்டாம் வயதில் தாய் மரணம் அடைவாள். ஜாதகன் தன் அறுபத்துமூன்றும் வயதில் கார்த்திகை மாதத்தில் பௌர்ணமியன்று மரணமடைவான் என்று சொல்லுகின்றோம். இவனுடைய மறுபிறவி ;

ஜாதகனது மறுபிறவியும், புத்ரபாவமும்

38. உத்தரம் காஞ்சி தன்னில் உதிப்பனும் வைசியச் சேயாய்
மெத்தவே செட்டுச் செய்து மேதினில் கீர்த்தி யுண்டாய்ச்
சித்தசன் வாழ்வா னுகும் செப்புவோம் புத்திர பாவம்
பத்தினி யிரண்டு என்றோம் பாலகன் ஆண்பா லொன்று;

38. வடக்கில் உள்ள காஞ்சீபுரத்தில் வைசிய குலத்தவனுகப் பிறந்து மிகுதியாக வர்த்தகம் புரிந்து வந்து உலகில் புகழடைந்து மன்மதன்போன்று அழகுடைய இவன் வாழ்ந்து வருவான் என்றோம். புத்திர பாக்கியத்தைச் சொல்லுகின்றோம். இரு புத்திரிகளும் ஒரு புத்திரனும் ;

39. விருத்தியா மென்று சொன்னோம்
விளம்புவோம் குடும்பச் சேதி
திருத்தமாய் நாற்பா லுறின்
மேலேதான் வேற தாகும்
உரைத்திட்டோம் யோகச் செய்கை
உரைக்கின்றோம் சூது இல்லான்
பெருத்தபூ மிகளு முள்ளான்
புண்ணியம் செய்ய இச்சை.

39. விருத்தியாகும் என்று கூறுகின்றோம். அவனுடைய குடும்பச் செய்தியைச் சொல்லுகின்றோம். அவனுடைய நாற்பத்தாரும் வயதிற்குமேல் குடும்பம் வேறுகும். அவனுடைய யோகச்செய்திகளைக் கூறுகின்றோம். சூதுகளில்லாதவன். அதிகமான விளை நிலங்களுள்ளவன். நற்செயல்களைச் செய்யப் பிரியப்படுபவன்.

40. செட்டுக்கள் சிலவே செய்வன்
சொல்லது இரண்டு முள்ளான்
திட்டமாய் மனைவி நேயன்
சீக்கிர நடையு முள்ளான்
வட்டமாய்க் குணங்க ளில்லான்
துணைவர்சொல் தட்டா னுகும்
கூட்டமாம் வேலை செய்யான்
காலிகள் விருத்தி யென்றேம்.

40. சில வியாபாரங்கள் செய்து வருவான், இருவிதமாகப் பேசுவான். மனைவியிடம் பிரியமுள்ளவன். வேகமாய் நடக்க வல்ல வன். தீய குணங்களில்லாதவன். உடன்பிறந்தவர்களின் சொல்லை மீறு தவன். கூட்டுவியாபார வேலை செய்யாதவன். கால்நடைகள் விருத்தியாம்.

41. தனத்தின்மே லிச்சை யுள்ளான்
தன்தேகம் சூடு முள்ளான்
கனத்தவர் நேசம் கொள்ளான்
கழறுவான் சிலவே பொய்கள்
இனத்துக்கு நல்லோ னுவன்
இடருகள் சிலவே செய்வன்
மனமது சூது மில்லான்
வந்திடும் கோபம் கொஞ்சம்.

41. பொருட் செல்வத்தின்மேல் ஆசையுடையவன். சூடான தேகமுள்ளவன். பெரியோர்கள் நட்புக்கொள்ளாதவன். சில சமயங் களில் பொய் பேசுபவன். தன் சுற்றத்தாருக்கு நல்லவனாக இருப்பான். சில துன்பங்களைச் செய்வான். கபடமில்லாதவன். சிறிது கோபம் கொள்ளுபவன்.

42. அத்திரி சொல்லும் போது அம்பிகை கேட்க லுற்றாள் வித்தகன் துணைவர் சேதி விளம்புவீ ரென்று கேட்கச் சித்தமாய்ப் பின்பா கத்தில் செப்புவோம் விவர மாகச் சுத்தமாய்த் தவங்கள் செய்யும் சுந்தரி கேட்டி டாயே.

42. இங்ஙனம் அத்திரிமுனிவர் கூறும்போது பார்வதிதேவி கேட்கலானாள். ஜாதகனுடைய உடன்பிறந்தவரின் செய்திகளைக் கூறுங்கள் என்று கேட்க, பின்பாகத்தில் அதை விவரமாகச் சொல்லு கின்றேம். தூய்மையாகத் தவங்கள் இயற்றும் அழகியே ! கேளுங்கள்.

ஜனனகாலத்தசை இருப்பு

43. புதல்வனின் ஜனன காலம் [1]புகர்தசை தன்னி லேதான்
சதமுட னண்டு நாலும் சாற்றிய திங்க ளொன்றும்
விதியினல் துணைவர் விருத்தி வித்தகன் தனக்கு நோயும்
பதியினில் வறுமை கொஞ்சம் பகர்ந்தன மிவனுக்
[கேதான்.

43. ஜாதகனுடைய ஜனன காலத்தில் சுக்கிர மகாதசையில் இருப்பு நான்கு வருடங்களும் ஒரு மாதமுமாம். ஜாதகனுக்குச் சகோதர விருத்தி ஏற்படும். அவனுக்கு நோய் உண்டாகும். வீட்டில் சிறிது வறுமை காணும் என்று சொன்னேம்.

44. பந்துவில் சுபமும் சூதம் பெருகிடும் தெய்வ பக்தி
சந்ததம் பூமி சேரும் தன்துணை சுபமு முண்டு
முந்திய காலி சேத மெய்திடு மிதுவல் லாமல்
சந்ததம் பிற்பா கத்தில் சாற்றுவோம் விவர மாக.

44. சுற்றத்தாருக்குச் சுபமும் அசுபமும் நேரும். தெய்வபக்தி மிகுதியாகும். விளைநிலங்கள் அதிகமாகச் சேரும். உடன்பிறந்தவருக்குச் சுபம் நிகழும். கால்நடைகள் சேதமடையும். இதுவல்லாமல் இன்னும் சிலவற்றைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம்.

---

1. சுக்கிரன்

ஜாதகம் 7

மூலப்பிரதியில் காணப்பெறவில்லை.

ஜாதகம் 8

1. அரியது ஜனன மாக [1]அந்தண னதிலே தங்கப்
பிறைமூன்றில் [2]ஞானி ஆறில் புதன்ரவி புகருமே டத்தில்
[3]கரியவன் எட்டில் தங்கக் [4]கரும்பாம்பு [5]விரயம் புக்கத்
தரைமகன் லாபம் தங்கச் சாற்றுவோம் பலனைத் தானே.

1. ஜன்ம லக்கினம் சிம்மமாக இருந்து லக்கினத்தில் குரு இருக்க,

கிரகநிலை

சனி	புதன் சூரியன் சுக்கிரன்		செவ்வாய்
	இராசி சக்கரம்		ராகு
கேது			லக்கினம் குரு
		சந்திரன்	

சந்திரன் மூன்றுமிடமாகிய துலாத்திலும், கேது ஆறுமிடமாகிய மகரத்திலும், புதன் சூரியன் சுக்கிரன் மேஷத்திலும், சனி எட்டாமிடமாகிய மீனத்திலும், ராகு விரயஸ்தானமாகிய கடகத்திலும், செவ்வாய் லாபஸ்தானமாகிய மிதுனத்திலும் இருப்பின், எற்படும் பலனைச் சொல்லுகிறேம்.

ஜாதகன் பிறந்த விட்டு நிலை

2. குறுமுனி சொல்லு கின்றார்
குறித்தது ஆண்பால் ஜன்மம்
வருமில்லம் வடக்குப் பார்வை
வடகீழ்ப்பால் அம்மன் கோஷ்டம்

---

1. குரு
2. கேது
3. சனி
4. இராகு
5. இலக்கினத்துக்குப் பன்னிரண்டாமிடம்; ஈண்டு கடகம்.

கரிமுகன் கீழ்ப்பால் தங்கும்
கந்தன்தன் தவத்தால் தோன்றும்
பெருநதி யிருபால் தங்கும்
பேசுமிவ் வடையா ளத்துள் ;

2. அகத்திய முனிவர் கூறுகின்றார். இந்த ஜாதகன் ஆண்மக னுடையது. அவன் பிறந்தவீடு வடக்கு நோக்கியுள்ள வாயிலுள்ளது. வடகிழக்கில் அம்மன் கோவிலும் விநாயகர் ஆலயம் கிழக்குத் திக்கிலும் முருகக்கடவுள் ஆலயம் ஒன்று அதற்கு அருகிலும் இருக் கும். பெரிய ஆறுகள் (கங்கை அல்லது காவிரி) ஊருக்கு இரு பக்கத்தி லும் உள்ளன. இவ்வித அடையாளங்களுள்ள வீட்டில் ;

ஜாதகனது குலமும் தந்தையின் வர்க்கமும்

3. உதிப்பனும் கர்ண சேயாய்
உரைக்கிறேரும் குடும்பச் சேதி
அதிபன்தன் முன்பின் ஜன்ம
மறைகிறேர் மிந்நூல் தன்னில்
அதிதியே தந்தை வர்க்கம்
ஆண்ரண்டும் பெண்ணுமவ் வாறு
சதியிலாத் தீர்க்க மெய்தும்
தந்தையின் குணத்தைக் கேண்மோ.

3. ஜாதகன் கருணீகர் குலத்தில் பிறப்பான். அவனுடைய குடும்பச் செய்தியையும் முற்பிறப்பு மறுபிறப்பு ஆகியவற்றையும் இந்த ஜோதிட நூலில் சொல்லுகின்றேரும். தாயே! ஜாதகனுடைய தந்தையின் உடன்பிறந்தவர்களில் இரு சகோதரர்களும் இரு சகோதரி களும் தீங்குகளின்றி நீண்ட ஆயுளுடனிருப்பர். ஜாதகனின் தந்தை யின் குணத்தைக் கேளுங்கள்.

தந்தையின் குணங்கள்

4. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
புல்லிய புத்தி கொஞ்சம் பூமியும் பரிபா லிப்பன்
சொல்லது இரண்டு முண்டு சூத்திரம் சிலவே செய்வன்
இல்லறம் செய்வா னுகும் இராசரா லவமா னத்தன்.

4. நல்லவனுக்கு நல்லவனுகவும் தீயருக்குத் தீயனுகவும் அற்ப மான புத்தியுடையவனுகவுமிருப்பான். விசே பூமியில் விவசாயம் செய்து வருவான். இருவிதமாகப் பேசுபவன். இரகசியக் காரியங்களைச் செய்வான். குடித்தனம் செய்து வருவான். அரசரால் (அரசாங்கத் தாரால்) அவமானப்படுவான்.

தந்தையின் முற்பிறவி

5. இருநிறம் நீட்சி யாவன் இவன்கிராமக் கணக்கு வேலை
அரிவையரிஷ்டம் கொள்வன் அவன்சுக போஜனத்தன்
மருமத்தை வெளிக்காட் டாதா னறைகிறேம் பூர்வம்
[தன்னைத்
திருவண மலைநா டன்னில் ஜனித்தனன் குலால வம்சம்.

5. கருமை கலந்த சிவப்பு நிறமுள்ளவன். நீண்ட உடலுடையவன். கிராமக்கணக்கு வேலையைச் செய்து வருவான். பெண்களிடம் பிரியம் கொள்ளுவான். சுகமாகச் சாப்பிடுவதில் இஷ்டமுள்ளவன். இரகசியத்தை வெளியிடாதவன். அவனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். திருவண்ணாமலையில் குயவர் மரபில் பிறந்தான்.

6. சுகமுள்ள குடும்பி யாகித் திரிவோர்க்கு மன்ன மீந்து
பகையான கால நாடு பரந்துமே [1]வேதன் லக்கம்
தகைமையா யிக்கு லத்தில் ஜனித்தவ னென்று
|சொல்வோம்
உகமையாய்ச் சொன்னே னுக்கு உதிப்பனு மிந்தப் பாலன்.

6. சௌக்கியமுள்ள குடும்பியாக வாழ்ந்து, நாடோடிகளாகிய ஏழைகட்கு அன்னமளித்து வந்து, மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு, இப்பிறவியில் பிறந்தவன் என்று சொல்லுகின்றேம். இவ்விதம் கூறப்பட்டவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான்.

ஜாதகனுடைய சகோதர பாவமும் சகோதரனின் குணமும்

7. பாலகன் துணைவ ராறில் பருகாவே யாவுந் தானே
சாலவே ஆண்பா லொன்று தங்கிடு முன்னே னுக
ஏலவே அவன்கு ணத்தை இயம்புவோ மானி றத்தான்
சீலவான் எல்லோ ரிஷ்டம் சுகபுசிப் புடைய னுமே.

7. ஜாதகனுடன் பிறந்தவர்கள் அறுவரில் ஜாதகனுக்கு முன் பிறந்த சகோதரன் ஒருவனைத் தவிர மற்றவர்கள் இறந்து விடுவர். ஜாதகனுடைய மூத்த சகோதரனுடைய குணத்தைக் கூறுகின்றேம். மாநிறமுடையவன். நல்லொழுக்கமுள்ளவன். எல்லோரிடத்திலும் பிரியமுள்ளவன். சுகமாகச் சாப்பிடுபவன்.

8. மனவர்மன் கணக்கு வேலை
மன்னனும் சிலகாள் செய்வன்
பிணையாகு மொருவ னுலே
பெட்டிப்பாம் பதுபோல் வாழ்வன்

1. பிரமன்

சனமுளான் பாரி காணன்
சுதர்காணன் வறுமை யந்தம்
கனமுள தொழிலும் பூமி
காணனை மென்று சொல்வோம்.

8. மனத்தில் வஞ்சம் உள்ளவன். சின்னட்கள் கிராமக்கணக் கனது வேலையைச் செய்து வருவான். வேறு ஒருவனால் அவ்வேலைக்குத் தீங்கேற்பட்டுப் பெட்டிப்பாம்பைப்போல் அடங்கி வாழ்ந்து வருவான். கோபமுடையவன். மணமில்லாதவன். புத்திரர் இல்லாதவன். கடைசி யில் தரித்திரனாகவும் விருத்தி வரும் தொழிலும் பூமியும் இல்லாதவ னாகவும் இருப்பான் என்றோம்.

ஜாதகனுடைய சகோதரனுக்கு மணமாகாத காரணம்

9. பாரியுங் காண வண்ணம் பகருவீர் முனியே கீர்தாம்
[1]காரிக்கு நாலில் சேயும் கரும்பாம்பு அஞ்சில் தங்க
[2]நீருக்கு உடையோ னோடு நீள்புதன் யிருப்ப தாலே
கூறினே மனைவி காணன் குலவிற்று முன்னுள்
[தோஷம்.

9. ஜாதகனின் சகோதரனுக்கு மனைவி ஏற்படாத காரணத்தைச் சொல்லுங்கள், முனிவரே! சனியிருக்குமிடத்திற்கு நான்காமிடத்தில் செவ்வாயும் ஐந்தாமிடத்தில் ராகுவும் சுக்கிரனுடன் புதனும் சேர்ந்து இருப்பதால் அங்ஙனம் தோஷம் கூறினோம். மனைவியில்லாதவன். முற்பிறவித் தோஷமும் ஏற்பட்டது.

முற்பிறவித் தீவினை

10. அவ்வினை புகல்வேன் கேளாய் [3]ஆலவாய் தன்னி
[லேதான்
அலக்ஷயமாய்ப் பிரம்ம சேயாய்ப் பிறந்துமே கிருஷி
[செய்து
திவ்விய மனைவி மைந்தர் சேர்ந்துமே வாழு நாளில்
ஒவ்விய கற்பின் மிக்க உத்தமி பேரில் மோகம்;

10. அவ்வினையைச் சொல்லுகின்றேன், கேளுங்கள். மதுரைமா நகரில் (அலட்சியமாக) ஓர் அந்தண குலத்தில் பிறந்து விவசாயம் செய்து வந்து ஒப்பற்ற மனைவி மக்களையடைந்து வாழ்ந்து வரும் காலத்தில் கற்பிற் சிறந்த ஒரு பெண்மீது மோகங் கொண்டு;

---

1. சனி
2. சுக்கிரன்
3. மதுரை

11. தந்திர மொழியே கூறிச் சத்தியைப் போகம் வேண்ட
அந்தவ ரிசையா ளாகி அவன்பல வந்த போகம்
விந்தையாய்ச் செய்தா னென்றேரும் விளம்புவா ளந்த
[மாது
சொந்தப்பா ரியுமே யற்றுத் தோன்றிடு மறுஜன் மத்தில்;

11. ஆசை வார்த்தைகளைக் கூறி அப்பெண்ணுடன் இன்பம் அனுபவிக்க வேண்டும் என்று வேண்ட, அவள் அதற்கு இசையாத வளாகி யிருக்கும்போது அவன் அப்பெண்ணுடன் பலவந்தமாகப் புணர்ந்தான் என்று சொன்னேம். அந்தப் பெண்ணும் கூறுகின்றாள்: இனி ஏற்படும் மறுபிறவியில் சொந்த மனைவியுமில்லாமல்;

ஏழைப்பெண்ணின் சாபம்

12. மணமின்றி மதலை யின்றி மன்னரால் அவமா னங்கள்
குணமிலாக் குடும்பி யாகிக் குறையாகும் தந்தை யாஸ்தி
பிணையான வார்த்தை சொல்லிப் போற்றினாள்
[குலதெய் வத்தை
அணைந்தது வந்தத் தோஷம் அந்தியக் காலம் தன்னில்;

12. மணமில்லாமல், குழந்தைகளில்லாமல், அரசாங்கத்தாரால் அவமானங்கள் அடைந்து, சுகமில்லாத குடும்பத்தையடைந்து, தந்தை யின் ஆஸ்தியும் (அழிந்து) குறைந்து, துன்பமடைவாய் என்று தீய சாபத்தை இட்டுத் தன் குலதெய்வத்தினிடம் முறையிட்டாள். அந்தத் தோஷம் இவனை யடைந்தது. இவனுடைய கடைசிக் காலத்தில்;

13. பாரியு மில்லா னகிப் பாரினில் வறுமை பூண்டு
சீரிய கால னடு சென்றுமே பிரமன் லக்கம்
தீரமா யிக்கு லத்தில் ஜனித்தன னிவனே யென்றேரும்
நேரிடு முன்னூழ்ச் சாபம் நிமலியும் காண னென்றேரும்.

13. மனைவியுமில்லாதவனாகி வறுமையையடைந்து மரண மடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் தோன்றினான் என்றேரும். முற்பிறவியின் சாபம் தொடரும். மனை வியை அடையாதவன் என்றேரும்.

சாபத்தின் பலமும் மறுபிறவியும்

14. வறுமையந் தியத்தில் நேரும் வளமிலா இல்ல மாகும்
பரவிப்பின் ஜன்மஞ் சொல்வேன் [1]பிருதிவி தலத்தி
[லேதான்
தறித்தொழில் செங்குந்தர் வம்சம் ஜனிப்பனு மென்று
[சொல்வோம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

---

1. காஞ்சிபுரம்

14. கடைசிக் காலத்தில் தரித்திரம் ஏற்படும். செல்வமில்லாத வீடாகும். மறுபிறவியைச் சொல்லுகின்றேன். காஞ்சிபுரத்தில் நெசவுத்தொழில் செய்து வரும் செங்குந்த மரபினளுகப் பிறப்பான் என்று சொல்லுகிறோம். வேதங்களின் முடிவில் கூறப்படும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகனது குணங்கள்

15. உதித்தவன் குணத்தைச் சொல்வோ முவமையாய்
[வார்த்தை சொல்வன்
நதிபல தேசம் செல்வன் நாதனுர் பத்தி பூண்பன்
சதியுள மனத்த னுகும் சகலர்க்கும் கல்வி சொல்வன்
துதிவசை யுடைய னுகும் துணைவனை ஆத ரிப்பன்.

15. ஜாதகனுடைய குணங்களைக் கேளுங்கள். சந்தோஷப்படும் படியான பேச்சுக்களையே பேசுபவன். பற்பல புண்ணிய நதிகளில் நீராடச் செல்வான். சிவபெருமான்மீது பக்தி கொள்வான். குற்ற முள்ள மனத்தினன். எல்லோருக்கும் கல்வி கற்பிப்பான். புகழும் பழியுமுள்ளவன். தன் உடன்பிறந்தவரை ஆதரித்து வருவான்.

16. இருவிதக் கல்வி கற்பன் இடுக்கமில் லாதா னுகும்
வருவியான் கட்டு வார்த்தை மானிலம் நிந்தை யேற்பன்
பறைபள்ளு வுடைய னுகும் பாரது விருத்தி செய்வன்
கரமதில் கத்திரி ரேகை கனமன முடைய னுமே.

16. இருவிதமான கல்விகளைக் கற்றுணர்வான். துன்பங்களில் லாதவன். வார்த்தைகளைப் புனைந்து பேசாதவன். உலகில் அவ் மானங்களை யடைவான். பள்ளுப்பறைகள் உள்ளவன். (பணியாட்கள் உள்ளவன்) விளைநிலங்களைப் பெருக்குவான். கையில் கத்திரிரேகை யுடையவன். பெருத்த புத்தியுள்ளவன்.

17. தந்தநோ யுடைய னுகும் தைரிய மனத்த னென்றும்
கந்தன்மேல் பத்தி கொள்வன் கன்னியர் மோக னுவன்
வந்தவர்க் கன்ன மீவன் மணமிலான் என்று
[சொல்வோம்
எந்தக்கா ரணத்தி னுலே இயம்பினீ ரந்தச் சங்கை.

17. பற்களில் நோய் உள்ளவன். தைரியமுள்ள மனத்தினன். முருகப்பிரான்மீது பக்தியுடையவன். பெண்கள்மீது மையல் கொள் ளுவான். தன்னிடம் வந்து யாசித்தவர்கட்கு அன்னமளிப்பவன். கல்யாணம் செய்து கொள்ளாதவன் என்று சொல்லுகின்றோம். எந்தக் காரணத்தினுல் அங்ஙனம் கூறினீர்கள்?

மணமில்லை : கிரகநிலை

18. சத்தமத் தோனு மெட்டில் தரைமகன் குடும்பம் பார்க்கப்
பத்தினி காணு னென்றேரும் பாலகன் பூர்வம் தன்னில்
குத்தமாய் வினைய நேகம் குலவிற்று மனைவி யினம்
சுத்தமாய்ப் பூர்வம் சொல்வீர் சேரனு டதனி லேதான் ;

18. ஏழாம் வீட்டுக்குரிய சனி எட்டிலும் செவ்வாய் குடும்ப ஸ்தானமாகிய கன்னியைப் பார்ப்பதாலும் மனைவியை அடையாதவன் என்றேரும். ஜாதகன் முற்பிறவியில் பல தீவினைகளைச் செய்ததால் மனைவிக்குத் தோஷம் ஏற்பட்டது. முற்பிறவியைச் சுத்தமாகச் சொல்லுங்கள். சேர நாட்டில் ;

தாயின் சகோதரியுடன் புணர்தல் : ஜாதகியினுடைய முற்பிறவி

19. வன்னிய குலமு தித்து வளமுள குடும்பி யாகி
இன்னவன் வாழு நாளில் இவன் செய்த கொடுமை [கேண்மோ
அன்னையின் தங்கை தானும் அவள்வரன் யில்லா ளாக
மன்மத னுடல் செய்தான் வயிரவ மூர்த்தி போகம்.

19. வன்னிய குலத்தில் பிறந்து செல்வவானனை குடும்பியாக ஜாதகன் வாழ்ந்து வருங் காலத்தில் இவன் செய்த தீவினைகளைக் கேளுங்கள். கணவனை இழந்த விதவையான தன் தாயாருடைய தங்கையுடன் மன்மத லீலைகளைப் புரிந்து ;

20. கலைத்தனன் அதுவு மின்றிக் கல்விகள் சொன்னேன் [புத்திரி
பலவந்த போகஞ் செய்தான் பாவையும் புகலு கின்றாள்
குலமதைக் கெடுத்த பாவி கூறுவேன் ஜன்மந் தன்னில்
கல்வியு மில்லா தாகித் தன்துணை யவ்வா றாகும்.

20. அதனால் ஏற்பட்ட கருவைக் கலைத்தான். அதுவல்லாமல் தனக்குக் கல்வி கற்பித்த ஆசிரியரின் புதல்வியிடம் பலவந்தமாக இன்பமனுபவித்தான். அப்பெண்ணும் கூறுகின்றாள். என் குலத்தைக் கொடுத்த பாவியே ! இனி ஏற்படும் மறு பிறவியில் படிப்பு இல்லாதவனாகி உடன் பிறந்த சகோதரர் இல்லாதவனாகி ;

21. துணைப்பெண்ணும் காணு தாகித் தந்தரும் குறைவ தாகிக்
கனமான குடும்பி யாகிக் கலைகுறை போலே யாகும்
துணைவனும் தந்தை யோடு செல்லுவாய் காவல் தானும்
பிணையாகித் தவசி போலே பூமியில் வாழ்வா யென்றாள் ;

21. உடன் பிறந்த சகோதரியில்லாதவனாகி பற்கள் ஊன மடைந்து பெரிய குடும்பியாகித் தேய்பிறைச் சந்திரன் போல்

வாழ்வாய். உடன் பிறந்தவனுடனும் தந்தையோடும் சிறை சென்று வாழ்வாய். பூமியில் தவம் செய்பவர்போல் தனித்து வாழ்வாய்.

22. மங்கையுந் தெருத்தூள் விட்டா ளடைந்தது வந்தத்
[தோஷம்
அங்கவ னந்தந் தன்னில் அதிகநீர் ரோகத் தாலே
நங்கங்கள் மிகவுண் டாகி நமன்பதி சென்று இன்னேன்
மங்கினன் நரகம் தன்னில் மலரோனும் வரையப் பட்டு;

22. என்று கூறித் தெரு மண்ணை வாரி இறைத்தாள். அந்தத் தோஷம் இவனை வந்தடைந்தது. அப்பிறவியின் கடைசிக் காலத்தில் ஜாதகன் நீர்ரோகத்தால் துன்பங்கள் மிகவடைந்து மரணமாகி நரகத்தில் அவஸ்தைப்பட்டான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு;

23. இக்குல முதிப்பா னுகும் இலகிடும் கன்னி சாபம்
முக்கிய மனைவி காணன் வியர்த்தமாம் குடும்பம் அந்தம்
துக்கமே அனுப விப்பான் சொல்லுவார் சிலர்சி லேடை
நக்கன்தன் மனையாள் தாமும் நவிலுவீர் சாந்தி யொன்று,

23. இப்பிறவியில் பிறப்பான் என்றேரும். பெண்ணின் சாபம் தொடரும். முக்கியமாக, மனைவியில்லாதவன். குடும்பம் முடிவில் வீணாகும். துன்பமே அனுபவிப்பான். சிலர் பலவிதமாகப் பேசுவார்கள். சிவபெருமான்தன் மனைவியாகிய பார்வதிதேவி கூறுகின்றாள்; சாந்தியொன்று கூறுங்கள்.

24. தந்தையாம் கல்வி சொன்னேன் தன்மகள் தங்கை
[வேண்டும்
அந்தவ ளிட்ட சாபம் அதுபரி காரம் சொல்லோம்
வந்தது வந்தே தீரும் வதிட்டரும் தடுத்துச் சொல்வார்
இந்தவன் தனக்குக் கர்மம் எவர்செய்வார் விவரம்
[சொல்வாய்.

24. கல்விகற்பித்த ஆசிரியர் தந்தைக்குச் சமமானவர். அவர் புதல்வி இவனுக்குத் தங்கைபோன்றவள். அதனால் அவளிட்ட சாபத்துக்குப் பரிகாரம் சொல்ல இயலாது. வருவது வந்தே தீரும். வசிஷ்ட முனிவர் இடையில் மறித்துக் கேட்கிறார். ஜாதகனுக்குக் கர்மங்கள் யார் செய்வார்கள்? சொல்லுங்கள்.

ஜாதகனுக்குக் கர்மம் செய்பவர்

25. இவன்பிதா தனையன் புத்திரன் இயம்பினேம் உரிமை
[செய்வர்
தவசியே இருவர் தன்னில் செய்குவோர் விவரம்
[சொல்வாய்
நவனியில் உத்தர பாகம் நவிலுவோம் அந்தச் சங்கை
சிவன்தனைப் பூசை செய்யும் செல்வதி கேட்டி டாயே.

25. ஜாதகனுடைய தந்தையின் சகோதரனுடைய மகன் இறுதிக் கடன்களைச் செய்வான் என்றேரும். தவசிகளே! இருவரில் யார் அவை களைச் செய்வார், விவரமாகச் சொல்லுங்கள் என வினவ அவ்விஷயங் களை அடுத்த பாகத்தில் சொல்லுகின்றேரும். சிவபெருமானுக்குப் பூசை புரியும் செல்வியே! கேளுங்கள்.

தாயின் விபரம்

26. அன்னைமா னிறத்த ளாகும் அயல்வாக்கு நல்லோ ளாவள்
தன்துணை யாண்பால் மூன்று சாற்றுவோம் இவள்தன்
[பூர்வம்
கன்னியா குமரி தன்னில் கலந்தனள் வடுக வர்க்கம்
தன்சுதர் மதலை யுண்டாய்த் தையலும் பங்க மின்றி;

26. ஜாதகனுடைய தாய் மாநிற முடையவள். பிறர் வாயால் நல்லவள் என்று கூறப்படுபவள். உடன் பிறந்தவர் மூவராவர். இவள் முற்பிறவியில் கன்னியாகுமரியில் வன்னியகுலத்தில் பிறந்து புத்திர பாக்கியம் பெற்றுக் குறைவுகளில்லாமல் வாழ்ந்து;

தாயின் மரணகாலம்

27. காலன்தன் நாட டைந்து கஞ்சலை வரையப் பட்டுச்
சீலமாய் கர்ண சேயாய் ஜனித்தவ ளென்று சொல்வோம்
சாலவே நாற்பா னென்பான் ஆண்டினில் சண்ட னுடு
ஏலவே செல்வா ளென்றேரும் ஈச்வரி கேட்டி டாயே.

27. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு நல்லொழுக்கமுள்ள கருணைகர் குலத்தவளாகப் பிறந்தவள் என்று சொல்லுகின்றேரும். இவள் ஜாதகனுடைய நாற்பத்தொன்பதாம் வயதில் மரணமடைவாள் என்று கூறுகின்றேரும். பார்வதி தேவியே! கேளுங்கள்.

தந்தையின் மரணகாலமும் மறுபிறவியும்

28. ஆறாறு வொன்று ஆண்டில் அவன்தந்தை கண்ட
[மென்றேரும்
கூறுவோம் பின்ஜன் மத்தைக் குற்றால நகரி லேதான்
பாரிய தனவா னுக்குப் பிறப்பனும் வைசியச் சேயாய்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

28. ஜாதகனுடைய தந்தை இவனுடைய முப்பத்தேழாம் வயதில் மரண மடைவான் என்றேரும். மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். குற்றாலத்தில் வைசிய குலத்தவனுகப் பெரியவொரு செல்வந்தனுக்குப் பிறப்பான். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற அம்பிகையே! கேளுங்கள்.

ஜாதகனுடைய மரணகாலம்

29. அன்பது எட்டு ஆண்டில்
அறைந்தன முன்னே னுக்கு
இன்னவன் கருமம் செய்வான்
இயம்புவோ மிவன்கா லத்தை
மன்னிய யெழுபான் மூன்றில்
மகரமா தத்தி லேதான்
தன்னுடல் ஆவி நீங்கும்
சாற்றுவோம் இவன்பின் ஜன்மம்.

29. ஜாதகன் தனது ஐம்பத்தெட்டாம் வயதில் தன் மூத்த சகோதரனுக்கு இறுதிக்கடன்களைச் செய்வான். ஜாதகனுடைய மரண காலத்தைக் கூறுகின்றோம். எழுபத்துமூன்றும் வயதில் தை மாதத்தில் மரணமடைவான். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய மறுபிறவி

30. உத்தரம் தணிகை தன்னில் உதிப்பனும் பிரம்ம சேயாய்
அத்திரி கடுத்துச் சொல்வார் அவனுமிச் சென்மம்
[தன்னில்
குத்தங்கள் சிலர்க்குச் செய்தான் வித்தகன்
[பெற்றோ ருக்குச்
சித்தமே கரப்பு மூண்டாய்த் தீக்குண முடைய னாகி;

30. வடக்கேயுள்ள திருத்தணி க்ஷேத்திரத்தில் அந்தணர் குலத்தில் பிறப்பான். அத்திரி முனிவர் மறுத்துக் கூறுகின்றார். ஜாதகன் இப்பிறவியில் சிலருக்குத் தீங்குகள் செய்து வந்தான். தன் பெற்றோருக்குத் துன்பங்களை விளைவித்தான். மனத்தில் தீய எண்ணங்களுடன் கெட்ட குணமுடையவனாகி யிருந்தும்;

உயர்குலப்பிறவி—காரணம்

31. எப்படி வுதிப்பன் சொல்வாய்
இடருகள் அனந்தம் செய்தும்
அப்பணி சடையோன் பத்தி
அநேகவா லயங்கள் சென்றும்
செப்புவேன் பலதீர்த் தங்கள்
சென்றதா லுதிப்பா னென்றோம்
ஒப்புட னிவனின் யோக
முரைக்கிறோம் தாயே கேளு.

31. எங்ஙனம் (உயர்ந்த குலத்தில்) பிறப்பான் என்று சொல்லுங்கள். எல்லையில்லாத் துன்பங்கள் செய்து வந்தபோதிலும் கங்கையை முடியில்தரித்த சிவபெருமானின் ஆலயங்கள் பலவற்றிற்குச் சென்றும் பற்பல புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்று நீராடியும் வந்ததால் ஏற்படும் என்றேும். ஜாதகனுடைய யோக வரலாற்றைச் சொல்லுகின்றேும். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய யோகம்

32. ஜனித்தனுள் முதலே யாகச் செப்புவோ நாற்பா னுளுள்
கனமான குடும்ப மெய்தும் காசினில் வறுமை காணுன்
குனிக்கிறே மதன்மே லாகக் குறைபிறை போலே
[யோகம்
வினைவரும் வழக்க னேகம் விளைபுலம் சேத மாகும்.

32. ஜாதகன் பிறந்தநாள் முதல் நாற்பத்து நான்காம் வயது வரையில் குடும்பம் பெரிதாயிருக்கும். உலகில் தரித்திரம் அடையாதவன். அதற்குப் பிறகு தேய்பிறைச் சந்திரன்போல் துன்பங்கள் நேரும். வழக்குகள் பல ஏற்படும். விளைநிலங்கள் சேதமாம்.

33. சல்லியப் பாதை நேரும் தடைப்படும் நினைத்த வெல்லாம்
புல்குவார் சிலேடை வார்த்தை போசன சுகமுங் கானுன்
கொல்லவே சிலர்நி னைப்பர் கோவலர் பகையு மாகும்
அல்லலா னன்பா னுறும் அம்பிகை யாளே கேளாய்.

33. கடன் உபத்திரவம் ஏற்படும். எண்ணிய காரியங்கள் நிறை வேறுமல் தடங்கலாகும். பலவிதமாகப் பலர் ஏசுவர். சரியாகச் சாப்பாடு கிடைக்காது. சமயம் பார்த்து இவனைக் கொல்லுவதற்குச் சிலர் நினைப்பர். அரசாங்க விரோதியாவான். ஐம்பத்தாறு வயது வரை துன்பப்படுவான். தாயே! கேளுங்கள்.

34. அதற்குமேல் மரண மட்டு மறைகிறேும் பலனை யாங்கள்
நிதிமிக வுடையோன் பக்கல் நேர்ந்துமே ஜீவிப் பானும்
துதிசெய்தே வாழ்வா னுகும் தரித்திர மடையா னுகும்
கதிதரும் கடவுள் பத்தி கலப்பனு மென்று சொல்வோம்.

34. அதற்குப் பிறகு அவனுடைய மரணகாலம் வரையில் உள்ள பலனைச் சொல்லுகின்றேும். பெரிய செல்வவான் ஒருவனிடம் சென்று ஜீவித்து வருவான். அவரைத் தோத்திரம் செய்தே வாழ்ந்து வருவான். தரித்திரம் அடையாதவன். நற்கதி யளிக்கும் கடவுளிடம் பக்தி கொள்ளுவான் என்று கூறுவோம்.

புதையல் கிட்டும் காலம்

35. அறுபது மூன்று ஆண்டில் அணுகிடும் பூர்வ பொன்னும்
பரிதியும் புகரும் புந்தி பாக்கிய மிருப்ப தாலே
நதிபுகர் சுயமாம் புத்தி நல்கிடும் அந்தக் காலம்
மருவிடும் பொருளு மென்றே மறைந்தது தப்பா வாமே.

35. ஜாதகனுடைய அறுபத்து மூன்றும் வயதில் அவனுக்குப் புதையல் ஒன்று கிடைக்கும். சூரியனும் சுக்கிரனும் புதனும்[1] பாக்கியஸ்தானத்தில் இருப்பதால் சுக்கிரமகாதசையில் சுக்கிர புக்தியில் பொருள் திண்ணமாகக் கிடைக்கும். நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகனது ஜனனகால தசை

36. பந்துவும் புகழ வாழ்வன் பாரினில் வறுமை காணன்
இந்தவன் ஜனன காலம் இயம்புவோம் சுவாதி ரண்டில்
விந்தையாய்ப் பணியி ருப்பு மேவிடும் ஒன்ப தாண்டு
பிந்திய திங்க ளொன்பான் பேசுவோம் பலனை யாங்கள்.

36. சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். உலகில் வறுமையடையாதவனுவான். ஜாதகனது ஜனன காலத்தில் சுவாதி நட்சத்திரம் இரண்டாம் பாதம்; இராகு மகாதசையில் ஒன்பது ஆண்டுகளும் ஒன்பது மாதங்களும் மீதமாம். அக்காலத்திய பலனைச் சொல்லுகின்றோம்.

37. தந்தைதாய் நலிவு மெய்தும் தனமது விரய மாகும்
பந்துவில் சூத மெய்தும் பகைவரும் காலி சேதம்
வந்தவன் தனக்குக் கண்ட மறைந்தனம் பூர்வ பாகம்
இந்திர னிறைஞ்சு மாதே இயம்பின பலனி தாமே.

37. தந்தை தாய் இவர்கட்கு உடல் நோய் ஏற்படும். பணச் செலவு அதிகமாகும். சுற்றத்தாருக்கு அசுபம் நிகழும். விரோதம் ஏற்படும். கால்நடைகள் சேதமாம். ஜாதகனுக்குக் கண்டம் ஏற்படும். இதுவரையில் முதல் பாகம் சொன்னோம். இந்திரனால் தோத்திரிக்கப்படும் தேவியே! நாங்கள் கூறிய பலன்கள் இவை.

---

1. பாக்கிய ஸ்தானம்—9ம் இடம்.

ஜாதகம் 9

1. திங்களு மீன மாகச் சேய்சனி பணியும் சாடி
பங்கயன் புதனு வீணை பார்க்கவ னலவன் புக்கத்
துங்கமா மதிதி சீயம் சுருதியோன் மேரு வாக
இங்கிவை கிரகம் நின்று இலக்கினம் சிம்ம மாக.

1. சந்திரன் மீனத்திலும், செவ்வாய் சனி ராகு கும்பத்திலும்; சூரியன் புதன் மிதுனத்திலும், சுக்கிரன் கடகத்திலும், கேது சிம்மத்திலும் குரு தனுசிலும் இங்ஙனம் நவக்கிரகங்கள் இருந்து, பிறந்த லக்கினம் சிம்மமானால்;

கிரகநிலை

சந்திரன்			சூரியன் புதன்
செவ்வாய் சனி ராகு	இராசி சக்கரம்		சுக்கிரன்
			இலக்கினம் கேது
குரு			

ஜாதகனின் வீட்டின் நிலை

2. பலனதைப் புகலு மென்று பார்வதி கேட்கும் போது
குலகுரு வசிஷ்டர் சொல்வார் குறித்திடு மாண்பால்
[ஜன்மம்
தலமது கீழ்மேல் வீதி சண்டன்தன் வாச லாகும்
நலமிலா மாயோ ஜுத்ரம் நற்றக்தி மேற்கில் பாழாம்.

2. பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கும்போது குலகுருவான வசிஷ்ட முனிவர் கூறுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகம். அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. பாழடைந்த விஷ்ணு ஆலயம் ஒன்று வடக்கிலும், விநாயகர் கோவில் மேற்குப்பக்கத்தில் பாழடைந்தும்;

3. அரன் கோஷ்டம் வடகீழ் நஷ்டம் ஆளிவா கனத்தாள்
[மாரி
மருவிடு மதற்கு வுத்தர மறைந்தஇவ் வடையா ளத்துள்
திருமக ஞரஞ் ஜன்மம் ஜனிப்பனும் வடுகர் வர்க்கம்
உரைக்கிறோம் குடும்பச் சேதி உத்தமி கேட்டி டாயே.

3. சிவபெருமான் ஆலயம் ஒன்று வடகிழக்கில் இடிந்தும் யாளியை வாகனமாகக் கொண்ட மாரியம்மன் கோவில் அதற்கு வடக்காகவும் இவ்வித அடையாளங்களுள்ள வீட்டில் ஜாதகன் தன் தந்தைக்கு ஆறுவது குழந்தையாக வன்னிய குலத்தில் பிறப்பான் என்று கூறுகின்றோம். அவனுடைய குடும்பச் சேதியைக் கேளுங்கள், தாயே!

ஜாதகனுடைய தந்தையின் குணங்கள்

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சரசமாய் வார்த்தை [யுண்டு
தந்தமும் தரள மொக்கும் சகடுவா கனமு முண்டு
தந்தைசொல் கடவா னுமே சிவந்தமெய் யுயர மாவன்
தன்பந்துக் கிணக்கஞ் சொல்லான் சர்ப்பம்போல் கோப [முண்டு.

4. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். சரச சல்லாபமாகப் பேசுபவன். பற்களும் முத்துப்போன்று வெண்மையாக விருக்கும். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். தன் தந்தையின் வார்த்தையை மீறுதவன். சிவந்த உடலும் உயரமான மேனியுமுள்ளவன். தன் சுற்றத்தாருடன் ஒற்றுமையாக இல்லாதவன். பாம்பைப்போல் சீற்றம் கொள்ளுவான்.

5. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உறப்பொடு புளிப்பி [லிச்சை
துண்டமாய்க் கூறு வானும் சோம்பிடான் காரி யத்தில்
தண்டமிழ் நூணுக்கம் தேரான் தரணியை விருத்தி [செய்வன்
வண்டணி மார்கள் மோகன் வல்வாயன் வாத முண்டு.

5. நன்றுகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவள். நல்ல புளிப்போடு காரம் கலந்த உணவை விரும்பிப் புசிப்பான். கண்டிப்பாய்ப் பேசுவான். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவன். நல்ல தமிழில் தேர்ச்சி பெறுதவன். விளை நிலங்களைப் பெருக்குவான். பெண்கள்மீது மையல் கொள்ளுவான். திக்குவாயன். வாத நோயுடையவன்.

ஜாதகனின் தந்தையின் சகோதரபாவம்

6. தன்துணை யாண்பா லொன்று
ஜனிக்குங்கால் தீர்க்க மென்றோம்
அன்னவன் வேறாய் வாழ்வன்
அவன்குணம் பின்பால் சொல்வேன்

சொன்னவிக் குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
மன்மத னெத்த தேகன்
மருமமில் லாதா னாகும்.

6. ஜாதகனுடைய தந்தைக்கு உடன் பிறந்தவன் ஒருவ னுண்டு என்றும் அவன் நீண்ட ஆயுள் உடையவன் என்றும் அவன் தன் தந்தையிடமிருந்து பிரிந்து தனியாக வாழ்ந்து வருவான் என்றும் சொல்லுகின்றோம். அவனுடைய குணத்தைப் பிறகு கூறுகின்றோம். இவ்வித குணங்களுள்ளவனுக்கு ஜாதகன் தோன்றுவான். ஜாதகன் மன்மதனைப் போன்ற அழகுள்ளவன். இரகசியமில்லாதவன்.

ஜாதகனுடைய குணங்கள்

7. ஊகவா னுணுக்கம் தேர்வன் உள்மனங் கபடு மில்லான்
நாகரி கங்க ளுண்டு நல்லோர்க்கு நல்ல னுவன்
வேகமாய் நடக்க வல்லான் வெஞ்சினம் வெளிக்காட்
[டாதான்
பாகமாய்ப் பேசு வானும் பஞ்சைமே லிரக்க மாவன்.

7. ஊகமுள்ளவன். நுட்பங்களை அறிந்தவன். மனத்தில் கபட மில்லாதவன். நவநாகரிகங்களில் விருப்பமுள்ளவன். நல்லவர்கட்கு நல்ல வனாக நடந்துகொள்ளுவான். வேகமாக நடப்பவன். கோபத்தை வெளி யிடாதவன். பொருத்தமாகப் பேசுபவன். ஏழைகளின்மீது இரக்கம கொள்ளுவான்.

8. வித்தையும் சமம தாகும் வேந்தருக் கிஷ்ட னுவன்
சத்திய மென்று லச்சம் சார்ந்திடு மாமி ரண்டு
சுத்தத்தார் மதிக்க வாழ்வன் சொல்லதைக் காப்பா னாகும்
குத்தத்தை வெளிவி டாதான் குடியில்லம் பெருக்கம்
[செய்யான்.

8. சமமான கல்வியறிவுடையவன். அரசாங்கத்தாருக்கு இஷ்ட முள்ளவன். சத்தியத்திற்குப் பயப்படுபவன். இரு மனைவியர்களை அடைவான். தன் உறவினர்கள் கொண்டாடும்படி வாழ்ந்துவருவான். சொன்ன சொற்களைக் காப்பாற்றுவான். (பிறர்) குற்றங்களை வெளி யிடாதவன். தானிருக்கும் வீட்டைப் பெரிதாகச் செய்யாதவன்.

9. தேவதாப் பத்தி கொள்வன் தேறினோர்க் கன்ன மீவன்
ஆவுகள் பணியேர் விருத்தி அதிகாரம் சிலநாள் செய்வன்
பாவத்தில் மனம்வை யாதான் பன்னிதி பாக்கியம்
[சேர்ப்பன்
மேவுவான் தலவா சங்கள் வீண்பழி யேற்கா னாகும்.

9. தெய்வ பக்தியுள்ளவன். பெரியோர்களுக்கு (துறவிகட்கு) அன்ன மளிப்பவன். பசுக்கள் பண்ணை ஏர் முதலியவற்றின் விருத்தி யுண்டு. சின்னட்கள் அதிகாரமுடைய பதவியை வகிப்பான். தீச்செயல் களைச் செய்யமனமுட்படாதவன். பிற்காலத்தில் பொருளைச் சேர்ப் பான். பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்வான். வீண் அப வாதங்களை அடையாதவன்.

சங்கரேகை சக்ரரேகை பத்மரேகைகள்

10. கரமதில் சங்கு சக்கரம் கஞ்சமாம் ரேகை யுண்டு
பறைபள்ளு சேர்ப்ப ருகும் பாக்கியம் செலவு செய்வன்
நிரகங்கள் சித்திரம் செய்வன் கீதங்கள் கேட்க இச்சை
மருமமும் கொஞ்ச முண்டு மங்கையே கேட்டி டாயே.

10. கையில் சங்கரேகை சக்கரரேகை பத்மரேகைகளுள்ளவன். ஹரிஜனங்களாலாகிய பணியாட்களைச் சேர்ப்பான். தன்னுடைய பிது ரார்ஜிதத்தைச் செலவு செய்துவருவான். வீட்டைச் சித்திரங்களால் அழகு படுத்துவான். சங்கீதம் கேட்பதில் விருப்பமுள்ளவன். சிறிது ரகசியமும் உள்ளவன். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதர பாவம்

11. இவனுடைத் துணைவர் தம்மை இயம்புவோ மீரைந் தாகும்
நவனியில் கன்னி ரண்டு நவிலுவோர் தீர்க்க மாக
அவர்களு மெண்பே ராகும் அணுகாவே மற்ற வெல்லாம்
தவசிபோல் வேடம் கொண்ட தயாபரி கேட்டி டாயே.

11. ஜாதகனுடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகின்றேம். அவர் பதின்மர் ஆவர். அவர்களில் இரு சகோதரிகள் நீண்ட ஆயு ளுள்ளவர்கள். மற்றச் சகோதரர்கள் எட்டுப் பேர்களும் நிலையார். தவசிபோல் வேடம் கொண்டிருக்கும் தயாநிதியே! கேளுங்கள்.

சகோதர தோஷத்திற்குரிய நிரகநிலை

12. என்னகா ரணத்தி னலே
இவன்துணை யாண்பால் தோஷம்
முன்னமே கூறு மென்ன
மூன்றினுக் குடையோன் வெள்ளி
பனிரண்டி லிருப்ப தாலே
பகரினே மதனல் தோஷம்
கன்னிமார் சேதி கொஞ்சம்
கழறுவோம் தாயே கேளு.

12. என்ன காரணத்தினல் ஜாதகனுக்குச் சகோதர தோஷம் ஏற்பட்டது? முதலில் அதைக் கூறுங்கள், என்று கேட்க, மூன்று

மிடத்துக்குரிய சுக்கிரன் பன்னிரண்டாமிடத்தில் இருப்பதால் தோஷம் ஏற்பட்டது என்று சொன்னேம். சகோதரிகளின் செய்தியைச் சிறிது கூறுகின்றேம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதரியின் குணங்கள்

13. வடதிசை வரனு நேரும் வறுமை யெப்போதும் காணுள்
திடமிலாத் தேகி யாகும் சேர்ந்திடும் பித்தச் சூடு
நடைநன்மை சீலி யாகும் நாயகன் மனத்துக் கேத்தோள்
மடையர்தம் உறவு கொள்ளாள் மைந்தர்கள் தோஷ
[மெய்தும்.

13. வடக்குத் திக்கிலிருந்து கணவன் வந்து சேருவான். எப்போதும் வறுமையில்லாதவள். உறுதியில்லாத தேகமுடையவள் பித்தச் சூட்டு நோயுள்ளவள். நன்னடத்தையும் நல்லொழுக்கமுமுள்ளவள். தன் கணவன் மனப்படி நடப்பவள். முட்டாள்கள் உறவு கொள்ளாதவள். அவளுக்குப் புத்திர தோஷம் ஏற்படும்.

புத்திர தோஷம் நீங்கச் சாந்தி

14. மூன்தோஷம் கொஞ்ச முண்டு மூலச்சூ டுடைய ளாகும்
வினதீர அம்மன் பீளும் வருவியே குளிக மாட்டி
வனிதையு மணிவா ளாகில் மாமுனி தோஷம் நீங்கிக்
கனமுளச் சுதர்கள் தோன்றும் கழறுவோ மாண்பால்
[ரண்டு;

14. முற்பிறவித் தோஷம் சிறிது உண்டு. மூலச்சூட்டு நோயுள்ளவள். முற்பிறவித் தீவினை நீங்கச் சாந்தி சொல்லுகின்றேம். அம்மனுடைய பீஜாக்ஷரத்தை ஒரு தகட்டில் எழுதி குளிகம் செய்து ஜாதகனுடைய சகோதரி அணிந்து வருவாளானால் பெரிய முனியின் தோஷம் நீங்கி நீண்ட ஆயுளுள்ள குழந்தைகள் பிறக்கும். இரு ஆண் குழந்தைகளும்;

ஜாதகனுடைய தங்கையின் குணங்கள்

15. கன்னிகை யவ்வாறு தீர்க்கம்
காதலி வயது தீர்க்கம்
பின்துணை சேதி சொல்வேன்
பேதைக்குக் கீழ்ப்பால் மாரன்
அன்னவள் வறுமை காணுள்
அலைச்சலாம் குடும்பம் சின்னுள்
பொன்பணி பின்னுல் சேர்ப்பள்
பிதாவினுல் சுகமு மேற்பள்.

15. இரு பெண் குழந்தைகளும் பிறந்து அவர்களும் நீண்ட ஆயுளுள்ளவர்களாவார்கள். ஜாதகனுடைய சகோதரியும் நீண்ட ஆயுளுடையவள். அவனுடைய இளைய சகோதரியின் செய்தியைச் சொல்லுகிறேம். அவளுக்குக் கணவன் கிழக்குத்திக்கிலிருந்து வருவான். தரித்திரம் அடையாதவள். சில காலம் குடும்பத்தில் சள்ளையுண்டு. பிற்காலத்தில் பொன் ஆபரணங்கள் சேர்ப்பாள். தந்தையால் சுகமடைவாள்.

16. பித்தம்போல் மயக்கம் கொஞ்சம் பிறர்குற்றம்
[புகலா ளாமே
முந்தின கோப முண்டு வுயர்வான குடும்பி யாவள்
சித்தினி சாதி யாவள் சேயர்க ளாண்பா லொன்று
வித்தகி மார்கள் ஒன்று விளம்புவோம் தீர்க்க மாக.

16. பித்தம் போல சிறிது மயக்கம் உடையவள். பிறருடைய குற்றங்களைச் சொல்லாதவள். (பிறர் மீது குறை கூறுதவள்.) முன் கோபமுடையவள். சித்தினி ஜாதியைச் சேர்ந்தவள். இவளது புத்திரபாவத்தைச் சொல்லுவோம். ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்து நீண்ட ஆயுளுள்ளவையாக இருக்கும்.

17. பாலர்கள் தவத்தால் தோன்றும் பால்பாக்கியம்
[விருத்தி யுண்டு
சாலவே வயது தீர்க்கம் சம்பத்துப் பின்னு லுண்டு
காலத்தை அறிந்து வாழ்வள் கல்மனம் பாவைக் கேதான்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைகிறேம் பின்பால்
[சேதி.

17. குழந்தைகளும் (முற்பிறவியில் செய்த) நல்வினையால் பிறக்கும். பால் பாக்கியம் பெருகும். நீண்ட ஆயுள் உள்ளவள். பிற்காலத்தில் செல்வம் அதிகமாகும். வருங்காலத்திற்கேற்ப வாழ்ந்து வருவாள். இளகாத மனமுடையவள். விஷத்தையுண்ட நீலகண்டனின் தேவியே! மற்றவற்றைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

18. மைந்தனின் மணத்தின் கால மறைகிறேம் பதினே
[ழாண்டுள்
பந்தணி மாது உள்ளூர் பகருவோம் வடபால் தன்னில்
அந்தவள் மாரி யாலே அந்தகன் பக்கல் சேர்வாள்
எந்தக்கா லத்தில் செல்வா ளிருபத்தோ ராண்டுக்
[குள்ளே;

18. ஜாதகனுடைய திருமணத்தின காலத்தைச் சொல்லுகின் ரேரும். அவனுடைய பதினேழாம் வயதுக்குள், மனைவி உள்ளூரி லிருந்தே, வடக்குப் பக்கத்திலிருந்து வருவாள். அவளும் அம்மை நோயால் இறந்து விடுவாள். அவள் எந்தக் காலத்தில் இறப்பாள் என்று கேட்க, ஜாதகனுடைய இருபத்தோராம் வயதுக்குள்ளாகவே ; (இறந்துவிடுவாள்).

ஜாதகனுடைய இரண்டாம் மணம்

19. பின்மனை யிருபா னேழுள்
புக்குவாள் கீழ்ப்பால் தன்னில்
அன்னவள் குணத்தைச் சொல்வே
னழகுளாள் மால்சி வப்பள்
தன்சொலு மடக்க முண்டு
சாற்றுமுன் கோபங் கொஞ்சம்
பின்னமில் லாத தேகி
பொய்யது வழுத்தா ளாகும்.

19. ஜாதகனின் இருபத்தேழாம் வயதுக்குள் இளைய மனைவி கிழக்குத் திக்கிலிருந்து வந்து சேர்வாள். அவளுடைய குணத்தைச் சொல்லுகின்றேரும். அழகுள்ளவள். கரிய நிறமுடையவள். அடக்க மாகப் பேசுபவள். கூறுவதற்குமுன் கோபங் கொள்ளுவாள். ஊன மில்லாத தேகமுள்ளவள். பொய் பேசாதவள்.

மனைவியின் குணங்கள்

20. மாரன்தன் மனத்துக் கேத்தோள் மறித்துரை யதிகம் [கூறாள்
திரமில் லாத நெஞ்சம் சிறுத்தவர்க் குதவி செய்வள்
பாரினில் நல்லோ ளாவள் பாவையுந் தீர்க்க ஜீவி
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

20. கணவன் மனத்துக்கேற்றபடி இருப்பவள். மறுத்துப் பேசாதவள். திட(ஸ்திர)மில்லாத மனமுள்ளவள். சிறுமையடைந்த வர்கட்கு உதவி செய்பவள். உலகில் நல்லவளாக இருப்பவள். நீண்ட ஆயுளுள்ளவள். ஆறுமுகக்கடவுளைப்பெற்ற அம்பிகையே! கேளுங்கள்.

இருமனைவியர் : கிரகநிலை

21. எப்படி வயது தீர்க்க மியம்புவீர் மூனியே நீர்தாம்
ஒப்புட னேழோ ளுட்சி உயர்பணி சேயுங் கூட
செப்பிலேழ் தாரம் ரண்டு திருதிய மனுகா தாகும்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் ரூவே.

21. வயது எங்ஙனம் தீர்க்கமாயிருக்கும், கூறுங்கள், முனிவரே! தாங்கள். ஏழாம் வீட்டுக்குரிய சனி ஆட்சியாகவும் ராகுவுடனும் செவ்வாயுடனும் கூட இருப்பதால் இருமனைவியர்தான் ஏற்படுவர். மூன்றுவது மனைவி ஏற்பட இடமில்லை. கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் பொய்யாகா.

ஜாதகனுடைய புத்திரவிருத்தி

22. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பால் ரண்டு
சித்தமாய்க் கன்னி ரண்டு செப்புவோர் தீர்க்க மாகப்
பத்தினி யிரண்டு என்றீர் பாலர்க ளெம்மா துக்குச்
சுத்தமாய்ச் சொல்லு மென்ன தோன்றுது முதல்ம
[னைக்கு.

22. ஜாதகனுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். இரு ஆண் குழந்தைகளும் இரு பெண் குழந்தைகளும் பிறந்து நீண்ட ஆயுளுள்ளவர்களாக இருப்பார்கள். இரு மனைவியர் உண்டு என்று சொன்னீர்கள். குழந்தைகள் எந்த மனைவிக்கு ஏற்படும் என்று திண்ணமாகச் சொல்லுங்கள், என, முதல் மனைவிக்குப் புத்திரபாக்கியமில்லை.

ஜாதகனுடைய முற்பிறவி

23. சுகமிலா மரிப்ப ளாகும் சுதர்களும் பின்ம னைக்குத்
தகமையா யிவன்முன் ஜன்மம் சாற்றுவோம் வாரி,
[யோரம்
பகையிலா நவபா ஷாணம் பருத்ததோர் நகரம் தன்னில்
மிகுதன முடையோ னுக்கு மேவினன் வன்னியச் சேயாய்.

23. சுகமில்லாமல் இறந்து விடுவாள். இரண்டாம் மனைவிக்குக் குழந்தைகள் தோன்றும். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். தனுஷ்கோடிக்கருகிலிருக்கும், பாபங்களே விலக்குகின்ற நவபாஷாணம் என்ற பெரிய ஊரில் மிகுந்த தனவானுகவுள்ள ஒரு வன்னிய குலத்தவனுக்குப் புத்திரனுகப் பிறந்தான்.

24. பலதொழில் செய்து யின்னேன் பாரினில் வாழு நாளில்
குலவின விணையைக் கேண்மோ கோதையை போகந்
[துய்த்து
விலையது தாராமல் சென்றான் வித்தகி புகலும் சாபம்
நலமான வார்த்தை சொல்லி நற்பொன்னுந் தாராத பாவி.

24. பலவிதமான தொழில் செய்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு பெண்ணுடன் இன்பமான வார்த்தைகளைப் பேசி, இன்பத்தை அநுபவித்து விட்டு, பணத்தைத்

தராமல் சென்று விட்டான். அந்தப் பெண் கூறிய சாபத்தைக் கேளுங்கள் என்னிடம் அன்புடன் பேசி (இன்பமனுபவித்த பிறகு) பணம் தராமல் சென்ற பாவியே!

தாசியின் சாபம்

25. மற்றொரு ஜன்மம் தன்னில் மனிவிக ளிருவ ராயும்
வித்தகர் துணைவ ரின்றி மேதினில் பழியு மேற்பாய்க்
குற்றமாய்ச் சொல்லிச் சென்றுள் குலவிற்று வந்தச் சாபம்
முத்தினேர் தொண்டு பூண்டு முயர்வான சேது சென்றும்;

25. அடுத்த பிறவியில் உனக்கு இருமனைவியர்கள் ஏற்பட்டு உடன்பிறந்தவர்களை அடையாமல் உலகில் அவமானங்களை யடைவாய் என்று கூறிவிட்டுச் சென்றுள். அந்தச் சாபம் இவனைப் பற்றியது. பெரியோர்களுக்குத் தொண்டுகள் பல செய்து உயர்ந்த சேதுவுக்குச் சென்று;

26. காலன்தன் னுட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமில் லாதா னுகி ஜனிப்பனு மிந்தப் பாலன்
ஆலம்போல் முன்னுழ்ச் சாப மணுகிடு மிச்சென் மத்தில்
பாலிகை யிருவ ராகும் பற்றது துணையா னுந்தான்.

26. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு நல்லொழுக்கமில்லாதவனுகி இந்தப் பிறவியில் ஜாதகன் பிறப்பான். கொடிய விஷம்போல முற்பிறவியில் செய்த தீவினையால் கிடைத்த சாபம் தொடரும். இப்பிறவியில் இருமனைவியரை யடைந்து சகோதரர் இல்லாமல் வாழ்வான்.

பெண்கூலிதராத பாபம் விலகாது

27. பிருகுமே புகலு கின்றுர் புனிதன்முன் ஜன்மம்
[தன்னில்
பெருநதி சேது சென்ற புண்ணியம் முன்னுழ்ச் சாபம்
குறையாதோ விவரம் சொல்வாய்க் கோதைபால் நடித்த
[கூலி
தார்ராமல் சொன்ன சாபம் தான்வில காது ஐயா.

27. பிருகுமுனிவர் கூறுகின்றுர். ஜாதகன் முற்பிறவியில் புண்ணியஸ்தலமாகிய சேதுவுக்குச் சென்று நீராடியதால் முற்பிறப்புச் சாபம் நீங்காதோ? விவரமாகச் சொல்லுங்கள் என்று கேட்க, பெண்ணிடம் இன்பவார்த்தைகளைப் பேசிப் பணம் தராமல் சென்றதால் பெண் கூறிய சாபம் விடாது, முனிவரே!

ஜாதகனுடைய யோகம்

28. இவனுடை யோகம் சொல்வேன்
எப்போதும் வறுமை காணுன்
நவனியை விருத்தி செய்வன்
நாட்டினில் சல்லியம் கொள்ளான்
தவசியே இருபா னென்பா
னுண்டினில் கிராமச் செட்டுப்
பவமிலா நேரு மென்றேரும்
பண்ணுவான் சித்திர யில்லம்.

28. ஜாதகனுடைய யோகத்தைச் சொல்லுகின்றேரும். ஒருகாலும் வறுமையையடையாதவன். விசோகிலங்கசோப் பெருக்குவான். உலகில் கடன் உபத்ரவம் இல்லாதவன். தவம் செய்பவளே! இருபத்தொன்பதாம் வயதில் கிராமத்தில் வியாபாரம் ஆரம்பமாகும். அழகிய வீட்டைக் கட்டுவான்.

29. தந்தைக்கு மேலாய் வாழ்வன் சாராள்க ளதிகம்
[சேர்ப்பன்
சந்திரன் பிறைபோல் யோகம் தங்கிடும் அதன்மே லாக
மூந்துமால் பத்தி கொள்வ னுயர்வான குடும்ப மேற்பன்
வந்தவர்க் கன்ன மீவன் வரசர்க ளுறவு கொள்வன்.

29. தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். பணியாட்கள் அதிகம் உள்ளவன். பிறைச்சந்திரன்போல யோகம் விருத்தியாகும். அதற்குப் பிறகு திருமாலின்மீது பக்தி கொள்ளுவான். உயர்ந்த குடும்பத்தை யடைவான். யாசித்து வந்தவர்கட்கு அன்னம் அளிப்பான். அரசாங்கத்தாருடன் நட்புக்கொள்ளுவான்.

30. எந்தநாள் மட்டுங் கிராமச் செட்டுகள் செய்வான்
[சொல்வாய்ப்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோ மந்தச் சேதி
பந்தினர்க் குதவி செய்வன் பாரது சேர்ப்பா னுகும்
இந்திர போக மேற்பன் ஈச்வரி கேட்டி டாயே.

30. எந்தக்காலம் வரையில் கிராம வியாபாரம் செய்து வருவான்? சொல்லுங்கள். அவ்விஷயங்கசோப் பின் பாகத்தில் சொல்லுகின்றேரும். தன் பந்துக்களுக்கு உபகாரம் செய்து வருவான். விசோகிலங்கசோப் பெருக்குவான். இந்திரனைப்போன்ற போகத்தைப் பெறுவான். பாவதிதேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய தாயின் குணங்கள்

31. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாநிறம் சமதே
[கத்தாள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உள்மனம் கபடு மில்லாள்
தீதுகள் ஒருவர்க் கெண்ணுள் சேயிழை யோக சாலி
பாதக மனமில் லாதாள் பரிந்துப சாரம் செய்வள்.

31. ஜாதகனின் தாயின் குணத்தைச் சொல்லுகிறேம். மாநிற முள்ளவள். சமமான உடலமைப்புடையவள். இனிமையாகப் பேசுபவள். கபடமில்லாதவள். ஒருவருக்கும் தீங்குகளைச் செய்ய எண்ணுதவள். யோகமுள்ளவள். தீயமனமில்லாதவள். அன்புடன் உபசாரம் செய்வாள்.

தாயின் உடன்பிறப்பு

32. தன்துணை யாண்பால் ரண்டு
சத்தியு மொன்றே யென்றேம்
கன்னிகை யிரட்டை யாகக்
கலப்பளா மாண்பா லொன்று
பின்னமா மொருவன் தீர்க்கம்
பேசுவோம் கீழ்ப்பா லில்லம்
அன்னவன் யோக மில்லான்
யாவர்க்கு நல்லோ னுவன்.

32. ஜாதகனுக்குத் தாயின் உடன்பிறந்தவர்களில் இரு சகோதரர் களும் ஒரு சகோதரியும் உண்டு என்றேம். அவள் இரட்டையாகப் பிறப்பாள். அவளுடன் ஆண்குழந்தை ஒன்று பிறக்கும். ஒரு குழந்தை நிலையாமல் மரித்து விடும். ஒருவன் தீர்க்கமாவன். அவன் கிழக்குப் பக்கத்தில் வீடுள்ளவன். அதிருஷ்ட மில்லாதவன். எல் லோருக்கும் நல்லவன்.

தாயின் சகோதரனின் குணங்கள்

33. பலகலை யுணர்வா னுகும் பாவையு மொன்று தீர்க்கம்
நலமுள சுதரான் மூன்று நங்கையு மொருத்தி யாகும்
குலவுமில் விட்டு நீங்கும் கூட்டுவான் நவநூல் தானும்
தலமது அல்ப மாகும் சாற்றுவோம் பின்பால் சேதி.

33. பலவிதமான கலைகளைக் கற்றுணர்வான். ஒரு மனைவியையே அடைவான். நன்மையுள்ள மூன்று புத்திரர்களும் ஒரு புத்திரியும் பிறப்பார்கள். தன் சொந்த வீட்டை விட்டு விலகுவான். புதிய நூல்களை (ஆராய்ச்சி செய்வான்) சேகரிப்பான். அல்பமான வீட்டை யுடையவன். பிற்பாகத்தில் மற்ற சேதிகளைக் கூறுகின்றேம்.

தாயின் முற்பிறவி

34. மாதுரு பூர்வம் சொல்வேன் மலைநாட்டில் கோகு லத்தில்
காதலி யுதித்து மேலும் கனமூள குடும்பி யாகி
மேதினில் வாழு நாளில் மேவின வினையைக் கேண்மோ
வேதியர் மதலைக் காக ஆவின்பா லிவளைக் கேட்க ;

34. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். மலைநாட்டில் இடையர் மரபில் பிறந்து பெரிய குடும்பியாக வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஓர் அந்தணர் தம் குழந்தைக்காகப் பசுவின்பால் இவளைக் கேட்க ;

அந்தணனது குழந்தைக்குப் பால் தர மறுத்தது

35. வெஞ்சின மிகவே கொண்டு விரட்டினு ளவனை யேதான்
மிஞ்சின குலத்தோர் சாபம் விளங்காது சுதர்கள் யாவும்
தஞ்சமாய்ப் பின்னுன் மத்தில் சந்ததி யாவும் தோஷம்
நஞ்சுபோல் மனத்த ளாகி நவின்றிட்டா ளனேக மாக.

35. மிகுந்த கோபத்தைக்கொண்டு அவ்வந்தணனைத் துரத்தினுள். அவ்வந்தணன் சாபமிட்டான். உயர்ந்த குலத்தவன் இட்ட சாபத்தால் புத்திரர்கள் விளங்கா. அடுத்த பிறவியிலும் தோன்றும் புத்திரர்கள் எல்லோருக்கும் தோஷம் ஏற்படும் என்று மனவருத்த மடைந்து கூறினுள்.

36. மாதுக்கு அந்தச் சாபம் மருவிற்று அந்தி யத்தில்
தீதாகுஞ் சுதர்கள் யாவும் தேவியும் சஞ்ச லத்தால்
போதக வானை கோஷ்டம் போற்றினுள் தீப மொன்று
ஈதவன் காலை னடு சேர்ந்துமே பிரமன் லக்கம் ;

36. அந்தச்சாபம் தொடர்ந்தது. தாய் கடைசிக்காலத்தில் தன் புத்திரர்களை இழந்து மனம் வருந்தி விநாயகர் ஆலயம் ஒன்றுக்குத் தீபகைங்கர்யம் செய்து வந்து பிறகு மரணமடைந்து மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு ;

விநாயகர் ஆலயத்தில் தீபம்வைத்த புண்யம்

37. வந்தவ ளென்று சொல்வோம் மறையவர் சாபத் தாலே
தன்சுதர் தோஷ மெய்தும் ஜயமுனி தடுத்துச் சொல்வார்
இந்ததோர் பாலன் தீர்க்கம் எப்படிச் சொல்லு மென்னத்
தந்தியின் கோஷ்டத் திற்குச் சாத்தின தீப புண்யம் ;

37. பிறந்தவள் என்றும் கூறுகின்றோம். அந்தணனுடைய சாபத்தால் தன் புத்திரர்கட்குத் தோஷமுண்டாகும். ஜயமுனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். இந்த ஜாதகன் மட்டும் எப்படி நீண்ட

ஆயுளுடன் இருப்பான் என்று சொல்லுங்கள், என, விநாயகர் ஆலயத்தில் தீபகைங்கர்யம் செய்து வந்த புண்ணியத்தால்;

ஜாதகனின் தாயின் மரணகாலமும் மறுபிறவியும்

38. மாரனு மொருவன் தீர்க்கம் மரித்திடு மிருநான் கென்றோம்
காரிழை பின்ஜன் மத்தைக் கழறுவோம் வான்மி யூரில்
சூதிலாக் கங்கை சேயாய் ஜனிப்பளா மிந்த மாது
பாரினில் முப்பா னெட்டில் பறப்பளாம் கால முடு.

38. ஒரு புத்திரன் நீண்ட ஆயுளுடன் இருப்பான். எட்டுக் குழந்தைகள் பிறந்து இறந்துபோம். தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருவான்மியூரில் சூதுகளில்லாத வேளாள குலத்தவளாகப் பிறப்பாள். இவள் ஜாதகனின் முப்பத்தெட்டாம் வயதில் மரணமடைவாள்.

தந்தையின் முற்பிறவி

39. தந்தையின் மூன்ஜன் மத்தைச் சாற்றுவோம் விரிஞ்சி
[தன்னில்
அந்தவன் செங்குந்த ரெக அணுகியே வாழு நாளில்
விந்தையாய் வார்த்தை யொன்று விளம்பினன்
[ஒருபெண் பேரில்
நொந்திடு மனத்த ளாகி நுவலுவாள் சாபம் தானும்.

39. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். விரிஞ்சிநாட்டில் செங்குந்தமரபினரைப் பிறந்து வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகிறோம். ஒரு பெண் மீது வேடிக்கையாக நிந்தைச்சொல் ஒன்றைக் கூறினன். அப்பெண் மனம் வருந்திச் சாபமிடுகிறாள்.

பெண் சாபம்

40. பெண்பழி சொன்ன பாவி பிறக்கும்பின் ஜன்மம்
[தன்னில்
கண்ணது அந்தம் போகிக் காசினி தன்னில் வாழ்வாய்
குன்னிய மனத்தாள் சொல்லக் குலவிற்று வந்தச் சாபம்
சண்டன்தன் பதிக்குப் புக்கிச் சதுர்மறை வரையப் பட்டு;

40. பெண்மீது அபாண்டமாகப் பழிசொன்ன பாவியே! நீ பிறக்கும் அடுத்த பிறவியில் கடைசிக் காலத்தில் உன் கண்குருடாகி பூமியில் தனித்து வாழ்ந்து வருவாய் என்று குறையடைந்த மனமுள்ள வளாகிய பெண் சொன்னாள். அந்தச் சாபம் தொடர்ந்தது. அவன் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு;

தந்தையின் மரணகாலம்

41. வந்தவ னென்று சொல்வோரம் மாதுவின் சாபம் போலே
அந்தத்தில் விழிகள் குற்ற மல்பமாம் பொருமை நெஞ்சம்
சந்தத மிருபா லென்பா லுண்டினில் கண்ட மெய்தும்
புந்தியின் தசையி லேதான் [1]பிறைபுத்தி நடக்கு
[மென்றோம்.

41. பிறந்தவன் என்று சொல்லுகின்றோம். பெண்ணின் சாபம் போல் தன் கடைசிக்காலத்தில் கண்கள் குருடாகி மனத்தில் அற்ப மான பொருமையடைந்து ஜாதகனுடைய இருபத்தொன்பதாம் வயதில் மரணமடைவான். அப்போது புதமகாதசையில் சந்திரபுக்தி நடக்கும் என்றோம்.

ஜாதகன் தந்தையின் மறுபிறவி

42. அத்திரி மறுத்துச் சொல்வார் ஆஞ்சு ஆண்டில் நேரும்
சுத்தமாய் மதிபு குத்தி அந்தத்தில் நேரு மென்றோம்
வித்தகன் பின்ஜன் மத்தை யியம்புவோரம் வேலங்
[காட்டில்
மெத்தனப் பொருளோ ஞக விளங்குவான் ரெட்டி
[வம்சம்.

42. அத்திரிமுனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதக னுடைய முப்பதாம் வயதில் சந்திரபுக்திக் கடைசியில்தான் தந்தைக்கு மரணம் நேரும் என்றோம். தந்தையினுடைய மறுபிறவியைச் சொல்லு கின்றோம். வேலங்காட்டில் பெரிய தனவானான ரெட்டியார் மரபில் (பிறப்பான் என்றோம்).

ஜாதகனுடைய மரணகாலம்

43. மாரனின் மரண கால மறைகிறோ மறுபா லுலில்
தீரமாய்த் [2]துலாமா தத்தில் தேய்பிறைப் பஞ்சமி தன்னில்
சேருவான் கால னடு செப்புவோ மிவன்பின் ஜன்மம்
பேரூரில் பிரம்ம சேயாயப் பிறப்பனு மென்று
[சொல்வோம்.

43. ஜாதகனது மரணக்காலத்தைச் சொல்லுகின்றோம். அவ னுடைய அறுபத்துநான்காம் வயதில் ஐப்பசி மாதத்தில் தேய்பிறைப் பஞ்சமி திதியன்று மரணமடைவான். இவன் மறுபிறவியில், பேரூரில் அந்தண குலத்தவனாகப் பிறப்பான் என்று கூறுகின்றோம்.

---

1. சந்திரபுக்தி
2. ஐப்பசி

அந்தணர் குலத்தில் பிறக்கக் காரணங்கள்

44. இந்ததோர் ஜன்மந் தன்னி லிவன்செய்த புண்ணிய [மென்ன
மந்தவே கூறு மென்ன மொழியதைக் காத்த லாலும்
சந்ததம் கடவுள் பத்தி சத்தியத் தோர்க்கு வன்னம்
அந்தவ னளித்த தாலே யருமறைக் குலமு திப்பான்.

44. இந்தப் பிறவியில் ஜாதகன் செய்த நற்செயல்கள் என்ன வென்று முதலில் கூறுங்கள். தன் வார்த்தைகளைக் காத்து வந்த தாலும் எப்பொழுதும் கடவுள் பக்தி கொண்டு யாசித்தவர்கட்கு அன்னமளித்து வந்ததாலும் அந்தணர் குலத்தில் பிறப்பான்.

ஜனனகாலதசை

45. பிறந்திடு காலம் தன்னில் பூரட்டாதி கடைப்பா தத்தில்
குருதசை யாண்டு ரண்டும் கூடிய பதினேர் திங்கள்
உரைத்தனம் பூர்வ பாக முணருவோம் பின்பால் சேதி
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

45. ஜாதகன் பிறக்கும் காலத்தில் பூரட்டாதி நட்சத்திரம் கடைசிப் பாதமாகும். அக்காலத்தில் குரு மகாதசையில் இரு வருடங்களும் பதினெரு மாதங்களும் இருப்பாகும் என்று முதல் பாகம் சொல்லுகின்றோம். பிறகு மற்ற விஷயங்களைக் கூறுகின்றோம். தருமத்தை வளர்க்கும் எங்கள் உயிருக்குயிரான தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 10

1. திங்களு மேட மாகச் சனிவீணை சிகியு மீனம்
பங்கயன் புதனுங் கோலில் பார்க்கவன் ராகு கன்னி
மங்கலன் சேயுந் தேளில் மறையவன் சீய மாக
இங்கிவைக் கிரகம் நின்று இலக்கினம் சிம்ம மாக ;

1. சந்திரன் மேஷத்திலும், சனி மிதுனத்திலும், கேது மீனத்திலும், சூரியன் புதன் துலாத்திலும், சுக்கிரன் ராகு கன்னியிலும் செவ்வாய் விருச்சிகத்திலும் குரு சிம்மத்திலுமாக நவக்கிரகங்கள் இருந்து இலக்கினம் சிம்மமாக இருப்பின் ;

கிரகநிலை

கேது	சந்திரன்		சனி
	இராசி சக்கரம்		
			லக்கினம் குரு
	செவ்வாய்	சூரியன் புதன்	சுக்கிரன் ராகு

ஜாதகனுடைய வீட்டின் நிலை

2. பலன்தனைப் புகலு மென்று பார்வதி கேட்கும் போது
நலமுடன் பிருகு சொல்வார் நாயகன் ஜனன மாமே
தலமது கீழ்மேல் வீதி சண்டன்தன் வாச லாகும்
அலைகடல் துயின்றோ னீசன் அணுகிடும் கீழ்ப்பால்
[தன்னில்.

2. பலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கும் போது, நன்மை மிக்க பிருகு முனிவர் கூறுகின்றார். இஃது ஆண் மகனின் ஜாதகம். அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. வீண்ட பாற்கடலில் துயில் கொண்டுள்ள திருமாலின் ஆலயமும் சிவபெருமானின் ஆலயமும் கிழக்குப் பக்கத்திலும் ;

3. சிங்கவா கனத்தாள் மாரி பாஞ்சாலி கணேச னுத்தரம்
இங்கிவை யடையா ளத்துள் பாலகன் சிற்றூர் தன்னில்
அங்கவன் கர்ண சேயா யருளுவான் மூன்றுஞ் ஜன்மம்
பொங்கமாய்க் குடும்பச் சேதி புகலுவோ மினிமே லாக.

3. சிங்கவாகனத்தையுடைய காளிகோவிலும் மாரியம்மன் கோவிலும், திரௌபதியம்மன் கோவிலும், விநாயகர் ஆலயம் ஒன்றும் ஆகிய நான்கும் வடக்கிலுள்ளன. இவ்வித அடையாளங்களுள்ள ஒரு சிற்றூரில் ஜாதகன் கருணீகர் குலத்தில் தன் தந்தைக்கு மூன்றுமவனுகப் பிறப்பான் என்றேரும். அவனுடைய குடும்பச் செய்திகளை இனிக் கூறுகின்றேரும்.

ஜாதகனின் தந்தையின் வர்க்கம்

4. தந்தையின் வர்க்கம் தன்னைச் சாற்றுவோ மாண்பால்
[காணன்
வந்திடும் கன்னி ரண்டு வரைந்தன மிவனுக் கேதான்
அந்தகோர் தந்தை சேதி அறிவிப்போ மினிமே லாகச்
சிந்தையில் கபடு மூண்டு சிலேடையாய்ப் பேசு வானும்.

4. ஜாதகனுடைய தந்தையின் வர்க்கத்தாரைப் பற்றிச் சொல்லுகின்றேரும். சகோதரரில்லாதவன். இரு சகோதரிகள் உள்ளவன் என்று கூறினேரும். ஜாதகனுடைய தந்தையின் செய்தியைக் கூறுகின்றேரும். மனத்தில் கபடமுள்ளவன். இருவிதப்பொருள் படும்படி பேசுபவன்.

5. மாநிறஞ் சமதே கத்தோன் மர்மத்தை வெளிக்காட்
[டாதான்
ஊனமில் லாத தேகி யுறுதியா மனத்த ஞகும்
தேன்மொழி கூறு வானும் செய்குவான் கணக்கு வேலை
பான்மையாய்ப் பேசு வானும் பிறர்பொரு ளிச்சை
[யுள்ளான்.

5. மாநிறமும் சமமான உடலமைப்புமுள்ளவன். மனத்திலுள்ளவற்றை வெளிவிடாதவன். ஊனமில்லாதவன். திடமான மனமுள்ளவன். இனிய வார்த்தைகளைப் பேசுபவன். கணக்கு வேலை செய்து வருவான். பொருத்தமாகப் பேசுபவன். பிறர் பொருளின்மீது விருப்பமுள்ளவன்.

6. புண்ணிய மனத்தா ஞகும் பூமிகள் சேர்ப்பா ஞகும்
கண்ணிய குடும்ப மேற்பன் கேவல மணுகாச் சித்தன்
தன்மையாய்ப் பேசு வானும் ஐகராசர் பேட்டி கொள்வன்
உண்மையை வெளிக்காட் டாதா னுவமையாய்ப் பேசு
[வானும்.

6. புண்ணியமான மனத்தினன். விசேஷலங்களைப் பெருக்குவான். கௌரவமான குடும்பத்தை யுடையவன். தாழ்வு அணுகாத மனத்தையுடையவன். பெருந்தன்மையாகப் பேசுபவன். அரசாங்கத்தாரின் பேட்டி கொள்ளுவான். தன்னுடைய உள் அந்தரங்கத்தை வெளிவிடாதவன். சந்தோஷப்படும்படி பேசுபவன்.

ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவி

7. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறேம் பட்சி தன்னில்
வன்னிய குலமு தித்து மனிவிமைந் தருமுண் டாகிப்
பொன்னெடு பணிதி யுண்டாய்ப் புகழான குடும்பி யாகி
அன்னவன் பயமில் லாமல் அணுகிஞன் கால னெடு.

7. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகிறேம். திருக்கழுக்குன்றத்தில் வன்னிய குலத்தவனுகப் பிறந்து மனைவிமக்களை யடைந்து பொன் ஆபரணங்கள் செல்வம் இவைகளுடன் கீர்த்தி பெற்ற குடும்பியாகி வாழ்ந்துவந்து தீச்செயல்களின்றி மரணமடைந்தான்.

ஜாதகனின் குணங்கள்

8. புங்கவன் வரையப் பட்டுப் பிறந்தன னென்று [சொல்வோம்
இங்கிவை குணத்தா னுக்கு இப்பால னுதிப்பா னகும்
அங்கவன் குணத்தைச் சொல்வே னழகுளான் மாஞ்சி [வப்பன்
சங்கையா மனத்த னகும் தந்தையின் சுகமி லாதான்.

8. பிரமதேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவன் என்று கூறுகின்றேம். இங்ஙனமுள்ள குணத்தையுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணத்தைச் சொல்லுகின்றேம். அழகுள்ளவன். சிவந்த நிறமுடையவன். சந்தேக மனத்தினன். தன் தந்தை போல் சுகம் பெறுதவன்.

9. போஜன சுகமு முள்ளான் புத்திமான் வறுமை காணன்
காசுகள் செலவு செய்யான் கல்விமா னுக வானும்
பாசமாய்ப் பேச வல்லான் பந்துவில் விரையம் பூர்வம்
கூசிடான் வார்த்தைக் கேதான் குணமது இரண்டு [முண்டு.

9. நன்றுகச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவன். புத்திசாலி. தரித்திரம் இல்லாதவன். காசு பணங்களை அதிகமாகச் செலவு செய்யாதவன். கல்வி யறிவுள்ளவன். ஊகமுடையவன். பிரியமாகப் பேசுபவன். முதலில் பந்துக்களில் நஷ்டம் நேரும். பேசுவதற்குக் கூச்சமில்லாதவன். இருவிதக் குணங்களுள்ளவன்.

10. குலத்தொழில் புரிவா னகும் குலத்துளோர் மதிக்க [வாழ்வன்
நிலையதைக் காப்பா னகும் நினைத்ததை முடிக்க வல்லான்
அலைகடல் துயின்றேன் பத்தி ஆசாரன் வெளிம யக்கன்
தலவாசம் செல்வா னகும் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு.

10. தன்னுடைய குலத்தொழிலையே செய்து வருவான். தன் பந்துக்கள் மதிக்கும்படி வாழ்ந்து வருவான். தன்னுடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக்கொள்ளுவான். எண்ணிய காரியங்களை முடிக்கக்கூடியவன். நீண்ட பாற்கடலில் துயில் கொள்ளும் திருமாலின்மீது பக்தியுள்ளவன். பிறர் ஆசாரமுள்ளவன் என எண்ணி மயங்கும்படி வாழ்ந்து வருவான். புண்ணிய தலங்களுக்குச் செல்வான். கால் நடைகள் பெருகும்.

11. தூணவன்சொல் கடவா னகும் துராசையும் கொஞ்ச [முண்டு
சினமுண்டு வெளிக்காட் டாதான் சிலராலே நிந்தை [யேற்பன்
கனமுள குடும்பம் பின்னல் கலவர புத்தி யுண்டு
வினமன முடைய னகும் மெல்லியர் மோக னவன்.

11. தன் உடன் பிறந்தவனது வார்த்தையை மீறுதவன். சிறிது கெட்ட ஆசையுள்ளவன். கோபமுடையவன். ஆனல் அதை வெளியில் காட்டாதவன். சிலபேரால் அவமானம் அடைவான். பெரிய குடும்பத்தைப் பின்னல் பெறுவான். குழப்பமடையும் புத்தியுடையவன். தீய மனமுடையவன். பெண்கள்மீது மோகம் கொள்ளுவான்.

ஜாதகனுடைய உடன்பிறந்தவர் குணம்

12. தன்தூண முன்ன ணென்று தங்கிடுந் தீர்க்க மாக
அன்னவன் குணத்தைச் சொல்வே னனையி னிறத்த [னகும்
முன்கோப முடனே தாழ்வு மொழியதைக் காப்பா னகும்
பின்னங்கள் கரங்கள் தன்னில் பேசுவோந் தாயே [யாங்கள்.

12. ஜாதகனுடைய மூத்த சகோதரன் ஒருவன் நீண்ட ஆயுளுள்ளவன். அவனுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். கரியநிறமுள்ளவன. முன்கோபி. விரைவிலேயே அது தணிந்து போம். தன் வார்த்தைகளைக் காப்பாற்றுவான். கைகளில் ஊனமுடையவன் என்று சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

13. கோல்ராசி மூல னளில் குதிப்பனும் முன்னேன் தானும்
நீலிமார் மோக னவன் நேமியில் நல்லோ னவன்
காலத்தை யறிந்து ரைப்பன் கல்விமான் பெருமை சாலி
மால்பத்தி யுடைய னகும் மாற்றலர் தமைச்செ யிப்பான்.

13. துலா ராசியில் மூல நட்சத்திரத்தில் ஜாதகனுடைய அண்ணன் பிறப்பான். பெண்களின்மீது மையல் கொள்ளுபவன். உலகில்

நல்லவனாக இருப்பான். வருங்காலத்தை முன் கூட்டியே தெரிந்து சொல்லக் கூடியவன். கல்விமான். பெருமையுள்ளவன். திருமாலிடம் பக்தியுடையவன். விரோதிகளை வெல்லுவான்.

14. சுயத்தொழில் புரிவா னாகும் சோம்ப லும் கொஞ்ச முண்டு
பயமுள மனத்தா னாகும் பாரது விரயம் செய்வன்
நயமுடன் பின்பால் பூமி நல்கிடும் சிலேடை வார்த்தை
கயவரை யுறவு கொள்ளான் காசுகள் விரயம் செய்வன்.

14. சுயமான (தன் குலத்) தொழிலைச் செய்துவருவான். சிறிது சோம்பல் உள்ளவன். பயந்த மனத்தினன். பூமியை விற்றுவிடுவான். பிற்காலத்தில் அவனுக்குப் பூமி கிடைக்கும். இருவிதப் பொருள் படும்படி பேசுபவன். தீயர்கள் உறவு கொள்ளாதவன். பணத்தைச் செலவுசெய்து விடுவான்.

சகோதரனின் மனைவியும் புத்திரரும்

15. சொல்லது சுருக்க மாகும் துணைவனை யாத ரிப்பன்
அல்லல்கள் பூர்வம் தன்னி லணுகிடும் பாரி ஒன்றே
வல்லியும் தென்மேல் திக்கில் மருவிடும் தீர்க்க ஜீவி
நல்லதோர் சுதராண் ரண்டு நங்கைமா ரவ்வா றுதீர்க்கம்.

15. சுருக்கமாகப் பேசுபவன். தன் உடன்பிறந்தவனை ஆதரிப்பான். முதலில் துன்பங்கள் ஏற்படும். மனைவி ஒருத்தியே யாவள். மனைவி தென்மேற்குத் திக்கிலிருந்து ஏற்படுவாள். நீண்ட ஆயுள் உள்ளவள். நல்ல புத்திரர் இருவரும், இரு புத்திரிகளும் நீண்ட ஆயுள் உடையவர்.

ஜாதகனுடைய இளைய சகோதரன் கிரகநிலை

16. மைந்தன்பின் துணைகள் காணன் அறிவிப்பீ ரந்தச்
[சங்கை
பந்தமாய்ப் பரிதி மூன்றில் பார்க்கவன் பணியும் ரண்டில்
இந்தவா றிருப்ப தாலே இவன்பிதா ஆதில் மாள்வன்
எந்தக்கா லத்தில் செல்வான் இயம்புவீ ரந்தச் சங்கை.

16. ஜாதகன் இளைய சகோதரன் இல்லாதவன். அந்த விவரத்தைச் சொல்லுங்கள். மூன்றுமிடத்தில் சூரியன் இருப்பதாலும், ராகுவும் சுக்கிரனும் லக்கினத்துக்கு இரண்டாமிடமாகிய கன்னியில் இருப்பதாலும் ஜாதகனுடைய தந்தை ஆதிகாலத்தில் மரணமடைவான். எந்தக் காலத்தில் தந்தை மரணமடைவான்? அந்த விஷயத்தைச் சொல்லுங்கள்.

தந்தையின் மரணகாலம்

17. இரண்டாண்டி லேகு வானு மிவன்தனைக் காப்போர்
[சொல்வாய்த்
திறமுடன் பிதாவின் தங்கை தேவனும் காப்பா னுகும்
பெருமையா யிவனு லில்லம் பெறுவனும் சுகமு மேற்பன்
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

17. ஜாதகனுடைய இரண்டாம் வயதில் தந்தை மரணமடைவான். ஜாதகனைப் பிறகு ஆதரித்து வருபவர் யார் என்று சொல்லுங்கள். திறமையுடன் தந்தையின் இளைய சகோதரியும் அவளுடைய கணவனும் காப்பார்கள். அவளுல் இந்த ஜாதகன் பெருமையாக வீட்டை அடைவான். சுகத்தை அடைவான். தருமத்தை விருத்தி செய்யும் எங்கள் உயிருக்குயிராகிய தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

18. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மிருபான்
[மூன்றுள்
காதலி மேல்பால் நேரும் கழறுவோ மவள்கு ணத்தை
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உள்மனம் கபடு முண்டு
தீதான புத்தி யில்லாள் தீரமா மனத்த ளாகும்.

18. ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேம். அவனுடைய இருபத்துமூன்றும் வயதுக்குள் அவனிருக்குமிடத்துக்கு மேற்கிலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுகின்றேம். அழகாகப் பேசுபவள். உள் மனத்தில் சிறிது கபடமுள்ளவள். தீய எண்ணங்களில்லாதவள். தைரியமுள்ள மனத்தினள்.

19. முன்கோபங் கொஞ்ச முண்டு வுயர்வான குடும்ப மேற்பள்
கன்னிகை வந்த பின்பு கணவனுக் கதிக யோகம்
பின்னமில் லாத தேகி புருடனுக் கினிய ளாகும்
அன்னியர் குற்றம் சொல்லா ளடிசிலுக் கினிய ளாமே.

19. முன்கோபம் சிறிதுள்ளவள். உயர்ந்த குடும்பத்தை அடைவாள். மனைவி வந்த பிறகு கணவனுகிய ஜாதகனுக்கு யோகம் விருத்தியாகும். ஊன மில்லாத தேகமுடையவள். தன் புருடன் மனத்துக்கேற்றவள். பிறர்மீது குற்றம் புகலாதவள். ருசியாகச் சமைப்பதில் சாமர்த்தியமுடையவள்.

ஜாதகனின் புத்ரபாவம்

20. மாதுவும் தீர்க்க ஜீவி வருவோரை யாத ரிப்பள்
பேர்தனம் பணியும் சேர்ப்பள் புகழ்ந்தோரை யாத
[ரிப்பள்
ஓதுவேன் சுதராண் ரண்டு உத்தமி மார்கள் மூன்று
சாதிப்போம் தீர்க்க மாகச் சங்கரி கேட்டி டாயே.

20. அப்பெண்ணும் நீண்ட ஆயுள் உள்ளவள். தன்னையண்டி வந்தவரை ஆதரிப்பாள். பெரும் தனத்தையும் ஆபரணங்களையும் சேர்ப்பாள். தன்னைத் துதித்தவரைக் காப்பாள். புத்திரர்கள் இருவரும் புத்திரிகள் மூவரும் பிறந்து நீண்டு ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் முற்பிறவி

21. முன்னவ னிருந்த ஜன்மம்
மொழிகிறேரும் புலியூர் தன்னில்
அன்னவன் வைசியச் சேயாய்
அணுகியே மனைவி மைந்தர்
உன்னதக் குடும்பி யாகி
உயர்வான செட்டுச் செய்து
தன்னிலே வாழு நாளில்
சார்ந்ததோர் வினையைக் கேண்மோ.

21. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். புலியூரில் வைசிய குலத்தில் தோன்றி மனைவி மக்களைப் பெற்று உயர்ந்த குடும்பியாக வாழ்ந்து பெரியதொரு வர்த்தகம் செய்து வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள்.

ஏழைகளின் கணக்கில் மோசம்

22. ஏழைக்குக் கணக்கில் மோச மெழுதினி னிவனே யம்மா
தாழ்வுளோர் வருத்த முற்றுச் சாற்றுவார் சாபம் தானும்
ஆழியில் பின்ஜன் மத்தில் ஆதியில் குடும்ப லெச்சல்
தாழ்வுடன் சல்லிய முண்டாய்த் தந்தையால் சுகமு
[மின்றி;

22. ஏழைகளின் கணக்கில் மோசம் செய்து எழுதி விட்டான். அந்த ஏழைகள் வருத்தமடைந்து சாப மிட்டனர். அடுத்த பிறவியில் உனக்கு முதலில் குடும்பத்தில் துன்பம் ஏற்பட்டு கடன் தொந்தரவும் உண்டாகி, தந்தையால் சௌகர்யங்கள் இல்லாமல்;

23. கன்னிகை துணையு மின்றிக் காசினில் வாழ்வா யென்றும்
இன்னமும் பலவாறு சொன்னு ரெய்திற்று வந்தச் சாபம்
முன்னோர்க்கு இடைஞ்சல் செய்தான் மேவிற்று அதனால் [தோஷம்
துன்மையாய்க் காலு டு சென்றுமே பிரமன் லக்கம்;

23. உடன் பிறந்த சகோதரியில்லாமல் தனித்து வாழ்வாய் என்றும் இன்னும் பலவிதமாகவும் சொன்னார்கள். அந்தத் தோஷம் இவனை வந்தடைந்தது. முன்னோர்கட்குத் தொந்தரவுகள் (அந்தணர் கட்குத் தீங்குகள்) செய்தான். அதனால் தோஷம் ஏற்பட்டது. துன்பந் தரும் எமபுரம் அடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு;

24. பிறப்பனு மிந்தப் பாலன் புக்கிடும் முன்னூழ்த் தோஷம்
அரிவையாந் துணைப்பெண் காணுன் ஆதியில் குடும்ப [லச்சல்
வறுமையும் சல்லியப் பாதை மாகிலம் விரயம் கொஞ்சம்
கரிமத வானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

24. இந்த ஜாதகன் பிறப்பான். முற்பிறவியில் செய்த தீவினையால் உடன்பிறந்த சகோதரி யில்லாதவன். ஆதி காலத்தில் குடும்பத்தில் அலைச்சல் உள்ளவனுகவும் தரித்திரம் அடைந்து துன்பமுற்றும் விளைநிலங்கள் சிறிது குறைந்தும் வாழ்வான். கரிய யானை முகத்தோனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகனின் பொதுயோகம்

25. வந்தவன் யோகச் சேதி
யறைகிறே மினிமே லாக
விந்தையாய் மூவே ழின்மேல்
மேன்மையாய்த் தொழிலும் வாய்க்கும்
எந்ததோர் தொழிலும் வாய்க்கும்
இயம்புவீர் முனியே நீர்தாம்
சந்ததம் கணக்கு வேலை
செய்வனு மென்று சொல்வோம்.

25. ஜாதகனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய இருபத்தோராம் வயதுக்குமேல் வர்த்தகம் மேன்மேல் விருத்தியாகும். எந்தத் தொழில் செய்து வருவான்? முனிவரே! சொல்லுங்கள். சதா கணக்கு வேலை செய்து வருவான் என்று சொல்லுவோம்.

26. அதுமுதல் இரண்டாண் டுக்கு
அல்பமாம் கத்திரி யோகம்
சதமுறும் அதன்மே லாகச்
சந்திரன் பிறைபோ லோங்கும்

நிதம்லாபம் பூமி சேரல்
நினைத்தது முடியு மென்றும்
குதர்க்கங்க ளில்லா வாழ்வன்
கூறுணச் சல்லியப் பாதை.

26 அது முதற்கொண்டு இரு வருடங்களுக்குச் சிறிது கத்திரியோகம் திண்ணமாக நேரும். அதற்குப் பிறகு வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். தினந்தோறும் லாபம் கிடைத்து வரும். விரோதிகளங்கள் சேரும். எண்ணிய காரியங்கள் முடியும் என்றும். வம்புகளில்லாமல் வாழ்வன். கடன் துன்பங்கள் ஏற்படா.

கத்திரியோகம்

27. எத்திசைத் தொழிலும் வாய்க்கு மியம்புவீர் முனியே
[நீர்தாம்
சித்தசன் தனையெ ரித்த தேவன்தன் திசையில் நேரும்
கத்தரி யோக மாகிக் கலந்திடும் அதன்பின் விருத்தி
சத்தேனும் மாறு தாகும் சங்கரி கேட்டி டாயே.

27. எத்திசையில் தொழில் ஏற்படும் என்று சொல்லுங்கள் முனிவரே! தாங்கள். மன்மதனை எரித்த சிவபெருமானுடைய திசையாகிய, வடகிழக்கில் ஏற்படும். கத்திரியோகம் ஏற்படும். அதற்குப் பிறகு விருத்தியாகும். பிறகு சிறிதும் மாறுது. தாயே! கேளுங்கள்.

யோகமேற்படுதற்குரிய கிரகநிலை

28. கிருஷிகள் பலித மேன்மை கௌரவக் குடும்பி யாமே
பறைபள்ளுச் சேர்த லுண்டு பார்மன்னர் மெச்ச
[வாழ்வன்
திருமகன் தனக்கு யோகம் செப்பின கார ணம்சொல்
குருஜன்ம மதியும் பாக்கியம் குசனுமே நாலில் ஆட்சி;

28. விவசாயம் செய்து வருவதில் நல்ல பலனளிக்கும். கௌரவமான குடும்பியாக இருப்பான். பள்ளர் முதலான பணியாட்கள் சேர்வர். உலகமன்னர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். ஜாதகனுக்கு யோகம் ஏற்படும் என்று சொல்லக் காரணம் கூறுங்கள். குரு ஜன்ம லக்கினத்திலும் சந்திரன் பாக்கியஸ்தானமாகிய மேடத்திலும் அவ்வீட்டுக்குரிய செவ்வாய் நாலில் ஆட்சியாகவும்;

கற்பகத்தருவின் யோகமும் வேசியோகமும்

29. காரியும் லாபம் நிற்கக் கற்பகத் தருவின் யோகம்
நாரியாம் வேசி யோகம் நவின்றதோ ரிரண்டு யோகம்
பாரினில் வறுமை காணன் பதரினில் செல்லா னுகும்
வேறுமோர் கிராம வாசம் விஷவாக்கு வுடைய னுமே.

29. சனி லாபஸ்தானத்தில் இருப்பதாலும் கற்பகத் தருவின் யோகமும் வேசியோகமும் ஆகிய இருவித யோகமும் ஏற்படும். வறுமை இல்லாதவன். அற்பகாரியங்களில் மனம் செல்லாதவனுகும். வேற்று ஒரு கிராமவாசம் ஏற்படும். தீயவார்த்தைகள் உடையவனுக இருப்பான்.

ஜாதகனுடைய தாயின் யோகம்

30. பின்பாகம் விவர மாகப் பேசுவோம் முனியே யாங்கள்
அன்னையின் சேதி சொல்வே னடக்கமும் பொறுமை
[யுண்டு
அன்னம்போல் வடிவு மேற்கு மணுகிடும் வாத தேகி
அன்னியர் குற்றம் சொல்லா ளல்பமாம் கோபம்
[கொஞ்சம்.

30. பிற்பாகத்தில் விவரமாகக் கூறுகின்றேரும், முனிவரே! நாங்கள். ஜாதகனுடைய தாயின் செய்திகளைச் சொல்லுகின்றேரும். அடக்கமும் பொறுமையுமுள்ளவள். அன்னத்தைப்போன்ற அழகிய நடையுள்ளவள். வாயு நோய் உள்ளவள். பிறர்மீது குற்றம் கூருதவள். சிறிது கோபம் கொள்ளுபவள்.

31. இல்லமும் மேல்பால் நேரு மிவள்துணை யாண்பா
[லொன்று
வல்லிமார் காணி ளாகு மலைச்சலாம் தாய்க்கு டும்பம்
சல்லியப் பாதை யுண்டு தரித்திரம் குடியாய் நிற்கும்
அல்லலாய் வாழ்வா ளாகும் அம்பிகை யாளே கேளாய்.

31. மேற்குப் பக்கத்தில் வீடு உள்ளவள். இவளுக்குச் சகோதரன் ஒருவனே. சகோதரி இல்லாதவள். தாயின் குடும்பம் அலைச்சலுள்ளதாகவும் துன்பமுள்ளதாகவும் தரித்திரமடைந்தும் இருக்கும். அதில் இவள் வாழ்ந்து வருவாள். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் மாமனின் யோகம்.

32. மாதுலன் வறுமை யாக வறைந்திடும் எதுவ ரைக்கும்
ஓதுவீர் விவர மாக உதித்தவன் ஐயைந் தாண்டுந்
தீதுண்டு என்று சொல்வோம் செப்பின ஆண்டு மேலாய்
மேதினில் பிறைபோல் யோகம் மேவிடு மென்று
[சொல்வோம்.

32. ஜாதகனுடைய மாமன் தரித்திரமடைந்து வாழ்வது எந்தக் காலம் வரையில் என்று சொல்லுங்கள். ஜாதகன் பிறந்து இருபத்தைந்து வருடங்கள் வரையில் தீங்குகள் உண்டு என்று சொல்லு

வோம். நாங்கள் கூறிய வருடங்களுக்கு மேலாக வள்ளபிறைச் சந்திரன் போல் யோகம் விருத்தி என்று சொல்வோம்.

ஜாதகனுடைய தாயின் முற்பிறவி

33. குடதிசைக் கொங்கு நாட்டில் குலவினுள் வைசியச்
[சேயாய்த்
திடமதாய்க் குடும்பி யாகித் தேவியும் வாழு நாளில்
விடவிழி மாதொ ருத்தி வித்தகி பார்ப்பான் மாது
அடைவுட னவள்மேல் நிந்தை யபாண்டமாய்ச்
[சொல்லும் போது ;

33. ஜாதகனின் தாய் முற்பிறவியில் மேற்குத் திசையில் உள்ள கொங்கு நாட்டில் வைசிய குடும்பத்தவளாகப் பிறந்து பெரும் குடும்பி யாகி வாழ்ந்து வருங்காலத்தில் நிய விழிகளைக் கொண்ட வேறு ஓர் அந்தணப் பெண்ணின்மீது அபாண்டமான பழிகளைக் கூறும்போது ;

பெண் சாபம்

34. மாதுவும் மனது வாடி யறைந்தசா பத்தைக் கேண்மோ
நீதான வார்த்தை யென்மேல் செப்பின பாவிக் கேதான்
காதலி துணைகள் யாவும் காலன்தன் பதிக்கே செல்லும்
மேதினில் மறுஜன் மத்தில் விளங்காது துணைப்பெண்
[ணுந்தான்.

34. அப்பெண்ணும் மனம் கலங்கி கூறிய சாபத்தைக் கேளுங்கள். நீய வார்த்தைகளை என்மீது கூறிய பாவியாகிய உனக்கு உடன் பிறந்த சகோதரிகளில்லாமல் இறந்து போவர். மறுபிறவியிலும் சகோதரியில்லாமல் வாழ்வாய் என்றாள்.

35. சுதர்களு முதலில் நஷ்டம் தோழனு மரித்துப் பின்பு
பதியது அலைச்ச லாயும் பஞ்சுபோல் மனமு மாயும்
இதுவித மாது சொல்ல எய்திற்று வந்தச் சாபம்
அதிபதி யந்தி யத்தில் வாயினில் ரணமும் கண்டு ;

35. முதலில் பிறக்கும் குழந்தைகள் இறந்தும் கணவனை இழந்தும் குடும்பம் அலைச்சலாகவும் சஞ்சலமடையும் மனத்தளராகவும் ஆவாய், என்று அப்பெண் சொல்ல, அந்தச் சாபம் இவளை வந்தடைந்தது. ஜாதகனின் தாயும் கடைசிக்காலத்தில் வாயில் புண் ஏற்பட்டு ;

36. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமாங் கர்ண சேயாய் ஜனிப்பளா மென்று சொல்வோம்
ஆலம்போல் மாது சாப மணுகிடும் துணைப்பெண் தோஷம்
சாலவே சுதர்பெண் ணின்றிச் சஞ்சல மனமாய் வாழ்வாள்.

36. மரணமடைந்து மீண்டும் பிரம தேவனுல் படைக்கப்பட்டு நல்லொழுக்கமுள்ள கருணீகர் குலத்தில் பிறப்பாள் என்று சொல்லுகின்றேரும். கொடிய சர்ப்பவிஷம் போல் பெண்ணின் சாபம் ஏற்பட்டு உடன் பிறந்த சகோதரியும் இல்லாமல் பெண் குழந்தைகளும் பிறவாமல் கலக்கமுள்ள மனத்தளாக வாழ்வாள்.

தாயின் மறுபிறவியும் மரணகாலமும்

37. மறுஜன்ம மோதூர் தன்னில் மறைக்குல முதிப்பா
[ளாகும்
கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
திருமகள் முப்பான் ரண்டில் செல்லுவா ளென்று
[சொல்வோம்
கரிமத வானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

37. மறுபிறவியில் ஓதூரில் அந்தண குலத்தில் பிறப்பாள் என்றேரும். ஜாதகனுடைய கருமகாலங்களேச் சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். ஜாதகனுடைய தாய் முப்பத்திரண்டாம் வயதில் மரணமடைவாள். கரிய யானைமுகத்தோனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

தந்தையின் மறுபிறவி

38. தந்தையின் பின்ஜன் மத்தைச் சாற்றுவோம் கங்கை
[சேயாய்
முந்தின தனமும் பெற்று மேதினில் வாழ்வா ஞகும்
எந்திடம் உதிப்பான் சொல்வா யரக்கர்தம் கால ஞரை
சந்ததம் வள்ளூர் கீழ்ப்பால் ஜனிப்பனும் பேரூர் தன்னில்.

38. ஜாதகனுடைய தந்தையின் மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். வேளாளர் குலத்தவனுகப் பிறந்து அதிகமான செல்வத்தையடைந்து உலகில் வாழ்ந்து வருவான். எந்த இடத்தில் பிறப்பான், சொல்லுங்கள். அரக்கர்கட்கு எமனுக வந்த வீரராகவப்பிரான் எழுந்தருளியிருக்கும் திருவள்ளூருக்குக் கிழக்கில் உள்ள பேரூரில் பிறப்பான்.

ஜாதகனுடைய மரணகாலம்

39. மாரனின் மரண கால மறைகிறே மெழுப தாண்டில்
தீரமாய்த் தேளின் மாதம் திருதியை வளர்பக் கத்தில்
கூறுவோ மார கங்கள் குலவும்பின் ஜன்மம் சொல்வேன்
தேறின வரங்கம் தன்னில் ஜனிப்பனும் பிரம்ம சேயாய்.

39. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றேரும். அவனுடைய எழுபதாம் வயதில் கார்த்திகை மாதம் சுக்கிலபட்ச திரு

தியையில் மரணமடைவான். மறுபிறவியில் திருவரங்கத்தில் அந்தண குலத்தவனுகப் பிறப்பான்.

ஜனனகால தசை

40. அன்னவன் ஜனன காலம் அசுவினி கடைப்பா தத்தில்
துன்கேது தசையி ருப்புத் திங்களு நவமே யாகும்
பின்புகர் தசையே யென்றும் பேசினேம் பூர்வ பாகம்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

40. ஜாதகனது ஜனன காலத்தில் அச்வினி நட்சத்திரம் கடைசிப்பாதத்தில் துன்பந் தரும் கேதுதசையில் இருப்பு ஒன்பது மாதங்களாம். பிறகு சுக்கிர மகாதசையென்று முதல்பாகம் கூறு கின்றேம். உயர்ந்த கணவனைப் பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜாதகம் 11

1. சிங்கலக் கினம தாகத் தெரிவையில் ராகு நின்று
மங்கலன் துலையில் காரி மால்புகர் தேளில் மேவத்
துங்கமாம் பரிதி வில்லில் சுந்தரப் பொன்னு மாளுய்
இங்கிதச் சிகியு மீன மிளமதி குண்டை நின்றே ;

1. இலக்கினம் சிம்மமாகவும் ராகு கன்னியிலும் செவ்வாய் துலாத்திலும், சனி புதன் சுக்கிரன் விருச்சிகத்திலும், தூய்மை செய்யும் சூரியன் தனுசிலும், குரு மகரத்திலும் கேது மீனத்திலும் சந்திரன் ரிஷபத்திலும் இருக்க ;

கிரகநிலை

கேது		சந்திரன்	
	இராசி சக்கரம்		
குரு			லக்கினம்
சூரியன்	சனி புதன் சுக்கிரன்	செவ்வாய்	ராகு

வீட்டின் நிலை

2. இத்தகை நவக்கோள் நின்று இருநில முதித்த சேய்க்குப்
பைத்திடும் கீழ்மேல் வீதி பேசுமில் லுத்திர நோக்குச்
சத்திய பலதே சூழும் சார்ந்திடும் பேரூர் தன்னில்
உத்தமன் ஜனிப்பா னென்று உரைத்தன மிந்நூல்
[தன்னில்.

2. இவ்விதமாக நவக்கிரகங்கள் இருந்து பிறந்த குழந்தையின் வீடு கிழக்கு மேற்கான வீதியில் வடக்குநோக்கியுள்ளதாகும். பல தெய்வங்கள் சூழ இருக்கும். ஒரு பெரிய ஊரில் ஜாதகன் பிறப்பான் என்று இந்த, ஜோதிட நூலில் கூறுகின்றோம்.

ஜாதகனுடைய விவரம்

3. இன்னவன் சென்ன யோகம்
எழிலுறும் தந்தை யோகம்
வின்னமா மன்னி யோகம்
விளங்கிடு மிவன்முன் ஜன்மம்

நன்னயப் பலன்க ளெல்லாம்
நாட்டுவோ மிந்நூல் தன்னில்
மன்னிய நவக்கோ டன்னல்
வழுத்திடக் கேளு மம்மா.

3. ஜாதகனுடைய பிறப்பு யோகம் அழகுள்ள தந்தையின் யோகம் தாயின் யோகம், ஜாதகனுடைய முற்பிறவி, மறுபிறவி நற்செயல்கள் ஆகியவற்றை யெல்லாம் இந்தச் சோதிட நூலில் சொல்லுகின்றோம். நவக்கிரகங்களின் நிலையை ஆராய்ந்து கூறக் கேளுங்கள்.

ஜாதகனின் முற்பிறவி

4. முன்னிவ னிருந்த ஜன்மம்
மொழிகுவேன் வேந்தே கேளு
பன்னகம் புனைந்தோன் வாழும்
பாண்டியில் தெற்கு வீதி
தன்னதில் சைவச் சேயாய்த்
தானிவன் ஜனன மாகிப்
பொன்னெடு பணிதி யோங்கிப்
புகழ்ச்சியாய் வாழு நாளில் ;

4. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள். ஸர்ப்பத்தைப் படுக்கையாகக் கொண்ட திருமால் வாழும் மதுரையில் தெற்கு வீதியில் சைவ குலத்தவனாக இவன் பிறந்து, பொன் செல்வம் ஆபரணங்கள் இவைகளைப்பெற்றுக் கீர்த்தியுடன் வாழ்ந்து வருங்காலத்தில் ;

5. அந்தனன் நகரிற் பெம்மா னடியிணைப் போற்றி செய்து
சுந்தர னதிதிக் கன்னம் சோர்விலா தெந்த நாளும்
விந்தையா யளித்துச் செல்வன் விளங்கியே வருங்கா
[லத்தில்
எந்தையே வோர்நா டன்னி லிறையவ னடியார் தோன்றி;

5. அந்த நகரத்தில் உள்ள திருமாலின் பாதங்களைப் போற்றி அதிதிகட்குத் தயங்காமல் எந்தக் காலத்திலும் அன்புடன் அன்னம் அளித்து வாழ்ந்து வருங் காலத்தில், தாயே! ஒருநாள் ஒரு சிறிய அடியார் வந்து ;

அடியாரின் ஆசி

6. தன்னுடைப் பசியை மாற்றிச்
சலிப்பிலாத் தன்னை நோக்கிச்
சொன்னதோர் பாலர் நீர்தாம்
துலங்கும்பின் ஜனனந் தோறும்

பொன்னெடு பணிதி யோங்கிப்
புகழ்ச்சியாய் வாழ்வா யென்று
அன்னவர் வாக்குக் கூறி
அடியவர் மறைய லானர்.

6. தன்னுடைய பசியைத் தீர்த்து விட்டவனைப் பார்த்துச் சொன்னதாவது. உனக்கு ஏற்படும் மறுபிறவிகள் ஒவ்வொன்றிலும் பொன்னுபரணங்களும் செல்வமும் பெருகிக் கீர்த்தியுள்ளவனாக வாழ்ந்து வருவாய் என்று சொல்லிவிட்டு அடியார் மறைந்து விட்டார்.

7. பரமனர் அடியார் வாக்குப் பலித்துமே யின்னே னுக்குத்
திரமுள வன்னள் போக்கிச் செழிப்புள கஞ்சன் தம்மால்
வரமுடன் வரையப் பட்டு வுண்மைமே ளிச்சென் மத்தில்
மரபுமே கர்ண சேயாய் வந்தவ னிவனே ஐயா.

7. அவ்வடியாரின் வாக்குப்படி வாழ்ந்து வந்து ஜாதகன் தன் ஆயுளைக் கழித்துவிட்டு மீண்டும் பிரமன் தம்மால் படைக்கப்பட்டு இப்பிறவியில் கருணைகர் குலத்தில் பிறந்தவன் இவன், தாயே!

8. இந்தநற் சுதனின் யோகம் எய்திடும் தந்தை யோகம்
சொந்தமா யன்னை யோகம் துலங்கிடும் பணிக ளெல்லாம்
விந்தையா யெடுத்துச் சொல்வேன் விளங்கிடும் தந்தை [வர்க்கம்
கொந்தள மேனி யாளே கூறுவேன் மேலுங் கேளே.

8. இப்பேற்பட்ட நல்ல பிள்ளையின் யோகத்தையும் தந்தையின் யோகத்தையும் தாயின்யோகத்தையும் கிடைக்கும் ஆபரணங்கள் ஆகிய வற்றையும் விவரமாக எடுத்துச் சொல்லுகின்றேம். ஜாதகனுடைய தந்தை வர்க்கத்தாரைப் பற்றிச் சொல்லுகின்றேம். அழகிய உடலை யுள்ளவளே, கூறுகிறேம்! கேளுங்கள்.

தந்தையின் வர்க்கம்

9. தந்தையின் குடும்ப வர்க்கம் சாற்றுவே ணுண்பால் ரண்டு
பிந்தியும் கன்னி மூன்று பேசிலும் தீர்க்க மாக
எந்தவே சிலனு டன்னில் இயற்றினேன் சிலபேர் கட்டம்
செந்தழல் போன்ற தாயே செப்புவேன் கேட்டி டாயே.

9. ஜாதகனுடைய தந்தையின் குடும்பத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். அவனுக்கு இரு சகோதரரும் மூன்று சகோதரிகளும் தீர்க்காயுள் உள்ளவர்கள் என்று கூறுகின்றேம் சின்னட்களில் சிலர் மரணமடைவர். செந்தணல் போன்றவளே! சொல்லுகிறேன், கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதர பாவம்

10. பாலகன் றுணைக ளாண்பால் பகருவேன் நால்வர் தீர்க்கம்
சீலமாய்க் கன்னி மூன்று சிறந்திடும் சிலரு டன்னில்
கோலமாய்க் கொஞ்ச ளவில் கூறுவேன் சிலபேர் கட்டம்
ஏலவே பாலன் தீர்க்கம் இயற்றுவோ நிறங்கு ணத்தை.

10. ஜாதகனுடைய சகோதரர் நால்வரும் சகோதரிகள் மூவரும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று கூறுகின்றேம். சில குழந்தைகள் சின்னட்களில் இறந்துவிடும் என்று சொல்லுகின்றேம். ஜாதகன் நீண்ட ஆயுள் உள்ளவன். அவனுடைய குணத்தைச் சொல்லுகின் றேம்.

ஜாதகனுடைய குணங்கள்

11. ஜாதக னிறங்கு ணத்தைச் சாற்றுவேன் நல்ல தாகப்
போதவே நீட்சி யில்லான் புலிகொலை யதனில் தேரான்
ஏதவே அழுத்த நெஞ்சன் ஈனரிற் பிரிய னவன்
காதலர் மோக முள்ளான் கழறுவே னணங்கே கேளே.

11. ஜாதகனுடைய நிறம் குணம் ஆகியவற்றைக் கூறுகின்றேம். உயரமில்லாதவன். அழுத்தமான நெஞ்சமுள்ளவன். அற்பர்கள் உற வில் பிரியமுள்ளவன். பெண்கள்மிது மோகம் கொள்ளுவான். இனியும் சொல்லுகின்றேம். தாயே கேளுங்கள்.

12. பொய்யுரை பகரான் மிஞ்சிப் புத்திநல் லறிவு தேர்வன்
அய்யன்மேல் பக்தி யுண்டு ஆகம நாலுங் கற்பன்
நய்யவே வார்த்தை கூறுன் நவிலுமுன் கோப முண்டு
துய்யநல் லனைவோர் நேயன் துட்டரை யிணக்கி
[மாய்ப்பன்.

12 பொய் பேசாதவன். புத்திசாலி. நல்லறியும் உள்ளவன். கடவுளின்மீது பக்தியுடையவன். நான்கு வேதங்களையும் கற்பான். பிறர் மனம் புண்படும்படி பேசாதவன். முன்கோபி. நல்லவர்களுக்கு நண்பன். துஷ்டர்களை இணக்கமாக இருந்து அடக்கி விடுபவன்.

13. ஏத்தமாய்த் தமிழுங் கற்பான் இலகிடா தன்னிய பாஷை
தோத்திரப் பிரிய னவன் சோம்பிடான் காரி யத்தில்
நாத்திசை கீர்த்தி யேற்பன் நவின்றிடும் பேரைக் காப்பன்
பார்த்திபன் போலே செல்வம் பெருகிடு மிவனுக் கென்றே.

13. தமிழை அதிகமாகக் கற்பான். அன்னிய பாஷையில் தேர்ச்சி பெறுதவன். தோத்திரம் செய்யப்படுவதில் பிரியமுள்ளவன். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவன். எல்லாத் திக்குகளிலும் புகழ் அடைவான். தன்னை வந்து அடைந்தவர்களை ஆதரிப்பான். (அரசர்போல் வாழ்ந்து வருவான்) அரசன் போல் மிகுந்த செல்வம் இவ னுக்கு ஏற்படும் என்று சொல்லுவேன்.

14. வாணிபச் சமர்த்த னகும் வளருந்தாய் தந்தை பட்சன்
பேணியே தொழிலும் செய்வன் பிரபல மாக வாழ்வன்
நாணயம் பெருக்க முண்டு நவின்றிடு மனைவி பட்சம்
காணிவன் செங்கை தன்னில் தங்கிடு மரியின் ரேகை.

14. வர்த்தகம் புரிவதில் சமர்த்தன். தன்னை வளர்த்து வரும் தாய் தந்தையரிடம் பிரியமுள்ளவன். சாமர்த்தியமாகத் தொழில் செய்து வருவான். பிரபலமாக வாழ்ந்து வருவான். அதிகமான பணப் புழக்கமுள்ளவன். மனைவியிடம் பிரியம் உள்ளவன். இவனுடைய கையில் விஷ்ணுரேகை யுள்ளவன்.

15. செய்யவே பருப்பின் மேலும் சிறுபுளிப் பதனி லிச்சை
உய்யவே ததிநெய் பாலி லடைந்திடும் பட்ச முள்ளான்
நையவே பசித்தோர்க் கன்னம் நயமுட னளிக்க வல்லான்
துய்யநன் னடக்கை நேயன் துலங்கிடு மனமுள் ளானே.

15. பக்குவமடைந்த பருப்பிலும் சிறிது புளிப்பிலும் பிரியமுள்ளவன். பால் தயிர் நெய் முதலியவற்றில் அதிக விருப்பமுள்ளவன். பசித்து வந்தவர்கட்கு அன்புடன் அன்னம் அளிப்பவன். நன்னடத்தை யுள்ளவன். அனைவர்க்கும் நண்பன். தூய்மையான மனமுள்ளவன்.

16. காரியச் சமர்த்த னகும் கணக்கினி லுக வானும்
தேரிய வழியில் நிற்பன் சிறந்திடும் தரள தந்தம்
பாரினில் நல்லோ னவன் பரிவுடன் கீர்த்தி யேற்பன்
மாறிடான் புலையுந் தேரான் மங்கையர் மோக வானே.

16. காரியங்கள் செய்வதில் கெட்டிக்காரன். கணக்கில் ஊகமுள்ளவன். பெரியோர்கள் சென்ற வழியே செல்பவன். பற்கள் முத்துக்களைப் போல் சிறந்து விளங்கும். உலகில் நல்லவன் என்ற அன்பான பெயரை அடைவான். என்றும் மாறுத அற்பமான செயல்களில் மனம் வையாதவன். பெண்கள்மீது மோகம் கொள்ளுவான்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

17. இத்தகை யுடையா னுக்கே யிலகிடு மணத்தின் காலம்
பத்தியா யெடுத்துச் சொல்வேன் பருவமே யிருபான் [மூன்றில்
நத்தியே ஏழிண் கோணம் நலமுட னுதித்தா டன்னை
வெத்தியாய் மணமே கொள்வன் விளம்புவேன் புத்திர [விருத்தி.

17. இவ்விதக் குணங்களையுடையவனுக்கு ஏற்படும் திருமணத்தின் காலத்தை முறையாக எடுத்துக் கூறுகின்றோம். ஜாதகனுடைய இருபத்து மூன்றும் வயதில் ஏழுகோணத்தில் இரகசியமுள்ள

பிறந்தவனே மணம் செய்து கொள்ளுவான். பிறக்கும் குழந்தைகளைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய புத்திர விருத்தி

18. புத்திர விருத்தி யாண்பால் புகலுவேன் மூவ ருண்டு
சத்தியாம் பெண்பால் ரண்டு சார்ந்திடும் தீர்க்க மாக
வெத்தியா யிதற்கு மேலாய் மேவியும் நிலையா வென்றோம்
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே கேட்டி டாயே.

18. ஜாதகனுடைய புத்திர விருத்தியைச் சொல்லுகின்றோம். புத்திரர்கள் மூவரும் புத்திரிகள் இருவரும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பார்கள். அதற்குமேல் பிறக்காது. குழந்தைகள் பிறந்தாலும் நிலையா. யானைமுகத்தோனைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

19. காசினிச் சுகருங் கூறக் கனத்திடும் வேந்த ரான
தேசிகர் விசுவா மித்திரர் செப்புவா ரதிலோர் சங்கை
மாசிலாச் சுகரே நீரும் வழுத்தினீர் புத்திர பாவம்
பாசமாம் பஞ்ச மாதி பகர்ந்தனன் மறைதல் நின்று;

19. இங்ஙனம் சுக முனிவர் சொல்லும்போது ஒருகாலத்தில் பெரிய அரசராக இருந்த விச்வாமித்திரர் சொல்லுகின்றார். அதில் ஒரு சந்தேகத்தைச் சொல்லுகின்றோம். மாசுகளில்லாத சுகமுனிவரே! புத்திரபாவத்தைக் கூறுங்கள். ஐந்தாம் வீட்டுக்குரிய குரு மறைவுஸ்தான மாகிய மகரத்தில் இருப்பதாலும்;

புத்திரபாவம்: கிரகநிலை

20. செப்பிய சேய்நோக் காலும் செங்கதி ரைந்தில் நின்று
தப்பிலாச் சனியும் பார்க்கச் சாற்றுமிப் பால னுக்கு
ஒப்புமுன் முதலாஞ் ஐன்ம முறைந்திடுந் துணைவர் சாபம்
வெப்பமா யிருப்ப தாலே விளம்பினீர் புத்திரர் தீர்க்கம்.

20. செவ்வாய் பார்ப்பதாலும் சூரியன் ஐந்தாமிடத்தில் இருந்து சனியால் பார்க்கப்படுவதாலும் ஜாதகனுக்கு முற்பிறவியில் சகோதரரால் ஏற்பட்ட தோஷம் அதிகமாயிருப்பதால் எங்ஙனம் புத்திரர் நீண்ட ஆயுள் உள்ளவர் என்று சொல்லுங்கள்.

21. சொன்னது சரியே நீரும் சுகமுள இன்னு னுக்கு
நன்னய வதுவும் தீர நாட்டுவேன் கிரியை கேளு
வின்னமா யிந்தப் பாலன் விளங்கிடு மருவூர்க் கேகித்
துன்னிய வரனைப் போற்றித் துலங்கிடு முள்ளூர் மீண்டு;

21. நாங்கள் கூறியது சரியே. சுகமுள்ள ஜாதகனுக்கு அந்தத் தோஷம் நீங்கச் சாந்தி யொன்று சொல்லுகிறேன். கேளுங்கள். தீங்குகள் செய்திருந்த ஜாதகன் மருவூருக்குச் சென்று, சிவபெரு

மானைப் போற்றித் துதித்துத் திரும்பவும் உள்ளூருக்குத் திரும்பி வந்து ;

நவக்கிரக சாந்தி

22. சொல்லிய நவக்கோள் சாந்தி துலங்கிய விதிபோல் [செய்தால்
நல்லவாம் புத்திரர் பாக்யம் நலமுட நிலைத்து நிற்கும்
வல்லனே மனைவி தீர்க்கம் வழுத்திய மொழிகுன் றுவே
அல்லலு மிவனுக் கில்லை கழறினே னிந்நூல் தன்னில்.

22. சொல்லிய நவக்கிரக சாந்தியைச் சாஸ்திரப்படி செய்தால் புத்திரர்கள் தோன்றுவர். தோன்றித் தீர்க்காயுளுடனிருப்பர். மனைவியும் நீண்ட ஆயுளுடனிருப்பாள். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. துன்பங்களும் இவனுக்கு இல்லை என்று இந்த ஜோதிட நூலில் சொல்லுகின்றேன்.

23. அவ்விதி செய்யா ஞகி லழகுள புத்திர தோஷம்
பவ்வமா மனைவி தோஷம் பருகிடு மென்று சொன்னேன்
ஒவ்வியே நானும் சொன்ன உரைமொழி குன்றி டாவே
திவ்விய மான எந்தன் செல்வியே கேட்டி டாயே.

23. நாங்கள் கூறிய நவக்கிரக சாந்தியைச் செய்யாவிடில் அழகுள்ள புத்திரருக்குத் தோஷம் ஏற்படும். பவ்யமாக இருக்கும் மனைவிக்கும் தீங்கு நேரும் என்று சொல்லுகிறேன். எல்லோரும் ஒப்பக் கூடிய முறையில் நான் சொன்ன வார்த்தைகள் பொய்யாகா. என்னுடைய தலைவியே ! கேளுங்கள்.

ஜாதகனுடைய யோகம்

24. பாலகன் யோகச் சேதி பகருவே னினிமே லாகச்
சீலமாஞ் ஜனனந் தொட்டுச் செப்பிய வொருபத் தாண்டும்
கோலமாம் பிதுர்க்கு யோகம் கொண்டிடும் பணிதி யாவும்
ஏலவே பொருளும் வாய்க்கும் எழில்நிதி தாமென் றோதே.

24. ஜாதகனுடைய யோகச் செய்திகளை இனிக் கூறுகின்றோம். பிறப்பு முதல் பத்தாம் வயது வரையில் தந்தைக்கு யோகம் ஏற்படும். வைத்திருக்கும் ஆபரணங்களை ஏற்பான். பொருளும் கிடைக்கும். அதிகமான செல்வமும் கிட்டும் என்று சொல்லுவோம்.

25. அரசர்கள் தம்மால் லாபம் அணிபல வினத்தா லுண்டாம்
குறைவரா ததன்மே லாகக் கூறுவே னிருநா லெட்டும்
திரமுள பால னுக்குத் தீங்கது வடைந்தி டாது
சரமுள வித்தை லாபம் சாற்றுவேன் மேலுங் கேளே.

25. அரசரால் லாபம் கிடைக்கும். பலவிதத்திலும் ஆபரணங்கள் கிடைக்கும். குறைகள் வரா. அதற்குமேல் பதினாறும் வயது வரையில் ஜாதகனுக்குத் தீமைகள் ஏற்படா. வித்தையை நன்றாக அப்யசிப்பான். மேலும் கூறுகின்றோம். கேளுங்கள்.

26. அதுமுத லீரெட் டாண்டு மணுகிடும் யோகம் சொல்வேன்
கதியுள பொருளும் வாய்க்கும் கேவல மடைந்தி டாது
விதியது வளரு மென்று விளம்பினே னிந்நூல் தன்னில்
சதியது வந்த போதும் சார்ந்திடா நிவிருத்தி யாமே.

26. அதற்குப்பிறகு பதினாறு வருஷம் ஏற்படும் யோகத்தைச் சொல்லுகின்றேன். கணிசமான பொருள் கிடைக்கும். கேவலம் ஏற்படாது. வயதும் அதிகமாகும். ஏதாவது தீமைகள் அணுகிய போதும் அவை விரைவில் நிவிருத்தியாகும் என்று இந்தச் சோதிட நூலில் சொல்லுகின்றோம்.

27. பிரபல கீர்த்தி யுண்டாம் பின்வெகு பூமி யுண்டாம்
அரசர்கள் தம்மால் லாப மணிதனம் பலமா யோங்கும்
குறையது லகுவா யுண்டு குணமிலா நிவிர்த்தி யாகும்
இறைவனைப் போற்று மாதே யேறிடும் பலத்த யோகம்.

27. பிரபலமான புகழை அடைவான். பிற்காலத்தில் அதிகமான பூமி கிட்டும். அரசாங்கத்தாரால் லாபம் அடைவான். செல்வம் ஆபரணங்கள் இவைகளைப் பெற்று விருத்தியாகும். சிறிய குறைகள் ஏற்பட்டுத் தீங்கிழையாமல் உடனே தீர்ந்துபோம். கடவுளைத் துதிக்கும் தேவியே! பலமான யோகம் விருத்தியாகும்.

28. சொல்லிய வாண்டு தொட்டுச் சுந்தர னுயுள் மட்டும்
வல்லனே பலத்த யோகம் வளர்ந்திடு நிதிமேன் மேலாய்க்
கல்லலு மடைந்தி டாது கருதிய வெல்லா மோங்கும்
வில்லணி தோளாய் ஓங்கும் விளங்கிடும் செல்வ மெத்த.

28. நாங்கள் சொல்லிய வருடம் முதல் ஜாதகன் ஆயுள் முடியும் வரை நல்ல பலமான யோகவானாக இருப்பான். செல்வம் மேன்மேலும் விருத்தியாக இருக்கும். துன்பங்கள் அணுகா. எண்ணிய காரியங்கள் நடைபெறும். ஆபரணங்களையணிந்த தோளையுடையவளே! செல்வம் அதிகமாகப் பெருகும்.

29. தானிய விருத்தி யுண்டாம் தரணியில் கீர்த்தி யேற்பன்
ஆணிபோல் பொருளும் சேரு மணிதனம் விருத்தி யுண்டு
கோனவ னருளு முண்டு குறித்திடு பூமி ஏற்பன்
தேன்மொழி யுடைய வேந்தே தெளிவுடன் கேட்டி
டாயே.

29. தானிய விருத்தியுண்டு. உலகில் புகழை அடைவான். நிலையான பொருள் சேரும். ஆபரணங்களும், செல்வமும் பெருகும். அரசரின் பாராட்டுதல் உண்டு. விசேஷங்களை அடைவான். இனிய வார்த்தைகளைப் பேசுபவளே! தெளிவாகக் கேளுங்கள்.

30. பலபல விதத்தி னாலும் பருகிடும் வணிபத் தாலும்
மேவிய வரச னாலும் வேண்டிடு முனியி னாலும்
நலமுறும் பொருளும் விருத்தி யணிதனம் நாட்கு
[நாளாய்க்
கலகமொன் றடையாச் செல்வம் கருத்துடன் படைத்து
[வாழ்வன்.

30. பற்பல விதங்களாலும் வியாபாரத்தாலும் அரசராலும் மகரிஷிகளின் அருளாலும் பொருள் நலம் அடைந்து பெருகும். ஆபரணங்கள் பணம் முதலியன நாளுக்குநாள் விருத்தியடைந்து சிறு கலகமும் ஏற்படாமல் கருத்துடனே வாழ்வான்.

31. அற்பமாம் பலன்கள் யாவு மடர்ந்துமே வந்த போதும்
சொற்பமாய் நிவிர்த்தி யாகும் சொல்லிய மொழி
[குன்றுவே
கற்பமா யிந்தப் பாலன் கருதிடு மரசனைப் போல்
சற்பனை யில்லா மற்றுன் தழைத்திட வாழ்வா னம்மா.

31. அற்பமான பலன்கள் எல்லாம் சேர்ந்து வந்தபோதிலும் விரைவிலேயே நீங்கும். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. கற்பகத் தருவைப்போன்ற ஜாதகன் அரசன்போலவும் வாழ்ந்து வருவான். துன்பமின்றி செழிக்க வாழ்ந்து வருவான்.

தாய்தந்தையின் மரணகாலம்

32. தந்தையு மீரு முண்டுள் தரித்திடா தரிஷ்ட மாகும்
பிந்தியு மன்னை கண்டம் பேசுவே னிலெட் டாண்டுள்
சுந்திரன் கண்ட காலம் சொல்லுவேன் பரீக்ஷித் தையா
விந்தையாம் கண்ட மொன்று விளங்கிட வதுவும் தீரும்.

32. ஜாதகனுடைய தந்தை இவனுடைய பன்னிரண்டாம் வயதுக்குள் மரணமடைவான். பிறகு ஜாதகனுடைய முப்பத்திரண்டாம் வயதில் தாய் மரணமடைவாள். ஜாதகனுடைய மரணக்காலத்தைப் பரிசீலித்துச் சொல்லுகின்றேம். இடையில் ஒரு கண்டம் ஏற்பட்டு அது விலகும்.

ஜாதகனுக்குக் கண்டமும் ஜாதகன் மரணகாலமும்

33. பண்டிதம் பலமாய்ச் செய்யப் பரீக்ஷித்தே யதுவும் தீரும்
விண்டிடு மிவனி னுயுள் விளம்புவே னிந்நூல் தன்னில்
மண்டிய வறுபத் தொன்பான் வயதினில் சேயின் வாரம்
கொண்டிடும் பூர்வ பட்சம் குணமுள பிரதமை யில்தான்.

33. பலவிதமாக மருந்துகள் கொடுத்து வைத்தியம் செய்தால் அது விலகும் இந்த நூலில் இவனுடைய ஆயுளைப்பற்றிச் சொல்லுகின்றேம். அறுபத்தொன்பதாம் வயதில் செவ்வாய்க்கிழமையன்று சுக்கிலபட்ச பிரதமை திதியில் மரணமடைவான்.

ஜாதகனின் மறுபிறவி

34. இன்னவ னுடலம் வாடி யேகுவான் கையிலைக் கப்பால்
மன்னிய இவன்பின் ஜன்மம் வழுத்து வேனூருக் கப்பால்
நன்னய விக்கு லத்தில் நாயகன் ஜனன மாகி
வின்னமில் லாம லின்னேன விளங்கியே வாழ்வா னுக.

34. ஜாதகன் மரணமடைந்து கைலாசத்துக்கு அப்பால் செல்லுவான். இவனுடைய மறுபிறவியில் அவ்வூருக்கு அப்பால் இதே குலத்தில் பிறந்து தீங்குகளில்லாமல் வாழ்ந்து வருவான்.

ஜாதகம் 12

1. சந்திரன் ஆட்சி யாகிச் சார்ந்த திரவி புந்தி
வந்திடத் தெரிவை சுண்ணும் வளர்சிகி துலையில் தாவ
அந்தணன் குடத்தின் மீது அரவுமே வருடைப் பற்றச்
செந்தரை மகனு மந்தன் செழித்திட வீணை தன்னில் ;

1. சந்திரன் தன் ஆட்சி ஸ்தலமாகிய கடகத்திலும் ; அதிலேயே சூரியனும் புதனும், கன்னியில் சுக்கிரனும், கேது துலாத்திலும், குரு கும்பத்திலும், ராகு மேஷத்திலும, செவ் வாய் சனி மிதுனத்தி லும் ;

கிரகநிலை

	ராகு		செவ்வாய் சனி
குரு	இராசி சக்கரம்		சந்திரன் சூரியன் புதன்
			லக்கினம்
		கேது	சுக்கிரன்

ஜாதகன் பிறந்த வீடு

2. இத்தகை நவக்கோள் நின்று மிளவலும் புவியில்
[தோன்றில்
ஒதிடும் பலன்க ளெல்லாம் பேசுவோம் கீழ்மேல் வீதி
சத்தியே தென்பால் நோக்கம் சார்ந்திடு மில்ல மாகும்
அத்திமா முகனை யீன்ற அம்மையே கேட்டி டாயே.

2. இவ்விதமாக நவக்கிரகங்கள் இருந்து ஜாதகன் சிம்மலக்கினத்தில் பிறந்தால் அடையும் பலன்களையெல்லாம் சொல்லுங்கள் என்று பார்வதி தேவி கேட்க பதில் உரைக்கின்றனர். ஜாதகன் பிறக்கும் வீடு கிழக்குமேற்கான தெருவில், தாயே ! தெற்கு நோக்கியுள்ள வாயிலை யுடையதாகும். யானைமுகத்தோனைப்பெற்ற தாயே ! கேளுங்கள்.

3. ஜனித்தது பேரு ராகும் சிறந்திடும் பலதெய் வங்கள்
குனித்திடும் மதியும் சீயம் குறித்திடு மிடத்தில் தானே
ஜனித்திடும் இந்தப் பாலன் நவில்சவு ராஷ்ட் டிரத்தில்
தொனித்திடும் குலத்தில் வந்த சுந்தரன் பலனைக் கேளே.

3. ஜாதகன் பிறந்தது ஒரு பெரிய ஊர் என்றேரும். அதில் சிறந்த பல தெய்வாலயங்கள் உள்ள இடத்தில் இந்த ஜாதகன் சௌராஷ்டிர குலத்தில் பிறப்பான். இந்த அழகனுடைய பலனைக் கேளுங்கள்.

4. பாலகன் ஜனன யோகம் பருகிடும் தந்தை யோகம்
சீலமா மிவன்முன் ஜன்மம் சிறந்திடும் பலன்கள் யாவும்
கோலமாய் நவக்கோ ளாய்ந்து கூறுவோ மிந்நூல்
[தன்னில்
வேலனே யின்ற மாதே வித்தகி கேட்டி டாயே.

4. ஜாதகனுடைய பிறப்பு யோகம் பெற்ற தாய் தந்தை இவர்களின் யோகம் நல்லொழுக்கத்தையுடைய முற்பிறவி முதலிய சிறந்த பலன்கள் யாவற்றையும் நவக்கிரகங்களின் நிலையைக் கூர்ந்து பார்த்து இந்த ஜோதிட நூலில் சொல்லுகின்றேரும். வேல்முருகனை பெற்றெடுத்த தாயே! கேளுங்கள்.

முற்பிறவி

5. முன்னவ னிருந்த ஜன்மம்
மொழிகிறே மிந்நூல் தன்னில்
நன்னயத் திருவோத் தூரில்
நலமுள வைசிய ருகிப்
பொன்னெடு பணிதி பொங்கிப்
புகழ்ச்சியாய் வாழு நாளில்
அன்னதில் அடைந்த தீங்கை
யறிவிப்போ மிந்நூல் தன்னில்.

5. ஜாதகனுடைய முற்பிறவியை இந்தச் சோதிட நூலில் சொல்லுகின்றேரும். திருவோத்தூரில் நன்மை மிக்க வைசிய குலத்தவனுகப் பிறந்து பொன் ஆபரணங்கள் செல்வம் இவைகளையடைந்து கீர்த்தியுடன் வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையை இந்நூலில் சொல்லுகின்றேரும்.

தீவினை

6. அந்தவூர் தன்னில் பெம்மான் அரனடி பூஜை செய்யும்
சுந்தர னொருவன் பெண்பால் சுகமுள கற்பின் மிக்காள்
எந்தையே அவள்மே லின்னேன் எழிலுறும் போகம்
[தூய்க்கச்
சிந்தையில் மயங்கி யின்னேன் தேவியை மயங்கச்
[செய்தான்.

6. அவ்வூரில் உள்ள எம்பெருமானுகிய சிவபிரானுக்குப் பூசை புரிந்து வரும் குருக்களின் அழகிய பெண் ஒருத்தி கற்பில் நிலையுள்ள வளாக இருந்தாள். அவள்மீது இந்த ஜாதகன் மோகம் கொண்டு அவளுடன் இன்பமனுபவிக்க மனத்தில் எண்ணங்கொண்டு அவளை மயக்கினன்.

மந்திரத்தால் பெண்ணை மயக்கியது

7. அந்தநல் மாது தானும்
அணுகியு மயங்கா தாலே
விந்தையா யவளை யின்னென்
விளங்கிய மந்திரந் தன்னால்
சுந்தரி தன்னை மாய்த்தான்
தூலங்கியே அத்தோ ஷந்தான்
எந்தையே யிவனைச் சூழ்ந்து
ஏகினன் ஜனனம் போக்கி ;

7. அந்த நல்ல பெண்மணியும் இவன் வார்த்தைகளில் மயங்காமல் இருந்து வந்ததால் ஜாதகன் அவளை மந்திரங்கள் செய்து அவளைத் தன் வயப்படுத்தி விட்டான். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது. பிறகு அப்பிறவியிலிருந்து மரணமடைந்து ;

8. பெத்திடும் நரகில் மூழ்கிப் பலமுள கஞ்சன் தன்னால்
நத்தியே வரையப் பட்டு நவின்றிடு மறுஜன் மத்தில்
பத்தியே மலநா டன்னில் பகர்குல சைவச் சேயாய்
உதித்திடும் ஜனன மாகி யுரைப்பதி லனேக தர்மம் ;

8. நரகத்தில் மூழ்கியிருந்து பலமிக்க பிரமதேவனால் மீண்டும் படைக்கப்பட்டு மறுபிறவியில் மலநாட்டில் சைவ குலத்தவனுகப் பிறந்து பற்பல தர்மங்கள் செய்து வந்தும் ;

9. செய்திடும் தவத்தி னாலே சேர்ந்திடும் யிச்சென் மத்தில்
நெய்திடா துதித்த சேயும் நவின்றன னிவனென் றோது
மையிடும் விழியி னாளே மறுவிய முன்னு ளாழி
உய்திடா நிவிர்த்தி யாக உரைக்கிறோம் கிரியை பின்னால்.

9. தவங்கள் இயற்றியதாலும் இப்பிறவியில் ஜாதகன் பிறந்தான் என்றும் சொல்லுகின்றோம். மையைத்தீட்டும் விழிகளையுடைய வளே ! முற்பிறப்பில் செய்த தீவினையை அடையாமல் நிவிர்த்தி செய்யும் சாந்தியைப் பின்னால் கூறுகின்றோம்.

ஜாதகனுடைய குடும்பம்

10. பாலகன் குடும்பச் செய்தி பகருவோம் தந்தை வர்க்கம்
சீலமாம் ஆண்பால் பாகம் செப்புவோம் பலமு ரைது
சாலவே கன்னி மூன்று சார்ந்திடும் இதற்கு மேலாய்
ஏலவே எடுத்துச் சொல்வோ மெந்தையே பலத்தை
[காணேும்.

10. ஜாதகனுடைய குடும்பச் செய்தியைக் கூறுகின்றேும். தந்தை வர்க்கத்தாரில் உடன்பிறந்தவர்கள் நிலையில்லை என்றும் மூன்று சகோதரிகள் உளர் என்றும் இதற்குமேல் இருப்பதற்கில்லை என்றும் சொல்லுகின்றேும்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

11. ஜாதகன் துணைக ளாண்பால் சார்ந்திடு மிருவ ராகும்
போதவே இதற்கு மேலாய்ப் புகலுவோம் பலமு ரைவே
ஏதவே பாலன் தீர்க்க மியம்பிய மொழி குன்ரைவே
காதலி குழலி ளாளே கழறுவோம் மேலும் கேளே.

11. ஜாதகனுக்கு உடன்பிறந்தவர்களில் இரு சகோதரர்கள் மட்டும் உண்டு என்றும் அதற்குமேல் பிறந்தாலும் நிலையில்லாதவர் என்றும் சொல்லுகின்றேும். ஜாதகன் நீண்ட ஆயுளுள்ளவன் என்றேும். நாங்கள் கூறியவை தவரு. அழகிய கூந்தலையுடையவளே! சொல்லுகிறேும், கேளுங்கள்.

ஜாதகனுடைய குணங்கள்

12. இன்னவ னிறங்கு ணத்தை யியற்றுவோ மினிமே லாக
நன்னய சிவந்த மேனி நல்கிடும் சமதே கத்தன்
துன்னிய உணச்சல் தேகி தோகையே நீட்சி யில்லான்
கன்னலின் சுவையை யேய்க்கும் காரிழாய் புகன்றிட்
[டோமே.

12. ஜாதகனுடைய நிறம் குணம் முதலியவற்றை இனிக் கூறுகின்றேும். சிவந்த உடலுடையவன். சமமான சரீர அமைப்புள்ளவன். மெல்லிய சரீரமுடையவன். தாயே! உயரமில்லாதவன். இனிய கரும்பின்சுவைக்கு மேம்பட்ட வார்த்தைகளையுடையவளே! சொல்லுகின்றேும்.

13. வித்தையும் புத்தி யுண்டு விளங்கிடும் பாஷை கற்பன்
சத்தியே யடைக்காய் நேயன் ஜனங்களைக் காக்க வல்லன்
வெத்தியா மீகை யுள்ளான் வெகுண்டிடும் பெயரைக்
[காப்பன்
புத்தியி லுாக முள்ளான் புன்னகை யுடையோ னுகும்.

13. நல்ல கல்வியறிவும் நல்ல புத்தியும் உள்ளவன். பல பாஷைகளைக் கற்பான். தாயே! வெற்றிலேப்பாக்குப் போடுவதில் விருப்பமுள்ளவன். தன் பந்துக்களை ஆதரித்து வருவான். கொடையாளி. துன்பமடைந்தவர்களைக் காப்பாற்றுவான். ஊகமுடைய புத்திசாலி. புன்னகையுள்ள முகத்தினன்.

இதுவுமது

14. உண்பதில் விருப்ப னுகு முரைப்பது நிஜமே யாகும்
அன்பான வசன னுகும் தக்கவா தங்கள் செய்வன்
பண்பெரும் ஸ்த்ரீகள் மோகன் பரவிய மனைவி பக்ஷன்
அன்புரு பரமன் பத்தி யணுகிடும் யிவனுக் கென்றோ.

14. சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். உண்மையையே பேசுபவன். யாரிடமும் பிரியத்துடன் பேசுபவன். தக்கபடி வாதங்கள் புரிவான். பண்புள்ளவன். பெண்கள்மீது மோகம் கொள்ளுவான். அடைந்த மனைவியின்மீது விருப்பமுள்ளவன். அன்பே உருவான கடவுளிடம் பக்தி கொண்டவன் இவன் என்றோம்.

15. மனமது குழப்ப முள்ளான் மங்கைதன் னுறவு கொள்வன்
சினமது சுளுவி லுண்டு சீறிலும் லகுவிற் றூழும்
கனமுள புதல்வன் தோழி கண்டிடு மனைவி குற்றம்
இனமுள எவர்க்கு நண்பன் இனரிடம் பிரிய னுமே.

15. மனத்தில் சஞ்சலம் உள்ளவன். பெண்களின் உறவு கொண்டவன். விரைவில் கோபம் கொள்ளுவான். எவ்வளவு அதிகமான கோபமுற்றிருந்தும் அது சீக்கிரத்தில் ஆறும். மனைவி நிலையாள். எல்லோருக்கும் நண்பனுவான். தன் சுற்றத்தாருக்குப் பிரியனுக இருப்பான்.

பத்மரேகை

16. நித்திரைப் பிரிய னுவன் நீர்தனில் தோய வல்லன்
குத்திர மெவர்க்கும் சொல்லான் கொம்பனை யாட்கு [நேயன்
சித்திர வடிவ னுகும் செங்கையில் பத்ம ரேகை
வெத்தியாய்க் காரி யத்தை விளங்கியே செய்வா னுமே.

16. தூங்குவதில் விருப்பமுள்ளவன். அடிக்கடி ரோடுவதில் பிரியம் உடையவன். எவருக்கும் குற்றம் விளைவிக்காதவன். மனைவிக்குப் பிரியமானவன். அழகன். கையில் பத்மரேகையுள்ளவன். எடுத்த காரியத்தை ஜயத்துடன் முடிக்கவல்லன்.

17. கொண்டிடும் தரளத் தந்தம் கூர்விழி சமமா யுண்டு
விண்டிடும் கல்வி யுள்ளான் விஷவார்த்தை கூரான் [யார்க்கும்
கண்டதோர் எதிரிக் கஞ்சான் கணக்கதி லூகை வானும்
செண்டிடு மெவர்க்கும் நண்பன் செப்பினேம் மேலும் [கேளே.

17. முத்துக்களைப்போன்ற வெளுப்பான பற்களையும் வேலைப் போன்ற கூர்மையான பார்வையையும் அழகான விழிகளையும் உடையவன்; நல்ல கல்வியறிவுள்ளவன். தீங்கு செய்யும் வார்த்தைகளை யொருவருக்கும் கூறுதவன். எதிர்த்து வரும் விரோதிக்குப் பயப்படாதவன். கணக்கில் ஊகமுள்ளவன். எல்லோருக்கும் நண்பனுவான். சொல்லுகிறேம் மேலும் கேளுங்கள்.

18. செய்தொழில் பலித முள்ளான் செழித்திடும் தெய்வ பக்தி
நொந்திட வார்த்தை கூரான் நவின்றனம் பிரபு பட்சன்
ஒய்ந்திடும் யோக சட்சம் உறைந்திடும் யிவனுக் கென்றே
மைதிகழ் குழலி னுளே வளரு[1]குஞ் சரமு மொப்பான்.

18. செய்யும் தொழில் நல்ல வருமானமளிக்கும். தெய்வபக்தி அதிகமாக உள்ளவன். பிறர் வருத்தமடையும்படி பேசாதவன். பிரபுக்களிடம் நட்புக்கொள்ளுவான் என்று சொல்லுகின்றேம். மையைப் போன்ற கரிய கேசத்தையுடையவளே! வளரும் யானையைப்போன்றவன்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

19. இக்நெறி யுடையா னுக்கு
இயற்றுவோ மணத்தின் காலம்
அன்னையே நாலே ழாண்டுள்
அணுகிய [2]யாழின் கோணம்
தன்னிலே உதித்த மாதை
ஜாதகன் மணமே கொள்வன்
கன்னலின் சுவையை யேய்க்கும்
காரிழை புகன்றிட் டோமே.

19. இவ்வித குணங்களுள்ளவனது திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேம். தாயே! இருபத்தெட்டாம் வயதில் மிதுன லக்கினத்தில் பிறந்த பெண்ணை ஜாதகன் மணம் புரிந்து கொள்வான். கரும்பைவிட இனிய வார்த்தைகளைப் பேசும் தேவியே! சொல்லுகின்றேம்.

---

1. யானை
2. மிதுனம்

புத்திர விருத்தி சிரகநிலை

20. கொண்டிடும் அம்மா துக்குக் குழந்தையும் விருத்தி யாக
மண்டியே பஞ்ச மாதி மறைசனி யில்லில் சார்ந்தும்
வெண்கோளு முன்னு லூழி வீரியர்க் கிருப்ப தாலும்
நண்டுட னதனை தீர்த்தால் நவில்சுதன் விருத்தி
[யென்றோம்.

20. இவனை மணந்த அப்பெண்ணின் புத்திரவிருத்தியைச் சொல்லுகின்றோம். ஐந்தாம் வீட்டுக்குரிய (புத்திரஸ்தானம்) குரு சனியின் வீட்டில் இருப்பதாலும், முற்பிறவியில் செய்த தோஷனை ஜாதகனுக்கு இருப்பதாலும், அதை அதன் விஷத்துடன் தீர்த்து விட்டால் புத்திர விருத்தி ஏற்படும் என்றோம்.

முற்பிறப்புத் தோஷனை நீங்கச் சாந்தி

21. மூன்றைநாள் ஊழி தீர மொழிகிறோம் கிரியை யொன்று
சிந்தையாம் மனைவி யோடே செல்வனு மனது வொத்து
விந்தையாம் மதுரைக் கேகி விளங்கிய தீர்த்தம் தோய்ந்து
எந்தையாம் பரமன் பாதம் எழிலுடன் அர்ச்சித் தேத்தி ;

21. முற்பிறப்புத் தோஷனை நீங்கச் சாந்தி யொன்று சொல்லுகின்றோம். ஜாதகன் தன் மனைவியுடன் மனமொத்து மதுரைக்குச் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடி அங்குக் கோயில் கொண்டுள்ள சிவபெருமானுக்குப் பக்தியுடன் அருச்சனை செய்து துதித்து ;

சாந்தி விபரம்

22. அதிதிக்கு அன்ன மீந்து அன்புடன் அர்ச்சித் தன்பால்
பகுதியாய் மதலை செய்து பரிவுடன் மறையோ ருக்கே
யிகையுள வடைக்கா யேலம் யெழிலுள கந்தங் கூட்டி
வகையுடன் தான மீந்து வண்மையா முன்னு ளுழி ;

22. கதியற்றவற்கு அன்புடன் அன்னமளித்து வந்து வெள்ளியால் ஒரு குழந்தை உருச்செய்து அதை புஷ்பம், ஏலம், சந்தனம், தாம்பூலத்துடன் அந்தணர்கட்குக் கொடுத்து வணக்கத்துடன் முற்பிறப்பின் தோஷனையை ;

23. அன்னவர் தமக்குச் சொல்லி யதுதனைப் பொருத்தோ
[மென்று
நன்மையாய் அவர்வாக் காலே நலம்பெற ஆசி ரேற்று
சொன்ன தோர் பழனிக்கேகிச் சுகமுறத் தீர்த்த மாடி
மன்னிய முருகன் பாத மகிழ்ச்சியாய் அர்ச்சித் தேத்தி ;

23. அவர்கட்குக் கூறி அவர்களும் அதைப் பெற்றுக்கொண்டு பொறுத்தேன் என்று அவர்களுடைய வாக்கினால் சொல்லப்பட்ட ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு நாம் கூறிய பழனிக்குச் சென்று, நீராடி, அங்குக் குடிகொண்டுள்ள முருகனுக்குப் பக்தியுடன் அருச்சனை செய்து துதித்து ;

24. திரும்பியும் உள்ளூர் மீண்டு தீங்கிலாச் சோம வாரம்
உரமுள விரதம் தன்னை யுண்மையாய் யாண்டு மூன்றும்
கரமுட னனுஷ்டி செய்தால் சார்ந்திடா முன்னை லூழி
அரமுடன் நிவிர்த்தி யாகு மம்மையே புகன்றிட் டோமே.

24. உள்ளூருக்குத் திரும்பி ஒவ்வொரு திங்கட்கிழமையும் பக்தியுடன் விரதம் இருந்து அம்மாதிரியே மூன்று வருடங்கள் நியமத்துடன் இருந்து வந்தால் முற்பிறப்புத் தீவினை அறவே ஒழிந்து விடும். தாயே ! கூறுகின்றோம்.

25. முந்தினை லூழி தீர்ந்தால் மொழியுமிப் பால னுக்கு
விந்தையாய்ப் புத்திர விருத்தி விளங்கிடு மாண்பால் [மூன்று
சிந்தையாங் கன்னி யவ்வாறு சிறந்திடும் தீர்க்க மாகப்
பைந்துநீ றணிய மாதே பகர்மொழி குன்றி டாவே.

25. முற்பிறப்புத் தீவினை நீங்கினால் இந்த ஜாதகனுக்கு மூன்று புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பர். நீற்றையணிந்த சிவபெருமானின் தேவியே ! நாங்கள் கூறியவை தவறு.

26. செப்பிய பலனும் நன்மை தேவியும் தீர்க்க மாவள்
தப்பிலா யோகம் வாய்க்கும் ஜாதகன் ஊழி தீர்க்கில்
வெப்பமாம் புத்திர தோஷம் விளங்கிடு மினவிக் கினம்
தப்பிலா இன்னை னுக்குத் தொடர்ந்திடு மிவனுக் [கேதான்.

26. நாங்கள் கூறிய பலனும் நன்மையாகும். பெண்ணும் தீர்க்காயுள் உள்ளவளாவாள். தப்பாமல் யோகம் கிட்டும். ஜாதகன் தீவினையைத் தீர்க்காவிடில் (சாந்தி செய்யாவிடில்) புத்திர தோஷத்தின் வெம்மை அதிகமாகி மனைவிக்கே அபாயமாக வந்து முடியும். தப்பில்லாமல் ஜாதகனுக்கு இந்தத் தோஷம் தொடரும்.

27. இங்கலம் முன்னல் செய்கை
யியற்றினேம் நவக்கோள் தம்மால்
நன்னய யோகச் செய்தி
நாட்டுவோ மினிமே லாக

அன்னையே ஜனனந் தொட்டு
அணுகிய வோரைந் தாண்டும்
சொன்னதோர் தந்தைக் கேதான்
துலங்கிடும் நயத்த யோகம்.

27. இதுவரையில் முற்பிறவியைப் பற்றிச் சொன்னேம். நவக்கிரக நிலையால் ஏற்படும் யோகச் செய்திகளை இனிமேல் சொல்லுகின்றோம். தாயே! ஜாதகன் பிறந்தது முதல் ஐந்து வருடங்கள் வரை தந்தைக்குப் பலமாக யோகம் விருத்தியாகும்.

28. வாணிபத் தொழிலி னலும் வளமுடன் பலவி னத்தால்
நாணயம் பலித மாகும் நல்கிடும் நிதியும் சேரும்
வீணினல் அதன்மேல் பத்தும் விளங்கிடும் தொழிலும்
[வாய்க்கும்
காணவே பணிதி பாத்திரம் கருதிடு மென்று கூறேன்.

28. வர்த்தகத் துறையிலும் மற்றும் பலவிதத்திலும் ஜாதகனுக்கு நாணயப்பெருக்கம் ஏற்படும். பிறகு ஒரு புதையலும் கிடைக்கும். அதற்குமேல் பத்து வருடங்கள் தொழிலில் மேன்மை உண்டாகும். ஆபரணங்கள் பாத்திரம் இவைகள் கிடைக்கும் என்று சொல்லுகின்றோம்.

29. சொல்லிய ஆண்டி னுள்ளே சுகபலன் விரையம்
[கொஞ்சம்
கல்லலாய் வந்து தீரும் காலைக்கு நயமென் றோது
நல்லவாம் அதன் மேலாக நல்கிய யீரெட் டாண்டும்
வல்லியே பால னுக்கு வளருமே அதிக யோகம்.

29. நாங்கள் கூறிய வருடத்திற்குள் நல்ல பலன் கிடைக்கும். சிறிது விரயமாகும். துன்பங்கள் சிறிது வந்து பிறகு விலகும். ஜாதகனுக்கு நன்மையே ஏற்படும் அதற்குமேல் பதினெட்டு ஆண்டுகளுக்கு ஜாதகனுக்கு அதிகமான யோகம் விருத்தியாகும்.

30. பலபல இனத்தி னலும் பார்குலத் தொழிலி னலும்
நலமுள தனத்தி னலும் நாட்டினிற் கீர்த்தி யோங்கும்
கலகங்க ளடைந்த போது கனத்திடா வதுவும் தீரும்
இலகிய வணிப மேன்மை எந்தையே புகன்றிட் டோமே.

30. பற்பல விதத்திலும் விவசாயம் செய்து வருவதாலும் நன்மையுள்ள தனத்தாலும் ஜாதகனுக்கு உலகத்தில் புகழ் விருத்தியாகும். இடையில் சில கலகங்கள் ஏற்பட்டாலும் அவை பலக்காமல் தீர்ந்துபோம். வர்த்தகம் உயரும். தாயே! இங்ஙனம் கூறுகின்றோம்.

31. அதுமுதல் வோரே ழுக்கு மணிதனம் விருத்தி யுண்டாம்
சதிவந்து நிவிர்த்தி யாகும் சாற்றிய ஆண்டின் மேலாய்
விதியுள வேரூண் டுக்கும் வெத்தியாம் பலனைக் காணும்
கதியுள ஆயுள் மட்டும் கிடைத்திடு மென்று சொல்லே.

31. அதற்குப் பிறகு ஏழு வருடங்கள் செல்வமும் ஆபரணங்களும் பெருகும். துன்பங்கள் ஏற்பட்டு நீங்கும். நாங்கள் கூறிய வருடங்களுக்குமேல் ஜாதகனுடைய ஆயுள் முடியும் வரையில் எல்லாக் காரியங்களிலும் வெற்றியைத் தவிர மற்ற பலன்கள் இல்லை என்று சொல்லுகின்றோம்.

32. வந்திடும் பலத்த யோகம் வளர்மதி தன்னைப் போலே
சுந்தர நிதியும் வோங்கும் சுகந்தரும் யாவு நன்மை
இந்திரப் பதிபோல் செல்வம் ஏறிடும் நாட்கு நாளாய்
மந்திர கிரியை யேய்க்கும் வளரின தனத்தி னுலே.

32. பலமான யோகங்கள் கிடைக்கும். வளர்பிறைச் சந்திரன் போல் செல்வம் விருத்தியாகும். எல்லாம் சுகம் கொடுப்பவையாகவும் நன்மை பயக்குபவனவாகவும் இருக்கும். இந்திரப்பதவிபோல் செல்வம் ஓங்கும். நாளுக்குநாள் செல்வம் வளர்ந்து மந்தரகிரியைவிட உயர்ந்ததாகும்.

33. பூமியும் விருத்தி யுண்டாம் புகழ்ச்சியாயாய்ப் பெருமை
[யோங்கும்
தாமிலாக் கீர்த்தி கொள்ளும் தரந்தரம் செல்வம் சேரும்
நேமியோ ரரிய செல்வம் நெறியுடன் பொருளுந் தேடி
வாழியே வாழ்வா னென்று வழுத்தினேம் ரிஷிக ளம்மா.

33. பூமியும் பெருகும். பெருமை உயரும். கீர்த்தியடைவான். படிப்படியாகச் செல்வம் சேரும். உலகம் அறியச் செல்வத்தை நேர் வழியில் தேடி வாழியே வாழி என வாழ்ந்து வருவான் என்று ரிஷிகளாகிய நாங்கள் கூறுகின்றோம்.

34. வாணிபம் பலமா யோங்கும் விருத்திக்கும் நாண யங்கள்
காணிக ளதிகம் சேர்ப்பன் கள்ளர்க ளாலே லாபம்
தோணவே பரியி னுலும் துலங்கிடும் செட்டு வாய்க்கும்
காணவே உலகோர் மெச்சக் காளையும் வாழ்வ னுமே.

34. வியாபாரம் பலமாகப் பெருகும். நாணயங்கள் விருத்தியாகும். அதிகமான வீடுகிலங்களைச் சேர்ப்பான். கள்ளர்களால் லாபம் கிட்டும். குதிரையாலும் வியாபாரம் செழிக்கும். உலகத்தவர் கொண்டாடும்படி ஜாதகன் வாழ்ந்து வருவான்.

35. தந்தையும் தந்தை நாளில் தனம்பொருள்
[பணிதி யுண்டாம்
சுந்தர னுளில் யோகம் துலங்கிடும் நயம தாக
விந்தையாம் அல்ப ரோகம் விளங்கியே வந்த போதும்
எந்தையே நிவிர்த்தி யாகும் எப்பவு நயமென் றோதே.

35. ஜாதகனுடைய தந்தையும் அவனுடைய நாளில் செல்வம் பொருள் ஆபரணங்கள் இவைகளைப் பெற்று நலமான யோகத்தை அடைவான். அற்பமான நோய்கள் ஏற்பட்டபோதிலும், தாயே! அவைகள் உடனே விலகும். எப்போதும் நன்மையென்றே சொல்லுங்கள்.

புதையல் கிடைக்கும் காலம்

36. தானிய விருத்தி யுண்டாம் தரணியில் கீர்த்தி மேன்மை
ஆனதோ ரிந்தப் பாலன் அணுகிய நாற்பன் மூன்றில்
ஏனமாம் பூமி தன்னில் எழில்நிதி நிட்சே பந்தான்
மானமாய்த் தனங்கள் பெற்று மகிழ்ச்சியாய் வாழ்வா
[னம்மா.

36. தானிய விருத்தியுண்டு. உலகில் மேலான புகழை அடைவான். இந்த ஜாதகன் தன்னுடைய நாற்பத்துமூன்றும் வயதில் தன்னுடைய பூமியிலிருந்து அளவற்ற புதையலைக் கண்டெடுத்து செல்வத்தையடைந்து மகிழ்ந்து வாழ்ந்து வருவான். தாயே!

37. வந்திடும் சிறுகண் டங்கள் வளமுடன் அனேக மேனும்
சென்திடும் கோளின் சாந்தி செய்துபின் பண்டி தங்கள்
விந்தையாய்ப் பலமாய்ப் பாலன் விதிப்படி நடப்பா னுளில்
சந்திர வதனத் தாளே சார்ந்திட நிவிர்த்தி யாமே.

37. சிறுசிறு கண்டங்கள் அநேகம் ஏற்படும். அவைகள் நீங்க நவக்கிரக சாந்தி செய்து அதற்குப் பிறகு ஔடதங்களை சாப்பிட்டு ஜாதகன் விதிப்படி நடந்து வந்தானுயின் எல்லாத் தீங்குகளும் விலகும். அழகி! முகத்தையுடையவளே! கேளுங்கள்.

ஜாதகனுடைய ஆயுள் பாவம்

38. ஜாதகன் ஆயுள் பாகம் சாற்றுவே னெழுபா னென்றில்
போதவே உடலம் வாடிப் புகல்விடை மதியும் பூர்வம்
ஆதிரை சேரும் நாளில் அற்புதன் கைலை சேர்வன்
காதலி குழலி னுளே கழறின மொழி குன்றுவே.

38. ஜாதகனுடைய ஆயுள் பாவத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய எழுபத்தோராம் வயதில் உடல்நலிவு ஏற்பட்டு பௌர்ணமியன்று [1] திருவாதிரை நட்சத்திரத்தில் ஜாதகன் கைலாசம் சேர்வான். அழகிய கேசத்தையுடையவளே! கூறியவை தவறு.

---

1. பௌர்ணமியன்று திருவாதிரை நட்சத்திரம் அநேகமாய் மார்கழி மாதத்தில் வரும்.

ஜாதகனுடைய மறுபிறவி

39. இன்னவன் மறுஜன் மந்தான் எடுக்கும்வா றுரைக்கக்
[கேளு
நன்னய வேலூர் பக்கம் நற்குலம் சைவச் சேயாய்
மன்னவன் ஜனன மாகி மாபெறும் தீர்க்க வாணுய்
அன்னையே வாழ்வா னென்று அருளினேம் ரிஷிக
[ளம்மா.

39. ஜாதகனுடைய மறுபிறவியைச் சொல்லுகிறோம். கேளுங்கள். வேலூருக்குப் பக்கத்திலுள்ள ஓர் ஊரில் நற்குலச் சைவனுகப் பிறந்து நீண்ட ஆயுள் உடையவனுக வாழ்வான் என்று ரிஷிகளாகிய நாங்கள் கூறுகின்றோம்.

40. புத்திர மகிழ்ச்சி யோடே பிரபலச் செல்வ வாணுய்ச்
சித்தமுங் கலங்கி டாமல் தேவியே வாழ்வா னென்று
வெத்தியாம் அதன்கு றிப்பில் விளம்பினேம் விவர
[மெல்லாம்
பத்தியே தெளிந்து பாராய்ப் பாவையே புகன்றிட்
[டோமே.

40. புத்திரர்களைப் பெற்றுச் சந்தோஷமுடன் மிகுந்த செல்வவானுகச் சிறிதும் கலங்காத நெஞ்சம் உடையவனுக வாழ்ந்து வருவான் என்றோம். தேவியே! வெற்றியாகவே அவனுடைய ஜாதகக்குறிப்பை விவரமாகக் கூறினேம். தெளிந்து பாருங்கள். தேவியே! கூறுகின்றோம்.

தாய், தந்தையரின் மரணகாலம்

41. தந்தையும் ஈராண் டுக்குள் தரித்திடா னரிஷ்ட மாவன்
பின்னையு மன்னை கண்டம் பேசுவோம் நாற்பான்
[ரண்டுள்
விந்தையாய் மரண மாவன் விளம்பிய மொழிகுன் றுவே
சுந்தரன் கண்டம் காலம் சொல்லுவோ மினிமேல்
[கேளே.

41. ஜாதகனுடைய தந்தை இரண்டாம் வயதில் மரணமடைவான். ஜாதகனுடைய நாற்பத்திரண்டாம் வயதில் தாய் இறந்துவிடுவாள். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. ஜாதகனுடைய மரணகாலத்தைச் சொல்லுகின்றோம் இனிமேல். கேளுங்கள்.

ஜாதகம் 13

1. மதிநந்தி சனியும் வண்டி மங்கலன் தூலயி லாக
புதன்மானி லிரவி ராகு புகர்கும்பம் பொன்னேன் மேடம்
விதிஜன்மம் சிம்ம மாக வதில்கேது இருப்பா னகில்
இதநவக் கோள்க ளிவ்வா றிருப்பதால் பலன்சொல்
[வீரே.

1. சந்திரன் விருஷபத்திலும், சனி கடகத்திலும், செவ்வாய் துலாத்திலும், புதன் மகரத்திலும் சூரியன் ராகு சுக்கிரன் கும்பத்திலும் குரு மேஷத்திலுமாக இருந்து இலக்கினம் சிம்மமாகவும் அதில் கேதுமாக நவக்கிரக நிலையையுள்ள ஜாதகனின் பலனைச் சொல்லுங்கள்.

கிரகநிலை

	குரு	சந்திரன்	
சூரியன் ராகு சுக்கிரன்	இராசி சக்கரம்		சனி
புதன்			லக்கினம் கேது
		செவ்வாய்	

ஜாதகனின் பிறந்த வீடு

2. வந்தவ ஞணும் ஜன்ம மறைகிரேம் கீழ்மேல் வீதி
எந்தையே வடக்கு வாடை ஈசனும் காளி சந்தி
சந்ததம் வடமேல் கோஷ்டம் சக்கரத் தோனு மாரி
மூந்திய மேற்கில் தங்கும் முயற்சியாம் நதியு மூண்டு.

2. பிறந்தவன் ஆண் மகனும். அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் வடக்கு வரிசையில் உள்ளது. சிவபெருமானின் ஆலயமொன்றும் காளி கோயிலொன்றும் ஒரு சந்தும் (அருகில் உள்ளன). அவை வடமேற்குத் திக்கில் இருக்கும். சக்கரத்தையுடையவனான திருமாலின் ஆலயமும் மாரியம்மன் கோவிலும் மேற்குப் பக்கத்தில் உள்ளன. அருகில் ஒரு நதியும் இருக்கும்.

3. பலவிதச் சோலை சூழ மருகிய பேரூர் தன்னில்
நிலமையா யிந்தப் பால நேர்ந்தன னிவனே யம்மா
குலவிய இவன்றன் யோகம் கூறுந்து ணையின் யோகம்
தலைமையாய்ப் புத்திர யோகம் சாற்றுவோ மிந்நூல்
[தன்னில்.

3. பலவித சோலைகள் சூழ இருக்கும் ஒரு பெரிய ஊரில் நல்ல நிலைமையில் இருக்கும் ஒரு குடும்பத்தில் இந்த ஜாதகன் பிறந்தான் என்றேரும். தாயே! இவனுடைய யோகத்தையும் சகோதரரின் யோகத்தையும் புத்திரபாக்கியத்தையும் இந்த ஜாதக நூலில் சொல்லுகின்றேரும்.

ஜாதகனுடைய குணங்கள்

4. தந்தைக்குத் தாரம் ரண்டில் தரித்திடு மினாயா ளீன்ற
மைந்தனும் ஜாத கன்தன் வரைகிறேரும் பலனே யாங்கள்
பந்தமாய்ச் சிவந்த மேனி பாரினில் சமதே கத்தன்
முந்திய கல்வி கொஞ்சம் முன்கோப மூர்க்க னுமே.

4. ஜாதகனுடைய தந்தைக்கு ஏற்பட்ட இருமனைவியரில் இளைய மனைவிக்குப் பிறந்தவன் இந்த ஜாதகன் என்று சொல்லுகின்றேரும். சிவந்த மேனியை யுள்ளவன். சமமான தேகமுடையவன். முக்கியமாக வுள்ள கல்வி (வேதம்) யறிவு சிறிதேயுள்ளவன். முன்கோபம் சிறிது உள்ளவன். கொடுமையுள்ளவன்.

5. பாக்கிய முடைய னுவன் பந்துவு மெச்ச வாழ்வன்
யோக்கிய முடைய னுவ னுறுதியா மனத்த னுகும்
தீர்க்கமாய் வயது முள்ளான் திருமகள் வாச முள்ளான்
வாக்குக ளேற்ற முள்ளான் மங்கையே மேலும் கேளே.

5. பாக்கிய முடையவனுவன். தன் சுற்றத்தார் கொண்டாடும் படி வாழ்ந்து வருவான். யோக்கியமாக இருப்பவன். திடமான மனத்தினன். நீண்ட ஆயுள் உடையவன். லட்சுமீவாச முள்ளவன். உயர்வான பேச்சுக்களைப் பேசுபவன் தாயே! மேலும் கேளுங்கள்.

6. ஏறுகள் பூமி யுள்ளா னிவன்சுக புசிப்ப னுமே
பாரியால் லாப முள்ளான் பாலர்க ளதிக மில்லான்
கோரின காரி யத்தைக் குணமுடன் முடிக்க வல்லான்
தேரின வழியில் நிற்பன் செலவுக ளதிகம் செய்யான்.

6. விளை நிலங்களை யுடையவன். ஏர்கள் உள்ளவன். சுகமாகச் சாப்பிடக் கூடியவன். தன் மனைவியால் லாப மடைபவன். புத்திரர்கள் அதிகமில்லாதவன். எண்ணிய காரியத்தைச் சௌகர்யமாக முடிக்கக் கூடியவன். பெரியோர் சென்ற வழியில் செல்லுபவன். அதிகம் செலவு செய்யாதவன்.

பத்மரேகை

7. இன்னவன் கரத்தி லேதான் இலகிடும் பத்ம ரேகை
அன்னவன் புளிப்பி லிச்சை அவன்வலு வுடைய னுவன்
கன்னென வார்த்தை சொல்வன் கபடுமே கொஞ்ச
[முள்ளான்
துன்னிய நெய்பா லிஷ்டன் சோம்பிடான் காரி யத்தில்.

7. ஜாதகனுடைய கையில் பத்மரேகை இருக்கும். அவனுக்குப் புளிப்புள்ள பதார்த்தங்களே அருந்துவதில் பிரியமுண்டு. திடமான சரீர முள்ளவன். இனிய வார்த்தைகளையே பேசுபவன். சிறிது கபட முள்ளவன். சுத்தமான நெய், பால் இவைகளே அருந்துவதில் பிரிய முள்ளவன். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவன்.

8. கரங்களில் வடுவு முள்ளான் காதலி வார்த்தை கேட்பன்
திருமகள் வாச முள்ளான் சிவந்திடு விழியு மாவன்
புறம்சொலும் புத்தி யுள்ளான் பூஷணம் சேர்ப்பா னகும்
வரவரச் செல்வ மோங்கு மம்பிகை மேலும் கேளே.

8. கைகளில் மடுக்கள் உள்ளவன். தன் மனைவியின் வார்த்தை யைக் கேட்பவன். இலட்சுமி இவன் வீட்டில் வசித்து வருவாள். சிவந்த விழிகளையுடையவன். கோட்சொல்லும் இயல்பினன். ஆபரணங் களைச் சேர்ப்பதில் பிரிய முள்ளவன். வரவரச் செல்வம் விருத்தியாகும். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

9. இன்னவன் தூணவர் தம்மை
இசைகுவோ மாண்பால் மூன்று
கன்னியும் நான்க தாகும்
கழறினே மிதன்மேல் தோன்றில்
இன்னமும் தோஷ மாகும்
பேசுவோ மிவன்தன் ஜன்மம்
அன்னமே ஏழ தாகும்
அறைகிறே மிவன்முற் ஜன்மம்;

9. ஜாதகனுடைய உடன்பிறந்தவரைப் பற்றிச் சொல்லுகின் றோம். மூன்று சகோதரர்களும் நான்கு சகோதரிகளும் உண்டு என்று சொல்லுகின்றோம். இதற்குமேல் பிறந்தால் நிலையாது. இவன் தன் தந்தைக்கு ஏழாவது பிறப்பாகும் என்று சொல்லுகின்றோம். தாயே! இவனுடைய முற்பிறவி;

ஜாதகனுடைய முற்பிறவி

10. இன்னவன் முன்ஜன் மத்தை யிசைகுவோம் நவினை [தென்பால்
நன்னிய பேரூர் தன்னில் நாயகன் மிலேச்சச் சேயாய்த்
தன்னிலே யுதித்து மேலும் தனம்பூமி யுள்ளா னகி
அன்னவன் மனைவி யோடு அனேகமாய்ச் செட்டு செய்து;

10. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். தெற் குப் பக்கத்தில் உள்ள ஒரு பேரூரில் மிலேச்சனாக (முகம்மதியனாக)ப்

பிறந்தான். பூமியில் செல்வங்களையும் பூமிகளையும் பெற்று தன் மனைவியுடன் பலவிதமான வர்த்தகம் புரிந்து வந்து ;

11. பிரபலக் கீர்த்தி யாகிப் புத்திர ருள்ளா னுகி
வருவோருக் கன்ன மீந்து வாழ்கிற நாளி லேதான்
உரிமையாய் வந்த ஊழி உரைக்கிறேம் கேளு மம்மா
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

11. பிரபலமான புகழையடைந்து புத்திரர்களைப் பெற்றுத் தன்னிடம் வந்தவர்கட்கு அன்னமளித்து வாழ்ந்து வந்த காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். பெரிய வயிற்றையுடைய விநாயகக்கடவுளைப் பெற்ற புண்ணியவதியே ! கேளுங்கள்.

பள்ளிவாசலில் கைம்பெண்ணுடன் இன்பமனுபவித்தது

12. அந்நகர் கோரி தன்னில் ஆளனில் லாத பெண்ணை
இன்னவன் போகம் துய்த்தான் இவளுக்குக் கருவுத் [தங்கி
கன்னிகை கர்ப்ப மூற்றுக் காலையு மவிழ்த்த மீய
நன்னிய கெர்ப்பம் நீங்கி நங்கையு மரண மானுள்.

12. அவ்வூரில் உள்ள பள்ளிவாசல் தன்னில் கணவனில்லாத ஒரு பெண்ணுடன் சம்போகம் செய்து வந்தான். அதனால் அப்பெண்ணுக்குக் கர்ப்பம் ஏற்பட்டது. ஜாதகனும் மருந்துகள் கொடுத்ததும் கர்ப்பம் நீங்கி அப்பெண்ணும் மரணமடைந்தாள்.

13. ஆகையா லந்தத் தோஷம் அணுகிற்று இவனுக் கம்மா
யோகமும் நீங்கிப் பின்பு உலகினில் தரித்திர னுகி
வேகவா நதியின் பக்கல் விளங்கிய காஞ்சி தன்னில்
ஏகமாத் தீர்த்தம் கீழ்ப்பால் இக்குலம் ஆல யத்தில்

13. ஆகையால் அந்தத்தோஷம் இவனுக்கு ஏற்பட்டது. அதிர்ஷ்டங்கள் விலகிய பிறகு தரித்திரனுக வாழ்ந்து வந்து வேகவதி நதியின் அருகில் உள்ள காஞ்சிபுரத்தில் உள்ள ஏகாம்ரதீர்த்தத்துக்கு அருகில் உள்ள ஆலயத்தில் (பள்ளிவாசலில்) ;

நல்வினை

14. தீபங்கள் பார்த்து வந்தான் திரிகாலம் ஜலம்கொ ணர்ந்து
கோபமில் லாதார் யோகம் கூறுவோர்க் களித்து வந்தான்
ஆவலாய்த் தரும வேலை அவனுமே நடத்தி வந்து
பாவங்கள் சிலவே நீங்கிப் பாரினில் மரண மாகி ;

14. தீப கைங்கர்யம் செய்துவந்தான். மூன்று காலங்களிலும் ஜலம் கொண்டுவந்து கோபமில்லாமல் யோகம் செய்பவர்களுக்குக் கொடுத்து வந்தான். விருப்பத்துடன் தரும கைங்கர்யம் செய்து வந்து சில பாபங்கள் நீங்கி மரணமடைந்தான்.

15. கஞ்சனுல் வரையப் பட்டுக் காளையும் ஜனனமாகித்
தஞ்சமாய்ச் சைவச் சேயாய் ஜாதகன் ஜனிப்பா னம்மா
முன்ஜன்ம தோஷம் தானும் மேவிற்று இச்சென் மத்தில்
சஞ்சல மனத்த னாகிச் சதாதுக்க முடைய னாகி ;

15. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு ஜாதகனும் பிறந் தான். அவன் சைவ குலத்தவனாகத் தோன்றுவான். முற்பிறவியில் செய்த தீவினை இப்பிறவியிலும் தொடர்ந்தது. கலக்கமுள்ள மனத்தை யுடையவனாகியும் சதா துக்கத்தை அனுபவிப்பவனாகவும் இருப்பான்.

16. மதலையின் தோஷ முண்டாய் வந்தது இவனுக் கம்மா
இதுவலால் இன்னம் ஊழி இசைக்கிறேம் கேளு மம்மா
அதிபனும் முன்ஜன் மத்தில் வணிபங்கள் செய்யும் போது
சதிருடன் ஏழை கட்குத் தனமது ஈந்துப் பின்பு ;

16. புத்திர தோஷத்தை யடைந்தவன் இவனே, தாயே ! இது வல்லாமல் இன்னும் ஒரு தீவினையைச் சொல்லுகின்றேம். தாயே ! கேளுங்கள். ஜாதகன் முற்பிறவியில் வர்த்தகங்கள் புரியும்போது கெட்டமனத்துடன் ஏழைகளுக்குச் சிறிது பொருள் கொடுத்து ;

அதிக வட்டி வாங்குதல்*

17. மைந்தனும் கணக்கில் மோசம் வட்டியு மதிகம் சேர்த்துத்
தந்ததோர் பொருளைக் கேட்கத் தானவர் கணக்கைத் [பார்க்கப்
பந்தமாய் அதிக மாகப் பகரின மொழியைக் கேட்டு
எந்தையே ஏழை தானு மிவர்வயிற் றெரிச்ச லாலே ;

17. ஜாதகன் கணக்கில் மோசம் செய்து அதிகமாக வட்டியைக் கூட்டித் தான் கொடுத்த பொருளைக் கேட்கும்போது ஏழைகள் கணக் கைப் பார்த்து அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று கூறிய வார்த்தைகளைக் கேட்டு மனம் நொந்து வயிற்றெரிச்சலால் ;

ஏழைகளின் சாபம்

18. வாங்கின பொருளை யெல்லாம் மாபாவி தனக்கே ஈந்து
தீங்காக ஏழை யோரும் செப்புவார் சாபம் தானும்
பாங்குடன் மறுஜன் மத்தில் பாலர் ளில்லா தாகி
ஏங்கியே இருப்பா யென்று ஏழையும் சொல்ல லுற்றார்.

18. தன்னிடமிருந்த பொருள்களை யெல்லாம் இந்தப் பாவிக்கே கொடுத்துவிட்டு ஏழைகள் தீய சாபத்தை இடுகின்றனர். நீ மறு

*மூகம்மதியர்கள் கடனுக்கு வட்டி வாங்கக்கூடாது என்று குர் ஆனில் சொல்லப்பட்டிருக்கிறது.

பிறவியில் புத்திரர்கள் இல்லாதவனுகவும் மனம் ஏங்கியும் வாழ்வாய் என்று சொன்னுர்கள்.

புத்திரதோஷம் நீங்கச் சாந்தி

19. இதுஒரு தோஷம் தானு மிலகிற்று இவனுக் கம்மா
அதுதீரச் சாந்தி யொன்று அறைகிறேரும் விவர மாக
அதிபனும் ரஜதம் தன்னுல் மதலேபோல் செய்துப் பின்பு
பதிதனில் கிரக சாந்தி பண்ணியே தான மீந்து ;

19. இந்த ஜாதகனுக்கு இது ஒரு தோஷமாச்சு. இந்தத் தோஷம் நீங்கச் சாந்தி யொன்று கூறுகின்றேரும். ஜாதகன் வெள்ளி யால் குழந்தைபோல் உரு ஒன்று செய்து தன் வீட்டில் நவக்கிரக சாந்தி செய்து அதைத் தானமாகக் கொடுத்து ;

இதுவுமது

20. அகதிகட் கன்ன மீந்து அவன்மனே யாளுந் தானும்
வகையுட னேராண் டுந்தான் மாதமோர் சஷ்டி தன்னில்
வெகுபய பக்தியோடு விரதமும் கொள்வா னுகில்
ஜகமதில் தோஷம் நீங்கிச் சேயர்கள் விருத்தி யாகும்.

20. ஏழைகளுக்கு அன்னம்ளித்து வந்து தன் மனைவியுடன் ஜாதகனும் ஒருவருடகாலம் பக்தியுடன் ஒவ்வொரு சஷ்டியிலும் விரதம் மேற்கொள்வானுனுல் உலகில் ஏற்பட்ட தோஷம் விலகிப் புத்திர விருத்தி ஏற்படும்.

21. இப்படிச் செய்யா னுகில் இலகாது புத்திரர் தாமும்
ஒப்புட னுதித்தா லுந்தா னுடனேதான் மரித்துப்
[போகும்
சொற்படி செய்வா னுகில் தோன்றிடும் மதலே தானும்
மெய்ப்புட னுண்பா லொன்று விளங்கிடும் கன்னி
[யொன்றே.

21. இங்ஙனம் செய்யாவிடில் புத்திரர் தோன்ருர். ஒரு சமயம் பிறந்தாலும் உடனேயே இறந்து விடும். நான்கள் கூறியபடி செய்து வந்தால் புத்திரர்கள் தோன்றுவர். ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் தோன்றித் தீர்க்கமாவார்கள்.

திருமணக்காலம்

22. இப்படி முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்ருள்
செப்பமாய் மணத்தின் காலம் சொல்லுவீ ரென்று கேட்க
அப்பணி சடையோன் தேவி அருளுவோ மிருபா னேழுள்
மைப்படி மனையாள் தானும் வருகுவாள் கூடி லேதான்.

22. இங்ஙனம் முனிவர் சொல்லும்போது பார்வதிதேவி கேட்க லானாள். ஜாதகனுடைய திருமணத்தின் காலத்தைச் சொல்லுங்கள் என்று வினவ, கங்கையைச் சடை முடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! ஜாதகனுடைய இருபத்தேழாம் வயதுக்குள் மனைவி மேற் குப் பக்கத்திலிருந்து வருவாள் என்று சொன்னேம்.

மனைவியின் குணங்கள்

23. அவள்குணம் வரையக் கேளாய் ஆளனுக்கினிய ளாவள்
நவமதில் துணைவ ரில்லாள் நாட்டுமா நிறமாம் தேகம்
இவளுமே வாயு தேகி எப்போதும் அல்ப ரோகி
அவமதி யில்லா ளாகும் அவள்நெஞ்ச மழுத்த முள்ளாள்.

23. அவளுடைய குணங்களைக் கூறுகின்றேம், கேளுங்கள். தன் கணவனுக்குப் பிரியமானவள். உலகில் உடன்பிறப்பில்லாதவள். மாநிறமுள்ளவள். வாயு ரோகமுள்ள சரீரி. எப்போதும் சிறிது நோய் இருந்துகொண்டே இருக்கும். தீய எண்ணங்களில்லாதவள். அழுத்த மான நெஞ்சமுடையவள்.

24. ஈகையும் கொஞ்ச முள்ளா ளின்பமாய் வார்த்தை [கூறுவள்
யோகமு முடைய ளாகு முறுதியா மனத்தா ளாகும்
பாகமு மெவர்க்கு நண்பள் பந்துவு மெச்ச வாழ்வள்
போகமு முடைய ளாவாள் புகலுவோம் மேலுங் கேளே.

24. சிறிது கொடுக்கும் குணமுள்ளவள். பிரியமாகப் பேசுபவள். சிறிது யோகம் செய்யும் இயல்பினள். திடமான மனமுள்ளவள் எவரிட மும் சிநேகமுள்ளவளாக இருப்பாள். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்வாள். போகத்தைப் பெறுபவள். தாயே! மேலும் கேளுங்கள்.

ஜாதகனின் மனைவியின் தாயின் விபரம்

25 தாய்வர்க்கம் நசித்துப் போகும் சஞ்சல மனத்த ளாகு
வாய்மொழி நல்ல தாகும் வரனுக்கு இஷ்ட முள்ளாள்
தீயரை மனத்தி லெண்ணாள் திருமகள் நோக்கு முள்ளாள்
சேயர்கள் தீர்க்க மில்லாள் செப்புவோம் மேலும் கேளே.

25. ஜாதகனின் மனைவியின் தாய்வர்க்கம் நசித்துவிடும். கலக்க முள்ள மனத்தினள். நல்ல வார்த்தைகளையே பேசுபவள். தன் கணவ னுக்குப் பிரியமானவள். தீய எண்ணங்களை மனத்தில் கொள்ளாதவள். இலக்குமி கடாட்சம் உள்ளவள். புத்திரர்கள் நீண்ட ஆயுள் உள்ள வையாக இரார். தாயே! மேலும் கேளுங்கள்.

ஜாதகனுடைய மனைவியின் முற்பிறவி

26. இவளுடை முன்ஜன் மத்தை யெடுத்துரை முரைக்கக்
[கேளாய்
அவனியில் அருணை தென்பா லருகினில் சிற்றூர் தன்னில்
சிவமதம் வைசியச் சேயாய் ஜனித்தவ ளிவளே யம்மா
நவமதில் வந்த ஊழி நாட்டுவோம் கேளு மாதே.

26. ஜாதகனுடைய மனைவியின் முற்பிறவியை நாம் சொல்லுகின்றோம். கேளுங்கள். திருவண்ணாமலைக்குத் தெற்கில் உள்ள சிற்றூரில் வைசியகுலத்தவளாகச் சிவ மதத்தில் தோன்றியவள் இவள். இவளுக்கு ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். தாயே!

கணவனுடைய சகோதரன்மீது குறைகூறுதல்

27. வரனுடைத் துணைவன் மேலே மங்கையும் குற்றம்
[சொல்லத்
திரமுடன் மணமா காமல் செல்வன்துர் மரண மாகி
உருமையாய்ப் பிசாசு மாகி உறைந்தன னவனே யம்மா
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

27. தன் கணவனுடைய சகோதரன்மீது இவள் குற்றம் கூறினாள். அவன் அதனால் மணம் புரிந்து கொள்ளாமல் இருந்து துர் மரணம் அடைந்து பிசாசாகி இவளை வந்து அடைந்தான். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

பிசாசுத் தோஷத்தால் புத்திரபாக்கிய மில்லாமை

28. இன்னவள் கர்ப்பத் தாலே இவளுமே மரண மாகி
நன்னய விக்கு லத்தில் நாயகி உதித்தா ளம்மா
கன்னிகை தனக்கு மேதான் கனத்ததோர் பிசாசுத்
[தோஷம்
முன்னமே யணுகு மம்மா அணுகாரே புத்திரர் தாமும்.

28. ஜாதகன் மனைவி கர்ப்பத்தால் மரணமடைந்து நல்ல குலமாகிய இக்குலத்தில் பிறந்தாள். பெண்ணுக்குத் திடமான பிசாசு தோஷம் இப்பிறவியிலும் தொடரும். புத்திரர்கள் தோன்றார்.

பிசாசு தோஷம் நீங்கச் சாந்தி

29. இவ்விதத் தோஷம் தீர இசைக்கிறோம் கிரியை யொன்று
நவ்விய கர்ம சாந்தி நலமுடன் செய்வா ரெனில்
திவ்வியப் பாலன் தானும் ஜனிக்குமே தீர்க்க மாகும்
பவ்வமாய்ச் செய்யா ரெனில் பருகாது துன்ப மாமே.

29. இந்த விதமான தோஷம் நீங்கச் சாந்தியொன்று கூறுகின்றேம். ஜாதகனின் மனைவிக்காக ஒரு நவக்கிரக சாந்தி நல்ல முறையில் செய்தால் அழகிய புத்திரன் தோன்றி நீண்ட ஆயுள் அடைவான். அலட்சியமாகச் செய்யாவிடில் குழந்தைகளைப் பெற மாட்டான். துன்ப மாகும்.

ஜாதகன் மரணகாலமும் மறுபிறவியும்

30. ஜாதகன் மரண காலம் சாற்றுவோ மெழுபான் ரண்டில்
கோதிலா தனுசு மாதம் குறைபக்கம் சஷ்டி தன்னில்
நீதியாய் மரண மாகி நிகழ்த்துவோ மிவன்பின் ஜன்மம்
தீதிலாக் காஞ்சி தன்னில் ஜனிப்பனே வைசியச் சேயாய்.

30. ஜாதகனுடைய மரணகாலத்தைச் சொல்லுகின்றேம். அவனுடைய எழுபத்திரண்டாம்வயதில் தீங்குகளில்லாத மார்கழி மாதத்தில் தேய்பிறைச் சஷ்டியில் மரணமடைவான். ஜாதகனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். தீமைகளில்லாத காஞ்சீபுரத்தில் வைசிய குலத்தவனுகப் பிறப்பான்.

ஜாதகன் மனைவியின் மரணகாலம்

31. மனையாளின் மரண கால மறைகிறே மிதன் பின்னுலே
அனையவே குடும்பச் செய்கை அறைகிறேம் கேளு மம்மா
இனிமையாய் முனிவர்கூற ஈச்வரி கேட்க லுற்றாள்
சினமிலாத் தந்தை சேதி செப்புவீ ரென்று கேட்டாள்.

31. ஜாதகனின் மனைவியின் மரணகாலத்தைச் சொல்லுகின்றேம். ஜாதகனுடைய மரணத்திற்குப் பிறகு ஆகும். அவர்களுடைய குடும்பச் செய்தியைச் சொல்லுகிறேம். கேளுங்கள், தாயே! என்று முனிவர் சொல்லும்போது பார்வதிதேவி கேட்கலானர். தாய் தந்தையரின் முடிவுகாலத்தைச் சொல்லுங்கள் என்றார்.

32. மற்றொரு பாகந் தன்னில் வரைகிறே மிவர்கள் சேதி
உற்றிய துணைவர் சேதி யுரைக்கிறேம் விபர மாக
சித்தசன் யோகந் தானும் திருமதி போலே யோங்கும்
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே கேட்டி டாயே.

32. அவ்விஷயத்தை மற்றொரு பாகத்தில் சொல்லுகின்றேம். ஜாதகனுடைய உடன்பிறந்தவர்களது செய்தியையும் கூறுகின்றேம். மன்மதன்போல் யோகமடைவான். (இலக்குமிபோல் செல்வம் பெருகும்.) வளர்பிறைச் சந்திரன்போல செல்வம் வளரும். யானைமுகத்தோனைப் பெற்றிட்ட தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 14

1. மதிசிகி மானில் தங்க மன்னனு மிரவி கோவில்
விதிசனி கருங் கோள் நண்டு வெள்ளிசே யரியில் தங்கப்
புதன்தெருக் காலி லேறுப் புலியது ஜன்ம மாக
இதுநவக் கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் கேது மகரத்திலும் குரு, சூரியன் துலாத்திலும் சனி ராகு கடகத்திலும், சுக்கிரன் செவ்வாய் சிம்மத்திலும், புதன் விருச்சிகத்திலும் இருக்க இலக்கினம் சிம்மமாகவும் நவக்கிரகங்கள் இருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள்.

கிரகநிலை

	இராசி சக்கரம்		சனி ராகு
சந்திரன் கேது			லக்கினம் சுக்கிரன் செவ்வாய்
	புதன்	குரு சூரியன்	

ஜாதகனின் பிறந்த வீட்டினடையாளங்கள்

2. அம்பிகை கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
செம்மையா யாண்பால் ஜன்மம் செப்புவோம் பிறந்த
[யில்லம்
[1]உம்பர்கோன் [2]குடகு வாடை உத்தரம் வாச லாகும்
தும்பியின் கோஷ்ட முத்தரம் துலங்கிடு மென்று
[சொன்னேம்.

2. பார்வதிதேவி கேட்கும்போது அத்திரி முனிவர் சொல்லுகின்ரூர். இந்து ஆண் மகனின் ஜாதகம். அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. விநாயகர் ஆலயம் வடக்குப் பக்கத்தில் உள்ளது என்று உரைப்போம்.

3. பத்திர காளி கீழ்ப்பால் பருகிடு மேற்கில் மாரி
தெத்தினம் நதியு முண்டு சிலசில சோலை யுண்டு
சித்தூரில் கூறை வீட்டில் ஜனிப்பனே யிந்தப் பாலன்
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழிகுன் ரூவே.

---

1. இந்திரன் = கிழக்கு.
2. மேற்கு.

3. கிழக்குப் பக்கத்தில் பத்திரகாளி கோயிலும் மேற்கில் மாரி யம்மன் கோயிலும் ஒரு நதியும் இருக்கும். சிற்சில தோட்டங்களும் உள்ள ஒரு சிற்றூரில் கூரை வீட்டில் ஜாதகன் பிறப்பான். கந்த பிராணைப்பெற்ற பெண் தெய்வமே! நாங்கள் கூறியவை தவரு.

ஜாதகனுடைய தந்தையின் விவரம்

4. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோ மானி
[றத்தான்
வந்திடு சமதே கத்தான் மனமது கபடு கொஞ்சம்
சிந்தையு மூக சாலி சிறுத்தவர் தம்மைக் காப்பன்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குகள் தப்பா னென்ரேரும்.

4. ஜாதகனுடைய தந்தையின் குணத்தை நாங்கள் சொல்லுகின் ரேரும். மாநிறமுள்ளவன். சமமானதேக முடையவன். மனத்தில் கபட முள்ளவன். ஊகமுடையவன். ஏழைகளையும் துன்பமடைந்தவர்களை யும் ஆதரித்து வருவான். தன்னை அண்டி வந்தவர்கட்கு அன்னமளிப் பான். சொன்ன சொற்கள் தவரு தவன்.

5. நடையது துருசு முள்ளான் நன்முக வடிவ முள்ளான்
மடையரை மனத்தி லெணணுன் வாக்குகள் தப்பா ஒகும்
விடவாக்குச் சிவந்த கண்ணன் மெல்லியர் மோக னுவான்
தடபுடல் செய்கை யுள்ளான் தாட்சிணியன் கனவா
[னென்ரேரும்

5. வேகமாக நடப்பவன். அழகிய முகத்தையுடையவன். முட் டாள்களை மனத்திற்கூட நினையாதவன். சொன்ன வார்த்தைகள் தவ ரூதவன். கெட்ட வார்த்தைகளைப் பேசுபவன். சிவந்த கண்களை யுடைய வன். பெண்கள்மீது மோகம் கொள்ளுவான். ஆடம்பரச் செய்கைகளை உடையவன். தாட்சிண்யமுள்ளவன். கனவானுக இருப்பவன்.

6. காரகத் தேக முள்ளான் கனத்தவர் நேசம் கொள்வன்
பாரிய ரிஷ்ட முள்ளான் பந்துக்கள் மெச்ச வாழ்வன்
பாரிய பூமி சேர்ப்பன் பெருந்தன முடைய னுவன்
கூறுமுன் கோபி யாவன் வண்டிவா கனமு முள்ளான்.

6. காரகநோய் உள்ள தேகமுடையவன். பெரியோர்கள் நட்புக் கொள்ளுவான். மனைவியின்மீது விருப்பமுடையவன். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். பெரும் பூமியை வாங்குவான். அதிகமான பொருளை உடையவன். முன்கோபி. வண்டி முதலிய வாகன வசதிகளை உடையவன்.

7. நாபிநோ யுடை னுவன் நற்றுணை யில்லா னுகும்
தீமைகள் ஆதி யில்தான் செறிந்திடு மென்று சொன்னேனும்
தாயின்தன் சுகமே யில்லான் சஞ்சல மனத்தா னுகும்
சேமமாம் குடும்ப முள்ளான் செல்வியே மேலுங் கேளே.

7. வயிற்றுவலி யுள்ளவன். உடன்பிறந்தவர்களில்லாதவன். ஆதிகாலத்தில் தீங்குகள் உண்டு என்று கூறுவோம். தாயின் சுகம் இல்லாதவன். அலைபாயும் மனத்தினன். சுகமுள்ள குடும்பி. தாயே! மேலும் கேளுங்கள்.

ஜாதகனுடைய தந்தையின் உடன்பிறந்தவர்

8. இவனுடைத் துணைவர் தம்மை யிசையவே பலத்தைக்
[காணேனும்
தவமுனி யிவ்வாறு கூறச் சாற்று வாளம்மன் தானும்
நவமதில் துணைவ ரில்லை யென்றுமீ ரந்தச் சேதி
கவனமாய்ச் சொல்லு மென்னக் கழறுவார் முனிவர்
[தாமும்.

8. ஜாதகனுக்குத் தந்தையின் உடன்பிறந்தவர்கள் உண்டு என்று சொல்ல இடமில்லை. இங்ஙனம் தவம் செய்யும் முனிவர்கள் சொல்ல, பார்வதிதேவி கேட்கின்றாள். உடன் பிறந்தவர்கள் இல்லை என்று சொல்லுகிறீர்களே. அதை நன்றாகக் கவனித்துக் கூறுங்கள் என, முனிவர் சொல்லுகின்றனர்.

9. மாதுரு உடன் மரித்து மறுமாதா வருவா ளென்றேனும்
தீதிலாத் துணைவ ருந்தான் ஜனிக்காரே என்று
[சொன்னேனும்
மேதினி யிலைய மாதா விருத்தியை யிரண்டி லேதான்
போதவே சொல்லு கின்றேனும் புண்ணிய சாலி கேளாய்.

9. ஜாதகனுடைய தந்தைக்குத் தாய் உடனே இறந்து இரண்டாம் தாய் வருவாள் என்றேனும். அவளுக்குப் புத்திரர்கள் பிறவார் என்றும் சொல்லுகின்றேனும் இலைய தாயாரின் விஷயங்களோ இரண்டாம் பாகத்தில் தருந்தபடி சொல்லுகின்றேனும். புண்ணியவதியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய குணங்கள்

10. இக்குண முடையோ னுக்கு இவனுமே உதித்தான்
[பாலன்
தொக்கவே ஐந்தாம் ஜன்மம் தோன்றினு னிவனே யம்மா
முக்கிய மிவன்கு ணத்தை மொழிகுறேனும் சிவந்த மேனி
தக்கதோர் கல்வி யுள்ளான் தயாளவான் பொறுமை
[யுள்ளான்.

10. இங்ஙனமுடைய குணங்களுள்ள தந்தைக்கு இந்த ஜாதகன் ஐந்தாம் பிறவியாகப் பிறந்தான் என்று சொன்னேம். இனி ஜாதகனுடைய குணங்களைக் கூறுகின்றேம். சிவந்த உடலும் தக்க கல்வியறிவு முள்ளவன். தயாள சிந்தையுள்ளவன். பொறுமையுள்ளவன்.

இதுவுமது

11. கோவுகள் விருத்தி யுள்ளான் குஞ்சர நடையு முள்ளான்
நாவுகள் தப்பா னுகும் நாற்றிசை கீர்த்தி கொள்வன்
மேலவர் பத்தி மானும் வீண்வார்த்தை யதிகம் பேசான்
வாவிகள் சோலை செய்வன் வண்டிவா கனமு முள்ளான்.

11. பசுக்கள் அதிகமாக உடையவன். யானையைப் போன்ற கம்பீரமான நடையுள்ளவன். வரக்குகள் தவறுதவன். நான்கு திசைகளிலும் புகழை அடைவான். பெரியோர்களின்மீது பக்தியுள்ளவன். அதிகமாக வீண்வார்த்தைகளைப் பேசாதவன். தோட்டம் துறவுகளை ஏற்படுத்துவான். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன்.

கமல ரேகை

12. இன்னவன் செங்கை தன்னில் இலகிடும் கமல ரேகை
அன்னிய ருறவு கொள்வன் ஆள்கார ரதிகம் சேர்ப்பன்
உன்னத பூமி சேர்ப்பன் உறைப்பொடு புளிப்பி லிச்சை
கன்னென மொழியு முள்ளான் கனதனம் பெறுவா
[னென்றோம்.

12. ஜாதகன் தனது கைகளில் பத்மரேகையுள்ளவன். பிறருடைய நட்புக்கொள்ளுவான். பணியாட்களை அதிகமாக உடையவன். உயர்தரமான விளைநிலங்களைச் சேர்ப்பான். உறைப்போடு புளிப்பும் சேர்ந்த பதார்த்தங்கள் அருந்துவதில் விருப்பமுள்ளவன். இனிய வார்த்தைகளையே பேசுபவன். மிகுந்த தனத்தை அடைவான்.

13. புத்திமான் செட்டு முள்ளான் பூஷணம் சேர்ப்பா னுகும்
பத்தினி நேய னுவன் பால்பாக்கிய முடைய னுவன்
சுத்தத்தார் மெச்ச வாழ்வன் துறவிகள் பக்தி மானும்
வித்தகன் கிருஷிகள் செய்வான் மெல்லியே மேலுங்
[கேளே.

13. இந்த ஜாதகன் புத்திசாலி. வர்த்தகம் செய்து வருவான். ஆபரணங்களைச் சேர்ப்பான். மனைவிக்குப் பிரியமானவன். பால்பாக்கியமுள்ளவன். தன் சுற்றத்தார் புகழும்படி வாழ்வான். துறவிகளிடம் பக்தியுள்ளவன். விவசாயம் செய்து வருவான். மெல்லிய இடையையுடையவளே! மேலும் கேளுங்கள்.

14. தந்தையின் வர்க்கத் துக்குத் தானவன் கர்மம் செய்வான்
வந்திடும் சிலது பூமி மன்னவ ரிஷ்டம் கொள்வன்
சொந்தநல் வீடு செய்வன் சுயேச்சையாய்க் குடும்ப மாவன்
தன்துணை மீது மிஷ்டன் தயாபரி மேலுங் கேளே.

14. இந்த ஜாதகன் தந்தையின் வர்க்கத்தினருக்கு இறுதிக் கடன்களை செய்து வருவான். அதனால் சில பூமிகள் இவனுக்குக் கிடைக்கும். அரசாங்கத்தாருக்குப் பிரியமானவனாக இருப்பான். சொந்தமாக நல்ல வீடு ஒன்றைக் கட்டுவான். தன்விருப்பப்படி குடும்பத்தை யுடையவன். தன் சகோதரர்மேல் பிரியமுள்ளவன். தயாநிதியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

15. இன்னவர் துணைவர் தம்மை யியம்புவோ மீரைஞ் சாகும்
தன்னிலே யாண்பா லொன்று சத்தியு மூவர் தீர்க்கம்
பின்னமாம் மற்ற வெல்லாம் பலக்காது என்று
[சொன்னேம்
கன்னென மொழியை யொக்கும் காதலி மேலுங் கேளே.

15. ஜாதகனுடைய உடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோம். அவர் பதின்மராவர். ஒரு சகோதரரும் மூன்று சகோதரிகளும் தீர்க்க ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லுகின்றோம். மற்றும் பிறந்தவர்கள் நிலையார் என்று உரைக்கிறோம். இனிய வார்த்தைகளையே பேசும் தேவியே! மேலுங் கேளுங்கள்.

ஜாதகனின் திருமணக்காலம்

16. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மொருபா
[னேழில்
மேதினில் தகுதி ணத்தில் வித்தகி மாதர் வர்க்கம்
கோதிலா மாது தன்னைக் குணமுடன் மணமே
[கொள்வான்
நீதாகு மந்தக் காரம் வந்திடு மிரண்டாம் மாது.

16. ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய பதினேழாம் வயதில் தெற்குப் பக்கத்திலிருந்து மனைவி தன் தாயின் வர்க்கத்திலிருந்து வருவாள். நீசமகளில்லாத அப் பெண்ணை நல்ல மனத்துடன் திருமணம் செய்த பின் அவள் இறந்து விடுவாள். பிறகு இரண்டாம் மனைவியை மணப்பான்.

இருமனைவிகள் : கிரகநிலை

17. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவா ளம்மன் தானும்
இனிமையாய் ஜாத கர்க்கு இரண்டாகும் தார மென்றீர்
கனிவுளச் சேதி தன்னைக் கழறுவீ ரென்று கேட்கச்
சனிசந்த மாதி யாகித் தானவன் விரைய முற்று ;

17. இங்ஙனம் முனிவர் சொல்லும்போது பார்வதிதேவி கேட்கின்றாள். ஜாதகனுக்கு இரு மனைவிகள் ஏற்படக் கூடிய காரணத்தைச் சொல்லுங்கள் என்று வினவ (முனிவர் பதில் கூறுகின்றனர்). சனி ஏழாம் வீட்டுக்குரியவனாகி விரயஸ்தானத்தில் இருப்பதாலும் ;

மறுப்பு

18. அரவுமே கூடி நிற்க அறைகிறோம் தாரம் ரண்டாய்க்
குருமுனி இதனைக் கேட்டுக் கூறுவா ரந்தச் சங்கை
அருணனும் நாலில் நிற்க ஆதலும் ஜன்மம் தங்க
மறுபடி தாரச் சங்கை வந்திடா தென்று சொன்னேம்.

18. ராகுவும் கூடி இருப்பதாலும் இரு மனைவிகள் உண்டு என்று சொல்லுகிறோம். அகத்திய முனிவர் இதைக் கேட்டு அதற்கு மறுப்புச் சொல்லுகிறார். புதன் நாலில் இருப்பதாலும் செவ்வாய் ஜன்மத்தில் இருப்பதாலும் இரண்டாம் மனைவி வரமாட்டாள் என்று சொன்னேம்.

இதுவுமது

19. சொன்னது மெய்தா னையா
சோமனும் சனியைப் பார்க்க
முன்ஜன்ம வினையி னலே
முயன் றிட்டோம் தாரதோஷம்
என்னஊ முதனீ நீங்கள்
இயம்புவீ ரென்று கேட்க
அன்னவன் தோஷந் தன்னை
அறைகிறோம் கேளு மம்மா.

19. சொன்னது சரிதானையா. சந்திரன் சனியைப் பார்ப்பதால் முற்பிறப்புத் தீவினையால் மனைவிக்குத் தோஷம் ஏற்படும் என்று சொன்னேம் அஃது என்ன தீவினை என்பதை நீங்கள் சொல்லுங்கள் என்று கேட்க, ஜாதகனுடைய தோஷத்தைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். தாயே!

ஜாதகனுடைய முற்பிறப்பு

20. இன்னவன் முன்ஜன் மத்தை யியம்புவோம் கேளு மம்மா
தென்புலி யூரி லேதான் தெளிகுல மறையோன் வம்சம்
நன்னய ஜனன மாகி நலமுள செல்வ வாழ்வு
வின்னமில் லாம லின்னேன் விளங்கியே வாழு நாளில் ;

20. ஜாதகனுடைய முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். தென்புலியூரில், அந்தண வம்சத்தில் பிறந்து நலமுள்ள செல்வவாழ்க்கை வாழ்ந்து தீமைகள் இல்லாமல் இவன் இருந்து வரும் காலத்தில் ;

குருவின் புத்திரியுடன் இன்பமனுபவித்தல்

21. பாலகன் தனக்கு'மேதான் பருகிய கல்வி சொன்ன
சீலமாம் குருவின் கன்னி சிறந்திடு புத்திரி தன்னை
ஏலவே வெகுநா ளாக இன்னவன் சினேகம் செய்து
கோலமாய்ப் போகம் துய்த்துக் குணமுடன் வருகு நாளில்;

21. ஜாதகனுக்குப் பாடம் கற்பித்து வந்த குருவின் அழகிய புத்திரியுடன் ஜாதகன் வெகுநாட்களாக நட்புக் கொண்டிருந்து அவளுடன் இன்பம் அனுபவித்து வரும் நாளில்;

22. நந்திவா யிந்தச் செய்கை நாட்குநாள் வெளிய தாகி
அந்தகோர் சேதி தன்னை அணுகிய புருடன் கேட்டுச்
சிந்தையா யிவளை யோட்டிச் செப்புவான் சாபம் தானும்
பந்தமென் பெண்ணை நீயும் பாவியே கெடுத்த தாலே;

22. இரகசியமாக இருந்த இந்தச் செய்கை சில நாட்களில் வெளியாகி விட்டது. அதை அந்தப் பெண்ணின் புருடன் கேள்விப்பட்டவுடன் அப்பெண்ணை விரட்டி விட்டான். பிறகு ஒரு சாபமும் இட்டான். பாவியே! என்னுடைய ஆசை மனைவியாய் இருந்தவளைக் கெடுத்து விட்டதால்;

23. மனமது துடிக் குமாறு மண்ணினில் புழுவாய்த் தோன் றி
இனமதாய் மனித ஜன்மம் எடுத்துமே வந்த போது
மனைவியும் தோஷ முண்டாய் மறுமனை வருவா ளாகும்
கனமுடன் மரண காலம் காதலி முன்செல் வாளே.

23. மனம் துடிக்குமாறு மண்ணில் உள்ள புழுவாய்ப் பிறந்து பிறகு மனிதப்பிறவி எடுக்குங் காலத்தில் மனைவிக்குத் தோஷமுண்டாகி இரண்டாம் மனைவி வருவாள். அவளும் உனக்கு முன்பாகவே மரணமடைவாள்.

24. என்றுமே சொல்லி யேதான் இவனுமே போக லுற்றான்
அன்னவன் மனைவி தானு மணுகிவன் தன்பால் சென்று
உன்னுடை மதியால் கெட்டே னுலகினில் வசையு
[மானேன்
என்னையும் காப்பா யென்ன இவனுமே காக்க லுற்றான்.

24. என்று கூறிச் சென்று விட்டான். அவன் போகும்போது அவனுடைய மனைவி (குருவின் புத்திரி) ஜாதகனின் பக்கலில் சென்று உன்னுடைய கெட்ட புத்தியால் அழிந்தேன். உலகில் அவமானமுமடைந்தேன். என்னை நீ ஆதரிப்பாய் என்று கேட்க, ஜாதகனும் அவளைக் காப்பாற்றி வந்தான்.

25. இன்னவன் பாரி தானும் ஏனிவ ளிங்கு யென்று
வின்னமாய்க் கலகம் செய்தாள் விளம்பியே யவளே
[யோட்ட
மன்னியே அன்னாள் தானும் மனமது மிகவே நொந்து
துன்னிய கயிறு மாட்டிச் சுந்தரி உயிரை விட்டாள்.

25. ஜாதகனுடைய மனைவியும் இவளே ஏன் இங்கு அழைத்து வந்தீர்கள் என்று சண்டையிட்டாள். ஜாதகனும மனைவியின் வார்த்தையைக் கேட்டு குருவின் புத்திரியை விரட்டிவிட்டான் அதனால் அந்தப்பெண் மனம் வருந்தி ஒரு கயிற்றைத் தன் கழுத்தில் மாட்டித் தூக்குப் போட்டுக் கொண்டு உயிரை மாய்த்துக் கொண்டாள்.

26. அந்தநல் தோஷந் தானும் அணுகிவன் தன்னைச் சூழ்ந்து
பிந்தியு மனைவி மாண்டு பித்தபாண் டதனால் மாண்டு
உந்தியி லுதித்தோ னுலே உலகினில் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றும் மங்கையே மேலுங் கேளே.

26. அந்தத் தோஷம் இவனைச் சூழ்ந்தது. பிறகு தன் மனைவியையும் இழந்து பித்தபாண்டு ரோகத்தால் தானும் இறந்து திருமாலின் நாபியில் உதித்த பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தவன் ஜாதகன் என்றும். தாயே! மேலும் கேளுங்கள்.

27. கூர்ந்திடு முன்னு ஜாழி கோதையே பால னுக்குச்
சேர்ந்துமே இருப்ப தாலே சத்தியு மாள்வா ளென்றும்
ஏந்துள கிரியை யொன்று இயம்புவோம் கேளு மம்மா
ஆர்ந்துள அரனின் மெய்யி லமர்ந்திடு முமையே கேளாய்.

27. முற்பிறப்புத் தீவினை ஜாதகனுக்குத் தொடரும். அது வெம்மையாகச் சேர்ந்து இருப்பதால் மனைவியும் இறந்து போவாள் என்றும். இதற்கு ஒரு சாந்தி கூறுகின்றோம். சிவபெருமானின் உடலில் இடப்பாகம் அமர்ந்துள்ள உமாதேவியே! கேளுங்கள்.

களத்திரதோடம் விலகுதற்குரிய சாந்தி

28. கோலமாய் மனைவி யோடு குறித்தனம் காஞ்சிக் கேகிச்
சீலமாய்த் தீர்த்தம் தோய்ந்து சிந்தையில் பக்தி யோடு
வேலனைப் பயின்றோ னுக்கு விளங்கிடு முமையா ளுக்கும்
ஏலபி ஷேகம் செய்து இன்பமா யர்ச்சித் தேத்தி;

28. ஜாதகன் தன் மனைவியுடன் காஞ்சிபுரத்துக்குச் சென்று அங்குள்ள புண்ணிய நீரில் ஸ்நானம் செய்து மனத்தில் தெய்வபக்தியுடன் வேலனைப் பிறப்பித்த சிவபெருமானுக்கும் உமாதேவிக்கும் அபிஷேகம் செய்து, முகமலர்ச்சியுடன் அர்ச்சனை செய்து துதித்து;

இதுவுமது

29. எந்தையே ரஜதம் தன்னில் இலகிய வில்லால் செய்து
சந்தனம் புஷ்பம் சீப்புத் தாம்பூலம் சுயம்பா கந்தான்
முந்திய அந்த ணர்க்கு முன்வைத்துப் பாதம் போற்றி
வந்தமுன் னாழைத் தன்னை யவரிடம் சொல்லி யேதான் ;

29. தாயே ! வெள்ளியால் ஒரு உருச்செய்து அதை சந்தனம் புஷ்பம் சீப்பு தாம்பூலம் இவைகளுடன் ஒரு வைதிகப்பிராமணனுக்கு அளித்து அவருடைய பாதங்களைப் போற்றி அவரிடம் தனக்கு வந்த தூதினையை சொல்லி (அவரிடம் ஆசி பெற்று) ;

30. மறுபடி உள்ளூர் மீண்டு மாதமோர் கார்த்தி கைக்கு
அறநெறி யோர்க்கு வன்னம் அன்புட னளித்து வந்தால்
வருமனை யாளும் தீர்க்கம் வமிசமும் விருத்தி யாகும்
திறமையாய்ச் செய்யா ஞில் செல்விக்குத் தோஷ
மென்றோம்.

30. மறுபடியும் உள்ளூருக்குத் திரும்பி மாதம் ஒரு கார்த்திகை தினத்தில் தருமவழியில் செல்பவர்கட்கு அன்புடன் அன்னமளித்து வந்தால் இவனுக்கு இப்பிறவியில் வரும் மனைவி நீண்ட ஆயுளுடன் இருப்பாள். வம்ச விருத்தியுண்டு. அலட்சியமாகச் செய்யாவிட்டால் மனைவிக்குத் தோஷம் உண்டு.

ஜாதகனுடைய புத்திர விருத்தி

31. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மிருநான் காகும்
வித்தக ஞண்பால் ரண்டு விளங்கிடும் கன்னி யிவ்வாறு
சித்தமாய்த் தீர்க்க மாகும் சேதமா மற்ற வெல்லாம்
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே கேட்டி டாயே.

31. ஜாதகனுடைய புத்திர விருத்தியைச் சொல்லுகின்றோம். அவர் எட்டு பேராகும். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்கமாயிருப்பர். மற்ற குழந்தைகள் நிலையா. யானைமுகத் தோனைப் பெற்ற தேவியே ! கேளுங்கள்.

தாயின் குணம்

32. மாதுரு குணத்தை யாங்க ளறைகிறோம் சிவந்த மேனி
மேதினில் சமதே கத்தாள் வித்தகி பொறுமை யுள்ளாள்
தீதிலாக் குணத்தா ளாகும் சேயுநன் னடக்கை யுள்ளாள்
பாதக மில்லா நெஞ்சம் பாரினில் நிந்தை யுள்ளாள்.

32. ஜாதகனுடைய தாயின் குணத்தை நாங்கள் கூறுகின்றோம். சிவந்த உடலும் சமமான உடலமைப்புமுள்ளவள். பொறுமைசாலி. தீமையில்லாத குணத்தினள். நன்னடக்கையுள்ளவள். தீங்குகள் இல்லாத மனமுடையவள். இப்பூமியில் அவமானம் அடைபவள்.

33. அன்னங்கள் போட வல்லாள் ஆளனுக் கினிய ளாகும்
பன்னுமா சார முள்ளாள் பாலர்மேல் பிரியை யாவள்
இன்னவள் வாயு ரோகி இன்பமா யுரைக்க வல்லாள்
மன்னிய அதிஷ்ட சாலி மனம்தெய்வ பக்தி யுள்ளாள்.

33. அன்னம் அளிப்பதில் பிரியமுள்ளவள். தன் கணவனுக்குப் பிரியமானவள். ஆசாரமுள்ளவள். குழந்தைகளின்மேல் பிரிய முடையவள். வாயுரோகமுடையவள். இன்பமாகப் பேசுபவள். அதிர்ஷ்டசாலி. தெய்வபக்தியுள்ள மனமுள்ளவள்.

ஜாதகனின் மாமன்

34. அவளுடைத் துணைவர் தம்மை அறைகுறேம் நவம
[தாகும்
அவனியில் பெண்பால் ஒன்று ஆண துமூன்று மாகும்
நவனியில் நான்கும் தீர்க்கம் நலிவுறு மற்ற வெல்லாம்
தவமுடை யோரைக் காக்கும் தயாபரி மேலுங் கேளே.

34. அவளுக்கு உடன்பிறந்தவரைக் கூறுகின்றேம். அவர் ஒன்பதின்மர் ஆவர். அவர்களில் ஒரு சகோதரியும் மூன்று சகோதரர்களும் ஆக நால்வரும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். மற்றவர்கள் நிலையார். தவங்கள் செய்பவரைக் காப்பாற்றும் தயாநிதியே! கேளுங்கள்.

இதுவுமது

35. மாதுலர் சேதி தன்னை யறைகுறேம் மூத்தோ னுக்கு
நீதியாய் ஆண்பெண் விருத்தி நேர்ந்திடும் குடும்பம் தானும்
போதவே யிளையோ னுக்குப் புத்திரி விருத்தி யுண்டு
தீதாகு மதன்பின் வந்தோன் சேயிலான் மணமு
[மில்லான்.

35. அம்மான்களின் செய்தியைக் கூறுகின்றேம். மூத்தவனுக்கு புத்திர விருத்தியுண்டு. புத்திர, புத்திரிகள் சேர்ந்து குடும்பம் நல்லதாக இருக்கும். இளையவனுக்குப் பெண் குழந்தை மாத்திரம் உண்டு. அதற்குப் பிறகு பிறந்தவன் நன்மையில்லாதவன். மணமும் குழந்தைகளும் இல்வாதவன்.

36. காரக தேக முள்ளான் கிளம்புவா னதனை விட்டே
வேறொரு நகரம் தன்னில் வீற்றிருப் பானு மேலும்
சீரிய மாதா வுக்குச் செப்புவோம் மாதுரு ரண்டாம்
கூறிய தந்தைக் கவ்வாறு குறித்தனம் ரிஷிக ளம்மா.

36. காரகநோய் உள்ள தேகமுடையவன். தான் பிறந்த ஊரை விட்டுக் கிளம்பி வேறு ஓர் ஊரில் வசித்து வருவான். அவனுடைய

தாய்க்கு இரு தாய்மார்கள் உண்டு. தந்தைக்கும் தாய்மார் இருவர் உண்டு என்று ரிஷிகளாகிய நாங்கள் கூறுகின்றோம்.

தாயின் முற்பிறவி

37. மாதுரு முன்ஜன் மத்தை யறைகிறோம பாண்டிய நாட்டில்
மேதினில் சேடர் வம்சம் வித்தகி யுதித்து மேலும்
கோதிலா மதலை யின்றிக் கோதையும் வரனின் கூட
தீதுகள் விலகும் வைகைத் தீர்த்தமும் தோய்ந்து
[மேதான் ;

37. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். பாண்டிய நாட்டில் சேடர் வமிசத்தில் பிறந்து புத்திர பாக்கியமில்லாமல் தன் கணவனுடன் தானும் திங்குகளி விலக்கும் வைகை நதியின் தீர்த்தத்தில் நீராடி ;

38. வருவோர்க்கு வன்ன மீந்து வன்மையாய்த் தண்ணீர்ப்
[பந்தல்
பெருமையாய் வைத்துப் பின்பு பிரபலப் பெருமை பூண்டு
சிறுமையு மில்லா ளாகிச் சென்றனள் சேதுக் கேதான்
அருமையாய் ராம லிங்க மர்ச்சித்து உள்ளூர் மீண்டு ;

38. தன்னிடம் வருபவர்கட்கு அன்னம் அளித்துப் பெரியதொரு தண்ணீர்ப்பந்தல் வைத்து (தாகத்துக்குத் தண்ணீர் கொடுத்து வந்து) பிறகு பிரபலமாகப் பெருமையடைந்து சிறுமைகள் இல்லாதவளாகிச் சேதுவுக்குச் சென்று அங்குள்ள ராமலிங்கத்துக்கு பக்தியுடன் அர்ச்சனை முதலியன செய்து உள்ளூர் திரும்பி ;

தாயின் மறுபிறவி

39. சொக்கர்க்குப் பணிகள் செய்து தொல்புவி மரண மாகி
இக்குலந் தன்னி லேதான் இரங்கின ளிவளே
[யென்றோம்
முக்கிய பின்ஜன் மத்தை முயலுவோம் காஞ்சி தன்னில்
தொக்கவே பிரம்ம சேயாய்த் தோன்றுவா னென்று
[சொன்னோம்.

39. சொக்கநாதருக்குத் தொண்டுகள் செய்து பிறகு உலகிலிருந்து மரணமடைந்து இப்பிறவியில் பிறந்தவள் இவள் (ஜாதகனின் தாய்) என்றோம். மறுபிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சிபுரத்தில் அந்தண குலத்தவளாய்ப் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம்.

தந்தையின் முற்பிறவி

40. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் சிறுபாக்
[கத்தில்
முந்திய வைசியச் சேயாய் முயன்றுமே பெருமை பூண்டு
சந்தம் செட்டுச் செய்து தனமதை யதிகம் பெற்று
வந்திடு மனைவி மைந்தர் வளமுள குடும்ப மாகி ;

40. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைக் கூறுகின்றோம். சிறுபாக்கத்தில் உயர்ந்த வைசிய குலத்தவனுகப் பிறந்து பெருமையை யடைந்து வர்த்தகம் செய்து வந்து செல்வத்தை அதிகமாகப் பெற்று மனைவி மைந்தர்களையும் பெற்றுச் செழிப்புள்ள குடும்பியாகி ;

சத்திரிய குலம்

41. அகதிகட் கன்ன மீந்து அரன்பணி விடையும் செய்து
இகபர னன்பு பூண்டு இவணுமே மரண மாகித்
தகைமையா யிச்சென் மத்தில் சத்திரிய குலத்தில்
[வந்தோன்
பகையிலாப் பின்ஜன் மத்தைப் பகருவோம் கேளு மம்மா.

41. கதியற்றவர்கட்கு அன்னமளித்து வந்து சிவபெருமானுக்குத் தொண்டுகள் பல செய்து பக்தி பூண்டு வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் இப்பிறவியில் சத்திரிய குலத்தில் பிறந்தான். நீங்குகள் இல்லாத மறுபிறவியைச் சொல்லுகின்றோம். தாயே ! கேளுங்கள்.

தந்தையின் மறுபிறவி

42. ஆலங்காட் டதற்குக் கீழ்ப்பா லணுகிய பேரூர் தன்னில்
சீலமாம் சைவ வம்சம் ஜனித்துமே வரசர் பக்கல்
கோலமா யரசு செய்து குணமுடன் ஜீவிப் பானும்
வேலனே யின்ற மாதே வித்தகி மேலுங் கேளே.

42. திருவாலங்காட்டிற்குக் கிழக்கில் உள்ள பெரிய ஓர் ஊரில் நல்லொழுக்கத்தையுடைய ஒரு சைவ குலத்தில் பிறந்து அரசாங்க உத்தியோகம் ஏற்று நன்மையுடன் ஜீவித்து வருவான். முருகக் கடவுளை ஈன்றெடுத்த தேவியே ! கேளுங்கள்.

ஜாதகனுடைய யோகச் செய்தி

43. ஜாதகன் யோகச் செய்கை சாற்றுவோம் கல்வி
[யுள்ளான்
மேதினி யதிகம் சேர்ப்பன் விசித்திர வீடு செய்வன்
ஞாலமேல் கீர்த்தி கொள்வன் நவமதில் திருஷ்டி செய்வன்
கோதிலாச் செட்டு ஓங்கும் கோவுகள் விருத்தி யுள்ளான்.

43. ஜாதகனுடைய யோகச் செய்தியைக் கூறுகின்றோம். கல்வியறிவுள்ளவன். விளைநிலங்களைப் பெருக்குவான். அழகான வீட்டைக் கட்டுவான். உலகில் புகழை அடைவான். விவசாயம் செய்து வருவான். வர்த்தகம் பெருகும். பசுக்கள் அதிகமாக உள்ளவன்.

44. வண்டிவா கனமு முள்ளான்
மன்னர்க ளிஷ்டம் கொள்வன்
அண்டின பேரைக் காப்பன்
ஆள்கார ரதிக மூள்ளான்
கொண்டளா திகட்கு மேலாய்க்
கூறுவோ மிவன்தன் யோகம்
பண்டான பொருளு மூண்டாம்
பதினைந்தாண் டின்மேல் யோகம்.

44. வண்டி முதலிய வாகன வசதிகளை உடையவன். அரசர் (அரசாங்கத்தாரின்) பிரியத்தைச் சம்பாதித்துக் கொள்ளுவான். தன்னை யண்டி வந்தவர்களை ஆதரிப்பான். பணியாட்கள் உள்ளவன். இவனுடைய பங்காளிகட்கு மேலாக இவன் யோகவானாக இருப்பான். முன்னோர்கள் வைத்திருந்த பொருள் சேரும். புதையல் கிடைக்கும். பதினைந்தாம் வயதுக்குமேல் யோகமுண்டாகும்.

45. பூமிகள் வீடு மாடு பூஷணம் பொருளும் யாவும்
நேமியி லேழா யிரம்பொன் நிகழ்த்துவோ மிதுவல் லாமல்
தீவுகள் செட்டுச் செய்வன் சிறந்திடு நிலத்தி லுலே
சேமமாய்ப் பொருள்ப டைப்பன் செல்வியே யின்னுங்' [கேளே.

45. விளைநிலங்கள் வீடு மாடுகள் ஆபரணங்கள் இதரப் பொருள்கள் எல்லாம் சேர்த்து ஏழாயிரம் பொன் பெறுமானம் உள்ளவன். இதுவுமல்லாமல் வேறு தீவுகளில் வர்த்தகம் செய்து வருவான். செழிப்புள்ள நிலத்திலுள் அதிகமான பொருளை அடைவான். தாயே! மேலும் கேள்.

தந்தைதாயின் மரணகாலம்

46. தந்தையின் மரண காலம்
சாற்றுவோ முப்பான் ரண்டில்
மந்திரி தசையி லேதான்
மந்தன்தன் புஷிப்பில் கண்டம்
பிந்திய மாதா வுக்குப்
பேசுவோ முப்பா னென்பான்
அந்தணன் திசையில் வெள்ளி
அவனுமே புசிக்கும் காலே.

46. ஜாதகனுடைய தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். அவனுக்கு ஜாதகனது முப்பத்திரண்டாம் வயதில் குரு மகா

தசையில் சனி புக்தியில் மரணம் ஏற்படும். பிறகு தாயார் அவனுடைய முப்பத்தொன்பதாம் வயதில் குரு மகாதசையில் சுக்கர புக்தியில் மரணம் அடைவாள்.

ஜாதகனுடைய மரணம்

47. இன்னவன் மரண கால மியம்புவோ மெழுப்பான் ரண்டில்
கன்னியின் மாதம் தன்னில் கனத்தபூ ரணிபா லேதான்
உன்னத மார்பு நோயால் உத்தம னுடலம் வாடும்
பிந்திய ஜன்மந் தன்னைப் பேசுவோம் கேளு மம்மா.

47. ஜாதகனுடைய மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். அவன் தனது எழுபத்திரண்டாம் வயதில் புரட்டாசி மாதத்தில் பௌர்ணமியன்று மார்பு நோயால் மரணம் அடைவான். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய மறுபிறவி

48. மறுஜன்மம் காஞ்சி தன்னில் வளமுள பிரம்ம சேயாய்த்
திருமகள் விலாசம் பெற்றுத் தினமர சர்கள் பக்கல்
பெருமையா யதிகா ரங்கள் பூமியில் செய்வா னுகும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்மணி மேலுங் கேளே.

48. ஜாதகனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சி புரத்தில் ஒரு செல்வவானுன அந்தணர் குலத்தில் பிறந்து லட்சுமீ கடாட்சம் பெற்று, அரசாங்க உத்தியோகம் ஏற்று, அதிகாரங்களை அடைந்து வாழ்ந்து வருவான். ஆறுமுகக்கடவுளைப் பெற்றிட்ட தேவியே! மேலும் கேளும்.

ஜாதகனுடைய ஜனனகாலதசை

49. பிறந்தசேய் ஜனன காலம் பிறைத்தசை ஆண்டு ரண்டு
தெரிந்திடு மாத மைந்தும் தினமது மீரெட் டாகும்
உறைந்திடும் பலனை யாங்கள் உரைக்கிறோம் தேகப் பீடை
குறைந்திடும் பொருளும் தானும் குடும்பத்தில் பூமி சேரும்.

49. ஜாதகனுடைய ஜனன காலத்தில் சந்திர மகாதசை இருப்பு இரண்டு வருடங்களும் ஐந்து மாதங்களும் பதினாறு நாட்களுமாம். அப்போது ஏற்படும் பலனை நாங்கள் கூறுகின்றோம். சரீர உபத்திரம் ஏற்படும். செலவு ஏற்படுவதால் செல்வம் குறையும். குடும்பத்திற்குப் பூமி சேரும்.

ஜாதகனுடைய பொது யோகம்

50. ஆரலின் தசையி லேதா னனேகமாய்ப் பூமி வாய்க்கும்
வேறொரு கிருகம் செய்வன் வெற்றியாம் நிலத்த [வெல்லாம்
கூறுவோம் துணைவர் விருத்தி கூடிடும் சுபமும் தானும்
நாரியே துணைவி கட்கு நற்சுபம் கேரு மென்றோம்.

50. அங்காரக மகாதசையில் அதிகமான பூமி விருத்தியாகும். விரோதிலங்கள் அதிகமாகச் சேரும். புதிய வீடு ஒன்றைக் கட்டுவான். எண்ணிய காரியங்கள் எல்லாம் நடைபெறும். உடன்பிறந்தவர் விருத்தியுண்டு. வீட்டில் தன் சகோதரிகட்குச் சுபமும் மங்கள கார்யங்களும் நடைபெறும் என்றும் சொல்லுகின்றோம்.

51. தனதான்ய மிகவே சேரும் சகலரும் புகழ வாழ்வன்
இனங்களுக் குதவி செய்வன் இடருகள் யாவும் நீங்கும்
கனமுள கீர்த்தி யோங்கும் கரும்பாம்புத் தசையி
[லேதான்
அனைவரும் பகைய தாகு மலைச்சலும் மிகவே யுண்டாம்.

51. தனதான்யங்கள் அதிகமாகச் சேரும். எல்லாரும் கொண்டாடும்படி வாழ்ந்திருப்பான். தன் சுற்றத்தாருக்கு உபகாரம் செய்வான். துன்பங்கள் எல்லாம் விலகும். பெரியதும் பரவியதுமான புகழ் விருத்தியாகும். ராகு மகாதசையில்தான் எல்லோரும் பகைவர் ஆவர். அதிகமான அலைச்சல் ஏற்படும்.

52. குடும்பமும் வேற தாகும் குறுகிடும் குடும்பம் தானும்
இடும்புக ளதிக முண்டாம் இடம்விட்டுப் பெயர்தல் நேரும்
தடமது புதிதாய்ச் செய்வன் தாயின்தன் பிதாவும்
[கண்டம்
அடவுடன் குடும்பச் சூதம் ஆச்சரிய மிகவே நேரும்.

52. குடும்பம் வேறாகும். இவனுடைய குடும்பம் சிறுத்து விடும். துன்பங்கள் அதிகமாகும். இடம் விட்டு இடம் மாற நேரிடும். புதிய வீட்டைக் கட்டுவான். தாயின் தந்தைக்குக் கண்டம் நேரிடும். குடும்பத்தில் அசுபம் ஏற்படும். சில ஆச்சரியமான சங்கதிகள் நேரும்.

53. பூமியால் விரோத முண்டாம் புகலுவார் அநேக நிந்தை
நேமியில் கர்மம் செய்வன் நல்கின பூமி சேரும்
தீமைகள் வந்து நீங்கும் திங்களைப் போல யோகம்
சேமமா மென்று சொன்னேம் செப்புவோ மேலுங்
[கேளே.

53. பூமியால் விரோதங்கள் ஏற்படும். அநேகர் பல இழிவான வார்த்தைகளைக் கூறுவார்கள். இவன் கர்மங்களைச் செய்வான். விரும்பிய பூமி இவனுக்குக் கிடைக்கும். தீமைகள் ஏற்பட்டு விலகும். பிறைச்சந்திரன்போல் யோகம் வளரும். சௌக்கியமாக இருப்பான் என்று சொன்னேம். மேலும் சொல்லுகின்றோம். கேளுங்கள்.

ஜாதகம் 15

1. பொன்புதன் ராகு மேடம் பூமகன் வீணை யாகச்
சந்திர னலவன் புக்கச் சனிமாதை கேது தூக்கம்
மன்ரவி புகரு ரந்தி வந்தவன் ஜன்மம் சீயம்
முந்திய நவக்கோ ளிவ்வா றுமுயன் றதால்
[பலன் சொல்வீரே.

1. குரு புதன் ராகு மேடத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், சந்திரன் கடகத்திலும், சனி கன்னியிலும், கேது துலாத்திலும், சூரியன் சுக்கிரன் விருஷபத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இவ்விதம் நவக்கிரகங்களும் இருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று ;

கிரகநிலை

<table>
<tr><td></td><td>குரு
புதன்
ராகு</td><td>சூரியன்
சுக்கிரன்</td><td>செவ்வாய்</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td>சந்திரன்</td></tr>
<tr><td></td><td>லக்கினம்</td></tr>
<tr><td></td><td></td><td>கேது</td><td>சனி</td></tr>
</table>

ஜாதகன் பிறந்த வீடு

2. அம்பிகை கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
செம்மையா யாண்பால் ஜன்மம் செப்புவோ மில்லம்
[தானும்
நன்மையாய் வடதென் வீதி நல்வாசல் மேற்குப் பார்வை
அம்புவி யணைந்தோன் கீழ்ப்பா லணுகிடு மதன்கீழ் ஈசன்

2. பார்வதிதேவி கேட்கும்போது அத்திரி முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியில் மேற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. கிழக்கில் சந்திரனைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் ஆலயமும் அதற்குக் கிழக்கில் ஈச்வரன் கோவிலும் ;

3. அக்கினி மாரி காளி அறைந்தனம் தெற்கில் தந்தி
முக்கிய நதியும் சூழி முயன்றனம் சோலை யுண்டு
மிக்கவே சூடு கோழி விரும்பிய முனியும் சக்தி
தக்கவே வாச மாகும் சமணரின் கோஷ்டம் வாயு.

3. மாரியம்மன் கோவிலும் காளி கோவிலும் தெற்கில் விநாயகர் ஆலயமும் ஓர் புண்ணிய நதியும் குளமும் தோட்டமும் அருகில் சூடு கோழியை பலிக்காக விரும்பும் முனீச்வரன் கோவிலும் அம்மன் கோவிலும் தென்மேற்குத் திக்கில் அருக (சமண)தேவன் கோவிலும் இருந்து வரும்.

ஜாதகனின் குலம்

4. இதுவலால் பலதே வாசம் இலகிய சோலை யுண்டு
சதியிலா சமவூர் தன்னில் ஜாதகன் கங்கை சேயாய்
விதியினை லுதிப்பா லகும் விளம்புவோம் கெட்டி வீட்டில்
அதிபதி யாக வாழ்வன அம்பிகை யாளே கேளாய்.

4. இலைகளின்றி இன்னும் பல தெய்வங்கள் வாழ்ந்து வருகின்ற சம நிலையுள்ள அவ்வூரில் அருகில் தோட்டம் உள்ள ஓர் இடத்தில் ஜாதகன் வேளாள குலத்தவனுகப் பிறப்பான். அவன் ஒரு மெத்தை வீட்டிற்கு அதிபதியாக வாழ்ந்து வருவான். தாயே! கேளுங்கள்.

5. தந்தைதாய் யோகம் தானும் சகோதர களத்திர புத்திரர்
வந்தவன் யோகச் செய்கை யவனுடை முன்பின் ஜன்மம்
பந்தமாய் நவக்கோ ளாய்ந்து பகருவோ மிந்நூல் தன்னில்
தந்தியைப் பெற்ற மாதே தயாபரி கேட்டி டாயே.

5. ஜாதகனுடைய தாய் தந்தையர்களது யோகம், சகோதரர்களது யோகம் மனைவி புத்திரர்கள், பிறந்தவனுடைய யோகச் செய்திகள் இவர்களின் முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றையும் எல்லா நவக்கிரக நிலையையும் ஆராய்ந்து இந்தச் சோதிடநூலில் கூறுகின்றேம். விநாயகனைப்பெற்ற தேவியே! தயாநிதியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய தந்தையின் விபரம்

6. தந்தையின் வர்க்கம் தன்னைச் சாற்றவே பலத்தைக் [காணேம்
சொந்தகல் தந்தை சேதி சொல்லுவோம் கருதித்தான்
எந்தையே வாத தேகி இன்பமாய் வார்த்தை கூறுவன்
சிந்தையில் கபடு மில்லான் சினேகித ரதிகம் கொள்வன்.

6. ஜாதகனுடைய தந்தையின் வர்க்கத்தாரைப் பற்றிச் சொல்லப் பலமில்லை. அவருடைய செய்திகளையும் குணங்களையும் கூறுகின்றேம். கருமை நிறமுடையவன். தாயே! வாயுசோகமுள்ள தேக முடையவன். இன்பமாகப் பேசுபவன். மனத்தில் சூதுகளில்லாதவன். நண்பர்களை அதிகமாக உடையவன்.

தந்தையின் குணங்கள்

7. சொன்னசொல் தவரு ஞகும் சுத்தநன் மனத்தா ஞகும்
கன்னென மொழியே சொல்வன் கனத்ததோர் செட்டுச்
[செய்வன்
தன்னிலே மாமி மூன்று சற்பாத்திரன் பொறுமை
[யுள்ளான்
அன்னியர் மெச்ச வாழ்வன் அன்புள மனத்த னுவன்.

7. சொன்னசொற்படி நடப்பவன். சுத்தமான நல்ல மனமுடைய வன். இனிய வார்த்தைகளையே பேசுபவன். பெரிதான வியாபாரத்தைச் செய்து வருவான். மூன்று மனைவியரை உடையவன். சற்பாத்திரன். பொறுமையுடையவன். பிறர் கொண்டாடும்படி வாழ்வான். அன்புள்ள மனத்தினன்.

8. ரோமங்கள் கீட்சி யில்லான் நுவலுப தேச மில்லான்
தீமையை விரும்பா ஞகும் சற்சனன் பெருமை யுள்ளான்
தாமத புத்தி யுள்ளான் தரணியில் கிருஷி செய்வன்
தீமையாம் பித்தச் சூடு செப்பிலே மிவனுக் கேதான்.

8. நீண்ட ரோமங்கள் இல்லாதவன். பெரியோர்களிடம் உப தேசங்களைக் கேட்காதவன். தீங்குகளைச் செய்ய விருப்பமில்லாதவன். உலகில் நல்லவனுவான். பெருமையுள்ளவன். தாமதமான புத்தியுடைய வன். உலகில் விவசாயம் செய்து வருபவன். தீங்கு செய்யும் பித்தச் சூட்டு நோயுள்ளவன் என்று சொல்லுகின்றேம்.

9. சஞ்சல மனத்தா ஞகும் தயையுளன் அலைச்ச லுள்ளான்
வந்தவர் தம்மைக் காப்பா ஞதியில் வறுமை யுள்ளான்
பஞ்சைமே லிரக்க முள்ளான் பாரினில் சல்லிய முள்ளான்
கிஞ்சுக ரோகி யாவன் கேவல மணுகாச் சித்தன்.

9. சஞ்சலப்படும் மனமுடையவன். தயை நிரம்பிய சித்தத்தை யுடையவன். அலைச்சலை உடையவன். தன்னை யண்டிவந்தவர்களை ஆதரிப்பான். ஆதிகாலத்தில் தரித்திர முடையவன். ஏழைகளின் மீது இரக்கமுடையவன். உலகில் கடன் உபத்திரவம் உள்ளவன். கசுரோகமுடையவன். அற்ப எண்ணங்களில்லாதவன்.

10. சொன்னசொல் கேட்பா ஞகும்
துராசையு மில்லா னென்றேரும்
இன்னமும் தயிர்நெய் யிஷ்டன்
எவரையும் வசியம் கொள்வன்

உன்னதக் கதைகள் கேட்பன்
ஊகமாம் மனத்தா னுகும்
அன்னியர் குற்றம் சொல்லான்
அவன்பந்து மெச்ச வாழ்வன்.

10. சொன்ன சொல்லைக்கேட்டு நடப்பவன். வீண் ஆசைகள் இல்லாதவன். தயிர் நெய் முதலியவைகளைச் சாப்பிடுவதில் பிரிய முள்ளவன். எல்லோரையும் தன்வயப்படுத்தும் இயல்பினன். உயர்ந்த கதைகளைக் கேட்பதில் இஷ்ட முள்ளவன். ஊகமுள்ள மனத்தினன். பிறர்மீது குற்றம் கூறுதவன். தன் சுற்றத்தார்கள் கொண்டாடும்படி வாழ்வான்.

ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவி

11. இவனுடை முன்ஜன் மத்தை யியம்புவோம் தில்லை
[தன்னில்
அவனியில் செங்குந்த வம்ச மவனுமே யுதித்து மேலும்
நவனியில் நெசவாம் செட்டு நடத்தியே பாக்கியம் பெற்றுத்
தவசிக ளுறவு கொண்டு தன்மனை புத்திர ருண்டாய்;

11. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின் றோம். தில்லைமாநகரில் செங்குந்த மரபினனாகப் பிறந்து உலகில் நெசவுத் தொழில் செய்து வந்து, பாக்கியத்தை யடைந்து, பெரியோர்களிடம் நட்புக்கொண்டு, மனைவி மக்களை யடைந்து;

12. வந்தவர் கன்ன மீந்து மருமலர்ச் சோலை வைத்து
மூந்திய வண்ண லுக்கு முயற்சியாய்த் தொண்டு செய்து
சந்ததம் முருகன் மேலே தானவன் களிப்புக் கொண்டு
வந்திடு மார்க்கந் தன்னில் வண்மைநீர்ப் பந்தல் வைத்து;

12. யாசித்தவர்கட்கு அன்னமளித்து வந்து, புஷ்பச்சோலை வைத்து, முதன்மையான கடவுளுக்குத் தொண்டுகள் பலசெய்து, முருகக் கடவுள்மீது சதா பக்திகொண்டு சந்தோஷத்துடன் சாலை மார்க் கத்தில் குளிர்ந்த தண்ணீர்ப் பந்தல் அமைத்து;

13. ஆவுக ளுள்ளா னுகி விரைவினில் மரண மாகிப்
பூவிலே தனிலு தித்த பிரமனல் வரையப் பட்டுத்
தாவியே கங்கை சேயாய்த் தானவனுதித்தா னென்றோம்
ஆவலா யிவனுக் கேதான் அவனுமே அஞ்சாம் ஜன்மம்.

13. பசுக்கள் உள்ளவனுகி வாழ்ந்து சிக்கிரத்தில் மரணமடைந்து தாமரை மலரில் அவதரித்த பிரம்மதேவனால் மீண்டும் படைக்கப்பட்டு வேளாள குலத்தவனுக இப்பிறவியில் பிறந்தவன் என்றோம். இவ்வித குணங்கள் உடையவனுக்கு ஜாதகன் ஐந்தாமவனுகப் பிறந்தான்.

ஜாதகனுடைய குணங்கள்

14. தந்தைக்குத் தார மூன்றில் தரித்திடும் கடை மாதின்ற
மைந்தனும் இவன்கு ணத்தை யறைகிறே மிருநி றந்தான்
சிந்தையில் மர்ம முள்ளான் சீலனு மூகை சாலி
எந்தையே கல்வி யுள்ளான் யாரையு மதியா னென்றேரும்.

14. ஜாதகனுடைய தந்தைக்கு ஏற்பட்டிருந்த மூன்று தாரங்களில் கடைசி மனைவியின் புத்திரனுகப் பிறந்தான் இந்த ஜாதகன். இவனுடைய குணத்தைக் கூறுகின்றேரும். இருநிற முடையவன். மனத்தில் இரகசியமுடையவன். நல்லொழுக்கமுள்ளவன். ஊகமுடையவன். தாயே! கல்வியறிவுள்ளவன். ஒருவரையும் மதிக்காதவன்.

15. பலரையும் நேசம் கொள்வன் பாரினில் தந்திர வாதி
தலமது செல்வா னுகும் சத்துரு வணக்கம் கொள்வன்
சீலமா தரையே சேர்வன் சிலேடையாய் வார்த்தை
[கூறுவன்
நலமான வார்த்தை சொல்வன் நாயகி யிஷ்ட முள்ளான்.

15. பலபேர்களிடம் நட்புக்கொள்ளுவான். உலகில் தந்திரசாலியாக இருப்பான். புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். தன் விரோதிகளை வணங்கச்செய்து விடுவான். நல்லொழுக்கமுள்ள மனைவியை அடைவான். இருபொருள் படும்படி பேசுபவன். நல்ல வார்த்தைகளையே கூறுபவன். மனைவிக்குப் பிரியமானவன்.

மச்சரேகை

16. வஞ்சக வஞ்ச னுவன் மர்மசாஸ் திரங்கள் கற்பன்
அஞ்சிடா னெதிரிக் கேதான் அவன்கரம் மச்ச ரேகை
மிஞ்சியே பேசு வானும் விஷபுலம் அதிகம் சேர்ப்பன்
கொஞ்சியே வார்த்தை சொல்வன் கோபத்தை மனத்துள்
[வைப்பன்.

16. வஞ்சகர்களுக்கு வஞ்சகனுக இருப்பான். இரகசிய சாஸ்திரங்களைக் கற்றுணர்வான். எதிரிகட்குப் பயப்படாதவன். அவன் கையில் மச்சரேகை யுள்ளவன். அதிக்மாகப் பேசுபவன். விஷ நிலங்களை அதிகரிப்பான். கொஞ்சிக் கொஞ்சி பேசுபவன். கோபத்தை மனத்தில் அடக்கிவைப்பவன்.

17. நினைத்தகா ரியமு டிப்பன் நிமலன்மேல் பத்தி பூண்பன்
கனமுளக் குடும்பி யாவன் காரியச் சமர்த்த னென்றேரும்
தனமிக்க வுடைய னுகும் தாட்சிண்யன் கனத்த புத்தி
வினையது ஒருவர்க் கெண்ணன் மேதினில் கீர்த்தி
[யேற்பன்.

17. எண்ணிய காரியங்களை முடிப்பவன். கடவுளிடம் பக்தியுள்ளவன். பெரிய குடும்பத்தை யுடையவன். காரியங்களைச் செய்வதில் சாமர்த்தியமுள்ளவன். மிகுந்த செல்வத்தை யுடையவன். தாட்சிண்ய முள்ளவன. பெரிய (தாராள) புத்தியுடையவன். ஒருவருக்கும் தீங்குகள் இழைக்க எண்ணுதவன் உலகில் புகழடைவான்.

18. போசனம் கொஞ்ச முண்பான் பதார்த்தங்க ளதிகம்
[கொள்வன்
நேசமாய்ச் சிறுதினிகளை விருப்பங் களதிகம் கொள்வன்
ஆசையாய்ப் பேச வல்லன் அற்பரை யுறவு கொள்ளான்
தாசிதா சாளு முள்ளான் தான்வலு வுடைய னேமே.

18. அற்பமாய்ப் போஜனம் அருந்துவான். காய்கறிகளை அதிகம் சேர்த்துக் கொள்ளுபவன். சிற்றுண்டிகளை விரும்பிப் புசிப்பதில் பிரியம் அதிகம் உள்ளவன். பிரியமாகப் பேசுபவன். அற்பர்களுடன் உறவாடாதவன். ஆணும் பெண்ணுமாகிய அதிக வேலைக்காரர்களை யுடையவன். வலுவான சரீர முள்ளவன்.

ஜாதகனின் உடன்பிறந்தவர்

19. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பா
[லொன்று
அவனியில் பெண்பால் மூன்று அவைகளும் விருத்தி
[என்றேரும்
நவனியில் மற்ற வெல்லாம் நசித்திடு மென்று சொன்னேம்
கவனமாய்த் துணைவன் சேதி கழறுவோம் கேளுக் தாயே.

19. ஜாதகனுடைய சகோதரர்களைப்பற்றிக் கூறுகின்றோம். ஜாதகனுக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் மூவரும் பிறந்து நீண்ட ஆயுள்கள் உள்ளவர்கள். மற்றபடி பிறப்பவர்கள் நிலையார் என்றும் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய உடன்பிறந்தவனைப் பற்றிச் சொல்லுகின்றோம். கேளுங்கள் தாயே!

ஜாதகனுடைய சகோதரனின் குணங்கள்

20. இருநிறம் உணச்சல் தேகி இடருக ளனந்த முள்ளான்
பெரும்புத்தி கல்வி யுள்ளான் பிழைகளும் சொல்லா னாகும்
திருமகள் வாச முள்ளான் செய்நிலம் விருத்தி செய்வன்
கரமதில் வடுவு முள்ளான் உண்மையா மனத்தா னாகும்.

20. கருமை கலந்த சிவந்த நிறமுடையவன். மெல்லிய சரீர முள்ளவன். எண்ணிலாத் துன்பங்கள் உள்ளவன். பெரும் புத்தியும் கல்வியறிவும் உள்ளவன். பிழைகளைச் சொல்லாதவன். லட்சுமீகடாட்சம் உள்ளவன். விளைநிலங்களைப் பெருக்குவான். கையில் வடு உள்ளவன். உண்மையான மனத்தினன்.

21. தந்தைதாய்க் கன்ப னுகும் தனமொடு செல்வ முண்டு
நந்தியா வுடைய னுகும் நாயகி பட்ச முள்ளான்
சிந்தையில் கபடு முள்ளான் சீக்கிரம் கோபி யாவன்
நொந்தவர் தம்மைக் காப்பன் நூவனுப தேச முள்ளான்.

21. தன் தாய் தந்தையருக்குப் பிரியமானவன். பொருளும் செல்வமும் உள்ளவன். பசுக்கள் காளைகள் முதலிய கால்நடைகளை உடையவன். மனைவிக்குப் பிரியமானவன். மனத்தில் கபடம் சிறிது உடையவன். முன்கோபி. கஷ்டப்படுபவர்களை ஆதரிப்பான். பெரியோர்களிடம் உபதேசம் கேட்பவன்.

22. தந்தையி னஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
கந்தன்மேல் பக்தி கொள்வன் காவலர் நேசம் செய்வன்
வந்திடு மனைவி ஒன்று வரைகிரே மிவனுக் கேதான்
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழி குன்ரூவே.

22. தன் தந்தையின் ஆஸ்தியைப் பெருக்குவான். முருகக் கடவுள்மீது பக்தியுடையவன். அரசரிடம் நட்புக்கொள்ளுபவன். இவனுக்கு மனைவி ஒருத்தியே யாவள் என்று சொல்லுகின்ரோம். முருகப்பிராணைப் பெற்ற தேவியே! நாங்கள் கூறியவை தவரு.

சகோதரனின் புத்திரபாவம்

23. புத்திர விருத்தி ஆண்பால் புகலுவோ மிரண்ட தாகும்
சித்தமாய்ப் பெண்பால் ரண்டு தீர்க்கமா மிவனுக் கேதான்
அத்திரி சொல்லும் போது அம்பிகை கேட்க லுற்ரூள்
சித்தசன் தந்தைக் கேதான் செப்பினீர் தாரம் மூன்று.

23. ஜாதகனுக்குப் பின் பிறந்தவனின் புத்திரபாவத்தைச் சொல்லுகிரோம். அவனுக்கு இரு புத்திரர்களும் இரு பெண்களும் தோன்றித் தீர்க்காயுளுடன் இருப்பர். இங்ஙனம் அத்திரி முனிவர் கூறும்போது பார்வதிதேவி கேட்கலானுள். ஜாதகனுடைய தந்தைக்கு மூன்று மனைவியர் என்று கூறினீர்களே!

24. என்னகா ரணங்க ளத்தை யியம்புவீர் முனியே என்ரூள்
அன்னையே சொல்லு கின்றேன் அவனுமுன் ஜன்மந்
[தன்னில்
கன்னிகை ஒருத்தி பேரில் கள்ளங்கள் சிலது சொல்லிப்
பின்னமாய் ஓட்டி விட்டான் பேதையும் சாபம்
[சொல்வாள்.

24. என்ன காரணத்தால் ஏற்படுவர் என்று சொல்லுங்கள் முனிவரே! என்ரூள். தாயே! சொல்லுகின்ரோம். ஜாதகனுடைய தந்தை முற்பிறவியில் பெண் ஒருத்தியின்மீது நிந்தைகள் பல

சொல்லி அவளை விரட்டி விட்டான். அப்பெண்ணும் மனம் வருந்திக் கூறுகின்றாள்.

பெண் சாபம்

25. மற்றொரு ஜன்மந் தன்னில் மங்கையர் தோஷ மாயும்
வித்தகன் தனிய னுயும் மேவிடும் குலத்தில் தோஷம்
சித்தமாய் நேரு மென்றும் செப்பிஞ ளந்த மாது
அத்தாலே மனைவி ஈனம் கூறினேம் கேளுந் தாயே.

25. அடுத்த பிறவியில் உன்னுடைய மனைவிக்குத் தோஷம் ஏற்பட்டுத் தனியளாக இருந்து நீ பிறந்த குலத்திற்கே நிங்கு ஏற் படும்படி வாழ்வாய் என்று கூறினாள் அந்தப்பெண். ஆகையினால் மனைவிக்குத் தோஷம் ஏற்பட்டது என்று சொன்னோம். தாயே!

ஜாதகனுடைய திருமணம்

26. துணைவிகள் சேதி தன்னைச் சொல்லுவோம் பின்பா
[கத்தில்
அனையவே ஜாத கர்க்கு அறைகுரே மன்றல் காலம்
இணையிலா ஒருபா னேழில் எய்திடும் மனைவி தானும்
கனமுள அந்த மாது காதலி மாதுர் வர்க்கம்.

26. உடன் பிறந்த சகோதரிகளது செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லு கின்றோம். ஜாதகனுக்குத் தனது பதினேழாம் வயதில் மணம் நேரும். அந்தப்பெண்ணும் ஜாதகனுடைய தாயின் வர்க்கத்திலிருந்து வருவாள்.

27. தென்திசை தனிலி ருந்து தேவியும் வருவா ளாகும்
அன்னவள் நிறம்சி வப்பாம் அழகுளாள் அடக்க
[முள்ளாள்
கன்னென மொழியு முள்ளாள் கபடுக ளில்லா ளாகும்
இன்னவள் தனக்குத் தாயா ரிருவர்க ளென்று
[சொன்னேம்.

27. தெற்குப் பக்கத்திலிருந்து மனைவி வருவாள் என்றோம். அவளுடைய நிறம் சிவப்பு. அழகுள்ளவள். அடக்கமுடையவள். இனிய வார்த்தைகளையே பேசுபவள். சூதுகள் இல்லாதவள். ஜாதக னுடைய மனைவிக்கு இரு தாய்மார்கள் உண்டு என்று சொன்னோம்.

ஜாதகனுடைய புத்திரபாவமும் முற்பிறவியும்

28. மகவுகள் விருத்தி தன்னை
யறைகுரேம் ஆண்பால் ரண்டு
கனமுடன் பெண்பா லிவ்வாறு
கழறுவோம் தீர்க்க மாக

அனையவே இவன்முன் ஜன்மம்
அறைகிறேம் காஞ்சி தன்னில்
சினமிலா இக்கு லத்தில்
செல்வனு முதித்தா னென்றேரும்.

28. ஜாதகனுடைய புத்திர விருத்தியைச் சொல்லுகின்றேரும். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்கமாயிருப்பர். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். காஞ்சீபுரத்தில் இதே குலத்தில் ஜாதகன் பிறந்தான் என்றேரும்.

இதுவுமது

29. உதித்துமே பெருமை பூண்டு உம்பர்க்கு அடிமை யாகி
நிதியது அதிக மாகி நேமியில் செட்டுச் செய்து
பதியினில் திருவு முண்டாய்ப் பந்துவு மெச்ச வாழ்ந்து
அதிபனும் சுகமாய் வாழ்ந்து மறலிதன் பதியைச்
சேர்ந்தான்.

29. பிறந்து, பெருமையை யடைந்து, தேவர்களுக்கு அடிமையாக வாழ்ந்து, செல்வங்கள் பெருகி, வர்த்தகம் புரிந்துவந்து, வீட்டில் இலக்குமி கடாட்சம் பெற்று, உறவினர் கொண்டாடும்படி சுகமாக வாழ்ந்து பிறகு இறந்தான்.

தாயின் குணங்கள்

30. கஞ்சனுல் வரையப் பட்டுக் காவல னிக்கு லத்தில்
மிஞ்சியே யுதித்தா னென்றேரும் முன்ஜன்ம ஊழில்
[லாமல்
தஞ்சமாய் வாழ்ந்தா னென்றேரும் சாற்றுவோம் மாதர்
[சேதி
கொஞ்சிய மொழியா ளாகும் கோதையும் சிவந்த மேனி.

30. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தான் என்றேரும். முற்பிறப்புத் தீவினைகள் இல்லாமல் வாழ்ந்து வந்தான். ஜாதகனுடைய தாயின் விவரங்களைக் கூறுகின்றேரும். கொஞ்சும் வார்த்தைகளைப் பேசுபவள். சிவப்பு நிறமுடைய சரீர முடையவள்.

31. பித்தமாம் தேகி யாவள் பிழைகளை யெண்ணு நெஞ்சம்
உத்தமி வாத தேகி உள்மனம் கபடு மில்லாள்
நித்தியம் சீல மாவள் நிதானமாய் வார்த்தை சொல்வள்
வித்தகி அன்ன மீவள் விளம்புவோம் துணைவர் தாமே.

31. பித்த தேகமுள்ளவள். தீங்குகளிழைக்க எண்ணுத மனத்தினள். வாத சரீர முடையவள். மனத்தில் கபட மில்லாதவள். நல்லொழுக்கமுடையவள். மெதுவாகப் பேசுபவள். அன்னம் அளிப்

பதில் பிரிய முடையவள். தாயே! அவளுக்குச் சகோதர பாவத்தைக் கூறுகின்றேம்.

ஜாதகனுடைய தாயின் சகோதரர்கள்

32. துணைவர்க ளாண்பா லொன்று சொல்லுவோம்
[பெண்பால் ரண்டு
கனமுடன் மூன்றும் தீர்க்கம் கனக்காவே இரண்டு தாமும்
அனையவே மாதர் பூர்வம் அறைகிறேம் தவளை தன்னில்
இணையிலா வைசியச் சேயா யிவளுமே யுதித்தா
[ளென்றேம்.

32. ஜாதகனுடைய தாய்க்கு ஒரு சகோதரனும் இரு சகோதரி களும் உண்டு என்றேம். இம் மூவரும் நீண்ட ஆயுள் உடையவர் என்றும் இரு சகோதரர் பிறந்து நிலையார் என்றும் சொல்லுகின் றேம். தாயின் முற்பிறவியைச் சொல்லுகிறேம். தவளேச்வரத்தில் ஈடில்லாத செல்வவாணிய ஒரு வைசிய குலத்தவனுக்குப் பிறந்தாள் என்றேம்.

தாயின் முற்பிறவி

33. வறுமைக ளில்லா ளாகி மைந்தர்க ளதிக முண்டாய்த்
திருமகள் விலாசம் பூண்டு ஜனங்களு மெச்ச வாழ்ந்து
வருவோர்க்கு அன்ன மீந்து மங்கையு வரனின் முன்னே
மறலியின் பதிக்குச் சென்று வந்தவ ளிவளே என்றேம்.

33. வறுமைகள் இல்லாதவளாகி பல புத்திரர்களைப் பெற்று இலக்குமி கடாட்சத்துடன் பந்து ஜனங்கள் கொண்டாடும்படி வாழ்ந்து வந்து, தன்னிடம் வந்தவர்கட்கு அன்னமளித்து வந்து, தன் கணவ னுக்கு முன்பாகவே மரணமடைந்து மீண்டும் பிறந்தவள் என்று கூறினேம்.

தாயின் மறுபிறவி

34. பின்ஜன்மம் காஞ்சி தன்னில்
பிறப்பளாம் பிரம்ம சேயாய்
அன்னையும் கேட்க லுற்றாள்
அவளிந்த ஜன்மம் தன்னில்
என்னபுண் ணியங்கள் செய்தா
ளியம்புவீர் முனியே என்றாள்
அன்னவ ளிச்சென் மத்தில்
யாவர்க்கு நல்லோ ளாகி;

34. மறு பிறவியில் காஞ்சிபுரத்தில் அந்தண குலத்தவளாய்ப் பிறப்பாள். பார்வதிதேவி கேட்கலானாள். ஜாதகனின் தாய் இப் பிறவியில் என்ன நற்காரியங்கள் செய்தாள்? அவற்றைக் கூறுங்கள்.

முனிவரே ! என்றுள். தாய் இப்பிறவியில் எல்லோருக்கும் நல்ல வளாகி ;

உயர்குலப் பிறவிக்குக் காரணம்

35. பொறுமையும் பெருமை பூண்டு புண்ணிய மனத்த ளாகிச்
சிறுமையென் றோரைக் காத்தும் தேவதா பக்தி பூண்டும்
வருவதால் பின்ஜன் மத்தில் மறைகுல முதிப்பா
[ளென்றோம்
அருமறை யோரைக் காக்கு மம்பிகை யாளே கேளாய்.

35. பொறுமையுடனும் பெருமையுடனும் இருந்து புண்ணிய மனமுடையவளாக ஏழைகளையும் கஷ்டப்படுபவர்களையும் காப்பாற்றித் தெய்வபக்தியுடன் இருந்து வருவதால் அடுத்த பிறவியில் அந்தண குலத்தில் பிறப்பாள் என்றோம். வேதங்களை யுணர்ந்தவர்களைக் காக்கும் தேவியே ! கேளுங்கள்.

ஜாதகனின் தாய் தந்தையரின் மரணகாலம்

36. தந்தையின் மரண காலம் சாற்றுவோ மிருபான் மூன்றில்
முந்திய கன்னி மாதம் மொழிகிறோம் கர்மம் தானும்
பிந்திய வன்னைக் கேதான் பேசுவோ முப்பா னென்றில்
தன்தனுர் மாதம் தன்னில் சாற்றினோம் கண்டம் தானே.

36. ஜாதகனுடைய தந்தையின் மரண காலத்தைச் சொல்லு கின்றோம். அவனுடைய இருபத்துமூன்றும் வயதில் புரட்டாசி மாதத் தில் தந்தையின் கருமங்களைச் செய்வான். பிறகு அவனுடைய முப்பத் தோராம் வயதில் மார்கழி மாதத்தில் தாய்க்குக் கண்டம் ஏற்படும்.

ஜாதகனின் பொதுயோகம்

37. ஜாதகன் யோகச் செய்கை சாற்றுவோம் பூமி சேர்ப்பன்
நீதிவான் பாக்கிய முள்ளான் நிருபர்க ளிஷ்டம்
[கொள்வன்
மாதவ ரன்பு பூண்பன் வண்டி வாகனமு முண்டு
தீதான குணங்க ளில்லான் சென்றிடம் பெருமை
[பூண்பன்.

37. ஜாதகனுடைய பொது யோகச் செய்கைகளைக் கூறுகின் றோம். விளை நிலங்களைச் சேர்ப்பான். நீதியுள்ளவன். பாக்கியமுள்ள வன். அரசர்களுக்குப் பிரியமானவன். தவங்கள் இயற்றும் பெரியோர் களிடத்தில் அன்புள்ளவன். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். தீய குணங்கள் இல்லாதவன். சென்ற இடங்களிலெல் லாம் பெருமை அடைவான்.

38. சொல்லது மேன்மை யாகும் சூட்சம புத்தி யுள்ளான்
நல்லவ னென்ற பேரை நாட்டுவான் பெருமை யுள்ளான்
வல்லிமார் மோக வாலும் வளர்பிறை போலே யோகம்
அல்லலு மில்லா லகும் அரசர்கள் பேட்டி கொள்வன்.

38. இவனுடைய வார்த்தைகள் மேன்மையாக உள்ளவை. கூர்மையான அறிவுள்ளவன். நல்லவன் என்ற பெயரை அடைவான். பெருமையுடையவன். பெண்கள் மீது மோகமுடையவன். வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் வளரும். துன்பங்கள் இவ்வாதவன். அரசர் களைப் பேட்டி காண்பான்.

39. இருபது இரண்டாண் டின்மே லிணையிலா யோகம் [வாய்க்கும்
திருமகள் வாசம் காணும் தீரமா நெஞ்ச முண்டு
பெருமையும் புகழுமுண்டு பிரபலச் செட்டு மோங்கும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

39. ஜாதகனுக்கு இருபத்திரண்டாம் வயதுக்குமேல் ஈடு இல்லாத யோகம் ஏற்படும். இலக்குமி கடாட்சம் ஏற்படும். தைரியமான மனத்தினன். பெருமையையும் கீர்த்தியையும் அடைவான். பெயர் பெற்ற வர்த்தகம் விரியும். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

40. குடும்பமும் பெரிதாய்க் காட்டும் குலவுவான் துணைவன் [ஒன்றாய்
அடைவுடன் பூமி வீடு அணிகளு மெல்லாம் முண்டு
திடமதாய்ப் பதினு யிரம்பொன் செப்புவோ மவனுக் [கேதான்
தடவரை மகளாய் வந்த சந்தியே கேட்டி டாயே.

40. குடும்பம் பெரியதாக இருக்கும். தன் சகோதரனுடன் ஒன்றுக வாழ்ந்து வருவான். இவனுடைய பூமி வீடு ஆபரணங்கள் இவைகளெல்லாம் சேர்ந்து திண்ணமாகப் பதினாயிரம் பொன் மதிப் புள்ளதாகும் என்று சொல்லுகிறோம். மலையரசின் மகளாய்ப் பிறந்த தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய மரணகாலம்

41. இன்னவன் மரண காலம் இயம்புவோ மெழுப தாண்டில்
தன்னிலே கும்ப மாதம் சதுர்த்தமி குறைபக் கத்தில்
அன்னவ னுடலம் வாடும் அறைகிறோம் பின்னும் மத்தை
உன்னதத் துவாரை தன்னில் உதிப்பனும் பிரம்ம [சேயாய்.

41. ஜாதகனுடைய மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். இவனுடைய எழுபதாம் வயதில் மாசிமாதத்தில் கிருஷ்ணபட்சம் சப்தமி திதியில் மரணமடைவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். உயர்ந்த துவாரகையில் அந்தண குலத்தவனுகப் பிறப்பான்.

குரு ஒன்பதில் இருப்பதின் பலன்

42. இதுமத்தில் ஜாத கர்க்கு இடருகள் உண்டோ வென்ன
எதுவித நோய்கள் வந்து மிலகிடு மிவனுக் கேதான்
அதுசேதி சொல்லு மென்ன அந்தணன் நவத்தில் நிற்க
விதியது தீர்க்க மென்றோம் விளம்பின மொழிகுன் றாது.

42. இதற்கு மத்தியில் ஜாதகனுக்குத் துன்பங்கள் ஏதேனும் உண்டோ என்று வினவ, எவ்விதமான நோய்கள் வந்தாலும் அவைகள் நீங்கிவிடும் என்றார். அஃது என்ன காரணத்தால் என்று கேட்க, குரு ஒன்பதாம் இடத்தில் இருப்பதால் ஆயுள் தீர்க்கம் என்றோம். நாங்கள் கூறியது தவறாது.

ஜனனகாலதசை

43. புதல்வனின் ஜனன காலம் புததசை தனிலி ருப்புச்
சிறந்திடு பதினேந் தாண்டும் திங்களு மூன்ற தாமே
அறைகிறோம் பலனை யாங்கள் அவனுக்குத் துணைவி ருத்தி
பதியினில் துணைவி கட்குப் பகருவோம் சுபங்கள் தாமே.

43. ஜாதகனுடைய ஜனன காலத்தில் புத மகாதசையில் இருப்பு பதினேந்து வருடங்களும் மூன்று மாதங்களுமாம். அக்காலத்திய பலன்களைச் சொல்லுகின்றோம். ஜாதகனுக்குச் சகோதரர்கள் பிறப்பார்கள். சகோதரிகளுக்குச் சுபகாரியங்கள் ஏற்படும்.

44. மாதரு துணைவ னுக்கு மனைவியும் வருவா ளென்றோம்
மேதினில் புத்திர விருத்தி விளம்புவோம் தந்தைக்
[கேதான்
போதவே செட்டு ஓங்கும் பூமியும் சேரு மென்றோம்
தீதுகள் சிலவே நேர்ந்து தீர்ந்திடு மென்று சொன்னோம்.

44. ஜாதகனுடைய அம்மானுக்குத் திருமணம் நிகழும். தந்தைக்கும் புத்திர விருத்தி ஏற்படும். வர்த்தகம் பெருகும். விளை நிலங்கள் சேரும். சில தீங்குகள் நேர்ந்து உடனே விலகும் என்றோம்.

45. பலபலச் செட்டு மோங்கும் பாக்கிய மிகவே சேரும்
தலமதில் திருவும் சேரும் தானதர் மங்கள் செய்வன்
நலமுளார் நேசம் கொள்வன் நவிலுவோம் சல்லியம்
[நீங்கும்
பலவிதச் சேதி யெல்லாம் பகருவோ மிரண்டி லேதான்.

45. வியாபாரம் பிரபலமாகப் பெருகும். அதிகமான பாக்கியம் ஏற்படும். வீட்டில் இலக்குமி வாசம் செய்வாள். தான தர்மங்களைச் செய்து வருவான். நன்மை மிக்கவரின் நட்பைக்கொள்ளுவான். கடன் உபத்திரவம் விலகும். மற்றும் பற்பல சேதிகளை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேம்.

தந்தையின் மறுபிறவி

46. தந்தையின் பின்னுன் மத்தைச் சாற்றுவோம் தணிகை
[தன்னில்
மூந்திய சத்திரியச் சேயா யெய்துவான் பெருமை பூண்டு
தன்தன மதிக முண்டாய்ச் செட்டுக்கள் மிகவே செய்வன்
தந்தியைப் பெற்ற மாதே சாற்றின மொழிகுன் ருவே.

46. ஜாதகனுடைய தந்தையின் மறுபிறவியைச் சொல்லுகின்றேம். திருத்தணிகையில் சத்திரிய குலத்தவனுகப் பிறந்து பெருமை அடைந்து அதிகமான செல்வத்தைப் பெற்று வர்த்தகங்களை விரிவாகச் செய்து வருவான். விநாயகனைப்பெற்ற தேவியே! நாங்கள் கூறியவை தவரு.

ஜாதகம் 16

1. சிங்கமும் ஜனன மாகச் சேல்சனி நந்தி பானு
மங்கலன் வீணை புக்க மால்புகர் மேட மாகத்
திங்களு மரசன் ராகு சஷ்டமம் கேது வண்டி
பொங்கமாய்க் கிரகமிவ் வாறு சேர்ந்ததால் பலன்சொல்
[வீரே.

1. லக்கினம் சிம்மமாகவும், சனி மீனத்திலும், சூரியன் விருச்சிகத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், புதன் சுக்கிரன் மேடத்திலும், சந்திரன் குரு ராகு ஆகியிடமாகிய மகரத்திலும், கேது கடகத்திலுமாக நவக்கிரகங்கள் இருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள்.

கிரகநிலை

சனி	புதன் சுக்கிரன்	சூரியன்	செவ்வாய்
	இராசி சக்கரம்		கேது
சந்திரன் குரு ராகு			லக்கினம்

ஜாதகனின் வீட்டுநிலை

2. குறுமுனி சொல்லு கின்றார் கோதையே ஆணும் ஜன்மம்
வருமில்லம் வடதென் வீதி மால்மாரி காளி தென்கீழ்
பெருவயி றப்ப னிற்கும் பேசுவோம் தக்ஷி ணத்தில்
கருமுனி யம்மன் கோஷ்டம் கங்கைமா நதியு முண்டே.

2. அகத்திய முனிவர் கூறுகின்றார். தாயே! இஃது ஆண் மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியில் உள்ளது. திருமாலின் ஆலயமொன்றும் மாரியம்மன் கோவிலும் காளி கோவிலும் வீட்டுக்குத் தென் கிழக்கில் உள்ளன. தெற்குப் பக்கத்தில் விநாயகர் ஆலயம் ஒன்று உளது. முனீச்வரன் கோவிலும் அம்மன் கோவிலும் அருகில் ஒரு புண்ணிய ஆறும் உண்டு.

3. ஈசனும் கீழ்ப்பால் தங்கும் இணையிலாச் சோலை யுண்டு
பாசமாய் மேற்கு வாடை பருகிய சமவூர் தன்னில்
வாசமா மிந்தப் பாலன் அவன்கங்கை வம்ச மென்றோம்
ஆசையா யிடபால் கொள்ளும் அம்பிகை யாளே கேளாய்.

3. கிழக்குப் பக்கத்தில் சிவபெருமான் கோவில் இருக்கும். அங்கு பெரியதொரு தோட்டம் ஒன்று இருக்கும். மேற்கு வரிசையில் உள்ளது ஜாதகன் வீடு. இங்ஙனம் உள்ள சம நிலையான ஊரில் வேளாள குலத்தவனுக ஜாதகன் பிறந்தவன் என்று சொல்லுகின்றோம். அன்புடன் சிவபெருமானுக்கு இடப்பக்கம் வீற்றிருக்கும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகனின் தந்தையின் குணங்கள்

4. இவன்பிதா குணத்தை யாங்கள் எடுத்துமே யுரைக்கக் [கேளாய்
அவனியில் மால்நி றத்தான் அதிர்ஷ்டவான் ஈகை [கொஞ்சம்
நவனியில் மர்ம முள்ளான் நாட்டினில் கிருஷி செய்வன்
தவசிக ளுறவு கொள்ளான் தன்தேகம் பித்தச் சூடு.

4. ஜாதகனுடைய தந்தையின் குணத்தை நாங்கள் எடுத்துச் சொல்லுகின்றோம். கேளுங்கள். திருமாலைப் போன்ற கரிய நிறமுள்ளவன். அதிருஷ்டமுள்ளவன். பிறருக்குக் கொடுக்கும் குணம் சிறிதளவே யுள்ளவன். ரகசிய முள்ளவன். விவசாயம் செய்து வருவான். தவம் செய்பவரிடம் உறவு கொள்ளாதவன். பித்தச் சூட்டுத் தேக முடையவன்.

5. வறுமைக ளில்லா ளுகும் மாடுகள் விருத்தி யுள்ளான்
பெரிதான குடும்பி யாவன் பூமியால் சல்லிய மில்லான்
உறன்முறைக் கினிய ளுகும் ஒண்டொடி யார்க்கு நேயன்
சரியிலா வார்த்தை சொல்வன் சந்தேக மனத்த னுமே.

5. தரித்திரம் இல்லாதவன். கால்நடைகள் பெருக்கம் உள்ளவன். பெரிய குடும்பியாக இருப்பான். பூமியால் கடன் உபத்திரவம் இல்லாதவன். தன் சுற்றத்தாருக்குப் பிரியமானவன். தன் மனைவிக்குப் பிரியமானவன். நேர்மையில்லாத பேச்சுக்களைப் பேசுபவன். சந்தேகமுள்ள மனத்தினன்.

6. கடன்கேளான் தந்திர வாதி காவலன் மூர்க்க முள்ளான்
உடன்படான் பழிக ளுக்கு உறுதியா மனத்தா ளுகும்
அடவுட னல்ப வுண்டி உவற்பொரு ளிச்சை யுள்ளான்
தடவரை மகளே யாங்கள சாற்றிய மொழி குன்றுவே.

6. கடன் கேட்காதவன். தந்திரசாலி. மூர்க்கக் குணமுடையவன். (அபவாதங்கள்) நிந்துகளைச் செய்ய உடன்படாதவன். திடமான மனத்தினன். சிறிதளவே ஆகாரத்தை புசிப்பவன். (உப்பிட்ட) பொருள்மீது விருப்பமுடையவன். மலையரசின் மகளே! நாங்கள் கூறிய வார்த்தைகள் பொய்யா.

ஜாதகனுடைய தந்தையின் சகோதரர்கள்

7. துணைவர்கள் பதினொன் றுகும் சுந்தரன் மூன்று தீர்க்கம்
கனமுடன் பெண்பா லைந்து கழறுவோம் தீர்க்க மாகும்
பிணையாகு மற்ற வெல்லாம் பேசுவோம் துணைவர் வேறுய்
அனையவிக் குணத்தா னுக்கு அவனுமே அஞ்சாம்
[ஐன்மம்.

7. ஜாதகனுடைய தந்தையின் சகோதரர்கள் பதினொருவர் ஆவர். மூன்று சகோதரர்களும் ஐந்து சகோதரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். மற்றவர்கள் இறந்து விடுவர். அந்தச் சகோதரர்களைப்பற்றிய விஷயத்தைத் தனியாகப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். இவ்விதக் குணங்களுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் ஐந்தாம் பிறவியாகப் பிறப்பான்.

ஜாதகனுடைய குணங்கள்

8. உதிப்பனு மிவனே யம்மா உரைக்கிறே மிவன்கு
[ணத்தைத்
ததிநெய்பா லிஷ்டம் கொள்வன் தன்தேக மிருநி
[றத்தான்
சதியிலா மனத்தா னுகும் சந்தேகம் பொறுமை யுண்டு
நதிபல தீர்த்தம் தோய்வன் நாயகன் சலுகை கொஞ்சம்.

8. இந்த ஜாதகன் இவ்வாறு பிறப்பான் என்றோம். தாயே! இவனுடைய குணத்தைக் கூறுகின்றோம். தயிர் நெய் பால் இவைகளில் விருப்பமுடையவன். கருநிறமுள்ள தேக முடையவன். தீங்குகள் இல்லாத மனத்தினன். சந்தேகமும் பொறுமையும் உள்ளவன். பற்பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடுபவன். சிறிது சலுகை யுடையவன்.

9. கல்வியும் கொஞ்ச முள்ளான் கனதனம் பின்னு
[ளுள்ளான்
நல்லவ னுகி வாழ்வன் நயம்படக் கூறு வானும்
புல்லிய குறவு கொள்ளான் பூமியில் கிருஷி செய்வான்
வில்நுதல் மார்கள் நேயன் வித்தகி கேட்டி டாயே.

9. சிறிதே கல்வியறிவுள்ளவன். பெரும் செல்வத்தைப் பிற்காலத்தில் பெறுவான். நல்லவனுகி வாழ்ந்து வருவான். நயமாகப் பேசுபவன். அற்பர்கள் உறவு கொள்ளாதவன். உலகில் விவசாயம் செய்து வருவான். வில்லைப்போன்ற வளைந்த புருவங்களையுடைய பெண்களுக்குப் பிரியமானவன். தாயே! கேளுங்கள்.

10. ரோமங்க ளுடையா னுகும் நுவலுப தேச மில்லான்
சேமமாம் குடும்ப முள்ளான் திருமகள் வாச முள்ளான்
தாமதக் குணத்தா னுகும் தைரியன் சுகபு சிப்பன்
தீமையு மெண்ண னுகும் தேவியே கேட்டி டாயே.

10. ரோமங்கள் உள்ளவன். பெரியோர்களிடம் உபதேசம் கேட்காதவன். செளக்கியமான குடும்பம் உள்ளவன். இலட்சுமி விலாச முள்ளவன். தாமதமான குணத்தினன். தைரியசாலி. சுகமாகச் சாப் பிடுவதில் பிரியமுள்ளவன். தீங்குகள் செய்ய மனத்தாலும் எண்ணு தவன். தேவியே ! கேளுங்கள்.

ருருத்திர ரேகை

11. கரமதில் ருத்திர ரேகை கனத்திடும் பூமி தானும்
உரன்முறை மெச்ச வாழ்வ னுகைவா னடக்க முள்ளான்
அரன்பத்தி உடைய னுகு மவசர நடையு முள்ளான்
பெருமவர் நேசம் கொள்வன் பூமிகள் விருத்தி செய்வன்.

11. கையில் உருத்திர ரேகை உள்ளவன். வீசா பூமிகள் பெருகும். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். ஊகமுள்ளவன். அடக்க முடையவன். சிவபக்தி யுடையவன். வேக மாக நடக்கும் இயல்பினன். பெரியோர்களிடம் நட்புக் கொள்ளுபவன். விசா நிலங்களைப் பெருக்குவான்.

ஜாதகனுடைய சகோதரர்கள்

12. இவனுடைத் துணைவர் தம்மை இசைக்கிறே மீரஞ் சாகும்
அவனியி லாண்பா லொன்று அவனுமே யிளைய னுகும்
நவனியில் பெண்பால் ரண்டு நாட்டுவோம் தீர்க்க மாக
அவர்களு முன்பின் னுக அறைகிறே மிவனுக் கேதான்.

12. ஜாதகனுடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். அவர் பதின்மர் ஆவர். அவர்களில் சகோதரன் ஒருவன் உண்டு. அவன் ஜாதகனுக்கு இளையவன். இரு சகோதரிகள். ஆகிய மூவரும் நீண்ட ஆயுள்உள்ளவர்கள் என்றேம். அவ்விரு சகோதரிகளும் ஜாதகனுக்கு முன்பின்னுகப் பிறந்தவர்கள் என்றேம்.

ஜாதகனின் இளைய சகோதரனின் குணம்

13. கனிஷ்டனும் வருவா னென்று கழறுவோ மவன்கு [ணத்தை
இனமதுக் கஞ்சா னுகும் இடறுக ளதிக முள்ளான்
கனமுள புத்தி யாவன் கரம்காலு வலிவு முள்ளான்
பிணைப்பான வார்த்தை சொல்வன் பேதையர் மோக [வாலும்

13. ஜாதகனுடைய இளைய சகோதரனின் குணத்தைச் சொல்லுகின்றோம். தன் இனத்தாருக்குப் பயப்படாதவன். துன்பங்கள் அதிகமுள்ளவன். கனத்த புத்தி யுள்ளவன். கை கால்கள் திடமாக உள்ளவன். பிறரைப் பிணைக்கும் வார்த்தைகளையே பேசுபவன். பெண்களின்மீது மோகங் கொள்ளுபவன் என்றோம்.

14. அன்னங்கள் ளகுவா யுண்பன் அதிகமாய்ப் பதார்த்தங்
[கொள்வன்
கன்னென மொழியே சொல்வன் கபடுளான் தந்திர வாதி
இன்னவன் கல்வி யுள்ளான் இவன்சிறு தீனி கொள்வன்
பன்னியே பேச வல்லன் பாக்கிய முடை யனமே.

14. சிறிதாகவே அன்னம் புசிப்பவன். காய்கறிகளை அதிகமாகச் சாப்பிடுபவன். இனிய வார்த்தைகளையே பேசுபவன். கபட முள்ளவன். தந்திரசாலி. கல்வி யறிவுள்ளவன். இவன் சிற்றுண்டிகளைச் சாப்பிடுவதில் பிரிய முடையவன். பன்னிப் பன்னிப் பேசுபவன். பாக்கியசாலி.

15. அவசரக் குணத்தா னுகும் ஆவுகள் விருத்தி யுள்ளான்
இவனுக்குத் தாரம் ஒன்று இயம்புவோம் புத்திர விருத்தி
நவமதில் ஆண்பால் ரண்டு நாயகி அவ்வா ருகும்
பவமுள விருத்தி யாகும் பருகாவே மற்ற வெல்லாம்.

15. அவசரமான குணத்தினன். பசுக்கள் அதிகமாக உள்ளவன். ஜாதனுடைய இளைய சகோதரனுக்கு மனைவி ஒருத்தியே என்றோம். அவனுக்குப் புத்திர விருத்தியைச் சொல்லுகின்றோம். ஒன்பது குழந்தைகள் தோன்றுவர். அவர்களில் இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். மற்றக் குழந்தைகள் நிலையா.

ஜாதகனின் திருமணக் காலம்

16. இன்னமும் சிலவே சேதி யியம்புவோ மிரண்டி லேதான்
அன்னவன் மணத்தின் கால மறைகிறே மொருபா
[னெட்டில்
கன்னிகை தென்கீழ் தன்னில் காதலி வருவா ளாகும்
தன்னிலே யிருசி வப்புச் சமதேக மடக்க முள்ளான்.

16. இன்னும் சில விஷயங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய திருமணக் காலத்தைக் கூறுகின்றோம். பதினெட்டாம் வயதில் தென் கிழக்குப் பக்கத்திலிருந்து மனைவி வருவாள் என்றோம். அவள் கருமை கலந்த சிவந்த நிறமும் சமமான உடலமைப்பும் உள்ளவள். அடக்க முடையவள்.

ஜாதகனின் மனைவியின் குணங்கள்

17. முன்கோபம் பின்பு சாந்த மூண்மையா மனத்தா ளாகும்
தன்பந்து மெச்சவாழ்வள் சரசமாய் வார்த்தை சொல்வள்
அன்பிலார் தம்மைச் சேராள் யாவர்க்கு நல்லோ ளாவள்
சொன்னசொல் தவரு ளாகும் சுந்தரி கேட்டி டாயே.

17. முன் கோபி. பிறகு சாந்த மடைவாள். உண்மையான மனத்தினள். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். சரசமாகப் பேசுபவள். அன்பில்லாதவருடன் சேராதவள். எல்லோருக்கும் நல்லவளாவாள். சொன்ன சொல் தவறுதவள். அழகியே! கேளுங்கள்.

ஜாதகனின் புத்திர பாவம்

18. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணும்
சுத்தமாய் முனிவர் கூற ஜயமுனி கேட்க் லுற்றார்
வித்தகன் தனக்குப் புத்திரர் வாராது என்று சொன்னீர்
குத்தத்தை சொல்லு மென்னக் கூறுவார் முனிவர் தாமே

18. ஜாதகனுக்குப் புத்திர பாவத்தைக் கூறப் பலமில்லை. இங்ஙனம் முனிவர்கள் சொல்ல ஜய முனிவர் கேட்கலானார். ஜாதகனுக்குப் புத்திரர்கள் இல்லை என்று சொன்னீர்களே! என்ன குற்றம் என்று சொல்லுங்கள் என, முனிவர் கூறுகின்றனர்.

புத்திரதோஷந்திற்குரிய கிரகநிலை

19. அஞ்சுக்கு உடையோன் நீச மாகியே ஆறில் சேர
நஞ்சுமே கூடி நிற்க நற்சனி அஞ்சைப் பார்க்கத்
துஞ்சிடு மகவை யென்றோம் ஜயமுனி கூறு கின்றார்
[1]கஞ்சனண் பகலும் பத்தில் காரியும் குருவும் பார்க்க.

19. ஐந்தாம் இடத்துக்குடைய குரு ஆறாம் இடத்தில் நீசமாக ராகுவுடன் கூடி இருப்பதாலும், சனி புத்திர ஸ்தானத்தைப் பார்ப்பதாலும் புத்திரர்கள் பிறந்தாலும் இறந்து விடுவர் என்றார். ஜய முனிவர் சொல்லுகின்றார். சூரியன் பத்தாமிடத்திலிருந்து அவ்விடத்தைச் சனியும் குருவும் பார்ப்பதால் ;

ஜாதகனின் முற்பிறவி

20. முன்ஜன்ம வினையி னாலே முயலுவோம் புத்திர தோஷம்
என்னவு முதனீ நீங்க வியம்புவீர் முனியே யென்றாள்
அன்னவன் முன்ஜன் மத்தி லாலங்கா டதற்கு மேல்பால்
உன்னதச் சிற்றார் தன்னி லுதிப்பனும் சேடர் வம்சம்.

20. முற்பிறப்பில் செய்த தீவினையால் புத்திர தோஷம் ஏற்பட்டது என்றோம். என்ன தீச்செயல்கள் செய்தான்? அவற்றைக் கூறுங்கள் முனிவரே ! என்று பார்வதி கேட்டாள். ஜாதகன் முற்பிறவியில்

1. சூரியன்.

திருவாலங்காட்டிற்கு மேற்கில் உள்ள சிறிய ஊரில் சேடர் குலத்தில் பிறந்தான்.

21. உதித்துமே நெசவு செய்து ஊர்பூமி தனங்க ளுண்டாய்ச்
சதிபிலா மனைவி மைந்தர் தான்வாழுங் காலந் தன்னில்
விதிக்கிரோம் வந்த வூழை விதவைமேல் குற்றம் சாட்டிப்
பதியதை வீட்டு நீக்கிப் பாவையை துரத்த லுற்றான்.

21. பிறந்து, நெசவுத் தொழில் செய்துவந்து, பூமிகள் செல்வங்கள் இவைகளைப் பெற்றுத் தீங்குகளில்லாத மனைவி மக்களை யடைந்து வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். ஒரு விதவைப் பெண்மீது குற்றங் கூறி வீட்டைவிட்டு அவளை விலக்கி (ஊரை விட்டே விரட்டி) விட்டான்.

விதவையின் சாபம்

22. அந்ததோர் மாது தானும் அறைகுவாள் மனவெ றுப்பால்
சந்ததி தோஷ மாகும் செல்வமும் குறைவு நேரும்
வந்திடு மறுஜன் மத்தில் மனைவிமைந் தருக்குத் தோஷம்
இந்தவாறு சொல்லி யேதான் யேகினாள் விதவை மாது.

22. அந்தப் பெண்ணும் மனவெறுப்படைந்து கூறுகின்றாள். உனகுப் புத்திர தோஷம் உண்டாகும். செல்வமும் குறைந்து போகும். உனக்கு ஏற்படும் அடுத்த பிறவியிலும் மனைவிக்கும் புத்திரர் கட்கும் தீங்குகள் உண்டாம். இம்மாதிரி சொல்லிவிட்டு அந்தக் கைம்பெண் சென்றுவிட்டாள்.

23. மாதுவின் தோஷம் தானு முறைந்தது அச்சென் மத்தில்
தீதுண்டு சுதர்க ளுக்குச் செல்வமும் குறைவு நேர்ந்து
தோகைவா கனத்தா னுக்குச் சுந்தர னடிமை செய்து
மேதினில் மரண மாகி விளங்கினு னிவனே என்றோம்.

23. அப்பிறவியிலேயே பெண்ணின் சாபமும் ஏற்பட்டது. புத்திரர்களுக்குத் தீங்கு உண்டாகிச் செல்வமும் குறைந்து மயிலை வாகன மாக உடைய சுப்பிரமணியக் கடவுக்குத் தொண்டுகள் பல செய்து மரணமடைந்து இப்பிறவிமில் பிறந்தவன் இவன் என்று சொன்னோம்.

புத்திர தோஷம் நீங்கச்சாந்தி

24. [1]ஆதலால் அந்தத் தோஷம் அணுகிற்று விச்சென் மத்தில்
மைந்தர்கள் தோஷ மென்றோ மறைகிரோ மதற்குச் சாந்தி
சந்ததம் காஞ்சி தன்னில் சண்முகம் கோஷ்டம் தன்னில்
இன்னவன் மனைவி யோடு ஏகியே அர்ச்சித் தேத்தி
எந்தையே யேழு கார்த்தி இடைவிடாச் சென்று மேதான்

1. இப்பாட்டில் ஓரடி மிகுந்துள்ளதைக் கவனிக்க.

24. ஆதலால் அந்தத் தோஷம் இப்பிறவியிலும் தொடர்ந்தது. புத்திரர்கட்குத் தோஷம் ஏற்படும். அது விலகச் சாந்தி யொன்று சொல்லுகிறோம். காஞ்சிபுரத்தில் உள்ள சுப்பிரமணியக் கடவுளின் ஆலயத்திற்கு இவன் தன் மனைவியுடன் சென்று முருகக்கடவுளுக்கு ஏழு கார்த்திகைகள் இடைவிடாமல் அர்ச்சனைசெய்து துதித்து;

25. மூவேழு பரத்துக் கன்னம் முதல்வனு மீந்து பின்னுஞ்
சாலவே யில்லஞ் சென்று சஷ்டியின் விரதம் கொண்டால்
ஞாலமேல் புத்திர ருண்டாம் நாயகன் செய்யா னகில்
பாலர்கள் தோஷ மென்றோம் பார்வதி கேட்டி டாயே.

25. இருபத்தொரு பிரதேசங்களுக்கு அன்னம அளித்துப் பிறகு வீட்டுக்குச் சென்று ஒவ்வொரு சஷ்டி தினத்திலும் விரதம் மேற்கொண்டானில் ஜாதகனுக்குப் புத்திரர்கள் பிறப்பர். இவன் அலட்சியமாகச் செய்யாவிடில் குழந்தைகள் தோன்ரு. பார்வதி தேவியே! கேளுங்கள்.

தாயின் விபரம்

26. இப்படிச் செய்வா னகி லியியம்புவோ மாண்பா லொன்று
செப்புவோம் பெண்பா லவ்வாறு தீர்க்கமா மிவனுக்
[கேதான்
ஒப்புடன் மாதுர் சேதி உரைக்கிறோம் கேளும் தாயே
மெப்புட னிருநி றத்தாள் வித்தநி கபடு மில்லாள்.

26. நாங்கள் கூறியபடி செய்து வந்தோனால் ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவைகளாக இருக்கும். ஜாதகனுடைய தாயின் செய்திகளைச் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள். கருமைகலந்த சிவந்த நிறமுடையவள். கபடமில்லாதவள்.

27. நிந்தையு மூடைய ளாகும் நிதானமாய் வார்த்தை
[சொல்வள்
பந்துவுக் கிஷ்ட முள்ளாள் பதரிலாள் பொறுமை சாலி
சந்ததம் மந்த தேகி தயாளமாம் குணத்தா ளாகும்
கந்தனைப் பெற்ற மாதே கழறுவோம் துணைவர் தம்மை.

27. பழிகள் உடையவள். நிதானமாகப் பேசுபவள். தன் சுற்றத்தாருக்குப் பிரியமானவள். அற்ப குணங்கள் இல்லாதவள். பொறுமை யுடையவள். மந்தமான சுபாவமுள்ளவள். தயாளகுணத்தினள். முருகக் கடவுளைப் பெற்ற தேவியே! அவளுக்கு உடன் பிறந்தவரைப் பற்றிக் கூறுகின்றோம்.

ஜாதகனின் தாயின் சகோதரர்

28. ஓரஞ்சு துணைவ ராகும் உரைக்கிறோம் ஆண்பா லொன்று
தீரமாய்ப் பெண்பா லவ்வாறு செப்புவோ மிவளுக்
[கேதான்
கூறுவோ மாண்பால் சேதி கோதைய ரிருவ ராகும்
பாரினில் நிராமச் செட்டுப் பண்ணுவா னிவனே என்றோம்.

28. ஐந்து சகோதர சகோதரிகள் உண்டு என்றும், ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லுகின்றும். இந்த ஜாதகனுடைய சகோதரனைப் பற்றிச் சொல்லுகின்றும். அவன் இரு மனைவியரை அடைவான். கிராம வியாபாரம் செய்து வருவான் என்று சொன்னேம்.

29. அன்னியப் பெண்கள் மோகன் அதிட்டவான் யார்க்கு
[நல்லான்
கன்னென மொழியே சொல்வன் கனதன முடைய
[னுவன்
அன்னவ னல்ப வஸ்து அருந்துவான் பூமி சேர்ப்பன்
தன்மனை நிந்தை யுள்ளான் சத்தியே மேலுங் கேளே.

29. வேற்றுப் பெண்களின் மீது மையல் கொள்ளுவான். அதிருஷ்டமுடையவன். எல்லோருக்கும் நல்லவன். இனிய வார்த்தைகளையே பேசுபவன். பெருஞ் செல்வம் உடையவன். சிறிதான உணவையே கொள்ளுபவன். வினை நிலங்களைச் சேர்ப்பான். தன் வீட்டைப் பற்றிய பழிச்சொல்லை உடையவன். தாயே! மேலும் கேளுங்கள்.

மாமனின் புத்திரபாவம்

30. மதலைகள் ஆண்பால் ரண்டு அவ்விதம் பெண்பா லாரும்
பதியது புதிதாய்ச் செய்வன் பாருளோர்க் குதவி
[செய்வன்
நிதமுமே சுகபு சிப்பன் நேரிழைப் பிரிய னுவன்
விதவிதச் செட்டுச் செய்வ னரசர்க ளிஷ்டங் கொள்வன்.

30. குழந்தைகளில் இரு ஆண்களும் இரு பெண்களும் உண்டு. புதிய வீட்டைக் கட்டுவான். உலகத்தவருக்கு உபகாரி. தினந்தோறும் நன்றுகச் சாப்பிடுவதில் பிரியன். மனைவிக்குப் பிரியமானவன். பல விதமான வியாபாரம் செய்து வருவான். அரசர்கட்கும் பிரியமானவன்.

தாயின் முற்பிறவி

31. அன்னையின் பூர்வம் தன்னை யறைகுறும் காஞ்சி
[கீழ்ப்பால்
தன்னிலே யருகி லேதான் சௌராஷ்ட்ர குலமு தித்து
இன்னமும் செல்வம் பெற்று இவள்பந்து மெச்ச வாழ்ந்து
மன்னியே வருவோருக்கு அன்னமும் தாக மீந்து ;

3. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றும். காஞ்சிபுரத்துக்குக் கிழக்கில் அருகாமையில் உள்ள ஓர் ஊரில் சௌராஷ்டிர குலத்தில் பிறந்து அதிகமான செல்வத்தை யடைந்து தன்

சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வந்து, அண்டி வந்தவர்கட்கு அன்னமும் பானமும் அளித்து வந்து ;

தாயின் மறுபிறவி

32. தேவதாப் பணியும் செய்துத் தேவியு மரண மாகித்
தாவிய விக்கு லத்தில் தானவள் வந்தா ளென்ரேம்
மேவிய பின்சென் மத்தை விளம்புவோம் காஞ்சி தன்னில்
ஆவலாய்த் தெய்வ வம்ச மவளுமே வுதிப்பா ளென்ரேம்.

32. தெய்வப் பணியும் செய்து வந்து பிறகு மரண மடைந்தான். மீண்டும் இக்குலத்தில் தோன்றினாள். அடுத்த பிறவியைச் சொல்லுகின்ரோம். காஞ்சிபுரத்தில் தேவ வம்சத்தில் பிறப்பாள் என்று சொல்லுகின்ரோம்.

ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவி

33. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் போரூர்
[தன்னில்
எந்தையே யிக்கு லத்தில் இவனுமே வுதித்து மேலும்
முந்திய பூமி யுண்டாய் முயற்சியாய்க் குடும்பி யாகித்
தன்தன மதிக முண்டாய்த் தானவன் வாழ்ந்தா
[னென்ரேம்.

33. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்ரோம். திருப்போரூரில் இதே குலத்தில் பிறந்து அதிகமான விளை நிலங்களைப் பெற்றுச் செழிப்புள்ள குடும்பத்தை யடைந்து தன்னுல் சம்பாதிக்கப்பட்ட பொருளை அதிகமாகப் பெற்று வாழ்ந்து வந்தான் என்ரோம்.

தந்தையின் மறுபிறவி

34. சுகதுக்கங் கலந்து வாழ்ந்து சுந்தரன் மரண மாகித்
தகைமையா யிக்கு லத்தில் தானவ னுதித்தா னென்ரேம்
வகையுடன் பின்ஜன் மத்தை யறைகின்ரே மாலங் காட்டில்
பகைமோ யிக்கு லத்தில் பாலனு முதிப்பா னென்ரேம்.

34. சுகமும் துக்கமும் கலந்து வாழ்ந்து வந்து ஜாதகனின் தந்தை மரணமடைந்து இக்குலத்தில் பிறந்தான் என்ரோம். தந்தையின் மறுபிறவியைச் சொல்லுகின்ரோம். திருவாலங்காட்டில் தீமைகளில்லாத இதே குலத்தில் பிறப்பான் என்ரோம்.

35. பாக்கிய முடைய னகிப் பாரினில் கீர்த்தி மானுய்
யோக்கிய னகி வாழ்வ னுரைக்கின்ரே மிவர்கள் காலம்
மார்க்கமா யாரு ரூண்டில் மார்கழி மாதந் தன்னில்
சீக்கிரம் தந்தை கண்டஞ் செப்பின மொழிகுன் ரூவே.

35. பாக்கியங்களோப் பெற்றுப் புகழுடன் உலகில் யோக்கியனாக வாழ்ந்து வருவான். ஜாதகனின் தாய்தந்தையர்களின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய முப்பத்தாரும் வயதில் மார்கழி மாதத்தில் தந்தை இறப்பான். நாங்கள் கூறியவை தவரு.

தாயின் மரணமும் ஜாதகனின் ஆயுளும்

36. மாதுரு மரண கால மறைகிறோம் நாற்ப தாண்டில்
மேதினில் கூனி மாதம் விளம்புவோங் கண்டந் தானே
ஓதுவேன் ஜாத கர்க்கு உரைக்கிறோ மறுபா ஞறில்
சூதிலாச் சிம்ம மாதம் சதுர்த்தசி குறைப்பக் கத்தில்;

36. ஜாதகனுடைய தாயின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். நாற்பதாம் வயதில் பங்குனி மாதத்தில் மரணம் ஏற்படும். ஜாதகனுக்குத் தனது அறுபத்தாரும் வயதில் ஆவணிமாதம் கிருஷ்ண பட்ச சதுர்த்தசி திதியில்;

ஜாதகனின் மறுபிறவி

37. மரணமே யாகி யேதான் மறுஜன்மம் விரிஞ்சி தன்னில்
திறமையாய்ப் பிரம்ம வம்சம் ஜனித்துமே பெருமை [பூண்டு
உறன்முறை மெச்ச வாழ்ந்து உலகினில் நல்லோ னாகி
நெறியுடன் வாழ்வா னாகும் நிமலியே கேட்டி டாயே.

37. மரண மடைந்து அடுத்த பிறவியில் விரிஞ்சி நாட்டில் அந்தண குலத்தில் பிறந்து பெருமை யடைந்து தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து, உலகில் நல்லவனாகி நேர்வழியில் ஒழுக்கத்துடன் வாழ்ந்து வருவான். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் பொதுயோகம்

38. இன்னவன் பொதுயோ கத்தை
இயம்புவோம் சல்லிய மில்லான்
அன்னவன் வறுமை யில்லான்
யாவர்க்கு முதவி செய்வன்
தன்னிலே கிருஷி செய்வன்
சஞ்சல மில்லா னாமே
இன்முகங் குடும்ப மொன்றாய்
இருப்பனு மென்று சொன்னோம்.

38. ஜாதகனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றோம், துன்பங்கள் இல்லாதவன். தரித்திரம் அடையாதவன். எல்லாருக்கும் உபகாரி. விவசாயம் செய்து வருவான். சஞ்சல மில்லாதவன். மலர்ந்த முகத்துடன் இருப்பான். குடும்பம் ஒன்றாகவே இருந்து வரும் என்று சொன்னோம்.

39. பூமியும் பரிபா லிப்பன் புண்ணியங் கொஞ்சம் செய்வன்
நேமியி லுதவி செய்வான் நிகர்தந்தை மேலாய் வாழ்வன்
தீமையை விரும்பா னுகும் செய்நிலம் பணிகள் பாக்கியம்
வாமியே ழாயி ரம்பொன் வந்திடு மென்று சொன்னேம்.

39. பூமியைக் காத்து வருவான். சிறிதே நற்காரியங்களைச் செய்து வருவான். உலகில் உள்ளவர்கட்கு உபகாரம் செய்து வருவான். தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். தீமையைச் செய்ய எண்ணுத வன். இவனுடைய நிலங்கள் ஆபரணங்கள் முதலியவை ஏழாயிரம் பொன் மதிப்புடையன என்று சொன்னேம்.

ஜனனகால தசை

40. ஜனித்திடு காலந் தன்னில் சந்திரன் தசையி ருப்புக்
குனித்திடு வாண்டு நான்குகூறுவோர் திங்க ளொன்று
இனமதில் சூத முண்டு இவனுக்குத் துணைவர் விருத்தி
சினமுண்டு காலி சேதம் தேகமும் நலிக ளாமே.

40. ஜாதகனது ஜனன காலத்தில் சந்திரமகாதசையில் இருப்பு நான்கு வருடங்களும் ஒரு மாதமும் ஆம். அக்காலத்தில் வீட்டில் அசுபம் நிகழும். இவனுக்குச் சகோதர விருத்தி ஏற்படும். தீங்குகள் ஏற்படும். கால் நடைகளுக்குச் சேதமும் உடல் நலிவும் காணும்.

41. குடும்பத்தில் கலக முண்டு கூறுவோம் விரோதம்
[காணேம்
அடைவுடன் களவு போகும் யாவரும் பகையு முண்டு
உடனேதான் செலவு முண்டு உரைக்கிறேம் விபரம்
[ரண்டில்
தடவரை மகளாய் வந்த சத்தியே கேட்டி டாயே.

41. குடும்பத்தில் கலகம் ஏற்படும். ஆனல் விரோத முண்டா காது. வீட்டில் திருட்டுப் போகும். எல்லோரும் விரோதிகள் ஆவார் கள். சிற்சில செலவுகள் உண்டு. மற்ற விவரங்களை இரண்டாம் பாகத் தில் சொல்லுகின்றேம். மலையரசனின் மகளாய் வந்த தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 17

1. மதிகுரு சாடி யாக மலைப்பாம்பு நந்தி யாக
விதிகன்னி சேயும் கோவில் வெய்யவன் கேது தேவில்
புதன்புகர் மேரு வாகப் புலியது ஜன்ம மாக
இதுபல னெவ்வா றென்று அறிந்தவள் கேட்கும் போது;

1. சந்திரன் குரு கும்பத்திலும், ராகு விருஷபத்திலும், சனி கன்னியிலும், செவ்வாய் துலாத்திலும், சூரியன் கேது விருச்சிகத்திலும், புதன் சுக்கிரன் தனுசி லும், ஜன்ம லக்கினம் சிம்மமுமாக இருப்பின் பலனெவ்வாறு என்று தேவி கேட்க;

கிரகநிலை

		ராகு	
சந்திரன் குரு	இராசி சக்கரம்		
			லக்கினம்
புதன் சுக்கிரன்	சூரியன் கேது	செவ்வாய்	சனி

ஜாதகியின் பிறந்தவீட்டு நிலை

2. பிருகுவும் புகலு கின்றார் பிறந்திடும் பெண்பால் ஜன்மம்
வருமில்லங் கீழ்மேல் வீதி வாசலுந் தெற்குப் பக்கம்
அரிகோஷ்டம் மேல்பா லாகு மறுபட்ட மாரி தென்மே
லரிவா கனத்தாள் பின்னே நல்கிடும் வடகீழ் தன்னில்.

2. பிருகு முனிவர் சொல்லுகின்றார். இது பெண்ணின் ஜாதகம். பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் தென்புறம் நோக்கியுள்ள வாயிலை யுடையது. விஷ்ணுவின் ஆலயம் மேற்கிலும் மாரியம்மன் கோவில் தென்மேற்குத் திக்கிலும் சிங்கவாகனத்தை யுடைய காளிகோயில் வடகிழக்குத் திசையிலும்;

3. சொல்லிய வடையா ளத்துள் சமவூரில் கங்கை சேயாய்ப்
புல்குவா ளிந்த மாது புகலுவோ மிவள்பி றப்பைத்
தல்லியின் தந்தை யோகம் சகோதரன் வரனின் யோகம்
அல்லலாய் முன்பின் ஜன்ம மறிவிப்போ மிந்நூல்

[தன்னில்.

3. இவ்வித அடையாளங்களுள்ள சம நிலையான ஊரில் வேளாள குலத்தவளாக ஜாதகி பிறப்பாள். இவளுடைய ஜனன வரலாறு, இவளுடைய தாய் தந்தையரின் யோகம், உடன்பிறந்தவர் யோகம் கணவனுடைய யோகம், முற்பிறப்பு, மறு பிறப்பு ஆகியவற்றை இந்தச் சோதிடநூலில் குறிக்கின்றோம்.

ஜாதகியினுடைய தந்தையின் விவரம்

4. தந்தையின் துணையாண் ஒன்று சத்தியு மவ்வா றுமே
அந்தவாண் இளையோ னுக அறைகுறே மவன்கு
[ணத்தைச்
சிந்தையு மிரண்டு மாகும் சீக்கிரம் கோபி யாவன்
வந்திடும் பாரி ரண்டு மைந்தர்க ளாண்பா லொன்று ;

4. ஜாதகியின் தந்தைக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரி ஒருத்தியும் உண்டு. சகோதரன் இளையவனுக இருப்பான். அந்த இளைய சகோதரனின் குணத்தைச் சொல்லுகின்றோம். இருவிதமான மனமுள்ளவன். விரைவில் கோபம் கொள்ளுவான். இரு மனைவியரை அடைந்திடுவான். ஒரு புத்திரனும் ;

ஜாதகியின் இளைய தந்தையின் செய்தி

5. கன்னிகை யவ்வார் தீர்க்கம் கழறுவார் பராசர் தாமும்
சொன்னதோர் பாரி ரெண்டில் சுதர்களு மெதற்கு
[விருத்தி
முன்மனை கன்னி ஒன்று மேவிடும் தீர்க்க மாகத்
தென்திசைக் கால நாடு செல்லுவாள் மறும னைக்கு

5. புத்திரி ஒருத்தியும் தோன்றித் தீர்க்கமாவர். பராசர முனிவர் கேட்கின்றார். நீங்கள் கூறிய மனைவியர் இருவரில் எந்த மனைவிக்குப் புத்திர விருத்தி ஏற்படும்? முதல் மனைவிக்குப் பெண் ஒன்று பிறந்து அவள் நீண்ட ஆயுளுடன் இருப்பாள். பிறகு அந்த மனைவி இறந்து விடுவாள். இரண்டாம் மனைவிக்கு ;

ஜாதகியின் இளைய தந்தையின் யோகம்

6. புத்திர விருத்தி யென்றும் பூமியால் ஜீவிப் பானும்
பத்தினி சொல்தட் டாதான் பாக்கிய மதிகங் காணுன்
வித்தகன் சின்னுள் ஒன்று யிருந்தபின் வேறுய்ச்
[செல்வன்
தீதுக ளெண்ணு னெங்க ளாத்துமத் தாயே கேளாய்.

6. புத்திரன் பிறப்பான் என்றும். விவசாயம் செய்து ஜீவித்து வருவான். மனைவியின் வார்த்தையை மீறுதவன். அதிகமான பொருட்

செல்வம் இல்லாதவன். இவன் ஜாதகியின் தந்தையுடன் சிலகாலம் ஒன்றுக வாழ்ந்து பிறகு தனியாகச் செல்வான். ஒருவருக்கும் தீங் கிழைக்காதவன். எங்கள் உயிருக்குயிரான தாயே! கேளுங்கள்.

ஜாதகியின் தந்தையினுடைய குணங்கள்

7. மங்கையின் தந்தை சேதி மாநிறம் வாத தேகி
சங்கையா மனத்தா னுகும் தரணியால் ஜீவிப் பானும்
நங்கைசொல் கடவா னுகும் நாதனுர் பத்தி பூண்பன்
எங்கள்போ லதிதிக் கன்ன மீவனும் நற்கு ணத்தன்.

7. ஜாதகியின தந்தையின் செய்தியைக் கூறுகின்றேரும். மாநிற முள்ளவன். வாயு நோயுடைய தேகமுடையவன். சந்தேக மனத்தி னன். பூமியால் ஜீவித்து வருவான். மனைவியின் சொல்லே மீறுதவ னுவான். சிவபெருமான்மீது பக்தி யுள்ளவன். எங்களைப்போன்ற துறவிகளுக்கு அன்னமிடுவான். நற்குணம் உடையவன்.

பத்மரேகை

8. இவ்விதக் குணத்தா னுகு மிடுக்கமென் ரேரைக்
[காப்பன்
அரிபோலே கோபங் கொஞ்ச மற்புத வார்த்தை
[சொல்வன்
தன்துணை தம்மா னுய்வன் காலிகள் விருத்தி யுண்டு
முருகன்தன் பத்தி பூண்பன் முண்டக ரேகை யுள்ளான்.

8. இவ்விதமான குணங்கள் உள்ளவன். துன்பங்கள் அடைந்த வரை ஆதரிப்பான். சிங்கம்போல் கோபம் கொள்ளுவான். அதிசய மாகப் பேசுபவன். உடன் பிறந்த சகோதரரால் நன்மையை யடை வான். கால்நடைகளின் விருத்தியுள்ளவன். முருகக் கடவுள் மீது பக்தி கொள்ளுபவன். கையில் தாமரைரேகை யுடையவன்.

9. உத்தரந் தனுசு தன்னி லுதிப்பனும் வறுமை காணுன்
பத்தினிக் கிஷ்ட னுகும் பாரினில் நல்லா னுகும்
நித்தியஞ் சீல னுவன் நிதானமாம் வார்த்தை யுண்டு
இத்தகைக் குணத்தா னுக்கு இம்மாது வுதிப்பா ளாகும்.

9. உத்தர நட்சத்திரம் தனுர்லக்கினத்தில் பிறந்தவன். வறுமை யில்லாதவன். தன் மனைவிக்குப் பிரியமானவன். உலகிற்கு நல்லவன் நல்லொழுக்கமுடையவன். நிதானமாகப் பேசுபவன். இவ்வித குணங் களையுடையவனுக்கு ஜாதகி பிறப்பாள் என்றேரும்.

ஜாதகியின் குணங்கள்

10. கன்னியின் சேதி சொல்வேன் கஞ்சமா மனத்த ளாகும்
அன்னமும் குறைவு ருதா ளழகுளாள் பொறுமை சாலி
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா ளாகும்
சொன்னசொல் காப்பா ளாகும் தாய்வர்க்கந் தன்னில்
[செல்லாள்.

10. ஜாதகியின் செய்திகளைக் கூறுகின்றோம். தாமரை பொன்ற மலர்ந்த மனமுடையவள். சாப்பாட்டிற்குக் குறைவில்லாதவள். அழகுடையவள். பொறுமை யுடையவள். ஊனமில்லாத தேகமுள்ளவள். பிறர்மீது (பிறருடைய) குற்றங்களைச் சொல்லாதவள். சொன்ன வார்த்தைகளைக் காப்பாள். தன் தாயார் வர்க்கத்தாரிடம் செல்லாதவள்.

11. சீலமாம் விரத சாலி தேறின புத்தி யேற்பள்
பால்பாக்கிய முடைய ளாகும் பசித்ததோருக் கன்ன
[மீவள்
ஞாலமேல் நல்லோ ளாவள் நாதனர் பத்தி பூண்பள்
காலத்தை யறிந்து ரைப்பாள் கணவன்தன் மனத்துக்
[கேற்றோள்.

11. நல்லொழுக்க முள்ளவள். விரதங்களை ஏற்பாள். முதிர்ந்த அறிவுடையவள். பால்பாக்கிய முள்ளவள். பசித்து வந்தவர்கட்கு அன்னமளிப்பவள். உலகில் நல்லவளாக இருப்பாள். சிவபெருமான் மீது பக்தி யுடையவள். வருங்காலத்தை அறிந்து சொல்லக் கூடிய வள். தன் கணவன் மனத்துக்கு ஏற்றபடி நடப்பவள்.

ஜாதகியின் சகோதரபாவம்

12. கன்னிக்குத் துணையாண் ஒன்று
கலந்திடுந் தீதே யாகும்
என்னகா ரணத்தி னலே
யிவள்துணை தோஷஞ் சொன்னீர்
துன்மையாய்ச் சேயு மூன்றில்
தொடர்ந்ததால் சொன்னேம் யாங்கள்
அன்னைசெய் வினையி னலே
அணுகாரே துணைவ ரென்றோம்.

12. ஜாதகிக்குச் சகோதரன் ஒருவன் பிறந்து அவன் இறந்து விடுவான். என்ன காரணத்தால் ஜாதகிக்குச் சகோதர தோஷம் உண்டு என்று சொல்லுகிறீர்கள். செவ்வாய் மூன்றுமிடத்தில் (சகோதர ஸ்தானத்தில்) இருப்பதால் சொன்னேம். ஜாதகியின் தாய் செய்த தீவினையாலும் ஜாதகிக்குச் சகோதர தோஷம் ஏற்பட்டது.

ஜாதகியின் தாயின் குணம்

13. மாதுரு குணமி வட்கு வறிவிப்பீர் முனியே நீர்தாம்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உறுதியில் லாத நெஞ்சம்
பாதக மனமில் லாதாள் பர்த்தாவுக் கினிய ளாகும்
வேதனை யொருவர்க் கெண்ணுள் மேவிடும் நாபிச் சூடு.

13. ஜாதகியின் தாயின் குணத்தைச் சொல்லுங்கள் முனிவரே! தாங்கள். இன்பமாகப் பேசுபவள். திடமில்லாத மனமுள்ளவள். தீய எண்ணங்களில்லாதவள். தன் கணவனுக்குப் பிரியமானவள். ஒருவருக்கும் தீங்கு இழைக்க நினையாதவள். வயிற்றுச் சூட்டு நோயுள்ளவள்.

14. பின்புத்தி யுடைய ளாகும் பேச்சதைக் காப்பா ளாகும்
அன்னியர் மதிக்க வாழ்வள் அடிசி லுக் கினிய ளாகும்
பொன்னிற முடைய ளாகும் புகழ்ந்தோரை யாத ரிப்பள்
தன்வரன் மனம்போல் வாழ்வள் சஞ்சல மனத்தா
[ளாமே

14. பின்புத்தியுள்ளவள். தன் வார்த்தைகளைக் காப்பாள். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். உருசியாகச் சமைப்பதில் சாமர்த்தியமுள்ளவள். பொன்னைப் போன்ற நிறமுள்ளவள். துதி செய்தவரைக் காப்பாள். தன் கணவன் மனமறிந்து வாழ்வாள். அலைபாயும் மனமுடையவள்.

தாயின் சகோதரபாவமும் முற்பிறவியும்

15. இல்லமும் வடபா லாகும் இவள்துணை ஆண்பா லைந்து
வல்லியு மொன்றே தீர்க்க மறைகிறே மிவளின் பூர்வம்
எல்லையி லுயர்வ தான எழில்கொங்கு நாட்டி லேதான்
வல்லியும் சேடர் வம்சம் மணுகியே வாழு நாளில்;

15. ஜாதகியின் தாய் வீடு வடக்குத் திசையிலுள்ளது. இவளுக்கு சகோதரர்கள் ஐவரும் சகோதரி யொருத்தியும் மூண்ட ஆயுள் உள்ளவர்கள். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். பூமியில் உயர்ந்ததான அழகிய கொங்குநாட்டில் சேடர் மரபில் பிறந்து, வம்சம் விளங்க வாழ்ந்துவரும் காலத்தில்;

பட்சிக்கூட்டைக் கலைத்தல்

16. இறப்பினில் கூடு கட்டி எய்திய பட்சி தாமும்
குறிப்புட னதனைக் கண்டு கூட்டினைக் கலைத்தா
[லென்றோரும்
சிறகிலாக் குஞ்சு யாவும் சண்டன்தன் பதிக்குச் செல்ல
மருவிற்று அந்தத் தோஷ மறைகிறோம் வேறு ஒன்று.

16. வீட்டில் கூரையில் கூடுகட்டியிருந்த பட்சியின் கூட்டைக் கலைத்தாள். அக்கூட்டிலிருந்த சிறகுகளில்லாக் குஞ்சுகள் எல்லாம் மரண மடைந்தன. அந்தத் தோஷம் வந்தடைந்தது. அது தவிர வேறு ஒன்று சொல்லுகின்றோம்.

பசித்த குழந்தைக்கு பால்தர மறுத்தது

17. மறையவர் மதலைக் காக வாவின்பா லிவளைக் கேட்கக்
குறையாக வார்த்தை சொல்லிக் கோதையு நின்ரு
[ளென்ரோம்
உரைக்கிரு ரருந்த வத்தோர் உரகன்போல் வார்த்தை
[யொன்று
மறுஜன்மம் கர்ம புத்திரர் மருவாரே யென்று சொல்ல.

17. ஓர் அந்தணர் தன் குழந்தைக்காகப் பசுவின்பாலை ஜாதகியி னுடைய தாயைக் கேட்கும்போது அவரிடம் நிங்கான வார்த்தைகளைக் கூறிவிட்டாள். இதைக் கேட்ட அந்தணர் சர்ப்பம்போல் கோபித்து மறுபிறவியில் கருமங்களைச்செய்யப் புத்திரர்கள் பிறவார் என்று சொன்னர்.

18. அந்தரம் ததாஸ்து வென்ன வணுகிற்று அந்தச் சாபம்
அந்தியக் காலந் தன்னில் அவள்சுதர் யாவும் விண்டு
சிந்தையுங் கலக்க மாகிச் சிரமற்ரோர் கோஷ்டத் திற்கு
விந்தையாய்த் தீபம் வைத்து மெத்தியே மரண மாகி;

18. பிறகு அப்படியே அந்தச் சாபம் இவளைப் பற்றியது. இவ ளும் தன் கடைசிக் காலத்தில் பிள்ளைகள் எல்லோரையும் இழந்து மனம் கலங்கி மாரியம்மன் கோவிலுக்குத் தீப கைங்கர்யம் செய்து வந்து மரணமடைந்து;

19. மால்மகன் வரையப் பட்டு
வந்தவ ளென்று சொல்வோம்
ஆலம்போல் மறையோர் சாபம்
அணுகிற்று இவளுக் கேதான்
பாலர்க ளுதிக்கில் தீதாம்
பராசரு மறுத்துச் சொல்வார்
வேல்விழி யெவ்வாறு தீர்க்கம்
விளம்புவீர் முனியே நீர்தாம்.

19. திருமாலின் மகனுகிய பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தவள் என்று சொல்லுகின்றோம். விஷம்போல் அந்தணர் சாபம் இவளுக்கு ஏற்பட்டது. புத்திரர்கள் தோன்றித் தீதாவர். பராசர முனிவர் இடை மறித்துக் கேட்கின்றார். புத்திரதோஷம் உண்டு என்று கூறியபோது ஜாதகி மாத்திரம் எங்ஙனம் நீண்ட ஆயுள் உள்ளவளாவள் என்று கூறுங்கள், முனிவரே! நீர்.

நல்வினைப் பலன்

20. முன்ஜன்ம மாரிக் கேதா னேற்றின தீபப் புண்யம்
கன்னிகை யொன்று தீர்க்கங் கருமபுத் திரனுந்
[தோன்றும்
மன்னிய சாந்தி யொன்று யறைகுவீர் முனியே நீர்தாம்
கன்மசாந் திகளுஞ் செய்தால் கலந்திடு மதனு லொன்று.

20. முற்பிறவியில் மாரியம்மனுக்குத் தீப கைங்கர்யம் செய்து வந்த புண்ணியத்தால் ஒரு புத்திரி பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவ ளாவள். இறுதிக் கடன் செய்யப் புத்திரன் ஒருவன் தோன்றுவான். இதற்குச் சாந்தியொன்று சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். நன்மை பயக்கும் கர்ம சாந்திகள் செய்தால் ஒரு புத்திரன் பிறப்பான்.

21. எந்தக்கா லத்தில் செய்தால் எய்திடு மதனீல தானும்
[1]மந்திரி தசையி லேதான் [2]மால்புத்தி காலந் தன்னில்
முந்திசொல் கர்மசாந்தி முறை போலே செய்வா னுகில்
சந்ததி தோன்றுந் தீர்க்கஞ் சத்தியே கேட்டி டாயே.

21. எந்தக் காலத்தில் கர்ம சாந்திகள் செய்தால் புத்திரர் தோன்றுவர். குருமகாதசையில் புதபுக்தியில் முன்பு கூறிய சாந்தியைச் சாஸ்திரப்படி செய்வானுகில் சந்ததியுண்டாகித் தீர்க்கமாம். தேவியே! கேளுங்கள்.

22. சொற்படிச் செய்யா னுகில் சுதர்கள்தாம் தீதே யாமே
சொற்படிச் செய்வா னுகில் தோன்றிடு மாண்பா லொன்று
செப்பின சாந்தி யெவ்வாறு செய்வது புகலு மென்ன
ஒப்புடன் கர்ம காண்ட முரைத்தனம் விவரங் காண்பாய்.

22. நாங்கள் சொல்லியபடி செய்யாவிடில் புத்திரர்கள் தோன்றி மறைந்து விடுவர். நாங்கள் கூறியபடி செய்து வந்தால் ஒரு புத்திரன் பிறப்பான். நீங்கள் கூறிய சாந்திகள் எப்படிச் செய்வது என்று சொல்லுங்கள் என, அவ்விஷயத்தைக் கர்மகாண்டத்தில் சொல்லி யிருக்கின்றோம். விவரத்தைப் பாருங்கள்.

தாயின் மறுபிறவியும் தந்தையின் முற்பிறவியும்

23. அன்னைபின் ஜன்மஞ் சொல்வே னலங்கா டதனி
[லேதான்
துன்னுமேல் திசையி லேதான் தோன்றியே சுகமாய்
[வாழ்வள்
இன்னவள் தந்தை பூர்வ மியம்புவோ மினிமே லாகப்
பொன்முகரி யாற்றி னோரம் பேரூரில் ரெட்டி வம்சம்;

1. குரு.
2. புதன்.

23. தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றேன். திருவாலங் காட்டில் மேற்குத் திசையில் பிறந்து சௌக்கியமாக வாழ்ந்து வருவாள். ஜாதகியின் தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். இனிக் கேளுங்கள். பொன்முகரியாற்றங்கரையோரத்திலுள்ள பெரிய ஊரில் ரெட்டியார் மரபில் ;

24. உதித்துமே சுதனும் வாழ்ந்து உயர்வான கிருஷி செய்து
மதித்திட்ட குடும்பி யாகி யறமதி லிச்சை யின்றிச்
சதியான மனத்தா லகிச் சண்டன்தன் பதிக்குச் சென்று
விதியவன் வரையப் பட்டு விளங்கிலை னென்று
[சொன்னேம்.

24. பிறந்து வாழ்ந்து வந்து, உயர்ந்த விவசாயம் செய்து வந்து, பெருமையுள்ள குடும்பியாகித் தருமம் செய்வதில் விருப்ப மில்லாமல் தீய மனத்தினனாகி மரண மடைந்து, மீண்டும் பிரமனால் படைக்கப் பட்டுப் பிறந்தான் என்று சொன்னேம்.

தந்தையின் மறுபிறவி

25. மறுஜன்மந் தணிகை தன்னில் மாரனும் ரெட்டி வம்சம்
பெரிதான குடும்பி யாகிப் பூமியு மதிக மூண்டாய்
உறைகுவா னென்று சொன்னே முரைத்தவை தப்பா
[வாமே
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

25. மறு பிறவியில் திருத்தணியில் ரெட்டியார் மரபில் பிறந்து பெரிய குடும்பியாக வாழ்ந்து வந்து, அதிகமான பூமியைப் பெற்று, வாழ்ந்து வருவான் என்று சொல்வோம். நாங்கள் கூறியவை தவரு. வேதங்களின் முடிவில் நடமாடும் தாயே! கேளுங்கள்.

ஜாதகியின் திருமணக்காலமும் கணவனின் குணமும்

26. மங்கையின் மணத்தின் கால மறைகிறேரும் பதினை
[ருண்டில்
தங்கிடும் வடபால் மாரன் சாற்றுவோ மவன்கு ணத்தைத்
திங்கள்போல் வதன மாகுந் தேறின புத்தி யேற்பன்
சங்கையா மனத்தா னகுந் தையலின் மனத்துக்
[கேற்றோன்.

26. ஜாதகியின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேரும். பதினைரும் வயதில் வடக்குத் திசையிலிருந்து கணவன் வருவான். அவனுடைய குணத்தைச் சொல்லுகின்றேரும். சந்திரனைப்போன்ற அழகிய முகமுள்ளவன். முதிர்ந்த அறிவுடையவன். சந்தேக மனத்தன். ஜாதகியின் மனத்துக்கேற்றபடி நடப்பவன்,

இதுவுமது

தாணியால் ஜீவிப் பானுஞ் சந்ததங் குறைவு றுதான்
அறுமுகன் பத்தி பூண்ப னுபத்தைச் சிலர்க்குக் காப்பன்
மர்மமு மில்லா னுகி வந்தவர்க் கன்ன மீவன்
பிறைபோலே செல்வ மோங்கும் பேதையும் வந்த பின்பு.

27. நிலவருவாயினுல் ஜீவித்து வருவான். ஒருநாளும் குறைவு இல்லாதவன். சுப்பிரமணியக் கடவுளிடம் பக்தி யுள்ளவன். சிலருக்கு ஏற்பட்ட ஆபத்துக்களை விலக்குவான். மனத்தில் மறைவில்லாதவனுவன். தன்னிடம் வந்தவர்கட்கு அன்னமளிப்பவன். ஜாதகியை மணந்தபிறகு பிறைச் சந்திரனைப்போல் செல்வம் விருத்தியாகும்.

28. புத்திமான் ஊகை சாலி புண்ணிய மனத்த னுகும்
சத்தியங் கூரு னுகும் சான்றோர்போல் வார்த்தை யுண்டு
சுற்றத்தார் மதிப்புக் கொள்ளல் சூழ்வினை வார்த்தை [யுண்டு
எத்திசை நல்லோ னுவன் இடுக்கமில் லாதா னென்றேரும்.

28. புத்திசாலி. ஊகமுடையவன். நல்ல எண்ணங்களுள்ள மனத்தினன். உண்மை பேசாதவன். பெரியோர்போல் பேசுபவன். தன் உறவினருடைய மதிப்பைப் பெறுபவன். வினைபொருந்திய வார்த்தைகளைப் பேசுபவன். எல்லாத் திக்குகளிலும் நல்லவன் என்ற பெயரையு மெடுப்பான். துன்பங்களில்லாதவனென்றேரும்.

புத்திர பாவம்

29. புத்திர ரெழுவர் தோன்றும் புகன்றதி லாண்பால் மூன்று
சத்திமா ரிருவர் தீர்க்கம் தங்காவே மற்ற வெல்லாம்
செத்திடு முதலில் புத்திரர் செப்புவீ ரந்தச் சங்கை
சித்தமாய்ப் புகரு மைந்தில் சேர்ந்ததால் பலனைச் [சொன்னேம்.

29. ஜாதகிக்குக் குழந்தைகள் எழுவர் தோன்றுவர். அவர்களில் மூன்று பிள்ளைகளும் இரு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். மற்றவர் நிலையில்லாதவர். முதலில் தோன்றும் குழந்தை இறந்து விடும். அந்தத் தோஷத்தைச் சொல்லுங்கள். புத்திர ஸ்தானத்தில் சுக்கிரன் இருக்கும் பலத்தால் சொன்னேம்.

ஜாதகியின் முற்பிறவி

30. பாலிகை பூர்வந் தன்னைப் பகருவோர்ந் திருச்செந் தூரில்
நீலியுங் கர்ண சேயாய் நேர்ந்துமே வறுமை யின்றி
மேலோர்க்குத் தொண்டு பூண்டு வினையது மில்லா தாகிக்
காலன்தன் னுடு சென்றுக் கஞ்சனுல் வரையப் பட்டு ;

30. ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருச்செந்தூரில் கருணீகர் குலத்தில் பிறந்து தரித்திரம் இல்லாமல் (பெரியோர்களுக்கு) அந்தணர்கட்குத் தொண்டுகள் செய்து தீவினைகள் இல்லாமல் வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு;

ஜாதகியின் யோகம்

31. உதிப்பளா மிக்கு லத்தில் உரைக்கின்றோ மிவளின் [யோகம்
மதித்திடக் குடும்பி யாவள் வருவோரை யாத ரிப்பள்
சதியிலா மனத்த ளாகுஞ் சான்றோருக் கன்ன மீவள்
நிதிமிக வுடையா ளாகும் நேமியில் வறுமை காணுள்.

31. இக்குலத்தில் பிறப்பாள். இவளுடைய யோகத்தைச் சொல்லுகின்றோம். பிறர் மதிக்கும்படியான குடும்பத்தை யுடையவள். தன்னை யண்டி வந்தவரைக் காப்பாள். தீய எண்ணங்களில்லாத மனத்தினள். பெரியோர்களுக்கு அன்னமளிப்பவள். பொருட்செல்வம் அதிக முடையவள். உலகில் தரித்திர மில்லாதவள்.

யோகம்—கிரகநிலை

32. தந்தையால் சுகமு மேற்பள் தங்கம்பொன் பணிதி [சேர்ப்பள்
எந்தக்கா ரணத்தி னலே யிவளுக்கு யோகஞ் சொன்னீர்
சந்திரன் குருவு மேழில் சர்ப்பமும் ரிஷபந் தங்க
அந்தவாறு வறுமை காணு ளம்பிகை யாளே [சொல்வோம்

32. தன் தந்தையால் சுகமடைவாள். தங்கம் பொன் இவற்றுலான ஆபரணங்களை அடைவாள். எந்தக் காரணத்தினால் ஜாதகிக்கு யோகம் ஏற்படும் என்று சொன்னீர்கள். சந்திரனும் குருவும் ஏழாமிடமாகிய கும்பத்திலும் ராகு விருஷபத்திலும் இருப்பதால் தரித்திரமடையாதவள் என்றோம். தாயே!

ஜாதகியின் கணவன் தாய் தந்தையரின் மரணகாலம்

33. நாற்பது மூன்று வாண்டில் நமன்பதி தந்தை சேர்வன்
ஏற்கவே நாற்பா னைந்தி லேறுவ ளன்னை தானும்
தீர்ப்பாக வன்பா னேழில் செல்லுவார் வரணு மேதான்
ஆர்க்கவே யறுபான் ரண்டில் அழகிய கன்னி மாதம்;

33. ஜாதகியின் நாற்பத்துமூன்றும் வயதில் தந்தையும், நாற்பத்து ஐந்தாம் வயதில் தாயும், ஐம்பத்தேழாம் வயதில் கணவனும் நிச்சயமாக மரணமடைவார்கள். அறுபத்திரண்டாம் வயதில் புரட்டாசி மாதத்தில்;

ஜாதகியின் மறுபிறவி

34. கன்னிகை யுடல மேகும் கழறுவோ மிவள்பின் ஜன்மம்
தென்திசைக் கெடிலந் தன்னில் சிறுவூரி லிக்கு லத்தில்
பொன்பணி யுடையா னுக்குப் பிறப்பளா மிந்த மாது
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

34. ஜாதகியின் மரணம் ஏற்படும். அவளுடைய மறு பிறவியைச் சொல்லுகின்றோம். தெற்குத் திசையில் கடில நதிக்கரையிலுள்ள ஒரு சிறு ஊரில் இதே குலத்தில் மிக்க செல்வமுடைய ஒருவனுக்கு மகளாகப் பிறப்பாள். உயர்ந்த கணவனைப் பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜாதகியின் ஜனனகாலதசை

35. ஜாதகி ஜனிக்குங் காலைச் சதயநாளி ரண்டாம் பாதம்
தீதான ராகு தன்னில் செல்லுமா மாண்டு வாறும்
கூறுவோம்பூர்வ பாகம் குறித்தவிம் மொழிகுன் றுவே
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

35. ஜாதகிக்கு ஜனன காலத்தில் சதய நட்சத்திரம் இரண்டாம் பாதம் ராகு மகா தசையில் செல்லு ஆறு வருடங்களாம். இதுவரை முதல்பாகத்தைக் கூறினேம். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. விநாயகக் கடவுளைப்பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

36. ஈரொன்ப தாண்டு மேலா யிவள்தந்தை தனக்கு யோகம்
கூறுவோம் பூமி சேரல் குடிவேறு மென்று சொல்வோம்
வேறொரு தீங்கு காணன் வெற்றியா கினைத்த வெல்லாம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

36. ஜாதகி பிறந்து பதினெட்டு வருஷங்கட்குப் பிறகு இவளுடைய தந்தைக்கு யோகம் விருத்தியாகும். விசேஷ நிலங்கள் சேரும். குடி வேறுகும் என்று சொல்லுகின்றோம். வேறு தீங்குகளில்லாதவன். எண்ணிய காரியங்கள் ஜயத்துடன் முடிவுறும். ஆறுமுகனைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 18

1. பிறைமேடங் காரி நண்டு பொன்புகர் பானு கோலில்
தரைமகன் மேரு வாகச்[1] சிகிசாடி பணியுஞ் சீயம்
[2]அருணன்தூ துவனுந் தேளி லரிஜன்மம் பலனெவ் வாறு
அறிவிப்பீர் பலனை யென்று அம்மையுங் கேட்கும் போது;

1. சந்திரன் மேடத்திலும் சனி கடகத்திலும் குரு சுக்கிரன் சூரியன் துலாத்திலும் செவ்வாய் தனுசிலும் கேது கும்பத்திலும் ராகு சிம்மத்திலும் புதன் விருச்சிகத்திலும் நின்று இலக்கினம் சிம்மமாக இருப்பின் பலன் எப்படியிருக்கும் என்று கூறுங்கள் எனப் பார்வதி கேட்கும் போது;

கிரகநிலை

	சந்திரன்		
கேது	இராசி சக்கரம்		சனி
			லக்கினம் ராகு
செவ்வாய்	புதன்	குரு சுக்கிரன் சூரியன்	

ஜாதகனின் வீட்டுநிலை

2. அத்திரி முனிவர் சொல்வா ரதுஜன்ம மாண்பா லாகும்
வித்தக னில்லங் கீழ்மேல் வடவாசல் மேல்பால் மாயோன்
பத்திர காளி தந்தி பரமனும் வடபா லாகும்
உத்தமி மாரி தென்மே லுரைத்தனஞ் சமவூ ராகும்.

2. அத்திரி முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் மகனுடைய ஜாதகம். அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. மேற்குப் பக்கத்தில் திருமாலின் ஆலயமும், காளி கோயில், விநாயகர் ஆலயம், சிவபெருமான் ஆலயம், ஆகியவை வடக்குப் பக்கத்திலும், உத்தமியாகிய மாரியம்மனுடைய கோயில் தென்மேற்கிலும் உள்ள சமநிலையுள்ள ஊரில்;

---

1. கேது.

2. புதன்.

ஜாதகனுடைய குலம்

3. பாலகன் சைவச் சேயரய்ப் பகருவோம் நான்காஞ்
[ஜன்மம்
சாலவே யன்னை தந்தை சகோதரர் களத்ர புத்திரர்
எலவே யிவனின் யோக மியம்புவோ முன்பின் ஜன்மம்
ஆலத்தை யுண்டோன் தேவி யறைகிறே மிந்த நூலில்.

3. ஜாதகன் சைவ குலத்தவன். தன் தந்தைக்கு நான்காமவனுகத் தோன்றுவான் என்று சொல்லுகிறேம். ஜாதகனுடைய தாய்தந்தை யர் உடன்பிறந்தவர் மனைவி மக்கள் இவனுடைய முற்பிறவி மறு பிறவி ஆகியவற்றை இந்தச் சோதிடநூலில் சொல்லுகின்றேம். கொடிய விஷத்தையுண்ட நீலகண்டனின் தேவியே!

தந்தையின் குணங்கள்

4. தந்தையின் துணையா ணென்று சத்தியு மவ்வா றுமே
அன்னவர் சேதி பின்பா றறிவிப்போந் தாயே யாங்கள்
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மினிமே லாகச்
சிந்தையு நல்ல தாகும் சிரமுகம் வடுவு மூள்ளான்.

4. ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரி ஒருத்தியும் உண்டு. அவர்களின் செய்தியைப் பிற்பாகத்தில் சொல் லுகின்றேம். தாயே! தந்தையின் வரலாற்றைச் சொல்லுகின்றேம். நல்ல மனமுள்ளவன். தலை முகம் இவைகளில் வடுக்கள் உள்ளவன்.

5. இருவிதக் கல்வி கற்பன் இரக்கமா மனத்தா னுகும்
அரிவையர் மோக னுவன் அடாவடி கூரு னுகும்
தரையதை விருத்தி செய்வான் செட்டுக்கள் சிலகாள்
[செய்வன்
பறைபள்ளு முடைய னுகும் பணிந்தோரை யாத ரிப்பன்.

5. இருவிதமான கல்வி கற்றுவருவான். இளகிய மனத்தினன். பெண்கள்மீது மோகங்கொள்வான். அடாவடியாகப் பேசாதவன். விளை நிலங்களைப் பெருக்குவான். சின்னட்கள் வியாபாரம் செய்து வருவான். பள்ளுப்பறை உள்ளவன் (பணியாட்களை உடையவன்). தன்னை வணங்கியவரைக் காத்துவருவான்.

6. பலருக்கு நல்லோ னுவன் பரவுப காரம் செய்வன்
தலவாசஞ் செய்வா னுகும் சங்கரன் தொண்டு பூண்பன்
நலமதை யெவர்க்குஞ் செய்வன் நற்சுக போஜ னத்தன்
விலைமாதர் மோகங் கொள்வன் மேன்மக்க ளுறவும்
[கொள்வன்.

6. பல பேருக்கு நல்லவனாக இருப்பான். பிறருக்கு உபகாரி. புண்ணியத் தலங்களுக்குச் செல்வான். சிவபெருமானுக்குத் தொண்டுகள் செய்பவன். எல்லோருக்கும் நன்மையே செய்து வருபவன். நன்றாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். வேசையர்களிடம் மோகம் கொள்ளுவன். பெரியோர்களிடம் கட்டுப் கொள்ளுபவன்.

7. ஆதிரை கடக ராசி யுதிப்பானும் பொறுமை சாலி
சதியிலா மனத்தா னாகும் செப்பிய குணத்தா னுக்கு
அதிபனு முதிப்பா னாகு மறைகூரு மிவன்கு ணத்தைத்
துதிசெய்வோர்க் குதவு வானுஞ் சொல்லதைக் காப்ப
[னாகும்.

7. திருவாதிரை நட்சத்திரத்தில் கடகலக்கினத்தில் பிறந்தவன். பொறுமையுடையவன். நிங்குகளில்லாத மனத்தினன். இவ்விதக் குணங்களுடையவனுக்கு ஜாதகன் பிறப்பான். இவனுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். தன்னைத் தோத்திரம் செய்பவருக்கு உபகாரி. சொன்ன சொல் தவறாதவன்.

ஜாதகனுடைய குணங்கள்

8. ஊகைவா னுணுக்கந் தேர்வ னுண்மையா மனத்தி னாகும்
பாகமாய்ப் பேசு வானும் பதரினில் செல்லா னாகும்
தோகையர் மோக னவன் சொல்லது சுருக்க மாகும்
ஆகம முணர்ந்தோர்க் கிட்டன் அன்னமு மன்பா யிவன்.

8. ஊகமுடையவன். நுட்பமான மனத்தினன். பொருத்தமாகப் பேசுபவன். அற்பகாரியங்களில் செல்லாத மனத்தினன். பெண்கள்மீது மோகங்கொள்ளுபவன். சுருக்கமாகப் பேசுபவன். வேதங்களை யுணர்ந்த அந்தணருக்குப் பிரியமானவன். அன்புடன் அன்ன மளிப்பான்.

9. வித்தையுஞ் சமம தாகும் விகடங்கள் கூறு னாகும்
சத்திய மென்று லச்சந் தரணியா லுய்வா னாகும்
சுத்தத்தோர் மதிக்க வாழ்வன் துணைவியால் பூமி
[சேர்ப்பன்
நித்தியஞ் சீல னவன் நிருபர்க ளிட்டங் கொள்வன்.

9. சமமான கல்வி யறிவுள்ளவன். விகடமாகப் பேசாதவன். சத்தியம் செய்யப் பயப்படுபவன். (உலகில்) பூமியில் விவசாயம் செய்து வாழ்ந்து வருவான். தன் உறவினர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். (முன் பிறந்த சகோதரியால்) மனைவியால் பூமியை அடைவான். நல்லொழுக்கமுள்ளவன். அரசர்களின் பிரியமுள்ளவன்.

10. தந்தையி னர்ஜி தத்தைத் தானவன் விருத்தி செய்வன்
பிந்தியும் பூமி சேர்ப்பன் பிறர்பொரு ளிச்சை யில்லான்
கந்தன்மேல் பக்தி பூண்பன் காலிகள் விருத்தி செய்வன்
முந்தின கோப மேற்பன் மொழியதைக் காப்பா னாகும்.

10. தன் பிதுரார்ஜிதமான பூமியைப் பெருக்குவான். அதற்குப் பிறகும் விளை நிலங்களை வாங்குவான். பிறருடைய சொத்துக்களில் ஆசையில்லாதவன். முருகக்கடவுள்மீது பக்தியுடையவன். கால் நடைகளின் பெருக்கமுள்ளவன். முன்கோபி. சொன்னவார்த்தைகளைக் காப்பாற்றுவான்.

கோதுமை ரேகை

11. இன்னவன் செங்கை தன்னி லிலங்கிடுங் கோதுமை [ரேகை
பொன்வெள்ளி பின்னல் சேர்ப்பன் புதையலும் வைப்பா [னாகும்
பின்னமில் லாத தேகி புகழது ஏற்பா னாகும்
பின்வருங் காரி யங்கள் புகலுவா னென்று சொன்னேம்.

11. ஜாதகனுடைய கையில் கோதுமை ரேகை இருக்கும். பிற் காலத்தில் பொன் வெள்ளி முதலியவற்றைச் சேர்த்து வைப்பான். புதையலையும் வைப்பான். ஊனமில்லாத தேகமுடையவன். கீர்த்தியை யடைவான். பின்னல் வரக்கூடிய காரியங்களை முன்னமேயே வுணர்ந்து சொல்லக்கூடியவன் என்று சொன்னேம்.

ஜாதகனுடைய உடன் பிறந்தோர்

12. தூணவர்கள் பின்னல் காணுன் தோகைமுன் னிரண்டு [தீர்க்கம்
வனிதைமுன் சேதி சொல்வேன் மால்நிறம் வாத தேகி
கனமுள புத்தி யேற்பள் கல்விமான் சுகமில் லாதாள்
பிணியான வார்த்தை கூறுள் புருடனும் பகையு மாகும்.

12. ஜாதகனுடன் பிறந்தவர்களில் இளையவர்கள் இல்லாதவன். இரு மூத்த சகோதரிகள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். மூத்த சகோ தரியின் செய்தியைச் சொல்லுகின்றேம். கருமை நிறமுடையவள். வாயு ரோகமுள்ளவள். பெரும் புத்தியுடையவள். கல்வியறி வுள்ளவள். சுகமில்லாதவள். தீங்கான வார்த்தைகளைப் பேசாதவள். புருடன் விரோதியாக இருப்பான்.

13. சிலவேநாள் வனவா சங்கள் செய்குவாள் சுகம்பின் [னேற்பள்
கலவர புத்தி யேற்பள் கணவனும் வடபால் நேர்வான்
நலமதை யெவர்க்குஞ் செய்வள் நற்சுத ரந்த மொன்று
குலவிடு மென்று சொல்வோங் குவலயம் வறுமை காணுள்.

13. சிலநாட்கள் வனவாசம் செய்வது போன்று துன்பப்படுவாள். பிற்காலத்தில் சுகமடைவாள். சஞ்சலமான புத்தியுடையவள். அவளுக்கு வடக்குத்திக்கிலிருந்து கணவன் வருவான். எல்லோருக்கும் நன்மையையே செய்வாள். கடைசியில் ஒரு புத்திரன் தோன்றுவான். உலகில் தரித்திரம் அடையாதவள்.

14. வயதுமே தீர்க்க மெய்தும் மாதுபின் சேதி சொல்வேன்
நய்மபடக் கூறு வாளாம் நவிலுவோங் கோபங் கொஞ்சம்
தயையுள மனத்தா ளாகுந் தரணியில் பெருமை காணாள்
புயபல முடைய ளாகும் புண்ணிய மனத்தா ளென்றோம்.

14. நீண்ட வயதுள்ளவள். இளைய சகோதரியின் செய்தியைச் சொல்லுகின்றோம். இனிமையாகப் பேசுவாள். சிறிது கோபம் கொள்ளுவாள். தயையுடைய மனத்தள். உலகில் பெருமையில்லாதவள். திடமான புஜங்களையுடையவள். நல்லெண்ணம் பொருந்திய மனத்தினள் என்றோம்.

ஜாதகனின் இளைய சகோதரியின் விவரம்

15. வரனுமே உள்ளூர் நேரு மைந்தர்க ளாண்பால் ரண்டு
அரிவையு மொன்றே தீர்க்கம் அவளுமே தீர்க்க ஜீவி
திருமக ளொப்ப தாகுஞ் சீலியா மென்று சொன்னோம்
கரிமத வானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

15. கணவன் உள்ளூரிலிருந்தே வருவான். புத்திரர்கள் இருவரும் பெண் ஒருத்தியும் பிறந்து அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள். அப் பெண்ணும் தீர்க்காயுள் உடையவள். இலக்குமியைப் போன்றவள். நல்லொழுக்க முள்ளவள் என்று சொன்னோம். கரிய மதயானையின் முகம்போன்ற முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகரின் திருமணக் காலம்

16. மன்னவன் மணத்தின் கால மறைகிறோ மிருபான் [மூன்றில்
கன்னிகை வடபால் நேரும் கழறுவோ மவள்கு ணத்தைத்
தன்சொலு மடக்க முண்டு சாதகமு மன்பா யீவள்
பொன்பணி சேர்ப்பா ளாகும் புருடன்தன் மனத்துக் [கேற்றோள்.

16. ஜாதகனுடைய திருமணக்காலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய இருபத்து மூன்றும் வயதில் வடக்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். அடக்கமாகப் பேசுபவள். அன்புடன் அன்னமளிப்பவள். பொன்னு பரணங்களைச் சேர்ப்பாள். தன் கணவன் மனத்துக்கேற்றவள்.

ஜாதகனின் மனைவியின் குணங்கள்

17. பால்பாக்கிய முடைய ளாகும் பகையென்று மனத்தில்
[வையாள்
ஞாலமேல் நல்லோ ளாவள் நயம்படக் கூறு வாளாம்
காலத்தை யறிந்து ரைப்பள் கடவுளர் பக்தி பூண்பள்
நீலிக்கு வயது தீர்க்கம் நுவலுவார் பராசர் தாமும்.

17. ஊழ்வினைப் பாக்கியமுடையவள். எவர்மீதும் மனத்தில் விரோதம் கொள்ளாள். உலகில் நல்லவளாக இருப்பாள். நியாயமாகப் பேசுபவள். வருங்காலத்தை அறிந்து சொல்லுவாள். தெய்வபக்தி யுள்ளவள். அவள் நீண்ட வயதுள்ளவள். பராசரர் கூறுகின்றார்.

இரு மனைவியார்—கிரகநிலை

18. மாரனுக் கிரண்டு தாரம் மருவிடு மென்று சொல்வோம்
கூறுவீ ரந்தச் சங்கை கேதுவு மேழில் தங்கக்
காரியும் வியத்தி லாகக் கழறினே மந்தச் சங்கை
மாறியே பிருகு சொல்வார் மாலவ னலி லாக;

18. ஜாதகனுக்கு இரு மனையவியர் ஏற்படுவர் என்று சொல்லுகின்றோம். அந்தச் சந்தேகத்தை நிவிர்த்தி செய்யுங்கள். கேது ஏழாமிடத்திலும் அவ்வீட்டுக்குரிய சனி விரயஸ்தானத்திலும் இருப்பதால் அவ்விதம் கூறுகின்றோம். பிருகுமுனிவர் அதை மறுத்துச் சொல்லுகின்றார். புதன் இலக்கினத்துக்கு நான்காமிடமாகிய விருச்சிகத்திலும்;

19. அஞ்சினில் சேயுந் தங்க ஆலோனும் நவத்தி லாக
வஞ்சியு மொன்றே தீர்க்க மறுமனை காணு தாகும்
தஞ்சமாய்ப் பாரி தானுஞ் ஜாதகன் முன்னே மாய்வள்
துஞ்சுங்கா லங்கள் சொல்வீர் தொடுவிஷந் தசையி
[லுண்டாம்.

19. ஐந்தாமிடத்தில் செவ்வாய் இருந்து சந்திரன் ஒன்பதாமிடத்தில் இருப்பதாலும் மனைவி ஒருத்தியே நீண்ட ஆயுள் உள்ளவள். இரண்டாம் மனைவி யில்லாதவன். ஜாதகனுக்கு முன்பாகவே அவனுடைய மனைவி இறந்துவிடுவாள். அவள் இறக்கும் காலத்தைச் சொல்லுங்கள். ராகு மகாதசையில் மரணம் ஏற்படும்.

20. அரவுதன் தசைபின் பாகம் அன்பது எட்டு ஆண்டில்
மருவிடுங் கண்ட மென்றே மால்புத்தி நடக்குங் காலை
உரைத்தன மொழிகுன் றுவே யுமையேகின் னருளால்
[சொன்னேம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

20. ஜாதகனுடைய ஐம்பத்தெட்டாம் வயதில் இராகு மகாதசையின் பின் பாகத்தில் புதபுக்தியில் கண்டம் ஏற்படும். நாங்கள் கூறியவை தவரு. உமாதேவியே! தங்களுடைய அருளால் சொல்லுகிறோம். கரிய யானையைப் போன்ற முகமுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

புத்திரபாவம்

21. சுதர்களு மாண்பால் ரெண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
பதராகு மிரண்டு வென்றோம் பகருவோம் பின்பால் சேதி
அதிபன்தன் பூர்வஞ் சொல்வேன் மலைநாட்டில் வைசியச்
[சேயாய்
விதவிதச் செட்டுச் செய்து வித்தகன் வாழ்ந்து வந்தான்.

21. இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்காயுளுடன் இருப்பர். இரு குழந்தைகள் பிறந்து இறந்துபோம். மற்றச் செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். மலைநாட்டில் வைசிய குலத்தில் பிறந்து விதவிதமான வர்த்தகம் புரிந்து வாழ்ந்து வந்தான்.

ஜாதகனுடைய முற்பிறவி

22. அறமதி லிச்சை யுண்டாய் அதிதிகட் கன்ன மீந்து
மறலியின் நாடு சேர்ந்து மறையவன் வரையப் பட்டு
வரநதி குலமு திப்பா னறைகிறோ மிவனின் யோகம்
தரையா லுஞ் செட்டி லு லுஞ் ஜாதக னுய்வா னுகும்.

22. தருமமிடுவதில் விருப்பமுண்டாகி, அதிதிகளுக்கு அன்னமளித்து வந்து, மரணமடைந்து, பிறகு மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு, இப்பிறவியில், வேளாள குலத்தில் பிறந்தான். இவனுடைய யோகத்தைச் சொல்லுகின்றோம். விளைநிலங்களைப் பயிர்செய்தும், உலகில் வர்த்தகம் செய்தும் ஜாதகன் வாழ்ந்து வருவான்.

23. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் கதிர்தசை முதலா
[மாகத்
திடமுள குடும்ப மேற்பன் சீதளப் பிறைபோல் யோகம்
தடமது வேறுரய்ச் செய்வன் சகலர்க்கு மிவன்சொல்
[மேன்மை
உடன்படான் பிழைக ளுக்கு உயர்வான புகழு மேற்பன்.

23. கடன்படுவான். அதைத் தீர்த்து விடுவான். சூரிய மகாதசை முதல் திடமான குடும்பத்தை அடைவான். இளம்பிறைச் சந்திரனைப் போல் யோகம் வளரும். வேறு வீட்டைக் கட்டுவான். எல்லோருக்கும் இவன் வார்த்தைகள் உயர்வுள்ளவை. தவறான செயலைச் செய்ய உடன்படான். உயர்ந்த கீர்த்தியை அடைவான்.

யோகமேற்படக் கிரகநிலை

24. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்கள்
[சொல்வீர்
அலவனும் நவத்தி லாக அதற்கேழில் குருவுந் தங்க
மால்யோகம் கேசரி யோக மறைந்தனம் பால னுக்குத்
தந்திமா முகனைப் பெற்ற தயாபரி கேட்டி டாயே.

24. ஜாதகனுக்கு யோகம் ஏற்படக் காரணம் என்னவென்று சொல்லுங்கள். சந்திரன் ஒன்பதாமிடத்திலும் அதற்கு ஏழாமிடத்தில் குருவும் இருப்பதால் மால்யோகம், கேசரியோகம் ஆகிய இரண்டும் ஜாதகனுக்கு ஏற்படும். விநாயகனைப் பெற்ற தயாநிதியே! கேளுங்கள்.

25. உண்டியும் குறைவு றுதான் ஒத்தாப்போல் வார்த்தை
[யுண்டு
அண்டினர் தம்மைக் காப்பன் அடாவடி தன்னில்
[செல்லான்
எண்டிசைப் புகழு மேற்பன் எதிரியை வசியங் கொள்வன்
அண்டர்கள் பூசை பூண்பன் அம்பிகை யாளே கேளாய்.

25. சாப்பாட்டிற்குக் குறைவில்லாதவன். பொருத்தமுள்ள வார்த்தைகளையே பேசுபவன். தன்னை யண்டியவர்களை ஆதரித்து வருவான். அடாவடிக்குப் போகாதவன். எல்லாத் திக்குகளிலும் கீர்த்தியை யடைவான். விரோதிகளைத் தன்வயப்படுத்துவான். தெய்வங்களுக்குப் பூசை புரிவான். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் தாயின் குணம்

26. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள்
[பொறுமை யுண்டு
அன்னமு மன்பா யிவள் ஆசாரம் முன்கோ பத்தாள்
அன்னியர் குற்றஞ் சொல்லாள் அடிசிலுக் கினிய ளாகும்
அன்னவள் யோக சாலி ஆளன்தன் மனத்துக்
[கேற்றோள்.

26. ஜாதகனுடைய தாயின் குணத்தைச் சொல்லுகின்றோம். அழகுள்ளவள். பொறுமைசாலி. அன்புடன் அன்னமளிப்பவள். ஆசாரமுடையவள். முன்கோபி. பிறர்மீது குற்றத்தைச் சொல்லாதவள். இனிய உணவைச் சமைப்பதில் சிறந்தவள். யோகசாலி. தன் கணவன் மனத்திற்கு இசைந்தவள்.

27. சிலவேளை விரோத மெய்துஞ் சீக்கிரக் கோபம் சாந்தம்
நலமதை யெவர்க்குஞ் செய்வள் நகையுமே ஈகை
[கொஞ்சம்
குலவிடும் பித்த வாயு கோதைக்குத் துணையாண் ரண்டு
தலைவியு மொன்றே தீர்க்கம் தாயில்லம் வடபா லாகும்.

27. சிற்சில சமயங்களில் விரோதம் ஏற்படும். விரைவில் கோபம் கொள்ளுபவள். உடனே அக்கோபம் தணிந்துவிடும். எல்லோருக்கும் நன்மை செய்பவள். புன்சிரிப்புஞ் சிறிதுகொடையும் உள்ளவள். பித்தவாயு ஏற்படும். ஜாதகனின் தாய்க்கு இரு சகோதரர்களும் சகோதரி ஒருத்தியும் உளராவர். அவர்கள் நீண்ட ஆயுளுள்ளவர்கள். தாய் வீடு வடக்குப் பக்கத்தில் உள்ளது.

தாயின் முற்பிறவி

28. பூருவம் புதுவை தன்னில் பிறந்தனள் வடுகச் சேயாய்ப்
பாரிய குடும்பி யாகிப் பாலர்க ளதிக முண்டாய்
வேறொரு வினையில் லாமல் மேவினள் கால னடு
ஆரியன் வரையப் பட்டு அணுகிலு ளித்த மாது.

28. ஜாதகனின் தாய் முற்பிறவியில் புதுச்சேரியில் வன்னிய குலத்தவளாகப் பிறந்து, பெரிய குடும்பத்தை யடைந்து, மிகுதியாகக் குழந்தைகளைப் பெற்று, வேறு தீவினையில்லாமல் மரணமடைந்தாள். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தவள் ஜாதகனின் தாய்.

தாயின் மறுபிறவியும் தந்தையின் முற்பிறவியும்

29. பின் ஜன்மங் கோகர் ணத்தில் பிறப்பளாம் வைசியச்
[சேயாய்
முன்னமே குடும்பி யாகி முதல்வியும் வாழ்வா ளாகும்
தந்தையின் பூர்வஞ் சொல்வேன் சம்புகே சுரத்தி லேதான்
விந்தையாய் நடனஞ் செய்யு மெல்லிக்குத் தாளஞ்
[சொல்லும்;

29. ஜாதகனின் தாய் மறுபிறவியில் கோகர்ணத்தில் வைசிய குலத்தில் பிறந்து பெரிய குடும்பியாக வாழ்ந்து வருவாள். ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருவானைக்காவில் நடனமாடும் ஸ்திரீகளுக்கு (தாஸிகட்கு) தாளம் போடும் நட்டுவனார்;

30. அந்ததோர் குலமு தித்து அழகான குடும்பி யாகிச்
சிந்தையும் நல்ல தாகித் தேவதாப் பக்தி கொண்டு
முந்தினோர் தொண்டு பூண்டு வினையது மில்லா தாகி
அந்தக நகரஞ் சென்று அயனுமே வரையப் பட்டு;

30. குலத்தில் பிறந்து அழகுள்ள குடும்பத்தை யேற்று நல்ல மனத்துடன் தெய்வபக்திகொண்டு பெரியோர்கட்குத் தொண்டுகளைச் செய்து தீவினைகள் இல்லாமல் மரணம் அடைந்து, மீண்டும் பிரம தேவனால் படைக்கப்பட்டு ;

தந்தையின் மரணகாலம்

31. வந்தவ னென்று சொல்வோ மறுஜன்மம் புதுவை [தன்னில்
மூந்தின குலமு தித்து மேதினி தன்னி லுய்வன்
அந்தவர் காலந் தன்னை யறிவிப்பீர் முனியே நீர்காம்
சந்தத நாற்பா னேழில் தந்தைக்குக் கண்ட மெய்தும்.

31. பிறந்தவன் என்று சொல்லுகின்றோம். மறுபிறவியில் புது வையில் அந்தணர் குலத்தில் பிறந்து பூமியால் ஜீவனம் செய்து வரு வான். அவனுடைய மரணக் காலத்தைச் சொல்லுங்கள், முனிவரே ! நீர். ஜாதகனுடைய நாற்பத்தேழாம் வயதில் தந்தையின் மரணம் நேரிடும்.

தாயின் மறைவு

32. அதற்குமே லொன்று ஆண்டில் அன்னைக்குக் கண்ட [மெய்தும்
அதிபனுக் கறுபா னறில் மேடமா தத்தி லேதான்
சதுர்த்தசி குறைப்பக் கத்தில் ஜாதக னுடல மேகும்
துதிசெய்தோர் தம்மைக் காக்கும் தேவியே கேட்டி
[டாயே.

32. அதற்குப் பிறகு ஒரு வருடத்தில் தாய் மரணமடைவாள். ஜாதகன் தனது அறுபத்தாறும் வயதில் சித்திரை மாதத்தில் கிருஷ்ணபட்சம் சதுர்த்தசி திதியில் மரணமடைவான். தோத்திரம் செய்பவரை ஆதரித்துவரும் தேவியே ! கேளுங்கள்.

ஜாதகனுடைய மறுபிறவியும் ஜனன கால தசையும்.

33. பின்ஜன்மம் காஞ்சி தன்னில் பிறப்பனு மிக்கு லத்தில்
அன்னவன் ஜனன காலம் அசுவினி முதல்பா தத்தில்
துன்கேது தசையா ரண்டுஞ் செப்பினேம் பூர்வ பாகம்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

33. மறுபிறவியில் காஞ்சீபுரத்தில் இதேகுலத்தில் பிறப்பான். ஜாதகனின் ஜனனகாலத்தில் அசுவதி நட்சத்திரம் முதல்பாதம். துன்பம் தரும்கேது மகாதசை பிருப்பு ஆறுவருடங்களாம் இதுவரை முதல்பாகம் சொன்னேம். உயர்ந்த கணவனைப்பெற்ற தேவியே ! கேளுங்கள்.

ஜாதகம் 19

1. பொன்விடை மதியும் வீணை பூமகன் மந்தன் கோலாம்
மன்புத னிரவி தேளில் மான்புகர் மீனம் ராகு
கன்னியில் கேது தங்கக் கனத்திடுஞ் ஜன்மஞ் சிம்மம்
தன்னிலே வுதித்தோ ருக்குச் சாற்றுவீர் பலன்கள் தாமே

1. குரு விருஷபத்திலும், சந்திரன் மிதுனத்திலும், செவ்வாய் சனி துலாத்திலும் புதன் சூரியன் விருச்சிகத்திலும், சுக்கிரன் மகரத்திலும், இராகு மீனத்திலும், கேது கன்னியிலும் நின்று, ஜன்ம இலக்கினம் சிம்மமாகப் பிறந்தவருக்குப் பலனைச் சொல்லுங்கள்.

கிரகநிலை

ராகு		குரு	சந்திரன்
	இராசி சக்கரம்		
சுக்கிரன்			லக்கினம்
	புதன் சூரியன்	செவ்வாய் சனி	கேது

ஜாதகன் பிறந்த வீட்டு நிலை

2. பார்வதி கேட்கும் போது பராசரும் சொல்லு கின்றார்
காரியே யாண்பால் ஜன்மம் காட்டுவோம் வடதென் வீதி
சூரியன் கிழக்குப் பார்வை தெற்கினில் சந்தி நிற்கும்
கூறுவோம் வடக்குத் தன்னில் குண்டமும் சோலை யாமே.

2. என்று பார்வதி தேவி கேட்கும் போது பராசரமுனிவர் கூறுகின்றார். தேவியே! இஃது ஆண்மகனின் ஜாதகம். அவன் பிறந்தவீடு, தெற்கு வடக்கான தெருவில், சூரியன் தோன்றும் கிழக்கு நோக்கியதாக உள்ளதாகும். தெற்கில் ஒரு சந்தும், வடக்குப் பக்கத்தில் ஒரு குளமும் சோலையும் உண்டு.

ஜாதகனின் குலம்

3. அருகினி லீசன் மாரி ஐங்கரன் காளி தங்கும்
குறுகிய சிற்றா ரில்தான் கூறிய கங்கை சேயாய்
வருகுவா னிந்தப் பாலன் வருந்துணை தந்தை மாதா
உரிமையா யிவன்முன் ஜன்ம முரைக்கிறேங் கேளு

மம்மா.

3. பக்கத்தில் சிவபெருமானின் ஆலயமும், மாரியம்மன் கோவிலும், விநாயகர் ஆலயமும், காளி கோவிலும் உள்ள சிற்றூரில் வேளாளகுலத்தவனாக இந்த ஜாதகன் பிறப்பான். அவனுக்கு உடன்பிறந்தவர்கள் தாய் தந்தையர் ஆகியோர் பலன்களையும் முற் பிறவி மறுபிறவி முதலானவற்றையும் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய தந்தையின் குணங்கள்

4. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோ மிருசி [வப்பன்
பந்தமாய் வாயு தேகன் பாரினி லூகை சாலி
சந்ததந் தியாகி யாவன் சன்மார்க்கன் வெகுபேர்க் [கன்பன்
வந்தவர்க் கன்ன மீவன் வள்ளல்மேல் பக்தி யுள்ளான்.

4. ஜாதகனுடைய தந்தையின் குணத்தை நாங்கள் கூறுகின்றோம். கருமைகலந்த சிவப்பு நிறமுடையவன். வாயுநோய் உள்ளவன். ஊகம் உடையவன். தியாகம் செய்யும் மனப்பான்மையுள்ளவன். நல்லவழியில் நடப்பவன். பலபேருக்குப் பிரியமானவன். தன்னிடம் வந்தவர்கட்கு அன்னமளிப்பவன். கடவுள் பக்தியுடையவன்.

5. அதிகாரஞ் சிலநாள் செய்வன் ஆசார முடைய னுவன்
ததிநெய்பா லிஷ்ட முள்ளான் சற்சனர் நேசங் கொள்வன்
பதியது புதிதாய்ச் செய்வன் பந்துவு மெச்ச வாழ்வன்
சதிசெய்யா மனத்த னுகும் சகலரும் வணங்க வாழ்வன்.

5. இவனுக்கு சில நாட்கள் அதிகாரமுள்ள பதவி வாய்க்கும். நல்லொழுக்க முடையவன். தயிர் நெய் பால் முதலியவற்றில் விருப்பமுள்ளவன். நல்லவர்களின் நட்பைக் கொள்வான். புதிய வீட்டைக் கட்டுவான். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்து வருவான். தீங்குசெய்யாத மனதினன். எல்லோரும் வணங்கும்படி வாழ்ந்து வருவான்.

6. பூமியும் பரிபா லிப்பன் புண்ணிய மனத்த னுமே
நேமியோர்க் குதவி செய்வன் நிதானமாய் வார்த்தை [கூர்வன்
தாமத மன்ன ரிஷ்டன் சகலபாக் கியமுஞ் சேர்ப்பன்
சாமிமேல் பக்தி யுள்ளான் தனமது வுடைய னுமே.

6. பூமியைக் காப்பாற்றிவருவான். நல்லெண்ணம் பொருந்தியவன். உலகத்தவருக்கு உதவிசெய்வான். மெதுவாகப் பேசுபவன். மன்னவருக்குப் பிரியமானவன். எல்லாவித பாக்கியங்

கனையும் அடைவான். தெய்வபக்தியுள்ளவன். பொருட்செல்வம் உடையவன்.

7. புத்திமான் பொறுமை யுள்ளான் பூஷண மதிகஞ்
[சேர்ப்பன்
நத்தின பேரைக் காப்பன் நன்முக மருவு முள்ளான்
சித்தினி ஜாதி யாவன் சிறப்பான குடும்ப முள்ளான்
பத்தினிப் பிரிய னுவன் பசுவுகள் பூமி சேர்ப்பன்.

7. புத்திசாலி. பொறுமையுள்ளவன். அதிகமான ஆபரணங்களை சேர்ப்பான். தன்னை அண்டிவந்தவர்களை ஆதரிப்பவன். முகத்தில் மச்சம் உள்ளவன். சித்தினி ஜாதியைச் சேர்ந்தவன். சிறப்புள்ள குடும்பத்தை யுடையவன். மனைவிக்குப் பிரியமானவன். பசுக்கள் பூமி முதலியவற்றை அடைவான்.

மச்ச ரேகை

8. இன்னவன் கரத்தி லேதான் இலகிடும் மச்ச ரேகை
கன்னென மொழியு முள்ளான் கணக்கினி லூகை சாலி
அன்னவன் துணைவர் தம்மை அறைகிறே மாண்பா
[லொன்று
பின்னமாம் மற்ற வெல்லாம் பேசுவோ மிவனுக் கேதான்

8. ஜாதகனுடைய தந்தையின் கையில் மச்ச ரேகை இருக்கும். இனிமையாகப் பேசுபவன். கணக்கில் ஊக முள்ளவன். ஜாதகனுடைய தந்தையின் உடன் பிறந்தவர்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். சகோதரன் ஒருவனே. மற்றவர்களெல்லாம் இறந்துபோவார்கள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய குணங்கள்

9. இக்குண முடையோ னுக்கு இவனுமே வுதித்த பாலன்
தொக்கவே பலங்கள் யாவும் சொல்லுவோஞ் சிவந்த
[மேனி
நக்கன்மேல் பக்தி யுள்ளான் நாதனுர் பூஜை செய்வன்
சிக்கின பொருளுஞ் சேர்ப்பன் செல்வமு முடைய னுமே.

9. இவ்விதக் குணங்களுடையவனுக்கு ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களையும் பலனையும் சொல்லுகின்றோம். சிவந்த உடலுள்ளவன். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன். சிவபெருமானுக்குப் பூசைகள் புரிந்து வருவான். சிக்கனமாக இருந்து பொருளைச் சேர்ப்பான். செல்வ மதிகம் உள்ளவன்.

10. அண்டினோர் தம்மைக் காப்பன் ஆள்கார ருடையனவன்
குண்டைகோ விருத்தி யுள்ளான் கோதைமார் நேசங்
[கொள்வன்
தண்டமிழ்க் கல்வி யுள்ளான் சகலரும் வணங்கு வாழ்வன்
வண்டிவா கனமு முள்ளான் வணிபங்கள் செய்வா னுமே.

10. தன்னை அண்டி வந்தவரைக் காப்பாற்றுவான். பணியாட்களை உடையவன். பசு எருதுகள் முதலியவற்றின் விருத்தி யுள்ளவன். பெண்களுடன் நட்புக் கொள்ளுவான். நல்ல தமிழ்க் கல்வியறிவுள்ள வன். எல்லோரும் தன்னைப் பணியும் நிலையில் வாழ்க்கை நடத்துவான். வண்டி முதலியன வாகன வசதிகள் உள்ளவன். வர்த்தகங்கள் புரிந்து வருவான்.

11. நடையது சொகுசு முள்ளான் நாட்டுவோர் தரள தந்தம்
அடைமொழி யதிகங் கூறுவன் அன்னங்கள் போட
[வல்லான்
படபட வார்த்தை யுள்ளான் பாரினில் கோப வானும்
மடையரை நேசஞ் செய்யான் மன்னர்பூ சிதனு
[மென்றேரும்.

11. உல்லாசமாக நடப்பவன். வெண்மையான பற்களையுடை யவன். அடைமொழி அதிகம் சொல்லுவான். அன்ன மளிப்பதில் பிரியமுள்ளவன். படபடப்பாகப் பேசுபவன். முன்கோபி. அற்பர் களுடன் நட்புக் கொள்ளாதவன். அரசரால் நன்கு மதிக்கப்படுபவன்.

12. *கரமதில் சங்கு சக்கரங் கனதன ரேகை யுள்ளான்
உரன்முறை மெச்ச வாழ்வன் உறுதியா மனத்த னுமே
துறவிகள் நேசங் கொள்வன் சோம்பிடான் காரி யத்தில்
குறைவிலாச் செல்வ முள்ளான் கூறுசௌக் கியமு
[முள்ளான்
பிறையது போலே செல்வம் பெருகிடு மிவனுக் கம்மா.

12. கையில் சங்க ரேகை, சக்கர ரேகை, தன ரேகைகள் உள்ளவன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். திடமான மனத் தினன். துறவிகளிடத்தில் நட்புக் கொள்ளுபவன். காரியங்களைச் செய் வதில் சோம்பலில்லாதவன். குறைவில்லாத செல்வ முடையவன். சௌக்கிய முள்ளவன். வளர் பிறைச் சந்திரனைப்போல் செல்வம் இவனுக்கு வளரும் என்று சொல்லுகின்றோம். தாயே!

---

*இப்பாடலில் ஓரடி மிகுந்திருப்பதைக் கவனிக்க.

13. ரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுப தேசங் கொள்வான்
பூமியும் விருத்தி செய்வான் புண்ணியங் கொஞ்சம்
[செய்வன்
காமனை யொத்த தேகம் கனதனஞ் சேர்ப்பா னுகும்
நேமமா சார முள்ளான் நித்தியம் சுகபு சிப்பன்.

13. நீண்ட தலைமயிர்களை யுடையவன். பெரியோர்களிடம் உப தேசம் கேட்டுக் கொள்ளுவான். விசை நிலங்களைப் பெருக்குவான். சில புண்ணிய காரியங்களைச் செய்வான். மன்மதனை யொத்த சரீரத்தைப் பெற்றவன். பெரிய செல்வத்தைச் சேர்ப்பான். நியமமும் ஆசாரமும் உள்ளவன். தினமும் சுகமான உணவை உட்கொள்ளுபவன்.

14. சிறுதீனி விருப்ப முள்ளான் சேஷ்டைக ளதிகஞ் செய்வன்
கர்வமும் டம்ப முள்ளான் கீதமேல் பிரிய னுவன்
மர்மமு முடைய னுகும் வர்ணிப்பான் கட்டு வார்த்தை
திருமகள் விலாச முள்ளான் செப்புவோ மேலுங் கேளே.

14. சிற்றுண்டிகளை அருந்துவதில் பிரியமுள்ளவன். குறும்புகளை அதிகம் செய்பவன். ஆடம்பரமும் கர்வமும் உடையவன். சங்கீதத்தில் பிரியமுள்ளவன். மனத்தில் கபட முடையவன். வார்த்தைகளைப் புனைந்து பேசுபவன். இலட்சுமி கடாட்சம் உள்ளவன். மேலும் கூறு கின்றோம். கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதர பாவம்

15. ஜாதகன் துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பா
[லொன்று
மேதினில் கன்னி மூன்று விளங்கிடும் நாலுந் தீர்க்கம்
நீதியா யிதற்கு மேலே நிலைக்காது நஷ்ட மாகும்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

15. ஜாதகனுடைய சகோதரரைப்பற்றிச் சொல்லுகின்றோம். சகோ தரன் ஒருவனும் சகோதரிகள் மூவரும் ஆக நால்வரும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லுகின்றோம். மேலும் பிறந்தால் அவர்கள் நிலையார். யானை முகத்தோனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய தாயின் குணம்

16. மாதுரு குணத்தை யாங்க ளறைகுறேஞ் சிவந்த மேனி
மேதினில் ஒடிசல் தேகி வித்தகி யுயர மில்லாள்
நீதியாய் நடக்கை யுள்ளாள் நிதானமாய்
[வார்த்தை கூறுவள்
தீதான ரோக முள்ளாள் தேகமே வலிவு மில்லாள்.

16. தாயின் குணத்தை நாங்கள் சொல்லுகின்றோம். சிவந்த உடலுள்ளவள். மெலிந்த தேகமுடையவள். உயரமில்லாதவள். நேர்மையுடன் நடப்பவள். நிதானித்துப் பேசுபவள். நீய ரோகமுடையவள். சரீரத்தில் பலமில்லாதவள்.

17. பித்தமாந் தேக மாகும் பலமிலா ளுகை சாலி
உத்தமர்க் கினிய ளாவள் உறுதியா மனத்தா ளாகும்
பத்தினி துணைவர் தம்மைப் பகருவோ மாண்பால் மூன்று
வித்தகி பெண்பால் ரண்டு விளங்கிடு மிவளுக் கம்மா.

17. பித்த சரீரமுடையவள். பல மில்லாதவள். ஊகமுடையவள். நல்லவர்க்கு இனியவள். திடமான மனத்தினள். ஜாதகனுடைய தாயின் உடன் பிறந்தவர்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளும் உள்ளவளாவாள்.

ஜாதகனின் மாமன்

18. இப்படி முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றாள்
எப்படி யாண்பால் மூன்று இயம்பினீ ரந்தச் சேதி
ஒப்புடன் சொல்லு மென்று உமைகேட்க
[முனிவர் சொல்வார்
தப்பிலா மாதுர் தானந் தனக்குமே மூன்றில் வெள்ளி;

18. இங்ஙனம் முனிவர்கள் சொல்லும்போது பார்வதி தேவி கேட்கலானாள். ஜாதகனுக்கு எப்படி மூன்று மாமன்மார்கள் உளர், சொல்லுங்கள், என்று உமாதேவி கேட்கும்போது, முனிவர் கூறுகின்றார். மாதுர்ஸ்தானமாகிய விருச்சிகத்துக்கு மூன்றுமிடத்தில் (சகோதரஸ்தானம்) சுக்கிரன்;

கிரகநிலை

19. இருந்துமே மூன்றே னுச்ச மிருப்பதால்
[சொன்னே மம்மா
திருந்திய சனிய னோடு சேயவன் கூடி யேதான்
அருந்தமா துர்தா னத்துக் கவர்களும் விரயம் நின்றால்
சிறந்திடு பலத்தை நன்றாய்ச் சோதித்துச்
[சொல்லு மென்றாள்.

19. இருப்பதாலும், அவ்வீட்டுக்குரியவனுகிய சனி உச்சமாக துலாத்தில் இருப்பதாலும் அவ்விதம் கூறினேம். அவ்விதம் உச்சனான சனியுடன் செவ்வாய் கூடியிருப்பதாலும், அவர்களும் மாதுர்ஸ்தானத்துக்கு விரயஸ்தானத்தில் (பன்னிரண்டாமிடம்) இருப்பதாலும், அதனால் ஏற்படும் பலனை நன்றாகப் பார்த்துச் சொல்லுங்கள் என்றாள்.

தாயின் சகோதர பாவம்

20. மாதுரு துணைவர் மூன்று வறைந்திட்டோ மந்தச் சங்சை
ஒதுவே லெருவ னுக்கு உறுந்தந்தை யாஸ்தி காணுன்
மேதினில் மாமன் பாக மிரண்டதாய் கேரு மம்மா
கோதிலா வொருவன் சேதி கூறுவோங் கேளு மம்மா.

20. தாயின் சகோதரர் மூவர் என்று சொல்லுகின்றோம். அவர்களில் ஒருவனுக்குத் தந்தையின் ஆஸ்திகள் கிட்டா. மாமன் ஒருவனுக்கு இரண்டு பாகங்கள் கிடைக்கும். ஒரு மாமனுடைய செய்தியைக் கூறுகின்றோம். கேளுங்கள், தாயே!

21. காதைக்கு மூத்தோ னுக்குச் சந்ததி யில்லாத தாலே
மேதினி லன்னைக் கேதான் விளங்கின
[இளையோன் தானும்
கோதிலாக் கர்மம் செய்வன் குணமுட னந்த வாஸ்தி
வேதனை விரோத மின்றி வீரிய னடைவா னம்மா.

21. ஜாதகனுடைய பாட்டனுடைய மூத்த சகோதரனுக்குச் சந்ததியில்லாததால் ஜாதகனுடைய தாயின் இளைய சகோதரன் கர்மங்கள் செய்வான். அவருடைய ஆஸ்திகளைத் துன்பங்கள் எவையுமின்றிப் பெறுவான். தாயே!

22. இப்படி முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றுள்
செப்புவீர் பலனை நீரே சொல்லுவார் புசண்டர் தாமும்
மெப்புடன் வடமேல் திக்கில் விளங்கிடு மில்லந் தானும்
அப்பணி சடையோன் தேவி யருளுவோங் கேளு மம்மா.

22. இங்ஙனம் முனிவர்கள் சொல்ல, பார்வதி தேவி கேட்கலானுள். முனிவர்களே! பலனைச் சொல்லுங்கள். புயண்டமுனிவர் கூறுகின்றார். வடமேற்குத் திக்கில் வீடு இருக்கும். கங்கையைச் சடைமுடிவில் தரித்த தேவியே! சொல்லுகின்றோம். கேளுங்கள்.

23. தந்தையின் மூன்ஜன் மத்தைச் சாற்றுவோங்
[காஞ்சிக் கீழ்ப்பால்
பந்தமாய்ப் பேரூர் தன்னில் பாலகன் சூத்திர லகச்
சந்ததம் பூமி பெற்றுந் தனதான்ய மதிக முண்டாய்
மைந்தரு மனைவி யோடு மகிழ்ச்சியாய் வாழு நாளில்;

23. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கஞ்சீபுரத்திற்குக் கிழக்கில் உள்ள பெரிய ஊரில் ஜாதகனுடைய தந்தை நான்காம் வருணத்தவனுகப் பிறந்தான். பூமியை அதிகமாக அடைந்து செல்வம், பொருள், தான்யம் முதலியவற்றையும், மனைவி மக்களையும் அடைந்து சந்தோஷமாக வாழ்ந்து வரும் காலத்தில்;

24. வருவோர்க்கு வன்ன மீந்து வள்ளல்மேல் பக்தி பூண்டு
சிறுமையென் றடைந்தோ ருக்குச் செல்வங்க
[ளுதவி செய்து
பெருமையாய்ச் சேதுக் கேகிப் புண்ணிய
[தீர்த்தந் தோய்ந்து
அருமறை யோர்க்குத் தானம் அவனுமே தந்து பின்பு;

24. தன்னையண்டி வந்தவர்கட்கு அன்ன மளித்து வந்து, சிவ பெருமான்மீது பக்தி கொண்டிருந்து, துன்பமடைந்த ஏழைகளுக்குப் பொருளுதவி செய்து, பெருமையாகச் சேதுவுக்குச் சென்று, புண்ணிய தீர்த்தத்தில் நீராடி அந்தணர்கட்குத் தானம் முதலியன செய்து பிறகு;

25. ராமலிங் கத்தைப் போற்றி நலமுள வுத்திரஞ் சென்று
தீமையை விலக்கும் வைகைத் தீர்த்தமும்
[தோய்ந்து மேதான்
சோமனை யணிந்த சொக்க நாதர்தம் பாதம் போற்றி
நேமநிட் டைகள் கொண்ட நிமலர்க்கு வன்ன மீந்து;

25. இராமலிங்கப் பெருமானுக்கு அருச்சனை செய்து துதித்துப் பிறகு வடக்கில் உள்ள பாபத்தை யொழிக்கும் வைகை நதியில் நீராடி, சந்திரனைச் சடைமுடியில் தரித்த சோமசுந்தரக் கடவுளின் பொற்பாதங் களைத் துதித்து நியமநிஷ்டைகளும் அனுஷ்டானங்களும் கொண்ட அந்தணர்கட்கு அன்ன மளித்துவந்து;

26. அங்குள்ள வால யங்கள் அநேகமாய்த் தரிசித் தேதான்
பொங்கமா யுள்ளூர் மீண்டு புண்ணியன் சிலநாள் சென்று
இங்கிவன் மரண மாகி இசைந்தன னிவனின் தந்தை
சங்கையில் லாம லேதான் சாற்றுவோம்
[பின்ஜன் மத்தை.

26. அங்குள்ள எல்லா ஆலயங்களிலும் உள்ள தெய்வங்களைத் தரிசித்து, பிறகு உள்ளூருக்கு வந்து சின்னாட்கள் சென்றதும் மரண மடைந்து ஜாதகனின் தந்தையாகப் பிறந்தவன் அவன் என்று சொல் லுகின்றோம். சந்தேகமில்லாமல் இவனுடைய மறுபிறவியைச் சொல்லு கின்றோம்.

தந்தையின் மறுபிறவி

27. மறுஜன்மஞ் சோழ நாட்டில் வளமையாய்த்
[தில்லை தன்னில்
நிறையவே பிரம்ம சேயாய் நிமலனு முதிப்பா னம்மா
குறைவிலாச் செல்வம் பெற்றுக் குணமுடன்
[மனைவி மைந்தர்
பெருமையாய் வாழ்வா னம்மா பேசுவோ மேலுங் கேளே.

27. மற்று பிறவியில் சோழ நாட்டில் உள்ள சிதம்பரத்தில் நிறை வுள்ள அந்தண குலத்தவளுகப் பிறப்பான். குறைவில்லாதசெல்வத்தை யடைந்து நற்குணமுள்ள மனைவி மக்களைப் பெற்றுப் பெருமையுடன் வாழ்ந்து வருவான். தாயே! மேலும் சொல்லுகின்றேம். கேளுங்கள்.

ஜாதகனுடைய முற்பிறவி

28 ஜாதகன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோந் தவளை
[தென்பால்
நீதியாய்ப் பேரூர் தன்னில் நிகருமிக் குலமு திக்து
கீதிலா வரசர் பக்கல் செட்டுக்க ளதிகஞ் செய்து
கோதிலா மனைவி மைந்தர் குறைவிலா வாழு நாளில் ;

28. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தவளேச்வரத்துக்குத் தெற்கில் உள்ள பெரிய ஊரில் இதே குலத்தில் பிறந்து, நீங்குகளில்லாத அரசாங்கச் சார்புள்ள தொழிலைச் செய்து வந்து, குற்றங்களில்லாத மனைவி மக்களுடன் குறைகளெவையு மில்லாமல் வாழ்ந்துவரும் காலத்தில் ;

29. பலவித வணிபம் செய்துப் பரமன்றன் னடியா ருக்குச்
சினமிலா வன்ன மீந்துத் தட்சிணந் தன்னில் சென்று
நலமுள வால யங்கள் நாயகன் சென்று மேதான்
தலந்தோறுந் தீர்த்தந் தோய்ந்து ஜாதக னுள்ளூர் மீண்டு;

29. பற்பல வர்த்தகம் செய்து வந்து சிவபெருமான் பொன்னடி களைப் பேரற்றிவரும் அடியவர்களுக்கு அன்னமளித்து வந்து, தென் திசையில் உள்ளபல புண்ணிய கேஷத்திரங்களுக்குச் சென்று, தரிசித்து ஒவ்வொரு புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடி, மீண்டும் உள்ளூருக்குத் திரும்பி ;

30. பெரியவர் நேசங் கொண்டு பிரபலக் கீர்த்தி பெற்று
அருமையாய்ச் சுரத்தி லேதான் அவனுடை யுடலம்
[வாடிக்
குறைந்தகன் கஞ்சன் தம்மால் குணமுடன் வரையப்
[பட்டுத்
திருமக னிக்கு லத்தில் ஜனித்தவ னிவனே யம்மா.

30. பெரியோர்களிடம் நட்புக்கொண்டு, பிரபலமான புகழை அடைந்து, ஜ்வரத்தால் மரண மடைந்து, பிரமனுல் மீண்டும் படைக்கப் பட்டு, ஜாதகன் இக்குலத்தில் பிறந்தவன் என்று சொல்லுகின்றேம் தாயே !

ஜாதகனுடைய திருமணக்காலம்

31. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மொருபா னூறில்
கன்னிகை வடமேல் திக்கில் காதலி வருவா ளென்றேரும்
அன்னவ ளதிர்ஷ்ட சாலி யவளுமே சிவந்த மேனி
பின்னமில் லாத தேகம் பேசிலே மிவளுக் கம்மா.

31. ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேரும். பதினேரும் வயதில் வடமேற்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள் என்றேரும். அவள் அதிருஷ்டமுள்ளவள். சிவந்த உடலுள்ளவள். குறையில்லாத உடலமைப்புள்ளவள் என்று சொல்லுகின்றேரும். தாயே!

ஜாதகனுடைய புத்திரபாவம்

32. இன்னவன் தனக்குப் புத்திர ரியம்புவோ மாண்பால் [ரண்டு
கன்னியு மவ்வா ரகும் கழறினேம் தீர்க்க மாக
நன்னிய விதன்மேல் தோன்றில் நட்டமா மதலை தாமும்
அன்னமே யாங்கள் சொல்லு மடைமொழி குன்றி டாவே.

32. ஜாதகனுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றேரும். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்காயுளுடனிருப்பர். மேலும் பிறந்தால் குழந்தைகள் நிலையா. தாயே! நாங்கள் கூறும் அருள்மொழிகள் தவரு.

ஜாதகனின் தாய் தந்தையரின் மரணகாலம்

33. தந்தையின் மரண காலம் சாற்றுவோ முப்பான் மூன்றில்
வந்திட வன்னை கால மறைகிறே மிருபா னென்பான்
எந்தையே யிவனின் கால மியம்புவோ மறுபா னேழில்
சந்தத மகர மாதஞ் சத்தமி முற்பக் கத்தில்.

33. ஜாதகனுடைய தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுகின்றேரும். அது ஜாதகனின் முப்பத்து மூன்றும் வயதில் நேரும். தாயின் மரணகாலம் இருபத்தொன்பதாம் வயதில் ஏற்படும். தாயே! ஜாதகன் தனது அறுபத்தேழாம் வயதில் தைமாதம் சுக்கிலபட்சம் சப்தமி திதியில் மரணமடைவான்.

நீண்ட ஆயுள்—கிரகநிலை

34. இப்படிப் பராசர் சொல்ல இயல்முனி வுரைக்க லுற்றார்
எப்படித் தீர்க்க மென்று இயம்பினீ ரந்தச் சேதி
ஒப்புடன் சொல்வா யென்ன வுரைக்கிறார் பராசர் தாமும்
செப்புவே னஷ்ட மத்தோன் தசமத்தி லேறி நின்றால்;

34. இங்ஙனம் பராசர முனிவர் கூற, சடைமுனிவர் ஒருவர் சொல்லலானார். ஜாதகனுக்கு எவ்விதம் நீண்ட ஆயுள் உண்டென்று சொல்லுங்கள் என்று வினவ, பராசார முனிவர் கூறுகின்றார். எட்டாம் வீட்டுக்குரிய குரு பத்தாம் வீட்டில் இருப்பதால்;

இதுவுமது

35. குற்றமாம் சிலவே நூலில் குறித்தன மிதுவல் லாமல்
வெற்றிசேர் மதியும் வீணை மேவியு மதற்கு யெட்டோன்
சிற்றமா யுச்ச மாகிச் செங்கதிர் திரத்தி லேறக்
கற்றிகூ முலகி லேதான் காலைக்கு வயது தீர்க்கம்.

35. சில நூல்களில் குறைவாகச் சொல்லப்பட்டிருக்கிறபடி இன்னூட்களில் தீங்கு ஏற்படும். இதுவல்லாமல் சந்திரன் மிதுனத்திலும், அவ்விடத்திற்கு எட்டாமிடமாகிய மகரத்திற்குடையவனுகிய சனி உச்சமாகித் துலாத்திலும், லக்கினாதிபதியாகிய சூரியன் நான்காமிடத்தில் ஸ்திரத்தில் இருப்பதால் உலகில் ஜாதகனுக்கு நீண்ட ஆயுள் உண்டு என்றேரும்.

36. பராசரர் கூறும் போது பகருவார் புசண்டர் தாமும்
நிராதரத் துணைவர் சேதி நிகழ்த்துவீ ரென்று கேட்கத்
திறமுள பின்பா கத்தில் செப்புவோ மிதுவல் லாமல்
வகையுடன் தந்தை தோழன் விளம்புவோம் பின்பா
[கத்தில்.

36. இங்ஙனம் பராசர முனிவர் சொல்லும்போது புஜண்ட முனிவர் சொல்லுகின்றார். (தந்தையின்) சகோதரன் செய்தியைக் கூறுங்கள் என்று கேட்க, பிற்பாகத்தில் சொல்லுகின்றேரும். தந்தையின் சகோதரனைப்பற்றியும் பிற்பாகத்தில் சொல்லுகின்றேரும்.

ஜாதகம் 20

1. சந்திரன் மேரு வாகச் சனிபுகர் புதன்பான் தூக்கம்
மந்திரி வீணை யாக மங்கலன் மேட மாக
முந்தியக் கருங்கோள் மீனம் முனிகன்னி ஜன்மஞ் சீயம்
இந்தவா றுகிரகங்கள் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் தனுசிலும், சனி சுக்கிரன் புதன் சூரியன் துலாத்திலும், குரு மிதுனத்திலும், செவ்வாய் மேஷத்திலும், ராகு மீனத்திலும், கேது கன்னியிலும் நின்று ஜன்மலக்கினம் சிம்மமாகவும் கிரகநிலைகள் இருந்தால் ஏற்படும் பலனைச்சொல்லுங்கள்.

கிரகநிலை

ராகு	செவ்வாய்		குரு
	இராசி சக்கரம்		
			லக்கினம்
சந்திரன்		சனி சுக்கிரன் புதன் சூரியன்	கேது

ஜாதகியின் கிரகநிலை

2. காதலி கேட்கும் போது கௌசிகர் சொல்லு கின்ரூர்
மேதினில் பெண்பால் ஜன்மம் விளம்புமில் வடதென் வீதி
போதவே மேற்கு வாசல் புத்தர்தங் கோஷ்டம் முத்தரம்
தீதிலா ஈசன் கீழ்ப்பால் திருமாலின் கோஷ்ட மக்கினி.

2. பார்வதிதேவி கேட்கும்போது கௌசிக முனிவர் கூறுகின்ரூர். இது பெண்ணின் ஜாதகம். இவள் பிறந்த வீடு வடக்குத் தெற்கான வீதியில் மேற்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. வடக்குத் திக்கில் புத்தர்பிரானின் கோவில் உள்ளது. தீங்குகளை விலக்கும் சிவபெருமான் கீழ்ப்பக்கத்திலும் தென்கிழக்குத் திக்கில் திருமாலும் கோயில் கொண்டுள்ளனர்.

3. அருகினில் மாரி தங்கும் அத்திசை காளி தந்தி
பெருமுனி யம்மன் தெற்கில் பேசுவோர் தீயு முண்டு
மருமலர் சோலை தங்கு மறைகிரேஞ் சமவூர் தன்னில்
திருமகள் கங்கை வம்சம் ஜனிப்பளா மாரஞ் ஜன்மம்.

3. சமீபத்தில் ஒரு மாரியம்மன் கோவிலும் அதே பக்கத்தில் காளி கோவில் ஒன்றும், விநாயகர் ஆலயம் ஒன்றும் உள்ளன. தெற்குத் திசையில் பெருத்த முனீச்வரன் கோவிலும் அம்மன் கோவிலும் இவையே யன்றி (மாரியம்மன்) திரௌபதியம்மன் கோவிலும் இருக்கும். அழகிய பூஞ்சோலையொன்றும் உள்ள சம்மிலையான ஊரில் ஜாதகி வேளாளர் குலத்தவளாகத் தன் தந்தைக்கு ஆறுவது குழந்தையாகப் பிறப்பாள் என்று சொல்லுவோம்.

4. அன்னையின் தந்தை யோக மவள்துணை புத்திர யோகம்
மன்னிய வரனின் யோகம் மாதவன் யோகந் தானும்
இன்னவள் முன்பின் ஜன்ம மியம்புவோ மிந்நூல் [தன்னில்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

4. ஜாதகியின் தாய் தந்தையர், அவளுடைய சகோதரர், புத்திரர், கணவன், இவர்களுடைய யோகங்களையும், இவளுடைய முற்பிறவி, மறுபிறவி ஆகியவற்றையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றோம். உயர்ந்த கணவனை யடைந்த உத்தமியே! கேளுங்கள்.

ஜாதகியின் தந்தையின் சகோதரர்

5. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மிருநான் [காகும்
நொந்திடும் யாவுந் தாமும் நுவலுவோ மாண்பால் ரண்டு
சந்ததம் விருத்தி யாகும் சோதரர் மூத்தோ ராவர்
இந்தவாறு தந்தை ஜன்ம மியம்புவோ நவம மென்று

5. ஜாதகியின் தந்தையின் உடன்பிறந்தவரைபற்றிச் சொல்லுகின்றோம். அவர் எட்டுபேர் ஆவர். அவர்கள் அனைவரும் மாண்டு விடுவார்கள். இரு சகோதரர் மட்டுமே நீண்ட ஆயுள் உடையவர்கள். அச் சகோதரரும் ஜாதகியின் தந்தைக்கு மூத்தவராவர். இவ்விதம் தந்தை ஒன்பதாவதாகப் பிறந்தான் என்றோம்.

ஜாதகியின் தந்தையின் குணம்

6. இவள்பிதா குணத்தைக் கேளாய் ஈகையுங் கொஞ்ச [முள்ளான்
அவனியில் கருநி றத்தான் அழகுளான் கல்வி கொஞ்சம்
நவனியில் செட்டுச் செய்வன் நல்லவன் கபடு கொஞ்சம்
தவசிக ளுறவு கொள்ளான் தாட்சிண்யன் புத்தி மானும்.

6. ஜாதகியின் தந்தையின் குணத்தைக் கேளுங்கள். கொடையாளி. கருத்தநிறமுடையவன். அழகுள்ளவன். சிறிதே கல்வியறிவுள்ளவன். உலகில் வியாபாரம் செய்து வருவான். நல்லவனாக இருப்பான். சிறிது கபடமு முள்ளவன். தவம் செய்வோர் உறவைக் கொள்ளாதவன். தாட்சிண்யமுடையவன். புத்திமான்.

7. நடையது துருசு முள்ளான் நன்முக வடுவு முள்ளான்
அடைமொழி யதிகங் கூறுவன் அதிகபால் பாக்கிய
[முள்ளான்
விடம்போலே கோபங் கொஞ்சம் வீணப வாத முள்ளான்
திடமான குடும்ப முள்ளான் தேவிமேல் பிரிய னுமே.

7. வேகமாக நடக்கும் இயல்பினன். அழகிய முகத்தில் வடுவுள்ளவன். அடைமொழிகளுடன் பேசுபவன். முற்பிறவியில் செய்த நல்வினையால் இப்பிறவியில் பாக்கிய முள்ளவன். சர்ப்பம்போல் கோபங் கொள்ளுவான். வீண் அபவாதத்தை அடைவான். திடமான குடும்பம் உள்ளவன். மனைவியின் மீது பிரியமுள்ளவன்.

8. வண்டிவா கனமு முள்ளான் மானிலம் விருத்தி செய்வன்
குண்டைகோ பலித முள்ளான் குஞ்ஜர நடையு மாவன்
அண்டினோர்க் குதவி செய்வ னவன்பொரு ளிச்சை
[யுள்ளான்
துண்டமாய்ப் பேசு வானுந் துணைவர்சொல் தட்டா
[னென்றோ்ம்.

8. வண்டி முதலிய வாகன வசதி உள்ளவன். விளைநிலங்களைப் பெருக்குவான். பசு எருதுகள் இவற்றின் விருத்தியுடையவன். யானையைப் போன்ற கம்பீரமான நடையுள்ளவன். தன்னையண்டி வந்தவர்க்குக் உபகாரி. செல்வத்தின் மீது விருப்பமுள்ளவன். கண்டித்துப் பேசுபவன். தன் சகோதரனின் வார்த்தையை மீறுதவன்.

9. பெருதன முடைய னுகும் பித்தமாந் தேக முள்ளான்
திறமையாய்ப் பேச வல்லன் தீரமா நெஞ்ச முள்ளான்
நிறையவே குடும்பி யாவன் நீள்நிலம் சேர்ப்பா னுகும்
அறநெறி பூணு னுகும் அவன்மனம் சஞ்ச லந்தான்.

9. பெரும் செல்வம் உள்ளவன். பித்த சரீரி. கெட்டிக்காரத்தனமாகப் பேசுபவன். தைரியமுள்ள மனத்தினன். பெரிய குடும்பத்தையுடையவன். வெகுவாக விளை நிலங்களைச் சேர்ப்பான். தரும வழியில் நடக்காதவன். சஞ்சலமுள்ள மனத்தினன்.

பத்மரேகை

10. காரியச் சமார்த்த னுகும் கல்மன மூகை வானும்
நாரியர் மோக வானும் நற்கரம் கமல ரேகை
கூறுவான் சுகமாய் வார்த்தை குமரனுங் குலதெய் வங்கள்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

10. காரியங்களை சாமர்த்தியமாகச் செய்பவன். இரக்கமற்ற மனமுள்ளவன். ஊமையுடையவன். பெண்கள்மீது மோகம் கொள்ளு

வான். கமலரேகையைக் கையில் உடையவன். சுகமாகப் பேசுபவன். இவனது குலத்தெய்வம் முருகக் கடவுளாம். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகியின் பிறப்பு

11. இக்குண முடையோ னுக்கு இவளுமே யுதிப்பா ளாகும்
மிக்கவே யிவள்கு ணத்தை விளம்புவோம் மாஞ்சி வப்பள்
பக்குவ மான வார்த்தை பகருவாள் கல்வி யுள்ளாள்
சிக்கன மில்லா ளாகும் சொல்லதுந் தவரு ளென்றோம்.

11. இவ்விதக் குணங்களுடையவனுக்கு இந்த ஜாதகி பிறப்பாள் என்றோம். ஜாதகியின் குணத்தைக் கூறுகின்றோம். மாநிறமுடையவள். பக்குவமாகப் பேசுபவள். சிறந்த கல்வியறிவுள்ளவள். சிக்கனமில்லாதவள். சொல் தவறுதவள் என்றோம்.

ஜாதகியின் குணங்கள்

12. அன்னங்கள் போட வல்லாள் ஆளனுக் கினிய ளாகும்
பன்னியே பேச வல்லாள் பந்துவுக் கினிய ளாகும்
பின்னமில் லாத தேகம் பெருந்தன முடைய ளாகும்
கன்னென மொழியே சொல்வள் காதலி யதிர்ஷ்ட சாலி.

12. ஏழைகளுக்கு அமுது படைப்பதில் ஆர்வமுள்ளவள். தன் கணவனுக்குப் பிரியமானவள். பன்னிப்பன்னிப் பேசும் இயல்பினள். சுற்றத்தாருக்குப் பிரியமானவள். ஊனமில்லாத சரீர முடையவள். பெரிதான செல்வம் உடையவள். இனிய வார்த்தைகளையே பேசுபவள். அதிருஷ்டமுள்ளவள்.

யோகமேற்படக் கிரகநிலை

13. எப்படி யோக மென்று இயம்பினீர் முனியே நீர்காம்
மெய்ப்புடன் லக்கி னத்தி லெய்யவ னதி நீசம்
ஒப்புட னின்ற தாலே உதித்தவள் தரித்திர முள்ளாள்
இப்பவு மாறுஞ் ஜன்ம மிவள்வந்த தாலே சொன்னேன்.

13. எப்படி யோகம் ஏற்படும் என்று சொன்னீர்கள்? முனிவரே இலக்கினத்திற்கு சூரியனுக்கு அவன் தன் நீசஸ்தானமான துலாத்தில் இருப்பதால் ஜாதகி தரித்திரமுள்ளவள். இவளும் தன் தந்தைக்கு ஆறும் பிறவியாகப் பிறந்தவள் என்பதால் சொன்னேம்.

14. மறுத்தவர் கூறு கின்றார் மங்கலன் புகரு மாட்சி
திறமையாய்ச் சனியு மூச்சந் தேவர்தங் குருவும் லாபம்
பிறையது வஞ்சில் நிற்கப் பேசுவோம் யோக முள்ளான்
திருமகள் வாச முள்ளாள் தேவியே கேட்டி டாயே.

14. இங்ஙனம் கூறியதை மறுத்துச் சொல்லுகின்ருர். செவ் வாயும் சுக்கிரனும் ஆட்சியாகவும், திறமையாகச் சனி உச்சமாகவும், குரு லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், சந்திரன் ஐந்தாமிடமாகிய தனுசிலும் இருப்பதால் யோகம் ஏற்படும். இலட்சுமி வாசமுள்ளவள். தேவியே! கேளுங்கள்.

ஜாதகியின் சகோதரபாவம்

15. இன்னவள் துணைவர் தம்மை யியம்பவோ மூத்தோர்
[காணேம்
தன்னிலே யிளையோ ருண்டு ஜயமுனி கூறு கின்ருர்
அன்னவள் தனக்குத் தோழர் அணுகாரே யென்று
[சொன்னேம்
பின்னமாம் சேதி தன்னைப் பேசுவீர் முனியே என்ருள்.

15. ஜாதகியின் உடன் பிறந்தவரைச் சொல்லுகின்றேம். மூத்தவர் இல்லாதவள். இளைய சகோதரன் ஒருவனுண்டு என்ருர். ஜயமுனி மறுத்துச் சொல்லுகிருர். ஜாதகிக்கு உடன் பிறந்தவர் நிலையார் என்று கூறுகின்றேம். சகோதரர் இறக்கக் காரணம் கூறுங் கள், முனிவரே! என்ருள்.

சகோதர தோஷ நிரகரிலை

16. இரவியுஞ் சனியு மூன்றி லிருப்பதால் துணைவர் தோஷம்
[1]அரிபுகர் மூன்றில் நிற்க அந்தணன் சேயும் பார்க்கத்
திறமையாய்த் துணைவ ருண்டு தேவியுஞ்
[சொல்லு கின்ருள்
கரும்பாம்பு எட்டில் நிற்கக் காதலி தந்தை தாயார்;

16. சனியும் சூரியனும் சகோதர ஸ்தானமாகிய மூன்றுமிடத்தில் இருப்பதால் உடன்பிறந்தவருக்குத் தோஷமுண்டு. புதன் சுக்கிரன் மூன்றுமிடத்தில் இருந்து குரு செவ்வாயால் பார்க்கப்படுவதால் திண்ணமாகச் சகோதரர் உண்டு. பார்வதி கேட்கின்ருள். ராகு எட்டாமிடத்தில் இருப்பதால் ஜாதகியின் பெற்ருர்;

தந்தையின் முற்பிறவி

17. செய்திடு வினையி னலே செப்புவோ மந்தத் தோஷம்
தையலால் தோஷ மில்லை தாய்தந்தைத்
[தோஷம் சொல்வோம்
ஐயமில் லாமல் சொல்வேன் அவள்தந்தை
[பூர்வம் தன்னில்
வையமேல் தணிகை மேல்பால் அருகினில்
[சிற்றூர் தன்னில்,

1. புதன்.

17. செய்திட்ட தீவினையால் அந்தத் தோஷம் ஏற்பட்டது; பெண்ணால் தோஷம் ஏற்படவில்லை. அவளுடைய தாய் தந்தையரால் செய்யப்பட்ட தீவினையென்று சந்தேகமின்றிச் சொல்லுகின்றோம். ஜாதகியின் தந்தை முற்பிறவியில் திருத்தணிகைக்கு மேற்கில் உள்ள சிற்றூரில்;

தீவினை

18. பிறந்தனன் செக்கா ளுகப் பிரபலச் செட்டுச் செய்து
நிறைந்ததோர் குடும்பி யாகி நிமலனும் வாழு நாளில்
உறைந்தவூழ் தன்னைச் சொல்வேன் உரைக்கிற
[மார்க்கந் தன்னை
விரைவினி லடைத்து விட்டான் மேவிற்றுத்
[தோஷ மொன்று.

18. வாணியர் மரபில் பிறந்து, பிரபலமான வியாபாரம் செய்து வந்து, நிறைந்த குடும்பத்தை யடைந்து, வாழ்ந்துவந்த காலத்தில் ஏற்பட்ட தீவினைவைச் சொல்லுகின்றோம். நடந்துவரும் (பொது) வழியை ஜாதகியின் தந்தை அடைத்துவிட்டான். அஃது ஒரு தோஷமாக ஏற்பட்டது.

மாட்டின்மீது சுமையை அதிகமாக வைத்தது

19. நந்திமே லதிகப் பாரம் நாயகன் போட்டு மேதான்
வந்தன னிதுவு மன்றி மறைக்குல மாது மோகம்
சிந்தையில் கொண்டு பின்பு சிலேடையாய்ப்
[பேச லுற்றான்
அந்தநேர் மாது தானும் அதற்கவ ளிசையா ளாகி;

19. காளைமாட்டின் மீது அதிகமான பாரத்தை வைத்து ஒட்டினான். இது தவிர, ஓர் அந்தணக் குலப்பெண்மீது இவன் மையல் கொண்டு மனத்தில் கெட்ட எண்ணத்துடன் இரு பொருள்படும்படி அவளிடம் பேசினான். அப் பெண்ணும் இவன் வார்த்தைக்கு இசையாதவளாகி;

பசுவின் பாலை ஒட்டக் கறந்தது

20. பலவிதச் சாபம் சொன்னள் பருகிற்று வதுவோர் சாபம்
நலமுள கோவின் பாலை நாயகன் கறந்து கொண்டு
குலவிய குட்டிக் கேதான் கொஞ்சமும் தராமல் செய்தான்
இலகிற்று விருதோ ஷங்கள் இவனுமே யச்சென் மத்தில்.

20. பலவிதமாகச் சாபமிட்டாள். அந்தச் சாபம் ஒன்று தொடர்ந்தது. நன்மை மிக்க பசுவின் பாலை அறவே கறந்துவிட்டு அதன்

கன்றுக்குச் சிறிதும் பால்விடாமல் சென்றுவிட்டான். இவ்வாறு பல விதமான தோஷங்கள் இவனுக்கு முற்பிறவியில் ஏற்பட்டன.

21. அந்தியக் காலந் தன்னில் ஆண்சுதர் யாவும் நீங்கிக்
கந்தன்தன் ஞல யத்தில் கனத்ததோர் பணிகள் செய்து
பிந்தியு மரண மாகிப் பிரமனுல் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றே மறைகிறே

[முன்னூழ்த் தோஷம்;

21. தந்தையும் தன் கடைசிக்காலத்தில் புத்திரர்கள் அனைவரையும் இழந்த பிறகு முருகக்கடவுள் ஆலயத்துக்குத் திருப்பணிகள் பல செய்து, மரண மடைந்தான். மிண்டும் பிரமதேவனுல் படைக்கப் பட்டுப் பிறந்தவன் இவன் என்று சொன்னேம். முன் பிறவியின் தோஷத்தால்;

தாயின் குணங்கள்

22. மதலைகள் ஜனிக்கில் தீதா மங்கையுங் கேட்க லுற்றுள்
சதமுள மாதுர் தோஷம் சாற்றுவீர் முனியே என்றுள்
விதங்களைச் சொல்லு கின்றேன் மெல்லியு

[மிருகி றத்தாள்
சதியிலா மனத்த ளாகும் தன்மனங் கவடு கொஞ்சம்.

22. புத்திரர்கள் பிறந்தால் நிலையார். பார்வதிதேவி கேட்கலாஞள். தாயினுல் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுங்கள் என்றுள். அவை ஏற்பட்ட விதத்தைச் சொல்லுகின்றேம். தாய் கரியநிறமுடையவள். தீங்குகளில்லாத மனத்தினள். சிறிது கபடமுள்ள மனத்தவள்.

தாயின் உடன்பிறந்தவர்

23. தேவதாப் பக்தி கொள்வள் ஜனவுப காரஞ் செய்வள்
மேவிடுங் கோபங் கொஞ்சம் விளம்புவோம்

[துணைவர் தம்மை
ஆவலா யாண்பா லொன்று அதுவன்றி வேறே யில்லைத்
தோன்றினுந் தோஷ மாகுஞ் சொல்லுவே

[மவன் தன் சேதி.

23. தெய்வ பக்தியுள்ளவள். ஜனங்களுக்கு உபகாரம் செய்பவள். சிறிது கோபம் கொள்ளுவாள். தாயின் உடன் பிறந்தவர்களைப்பற்றிச் சொல்லுகின்றேம். ஒரு சகோதரனைத் தவிர யாருமில்லை. மேற் பட்டுப் பிறந்தாலும் நிலையா. தாயின் சகோதரனின் செய்தியைச் சொல்லுகின்றேம்.

இதுவுமது

24. மாகிற மர்ம வானும் மனைவியால் பெருமை பூண்பன்
ஆனவர் நேசம் கொள்வன் அவன் தந்தை
[யாஸ்தி யில்லான்
தேன்மொழி மனையாள் பக்கல் செல்லுவான்
[கல்வி கொஞ்சம்
ஈனமாங் குணங்க ளில்லான் இவனுமே கிருஷி செய்வன்.

24. மாகிற முள்ளவன். இரகசிய முடையவன். தன் மனைவியால் பெருமையை யடைவான். பெரியோர்களின் நட்பைக்கொள்ளுவான். தன் தந்தையின் ஆஸ்திகளை யடையாதவன். இனிய வார்த்தைகளைப் பேசும் மனைவியின் ஊரில் சென்று வாழ்வான். கல்வியறிவு சிறிதே உடையவன். அற்ப குணங்கள் இல்லாதவன். விவசாயம் செய்து வருவான்.

25. பிறந்தயில் வாசஞ் செய்யான் புகலுவோ
[மனைவி யொன்று
சிறந்திடும் புத்திரர் தாமுஞ் செப்புவோம் விசேஷ மாக
நிரந்தர மாக வாழ்வன் நிமலியின் ஊரைச் சார்வன்
அறந்தனை வளர்க்கு மெங்கள் அம்பிகை யாளே கேளாய்.

25. தான் பிறந்த வீட்டில் வாசம் செய்யாதவன். ஒரு மனைவியையே உடையவன். புத்திரர்கள் சிறந்தவர்களாக இருப்பார்கள். நீண்ட ஆயுளுடனிருப்பான். மனைவியின் ஊரில் சேர்ந்து வாழ்வான். தருமத்தை வளர்க்கும் எங்கள் தாயே! கேளுங்கள்.

தாயின் முற்பிறவி

26. மாதுரு பூர்வந் தன்னை யறைகிறேங் காஞ்சி தன்னில்
மேதினில் சேடர் வம்சம் வித்தகி யுதித்தா ளென்றேரும்
கோதிலா மதலை யுண்டாய்க் குலத்துக்கு மேலாய்வாழ்ந்து
தீதிலா வறுமை யின்றித் தேவியும் வாழு நாளில்;

26. தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். காஞ்சிபுரத்தில் சேடர்மரபில் பிறந்தாள் என்றேரும். தீங்குகளில்லாத புத்திரர்களை யடைந்து தன் குலத்திற்கு மேம்பட்டவளாக வாழ்ந்து வந்தாள். தீமையும் தரித்திரமுமில்லாமல் வாழ்ந்து வருங்காலத்தில்;

27. பஞ்சையாய்ப் பெண்ணு மோர்நாள் பாலகன்
[தனக்கு அன்னம்
கெஞ்சியே கேட்கும் போது கர்வத்தா லில்லை யென்றுள்
வஞ்சியும் மனவெ றுப்பா லறைகிறுள் சாபந் தானும்
தஞ்சமாய்ப் பின்னன் மத்தில் சந்ததி நாச மாகும்.

27. ஏழைப் பெண் ஒருத்தி தன் குழந்தைக்கு அன்னம் வேண்டி இவளைக் கேட்கும்போது இவள் கர்வமுற்று இல்லையென்று கூறினாள். அப்பெண்ணும் மனம் வருந்திக் கூறிய சாபத்தைக் கேளுங்கள். மறு பிறவியில் சந்ததி நாசமடையும்.

28. இல்லங்கள் பாழ தாகு மென்றுமே சொல்லி யேதான்
குன்றிய மனத்த ளாகிக் கோதைவே றில்லஞ் சென்றாள்
அல்லலா யேழை சாபம் அணுகிற்று யிச்சென் மத்தில்
சொல்லுவேன் தந்தை யாலும் சேர்ந்திடு மதலை தோஷம்.

28. வீடுகள் பாழடைந்து போம் என்று சொல்லி, மனம் நொந்து வேறு வீட்டுக்குச் சென்றாள். அந்த ஏழையின் சாபம் இவளைத் துன்பமாகத் தொடர்ந்தது. இப்பிறவியில் தந்தையினாலும் அவர்களுக்குப் புத்திரதோஷம் ஏற்படும் என்றோம்.

29. இவ்விதத் தோஷந் தானு மிருவர்க்குச் சேர்ந்த தாலே
பவ்வமாய்ச் சுதர்க்குத் தோஷம் பருகாது [நஷ்ட மென்றோம்
கவ்விய தோஷந் தீரக் கழறுவோஞ் சாந்தி தானும்
ஒவ்விய கர்ம சாந்தி உத்தமன் செய்வா னாகில்;

29. இவ்விதமான தோஷங்கள் தாய் தந்தையர் இருவருக்கும் சேர்ந்ததால் இவளுக்குச் சகோதரரில்லை என்றும், பிறந்தாலும் நிலை யார் என்றும் சொல்லுகின்றோம். இவளைப் பற்றிய தோஷம் நீங்கச் சாந்தியொன்று கூறுகின்றோம். கர்ம சாந்தியொன்றை ஜாதகியின் தந்தை செய்துவந்தால்;

30. சுதர்களும் விருத்தி தீர்க்கம் சொல்லுவோ [மாண்பா லொன்று
விதியினால் பெண்பா லிவ்வாறு விளம்புவோந் தீர்க்க மாக
மதிறுதல் மாது கேட்பா ளறைந்திடில் கர்ம சாந்தி
விதங்களைச் சொல்லு மென்ன விளம்புவார் [முனிவர் தாமே.

30. புத்திர விருத்தி ஏற்படும். ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் பிறந்து நீண்ட ஆயுளுள்ளவராவர் என்றோம். சந்திரனைப் போன்ற அழகிய புருவத்தையுடைய பார்வதி கேட்கலானாள். கர்ம சாந்தி செய்யும் விதத்தைச் சொல்லுங்கள், முனிவரே! என, முனிவர் கூறுகின்றார்.

31. அதர்வணம் கற்றோ ராலே அம்பிகை பூஜை செய்து
பதியினில் கர்ம சாந்தி பண்ணினால் தோஷம் போக்கி
விதியினால் சுதராண் தோன்றும் வித்தகன் செய்யா னாகில்
சதியுண்டு சுதர்க ளுக்குச் சத்தியே கேட்டி டாயே.

31. அதர்வணவேதம் கற்றவரால் அம்பிகையின் பூசையைச் செய்வித்து வீட்டில் கர்மசாந்தி செய்தால் தோஷம் நீங்கிப் புத்திரன் பிறப்பான். செய்யாவிடில் புத்திரர்கட்குத் தீங்காம். தேவியே! கேளுங்கள்.

தந்தையின் மறுபிறவி

32. தந்தையின் பின்ஜன் மத்தைச் சாற்றுவோம்
[காஞ்சி மேல்பால்
சந்தத மிக்கு லத்தில் ஜனித்துமே பெருமை பூண்டு
மூந்திய பூமி யுண்டாய் மூயற்சியாய்க் குடும்பி யாகி
எந்தையே வாழ்வா னுகும் ஈச்வரி கேட்டி டாயே.

32. ஜாதகியின் தந்தையின் மறு பிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சீபுரத்திற்கு மேற்குப் பக்கத்தில் இதே குலத்தில் பிறந்து, பெருமையடைந்து, அதிகமான பூமியைப் பெற்று, உயர்வான குடும்பத்தை யடைந்து வாழ்வான். தேவியே! கேளுங்கள்.

தாயின் மறுபிறவி

33. மாதுரு பின்ஜன் மத்தை யறைகிறே மவ்வூர் தன்னில்
தீதிலா யிக்கு லத்தில் ஜனித்துமே வாழ்வா ளாகும்
கோதிலா மதஜ்ல யுண்டாய்க் குறைவிலா வாழ்வா ளாகும்
மாதவர் துதிக்கா நின்ற மங்கையே மேலுங் கேளே.

33. தாயின் மறு பிறவியைச் சொல்லுகின்றேம். அவ்வூரிலேயே இதே குலத்தில் பிறந்து வாழ்ந்து வருவாள். தீங்குகளில்லாத புத்திரர்களைப் பெற்றுக் குறைவில்லாமல் வாழ்ந்து வருவாள். மாபெரும் தவம் செய்பவரும் துதிக்கும் தேவியே! மேலும் கேளுங்கள்.

ஜாதகியின் திருமணக் காலம்

34. ஜாதகி மணத்தின் காலஞ் சாற்றுவோ மீரஞ் சாண்டில்
மேதினி லுள்ளூர் தன்னில் வித்தகி மாதுர் வர்க்கம்
கோதிலா வரணுண் டாகுங் கூறுவோம் புத்திர பாவம்
சூதிலாச் சொல்லு கின்றேன் தோகையே கேட்டி டாயே.

34. ஜாதகியின் திருமணக் காலத்தைக் கூறுகின்றேம். அவளுடையபத்தாம் வயதிலேயே உள்ளூரில் தன் தாயின் வர்க்கத்திலிருந்து குறைவில்லாத கணவன் வாய்ப்பான். அவர்களுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றேம். மறைவில்லாமல் கூறுவதைக் கேளுங்கள். தாயே! கேளுங்கள்.

புத்திரபாவமும் முற்பிறவியும்

35. புத்திர ராண்பால் ரண்டு பெண்களு மவ்வா ரூகும்
சித்தமாய் நான்குந் தீர்க்கஞ் செப்புவோ மூன்று சேதம்
வித்தகி பூர்வம் தன்னை விளம்புவோங் காஞ்சி தன்னில்
சுத்தமாய்க் கருணீ கராய்த் துலங்கிலை ளிவளே
[யென்ரேரும்.

35. இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து அவர்கள் நான்கு பேரும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார். மூன்று குழந்தைகள் நிலையா. ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுகின்ரேரும். காஞ்சி புரத்தில் கருணீகர் குலத்தில் பிறந்தாள் என்ரேரும்.

36. தானமுந் தர்மஞ் செய்து சகலர்க்கு நல்லோ ளாகி
ஆனதோர் மதலை யுண்டாய் அவளுமே வறுமை யின்றி
மானமாய் ஜீவித் தேதான் மறலியின் பதிக்குச் சென்று
மான்விழி மாதா யிங்கு வந்தன ளிவளே யென்ரேரும்.

36. தான தர்மம் செய்து எல்லோருக்கும் நல்லவளாகிப் புத்திரர்களை யடைந்து, வறுமையில்லாமல் கண்ணியத்துடன் ஜீவனம் செய்து வந்து, மரணமடைந்து, இங்கு மானைப்போன்ற விழிகளையுடைய பெண்ணாகப் பிறந்தவள் இவள் என்று சொன்னேம்.

தந்தையின் மரண காலம்

37. தந்தையின் மரண காலஞ் சாற்றுவோ முப்பான் ரண்டில்
வந்திடு மகர மாத மறைகிரேரங் கெண்டந் தானும்
சந்திரன் தசையி லேதான் சேயது புசிப்பு நாளில்
எந்தையே தந்தை தோஷம் எய்திடு
[மென்று சொன்னேம்.

37. ஜாதகியின் தந்தையின் மரண காலத்தைச் சொல்லுகின்ரேரும். அவளுடைய முப்பத்திரண்டாம் வயதில் தைமாதத்தில் கண்டம் ஏற்படும். அப்போது சந்திரமகாதசையில் செவ்வாய் புக்தி நடைபெறும். அப்போது தந்தை மரணம் அடைவான் என்று சொன்னேம்.

தாயின் மரண காலம்

38. மாதரு மரண கால மறைகிரேர முப்பா ரெண்பான்
தீதிலாக் கன்னி மாதஞ் சொல்லுவோங் கண்டந் தானே
மேதினில் மதிதசை தன்னி லவன்சுய புத்தி தன்னில்
ஓதினேன் மார கங்கள் உத்தமி கேட்டி டாயே.

38. தாயின் மரண காலத்தைச் சொல்லுகின்ரேரும். முப்பத்தொன்பதாம் வயதில் புரட்டாசி மாதத்தில் கண்டம் ஏற்படும். சந்திர மகாதசை சந்திர புத்தியில் மரணம் ஏற்படும். உயர்ந்த குணமுள்ள தாயே! கேளுங்கள்.

ஜாதகியின் மரண காலம்

39. ஜாதகி மரண காலஞ் சாற்றுவோ மன்ப தாண்டில்
கோதிலாக் கடக மாதம் குறைபக்கந் திரயோ தசியில்
தீதான சூலை யாலே தேகமே வாடு மென்றேரும்
ஓதுவோ மிவள்பின் ஜன்மம்.....தன்னில்;

39. ஜாதகியின் மரண காலத்தைக் கூறுகின்றேரும். ஐம்பதாம் வயதில், ஆடி மாதத்தில், கிருஷ்ணபட்சம், திரயோதசி திதியில், தீய வயிற்று வலியால் மரணம் அடைவாள் என்றேரும். அவளுடைய மறு பிறவியில்.....ஊரில்.

ஜாதகியின் மறுபிறவியும் கணவனின் யோகமும்

40. பிறப்பளே சத்திரிய வம்சம் பெருமையும் புகழு
[முண்டாய்த்
திருமகள் வாசம் பூண்டு செல்வதி வாழ்வா ளாகும்
வரனுடை யோகம் தன்னை யறைகிறே மிருநி றத்தான்
.....பூமியுண்டு எந்தையே கேட்டி டாயே.

40. பிறப்பாள். க்ஷத்திரிய குலத்தவளாகத் தோன்றிப் பெருமையையும் கீர்த்தியும் உடையவளாகி வாழ்ந்து, இலட்சுமி கடாட்சம் பெற்று வாழ்ந்து வருவாள். ஜாதகியின் கணவனுடைய யோகத்தைச் சொல்லுகின்றேரும். கரிய நிறமுள்ளவன். பூமியுண்டு. தாயே!..... கேளுங்கள்.

41. கல்வியுங் கொஞ்ச முள்ளான் காதலி வந்த பின்பு
நல்லவ னாகி வாழ்வன் நற்பூமி சேர்ப்பானாகும்
இல்லறம் புதிதாய்ச் செய்வன் இளம்பிறை போலே
[யோகம்
வல்லியே கீர்த்தி மானும் வந்திடுந் தனதான் யங்கள்.

41. சிறிதே கல்வியறிவுள்ளவன். ஜாதகியை மணந்த பின்பு நல்லவனாக வாழ்ந்து வருவான். நன்கு விளைகின்ற பூமியைச் சேர்ப்பான். புதிய வீட்டைக் கட்டுவான். வளர் பிறையைப்போல் யோகம் விருத்தியாம். தாயே! கீர்த்தியைப் பெறுவான். தனதான்யங்கள் பெருகும்.

ஜாதகியின் ஜனனகாலதசை

42. உதித்தவள் ஜனன காலம் உயர்கேது தசையி ருப்பு
மதித்திட வாண்டு நான்கும் வருந்தினம் பனிரண் டாகும்
அதியான ரோகந் தானும் சந்ததி தனக்கு நேரும்
பதியினில் திருவு மோங்கும் பாக்கிய முண்டா மென்றேரும்.

42. ஜாதகியின் ஜனன காலத்தில் கேது மகாதசையில் இருப்பு நான்கு வருடங்களும், பனிரண்டு நாட்களுமாம். அக்காலத்தில் பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் அதிகமான நோய் ஏற்படும். வீட்டில் செல்வம் பெருகும். பாக்கிய முண்டாகும்.

43. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவாளம்மன் தாமும்
அனையவே தந்தை மூத்தோ ரவர்பலன் சொல்லு
[மென்னக்
கனமுள குடும்ப மொன்றுய்க் கழறுவோம் சிலவே சேதி
இணையிலாப் பின்பா கத்தி லியம்புவோங் கேட்டி டாயே.

43. இங்ஙனம் முனிவர் சொல்லும்போது பார்வதி தேவி கூறுகின்றாள். ஜாதகியின் தந்தையின் மூத்த சகோதரனின் பலனைச் சொல்லுங்கள் என்றாள். பெரியதொரு குடும்பம் ஒன்றுகவே யிருக்கும் என்றும் சொல்லுவோம். மற்றவிஷயங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 21

1. திங்களு மான தாகத் [1]திவாகரன் தேள தாக
மங்கலன் சாடி புக்க மறைமீனம் ராகு மேடம்
தங்கிய புகருங் கேது தராசினில் சனியு மாதை
இங்கிதப் புந்தி மேரு இலக்கினம் சிம்ம மாக ;

1. சந்திரன் மகரத்திலும், சூரியன் விருச்சிகத்திலும், செவ்வாய் கும்பத்திலும், குரு மீனத்திலும், ராகு மேடத்திலும், சுக்கிரன் கேது துலாத்திலும், சனி கன்னியிலும், புதன் தனுசிலுமாக நின்று இலக்கினம் சிம்மமாகவும் ;

கிரகநிலை

குரு	ராகு		
செவ்வாய்	இராசி சக்கரம்		
சந்திரன்			லக்கினம்
புதன்	சூரியன்	சுக்கிரன் கேது	சனி

ஜாதகனின் வீட்டு நிலை

2. இந்தவாறு கோளு நின்ரு லியம்புவீர் பலனைத் தானே
சந்ததம் புயண்டர் சொல்வர் ஜனித்திடு மாணும் ஜன்மம்
வந்தவன் வடதென் வீதி வாசலு மேற்குப் பார்வை
பந்தமாய்க் கிழக்கில் மாயோன் பரமனு மதன்கீழ் தங்கும்.

2. கிரகங்கள் இருப்பின் பலனைச் சொல்லுங்கள். (எனப் பார்வதி தேவி கேட்க) புஜண்ட முனிவர் கூறுகின்ரார். இஃது ஆண் மகனின் ஜாதகம். ஜாதகன் பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியில் மேற்கு நோக்கியுள்ளது. வீட்டிற்குக் கிழக்கில் திருமாலின் ஆலயமும், அதற்குக் கிழக்கில் சிவபெருமானின் ஆலயமும் உள்ளன.

3. தென்திசை ஆடுதின்னுங் தேவியுங் கருப்ப னிற்பன்
அன்புடன் மாரி தென்கீழ் ஆளிவா கனத்தோள் நிற்கும்
நன்மையாய்ச் சந்தி தெற்கில் நல்கிடு மிதுவல் லாமல்
பன்மையாய்த் துருவங் கீழ்ப்பால் பகருவோஞ் சமவூர்
[தன்னில்;

1. சூரியன்.

3. தெற்குத்திக்கில் ஆடுகளைப் பலி கொள்ளும் காளி தேவியின் கோவிலும், கருப்பன் சாமியின் கோவிலும் உள்ளன. மாரியம்மன் கோவிலும், யாளி வாக்னமுடைய துர்க்கையம்மன் கோவிலும் தென் கிழக்கில் உள்ளன. நல்லதொரு நாற்சந்தி தெற்கில் உள்ளது. இது வன்றிக் கிழக்கில் கோட்டையொன்று உண்டு. இங்ஙனமான சமஸ்தா யுள்ளதோர் ஊரில் ;

ஜாதகனின் குலம்

4. உதிப்பனும் வேளா ளுக உரைக்கிரேரும் தந்தை யோகம்
மதிறுதல் மாதுர் யோகம் வருந்துணை களத்திர புத்திரர்
சதியிலா முன்பின் ஜன்மஞ் சாற்றுவோ மிந்நூல்
[தன்னில்
பதியது செய்கை யெல்லாம் பகருவோர்ந் தாயே கேளும்.

4. ஜாதகன் வேளாளர் குலத்தவனகத் தோன்றுவான். அவனுடைய தந்தை, அழகிய புருவங்களையுடைய தாய், இவர்களின் யோகங்கள், இவனை யடையும் மனைவி, தோன்றும் குழந்தைகள், தீங்குகளில்லாத முற்பிறவி, மறுபிறவி ஆகிய இவை எல்லாவற்றையும் ஜாதகனுடைய செய்கைகளையும் இந்த ஜோதிட நூலில் கூறுகின்றேரும். தாயே ! கேளுங்கள்.

ஜாதகனின் தந்தையின் விவரம்

5. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றவே பலமே யில்லை
வந்தவன் பிதாவின் சேதி யறைகிரேர் மிருகி றத்தான்
சந்தத மொடிசல் தேகி சந்தேக மனத்த னுகும்
நொந்திடும் பேரைக் காப்பன் நீங்காத செல்வ முள்ளான்.

5. ஜாதகனுடைய தந்தையின் வர்க்கத்தாரைப் பற்றிக் கூறக் கிரக பலமில்லை. அதனால் தந்தையின் செய்திகளைக் கூறுகின்றேரும். கருமை கலந்த செம்மை நிறமுள்ளவன். மெல்லிய சரீரி. சந்தேகமுள்ள மனத்தினன். துன்பமடைந்தவரைக் காப்பாற்றுவான். குறையாத செல்வத்தை யுடையவன்.

6. பூமியும் பரிபா லிப்பன் புதுமனை யழகாய்ச் செய்வன்
நேமியோர்க் குதவி செய்வன் நிதானமாய் வார்த்தை
[கூறுவன்
தீமையு மொருவர்க் கெண்ணன் திருமகள் வாச
[முள்ளான்
தாமதக் குணத்தா னுகும் தந்திர வாதி யென்றேரும்.

6. பூமியை யாண்டு வருவான். விவசாயம் செய்து வருவான். அழகிய புதிய வீடு ஒன்றைக் கட்டுவான். உலகத்தவருக்கு உபகாரம்

செய்து வருவான். மெதுவாகப் பேசும் இயல்பினன். ஒருவருக்கும் தீங்குசெய்ய நினையாதவன். இலட்சுமி கடாட்ச முள்ளவன். தாமத மாகக் காரியங்களைச் செய்யும் இயல்பினன். தந்திரமுள்ளவன்.

இதுவுமது

7. நல்லோர்க்கு நல்ல னுவன் நாயகி பட்ச முள்ளான்
இல்லையென் றுரைக்க மாட்டான் எதிரியை வசியங்
[கொள்வன்
சொல்லது விரண்டு முள்ளான் சுத்தகன் மனத்த னுகும்
புல்லிய குறவு கொள்ளான் போஜனச் சுகியனென்றோம்.

7. நல்லவருக்கு நல்லவன். மனைவிக்குப் பிரியமானவன். (மனைவி யிடம் பிரியமுள்ளவன்.) யாசித்தவர்கட்கு இல்லையெனக் கூறுதவன். விரோதிகளைத் தன்வயப்படுத்துபவன். இருவிதமாகப் பேசுபவன். சுத்தமான நல்ல மனத்தை யுடையவன். அற்பர்களிடம் நட்புக் கொள்ளாதவன். சுகமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன்.

உருத்திர ரேகை

8. கரமதில் ருத்திர ரேகை கல்வியு முடைய னுகும்
விரைவினில் நடக்க வல்லன் விளைபுலம் விருத்தி
[செய்வன்
அரிபத்தி பூண்பா னுகும் அன்னங்கள் போட வல்லான்
சிரமுக வடிவு முள்ளான் தேகமும் பித்தச் சூடு.

8. கையில் உருத்திர ரேகை யுள்ளவன். கல்வியறிவுள்ளவன். வேகமாக நடக்கக் கூடியவன். விளை நிலங்களைப் பெருக்குவான். விஷ்ணு பக்தியுள்ளவன். பசித்தவர்கட்கு அன்னம் அளிப்பவன். தலை முகம் இவை அழகுள்ளவை. பித்தச்சூட்டுத் தேக முள்ளவன்.

9. உண்டியா முணவின் மீது உறைப்பொடு புளிப்பி லிச்சை
பண்டிபண் டார முள்ளான் பாவையர் மோக வானும்
எண்டிசைக் கீர்த்தி கொள்வன் இடுக்கண்க ளில்லா னுகும்
அண்டினோர்க் குதவு வானு மலைச்சலு முடைய
[னென்றோம்.

9. சாப்பிடும் உணவில் உறைப்புடன் கூடிய புளிப்புப் பதார்த்தங் களில் விருப்பமுள்ளவன். ஆள் பலம் உள்ளவன். பண்டக சாலை கள் உள்ளவன். பெண்கள்மீது மையல் கொள்ளுபவன். எட்டுத் திசைகளிலும் புகழை அடைவான். துன்பங்களில்லாதவன். தன்னை யண்டிவந்தவர்கட்கு உபகாரம் செய்பவன். அலையும் சுபாவத்தினன்.

ஜாதகனின் குணங்கள்

10. இக்குண முடையோ னுக்கு இவனுமே யாரஞ் ஜன்மம்
மிக்கவே யிந்தப் பாலன் விளம்புவா னிவனே யென்றும்
தக்கவே பலன்கள் தம்மைச் சாற்றுவோ மால்நி
[றத்தான்
தொக்கவே வாத தேகி தோத்திரப் பிரிய னுமே.

10. இவ்விதக் குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் ஆருவது குழந்தையாகப் பிறப்பான். அவனுடைய குணங்களையும் பலன்களையும் கூறுகின்றோம். திருமாலைப் போன்ற கரிய நிறமுடையவன். வாத சரீரி. (வாயு ரோகமுள்ளவன்.) துதி செய்யப்படுவதில் விருப்பமுள்ளவன்.

11. கல்வியு மதிக முள்ளான் கனதன மேன்மே லுள்ளான்
நல்லவ னாகி வாழ்வன் நாதனுர் பக்தி கொள்வன்
சொல்லுமே நெறியுள் ளோனுஞ் சுகபுகிப் பிச்சை
[யுள்ளான்
அல்லலு மில்லா னாகும் ஆவுகள் விருத்தி யென்றும்.

11. அதிகமான கல்வியறிவுடையவன். அதிகமான செல்வம் மேன்மேலும் விருத்தியாகும். நல்லவனாக வாழ்ந்து வருவான். சிவ பெருமான்மீது பக்தியுள்ளவன். நேர்மையுடன் பேசுபவன். நன்றாகச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவன். துன்பங்களில்லாதவன். பசுக்களின் விருத்தி யுடையவன்.

12. கனிவர்க்க மிஷ்ட னாகுங் காரியச் சமர்த்த னென்றும்
அனையமுன் கோபங் கொஞ்ச மவன்தந்தை மேலாய்
[வாழ்வன்
இனியசொல் லுடைய னாகும் எதிரிக்கு அஞ்ச மாட்டான்
மனையவ ளிஷ்டங் கொள்வன் மங்கையே கேட்டி டாயே.

12. பழவகைகளை உண்பதில் பிரியமுள்ளவன். சாமர்த்திய மாகக் காரியங்களைச் செய்பவன். சிறிது முன்கோபி. தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். இன்பமாகப் பேசுபவன். விரோதிகட்குப் பயப்படாதவன். மனைவியின் பிரியத்தைப் பெற்றவன். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதர பாவம்

13. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மெழுவ ராகும்
அவனியில் மூத்தோர் காணும் அறைந்தன மிளையோ
[ருண்டு
நவனியில் லாண்பா லொன்று நாயகி யிரண்டு மாகும்
கவனமா யிளையோன் சேதி கழறுவோம் கேளுந் தாயே.

13. ஜாதகனுடைய உடன்பிறந்தவர்களைப்பற்றிச் சொல்லுகின்றேரும். அவர்கள் எழுவராவர். ஆனால் ஜாதகனுக்கு முன் பிறந்தவர் நிலையில்லை. பின் பிறந்து நிலையாயிருப்பவரில் ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் உளர். நன்றாகக் கவனித்து ஜாதகனின் இளைய சகோதரனின் செய்தியைக் கூறுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

இளைய சகோதரனின் செய்திகள்

14. புத்திமான் வித்தை யுண்டு புகலுவான் கட்டு வார்த்தை
சித்தமே வர்ம முண்டு திருமக னெப்ப தாகும்
அத்திபோல் நடையு முள்ளான் அரசர்கள் நேசஞ் [செய்வான்
சுத்தமு முடைய னாகும் சோம்பிடான் காரி யத்தில்.

14. புத்திசாலி. கல்வியறிவுள்ளவன். வார்த்தைகளைப் புனைந்து பேசும் இயல்பினன். மனத்தில் வர்மம் (வஞ்சம்) உள்ளவன். மன்மதனையொத்த அழகுடையவன். யானையைப்போன்று கம்பீரமாக நடப்பவன். அரசரிடம் நட்புக் கொள்ளுவான். சுத்த முள்ளவன். காரியங்கள் செய்வதில் சோம்பலில்லாதவன்.

ஜாதகனின் இளைய சகோதரனின் புத்திரபாவம்

15. தேகமே வலிவு முள்ளான் தீரனு மூர்க்கங் கொஞ்சம்
பாகமாய்ப் பேச வல்லான் பத்தினி யொருத்தி யென்றேரும்
ஆகவே புத்திர பாகம் அறைகிறேரு பாண்பால் ரண்டு
ஊகமாய்ப் பெண்பால் ரண்டு உரைக்கின்றேரங் [தீர்க்கமாக.

15. திடமான சரீர முடையவன். தைரியசாலி. சிறிது மூர்க்க குணமுள்ளவன். பொருத்தமாகப் பேசுபவன். மனைவி யொருத்தியே யாவள் என்றேரும். அவனுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றேரும். இரு புத்திரர்களையும் இரு புத்திரிகளையும் பெற்றவன். அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும்.

ஜாதகனின் திருமணக் காலம்

16. மற்றதோர் துணைவி சேதி யறைகிறேரும் பின்பா கத்தில்
உற்றதோர் ஜாத கர்க்கு உரைக்கிறேரு மணத்தின் காலம்
சித்தமா யீரே ழாண்டில் தென்திசை மாதர் வர்க்கம்
சத்தியும் வருவா ளாகும் சாற்றுவோ மவள்கு ணத்தை.

16. மற்ற சகோதரியின் விஷயங்களைப் பின்பாகத்தில் கூறுகின்றேரும். ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேரும். அவனுடைய பதினான்காம் வயதில் தெற்குத் திசையிலிருந்து தன் தாயின் வர்க்கத்திலிருந்து மனைவி வருவாள் என்றேரும். அவளுடைய குணத்தைக் கூறுகின்றேரும்.

ஜாதகனுடைய மனைவியின் குணங்கள்

17. இருநிற முடைய ளாகும் இன்பமாய் வார்த்தை கூறுவள்
திருமகள் வாச முள்ளாள் தேவியும் பொறுமை சாலி
பெறுமவர்க் கினிய ளாகும் புண்ணிய மனத்தா
[ளென்றோரும்
வறுமைக ளில்லா ளாகும் வரனுக்கு நேய முள்ளாள்.

17. கரிய நிறம் உள்ளவள். பிரியத்துடன் பேசுபவள். இலட்சுமிதேவி இவளுடைய வீட்டில் வாசம் செய்து வருவாள். பொறுமையுடையவள். பெற்றோர்க்குப் பிரியமானவள். நல்லெண்ணம் நிரம்பிய மனத்தினள். தரித்திர மடையாதவள். தன் கணவனுக்கு இனியவள்.

ஜாதகனுடைய புத்திரபாவம்

18. மதலைகள் விருத்தி தம்மை யறைகிறோ மாண்பா
[லொன்று
சதமாகும் பெண்பால் ரண்டு சாற்றினேந் தீர்க்க மாக
முதலிலே நஷ்டம் ரண்டு மெய்திடும் பின்பு விருத்தி
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

18. ஜாதகனின் புத்திர விருத்தியைச் சொல்லுகின்றோம். ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் பிறந்து அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள் என்றோம். முதலில் தோன்றும் இரு குழந்தைகளும் நிலையா. பிறகு புத்திர விருத்தி யேற்படும். கதியற்றவரைக் காக்கும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகனின் தாயின குணங்கள்

19. மாதுரு குணத்தை யாங்க ளறைகிறோ மிருநி றத்தள்
மேதினில் சமதே கத்தாள் மெல்லியு மதிஷ்ட சாலி
தீதிலாக் குணத்தா ளாகும் செல்விநன் னடக்கை யுண்டு
சூதுக ளில்லா ளென்றோஞ் சூட்சும புத்தி யுள்ளாள்.

19. ஜாதகனின் தாயின் குணத்தைக் கூறுகின்றோம். கரிய நிறமுடையவள். சமமான சரீர அமைப்புள்ளவள். அதிருஷ்டமுள்ளவள். தீதில்லாக் குணங்களுள்ளவள். செல்வமுடையவள். நன்னடத்தை யுடையவள். கபடமில்லாதவள். நுண்ணிய அறிவாளி.

ஜாதகனின் தாயின் சகோதரபாவம்

20. அவளுடைத் துணைவர் தம்மை யறைகிறோ மாண்பால்
[காணும்
நவனியில் பெண்பா லொன்று நாட்டுவோந் தீர்க்க மாக
பவமுள தாய்க்கு டும்பம் பகையுண்டு யிவளுக் கேதான்
குவலய மீதி லேதான் குலநிந்தை யுடைய ளாமே.

20. ஜாதகனுடைய தாயின் சகோதரபாவத்தைச் சொல்லுகின்றோம். சகோதரர்கள் இல்லாதவள். சகோதரி ஒருத்தி மீண்ட ஆயுள் உள்ளவள். தன் தாயின் குடும்பத்தில் விரோதம் உள்ளவள். ஜாதகனின் தாய் குலத்தில் பழி ஏற்பட்டு உலகில் வாழ்ந்து வருவாள்.

தாயின் முன்விறவி

21. இவளுடை முன்ஜன் மத்தை யியம்புவோந் தவனீ
[தெற்கில்
அவனியில் பேரூர் தன்னில் அந்தண குலமு தித்துப்
பவமுள வரனு முண்டாய்ப் பாலர்க ளில்லா ளாகித்
தவசிபோல் மத்தி யத்தில் தானவள் விதவை யாகி ;

21. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். தவனோச்வரத்துக்குத் தெற்கில் உள்ள பெரிய ஊரில் அந்தணர் குலத்தவளாகப் பிறந்து நல்ல கணவனை யடைந்து புத்திர பாக்கியமில்லாதவளாக இருந்து தவம் செய்பவளைப்போல் தனித்து வாழ்ந்து இடையில் கணவனை யிழந்து ;

22. இருந்துமே சிலநாள் சென்று இவளுமே மரண மாகி
உறைந்தனள் கங்கை சேயாய் உத்தமி கேட்க லுற்றாள்
அருமறைக் குலமு தித்து அவளுமே யிச்சென் மத்தில்
உரமுடன் கங்கை வம்ச முதித்தகா ரணங்க ளென்ன.

22. வாழ்ந்து வந்து சின்னாட்கள் சென்றதும் மரணமடைந்து மீண்டும் இப்பிறவியில் வேளாளர் குலத்தவளாகப் பிறந்தாள். பார்வதி தேவி கேட்கலானாள். அரிய அந்தணர் குலத்தில் முற்பிறவியில் தோன்றிய இவள் இப்பிறவியில் வேளாள குலத்தில் பிறக்கக் காரணங்க ளென்ன ?

பரபுருடன்மீது மோகம் குலம் தாழ்வானது :

23. முன்ஜன்மம் பிரமம் வம்ச முயன்றுமே விதவை யாகி
அன்னியன் ஒருவன் மேலே அவள்மோகங் கொண்டா
[ளென்றோம்
பின்னங்க ளொன்று மில்லை பேச்சது போலே தானும்
இன்னவ ளிக்கு லத்தில் எய்தினா ளென்றோ மம்மா.

23. முற்பிறவியில் அந்தண குலத்தில் பிறந்து, கைம்பெண்ணாக இருக்கும் காலத்தில், வேறுபுருடன் ஒருவன்மீது மையல் கொண்டாள். ஆனால் தீய காரியங்களைச் செய்யவில்லை. அதனால் இக்குலத்தில் வந்து பிறந்தாள் என்று கூறுகின்றோம். தாயே !

தாயின் மறுபிறவி

24. இவளுடைப் பின்ஜன் மத்தை யியம்புவோம் வள்ளூர் [தன்னில்
நவனியில் வைசிய வம்சம் நாயகி யுதித்து மேலும்
பவமுள சுகங்க ளுண்டாய்ப் பந்துபூ சிதமாய் வாழ்வள்
அவளுடை நிர்யா ணத்தை யறைகிறேங் கேளுந் தாயே.

24. ஜாதகனுடைய தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருவள்ளூரில் வைசிய குலத்தில் பிறந்து பற்பல சுகங்களைப் பெற்றுச் சுற்றத்தாரால் கொண்டாடப்பட்டு வாழ்ந்து வருவாள். அவளுடைய மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

தாயின் மரணகாலமும் தந்தையின் முற்பிறவியும்

25. ஆறஞ்சு வஞ்சு வாண்டில் ஆவணி மாதந் தன்னில்
கூறுவோ மாதா வுக்குக் குறிக்கிறேங் தந்தை பூர்வம்
வீரிய தவளைக் கீழ்ப்பால் விளங்கிய சிற்றூர் தன்னில்
நாரியே சமண வம்சம் நாயக னுதித்தா னென்றோம்.

25. ஜாதகனுடைய முப்பத்தைந்தாம் வயதில் ஆவணி மாதத்தில் தாய் மரணமடைவாள். ஜாதகனின் தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். தவளேச்வரத்துக்குக் கிழக்கில் உள்ள சிற்றூரில் சமணவம்சத்தில் பிறந்தான் என்று கூறுகின்றோம். தாயே!

26. கடனில்லை யிடுக்க மில்லை கல்வியும் பெரிதா யுள்ளான்
திடமான குடும்பி யாவன் சென்றிடம் பெருமை கொண்டு
அடைவுடன் வாழு நாளில் அறைகிறே மூழி தானும்
தடவரை மகளாய் வந்த சத்தியே மேலுங் கேளே.

26. கடன் உபத்திரவம் இல்லாதவன். துன்பங்களற்றவன். அதிகமான கல்வி யறிவுள்ளவன். பெரிய குடும்பியாக இருப்பான். போன இடங்களில் பெருமை அடைந்து வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். மலையரசின் மகளாகப் பிறந்த பார்வதி தேவியே! கேளுங்கள்.

27. அந்தணர் நேச னுக்கு அவன்சில பொய்கள் சொன்னன்
மந்திரம் சிலவே வேளை மறந்திட்டா னிதுவே யன்றி
அந்தியக் காலந் தன்னில் அந்தகன் பக்கல் சென்று
வந்தவ னிவனே யென்றே மம்பிகை கேட்க லுற்றாள்.

27. அந்தணர் குலத்தில் தோன்றிய நண்பனிடம் ஜாதகனின் தந்தை சில பொய்களைக் கூறினன். சில வேளைகளில் தன் கடமைகளைச் செய்யாமல் மறந்து விட்டான். தன் கடைசி வாழ்நாட்களை அவ்

வண்ணம் கழித்துப் பிறகு மரணமடைந்து இப்பிறவியில் பிறந்தவன் என்று சொல்லுகின்றோம். பார்வதி தேவி கேட்கலானாள்.

அந்தணனிடம் பொய் சொன்னது

28. முன்ஜன்ம மந்தி ரத்தை மொழியாமல் சிலவே வேளை
இன்னவன் பொய்கள் சொன்னு னென்றீர்கள் பலனைச்
[சொல்வாய்
தன்னமே தனிய னுவன் சகோதர தோஷ முண்டு
முன்னமே சுதர்கள் தோஷ மொழிந்தனம் முனிவ ரம்மா.

28. முற்பிறவியில் மந்திரங்களைச் சிலவேளைகளில் ஓதாமல் இருந்ததுமன்னியில் பொய்களும் கூறினன் என்று சொன்னீர்களே! அவற்றின் பலனைச் சொல்லுங்கள். அவன் தன்னந்தனியனாக இருப்பான். சகோதர தோஷம் உள்ளவன். முதலில் தோன்றும் குழந்தை கட்குத் தோஷமுண்டு என்று ரிஷிகள் உரைத்தனர்.

ஜாதகனுடைய மறுபிறவி

29. இன்னவன் பின்ஜன் மத்தை யியம்புவோங் காஞ்சி
[தன்னில்
அன்னவன் பிரம்ம சேயாய் அநேகமாய்த் தனங்கள்
[பெற்று
மன்னிய வரச ராலே மகிழ்சுதன் வாழ்வா னுகும்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

29. ஜாதகனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சி புரத்தில் அந்தணர் குலத்தவனாகப் பிறந்து பெரிய செல்வங்களை யடைந்து அரசாங்க உத்தியோகம் ஏற்று வாழ்ந்து வருவான். உயர்ந்த கணவனை யடைந்த உத்தமியே! கேளுங்கள்.

தந்தையின் மரணகாலம்

30. தந்தையின் மரண காலஞ் சாற்றுவோ முப்பான் மூன்றில்
முந்திய துலாமா தத்தில் மெய்திடு மார கங்கள்
இந்தவா றுமன்னன் பூர்வ மிசைக்கின்றோ
[மினிமே லாகக்
கந்தனை யீன்ற தாயே கழறின மொழிகுன் றுவே.

30. ஜாதகனுடைய தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய முப்பத்துமூன்றும் வயதில் உயர்ந்த ஐப்பசி மாதத்தில் மரணம் நேரிடும். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கந்தவேளைப் பெற்ற தாயே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

ஜாதகனுடைய முற்பிறவி

31. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகின்றேங் காஞ்சி [கீழ்ப்பால்
தன்னிலே பேரூர் தன்னிற் செங்குந்த மரபில் தோன்றி
அன்னவன் மதலை யுண்டாய் அநேககீர்த் திகளும் [பெற்றுச்
சென்னியா றுடையா னுக்குத் திருப்பணி யதிகஞ் செய்து;

31. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சி புரத்துக்குக் கிழக்கில் உள்ள பெரிய ஊரில் செங்குந்த மரபினனாகப் பிறந்து, புத்திர பாக்கியம் பெற்று அதிகக் கீர்த்திமானாக வாழ்ந்து கங்கையைச் சடை முடியில் தரித்த சிவபெருமானுக்குத் திருப்பணிகள் பல செய்து;

32. மார்க்கத்தில் தண்ணீர்ப் பந்தல் வைத்துமே பெருமை [பூண்டு
ஏற்கவே பந்து மெச்ச இவனுமே வாழ்ந்தா னென்றேரும்
ஆற்கவே யந்தி யத்தி லனுயாச மரண மாகித்
தாக்கிய மறையோ னுலே தானவன் வரையப் பட்டு;

32. சாலை யோரங்களில் தண்ணீர்ப் பந்தல்கள் அமைத்துப் பெருமையடைந்து, தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வந்தான். தன் கடைசிக் காலத்தில் அநாயாச மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு;

ஜாதகனுக்கு கண்டம்

33. வந்தவ னிவனே யென்றே மறைகிறே மரண காலம்
இந்தவா றுமன்ன னுக்கு எண்ணஞ்சு நாலு வாண்டில்
முந்தவே கண்ட முண்டா முருகரால் விலகு மென்றேரும்
கந்தனைப் பெற்ற மாதே காதலி கேட்டி டாயே.

33. பிறந்தவன் இந்த ஜாதகன் என்றேரும். அவனுடைய மரணக் காலத்தைச் சொல்லுகின்றேரும். அவனுக்கு நாற்பத்து நான்காம் வயதில் ஒரு பெரிய கண்டம் ஏற்படும். அதுவும் முருகக் கடவுளின்னருளால் நீங்கும் என்றேரும் கந்தபிரானைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய மரணம்

34. அன்பத்து நான்கு வாண்டி லாவணி மாதந் தன்னில்
மந்தன்தன் தசையி லேதான் வருங்கருங் கோள்பு சிப்பில்
முந்திய சிலவே நாளி லெய்திடு மரணந் தானும்
பிந்திய காலந் தன்னைப் பேசுவோ மிவனுக் கேதான்.

34. ஜாதகனுடைய ஐம்பத்துநான்காம் வயதில், ஆவணி மாதத்தில், சனி மகா தசையில், ராகு புக்தியின் ஆரம்பத்தில் மரணம் நேரிடும். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய மறுபிறவி

35. மறுஜன்மங் காஞ்சி தன்னில் மறைக்குல முதிப்பா னுகும்
திருமகள் வாசம் பூண்டு தேசமே லதிகா ரங்கள்
பெருமையாய்க் கீர்த்தி யாகிப் பூமியில் வாழ்வா னுகும்
அறுமுகன் தன்னைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

35. ஜாதகன் மறுபிறவியில் காஞ்சீபுரத்தில் அந்தண குலத்தவனுகப் பிறப்பான். அவன் லட்சுமி கடாட்சம் பெற்று அரசாங்க உத்தியோகங்களில் அதிகாரங்களை யளிக்கும் பதவிகளை யடைந்து பெருமையுடனும் புகழுடனும் பூவுலகில் வாழ்ந்து வருவான். ஆறுமுகக் கடவுளைப்பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய யோகம்

36. இன்னவன் யோகச் சேதி யியம்புவோம் வீணை யோகம்
தன்னிலே வேசி யோகந் தாமரை யோக மென்றும்
மன்னிய நிபுணன் கல்வி மர்மசாத் திரங்கள் கற்பன்
உன்னத ஞானம் வாய்ந்த உத்தம னிவனே யென்றும்.

36. ஜாதகனுடைய யோகச் செய்திகளைக் கூறுகின்றோம். **வீணை யோகம்**, வேசியோகம், தாமரையோகம், என்ற இம்மூன்று யோகங்களும் ஏற்படும். கல்வியில் நல்ல அறிவாளியாவன். ரகசிய சாஸ்திரங்களைக் கற்றவன். உயர்ந்த ஞானோபதேசம் பெற்ற நற்குணவான் இவன் என்றும்.

37. தந்தையி னஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
சிந்தையில் கபடு மில்லான் திருப்பணி யதிகம் செய்வன்
வந்தவர்க் கன்ன மீவன் வரசர்பூ சிதனே யாவன்
தென்திசைச் சேது தோய்வன் சிலசில தலங்கள்
[செல்வன்.

37. ஜாதகன் தன் தந்தையினுடைய ஆஸ்திகளைப் பெருக்குவான். மனத்தில் சூதுகள் இல்லாதவன். அதிகமான ஆலயத் திருப்பணிகளைச் செய்வான். அண்டிவந்தவர்கட்கு அன்னமளிப்பவன் அரசரால் நன்கு மதிக்கப்பட்டவன். தெற்குத்திசையில் உள்ள சேதுவில் நீராடுவான். மற்றும் சிற்சில புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான்.

38. அடிமைக ளதிகம் சேர்ப்பன்
அநேகரும் வணங்க வாழ்வன்
கொடுமைகள் செய்யா னுகும்
கொள்ளுவான் பணிதி பாத்திரம்

திடமான குடும்பி யாவன்
செட்டுக்க ளதிகஞ் செய்வன்
படிமீதில் குடும்ப மொன்றுப்
பாலிப்பா னிவனே யென்றோம்.

38. பணியாட்களை அதிகமாக உடையவன். பலர் இவனுக்கு வணக்கம் செய்வர். கொடிய காரியங்களைச் செய்யாதவன். ஆபரணங்கள், அதிகமான பாத்திரங்கள் இவைகளைப் பெற்றவன். பெரிய குடும்பியாக இருப்பான். அதிகமான வியாபாரங்களைச் செய்து வருவான். உலகில் ஒரே குடும்பமாக வாழ்ந்து வருவான் என்றோம்.

39. தன்னுடைத் துணைவர் தம்மைத் தானவன் விலக்க [மாட்டான்
கன்னென மொழியே சொல்வன் கௌரவக் குடும்பி [யாவன்
அன்னிய மூன்று கிராம மருவிடும் பூமி தானும்
மன்னிய ஏர்ப்பெ ருக்கம் வந்திடும் யோக வானே.

39. ஜாதகன் தன்னுடன் பிறந்த சகோதரனை விலக்காதவன் (அவனோடு ஒன்றுகவே வாழ்ந்து வருவான்). இனிய வார்த்தைகளையே பேசுபவன். கௌரவமான குடும்பத்தை யுடையவன். வெற்று கிராமங்கள் மூன்றில் விளை நிலங்களை உடையவன். பண்ணை ஏர் முதலியன வெகுவாக உடையவன். யோகமுள்ளவன்.

ஜனனகால தசை

40. ஜனித்தவன் ஜனன காலஞ் சேய்தசை தனிலி ருப்புக்
குனித்திடு மாண்டு வாறுங் கூறினேஞ் திங்க ளவ்வாறு
கனமுள துணைவர் விருத்தி கழறினேஞ் செட்டு மோங்கும்
இனமது பகையு முண்டு இவன்மாதர் வர்க்கம் பீடை.

40. ஜாதகன் பிறக்கும் காலத்தில் அங்காரக மகா தசையில் மீதமிருப்பு ஆறு வருடங்களும் ஆறு மாதங்களுமாம். அக்காலத்தில் உடன் பிறந்தவர் விருத்தியாவர். வர்த்தகம் பெருகும். தன் பந்துக்களின் விரோதம் ஏற்படும். தன் தாயின் வர்க்கத்தில் ரோகமுண்டு.

41. தானிய விருத்தி யுண்டு ஜயமுண்டு நினைத்த வெல்லாம்
ஈனமாம் பொருள்கை கூடு மிடறுகள் வந்து நீங்கும்
ஆனதோர் துணைவர் தோஷம் அடைந்திடும் பூமி தானும்
பான்மையாய் பணியுஞ் செய்வன் பார்வதி கேட்டி டாயே.

41. தானியப் பெருக்கம் உண்டு. எண்ணிய காரியங்கள் கை கூடும். நஷ்டமடைந்த பொருள்கள் திரும்பிவந்து சேரும். துன்பங்கள் வந்து விலகும். உடன்பிறந்தவருக்குத் தீங்கு ஏற்படும். பூமி கிட்டும். ஆலயத்திருப்பணிகளைச் செய்வான். பார்வதி தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 22

1. அம்புலி காரி மாதை [1]யரிபரி[2] யோனுந் தேளில்
கும்பத்தில் குசனுந் தங்கக் குருமீனம் ராகு மேடம்
நம்புகர் கேது தூக்க நாட்டுவோஞ் ஜன்மஞ் சீயம்
இம்மையில் கிரகம் நின்றால் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் சனி கன்னியிலும், புதன் சூரியன் விருச்சிகத்திலும், செவ்வாய் கும்பத்திலும், குரு மீனத்திலும், ராகு மேடத்திலும், சுக்கிரன் கேது துலாத்திலும் நின்று இலக்கினம் சிம்மாக இருப்பின் ஏற்படும் பலனைக் கூறுங்கள்.

கிரகநிலை

குரு	ராகு		
செவ்வாய்	இராசி சக்கரம்		
	புதன் சூரியன்	சுக்கிரன் கேது	சந்திரன் சனி

ஜாதகனின் வீட்டு நிலை

2. பாலக னைஞ் ஜன்மம் பிறந்தயில் கிழக்கு வாசல்
கோலமாய் வடதென் வீதி கூத்தனை யுதைத்தோன் [கீழ்ப்பால்
சாலவே மாயோன் மாரி சாமுண்டி தந்தி தென்கீழ்
சீலமா நதியுந் தெற்கில் செப்புவோங் கேளுந் தாயே.

2. இந்தது ஆண் மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியில் கிழக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. கிழக்குப் பக்கத்தில் எமனைக் காலாலுதைத்த சிவபெருமானின் ஆலயமும், தென்கிழக்கில் திருமாலின் ஆலயமும், மாரியம்மன் கோவில், சாமுண்டீச்வரி, விநாயகர் இவர்களின் ஆலயங்களும் தெற்குப்பக்கத்தில் புண்ணிய நதியும் ஓடும். தாயே! கேளுங்கள்.

3. கருமுனி யம்மன் கோவில் கனத்ததோர் சோலை யுண்டு
பெருமையாய்ச் சமவூர் தன்னில் பேசினேங் கங்கை [சேயாய்
வரும்புத்திர களத்திர யோகம் மாதுரு தந்தை யோகம்
வருமவன் முன்பின் ஜன்ம மறைகிரே மிந்நூல் தன்னில்.

---

1. அரி = புதன். 2. பரியோன் = சூரியன்.

3. கருப்பண்ணசாமி, அம்மன் இவர்களின் கோவில் முதலியன வும் பெரியதொரு தோட்டமும் சூழ்ந்த பெருமையுள்ள சம நிலையுள்ள ஊரில் வேளாள குலத்தவனுக ஜாதகன் பிறந்தான். ஜாதகனுடைய யோகம், புத்திர பாவம், களத்திரபாவம், தாய் தந்தையரின் யோகம், அவர்களின் முற்பிறவி, மறுபிறவி ஆகியவற்றையும் இந்தச் சோதிட நூலில் சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய தந்தையின் சகோதரபாவம்

4. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பா
[லொன்று
வந்திடுங் கன்னி நான்கு வகையுடன் விருத்தி தீர்க்கம்
நொந்திடு மற்ற வெல்லாம் நவிலுவோ மவர்கு ணத்தைச்
சந்ததங் கருதி றத்தான் சமதேகம் வாயு பீடை.

4. ஜாதகன் தந்தையின் உடன் பிறந்தவரைச் சொல்லுகின்றோம். ஒரு சகோதரனும் நான்கு சகோதரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள். மற்றும் தோன்றுமவர்கள் நிலையார் என்றோம். தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். கரிய நிறமுள்ளவன். சமமான உடலமைப்புள்ளவன். வாயு ரோகமுடையவன்.

5. காரக தேக முள்ளான் கபடுக ளில்லா ஞகும்
சீறிடான் கிருஷி செய்வன் தேகமே வலிவு கொஞ்சம்
பாரியர் பக்தி யுள்ளான் பதரிலான் வறுமை யுள்ளான்
கூறுவான் சுகமாய் வார்த்தை குறித்தனம் வாயு
[நோயான்.

5. காரக நோயுள்ள சரீர முடையவன். சூதுகள் இல்லாதவன். கோபங் கொள்ளாதவன். வியவசாயம் செய்து வருபவன். சிறிது வலி வான சரீரமுள்ளவன். மனைவியின் மீது அதிக விருப்பமுள்ளவன். அற்ப குணங்களில்லாதவன். தரித்திரமுள்ளவன். இன்பமுறும்படி பேசுபவன். வாயுரோக முடையவன்.

கத்தரிரேகை

6. போஜனப் புளிப்பி லிச்சை புண்ணிய மனத்த ஞகும்
காசுமே லாசை கொள்வன் கத்திரி ரேகை யுள்ளான்
பேச்சினில் சோரா ஞகும் பின்புத்தி யுடைய னவன்
ஆசையாய் முருகன் பத்தி யவனுமே கொள்வ ஞகும்.

6. சாப்பாட்டில் புளிப்புப் பதார்த்தங்களில் பிரிய முள்ளவன். நல்லெண்ணம் வாய்ந்த மனத்தினன். பணத்தின்மீது ஆசையுள்ளவன். கத்திரிரேகையுள்ளவன். சோர்வில்லாமல் பேசுபவன், (வாக்குவன்மை யுள்ளவன்.) சிறிது பின்புத்தியுள்ளவன். முருகக் கடவுள்மீது அதிக மான பக்தியுடையவன்.

7. துணைவரை யாதரிப்பன் சோம்பலுங் கொஞ்ச முள்ளான்
கனமுள தந்தை யாஸ்தி காவலன் விருத்தி செய்வன்
அனைவரை யுறவு கொள்வன் அல்பவஸ் துகளு மிஷ்டன்
ஜனவுப காரி னுவன் தேவியே கேட்டி டாயே.

7. உடன்பிறந்தவரை யாதரிப்பவன். சிறிது சோம்பலுள்ளவன். தன் தந்தையின் பெரிய ஆஸ்தியை விருத்தியாக்குவான். எல்லோருடனும் நட்புக் கொள்ளுவான். அற்பவஸ்துக்களில் பிரிய முடையவன். ஜனங்களுக்கு உபகாரி. தாயே! கேளுங்கள்.

கோதுமை ரேகை

8. கோதுமை ரேகையுள்ளான் குறையான மனத்த னுகும்
வேதனை யெண்ணு நெஞ்சன் வீணுப வாத முள்ளான்
ஓதுவான் கல்வி கொஞ்ச முறுதியா மனத்த னுமே
மேதினில் தனமில் லாதான் வித்தகி கேட்டி டாயே.

8 கோதுமை ரேகையுள்ளவன். மனத்தில் குறையுள்ளவன். பிறருக்குத் தீங்கிழைக்க மனமில்லாதவன். ஜனங்களால் அபவாத மடைவான். சிறிதே கல்வியறிவுள்ளவன். திடமான மனத்தினன். உலகில் பொருட் செல்வமில்லாதவன். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் குணங்கள்

9. இக்குண முடையோ னுக்கு இவனுமே யிரண்டாஞ் [ஜன்மம்
மிக்கவே யுதிப்பா னுகும் விளம்புவோங் கருகி றத்தன்
தக்கவே கல்வி கற்பன் சமர்த்தான வார்த்தை சொல்வன்
தொக்கவே சோகை பித்தந் தோன்றிடு மென்று [சொன்னேம்.

9. இக்குணங்கள் உள்ளவனுக்கு இந்த ஜாதகன் இரண்டாம் குழந்தையாகப் பிறப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றோம். கரிய நிறமுடையவன். தகுதியான கல்வியைக் கற்றுணர்வான். சாமர்த்தியமாகப் பேசுபவன். ஜாதகனுக்கு பித்தம், சோகை முதலிய நோய்கள் ஏற்படும் என்றோம்.

10. தந்தைக்கு மேலாய் வாழ்வன் சகலர்க்கு நல்லோ னுவன்
சிந்தையு மர்ம முள்ளான் சீக்கிர நடையு மாவன்
சொந்தமாய்ப் பூமி சேர்ப்பன் சொல்லது யிரண்டு [முள்ளான்
தன்தனஞ் சேர்ப்ப னுகுஞ் சித்திர விருத்தி செய்வன்.

10. தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். எல்லோருக்கும் நல்லவனாக இருப்பான். மனத்தில் ஒளிவு உள்ளவன்

வேகமாக நடப்பவன். சொந்த சம்பாத்தியத்தால் பூமியைப் பெருக்குவான். இருவிதமாகப் பேசுபவன். பொருளைச் சேர்ப்பவன். சித்திரங்களைச் சேகரிப்பான்.

11. காரியச் சமர்த்த னுகுங் கணக்கினி லூகை சாலி
தேரிய வழியில் நிற்பன் சுகதுக்கங் கலந்து வாழ்வன்
பாரியை யிஷ்டங் கொள்வன் பந்துவும் புகழ வாழ்வன்
நாரியர் மோக வானும் நாயகி கேட்டி டாயே.

11. காரியங்களைச் செய்வதில் சமர்த்தன். கணக்கில் ஊகமுள்ளவன். முதிர்ந்த நேர்வழியில் நடப்பவன். சுகமும் துக்கமும் கலந்து வாழ்பவன். மனைவியின் பிரியத்தைப் பெற்றவன். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். பெண்கள்மீது மையல் கொள்ளுவான். தாயே! கேளுங்கள்.

12. மர்மவான் நோஞ்சை யுள்ளான் மாடுகள் விருத்தி
[யுள்ளான்
திருமகள் வாச முள்ளான் தேவதாப் பக்தி யுள்ளான்
விரைவினில் நடக்க வல்லான் விளம்புவான் கட்டு
[வார்த்தை
பறைபள்ளு முடைய னுவன் பார்வதி கேட்டி டாயே.

12. இரகசிய முள்ளவன். மெலிந்தவன். கால்நடைகளின் விருத்தியுள்ளவன். இலட்சுமி வாசம் உடையவன். தெய்வபக்தியுள்ளவன். வேகமாக நடக்கும் இயல்பினன். வார்த்தைகளைப் புனைந்து பேசுபவன். ஆள் படைகள் உள்ளவன். பார்வதி தேவியே! கேளுங்கள்.

சகோதரபாவம்

13. தூணை வர்கள் மூத்தோர் காணன் சொல்லுவோ
[மிலையோ ருண்டு
அணையவே யாண்பா லொன்று அதுவன்றிப் பெண்பா
[லொன்று
கனமுட னிரண்டுந் தீர்க்கங் கனக்காவே மற்ற வெல்லாம்
பனிவரை மகளாய் வந்த பார்வதி கேட்டி டாயே.

13. ஜாதகனுக்கு முன்பிறந்த உடன்பிறப்பு இல்லை. இளைய சகோதரருள்ளவன். ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் பிறந்து நீண்ட ஆயுள் உடையவராக இருப்பர். மற்றும் தோன்றும் குழந்தைகள் நிலையார். ஹிமவானின் மகளாய்ப் பிறந்த பார்வதி தேவியே! கேளுங்கள்.

ஜாதகனின் மணக்காலம்

14. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருபா
[ஞென்றில்
கன்னிகை யுள்ளு ருத்தரங் காதலி வருவா ளாகும்
அன்னவ ளிருசி வப்பு அளவிலாச் சந்தே கத்தாள்
உன்னத நீட்சி யில்லா ளுதைந்திடு சூடு முள்ளாள்.

14. ஜாதகனுடைய திருமணக்காலத்தைச் சொல்லுகின்றேம். இருபத்தோரும் வயதில் உள்ளூரிலிருந்தே மனைவி வருவாள் என்றேம். அவள் கருமை கலந்த சிவந்த நிறமுடையவள். அளவில்லாமல் சந்தேகப்படும் இயல்பினள். குட்டையான சரீரம் உடையவள். சூட்டுச் சரீரி.

ஜாதகனின் மனைவியின் குணங்கள்

15. முன்கோப மூர்க்க முண்டு முயற்சியாய்க் குடும்பி யாவள்
தனிசொலே மேன்மை யாகச் சாதிப்பா ளழகி யாவள்
அன்னவள் தனக்குப் புத்திரர் அறைகிறேம் பலத்தைக்
[காணேம்
தன்னிலே புயண்டர் சொல்லச் சாற்றுவார்
[பராசர் தாமும்.

15. சிறிது முன்கோபி. மூர்க்ககுணமுள்ளவள். உழைப்பாளியின் குடும்பத்தைச் சேர்ந்தவள். தன் வார்த்தைகளே மேன்மையுள்ளவை என்று திடமாகக் கூறுபவள். அழகுள்ளவள். அவளது புத்திரபாவத்தைச் சொல்லுகின்றேம். புத்திரனுண்டு என்று கூறக்கிரக பலமில்லை. இவ்விதம் புஜண்ட முனிவர் சொல்லும்போது பராசரர் கூறுகின்றார்.

புத்திரதோஷ கிரகநிலை

16. ஏதுகா ரணத்தி னலே யிவனுக்கு மதலை தோஷம்
ஓதுவீர் முனியே யென்றார் உயர்குரு வஞ்சோ னகித்
தீதான யெட்டில் நின்றுஞ் சனியுமே யவனைப் பார்க்க
மேதினில் தோஷஞ் சொன்னேம் விதுரரும்
[சொல்லு கின்றார்.

16. என்ன காரணத்தால் ஜாதகனுக்குப் புத்திர தோஷம் ஏற்பட்டது என்று கூறுங்கள், முனிவரே! என்றார். உயர்ந்த குரு ஐந்தாம் வீட்டுக்குரியவனாகி, எட்டாமிடத்தில் இருந்து, அவரைச் சனி பார்ப்பதால் தோஷம் ஏற்பட்டது என்றார். விதுரரும் சொல்லுகின்றார்.

17. அஞ்சினுக் குடையோ னுட்சி யதற்கைந்தோன் சத்த
[மத்தில்
தஞ்சமாய்க் கருமத் தோனுந் தானவ னுட்சி யாக
மிஞ்சிய மதலை தன்னுல் மேவிடும் தனக்குக் கர்மம்
வஞ்சியே முன்னுழ் தன்னுல் மதலைகள் பீடை யாமே.

17. ஐந்தாம் வீட்டிற்குரிய குரு ஆட்சியாகவும், அவ்வீட்டிற்கு ஐந்தாமிடமாகிய மேஷத்திற்கு உரியவனுகிய அங்காரகன் ஏழாமிடத்தில் இருப்பதாலும், பத்தாம் வீட்டுக்குரியவனுகிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதாலும் தன்னுடைய புத்திரனுல் இறுதிக் கடன்கள் செய்யப் படுவன். தாயே! முற்பிறவியில் செய்த தோஷத்தால் புத்திரர்கட்குப் பீடையுண்டு.

ஜாதகனின் முற்பிறவி

18. என்னஊ ழதனை நீங்க ளியம்புவீர் முனியே யென்ரூள்
அன்னையே சொல்லு கின்றே மவனுமுன் ஜன்மங்
[தன்னில்
கன்னமா புரத்தி லேதான் கம்மாள குலமு தித்துத்
தன்னிலே தனங்கள் கொஞ்சம் தரித்துமே வறுமை யாகி;

18. என்ன தீவினை செய்தான்? அதை நீங்கள் கூறுங்கள். முனிவரே! என்று பார்வதி கேட்டாள். தாயே! சொல்லுகின்றேம். ஜாதகன் முற்பிறவியில் கன்னபுரத்தில் கம்மாளர் குலத்தில் பிறந்து சிறிது பொருளைப் பெற்று வாழ்ந்து பிறகு தரித்திரனுகி;

சிற்றின்ப மனுபவித்து அதற்குப் பணம் தராதது

19. அயவேலை செய்து வந்தா னந்தநா ளுழைச் சொல்வேன்
வியங்கொண்ட மாதைத் தானும் வித்தகன் போகம்
[துய்த்து
நலமுடன் பொருள்த ராமல் நற்பணி தாரே னென்று
ஜயம் போலே ஆசை காட்டித் தராமலே விட்டா
[னென்ரேம்.

19. இரும்பு வேலைகளைச் செய்து வந்தான். அக்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேன். ஒரு கைம்பெண்ணுடன் ஜாதகன் சிற்றின்பம் அனுபவித்து விட்டு அதற்குப் பொருள் கொடுக்காமல் இருந்து ஆபரணங்கள் (வாங்கித்) தருவதாக ஆசை காட்டிப் பிறகு மோசம் செய்து தராமல் இருந்து விட்டான் என்றேம்.

விதவைப் பெண்ணின் சாபம்

20. வீணைகச் சிலகாள் போக்கி விதவையுஞ் சொல்லு கின்ரூள்
வீணைக ஆசை சொல்லி வெற்றியை யடைந்த பாவி
வீணைக மறுஜன் மத்தில் விளங்காவே மதலை தாமும்
வீணைப் பழியு நேரும் என்றுமே மாது சொல்லி;

20. சின்னஞ்சிறுகள் பொறுத்திருந்து பிறகு விதவைப்பெண் சொல்லுகின்றாள். வீணாக ஆசை வார்த்தைகளைக் கூறிக் காரியத்தை சாதித்துக்கொண்ட பாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் புத்திரர் இலையாக. வீண் அபவாதமும் ஏற்படும் என்று சொல்லி ;

21. விலக்கிய ளாசை தன்னை மேவிற்று வந்தத் தோஷம்
கலக்கங்க ளொன்று வுண்டு கழறுவோம் நாக மொன்று
குலக்கூறு அஞ்சு மோடு கூடியே யில்லம் செல்ல
விலக்காம லடித்து விட்டான் மேவிற்று வந்தத் தோஷம்.

21. தன் ஆசையை விட்டொழித்தாள். அந்தத் தோஷம் இவளை வந்தடைந்தது. வேறு தோஷமும் ஒன்று சொல்லுகின்றோம் ஒரு சர்ப்பம் தன் ஐந்து குட்டிகளுடன் (இவனுடைய) வீட்டிற்குச் சென்றது. அதை இவன் விலக்காமல் அடித்து விட்டான். அஃது ஒரு தோஷமாயிற்று.

22. இன்னமும் பலதோ ஷங்க ளிலகிற்று விவனுக் கேதான்
பின்னையு மந்தி யத்தில் பேச்சதில் குழற வுண்டாய்த்
தன்னிலே காலன் பக்கல் சேர்ந்துபின் னரகம் புக்கு
உன்னதப் பிரமன் லக்க முறைத்தபின் வந்தா
[னென்றோம்.

22. இன்னும் பலவிதத் தோஷங்கள் இந்த ஜாதகனுக்கு ஏற்பட்டன. இவன் தனது கடைசிக் காலத்தில் வாக்குக் குழறல் ஏற்பட்டுப் பிறகு மரண மடைந்து, நரகம் அடைந்து, மீண்டும் பிரம தேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தவன் என்றோம்.

23. சடைமுனி யிவ்வாறு சொல்லச் சங்கரி கேட்க வுற்றாள்
கடையனு முன்ஜன் மத்தில் கம்மாள குலத்தில் வந்து
இடையினில் சிலவே பாவ மெய்தினா னென்று சொன்னீர்
உடையவ னிச்சென் மத்தில் யோகவா னென்று
[சொன்னீர்.

23. இவ்விதம் ஜடாமுனிவர் கூறும்போது பார்வதிதேவி கேட்கலானார். ஜாதகன் முற்பிறவியில் கடைசி வருணத்தவனாகி, கம்மாளர் குலத்தில் பிறந்து இடைக் காலத்தில் சில தீய கர்மங்களைச் செய்தான் என்று சொன்னீர்கள். அப்படிப்பட்டவன் இப்பிறவியில் யோகவானாக இருக்கக் காரணம் என்ன வென்று சொல்லுங்கள்.

ஆலயத்தில் தீபம் செய்து வைத்த புண்ணியம்

24. ஏதுகா ரணங்கள் தம்மை யியம்புவீர் முனியே யென்றாள்
ஓதுவேன் கேளு மம்மா உதித்தவன் முன்ஜன் மத்தில்
தீதிலா ஈச னுக்குத் தீபங்கள் செய்து வைத்தான்
ஆதலா லிக்கு லத்தில் அவன்யோக வானு மென்றோம்.

24. என்ன காரணத்தால் ஏற்பட்டது என்று கூறுங்கள், முனிவரே! என்ருள். தாயே! சொல்லுகின்ரேம். கேளுங்கள். ஜாதகன் முற்பிறவியில் பாவங்களைப் போக்கும் சிவபெருமானுக்குத் தீப கைங்கர்யம் செய்து வந்ததால் இப்பிறவியில் அவன் யோகவாழ்க்கை வாழ்ந்து வருவான் என்ரேம்.

புத்திரதோஷம் நீங்கச் சாந்தி

25. முன்ஜன்மம் விதவை சாப
முயன்றது நாக தோஷம்
தன்னிலே சுதர்கள் தோஷம்
சாற்றினேஞ் சாந்தி சொல்வேன்
அன்னவன் காஞ்சிக் கேகி
அம்மைக்கா மாட்சி கோட்டம்
உன்னதத் தீர்த்தந் தோய்ந்து
உமைக்குமே வர்ச்சித் தேத்தி ;

25. முற்பிறவியில் ஏற்பட்ட கைம்பெண்ணின் சாபம், சர்ப்ப தோஷம், இவைகளாலேற்பட்ட புத்திரதோஷத்தை விலக்கச் சாந்தி யொன்று சொல்லுகின்ரேம். ஜாதகன் காஞ்சீபுரத்திலுள்ள காமாட்சி யம்மன் கோவிலுக்குச் சென்று, அங்குள்ள புஷ்கரணியில் ஸ்ரோடிப் பார்வதிதேவிக்கு அருச்சனைகள் செய்து, துதித்து ;

சாந்தி விபரம்

26. அன்பது மறையோர்க் கன்னம் ஆலயந் தன்னில் செய்து
இன்பமாய்ப் புஷ்பங் கந்தம் இவர்களுக் களித்த பின்பு
அன்புட னுள்ளூர் சென்று அரசுடன் நாகம் வைத்துத்
தன்னுடைக் கோஷ்டந் தன்னில் தன்மனை மண்ட
[லந்தான் ;

26. ஐம்பது அந்தணர்கட்குக் கோவிலில் சமாராதனை செய்வித்துப் பிறகு இன்முகத்துடன் புஷ்பம், சந்தனம், தாம்பூலம் இவைகளைக் கொடுத்துப் பிறகு உள்ளூருக்குத் திரும்பி, அரசமரத்தினடியில் நாகத்தைப்போன்ற உருச்செய்து, பிரதிஷ்டை செய்து வைத்து, தன் ஊரில் உள்ள கோவிலில் மனைவியுடன் ஒரு மண்டலம் (45 நாட்கள்);

27. சுற்றியே வருவா னகில் சுதர்களும் விருத்தி யாகும்
சித்தமா யாண்பா லொன்று சேயுமே கன்னி யவ்வாறு
பூத்திடும் தீர்க்க மாகும் பிழையென்று செய்யா னகில்
சத்தியே யுதித்தா லுந்தான் தங்காது நஷ்ட மாமே.

27. பிரதட்சிணம் செய்து வந்தால் புத்திர விருத்தி ஏற்படும். திண்ணமாக ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் தோன்றி அவர்கள் நீண்ட ஆயுளுடன் இருப்பர். அலட்சியமாகச் செய்யாது விட்டு விடின், தாயே! பிறந்தாலும் அவை இறப்பது திண்ணம்.

தந்தையின் முற்பிறவி

28. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோங் காஞ்சி
[தெற்கில்
முந்திய பேரூர் தன்னி லுதித்தனன் வன்னிய குலச்
சந்ததம் தனங்க ளுண்டாய்த் தன்மனை புத்திர சோடுப்
பந்தமாய் வாழு நாளில் பகருவோ மூழி தானும்.

28. தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சிக்குத் தெற்கில் உள்ள பெரிய ஊரில் வன்னிய குலத்தவனுகப் பிறந்தான். பெரும் செல்வங்களை உடையவனுகி மனைவிமக்களை யடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கூறுகின்றோம்.

பூனையின் மீது வெந்நீரை கொட்டியது

29. மங்கையே வோர்நாள் தன்னில் மார்ஜால மேலேவெந்நீர்
சங்கையாய்த் தெளித்து விட்டா னதன்தேகம் பாதை
[நேர்ந்து
பொங்கிய மறலி பக்கல் சென்றது வந்தப் பூனை
திங்கள்போல் கோஷ்டந் தானுஞ் சேர்ந்தது விதுவல்
[லாமல்;

29. தாயே! ஒருநாள் ஒருபூனையின்மீது வெந்நீரைக் கொட்டிவிட்டான். பூனை அதனுல் சரீர உபத்ரவப்பட்டுமரணமடைந்தது. சந்திரனை ராகு பிடிப்பதுபோல் இவனைத் தோஷம் பற்றியது. இதுவன்றி;

அந்தணப் பெண்ணுட்ன் சிற்றின்பம் அனுபவித்தது

30. மறையவன் மாதைத் தானு
மன்னவன் போகந் துய்த்தான்
அறைந்தன மதுவோர் தோஷம்
ஆவுக ளிரைமேய்ந் திடவே
விரைவினி லடித்தா னென்றோம்
மேவிற்று யித்தோ ஷங்கள்
நிறையவே சேர்ந்த வென்றோம்
நிமலியே கேட்டி டாயே.

30. அந்தணப் பெண் ஒருத்தியுடன் ஜாதகனின் தந்தை இன்பமனுவித்து வந்தான். அஃது ஒரு தோஷமாயிற்று. பசுக்கள் புல் மேயும்போது அவைகளை அடித்து விட்டான். அதுவும் ஒரு தோஷமாயிற்று. இவ்விதமான தோஷங்கள் பல சேர்ந்தன. தாயே! கேளுங்கள்.

31. மரணகா லத்தி லேதான் வாயுவால் பாதைப் பட்டு
மறலியின் பதிக்குச் சென்று மாநர கதனில் புக்கு
மறையவன் வறையப் பட்டு வந்தவ னிவனே யென்றே
மறைகிறே முன்னூழ்த் தோஷம் வரும்பலன் சொல்லக்
[கேளாய்.

31. தன் கடைசிக் காலத்தில் வாயுரோகத்தால் அவஸ்தைப்பட்டு மரணமடைந்தான். நரகத்தை யடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கபபட்டு பிறந்தவன் ஜாதகனின் தந்தையென்று சொல்லுகின்றேம். முற்பிறவியில் செய்த தீவினையின் பலனைச்சொல்லுகின்றேம்.

32. மேகரோ கங்க ளுண்டாம் விரைவாத முடனே காணும்
மூலச்சூ டுகளு முண்டு மொழிகிறேம் தீமை யாகும்
ஆகவே யெந்தநா ளில் அணுகிடு மேக ரோகம்
பாகமாய் நாலாண் டின்மேல் பெருகிடு மந்த ரோகம்.

32. மேக ரோகம் (காரக நோய்) ஏற்பட்டது. விரைவாத நோயுமுண்டு. மூலச்சூட்டு நோயும் ஏற்படும். அவைகளால் உபத்திரவம் நேரிடும். அந்த வியாதி எந்தக் காலத்தில் ஏற்படும்? கூறுங்கள். ஜாதகனுடைய நான்காம் வயதுக்குமேல் தந்தைக்கு மேகரோகம் ஏற்படும்.

மேகரோகம் நீங்கச் சாந்தி

33. ரோகங்கள் நிவிர்த்தி செய்ய நுவலுவோஞ் சாந்தி
[தானும்
பாகமாய்க் கர்ம சாந்தி பண்ணியும் வங்க பஸ்மம்
ஆகவே மண்ட லந்தான் அருந்திட ரோகம் நீங்கும்
போகவா ரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

33. மேகரோகம் தீரச் சாந்தியொன்று கூறுகின்றேம். பொருத்தமான கர்மசாந்தி செய்து "வங்கபஸ்மம்" ஒரு மண்டலகாலம் சாப்பிட்டால் வியாதி நீங்கிவிடும். சுகஸமுத்திரத்தைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

மருந்து செய்யும் விதம்

34. மருந்துயெவ் விதங்கள் செய்யும் வகைதனைச் சொல்லு
[மென்னப்
பெருவங்கம் சுத்தி செய்துப் பலமிலாத் தகடு செய்து
தரைசூட மூலி சேர்த்து சாணுன்கு புடமே போடத்
திருநீறு போலே யாகுந் தினம்வெண்ணெய் கூட்டித்
[தானே.

34. மருந்து செய்யும் விதத்தைச் சொல்லுங்கள் என்று வினவும் போது, பெருவங்கத்தைச் சுத்திசெய்து, அதை மெல்லிய தகடாகச்

செய்து தரைசூட மூலிகையை உடன்சேர்த்து நான்கு சாண்கள் அகல நீளத்தில் பள்ளந்தோண்டி அதனுள் ஸ்புடம் போட்டால் வெண்மை யான சூர்ணம் போலாகும். அதைத் தினந்தோறும் வெண்ணெயுடன் கூட்டி ;

35. உண்ணவும் பத்தி யங்க ளொன்றுமே யில்லை யம்மா
திண்ணமாய்க் கர்ம சாந்தி செய்விதம் சொல்லு மென்ன
வண்ணமாய்க் கலச மொன்பான் வைத்துமே சத்தி பூசை
பண்ணியே யறுகோ ணத்தால் பாவையும் செய்து
[மேதான் ;

35. சாப்பிடவேண்டும். தாயே! அதற்குப் பத்தியங்கள் எதுவும் இடையா. கர்மசாந்தி செய்யும் விதத்தைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்க, அழகிய ஒன்பது கலசங்கள் வைத்து, சக்தி பூஜை செய்து, வெள்ளியாலான, ஆறுகோணங்களுடைய தகட் டில் குழந்தைபோல் உருச்செய்து ;

36. சமித்தினுல் ஓமம் செய்து அபிஷேகம் உருவு நூறு
அமைத்துமே வர்ச்சித் தேத்தி யறுமுகன் வாரந் தன்னில்
உவமையாய்ச் செய்வா ஞகி லுவந்தோர் ரோகம் நீங்கும்
சிவன்தனைப் பூசை செய்யும் தேவியே கேட்டி டாயே.

36. செவ்வாய்க்கிழமையன்று, மனமுவந்து சமித்தால் ஹோமம் செய்து, அபிஷேகம்செய்து, நூறுதரம் அருச்சனைசெய்து வந்தால் வந்தரோகம் விலகும். சிவபெருமானைப் பூசைசெய்யும் தேவியே! கேளுங்கள்.

தந்தையின் மறுபிறவி

37. பின்ஜன்மந் தந்தைக் கேதான்
பேசுவோந் தில்லை தன்னில்
அன்னவன் வைசியச் சேயா
யதிகமாய்ச் செட்டுச் செய்யத்
தன்னதோர் பதியு முண்டாய்த்
தரணியில் வாழ்வா ஞகும்
கன்னென மொழியை யொக்கும்
காதலி புகன்றிட் டோமே.

37. ஜாதகனுடைய தந்தை மறுபிறவியில் சிதம்பரத்தில் வைசிகுலத்தவனுகப் பிறந்து, அதிகமாக வர்த்தகம் செய்துவந்து, தன்னுடைய அந்தஸ்துக்குத் தக்க வீடு ஒன்றுக்கட்டி அதில்வாழ்ந்து வருவான் என்றேரும். இனிய வார்த்தைகளைப் பேசுபவளே! கூறுகின்றேரும்.

தாயின் குணங்கள்

38. மாதுரு குணத்தைக் கேளாய் மருமமும் பொறுமை யுண்டு
மேதினி லடக்க முள்ளாள் வீண்வார்த்தை யதிகம்
[பேசாள்
பாதக மெண்ணு ளாகும் பகையிலா ளெவர்க்கு நல்லாள்
ஒதுவேன் பித்தச் சூடு வுறைந்திடு மென்று சொன்னேம்.

38. ஜாதகனுடைய தாயின் குணத்தைக் கேளுங்கள். ரகசிய முள்ளவள். பொறுமையுடையவள். அடக்கமுள்ளவள். வீண் வார்த்தையாடாதவள். தீங்குகள் எண்ணுத மனத்தினள். ஒருவரிடமும் விரோதமில்லாதவள். எல்லோருக்கும் நல்லவள். பித்தச் சூட்டு நோயுள்ளவள் என்று சொல்லுகின்றோம்.

தாயின் சகோதர பாவம்

39. இவளது துணைவர் தம்மை யறைகிறோ மாண்பா லொன்று
நவனியில் வேறே யில்லை நல்கினுந் தீதே யாகும்
இவர்களு முள்ளூ ராகு மியம்புவோ மாதுர் பூர்வம்
தவசியே சொல்லு கின்றேன் தயாபரி கேட்டி டாயே.

39. ஜாதகனுடைய தாயின் சகோதரரைப்பற்றிச் சொல்லு கின்றோம். ஒரு சகோதரன் உண்டு. வேறு எவரும் கிலியாயிரார். பிறந் தாலும் இறந்துவிடுவார். அவர்கள் உள்ளூரிலேயே இருப்பார்கள். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். தயாநிதியே! கேளுங்கள்.

தாயின் முற்பிறவி

40. அன்னையு மவ்வூர் மேற்கில் அருகினில் பேரூர் தன்னில்
தன்னிலே செங்குந்தர் வம்சம் தானவ ளுதித்தா
[ளென்றோம்
பொருளொடு பணிதி பெற்றுப் புத்திர ருள்ளா ளாகி
இன்னவள் நல்லோ ளாகி யிவள்கொஞ்ச மறமும் செய்து;

40. தாய் அவ்வூருக்கு சமீபத்தில் மேற்கில் உள்ள பெரிய ஊரில் செங்குந்த மரபில் பிறந்தாள் என்றோம். செல்வம் ஆபரணங்கள் முதலியவற்றைப் பெற்றுப் புத்திர பாக்கியமடைந்து தன் இனத் தாருக்கு நல்லவளாகி வாழ்ந்து, சிறிது தருமமும் செய்து;

தாயின் மறுபிறவி

41. சண்டன்தன் பதிக்குச் சென்று
சதுர்முகன் வரையப் பட்டுத்
துண்டமா யிக்கு லத்தில்
தோன்றினு ளிவளே யென்றோம்

உண்டவே பின்ஜன் மத்தை
உரைக்கிறேம் காஞ்சி தன்னில்
பண்டிபண் டார முள்ள
பதியினில் வைசியச் சேயாய் ;

41. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவள் என்று சொன்னேம். தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சிபுரத்தில் ஆட்படையும் பண்டகசாலைகளும் கிடங்குகளும் உள்ள வீட்டில் வைசிய குலத்தவளாக ;

தந்தையின் மரணகாலம்

42. உதிப்பளே யிவளு மென்றே முரைக்கிறேந் தந்தை [காலம்
விதிக்கிறே மிருபா ஞென்றில் விளம்புவோங் கண்டந் [தானும்
இதுகாலம் ரோகங் கண்டு விலகிடு முருக ஞலே
சதிசெயு மிருபா ஞென்பான் சித்திரை மாதங் கண்டம்.

42. பிறப்பாள் என்றேம். ஜாதகனுடைய தந்தையின் மரண காலத்தைச் சொல்லுகின்றேம். ஜாதகனின் இருபத்தோராம் வயதில் ஒரு கண்டம் ஏற்படும். அப்போது நோய் ஏற்பட்டு முருகக்கடவுளின் அருளினுல் விலகும். பிறகு இருபத்தொன்பதாம் வயதில் சித்திரை மாதத்தில் கண்டம் ஏற்படும்.

தாயின் மரணகாலம்

43. அன்னைக்கு முப்பா ஞலி லைப்பசி மாதந் தன்னில்
பண்ணிய மூத்ரோ கத்தால் பாவையு கண்ட மென்றேம்
இன்னவன் மரண கால மியம்புவோ மன்பா ஞறில்
தன்னிலே மேட மாதந் தசமியாங் குறைப்பக் கத்தில் ;

43. தாய், ஜாதகனின் முப்பத்துநான்காம் வயதில், ஐப்பசி மாதத்தில், மூத்திர ரோகங்கண்டு அதனுல் மரணமடைவாள். ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றேம். அவன் ஐம்பத்தாரும் வயதில் சித்திரை மாதம் கிருஷ்ணபட்சம் தசமி திதியில் ;

ஜாதகனின் மறுபிறவி

44. உடலுமே வாடு மென்றே முரைக்கிறேம் பின்ஜன் [மத்தை
அடைவுடன் காளாத்தி தன்னி லவனுமே வைசிய வம்சம்
திடமுட னுதிப்பா ஞகுஞ் செட்டுகள் மிகவே செய்தும்
தடமதில் கீர்த்தி யாவன் தயாபரி கேட்டி டாயே.

44. மரணமடைவான் என்றேம். ஜாதகனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். திருக்காளத்தியில் வைசிய குலத்தவனுகப்

பிறப்பான். பலமான வியாபாரம் செய்து வந்து, உலகில் புகழை அடைவான். தயாநிதியே! கேளுங்கள்.

பொது யோகம்

45. உதித்தவன் பொதுயோ கத்தை
உரைக்கிறேனுஞ் சுகமு முள்ளான்
நதிபல தீர்த்தந் தோய்வன்
நாட்டினில் கீர்த்தி யேற்பன்
அதிகமாய்ப் பொருளுஞ் சேர்ப்பன்
அனேகரும் வணங்க வாழ்வன்
வதிபனும் பெருமை யாக
வாழ்குவா னென்று சொன்னேம்.

45. ஜாதகனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றேம். சுகமுள்ளவன். பற்பல புண்ணிய நதிகளில் நீராடுவான். உலகில் புகழை அடைவான். அதிகமான பொருளைச் சேர்த்து வைப்பான். பலர் இவனை வணங்கும்படி வாழ்ந்து வருவான். பெருமையாக வாழ்க்கையை நடத்துவான் என்றேம்.

ஜனனகாலதசை

46. ஜனித்திடு காலந் தன்னில் சேய்தசை நாலு வாண்டும்
குனித்திடு திங்கள் ரண்டு குலவுநா லிருப தாகும்
கனமுள சாத கர்க்குக் கண்டிடு மதிக ரோகம்
இனமதில் பீடை காணும் இலாபத்துச் செலவ னேகம்.

46. ஜாதகன் பிறப்புக் காலத்தில் அங்காரக மகாதசையில் நான்கு வருடங்களும் இரு மாதங்களும் இருபது நாட்களும் மீதமாம். அப்போது ஜாதகனுக்கு அதிகமான நோய் ஏற்படும். சுற்றத்தாருக்குப் பீடையுண்டு. வரவுக்குமேல் செலவுகள் அதிகம் ஏற்படும்.

47. தந்தைதாய் ரோக முண்டு தன்மனை விருத்தி யாகும்
முந்திய காலி பீடை உயர்சுபந் தந்தை வர்க்கந்
தந்தைதாய்த் துணைவர் சேதி சாற்றுவோம் பின்பா [கத்தில்
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழிகுன் றுவே.

47. தாய் தந்தையருக்குப் பிணி பீடிக்கும். வீடு பெருகும். கால்நடைகட்குச் சேதம் உண்டு. தந்தை வர்க்கத்தாருக்குச் சுப காரியங்கள் நிகழும். மற்றபடி தாய் தந்தையரின் செய்தியைப் பிற் பாகத்தில் கூறுகின்றேம். முருகக்கடவுளைப்பெற்ற தேவியே! கூறிய வார்த்தைகள் தவறு.

ஜாதகம் 23

1. மந்திரி கோல தாக [1]மார்த்தாண்டன் ராகு மீனம்
புந்தியுஞ் சாடி யாகப் புகர்சனி மான தாகச்
சந்திரன் குஜனுந் தேளில் [2]செம்பாம்பு மாதை புக்க
இந்தவாறு கிரகம் நின்று இலக்கினஞ் சிம்ம மாக ;

1. குரு துலாத்திலும், சூரியன் ராகு மீனத்திலும், புதன் கும்பத்திலும், சனி சுக்கிரன் மகரத்திலும், சந்திரன் செவ்வாய் விருச்சிகத்திலும், கேது கன்னியிலுமாக நவக்கிரகங்கள் நின்று இலக்கினம் சிம்ம மாக இருப்பின் ;

கிரகநிலை

சூரியன் ராகு			
புதன்	இராசி சக்கரம்		
சுக்கிரன் சனி			லக்கினம்
	சந்திரன் செவ்வாய்	குரு	கேது

ஜாதகனின் வீட்டுநிலை

2. உமையவள் கேட்கும் போது உரைக்கின்றார் பராசர்
[தாமும்
அமைந்திடு மாண்பால் ஐன்ம மவனில்லங் கிழக்கு வாடை
எமனுத்ர வீதி யாகும் யானையின் கோட்டந் தெற்கில்
ஐமதக்னி வடமேல் தங்குந் தேவிமா காளி கீழ்ப்பால்.

2. (பலனைக் கூறுங்கள்) எனப் பார்வதிதேவி கேட்கும்போது பராசரமுனிவர் கூறுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகம். அவன் பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியில் கிழக்கு வரிசையில் உள்ளது. விநாயகரின் ஆலயம் தெற்கிலும், மாரியம்மன் கோவில் வடமேற்குத் திக்கிலும், காளிதேவியின் கோவில் கிழக்கிலும் ;

ஜாதகனுடைய குலம்

3. பரமனைப் பூசை செய்யும் பத்தினி முனியு நிற்குங்
குறைதலை மாரி தங்குங் குண்டமு மருகில் தங்கும்
அறைகிறேனுஞ் சிற்றூர் தன்னி லவனும்பூ வைச்ய வம்சம்
விரைவினி லுதிப்பா ரகும் வித்தகி கேட்டி டாயே.

---

1. சூரியன்.
2. கேது

3. சிவபெருமானைப் பூசைகள் புரியும் அம்பாள் கோவிலும், முனீச்வரன் கோவிலும், மாரியம்மன் கோவிலும், ஒரு குளமும் வீட்டின் அருகில் இருக்கும். இங்ஙனமானதொரு சிற்றூரில் ஜாதகன் பூவைசிய குலத்தில் பிறப்பான் என்றோம். தேவியே! கேளுங்கள்.

4. இன்னவன் ஜனன யோகம்
எழில்பெறுந் தந்தை யோகம்
மன்னிய வன்னை யோகம்
வரும்புத்திர களத்திர யோகந்
தன்னிலே முன்பின் ஜன்மஞ்
சாற்றுவோ மிந்நூல் தன்னில்
அன்னையே யாங்கள் சொல்லும்
அருள்மொழி குன்று வென்றோம்.

4. ஜாதகனுடைய யோகம் அழகிய தந்தை தாய் இவர்களின் யோகம், இவனுக்கு ஏற்படும் புத்திர பாக்கியம், மனைவியின் யோகம், முற்பிறவி, மறுபிறவி ஆகிய இவற்றை இந்தச் சோதிட நூலில் கூறுகின்றோம். தாயே! நாங்கள் கூறும் அருள் வாக்கியங்கள் பொய்யாகா.

ஜாதகனுடைய தந்தையின் குணங்கள்

5. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சகலர்க்கு
[நல்லோ னவன்
நொந்திடும் பேரைக் காப்பன் நேமியில் ஒடிசல் தேகி
வந்தவர்க் கன்ன மீவன் மருமமில் லாத நெஞ்சம்
சந்தத மிருந் றத்தான் சரசமாய்ப் பேச வல்லன்.

5. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். எல்லோருக்கும் நல்லவனுவான். துன்பமடைந்தவரைக் காப்பாற்றுவான். மெல்லிய சரீரமுள்ளவன். தன்னை யண்டி வந்தவர்கட்கன்னமளிப்பவன். மனத்தில் ஒளிவில்லாதவன். கரியநிறமுடையவன். சரசசல்லாபமாகப் பேசுபவன்.

6. மனமது கபடு மில்லான் மறுமொழி யதிகங் கூறான்
சினமது கொஞ்ச முண்டு தீர்ந்திடும் பின்னு லேதான்
இனத்துக்கு நல்லோ னவ னீகையு முடைய னென்றோம்
தனமுளா னுதவி செய்வன் தன்தேகம் பித்தச் சூடு.

6. மனத்தில் கபடமில்லாதவன். எதிர்த்துப் பேசும் வழக்கமில்லாதவன். சிறிது முன்கோபமுள்ளவன். உடனே அக்கோபம் தாழ்வடையும். தன் சுற்றத்தாருக்கு நல்லவன். கொடையாளி. செல்வவானுக இருப்பான். பிறருக்கு உதவி செய்பவன். பித்தச்சூட்டு சரீரி.

பத்மரேகை

7. அன்னியப் பெண்கள் மோகன் அதுவன்றி விதவை
[மோகன்
தன்தந்தை யாஸ்தி மேலாய்த் தானவன் விருத்தி
[செய்வன்
இன்னவன் கரத்தி லேதான் இலகிடுங் கமல ரேகை
சொன்னசொல் தவரு ஞகுஞ் சித்திர வீடு செய்வன்.

7. பரஸ்திரீகளிடம் மையல் கொள்ளுபவன். கைம்பெண்களிடமும் அதிக விருப்பம் கொள்ளுபவன். தன் தந்தையின் ஆஸ்தியைப் பெருக்குவான். இவனுடைய கையில் பத்மரேகை யுண்டு. சொன்ன வார்த்தைகளை மீறுதவன். அழகிய வீட்டைக் கட்டுவான்.

8. சுகிபுசிப் புடைய னுவன் துணைவர்சொல் தட்டா னுகும்
பகையது யில்லா னுகும் பஞ்சைமே லிரக்க முள்ளான்
வகையான குடும்பி யாவன் மாநிலங் கீர்த்தி யேற்பன்
சகமதில் சகடு முள்ளான் செட்டுகள் செய்யா
[னென்றோம்.

8. சுகமாகச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவன். தன் உடன் பிறந்தவர்களது வார்த்தைகளை மீறுதவன். விரோதிகள் இல்லாதவன். ஏழைகளின்மீது இரக்கமுடையவன். செல்வாக்குள்ள குடும்பத்தை யுடையவன். உலகில் புகழை அடைவான். வண்டியொன்று வைத்திருப்பான். (சகடை யோகமுள்ளவன்.) வியாபாரம் செய்து வரர்தவன்.

தந்தையின் சகோதரபாவம்

9. அவனுடைத் துணைவர் தம்மை யறைகிறோ மாண்பால்
[ரண்டு
நவனியில் கன்னி யொன்று நாட்டுவோந் தீர்க்க மாகப்
பவமுள மூன்று நஷ்டம் பகருவோ மிவனுக் கேதான்
தவசிபோல் வேடங் கொண்ட தயாபரி கேட்டி டாயே.

9. ஜாதகனுடைய தந்தையின் சகோதர பாவத்தைச் சொல்லுகின்றோம். இரு சகோதரரும் ஒரு சகோதரியும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பர். மூன்றுபேர் இறந்துவிடுவர் என்று சொல்லுகின்றோம். தவம் செய்பவரைப்போல் இருந்து வரும் தயாநிதியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய குணங்கள்

10. இக்குண முடையோ னுக்கு யிவனுமே யுதிப்பா னுகும்
மிக்கவே யிவன்கு ணத்தை விளம்புவோ மிருசி வப்பன்
தக்கவே யொடிசல் தேகி சன்மார்க்கன் ஊக முள்ளான்
பக்குவ மான வார்த்தை பகருவா னிவனே யென்றோம்.

10. இவ்விதக் குணங்கள் உடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான் என்றேரும். இவனுடைய குணத்தைக் கூறுகின்றேரும். இருவிதமான நிறமுடையவன். மெல்லிய சரீரமுள்ளவன். நல்வழியில் நடப்பன். ஊகைசாலி. இந்த ஜாதகன் பொருத்தமாகப் பேசுபவன் என்றேரும்.

11. அன்னியர்க் குதவி செய்வன்
அகதிகள் நேசம் செய்யான்
பொன்னது சேர்க்கை யாகும்
பிதுர்நாளில் செல்வ முள்ளான்
சொன்னசொல் லிரண்டு முண்டு
தொடுத்திடு கர்மம் வெல்வன்
செந்நெல்லு ராசி சேருஞ்
செய்தொழில் பலித மாமே.

11. பிறருக்கு உபகாரி. கதியற்றவரது நட்பைக் கொள்ளாதவன். திரவியத்தை அதிகமாகச் சேர்ப்பவன். தந்தையால் சேர்த்து வைக்கப் பட்ட பொருளை உடையவன். இருவிதமாகப் பேசும் இயல்பினன். எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிப்பான். நெல் அதிகமாக விளையும். செய்யும் தொழில் வெற்றியாகும்.

12. அன்னைசொல் கடவா ஒரு மற்பரை யுறவு கொள்ளான்
நன்னய வசன முள்ளான் நாவலர்க் கினிய ஒரும்
மன்னிய கரத்தி லேதான் வளர்தன ரேகை யுள்ளான்
அன்னமுஞ் சொகுசா யுண்பன் ஆவொடு நந்தி சேரும்.

12. தன் தாயின் வார்த்தையை மீறுதவன். அற்பர்களிடம் நட்புக் கொள்ளாதவன். இனிமையாகப் பேசுபவன். பெண்களுக்குப் பிரியனுவன். கையில் விருத்தியாகும் தனரேகையை உடையவன். அன்னத்தை விரும்பி அருந்துவதில் பிரியமுள்ளவன். பசு காளைகள் விருத்தியாம்.

13. நடையது துருசு முள்ளான் நடுவய தலைச்ச லுள்ளான்
அடிமையேர் குடிக ளுண்டு அறுமுகன் தனைத்து திப்பான்
தடமதில் வைப்பு முண்டு சோலைக ளுடைய ஒருந்
திடமதா யேர்ப்பெ ருக்கஞ் செப்புவோ மிவனுக் கேதான்.

13. வேகமாக நடப்பவன். மத்திய வயதில் அலைச்சல் உள்ள வன். குடிபடைகளையும் பணியாட்களையும் ஏர்களையும் உடையவன். சுப்பிரமணியக்கடவுளைப் பூசிப்பவன். ஊரில் பெரிய வீடு உண்டு. தோப்புக்களையும் சோலைகளையும் உடையவன். ஏர்கள் விருத்தியுறும் என்று சொல்லுகின்றேரும்.

ஜாதகனுடைய சகோதரர்

14. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பா
[லொன்று
அவனியில் கன்னி யவ்வா றறைகிறே மிவனுக் கேதான்
பவமுள துணைவன் சேதி பகருவோஞ் சிவந்த மெய்யன்
நவனியில் கல்வி மானும் நாயகன் ஊகை வானும்.

14. ஜாதகனுடைய உடன்பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உள்ளவன். இவனுடைய சகோதரனைப் பற்றிச் சொல்லுகின்றோம். சிவந்த உடலுடையவன். உலகில் கல்வியறிவுள்ளவன். ஊகமுடையவன்.

இதுவுமது

15. பலருக்குச் சகாய முள்ளான் பாரினில் நல்லோ னுவன்
விலைமாதர் விருப்ப முள்ளான் வீணப வாத மில்லான்
குலவுநன் னடக்கை யுள்ளான் கூறுவோஞ் சீல னுகக்
கலைகளுங் கற்பா னுகுங் காரியச் சமர்த்த னென்றோம்.

15. பல பேருக்கு உதவியைச் செய்பவன். உலகில் நல்லவனுக வாழ்ந்து வருவான். வேசையர்மீது விருப்பங் கொள்ளுபவன். வீண் பழிகளை ஏற்காதவன். நன்னடத்தையையுடையவன். நல்லொழுக்கமும் உள்ளவன் என்று சொல்லுவோம். பலவிதக் கலைகளைக் கற்றுணர்வான். காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்து முடிப்பவன்.

16. மனைவியு மொன்றே யாகுங் வருஞ்சுதர் பெண்பா
[லொன்று
கனமுடன் தீர்க்க மாகும் காணது வாண்பா லுந்தான்
சினமிலாப் பராசர் சொல்ல ஜயமுனி கூறு கின்றார்
தனயனுக் காண்பால் தோஷஞ் சாற்றின கார
[ணஞ்சொல்.

16. மனைவி யொருத்தியே யாவள். ஒரு புத்திரியே தோன்றுவாள். அவளும் நீண்ட ஆயுள் உடையவள். புத்திரனில்லாதவன். இங்ஙனம் பராசரமுனிவர் சொல்லும்போது ஜயமுனிவர் கூறுகின்றார். இவனுக்குப் புத்திரதோஷம் ஏற்படக் காரணம் சொல்லுங்கள்.

17. தந்தைக்கு வுரிமை செய்யான் தாய்க்கவன் செய்வா
[னுகும்
எந்தையே தந்தை முன்னே யிவனுமே மரண மாவன்
பிந்தியே தந்தை வீழ்வன் பேசின மொழிகுன் றுவே
கந்தனை யின்ற மாதே கழறுவோ மேலுங் கேளே.

17. ஜாதகனுடைய சகோதரன் தன் தந்தைக்கு இறுதிக்கடன் கரீச் செய்யாதவன். அவற்றைத் தன் தாய்க்குச் செய்து முடிப்பான். தாயே! இவன் தன் தந்தைக்கு முன்பாகவே இறந்து விடுவான். பிறகே தந்தை மரணமடைவான். நாங்கள் கூறிய வார்த்தைகள் பொய்யாகா. கந்தவேளைப் பெற்ற புண்ணியவதியே! மேலுங் கேளுங்கள்.

18. ஜயமுனி யெழுந்தி ருந்து திடுக்கென வுரைக்க வுற்றீர்
நயமுடன் மத்தி யத்தில் நாயகன் மரண மென்றீர்
வியமதைச் சொல்லு மென்ன வேறெரு பகையி னலே
அயலவன் மிலேச்ச னலே யப்பில்லி சூனியத் தாலே;

18. ஜயமுனி திடீரென்று எழுந்திருந்து கூறுகின்றார். இடைக் காலத்தில் ஜாதகனுடைய சகோதரன் இறந்து விடுவான் என்று சொன்னீர்களே. அதற்குக் காரணம் சொல்லுங்கள் என்று வினவ, அயலானன வேறெரு விரோதியினல் (முகம்மதியனல்) பில்லி சூன்னியம் வைக்கப் பெற்று;

19. மாரக நேரு மென்றே மவன்தந்தைக் கவ்வா றுகுங்
கூறுமிம் மன்ன னுக்குங் கூறுவோ மவ்வா றென்றேரும்
தீரமாய் முனிவர் கூற ஜயமுனி கேட்க வுற்றீர்
வீரியன் குடும்பத் துக்கு மேவிடுந் தோஷ மென்றீர்.

19. மரணம் நேரிடும் என்றேரும். ஜாதகனுடைய தந்தைக்கும் அவ்வாறே நேரிடும். இந்த ஜாதகனுக்கும் அவ்விதமே மரணம் ஏற்படும் என்றேரும். இவ்விதம் முனிவர் சொல்லும்போது ஜயமுனிவர் வினவ லானர். ஜாதகனுடைய குடும்பத்துக்குத் தோஷம் ஏற்படும் என்றீரே.

20. எந்தக்கா லத்தி லேதான் இயம்புவீ ரந்தச் சங்கை
முந்தியே கூறு மென்ன மொழிகின்றே னிருபா னைந்தில்
பந்தமா யிந்தச் சங்கை பகருவோந் துன்ப முண்டு
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழிகுன் ரூவே.

20. எந்தக் காலத்தில் அந்தத் தோஷம் ஏற்படும் என்று முதலில் கூறுங்கள். ஜாதகனுடைய இருபத்தைந்தாம் வயதில் இந்தத் துன்பம் ஏற்படும். கந்தபிரானைப்பெற்ற தேவியே! கூறிய வார்த்தைகள் தவரு.

21. வரும்வினை நிவிர்த்தி செய்ய வறைகுவீர் கிரியை யொன்று
கிரகசாந் திகளுஞ் செய்து காஷ்டத்தில் சத்தி பூசை
உரிமையாய்ச் செய்வா னகி லுறைந்ததோர் வினைக

[ளேகும்

திறமையாய்ச் செய்யா னகில் தீதுக ளதிக முண்டாம்.

21. அந்தத் தீவினையைப் போக்கச் சாந்தியொன்று கூறுங்கள். நவக்கிரக சாந்தி செய்து, நூல்களில் கூறியவண்ணம் சக்தியூஜை செய்து வருவாகினால் ஏற்பட்ட தீவினைகள் விலகும். அலட்சியமாகச் செய்யாவிடில் துன்பங்கள் அதிகம் ஏற்படும்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

22. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மிருபா
[னென்றில்
மேதினி லுத்தி ரத்தில் விளங்குவா ளிவளே யென்றும்
போதவே யவள்கு ணத்தைப் புகலுவோ மிருபி வப்பள்
ஓதுமுன் கோபங் கொஞ்ச முடன்படாள் பிழைக ளுக்கு

22. ஜாதகனுடைய திருமணக்காலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய இருபத்தோராம் வயதில் வடக்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள் என்றோம். அவளுடைய குணத்தைக் கூறுவோம். கருமை கலந்த சிவப்பு நிறமுடையவள். முன்கோபி. தீங்குகளைச் செய்ய சம்மதியாள்.

மனைவியின் குணங்கள்

23. பித்தமாந் தேக முள்ளாள் பெருதன முடைய ளாகும்
குத்தமில் லாதா ளாகுங் குணமது விரண்டு முள்ளாள்
சித்தினி சாதி யென்றுஞ் செப்புவோம் புத்திர பாகம்
வித்தக ராண்பால் ரண்டு விளங்கிடும்.பெண்பா லவ்வா று

23. பித்த சரீரமுடையவள். பெருஞ் செல்வம் உள்ளவள். குற்றம் இல்லாதவள். இருவிதமான குணங்களையுடையவள். சித்தினி ஜாதியைச் சேர்ந்தவள். இவளது புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றுவர்.

தாயின் குணங்கள்

24. இதுகளுந் தீர்க்க மாகும் எமபதம் மூன்று போகும்
புதல்வர்க ளிவன்மே லாகப் போற்றுவோம் யோகந்
[தானும்
மதிதுதல் மாதர் சேதி யறைகின்றோம் பொறுமை சாலி
சதியிலாக் குணத்த ளாகுந் தன்வரன் மனம்போல்
[வாழ்வள்.

24. இவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவராவர். மூன்று குழந்தைகள் இறந்து விடும். இவனுடைய புத்திரர்கள் இவனுக்கு மேலாக வாழ்ந்து வருவார் என்று கூறுகின்றோம். சந்திரனைப் போல் அழகிய புருவங்களையுடைய தாயின் விவரங்களைச் சொல்லுகின்றோம்.

பொறுமையுடையவள். தீமையில்லாத குணத்தினள். தன் கணவனுடைய மனமறிந்து வாழ்ந்து வருவாள்.

தாயின் சகோதரரும் முற்பிறவியும்

25. அவள்துணை யாண்பா லொன்று
அவ்வாறே கன்னி யாகும்
இவைரண்டுந் தீர்க்க மாகும்
இருப்பிட முத்திர மென்றோம்
நவனியி லிவள்தன் பூர்வம்
நாட்டுவோம் [1]பட்சி மேல்பால்
பவமூள சிற்றூர் தன்னில்
பிறந்தனள் தியின் வம்சம்.

25. தாயின் உடன்பிறந்தவர்களில் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். அவர்கள் ஜாதகனுடைய வீட்டுக்கு வடக்கில் இருப்பார்கள் என்றோம். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருக்கழுக்குன்றத்துக்கு மேற்கில் உள்ள சிற்றூரில் வன்னிய குலத்தில் பிறந்தாள்.

26. சுகமது வுடையா ளாகிச் சுதர்களுந் தீர்க்க முண்டாய்
வகையான குடும்பி யாகி வரன்முன்னே மரண மாகித்
தகமையாய் மறையோ னுலே தானவள் வரையப் பட்டுப்
பகையிலா யிக்கு லத்தில் பிறந்தன ளிவளே யென்றோம்.

26. சுகமுடையவளாகிப் புத்திரபாக்கியம் பெற்றுச் செயலுள்ள குடும்பத்தையடைந்து தன் கணவனுக்கு முன்பாக மரணமடைந்து மீண்டும் பிரம்மதேவனால் படைக்கப்பட்டுத் தீமையில்லாத இக்குலத்தில் பிறந்தவள் ஜாதகனுடைய தாய் என்றோம்.

தாயின் மறுபிறவியும் தந்தையின் முற்பிறவியும்

27. மறுஜன்மங் காஞ்சி தன்னில் மறைக்குலந் தனிலு [தித்துக்
குறையிலா வாழ்வா ளாகுங் கூறுவோம் தந்தை பூர்வம்
திருக்காஞ்சி கீழ்ப்பா லாகச் செப்பிய நகரந் தன்னில்
உறைந்தனள் வைசிய வம்சம் உத்தமி கேட்டி டாயே.

27. மறுபிறவியில் காஞ்சீபுரத்தில் அந்தணர் குலத்தில் பிறந்து குறைவொன்று மில்லாமல் வாழ்ந்து வருவாள். தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சீபுரத்திற்குக் கிழக்கில் உள்ள நகரத்தில் வைசிய வம்சத்தில் பிறந்தான். தாயே! கேளுங்கள்.

---

1. திருக்கழுக்குன்றம்

28. தனமது பெருக்க முண்டாய்ச் செட்டுக ளதிகஞ் செய்து
இனமது மெச்ச வாழ்ந்து இருக்குமந் நாளி லேதான்
சினங்கொண்டு வேழை தானுஞ் செல்வர்க்கு மணங்கள்
[வேண்டிக்
கனமுள மாங்கல்யந் தன்னைக் கழறுவா யென்று கேட்க;

28. பொருளை அதிகமாக அடைந்து, மிகுதியாக வர்த்தகம் செய்து, சுற்றத்தார்கள் புகழும்படியாக வாழ்ந்து வரும் காலத்தில் ஏற்பட்ட தீங்கைச் சொல்லுகின்றோம். ஏழையொருவன் தன் குழந்தைக்கு மணம் செய்விக்க எண்ணி இவனை மாங்கல்யம் செய்து தருவாய் என்று கேட்கும்போது ;

மாங்கல்யம் தர மறந்தது

29. அப்படித் தாரே னென்று
அந்ததோர் வைசியன் சொல்ல
ஒப்புடன் நம்பி யேதான்
உடன்மணம் கூட்டிக் கொண்டு
மெய்ப்புட னிவன்பால் சென்று
வேண்டியே மங்கிலியம் கேட்கச்
செப்புவான் வைசியன் தானுஞ்
சிந்தையு மறந்தே னென்று.

29. அவ்விதம் தருகிறேன் என்று வைசிய குலத்தில் பிறந்த வணிக இந்த ஜாதகனின் தந்தை கூறினான். அதை நம்பி அந்த ஏழை திருமணத்தை ஏற்பாடு செய்து கொண்டு இவனிடம் சென்று மாங்கலியத்தைக் கேட்க, வைசியன் மறந்து விட்டேன் என்று கூறினான்.

ஏழையின் சாபம்

30. தனமிலா வருத்தங் கொண்டு தான்வேறு முத்திரை
[வாங்கி
மணமதை முடித்த பின்பு வறைகிறார் சாபந் தானும்
கனமுடன் பின்னுன் மத்தில் காதலி மரண மாகிச்
சினமுடன் சிறைசின் னளாய்த் தீவினில் வாழ்வா
[யென்று ;

30. பணமில்லாமல் வருத்தமுற்று அலைந்து, ஏழைகள் வேறு திருமங்கல்யம் வாங்கிக் கொண்டு திருமணத்தை முடித்து விட்டுச் சாபம் இடுகின்றனன். நீ அடுத்த பிறவியில் மனைவியை இழந்து சின்னஞ்சிறுவர்கள் சிறைவாசம் செய்து, தீவில் வாழ்ந்து வருவாய் என்று ;

31. சொல்லிய யேழை சாபந் தொடர்ந்தது வந்தத் தோஷம்
அல்லல்க ளந்தி யத்தில் அதிகத்துன் பங்கள் சேர்ந்து
புல்லிய காலன் பக்கல் பொருந்தியே வேத னுலே
வல்லியே வரையப் பட்டு வந்தவ னிவனே யென்றேரும்.

31. ஏழைகள் கூறினர். அந்தத் தோஷம் இவனைத் தொடர்ந்தது. தன் கடைசிக்காலத்தில் மிகுதியாகத் துன்பங்களை அடைந்து மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இந்த ஜாதகனின் தந்தை என்றேரும். தாயே!

தந்தையின் மறுபிறவி

32. பின்ஜன்மந் துவாரை தன்னில்
பிறப்பனும் பிரம்ம சேயாய்
அன்னையுங் கேட்க லுற்றாள்
அவனுமிச் சென்மந் தன்னில்
என்னபுண் ணியங்கள் செய்தான்
இயம்புவீர் முனியே நீர்தாம்
அன்னமே சொல்லு கின்றேன்
அவனுமிச் சென்மந் தன்னில்;

32. ஜாதகனுடைய தந்தை மறுபிறவியில் துவாரகையில் அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான். பார்வதிதேவி கேட்கலானாள். இப்பிறவியில் அவன் என்ன நற்செயல்கள் புரிந்தான்? அவற்றைச் சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். தாயே! கூறுகின்றேரும். ஜாதகனின் தந்தை இப்பிறவியில்;

உயர்குலப் பிறவிக்குக் காரணம்

33. ஏழைதன் பேரி லிச்சை யின்பமாய் வைத்த தாலும்
ஆழியில் நல்லோ னையும் ஆபத்தைக் காத்த லாலும்
வாழ்த்தினேர்க் குதவி செய்தும் வந்ததால் மறுஜன் [மத்தில்
சூழ்வனும் பிரம்ம சேயாய்த் தோகையே மேலுங் கேளே.

33. ஏழைகளின்மீது இரக்கம் கொண்டு வாழ்ந்ததாலும், உலகில் நல்லவனாகப் பலருக்கு நேர்ந்த ஆபத்தைக் காத்ததாலும், தன்னை தோத்தரித்தவர்கட்கு உபகாரியாக இருந்து வந்ததாலும், மறுபிறவியில் அந்தணர்குலத்தில் பிறப்பான். தாயே! மேலும் கேளுங்கள்.

ஜாதகனின் முற்பிறவி

34. ஜாதகன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோங் காஞ்சி [யுத்திரம்
தீதிலாப் பேரூர் தன்னில் ஜனித்தனன் செங்குந்த வம்சம்
போதவே தனங்க ளுண்டாய்ப் புத்திர ருள்ளா ளுகிப்
பாதக மனமில் லாமல் பலருக்கு முதவி யாகி ;

34. ஜாதகனின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சி புரத்துக்கு வடக்கில் உள்ள தீமைகளில்லாத பெரிய ஊரில் செங்குந்த மரபினனுகப் பிறந்து, பெருஞ் செல்வங்களைப்பெற்று, புத்திர பாக்கிய மடைந்து, தீயஎண்ணங்களில்லாமல் பலபேருக்கும் உதவியாக இருந்து;

35. அன்னவ னுல யத்தில் அவள்திருப் பணியுஞ் செய்து
இன்னவன் நெசவி னுலே யுலகிலே பெருமை பூண்டு
மன்னிய காலன் பக்கல் வந்துபின் மறையோ னுலே
உன்னத வரையப் பட்டு வுதித்தவ னிவனே யென்றோம்.

35. ஆலயத் திருப்பணிகளைச் செய்து வந்து, நெசவுத் தொழிலில் பெருமையடைந்து, வாழ்ந்து, பிறகு மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இந்த ஜாதகன் என்றோம்.

தாயின் மரணகாலம்

36. மாதுரு மரண கால மறைகிறோம் பதினே ராண்டில்
சூதிலாச் [1]சிம்ம மாதஞ் சொல்லுவோ மார கங்கள்
மேதினில் தந்தைக் கேதான் விளம்புவோ மிருபானேந்தில்
தீதிலாத் [2]தேளின் மாதஞ் செப்புவோங் கண்டந் தானே.

36. ஜாதகனுடைய தாயின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய பதினேராம் வயதில் தீங்குகளில்லாத ஆவணி மாதத்தில் மரணம் நேரிடும். தந்தைக்கு ஜாதகனுடைய இருபத்தைந்தாம் வயதில் கார்த்திகை மாதத்தில் மரணம் சம்பவிக்கும்.

ஜாதகனுடைய ஆயுள்பாவம்

37. இன்னவன் மரண கால மியம்புவோ மன்பா னெட்டில்
நன்மையா யானி மாதம் நவமியாங் குறைப்பக் கத்தில்
அன்னவ னுடலம் வாடும் அம்மொழி பராசர் சொல்ல
மன்னிய புயண்டர் தாமு மரித்துமே கேட்க வுற்றார்.

37. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றோம். இவன் தனது ஐம்பத்தெட்டாம் வயதில் ஆனி மாதத்தில் கிருஷ்ண பட்சம் நவமி திதியில் இறந்து விடுவான். இவ்விதம் பராசரமுனிவர் சொல்லும்போது புஜண்டமுனிவர் இடையில் மறுத்துக் கூறுகின்றார்.

1. ஆவணி
2. கார்த்திகை

38. இதுமத்தில் ஜாத கர்க்கு இலகாதோ மார கங்கள்
அதுகுற்றஞ் சொல்லு மென்ன வையைந்து வாண்டு [மேலே

சதியினல் கருவு தன்னல் சடலத்துக் குற்ற மாகும்
அதுகாலம் புகரில் மந்த னவன்சக்ரம் நடக்கு மென்றேரும்.

38. இதற்கிடையில் ஜாதகனுக்கு மரணம் ஏற்படாதோ? சொல்லுங்கள், என்று வினவ, ஜாதகனுக்கு இருபத்தைந்தாவது வயதுக்கு மேல் கண்டம் ஏற்படும். அப்போது சுக்கிரமகாதசையில் சனிபுக்தி நடைபெறும் என்றேரும்.

39. அந்ததோர் காலந் தன்னில் அம்பிகை பூசை செய்து
பிந்தியுங் கிரக சாந்தி புனிதனுஞ் செய்வா னகில்
வந்திடு வினைகள் நீங்கு மறுமுகன் கிருபையி னலே
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழிகுன் ரூவே.

39. அந்தக் காலத்தில் தேவிபூசையைச் செய்து பிறகு நவக்கிரக சாந்தியையும் ஜாதகன் செய்து வந்தால் இவனை வந்தடையும் தீங்குகள் விலகி விடும். ஆறுமுகக்கடவுளின் கிருபையாலும் நன்மை ஏற்படும். முருகக்கடவுளைப்பெற்ற தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவரு.

ஜாதகனுடைய மறுபிறவி

40. அக்கண்டம் நீங்கி யேதான்
ஐம்பத்தெட் டாண்டி ருப்பன்
மிக்கவே யிவன்பின் ஜன்மம்
விளம்புவோங் காளாத்தி தன்னில்
தொக்கவே சைவச் சேயாய்த்
தோன்றியே பெருமை பூண்டு
நக்கனைப் பூசை செய்வன்
நங்கையே கேட்டி டாயே.

40. அந்தக் கண்டம் நீங்கிப் பிறகு ஜாதகன் தன் ஐம்பத்தெட்டாம் வயது வரையில் சுகமாயிருப்பான். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். காளத்தியில் சைவ குலத்தவனுகப் பிறந்து பெருமையையடைந்து, சிவபெருமானுக்குப் பூசைகளைப் புரிவான். தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய பொதுயோகம்

41. இன்னவன் பொதுயோ கத்தை
யியம்புவோம் வறுமை யில்லான்
தன்தந்தை யாஸ்தி தன்னைத்
தானவன் விருத்தி செய்வன்

முந்திய குடும்பி யாவன்
முயற்சியால் மேன்மை யுள்ளான்
பின்னமில் லாத தேகன்
பூமிக ளனந்தஞ் சேர்ப்பன்.

41. ஜாதகனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றேம். வறுமையையடையாதவன். தன் தந்தையின் ஆஸ்தியைப் பெருக்குவான். உயர்வான குடும்பத்தை அடைவான். சொந்த முயற்சியால் மேன்மையையடைவான். ஊனமில்லாத சரீரத்தையுடையவன். எண்ணற்ற விளைநிலங்களைச் சேர்ப்பான்.

42. கிருஷியுஞ் செய்வா னுகுங் கண்ணிய மாக வாழ்வன்
இருவிதக் குரலு முள்ளான் இனத்துக்குத் தலைவ னுவன்
திருமகள் வாச முள்ளான் செய்நிலம் பணிகள் பூமி
உரைக்கிறே முப்பா யிரம்பொன் உத்தமி கேட்டி டாயே.

42. விவசாயம் செய்து வருவான். மதிப்புடன் வாழ்ந்து வருவான். இருவிதமான குரல் உள்ளவன். தன் சுற்றத்தாருக்குத் தலைவனுக இருப்பவன். இலட்சுமி இவன் வீட்டில் வாசம் செய்வாள். விளைநிலங்கள், ஆபாணங்கள் இதர பூமி இவை முப்பதாயிரம் பொன் மதிப்பு உள்ளவை என்றேம். தேவியே! கேளுங்கள்.

ஜனனகால தசை

43. பிறந்திடு காலந் தன்னில் புததசை தனிலி ருப்புச்
சிறந்திடு வாண்டு மூன்றுந் திங்களு மொன்றே யாகும்
உறைந்திடு நாட்கள் பத்து மறைகிறேம் பூமி சேரும்
விரைவினில் ஜாத கர்க்கு விளங்கிடும் ரோகந் தானே.

43. ஜாதகன் பிறக்கும்போது புதமகாதசையில் சென்றது போக இருப்பு மூன்று வருடங்களும் ஒரு மாதமும் பத்து நாட்களுமாம். அக்காலத்தில் பூமி பெருகும். ஜாதகனுக்குச் சிக்கிரத்தில் நோய் ஏற்படும்.

44. ஜனவுப காரத் தாலே சேர்ந்திடுஞ் சிலவே பாக்கியம்
வினையுண்டு காலி பீடை விரோதமாம் பந்து தன்னில்
அனையவே சூத கங்கள் அணுகிடும் பந்து தன்னில்
கனமுடன் பின்பா கத்தில் கழறுவோம் விவர மாக.

44. ஜனங்களின் உபகாரத்தால் சில பாக்கியங்கள் சேரும். துன்பங்கள் உண்டு. கால்நடைகட்குப் பீடை. சுற்றத்தாரிடம் பகை ஏற்படும். பந்துக்கள் வீட்டில் அசுபம் நிகழும். மற்றவற்றைப் பின் பாகத்தில் சொல்லுகின்றேம்.

ஜாதகம் 24

1. புதன்கன்னி யிரவி கோலாம் புகர்கேது தேளி லாக
மதிகுரு [1]சுறுவில் தங்க மங்கலன் தனுசி லேற
வதிகயர் குண்டை யாக மைந்தனு மரியில் புக்க
அதிபனுஞ் ஜன்மஞ் சீயம் வந்தவன் பலத்தைச்
[சொல்வாய்.

1. புதன் கன்னியிலும், சூரியன் துலாத்திலும், சுக்கிரன் கேது விருச்சிகத்திலும், சந்திரன் குரு மகரத்திலும், செவ்வாய் தனுசிலும், ராகு விருஷபத்திலும், சனி சிம்மத்திலுமாக நவக்கிரகங்கள் இருந்து இலக்கினம் சிம்மமாயின் ஏற்படும் பலனைக் கூறுங்கள்.

கிரகநிலை

		ராகு	
சந்திரன் குரு	இராசி சக்கரம்		லக்கினம் சனி
செவ்வாய்	சுக்கிரன் கேது	சூரியன்	புதன்

ஜாதகனின் வீட்டுநிலை

2. பிறந்தசே யாணுஞ் ஜன்மம் பேசுவோங் கீழ்மேல் வீதி
உறைந்திடும் வடக்குப் பார்வை யுயரெதி ரில்ல மில்லை
சிறந்திடு மாரி மேற்கில் திருமாலும் வடமேல் தங்கும்
நிரந்தர மீசன் காளி நிற்பரே வடக்கி லேதாம்.

2. இஃது ஆண்பிறப்பு. பிறந்தவன் வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றோம். அவனுடைய வீடு கிழக்கு மேற்கான வீதியில் வடக்கு நோக்கியுள்ளது. எதிரில் வீடில்லை. மேற்குப் பக்கத்தில் மாரியம்மனின் கோவிலும், வடமேற்குத் திக்கில் திருமாலின் ஆலயமும், வடக்கில் வெகு காலமாக உள்ள சிவபெருமானின் கோவிலும், காளியின் கோவிலும், இருக்கும்.

---

1. மகரவிராசி

3. இவ்வித வடையா ளத்து ளிலகிய கூரை வீட்டில்
திவ்விய பாலன் தானுஞ் ஜனிப்பனே யிவனின் யோகம்
நவ்விய மாதுர் தந்தை நற்றுணை யோகந் தானும்
பவ்யமாய் முன்பின் ஜன்மம் பகருவோம் கேளு மம்மா.

3. இவ்வித வடையாளங்களுள்ள கூரை வீட்டில் இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடைய யோகம், தாய் தந்தையர், உடன்பிறந்தவர், இவர்களின் யோகம் முற்பிறவி, மறுபிறவி, ஆகிய இவற்றைக் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் தந்தையின் குணங்கள்

4. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம்
[வெகுபேர்க் கன்பன்
சிந்தையில் கவலை யில்லான் சிவபூசை செய்வா னுகும்
பந்துவு மெச்ச வாழ்வன் பாவைமேல் பிரிய னுவன்
எந்தையே கல்வி யுள்ளான் இவன்சுக புசிப்ப னுமே.

4. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கூறுகின்றோம். பலபேர்க்குப் பிரியமானவன். மனத்தில் கவலையில்லாதவன். சிவ பூசையைச் செய்து வருவான். தன் சுற்றத்தார் புகழும்படி வாழ்ந்து வருவான். மனைவியின்மீது பிரியமுள்ளவன். தாயே! கல்வியறி வுள்ளவன். நன்றுகச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவன்.

5. மதுமா மிசங்கள் கொள்வன் வாத்திமை வேலை செய்வன்
நிதிகளைச் செலவு செய்வன் நிதானமாய் வார்த்தை
[கூறுவன்
விதவிதத் தொழிலுஞ் செய்வன் வித்தகி பூசை செய்வன்
ததிநெய்பால் பிரிய முள்ளான் சஞ்சல மனத்த னுமே.

5. மது மாமிசம் முதலியவற்றை உட்கொள்ளுவான். உபாத்தியாயர் வேலையைச் செய்து வருவான். பொருளை அதிகமாகச் செலவு செய்வான். மெதுவாகப் பேசுவான். விதவிதமான தொழில்களைச் செய்து வருவான். அம்மனுக்குப் பூசைகளைப் புரிவான். தயிர் நெய் பால் முதலியவைகளில் விருப்பமுடையவன். அலைபாயும் மனத்தினன்.

6. மந்திர மறைகள் கற்பன் மன்னுமா சார முள்ளான்
விந்தையாய்ப் பொருள்கள் தேடி விரைவினில் செலவு
[செய்வன்
தந்தையி னர்ஜி தத்தைத் தானவன் விருத்தி செய்வன்
பந்தமாய் ஞாதி வர்க்கம் பெருகிடா தரிட்ட மாமே.

6. மந்திரங்களையும் வேதங்களையும் கற்றவன். ஆசாரமுள்ளவன். ஆச்சரியப்படும்படி பொருள்களைத் தேடுவான். அவற்றைச்

சீக்கிரத்திலேயே செலவு செய்து விடுவான். தன் தந்தையினால் தேடப் பட்ட பொருள்களைப் பெருக்குவான். தன் பங்காளி வர்க்கத்தார் அதிகமில்லாதவன். அவர்கள் நிலையில்லாதவர் என்றேும்.

7. சல்லியப் பாதை யுள்ளான் தைரிய மனமில் லாதான்
நல்லவர் நேசம் செய்வன் நற்புத்தி யுடைய னுகும்
இல்லையென் றுரைக்க மாட்டான் யாரையும் வசியஞ்
[செய்வன்
சொல்லுமே நெறியுள் ளானுஞ் சுந்தரி மேலுங் கேளே.

7. கடன் தொல்லைகளை உடையவன். தைரியமில்லாத மனத் தினன். நல்லவரிடம் நட்புக் கொள்ளுபவன். நல்ல புத்தியுள்ளவன். யாசித்தவருக்கு இல்லை என்று கூறுதவன். எல்லோரையும் வசப் படுத்தும் குணத்தினன். நேர்மையுள்ள வார்த்தைகளுள்ளவன். அழகியே! மேலும் கேளுங்கள்.

ஜாதகனின் தந்தையின் சகோதரபாவம்

8. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பால்
[ரண்டு
நவமதில் கன்னி ரண்டு நாட்டுவோந் தீர்க்க மாகும்
இவனுமே வுதிக்கா முன்னம் இவன்தந்தை துணைவர்
[சேதம்
அவனியில் பெண்பால் தீர்க்க மறைகிறேங் கேளு மம்மா.

8. இவனுடைய சகோதர பாவத்தைச் சொல்லுகின்றேும். அவர் கள் ஒன்பதுபேராவர் இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் நீண்ட ஆயுள் உடையவராக இருப்பர். ஜாதகன் பிறப்பதற்கு முன்பு தந்தை யின் சகோதரர்கள் இறந்து விடுவர். சகோதரிகள் தீர்க்கமாக இருப்பர் என்று சொல்லுகின்றேும். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் குணங்கள்

9. இப்படி யிருக்குந் தந்தை யிவனுக்கு வுதித்த பாலன்
செப்புவோம் பலன்கள் யாவுந் தீரனன் மனத்த னுகும்
ஒப்புடன் கருதி றத்தான் உரைக்கிறேங் கல்வி கொஞ்சம்
மெய்ப்புடன் முரட னுகும் மெல்லியே மேலுங் கேளே.

9. இவ்விதக் குணங்களுள்ள தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப் பான். அவனுடைய பலன்களைச் சொல்லுகின்றேும். தைரியசாலி நல்ல மனமுடையவன். கரிய நிறமுள்ளவன். சிறிதே கல்வியறி வுள்ளவன். முரட்டுச் சுபாவம் உடையவன். தாயே! மேலும் கேளுங்கள்.

10. தந்தையி னர்ஜி தத்தை ஜாதக னடைய மாட்டான்
சிந்தையில் மூரட னவன் செப்புமுன் கோப முள்ளான்
கந்தனைப் பூசை செய்வன் காரியச் சமர்த்த னகும்
தன்தன மில்லா னகுந் தாட்சிண்ய முடைய னமே.

10. தன் தந்தையால் சம்பாதிக்கப்பட்ட பொருளை ஜாதகன் பெறுதவன். மனத்தில் மூரட்டுக் குணமுள்ளவன். கூறுவதற்குமுன் கோபம் கொள்ளுபவன். சுப்பிரமணியக் கடவுளைப் பூஜித்து வருவான். காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்பவன். தன்னால் தேடப்பட்ட பொருள் இல்லாதவன். தாட்சிண்ய மனப்பான்மையுள்ளவன்.

11. பிந்தின காலந் தன்னில் பலத்திடு யோகந் தானும்
மைந்தனு மயலூர் தன்னில் வாழ்வனுஞ் சிலரா னுந்தான்
பந்தமாய்த் துணைவர் தம்மைப் பகருவோ மாண்பா
[லொன்று
எந்தையே பெண்பால் நான்கு இதற்குமேல்
[விருத்தி யில்லை.

11. பிற்காலத்தில் யோகம் பெருகும். சின்னட்கள் வேற்றூரில் வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய சகோதர பாவத்தைச் சொல்லுகின்றோம். ஒரு சகோதரனும் நான்கு சகோதரிகளும் தோன்றுவர். அதற்குமேல் விருத்தியாகாது.

ஜாதகனுடைய சகோதரனின் செய்திகள்

12. இப்படி முனிவர் கூற ஈச்வரி கேட்க வுற்றாள்
செப்புவாய் துணைவர் சேதி செல்வியுங் கேட்கும் போது
ஒப்புட னண்பால் சேதி உரைக்கிறோம் விவர மாகத்
தப்பித மொருவர்க் கெண்ணன் சாந்தவான் பொறுமை
[யுள்ளான்.

12. இங்ஙனம் முனிவர்கள் சொல்லும்போது பார்வதிதேவி கேட்கின்றாள். சகோதர பாவத்தைப் பற்றிக் கூறுங்கள். சகோதரனைப்பற்றி விவரமாகக் கூறுகின்றோம். ஒருவருக்கும் தீங்குகள் எண்ணுதவன். சாந்தமுள்ளவன். பொறுமையுடையவன்.

13. கல்வியுங் கொஞ்ச முள்ளான் கனத்தவர் சேசங்
[கொள்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் எதிரியை வசியஞ்
[செய்வன்
நல்லவர் பலர்க ளாலே நாட்டினில் கீர்த்தி கொள்வன்
அல்லலென் றடைந்தோர் தம்மை யாதரிப் பானு மம்மா.

13. சிறிதே கல்வியறிவுடையவன். பெரியோர்களிடம் நட்புக் கொள்ளுபவன். யாசித்தவருக்கு இல்லை என்று கூறுதவன். விரோதி களைத் தன்வயப்படுத்துவான். உலகிலுள்ள பல நல்ல மனிதர்களால் புகழ்பெறுவான். துன்பமடைந்து அடைக்கலம் புகுந்தவரை ஆத ரித்து வருவான். தாயே!

14. அன்னிய தேசந் தன்னில் அவனுமே சிலநாள் வாசம்
மன்னரால் ஜீவ னங்கள் மைந்தனுஞ் சிலநாள் செய்வன்
இன்னவன் பித்த தேகி யிவன்சுக புசிப்பா ளகும்
கன்னியர் சேதி தன்னைக் கழறுவேன் கேளு மாதே.

14. சின்னட்கள் அவன் வெளி தேசத்தில் வாழ்ந்து வருவான். அரசாங்க உத்தியோகம் ஏற்று சிலகாலம் வாழ்ந்து வருவான். ஜாதக னுடைய சகோதரன் பித்த தேகமுள்ளவன். நன்றாக உண்பதில் பிரியமுள்ளவன். சகோதரியின் செய்தியைக் கூறுவோம். தாயே! கேளுங்கள்.

15. பரவசஞ் சுகமு முள்ளாள் பந்துவும் பகைய தாகும்
வரனண்டை வாழ மாட்டாள் மங்கையா லவமா னத்தள்
திறமையாய்ப் பெண்பா லொன்று சேதமா மொன்று
[சேமம்
குறைவரு மிரண்டு பேரால் கோதையே மேலுங் கேளே.

15. பிறர் வயப்பட்டவள். சுகமுடையவள். சுற்றத்தாரிடம் விரோதமுள்ளவள். தன் கணவனுடன் சேர்ந்து வாழ்க்கையை நடத் தாதவள். ஒரு பெண்ணால் அவமானம் அடைவாள். பிறக்கும் இரு பெண்களில் ஒன்று இறந்துவிடும். ஒரு பெண் சுகமாக இருக்கும். வேற்று மனிதர் இருவரால் குறை ஏற்படும். தாயே! மேலும் கேளுங்கள்.

ஜாதகனின் தாயின் குணங்கள்

16. மாதரு குணத்தை யாங்க ளறைகிறே மிருகி றத்தாள்
நீதியாய்ச் சமதே கத்தாள் நிகர்பித்த வாயு தேகி
பாதக மொருவர்க் கெண்ணாள் பந்துவு மெச்ச வாழ்வள்
சூதுக ளெண்ணு நெஞ்சஞ் சுந்தரி மேலுங் கேளே.

16. ஜாதகனுடைய தாயின் குணத்தை நாங்கள் கூறுகின்றோம். இரு நிறமுடையவள். சமமான உடலமைப்புள்ளவள். பித்த வாயு வுள்ள சரீரமுடையவள். ஒருவருக்கும் தீங்கிழைக்க நினையாதவள். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். கபட எண் ணங்களில்லாத மனத்தினள். அழகியே! கேளுங்கள்.

17. அன்னங்கள் போட வல்லாள் ஆசார முடைய ளாகும்
பன்னியே யெவர்க்கு நட்பு பாலர்மேல் பிரிய முள்ளாள்
மன்னிய வரனுக் கேதான் மங்கையும் நேச முள்ளாள்
துன்னிய செலவ னந்தஞ் சுந்தரி செய்வா ளென்றேரும்.

17. அன்னம் அளிப்பதில் ஆர்வமுள்ளவள். ஆசாரமுடைய வள். எல்லோரிடத்திலும் நட்புக் கொள்ளுவாள். குழந்தைகளின் மீது பிரியமுடையவள். தன் கணவனுக்குப் பிரியமானவள். எண் ணற்ற செலவுகளைச் செய்து வருவாள் என்று சொன்னேம்.

தாயின் சகோதரபாவமும் ஜாதகனின் திருமணமும்

18. இன்னவள் துணைவர் தம்மை யிசைக்கிறேரும் பலத்தைக் [காணேம்
தன்னுமே தனிய ளாவள் ஜாதகன் மணத்தின் காலம்
பன்னிய யிருபான் ரண்டில் பாவையும் வருவா ளம்மா
அன்னவ ளுத்த ரத்தில் வருவளாங் கேளு மம்மா.

18. இவளுடைய சகோதரரைப் பற்றிச் சொல்லுகின்றேரும். உண்டு என்று கூறக் கிரகபலமில்லை. இவள் தன்னந்தனியளாக வாழ்ந்து வருவாள். ஜாதகனுடைய திருமணக் காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். ஜாதகனுடைய இருபத்திரண்டாம் வயதில் இவன் வீட்டுக்கு வடக்கிலிருந்து மனைவி வருவாள் என்றேரும். தாயே! கேளுங்கள்.

புத்திரபாவம்

19. ஜாதகன் தனக்குப் புத்திரர் சாற்றுவோ மாண்பா [லொன்று
மேதினில் பெண்பால் ரண்டு விருத்தியாந் தீர்க்க மாகும்
நீதியா யிதன்மேல் தோன்றில் நிலைக்காதே நட்ட மாமே
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

19. ஜாதகனுடைய புத்திர பாவத்தைச் சொல்லுகின்றேரும். ஆண் குழந்தை யொன்றும் பெண் குழந்தைகள் இரண்டும் பிறந்து நீண்ட ஆயுளுள்ளவையாகும். இதற்குமேல் பிறந்தால் நிலையா. இறந்துவிடும் என்றேரும். விநாயகரைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

20. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோந் தோகை [மேல்பால்
பந்தமாய்ச் சிற்றூர் தன்னில் பாலகன் செட்டி யாகிச்
சந்ததம் தனங்கள் பெற்றுத் தரணியு மதிக முண்டாய்ப்
பந்தமாய் மனைவி யோடு பாலகர்க ளுள்ளா ளுகி;

20. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தோகைமலைக்கு மேற்கில் உள்ள சிற்றூரில் செட்டியார் மரபில் பிறந்து வெகுவாகச் செல்வத்தையடைந்து, பூமிகளையும் பெற்று, மனைவி மக்களையும் பெற்றவனாகி ;

21. ஆள்காரர திக முண்டாய் அதிகாரம் பெற்றே யின்னும்
நீள்புவி தன்னி லேதான் நிகர்செட்டு வதிகஞ் செய்து
நாளுக்கு நாளாய் யோகம் நாற்றிசைக் கீர்த்தி யாகி
வாழ்கின்ற நாளி லேதான் வருமூழி சொல்லக் கேளாய்.

21. பணியாட்கள் உள்ளவனாகவும், அதிகாரத்தை பெற்று வாழ்ந்து, நீண்ட உலகில் எல்லையில்லாத வர்த்தகத்தைப் புரிந்து, நாளுக்குநாள் யோகம் பெருகி, உலகில் எல்லாப் பக்கங்களிலும் புகழையடைந்து வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். கேளுங்கள்.

22. வருவோருக் கன்ன மாடை வான்பொரு ளளித்துமேலும்
பெருமையாய்ச் சொல்லே வேறு பிசகிலா திருக்கும்
[நாளில்
வறுமையா யகதி யோர்நாள் அயர்மது புசித்து நாளும்
மருவிய மனையாள் தன்னை வாட்டினன் கழியி னாலே.

22. தன்னிடம் யாசித்து வருபவர்கட்கு அன்னவஸ்திராதிகள், பொருள் முதலியவற்றைக் கொடுத்து உபசரித்துப் பெருமையுடனிருந்து வேறு தீங்குகளில்லாமல் வாழ்ந்துவருங் காலத்தில், ஒருநாள் ஏழை ஒருவன் மது உண்டிருந்தபோது (மது உண்ட மயக்கத்தால்) தன்னுடைய மனைவியை ஒரு தடியால் அடித்தான்.

23. அடியது பொறுக்கா மல்தான் அவள்மனந் துடிக்கும்
[போது
கொடியனை யிவன்மி ரட்டிக் கொண்டுதான் சிறையி
[லிட்டான்
மிடியனும் மனங்க லங்கி விளம்பிய சாப மொன்று
கடினமா யிவன்பின் ஜன்மங் காளையு மூதித்து மேதான் ;

23. அந்த அடியைப் பொறுக்க முடியாமல் ஏழைப்பெண் மனம் துடித்து வருந்தும்போது இவன் அந்த ஏழையை மிரட்டிச்சென்று ஓர் அறையிலிட்டுப் பூட்டி விட்டான். (காவலில் வைத்துவிட்டான்.) அந்த ஏழை மனவருத்தமுற்றுக் கூறிய சாபத்தைக் கேளுங்கள். இவன் மறுபிறவியில் ;

24. என்னைப்போல் மதுபு சித்து எவர்களும் நகைக்க ஜன்மம்
மன்னவ னெடுப்பா னென்று வழுத்தினை னகதி தானும்
அன்னையே யவனி வன்தான் ஆகையா லிச்சென் மத்தில்
கன்னியர் புத்தி யாலுங் கன்னியா லவமா னத்தன்.

24. என்னைப்போல் கள் உண்டு எல்லோரும் நகைக்கும்படியான ஜன்மத்தை எடுப்பான் என்று ஏழை கூறினன். தாயே! ஆகையால் ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் பெண்கள் வார்த்தையைக் கேட்ப தாலும் மனைவியினாலும் அவமானம் அடைவான்.

தாய், தந்தையர் ஜாதகன் மரணகாலம்

25. இவனுடை மரண கால மிசைக்கிரே மிருபா னுறில்
அவனிலே மாதுர் கால மறைகுவோ மிருபான் மூன்றில்
சுவமதில் ஜாத கர்க்கு நாட்டுவோ மிருபா னெட்டில்
சிவனுடை மாதந் தன்னில் திருவோண நாளி லேதான்;

25. ஜாதகனுடைய தந்தைக்கு இவனுடைய இருபத்தாரும் வயதில் மரணம் ஏற்படும். தாயின் மரணம் இருபத்துமூன்றும் வயதில் நேரிடும். ஜாதகன் தனது இருபத்தெட்டாம் வயதில் மாசி மாதம் திருவோண நட்சத்திரத்தில்;

ஜாதகனுடைய முற்பிறவி

26. பித்தரோ கத்தி னுலே பரன்பத மடைவா னம்மா
சித்தமா யிவன்முன் ஜன்மஞ் செப்புவோம் ஒதூர் நாட்டில்
மெய்ப்புடன் சூத்திர னாகி விளங்கிடு மனைவி மைந்தர்
ஒப்புடன் வாழு நாளில் உரைக்கிரே மூழி தானே.

26. பித்த ரோகத்தால் சிவபதம் அடைவான். தாயே! ஜாதகன் முற்பிறவியில் ஒதூர் என்ற ஊரில் நான்காம் வருணத்தவனாகப் பிறந்து, மனைவி மக்களை யடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம்.

27. மனையாளின் வார்த்தை கேட்டு மாதாவை விரோதஞ்
[செய்தான்
அனையவே வந்தச் சாபம் அணுகிற்று வதுவல் லாமல்
கனிவுள யேழை தன்னைக் கனமுட னேசஞ் செய்து
தனியவன் பூமி தன்னைத் தானவன் பறித்துக்
[கொண்டான்.

27. தன் மனைவியின் பேச்சைக் கேட்டுத் தன் தாயிடம் விரோதங் கொண்டான். அதனால் ஜாதகனுக்குத் தாயின் சாபம்

ஒன்று ஏற்பட்டது. ஏழை ஒருவனுடன் இந்த ஜாதகன் சிநேகம் செய்து, பிறகு அவனுடைய பூமியை அபகரித்துக் கொண்டான்.

ஏழையின சாபம்

28. ஆகையா லந்த வேழை யவன்மனம் நொந்து வாடி
பாகமாய்ச் சாப மொன்று பகருவான் மறுஜன் மத்தில்
வேகமாய்த் தந்தை யாஸ்தி விளங்காமல் நசித்து நீயே
தோகையர் துணைவி யாலே சொல்லவ மானம் நேர்ந்து ;

28. ஆகையால் அந்த ஏழை நண்பன் மனம் நொந்து கஷ்டப் பட்டுக் கூறும் சாபத்தைக் கேளுங்கள். மறு பிறவியில் உன் தந்தை யின் ஆஸ்தியைப் பெருமல் அழிந்துபோய், மனைவியால் அவமான மடைந்து (வாழ்வாய்) ;

29. இப்படி யேழை சொல்ல இவனுக்குத் தோஷம் நேர்ந்து
மெய்ப்புட னச்சென் மத்தில் மெலிந்துமே குன்ம
[நோயால்
செப்பமாய் மரண மாகிச் செல்வனு மிச்சென் மத்தில்
ஒப்புடன் வந்தா னம்மா உரைத்திட்டோ மிவன்பின்
[ஜன்மம்.

29. இவ்விதம் ஏழை கூற இவனுக்குத் தோஷம் ஏற்பட்டது அப்பிறவியிலேயே ஜாதகன் குன்மநோயால் கஷ்டப்பட்டு, மரண மடைந்து, இப்பிறவியில் இந்த ஜாதகனுகப் பிறந்தான். தாயே ! இவ னுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம்.

30. தணிகையின் மலைக்கு மேல்பால்
சாற்றிய சிற்றூர் தன்னில்
கனிவுடன் ரெட்டி யாகக்
காவலன் பிறப்பா னம்மா
இனிமேலாய்க் குடும்பச் செய்கை
யிசைக்கிறோ மிவனுக் கேதான்
அனையவே ஜனனந் தொட்டு
ஐயிரெண்டு வாண்டுக் குள்ளே ;

30. திருத்தணிக்கு மேற்குப்பக்கத்தில் உள்ள சிற்றூரில் ரெட்டியார் மரபில் பிறந்து வாழ்வான். தாயே ! இனி இவனுடைய குடும்பச் செய்திகளைக் கூறுகின்றோம். ஜாதகனுடைய பிறப்பு முதல் பத்து வருடங்களுக்குள்ளாக ;

31. பலவிதத் துன்பம் நேரும் பகருவோம் விவர மாகக்
குலமதில் நிந்தை யாகுங் கூர்சவுக் கியங்கு றைச்சல்
நலமில்லை சல்லியப் பாதை நன்பூமி சேத மாகும்
தலைமையாம் புத்தி தானுஞ் சஞ்சல மூண்டா மென்னே.

31. பற்பல விதமான தீங்குகள் ஏற்படும். அவற்றை விவரமாகக் கூறுகின்றேரும். குலத்தில் பழி ஏற்படும். சுகக் குறைவு நேரும். கடன் உபத்திரவமுண்டு. நன்மையையடையாதவன். விரோதிகளுக்குச் சேதமுண்டாம். அலைபாயும் மனமுண்டு என்றேரும்.

32. மாதுரு தந்தை நோயாம் வரும்பலன் குறைவ தாகும்
மேதினில் செலவ னேகம் விளங்காவே கோக்கள் தாமும்
நீதியா யதற்கு மேலே நிலவுபோல் யோகம் வாய்க்கும்
ஆதியாய் மரண மட்டும் அணுகாவே தரித்தி ரங்கள்.

32. தாய் தந்தையருக்கு வியாதி ஏற்படும். பலன் குறைவாக ஏற்படும். உலகில் செலவு அதிகமாகும். பசுக்கள் விருத்தியுறு. அதற்குப் பிறகு வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் வளரும். அதிலிருந்து ஜாதகனுடைய மரணகாலம் வரை தரித்திரங்கள் ஏற்படா.

ஜாதகம் 25

1. பொன்புக ரரியில் தங்கப் புவிமகன் மதியுந் தேளில்
மந்தனும் வீணை யாக மால்கருங் கோளுங் கன்னி
விந்தையா யிரவி கோலாம் மீனத்தில் கேது தங்க
வந்தவன் ஜன்மஞ் சிம்ம மறைகுவீர் பலனை யென்று.

1. குரு சுக்கிரன் சிம்மத்திலும், செவ்வாய் சந்திரன் விருச்சிகத்திலும், சனி மிதுனத்திலும், புதன் ராகு கன்னியிலும், சூரியன் துலாத்திலும், கேது மீனத்திலும், தங்கிப் பிறந்த லக்கினம் சிம்ம மானுல் பலனைச் சொல்லுங்கள் என்று ;

கிரகநிலை

கேது			சனி
	இராசி சக்கரம்		லக்கினம் குரு சுக்கிரன்
	செவ்வாய் சந்திரன்	சூரியன்	புதன் ராகு

ஜாதகனின் வீட்டுநிலை

2. அம்மையுங் கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
உண்மையா யாண்பால் ஜன்மம் உரைக்கிறேங்
[கீழ்மேல் வீதி
அண்மையாய்த் தெற்குப் பார்வை யறைகிறே மெதிர்வீ
[டில்லை
துன்மையாய்க் குடிசை தன்னில் ஜனிப்பனு மிவனே
[யம்மா.

2. பார்வதிதேவி கேட்கும்போது அத்திரிமுனிவர் கூறுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்தவீடு கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு நோக்கியுள்ளது. எதிர்ப்பக்கத்தில் வீடுகளில்லை. இவன் சிறு குடிசையில் பிறப்பான். தாயே!

3. வடமேற்கில் கன்னி தங்கு மறைகிறே மிதுவல் லாமல்
அறைகிறே மவ்வூர் தில்லை யாலய மொன்றுங் காணும்
விதியினல் முன்பின் ஜன்ம மேதினில் தந்தை தாயார்
அதிதூண களத்திர புத்திரர் அறைகிறே மிவர்க ளுக்கே.

3. வடமேற்குப் பக்கத்தில் மாரியம்மன் கோவிலொன்று உண்டு என்றேரும். அது தவிர, அவ்வூரில் சிவபெருமான் ஆலயம் இல்லை என்று சொல்லுகின்றேரும். ஜாதகனுடைய முற்பிறப்பு, மறுபிறப்பு, தந்தைதாய் இவர்களுடைய யோகத்தையும், உடன்பிறந்தவர், மனைவி, மக்கள் இவர்களுடைய பலனையும் சொல்லுகின்றேரும்.

ஜாதகனுடைய தந்தையின் குணங்கள்

4. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோ மிருசி
[வப்பன்
பந்தமாய்ச் சமதே கத்தன் பாலர்மேல் பிரிய முள்ளான்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குகள் சுத்த முள்ளான்
சிந்தையில் கபடு மில்லான் சிலநாட்கள் தரித்திர மாவன்.

4. ஜாதகனுடைய தந்தையின் குணத்தை நாங்கள் கூறுகின்றேரும். கருமை கலந்த சிவப்பு நிறமுள்ளவன். பொருத்தமாகவும் சம்மாகவும் உள்ள சரீரமுடையவன். குழந்தைகள்மீது அன்புடையவன். தன்னிடம் யாசித்து வந்தவர்கட்கு அன்ன மளிப்பவன். சுத்தமாகப் பேசுபவன். மனத்தில் ஒளிவில்லாதவன். சின்னட்கள் தரித்திர தசையை அடைந்திருப்பான்.

5. பந்துவின் பிரிய னுவன் பயிர்த்தொழி லுடைய னுவன்
சந்ததங் கல்வி யில்லான் சஞ்சல மனத்தா னுகும்
முந்தவே பூமி யில்லான் முன்கோபங் கபடு கொஞ்சம்
கொந்திடுங் குடும்பந் தானும் நுவலுப தேச மில்லான்.

5. தன் சுற்றத்தாருக்குப் பிரியமானவன். விவசாயம் செய்து வருவான். கல்வியறிவில்லாதவன். அலைபாயும் மனத்தினன். பிதுரார்ஜிதமான விசாலநிலங்கள் இல்லாதவன். முன்கோபமும் சிறிது சூதும் உள்ளவன். குடும்பம் அவஸ்தையுறும். பெரியோர்களிடம் உபதேசத்தைக் கேட்காதவன்.

6. பித்தமாந் தேக முள்ளான் பின்வய தினிலே யோகம்
குத்திர வசனங் கூறுன் குணமுளான் பொறுமை
[யுள்ளான்
பத்தினி யொருத்தி யாகும் பகைவரை நேசங் கொள்ளான்
நித்தியஞ் சஞ்ச லத்தான் நிகழ்த்துவோ மேலுங் கேளே

6. பித்த சரீர முடையவன். பிற்காலத்தில் யோகமுள்ளவன். குதர்க்கமாகப் பேசாதவன். நற்குணமும் பொறுமையு முடையவன். மனைவி ஒருத்தியே யாவள். விரோதிகளுடன் நட்புக் கொள்ளாதவன். தினமும் அலைபாயும் மனத்தையுடையவன். மேலே கூறுகின்றேரும். கேளுங்கள்.

தந்தையின் சகோதர பாவம்

7. இன்னவன் தூணவர் தம்மை யியம்புவோ மாண்பா
[லொன்று
கன்னியு மூவ ராகுங் கனக்காவே விரண்டு நஷ்டம்
அன்னமே யிருவர் தீர்க்கம் அப்படி யிருக்குந் தந்தை
இன்னவன் தனக்கு மேதான் இவனுமே வுதிப்பா
[னென்றோம்.

7. இவனுடைய சகோதரரைப்பற்றிச் சொல்லுகின்றோம். ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் பிறப்பார்கள். இரு குழந்தைகள் மரண மடையும். தாயே! இரு குழந்தைகள் நீண்ட ஆயுளுள்ளவர்கள். இங்ஙனமுள்ள தந்தைக்கு ஜாதகன் பிறப்பான் என்று சொன்னோம்.

ஜாதகனுடைய சகோதர பாவம்

8. ஜாதகன் தூணவர் தம்மைச் சாற்றுவோம் நான்க தாகும்
மேதினி லாண்பா லொன்று விளங்கிடும் பெண்பால்
[மூன்று
ஏதவே யிரண்டு தீர்க்கம் புகலுவோ மிரண்டு நஷ்டம்
நீதியா யிவன்கு ணத்தை நிகழ்த்துவோ மேலுங் கேளே.

8. ஜாதகனுடைய சகோதரபாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். உடன்பிறந்தவர் நால்வராவர். ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் தோன்றுவர். அவர்களில் இருவரே நீண்ட ஆயுளுள்ளவர்கள். இருவர் இறந்து விடுவர். ஜாதகனுடைய குணத்தை இனிமேல் கூறுகின்றோம். கேளுங்கள்.

ஜாதகனுடைய குணங்கள்

9. இன்னவன் சிவந்த மேனி இவனுமே வொடிச லுள்ளான்
கன்னென மொழியு முள்ளான் கல்வியு மல்ப மாகும்
பன்னிய யுரையு முள்ளான் பாரினில் செட்டுச் செய்வன்
சொன்னசொல் தப்பா னாகுந் துறவிகள் நேசங்
[கொள்வன்.

9. ஜாதகன் சிவந்த உடலுடையவன். மெல்லிய சரீரி. இனிய வார்த்தைகளையே பேசுபவன். சிறிதளவே கல்வியைக் கற்றவன். பன்னிப் பன்னிப் பேசுந் தொழிலை யுடையவன். உலகில் வர்த்தகத்தைப் புரிந்து வருவான். சொன்ன வார்த்தைகளைத் தவறுதவன். பெரியோர்களிடம் (பரதேசிகளிடம்) நட்புக் கொள்ளுவான்.

10. பால்பாக்கிய முடைய னாகும் பந்துவு மெச்ச வாழ்வன்
சீலமா சார முள்ளான் சாத்தானின் ஜாதி யாவன்
ஞாலமேல் பூமி சேர்ப்பன் நற்காலி விருத்தி யுள்ளான்
கால்கரம் வலிவ தாகுங் கனதனம் பின்னு லுள்ளான்.

10 ஊழ்வினையிலேற்பட்ட பாக்கியமுள்ளவன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். நல்லொழுக்கமும் ஆசாரமும் உடையவன். சாத்தான் என்ற ஜாதியைச் சேர்ந்தவன். உலகில் விசேஷ நிலங்களைப் பெருக்குவான். கால்நடைகளின் விருத்தியை யுடையவன். கைகால்கள் திடமாகவிருக்கும். பிற்காலத்தில் பெரிய செல்வங்கள் உள்ளவன்.

11. தானிய விருத்தி செய்வன் சகலரும் புகழ வாழ்வன்
மானமாய் ஜீவிப் பானும் மறுமொழி யதிகங் கூறன்
தேன்மொழி மனையா ளொன்று தினஞ்சுக புசிப்ப னாகும்
ஈனமாங் குணங்க ளில்லான் இவன்பித்தச் சூடாந் [தேகன்.

11. தானியப்பெருக்கமுடையவன். எல்லோராலும் கொண்டாடப் படுபவன். மானி. எதிர்த்துப் பேசும் சுவபாவமில்லாதவன். இனிமை யாகப் பேசும் மனைவி ஒருத்தியையே உடையவன். தினந்தோறும் அறு சுவை யுணவை உண்பதில் பிரியமுள்ளவன். அற்ப குணங்களில்லாத வன். பித்தச் சூட்டு தேகமுடையவன்.

12. வண்டிவா கனமு முள்ளான்
மாதர்மேல் விருப்ப முள்ளான்
[1]குண்டைகோ விருத்தி யுள்ளான்
குலத்துக்குத் தலைவ னாகும்
எண்டிசைக் கீர்த்தி யேற்பன்
எவரையும் நேசங் கொள்வன்
அண்டின பேரைக் காப்பன்
அறைகிறே மேலுங் கேளே.

12. வண்டி முதலிய வாகன வசதியுள்ளவன். பெண்கள் மீது விருப்பமுடையவன். பசு எருதுகளின் பெருக்கம் உள்ளவன். தன் குலத்துக்குத் தலைவனாகவிருப்பன். எல்லாத்திக்குகளிலும் புகழை அடைவான். எல்லோரிடத்திலும் நட்புக்கொள்ளும் இயல்பினன். தன்னை வந்து அடைந்தவரை ஆதரிப்பான். மேலும் கூறுகின்றோம். கேளுங்கள்.

ஜாதகனுடைய திருமணக் காலம்

13. இவனுடை மணத்தின் காலம் இயம்புவோ மிருபான் [ரண்டுள்
அவனியில் கிழக்குத் திக்கில் அவள்மாதர் வர்க்கந் [தன்னில்
கவனமாய்க் கொள்வா னம்மா கன்னியு மிருநி றத்தள்
தவமுடை யோர்க்கு வன்பள் தான்கற்பு முடைய ளாவள்

1. காளைமாடு.

13. ஜாதகனுடைய திருமணத்தின் காலத்தைக் கூறுகின்றோம். இருபத்திரண்டாம் வயதுக்குள் கிழக்குத் திக்கிலிருந்து தன் தாய் வர்க்கத்திலிருந்து நன்றாக ஆராய்ந்து பார்த்து மனைவியைத் தேர்ந் தெடுப்பான். தாயே! அவள் கரிய நிறமுடையவள். தவம் செய்ப வருக்குப் பிரியமுள்ளவள். கற்புடையவள்.

மனைவியின் குணங்கள்

14. வரனுக்கு நேய முள்ளாள் மைந்தரு முடைய ளாகும்
திருமகள் விலாச முள்ளாள் சினமிலாள் ஊகை சாலி
குறைவிலாப் பாக்கிய முள்ளாள் கூறுவோ மதிர்ஷ்ட சாலி
பெருமையு முடைய ளாகும் பேசுவோ மேலுங் கேளே.

14. தன கணவனுக்குப் பிரியமுள்ளவள். புதல்வருள்ளவள். இலட்சுமி கடாட்சம் உடையவள். கோபமில்லாதவள். ஊகமுடைய வள். நிறைந்த பாக்கியசாலி. அதிருஷ்டமுமுடையவள். பெருமையை அடைவாள். மேலும் கூறுகின்றோம். கேட்பீராக.

தாயின் விவரம்

15. மாதரு குணத்தை யாங்க ளறைகிறோம் மால்நி றத்தாள்
தீதிலாக் குணத்தா ளாகுஞ்செப்புகன் டைக்கையுள்ளாள்
மேதினில் வலிவு முள்ளாள் விளங்கிடு முன்கோ பந்தான்
வேதனை யொருவர்க் கெண்ணுள் விளங்குபூ டணமு
[மில்லாள்.

15. ஜாதகனுடைய தாயின் குணத்தை நாங்கள் கூறுகின்றோம். திருமாலைப்போன்ற கரியநிறமுடையவள். தீங்குகளில்லாத குணத் தள். நன்னடத்தையுடையவள். திடமான சரீரமுடையவள். சிறிது முன் கோபமுடையவள். ஒருவருக்கும் தீங்கிழைக்க மனமொப்பாதவள். ஆபரணங்கள் அதிகமில்லாதவள்.

தாயின் சகோதர பாவம்

16. அன்னங்கள் போட வல்லாள் அடக்கமு முடைய ளாவள்
மன்னிய வயிற்றில் ரோகி மறுமொழி யதிகங் கூரள்
இன்னவள் துணைவர் தம்மை யீயம்புவோ மாண்பா
[லொன்று
கன்னியு மவ்வா ருகுங் கழறின மொழிகுன் றுவே.

16. அன்ன மளிப்பதில் விருப்பமுடையவள். அடக்கமுள்ளவள். வயிற்றுவலி உள்ளவள். எதிர்வார்த்தை யதிகம் பேசாதவள். இவ ளுடைய உடன்பிறப்பைப்பற்றிச் சொல்லுகின்றோம். ஒரு சகோதர னும் ஒரு சகோதரியும் உள்ளவள். நாங்கள் கூறியவார்த்தைகள் தவறு

தாய்மாமனின் விஷயங்கள்

17. மாதுல னெருவன் சேதி யறைகி றேமுகை சாலி
போதவே கல்வி கொஞ்சம் பூமியு மில்லா னுகும்
நீதிலாக் குணத்த னுகுஞ் செலவுக ளதிகஞ் செய்வன்
நீதியாய்க் குடும்ப லேச்சல் நீங்குவா னூரை விட்டே.

17. ஜாதகனுடைய மாமனுடைய செய்திகளைக் கூறுகின்றேம். ஊகமுடையவன். சிறிதளவே கல்வியைக் கற்பான். விசா நிலங்களில்லா தவன். நீய குணங்களில்லாதவன். அதிகச் செலவாளி. குடும்பம் துன்புற்று இருக்கும். பிறந்த ஊரைவிட்டு விலகிச்சென்று விடுவான்.

இதுவுமது

18. சிலவேகா ளன்னிய தேசஞ் சென்றுபின் னூரைச் [சேர்வன்
பலமான யோகம் பின்னல் பேசுவோ மவனுக் கம்மா
உலகினில் கீர்த்தி மானும் உத்தம னுகி வாழ்வன்
பலவித மனத்த னுகும் பகருவோ மேலுங் கேளே.

18. சின்னட்கள் வேறு தேசம் சென்று, வாழ்ந்து, பிறகு ஊருக்குத் திரும்பி வருவான். அதன் பின்னல் இவனுக்கு யோகம் விருத்தியாகும். தாயே! உலகில் புகழை அடைவான். நல்லவனுக வாழ்ந்து வருலான். பலவிதமான (அலைபாயும்) மனமுடையவன். கூறுகின்றேம். கேளுங்கள்.

ஜாதகனுடைய புத்திர பாவம்

19. ஜாதகன் தனக்குப் புத்திரர் சாற்றுவோ மிருநான்காகும்
மேதினி லாண்பால் ரண்டு விளங்கிய பெண்பால் ரண்டு
கோதிலா நான்குந் தீர்க்கங் குறித்தனம் நான்கு நஷ்டம்
மாதவர் துதிக்கா நின்ற மங்கையே மேலுங் கேளே.

19. ஜாதகனது புத்திர பாவத்தைச் சொல்லுவோம். அவர் எட்டுப்பேராவர். அவர்களுள் புத்திரர்கள் இருவரும் புத்திரிகள் இருவரும் ஆக நால்வரும் நீண்ட ஆயுளுள்ளவர்கள். நான்கு குழந்தைகள் நிலைக்காமல் இறந்து போம். தவம் செய்பவர் துதித்துவரும் தாயே! மேலும் கேளுங்கள்.

20. முனிவரிவ் வாறுரைக் கூற மொழிவராம் புயண்டர் தாமும்
அனையவே தந்தைக் கேதான் அருளுவீர் முன்ஜன் [மத்தைக்
கனிவுடைப் புயண்டர் கேட்கக் கழறுவா ரத்திரி தாமும்
வணிபனுந் தந்தை முன்னு லருணமா நகர்ச்சு மேல்பால்;

20. இங்ஙனம் முனிவர்கள் சொல்லுப்பேர் தவுஜண்ட முனிவர் கூறுகின்றார். ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுங்

கள் என்று பணிவுடன் புஜண்ட முனிவர் வினவும்போது, அத்திரி முனிவர் கூறுகின்றார். திருவண்ணாமலைக்கு மேற்குப் பக்கத்தில் தந்தை வர்த்தகம் புரியும்

தந்தையின் முற்பிறவி

21. காராளர் குலமு தித்துக் கனமான செட்டுச் செய்து
ஊரெலாங் கீர்த்தி பெற்று உத்தமன் வாழு நாளில்
கூறுவே னூழி தானும் குருவைநிந் தித்துப் பேசித்
தீரனு மவர்பா தத்தைச் சிந்திக்கா மனத்த னாகி;

21. வேளாளர் குலத்தவனாகப் பிறந்து பெரியதொரு வியாபாரம் செய்துவந்து எல்லாவிடங்களிலும் புகழடைந்து வருங்காலத்தில் ஏற் பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். தன்னுடைய ஆசாரியனை அவ மதித்துப்பேசி அவருடைய பாதங்களை மனத்தாலும் நினையாதவனாகி ;

குரு சாபம்

22. பாதகா ணிக்கை யின்றிப் போதவே பூமி யின்றி
மேதினில் குருவுந் தானும் விளம்புவார் சாபந் தானும்
வேதனை யெண்ணியே னுக்கு விளங்கும்பின் ஜன்மந் [தன்னில்
போதவே பூமி யின்றிப் போஜனக் குறைவு மாகி;

22. பாதகாணிக்கையாகப் பூமியொன்றும் தராமல் இருந்ததால் குரு கூறிய சாபத்தைச் சொல்லுகின்றோம். எனக்குத் தீங்குகள் எண் ணியவனான உனக்கு ஏற்படும் மறுபிறவியில் விளைபுலங்கள் இல்லாமல் சாப்பாட்டுக்கும் குறை வேற்பட்டு;

23. தரித்திர மடைவா யென்று சாற்றினர் குருவுந் தாமும்
நிறைந்திடுஞ் சாபந் தானும் நிமலனைப் பற்றி யேதான்
குறைந்திடுஞ் செல்வ மெல்லாங் கூறுமச் சென்மந் [தன்னில்
விரைந்தது வென்று சொன்னே மெல்லியே மேலுங் [கேளே.

23. தரித்திரம் அடைந்து வாழ்வாய் என்று குருவும் சாபமிட் டார். அந்தச் சாபமும் தொடரும். ஜாதகனுடைய தந்தைக்கு அதனால் அப்பிறவியிலேயே செல்வம் குறைந்துவிட்டது என்று கூறுகின்றோம். மெல்லிய இடையுள்ளவளே! மேலும் கேளுங்கள்.

24. அச்சென்மந் தன்னி லேதான் அவன்வெகு வறுமை [பூண்டு
இலச்சைக ளதிகம் பட்டு நாயகன் மரண மாகி
இச்சென்மந் தன்னி லேதான் இவன்வன்னிய குலத்தோ [னாகி
அச்சுதன் பாதத்த னாகி யவனுமே பிறந்தா னென்றோம்.

24. அப்பிறவியிலேயே ஜாதகனுடைய தந்தை தரித்திர மடைந்து, மிக்க அவமான மடைந்து, மரணமான பின், இப்பிறவியில் வன்னிய குலத்தில் விஷ்ணுமதத்தினனுகப் பிறந்தான் என்றேரும்.

தந்தையின் மறு பிறவி

25. பிற்சென்மஞ் சிறுபாக் கத்தில் பேசுவோம் வைசிய னுகி
இலச்சைக ளில்லா னுகி நாடெலாம் வணிபஞ் செய்து
மிச்சமாய்த் தனங்கள் பெற்று வீரியன் வாழ்வா னம்மா
அச்சுதன் தங்கை யாளே யம்மையே மேலுங் கேளே.

25. மறு பிறவியில் சிறு பாக்கத்தில் வைசிய குலத்தில் பிறந்து துன்பங்களில்லாதவனுக எல்லா ஊர்களிலும் வர்த்தகம் புரிந்து வந்து அதிகமான பொருளையடைந்து வாழ்ந்துவருவான். கண்ணபிரானின் தங்கையே! தாயே! மேலும் கேளுங்கள்.

ஜாதகனுடைய முற்பிறவி

26. ஜாதகன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோஞ் சோழ
[நாட்டில்
மேதினி லாழி யோரம் விளங்கிய பேரூர் தன்னில்
போதவே சூத்திர னுகிப் புத்திரர் மனைவி யோடு
பாதக மில்லா னுகிப் பந்துக்கள் மெச்ச வாழ்ந்து;

26. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். சோழ நாட்டில் சமுத்திரத்திற்குப் பக்கத்தில் உள்ள (நாகை, கடலூர்) பெரிய தேர் ஊரில் நான்காம்வருணத்தவனுகப் பிறந்து, மனைவி மக்களோடு வாழ்ந்து வந்து, தீங்குகளில்லாமல் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்துவந்து;

இதுவுமது

27. தானமுந் தருமஞ் செய்து தவமுடை யோருக் கன்னம்
மானமா யளித்துப் பின்பு மரணமே யாகி யேதான்
ஆனதா லிக்கு லத்தில் அணுகினு னிவனே யென்றேரும்;
தேன்மொழி மாதே யாங்கள் செப்புவோ மிவன்பின்
[ஜன்மம்.

27. தான தருமங்களைச் செய்துவந்து, நல்வினை இயற்றிய தவசி களுக்கு உணவு அளித்து வாழ்ந்து மரணமடைந்ததால் இப்பிறவியில் இக்குலத்தில் பிறந்தான் என்றேரும். இனிய வார்த்தைகளைப் பேசுப வளே! இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும்.

ஜாதகனுடைய மறுபிறவி

28. காஞ்சிமா நகரி லேதான் கனமுள சைவ னுகி
வாஞ்சையாய்த் தனங்கள் பெற்று வளமுள செட்டுச்
]செய்து
நாஞ்சைக ளில்லா னுகி நன்மைந்தர் மனைவி யோடு
வேஞ்சின மில்லா னுகி வித்தகன் வாழ்வா னென்றோம்.

28. காஞ்சிமாநகரில் பெரிய தொரு சைவனுகப் பிறந்து, அதிக மான செல்வங்களைப் பெற்று, விருத்தியுள்ள வியாபாரம் செய்து வந்து தீங்குகளில்லாதவனுக விருந்து, நல்ல மனைவி மக்களைப் பெற்று, தீய கோபமில்லாதவனுக வாழ்ந்து வருவான் என்றோம்.

தாய் தந்தையரின் மரண காலமும் ஜாதகனுடைய வயதும்

29. இவனுடைத் தந்தை கால மியம்புவே நாற்பா னென்றில்
அவனியில் மாதுர் கால மறைகிறோ மதன்மே னன்கும்
நவமதி லிவனின் காலம் நாட்டுவோ மெழுபான் மூன்றில்
தவமுள தனுசு மாதஞ் சதுர்த்தசி முற்பா கத்தில்;

29. ஜாதகனுடைய தந்தையின் மரண காலத்தைக் கூறுகின் றோம். இவனுடைய நாற்பத்தோராம் வயதில் அஃது ஏற்படும். தாய் அதற்குப் பிறகு நான்கு வருடங்களில் மரண மடைவாள். ஜாதகன் தனது எழுபத்து மூன்றும் வயதில் மார்கழி மாதம் சுக்லபட்சம் சதுர்த் தசி திதியில்;

30. பித்தமாஞ் சுரத்தி னுலே பிஞ்சக னுடலும் வாடி
மத்தியா னத்தி லேதான் மரணமே யாவா னென்றோம்
அத்திரி முனிவர் சொல்வர் அம்மையுங் கேட்க லுற்றுள்
வித்தகன் குடும்பச் செய்கை விளம்புவாய் முனியே
[யென்றுள்.

30. பித்த சுரத்தால் மரணமடைவான். அக்காலம் நடுப்பகலாக விருக்கும் என்றோம். அத்திரி முனிவர் கூறுவதைக் கேட்டு, பார்வதி தேவி கேட்கலானுர். ஜாதகனுடைய குடும்பத்தின் விவரத்தைக் கூறுங் கள் என்றுள்.

ஜாதகனுடைய பொது யோகம்

31. ஜாதகன் ஜனனந் தொட்டுச் சாற்றுவே யீறே ழாண்டுள்
வேதனை யதிகமுண்டு விளைபுலம் குறைவ தாகும்
மேதினில் சுகங்கு றைச்சல் வீண்செல வதிக மாகும்
தீதான சல்லியப் பாதை சேர்ந்திடு மென்று சொன்னோம்.

31. ஜாதகனுடைய பிறப்பு முதல் பதினுன்கு வருடங்கள் வரை அதிகமான துன்பங்களுண்டு. விளைநிலங்கள் குறைந்துபோம்.

சௌக்கியத்திற்குக் குறைவேற்படும். அநாவசியமான செலவு நேரும். தீய கடன் உபத்திரவம் ஏற்படும் என்று சொன்னேம்.

இதுவுமது

32. குடும்பத்தில் குறைவு நேருங்
குண்டைகோ வுகளும் நஷ்டம்
திடமுடன் மாம னுக்குஞ்
சேர்ந்திடு மிப்ப லன்தான்
உடன்பிறந் தோர்க ளுக்கும்
அறைகிறேஞ் சுகமுங் காணேம்
அடைவுட னிதன்மேல் யாங்கள்
அறைகிறேம் பலன்கள் தாமே.

32. குடும்பத்தில் குறைகள் ஏற்படும். பசு எருது முதலிய கால்நடைகட்குச் சேத முண்டு. திடமான சரீரமுடைய மாமனுக்கும் இதே பலன்கள் ஏற்படும். தன் சகோதரர்கட்கும் உடல் நலம் இல்லை என்றேம். இதற்கு மேற்பட்ட பலன்களைக் கூறுகின்றேம்.

33. பதினேழு வாண்டின் மேலே பகருவோம் பலன்கள் [தாமும்
சதமுள பூமியா லுஞ் சல்லியப் பாதை நீங்கும்
அதிகமாம் பூமி சேரும் ஆட்களும் விருத்தி யாவர்
மதிதனைப் போலே யோகம் வளர்ந்திடு மிவனுக்கே தான்.

33. ஜாதகனுடைய பதினேழாம் வயதிற்குமேல் ஏற்படும் பலன்களைச் சொல்லுகின்றேம். வெகுநாட்களாக உள்ள பூமியால் கடன் உபத்ரவம் விலகும். அதிகமான பூமி சேரும். பணியாட்கள் விருத்தியாவர். இந்த ஜாதகனுக்குச் சந்திரனைப்போல் யோகம் விருத்தியாகும்.

34. மணையாளும் வந்த பின்பு வரும்பலன் னதிக முண்டு
அனையவே செல்வ மோங்கு மவனுடைத் தரித்திர நீங்கும்
இணையிலாப் பொருளுஞ் சேரும் இவன் சித்திர வீடுஞ் [செய்வன்
கனமுள குடும்ப முள்ளான் கழறின மொழிகுன் றுவே.

34. ஜாதகனுக்கு மணமான பின்பு யோகம் விருத்தியாகும். செல்வம் பெருகும். அவனுடைய வறுமை நீங்கும். ஈடில்லாத பொருள் சேரும். அழகிய வீடு ஒன்றும் கட்டுவான். பெரிய குடும்பம் உடையவன். நாங்கள் கூறிய வார்த்தைகள் பொய்யாகா.

ஜாதகம் 26

1. மதிதுலாஞ் சனியுந் தேளு மகமேரு கயறு மாகப்
பதிகுசன் [1]புல்ல மாகப் பகர்சிங மிதுனந் தங்க
அதிபுதன் ரவியும் நண்டு [2]மாளிசுன் [3]வேந்தன் கன்னி
பதியுதான் சிம்ம மாக வறைகுவீர் பலனை யென்றாள்.

1. சந்திரன் துலாத்திலும், சனி விருச்சிகத்திலும், ராகு தனுசிலும், செவ்வாய் ரிஷபத்திலும், கேது மிதுனத்திலும், புதன் சூரியன் கடகத்திலும், சுக்கிரன் குரு கன்னியிலுமாக இருந்து பிறந்த லக்கினம் சிம்ம மாக இருப்பின் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்க லானாள்.

கிரகநிலை

<table>
<tr><td></td><td></td><td>செவ்வாய்</td><td>கேது</td></tr>
<tr><td></td><td rowspan="2">இராசி
சக்கரம்</td><td></td><td>புதன்
சூரியன்</td></tr>
<tr><td></td><td></td><td>லக்கினம்</td></tr>
<tr><td>ராகு</td><td>சனி</td><td>சந்திரன்</td><td>சுக்கிரன்
குரு</td></tr>
</table>

ஜாதகியின் வீட்டுநிலை

2. பார்வதி கேட்கும் போது பராசரர் சொல்லு கின்றார்
சீர்புகழ் பெண்பால் ஜன்மம் செப்புவோங் கீழ்மேல் வீதி
சாரியாய் வடக்கு வாசல் சந்திய மதுஅக் குடும்பம்
பாரிய காளி கீழ்ப்பால் பகர்ந்தனம் பெண்ணை வில்லு.

2. பார்வதி தேவி கேட்கும்போது பராசர முனிவர் சொல்லுகின்றார். இது பெண்ணின் ஜாதகம். இவள் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்குச் சாரியில் உள்ளது. கிழக்குப்பக்கத்தில் ஒரு பெரிய காளி கோவில் உள்ளது. மேற்குத் திசையில் துர்க்கையம்மன் கோவில் உள்ளது.

3. அதற்குமேல் வடக்கி லீச னன்புள தீர்த்தம் மேல்பால்
இதுவுமே சோலை யுண்டு இன்பமாய்ச் சிற்றூர் தன்னில்
நீதியாய் வந்து தித்தாள் நிற்றுய்யும் யாதவ குலத்தில்
பாதியாய் வடிவெ டுத்த பத்தினி மேலுங் கேளே.

---

1. விருஷபம். 2. சுக்கிரன். 3. குரு.

3. அதற்கு வடக்குப் பக்கத்தில் சிவபெருமானின் ஆயலமும், ஒரு புண்ணிய நீர்நிலை மேற்குப் பக்கத்திலும் உள்ளன. ஒரு தோட்டமும் உண்டு. இவ்வித வடையாளங்களுள்ள சிற்றூரில் இந்த ஜாதகி யாதவ குலத்தில் பிறந்தாள். சிவபெருமானுடைய (அர்த்தநாரீச்வர) உடலில் பாதியாக உருவம் எடுத்த தாயே! கேளுங்கள்.

4. தாதையின் யோகந் தானுந் தன்னுடன் பிறந்தார் [யோகம்
ஆயவே மாமன் யோகம் அன்புள முன்பின் ஜன்மம்
வாய்மொழி புத்திர யோகம் வழுத்துவோ மிந்த நூலில்
மாயமாய்ச் சொல்வோ மம்மா மங்கையே கேளுந் தாயே.

4. ஜாதகியின் யோகம், தந்தையின் யோகம், உடன்பிறந்தவருடைய யோகம், கணவனின் யோகம், மூற்பிறவி, மறுபிறவி, புத்திரர்கள் யோகம், ஆகிய அனைத்தையும் இந்த ஜோதிடநூலில் அதிசயிக்கும்படி கூறுகின்றோம். தாயே! கேளுங்கள்.

தந்தையின் குணங்கள்

5. தந்தையின் குணத்தை யேதான் சாற்றுவோஞ் சிவந்த [தேகம்
எந்தையே கல்வி யுள்ளான் ஈகையுங் கொஞ்ச மாகும்
சந்ததம் சூடாந் தேகஞ் சட்டமாய்க் குள்ள னவன்
விந்தையாய் வார்த்தை சொல்வன் வித்தகி கேளுந் தாயே.

5. ஜாதகனுடைய தந்தையின் குணத்தை நாங்கள் கூறுகின்றோம். சிவந்த உடலுள்ளவன். தாயே! கல்வியறிவுள்ளவன். சிறிது கொடுக்கும் குணமுமுள்ளவன். சதா சூட்டுத் தேகமுள்ளவன். குட்டையன். வேடிக்கையாகப் பேசுபவன். தாயே! கேளுங்கள்.

6. முகமது வசிய முள்ளான்
முன்கோபங் கொஞ்ச முள்ளான்
ஜகமதில் கீர்த்தி கொள்வன்
சிந்தையுங் கலக்க முள்ளான்
அகமது புதிதாய்ச் செய்வன்
எடுத்தயில் திருவும் வாசம்
இகபரன் அன்பு கூர்வன்
எழையை யாத ரிப்பன்.

6. வசீகரமான (கவர்ச்சியான) முகமுடையவன். சிறிது முன்கோபி. உலகில் புகழ் பெறுவான். மனத்தில் சஞ்சலம் உள்ளவன். புதிதாக வீட்டைக் கட்டுவான். அவ்வீட்டில் லட்சுமி கடாட்ச முடையவன். சிவபெருமான் மீது பக்தியுள்ளவன். ஏழைகளைக் காப்பான்.

7. பூமியால் பெருமை யுள்ளான் புண்ணிய மனத்த னாகும்
சாமிமேல் பக்தி யுள்ளான் சர்ச்சன நூறவு கொள்வன்
காமிய மில்லா னாகுங் கபடுமே கொஞ்ச முள்ளான்
சோம்ப லுடைய னவன் சுகரோக முடைய னுமே.

7. பூமியால் பெருமையை யடைவான். நல்லெண்ணம் பொருந்திய மனத்தினன். தெய்வபக்தி யுடையவன். நல்லவருடன் நட்புக்கொள்ளுவான். ஆசையில்லாதவன். சிறிது கபடமுள்ளவன். சோம்பலுள்ளவன். அளவுக்கு மீறிய இன்பத்தின் அனுபவத்தால் ஏற்பட்ட ரோக முடையவன்.

8. கிருஷியு முடைய னவன் கிளைத்திடு மாடு வாடும்
பெருகிய புத்தி யுள்ளான் பிரபல மாக வாழ்வன்
சிறுமையு மில்லா னாகுஞ் செயம்செய்வன் எடுத்த வேலை
திருவுமே வாச மாகும் ஜனங்களை யாத ரிப்பன்.

8. விவசாயம் செய்து வருவான். கால் நடைகள் பெருகும். தாராள மனப்பான்மையுள்ளவன். பெரியமனிதனாக வாழ்ந்து வருவான். தாழ்வை அடையாதவன். தான் ஆரம்பித்த காரியத்தை வெற்றியுடன் முடிப்பான். இலட்சுமி கடாட்சம் உள்ளவன். பந்து ஜனங்களை ஆதரித்து வருவான்.

தந்தையின் சகோதரபாவமும் முற்பிறவியும்

9. இன்னவா றுள்ள தந்தை யியம்புவோ மாண்பா லொன்று
கன்னியு மவ்வா றாகுங் களைக்காவே யிதன்மேல்
[தோன்றில்
தன்னிவன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் புதுவை
[தன்னில்
பன்னிய வைசிய னாகப் பாரினி லுதித்தா னம்மா.

9: இங்ஙனம் சொல்லப்பட்ட ஜாதகியினுடைய தந்தைக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் பிறந்து நீண்ட ஆயுளுள்ளவர்களாவார்கள். மேலும் பிறக்கும் குழந்தைகள் நிலையா. இவனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். புதுவை மாநகரில் வைசிய குலத்தவனாகப் பிறந்தான். தாயே!

தந்தையின் மறுபிறவி

10. பின்ஜன்மம் பிருதிவி யிக்குப் பேசுவோ மேற்குத் திக்கில்
அன்னவன் சிற்றூ ரில்தான் அரும்மறைக் குலத்தி
[லேதான்
மன்னவன் பொருளும் பெற்று மகிழுடன் வாழ்வா னாகும்
தன்னினத் தார்க்கு மேலாய்ச் சட்டமாய் வாழ்வா னம்மா.

10. மறுபிறவியில் காஞ்சீபுரத்துக்கு மேற்குப் பக்கத்தில் உள்ள சிற்றூரில் உயர்ந்த அந்தணர் குலத்தவனுகப் பிறந்து மிகுந்த செல்வத்தை யடைந்து சந்தோஷத்துடன் வாழ்ந்து வருவான். தன் சுற்றத்தாருக்கு மேம்பட்டவனுக நேர்மையுடன் வாழ்ந்து வருவான்.

ஜாதகியின் தாய் விவரம்

11. சத்தமத் தோரு ரைக்கச் சாற்றுவா ளம்மை தாமும்
வித்தகி யன்னை சேதி விளம்புவா யென்று கேட்டாள்
புத்திமான் பொறுமை யுள்ளாள் புண்ணிய சாலி யாகும்
சித்தமும் பேதை யுள்ளாள் ஜனங்கள்மேல் பட்ச
[முள்ளாள்.

11. இங்ஙனம் ஸப்த ரிஷிகளும் கூறும்போது பார்வதிதேவி கூறுகின்றார். ஜாதகியின் தாயினுடைய விஷயங்களைச் சொல்லுங்கள் என்றாள். தாய் புத்திசாலி. பொறுமையுடையவள். புண்ணியவதி. கபடமில்லாதவள். தன் சுற்றத்தாரிடம் பிரியமுள்ளவளாக இருப்பாள் என்றேரும்.

12. இவளுக்குத் தாயும் ரண்டு இன்பமா யுண்டு காண்பாய்
அவனியி லிளைய ளுக்கு அவளுமே யுதித்தா ளென்றேரும்
நவனியில் துணைவர் சேதி நாட்டுவோ மாண்பால் ரண்டு
பவமதாய்க் கன்னி யொன்று பட்சமாய் நாலுந் தீர்க்கம்.

12. ஜாதகிக்கு இரு தாய்மார்கள் உண்டு என்று சொல்லுகின்றேரும். இந்த ஜாதகி இளைய தாயாருக்குப் பிறந்தவள் என்றேரும். ஜாதகியின் தாயின் உடன்பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகின்றேரும். தாய்க்கு இரு சகோதரர்களும் ஒரு சகோதரியும் ஆக நால்வரும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும் கூறுகின்றேரும்.

13. இன்னமுஞ் சிலவே சங்கை யியம்புவோம் பிற்பா கத்தில்
அன்னவள் சகோதரி யோக மறைகுவோம் நன்ரு
[கத்தான்
தன்னிவள் சிவந்த தேகஞ் சமமான வுயர முள்ளாள்
பன்னியே ஒடிச்ச லுள்ளாள் பாலர்க ளுடைய ளாமே.

13. இன்னும் சில சந்தேகங்களைப் பிற்பாகத்தில் கூறுகின்றேரும். ஜாதகியுடைய சகோதரியின் யோகத்தை நன்ருகச் சொல்லுகின்றேரும். சிவந்த உடலுடையவள். சமமான உயரமுள்ளவள். மெல்லிய சரீரி. புத்திரபாக்கிய முள்ளவள்.

14. கோபமு முடையா ளாகுங் குற்றத்தை யெண்ணு ளாகும்
வேகமாய் நடக்க வல்லாள் மிருதுவான சொல்லு
[முள்ளாள்
நாவதைக் காக்க மாட்டாள் நுண்ணிய புத்தி யுள்ளாள்
தீமைக ளில்லா ளாகுஞ் செல்வமு முடைய ளாகும்.

14. கோப முள்ளவள். பிறர் குற்றத்தைப் பாராட்டாதவள். வேகமாக நடக்க வல்லவள். மெதுவாகப் பேசுபவள். சொன்ன வார்த்தைப்படி நடக்காதவள். கூர்மையான அறிவுடையவள். தீய எண்ணங்க ளில்லாதவள். செல்வம் உடையவள்.

15. துணைவர்க ளாண்பா லொன்று
தோகைமா ரிருவ ராகும்
வினையிலா மன்றல் காலம்
விளம்புவோம் பத்தாண் டுக்கும்
இணைப்புடன் வடக்குத் திக்தில்
இருந்துமே வரனு மேதான்
அனையவே வருவா னென்று
யாங்களு முரைத்திட் டோமே.

15. ஜாதகிக்கு உடன் பிறந்தவர்களில் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் இருவருமாகும். தீங்குகளில்லாத திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகியின் பத்தாம் வயதுக்குள் வடக்குப் பக்கத்திலிருந்து கணவன் வருவான் என்று நாங்கள் கூறுகின்றோம்.

ஜாதகியின் புத்திரபாவம்

16. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பால் காணும்
சித்தமாய் விச்வா மித்திரர் திடுக்கெனக் கேட்க லுற்றார்
பத்தினி தனக்குப் புத்திரர் பருகாத கார ணத்தை
மெத்தவே சொல்லு மென்ன விளம்புவார் பராசர் தாமும்.

16. ஜாதகியின் புத்திரவிருத்தியைச் சொல்லுகின்றோம். ஆண் குழந்தைகள் இல்லை. உடனே கௌசிக முனிவர் எழுந்து திடீரென வினவலானார். ஜாதகிக்குப் புத்திரர் தோன்றுத காரணத்தைக் கூறுங்கள். பராசர முனிவர் சொல்லுகிறார்.

17. சிம்மலக் கினம தாகச் செப்பினே னஞ்சில் ராகு
துன்மையாம் புத்திரர் தாமுஞ் சொல்லுவார் விச்வா
[மித்திரர்
மும்மையில் ஊழி தன்னை யுரைத்திட வேண்டு மென்னச்
செம்மையாய்ச் சொல்ல லுற்றார்.....தன்னி லேதான்.

17. சிம்ம லக்கினத்தைப் பெற்று ஐந்தாமிடமாகிய தனுசில் ராகு இருப்பதால் புத்திரர்கட்குத் தீங்கு நேரும். கௌசிக முனிவர் கூறுகின்றார். முற்பிறவியில் செய்த தீவினையைக் கூறவேண்டும் என்று கேட்டார். நிச்சயமாகக் கூறுகின்றார்.

ஜாதகியின் முற்பிறவி

18. இக்குலந் தனிலு தித்து இவள்செல்லு நோக்கா யுள்ள
திக்கெலாம் கீர்த்தி பெற்றுச் செல்வமாய் வாழுங் காலை
தக்கதோர் தினத்தில் தானுந் தன்னுடை வளவி லேதான்
புக்கவே [1]வரவு தானும் புறப்பட்டு வந்த தம்மா.

18. இதே குலத்தில் பிறந்து, செல்லும் எல்லாத் திசைகளிலும் புகழடைந்து செல்வியாக வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். ஒரு நாள் இவளுடைய வீட்டில் ஒரு ஸர்ப்பம் புறப்பட்டு வந்து நுழைந்தது.

ஸர்ப்பத்தைக் கொன்ற தோஷம்

19. அதையுமே வடித்துப் போட்டாள்
அச்சாப மிவளைப் பற்றிச்
சிதைந்திடும் புத்திரன் தானுஞ்
செப்பவே முனிவர் தாமும்
விதமதா யைந்தோன் ரண்டில்
மிகநட்புப் பெற்ற தாலே
பதனமா யாண்பா லொன்று
பாங்குள கன்னி ரண்டு.

19. அதை இவள் அடித்துக் கொன்றாள். அந்தத் தோஷம் இவளைப் பற்றியது. அதனால் புத்திரர் இறந்து போவர். இவ் விதம் ரிஷிகள் கூறினார்கள். குரு (ஐந்தாமிடமாகிய புத்திரஸ்தானத் திற்குரியவன்) இரண்டாமிடத்திலிருப்பதால் ஒரு புத்திரனும் அழகிய இரு புத்திரிகளும் தோன்றுவர்.

20. முந்தியே பிறந்தா னுந்தான் முக்கியஞ் சேத மாகும்
பிந்தியே நிலைக்குந் தாயே பேசுவோம் யாங்க ளுந்தாம்
வந்திடுஞ் ஜாத கிக்கு வழுத்துவீர் பின்ஜன் மத்தைக்
கந்தனைப் பெற்ற மாதே கழறுவோங் கேளுந் தாயே.

20. அவ்விதம் முதலில் தோன்றும் குழந்தை நிச்சயமாக இறந்துபோம். பிறகு பிறக்கும் குழந்தைகள் தீர்க்கமாம். தாயே! ஜாதகியின் மறுபிறவியைச் சொல்லுங்கள். முருகக் கடவுளைப் பெற்ற தேவியே! கூறுகின்றோம். கேளுங்கள்.

---

1. சர்ப்பம்.

ஜாதகியின் மறுபிறவியும், தந்தை, கணவனின் மரணகாலமும்

21. தில்லையில் வைசியச் சேயாய் ஜனித்துமே பாக்கியம்
[பெற்று
எல்லையில் கீர்த்தி பெற்று இன்பமாய் வாழ்வாள் தானும்
சொல்லுவேன் தந்தை காலம் புகலுவோ முப்பா னரும்
ஏலவே வரனின் காலம் இயம்புவோ மறுபான் ரண்டு.

21. தில்லை மாநகரில் வைசிய குலத்தவளாகப் பிறந்து, பாக்கிய மடைந்து, எல்லாவிடங்களிலும் புகழ் அடைந்து, இன்பமாக வாழ்ந்து வருவாள். தாயே! ஜாதகியின் தந்தையின் மரணகாலத்தைச் சொல்லு கின்றேம். ஜாதகியின் முப்பத்தாரும் வயதில் அது நேரிடும். கணவன் மரணம் இவளுடைய அறுபத்திரண்டில் ஏற்படும்.

ஜாதகியின் மரணகாலம்

22. பிந்தியே மரண மாவள் பேசுவோ மதன்மேல் ரண்டு
வந்திடுங் [1]கூனி மாதம் வளர்பிறைச் சுக்கில பட்சம்
விந்தையாய் மரண மாவள் மௌனமாய் முனிவர்
[சொல்லப்,
பந்தமா யம்மன் தாமும் பட்சமாய்க் கேட்க லானாள்.

22. அதற்குப் பிறகு இரண்டு வருடங்களில் பங்குனிமாதம் சுக்கில பட்சத்தில் ஜாதகி மரணமடைவாள். இங்ஙனம் ரிஷிகள் கூறும் போது பார்வதிதேவி பிரியத்துடன் கேட்கலானாள்.

யோகமேற்படக் கிரகநிலை

23. யோகங்க ளெவ்வா றென்று வுரைக்கிறீர் பராசர் தாமும்
போகபாக் கியங்க ளுண்டு புகழுமே வோங்குந் தானே
சுங்கனுங் குடும்பந் தன்னி லிருக்கவே யரசன் தானும்
தோகையு மாமி வீடு சேரவே மாட்டா ளம்மா.

23. ஜாதகிக்கு எவ்விதம் யோகங்கள் உண்டு என்று சொன்னீர் கள்? பராசர முனிவர் கூறுகின்றார். போகமும், பாக்கியமும், கீர்த்தியும் விருத்தியாகும். குடும்ப ஸ்தானத்தில் சுக்கிரனும் குருவும் இருப்பதால் இப்பெண்ணும் தன் மாமியின் வீடு சேராதவள் என்றேம். தாயே! (புருடனின் பெற்றோர் வீட்டில் வாழாதவள்.)

24. தந்தையின் வீட்டி லேதான் ஜாதகி வரனுந் தானும்
வந்துமே வாழ்வா ரம்மா வழுத்துவோ மிந்த நூலில்
சிந்தையில் பார்க்குந் தாயே செப்புவேன் ஜனனந்
[தொட்டுப்
பந்தமா யாண்டொன் றுக்கும் பகருவோ மேலுங் கேளே

1. பங்குனி.

24. ஜாதகி தன் தந்தையின் வீட்டில் தன் கணவனுடன் வாழ்ந்து வருவாள் என்று இந்த நூலில் சொல்லுகின்றோம். முனிவர்களும் சான்றோர்களும் எப்பொழுதுஞ் சிந்தனைசெய்து கொண்டிருக்கும் தாயே! ஆராய்ந்து பார்த்து ஜாதகி பிறந்த ஒரு வயது வரையில் உள்ள பலனைச் சொல்லுகிறோம் கேளுங்கள்.

ஜாதகியினுடைய பொது யோகம்

25. சல்லியப் பாதை யுண்டு தானியஞ் சேத மாகும்
வல்லிதாய் நாற்கால் சேதம் வருத்தங்கள் மிகவே யுண்டு
புல்லிய புழுவாய் வீடும் பொருந்தவே செய்து தீரும்
அல்லிய விரோதங் கொஞ்ச மாகுமென் றுரைத்திட்
[டோமே.

25. கடன் தொல்லை ஏற்படும். நெல் முதலிய தானியங்களில் நஷ்டமேற்படும். ஜாதகியினுடைய தாய்க்கு (மூத்த தாய்க்கு) த் தீங்கு நேரும். கால் நடைகள் அழிந்து போம். மிகுந்த வருத்தமடையும் சம்பவங்கள் நிகழும். வீட்டில் அற்பமான துன்பந்தரும் சம்பவங்கள் பல ஏற்பட்டு அவை நீங்கும். அற்பமான விரோதம் ஏற்படும் என்று சொல்லுகின்றோம்.

26. பிற்பாதி மனவுற் சாகம் பூமியில் விளைவு வோங்கும்
தற்பரி கிருபையு முண்டு சல்லியங் கொஞ்சந் தீரும்
அற்பமாங் காலி சேதம் ஆளடி தட்ட லாகும்
சொற்பமாம் பீதி தானுந் தோன்றிடு மென்று
[சொன்னேம்.

26. வாழ்நாளின் பிற்பாதியில் மனத்தில் உற்சாகம் ஏற்படும். விளை நிலங்களில் பலன்கள் விருத்தியுறும். இலட்சுமி கடாட்சம் உண்டாகும். கடன் கொஞ்சம் நீங்கும். கால்நடைகள் சிறிதளவே சேதமாம். ஆள்பலம் சிறிது தடைபடும். சிறிது பயமும் ஏற்படும் என்றும் கூறுகின்றோம்.

27. மூன்றைந்தி லேழு பத்தில் முக்கியங் கண்டம் நேரும்
தீர்ந்திடும் பண்டி தத்தால் செல்விக்கு வயது தீர்க்கம்
ஆன்றதோர் காலத் தில்தான் ஐங்கரர்க் கபிடே கித்தே
சான்றோர்கள் மனத்தில் வாழுஞ் சத்தியே மேலுங்
[கேளே.

27. ஜாதகியின் மூன்று, ஐந்து, ஏழு, பத்தாம் வயதுகளில் பெரிய கண்டங்கள் நேரிடும். ஆனால் அவை வைத்தியத்தால் நிவிர்த்தி செய்யத் தீரும். ஜாதகிக்கு நீண்ட ஆயுள் உண்டு. உரிய காலத்தில் விநாயகருக்கு அபிஷேகம் செய்துவரல் வேண்டும். பெரியோர்கள் மனத்தில் குடியிருக்கும் தேவியே! கேளுங்கள்.

28. முன்சொன்ன வாண்டின் மேலே
முக்கிய மைந்தாண் டுக்குந்
தன்மையாய்ப் பொருளுஞ் சேருஞ்
சதியிலா வாழ்வா ளாகுந்
துன்மைக ளொன்று மில்லை
சொர்ணமுஞ் சேருந் தாயே
அன்னியர் பூமி கொஞ்சம்
அன்புடன் வந்து சேரும்

28. முன்னுல் கூறிய வருடங்களுக்குப் பிறகு ஐந்து வருடங்களில் திண்ணமாகப் பொருள் சேரும். தீமைகள் ஒன்று மில்லாமல் வாழ்ந்து வருவாள். பொன் (முதலிய ஆஸ்தி) விருத்தியாம். பிறருடைய பூமி சிறிது இவளிடம் வந்து சேரும்.

29. வீட்டினில் சுபங்க ளுண்டு மெல்லியர் தமக்குத் தாமும்
நாட்டினில் பகையுங் கொஞ்சம் நல்கிடு மதுவுந் தீரும்
தாட்டியாய்ப ப்ரியோர் நட்புத் தன்மன வுற்சா கங்கள்
காட்டிய வந்தி யத்தில் கவலையுங் கொஞ்ச முண்டாம்.

29. இவளுடைய வீட்டில் சுபகாரியங்கள் நிகழும். ஜாதகிக்கு உலகில் சிறிது விரோதம் ஏற்பட்டு அதுவும் விரைவில் நீங்கும். பெரியோரிடம் திடமான நட்பு ஏற்படும். மனத்தில் சந்தோஷங்கள் நிகழும். கடைசிக் காலத்தில் சிறிது கவலை ஏற்படும்.

30. இன்னமு நாலாண் டுக்கு ளிசைகுவோம் பலனைக் கேளு
நன்னிலம் லாப முண்டு வீரனுங் கணவன் நேரும்
அன்னமே ஆடல் பாடல் அருமையாய் பூர்வ பாகம்
சொன்னசொல் குளறி டாது சுந்தரி கேளுந் தாயே.

30. அதற்குப் பிறகு நான்கு வருடங்களுக்குரிய பலனைச்சொல்லு கின்றேரும். நல்ல நிலங்களிலிருந்து அதிக லாபமுண்டாகும். நல்ல வீரவம்சத்தில் ஜாதகிக்குத் திருமணம் ஏற்படும். தாயே! ஆடல் பாடல் முதலியவைகளில் பங்குண்டு. தாயே! முதல்பாகத்தை இவ் விதம் சொல்லுகின்றேரும். நாங்கள் கூறியவை தவரு. அழகியே! மேலும் கேளுங்கள்.

31. கிருஷியால் லாப முண்டு
கிளைத்திடு மாடு ஆடுந்
திருவுமே வாச மங்கும்
மேதினில் சுகபு சிப்பு
உருகியே பொருளு முண்டு
பகையுமே வீட்டி லுண்டு
வருகிற சகோதர னேடு
வருத்தமும் வந்து தீரும்.

31. விவசாயத்தால் லாபம் ஏற்படும். கால் நடைகள் பெருகும். இவள் வீட்டில் இலட்சுமி கடாட்சம் உண்டு. உலகில் நன்முக (சிரம மன்றி) சாப்பாடு கிடைக்கும். பொன் சேரும். வீட்டில் விரோதம் ஏற் படும். சகோதரனுடன் வருத்தம் ஏற்பட்டு நீங்கும்.

32. சமரச மாகுந் தாயே சாற்றினேம் பெரியோ ராலே
அமரவே வரசர் மூலம் அவன்பிதா வழக்குச் செய்வன்
சரசமா யதில்வெல் வானும் வெட்டியாய்ப் பொருளுஞ்
[சேதந்
தவமதா யிதற்கு மேலே சாற்றுவோங் கேளு மம்மா.

32. வந்த மனவருத்தம் பெரியோர்களால் சமாதானம் செய்யப் பட்டு விலகும். தாயே! அரசாங்கத்தார் மூலம் தந்தை வழக்குத் தொடரு வான். அதில் ஜயிப்பான். அனுவசியமாகப் பொருள் சேதமாகும். இதற்குப் பிறகு உள்ளதைப் பிற்பாகத்தில் கூறுகின்றேம். தாயே!

33. பதினேந்து வாண்டு மட்டும்
பகருவோம் பலனைக் கேளு
சதியது முப்பா னைந்தில்
நன்மத்தி யத்தில் தானே
நிதியுண்டு யேற்பா ருண்டு
நீள்நில மதிக முண்டு
அதிபதி யாக வாழ்வள்
மங்கையே கேளுந் தாயே.

33. அதற்குப் பிறகு பதினேந்து வருடங்கள் வரையிலுள்ள பல னைச் சொல்லுகின்றேம். கேளுங்கள். முப்பத்தைந்து வயதின் நடுவில் நீங்குகள் அதிகமுண்டு. செல்வம் பெருகும். விளைநிலம் மிகுதியாகச் சேரும். எல்லோருக்கும் தலைவனாக வாழ்வாள். தாயே! கேளுங்கள்.

34. தானிய விருத்தி யுண்டு தைரியம் நினைத்த வேலை
வேண்டும்போர்க் குபகா ரங்கள் வெருதுகள் பசுக்கள்
[விருத்தி
வானவர்க் கன்ன மீதல்.....
.....

34. விளை நிலங்களில் விளைச்சல் மிகும். தொடங்கிய செயலை முடிக்கும் மனவுறுதி ஏற்படும். வேண்டியவர்கட்கு உதவி செய்வாள். விருந்தினர் பலர் வீட்டை நாடிவருவர். பசுக்கள் எருது முதலியவை விருத்தியாம். தெய்வங்கட்கும் பூஜை முதலியன நடத்துவாள்.....

ஜாதகம் 27

1. அரியது ஜன்மம் அம்புலி கோலில்
[1]அந்தணன் ராகுவுந் தேளில்
கரியவன் மேரு சேய்சிங நந்தி
[2]கவிஞனும் பானுவும் வீணை
[3]பிறைமகன் [4]அலவன் பலனது யெவ்வாறு
போற்றுவீர் முனிவரே நீர்தாம்
குருமுனி சொல்வார் ஆணது ஜன்மம்
குறித்தவில் குபேரன்தன் வாசல்.

1. சிம்மம் இலக்கினமாகவும், சந்திரன் துலாத்திலும், குரு ராகு விருச்சிகத்திலும், சனி தனுசிலும், செவ்வாய் கேது விருஷபத்திலும், சுக்கிரன் சூரியன் மிதுனத்திலும், புதன் கடகத்திலும் இருந்தால் எவ்விதப் பலன்கள் நேரும் என்று கூறுங்கள் முனிவரே! என்று வினவும் போது அகத்திய முனிவர் கூறுகின்றார். இஃது ஆண் மகனின் ஜாதகம். அவன் பிறந்த வீடு வடக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது.

கிரகநிலை

		செவ்வாய் கேது	சுக்கிரன் சூரியன்
	இராசி சக்கரம்		புதன்
			லக்கினம்
சனி	குரு ராகு	சந்திரன்	

2. தந்திபாஞ் சாலி மேல்திசை தங்குஞ்
சத்திமா காளியு முத்தரம்
முந்திய ஊராம் இருபுற நதியும்
மேவியுஞ் சேட்டனுய் வருவான்
சந்ததங் கௌரி வர்க்கமே யாகுந்
தன்துணை தாய்தந்தை யோகம்
வந்திடு மனைவி புத்திரர் யோகம்
அறைகிறேர் முன்பின் ஜன்மம்.

---

1. குரு.
2. சுக்கிரன்.
3. புதன்.
4. கடகம்.

2. விநாயகர் ஆலயமும், திரௌபதியம்மன், கோவிலும் மேற்குப் பக்கத்தில் உள்ளன. மிகுந்த சக்தியுள்ள காளி தேவி வடக்குத் திக்கில் உள்ளாள். இவ்விதங்களிலும் இருபுறங்களிலும் நதிகளும் உள்ள ஒரு பெரிய ஊரில் ஜாதகன் தன் தந்தைக்கு மூத்த புதல்வனுகப் பிறப்பான். அவன் கௌரீகர் குலத்தில் தோன்றுவான். அவனுடைய யோகம், உடன் பிறந்தவர், தாய் தந்தையர், இவனே யடையும் மனைவி இவனுக்குத் தோன்றும் புத்திரர்கள், இவனுடைய முற்பிறவி, மறு பிறவி ஆகிய இவற்றை இதில் கூறுகின்றேம்.

தந்தையின் உடன் பிறந்தவர்களும் குணமும்

3. தந்தையின் துணையேழ் அதில்பெண் மூன்று
சாற்றுவோ மாணது நான்கு
பிந்தியும் ஒருவன் பலமில்லை யென்றேம்
பேசுவோ முத்தர பாகம்
அந்தவ ரிருபா னேழாண்டின் மேலாய்
அகமது பிரிதலா மென்றேஞ்
சந்ததந் தந்தை குணமதைக் கேளாய்ச்
சமகல்வி இருநிற முடையோன்.

3. ஜாதகனுடைய தந்தைக்கு உடன் பிறந்தவர் எழுவரில் மூன்று சகோதரிகளும் நான்கு சகோதரர்களும் உண்டு என்றேம். அவர்களில் பின் பிறந்தவன் ஒருவன் நீண்ட ஆயுளில்லாதவன். அவனுடைய விவரங்களைப் பின் பாகத்தில் சொல்லுகின்றேம். அவர்களுக்குள் (ஜாதகனுடைய தந்தையின்) இருபத்தேழாம் வயதிற்கு மேல் வீட்டுப் பிரிவினை ஏற்படும். இனி ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கேளுங்கள். சமமான கல்வி யறிவுடையவன். கருமை கலந்த சிவப்பு நிறமுள்ளவன்.

4. தரித்தொழில் தாசு செட்டுக்கள் செய்வன்
தரணிகள் விருத்திபின் னுண்டாம்
அரிவையர் மோகன் அடாவடி செய்யான்
யாவர்க்கு நல்லவ னுவன்
நெறியது காப்பன் சொல்லது சுகமாம்
நிதம்சீலன் துணைவரைக் காப்பன்
உறவினர்க் குதவி செய்வனு மென்றேம்
கும்பமா திரைதனி லுதிப்பான்.

4. நெசவுத் தொழிலைச் செய்து வருவான். ஜவுளி வியாபாரம் செய்வான். பிற்காலத்தில் விளை நிலங்கள், பூமி இவைகள் பெருகும். பெண்கள்மீது மையல் கொள்பவன். அடாவடியாக ஒன்றும் செய்

யாதவன். எல்லோருக்கும் நல்லவனாக இருப்பான். நேர்மையாக நடந்து கொள்ளுவான். தக்கபடி பேசுபவன். நல்லொழுக்கமுள்ளவன். உடன் பிறந்தவரை ஆதரிப்பான். உறவினர்கட்கு உபகாரியாக இருப்பவன். கும்பலக்கினத்தில், திருவாதிரை நட்சத்திரத்தில் பிறந்தவன்.

5. குடும்பத்தைக் காப்பான் குத்திரம் பேசான்
குலத்துளோர் மதிக்கவே வாழ்வன்
கடன்கொள்வன் நிவிர்த்தி யாகுமே பொறுமை
காலாள்க ளுடையனு மென்றோம்
விடவாக்குத் தேவ பத்தியு முடையன்
விஷவாக்கு வுடையனு மென்றோம
தடபுட லுடையான் பித்தகே கத்தன்
தரித்திர மிலானென் றுரைப்போம்.

5. தன் குடும்பத்தை ஆதரித்து வருவான். குதர்க்கம் பேசாதவன். தன் இனத்தவர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். கடன் வாங்குவான். பிறகு அதை நிவிர்த்தி செய்வான். பொறுமைசாலி. பணியாட்களிர் உடையவன். பேசுவதில் கொடுமையுள்ளவன். தெய்வ பக்தியுள்ளவன். கொடூரமாகப் பேசுபவன். ஆடம்பரச் செய்கைகளுள்ளவன். பித்த சரீரி. தரித்திரமில்லாதவன் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய குணங்கள்

6. உரைத்தவிக் குணத்தா னுக்குமே யிவனும்
உதிப்பனும் இவன்குணம் கேளாய்
கரைமன முடையான் கல்வியு மிரண்டு
கஞ்சமா நிறத்தானுங் கோபி
பறைபள்ளு முடையானன் பூருவ தொழிலும்
பண்ணுவன் தாதைக்குத் தாழான்
வரைவினில் நடப்ப னன்னியர்க் குதவி
வேண்டியே செய்னுவ மென்றோம்.

6. இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான் என்றோம். இவனுடைய குணத்தைக் கேளுங்கள். இளகிய மனமுடையவன். இருவிதமான கல்விகளிக் கற்றுணர்வான். தாமரையைப் போன்ற நிறமுடையவன். முன் கோபி. ஹரிஜனங்களாலாகிய ஆட்பெருக்க முடையவன். பூர்வீகத் தொழில்களிச் செய்து வருவான். தகப்பனுருக்குக் குறைந்தவன் அல்லன். வேகமாக நடப்பான். பிறருக்கு வேண்டிய காலத்தில் (தானே விரும்பி) உதவி செய்து வருவான் என்றோம்.

இதுவுமது

7. சித்திர வில்லஞ் செய்வனுங் கிருஷியும்
சென்றிடம் பெருமையு மேற்பன்
சுத்தவான் நிலவணி பங்களே செய்வன்
தொடுத்ததை வென்றிடு வானும்
புத்திமா னரசர் பக்கல்வா ணிபமும்
பொருந்திடுங் கோள்களு னவிலான்
வெத்திச்சொல் லுடையான் தலவாசஞ் செல்வன்
வெறுத்தோர்க்கு வன்னமு மீவன்.

7. அழகிய வீட்டைக்கட்டுவான். விவசாயம் செய்து வருவான். ஜாதகன் சென்றவிடங்களில் பெருமையடைவான். சுத்தமான (மன முள்ள)வன். நிலங்களே (அடைமானமாகக் கொண்ட) கொடுக்கல் வாங் கல் செய்து வருவான். எடுத்த காரியங்களே வெற்றியுடன் செய்து முடிப் பவன். புத்திசாலி. அரசாங்கத்தில் வியாபாரம் செய்வான். (காண்ட் ராக்ட் வேலே செய்வான்). கோட் சொல்லாதவன். வாக்கு வன்மையுடை யவன். பல புண்ணியதலங்களுக்குச் செல்வான். துறவிகட்கு அன்ன மளிப்பவன்.

ஜாதகனுடைய உடன்பிறந்தவர்களும் திருமணக்காலமும்

8. தன்துணை நவமாஞ் சாற்றுவோ மதனில்
சீரணஞ் சிலவுமே யென்றேரும்
கன்னிய ரிரண்டு காளையு மவ்வாறு
கழறுவோந் தீர்க்கமா மென்றேரும்
பின்பாகம் விவரம் பேசுவோ முனியே
பேதையர் வரவுகா லங்கேள்
மன்னிய பதிஞ் ரண்டினில் நேரும்
வருந்தந்தை வர்க்கமா மென்றேரும்.

8. ஜாதகனுக்கு உடன் பிறந்தவர்கள் ஒன்பதின்மராவர் என்று சொல்லுகின்றேரும். அவர்களில் சிலர் நிலையார் என்றும் கூறு கின்றேரும். இருசகோதரர்களும் இருசகோதரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். மற்ற விஷயங்களேப் பின்பாகத்தில் சொல்லு கின்றேரும். முனிவரே! ஜாதகனுடைய திருமணக்காலத்தைக் சொல்லு கின்றேரும். ஜாதகனுடைய பதினேரும் வயதில், மனைவி, தன் தந்தையின் வர்க்கத்திலிருந்து வருவாள் என்று கூறுகின்றேரும்.

வேறு

ஜாதகனுடைய மனைவியின் குணங்கள்

9. மாதுகுணங் கூறுகின்றே மாஞ்சி வப்பள்
வருவோரை யாதரிப்பள் மகிழ்ந்த சொல்லும்
பாதகத்தில் மனம்வையாள் யோகசாலி
பாட்டாளி வரன்மேலே பட்ச முண்டு
கோதிலா முன்கோபங் கொடுமை யேற்காள்
குலமதிப்புக் கொண்டிடுவள் கோதை தீர்க்கம்
மாதவரும் தடுத்துரைப்பார் சனியு மைந்தில்
மதிமூன்றில் பணிநாலில் மருவிநிற்க ;

9. ஜாதகனுடைய மனைவியின் குணங்களைச் சொல்லுகின்றேம். மாநிற முடையவள். தன்னையண்டி வந்தவரை ஆதரித்து வருவாள். இனிமையான பேச்சுக்கள் உள்ளவள். தீய காரியங்களில் மனம் செல்லாதவள். யோக முடையவள். உழைப்பாளி என்று சொல்லுகின்றேம். தன் கணவன் மீது பிரிய முடையவள். முன்கோபம் கொடுமை முதலியவை இல்லாதவள். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். அவள் நீண்ட ஆயுள் உள்ளவள். தவம் செய்யும் முனிவர் மறுத்துக் கூறுகின்றார். சனி ஐந்தாமிடத்திலும், சந்திரன் மூன்று மிடத்திலும், ராகு நான்காமிடத்திலும் இருப்பதால் ;

இருதாரம் ஏற்படுதற்குரிய கிரகநிலையும் மறுப்பும்

10. மனையிரண்டு தான்புகல்வோம் மாரனுக்கு
வதிட்டருமே தடுத்துரைப்பார் பொன்னே னலில்
கனமுடனே சேய்பத்தில் புகரும் லாபங்
கலந்தபலன் தாரமொன்றே கருதலாகும்
வினையாக அபிமான மிகவுண் டாகும்
விளம்புவோ அந்தமதில் சுதர்பலன்கேள்
பிணையாகுந் தோன்றுது தோன்றில் தீதாம்
புகலுவீ ரச்சங்கை யிரவி மைந்தன் ;

10. ஜாதகனுக்கு இரு மனைவிமார் உண்டு என்றுதான் சொல்ல இடமிருக்கிறது என்றார். அதற்கு வசிஷ்ட முனிவர் மறுத்துக் கூறுகின்றார். குரு நான்காமிடத்திலும், செவ்வாய் பத்தாமிடத்திலும் சுக்கிரன் லாபஸ்தானமாகிய, பதினோராமிடத்திலும் இருப்பதால் மனைவி யொருத்தியே உண்டு என்று கூறவேண்டும். ஆனல் தீங்குகள் ஏற்படும்படி அபிமானப்பெண்கள் பலர் ஏற்படக் கூடும் என்றார். அவ்விஷயங்களை இறுதியில் சொல்லுகின்றேம். புத்திரபாவத்தைக் கேளுங்கள். இல்லை. புத்திரர் தோன்றார். தோன்றினும் நிலையார். அந்த விஷயங்களைக் கூறுங்கள். சனி (சூரியனுடைய புத்திரன்) ;

புத்திரபாவம்

11. அஞ்சில்கின்று சேய்புகர்பான் பார்த்த தோடம்
அறிவித்தோ மதுவன்றிப் பூர்வந் தன்னில்
மிஞ்சிவினை செய்ததனல் விளம்பி னேம்யாம்
வினைபுகல்வீர் முனியேயென விமலன் பூர்வந்
தஞ்சைநகர் தன்னில்ஜனித் தவனே யாகும்
மறவர்குலந் தனிலுதித்துக் குடும்பி யாகி
வஞ்சியுண்டாய் மதலைகளும் பெருக்க மாகி
வாழ்நாளில் வினைசொல்வேன் மங்கை யேகேள்.

11. ஐந்தாமிட (புத்திரஸ்தான)த்தில் இருந்து செவ்வாய் சுக்கரன் சூரியன் பார்ப்பதால் புத்திரருக்குத் தோஷ மேற்பட்டது என்றோம். இதுவல்லாமல் முற்பிறவியில் செய்த தீவினைகளின் அதிகத்தால் நாங்கள் அவ்விதம் கூறுகின்றோம். தீவினையைச் சொல்லுங்கள். முனிவரே! என்று வினவ, ஜாதகன் முற்பிறவியில் தஞ்சைமாநகரில் மறவர் குலத்தில் பிறந்தான். பெரிய குடும்பியாகி மனைவிமக்களை யடைந்து வாழ்ந்து வரும் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

வேறு

கைம் பெண்ணுடன் இன்பம் அனுபவித்ததும், கருவழித்ததும்

12. வரனின்றி மாது போகம் மன்னனுஞ் செய்து வந்து
கருவுண்டாய்ப் பண்டி தத்தால் கலைத்தவ னிவனே [யென்றோம்
மருவிற்று வந்தத் தோட மறைகிறோம் வேறு வொன்று
அரியரா மறையோ ருக்கு அவன்சில கொடுமைசெய்தான்

12. கணவனை யிழந்த பெண்ணுடன் இந்த ஜாதகன் சிற்றின்பம் அனுபவித்து அதனால் ஏற்பட்ட கருவை மருந்துகள் கொடுத்துக் கலைத்து விட்டான். அஃது ஒரு தோஷமாயிற்று. வேறு ஒன்றும் கூறுகின்றோம். அரிய அந்தண குலத்தில் பிறந்த சிலருக்கு இவன் சில கொடுமைகளைச் செய்தான்.

பசுவின் பாலை முழுதும் கறந்தது

13. [1]ஆவின்பா லறக்க றந்தான் அணுகிற்று வந்தத் தோடம்
பாவையும் பாலர் மாண்டு பாலகன் சேதுக் கேகி
மேவியே தீர்த்தந் தோய்ந்து விப்பிரர் தொண்டு பூண்டு
தாவிலன் கால னுடு சதுர்முகன் வரையப் பட்டுக்
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழிகுன் றுவே.

1. இப்பாடலில் ஒரு அடி மிகுந்துள்ளது.

13. பசுவின் பாலை (கன்றுக்கு விடாமல்) முழுவதும் கறந்து விட்டான். அதுவொரு தோஷமாயிற்று அதனால் அவன் மனைவி மக்களை இழந்து, பிறகு சேதுவுக்குச்சென்று, புண்ணியநீராடி, அந்தணர்கட்குத் தொண்டுகள் செய்து மரணமடைந்தான். பிறகு மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தான் என்றேரும். முருகப்பிரானைப்பெற்ற தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவரு.

14. இக்குல முதிப்பா னுகு மிலகிடு முன்னூழ்த் தோடஞ்
சிக்கிபோல் சேரு மென்றேஞ் சுதர்தோன்றூர்
[தோன்றில் தீதாந்
தக்கின தோடந் தீரச் சாற்றுவீர் கிரியை தானும்
முக்கிய சேது சென்று மூயர்தீர்த்தந் தோய்ந்து மேதான்;

14. இக்குலத்தில் பிறப்பான் என்றேரும். முற்பிறவித் தோஷம் தொடரும். புத்திரர்கள் தோன்றூர். அப்படிப் பிறந்தாலும் நிலையா. புத்திரதோஷம் நீங்கச் சாந்தியொன்று கூறுகின்றேரும். விசேஷமான புண்ணிய ஸ்தலமாகிய சேதுவிற்குச் சென்று, அங்குள்ள புண்ணிய நீரில் நீராடி;

சாந்தி விவரம்

15. அரனுக்கு வர்ச்சித் தேத்தி
அடைக்காயுங் கந்தத் தோடு
இரணியஞ் சேர்த்து வின்னேன்
இலகுவாய் மறையோ ருக்குத்
திருவாக்கா லாசீ ரேத்தித்
திரும்பியு முள்ளூர் சென்று
பெருவயி றப்ப னுக்குப்
பொருத்தியே தீப மொன்று;

15. அங்குள்ள ராமநாதப்பிரானுக்கு அருச்சனைசெய்து, துதித்து வெற்றிலை பாக்கு சந்தனம் இவைகளுடன் தட்சிணையை சேர்த்து இந்த ஜாதகன் ஆகமங்கள் அறிந்த அந்தணருக்குக் கொடுத்து, அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று, மீண்டும் உள்ளூருக்குத் திரும்பி, விநாயகர் ஆலயத்தில் தீபம் ஒன்று ஏற்றி வைத்தால்;

16. சனிவாரம் விரதங் கொள்ளச்
சார்ந்தவூழ் விலகி யேதான்
இனிமையாய்ச் சுதர்கள் தோன்றும்
எழில்வயது தீர்க்க மாகுங்
கனமுடன் செய்யா னுகில்
காலைகள் விருத்தி தோடம்
தனையனூழ் நிவிர்த்தி செய்யில்
சாற்றுவோ மாண்பா லொன்று;

16. சனிக்கிழமைதோறும் விரதம் இருந்தால் முற்பிறப்பில் செய்த தீவினைகள் நீங்கி அழகிய புத்திர பாக்கியம் ஏற்படும். அவர்களுக்குத் தீர்க்காயுள் ஏற்படும் என்றேரும். அலட்சியமாகச் செய்யாவிடில் புத்திரர் விருத்தியுறுர். தீவினை நீங்கச் சாந்தி செய்தால் ஒரு புத்திரனும்;

தாயின் விவரம்

17. கன்னிகை மூன்று தீர்க்கங் கழறின மொழிகுன் ருவே
அன்னைமா நிறத்த ளாகும் அன்புள மனத்த ளென்றேரும்
முன்கோபம் பின்பு சாந்த மூலகுக்கு நல்லோ ளாவள்
தன்துணை காணு ளாகுந் தாயது விரண்டு நேரும்.

17. மூன்று புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பார்கள். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. ஜாதகனுடைய தாய் மாநிறமுள்ளவள். அன்புள்ள மனத்தினள் என்றேரும். முன்கோபமுள்ளவள். பிறகு சாந்தம்டைவாள். உலகத்தவருக்கு நல்ல வளாக இருப்பாள். உடன் பிறந்தவர்கள் இல்லாதவள். ஜாதகன் தாய்க்கு இரு தாய்மார்கள் உள்ளனர் என்றேரும்.

இரு தாய்மார்களுக்குரிய கிரகநிலை

18. எப்படி வன்னை ரண்டு
இயம்புவீர் முனியே நீர்தாம்
தப்பிதம் ராகு நாலில்
சனியைந்தி லிருப்ப தாலே
செப்பிலே மன்னை ரண்டு
செல்வதி தனியாய் வாழ்வள்
முற்பிறப் பினில நேக
வினையுமே யுண்டா மென்றேரும்.

18. ஜாதகனுடைய தாய்க்கு இரு தாய்மார்கள் உண்டு என்று எவ்விதம் கூறினீர்கள். முனிவரே! ராகு மாதுர் ஸ்தானத்தில் இருப்பதாலும் சனி ஐந்தாமிடத்தில் இருப்பதாலும் தாய்க்கு இரு தாய்மார்கள் உண்டு என்றும் இவள் தனியாக வாழ்ந்து வருவாள் என்று சொல்லுகிறேரும். முற்பிறவியில் செய்த தீவினைகள் அதிக முண்டு என்றேரும்.

தாயின் முற்பிறவி

19. அவ்வினை புகலக் கேண்மோ
அவள்பூர்வம் மலைநா டன்னில்
பவ்யமாய் வைசியச் சேயாய்ப்
பணிதிகள் பால ருண்டாய்

நவ்வியே வாழு நாளில்
நாட்டுவோ மூழி தானுந்
திவ்விய வில்லந் தன்னில்
சேர்ந்தது வடைக்க லானும்.

19. அந்தத் தீவினைகள் இன்னவென்று சொல்லக் கேளுங்கள். ஜாதகனின் தாய் முற்பிறவியில் மலை நாட்டில் வைசிய குலத்தில் பிறந்து, நல்ல ஆபரணங்களையும் புத்திரர்களையும் யடைந்து, வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். இவளுடைய வீட்டில் ஒரு பட்சி வசித்து வந்தது.

பட்சியின் கூட்டைக் கலைத்தல்

20. கருவதை யழித்தா லென்றேங் கலந்தது பட்சி தோடம்
மறையவர் மணத்துக் காக வளமுள பணிகள் கேட்கக்
குறைசொல்லி ஈயா விட்டாள் மறையவர் சென்ற
[ரென்றேம்
திருமக ளந்தி யத்தில் சேத்தும ரோகத் தாலே;

20. அதனுடைய குஞ்சுகளையும் முட்டைகளையும் இந்த ஜாதகனின் தாய் அழித்து விட்டாள். (இவை தவிர வேறு ஒன்று சொல்லுகின்றோம்). ஓர் அந்தணர் ஒரு கலியாணத்துக்கு ஆபரணங்களைக் கேட்டார். (திருமங்கல்யம் தானமாகக் கேட்டார் அல்லது கலியாணத்துக்குச் செல்ல நகையை இரவலாகக் கேட்டார் என்றும் கொள்ளலாம்) இவள் அவர்மீது பற்பல குறைபாடுகளைச் சொல்லிக் கொடுக்காமல் இருந்து விட்டாள். அவர்களும் சென்று விட்டனர். ஜாதகனின் தாய் தன் கடைசிக் காலத்தில் ரோகம் ஏற்பட்டு;

21. காலன்தன் நாட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டு
ஞாலமேல் வந்தா லென்றேம் நல்கிடு முன்னூழ்த் தோடம்
சாலவே துணைகள் காணுள் தாயது மிரண்டு நேரும்
ஞாலவே மறுதா யார்க்கு இயம்புவீர் புத்திரர் தாமே.

21. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப் பிறவியில் பிறந்தாள் என்றேம். முற்பிறவியில் செய்த தோஷத்தால் உடன் பிறந்தவள் இல்லாதவள். இரு தாய்மார்கள் உண்டு என்று சொல்லுகின்றோம். இவளுடைய இரண்டாம் தாய்க்குப் புத்திரருண்டா! சொல்லுங்கள்.

தாயின் மறுபிறவி

22. கன்னிகை யிரண்டு நேருங் காளைகள் தோட மெய்தும்
பின் ஜன்மம் புகலக் கேண்மோ புலியூரில் சைவச்
[சேயாய்
அன்னவ ளுதிப்பா ளாகு மறைந்தது தப்பா தாகும்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

22. இரு புத்திரிகள் உண்டு என்று சொல்லுகின்றோம். புத்திரர்களுக்குத் தோஷம் உண்டு. தாயின் மறு பிறவியைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். புலியூரில் (சிதம்பரத்தில்) சைவகுலத்தவளாகப் பிறப்பாள் என்றோம். நாங்கள் கூறியவை தவறு. உயர்ந்த கணவனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

23. தந்தையின் பூர்வங் கேளாய் தாம்பிர பரணி தன்னில்
வந்தனன் ரெட்டி வம்சம் வளமுள குடும்பி யாகிப்
பிந்தினோர்க் கன்ன மீந்து பூமியில் வறுமை யின்றி
முந்தின தலங்கள் சென்று மேதினில் பவமில் லாமல்;

23. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். தாமிரவருணியில் ரெட்டியார் குலத்தில் பிறந்து செல்வாக்குள்ள குடும்பியாக வாழ்ந்து, ஏழைகட்கு அன்ன மளித்து வந்து, பூமியில் தரித்திரமில்லாமல் வாழ்ந்து, உயர்ந்த பல புண்ணிய தலங்களுக்குச் சென்று, உலகில் பாவமில்லாமல்;

தந்தையின் மறுபிறவி

24. மறலியின் பதிக்குச் சென்று
[1]மால்மகன் வரையப் பட்டுத்
திருமகள் குலத்தி லேதான்
ஜனித்தன னிவனே யென்றோம்
வருஜன்மங் காஞ்சி தன்னில்
மறைக்குல முதிப்பா னுகும்
பராசருந் தடுத்துச் சொல்வார்
பாலக னிச்சென் மத்தில்;

24. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப் பிறவியில் வேளாளனுகப் பிறந்தான் (ஜாதகனின் தந்தை) என்று சொன்னேம். மறுபிறவியில் இவன் காஞ்சிபுரத்தில் அந்தணர் குலத்தவனுகப் பிறப்பான் என்றோம். பராசர முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில்;

குலம் உயர்வானது

25. பொருளது விச்சை யாயும் பூமியில் செட்டுச் செய்தும்
இருவித வார்த்தை யாயு மீவனுமே வாழ்வ தாலே
மறைக்குல முதிக்கும் வண்ண முரைப்பீர்கள் முனியே [நீர்தாம்
குறையென்றோர்க் குதவி செய்துங் குலமதை யாதரித்தும்

1. திருமாலின் நாபிக் கமலத்திலிருந்து தோன்றினமையின் பிரமதேவனுக்கு "மால்மகன்" எனப் பெயருண்டாயிற்று.

25. பொருள்கள் மீது விருப்பமுள்ளவனுயும், பூமியில் வர்த்தகம் புரிந்தும், இருவிதமான பேச்சுக்களை யுடையவனுகவும் வாழ்ந்து வருவதால் உயர்ந்த அந்தணகுலத்தில் தோன்றும் காரணங்கள் என்ன வென்று கூறுங்கள். முனிவரே! தாங்கள். இவன் துன்பமடைந்தவரை ஆதரித்தும் தன் குலத்தவரைக் காப்பாற்றியும்;

தந்தையின் மரணகாலம்

26. அறமதி லிச்சை யாயு மவனுமே வாழ்ந்த தாலும்
மறைக்குல முதிப்பா லைகு மாறேழு வாண்டு தன்னில்
பெருமையாய் மகர மாதம் புகன்றனந் தந்தை கண்டம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

26. தருமம் செய்வதில் விருப்பமுள்ளவனுயும் வாழ்ந்து வருவ தால் அந்தண குலத்தில் பிறப்பான். ஜாதகனுடைய நாற்பத்திரண் டாம் வயதில் தை மாதத்தில் தந்தை மரணமடைவான். கரிய யானை முகத்தோனைப் பெற்றவளே! கேளுங்கள்.

தாயின் மரணகாலம்

27. அந்ததோ ராண்டு தன்னில் அணுகிய மீன மாதம்
வந்தவ னன்னை கண்டம் வகுக்கிறேஞ் ஜாத கர்க்குச்
சந்தத மறுபா லறில் துலாமாத கண்ட மென்றேரும்
இந்தவாறு முனிவர் கூற வியம்புவார் பராசர் தாமும்.

27. அதே வருடத்தில் பங்குனி மாதத்தில் ஜாதகனுடைய தாய் மரண மடைவாள். ஜாதகன் தனது அறுபத்தாரும் வயதில் ஐப்பசி மாதத்தில் மரண மடைவான். இவ்விதம் முனிவர்கள் சொல்ல பராசர முனிவர் சொல்லுகின்ருர்.

28. சகடைதோ ஷங்க ளொன்று [1]சிகண்டியும் மெட்டோனுகி
பகையாக நாலில் தங்கப் பாலகன் இரண்டாண்டுக்குள்
தகைமையாகக் கண்ட மென்றேரும் தவமுனி தடுத்துச்
[சொல்வார்
உகமையாய்ப் பொன்னே லுலி லுயர்புகர் லாபம் தங்க;

28. சகடை தோஷம் உண்டு என்றேரும். குரு எட்டாம் வீட்டுக் குரியவனுகித் தீங்காக நான்காமிடத்தில் தங்கி இருப்பதால் ஜாதக னுக்குப் பிறந்து இரண்டு வருடங்களுக்குள்ளாகவே கண்டமேற்படும் என்றேரும். தவமுனிவர் தடுத்துக்கூறுகின்ருர். குரு நாலில் இருந் தாலும் சுக்கரன் லாபஸ்தானத்தில் இருப்பதால்;

---

1. சிகண்டி - குரு.

ஜாதகனின் மறுபிறவி

29. வயதுமே தீர்க்க மெய்து மங்கலன் தசமந் தங்க
நயமுடன் தாய்தந் தைக்கே நாயகன் கருமஞ் செய்வான்
பயமிலாச் சொன்னேம் யாங்கள் பகருவோ மிவன்பின்
[ஜன்மம்
வியமிலாக் காசி பக்கல் மேவுவான் பிரம்ம சேயாய்.

29. நீண்ட வயதுண்டு. செவ்வாய் பத்தாமிடத்தில் (கருமஸ்தானத்தில்) இருப்பதால் ஜாதகன் தன் தாய் தந்தையருக்குக் கருமங்களைச் செய்வான். சந்தேகமின்றிச் சொல்லுகின்றேம். ஜாதகனுடைய மறு பிறவியைச் சொல்லுகின்றேம். தீங்குகளில்லாத காசிக்குப் பக்கத்தில் அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான்.

ஜாதகனுடைய பொது யோகம்

30. வந்தவன் பொதுயோ கத்தை
யறைகிறே மைந்தாண் டின்மேல்
இந்தவன் மரண மட்டும்
இளம்பிறை போலே யோகம்
தந்தனஞ் சேர்ப்பா னகுந்
தரணிகள் விருத்தி செய்வன்
மூந்திய செட்டு வோங்கு
முலகுக்கு வுதவி செய்வன்.

30. ஜாதகனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றேம். ஐந்தாம் வயதிற்குமேல் ஜாதகன் இறக்கும் வரையில் வளர்பிறைச் சந்திரன் போல் யோகம் விருத்தியாகும். தன்னால் சம்பாதிக்கப்பட்ட பொருள் அதிகமாகும். விசேஷ நிலங்களைப் பெருக்குவான். வர்த்தகம் பெருகும். உலகத்தவருக்கு உபகாரம் செய்து வருவான்.

31. தாதைக்கு மேலாய் வாழ்வன்
சதுஷ்பாதங் காலாள் விருத்தி
ஓதுவேன் ஜனித்த வாண்டில்
உறைகுவான் தந்தை தந்தை
சூதினல் கண்டம் நேருஞ்
சுதனஸ்தி மூவாயி ரம்பொன்
மேதினில் சேர்ப்பா னகும்
விளம்பின மொழிகுன் றுவே.

31. தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். கால் நடைகள் பணியாட்கள் விருத்தியாகும். ஜாதகன் பிறந்த வருடத்தில் ஜாதகனுடைய பாட்டனார் (தகப்பனாரின் தகப்பன்) இறந்து போவார்,

வஞ்சனையால் அவருக்கு மரணம் நேரிடும். ஜாதகன் தன் ஆயுளில் மூவாயிரம் பொன் ஆஸ்தியைச் சேர்ப்பான். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவரு.

32. ஈரறு ஆண்டு மேலாய் எய்திடும் பூர்வம் பொன்னுந்
தீரமாய்ச் சோஜல தன்னில் தந்தையார்ஜிதத்தில் நேரும்
பாரது வதன்பின் னுகப் படைப்பனு மென்று
[சொன்னேம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

32. ஜாதகனுக்குப் பன்னிரண்டாம் வயதுக்குமேல் புதையல் கிடைக்கும். அதுவும் அவன் வீட்டுத்தோட்டத்தில்; தன்தந்தையால் சம்பாதிக்கப்பட்ட பொருளிலிருந்து கிடைக்கும். அதற்குப்பிறகு விளை நிலங்களை வாங்குவான் என்றேரும். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற அம்பிகையே! கேளுங்கள்.

ஜனனகால தசை

33. ஜனித்திடுங் காலந் தன்னில் சித்திரை நாலாம் பாதங்
குனிசேயின் தசையி ருப்புக் கூறுவோமாண்டு வொன்று
வினையிலாத் திங்கள் ரண்டு மேவிடு நாட்கள் பத்தும்
கனமுடன் பலனைப் பின்பால் கழறுவோம் பூர்வஞ்
[சொன்னேம்.

33. ஜாதகன் பிறக்குங் காலத்தில் சித்திரை நட்சத்திரம் நாலாம் பாதம். அப்போது அங்காரக மகாதசையில் இருப்பு ஒரு வருடமும், இரு மாதங்களும், பத்து நாட்களுமாம். மற்ற பலன்களைப் பிற் பாகத்தில் சொல்லுகின்றேரும். இதுவரை முதல்பாகம் சொன்னேம்.

34. சத்தம முனிவர்
சுத்தமாய்ச் சொன்னேங்
குத்தங்கள் யாவும்
வித்தகி பொறுப்பாய்.

34. முனிவர்களாகிய நாங்கள் எழுவரும் நன்றுகப் பார்த்துப் பலன்களைக் கூறியிருக்கிறேரும். அவற்றில் எவையேனும் குற்றங்கள் இருப்பின் அக்குற்றங்கள் எல்லாவற்றையும் பொறுத்தருள்வாய். தாயே!

ஜாதகம் 28

1. பிறைராகு குருவு மானில் புகர்பரி யோனு மேரு
தரைமகன் புதனுந் தேளில் சனிசாடி கேது வண்டி
அரியது ஜன்ம மாக அறைகுவீர் பலனை யென்று
நிரைபரா பரியுங் கேட்க நிகழ்த்துவா ரத்திரி தாமே.

1. சந்திரன் ராகு குரு மகரத்திலும், சுக்கிரன் சூரியன் தனுசிலும், செவ்வாய் புதன் விருச்சிகத்திலும், சனி கும்பத்திலும், கேது கடகத்திலும் இருந்து இலக்கினம் சிம்மமாலை ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கும்போது அத்திரி முனிவர் பதில் சொல்லுகின்றார்.

கிரகநிலை

சனி	இராசி சக்கரம்		கேது
சந்திரன் ராகு குரு			லக்கினம்
சுக்கிரன் சூரியன்	செவ்வாய் புதன்		

2. இந்தசே யாணைஞ் ஜன்மம் இல்லமூங் கீழ்மேல் வீதி
தென்வாசல் கீழ்மே லாறு தேவிமார் கன்னி மேற்கில்
சந்தியு மாரி வுத்ரம் சாற்றுமிவ் வடையா ளத்துள்
முந்திய பேரு ராகும் மேவுவா னிந்தப் பாலன்.

2. இஃது ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்குப் பார்வையுள்ளது. வீட்டுக்கருகில் கிழக்கு மேற்காக ஒரு நதி ஓடுகிறது. அம்மன் கோவிலும் காளி கோவிலும் மேற்கில் உள்ளன. வடக்குப்பக்கத்தில் நாற்சந்தியும் மாரியம்மன் கோவிலும் உள்ளன. இவ்வித அடையாளங்களுள்ள பெரிய ஊரில் உள்ளதொரு வீட்டில் ஜாதகன் பிறப்பான்.

3. இன்னவன் ஜனன யோகம்
எழில்பெருந் தந்தை யோகம்
அன்னையின் தந்தை யோகம்
அவன்துணை களத்திர யோகம்

முன்பின்ஜன் மங்கள் யாவும்
மொழிகிறேர் மிந்நூல் தன்னில்
சிந்தையாய் நவக்கோ ளாய்ந்து
செப்புவோந் தாயே கேளும்.

3. ஜாதகனுடைய பிறப்பு யோகம், அழகிய தந்தை தாய் முதலியவர்களுடைய யோகங்கள் ஜாதகனின் உடன்பிறந்தவர்கள், மனைவி, மக்கள் முதலானேர் முற்பிறப்பு, மறுபிறப்பு ஆகிய எல்லாவற்றையும் இந்த ஜோதிடநூலில் நவக்கிரக நிலையை நன்கு ஆராய்ந்து கூறுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் தந்தை வர்க்கம்

4. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றுவோ மைவ ராவர்
நொந்திடுஞ் சிலவே யென்றேரும் நிகரமாங் கன்னி ரண்டு
அந்தமா னொருவன் செல்வன் அவனுமே காண லாகும்
பிந்தியு மொருவன் வர்க்கம் பலமிலாச் சிதையு
[மென்றேரும்.

4. ஜாதகனுடைய தந்தையின் வர்க்கத்தினரைப் பற்றிச் சொல்லுகின்றேரும். அவர்கள் ஐந்துபேராவர். அவர்களில் சிலர் நிலையார் என்றும் மீதியாக இரு சகோதரிகளும் இரு சகோதரர்களும் உண்டு என்று சொல்லுகின்றேரும். அவர்களில் ஒருவன் அந்தமான் தீவுக்குச் சென்று அங்கேயே இறந்து விடுவான். பிறகு மற்றொருவனும் நிலையில்லாது துன்பமடைவான் என்றேரும்.

இதுமுதல் மூன்று பாடல்களில் தந்தையின் குணங்கள் கூறப்படுகின்றன

5. ஆகிலும் பின்பால் சொல்வேன் அறைகிறேர்ந் தந்தை
[சேதி
பாகமாய்ப் பேச வல்லான் பாருகள் சேர்ப்பா னுமே
தோகையர் மோக வானந் தரகுகள் செய்வா னாகும்
வேகமாய் நடக்க வல்லான் மேதினில் வறுமை காணன்.

5. இருந்தபோதிலும் அவர்களுடைய விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேரும். ஜாதகனுடைய தந்தையைப்பற்றிக் கூறுகின்றேரும். பொருத்தமாகப் பேசுபவன். விலாநிலங்கள் பூமி இவைகளைப் பெருக்குவான். பெண்கள்மீது மையல் கொள்ளுபவன். தரகு வியாபாரம் செய்து வருவான். வேகமாக நடப்பவன். தரித்திரமடையாதவன்.

6. முன்கோபம் பின்பு சாந்தம் மூலச்சூ டுடைய னுமே
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பான் செட்டுச்
[செய்வன்
பொன்பணி சேர்ப்பா னுகும் புகழ்ந்தோரை யாதரிப்பன்
அன்னியர் மதிக்க வாழ்வன் அரிபத்தி கொஞ்ச முண்டு.

6. முன்கோபமுடையவன். விரைவிலேயே சாந்த மடைவான். மூலச்சூட்டு நோயுள்ளவன். தன் வார்த்தைகளே மேன்மையுள்ளவை என்று அடித்துச் சொல்லுபவன். வர்த்தகம் புரிந்து வருவான். பொன்னுபரணங்களைச் சேர்ப்பான். தன்னைத் துதி செய்தவரைக் காப் பாற்றுவான். பிறரால் கொண்டாடும்படியான வாழ்க்கையை நடத்து பவன். சிறிது விஷ்ணு பக்திமுள்ளவன்.

உருத்திரரேகை

7. இல்லமும் புதிதாய்ச் செய்வன் எதிரிக்கு வணக்கங்
[கொள்ளான்
மல்லுக்கு முன்செல் லாதான் மலர்க்கர முருத்திர ரேகை
தல்லிபோல் காப்பா னுகும் தன்மனங் கவடு கொஞ்சம்
நல்லதோர் தலங்கள் செல்வன் நன்முக வடிவு முண்டு.

7. புதிதாக வீட்டைக் கட்டுவான். விரோதிகட்கு அடங்காதவன். ஆனல் வீண் சண்டைக்குச் செல்லாதவன். புஷ்பத்தைப் போன்ற மெல்லிய கைகளில் உருத்திர ரேகையை உடையவன். தாய் மகனை உச்சரிப்பதுபோல் அன்புடன் பிறரை ஆதரிக்கும் குணமுள்ளவன். சிறிதே வஞ்சனையுள்ளவன். நல்ல புண்ணிய தலங்களுக்குச் செல்லு பவன். அழகிய முகத்தில் வடு உள்ளவன்.

இனி வரும் ஐந்து பாட்டுகளில் ஜாதகனின் குணங்கள் சொல்லப்படுகின்றன

8. இந்நெறி யுடையோ னுக்கு இவனுமே வுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் ஆதிமால் நிறத்த
[னுகும்
கன்னென மொழியே சொல்வான் கொடூரமுஞ்
[சாந்த முண்டு
பின்னமில் லாத தேகி பிறர்வசஞ் செய்யா னுகும்.

8. இவ்விதங் கூறப்பட்ட தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான் என்றேரும். அவனுடைய குணங்களைச் சொல்லுகின்றேரும். திரு மாலைப் போன்ற கரிய நிறமுடையவன். இனிய வார்த்தைகளையே பேசுபவன். சிறிது முன்கோபமும் உடனே தணிவும் உள்ளவன். ஊனமில்லாத தேகத்தன். பிறர் வயப்படாதவன்.

9. கல்வியுஞ் சமம தாகுங் காவல்க ளுடைய ஞகும்
இல்லையென் றுரைக்க மாட்டான் இருவித வார்த்தை
[யுண்டு
வல்லியர் மோக வானும் மாவில்லம் விருத்தி செய்வன்
சல்லியங் கொள்ளா ஞகுஞ் ஜனித்தயில் லடையா ஞமே.

9. சமமான கல்வியறிவுள்ளவன். ஏவலாட்களோ டுடையவன். தன்னிடம் வந்து யாசிப்பவர்கட்கு இல்லையென்னாதவன். இருவித மாகவும் பேசுபவன். பெண்களுக்குப் பிரியன். இவன் தனது வீட்டைப் பெரிதாக்குவான். கடன் வாங்கார்தவன். தான் பிறந்த வீட்டைப் பெருதவன்.

10. பலவிதச் செட்டுச் செய்வன் பாக்கிய முடைய ஞகுந்
தலவாசந் செல்வா ஞகும் ஊழியர் பக்தி கொள்வன்
வல்லன்போல் வார்த்தை சொல்வன் பொருந்தவே
[யுரைப்பா ஞகும்
நிலையிலார்க் குதவி செய்வன் நீத்தோருக் கன்ன மீவன்.

10. பற்பலவிதமான வர்த்தகத்தைப் புரிவான். பாக்கியசாலி. புண்ணியத்தலங்களுக்குச் செல்லுபவன். அடியார்களிடம் பக்தியுள்ளவன். எல்லாம் தெரிந்தவன்போல் பேசுபவன். பொருத்தமாகப் பேசுபவன். வீடுகளில்லாத ஏழைகளுக்கு உபகாரம் செய்பவன். துறவிகட்கு அன்னமளிப்பவன்.

11. மானத்தைக் காப்பா னென்றோம் வஸ்திர வேலை
[செய்வன்
ஊனமில் லாத தேகன் உறுதிமான் பித்த தேகி
தானியம் விருத்தி செய்வன் நாதனர் பக்தி பூண்பன்
[1]போனிடம் பெருமை யேற்பன் பெரிதான குடும்பி
[யாவன்.

11. பிறருடைய மானத்தைக் காப்பதற்குரிய வஸ்திரங்கள் (துணிமணி நெய்தல்) செய்யும் நெசவுத்தொழிலைச் செய்வான். ஊனமில்லாத தேகமுடையவன். திடமானவன். பித்த சரீரி. தானியங்களைப் பெருக்குவான். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன். சென்ற விடங்களிலெல்லாம் பெருமையுடையான். பெரிய குடும்பியாவன்.

---

1. போனவிடம் என்பது செய்யுள் நோக்கிப் போனிடம் எனக் குறைந்த தெனவறிக.

12. தந்தைக்கு மேலாய் வாழ்வன்சகடுகள் பின்னல்
[சேர்ப்பன்
வந்தவர்க் கன்ன மீவன் வளமுள சேத்திரஞ் செல்வன்
பிந்திநாள் போக முண்டு பூருவப் பொருளுஞ் சேரும்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழிகுன் றுவே.

12. தன் தந்தையினும் மேன்மையான வாழ்க்கையை நடத்துவான். பிற்காலத்தில் வண்டி முதலிய வாகனங்களை வைத்துக் கொள்ளுவான். தன்னையண்டி வந்தவர்கட்கு அன்புடன் அன்னமளிப்பவன். பல புண்ணிய க்ஷேத்திரங்கட்குச் செல்லுவான். பிற்காலத்தில் போக முள்ளவன். பிதுரார்ஜிதமான செல்வமும் சேரும். முருகக் கடவுளைப் பெற்ற தாயே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

ஜாதகனுடைய உடன்பிறப்பு

13. தன்துணை நவமே தோன்றுஞ் சீரணஞ் சிலவே
[யென்றோம்
சந்தத மாண்பால் மூன்று தையலா ரிருவர் தீர்க்கம்
முந்திலை ராண்பால் ரண்டு மொய்குழ லவ்வா றுகும்
பிந்தியு மாண்பா லொன்று பேசுவோந் தீர்க்க மாக.

13. ஜாதகனுக்கு உடன்பிறந்தவர் ஒன்பதின்மர் ஆவர். அவர்களில் சிலர் நிலையாமல் இறந்து விடுவார்கள் என்று சொன்னோம். மூன்று சகோதரர்களும் இரு சகோதரிகளும் மட்டுமே நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லுகிறோம். இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் இவனுக்கு மூத்தவராவர். ஜாதகனுக்குப் பின்பிறந்த சகோதரன் ஒருவன் நீண்ட ஆயுள் உள்ளவன் என்று கூறுகின்றோம்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

14. பின்பாகம் விவர மாகப்
பேசுவோ மவர்கள் சேதி
இன்னவன் மணத்தின் கால
மியம்புவோம் பதினே ழாண்டில்
கன்னிகை யுள்ளூர் தன்னில்
கலப்பளாங் குணத்தைச் சொல்வேன்
நன்னடை மிருது வார்த்தை
நாயகன் மனம்போல் வாழ்வள்.

14. அவர்களுடைய விவரங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய திருமணக்காலத்தைக் கூறுகின்றோம். அவனுடைய பதினேழாம் வயதில் உள்ளூரிலிருந்தே மனைவி வருவாள்,

அவளுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். நல்ல நடத்தையுள்ளவள். மெதுவாகப் பேசுபவள். தன் கணவன் மனத்திற்கொப்ப வாழ்ந்து வருவாள்.

ஜாதகனுடைய மனைவியின் குணங்கள்

15. அறமதி லிச்சை யுண்டு அடைந்தோரை யாத ரிப்பள்
இருநிறம் பித்த தேகி யாவர்க்கு நல்லோ ளாவள்
விரதங்கள் பூண்பா ளாகும் வீண்பழி யேற்கா ளாகும்
நரைமல ரிஷ்டங் கொள்வள் நாயகி யோக சாலி.

15. தருமம் செய்வதில் விருப்பமுள்ளவள். தன்னையண்டி வந்தவர்களைக் காப்பாள். கரிய நிறமுடையவள். பித்த சரீரி. எல்லோருக்கும் நல்லவளாக இருப்பாள். நோன்புகளை நோற்பாள். வீண்பழியை அடையாதவள். வெண்மையான புஷ்பங்களின் மீது விருப்பமுடையவள். அருஷ்டசாலி.

இருதாரமேற்படுதற்குரிய கிரகநிலை

16. வயதுமே தீர்க்க மெய்து மாமுனி தடுத்துச் சொல்வார்
வியமாகு முதல்ம னைதான் மேவிடு மிரண்டாம் பாரி
பயமிலாச் சொன்ன சங்கை பகருவீர் முனியே நீர்தாம்
நயமுடன் காரி யேழில் [1]நன்னிலத் தோனும் பார்க்க ;

16. நீண்ட வயதுள்ளவள். (வசிஷ்ட) முனிவர் மறுத்துக் கூறுகின்றார். ஜாதகனுக்கு முதலில் ஏற்படும் மனைவி இறந்து விடுவாள். இரண்டாவது மனைவி திண்ணமாக வருவாள் என்றார். (இதைக்கேட்டு மற்ற முனிவருள் ஒருவர் வினவலானார்) முனிவரே ! தாங்கள் பயமில்லாமல் ஒரு சந்தேகத்தைக் கூறுகின்றீர்களே ! அதை விவரமாகச் சொல்லுங்கள் என, சனி ஏழாம் வீட்டில் இருந்து அவனைச் செவ்வாய் பார்ப்பதால் ;

மறுப்பு : கிரகநிலை

17. செப்பினேந் தாரம் ரண்டு ஐயமுனி தடுத்துச் சொல்வார்
ஒப்புட னேழோ ளட்சி உயர்சேயும் நாலி லாட்சி
தப்பிலாப் புதனுஞ் சேர்ந்தான் மனையொன்று வவளே [தீர்க்கம்
மைப்படி விழியாள் ரண்டு மருவாது வென்று [சொன்னேம்.

17. ஜாதகனுக்கு இரண்டனைவியர் ஏற்படுவர் என்றார். ஐய முனிவர் அவர் சொல்வதை மறுத்துப் பின் வருமாறு கூறுகின்றார். சனி ஏழாம் வீட்டுக்குரியவனுக ஆட்சியாக இருப்பதாலும், செவ்வாய் நான்கா

1. பூமிகாரகன், செவ்வாய்.

மிடத்தில் ஆட்சியாக இருந்து அவனுடன் குடும்பஸ்தானாதிபதியாகிய புதன் சேர்ந்திருப்பதாலும் மனைவி ஒருத்தியே நீண்ட ஆயுள் உள்ளவள் என்றும், மை நிறைந்த அழகிய விழிகளைக் கொண்ட இரு மனைவியர் ஏற்பட இடமில்லை என்று சொன்னார்.

ஜாதகனுடைய புததிரபாவம் : கிரகநிலை

18. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணெஞ்
சித்தமா யுதித்தா லுந்தான் ஜீரண மென்று சொல்வோங்
குத்தத்தைச் சொல்லு மென்னைக் குருடனும் ரவியு
[மஞ்சில்
வித்தக னஞ்சோ னீச்ச மேவியே யிருப்ப தாலே ;

18. ஜாதகனுக்குப் புத்திர விருத்தியுண்டு என்று கூறக் கிரக பலமில்லை. ஒரு சமயம் பிறந்தாலும் அவை நிலையாமல் மரணமடையும் என்று கூறுகின்றோம். புத்திரபாக்கிய மில்லாயிருப்பதற்குக் காரணமான குற்றத்தைக் கூறுங்கள் என்று கேட்க, சுக்கிரனும் சூரியனும் ஐந்தாமிடத்தில் (புத்திர ஸ்தானத்தில்) இருப்பதாலும், அவ்வீட்டுக் குரிய குரு நீசமாக மகரத்தில் இருப்பதாலும் ;

ஜாதகனுடைய முற்பிறவி

19. சுதர்களுந் தோஷ மெய்துஞ்
சேயன்முன் ஜன்மந் தன்னில்
அதிகமாய் வினைகள் செய்தான்
அணுகிற்று வந்தத் தோஷம்
அதிபன்செய் வினைக ளென்ன
வறைகுவீர் முனியே நீர்தாம்
கதிதரும் பாண்டி நாட்டில்
கருணீகர் குலத்தி லேதான் ;

19. புத்திரதோஷம் ஏற்படும். இதுவும் தவிர ஜாதகன் முற்பிறவியில் அதிகமான தீவினைகள் செய்தான். அவ்வினைகளின் பலனுகப் புத்திர பாக்கியமில்லை. ஜாதகன் செய்த தீவினைகள் என்ன வென்று கூறுங்கள். முனிவரே! தாங்கள். நற்கதியைத் தரும் பாண்டிய நாட்டில் கருணீகர் குலத்தில் ;

20. உதித்தன னிந்தப் பாலன் உயர்வான குடும்பி யாகி
நிதிமிகப் பெருக்க முண்டு நிலையும் மதலை யுண்டாய்ச்
சதியான வணிபஞ் செய்துந் தரணியில் வாழு நாளில்
அதிதியு மந்திக் காலம் அன்னமு மிவனைக் கேட்க ;

20. பிறந்தான். இந்த ஜாதகன் உயர்ந்த குடும்பியாக இருந்து வந்தான். பெரிய செல்வம் உள்ளவனுகவும் மனைவிமக்களை அடைந்தும் வஞ்சனை நிறைந்த வியாபாரம் செய்தும் வாழ்ந்து வந்தான். இங்ஙனம் உலகில் வாழ்ந்துவருங்காலத்தில் ஒருநாள் சாயங்கால வேளையில் ஒரு அடியார் இவனிடம் வந்து அன்னம் கேட்கும்போது;

அன்னமளிக்க மறுத்தது

21. சிங்கம்போல் கோபங் கொண்டு சிலேடையாய் வார்த்தை
[சொல்லச்

சங்கர னடியார் தாமுஞ் சஞ்சல மனத்தா ராகி
மங்கிடு மனைவி மைந்தர் வருஞ்ஜன்மஞ் சுதர்க ளின்றிப்
பங்கமாய் வாழ்வா யென்றுப்பகர்ந்துமே சென்ரு
[ரென்ரேரும்.

21. சிங்கம் போலக் கோபங்கொண்டு நிந்தை வார்த்தைகளைக் கூறும்போது சிவனடியார் மனமுடைந்து வருத்த முற்றுப் பின்வரு மாறு கூறுகின்ரூர். உன்னுடைய மனைவி மக்கள் இறந்து போய் அடுத்த பிறவியிலும் புத்திரபாக்கிய மில்லாமல் குறையாகவே வாழ்ந்து வருவாய், எனறு கூறிவிட்டுச் சென்ரூர்.

22. இதுவொரு தோஷ மாச்சு இம்புவோம் வேறு வொன்று
முதல்குல விதவை போகம் மேவியே கருவ ழித்தான்
அதுவின றித் தொழிலில் மோசம் அநேகமாய்ச் செய்தா
[னென்ரேரும்

அதிபனுக் கந்தி யத்தில் மைந்தர்கள் தோஷ மாகும்.

22. இஃது ஒரு தோஷமாயிற்று. இது தவிர, வேறு ஒன்றும் கூறுகின்ரேரும். இந்த ஜாதகன் அந்தணர் குலத்தில் தோன்றிய கைம் பெண்ணொருத்தியுடன் இன்பம் அனுபவித்தான். அதனுல் ஏற்பட்ட கருவையும் அழித்துவிட்டான். இவைகளைத் தவிர, இவன் வர்த்தகம் புரியும்போது பல சமயங்களில் பிறரை மோசமும் செய்தான். அதனுல் கடைசிக் காலத்தில் இவனுக்குப் புத்திரதோஷம் ஏற்பட்டது.

23. சஞ்சல மனத்த னுகிச் சண்டன்தன் பதிக்குப் புக்கிக்
கஞ்சனுல் வரையப் பட்டுக் கௌரியின் குலமு திப்பன்
நஞ்சுபோல் முன்னூழ்த் தோஷம் நல்கிடு மிச்சென்
[மத்தில்

கொஞ்சிடு மதலை தோஷங் கூறுவோஞ் சாந்தி தானே.

23. ஜாதகன் அலைபாயும் மனத்தினனுக வாழ்ந்து பிறகு மரண மடைந்தான். மண்டும் பிரம்மதேவனுல் படைக்கப்பட்டுக் கௌரீகர் குலத் தில் பிறந்தான். கொடிய விஷம்போல் முற்பிறப்புத்தோஷம் இப்பிற

வியிலும் தொடந்தது. அதனல் பிறக்கும் குழந்தைகளுக்குத் தோஷம் ஏற்படும். அது நீங்கச் சாந்தி யொன்று கூறுகின்ரோம்.

நோஷம் நீங்கச் சாந்தி

24. மனைவியுந் தானு மாக வருணைமால் மலைக்குச் சென்று
கனமுள தீர்த்தந் தோய்ந்து கடவுளர்க் கர்ச்சித் தேத்திச்
சினமிலா வொருபா னைந்து சங்கமர்க் கன்ன மீந்து
தனயன்தா னுள்ளூர் மீண்டு சனிவாரம் விரதமே
[கொள்ள;

24. ஜாதகன் தன் மனைவியுடன் திருவண்ணுமலைக்குச் சென்று அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் நீராடி, சிவபெருமானுக்கு அருச் சனை செய்து, துதித்து, கோபங் கொள்ளாமலிருக்கும் பதினைந்து துறவிகட் கன்னமளித்து வந்து, பிறகு உள்ளூருக்குத் திரும்பி, ஒவ் வொரு சனிக்கிழமையன்றும் நோன்பு இருப்பானுகில்;

தாயின் குணங்கள்

25. முன்வினை நிவிர்த்தி யாகி மேவிடுஞ் சுதாண் ரண்டு
கன்னிகை யவ்வாறு தீர்க்கங் கழிறின மொழிகுன் ரூவே
அன்னையின் குணத்தைச் சொல்வோரம் அன்புள மனத்த
[ளாகுந்
தன்மனங் கவடு மில்லாள் காற்றுமுன் கோபி யாவள்.

25. முற்பிறவித் தோஷம் விலகிய பிறகு இரு ஆண் குழந்தை களும் இரு பெண் குழந்தைகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ள வையாக இருக்கும். நாங்கள் கூறிய வாக்கியங்கள் பொய்யாகா. ஜாதகனுடைய தாயின் விவரங்களைக் கூறுகின்ரோம். தாய் அன் புள்ள மனத்தினள். வஞ்சனையில்லாத மனமுடையவள். கூறுவதற்கு முன் கோபம் கொள்ளும் இயல்பினள்.

26. வரன்மனம் போலே வாழ்வள்
மாதுவும் யோக சாலி
குறையென்ரோர்க் குதவி செய்வள்
கோதையுங் கன்னி யாகும்
பெரியதோர் குடும்பி யாவள்
பிழையது வொருவர்க் கெண்ணுள்
வருவோரை யாத ரிப்பள்
மறுவிடுஞ் சூலை ரோகம்.

26. தன் கணவனுடைய மனமறிந்து வாழ்ந்து வருவாள். அதிருஷ்டமுள்ளவள். துன்பமடைந்து சிறுமைப்பட்டவர்கட்கு உப

காரி. தாயே! இவள் கன்னியா லக்கினத்தில் பிறந்தவள் என்கிறோம். இவள் பெரிய குடும்பத்தையுடையவள். ஒருவருக்கும் தீங்குகளைச் செய்ய எண்ணுதவள். தன்னை யண்டி வந்தவர்களை ஆதரிப்பாள். சூலை நோய் உள்ளவள். (வயிற்று வலி உள்ளவள்).

தாயின் சகோதர பாவமும் முற்பிறவியும்

27. தன்துணை யாண்பா லொன்று
சத்திமார் நால்வ ராகுங்
கன்னிமா ரொருவர் தீர்க்கங்
கழறுவோம் பின்பால் சேதி
அன்னையின் பூர்வஞ் சொல்வேன்
அழகர்வாழ் பாண்டி கீழ்ப்பால்
சின்னவூர் தன்னி லேதான்
ஜனித்தனள் தியின் வம்சம்.

27. ஜாதகனுடைய தாய்க்கு ஒரு சகோதரனும் நான்கு சகோதரிகளும் உள்ளனர். ஆனால் அவர்களில் ஒரு சகோதரி மட்டுமே நீண்ட ஆயுள் உள்ளவள் என்கிறோம். அவர்களின் மற்ற செய்திகளை விவரமாகப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். தாயினுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். (கள்ள) அழகர் எழுந்தருளியிருக்கும் மதுரைக்குப் பக்கமாகக் கிழக்குத் திசையிலுள்ள ஒரு சிற்றூரில் வன்னியர் குலத்தவளாகப பிறந்தாள் என்று சொன்னோம்.

28. மாரனு மதலை யுண்டாய் விளங்கியே யிப்ப டிக்கு
நாரிக்கு வினைக ளின்றி நமன்பதி மாது சென்று
ஆரியன் வரையப் பட்டு அணுகினு ளிக்கு லத்தில்
கூறுவோ மிவள்பின் ஜன்மங் குடகினில் சேர நாட்டில்;

28. கணவனை யடைந்து புத்திர பாக்கியம் பெற்றுத் தீவினைகள் ஏதுமில்லாமல் மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் இக்குலத்தில் தோன்றினாள். தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம். மேற்குப் பக்கத்திலுள்ள சேர நாட்டில்;

தாயின் மறுபிறவி

29. உதிப்பளாம் வைச்யச் சேயா யுயர்வான குடும்பி யாகிச்
சுதர்களு மதிக முண்டாய்த் தொல்புவி வறுமை யின்றி
அதிபதி வாழ்வா ளாமே யறைந்தது தப்பா தாகும்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

29. வைசிய குலத்தவளாகப் பிறந்து உயர்ந்த குடும்பத்தைப் யடைந்து, புத்திர பாக்கியம் பெற்று, உலகில் தரித்திரமடையாமல்

வாழ்ந்து வருவாள். நாங்கள் நீர நன்றுகப் பார்த்துக் கூறியவை தவறு. கதியற்றவரைக் காக்கும் தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவி

30. தந்தையின் பூர்வந் தன்னைத் தானெடுத் தியம்பக்
[கேண்மோ
மூந்திய தலத்துக் கீழ்ப்பா லுயர்வான வூரி லேதான்
இந்ததோர் குலமு தித்து யாவர்க்கும் நல்லோ னுகி
வந்தவர்க் கன்ன மீந்து மறலியின் பதிக்குச் சென்று ;

30. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். ஒரு புண்ணிய ஸ்தலத்துக்குக் கிழக்கில் உள்ள ஒரு பெரிய ஊரில் இதே குலத்தில் பிறந்து எல்லோருக்கும் நல்லவனுக வாழ்ந்து வந்து தன்னையண்டிவந்தவர்களே ஆதரித்து அன்னமளித்து வந்து மரணமடைந்து;

தந்தையின் மறுபிறவி

31. சிரநான்கோன் வரையப் பட்டு ஜனித்தவ னிவனே
[யென்றேருஞ்
செந்தில்மா நகரந் தன்னில் மறைக்குல முதிப்பா னுகுந்
திருமக னிச்சென் மத்தில் ஜனபந்து பகையு மாயும்
பொருளது விச்சை யாயும் பொருமையு முடைய னுயும் ;

31. நான்கு தலைகளையுடைய பிரம தேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவன் ஜாதகனுடைய தந்தை என்று சொல்லுகின்றேரும். அவன் அடுத்த பிறவியில் செந்தில் மாநகரில் (திருச்செந்தூரில்) அந்தண குலத்தவனுகப் பிறப்பான் என்றேரும். ஜாதகனுடைய தந்தை இப் பிறவியில் தன் சுற்றத்தாரிடம் விரோதம் கொண்டும் (பிறர்) பொருளின்மீது ஆசை வைத்தும், பொருமையுடையவனுகவும்;

32. சொல்லது தவறுத லாயுஞ் சுதனுமே யிருந்து வந்தான்
நல்லதோர் சேது தன்னில் நான்மறைக் குலமெவ் வாறு
புல்குவீர் முனியே நீர்தாம் போற்றுவோர் தாயே கேளு
நல்லவர் நேச மாயும் நாதனர் பக்தி யாயும் ;

32. வாக்குகள் தவறி நடந்தும் இருந்து வந்தவனுகிய இவன் எங்ஙனம் அடுத்த பிறவியில் புண்ணிய தலமாகிய சேதுவில் (வுக்குப் பக்கத்தில் உள்ள திருச்செந்தூரில்) அந்தணர் குலத்தில் பிறப்பான். முனிவரே! சொல்லுங்கள். தாயே! நாங்கள் கூறுகின்றேரும். கேளுங்கள். அவன் இப் பிறவியில் நல்லவருடன் நட்புக்கொண்டிருந்து வந்ததாலும் சிவபெருமான் மீது பக்திகொண்டு வாழ்ந்து வந்ததாலும்;

தந்தையின் மரணகாலம்

33. சிலர்க்குவா பத்தைக் காத்துந்
தேறினேர்க் கன்ன மீந்துந்
தலவாசஞ் சென்ற புண்ணியஞ்
ஜனிப்பனு மறைக்கு லத்தில்
தலைவனின் கரும காலஞ்
சாற்றுவீர் முனியே நீர்தாம்
குலவுவான் முப்பான் ரண்டில்
கூற்றன்தன் பதிக்குத் தந்தை.

33. துன்பமுற்ற சிலருக்கு ஆபத்தைக் காத்து வந்ததாலும் பெரியோர்கட்கு அன்னமளித்து வந்ததாலும், பல புண்ணிய தலங்களுக்குச் சென்று வந்ததாலும், அந்தணர் குலத்தில் பிறப்பான் என்றேரும். ஜாதகனுடைய கர்ம காலத்தைச் சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். ஜாதகனுடைய முப்பத்திரண்டாம் வயதில் தந்தை இறப்பான்.

தாயின் மரணகாலமும் ஜாதகனுடைய வயதும்

34. முப்பது வைந்து வாண்டில் மேவுவா ளன்னை தானும்
செப்புவே னறுபா னெட்டில் சிம்மா தத்தி லேதான்
தப்பிதஞ் ஜாத கர்க்குச் சாற்றுவோ மார கங்கள்
மெய்ப்புட னிவன்பின் ஜன்மம் விளம்புவோங்
[கேட்டி டாயே.

34. ஜாதகன் தாய் அவனுடைய முப்பத்தைந்தாம் வயதில் மரண மடைவாள் என்றேரும். அவன் தனது அறுபத்தெட்டாம் வயதில் ஆவணி மாதத்தில் மரண மடைவான் என்றேரும், அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். கேளுங்கள்.

ஜாதகனுடைய மறுபிறவி

35. உத்தரம் வள்ளூர் தன்னில்
உதிப்பனுஞ் சைவச் சேயாய்
அத்திரி யிவ்வாறு கூற
அறைகுவார் பராசர் தாமும்
வெத்தியா யறுபா னெட்டு
விளம்புவீர் வயது தானுங்
குத்தமாய் நாற்ப தாண்டில்
கூறுவோங் கண்டந் தானே.

35. வடக்குப் பக்கத்திலுள்ள திருவள்ளூரில் சைவ குலத்தவனுகப் பிறப்பான் என்று அத்திரி முனிவர் கூறும்போது பராசர

முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுக்குத் திண்ணமாக அறுபத்தெட்டு வயது உண்டு என்று சொன்னீர்களே! எங்ஙனம்? ஜாதகனுடைய நாற்பதாம் வயதில் கண்டம் ஏற்படாதோ?

ஆயுர் பாவம்—கிரகநிலை

36. காரணம் யாது யென்னக் காரியு மேழில் தங்கத்
தீரமாய்ச் சுயபு குத்தி சேர்வதா லிதுவு மொன்று
சாரியாய் நாலோன் சக்கரஞ் சனியாக யிருப்பதாலே
கூறினேங் கண்ட மென்று குறுமுனி தடுத்துச்
[சொல்வார்.

36. என்ன காரணம் என்று சொல்லுங்கள் என்று வினவ, சனி ஏழாமிடத்தில் இருப்பதாலும், அவருடைய புக்தி சேர்வதாலும் அங்ஙனம் சொன்னேம். இஃது ஒன்று, ஜாதகனுக்கு நான்காவது தசை சனி தசையாக வருவதால் அவனுடைய தசையில் அவனுடைய புக்தியில் கண்டம் ஏற்படும் என்றோம். (இது தவிர வேறு ஒன்றும் சொல்லுகின்றோம். நான்காம் வீட்டுக்கு நான்காம் விடமாகிய கும்பத்தில் சனி இருப்பதால் நாங்கள் கண்டம் உண்டு என்றோம்.) அகத்திய முனிவர் தடுத்துச் சொல்லுகிறார்.

இதுவுமது

37. புந்தியு மிரண்டோ ஞகிப் பூமக னுடனே கூடி
விந்தையாய் நாலில் தங்க விதிகயறு தசைக்கா லத்தில்
அந்தகன் நாட்டைக் காண்பான் அதற்குமுன் னதேக
[துன்பம்
வந்திடும் நிவிர்த்தி யாகும் வயதுமே தீர்க்க மம்மா.

37. புதன் இரண்டாம் வீட்டுக் குரியவனுகிச் செவ்வாயுடன்கூடி நான்காமிடத்தில் இருப்பதால் ராகு மகாதசையில் கண்டம் ஏற்படும். இறந்து விடுவதுபோல் மிகுந்த கஷ்டத்தை அடைவான். ஆனால் அது நிவிர்த்தியாகும். நீண்ட வயதுண்டு.

(வெகுதான்ய வருஷம்) மனைவியின் மரண காலம்

38. அன்பது யேழு வாண்டில் அவன்மனை செல்வா ளாகும்
வந்தவன் யோகச் சேதி வறைகிறே மினிமே லாகத்
தன்தனங் கொடுக்கல் வாங்கல் சல்லியங் கொள்ளா லுகும்
விந்தையாய்ப் பூர்வம் ஒன்று மேவிடு முப்பான் ரண்டில்.

38. ஜாதகனுடைய ஐம்பத்தேழாம் வயதில் அவனுடைய மனைவி மரண மடைவாள். ஜாதகனுடைய யோகச் செய்திகளை இனிக் கூறுகின்றோம். தான் சம்பாதித்த பொருளைக் கொடுக்கல் வாங்கல் செய்வான். கடன் படாதவன். ஜாதகனுடைய முப்பத்திரண்டாம் வயதில் புதையல் ஒன்றும் கிட்டும்.

யோகபாவம்

39. கரித்தொழில் பிறைபோ லோங்குந்
தரணிக ளதிகஞ் சேர்க்கை
பெருமையும் புகழு மேற்பன்
பேசின முவ்வொன் பான்மேல்
பிறைபோலே செல்வ மோங்கும்
பலஜன வசிய மாகும்
உரைக்கிறே மேழா யிரம்பொன்
உத்தமன் கொள்வா னுகும்.

39. நெசவுத் தொழில் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளரும். விரோதிலங்களை அதிகம் சேர்ப்பான். பெருமையையும் புகழையும் அடைவான். ஜாதகனுடைய இருபத்தேழாம் வயதிற்குமேல் வளர் பிறைச் சந்திரனைப்போல் செல்வம் விருத்தியாகும். பல ஜனங்கள் நண்பர்களாகக் கூடுவர். மொத்தத்தில் ஏழாயிரம் பொன் சேர்ப்பான்.

இதுவுமது

40. ஆறஞ்சு மூன்று வாண்டில் அவன்துணை வேறுய்ச்
[செல்வான்
பாரினில் பாகம் நன்றுய்ப் பகருவோம் பால னுக்குப்
காரிழைத் துணைவி யாலே கலந்திடுஞ் சிலவே யென்றும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

40. ஜாதகனுடைய முப்பத்து மூன்றும் வயதில் சகோதரன் தனியாகச் செல்லுவான். பிற்பாகத்தில் விவரமாகக் கூறுகின்றோம். ஜாதகனுடைய மனைவியால் சில பொருள்கள் சேரும். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய ஜனனகால தசை

41. ஜாதகன் ஜனன காலஞ் சக்கரநா ளிரண்டாம் பாதம்
மேதினில் சேய்நா லாண்டு சொல்லுவோம் பலன
[யாங்கள்
ஓதுவோம் பின்பால் சேதி உரைத்தனம் பூர்வ பாகம்
மாதவர் தம்மைக் காக்கும் மங்கையே கேட்டி டாயே.

41. ஜாதகனுடைய ஜனன காலம் அவிட்ட நட்சத்திரம் இரண்டாம் பாதமாகும். அக்காலத்தில் அங்காரக மகாதசையில் செல்லு போக மீதி நான்கு வருடங்களாகும் மற்ற விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். இதுவரை முதல் பாகம் கூறினேம். தவம் செய்ப வரைக் காக்கும் தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 29

1. மதிதேஸில் கேது மானில் மங்கலன் பானு வீண
புதன்சனி ராகு நண்டில் புகர்சீயம் பொன்னேன்
[கோலில்
உதயமுஞ் சிம்ம மாக வுரைப்பீர்கள் பலனை யென்று
அதிபதி கேட்கும் போது வதிட்டருங் கூறு கின்றார்.

1. சந்திரன் விருச்சிகத்திலும், கேது மகரத்திலும், செவ்வாய் சூரியன் மிதுனத்திலும், புதன் சனி ராகு கடகத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும், குரு துலாத்திலும் இருந்து பிறந்த லக்கினம் சிம்மமாக இருப்பின் பலனைக் கூறுங்கள் என்று பார்வதி தேவி கேட்கும் போது வசிஷ்ட முனிவர் கூறுகின்றார்.

கிரகநிலை

			செவ்வாய் சூரியன்
	இராசி சக்கரம்		புதன் சனி ராகு
கேது			லக்கினம் சுக்கிரன்
	சந்திரன்	குரு	

ஜாதகனின் வீட்டு நிலை

2. இந்தசே யாணுஞ் ஜன்மம்
இல்லமும் வடதென் வீதி
முந்துமேல் வாச லாகும்
முனியுமே மேல்பால் தங்கும்
அந்தரி காளி யுத்தரம்
அரன்கோட்டம் மேல்பா லாகும்
தென்திசை நதியு முண்டு
திருமாலுங் கீழ்ப்பால் தங்கும்.

2. இஃது ஆண் மகனின் ஜாதகம். பிறந்த வீடு தெற்கு வடக்கான தெருவில் மேற்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. மேற்குப் பக்கத்தில் முனியாண்டவர் கோவில் இருக்கும். மாரியம்மன் கோவிலும் காளி கோவிலும் வடக்குப் பக்கத்தில் உள்ளன. மேற்குப் பக்கத்தில் சிவபெருமான் ஆலயம் ஒன்றுண்டு. தெற்குப் பக்கத்தில் ஒரு நதி ஓடும். கிழக்குப் பக்கத்தில் திருமாலின் ஆலயம் ஒன்றுளது.

3. இன்னமும் பலதே வாசம்
இலகிய சமவூர் தன்னில்
கந்தன்தன் னடிமை வர்க்கங்
காப்பானும் நான்காஞ் ஜன்மந்
தந்தைதாய்த் துணைவர் யோகந்
தன்மனை புத்திர யோகம்
வந்தவர் முன்பின் ஜன்ம
மறைகிறே மிந்நூல் தன்னில்.

3. இன்னும் பல தெய்வங்கள் கோயில் கொண்டுள்ள சமஸ்தலத்துள்ள ஓர் ஊரில் இந்த ஜாதகன் செங்குந்த மரபினனாகப் பிறந்தான். இவன் தன் தந்தைக்கு நான்காமவனாகத் தோன்றியவன். இவனுடைய தாய் தந்தை, உடன் பிறந்தவர், மனைவி, புத்திரர்கள் இவர்களுடைய யோகங்களையும் முற்பிறவி, மறுபிறவி, ஆகிய இவற்றையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றோம்.

வேறு

தந்தையின் சகோதரபாவமும் குணங்களும்

4. தந்தைதுணை யிருநான்கி லாண்பா லிரண்டு
சாற்றுகின்றோம் பெண்மூன்று ஜனனமாகும்
பிந்தியுமே சிலமாது சேத மெய்தும்
பெரிதாண்டு மொன்றாகக் கூடி வாழ்வர்
அந்தவர்கள் சேதிபின்பா லறிவிப் போம்யாம்
அறைகின்றோம் பிதாகுணத்தை யிருநி றத்தான்
சிந்தையது கவடில்லான் ஈகை வாளஞ்
சீலத்தொழில் மிகவேதான் செய்வா னாகும்.

4. ஜாதகனுடைய சகோதரர் எட்டுப்பேரில் இரு சகோதரரும் மூன்று சகோதரிகளும் நிலையானவர் என்றோம். மற்றும் தோன்றுபவர்கள் இறந்து விடுவார் என்றோம். அவர்கள் வெகுகாலம்மாக ஒன்றாகக் கூடி வாழ்ந்து வருவார்கள். அவர்களுடைய விவரங்களை நாங்கள் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். இப்போது ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கூறுகின்றோம். அவன் கருமை கலந்த சிவந்த நிறமுடையவன். மனத்தில் வஞ்சனை எல்லாதவன். கொடையாளி. நெசவுத் தொழிலை மிக்க மேன்மையாகச் செய்து வருவான் என்று கூறுகின்றோம்.

வேறு

5. பண்டுநாள் பூமி யில்லான் பருத்திடும் பூமி பின்னுள்
குண்டைகோ விருத்தி யுண்டு குத்திர வார்த்தை கூறுன்
தண்டமிழ் நூணுக்கந் தேறுன் சாந்தவா னூகை சாலி
முண்டக ரேகை யுண்டு வுலகினில் நல்லோ னுவன்.

5. பிதுரார்ஜிதமான பூமிகள் இல்லாதவன். பிற்காலத்தில் பூமி விருத்தியாகும். பசு எருது முதலியன அதிகமாயுள்ளவன். குதர்க்கமாகப் பேசாதவன். தமிழ் மொழியில் உள்ள நூட்பங்களை அறியாதவன். சாந்தமுடையவன். ஊகமுள்ளவன். கையில் பத்மரேகையுள்ளவன். உலகில் நல்லவன் என்ற பெயருடையவன்.

6. ஆபத்தைச் சிலர்க்குக் காப்பன்
அறுமுகன் பக்தி பூண்பன்
பாவத்தில் மனஞ்செல் லாதான்
பணையேர்கள் காலா ளுள்ளான்
தீபம்போல் பந்துக் கட்குச்
சித்திர வில்லஞ் செய்வன்
மேவுவான் தலவா சங்கள்
வீண்பழி யேற்கா னுமே.

6. சிலருக்கு ஏற்பட்ட ஆபத்தை விலக்குவான். முருகக் கடவுள்மீது பக்தி யுடையவன். பாவச் செயல்களின்மீது மனம் வையாதவன். பண்ணை, ஏர், முதலியனவும் ஏவலாட்களும் உள்ளவன். தன் சுற்றத்தாருக்கு ஒரு தீபம்போல் பிரகாசமாக இருப்பான். அழகிய வீடு ஒன்றைக் கட்டுவான். பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லுவான். வீண் அபவாதங்களை அடையாதவன்.

7. போஜனச் சுகிய னுகும் பொய்யது வழுத்தா நெஞ்சங்
காசுமே லாசை யுண்டு காவுகள் செய்வா னுகுந்
தூசுபோல் மனத்த னுகுந் தொல்லையு மில்லா னுகும்
நேசங்க ளதிகஞ் செய்வன் நேரிழை தன்னுல் யோகம்.

7. சுகமாகச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவன். பொய் பேசாதவன். பணம், காசுகளின்மீது ஆசை யுடையவன். காவுகள் செய்வான். தூய்மையான மனத்தினன். துன்பங்க ளில்லாதவன். எல்லோரிடமும் நட்புக் கொள்ளுவான். தன் மனைவியால் அதிருஷ்டம் உள்ளவன்.

ஜாதகனுடைய சகோதரனின் செய்திகள்

8. சொல்லிய குணத்தா னுக்குச்
சுதனுமே வுதிப்பா ஞகும்
வல்லவன் தூணமுன் ஞண்பா
லறைகிறே மொருவர் தீர்க்கம்
நில்லாவே மற்ற வெல்லாம்
நிகழ்த்துவோ மவன்தன் சேதி
மல்லின்முன் செல்லா ஞகும்
மறுஜன்மங் காண னென்றேரும்.

8. இவ்விதம் கூறப்பட்ட குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான் என்றேரும். இவனுக்கு முன் பிறந்தவர்களில் சகோதரன் ஒருவன் உண்டு என்றேரும். அவன் நீண்ட ஆயுளுள்ளவன் என்றும் கூறுகின்றேரும். மற்றும் உடன்பிறந்தவர் நிலையார். அவனுடைய செய்தியைக் கூறுகின்றேரும். சண்டைக்கு முன்னே செல்லாதவன். மறுபிறப்பில்லாதவன்.

இதுவுமது

9. சுயத்தொழில் செய்வா ஞமே சுந்தர முடைய ஞகும்
பயமுள மனத்தா ஞகும் பாரினில் வறுமை காணன்
நயமுள வார்த்தை சொல்வான் நாயகி யொன்றே தீர்க்கந்
தயையுள சுதராண் ரெண்டு சத்தியு மூன்று வென்றேரும்.

9. அவன் தன் சொந்தத்தொழிலாகிய நெசவுத்தொழிலைச்செய்து வருவான் என்றேரும். அழகுடையவன். பயந்த சுபாவம் உள்ளவன். உலகில் வறுமையடையாதவன். இன்பமாகவே பேசுபவன். மனைவி யொருத்தியே நீண்ட ஆயுள் உள்ளவள். அழகிய இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் பிறந்து வாழ்வர் என்றேரும்.

10. உடன்கூடி வாழ்வா ஞகும் உத்தமன் வயது தீர்க்கந்
தடபுடல் செய்கை யுண்டு சண்முகன் பக்தி பூண்பன்
கடன்கொடான் இரக்க மில்லான் கனத்தபுத் திகளு
[மேற்பன்
படைதனில் செல்லா ஞகும் பார்வதி கேட்டி டாயே.

10. அவன் ஜாதகனுடன் சேர்ந்து வாழ்ந்து வருவான் என்றேரும். அவனும் நீண்ட ஆயுள் உள்ளவன். ஆடம்பரச் செய்கையுள்ளவன். முருகக் கடவுள்மீது பக்தியுடையவன். பிறருக்குக் கடன் கொடுக்காதவன். இரக்கம் கொள்ளும் மனமில்லாதவன். பெரிய புத்திசாலி. போருக்குச் செல்லாதவன். தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய குணங்கள்

11. பாலகன் குணத்தைக் கேளாய்ப் பஞ்சைப்போ
[லுணச்சல் தேகி
சீலமாஞ் சமமாங் கல்வி தேறின புத்தி யுண்டு
காலத்தை யறிந்து ரைப்பன் கட்டுவார்த் தைகள்
[சொல்வன்
வேல்விழி மார்கள் மோகன் வெஞ்சின முடைய னுமே.

11. இனி ஜாதகனுடைய குணத்தைக் கேளுங்கள். மிகவும் மெல்லியதான சரீரத்தையுடையவன். நல்லொழுக்கமுள்ளவன். சம மான கல்வியறிவுள்ளவன். முதிர்ந்த அறிவாளி. வருங்காலத்தை அறிந்துசொல்லக் கூடியவன். வார்த்தைகளைப் புனைந்து பேசுவதில் விருப்பமுடையவன். பெண்கள்மீது மையல் கொள்ளுபவன். கோபிஷ்டன்.

12. தன்தொழி லறிவா னுகுந்
தந்தையார் ஜிதங்கள் விருத்தி
அன்னிய ருறவு கொள்வன்
அணுகிடு மாமி ரண்டு
உன்னத வழிகள் தன்னில்
உண்மையா மென்று சொன்னேம்
பன்னியே பெருவயி ரூனப்
போற்றியே வாழ்வான் தாயே.

12. தன் தொழிலில் உள்ள நுணுக்கங்களை நன்குக அறிந்தவன். தன் தந்தையால் தேடப்பட்ட பொருளை விருத்தி செய்வான். பிற ருடன் நட்புக்கொள்ளுவான். இரு மனைவியரைப் பெற்றவன். உயர்ந்த நோக்கங்களுள்ள வழியில் செல்லுவான். உண்மையுள்ள மனத்தினன். பெரிய வயிற்றையுடைய விநாயகக் கடவுளை வணங்கி வாழ்வான். தேவியே! கேளுங்கள்.

13. சல்லியங் கொள்ளா னுகுந்
தனயன்சொல் லடுத்து வாழ்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான்
இருவித வார்த்தை சொல்வன்
நல்லவ ரவர்க ளாலே
நாட்டினில் புகழு மேற்பன்
எல்லைகள் சேர்ப்பா னுகும்
எய்திடும் நாபிச் சூடு.

13. கடன் படாதவன். தன் சகோதரன் சொற்படி கேட்டு வாழ்ந்து வருவான். யாசித்தவருக்கு இல்லை யென்று கூறுதவன். இருவித மாகவும் பேசுபவன். அவன் நல்லவர்களால் உலகில் கீர்த்தியை யடைவான். பூமிகளை அதிகமாக வாங்குவான். நாமிச்சூட்டு நோயுள்ளவன்.

ஜாதகனது திருமணக்காலம்

14. பாரியு மீரெட் டாண்டுள் பரவிடு முள்ளூர் தன்னில்
நாரியின் குணத்தைச் சொல்வேன் நயம்படக் கூறு [வாளாங்
காரியச் சமர்த்த ளாகுங் கடந்தோர்க்கு வன்ன மீவள்
கூறுமுன் கோபி யாகுங் கோதைக்கு அன்னை ரண்டு.

14. ஜாதகனுக்கு அவனுடைய பதினேறும் வயதுக்குள் உள்ளூரி லிருந்தே மனைவி வாய்ப்பாள். அவளுடைய குணத்தைக் கூறுகின் றேம். அவள் இனிமையாகப் பேசுபவள். காரியங்களைச் செய்வதில் சாமர்த்திய முடையவள். துறவிகட்கு அன்ன மளிப்பவள். சொல்லுவ தற்கு முன்பாகவே கோபம் கொள்ளுவாள். இருதாய்மாரைப் பெற்றவள்.

15. வறுமைக ளடையா ளாகு மாதுநன் னடக்கை யுண்டு
குறையென்றோர்க் குதவி செய்வள் கோதைக்கு வயது [தீர்க்கம்
பராசரும் தடுத்துச் சொல்வார் பெருகாது முதல்ம [னைதான்
இருமனை யணுகு மென்றேம் எப்படிச் சொல்லு மென்ன ;

15. தரித்திரமடையாதவள். நன்னடத்தையுள்ளவள். துன்ப மடைந்தவர்கட்கு உபகாரம் செய்பவள். நீண்ட ஆயுள் உள்ளவள். பராசர முனிவர் மறுத்துச் சொல்லுகிறார். ஜாதகனுக்கு முதல் மனைவி நிலையில்லாதவள். அவனுக்கு இருமனைவியர் உண்டு என்று கூறுகின் றேம். எவ்விதம் ஏற்படும் என்று கூறுங்கள், என்று வினவ ;

இருதாரம் : கிரகநிலை

16. சத்தமஞ் சனியே யாகித் தனத்துளோன் பணியுங் கூடி
குத்தமா யீரா றில்தான் குலவிடஞ் சரமே யாக
இத்தகைப் பலத்தி னாலே இருதார மென்று சொன்னேம்
வித்தகர் மறுத்துச் சொல்வார் வெண்மதி நாலில் தங்க ;

16. ஏழாம் வீட்டுக்குரியவன் சனியாகி, அவனுடன் (குடும்ப ஸ்தானத்துக்குரிய) புதனும் ராகுவும் கூட விரயஸ்தானத்தில் இருப்ப தாலும், அவ்விடம் சரஸ்தானமாக இருக்கும் பலத்தாலும் ஜாதகனுக்கு இருமனைவியர் என்று சொல்லுகின்றேம். முனிவர் தடுத்துச் சொல்லு கின்றார். சந்திரன் நாலில் இருப்பதாலும் ;

17. அதற்கேழோன் ஐன்மந் தங்க அணுகாரே தாரம் ரண்டு
இதற்குநேர் தந்தை வர்க்கம் எய்திடுந் தாரம் ரண்டு
அதிபதி மனைவி வர்க்கம் வகுக்கின்றேந் தாரம் ரண்டு
சதியிலாப் பால னுக்குச் சாற்றெணு வந்த வார்த்தை.

17. அவனிருக்குமிடத்துக்கு ஏழாமிடத்துக்குரிய சுக்கிரன் லக்கினத்தில் இருப்பதால் ஜாதகனுக்கு இரு மனைவியர் ஏற்பட நியாயமில்லை. ஆனால் இவனுடைய தந்தை வர்க்கத்தினருக்கு இரு மனைவியர் ஏற்படுவர். இது தவிர ஜாதகனுடைய மனைவியின் வர்க்கத்தினருக்கும் (சகோதரர் முதலானவர்) இரு மனைவியர் ஏற்படலாம். ஆனால் தீங்குகளில்லாத ஜாதகனுக்கு அவ்விதம் கூறக் கிரகபலமில்லை.

ஜாதகனுடைய புத்திரபாவம்

18. சுதர்களு மெழுவர் தோன்றுஞ் சோர்வுறுஞ் சிலவே
[யென்றேரும்
சதமூடன் ஞண்பால் மூன்று தையலு மிரண்டு யென்றேரும்
முதல்சுதர் தோஷ மெய்து முரைக்கின்றேரும் பால னுக்கு
அதிதியை வைத்தா தரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

18. ஜாதகனுக்கு ஏழு புத்திரர்கள் தோன்றுவர் என்றேரும். அவர்களில் சிலர் இறந்து விடுவார். இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். முதலில் தோன்றும் குழந்தை நிலையாது. கதியற்றவரைக் காக்கும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய முற்பிறவி

19. ஜாதகன் மூன்ஜன் மத்தைச் சாற்றுவோ மூத்துக்
[காட்டில்
கோதிலாத் தீயின் வம்சங் குதித்தனன் நெசவுச் சேயாய்
மேதினில் மனைவி மைந்தர் விளங்கியே வாழு நாளில்
தீதாக வந்த வூழைச் செப்புவோந் தாயே கேளு.

19. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். ஊத்துக்காட்டில் குற்றங்களில்லாத வன்னிய வம்சத்தில் பிறந்து நெசவுத் தொழிலைச் செய்து வந்தான். அவன் உலகில் மனைவி மக்களை யடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் தீம்பாக வந்த வினையைச் சொல்லுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

தீபத்துக்குக் கொடுத்த எண்ணையை மறைத்தது

20. குறைதலைக் கோட்டந் தன்னில் குமரனு மூழியம் பார்த்து
வருகிற காலந் தன்னில் மனத்தினில் கவடு கொண்டு
குறைத்தனன் தீபந் தன்னைக் கூறுவோ மின்னு
[மொன்று
நிறைமன மாக வாவின் நெய்தனை யொருவர் தந்து;

20. ஜாதகன் முற்பிறவியில் மாரியம்மன் கோவிலில் வேலை செய்துவரும் காலத்தில் மனத்தில் தீய எண்ணங்களுடன் தீபம் ஏற்றுவதற்குரிய எண்ணெயைக் குறைத்துவிட்டான். இது தவிர வேறு ஒன்று கூறுகின்றோம். நிறைந்த மனத்துடன் ஒருவர் பசுவின் நெய்யைக் கொடுத்து;

தீபத்துக்குக் கொடுத்த நெய்யைச் சொந்த உபயோகஞ் செய்தது

21. சத்தியின் முன்பாய்த் தீபஞ் சாற்றுவா யென்று
[சொன்னர்
வித்தகன் ஆவின் நெய்யை விளக்கது வைக்கா மல்தான்
சுத்தினன் இல்லத் திற்குச் சூழ்ந்தது வதுவோர் தோஷம்
பத்தினி பிராம ணப்பெண் பேரினில் லகுவாய்க் குற்றம்;

21. தெய்வத்துக்கு முன்பாகத் தீபத்தை ஏற்று என்று கூறிக் கொடுத்த பசுவின் நெய்யை இவன் தீபம் ஏற்ற வைத்துக்கொள்ளாமல் தன் சொந்த உபயோகத்துக்காக வீட்டுக்கு எடுத்துச் சென்றான். அதுவும் ஒரு தோஷமாயிற்று. அந்தணர் குலத்தில் தோன்றிய கற்புள்ள பெண் ஒருத்தியின்மீது பலவிதமான குற்றங்களை அலட்சியமாக;

அந்தணப் பெண்ணின்மீது குறை சொல்லல்

22. சொல்லினி னிந்தப் பாலன் தோகையும் வருத்த முற்றுப்
புல்குவாய் மறுஜன் மத்தில் பெண்துணைத் தோஷ மாகும்
நில்லாது முதலில் புத்திரர் நுகர்ந்தன ளந்த மாது
அல்லல்க ளந்தி யத்தில் அணுகியே மரண மாகி;

22. இந்த ஜாதகன் கூறினான். அந்தணப் பெண்ணும் மனம் வருந்தி சாபமிடுகிறாள். நீ அடுத்த பிறவி யெடுத்து, அப்போது சகோதரிக்குத் தோஷம் ஏற்பட்டு, முதலில் தோன்றும் புத்திரர் நிலையாமல் வாழ்வாய் என்று சொல்லிவிட்டுச் சென்றாள். ஜாதகனும் தன் கடைசிக் காலத்தில் துன்பங்கள் பலவற்றையடைந்து மரணமடைந்து;

23. வந்தவ னிவனே யென்றும் மறைமாது சாபந் தானுந்
தன்துணைப் பெண் பால் தோஷம் தங்கிடு மாரி குற்றம்
உன்னத விழிக்குக் குற்றம் உரைப்பீர்க ளெந்தக்
[காலம்
அந்தாண்டின் முதலே யாக அணுகிடும் பால னுக்கு.

23. இப்பிறவியில் பிறந்தவன் என்றும். அந்தணப்பெண் கூறிய சாபத்தால் சகோதரிக்குத் தோஷ முண்டாகும். மாரியம்மனுக்குச் செய்த தீவினையால் கண் பார்வை குற்றமாகும். அஃது எந்தக் காலத்தில் ஏற்படும் என்று கூறுங்கள். ஜாதகன் ஐந்தாம் வயது முதல் பார்வையை இழப்பான் என்றும்.

சாந்தி

24. வினையது நிவிர்த்தி செய்ய விளம்புவீர் சாந்தி தானுந்
தனையனு மவ்வூர் சென்று சத்திக்கு வபிஷே கித்துக்
கனமூள மலரைக் கொய்து காதலி தனக்குச் சாத்தி
அனையவே தீப மொன்று அயத்தினுல் செய்து வைக்க ;

24. தீவினைகள் நீங்கச் சாந்தியொன்று கூறுங்கள் என்று வினவ, பதில் சொல்லுகின்றார். ஜாதகனும் அவ்வூருக்குச் சென்று மாரியம்மனுக்கு அபிஷேகம் செய்து நல்ல புஷ்பங்கள் பல எடுத்து வந்து அம்மனுக்குப் பக்தியுடன் சாத்தி, இரும்பால் அணையா விளக்கு (தூங்கா விளக்கு) ஒன்று செய்து வைத்தானுகில் ;

அந்தணப்பெண்ணிட்ட சாபத்திற்குச் சாந்தியில்லை

25. சோதியின் குற்றம் நீங்கும் தோகையின் சாபத் திற்கு
ஒதவே மாட்டோம் யாங்கள் உரைத்தது போலே நேரும்
மாதுரு குணத்தைச் சொல்வேன் மாஞ்சிவப் புடைய
[ளாகுங்
காதலி யில்லந் தெற்குக் கபடுமே கொஞ்ச முண்டு.

25. கண்களில் ஏற்பட்ட தோஷம் நீங்கும். பெண்ணின் சாபம் தீர நாங்கள் சாந்தி கூறவேமாட்டோம் அவள் சொல்லியபடியே நேரிடும். ஜாதகனுடைய தாயின் குணத்தைக் கூறுகின்றோம். அவள் மாநிற முடையவள். அவளுடைய வீடு தெற்குப் பக்கத்தில் உள்ளது. மனத்தில் சிறிது வஞ்சனை யுடையவள்.

தாயின் குணங்கள்

26. புத்திமான் பொறுமை சாலி புண்ணிய மனத்த ளாகும்
குத்தமில் லாதா ளென்றோம் குணமது நல்ல தாகும்
சுத்தமு முடையா ளாகும் துணையாண்பா லொன்றே
[தீர்க்கம்
வித்தகி யவ்வா றாகு மேவிடும் பித்தச் சூடு.

26. புத்திசாலி. பொறுமையுடையவள். நல்லெண்ணம் பொருந்திய மனத்தினள். குற்றங்களில்லாதவள். நல்ல குணசாலி. சுத்தமானவள். ஒரே உடன்பிறந்தவனை உடையவள். சகோதரியும் ஒருத்தியே யாவள். பித்தச்சூட்டு நோயுள்ளவள்.

தாயின் முற்பிறவி

27. மாதுரு பூர்வந் தன்னை யறைகிறோ முனியே கேளு
மேதினி லவ்வூர் கீழ்ப்பால் விளங்கினுள் தீயின் வம்சங்
கோதைக்கு மதலை யுண்டாய்க் குவலயம் நல்லோ ளாகித்
தீதிலா வாழு நாளில் தும்பியின் கோஷ்டத் துக்கு ;

27. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைக் கூறுகின்றேம். முனிவரே! கேளுங்கள். அவள் ஊருக்குக் கிழக்கில் வன்னிய குலத்தில் பிறந்தாள் என்றேம். அவள் புத்திர பாக்கியமடைந்து உலகில் நல்லவளாக வாழ்ந்து, தீமைகளில்லாமல் இருந்து, விநாயகரின் ஆலயத்துக்கு;

விநாயகர் ஆலயத்தில் தீபம் வைத்தது

28. திபமு மொன்று வைத்துத் தேவியுஞ் சுகமாய் வாழந்து
பாவத்தில் மனம்வை யாமல் பரங்களுக் கன்ன மீந்து
தாவினுள் கால ளடு சதுர்முகன் வரையப் பட்டுப்
பாவையு மிக்கு லத்தில் பரவினுள் என்று சொல்வோம்.

28. தீப கைங்கர்யம் செய்து சௌக்கியமாக வாழ்ந்து வந்து, தீச் செயல்களில் மனம் வைக்காமல் துறவிகட் கன்னமளித்து வந்து மரண மடைந்தாள். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் இக்குலத்தில் பிறந்தாள் என்று சொல்லுகின்றேம்.

தாயின் மறுபிறவி

29. முன்ஜன்ம மதிப்பு புண்ணிய
மொழிகின்றேம் ஆண்பால் ரண்டு
தன்சுதர் விருத்தி யென்றேந்
தரணியில் வறுமை காணுள்
பின்ஜன்மந் தணிகைக் கீழ்ப்பால்
பிறப்பளாம் ரெட்டி வம்சம்
உன்னத வரனைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

29. முற்பிறவியில் செய்த தீப கைங்கர்யத்தின் புண்ணியத்தால் இரு புத்திரர்கள் பிறந்து வளர்வார்கள். உலகில் வறுமையை யடையாத வள் என்றேம். மறுபிறவியில் திருத்தணிக்குக் கிழக்கில் ரெட்டியார் மரபில் பிறந்து வாழ்வாள். உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவி

30. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் தக்கோல மருகில் [கீழ்ப்பால்
வந்தனன் ரெட்டி வம்ச மதிதிகட் கன்ன மீந்து
விந்தையாய்ச் சிருஷி செய்து மேதினில் நல்லோ ஞக
அந்தகன் பக்கல் சென்று அயனுமே வரையப் பட்டு;

30. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின் றேம். தக்கோலத்துக் கருகில் உள்ள ஊரில் கிழக்கில் ரெட்டியார்

மரபில் பிறந்து துறவிகட்கன்ன மளித்து வந்து, அதிசயமாக விவசாயம் செய்து வந்து உலகில் நல்லவனுக வாழ்ந்து மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு;

தந்தையின் மறுபிறவி

31. பிறந்த னென்று சொல்வோம் பூமியில் வறுமை காணுன்
மறுஜன்மம் வேங்க டத்துள் வருவனும் சைவச் சேயாய்
அறைகிறேங் கரும காலம் ஆறஞ்சு வாண்டு தன்னில்
திருமகன் தந்தை கண்டஞ் சிகிதசை சுயமாம் புத்தி.

31. இப்பிறவியில் பிறந்தான் என்றேரும். அவன் உலகில் தரித்திரமடையாதவன். அவன் மறுபிறவியில் திருப்பதியில் சைவ குலத்தவனுகப் பிறப்பான் என்றேரும். இவர்களுடைய இறுதிக் காலத்தைச் சொல்லுகின்றேரும். ஜாதகனுடைய முப்பதாம் வயதில் தந்தை மரண மடைவான். அப்போது கேது மகா தசையில் கேது புக்தி நடைபெறும்.

தாயின் மரணகாலம்

32. நேரிடு மென்று சொல்வோம் நிகழ்த்துவோ [மதன்பின் னுக
ஆரூறு விரண்டு வாண்டில் அன்னைக்குக் கண்ட மெய்தும்
நீர்புகர் தசைக்கா லத்தில் நிகர்சுய புத்தி யாகும்
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

32. என்று சொல்லுகின்றேரும். அதற்குப் பிறகு அவனுடைய முப்பத்தெட்டாம் வயதில் தாய் மரண மடைவாள் என்றேரும். அப் போது சுக்கிர மகா தசையில் சுக்கிரபுக்தி நடைபெறும். உலகில் தவங்கள் செய்யும் தேவியாகிய பார்வதியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய மரணகாலம்

33. அன்பது வெட்டு வாண்டில் ஆனிமா தத்தி லேதான்
இன்னவ னுடல மேகு மியம்புவோ மிவன்பின் ஜன்மம்
அந்நகர் தன்னி லேதான் அருளுவான் வைசியச் சேயாய்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

33. ஜாதகன் தன் ஐம்பத்தெட்டாம் வயதில் ஆனி மாதத்தில் மரணமடைவான். இவனுடைய மறுபிறவியில் உள்ளூரிலேயே வைசியர் குலத்தவனுகப் பிறப்பான். உயர்ந்த யானைமுகக் கடவுளைப்பெற்ற தேவியே! கேளுங்கள்.

34. பாலகன் குடும்பச் சேதி பகருவோ மினிமே லாகச்
சாலவே யிருப தாண்டில் தன்பிதா துணைவர் வேறாய்
ஏலவே பாக மூன்றாய் எய்திடு மென்று சொல்வோம்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைந்தவை தப்பா வாமே.

34. ஜாதகனுடைய குடும்ப விவரங்களை இனிக் கூறுகின்றோம். அவனுடைய இருபதாம் வயதில் தந்தையின் சகோதரர் பிரிந்து போவார். அவர்களின் ஆஸ்தி மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படும் என்று சொல்லுகின்றோம். கொடிய விஷத்தையுண்ட நீலகண்டனின் தேவியே! நாங்கள் கூறியவை தவறு.

பொது யோகம்

35. இன்னமும் யோகஞ் சொல்வே னிறங்குநாள் முதலே யாக
அன்னவன் மரண மட்டும் அம்புலி போலே யோகம்
தந்தைமேல் வாழ்வா னுகுந் தனம்பூமி யதிகஞ் சேர்ப்பன்
மூன்துணை நாற்ப தாண்டில் வேறுவ னென்று
[சொன்னேம்.

35. ஜாதகனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றோம். பிறந்தது முதல் மரணமடையும்வரையும் வளர்பிறைச்சந்திரன் போல் யோகம் பெருகும். அவன் தன் தந்தைக்கு மேல் யோகவானாக வாழ்ந்து வருவான். பெரிய செல்வம் பூமி இவைகளை அதிகம் அடைவான். ஜாதகனுடைய மூத்த சகோதரன் நாற்பதாம் வயதில் வேறுகச் சென்று விடுவான் என்றோம்.

சாமரையோகம்: கிரகநிலை

36. ஜாதகன் யோக மெவ்வாறு சாற்றினீர் விவரஞ் சொல்வீர்
ஆதவன் சேயும் லாபம் அசுரனுஞ் ஜன்மந் தங்க
மாதவன் சேயைப் பார்க்க வறைந்தனஞ் சாமரை
[யோகம்
மேதினில் புகழு மேற்பன் வித்தகி கேட்டி டாயே.

36. ஜாதகனுக்கு யோகம் ஏற்படும் என்று எவ்விதம் சொன்னீர்? விவரமாகக் கூறுங்கள். சூரியனும் செவ்வாயும் லாபஸ்தானத்தில் இருப்பதாலும் சுக்கிரன் ஜன்ம லக்கினத்தில் இருப்பதாலும் புதன் செவ்வாயைப் பார்ப்பதாலும் சாமரையோகம் ஏற்படும். உலகில் கீர்த்தியையடைவான். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய ஜனனகால தசை

37. அன்னவன் ஜனன கால மனுடத்தி லிரண்டாம் பாதம்
துன்சனி யீரு ரண்டு திங்களுந் தசமே யாகும்
முன்பாகம் புகன்றோம் யாங்கள் மொழிகின்றோம்
[பின்பால் சேதி
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

37. ஜாதகனுடைய ஜனன காலம் அனுஷத்தில் இரண்டாம் பாதம் என்றோம். அக்காலத்தில் சனி மகாதசையில் பாக்கி பன்னிரண்டு வருடங்களும் பத்து மாதங்களுமாகும். இது வரை முதல் பாகத்தைச் சொன்னேம். தாயே! மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். உயர்ந்த கணவனைப் பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜாதகம் 30

1. அரியது வுதய மாக அரவுமே ஜன்மந் தங்கக்
கரியவன் நாலி லாகக் கேதுவு மேழி லாகக்
குருபுதன் மதிசே யெட்டில் குருடனுந் தசத்தி லாகப்
பரிதியு மேட மாகப் பகருவீர் பலனை யென்று;

1. சிம்மம் லக்கின மாகவும், ராகு லக்கினத்திலும், சனி நான்காமிட மாகிய விருச்சிகத்திலும், கேது ஏழாமிடமாகிய கும்பத்திலும், குரு, புதன், சந்திரன் எட்டாமிடமாகிய் மீனத்திலும் சுக்கிரன் பத்தாமிடமாகிய விருஷபத்திலும், சூரியன் மேஷத்திலும் இருந்தால் பலனைச் சொல்லுங்கள் என்று;

கிரகநிலை

குரு புதன் சந்திரன் செவ்வாய்	சூரியன்	சுக்கிரன்	
கேது	இராசி சக்கரம்		
			லக்கினம் ராகு
	சனி		

ஜாதகனின் வீட்டின் அமைப்பு

2. சுந்தரி கேட்கும் போது சயமுனி கூறு கின்றார்
இந்தசே யாணுஞ் ஜன்மம் இல்லமும் கீழ்மேல் வீதி
தென்வாடை மாயோ னீசன் சிங்கவா கனத்தாள்
[மேல்பால்
நன்னதி தென்பா லாகும் நாட்டிய சிறுவூர் தன்னில்;

2. பார்வதி தேவி கேட்கும்பொது ஜயமுனிவர் பதில் சொல்லு கின்றார். இஃது ஆண் மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு வரிசையிலுள்ளது. மேற்குப் பக்கத்தில் திருமாலின் ஆலயமும், சிவபெருமான் கோவிலும் சிங்கத்தை வாகனமாகவுடைய காளி கோவிலும் உள்ளன. தெற்குப் பக்கத்தில் ஒரு புண்ணிய ஆறு ஓடும். இங்ஙனம் உள்ளதொரு சிறு ஊரில்;

3. பாலகன் சேட்ட னைப்பகருவோ மிவனின் யோகஞ்
சாலவே யன்னை தந்தை சகோதர களத்திர புத்திரர்
ஏலவே முன்பின் ஜன்ம மியம்புவோ மிந்நூல் தன்னில்
ஆலத்தை யுண்டான் தேவி யறிவிப்போம் பிதாகு
[ணத்தை.

3. ஜாதகன் தன் தந்தைக்கு மூத்த புதல்வனுகப் பிறந்தவன். இவனுடைய யோகத்தையும், தாய்தந்தையரின் யோகத்தையும் உடன் பிறந்தவர், மனைவி, மக்கள், இவர்களின் யோகத்தையும் முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேரும். விஷத்தையுண்ட நீலகண்டனின் தேவியே ! நாங்கள் ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கூறுகின்றேரும்.

ஜாதகனுடைய தந்தையின் உட்ன் பிறந்தவர்

4. தந்தையின் துணையாண் காணன் சத்தியு மொன்று
[மாகும்
பிந்தியுஞ் சேத மெய்தும் பிதாவுமே தனிய னுவன்
அந்தவன் சேதி சொல்வேன் அரிநிறம் பித்த தேகி
கந்தனைப் போற்றிச் செய்வன் கல்வியும் லாப மாகும்.

4. ஜாதகனுடைய தந்தைக்கு உடன் பிறந்த சகோதரரில்லை. சகோதரி ஒருத்தியே உண்டு. அவளும் பிற்காலத்தில் இறந்து விடுவாள். தந்தை தனியனுக வாழ்ந்து வருவான். அவனுடைய செய்திகளைக் கூறுகின்றேரும். கரியநிறமுடையவள். பித்த சரீரி. முருகக்கடவுளிடம் பக்தி கொண்டு துதிப்பான். கல்வி யறிவுடையவன்.

ஜாதகனுடைய தந்தையின் விவரம்

5. பலர்பணி செய்வா னுகும் பாருகள் விருத்தி செய்வன்
நலனென்று புகழு மேற்பன் நவின்றிடான் கட்டு
[வார்த்தை
கலக்கத்தைக் கூரு னுகுங் காதலிக் கிட்ட னுமே
சொல்மொழி காப்பா னுகுஞ் செப்புவோ மிவன்முன்
[ஜன்மம்.

5. பல வேலைகளைச் செய்துவருவான். (பலருடைய வேலைகளை இவன் செய்வான். பணியாளாக வேலைசெய்து வருவான்). பூமிப் பெருக்கமுள்ளவன். நல்லவன் என்ற பெயரையடைவான். வார்த்தைகளைப் புனைந்து பேசாதவன். கலகம் செய்யாதவன். தன் மனைவிக்குப் பிரியமானவன். சொன்ன வார்த்தைகளைக் காப்பான். இவனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும்.

6. தென்திசை யாழி தன்னில் ஜனித்தனன் வேளா னுகப்
பொன்பணி யுடையோ னுகிப் பூமியும் பெருக்க மாகி
அந்நக ரதிகா ரங்க ளவன்செய்த வினையைக் கேண்மோ
கன்னிகை விதவை மாது கலந்தனள் தாயில் லத்தில்.

6. தெற்குத் திசையில் உள்ள சமுத்திரத்திற்கு அருகில் உள்ள ஊரில் (திருவாழி என்னும் க்ஷேத்திரத்தில்) நல்ல வேளாள குலத்தில் பிறந்து, பொன் ஆபரணங்களை உடையவனுக இருந்து, விளை நிலங்

களை அதிகமடைந்து, அவ்வூரில் அதிகாரமுடைய உத்தியோகத்தைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். விதவைப் பெண் ஒருத்தி தன் தாயின் வீட்டில் வசித்து வந்தாள்.

விதவையைப் பலவந்தமாகப் புணர்தல்

7. மாதுமேல் வேறெரு ருத்தன் மன்மத லுடல் பேசக்
காதலி யிசையா ளாகிக் கன்னியுஞ் சிலகாள் சென்று
சூதிலாத் தனியாய்ச் செல்லத் தோகையைப் பலவந்
[தத்தால்
பாதகன் புணரும் போது பாவையும் திகில டைந்து;

7. அப் பெண் மீது வேற்றுப் புருடன் ஒருவன் மையல் கொண்டு சிற்றின்பம் அனுபவிக்க அழைக்கும்போது அப் பெண்ணும் அதற் குட்படாதவளாக இருந்தாள். சின்னாட்கள் சென்றதும் அப்பெண் மனத்தில் கபடமில்லாமல் தனியாகச் செல்லுங்காலத்தில் அவளைப் பல வந்தமாகப் பிடித்துக் கொடுமையாகப் புணரும்போது அப்பெண் பயந்து;

பொருளைப் பெற்றுக்கொண்டு பட்சபாதமாகத் தீர்ப்பளித்தல்

8. இல்லிடத் துணைவ ரோடு இயம்பிஞ ளந்தச் சங்கை
அல்லலா யதிகாரி பக்க லறைந்தனர் கோபத் தாலே
பொல்லாங்கு இசைந்தோன் பக்கல் பொருளது பெற்றுக்
[கொண்டு
வல்லிமேல் குற்றஞ் சொல்ல மாதுவுந் திகில டைந்து;

8. இவ்விஷயத்தை வீடு சென்று தன் சகோதரரிடம் கூறினாள். அவர்கள் கோபங்கொண்டு அவ்வூரின் அதிகாரியாக இருந்த இந்த ஜாதகனுடைய தந்தையினிடம் வருத்தத்தோடு சொன்னார்கள். அதி காரியும் தீங்குகள் செய்தவனிடமிருந்து பொருளைக் கொண்டு கைம் பெண் மீதே குற்றம் கூறிவிட்டான். அப்பெண்ணும் மனத்தில் துயர முற்று;

பெண்ணின் சாபம்

9. பெண்பழி சொன்ன பாவி
பிறக்கும்பின் ஜன்மந் தன்னில்
என்னைப்போல் துணைவ ரின்றி
இரக்கமாஞ் ஜாதி யாயும்
கன்னிகை சுதரு மின்றிக்
காசினி தன்னில் வாழ்வாய்
இன்னமும் பலவாறு சொன்னுள்
எய்திற்று வந்தச் சாபம்.

9. பெண்மீது அபாண்டமாகக் குறை கூறிய பாவியே! உனக்கு ஏற்படும் அடுத்த பிறவியில் நீ என்னைப்போல் உடன்பிறந்தவரில்லாமல் இழிவான குலத்தில் பிறந்து, துன்பமடைந்து, மனைவி புத்திர பாக்கிய மில்லாமல், உலகில் வாழ்ந்து வருவாய் என்றும் இன்னும் பலவித மாகவும் சொன்னாள். அந்தச் சாபம் தொடர்ந்தது.

10. ஆகையா லிச்சென் மத்தில்
அண்ணன்தம் பிகளு மின்றித்
தோகையுஞ் சுதர்பெண் ணின்றித்
தொல்புவி தன்னில் வாழ்வன்
பாகமாய்க் குணத் தானுக்குப்
பிறப்பது மிந்தப் பாலன்
போகவா ரிதியைப் பெற்ற
புண்ணிய சாலி கேளாய்.

10. ஆகையால் இப்பிறவியில் அண்ணன் தம்பிகள் இல்லாதவனு கவும் உடன் பிறந்த சகோதரி இல்லாதவனுகவும் உலகில் வாழ்ந்து வரு வான். இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களையுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான். போக சமுத்திரத்தைப் போன்ற கணவனை யடைந்த புண்ணியவதியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய குணங்கள்

11. பாலக னிறங்கு ணத்தைப் பகருவோம் மால்நி றத்தான்
சீலம்போல் வெளிம யக்கன் சிரமுகம் வடிவு மேற்பன்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நயம்படக் கூறு வானும்
ஆலம்போல் பகைவ ருக்கு அவனுமே கருட னவன்.

11. ஜாதகனுடைய குணத்தைக் கூறுகின்றோம். திருமாலைப் போல் கரிய நிறமுடையவன். நல்லொழுக்க முள்ளவன்போல் பிறர் நினைக்கும்படி நடந்து கொள்ளுவான். தலை முகம் இவைகள் அழகாக உள்ளவன். வீண் நிலங்களைப் பெருக்குவான். இனிமையாகப் பேசு பவன். கொடிய விஷத்தையுடைய பாம்பைப்போன்ற பகைவர்கட்குக் கருடனைப் போன்றவன்.

இதுவுமது

12. வறுமையெப் போதுங் காணன் வஞ்சனை யெவர்க்கு [மெண்ணன்
அரிரேகை கமல ரேகை யணுகிடுங் கரத்தி லேதான்
வறுமையு மில்லா தாகும் மானிலஞ் சல்லியம் காணன்
திருமகன் செய்வா னுகுஞ் சொல்லது காப்பா னுகும்.

12. தரித்திரத்தை ஒருபோதும் அடையாதவன். ஒருவருக்கும் வஞ்சனைகளைச் செய்ய மனமுட்படாதவன். கைகளில் விஷ்ணு ரேகை பத்மரேகைகள் உள்ளவன். தரித்திரம் இல்லாதவன். கடன்படாதவன். (துன்பமடையாதவன்). புதிய வீடு கட்டுவான். கூறிய வார்த்தைகளைக் காப்பான்.

13. திருப்பணி வேலை செய்வன் தேவதா லயங்கள் செல்வன்
பெருமையாய்க் குடும்ப மேற்பன் போஜன வறுமை [காணன்
தரைமிகத் தேடு வானுஞ் சமகல்வி யூகை சாலி
நெறியதைக் காப்பா னுகும் நினைத்தகா ரியமு டிப்பன்.

13. ஆலயத் திருப்பணிகளைச் செய்து வருவான். பல புண்ணிய தலங்களிலுள்ள ஆலயங்களுக்குச் செல்வான். பெருமையுடைய குடும்பத்தை அடைவான். சாப்பாட்டுக்குத் தரித்திரமில்லாதவன். அதிகமான விளை நிலங்களை வாங்கிச் சேர்ப்பான். சமமான கல்வியறிவுள்ளவன். ஊக முடையவன். நேர்மையுடன் நடப்பவன். எண்ணிய காரியத்தை வெற்றியுடன் முடிக்கக் கூடியவன்.

ஜாதகனுடைய சகோதரபாவமும் திருமணக் காலமும்

14. தன்துணை நான்கு தோன்றுந்
தீர்க்கமா யாண்பால் மூன்று
கன்னிகை காணு னுகுங்
காதலர் சேதி பின்பால்
பன்னுவோந் தாயே யாங்கள்
பாலகன் மணத்தின் காலம்
கன்னியுங் கீழ்ப்பால் தன்னில்
கலப்பளாம் மூவெட் டாண்டுள்.

14. ஜாதகனுக்கு உடன்பிறந்தவர்கள் நால்வர் தோன்றுவர். அவர்களில் மூன்று சகோதரர்கள் மட்டுமே நீண்ட ஆயுள் உள்ளவர். சகோதரியில்லாதவன். அவர்களுடைய செய்தியைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். தாயே! ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். மனைவி கிழக்குப் பக்கத்திலிருந்து ஜாதகனுடைய இருபத்து நான்காம் வயதுக்குள் வருவாள்.

ஜாதகனின் மனைவியின் குணங்கள்

15. மங்கையின் குணத்தைச் சொல்வேன்
வஞ்சனை யெண்ணு நெஞ்சஞ்
சங்கையென் றோரைக் காப்பாள்
சாதிப்பாள் சிலவே சங்கை

நங்கையு மிருகி றத்தாள்
நாயகன் மனத்துக் கேற்றோள்
எங்கள்போ லதிதிக் கன்னம்
ஈகுவாள் வறுமை காணுள்.

15. ஜாதகனுடைய மனைவியின் குணத்தைக் கூறுகின்றோம். கபடமில்லாத மனத்தினள். துன்ப மடைந்தவரைக் காப்பாள். சில சந்தேகங்களை விளக்கக் கூடியவள். அவள் கரிய நிறமுடையவள். தன் கணவன் மனத்துக் கிசைந்தவள். எங்களைப் போன்ற துறவிகட்கு, அன்னமளிப்பவள். தரித்திரத்தை அடையாதவள்.

16. வந்தபின் பிறைபோல் யோகம்
மருவிடு மென்று சொல்வோம்
நிந்தைக ளேற்கா ளாகும்
நேமியில் நல்லோ ளாவள்
பந்தினர் மகிழ வாழ்வள்
பராபட் சங்கள் பேசாள்
அந்தவள் வயது தீர்க்கம்
அத்திரி மறித்துச் சொல்வார்.

16. ஜாதகனுக்கு மனைவி வந்த பிறகு வளர்பிறைச் சந்திரன் போல் யோகம் விருத்தியாகும் என்று சொல்லுகின்றோம். பழிகளை அடையாதவள். உலகில் நல்லவளாக வாழ்ந்து வருவாள். தன் சுற்றத்தார் சந்தோஷப்படும்படியாக வாழ்ந்து வருவாள். பட்சபாதமாக (ஒரு தலையாக)ப் பேசாதவள். நீண்ட வயதை உடையவள். அத்திரி முனிவர் தடுத்துக் கூறுகின்றார்.

இருதாரம் கிரகநிலை

17. இருதாரம் பால னுக்கு எய்திடு மென்று சொல்வோம்
வருமாறு சொல்லு மென்ன மங்கலன் புதனு மெட்டில்
சரியிலாக் கேது வேழில் தங்கின பலத்தால் சொன்னோம்
வருமது சொல்லு மென்றோம் கூறுணைத் தார மிரண்டு.

17. ஜாதகனுக்கு இருதாரம் ஏற்படும் என்று கூறுகின்றோம். அவ்விதம் கூறக் காரணங்கள் என்னவென்று சொல்லுங்கள் என்று கேட்கும்போது (பதில் கூறுகின்றார்). அங்காரகனும் புதனும் எட்டாமிடமாகிய மீனத்தில் தங்கியதாலும் துன்பந்தரும் கேது ஏழில் இருக்கும் பலத்தினாலும் அவ்விதம் சொன்னோம். இரு மனைவியர் ஏற்படுவர் என்று சொல்ல இடமில்லை.

18. காரணம் கூறு மென்னக் கவிமக ளுட்சி யாயுந்
தீரமாய்ப் பானு வுச்சஞ் சனியுமே நாலில் தங்கப்
பாரிக்கு வநேக கண்டம் பகருமே நமனைக் காணுள்
நாரியுந் தீர்க்க மென்றேம் நாயகி கேட்டி டாயே.

18. அதற்குக் காரணம் கூறுங்கள் என்று கேட்க, சுக்கிரன் ஆட்சியாகவும், சூரியன் திடமாக மேஷத்தில் உச்சனுகவும், சனி நாலாம் வீட்டில் இருக்கவும், மனைவிக்குப் பலவிதமான கண்டங்கள் ஏற் படும். ஆனல் மரணமடையமாட்டாள். அவள் நீண்ட ஆயுள் உள்ள வள் என்றேம். பார்வதியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய புத்திரபாவம்

19. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலமு ரைது
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று
[சொன்னேங்
குத்தத்தைச் சொல்லு மென்ன குஜன்குரு புதனு
[மெட்டில்
பத்தின பலத்தால் சொன்னேம் பார்வதி கேட்டி டாயே.

19. ஜாதகனுக்குப் புத்திர விருத்தியைச் சொல்லுகின்றேம். புத்திரர்கள் தோன்றுவதற்குக் நிரக பலமில்லை என்றேம். ஆனல் பிறந்தாலும் தீர்க்காயுளுடன் இராமல் இடையில் மரித்து விடுவர் என்று சொன்னேம். அதற்குக் காரணமான குற்றத்தைச் சொல்லுங் கள் என்று வினவ, செவ்வாய் குரு புதன் இவர்கள் எட்டாமிடத்தில் இருக்கும் பலத்தால் அங்ஙனம் சொன்னேம். பார்வதி தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய முற்பிறவி

20. இதுவன்றிப் பூர்வந் தன்னி லிவன்சில கொடுமை
[செய்தான்
அதனலே புத்திர தோஷம் அறிவிப்பீ ரந்தச் சங்கை
யதிபன்தன் பூர்வஞ் சொல்வேன் மலைநாட்டில் வைசியச்
[சேயாய்
நிதிமிக வுடைய ஞகி நேமியில் வாழு நாளில்;

20. இதுவல்லாமல் முற்பிறவியில் ஜாதகன் சில தீய காரியங் களைச் செய்தான், அதனல் புத்திர தோஷம் ஏற்பட்டது. அந்த விஷ யத்தைக் கூறுங்கள் என, ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின் றேம். மலைநாட்டில் வைசிய குலத்தவனுகப் பிறந்து, மிகுந்த செல்வத் தைப் பெற்று, உலகில் வாழ்ந்து வருங்காலத்தில்;

பசுவின்கன்றுக்கு பால் விடாதது

21. கன்றுக்குப் பால்வி டாமல்
கறந்தன னதுவோர் தோஷங்
குன்றிய மனத்தோ ருக்குக்
குறைசெய்தான் கணக்கி லேதான்
தன்றியின் துணைக்கு பாகந்
தந்ததில் மோசஞ் செய்தான்
இன்றெலா மிச்சென் மத்தில்
எய்திற்று வென்று சொன்னேம்.

21. பசுவின் கன்றுக்குப் பால் விடாமல் முழுவதையும் கறந்தான். அஃது ஒரு தோஷமாயிற்று. துன்பமடைந்த சிலருக்கு இவன் கணக்கில் சில மோசங்களைச் செய்தான். தன்னுடைய தந்தையின் சகோதரருக்குரிய பாகத்தைக் கொடுக்கும்போது சில மோசங்கள் செய்தான். இவைகளெல்லாம் ஒன்றுகூடி இப்பிறவியில் இவனை வந்தடைந்தன என்று சொன்னேம்.

22. ஆகையால் மதலை காணுன் அதுவின்றிப் பாரி யாலே
பாகமாய்ச் சிலவே தோஷம் பற்றின புகலக் கேண்மோ
தோகையின் பூர்வஞ் சொல்வேன் தவளையின் மலைக்குத் [தென்பால்
போகபாக் கியவான் வீட்டில் பிறந்தன ளருகர் வர்க்கம்.

22. ஆதலால் புத்திரர்களை அடையாதவன் என்றேம். அது வல்லாமல் இவனுடைய மனைவியினால் சில தோஷங்கள் ஏற்பட்டன. அவைகளைச் சொல்லுகின்றேம். கேளுங்கள். அவளுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தவளைமலைக்குத் தெற்கில் பெரும் பாக்கிய முள்ள தொரு சமணர் குடியில் தோன்றியவனுக்கு இவள் பெண்ணாகப் பிறந்தாள்.

ஏழைக்கு அன்னமளிக்க மறுத்தது

23. பஞ்சையா யேழை மாது
பாலர்க்கு வன்னம் வேண்டிக்
கெஞ்சினள் மாது பக்கல்
கனிமொழி வார்த்தை யின்றி
மிஞ்சின வார்த்தை சொல்லி
விரட்டினு ளேழை தன்னை
வஞ்சியும் மனவெ றுப்பால்
விந்தையாய்க் கூறக் கேண்மோ.

23. ஏழைப்பெண் ஒருத்தி தன் குழந்தைக்குப் பசிக்கு அன்னம் அளிக்கவேண்டும் என்று தாழ்மையுடன் கேட்கும்போது இப்பெண்

ணும் இளகிய மனமில்லாமல் வெகுண்டு இரக்கமுள்ள வார்த்தையைக் கூறுமல் கடினமாகக் கூறி அவளை விரட்டி விட்டாள். ஏழைப்பெண் ணும் மனம் வருந்திக் கூறியதைக் கேளுங்கள்.

24. பாலர்சோ றீயாப் பாவி பருகாது சுதரு னக்குச்
சொல்லுவேன் பின்ஜன் மத்தில் சந்ததி யில்லா மல்தான்
ஞாலமேல் வேறு யில்லம் வாழ்குவா யென்று சொல்ல
ஆலம்போ லந்தச் சாப மணுகிற்றுப் பாவைக் கேதான்.

24 குழந்தையின் பசிக்கு அன்னம் அளிக்காத பாவியே! அடுத்த பிறவியில் உனக்குப் புத்திரர்கள் பிறவாமல் மனத்தில் சமா தானம் இல்லாமல் வாழ்ந்து வருவாய். நீ இருக்கும் வீட்டைவிட்டு வேறு வீட்டுக்குச் சென்று வாழ்ந்து வருவாய் என்று சொன்னள். கொடிய விஷம்போல் அந்தச் சாபம் இந்தப் பெண்ணுக்கு (ஜாதக னுடைய மனைவிக்கு) ஏற்பட்டது.

25. அந்தியக் காலந் தன்னில் அவள்சுதர் யாவு மாண்டு
அந்தக நகரஞ் சென்று அயனுமே வரையப் பட்டு
இந்தவா றுதிப்பா ளாகும் எய்திடு முன்னூழ்ச் சாபந்
தன்சுதர் தோஷ மெய்துந் தனியளாய் வாழ்வா ளம்மா.

25. இவளும் தன் கடைசிக் காலத்தில் புத்திரர்களை இழந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இவ்விதம் பிறந்து ஜாதகனின் மனைவியானள். முற்பிறவித் தோஷம் தொடரும். தொன்றும் புத்திரர்கட்குந் தீங்குண்டாகும். இவள் தனிமையாக வாழ்ந்து வருவாள்.

உயர்குலத்தில் பிறந்தவளுக்குக் குலந் தாழ்வானது

26. பிருகுமே புகலு கின்றூர்
பூவைமுன் ஜன்மந் தன்னில்
அருகர்தங் குலமு தித்தோள்
அல்பமாங் குலத்தி லேதான்
வருகுங்கா ரணங்கள் சொல்வீர்
மாதுமுன் ஜன்மந் தன்னில்
விரதங்கள் மூட்டுச் செய்தாள்
மேவுவா ளிக்கு லத்தில்.

26. பிருகு முனிவர் சொல்லுகின்றூர். முற்பிறவியில் சமணர் குலத்தில் பிறந்தவளாகிய இவள் இப்பிறவியில் தாழ்வான குலத் தில் தோன்றும் காரணங்கள் என்னவென்று கூறுங்கள். விரதங் களை அனுஷ்டிப்பதில் தவறினள். அதனால் இப்பிறவியில் இக் குலத்தில் பிறந்தாள்.

ஜாதகனுடைய மனைவியின் மறுபிறவி

27. மறுஜன்மங் காஞ்சிக் கீழ்ப்பால்
வளமுள பேரூர் தன்னில்
உறைகுவாள் செங்குந்த சேயாய்
உயர்வான குடும்பி யாவள்
கருமங்க ளெவர்செய் வார்கள்
கழறுவீ ரந்தச் சங்கை
திருமகன் தூணவன் புத்திரன்
செய்வனு மென்று சொல்வோம்.

27. மறுபிறவியில் காஞ்சிபுரத்துக்குக் கிழக்கில் உள்ள செழிப்புள்ள ஒரு பெரிய ஊரில் செங்குந்த வமிசத்தவளாகப் பிறப்பாள். அக்குலத்தில் பெரியதொரு குடும்பியாக வாழ்ந்து வருவாள். இவளுக்கு இறுதிக் கடன்களை யார் செய்வார்கள் என்று சொல்லுங்கள் என, அதற்குப் பதில் கூறுகின்றார். ஜாதகனுடைய சகோதரன் புத்திரன் செய்வான் என்று சொல்லுகின்றோம்.

தாயின் குணங்கள்

28. பின்பாக மந்தச் சங்கை
பேசுவோந் தாயே என்றோம்
அன்னையின் குணத்தைச் சொல்வேன்
அன்புள மனத்தா ளாகுந்
தன்மனங் கபடு மில்லாள்
சாற்றினே மயலார் குற்றம்
பன்னியே பேசு வாளாம்
பஞ்சைமே லிரக்க மாவள்.

28. அவ் விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். தாயே! ஜாதகனுடைய தாயின் குணத்தைச் சொல்லுகின்றோம். அவள் அன்புள்ள மனத்தினள். கபடமில்லாதவள். பிறர்மீது குற்றம் கூறுபவள். பன்னிப்பன்னிப் பேசுபவள். ஏழைகளின்மீது இரக்க முடையவள்.

29. அன்னமு மன்பா யீவ ளாளன்தன் மனத்துக்
[கேற்றோள்
துன்மையாய்ப் பித்த வாயு தோன்றிடு மென்று
[சொல்வோந்
தன்தூண யாண்பால் மூன்று தையல ரவ்வா றாகும்
பின்னமாம் பெண்பா லென்றோம் பேசுவோ மன்னை
[பூர்வம்.

29. அன்புடன் அன்னத்தை அளிப்பவள். தன் கணவன் மனத்துக்குத் தக்கபடி நடப்பவள். பித்தவாயு எப்பொழுதும் தொந்தரவு கொடுத்துக் கொண்டிருக்கும் என்று சொல்லுகிறோம். உடன் பிறந்தவர்களில் மூன்று சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உண்டு என்றோம். சகோதரிகள் நிலையார் என்றோம். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம்.

தாயின் முற்பிறவி

30. தென்திசைப் பெண்ணை யோரஞ்
ஜனித்தனள் வன்னிய சேயாய்த்
தன்சுத ரதிக முண்டாய்ச்
சான்றோருக் கன்ன மீந்து
முன்வினை யில்லா ளாகி
மேவினுள் கால னுடி
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறந்தன ளென்று சொல்வோம்.

30. ஜாதகனுடைய தாய் தெற்குப் பக்கத்தில் பெண்ணையாற்றுக்கு அருகிலுள்ள ஊரில் வன்னிய குலத்தவளாகப் பிறந்து புத்திர பாக்கியம் பெற்றுப் பெரியோருக்கு அன்னமளித்து வந்து முற்பிறப்புத் தீவினையில்லாமல் வாழ்ந்து மரணமடைந்தாள். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தாள் என்று சொன்னோம்.

தாயின் மறுபிறவியும் தந்தையின் மரணகாலமும்

31. மறுஜன்மந் தக்கோ லத்தில் வருவளாஞ் சத்திரியச்
[சேயாய்க்
கருமகா லங்கள் தன்னைக் கூறுவீர் முனியே நீர்தாம்
திருகிலா நாற்ப தாண்டில் செல்லுவான் தந்தை தானும்
வருஞ்ஜன்மம் வான்மி யூரில் வருவனும் வைசியச்
[சேயாய்;

31. மறுபிறவியில் தக்கோலத்தில் க்ஷத்திரிய குலத்தவளாகப் பிறப்பாள். ஜாதகனுடைய கரும காலங்களைக் கூறுங்கள், முனிவரே! தாங்கள். ஜாதகனுடைய நாற்பதாம் வயதில் தந்தை மரணமடைவான். அடுத்த பிறவியில் அவன் திருவான்மீயூரில் வைசிய குலத்தவனாகப் பிறப்பான்.

தாயின் மரணகாலம்

32. அன்னைக்கு நாற்பா றதில்
அணுகுமே கண்டஞ் சொன்னோம்
இன்னவன் தனக்குச் சொல்வாம்
இளம்பிறை தசைகா லத்தில்

உன்னத வறுபா லறில்
அணுகுமே கண்ட மென்றேங்
தன்னவன் தனக்குச் சொல்வேன்
இளம்பிறை தசைகா லத்தில் ;

32. ஜாதகனுடைய தாய், இவனுடைய நாற்பத்தாரும் வயதில் மரணமடைவாள். ஜாதகனுக்கு, தனது சந்திர மகாதசையில், அஃதாவது அறுபத்தாரும் வயதில் கண்டம் ஏற்படும். அப்போது சந்திர மகாதசை நடக்கும் என்றேரும்.

ஜாதகனுடைய மறுபிறவி

33. பாலன்பின் ஜன்மந் தன்னைப் பகருவோங் காஞ்சி
[தன்னில்
சீலமா மறைக்கு லத்தில் ஜனிப்பனு மென்று சொல்வோம்
சாலவே யிச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன
வேலவன் பத்தி யாயும் விகடங்கள் கூறு தாலும் ;

33. ஜாதகனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். அவன் காஞ்சிமாநகரில் நல்லொழுக்கமுள்ள ஓர் அந்தணர் குடியில் பிறப்பான் என்று சொல்லுகின்றேரும். அவன் இப்பிறவியில் என்ன நல்வினைகளைச் செய்தான் ? அவற்றைக் கூறுங்கள் என்று வினவ, வேலையுடைய முருகக் கடவுளின்மீது பக்தியுடன் இருந்து வந்ததாலும் அடாவடியாகப் பேசாததாலும் ;

உயர்குலப் பிறவிக்குக் காரணம்

34. திருப்பணி செய்த லாலுந் தேவதாத் தலங்கள் சென்றும்
வருவதால் மறைக்கு லத்தில் மாரனு முதிப்பா னுகும்
உரைக்கிறே மிவனின் யோக முலகினில் வறுமை
[காணுன்
தரையது நாட்கு நாளாய்ச் சேர்ப்பனுஞ் சல்லியங்காணுன்

34. ஆலயத்திருப்பணிகளைச் செய்துவந்ததாலும் பல புண்ணிய தேவாலயங்களுக்குச் சென்று வந்ததாலும் உயர்ந்த அந்தணர் குலத்தில் பிறப்பான் என்றேரும். இவனுடைய யோகத்தைக் கூறுகின்றேரும். தரித்திரமில்லாதவன். நாளுக்குநாள் விளைநிலங்களைப் பெருக்குவான். கடன்படாதவன் (துன்பமடையாதவன்).

ஜாதகனுடைய யோகம்

35. பிறந்தநாள் முதலே யாகப் பேசுவோ மிருப தாண்டு
குறைவுள குடும்ப மாகுங் கூறுவோ மதன்மேல் யோகம்
அரிவையும் வந்த பின்பு அம்புலி போலே செல்வம்
மருவிடு மென்று சொல்வோம் மங்கையே கேட்டி டாயே.

35. ஜாதகன் பிறந்தது முதல் இருபதாம் வயதுவரை குடும்பம் சற்றுக் குறையுளதாக இருக்கும். அதற்குப் பிறகு யோகம் மேல்

மேல் விருத்தியாகும். மனைவி வந்தபிறகு பிறைச்சந்திரன்போல் செல்வம் ஓங்கும் என்று சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

36. அன்னையின் குடும்பம் வேறு அணுகிடும் பால னுக்குத்
தன்மனை அன்பா லலில் செப்புவோ மார கங்கள்
தென்முனி மறித்துச் சொல்வார் சேயன்தன் நாற்பா
[னென்றில்
துன்மைகள் நேரா தோசொல் ஜயமுனி புகலு கின்றார்.

36. தாயின் குடும்பமும் இவனை வந்தடையும். இவனுடைய மனைவி இவனுடைய ஐம்பத்துநான்காம் வயதில் மரணமடைவாள் என்றோம். அகத்திய முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதக னுடைய நாற்பத்தோராம் வயதில் தீமைகள் நேராவோ என்று சொல் லுங்கள் என, ஜய முனிவர் கூறுகின்றார்.

37. எந்தநோய் வந்தா லுந்தா னிரவிமுன் பனிபோல் நீங்குஞ்
சொன்னதோ ராண்டு மேலாய்ச் சுகமது பெறுவான்
[பாலன்
பொன்பூமி யதிகம் நேரல் பூசுரர்க் கன்ன மீவன்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

37. ஜாதகனுக்கு எவ்விதமான நோய் ஏற்பட்ட போதிலும் சூரியன் முன் பனிபோல் விரைவில் விலகும். நாங்கள் கூறிய வருடத் துக்கு மேலாகச் சுகமடைவான் அவன். செல்வம் பூமி முதலியன அதிகமாக ஏற்படும். அந்தணர்கட்கு உணவளிப்பான். உயர்ந்த கண வனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜனன கால தசை

38. உதித்திடு காலந் தன்னில்
உத்தரட் டாதி ரண்டில்
[1]கதிர்மகன் தசையொன் பாண்டும்
கலந்திடுந் திங்க ளேழும்
முதல்பாகம் விவரஞ் சொன்னேம்
மொழிகிறோம் பின்பால் சேதி
அதிதியை யாத ரிக்கும்
அம்பிகை யாளே கேளாய்.

38. ஜாதகன் பிறக்கும்காலத்தில் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் இரண்டாம் பாதமாகும். அப்போது சனி மகாதசையில் ஒன்பது வருடங்களும் ஏழு மாதகளும் மீதமாகும். இது வரையில் முதல் பாகத்தை விவரமாகச் சொன்னேம். மற்ற விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். முனிவர்களைக் காக்கும் தாயே! கேளுங்கள்.

---

1. சனி

ஜாதகம் 31

1. [1]கலிகன்னி பொன்னேன் தேளில் காரியும் பணியுங்
[கோலில்
[2]நிலமகன் புந்தி சீயம் நீர்புகர் வீணை யாக
[3]அலவனில் பானு தங்க [4]அதிதியு மேட மாகத்
தலமது சீய மாகச் சாற்றுவீர் பலனைத் தானே.

1. சந்திரன் கன்னியிலும், குரு விருச்சிகத்திலும், சனி ராகு துலாத்திலும், செவ்வாய் புதன் சிம்மத்திலும், சுக்கிரன் மிதுனத்திலும், சூரியன் கடகத்திலும், கேது மேடத்திலும் இருந்து இலக்கினம் சிம்மமாஞல் உள்ள பலனைக் கூறுங்கள்.

கிரகநிலை

	கேது		சுக்கிரன்
	இராசி சக்கரம்		சூரியன்
			லக்கினம் செவ்வாய் புதன்
	குரு	சனி ராகு	சந்திரன்

[1]பிறந்த வீட்டு நிலை

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்றூர்
மேதினி லாண்பால் ஐன்மம் வந்தவில் வடக்கு வாடை
தீதிலாக் கீழ்மேல் வீதி தென் திசை முருகன் கோஷ்டம்
போதவே பள்ளி வாசல் போற்றுவோ மதன்கீழ்
[மாயோன்.

9. என்று பார்வதி தேவி கேட்கும்போது கௌசிக முனிவர் பதில் உரைக்கின்றூர். இஃது ஆண் மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் வடக்கு வரிசையில் உள்ளது. இவ் வீட்டுக்குத் தெற்கில் முருகன் கோவிலும் ஒரு பள்ளிவாசலும் உள்ளன. அதற்குக் கிழக்கில் திருமாலின் ஆலயம் ஒன்றுண்டு.

3. வடதிசை யம்மன் கோட்டம் வடமேல்பால் கன்னி யுண்டு
இடிபடுங் கெடியு முண்டு இந்திர நகர மொப்பாக்
திடமு னரசர் வாசஞ் செம்புவோம் பேரூ ராமே
அடைவுடன் வைசியச் சேயாய் அருளுவா னிந்தப் பாலன்.

---

1. சந்திரன். 2. செவ்வாய். 3. கடகம். 4. கேது.

3. வடக்குப் பக்கத்தில் அம்மன் கோவிலும் வடமேற்குத் திக்கில் மாரியம்மன் கோவிலும் இடிந்ததொரு கோட்டையுமிருக்கும். இந்திரனுடைய அமராவதி நகரம் போன்று அழகு பொருந்திய ஊராகும் அது. ஒரு பெரிய அரசன் அவ்வூரில் வசித்து வருவான். இங்ஙனஞ் சிறந்த ஊரில் இந்த ஜாதகன் வைசிய குலத்தவனாகப் பிறப்பான் என்றோம்.

4. பாலகன் ஜனன யோகம் பெருகிய வன்னி யோகம்
ஞாலமேல் தூணவர் யோகம் நன்மனை புத்திர யோகஞ்
சீலமாய் முன்பின் யோகஞ் செப்புவோ மிந்நூல் தன்னில்
ஆலத்தை யுண்டோன் தேவி யறைகின்றோங் கேட்டி.
[டாயே.

4. ஜாதகனுடைய பிறப்பு, அவனைப் பெற்ற தாய், உடன் பிறந்தவர்கள், மனைவி மக்கள் முதலியோருடைய யோகங்கள், அவர்களின் முற்பிறவி மறுபிறவி ஆகிய இவைகளை இந்த ஜோதிட சாஸ்திரத்தில் கூறுகின்றோம். கொடிய விஷத்தைப் பருகிய நீலக்கண்டனின் தேவியே! நாங்கள் கூறுவதைக் கேளுங்கள்.

ஜாதகனின் தந்தையின் சகோதரபாவம்

5. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றவே பலமு றுது
வந்திடுங் கன்னி ரண்டு வறைந்தனந் தீர்க்க மாக
எந்தையே தந்தை சேதி யியம்புவோம் மால்கி றத்தான்
கந்தவேள் பத்தி பூண்பன் கல்விமா னுகை சாலி.

5. ஜாதகனுடைய தந்தையின் வர்க்கத்தைக் கூறக் கிரக பலமில்லை. இரு சகோதரிகளை மூண்ட ஆயுளுள்ளவர்கள் என்று கூறுகின்றோம். தாயே! ஜாதகனின் தந்தையின் விவரங்களைக் கூறுகின்றோம். திருமாலைப்போல் கரிய நிறமுள்ளவன். முருகக் கடவுள்மீது பக்தியுடையவன். கல்வியறிவுடையவன். ஊகமுள்ளவன்.

ஜாதகனின் தந்தையின் குணங்கள்

6. பெரியவ ருறவு கொள்வன் பிதுரில்லம் வாழ்வா னுகும்
மருமமுங் கொஞ்ச முண்டு வாக்குச்சொல் தப்பா னுகுங்
குறையென்றோர்க் குதவி செய்வான் குவலயஞ் சேர்ப்பா
[னுகும்
பொறுமைசா லிளம னத்தன் பூமியில் செட்டுச் செய்வன்.

6. பெரியோர்களிடம் நட்புக்கொள்ளுபவன். தன் தந்தையின் வீட்டில் வாழ்ந்து வருவான். சிறிது மறைவுள்ளவன். சொன்ன

வார்த்தைகளை மீறுதவன். துன்பமடைந்தவர்க்கு உபகாரி. விலை நிலங்களைப் பெருக்குவான். பொறுமையுடையவன். இரக்கமுள்ளவன். உலகில் வர்த்தகம் புரிந்து வாழ்ந்து வருவான்.

7. மூலச்சூ டுடைய னுகும் முனிவுண்டு வுடனே தாழ்வு
ஞாலமேல் நல்லோ னுவன் னளிளமாய் வார்த்தை கூறும்
பால்தயிர் பிரிய னுவன் பதர்செல்லான் வறுமை காணுன்
வேலவன் தொண்டு பூண்பன் மேம்பாடாய்க் குடும்ப
[மேற்பன்.

7. மூலச்சூட்டு நோயுள்ளவன். கோபங்கொள்ளுபவன். விரைவிலேயே அது தணிந்து போம். உலகில் நல்லவனுக இருப்பான். அழகாகப் பேசுபவன். தயிர் பால் இவைகளின் மீது விருப்புடையவன். அற்பத்தனமான காரியங்களில் செல்லாதவன். தரித்திரமில்லாதவன். முருகக்கடவுளுக்குத் திருப்பணிகளைச் செய்வான். மேன்மையுள்ள குடும்பத்தை யுடையவன்.

8. மாதுவின் ராசி தோன்றும் [1] முடனக முதிப்பா னுகுஞ்
சூதிலான் பொறுமை சாலி சொல்லதைக் காப்பா னுகுஞ்
சாதிப்பான் தொடுத்த வேலை தந்தையின் துணைவ னுஸ்தி
சூதிலுல் சேர்ப்பா னுகுந் துறவிகட் கன்ன மீவன்.

8. கன்னியா லக்கினத்தில் பிறந்தவன். மகநட்சத்திரத்தில் பிறந்தவன். கபடமில்லாதவன். பொறுமையுடைவன். சொன்ன சொற்களைக் காப்பவன். எடுத்த காரியத்தை வெற்றியுடன் முடிப்பவன். தன் தந்தையின் சகோதரனுடைய ஆஸ்திகளைக் கபடமாக அபகரிப்பான். முற்றும் துறந்தவர்கட்கு அன்ன மளிப்பவன்.

9. இல்லமு மூன்று செய்வன் எதிரியை வசியங் கொள்வன்
சொல்லிய குணத்தா னுக்குச் சுதனுமே வுதிப்பா னுகும்
வல்லவன் குணத்தைச் சொல்வேன் மாநிறம் வாத தேகி
வெல்லுஞ்சொல் லுடைய னுகும் வீண்பழி யேற்கா னுமே.

9. மூன்று வீடுகளைக் கட்டுவான். விரோதிகளைத் தன் வயப்படுத்துவான் இங்ஙனம் கூறப்பட்ட தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான் என்றேரும். அவனுடைய குணத்தைக் கூறுகின்றேரும். மாநிற முடையவன். வாயு நோயுள்ள சரீரமுடையவன். வாக்கு வன்மையுடைவன். அநியாயமான அபவாதத்தை அடையாதவன்.

---

1. மகம்.

ஜாதகனின் குணங்கள்

10. கல்விமான் கந்தன் பக்தி கனத்தசெட் டுகளுஞ் செய்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் எடுத்தகா ரியமு
[டிப்பன்
தல்லிக்கு இஷ்ட னுவன் தரணியை விருத்தி செய்வன்
புல்லியோ ருறவு கொள்ளான் மேம்பாடாய்க் குடும்ப
[மேற்பன்.

10. கல்வி யறிவுள்ளவன். முருகக்கடவுள் மீது பக்தியுள்ளவன். பெரியதொரு வியாபாரத்தைச் செய்துவருவான். யாசித்தவர்கட்கு இல்லையென்று கூறுதவன். தான் செய்ய ஆரம்பித்த காரியங்களை ஜயத்துடன் முடிப்பான் தாயாருக்குப் பிரியமானவன். விசுவாசிலங் களைப் பெருக்குவான். அற்பர்களுடைய நட்பைக் கொள்ளாதவன். மேன்மையுள்ள குடும்பத்தைப் பெறுவான்.

இதுவுமது

11. பலசகா யங்கள் செய்வன் பணிதிகள் சேர்ப்பா னுகும்
தலந்தீர்த்தந் தோய்வா னுகுஞ் சந்தேக மனத்த னுகும்
விலைமாதர் மோகங் கொள்ளான் மேம்பாடாய்க் குடும்ப
[மேற்பன்
குலவிடும் பித்தச் சூடு குணமது நல்ல தாமே.

11. பலருக்கு உபகாரம் செய்பவன். ஆபரணங்களைச் சேர்ப்பான். புண்ணியஸ்தலங்களுக்குச் சென்று நீராடுவான். சந்தேகப்படும் இயல் பினன். வேசையர்களின் மீது விருப்பமில்லாதவன். மேன்மையான குடும்பத்தை யடைவான். பித்தச் சூட்டு நோயுள்ளவன். நல்ல குணவான்.

விஷ்ணு ரேகை

12. கரமதில் விஷ்ணு ரேகை கடந்தோர்க்கு வன்ன மீவன்
அரிவையர் தம்மால் லாபம் அறுமுகன் விரத மேற்பன்
குறையென்றோர்க் குதவி செய்வன் கொடுமையை
[யெவர்க்கு மெண்ணுன்
கரைமனங் காலி விருத்தி காதலி கேட்டி டாயே.

12. கையில் விஷ்ணுரேகை யுள்ளவன். துறவிகட்கு அன்ன மளிப்பவன். பெண்களின் மூலம் வருவாயுள்ளவன். ஆறுமுகக் கடவுளை உத்தேசித்து விரதத்தை மேற்கொள்ளுவான். துன்பமடைந்த வர்கட்கு உபகாரம் செய்பவன். ஒருவருக்கும் தீமையைச் செய்ய எண்ணுதவன். இளகிய மனமுடையவன். கால்நடைகளின் பெருக்க முள்ளவன். தாயே! கேளுங்கள்.

13. பண்டுநாள் பூமி யில்லான் பெருகிடும் பின்னல் பூமி
அண்டினோர்க் குதவி செய்வ னவனுப தேசங் கொள்வன்
வண்டிவா கனமு முண்டு மாதுரு தன்னல் யோகந்
துண்டமாய்ப் பேசா னுகுந் தொடுவழக் கதனில்
[செல்லான்.

13. பிதுரார்ஜிதமான பூமிகள் இல்லாதவன். ஆனல் பிற் காலத்தில் பூமியைப் பெறுவான். தன்னே யண்டி வந்தவர்கட்கு உப காரி. பெரியோர்களிடம் உபதேசம் கேட்பவன். வண்டி முதலிய வாகனங்கள் உள்ளவன். தாயாரால் (மனைவியை மணந்த பிறகு) அதிருஷ்டப் பெருக்குள்ளவன். கண்டித்துப்பேசாதவன். வீண் சண் டைக்குச் செல்லாதவன்.

ஜாதகனுக்கு உடன் பிறந்தவர்கள்

14. தன்துணை நால்வர் தோன்றுந் தங்காவே யிரண்டு
[என்றேரும்
கன்னிமா ரிருவர் தீர்க்கங் கழறுவோ மூத்தோள் சேதி
அன்னியர் மதிக்க வாழ்வள் அன்புள மனத்தா ளாகுங்
கன்னென மொழியைச் சொல்வள் கசடரை யுறவு
[கொள்ளாள்.

14. ஜாதகனுக்கு உடன் பிறந்தவர்கள் நால்வா தோன்றுவர். அவர்களில் இருவர் நிலையில்லாதவர். இரு சகோதரிகளே நீண்ட ஆயுளுள்ளவர்கள். அவர்களில் மூத்த சகோதரியைப் பற்றிச்சொல்லு கின்றேரும். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். அன்புள்ள மனத்தினள். இனிமையாகப் பேசுபவள். அற்பர்களுடன் நட்புக் கொள்ளாதவள்.

சகோதரியின் விவரம்

15. அடக்கமும் பொறுமை சாலி யருந்ததி போலே யாகுந்
திடுக்கெனக் கூரு ளாகுந் துறவோருக் கன்ன மீவள்
மடக்கொடி மத்தி யத்தில் வரனுமே வாழ்வா னென்றேரும்
நடக்கையு நல்ல தாகும் நாயகி சமயோ சுத்தாள்.

15. அடக்க முள்ளவள். பொறுமையுடையவள். அருந்ததி யைப்போன்று கற்பில் சிறந்து விளங்குபவள். பெரியோர்கள் எதிரில் திடீரென்று பேசாதவள். முற்றும் துறந்தவர்கட்கு அன்னவளிப்பவள். இவளுடைய மத்திய வயதில் கணவன் வாய்ப்பான். நன்னடக்கையுள்ள வள். சமமான யோகமுடையவள்.

சகோதரியின் புத்திரபாவம்

16. சுதர்களு மாண்பா லொன்று தோகையு மவ்வாறு தீர்க்கம்
பதராகு மூன்று வென்றேரும் பாவைதன் னுதவி யாவள்
அதிபதி வயது தீர்க்க மைத்துன ரில்லா ளாகுஞ்
சதியிலா மனத்தா ளாகுஞ் சங்கரி கேட்டி டாயே.

16. அவளுக்குப் பிறக்கும் குழந்தைகள் ஐவரில் ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். மூன்று முழந்தைகள் இறந்துபோம். புதல்விக்கு இவள் உதவியாக இருப்பாள். கணவனுக்கு நீண்ட ஆயுளுண்டு. கணவனுக்குச் சகோதரரில்லாதவள். தீங்குக ளில்லாத மனத்தினள். சங்கரனின் தேவியே! கேளுங்கள்.

இளைய சகோதரியின் விவரம்

17. அதற்குப்பின் துணைவி சேதி யன்புள மனத்தா ளாகும்
புதல்வர்கள் தோஷ மாகும் புண்ணிய மனத்தா ளாகும்
நிதிமிக வுடையா ளாகும் நேர்ந்திடும் நாபிச் சூடு
சதியாகுங் கருப்பன் தோஷஞ் சந்ததி குற்ற மாமே.

17. அவளுக்குப் பின் பிறந்த சகோதரியின் செய்திகளைக் கூறு கின்றேரும். அன்புள்ள மனத்தினள். அவளுக்குப் புத்திர தோஷம் உண்டு என்றேரும். நல்லெண்ணம் பொருந்திய மனமுடையவள். அதி கமான செல்வம் படைத்தவள். நாபிச்சூட்டு நோயால் துன்பமுறுவாள். அவளுக்குக் கருப்பன்சாமியின் தோஷம் ஏற்பட்டு அதனல் புத்திர பாக்கியம் இல்லாதவள்.

ஜாதகனின் திருமணக் காலம்

18. அந்தியஞ் சுதரா ணென்று வணுகிடும் பாவைக் கேதான்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோ மந்தச் சங்கை
இந்தவன் மணத்தின் கால மியம்புவோ மீரொன் பானில்
தென்திசைப் பாரி வாய்க்குஞ் செப்புவோ மிவள்கு
[ணத்தை.

18. தன் கடைசிக் காலத்தில் ஒரு புத்திரன் தோன்றுவான். அவ்விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேரும். ஜாதகனுடைய திருமணக்காலத்தைக் கூறுகின்றேரும். அவனுடைய பதினெட்டாம் வயதில் தெற்குப்பக்கத்திலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தை யுரைக்கின்றேரும்.

ஜாதகனுடைய மனைவியின் குணங்கள்

19. நல்லவள் நல்ல வர்க்கு நற்புத்தி யூக சாலி
தொல்லையோர்க் குதவி செய்வள் தோழன்தன் மனத்துக்
[கேற்றோள்
அல்லல்க ளணுகா தாகும் யாவர்க்கு நல்லோ ளாவள்
புல்லிய புத்தி யில்லாள் பெரியோர்க்கு வன்ன மீவள்.

19. நல்லவர்கட்கு நல்லவளாக நடந்துகொள்ளுபவள். நல்ல புத்தியும் ஊகமும் உள்ளவள். துன்புற்றவர்கட்கு உபகாரி. தன் கணவன் மனத்துக்குத் தகுந்தபடி நடப்பவள். துன்பங்களை அடையாதவள். எல்லோருக்கும் நல்லவளாக நடப்பவள். அற்பபுத்தியில்லாதவள். பெரியவர்கட்கு அன்னமளிப்பவள்.

20. பால்பாக்கிய முடைய ளாகும் பகையென்று மனத்தில்
[வையாள்
சீலியா விரத மேற்பள் செல்வியும் வந்த பின்பு
மால்மனை வாச மெய்தும் வருவோரை யாத ரிப்பள்
காலத்தை யறிந்து ரைப்பள் காதலி யிருசி வப்பள்.

20. பால் பாக்கிய முள்ளவள். பிறர் செய்யும் குற்றங்களை மனத்தில் வைத்துக்கொள்ளாதவள். (விரோதம் பாராட்டாதவள்). நல்லொழுக்கமுடைவள். நோன்புகள் நோற்பாள். இவளை மணந்த பின்பு ஜாதகனுக்கு இலட்சுமி நோக்கு ஏற்பட்டு விருத்தியாகும். அண்டி வந்தவர்களை யாதரிப்பாள். வருங்காலத்தை அறிந்து முன்பாகவே சொல்லக் கூடியவள். கருஞ்சிவப்பு நிறமுடையவள்.

புத்திர பர்வம்

21. புத்திரர் தவத்தி னலே பொருந்திடு மாண்பா லொன்று
சித்தாய்ப் பெண்பால் ரண்டு செப்புவோர் தீர்க்க மாகக்
குத்தமா யிரண்டு சேதங் குழவிகள் தன்மே லாகச்
சுத்தமாய்1 மார்க்க மெய்தும் தோகையே கேட்டி டாயே.

21. (முற்பிறவியில் செய்த புண்ணியத்தால்) புத்திரர் தோன்றுவதற்குரிய சாந்தி செய்தால் ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவராக இருப்பர். இரு குழந்தைகள் பிறந்து இறந்து விடும்.

இரு தர்ரம் : கிரகநிலை

22. அத்திரி தடுத்துச் சொல்வார் அறைந்திட்டீர் தார
[மொன்று
குத்தமா யேழோன் தானுங் குளிர்புகர் வீட்டி லேறிப்
பத்திடஞ் சரமே யாகிப் பணிவுடன் கூடி நிற்க
வித்தகன் தனக்குத் தாரம் விளம்புவோ மிரண்டே
[யாக.

22. அத்திரி முனிவர் மறுத்துச் சொல்லுகிறார். ஜாதகனுக்கு ஒரு மனைவியென்று சொல்லுகிறீர்களே! ஏழாம் வீட்டுக்குரிய சனி சுக்கிரனுடைய வீட்டில் (துலாத்தில்) இருப்பதாலும், பத்தாமிடம் சரமாக இருப்பதாலும், ராகுவுடன் கூடி இருப்பதாலும் ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டு என்று கூறுகின்றோம்.

மறுப்பு—கிரக நிலை

23. குறுமுனி தடுத்துச் சொல்வார் கூறுணைத் தாரம் ரண்டு
வருமனை யொன்றே யாகும் உரைப்பீர்க ளந்தச் சங்கைத்
திருநிலா வேழோ னுச்சஞ் சந்திரன் தனத்தில் சேர
அருணனுஞ் ஜன்மந் தங்க அந்தணன் நாலி லேற;

23. அகத்திய முனிவர் தடுத்துக் கூறுகின்றார். ஜாதகனுக்கு இரண்மனைவியர் ஏற்படக் காரணமில்லை. மனைவி ஒருத்தியே உண்டு. அதற்குரிய காரணத்தைக் கூறுங்கள். ஏழாம் வீட்டுக்குரிய சனி உச்சமாக துலாத்திலும் சந்திரன் (தன ஸ்தானத்தில்) குடும்ப ஸ்தானத்தில் இருப்பதாலும், புதன் இலக்கினத்தில் இருப்பதாலும், குரு நான்காமிடத்தில் இருப்பதாலும்;

24. இப்படிக் கிரகம் நிற்க வியம்பொணைத் தாரம் ரண்டு
தப்பித மணுகா தாகுஞ் சண்முக னருளி னலே
மைப்படி வன்னை சேதி யறைகிறே மினிமே லாகச்
செப்புநன் னடக்கை யுண்டு சீலியாம் யோக சாலி.

24. இவ்விதமான கிரக நிலையிருக்கும்போது ஜாதகனுக்கு இரு மனைவி ஏற்படக்காரணமில்லை. ஆறுமுகக் கடவுளின் அருளால் தீங்கு ஏற்படாது. இனிமேல் ஜாதகனுடைய தாயின் செய்திகளைக் கூறுகின்றோம். தாய் நன்னடத்தையுள்ளவள். நல்லொழுக்கமுடையவள். அதிருஷ்டசாலி.

தாயின் விஷயங்கள்

25. சுகமுள வார்த்தை சொல்வள் தூறவிகட் கன்ன மீவள்
அகமதில் வந்த பின்பு அணுகிடும் விசேட யோகம்
இகபரன் பக்தி பூண்பள் இடரென்றோர்க் குதவி
[செய்வள்
முகவசீ கரமு முண்டு மேதினில் நல்லோ ளாவள்.

25. இன்பமாகப் பேசுபவள். பரதேசிகட்கு அன்புடன் அன்னமளிப்பாள். இவளை மணந்த பிறகு கணவனுக்கு அதிகமான யோகம் ஏற்படும். சிவபெருமான் மீது பக்தியுள்ளவள். துன்பமடைந்தவர்கட்கு உபகாரி. முகம் கவர்ச்சியுள்ளதாக இருக்கும். உலகில் நல்லவள் என்ற பெயரை எடுப்பாள்.

தாயின் சகோதரபாவமும் முற்பிறவியும்

23. தன்துணை யாண்பா லொன்று சாற்றுவோந் தென்பா
[லில்லம்
அன்னவள் பூர்வஞ் சொல்வேன் அழகர்வாழ் பாண்டி
[நாட்டில்
உன்னதக் கங்கை சேயா யுறைந்துமே வறுமை யின்றித்
தன்னினத் தவர்க ளுக்குத் தானவ ளுதவி செய்து;

26. ஜாதகனுடைய தாய்க்குச் சகோதரன் ஒருவன் உண்டு. அவனுடைய வீடு தெற்குப் பக்கத்தில் உள்ளது. தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். அழகர்பிரான் எழுந்தருளியிருக்கும் பாண்டிய நாட்டில் (மதுரையில்) உயர்ந்ததொரு வேளாள குலத்தவனுகப் பிறந்து தரித்திரமில்லாமல் தன் சுற்றத்தாருக்கு உபகாரம் செய்து வந்து;

தாயின் மறுபிறவி

27. அறமதி லிச்சை யுண்டா யந்தகன் பக்கல் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று
[சொல்வோம்
வருஞ்ஜன்மம் புலியூர் தன்னில் வருகுவாள் பிரம்ம
[சேயாய்த்
திருமக ளிச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன.

27. தருமம் செய்வதில் விருப்பங் கொண்டு வாழ்ந்து மரண மடைந்து மீண்டும் பிரம தேவனுல் படைக்கப்பட்டு இப் பிறவியில் பிறந்தவள் என்று சொல்லுகின்றோம். அடுத்த பிறவியில் புலியூரில் அந்தணர் குலத்தவளாகப் பிறப்பாள். ஜாதகனுடைய தாய் இப்பிறவியில் என்னென்ன நற்செயல்களைப் புரிந்தாள்? கூறுங்கள்.

உயர் குலப்பிறவி—காரணம்

28. வரன்மனம் போலே வாழ்ந்து வருவோரை யாத ரித்துங்
குறையென்றோர்க் குதவி செய்துங் குவலயம் நல்லோ
[ளாயுந்
திருமகள் வாழ்வ தாலே ஜனிப்பளா மென்று
[சொல்வோம்
அறுமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

28. தன் கணவன் மனம் போல் வாழ்ந்து தன்னை யண்டி வந்தவர்களைக் காத்துத் துன்பமடைந்தவர்கட்கு உபகாரம் செய்து, உலகில் நல்லவள் என்ற பெயருடன் வாழ்ந்து வருவதால் அவ்விதம் சொன்னேம். வேதங்களின் முடிவில் நடமாடும் தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவி

29. தன்தந்தை பூர்வஞ் சொல்வேன் தென்திசைச் சேது
[தன்னில்
வந்தனன் தீயின் வம்சம் வாடகைத் தொழிலே செய்து
முந்தினோர்க் காடை யன்ன மீந்துமே வறுமை யின்றி
நொந்தவர்க் குதவி செய்து நீத்தோர்க்குப் பொருளில்
[லாமல்;

29. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தெற்குக் கோடியில் உள்ள சேதுவுக்கருகில் உள்ள ஊரில் வன்னியர் குலத்தவனுகப் பிறந்து வாடகைத் தொழில் (வீடு கட்டிக் குடிக்கூலிக்குக் கொடுத்தல்) செய்துவந்து, அந்தணர்கட்கு வஸ்திரம் அன்னம் இவைகளை யளித்து வந்து, தரித்திரமில்லாமல் வாழ்ந்து, துன்பமடைந்தவர்கட்கு உபகாரம் செய்து வாடகை யில்லாமல் துறவிகட்கு வீடு கொடுத்து வாழ்ந்து;

30. வாடகை ஏதுமில்லா வதிதிகள் ஆசி சொல்வார்
தேடுதற் கரிய வீசன் தியானங்கள் மிகவே கொண்டு
நாடினன் காலை நாற்றலைக் கஞ்சன் தம்மால்
கூடினி னிக்கு லத்தில் கோதையே கேட்டி டாயே.

30. வாடகை யில்லாமல் வசித்த துறவிகளின் ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தேடுவதற்கரிய ஈச்வரபக்தி அதிகமாகக் கொண்டு வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனல் படைக்கப்பட்டு இப் பிறவியில் இக் குலத்தில் பிறந்தான். தாயே! கேளுங்கள்.

தந்தையின் மறுபிறவி

31. பின்வருஞ் ஜன்மஞ் சொல்வேன் பிரயாகையில்
[பிரம்ம சேயாய்ப்
பொன்பொரு ளுடையோ னெனப் புகழான குடும்பி யாவன்
அன்னவ னிச்சென் மத்தில் அவன்சில செட்டுச் செய்தும்
கன்மன முடைய னெனக் கவடுகள் சிலவே செய்தும்;

31. ஜாதகனுடைய தந்தையின் அடுத்த பிறவியைச் சொல்லுகின்றேம். பிரயாகையில் அந்தணர் குலத்தவனுகப் பிறந்து செல்வம் பொருள் இவைகளைப் பெற்றுக் கீர்த்தியையுடைய குடும்பமுடையவனுக வாழ்ந்து வருவான். அவன் இப் பிறவியில் சிற்சில தொழில்களைப் புரிந்தும் இரக்கமில்லாத மனத்துடன் சில வஞ்சகச்செயல்களைச் செய்தும்;

உயர்குலப்பிறவி : காரணம்

32. வருவதால் மறுபி றப்பு மறைக்குல முதிக்கும் வண்ணம்
உரைப்பீர்கள் முனியே நீர்தாம் உத்தம னனந்தஞ்
[செய்தும்
முருகர்தம் பணியுஞ் செய்து முயன்றோர்க்கு வன்ன மீந்து
பெருமையாய்த் தலங்கள் சென்ற புண்ணிய பலத்தி
[னலே ;

32. அடுத்த பிறவியில் அந்தணர் குலத்தில் தோன்றக் காரணம் என்னவென்று கூறுங்கள். முனிவரே! தாங்கள். ஜாதகனுடைய தந்தை, எண்ணற்ற தீங்குகளைச் செய்தபோதிலும் முருகக் கடவுளுக்குத் தொண்டுகள் பலவற்றைச் செய்து வந்ததாலும், உயர்ந்த வர்கட்கு அன்னமளித்து வந்ததாலும், பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று வந்ததாலும் ஏற்பட்ட நல்வினைப் பயனல் ;

தந்தையின் மரணகாலம்

33. உதிப்பனு மென்று சொல்வோம் உரைக்கின்றோம்
[நாற்பா னெட்டில்
சதியான கால னுடி சாருவா னென்று சொல்வோம்
அதுகாலம் [1] முடவன் சக்கரம் அப்புகர் புத்தி யாகுந்
துதிசெய்தோர் தம்மைக் காக்குந் தோகையே கேட்டி
[டாயே.

33. பிறப்பான் என்று சொன்னோம். அவனுடைய இறுதிக் காலத்தைக் கூறுகின்றோம். ஜாதகனுடைய நாற்பத்தெட்டாம் வயதில் அவன் தீங்கான மரணத்தை யடைவான். அக்காலத்தில் சனி மகா தசையில் சுக்கிர புத்தியாகும் என்று சொன்னோம். தோத்திரம் செய்ப வரைக் காப்பாற்றும் தெய்வமே! கேளுங்கள்.

தாயின் மரணகாலம்

34. இருபது வேழு வாண்டில் இயம்புவோ மன்னை கண்டங்
குருதசை காரி புக்தி கூடிடு மந்தக் காலந்
திருமகன் யோகச் சேதி செப்புவோ மினிமே லாகப்
பிறையது போலே செல்வம் பெருகிடுஞ் ஜனனந்
[தொட்டு;

34. ஜாதகனுடைய இருபத்தேழாம் வயதில் தாய் இறந்துவிடுவாள் என்றோம். அக்காலத்தில் குருமகாதசையில் சனி புக்தி நடை பெறும். இனி ஜாதகனுடைய பொதுயோகத்தைச் சொல்லுகின்றோம். வளர் பிறைச் சந்திரன் போல் செல்வம் விருத்தியாகும். ஜாதகன் பிறப்பு முதல்;

1. சனி

ஜாதகனுடைய பொது யோகம்

35. அன்னவன் மரண மட்டும்
அணுகாவே தரித்தி ரங்கள்
பொன்னது கொடுக்கல் வாங்கல்
பூமியும் விருத்தி செய்வன்
தென்திசைத் தலங்கள் செல்வன்
தேவதாப் பக்தி பூண்பன்
கன்னென மொழியே சொல்வன்
கந்தன்தன் தொண்டு பூண்பன்.

35. அவனுடைய மரணகாலம் வரையில் அவனுக்கு வறுமைகள் ஏற்படா. பணம் கொடுக்கல் வாங்கல்களைச் செய்து வருவான். விளை நிலங்களைப் பெருக்குவான். தெற்குப் பக்கத்திலுள்ள புண்ணியத் தலங்களாகிய மதுரை, இராமேசுவரம், சேது, திருச்செந்தூர், முதலிய ஊர்களுக்குச் சென்று வருவான். தெய்வபக்தி யுடையவன். இனிய வார்த்தைகளையே பேசுபவன். முருகக் கடவுளுக்குத் தொண்டுகள் பலவற்றைச் செய்வான்.

36. இல்லமு மூன்று செய்வன் இடரென்றோர்க் குதவி
[செய்வன்
சொல்வார்த்தை காப்பா னுகுந் தொடுவழக் கதனில்
[செல்லான்
மெல்லியர்க் கிட்ட னுவன் விருந்தோரை யாத ரிப்பன்
அல்லலை யகற்று மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

36. மூன்று வீடுகளைக் கட்டுவான். துன்பமடைந்தவர்கட்கு உபகாரம் செய்பவன். சொன்ன சொல்லை மீறுதவன். வீண சண்டைக்குப் போகாதவன். தன் மனைவிக்குப் பிரியமானவன். தன் வீட்டுக்கு வந்த விருத்தினர்களை அன்புடன் உபசரிப்பான். எங்களுடைய துன்பத்தைத் தவிர்க்கும் உயருக்குயிரான தாயே! கேட்டிடுவாய்.

யோகமேற்படுதற்குரிய கிரகநிலை

37. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளெந்தச்
[சங்கை
ஆகமன் நாலில் தங்க அலரிக்கீ ராறில் வெள்ளி
பாலகன் சேயுஞ் ஜன்மம் பனிரெண்டோ னிரண்டில்
[தங்கப்
போகத்தா னத்தில் காரி பொருந்தின பலத்தி னலே;

37. ஜாதகனுக்கு யோகம் ஏற்படும் என்று சொல்லக் காரணம் யாது? கூறுங்கள் என்று வினவ, முனிவர்கள் பதில் உரைக்கின்றனர்.

குரு நான்காமிடத்தில் இருப்பதாலும், சூரியனிருக்கு மிடத்துக்குப் பன்னிரண்டில் சுக்கிரன் இருப்பதாலும், ஜன்ம லக்கினத்தில் செவ்வாய் இருப்பதாலும், பன்னிரண்டாமிடத்துக்குரிய சந்திரன் இரண்டாமிடத்தில் இருப்பதாலும், போகஸ்தானத்தில் சனி யிருக்கும் பலத்தாலும் ;

38. நன்யோகம் வேசி யோகம்
நாட்டினும் பால னுக்கு
அளகேசன் போலே வாழ்வன்
அவனியில் சல்லியங் கொள்ளான்
உளமதில் கபடு மில்லான்
உற்றோர்கள் மதிப்புக் கொள்வான்
இளம்பிறை யணிந்தோன் மாதே
இம்மொழி தப்பா வாமே.

38. வேசியோகம் முதலான நல்ல யோகங்கள் ஜாதகனுக்கு ஏற்படும் என்றும். அளகாபுரிக்கு அதிபனாகிய குபேரன் போல் செல்வவானாக வாழ்வான். உலகில் கடன்படாதவன். மனத்தில் சூதுகளில்லாதவன். தன் சுற்றத்தார்களால் பெருமையை யடைவான். பிறைச் சந்திரனைத் தலையில் தரித்த சிவபெருமானின் தேவியே! இவ் வார்த்தைகள் தவறு.

ஜாதகனுடைய முற்பிறப்பு

39. இன்னவன் முன்ஜன் மத்தை யியம்புவோ மினிமே
[லாகத்
தென்திசைப் பழனி தன்னில் சைவமாங் கங்கை சேயாய்
அன்னவ னுதித்து மேலும் அவனியால் ஜீவித் தேதான்
உன்னத சேது சென்று வுயர்வோர்கள் பக்தி பூண்டு ;

39. ஜாதகனுடைய முற்பிறப்பைச் சொல்லுகின்றோம். தெற்குத் திசையில் உள்ள பழனியில் சைவ வேளாளர் குலத்தில் பிறந்து, விவசாயம் செய்து அதனால் ஜீவித்து வந்து, உயர்ந்த சேதுவுக்குச் சென்று பெரியோர்களிடம் பக்திகொண்டு வாழ்ந்து ;

ஜாதகன் வயது

40. தாகப்பந் தலும மைத்துச் சண்டன்தன் பதிக்குச்
[சென்று
ஆகமன் வரையப் பட்டு அணுகுவா னிக்கு லத்தில்
பாகமா யன்பத் தொன்பான் ஆண்டினில் மேட மாதம்
ஏகிடு முடல மென்றே மியம்புவோ மிவன்பின் ஜன்மம்.

40. தண்ணீர்ப்பந்தல்களை அமைத்துப்பிறகு மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தான். நிண்ணமாக ஜாதகன் தனது ஐம்பத்தொன்பதாம் வயதில் சித்திரை மாதத்தில் மரணமடைவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம்.

ஜாதகனுடைய மறுபிறவி

41. உத்தரம் பிரயாகை பக்கல் உதிப்பனும் பிரம்ம சேயாய்
அத்திரி தடுத்துச் சொல்வார் அவனுமிச் சென்மந்
[தன்னில்
பெத்தபுண் ணியங்க ளென்னப் பேசுவீர் முனியே
[நீர்தாஞ்
சுத்தமாந் தெய்வ பத்தி சொல்லதைக் காத்த தாலும்;

41. வடக்கில் உள்ள பிரயாகைக்குப் பக்கத்தில் உள்ள ஊரில் அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான். அத்திரி முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகன் இப்பிறவியில் செய்த புண்ணியங்கள் என்னவென்று கூறுங்கள், முனிவரே! தூய்மையான தெய்வபக்தி கொண்டும் தான் கூறிய வார்த்தைகளைத் தவறுமலும்;

42. முருகர்தம் தொண்டு பூண்டு முயர்வான தலங்கள்
[சென்றும்
வருவதால் மறுபி றப்பு மறைக்குல முதிப்பா னாகுந்
திருமனை யிவன்பின் னாலே செல்லுவாள் காலை யீடு
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

42. முருகப்பிரானுக்குத் தொண்டுகள் பலவற்றைச் செய்தும் பல உயர்ந்த புண்ணியத் தலங்களுக்குச் சென்றும் வாழ்ந்து வந்ததால் அடுத்த பிறவியில் அந்தணர் குலத்தில் பிறப்பான். இவனுடைய மனைவி இவனுக்குப் பிறகு மரணமடைவாள். அரிய வேதங்களின் முடிவில் சொல்லப்படும் தேவியே! கேளுங்கள்.

ஜனனகால தசை

43. ஜனித்திடு காலந் தன்னில் சேய்தசை யாண்டு வைந்துங்
குனித்திடு திங்கள் மூன்றுங் கூறுவோம் பலனை யாங்கள்
வினையுண்டு ஜாத கர்க்கு மேவிடுந் துணைவர் தாமும்
அனையவே பந்து சூதம் அறைந்தனம் பூர்வ பாகம்.

43. ஜாதகன் பிறப்புக் காலத்தில் (சித்திரா நட்சத்திரம்) அங்காரக மகாதசையில் இருப்பு ஐந்து வருடங்களும் மூன்று மாதங்களுமாம். அக்காலத்திய பலனைச் சொல்லுகின்றோம். ஜாதகனுக்கு நோயால் உபத்ரவமுண்டு. சகோதர விருத்தி யேற்படும். தன் சுற்றத்தாருக்கு அசுபம் நிகழும். இதுவரை முதல்பாகத்தைக் கூறினேம்.

ஜாதகம் 32

1. சந்திரன் மாதி லாகச் சனிராகு சாடி புக்க
பொன்தனுசு பூமன் மானில் புகர்புத னிரவி நந்தி
பிந்திய கேது சீயம் புகலுவோஞ் ஜன்மஞ் சிம்மம்
இந்தவாறு கோளு நின்ரூல் இயம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் கன்னியிலும், சனி ராகு கும்பத்திலும், குரு தனுசிலும், செவ்வாய் மகரத்திலும், சுக்கிரன் புதன் சூரியன் விருஷபத்திலும், கேது சிம்மத்திலுமாக நவக்கிரகங்கள் நின்று இலக்கினம் சிம்மமாக விருந்தால் ஏற்படும் பலனைக் கூறுங்கள்.

கிரகநிலை

		சுக்கிரன் புதன் சூரியன்	
சனி ராகு	இராசி சக்கரம்		
செவ்வாய்			லக்கினம் கேது
குரு			சந்திரன்

ஜாதகன் பிறந்த வீட்டுநிலை

2. வந்தவன் வடதென் வீதி வாசலு மேற்கு நோக்கந்
தந்தைதா யில்லா மன்று சாற்றினேங் கூரை யில்லந்
சந்தியு மருகர் தந்தி சாமுண்டி மாரி யுத்தரம்
முந்துமால் மேற்கே தங்கு மிடிந்ததா மந்தக் கோட்டம்.

2. ஜாதகன் பிறந்தவீடு தெற்கு வடக்கான தெருவில் மேற்கு நோக்கிய வாயிலுள்ளது. அஃது அவனுடைய பெற்றோர் வீடு அன்று. சிறு கூரை வீடாகும். வீட்டுக் கருகில் ஒரு சந்தும், சமணதேவன் கோவிலும், விநாயகர் ஆலயமும், சாமுண்டீச்வரி, மாரியம்மன் இவர்களது கோவிலும் வடக்குப் பகுதத்தில் உள்ளன. மேற்குப் பக்கத்தில் இடிந்ததான திருமாலின் ஆலயமொன்றுளது.

3. இந்தநல் லடையா ளத்துள் இலகிய சிற்றூர் தன்னில்
வந்தவ னிவனே யென்ரூம் வருந்தந்தை தாயின் யோகம்
தன்துனை களத்திர புத்திரர் ஜாதகன் முன்பின் ஜன்மம்
உன்னத நவக்கோ ளாய்ந்து உரைக்கிரூம் தாயே

[கேளும்.

3. இவ்விதமான அடையாளங்களுள்ள ஒரு சிற்றூரில் இந்த ஜாதகன் பிறந்தவன் என்றேம். இவனுடைய தந்தை தாய் உடன் பிறந்தவர், மனைவி மக்கள், முற்பிறவி, மறுபிறவி ஆகியவற்றைப் பற்றி நவக்கிரகங்களின் நிலையை ஆராய்ந்து கூறுகின்றேம். தாயே! கேளுங்கள்.

இனி வரும் மூன்று பாடல்களில் ஜாதகனுடைய தந்தையின் குணங்கள் கூறப்படும்

4. தந்தையின் தூணவ ராறில் தங்காது யாவுந் தாமே
தன்தன மில்லா னுகுஞ் சன்மார்க்கன் சமயோ கத்தான்
சிந்தையில் மர்ம மில்லான் சிலுகுக ளொருவர்க்
[கெண்ணுன்
எந்தையே யிருசி வப்பன் இன்பமாய் வார்த்தை
[சொல்வன்.

4. ஜாதகனுடைய தந்தைக்கு உடன்பிறந்தவர் அறுவர். அவர்கள் ஒருவரும் நிலையார். தந்தை தன்னுல் சம்பாதிக்கப்பட்ட பொருள் இல்லாதவன். நல்வழி நடப்பவன். சமமான யோகங்களுடையவன். மனத்தில் இரகசிய மில்லாதவன். தீங்குகளை எவருக்கும் செய்ய நினையாதவன். தாயே! இரு நிறமுடையவன். இன்பமாகப் பேசுபவன்.

5. ரோமங்கள் நீட்சி யில்லான் நுண்ணிய புத்தி யில்லான்
பூமியில் கிருஷி செய்வான் புயபல முடைய னுவன்
நேமியை விரயஞ் செய்வான் நேர்ந்திடும் பித்தச் சூடு
தீமையை வெளிக்காட் டாதான் திகம்பரன் பக்தி
[கொள்வன்.

5. நீண்ட ரோமங்களில்லாதவன். புத்திக் கூர்மை யில்லாதவன். விவசாயம் செய்து வருவான். வலிவுள்ள புஜங்களையுடைய பராக்கிரமசாலி. விலைநிலங்களை விற்று விடுவான். பித்தச்சூட்டு நோயுள்ளவன். மனத்திலுள்ள கெட்ட எண்ணங்களை வெளியிடாதவன். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன்.

6. மூலச்சூ டுடைய னுவன் முன்கோபம் பின்பு சாந்தஞ்
சாலமா மனத்தா னுகுந் தனமதி லிச்சை யுள்ளான்
சீலமு மதிக மில்லான் சிலுகான குடும்பி யாவன்
பால்பாக்கிய முடைய னுகும் பகையென்று வெளிக்காட்
[டாதான்.

6. மூலச்சூட்டு நோயுள்ளவன். முன்கோபமுடையவன். அக்கோபம் உடனே தாழ்வுறும். தாராள மனப்பான்மையுடையவன்.

பொருட்செல்வத்தில் விருப்பமுடையவன். நல்லொழுக்கமில்லாதவன். துன்பமுற்ற (சிக்கலுள்ள) குடும்பத்தையுடையவன். பால் பாக்கிய முள்ளவன். விரோத மனப்பான்மையை வெளியில் தெரிவிக்காதவன்.

ஜாதகனுடைய குணங்கள்

7. சொன்னவிக் குணத்தா னுக்குச் சுதனுமே வுதிப்பா
[னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அவனிரு நிறத்த
[னுகும்
பன்னியே பேச வல்லான் பால்தயிர் பிரிய னுகும்
உன்னதத் தரள தந்தம் உவமைகள் சொல்வா னுமே.

7. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான் என்றேம். அவனுடைய குணங்களைக் கூறுகின்றேம். கருமை கலந்த சிவப்பு நிறமுடையவன். பன்னிப்பன்னிப் பேசுபவன். பால் தயிர் இவைகளைப் புசிப்பதில் விருப்பமுடையவன். உயர்ச்சியும் வெண்ணிறமுமுடைய பற்களுள்ளவன். பல உதாரணங்களுடன் பேசுவான்.

8. வித்தையுஞ் சமம தாகும் விவேகியா மெவர்க்கு நண்பன்
புத்திமான் பொறுமை சாலி புராதனம் விரயஞ் செய்வன்
நத்தினோர்க் குதவி செய்வன் நலம்படக் கூறு வானுஞ்
சித்தச லைப்ப தாகுஞ் சீக்கிர நடையு மாவன்.

8. சமமான கல்வியறிவுள்ளவன். நன்மை தீமைகளை யறிந்தவன் (விவேகமுள்ளவன்). எல்லோருக்கும் நண்பன். புத்திசாலி. பொறுமையையுடையவன். பிதுரார்ஜிதமான சொத்துக்களை (வெகு நாட்களாக இருந்து வந்த சொத்தை) அழிப்பான். அண்டிவந்தவர்க்கு உபகாரம் செய்பவன். நன்மை பயக்கும்படி பேசுபவன். மன மதனையொத்த அழகுடையவன். வேகமாக நடப்பவன்.

9. பிறந்தவில் தன்னை நீக்கிப் பொதுவான தென்மேல்
[திக்கில்
உறைந்துபின் பதினே ழாண்டில் உதித்தவூ ரடைவா
[னுகும்
நிரந்தர மவ்வூர் வாசம் நிகர்பிதா பூமி தன்னை
மறந்துமே யவ்வூர் தன்னில் வாங்குவான் பூமி தானே.

9. பிறந்த வீட்டை விட்டுப் போய்த் தென்மேற்குத் திக்கிலுள்ள ஒரு பொதுஸ்தலத்தில் இருந்து, பிறகு பதினேழாம் வயதில் மீண்டும் தன் சொந்த ஊரை அடைவான். பிறகு அவ்வூரிலேயே வசித்து வருவான். தன் தந்தையின் விளைநிலங்களைத் திரும்ப வாங்கி அவ்வூரில் வாழ்ந்து வருவான்.

10. ஏறுகள் விருத்தி செய்வன் இல்லமும் புதிதாய்ச் செய்வன்
நாரிகள் மோகங் கொள்வன் நான்குபேர் தூணைகள்
[தோன்றுங்
காரிழை யொன்றே தீர்க்கங் காளையு மவ்வா றுகுந்
தீரமாய்ப் பெண்பால் சேதி செப்புவோங் கேளுந் தாயே.

10. ஏர்களைப் பெருக்குவான். வீட்டைப் புதிதாகக் கட்டுவான். பெண்களின்மீது மையல் கொள்ளுவான். நான்கு சகோதரர்கள் தோன்றுவர். அவர்களில் ஒருவனே நீண்ட ஆயுளுள்ளவன். சகோதரி ஒருத்தியே பிறந்து தீர்க்கமாயிருப்பாள். அவளுடைய செய்திகளைக் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதரியின் குணங்கள்

11. உணச்சலா மிருசி வப்பள்
உள்மனங் கவடு மில்லாள்
வினையிலாள் கீழ்ப்பால் தன்னில்
மேவுவான் வரனு மேதான்
அனையவே சிலநா ளொன்றுய்
அணுகிப்பின் வேறுய்ச் செல்வன்
பிணையாகுஞ் சிறையி ருப்பள்
துணையவன் தன்னை டொத்து.

11. மெல்லிய சரீரமுடையவள். கருமை கலந்த சிவப்பு நிற முடையவள். சூதுகளில்லாத மனத்தினள். தீங்குகளையடையாதவள். கணவன் அவளிருக்குமிடத்துக்குக் கிழக்குத் திசையிலிருந்து வருவான். அவனும் சிலகாலம் ஒன்றுகக் கூடியிருந்து பிறகு தனியாகச் சென்றுவிடுவான். ஜாதகனின் சகோதரி சிறையிலிருப்பதுபோல் தன் சகோதரனின் வீட்டில் வசித்து வருவாள்.

12. காரணம் யாது வென்னக் கணவனு விரோத முற்றுப்
பார்மன்னர் தன்பால் சென்று பாவையின் உணவுக்
[காகத்
தீரமாய்ச் சிலநா ளொன்றுய் அணுகிப்பின் வேறுய்ச்
[செல்வள்
மாரன்பால் சேரா ளாகும் மாதுவூழ் வினையா மென்னே.

12. அதற்குக் காரணம் என்னவென்று கேட்க, கணவனும் இவளிடம் பகைத்துக்கொண்டு விடுவான். இவளும் அரசாங்கத்தாரிடம் சாப்பாட்டுக்காக முறையிட்டு, (ஜீவனஞ்ச வழக்குத் தொடர்ந்து) பிறகு சிலகாலம் கணவனுடன் ஒன்றுக வாழ்ந்து, மறுபடி

தனியாகச் சென்று விடுவாள். கணவன்வீட்டில் வாழாதவள் இது முற்பிறவியில் செய்த தீவினையால் ஏற்பட்டது என்றேும்.

ஜாதகன் சகோதரியின் முற்பிறவி

13. என்னவூழ் செய்தாள் சொல்வாய்
இயம்புவோங் கேளுந் தாயே
பெண்ணையின் வடபா லாகப்
பெரும்பணைப் பட்டி தன்னில்
வன்னிய மரபில் தோன்றி
மாரன்தன் னுடன்வ சித்துத்
தன்சுத ரதிக முண்டாய்த்
தரையினில் வாழு நாளில் ;

13. என்ன தீவினைகள் செய்தாள்? அவற்றைக் கூறுங்கள். தாயே! சொல்லுகின்றேும். கேட்பீராக. பெண்ணையாற்றிற்கு வடக்குப்புறத்தில் இருக்கும் பெரும்பணைப்பட்டியென்ற ஊரில் வன்னியர் குலத்தில் பிறந்து, தன் கணவனுடன் வாழ்ந்து வந்து, புத்திரர் களைப்பெற்று ஜீவித்து வருங்காலத்தில் ;

வேற்றுப்பெண்ணை நிந்தை

14. வந்தவூழ் தன்னைச் சொல்வேன் வரனுமே வேறு மாதை
இந்திர ஜாலஞ் சொல்லி யிருப்பிடம் விட்டு நீக்கித்
தன்பக்கல் வைத்துக் கொண்டான் தையலும்
[விரோத முற்று
நிந்தையாய்ப் பழியைச் சொல்லி நீக்கிய ளந்த மாதை.

14. ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேும். இவளுடைய கணவன் வேற்றுப்பெண் ஒருத்தியை மயக்கி அவளுக்கு ஆசைகாட்டி அவளுடைய வீட்டை விட்டு விலக்கித் தன் வீட்டில் வைத்துக் கொண்டான். இந்தப் பெண் (ஜாதகனுடைய சகோதரி) மனத்தில் பகைகொண்டு நிந்தை வார்த்தைகளைக்கூறி அவ்வீர விரட்டி விட்டாள்.

பெண் சாபம்

15. மாதுவுந் திகில டைந்து வறைகிறுள் சாபந் தானும்
நீதியாய் மறுஜன் மத்தில் நிமலியா யுதித்து நீயும்
போதவே வரனுண் டாகிப் பொருந்தாமல் தவசி போலே
மேதினில் வாழ்வா யென்று விளம்பிமண் தூற்றிச்
[சென்றுள்.

15. அந்தப் பெண்ணுக்கும் மனத்தில் பயம் ஏற்பட்டுச் சாப மிடுகின்றாள். நியாயமாக நீ மறுபிறவியிலும் பெண்ணுப்ப் பிறந்து, தகுந்த கணவனையடைந்து, அவனுடன் சேர்ந்து வாழாமல் தவசிபோல் தனியாக உலகில் வாழ்ந்து வருவாய் என்று கூறித் தெருமண்ணை வாரி யிறைத்து விட்டுச் சென்றாள்.

16. அதுவன்றி வினைவே றில்லை யடைந்தது வந்தச் சாப
மதிபதி யந்தி யத்தில் மலர்வனஞ் சோலை வைத்து
நதிசடை அணிக்தோ னுக்கு நல்கியே வந்தா
[ளென்றேஞ்
சதிசெய்யுங் காலன் பக்கல் சார்ந்தனள் வரன்முன்
[னேதான்.

16. அதுவல்லாமல் வேறு தீவினையின்றி வாழ்ந்தாள். ஆனல் அந்தத் தோஷம் இவளைப் பற்றியது. இவளும் தன் கடைசிக் காலத்தில் நந்தவனம் ஒன்று வைத்து அதில் மலர்ச்செடிகளை வளர்த்து அவற்றில் உண்டாகும் மலர்களை மாலையாகத் தொடுத்துக் கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானுக்கு அளித்து வந்தாள் என்றேம். பிறகு தன் கணவன் மரணமடைவதற்கு முன்பாகவே இறந்தாள்.

17. கஞ்சனுல் வரையப் பட்டுக் காதலி யிச்சென் மத்தில்
மிஞ்சிய குலமு தித்தாள் விதுரருங் கேட்க வுற்றூர்
வஞ்சிமுன் ஐன்மத் தில்தான் வன்னிய குலமு தித்தாள்
தஞ்சமா யிக்கு லத்தில் சாருங்கா ரணங்க ளென்ன.

17. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் உயர்ந்த குலத்தில் பிறந்தாள். விதுரர் வினவலானூர். இப்பெண் முற்பிறவியில் வன்னியர் குலத்தில் பிறந்து இப்பிறவியில் இந்தக் குலத்தில் பிறக்கும் காரணங்கள் என்ன ?

உயர்குலப் பிறவிக்குக் காரணம்

18. சொல்லுவீர் விவர மாகச் சுந்தரி முன்ஜன் மத்தில்
நல்லபூஞ் சோலை வைத்து நன்மலர்க் கடவுளுக் கீந்து
வல்லியும் வாழ்ந்த தாலே விரைந்தனள் மேல்கு லத்தில்
புல்லியர் மாது சாபம் புக்கிடு மிச்சென் மத்தில்.

18. விவரமாகக் கூறுங்கள் (என்றூர்). அழகான இப்பெண் முற்பிறவியில் தெய்வத்திருப்பணிக்காக நல்ல மலர்ச்சோலை யொன்றை வைத்து, புஷ்பங்களைத் தெய்வத்துக்கு அளித்து, வாழ்ந்து வந்ததால் உயர்ந்த குலத்தில் பிறந்தாள். அற்பமான பெண்ணுடைய சாபமும் இப்பிறவியில் தொடரும்.

மறுபிறவி

19. வரன்சுக மடையா ளாகும் மாமுனி போலே வாழ்வள்
திருமகள் பின்ஜன் மத்தைச் செப்புவோங் காஞ்சி
[மேல்பால்
உறைகுவாள் கங்கை சேயா யுயர்வான குடும்பந் தன்னில்
பெருமையும் புகழு மேற்பள் புண்ணிய சாலி கேளாய்.

19. தன் கணவனுடைய சுகத்தைப் பெறுதவள். பெரியதொரு ரிஷிபோல் (தனியாகவும் நேர்மையுடனும்) வாழ்ந்து வருவாள். அவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சிபுரத்துக்கு மேற்கில் உள்ள ஊரில் வேளாளர் குலத்தவளாகப் பிறப்பாள். மேம்பட்ட குடும்பத்தில் பிறந்து பெருமையுடனும் கீர்த்தியுடனும் வாழ்வாள். புண்ணியசாலியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய இளைய சகோதரனின் குணங்கள்

20. பின்துணை யாண்பால் சேதி பேசுவோந் தாயே கேளு
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பான் மூர்க்கங்
[கொஞ்சம்
பன்னியே பேசு வானும் பட்சண மதிகங் கொள்வன்
சொன்னசொல் லிரண்டு முள்ளான் துணைவரோ
[டொத்து வாழ்வன்.

20. ஜாதகனுடைய இளைய சகோதரனின் செய்தியைக் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள். தன் வார்த்தைகளே மேன்மையுள்ளவை என்று அடித்துப் பேசுபவன். சிறிது மூர்க்ககுணமும் உள்ளவன். பன்னிப்பன்னிப் பேசுபவன். அதிகமாகச் சிற்றுண்டிகளை விரும்பிப் புசிப்பவன். இருவிதமாகவும் பேசுபவன். சகோதரனுடன் மனமொத்து வாழ்ந்து வருவான்.

இதுவுமது

21. கிருஷிகள் செய்வா னுகுங் கண்ணிய மாக வாழ்வன்
வருங்கல்வி கொஞ்ச முண்டு மறுமொழி யதிகங் கூறுவன்
பறைபள்ளு சேர்ப்பா னுகும் பகருவான் கட்டு வார்த்தை
நிறையவே குடும்பி யாவன் நேமியில் சீல னுவன்.

21. விவசாயத்தைச் செய்து வருவான். தன்மதிப்புடன் வாழ்ந்து வருவான். கல்வியறிவு சிறிதேயுள்ளவன். எதிர்வார்த்தையை மிகுதியாகச் சொல்லுபவன். ஏவலாட்களை அதிகமாகச் சேர்ப்பவன். வார்த்தைகளைப் புனைந்து பேசுபவன். பெரிய குடும்பியாகவும் உலகில் நல்லொழுக்கமுள்ளவனுகவு மிருப்பான்.

22. நற்சுகஞ் செல்வ முண்டு நயம்பெறும் பூமி யாலே
கற்பன விவேகத் தாலே யுயர்செல்வம் பின்னு லெய்தும்
அற்பமாம் புத்தி கொஞ்சம் அருகர்தம் பக்தி கொள்வன்
சொற்பனப் பலித முண்டு தோகையே மேலுங் கேளே.

22. நல்ல சுகத்தை யளிக்கும் செல்வமுடையவன். பூமியிலிருந்து நல்ல வருமானம் வரும். பிற்காலத்தில் இவனுடைய நல்ல அறிவால் விவேகத்தால்) பெரியதொரு செல்வம் கிடைக்கும். சிறிதளவு அற்ப புத்தியுமுடையவன். அருகதேவரிடம் பக்தியுள்ளவன். இவனுடைய கனவுகள் நனவாகும். தாயே! மேலும் கேளுங்கள்.

23. பாரியு முத்திர நேரும் பாலர்க ளாண்பா லொன்று
நாரியு மிரண்டு வென்றோ நவின்றவிம் மூன்றுந் தீர்க்கந்
தீரமா யிவன்தன் னோடு சிலகாலம் வாழ்வன் மாதே
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை புகன்றிட் டோமே.

23. இவனுக்கு மனைவி வடக்குத் திசையிலிருந்து வருவாள். ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் பிறந்து மூவரும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள் என்றோம். தைரியத்துடன் இவன் இந்த ஜாதகனுடன் சேர்ந்து சில காலம் வாழ்ந்து வருவான். தாயே! ஆறுமுகக் கடவுளைப் பெற்ற அம்பிகையே! நாங்கள் கூறுவதைக் கேளுங்கள்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

24. உதித்தவன் மணத்தின் காலம் உரைக்கின்றோ
[மையைந் தாண்டில்
அதிபதி தென்மேல் திக்கில் மாதுரு வர்க்கந் தன்னில்
விதியினல் வருவா ளென்றோம் விளம்புவோ மிவள்கு
[ணத்தைச்
சதிசெய்யா மனத்தா ளாகுஞ் சாந்தமுங் கோப முண்டு.

24. ஜாதகனுடைய திருமணக்காலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய இருபத்தைந்தாம் வயதில் அவனிருக்குமிடத்துக்குத் தென்மேற்குத்திக்கிலிருந்து தன் தாயின் வர்க்கத்தில், ஆன்றோர்களின் ஆக்ஞைப்படி வந்து சேருவாள் என்றோம். மனைவியினுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். தீங்குகள் நினையாத மனத்தினள். சிறிது கோபமும் பிறகு தணிவும் உள்ளவள்.

25. மாநிறம் புத்தி சாலி மர்மமாங் குணத்த ளாகுந்
தானமுந் தருமஞ் செய்வள் தங்கிடும் நாபிச் சூடு
தேன்மொழி வயது தீர்க்கஞ் ஜயமுனி கூறு கின்றார்
தானவள் மரண மாகிச் சார்ந்திடு மிரண்டாந் தாரம்.

25. மாநிறமுள்ளவள். புத்திசாலி. இரகசியமுள்ளவள். தான தருமஞ் செய்வதில் விருப்பமுடையவள். வயிற்றுச் சூட்டு நோய் உள்ளவள். இனிய வார்த்தைகளைப் பேசுபவள். நீண்ட ஆயுள் உள்ளவள். ஐயமுனிவர் மறுத்துக் கூறுகின்றார். இப்பெண் இறந்து மறுமனிவி வந்து சேருவாள் என்றோம்.

இருதாரமேற்படக் கிரகநிலையும் மறுப்பும்

26. ஏதுகா ரணத்தி னலே யியம்புவீ ரந்தச் சங்கை
ஓதுவீர் முனியே நீர்தாம் உரகனுஞ் சனியு மேழில்
நீதாக விருப்ப தாலே செப்பினே மந்தச் சங்கை
மாதவர் மறித்துச் சொல்வார் மந்தனு மாட்சி யாக;

26. என்ன காரணத்தால் நீங்கள் அவ்விதம் சொல்லுகிறீர்கள் முனிவரே! தாங்கள் அதைக் கூறுங்கள்! சனியும் ராகுவும் ஏழாமிடத்தில் (களத்திரஸ்தானத்தில்) இருப்பதால் அவ்விதம் சொன்னோம். மிகுந்த தவமியற்றிய முனிவர் மறுத்துக் கூறுகின்றார். சனி (ஏழாம் வீட்டுக்குரியவன்) ஆட்சியாகவும்;

27. உறைவதால் ராகு கூட [1]உடுபதி யிரண்டில் நிற்க
[2]அருணனு மிரண்டோ னகி யணுகிடத் தசமந் தன்னில்
வருமனை யொன்றே யாகு மாங்கலிய மிரண்டு மாகுந்
திருடனல் நாற்ப தாண்டில் சென்றிடு முதல்மாங் கலியம்.

27. இராகுவுடன் கூடி ஏழாமிடத்திலேயே இருப்பதாலும், இரண்டாமிடத்தில் (குடும்பஸ்தானத்தில்) சந்திரன் இருப்பதாலும், அவ்வீட்டுக் குரியவன் புதனாகி, அவன் பத்தாமிடத்தில் (கேந்திரஸ்தானம்) இருப்பதாலும், அவனுக்கு மனைவி யொருத்தியேயாகும். ஆனால் அவளுக்கு இரு மாங்கல்யங்கள் அணிவிக்க நேரும். முதல் மாங்கல்யம் நாற்பதாம் வயதில் திருடனால் அபகரிக்கப்படும்.

28. இதுவன்றி முப்பா னலில் இடர்வரும் பாரிக் கேதான்
கருவுண்டாய்க் கர்ப்பத் தாலே கனத்ததோர் கண்டம்
[நேரும்
அருகர்தங் கிருபை யினலே யவ்வினை நிவிர்த்தி யாகுஞ்
சுதர்களு மிருநான் காகத் தோன்றிடு மென்று
[சொன்னோம்

28. இதுவல்லாமல் ஜாதகனுடைய முப்பத்துநான்காம் வயதில் மனைவிக்குத் துன்பம் உண்டாகும். அவளுக்குக் கர்ப்பம் ஏற்பட்டு அதனால் பெரியதொரு கண்டம் ஏற்படும். அருகதேவனின் அருளால் அவ்வினை விலகும். பிறகு எட்டுப் புதல்வர்கள் பிறப்பார்கள் என்றோம்.

1. சந்திரன் 2. புதன்

புத்திர பாவம்

29. புத்திர ராண்பால் மூன்று பெண்ணது விரண்டு
[வென்றேஞ்
சித்தமா யைந்துந் தீர்க்கஞ் சீரண மற்ற வெல்லாம்
புத்திர ரிவன்மே லாகப் போற்றுவோம் யோகந் தானும்
அத்திரி சொல்லு கின்றார் அவன்சுதர் யோகமெவ் வாறு.

29. அவர்களில் மூன்று பிள்ளைகளும் இரு பெண்களும் நீண்ட ஆயுள் உள்ளவர் என்றேரும். மற்றக்குழந்தைகள் நிலையா. இவனுடைய புத்திரன் இவனுக்கு மேம்பட்டவனாக இருப்பான் என்று சொல்லுகின்றேரும். அத்திரி முனிவர் கூறுகின்றார். ஜாதகனுடைய புத்திரனுக்கு எங்ஙனம் யோகமேற்படும்?

யோக மேற்படுவதற்குரிய கிரகநிலை

30. [1]பொன்னவ னஞ்சி லாட்சிப் [2]பூமக னறி லுச்சம்
இன்னவாறு கிரகம் நிற்க வியம்பினேம் புத்திர யோகம்
அன்னையின் குணத்தைச் சொல்வேன் அவளிரு நிறத்த
[ளாகும்
தன்மனங் கவடு மில்லாள் தன்பணி யதிக மில்லாள்.

30. புத்திர ஸ்தானத்துக்குரிய குரு ஐந்தாமிடத்தில் ஆட்சியாகவும், செவ்வாய் ஆறுமிடத்தில் உச்சனாகவும் இவ்விதம் கிரகநிலைகள் இருப்பதால் நாங்கள் புத்திரனுக்கு யோகம் ஏற்படும் என்று சொன்னேம். இனி தாயின் விவரங்களைக் கூறுகின்றேரும். தாய் கரிய நிறமுடையவள். கபடமில்லாத மனமுடையவள். ஆபரணங்கள் அதிகமில்லாதவள்.

தாயின் குணங்கள்

31. மாதிவள் சமயோ கத்தாள் மைந்தர்மே லாசை யுள்ளாள்
சோதியுங் குறைவு முண்டு சுகமுள வார்த்தை சொல்வாள்
பாதக மனமில் லாதாள் பரவுப காரி யாகும்
நீதியாய் நடக்கை யுள்ளாள் நிதானமாங் குடும்பி
[யென்றேரும்.

31. சம்மான யோக முடையவள். புத்திரர்கள் மீது பிரியமுடையவள். கண்பார்வை சிறிது மங்கலடையும். இனிமையாகப் பேசுபவள். தீய மனமில்லாதவள். பிறருக்கு உபகாரி. நேர்மையுடன் நடப்பாள். நிதானமான குடும்பத்தையுடையவள்.

---

1. குரு
2. செவ்வாய்

தாயின் உடன்பிறந்தவரும், முற்பிறவியும்

32. ஆறது தூணேயே யாவர் அவர்களி லாண்பா லொன்று
தீரமாய்த் தீர்க்க மென்றேஞ் சேதியைப் பின்பால்
[சொல்வோம்
நாரியின் பூர்வங் கேளாய் நற்கடை யூரி லேதான்
பாரிய தனவா னுக்குப் பிறந்தனள் ரெட்டி வம்சம்.

32. ஜாதகனுடைய தாய்க்கு அறுவர் உடன் பிறந்தவராவர்; அவர்களில் ஒரு சகோதரன் நீண்ட ஆயுள் உள்ளவன் என்றேரும். அவனுடைய செய்திகளைப்பற்றி பிற்பாகத்தில் கூறுகின்றேரும். தாயின் முற்பிறவியைக் கேளுங்கள். திருக்கடையூர் என்ற தலத்தில் ரெட்டியார் குலத்தில் பெரியதொரு தனவானுக்கு மகளாக பிறந்தவள்.

33. மதலைக ளதிக முண்டாய் வாழ்நாளில் வினையைச்
[சொல்வேன்
அதிகமாய் வயது சென்ற அம்மறை விதவை மாது
அதிபதி தன்பால் சென்று வறுமையாய்ப் பிச்சை
[யென்னச்
சதியான வார்த்தை சொல்லிச் சாத்திரு ளம்மை தன்னை.

33. அதிகமான புத்திரர்களை யடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேரும். அந்தணர் குலத்தில் தோன்றிய, கணவனை யிழந்த வயதான கிழவி யொருத்தி இவளிடம் சென்று, தன் தரித்திர நிலையைக் கூறி, பிச்சையிடு என்று கூறுங் கர்ஸத்தில் கொடிய வார்த்தைகளைக் கூறி கிழவியை விரட்டி விட்டாள்.

34. அவ்வைபோ லொத்த மாது அறைகிறுள் சாபந் தானும்
ஒவ்விய மறுஜன் மத்தில் உறுந்துணைப் பெண்கா ணுமல்
பவ்வமா யுதித்த மாது பரதேசி யாகி யேதான்
திவ்விய மில்ல மின்றித் தேசமே லலைவா யென்று ;

34. ஔவைப் பிராட்டியாரைப்போன்று வயதான கிழவி மனம் நொந்து சாபமிடுகிறுள். உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உடன் பிறந்த சகோதரியில்லாமல் பரதேசி போல் வாழ்ந்து (புகுந்த) பிறந்த விடமும் அடையாமல் நாடெங்கும் அலைவாய் என்றுள்.

35. உரைத்துமே சென்று ளென்றேரும் உறைந்தது வந்தத்
[தோஷங்
குறைவுற்றுச் செல்வந் தானுங் கூத்தன்தன் பதிக்குப்
[புக்குப்
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தன ளிந்த மாது
மறைமாது சாபம் போலே வருந்தியே துணைப்பெண்
[ணின்றி ;

35. என்று கூறிச் சென்றுள். அந்தத்தோஷம் இவளையடைந்தது. இவள் செல்வத்தை யிழந்து மரணமடைந்து மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தாள். அந்தண குலத்து மாது இட்ட சாபம் போல் உடன்பிறந்த சகோதரிகளில்லாமல் ;

36. பெற்றபெண் தவசி யாயும் பொன்பணி குறைவ தாயும்
உற்றிட நிலையில் லாமல் உறைவளா மிவளே யென்றும்
மற்றொரு ஜன்மஞ் சொல்வேன் மாவலி தன்னி லேதான்
குற்றமில் லாத கங்கைக் குலத்தினி லுதிப்ப ளாகும்.

36. பெற்ற பெண் தவம் செய்பவளைப் போல் தனியாகவும் பொன், ஆபரணங்கள் குறைந்தும், இருக்க நிலையான இடமில்லாமலும் வாழ்ந்து வருவாள். தாயின் அடுத்த பிறவியைச் சொல்லுகின்றேம். மகாபலிபுரத்தில் குற்ற மில்லாத வேளாளர் குலத்தவளாகப் பிறப்பாள் என்றேம்.

தந்தையின் முற்பிறவி

37. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் தண்டகா வனத்துக்
[கீழ்ப்பால்
பந்தமாய்ச் சிற்றூர் தன்னில் பிறந்தனன் மறையோ
[னுகச்
சந்ததங் கிருஷியால் தானே தானவன் ஜீவித் தேதான்
வந்திடு காலந் தன்னில் வாதாடி யிருவர் தாமும் ;

37. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தண்டகாரண்யத்துக்குக் கிழக்கில் (காகிநாடாவுக் கருகில்) உள்ள சிற்றூரில் அந்தண குலத்தவனுகப் பிறந்து, சதா பயிர்த் தொழில் செய்து, ஜீவனம் நடத்திவந்தான். அக்காலத்தில் இருவர் சண்டையிட்டுக் கொண்டு ;

பொய்ச் சாட்சி சொல்லுதல்

38. அரசர்பால் செல்லும் போது அவர்களி லொருவன்
[தன்பால்
குறையான வார்த்தை சொன்னுன் கொற்றவ ரெதிரி
[லேதான்
பெரியவர் புகலு கின்றூர் பொய்சொன்ன பாவி யேதீ
வருஞ் ஜன்மந் துணைக ளின்றி மாநில மலைச்ச லாயும் ;

38. அரசாங்கத்தாரிடம் சென்று முறையிடும் போது, அவர்களில் ஒருவர் பக்கமாக நியாய சபையில் இவன் பொய்ச் சாட்சி சொன்னுன். அவர்களில் பெரியவனுகிய ஒருவன் சொல்லுகிருன். பொய்

சொன்னபாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உடன்பிறந்தவர் களில்லாமல் உலகில் துன்பத்தையும் அடைந்து ;

39. சதியிலுல் வாழ்வா யென்று சாற்றினன் மறையோன்
[தானும்
அதுதோஷ மிவனைச் சேர்ந்து அந்தகன் பக்கல் புக்கு
விதியவன் வரையப் பட்டு விளங்கிலு னிவனே
[யென்றேரும்
பதியது வலிச்ச லெய்தும் பதராகுந் துணைவர் தாமே.

39. வாழ்ந்து வருவாய் என்று அந்தணனுகிய அவன் சொன்னன். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது. இவனும் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான் என்றேரும். இவனுக்குச் சதா அலிச்சலாகவும் உடன்பிறந்தவர் நிலையா மலும் இருப்பான்.

தந்தையின் மறுபிறவி

40. பின்னன்மந் தவளை தென்பால் பேரூரில் வைசியச்
[சேயாய்
அன்னவ னுதிப்பா னுகும் அதிகமாய்ச் செட்டுச் செய்வன்
இன்னவன் பூர்வஞ் சொல்வேன் எழில்பெறு காஞ்சி
[தன்னில்
மன்னர்தங் குலமு தித்து வணிபங்கள் செய்து
[வின்னேன் ;

40. இவனுடைய மறுபிறவியில் தவளேச்வரத்துக்குத் தெற்கில் உள்ள பெரிய ஊரில் வைசியகுலத்தவனுகப் பிறப்பான் என்றேரும். விரிவாக வர்த்தகம் புரிவான். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லு கின்றேரும். அழகிய காஞ்சீபுரத்தில் க்ஷத்திரியகுலத்தில் பிறந்து வர்த்தகம் புரிந்து வந்து ;

ஜாதகனுடைய முற்பிறவியும் குலமும்

41. அறமதி லிச்சை யுண்டாய் அன்னங்கள் விரையஞ்
[செய்து;
மறலியின் பதிக்குப் புக்கு மால்மகன் வரையப் பட்டுப்
பெருமையா யருகர் வம்சம் பிறந்தன னிந்தப் பாலன்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

41. தருமம் செய்வதில் விருப்பங்கள் கொண்டு பசித்தவருக்கு அன்னமளித்துவந்து, மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு, சமணகுலத்தில் பிறந்தான். விநாயகக்கடவுளைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்,

தந்தை தாய் சகோதரி இவர்களின் மரணகாலம்

42. முப்பது மூன்று வாண்டில் முடிவான மாதந் தன்னில்
செப்புவோம் தந்தை கண்டஞ் செறிந்தபின் முப்பா னுறில்
ஒப்புடன் மகர மாதம் உரைக்கிறோ மன்னை கண்டஞ்
செப்புவோம் நாற்பா னேழில் சேடிக்குத் தோஷ
[மெய்தும்.

42. ஜாதகனுடைய முப்பத்துமூன்றும் வயதில் பங்குனி மாதத்தில் தந்தை மரணமடைவான். பிறகு முப்பத்தாரும் வயதில் தை மாதத்தில் தாய் மரணமடைவாள். நாற்பத்தேழாம் வயதில் சகோதரி மரணமடைவாள்.

மனைவியின் மரணமும் இவனுடைய ஆயுளும்

43. பாரியு மன்பான் மூன்றில் பகருவோங் கண்டந் தானே
தீரமா யன்பா னெட்டில் சித்திரை மாதந் தன்னில்
கூறிய பருவ நாளில் கூத்தன்தன் பதிக்குச் செல்வன்
வேறொரு ஜன்மந் தன்னை விளம்புவோங் தாயே கேளு

43. ஜாதகனுடைய மனைவி இவனுடைய ஐம்பத்துமூன்றும் வயதில் மரணமடைவாள். திண்ணமாக ஐம்பத்தெட்டாம் வயதில் சித்திரை மாதத்தில் பௌர்ணமி திதியன்று ஜாதகன் மரணமடைவான். ஜாதகனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய மறுபிறவி

44. வேங்கட மேற்கி லேதான் விளங்குவா னிக்கு லத்தில்
தீங்கிலா வரசர் பக்கல் ஜீவிப்பா னிவனே யம்மா
ஆங்கவன் பொதுயோ கத்தை யறைகிறோம் தாயே
[கேளு
பாங்கியும் வந்த பின்பு பகருவோம் விசேட யோகம்.

44. திருப்பதிக்கு மேற்கில் இதே குலத்தில் பிறப்பான். தீங்குகளில்லாத அரசாங்க உத்தியோகம் ஏற்று ஜீவித்து வருவான். அவனுடைய பொது யோகத்தைக் கூறுகின்றோம். தாயே! இவனுக்கு மனைவி வந்த பிறகு யோகம் விருத்தியாகும்.

45. பூமியும் நாட்கு நாளாய்ப் பொலிந்திடுங் குறைவு றுதான்
நேமியி லிருபா னெட்டு மேல்தானு மில்லஞ் செய்வன்
தீமைக ளணுகா தாகுஞ் ஜனபந்து புகழ வாழ்வன்
ஆமவ னஸ்தி யாவும் அணுகுநா லாயி ரம்பொன்.

45. நாளுக்குநாள் பூமி விருத்தியாகும் ஒரு குறைவுமில்லாதவன். ஜாதகனுடைய இருபத்தெட்டு வயதுக்குமேல் புதிய வீடு கட்டுவான். தீங்குகள் ஏற்படா. தன் சுற்றத்தார்கள் கொண்டாடும் படி வாழ்ந்து வருவான். அவனுடைய ஆஸ்திகள் எல்லாம் சேர்ந்து நாலாயிரம் பொன் மதிப்புள்ளவை என்றேம்.

ஜனன காலதசை

46. பாலகன் ஜனிக்குங் காலே பரிதியின் தசையி லேதான்
சாலவே திங்கள் பத்துஞ் சாற்றுவோம் பலனை யாங்கள்
ஆலம்போல் ரோகம் வாய்க்கும் அனங்குறை
[செலவ னேகம்
ஏலவே மனக்க லக்கம் இயம்புவோம் விவரம் ரண்டில்.

46. ஜாதகன் பிறக்கும் காலத்தில் சூரிய மகா தசையில் பத்து மாதங்கள் மீதமாம். அக்காலத்திய பலனைச் சொல்லுகின்றேம். கொடிய விஷம்போல் நோய் ஏற்படும் சாப்பாட்டுக்குக் கஷ்டம். செலவு அதிகரிக்கும். மனச் சஞ்சலம் உண்டு. மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேம்.

ஜாதகம் 33

1. சிங்கமு முதய மாகச் சேய்ஜன்ம மதிந வத்தில்
பங்கயன் புந்தி காரி பார்ப்பானு மஞ்சி லேறச்
[1]சுங்கனு பணியு ஞலில் சிகிதசங் கிரகம் நின்ரூல்
அங்கது பலனெவ் வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

1. இலக்கினம் சிம்மமாகவும், செவ்வாய் லக்கினத்திலும், சந்திரன் ஒன்பதாமிடமாகிய மேஷத்திலும், சூரியன் புதன், சனி, குரு ஐந்தாமிடமாகிய தனுசிலும் சுக்கிரன் ராகு நான்காமிடமாகிய விருச்சிகத்திலும், கேது பத்தாமிடமாகிய விருஷபத்திலுமாக நவக்கிரகங்கள் இருப்பின் பலனைச் சொல்லுங்கள், முனிவரே! தாங்கள்.

கிரகநிலை

	சந்திரன்	கேது	
	இராசி சக்கரம்		
			லக்கினம் செவ்வாய்
சூரியன் புதன் சனி குரு	சுக்கிரன் ராகு		

ஜாதகனின் வீட்டு நிலை

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்ரூர்
மேதினி லாண்பால் ஜன்மம் விளம்புவோ மில்லந் தானும்
[2]ஆதவன் [3]குடகு வீதி [4]அந்தகன் வாச லாகும்
ஏத.....கழறின மொழிகுன் ரூவே.

2. பார்வதிதேவி கேட்கும்போது கௌசிக முனிவர் பதில் உரைக்கின்ரூர். இஃது ஆண்மகனின் ஜாதகம். அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு நோக்கியுள்ள வாயிலை யுடையது. .....நாங்கள் கூறியவை தவரு.

3. மாலவன் கோட்டம் பாழாம் மாகாளி அரனும் வாயு
சாலவிவ் வடையா ளத்துள் ஜனிப்பனுஞ் சேஷ்ட னுகப்
பாலகன் தந்தை யன்னை பத்தினி புத்திர யோகம்
ஏலவே முன்பின் ஜன்ம மியம்புவோ மிந்நூல் தன்னில்.

---

1. சுக்கிரன், 2. சூரியன்—ஈண்டுக் கிழக்குத் திசை.
3. மேற்கு, 4. எமன்—ஈண்டு தெற்குத் திசை.

3. திருமாலின் ஆலயம் ஒன்று பாழடைந்து உள்ளது. காளி கோயிலும் சிவபெருமான் ஆலயமும் வடமேற்குத் திக்கில் உள்ளன. இவ்வித அடையாளங்களுள்ள வீட்டில் ஜாதகன் தன் தந்தைக்கு மூத்த பிள்ளையாகப் பிறப்பான். ஜாதகனுடைய யோகம் தந்தை தாயார்களுடைய யோகங்கள், மனைவி மக்களின் யோகங்கள், முற்பிறவி மறுபிறவி ஆகிய இவற்றை இந்தச் சோதிட நூலில் கூறுகின்றோம்.

ஜாதகனின் தந்தையின் உடன்பிறந்தவர்

4. தந்தையின் துணையாண் காணுன்
சத்திமர் ரிருவ ரென்றோம்
அந்தவர் சுகமில் லாதார்
அவர்பலன் பின்பால் சொல்வேன்
தந்தையின் குணத்தைச் சொல்வேன்
தையலி னில்லம் வாழ்வன்
.....சார்வான்
வெளியூர் தன்னில்.

4. ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதரரில்லை. சகோதரிகள் இருவர் என்று சொல்லுகின்றோம். அவர்களும் சுகமில்லாதவர்கள் என்றோம். அவர்களுடைய பலனைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கூறுகின்றோம். மனைவியின் வீட்டில் வாழ்ந்து வருவான்.....வெளியூருக்குச் சென்று விடுவான்.

5. பலவித வணிபஞ் செய்வன் பரவுப காரஞ் செய்வன்
சொலுமொழி காப்பா ளுகுஞ் சித்திர வில்லஞ் செய்வன்
கல்லு.....கொள்வன்
விலைமாதர் மோகங் கொள்ளான் விமலனைப் பூசை
[பூண்பான்.

5. பலவிதமான வர்த்தகம் புரிந்து வருவான். பிறருக்கு உபகாரம் செய்பவன். சொன்ன வார்த்தைகள் தவறுதவன். அழகிய வீட்டைக் கட்டுவான்.....வேசையர்களின் மீது விருப்பமில்லாதவன். தெய்வத்துக்குப் பக்தியுடன் பூசை புரிந்து வருவான்.

6. கரமதில் வாயு சோர்வு கந்தன்தன் பக்தி கொள்வன்
உறன்முறைக் மதிக்க வாழ்வன் உருத்திர ரேகை யுண்டு
பறைபள்ளு சேர்ப்ப ளுகும் சந்தேக மனத்த ளுகும்
விரைவினில் நடக்க வல்லான் வெஞ்சினம் வெளிக்காட்
[டாதான்.

6. வாயு ரோகத்தால் கையில் சோர்வுண்டாகும். முருகக் கடவுள் மீது பக்தியுள்ளவன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். ருத்திரரேகை யுடையவன் ஹரிஜனங்களாலான பணியாட்கள் சேர்ப்பான். சந்தேகமுள்ள மனத்தினன். வேகமாக நடக்கக்கூடியவன். கடுங்கோபத்தை வெளியிடாதவன்.

7. ரோமங்க ளதிக மில்லான் நுண்ணிய புத்தி யுண்டு
காமனே விருப்பங் கொள்வன் கரமதில்.....ரேகை
ஆமது விரண்டு செய்வன் அஞ்சிடா னெதிரிக் கேதான்
சேமமாங் குடும்ப மேற்பன் சேல்விழி கேட்டி டாயே.

7. அதிகமான ரோமங்களில்லாதவன். கூர்மையான அறிவுள்ளவன். மன்மதனேப்போல் இன்பத்தில் விருப்ப முடையவன். தனது கையில் ரேகை யுள்ளவன். இரு வீடுகளைக் கட்டுவான். விரோதி கட்குப் பயப்படாதவன். சுகமுள்ள குடும்பத்தை யடைவான். மீனைப் போன்ற அழகிய விழிகளைக் கொண்டவளே! கேளுங்கள்.

இனிவரும் 3 பாட்டுகளில் ஜாதகனின் குணங்களைக் கூறுவார்

8. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான்
[சிவந்த மேனி
மன்னர்க ளுறவு கொள்வன் மாற்றினை லகுவில் வெல்வன்
பொன்னது சேர்ப்பா னுகும் புகழ்ந்தோரை யாத ரிப்பன்.

8. இவ்விதக் குணங்களுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணத்தைக் கூறுகின்றேம். அழகுள்ளவன். சிவந்த உடலுடையவன். அரசர்களுடன் நட்புக்கொள்ளுவான். விரோதிகளைச் சுலபமாக ஜயிப்பான். செல்வத்தைப் பெருக்குவான். தன்னைத் துதித்தவரைக் காப்பான்.

9. வித்தையுஞ் சமமாய்க் கற்பன் விவேகியாம் முன்கோ
[பதன்
சுத்தமாம் வணிபஞ் செய்வன் தொல்புவி கிருஷி யுண்டு
சத்தியங் கூறு வானுஞ் ஜனவுப காரி யாகும்
வெத்திச்சொல் லுடைய னுகும் வேலவன் பக்தி
[கொள்வன்.

9. சமமான கல்வி கற்பான். நன்மை தீமைகளை யறியக்கூடிய விவேகமுள்ளவன். முன்கோபமுடையவன். சுத்தமுள்ளவன். வர்த்தகம் புரிந்து வருவான். பூமியில் பயிர்த் தொழிலைச் செய்து வருவான். உண்மையையே பேசுபவன். ஜனங்களுக்கு உபகாரம் செய்பவன். இவனுடைய வார்த்தைக்கு மதிப்புண்டு (வாக்கு வன்மையுடையவன்). முருகக் கடவுள் மீது பக்தியுள்ளவன்.

10. இன்னவன் செங்கை தன்னி லிலகிடுங் கோதுமை ரேகை
அன்னியர் மதிக்க வாழ்வன் ஆவுகள் பலித முண்டு
உன்னத தேகி யாவன் உயர்பணி சேர்ப்பா னுகும்
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா னென்றேரும்.

10. ஜாதகனுடைய கையில் கோதுமை ரேகையுள்ளவன். பிறர் கொண்டாடும்படியாக வாழ்ந்து வருவான். பசுக்கள் விருத்தியாகும். உயர்ந்த தேகமுடையவன். உயர்வான ஆபரணங்களைச் சேர்ப்பான். ஊனமில்லாத சரீரத்தைப் பெற்றவன். பிறருடைய குற்றங்களை எடுத்துச் சொல்லாதவன். (பிறர் மீது குற்றம் சாட்டாதவன்).

11. எப்படி யோகஞ் சொன்னீ ரியம்புவீ ரந்தச் சங்கை
அப்பணி புகரு நாலில் அந்தணன் புந்தி யஞ்சில்
ஒப்புட னிருப்ப தாலே உயர்பரு வதயோ கங்கள்
செப்புவேன் வேசி யோகஞ் சிறந்திடு பால னுக்கு.

11. ஜாதகனுக்கு எவ்விதம் யோகம் உண்டு என்று சொல்லுங்கள். ராகு சுக்கிரன் நாலாமிடத்தில் இருப்பதாலும் குரு புதன் ஐந்தாமிடத்தில் இருப்பதாலும் உயர்ந்த பர்வதயோகம் வேசியோகம் ஆகிய இரண்டு யோகங்களும் ஜாதகனுக்கு ஏற்படும் என்றேரும்.

12. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தரணிகள் தனமுஞ்
[சேர்ப்பன்
இந்திர யோக மேற்பன் ஏவலா ளுடைய னுகும்
வந்தவர்க் கன்ன மீவன் வள்ளல்மேல் பக்தி பூண்பன்
எந்திடம் பெருமை யேற்பன் ஈச்வரி கேட்டி டாயே.

12. தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். பூமி செல்வம் இவைகளைச் சேர்ப்பான். இந்திரயோகம் அடைவான். பணியாட்கள் உள்ளவன். தன்னையண்டி வந்தவர்கட்கு அன்னமளிப்பவன். தெய்வ பக்தி யுடையவன். எல்லாவிடங்களிலும் பெருமை அடைவான். பார்வதி தேவியே! கேளுங்கள்.

ஜாதகன் சகோதரபாவம்

13. தன்துணை யாண்பால் ரண்டு தையலு மிருவர் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பேசுவோம் பின்பா கத்தில்
இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மீரொன்
[பாண்டில்
கன்னிகை வடபால் நேருங் கழறுவோ மவள்கு ணத்தை

13. ஜாதகனுக்கு இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். மற்றும் தோன்றுபவர்

நிலையார். அவ்விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய திருமணக்காலத்தைக் கூறுகின்றோம். அவனுடைய பதினெட்டாம் வயதில் வடக்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுகின்றோம்.

ஜாதகனின் மனைவியின் குணங்கள்

14. மாநிறம் வாத தேகி மர்மமில் லாதா ளாகும்
ஊனமில் லாத தேகி உயர்வான புத்தி யுண்டு
தானமுந் தரும மிச்சை தன்வரன் மனத்துக் கேற்றோள்
பான்மையாய்ப் பேசு வாளாம் பால்பாக்கிய முடைய
[ளாகும்.

14. மாநிற முடையவள். வாயு ரோகமுடைய சரீரி. வெளிப்படையான மனமுடையவள். குறைவுகளில்லாத தேகமுடையவள். உயர்ந்த புத்தியுள்ளவள். தான தருமங்களைச் செய்வதில் விருப்ப முடையவள். தன் கணவன் மனத்துக் கேற்றபடி நடப்பவள். பொருத்தமாகப் பேசுபவள். ஊழ்வினையால் வந்த பாக்கியமுள்ளவள்.

15. அன்னம்போல் சாய லொக்கும் ஆளனுக் கினிய ளாகும்
அன்னமு மன்பா யீவள் அடாவடி கூறு ளாகும்
அன்னியர் குற்றஞ் சொல்லாள் ஆபத்தைச் சிலர்க்குக்
[காப்பள்
அன்னவள் தீர்க்க ஜீவி அம்பிகை யாளே கேளாய்.

15. அன்னத்தைப் போன்ற அழகிய (நடையுள்ள)வள். தன் கணவனுக்கு உகந்தவள். அன்புடன் அன்னமளிப்பதில் விருப்ப முள்ளவன். அடாவடியாகப் பேசாதவள். பிறர் மீது குற்றம் கூறுதவள். பிறருடைய துன்பங்களை விலக்குவாள். நீண்ட வயதுள்ளவள். தாயே! கேளுங்கள்.

16. புத்திர விருத்தி சொல்வோம் பிறந்திடுஞ் சிலவே சேதஞ்
சுத்தமா யாண்பால் மூன்று தோகையு மிரண்டு
[வென்றோங்
சூத்தமா முதலில் ரண்டு கூறுவீ ரந்தச் சங்கை
புத்திரத் தானந் தன்னில் புதன்சனி யிருப்ப தாலே;

16. ஜாதகனின் புத்திரபாவத்தைக் கூறுகின்றோம். தோன்றுவர். அவர்களில் சிலர் இறந்து விடுவர். மூன்று புத்திரர்களும் இரு புத்திரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். முதலில் தோன்றும் இரு குழந்தைகள் நிலையா. அந்தச் சந்தேகத்தை விளக்கிக் கூறுங்கள். புத்திரஸ்தானத்தில் சனி புதன் இருப்பதால்;

ஜாதகனுடைய முற்பிறவி

17. சொல்லுவோ மந்தச் சங்கை சுதனுடைப் பூர்வங் கேளாய்
எல்லையி லுயர்வ தான எழில்கொங்கு நாட்டி லேதான்
புல்கினன் கங்கை சேயாய்ப் பூமியும் பரிபா லித்து
வல்லியு மதலை யுண்டா யறுமுகன் பக்தி கொண்டு;

17. அந்தத் தோஷம் ஏற்படும். தவிர ஜாதகனுடைய முற் பிறவியைக் கேளுங்கள். உலகில் செழிப்புள்ள கொங்கு நாட்டில் வேளாளர் குலத்தவனுகப் பிறந்து, பூமியில் விவசாயம் செய்து வந்து, மனைவி புத்திரபாக்கியம் பெற்று, முருகக் கடவுள்மீது பக்தி கொண்டு;

18. வினையது வில்லா தாகி மேவினன் கால னுடு
கனமுள பிரமன் லக்கங் குதித்தன னென்று [சொல்வோர்
தனயன்தன் யோகச் சேதி சாற்றுவோ மினிமே லாகச்
சினமிலான் வறுமை யில்லான் செழிப்பான குடும்பி [யாவன்.

18. வேறு தீவினைகள் இல்லாமல் வாழ்ந்து மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனல் படைக்கப்பட்டுப் பிறந்தான் என்று சொன் னேம். இனி ஜாதகனுடைய யோகச் செய்திகளைக் கூறுகின்றோம். கோபமில்லாதவன். தரித்திரமடையாதவன். செழிப்புள்ள குடும் பத்தை யடைவான்.

19. புண்ணியத் தலங்கள் செல்வன் புகழ்ந்தோரை யாத [ரிப்பன்
அண்ணலைப் பூசை பூண்பன் அவனியில் செட்டுச் [செய்வன்
தண்மையாங் குணத்த னுகுஞ் சகடுவா கனமு மேற்பன்
அண்ணலைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

19. பல புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். துதி செய்த வரை யாதரிப்பான். சிவபெருமானுக்குப் பூசை புரிவான். உலகில் வர்த்தகம் செய்து வருவான். குளிர்ந்த மனப்பான்மையுடையவன். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். சிவபெருமானைப் பூசை கள் புரிந்து வரும் தேவியே! கேளுங்கள்.

தாயின் விவரங்கள்

20. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாஞ்சிவப் புடைய [ளாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுறுதியில் லாத நெஞ்சங்
காதலி வந்த பின்பு கணவனுக் கதிக யோகம்
பாதக மனமில் லாதாள் பணிந்தோரை யாத ரிப்பள்.

20. தாயின் குணத்தைக் கூறுகின்றோம். மாநிறமுடையவள். இன்பமாகப் பேசுபவள். இடமில்லாத மனமுடையவள். தாயை மணந்த பிறகு தந்தைக்கு யோகம் விருத்தியாக விருக்கும். தீயமனமில்லாத வள். தன்னை வணங்கியவரை ஆதரித்து வருவாள்.

21. முன்கோபங் கொஞ்ச முண்டு மேவிடும் பித்தச் சூடு
தன்வரன் மனத்துக் கேற்றோள் சாதமு மன்பா யீவள்
தன்துணை யாண்பால் மூன்று தங்காது வொருவன்
[தானுங்
கன்னிகை யொருத்தி யாகுங் கனமிலாக் குடும்ப
[மென்றோம்.

21. சிறிது முன் கோபமுடையவள். பித்தச்சூட்டு நோயுள்ளவள். தன் கணவன் மனமறிந்து நடப்பவள். அன்னத்தை அன்புடன் அளிப்ப வள். உடன் பிறந்தவரில் மூன்று சகோதரருண்டு. ஒரு சகோதரன் நிலையில்லாதவன். சகோதரி யொருத்தியே யுண்டு. விருத்தியில்லாத குடும்பமென்றோம்.

22. இல்லமும் வடபா லாகும் இவளுடைப் பூர்வங் கேளாய்
நல்லகா ளத்தி கீழ்ப்பால் நாயகி செங்குந்த வம்சம்
புல்கியே வறுமை யின்றிப் புத்திர ரதிக முண்டாய்
வல்லியும் வரன்முன் னுக மறலியின் பதிக்குச் சென்று;

22. இவளுடைய வீடு வடக்குப் பக்கத்திலுள்ளது. தாயின் முற் பிறவியைக் கேளுங்கள். திருக்காளத்தித் தலத்துக்குக் கிழக்கில் செங் குந்த மரபில் பிறந்து தரித்திரம் அடையாமல் புத்திர பாக்கியம் பெற்றுத் தன் கணவனுக்கு முன்பாகவே மரணமடைந்து;

23. சிரநான்கோன் வரையப் பட்டு ஜனித்தவ ளென்று
[சொல்வோம்
வறுமையெப் போதுங் காணுள் மறுஜன்மம் பட்சி
[தன்னில்
உறைகுவாள் கங்கை சேயாய்.....பந் தன்னில்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

23. மீண்டும் பிரம்தேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவள் என்று சொல்லுகின்றோம். எக்காலத்திலும் தரித்திரம் இல்லாதவள். மறுபிறவியில் திருக்கழுக்குன்றத்தில், வேளாளர் குலத்தவளாகப் பிறப் பாள்..... வேதங்களின் முடிவில் நடமாடும் தேவியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

24. தந்தையின் பூர்வந் தன்னைத் தானெடுத் தியம்பக் கேளாய்
முந்திய வருணை தன்னி லுதித்தனன்.....
விந்தையாய்ச் செட்டுச் செய்து வித்தகி மதலை யுண்டாய்
அந்தவன் வாழு நாளில்அணுகின வினையைக் கேண்மோ.

24. ஜாதக்னுடைய தந்தையின் முற்பிறவியை எடுத்துக் கூறு கின்றோம். கேளுங்கள். முதன்மையான திருவண்ணுமலைத் தலத்தில் ....பிறந்து அதிசயமாக வர்த்தகம் புரிந்து வந்து மனைவி மக்களைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினை யைக் கேளுங்கள்.

தாயை அடித்த தோஷம்

25. மனைவியின் வார்த்தை கேட்டு மாதாவை யடித்தா
[னென்றோம்
.....சாபந் தேவிசொல் மேன்மை யாச்சே
வினைவருங் கரத்தி லேதான் மேவும்பின் ஜன்மந் தன்னில்
பிணையாகுங் கரத்தி லேதான் பிதுரில்ல மடையா தாகும்.

25. தன் மனைவியின் வார்த்தையைக் கேட்டுத் தன் தாயை அடித்தான் என்றோம். தாய் மனம் நொந்து சாபமிட்டாள். உன் மனைவியின் சொல் உனக்கு மேன்மையாற்று. உனக்கு ஏற்படும் மற்று பிறவியில் கைகளில் துன்பம் ஏற்படும். முடிவுரும்ல் தீங்காகும். தந்தையின் வீட்டை அடையாதவனுவாய்.

26. இன்னமும் பலவே சொன்னுள் எய்திற்று வந்தச் சாபம்
பொன்னதைச் சிலர்க்குத் தந்து புகன்றனன் கணக்கில்
[மோசம்
அன்னவர் வருத்த முற்று வறைந்தசா பத்தைக்
[கேண்மோ
பின்வருஞ் ஜன்மந் தன்னில்.....திலேதான்;

26 என்றும் இன்னும் பலவிதமாகவும் கூறினுள். அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது. சிலருக்குச் சிறிது பணத்தைக் கொடுத்து கணக்கில் தவறு சொன்னுன். அவர்களும் வருத்தமடைந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். ஏற்படும் மறுபிறவியில் ;.....

27 துணையாண்பா லில்லா தாகித் தொல்புவி தன்னில்
[வாழ்வாய்
வினைமன மாகச் சொன்னுர் மேவிற்று வந்தச் சாபந்
தனையனு மந்தி யத்தில்.....
கனமுள தொண்டு பூண்டு காலன்தன் பதிக்குச் சென்று;

27. சகோதரனில்லாமல் உலகில் வாழ்ந்து வருவாய் என்று துன் புற்ற மனத்துடன் சாபமிட்டனர். அந்தச் சாபம் வந்தடைந்தது. இந்த ஜாதகன் தந்தை தன் கடைசிக் காலத்தில்..... .....தொண்டுகள் செய்து மரண மடைந்து ;

28. வந்தவ னென்று சொல்வோம் மருவிடு முன்னூழ்ச் சாபந்
தன்துணை யாண்பால் தோஷந் தந்தையி னஸ்தி காணன்
.....னும் நிமலியுங் கேட்க வுற்றாள்
முந்தின மாதுக் கேதான் மேவின புண்ணியத் தாலே.

28. மீண்டும் இப்பிறவியில் பிறந்தவன் என்று சொல்லுகிறோம். முற்பிறவிச் சாபம் தொடரும். அதனால் உடன் பிறந்த சகோதரனில்லா தவன். தந்தையின் ஆஸ்தியை அடையாதவன்..... .....பார்வதி கேட்கலானாள். அந்தணகுலப் பெண்ணுக்குச் செய்த புண்ணியத்தால் ;

தாயிட்ட சாபம் விலகாது

29. சாபங்கள் விலகா வோசொல் தாய்சாபம் விலகா தாகும்
ஆ..... . தாயே கேளு
மேவிய வான்மி யூரில் விளங்குவான் சைவச் சேயாய்த்
தாவினோர் தம்மைக் காக்குந் தயாபரி கேட்டி டாயே.

29. சாபங்கள் விலகாவோ சொல்லுங்கள். அன்னை மனம் வருந்தி இட்ட சாபம் விலகாது..... தாயே! கேளுங்கள். திருவான்மியூரில் சைவ குலத்தவனுகப் பிறப்பான். அண்டினவரைக் காக்கும் தயாநிதியே! கேளுங்கள்.

30. முப்பது வேழு வாண்டில் விளம்புவோர் தந்தை கண்டம்
.....தானுஞ் சூரியன் தசைக்கா லத்தில்
தப்பிதந் தந்தைக் கேதான் சார்ந்திடு மென்று
[சொல்வோம்
அப்படி நடவா தாகும் அம்புலி தசைக்கா லத்தில்;

30. முப்பத்தேழாம் வயதில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். அப் போது சூரிய மகாதசை நடைபெறும். அக்காலத்தில்தான் தந்தைக்குத் தீங்குகள் ஏற்படும் என்று சொல்லுகின்றோம். அவ்விதம் நடவாது. சந்திரமகாதசையில்;

ஜாதகரின் மரண காலம்

31. மார.....தன்னில்
கூறவோ மன்னை கண்டங் குழவிக்கு வறுப தாண்டில்
தீரமாய் மேட மாதந் தேய்பிறைச் சஷ்டி தன்னில்
சாருவான் கால நாடு சங்கரி கேட்டி டாயே.

31. தாய் மரண மடைவாள் என்றேரும். ஜாதகனுடைய அறுப தாம் வயதில் சித்திரை மாதம் கிருஷ்ணபட்சம் சஷ்டிதிதியில் ஜாதகன் மரணமடைவான். பார்வதியே! கேளுங்கள்.

ஜாதகனின் மறுபிறவி

32. பின்ஜன்மந் தன்னி லேதான் பிறப்பனும் பிரம்ம சேயாய்
மன்னனுல் தொழிலும் பெற்று மாரனும் வாழ்வா னுகும்
அன்னவன் ஜனன காலம் அசுவினி மூன்றும் பாதந்
துன்கேது தசை மூன்றுண்டு.....மாகும்.

32. ஜாதகன் மறு பிறவியில் அந்தணர் குலத்தவனுகப் பிறப் பான். அரசாங்க உத்தியோகம் ஏற்று வாழ்ந்து வருவான். ஜாதக னுடைய ஜனன காலத்தில் அச்வதி நட்சத்திரம் மூன்றும் பாதம்: துன்பம் தரும் கேது மகா தசையில் மூன்று வருடங்களும்..... மீதமாகும்.

பொதுப் பலன்

33. பலனதைப் புகலக் கேண்மோ பாலகன் தனக்கு ரோகம்
[1] நிலவுபோல் வணிப மோங்கும் நேர்ந்திடுந் துணைபின்
[விருத்தி
குலவிடும் மாது தானும்.....தும்
விலகிடுங் கூட்டுத் தானும் வெற்றியாம் நினைத்த
[வெல்லாம்.

33. ஜாதகனுடைய பொதுப் பலனைக் கேளுங்கள். சொல்லுகின் றேரும். அந்தத் தசையில் ஜாதகனுக்கு நோய் ஏற்படும். வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகம் விருத்தியாகும். சகோதர விருத்தி ஏற்படும். திருமணம் நடைபெறும். கூட்டு வியாபாரத்திலிருந்து விலகிச் சொந்த மான தொழிலைச் செய்யும் நிலை யுண்டாகும். எண்ணிய காரியங்கள் ஜயத்துடன் முடியும்.

34. புகர்தசைக் காலந் தன்னில் புதுவில்லுஞ் செய்த லுண்டு
மிகுதியாய்ப் பொருளும் வாய்க்கும்.....
பகைவரி னுறவுங் கிட்டும் பந்துவில் சுபமுஞ் சூதம்
அகமதில் பிதாம கிக்கு அணுகிடுங் கண்டந் தானே.

34. சுக்கிர மகாதசையில் புதிய வீட்டைக்கட்டுவான். செல்வம் அதிகரிக்கும். விரோதிகள் தங்கள் விரோதத்தை மறந்து நண்பராவர். சுற்றத்தாருக்கு நல்லவையும் நிமையும் ஏற்படும். இவனுடைய வீட்டில் தகப்பனை ன்ற தாய்க்கு (பாட்டிக்கு) மரணம் ஏற்படும்.

---

1. சந்திரன்.

35. பொருளது பெருக்க மெய்தும் பெறுவனுஞ் சகடு தானும்
.....வாய்க்கும் பெருமையாய்ச் செட்டு வோங்கல்
இருவில்லஞ் செய்த லுண்டு ஏவலாள் சேர்க்கை யாகும்
திருமணந் துணைவி ருத்தி செப்புவோம் பின்பால் சேதி.

35. செல்வம் விருத்தியாகும். வண்டி வாங்குவான்.....
.....ஏற்படும். வர்த்தகம் பெருமையாக விரியும். இரு வீடுகளைக் கட்டுவான். வேலைக்காரர்களைச் சேர்ப்பான். ஜாதகனுக்குத் திருமணம் ஏற்படும். மற்ற விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லு கின்றோம்.

தந்தையின் பெற்றோரின் மரணகாலம்

36. ஈராறு வாண்டு தன்னில் இவன்பிதா தந்தை கண்டந்
தீரமா யிரெட் டாண்டில் செப்புவோம் பிதாவி னன்னை
வேறொரு பாகந் தன்னில் விளம்புவோம் விவர மாக
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை கேட்டி டாயே.

36. ஜாதகனுடைய பன்னிரண்டாம் வயதில் தந்தையின் தந்தை (பாட்டனார்) மரண மடைவார். திண்ணமாகப் பதினேழும் வயதில் தந்தையின் தாய் மரணமடைவாள். மற்ற விஷயங்களை விவரமாகப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 34

1. சந்திரன் சிம்ம மாகச் சனிபுகர் கன்னி யாகப்
புந்தியுந் தேள ராகப் பூமகன் சாடி யாக
மந்திரி மீன மாக மார்த்தாண்டன் கேது தூக்கம்
முந்திய ராகு மேட முதயமுஞ் சிம்ம மாக;

1. சந்திரன் சிம்மத்திலும், சனி சுக்கிரன் கன்னியிலும், புதன் விருச்சிகத்திலும், செவ்வாய் கும்பத்திலும், குரு மீனத்திலும், சூரியன் கேது துலாத்திலும், ராகு மேடத்திலும், ஜன்மம் சிம்மமுமாகி;

கிரகநிலை

குரு	ராகு		
செவ்வாய்	இராசி சக்கரம்		
			லக்கினம் சந்திரன்
	புதன்	சூரியன் கேது	சனி சுக்கிரன்

ஜாதகனுடைய வீட்டு நிலை

2. இந்தவாறு கோளு நின்ருல் இயம்புவீர் பலனே யென்று
சுந்தரி கேட்கும் போது ஜயமுனி கூறு கின்ருர்
வந்தது வாண்பால் ஜன்ம மறைகிறே மில்லம் தானும்
இந்திர னிடது வாடை எமன்வாச லென்று சொன்னேம்.

2. இவ்விதம் கிரகங்கள் இருந்தால் ஏற்படும் பலனேச் சொல்லுங்கள் என்று அழகிய பார்வதி தேவி கேட்கும்போது, ஜயமுனிவர் பதில் சொல்லுகின்ருர். இஃது ஆண் மகனுடைய ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு நோக்கியுள்ள வாயிலுள்ளது என்று கூறுகின்ருேம்.

3. சந்தியு காளி கீழ்ப்பால் தெற்கினி லோடைக் காலும்
முந்திய நதியு மேற்கில் முயற்சியாய்க் குண்ட முண்டு
இந்துவுஞ் சடையில் சூடும் இகபர னுத்தர மாகுந்
தந்தியு மவ்வூர் வாசங் கழறுவோம் பேரூர் தன்னில்.

3. கிழக்கில் ஒரு சந்தும், காளி கோவிலும், தெற்குப் பக்கத்தில் ஒரு கால்வாயும், மேற்குப் பக்கத்தில் பழமையான ஓர் ஆறும், பெரியதொரு குளமும், சந்திரனைச் சடைமுடியில் தரித்த சிவபெருமான் வடக்குத் திக்கிலும், விநாயகப் பிரானும் அவ்வூரில் கோயில் கொண்டுள்ளனர். அப்படிப்பட்ட பெரிய ஊரில் ;

4. இன்னமும் பலதே வாசம் இலகிய சோலை யுண்டு
உன்னத நகரந் தன்னில் உதித்தவில் பாகம் ரண்டாம்
தன்னிலே வொருபால் சந்தாம் செங்குந்த மரபே யாகும்
அன்னவன் மூன்றுஞ் ஜன்ம மறைகிறேங் கேட்டி டாயே

4. இன்னும் பல தெய்வங்கள் கோயில் கொண்டு விளங்குவர். அழகிய சோலையுண்டு. இங்ஙனமான உயர்ந்த நகரத்தில் ஜாதகன் பிறந்த வீடு இருபாகங்கள் கொண்டது. ஒரு பக்கத்தில் சந்தான்று இருக்கும். இவன் செங்குந்த வமிசத்தில் பிறந்தவன் என்றேரும். இவன் தன் தந்தைக்கு மூன்றும் பிறவியாகப் பிறப்பான் என்று கூறுகின்றேரும். கேளுங்கள்.

ஜாதகனிள் தந்தையின் உடன்பிறந்தவர்

5. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றுவோ மொருவ [னுகும்
அந்தவன் மூத்தோ னுக வறைகிறே மவன்கு ணத்தைச்
சந்ததங் கல்வி யுள்ளான் சமர்த்தான வார்த்தை [சொல்வன்
எந்தையே தாரம் ரண்டு வியம்புவோ மிவனுக் கேதான்

5. ஜாதகனுடைய தந்தையின் வர்க்கத்தாரைப் பற்றிச் சொல்லுகின்றேரும். ஒரு சகோதரன் மட்டுமே உள்ளவன். அவனும் இவனுக்கு மூத்தவன் என்றேரும். அவனுடைய குணங்களைக் கூறுகின்றேரும். நல்ல கல்வி யறிவுள்ளவன். சாமர்த்தியமாகப் பேசுபவன். இரு மனைவியர் உள்ளவன் என்று கூறுகின்றேரும் தாயே !

6. ஊகவான் கோபம் முன்பு வுடனேதான் சாந்த மாகும்
பாகமாய்ப் பேச வல்லன் பாவையர் மோக வானும்
நாகரி கங்க ளுள்ளான் நாதனுர் பக்தி கொள்வன்
ஆகம மறியா னுகும் அவன்மன சஞ்ச லத்தான்

6. ஊகமுடையவன். முன்கோபமுள்ளவன். பிறகு சாந்தமடைவான். பொருத்தமாகப் பேசுபவன். பெண்கள் மீது மையல் கொள்ளுபவன். நாகரீகமாக இருப்பதில் பிரியமுடையவன். சிவபெருமான் மீது பக்தியுள்ளவன். சாஸ்திரங்களை அறியாதவன். மனத்தில் துன்பமுள்ளவன்.

7. சுகதுக்க முடைய னுகுஞ் சுந்தரன் வேறுய்ச் செல்வன்
வகையுடன் புத்திர பாகம் வகுக்கிறேரும் முதல்மா துக்குப்
பகையுண்டு வாண்பா லுந்தான் பத்தினி மாரி ரண்டு
ஜகமதில் யமன்ப திக்குச் சேருவா ளிரண்டா மாது

7. சுகதுக்கம் கலந்த வாழ்க்கை யுடையவன். அவனும் தனியாகச் சென்று விடுவான். ஜாதகனுடைய தந்தையின் சகோதரனின் புத்திர பாவத்தைச் சொல்லுகின்றேரும். அவனுடைய முதல் மனைவிக்குப் புத்திரன் ஒருவன் பிறந்து நிலையான். இரு பெண்களுண்டு. இரண்டாம் பெண் இறந்துவிடுவாள்.

8. மறுமாது தனக்குப் புத்திரர் அறைகிறே மாண்பால்
[ரண்டு
திருமகன் போலே புத்திரர் செய்யவே யிரண்டு மாக
அறைகிறே மவர்கள் சேதி யணுகிய பின்பா கத்தில்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

8. இரண்டாம் மனைவிக்குப் புத்திர பாவத்தைச் சொல்லுகின்றேரும். இரு பிள்ளைகள் பிறப்பர். அவர்கள் இருவரும் இலக்குமி குமாரனுகிய மன்மதன் போன்றவர். அவர்களுடைய செய்தியைப் பின் பாகத்தில் சொல்லுகின்றேரும். பெரும் வயிற்றையுடைய விநாயகனைப் பெற்ற புண்ணியவதியே ! கேளுங்கள்.

பின்வரும் மூன்று பாடல்களில் தந்தையின் குணங்களைக் கூறுவர்

9. தந்தையின் குணத்தைக் கேளாய்ச் சமர்த்தாக
[வார்த்தை சொல்வன்
சிந்தையில் கபட மில்லான் சிலமு மூக வானும்
நொந்திடும் பேரைக் காப்பன் நேமியில் நல்லோ னுவன்
வந்திடும் மூலச்சூடு மாமிக ளிரண்டே யென்றும்

9. தந்தையின் குணங்களைக் கேளுங்கள். சாமர்த்தியமாகப் பேசுபவன். மனத்தில் கபட மில்லாதவன். நல்லொழுக்கமுள்ளவன். ஊகமுள்ளவன். துன்பமடைந்தவரைக் காப்பவன். உலகில் நல்லவனுக இருப்பான். மூலச்சூட்டு நோயுள்ளவன். இரு மனைவியரை அடைவான்.

10. செலவுக ளதிக முள்ளான் சுகபுஷிப் புடைய னுகும்
நலமுளோர் நேயங் கொள்வன் நாதனுர் பக்தி
[கொள்வன்
தலமது தீர்த்தந் தோய்வன் சந்தேக மனத்த னுகும்
பலமிலான் நாபிச் சூடன் புகலுவா ளிரண்டு வார்த்தை.

10. அதிகமான செலவுகள் உள்ளவன். சுகமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். நல்லவருடைய நட்பைக் கொள்ளுபவன். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன். பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். சந்தேகப்படும் இயல்பினன். பலமில்லாதவன். நாபிச் சூட்டு நோயுள்ளவன். இருவிதமாகப் பேசுபவன்.

11. நெசவுகள் செய்வா னுகும் நிமிலிமேல் மோக வானும்
பசிதாக முடைய னுகும் பரவுப காரஞ் செய்வான்
வசையது கூரு னுகு மயலார்பொ னிச்சை யில்லான்
கசிவுள மனத்த னுகும் காதலி கேட்டி டாயே.

11. நெசவுத் தொழிலைச் செய்து வருவான். பெண்கள் மீது மையல் கொள்ளுபவன். எப்பொழுதும் பசியுள்ளவன். பிறருக்கு உபகாரம் செய்பவன். ஒருவரையும் இழிவாகப் பேசாதவன். பிறர் பொருளுக்கு ஆசைப்படாதவன். இரக்கமுள்ள மனத்தினன். தாயே கேளுங்கள்.

பின்வரும் நான்கு பாடல்களில் ஜாதகனின் குணங்கள் கூறப்படும்

12. இங்நெறி யுடையா னுக்கு இருதார மீளயா னுக்கு
அன்னவ னுதிப்பா னுகும் அறைகிறே மவன்கு
[ணத்தைப்
பின்னமில் லாத தேகம் பேதையாங் குணங்க ளாகுஞ்
செந்நிறம் முணச்சல் தேகி தீரமில் லாதா னென்றேரும்

12. இங்ஙனம் உள்ள தந்தைக்கு இரு மனைவியருளர். அவர்களில் இளைய மனைவிக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றேரும். ஊனமில்லாத தேகத்தை யுடையவன். பயந்த சுபாவம் உள்ளவன். சிவந்த நிறமும் மெல்லியதாகவுமுள்ள சரீர முடையவன். தைரியமில்லாதவன்.

13. வித்தையுங் கொஞ்ச முள்ளான் விரும்புவான் சுகபு
[சிப்புச்
சுத்தத்தார் மெச்ச வாழ்வன் துராசையுங் கொஞ்ச
[முள்ளான்
பத்தினி மார்கள் நேயன் பாருகள் சேர்ப்பா னுகும்
நித்தியஞ் சில னென்றேரும் நேமியில் வசியஞ் கொள்வன்

13. சிறிதளவே கல்வி கற்றவன். நன்றுகச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவன். தன் உறவினர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். சிறிது கெட்ட ஆசையும் உள்ளவன். மனைவிக்குப் பிரியமானவன். பூமியைப் பெருக்குவான். நல்லொழுக்க முள்ளவன். உலகத்தவர் தன்வயப்படும்படி நடந்து கொள்ளுபவன்.

14. குணமது நல்ல தாகுங் குறிப்பினில் கொடுமை தோன்றுஞ்
சினமுண்டு சோர்த லுண்டு சீக்கிர நடையு மாவன்
தனமது பின்னு லுள்ளான் ஐயஞ்செய்வ னெடுத்த வேலை
கனமத வாணைப் பெற்ற காதலி கேட்டி டாயே

14. நல்ல குணமுடையவன். முகத்தில் கடூரம் உள்ளவன். முன் கோபம் கொள்ளுபவன். விரைவில் சாந்தமடைபவன். வேகமாக நடக்கக் கூடியவன். பிற்காலத்தில் செல்வம் உள்ளவன். எடுத்த காரியங்களை வெற்றியுடன் முடிப்பான். பெரிய மதயானையைப் போன்ற முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

15. இன்னவன் செங்கை தன்னில் இலகிடு முருத்திர ரேகை
தன்னிலே சுழியு முண்டு சதுஷ்பாதம் விருத்தியுள்ளான்
பொன்னெடு பணிதி சேர்ப்பன் புகழ்ச்சியாங் குடும்பி
[யாவன்
அன்னவன் சித்திர வீடு அமைத்திடு வானு மென்றோம்

15. ஜாதகனுடைய கையில் உருத்திரரேகை யுள்ளவன். மற்றும் சுழியும் உள்ளவன். கால்நடைப் பெருக்க முள்ளவன். செல்வம் ஆபரணங்கள் முதலியவற்றைச் சேர்ப்பான். கீர்த்தியுடைய குடும்ப முள்ளவன். ஜாதகன் அழகிய வீடு ஒன்றைக் கட்டுவான் என்றோம்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

16. சத்தியே துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பால் ரண்டு
சுத்தமாய்க் கன்னி ரண்டு செப்புவோ மிவனுக் கேதான்
பத்திய மூன்று நட்டம் பகருவோம் பின்பா கத்தில்
அத்திரி சொல்லு கின்றார் அவன்முதல் தாயொன்
[றென்றீர்.

16. தாயே! ஜாதகனுடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் தோன்றுவார்கள். மூன்று குழந்தைகள் இறந்துபோம் என்றோம். அவ்விஷயங்களைப் பின் பாகத்தில் கூறுவோம். அத்திரி முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுக்கு முதல்தாய் ஒருத்தியுண்டு என்று சொன்னீர்கள்.

17. அந்ததோர் மாதா வுக்கு வறைகுவீர் புத்திர பாவஞ்
சந்ததி யில்லா ளாகுஞ் ஜனிக்கினும் தீதே யாகும்
அந்தகன் பக்கல் சேர்வள் அதன்பின்னு லிவன்தன்
[மாதா
வந்திடு மென்று சொன்னேம் மங்கையே மேலுங் கேளே.

17. அந்தத்தாய்க்குப் புத்திரர் உண்டா? சொல்லுங்கள். முதல் மனைவிக்குப் புத்திரரில்லை. தோன்றினும் நிலையாமல் இறந்துவிடுவர். அந்தத்தாய் இறந்துவிடுவாள். அதற்குப் பிறகு வந்தவள்தான் ஜாதகனுடைய தாய் என்றேம். தாயே! மேலும் கேளுங்கள்.

தாயின் குணங்கள்

18. மாதுரு சிவந்த மேனி மர்மமுங் கொஞ்ச முள்ளாள்
சூதுக ளெண்ணு ளாகுஞ் சொல்லுமுன் கோபங்
[கொஞ்சம்
தீதான குணமில் லாதாள் சோம்பலுங் கொஞ்ச
[முள்ளாள்
மேதினி லூகை சாலி வீணப வாத மேற்பள்.

18. தாய் சிவந்த நிறமுடையவள். சிறிது ரகசியமுள்ளவள். வஞ்சனையை நினையாதவள். சிறிது முன்கோபமுண்டு. தீய குணங்களில்லாதவள். சிறிது சோம்பலும் உடையவள். ஊகமுடையவள். வீண்பழியையும் அவமானத்தையும் அடைவாள்.

19. யோகமுஞ் சமம தாமே வுடமைக ளதிக மில்லாள்
நாகரி கங்கள் கொஞ்சம் நல்கிடும் பித்தச் சூடு
வேகமாய்ப் பேச வல்லள் வித்தகி துணையா மென்றேம்
மோகமா யாண்பால் காணுள் மொழிகிறேம் பெண்பால்
[மூன்று.

19. சமமான யோகமுடையவள். அதிகமான பொருட்செல்வம் இல்லாதவள். நாகரிகங்கள் உள்ளவள். பித்தச்சூட்டு நோயுள்ளவள். வேகமாகப் பேசுபவள். தாயின் உடன் பிறந்தவாகளைக் கூறுகின்றேம். சகோதரர் இல்லாதவள். மூன்று சகோதரிகள் உள்ளவள்.

20. இல்லமுந் தென்மே லாகும் ஏகிடு மந்த வில்லம்
அல்லலாங் குடும்ப மென்றேம் அம்பிகை கேட்க லுற்றாள்
வல்லிக்குத் துணையாண் தோஷம் வரனில்லம் வாழா
[ளென்றீர்
சொல்லுவீ ரந்தச் சங்கை ஐயமுனி கூறு கின்றார்.

20. இவளுடைய வீடு தென்மேற்கிலுள்ளது. அவளுக்கு இந்த வீடுகிடைக்காது. துன்பமடையும் குடும்பமென்றேம். பார்வதி தேவி கேட்கலானார். ஜாதகனுடைய தாய்க்குச் சகோதர தோஷம் உண்டு என்றும் அவள் தன் கணவனுடன் வசித்து வராதவள் என்றும் கூறுகின்றீர்களே! அந்த விவரத்தைச் சொல்லுங்கள். ஐயமுனிவர் சொல்லுகின்றார்.

தாய்க்கு சகோதரதோஷ மேற்படக் கிரகநிலை

21. மதிக்குமே யிரண்டில் மந்தன் மன்னவன் பார்த்த தாலே
சதியாகு மில்லந் தானுஞ் சகோதர தோஷ மெய்தும்
அதிபதி பூர்வ தோஷம் வந்ததால் குற்ற மாமே
விதியதை நவக்கோ ளாய்ந்து விளம்புவீர் முனியே
[நீர்தாம்.

21. மாதுர்காரகனுகிய சந்திரன் இருக்குமிடத்திற்கு இரண்டா மிடத்தில் சனி யிருப்பதாலும், அந்த வீட்டைக் குரு பார்ப்பதாலும் தாய் வீட்டுக்குத் தோஷம் உண்டு. சகோதரதோஷம் ஏற்படும். அது தவிர, முற்பிறவியில் செய்த தவினையும் ஏற்பட்டது. அந்தத் தவினையை நவக்கிரக நிலையை ஆராய்ந்து சொல்லுங்கள், முனிவரே! தாங்கள்.

தாயின் முற்பிறவி

22. மங்கையு முன்ஜன் மத்தில் மாவலி நகரின் மேல்பால்
பொங்கிய பேரூர் தன்னில் பிறந்தனள் கங்கை சேயாய்
இங்கிவ ளுதித்து மேலும் எழில்பெறு மதலை யுண்டாய்
நங்கையு வாழு நாளில் நவிலுவோ மூழி தானே.

22. ஜாதகனுடைய தாய் முற்பிறவியில் மகாபலிபுரத்திற்கு மேற்கில் உள்ள ஒரு பெரிய ஊரில், வேளாளர் குலத்தவளாகப் பிறந்து அழகிய குழந்தைகளைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தவினையைச் சொல்லுகின்றோம்.

தாய் நம்பிக்கைத்துரோகம் செய்ததையும் அதனால் ஏற்படும்பலனையும் பின்வரும் நான்கு பாடல்களில் கூறப்படும்

23. வன்னிய மரபில் தோன்றும் வனிதையு மிவள்பால்
[சென்று
தன்னுடை நகைகள் தம்மைத் தந்தனள் திருடர் பாதை
பின்னையும் வாங்கிக் கொண்டு பேதையுஞ் சிலநாள்
[வைத்து
அன்னவள் பொருளைக் கேட்க அவைகளில் சிலவேபற்றி;

23. வன்னியர் குலத்தில் பிறந்த பெண் ஒருத்தி இவளிடம் சென்று, திருட்டுப் பயத்தால் தன்னுடைய நகைகளை யெல்லாம் சேர்த்துக் கொடுத்து வைத்திருந்தாள். இப்பெண்ணும் (ஜாதகனின் தாயும்) அதை வாங்கிச் சில காலம் வைத்திருந்தாள். நகைக்குரியவள் தன்னுடைய நகைகளைத் திரும்பக் கேட்கும்போது, அவைகளில் சில வற்றை இவள் எடுத்துக்கொண்டு;

24. ஈந்தன ளப்பெண் பார்த்து வின்னமும் பணிக ளெங்கே
கூர்ந்துமே யளிப்பா யென்னக் கோதையும் விரோத
[முற்று
இருந்ததைத் தந்தே னென்ன விவளுமே மனங்க லங்கித்
தந்ததை மோசஞ் செய்தாய்ச் சண்டாளப் பாவி நீதான்;

24. மீதியைக் கொடுத்தாள். வன்னியர்குலத்து மாது (நகைக்குரியவள்) பார்த்து, மற்ற நகைகள் எங்கே, தயை செய்து நன்றுகப் பார்த்துக்கொடு என்று வினவும் போது, இவள் கோபித்து, என்னிடம் இருந்ததைக் கொடுத்துவிட்டேன் என்றுள். உரியவள் மனம் கலங்கி நான் கொடுத்த பொருளை எடுத்துக் கொண்டு மோசம் செய்த சண்டாளப் பாவியே!

25. மறுஜன்மந் தோன்றி னலும் வரன்துணை காணு ளாயும்
உறைபில்ல மில்லா ளாயு முன்குலங் குற்ற மாயும்
பெரும்பணி யில்லா தாகும் புலம்பியே சென்று
[ளென்றோம்
விரைவினி லந்தத் தோஷம் மேவிற்று யிவளுக் கேதான்.

25. மறு பிறவியிலும் கணவன், உடன் பிறந்தவர்கள் இவர்களை யிழந்து, புகுந்த வீட்டை அடையாமலும், உன் குலத்தில் அவமான மடைந்தும், ஆபரணங்களில்லாதவளாயும் வாழ்வாய் என்று சாபமிட்டுப் புலம்பிக்கொண்டு சென்றுள். சீக்கிரத்தில் அந்தத் தோஷம் இவளைப் பற்றியது.

26. அந்தியக் காலந் தன்னில் அவள்நேத்திரங் குற்ற மாயும்
அந்தகன் பக்கல் சென்று அயனுமே வரையப் பட்டு
வந்தன ளிக்கு லத்தில் மாதுவின் சாபந் தானும்
மூந்தியே சேர்ந்த தாலே விலகாது துணையா ணென்றோம்

26. தாய் தன் கடைசிக் காலத்தில் கண்பார்வையை இழந்து மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு, இப்பிறவியில் பிறந்தாள். பெண்ணின் சாபம் முதலிலேயே ஏற்பட்டதால் உடன் பிறந்த சகோதரரில்லாதவளாவாள்.

தாயின் மறுபிறவியும் தந்தையின் முற்பிறவியும்

27. பின்ஜன்மங் காஞ்சி தன்னில் பிறப்பளே விக்கு லத்தில்
தந்தையின் பூர்வஞ் சொல்வேன் தக்கோல மருகில்
[தெற்கில்
வந்தனன் கர்ண வம்சம் மனவிமைந் தருமுண் டாகி
அந்தவூர் கணக்கு வேலை யவனுமே பார்த்தா னென்றோம்.

27. மறுபிறயில் காஞ்சிபுரத்தில் இதே குலத்தில் பிறப்பாள். இனி ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம்,

தக்கோலத்துக்கருகில் தெற்குப்பக்கதில் உள்ளதொரு ஊரில் கருணீகர் குலத்தில் பிறந்து, மனைவி மக்களைப் பெற்று, அவ்வூர் கணக்கு வேலையைப் பார்த்து வந்தான்.

28. அதுகளி யேழை யோரை யவனுமே மோசஞ் செய்தான்
சதியிலா வேழை யோர்கள் சாற்றுவார் மனவெறுப்பால்
நிதிகளை நயமா யீந்து நிலமதை யுன்பால் கொண்டு
சதிசெய்தா யேழை தம்மைச் சண்டாளப் பாவி யேநீ ;

28. அக்காலத்தில் ஏழைகட்கு கணக்கில் சில மோசங்களைச் செய்தான். கதியற்ற ஏழைகள் மனம்நொந்து சாபமிடுகின்றனர். நயவஞ்சகமாகப் பொருளைச் சிறிது கொடுத்து எங்கள் நிலத்தை யபகரித்து, ஏழைகளாகிய எங்களுக்கு சதி செய்தாயே! சண்டாளனே! நீ ;

29. மற்றொரு ஜன்மந் தன்னில் மனைவிய ரிருவ ராயும்
உற்றநற் றுணைவி ரோத முறைந்திடு மென்று சொன்னார்
குற்றமா யேழை சாபங் குலவிற்று விவனுக் கேதான்
வித்தக னந்தி யத்தில் விதவித நோய்கள் கண்டு ;

29. தோன்றும் மறுபிறவியில் இரு மனைவியரை யடைவாய். உடன்பிறந்த சகோதரர்களிடம் விரோதம் ஏற்படும் என்று கூறினர்கள். தீங்காக அந்த ஏழைகளின் சாபம் இவனை வந்தடைந்தது. ஜாதகனுடைய தந்தையும் தன் கடைசிக் காலத்தில் பல வியாதிகள் ஏற்பட்டு;

30. மறலியின் பதிக்குச் சென்று வயனுமே வரையப் பட்டுப்
பிருதிவி தலத்தி லேதான் பிறந்தனன் செங்குந்த வம்சம்
உறைந்திடு முன்னூழ்ச் சாபம் உத்தமி மார்கள் ரண்டு
வருந்துணை பகையு மெய்து மம்பிகை யாளே கேளாய்.

30. மரண மடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுக் காஞ்சிபுரத்தில் செங்குந்த மரபினனாகப் பிறந்தான். மூற்பிறவித் தோஷம் ஏற்படும். இரு மனைவியரை அடைவான். உடன் பிறந்த சகோதரருக்குள் விரோதம் ஏற்படும். தாயே! கேளுங்கள்.

தந்தையின் மறுபிறவி

31. பின்ஜன்ம மவ்வூர் தன்னில் பிறப்பனே மறையோ ரைக
அன்னையுங் கேட்க வுற்றாள் அவனிந்த ஜன்மந் தன்னில்
என்னபுண் ணியங்கள் செய்தா னியம்புவீர் முனியே [நீர்தாம்
தர்மமா மனத்த னையுஞ் சாமிமேல் பக்தி கொண்டும் ;

31. ஜாதகனுடைய தந்தை மறுபிறவியில் அவ்வூரில் அந்தண குலத்தவனாகப் பிறப்பான் என்றார். பார்வதி தேவி கேட்கலானார்.

ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் என்ன நற்செயல்கள் புரிந்தான். அவற்றைக் கூறுங்கள், முனிவரே! தாங்கள். அவன் தருமம் செய்யும் மனப்பான்மையுடனும், தெய்வபக்தியுடனும்;

உயர்குலப் பிறவிக்குக் காரணம்

32. நல்லோர்க்கு நல்ல னுயும் நவின்றது தப்பா தாயும்
அல்லலென் றோரை காத்தும் அவனுமே வாழ்ந்த தாலே
வல்லவன் வாழ்ந்த தாலே மறைக்குல முதிப்பா னென்
[றோரும்
வில்லுதல் புருவத் தாளே வித்தகி கேட்டி டாயே.

32. நல்லவருக்கு நல்லவனாகவும், சொன்ன சொல் தவறாமலும், துன்பமடைந்தவரை யாதரித்தும் வாழ்ந்துவந்ததால் அடுத்த பிறவியில் அந்தணர் குலத்தில் பிறப்பான். வில்லோப்போன்ற வளைந்த புருவங்களையுடைய தேவியே! கேளுங்கள்.

தாய் தந்தையரின் இறுதிக்காலம்

33. தந்தையின் மரண காலஞ் சாற்றுவோ மிருபா
[னென்பான்
மூந்திய மகர மாத மெய்திடுங் கருமந் தானும்
பிந்தியு மன்னைக் கேதான் பேசுவோ முப்பா னேழில்
தன்தனுர் மாதந் தன்னில் சாற்றுவோங் கருமந் தானே.

33. ஜாதகனுடைய தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். இருபத்தொன்பதாம் வயதில் உயர்வான தைமாதத்தில் மரணமடைவான். பிறகு தாய்க்கு ஜாதகனுடைய முப்பத்தேழாம் வயதில் மார்கழி மாதத்தில் மரணமேற்படும்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

34. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மொருபா
[றில்
சொந்தவூர் மேற்கி லேதான் தோன்றிடு மந்த மாது
அன்னவள் சேதி சொல்வேன் அன்னம்போல் சாய
[லுள்ளாள்
கன்னென மொழியு முள்ளாள் காதலி சிவந்த மேனி.

34. ஜாதகனுடைய திருமணக் காலத்தைக் கூறுகின்றோம். பதினாறும் வயதில் சொந்த ஊரின் மேற்குப் பக்கத்திலிருந்து மனைவருவாள். அவளுடைய செய்திகளைச் சொல்லுகின்றோம். அன்னத்தைப் போன்று நடையழகு உடையவள். இனிய வார்த்தை பேசுபவள். சிவந்த உடலுடையவள்.

35. முன்கோப மூர்க்க முண்டு முயற்சியாய்க் குடும்பி யாவள்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பாள் பித்த தேகி
அன்னவள் சமயோ கத்தாள் அறைகிறேம் புத்திர
[பாவம்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

35. முன் கோபமுடையவள். செழிப்பான குடும்பத்தை யுடைய வள். தன் வார்த்தைகளே மேன்மையுள்ளனவென்று உறுதியாகக் கூறுபவள். சமமான யோகமுள்ளவள். புத்திர பாவத்தைச் சொல்லு கின்றேம். உயர்ந்த யானை முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற உத்தமியே ! கேளுங்கள்.

ஜாதகனுடைய புத்திரபாவம்

36. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் நவம தாகுஞ்
சித்தமாய் யர்ண்பால் ரண்டு செப்புவோங் கன்னி
[மூன்று
குத்தமா மற்ற வெல்லாங் கூறுவோ மிவனுக் கேதான்
அத்தியை யின்ற மாதே அறைகிறேங் கேட்டி டாயே.

36. ஜாதகனுடைய புத்திர விருத்தியைச் சொல்லுகின்றேம். ஒன்பது குழந்தைகள் தோன்றும். இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் நிலையுள்ளவர். மற்ற குழந்தைகள் நிலையா என்று கூறு கின்றேம். யானைமுகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே ! கேளுங்கள்.

37. ஜாதகன் பூர்வந் தன்னைச் சாற்றுவோம் புலியூர் தன்னில்
நீதியாய்த் தீயின் வம்சம் நேர்ந்தனன் கிருஷி யாலே
மேதினில் ஜீவித் தேதான் விளைபுலங் கொஞ்ச மாகித்
தீதான மனங்க ளின்றிச் சேயிழை மதலை யுண்டாய்;

37. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். புலி யூரில் வன்னியர் குலத்தவனைப் பிறந்து விவசாயம் செய்து உலகில் ஜீவித்து வந்து, விளை நிலங்கள் கொஞ்சம் அடைந்து, தீய எண்ணங் களில்லாமல், மனைவி, மக்களைப் பெற்று;

38. வடமலை தன்னில் சென்று மாலுக்கு வர்ச்சித் தேத்தி
அடைவுடன் காஞ்சி சென்று அவனுமே பேதி யாலே
உடனேதான் மரண மெய்தி யுதித்தவ னிவனே
[யென்றேம்
முட னிவனின் யோகஞ் செப்புவோ மினிமே லாக

38. வடமலைக்கு (திருப்பதிக்கு)ச் சென்று அங்குக் கோயில் கொண்டுள்ள திருமாலுக்கு அருச்சனை செய்து, துதித்து, காஞ்சிபுரம் சென்று, பேதிகண்டு மரணமடைந்து மீண்டும் பிறந்தவன் இவன் என்று சொன்னேம். இனி இவனுடைய யோகத்தை நிச்சயமாகச் சொல்லுகின்றேம்.

39. உதித்தநாள் முதலே யாக ஒருபத்து வாண்டு மட்டும்
நிதியது சேரா தாகும் நினைத்தகா ரியங்க ளாகா
பதியது குறைவ தாகும் பந்துவும் பகையே யாகும்
வரவுக்குச் செலவ தேக மங்கையே கேட்டி டாயே.

39. ஜாதகன் பிறந்த நாள் முதல் பத்து வயது வரையில் செல்வம் சேராது. எண்ணிய காரியங்கள் நடைபெறு. நிலங்கள் குறைந்து போம். சுற்றத்தாரும் விரோதம் கொள்ளுவார். வரவுக்கு மேல் செலவு ஏற்படும். தாயே! கேளுங்கள்.

40. அதற்குமேல் மரண மட்டும் அம்புலி போலே யோகம்
நிதியது சேரு மென்றேரும் கேமியோ ருறவே யாகும்
பதியது புதிதாய்ச் செய்வன் பந்துவும் புகழ வாழ்வன்
அதிகமாய்த் தொழிலு மோங்கும் ஆள்கார ருடைய னுமே.

40. அதற்குப் பிறகு ஜாதகன் மரண காலம் வரையில் வளர் பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். பொருள் சேரும். உலகத்தவர் மதிப்புக்கொள்ளுவர். வீட்டைப் புதிதாகக் கட்டுவான். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்வான். தொழில் விருத்தியாகும். ஏவலாட்களை உடையவன்.

41. நாளுக்கு நாளாய் யோகம் நல்கிடு மிவனுக் கேதான்
காளைகள் கோவு சேரும் கனத்திடுங் பூமி தானுஞ்
சீலமு முடைய னுகுஞ் ஜயஞ்செய்வ னெடுத்த வேலை
வேலனை யீன்ற மாதே வித்தகி கேட்டி டாயே.

41. ஜாதகனுக்கு நாளுக்கு நாள் யோகம் விருத்தியாகும். பசுகாளை இவை பெருகும். பூமியும் அதிகமாகும். நல்லொழுக்கமுடையவன். எடுத்த காரியங்களெல்லாம் வெற்றியுடன் முடியும். வேல் முருகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

42. ஜாதகன் மரண காலஞ் சாற்றுவோ மறுபான் ரண்டில்
மேதினில் [1]கூனி மாத முத்தர நாளி லேதான்
பித்தமாம் பாண்டு நோயால் பொருந்திப்பின் மரண
[மெய்தி
ஒதுவே னிவன்பின் ஜன்மம் உத்தமி கேட்டி டாயே.

1. பங்குனி.

42. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றோம். அறுபத்திரண்டாம் வயதில் பங்குனி மாதம் உத்தர நட்சத்திரத்தில் பித்தபாண்டு நோய் ஏற்பட்டு மரண மடைவான். அவனுடைய மறு பிறவியைச் சொல்லுகிறோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் மறுபிறவி

43. உத்தரந் தணிகை கீழ்ப்பால் உதிப்பனும் ரெட்டி வம்சஞ்
சித்தமாய்ப் பூமி யாலுஞ் செட்டுவால் ஜீவிப் பானும்
மெத்தவே பாக்ய முண்டாய் மேதினில் கீர்த்தி யேற்பன்
அத்தியை யீன்ற மாதே யறைகிறோங் கேட்டி டாயே.

43. வடக்கில் திருத்தணிக்குக் கிழக்கில் ரெட்டியார் மரபில் பிறந்து விளை நிலங்களாலும், வர்த்தகம் புரிந்து வருவதாலும் பெரும் பாக்கியமடைந்து, உலகில் புகழை அடைவான். விநாயகனைப் பெற்ற தேவியே! சொல்லுகின்றோம். கேளுங்கள்.

44. ஜனித்திடு காலந் தன்னில் [1]செம்பாம்பு தனிலி ருப்புக்
குனித்திடு வாண்டு வாறுங் கூர்திங்கள் பதினொன் றுகுந்
துணைவர்கள் விருத்தி யாகுஞ் செலவுக ளதிக மெய்துந்
தனமது சேரா தாகுந் தாய்தந்தை தமக்கு நோயாம்.

44. ஜாதகன் பிறக்கும் காலத்தில் (மக நட்சத்திரம் முதல்பாதம்) கேது மகாதசையிலிருப்பு ஆறு வருடங்களும் பதினொரு மாதங்களு மாம். அக்காலத்தில் உடன்பிறந்தவர் விருத்தியாவர். செலவுகள் பெரு கும். செல்வம் சேராது. தாய் தந்தையருக்கு வியாதி பீடிக்கும்.

1, கேது.

ஜாதகம் 35

1. அரியது வுயிரு மாக வதிதியுஞ் ஜன்மந் தங்கப்
பரிதியும் புதனு மூன்றில் பார்க்கவன் குருவு மஞ்சில்
கரியவன் மதிசேய் ராகு [1]களத்திரத் தானம் நிற்க
உரைப்பீர்கள் பலனே யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சிம்மம் லக்கினமாகவும், கேது ஜன்மத்திலும், சூரியன் புதன் மூன்றுமிடமாகிய துலாத்திலும், சுக்கிரன் குரு ஐந்தாமிடமாகிய தனுசிலும், சனி சந்திரன் செவ்வாய் ராகு களத்திரஸ்தானமாகிய கும்பத்திலும் இருக்க பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்கலானாள்.

கிரகநிலை

சனி சந்திரன் செவ்வாய் ராகு	இராசி சக்கரம்		லக்கினம் கேது
சுக்கிரன் குரு		சூரியன் புதன்	

2. தென்முனி புகலு கின்றார் ஜனித்திடு மாண்பால் ஜன்மந்
தென்வாசல் கீழ்மேல் வீதி தீயஞ்சாள் வடமே லாகுந்
தென்திசை காளி தங்குஞ் சிவன்கோஷ்டம் மேல்பா
[லாகுந்
தென்மேல்பால் மாரி தங்குஞ் செப்பிய சம்வூர் தன்னில்;

2. அகத்திய முனிவர் கூறுகிறார். இஃது ஆண் மகனின் ஜாதகம். பிறந்த வீடு தெற்குப் பார்த்த வாயிலையுடையது. அது கிழக்கு மேற்கான தெருவாகும். வடமேற்குப் பக்கத்தில் பாஞ்சாலி கோயிலும், (திரௌபதியம்மன்) தெற்கில் காளிகோவிலும், மேற்கில் சிவன் கோவிலும், தென்மேற்குத் திக்கில் மாரியம்மன் கோயிலும் உள்ள சமஸ்தானமான ஊரில் ;

---

1. இலக்கினத்துக்கு ஏழாமிடம். ஈண்டு கும்பராசி.

ஜாதகனுடைய குலம்

3. உதிப்பனும் நான்காஞ் ஜன்மம் ஓராறு முகத்தோன் [வர்க்கம்
மதிநுத லன்னை தந்தை வருந்துணை களத்திர புத்திரர்
சதியிலா முன்பின் ஜன்மஞ் ஜாதகன் யோகச் சேதி
அதிதியே நவநூ லாய்ந்து வறிவிப்போ மிந்நூல் தன்னில்.

3. ஜாதகன் (சுப்பிரமணிய வர்க்கமாகிய) செங்குந்த மரபில் தன் தந்தைக்கு நான்காமவனுகப் பிறப்பான். அவனுடைய தாய் தந்தை உடன்பிறந்தவர் சகோதரர் மனைவி மக்கள் முதலானவர், முற்பிறவி மறுபிறவி, ஜாதகனுடைய யோகச் செய்திகள், ஆகியவற்றை இந்த நவக்கிரக நிலேயை ஆராய்ந்து இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேம். தாயே !

தந்தையின் சகோதரபாவம்

4. இவன்பிதா துணைவ ரெட்டி லிருகன்னி யாண்பா லாறு
அவர்களும் விருத்தி யென்றேம் அண்மையாய்க் குடும்பி [யாவர்
தவசியே பின்பால் சேதி சாற்றுவோ முத்தர பாகம்
நவனியில் பிதாகு ணத்தை நாட்டுவோந் தாயே கேளும்.

4. ஜாதகனுடைய தந்தையின் உடன் பிறந்தவர்கள் எட்டுப் பேராவர். அவர்களில் இரு சகோதரிகளும் ஆறு சகோதரர்களும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். அவர்கள் ஒரே குடும்பமாயிருப்பார்கள். அவர்களது செய்தியைப் பிற்பாகத்தில் கூறுவோம். இப்பொழுது ஜாதகனின் தந்தையின் குணங்களைப் பற்றிக் கூறுகின்றேம். தாயே! கேளுங்கள்.

தந்தையின் குணங்கள் பின்வரும் இருபாக்களில் கூறுவர்

5. மாநிறஞ் சமதே கத்தோன் வணிபமுங் கிருஷி செய்வன்
பான்மையாய்ப் பேசு வாளும் பாருகள் விருத்தி செய்வன்
ஊனமாங் கருமே கங்கள் உடலினில் படரு மென்றேம்
ஈனமாங் குணமுங் கொஞ்சம் இதிகாசப் பிரிய ருகும்.

5. ஜாதகனுடைய தந்தை மாநிறமுடையவன். சமமான உட லமைப்புள்ளவன். வர்த்தகமும் விவசாயமும் செய்துவருவான். பொருத்தமாகப் பேசுபவன். விலை நிலங்களைப் பெருக்குவான். உடலில் கருமேகநோய் ஏற்பட்டுப் படர்ந்து வரும். அற்பமான குணம் சிறிதுள்ளவன். புராணக் கதைகளைக் கேட்பதில் பிரியமுள்ளவன்.

6. தரித்ரங்க ளில்லா னுகுஞ் சல்லிய மென்று லச்சம்
பொருத்தமாய்ப் பேசு வானும் பிறர்பொரு ளிச்சை
[வையான்
துரிதமாய் நடக்க வல்லன் சோம்ப லுங் கொஞ்ச முண்டு
மறித்துமே பராசர் சொல்வார் மருவுங்கா ரகங்கள்
[தோன்று;

6. தரித்திரங்களில்லாதவன். கடன் வாங்கப் பயப்படுபவன். மிகவும் பொருத்தமாகப் பேசுபவன். அன்னியருடைய பொருளின் மீது ஆசையில்லாதவன். வேகமாக நடப்பவன். சிறிது சோம்பலுடை வன். இவ்விதம் கூறும்போது பராசர முனிவர் தடுத்துச் சொல்லு கின்றார். அவனுக்குக் காரகநோய் ஏற்படுவதற்கு ;

காரகநோய் ஏற்படக் கிரகநிலை

7. காரணம் யாது வென்னக் கதிரவ னுடனே புந்தி
தீரமா யிருப்ப தாலே சேர்ந்திடுங் கார கங்கள்
மாரன்முன் ஜன்மந் தன்னில் மருவிற்றுச் சிலவே
[தோஷங்
கூறுவீ ரந்தச் சங்கை குறுமுனி புகலு கின்றார்.

7. உரிய காரணங்கள் என்னவென்று கூறுங்கள் என்று வினவ, சூரியனுடன் புதன் துலாத்தில் இருப்பதால் அவனுக்குக் காரகநோய் ஏற்படும் என்றோம். அதுவும் தவிர, ஜாதகனுடைய தந்தை முற்பிறவி யில் சில தீங்குகளைச் செய்ததன் பயனால் ஏற்பட்டது என்றோம். அந்தத் தீவினையைச் சொல்லுங்கள் என, அகத்திய முனிவர் உரைக்கின்றார்.

தந்தையின் முற்பிறவி

பூனையின்மீது வெந்நீரை ஊற்றிய தோஷம்

8. பிருதிவி தலத்தி லேதான் பிறந்தனன் சௌராஷ்டர
[வம்சம்
மருவின வினையைச் சொல்வோ மார்ஜாலன் கொடுமை
[செய்யத்
திருமகன் வெந்நீ ரூற்றத் தேகமும் பொங்கி யேதான்
உறைந்தது கால னுடு உத்தம னந்தி யத்தில் ;

8. ஜாதகனுடைய தந்தை முற்பிறவியில் காஞ்சீபுரத்தில் சௌராஷ்டிர வம்சத்தில் பிறந்தான். அக்காலத்தில் ஏற்பட்ட தீவினை யைச் சொல்லுகின்றோம். ஒரு பூனை வீட்டில் அதிகத் தொந்திரவு செய்தது. அதைக்குறி பார்த்து இவன் அதன் மேல் வெந்நீரைக் கொட்ட, பூனையின் உடம்பெல்லாம் வெந்து மரணமடைந்தது. இவனும் தன் கடைசிக் காலத்தில் ;

காரகநோய் ஏற்பட்டக் காரணம்

9. பலவிதப் பிணியுங் கண்டு பார்வையுங் குறைவு நேர்ந்து
குலவினுன் கால நாடு குறைதலே வரையப் பட்டு
உலகினி லுதித்தா னென்றேரும் உயர்பூனை தோஷத்
[தாலே
விலகிடாக் கார கங்கள் மேவிடு மென்று சொல்வோம்.

9. பலவிதமான வியாதிகள் ஏற்பட்டுக் கண்பார்வை குறைந்து மரணமடைந்து மீண்டும் பிரம தேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவன் என்றேரும். பூனையின் மீது வெந்நீரூற்றிய தோஷத்தால் காரகநோய்கள் விலகா ; அவசியம் ஏற்படவே ஏற்படும் என்று சொல்லுகின்றேரும்.

ஜாதகனுடைய குணங்கள்

10. சொல்லிய குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
வல்லவன் குணத்தைச் சொல்வேன் மாஞ்சிவப் புடைய
[னுகும்
எல்லைகள் விருத்தி செய்வன் ஏவலா ளுடைய னுகும்
நல்லவன் நல்ல வர்க்கு வன்புடையற் கின்ப னுவன்.

10. இவ்விதம் சொல்லப்பட்ட குணத்தவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான் என்றேரும். அவனுடைய குணத்தைக் கூறுகின்றேரும். மாநிற முவடையவன். பூமியைப் பெருக்குவான். வேலைக்காரர்களை உடையவன். நல்லவருக்கு நல்லவனுகவும் அன்புடையவர்கட்குப் பிரியமானவனுகவும் இருப்பான்.

இதுவுமது

11. அன்னிய மாத ராலே வவமானம் நேரு மென்றேரும்
சொன்னசொல் தப்பா னுகுங் குழவிகள் நேசங்
[கொள்வன்
பொன்கடன் படவும் பின்னல் போக்கிடுங் குணத்தா
[னுகும்
தன்னினத் தவர்க்கு மேலாய்த் தனிகனுய் வாழ்வான்
[மாதே.

11. வேறொரு பெண்ணுல் அவமானம் ஏற்படும் என்று சொன்னேரும். சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவன். குழந்தைகளிடம் பிரியமாக இருப்பான். பொருள் கடன் வாங்குபவன். பிற்காலத்தில் அக்கடனைத் தீர்த்துவிடுங் குணமுடையவன். தன் சுற்றத்தாருக்கு மேம்பட்ட செல்வவானுக வாழ்ந்துவருவான். தாயே !

இதுவுமது

12. தந்தைமேல் வாழ்வா னுகுஞ் சமரசக் கல்வி யுண்டு
சுந்தர முடைய னுகுந் துருசான கோப மேற்பன்
சிந்தையு நல்ல தாகுஞ் ஜனித்தவில் லடையா னுகும்
விந்தையா யிரண்டு வில்லம் வித்தகன் செய்வ னுமே

12. தன் தந்தைக்கும் மேம்பட்டவனுக வாழ்வான் என்றேரும். சமமான கல்வியறிவுள்ளவன். அழகுடையவன். விரைவில் கோபம் கொள்ளுவான். நல்ல மனமுடையவன் தான் பிறந்த வீட்டை அடையாதவன். அழகிய இரு வீடுகளைக் கட்டுவான் என்றேரும்.

விஷ்ணு ரேகை

13. இன்னவன் செங்கை தன்னில் இலகிடும் விஷ்ணு ரேகை
தன்மனை பகையா மத்தில் சார்ந்திடும் மறும னைதான்
எந்தக் காலத்தில் நேரும் இயம்புவீர் முனியே நீர்தாம்
மந்திரி தசையந் தியத்தி லரவுதன் புக்தி யாகும்.

13. ஜாதகனுடைய அழகிய கைகளில் விஷ்ணு ரேகையுள்ளவன். இடைக் காலத்தில் மனைவியை இழந்து விடுவான். இரண்டாம் மனைவி வருவாள் என்றேரும். அஃது எந்தக் காலத்தில் ஏற்படும் என்று சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். குரு மகாதசை முடிவில் ராகு புத்தியில் அங்ஙனமாகும்.

ஜாதகனுடைய சகோதரியின் விவரம்

14. தன்துணை முன்பெண் ணொன்று சாற்றுவோந் தீர்க்க [மாகக்
கன்னிகை சேதி சொல்வேன் கணவனுக் கினிய ளாகும்
முன்கோப முடைய ளாகும் முதல்விபாட் டாளி யாகும்
பொன்பணி யதிகங் காணுள் புருடன்தன் னூரில் வாழாள்

14. ஜாதகனுக்கு முன் பிறந்த சகோதரி யொருத்தி தீர்க்காயுளுடன் இருப்பாள். அப்பெண்ணுடைய செய்திகளைக் கூறுகின்றேரும். தன் கணவனுக்குப் பிரியமானவள். முன்கோபமுடையவள். உழைப்பாளி என்றேரும். பொன்னுபரணங்கள் அதிகமில்லாதவள். இவள் புருடனுடன் வாழ்ந்து வராதவள்.

15. இல்லமும் விட்டு நீங்கி யேகுவாள் தங்க ணூரில்
வல்லியும் வரனுங்கூடா வளமுள குடும்பம் பின்னுல்
சொல்லுவேன் சுதரா ணொன்று தோகையு மவ்வாறு [தீர்க்கம்
நல்லதோர் வார்த்தை கூறுவள் நற்றுணை பகையு [மெய்தும்

15. அவள் தன்னுடைய கணவனது வீட்டைவிட்டுச் சென்று தன்னுடைய பிறந்த ஊரில் வசித்து வருவாள் என்றேரும். அவள் தன் கணவனுடன் சேர்ந்து வாழாதவள். பிற்காலத்தில் செழிப்புள்ள குடும்பத்தை யடைவாள். ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் பிறப்பர். அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பார்கள். நல்ல வார்த்தையையே பேசுபவள். சகோதரரிடம் விரோதம் ஏற்படும்.

பின்வரும் இருபாடல்களில் ஜாதகனுடைய திருமணக் காலமும் மனைவியின் விவரங்களும் கூறுவார்

16. மாரனின் மணத்தின் கால மறைகிறே மரவு காலம்
நாரியும் வடபால் நேரும் நவிலுவோ மவள்கு ணத்தைத்
தீரமில் லாத நெஞ்சம் செப்புமுன் கோபி யாவள்
வேறொரு நடக்கை யில்லாள் மெல்லியும் யோக சாலி.

16. ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேரும். ராகு மகாதசையில் வடக்குத் திக்கிலிருந்து வருவாள். அவளுடைய குணத்தைக் கூறுகின்றேரும். தைரியமில்லாத மனத்தள். முன்கோப முடையவள். வேறு தீயநடத்தை யில்லாதவள். அதிர்ஷ்ட முடையவள்.

17. வரனுடை மனத்துக் கேத்தோள் வருவோரை யாத
[ரிப்பள்
பொறுமையாய்க் குடும்ப மேற்பள் போசன வறுமை
[காணுள்
சிறையுண்டு மத்தி யத்தில் சொல்லினுல் பகையும் நேர்ந்து
அரிவையும் வேராய்ச் செல்வள் அம்பிகை யாளே
[கேளாய்.

17. தன் கணவனுடைய மனத்துக் கேற்றபடி நடப்பவள். தன்னையண்டி வந்தவர்களை ஆதரிப்பாள். பொறுமை யுடையவள். குடும்பத்தை நன்முக நடத்துபவள். சாப்பாட்டுக்குத் தரித்திர மடையாதவள். இடைக்காலத்தில் சிறையிலிருப்பது போல் தனித்து வாழ நேரிடும். தன் வாயிலிருந்து வெளிப்பட்ட தீயவார்த்தைகளால் விரோதம் ஏற்பட்டுத் தனியாகச் சென்று விடுவாள். தாயே! கேளுங்கள்.

18. மறுமனை வடகீழ் நேரு மறைகிறே மவள்கு ணத்தைப்
பொறுமையும் பெருமை யேற்பள் பேச்சது யதிக மெய்த்துந்
திருமக ளொப்ப தாகுஞ் செய்ந்நன்றி மறவா ளாகும்
விரதங்கள் பூண்பா ளாகும் வித்தகி யோக சாலி.

18. வடகிழக்குத் திசையிலிருந்து இரண்டாம் மனைவி வருவாள். அவளுடைய குணங்களைக் கூறுகின்றோம். பொறுமைசாலி. பெருமையை யடைவாள். அதிகமாகப் பேசுவாள். இலக்குமியைப் போன்றவள். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவள். விரதங்களை ஏற்பாள். அதிர்ஷ்டசாலி என்றோம்.

19. சுதர்களு மாண்பா லொன்று தோகையு மிருவர் தீர்க்கம்
முதல்மனை தனக்குப் புத்திரர் மேவாது கன்னி யொன்று
பதராகு மூன்று நாலு பாவைக்கு வென்று சொல்வோம்
அதிபதி யிளைய மாது வந்திடுங் காலஞ் சொல்வீர்.

19. புத்திரன் ஒருவனுண்டு. இரு புத்திரிகள் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். ஜாதகனுடைய மூத்த மனைவிக்குப் புத்திரபாக்கியமில்லை. முதலில் பிறக்கும் பெண் குழந்தை நிலையாது. மூன்றுவதும் நான்காவதுமாகத் தோன்றும் குழந்தைகள் இறந்துவிடும் என்று கூறுகின்றோம். ஜாதகனுக்கு இரண்டாம் மனைவி வரும் காலத்தைச் சொல்லுங்கள்.

ஜாதகனுடைய இரண்டாம் திருமணக்காலமும் முற்பிறவியும்

20. பதின்மூன்றஞ் செய்யுள் தன்னில்
பகர்ந்தனம் விவரங் காண்பீர்
உதித்தவன் பூர்வஞ் சொல்வேன்
உயர்வான வாழி தன்னில்
நிதிமிக வுடையா னுக்கு
நேர்ந்தனன் தீயின் வம்சம்
அதிபதி மதலை யுண்டாய்
வாழ்நாளில் வினையைச் சொல்வேன்.

20. பதின்மூன்றும் பாட்டில் அந்த விவரம் சொல்லியிருக்கின்றோம். அங்குக் காணுங்கள். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். உயர்ந்த திருவாழி என்னும் தலத்தில் செல்வம் அதிகமாகப் படைத்தவனாகிய வன்னிய குலத்தவனொருவனுக்குப் பிறந்து, புத்திரபாக்கியம் பெற்று, வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம்.

பொருள் திருப்பிக்கொடுக்காத தோஷம்

21. மறைமாது பொருளுங் கொஞ்ச
மாரன்பால் வைத்து விட்டு
உறைந்தன்ள் சேதுக் கேதான்
உத்தமி மரண மானுள்

பொருள்கொடாத் தோஷ மொன்று
புகுந்தது விதுவல் லாமல்
அரிவையாங் குலத்து மாது
வவன்பேரில் அடாத வார்த்தை ;

21. அந்தணர்குலஸ்திரீ ஒருத்தி சிறிது பொருள் சேகரித்து ஜாதகனிடம் கொடுத்து வைத்துவிட்டுச் செதுவுக்குச்சென்று அவ் விடத்திலேயே மரண மடைந்தாள். பொருளைத் திருப்பித் தராத தோஷம் இவனைப் பற்றியது. இதுவுமல்லாமல் நல்ல உயர்குலப் பெண் ஒருத்தி இந்த ஜாதகன் மீது அடாத பழி வார்த்தைகளை ;

22. இனமதில் சொல்லும் போது விப்பால னதைய றிந்து
வினைமன மாகக் கொண்டு விலக்கினன் மாதைத் தானுஞ்
சினங்கொண்டு மங்கை தானுஞ் செப்புவாள் பாவி யேநீ
இனிவருஞ் ஜன்மந் தன்னில் எய்துவா யென்னை பாரி ;

22. தன் இனத்தவர்களிடம் கூறும்போது அதை இந்த ஜாத கன் தெரிந்துகொண்டு தீய எண்ணங்களைக் கொண்டு அப்பெண்ணை நீக்கி விட்டான் (விரட்டி விட்டான்). கோபங்கொண்ட அந்தப் பெண் ணும் சாபமிடுகிறாள். பாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் என்னையே மணந்து ;

சகோதரனுடைய பாகத்தை தராதது

23. மத்தியில் நிந்தை சொல்லி வளவினில் வாழ்வே னென்று
வித்தகி சொல்லி மாண்டாள் மேவிற்று வந்தச் சாபஞ்
சித்தஜன் துணைக்குப் பாகந் தேறிடாச் செய்தா
[னென்றும்
அத்தியை வளர்த்த வெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

23. இடைக்காலத்தில் பழிகள் கூறி உன்னுடைய வீட்டில் வாழ்ந்து வருவேன் என்று சொல்லிவிட்டு மரணமடைந்தாள். அந்தச் சாபம் ஏற்பட்டது. ஜாதகன் தன் உடன்பிறந்தவனுக்குப் பாகம் தராமல் செய்துவிட்டான். விநாயகனைப் பெற்று வளர்த்த எங்க ளுடைய உயிருக்குயிரான தாயே! கேளுங்கள்.

24. துணைவனும் வருத்த முற்றுச் செப்பிய சாபங் கேண்மோ
வினைசெய்த பாவி யேநீ மேவும்பின் ஜன்மந் தன்னில்
வனிதையா லவமா னங்கள் வந்திடு மதுவு மன்றி
எனைப்போலே துணையா ணின்றி யிறங்குமில்
[லடையா தாகி ;

24. உடன்பிறந்தவனும் வருத்தமடைந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். எனக்குத் தீங்கிழைத்த பாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் மனைவியால் அவமானங்கள் அடைவாய். அதுவல்லாமல் என்னைப்போல் உடன்பிறந்த சகோதரர்களில்லாமலும், பிறக்கும் வீட்டை அடையாதவனாகியும்;

25. உலகினில் வாழ்வா யென்று உதறினன் தெருத்தாள் [தானும்
குலவிற்று வந்தச் சாப மிவனையு மந்தி யத்தில்
மலைமீதில் வாழ்வோன் பத்தி வைத்துமே மரண மாகித்
தலைநான்கோன் வரையப் பட்டு ஜனிப்பனு மிந்தப் [பாலன்.

25. உலகில் வாழ்ந்து வருவாய் என்று கூறித் தெருமண்ணை வாரி யிறைத்தான். அந்தச்சாபம் இவனை வந்தடைந்தது. இவனும் தன் கடைசிக் காலத்தில் மலைமீதில் வாழ்ந்துவரும் முருகக் கடவுள் திருப்பதி வேங்கடாசலபதி ஆகிய தெய்வங்களிடம் பக்தி கொண்டு வணங்கி வாழ்ந்து, மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப் பட்டுப் பிறந்தான்.

தீவினையின் பலன்கள்

26. ஆகையால் மறைமா துந்தான் அணுகுவாள் மறும [னையாய்
தோகையி னினத்தை விட்டுத் துரத்தின மாது தானும்
பாகமாய் முதல்ம னைதான் பட்டுவர்துணை சா பத்தால்
ஏகனு மில்ல நீங்கும் இடருண்டு குடும்பந் தன்னில்.

26. ஆகையால் அந்தணர் குலப்பெண் இவனுக்கு இரண்டாம் மனைவியாக வருவாள். தான் பிறந்த குலத்தை விட்டுத் துரத்தப்பட்ட பெண் முதல் மனைவியாக வருவாள். உடன்பிறந்தவன் சாபத்தால் பிறந்த வீட்டை விட்டு விலகுவான். தனியனாக வாழ்வான். குடும்பத்தில் அதிகமான துன்பம் ஏற்படும்.

27. வந்தவன் யோகச் சேதி வரைகிறேனு கிருஷி செய்வன்
தந்தைமேல் வாழ்வா னாகுந் தரணியுங் கூவல் சோலை
இந்தவன் சேர்ப்பா னாகும் யாரையும் வசியங் கொள்வன்
கந்தன்தன் னருளி னாலே காலையுஞ் சுகமாய் வாழ்வன்.

27. ஜாதகனுடைய யோகச் செய்தியைக் குறிக்கின்றேம். விவசாயம் செய்து வருவான். தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். பூமி கிணறு தோட்டம் முதலியவற்றைச் சேர்ப்பான் என்றேம். எல்லோரையும் வசீகரிக்கக் கூடியவன். முருகப்பிரானின் அருளால் ஜாதகன் சௌக்கியமாக வாழ்ந்து வருவான்.

28. கொள்ளவும் விற்க வல்லன் கோதையர் மோக னுவன்
பள்ளுக ளுடைய னுவன் பாரபட் சங்க ளில்லான்
கள்ளமுங் கொஞ்ச முண்டு கட்டுரை பகரா னுமே
சள்ளமுன் பின்னல் நீங்குஞ் சகடுக ளுடைய னுமே.

28. வாங்கவும் விற்கவும் சாமர்த்தியமுள்ளவன். பெண்கள் மீது மையல் கொள்ளுபவன். பணியாட்களை உடையவன். பட்சபாத மில்லாதவன். சிறிது கபடமும் உடையவன். பொய் பேசாதவன். முன்னல் ஏற்பட்டிருந்த துன்பங்கள் விலகும். வண்டி முதலான வாகன வசதிகளை யுடையவன்.

ஜாதகனுடைய தாயின் குணங்கள்

29. மாதுரு குணத்தைச் சொல்வேன் மனமது கவடு [கொஞ்சம்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுண்மையை வெளிக்காட் [டாதாள்
பாதக மனமில் லாதாள் பகர்ந்திடாள் கட்டு வார்த்தை
சாதிப்பாள் சிலவே சங்கை சந்தேக மனத்தா ளாகும்.

29. ஜாதகனுடைய தாயின் குணத்தைச் சொல்லுகின்றோம். சிறிது கபடமான மனமுள்ளவள். இன்பமாகப் பேசுபவள். உள் மனத்திலிருப்பவைகளை வெளிவிடாதவள். தீய மனமில்லாதவள். வார்த்தைகளைப் புனைந்து பேசாதவள். சில சந்தேகங்களை விலக்குவாள். ஆனல் சந்தேகப்படும் இயல்பினள்.

30. அறமதி லிச்சை கொஞ்சம் அவள்துணை யாண்பால் ரண்டு
நவனியில் கன்னி யொன்று நாட்டுவோ மிவளுக் கேதான்
தவசியே தென்மே லில்லஞ் சார்ந்திடும் பித்த வாயு
சிவன்தனைப் பூசை செய்யுஞ் செல்வதி கேட்டி டாயே.

30. தருமம் செய்வதில் விருப்பமுடையவள். இரு சகோதரர்கள் உண்டு என்றும் சகோதரி ஒருத்தி உண்டு என்றும் கூறுகின்றோம். தவம் செய்பவளே! இவளுக்குத் தென்மேற்குத் திக்கில் வீடு உண்டு. பித்தவாயு இவள் சரீரத்தில் இருக்கும். சிவபெருமானைப் பூசை புரிந்துவரும் செல்வியே! கேளுங்கள்.

தாயின் முற்பிறவியும் தீவினைகளும்

31. முன்னவ ளிருந்த ஜன்ம
மொழிகிறோம் மயிலங் கீழ்ப்பால்
உன்னத பேரூர் தன்னில்
உதித்தனள் கங்கை சேயாய்

கன்னிகை சுகமாய் வாழுங்
காலத்தில் வினையைச் சொல்வேன்
தன்னினம் புசிக்குங் காலந்
தையல்வஞ் சனையுஞ் செய்தாள்.

31. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். மயிலத்துக்குக் கிழக்கில் உள்ள உயர்ந்ததொரு பெரிய ஊரில் வேளாளர் குலத்தவளாகப் பிறந்தாள். அவளும் சுகமாக வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். தன் சுற்றத்தார் சாப்பிடும் போது அவர்களுக்குச் சாப்பாட்டில் வஞ்சனை செய்தாள். ஒருவருக்கிட்டபடி மற்றவருக்கும் இடவில்லை.

32. இதுவன்றி வால யத்தில் இம்மாதும் வரனுஞ் சென்று
சதிபதி முருகன் பாதஞ் சேவித்துக் கடைக்குச் சென்று
விதவித சிவப்பு மஞ்சள் வித்தகி வாங்கி வந்து
நிதியது தராமல் சென்றாள் நேர்ந்தது வந்தச் சாபம்.

32. இதுவல்லாமல் ஓர் ஆலயத்துக்கு இவள் தன் கணவனுடன் சென்று இருவரும் முருகப்பிரான் அடிகளைப் போற்றிப் பிறகு கடைவீதிக்குச் சென்று விதவிதமான குங்குமம் மஞ்சள் சீப்பு முதலியன வாங்கிவந்து அவற்றிற்குரிய பணத்தைத் தராமல் சென்றாள். அந்தப் பாபம் தொடர்ந்தது.

தீவினையின் பயன்

33. மங்கைக்கு வந்த வாண்டில் மாரனு மரண மாகிச்
சங்கையா மனத்த ளாகிச் சண்டன்தன் பதிக்குச் [சென்று
புங்கவன் வரையப் பட்டுப் பிறந்தவ ளிவளே யென்றோம்
நங்கைக்கு வணிகன் சாபம் நல்கிடு மிச்சென் மத்தில்;

33. அந்த வருடத்திலேயே கணவனையிழந்து துன்பமடைந்த மனமுடையவளாக மரண மடைந்தாள். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவள் இவள் என்றோம். பெண்ணுக்குக் கடைக்காரனின் சாபம் ஏற்பட்டு இப்பிறவியிலும்;

34. மத்தியில் விதவை யாவ ளறைகிறோ மிவள்பின் ஜன்மம்
முத்தர்வாழ் தணிகை தன்னி லுதிப்பளாம் ரெட்டி வம்சஞ்
சத்திக்கு மூப்பான் ரண்டுள் சாற்றுவோ மூக்கால் கண்டம்
பத்திப்பின் மூப்பா னலில் பகருவோங் கண்டந் தானே.

34. இடைக்காலத்தில் கைம் பெண்ணாவாள். அவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். முக்தியடையவிரும்புபவர்கள் வாழ்ந்து

வரும் திருத்தணிகையில் செட்டியார் மரபில் பிறப்பாள். அவளுக்கு ஜாதகனுடைய முப்பத்திரண்டாம் வயதில் மூன்று முறை கண்டம் ஏற்படும். பிறகு (அது நிவிர்த்தியாகி) ஜாதகனின் முப்பத்து நான்காம் வயதில் மரண மடைவாள்.

தந்தையின் மரணகாலம்

35. தந்தைக்கு வெட்டாண் டுக்குள் சார்ந்திடுங் கண்ட மென்று
பிந்திய ஜன்மஞ் சொல்வேன் பெருமலைப் பட்சி தன்னில்
விந்தையாய் வணிபஞ் செய்யும் வைசிய குலமு திப்பான்
சுந்தர வதனத் தாளே செப்பின மொழிகுன் ரூவே.

35. ஜாதகனுடைய தந்தைக்கு அவனுடைய எட்டாம் வயதுக்குள் கண்டமொன்று ஏற்படும் (மரண மடைவான்.) மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருக்கழுக்குன்றத்தில் வர்த்தகம் புரிந்து வரும் வைசிய குலத்தில் பிறப்பான். அழகிய முகத்தையுடையவளே! நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகனின் மரணகாலம்

36. அறுபது வைந்து வாண்டில் அணுகிய [1]கன்னி மாதந்
திருதியை திதியி லேதான் தேய்பிறை நிசியி லேதான்
உறைகுவான் கால நாடு உதித்தசே யென்று சொல்வேன்
கரிமத வாணை பெற்ற காதலி கேட்டி டாயே.

36. ஜாதகன் தனது அறுபத்தைந்தாம் வயதில் புரட்டாசி மாதம் கிருஷ்ணபட்சத் திருதியை திதி நடுநிசியில் மரண மடைவான். கரிய யானை முகத் தோனைப்பெற்ற தேவியே! கேளுங்கள்.

37. பின்ஜன்மம் [2]வாயு தன்னில் பிறப்பனும் பிரம்ம சேயாய்
மன்னனல் தொழிலும் பெற்று வடதிசை யரசன் போலே
இன்னவன் வாழ்வா னகும் இயம்பின மொழிகுன் ரூவே
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

37. மறு பிறவியில் திருக்காளத்தியில் அந்தண குலத்தவனாகப் பிறந்து அரசாங்க உத்தியோகம் ஏற்று வடக்குத் திசைக்கு அரசனாகிய குபேரன்போல் வாழ்ந்து வருவான். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

---

1. புரட்டாசி.

2. காளஹஸ்தி. இது பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்று. மற்றையவை முறையே :—

பிருதிவி—காஞ்சிவரம். அப்பு—திருவானைக்கா.
தேயு—திருவண்ணுமலை. ஆகாயம்—சிதம்பரம். என்பன.

ஜாதகம் 36

1. அரியது ஜன்ம மாக அரவுமே வெள்ளி ரண்டில்
பரிதியும் புதனு மூன்றில் [1]பார்மக னஞ்சில் தங்கக்
[2]கரியவ னறி லேறக் [3]கனகனு மேழி லாகப்
பிறையது நவத்தி லேறப் பேசுவீர் பலனைத் தானே.

1. சிம்மம் லக்கினமாகவும், ராகு சுக்கிரன் இரண்டா மிடமாகிய கன்னியிலும், சூரியன் புதன் மூன்றுமிடமாகிய துலாத்திலும், செவ்வாய் ஐந்தாமிடமாகிய தனுசிலும், சனி ஆறுமிடமாகிய மகரத்திலும், குரு ஏழாமிடமாகிய கும்பத்திலும், சந்திரன் ஒன்பதாமிடமாகிய மேஷத்திலும் (கேது மீனத்திலும்) இருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள்.

கிரகநிலை

கேது	சந்திரன்		
குரு	இராசி சக்கரம்		
சனி			லக்கினம்
செவ்வாய்		சூரியன் புதன்	ராகு சுக்கிரன்

2. மங்கையுங் கேட்கும் போது வசிட்டருங் கூறு கின்றார்
இங்கிவை யாண்பால் ஜன்மம் இல்லமுங் கீழ்மேல் வீதி
அங்காள காளி மேற்கில் ஆதிமால் வடமே லாமே
சங்கையாய்ச் சந்து மாமே சிறுவூராங் கங்கை சேயாய்.

2. பார்வதி தேவி கேட்கும் போது வசிஷ்ட முனிவர் பதில் உரைக்கின்றனர். இஃது ஆண் மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் உள்ளது மேற்குத் திசையில் அங்காளம் மன் கோயில் உள்ளது. திருமாலின் ஆலயம் வடமேற்குத் திக்கிலும் அருகில் ஒரு சந்தும் உள்ள சிற்றூரில் வேளாளர் குலத்தவனுக;

---

1. செவ்வாய்.
2. சனி.
3. குரு.

3. உதிப்பனு மைந்தாஞ் ஜன்மம் உறுந்தந்தை தாயின்
[யோகஞ்
சதியிலாத் துணைவர் யோகந் தன்மனை களத்திர யோகம்
அதிபன்தன் முன்பின் ஜன்மம் வரைகிரே மிந்நூல்
[தன்னில்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

3. பிறப்பான். இவன் தன் தந்தைக்கு ஐந்தாம் புதல்வனுகத் தோன்றுவான். இவனுடைய தந்தை, தாய், தீங்குகளில்லாத உடன் பிறந்தவர், மனைவி மக்கள் முதலானவர்களின் யோகங்கள் ஜாதக னுடைய முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றை இந்தச் சேதிட நூலில் குறிக்கின்றேம். கதியற்றவரைக் காக்கும் தேவியே! கேளுங்கள்.

கீழ்வரும் இருபாடல்களால் தந்தையின் குணங்களைக் கூறுவார்

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சரசமாய்
[வார்த்தை யுண்டு
தந்தமுந் தரள மொக்குந் தானிரு நிறத்த னுகுந்
தந்தையி னில்லம் வாழான் தனமது விரயஞ் செய்வான்
பந்துவுக் கினக்கஞ் சொல்லான் தன்தொழில் சிலநாள்
[செய்வன்.

4. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கேளுங்கள். சரச மாகப் பேசுபவன். முத்துக்களைப் போல் வெண்மையான பற்களை யுடையவன். கருமை கலந்த சிவப்பு நிறமுடையவன். தன் தந்தையின் வீட்டில் வசிக்காதவன். பொருளைச் செலவு செய்துவிடுவான். தன் சுற்றத்தாரிடம் பணிவில்லாதவன். சின்னுட்கள் தன் குலத்தொழிலைச் செய்து வருவான்.

5. மனைவியி னில்லம் வாசம் வலப்புற மச்ச முண்டு
சினமுண்டு வடனே தாழ்வு சேர்ந்திடு வேண லங்கள்
வினையிலா மனத்தா னுகுங் விளைநிலம் விரயஞ் செய்வன்
கனமுள குடும்பம் பூர்வம் கனக்காது மத்தி லேதான்.

5. தன் மனைவியின் வீட்டில் வசித்து வருவான். இவனுக்கு வலது பக்கத்தில் மச்சம் ஒன்று இருக்கும். முன் கோபி. விரைவில் சாந்தமடைவான். மிக்க நன்மைகள் அடைவான். சூதுகளில்லாத மனத்தினன். விளை நிலங்களை விற்றுவிடுவான். ஆதிகாலத்தில் பெரிய குடும்பம் உண்டு. இடையில் அது சிறுத்துவிடும்.

ஜாதகருடைய தந்தையின் பெயர்

6. சல்லியப் பாதை யேற்பன் தன்மனஞ் சந்தே கத்தான்
இல்லையென் றுரைக்க மாட்டான் இதிகாச மறியா னுகுங்
கல்வியு மற்ப முண்டு காகுத்த நாமங் கொண்டோன்
புல்லிய புத்தி கொஞ்சம் போசன சுகமுள் ளானே.

6. துன்பமுறும் வழியைப் பின்பற்றுபவன். சந்தேகமுள்ள மனத்தினன். யாசித்தவருக்கு இல்லை யென்று கூறுதவன். புராணக் கதைகளே யறியாதவன். கல்வி யறிவு சிறிதளவே உள்ளவன். ஸ்ரீராம பிரானுடைய பெயரையுடையவன். அற்ப புத்தி யுள்ளவன். சுகமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். (இந்த நூலில் இந்த ஜாதகத்தில் மட்டுமே பெயர் கூறப்பட்டிருக்கிறது.)

விஷ்ணுரேகை பத்மரேகைகள்

7. கரமதில் விஷ்ணு ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு
மருமத்தை வெளிக்காட் டாதான் மனைவிபா லணுகி [வாழ்வன்
விரைவினில் நடக்க வல்லான் வேண்டினோர்க் குதவி [செய்வன்
நரைமல ரிட்டங் கொள்வன் நலிந்தமே லதிக வார்த்தை.

7. கையில் விஷ்ணுரேகையை யுடையவன். பத்மரேகையும் உடையவன். மனத்தில் நினைப்பதை வெளிக்காட்டாதவன். தன் மனைவியின் வீட்டில்வாழ்ந்து வருவான். வேகமாக நடப்பவன். தன்னை யாசித்தவர்கட்கு உபகாரம் செய்பவன். வாசனைப் புஷ்பங்களின்மீது பிரியமுள்ளவன். மெல்லிய சரீரி. அதிகமாகப் பேசுபவன்.

8. தன்துணை யெழுவர் தோன்றுந்
தங்கிடு மாண்பா லொன்று
கன்னிகை யவ்வா றுகுங்
கழறுவோம் பின்னுல் சேதி
சொன்னவிக் குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன்
அற்பமாம் வார்த்தை யுண்டு.

8. தந்தைக்கு உடன்பிறந்தவர் எழுவ ராவர். அவர்களில் மூன்று சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் நீண்ட ஆயுள் உள்ள வர்கள். அவர்களுடைய செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுகின் றோம். இவ்விதம் கூறப்பட்ட குணத்தவனுக்கு இந்த ஜாதகன் பிறப் பான் என்றோம். அவனுடைய குணத்தைக் கூறுகின்றோம். அற்ப மாகப் பேசுபவன்.

பின்வரும் நான்கு பாட்டல்களில் ஜாதகனுடைய குணங்களைக் கூறுவார்

9. மானிற முணச்சல் தேகி மறுகல்வி கற்பா னுகும்
ஈனரை யுறவு கொள்ளா னுலகபூ சிதமு மாவன்
மானமாய் ஜீவிப் பானு மாற்றூன லகுவாய் வெல்வன்
ஊனமில் லாத தேகி யுயர்வான புகழு மேற்பன்.

9. மாநிறமுள்ளவன். மெல்லிய சரீர முடையவன். வேறு கல்வியையும் (அன்னிய பாஷையையும்) கற்பான். அற்பர்களுடன் நட்புக் கொள்ளாதவன். உலகத்தவரால் கொண்டாடப்படுபவன். கண்ணியத்துடன் வாழ்ந்து வருவான். விரோதிகளைச் சுலபமாக வெற்றி கொள்ளுவான். குறையில்லாத தேகமுடையவன். உயர்ந்த கீர்த்தியையும் அடைவான்.

10. நடையது சொகுசு முண்டு நலிந்தோரை யாத ரிப்பன்
விடவாக்கன் தந்திர வார்த்தை வெற்றியாந் தொடுத்த
[வெல்லாம்
அடிமைக ளதிகஞ் சேர்ப்பன் ஆண்மையாய்க் குடும்ப
[மேற்பன்
தடபுடல் செய்கை யுண்டு சல்லியங் கொள்ளா னுகும்.

10. உல்லாஸமாக நடப்பவன். துன்புற்றவரை ஆதரித்து வருவான். கொடுமையாகப் பேசுபவன். தந்திரமாகப் பேசுபவன். ஆரம்பித்த காரியங்களை ஜயத்துடன் முடிப்பான். பணியாட்களை அதிகமாக உடையவன். தைரியத்துடன் குடும்பத்தை யேற்று நடத்துவான். ஆடம்பரக் காரியங்களைச் செய்பவன். கடன் வாங்காதவன்.

11. வண்டிவா கனமு மேற்ப னறுமுகன் பக்தி கொள்வன்
துண்டமாய் வார்த்தை யுண்டு சேருவான் வெளிதே
[சத்தில்
பண்டுநாள் பூமி கொஞ்சம் பாலக னதிகஞ் சேர்ப்பன்
தண்டமிழ் துணுக்கந் தேர்வன் ஜனவசி யங்கள்
[செய்வன்.

11. வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். ஆறுமுகக் கடவுளிடம் பக்தியுள்ளவன். கண்டித்துப் பேசுபவன். வெளி தேசத்துக்குச் செல்லுவான். பிதுரார்ஜிதமான சொத்துக்கள் சிறிதுள்ளவள். அவற்றை விருத்தி செய்வான். நல்ல தமிழ்ப் பாஷையிலுள்ள நூட்பமான விஷயங்களை அறிபவன். ஜனங்களை வசியம் செய்பவன்.

12. அரசரால் தொழிலு மேற்பன் ஆபத்தைச் சிலாக்குக் [காப்பன்
கரிமத கோஷ்டஞ் செய்வன் கனமுள வில்லஞ் செய்வன்
பெரியவ னுறவு கொள்வன் பிதாமேலாய் வாழ்வா னகும்
அரிமத முடைய னகும் ஆவுகள் பலித முண்டு.

12. அரசாங்க உத்தியோகம் செய்து வருவான். சில பேருக்கு ஏற்பட்ட துன்பத்தை விலக்குவான். விநாயகருடைய ஆலயத் திருப் பணியைச் செய்வான் (கோவிலைக் கட்டுவான்). பெரியதொரு வீட்டைக் கட்டுவான். பெரியோர்களிடம் நட்பைக்கொள்ளுவான். தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். விஷ்ணு மதத்தில் பக்தி உடையவன். பசுக்கள் விருத்தியாகும்.

ஜாதகனுடைய உடன்பிறப்பும் சகோதரனின் விவரங்களும்

13. தன்துணை முன்னு ணைன்று சாற்றுவோர் தீர்க்க மாக
கன்னிகை மூவர் தீர்க்கங் காளையின் சேதி கேளாய்
அன்னவன் சோதி நாளாம் அலவன்தன் ராசி யாகும்
பின்னமில் லாத தேகி பொய்யது வழுத்தா னகும்.

13. ஜாதகனுக்கு முன்பிறந்த சகோதரன் ஒருவன் உண்டு. அவன் நீண்ட ஆயுள் உள்ளவன். மூன்று சகோதரிகளுமுண்டு. அவர்களும் தீர்க்காயுள் உள்ளவர்கள். சகோதரனுடைய செய்தியைச் சொல்லுகின்றோம். அவன் சுவாதி நட்சத்திரம் கடக லக்னத்தில் பிறந்தவன். ஊனமில்லாத தேக முடையவன். பொய் பேசாதவன்.

14. வித்தையுஞ் சமம தாகும் விவேகியாம் பொறுமை சாலி
சத்திய மென்று லச்சந் தரணியால் ஜீவிப் பானுஞ்
சுத்தத்தார் மதிக்க வாழ்வன் சோம்பிடான் காரி யத்தில்
உத்தமக் குணத்தா னகும் உலகினில் செட்டுஞ் செய்வன்.

14. சமமான கல்வியறிவுள்ளவன். (அஃதாவது ஒருவருக்குச் சாதாரணமாகத் தெரியவேண்டிய அளவு படித்துத் தெரிந்துகொண்டவன் என்பது கருத்து) விவேகமுள்ளவன். பொறுமையுடையவன். சத்தியத்திற்குப் பயப்படுபவன். விவசாயம் செய்து ஜீவித்து வருபவன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். காரியங்களிலே செய்வதில் சோம்பலில்லாதவன். உயர்ந்த குணமுள்ளவன். உலகில் வர்த்தகம் செய்து வருவான்.

15. பாரியு மொன்றே யாகும் பாலர்க ளாண்பால் ரண்டு
நாரியு மூன்று வென்றோம் நாயகன் தீர்க்க ஜீவி
போரினில் செல்லா னகும் போஜன வறுமை காணும்
ஆறுமா முகத்தோன் பத்தி யாள்காரர் சேர்ப்பா னகும்.

15. மனைவி ஒருத்தியேயாவள். இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் பிறப்பர். அவன் நீண்ட ஆயுள் உள்ளவன். வீண் சண்டைக்குச் செல்லாதவன். உணவுக்குத் தரித்திரம் இல்லாதவன். ஆறுமுகக் கடவுள்மீது பக்தியுடையவன். வேலைக்காரர்களை அதிக மாக உடையவன்.

ஜாதகனுடைய திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

16. கன்னிமார் சேதி தன்னைக்
கழறுவோம் பின்பா கத்தில்
இன்னவன் மணத்தின் கால
மியம்புவோ மிருப தாண்டுள்
அன்னவள் வடகீழ் தன்னில்
அமர்ந்திடுங் குணத்தைச் சொல்வேன்
பொன்னிற முடையா ளாகும்
புகழ்ந்தோரை யாத ரிப்பள்.

16. ஜாதகனுடைய சகோதரிகளின் செய்திகளைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின் றோம். இருபதாம் வயதுக்குள் வடக்குத் திக்கிலிருந்து மனைவி வரு வாள் என்றோம். அவளுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். பொன்போன்ற நிறமுடையவள். தன்னைத் புகழ்ந்தவர்களுக்கு ஆதரவு அளிப்பாள்.

17. தோகைபோல் சாய லொக்குந்
துறவிபோல் வார்த்தை யுண்டு
பாகமாய்ப் பேசு வாளாம்
பர்த்தாவின் மனம்போல் வாழ்வள்
நாகரி கங்க ளுண்டு
நல்லோர்க்கு நல்லோ ளாவள்
ஊகமும் நுணுக்கந் தேர்வள்
உயர்பணி சேர்ப்பா ளாகும்.

17. மயிலைப்போன்ற அழகுள்ளவன். சன்னியாசிகளைப் போல் பற்றில்லாமல் பேசுபவள். கண்டிப்பாகப் பேசுபவள் (பொருத்த மாகப் பேசுபவள்) தன் கணவன் ,மனம்போல் வாழ்ந்து வருவாள். நாகரீகமாக இருப்பவள். நல்லவருக்கு நல்லவளாவாள். ஊகமுள்ளவள் கூர்மையான அறிவுள்ளவள். உயர்வான ஆபரணங்களைச் சேர்ப்பாள்.

18. மாதுவும் வந்த பின்பு வரனுக்கு வதிக யோகங்
காதலி தீர்க்க ஜீவி கௌசிகர் மறித்துச் சொல்வார்
கோதைய ரிருவ ரென்று கூறுவோ மிவனுக் கேதான்
ஓதுவீ ரந்தச் சங்கை யோரேழோ ரறி லேறி;

18. ஜாதகனுக்கு மனைவி வந்த பிறகு யோகம் அதிகமாகும். மனைவியும் நீண்ட ஆயுள் உள்ளவள் என்றார். கௌசிக முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டு என்று சொல்லுகின்றோம். அந்தச் சந்தேகத்தைத் தீருங்கள். ஏழாம் வீட்டுக்குரிய சனி ஆறுமிடத்தில் இருந்து;

19. சரத்தினி லிருப்ப தாலே தாரமு மிரண்டு வென்றோம்
மறித்துமே வதிஷ்டர் சொல்வார் மறையவ னேழில்
[தங்கப்
பிருகுமே ரண்டி லேறப் புதன்மூன்றி லிருப்ப தாலே
திருமனை யொன்றே தீர்க்கஞ் செப்பொணாத் தாரம் ரண்டு.

19. சரமாக இருப்பதால் அவனுக்கு இரு மனைவியர் உளர் என்றார். இதற்கு மறுப்பாக வசிஷ்ட முனிவர் கூறுகின்றார். குரு ஏழாம் வீட்டில் இருப்பதாலும் களத்திரகாரகனுகிய சுக்கிரன் குடும்ப ஸ்தானத்தில் இருப்பதாலும் அவ்வீட்டுக்குரிய புதன் மூன்றுமிடத்தி லிருப்பதாலும் ஜாதகனுக்கு மனைவி யொருத்தியே. நீண்ட ஆயுள் உள்ளவள். இரு மனைவியர் ஏற்படக் காரணம் இல்லை.

20. ஆகிலுஞ் சங்கை யொன்று வபிமான மாது நேருந்
தோகையு மெந்தக் காலஞ் சேருவாள் விவரஞ்
[சொல்வாய்
பாகமாய் மூப்பான் ரண்டில் பாவையும் வடகீழ் நேருந்
தோகையும் வடுக மாது செப்புவோம் பால னுக்கு.

20. அவ்வண்ணமிருந்தபோதிலும் ஒரு செய்தியைக் கூறுகின்றோம். ஜாதகனுக்கு அபிமானப் பெண் ஒருத்தியுண்டு. அந்தப் பெண்ணும் எந்தக் காலத்தில் வருவாள் என்று சொல்லுங்கள். திண்ணமாக ஜாதகனுடைய மூப்பத்திரண்டாம் வயதில் அவள் வடகிழக்குத் திக்கிலிருந்து வருவாள். அப்பெண் வன்னிய குலத்தவள் என்றோம்.

21. மங்கைக்குச் சுதர்க ஞண்டோ வறிவிப்பீர் முனியே
[நீர்தாம்
அங்கவள் தனக்குப் புத்திர ணுகாரே யென்று
[சொல்வோம்
இங்கிவன் தாரத் துக்கு வெய்திடு மாண்பால் ரண்டு
நங்கைமார் நால்வ ராவர் கவின்றனந் தீர்க்க மென்றோம்.

21. அபிமானப் பெண்ணுக்குப் புத்திரபாக்கியம் உண்டோ! சொல்லுங்கள். முனிவரே! தாங்கள், அவளுக்குப் புத்திரர் தோன்றுர் என்று சொல்லுவோம். ஜாதகனுடைய மனைவிக்கு இரு புத்திரர்களும் நான்கு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள் என்றோம்.

புத்திரபாவமும் முற்பிறவியும்

22. முதல்சுதர் தோஷ மெய்து மொழிகுவீ ரந்தச் சங்கை
புதல்வர்தா னத்தில் சேயும் பொருந்தின பலத்தால்
[சொன்னேம்
அதிபன்தன் முன்ஜன் மத்தை யறிவிப்போ மினிமே லாக
அதிதி வாழ் பெண்ணை நாட்டில் அணுகினன் வன்னிய
[சேயாய்.

22. முதலில் தோன்றும் புத்திரர்கட்குத் தோஷமுண்டு. அதற்குக் காரணத்தைச் சொல்லுங்கள். புத்திரஸ்தானமான ஐந்தாமிடத்தில் செவ்வாய் இருக்கும் பலத்தால் அங்ஙனம் சொன்னேம். இனி ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். துறவிகள் வாழும் பெண்ணையாறு பாயும் நாட்டில் வன்னியர் குலத்தவனுகப் பிறந்தான்.

23. சுகமுள குடும்பி யாகிச் சுந்தரன் வாழு நாளில்
தகைமையாய் வேறு மாது சந்ததங் குறையுண் டாகி
அகமதி லணுகி யேதான் அன்னமுந் தருவா யென்னப்
பகையின்றி வன்ன மீந்து பாவையைக் காக்கும் போது;

23, சுகமுள்ள குடும்பத்தை யடைந்து ஜாதகன் வாழ்ந்து வருங் காலத்தில் வேற்றுப்பெண் ஒருத்தி செல்வம் குறைந்து ஏழையாகி இவனுடைய வீட்டிற்குச் சென்று பசிக்கு அன்னம் அளிக்கும்படி வேண்ட அவனும் தீய எண்ணங்களில்லாமல் சாப்பாடு போட்டு அப் பெண்ணைக் காத்து வரும்போது;

24. இல்லத்தில் துணைவி போலே யிருந்துமே ஏவல் செய்து
வல்லியு மோர்நாள் தன்னில் மறைவாகச் சிலவே
[பொன்னைப்
புல்லியே மானைப் போலே பறந்தன ளென்று
[சொன்னேம்
வல்லவன் மறுநாள் பார்த்து மங்கையைக் காணு னகி;

24. வீட்டில் சகோதரிபோல் இருந்துவந்தாள். வேலைகளையும் செய்துவந்தாள். அவள் ஒருநாள் சில பொருளை (பொன் ஆபரணங்களை அல்லது பணத்தை (எடுத்து மறைத்து வைத்துக்கொண்டு மானைப் போல் வேகமாக ஓடி மறைந்து விட்டாள். மறுநாள் ஜாதகன் இதனை யறிந்து அந்தப் பெண்ணைக் காணுமல்;

வேறு

25. முன்கடனே பின்கடனே அறியேன் யானும்
மூலப்பொருள் நீயறிவாய் என்று சொல்லித்
தன்கரத்தால் தெருத்தூளைத் தூற்றிச் சென்றான்
ஜாதகனு மந்நியத்தில் கடவு ளர்க்கு
உன்னதமாய்த் தொண்டுசெய்து காலை ஓடு
ஒதுங்கியே பிரமன்லக்க முதிப்பா னாகும்
முன்கடனைத் தீர்ப்பதற்கு வந்தமாது
மேவுவாள் மரணமட்டும் விலகா தாகும்.

25. முற்பிறவியில் ஏற்பட்ட கடனே இப்பிறவியில் பட்டகடனே யான் அறியேன், எல்லாவற்றிற்கும் மூலப்பொருளாகிய பரப்பிரம்ம மாகிய கடவுளே! நீயொருவனே யறிவாய். என்று தன் கையால் தெரு மண்ணை எடுத்துத் தூற்றிப் போனான். ஜாதகன் கடைசிக் காலத்தில் இறைவனுக்குத் தொண்டு புரிந்து மரணமடைந்து மீண்டும் பிறந்தான். முற்பிறவிக் கடனைத் தீர்க்க அப்பெண் அபிமானப் பெண்ணாக வருவாள். ஜாதகன் இறக்கும்வரை இவனைவிட்டு நீங்காதவள்.

வேறு

ஜாதகனின் யோக விஷயம்

26. ஜாதகன் யோகச் சேதி சாற்றுவோ மினிமே லாகப்
போதனஞ் சேர்ப்பா னாகும் புதையல்கள் வைப்பா னாகுங்
காதியு மதிக மேற்பன் கனத்தவர் நேசங் கொள்வன்
வேதனை யொருவர்க் கெண்ணான் வேந்தரால் சீருள்
ளானும்.

26. ஜாதகனுடைய யோகச் செய்தியைக் கூறுகின்றோம். பெருஞ் செல்வத்தைத் சேர்ப்பான். பூமியில் புதையலை வைப்பான். அதிகமாகப் புகழையும் அடைவான். பெரியோர்களுடைய சிநேகத்தைப் பெறுவான். நீங்களுள் ஒருவருக்கும் செய்ய மனத்தாலும் நினையாதவன். அரசாங்க உத்தியோகம் ஏற்று உயர்வடைவான்.

27. இருபது மூன்றாண் டின்மேல் இவனுக்கு வரசர் மூலம்
பெருகிடுஞ் தொழிலு மென்றோம் பிறைபோல யோகம்
வாய்க்குங்
திருகிலா வன்ப தாண்டுஞ் செய்குவா னரசு தானும்
வறுமைகள் காண லாகும் மருவிடும் நிதியுஞ் செல்வம்.

27. இருபத்துமூன்றும் வயதுக்குமேல் ஜாதகனுக்கு அரசாங்கத்தார் மூலம் தொழில் வாய்க்கும். அது வளர்பிறைச் சந்திரன்போல் விருத்தியாகும். ஐம்பதாம் வயதுவரையில் நீங்களில்லாமல் உத்தியோகத்தைச் செய்வான். தரித்திரத்தை அடையாதவன். பெருஞ் செல்வம் இவனுக்கு ஏற்படும்.

மரகதயோகம்—கிரகநிலை

28. எந்தக்கா லத்தில் நேரு மியம்புவீர் முனியே நீர்தாம்
சந்தத மெட்டாண் டின்மேல் சார்ந்திடும் நிதியு மென்றேரும்
இந்தவன் தனக்கு யோகம் எய்தின கார ணஞ்சொல்
மந்திரி புதனைப் பார்க்க மரகத யோக மொன்று.

28. எந்தக் காலத்தில் இவனுக்கு பெருத்த செல்வம் கிட்டும். முனிவரே ! தாங்கள் சொல்லுங்கள். ஜாதகனுடைய எட்டாம் வயதுக்கு மேல் ஒரு புதையல் கிடைக்கும். இவ்னுக்கு யோகம் ஏற்படக் காரணம் சொல்லுங்கள். குரு புதனைப் பார்ப்பதால் மரகதயோகம் என்ற ஒரு யோகம் ஏற்படும் என்று சொன்னேம்.

வேசியோகம் பூயோகம் மல்லியோகம்—கிரகநிலை

29. பரிதிக்குப் பன்னி ரண்டில் பார்க்கவ னிருப்ப தாலே
அரிவையர் வேசி யோகம் அம்புலி தனக்கு வேழில்
அருணன்தூ துவனுந் தங்க வணுகும்பூ மல்லியோ கங்கள்
திருதிய யோகத் தாலே செப்புவோ மிராஜ யோகம்.

29. சூரியன் இருக்குமிடத்துக்குப் பனிரண்டாம் இடத்தில் சுக்கிரன் இருப்பதால் வேசியோகமும் உண்டு. சந்திரனுக்கு ஏழில் புதன் இருப்பதால் பூயோகம் மல்லியோகம் ஆகிய மூன்று வித யோகங்கள் ஏற்பட்டு ராஜயோகமுள்ளவனுக இருப்பான் என்றேரும்.

ஜாதகனுடைய பொது யோகம்

30. ஜனித்தநாள் முதலே யாகச் சஷ்டியா மாண்டு மட்டுங்
கனமிலாக் குடும்ப மெய்துங் கடனே யதிகம் நேருந்
தனமது செலவு முண்டு தாணியுஞ் சேத மாகு
மினமது சஞ்ச லங்கள் வரவுக்குச் செலவ நேகம்.

30. ஜாதகன் பிறந்தது முதல் ஆறு வயது வரையில் சாதாரண மாகக் குடும்பம் நடைபெறும். அக்காலத்தில் கடன் அதிகமாக வாங்க நேரிடும். பணச் செலவு அதிகம் உண்டு. பூமியும் சேதமாகும். சஞ்சலங் கள் உண்டாகும். வரவுக்குமேல் செலவு ஏற்படும்.

31. அதற்குமேல் வறுமை காணன் அம்புலி போலே யோகம்
பதியினில் திருவு சேரும் பலவித லாப மெய்தும்
புதையலும் நேரு மென்றேரும் பூமியும் பெருக்க மெய்தும்
பதிசெய்தோ நுறவே யாகுஞ் சல்லியம் நேரு மென்றேரும்.

31. அதற்குப் பிறகு தரித்திரத்தை யடையாதவன். வளர் பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். வீட்டில் லக்ஷ்மி வந்து

சேருவாள். பலவிதமான லாபங்கள் ஏற்படும். புதையல்கிடைக்கும். விலை நிலங்கள் விருத்தியாகும். துன்பம் செய்யும் விரோதிகளும் நண்பர்களாக மாறிவிடுவார்கள். (கடன் உபத்திரவம்) சிறு துன்பங்கள் ஏற்படும்.

ஜாதகனுடைய தாயின் யோகம்

32. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளா ளிருநி
[றத்தாள்
முன்கோபி மூலச் சூடு மொழியது சுகமே யாகும்
பொன்பணி யதிகங் காணுள் பிதுரில்லம் விட்டு நீங்காள்
தன்துணை யாண்பால் காணுள் சத்திமா ரைவ ராகும்.

32. ஜாதகனுடைய தாயின் குணத்தைக் கூறுகின்றோம். அழகுள்ளவள். இரு நிறமுள்ளவள். முன் கோபி. மூலச் சூட்டு நோயுடையவள். இன்பமாகப் பேசுபவள். பொன் ஆபரணங்கள் அதிகம் இல்லாதவள். தன் தந்தையின் வீட்டைவிட்டு விலகாதவள். உடன் பிறந்தவர்களில் சகோதரர்கள் இல்லாதவள். சகோதரிகள் ஐவர் என்று சொல்லுகின்றோம்.

தாயின் முற்பிறவி

33. முன்னவ ளிருந்த ஜன்ம மொழிகின்றோம் வான்மி யூரில்
மன்னர்தங் குலமு தித்து மைந்தர்க ளதிக முண்டாய்
அன்னவள் வாழு நாளில் அவள்வரன் தம்பி பேரில்
உன்னதோ டத்தைச் சொல்லி யொதுக்கினா ளென்று
[சொல்வோம்.

33. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருவான்மியூரில் க்ஷத்திரிய குலத்தில் பிறந்து புத்திர பாக்கியம் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் அவளுடைய கணவனின் சகோதரனின்மீது அடாத வார்த்தைகளைக் கூறி அவனை வீட்டைவிட்டு விரட்டிவிட்டாள் என்றோம்.

சகோதரனின் சாபம்

34. மைத்துனன் வருத்த முற்று
வறைந்திட்ட சாபங் கேண்மோ
குத்தமா யென்மேல் சொன்ன
கொடும்பாவி தனக்கு மேதான்
பத்தாது துணைவர் தாமும்
பிறக்கும்பின் ஜன்மந் தன்னில்
சத்திக்குத் துணைக ளின்றித்
தரித்திர மடைந்து வாழ்வாள்.

34. தாயின் மைத்துனன் வருத்தமடைந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். என் மீது அபாண்டமாகப் பழி கூறிய பாவிக்கு ஏற்படும் மறுபிறவியில் உடன் பிறந்தவர்கள் தோன்றார்கள். இப்பிறவியிலும் உடன்பிறந்தவர்களில்லாமல் தரித்திரமடைந்து வாழ்ந்து வருவாள் என்றான்.

35. இன்னமும் பலவாறு சொன்னன் எய்திற்று வந்தத்
[தோஷந்
தென்திசைச் காலனு சென்றுமே பிரமன் லக்கம்
இன்னவ ஞதித்தா னென்றேரும் எய்திடும் முன்னூழ்ச்
[சாபந்
தன்துணை யாண்பால் தோஷஞ் சமயோக மாகி வாழ்வள்.

35. இன்னும் பலவிதமாகச் சொன்னன். அந்தத் தோஷம் ஜாதகனுடைய தாயை வந்தடைந்தது. அப்பிறவியில் மரண மடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றேரும். முற்பிறவித் தோஷத்தால் உடன் பிறந்த சகோதரர்களில் லாமல் சாதாரணமான யோகத்துடன் வாழ்ந்து வருவாள்.

தாயின் மறுபிறவியும் தந்தையின் முற்பிறவியும்

36. ஜன்னமாங் காஞ்சி தன்னில் பிறப்பளாஞ் சன்னு சிவம்சம்
பொன்பணி யுடைய ளாகிப் பூவையும் வாழ்வா ளாகுந்
தந்தையின் பூர்வஞ் சொல்வேன் சீகாழி தன்னி லேதான்
வன்னிய குலமு தித்து மறையோர்க்குத் தொண்டு பூண்டு;

36. மறுபிறவியில் காஞ்சியில் சன்னுசி குலத்தில் பிறந்து பொன் ஆபரணங்கள் இவைகளை உடையவளாக வாழ்ந்து வருவாள். ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுவோம். சீர்காழி என்னும் ஊரில் வன்னியர் குலத்தில் பிறந்து அந்தணர்கட்குப் பல தொண்டு களைச் செய்து ;

தந்தையின் மறுபிறவி

37. வினையது வில்லா னகி மேவினன் காலனு
கனமுள பிரமன் லக்கங் கங்கையின் குலமு தித்தான்
அனையவே யிவன்பின் ஜன்மம் அருளுவோங் காஞ்சி
[கீழ்ப்பால்
சினமிலாப் செங்குந்த வம்சஞ் ஜனிப்பானும் பெருமை
[யாக.

37. தீவினைகள் இல்லாமல் வாழ்ந்து மரண மடைந்தான். மீண்டும் பிரம தேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் வேளாளர் குலத்தவனாகப் பிறந்தான். அடுத்த பிறவியில் காஞ்சீபுரத்துக்குக் கிழக்கில் உள்ள தீங்குகளில்லாத செங்குந்த வம்சத்தில் பிறந்து பெருமை அடைவான்.

தாய் தந்தையர் ஜாதகன் மரண காலங்கள்

38. ஆறுறு வாண்டு தன்னில் அன்னைக்குக் கண்ட மெய்தும்
தீமாய் முப்ப தாண்டில் செப்புவோர் தந்தை கண்டம்
மாரனுக் கறுபா லறில் மேடமா தத்தி லேதான்
சேருவான் கால நாடு செல்வதி கேட்டி டாயே.

38. முப்பத்தாறுவது வயதில் தாய்க்கு மரணம் நேரும். தந்தை ஜாதகனின் முப்பதாம் வயதில் மரணமடைவார் என்று கூறுவோம். ஜாதகன் தனது அறுபத்தாறும் வயதில் சித்திரைமாதம் எமபுரமடைவான். பார்வதியே! கேளுங்கள்.

ஜாதகன் மறுபிறவியும் உயர்குலப் பிறவிக்காரணமும்

39. மறுஜன்மம் வள்ளூர் தன்னில் மறைக்குல முதிப்பா ஞகும்
திருமக னிச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன
பெருமையாய்த் தலங்கள் சென்றும் பெரியோர்க்குத் [தொண்டு பூண்டும்
அறமதி லிச்சை வைத்தும் ஆகையா லுதிப்பா ஞகும்.

39. ஜாதகன் மறுபிறவியில் திருவள்ளூரில் அந்தணர் மரபில் பிறப்பான். இப்பிறப்பில் ஜாதகன் என்ன நற்செயல்கள் செய்தான்? என்று ஒரு முனிவர் கேட்க மற்றொருவர் கூறுகின்றார். மேன்மையுடன் பல புண்ணியஸ்தலங்களுக்குச் சென்றும், பெரியோர்க்குப் பணிவிடைகள் புரிந்தும், தருமம் செய்வதில் விருப்பமுடையனுயும் இருந்து வந்ததால் அந்தணர் குலத்தில் பிறப்பான் என்றேம்.

40. அன்னவன் ஜனன காலம் அசுவினி முதல்பா தத்தில்
துன்கேது தசையா ரூண்டுந் திங்களுந் தசமே யாகும்
பொன்பூமி செலவு முண்டு புதல்வனும் பிணியால் வாடுந்
தன்மனச் சஞ்ச லங்கள் தரித்திரங் குடியாய் நிற்கும்.

40. ஜாதகனுடைய ஜனன காலத்தில் அச்வினி நட்சத்திரம் முதல்பாதமாகும். அப்போது கேதுமகாதசையில் இருப்பு ஆறு வருடங்களும் பத்து மாதங்களுமாம். அக்காலத்தில் பொருள் பூமி இவைகளுக்குச் செலவு ஏற்படும். ஜாதகன் நோய் ஏற்பட்டு வருந்துவான். மனத்தில் சஞ்சலங்கள் உண்டாகும். தரித்திரம் நிலையாக இருக்கும்.

41. இனமதில் சூத முண்டு இடருக ளநேக மாகுஞ்
சினமனந் தந்தை நோயாஞ் செலவுக ளதிக மெய்தும்
நினைவது கெடுதி யாரும் நிலைக்காவே கன்று காலி
கனமத வாஜ பெற்ற காதலி கேட்டி டாயே.

41. தன் பந்துக்களுக்கு அசுபம் நிகழும். துன்பங்கள் அதிகமாகும். வியாதி தந்தையையும் பீடிக்கும். செலவுகள் பெருகும். எண்ணிய காரியங்கள் நடைபெறு. கன்று முதலிய கால் நடைகள் நிலையா. பெரிய மதயானையைப் போன்ற முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 37

1. கலையது கலையி லாகக் கனகனும் நந்தி புக்கப்
புலவன்சேய் பானு காரி புக்கிடங் கன்னி யாக
மலைப்பாம்பு மீன மாக மழைக்கோளுங் கோல தாகத்
தலமது சீய மாகச் சாற்றுவீர் பலனைத் தானே.

1. சந்திரன் மகரத்திலும், குரு விருஷபத்திலும், கேது, புதன் செவ்வாய் சூரியன் சனி கன்னியிலும், ராகு மீனத்திலும், சுக்கிரன் துலாத்திலும் இருந்து இலக்கினம் சிம்மமாஞல் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் ;

கிரகநிலை

ராகு		குரு	
	இராசி சக்கரம்		
சந்திரன்			லக்கினம்
		சுக்கிரன்	புதன் செவ்வாய் சூரியன் சனி கேது

ஜாதகனின் வீட்டுநிலை

2. சங்கரி கேட்கும் போது ஜடைமுனி புகலு கின்றார்
இங்கிவ ணுண்பால் ஜன்மம் இல்லமுங் கீழ்ப்பால்
[நோக்கந்
தங்கிடும் வடதென் வீதி கோபாலர் வாச மாகுங்
கங்கையுங் கீழ்ப்பா லாகுங் கனத்ததோர் செட்டு
[மோங்கும்

2. என்று பார்வதிதேவி கேட்கும்போது சடைமுடையையுடைய முனிவர் கூறுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு நோக்கியுள்ளது. அது தெற்கு வடக்கான வீதியிலுள்ளது. அங்கு கோபாலர் (கண்ணன்) கோவில் ஒன்று உளது. கிழக்குப் பக்கத்தில் ஒரு புண்ணிய நதி ஓடும். அஃது ஒரு பெரிய வியாபார ஸ்தலமாகும்.

3. இந்திர நகர மொப்பாம் எழில்பல தேவர் வாசஞ்
சந்ததங் கங்கை சேயாய் ஜனிப்பனு மிந்தப் பாலன்
தந்தைதாய்த் துணைவர் யோகந் தன்மனை புத்திர யோகம்
வந்தவன் முன்பின் ஜன்ம வரைகிரே மிந்நூல் தன்னில்.

3. அந்நகர் இந்திரனுடைய நகரமாகிய தேவலோகத்துக்கு ஒப்பாம். மற்றும் பல தெய்வங்கள் வசித்து வரும் அவ்வூரில் வேளாளர் குலத்தவனுக இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடைய தாய் தந்தையர் உடன்பிறந்தவர், மனைவி, மக்கள், முற்பிறவி, மறுபிறவி, ஆகியவற்றை இந்தச் சோதிட நூலில் குறிக்கின்றேம்.

பின்வரும் மூன்று பாடல்களால் ஜாதகன் தந்தையின் குணங்களைக் கூறுவார்

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சர்ப்பம்போல்
[கோப முண்டு
பிந்தியோ சனையு மாவன் பிறருப காரி யாவன்
வந்தவர்க் கன்ன மீவ ஞதியில் வறுமை யுண்டு
கந்தன்மேல் பக்தி பூண்பன் கல்வியு மில்லா னுகும்.

4. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கூறுகின்றேம். சர்ப்பம்போல் கோபம் கொள்ளுபவன். பின்யோசனை யுள்ளவன். அன்னியர்கட்கு உதவி யளிப்பவன். தன்னை யண்டி வந்தவர்கட்கு அமுது படைப்பவன். ஆதிகாலத்தில் தரித்திரமுள்ளவன். முருகக் கடவுள் மீது பக்தியுள்ளவன். கல்வியறிவு இல்லாதவன்.

5. ரோமங்க ளதிக மில்லான் நுவலுப தேசங் கொள்வன்
காமனை விருப்பங் கொள்வன் கனத்தவர் நேசஞ் செய்வன்
மாமன்னர் மெச்ச வாழ்வன் வாயுநோ யுடைய னுகும்
பூமிக ளதிகஞ் சேர்ப்பன் புகழ்ந்தோரை யாத ரிப்பன்.

5. சரீரத்தில் அதிக ரோமங்களில்லாதவன். பெரியவர்களிடம் உபதேசத்தைக் கேட்பவன். மன்மதனைப்போன்ற அழகுள்ளவன் (மிக்க காமமுடையவன்.) பெரியோர்களிடம் நட்பைக் கொள்பவன். உலக மன்னர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். வாயு நோயுள்ளவன். அதிகமான விளைநிலங்களைப் பெருக்குவான். துதிசெய்தவரைக் காப்பான்.

6. பலதொழில் புரிவா னுகும் பந்துவை யாத ரிப்பன்
கலகத்தைக் கூரு னுகுங் கஞ்சமாம் ரேகை யுண்டு
நிலையதைக் காப்பா னுகும் நினைத்ததை முடிக்க வல்லான்
தலவாசஞ் செய்வா னுகுந் தனமது பெருக்க முண்டு.

6. பலவிதமான தொழில்களைச் செய்து வருவான். தன் சுற்றத் தாரைக் காத்து வருவான். வீண் கலகங்களை விலாவிக்காதவன். பத்மரேகை உள்ளவன். தன் அந்தஸ்தைக் காத்துக்கொள்ளுபவன். எண்ணிய காரியங்களை முடிக்கும் ஆற்றல் உடையவன். பல புண் ணியத் தலங்களுக்குச் செல்லுபவன். பொருட்செல்வப் பெருக்க முள்ளவன்.

7. தன்துணை யாண்பால் காணுன்
சத்திமா ரொன்றே தீர்க்கங்
கன்னிதன் தேவி யாலே
காசினி தன்னி லுய்வான்
மன்னிய வாண்பால் தோஷ
மணுகுங்கா ரணங்க ளெவ்வாறு
ஒன்பதுக் குடையோன் தானும்
இரண்டினி லிருப்ப தாலே;

7. ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதரரில்லை. சகோதரி யொருத்தியே மீண்ட ஆயுளுள்ளவள். அவளால் (தன்னுடைய சகோதரியால்) உலகில் ஜீவித்து வருவான். ஜாதகனுடைய தந்தைக் குச் சகோதர தோஷம் ஏற்படக் காரணங்கள் என்ன? ஒன்பதாமிடத் துக்குரியவன் (பிதுரு பாக்கியஸ்தானுதிபதி) இரண்டாமிடத்திலிருப்ப தால்;

தந்தையின் முற்பிறவி

8. முன்ஜன்மங் கொங்கு நாட்டி லுதித்தனன் சத்ரிய [சேயாய்த்
தன்னக ரரசு செய்வ னவன்செய்த வினையைக் [கேண்மோ
கன்னிமா ரநேக மாகக் கலந்துமே போகந் துய்த்தும்
முன்னேர்கள் மாது போகம் மேவியு மதுவு மின்றி;

8. ஜாதகனின் தந்தை முற்பிறவியில் கொங்குநாட்டில் கூத் திரிய குலத்தில் பிறந்து தன் ஊரை ஆண்டு வந்த காலத்தில் ஏற் பட்ட தினைனயைக் கேளுங்கள். பல பெண்களுடன் சிற்றின்பம் அனுபவித்த பிறகும் (தன்னைவிட அதிக வயதானவர்களுடன்) உயர்ந்த குலத்தில் பிறந்த பெண்களுடன் இன்பம் அனுபவித்து வந்து;

9. அரனுக்கு வர்ஹ மான வம்மலர் கொய்தா னென்றேரும்
மறுவிற்று வந்தத் தோஷ மாரனு மந்தி யத்தில்
பெரியோருக் கன்ன மீந்து புக்கனன் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று [சொல்வோம்,

9. சிவபெருமானுக்கு அருச்சனைக்காக விருந்த புஷ்பங்களைப் பறித்தான். அஃது ஒரு தோஷமாக ஆயிற்று. அவனும் தன் கடைசிக் காலத்தில் பெரியோர்கட்கு அன்னமிட்டு வந்து பிறகு மரணமடைந் தான். மீண்டும் பிரம தேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந் தான் என்றேரும்.

10. ஆகையா லிச்சென் மத்தில் அணுகிடுங் காலில் வாயு
போகிடக் கிரியை யொன்று புகலுவீர் முனியே நீர்தாம்
பாகங்கள் சொல்லோம் யாங்கள் பரன்மலர் பறித்த
[தற்குப்
போகவா ரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

10. ஆகையால் இப்பிறவியில் ஜாதகனின் தந்தைக்கு காலில் வாயு நோயால் உபத்ரவம் ஏற்படும். அது நீங்கச் சாந்தி யொன்று கூறுங்கள். முனிவரே! தாங்கள், அசுத்தமாக இருக்கும்போது சுவா மிக்குப் பூஜைக்காகப் புஷ்பங்களைக் கொய்த பாவத்துக்குச் சாந்திகளைக் கூற மாட்டோம். போக சமுத்திரத்தைப்பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

இவ்வரும் நான்கு பாடல்களால் ஜாதகனின் குணங்கள் கூறப்படும்

11. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வோம் ஆனையி னிறத்த
[ைகும்
உன்னதக் கல்வி ரண்டு உணருவான் சங்கை யின்றி
உன்னத வரனைப்பெற்ற வுத்தமி கேட்டி டாயே.

11. இவ்விதம் சொல்லப்பட்ட குணங்கள் உடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணத்தைக் கூறுகின்றோம். யானையைப் போன்ற கரியநிறமுள்ளவன். இருவிதமான கல்வியைச் சந்தேகமில்லாமல் கற்றவன். உயர்ந்த கணவனை யடைந்த உத்தமியே! கேளுங்கள்.

12. அரசர்பூ ஜிதமு மாவன் ஆள்கார ரதிகஞ் சேர்ப்பன்
உறன்முறை மதிக்க வாழ்வ னுவமையாய்ப் பேசு வானுற்
றரையது விருத்தி செய்வன் தான்கண்ணியன் கனத்த
[புத்தி
பொருளது விருத்தி செய்வன் மெய்யாயுறவு கலவா ருகும்.

12. அரசரால் நன்கு மதிக்கப்பட்டவன். ஏவலாட்களை அதிகம் பெற்றவன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். உபமானங்களுடன் பேசுபவன். விசேஷ நிலங்களைப் பெருக்குவான், தன்மதிப்புடன் இருப்பான். பொருளை அதிகம் சேர்ப்பான்.....

13. மன்னரால் தொழிலு மேற்பன் மாற்ருனுங்
[குலவி யேற்பன்
உன்னத வநேக வில்லம் உத்தமன் செய்வா னுகும்
முன்னேரால் தேடுஞ் செம்பொன் மேவிடும் பூமி யாலே
அன்னியர்க் குதவி செய்வன் அவனியில் புகழு மேற்பன்.

13. அரசாங்க உத்தியோகத்தை ஏற்று வாழ்ந்து வருவான். விரோதிகள் உள்ளவன். இந்த ஜாதகன் உயர்ந்த பல வீடுகளை கட்டுவான். முன்னேர்கள் தேடிவைத்த ஆஸ்தி பூமியிலிருந்து கிடைக்கும். பிறருக்கு உபகாரம் செய்பவன். உலகில் கீர்த்தியை அடைவான்.

14. அறுமுகன் பக்தி கொள்வன் அறிவோர் ஞறவு மேற்பன்
வறுமையெப் போதுங் காணன் மஞ்சமு மெத்தை யுண்டு
பெருகதி தீர்த்தந் தோய்வன் போஜனம் பெரியோர்க்
[கீவன்
நரைமலர்க் கந்த மிஷ்டன் நாயகி கேட்டி டாயே.

14. ஆறுமுகக் கடவுள் மீது பக்தியுடையவன். அறிவாளிகளின் தொடர்புள்ளவன். ஒரு காலத்திலும் தரித்திரமடையாதவன். கட்டில் மெத்தைகள் உள்ளவன். பல புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்று நீராடுவான். பெரியோர்கட்கு அன்புடன் அமுது படைப்பான். நல்லவாசனையுள்ள புஷ்பங்கள் சந்தனம் இவைகளில் விருப்பமுள்ளவன். தாயே! கேளுங்கள்.

சகோதர பாவம்

15. தன்துணை முன்னே ஞென்று சத்தியு மவ்வ ருகுஞ்
சொன்னவாண் சேதி சொல்வேன் [1]சுகம்போல
[வார்த்தை யுண்டு
கன்னியா ராசி யாகுங் கடைநாளில் தோன்றும் பின்னும்
முன்கோப முடைய ஞகு முயர்வான குடும்பி யாவன்.

15. ஜாதகனுக்கு முன்பிறந்த சகோதரன் ஒருவனும் சகோதரி யொருத்தியும் உள்ளனர். நாங்கள் கூறிய சகோதரனின் செய்திகளைக் கூறுகின்றேம். கிளிபோல் கொஞ்சிப் பேசுபவன். கன்னியா லக்கினத்தில் ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவன். முன் கோப முடையவன். உயர்ந்த குடும்பத்தைப் பெற்றவன்.

16. தந்தியி னிறத்த ஞகுந் தையலார் மோக ஞவன்
சிந்தையும் வெகுளி யாமே செய்ந்நன்றி மறவா ஞகுங்
கந்தன்மே லன்பு பூண்பன் கடன்கொளான் வணிபஞ்
[செய்வன்
எந்திடம் நல்லோ ஞவன் ஏவலா ளுடைய ஞகும்.

---

1. கிளி.

16. யானை போன்று கரிய நிறமுடையவன். பெண்கள் மீது மையல் கொள்ளுபவன். வெகுளியான மனத்தன். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். முருகக்கடவுள் மீது பக்தியுள்ளவன். கடன் வாங்காதவன். வர்த்தகம் புரிந்து வருவான். எல்லாவிடங்களிலும் நல்லவன் என்ற பெயருடையவன். பணியாட்கள் உள்ளவன்.

17. மனைவியு மொன்றே யாகு மாதுரு வர்க்கம் நேரும்
கனமுள சுதரான் மூன்று கன்னிமா மிருவர் தீர்க்கம்
மனையிலா வாழ்வா னுகும் பிதாமேலா யுய்வா னுமே
சினமுண்டு வுடனே தாழ்வு ஐகராஜர் பேட்டி கொள்வன்.

17. மனைவி யொருத்தியே உள்ளவன். அவள் தன் தாயின் வர்க்கத்திலிருந்து வருவாள். தீர்க்காயுள் உள்ளவர்களான மூன்று புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றுவார். (தங்கச் சொந்த வீடில்லாமலேயே) துன்பமின்றி வாழ்ந்து வருவான். தன் தந்தைக்கு மேலானவனுக வாழ்வான். முன்கோபங்கொள்ளுபவன். சிக்கிரத்திலேயே அது தாழ்வுறும். அரசாங்கத்தாருடன் நட்பைக்கொண்டவன்.

18. நித்திரை சுகமு மூன்டு நீரோடப் பிரிய னுகும்
உத்தமர் நேசங் கொள்வன் உண்மையை வெளிக்காட்
[டாதான்
சித்தினி சாதி யாவன் தீரமில் லாத நெஞ்சங்
குத்தத்தை மனத்தில் வையான் குறிப்பினில் கொடுமை
[தோன்றும்.

18. சுகமாக நித்திரை செய்வான். அடிக்கடி நீரோடுவதில் பிரியமுள்ளவன். நல்லவருடன் சிநேகம் கொள்ளுவான். மனத்தில் உள்ள உண்மையை வெளியில் தெரிவிக்காதவன். சித்தினி ஜாதிப் புருஷனுவான். தைரியமில்லாத மனத்தினன். குற்றம் செய்வதில் விருப்பமில்லாதவன். பிறர்செய்யும் குற்றத்தை பாராட்டாதவன். முகத்தில் கடூரம் தோன்றும்.

தாயின் விவரங்கள்

19. மாதுரு குணத்தைச் சொல்வோ மால்நிற முணச்சல் தேகி
ஒதுமுன் கோபங் கொஞ்சம் உயர்வான பக்தி யுண்டு
பாதக மனமில் லாதாள் பணிந்தோரை யாத ரிப்பள்
காதலி வந்த பின்பு கணவனுக் கதிக யோகம்.

19. தாயின் குணத்தைச் சொல்லுகின்றோம். திருமாலைப் போன்று கரிய நிறமுடையவன். மெல்லிய சரீரி. சொல்லுவதற்கு முன் கோபமடைவாள். உயர்ந்த தெய்வ பக்தியுள்ளவள். தீயமனமில்லாதவள். தன்னை யண்டி வணங்கியவரைக் காப்பாற்றுவாள். இவளை மணந்தபிறகு இவளுடைய கணவனுக்கு யோகம் பெருகும்.

20. சொல்லது சுருக்க மாகுந் தோழன்தன் மனத்துக்
[கேத்தோள்
தல்லிபோல் காப்பா ளாகுந் சாதமு மன்பா யீவள்
வல்லிக்குத் துணையாண் மூன்று மங்கைமா ரிருவ ராகும்
புல்குவோந் தீர்க்க மாகப் பிரிதலாய் வாழ்வா ளாகும்.

20. அதிகமாகப் பேசாதவள். தன் கணவன் மனமறிந்து அவன் விருப்பப்படி நடப்பவள். தாயாரைப் போல் ஆதரவு அளிக்கும் இயல்பினள். அன்புடன் அன்னமளிக்கும் சுபாவத்தினள். இவளுக்குச் சகோதரர் மூவரும் சகோதரிகள் இருவரும் உண்டு. அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும் தாயினிடமிருந்து பிரிந்து வாழ்வார்கள் என்றும் கூறுவோம்.

தாயின் முற்பிறவி

21. அன்னையின் பூர்வஞ் சொல்வேன் அழகர்வாழ் பாண்டி
[நாட்டில்
மூன்குலந் தனிலு தித்து முயர்வான குடும்பி யாகித்
துன்மையாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கங்
கன்னிகை யுதித்தா ளென்றேங் கழறுவா ரத்திரி தாமும்.

21. தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். அழகர் எழுந்தருளியிருக்கும் பாண்டிய நாட்டில் முதல் குலமாகிய அந்தண குலத்தில் பிறந்து உயர்ந்த குடும்பத்தை யடைந்து பிறகு மரண மடைந்து மீண்டும் பிரம தேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் ஜாதகனின் தாயாகப் பிறந்தாள். அத்திரி முனிவர் சொல்லுகின்றார்.

22. மாதுமூன் ஐன்மந் தன்னில் மறைக்குல முதித்தா
[ளென்றீர்
கோதையு மிச்சென் மத்தில் குறைவான குலமெவ் வாறு
ஓதுவீர் முனியே நீர்தாம் உத்தமி பூர்வந் தன்னில்
தீதாக விரத முட்டுச் செய்ததா லுதித்தா ளென்றேரும்.

22. தாய் முற்பிறவியில் அந்தணர் குலத்தில் பிறந்தாள் என்று சொன்னீர்களே ! இப்பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறக்கும் காரணங்க ளென்ன? தாங்கள் அதனைக் கூறுங்கள், முனிவரே! ஜாதகனின் தாய் முற்பிறவியில் செய்யவேண்டிய கடமைகளான விரதங்களைச் செய்யாமல் இருந்ததால் அவ்வண்ணம் பிறந்தாள் என்றோம்.

தாயின் மறுபிறவி

23. பின்ஜன்மந் தில்லை தன்னில் பிறப்பளாஞ் சைவச்
[சேயாய்ப்
பொன்பொரு ளுடைய ளாகிப் புகழான குடும்பி யாவள்
கன்மகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
துன்மையா யையைந் தாண்டில் செப்புவோந் தந்தை
[கண்டம்.

23. மறுபிறவியில் தில்லைமாநகரில் (சிதம்பரத்தில்) சைவ குலத்தவளாகப் பிறந்து பொன் ஆபரணங்கள் முதலியவை பெற்றுக் கீர்த்தி பெற்ற குடும்பத்தை யடைவாள். ஜாதகனுடைய கரும காலத்தைச் சொல்லுங்கள் முனிவரே! தந்தை இருபத்தைந்தாம் வயதில் கெடுதி விளைவிக்கும் மரணமடைவான்.

தந்தையின் மறுபிறவி

24. மறுஜன்ம மாயூ ரத்தில் வருகுவான் சத்திய சேயாய்ப்
பெருமையாய்ச் செட்டுச் செய்து புண்ணிய மனத்த னாகித்
திருவிலா வாழ்வா னகுஞ் செப்பின மொழிகுன் றுவே
அறுமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

24. தந்தை மறுபிறவியில் மாயவரத்தில் சத்திரிய குலத்தவனாகப் பிறந்து பெருமையான வர்த்தகம் புரிந்து வந்து நல்லெண்ணம் பொருந்திய மனத்துடன் தீங்குகள் இல்லாமல் வாழ்ந்து வருவான். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. அரிய வேதங்களின் முடிவில் கூறப்படும் தேவியே! கேளுங்கள்.

தாயின் மரணகாலமும் ஜாதகனின் திருமணக்காலமும்

25. ஆறஞ்சு மூன்று வாண்டில் அன்னைக்குத் துன்ம
[மெய்தும்
மாரனின் மணத்தின் கால மறைகிறேம் பதினெட்
[டாண்டில்
காரிழை தந்தை வர்க்கங் கலப்பளாந் தென்மேல் திக்கில்
கூறுவோ மவள்கு ணத்தைக் கழறின மொழிகுன் றுவே.

25. ஜாதகனுடைய முப்பத்து மூன்றும் வயதில் தாய் மரணமடைவாள். ஜாதகனின் திருமணக் காலத்தைச் சொல்லுகிறேம். அவனுடைய பதினெட்டாம் வயதில் தென் மேற்குப் பக்கத்திலிருந்து தன் தந்தையின் வர்க்கத்தைச் சேர்ந்த பெண் மனைவியாக வருவாள். அவளுடைய குணங்களைக் கூறுகின்றேம். நாங்கள் சொல்லும் வார்த்தைகள் தவறு.

மனைவியின் குணங்கள்

26. தோகைபோல் சாய லாகுந் துறவிகட் கன்ன மீவள்
பாகமாய்ப் பேசு வாளாம் பந்துவை யாத ரிப்பள்
நாகரி கங்க ளுண்டு நடையது நன்மை யாகும்
போகபோக் கியங்க ளேற்பள் பூமியில் வறுமை காணுள்.

26. மயிலைப் போன்ற அழகுடையவள். பரதேசிகட்கு அன்ன மளிப்பவள். பொருத்தமாகப் பேசுபவள். தன் சுற்றத்தாரை ஆதரித்து வருவாள். நாகரிகமாக இருப்பவள். நன்னடத்தையுள்ளவள். போகங் களையும் பாக்கியங்களையும் அடைவாள். தரித்திர மடையாதவள்.

புத்திர பாக்கியம்

27. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பால் ரண்டு
சத்திமா ரவ்வாறு தீர்க்கஞ் சாற்றிய மொழிகுன் ரூவே
வித்தகன் பூர்வந் தன்னை விளம்புவோ மினிமே லாக
அத்திவாழ் மலைநா டன்னில் அணுகிலன் வன்னிய
[சேயாய்;

27. ஜாதகனுடைய புத்திர விருத்தியைச் சொல்லுகின்றோம். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ள வர்கள் என்றோம். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. ஜாதக னுடைய முற் பிறவியைச் சொல்லுகின்றோம். யாழைகள் மிகுதியாக வசிக்கும் மலை நாட்டைச் சேர்ந்த ஓர் ஊரில் (மலையாளத்தில்) வன்னியர் குலத்ததனைப் பிறந்து;

28. சுகமுள குடும்பி யாகிச் சேர்ர்வோர்க்கு வன்ன மீந்து
இகபர னன்பு பூண்டு எழில்மார்க்கந் தாகம் வைத்துத்
தகைமையாய்த் தலங்கள் சென்று சண்டன்தன் பதிக்குப்
[புக்கி
ஐகபதி வரையப் பட்டு ஐனிப்பனு மிந்தப் பாலன்.

28. சௌகரியமுள்ள குடும்பியாகிப் பசித்தவருக்கு அமுது படைத்துச் சிவபெருமானிடம் பக்தி கொண்டிருந்து சாலையோரங்களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்துப் பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று பிறகு மரண மடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந் தவன், இந்த ஜாதகன் என்றோம்.

ஜாதகனுடைய பொதுயோகம்.

29. பாலகன் யோகச் சேதி பகருவோ மினிமே லாகச்
சீலம்போல் வெளிம யக்கன் ஐனசகா யங்கள் செய்வன்
காலத்தை யறிந்து வாழ்வன் காசினில் புகழு மேற்பன்
ஞாலத்தை விருத்தி செய்வன் ராஜபூ ஜிதமு மாவன்.

29. ஜாதகனுடைய பொது யோகத்தை இனிக் கூறுகின்றேம். நல்லொழுக்கமுள்ளவன் என்று பிறர் நினைக்கும்படி நடப்பவன். ஜனங்களுக்கு உபகாரம் செய்பவன். வருங்காலத்தையறிந்து அதற்குத் தக்கபடி வாழ்வான். உலகில் கீர்த்தியடைவான். விசேஷ நிலங்களைப் பெருக்குவான். அரசாங்கத்தாரால் மதிக்கப்படுபவன்.

30. இல்லமு மநேகஞ் செய்வன் எய்திடும் பூர்வ பொன்னும்
புல்குவார் பராசர் தாமும் புதுவில்ல மெந்தக் காலம்
வல்லவன் செய்வான் சொல்வீர் வறுவிரண் டாண்டில்
[செய்வன்
நல்கிடும் பொருள்பின் ஞலே நாயகி கேட்டி டாயே.

30. பல வீடுகளைக் கட்டுவன். புதையலும் கிடைக்கும். பராசர முனிவர் சொல்லுகின்றார். எந்தக் காலத்தில் புது வீடு கட்டுவான்? அதைச் சொல்லுங்கள். ஜாதகனின் பன்னிரண்டாம் வயதில் புதுவீடு கட்டப்படும். பிற்காலத்தில் புதையல் கிடைக்கும். தாயே! கேளுங்கள்.

யோக மேற்படுங் கிரகநிலை

31. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச்
[சங்கை
[1]ஆகமன் தசமம் நிற்க [2]அசுரர்மந் திரியு மாட்சி
[3]பாகனு மிரண்டி லுச்சம் [4]பார்மகன் கூடி நிற்க.
போகபாக் கியங்க ளேற்பன் பிதாமேலாய் வாழ்வா
[ரகும்.

31. ஜாதகனுக்கு யோகம் என்ன காரணத்தினல் ஏற்படும் என்றும் சொல்லுங்கள். குரு பத்தில் இருப்பதாலும், சுக்கிரன் ஆட்சியாகவும், புதன் இரண்டாமிடத்தில் உச்சனுகவும், செவ்வாயுடனும் சனியுடனும் கூடி இருப்பதாலும் போகபாக்கியங்களை யடைந்து தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான்.

32. இருபது விரண்டாண் டின்மேல் இவனுக்கு [5]ராஜ
[யோகம்
பெருகிடும் பிறைபோல் யோகம் புரவியுஞ் சகடு நேரும்
பொருள்பூமி பணிக ளில்லம் புகழ்பதி ஞயி ரம்பொன்
திருகிலாச் சேரு மென்றேஞ் செப்பின மொழிகுன்
[றுவே.

---

1. குரு.
2. சுக்கிரன்.
3. புதன்.
4. சனி.
5. ராஜயோகம்.

32. இருபத்திரண்டாம் வயதுக்கு மேல் ஜாதகனுக்கு ராஜ யோகம் ஏற்படும். வளர்பிறைச் சந்திரன் போல் யோகம் வளரும். குதிரை வண்டி வாங்குவான். பொருள் பூமி வீடு முதலியன சேர்ந்து பத்தாயிரம் பொன் பெறுமானம் உள்ளவை என்றும். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவரு.

சகோதரியின் குணங்கள்

33. அத்திரி புகலு கின்றார் அறைந்திட்டீர் தூணைப்பெண்
[ணென்று
வித்தகி சேதி யெவ்வாறு விளம்புவீர் முனியே நீர்தாம்
பத்தாவுக் கினிய ளாகும் பரவுப காரஞ் செய்வள்
உத்தம குணத்த ளாகும் உயர்வான புத்தி யேற்பள்.

33. அத்திரி முனிவர் சொல்லுகின்றார். ஜாதகனுக்குச் சகோதரி யொருத்தி உண்டு என்று சொன்னீர்களே! அவளுடைய செய்திகளைக் கூறுங்கள், முனிவரே! தாங்கள். சகோதரி தன் கணவனுக்குப் பிரிய மானவள். பிறருக்கு உபகாரம் செய்பவள். நல்ல உயர்ந்த குணமுடைய வள். மேலான புத்தியுள்ளவள்.

34. மால்நிறங் கல்வி மானு மாதரு வுதவி யுண்டு
சீலியாம் வறுமை காணுள் ஜனித்தவூர் வாசி யாகும்
பாலிகை தன்னுல் யோகம் பகருவோம் வரனுக் குந்தான்
வேலனைப் பயின்ற மாதே வித்தகி வயது தீர்க்கம்.

34. கரிய நிறமுடையவள். கல்வி யறிவுள்ளவள். பிறந்த வீட்டால் உபகாரம் உண்டு. ஒழுக்கமுள்ளவள். தரித்திரமடையா தவள். பிறந்த ஊரிலேயே வாழ்க்கைப்படுவாள். இவளுடைய கணவனுக்கு இவளால் யோகம் விருத்தியாகும். முருகக் கடவுளைப் பெற்ற தேவியே! அவளுக்கு நீண்ட வயதுண்டு.

சகோதரியின் புத்திர பாவம்.

35. சுதர்களு மாண்பால் ரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
பதரினில் செல்லா ளாகும் பகருமுன் கோபங் கொஞ்சந்
ததிபாக்கிய முடைய ளாகுஞ் சங்கையா மனத்த ளாகும்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

35. ஜாதகனின் சகோதரிக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிக ளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லுகின்றோம். அற்ப காரியங்களில் மனம் செல்லாதவள். கூறுவதற்கு முன் கோபம் கொள்ளுவாள். (தயிர் நெய்) பால் பாக்கியமுடையவள். சந்தேகப்படும் இயல்பினள். கதியற்றவரை ஆதரிக்கும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய மரணகாலம்

36. ஜாதகன் மரண காலஞ் சாற்றுவோ மறுபா ஞென்பான்
மேதினில் மகர மாதம் வளர்பிறைச் சஷ்டி தன்னில்
சூதான கால நாடு சேருவா னிந்தப் பாலன்
ஓதுவே னிவன்பின் ஜன்மம் உத்திரங் கோகர் ணத்தில்;

36. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றேம். அவனுடைய அறுபத்தொன்பதாம் வயதில் தை மாதத்தில் சுக்ல பட்சம் சஷ்டி திதியில் மரணமடைவான். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். வடக்கிலுள்ள கோகர்ணத்தில்;

ஜாதகனுடைய மறுபிறவியும் ஜனனகால தசையும்

37. உதிப்பனும் வைசியச் சேயாய் உயர்வான செட்டுச் செய்து
நிதியுக வுடைய ஞரி நேமியில் வாழ்வா னுகும்
அதிபனுஞ் ஜனன கால மருவோணங் கடைப்பா தத்தில்
மதிதசை வாண்டி ரண்டு மாதமு மாற தாகும்.

37. வைசிய குலத்தவனுகப் பிறந்து பெரியதொரு வர்த்தகம் புரிந்து வந்து செல்வம் அதிகமாக உடையவனுக உலகில் வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய ஜனன காலத்தில் திருவோண நட்சத்திரம் கடைசிப் பாதத்தில் பிறந்தான். அப்போது சந்திர மகாதசையில் இரு வருடங்களும் ஆறுமாதங்களும் மீதமாகும்.

ஜாதகம் 38

1. அரியது ஜன்ம மாக அந்தணன் கேது தங்கப்
பரிதியு மிரண்டி லேறப் பார்மகன் லாபந் தங்கக்
கரியவன் புந்தி வெள்ளி கலியுமே மூன்றி லாக
பெரும்பணி யேழி லாகப் பேசுவீர் பலனைத் தானே,

1. சிம்மம் லக்கினமாகவும், குரு கேது இலக்கினத்திலும், சூரியன் இரண்டாமிடமாகிய கன்னியிலும், செவ்வாய் லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், சனி, புதன், சுக்கிரன், சந்திரன் மூன்றுமிடமாகிய துலாத்திலும், ராகு ஏழாமிடமாகிய கும்பத்திலும் இருந்தால் பலனைச் சொல்லுங்கள்,

கிரகநிலை

			செவ்வாய்
ராகு	இராசி சக்கரம்		
			லக்கினம் குரு கேது
		சனி புதன் சுக்கிரன் சந்திரன்	சூரியன்

ஜாதகன் தந்தையின் வீட்டு அமைப்பு

2. சங்கரி கேட்கும் போது சடைமுனி கூறு கின்றார்
இங்கிவ ணுண்பால் ஜன்மம் இவன்தந்தை யில்லஞ்
[சொல்வேன்
சங்கையாய்க் கீழ்மேல் வீதி சண்டன்தன் வாச லாமே
சிங்கவா கனத்தாள் கீழ்ப்பால் சிவன்கோட்டம் வடபா
[லாமே.

2. என்று பார்வதிதேவி முனிவர்களை நோக்கிக் கேட்க, அவர்களில் சடைமுடியையுடைய முனிவரொருவர் பின்வருமாறு சொல்லுகின்றார். இவ்வாருன கிரகநிலைகளைக் கொண்டு பிறந்த இந்து ஆண் பிறப்பு. இந்த ஜாதகன் தந்தையின் வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றேன். அது கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு நோக்கிய வாயிலையுடைய வீடாகும். வீட்டுக்குக் கீழ்ப்புறமாக சிங்கத்தை வாகனமாகக் கொண்ட துர்க்கையம்மன் கோயிலுள்ளது. வடக்குப் பக்கமாகச் சிவாலய மொன்றுளது.

3. மாலவன் தீபாஞ் சாலி மருவிடும் வடமே லாகச்
சோலைகள் குண்ட மூண்டு சிறுவூராஞ் சேட்ட ஞகப்
பாலக னன்னை தந்தை பத்தினி புத்திர யோகம்
ஏலவே முன்பின் ஜன்மம் இயம்புவோ மிந்நூல் தன்னில்.

3. தென்கிழக்குத் திசையில் விஷ்ணு கோவிலும், வீட்டுக்கு வட மேற்குத் திசையில் திரௌபதியம்மன் கோவிலும் உள்ளன. மற்றும், கிழக்குத்தருஞ் சோலைகளும், குளிர்ந்த நீரைத் தம்மிடத்திலே கொண்ட குளங்கள் பலவும் உள்ள சிறிய ஊர் அது. இப்படிப்பட்ட ஊரில் தோன்றிய இந்த ஜாதகனின் யோகங்கள், தாய் தந்தையர் மனைவி புதல்வர் முதலானோர்களது யோகங்கள் இவர்களுடைய முற்பிறப்பு மறு பிறப்பு இவற்றைப் பற்றிய செய்திகளை இந்தச் சோதிட நூலில் நாங்கள் விளக்கமாகச் சொல்லுகின்றோம்.

ஜாதகன் தந்தையுடன் பிறந்தோர் விவரம்

4. தந்தையின் துணைக வத்துள் ஆண்ரண்டு கன்னி ரண்டு
இந்தவாறு விருத்தி யென்றோம் இவர்களும் வேறுயிச்
[செல்வர்
பந்தமாய்க் குடும்ப மென்றோம் பறப்பராம் வேற்றூர்
[தன்னில்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி.

4. ஜாதகன் தந்தையோடு பிறந்தவர் ஒன்பது பேராவர். அவர்களில் சகோதரர் இருவரும் சகோதரிகள் இருவரும தீர்க்கமான ஆயுள் உள்ளவர்கள் என்று கூறுவோம். அச்சகோதரர்களும், ஜாதகனுடைய தந்தையோடு வசிக்காமல், குடும்பத்தைவிட்டுப் பிரிந்து போவார்கள். வேற்றூரில் சென்று வாழ்ந்து வருவார்கள். இரண்டாம் பாகத்தில் அவர்களைப்பற்றிய செய்திகளைச் சொல்லுகின்றோம்.

ஜாதகன் தந்தையின் குணங்கள்
வேறு

5. தந்தைகுணஞ் சாற்றுகின்றோ மிருநி றத்தான்
சர்ப்பம்போல் கோபமுண்டு சாந்த னவன்
தந்தைமொழிக் கிடருரையான் சன்மார்க் கத்தான்
தகுகல்வி தானுடையன் சாற்றன் பொய்யும்
தந்தமது தாளமொக்கு மீகை யாளன்
சதுஷ்பாதம் விருத்தியற்பஞ் சந்தே கத்தன்
தன்பந்துக் கிணக்கஞ்சொலா னாகை வானும்
சல்லியப்பா தைகளேற்பன் தனமில் லாதான்.

5. ஜாதகனின் தகப்பனாரது குணங்களைச் சொல்லுகின்றோம். கரியநிற முடையவன். பாம்புபோல் மிக்க சீற்ற முள்ளவன். ஆயினும்

உடனேயே தணியும் தன்மையுண்டு. தன் தகப்பன் சொற்களுக்குப் பாதகமாக எவற்றையும் கூறுதவன். நல்லொழுக்கமுள்ளவன். தக்க கல்வியறிவுடையன். பொய் பேசாதவன். இவன் பற்கள் முத்துக்கள் போன்று வெண்மையானவை. ஏழைகளுக்குக் கொடுக்கும் குணமுள்ளவன். கால்நடைகள் அபிவிருத்தி சிறிது அளவேயாம். எல்லா விஷயங்களிலும் சந்தேகப்படும் சுபாவமுடையவன். தன் உறவினர்களோடு ஒற்றுமை யில்லாதவன். எதனையும் ஊகித்து உணருஞ் சக்தியைப் பெற்றவன். கடன்தொந்திரவுகள் உள்ளவன். செல்வ மில்லாதவன்.

*

1. கலிகேது கலியி லாகக் காரியுஞ் சாடி யாகப்
புலவனுப் பானு வெள்ளி [1]பறப்பினில் குருவும் வீணை
நிலமகன் கன்னி யாக நீண்டதோ ரரவு நண்டில்
தலமது கெண்டை யாகச் சாற்றுவீர் பலனைத் தானே.

1. சந்திரன் கேது மகரத்திலும், சனி கும்பத்திலும், புதன் சூரியன் சுக்கிரன் கடகத்திலும், குரு மிதுனத்திலும், செவ்வாய் கன்னியிலும், ராகு கடகத்திலும் நின்று, ஜன்மலக்னம் மீனமானால் பலனைச் சொல்லுங்கள்.

2. பார்வதி கேட்கும் போது பராசரும் புகலு கின்றார்
சீர்புக ழாண்பால் ஜன்மஞ் ஜனித்தவில் கீழ்மேல் வீதி
கூறுவோர்ந் தேவி வாசல் கூரையாஞ் சனித்த வில்லம்
மாரியு மீச னுத்தரம் வடமேலா மாயோன் காளி.

2. பார்வதி தேவி கேட்கும்போது பராசர முனிவர் சொல்லுகின்றார். இது புகழ்பெற்ற ஆண் மகனுடைய ஜாதகம். அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு நோக்கியுள்ள வாசலையுடையது. தனியான கூரை வீடாகும். மாரியம்மன் கோவிலும் சிவபெருமான் ஆலயமும் வடக்கிலும், வடமேற்கில் திருமாலின் ஆலயமும் காளி கோவிலும் உள்ளன.

---

*38 ஆம் ஜாதகம் 5-ஆவது பாடலுடன் குறையாக நின்று விடுகிறது. இதற்கு மேல்வரும் பாடல்கள் வேறு லக்னத்துக்குத் தொடர்புடையவையாகக் காண்கின்றன. இருப்பினும் மூலம் பிரதியில் உள்ளவாறே அவற்றையும் உரைவிளக்கந் தந்து இங்கு வெளியிட்டுள்ளேன்.

1 நண்டு : கடகவிராசி

3. சிங்கவா கனத்தாள் கீழ்ப்பால் செப்பின வடையா
[ளத்துள்
அங்கவ னேழாஞ் ஐன்மம் அருளுவான் ரெட்டி வம்சம்
இங்கிவன் குடும்பச் சேதி யியம்புவோ மினிமே லாகப்
பங்கய வதனம் போன்ற பார்வதி கேட்டி டாயே.

3. சிங்கத்தைவாகனமாக உடைய துர்க்கையம்மன் கோவில் கிழக்கில் பக்கத்திலும் உளது. இவ்விதமாகச் சொல்லப்பட்ட அடையாளங்களையுடைய வீட்டில் ஜாதகன் ரெட்டியார் மார்பில் தன் தந்தைக்கு ஏழாவது மகனுகப் பிறந்தவன். இவனுடைய குடும்பத்தைப்பற்றி இனிக் கூறுகின்றேம். தாமரையைப் போன்ற முகத்தையுடைய தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய தந்தையின் குணங்கள்

4. தந்தையின் துணையாண் ரண்டு சாற்றுவோந் தீர்க்க மாக
அந்தவர் வேறுய்ச் செல்வ ரவர்பலன் பின்பால்
[சொல்வேன்
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மிருநி றத்தான்
சிந்தையும் நல்ல தாகுஞ் சங்கீதப் பிரிய னுகும்.

4. ஜாதகனுடைய தந்தைக்கு இரு சகோதரர்கள் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லுகின்றேம். அவர்கள் தனியாகச் சென்று விடுவர் என்றும் கூறுகின்றேம். அவர்களுடைய செய்திகளைப் பின்பாகத்தில் உரைக்கின்றேம். ஜாதகனுடைய தந்தையைப் பற்றிக் கூறுகின்றேம். கரிய நிறமுடையவன். நல்ல மனமுள்ளவன். சங்கீதத்தில் பிரிய முடையவன்.

5. இல்லத்தை விட்டு நீங்கி ஏகுவன் தென்பால் தூரம்
வல்லியில் வாச மாகும் மர்மமில் லாதா னுகுஞ்
சொல்லது வதிக முண்டு தந்தமுந் தேய்வு முண்டு
சல்லியங் கொஞ்ச மேற்பன் சாந்தியும் பின்னல் செய்வன்.

5. ஜாதகனுடைய தந்தை தனது வீட்டை விட்டு விலகிவிடுவான். மனஸ்தாபப்பட்டுக் கொண்டு தென் திசையில் தொலைவிலுள்ள மனைவியின் வீட்டில் வசித்து வருவான். இரகசிய மில்லாதவன். அதிகமாகப் பேசுபவன். பற்கள் தேய்ந்துள்ளன. சிறிது கடன் உபத்திரவ முடையவன். பிற்காலத்தில் பரிகாரம் செய்துகொள்வான்.

6. பயிர்த்தொழில் புரிவா னுகும் பத்தினிக் கிட்ட னுவன்
வியஞ்செய்வன் தந்தை யாஸ்தி விகடங்கள் கூறு னுகும்
பயமுள குணத்த னுகும் பஞ்சைபோ லுணவு கொள்வன்
தயையுள மனத்த னுகுந் தான்கண்ணி யன்நீண்ட தேகன்.

6. விவசாயம் செய்து வருவான். தன் மனைவிக்குப் பிரியமான வன். தன் தந்தையின் ஆஸ்தியை அழித்து விடுவான். அகடவிகட மாகப் பேசத் தெரியாதவன். பயந்த சுபாவத்தினன். ஏழையைப் போல் பரிவுடன் அன்னத்தைப் புசிப்பவன். இரக்கமும் தயையுமுள்ள மனத்தினன். கண்ணியமுள்ளவன். உயர்ந்த சரீர முடையவன்.

ஜாதகனது குணங்கள்

7. இங்நெறி யுடையா னுக்கு விப்பால னுதிப்ப னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் [சிவந்த மேனி
மன்மத னெப்ப தாகும் வாக்கது சுத்த முண்டு
பின்னமில் லாத தேகி குற்றமு மில்லா னுகும்.

7. இவ்வித குணங்களையுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றோம். சிவந்த உடலுடையவன். மன்மதனைப்போன்ற அழகுடையவன். வாக்குச் சுத்தமுள்ளவன் (பொய் பேசாதவன்). ஊனமில்லாத தேகத்தைப் பெற்றவன். குற்றங்களில்லாதவன்.

8. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
அல்லலெப் போதுங் காணன் ஆவுக ளேற்ப னுகுஞ்
சல்லிய மில்லா னுகுந் தந்தைக்கு மேலாய் வாழ்வன்
தல்லியின் துணைவர் தம்மால் சத்பாக்கி யங்க ளெல்லாம்.

8. நல்லவர்கட்கு நல்லவனுகவும் துஷ்டர்கட்குத் துஷ்டனுகவு மாவான். ஒருக்காலும் துன்பத்தை அடையாதவன். பசுக்களை அதிக மாகப் பெற்றவன். கடன் உபத்ரவமில்லாதவன். தன் தந்தைக்கு மேம் பட்டவனுக வாழ்ந்து வருவான். தன் தாய் மாமனால் நல்ல பாக்கியங் களைப் பெறுவான்.

9. பால்யத்தில் பூமி சேர்ப்பன் பிறப்பிலே புலவ னுவன்
கல்விமான் குணமு முள்ளான் புண்ணியத் தலங்கள் [செல்வன்
கலகத்தைக் கூரு னுகுங் காரியச் சமர்த்த னுகும்
பலமுள குடும்ப மேற்பன் பேதையே கேட்டி டாயே.

9. சிறு வயதிலேயே பூமியை யடைவான். (முற்பிறப்பில் செய்த நல்வினையால்) பிறக்கும்போதே புலமையைப் பெற்றவன். கல்வியறி வுள்ளவன். நற்குணமுள்ளவன். பல க்ஷேத்திரங்களுக்குச் செல்லு வான். கலகம் செய்யாதவன். காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்து முடிப்பவன். தகுதிபெற்ற குடும்பத்தை யடைவான். தாயே! கேளுங்கள்.

பின்வரும் ஐந்துபாடல்களில் ஜாதகனுடன் பிறந்தவர்களின் விவரம் கூறப்படுகின்றது

10. இன்னவன் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பால் [ரண்டு
கன்னிமா ரெருவ ராகுங் கழறுவோ முன்னேள் சேதி
அன்னியர் மதிக்க வாழ்வள் அரிநிறஞ் சமதே கத்தாள்
உன்னத வார்த்தை சொல்வள் உள்மனங் கபடு மில்லாள்.

10. ஜாதகனுடைய சகோதரரைப் பற்றிச் சொல்லுகின்றோம். இரு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளவன். மூத்த சகோதரியைப்பற்றிச் சொல்லுகின்றோம். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். விஷ்ணுவைப்போன்று கரிய நிறமுடையவள். சமமான உடலமைப்புள்ளவள். உயர்வாகப் பேசுபவள். உன் மனத்தில் கபடமில்லாதவள்.

11. அன்னையின் துணைவன் தன்னை யவளுமே மாலை பூண்பள்
தன்சுத ராண்பால் ரண்டு சத்திமார் மூவ ராகும்
பொன்பொரு ளதிகஞ் சேரும் பெரிதான குடும்பி யாவள்
பின்னரை யாத ரிப்பள் புண்ணிய மனத்தா ளாகும்.

11. தன் தாயின் சகோதரனை மணந்து வாழ்ந்து வருவாள். இரு புத்திரர்களையும் மூன்று புத்திரிகளையும் பெற்றவள். இவள் காலத்தில் குடும்பத்தில் பொன் செல்வம் முதலியன அதிகம் விருத்தியாகும். பெரிய குடும்பத்தைப் பெற்றவள். ஏழைகளை ஆதரித்து வருவாள். நல்லெண்ணம் பொருந்திய மனமுடையவள்.

12. மங்கையுங் கீர்க்க ஜீவி யவள்பின்னேன் சேதி கேளாய்
சங்கையா மனத்த னாகுந் தரணியில் சில வானும்
நங்கையர் மோக னவன் நயம்படக் கூறு நெஞ்சம்
அங்கவ னிருநி றத்தன் அல்பமாங் கல்வி யுண்டு.

12. அவள் நீண்ட ஆயுள் உள்ளவள். இவளுடைய இளைய சகோதரனின் செய்தியைக் கேளுங்கள். சந்தேகமுள்ள மனத்தினன். நல்லொழுக்க முடையவன். பெண்கள் மீது விருப்பமுடையவன். நயமாகப் பேசவேண்டுமென்ற மனத்தினன். கரிய நிறமுடையவன். கல்வியறிவு அதிகமில்லாதவன்.

13. நிருஷிகள் செய்வா னாகுங் கெடுதிக ளொருவர்க் [கெண்ணன்
பெருமையும் புகழு முண்டு போசன வறுமை காணன்
வறுமைக ளில்லா னாகு மாற்றலீன லகுவில் வெல்வன்
உரையுமுன் கோபங் கொஞ்சம் உணவுகள் கொள்வா [னாகும்.

13. விவசாயம் செய்து வருவான். ஒருவருக்கும் தீங்கிழைக்கும் மனமில்லாதவன். பெருமையும் கீர்த்தியும் ஏற்படும். சாப்பாட்டுக்குத் தரித்திரமில்லாதவன் (ஏழைமை யில்லாதவன்). எதிரியைச் சுலபமாக வெற்றி கொள்ளுவான். சிறிது கோபம் உள்ளவன். சுகமான உணவை உட்கொள்ளுவான்.

14. மனைவியு மொன்றே யாகு மைந்தர்க ளாண்பா லொன்று
கனமுள பெண்பா லொன்று கழறுவோந் தீர்க்க மாகச்
சினமிலா வொன்றுய் வாழ்வர் செப்புவோம் பின்பால்
[சேதி
தனயனின் சேதி சொல்வேன் தந்திர மொழியு முண்டு.

14. இவனுக்கு மனைவி யொருத்தியே. ஓர் ஆண் மகனும், ஒரு பெண்ணும் பிறப்பர். அவர்கள் தீர்க்கமாக வாழ்வர். எல்லோரும் சகஜ மனோபாவத்துடன் ஒன்றுபட்டு வாழ்வர். அவர்களைப் பற்றிய செய்திகளனைத்தையும் பின் பகுதியில் சொல்லுவோம். ஜாதகனின் செய்தியைச் சொல்லுகிறேன். சாமர்த்தியமாகப் பேசுவான்.

15. வித்தையு முடைய னுகும் விவேகியா மெவர்க்கு நண்பன்
புத்தியில் பெரியோ னுகும் பொய்மெய்யாய்ப் புகலு
[வானுஞ்
சுத்தத்தார் மதிக்க வாழ்வன் சோம்பிடான் காரி யத்தில்
வெத்திச்சொல் லுடைய னுகும் வீண்வம்புங் கொஞ்ச
[முண்டு.

15. கல்வியைக் கற்றவன். சாமர்த்தியசாலி. யாவரிடமும் நட்பு மனப்பான்குள்ளவன். அறிவில் பெரியவன். பொய்யையும் மெய் போலப் பேசுபவன். சுற்றத்தார் கொண்டாடும்படியான வாழ்க்கை நடத்துவான். சோம்பலில்லாது காரியங்களைச் செய்பவன். வெற்றி தரும் சொற்களைக் கூறுவான். (துண்டுப் பேச்சில்லாதவன்). தனக்குச் சம்பந்தமில்லாத வம்புகளிலும் சிறிது கலந்து கொள்வான்.

16. தரித்திர மில்லா னுகுஞ் சாகையும் வேறு செய்வன்
பொருத்தமாய்ப் பேசு வானும் பாரியு மொன்றே யாகும்
வெறுத்தோர்க்கு மன்ன மீவன் விளம்புவோஞ்
[சுதரா ணிரண்டு
உரைத்தனங் கன்னி யொன்று உடன்கூடி வாழ்வா
[னுகும்.

16. தரித்திரமில்லாதவன். வேறு (புதிய) வீட்டைக் கட்டுவான். பொருத்தமாகப் பேசுபவன். மனைவி யொருத்தியே யுள்ளவன். துறவிகட்கு அன்புடன் அன்னமளிப்பவன். இவனுக்கு இருபுத்திரர் களும் ஒரு புத்திரியும் பிறப்பார்கள். அவர்கள் ஒன்றுகவே வாழ்ந்து வருவார்கள் என்றோம்.

17. துரவுகள் சோலை செய்வன் தீர்க்கமாம் வயது மேற்பன்
பாரியால் லாப மேற்பன் பாக்கியம் பெருக்க மாகும்
அரிபூஜை செய்வா னுவன் அதிகமாம் விரத மேற்பன்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

17. கிணற்றை வெட்டுவிப்பான். சோலைகளை வளர்விப்பான். நீண்ட வயதுள்ளவன். தன் மனைவியால் சௌகர்யங்களை அடைவான். பெருஞ் செல்வத்தையும் பாக்கியங்களையும் பெறுவான். விஷ்ணு நாம பூஜைகள் செய்து வருவான். அதிகமான விரதங்களை ஏற்பான். கரிய யானை முகத்தோனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

18. மற்றதோர் துணைவி தன்னை யறைகூறும் பின்பா கத்தில்
வித்தகன் பின்னுல் கன்னி மேவிடுந் தீதை யாகும்
பத்தினி யன்னை சேதி பகருவோ மிருசி வப்பள்
குத்தத்தை மனத்தில் வையாள் கூறுவாள் சுகமாய்
[வார்த்தை.

18. மற்ற சகோதரியின் செய்திகளைப் பின்பாகத்தில் எழுதுகிறோம். ஜாதகனுக்குப் பின்பு தோன்றும் சகோதரி மரணமடைவாள். ஜாதகனுடைய தாயின் செய்திகளை இனிக் கூறுகின்றோம். கரிய நிறமுடையவள். பிறர் செய்யும் குற்றங்களை மனத்தில் வையாதவள். இன்பமாகப் பேசுபவள்.

19. மங்கையும் யோக சாலி வடிவினில் குள்ள மாவன்
சங்கையா மனத்த ளாகுந் தன்வரன் றனக்கு யேத்தோள்
சிங்கம்போல் கோபம் சாந்தஞ் சிலமுங் கொஞ்ச மூண்டு
தங்கிடும் பித்தச் சூடு தைரிய மனத்த ளாகும்.

19. ஜாதகனுடைய தாய் அதிர்ஷ்டமுள்ளவள். குட்டையான சரீரமுடையவள். சந்தேகமுடைய மனத்தினள். தன் கணவனது மனத்துக்கு ஏற்றபடி நடப்பவள். சிம்மம்போல் கோபம் கொள்ளுபவள். சீக்கிரத்தில் சாந்தமடையும் குணமும் உள்ளவள். கல்லொழுக்க முடையவள். பித்தச்சூட்டு நோயுள்ளவள். தைரியமுள்ள மனத்தினள்.

20. தன்துணை பக்கல் தன்னில் சார்ந்துமே வாழ்வா ளாகுந்
தன்துணை யாண்பா லொன்று சாற்றுவோந் தீர்க்க மாகப்
பின்துணை யாகச் சொல்வேன் பேசுவோ மவன்கு
[ணத்தைத்
தன்தந்தை யில்ல தீங்கிச் சாருவா னவ்வூர் தென்பால்.

20. தன்னுடைய சகோதரனிடம் சென்று அவரோடு சேர்ந்து வாழ்ந்து வருவாள். உடன் பிறந்த சகோதரன் ஒருவன் நீண்ட ஆயுள் உடையவன் என்றும் சொல்லுகின்றோம். அவன் தாய்க்குப்பின் பிறந்தவன் என்றோம். அவனுடைய குணங்களைக் கூறுகின்றோம். அவன் தன்னுடைய தந்தையின் வீட்டைவிட்டு அவ்வூருக்குத் தெற்குப் பக்கத்திலுள்ள ஊருக்குச் சென்று வாழ்வான்.

21. தந்தையால் சுகமே யேற்கான் தரணியில் சல்லிய
[மேற்பன்

தந்தைசொல் கடவா னகுஞ் சாராட்க ளுடைய னகும்
பிந்தியே பொருளை யேற்பன் பொய்யது புகலா னமே
சிந்தையு நல்ல தாகுந் திருத்தமாய்ப் பேசு வானும்.

21. தன்னுடைய தந்தையால் சுகத்தையடையாதவன். உலகில் கடன் வாங்குவான். தன் தந்தையின் வார்த்தைகளை மீறுதவன். ஏவலாட்களை உடையவன். பிற்காலத்தில் செல்வம் பெறுவான். பொய்யைப் பேசாதவன். நல்ல மனத்தையுடையவன். சுத்தமாகப் பேசுபவன்.

22. போஜன வறுமை காணன் பூமியால் ஜீவிப் பானங்
காசுவீண் செலவு செய்யான் காலிகள் விருத்தி யுண்டு
மாசிலாக் குணத்தா னகும் வளவுமே பின்னல் செய்வன்
ஆசையாய்த் தவங்கள் செய்யு மம்பிகை யாளே கேளாய்.

22. உணவுக்குத் தரித்திரமில்லாதவன். விவசாயம் செய்து ஜீவனம் செய்வான். (அநாவசியமாக) பணத்தைச் செலவு செய்யாதவன். கால் நடைகள் பெருகும். குற்றங்களில்லாத குணத்தினன். பிற்காலத்தில் வீட்டைக் கட்டுவான். பிரியத்துடன் தவங்களியற்றும் தேவியே! கேளுங்கள்.

23. [1]பாரியு மொன்றே யாகும் பாலர்க ளாண்பா லிரண்டு
நாரியு மூன்று வென்றோம் நாட்டினில் வறுமை காணுள்
.....
.....

23. மனைவியும் ஒருத்தியே. புத்திரர் இருவரும் பெண்கள் மூவரும் தோன்றுவர். தரித்திரமில்லாதவன்.....

---

1. இதற்குமேல் மூலப்பிரதியிலில்லை. ஜாதகம் குறையாகவே காணுகின்றது.

ஜாதகம் 39

1. பிறைபுகர் புதன்பொன் கன்னி பூமகன் பரிதி கோலாங்
கரியவன் தேளி லாகக் கரும்பாம்பு மான தாக
அரியது ஜன்ம மாக அதிதியுங் கடகம் புக்க
உரைப்பீர்கள் பலனே யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் சுக்கிரன் புதன் குரு கன்னியிலும், செவ்வாய் சூரியன் துலாத்திலும், சனி விருச்சிகத்திலும், ராகு மகரத்திலும், கேது கடகத்திலும் நின் று இலக்கினம் சிம்மமாக இருப்பின் பல னைச் சொல்லுங்கள் எனப் பார்வதி கேட்க்லானர்.

கிரகநிலை

	இராசி சக்கரம்		கேது
ராகு			லக்கினம்
	சனி	செவ்வாய் சூரியன்	சந்திரன் சுக்கிரன் புதன் குரு

ஜாதகன் பிறந்த ஊரின் அமைப்பு

2. அத்திரி புகலு கின்றார் ஆணது ஜன்ம மாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் வடவாரடை கீழ்மேல் வீதி
அத்தியின் கோஷ்ட மேல்பால் அருகினில் சந்து முண்டு
சித்தஜன் தனையெ ரித்த தேவனுந் தென்பா லோடை.

2. அத்திரி முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகமாகும். அவனுடைய பிறந்த வீட்டைச் சொல்லுகின்றோம். அது மெழக்கு மேற்கான வீதியில் வடக்கு வரிசையில் உள்ளது. மேற் குப் பக்கத்தில் விநாயகர் ஆலயமும் சமீபத்தில் ஒரு சந்தும் உண்டு. மன்மதனையெரித்த சிவபெருமான் ஆலயமும் ஓடையும் தெற்குப் பக்கத்தில் உள்ளன.

3. இன்னமும் பலதே வாசம் இலகிய பேரூ ராகும்
உன்னதச் செட்டு வோங்கும் உம்பர்கோன் நகர மாமே
சொன்னவிவ் வடையா ளத்துள் சுதனுமே சேட்ட னாக
மன்னன்பூ வைகிய வம்சம் வருவனு மென்று

[சொல்வோம்.

3. இன்னும் பல தெய்வங்கள் வசித்துவரும் ஒரு பெரிய ஊரில் ஜாதகன் பிறந்தான். அங்கு உயர்வான வர்த்தகம் பெருகும். தேவர்களுக்கெல்லாம் அரசனுகிய இந்திரனுடைய அம்ராவதி நகரத்தைப் போன்றது அது. இவ்வித அடையாளங்களுள்ளதோரூரில் ஜாதகன் தன் தந்தைக்கு மூத்த புதல்வனுகப் பூவைசிய குலத்தில் பிறந்தவனென்று சொல்லுகின்ரோம்.

4. தாதைக்குத் தாரம் ரண்டு தரித்திடு மிளையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
ஓதுவேன் துணையுங் காணன் உத்தமி மார்க ளந்தாம்
நீதியாய் விருத்தி யென்ரோம் நுவலுவார் பராசர் தாமும்.

4. (ஜாதகனுடைய) பாட்டனுக்கு ஏற்பட்ட மனைவியரிருவரில் இளைய மனைவிக்குப் பிறந்தவன் இந்த ஜாதகனுடைய தந்தையென்று சொல்லுகின்ரோம். வேறு சகோதரர்கள் இல்லாதவன். சகோதரிகள் உள்ளவன். பராசரமுனிவர் சொல்லுகின்ரார்.

ஜாதகன் தந்தையின் சகோதரன் குணங்கள்

5. முன்மாதா வொன்று யென்றீர் மொழிகுவீ ரவர்க்குப் [புத்திரர்
மன்மதன் போலா ணென்று மருவிடுந் தீர்க்க மாக
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் மாநி [றத்தான்
தன்சொலுஞ் சுகமு முண்டு தையலார் மோக னுவன்.

5. ஜாதகனுக்கு மூத்த தாயார் ஒருத்தியுண்டு என்று கூறினீர்களே! அவருக்குப் புத்திரர் உண்டா? மன்மதனைப்போல் அழகிய புத்திரன் ஒருவன் உண்டு என்றும் அவனும் நீண்ட ஆயுள் உள்ளவன் என்றும் சொல்லுகின்ரோம். அவனுடைய குணத்தைச் சொல்லுகின்ரோம். அழகுள்ளவன். மாநிறமுடையவன். இன்பமாகப் பேசுபவன். பெண்கள் மீது மையல் கொள்ளுபவன்.

6. இருவிதக் கல்வி கற்பன் எவரையும் வசியங் கொள்வன்
நெறியதைக் காப்பா னுகும் நினைத்தகா ரியமு டிப்பன்
பெரிதான செட்டுச் செய்வன் பெம்மானின் பக்தி [பூண்பன்
அறுமுக னருளு மோங்கும் அற்பரை யுறவு கொள்ளான்.

6. இருவிதமான கல்விகளைக் கற்றுணர்வோன். எல்லோரையும் தன்வயப்படுத்துவான். நல்லொழுக்கத்தை யுடையவன். எண்ணிய காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவன். பெரியதான வர்த்தகத்தைப் புரிந்து வருவான். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன்.

ஆறுமுகக் கடவுளுடைய அருள் விருத்தியாகும். அற்பர்களுடைய நட்பைக்கொள்ளாதவன்.

7. வறுமையெப் போதுங் காணன் மருவிடுஞ் சிரசில் பாதை
அரசர்கள் நேசங் கொள்வன் அறமதி லிச்சை கொஞ்சம்
பெருமையும் புகழு மேற்பன் பலவீன முடைய னகும்
இருபாரி யணுகு மென்றும் எய்தார்கள் சுதர்கள் தாமே.

7. ஒரு காலத்திலும் தரித்திரமடையாதவன். தலைவலி அடிக்கடி ஏற்படும். அரசாங்கத்தாருடைய தொடர்பு உள்ளவன். தருமம் செய்வதில் விருப்பமுடையவன். பெருமையையும் கீர்த்தியையும் அடைவான். பலக்குறைவு உள்ளவன். இரு மனைவியரை யடைவான். புத்திரர்களை அடையாதவன்.

8. மாரனை டொத்து வாழ்வன் மாநிலம் விருத்தி செய்வன்
காரியச் சமர்த்த னுமே காதலன் தீர்க்க ஜீவி
வீரியன் தனக்குப் புத்திரர் விளங்காத கார ணஞ்சொல்
பாரினில் பூர்வ தோஷம் பகருவோம் பின்பால் சேதி.

8. ஜாதகனின் தந்தையுடன் மனமொத்து வாழ்ந்து வருவான். நிலங்களைப் பெருக்குவான். காரியங்களைச் சமர்த்தியமாகச் செய்து வருவான். நீண்ட ஆயுள் உள்ளவன். அவனுக்குப் புத்திர பாக்கியமில்லாத காரணத்தைச் சொல்லுங்கள். உலகில் முற்பிறவியில் செய்த தோஷத்தால் ஏற்பட்டது. அவற்றைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம்.

ஜாதகன் தந்தையின் குணங்கள்

9. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சரசமாய்
[வார்த்தை யுண்டு
தந்தையி னஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
தந்தமும் பெரிதாய்க் காட்டுந் தானிரு நிறத்த னுமே
தன்பந்து மதிக்க வாழ்வன் சாற்றுவோ மூகை சாலி.

9. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். சரசமாகப் பேசுபவன். தன் தந்தையின் ஆஸ்தியைப் பெருக்குவான். பெரிய பற்களையுடையவன். கரிய நிறமுடையவன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். ஊகமுடையவன்.

10. வித்தையு முடைய னகும் விவேகியா மெவர்க்கு
[நல்லோன்
சத்திய மென்று லச்சந் தைரிய மனத்த னுமே
நத்தினோர்க் குதவி செய்வன் நாதனர் பக்தி கொஞ்சம்
பத்தினி மார்கள் தம்மால் பலவிதத் துன்ப மேற்பன்.

10. கல்வியறிவுள்ளவன். நன்மை தீமைகளைப் பாகுபாடு செய்யத் தெரிந்தவன். எல்லோருக்கும் நல்லவனாக இருப்பவன். சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவன். தைரியமுள்ள மனத்தினன். தன்னை வந்து அண்டியவர்கட்கு உபகாரி. கடவுள் பக்தி சிறிது கொண்டவன். தன் மனைவிமாரால் பலவிதமான துன்பங்களையடைவான்.

11. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
அல்லல்கள் மத்தி யத்தில் அணுகிடு மில்லந் தன்னில்
சல்லியங் கொள்ளா னுகுந் தன்பந்தை யாத ரிப்பன்
சொல்லது சுருக்க மாகுஞ் சோம்பிடான் காரி யத்தில்.

11. நல்லவர்கட்கு நல்லவனாகவும் துஷ்டர்கட்குத் துஷ்டனாகவும் நடந்து கொள்ளுவான். இடைக்காலத்தில் வீட்டில் துன்பங்கள் ஏற்படும். கடன்படாதவன். தன் சுற்றத்தாரை ஆதரித்து வருவான். சுருக்கமாகப் பேசுபவன். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவன்.

கோதுமை—விஷ்ணு—ரேகைகள்

12. இன்னவன் செங்கை தன்னில்
இலகிடுங் கோதுமை ரேகை
பன்னுமால் ரேகை யுண்டு
பகர்ந்திடான் கட்டு வார்த்தை
உன்னதத் தலங்கள் செல்வன்
உயர்வோர்கள் நேசங் கொள்வன்
அன்னியர் மதிக்க வாழ்வன்
அவன்தூசு செட்டுச் செய்வன்.

12. இவன் தனது கையில் கோதுமை ரேகையுள்ளவன். விஷ்ணு ரேகையுமுள்ளவன். வார்த்தைகளைப் புனைந்து பேசாதவன். உயர்ந்த புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். உயர்ந்தவர்களுடையவும் பெரியோர்களுடையவும் நட்பைக் கொள்ளுபவன். பிறர் கொண்டாடும் படி வாழ்ந்து வருவான். அவன் துணி வியாபாரம் செய்து வருவான்.

13. முகமதில் வடி(டு)வு மில்லான் முன்கோபம் பின்பு சாந்தம்
பகையோரை வணங்க வைப்பன் பாருகள் விருத்தி
[செய்வன்
உகமையாய் வார்த்தை சொல்வன் ஓராறு முகத்தோன்
[பக்தி
ஜகமதில் வறுமை காணன் சிந்தையுங் கிலேச முண்டு.

13. முகத்தில் களையில்லாதவன் (வடு இல்லாதவன்). முன் கோபம் கொள்ளுவான். பிறகு சாந்தமடைவான், விரோதிகளை வணங்க

வைப்பவன். விலைநிலங்களைப் பெருக்குவான். உபமானங்களுடன் பேசுபவன். ஆறுமுகக்கடவுள்மீது பக்தியுள்ளவன். உலகில் தரித்திர மடையாதவன். மனத்தில் சஞ்சலமுடையவன்.

ஜாதகனின் குணங்கள்

14. இன்னெறி யுடையா னுக்கு விப்பால னுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அரிமக னெப்ப
[தாகும்
பன்னியே பேசு வானும் பலகலை யுணர்வா னுகும்
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா னுகும்.

14. இவ்விதக் குணங்களையுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுகின்றோம். மன்மதனைப் போன்று அழகுடையவன். பன்னிப் பன்னிப் பேசும் இயல்பினன். பல கலைகளையும் நூல்களையும் அறிந்துரைப்பான். ஊனமில்லாத சரீரத்தைப் பெற்றவன். பிறருடைய குற்றத்தை எடுத்துக் குறை கூறுதவன்.

பத்மரேகை

15. தந்தையின் தந்தை போலே தானவன் வாழ்வா னுகும்
மந்திர யோக மேற்பன் மாற்றுரை நாசஞ் செய்வன்
கந்தன்மேல் பக்தி பூண்பன் கஞ்சமாம் ரேகை யுண்டு
சிந்தையும் நல்ல தாகுஞ் சிலேடையாய் வார்த்தை
[சொல்வன்.

15. தன் தந்தையின் தகப்பன் போல் சீர்பெற்று வாழ்ந்து வருவான். மந்திர சாஸ்திரங்களையும் யோக சாஸ்திரங்களையும் நன்கு அறிந்தவன். விரோதிகளை அறவே ஒழித்து விடுவான். முருகக் கடவுள்மீது பக்தியுடையவன். கையில் பத்மரேகையுள்ளவன். நல்ல மனமுடையவன். இருவிதப் பொருள்படும்படி பேசுபவன்.

16. பலதொழில் செய்வா னுகும் பரவுப காரி னுமே
நிலையதைக் காப்பா னுகும் நிருபர்க்கு விவன்சொல்
[மேன்மை
புலவன்போல் மொழிவா னுகும் புயபல முடையா னுகும்
விலைமாதர் மோகங் கொள்வன் வெற்றியாந் தொடுவ
[முக்கு.

16. பல தொழில்களைச் செய்து வருவான். பிறருக்கு உபகாரம் செய்பவன். தன்னுடைய அந்தஸ்தைக் காத்துக் கொள்ளுவான். அரசாங்கத்தாருக்கு இவனுடைய வார்த்தைகளில் மதிப்பு உண்டு. புலவன்போல் பேசுபவன். பராக்கிரமம் உள்ளவன். தோள் வலி

வள்ளவன். வேசையர்மீது விருப்பங் கொள்ளுபவன். எடுத்த காரியங்களில் ஜயம் பெறுவான்.

நள—பேரி—தூல யோகங்கள் : கிரக நிலை

17. யோகமெவ் விதமாய்ச் சொல்வீ ருரைப்பீர்க ளந்தச்
[சங்கை
[1]பாகனும் புகர்பொன் திங்கள் பற்றிட மிரண்டே யாக
நாகமு மாறில் தங்க நளயோகம் பேரி யோகம்
வேகமாய்த் தூல யோகம் விளம்பிடினும் பால னுக்கு.

17. ஜாதகனுக்கு யோகம் ஏற்படும் என்று எங்ஙனம் கூறுகிறீர்கள்? அதைச் சொல்லுங்கள். புதன், சுக்கிரன், குரு, சந்திரன் இவர்கள் இரண்டாமிடத்திலும் ராகு ஆறுமிடத்திலும் தங்கியிருப்பதால் நளயோகம் பேரியோகம் தூலயோகம் ஆகிய இம்மூன்று யோகங்களும் ஜாதகனுக்கு ஏற்படும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

18. இன்னவன் துணைவர் தம்மை யியம்பவாண் பலமு ரைது
கன்னிகை யிருவர் தீர்க்கங் கழறுவோம் பால னுக்கு
என்னகா ரணத்தி னலே யிவன்துணை யாண்பால்
[தோஷந்
துன்மையா யாறில் ராகு சேர்ந்ததோர் பலத்தால்
[சொன்னேம்.

18. ஜாதகனுடைய சகோதரரைப் பற்றிச் சொல்லுகின்றோம். சகோதரர் உண்டு என்று சொல்லக் கிரக பலமில்லை. இரு சகோதரிகள் உண்டு என்றும் அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும் சொல்லுகின்றோம். என்ன காரணத்தினால் ஜாதகனுக்குச் சகோதர தோஷம் உண்டு என்று சொல்லுங்கள்? நீமையாக ராகு ஆறுமிடத்தில் இருப்பதால் அங்ஙனம் நாங்கள் சொன்னோம்.

19. பெண்துணை யெவ்வாறு தீர்க்கம்
பேசுவீர் முனியே நீர்தாந்
திண்ணமாய் ரவிசேய் மூன்றில்
சேர்ந்ததோர் பலத்தால் சொன்னேம்
வண்ணமாய் மறுதா யொன்று
மருவிடு மெட்டா மாண்டில்
பன்மையாய்ச் சுதராண் ரண்டு
பாவையு மவ்வாறு தீர்க்கம்.

---

1. புதன்

19. சகோதரிகள் மட்டும் உளர் என்றும் அவர்கள் நீண்ட ஆயுளுள்ளவர் என்றும் எவ்விதம் சொல்லுகிறீர்கள்? முனிவரே! தாங்கள். சூரியன் செவ்வாய் மூன்றுமிடத்தில் சேர்ந்திருப்பதன் பலத்தால் நிச்சயமாக அவ்விதம் சொன்னேம். ஜாதகனுடைய எட்டாம் வயதில் இரண்டாம் தாய் ஒருத்தி வருவாள் என்றும் அவளுக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து தீர்க்காயுள் உள்ளவர்களாவார் என்றும் கூறுகின்றோம்.

மாற்றுந்தாய்

20. மறுமாதா வணுகுஞ் சேதி வறிவிப்பீர் முனியே நீர்தாங்
கரியவ ளலில் தங்கக் [1]கதிருடன் சேயுங் கூட
வரிவிழி யன்னை பின்னேள் வருகுவா ளென்று
[சொன்னேம்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

20. ஜாதகனுக்கு இரண்டாம் தாய் வரும் விவரங்களைச் சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். சனி நான்காமிடத்தில் (மாதுர் ஸ்தானம்) இருந்து அவ்வீட்டுக்குரிய செவ்வாயுடன் சூரியன் சேர்ந்திருப்பதால் தாய்க்குப் பின் பிறந்த சகோதரியை தந்தை மணப்பான் என்று சொல்லுகின்றோம். பெரிய வயிற்றையுடைய விநாயகனைப்பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

மனைவியின் குணங்கள்

21. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பதினெட்
[டாண்டுள்
நீலியு முள்ளூர் தன்னில் நேருவாள் குணத்தைச்
[சொல்வேன்
சீலியாஞ் சிவந்த மேனி சிறுத்தோருக் கன்ன மீவள்
மால்மனை யொப்ப தாகும் வருவோரை யாத ரிப்பள்.

21. ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். மனைவி அவனுடைய பதினெட்டாம் வயதிற்குள் உள்ளூரிலிருந்தே வருவாள். அவளுடைய குணத்தைக் கூறுகின்றோம். நல்லொழுக்க முள்ளவள். சிவந்த உடலுள்ளவள். ஏழைகட்கு அன்னமளிப்பவள். இலக்குமியைப் போன்ற அழகுடையவள். தன்னையண்டி வந்தவரை ஆதரித்து வருவாள்.

இதுவுமது

22. அன்னம்போல் வடிவு மொக்கும் ஆளன்தன் மனத்துக்
[கேத்தோள்
அன்னமு மன்பா யீவள் அயல்குற்றம் புகலா ளாகும்
அன்னியர் மதிக்க வாழ்வள் அடாவடி கூரு ளாகும்
அன்னவள் யோக சாலி அம்பிகை யாளே கேளாய்.

1. சூரியன்

22. அன்னத்தைப்போன்ற அழகிய நடை உள்ளவள். தன் கணவன் மனப்படி நடப்பவள். பிரியத்துடன் அமுது படைப்பவள். பிறர்மீது குற்றங் கூறுதவள். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். அடாவடியாகப் பேசாதவள். அதிர்ஷ்டமுள்ளவள். தாயே! கேளுங்கள்.

புத்திரபாவம்—தோஷம்—கிரகநிலை

23. சுதர்களு மாண்பால் ரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
பதராகு மிரண்டு வென்றோம் பகருவீ ரந்தச் சங்கை
புதல்வர்தா னத்தோ லைடு புகர்கூடி யிருப்ப தாலே
அதுபல னிரண்டும் நாலும் அணுகாது வென்று
[சொன்னேம்.

23. ஜாதகனுக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லுகின்றோம். இரு குழந்தைகள் இறந்து விடும் என்றும் கூறுகின்றோம். அதற்குக் காரணங்கள் என்னவென்று சொல்லுங்கள். புத்திர ஸ்தானத்திற்குரிய குருவுடன் சுக்கிரன் கூடி இருப்பதால் இரண்டாவதும் நான்காவதுமாகப் பிறக்கும் குழந்தைகள் நிலையா.

ஜாதகனின் முற்பிறவி

24. ஜாதகன் பூர்வஞ் சொல்வேன் சட்டநா தேசர் நாட்டில்
ஓதுவார் குலமு தித்து வுயர்வான குடும்பி யாகிக்
காதலி மதலை யுண்டாய்க் கனமுடன் வணிபஞ் செய்து
மேதினில் நல்லோ னாகி மேவினன் கால நாடு.

24. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். சட்டநாதேச்வரர் எழுந்தருளியிருக்கும் சிகாழியில் அந்தணர் குலத்தில் பிறந்து உயர்ந்த குடும்பத்தையடைந்து மனைவி மக்களோப்பெற்று பெரிய வர்த்தகம் செய்து வந்து, உலகில் நல்லவனாக வாழ்ந்து மரணமடைந்தான்.

25. பொன்னவன் வரையப் பட்டுப்
பிறப்பினு மிந்தப் பாலன்
முன்ஜன்ம மறையோ னாக
வுதித்தவ னிச்சென் மத்தில்
தன்குலந் தாழ்வாய் வந்த
சங்கையைச் சொல்லு மென்றாள்
அன்னவன் முன்ஜன் மத்தில்
அருமறை யோதாத் தாலும்;

25. மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். முற்பிறவியில் அந்தணர் குலத்தில் தோன்றிய ஜாதகன்

இப்பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறக்கும் காரணங்களைச் சொல்லுங்கள். ஜாதகன் முற்பிறவியில் அரிய வேதங்களைக் கற்றுணராமல் (கடமைகளைச் சரிவரச் செய்யாமல்) இருந்ததால்;

ஜாதகனுடைய பொது யோகங்கள்

26. குலந்தாழ்வாய்ப் பிறப்பா னுகுங் கூறுவோ மிவனின் [யோகங்
குலமதிப் புடனே வாழ்வன் காவலர் மெச்ச வுய்வன்
குலத்துளோர் தம்மைக் காப்பன் கூற்றினை [யுதைத்தோன் பக்தி
குலவுவான் தூசுச் செட்டுக் கொள்ளவும் விற்க வல்லன்.

26. தாழ்ந்த குலத்தில் பிறப்பான் என்று சொல்லுகின்றோம். இவனுடைய பொது யோகத்தை விளம்புங்கால் தன் குலத்தில் மேன்மையுடையவன் என்றும் *அரசாங்கத்தாரால் கொண்டாடப்படும் படி இருப்பான் என்றும் சொல்லுவோம். தன் இனத்தவரை ஆதரிப்பான். எமனை யுதைத்த சிவபெருமானிடம் பக்தி யுள்ளவன். துணி வியாபாரம் செய்து வருவான். வாங்கவும் விற்கவும் சாமர்த்திய முள்ளவன்.

27. பலவிதத் தொழிலு மோங்கும் பாருகள் விருத்தி யுண்டு
தலவாசஞ் சேது செல்வன் தர்மமாங் குணத்தா னுகுந்
திலகம்போல் யாவ ருக்குந் தேறினோர்க் கன்ன மீவன்
கலகத்தைக் கூறு னுகுங் காதலி கேட்டி டாயே.

27. பலவிதமான தொழில்களைச் செய்வான். அவை விருத்தியாகும். விளைநிலங்கள் பெருகும். ஜாதகன் பல புண்ணியத்தலங்களுக்குச் செல்வான். தர்ம குணமுள்ளவன். யாவருக்குஞ் சிறந்து விளங்குவான். துறவிகட்கு அன்னத்தை அன்புடன் அளிப்பவன். பிறரைப் பற்றிய கலக வார்த்தைகளைச் சொல்லாதவன். தாயே! கேளுங்கள்.

தாயின் குணங்கள்

28. இன்னமும் விவர மாக இயம்புவோம் பின்பா கத்தில்
அன்னையின் சேதி சொல்வேன் அரிபோலே கோபங் [கொஞ்சம்
பன்னியே பேசு வாளாம் பஞ்சைகட் கன்ன மீவள்
தன்சொலு மடக்க முண்டு தானீன மனத்த ளாகும்.

28. இன்னும் விவரமாகப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். தாயின் செய்தியைச் சொல்லுகின்றோம். சிங்கம்போல் கோபம் கொள்ளுவாள். பன்னிப் பன்னிப் பேசுபவள். ஏழைகட்கு அன்னமளிப்பவள். அடக்கமாகப் பேசுபவள். அற்பமான எண்ணங்கள் உள்ளவள்.

29. மங்கையும் யோக சாலி மறுமொழி யதிகங் கூறுள்
சங்கையா மனத்த ளாகுந் தைரிய மில்லா நெஞ்சம்
அங்கமும் பழுதி லாதாள் ஆபத்தென் றோரைக் காப்பள்
பொங்கிய குடும்ப மேற்பள் புகழ்ந்தோரை யாத ரிப்பள்.

29. அதிருஷ்டமுடையவள். எதிர்வார்த்தைகளை அதிகம் பேசாதவள். சந்தேகப்படக்கூடிய மனமுடையவள். தைரியமில்லாத மனத்தினள். குறையில்லாத சரீரமுடையவள். துன்பமடைந்தவரைக் காப்பாற்றுவாள். விருத்தியடையும் குடும்பத்தையடைவாள். தன்னைத் துதி செய்தவரை ஆதரிப்பாள்.

தாயின் உடன்பிறந்தவர்களும் முற்பிறவியும்

30. தன்துணை யாண்பா லொன்று
தையலர் நால்வ ராகும்
அன்னையி லுள்ளு ராகும்
அவள்பூர்வம் புகலக் கேண்மோ
தென்திசைக் கடையூர் தன்னில்
ஜனித்தனள் சேடர் வம்சம்
பொன்னெடு பணியு முண்டாய்ப்
புகழ்ச்சியாய் வாழு நாளில்;

30. ஜாதகனுடைய தாய்க்கு உடன்பிறந்தவரில் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் நால்வரும் உளர். தாயார் ஜாதகன் பிறந்த ஊரைச் சேர்ந்தவள். அவளுடைய (தாயின்) முற்பிறவியைச் சொல்லுகின்றோம். தெற்குத் திசையிலுள்ள திருக்கடையூரில் சேடர் வமிசத்தில் பிறந்து பொன்னுபரணங்கள் செல்வம் இவைகளைப் பெற்று கீர்த்தியுடன் வாழ்ந்து வருங்காலத்தில்;

தாய் முற்பிறவியில் செய்ததீவினை

31. வரன்தம்பி மனைவி தானும் மங்கலிய மின்றி வாழ
அரிவைமேல் வரன்மோ கித்து அவன்போகந்
[துய்க்கும் போது
திருமகள் அதனைக் கண்டு சிந்தையில் கோப முற்று
உறன்முறை தன்பால் சொல்லி யொதுக்கினள்
[மாதைத் தானும்.

31. தன் கணவனுடைய தம்பியின் மனைவி மாங்கல்யத்தை இழந்து இவளுடைய வீட்டில் வசித்து வந்தாள். அவள்மீது தன் கணவன் மோகங் கொண்டு அவளுடன் இன்பமனுபவித்து வந்தான். ஜாதகனுடைய தாய் அதைத் தெரிந்துகொண்டதும் கோபித்துத் தன்சுற்றத்தாரிடம் சொல்லி அப்பெண்ணை விலக்கி விட்டாள்.

32. மாதுவு மனமே வாடி யறைந்தசா பத்தைக் கேண்மோ
காதலி துணையென் றெண்ணைக் காற்றினில் பஞ்சாய்
[விட்டாய்
மேதினில் மறுஜன் மத்தில் விளங்கியே வுன்சு கத்தில்
பாதியுங் கொள்வே னென்று பகர்ந்துமே ஜலத்தால்
[மாண்டாள்.

32. அப்பெண்ணும் மனம் கலங்கிக் கூறிய சாபத்தைக் கேளுங்கள். என்னைக் கூடப்பிறந்த சகோதரிபோல் பாவிக்காமல் என்னைக் காற்றில் அலையும் பஞ்சைப்போல் தவிக்கவிட்டு விட்டாய். அதனால் உனக்கு மறுபிறவியில் ஏற்படும் சுகத்தில் நான் பாதி பங்கு கொள்வேன் என்று சொல்லி ஜலத்தில் விழுந்து மரணமடைந்தாள்.

33. கன்னிகை யக்கு லத்தில் கடந்தோர்க்கு வன்ன மீந்து
பன்மையாய்க் கால நாடு பறந்துமே பிரமன் லக்கம்
இன்னவ ளுதித்தா ளென்றேரும் எய்திடு முன்னாழ்த்
[தோஷம்
பின்துணை யாகத் தோன்றிப் போகத்தில் பாதி
[கொள்வார்.

33. ஜாதகனுடைய தாயும் அப்பிறவியில் துறவிகட்டு அமுது படைத்துப் பிறகு மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப் பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம். முற்பிறவியில் செய்த தீவினை இப்பிறவியிலும் தொடரும். இவள் மறு மனைவியாக வாழ்க்கைப்பட்டுச் சுகத்தில் பாதிப் பங்கைக் கொள்வாள்.

தாயின் மறுபிறவி

34. பின்ஜன்ம மிவ்வூர் தன்னில் பிறப்பளாஞ் சௌராட்டிர
[வம்சம்
முன்னமே குடும்பி யாகி முதல்வியும் வாழ்வா ளாகும்
மன்னனுக் கெண்ணைந் தாண்டில் மாதுரு கண்ட
[மென்றோரும்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

34. மறுபிறவியில் அவ்வூரிலேயே சௌராஷ்டிர வம்சத்தில் பிறப்பாள். உயர்வான குடும்பத்தை யடைந்து வாழ்வாள். ஜாதகனுடைய நாற்பதாம் வயதில் மரண மடைவாள் என்றோரும். உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

35. இவன்பிதா பூர்வந் தன்னை யெடுத்துமே யியம்பக்
[கேண்மோ
தவசிவா ழருணை தென்பால் சிறுவூரில் வைசியச் சேயாய்
அவனுமே வுதித்து மேலும் அழகான குடும்பி யாகிப்
பவமன மில்லா னகிப் பஞ்சைகட் கன்ன மீந்து;

35. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். தவம் செய்பவர் வாழ்ந்து வரும் திருவண்ணாமலைக்குத் தெற்கில் உள்ள சிற்றூரில் வைசிய குலத்தவனுகப் பிறந்து அழகான குடும்பத்தை யடைந்து தீய மன மில்லாமல் ஏழைகட்கு அன்னமளித்து வந்து ;

36. காலன்தன் னுட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமாங் கங்கை சேயாய்ச் சிம்மலக் கினத்தி லேதான்
சாலவே வனுட நாளில் ஜனிப்பனு மென்று சொல்வோம்
ஞாலமேல் வறுமை காணுன் நற்புக ழேற்பா னுகும்.

36. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு நல்லொழுக்கமுடைய வேளாள குலத்தவனுகப் பிறந்தான். சிம்ம லக்கினத்தில் அனுட நட்சத்திரத்தில் பிறந்தவன். உலகில் தரித்திரத்தை யடையாதவன். கீர்த்தியை அடைவான்.

தந்தையின் மரணகாலம்

37. அறுபது வேழு வாண்டில் ஆடிமா தத்தி லேதான்
குறைபக்க மேகா தசியில் குழவியி னுடல மேகும்
மறுஜன்மங் கலிங்கு தன்னில் வருவனுஞ் சத்திரியச்
[சேயாய்க்
கரிபரி யுடைய னுகிக் காவலன் போலே வாழ்வன்.

37. ஜாதகன் தனது அறுபத்தேழாம் வயதில் ஆடி மாதம் கிருஷ்ண பட்சம் ஏகாதசி திதியன்று மரணமடைவான். மறுபிறவியில் கலிங்கநாட்டில் க்ஷத்திரிய குலத்தவனுகப் பிறப்பான். யானை குதிரை முதலியவைகளை யுடையவனுய் அரசன் போல் வாழ்ந்து வருவான்.

38. பிருகுமே தடுத்துச் சொல்வார் பாலனுக் கீரைந் தாண்டுள்
அரவுதன் தசையி லேதான் அவன்சுய புக்தி தன்னில்
வரும்பிணி யனேக முண்டு மாரகம் போலே நேருங்
குருவுமே விரண்டில் தங்கக் குழவியுந் தீர்க்க சீவி.

38. பிருகு முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார் ஜாதகனுக்குப் பத்தாம் வயதுக்குள் ராகுதசை ராகு புக்தியில் வியாதி அதிகமாக ஏற்பட்டுப் பீடிக்கும். மரணமடைவது போல் துன்பங்களையடைவான். குரு இரண்டாம் வீட்டில் இருப்பதால் நீண்ட ஆயுள் உள்ளவனுவான்.

39. ஜனித்திடு காலந் தன்னில் சித்திரை முதற்பா தத்தில்
குனித்தசே யாரூண் டுந்தான் குலவிடுந் திங்க ளேழும்
வினைவருஞ் ஜாத கர்க்கு வேண்டிய கலக மில்லாந்
தனமது செலவு முண்டு சஞ்சல மனந்தந் தைக்கு.

39. ஜாதகன் பிறக்கும் காலத்தில் சித்திரா நட்சத்திரம் முதல் பாதம் செவ்வாய் தசையில் ஆறு வருடங்களும் ஏழு மாதங்களும் மீத மாகும். அக்காலத்தில் ஜாதகனுக்குத் தீங்கு ஏற்படும். அதிகமான கலகங்களும் பணச் செலவும் ஏற்படும். தந்தைக்கு மனக் கலக்கம் நேரிடும்.

40. செய்தொழி லற்ப மாகு சிறையிலே வாச முண்டு
கைப்பொருள் செலவு மாகுங் காசினில் சிந்தை யுண்டு
ஐயங்கள் நீங்கு மந்தம் யாவத்துஞ் ஜயமே வுண்டு
தையலா லொருத்தி யாலே சகலமுங் கூடு மென்றோரும்.

40. செய்யும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படாமல் அற்ப பலனைத்தரும். சிறைவாசம் ஏற்படும். கைப்பொருள் செலவு அதிக மாகும். உலகில் மனக்கலக்கம் உள்ளவன். கடைசிக் காலத்தில் சந்தே கங்கள் விலகும். எல்லாவற்றிலும் வெற்றி உண்டு. பெண் ஒருத்தி யால் எல்லாக் காரியங்களும் கைகூடும். துன்பங்கள் விலகும்.

41. ஈரு று வாண்டு மட்டும் இடருக ளில்லந் தன்னில்
மாறிடும் நதியும் பூமி மங்கையர் ஞாதி யாலே
தீராத வழக்கு நேருஞ் செப்பின வாண்டு மேலாய்க்
கூறின ஞாதி தானுங் கூத்தன்தன் பதிக்குச் செல்லும்.

41. ஜாதகனுடைய பன்னிரண்டாம் வயது வரையில் துன்பங்கள் ஏற்படும். வீட்டினுல் சண்டையுண்டு. தண்ணீர்ப் பாய்ச்சல், விளை நிலங்கள் இவற்றின் விஷயமாகவும் தன் பங்காளிப் பெண் ஒருத்தி யாலும் முடிவுறுத வழக்குகள் உண்டாகும். நாங்கள் சொல்லும் காலத் துக்குச் சரியாய் ஞாதியர் மரணமடைவர்.

42. விலகின பூமி சேரும் வெற்றியாம் நினைத்த வெல்லாங்
கலகங்கள் காணன் பின்னல் கோவலர் நேச முண்டு
பலர்களின் மதிப்புக் கொள்ளல் பார்மன்னர் தம்மால்
[பொன்னுங்
குலவிடு மென்று சொன்னேங் கூறின மொழிகுன் றுவே.

42. அவள் இறந்த பிறகு நீங்கின பூமிகள் திரும்ப வந்து சேரும். எண்ணிய காரியங்கள் கைகூடும். கலகங்கள் ஏற்படா. பிறகு அரசாங் கத்தாருடன் தொடர்பு ஏற்பட்டு நட்புக்கொள்ளுவான். பலரும் கொண் டாடும்படியாக இருக்கும். அரசாங்கத்தாரால் செல்வம் கிடைக்கும். நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகம் 40

1. கலிகலி காரி மேடங் கனகனுஞ் சீய மாகப்
புலவன்சேய் பானு மேரு புகர்தேளில் ராகு கன்னி
தலமது சிம்ம மாகச் சாற்றுவீர் பலனே யென்று
மலையிறை மகளுங் கேட்க வதிஷ்டரும் புகலு கின்றார்.

1. சந்திரன் மகரத்திலும், சனி மேஷத்திலும், குரு சிம்மத்திலும், புதன் செவ்வாய் சூரியன் தனுசிலும், சுக்கிரன் விருச்சிகத்திலும், ராகு கன்னியிலும், (கேது மீனத்திலுமாக) இருந்து, இலக்கினம் சிம்மமாஞல் பலனைக் கூறுங்கள் என்று மலையரசனுகிய ஹிமவானின் புத்திரி பார்வதி கேட்க வசிஷ்டர் சொல்லுகின்றார்.

கிரகநிலை

கேது	சனி		
	இராசி சக்கரம்		
சந்திரன்			லக்கினம் குரு
புதன் செவ்வாய் சூரியன்	சுக்கிரன்		ராகு

ஜாதகனது வீட்டினமைப்பு

2. இந்தசே யாஞஞ் ஜன்மம் இல்லமுங் கீழ்ப்பால் நோக்கந்
தென்வட வீதி யாகுஞ் சித்திர வில்ல மாகும்
பொன்னக ரொப்ப தாகும் புவிராஜர் கெடியு முண்டு
மன்னர்கள் வாச மாகும் வாடகை வீடே யாகும்.

2. இஃது ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு நோக்கியுள்ளது. அது தெற்கு வடக்காக வுள்ள தெருவிலுள்ள அழகிய வீடாகும். தேவலோகம் போலுள்ளதொரு பெரிய ஊராகும். பூமியை யாளும் அரசனுடைய கோட்டையொன்று இருக்கும். அரச குடும்பத்தினர் அவ்வூரில் வாழ்ந்து வருவர். ஜாதகன் பிறந்த வீடு சொந்தமான வீடல்ல என்றேரும்.

3. இத்தகை யடையா ளங்கள் இவனுமே வாச மாகும்
பெத்ததாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
வித்தகன் துணைவர் யோகம் விளம்புவோ மூன்பின்
[ஜன்மம்
அத்தியை வளர்த்த வெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

3. இவ்வித அடையாளங்களுள்ள வீட்டில் ஜாதகன் வசித்து வருவான். இவனைப் பெற்ற தாய் தந்தை மனைவி மக்கள் உடன் பிறந்தவர் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றையும் இந்த நூலில் சொல்லுகின்றோம். யானைமுக முடைய விநாயகனைப்பெற்று வளர்த்த எங்கள் உயிருக்குயிரான தேவியே! கேளுங்கள்.

தந்தையின் குணங்கள்

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சாந்தவா னிருநி
[றத்தன்
தன்தனஞ் சேர்ப்பா னகுஞ் சங்கரன் பூசை பூண்பன்
வந்தவர் பிணியுந் தீர்ப்பன் மந்திரம் வைத்தி யங்கள்
மூந்தியே செய்வா னகும் மூலச்சூ டுடைய னகும்.

4. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். பொறுமையை யுடையவன். கரிய நிறத்தையுடையவன். தன்னால் சம் பாதிக்கப்பட்ட பொருளை உடையவன். சிவபெருமானைப் பூசைகள் புரிந்து வருவான். இவன் தன்னிடம் வந்தவருடைய நோயைத் தீர்ப் பான். மந்திர சாஸ்திரம் வைத்திய சாஸ்திரம் இவைகளை யறிந்தவன். மூலச்சூட்டு நோயுள்ளவன்.

இதுவுமது

5. மாதரு சுகமில் லாதான் மர்மமில் லாதானும்
காதியு மதிக மேற்பன் கண்முகம் வசிய முண்டு
பாதக மனமில் லாதான் பாரினில் வறுமை காணன்
தீதென்றோர்க் குதவி செய்வன் திகம்பரர் தியானஞ்
[செய்வன்.

5. தாயினால் சுகமில்லாதவன். இரகசியமில்லாதவன். அதிக மான புகழை அடைவான். முகம் கண்கள் இவை வசிகரமாக உள்ளவை. நிய எண்ணங்களில்லாத மனத்தினன். உலகில் தரித்திரம் அடை யாதவன். துன்பமடைந்தவர்கட்கு உபகாரம் செய்பவன். திகம்பர னகிய சிவபெருமானைச் சதா மனத்தில் எண்ணிப் போற்றி வருவான்.

தந்தைக்கு இரு தாய்மார்

6. அன்னைய ரிரண்டு மாகும் அணுகிய மூன்தாய்க்
[கின்னேன்
தன்துணை காண னகுஞ் ஜனித்தவன் வறுமை யேற்பன்
கன்னென மொழியு முண்டு கல்விமா னாகை சாலி
என்னகா ரணத்தி னலே விவன்துணை தோஷ மென்றீர்.

6. இரு தாய்மார்களையுடையவன். மூத்த தாய்க்குப் பிறந்தவன் இந்த ஜாதகனின் தந்தை என்றேரும். உடன் பிறந்தவர் இல்லாதவன். தரித்திரத்தை அடைவான். சுவையுள்ள வார்த்தைகளைப் பேசுபவன். கல்விமான். ஊகமுடையவன். என்ன காரணத்தினல் ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதர தோஷம் ஏற்பட்டது.

7. காரியு நவத்தில் நிற்கப் பாம்புமே விரண்டில் தங்க
மாரனுக் காதி யில்தான் மாதுரு நஷ்ட மெய்தி
வேரொறு வன்னை நேரும் விளம்புவீ ரவர்க்குப் புத்திரர்
மாரன்போ லொருவன் தீர்க்க மடிவுண்டு மற்ற வெல்லாம்.

7. பிதுர்பாக்கியஸ்தானமாகிய ஒன்பதாமிடத்தில் சனி இருப்பதாலும் இரண்டாமிடத்தில் கேது தங்கி இருப்பதாலும் ஜாதகனுடைய தந்தை ஆதிகாலத்திலேயே தாயை இழக்க நேரிடும். வேற்றுப்பெண் ஒருத்தி மாற்றுந் தாயாக வருவாள். அவளுக்குப் புத்திர பாக்கியம் உண்டோ? சொல்லுங்கள். மன்மதன் போல் அழகிய புத்திரன் ஒருவனே பிறந்து நீண்ட ஆயுளையுடையவன். மற்றவர் நிலையார்.

தந்தையின் சகோதரன் குணங்கள்

8. மாரனின் குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி
[யாகுந்
தீரமில் லாத நெஞ்சஞ் செய்வனும் வைத்தி யங்கள்
ஆறுமா முகத்தோன் பத்தி யடைந்தோரை யாத ரிப்பன்
பாரிமார் மூவ ராகும் பாலர்க ளாண்பால் ரண்டு;

8. ஜாதகனுடைய தந்தையின் சகோதரன் குணத்தைச் சொல்லுகின்றேரும். மாந்தளிர் போன்ற மேன்மையான சரீர முடையவன். தைரியமில்லாத மனத்தினன். வைத்தியங்கள் செய்து வருவான். ஆறுமுகக் கடவுளிடம் பக்தியுள்ளவன். தன்னை யண்டி வந்தவரைக் காப்பான். மூன்று மனைவியரை அடைவான். இரு புத்திரர்களும்;

9. கன்னிகை யொன்றே தீர்க்கங்
கௌசிகர் மறித்துச் சொல்வார்
சொன்னதோர் மனைவி மூன்று
தீர்க்கமோ விரய மோசொல்
முன்ரண்டு மனைவி நஷ்ட
மூன்றுவ தாரந் தானும்
மன்னனுக் கந்தி யத்தில்
மடிவுண்டு வென்று சொன்னேம்.

9. ஒரு புத்திரியும் பிறந்து அவர்கள் நீண்ட ஆயுள் உடையவர்களாக இருப்பார்கள். விசுவாமித்திரர் இடைமறித்துச் சொல்லுகின்

ரூர். நீங்கள் கூறிய மனைவிகள் மூவரும் நீண்ட ஆயுள் உடையவரோ? இறந்து விடுவாரோ? சொல்லுங்கள். முதலில் வரும் இரு மனைவியரும் இறந்து விடுவர். மூன்றும் மனைவி ஜாதகனுடைய தந்தையின் சகோதரருடைய கடைசிக்காலத்தில் மரணம் அடைவரள் என்றேம்.

10. சுதர்களு மெம்மா துக்குத் தோன்றிடும் விவரஞ்
[சொல்வாய்
மதிமுகக் கடைமா துக்கு மைந்தர்கள் தீர்க்க மென்றேம்
இதுநிற்கத் தென்பால் தன்னில் ஈசன்போ லொருவர்
[வந்து
நீதிசேர் வாதஞ் செய்வர் நேருங்கா லங்கள் சொல்வாய்.

10. ஜாதகனுடைய தந்தையின் சகோதரருடைய எந்த மனைவிக்குப் புத்திரர் தோன்றுவர்? விவரங்களைச் சொல்லுங்கள். அழகிய சந்திரனைப்போன்ற முகமுடைய கடைசி மனைவிக்குப் புத்திரர்கள் தோன்றித் தீர்க்கமாவர் என்றேம். இஃது இவ்வாறுக, தெற்குப் பக்கத்திலிருந்து சிவபெருமானைப்போல் ஒருவர் வந்து இவனிடம் மிகுந்த வாதங்கள் புரிவார். அது ஏற்படும் காலத்தைச் சொல்லுங்கள்.

11. அறுபது வாரூண் டின்மேல் அணுகிடும் விகார மேதான்
பெருமையும் புகழு மேற்பன் புண்ணியத் தலங்கள்
[செல்வன்
பொருளது பெருக்கஞ் செய்வன் பூஷண மதிகஞ்
[சேர்ப்பன்
திருகிலா வென்றாய் வாழ்வன் செல்வதி கேட்டி டாயே.

11. ஜாதகனுடைய தந்தையின் சகோதரருக்கு அறுபத்தாரும் வயதுக்குமேல் அந்தச்சிக்கல் வரும். அதற்குப் பிறகு பெருமையை அடைவான். கீர்த்தியை யடைவான். புண்ணிய தலங்களுக்குச் செல்வான். செல்வம் அதிகரிக்கும். ஆபரணங்கள் சேரும். துன்பங்களில்லாமல் ஒன்றுக வாழ்ந்து வருவான். செல்வியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

12. தந்தையின் பூர்வந் தன்னைத் தானெடுத் தியம்பக் கேளு
தென்திசை நவபா ஷாணந் தேவியின் நகரந் தன்னில்
வன்னிய குலமு தித்து வணிபங்கள் மிகவே செய்து
அன்னவன் வாழு நாளி லணுகின வினையைக் கேண்மோ.

12. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியை எடுத்துச் சொல்லுகின்றேம். கேளுங்கள்! தெற்குத்திசையிலுள்ள நவபாஷாணத்துக்கு அருகிலுள்ள தேவிப்பட்டணத்தில் வன்னியர் குலத்தில் பிறந்து மிகப் பெரிய வர்த்தகம் செய்து வாழ்ந்துவருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள்,

13. இனமதி லொருபெண் பேரில் இடருகள் சிலவே சொல்ல
வணிபனு மதைய றிந்து மங்கையை விலக்கும் போது
சினங்கொண்டு வந்த மாது செப்பின சாபங் கேண்மோ
கனமுள புத்தி யின்றிக் கைகழுவ விட்ட பாவி.

13. தன்னுடைய சொந்தக்காரப்பெண் (பந்துவின் பெண்) ஒருத்தி மீது சில தீய வார்த்தைகளைக் கூறினன். அவளுடைய கணவன், அதைக் கேட்டு அப்பெண்ணை நீக்கிவிட்டான். கோபங் கொண்ட அந்தப்பெண் கூறும் சாபத்தைக் கேளுங்கள். தாராள புத்தி யில்லாமல் என்னைக் கைவிடச் செய்த பாவியே!

14. மற்றொரு ஜன்மந் தன்னில் வருந்துணை யில்லா தாகிப்
பெற்றதாய்ச் சுகமு மின்றிப் பூருவம் வறுமை யுண்டாய்க்
குற்றமாய் வாழ்வா யென்றுள் குலவிற்று வந்தச் சாபம்
வித்தக னந்தி யத்தில் மேவினன் சேதுக் கேதான்;

14. உனக்கு ஏற்படும் அடுத்த பிறவியில் உடன்பிறந்தவர்கள் இல்லாமல் பெற்ற தாயின் சுகமுமில்லாமல் ஆதியிலிருந்தே தரித்திர மடைந்து தினங்குடன் வாழ்ந்து வருவாய் என்றுள். அந்தச் சாபம் இவனுக்கு ஏற்பட்டது. இவனும் கடைசிக் காலத்தில் சேதுவுக்குச் சென்று;

15. அரனடி தொண்டு பூண்டு அன்னமு மவருக் கீந்து
மறலியின் பதிக்குப் புக்கு மறையவன் வரையப் பட்டுப்
பரமன்தன் னடிமை வர்க்கம் பிறந்தன னென்று
[சொன்னேம்
உறைந்திடு மாது சாபம் உடன்துணை தோஷ மெய்தும்.

15. சிவபெருமானுடைய அடியார்கட்குத் தொண்டுகள் பல செய்து, அவர்கட்கு அன்னமளித்து வந்து மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுச் சிவனுடைய அடிமைகள் வர்க்கத்தில் பிறந்தவன் என்று சொன்னேம். பெண்ணின் சாபத்தால் உடன் பிறந்தவர்கட்குத் தோஷ மேற்படும்.

16. சொல்லிய குணத்தா னுக்குச்
சுகம்பின்பா லெவ்வா றுசொல்வீர்
நல்லதோர் சேது சென்றும்
நற்காவி யோர்க்கு வன்னந்
தல்லிபோ லிந்தப் புண்ணியஞ்
சம்பத்துப் பெற்ரு னென்ரும்
வல்லவன் தனக்குப் பாலன்
மாறுவா னென்று சொல்வோம்.

16. இவ்விதம் சொல்லிய குணங்களுள்ளவனுக்குப் பிற்காலத்தில் சுகம் எங்ஙனம் ஏற்படும்? சொல்லுங்கள். நல்ல தலமாகிய சேதுவுக்குச் சென்றதாலும் பரதேசிகட்கு (காவிவஸ்திரம் அணிந்த துறவி கட்கு) அன்னம் அளித்து தாயைப்போல் காத்து வந்த புண்ணியத்தாலும் செல்வம் உண்டாகும். இவ்விதக் குணங்களையுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான் என்றேரும்.

ஜாதகனுடைய குணங்கள்

17. பாலகன் குணத்தைச் சொல்வேன் பதரினில் செல்லா
[ஞகும்
மால்மக ஞெப்ப தாகும் வாததே கத்தா னென்றேஞ்
சீலவான் மாநி றத்தான் சிந்தையு நல்ல தாகும்
வேலன்மேல் பக்தி கொள்வன் வெஞ்சினம் வெளிவி
[டாதான்.

17. ஜாதகனுடைய குணத்தைச் சொல்லுகின்றேரும். அற்ப காரியங்களில் மனம் செல்லாதவன். திருமாலின் புத்திரனுகிய மன்மதனேப்போன்ற அழகன். வாயுரோகமுடைய சரீரமுள்ளவன். நல்லொழுக்க முள்ளவன். மாநிறமுடையவன். நல்ல மனமுள்ளவன். முருகக்கடவுள்மீது பக்தியுடையவன். கோபத்தை வெளியிடாதவன்.

இதுவுமது

18. அன்னிய பாஷை மேன்மை யரசரால் தொழிலு
[மேற்பன்
பொன்பணி சேர்ப்பா ஞகும் புத்திமா னூகை சாலி
நன்மையை யெவர்க்குஞ் செய்வன் நற்கரந் தனரே
[கைதான்
தன்பந்தை யாத ரிப்பன் தருமத்தி லிச்சை யுண்டு.

18. பிற பாஷையில் அதிகமான மேன்மை பெறுவான். அதனல் உத்தியோகம் ஏற்றுச் செல்வத்தைச் சேகரிப்பான். நல்ல புத்திசாலி. ஊகமுடையவன். எல்லோருக்கும் நன்மையைச் செய்பவன். கையில் தனரேகையுள்ளவன். தன் சுற்றத்தாரை ஆதரித்து வருவான். தருமம் செய்வதில் விருப்பமுள்ளவன்.

ஜாதகனின் யோகம்—கிரகநிலே

19. சித்தஜன் தனக்கு யோகஞ் செப்பின காரணஞ்சொல்
பத்தினுக் குடையோன் நாலில் பரிதிசேய் புதனு
[மைந்தில்
உத்தமக் குருவுஞ் ஜன்மம் உரகனுங் கன்னி யாகப்
பெத்ததால் வேசி யோகம் பேரிகை யோக மொன்று;

19. ஜாதகனுக்கு யோகம் ஏற்படக் காரணத்தைக் கூறுங்கள். பத்தாம் வீட்டுக்குரிய சுக்கிரன் நான்காமிடத்திலும், சூரியன் செவ்வாய் புதன் ஐந்தாமிடத்திலும், குரு ஜன்மத்திலும், ராகு கன்னியிலுமாக இருப்பதால் வேசியோகம், பேரிகையோகம் ;

20. அளகேச யோக மென்று அறைந்தனம் மூன்று யோகந்
தளபதி யாகி வாழ்வன் தந்தைமேல் புகழு மேற்பன்
உளமதில் கவடு மில்லான் உயர்வோர்கள் நேச யோகந்
தளைபடு காவ லில்லான் தாட்சிண்யன் கனத்த புத்தி.

20. அளகேசயோகம் ஆகிய இம்மூன்று யோகங்களும் ஏற்பட்டுப் பெரிய அதிபதியாக வாழ்ந்து வருவான். தன் தந்தைக்குமேல் கீர்த்தியடைவான். மனத்தில் வஞ்சகமில்லாதவன். பெரியோர்களுடைய நட்பைக் கொள்ளுவான். கட்டுப்பாடில்லாதவன். தாட்சண்யமுடையவன். தாராள புத்தியுடையவன்.

21. எந்தக்கா லத்தில் ராஜ யோகமு மென்று சொல்வாய்
வந்தவன் மூவெட் டாண்டில் மன்னரால் தொழிலு [மேற்பன்
சந்திரன் பிறைபோல் யோகந் தங்கிடு மன்பா னலும்
பிந்தியும் ராச மூலம் பொருள்வாங்கி யுய்வன் தானே.

21. ஜாதகனுக்கு எந்தக் காலத்தில் ராஜயோகம் ஏற்படும் என்று சொல்லுங்கள். ஜாதகனுடைய இருபத்துநான்காம் வயதில் அரசாங்கத் தொழிலை ஏற்று வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் அடைவான். ஐம்பத்துநான்காம் வயது வரையிலும் (உத்தியோகம் பார்ப்பான்) அதற்குப் பிறகு அரசாங்கத்தாரிடமிருந்து பொருள் வாங்கி (உபகாரச் சம்பளம்) வாழ்ந்து வருவான்.

22. இதுமத்தில் தொழிலுக் கீன
மெய்தாதோ விவரஞ் சொல்வாய்
விதவிதக் கலகம் நேரும்
வேதியன் ஜன்மந் தங்க
அதமாகும் வினைகள் யாவும்
அறிவிப்போம் பின்பால் சேதி
மதிசடை யணிந்தோன் மாதே
மணக்காலம் புகலக் கேண்மோ.

22. இதற்கிடையில் இவனுடைய உத்தியோகத்துக்கு இடருகள் வாராவோ? விவரம் சொல்லுங்கள், என்று கேட்கும்போது, (முனிவர்கள் பதிலுரைக்கின்றனர்). குடும்பம் உத்தியோக நிமித்தமாகப் பற்பல கலகங்கள் நேரிடும். குரு ஜன்மத்தில் தங்கியிருப்பதால்

எல்லாவிதமான தீங்குகளும் அழிந்து போம். மற்ற விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். சந்திரனைச் சடைமுடியில் அணிந்த சிவபெருமானின் தேவியே! ஜாதகனுடைய திருமணக்காலத்தைக் கூறுகின்றேம். கேளுங்கள்.

23. இருபது வாறு வாண்டில் இவனுக்குப் பாரி வாய்க்கும்
வருங்கன்னி மேல்பால் நேரு மறைகிறே மவள்கு
[ணத்தைத்
திருகிலாக் குணத்தா ளாகுஞ் ஜனவுப காரி யாகும்
பெருமையும் புகழு மேற்பள் பூமியில் வறுமை காணுள்.

23. ஜாதகனுடைய இருபத்தாரும் வயதில் அவனுக்குத் திருமணம் நிகழும். மேற்குப் பக்கத்திலிருந்து மனைவி வாய்ப்பாள். அவளுடைய குணத்தைக் கூறுகின்றேம், கேளுங்கள். தீங்குகளில்லாத குணத்தினள். ஜனங்களுக்கு உபகாரி. பெருமையும் கீர்த்தியும் அடைவாள். தரித்திரத்தை அடையாதவள்.

24. மாதவும் வந்த பின்பு வரனுக்கு யோக மென்றேம்
மாதவுந் தீர்க்க ஜீவி மாமுனி தடுத்துச் சொல்வார்
காதலன் தனக்குத் தாரங் கழறுவோ மிரண்டு மாக
ஓதவே வந்தச் சங்கை உரகனு மிரண்டில் தங்க;

24. ஜாதகனுக்கு மனைவி வந்த பிறகு யோகம் பெருகும் என்றேம். அப்பெண் நீண்ட ஆயுள் உடையவள். முனிவர் பெருமான் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டு என்று சொல்லுகின்றேம். அதற்கு காரணத்தைக் கூறுங்கள். ராகு இரண்டாமிடத்தில் இருப்பதாலும்;

இருதாரமேற்படக் கிரகநிலையும் மறுப்பும்

25. சத்தமத் தோன்ச ரத்தில் சார்ந்துமே நீச மாகப்
பத்தினி யிரண்டு வென்றேம் பராசரந் தடுத்துச்
[சொல்வார்
சுத்தமாய்க் குருவேழ் நோக்கச் சுக்கிரன் நாலில் தங்கச்
சத்தியு மொன்றே தீர்க்கஞ் சாட்சிக ளொன்று
[கேண்மோ.

25. ஏழாமிடத்திற்குரிய சனி சரஸ்தானத்திலும், நீசமாக மேஷத்தில் இருப்பதாலும் ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டு என்றேம். பராசர முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். குரு லக்கினத்திலிருந்து களத்திர ஸ்தானமாகிய ஏழாமிடத்தைப் பார்ப்பதாலும், சுக்கிரன் நான்காமிடத்தில் இருப்பதாலும், ஜாதகனுக்கு மனைவி யொருத்தியே நீண்ட ஆயுளுள்ளவள். இதற்குச் சான்று ஒன்று கூறுகின்றேம்.

வேறு

26. இதற்குநே ரிடையாய்ச் சாதகச் சுருதி
யிதிலேழா மிடத்திலே பாரு
அதில்சொல்லும் விவர மிரண்டேழோன் கேந்திரம்
ஆகிலுங் கோணத்தி லிருக்கச்
சதியிலாத் தார மொன்றென மொழிவோஞ்
சங்கையை விவரமாய்க் காண்பாய்
அதுவின்றி வர்க்கில் பரலுமே வொன்று
அறைந்தனம் விவரங்கள் காண்பாய்.

26. இதற்குச் சான்றாக ஜோதிட நூலில் ஏழாம் பாவத்தைப் பார்க்க. அதில் உள்ள விவரத்தைக் கேளுங்கள். இரண்டாம் வீட்டுக்கும் ஏழாம் வீட்டுக்குமுரியவர்களான இருவரும் கேந்திர ஸ்தானத்திலிருந்தாலும் கோண ஸ்தானத்தில் இருந்தாலும் சந்தேகமின்றி மனைவி ஒருத்தியே யாவள். அந்தச் சந்தேகத்தை நன்றாகப் பாருங்கள். அதுவும் தவிர பரல் ஒன்று இருக்கும். அந்த விவரத்தையும் நீங்கள் பார்க்கலாம்.

வேறு

ஏழாமிடத்துக்குரியவன் நீசனானதன்பலன்

27. ஆகிலு மேழோ நீசம் அணுகின பலத்தி னலே
போகிடு மிவன்முன் பாரி புகலுவீர் காலந் தன்னைப்
பாகமா யன்பா னறில் பாவையு மரிப்ப ளாகும்
போகவா ரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

27. இவ்விதம் இருந்தபோதிலும் ஏழாம் வீட்டுக்குரிய சனி தன் நீசஸ்தானமாகிய மேஷத்தில் இருக்கும் பலத்தால் ஜாதகனுடைய மனைவி அவனுக்கு முன்பாக மரணமடைவாள். அஃது எந்தக் காலத்தில் என்று சொல்லுங்கள். முனிவரே! திண்ணமாக ஐம்பத்தாறும் வயதில் மனைவி இறந்து விடுவாள். யோகக்கடலாகிய கணவனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

புத்திரபாவம்—கிரகநிலை

28. புத்திர ரிருகான் காகப் பிறந்திடு மதிலாண் மூன்று
சத்தியு மொன்றே தீர்க்கந் தீங்காகு மற்ற வெல்லாங்
குத்தங்க ளதற்குச் சொல்வோங் குஜன்பரி யோனு
[மைந்தில்
சித்தமா யிருப்ப தாலே செப்புவோங் கேளுந் தாயே.

28. ஜாதகனுக்கு எட்டுக் குழந்தைகள் தோன்றுவர். அவர்களில் மூன்று புத்திரர்களும் ஒரு புத்திரியும் மட்டுமே நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். மற்றக் குழந்தைகள் நிலையா. குழந்தைகள் நிலையாத

காரணத்தைக் கூறுகின்றேம். செவ்வாய் சூரியன் புத்திர ஸ்தானத்தில் இருப்பதால் அவ்விதம் சொன்னேம். தாயே! கேளுங்கள்.

29. முதலிரண் டைந்து மேழு
மேவாவே யென்று சொல்வோம்
அதிபன்தன் துணைவர் சேதி
யறைகிறே நவம தாகும்
அதுகளி லாண்பால் மூன்று
அம்பிகை யொன்றே தீர்க்கம்
உதவாது மற்ற வெல்லாம்
உறங்கிடு மென்று சொல்வோம்.

29. முதலில் தோன்றும் இரு குழந்தைகள், ஐந்தாவது, ஏழாவது, குழந்தைகள் இறந்து விடும் என்று சொல்லுகின்றேம். ஜாதகனுடைய சகோதர பாவத்தைச் சொல்லுகின்றேம். அவர்கள் ஒன்பதின்மர். அவரில் மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் நிலையானவர்கள். மற்றவர்களனைவரும் இறந்து விடுவர் என்று சொல்லுகின்றேம்.

முற்பிறவி

30. பாலகன் முன்ஜன் மத்தைப் பகருவோ மினிமே லாகச்
சீலமாம் விரிஞ்சி தன்னில் ஜனித்தனன் கங்கை சேயாய்ப்
பாலிகை மதலை யுண்டாய்ப் பாரினுல் ஜீவித் தேதான்
ஆலத்தை யுண்டோ னுக்கு அன்புடன் பணிகள் செய்து;

30. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். கல்லொழுக்கத்தையுடையவர்கள் வாழும் விரிஞ்சி நாட்டில் வேளாளர் குலத்தவனுகப் பிறந்து, மனைவி மக்களைப் பெற்று, விவசாயம் செய்து ஜீவித்து வந்தான். கொடிய விஷத்தையுண்ட நீலகண்டனுக்கு (சிவபெருமானுக்கு)ப் பக்தியுடன் திருப்பணிகள் செய்து;

31. வருமார்க்கந் தாகப் பந்தல் வைத்துப்பூஞ் சோலை நேர்ந்து
மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக னிச்சென் மத்தில் ஜனிப்பனு மென்று
[சொல்வோங்
கரிமத வாணை பெற்ற காதலி கேட்டி டாயே.

31. சாலை யோரங்களில் தண்ணீர்ப்பந்தல்களை அமைத்து, பூந்தோட்டம் முதலியவற்றை வைத்து, மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான் என்று சொன்னேம். கரிய யானைமுகத்தோனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

32. இன்னவன் யோகச் சேதி யிசைக்கிறே முனியே கேளும்
மன்னனு லதிகா ரங்கள் மருவிடு மூவெட் டாண்டில்
பொன்பணி யில்லம் யாவும் பெருவாணி யாயி ரம்பொன்
உன்னதக் கல்வி தானும் உயர்வாகு மிருபான் மூன்றில்.

32. ஜாதகனுடைய யோகச்செய்திகளைக் கூறுகின்றேரும். முனிவரே! கேளுங்கள். இருபத்துநான்காம் வயதில் அரசனுல் அதிகாரங்கள் பெற்று, பொன்னுபரணங்கள், வீடு முதலியவற்றைப் பெற்று ஐயாயிரம் பொன் சேர்ப்பான். உயர்ந்த கல்வி இருபத்துமூன்று வயது வரையில் மேன்மேலும் விருத்தியாகும்.

தாயின் குணங்கள்

33. தல்வியின் குணத்தைச் சொல்வேன் சாந்தமாஞ் சரச [வார்த்தை
நல்லவ ளெவர்க்கு மேதான் நாயகி வந்த பின்பு
அல்லல்க ளில்லா ளாகும் அவசர மனமுங் கொஞ்சம்
சொல்லது சுருக்க மாகும் துணைவர்க ளில்லா வாழ்வள்.

33. ஜாதகனுடைய தாயின் குணங்களைக் கூறுகின்றேரும். பொறுமையுடையவள். சரசசல்லாபமாகப் பேசுபவள். எல்லோருக்கும் நல்லவளாக இருப்பாள். இவளுக்கு மணமான பின்பு துன்பங்கள் இல்லாதவள். சிறிது அவசர மனமும் உடையவள். சுருக்கமாகப் பேசுபவள். உடன்பிறந்தவர்களில்லாதவள்.

34. வரணுடை மனத்துக் கேத்தோள் மாந்தளிர் மேனி [யாகும்
உறன்முறை தனைக்காப் பாளாம் உறுதியில் லாத [நெஞ்சம்
அரிவையுஞ் சீலி யாகும் அடாவடி கூரு ளாகுந்
திருமக ளொப்ப தாகுஞ் செப்புவோ மிவளின் பூர்வம்.

34. தன் கணவன் மனத்துக்குத் தக்கபடி நடப்பவள். மாந்தளிர் போன்ற மென்மையான உடலுள்ளவள். தன் சுற்றத்தாரைக் காப்பவள். திடமில்லாத மனமுடையவள். நல்லொழுக்கமும் உள்ளவள். அடாவடியாகப் பேசாதவள். இலக்குமியைப் போன்றவள். இவருடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும்.

தாயின் முற்பிறவி

35. தென்திசைப் பழனி தன்னில்
ஜனித்தனள் கோகு லத்தில்
தன்வரன் மதலை யுண்டாய்த்
தான்வாழ்நாள் வினையைக் கேண்மோ

தன்னில்ல மடைக்க லானுங்
தான்வாழு மதைக்க லேத்தாள்
தன்கரு வுடைய பட்சி
சாலங்கள் சோர்ந்த தென்றேரும்.

35. தெற்குப்பக்கத்தில் உள்ள பழனி என்ற க்ஷேத்திரத்தில் இடையர் மரபில் பிறந்து கணவன் புத்திரர்கள் இவர்களையடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். இவளுடைய வீட்டில் ஒரு பட்சி கூடு கட்டி வாழ்ந்து வந்தது. அக்கூட்டைக் கலைத்தாள். சிறு குஞ்சுகளும் முட்டைகளும் அழிந்தன.

36. மாதவு மந்தி யத்தில் மதிபிறை யணிந்தோ னுக்குச்
சூதின்றி யாவின் பாலைத் தந்தனள் பூசைக் கேதான்
வேதனை யின்றி வாழ்ந்து மேவினள் கால நாடு
மாதவன் வரையப் பட்டு வந்தவ ளென்று சொல்வோம்.

36. தன்னுடைய கடைசிக்காலத்தில் சந்திரனைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானுக்கு அபிஷேகத்துக்கு ஒளிவில்லாமல் பசுவின் பாலைக் கொடுத்து வந்தாள். துன்பங்கள் இல்லாமல் வாழ்ந்து வந்து பிறகு மரணமடைந்தாள். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தவள் ஜாதகனுடைய தாய் என்று சொல்லுகின்றோம்.

37. ஆகையால் பட்சி சாபம் அணுகின பலத்தி னாலே
தோகையி னில்லம் பாழாந் துணைவர்கள் தோஷ [மெய்தும்
போகபாக் கியங்க ளெவ்வாறு பொருந்திடும் விவரஞ் [சொல்வீர்
பாகமா யாவின் பாலும் பரனுக்கு ஈந்த புண்யம்.

37. பட்சியின் கூட்டைக் கலைத்த தோஷத்தால் இவளுடைய வீடு பாழடைந்து போம். உடன்பிறந்தவர்களுக்குத் தோஷமுண்டாம். மற்ற சௌக்கியங்கள் எவ்விதத்தால் ஏற்படும்? விரிவாகக் கூறுங்கள். சுத்தமான பசுவின் பாலைச் சிவபெருமானுக்குக் கொடுத்து வந்த புண்ணியத்தால் நலன்கள் உண்டாகும்.

தாயின் மறுபிறவி

38. வரனுலே சுகமு மேற்ப ளறைகிறே மிவள்பின் ஜன்மந்
திருக்காஞ்சி தன்னி லேதான் ஜனிப்பளா மிக்கு லத்தில்
பொருளது பெருக்க முண்டாய்ப் புண்ணிய வதியும் [வாழ்வள்
அறுமுகன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

38. தன் கணவனுல் சுகம்டைவாள். இவளுடைய மறுபிறவி யைச் சொல்லுகின்றேம். காஞ்சிபுரத்தலத்தில் இதே குலத்தவ ளாகப்பிறந்து, செல்வம் பெருகிப் புண்ணியவதியாக வாழ்ந்து வருவாள். ஆறுமுகக் கடவுளைப் பெற்று வளர்த்த அம்பிகையே! கேளுங்கள்.

தாய் தந்தையரின் இறுதிக்காலம்

39. இருபது வேழு வாண்டில் எய்திடுங் கண்ட மொன்று
மறலியைக் காணு தாகு மாறஞ்சு வாண்டில் நேரும்
பெறுந்தந்தை யிருப தாண்டில் புகுவனுங் கால நாடு
மறுஜன்மம் வேங்க டத்தில் வருகுவான் சத்ரியச் சேயாய்.

39. ஜாதகனுடைய தாய்க்கு இவனுடைய இருபத்தேழாம் வயதில் கண்டம் ஏற்படும். அப்போது மரணம் நேரிடாமலிருப்பின் முப்பதாம் வயதில் மரண மடைவாள். தந்தை ஜாதகனின் இருபதாம் வயதில் மரண மடைவான். மறுபிறப்பில் திருவேங்கடத்தில் கூடித்திரிய குலத்தவனுகப் பிறப்பான்.

ஜாதகனுடைய மரணகாலம்

40. மைந்தனின் மரண கால மறைகிறே மறுபா னிரண்டில்
முந்தின மகர மாத முயர்பக்க மொன்று நாளில்
இந்தவ னுடல மேகு மியம்புவோம் பின்பால் சேதி
கந்தன்வாழ் போரூர் தன்னில் கலப்பனு மிக்கு லத்தில்.

40. ஜாதகனுடைய மரண காலத்தைக் குறிக்கின்றேம். அறுபத் திரண்டாம் வயதில் தை மாதத்தில் சுக்கிலபட்சம் பிரதமை திதியில் ஜாதகன் மரண மடைவான். மற்ற செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். முருகக் கடவுள் எழுந்தருளியிருக்கும் திருப் போரூரில் இதே குலத்தில் பிறப்பான்.

41. உதித்திடு காலந் தன்னில் ஓணத்தின் முதல்பா தத்தில்
மதிதசை யாண்டு வெட்டு மாதமோ ரிரண்டே யாகுஞ்
சதியிலாப் பூர்வஞ் சொன்னேஞ் சாற்றுவோம் பின்பால் [சேதி
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

41. ஜாதகன் பிறக்கும் காலத்தில் திருவோண நக்ஷத்திரம் முதல் பாதம் நடைபெறும். அப்போது சந்திரமகா தசை எட்டு வருடங்களும் இரு மாதங்களும் மீதமாகும். சந்தேகமின்றி முதல் பாகத்தைச் சொன்னேம். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். முனிவர்களை ஆதரிக்கும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 41

1. அரியது வுதய மாக [1]அருக்கன்பொன் புதனி ரண்டில்
கரியவன் புகரு நான்கில் கார்க்கோட னஞ்சில் தங்கக்
குறைமதி யிருநான் காக [2]குசன்கேது லாபம் நிற்க
உரைப்பீர்கள் பலனை யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகி, சூரியன் குரு புதன் இரண்டாமிடமாகிய கன்னியிலும், சனி சுக்கிரன் நான்காமிடமாகிய விருச்சிகத்திலும், ராகு ஐந்தாமிடமாகிய தனுசிலும், சந்திரன் எட்டாமிடமாகிய மீனத்திலும், செவ்வாய் கேது லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், இருப்பின் பலனைச் சொல்லுங்கள் என, பார்வதிதேவி கேட்கின்றாள்.

கிரகநிலை

சந்திரன்			கேது செவ்வாய்
	இராசி சக்கரம்		
			லக்கினம்
ராகு	சனி சுக்கிரன்		சூரியன் குரு புதன்

ஜாதகனது விட்டுநிலை

2. அத்திரி புகலு கின்றார் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் வடவாடை கீழ்மேல் வீதி
உத்தர மோடை காணும் உயர்மேற்கில் தந்தி வாசம்
பத்திர காளி கந்தன் பகருவோங் குணக்கி லேதான்.

2. அத்திரி முனிவர் கூறுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றோம். அது கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு வரிசையிலுள்ளது. வடக்குப் பக்கத்தில் ஒரு மேரோடை யுண்டு. மேற்குப் பக்கத்தில் விநாயகர் ஆலயமும், கிழக்குத் திக்கில் காளிகோயிலும், முருகப்பிரான் ஆலயமும் உள்ளன.

3. தென்திசை கதிபா லாறு சிறப்புற்ற வூரே யாகும்
அன்னவன் பின்ஜன் மந்தான் அறுமுக னடியார்
[வர்க்கம்
இன்னவ னுதிப்பா லுகு மியம்புவோங் குடும்பச் சேதி
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

---

1. சூரியன்.
2. செவ்வாய்

3. தெற்குப் பக்கத்தில் பாலாறும் உள்ள ஒரு சீர்பெற்ற ஊராகும். அவன் நான்காம் வருணத்தவனுகச் செங்குந்த மரபில் பிறப்பான். அவனுடைய குடும்பச் செய்திகளைக் கூறுகின்றேம். உயர்ந்த யானை முகத்தையுடைய விநாயகனைப்பெற்ற குணவதியே! கேளுங்கள்.

தந்தையின் உடன்பிறப்பு

4. தந்தையின் துணையா னிரண்டு சாற்றுவோம் தீர்க்க மாக
மூன்றின துணைவ ராக மொழிகிறேம் தாயே கேளும்
அந்தவர் வேறுய்ச் செல்வர் அணுகாது கன்னி தானும்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி.

4. ஜாதகனுடைய தந்தையின் உடன்பிறந்தவரைச் சொல்லுகின்றேம். இரு சகோதரர்கள் ஜாதகனுடைய தந்தைக்கு மூத்தவராகவும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாகவும் உளர் என்று கூறுகின்றேம். தாயே! கேட்டிடுவாய். அந்தச் சகோதரரிருவரும் தனியாகச் சென்று விடுவர். உடன்பிறந்த சகோதரிகளில்லாதவன். பிற்பாகத்தில் அவர்களுடைய செய்திகளைக் கூறுகின்றேம்.

வேறு

தந்தையின் குணங்கள்

5. தந்தைகுணங் கூறுகின்றே மாகி றத்தான்
சரசமாய் வார்த்தையுண்டு சமதே கத்தன்
சிந்தையினில் கவடில்லான் வறுமை காணுன்
ஜீவனங்கள் நெசவென்றே நெ சிலைடை வார்த்தை
கந்தன்மேல் பக்திமிகுந் தரணி சேர்ப்பன்
கஞ்சமாம் ரேகையுண்டு கனத்த புத்தி
எந்தநாளு மன்னங்கள் குறைவில் லானும்
இவன்துணைசொல் தடுக்கானும் இடர்செய் யாதான்.

5. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றேம். மாநிறமுடையவன். சரச சல்லாபமாகப் பேசுபவன். சமமான உடலமைப்புள்ளவன். மனத்தில் கபடமில்லாதவன். தரித்திரமில்லாதவன். நெசவுத்தொழிலால் ஜீவனம் நடத்துவான் என்றேம். இருபொருள் படும்படியாக பேசுபவன். முருகக் கடவுள்மீது அதிகமான பக்தியையுடையவன். விளை நிலங்களைச் சேர்ப்பான். கையில் பத்மரேகையுடையவன். தாராள புத்தியுள்ளவன். எக்காலத்திலும் சாப்பாட்டிற்கு வறுமையில்லாதவன். தன் சகோதரனுடைய வார்த்தைகளை மீறுதவன். துன்பங்களைப் பிறருக்குச் செய்யாதவன்.

இதுவுமது

6. செய்ந்நன்றி மறவாதான் தீர நெஞ்சன்
சிவபூசை தனைச்செய்வ னந்தி யத்தில்
ஐயமன முடையவனு மறிவோர் நேயன்
ஆதில்சிவ பூசையுண்டு மத்தில் செய்யான்
பொய்யுரையான் நடைகடிது சமமாங் கல்வி
பித்தச்சூ டுடையவனும் புயப லத்தன்
தையல்சொல் கடவாதான் சொல்சு ருக்கஞ்
சதுஷ்பாதம் விருத்தியல்பந் தந்தை தானே.

6. பிறர் செய்த உபகாரங்களை மறவாதவன். தைரியமுள்ள மனத்தினன். கடைசிக் காலத்தில் சிவபூஜை செய்து வருவான். சந்தேகமுள்ள மனத்தினன். படித்தவர்களாகிய அறிவாளிகட்கு நண்பன். ஆதிகாலத்திலும் சிவபூஜை செய்து வருவான். இடைக் காலத்தில் அதனைச் செய்யாது விட்டு விடுவான். பொய் பேசாதவன். வேகமாக நடப்பவன். சமமான கல்வி யறிவு உள்ளவன். பித்தச் சூட்டு சரீரி. தோள்வலி வுள்ளவன். மனைவியின் வார்த்தையை மீறுதவன். சுருக்கமாகப் பேசுபவன். கால்நடைகளின் பெருக்கமில்லாதவன். தந்தை இவ்விதக் குணங்களுள்ளவன்.

ஜாதகனது குணங்கள்

7. சொன்னவிந்த குணத்தானுக் கிந்தப் பாலன்
தோன்றுவா னவன்குணத்தைச் செப்பக்
[கேண்மோ
கன்னல்மொழி மாநிறத்தன் கல்வி மானுங்
கடந்தோர்கள் நேசமுண்டு காம னெப்பாம்
அன்னியர்கள் மதிக்கவுய்வ னடக்க வார்த்தை
ஆண்மையாய்க் குடும்பமுறு மாட்கள் சேர்க்கை
பொன்பணிகள் சேர்த்திடுவன் பூமி விருத்தி
பிதாமேலாய் வாழ்ந்திடுவன் பெருமை யோனும்.

7. இங்ஙனம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். இனிய சுவையுள்ள வார்த்தைகளையே பேசுபவன். மாநிற முடையவன். கல்வியறிவுள்ளவன். துறவிகளுடைய நட்பைப் பெற்றவன். மன்மதனைப் போன்ற அழகன். பிறர்கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். அடக்கமாகப் பேசுபவன். குடும்பத்தைத் தானே ஏற்று நடத்துவான். பணியாட்கள் உள்ளவன். பொன்னுபரணங்களைச் சேர்ப்பான். விளை நிலங்களையும் பெருக்குவான். தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். பெருமையை யுடையவன்.

இதுவுமது

8. உண்டிசுக முறைப்பிலிச்சை யூகை சாலி
உளங்கருப்பு மில்லாதா னுவமை வார்த்தை
பண்டுநாள் தொழில்மேன்மை செய்வா னுகும்
பதர்செல்லான் பலவணிபம் பண்ணு வானுங்
கண்டிதமே பேசாதான் கருணை யாளான்
[1]கார்க்கோடன் போல்கோபங் கலந்து தாழ்வன்
எண்டிசையும் நல்லவனு மெதிரிக் கஞ்சான்
இல்லத்துக் கிருபுறத்தா ரிரக்க மாவர்.

8. சுகமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். காரமான பதார்த்தங்களைப் புசிப்பதில் விருப்பமுடையவன். ஊகமுடையவன். மனத்தில் தீய எண்ணங்களில்லாதவன். உபமானங்களுடன் பேசுபவன். வெகு நாட்களாகச் செய்து வரும் குடும்பத் தொழிலில் மேன்மை யடைவான். அற்ப காரியங்களில் மனம் செல்லாதவன். பலவிதமான வர்த்தகம் புரிவான். கண்டிப்பாகப் பேசாதவன். இரக்கமுள்ள மனத்தன். ஸர்ப்பம்போல் விரைவில் கோபம் கொள்ளுவான். விரைவில் சாந்த மடைவான். எட்டுத் திக்குகளிலும் நல்லவன் என்ற பெயரைப் பூண்பான். விரோதிகட்குப் பயப்படாதவன். இவனுடைய வீட்டிற்கு இரு புறங்களிலும் உள்ளவர் இவனிடம் அனுதாபமுடன் இருப்பர். (இரு புறங்களிலுமுள்ள வீடுகள் தாழ்ந்து இருக்கும்.)

ஜாதகனுடைய சகோதரபாவமும், சகோதரனின் இயல்புகளும்

9. அவன்துணை மூன்பின்சேத மறைந்தேன் பாரு
அதற்குமேல் விருத்தியென்றே மஞ்சாந் தீர்க்கம்
பவமில்லா வாணென்று கன்னி யவ்வார்
பகருவோந் தீர்க்கமாய்ப் பால னுக்குத்
தவசிகளே துணைசேதி சாற்றக் கேண்மோ
சந்தேக மனமுடையன் தைரி யத்த
னவனிகளுக் சேர்த்திடுவன் கல்வி மேன்மை
நாடெலாம் வசியமுறும் நங்கை மோகன்.

9. ஜாதகனுக்கு முன்னுல் பிறந்த சகோதரனும் பின் பிறந்த சகோதரனும் இறந்து விடுவர். பிறகு தோன்றும் ஐவர் விருத்தியடைவர். தீமையில்லாத சகோதரன் ஒருவனும் சகோதரி ஒருத்தியும் தோன்றி நீண்ட ஆயுள் உள்ளவர்கள் ஆவார்கள். தாயே! ஜாதகனுடைய சகோதரனின் விவரத்தைச் சொல்லுகின்றேம். கேளுங்கள். சந்தேகமுள்ள மனத்தினன். தைரியசாலி. விசாலநிலங்களைப் பெருக்குவான். கல்வியில் மேன்மையுள்ளவன். உலகத்தினர் இவனுடைய புகழுக்கு வசப்படுவர். பெண்கள்மீது மையல் கொள்ளுபவன்.

1. சர்ப்பம்

சகோதரனின் இயல்புகள்

10. மோகனத் திரம்போல ஜனம யக்கன்
மொழிகாப்பன் வறுமையிலான் முருகன் பக்தி
ஆகமத்தின் பயனறிவான் தறிகள் விருத்தி
அடைந்தோரை யாதரிப்பன் அரிபோல் கோபம்
நாகரி கங்களுள்ளான் தன்னூர் வாழ்வன்
நங்கையொன்று தீர்க்கமுறுஞ் சுதரா ணென்று
பாகமாய்ப் பெண்ணிருவர் பகர்ந்தோம் யாங்கள்
பாலனுமே வயதுதீர்க்கம் பாவை யேகேள்.

10. மோகனஸ்திரம் பட்டு மயங்குவதுபோல் இவனுடைய வார்த்தைகளுக்கு எல்லோரும் வசப்படுவர். சொன்ன சொற்படி நடப்பவன். தரித்திரமில்லாதவன். ஆறுமுகக் கடவுள்மீது பக்தி யுடையவன். வேதங்களின் பயனை நன்கு தெரிந்துகொள்வான். கைத்தறிப் பெருக்கமுள்ளவன். தன்னையண்டிவந்தவரைக் காப்பான். சிங்கத்தைப்போல் கோபம் கொள்ளுவான். நாகரிகமாக வாழ்ந்து வருவான். சொந்த ஊரிலேயே வசித்து வருவான். மனைவி யொருத்தியே நீண்ட ஆயுள்உள்ளவள் என்றோம். ஒரு புதல்வனும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லுகின்றோம். ஜாதகனும் தீர்க்காயுள் உள்ளவன் என்றோம். தாயே! கேளுங்கள்.

வேறு

ஜாதகனுடைய திருமணக்காலமும் மனைவியின் விவரங்களும்

11. பெண்துணை சேதி தன்னைப் பேசுவோம் பின்பா கத்தில்
இன்னவன் மணத்தின் காலம் ஈரெட்டு வாண்டில் நேருங்
கன்னிகை மேல்பால் தன்னில் கலப்பளாங் குணத்தைச்
[சொல்வேன்
கண்ணிய குடும்பி யாவள் கேவல மணுகாச் சித்தம்.

11. ஜாதகனுடைய சகோதரியைப்பற்றிய செய்திகளைப் பிற் பாகத்தில் கூறுகின்றோம். இவனுக்குத் திருமணம் பதினாறும் வயதில் நேரும். மணப்பெண் இவனுடைய வீட்டுக்கு மேற்குப் பக்கத்திலிருந்து வந்து சேருவாள். அவளுடைய குணங்களைச் சொல்லுகின்றோம். கௌரவமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவள். கேவலமடையாத மன முள்ளவள்.

12. காதலி வந்த பின்பு கணவனுக் கதிக யோகஞ்
சூதிலாள் நடையு நன்மை துறவோர்க்கு வன்ன மீவள்
போதன முடைய ளாகும் புண்ணிய மனத்த ளாகுஞ்
சீதள குணத்த ளாகுந் திருமக ளொப்ப தாகும்.

12. மனைவி வந்த பிறகு ஜாதகனுக்கு யோகங்கள் விருத்தி யாகும். அவள் கபடமில்லாதவள். நன்னடத்தையுடையவள். துறவி கட்கு அமுது படைப்பவள். பெருஞ் செல்வம் பெற்றவள். நல்லெண் ணம் பொருந்திய மனமுடையவள். குளிர்ந்த மனப்பான்மையுடையவள். இலக்குமியைப் போன்றவள்.

புத்திரபாக்கியம் ஏற்படாமைக்குரிய கிரகநிலை

13. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணெஞ்
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று
[சொல்வோம்
எத்தகைப் பலத்தி னுலே யியம்பினீ ரந்தச் சங்கை
குத்தமாய்ப் பணியு மைந்தில் குஜனுமே பார்த்த தாலே ;

13. ஜாதகனுக்குப் புத்திர விருத்தி யுண்டு என்று சொல்லக் கிரகபலமில்லை. ஒரு சமயம் தோன்றினும் அவை நிலையாமல் இறந்து போம் என்று கூறுகின்றோம். எவ்விதக் கிரக பலத்தால் அவ் வண்ணம் சொல்லுகின்றீர்கள் ? இராகு புத்திரஸ்தானமாகிய ஐந்தா மிடத்தில் இருந்து அங்காரகனுல் பார்க்கப்படுவதால் ;

14. மைந்தர்கள் தோஷ மெய்து மருவிடு முன்னுழ்ச் சாபம்
வந்ததோர் வினையைச் சொல்வீர் மாரன்மூன் ஜன்மங்
[கேளாய்க்
கந்தன்வாழ் தோகை கீழ்ப்பால் கனமுள பேரூர் தன்னில்
இந்ததோர் குலமு திந்து இடுக்கமில் லாமல் வாழும் ;

14. புத்திர தோஷம் ஏற்படும் என்று சொன்னோம். முற்பிறவித் தோஷமும் சேர்ந்தது. முற்பிறவியில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுங் கள். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம், கேளுங்கள். முருகப்பிரான் எழுந்தருளியிருக்கும் தோகைமலைக்குக் கிழக்கில் உள்ள பெரிய ஊரில் இதே செங்குந்த மரபில் பிறந்து துன்பங்களில்லாமல் வாழ்ந்து வருகின்ற ;

நல்லபாம்பைக் கொன்றது

15. காலத்தில் வினையைச் சொல்வேன்
[1]கட்செவி யில்லம் வாசந்
தோலது வாங்கும் நாளில்
தயங்கிற்று முற்றந் தன்னில்
பாலக னரங்கஞ் செய்து
பரலோகஞ் சேர்த்தா னென்றேங்
கோலமா யந்தத் தோஷங்
குலவிற்று வென்று சொல்வோம்.

1. பாம்பு

15. காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். ஒரு நல்லபாம்பு இவனுடைய வீட்டில் வசித்து வந்தது. அப்பாம்பு தோன்றிக்கும் காலத்தில் இவனுடைய வீட்டு முற்றத்தில் மயங்கிக் கிடந்தது. அதை இந்த ஜாதகன் தடியால் அடித்துக் கொன்றான். அந்தச் சர்ப்ப தோஷம் தீவினையாக இவனைப் பற்றியது என்று சொல்லுகின்றோம்.

ஏழைப் பெண்ணுக்கு அன்னமளிக்க மறுத்தது

16. பஞ்சையா யேழை மாது பாலர்க்கு வன்னம் வேண்டிக்
கெஞ்சினுள் மாரன் பக்கல் கிளிமொழி வார்த்தை யின்றி
மிஞ்சின வார்த்தை சொல்லி விரட்டினு னேழை தன்னை
வஞ்சியு மனவெ றுப்பா லறைந்திட்ட சாபங் கேண்மோ.

16. ஓர் ஏழைப்பெண் தன் குழந்தையின் பசியைப் போக்க இவனைச் சிறிது அன்னம் கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டாள். ஜாதகன் இனிய வார்த்தைகளைச் சொல்லாமல், கோபித்து, கடுமையான சொற்களைக் கூறி அவ்வேழையை விரட்டி விட்டான். ஏழைப்பெண்ணும் மனவெறுப்புடன் கூறிய சாபத்தைக் கேளுங்கள்.

17. பாலர்சோ றீயாப் பாவி பெருகாவே சுதர்கள் தாமும்
ஞாலமேல் மறுஜன் மத்தில் நல்காரே சுதர்கள் தாமும்
ஆலம்போல் சொல்லிச் சென்று ளணுகிற்று வந்தச்
[சாபஞ்
சாலவே யந்தி யத்தில் தன்சுதர் மரண மாகி ;

17. குழந்தையின் பசிக்கு அன்னம் அளிக்காத பாவியே! உனக்குக் குழந்தைகள் கிடையா. மறுபிறவியிலும் புத்திரர்கள் இல்லாமல் வாழ்ந்து வருவாய் என்ற, விஷத்தைப் போன்ற கொடிய, வார்த்தைகளைக் கூறிவிட்டுச் சென்றாள். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது. இவனும் தன் கடைசிக் காலத்தில் புத்திரர்களை இழந்து ;

18. அறுமுகன் தொண்டு பூண்டும் அதிதிகட் கன்ன மீந்தும்
வருமார்க்கந் தாகப் பந்தல் வைத்துமே மரண மாகிப்
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
அரிவையர் சாப மொன்று அரவதைக் கொன்ற
[தோஷம் ;

18. ஆறுமுகக்கடவுள்மீது பக்தியுடன் வாழ்ந்து கதியற்றவர்கட்கு அன்னமளித்து வந்து, ஜனங்கள் நடமாடும் சாலையோரங்களில் தண்ணீர்ப்பந்தல்களை அமைத்து வாழ்ந்து, மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவன் ஜாதகன் என்றோம். ஏழைப்பெண் சாபமும், சர்ப்பத்தைக் கொன்ற தோஷமும்;

சர்ப்பதோஷம் நீங்கச் சாந்திசெய்யும் முறை

19. நேரிடு மிச்சென் மத்தில் நிலையார்கள் சுதர்க ளென்றேங்
கூறுவோஞ் சுதர்க்குச் சாந்தி குணதிசை பூற்றுக்
[காட்டில்
மாரிக்கு வபிடே கித்து மலரொன்று செய்து வைத்துத்
தீரனு முள்ளூர் சென்று செம்பினுல் நாகஞ் செய்து ;

19. இப்பிறவியில் தொடரும். அதனுல் புத்திரர்கள் நிலையாக இரார். தோஷங்கள் நீங்கச் சாந்தி யொன்று கூறுகின்றேரும். கிழக்குத் திக்கில் உள்ள ஊத்துக்காட்டில் உள்ள மாரியம்மனுக்கு அபிஷேகம் செய்வித்துக் கண்மலர் ஒன்று செய்து அணிவித்து, மீண்டும் உள்ளூருக்குத் திரும்பி செப்பினுல் நாகம் போல் ஓர் உருவத்தைச் செய்து;

பெண்சாபம் விலகச் சாந்திசெய்யும் விதம்

20. கணபதி யருகில் வைத்துக் காவலன் பூசை கொள்ளப்
பிணையாக நாக சாபம் போகிடு மதுவு மின்றிச்
சினமான மாது சாபந் தீர்ந்திடக் கிரியை சொல்வேன்
தணிகைக்குப் பதினேர் கார்த்திக் தடையின்றி யிருவர்
[சென்று ;

20. விநாயகரின் அருகில் வைத்துப் பூசைகள் புரிந்து வந்தால் சர்ப்பதோஷம் நீங்கி விடும். அதுவல்லாமல் கோபங் கொண்ட பெண் இட்ட சாபம் விலகச் சாந்தி யொன்று சொல்லுகின்றேரும். ஜாதகன் தன் மனைவியுடன் முருகப்பிரான் எழுந்தருளியிருக்கும் திருத்தணிக்கு இடைவிடாமல் தொடர்ச்சியாகப் பதினேரு கார்த்திகைகள் போய் ;

இதுவுமது

21. கடைநாளில் மூவேழ் பேர்க்குக் காவல னன்ன மீந்து
இடைவிடாச் சஷ்டி நோன்பு இவனுமே கொள்வா னுகில்
மடமயில் மாது சாபம் விலகிடு மென்று சொல்வோம்
உடன்சுதர் தோன்று மென்றேரும் உத்தமி கேட்டி
[டாயே.

21. கடைசி தினத்தன்று இருபத்தொரு பரதேசிகட்கு அன்புடன் அமுது படைத்து, இடைவிடாமல் சஷ்டி நோன்பு இயற்றுவா னுகில் பெண்ணின் சாபம் விலகி விடும் என்று சொன்னேம். இந்தச் சாந்திகள் செய்தவுடன் புத்திரபாக்கியம் ஏற்படும் என்று கூறுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

22. சொற்படி செய்யா னுகில் சுதர்தோன்றூர் தோன்றில்
[தீதாம்
சொற்படி செய்வா னுகில் தோன்றிடு மாண்பா லொன்று
மைப்படி பெண்பா லிரண்டு வறைகிறேரும் தீர்க்க மாக
அப்பணி சடையோன் தேவி யருளிய மொழிகுன் றுவே.

22. நாங்கள் கூறியபடி செய்யாவிடில் புத்திரபாக்கியம் இல்லை. புத்திரர்கள் பிறந்தாலும் நிலையார். நாங்கள் சொன்னபடிச் செய்து வருவாளுகில் ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பர். கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! நாங்கள் கூறிய அருள்மொழிகள் தவரு.

தாயின் குணங்கள்

23. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள்
[சிவந்த மேனி
தன்சொல்லு மடக்க முண்டு தானிள மனத்த ளாகும்
மன்னிய வாத தேகி வருவோரை யாத ரிப்பள்
கன்னென மொழியு முண்டு கணவனுக் கினிய ளாகும்.

23. ஜாதகனுடைய தாயின் குணத்தைக் கூறுகின்றேரும். அழகுள்ளவள். சிவந்த உடலுடையவள். அடக்கமாகப் பேசுபவள். இளகிய மனமுள்ளவள். வாயுரோகமுடைய சரீரமுடையவள். தன்னை யண்டி வந்தவரை ஆதரித்து வருவாள். இனிய வார்த்தைகளையே பேசுபவள். தன் கணவனுக்குப் பிரியமானவள்.

24. தன்துணை யாண்பா லிரண்டு சத்திமா ரவ்வாறு தீர்க்கம்
அன்னையும் துலாத்தின் கோணம் அவள்பூர்வம்
[புகலக் கேண்மோ
தென்திசைப் பெண்ணை யோரஞ் ஜனித்தனள்
[மறைக்கு லத்தில்
பொன்பணி பெருக்க மாகிப் பூவையும் வாழ்ந்து மேதான்;

24. ஜாதகனுடைய தாய்க்கு இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் பிறந்து தீர்க்காயுள் உள்ளவர்களாவார்கள். தாய் துலா லக்கினத்தில் பிறந்தவள். அவளுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். கேட்பீராக. தெற்குத் திக்கில் உள்ள பெண்ணையாற்றுக்கருகில் உள்ள ஊரில் அந்தணர் குலத்தவளாகப் பிறந்து பொன், ஆபரணங்கள் இவைகளை யதிகம் பெற்று வாழ்ந்து வந்தாள். தாயே!

25. மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக ளுதித்தா ளென்றேரு ஜயமுனி தடுத்துச்
[சொல்வார்
மறைக்குல முன்ஜன் மத்தில் வந்தவள் குலந்தாழ் வாக
வருகுங்கா ரணங்கள் சொல்வீர் மாதுமுன் ஜன்மந்
[தன்னில்;

25. மரணமடைந்து பிறகு மீண்டும் பிரமதேவனுல் படைக்கப் பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்று சொல்லுகின்றேரும். ஜய

முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். முற்பிறவியில் அந்தணர் குலத்தில் பிறந்தவளான இவள் இப்பிறவியில் தாழ்வான செங்குந்த மரபில் பிறக்கும் காரணங்களென்ன வென்று சொல்லுங்கள். ஜாதகனுடைய தாய் முற்பிறவியில் ;

26. விரதங்கள் முட்டுச் செய்து
விதத்தகி வாழ்ந்த தாலே
தறித்தொழில் செய்கு லத்தில்
ஜனித்தன ளென்று சொல்வோம்
பெருஞ்சுதர் முதலில் நஷ்டம்
பேசுவோம் பாவைக் கேதான்
வறுமைக ளில்லா வாழ்வ
ளறைகிறோ மிவள்பின் ஜன்மம்.

26. தன் கடமைகளை (ஒழுங்குடன்) செய்யாமல் இருந்து விட்டதால் தறித்தொழில் செய்து வரும் இந்தச் செங்குந்த வமிசத்தில் பிறந்தாள் என்றோம். இவள் பெற்ற முதல் புத்திரன் கிலேயாமல் மரணமடைவான். தரித்திரம் இல்லாமல் வாழ்ந்து வருவாள். ஜாதகனுடைய தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம்.

தாயின் மரணகாலமும் மறுபிறவியும்

27. உத்தரந் தணிகை மேல்பால் உயரூரில் கர்ண சேயாய்
மெத்தனக் குடும்பி யாகி விதத்தகி வாழ்வா ளாகுஞ்
சத்தியே முப்பா னேழில் சண்டன்தன் பதிக்குச்
[செல்வள்
அத்தியை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

27. வடக்குத் திக்கில் உள்ள திருத்தணிக்கு மேற்கில் உள்ள ஒரு பெரிய ஊரில் கருணீகர் குலத்தில் பிறந்து கௌரவமுள்ள குடும்பியாக வாழ்ந்து வருவாள். தாயே! ஜாதகனுடைய முப்பத்தேழாம் வயதில் தாய் மரணமடைவாள். யானைமுகத்தோனைப் பெற்று வளர்த்த எங்கள் உயிருக்குயிராகிய தாயே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

28. தந்தையின் பூர்வந் தன்னைச் சாற்றுவோங் கடையூர்
[தன்னில்
வந்தனன் வேளா ஞக வளமுள குடும்பம் பெற்றுப்
பைந்தொடி மதலை யுண்டாய்ப் பாரினில் வாழு நாளில்
நிந்தைக ளொருபெண் பேரில் நிருமித்தா னென்று
[சொல்வோம்,

28. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். திருக்கடையூரில் வேளாளர் குலத்தவனுகப் பிறந்து செழிப்புள்ள குடும்பத்தையடைந்து மனைவி மக்களைப் பெற்று உலகில் வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். ஒரு பெண்மீது அடாதபழியைக் கூறினன்.

29. மாதுவின் வரனுங் கேட்டு மங்கைமேல் கோபங் காட்ட
ஓதுவா ளந்த மாது உரைத்திட்டாய் நிந்தை வார்த்தை
பாதகா மறுஜன் மத்தில் பாவையர் தூணை வ ரின்றி
மேதினில் வாழ்வா யென்ரூள் மேவிற்று வந்தச் சாபம்.

29. அந்தப் பெண்ணின் கணவன் இவ்வார்த்தைகளைக் கேட்டுக் கோபமுற்று அப்பெண்ணைக் கடிந்தான். மனம் வாடிய அப்பெண் கூறுகின்ருள் "என்மீது அடாதபழியைச் சுமத்தினையே! பாதகா! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உடன்பிறந்த சகோதரிகள் இல்லாமல், வாழ்ந்து வருவாய்" என்ருள். அந்தச் சாபம் இவனைத் தொடர்ந்தது.

30. அந்தியக் காலந் தன்னில் அவன்சேது பதிக்குச் சென்று
தென்திசைக் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
வந்தவ னென்று சொல்வோ மங்கையின் சாபத் தாலே
தன்தூணைப் பெண்பால் தோஷஞ் சங்கரி கேட்டி டாயே.

30. ஜாதகனுடைய தந்தை, தன் கடைசிக் காலத்தில் சேதுவுக்குச் சென்று நீராடி பிறகு மரணமடைந்தான் என்றேம். மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவன். பெண்ணின் சாபத்தால் உடன்பிறந்த சகோதரிக்குத் தோஷம் ஏற்பட்டது. சங்கரனின் தேவியே! கேளுங்கள்.

தந்தையின் மரணகாலமும் மறுபிறவியும்

31. ஆறஞ்சு மூன்று வாண்டில் அலரியின் தசைக்கா லத்தில்
கூறுவோம் தந்தை கண்டங் குறிக்கும்பின் ஜன்மஞ்
[சொல்வேன்
தீரமாய்ப் போரூர் தன்னில் ஜனிப்பனுஞ் சைவச்
[சேயாய்ப்
பாரினில் வறுமை யின்றிப் பாலகன் வாழ்வா னுகும்.

31. ஜாதகனுடைய முப்பத்துமூன்றும் வயதில் சூரிய மகாதசையில் தந்தை மரணமடைவான். தந்தையினுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். திருப்போரூரில் சைவ குலத்தவனுகப் பிறந்து உலகில் தரித்திரமின்றி வாழ்ந்து வருவான்.

ஜாதகன் மரணகாலம்

32. உதித்தவன் மரண கால முரைக்கின்றே மெழுப
[தாண்டில்
நதிதுலா மாதந் தன்னில் நல்கிடு மார கங்கள்
வதிஷ்டருந் தடுத்துச் சொல்வார் மாலவ னிரண்டில் தங்க
அதுதசை கண்ட மென்றே மதுவின்றி வேறு
[சொல்வார்.

32. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றேம். எழுபதாம் வயதில் நதியில் நீராடுவதால் புண்ணியத்தை யளிக்கும் துலா மாதத்தில் மரணமடைவான். வசிஷ்ட முனிவர் மற்றுத்துச் சொல்லுகின்றார். புதன் இரண்டாமிடத்தில் இருப்பதால் அவனுடைய தசா காலத்தில்தான் மரணமடைவான் என்றேம். அவரல்லாமல் வேறு ஒருவர் கூறுகின்றார்.

33. சிதிதசை காலம் தன்னில் செப்புவோ மார கங்கள்
மிகுபிணி வந்த போதும் வெள்ளியும் நாலில் தங்கத்
தகைமையாய்க் குருவு மிரண்டில் சார்ந்ததால் வயது
[தீர்க்கம்
உகமையாய் மதிக்கு வேழில் உயர்குரு விருப்ப தாலே ;

33. கேது மகாதசையில்தான் மரணம் சம்பவிக்கும். மற்றொருவர் தடுத்துச்சொல்வார். அதிகமான ரோகங்கள் வந்தபோதிலும் சுக்கிரன் நான்காமிடத்தில் இருப்பதாலும் குரு இரண்டாமிடத்தில் இருப்ப தாலும் நீண்ட ஆயுள் உள்ளவன். சந்திரனுக்கு ஏழாமிடத்தில் குரு இருப்பதால் (கஜகேசரி யோகம் உண்டு).

34. பாலகன் தீர்க்க மென்றேம் பகருவோ மிவன்பின்
[ஜன்மஞ்
சீலமா மருணை தன்னில் ஜனிப்பனு மறையோ னுகச்
சாலவே யிச்சென் மத்தில் சார்ந்தபுண் ணியங்க ளென்ன
வேலன்மேல் பக்தி யாயும் வீண்வம்பில் செல்லாத தாலும்;

34. ஜாதகன் நீண்ட ஆயுள் உள்ளவன் என்றேம். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். நல்லொழுக்கம் பொருந்திய வர் வாழும் திருவண்ணாமலையில் அந்தண குலத்தவனாகப் பிறப்பான். இப்பிறவியில் ஜாதகன் செய்த நற்செயல்கள் என்னவென்று கூறுங் கள். முருகக்கடவுள்மீது பக்தி கொண்டு வாழ்வதாலும் வீண் சண்டைக்குச் செல்லாததாலும் ;

35. அறமதி லிச்சை யாயும் அதிதிகட் கன்ன மீந்தும்
நெறியதைக் காத்து மேதான் நிமலனும் வாழ்வ தாலே
மறைக்குல முதிப்பா னாகு மறைந்தது தப்பா தாகும்
பெருவயி றோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

35. தருமம் செய்வதில் விருப்பங் கொண்டு வாழ்ந்தும் கதியற்ற வர்கட்கு அன்னமளித்தும் நேர்மையுடன் நடந்தும் வருவதால் உயர்ந்த அந்தணர் குலத்தில் பிறப்பான். நாங்கள் கூறியது தவறுது. பருத்த வயிற்றையுடைய விநாயகனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

36. காவலன் ஜனிக்குங் காலை கடைநாளில் கடைப்பா
[தத்தில்
மேவிய புதனி ருப்பு விளம்புவோ மாண்டு மூன்றுந்
தாவிய திங்கள் மூன்று சாற்றுவோம் பூர்வ பாகம்
ஆவலாய்த் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

36. ஜாதகன் பிறக்கும்போது ரேவதி நட்சத்திரம் கடைசிப் பாதம் நடைபெறும் அக்காலத்தில் புதமகாதசையில் இருப்பு மூன்று வருடங்களும் மூன்று மாதங்களுமாம். இதுவரை முதல் பாகத்தைச் சொன்னேம். விருப்புடன் தவங்கள் இயற்றும் தேவியே! கேளுங்கள்.

37. புந்தியு மிரண்டி லேறப் பூமகன் லாபந் தங்க
மந்தனும் புகரும் நாலில் மருவின பலனெவ் வாறு
கந்தன்தன் அருளி னாலே [1]கவிமகன் தசையி லேதான்
முந்துசேய்ப் புத்தி தன்னில் மேவிடும் நிதிகிட் சேபம்.

37. புதன் இரண்டாமிடத்திலும் அங்காரகன் லாப ஸ்தான மாகிய மிதுனத்திலும் சனியும் சுக்கிரனும் நான்காமிடத்திலும் இருக் கும் பலத்தால் என்ன பலன் சொல்லுங்கள். முருகப்பிரான் அரு ளால் சுக்கிர மகாதசையில் அங்காரக புக்தியில் புதையல் கிடைக்கும்.

38. தரணியை விருத்தி செய்வன் தன்பந்து மதிக்க வாழ்வன்
இருவில்லம் நேரு மென்றோ மேவலா ளதிகஞ் சோர்க்கை
குறையென்றோர்க் குதவி செய்வன் குழவியுந் தேடுஞ்
[செம்பொன்
அறுவாயிர மென்றே யோதும் அறைந்தனம் பூர்வ
[பாகம்.

38. விளைநிலங்களைப் பெருக்குவான். தன் சுற்றத்தார் கொண் டாடும்படி வாழ்ந்து வருவான் இரு வீடுகள் கிடைக்கும். பணி யாட்கள் அதிகம் உள்ளவன்: துன்பமடைந்தவர்கட்கு உபகாரி. ஜாதகன் ஆறுயிரம் பொன் சேர்ப்பான் என்று சொல்லுகின்றோம். இதுவரை முதல்பாகம் சொன்னேம்.

---

1. சுக்கிரன்

ஜாதகம் 42

1. அரியது வுதய மாக அம்புலி மூன்றில் தங்கக்
கரியவ னேழி லாகக் கதிர்குரு சேயும் லாபம்
அரவுமே வெள்ளி புந்தி அணுகிட மீரா ருக
உரைப்பீர்கள் பலனை யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகி சந்திரன் மூன்றுமிடமாகிய துலாத்திலும், சனி ஏழாமிட மாகிய கும்பத்திலும், சூரியன் குரு செவ்வாய் லாப ஸ்தானமாகிய மிதுனத்திலும், ராகு சுக்கிரன் புதன் பனிரண்டாமிடமாகிய கடகத்திலும், (கேது ஆறுமிடமாகிய மகரத்திலும்) இருப்பின் பலன் எவ்வாறு சொல்லுங்கள் என்று பார்வதி தேவி கேட்கும்போது;

ராசி சக்கரம்

			சூரியன் குரு செவ்வாய்
சனி	இராசி சக்கரம்		ராகு சுக்கிரன் புதன்
கேது			லக்கினம்
		சந்திரன்	

ஜாதகியின் வீட்டு நிலை

2. குறுமுனி புகலு கின்றார் குறித்தது பெண்பால் ஜன்மம்
வருமில்லம் வடதென் வீதி வாசலு மேல்பா லாகும்
பெருவயி றப்பன் தென்பால் பள்ளிவா சலுமே வுத்திரம்
வருநதி தென்பால் ஈசன் வளம்பெற்ற மனையு முண்டு.

2. அகத்திய முனிவர் சொல்லுகின்றார். இது பெண்ணின் ஜாதகம். இவள் பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியிலுள்ளது. மேற்கு நோக்கியுள்ள வாயிலுடையது. பெரிய வயிற்றையுடைய விநாயகக்கடவுளின் கோவில் தெற்குப் பக்கத்திலும், ஒரு பள்ளி வாசல் வடக்குத் திக்கிலும், ஒரு புண்ணிய ஆறும் நல்லதொரு சிவபெருமான் கோயிலும் தெற்குத் திசையிலும் உள்ளன.

3. இன்னமும் பலதே வாசம் இலகிய பேரு ராகும்
உன்னதச் செட்டு வோங்கும் உரைத்தவிவ் வடையா
[ளத்துள்
கன்னிகை யிரண்டாஞ் ஜன்மங் கழறுவோம் வடுகர்
[வர்க்கம்
தன்னிலே குடும்பச் சேதி சாற்றுவோ மிந்நூல் தன்னில்.

3. அஃது, இன்னும் பல தெய்வங்கள் கோயில் கொண்டுள்ள ஒரு பெரிய ஊராகும். அவ்வூரில் மிகுதியாக வர்த்தகம் நடைபெறும். இவ்வித அடையாளங்களுள்ள ஊரிலுள்ளதொரு வீட்டில் ஜாதகி தன் தந்தைக்கு இரண்டாம் பிறவியாக வடுகர் குலத்தில் பிறப்பாள் என்றேம். இவளுடைய குடும்பச் செய்தியை இந்த ஜோதிட நூலில் சொல்லுகின்றேம்.

பின்வரும் மூன்று பாடல்களில் தந்தையின் குணங்களைக் கூறுவர்

4. தந்தையின் தூணவர் தம்மைச் சாற்றுவோம் பலமு ருது
அந்தவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான்
[சிவந்த மேனி
முந்துமால் பக்தி கொள்வன் மொழியது சுகமே யாகும்
சிந்தையு நல்ல தாகுஞ் ஜனவுப காரி யாகும்.

4. ஜாதகியின் தந்தைக்கு உடன்பிறந்தவர் உண்டு என்று சொல்ல இரக பலமில்லை. தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றேம். அழகன். சிவந்த உடலுடையவன். திருமாலின் மீது பக்தி யுள்ளவன். சுகமாகவே இருப்பவன். இனிமையாகப் பேசுவான். ஜனங்களுக்கு உபகாரியாவன்.

5. ஆதியில் வறுமை யுள்ளான் அவன்தந்தை யாஸ்தி
[காணன்
பாதியின் வயது மேலாய்ப் பாக்கிய மில்லம் நேரும்
காதலி வந்த பின்பு கழறுவோம் பிறைபோல் யோகம்
மாதாவின் சுகமு மில்லான் வனவாச மாக வாழ்வன்.

5. ஆதிகாலத்தில் தரித்திரமுடையவன். தன் தந்தையால் சம் பாதிக்கப்பட்ட ஆஸ்திகள் இல்லாதவன். பாதி வயதுக்குமேல் பாக்கி யம் கிட்டும். வீடும் கிடைக்கும். மனைவி வந்த பிறகு வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். தாயின் சுகமில்லாதவன். காட்டில் வசிப்பதுபோல் தனித்து வாழ்ந்து வருவான்.

6. ஒருவர்பா லணுகி யேதான் உயருவான் வணிபத் தாலே
மருவாது வில்லம் தானு மதுத்தொழில் சிலநாள் செய்வன்
விரைவினில் நடக்க வல்லான் வீண்வம்பு மில்லா னுகும்
பொருள்பின்னல் சேர்ப்பா னுகும் பூமியில் வறுமை
[காணன்.

6. ஒருவரை யடைந்து வாழ்ந்து பிறகு வியாபாரத்தால் முன்னுக்கு வருவான். வீடு கிடைக்காது. கள்ளிறக்கி விற்கும் தொழிலைச் சில நாட்கள் (மதுவக்கைகள் விற்பனை) செய்து வருவான். வேகமாக நடக்கக்கூடியவன். வீண் சண்டைக்குச் செல்லாதவன். பிற்காலத்தில் செல்வம் சேர்ப்பான். தரித்திரமடையாதவன்.

தந்தைக்குச் சகோதரதோஷம்—கிரகநிலை

7. என்னகா ரணத்தி னலே
இவன்துணை தோஷஞ் சொன்னீர்
பொன்பானு சேயும் லாபம்
பொருந்தின பலத்தால் சொன்னேம்
முன்ஜன்ம வினையி னலு
மேவார்கள் துணைவ ரென்றேரும்
என்னவூழ் செய்தா னதனை
இயம்புவீர் முனியே நீர்தாம்.

7. ஜாதகியினுடைய தந்தைக்குச் சகோதர தோஷம் உண்டு என்று எங்ஙனம் சொன்னீர்கள். குரு, சூரியன், செவ்வாய் லாபஸ்தான மாகிய மிதுனத்தில் சேர்ந்திருக்கும் காரணத்தாலும் முற்பிறப்புத் தீவினை சேர்ந்ததாலும் தந்தைக்கு உடன்பிறந்தவாகள் இல்லை என்று சொன்னேம். என்ன தீவினை செய்தான் என்று சொல்லுங்கள்; முனிவரே! தாம்.

தந்தையின் முற்பிறவி

8. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகிறேங் கொங்கு நாட்டில்
மன்னர்தங் குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாகி
அன்னவன் வாழு நாளில் அணுகின வினையைக்
கேண்மோ
முன்னோர்க்குப் பொருளு மீந்து முறியொன்று தீட்டிக்
[கொண்டு;

8. தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். கொங்கு நாட்டில் க்ஷத்திரிய குலத்தில் பிறந்து மனைவி மக்களைப் பெற்று ஜாதகியின் தந்தை வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். அந்தணர் சிலருக்குப் பொருள் கொடுத்துப் பத்திரம் ஒன்று எழுதி வாங்கிக்கொண்டு;

9. சிலவேநாள் சென்ற பின்பு செம்பொன்னை
[வினவும் போது
நலமாகப் பின்பால் தாரேன் னளினமாய்ச் சொல்லும்
[போது
தலைவனுங் கோப முற்றுத் தனத்துக்கு விடரு மாகக்
குலவுமில் பூமி யாவும் கோவலர் தம்மால் பற்றி;

9. சின்னாட்கள் சென்றதும் பொருளைத் திரும்பவும் கேட்கும் போது அவர்களும் தாழ்மையுடன் பிறகு தருகிறேரும் என்று சொல்ல, இவன் கோபங்கொண்டு அரசாங்கத்தாரிடம் சென்று முறையிட்டு, அவர்கள் உதவியால் அந்தணரின் வீட்டையும் நிலங்களையும் அடைந்து;

10. இல்லத்தை விட்டு நீக்க வியம்புவார் மறையோர் தாமும்
அல்லல்கள் செய்த பாவம் அணுகும்பின் ஜன்மந்
[தன்னில்
நில்லாது தந்தை யாஸ்தி நேமியில் தனியாய் வாழ்வாய்
அல்லல்க ளதிக முண்டு அம்புவி தன்னில் வாழ்வாய்.

10. அவர்களே வீட்டை விட்டு விலக்கிவிடும்போது அந்தணர் கள் துன்பமடைந்து சாபமிடுகின்றனர். எங்களுக்குத் தீங்கு செய்த பாவத்தால் நீ பிறக்கும் அடுத்த ஜன்மத்தில் தந்தையின் ஆஸ்தியைப் பெறுமல் தனியனாக வாழ்வாய். துன்பம் அதிகமாக வடைந்து பூமியில் வாழ்ந்து வருவாய் என்றனர்.

11. இன்னமும் பலவே சொன்னர் எய்திற்று வந்தச் சாபம்
பொன்பணி யந்த மின்றிப் புக்கினன் கால நாடு
முன்னவன் வரையப் பட்டு முதித்தனன் சத்கு லத்தில்
அன்னவா றிருந்த தாலே அணுகாது தந்தை யாஸ்தி.

11. இன்னும் பலவிதமாகச் சொன்னர்கள். அந்தப் பாவம் இவனைச் சார்ந்தது. அதனால் தன் கடைசிக் காலத்தில் செல்வத்தை இழந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு நல்ல குலத்தில் பிறந்தான். அந்தணர்களுடைய சாபத்தால் தந்தையின் ஆஸ்தியை அடையாதவன்.

ஜாதகியின் குணங்கள் : 3 பாடல்கள்

12. தன்துணை காண னுகுந் தடமில்லான் தனமு மில்லான்
சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா
[ளிந்த மாது
கன்னிகை குணத்தைச் சொல்வேன் கல்விமான்
[மூன்கோ பத்தாள்
பின்னமில் லாத தேகி பெருமையாய்க் குடும்ப மேற்பள்.

12. உடன்பிறந்தவரில்லாதவன். பிறந்த வீடில்லாதவன். செல்வமுமில்லாதவன். இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களுள்ள வனுக்கு இந்த ஜாதகி பிறப்பாள். அவளுடைய குணத்தைச் சொல் வேன். கல்வியறிவுள்ளவள். முன்கோபமுடையவள். ஊனமில்லாத சரீரமுள்ளவள். பெருமையுள்ள குடும்பத்தை யடைவாள்.

13. வாததே கத்தா ளாகும் வருவோரை யாத ரிப்பள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுறுதியில் லாத நெஞ்சந்
தீதுக ளொருவர்க கெண்ணுள் சீலியாம் விரத சாலி
மாதவர்க் கன்ன மீவள் மாந்தளிர் தேகி யாகும்.

13. வாயு நோயுள்ள சரீரமுடையவள். தன்னையண்டிவந்த வரைக் காப்பாள். இனிமையாகப் பேசுபவள். திடமில்லாத மனத்தினள். பிறருக்குத் தீங்கு செய்ய எண்ணுதவள். நல்லொழுக்கமுள்ளவள். விரத மேற்பாள். தவம் செய்பவருக்கு அன்னமளிப்பவள். மாந்தளிர்போன்ற மென்மையான தேகமுடையவள்.

14. பால்பாக்கிய முடையளாகும் பசித்தோர்க்குத் தாக மீவள்
மேலதாங் குடும்ப மேற்பள்விளம்புவோர் துணைவர்தம்மை
வேலன்போ லாண்பாக் கியமும் மெல்லியு
[மவர்போ லிரண்டு
சாலவே பின்பா கத்தில் சாற்றுவோ மவர்கள் சேதி.

14. பால் பாக்கியமுடையவள். பசியுடன் வந்தவர்கட்கு அன்னமும் பானமும் அளிப்பவள். மேன்மையுள்ள குடும்பத்தை யடைவாள். ஜாதகியின் உடன் பிறந்தவரைப்பற்றிச் சொல்லுகின்றோம். முருகனைப் போல் அழகிய சகோதரருண்டு. இரு சகோதரிகளும் தோன்றுவர். பிற்பாகத்தில் அவர்களைப்பற்றிய விவரங்களைச் சொல்லுகின்றோம்.

ஜாதகியின் திருமணக்காலம்

15. மாதுவின் மணத்தின் கால மறைகிறே மீரா ரூண்டில்
காதலன் வடபால் நேருங் கழறுவோ மவன்கு ணத்தை
மேதினில் செட்டுச் செய்வன் விவேகியாம் நற்கு
[ணத்தான்
காதியு மதிக மேற்பன் காலிகள் விருத்தி யுண்டு.

15. ஜாதகியின் திருமணக்காலத்தைச் சொல்லுகின்றோம். அவளுடைய பன்னிரண்டாம் வயதில் வடமேற்குத் திக்கிலுள்ள ஊரில் ஒருவனை மணப்பாள். கணவனுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். வியாபாரம் செய்து வருவான். நன்மை தீமைகளைப் பாகுபாடு செய்யும் வகையறிந்தவன். நற்குணமுள்ளவன். கீர்த்தியையடைவான், கால் நடைகளின் பெருக்கம் உள்ளவன்.

16. மாநிறஞ் சமதே கத்தான் வறுமையெப் போதுங் காணுன்
தேன்மொழி கூறு வானுஞ் செய்ந்நன்றி மறவா லுகும்
ஊனமில் லாத தேகி யுயர்வான குடும்ப மேற்பன்
ஈனரை யுறவு கொள்ளா னிடுக்கமாங் குணமில் லாதான்.

16. மாநிற முள்ளவன். சமமான உடலமைப்புள்ளவன். ஒரு போதும் தரித்திரம் அடையாதவன். இனிய வார்த்தைகளையே பேசுபவன். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். குறைவுகளில்லாத சரீரமுடையவன். உயர்ந்த குடும்பத்தை யடைவான். அற்பருடன் சகவாசம் செய்யாதவன். துன்பம் செய்யும் குணமில்லாதவன்.

17. சல்லியப் பாதை யில்லான்
சான்ரோர்க ளுறவு கொள்வான்
இல்லையென் றுரைக்க மாட்டான்
எதிரியை நாசஞ் செய்வன்
அல்லலைப் போதுங் காணன்
ஆங்கார முடைய னாகும்
எல்லையை விருத்தி செய்வன்
இடரென்றோர்க் குதவு வானும்.

17. கடன் துன்பமில்லாதவன். பெரியோர்களுடைய உறவைக் கொள்ளுபவன். யாசித்தவருக்கு இல்லையென்று கூறுதவன். விரோதிகளை நாசம் செய்து விடுவான். எக்காலத்திலும் துன்பம் அடையாதவன். அகங்காரம் உடையவன். (மமதையுள்ளவன்). விரோதிகளைப் பெருக்குவான். துன்பமடைந்தவருக்கு உபகாரி.

ஜாதகியின் புத்திரபாவமும் முற்பிறவியும்

18. சுதர்களு மாண்பால் மூன்று தோகையு மிரண்டு
[வென்றோம்
சதமுட னைந்துந் தீர்க்கஞ் ஜீரண மூன்று வென்றோம்
மதிசதி பூர்வஞ் சொல்வேன் வடமலை தன்னி லேதான்
நீதிமிக வுடையா னுக்கு நேர்ந்தனள் வைசியச் சேயாய்.

18. மூன்று ஆண் குழந்தைகளும் இரு பெண் குழந்தைகளும் தோன்றி, அவ்வைந்தும் நீண்ட ஆயுள் உள்ளவை என்றும் மூன்று குழந்தைகள் பிறந்து இறந்துவிடும் என்றும் கூறுகின்றோம். ஜாதகியுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம் வடக்கிலுள்ள திருப்பதியில் செல்வம் மிகுந்த ஒரு வைசியனுக்கு மகளாகப் பிறந்தாள்.

19. சுகமுள குடும்பி யாகிச் சோர்வோர்க்குத் தாக மீந்து
இகபரன் பக்தி பூண்டு இருவினை யில்லா தாகிப்
பகையான கால நாடு பறந்தனள் வரன்மூன் னக
ஜகமதில் வரையப் பட்டு ஜனித்தவ ளென்று சொல்வோம்.

19. சௌக்கியமுள்ள குடும்பத்தைப் பெற்று பசித்தவர்கட்கு அன்ன பானதிகள் அளித்து வந்து, சிவபெருமான் மீது பக்திகொண்டு வாழ்ந்து, வேறு தீவினைகள் இல்லாமல், தன் கணவனுக்கு முன்பாக மரணமடைந்து மீண்டும் இப்பூவுலகில் படைக்கப்பட்டுப் பிறந்தவள் என்று சொன்னோம்.

ஜாதகியின் பொதுயோகம்

20. மாதுவின் யோகஞ் சொல்வோ மாகிலம் வறுமை காணுள்
தீதியாய் மூன்றுண் டின்மேல் நிலவுபோல் குடும்ப
[மெய்தும்
பேர்தனஞ் செய்தலுண்டு புகழுண்டு தொழிலு மேன்மை
மேதினில் சல்லியங் காணுள் சுற்றமும் மதிக்க வாழ்வள்.

20. ஜாதகியின் பொது யோகத்தைச் சொல்லுகின்றோம். உலகில் தரித்திரத்தை அடையாதவள். பிறந்து மூன்று வருடங்களுக்கு மேல் வளர்பிறைச் சந்திரன்போல் குடும்பம் விருத்தியாகும். பெருத்த செல்வத்தை அடைவாள். கீர்த்தியுண்டு. தொழில் அபிவிருத்தியடையும். உலகில் துன்பம் அடையாதவள். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்வாள்.

இதுவுமது

21. பிறந்தநாள் முதலே யாகப் பேசுவோ மூன்றுண் டுக்குள்
வரவுக்குச் செலவ தேக மனமது சஞ்ச லங்கள்
உறன்முறை நிந்தை சொல்ல வொருவர்பால் வணங்கி
[வாழ்தல்
மருவிடும் வனவா சங்கள் வறைகிறே மதன்மே லாக.

21. ஜாதகி பிறந்தது முதல் மூன்று வயது வரையில் வரவுக்கு மேல் செலவு பெருகிச் சஞ்சலங்கள் அதிகமாக ஏற்படும். சுற்றத்தார்கள் ஏசும்படி வாழ்க்கை ஏற்படும். ஒருவரை அண்டி வாழ நேரிடும். வனத்தில் வாழ்வது போன்று தனித்த வாழ்க்கை ஏற்படும். அதற்கு மேற்பட்ட பலனைக் கூறுகிறோம்.

இதுவுமது

22. அன்னையின் துணைவர்க் கத்தால் யாவத்துங் கூடு
[மென்றோம்
உன்னத வில்லம் நேரல் ஓராறு வாண்டு தன்னில்
பொன்பணி பின்னல் சேரல் பெருமையாய் வணிபஞ்
[செய்தல்
தன்னினம் புகழ வாழ்தல் சகலமும் நினைத்த தாங்கும்.

22. தன்னுடைய தாயின் சகோதரரால் எல்லாக் காரியங்களும் கைகூடும். உயர்ந்ததொரு வீடு கிடைக்கும். ஜாதகியின் ஆறு வயது வரையில் அங்ஙனம் இருக்கும். அதற்குப் பிறகு பொன்னுபரணங்கள் சேரும். கீர்த்தியுடன் பிறர் மூலம் வர்த்தகம் புரிய நேரிடும். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்வாள். எண்ணிய காரியங்களனைத்தும் கைகூடும்.

23. ஆரூண்டு முதலே யாக அற்புத யோக மெய்தும்
பாரினில் வணிப மோங்கும் பலர்களும் நேச மெய்துங்
காரியம் நினைத்த தோங்குங் காலிகள் பலித மூண்டு
மாறிடா வின்ற வார்த்தை மங்கையே கேட்டி டாயே.

23. ஜாதகியின் ஆறு வயதுக்குமேல் அதிசயமான யோகம் கிடைக்கும். உலகில் வியாபாரம் பெருகும். பல பேருடைய நட்புக் கிட்டும். எண்ணிய காரியங்கள் நடைபெறும். கால்நடைகளின் பெருக்கம் உண்டு. இந்த வார்த்தைகள் தவரு. தாயே! கேளுங்கள்.

ஜாதகியின் தாயின் விவரம்

24. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாஞ்சிவப் புடைய [ளாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுள்மனங் கவடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பர்த்தாவின் மனத்துக் [கேற்றோள்
சூதிலாள் நடையும் நன்மை சுந்தர முடைய ளாகும்.

24. ஜாதகியின் தாயின் குணத்தைக் கூறுகின்றோம். மாநிற முடையவள். இன்பமாகப் பேசுபவள். உள் மனத்தில் ஒளிவு இல்லாதவள். நிய எண்ணங்களில்லாத மனத்தினள். தன் கணவன் மனத்துக்கு ஏற்றவள். கபடமில்லாதவள். நன்னடத்தையுள்ளவள். அழகுள்ளவள்.

25. மால்மனை யொப்ப தாகும் வருவோரை யாத ரிப்பள்
காலத்தை யறிந்து ரைப்பள் கருதிடாள் கட்டு வார்த்தை
சீலிக்குஞ் துணையா ணென்று செப்புவோர் தீர்க்க மாகப்
பாலிகை மார்கள் மூன்று பகருவோர் தீர்க்க மாக.

25. இலக்குமியை யொத்த செல்வி, தன்னையண்டி வந்தவரைக் காப்பாள். வருங்காலத்தை முன்கூட்டியே தெரிந்து கொண்டு சொல்லக் கூடியவள். வார்த்தைகளைப் புனைந்து பேசாதவள். அவளுக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் மூவரும் உளர் என்றும் அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும் சொல்லுகின்றோம்.

தாய்மாமனின் விவரம்

26. மாதுலன் சேதி சொல்வேன் மாநிலம் நல்லோ னவன்
நீதிவான் வணிபஞ் செய்வன் நேராது தந்தை யாஸ்தி
காதலி மனைவி பக்கல் கலந்துமே வாழ்வா னாகும்
பேர்தன மில்லம் நேரல் புகழது ஏற்ப னாகும்.

26. ஜாதகியின் மாமனின் செய்திகளைக் கூறுகின்றோம். உலகில் நல்லவனாக வாழ்வான். நேர்மையுள்ளவன். வர்த்தகம் செய்து வரு

வான். தன் தந்தையின் ஆஸ்திகள் இல்லாதவன். தன் மனைவி யுடன் சேர்ந்து அவளுடைய வீட்டில் வாழ்ந்து வருவான். பெரிய தொரு வீடு கிடைக்கும். கீர்த்தியை அடைவான்.

27. தந்தையால் சுகமில் லாதான் தன்மனை தன்னுல் யோகம்
பிந்திநாள் யோக மேற்பன் பூமியு மில்லம் நேரல்
பந்தினர் மதிக்க வுய்வன் பரவுப காரனுவன்
விந்தையாய் வார்த்தை கூறல் விமலியே கேட்டி டாயே.

27. தன் தந்தையால் பெறக்கூடிய சௌகர்யங்கள் இல்லாதவன். தன்னுடைய மனைவியால் அதிர்ஷ்டத்தைப் பெறுவான். பிற்காலத்தில் யோகத்தை யடைவான். விஸ்தாரமில்லங்கள் வீடு இவை கிடைக்கும். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். பிறருக்கு உபகாரம் செய்பவன். வேடிக்கையாகப் பேசுபவன். தாயே! கேளுங்கள்.

மாமனின் புத்திரபாவமும் தாயின் முற்பிறவியும்

28. சுதர்களு மாண்பா லிரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
அதிபனும் வயது தீர்க்க மறைகிறேம் பின்பால் சேதி
இதுநிற்க வன்னை பூர்வ ஜியம்புவோம் பட்சி தன்னில்
முதற்குலந் தனிலு தித்து முயர்வான குடும்பி யாகி;

28. மாமனுக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து தீர்க்காயுளுடன் இருப்பார். மாமனுக்கும் நீண்ட ஆயுள் உண்டு. மற்றச்செய்திகளைப் பிற்பாகத்தில் கூறுவோம். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருக்கழுக்குன்றத்தில் அந்தணர் குலத்தவ ளாகப் பிறந்து பெரிய குடும்பத்தை யடைந்து;

29. மங்கையு மரண மாகி மறையவன் வரையப் பட்டு
இங்கிவ ளுதித்தா ளென்றேம் இயம்புவா ரத்திரி தாமும்
அங்கவள் முன்ஜன் மத்தில் அருமறைக் குலமு தித்தாள்
சங்கையாய் வடுகர் வர்க்களுஞ் சார்ந்தகா ரணங்க ளென்ன.

29. தாயும் மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனுல் படைக்கப் பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம். அத்திரி முனிவர் சொல்லுகின்றார். முற்பிறவியில் அந்தணர் குலத்தில் தோன்றியவள், இப்பிறவியில் தீம்பாக வன்னிய குலத்தில் பிறக்கும் காரணங்கள் என்ன?

30. வித்தகி முன்ஜன் மத்தில் விரதங்கள் முட்டுச் செய்து
குத்தமாய் வாழ்ந்த தாலே குலவினு ளிக்கு லத்தில்
குத்தமா யிவள்பின் ஜன்மஞ் செப்புவோம் வள்ளூர்
[தன்னில்
முத்தின சைவச் சேயா யுதிப்பளாஞ் சுகமுள் ளோளாய்.

30. ஜாதகியின் தாய் முற்பிறவியில் பலவித விரதங்களைச் செய்யாமல் இருந்து வந்ததால் இப்பிறவியில் வந்து பிறந்தாள். தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருவள்ளூரில் அரியதொரு சைவகுலத்தவளாகப் பிறந்து சுகமுடையவளாக இருப்பாள்.

ஜாதகியின் தந்தையின் மரணமும் மறுபிறவியும்

31. ஆறஞ்சு மூன்று வாண்டில் அணுகிடுந் தந்தை கண்டங்
கூறுவோ மிவன்பின் ஜன்மங் கூடலில் சைவச் சேயாய்த்
தீரமா யுதிப்பா னெனுஞ் ஜயமுனி தடுத்துச் சொல்வார்
மாரனு மிச்சென் மத்தில் மருவின புண்ணிய மென்ன.

31. ஜாதகியின் முப்பத்துமூன்றும் வயதில் தந்தை மரணம் அடைவான். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். மதுரையில் சைவகுலத்தவனுகப் பிறப்பான் என்று சொன்னார். ஜய முனிவர் மறுத்து வினவினர். ஜாதகியின் தந்தை இப்பிறவியில் என்ன நல்வினைகள் செய்தான்?

உயர்பிறவிக்குக் காரணமும் தாயின் மரணகாலமும்

32. சிலர்க்குவா பத்தைக் காத்துந் தேவதாப் பக்தி யாயுந்
தலைவனும் வாழ்வ தாலே ஜனிப்பனுஞ் சைவச் சேயாய்
நிலையாக முப்பா னெட்டில் நிகரன்னை கண்ட மென்றோம்
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன் றுவே.

32. சில பேருக்கு ஏற்பட்ட ஆபத்தை விலக்கியும், தெய்வபக்தியுடன் வாழ்ந்து வருவதால் சைவ குலத்தவனுகப் பிறப்பான். ஜாதகியின் முப்பத்தெட்டாம் வயதில் ஒப்பில்லாத தாய்க்குக் கண்டம் ஏற்படும் என்றோம். மலையரசனின் மகளே! நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகியின் மரணகாலமும் மறுபிறவியும்

33. அன்பது வாறு வாண்டி லைப்பசி மாதந் தன்னில்
இன்னவ ளுடலை மேகும் இயம்புவோ மிவள்பின் ஜன்மம்
பொன்முகரி யாற்றி னோரம் பேரூரில் கர்ண சேயாய்
கன்னிகை யுதிப்பா ளாகுங் கவுசிகர் மறித்துச் சொல்வார்.

33. ஜாதகி தனது ஐம்பத்தாறும் வயதில் ஐப்பசி மாதத்தில் இறப்பாள். அவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். பொன்முகரி யாற்றங்கரையின் பக்கத்திலுள்ள ஒரு பெரிய ஊரில் கருணீகர் குலத்தவளாகப் பிறப்பாள். கௌசிக முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார்.

34. மங்கைக்கு மூன்றுண் டுக்குள் மருவிடுங் கண்ட
[மென்றோம்
பங்கயன் குருவும் லாபம் பங்குமே வேழில் தங்க
அங்கவள் தனக்கு ரோகம் அணுகினும் நிவிர்த்தி யாகுஞ்
சங்கையே காணு ளாகுந் தானுமே தீர்க்க ஜீவி.

34. ஜாதகிக்கு மூன்று வயதுக்குள்ளாகவே கண்டம் ஏற்படும் என்று சொன்னேம். மற்றவர் கூறுகின்றார்: சூரியன் குரு லாபஸ்தானத்திலும் சனி ஏழாமிடத்தில் இருப்பதாலும் அவளுக்கு வியாதி ஏற்பட்டு நீங்கும். ஆனல் உயிருக்கு அபாயமேயில்லை. நீண்ட ஆயுள் உடையவள்.

ஜாதகியின் ஜனனகால தசை

35. அன்னவள் ஜனன காலம் அரவுதன் தசை யிருப்பு
சொன்னனே பதினு லாண்டுந் திங்களும் பதினென் றாகும்
முன்பாகம் விவரஞ் சொன்னே மொழிகின்றோம்
[பின்பால் சேதி
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

35. ஜாதகியின் ஜனன காலத்தில் ராகு மகாதசையில் இருப்பு பதினன்கு வருடங்களும் பதினேரு மாதங்களுமாம். இங்ஙனம் முதல் பாகத்தைச் சொன்னேம். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

கிரகநிலை: பலன்

36. மதிமூன்றில் கேது வாறில் மருவின பலனைவ் வாறு
பிதாவுக்கு வில்லம் பூமி பொருளுமே போதா தாகும்
மதிமுக வன்னை யாலே மருவிடு மில்ல மென்றோம்
அதுபலன் பின்பால் சொல்வேன் அம்பிகை யாளே
[கேளாய்.

36. சந்திரன் மூன்றுமிடத்திலும் கேது ஆறுமிடத்திலும் இருப்பதன் பலனைச் சொல்லுங்கள். தந்தைக்கு வீடு விளைநிலங்கள் பொருள் இவைகள் வாரா. அழகிய தாயாரால் வீடு கிடைக்கும். அந்த விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 43

1. பிறையரி ராகு கோலில் பூமகன் புகருங் கெண்டை
பரிதியுங் காரி புந்தி புல்லத்தில் குருவும் வீணை
அரியது ஜன்ம மாக அறைகுவீர் பலனை யென்று
நெறியுள வுமையாள் கேட்க நீள்சடை முனிவர் சொல்வார்.

1. சந்திரன் சிம்மத்திலும், ராகு துலாத்திலும், செவ்வாய் சுக்கிரன் மீனத்திலும், சூரியன் சனி புதன் விருஷபத்திலும், குரு மிதுனத்திலும் கேது மேஷத்திலும் நின்று ஜன்ம லக்கினம் சிம்மமானால் ஏற்படும் பலனைக் கூறுங்கள் என்று பார்வதி தேவியார் கேட்க, நீண்ட சடையை யுடைய முனிவரொருவர் சொல்லத் தொடங்குவார்.

ராசிச் சக்கரம்

செவ்வாய் சுக்கிரன்	கேது	சூரியன் சனி புதன்	குரு
	இராசி சக்கரம்		
			லக்கினம் சந்திரன்
		ராகு	

ஜாதகனின் வீட்டுநிலை

2. இந்தசே யாணுஞ் ஜன்மம் இல்லமுங் கீழ்மேல் வீதி
தென்பார்வை கீழ்ப்பா லீசன் திருமாலின் கோட்டந் தந்தி
நன்னதி யருகில் தங்கும் நாட்டிய சமவூர் தன்னில்
இன்னமும் பலதே வாசம் இறங்குவான் கங்கை சேயாய்.

2. இஃது ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. கிழக்குப் பக்கத்தில் சிவபெருமான் ஆலயமும், திருமாலின் ஆலயமும், விநாயகர் ஆலயமும் உள்ளன. ஒரு புண்ணிய ஆறு சமீபத்தில் ஓடும். இங்ஙனம் இத்தெய்வங்கள் தவிர மற்றும் பல தெய்வங்கள் வாழ்ந்துவரும் சமநிலையான ஊரில் வேளாளர் குலத்தவனுகப் பிறப்பான்.

3. ஜாதகன் யோகச் சேதி தாய்தந்தை துணைவர் யோகம்
போதவே மனைவி புத்திரர் புகலுவோ முன்பின் ஜன்மந்
தீதிலாப் பலன்க ளாய்ந்து செப்புவோ மிந்நூல் தன்னில்
மேதினில் தவங்கள் செய்யும் விதத்தை கேட்டி டாயே.

3. ஜாதகனுடைய யோகம் தாய் தந்தையருடைய யோகம், உடன்பிறந்தவர், மனைவி, மக்கள், இவர்களுடைய யோகம், முற்பிறவி மறுபிறவி ஆகிய எல்லாவற்றையும் நன்கு ஆராய்ந்து இந்தச் சோதிட நூலில் சொல்லுகின்றோம். உலகில் தவங்கள் செய்யும் தேவியே ! கேளுங்கள்.

4. தந்தையின் துணையி ரைந்தி லாணென்று கன்னி மூன்று
இந்தவர் விருத்தி யென்றோம் இலகாவே மற்ற வெல்லாம்
அந்தவாண் வேரூய்ச் செல்வர் அவர்பலன் பின்பால்
[சொல்வேன்
எந்தையே தந்தை சேதி யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகனுடைய தந்தையின் உடன்பிறந்தவர்கள் பதின்மராவர். அவர்களில் ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். மற்றவர்கள் நிலையார். அந்தச் சகோதரன் தனியாகச் சென்று விடுவான். அவனுடைய செய்திகளைப் பின்பாகத்தில் கூறுகின்றோம். தாயே ! ஜாதகனுடைய தந்தையின் செய்தியை இனிக் கூறுகின்றோம்.

தந்தையின் விவரங்கள்

5. தரணியை விருத்தி செய்வன் சமகல்வி யூகை வானும்
பெருமையாய்க் குடும்ப முன்னல் பொய்யது வழுத்தா
[னகும்
பறைபள்ளு முடைய னகும் பணிந்தோரை யாத ரிப்பன்
முருகர்தம் பத்தி பூண்பன் முனிவுண்டு வெளிக்காட்
[டாதான்.

5. விளைநிலங்களைப் பெருக்குவான். சமமான கல்வியறிவுள்ளவன், ஊகமுடையவன். பெருமையுள்ள குடும்பத்தை யுடையவன். பொய்யைப் பேசாதவன். பள்ளர் பறையராகிய ஆட்படையுடையவன். தன்னையண்டி வணங்கியவரைக் காப்பான். முருகக் கடவுள்மீது பக்தி யுடையவன். முன்கோபமுடையவன். ஆனால் வெளிக்காட்டாதவன்.

6. பலருக்கு நல்லோ னவன் பஞ்சைமே லிரக்க முண்டு
நலமதைப் பலர்க்குஞ் செய்வன் நாற்காலி பலித மாகும்
விலமாதர் மோகங் கொள்ளான் வீண்பழி யேற்கா னகுங்
கலகத்தைக் கூரு னகுங் காதலி கேட்டி டாயே.

6. பலபேருக்கு நல்லவனாக இருப்பான். ஏழைகளின்மீது இரக்கம்கொள்ளுவான். எல்லாருக்கும் நல்லதையே செய்து வருவான். கால் நடைகள் பெருகும். வேசையர் மீது விருப்பங்கொள்ளாதவன். அடாத பழிச்சொல்லை ஏற்காதவன். கலகம் செய்யும் குணமில்லாதவன். தாயே ! கேளுங்கள்.

ஜாதகன் குணங்கள்

7. சொன்னவிக் குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன்
அழகுளான் சிவந்த மேனி
பின்னமில் லாத தேகி
புவிராசர் பேட்டி கொள்வன்
மன்னர்க்கு விவன்சொல் மேன்மை
மாதுலன் தன்பால் வாசம்.

7. இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களையுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். அழகுள்ளவன். சிவந்த உடலுடையவன். ஊனமில்லாத சரீரமுடையவன். அரசாங்கத்தாருடன் தொடர்பு உள்ளவன். அரசருக்கு இவனுடைய வார்த்தைகள் மேன்மைபெற்றவையாக இருக்கும். இவன் தன் மாமன் வீட்டில் வசித்து வருவான்.

இதுவுமது

8. அன்னியக் கல்வி யாலே யரசுமே செய்வா னுகும்
பொன்பணி பின்னல் சேர்ப்பன் பொய்யது புகலா னுகுந்
தன்சொல்லு மடக்க முண்டு சகலர்க்கு நல்லோ னுவன்
தென்திசைச் சிலநாள் வாசந் திகைத்தோரை
[யாத ரிப்பன்.

8. அன்னிய பாஷையில் நல்ல தேர்வு பெற்று உத்தியோகம் வகித்து வருவான். பொன் ஆபரணங்கள் இவைகளைப் பிற்காலத்தில் சேர்ப்பான். பொய்யைப் பேசாதவன். அடக்கமாகப் பேசுபவன். எல்லோருக்கும் நல்லவனுக இருப்பான். சின்னட்கள் தெற்குப் பக்கத்திலுள்ள ஊரில் வசித்து வருவான். பயந்தவர்களைக் காப்பான்.

இதுவுமது

9. சுகதுக்கஞ் சேதி சொல்லுந் தொழிலதைச் செய்வா னுகும்
அகமது பின்னல் செய்வன் அம்புவி பிறைபோல் யோகம்
பகைவரை யுறவு கொள்வன் பால்தயிர் பிரிய னுவன்
உகமையாய் வார்த்தை சொல்வன் ஓராறு முகத்தோன்
[பக்தி.

9. சுகம் துக்கம் இவைகளை யறிவிக்கும் சோதிடத் தொழிலைச் செய்து வருவான். (தந்தி இலாக்காவில் வேலை பார்ப்பதாகக் கொள்வது பொருந்தும்.) பிற்காலத்தில் வீட்டைக்கட்டுவான். வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். விரோதிகளிடமும் நட்புக்

கொள்ளுவான். பால் தயிர் இவைகளைப் புசிப்பதில் பிரியமுள்ளவன். சிரிக்கச் சிரிக்கப் பேசுபவன். சுப்பிரமணியக் கடவுள் மீது பக்தி யுள்ளவன்.

சங்கரேகை, சக்கரரேகை, பத்மரேகை முதலியன

10. கரமதில் சங்கு சக்கரங் கமலரே கையுமே யுண்டு
மருமம தில்லா னுகும் வாக்குச்சொல் காப்பா னென்றேங்
கரிமதக் கோட்டஞ் செய்வன் கண்டித முரையா னுகும்
பெருமையும் புகழு மேற்பன் பூமியும் பின்னல் சேர்ப்பன்.

10. கைகளில் சங்கரேகை சக்கரரேகை பத்மரேகை முதலியன வுள்ள வன். இரகசியமில்லாதவன். சொன்ன வார்த்தைகளை மீறுதவன். விநாயகரின் ஆலயத்தைக் கட்டுவான். கண்டித்துப் பேசாதவன். பெருமையையும் கீர்த்தியையும் அடைவான். பிற்காலத்தில் பூமிகள் சேர்ப்பான்.

ஜாதகன் மேன்மை

11. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தந்தமுந் தரள மொக்கும்
இந்திரன் போலே பின்னல் இவனுமே வாழ்வா னுகும்
வந்தவர்க் கன்ன மீவன் மறித்துரை யதிகங் கூறான்
தென்முனி தடுத்துச் சொல்வார் செப்பினீர் யோக
[மெவ்வார்.

11. தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். முத்துக்களைப் போன்ற வெண்மையான பற்களையுடையவன். பிற்காலத்தில் இவன் தேவேந்திரன் போல் வாழ்ந்து வருவான். தன்னை யண்டிவந்தவர்கட்கு அன்னமளிப்பவன். அதிகமாக எதிர்த்துப் பேசும் வழக்க மில்லாதவன். அகத்திய முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுக்கு எங்ஙனம் யோகம் சொன்னீர்கள்?

ஜாதகன் யோகங்கள்

12. தருமகர் மாதி யோகந் தாமரை யோக மொன்று
பருவத யோக மொன்று பகர்ந்தன மூன்று யோகந்
திறமையாய் விவரஞ் சொல்வேன் செம்பொன்னு
[மிரண்டி லேறக்
[1]குருதியன் புகரும் லாபங் கூரியன் காரி ஜன்மம்;

குறிப்பு :—இந்த ஜாதகத்தில் 12ஆம் பாடல்கள் முதல் சொல்லப் பெற்றுள்ள இரகஸ்யங்களும் பலன்களும் விருஷப லக்னத்துக்குப் பொருத்தமாகவுள்ளன. ஆயினும், மூலப்பிரதியிலுள்ளவாறே வரிசை யெண்கள் கொடுக்கப்பெற்று உரைவிளக்கத்துடன் இங்கு வெளியிடப் பெறுகின்றன.

1. செவ்வாய்

12. தருமகர்மாதி யோகம், தாமரை யோகம், பர்வ்தயோகம் ஆகிய இம்மூன்று யோகங்களும் உள்ளவன். அதற்கு விவரம் சொல்லுகின்றோம். குரு மிதுனத்திலும் செவ்வாய் சுக்கிரன் மீனத்திலும், புதன் சனி விருஷபத்திலும் இருப்பதால் ;

யோகமேற்படும் வயது

13. ஆகையால் யோகஞ் சொன்னேம்
அறுநான்கு வாண்டு மேலாய்ப்
போகபாக் கியங்க ளெய்தும்
பேதையும் வந்த பின்பு
மேகம்போல் புகழு மெய்தும்
வேண்டினோர்க் குதவி யாமே
தோகைவா கனலு லன்பு
தோன்றிடு மென்று சொல்வோம்.

13. அவ்விதமான யோகங்கள் ஏற்படும் என்று சொன்னோம். ஜாதகனுக்கு இருபத்துநான்காம் வயதுக்குமேல் சகலபோக பாக்கியங்களும் கிட்டும். மனைவி வந்த பின்பு மேகம்போல் கீர்த்தி பரவும். வேண்டி வந்துவர்கட்கு உதவி செய்பவன் மயிலை வாகனமாக உடைய சுப்ரமணியக்கடவுளின் அருளால் அன்பு கிடைக்கும் என்று சொல்லுகின்றோம்.

ராஜயோகம்

14. எந்தக்கா லத்தி லிராச யோகமு மெய்துஞ் சொல்வாய்
வந்தவ னிருப தாண்டில் மருவிடு மிராச யோகம்
பிந்தியு மன்பா னண்டும் பிறைபோலே யோகம்
[வாய்க்கும்
சந்தத மில்லம் பூமி சேர்ப்பன்பத் தாயி ரம்பொன்.

14. ஜாதகனுக்கு எந்தக் காலத்தில் ராஜயோகம் ஏற்படும் என்று சொல்லுங்கள். இவனுடைய இருபதாம் வயதில் ராஜயோகம் ஏற்படும். ஐம்பதாம் வயது வரையில் வளர்பிறைச் சந்திரன்போல் அந்த யோகம் விருத்தியாகும். பூமி வீடு முதலானவைகளைச் சேர்த்து ஆஸ்திகள் பத்தாயிரம் பொன் மதிப்புள்ளவை என்று சொல்லுகின்றோம்.

உடன்பிறந்தவர் விவரம்

15. தன்துணை நான்கு தோன்றுந்
தங்காவே சிலவே யென்றோம்
வந்திடுங் கன்னி யிரண்டு
வறைந்தனந் தீர்க்க மாக

எந்தக்கா ரணத்தி னலே
இவன்துணை யாண்பால் தோஷம்
பந்தமா யாறில் ராகு
பதிந்ததோர் பலத்தால் சொன்னேம்.

15. ஜாதகனுக்கு நான்கு சகோதரர்கள் தோன்றுவர். அவர்களில் சிலர் நிலையார் என்று கூறுகின்றோம். இரு சகோதரிகள் மட்டுமே நீண்ட ஆயுள் உள்ளவர்கள். என்ன காரணத்தால் ஜாதகனுக்குச் சகோதர தோஷம் ஏற்பட்டது என்று கூறுங்கள். ஆருமிடத்தில் ராகு இருப்பதால் அவ்விதம் சொன்னேம்.

திருமணக்காலம்

16. மங்கள மிருபா னறில் மருவிடுந் தென்பால் பாரி
அங்கவள் குணத்தைச் சொல்வேன் அரிமனை யொப்ப [தாகும்
பொங்கின குடும்ப மேற்பள் புண்ணிய மனத்த ளாகும்
பங்கய முகத்த ளாகும் பணிந்தோரை யாத ரிப்பள்.

16. ஜாதகனுடைய இருபத்தாரும் வயதில் திருமணம் நிகழும். தெற்குப் பக்கத்திலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைக் கூறுகின்றோம். இலக்குமியைப் போன்ற செல்வமுடையவள். செழிக்கும் குடும்பத்தை மேற்கொள்வள். நல்லெண்ணம் பொருந்திய மனத்தினள். தாமரையைப் போன்ற மலர்ந்த முகத்தினள். தனக்கு அடங்கியவரை ஆதரித்து வருவாள்.

மனைவியின் குணங்கள்

17. வரன்மனம் போலே வாழ்வள் மறித்துரை யதிகங் கூரள்
உறன்முறை மதிக்க வுய்வ ளுண்மையா மனத்த ளாகும்
நறைமல ரிஷ்டங் கொள்வள் நல்லோர்க்கு நல்ல ளாவள்
அரிபோலே கோப முண்டு அவளுக்கு வயது தீர்க்கம்.

17. தன் கணவன் மனம்போல் வாழ்ந்து வருவாள். மறித்துப் பேசும் வழக்கமில்லாதவள். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். உண்மையான மனமுடையவள். மணமுள்ள புஷ்பங்களின்மீது விருப்பமுடையவள். நல்லவர்கட்கு நல்லவளாக இருப்பவள். சிங்கம்போல் கோபம் கொள்ளுபவள். நீண்ட வயதுடையவள்.

ஜாதகனுடைய புத்திரபாவம்

18. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலமு ருவே
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று [சொல்வோங்
குத்ததைப் புகலு மென்னக் கூரிய னைந்தோ ரெதிப்
பத்தினுக் குடையோன் சேர்ந்து பதிந்திடுஞ் ஜன்ம மாக;

18. ஜாதகனுக்குப் புத்திர விருத்தியுண்டு என்று சொல்லக் கிரக பலமில்லை. அவ்விதம் பிறந்தாலும் கிஷ்யா என்று சொல்லுகின்றோம். எவ்விதக் குற்றத்தால் அவ்விதம் சொல்லுகிறீர்கள்? புதன் ஐந்தாம் வீட்டுக்குரியவனுகிப் பத்தாம் வீட்டுக்குடைய சுக்கிரனோடு சேர்ந்து ஜன்மத்தில் இருப்பதால்;

ஜாதகன் முற்பிறவி

19. மதலில்க ளாண்பால் தோஷ மங்கைய ரிருவர் தீர்க்கம்
இதுநிற்கத் திறத்தோன் பூர்வ மியம்புவோ மினிமே
[லாகப்
புதுவையில் வைசியச் சேயாய்ப் பிறந்துமே வணிபஞ்
[செய்து
சுதர்களு மதலை யுண்டாய்ச் செழிப்பான குடும்ப மாகி;

19. ஆண் குழந்தைகளுக்குத் தோஷமுண்டு. இரு பெண் குழந்தைகள் மட்டும் நீண்ட ஆயுள் உள்ளவை. இஃது இவ்விதமாக, ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். புதுச்சேரியில் வைசிய குலத்தவனுகப் பிறந்து, வர்த்தகம் புரிந்து வந்து, புத்திர பாக்கியம் பெற்றுச் செழிப்புள்ள குடும்பத்தை யடைந்து;

முற்பிறவித் தோஷம்

20. வந்ததோர் வினையைச் சொல்வே னருமறை கணக்கில்
[மோசம்
இந்தவன் செய்தா னென்றோம் இயம்புவார் மறையோர்
[சாபம்
சந்ததி தோஷ மெய்துஞ் சாரும்பின் ஜன்மந் தன்னில்
தன்துணை யாண்பால் தோஷந் தந்தையில் வாச மின்றி;

20. இருந்த காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். எழை அந்தணருடைய கணக்கில் சில மோசங்களைச் செய்தான் என்று சொன்னோம். அவ்வந்தணர்கள் சாபமிட்டனர். நீ புத்திர பாக்கியமில்லாமல் வாழ நேரிடும். மறுபிறவியிலும் உடன்பிறந்த சகோதரருக்குத் தோஷமுண்டாகும். தந்தையின் வீட்டில் வசிக்காமல்;

முற்பிறவிச் சாபமும் பலனும்

21. கருமபுத் திரனு மின்றிக் காசினி தன்னில் வாழ்வாய்
இருபிறப் பாளர் சொல்ல வெய்திடு மந்தச் சாபம்
பொருளது யிழவா யந்தம் புகுந்தனன் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்.

21. இறுதிக் கடன்கள் செய்யப் புத்திரன் இல்லாமல் உலகில் வாழ்ந்து வருவாய் என்று த்விஜர்களாகிய அவ்வந்தணர்கள் சொல்ல, அந்தச் சாபம் இவனை இப்பிறவியில் தொடர்ந்தது. அப்பிறவியில் செல்வத்தை இழந்து மரணமடைந்தான். மீண்டும் பிரமனுல் படைக்கப்பட்டுப் பிறந்தான் இந்த ஜாதகன்.

முற்பிறவித் தீவினைப் பலன்

22. முன்ஜன்ம வினையி னலே மேவாது துணையா னுந்தான்
கன்மபுத் திரனும் தோஷங் காளையும் வேற்றூர் வாசம்
இன்னவன் தனக்குப் புத்திரர் எய்திடக் கிரியை
[சொல்வார்
தென்திசைப் போரூ ருக்குத் தேவியும் தானு மாக ;

22. முற்பிறவியில் செய்த தீவினையால் உடன்பிறந்த சகோதரர் இல்லை. கருமங்கள் செய்யப் புத்திரன் இல்லை. வேற்றூரில் வசம் செய்து வருவான். ஜாதகனுக்கு ஏற்பட்ட தீவினைகள் நீங்கிப் புத்திரர் தோன்றச் சாந்தியொன்று சொல்லுகின்றார். தெற்குத் திக்கிலுள்ள திருப்போரூருக்குத் தன் மனைவியுடன் சென்று ;

தீவினை விலகச் சாந்தி

23. ஒன்பது கார்த்தி சென்று ஓராறு முகனைப் போற்றி
அன்னவன் கடைநாள் தன்னில் ஐயாறு பரத்துக்
[கன்னம்
இன்பமா யளித்து வின்னை நிருவருஞ் சஷ்டி நோன்பு
அன்னமு மில்லா தாகி யாண்டுமே விரதங் கொள்ள ;

23. ஒன்பது கார்த்திகைகள் முருகனைப் போற்றித் துதித்துக் கடைசிக் கார்த்திகையன்று முப்பது பரதேசிகட்கு அன்புடன் அன்னமளித்து வந்து, பிறகு இருவரும் சஷ்டியன்று ஒன்றும் உண்ணுமல் ஓராண்டு விரதம் ஏற்று வருவார்களாகில் ;

ஜாதகனுக்கு இருமனைவியர் : காரணம்

24. மன்மதன் போலா னென்று மருவிடுந் தீர்க்க மாகப்
பன்னுவார் பிருகு தாமும் பாவைய ரிரண்டு நேரும்
என்னசா ரணங்கள் சொல்வீர் இருநான்கோ
[னிரண்டில் தங்கக்
கன்னிகை யிருவ ரென்றே நெளசிகர் மறித்துச்
[சொல்வார்.

24. மன்மதனைப் போன்ற அழகான புத்திரன் ஒருவன் பிறந்து தீர்க்காயுள் உள்ளவன் என்றேம். பிருகு முனிவர் சொல்லுகின்றார். மனைவியர் இருவர் ஏற்படுவர் என்றேம். என்ன காரணத்தால் அவ்

விதம் சொல்லுகிறீர்கள்? விளக்கமாகக் கூறுங்கள். எட்டாம் வீட்டுக்குரிய குரு இரண்டாமிடத்தில் தங்கி யிருப்பதால், இரு மனைவியர் என்றேரும். விசுவாமித்திரர் தடுத்துச் சொல்லுகின்றார்.

மேற்படி செய்திக்கு மறுப்பு

25. ஜாதகன் தனக்கு நேரா தந்தையின் னைனுக் கேதான்
ஓதுவோந் தார மிரண்டு உதித்தவன் தனக்குச்
[சொல்வோம்
மாதுவு மிவன்முன் னலே மரிப்பளா மிரண்டாண்
[முன்னே
போதக வாணை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

25. ஜாதகனுக்கு இரு மனைவியர் இல்லை. இவனுடைய சிறிய தகப்பனாருக்கு இரு மனைவியர் உண்டு என்றேரும். ஜாதகனுடைய மனைவி இவனுக்கு (இவன் இறப்பதற்கு) முன்னால் இரண்டு வருடத்தில் இறந்து விடுவாள். விநாயகனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

ஜாதகன் தாயின் குணங்கள்

26. மாதரு குணத்தைச் சொல்வேன்
வருவோரை யாத ரிப்பள்
சீதள குணத்தா ளாகுந்
தீங்கதை யொருவர்க் கெண்ணாள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை
யுண்மையா மனத்த ளாகும்
வேதான பித்த வாயு
மேவிடு மென்று சொல்வோம்.

26. ஜாதகனுடைய தாயின் குணங்களைக் கூறுகின்றோம். அண்டி வந்தவரை ஆதரித்து வருவாள். குளிர்ந்த மனமுடையவள். ஒருவருக்கும் தீங்கு செய்ய மனமில்லாதவள். சுகமாகப் பேசுபவள். உண்மையையே பேசுபவள். தீய பித்தவாயு நோயுள்ள சரீரமுடையவள் என்று சொல்லுகின்றோம்.

தாயின் சகோதர பாவமும் முற்பிறவியும்

27. இல்லறுந் தென்பால் தூரம் இவள்துணை யாண்பா
[லொன்று
வல்லியு மவ்வா றகு மறைந்தனந் தீர்க்க மாகச்
சொல்லுவோ மிவள்தன் பூர்வந் தோகையின் கீழ்ப்பா
[லாகப்
புல்கினள் சிறுவூர் தன்னில் பூவையு மிரட்டி வம்சம்.

27. தாயின் வீடு தெற்குப் பக்கத்தில் உள்ளது. தாயின் உடன்பிறந்தவர்களில் சகோதரன் ஒருவனும் சகோதரி யொருத்தியும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். முருகப்பிரான் எழுந்தருளியுள்ள தோகை மலைக்குக் கிழக்குப் பக்கமாக உள்ளதொரு சிற்றூரில் செட்டியார் மரபில் பிறந்தாள்.

தாயின் முற்பிறவிச் செய்திகள்

28. சுகமுள குடும்பி யாகிச்
சுந்தரி வாழு நாளில்
பகையிலாத் தோகை சென்று
பகவானைப் போற்றி செய்து
தகைமையாய்க் கடைவீ திக்குச்
சென்றுமே சிவப்பு மஞ்சள்
மிகுதியாய் வாங்கிக் கொண்டு
வெள்ளியுந் தராமல் சென்றாள்.

28. சௌக்கியமுள்ள குடும்பத்தைப் பெற்று வாழ்ந்து வரும் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். திங்களில் லாத தோகைமலைக்குச் சென்று அங்குள்ள கடவுளைத் துதித்துத் திரும்பிக் கடைவீதிக்குச் சென்று குங்குமம் மஞ்சள் இலைகளை வாங்கிக் கொண்டு அவற்றிற்குரிய பணத்தைத் தராமல் சென்றாள்.

இதுவுமது

29. வணிபனும் பின்னல் பார்த்து மாதினைக் காய்ந்து ஏகித்
துணிவிலா மனத்த னாகிச் செப்புவான் சாபந் தானுங்
கணிகைக்குப் பொருளு மாகா முன்னமே கணவன்
[மாள்வன்
இனிவருஞ் ஜன்மந் தன்னில் ஏகுவான் மத்தில் மாரன்.

29. கடைக்காரனும் அதையுடனே அறிந்து பெண்ணைக் காணு மல் மனம் வருந்திச் சாபமிடுகின்றான். வாங்கிப்போன குங்குமம் மஞ்சள் முதலியன திருவதற்கு முன்பாகவே இப்பெண்ணின் கணவன் இறந்து விடுவான். இனி ஏற்படும் பிறவியிலும் மத்திய வயதில் கணவன் மரணமடைவான்.

முற்பிறவிச் சாப பலன்

30. இன்னமும் பலவாறு சொல்லி யிறைத்தனன்
[தெருத்தூள் வாரி
கன்னிக்கு வந்த வாண்டில் காவலன் மரண மாகித்
தன்மனச் சஞ்ச லத்தால் சண்டன்தன் பதிக்குச்
[சென்று
பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று
[சொல்வோம்.

30. இன்னும் பலவிதமாகக் கூறி மண்ணை வாரி யிறைத்தான். ஜாதகனுடைய தாய் அதே வருடத்தில் கணவனை யிழந்து மனத்தில் சஞ்சலமடைந்து மரணமடைந்து மீண்டும் பிரமனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவள் என்று சொல்லுகின்றோம்.

மேற்படி தொடர்ச்சியும், தாயின் மறுபிறவியும்

31. மங்கைக்கு விச்சென் மத்தில் வணிபன்றன் சாபத் தாலே
தங்காது மத்தில் மாரன் சஞ்சல மனமாய் வாழ்வள்
அங்கவள் பின்ஜன் மத்தை யறிவிப்போம் வேங்க
[டத்தில்
பொங்கின குடும்பந் தன்னில் பிறப்பளா மிரட்டி வம்சம்.

31. ஜாதகனுடைய தாய்க்கு இப்பிறவியில் கடைக்காரனுடைய சாபத்தால் இடையில் கணவன் மரணமடைவான். இவளும் மனத்தில் கவலையுற்று வாழ்ந்து வருவாள். அவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருவேங்கடத்தில், செழிப்பானதொரு ரெட்டியார் குடும்பத்தில் பிறப்பாள்.

தந்தையின் முற்பிறவி

32. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் சட்டகா தீசர் நாட்டில்
வந்தன னிக்கு லத்தில் மனைவிமைந் தருமுண் டாகி
இந்தவன் வாழ்ந்து மேதான் இருவினை யில்லா தாகித்
தென்திசை மறலி பக்கல் சென்றுமே பிரமன் லக்கம்;

32. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். சட்டநாதேச்வரர் எழுந்தருளியுள்ள சீகாழியில் இதே குலத்தில் பிறந்து மனைவி மக்களைப் பெற்று தீய வினைகளில்லாமல் வாழ்ந்து வந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு;

தந்தையின் மரணமும் மறுபிறவியும்

33. உதித்தவ னென்று சொல்வோம் உரைக்கிறோ
[மிவன்பின் ஜன்மஞ்
சதியிலா விரிஞ்சி தன்னில் ஜனிப்பனு மிக்கு லத்தி
லதிபனுக் கிரெட் டாண்டுள் மறலியின் பதிக்குத் தந்தை
சதியாகச் செல்வா னகுஞ் சாற்றின மொழிகுன் றுவே.

33. இப்பிறவியில் பிறந்தவன் என்று சொல்லுகின்றோம். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். தீங்குகளில்லாத விரிஞ்சி நாட்டில் இதே குலத்தில் பிறப்பான். ஜாதகனுடைய பதினாறும் வயதில் தந்தை மரணமடைவான். நாங்கள் கூறியவை தவறு.

தாயின் இறுதிக்காலமும் ஜாதகன் மரணமும்

34. மூப்பத்து மூன்று வாண்டில் விளம்புவோ மன்னை
[கண்டஞ்
செப்புவோஞ் ஜாத கர்க்குச் சஷ்டமே லாறு வாண்டும்
ஒப்புடன் சிம்ம மாதம் உயர்பட்சந் தசமி தன்னில்
தப்பாது வுடல மேகுஞ் சாற்றின மொழிகுன் முவே.

34. ஜாதகனுடைய மூப்பத்து மூன்றும் வயதில் தாய் மரண மடைவாள். ஜாதகன் தன் அறுபத்தாறும் வயதில் ஆவணி மாதம் சுக்லபட்சம் தசமி திதியன்று மரணமடைவான். நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகன் மறுபிறவியும் ஜனனகாலதசையும்

35. பின்ஜன்மங் காஞ்சி தன்னில் பிறப்பனும் பிரம்ம சேயாய்
அன்னவன் ஜனன காலம் அசுரர்மந் திரியி ருப்புச்
சொன்னனே வாண்டி ரண்டுந் திங்களு மெட்ட தாமே
பன்னினேம் பூர்வ பாகம் பார்வதி கேட்டி டாயே.

35. மறுபிறவியில் காஞ்சிபுரத்தில் அந்தணர் குலத்தவனுகப் பிறப்பான். ஜாதகனுடைய ஜனன காலத்தில் சுக்கிர மகாதசையில் இருப்பு, இரு வருடங்களும் எட்டு மாதங்களுமாம். இதுவரை முதல் பாகத்தைச் சொன்னேம். பார்வதிதேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 44

1. அரியது ஜன்ம மாக அம்புலி ராகு மூன்றில்
கரியவன் பொன்னே ஞறில் [1]கார்மக னென்பா னிற்கத்
தரைமகன் மேட மாகத் தபனனும் புதனும் லாபம்
உரைப்பீர்கள் பலனே யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகவும், சந்திரன் ராகு மூன்றுமிடத்திலும், சனி குரு ஆறுமிடத்திலும், சுக்கிரன் ஒன்பதாமிடத்திலும், செவ்வாய் மேஷத்திலும் (கேது மேஷத்திலும்,) சூரியன் புதன் லாப ஸ்தானத்திலும் இருந்தால் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதி கேட்கலானாள்.

கிரகநிலை

	சுக்கிரன் கேது	செவ்வாய்	சூரியன் புதன்
சனி குரு	இராசி சக்கரம்		லக்கினம்
		சந்திரன் ராகு	

2. பிருகுவும் புகலு கின்றார் பிறந்திடு மாண்பால் ஜன்மம்
வருமில்லங் கீழ்மேல் வீதி வாசலும் வடபால் நோக்கங்
கரிமத கோஷ்ட மேற்கில் கனலினி லுதித்தோள்
[தெற்கில்
திருமாலின் கோஷ்டம் தென்கீழ் சிம்மவா கனத்தாள்
[மாரி ;

2. பிருகு முனிவர் கூறுகின்றார். இந்த ஆண் மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் வடக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. விநாயகர் கோயில் மேற்குத் திசையிலும், தெற்கில் திரௌபதியம்மன் கோயிலும், திருமாலின் கோவில் தென் கிழக்குத் திசையிலும், சிங்க வாகனத்தையுடைய துர்க்கை, மாரியம்மன் ஆகியோர் ஆலயங்களும் ;

---

1. சுக்கிரன்.

3. அரன்கோஷ்டம் வடபா லாகும் அறைந்தவிவ் வடையா
[ளத்துள்
திருமக னுதிப்பா லுகுந் தீயின்தன் குலமே யாகும்
பெறுந்தந்தை தாயின் யோகம் பேதையும் புத்திர யோகம்
உரைக்கிறே முன்பின் ஜன்மம் உத்தமி கேட்டி டாயே.

3. சிவபெருமான் ஆலயமும் வடக்குப் பக்கத்தில் உள்ளன. இவ்வித அடையாளங்களுள்ள வீட்டில் வன்னியர் குலத்தவனாக இந்த ஜாதகன் தோன்றுவான். இவனுடைய தந்தை தாய் மனைவி மக்கள் இவர்களுடைய யோகங்கள் முற்பிறவி மறுபிறவி ஆகிய இவற்றையும் கூறுகின்றேம். தாயே! கேளுங்கள்.

தந்தை பிறப்பும் சகோதரபாவமும்

4. தாதைக்குத் தார மிரண்டில்
தரித்திடு மிளையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும்
நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைவர் தம்மைப்
போற்றவே பலத்தைக் காணேம்
மேதினில் தனியாய் வாழ்வன்
விளம்புவோ மிவன்கு ணத்தை.

4. ஜாதகனுடைய பாட்டனுக்கு ஏற்பட்ட மனைவியர் இருவர். அவர்களுள் இளைய மனைவிக்குப் பிறந்தவன் இந்த ஜாதகனுடைய தந்தை என்று சொன்னேம். தந்தைக்குச் சகோதரர் உண்டு என்று சொல்லக் கிரக பலமில்லை. தந்தை தனியனாக வாழ்ந்து வருவான். தந்தையின் குணத்தைக் கூறுகின்றேம்.

தந்தையின் குணங்கள்

5. கல்வியில் லாதா லுகுங் கௌரவ மில்லா னென்றேம்
வல்லிக்கு வடக்க மாவன் மனமது சஞ்ச லத்தன்
புல்லிய புத்தி கொஞ்சம் போஜன சுகவா லுகுந்
தல்லியால் நிந்தை யேற்பன் சங்கையா மனத்த லுகும்.

5. கல்வியறிவில்லாதவன். மதிப்பில்லாதவன் என்று சொல்லுகின்றேம். தன் மனைவிக்கு அடங்கி நடப்பவன். அலைபாயும் மனத்தினன். சிறிது அற்ப புத்தியுடையவன். நன்றாகச் காப்பிடுவதில் விருப்பமுள்ளவன். தாயாரால் பழியை அடைவான். சந்தேக மனமுடையவன்.

இதுமுதல்

6. வீண்கோப முடைய னுகும் வெறிகொளும் பொருளு
[மிட்டன்
வானவர் பத்தி பூணன் மனைவியால் பெருமை யேற்பன்
.....முடையா னுகும் அல்பமாங் கோப முண்டு
நாணமில் லாதா னென்றோரும் நாயகி கேட்டி டாயே.

6 முன்கோப முடையவன். போதையூட்டும் மது முதலான பொருள்களில் விருப்பமுள்ளவன். தெய்வபக்தி யில்லாதவன். தன் மனைவியால் பெருமையையடைவான்..... உள்ளவனுவன். சிறிது கோபங்கொள்ளும் இயல்பினன். வெட்கமில்லாதவன். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய குணங்கள்

7. பாலகன் குணத்தைச் சொல்வேன் பலருக்கு நல்லோ
[னுவன்
சிலவான் வெளிம யக்கன் செய்ந்நன்றி மறவா னுகும்
வேல்விழி மாதர் மோகன் வெற்றியாந் தொடுவ ழக்கில்
காலத்தை யறிந்து ரைப்பன் கண்டித வார்த்தை யுண்டு.

7. ஜாதகனுடைய குணங்களைக் கூறுகின்றோம். பலபேருக்கு நல்லவனுக இருப்பான். நல்லொழுக்கமுடையவன். வெளியார் மயங்கும்படி வாழ்ந்து வருவான். பிறர்செய்த உபகாரத்தை மறவாதவன். வேலைப்போன்ற கூரிய விழிகளையுடைய பெண்கள் மீது மையல் கொள்ளுபவன். எடுத்த காரியங்களை ஜயத்துடன் முடிப்பான். வருங் காலத்தை யறிந்து சொல்லக்கூடியவன். கண்டித்துப் பேசும் இயல் பினன்.

மேற்படி : தொடர்ச்சி

8. வித்தையுஞ் சமமா யேற்பன் விவேகியாந் தந்திர
[வார்த்தை
புத்தியில் பெரியோ னுவன் புவிராசர் பேட்டி கொள்வன்
சுத்தத்தார் மதிக்க வாழ்வன் சோம்பிடான் காரி யத்தில்
அத்திபோல் நடையு மாவன் அறுமுகன் பத்தி பூண்பன்.

8. சமமான கல்வியறிவு உள்ளவன். நல்லவை தியவைகளை உணர்ந்து நடப்பவன். தந்திரமாகப் பேசுபவன். அறிவில் பெரியவன். அரசாங்கத்தாருடன் தொடர்புள்ளவன். தன் உறவினர் கொண் டாடும்படி வாழ்ந்து வருவான். காரியங்களைச் செய்வதில் சோம்ப லில்லாதவன். யானையைப்போன்ற கம்பீரமான நடையுள்ளவன். முருகக் கடவுள்மீது பக்தியுடையவன்.

ஜாதகனின் யோகம்

9. அரசரால் ஜீவ னங்கள் அணுகிடும் பால னுக்கு
வருகாலஞ் சொல்லு மென்ன வறுமூன் றிரண்டு
[வாண்டில்
மருவிடு மிராச யோகம் வளர்பிறை போலே வோங்குங்
குறைவிலா வன்பான் மூன்று ஆண்டுமட் டுய்வா
[னென்றோரும்.

9. அரசாங்க உத்தியோகத்தை ஏற்று ஜீவித்து வருவான். அஃது எந்தக் காலத்தில் ஏற்படும் என்று சொல்லுங்கள். ஜாதகனுடைய இருபதாம் வயதில் ராஜயோகம் ஏற்படும். வளர்பிறைச் சந்திரன் போல் யோகம் விருத்தியாகும். ஜாதகனுடைய ஐம்பத்து மூன்றும் வயது வரையில் குறைவில்லாமல் யோகம் வளரும் என்றோரும்.

இதுவுமது

10. அன்னையால் பெருமை யேற்பன்
அடைந்தோரை யாத ரிப்பன்
மன்னர்க்கு விவன்சொல் மேன்மை
மறுநகர் வாச மெய்தும்
பொன்பணி யதிகஞ் சேர்ப்பன்
புகழ்ந்தோரை யாத ரிப்பன்
தன்சொல்லே மேன்மை யாகச்
சாதிப்பா னூகை சாலி.

10. தாயாரால் பெருமையை அடைவான். தன்னையண்டி வந்தவரைக் காத்து வருவான். அரசாங்கத்தாருக்கு இவன் வார்த்தைகள் மேன்மையாம். வேற்று ஊரில் வசித்து வருவான். பொன்னுபரணங்களே அதிகம் சேர்ப்பான். தன்னைத் துதிசெய்தவரைக் காப்பான். தன் வார்த்தைகளே உயர்ந்தவை என்று திடமாகக் கூறுபவன். ஊக முடையவன்.

ஜாதகனின் உடன்பிறந்தவர்

11. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மெண்மர்
[தோன்றும்
அவர்களில் லாண்பா லொன்று அழகிய கன்னி ரண்டு
தவசியே தீர்க்க மெய்துஞ் சாற்றுவோ மாண்பால் சேதி
நவனியா லுய்வா னுகும் நற்கல்வி யதிகங் காணன்.

11. ஜாதகனுடைய சகோதரரைப் பற்றிச் சொல்லுகின்றோம். அவர் எட்டுப் பேராவர். அவர்களில் ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோரும். தவம் செய்பவனே! சகோதரனின் செய்தியைக் கூறுகின்றோம். விவசாயம் செய்து ஜீவித்து வருவான். அதிகமாகக் கல்வியறிவில்லாதவன்.

ஜாதகனின் சகோதரனது குணங்கள்

12. பித்தன்போல் திரிவா னகும் பிறர்குற்றம் புகலா னகுஞ்
சித்தமுங் கரப்பு மில்லான் தேவதாப் பக்தி பூணன்
சுத்தமில் லாம னத்தன் சோம்பலு முடைய னுமே
பத்தினி யொன்றே யாகும் பாலர்க ளாண்பா லொன்று.

12. பைத்தியம் போல் திரிந்து வருவான். பிறருடைய குற்றங் களைக் கூறுதவன். மனத்தில் மறைவில்லாதவன். தெய்வபக்தி யில்லாதவன். தூய்மையான மனமில்லாதவன், சோம்பேறி. இவ னுக்கு மனைவியொருத்தியே யாவள். இவனது புத்திர பாக்கியத்தைச் சொல்லுகின்றோம். ஆண்மகன் ஒருவனும்;

சகோதரன் இயல்பும் ஜாதகனின் தாயின் குணங்களும்

13. கன்னிகை யிரண்டு தீர்க்கங் காதலன் சமயோ கத்தான்
இன்னனே டொத்து வாழ்வன் இயம்புவோம் பிற்பால் [சேதி
அன்னையின் குணத்தைச் சொல்வேன் அன்புடை [மனத்தா ளாகும்
முன்கோப முடனே தாழ்வு மொழியது சுகமே யாகும்.

13. இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என் றோம். ஜாதகன் சகோதரன் சமமான யோகமுடையவன்; ஜாதகனுடன் ஒற்றுமையாக வாழ்ந்து வருவான். மற்ற செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். இப்போது தாயின் குணத்தைக் கூறுகின்றோம். அன்புள்ள மனத்தினள். முன்கோபமுடையவள். அக்கோபம் விரைவில் தாழ்வடையும்.

இதுவுமது

14. பலருக்கு நல்லோ ளாவள் பரவச முடைய ளாகுங்
குலவுமே கார கங்கள் குன்றுது யாண்டு முண்டு
தலைவியால் குடும்ப மேன்மை சதுஷ்பாதம் விருதது யுண்டு
நிலையிலார்க் குதவி செய்வள் நினைத்தது போல்மு டிப்பள்.

14. எல்லோருக்கும் நல்லவளாகஇருப்பாள். பெரியோர்கள் உப தேசங்களைக்கேட்டு மனமுருகும் இயல்பினள். காரக நேரயுற்றவள் (மேகரோக முடையவள்). அது குறையாது. இவளால் குடும்பகௌரவ உயரும். கால்நடைகள் பெருகும். ஏழைகட்கு உதவிபுரிவாள் எண்ணிய காரியங்களைச் செய்து முடிப்பள்.

15. இல்லமு மேல்பா லாகும் இவள்துணை யாண்பா லிரண்டு
வல்லியு மொருத்தி யாகு மவள்குண முன்கோ பத்தாள்
இல்லமு மில்லா ளாகும் யாரையு முறவு கொள்வள்
நல்லவ ளாகி வாழ்வள் நாயக னின்றி வாழ்வள்.

15. இவளுடைய வீடு மேற்குப் பக்கத்திலுள்ளது. இவளுடன் பிறந்தவர்களில் சகோதரர்கள் இருவரும் சகோதரி யொருத்தியு மாவார்கள். சகோதரியின் குணத்தைக் கூறுகின்றோம். முன்கோப முடையவள். வீடு இல்லாதவள். எல்லாரிடமும் நட்புக் கொள்ளுபவள். நல்லவளாகி வாழ்ந்து வருவாள். கணவனை இழந்து வாழ்ந்து வருவாள்.

தாயின் சகோதரியின் புத்திரபாவமும், குணங்களும்

16. சுதராண்பா லிரண்டு தீர்க்கந் தோகையு மொர்ருத்தி
[யாகும்
பதர்குண முடைய ளாகும் பலரையும் வசியங் கொள்வள்
அகமது பின்னல் சேரும் அஞ்சிடா ளெதிரிக் கேதான்
உகமையாய்ப் பேசு வாளாம் உறுதியா மனத்த ளாகும்.

16. இரு புத்திரர்கள் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள். புத்திரி யொருத்தியே யாவள். அற்பகுணம் உள்ளவள். எல்லோரை யும் வசிகரிக்கும் இயல்பினள். பிற்காலத்தில் வீடு கிடைக்கும். விரோதி கட்குப் பயப்படாதவள். உயர்மானங்களுடன் பேசுபவள். திடமான மனத்தள்.

ஜாதகனின் தாயின் முற்பிறவி

17. இன்னமும் பலவே சேதி யியம்புவோம் பின்பா கத்தில்
அன்னையின் பூர்வஞ் சொல்வேன் அப்புவில் வைசியச்
[சேயாய்ப்
பொன்பொரு ளுடைய ளாகிப் பூவையும் வாழு நாளில்
மன்னனு.....ஓட்ட லுற்றாள்.

17. இன்னும் பலவிதச் செய்திகளைப் பிற்பாகத்தில் கூறுகின் றோம். ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருவானைக்காவில் வைசிய குலத்தவளாகப் பிறந்து பொன் செல்வம் இவைகளை யடைந்து வாழ்ந்து வருங்காலத்தில்... ....விரட்டினாள்.

முற்பிறவிச் சாபம்

18. மாரனும் வருத்த முற்று வறைந்தசா பத்தைக் கேண்மோ
தீரமாய்ப் பின்ஜன் மத்தில் சித்திர மனேக மாகக்
கூறுவார்.....ன்னும் பகையு மாகிப்
பாரினில் வாழ்வாய் நீயும் பகர்ந்துமே சென்ரு
[னென்ரோம்.

18. அவன் வருத்தமடைந்து கூறுகின்ற சாபத்தைக் கேளுங் கள். இனி ஏற்படும் மறுபிறவியில் உன்மீது பலரும் பலவகைப் பழி களைக் கூறுவர்.....விரோதி யாக உலகில் வாழ்ந்து வருவாய் என்று கூறி விட்டுச் சென்ரான்.

மேற்படி சாப பலனும், தாயின் மறுபிறவியும்

19. அந்திய காலந் தன்னில் அவளுக்கு வாய்ப்புண் கண்டு
அந்தகன் பக்கல் சென்று அயலே வரையப் பட்டு
வந்தவ ளென்று சொல்வோ மறைகிறே மிவள்பின்
[ஜன்மங்
கந்தன்வாழ் தணிகை தன்னில் கலப்பளா மிரட்டி வம்சம்.

19. ஜாதகனுடைய தாய் தன் கடைசிக் காலத்தில் வாயில் புண் ஏற்பட்டு மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப் பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம். தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம். முருகக்கடவுள் வீற்றிருக்கும் திருத்தணிகையில் ரெட்டியார் மரபில் பிறப்பாள்.

தந்தையின் முற்பிறவி

20. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் தக்கோலந் தன்னி
[லேதான்
வந்தன னிக்கு லத்தில் மறையவர் தொண்டு பூண்டு
அந்தவன் வாழு நாளில் அணுகின வினையைக்
[கேண்மோ
கன்னிகை யொருத்தி பேரில் காணுத வார்த்தை
[சொன்னான்.

20. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம் தக்கோலமென்ற ஊரில் இதே குலத்தில் பிறந்து பகவானுக்குத் தொண்டுகளைச் செய்து கொண்டு வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு கன்னிப்பெண் மீது தான் உணராமலே பழியான வார்த்தைகளைக் கூறினான்.

முற்பிறவியில் ஏற்பட்ட சாபம்

21. மாதுவு மனமே வெட்கி யறைந்தசா பத்தைக் கேண்மோ
பாதகா வெந்தன் பேரில் பழிகளுஞ் சொன்னாய் நீயும்
மேதினில் மறுஜன் மத்தில் விளங்காது துணையெ
[னைப்போல்
தீதாகும் தோகை யாலே செப்பியே தெருத்தாள்
[விட்டாள்.

21. அந்தப் பெண்ணும் மனம் வருந்திக் கூறிய சாபத்தைக் கேளுங்கள். கொடியவனே! என்மீது அடாத கிந்தை வார்த்தை களைக் கூறினாய். இனி ஏற்படும் மறுபிறவியில் உனக்கு என்னைப் போல் சகோதரிகள் இல்லாமல் இறந்து விடுவர். மனைவியால் துன்பமும் பழியும் ஏற்படும் என்று கூறித் தெருமண்ணை வாரி இறைத்தாள்.

22. ஆகையா லிச்சென் மத்தில் அண்ணன்தம் பிகளு
[மின்றித்
தோகையால் நிந்தை யேற்பன் செப்புவோ மிவன்பின்
[ஜன்மம்
பாகமாய்க் தக்கோ லத்தில் பிறப்பனு மிக்கு லத்தில்
போகவா ரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

22. ஆதலினால், ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் அண்ணன் தம்பிமார் இல்லாமல் மனைவியால் அவமானம் அடைவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். தக்கோலத்தில் இதே குலத்தில் பிறப்பான். போகக்கடலாகிய இறைவனைக் கணவனுக மணந்த புண்ணியவதியே! கேளுங்கள்.

தாய்தந்தையரின் இறுதிக்காலம்

23. இருபது வாண்டுக் குள்ளே இவன்தந்தை கண்ட மெய்துந்
திருகிலா விருபத் தேழில் செப்புவோ மன்னை கண்டம்
*அருமறை முடிவிலாடும் அம்பிகை யாளே கேளாய்

23. ஜாதகனுடைய இருபதாம் வயதுக்குள்ளாகவே இவனுடைய தந்தை மரணமடைவான். இருபத்தேழாம் வயதில் தாய் மரணமடைவாள். அரிய வேதங்களின் முடிவில் சொல்லப்படும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகனின் திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

24. ஜாதகன் மன்றல் காலஞ் சாற்றுவோம் பதினு ருண்டில்
காதலி மேல்பால் நேருங் கழறுவோ மவள்கு ணத்தைச்
சூதிலாள் பொறுமை சாலி சொல்லது சுருக்க மாகும்
மாதுவும் வந்த பின்பு வரனுக்கு யோக மென்றோம்.

24. ஜாதகனுடைய திருமணக்காலத்தைக் கூறுகின்றோம். அவனுடைய பதினேரும் வயதில் மேற்குப் பக்கத்திலிருந்து மனைவி வருவாள். அவளுடைய குணத்தைக் கூறுகின்றோம். சூதுகளில்லாதவள். பொறுமையுடையவள். சுருக்கமாகப் பேசுபவள். இவளை மணந்த பிறகு ஜாதகனுக்கு யோகங்கள் விருத்தியாகும்.

25. தோகைபோல் நிறத்தா ளாகுந் துறவோர்க்கு
[வன்ன மீவள்
பாகமாய்ப் பேசு வாளாம் பாவையும் நடக்கை நன்மை
தாகமென் றோர்க்கு மீவள் சமத்துவ முடைய ளாகும்
நாகரி கங்க ளுண்டு நாயகன் மனத்துக் கேத்தோள்.

* மூலப்பிரதியில் இப்பாடல் மூன்றடியாகவே முடிகின்றது.

25. மயிலைப்போன்ற அழகான நிறமுடையவள். முதியவர்கட்கு அன்புடன் அன்னம் படைப்பவள். பொருத்தமாகப் பேசுபவள். நன்னடத்தையுடையவள். பசிதாகம் உள்ளவர்களுக்குக் கொடுப்பவள். சமத்துவ மனப்பான்மை யுள்ளவள். நாகரிகங்கள் உடையவள். தன் கணவனது மனத்துக்கு ஏற்றவள்.

புத்திர பாவமும் ஜாதகனின் முற்பிறவியும்

26. புத்திர ராண்பா லிரண்டு பெண்ணது மூன்றே
[யென்றோம்
வித்தகன் பூவஞ் சொல்வேன் மேற்றிசைக் கொங்கு
[நாட்டில்
சுத்தமாஞ் சைவச் சேயாய்த் தோன்றியே கிருஷி செய்து
பத்தினி மதலை பெற்றுப் பலருக்கு நல்லோ னுயும்;

26. இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் தோன்றுவர். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். மேற்குத் திசையில் உள்ள கொங்கு நாட்டில் சுத்தமான சைவ குலத்தவனாகப் பிறந்து விவசாயம் செய்து வந்து மனைவி மக்களையடைந்து பலபேருக்கு நல்லவனாகவும்;

பர்வதயோகம் : கேசரியோகம்

27. அறமதி லிச்சை புண்டாய் அந்தக நகரஞ் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்த வில்லம்
உரைக்கிறோ மிவனின் யோகம் உயர்பரு வதயோ கங்கள்
மருவுங்கே சரியோ கங்க ளறைகிறோம் பால னுக்கு.

27. தருமம் செய்வதில் விருப்பமுள்ளவனாகவும் வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இவ்வீட்டில் பிறப்பான். இவனுடைய யோகத்தைக் கூறுகின்றோம். உயர்ந்த பர்வத யோகம் கேசரியோகம் ஆகிய இருயோகங்களும் ஜாதகனுக்கு ஏற்படும்.

யோகத்தின் பலன்

28. யோகத்தின் பயனைச் சொல்வேன் உலகுளோர் மதிக்க
[வுய்வன்
நாகம்போல் பகைவ ருக்கு நற்கரு டன்போல் வாழ்வன்
போகபாக் கியங்க ளேற்பன் புவிராச்சர் தம்மா லுய்வன்
பாகமாய்க் குடும்ப மேற்பன் பந்துவுக் கினிய னுகும்.

28. யோகத்தினுடைய பலனைச் சொல்லுகின்றோம். உலகத்தவர் மதிப்புப்பெற்று வாழ்ந்து வருவான். சர்ப்பம் போன்ற விரோதிகளுக்கு கருடன் போன்ற பகைவனுவான். போக போக்கியங்களை அடைவான். அரசாங்க உத்தியோகம் ஏற்று ஜீவித்து வருவான்.

பொருத்தமான குடும்பத்தை யடைவான். சுற்றத்தாருக்குப் பிரிய மானவன்.

29. இருபது வாண்டு தன்னில் எய்திடு மிராஜ யோகந்
தரையதை யிருவூர் சேர்ப்பன் சகடுவா கனமு மேற்பன்
அரசர்க்கு விவன்சொல் மேன்மை யதிகார முடைய
[ஞகுந்
திருமக னில்லம் பூமி சேர்ப்பதால் லாப மேற்பன்.

29. ஜாதகனுடைய இருபதாம் வயதில் ராஜயோகம் ஏற்படும். இரு ஊர்களில் நிலம் வாங்குவான். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். இவனுடைய வார்த்தைகளில் அரசாங்கத்தாருக்கு மிக்க மதிப்பு உண்டு. அதிகாரத்தை ஏற்று நடப்பவன். ஜாதகன் வீடு விளை நிலங்கள் இவைகளைச் சேர்ப்பதால் லாபமடைவான்.

ஜாதகன் மரணகாலம்

30. அறுபது வாண்டு தன்னி லைப்பசி மாதந் தன்னில்
திருமக னுடல மேகுஞ் செப்புவோ மிவன்பின் ஜன்மந்
திருவண்ண மலையி லேதான் ஜனிப்பனுஞ் சைவச் சேயாய்க்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

30. ஜாதகனுக்கு அறுபதாம் வயதில் ஐப்பசி மாதத்தில் மரணம் சம்பவிக்கும். இவன், மறுபிறவியில் திருவண்ணமலையில் சைவ குலத்தவனாகப் பிறப்பான். கரிய மதயானையைப் போன்ற முகத்தை யுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகன் ஜனனகால தசை

31. அன்னவன் ஜனன காலம் அநுடத்தில் மூன்றும் பாதந்
துன்சனி தசையெட் டாண்டின் செப்புவோம் பலனை
[யாங்கள்
பொன்பணி செலவு முண்டு புதல்வனும் பிணிய நேகந்
தன்மன சஞ்ச லங்கள் சாற்றினேம் பூர்வ பாகம்.

31. ஜாதகனது ஜனன காலத்தில் அநுட நட்சத்திரம் மூன்றும் பாதமாகும். அக்காலத்தில் நடப்பு சனி மகாதசை. அத்தசையில் மீதியிருப்பு எட்டு வருடங்கள். அக்காலத்திய பலனைச் சொல்லுகின் றோம். பொன் செல்வம் இவைகள் செலவாகும். ஜாதகனுக்கு நோய் ஏற்படும். மனத்தில் சஞ்சலங்கள் ஏற்படும். இதுவரை முதல் பாகத் தைச் சொன்னோம்.

ஜாதகம் 45

1. அரியது ஜன்ம மாக அதிதியு மிரண்டி லேறக்
கரியவன் மூன்றி லாகக் கலைநாவில் சேயு மாறில்
[1]புலவனும் புகரு மேழில் புரவியோன் பாம்பு கெண்டை
குருவுமே தசம மாகச் கேட்டையு மிரண்டாம் பாதம்;

1. சிம்மம் இலக்கினமாகவும், கேது இரண்டாமிடமாகிய கன்னியிலும், சனி மூன்றுமிடமாகிய துலாத்திலும், சந்திரன் நான்காமிடமாகிய துலாத்திலும், செவ்வாய் ஆறுமிடமாகிய மகரத்திலும் புதன் சுக்கிரன் ஏழாமிடமாகிய கும்பத்திலும், சூரியன் ராகு மீனத்திலும், குரு பத்தாமிடமாகிய விருஷபத்திலும், இவ்வாறு நவக்கிரகங்கள் இருந்து கேட்டை இரண்டாம் பாதத்தில் பிறந்தவனுடைய;

கிரகநிலை

சூரியன் ராகு		குரு	
புதன் சுக்கிரன்	இராசி சக்கரம்		
செவ்வாய்			லக்கினம்
	சந்திரன்	சனி	கேது

2. பலனதைப் புகலு மென்று பார்வதி கேட்கும் போது
குலகுரு வதிட்டர் சொல்வார் குறித்திடு மாண்பால்ஜன்மந்
தலமது வடதென் வீதி சனிவாசல் பேரு ராகும்
நலமுள கங்கை சேயாய் நாயகன் சேஷ்ட னாகும்.

2. பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கும்போது குலகுருவாகிய வசிஷ்ட முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் பிள்ளையின் ஜாதகம். இவன் பிறந்த வீடு தெற்கு வடக்காக உள்ள வீதியில் வடகிழக்கை நோக்கியுள்ள வாயிலையுடையது. அவ்வூர் பெரிதாயுள்ளது, வேளாள குலத்தில் ஜாதகன் தன தந்தைக்கு மூத்த புதல்வனாகப் பிறப்பான்.

3. ஜனித்தவில் லிதர தேசஞ் செப்பினேந் தந்தை யில்லஞ்
சினமிலா யிவனின் யோகந் தந்தைதாய்த் துணைவர்
[யோகம்
வினையுடன் முன்பின் ஜன்மம் விளம்புவோ மிந்நூல்
[தன்னில்
கனமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

---

1. புதன்.

3. ஜாதகன் பிறந்த வீடு வேற்று நாட்டிலுள்ளது என்றேரும். இவன் தன் தந்தையின் வீட்டில் பிறப்பான். இவனுடைய யோகம் தாய் தந்தையருடைய யோகம், திங்குள்ள முற்பிறவி, மறுபிறவி ஆகிய வற்றை இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேரும். கரிய மதயானையைப் போன்ற முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

4. தந்தையின் துணைவ ரேழி லாணென்று கன்னி நான்கு
இந்தவாறு விருத்தி யென்றேரும் இயம்பின வாண்பா
[லுந்தான்
மூன்றின துணைவ ரென்றே மொழிகிறே மவன்தன் சேதி
அந்தவன் வேரூய்ச் செல்வன் அறிவுளா னுணச்சல்
நீட்சி.

4. ஜாதகனுடைய தந்தையின் சகோதரர் எழுவராவர். அவர்களில் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் நால்வரும் நீண்ட ஆயுள் உள்ள வர்கள் என்றேரும். நாங்கள் கூறிய சகோதரன் தந்தைக்கு மூத்தவன் என்று சொன்னேம். அவனுடைய செய்திகளைக் கூறுகின்றேரும். அவன் வேருகச் சென்று விடுவான். அறிவாளி. மெல்லிய தேக மூடையவன்.

5. அரசர்பா லணுகி வுய்வன் அவனியில் வறுமை காணன்
வருமனை யொன்றே தீர்க்க மைந்தர்க ளாண்பா லிரண்டு
அரிவையு மூன்று மாகும் அடாவடி காணு னுகும்
பெருமையாய்க் குடும்ப மேற்பன் புத்திரன் தன்னல்
[யோகம்.

5. அரசரை அடைந்து வாழ்வான். (அரசாங்க உத்தியோகம் ஏற்று வாழ்ந்து வருவான்.) தரித்திரத்தை அடையாதவன். இவனுக்கு ஏற்படும் மனைவி ஒருத்தியே. புத்திரர்கள் இருவரும் புத்திரிகள் மூவரும் தோன்றுவர். அடாவடியாகப் பேசாதாவன். பெருமையுள்ள குடும்பத்தை அடைவான். தன்னுடைய மகனல் யோகம் பெறுவான்.

6. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சாந்தவான் சரச
[வார்த்தை
தந்தமுந் தரள மொக்குந் தனமது செலவு செய்வன்
தன்பந்து மதிக்க வாழ்வன் சகலர்க்கு நல்லோ னுவன்
தன்தனங் கொடுக்கல் வாங்கல் சார்ந்திடு மாமி ரண்டு.

6. ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கூறுகின்றேரும். பொறுமையுடையவன். சரச சல்லாபமாகப் பேசுபவன். முத்துக் களைப் போன்ற வெண்மையான பற்களையுடையவன். பொருளைச் செலவு செய்து விடுவான். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து

வருவான். எல்லோருக்கும் நல்லவன். தன்னுடைய பணத்தைக் கொடுக்கல் வாங்கல் செய்து வருவான். இரு மனைவியரை அடைவான்.

7. மகநாளில் கன்னி ராசி மருவுவான் வாத தேகி
பகையென்று மனத்தில் வையான் பணிந்தோரை யாத
[ரிப்பன்
புகைசக்ர மோடு மார்க்கம் புவிதனில் சிலநா ளுய்வன்
உகமையாய் வார்த்தை சொல்வ னுறுதியில் லாத
[நெஞ்சம்.

7. மக நட்சத்திரத்தில் கன்னியா லக்கினத்தில் பிறந்தவன். வாயு ரோகமுடைய சரீரமுள்ளவன். ஒருக்காலத்திலும் விரோதம் பாராட்டாதவன். தன்னை வணங்கியவரை ஆதரித்து வருவான். புகை வண்டி போக்கு வரவுப் பாதை நிலையத்தில் சின்னட்கள் வசித்து வருவான். (சிலகாலம் ஸ்டேஷன் மாஸ்டர் வேலை பார்ப்பான்.) உப மானங்களுடன் பேசுபவன். திடமில்லாத மனமுள்ளவன்.

8. அரசர்பால் சிலநா ளுய்வன் அதன்பின்னல் வணிபஞ்
[செய்வன்
தரையதைச் சேர்ப்பா னுருஞ் சந்தேக மனத்த னுரும்
மர்மமுங் கொஞ்ச முண்டு மாநிறங் கடவுள் பக்தி
வருவோரை யாத ரிப்பன் மாடுகள் பலித மற்பம்.

8. அரசாங்க உத்தியோகம் ஏற்று சிலகாலம் வசித்து வருவான். அதற்குப் பின்னல் வர்த்தகம் செய்து வருவான். விளைநிலங்களைச் சேர்ப்பான். சந்தேகமுள்ள மனத்தினன். சிறிது மறைவுள்ளவன். மாநிறமுடையவன். தெய்வபக்தியுள்ளவன். தன்னையண்டி வந்த வரை ஆதரித்து வருவான். கால்நடைகள் விருத்தியுறுது.

9. வாதநோய் கொஞ்ச முண்டு
மால்ரேகை கரத்தில் தோன்றும்
வேதனை யொருவர்க் கெண்ணன்
மெல்லியர் மோக னுவன்
சாதுகள் நேசஞ் செய்வன்
தனஞ்சேர்ப்பன் செலவு செய்வன்
நியாதியு முடைய னுருங்
கீதங்கள் கேட்க விஷ்டன்.

9. வாயு ரோகமுடையவன். கையில் விஷ்ணுரேகை உள்ளவன். ஒருவருக்கும் தீங்கு எண்ணுத மனத்தினன். பெண்கள்மீது பிரிய முள்ளவன். சாதுக்களின் நட்பினைப் பெறுவான். பணத்தைச் சேர்ப்

பான். அதைச் செலவும் செய்து விடுவான். கீர்த்தியையுடையவன். சங்கீதத்தைக் கேட்பதில் விருப்பமுள்ளவன்.

10. சொன்னவிக் குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன்
அழகுளான் வாத தேகி
கன்னென் மொழியே சொல்வன்
கல்வியு மிரண்டு வற்பம்
பின்னமில் லாத தேகி
பொருத்தமாய்ப் பேசு வானும்.

10. இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களையுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றோம். அழகுள்ளவன். வாயு ரோகமுடைய சரீரமுள்ளவன். இனிய வார்த்தைகளையே பேசுபவன். இருவிதக் கல்விகளைக் கற்பான். சிறிதளவே கல்வியறிவுடையவன். ஊனமில்லாத சரீரமுள்ளவன். பொருத்தமாகப் பேசுபவன்.

11. பலவித வணிபஞ் செய்வன்
பரவுப காரனு கும்
நலமதை யெவர்க்குஞ் செய்வன்
நல்லோர்க்கு நல்ல னுவன்
சொலுமொழி காப்பா னுகுஞ்
சொகுசனும் நடைக்கு வஞ்சான்
விலைமாதர் மோகங் கொள்ளான்
வெஞ்சினம் வெளிக்காட் டாதான்.

11. பலவிதமான வர்த்தகங்களைப் புரிந்து வருவான். பிறருக்கு உபகாரி. எல்லோருக்கும் நன்மையையே செய்து வருபவன். நல்லவர் கட்கு நல்லவனாக இருந்து வருவான். சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவன். ஆடம்பரத்தில் பிரியமுள்ளவன். நடப்பதற்குச் சளையாதவன். வேசையர்மீது விருப்பமில்லாதவன். கோபத்தை வெளிவிடாதவன்.

12. அன்னையின் சுகமில் லாதான் ஆதியி லனங்கு றைச்சல்
பின்னெரு பக்கல் வாசம் பூமியும் பின்னுல் சேர்ப்பன்
மன்னர்க்கு விவன்சொல் மேன்மை வருவோரை யாத
[ரிப்பன்
பொன்பணி யதிகஞ் சேர்ப்பன் போசன வறுமை
[காணுன்.

12. தன் தாயாரால் சௌக்கியம் அடையாதவன். ஆதிகாலத்தில் சாப்பாட்டுக்கு வறுமையுடையவன். வேற்றூரில் சென்று வாழ்ந்து வருவான். பிற்காலத்தில் பூமியைச் சேர்ப்பான். இவனுடைய வார்த்தையில் அரசாங்கத்தாருக்கு மதிப்பு உண்டு. தன்னை அண்டி வந்தவரைக் காப்பான். பொன் ஆபரணங்களை அதிகம் சேர்ப்பான். சாப்பாட்டுக்குத் தரித்திரமில்லாதவன்.

13. தன்துணை காணு லகுஞ் சாற்றுவீ ரந்தச் சங்கை
துன்சனி மூன்றில் தங்கச் சேயுமே வாறி லேறச்
சந்திர னிலில் நீசந் தங்கின பலத்தி னுலே
அன்னையு மிரண்டில் மாண்டு அணுகிடும் வேறு மாதா.

13. உடன்பிறந்தவரில்லாதவன். அதற்குக் காரணம் கூறுங்கள். தீங்கு தரும் சனி மூன்றுமிடத்திலும், செவ்வாய் ஆறுமிடத்திலும், சந்திரன் நான்காமிடத்தில் நீசனுகவும் இருக்கும் பலத்தால் அவ்விதம் நாங்கள் சொன்னேம். சகோதர ஸ்தானத்தில் சனியும் மாதுர்காரனுகிய சந்திரன் மாதுர்ஸ்தானத்தில் நீசனுகவும் அவ்வீட்டுக்குரிய செவ்வாய் ஆறுமிடத்தில் மறைந்து இருப்பதாலும் தாய் ஜாதகனுடைய இரண்டாம் வயதில் மரணமடைந்து வேறு இளைய தாய் ஒருத்தி வாய்ப்பாள்.

14. மாதுவின் குணத்தைச் சொல்வேன்
மனமது கவடு மில்லான்
ஓதுமுன் கோபங் கொஞ்சம்
உடன்படாள் பிழைக ளுக்குச்
சாதிப்பாள் சிலவே சங்கை
தன்வரன் மனத்துக் கேத்தோள்
ஓதினோர்க் குதவி செய்வள்
சேர்ந்திடும் பித்த சூடு.

14. ஜாதகனுடைய இளைய தாயின் குணங்களைக் கூறுகின்றேம். சூதுகளில்லாத மனத்தள். சொல்லுவதற்குமுன் கோபம் கொள்ளும் இயல்பினள். தீங்குகளைச் செய்ய மனமில்லாதவள். சில சந்தேகங்களை நிவிர்த்தி செய்வாள். தன் கணவனது மனமறிந்து வாழ்பவள். வேதமுணர்ந்த அந்தணர்கட்கு உபகாரி. பித்தச்சூட்டு நோயுள்ளவள்.

15. வயதுமே தீர்க்க மெய்து மைந்தர்க ளாண்பா லொன்று
நயமுள பெண்பா லொன்று நாட்டுவோர் தீர்க்க மாக
வியமாகு மற்ற வெல்லா மறைகிறேம் பின்பால் சேதி
கயமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

15. நீண்ட ஆயுள் உள்ளவள். புத்திரன் ஒருவனும் புத்திரி ஒருத்தியும் பிறந்து தீர்க்காயுள் உள்ளவர்கள். மற்றும் தோன்றும் குழந்தைகள் நிலையா. மற்ற விவரங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றேம். மதயானையைப் போன்ற முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

16. ஜாதகன் தன்னை யீன்ற தாய்சேதி புகலக் கேண்மோ
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உறுதியில் லாத நெஞ்சம்
மேதினி லடக்க வார்த்தை வீண்பழி யேற்கா ளாகுங்
காதலி யோக சாலி கண்முகம் வசிய மூண்டு.

16. ஜாதகனைப் பெற்ற தாயின் குணங்களைச் சொல்லக் கேட்பீராக. நன்றுகப் பேசுபவள். திடமில்லாத மனமுடையவள். அடக்கமாகப் பேசுபவள். வீண் அபவாதங்களை அடையாதவள். அதிர்ஷ்ட முடையவள். முகம் கண்கள் இவை வசிகரமாக உள்ளவை.

17. வந்தபின் வரன்யோ கந்தான்
மாரன்தன் மனத்துக் கேத்தோள்
தன்துணை காணு ளாகுஞ்
ஜனிக்கினுந் தீதே யாகும்
எந்தக்கா ரணத்தி னலே
யிவள்துணை தோஷஞ் சொன்னீர்
மந்தரக் கயிறு வெட்டில்
வருவதால் தோஷஞ் சொன்னேம்.

17. இவளை மணந்தபின் ஜாதகனுடைய தந்தைக்கு அதிர்ஷ்டம் ஏற்படும். தன் கணவன் மனத்துக்கு ஏற்றபடி நடப்பவள். உடன்பிறந்தவர் இல்லாதவள். பிறந்தாலும் நிலையார். எந்தக் காரணத்தால் தாய்க்குச் சகோதர தோஷம் உண்டு என்று சொன்னீர்கள். ராகு எட்டாமிடத்தில் இருப்பதால் அங்ஙனம் யாம் கூறினேம்.

18. முன்னவ ளிருந்த ஜன்ம மொழிகிறேம் தொண்டை [நாட்டில்
வன்னிய மரபில் தோன்றி மைந்தரு முடைய ளாகிக்
கன்னிகை வாழ்நாளில் கலந்ததோர் துன்மை [சொல்வேன்
தன்னில்ல மடைக்க லானுஞ் சார்ந்தது வெகுநா ளாக.

18. ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தொண்டை நாட்டில் வன்னியர் குலத்தில் பிறந்து புத்திரர்களைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். இவளுடைய வீட்டில் ஒரு பட்சி வெகு நாட்களாக வசித்து வந்தது.

19. குருவியின் கூட்டைப் பின்னுங்
கோதையுங் கலித்தா லென்றேரும்
மருவிற்று வதுவோர் தோஷம்
மைத்துனன் பேரில் நிந்தை
யுரைத்திட்டாள் மனவெ றுப்பால்
உரைத்தசா பத்தைக் கேண்மோ
வருஞ்ஜன்மந் துணைவ ரின்றி
மடிவளே மத்தி லேதான் ;

19. அந்தப் பட்சியின் கூட்டை இப்பெண் கலித்து விட்டாள். அஃது ஒரு தோஷமாக ஏற்பட்டது. தன்னுடைய கணவனுடைய சகோதரன்மீது அபாண்டமான பழிகூரச் சுமத்தினள். அதனால் வெறுப்படைந்த மைத்துனன் கூறிய சாபத்தைக் கேளுங்கள். இனி ஏற்படும் பிறவியில் உடன்பிறந்தவளின்றி இடைக்காலத்திலேயே மரணமடைவாய் ;

20. இன்னமும் பலவாறு சொன்னன் எய்திற்று வந்தச்
[சாபங்
கன்னிகை யந்தி யத்தில் கனமிலார்க் கன்ன மீந்து
தென்திசைக் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்
அன்னவ ளுதித்தா ளாகும் அணுகிடு முன்னூழ்த்
[தோஷம்.

20. என்றும் இன்னும் பலவிதமாகவும் சொன்னன். அந்தச் சாபமும் தொடர்ந்தது. ஜாதகனுடைய தாய் தன் கடைசிக் காலத்தில் ஏழைகட்கு அன்னமளித்து வந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் தோன்றினள். முற்பிறவித் தோஷமும் தொடர்ந்தது.

21. உடன்பிறந் தோர்க ளின்றி வுத்தமி வாழ்வா ளாகும்
அடைவுட னிவள்பின் ஜன்மம் அருணைபால் சைவச்
[சேயாய்த்
திடமுள குடும்பி யாவள் செப்பின மொழிகுன் றுவே
தடவரை மகளே பூர்வந் தந்தைக்குச் சொல்வேன் தாயே.

21. உடன்பிறந்தவர்களில்லாமல் வாழ்ந்து வருவாள். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். திருவண்ணாமலைக்கருகில் உள்ள ஊரில் சைவ குலத்தில் பிறந்து செல்வாக்குள்ள குடும்பத்தை அடைவாள். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவரு. மலையரசனின் மகளே ! தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும்.

22. தென்திசை யானைக் காவில் செழிப்புள வைசியச் சேயாய்
அன்னவ னுதித்து மேலும் ஆண்மையாய்க் குடும்பி யாகி
இன்னவன் வாழு நாளில் எய்தின வினையைக் கேண்மோ
கன்னிகை விதவை மோகங் கலந்துமே கருத்தங் கிற்று.

22. தெற்குப் பக்கத்திலுள்ள திருவானைக்காவில் ஒரு தன வாணிக வைசியனுக்கு மகனாய்ப் பிறந்து தைரியத்துடன் குடும்பத்தை ஏற்று நடத்தி வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு கைம்பெண்ணுடன் சிற்றின்பம் அனுபவித்தான். அதனால் கருவேற்பட்டது.

23. பண்டிதஞ் செய்யும் போது பாவையு மரண மானாள்
அண்டிற்று வந்தத் தோஷம் அதுவின்றி வேறு காணுன்
சண்டன்தன் பதிக்குச் சென்று தலைநான்கோன்
[வரையப் பட்டுத்
துண்டமா யுதித்தா னுகுந் தொடர்ந்திடு முன்னூழ்த்
[தோஷம்.

23. அக்கருவை விலக்க ஔடதங்களைக் கொடுத்தாள். அதனால் அக்கைம்பெண் இறந்து விட்டாள். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது. அந்தத் தோஷந்தவிர வேறில்லை. கடைசியில் மரணமடைந்தபின் மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். முற்பிறவித் தோஷமும் தொடர்ந்தது.

தந்தையின் மறுபிறவி

24. பாரியு மிரண்டே யாகும் பகருவோ மிவன்பின் ஜன்மம்
வாரியி னேரந் தன்னில் மகாபலி நகரி லேதான்
பாரிய தனவா னுக்குப் பிறப்பனும் பிரம்ம சேயாய்க்
கூறுவா ரத்திரி தாமுங் குமரனு மிச்சென் மத்தில்;

24. இரு மனைவியரை அடைவான். இவனுடைய (தந்தையினுடைய) மறுபிறவியைச் சொல்லுகின்றோம். மகாபலிபுரத்தில் பெரிய தனவானுக்குப் புத்திரனாக அந்தணர் குலத்தில் பிறப்பான். அத்திரி முனிவர் கூறுகின்றார். ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில்;

25. இருவிதக் குணத்தா னுயும் இடுக்கண்கள் சிலர்க்குச்
[செய்தும்
பொருளது விச்சை யாயும் பெம்மானின் பத்தி யின்றி
வருவதால் மறைக்கு லத்தில் வருகுங்கா ரணங்கள்
[சொல்வீர்
திருமக னிச்சென் மத்தில் சிலர்க்குவா பத்தைக் காத்தும்;

25. இருவிதக் குணங்களே உடையவனுகியும் சிலருக்குத் துன்பங் களே விளைவித்தும் செல்வத்தின்மீது விருப்பங் கொண்டும் தெய்வ பக்தியில்லாமலும் வாழ்ந்து வருவதால் அடுத்த பிறவியில் அந்தண குலத்தவனுகப் பிறக்கும் காரணமென்னவென்று கூறுங்கள். ஜாத கனுடைய தந்தை இப்பிறவியில் சிலபேருடைய ஆபத்தை நீக்கியும்;

26. மனமது கவடு மின்றி வருவோரை யாத ரித்தும்
கனமுள தலங்கள் சென்று காவலன் வாழ்வ தாலே
தினஞ்சதுர் வேதஞ் சொல்லுஞ் சீர்மறைக் குலமு
[திப்பான்
தினமிலாத் தவங்கள் செய்யுஞ் செல்வதி கேட்டி டாயே.

26. தன் மனத்தில் சூதுகளில்லாமல் அண்டி வந்தவரை ஆத ரித்துவந்து பல திவ்விய க்ஷேத்திரங்களுக்குச் சென்று வருவதால் தினந் தோறும் நான்கு வேதங்களே ஓதும் நல்லொழுக்கமுடைய அந்தணர் குலத்தில் பிறப்பான். தவருமல் தவங்களியற்றும் செல்வியே! கேளுங்கள்.

27. ஆரூறு வாண்டு தன்னில் ஆவணி மாதந் தன்னில்
கூறுவோந் தந்தை கண்டங் குறிக்கிரே மறுவன்
[னேக்குத்
தீரமாய் நாற்பா மூன்றில் செல்லுவாள் கால நாடு
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

27. ஜாதகனுடைய முப்பத்தாரும் வயதில் ஆவணி மாதத்தில் தந்தை மரணமடைவான். அவனுடைய இனைய தாயார் நாற்பத்து மூன்றும் வயதில் இறப்பாள். உலகில் தவங்களியற்றும் தேவியே! கேளுங்கள்.

இதுமுதல் இரண்டு பாட்டல்கள்: ஜாதகன் மனைவியின் குணங்கள்

28. பத்தொன்ப தாண்டுக் குள்ளே
பாலகன் மணங்கள் சொல்வேன்
சத்தியும் வடமேல் நேருஞ்
சாற்றுவோ மவள்கு ணத்தைக்
குத்ததை மனத்தில் வையாள்
கூறுவாள் சுகமாய் வார்த்தை
சுத்தமும் விரத மேற்பள்
சோம்பிடாள் காரி யத்தில்.

28. ஜாதகனுக்கு, பத்தொன்பதாம் வயதுக்குள் திருமணம் நிகழும். அவனுக்கு மனைவி வடமேற்குத் திக்கிலிருந்து வருவாள்

அவளுடைய குணத்தைக் கூறுகின்றேம். பிறர் குற்றங்களைப் பாராட்டாதவள். இன்புறும்படி பேசுபவள். சுத்தமுடையவள். நோன்புகளை நோற்பாள். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவள்.

29. தோகைபோல் நிறத்த ளாகுந் துறவோர்க்கு வன்ன [மீவள்
ஆகம முணர்ந்தோ ருக்கு அன்னமு மன்பா யீவள்
போகபாக் கியங்க ளேற்பள் புகழ்ந்தோரை யாத ரிப்பள்
தாகமென் றோர்க்கு வீவள் சத்தியுந் தீர்க்க ஜீவி.

29. மயிலைப்போன்ற அழகிய நிறமுடையவள். துறவிகட்கும் வேதங்களையுணர்ந்த அந்தணர்கட்கும் அன்புடன் அன்னமளிப்பாள். சுகங்களையும் பாக்கியங்களையும் அநுபவிப்பாள். தன்னைத் துதி செய்தவரைக் காப்பாள். பசி தாகம் என்று வந்தவருக்குக் கொடுப்பவள். நீண்ட ஆயுள் உள்ளவள்.

30. ஜயமுனி யிதனைக் கேட்டுச் செப்புவார் சங்கை யொன்று
வியமாகு முதல்ம னைதான் மேவிடு மிரண்டாம் பாரி
பயமிலாச் சொன்ன சங்கை பகருவோம் விவர மாக
நயமிலா வேழோன் காரி நற்சர மதனில் தங்க ;

30. ஜய முனிவர் இதனைக் கேட்டுச் ஒரு சந்தேகத்தைக் கூறுகின்றார். ஜாதகனுக்கு முதல் மனைவி நிலையாள். இரண்டாம் மனைவியொருத்தி வருவாள். பயமில்லாமல் (சந்தேகமில்லாமல்) கூறிய விஷயத்தை விவரமாகச் சொல்லுகிறேன். ஏழாம் வட்டுக்குரிய சனி சர ராசியாகிய துலாத்தில் தங்கியிருப்பதால் ;

31. சொல்லினே மந்தச் சங்கை தென்முனி புகலு கின்றார்
நல்லதோர் குருவும் பத்தில் நற்புதன் புக்கு மேழில்
அல்லலில் லாமல் நிற்க அணுகாது தார மிரண்டு
வல்லியு மொருத்தி தீர்க்க மடிவளே வரன்மூன் னுக.

31. அவ்விதம் சொன்னேம். அதற்கு அகத்திய முனிவர் ஒரு மறுப்புக் கூறுகின்றார். குரு பத்தாம் வீட்டில் இருப்பதாலும் புதன் சுக்கிரன் ஏழாமிடத்தில் கெட்ட பார்வையில்லாமல் இருப்பதாலும் ஜாதகனுக்கு இரு மனைவியர் நேரிடக் காரணமில்லை. மனைவி யொருத்தியே அவள் ஜாதகனுக்கு முன்பாகவே இறந்து போவாள்.

32. எந்தக்கா லத்தில் செல்வாள் இயம்புவீ ரந்தச் சங்கை
சந்தத மன்பா னேழில் தன்மனை கண்ட மெய்தும்
பின்மனை காண லுகும் பேசுவோம் பின்பால் சேதி
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

32. எந்தக் காலத்தில் அவள் இறந்து விடுவாள்? சொல்லுங்கள், முனிவரே! ஜாதகனுடைய ஐம்பத்தேழாம் வயதில் மனைவிக்கு மரணம் சம்பவிக்கும். அதற்குப் பிறகு வேறு மணம் செய்து கொள்ள மாட்டான். மற்ற விவரங்களைப் பின் பாகத்தில் சொல்லுகின்றேம். உயர்ந்த கணவனைப் பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

33. புத்திர ரெழுவர் தோன்றும் போகிடுஞ் சிலவே
[யென்றேஞ்
சுத்தமா யாண்பா லிரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
வித்தகன் பூர்வந் தன்னை விளம்புவோங் கொங்கு
[நாட்டில்
சத்திரிய குலமு தித்துத் தன்மனை மதலை யுண்டாய்;

33. ஜாதகனுக்கு ஏழு குழந்தைகள் தோன்றுவர். அவைகளில் சில இறந்து போம். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேம். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். கொங்கு நாட்டில் அரச குலத்தில் பிறந்து மனைவி மக்களைப் பெற்று;

34. பலவித வணிபஞ் செய்து பாரினில் வாழு நாளில்
குலவின விளையைச் கேண்மோ (வேல்விழி)கோதைமேல்
[நிந்தை சொல்லித்
தலம்விட்டு விலகும் போது சத்தியும் புகலு கின்றாள்
கலகத்தை வுரைத்த பாவி கழறும்பின் ஜன்மந் தன்னில்;

34. பலவிதமான வர்த்தகம் புரிந்து உலகில் வாழ்ந்து வருங் காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு பெண்மீது அபாண்டமான பழியைக் கூறியதால் அப்பெண் தன் கணவனைவிட்டுப் போகும்போது சொல்லுகின்றாள். அனுசியமாகக் கலகம் விளைவித்த பாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில்;

35. அன்னையின் சுகமு மின்றி அண்ணன்தம் பிகளுமின்றிக்
குன்னிய மனத்த னாகிக் குவலயந் தன்னில் வாழ்வாய்
இன்னமும் பலவாறு சொன்னாள் எய்திற்று வந்தச் சாபம்
மன்னனு மந்தி யத்தில் வாய்ப்புண்ணால் மரண மாகி;

35. தாயாரால் சுகமில்லாதவனாகிச் சகோதரர்களும் இல்லாத வனாகிச் சிறுமையடைந்த மனமடைந்து உலகில் வாழ்ந்து வருவாய் என்றும், இன்னும் பலவிதமாகவும் சொன்னாள். அந்தச் சாபம் இவனைப்பற்றியது. இவனும் தன் கடைசிக் காலத்தில் வாய்ப்புண்ணால் மரணமடைந்து;

36. உதிப்பலு மிந்தப் பாலன் உறைந்திடுங் கன்னி சாபம்
மதிமுக வன்னை யாதில் மடிவளாந் துணையுங் காணுள்
அதிபன்தன் யோகச் சேதி யறைகிறேரும் வேசி யோகம்
பொதுவதாய்க் கேசரி யோகம் புகலுவோம் பலனை
[யாங்கள்.

36. இந்த ஜாதகன் பிறப்பான். பெண்ணின் சாபம் தொடரும். அழகிய முகத்தைப் பெற்ற தாய் ஆதிகாலத்திலேயே மரண மடைவாள். உடன் பிறந்தவரில்லாதவன். ஜாதகனுடைய யோகச் செய்திகளைக் கூறுகிறேரும். வேசியோகம் கேசரியோகம் முதலியவைகள் ஏற்படும். அப்பலனைச் சொல்லுகின்றேரும்.

37. பலவணி பங்கள் செய்வன் பார்மன்னர் தம்மால் செட்டுந்
தலைவனுஞ் செய்வா னுஞ் சல்லியங் கொள்ளா னுரும்
நிலமது பெருக்கஞ் செய்வன் நினைத்தகா ரியமு டிப்பான்
பலரையும் வசியங் கொள்வன் பரவுப காரனுரும்.

37. பலவிதமான வியாபாரம் செய்து வருவான். அரசாங்கச் சார்புள்ள வர்த்தகம் புரிவான். கடன் வாங்காதவன். விளை நிலங்களைப் பெருக்குவான். எண்ணிய காரியங்களைச் செய்து முடிப்பான். எல்லோரையும் தன் வயப்படுத்துவான். பிறருக்கு உபகாரி என்றேரும்.

38. இல்லமு மிரண்டு செய்வன் ஏவலா ளதிகஞ் சேர்ப்பன்
நல்லவ னுகி வாழ்வன் நற்புகிப் புடைய னுகுந்
தொல்லுக ளேற்கா னுகுஞ் சொல்லதைக் காப்பா னுரும்
வெல்லுவா னெதிரி தன்னை வீண்வழக் கோரஞ்
[சொல்லான்.

38. இரு வீடுகளைக் கட்டுவான். பணியாட்களை அதிகமாக உடையவன். நல்லவனுக வாழ்ந்து வருவான். நன்றுகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். உபத்ரவங்களை அடையாதவன். சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவன். விரோதிகளை ஜயிப்பான். தவறுன வழக்குகளுக்குச் சென்று பட்சபாதமாகச் சாட்சி சொல்லாதவன்.

39. தனம்பூமி பணியில் லங்கள் சார்ந்திடு மூவா யிரம்பொன்
வினையாக மூவைந் தாண்டும் விரயமுஞ் சல்லியப் பாதை
கனதன மதன்மே லோங்குங் கழறுவோம் பின்பால்
[சேதி
வினையிலாத் தவங்கள் செய்யும் வித்தகி கேட்டி டாயே.

39. செல்வம், பூமி ஆபாணங்கள் இவையெல்லாஞ் சேர்ந்து மூவாயிரம் பொன் பெறுமானம் உள்ளவன். ஜாதகனுக்குப் பதினைந்து

ரை துன்பம் ஏற்படும். அதற்குப் பிறகு பெருஞ் செல்வம் மேல் பிருத்தியாகும். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லு ம். தீங்குகளில்லாத தவங்களியற்றும் தேவியே ! கேளுங்கள்.

ஜாதகனின் மரணகாலம்

புறுபது வொன்ப தாண்டில் ஆனிமா தத்தி லேதான்
றைபக்கந் தசமி தன்னில் குழவியி னுடல மேகும்
றுஜன்மந் துவாரை பக்கல் மருவுவான் சத்ரியச் சேயாய்
றந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

1. ஜாதகன் தன் அறுபத்தொன்பதாம் வயதில் ஆனி மாதத் ருஷ்ணபட்சம் தசமி திதியன்று மரணமடைவான். மறுபிறவியில் கைக்கருகில் உள்ள ஊரில் அரச குலத்தவனாகப் பிறப்பான். ந்தை வளர்க்கும் எங்கள் உயிருக்குயிரான தேவியே ! கேளுங்கள்.

ஜனனகால தசை

பிறந்திடுங் காலந் தன்னில் புததசை யொன்ப தாண்டும்
உரைக்கிறேம் பலனை யாங்கள் உதித்தசே யன்னை
[கண்டம்
மறுநகர் செல்வா னாகு மறுவன்னை நேரு மென்றேங்
திருகாகுந் தொழில்தந் தைக்குச் செலவுண்டு பூர்வஞ்
[சொன்னேம்.

41. ஜாதகன் பிறக்கும் காலத்தில் புதமகாதசையில் இருப்பு பது வருடங்களாம். அக்காலத்திய பலனை நாங்கள் சொல்லுகின் ம். ஜாதகனுடைய தாய் மரண மடைவாள். ஜாதகன் வேற்றூ தச் சென்று வாழ்வான். மாற்றுந்தாய் வருவாள். தந்தைக்குத் ழிலில் தீமை ஏற்படும். செலவுமுண்டு; என்று இவ்வாறு முதல் த்துப் பலன்களைச் சொன்னேம்.

ஜாதகம் 46

1. அரியது வுதய மாக வதிதியுஞ் ஜன்மந் தங்கக் கரியவன் மூன்றி லாகக் கலைநாவில் பணியு மேழி தரைமகன் புகரு மஞ்சில் தபனனும் புதனு மாறில் குருவுமே விரய மாகக் கேட்டையின் நான்காம் ப

1. சிம்மம் இலக்கினமாகவும், கேது லக்கினத்திலும், மூன்றுமிடமாகிய தி திலும், சந்திரன் நா மிடமாகிய விருச்சி லும், ராகு ஏழு மாகிய கும்பத்தி செவ்வாய் சுக்கி ஐந்தாமிடமாகிய த லும், சூரியன் ஆறுமிடமாகிய மக லும், குரு விரயஸ்த மாகிய கடகத்தி நின்று கேட்டை நட திரம் கடைசிப் பா தில்;

கிரகநிலை

ராகு	இராசி சக்கரம்		குரு
சூரியன் புதன்			லக்கினம் கேது
செவ்வாய் சுக்கிரன்	சந்திரன்	சனி	

ஜாதகன் வீட்டு அமைப்பு

2. உரைப்பீர்கள் பலனெனென்று வுத்தமி கேட்கும் போத குறுமுனி புகலு கின்றார் குறித்தது வாண்பால் ஜன்ம வருமில்லம் வடதென் வீதி வாசலு மேல்பால் நோக்கம் அரன்கோஷ்டம் வடகீ ழாகும் அனல்காளி யதற்குத் [தென்மே

*குறைதலை மாரி யுத்ரங் குஞ்ஜா முகத்தோன் கீழ்ப்பா

2. பிறந்த ஜாதகருக்குப் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வ தேவி கேட்கும்போது அகத்திய முனிவர் கூறுகின்றார். நீங்கள் குறி பிட்ட கிரகநிலைகளோடு பிறந்தது ஆண் குழந்தையாகும். அவ பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியில் மேற்கு நோக்கியுள்ள வடகிழக்கில் சிவபெருமான் ஆலயமும், காளி தேவியின் கோவி கற்குத் தென்மேற்குத் திக்கிலும், மாரியம்மன் கோவில் வடக்கு திலும், யானை முகத்தையுடைய விநாயகர் ஆலயம் கிழக்குப் பக்க

ண்டு ஒரு வரி மிகுந்துள்ளது.

மேற்படி தொடர்ச்சியும் ஜாதகன் பிறப்பும்

3. மாலவ னதற்குக் கீழ்ப்பால் மடிந்ததோர் கெடியவ் வூரில்
சாலையு மார்க்க முண்டு செப்பின வடையா ளத்துள்
பாலக னந்தாஞ் ஜன்மம் பகருவோர்ந் தியின் வம்சஞ்
சாலவே குடும்பச் சேதி சாற்றுவோ மிந்நூல் தன்னில்.

3. அதற்குக் கிழக்கில் திருமாலின் ஆலயமும் இடிந்ததொரு கோட்டையும் உள்ளன. அவ்வூர் வழியாக பெரியதொரு சாலை செல்லும். இவ்விதம் சொல்லப்பட்ட அடையாளங்களுள்ள வீட்டில் ஜாதகன் வன்னிய குலத்தவனாகத் தன் தந்தைக்கு ஐந்தாம் பிறவியாகப் பிறந் தான். அவனுடைய குடும்பச் செய்திகளைக் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றோம்.

தந்தை வரலாறும் அவர் சகோதரியின் குணங்களும்

4. தந்தையின் துணையாண் காணுன் சத்தியு மொருத்தி
[தீர்க்கம்
அந்தவள் குணத்தைச் சொல்வே னரிமனை யொப்பாய்
[வாழ்வள்
நிந்தைக ளேற்கா ளாகும் நேயியில் நல்லோ ளாவள்
சந்ததி கன்னி யொன்று சாற்றுவோ மாண்பா லவ்வாறு.

4. ஜாதகனுடைய தந்தை சகோதரனில்லாதவன். சகோதரி ஒருத்தியே நீண்ட ஆயுள் உள்ளவள். அந்தச் சகோதரியின் குணங் களைக் கூறுகின்றோம். இலக்குமியை யொப்ப வாழ்வள். பழிகளை அடை யாதவள். உலகில் நல்லவளாக இருப்பாள். ஒரு புத்திரியும் ஒரு புத்திரனும் உண்டு என்று சொல்லுகின்றோம்.

தந்தையின் சகோதரி இயல்புகள்

5. தீர்க்கமாஞ் சிலவே சேதந் தேவிக்கு வரனு மூள்ளூர்
ஏற்போர்க்குத் தாக மீவள் இன்சொலு மற்ப கோபி
மூர்க்கரோ டிணக்கஞ் செய்யாள் மேம்பாடாய்க் குடும்ப
[மேற்பள்
நாக்கதைக் காப்பா ளாகும் நாயகி தீர்க்க ஜீவி.

5. மேற்கூறியவர் தீர்க்கமாவர். சில பிறந்து மடிந்துபோம். இவளுக்கு (தந்தையின் சகோதரிக்கு) கணவன் உள்ளூரிலேயே வாய்ப் பான். யாசிப்பவர்களுக்கு உணவு தண்ணீர் முதலியவற்றை அளிப்பாள். அனைவருடனும் இனிய சொற்களையே பேசுவாள். சிறிதளவே கோப முடையவள். கெட்ட குணமுடையவர்களோடு சேரமாட்டாள். மேன்மை யாகக் குடும்பத்தை நடத்துவாள். அடக்கமாகப் பேசுவாள். (சொன்ன நடப்பவள்.) - தீர்க்கமான வயதுடையவள்.

வேறு

தந்தையின் குணங்கள்

6. தந்தைகுணங் கூறுகின்றேங் கடக ராசி
ஜனிப்பனுஞ் சித்திரநாள் சரச வார்த்தை
தந்தைமொழிக் கிடருரையா னுள்ளன் போடும்
சாப்பாட்டுச் சுகியனென்றேனுஞ் சிவந்த மேனி
தன்பந்து வாதரிப்பன் சேத்ரஞ் செய்வன்
சதுஷ்பாதம் விருத்தியுண்டு தரணி சேர்ப்பன்
தன்பந்து மதிக்கவுய்வன் சாராள் சேர்க்கை
சல்லியங்கள் கொள்ளாதான் சாந்த னுவன்.

6. ஜாதகன் தந்தையின் குணங்களைச் சொல்லுகின்றேம். கடக லக்கினம் சித்திரை நட்சத்திரத்தில் தோன்றுவான். இன்பமாகப் பேசுவான். தன் தகப்பனுர் சொல்லும் சொற்களுக்கு மாறுக (தடையாக) எதையுஞ் சொல்லாதவன். மனத்தில் அன்புடையவன். போஜன சுகமுள்ளவன் என்று சொன்னேம். சிவந்த நிறமுடையவன். தனது உறவினர்களை அன்புடன் ஆதரிப்பான். புதியதாக வீட்டைக் கட்டுவான். கால்நடைகள் பெருக்கம் ஏற்படும். விளைநிலங்களைச் சேர்ப்பான். தன் சுற்றத்தார்கள் மதிக்கத் தகுந்த நிலையில் வாழ்வான். மிகுதியான பணியாட்களை வைத்துக்கொள்வான். கடன் வாங்காதவன். பொறுமை உடையவன்.

இதுவுமது

7. திருப்பணிகள் தான்செய்வன் தீர நெஞ்சன்
சேயிழைசொல் தட்டாதான் தேர்ந்தோர்க் கன்பன்
வருவோருக் கன்னமீவன் பெருமை புத்தி
மன்னர்க்கு யிஷ்டமுளன் மரும மில்லான்
குறையென்றோர்க் குதவிடுவன் கொடுமை காட்டான்
கோதுமைரே கைகரத்தில் குலவு மென்றேம்
மறையோர்க்கு யிஷ்டமுளன் தலங்கள் செல்வன்
மாகிலத்தில் புகழுமேற்பன் வறுமை காணன்.

7. ஆலயத் திருப்பணிகளைச் செய்து வருவான். தைரியமுள்ள மனத்தினன். மனைவியின் வார்த்தையை மீறுதவன். பெரியோர்களுக்குப் பிரியமானவன். அண்டிவந்தவர்கட்கு அன்புடன் அன்னமளிப்பவன். பெரிய (தாராள) புத்தியுள்ளவன். அரசாங்கத்தாருக்குப் பிரியமானவன். இரகசியமில்லாதவன். துன்பமடைந்தவர்கட்கு உபகாரம் செய்பவன். முகத்தில் கொடூரம் இல்லாதவன். கையில் கோதுமை ரேகை உள்ளவன். வேதங்களை உணர்ந்த அந்தணர்களிடத்தில் பக்தி

விருப்பமானவன். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்பவன். உலகில் கீர்த்தியை அடைவான். தரித்திரமில்லாதவன்.

ஜாதகனின் குண நலங்கள்

8. சொன்னவிந்தக் குணத்தானுக் கிந்தப் பாலன்
தோன்றுவா னிவன்குணத்தைச் செப்பக்
[கேண்மோ
கன்னமொழி சிவந்தமெய்யன் கல்வி மேன்மை
காலாட்கள் விருத்தியுண்டு கருதான் பொய்யும்
மூன்னர்க்கு யிஷ்டமுள்ளான் வறுமை காணன்
மாரியால் வடுவேற்பன் மாடு விருத்தி
அன்னியர்கள் மதிக்கவுய்வன் அடைந்தோர்க் கன்பன்
ஆபத்தைக் காத்திடுவன் அறிவோர் நேயன்.

8. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணத்தைக் கேளுங்கள். இனிய வார்த்தைகளையே பேசுபவன். சிவந்த உடலுடையவன். கல்வியில் மேன்மையடைவான். கால் நடைகள் விருத்தியடையும். அரசாங்கத்தாருக்கு பிரியமானவன். தரித்திரமில்லாதவன். அம்மை நோயால் வடு உள்ளவன். கால் நடைகள் பெருகும். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். தன்னை வந்து அடைந்தவர்கட்குப் பிரியமானவன். பிறருக்கு உண்டாகும் துன்பங்களை நீக்குவான். அறிவாளிகட்கு நண்பன்.

இதுவுமது

9. தந்தைமேல் வாழ்ந்திடுவேன் சல்லியங் காணன்
தரணிபல ஊரிலுளன் சமர்த்தாய் வார்த்தை
வந்தவரை யாதரிப்பன் வளவு செய்வன்
வாக்குத்தப்பான் மடையரையே வணங்கா னுகுஞ்
சுந்தரமுஞ் சீலமுண்டு துறவோர் நேயன்
சொல்காப்பன் சீதமலர் ரேகை யுண்டு
கந்தன்மேல் பக்தியுள்ளான் கனலால் பீடை
கழறுவனுந் தந்திரமொழி காம னெப்பான்.

9. தன் தந்தைக்கு மேலாக வாழ்வான். கடனுபத்ரவ மில்லாதவன். பல ஊர்களில் விளைநிலங்களை வாங்குவான். சாமர்த்தியமாகப் பேசுபவன். தன்னை யண்டிவந்தவரை ஆதரித்து வருவான். விவசாயம் செய்து வருவான். சொன்னவார்த்தைகளைத் தவற விடாதவன், மூடர்களின் நட்பைக் கொள்ளாதவன். அழகுள்ளவன். நல்லொழுக்க முடையவன். துறவிகட்குப் பிரியமானவன். சொன்ன வார்த்தை

களின்படி நடப்பவன். கையில் பத்மரேகை உள்ளவன். முருகக் கடவுள் மீது பக்தியுள்ளவன். நெருப்பால் துன்பம் உண்டாகும். (அம்மை நோயால் துன்புறுவான்.) தந்திரமாகப் பேசுபவன். மன்மதனை யொத்த அழகன்.

ஜாதகனுடன் பிறந்ததோர்: மூத்த சகோதரனின் இயல்புகள்

10. தன்துணைமுன் னேனென்று கன்னி யவ்வாறு
சாற்றுகிரேந் தீர்க்கமதா யாண்பால் சேதி
மன்னனுமா யில்யநாள் மிதுன ராசி
வருவாலு மாகிறத்த னுக வானும்
பொன்பணிக ளதிகமுளான் கல்வி மேன்மை
புகழ்ந்தோரை யாதரிப்பன் பூமி விருத்தி
பின்னமிலான் பிறர்பொருளி லிச்சை வையான்
பிதாமேலாய் வாழ்வானும் புகழு மேற்பன்.

10. ஜாதகனுக்கு உடன்பிறந்தவரில் மூத்த சகோதரன் ஒருவனும் மூத்த சகோதரி யொருத்தியும் தீர்க்க ஆயுளுடன் உள்ளவர். ஜாதகனுடைய மூத்த சகோதரனின் செய்தியைக் கூறுகின்ரேம். அவன் ஆயில்ய நட்சத்திரம் மிதுன லக்னத்தில் பிறந்தவன். மாகிற முடையவன். ஊகித்தறியும் சக்தி யுள்ளவன். பொன்னுபரணங்கள் அதிகமுடையவன். கல்வியில் மேன்மை யடைந்தவன். தன்னைத் துதி செய்தவரை ஆதரித்து வருவான். விளைநிலங்களைப் பெருக்குவான். ஊனமில்லாதவன். பிறர் பொருளின்மீது விருப்பமில்லாதவன். தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். கீர்த்தியை அடைவான்.

மூத்த சகோதரனின் குணங்கள்

11. மனங்கவடு மில்லாதான் மறித்துக் கூரான்
மனைவியொன்று தீர்க்கமுறு மாதர் வர்க்கஞ்
சினமுண்டு வடன்சாந்தஞ் சுதரா ணிரண்டு
செல்விமார் மூவர்களுந் தீர்க்க மாவர்
வினையெவர்க்கு மெண்ணுதான் வயதுந் தீர்க்கம்
வெற்றியாந் தொடுவழக்கு விசன மேற்கான்
சனவுதவி தலஞ்செல்வன் சாராள் சேர்க்கை
சம்பத்தாய் வாழ்ந்திடுவன் சகடு மேற்பன்.

11. மனத்தில் சூதில்லாதவன். (பெரியோர் பேசும்பொழுது) இடைமறித்துப் பேசும் வழக்கமில்லாதவன். இவனுக்கு ஒரே மனைவி தானுண்டு. அவள் நீண்ட ஆயுளுள்ளவளாக இருப்பாள். அவளும் தாயின் வர்க்கத்திலிருந்து வந்தவள். முன்கோபம் கொள்ளுபவன். ஆனல் விரைவில் அது தாழ்வடையும். இரு புத்திரர்களையும் மூன்று புத்திரிகளையும் பெறுவான். அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள்.

ஒருவருக்கும் தீங்கிழைக்க மனமில்லாதவன். நீண்ட ஆயுள் உள்ளவன். எடுத்த காரியங்களிலெல்லாம் வெற்றியே அடைவான். துன்பமடையாதவன். பந்து ஜனங்களுக்கு உபகாரம் செய்பவன். பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லுபவன். ஏவலாட்கள் உள்ளவன். எல்லாவிதச் செல்வமும் பெற்று வாழ்ந்து வருவான். வாகன வசதிகள் உள்ளவன்.

வேறு

ஜாதகன் சகோதரியின் குணங்கள்

12. கன்னியின் குணத்தைச் சொல்வேன்
காமன்தன் மனையே யொப்பள்
பொன்னிறம் பணியுஞ் சேர்ப்பள்
புருடன்தன் மனத்துக் கேத்தோள்
அன்னியர் மதிக்க வாழ்வள்
அடாவடி கூரு ளாகும்
மன்னனுந் தென்பால் நேரும்
மாதுநன் னடக்கை யுண்டு.

12. ஜாதகனுடைய சகோதரியின் குணத்தைக் கூறுகின்றோம். மன்மதனுடைய மனைவியாகிய இரதிதேவியைப் போல் அழகுள்ளவள். பொன் போன்ற நிறமுடையவள். ஆபரணங்களே அடைவாள். தன் கணவன் மனத்துக்கேற்றபடி நடப்பவள். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். அடாவடியாகப் பேசாதவள். அவளுக்கு கணவன் தெற்குப் பக்கத்திலிருந்து வருவான். நன்னடத்தையுள்ளவள்.

சகோதரியின் புத்திரபாவமும் இயல்புகளும்

13. சுதர்களு மாண்பா லொன்று தோகைய ரிருவர் தீர்க்கம்
பதில்சொல்லாள் மிருது வார்த்தை பஞ்சைமே லிரக்க [முண்டு
தபாக்கிய முடைய ளாகுந் சத்தியுந் தீர்க்க ஜீவி
அதிகிடட் கன்ன மீவன் அம்பிகை யாளே கேளாய்.

13. அவளுக்கு ஒரு புதல்வனும் இரு புதல்விகளும் பிறந்து தீர்க்காயுளுடன் இருப்பர். எதிர்த்துப் பேசும் வழக்கமில்லாதவள். மெதுவாகப் பேசுபவள். ஏழைகளின்மீது இரக்கமுடையவள். தயிர் நெய் பால் முதலியன அதிகமாகக் கிடைக்கும் பாக்கிய முள்ளவன். நீண்ட ஆயுள் உள்ளவள். வீடு தேடி வரும் விருந்தினர்கட்கு அன்னமளிப்பவள் தாயே! கேளுங்கள்.

ஜாதகன் இளைய சகோதரியின் செய்திகள்

14. மைந்தன்பின் கன்னி யொன்று வறைகிறேம் தீர்க்க மாக
கொந்திடு மூன்று வென்றேரும் நுவலுவோ மவள்கு
[ணத்தைச்
சந்திர வதன மூண்டு சாயல்நேத் திரம தாகும்
இந்திர போக மேற்ப ளிடருக ளொருவர்க் கெண்ணுள்.

14. ஜாதகனுக்குப் பின் பிறக்கும் சகோதரி யொருத்தி உண்டு. அவளும் தீர்க்க ஜீவி என்றேரும். மூன்று குழந்தைகள் (உடன் பிறந்த வர்கள்) நிலையார். பின் பிறந்த சகோதரியின் குணத்தைக் கூறுகின் றேரும். சந்திரனைப்போன்று வட்டமான அழகிய முகமுடையவள். பார்வை ஒரு பக்கமாகச் சாய்ந்து இருக்கும். இந்திரனைப்போன்ற யோகத்தைப் பெறுவாள். ஒருவருக்கும் துன்பங்களை இழைக்க எண் ணுதவள்.

இளைய சகோதரியின் புத்திரபாவம்

15. மங்கைக்குச் சுதரா னிரண்டு மாதுவு மொன்றே தீர்க்கஞ்
சங்கையா மனத்த ளாகுந் தன்வரன் மனத்துக்
[கேத்தோள்
நங்கைக்கு வுத்தி ரத்தில் நாணது யிழப்ப ளாகும்
அங்கதை வுத்திர பாகம் அறிவிப்போந் தாயே யாங்கள்.

15. இளைய சகோதரிக்கு இரு புத்திரர்களும் ஒரு புத்திரியும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பர். சந்தேகப்படும் இயல்பினள். தன் கணவன் மனத்திற்கு ஏற்றவள். வடக்குப் பக்கத்தி லிருந்து கணவன் வருவான். இடைக்காலத்தில் கணவனை இழந்து விடுவாள். அந்த விஷயங்களைப் பின்பாகத்தில் கூறுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

ஜாதகன் தாயின் இயல்புகள்

16. அன்னையின் சேதி சொல்வேன் அழகுளாள் வாத தேகி
அன்னமு மன்பா யீவள் அருந்ததி குணத்தா ளாகும்
அன்னியர் குற்றஞ் சொல்லாள் ஆளன்தன் மனத்துக்
[கேத்தோள்
அன்னவள் யோக சாலி யடிசிலுக் கினிய ளாகும்.

16. ஜாதகனுடைய தாயின் செய்திகளைக் கூறுகின்றேரும். அழ குள்ளவள். வாயு ரோகமுடைய சரீரி. அன்புடன் அமுது படைப்ப வள். அருந்ததிபோன்று கற்பிற் சிறந்த குணத்தினள். பிறர்மீது குற்றம் புகலாதவள். தன் கணவன் மனத்துக் கேற்றவள். அதிர்ஷ்ட முள்ளவள். சுவையுடன் சமைப்பதில் வல்லவள்.

இதுவுமது

17. சீலியாம் விரத சாலி திகைத்தோர்க்குத் தாக மீவள்
பால்பாக்கிய மல்ப மாகும் பலருக்கு நல்லோ ளாவள்
சாலவே பித்த வாயு தங்கிடும் பலன்செய் யாது
நீலியும் வந்த பின்பு நிலவுபோல் யோக மெய்தும்.

17. நல்லொழுக்கமுடையவள். நோன்புகளை ஏற்பாள். பசி தாகங்களால் களைத்தவர்கட்கு அன்னபானதிகளை அளிப்பவன். முற் பிறவியில் செய்த பாக்கியம் சிறிதளவேயுள்ளவள். பலபேருக்கு நல்லவளாவள். பித்தவாயு நோயுள்ள சரீரமுடையவள். ஆயினும், அதனால் தொந்தரவு இராது. இவளை மணந்த பிறகு கணவனுக்கு யோகம் விருத்தியாகும்.

தாயின் மூத்தசகோதரனின் வரலாறு

18. இல்லமு முள்ளு ராகும் இவள்துணை யாண்பா லிரண்டு
புல்குவோ முன்னென் சேதி புகழான குடும்ப மேற்பன்
தொல்லையில் லாமல் வாழ்வன் தொல்புவி விருத்தி
[செய்வன்
மல்லுக்கு முன்செல் லாதான் மனைவியு மொன்றே
[தீர்க்கம்.

18. தாய்க்குப் பிறந்த வீடு உள்ளூராம். அவளுடைய சகோதரர்கள் இருவராவர். மூத்த சகோதரனுடைய செய்தியைக் கூறுகின்றோம். கீர்த்தியுள்ள குடும்பத்தை அடைவான். துன்பங்களில்லாமல் வாழ்ந்து வருவான். விளைநிலங்களைப் பெருக்குவான். வீண் சண்டைக்கு முன் செல்லாதவன். அவனுக்கு ஒரு மனைவியே. அவள் நீண்ட ஆயுள் உள்ளவள்.

இதுவுமது

19. சுதர்களு மாண்பா லொன்று தோகையு மவ்வாறு
[தீர்க்கம்
பதராகு மற்ற வெல்லாம் பாரினில் சல்லிய மேற்கான்
வதிபனும் வயது தீர்க்க மருவுவான் துணையோ டொத்து
குதர்க்கமில் லாமல் வாழ்வன் கோதையே கேட்டி டாயே.

19. தாயின் சகோதரனுக்கு ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் பிறந்து தீர்க்காயுள் உள்ளவர்களாக இருப்பர். மற்றும் தோன்றும் குழந்தைகள் நிலையா. உலகில் துன்பங்களை அடையாதவன். நீண்ட ஆயுள் உள்ளவன். தன் சகோதரனுடன் சண்டை செய்யாது ஒற்றுமையாக வாழ்ந்து வருவான். தாயே! கேளுங்கள்.

தாயின் இளைய சகோதரன் செய்தி

20. பின்தூணை சேதி சொல்வேன் பூமியால் சீவிப் பாலும்
முன்னேன்சொல் கடவா ளகு மொழியதைக் காப்பா
[ளகும்
இன்னேன்தன் மனையாளாலே பூமியும் பெருக்கஞ்
[செய்வன்
அன்னமுங் குறைவு றுதான் அணுகிடும் பித்தச் சூடு.

20. தாயின் இளைய சகோதரனுடைய செய்தியைச் சொல்லுகின்றேம். விவசாயம் செய்து ஜீவித்து வருவான். மூத்த சகோதரனது சொற்படி நடப்பவன். சொன்ன சொற்களைக் காப்பவன். இவன் தன் மனைவியால் விளைநிலங்களை அதிகம் பெருக்குவான். சர்ப்பாட்டிற்குக் குறைவில்லாதவன். பித்தச்சூட்டு நோயுள்ளவன்.

இளைய சகோதரன் புத்திரபாவம்

21. மாதுவு மொன்றே வள்ளூர் மைந்தர்க ளாண்பா
[லொன்றே
காதலி மாரு மவ்வாறு கழறுவோர் தீர்க்க மாக
வேதனை யொருவர்க் கெண்ணன் விமலன்தன் பத்தி
[பூண்பன்
சீதள குணத்த ளகுந் தீர்க்கமாம் வயது மேற்பன்.

21. தாயின் இளைய சகோதரனுக்கு மனைவி ஒருத்தியே யாவள். அவளும் உள்ளூரிலிருந்தே வருவாள். ஒரு புத்திரனையும் ஒரு புத்திரியையும் பெற்று வாழ்வான். அவர்கள் தீர்க்காயுள் உள்ளவர்கள். ஒருவருக்கும் தீங்கிழைக்க மனமொப்பாதவன். தெய்வபக்தி யுள்ளவன். தண்மையான குணமுடையவன். நீண்ட வயதுள்ளவன்.

தாயின் முற்பிறவி

22. இன்னமும் விவர மாக இயம்புவோம் பின்பா கத்தில்
அன்னையின் பூர்வஞ் சொல்வேன் [1]அப்புவின் தலத்தி
[லேதான்
நன்னய கர்ண சேயாய் நல்கியே வாழு காளில்
முன்னமே குடும்பி யாகி மேலோர்கள் தொண்டு பூண்டு;

22. இன்னும் விவரமாகப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். தாயின் முற்பிறவியைக் கூறுகின்றேம். திருவானைக்காவில் கருணீகர் குலத்தவளாகப் பிறந்து வாழ்ந்து, உயர்ந்த குடும்பத்தைப் பெற்றுப் பெரியோர்களுக்குத் தொண்டுகள் பல செய்து;

1. திருவானைக்கா

தாயின் மறுபிறவி

23. வினையது மில்லா ளாகி மேவினள் கால நாடு
கனமுள பிரமனி லக்கங் கலந்தன ளிக்கு லத்தில்
சினமுளாள் வறுமை காணுள் செல்விபின் ஜன்மஞ் [சொல்வேன்
அனையவே வள்ளூர் தன்னில் அருளுவாள் பிரம்ம [சேயாய்.

23. வேறு தீவினைகள் இல்லாதவளாகி மரணமடைந்தாள். மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் இக்குலத்தில் பிறந்தாள். கோபத்தைக் கொள்ளுவாள். தரித்திரத்தை அடையாதவள். தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றேம். தாயே! திருவள்ளூரில் அந்தணர் குலத்தவளாகப் பிறப்பாள்.

உயர்குலப் பிறவிக் காரணம்

24. இந்ததோர் ஜன்மந் தன்னில் இவள்செய்த புண்ணிய [மென்ன
முந்தவே கூறு மென்ன மொழியதைக் காத்த லாலுஞ்
சிந்தையு நல்ல தாயுந் தேவன்தன் மனம்போல் [வாழ்ந்தும்
அந்தவள் வாழ்வ தாலே அருமறைக் குலமு திப்பாள்.

24. இப்பிறவியில் ஜாதகனுடைய தாய் செய்த நற்செயல்கள் எவை? அவற்றை முதலில் கூறுங்கள் என்று வினவ, அவள் தான் சொன்ன வார்த்தைகளின்படி நடப்பதாலும், நல்ல மனமுள்ளவளாய்த் தன் கணவனது மனமறிந்து வாழ்ந்து வருவதாலும், அடுத்த பிறவியில் அந்தண குலத்தில் பிறப்பாள்.

தந்தையின் முற்பிறவி

25. பாலகன் தந்தை பூர்வம் பகருவோ மினிமே லாக
வேலன்வாழ் பழனி நாட்டில் விளங்கினன் மறைக்கு [லத்தில்
சாலவே செட்டுச் செய்து தன்மனை மதலை யுண்டாய்
ஞாலமேல் வாழு நாளில் நல்கின வினையைக் கேண்மோ.

25. இனி ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். வேலாயுதத்தையுடைய முருகப்பிரான் கோயில் கொண்டுள்ள பழனி க்ஷேத்திரத்தில் அந்தணர் குலத்தவனுக்குப் பிறந்தான். வெகுவாக வர்த்தகம் புரிந்து வந்து மனைவி மக்களோடுபெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள்.

முற்பிறவித் தீவினையும் சாபமும்

26. ஏழைக்குக் கணக்கில் மோசம்
எழுதினு னிவனே யென்றேங்
தாழ்வுளோர் வருத்த முற்றுச்
சாற்றுவார் சாபந் தானும்
ஆழியில் பின்ஜன் மத்தில்
அண்ணன்தம் பிகளு மின்றிச்
சூழ்ந்திடுஞ் சுதரு முன்னல்
துன்பமா மென்று சொன்னர்.

26. ஏழைகளின் கணக்கை மோசக்கருத்துடன் தவருக எழுதினன். அவ்வேழைகள் வருந்திச் சாபமிடுகின்றனர். உலகில் ஏற்படும் மறுபிறவியில் அண்ணன் தம்பிகள் இல்லாமல் முதலில் தோன்றும் புத்திரர்களும் நிலையார் என்று சொன்னர்கள்.

சாப பலன்

27. அந்தரந் ததாஸ்து வென்ன அணுகிற்று வந்தச் சாபம்
மைந்தனு மரண மாகி மறையவன் வரையப் பட்டு
இந்ததோர் குலமு திப்பான் எய்திடு மேழைச் சாபந்
தந்துணை யாண்பால் காணன் சந்ததி முதலில் நஷ்டம்.

27. அப்படியே யென்று சந்தர்ப்ப வார்த்தைகளும் ஏற்பட அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது. ஜாதகனுடைய தந்தையும் அப்பிறவியின் இறுதியில் மரணமாகி மீண்டும் பிரமதேவனால் படைக்கப் பட்டு இப்பிறவியில் பிறந்தான். ஏழையின் சாபமும் தொடர்ந்தது. உடன்பிறந்த சகோதரரில்லாதவன். முதலில் தோன்றும் புத்திரர்கள் நிலையார்.

அத்திரிமுனிவரின் ஐயமும் அதற்கு விடையும்

28. அத்திரி புகலு கின்றார் அவனுமுன் ஜன்மந் தன்னில்
முத்தின குலமு தித்தோன் மேவுமிச் சென்மந் தன்னில்
சத்திரிய குலமு திக்குந் தாழ்வதைச் சொல்லு மென்ன
வித்தகன் முன்ஜன் மத்தில் வேதங்கள் விரும்பாத்
[தாலே ;

28. அத்திரி முனிவர் சொல்லுகின்றார். ஜாதகன் தந்தை முற்பிறவியில் உயர்ந்த அந்தணர் குலத்தில் பிறந்து இப்பிறவியில் சத்திரிய குலத்தில் பிறக்கும் தாழ்வுக்கான காரணங்களைச் சொல்லுங்கள் என்று கேட்க, முனிவரொருவர் விடை கூறுகின்றார். ஜாதகனுடைய தந்தை முற்பிறவியில் வேதங்களை விருப்பத்துடன் ஓதி வராததால் ;

ஜாதகன் தந்தையின் மரணகாலம்

29. உதித்தன னென்று சொல்வோ முரைப்பீர்கள் கரும
[காலம்
அதிபனுக் காரு ரூண்டில் ஆடுமா தத்தி லேதான்
சதியான கால நாடு சாருவான் தந்தை யென்றேரும்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

29. இப்பிறவியில் பிறந்தான் என்று சொல்லுகின்றேரும். ஜாதகனுடைய கரும காலங்களைக் கூறுங்கள், முனிவரே. ஜாதகனின் முப்பத்தாரும் வயதில் சித்திரை மாதத்தில் தந்தை மரணமடைவான் என்றேரும். கதியற்றவரைக் காக்கும் தாயே! கேளுங்கள்.

தாயின் மரணகாலமும், தந்தையின் மறுபிறவியும் தொழிலும்

30. ஆரூறு வொன்று வாண்டில் ஆவணி மாதந் தன்னில்
கூறுவோ மன்னை கண்டங் குறிக்கிறேரும் பிதாபின்
[ஜன்மந்
தீரமாய்த் துவாரை தன்னில் சதுர்மறைக் குலமு
[திப்பான்
பாரினி லரசு செய்வான் பராசரு மறித்துச் சொல்வார்.

30. ஜாதகனுடைய முப்பத்தேழாம் வயதில் ஆவணி மாதத்தில் தாய் மரண்மடைவாள். ஜாதகனுடைய தந்தையின் மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். துவாரகையில் நான்குவேதங்கற்ற அந்தணர் குலத்தில் பிறப்பான். உலகில் அரசன்போல் வாழ்ந்து வருவான். பராசர முனிவர் மறுத்துக் கூறுகின்ரூர்.

பராசரமுனிவரின் கேள்வியும், அதற்கு விடையும்

31. வன்னிய குலமு தித்தோன்
மறுஜன்மந் துவாரை தன்னில்
தொன்மறைக் குலமு திக்குஞ்
சேதியைப் புகலு மென்ன
அன்னவ னிச்சென் மத்தில்
ஆபத்தைச் சிலர்க்குக் காத்தும்
முன்னேருக் குதவி செய்து
மொழியதைக் காத்த தாலும்;

31. இப்பிறவியில் வன்னியர் குலத்தில் பிறந்தவன் அடுத்த பிறவியில் துவாரகையில் தூய்மையான அந்தணர் குலத்தில் தோன்றும் காரணங்களைக் கூறுங்கள் என்று வினவ, ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் சிலருடைய துன்பங்களை விலக்கியும் பெரியோர் கட்கு உதவி செய்தும் சொன்ன வார்த்தைகளைக் காத்து வந்த தாலும்;

மேற்படி தொடர்ச்சியும், ஜாதகன் திருமணக்காலமும்

32. திருப்பணி செய்த லாலுந் தேவதாத் தலங்கள் சென்றும்
வருவதால் மறைக்கு லத்தில் மருவிப்பின் தேவ னுவன்
உரைக்கிறேம் பாலன் சேதி உத்தமி வருகுங் காலம்
இருபது வாண்டு தன்னில் எய்திடு மன்னை வர்க்கம்.

32. ஆலயத்திருப்பணிகள் செய்து வந்ததாலும் பல புண்ணிய தலங்களுக்குச் சென்று வந்ததாலும் அந்தணர் குலத்தில் பிறந்து முடிவில் தேவனுவான். ஜாதகனுடைய திருமணக்காலத்தைச் சொல்லுகின்றேம். அது அவனுடைய இருபதாம் வயதில் நிகழும். தாயின் வர்க்கத்திலிருந்து மனைவி வருவாள்.

ஜாதகனின் மனைவியின் குணங்கள்

33. மாதுவின் குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி
[யாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுள்மனங் கவடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பரவுப காரி யாகுந்
தீதென்றோர்க் குதவி செய்வள் தீர்க்கமாம் வயது
[வென்றேம்.

33. ஜாதகனுடைய மனைவியின் குணத்தைக் கூறுகின்றேம். மாந்துளிர் போன்று மென்மையான சரீரமுடையவள். இன்புறும்படி பேசுபவள். மனத்தினுள் சூதுகளில்லாதவள். தீய எண்ணங்களில்லாத மனத்தினள். பிறருக்கு உபகாரியாவள். துன்பமடைந்த வர்கட்கு உபகாரம் செய்பவள். நீண்ட ஆயுள் உள்ளவள் என்றேம்.

ஜாதகனுக்கு இருமனைவியர் : கிரகநிலை

34. ஐயமுனி இதனைக் கேட்டுச் செப்புவார் முனிவ ருக்கு
வியமாகு முதல்ம னைதான் மேவிடு மிரண்டாம் பாரி
பயமிலாச் சொன்ன சங்கைப் பகருவீர் முனியே கீர்தாம்
நயமிலீர் வேழில் ராகு நற்சனி மூன்றி லாக;

34. ஐய முனிவர் இவற்றைக் கேட்டுக் கூறுகின்றார். ஜாதகனுக்கு முதலில் வரும் மனைவி இறந்து விடுவாள். இரண்டாம் மனைவி ஒருத்தி வருவாள் என்றார். ஐயமின்றி இங்ஙனம் சொல்லக் காரணங் களைக் கூறுங்கள். நன்மையில்லாத ராகு ஏழில் (களத்திர ஸ்தானத்தில்) இருப்பதாலும் அவ்வீட்டுக்குரிய சனி மூன்றுமிடத்தில் ;

முதல் மனைவியின் மரணகாலம்

35. இருப்பதால் தார மிரண்டு இயம்பினேம் முனியே யாரும்
வருமனை யிரண்டுங் தீர்க்க மடிவுண்டோ விவரஞ்
[சொல்வீர்
திருகாகு முதல்ம னைதான் செப்புவீர் காலக் தன்னை
[1]பிரசுரன் தசையங் தத்தில் புதல்வனுக் கிருபா
[ளென்பான் ;

35. இருப்பதாலும் இரு மனைவியர் உண்டு என்று சொல்லுகின்றீரும். முனிவரே ! ஜாதகனுடைய இரு மனைவியரும் நீண்ட ஆயுள் உள்ளவரோ? அல்லது இடையில் இறப்பரோ? விவரங்களைச் சொல்லுங்கள். முதல் மனைவி மரணமடைவாள். அஃது எந்தக் காலம் என்று கூறுங்கள். சுக்கிர மகாதசை முடிவில் ஜாதகனுக்கு இருபத்தொன்பதாம் ;

இளைய மனைவி வருங்காலம் : அவள் இயல்புகள்

36. ஆண்டினில் கர்ப்பத் தாலே அம்மாது மரிப்பா ளாகுந்
தாண்டிய மறும னைதான் சேருவா ளந்த வாண்டில்
பாண்டியன் மகள்போ லொப்பாம் பர்த்தாவுக் கினிய
[ளாகும்
வேண்டினோர்க் குதவி செய்வள் விகடங்கள் கூரு
[ளாகும்.

36. வயதில் கர்ப்பமுற்று அப்பெண் (முதல் மனைவி) இறந்து விடுவாள். அதே வருடத்தில் வேற்று மனைவி ஒருத்தி வாழ்க்கைப் படுவாள். அவள் பாண்டிய ராஜகுமாரி போன்றவள். தன் கணவனுக்குப் பிரியமானவள். தன்னை வேண்டியவர்கட்கு உபகாரி. அகடவிகடமாகப் பேசாதவள்.

ஜாதகனின் புத்ரபாவம்—தோஷமேற்பட்டக் கிரகநிலை

37. மங்கையும் தீர்க்க ஜீவி மைந்தர்கள் பலத்தைச்
[சொல்வேன்
துங்கமா மாண்பால் மூன்று தோகையர் மூவர் தீர்க்கஞ்
சங்கையா முதலில் தோஷஞ் சாருங்கா ரணங்கள்
[சொல்வீர்
மங்கலன் புகரு மைந்தில் மருவின பலத்தால் தோஷம்.

37. அவளும் நீண்ட ஆயுள் உள்ளவள். ஜாதகனுடைய புத்திர பாவத்தைச் சொல்லுகின்றோம். தூய்மையான புத்திரர்கள்

1. சுக்கிரன்

மூவரும் புத்திரிகள் மூவரும் தோன்றுவர். முதலில் தோன்றும் குழந்தை நிலையாது. அவ்விதம் ஏற்படக் காரணம் செர்ல்லுங்கள். செவ்வாயும் சுக்கிரனும் புத்திர ஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் இருக்கும் பலத்தால் அவ்விதம் சொன்னேம்.

ஜாதகனின் முற்பிறவியும், தீவினையும்

38. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகிறேம் பாண்டி நாட்டில்
துன்மதி கர்ண சேயாய்த் தோன்றியே மனைவி யுண்டாய்
அன்னவன் வாழு நாளில் அணுகின வினையைக்
[கேண்மோ
தன்வர னில்லா மாதைத் தானவன் போகந் துய்த்தும்;

38. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். பாண்டிய நாட்டில் கருணீகர் குலத்தில் பிறந்து, கெட்ட புத்தியுள்ளவனாகி மனைவி மக்களைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். கணவனை இழந்த பெண்ணுடன் ஜாதகன் சிற்றின்பம் அனுபவித்தான்.

முற்பிறவித் தீவினைப்பயன்

39. பாவைக்குக் கருவு தங்கப் பண்டிதஞ் செய்யும் போது
மேவினுள் கால நாடு மேவிற்று வந்தத் தோஷங்
காவல னந்தி யத்தில் கரமது சோர்வு நேர்ந்து
மேவினன் கால நாடு வேதத்தோன் வரையப் பட்டு;

39. அதனால் அக்கைம்பெண்ணுக்குக் கருவேற்பட்டது. அக்கருவை நீக்க மருந்தைக் கொடுக்கும்போது அப்பெண் மரணமடைந்தாள். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது. ஜாதகனும் தன் கடைசிக் காலத்தில் கை கால்கள் சோர்வுற்று மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு;

பர்வத, வேசி யோகங்கள்

40. பிறப்பது மிந்தப் பாலன் பேதையின் தோஷத் தாலே
மருவிடுந் தார மிரண்டு வறைகிறேம் மிவனின் யோகம்
பருவத யோக மொன்று பாவையே வேசி யோகம்
உரைக்கிறேம் பலனை யரங்கள் உத்தமி கேட்டி டாயே.

40. இப்பிறவியில் பிறந்தான். பெண்ணையிறக்கச் செய்த தோஷத்தால் இரு மனைவியர் ஏற்படுவர். ஜாதகனுடைய யோகங்களைச் சொல்லுகின்றேம். பர்வதயோகம், வேசியோகம் இவ்விரண்டும் ஏற்படும். அந்த யோகங்களின் பலனைச் சொல்லுகின்றேம். உயர்ந்த குணமும் எப்பொழுதும் இளமையும் உள்ளவளே! கேளுங்கள்.

ஜாதகனுக்கு ஏற்படும் மேன்மை

41. தந்தையின் பூமி மேலாய்த் தானவன் விருத்தி செய்வன்
தந்தைசெய் பல்செட் டுந்தான் தானவன் செய்வா னகு
முன்துணை தனைக்காப் பானு முலகினிற் புகழு மேற்பன்
நிந்தைக ளேற்கா னகும் நிருபர்க ளுறவு கொள்வன்.

41. தந்தையினுல் சேர்த்து வைக்கப்பட்ட நிலங்க அ
விருத்தி செய்வான். தந்தையால் செய்யப்பட்டு வந்த தெ
பெருக்கம் செய்வான். தன்னுடைய மூத்த சகோதரனை ஆ
வருவான். கீர்த்தியை அடைவான். அவமானங்களை அடைய
அரசாங்கத் தொடர்பு உள்ளவன்.

இதுவுமது

42. அறமதி லிச்சை யுண்டு
யாவர்க்குஞ் சகாய னவன்
பிறைபோலே யோக மேற்பன்
பெரும்பொரு ளிச்சை யுண்டு
பொருளதைச் சேர்ப்பா னகும்
புண்ணியத் தலங்கள் செல்வன்
திருமனை யாஸ்தி யாவுஞ்
செப்புவோம்பத் தாயி ரம்பொன்.

42. தருமத்தைச் செய்வதில் விருப்பமுள்ளவன். எல்லோ
சகாயத்தைச் செய்து வருவான். வளர்பிறைச் சந்திரன்போல்
விருத்தியடையும். பெரும் பொருளைச் சேர்ப்பதில் பிரி
வன். ஆஸ்தியைப் பெருக்குவான். பல புண்ணிய கே
களுக்குச் செல்லுவான். இவனது வீடு ஆஸ்தி எல்லாம்
பத்தாயிரம் பொன் மதிப்புள்ளதாகும்.

ஜாதகன் மரணகாலம்

43. அறுபது வாறு வாண்டில் ஆனிமா தத்தி லேதான்
குறைபக்க மேகா தசியில் குழவிழி னுடல மேகும்
பராசரு மறித்துச் சொல்வார் பத்தாண்டுள் பால னு
உரைக்கிறேர் மார கங்கள் உயர்குறு முனிவர் சொல்வ

43. ஜாதகனுடைய அறுபத்தாரும் வயதில் ஆனி மாதத்
கிருஷ்ணபட்சம் ஏகாதசியன்று ஜாதகன் மரணமடைவான். பரா
முனிவர் இடைமறித்துச் சொல்லுகின்ருர். ஜாதகனுக்கு ப
வயதுக்குள்ளாகவே மரணம் நேரிடாதோ! அகத்திய முனிவர்
கின்ருர்.

ஸப்தரிஷிகாடி

நீண்ட ஆயுளுக்குரிய கிரகநிலை

காரியும் பொன்னே னுச்சங் கலந்ததால் தீர்க்க ஜீவி
பாரினில் வினைய நேகம் பரவினும் நிவிர்த்தி யாகுந்
தீரமா யிவன்பின் ஜன்மஞ் செப்புவோங் காஞ்சி
[தன்னில்
கோவான் மறைக்கு லத்தில் செப்பின மொழிகுன்
[ருவே.

சனியும் குருவும் (ஆயுள்காரகனுகிய சனியும், ஆயுள் ஸ்தான ட்டாமிடத்துக்குரியவனுகிய குருவும்) உச்சர்களாக இருப்பதால் ன் நீண்ட ஆயுள் உள்ளவன் என்றேரும். உலகில் எவ்வளவு ம் ஏற்படினும் அவை விலகும். இவனுடைய மறுபிறவியைச் லுகின்றேரும். காஞ்சீபுரத்தில் அந்தணர் குலத்தில் பிறப்பான். ர் கூறிய வார்த்தைகள் தவரு.

ஜனனகாலதசை

பிறந்திடு காலந் தன்னில் புதன்தசை யாண்டு மூன்றுஞ்
சிறந்திடுந் திங்கள் பத்துஞ் செப்புவோம் பலனே யாங்கள்
மருவிடும் பிணிய நேகம் வருந்துணை பின்னல் சேரும்
தெரிவிப்போம் பின்னல் சேதி தேவியே கேட்டி டாயே.

45. ஜாதகன் பிறக்கும் காலத்தில் புதமகாதசையில் மூன்று ங்களும் பத்து மாதங்களும் மீதமாம். அக்காலத்திய பலனே கூறுகின்றேரும். அநேக விதமான நோய்கள் ஏற்படும். சகோதர யுண்டு. மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின் தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 47

1. சிங்கலக் கினம தாகச் செங்கதிர் வெள்ளி புந்தி
தங்கிட மிரண்டு மாகச் சிகியஞ்சில் சேயு மாறில்
பங்குமே வேழ தாகப் பிறைதசம் பணியுமி லாபந்
துங்கமாங் குருவி யத்தில் செப்புவீர் பலனைத் தானே.

1. இலக்கினம் சிம்மமாகவும், சூரியன் சுக்கிரன் புதன் இரண்டாமிடமாகிய கன்னியிலும், கேது ஐந்தாமிடமாகிய தனுசிலும், செவ்வாய் ஆறுமிடமாகிய மகரத்திலும், சனி ஏழாமிடமாகிய கும்பத்திலும், சந்திரன் பத்தாமிடமாகிய விருஷபத்திலும், ராகு லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், குரு விரய ஸ்தானமாகிய கடகத்திலும் இருந்தால் ஏற்படும் பலனைக் கூறுங்கள்.

கிரகநிலை

		சந்திரன்	ராகு
சனி	இராசி சக்கரம்		குரு
செவ்வாய்			லக்கினம்
கேது			சூரியன் சுக்கிரன் புதன்

ஜாதகனின் வீட்டு நிலை

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்றார்
மேதினி லாண்பால் ஐன்ம மடைவுட னுதிப்பா லுகும
போதக வானை கீழ்ப்பால் பூதகா தனுமே மீனம்
நீதியாய் மேல்பால் வாசல் நிகர்மாரி வுத்திர மாகும்.

2. இங்ஙனம் பார்வதிதேவி கேட்கும்போது பராசர முனிவர் கூறுகின்றார். இஃது ஆண் மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீட்டுக்குக் கிழக்கில் விநாயகர் ஆலயமும், வடமேற்குத் திக்கில் பூதகணங்களுக்குத் தலைவனாகிய சிவபெருமான் கோயிலும் உள்ளன. வீடு மேற்கு நோக்கியுள்ளது. மாரியம்மன் கோவில் வடக்கில் இருக்கும்.

ஜாதகன் குலம்

3. மடிந்தோர் கெடியுங் காணும் வளமுள பேரு ராமே
திடமுள யில்ல மாகுஞ் சேயனு மேழாஞ் ஐன்மம்
அடைவுட னுதிப்பா லுகும் அக்கினி குலமே யாகுந்
தடவரை மகளே யாங்கள் சாற்றுவோம் பாலன் சேதி.

3. இடிந்த தொரு கோட்டையும் அவ்வூரில் உண்டு. அவ்வூர் செழிப்பான பெரிய ஊராகும். அவ்வூரில் ஓர் உறுதியான வீட்டில் தன் தந்தைக்கு ஏழாம் பிறவியாக ஜாதகன் பிறப்பான். அவன் வன்னியகுல சத்திரிய குலத்தில் பிறந்தவன். மலையரசாகிய ஹிமவானின் புத்திரியே! நாங்கள் ஜாதகனுடைய செய்தியைக் கூறுகின்றோம்.

தந்தையின் வரலாறு

4. தந்தையின் துணையா ணென்று சத்திமா ரிருவ ராகும்
அந்தவாண் முன்னே ணைக வறிவிப்போ மவன்கு
[ணத்தைச்
சிந்தையு நல்ல தாகுஞ் சிறப்பான குடும்பி யாவன்
முந்துமால் பத்தி கொள்வன் மேதினி விருத்தி செய்வன்.

4. ஜாதகனுடைய தந்தைக்கு ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் உள்ளனர். அந்தச் சகோதரன் ஜாதகனுடைய தந்தைக்கு மூத்தவன் என்று சொல்லுகின்றோம். அவனுடைய குணத்தைக் கூறுகின்றோம். நல்ல மனமுள்ளவன். சிறப்புள்ள குடும்பத்தை யுடையவன். திருமாலின் மீது பக்தியுள்ளவன். விசே நிலங்களைப் பெருக்குவான்.

தந்தையின் மூத்த சகோதரன் குணங்கள்

5. நல்லவன் நல்ல வர்க்கு நாதனுர் பத்தி பூண்பன்
சொல்லது சுருக்க மாகுந் துணைவன்சொல் கடவா ணைகும்
இல்லையென் றுரைக்க மாட்டா னிடர்செய்யான் யாவ
[ருக்கும்
மல்லுக்கு முன்செல் லாதான் மாடுகள் பணையோர் விருத்தி

5. நல்லவர்கட்கு நல்லவனாக இருப்பவன். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன். சுருக்கமாகப் பேசுபவன். தன்னுடைய சகோதரனுடைய வார்த்தைகளை மீறுதவன். யாசித்தவர்கட்கு இல்லையென்று கூறுதவன். ஒருவருக்கும் தீங்கை இழைக்காதவன். சண்டைக்குச் செல்லாதவன். கால் நடைகள், பண்ணை, ஏர் முதலியவற்றின் பெருக்க முள்ளவன்.

புத்திரபாவம்

6. பாரியு மொன்றே யாகும் பாலர்க ளாண்பா லொன்று
தீரமாம் பெண்பா லொன்று தீர்க்கமா மென்று
[சொல்வோம்
வீரரே மற்ற வெல்லா மேன்மையாய்க் குடும்ப மேற்பன்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

6. மனைவியொருத்தியே. ஒரு புத்திரனையும் ஒரு பெண்ணையும் பெற்றவன். இவ்விரு குழந்தைகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள்.

மற்ற குழந்தைகள் நிலையா என்றும் சொல்லுகின்றோம். மேன்மை யுள்ள குடும்பத்தை யடைவான். அறுமுகக் கடவுளைப் பெற்ற அம்பிகையே ! கேளுங்கள்.

தந்தையின் குணநலங்கள்

7. கன்னிமார் சேதி தன்னைக் கழறுவோம் பின்பா கத்தில்
இன்னவன் தந்தை சேதி யியம்புவோ மிருசி வப்பன்
பன்னினர்க் கிணக்கஞ் சொல்லான் பாரிலு லுய்வா லுகும்
நின்தைக ளேற்கா லுகும் நேர்ந்திடும் பித்த வாயு.

7. தந்தையின் சகோதரிகளின் விஷயத்தைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். இப்போது ஜாதகனுடைய தந்தையின் விவரங் களைக் கூறுகின்றோம். கரிய நிறமுடையவன். தன் சுற்றத்தாருக்கு இணங்காதவன். விவசாயத்தைச் செய்து வருவான். அவமானங்களை அடையாதவன். பித்தவாயு உள்ள சரீரமுடையவன்.

இதுவுமது

8. சல்லிய மில்லா லுகுந் தரணிகள் சேர்ப்பா லுகுஞ்
சொல்லது தந்திர மாகுஞ் சோம்பிடான் காரி யத்தில்
புல்லிய நிறவு கொள்ளான் புதுவில்லுஞ் செய்வா லுகும்
அல்லல்க ளடையா லுகும் ஆவுகள் விருத்தி செய்வன்.

8. கடன் உபத்திரவமில்லாதவன். விளை நிலங்களைப் பெருக் குவான். தந்திரமாகப் பேசும் இயல்பினன். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவன். அற்பர்களுடன் நட்புக்கொள்ளாதவன். புதிய வீடு ஒன்றைக் கட்டுவான். துன்பங்களை அடையாதவன். பசுக்களைப் பெருக்குவான்.

இதுவுமது

9. உண்டியில் வறுமை காணன் உறைப்பொடு புளிப்பி
[லிச்சை
துண்டமாய்க் கூரு லுகுந் தோகைசொல் கடவா லுகும்
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்
குண்டுணி கூரு லுகுங் குலமதிப் புடனே வாழ்வன்.

9. சாப்பாட்டிற்குத் தரித்திரமில்லாதவன். காரத்துடன் சேர்ந்த புளிப்புப் பண்டங்களை அருந்துவதில் பிரியமுடையவன். கண்டிதத்துப் பேசும் வழக்கமில்லாதவன். மனைவியின் வார்த்தைகளை மீறுதவன். வெகு காலத்திய (பிதுரார்ஜிதமான ஆஸ்திகளை) நிலங்களைப் பெருக்கு வான். கோள் சொல்லாதவன். தன் குலத்தின் மதிப்புடையவனாக வாழ்ந்து வருவான்.

ஜாதகனின் குணநலன்கள்

10. சொல்லிய குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
புல்குவோ மிவன்கு ணத்தைப் புல்குவான் கல்வி ரண்டு
நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
வெல்லுவா னெதிரி தன்னை வீண்வழக் கோரஞ்
[சொல்லான்.

10. இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றோம். இருவிதமான கல்விகளைக் கற்பான். நல்லவர்கட்கு நல்லவனுகவும் தீயவர்கட்குத் தீயவனுகவும் இருப்பான். விரோதிகளை ஜயிப்பான். வீண்சண்டைக்குச் செல்லாதவன். (பொய்ச் சாட்சி சொல்லாதவன்)

ஜாதகன் தொழில்

11. அன்னிய பாஷை மேன்மை யரசரால் தொழிலு மேற்பன்
முன்னோர்க்குத் தொண்டு பூண்ப னுலகுக்கு நல்லோ
[னுவன்
பின்னமில் லாத தேகி பூமியும் பலவூர் சேர்ப்பன்
மன்னர்க்கு விவன்சொல் மேன்மை வருவோரை யாத
[ரிப்பன்.

11. வேற்று மொழியொன்றைக் கற்று மேன்மையடைவான். அரசரால் தொழில் அடைவான். தன் முன்னோர்கட்குத் தொண்டுகளைச் செய்துவருவான். உலகத்தவர்கட்கு நல்லவனுவான். ஊனமில்லாத சரீரமுடையவன். பல ஊர்களில் பூமியைச் சேர்ப்பான். அரசருக்கு இவன் வார்த்தைகளை மதிப்புள்ளவையாக இருக்கும். அண்டி வந்தவரைக் காப்பான்.

ஜாதகன் இயல்புகள்

12. பரிவண்டி யுடைய னுகும் பலமுள குடும்பி யாவன்
நெரியதைக் காப்பா னுகும் நீத்தோர்க்கு வன்ன மீவன்
பறைபள்ளு வுடைய னுகும் பாக்கியஞ் சேர்ப்பா னுகுந்
துரிதமாய் நடக்க வல்லன் சூட்சும புத்தி யேற்பன்.

12. குதிரை வண்டி வைத்திருப்பவன். பலமான குடும்பத்தையுடையவன். நேர்மையுடன் நடந்துகொள்வான். துறவிகட்கு அன்புடன் அன்னமளிப்பவன். ஹரிஜனங்களாலான ஏவலாட்கள் உள்ளவன். பாக்கியசாலி. வேகமாக நடப்பவன். நுண்ணிய அறிவுடையவன்.

பேரி—புரந்தர—யோகங்களுண்டாதற்குரிய கிரகநிலை

13. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச் [சங்கை
பாகன்சேய் மதியோ னுச்சம் பத்தினிக் குடையோ [னிரண்டில்
ஆகமன் தனக்கீ ராறில் அரவுமே விருப்ப தாலே
போகவான் பேரி யோகம் புரந்தர யோக மொன்றும் ;

13. ஜாதகனுக்கு யோகம் ஏற்படும் என்று எங்ஙனம் சொன்னீர்கள் ? அதற்குக் காரணம் கூறுங்கள். புதன் செவ்வாய், சந்திரன் உச்சர்களாகவும், பத்தாம் வீட்டுக்குரிய சுக்கிரன் இரண்டாமிடத்திலும், குருவுக்குப்பன்னிரண்டில் ராகு இருப்பதாலும் ஜாதகனுக்கு பேரியோகம் புரந்தரயோகம் ஆகிய இரண்டும் ஏற்படும்.

யோகங்களின் பலன்

14. இருவித யோகத் தாலே இந்திரன் போல வாழ்வன்
அரசுமே செய்வா னாகும் அவனிமேல் புகழு மேற்பன்
திருமக னில்லம் பூமி சேர்ப்பன்மூப் பாயி ரம்பொன்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

14. இவ்விரு யோகங்களால் ஜாதகன் தேவர்கட்கரசனுகிய இந்திரன் போல் வாழ்ந்து வருவான். அரசன் போல் செல்வாக்குள்ளவன். உலகில் கீர்த்தியைப் பெறுவான். வீடு விளைநிலங்கள் ஆகிய இவை மூப்பதாயிரம் பொன் மதிப்புள்ளவை. வேதங்களின் முடிவில் வாழும் தேவியே! கேளுங்கள்.

ராஜயோகம் ஏற்படும் காலம்

15. எந்தக்கால் ராஜ யோகம் எய்திடு மென்று சொல்வீர்
வந்தவன் மூவே ழின்மே லரசரால் தொழிலு மேற்பன்
சந்திரன் பிறைபோல் யோகந் தங்கிடு மன்பான் மூன்றும்
இந்தவ னரசு செய்வன் ஈச்வரி கேட்டி டாயே.

15. ஜாதகனுக்கு எந்தக்காலத்தில் ராஜயோகம் ஏற்படும் என்று சொல்லுங்கள். ஜாதகன் இருபத்தாராம் வயதுக்கு மேல் அரசாங்கத் தொழில்களே ஏற்பான். அதன்பிறகு வளர்பிறைச் சந்திரன் போல் யோகம் வளரும். அதிகாரங்களுடைய பதவியை வகிப்பான். ஐம்பத்துமூன்றும் வயது வரையில் ராஜயோகம் உள்ளவன். ஈசுவரியே! கேளுங்கள்.

16. இதுமத்தில் தொழில்க ளுக்கு இடருக ளுண்டோ
[சொல்வீர்
விதவிதக் கலகம் நேரும் வெண்மதி தசமந் தங்க
உதயனும் புகரு மிரண்டில் உறைந்ததால் பனிபோல்
[நீங்கும்
இதுவிவ ரங்க ளெல்லாம் இயம்புவோம் பின்பா கத்தில்.

16. இதற்கிடையில் இவனுடைய தொழிலுக்குத் துன்பங்கள் ஏற்படாவோ? சொல்லுங்கள். பற்பலவிதமான கலகங்கள் நேரும். அவை, சந்திரன் பத்தாமிடத்தில் இருப்பதாலும், சூரியனும் புதனும் இரண்டாமிடத்தில் இருப்பதாலும், சூரியன் முன் பனிபோல் விலகி விடும். இவற்றையெல்லாம் பின்பு விவரமாகக் கூறுகின்றோம்.

ஜாதகனின் சகோதரியின் குணங்கள்

17. தன்துணை முன்பெண் ணொன்று
சாற்றுவோந் தீர்க்க மாக
அன்னவள் குணத்தைச் சொல்வேன்
அரிமனை யொப்பாய் வாழ்வள்
பொன்பணி சேர்ப்பா ளாகும்
புருடன்தன் மனத்துக் கேத்தோள்
கன்னிகை யோக சாலி
கவடிலாள் முன்கோ பத்தாள்.

17. ஜாதகனுக்கு மூத்த சகோதரி யொருத்தியுண்டு என்றும் அவள் நீண்ட ஆயுள் உள்ளவள் என்றும் சொல்லுகின்றோம். அவளுடைய குணத்தைக் கூறுகின்றோம் இலக்குமியைப்போன்ற செல்வியாயிருப்பாள். பொன்னாபரணங்களின் விருத்தியுள்ளவள். தன் கணவன் மனத்துக் கேற்றபடி நடப்பவள். அதிருஷ்டமுடையவள். சூதுகளில்லாதவள். முன்கோபி.

சகோதரியின் புத்திர பாவம்

18. மாதுவுந் தீர்க்க ஜீவி வருவோரை யாத ரிப்பள்
சூதிலா ளதிக வார்த்தை துறவோர்க்கு வன்ன மீவள்
காதல னுள்ளூர் நேருங் கனமான குடும்ப மேற்பள்
ஓதுவேன் சுதரா னிரண்டு உத்தமி கேட்டி டாயே.

18. அவள் நீண்ட ஆயுளை உடையவள். தன்னையண்டி வந்த வரை ஆதரித்து வருவாள். கபடமில்லாதவள். அதிகமாகப் பேசுபவள். துறவிகட்கு அன்புடன் அன்னமளிப்பவள். உள்ளூரிலிருந்தே கணவன் வாய்ப்பான். பெரிதான குடும்பத்தை அடைவாள். இரு புத்திரர்களைப் பெறுவாள். தாயே! கேளுங்கள்.

சகோதரதோஷம்—கிரகநிலை

19. சுகமுள குடும்ப மேற்பள் சேரர்வுறு மற்ற வெல்லாந்
தகமையாய்ப் பாலன் பின்னுல் ஜனிக்கினுந் தீதே யாகும்
பகையதைப் புகலு மென்னப் பார்க்கவ னிரண்டில்
[நீச்சஞ்
ஜகத்துளோ ரறில் தங்கச் செப்பினே மந்தச் சங்கை.

19. சௌக்கியமான குடும்பத்தை யடைவான். மற்றும் தோன்றும் குழந்தைகள் நிலையா. ஜாதகனுக்குப் பின்னுல் பிறக்கும் குழந்தைகள் இறந்துவிடுவார். அதற்குக் காரணங்கள் என்னவென்று கூறுங்கள். மூன்றுமிடத்துக்குரிய சுக்கிரன் இரண்டாமிடத்தில் நீச்சனுகவும் சகோதரகாரகனுகிய செவ்வாய் ஆருமிடத்தில் மறைந்து மிருப்பதால் அவ்விதம் சொன்னேம்.

தாயின் குணங்கள்

20. இதுவன்றி யன்னை யாலே யெய்திற்று வந்தச் சாபம்
அதுவினை புகலு மென்ன அவள்குணம் பொறுமை
[சாலி
சதியிலா மனத்த ளாகுஞ் சாதமுங் குறைவு ரூதாள்
துதிசெய்தோர்க் குதவு வாளாஞ் சோம்பிடாள் காரி
[யத்தில்.

20. இது வல்லாம்ல் ஜாதகனின் தாயாரால் சில தீங்குகள் நேரிட்டன. அத்தீங்குகளைச் சொல்லுங்கள் என, தாயின் குணத்தைச் சொல்லுகின்றேம். பொறுமையுடையவள். தீங்குகளில்லாத மனத்தினள். உணவுக்குக் குறைவில்லாதவள். தோத்திரம் செய்தவரைக் காப்பாள். காரியங்கள் செய்வதில் சோம்பலில்லாதவள்.

தாயின் சகோதரனின் குணங்கள்

21. பித்தச்சூ டுடைய ளாகும் பிறர்குற்றம் புகலா ளாகும்
வித்தகி துணையா லென்று விளம்புவோர் தீர்க்க மாகச்
சித்தச னெப்ப தாகுஞ் செழிப்பான குடும்ப மேற்பன்
பத்திமா னவர்க்கு வன்னம் படைப்பனுஞ் சிவந்த மேனி.

21. பித்தச்சூடுடையவள். பிறருடைய குற்றத்தைக் கூறுதவள். தாயின் உடன் பிறந்தவன் ஒருவன் நீண்ட ஆயுள் உள்ளவன் என்றேம். அவன் மன்மதனையொத்த சரீரமுடையவன். செழிப்புள்ள குடும்பத்தை யடைவான். பக்தியுள்ளவர்கட்கு அன்னமிடுபவன், சிவந்த உடலுடையவன்.

இதுவுமது

22. பலவிதச் செட்டுச் செய்வன் பரவுப காரனுகும்
தலந்திருப் பணியுஞ் செய்வன் தரணிக ளதிகஞ் சேர்ப்பன்
திலகமாம் யாவ ருக்குஞ் சேயிழை யொன்றே தீர்க்கம்
நலமுள சுதரா ணிரண்டு நங்கைமா ரவ்வாறு தீர்க்கம்.

22. பலவித வர்த்தகங்களைப் புரிந்து வருவான். பிறருக்கு உபகாரம் செய்பவன். பல ஆலயத்திருப்பணிகளைச் செய்து வருவான். உலகில் உயர்ந்த பதவியை வகிப்பான். விளைநிலங்களை மிகுதியாகச் சேர்ப்பான். எல்லோருக்கும் நல்லவன். மனைவி யொருத்தியையே உடையவன். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்காயுள் உள்ளவர்கள்.

தாயின் முற்பிறவி

23. மாரனும் வயது தீர்க்க மருமமில் லாதா னுகுங்
கூறுவோம் பின்பால் சேதி கோதையின் பூர்வங்
[கேளாய்
வாரியி னேரந் தன்னில் மாவலி நகரி லேதான்
பார்விருத்தி செயுங்கு லத்தில் பிறந்தவ ளென்று
[சொன்னேம்.

23. ஜாதகனுடைய மாமனுக்கு வயது தீர்க்கமானது. இரகசியமில்லாதவன். மற்றச் செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். ஜாதகனுடைய தாயின் முற்பிறவியைக் கேளுங்கள். சமுத்திரக் கரையிலுள்ள மகாபலிபுரத்தில் விவசாயம் செய்துவரும் வேளாளர் குலத்தில் பிறந்தவள் என்று சொல்லுகின்றேம்.

தீவினை

24. கனமுள குடும்பி யாகிக் காதலி வாழு நாளில்
வினையதைப் புகலக் கேண்மோ வேதியர் மதலைக் காகக்
னைமுள வாவின் பாலைக் காதலி தன்பால் கேட்கச்
சினங்கொண்டு வீயா நின்ரூள் செப்புவாள் மறைமா
[துந்தான்.

24. செழிப்புள்ள குடும்பத்தை யடைந்து வாழ்ந்துவரும் காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஓர் அந்தணர்குலப் பெண் தன் குழந்தைக்குப் பசுவின் பால் வேண்டுமென இவளை யணுகிக் கேட்டாள். இவளும் கோபங்கொண்டு கொடுக்காமல் இருந்தாள். அந்தணர்குலப் பெண்ணும் சொல்லுகின்றுள்.

குழந்தைக்குப் பால் தராததின் பலன்

25. பாலர்பா லீயாப் பாவி பருகாது சுதரு னக்குச்
சாலவே பின்ஜன் மத்தில் சந்ததி வதிக்குந் தீதாம்
ஏலவே சொல்லிச் சென்ரு ளெய்திற்று வந்தச் சாபம்
ஆலம்போல் வேறு வொன்று மணுகிற்றுப் புகலக்
[கேண்மோ.

25. குழந்தையின் பசிக்குப் பால் தராத பாவியே! உனக்குக் குழந்தைகள் தோன்ரு. மறுபிறவியில் தோன்றும் புத்திரர்கட்கும் தீங்குண்டாம் என்று சொல்லி விட்டுச் சென்ருள். அந்தச் சாபம் இவளை யடைந்தது. கொடிய விஷம்போல் வேருெரு தீவினையும் இவளைப் பற்றியது. அதைக் கேளுங்கள்.

பட்சியின் கூட்டைக் கலைத்ததன் பயன்

26. இறப்பினில் கூடு கட்டி யிருந்திடு பட்சி தன்னைக்
குறிப்பாக கண்டு மேதான் கூட்டினைக் கலைத்தா
[ளென்ரும்
மறலியின் நாட்டைக் குஞ்சு மருவிற்று வந்தத் தோஷம்
அரிவையு மந்தி யத்தில் அவள்சுதர் மரண மாகி ;

26. இவளுடைய வீட்டின் கூரையில் கூடுகட்டியிருந்த பட்சியைப் பார்த்ததுமே அக்கூட்டைக் கலைத்து விட்டாள். அக்கூட்டிலிருந்த குஞ்சு மரணமடைந்தது. அந்தத் தோஷமும் பற்றியது. இப் பெண்ணும் தன் கடைசிக்காலத்தில் புத்திரர்களை யிழந்து ;

நற் செயல்கள்

27. மனமது வருத்த முற்று மாரியின் கோட்டத் திற்குக்
கனமத வானை கோட்டங் காதலி தீபம் வைத்து
வனிதையு மரண மாகி மறையவன் வரையப் பட்டு
அனையவே விக்கு லத்தி லருளினு ளென்று சொல்வோம்.

27. மனவருத்தமடைந்து மாரியம்மனுடைய கோவிலுக்கும் விநாயகர் ஆலயத்துக்கும் தீப கைங்கர்யம் செய்து வந்தாள். பிறகு மரணமடைந்து, பிரம்தேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் மாலிக்குலத்தில் பிறந்தாள் என்று சொல்லுகின்ரோம்.

ஆலயங்களில் தீபமேற்றியதன் பயன்

28. முன்ஜன்மம் பட்சி தோஷ முதுமறை யாளின் சாபந்
தன்சுதர் தோஷ மெய்துஞ் ஜயமுனி மறித்துச்
[சொல்வார்
கன்னியுங் காஞ் தீர்க்கங் கழறுவீர் முனியே நீர்தாம்
பெண்மாரி கணேசன் கோஷ்டம் புண்யபா கத்தால்
[தீர்க்கம்.

28. முற்பிறவியில் செய்த தீவினைகளாலான பட்சிதோஷமும் அந்தண குலப்பெண்ணின் சாபமு மேற்பட்டன. அவற்றுல் புத்திர தோஷம் உண்டாகும். ஜயமுனிவர் இடையில் மறித்துச் சொல்லு கின்ருர். ஜாதகனும் அவன் சகோதரியும் எங்ஙனம் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லுங்கள்? முனிவரே! மாரியம்மன் கோவிலி லும் விநாயகர் ஆலயத்திலும் தீப கைங்கர்யம் செய்து வந்த புண்ணி யத்தால் இவ்விருவரும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்ருேம்.

29. இப்பால னன்றி வேறு வெய்தாரோ விவரஞ் சொல்வீர்
தப்பித மின்றி வெள்ளி தனத்தினி லிருப்ப தாலே
இப்பாலன் தீர்க்க மெய்து மியம்புவோ மிவள்பின்
[ஜன்மம்
அப்புவில் வேளா ராக அக்குல முதிப்பா ளென்ருேம்.

29. இந்த ஜாதகன் தவிர வேறு புத்திரர்கள் பிறவாரோ? விவ ரங்களைக் கூறுங்கள் என்று வினவ, தவறில்லாமல் சொல்லுகின்ருேம். சுக்கிரன் தனஸ்தானத்தில் இருப்பதால் இந்த ஜாதகன் நீண்ட ஆயுளை உடையவன் என்ருேம். தாயினுடைய மறுபிறவியைச் சொல்லுகின் ருேம். திருவாஞைக்காவில் வேளாளர் குலத்தவளாகப் பிறப்பாள் என்ருேம்.

தந்தையின் முற்பிறவி

30. மைந்தனின் தந்தை பூர்வ மறைகிரே மினிமே லாகச்
செந்திமா மலையி லேதான் ஜனித்தனன் சேடர் வம்சம்
மூந்தின குடும்பி யாகி முன்னேருக் குதவி செய்து
கந்தன்மேல் பத்தி பூண்டு காலன்தன் நாடு சேர்ந்து;

30. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைக் கூறுகின்ருேம். செந்தில்மலையில் (திருச்செந்தூரிலுள்ள மலையில்) சேடர் மரபில் பிறந்து, செழிப்புள்ள குடும்பத்தை யடைந்து, பெரியோர்கட்கு உதவி செய்து, முருகக்கடவுள்மீது பக்திபூண்டு வாழ்ந்து, மரணமடைந்து;

தந்தையின் மறுபிறவி

31. சிரநான்கோன் வரையப் பட்டு ஜனித்தன னென்று
[சொல்வோம்
வருஞ்ஜன்மம் விரிஞ்சி தன்னில் வருவனுஞ் சைவச்
[சேயாய்ப்
பொருளது பெருக்க மாகிப் புண்ணியன் வாழ்வா னுகுங்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

31. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவன் என்றேரும். அடுத்த பிறவியில் விரிஞ்சி நாட்டில் சைவ குலத்தவனுகப் பிறந்து, பெருஞ் செல்வங்களே யடைந்து வாழ்ந்து வருவான். கரிய யானை முகத்தினனுகிய விநாயகனைப்பெற்ற தேவியே! கேளுங்கள்.

தந்தை தாயரின் மறைவு

32. இருபது வாறு வாண்டி லெய்திடுந் தந்தை கண்டந்
திருகிலா முப்ப தாண்டில் சேயனைப் பெற்ற வன்னை
மறலியின் நாடு சேர்வ ளறைந்தது தப்பா வாமே
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

32. ஜாதகனுடைய இருபத்தாரும் வயதில் தந்தை மரணமடைவான். முப்பதாம் வயதில் ஜாதகனுடைய தாய் மரணமடைவாள். நாங்கள் கூறியவை தவரு. அரிய வேதங்களின் முடிவில் கூறப்படும் தேவியே! கேளுங்கள்.

தந்தையின் மரணகாலம் கிரகநிலை

33. ஒன்பதுக் குடையோன் சேயா யோராறி லிருப்ப தாலே
அன்னவர் தசையி லேதா னணுகிடுந் தந்தை கண்டம்
பொன்னவன் சேயைப் பார்க்கப் புகலொணு மாரங்கள்
துன்ராகு தசையி லேதான் செப்புவோ மாரங்கள்.

33. ஒன்பதாமிடத்துக்குரிய செவ்வாய் ஆருமிடத்தில் இருப்பதால் அவனுடைய தசா காலத்தில் தந்தை மரணமடைவான். (மற்றவர் மறுத்துக் கூறுகின்ரூர்) குரு செவ்வாயைப் பார்ப்பதால் அக்காலத்தில் மரண மேற்படும் என்று சொல்ல இடமில்லே. ராகுமகாதசையில்தான் தந்தை மரணமடைவான்.

ஜாதகனுடைய திருமணக்காலமும் மனைவியின் குணநலன்களும்

34. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோம் பதினே
[ழாண்டில்
காதலி யன்னை வர்க்கங் கலப்பளாங் குணத்தைச்
[சொல்வேன்
பாதக மனமில் லாதாள் பஞ்சைமே லிரக்க மாவள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுயர்வான புத்தியேற்பள்.

34. ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய பதினேழாம் வயதில் அவனுடைய தாயின் வர்க்கத்திலிருந்து மனைவி வருவாள் என்றோம். மனைவியின் குணங்களைக் கூறுகின்றோம். தீய மனமில்லாதவள். ஏழைகளின்மீது இரக்கமுடையவள். இன்பமாகப் பேசுபவள். உயர்ந்த புத்திசாலி.

இதுவுமது

35. கல்விமான் கடவுள் பக்தி கண்முகம் வசிய முண்டு
இல்லையென் றுரைக்க மாட்டாள் யாவர்க்கு நல்லோ
[ளாவள்
சொல்லதைக் காப்பா ளாகுந் தோழன்தன் மனத்துக்
[கேத்தோள்
வல்லிக்கு வயது தீர்க்க மறித்துமே பராசர் சொல்வார்.

35. கல்வியறிவுடையவள். தெய்வபக்தி யுள்ளவள். முகம் கண்கள் இவை வசீகரமாக விருக்கும். யாசித்தவருக்கு இல்லையென்று கூறுதவள். எல்லோருக்கும் நல்லவள். சொன்ன வார்த்தைகளின் படி நடப்பவள். தன் கணவன் மனத்திற்கு ஏற்ப நடப்பவள். நீண்ட ஆயுள் உள்ளவள். பராசரர் இடைமறித்துக் கூறுகின்றார்.

36. கரியவ னேழி லாகக் கவிமக னிரண்டில் நீசம்
இருப்பதால் பால னுக்கு இருதார மென்று சொல்வோம்
பிருகுவும் புகலு கின்றார் புதனுச்சஞ் சுகத்தோ னுச்சந்
திருகிலா விருப்ப தாலே செப்பினேந் தார மொன்றே.

36. சனி ஏழாமிடத்திலிருப்பதாலும், களத்திரகாரகனுகிய சுக்கிரன் இரண்டா மிடத்தில் நீசம் பெற்றிருப்பதாலும், ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டு என்று சொல்லுகின்றோம். பிருகு முனிவர் கூறுகின்றார். இரண்டாம் வீட்டுக்குரிய புதனும் சுகஸ்தானாதிபதியாகிய அங்காரகனும் உச்சர்களாக இருப்பதாலும் ஜாதகனுக்கு மனைவி ஒருத்தியே.

மேற்கூறியதற்கு மறுப்பும், சான்றும்

37. சனிபுகர் பலத்தி னலே ஜாதகன் முன்னே தாரம்
வினையாகுங் காலஞ் சொல்வாய் வித்தக னறுப தாண்டில்
வனிதையு மரிப்ப ளாகு மைந்தர்கள் பலத்தைச்
[சொல்வேன்
கனமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

37. சனி சுக்கிரன் இவர்களுடைய பலத்தால் ஜாதகனுக்கு முன்னமே மனைவி மரணமடைவாள். அவ்வண்ணம் மனைவி இறக்கும் காலத்தைச் சொல்லுங்கள். ஜாதகனுடைய அறுபதாம் வயதில் மனைவி

இறந்து விடுவாள் என்றேும். ஜாதகனுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றேும். பெரிய யானை முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய புத்திரபாவம்

38. சுதர்களு மிருநான் காகத் தோன்றிடுஞ் சிலவே சேதஞ்
சதமுட னுண்பால் மூன்று சத்திமார் நிருவர் தீர்க்கம்
முதல்சுதர் தோஷ மெய்து மொழிகுவீ ரந்தச் சங்கை
புதல்வர்தா னத்தோன் விரயத்தில் பொருந்தின
[பலத்தால் சொன்னேம்.

38. ஜாதகனுக்கு எட்டுக் குழந்தைகள் தோன்றுவர். அவர்களில் சிலர் நிலையார். மூன்று புத்திரர்களும் இரு புத்திரிகளும் நிலையானவர் என்றேும். முதலில் தோன்றும் குழந்தை இறந்து விடும். அதற்குக் காரணம் சொல்லுங்கள். புத்திரஸ்தானத்துக்குரிய குரு விரய ஸ்தானத்தில இருக்கும் பலத்தால் அவ்விதம் சொன்னேம்.

ஜாதகனுடைய முற்பிறவி—சகோதரனுக்குப் பாகம் தராதது

39. இன்னவன் முன்ஜன் மத்தை யியம்புவோஞ்
[சிறுபாக் கத்தில்
மன்னர்தங் குலமு திக்து மனிவிமைந் தருமுண் டாகி
உன்னதச் செட்டுச் செய்து வுத்தமன் வாழு நாளில்
தன்னுடைத் துணைக்குப் பாகந் தராமலே மோசஞ்
[செய்தான்.

39. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேும். சிறு பாக்கத்தில் (வன்னிய குல) க்ஷத்திரிய குலத்தில் பிறந்து மனிவி மக்களை யடைந்து, உயர்ந்த வர்த்தகம் புரிந்து வாழ்ந்து வரும் காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேும். தன்னுடைய உடன் பிறந்தவனுக்குரிய பாகத்தைத் தராமல் மோசம் செய்தான்.

சகோதரனின் சாபம்

40. பின்னவன் வருத்த முற்றுப்
புகன்றசா பத்தைக் கேண்மோ
பொன்கடன் தந்த பாவி
பிறக்கும்பின் ஐன்மந் தன்னில்
அண்ணன்தம் பிகளு மின்றி
அவனிபால் வாழ்வா யென்னத்
துன்மைகள் சேர்ந்த வென்றேஞ்
சேயனு மந்தி யத்தில்;

40. இவ்வாய சகோதரன் வருத்தமடைந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். எனக்குரிய பாகத்தை எடுத்துக்கொண்டு கடவுள் மாத்திரம் எனக்குக் கொடுத்த பாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் அண்ணன் தம்பிகள் இல்லாமல் தனியனாக வாழ்ந்து வருவாய் என்றான். அந்தச் சாபம் வந்தடைந்ததென்றோம். ஜாதகன் தன் கடைசிக் காலத்தில்;

41. தாகப்பந் தலும மைத்துச் சான்றோர்க்கு வன்ன மீந்து
ஏகினன் கால நாடு இறைவன் வரையப் பட்டுப்
பாகமா யிக்கு லத்தில் பிறப்பனு மென்று சொல்வோம்
போகபாக் கியங்கள் பெற்றுப் புவிராசர் தம்மா லுய்வன்.

41. தாகமென்று வந்தவர்கள் அருந்துவதற்காகத் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்துப் பெரியோர்களுக்கு அன்னமளித்து வந்து மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் இக்குலத்தில் பிறந்தான் என்றோம். போக பாக்கியங்களை யடைந்து அரசாங்க உத்தியோகத்தை ஏற்று வாழ்ந்து வருவான்.

ஜாதகனுடைய மரணகாலம்

42. அறுபது வைந்து வாண்டில் அழகிய தனுசு மாதம்
நிறைபக்க மேகா தசியில் நிமலன்தன் னுடல மேகும்
பிருகுமே புகழு கின்றார் புதல்வனுக் கிரண்டாண் டுள்ளே
வரும்வினை கண்ட மென்றோம் மாமுனி தடுத்துச்
[சொல்வார்.

42. ஜாதகனுடைய அறுபத்தைந்தாம் வயதில் மார்கழி மாதத்தில் சுக்லபட்சம் ஏகாதசியன்று ஜாதகன் மரணமடைவான். பிருகு முனிவர் கூறுகின்றார். ஜாதகனுக்கு இரண்டு வயதுக்குள்ளாகவே கண்டம் ஏற்படும் என்றோம். மாமுனிவர் மறுத்துச் சொல்லுகின்றார்.

கண்டமில்லை என்பதற்குச் சான்று—கிரகநிலை

43. எட்டினுக் குடையோன் பொன்னை னீராறி லிருப்ப
[தாலும்
திட்டமாய்ப் புகரும் புந்தி தனத்தினி லிருப்ப தாலும்
துட்டமாய்ப் பிணிய நேகந் தொடர்ந்துபின் நீங்கு
[மென்றோனுந்
துட்டரைச் சம்ம ரிக்குந் தேவியே தீர்க்க ஜீவி

43. ஆயுள் ஸ்தானமாகிய எட்டாம் வீட்டுக்குரிய குரு பன்னிரண்டாமிடத்தில் இருப்பதாலும், சுக்கிரனும் புதனும் தனஸ்தானமாகிய தன்னியில் இருப்பதாலும் அதிகமாக நோய் ஏற்படும். அது பிறகு

விலகி விடும் என்றேரும். துஷ்டர்களே நிக்ரஹம் செய்யுந் தேவியே! ஜாதகன் நீண்ட ஆயுள் உள்ளவன் என்றேரும்.

ஜாதகனின் மறுபிறவியும், ஜனனகால தசையும்

44. பின்ஜன்மம் வேங்க டத்தில் பிறப்பனுஞ் சைவச் சேயாய்
அன்னவன் ஜனன காலம் அம்புலி தசையி ருப்புச்
சொன்னனே வாண்டு வெட்டுந் திங்களு மைந்து மாகும்
மன்னனும் பிணிய நேக மறைந்தனம் பூர்வ பாகம்.

44. ஜாதகன் மறுபிறவியில் திருவேங்கடத்தில் சைவ குலத்தவனுகப் பிறப்பான் என்றேரும். அவனது ஜனன காலத்தில் சந்திர மகாதசையிலிருப்பு எட்டு வருடங்களும் ஐந்து மாதங்களுமாம். அக்காலத்தில் வியாதி அதிகமாகப் பீடிக்கும். இதுவரை முதல்பாகம் கூறினேம்.

ஜாதகம் 48

1. சிங்கலக் கினம தாகச் சனிபுக ரிரண்டில் தங்க
[1]மங்கலன் குருவு மூன்றில் மால்ராகு பரிதி நாலில்
திங்களு மாற தாகச் சிகிதசம் பலனெவ் வாறு
சங்கையைச் சொல்லு மென்ன சங்கரி கேட்கும் போது;

1. சிம்மம் ஜன்ம விலக்கினமாகவும், சனி சுக்கிரன் இரண்டாமிடமாகிய கன்னியிலும், செவ்வாய் குரு மூன்றாமிடமாகிய துலாத்திலும், புதன், ராகு சூரியன் நான்காமிடமாகிய விருச்சிகத்திலும், சந்திரன் ஆறுமிடமாகிய மகரத்திலும், கேது பத்தாமிடமாகிய விருஷபத்திலும் இருப்பின் பலன் எவ்விதமிருக்கும் என்று கூறுங்கள் என்று சங்கரினின் தேவியாகிய பார்வதிதேவி கேட்கும் போது;

கிரகநிலை

		கேது	
சந்திரன்	இராசி சக்கரம்		லக்கினம்
	புதன் ராகு சூரியன்	செவ்வாய் குரு	சனி சுக்கிரன்

ஜாதகன் வீட்டுநிலை

2. அத்திரி புகலு கின்றார் அதுஜன்ம மாண்பா லாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் வடவாடை கீழ்மேல் வீதி
அத்தியின் கோஷ்ட மேல்பால் அருகரு மருகில் தங்கும்
இத்தகை யடையா ளத்துள் இறங்குவா னிந்தப் பாலன்.

2. அத்திரி முனிவர் பதில் உரைக்கின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு வரிசையில் உள்ளது. மேற்குப் பக்கத்தில் விநாயகர் ஆலயமும், ஜைன ராலயம் ஒன்று அருகிலும் உள்ளன. இவ்வித அடையாளங்களுள்ள வீட்டில் ஜாதகன் பிறப்பான்.

தந்தையின் சகோதரபாவமும் தந்தையின் இயல்புகளும்

3. தந்தையின் துணையா ணென்று சத்தியு மவ்வாறு விருத்தி
நொந்திடு மந்த வாண்பால் நுவலுவோம் பிதாகு ணத்தை
விந்தையாய்ச் செட்டுச் செய்வன் விகடங்கள் கூறு னுகும்
நந்தியா விருத்தி யில்லான் நளினமாய் வார்த்தை கூர்வன்

1. செவ்வாய்

3. ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரி யொருத்தியும் உளர் அந்தச் சகோதரன் இறந்து விடுவான். தந்தை யின் குணங்களைக் கூறுகின்றோம். வர்த்தகங்கள் புரிந்து வருவான். அகடவிகடமாகப் பேசாதவன். எருது, பசு இவைகளில் விருத்தி களில்லாதவன். மிருதுவாகப் பேசுபவன்.

தந்தையின் குணங்களும் முற்பிறவியும்

4. அறமதி லிச்சை யுண்டு வாபத்தைச் சிலர்க்குக் காப்பன்
பொரைசொலா னிளம னத்தன் போற்றினோர்க் குதவி
[செய்வன்
உரைக்கிறோ மிவன்முன் ஜன்ம முறையூருக் கருகி
[லேதான்
தரிதொழில் செயுங்கு லத்தில் தானவ னுதித்தான்
[சொல்லே

4. தருமம் செய்வதில் விருப்பமுடையவன். சிலபேருக்கு ஏற் பட்ட துன்பங்களை நீக்குவான். பொய் பேசாதவன். இளகும் மன முடையவன். தன்னைத் தோத்திரம் செய்தவரை ஆதரித்து வருவான். அவனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். உறையூருக்கு அருகில் உள்ள ஊரில் நெசவுத் தொழில் செய்து வரும் செங்குந்தர் மரபினனுகப் பிறந்தான்.

5. தனமது வுடையோ னுதித் தன்மனை மதலை யுண்டாய்
இனத்துக்கு யஜமா னகி யிவன்வாழ்நாள் வினையைக்
[கேண்மோ
வனிதைமேல் வேறொ ருத்த னறைந்தனன் சிலேடை
[வார்த்தை
தனயனு மதைய றிந்து சங்கையை வினவி யேதான்;

5. செல்வம் உடையவனுகவிருந்து மனைவி மக்களைப் பெற்று தன் பந்து ஜனங்களுக்குத் தலைவனுக வாழ்ந்து வருங் காலத்தில் ஏற் பட்ட தீவினையைக் கேளுங்கள். வேற்றுப் பெண் ஒருத்தி மீது ஒருவன் அடாத பழியைக் கூறினன். ஜாதகனுடைய தந்தையும் அதை விசாரித்து நியாயம் வழங்க விருக்கும் காலையில்;

லஞ்சம்பெற்று நியாயம் சரியாக வழங்காதது

6. பொன்னது வவனுல் பெற்றுப்
பேதைமேல் நிந்தை சொல்லிக்
கன்னியை விலக்க லுற்றோன்
கழறுவாள் மாது சாபம்

துன்மைகள் செய்த பாவி
தோன்றும்பின் ஜன்மந் தன்னில்
என்னைப்போல் துணைவ ரின்றி
எய்திடுங் குலத்தில் குற்றம் ;

6. வேற்று மனிதனிடமிருந்து இலஞ்சமாகச் சிறிது பொருளைப் பெற்றுக்கொண்டு இப்பெண் மீதே தவறுள்ளது என்று தவருகத் தீர்ப்பளித்தான். (அதனால் பெண்ணின் கணவன் அவளை விலக்கிவிட்டான்.) அப்பெண் மனம் வருந்திச் சாபமிட்டாள். எனக்குத் தீங்கு களிழைத்த பாவியே ! உனக்கு ஏற்படும் மறு பிறவியில் என்னைப் போல் சகோதரிகளில்லாமலும் குலத்தில் நிந்தைகள் ஏற்பட்டும் வாழ்ந்து வருவாய் ;

7. இன்னமும் பலவாறு சொன்னள் எய்திற்று வந்தச் சாபம்
மன்னனு மாளு மாகி மறையவன் வரையப் பட்டு
அன்னவ னுதித்தா னென்றேரும் அணுகிடு மாது சாபந்
தன்துணை தோஷ மாகுந் தனியனாய் வாழ்வா
[னென்றேரும்.

7. என்றும் இன்னும் பலவிதமாகவும் சாபமிட்டாள். அந்தச் சாபம் தொடர்ந்தது. ஜாதகனுடைய தந்தையும் அப்பிறவியின் இறுதியில் மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான் என்றேரும். பெண்ணின் சாபத்தால் உடன் பிறந்தவருக்குத் தோஷ மேற்படும். தன்னந்தனியனாக வாழ்ந்து வருவான் என்றேரும்.

ஜாதகன் குணங்கள்

8. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அவனிரு நிறத்த
[னாகும்
உன்னதக் கல்வி கற்பன் ஓராறு முகத்தோன் பத்தி
பின்னமில் லாத தேகி பேச்சதைக் காப்பா னாகும்.

8. இவ்விதம் கூறப்பட்ட குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றேரும். அவன் கருமை கலந்த சிவப்பு நிறமுடையவன். உயர்வான கல்வியைக் கற்பான். ஆறுமுகக் கடவுள்மீது பக்தியுடையவன். ஊனமில்லாத சரீரமுடையவன். சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவன்.

இதுவுமது

9. தந்தையி னுஸ்தி தன்னைத் தானவன் நாஸ்தி செய்வன்
அன்னிய தேச வாசம் அலைகடல் மேலே செல்வன்
உன்னதச் செட்டுச் செய்வன் உள்மனங் கவடு மில்லான்
பொன்சேர்ப்பன் செலவு செய்வன் பொய்மெய்யும்
[புகல்வா னகும்.

9. தன் தந்தையினால் வைக்கப்பட்ட ஆஸ்திகளை அழித்து விடுவான். அன்னிய தேசத்தில் வசிப்பான். கடல்தாண்டிச் செல்லுவான். உயர்ந்த வர்த்தகத்தைப் புரிந்துவருவான். மனத்தினுள் சூதுகளில்லாதவன். நிறைந்த செல்வத்தைச் சேகரிப்பான் நன்றாகச் செலவும் செய்து வருவான். பொய் மெய் இரண்டையும் கலந்து பேசுவான்.

களத்திரபாவமும், கையில்ரேகையும்

10. மாமிக ளிரண்டே யாகு மர்மமுங் கொஞ்ச முண்டு
காமனை விருப்பங் கொள்வன் கரமதில் மாலின் ரேகை
ஆமதைப் பின்னல் செய்வன் யாவர்க்கு நல்லோ னவன்
தீமையை யொருவர்க் கெண்ணன் சேத்திரஞ் சிலர்க்குச்
[செய்வன்.

10. இரு மனைவியரை அடைவான். சிறிது இரகசியமும் உள்ளவன். சிற்றின்பத்தில் விருப்பமுடையவன். கையில் விஷ்ணு ரேகையுடையவன். பிற்காலத்தில் வீடு ஒன்றைக் கட்டுவான். ஒருவருக்கும் தீங்கிழைக்க மனமொப்பாதவன். சிலருக்கு வீட்டைக் கட்டிக் கொடுப்பான்.

ஜாதகன் உடன்பிறந்தவர்

11. பலவணி பங்கள் செய்வன் பகருவோந் துணைவர் தோஷம்
நலமுள கன்னி யொன்று நசித்திடு மத்தி யில்தான்
அலைமீது துரும்பு போலே யலைவனு மத்தி யில்தான்
புலவன்போல் மொழிவா னகும் பிறந்தவில் லடையா
[னகுஞ்

11. பற்பல வர்த்தகங்களைப் புரிந்து வருவான். வருக்குத் தோஷமுண்டு. நன்மைமிக்க சகோதரி யொ
அவளும் இடைக்காலத்தில் இறந்துவிடுவாள். த
துரும்புபோல் மத்திய வயதில் சஞ்சலம் அடை
புலவனைப் போல் பேசுபவன். தான் பிறந்த வீட்

திருமணக் காலம்

12. மங்கள மிருப தாண்டில் மருவிடும் பாரி தானும்
அங்கவ ளுடனே மாள்வள் அவன்சுகங் காணு னுகுஞ்
சங்கையா யலமேல் செல்வன் தனஞ்சேர்ப்பன் செலவு [செய்வன்
நங்கையே நகரஞ் சென்று நாயகி மணமே கொள்வன்.

12. ஜாதகனுக்கு இருபதாம் வயதில் திருமணம் நிகழும். ஆனால் அப்பெண் விரைவில் இறந்துவிடுவாள். திருமண சுகத்தை அடையான். சமுத்திரத்துக்கு அப்பால் செல்வான். பொருளைச் சேர்ப்பான். செலவையும் செய்துவருவான். வேற்று ஊரில் (அயல் நாட்டில்) ஜாதகன் திருமணம் செய்துகொள்ளுவான.

ஜாதகன் இரண்டாம் திருமணக்காலம்

13. எந்தக்கா லத்தில்செய்வான் இயம்புவீர் முனியே நீர்தாம்
மந்திரி தசையந் தத்தி லறைகுரே முப்பா னென்பான்
அந்தவள் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் சிவந்த [மேனி
நிந்தைக ளேற்கா ளாகும் நேர்ந்திடுங் குலத்தில் தோஷம்.

13. எந்தக் காலத்தில் இரண்டாம் திருமணம் நிகழும்? சொல்லுங்கள், முனிவரே! குருமகாதசை முடிவில், ஜாதகனின் முப்பத்தொன்பதாம் வயதில் அஃது ஏற்படும். அந்த மனைவியின் குணத்தைச் சொல்லுகின்றேம். அழகுள்ளவள். சிவந்த உடலுடையவள். வீண் அபவாதத்தை அடையாதவள். ஆனால் அவளுடைய வம்சத்தில் பழியுண்டு.

மனைவியின் குணங்களும் புத்திரதோஷமேற்படக் கிரகநிலையும்

14. வரன்மனம் போலே வாழ்வள் வருவோரை யாத ரிப்பள்
அரிவையும் யோக சாலி யவளுக்குச் சுதர்கள் தோன்றி
மறலியின் பதிக்குச் செல்லு மறைகுரே மந்தச் சங்கை
குருவுமே வைந்தெட் டோனுய் [1]குஜனுமே கூடி மூன்றில் ;

14. தன் கணவனுடைய மனம்போல் நடந்து குடும்பத்தில் வந்து வருவாள். அண்டி வந்தவரை ஆதரித்து வருவாள். [illegible] யவள். அவளுக்குப் புத்திரர்கள் தோன்றி நிலையாமல் [illegible] நந்தைகள் நிலையாமைக்கான காரணத்தைக் கூறு [illegible] ருந்து எட்டாமிடங்களுக்குரியவனுகி செவ்வாயுடன் [illegible] ய கன்னியில் ;

ஜாதகன் மனைவியின் முற்பிறவித்தோஷம்

15. இருப்பதால் தோஷஞ் சொன்னே மிதுவன்றிப்
[பூர்வந் தன்னில்
வரும்வினை யாலே நேரு மறைகிறேரும் பூர்வங் கேளாய்
அருணையில் கர்ண சேயா யணுகியே பெருமை யாகத்
திருமகள் வாழு நாளில் செய்ததோர் வினையைச்
[சொல்வேன்.

15. இருப்பதனல் அவ்விதம் புத்திர தோஷமுண்டு என்று சொல்லுகின்றேரும். இதுவல்லாமல் முற்பிறவியில் செய்த தீவினை யாலும் இப்பிறவியில் அங்ஙனம் ஏற்படும். முற்பிறவியின் விவரங்களைக் கேளுங்கள். திருவண்ணுமலையில் கருணீகர் குலத்தவளாகப் பிறந்து பெருமையுடன் வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கூறுகின்றேரும். கேட்பீராக.

16. தன்னுடைக் கொல்லை தன்னில்
தங்கிற்றுக் கருப்பன் சாமி
முன்னேர்கள் தோத்த ரிப்பார்
முதல்குல தெய்வ மென்று
கன்னிகை தொழாமல் நின்ரூள்
கருமுனி புகலுஞ் சாபம்
என்னையே தொழாத பாவி
உன்னுடைச் சுதரைக் கொல்வேன்.

16. இவளுடைய வீட்டுக் கொல்லையில் ஒரு கருப்பன்சாமி வாழ்ந்து வந்தது. அத்தெய்வத்தை இவனுடைய முன்னேர்கள் முதல் குலதெய்வமாகப் பாவித்துத் தொழுது வந்தனர். ஜாதகனுடைய மனைவியோ அலட்சிய புத்தியுடன் வணங்காமல் இருந்து வந்தாள். அதனல் கோபமடைந்த கருப்பன்சாமி இட்ட சாபத்தைக் கேளுங்கள். என்னை வணங்காத பாவியே! உன்னுடைய புத்திரர்களை அழிப்பேன்.

முனியின் சாபம்

17. மறுஜன்மஞ் சுதர்கள் தோன்றில் மறலியின் பதிக்குச்
[சேர்ப்பேன்
உறைகுவே னுன்பால் யானும் உரைத்துமே முனியுஞ்
[செல்ல
மருவிற்று வந்தச் சாப மங்கைக்கு வந்த ஜன்மம்
பெறுஞ்சுதர் யாவு மற்றுப் பேதையுஞ் சஞ்ச லத்தால்;

17. மறுபிறவியிலும் உனக்குத் தோன்றும் குழந்தைகளைக் கொல்லுவேன். உன்னையடைந்து வாழ்ந்து வருவேன். (பிசாசு பிடித்தது என்றும் சொல்லும் மரபிற்கொப்ப முனி பிடித்து உபத்திரவம் செய்வது) என்று சொல்லி விட்டுச் சென்றது. அந்தச் சாபம் இவளைத் தொடர்ந்தது. அதனால் அப்பிறவியில் பெற்ற குழந்தைகள் அனைத்தையும் இழந்து மனத்தில் சஞ்சலமடைந்து ;

18. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனால் வரையப் பட்டுச்
சீலமில் லாத கங்கைக் குலமதி லுதிப்பா ளாகும்
ஆலம்போல் முனியின் தோஷ மவள்சுதர் தோஷ
[மெய்தும்
பாலன்தன் பூர்வந் தன்னைப் பகருவோ மினிமே லாக.

18. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு நல்லொழுக்கமில்லாததொரு வேளாள குலத்தில் பிறப்பாள் என்றோம். கொடிய விஷம் போல் முனியின் சாபம் ஏற்பட்டுப் புத்திரர்களை இழந்து வாழ்வாள். இனி ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம்.

ஜாதகன் முற்பிறவியும் தீவினையும்

19. சேரநாடு தன்னி லேதான் ஜனித்தனன் வன்னிய
[சேயாய்த்
தாரணி தன்னி லுய்ந்து தான்வாழ்நாள் வினையைக்
[கேண்மோ
காரிழை யொருத்தி பேரில் காணுத வார்த்தை சொல்ல
மாரனு மவளை நீக்க மங்கையும் புகலுஞ் சாபம்.

19. சேர நாட்டில் வன்னிய குலத்தவளாகப் பிறந்து, விவசாயம் செய்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு பெண்மீது தான் பாராத சில அபாண்ட வார்த்தைகளைக் கூறினன். அதனால் அவளுடைய கணவன் அப்பெண்ணை விலக்கி விட்டான். அப்பெண் சாபமிட்டாள்.

பெண்ணுடைய சாபம்

20. பெண்பழி சொன்ன பாவி
பிறக்கும்பின் ஜன்மந் தன்னில்
அண்ணன்தம் பிகளு மின்றி
அவன்தந்தை யாஸ்தி யின்றி
வண்ணமாய் மனைவி யிரண்டு
மருவிடுங் குலத்தில் குற்றந்
திண்ணமாய்ச் சலமேல் செல்வாய்த்
தந்தையின் சேத்திர மின்றி ;

20. பெண்ணை என்மீது இல்லாத பழிகளைச் சுமத்திய பாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் அண்ணன் தம்பிகளில்லாமல் உன்னுடைய தந்தையின் ஆஸ்திகளையும் பெருமல், இரு மனைவியரை யடைந்து, குலத்திலும் நிந்தை யேற்பட்டுக் கடல்கடந்து சென்று வாழ்ந்து வருவாய் என்றும் தந்தையின் ஆஸ்திகளைப் (வீட்டையடையாமல்) பெருமல்;

இதுவுமது

21. தென்காற்றில் பஞ்சு போலே தேசமே லலைவா யென்று
கன்னிகை தெருத்தூள் தூற்றக் கலந்தது வந்தச் சாபம்
மன்னவ னந்தி யத்தில் வறுமைகள் மிகவே கொண்டு
துன்மையாய்க் கால நாடு சென்றுமே பிரமன் லக்கம்;

21. தென்றற் காற்றில் அகப்பட்ட பஞ்சுபோல உலகத்தில் அலைவாய் என்று கூறித் தெருமண்ணை வாரி இறைத்தாள். அந்தச் சாபம் தொடர்ந்தது. ஜாதகனும் தன் கடைசிக் காலத்தில் வெகு வாகத் தரித்திரமடைந்து, மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு;

முற்பிறவித் தீவினைப்பயன்

22. உதிப்பனு மென்று சொல்வோ முறைந்திடு மாது சாபம்
பதிகாணன் சமமாஞ் செல்வன் பாவைமா ரிருவர் நேரும்
சுதர்தோஷந் துணையுந் தோஷஞ் சுயகுலந் தோஷ
[மெய்தும்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

22. இப்பிறவியில் பிறந்தான் என்று சொல்லுகின்றோம். அப் பெண்ணின் சாபம் தொடரும். பிறந்த வீடில்லாதவன். சமமான செல்வத்தை யுடையவன். இரு மனைவியரை அடைவான். புத்திர தோஷமுண்டு. உடன்பிறந்தவரில்லாதவன். தன் குலத்தில் நிந்தை யேற்பட்டிருக்கும். கதியற்றவரைக் காக்கும் தயாநிதியே! கேளுங்கள்.

தோஷங்கள் விலகச் சாந்தி செய்யும் முறை

23. சுதர்தோன்றக் கிரியை யொன்று செப்புவீர் முனியே
[நீர்தாம்
அதிபதி செய்வி னைக்கு வரைகிறேங் கிரியை யொன்று
விதிபோலே கரும சாந்தி வித்தகி தனக்குச் செய்து
சதியிலாச் சத்தி பீஜந் தாமிர ரேக்கில் கீறி;

23. புத்திரர்கள் பிறக்கும்வண்ணம் சாந்தியொன்று கூறுங்கள் முனிவரே! தாங்கள். ஜாதகன் மனைவி செய்த தீவினைகள் தீரச் சாந்தி,

யென்று எழுதுகின்றேம். வேதங்களில் சொல்லப்பட்டபடி கரும சாந்தி யொன்று மனைவிக்குச் செய்து, தீங்குகளை யொழிக்கும் சக்தி யின் பீஜாட்சரத்தைத் தாமிரத்தட்டில் எழுதி ;

இதுவுமது

24. சகஸ்ர ஜபமுஞ் செய்து சத்தியு மணிந்து கொள்ளப்
பகையது விலகி யேதான் பாலர்கள் தோன்றுந் தீர்க்கந்
தகைமையாய்ச் செய்யா னகில் சந்ததி விருத்தி நஷ்டம்
உகமையாய்ச் செய்வா னகில் ஒருவாண்பால் கன்னி
[யிரண்டு ;

24. ஆயிரம் தடவை சக்தியின் பீஜாட்சர மந்திரத்தை ஜபம் செய்து ஜாதகனுடைய மனைவி அத்தகட்டினை அணிந்து வந்தால் தீவினைகள் விலகிப் புத்திர பாக்கியம் ஏற்படும். அலட்சியமாகச் செய்யாவிடில் புத்திரர்கள் தோன்றி இறந்து விடுவர். மனமொப்பிச் செய்து வந்தால் ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் ;

ஜாதகன் செய்த தீவினை தீரச்சாந்தி செய்யும் முறை

25. தீர்க்கமா மென்று சொல்வோஞ் சேயன்செய்
[வினைக்குச் சொல்வோம்
ஏற்கவே தணிகைக் கேதான் இருவரு மைந்து கார்த்தி
ஆர்க்கவே சென்று மேதான் அந்தரா ளேழு பேர்க்குச்
சாக்ரதை யோடு வன்னந் தாம்பூலந் தனமு மீந்து ;

25. நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேம். ஜாதகன் செய்த தீவினை நீங்கச் சாந்தி யொன்று கூறுகின்றேம். புண்ணியத் தலமாகிய திருத்தணிக்குத் தன் மனைவியுடன் சென்று அங்குள்ள முருகப்பிரானைத் தொடர்ந்து ஐந்து கார்த்திகையன்று தரிசித்து அவ்வூரிலேயே (கடைசி தினத்தன்று) அன்றைய தினமே ஏழு பரதேசிகட்கு மிகுந்த சிரத்தையுடன் அமுது படைத்துத் தாம்பூலத்துடன் தட்சிணையும் சேர்த்து அளித்து ;

இதுவுமது

26. தன்னகர் சென்று மேதான் தசதிங்கள் கார்த்தி
[நோன்பு
மன்னவன் கொள்வா னகில் மைந்தரும் விருத்தி
[யென்றேம்
பொன்பூமி நேரு மென்றேம் புகன்றது தப்பா தாகும்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

26. தன்னுடைய சொந்த ஊருக்குத் திரும்பி பத்து மாதங்கள் கார்த்திகை யன்று விரதம் இருப்பானகில் இவர்களுக்குப் புத்திர

விருத்தி ஏற்படும். செல்வம் பூமி இவைகளும் பெருகும். நாங்கள் கூறியவை தவரு. உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜாதகன் யோகபாவம்

27. வந்தவன் யோகச் சேதி வரைகிறேந் தாயே கேளும்
இந்தவன் ஜனனந் தொட்டு ஏழைந்து மூன்று வாண்டுஞ்
சந்திரன் போலே யோகந் தங்கிடுங் குறைவு முண்டு
சிந்தையுங் கலக்க மாகுஞ் சிலசில துன்பம் சேரும்.

27. ஜாதகனுடைய பொது யோகச் செய்திகளைக் குறிக்கின்றேரும். தாயே! கேளுங்கள். ஜாதகன் பிறந்தது முதல் முப்பத்தெட்டாம் வயது வரையில் தேய்பிறைச் சந்திரன்போல் யோகம் குறையும். அதிர்ஷ்டங்கள் குறையும். மனக்கலக்க மேற்படும். பலவிதமான துன்பங்கள் உண்டாகும்.

28. அதற்குமேல் வறுமை காணுன் அம்புலி போலே [யோகம்
நிதிசேரும் பூமி வாய்க்கும் நேர்ந்திடுஞ் சுதர்தம் யோகம்
பதிசெய்தல் மனமுந் தீரம் பாக்கியம் பெருக்க முண்டு
சதியிலாப் பின்பா கத்தில் சாற்றுவோம் விவர மாக.

28. அதற்குப் பிறகு வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். புதையல் கிடைக்கும். விளைநிலங்களை வாங்குவான். புத்திர பாக்கியமும் ஏற்படும். வீட்டைக் கட்டுவான். மனத்திடமுண்டாகும். பாக்கியம் குறைவில்லாமல் பெருகும். மற்றவற்றைச் சந்தேக மறப் பிற்பாகத்தில் விவரமாகக் கூறுகின்றேரும்.

ஜாதகனின் தாயின் குணங்கள்

29. அன்னையின் குணத்தைச் சொல்வேன்
அரிமனை யொப்ப தாகுந்
தன்சொல்லு மடக்க முண்டு
தாமரை மலர்போல் தேகங்
கன்னென மொழியே சொல்வள்
கட்செவி கோப மேற்பள்
மன்னவன் மனத்துக் கேத்தேதாள்
வாததே கத்தா ளாகும்.

29. ஜாதகனுடைய தாயின் குணத்தைக் கூறுகின்றேரும். இலக்குமியைப் போன்ற அழகும் செல்வமுமுடையவள். அடக்கமாகப் பேசுபவள். தாமரைமலர்போல் நளினமான சரீரமுடையவள். இனிய வார்த்தைகளையே பேசுபவள். பாம்பைப்போல் விரைவில் கேட்கும்

சக்தியைப் பெற்றவள். கோபங் கொள்ளுபவள். தன் கணவன் மனத்திற்குகந்தபடி வாழ்வாள். வாயு நோயுள்ள சரீரமுடையவள்.

தாயின் சகோதர பாவமும் முற்பிறவியும்

30. துணைவர்க ளில்லா ளாகுஞ் செப்புவீ ரந்தச் சங்கை
பிணையாக ராகு நாலில் பெற்றதால் வம்சம் நாஸ்தி
கனமுள விவள்தன் பூர்வங் கழறுவோங் கொங்கு
[நாட்டில்
சினமிலாச் செக்கான் வம்சஞ் ஜனித்துமே வாழு நாளில்;

30. உடன்பிறந்தவர்களில்லாதவள். அதற்குரிய காரணத்தைச் சொல்லுங்கள். ஜாதகனுக்கு மாதுர்ஸ்தானமாகிய விருச்சிகத்தில் ராகு இருப்பதால் தாயின் வம்சம் அழிந்துபோம். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கொங்கு நாட்டில் வாணியர் குலத்தில் பிறந்து வாழ்ந்துவருங் காலத்தில் ;

ஓரகத்தியின் சாபம்

31. மைத்துனன் மனைவி பேரில்
வர்ணித்தான் நிந்தை வார்த்தை
பத்தினி மனவெ றுப்பால்
பகர்ந்தசா பத்தைக் கேண்மோ
குத்தமில் லாம லென்மேல்
குறைகளுஞ் சொன்ன பாவி
பற்றுது துணையென் னைப்போல்
பாலர்கள் தோஷ மாயும் ;

31. தன்னுடைய ஓரகத்தியின்மீது (கணவனுடைய சகோதரனின் மனைவி) அடாத பழிகளைச் சொன்னாள். அந்த நற்குணவதியும் பதிவிரதையுமான பெண் மனம் வருந்திக் கூறிய சாபத்தைக் கேளுங்கள். குற்றமில்லாத என்மீது அபாண்டமான நிந்தை மொழிகளைக் கூறிய பாவியே! நீ, என்னைப்போல சகோதரிகள் இல்லாமலும் புத்திரர்களுக்குத் தோஷ மேற்பட்டும் ;

32. உலகினில வாழ்வா யென்ன வுறைந்தது வந்தச் சாபந்
தலைவியு மந்தி யத்தில் தந்தியின் கோஷ்டத் திற்கு
நிலைமையாய்த் தீப மொன்று நேர்ந்துமே மரண மாகித்
தலைநான் கோன் வரையப்பட்டு ஜனித்தன னென்று
[சொல்வோம்.

32. உலகில் வாழ்ந்து வருவாய் என்று கூறினாள். அந்தச் சாபம் தொடர்ந்தது. ஜாதகனுடைய தாயும் தன் கடைசிக் காலத்தில்

விநாயகர் ஆலயத்திற்கு ஒரு தூங்காவிளக்கு (நிலையான தீப கைங்கர்யம்) ஏற்றி வந்தாள். பிறகு மரணமடைந்து மீண்டும் நான்கு தலை களையுடைய பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம்.

விநாயகருக்குத் தீபம் வைத்ததின் பலன்

33. ஆகையா லிச்சென் மத்தில் அம்மாது சாபம் போலே
தோகையுந் தனியாய் வாழ்வள் சுதர்களுந் தோஷ
[மெய்தும்
பாகமாய்ப் பராசர் சொல்வார் பாலக னெவ்வாறு
[விருத்தி
வாகையாய்க் கணேச னுக்கு மருவின தீப புண்ணியம்;

33. ஆகையால் இப்பிறவியில் அப்பெண்ணுடைய சாபத்தைப் போல் தன்னந்தனியளாக வாழ்ந்து வருவாள். புத்திர தோஷமும் ஏற்படும். இவ்விதம் பொருத்தமாகப் பராசர முனிவர் சொல்லும் போது (மற்ற முனிவர்கள் வினவுகின்றனர்). ஜாதகன் மாத்திரம் எவ்விதம் தோன்றி நிலையாக இருப்பான்? சொல்லுங்கள். மனம் விரும்பி விநாயகக்கடவுளுக்குத் தீபம் ஏற்றிய புண்ணியத்தால்;

தாயின் மறுபிறவியும் மரணகாலமும்

34. இந்ததோர் பாலன் தீர்க்க மியம்புவோ மிவள்பின்
[ஜன்மஞ்
செந்திமா மலையி லேதான் ஜனிப்பளாம் வைசியச்
[சேயாய்க்
கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
மன்னனுக் காறைந் தாண்டில் மாதுவு மரிப்ப ளாகும்.

34. இந்தப் புத்திரன் மட்டும் நீண்ட ஆயுள் உள்ளவன் என்றோம். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். செந்தில் மாமலையில் (திருச்செந்தூரில்) வைசிய குலத்தவளாகப் பிறப்பாள் என்றோம். ஜாதகனுடைய கரும காலங்களைக் கூறுங்கள், முனிவரே! தாங்கள். ஜாதகனுடைய முப்பதாம் வயதில் தாய் மரணமடைவாள்.

ஜாதகன் தந்தையின் மரணகாலமும் மறுபிறவியும்

35. இருபது வாண்டு தன்னில் இவன்பிதா கண்ட மெய்தும்
வருஞ்ஜன்மம் விரிஞ்சி தன்னில் வருவனஞ் சைவச்
[சேயாய்ப்
பொருளது பெருக்க மாகிப் புண்ணியன் வாழ்வா னுகுப்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

35. ஜாதகனுடைய இருபதாம் வயதில் தந்தை மரணமடைவான். மறுபிறவியில் விரிஞ்சி நாட்டில் சைவ குலத்தவனுகப் பிறப்பான். செல்வப்பெருக்கமடைந்து வாழ்ந்து வருவான். அரிய வேதங்களின் முடிவில் கூறப்படும் அம்பிகையே! கேளுங்கள்.

ஜாதகன் மரணகாலமும் மறுபிறவியும்

36. அறுபது வேழு வாண்டில் ஆவணி மாதந் தன்னில்
திருமக னுடல மேகுஞ் செப்புவோ மிவன்பின் ஜன்மம்
பிருதிவி தலத்தி லேதான் பிறப்பனுஞ் சவுராஷ்ட்ர
[வம்சம்
நிறையவே குடும்பி யாவன் நிமலியே கேட்டி டாயே.

36. ஜாதகன், அறுபத்தேழாம் வயதில், ஆவணி மாதத்தில் மரணமடைவான். ஜாதகனின் மறுபிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சிபுரத்தில் சௌராஷ்டிர வம்சத்தில் பிறந்து பெரியதொரு குடும்பத்தில் வாழ்ந்து வருவான். தாயே! கேளுங்கள்.

ஜாதகன் ஜனன காலதசை

37. அன்னவன் ஜனன காலம்
அவிட்டநா ளிரண்டாம் பாதந்
துன்சேயின் தசையைந் தாண்டுந்
திங்களு மூன்றே யாகும்
முன்பாகம் விவரஞ் சொல்வோ
முரைக்கிறேம் பின்பால் சேதி
கன்னென மொழியை யொக்குங்
காதலி கேட்டி டாயே.

37. ஜாதகனுடைய ஜனன காலத்தில் அவிட்ட நட்சத்திரத்தில் இரண்டாம் பாதம் நடைபெறும். அப்போது அங்காரக மகா தசையில் செல்ல வேண்டியது ஐந்து ஆண்டுகளும் மூன்று மாதங்களுமாம். இது வரை விவரமாக முதல் பாகத்தைச் சொன்னேம். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுகின்றேம். கரும்பைப்போன்ற இனிய வார்த்தை களைப் பேசும் தேவியே! கேளுங்கள்.

யில் மேற்கு நோக்கியிருக்கிறது. வாயிலையுடையதாய்க் கிழக்கு வரிசையிலுள்ளது அந்நகரம் தேவேந்திரனுடைய நகரத்திற்கு ஒப்பான அழகுள்ளது. கிழக்குப் பக்கத்தில் பெரியதொரு சமுத்திரமுள்ளது. அது பெரிய வியாபார ஸ்தலமாகும்.

3. இன்னமும் பலதே வாசம்
இலகிய கெட்டி யில்லங்
கன்னிகை நான்காஞ் ஜன்மங்
கலப்பளா மிவளின் யோகம்
அன்னையின் தந்தை யோகம்
அவள்வரன் புத்திர யோகம்
மூன்பின்ஜன் மங்கள் யாவு
முரைக்கிறே மிந்நூல் தன்னில்.

3. இன்னமும் பற்பல தெய்வங்கள் கோயில் கொண்டுள்ள அவ்வூரில் ஒரு கெட்டியான வீட்டில் ஜாதகி தன் தந்தைக்கு நான்காம் குழந்தையாகப் பிறப்பாள். இவளுடைய யோகம் தாய் தந்தை கணவன் இவர்களுடைய யோகம் புத்திர பாக்கியம் முற்பிறவி மறுபிறவி ஆகிய வனைத்தையும்பற்றி இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேம்.

இனி வரும் ஐந்து பாடல்களில் ஜாதகியின் தந்தையின் குணங்கள் விவரிக்கப்படுகின்றன.

4. தந்தையின் தூணையாண் மூன்று சாற்றுவோம் தீர்க்க
[மாகப்
பிந்திய தூணைவ ராகப் பேசுவேம் தாயே யாங்கள்
அந்தவர் சேதி யாவும் அறிவிப்போம் பின்பா கத்தில்
கந்தனை யின்ற மாதே கழறுவோம் பிதாகு ணத்தை.

4. ஜாதகியின் தந்தைக்குச் சகோதரர் மூவர். நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேம். அவர்களும் இவனுக்குப் பின் பிறந்தவர்கள். என்று கூறுகின்றேம். அவர்களின் விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். முருகப்பிரானைப்பெற்ற தேவியே! தாயே! இனி ஜாதகியின் தந்தையின் குணத்தைக் கூறுகின்றேம்.

5. புத்திமான் பொறுமை சாலி புயபல முடைய ஞகுஞ்
சித்தமே கரப்பு மில்லான் செய்ந்நன்றி மறவா ஞகுஞ்
சுத்தம்போல் வெளிம யக்கன் சோம்பிடான் காரி யத்தில்
பத்தனிக் கிஷ்ட ஞகும் பிறப்பனும் வெளியூர் தன்னில்.

ஜாதகம் 49

1. பிறைபுகர் பரிதி புந்தி பொன்னவன் பணியும் [1]கண்டில்
தரைமகன் மேரு வாகச் சிகிமானில் காரி மீனம்
அரியது ஜன்ம மாக ஆயில்ய மிரண்டாம் பாதம்
உரையுமே பலனை யென்று உத்தமி கேட்கும் போது;

1. சந்திரன், சுக்கிரன், சூரியன், புதன், குரு, ராகு கடகத்திலும், செவ்வாய் தனுசிலும் கேது மகரத்திலும், சனி மீனத்திலுமாக இருந்து ஜன்ம இலக்கினம் சிம்ம மாகி, ஆயில்ய நட்சத் திரம் இரண்டாம் பாதத் தில் பிறக்கும் ஜாதகருக் குப் பலனைக் கூறுங்கள் எனப் பார்வதி கேட்கும் போது;

கிரகநிலை

சனி			
	இராசி சக்கரம்		சந்திரன் சுக்கிரன் சூரியன் புதன் குரு ராகு
கேது			லக்கினம்
செவ்வாய்			

ஜாதகியின் வீட்டுநிலை

2. குறுமுனி புகலு கின்றார் குறித்தது பெண்பால் ஜன்மம்
வருமில்லம் வடதென் வீதி வாசலு மேல்பால் நோக்கம்
உறையில்லம் வாடை யாகும் [2]உம்பர்கோன் நகர
[மொப்பாம்
பெருங்கடல் கீழ்ப்பா லாகுந் பலமுள செட்டு வோங்கும்.

2. அகத்திய முனிவர் சொல்லுகின்றார். இஃது ஓர் பெண் குழந்தையின் ஜாதகம். இவள் பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதி

---

1. கடகவிராசி
2. தேவேந்திரன்

5. புத்திசாலி. பொறுமையுடையவன். தோள் வலியுள்ளவன். (பராக்கிரமசாலி). மனத்தில் சூது வஞ்சனைகளில்லாதவன். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். சுத்தமுள்ளவன் என்று மற்றவர் நினைக்கும்படி நடந்துகொள்ளுவான். காரியங்களைச் சோம்பலில்லாமல் செய்து முடிப்பவன். தன் மனைவிக்குப் பிரியமானவன். வெளியூரில் பிறந்தவன் என்றேரும்.

6. தந்தையி னில்லம் வாழான் ஜகராஜர் தன்னு லுய்வன்
பந்தினர் மதிக்க வாழ்வன் பரவுப காரு லுகும்
நிந்தைகள் சிலவே யேற்பன் நேமியில் நல்லோ னுவன்
முந்திநாள் யோக மில்லான் முனிவுண்டு வுடனே தாழ்வு.

6. தன் தந்தையினுடைய வீட்டில் வசித்து வராதவன். அரசாங்க உத்தியோகத்தை ஏற்று வாழ்வான். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். பிறருக்கு உபகாரங்களைச் செய்பவன். சில பழிவார்த்தைகளையும் அடைவான். உலகில் நல்லவன் என்ற பெயரை அடைவான். பிதுரார்ஜிதமான சொத்தில்லாதவன். முன் கோபி. விரைவில் தாழ்வடைவான்.

7. நடையது கடின மாகும் நாதனர் பக்தி பூண்பன்
தடபுடல் செய்கை யுண்டு சந்தேக மனத்த லுகும்
விடவாக்கன் பித்த தேகி விஷ புலம் பின்னல் சேர்ப்பன்
துடியிடை மார்கள் மோகன் துணைகன்னி மார்கள்
[காணன்.

7. வேகமாக நடப்பவன். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன். ஆடம்பரச் செய்கைகள் உள்ளவன். சந்தேகமுள்ள மனப்பான்மை யுடையவன். பேசுவதில் கொடுமையுள்ளவன். பித்தசரீரி. பிற்காலத்தில் விஷ நிலங்களைச் சேர்ப்பவன். மெல்லிய இடைகளையுடைய பெண்களின்மீது மையல் கொள்ளுபவன். உடன் பிறந்த சகோதரிகளில்லாதவன்.

பத்மரேகை

8. அரசரால் தொழிலு மேற்பன் ஆபத்தைச் சிலர்க்குக்
[காப்பன்
முருகர்தம் பக்தி கொள்வன் முண்டக ரேகை யுண்டு
உறன்முறைக் கிணக்கஞ் சொல்லான் உரைத்தவிக்
[குணத்தா னுக்குத்
திருமக ளுதிப்பா ளாகுஞ் செப்புவோ மிவள்கு ணத்தை.

8. அரசாங்கத் தொழிலைப் பெற்று வாழ்வான். சிலருக்கு ஆபத்தைத் தவிர்ப்பான். முருகப்பிரான் மீது பக்தியுள்ளவன்.

கையில் பத்மரேகை யுள்ளவன். தன் சுற்றத்தாருக்கு அடங்கியவனல்லன். இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களையுடையவனுக்கு இந்த ஜாதகி பிறப்பாள் என்றும். இவளுடைய குணத்தைக் கூறுகின்றும்.

ஜாதகியின் குணங்கள்

9. கல்விமான் கடவுள் பக்தி கண்முகம் வசிய முண்டு
இல்லையென் றுரைக்க மாட்டாள் இடர்செய்யாள் யாவ
[ருக்கும்
நல்லவ ளாகி வாழ்வள் நாயகி யிருசி வப்பள்
புல்லிய புத்தி யில்லாள் புயபல முடைய ளாகும்.

9. கல்வி யறிவுடையவள். தெய்வ பக்தியுள்ளவள். முகம் கண்கள் இவைகள் வசீகரமாக உள்ளவை. யாசித்தவர்கட்கு இல்லை யென்று கூறுதவள். பிறருக்குத் தீங்கிழையாதவள். கருமைகலந்த செம்மை நிறமுடையவள். அற்பபுத்தி யில்லாதவள். புயபலமுடையவள்.

இதுவுமது

10. பால்பாக்கிய முடைய ளாகும் பசித்தோர்க்குத் தாக
[மீவள்
சீலமுங் கொஞ்ச முண்டு ஜனவுப காரி யாகுங்
காலத்தை யறிந்து ரைப்பள் கணவனுக் கினிய ளாகும்
மால்மனை யொப்ப தாகு மரிபோலக் கோப மேற்பள்.

10. முற்பிறவியில் செய்த பாக்கியமுள்ளவள். பசியுடன் வந்தவர்கட்கு அன்னபானதிகளை அளிப்பவள். நல்லொழுக்க முடையவள். ஜனங்களுக்கு உபகாரி. வருங்காலத்தைப்பற்றி முன் கூட்டித் தெரிந்து சொல்லக்கூடியவள். தன் கணவனுக்கும் பிரியமானவள். திருமாலுடைய மனைவியாகிய இலக்குமியைப்போன்ற செல்வி. சிங்கம்போல் கோபம் கொள்ளுபவள்.

ஜாதகியின் சகோதரபாவமும் கிரகநிலையும்

11. இன்னவள் துணைவர் தம்மை யியம்பவே பலமு றுது
என்னகா ரணத்தி னலே யியம்பீனீ ரந்தச் சங்கை
பொன்னவன் பணியும் வெள்ளி புரவியோன் விரையம்
[புக்கத்
தன்பாலர் மூன்னோர் நஷ்டஞ் சங்கரி கேட்டி டாயே.

11. இவளுடைய சகோதரபாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றும். ண்டு என்று கூறக் கிரகபலமில்லை. என்ன காரணத்தால் தாங்கள் சந்தேஹம் கூறுகிறீர்கள்? அவற்றைச் சொல்லுங்கள், என, குரு க்கரன், சூரியன் இவர்கள் விரயஸ்தானத்தில் இருப்பதால்

ஜாதகிக்கு முன் பிறந்தவர்கள் நிலையார். சங்காளின் தேவியே! கேளுங்கள்.

ஜாதகிக்குப்பின் பிறந்தவரும் தாயின் குணங்களும்

12. மாதுபின் தூணைவர் தம்மை யறைகிறே மாண்பா
[லிரண்டு
காதலி யொன்றே தீர்க்கங் கழறுவோம் பாவைக்
[கேதான்
சீதள வதனம் போன்ற செல்வியின் அன்னை சேதி
ஒதுவே னிருநி றத்தாள் உயர்வான புத்தி யேற்பள்.

12. ஜாதகியின் இளைய சகோதரபாவத்தை இனிச் சொல்லுகின்றோம். இரு சகோதரரும் ஒரு சகோதரியும் பிறந்து நீண்ட ஆயுள் சாபவர்கள் என்றேும். குளிர்ந்த முகத்தையுடைய ஜாதகியின் தாயின் குணத்தினை இனிக் கூறுகின்றேும். கருமை கலந்த செம்மை நிறமுடையவள்; மேன்மையான புத்தி யுடையவள்.

இதுவுமது

13. அடிசி லுக்கினிய ளாகும் அடாவடி தன்னில் செல்லாள்
நடைநன்மை தேவ பக்தி நளினமாய் வார்த்தை யுண்டு
அடைமொழி யதிகங் கூறு ளடைந்தோரை யாத ரிப்பள்
மடையரை யுறவு கொள்ளாள் மாநிலம் நல்லோ ளாவள்.

13. உருசியாக சமைப்பதில் வல்லவள். அடாவடியாகப் பேசாதவள். நன்னடத்தை யுடையவள். தெய்வபக்தியுள்ளவள். அழகாகப் பேசுபவள். அடைமொழிகளுடன் பேசாதவள். தன்னையண்டி வந்தவரை ஆதரித்து வருவாள். முட்டாள்களுடன் உறவாடாதவள். உலகில் நல்லவளாக வாழ்ந்து வருவாள்.

ஜாதகியின் தாயின் முற்பிறவி

14. வரன்மனம் போலே வாழ்வாள் மருவிடும் பித்தச் சூடு
அரிவைக்குத் தூணையா னிரண்டு அம்பிகை மார்கள்
[மூன்று
திரமாகு மென்று சொல்வோஞ் செப்புவோம் பின்பால்
[சேதி
உரைக்கிறே மிவளின் பூர்வம் உத்தமி கேட்டி டாயே.

14. தன்னுடைய கணவனுடைய மனம்போல் வாழ்ந்துவருவாள். பித்தச்சூட்டு நோயுள்ளவள். தாயின் உடன் பிறந்தவர்களில் சகோதரரிருவரும் சகோதரிகள் மூவருமாவர். அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும் சொல்லுகின்றோம். அவர்களுடைய விவரத்தைப்

பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். தாயின் முற்பிறவியைக் கூறுகின்றேம். தாயே! கேளுங்கள்.

15. தென்திசைச் சேர நாட்டில்
ஜனித்தனள் வைசியச் சேயாய்ப்
பொன்பொரு ளுடைய ளாகிப்
புதல்வர்க ளதிக முண்டாய்
அன்னவள் வாழு நாளில்
அணுகின வினையைக் கேண்மோ
துன்முனி கொல்லை தன்னில்
சூழ்ந்தது வெகுநா ளாக.

15. தெற்குத் திசையிலுள்ள சேர நாட்டில் வைசிய குலத்தவளாகப் பிறந்தாள் என்றேம். செல்வம் பொன் இவைகளை யடைந்து புத்திரபாக்கியத்தைப் பெற்று வாழ்ந்து வரும் காலத்தில ஏற்பட்ட தீவினையைக் கூறுகின்றேம், கேட்பீராக. ஒரு முனீச்வரன் இவளுடைய வீட்டுக் கொல்லையில் வெகுநாட்களாக வசித்து வந்தது.

குலதெய்வத்தைத் தொழாதது—முனியின் சாபம்

16. முன்னோர்கள் தோத்தரிப்பார் முதற்குல தெய்வ மென்று
கன்னியுந் தொழாது நின்றாள் கருமுனி புகலுஞ் சாபம்
என்னையே தொழாத பாவி யின்றதோர் சுதரைக்
[கொல்வேன்
பின்வருஞ் ஜன்மந் தன்னில் புதல்வரை யாவுங்
[கொள்வேன் ;

16. தன் குலதெய்வமாக இவளுடைய முன்னோர்கள் அதனைப் போற்றி வந்தனர். ஆனல் ஜாதகியின் தாயோ அம்முனியைப் போற்றாமலிருந்தாள். அந்தக் கருப்பண்ணன்சாமி கூறிய சாபத்தைக் கேளுங்கள். என்னைத் தொழாத பாவியே! உனக்குப் பிறக்கும் குழந்தைகளைக் கொல்லுவேன். மறுபிறவியிலும் உன்னுடைய குழந்தைகள் எல்லாவற்றையும் அழிப்பேன் ;

ஏழைக்குழந்தைக்கு அன்னமளிக்க மறுத்தது

17. சொல்லியே வேறு சாகை சார்ந்தது முனியு மேதான்
புல்கிற்று வந்தச் சாபம் புகலுவோம் வேறு வொன்றும்
வல்லியா மேழை மாது மைந்தர்க்குச் சாதம் வேண்ட
அல்லலாய் வார்த்தை சொல்லி அணுகாதே சாத
[மென்ன.

17. என்று கூறி அம்முனி வேறு இடத்துக்குச் சென்றது. அந்தச் சாபம் இவளைத் தொடர்ந்தது. இது தவிர வேறு தீவினை ஒன்றையும் கூறுகின்றோம். ஏழைப்பெண் ஒருத்தி தன் குழந்தையின் பசிக்குச் சாதம் கொடுக்க இவளை யாசித்தாள். ஜாதகியின் தாய் அதற்குப் பணிவான பதிலை அளிக்காமல் கோபித்து இல்லையென்று கூறி விரட்டி விட்டாள்.

18. வேல்விழி யேழை மாது விளம்பிய சாபங் கேண்மோ
பாலர்சோ றீயாப் பாவி பெருகாவே சுதரு னக்குச்
சாலவே பின்ஜன் மத்தில் சந்ததி வுதிக்கில் தீதாம்
ஏலவே சொல்லி வேறு வில்லமுஞ் சென்ரு ளென்றோம்.

18. வேலைப்போன்ற கூரிய விழிகளையுடைய ஏழைப்பெண் கூறிய சாபத்தைக் கேட்பீராக. குழந்தையின் பசிக்கு அன்னமளிக்காத பாவியே! உனக்குப் புத்திரர் தோன்றார். இனி வரும் மறுபிறவியிலும் தோன்றும் புத்திரர்கட்குத் தோஷமுண்டாகும் என்று கூறி வேறு வீட்டுக்குச் சென்றாள் என்று சொன்னோம்.

19. மங்கைக்கு வச்சென் மத்தில்
மைந்தர்கள் தோஷ மெய்திச்
சங்கையா மனத்த ளாகிச்
சண்டன்தன் பதிக்குச் சென்று
புங்கவன் வரையப் பட்டுப்
பிறந்தவ ளென்று சொல்வோந்
தங்கிடு முன்னூழ்த் தோஷஞ்
சந்ததி வுதிக்கில் தீதாம்.

19. அதனால் அப்பிறவியிலேயே புத்திரர்கட்குத் தோஷ மேற்பட்டுச் சஞ்சலமடைந்த மனமுள்ளவளாகி மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றோம். முற்பிறவியின் தோஷம் தொடரும். அதனால் பிறக்கும் குழந்தைகட்குத் தீங்குண்டாகும்.

புத்திரதோஷம் நீங்கச் சாந்தி

20. அந்ததோர் வினைகள் தீர வாருயிர்க் கிரியை யொன்று
விந்தையாய்க் கரும சாந்தி வித்தகி தனக்குச் செய்து
அந்தரி பீஜந் தன்னை யறுகோணந் தனில மைத்துச்
சுந்தரி யணிந்து கொண்டு சுக்கிர வார நோன்பை;

20. அந்தத் தீவினைகள் தீரச் சாந்தி யொன்று கூறுகின்றோம். கருமசாந்தி யொன்று ஜாதகியின் தாய்க்குச் செய்து சக்தியின் பீஜாட்

சரத்தை ஆறு கோணங்களையுடைய தகட்டில் எழுதி இவள் அணிந்து கொண்டு வெள்ளிக்கிழமை தோறும் நோன்பு ;

21. மாதுவுங் கொள்வா ளாகில் வரும்வினை யாவு நீங்கி
மேதினில் சுதர்கள் தோன்றி விருத்தியாம் பாவைக்
[கேதான்
தீதென்று செய்யா ளாகில் ஜனித்தசேய் நஷ்ட மெய்தும்
ஓதின கரும சாந்தி யுரைப்பீர்கள் விவர மாக.

21. இருப்பாளாகில் இவள் செய்த தீவினைகளின் வெம்மை நீங்கிப் புத்திர பாக்கியம் ஏற்படும். அலட்சியமாகச் செய்யாவிடில் தோன்றும் குழந்தைகள்நிலையாமல் இறந்துபோம் கருமசாந்தி செய்யும் விதத்தை விவரமாகக் கூறுங்கள்.

தாயின் மறுபிறவி

22. ஐந்தாமாங் காண்டங் தன்னி லறிவிப்போ முனியே
[கேளும்
பிந்தின ஜன்மஞ் சொல்வேன் பெருமலை தன்னி லேதான்
முந்தின தனவா னுக்கு வுதிப்பளாங் கங்கை சேயாய்ச்
சந்திர வதனம் போன்ற சங்கரி கேட்டி டாயே.

22. ஐந்தாம் காண்டத்தில் கூறுகின்றோம். முனிவரே ! கேளுங்கள். தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம். பெரிய மலையாகிய திருப்பதியில் வேளாளர் குலத்தவனை பெரியதொரு தனவானுக்கு பெண்ணாகப் பிறப்பாள். மதியன்ன அழகிய முகத்தையுடையவளான சங்கரியே ! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

23. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் சட்டநா தீசர் நாட்டில்
முந்தின வேளாள னுக்கு வுதித்துமே கிருஷி செய்து
அந்தவன் வாழு நாளி லணுகின வினையைக் கேண்மோ
நிந்தைக ளோர்பெண் பேரில் நிருமித்தா னென்று
[சொல்வோம்.

23. ஜாதகியின் தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். சட்டநாதீச்வரர் வாழ்ந்துவரும் சீகாழியில் பெரியதொரு வேளாளனுக்குப் புத்திரனாகத் தோன்றி, விவசாயம் செய்து வாழ்ந்துவரும் காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு பெண்மீது அபாண்டமாகப் பழியான வார்த்தைகளைக் கூறினன்.

24. நிந்தைகள் சொன்ன பாவி நேரும்பின் ஜன்மந் தன்னில்
தந்தையி லஸ்தி யின்றிச் சந்ததி தோஷ மாயும்
வந்திடுந் துணைப்பெண் ணின்றி வளவினில் வாழா தாயும்
இந்தவா று சொல்லிச் சென்ரு ளெய்திற்று வந்தச் சாபம்.

24. என்மீது இல்லாத பழி வார்த்தைகளைக் கூறிய பாவியே! இனி ஏற்படும் பிறவியில் உன் தந்தையின் ஆஸ்தியை நீ அடையாமலும் புத்திரதோஷமடைந்தும், சகோதரி இல்லாமலும், பிறந்த வீட்டில் வாழ்ந்து வராமலும் இருப்பாய் என்று கூறிவிட்டுச் சென்றாள். அந்தச் சாபம் இவனைத் தொடர்ந்தது.

25. மாரனு மரண மாகி மறையவன் வரையப் பட்டு
நாரியாஞ் சலகு லத்தில் நல்குவா னென்று சொல்வோங்
காரிழை சாபத் தாலே காணது துணைப்பெண் ணுந்தான்
வேறூரில் வாச மெய்தும் வேந்தனுல் தொழிலு மேற்பன்.

25. ஜாதகியின் தந்தை அப்பிறவியில் அச்சாபத்தைப் பெற்றுப் பிறகு மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப் பிறவியில் கங்கை குலமாகிய வேளாள குலத்தில் பிறப்பான் என்று சொல்லுகின்றோம். பெண்ணுடைய சாபத்தால் சகோதரியில்லாமலும் வெற்றூரில் வாழ்ந்தும் வருவான் என்றோம். அரசாங்கத்தில் தொழிலே ஏற்று உய்வான்.

தந்தையின் மறுபிறவி

26. அன்னமுங் குறைவு றுதான் அரசரால் மரண மட்டும்
இன்னவன் ஜீவிப் பானு மியம்புவோ மிவன்பின் ஜன்மங்
கன்னியா குமரி தன்னில் கலப்பனுஞ் சத்திரியச் சேயாய்
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

26. சாப்பாட்டிற்குக் குறைவில்லாதவன். ஜாதகியின் தந்தை தன் மரணகாலம் வரையில் அரசாங்க உத்தியோகத்தை ஏற்று ஜீவித்து வருவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். கன்னியா குமரியில் க்ஷத்திரிய குலத்தவனுகப் பிறப்பான். உயர்ந்த யானை முகத்தையுடைய விநாயகனைப்பெற்ற தேவியே! கேளுங்கள்.

தாய், தந்தையரின் மரணகாலம்

27. ஆறூறு வாண்டு தன்னில் அவள்தந்தை கண்ட மெய்துந்
தீரமாய் நாற்பா னேழில் செப்புவோ மன்னை கண்டங்
கூறுவோம் பதின்மூன் றுண்டில் குழவியின் தந்தை
[யன்னை
சேருவாள் கால நாடு செல்வதி கேட்டி டாயே.

27. ஜாதகியின் முப்பத்தாரும் வயதில் தந்தை மரணமடைவான். நாற்பத்தேழாம் வயதில் தாய் இறந்து விடுவாள். ஜாதகியின் பதின்மூன்றும் வயதில் அவளுடைய தந்தையின் தாய் மரணமடைவாள் என்றோம். செல்வியே! கேளுங்கள்.

திருமணக்காலம்

28. மங்கையின் மணத்தின் காலம் வரைகிறேம் பதினை
[லாண்டில்
தங்கிடும் மேல்பால் மாரன் தாயின்தன் வர்க்கந் தன்னில்
அங்கவன் குணத்தைச் சொல்வே னரிமக னெப்ப
[தாகுஞ்
சங்கையா மனத்த னுகுந் தரணியில் செட்டுச் செய்வன்.

28. ஜாதகியின் திருமணக்காலத்தைக் குறிக்கின்றேம். பதினான்காம் வயதில் தன் வீட்டுக்கு மேற்குப் பக்கத்திலிருந்து, தாயின் வர்க்கத்திலிருந்து கணவன் வருவான் என்றேம். அவனுடைய குணத்தைக் கூறுகின்றேம். மன்மதனைப் போன்ற அழகன். சந்தேகப் படும் மனமுள்ளவன். உலகில் வர்த்தகத்தைப் புரிந்து வருவான்.

கணவனின் குணங்கள்

29. தனமது பெருக்க முண்டு சகலர்க்கு நல்லோ னுவன்
இனமது மதிக்க வாழ்வன் இடரென்றோர்க் குதவி
[செய்வன்
நினைவதை முடிக்க வல்லன் நீள்நிலஞ் சேர்ப்பா னுகுங்
கனமுள குடும்ப மேற்பன் காதலன் தீர்க்க ஜீவி.

29. செல்வப் பெருக்கமுள்ளவன். எல்லோருக்கும் நல்லவனுவான். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். துன்பமடைந்தவர்கட்கு உபகாரி. எண்ணிய காரியங்களை முடிக்கும் ஆற்றல் உள்ளவன். நீண்ட விலை நிலங்களைச் சேர்ப்பான். பெரிய குடும்பத்தை நிர்வகிப்பான். நீண்ட ஆயுள் உள்ளவன்.

ஜாதகியின் புத்திரபாவம்

30. சுதர்களு மாண்பா லிரண்டு தோகையு மூன்று வென்றோம்
பதராகு முதலி ரண்டும் பகர்ந்தன வைந்துந் தீர்க்கம்
அதிபதி பூர்வஞ் சொல்வேன் மால்மலை தன்னி லேதான்
நிதிமிக வுடையா னுக்கு நேர்ந்தன னிரட்டி வம்சம்.

30. இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் தோன்றுவர் என்றேம். முதலில் தோன்றும் புத்திரர் இருவர் நிலையில்லாதவர் என்றேம். நாங்கள் கூறிய ஐந்து குழந்தைகளும் நீண்ட ஆயுள் உள்ளவை என்றேம். ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். திருமால் குடிகொண்டுள்ள திருமலையில் ரெட்டியார் மரபில் சல்வவானை ஒருவனுக்குப் புத்திரியாக இவள் பிறந்தாள்.

31. சுகமுள குடும்பி யாகிச் சுதர்களு மதிக முண்டாய்ப்
பகையான கால நாடு பரவினுள் வரன் முன் ஞக
ஜகபதி வரையப் பட்டு ஜனித்தன ளென்று சொல்வோம்
மிகுதவம் புரியு மெங்கள் வித்தகி கேட்டி டாயே.

31. சௌக்கியமுள்ள குடும்பியாகிப் புத்திர பாக்கியம் பெற்று வாழ்ந்து தன் கணவனுக்கு முன்பாகத் தீதான மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றோம். மிகுந்த தவங்கள் இயற்றும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகியின் மரணகாலம்

32. அன்பது வேழு வாண்டில் ஆடிமா தத்தி லேதான்
இன்னவ ளுடல மேகும் இயம்புவார் பராசர் தாமுங்
கன்னிக்கு மூன்றுண் டுக்குள் கழறுவோ மார கங்கள்
என்னகா ரணங்கள் சொல்வீர் ஈன்றதாய் செய்பா
[வத்தால்.

32. ஜாதகி, தனது ஐம்பத்தேழாம் வயதில் ஆடிமாதத்தில் மரணமடைவாள். பராசர முனிவர் சொல்லுகின்றார். ஜாதகிக்கு மூன்றும் வயதுக்குள்ளாகவே மரண மேற்படும். என்ன காரணத்தால் அவ்விதம் நேரிடும்? சொல்வீராக. இவளுடைய தாய் செய்த தீவினையால் அவ்வண்ணம் நேரும் என்றோம்.

ஜாதகியின் மறுபிறவி

33. முன்சொன்ன கரும சாந்தி வித்தகி தனக்குச் செய்யில்
இன்னவள் தீர்க்க ஜீவி யியம்புவோ மிவள்பின் ஜன்மங்
கன்னியா குமரி தன்னில் கலப்பளாம் விச்வச் சேயாய்
உன்னத வரனைப் பெற்ற வுத்தமி கேட்டி டாயே.

33. நாங்கள் கூறியபடி ஜாதகியின் தாய் கருமசாந்தி செய்தால் ஜாதகிக்கு நீண்ட ஆயுள் உண்டு என்றோம். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். கன்னியா குமரியில் விச்வகர்மாவின் குலத்தில் (குயவர் மரபில்) பிறப்பாள் என்றோம். உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜனனகால தசை

34. மாதுவின் ஜனன கால மாயில்ய மிரண்டாம் பாதம்
ஓதுவேன் புதனி ருப்பு உயர்பதி னென்று வாண்டும்
போதவே திங்க ளிரண்டும் புகன்றனம் பூர்வ பாகம்
நீதியாய்த் தவங்கள் செய்யு நிமலியே கேட்டி டாயே.

34. ஜாதகியின் ஜனன காலத்தில் ஆயில்ய நக்ஷத்திரம் இரண்டாம்பாதமாகும். புதமகாதசையிலிருப்பு பதினெரு வருடங்களும் இருமாதங்களும் மீதமாகும். இதுவரை முதல்பாகத்தைச் சொன்னோம். நேர்மையுடன் தவங்களை இயற்றும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 50

1. மதிபுதன் சனிபொன் மானில் மங்கலன் ராகு கன்னி
உதயனும் புகரு மேரு உற்றிட கேது மீனம்
இதுவிதக் கோளு நின்று விலக்கினஞ் சிம்ம மாக
அதுபலன் புகலு மென்று அம்பிகை கேட்க லுற்றாள்.

1. சந்திரன் புதன் சனி குரு மகரத்திலும், செவ்வாய் ராகு கன்னியிலும், சூரியன் சுக்கிரன் தனுசிலும், கேது மீனத்திலுமாக நவக்கிரகங்கள் நின்று லக்கினம் சிம்மமாலை ஏற்படும் பலனைச் சொல் லுங்கள் என்று பார்வதி தேவி கேட்கலானார்.

கிரகநிலை

கேது			
	இராசி சக்கரம்		
சந்திரன் புதன் சனி குரு			லக்கினம்
சுக்கிரன் சூரியன்			செவ்வாய் ராகு

ஜாதகனது வீட்டுநிலை

2. அத்திரி புகலு கின்றார் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் மேல்வாடை வடதென் வீதி
சித்தசன் கணேசன் தென்பால் திருமாலின் கோஷ்ட
[மேற்கில்
சத்திபாஞ் சாலி யுத்திரஞ் சாற்றிய வடையா ளத்துள்;

2. அத்திரி முனிவர் கூறுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகம். இவனுடைய பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றோம். அது தெற்கு வடக்கான தெருவில் மேற்கு வரிசையில் உள்ளது. இவன் பிறந்த வீட்டுக்குத் தெற்குப் பக்கத்தில் விநாயகக் கடவுள் கோயில் கொண்டுள்ளார். திருமாலின் ஆலயமொன்று மேற்கிலுள்ளது. திரௌபதியம்மன் கோவில் வடக்குத் திக்கிலுள்ளது. இவ்விதம் சொல்லிய அடையாளங்களுள்ள வீட்டில்;

3. உதிப்பனு மிரண்டாஞ் ஜன்ம முரைக்கிறே மிவனின்
[யோகம்
மதிநுத லன்னை யோக மனைவிமைந் தரின்யோ கங்கள்
அதிபர்கள் முன்பின் ஜன்ம மறைகிறே மிந்நூல்
[தன்னில்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

3. ஜாதகன் தன் தந்தைக்கு இரண்டாம் புத்திரனுகப் பிறப் பான். இவனுடைய யோகத்தையும், (தந்தை) அழகிய புருவங்களை யுடைய தாய், மனைவி மக்கள் இவர்களுடைய யோகங்களையும் இவர் களின் முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேம். கதியற்றவரை யாதரிக்கும் தேவியே! கேளுங்கள்.

தந்தையின் சகோதரபாவம்

4. தந்தையின் தூணயா ணிரண்டு சாற்றுவோந் தீர்க்க மாக
அந்தவர் சேதி பின்பால் அறிவிப்போந் தாயே யாங்கள்
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மிருசி வப்பன்
சிந்தையு நல்ல தாகுஞ் ஜனவுப காரி யாகும்.

4. ஜாதகனுடைய தந்தையின் சகோதரர் இருவர் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேம். அவருடைய செய்திகளைப் பிற்பாகத்தில் கூறுகின்றேம். தாயே! ஜாதகனுடைய தந்தையின் செய்திகளை இனிச் சொல்லுகின்றேம். கருமை கலந்த சிவந்த நிறமுடையவன். நல்ல மனமுடையவன். ஜனங்களுக்கு உதவி செய்பவன்.

இனிவரும் நான்கு பாடல்களில் ஜாதகனுடைய தந்தையின் குணங்கள் கூறப்படுகின்றன

5. பலவித மாதர் மோகன் பகலில்சம் போகஞ் செய்வன்
தலம்விடும் வெளியூர் வாசந் தாதையார்ச் சித்தத்தை
[வேண்டான்
புலவனு மூகை சாலி புரவலர்க் கிவன்சொல் மேன்மை
சலமதை விருப்பங் கொள்வள் தங்கிடு நாபிச் சூடு.

5. பலவகையான பெண்களின்மீது விருப்பங் கொள்ளுபவன். பகலிலேயே சிற்றின்பம் அனுபவிப்பதில் ஆசையுடையவன். பிறந்த ஊரைவிட்டு வெளியூர் சென்று வசிப்பவன். தன் தந்தையால் சம்பா திக்கப்பட்ட ஆஸ்தியை வேண்டாதவன். நன்குகற்றவன். ஊகமுடை யவன். அரசாங்கத்தாருக்கு இவனுடைய வார்த்தைகள் மேன்மையுள் ளவையாகும். தண்ணீர் (தண்ணீரில் மிகுதியாக விளையாடுவதில்) அதிகமாகக் குடிப்பதில் விருப்பமுடையவன். நாபிச்சூட்டு நோயுள்ளவன்.

6. அரசரால் தொழிலு மேற்பன்
ஆபத்தைச் சிலர்க்குக் காப்பன்
தரையதைப் பின்னுல் சேர்ப்பன்
தனமதைச் செலவு செய்வன்
வரிவிழி மார்க ளாலே
வவமானம் நேரு மென்றும் (மனமது சஞ்ச லங்கள்)
இருவிதக் கல்வி கற்பன்
ஏவலா ளுடைய னுமே.

6. அரசாங்கத் தொழிலை ஏற்று வாழ்வான். சிலருக்கு ஏற்பட்ட துன்பங்களை விலக்குவான். பிற்காலத்தில் விளைநிலங்களை வாங்கிச் சேர்ப்பான். தன்னுடைய ஆஸ்தியைச் செலவு செய்து விடுவான். வேலைப்போன்ற விழிகளையுடைய மாதர்களால் அவமானம் ஏற்படும். மனத்தில் சஞ்சலங்கள் உள்ளவன். இருவிதமான கல்விகளைச் கற் பான். பணியாட்களையுடையவன்.

7. பாலுடன் நீர்சேர்ந் தாற்போல் பாவைய ரநேக முண்டு
நூலிடை நிகர மென்றுல் நாரன்ப துடனே சேர்வன்
காலத்தை யறிந்து ரைப்பன் கட்செவி போலே கோபம்
மால்மக ளெப்ப னுகு மதுவின்மேல் பிரிய னுகும்.

7. சுத்தமான பாலுடன் தண்ணீர் சேர்ந்ததுபோல் பல பெண் களை விட்டுப் பிரியாமல் வாழ்ந்து வருவான். அழகிய சிறு இடையை யுடைய பெண்களைப் பார்த்தால் விருப்பத்துடன் உடனே அவளுடன் சேர்ந்து விடுவான். வருங்காலத்தை யறிந்து சொல்லக்கூடியவன். ஸர்ப்பம்போல் கோபம் கொள்ளுபவன். மன்மதனைப்போன்று அழ காக இருப்பவன். மதுவருந்துவதில் பிரியமுள்ளவன்.

8. தனங்கொள்வன் செலவு செய்வன் சமர்த்தாக
[வார்த்தை யுண்டு
இனங்களை யாத ரிப்பன் இருவிதக் குணமு முண்டு
துணைவரை யாத ரிப்பன் தோகைமேல் பிரிய மில்லான்
நினைவதை முடிக்க வல்லன் நிமலியே கேட்டி டாயே.

8. பணத்தைச் சம்பாதிப்பான். செலவும் செய்வான். சாமர்த் தியமாகப் பேசுபவன். தன் சுற்றத்தாரைக் காத்து வருவான். இரு விதமான குணங்களுள்ளவன். தன்னுடைய சகோதரரைக் காத்து வருவான். மனைவியின்மீது பிரியமில்லாதவன். எண்ணிய காரியங் களை முடிக்கும் சாமர்த்தியமுடையவன். தாயே! கேளுங்கள்.

இனிவரும் நான்கு பாடல்கள் ஒரு தொடர்:
ஜாதகனுடைய குண விசேஷங்கள்

9. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளா
[னிருநி றத்தன்
தன்னுடல் மெலிவு முண்டு சந்தேக மனத்த னாகும்
பன்னியே பேசு வானும் பலகலை யுணர்வா னாகும்.

9. இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களையுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுகின்றோம். அழகுள்ளவன். கருமை கலந்த செம்மை நிறமுடையவன். மெல்லிய சரீரமுடையவன். சந்தேகப்படும் இயல்பினன். பன்னிப் பன்னிப் பேசுபவன். பலவிதமான கலைகளைக் கற்றுணர்வான்.

10. அன்னிய பாஷை மேன்மை அரசர்பூ சிதமு மாவன்
சொன்னசொல் காப்பா னாகுஞ் சோம்பிடான் காரி
[யத்தில்
மன்னரால் ஜீவ னங்கள் மருவிடும் பால னுக்குப்
பொன்பணி யதிகஞ் சேர்ப்பன் புகழ்ந்தோரை யாத
[ரிப்பன்.

10. அன்னிய பாஷையில் நன்கு தேர்ச்சி பெற்றிருப்பவன். அரசரால் கொண்டாடப்படுபவனுவன். தான் சொன்ன சொல்லைக் காப்பவன். காரியங்களைச் செய்து முடிப்பதில் சோம்பலில்லாதவன். அரசரால் உத்தியோகம் கிடைக்கும். (அரசாங்க உத்தியோகம் ஏற்று வாழ்வான்). பொன்னுபரணங்களை அதிகமாகவுடையவன். தன்னைத் தோத்திரம் செய்தவரைக் காப்பவன்.

11. இன்னவன் செங்கை தன்னில் இலகிடுங் கமல ரேகை
தன்துணை தனைக்காப் பானுந் தன்பந்து மேலாய்
[வாழ்வன்
அன்னியர் மதிக்க வுய்வன் அறமதி லிச்சை யுண்டு
பின்னமில் லாத தேகி பொய்யது வழுத்தா நெஞ்சம்.

11. ஜாதகன் தனது கையில் பத்மரேகை யுள்ளவன். தன் உடன்பிறந்தவரைக் காப்பவன். தன் சுற்றத்தாருக்கு மேன்மையாக வாழ்ந்து வருவான். பிறர் கொண்டாடும்படியான வாழ்க்கையை நடத்துவான். தருமம் செய்வதில் விருப்பமுடையவன். ஊனமில்லாத சரீரி. பொய் பேசாதவன்.

12. இல்லமு மிரண்டு செய்வன் எதிரியை வசியங் கொள்வன்
அல்லலெப் போதுங் காணுன் அரிவையர் மோக னுவன்
சல்லியங் கொள்ளா னுகுஞ் சகடுவா கனமு மேற்பன்
மல்லுக்கு முன்செல் லாதான் வருவோரை யாத ரிப்பன்.

12. இரண்டு இடங்களில் வீடுகள் கட்டுவான். விரோதிகளைத் தன் வயப்படுத்துபவன். ஒருக்காலும் துன்பத்தையடையாதவன். பெண்களின்மீது மையல் கொள்ளும் இயல்பினன். கடன் வாங்காதவன். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். சண்டைக்கு முன்னே போகாதவன். தன்னையண்டி வந்தவரை ஆதரித்து வருவான்.

ஜாதகனுடைய சகோதர பாவம்

13. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ முன்பெண் [ணென்று
அவள்குணம் புகலக் கேண்மோ வறிவுளாள் [பொறுமை சாலி
தவசிகட் கன்ன மீவள் சம்பத்து முடைய ளாகும்
பவமன மில்லா ளாகும் பணிதிபாத் திரங்கள் சேர்ப்பாள்.

13. ஜாதகனுடைய சகோதரரைப் பற்றிச் சொல்லுகின்றோம். மூத்த சகோதரி யொருத்தி உண்டு என்றோம். அவளுடைய குணங்களைக் கேட்பீராக. அறிவுள்ளவள். பொறுமையையுடையவள். தவம் செய்பவருக்கு அன்னத்தைப் படைப்பவள். செல்வமுள்ளவள். தீமையான மனமில்லாதவள். ஆபரணங்கள் பாத்திரங்கள் இவைகளைச் சேர்ப்பாள்.

ஜாதகனுடைய மூத்தசகோதரியின் புத்திரபாவம்

14. வரனுமே கீழ்ப்பால் நேரு மைந்தர்க ளாண்பா லிரண்டு
திருமக ளொப்ப தாகுஞ் செல்வியு மூவ ராகுங்
குறைவிலாக் குடும்ப மேற்பள் குவலயம் நல்லோ ளாவள்
பெருமையாய் வாழ்வா ளாகும் பேதைக்கு வய்து தீர்க்கம்.

14. அவளுக்குக் கணவன் கிழக்குப் பக்கத்திலிருந்து வாய்ப்பான். இரு புத்திரர்களையும் இலக்குமியை யொத்த அழகிய மூன்று புத்திரிகளையும் பெறுவாள். குறைகளில்லாத குடும்பத்தை யுடையவள். உலகில் நல்லவள் என்ற பெயரையுடையவள். பெருமையாக வாழ்ந்தும் நீண்ட ஆயுளுள்ளவளாகவுமிருப்பாள்.

ஜாதகன் இளைய சகோதரன் குணங்கள்

15. பின்துணை யாண்பா லொன்று
பேதையு மவ்வாறு தீர்க்கம்
அன்னவன் குணத்தைச் சொல்வேன்
அறிவுளா னுணச்சல் தேகி

தன்சொல்லே மேன்மை யாகச்
சாதிப்பான் கல்வி மேன்மை
பொன்பொருள் செலவு செய்யான்
புவிராசர் பேட்டி கொள்வன்.

15. ஜாதகனுக்குப்பின் சகோதரன் ஒருவனும் சகோதரி யொருத்தியும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். அவனுடைய (இளைய சகோதரனுடைய) குணங்களைக் கூறுகின்றேரும். அறிவாளி. மெல்லிய சரீரி. தன் வார்த்தைகளே மேன்மையுள்ளவை யென்று திடமாகக் கூறுபவன். கல்வி யறிவில் மேன்மையுள்ளவன். செல்வத்தைச் செலவிடாதவன். அரசரைப் பேட்டி காண்பான். (அரசாங்கத்தாருடன் தொடர்பு உள்ளவன்)

இளைய சகோதரன் புத்திரபாவம்

16. மன்னரால் ஜீவ னங்கள் மருவிடும் பால னுக்குத்
தன்மனை யொன்றே தீர்க்கஞ் சாற்றுவோஞ் சுதரா
[ணென்று
கன்னிகை மூவ ராகுங் கண்டித வார்த்தை யுண்டு
அன்னியர் வசியங் கொள்வன் ஆவுகள் பலித முண்டு.

16. அரசாங்க உத்தியோகத்தை ஏற்று ஜீவித்து வருவான். ஜாதகனுடைய சகோதரனுக்கு மனைவி யொருத்தியே நீண்ட ஆயுளுள்ளவள் என்றேரும். ஒரு புத்திரனையும் மூன்று புத்திரிகளையும் பெற்றவன். கண்டித்துப் பேசுபவன். பிறரைத் தன் வயப்படுத்துபவன். பசுக்களின் விருத்தியுண்டு.

இளைய சகோதரனின் இயல்புகள்

17. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தரணிகள் சேர்ப்பா னுகும்
தந்திர மொழியு முண்டு சத்திமார் மோக னுவன்
தந்தமுஞ் தரள மொக்குஞ் சாதமு மேழைக் கீவன்
தன்தனங் கொடுக்கல் வாங்கல் தனமது புதையல்
[வைப்பன்.

17. தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். விளைபூமிகளைச் சேர்ப்பவன். தந்திரமாகப் பேசுபவன். பெண்கள்மீது விருப்பமுடையவன். முத்துக்களைப்போன்ற வெண்மையான பற்களையுடையவன். ஏழைகட்கு அன்னமளிப்பவன். தன்னுடைய பொருளைக் கொடுக்கல் வாங்கல் செய்பவன். செல்வத்தைப் பூமியில் புதைத்து வைப்பவன்.

ஜாதகன் திருமணக்காலமும் மனைவியின் இயல்புகளும்

18. [1]உத்தர பாகந் தன்னில் உரைக்கிறே மற்றோர் சேதி
புத்திரன் மணத்தின் காலம் புகலுவோ மீரொன்
[பாண்டில்
வித்தகி மேல்பால் நேரும் விளம்புவோ மவள்குணத்தைச்
சுத்தமா மடக்க வார்த்தை சோம்பிடாள் காரி யத்தில்
சித்தமே கரப்பு மில்லாள் ஜனவுப காரி யாகும்.

18. மற்றவர் செய்திகளைப் பின் பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய திருமணக் காலத்தைக் கூறுகின்றோம். அவனுக்கு, மனைவி, பதினெட்டாம் வயதில், மேற்குப் பக்கத்திலிருந்து வாய்ப்பாள். அவளுடைய குணங்களைக் கூறுகின்றோம். பரிசுத்தமுள்ளவள். அடக்கமாகப் பேசுபவள் காரியங்களைச் சோம்பலில்லாமல் செய்து முடிப்பவள். மனத்தில் கபடமில்லாதவள். ஜனங்களுக்கு உபகாரி.

19. அன்னம்போல் வடிவு மொக்கு மடைந்தோரை யாத
[ரிப்பள்
அன்னியர் குற்றஞ் சொல்லா ளவள்வரன் மனத்துக்
[கேத்தோள்
அன்னமு மன்பா யீவள் அடிசிலுக் கினிய ளாகும்
அன்னவள் வந்த பின்பு அவள்வரன் தனக்கு யோகம்.

19. அன்னத்தைப் போன்ற அழகான சரீரமுடையவள். தன்னை அண்டி வந்தவரைக் காப்பவள். பிறர்மீது குற்றம் கூறுதவள். தன்னுடைய கணவன் மனத்துக் கேற்றவள். பிரியத்துடன் அன்ன மளிப்பவள். உருசியாகச் சமைப்பதில் வல்லவள். இவளை மணந்த பிறகு ஜாதகனுக்கு யோகம் விருத்தியாகும்.

ஜாதகன் புத்திரபாவமும்—கிரகநிலையும்

20. மங்கையுந் தீர்க்க ஜீவி
மைந்தர்கள் பலத்தைச் சொல்வேன்
சிங்கம்போ லாண்பா லிரண்டு
செல்விமா ரவ்வாறு தீர்க்கஞ்
சங்கைகள் முதலில் கஷ்டஞ்
சாற்றுவீ ரந்தச் சேதி
சுங்கணும் பரிதி யைந்தில்
சூழ்ந்திடத் தோஷஞ் சொன்னேம்.

20. இவள் நீண்ட ஆயுள் உடையவள். அவளுடைய புத்திர பாவத்தைச் சொல்லுகின்றோம். சிங்கத்தைப்போல் இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றுவர். முதலில் தோன்றும் புத்திரர்

[1] இப்பாடலில் ஓர் அடி மிகுந்துளது.

இதுவுமது

30. அண்ணன்தம் பிகளு மின்றி யனேகமாய்ச் சக்கி முத்தி
திண்ணமாய் நேரு மென்றேஞ் சிலவேநா ளிருந்து நீங்கும்
வண்ணமா யொருத்தி தானும் வளவினில் தங்கு
[மென்றேங்
கண்ணிய மாக வாழ்வள் கூறுஞ்சொல் சுகமே யாகும்.

30. சகோதரர்களில்லாமல் பலபெண்களுடன் சக்கிழத்தியாக வாழ்ந்து வருவாள். இது திண்ணமாக ஏற்படும். சின்னட்கள் அவ் விதமிருந்து பிறகு மற்ற பெண்கள் விலகிவிடுவர். அழகுள்ள மற்றொரு பெண் இவளுடைய வீட்டில் வந்து வசிப்பாள். அவளும் இவளிடப் பெருமையுடன் வாழ்ந்து வருவாள். அவளுடைய வார்த்தைகளே கணவனுக்குப் பிரியமுள்ளவையாக இருக்கும்.

31. தோகைபோல் சாய லொக்குஞ் ஜயமுனி தடுத்துச்
[சொல்வார்
பாகமா யனேக மாது பரவியே விலகு மென்றீர்
ஏகாம லொருத்தி யில்ல மிருக்குங்கா ரணங்க ளென்னத்
தோகைமுன் பவத்தால் நேருஞ் செப்புவீ ரந்தச் சங்கை.

31. அவள் மயிலைப்போன்ற சாயலுடையவள். ஜயமுனிவர் மறுத்துச் சொல்லுகிறார். பொருத்தமான பல பெண்கள் வந்து நீங்கு வார்கள் என்றும் போகாமல் ஒருத்தி வீட்டிலேயே இருப்பாள் என்றும் சொல்லுகிறீர்களே! அதற்குக் காரணமென்ன? சொல்லுங்கள். சக்கி முத்தி முற்பிறவியில் செய்த வினையால் அவ்விதம் நேரும். அவ் வினையைச் சொல்லுங்கள்.

தாயின், சக்கிழத்தியின் முற்பிறவி

32. காரிழை பூர்வஞ் சொல்வேன் காளத்தி தன்னி லேதான்
பாரிய தனவா னுக்குப் பிறந்தனள் வைசியச் சேயாய்
மாரனு மதலை யுண்டாய் வாழ்நாளில் வினையைச்
[சொல்வேன்
நாரியுஞ் சிலவே பொன்னை நம்பிக்கை யாய வரித்து

32. சக்கிழத்தியின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். திருக் காளத்தியில் பெரியதொரு தனவானை வைசியனுக்குப் புத்திரியாகப் பிறந்தாள். கணவன் புத்திரர்கள் இவர்களை யடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேரும். இவள் சில பொன் நாணயங்களை நம்பிக்கையாகக் கொடுத்து வைத்திருந்து;

33. சிலவேநாள் சென்ற பின்பு தனமதைக் கேட்கும் போது
தலமதை யீடல் கொள்ளுந் தருகிறேன் சின்னாள் சென்று
புலம்பிப்பின் மாது மாண்டாள் பொருளதை வாங்க
[வேண்டிக்
ளென்று சொல்வோங் குழவிக ளில்லா ளாவள்

தாயின் உடன்பிறப்பும், முற்பிறவியும்

27. தன்துணை யாண்பால் காணுள் சத்தியு மொருத்தி யாகும்
முன்ஜன்மங் கடையூர் தன்னி லுதித்தனள் வன்னியச்
[சேயாய்க்
கன்னிகை வாழு நாளில் கணவன்தன் தம்பி பேரில்
உன்னத வார்த்தை சொல்லி யொதுக்கினுள் வேற தாக;

27. உடன்பிறந்த சகோதரனில்லாதவள். சகோதரி யொருத்தியையே யுடையவள். முற்பிறவியில் திருக்கடையூரில் வன்னிய குலத்தவளாகப் பிறந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். தன்னுடைய கணவனுடைய சகோதரன்மீது அடாத வார்த்தைகளைக் கூறி அவனைப் பிரித்து விட்டாள். (சகோதரனிடமிருந்து வேருகப் பிரிந்து செல்லும்படி செய்தாள்).

மைத்துனன் சாபம்

28. மைதுனன் வருத்த முற்று வறைந்திட்ட சாபங்
[கேண்மோ
குத்தமாய்ச் சொன்ன பாவி குலவும்பின் ஜன்மந்
[தன்னில்
பற்றுது துணையெ னைப்போல் பலபாவை சக்க ளத்தி
குற்றமாய் நேரு மென்றுங் குறைமன மாக வாழ்வாய்.

28. வருத்தமடைந்த மைத்துனன் கூறிய சாபத்தைக் கேளுங்கள். என்மீது இல்லாத குற்றங்களைக் கூறிய பாவியே! இனி ஏற்படும் மறுபிறவியில் என்னைப்போல் சகோதரரை அடையாமல் பல பெண்களுடன் சக்கிழத்தியாக வாழ்க்கைப்படுவாய் என்றும் மனத்தில் குறையுள்ளவளாக வாழ்ந்து வருவாய் என்றும்;

சாபத்தின் பயன்

29. இன்னமும் பலவாறு சொன்னன் எய்திற்று வந்தச்
[சாபங்
கன்னிக்கு வந்தி யத்தில் கண்ணேயு மதிக முண்டாய்த்
துன்மையாய்க் கால நாடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
அன்னவ ளுதித்தா ளென்றே மணுகுமைத்
[துனன்சா பத்தால்

29. இன்னும் பலவிதமாகச் சொன்னன். அந்தச் சாபம் தொடர்ந்தது. அப்பெண்ணுக்குத் தன் கடைசிக் காலத்தில் கண்வலி அதிகமாக ஏற்பட்டு அதனல் மரணமடைந்தாள். மீண்டும் பிரதேவனல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றும் துனனுடைய சாபத்தால்;

ஜாதகனுடைய பதினெட்டாம் வயதுக்குமேல் வளர்பிறைச் சந்திரன் போல் யோகம் விருத்தியாகும். அவனுடைய ஐம்பதாம் வயதுவரை ராஜயோகம் ஏற்படும். செழிப்புள்ள குடும்பத்தை யடைவான்.

24. இல்லமு மிருபா லறில் எய்திடு மதன்மேல் பத்துஞ்
செல்லுமே வேரு மில்லஞ் சேர்ந்திடும் பூமி சேர்ப்பன்
நல்லவர் பலர்க ளாலே நாட்டினில் புகழு மேற்பன்
சொல்லது வெவர்க்கு மேன்மை சேர்ப்பன்பத் தாயி
[ரம்பொன்.

24. ஜாதகன், தனது இருபத்தாரும் வயதில் புதிய வீட்டைக் கட்டுவான். அதற்குமேல் பத்து வருடங்களில் வேறொரு வீட்டையுங் கட்டுவான். விளைநிலங்களைச் சேர்ப்பான். உலகில் பல நல்லவர்களால் கீர்த்தியையடைவான். எல்லோருக்கும் இவனுடைய வார்த்தைகள் மேலாகும். அதுவரையில் பத்தாயிரம் பொன் சேர்ப்பான்.

25. அன்பது வாண்டு மேலா யரசரால் வணிபஞ் செய்வன்
துன்பங்க ளணுகா தாகுந் துர்வழக் கதனில் செல்லான்
பின்துணை காப்பா ளுகும் பூமியு மேர்ப்பெ ருக்கங்
கன்னென மொழியை யொக்குங் காதலி புகன்றிட்
[டோமே.

25. ஜாதகன் தனது ஐம்பதாம் வயதுக்குமேல் அரசாங்கச் சார்புள்ள (தொடர்புள்ள) வர்த்தகத்தைப் புரிந்து வருவான். தீங்குகள் ஏற்படா. வீண்சண்டைக்குச் செல்லாதவன், இனிய சகோதரனை ஆதரித்து வருவான். விளைநிலங்களை விருத்தி செய்வான். கரும்பு போல் இனிக்கும் வார்த்தைகளையே பேசும் தேவியே! நாங்கள் கூறுகின்றோம்.

ஜாதகனின் தாயின் குணங்கள்

26. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாநிற முணச்சல் தேகி
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுள்மனங் கவடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பணிந்தோரை யாத ரிப்பள்
காதலி யோக சாலி கண்டிலாள் பொறுமை யுண்டு.

26. ஜாதகனுடைய தாயின் குணங்களைச் சொல்லுகின்றோம். டையவள். மெல்லிய சரீரி. பிறர் இன்பமுறும்படி பேசுபவள். தில் சூதுகளில்லாதவள். தீய எண்ணங்களில்லாத மனத் வணங்கியவரை ஆதரித்து வருவாள். அதிருஷ்ட டிப்பாக இருக்கும் சுபாவமில்லாதவள். பொறுமை

நிலையார். அதற்குரிய காரணத்தைக் கூறுங்கள். சுக்கிரனும் சூரியனும் புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் சேர்ந்திருப்பதால் அவ்விதம் தோஷம் ஏற்படும் என்றேம்.

ஜாதகன் முற்பிறவி

21. இன்னவன் முன்னொன் மத்தை யெடுத்துரை முரைப்பக்
[கேண்மோ
கன்னியா குமரி தன்னில் கலந்தனன் வேளாள னாக
முன்னமே குடும்பி யாகி மேதினி விருத்தி செய்து
பின்னோர்க்கு வன்ன மீந்து பிழையெது மில்லா னாகி;

21. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். கேட்பீராக. கன்னியாகுமரியில் வேளாளர் குலத்தவனாகப் பிறந்தான். செழிப்புள்ள குடும்பத்தை யடைந்து விவசாயம் செய்து பூமிப் பெருக்க மடைந்து ஏழைகளுக்கு அன்னமளித்து வந்து தீய காரியங்களைச் செய்யாதவனாகி;

ஜாதகனுடைய குலமும் குணங்களும்

22. பலதல வாசஞ் சென்று
பறந்தனன் கால நாடு
தலைநான்கோன் வரையப் பட்டு
னிப்பனும் வடுகர் வர்க்கம்
நிலைமையா யிவனின் யோகம்
நிழ்த்துவோ மினிமே லாக
புலவன்போல் மொழிவா னாகும்
புண்ணியத் தலங்கள் செல்வன்.

22. பல புண்ணியத் தலங்களுக்குச் சென்று மரணமடைந்தான். மீண்டும் நான்கு தலைகளையுடைய பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் வன்னிய குலத்தில் பிறந்தான் என்றேம். இனி ஜாதகனுடைய யோகத்தைக் கூறுகின்றேம். பெரிய புலவனைப்போல் பேசுபவன். பல புண்ணிய க்ஷேத்திரங்கட்குச் செல்லுபவன்.

ஜாதகனுடைய யோகம்

23. அரசரால் ஜீவ னங்கள் அணுகிடும் பால னுக்கு
வருங்காலம் புகலு மென்ன வறுமூன்று வாண்டின்
[மேலாய்ப்
பிறைபோலே யோக மெய்தும் புதல்வனுக் கன்பா
மருவிடு மிராச யோகம் வளமையாய்க் குடும்

23. ஜாதகன் அரசாங்க உத்தியோகங்களை
வருவான். அஃது ஏற்படும் காலம் எப்போது என்

33. சில காலஞ்சென்று கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்கும்போது, உன்னுடைய வீட்டை ஈடு காண்பி, சின்னட்கள் சென்று திருப்பித் தருகிறேன் என்றான். ஆனால் அவள் அதற்குள் மரண மடைந்து விட்டாள். பொன் கொடுத்த பெண் தான் கொடுத்த பணத்தைத் திருப்பி வாங்க இவ்விதம் பிறந்தாள் என்றும். புத்திர பாக்கியமில்லாதவள்;

34. தனமது வெவனி டத்தில் தந்தனள் விவரஞ் சொல்வீர்
தனயன்தன் தந்தை பக்கல் தந்தனள் பொருளு [மேதான்
வினையது தீர வேண்டி வித்தகி வாழ்வா ளாமே
சினபிலா விவள்பின் ஜன்மந் தில்லைபா லிரட்டி வம்சம்.

34. செல்வத்தை யாரிடத்தில் கொடுத்தாள்? விவரத்தைச் சொல்லுங்கள். ஜாதகனுடைய தந்தையினிடம் கொடுத்தாள். தான் செய்த வினை தீர இவ்விதம் வாழ்ந்து வருவாள். (கொடுத்த பணத்தைத் திரும்பிப் பெறுவதற்காக சக்கிழத்தியாக வந்தாள்). இவள் மறுபிறவியில் சிதம்பரத்தில் ரெட்டியார் மரபில் பிறப்பாள் என்றும்.

சக்கிழத்தியின் மரணகாலமும் தாயின்மரணமும்

35. இருபது நாலு வாண்டி லேகுவாள் கால நாடு
திருகிலா மூப்பா னேழில் செல்லுவா ளன்னை தானும்
மறுஜன்மங் காஞ்சி தன்னில் வருவளாஞ் சவுராஷ்ட்ர [வம்சங்
கரிமத வானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

35. ஜாதகனுடைய இருபத்துநான்காம் வயதில் இவள் மரண மடைவாள். அவனுடைய மூப்பத்தேழாம் வயதில் பெற்ற தாய் மரண மடைவாள். தாய் மறுபிறவியில் காஞ்சீபுரத்தில் சௌராஷ்டிர வம்சத்தில் பிறப்பாள். கரிய மதயானையின் முகம் போன்ற முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

36. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் சட்டநா தேசர் நாட்டில்
விந்தையாய் முத்திரிய ஜெக விளங்கியே பெருமை பூண்டு
வந்தவர்க் கன்ன மீந்து மார்க்கத்தில் தாகப் பந்தல்
இந்தவன் வைத்து மேதான் இருடிக ளுறவு கொண்டு;

36. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். சட்டநாதேச்வரர் எழுந்தருளியுள்ள சேகாழியில் முத்திரிய குலத்தவனாகப் பிறந்து, பெருமையடைந்து, தன்னை யண்டி வந்தவர்கட்கன்னமளித்துவந்து சாலையோரத்தில் தண்ணீர்ப்பந்தல்களை அமைத்து, இவ்வுலகில் துறவிகளிடத்தில் நட்புக் கொண்டு வாழ்ந்து;

37. வினையெது யில்லா ஞகி மேவினன் கால நாடு
கனமுள பிரமன் லக்கங் கௌரியின் குலமு தித்தான்
அனையவே யரச ராலே யவனுமே ஜீவிப் பாஞ்
சினமிலாப் புராசர் கேள்வி செப்பினீ ரிராஜ யோகம்.

37. தீவினைகள் இல்லாதவனுக இருந்து மரணமடைந்தான். பிரமதேவனுல் படைக்கப்பட்டு கௌரிகர் குலத்தில் பிறந்தான். அரசாங்கத் தொழிலால் ஜீவனஞ் செய்வான். கோபமில்லாத பராசரர் விளவலானுர். ராஜயோகம் உண்டு என்று சொன்னீர்களே?

38. எதுமட்டுஞ் செய்வான் சொல்வீர் இருபது வாண்டு மட்டும்
அதிபனு மரசு செய்வன் விலகிடு மதன்மே லாகச்
சதியிலா மரண மட்டுந் தனம்பெருக் கிளாயா ஞகும்
இதுவிவ ரங்கள் யாவும் இயம்புவோம் பின்பா கத்தில்.

38. எந்தக் காலம் வரையில் ராஜயோகம் உண்டு என்று கூறுங்கள். இருபதாம் வயது வரையில் ஜாதகன் தந்தை யோகவானுக இருப்பான். அதற்குப் பிறகுத் தன் மரண காலம் வரையில் செல்வம் சேர்ப்பதில் தளராதவன். இந்த விவரங்கள் எல்லாவற்றையும் பிற் பாகத்தில் சொல்லுகின்றேம்.

தந்தையின் மரணகாலம்

39. இதுமத்தில் தொழில்க ளுக்கு விடருக ளுண்டோ [சொல்வீர்
விதவிதக் கலகம் நேரும் வெள்ளியைந் தினிலே தங்க
எதுவிதம் வந்த போதும் இரவிமூன் பனிபோல் நீங்குஞ்
சதியிலா மூப்ப தாண்டில் சாற்றுவோ மார கங்கள்.

39. இதற்கிடையில் ஜாதகனுடைய தந்தைக்குத் தொழிலில் துன்பங்கள் உண்டோ? சொல்லுங்கள். விதவிதமான கலகங்கள் ஏற்படும். சுக்கிரன் ஐந்தாமிடத்தில் இருப்பதால் எந்தத் தீங்கு வந்தாலும் சூரியன்முன் பனிபோல் விரைவில் நீங்கும். ஜாதகனுடைய மூப்பதாம் வயதில் தந்தைக்கு மரணமேற்படும்.

தந்தையின் மறுபிறவி

40. மறுஜன்மம் விரிஞ்சி தன்னில் மன்னர்தங் குலமு தித்து
அரசுமே பெறுவா ஞகும் அறைந்தவிம் மொழிகுன் [றுவே
திருமகன் தனக்குச் சொல்வேன் சனிதசை யந்தந் [தன்னில்
அறுபது மூன்று வாண்டில் ஆவணி மாதந் தன்னில்;

40. மறுபிறவியில் விரிஞ்சி நாட்டில் சத்திரிய குலத்தில் பிறந்து அரசுரிமைஞ்சிப் பெறுவான். (அதிகாரமுள்ள உத்தியோகத்தை ஏற்று

வாழ்வான்). நாங்கள் கூறிய வார்த்தைகள் தவரு. ஜாதகனுடைய சனிமகாதசை முடிவில், அறுபத்துமூன்ரும் வயதில், ஆவணி மாதத்தில் ;

ஜாதகன் மறுபிறவி

41. பாலக னுடல மேகும் பகருவோ மிவன்பின் ஜன்மஞ்
சீலமா மதுரை தன்னில் ஜனிப்பனும் மறைக்கு லத்தில்
மேலான குடும்பி யாகி வித்தகன் வாழ்வா னுகும்
ஆலத்தை யுண்டோன் தேவி யறிவிப்போம் விவர
[மிரண்டில்.

41. ஜாதகன் மரணமடைவான். ஜாதகனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்ரோம். நல்லொழுக்கமுள்ளவர்கள் வாழும் மதுரையில் அந்தணர் குலத்தவனுகப் பிறப்பான். மேன்மையான குடும்பத்தையடைந்து வாழ்ந்து வருவான். கொடிய விஷத்தை (உலக நலனுக்காக) உண்ட நீலகண்டனின் தேவியே! மற்ற விவரங்களோ இரண்டாம் பாகத்தில் கூறுகின்ரோம்.

ஜனனகால தசை

42. திருவோண மூன்ரும் பாதஞ் ஜனிப்பனு மிந்தப் பாலன்
பிறைதசை யாண்டு மூன்றும் பேசிய திங்கள் நாலும்
வருவித்தோம் பூர்வ பாகம் வகுக்கிரோம் பின்பால் சேதி
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

42. திருவோண நட்சத்திரம் மூன்ரும் பாதத்தில் ஜாதகன் பிறப்பான். அக்காலத்தில் நடைபெறுவது சந்திரமகாதசையாகும். அத்தசையில் செல்லுப்போக மீதி மூன்று வருடங்களும் நான்கு மாதங்களுமாம். இதுவரையில் முதல் பாகத்தைச் சொன்னேம். மற்றச் செய்திகளைப் பின்பாகத்தில் சொல்லுகின்ரோம். அரிய வேதங்களின் முடிவில் சொல்லப்படும் தேவியே! கேட்பீராக.

43. சத்தம முனிவர்
சுத்தமாய்ச் சொன்னேங்
குத்தங்கள் யாவும்
வித்தகி பொறுப்பாய்.

43. ஏழு முனிவர்களடங்கிய குழுவாகிய நாங்கள் நன்ரக ஆராய்ந்து பார்த்துக் கூறியிருக்கின்ரோம். கூறியவைகளில் குற்றங்கள் இருப்பின் அவற்றைப் பொறுத்தருள்வாய். தாயே!

ஜாதகம் 51

1. பிறைநந்தி கேது வீணை புதன்நண்டில் சேயுங் கன்னி
பரிதியும் வெள்ளி சிம்மம் பணிதனு பொன்னுங்
[கெண்டை
கரியவன் மேட மாகக் கழறுவோஞ் ஜன்மஞ் சிம்மம்
உரையுமே பலனை யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் விருஷபத்திலும், கேது மிதுனத்திலும், புதன் கடகத்திலும், செவ்வாய் கன்னியிலும், சூரியன் சுக்கிரன் சிம்மத்திலும், ராகு தனுசிலும், குரு மீனத்திலும், சனி மேடத்திலுமாகவும் ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இருப்பின் பலனைச் சொல்லுங்கள் என பார்வதிதேவி கேட்க லானாள்.

கிரகநிலை

குரு	சனி	சந்திரன்	கேது
	இராசி சக்கரம்		புதன்
			லக்கினம் சூரியன் சுக்கிரன்
ராகு			செவ்வாய்

ஜாதகனுடைய வீட்டுநிலை

2. குறுமுனி புகலு கின்றார் குறித்தது வாண்பால் ஜன்மம்
வருமில்லங் கீழ்மேல் வீதி வாசலும் வடக்குப் பார்வை
அரன்கோஷ்ட மேல்பால் தங்கும் அம்பிகை தென்மே
[லாகுங்
[1]குறைதலை மிதுன கோணங் குண்டமும் வடபா லாகும்.

2. அகத்திய முனிவர் கூறுகின்றார். இஃது ஆண் மகனுடைய ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. வீட்டுக்கு மேற்கில் சிவபெருமான் ஆலயமும், அம்பாள் கோவில் தென்மேற்கிலும், உடலிலிருந்து குறைக்கப்பட்ட தலையை மாத்திரமுடைய மாரியம்மன் கோவில் வடகிழக்குத் திக்கிலும் உள்ளன. வடக்குத்திக்கில் ஒரு குளம் உண்டு.

---

1. மாரியம்மன்

3. இத்தகை யடையா ளத்துள் இலகிய சமவு ராகும்
விர்த்தகன் கௌரி வர்க்கம் விளங்குவா னிந்தப் பாலன்
பெத்ததாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகஞ்
சுத்தமாய் முன்பின் ஜன்மஞ் செப்புவோஞ் சாந்தி தானும்

3. இத்தகைய அடையாளங்களுள்ள சமநிலையான ஊரில் ஜாதகன் கௌரீகர் வம்சத்தில் பிறந்தான். இவனைப் பெற்ற தாய் தந்தையருடைய யோகம் மனைவி மக்களின் யோகம் முற்பிறவி மறு பிறவி ஆகிய இவற்றை இந்திச் சோதிட நூலில் கூறுகின்றோம். சாந்தி விவரங்களையும் சொல்லுகின்றோம்.

தந்தையின் குணவிசேஷங்கள்

வேறு

4. தந்தைகுண மாகிறத்தன் சமதே கத்தன்
சமர்த்தாக வார்த்தையுளன் சாந்த னுவன்
தந்தைநாள் வறுமையுளன் பின்பு யோகந்
தரணிவிருத்தி செய்திடுவன் தனமுஞ் சேர்ப்பன்
தந்தமது தரளமொக்கும் பணையேர் விருத்தி
தன்மனத்தில் கவடுமில்லான் சகடு முண்டு
தன்பந்துக் கிணக்கமில்லான் நாபிச் சூடு
தங்குமென்றே மந்தியத்தில் சஞ்ச லங்கள்.

4. தந்தையின் குணங்களைக் கூறுகின்றோம். மாநிறமுடையவன். சமமான சரீரமுடையவன். சாமர்த்தியமாகப் பேசுபவன். பொறுமை யுடையவன். தன் தகப்பனார் காலத்திய தரித்திரதசை யுள்ளவன். பிற்காலத்தில் அதிர்ஷ்டமுடையவன். விளை நிலங்களைப் பெருக்கம் செய்வான். அதற்குப் பின் செல்வத்தை விருத்தி செய்வான். முத்துக் களைப் போன்ற வெண்மையான பற்களை யுடையவன். பண்ணை ஏர் முதலியனவற்றின் விருத்தியுள்ளவன். மனத்தில் கபடமில்லாதவன். வண்டி முதலான வாகன வசதிகளுள்ளவன். தன் சுற்றத்தாருக்குத் தாழ்வில்லாதவன். நாபிச் சூட்டு நோயுள்ளவன். கடைசிக்காலத்தில் மனத்தில் கவலைகள் உள்ளவன்.

இதுவுமது

5. கல்விசமங் காலாட்க ளுடைய னுகுங்
காதலியால் பெருமையுளன் கனத்த புத்தி
நல்லவனுய் வாழ்ந்திடுவன் பொருள்மே விச்சை
நாற்காலி விருத்தியுண்டு நட்பாய் வார்த்தை
இல்லமுமே செய்திடுவன் எதிரிக் கஞ்சான்
எடுத்தகா ரியமுடிப்பன் இடரொன் றெண்ணுன்
மல்லுக்குச் செல்லானுப தேசங் கொள்வான்
மாற்ரு னும் வசியமுறு மாரன் தானே.

5. சமமான கல்வியறிவையுடையவன், ஏவலாட்களை உடையவன், தன் மனைவியால் பெருமையையுடையவன், பெருத்த புத்தியுள்ளவன், நல்லவனாக வாழ்ந்து வருவான். பொருள்மீது விருப்பங் கொள்ளு பவன். கால் நடைகளின் பெருக்கமுள்ளவன். யாவரிடமும் சிநேக மனப்பான்மையுடன் பேசுபவன். வீட்டைக் கட்டுவான். விரோதி கட்குப் பயப்படாதவன். எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிப்பான். பிறருக்குத் துன்பத்தைச் செய்ய எண்ணுதவன். வீண் சண்டைக்கு முன்செல்லாதவன். பெரியோர்களிடம் உபதேசத்தைக் கேட்பவன். விரோதிகளும் இவன் பேச்சுக்களில் மயங்கி வசமாவர்.

தந்தையின் முற்பிறவி வரலாறு

6. முன்ஜன்ம மரங்கத்து மேல்பா லாக
மேவியதோர் சிறுவூரில் வைசியச் சேயாய்ப்
பொன்பலமு முடையவனுய் வணிபஞ் செய்து
பெரிதான தலஞ்சென்று பெருமை யாகித்
தன்மனைவி மதலையுண்டா யறத்தி லிச்சை
சான்றோர்க்கு வன்னமீந்து பவமில் லாமல்
தென்திசையி னரசனிடஞ் சேர்ந்து யின்னேன்
தலைநான்கோன் வரையவந்தான் இவனுந் தானே.

6. முற்பிறவியில் திருவரங்கத்துக்கு மேற்குப் பக்கத்தில் உள்ள சிற்றூரில் வைசிய குலத்தவனுகப் பிறந்தான். மிகுந்த செல்வத்தை யுடையவனுக விருந்து வர்த்தகம் புரிந்து வந்தான். பெரிய புண்ணி யத்தலங்கள் பலவற்றிற்குச் சென்று பெருமையை யடைந்து மனைவி மக்களைப் பெற்றுத் தருமம் செய்வதில் விருப்பமுள்ளவனுக வாழ்ந்து பெரியோர்களுக்கு அன்புடன் அன்னமளித்து வந்து பாவச்செயல் களில்லாமல் தெற்குத் திசைக்கதிபதியான எமராசனின் பட்டணஞ் சேர்ந்து (மரணமடைந்து) மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவன் என்றும்.

வேறு

இதுமுதல் நான்கு பாடல்களில் ஜாதகனுடைய குணங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன

7. இன்நெறி யுடையா னுக்கு இவனுமே சஷ்ட னுக
அன்னவ னுதிப்பா னுகும் அவன்குணங் கூறக்
[கேண்மோ
துன்னுமால நிறத்த னுகுஞ் சொல்லது சுகமே யாகும்
பின்னமில் லாத தேகன் புகழ்ந்தோரை யாத ரிப்பன்.

7. இவ்விதம் கூறப்பட்ட குணங்களையுடையவனுக்கு இந்த ஜாதகன் ஆரும் புதல்வனாகப் பிறப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றேம். கேளுங்கள். கரிய நிறமுடையவன். இன்பமான வார்த்தைகளைப் பேசுபவன். ஊனமில்லாத சரீரமுடையவன். தன்னைத் துதிசெய்தவரைக் காப்பவன்.

8. மாரியால் வடுவு முண்டு வணிபங்கள் பலவாய்ச் செய்வன்
தீரமா மனத்த னகுஞ் சிரமுகம் வடிவு காணும்
பாரது விருத்தி யுண்டு பார்வையு மொன்று வூனம்
நேரிடு மாதி காலம் நினைத்தது முடிக்க வல்லன்.

8. அம்மை நோய் ஏற்பட்டதன் விளைவாக சரீரத்தில் வடுக்கள் உள்ளவன். பலவிதமான வர்த்தகங்களைச் செய்து வருவான். தைரிய முள்ள மனத்தினன். தலையிலும் முகத்திலும் வடுக்களை உடையவன். விளைநிலங்களின் பெருக்க முள்ளவன். ஆதிகாலத்தி லிருந்தே கண் களில் ஒன்று ஊனமுள்ளதாக இருக்கும். எண்ணிய காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றலுடையவன்.

9. தந்தைபோல் வாழ்வா னகுந் தானியந் தாசுச் செட்டு
இந்தவன் செய்வா னகும் இடுக்கமாங் குணமில் லாதான்
எந்திடம் பெருமை யேற்பன் இசைகளுங் கேட்க வல்லான்
விந்தையாய்க் கல்வி கற்பன் விவேகியா மென்று
[சொல்வோம்.

9. தன் தந்தையைப் போல் வாழ்ந்து வருவான். தானிய வியா பாரத்தையும் துணிவர்த்தகமும் செய்து வருவான். துன்பமடையும் குணங்களில்லாதவன். எல்லாவிடங்களிலும் பெருமையை யடைவான். சங்கீதம் கேட்பதில் விருப்பமுடையவன். அதிசயமாகக் கல்வியைக் கற்பான். விவேகமுடையவன் என்று சொல்லுகின்றேம்.

10. கிரகநூ லறிவா னகுங் கௌரவக் குடும்ப மேற்பன்
அறிவுளோர் நேசங் கொள்வன் அவனியில் வறுமை
[காணன்
நறைமல ரிஷ்டங் கொள்வன் நல்லோர்க்கு நல்ல னவன்
அரிபத்தி கொஞ்ச முண்டு அம்பிகை யாளே கேளாய்.

10. ஜோதிட நூல்களின் நுட்பங்களையறிந்தவன். கௌரவமான குடும்பத்தை யடைவான். அறிவாளிகளின் நட்பைக் கொள்ளுபவன். உலகில் தரித்திரத்தையடையாதவன். வாசனையுள்ள புஷ்பங்களின் மீது விருப்பமுடையவன். நல்லவர்கட்கு நல்லவன். தெய்வபக்தி சிறிது கொள்ளுவான். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

11. தன்துணை யாண்பால் நான்கு சத்தியு மிருவ ராகும்
பின்னமா மற்ற வெல்லாம் பேசின வாண்பர் லுந்தான்
முன்பின்னுய்த் தோன்று மென்றே மேதினில் சிலநா
[ளொன்றுய்
அன்னவர் வாழ்ந்து பின்னுல் அவர்களும் வேறுய்ச்
[செல்வர்.

11. ஜாதகனுக்கு உடன் பிறந்தவர்களில் இரு சகோதரிகளும் நான்கு சகோதரர்களும் நிலையானவர். மற்றும் தோன்றுபவர் இறந்து விடுவர் என்றேரும். நாங்கள் கூறிய சகோதரர்கள் ஜாதகனுக்கு முன் பின்னுகப் பிறந்தவர்கள் என்றேரும். சிலகாலம் அவர்கள் ஒன்றுக வாழ்ந்து வருவர். பிறகு அவர்களும் தனியாகச் சென்று விடுவர்.

12. எந்தக்கா லத்தி லேதான் ஏகுவார் விவரஞ் சொல்வீர்
வந்தவ னிருபா லுறு வாண்டினில் வேறுய்ச் செல்வர்
பிந்தின பாகந் தன்னில் பேசுவோம் விவர மாகத்
தந்தையின் பாக மாறுய்ச் சார்ந்திடு மூவைந் தாண்டுள்.

12. ஜாதகனுடைய சகோதரர் எந்தக் காலத்தில் தனியாகச் செல்லுவார்? அவ்விவரத்தைக் கூறுங்கள். அவர்கள் ஜாதகனுடைய இருபத்தாரும் வயதில் தனியாகச் செல்லுவர். பிற்பாகத்தில் அந்த விவரத்தைச் விரிவாகச் சொல்லுகின்றேரும். ஜாதகனுடைய தந்தையினது சொத்து பதினைந்தாம் வயதுக்குள் ஆறு பாகங்களாகப் பிரிந்து போம்.

ஜாதகனுடைய திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

13. இன்னவன் மணத்தின் காலம் இருபது வாண்டு தன்னில்
தென்மேல்பால் பாரி வாய்க்குஞ் செப்புவோ மவள்கு
[ணத்தைத்
தன்மனங் கவடு மில்லாள் சாற்றுமுன் கோபி யாவள்
துன்குண மில்லா ளாகுந் தோழன்தன் மனத்துக்
[கேத்தோள்.

13. ஜாதகனுடைய திருமணத்தின் காலத்தைச் சொல்லுகின்றேரும். அவனுடைய இருபதாம் வயதில் தென்மேற்குத் திக்கிலிருந்து மனைவி வாய்ப்பாள். அவளுடைய குணத்தை இனிக் கூறுகின்றேரும். கபடமில்லாதவள். முன்கோபி. தீயகுணமில்லாதவள். தன் கணவன் மனப்படி நடப்பவள்.

இதுவுமது

14. அன்னம்போல் நடையு மொக்கும் அன்புள மனத்த
[ளாகும்
அன்னியர் குற்றஞ் சொல்லாள் அடாவடி தன்னில்
[செல்லாள்
அன்னமு மன்பா யீவள் அறிவுளோர் நேயங் கொள்வள்
அன்னியர் மதிக்க வாழ்வள் அடிசிலுக் கினிய ளாகும்.

14. அன்னத்தைப் போன்ற நடையழகுள்ளவள். பிறர்மீது அன்பு செலுத்தும் மனத்தினள். அயலார்மீது குற்றம் கூறுத வள். அடாவடியாகப் பேசாதவள். அன்புடன் அன்னமளிப்பவள். அறிவாளிகளின் நட்பைக் கொள்ளுபவள். பிறர் கொண்டாடும்படி வாழ்வாள். உருசியாகச் சமைப்பதில் வல்லவள்.

இரு தாரமேற்படுதற்குரிய கிரகநிலை

15. மங்கைக்கு வயது தீர்க்க மாமுனி தடுத்துச் சொல்வார்
நங்கைமா ரிருவ ரென்று நவிலுவோம் பால னுக்குச்
சங்கையைச் சொல்லு மென்னச் சனியேழா மிடத்தோ
[னுகிச்
சங்கம்போல் சரத்தில் தங்கத் தனத்துளோன்
[விரையம் புக்க ;

15. அப்பெண் தீர்க்க வயதுடனிருப்பாள். பெரியவராகிய வசிஷ்ட முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுக்கு இரு மனைவியர் ஏற்படுவர் என்று கூறுகின்றோம். அதற்குரிய கார ணத்தைக் கூறுங்கள் என்றுமுனிவர் கேட்க, விடை கூறுகின்றார். சனி ஏழாமிடத்துக்குரியவனுகி சரஸ்தானமாகிய மேஷத்தில் தங்கி யிருப்பதாலும், குடும்பஸ்தானாதிபதியாகிய புதன் விரயஸ்தானமாகிய கடகத்தில் இருப்பதாலும் ;

ஜயமுனிவரின் மறுப்பும் அதற்கு ஆதாரமும்

16. செப்பினேந் தார மிரண்டு ஐயமுனி தடுத்துச் சொல்வார்
ஒப்பாது வந்த வார்த்தை வொன்பதுக் குடையோ
[னிரண்டில்
மெய்ப்புடன் சனியைப் பார்க்க வெள்ளியும் பரிதியேழைத்
தப்பித மின்றிப் பார்க்கத் தனத்தோனைப் பொன்னே
[பார்த்

16. இரு மனைவியரை அடைவான் என்று கூறுகின்றேன் முனிவர் அதை மறுத்துச் சொல்லுகின்றார். நீங்கள் சொல்லும் காரணங்கள் சரியில்லை. ஒன்பதுக்குடையவனைப்போல் திரகாரகனுகிய) அங்காரகன் குடும்பஸ்தானத்தில் நீசனை

அவர் சனியைப் பார்ப்பதாலும், சுக்கிரனும் சூரியனும் ஏழாமிடத்தைப் பார்ப்பதாலும், (குடும்ப ஸ்தானத்தை குரு பார்ப்பதாலும்) இரண்டாமிடமாகிய கன்னிக்குரிய புதனை குரு பார்ப்பதாலும் ;

பார்வதி தேவியின் சமாதானம்

17. ஒருமனை யென்று சொல்வோம் உமையவள் புகலு
[கின்றாள்
இருவர்சொல் சரிதான் கேளும் இவனுக்குப் பாரி
[யொன்று
திருமகன் தனக்கு முன்னே செல்லுவா ளந்தப் பாரி
மறுமனை காணு மகு மக்கால மந்தஞ் சொல்வேன்.

17. மனைவி யொருத்தியே என்று சொல்லுகின்றோம். பார்வதி தேவி கூறுகின்றாள். இருவர் சொல்லும் காரணங்களும் சரிதான். ஜாதகனுக்கு மனைவி ஒருத்திதான் இருப்பாள். அவளும் ஜாதகனுக்கு முன்பு இறந்து விடுவாள். இரண்டாம் திருமணம் செய்து கொள்ளான். மனைவி இறந்துவிடும் காலத்தைக் கடைசியில் கூறுகின்றோம்.

ஜாதகனுடைய புத்திரபாவம்

18. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணுஞ்
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று
[சொல்வோம்
எத்தசைப் பலத்தி னலே யியம்பினீ ரந்தச் சங்கை
சுத்தமாய்ச் சொல்லு மென்னச் செப்புவார் முனிவர்
[தாமும்.

18. ஜாதகனுக்குப் புத்திர விருத்தியுண்டு என்று கூறக் கிரக பலமில்லை. ஒரு சமயம் பிறந்தாலும் அவை நிலையாமல் இறந்துவிடும் என்று சொல்லுகின்றோம். எந்தக் கிரக பலத்தால் அவ்விதம் தோஷமுண்டு என்கிறீர்கள் அவற்றை விவரமாகக் கூறுங்கள் என்று கேட்க, முனிவர் பதில் சொல்லுகின்றார்.

புத்திரதோஷத்திற்குரிய கிரகநிலை

19. அஞ்சினில் ராகு தங்க வஞ்சவ னெட்டி லேறத்
தஞ்சமாய்ச் சுதர்கள் தோஷஞ் சார்ந்தது வென்று
[சொல்வோம்
மிஞ்சின ஜன்மந் தன்னில் மேவிற்று வின்ய நேகம்
வஞ்சனை யென்ன செய்தா னறிவிப்பீர் முனியே கீர்தாம்.

புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடத்தில் ராகு இருப்பதாலும் குரியவன் எட்டாமிடத்தில் இருப்பதாலும் புத்திரர்கட்குத் [illegible]ட்டது. (நல்ல பலனளிக்கும் சுபக்கிரகங்கள் ஆறு, எட்டு

பன்னிரண்டாமிடங்களில் சேர்ந்தால் நல்ல பலனை அளிக்கும்). இது தவிர, முற்பிறவியில் செய்த தீவினைகள் பலவற்றின் பயனாகவும் அவ் விதம் நேரிட்டது. அத்தீவினைகளென்னவென்று, முனிவரே ! தாங்கள் கூறுங்கள்.

ஜாதகனுடைய முற்பிறவி

20. உதித்தவன் பூர்வந் தன்னை உரைக்கிறேன் தாயே கேளுஞ்
சதியிலாக் காஞ்சி கீழ்ப்பால் சார்ந்திடு மூற்றுக் காட்டில்
அதிபனும் வன்னியச் சேயாய் வந்துமே மனைவி மைந்தர்
நிதிமிக வுடையோ னாகி நிமலனும் வாழு நாளில் ;

20. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தாயே ! கேளுங்கள். தீங்குகளில்லாத காஞ்சிபுரத்துக்குக் கிழக்கில் உள்ள ஊற்றுக் காட்டில் வன்னியர் குலத்தவனாகப் பிறந்து மனைவிமக்களை யடைந்து செல்வம் மிகப்பெற்றவனாக வாழ்ந்து வருங்காலத்தில் ;

ஜாதகனது தீவினை வகை

21. அங்ஙகர் மாரி கோஷ்டம் அவன்பூசை செய்து வந்தான்
பின்னமாய் வந்த வூழைப் பேசுவோந் தாயே கேளுங்
கன்னிகை போகந் துய்த்துக் காதலன் போ டாமல்
மாரியின் கோஷ்டஞ் சென்றான் மருவிற்று வதுவோர்
[தோஷம்.

21. ஜாதகன் அவ்வூரிலுள்ள மாரியம்மனுடைய கோவிலில் பூசைகளைச் செய்துவந்த காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லு கின்றேம். தாயே ! கேளுங்கள். சிற்றின்பத்தை அனுபவித்துப் பிறகு போடாமல் அவன் மாரியம்மன் கோவிலுக்குச் சென்றான். அஃது ஒரு தீவினையாயிற்று.

22. நேத்திர மலரைக் கொண்டு நிமலனும் பணிகள் செய்து
வேற்றுமை தருக்கே யீந்தான் மெல்லியுங் காலில்
[பூண்டாள்
கூத்தன்போ லந்தத் தோஷங் குலவிற்று விதுவு மன்றிச்
சேத்திரந் தன்னி லோர்நாள் செம்பாம்பு மகுடங்
[கொண்டு ;

22. அம்மனுக்குச் சாத்தியிருந்த கண்மலரை எடுத்து ஜாதகன் ஆபரணங்களைச்செய்து தன் ஆசைநாயகிக்குக் கொடுத்தான். அவளும் அதைத் தன் காலில் அணிந்துக்கொண்டாள். கொடிய எமன்போல் அத்தோஷம் இவனை யடைந்தது. இதுவல்லாமல் இவனது மனை யில் ஒரு சர்ப்பம் படம் எடுத்து ;

23. திகைத்தது வரங்களுஞ் செய்யத் தண்டினுல் விரட்டும் [போது
பகையான காலநாடு பற்றிற்று வதுவோர் தோஷந்
தகைமையா யந்தி யத்தில் தன்சுத ரில்லா தாயும்
உகமையாய்ச் சுதர்கள் மாண்டு வுள்மனங் கவலை
[கொண்டு;

23. ஆடியது. அதை ஜாதகன் ஒரு தடியால் அடித்தான். அதனுல் அந்தச் சர்ப்பம் இறந்தது. அஃது ஒரு தோஷமாயிற்று. இவன் தன் கடைசிக் காலத்தில் தன் புத்திரர்களை இழந்தும் மனத்தில் சஞ்சலமடைந்தும்;

தீவினைகளின் பயன்

24. காலன்தன் நாட டைந்து களஞ்சனுல் வரையப் பட்டுச்
சாலவே யுதிப்பா னுருக் தங்கிடு மாரி குற்றம்
ஏலவே யிடக்கை யூனம் எழில்முக வடுவு காணும்
ஆலத்தைக் கொன்ற தோஷ மணுகாரே சுதர்கள் தாமே.

24. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறப்பான் என்றேரும். மாரியம்மனுக்குத் தீங்குகளைச் செய்த தோஷத்தால் ஜாதகனுடைய இடதுகை ஊனமாகும். அழகிய முகத்தில் அம்மை வடுக்கள் தோன்றும். சர்ப்பத்தைக் கொன்ற தோஷத்தால் புத்திர பாக்கியமில்லை. (புத்திரர் பிறந்தாலும் நிலையார்).

தீவினை விலகச் சாந்தி

25. வந்ததோர் வினைகள் தீர வறைகுவீர் சாந்தி தானும்
எந்தச்சாந் திகள்செய் தாலும் விலகாது மாரி தோஷம்
வந்தது வந்தே தீரு மால்பணி தோஷத் திற்கு
இந்தவன் சிலையில் நாகஞ் செய்துமே வரசின் கீழே;

25. ஜாதகனுக்கு ஏற்பட்ட தீவினைகள் விலகச் சாந்தியொன்று கூறுங்கள். எந்தச் சாந்திகள் செய்தாலும் மாரியம்மனுக்குச் செய்த தோஷங்கள் நீங்கா. அவை நிச்சயமாக இவனை வந்தடையும். சர்ப்பத்தைக் கொன்ற தோஷத்திற்குச் சாந்தி சொல்லுகின்றேரும். ஜாதகன் கல்லினுல் நாகம்போல் உரு ஒன்று செய்து அதை அரசமரத்தின் கீழே;

26. உத்தரந் திசையில் வைக்க வுரகன்தன் தோஷம் நீங்கி
புத்திர ருதிக்கும் விருத்தி புகன்றதைச் செய்யா னுகில்
பத்தினி புதல்வர் தோஷம் பகர்ந்தனஞ் செய்வா னுகில்
சுத்தமா யாண்பா லொன்று தோகையு மிரண்டு தீர்க்க

வடக்குத் திசையில் (உள்ள ஊரில்) பிரதிஷ்டை செய்த நீங்கிப் புத்திர விருத்தி ஏற்படும். நாங்கள் கூ

படி சாந்தி செய்யாவிடில் மனைவி புத்திரர் இவர்கட்குத் தோஷ முண்டாகும். நாங்கள் சொல்லியவண்ணம் சாந்தி செய்தால் திண்ண மாகப் புத்திரன் ஒருவனும் புத்திரிகள் இருவரும் தோன்றி நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள்.

தாயின் குணங்கள்

27. மாதுரு நற்கு ணத்தாள் வருவோரை யாத ரிப்பள்
தீதிலாள் பொறுமை சாலி தேவியும் வந்த பின்பு
சீதளப் பிறைபோல் யோகஞ் செப்புவோங் குடும்பத் [துக்கு
வேதனை யொருவர்க் கெண்ணாள் மெல்லிநன் நடக்கை [யுள்ளாள்.

27. தாயின் குணங்களைச் சொல்லுகின்றோம். தன்னை யண்டி வந்தவரை ஆதரிப்பாள். தீமைகளில்லாதவள். பொறுமையுடைய வள். இவளை மணந்த பிறகு குளிர்ந்த வளர்பிறைச் சந்திரன்போல் ஜாதகனது குடும்பத்துக்கு யோகம் விருத்தியாகும். ஒருவருக்கும் தீங்குகளைச் செய்ய மனமில்லாதவள். நன்னடத்தையையுடையவள்.

தாயின் சகோதரபாவமும், முற்பிறவியும்

28. தன்துணை யாண்பா லிரண்டு சத்திமார் நால்வர் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பேதையில் சனியின் கோணம்
அன்னவள் பூர்வஞ் சொல்வேன் அழகர்வாழ் நாட்டி [லேதான்
துன்னவர் குலமு தித்துத் தன்வரன் மதலை யுண்டாய்;

28. ஜாதகனின் தாய்க்கு இரு சகோதரர்களும் நான்கு சகோதரி களும் உள்ளனர். அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். மற்றும் தோன்றுபவர் நிலையார். அவள் வீடு வடகிழக்கு மூலையில் உள்ளது. ஜாதகனின் தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். அழகர் பிரான் எழுந்தருளியுள்ள பாண்டிய நாட்டில் மறவர் குலத்தில் பிறந்து கணவன் புத்திரர் இவர்களை யடைந்து;

29. அறமதி லிச்சை யுண்டாய் அரன்பூசைக் காவின் பாலை
யொருமன மாக வீந்து வுயர்வோர்க்குத் தாகந் தந்து
மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமகள் விலாச வம்சம் தேவியு முதித்தா ளென்றோம்.

29. தருமம் செய்வதில் விருப்பமுண்டாகி வாழ்ந்து காலத்தில் சிவபெருமானுக்கு அபிஷேகத்துக்கும் பூஜைக்கும் பாலை நல்ல மனத்துடன் அளித்து வந்தும் உயர்ந்தவர்கட்கு ங்கும் தானதிகளைக் கொடுத்தும் வாழ்ந்திருந்து பிறகு மரணமை

டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு லக்ஷ்மீகடாட்சம் பெற்ற (வேளாளர்) குலத்தவளாகப் பிறந்தாள் என்றேரும்.

தாயின் மறுபிறவியும் மரணகாலமும்

30. மறுஜன்மந் துவாரை தன்னில்
வருவளாஞ் சைவச் சேயாய்ப்
பெருகிதி யுடைய ளாகிப்
பேதையும் வாழ்வா ளாகும்
உரைக்கிறேங் கரும காலம்
உதித்தவன் பதினே ழாண்டில்
மறலியின் பதிக்கு வன்னை
வருவளா மென்று சொல்வோம்.

30. தாய் மறுபிறவியில் துவாரகையில் சைவ குலத்தவளாகப் பிறப்பாள். பெருஞ் செல்வத்தை யுடையவளாகி வாழ்ந்து வருவாள். அவளுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றேரும். ஜாதகனுடைய பதினேழாம் வயதில் தாய் மரணமடைவாள்.

தந்தையின் இறுதிக்காலமும் மறுபிறவியும்

31. அரவுதன் தசைக்கா லத்தில் [1]அந்தணன் புக்தி யாகும்
பெறுந்தந்தை தமக்குச் சொல்வோம் பாரிய விருபா
[னேழில்
அரவுதன் தசைக்கா லத்தில் [2]அலரியின் புக்தி யாகும்
மறுஜன்மம் வள்ளூர் தன்னில் வருவனுஞ் சத்ரியச்
[சேயாய்.

31. அக்காலம் ராகு மகாதசையில் குரு புக்தி நடைபெறும். இவனைப் பெற்ற தந்தை ஜாதகனின் இருபத்தேழாம் வயதில், ராகு மகாதசையில் சூரிய புக்தியில் மரணமடைவான். தந்தை மறு பிறவியில் திருவள்ளூரில் சத்திரிய குலத்தவனுகப் பிறப்பான் என்றேரும்.

ஜாதகன் மனைவி இவர்கள் மரணகாலமும் மறுபிறவியும்

32. பாரியு மன்பா னுன்கா மாண்டினில் மரண மாகும்
மாரணு மறுபா னுன்பான் மார்கழி மாதந் தன்னில்
சேருவரன் கர்ல நாடு செப்புவோ மிவன்பின் ஜன்மம்
ரிய வரங்கந் தன்னில் பிறப்பனு மறைக்கு லத்தில்.

32. ஜாதகன் ஐம்பத்துநான்காம் வயதில் மனைவி மரணமடைவாள். அவன் தனது அறுபத்தொன்பதாம் வயதில் மார்கழி மாதத்தில் மரணமடைவான். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். பெரிய ஊராகிய திருவரங்கத்தில் அந்தணர் குலத்தவனாகத் தோன்றுவான்.

33. இந்ததோர் ஜன்மந் தன்னில் இவன்சில வினைகள்
[செய்தான்
முந்தின குலமெவ் வாறு வுதிக்குங்கா ரணங்க ளெவ்வாறு
அந்தவ னிச்சென் மத்தில் அறமதி லிச்சை யுண்டாய்ச்
சந்ததஞ் சிலரா பத்தைத் தானவன் காத்த லாலும்;

33. ஜாதகன் இப்பிறவியில் சில தீய காரியங்களைச் செய்தவனாக விருந்தும் மறுபிறவியில் அந்தணர் குடியில் தோன்றும் வண்ணம் யாது? முனிவர்களே! சொல்லுங்கள். ஜாதகன் இப்பிறவியில் தர்மம் செய்வதில் விருப்பமுள்ளவனாகியும், சிலருடைய ஆபத்தைக் காத்து வந்ததாலும்;

34. தேவதாத் தலங்கள் சென்றுந் தேறினோர்க் கன்ன
[மீந்தும்
பாவலன் வாழ்வ தாலே பிறப்பது மறைக்கு லத்தில்
மேவுங்கால் சகடு நாளில் வெண்மதி தசையி ருப்புத்
தாவிய வாண்டு வைந்துந் திங்களு மாற தாகும்.

34 பல தெய்வாலயங்கள் உள்ள புண்ணிய தலங்களுக்குச் சென்று வந்ததாலும், முற்றுமுணர்ந்த துறவிகட்கு அன்னமளித்து வாழ்ந்து வந்ததாலும், அடுத்த பிறவியில் அந்தணர் குலத்தில் பிறப்பான். ஜாதகனது ஜனனகாலத்தில் ரோகிணி நட்சத்திரம் (இரண்டாம் பாதம்) அப்போது சந்திர மகாதசை யிருப்பு ஐந்து வருடங்களும் ஆறு மாதங்களும் மீதமாம்.

35. வந்தவன் யோகச் சேதி யறைகிறே மினிமே லாகச்
செந்திரு கடாட்ச மோங்குஞ் செட்டுக்கள் பலவாய்ச்
[செய்வன்
இந்திர போக மேற்பன் எழில்பூமி விருத்தி யென்றோர்க்
தன்தனம் புதையல் வைப்பன் [1]சிகண்டியின் தசையி
[லேதான்;

35. ஜாதகனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றோம். லட்சுமிகடாட்சம் பெருகும். பலவிதமான தொழில்களைச் செய்வான்.

---

1. குரு

இந்திரபோகத்தை அடைவான். செழிப்புள்ள பூமி விருத்தியாகும். இவன் சம்பாதித்த பொருளைப் பூமியில் புதைத்து வைப்பான். குரு மகாதசையில் ;

36. பலஜன வசியங் கொள்வன் பஞ்சணை மெத்தை யுண்டு
நிலையிலார் தம்மைக் காப்பன் நேர்ந்திடுஞ் சகடு தானுந்
தலவாசஞ் செல்வா னுகுந் திருப்பணி வேலை செய்வன்
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன் றுவே.

36. பல ஜனங்களின் அன்பைப் பெறுவான். (பல பேரைத் தன் வயப்படுத்துவான்.) பஞ்சு மெத்தைகள் உள்ளவன். வீடு களில்லாத ஏழைகளைக் காப்பவன். வண்டி முதலான வாகனங்களை வைத்திருப்பவன். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். ஆலயத் திருப்பணிகளைச் செய்து வருவான். மலையரசனுகிய இமவானின் மகளே ! நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகம் 52

1. பொன்மதி புதனுஞ் சீயம் புகர்கண்டு காரி வீணை
கன்னியில் பரிதி ராகு கேதுவு மீன மாகத்
துன்குஜன் கோல தாக ஜன்மமுஞ் சீய மாகப்
பன்னுவீர் பலனை நீங்கள் பராசரும் புகலு கின்றார்.

1. குரு சந்திரன் புதன் சிம்மத்திலும், சுக்கிரன் கடகத்திலும், சனி மிதுனத்திலும், சூரியன் ராகு கன்னியிலும், கேது மீனத்திலும், செவ்வாய் துலாத்திலும் நின்று இலக்கினம் சிம்மமாக இருந்தால் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி வினவ, பராசர முனிவர் கூறுகின்றார்.

கிரகநிலை

கேது			சனி
	இராசி சக்கரம்		சுக்கிரன்
			லக்கினம் குரு சந்திரன் புதன்
		செவ்வாய்	சூரியன் ராகு

ஜாதகனின் வீட்டுநிலை

2. இந்தசே யாணுஞ் ஜன்மம் இல்லமுங் கீழ்மேல் வீதி
தென்வாடை தந்தி மேற்கில் தேவிமா காளி தங்கும்
முந்திய மார்க்க முத்திர முயன்றனஞ் சிறுவூர் தன்னில்
வந்தவ னிரண்டாஞ் ஜன்மம் வர்க்கமோ கோகு லத்தில்;

2. இஃது ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு வரிசையில் உள்ளது. மேற்குத்திக்கில் விநாயகர் ஆலயமும் காளி கோவிலுமுண்டு. பெரியதொரு சாலை வடக்குத்திக்கிலுமாக உள்ள சிற்றூரில் ஜாதகன் தன் தந்தைக்கு இரண்டாமவனாக, ஆயர் குடியில்;

3. உதிப்பவ மன்னை தந்தை யுறுந்துணை யோகந் தானும்
மதிமுக மனைவி மைந்தர் வந்தவன் யோகச் சேதி
சதியிலா முன்பின் ஜன்மஞ் சாற்றுவோ மிந்நூல்,

அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே சே

3. பிறப்பான். ஜாதகனுடைய தாய் தந்தையர் உடன்பிறந்தவர் அழகிய மனைவி, புத்திரபாக்கியம் இவர்களுடைய யோகங்கள் முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேம். கதியற்றவரைக் காக்கும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய தந்தையின் சகோதர பாவம்

4. தந்தையின் தூணயாண் தோஷஞ் சத்திமா ரவ்வா
[ரென்றேரும்
பிந்தியுஞ் சிலவே சேதம் பேசுவோம் பின்பால் சேதி
எந்தையே பிதாகு ணத்தை யியம்புவோ மாஞ்சி வப்பன்
சந்தத முணைச்சல் தேகி சத்தான பொருளு மிட்டன்.

4. ஜாதகனுடைய தந்தையின் சகோதர சகோதரிகளுக்குத் தோஷமுண்டு என்று சொல்லுகின்றேம். ஜாதகனுடைய தந்தைக்குப் பின் பிறந்த சகோதரரும் நிலையில்லாதவர். தாயே! தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றேம். மாநிறமுடையவன். மெல்லிய சரீர முடையவன். புஷ்டியுள்ள ஆகாரங்களைச் சாப்பிடுவதில் பிரிய முள்ளவன்.

இது முதல் நான்கு பாடல்களில் ஜாதகனின் தந்தையின் குணங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன

5. ஞானநூ லறிவா னுகும் நற்கிராமச் செட்டுச் செய்வன்
தானமுந் தரும மிச்சை தரணியை விருத்தி செய்வன்
ஈனரை யுறவு கொள்ளான் எடுத்தகா ரியமு டிப்பன்
ஆனவர் நேசங் கொள்வன் ஆடுமா டுடைய னுமே.

5. வேதாந்த நூல்களைக் கற்றறிந்தவன். கிராம வியாபாரத்தைச் செய்து வருவான். தான தருமங்களைச் செய்வதில் பிரியமுடையவன். விளைநிலங்களைப் பெருக்குவான். அற்பர்களுடைய சினேகத்தைக் கொள்ளாதவன். தான் எடுத்த வேலையை வெற்றியுடன் செய்து முடிப்பவன். பெரியோர்களுடைய நட்பைக் கொள்ளுபவன். கால் நடைகளின் பெருக்கத்தை யுடையவன்.

6. தந்தமும் பெரிதாய்க் காட்டுந் தரணியை விருத்தி
[செய்வன்
விந்தையா யில்லஞ் செய்வன் விருந்தினர்ப் பிரிய னுகும்
வந்தவர்க் கன்ன மீவன் மர்மநூ லறிவா னுகும்
முன்திருப் பணியுஞ் செய்வ னுயர்வான குடும்ப
[மேற்பன்.

பற்கள் பெரியனவாகத் தெரியும். விளைநிலங்களைப்
ன். அழகாகவும் அதிசயிக்கும்படியாகவுமுள்ள வீட்டைக்

கட்டுபவன் விருந்தாளிகளிடத்தில் பிரியமுடையவன். அண்டி வந்த வர்கட்கு அமுது படைப்பவன். இரகசிய நூலை யறிந்தவன். பெரிய ஆலயத் திருப்பணியைச் செய்து வருவான். உயர்ந்த குடும்பத்தை அடைவான்.

பத்மரேகை

7. ஜனசகா யங்கள் செய்வன் செய்ந்நன்றி மறவா ஞகும்
இனமதிப் புடையா ஞகும் இடரென்றோர்க் குதவி
[செய்வன்
வினையதை யொருவர்க் கெண்ணுன் வீண்பழி யேற்கா
[ஞகும்
பணையோர்கள் விருத்தி யுண்டு பங்கய ரேகை யுண்டு.

7. ஜனங்களுக்கு உபகாரங்களைச் செய்து வருவான். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். பந்து ஜனங்களால் கொண்டாட்டப்படுவான் துன்பமடைந்தவரைக் காப்பான். ஒருவருக்கும் தீங்கு செய்ய எண்ணுதவன். வீணபவாதங்களை அடையாதவன். மிகுந்த பண்ணை ஏர்களை யுடையவன். கையில் பத்மரேகையை யுடையவன்.

8. போஜன வறுமை காணுன் பொய்யது வழுத்தா நெஞ்சம்
வாசியோ கங்கள் செய்வன் மாற்றூன வசித்தே
[வெல்வன்
காசுகள் செலவு செய்வன் கல்விமான் பொறுமை சாலி
தூசுபோல் மனத்த ஞகுஞ் சுகதுக்க மிரண்டு மூண்டு.

8. சாப்பாட்டுக்குத் தரித்திரமில்லாதவன். பொய்யைப் பேசாதவன். யோகாசனங்களைச் செய்து வருவான். விரோதிகளை அடுத்தே யிருந்து ஜயிப்பான். பணம் காசுகளைச் செலவழிக்கத் தயங்காதவன். கல்வி யறிவுடையவன். பொறுமையுள்ளவன். தூய்மையான மனத்தினன். சுகதுக்கம் இரண்டும் கலந்த வாழ்க்கையை யுடையவன்.

ஜாதகனின் குணங்கள்

9. இந்நெறி யுடையா னுக்கு விவனுமே வுதிப்பா ஞகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அவனிரு நிறத்த
[ஞகுந்
தன்சொல்லு மடக்க முண்டு தரணியை விருத்தி
[செய்வன்
பின்னமில் லாத தேகி பேதையர் மோக னவன்.

9. இவ்விதம் கூறப்பட்ட குணங்களை யுடையவனுக்கு ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணத்தைக் கூறுகின்றோம்— கலந்த சிவப்பு நிறமுள்ளவன். அடக்கமாகப் பேசுபவன்

நிலங்களைப் பெருக்குவான். ஊனமில்லாத சரீரத்தையுடையவன். பெண்கள்மீது மையல் கொள்ளுபவன்.

இதுவுமது

10. முன்கோபம் பின்பு சாந்த மூர்க்கமுங் கொஞ்ச முண்டு
பன்னுவான் சமமாங் கல்வி பரிந்துப சாரஞ் செய்வன்
அன்னியர்க் குதவி செய்வன் அவன்கர முருத்திர ரேகை
பொன்பணி பின்னல் சேர்ப்பன் புகழ்ந்தோரை யாத
[ரிப்பன்.

10. முன்கோபமுடையவன். பிறகு விரைவில் சாந்தமடைவான். சிறிது மூர்க்க குணமுமுள்ளவன். சமமான கல்வியறிவுள்ளவன். பரிவுடன் உபசாரம் செய்து வருவான். பிறருக்கு உபகாரி. கையில் உருத்திர ரேகையுள்ளவன். பொன் ஆபரணங்களைப் பின்னல் சேர்ப்பான். தன்னைத் துதிசெய்தவரை ஆதரிப்பான்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

11. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ முன்பெண்
[ணொன்று
நவனியி லிளையார் மூன்று நாயகி யொன்று வென்றும்
அவர்சேதி பின்பால் சொல்வேன் அறைகிறே
[மணத்தின் காலந்
தவசியே யீரெட் டாண்டில் தாய்துணை மகள்கீழ்ப்பாலில்;

11. ஜாதகனுடைய சகோதரரைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவனுக்கு மூத்த சகோதரி யொருத்தியுண்டு. இளைய சகோதரர்கள் மூவரும் சகோதரி யொருத்தியும் ஆக நால்வர் உளர் என்று சொல்லுகின்றோம். அவர்களுடைய செய்தியைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். ஜாதகனுடைய திருமணக்காலத்தை யுரைக்கின்றோம். தாயே! ஜாதகனுடைவ பதினாறும் வயதில் தன் தாயின் சகோதரனின் புத்திரி கிழக்குப் பக்கத்திலிருந்து;

ஜாதகனின் மனைவியின் இயல்புகள்

12. வருவளாங் குணத்தைச் சொல்வேன்
மாநிறஞ் சமதே கத்தோள்
குறையென்றோர்க் குதவி செய்வள்
புஞ்சிரிப் புடைய ளாகும்
விரதங்கள் பூண்பா ளாகு
மெல்லிநன் னடக்கை யுள்ளாள்
நுமையாய்க் குடும்ப மேற்பள்
மிழையது வெவர்க்கு மெண்ணுள்.

12. வருவாள் என்றேரும். அவளுடைய குணத்தைச் சொல்லு கின்றேரும். மாநிறமுடையவள். சமமான சரீர அமைப்புள்ளவள். துன்ப மடைந்தவர்கட்கு உதவி செய்வாள். புன்சிரிப்புடையவள். விரதங்களை ஏற்பாள். நன்னடத்தை யுடையவள். பெருமையான குடும்பத்தை அடைவாள். ஒருவருக்கும் தீங்குகளை விளைவிக்க எண்ணுதவள்.

புத்திரபாவமும், ஜாதகனின் தாயின் விவரமும்

13. புத்திரர் நவமே தோன்றும் போகிடுஞ் சிலவே
[யென்றேஞ்
சுத்தமா யாண்பா லிரண்டு தோகையு மூவர் தீர்க்கம்
பத்தினி யன்னை சேதி பகருவோ மால்கி றத்தாள்
வித்தகி யோக சாலி வீண்வம்பில் செல்லா ளாகும்.

13. ஜாதகனுக்கு ஒன்பது குழந்தைகள் தோன்றும். அவை களில் சில நிலையாமல் இறந்துவிடும். திண்ணமாக இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். ஜாதகனுடைய தாயின் செய்தியைக் கூறுகின்றேரும். அவள் திருமாலின் நிறந்தைப் போன்று கருமையான நிறமுள்ளவள். அவள் அதிஷ்டமுள்ளவள். வீண் வம்புக்குச் செல்லாதவள்.

ஜாதகனின் தாயின் குணங்கள்

14. வரன்மனம் போலே வாழ்வள் வருவோரை யாத ரிப்பள்
கரைமனம் பொறுமை சாலி கலிகளைத் தீர்ப்பா ளாகுந்
திருநிலாக் குணத்த ளாகுஞ் சீலியாந் தெய்வ பக்தி
மருமமுங் கொஞ்ச முண்டு மருவிடுஞ் சூலை வாயு.

14. தன்னுடைய கணவனின் மனமறிந்து வாழ்ந்து வருவாள். தன்னையண்டி வந்தவரை ஆதரித்து வருவாள். இளகிய மனமுடை யவள். பொறுமையுடையவள். துன்பங்களைத் தீர்ப்பாள். தீங்குக ளில்லாத குணத்தினள். நல்லொழுக்கமுள்ளவள். தெய்வபக்தி யுடையவள். சிறிது இரகசியமுடையவள். சூலை நோயுள்ளவள்.

15. இல்லமு மலைச்ச லாகும் இவள்துணை யாண்பா லொன்று
வல்லியு மவ்வா ருகு மாதுலன் நிலையை விட்டுச்
செல்லுவான் கீழ்ப்பா லாகச் சேருங்கா ரணங்க
[ளெவ்வாறு
தல்லியின் தானத் தோனுஞ் சேயாகி மூன்றில் தங்கப்

15. வீட்டில் துன்பங்க ளதிகமுள்ளவள். இவளுக்கு தரன் ஒருவனும் சகோதரி யொருத்தியும் உண்டு. (தாயினுடைய) சகோதரன் தன் சொந்த வீட்டை விட்டு

பக்கத்தில் செல்லுவான். அங்ஙனம் போவதற்குரிய காரணங்க ளென்ன? சொல்லுங்கள். மாதுர்ஸ்தானாதிபதியாகிய அங்காரகன் மூன்றுமிடத்திலிருப்பதாலும்;

தாயின் முற்பிறவி

16. மதிக்குமே குடும்பம் ராகு மருவின பலத்தி னுலே
அதமாகுஞ் ஜனித்த வில்லம் அன்னையின் பூர்வங் கேளாய்
நதிவோரம் நவபா ஷாணம் நன்னகர் தன்னி லேதான்
சதியிலா வன்னியச் சேயாய் ஜனித்துமே வறுமை யின்றி;

16. சந்திரனிருக்குமிடத்துக்கு இரண்டாமிடத்தில் ராகு இருக் கும் பலத்தாலும் ஜாதகனுடைய தாய்மாமன் பிறந்த வீடு அழிந்து போம். ஜாதகனின் தாயின் முற்பிறவியைக் கேளுங்கள். நதியோரத் தில் (சமுத்திரக்கரையில்) இருக்கும் நவபாஷாணமென்ற அழகிய நகரில் தீங்குகளில்லாத வன்னிய குலத்தில் பிறந்து தரித்திரமில்லாமல்;

17. அதிதிகட் கன்ன மீந்து வச்சென்மம் பவமில் லாமல்
சதிசெய்யுங் கால நாடு சேர்ந்துமே பிரம னிலக்கம்
இதுகுல முதித்தா ளாகும் இடரான புத்தி யில்லாள்
அதிபதி பின்ஜன் மத்தை யறைகிறே மினிமே லாக.

17. துறவிகட்கன்னமளித்து வந்தும் அப்பிறவியில் தீய காரியங் களில்லாமலும் வாழ்ந்து, மரண மடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் இக்குலத்தில் பிறந்தாள். தீங்குகளில் லாத மனமுள்ளவள். இனிமேல் அவளுடைய மறுபிறவியைச் கின்றோம்.

தாயின் மறுபிறவி

18. உத்தரம் வேங்க டத்துள் உதிப்பாளங் [1]கர்ம சேயாய்
அத்திரி தடுத்துச் சொல்வார் அவளுமிச் சென்மந்
[தன்னில்
பெத்தபுண் ணியங்க ளென்னப் பேசுவீ ரந்தச் சங்கை
குத்தத்தை யெண்ணு ளாயுங் குறையென்றோர்க் குதவி
[செய்தும்;

18. வடக்குப் பக்கத்திலுள்ள திருவேங்கடத்தில் அந்தணர் குலத்தவளாகப் பிறப்பாள் என்றார். அத்திரி முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். அவள் இப்பிறவியில் செய்த புண்ணியச் செயல்கள் [ளை] கூறுங்கள், முனிவரே! பிறருடைய குற்றத்தைப் பார்ராட்டா வீர்பமடைந்தவர்கட்கு உதவி செய்துவந்தும்;

---

[1] கர்மாதிகளைத் தவறாது செய்ய வேண்டிய அந்தணர்.

19. தேவதாப் பத்தி யாயுஞ் செய்ந்நன்றி மறவாத் தாலும்
நாவது சுத்த மாயும் நாயகன் மனம்போல் வாழ்த்தும்
பாவையும் வாழ்வ தாலே பிறப்பளாம் பிரம்ம சேயாய்
ஆவலாய்ப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

19. தெய்வ பக்தியுள்ளவளாயும் பிறர் செய்த உபகாரங்களை மறவாமலும்; வாக்குத் தவறுமலும், தன் கணவன் மனம்போல் வாழ்ந்து வந்ததாலும், அந்தணர் குலத்தவளாகப் பிறந்து வாழ்வாள். இறைவனை விரும்பிப் பூசைசெய்து வரும் தேவியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

20. தந்தையின் பூர்வந் தன்னைச் சாற்றுவோம் பழனி [நாட்டில்
வந்தன னிரட்டி வம்சம் வளமுள குடும்பி யாகி
முந்திலை ரதிதி தொண்டு முயன்றுப தேசம் பெற்று
நொந்தவர்க் கன்ன மீந்து நிமலனுஞ் சுகமாய் வாழ்ந்து;

20. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். பழனி க்ஷேத்திரத்தில் செட்டியார் மரபில் பிறந்து செழிப்புள்ள குடும்பத்தை யடைந்து, பெரியோர்கட்கும் கதியற்றவர்கட்கும் தொண்டுகளைச்செய்து அவரது உபதேசங்களைப் பெற்று, துன்பமடைந்தவர்கட்கு அன்னமளித்து வந்து சௌக்கியமுடன் வாழ்ந்து;

ஜாதகன் குலம்

21. பண்டிதம் பலவாய்ச் செய்து பறந்தனன் கால நாடு
[1]மூண்டக முதித்தோ னிலக்க மேதினில் வரையப் பட்டு
எண்டிசைப் புகழு கின்ற யாதவ குலமு தித்தான்
தண்டமிழ் நூணுக்கந் தேர்வன் முனியுப தேசங் [கேட்பன்.

21. பலவிதமான வைத்தியங்களை செய்தும் மரண மடைந்தான். மீண்டும் தாமரைப் புஷ்பத்தில் பிறந்தவராகிய பிரமதேவனால் படைக்கப் பட்டு எட்டுத்திக்குகளிலும் புகழ்பெற்ற யாதவ குலத்தில் பிறந்தான். நல்ல தமிழிலுள்ள நூட்பங்களை அறிந்தவன். தவம் செய்பவருடைய உபதேசங்களைக் கேட்பவன்.

22. அதற்குப்பின் வகார வேலை யறிவனுந் தடாக வேலை
எதுகாலஞ் சொல்லு மென்ன வெழுமூன்று வாண்டு [மேலாய்ப்
பதியினி லதிதி வந்து பண்ணுவான் வகாரந் தானும்
மதிசொல்வ னவனால் மேன்மை மனக்கிலே சங்கள் நீங்கும்

1. தாமரை

22. அதற்குப் பின் மந்திரோபதேசஞ் செய்யும் திறமையை அறிவான். திருக்குளம் அமைக்கும் வேலையையும் செய்வான். அவை எந்தக்காலத்தில் செய்யப்படும் கூறுங்கள். ஜாதகனுடைய இருபத்தோராம் வயதுக்கு மேல் இவனுடைய வீட்டில் அதிதியாக ஒரு பெரியவர் வந்து மந்திரோப தேசங்களையும் இதோபதேசங்களையும் செய்வார். அவருடைய வார்த்தைகளைக் கேட்டு மேன்மையையடைவான். மனத்திலுள்ள கவலைகள் விலகும்.

23. யோகமு மையைந் தின்மே லுறைந்திடு மவனு லேதான்
ஆகம நுணுக்கத் தாலே யறைகிறேரும் பின்பால் சேதி
பாகமா யிவன்பின் ஜன்மம் பிரயாகையில் பிரம்ம சேயாய்
ஏகமூர்த் தியைப்பூ சித்து ஏகுவான் தேவ னுக.

23. இருபத்தைந்தாம் வயதுக்குமேல் அவனுல் கௌகரியங்கள் கிட்டும். வேதாகமங்களில் கூறப்பட்ட ரகசியங்களை யறிந்து மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுகின்றேரும் தந்தையின் மறுபிறவியை இனிக் கூறுகின்றேரும். பிரயாகையில் அந்தண குலத்தவனுகப் பிறந்து அங்குள்ள இறைவனுக்குப் பூஜை செய்து கடைசியில் தேவனுவான்.

ஜாதகனின் முற்பிறவி

24. பாலகன் பூர்வந் தன்னைப் பகருவோ மிலங்கை நாட்டில்
சாலவே வன்னியச் சேயாய் ஜனித்துமே வரசர் பக்கல்
வேலையுஞ் செய்து வந்து மிகுதன மவனுல் பெற்றுச்
சீலமாஞ் சேதுக் கேகிச் சென்றனன் பேதி யாலே.

24. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். இலங்கைத் தீவில் வன்னிய குலத்தவனுகப் பிறந்து அரசாங்க உத்தியோகத்தை ஏற்று வாழ்ந்து அரசரால் பெருஞ் செல்வத்தைப் பெற்று நல்ல கதியைத்தரும் சேதுவுக்குச் சென்று அங்குப் பேதியால் மரண மடைந்து ;

ஜாதகனின் யோகங்கள்

25. வேதத்தோன் வரையப் பட்டு விளங்கினு னிக்கு லத்தில்
ஒதுவே னிவனின் யோகம் உதித்தகாள் முதலே யாக
மேதினி லீரா ருண்டு மேன்மையாய்க் குடும்ப மெய்தும்
போதனங் காலி சாலி புகழ்பெறு மூண்டாம் மேன்மை.

25. வேத மறிந்த பிரமனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். இவனுடைய பொதுயோகத்தைக் கூறுகின்றேரும். ஜாதகன் தோன்றிய நாள்முதல் பன்னிரண்டாம் வயது வரையில் குடும்பம் மேன்மையாக விருக்கும். பெரிய தனம் கிட்டும். கால்நடைகள் பயிர்கள் இவை பெருகும். கீர்த்தியைப் பெறுவான். மேன்மையையடைவான்.

இதுவுமது

26. அதற்குமேல் மூவே ழாண்டு மலைதுரும் பதுபோல்
[நெஞ்சங்
குதர்க்கமாங் காலி சாலி கூறுவோஞ் சல்லியப் பாதை
விதவித நஷ்ட மெய்துங் விளம்புவோ முத்தர பாகஞ்
சதியிலா வதன்மே லாகச் சந்திரன் பிறைபோல்
[யோகம்.

26, அதற்கு மேல் இருபத்தோராம் வயது வரையில் நீரின் மேலுள்ள துரும்பைப் போல் நிலையின்றிச் சஞ்சலப்படும் மனத்துடன் வாழ்வான். கால் நடைகளும் பயிர்களும் சேதமடையும். துன்பமடையும் வழியில் செல்வான். விதவிதமான நஷ்டங்கள் ஏற்படும். மற்றவற்றைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். தீங்குகளில்லாமல் அதற்குமேல் (இருபத்தோராம் வயதுக்குப் பிறகு) வளர்பிறைச் சந்திரன் போல் விருத்தியாம்.

இதுவுமது

27. சல்லிய மில்லா வாழ்வன் தானியப் பெருக்க முண்டு
நல்லவர் நேச மெய்தும் ராஜபூ ஜிதமே யாகும்
எல்லைகள் சேர்த்த லுண்டு எழில்திருப் பணிகள் செய்து
தலவில்லம் வேறு செய்த லிவன்சொல்லு மேன்மை
[யாதல்.

27. துன்பங்கள் (கடனுபத்ரவம்) இல்லாமல் வாழ்ந்து வருவான். தானிய விருத்தியுண்டு. நல்லவருடைய சிநேகம் கிட்டும். ராஜாங்க மதிப்பைப் பெறுவான். புதிய நிலங்கள் சேரும். அழகிய ஆலயத்திருப்பணிகளைச் செய்வான். புதிய வீட்டைக் கட்டுவான். இவனுடைய வார்த்தைகள் மதிப்புள்ளவையாகும்.

ஜாதகனின் யோகமும் தந்தையின் மரணகாலமும்

28. அதுமுதல் மரண மட்டும் அற்புதன் தனக்கு யோகம்
நதிபூமி பணிகள் தான்யம் நேர்ந்திடுங் காலாள் சேர்க்கை
அதிபனுக் காறஞ் சின்மேல் வரைகிறேந் தந்தை கண்டம்
உதையத்தோன் தசையே யாகும் உயர்புதன் புக்தி
[யாகும்.

28. அந்தக்காலம் முதல் ஜாதகனுடைய கடைசிக் காலம் வரையில் ஜாதனுக்கு யோகம் விருத்தியாகும். நீர்நில பூமிகள் விளை நிலங்கள் ஆபரணங்கள் தான்யங்கள் இவை பெருகும். ஏவலாட்கள்

சேருவார்கள். ஜாதகனுடைய முப்பதாம் வயதுக்குமேல் தந்தை மரண மடைவான். சூரிய மகாதசையில் புதபுக்தியில் அஃது ஏற்படும்.

தாயின் மரணமும் ஜாதகனின் மரண காலமும்

29. அதற்குமே லுந்தா மாண்டில் அன்னைக்குக் கண்ட
[மெய்தும்
உதித்தவன் தனக்குச் சொல்வேன் உயர்குரு தசையே
[யாகும்
மதுகால மெழுப தாண்டில் மீனமா தத்தி லேதான்
சதியான கால நாடு சாருவா னிந்தப் பாலன்.

29. அதற்குப் பிறகு ஐந்து வருடங்களில் தாய் மரண மடைவாள். ஜாதகன் மரண காலத்தைக் கூறுகின்றோம். அது குருமகாதசையில் நடைபெறும். ஜாதகன் தனது எழுபதாம் வயதில் பங்குனி மாதத்தில் மரண மடைவான்.

ஜாதகனுடைய மறுபிறவி

30. மறுஜன்ம மவ்வூர் மேற்கில் மன்னவர்வாழ் நகரந்
[தன்னில்
உறைவனுஞ் சைவச் சேயா யோங்கின குடும்பி யாகித்
திருமகள் வாசம் பெற்றுச் செல்வனும் வாழ்வா னுகும்
பெருவயி றோனப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

30. மறு பிறவியில் அவ்வூருக்கு மேற்கில் அரசர்கள் வாழ்ந்து வரும் நகரத்தில் சைவ குலத்தவனாகப் பிறந்து செழிப்புள்ள குடும்ப முடையவனாகி லட்சுமீகடாட்சம் பெற்று வாழ்ந்து வருவான். பெரிய வயிற்றையுடைய விநாயகனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

ஜாதகன் ஜனனகால தசையும் பலனும்

31. மன்னவன் ஜனிக்குங் கால மகமுதற் காலே யாகுந்
துன்கேது தசையி ருப்புச் சொல்லுவே னுண்டு வாறும்
பின்துணை விருத்தி யாகும் பலமன யில்லஞ் செய்வன்
உன்னதப் புகழு மோங்கும் உயர்திருப் பணியுஞ்செய்வன்.

31. ஜாதகனுடைய ஜனன காலத்தில் மகநட்சத்திரம் முதற் பாதமாகும். தீங்குதரும் கேதுமகாதசையில் செல்லுப் போக மீதி யிருப்பு ஆறு வருடங்கள் ஆகும். அக்காலத்தில் சகோதர விருத்தி யுண்டு. அழகிய பலம் பொருந்திய வீட்டைக் கட்டுவான். உயர்ந்த கீர்த்தி விருத்தியாகும். ஆலயத்திருப்பணிகளைச் செய்வான்.

32. சந்திரன் போலே யோகஞ் சதுஷ்பாதம் விருத்தி
வந்தவர்க் கன்ன மீவன் விளைநிலங் காலாள் விருத்தி
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விவர மாகச்
சுந்திர வதனத் தாளே சாற்றினேம் பூர்வ பாகம்.

32. வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் பெருகும். கால் டி சுள் விருத்தியாகும். அண்டி வந்தவர்கட்கு அன்னமளிப்பான். விளை நிலங்களும் கால்நடைகளும் பெருகும். மற்ற விஷயங்களைப் பிற் பாகத்தில் விவரமாகக் கூறுகின்றேம். அழகிய முகத்தையுடைய வளே! இதுவரை முதற்பாகத்தைச் சொன்னேம்.

ஜாதகம் 53

அரியது ஜன்ம மாக அம்புலி புகரும் தங்கக்
கரியவன் கேது வைந்தில் குஜனுமே யிரண்டில் தங்கக்
ராகு லாப மேறக் கூரியன் பரிதீ ராறில்
வராகுவீர் பலனை யென்று மங்கையும் கேட்க லுற்றாள்.

1. சிம்மம் லக்கினமாகவும், அதில் சந்திரனும் சுக்கிரனும் தங்கியிருக்க, சனி கேது தனுசிலும், செவ்வாய் இரண்டாமிடமாகிய கன்னியிலும், குரு ராகு லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், புதன் சூரியன் கடகத்திலுமாக நிற்பின் பலன் என்ன வென்று கூறுங்கள் எனப் பார்வதி வினவலானாள்.

கிரகநிலை

			குரு ராகு
	இராசி சக்கரம்		புதன் சூரியன்
			லக்கினம் சந்திரன் சுக்கிரன்
சனி கேது			செவ்வாய்

ஜாதகன் வீட்டுநிலை

2. அத்திரி சொல்லு கின்றார் ஆணது ஜனன மாகும்
வித்தக னுதித்த வில்லம் விளம்புவோங் கீழ்மேல் வீதி
உத்தரம் வாச லாகும் ஓங்காளி தென்பா லாகுஞ்
சித்தஜன் தனையெ ரித்தோன் தேவனுங் கீழ்ப்பா லாகும்.

2. அத்திரி முனிவர் சொல்லுகின்றார். இஃது ஆண் மகனுடைய ஜாதகம். அவன் பிறந்த வீட்டு நிலையைக் கூறுகின்றோம். அது கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. காளி தேவியின் கோவில் தெற்குப் பக்கத்தில் உள்ளது. மன்மதனை யெரித்த சிவபெருமான் கிழக்குத்திக்கில் கோயில் கொண்டுள்ளார்.

ஜாதகனுடைய குலம்

3. தந்தியு மேற்கில் தங்குஞ் சாலையு மருகில் தங்கும்
நன்னகி கீழ்ப்பா லாகும் நாட்டிய சிறுவூர் தன்னில்
அன்னவர் ஜனன மாகும் அக்கினி குலமே யாகும்
வந்தவன் குடும்பச் சேதி யறைகுறே மிந்நூல் தன்னில்.

3. மேற்குத் திக்கில் விநாயகர் ஆலயம் ஒன்று உளது. சமீபத்தில் ஒரு சாலையும் இருக்கும். கிழக்குத் திக்கில் ஒரு புண்ணிய நதி ஓடும். இவ்வித அடையாளங்களுள்ள சிற்றூரில் ஜாதகன் வன்னிய குலத்தவனுகப் பிறப்பான் என்றேரும். அவனுடைய குடும்பச் செய்திகளை இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேரும்.

ஜாதகனின் தந்தையின் சகோதரபாவம்

4. தந்தையுந் துணையாண் காணுன் சத்திமார் நால்வர் [தீர்க்கம்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி
இந்ததோர் பிதாவின் சேதி யியம்புவோ மால்கி றத்தன்
சந்ததங் கல்வி காணுன் ஜனவுப கார னுமே.

4. ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதரர்களில்லை. நான்கு சகோதரிகள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். அவர்களுடைய செய்திகளைப் பிற்பாகத்தில் கூறுகின்றேரும். ஜாதகனுடைய தந்தையின் செய்திகளை இனிக் கூறுகின்றேரும். திருமாலைப்போன்ற கரிய நிறமுடையவன். கல்வியறிவில்லாதவன். ஜனங்களுக்கு உபகாரம் செய்பவன்.

தந்தையின் குணநலங்கள்

5. ஆதியில் வறுமை யுள்ளான் அறுமுகன் பத்தி பூண்பன்
பாதியாம் வயது மேலாய்ப் பாரது சேர்ப்பா னுமே
நீதிமான் கிருஷி செய்வன் நேமியில் நல்லோ னுவன்
மாதுக ளிரண்டே யாகு மாமிக ளவ்வா றுகும்.

5. ஆதி காலத்தில் தரித்திர முள்ளவன். முருகக் கடவுள்மீது பக்தியுடையவன். பாதி வயதுக்குமேல் விளைநிலங்களைப் பெருக்குவான். நேர்மையுடன் விவசாயம் செய்து வருவான். உலகில் நல்லவனுக வாழ்ந்து வருவான். இரு தாய்மார்களை உடையவன். இரு மனைவியரையும் அடைவான்.

இதுவுமது

6. சேத்திரங் குலதெய் வங்கள் சதுஷ்பாதம் விருத்தி [யுள்ளான்
புத்திமான் பெரியோர் நேயன் பொய்யது வழுத்தா [நெஞ்சங்
குத்தத்தை மனத்தில் வையான் கோபமுந் தணிவு முண்டு
சித்திர வில்லஞ் செய்வன் சீக்கிர நடையு மாவன்.

6. வீட்டில் குல தெய்வங்களின் வாச முள்ளவன். கால்நடைப் பெருக்கமுடையவன். புத்திமான். பெரியோர்களுக்குப் பிரியமானவன். பொய் பேசாத மனத்தினன். பிறர் செய்யும் குற்றங்களை மனத்

தில் வையாதவன். சிறிது முன்கோபமும் உடனே தணிவும் உள்ளவன். அழகிய வீட்டைக் கட்டுவான். வேகமாக நடக்கு மியல்பினன்.

இனி வரும் நான்குபாட்டல்களில் ஜாதகனுடைய குணங்கள் சொல்லப்படுகின்றன

7. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோகைய ரிருவர் [தம்மில்
முன்மனை யாட்கு வின்னென் மேவுவா னென்றே மம்மா
அன்னவன் குணத்தைச் சொல்வேன் ஆதிமால் நிறத்த [னகும்
பன்னிய கல்வி கொஞ்சம் பரவுப காரனவன்.

7. இவ்விதம் கூறப்பட்ட குணங்களையுடையவனுக்கு ஏற்பட்ட மனைவியர் இருவரில் மூத்த மனைவிக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களை சொல்லுகின்றோம். ஆதி திருமாலைப் போன்ற கரியநிற முடையவன். சிறிதே கல்வி பயின்றவன். பிறருக்கு உபகாரம் செய்பவன்.

8. வறுமையெப் போதுங் காணன் வண்டிவா கனமு முண்டு
அரிவாக னத்தாள் பத்தி யடுத்தோரைக் காப்பா னகுங்
குருவுப தேசங் கொள்ளான் குறிப்பினில் கொடுமை [தோன்றும்
விரைவினில் நடப்பா னகு மேவிடும் நாபிச் சூடு.

8. எக்காலத்திலும் தரித்திர மடையாதவன். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். சிங்கத்தை வாகனமாகவுடைய துர்க்கையம்மன் மீது பக்தியும் விச்வாசமும் உள்ளவன். அண்டிவந்தவரை ஆதரித்து வருவான். குருமுகமாக உபதேசம் கொள்ளாதவன். முகத்தில் கடூரம் தோன்றும். வேகமாகநடப்பவன். நாபிச் சூட்டு நோயுள்ளவன்.

பர்வதரேகை

9. இன்னவன் செங்கை தன்னில் இலகிடும் மலையி ரேகை
தன்மனங் கவடு கொஞ்சந் தரணியைச் சேர்ப்பா னகுஞ்
சொன்னசொல் காப்பா னகுஞ் சீலனந் தயிர்மோ [ரிஷ்டன்
தன்னுடல் மெலிவு முண்டு சந்தேக மனத்த னகும்.

9. இவனுடைய அழகிய கைகளில் பருவத ரேகைகள் இருக்கும். மனத்தில் சிறிது சூதுகள் (மறைவுகள்) உள்ளவன். விளை நிலங்களைச் சேர்ப்பான். தான் சொன்னசொற்படி நடப்பவன். நல்லொழுக்க முள்ளவன். தயிர் மோர் இவைகளை அருந்துவதில் விருப்பமுடையவன். மெல்லிய சரீர முள்ளவன். சந்தேகப்படும் இயல்பினன்.

10. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன்
உறைப்பொடு புளிப்பி லிச்சை
பண்டுகான் பூமி விருத்தி
பதர்செல்லான் பணியே ருள்ளான்
குண்டுணி கொஞ்ச முண்டு
குலமதிப் புடைய னுகும்
எண்டிசைப் புகழ வாழ்வன்
இரணியம் பின்னல் சேர்ப்பன்

10. நன்றுகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். உறைப்புப் பதார்த்தங்களுடன் புளிப்பும் கலந்த உணவை அருந்துவதில் இஷ்டன். வெகு நாட்களாக உள்ள பூமியைப் பெருக்குவான். அற்ப காரியங்களில் மனம் செல்லாதவன். பண்ணை ஏர் முதலியன உள்ளவன். சிறிது கோட் சொல்லும் சுபாவத்தினன். தன்னுடைய குலத்தவர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். எல்லாத் திக்குகளிலும் கீர்த்தியை யடைவான். பிற்காலத்தில் பொன்னைச் சேர்ப்பான்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

11. இவன்துணை நவமே தோன்று
மேகிடுஞ் சிலவே யென்றோம்
நவனியில் கன்னி மூன்று
நாட்டுவோந் தீர்க்க மாக
அவர்சேதி பின்பால் சொல்வேன்
அம்மனுங் கேட்க லுற்றாள்
பவமுள மறுதா யொன்று
பகர்ந்தீரே யவட்குப் புத்திரர்;

11. ஜாதகனுடைய சகோதரரைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஒன்பது பேர் உடன் பிறந்தவர்களாவார்கள். அவர்களில் சிலர் நிலையில்லாதவர். மூன்று சகோதரிகள் மட்டுமே நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று கூறுகின்றோம். அவர்களுடைய விவரங்களை பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். பார்வதி தேவியும் கேட்கலானாள். ஜாதகனுக்கு இளைய தாய் ஒருத்தி யுண்டு என்று சொன்னீர்களே! அவளுக்குப் புத்திரபாக்கியம் உண்டா?

12. செப்புவீர் முனியே நீர்தாஞ் சேயர்க ளாண்பா லொன்று
ஒப்புடன் கன்னி யவ்வா றுரைக்கின்றோந் தாயே
[யாங்கள்
மெய்ப்புட னையைந் தாண்டில் வேறுவா னந்தப் பாலன்
தப்பிதந் தனக்கு வாண்பால் சாராத காரணஞ்சொல்.

12. சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் இரண்டாம் தாய்க்குத் தோன்றுவர் என்று சொல்லுகின்றீரும். தாயே! அந்தச் சகோதரன் ஜாதகனுடைய இருபத்தைந்தாம் வயதிற்குமேல் தனியாகச் சென்று விடுவான். ஜாதகனு(க்குச் சகோதரர்) டைய தந்தைக்கு வேறு புத்திரர் தோன்றுத காரணமென்ன? சொல்லுங்கள்.

சகோதர தோஷம்—கிரகநிலை

13. மூன்றினுக் குடையோன் வெள்ளி
மதியுடன் கூடி ஜன்மம்
மூன்றுக்கு மூன்றில் காரி
மெய்ஞ்ஞானி கூடி நிற்க
ஈன்றதோர் துணையாண் தோஷம்
இதுவன்றிப் பூர்வந் தன்னில்
சான்றது வினைய நேகஞ்
சாற்றுவோ மந்தந் தன்னில்.

13. மூன்றும் வீட்டுக்குடைய சுக்கிரன் சந்திரனுடன் கூடி ஜன்மலக்கினமாகிய சிம்மத்தில் இருப்பதாலும் மூன்றும் வீட்டுக்கு மூன்றில் சனியும் கேதுவும் கூடி இருப்பதாலும் ஜாதகனுக்குச் சகோதரதோஷம் ஏற்பட்டது. இதுவல்லாமல் ஜாதகனுடைய முற்பிறவியில் பல தீவினைகளைச் செய்தான். அதன் பலனுகவும் தோஷ முண்டாயிற்று. அவ்வினைகளின் விவரத்தை இறுதியில் கூறுகின்றோம்.

ஜாதகனின் திருமணமும் மனைவியின் குணங்களும்

14. இருபது வாண்டு தன்னில்
எய்திடுந் தென்பால் பாரி
மறுவன்னை வர்க்கம் நேரு
மாதுவின் குணத்தைக் கேளாய்
திருகிலா மனத்தா ளாகுஞ்
செப்புமூன் கோபங் கொஞ்சம்
அரிவைநன் னடையு முண்டு
அன்னம்போல் சாய லொக்கும்.

14. ஜாதகனுக்கு இருபதாம் வயதில் தெற்குப் பக்கத்திலிருந்து மனைவி வருவாள். அவளும் ஜாதகனுடைய இளைய தாயின் வர்க்கத்திலிருந்து வருவாள். அப்பெண்ணின் குணத்தைக் கேளுங்கள். தீதுகளில்லாத மனத்தினள். சிறிது முன்கோபமும் உள்ளவள். நன்னடத்தையுடையவள். அன்னத்தைப் போன்று நடையழகுடையவள்.

15. பந்துவை யாத ரிப்பள் பரிந்துப சாரஞ் செய்வள்
நிந்தைகள் புகலா ளாகும் நிமலியும் யோக சாலி
விந்தையாய் வார்த்தை சொல்வ ளிருசிவப் புடைய ளாகும்
நொந்தபேர்க் கன்ன மீவள் நேமியில் சீலங் கொஞ்சம்.

15. பந்துவை ஆதரித்து வருவாள். அன்புடன் உபசரிப்பாள். பிறர்மீது அபாண்டமான பழிகளைக் கூறுதவள். அதிர்ஷ்டமுடையவள். வேடிக்கையாகப் பேசுபவள். மாநிற முடையவள். துன்பமடைந்தவர் கட்கு அன்னமளிப்பவள். உலகில் நல்லொழுக்கமும் சிறிதுடையவள்.

ஜாதகனின் புத்திரபாவம்

16. புத்திர விருத்தி தன்னைப்
புகலுவோ மெண்மர் தோன்றுஞ்
சத்திமார் நால்வர் தீர்க்கஞ்
சாற்றுவோ மாண்பா லொன்று
சுத்தமா யைந்தாஞ் ஜன்மஞ்
ஜனித்திடுந் தீர்க்க மாகப்
புத்திர னிவன்தன் மேலாய்ப்
புகழது ஏற்கா னுகும்.

16. ஜாதகனுடைய புத்திரபாக்கியத்தைப் பற்றிச் சொல்லுகின் றோம். அவர்கள் எட்டுப் பேராவர். அவர்களில் நான்கு புத்திரிகளும் ஒரு புத்திரனுமாகிய ஐவரும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். (அந்தப் புத்திரனும் ஐந்தாமவனைப் பிறப்பான்). அவன் இவனுக்கு மேலாகக் கீர்த்தியையடையாதவன்.

ஜயமுனிவரின் ஐயம்

17. ஜயமுனி சொல்லுகின்றார் செப்பினீர் சுதர்வி ருத்தி
வியமாக வஞ்சில் காரி மெய்ஞ்ஞானி கூடி நிற்கத்
தயையுடன் சுதர்க ளவ்வாறு சார்ந்திடு பால னுக்குப்
பயமிலாச் சொன்ன சங்கைப் பகருவீர் முனியே நீர்தாம்.

17. ஜய முனிவர் பதில் கேட்கலானார். ஜாதகனுக்கு எங்ஙனம் புத்திர விருத்தி ஏற்படும்? புத்திரஸ்தானத்தில் சனியுடன் கேது இருப்பதால் புத்திர பாக்கியம் உண்டு என்று சந்தேகமில்லாமல் நீங்கள் கூறுவதற்குரிய சரியான காரணத்தைச் சொல்லுங்கள். முனிவரே!

புத்திரபாக்கிய மேற்படுவதற்குரிய கிரகநிலை

18. கருமத்தோன் ஜன்மந் தங்கக் கலிமதி கூடி நிற்கக்
குருவுமே வஞ்சைப் பார்க்கக் கூறினேம் புத்திர விருத்தி
உருமங்கள் சுதனுல் நேரும் உரைத்தது தப்பா தாகும்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

18. கரும்ஸ்தானுதிபதியாகிய சுக்கிரன் (பத்தாமிடமாகிய விருஷ பத்துக்குரியவன்) ஜன்ம லக்கினத்திலிருப்பதாலும், அவனுடன் சந்திரன் கூடியிருப்பதாலும், குரு புத்திரஸ்தானத்தைப் பார்ப்பதாலும் திண்ணமாகப் புத்திரபாக்கியம் உண்டு. ஜாதகனுக்குப் புத்திரனால் இறுதிக் கடன்கள் செய்யப்படும். நாங்கள் கூறியவை தவரு. அரிய வேதங்களின் முடிவில் சொல்லப்படும் தேவியே! கேளுங்கள்.

பின்வரும் இரு பாடல்களில் தாயின் குணங்கள் கூறப்பட்டுள்ளன

19. அன்னையும் நற்கு ணத்தாள் அவளுமாஞ் சிவப்ப ளாகுங்
கன்னிகை வந்த பின்பு கணவனுக் கதிக யோகம்
பொன்பூமி யில்லம் நேரும் புகழ்ந்தோரை யாத ரிப்பள்
தன்பந்து புகழ வாழ்வள் சர்ப்பாத்திரி யென்று
[சொல்வோம்.

19. ஜாதகனுடைய தாய் நற்குணமுடையவள். மாநிறமுடையவள். இவளே மணந்த பிறகு கணவனுக்கு (ஜாதகன் தந்தைக்கு) அதிகமான யோகம் ஏற்படும். செல்வம் பூமி வீடு இவைகள் கிட்டும், தன்னைத் துதிசெய்தவரைக் காப்பாள். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். (சற்பாத்திரியோக முடையவள்) என்றோம்.

20. எப்போதுங் கொஞ்சம் வாயு வெய்திடு மவளுக் கேதான்
தப்பிதக் குணமில் லாதாள் தன்துணை யாண்பா
[லொன்று
மைப்படி பெண்பா லிரண்டு வறைந்தனந் தீர்க்க மாக
ஒப்புட னுள்ளு ரில்லம் உத்தர திசையா மென்றோம்.

20. எப்போதும் வாயு நோயுள்ளவள். தவருன குணங்களில் லாதவள். உடன்பிறந்தவர்களில் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் இருவரும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். இவளுடைய ஊரிலேயே வடக்குத் திசையில் சொந்த வீடுள்ளவள்.

ஜாதகனின் தாய் முற்பிறவியில் செய்த தீவினை நல்வினைகள் அவற்றின் பலன்கள் முதலியவற்றை தனித்தனியே பின்வரும் மூன்று பாடல்கள் கூறும்

21. முன்ஜன்மம் புகலு கின்றேன் மூலமாங் குடியி லேதான்
கன்னிகை யிக்கு லத்தில் கலந்துமே வாழு நாளில்
தன்னில்லை மடைக்க லானுந் தங்கிற்று வதனைக்
[கொன்றுள்
தென்திசைக் கால நாடு சேர்ந்தது புள்ளின் புத்திரர்.

21. தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். மூலமாங்குடியில் இதே குலத்தில் பிறந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கூறுகின்றோம். இவளுடைய வீட்டில் ஒரு பட்சி (கூடுகட்டி) வசித்தது. (அக்கூட்டைக் கலைத்ததால்) பட்சி இறந்தது. பட்சியையே ஆகாரத்துக்கு நம்பியிருந்த குஞ்சுகளும் இறந்தன.

22. அதுவொரு தோஷ மாச்சு வந்தியஞ் சுதர்க ளின்றிச்
சதியான வாயு ரோகந் தங்கிற்று வவளுக் கேதான்
கதியானைக் கோஷ்டத் திற்குத் தீபமு மொன்று வைத்துச்
சதியான கால நாடு சார்ந்தன ளிவளே யென்றோம்.

22. அஃது ஒரு தோஷமேற்பட்டது. அதனால் தன் கடைசிக் காலத்தில் புத்திரர்களை யிழந்து வாயு ரோகம் ஏற்பட்டுத் துன்பமடைந்தாள். பாபங்களைப்போக்க எண்ணி நற்கதியைக் கொடுக்கும் விநாயகர் ஆலயத்துக்குத் தீபம் ஒன்று வைத்து வந்து கடைசியில் மரணமடைந்தாள்.

23. சிரநான் கோன் வரையாப் பட்டு
ஜனித்தன ளிவளே யென்றோம்
பறவையைக் கொன்ற தோஷம்
பெற்றசே யிரண்டு பங்கு
மறலியின் பதிக்குச் செல்லும்
மதயானை தீப புண்யம்
உறைந்திடுஞ் சுதராண் தீர்க்கம்
உரைக்கிறோ மிவள்பின் ஜன்மம்.

23. நான்கு தலைகளையுடைய பிரமதேவனால் படைக்கப்பட்டு இப் பிறவியில் பிறந்தவள் இவள் என்றோம். பட்சியைக் கொன்ற தோஷத்தால் தான் பெற்ற குழந்தைகளில் (மூன்றில்) இருபங்கு மரணமடையும். விநாயகரது கோயிலில் தீபம் ஏற்றிவைத்த புண்ணியத்தினால் புத்திரன் ஒருவன் தோன்றித் தீர்க்கமாயிருப்பான். இனி மறுபிறவியைச் சொல்லுகின்றோம்.

ஜாதகனின் தாயின் மறுபிறவி தந்தையின் முற்பிறவிகளின் வரலாறு

24. தென்திசைப் பழனி நாட்டில்
ஜனிப்பளாங் கங்கை சேயாய்த்
தந்தையின் பூர்வஞ் சொல்வேன்
தக்கோல மருகி லுத்தரம்

வந்தனன் வைசியச் சேயாய்
வணிபங்கள் மிகவே செய்து
மைந்தரு மனைவி யுண்டாய்
வாழ்நாளில் வினையைக் கேண்மோ.

24. தெற்குத் திக்கில் உள்ள பழனி க்ஷேத்திரத்தில் வேளாளர் குலத்தவளாகப் பிறப்பாள். இனி தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். நக்கோலத்துக்கு அருகில் வடக்குப் பக்கத்தில் உள்ள ஊரில் வைசிய குலத்தவனுகப் பிறந்தான். வர்த்தகம் வெகுவாகச் செய்து வந்து மனைவி மக்களைப்பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள்.

அடைக்கலமாக வைத்தபொருளை அபகரித்ததால் அப்பொருளைத் திரும்பவும் அடைய மறுபிறவியில் மனைவியாக வந்தது

25. மறைமாது சிலவே பொன்னை வைத்துமே சேதுக் கேகி
மறுபடி யுள்ளூர் மீண்டு மாரன்பால் பொருளைக் கேட்கத்
தருகிறே னென்று சொல்லிச் சாலங்கள் செய்தா
[னென்றோரும்
அரிவையும் பேதி யாலே அந்தகன் பக்கல் சென்றாள்.

25. அந்தணர் குலத்துப்பெண் ஒருத்தி இவனிடம் சிறிது பொருளைக் கொடுத்து வைத்திருக்கச் சொல்லி சேதுவுக்குச் சென்றாள். அப்பெண் உள்ளூருக்குத் திரும்பித் தான் கொடுத்த பொருளைத் திருப்பிக் கேட்கும்போது தருவதாகக கூறிச் சால்சாப்புகள் சொல்லி வந்தான். அப்பெண்ணும் பேதியால் மரணமடைந்தாள்.

26. பாலக னந்தி யத்தில் பாக்கியங் குறைவு நேர்ந்து
காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டுச்
சாலவே வுதித்தா னென்றோர் தனமீந்த மாது தானும்
ஏலவே மறும னைதான் எய்திடு மென்று சொல்வோம்.

26. ஜாதகனுடைய தந்தையும் தன் கடைசிக் காலத்தில் பாக்கியக் குறைவேற்பட்டு மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். பொருளைக் கொடுத்து வைத்திருந்த அந்தணர் குலப்பெண் இரண்டாம் மனைவியாக வாழுக்கைப் படுவாள் என்றோம்.

27. முன்கடன் வாங்க வேண்டி மேவுவாள் பெண்பா லாக
முன்காலம் வறுமை நேரும் விளம்புவோ மிவன்பின்
[ஜன்மங்
கன்னியா குமரி பக்கல் கலப்பனுஞ் சத்திரியச் சேயாய்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

27. முற்பிறப்பில் கொடுத்த கடனைத் திரும்பப்பெற வேண்டி இரண்டாம் மனைவியாக வருவாள். ஆதிகாலத்தில் வறுமை யேற் படும். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். கன்னியா குமரிக்குப் பக்கத்தில் உள்ள ஊரில் சத்திரிய குலத்தில் பிறப்பான். உயர்ந்த கணவனையடைந்த தேவியே ! கேளுங்கள்.

ஜாதகன் முற்பிறவி

28. உதித்தவன் பூர்வந் தன்னை யுரைக்கிறோம் நவபா
[ஷாணம்
பதிதேவி நகரந் தன்னில் பிறந்தன னிக்கு லத்தில்
அதிபதி மைந்த ருண்டாய் மாநிலஞ் செட்டுச் செய்து
சதியிலா வாழு நாளில் தங்கின வினையைக் கேண்மோ.

28. இனி ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். நவபாஷாணத்திற்கு அருகில் தேவிப்பட்டணம் என்ற ஊரில் இதே குலத்தில் பிறந்து மனைவி மக்களையடைந்து உலகில் வர்த்தகம் புரிந்து தீங்குகளில்லாமல் வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள்.

நீதி ஸ்தலத்தில் ஓரங்கூறுதல்

29. மன்னர்பால் மறையோ ருக்கா
யறைந்தனன் கட்டு வார்த்தை
தன்சொலால் மறையோ னுக்குச்
செலவுக ளதிக முண்டாய்
அன்னவன் மனைவெ றுப்பால்
அறைவனுஞ் சாபந் தானும்
முன்குலத் தோர்க்குத் துன்ப
மொழிந்திட்ட பாவி யேநீ ;

29. ஓர் அந்தணனுக்காக நியாயாதிபதியின் முன்னிலையில் இல்லாத வார்த்தைகளை (பொய்ச்சாட்சியை)க் கூறினன். இவனுடைய வார்த்தையால் மற்ற அந்தணனுக்கு (தன்னுடைய வழக்கை ஸ்தாபிக்க)ச் செலவு அதிகமாக ஏற்பட்டது. அவன் மனம் நொந்து சாபமிட்டான். அந்தணனுக்குத் துன்பம் ஏற்படும்படியான வார்த்தை களைக் கூறிய பாவியே !

அந்தணர் சாபம்

30. மறுஜன்மந் துணியா னின்றி
மாதுவோ சுதரால் துன்பந்
திருமனை பாக மிரண்டாய்ச்
செய்துமே வாழ்வா யாகும்

அறுமறை சொல்லிச் சென்றூர்
அடைந்தது வந்தத் தோஷம்
மறலியின் பதிக்குச் சென்று
மால்மகன் வரையப் பட்டு;

30. உனக்கு மறுபிறவியில் உடன்பிறந்த சகோதரரில்லாமலும் மாற்றுந்தாயால் துன்பமடைந்தும் வீட்டை இரு பாகங்களாகச் செய்தும் வாழ்ந்து வருவாய் என்று கூறி விட்டு அவ்வந்தணர் சென்றூர். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது. ஜாதகன் மரணமடைந்து மீண்டும் திருமாலின் நாபியிலிருந்துதித்த பிரமதேவனால் படைக்கப் பட்டு;

ஜாதகனின் குலம்

31. வன்னிய குலமு திப்பான் மறையவர் சாபம் போலே
தன்துணை காணு ளுகுந் தன்பாக மிரண்டாய்ப் போகும்
அன்னவன் ஜனித்த பின்பு அம்புலி போலே யோகம்
பின்னமில் லாமல் நேரும் பேசுவோம் யோகச் சேதி.

31. வன்னிய குலத்தில் பிறப்பான். அந்தணரிட்ட சாபம்போல் உடன்பிறந்தவர் இல்லாதவனுவான். அவனுடைய வீடு இரு பாகங்களாகும். ஜாதகன் பிறந்த பிறகு வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். தீமைகள் ஏற்படா. இனி ஜாதகனுடைய யோகத்தைச் சொல்லுகின்றேம்.

சூன்யயோகம், கமலயோகம் முதலியன ஏற்படுதற்குரிய கிரகநிலையும் அந்த யோகங்களின் பயன்களும்

32. மதிக்கிரு புறத்தில் நல்லோர்
மருவிடச் சூன்ய யோகம்
விதிக்கேழில் பொன்னேன் நிற்க
விளம்புவோங் கமல யோகம்
அதுபல னெண்ணுன் கின்மேல்
அருளுவோம் யோகந் தானும்
நிதிபூமி சேர்த்த லுண்டு
நேர்ந்திடும் பூவின் சோலை.

32. சந்திரன் இருக்குமிடத்திற்கு இரு புறங்களிலும் சுபக்கிரகங்கள் இருப்பதால் சூன்யயோகமும், சனியிருக்குமிடத்துக்கு ஏழாமிடத்தில் குரு இருப்பதால் கமலயோகமும் ஏற்படும். அவற்றாலுண்டாகும் பலன்களாவன :-ஜாதகனுடைய முப்பத்திரண்டாம் வயதுக்குமேல் பொருள் பூமி இவைகள் சேரும். பூந்தோட்டத்தை அமைப்பான்.

33. அன்னியக் கிராம பூமி யணுகிடும் பால னுக்குத்
தன்பந்து புகழு மெய்துந் தந்தைக்குத் தாழ்வு றுதான்
பொன்பொருள் பூமி யாவும் புகலுமூ வாயி ரம்பொன்
கன்னென மொழியை யொக்குங் காதலி கேட்டி டாயே.

33. வேற்றுக் கிராமத்திலிருந்து பூமி இவனுக்குக் கிட்டும். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். தன் தந்தையின் யோக்யதைக்குக் குறைவில்லாதவன். பொன், ஆபரணம், செல்வம் பூமி இவைகளெல்லாம் சேர்ந்து மூவாயிரம் பொன் மதிப்புள்ளவை. இனிய வார்த்தைகளைப் பேசும் தேவியே! கேளுங்கள்.

தாய் தந்தையரின் மரணகாலம்

34. பதினேழு வாண்டுக் குள்ளே பறப்பனுந் தந்தை
[யென்றேங்
கதிர்தசை கால மாகுங் கழறுவோம் நாற்ப தாண்டில்
மதிமுக வன்னை கண்ட மலைப்பாம்பு தசைக்கா லத்தில்
சதியான சுயமாம் புத்தி சார்ந்திடு மென்று சொல்வோம்.

34. ஜாதகனுடைய பதினேழாம் வயதுக்குள்ளாகவே தந்தை மரணமடைவான். அக்காலம் சூரியமகாதசை நடைபெறும். ஜாதக னுடைய நாற்பதாம் வயதில் அழகிய முகத்தையுடைய தாய் மரண மடைவாள். அக்காலத்தில் ராகுமகாதசையில் ராகுபுக்தி நடைபெறும்.

ஜாதகனது மரணகாலமும் மறுபிறவியும்

35. பாலக னெழுப தாண்டில்
பகல்மீன மாதந் தன்னில்
சாலவே கண்டம் நேருஞ்
சாற்றுவோ மிவன்பின் ஜன்மம்
மேல்கோட்டை நகரந் தன்னில்
மேவுவான் பிரம்ம சேயாய்
ஏலவே பராசர் சொல்வார்
இயம்பினீர் வயது தீர்க்கம்.

35. ஜாதகன் தனது எழுபதாம் வயதில் பங்குனி மாதம் பகலில் மரணமடைவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். மேல்கோட்டை என்ற ஊரில் அந்தணர் குலத்தில் பிறப்பான். பராசர முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுக்கு நீண்ட வயதுண்டு என்றீர்களே!

36. இதுமத்தில் மார கங்கள் எய்தாவோ விவரஞ் சொல்வீர்
மதிபுகர் ஜன்மந் தங்க மைந்தர்க்கு வயது தீர்க்கம்
எதுவித நோய்நேர்ந் தாலும் இரவிமுன் பனிபோல்
[நீங்கும்
அதிதியை யாத ரிக்கும் ஆத்துமத் தாயே கேளாய்.

36. அதற்கிடையில் மாரகங்கள் ஏற்படாவோ? விவரமாகக் கூறுங்கள், என, சந்திரன் சுக்கிரன் இவர்கள் ஜன்ம லக்னத்தில் தங்கியிருப்பதால் ஜாதகனுக்கு நீண்ட ஆயுள் உண்டு. எவ்வித வியாதிகள் ஏற்பட்டாலும் சூரியன் முன் பனிபோல் விலகும். கதி யற்றவரைக் காக்கும் எங்கள் உயிருக்குயிரான தாயே! கேளுங்கள்.

அந்தணர்குலத்தில் தோன்றக் காரணம்

37. இந்ததோர் ஜன்மந் தன்னில்
இவன்செய்த புண்ணிய மென்ன
மூந்தின குலமு திக்குங்
காரணம் புகலு மென்ன
வந்தவர்க் கன்ன மீந்து
மனமது தளர்ச்சி யாயுங்
கந்தன்மேல் பக்தி யாயுங்
கனத்ததோர் தலங்கள் சென்றும்;

37. இப்பிறவியில் செய்த எந்த நற்செயல்களின் பலனை அடுத்த பிறவியில் அந்தணர் குலத்தில் பிறப்பான்? சொல்லுங்கள். தன்னை யண்டி வந்தவர்கட்கு அன்னமளித்து வந்தும் இளகிய மனமுடைய வனை இருந்தும் முருகக்கடவுள்மீது பக்தியுடையவனை வாழ்ந்தும் பல புண்ணிய தலங்களுக்குச் சென்று வந்தும்;

ஜனன காலதசை

38. இருப்பதால் மறுபி றப்பு இறங்குவான் பிரம்ம சேயாய்த்
திருமகன் தனக்குப் பின்னல் தேவியு மரண மாவள்
உரைக்குங்கால் பூர நாளில் உதிப்பனு முதற்பா தத்தில்
பிருகுவின் தசையி ருப்புப் புகலுவோ மீரெட் டாண்டும்.

38. இவ்விதமான நற்செயல்களைப் புரிந்து வந்ததால் அடுத்த பிறவியில் அந்தணர் குலத்தில் பிறப்பான். இவனுக்குப் பின் மனைவி மரணமடைவாள். ஜாதகன் பூர நட்சத்திரம் முதல் பாதத்தில் பிறப் பான். அக்காலத்தில் சுக்கிரமகாதசையில் இருப்பு பதினெறு வருடங் களும்;

39. திங்களு மிரண்ட தாகுஞ் செப்புவோம் பலனை யாங்கள்
பொங்கிய குடும்பு மெய்தும் பிறக்கும்பின் துணைக
[ளுந்தான்
தங்கிடு மறுமா தாவுந் தரணிகள் சேர்த்த லுண்டு
துங்கமா மில்லஞ் செய்தல் துணைவிக்குச் சுபமு நேரும்.

39. இரு மாதங்களுமாம். அக்காலத்திய பலனைக் கூறுகின்றோம். குடும்பம் பெரிதாகும். சகோதர விருத்தியேற்படும். இரண்டாம் தாய் வருவாள். பூமிகள் சேரும். அழகிய புதிய வீடுகட்டப்படும். சகோதரிக்குச் சுப காரியங்கள் நிகழும்.

40. பந்துவில் சுபமுஞ் சூதம் பெருகிடு யோர்பா ருந்தான்
விந்தையாய்த் தேவ பூசை மேவிடுந் தலங்கள் செல்லல்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விவர மாக
இந்திர னிறைஞ்சு மாதே இதுபூர்வ பாக மாமே.

40. தன் சுற்றத்தாரில் சுபமும், அசுபமும் நிகழும். பூமி, ஏர் முதலியன விருத்தியாகும். தெய்வபூசை நடைபெறும். புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். மற்ற விஷயங்களைப் பிற்பாகத்தில் விவரமாகக் கூறுகின்றோம். இந்திரன் தோத்தரிக்கும் தேவியே! இது முதல் பாகமாகும்.

ஜாதகம் 54

1. கலிவீணை காரி தேளில் கணக்கனும் பானு மேரு
நிலமகன் நந்தி யாக நீர்புகர் பணியு மானில்
குலகுரு சீய மாகக் கோளரி ஜன்ம மாகப்
பலனதைச் சொல்லு மென்று பார்வதி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் மிதுனத்திலும், சனி விருச்சிகத்திலும், புதன் சூரியன் தனுசிலும், செவ்வாய் விருஷபத்திலும், சுக்கிரன் ராகு மகரத்திலும், குரு சிம்மத்திலும் (கேது கடகத்திலுமாக) இருந்து, ஜன்ம லக்கினம் சிம்மமாலுல் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கலானாள்.

ராசிசக்கரம்

	செவ்வாய்		சந்திரன்
	இராசி சக்கரம்		கேது
சுக்கிரன் ராகு			லக்கினம் குரு
புதன் சூரியன்	சனி		

ஜாதகன் பிறந்த வீட்டுநிலை

2. அத்திரி சொல்லு கின்றார் ஆணது ஜனன மாகும்
வித்தக னுதித்த வில்லம் விளம்புவோங் கீழ்மேல் வீதி
உத்தரம் வாடை யாகும் உயர்ந்தநீர் நிலையுந் தங்கும்
மதில்தானு மருகில் தங்கு மால்தூதன் மத்தில்
[தோன்றும்.

2. அத்திரி முனிவர் பதில் சொல்லுகின்றார். இந்த ஜாதகம் ஆண் மகனுடையது. அவன் பிறந்த வீட்டு நிலையைச் சொல்லுகின்றோம். அது கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு வரிசையில் உள்ளது. அவ்வீட்டுக்கருகில் நீர் நிலையொன்று உண்டு. சமீபத்தில் ஒரு மதில் உண்டு. மத்தியில் திருமாலின் தூதுவனுகிய அநுமான் கோயில் உண்டு.

தாயின் முற்பிறவி

31. மாதுரு பூர்வஞ் சொல்வேன் மதுரைக்குத் தென்பா லாக
மேதினில் சிறுவூர் தன்னில் விளங்கினுள் கர்ண சேயாய்ப்
பாதக மனமில் லாமல் பரவுப காரி யாயும்
வேதியர் தொண்டு பூண்டு மேவினுள் கால நாடு.

31. தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். மதுரைமாநகருக்குத் தெற்கிலுள்ள சிற்றூரில் கருணீகர் குலத்தவளாகப் பிறந்து தீய எண்ணங்களில்லாத மனமுடையவளாகிப் பிறருக்கு உபகாரம் செய்து வந்து அந்தணர்கட்குப் பணிவிடைகளைச் செய்து வாழ்ந்து மரணமடைந்து ;

தாயின் மறுபிறவி

32. சிரநான்கோன் வரையப் பட்டு
ஜனித்தன னென்று சொல்வோம்
அரிவைபின் ஜன்மஞ் சொல்வே
னிலங்கா டதற்கு மேற்கில்
சிறு வூரில் சைவச் சேயாய்
ஜனிப் பளாமென்று சொல்வேன்
பெருவயி றோடினப் பெற்ற
புண்ணிய சாலி கேளாய்.

32. மீண்டும் பிரம தேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம். தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருவாலங்காட்டிற்கு மேற்கில் உள்ள சிற்றூரில் சைவகுலத்தவளாகப் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம். பெரிய வயிற்றையுடைய விநாயகனைப் பெற்ற புண்ணியவதியே ! கேளுங்கள்.

தந்தையின் மரண காலமும் மறுபிறவியும்

33. இருபது நாலு வாண்டில்
இவன்தந்தை கண்ட மென்றோம்
மறுஜன்மம் வள்ளூர் தன்னில்
மறைக்குல முதிப்பா னுகும்
திருமக னிச்சென் மத்தில்
செய்தபுண் ணியங்க ளென்ன
உரைப்பீர்கள் முனியே நீர்தாம்
உத்தம னிச்சென் மத்தில் ;

33. ஜாதகனுடைய இருபத்து நான்காம் வயதில் தந்தை மரணமுன். மறுபிறவியில் திருவள்ளூரில் அந்தணர் குலத்தில் என்றோம். (பார்வதி) தவி வினவலானாள்

னுடைய தந்தை இப்பிறவியில் என்ன நற்செயல்களைச் செய்தான்? அவற்றை விளம்புவீர், முனிவரே! தாங்கள். ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில்;

ஜாதகனின் தந்தைக்கு உயர்குலப்பிறவி ஏற்படுதற்குரிய காரணங்கள்

34. அறமதி லிச்சை யாயும் அடாவடி சொல்லாத் தாலுந்
திருகிலாக் குணத்த னுயுஞ் சிந்தையில் தேவ பத்தி
பெருமையாய்க் கொண்ட தாலே பிறப்பனும் பிரம்ம [சேயாய்க்
கரிமத வாணை பெற்ற காதலி கேட்டி டாயே.

34. தருமம் செய்வதில் விருப்பமுள்ளவனுகவும், அடாவடியாகக் காரியங்களைச் செய்யாததாலும், நிய குணங்களில்லாமலும், மனத்தில் தெய்வபக்தி கொண்டும் வாழ்ந்து வந்ததாலும், அடுத்த பிறவியில் அந்தணர் குலத்தில் பிறப்பான். கரிய யானை முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

தாயின் மரண காலமும் ஜாதகனின் மரணமும்

35. மூப்பது நாலு வாண்டில்
விளம்புவோ மன்னைக் கேதான்
ஒப்புட னறுபா னேழில்
உயர்தனு மாதந் தன்னில்
செப்புவோம் பாலன் கண்டஞ்
சுதனுடைப் பின்னுன் மங்கேள்
மெய்ப்புடன் தில்லை தன்னில்
விளங்குவான் பிரம்ம சேயாய்.

35. ஜாதகனுடைய முப்பத்து நான்காம் வயதில் தாய் மரண மடைவாள். அறுபத்தேழாம் வயதில் உயர்ந்த மார்கழி மாதத்தில் ஜாதகன் மரண மடைவான். அவனுடைய மறுபிறவியைக் கேளுங்கள். தில்லைமாநகரில் அந்தண குலத்தவனுகப் பிறப்பான்.

ஜனன காலதசை

36. உத்தமன் ஜனிக்குங் காலை யுரோகிணி கடையாம் பாதஞ்
சித்தமாய் மதியி ருப்புச் செப்புவோ மாண்டி ரண்டும்
பத்திய திங்கள் மூன்றும் பகர்ந்தனம் பூர்வ பாகம்
அத்தியைப் பெற்ற மாதே அறைகிறேம் பின்பால் கே

36. ஜாதகனின் ஜனனகாலத்தில் ரோகிணி நட்சத்திரம் கடை பாதமாம். சந்திர மகாதசையில் செல்லுப்போக மீதம் இருவருடங்க மூன்று மாதங்களுமாகும். இது வரை முதல் பாகத்தைச் சொன்னே னை த்தையுடைய விநாயகனைப் பெற்ற தாயே! பிற்பாதி கேளைக் கூறுவோம்.

ஜாதகம் 57

1. [1]புலியது வுதயம் புதன்கேது விரண்டில்
புரவியோன் மூன்றினில் தங்க
நிலமக னஞ்சில் குருபணி யெட்டில்
[2]நீலனும் லாபம தாகச்
[3]சலக்கோளு நாலில் சந்திரன் விரயஞ்
சாற்றுவீர் பலன்தனை யென்று
மலைமகள் கேட்க வதிஷ்டரும் புகல்வா
ராணது ஜனனமே யாகும்.

1. சிம்மம் லக்கினமாகவும், புதன் கேது இரண்டாமிடமாகிய கன்னியிலும், சூரியன் மூன்றுமிடமாகிய துலாத்திலும், செவ்வாய் ஐந்தாமிடமாகிய தனுசிலும், குரு ராகு எட்டாமிடமாகிய மீனத்திலும், சனி லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், சுக்கிரன் நான்காமிடமாகிய விருச்சிகத்திலும், சந்திரன் விரயஸ்தானமாகிய கடகத்திலும் இருந்தால் பலனைச் சொல்லுங்கள், என்று ஹிமவானின் புத்திரியாகிய பார்வதி கேட்கும்போது வசிஷ்ட முனிவர் பதில் சொல்லுகின்றார். இஃது ஆண் மகனின் ஜாதகம்.

கிரகநிலை

குரு ராகு			சனி
	இராசி சக்கரம்		சந்திரன்
			லக்கினம்
செவ்வாய்	சுக்கிரன்	சூரியன்	புதன் கேது

பிறந்த வீட்டுநிலை

2. தாதையி னில்லந் தென்வட வீதி
சனிபார்வை யொருபுற மில்லம்
போதக வானைக் கோஷ்டமு முத்ரம்
பூருவ மிலேச்சர்க ளூராம்

பாதையுங் கீழ்ப்பால் பகருவோர்ந் தாயே
பதிந்திடுஞ் சிறுநக ராகுஞ்
சூதிலாக் கங்கைக் குலமதில் தோன்றுஞ்
செப்புவோர்ங் குடும்பத்தின் சேதி.

2. ஜாதகன் தனது பாட்டனரின் வீட்டில் பிறந்தவன் என்ரேம். அவ்வீடு தெற்கு வடக்கான வீதியில் வடகிழக்கு மூலையை நோக்கி இருக்கும். ஒரு பக்கம் வீடு உள்ளது. வடக்கில் விநாயகர் ஆலயம் ஒன்றுளது. முதலில் அது முகம்மதியர் வாழ்ந்துவந்த ஊராகும். கிழக்குப்பக்கத்தில் ஒரு நடைபாதையுண்டு. தாயே ! சிறிய நகரமாகும் அது. சூதுகளில்லாத வேளாளர் குலத்தில்இவன்தோன்றிய வன். அக்குடும்பச் செய்திகளை இனிக் கூறுகின்ரேம்.

ஜாதகன் தந்தையின் குணங்கள்

3. தந்தையின் குணங்கள் சிவந்தமெய் யூகி
ஜகராஜர் பேட்டியே கொள்வன்
சிந்தையு நல்லோன் திருப்பணி செய்வன்
செல்வோர்க்கு மார்க்கமு மமைப்பன்
அந்தரி காளி யறுமுகன் பத்தி
அரசரால் செட்டுக்கள் செய்வன்
வந்தவர்க் கன்னந் தரணிகள் சேர்ப்ப
னடிமைகோ டிகளுமே யுண்டு.

3. ஜாதகனுடைய தந்தையின் குணங்களைச் சொல்லுகின்ரேம். சிவந்த உடலுடையவன். ஊகமுடையவன். அரசர்களிடம் தொடர்பைக் கொள்ளுவான். நல்ல மனமுள்ளவன். ஆலயத் திருப்பணிகளைச் செய்து வருவான். நடப்பவர்கட்கு ஒழுங்கான பாதைகளை அமைப் பான். காளி தேவியிடமும் ஆறுமுகக் கடவுளிடமும் பக்தியுள்ளவன். அரசாங்க உத்தியோகத்தை ஏற்று வாழ்வான். தன்னிடம் வந்தவர் கட்கு அன்னம் அளிப்பவன். விளைநிலங்களைச் சேர்ப்பான். அடிமை யாட்கள் பலருள்ளவன்.

இதுவுமது

4. பலவித வணிபம் பண்ணுவான் புகழும்
பந்துவு மதிக்கவே வுய்வன்
குலவிடும் வாயு பாதையு மந்தங்
குடியது சித்திரஞ் செய்வன்
நிலையது காப்பன் நினைத்தது முடிப்பன்
நிருபர்க்கு விவன்சொலு மேன்மை
ரலுமொழி காப்பன் சுந்தர மூடை
ரன் காரியத் தினிலே

யொத்த சிவபெருமான் கோவிலும் இடிந்துள்ளது. அதற்கு மேற்குப் பக்கத்தில் திருமால் கோவில் இடிந்திருக்கும். அவ்விடத்துக்குக் கிழக்கில் விநாயகர் ஆலயம் ஒன்றுளது.

3. மேவு மடையா ளத்தினிலே
விளங்கிடுங் கங்கை குலமாகுந்
தாவுந் தந்தை குணந்தனையே
சாற்றக் கேண்மோ மானிறத்தன்
பூமி தன்னுல் தானுய்வன்
புகழு மிலாதான் புண்ணியவான்
நாவு தவறுன் வறுமையுளன்
நாடா தென்றேங் துணையாண்பால்.

3. இவ்வித அடையாளங்களுள்ள இடத்தில் ஜாதகன் வேளாளர் குலத்தவனுகப் பிறப்பான். இனி தந்தை, தாய் இவர்களின் குணத்தையும் மற்ற விவரங்களையும் செல்லக் கேட்பீராக. ஜாதகனுடைய தந்தை மானிறமுடையவன். விவசாயம் செய்து வாழ்ந்து வருவான். கீர்த்தியில்லாதவன். நல்ல காரியங்களைச் செய்தவன். சொல் தவருதவன். தரித்திரமுடையவன். உடன்பிறந்த சகோதரரில்லாதவன்.

4. கன்னி நால்வர் தானுரைப்போங்
கலகஞ் சிலவே பின்சொல்வோம்
பொன்னு பரணந் தான்சேர்க்கான்
பூமி யதிகந் தான்காணன்
பின்ன மில்லான் நற்குணத்தான்
புகலான் கட்டு வார்த்தைகளைத்
தன்சொல் லடக்க மூகையுளன்
தரும குணத்தா னெனவுரைப்போம்.

4. நான்கு சகோதரிகள் உளர் என்று கூறுகின்றேம். அவர்களுள் சிலர் நிலையார். அவ்விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். பொன் ஆபரணங்கள் அதிகமில்லாதவன். விளைநிலங்களும் அதிகமில்லாதவன். ஊனமில்லாத சரீரமுடையவன். நல்ல குணமுள்ளவன். பொய் பேசாதவன். அடக்கமாகப் பேசுபவன். ஊமுடையவன். தருமம் செய்யும் குணமுள்ளவன் என்றும் கூறுகின்றேம்.

5. உரைத்த குணத்தா னுக்குவிவன்
உதிப்பா னிவனின் குணங்கேளாய்
நிறுத்த புத்தி கல்வியுளன்
நேமியில் நல்லோன் சீலனுமாஞ்

சிறுத்தோர் நேயன் கிருஷிசெய்வன்
சிவந்த மெய்ய னுணச்சலுளான்
பொருத்த மாகப் பேசிடுவன்
பொய்யைப் புகலான் பூவையரே.

5. இவ்விதம் கூறப்பட்ட குணமுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இனி, ஜாதகனுடைய குணங்களைக் கேளுங்கள். நிதான மான புத்தியுள்ளவன். கல்வியறிவுடையவன். உலகில் நல்லவன் என்ற பெயருடையவன். துன்பமடைந்தவர்கட்கு உபகாரம் செய்பவன். விவசாயம் செய்து வருவான். சிவந்த உடலும் மெல்லிய சரீரமுமுள்ள வன். பொருத்தமாகப் பேசுபவன். பொய் பேசாதவன். தாயே!

6. அறிவோர் நேயன் அறமிச்சை
யடைந்தோர் தம்மை யாதரிப்பன்
பெரிதாஞ் சோதி தந்தமுமே
பிதாகாள் பூமி யற்பமுமாந்
தரைபின் னலே சேர்த்திடுவன்
செப்புங் காலந் தவமுனியே
இருபத் தைந்து வாண்டின்மே
லெய்து மியோக மேந்திழையால்.

6. அறிவாளிகட்குப் பிரியனுவன். தருமம் செய்வதில் விருப்ப முடையவன். தன்னை அண்டி வந்தவர்கட்கு அன்புடன் உபசரிப் பான். கண்கள் பெரியவையாக இருக்கும். பற்களும் நீண்டு இருக் கும். பிதுரார்ஜிதமான பூமி சிறிதளவே உள்ளவன். பிற்காலத்தில் பூமியைச் சேர்ப்பான். எக்காலத்தில் பூமியைப் பெருக்குவான்? முனி வரே! சொல்லுங்கள். ஜாதகனுடைய இருபத்தைந்தாம் வயதிற்கு மேல் அவனுடைய மனைவியால் யோகம் கிட்டும்.

7. பலநூ லறிவன் பின்வறுமை
பாரான் பணையேர் விருத்திகளும்
பிலமா தர்மேல் மோகமிலான்
வேலன் பத்தி தான்கொள்வன்
நலவுந் துணையாண் காணுனங்
கொடிபோல் மாது மூவருண்டு
நலவா சங்கள் சென்றிடுவன்
சாரும் பூர்வ நிதியென்றோம்.

பலவிதமான நூல்களைக் கற்றறிவான். பிற்காலத்தில் தரித் டையாதவன். பண்ணை ஏர் முதலியன விருத்தியாகும். ஸ்திரி மோகம் கொள்ளாதவன். முருகக்கடவுள்மீது பக்தி

யுள்ளவன். சகோதரர்களில்லாதவன். கொடிபோல் மெல்லிய சகோதரிகள் மூவருள்ளவன். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். பெரியோர்கள் சேமித்து வைத்த புதையல் ஒன்று கிடைக்கும் என்றேரும்.

புதையல் கிடைத்தற்குரிய கிரகநிலையும் காலமும் வேறு

8. எந்தவிதம் நிதிசேரும் விவரஞ் சொல்வாய்
[1]இரணியனும் லாபமதி லந்த வீட்டோன்
தன்தனத்தோ னுகியுமே சுதர்க்கி ரண்டில்
செங்கதிரோன் பாக்கியத்தோன் கூடி நிற்க
மந்தனுடன் கேதுபத்தி லிருப்ப தாலே
மருவிடுமே கேதுதசை காலந் தன்னில்
மூந்திநாள் பூர்வபொன்னு மெனவு ரைத்தோம்
மொழிந்திட்டோ மதற்குமேல் யோகந் தானே.

8. எந்தக்காலத்தில் ஜாதகனுக்குப் புதையல் கிடைக்கும்? அந்த விவரத்தைக் கூறுங்கள் (என்ன காரணத்தால் கிடைக்கும்?) குரு லாபஸ்தானத்தில் (மிதுனத்தில்) இருப்பதாலும், அவ்வீட்டுக்குரியன் தனஸ்தானத்துக்கும் உரியவனாகி (புதன் மிதுனம் கன்னி இவ்விரு ராசிகளுக்கும் அதிபதியாவான்) அவனும் அவனுடைய வீட்டிற்கு (ரண்டு கன்னிக்கு) தனஸ்தானத்தில் (இரண்டாமிடத்தில்) சூரியனுடனும் பாக்கியஸ்தானாதிபதியாகிய (ஒன்பதாமிடத்துக்குரியவன்) செவ்வாயுடன் கூடி இருக்கும் பலத்தாலும், சனியுடன் கேது பத்தாமிடத்தில் இருப்பதாலும், கேது மகா தசையில் வெகுகாலமாக உள்ள புதையல் இவனுக்குக் கிடைக்கும் என்று சொல்லுகின்றோம். அதற்குப் பிறகு யோகம் விருத்தியாகும்.

தாயின் குணங்கள்

9. அன்னைகுண மந்தபுத்தி பொறுமை சாலி
அடைந்தோரை யாதரிப்பள் அழகு மூண்டு
தன்மகுண மிளமனத்தாள் சமயோ கத்தாள்
தாயில்லந் தென்திசையாந் துணையா னிரண்டு
கன்னிமா ரவ்வாரூர்க் கருத லாகுங்
காலைக்கு வோரேழு வாண்டில் மாள்வள்
என்னகா ரணம்புகல்வீர் ராகு திங்கள்
இருவிரண்டி லிருப்பதனு லியம்பி னேம்ய-

1. குரு

9. இனி தாயின் குணங்களைக் கூறுகின்றோம். மந்த புத்தியுள்ளவள். பொறுமையுடையவள். அண்டி வந்தவரை ஆதரிப்பாள். அழகுள்ளவள். தர்மம் செய்வதில் விருப்பமுடையவள். இளகிய மனமுள்ளவள். சமமான யோக முடையவள். இவளுடைய வீடு தெற்குத் திசையிலுள்ளது. இரு சகோதரர்களையும் இரு சகோதரிகளையும் உடையவள். ஜாதகனுடைய ஏழாம் வயதில் மரணமடைவாள். என்ன காரணத்தால் அவ்விதம் சொல்லுகிறீர்கள்? அதைக் கூறுங்கள். மாதுர்ஸ்தானத்தில் (நான்காமிடத்தில்) மாதுர்காரகனுகிய சந்திரன் ராகுவுடன் கூடியிருப்பதால் அவ்விதம் தோஷம் சொன்னேம்.

இளைய தாயின் விவரங்கள்

10. மறுவன்னை மேல்பாலில் வருகு வாளாம்
மைந்தருமே தோஷமுண்டா மாதுக் கேதான்
அரிவைக்குச் சுதர்தோஷங் கார ணஞ்சொல்
அணுகிற்று பூர்வவினை யம்மா துக்கு
வறிவிப்பீர் பூர்வவினை முன்ஜன் மங்கேள்
மயிலமா நகர்க்குமேல் சிறுவூர் தன்னில்
திருமகளு மிரட்டிகுலந் தனிலு தித்துச்
சிறப்பான குடும்பியாய் வாழு நாளில்;

10. அவனுக்கு மாற்றுந்தாய் ஒருத்தி மேற்குப் பக்கத்திலிருந்து வருவாள் என்றோம். அவளுக்குப் புத்திரதோஷம் உண்டு என்று சொல்லுகிறோம். அவளுக்குப் புத்திர தோஷம் ஏற்படக் காரணம் என்னவென்று சொல்லுங்கள். முற்பிறவியில் செய்த தீவினையால் அங்ஙனமாயிற்று என்றார். அப்பூர்வ ஜன்மத்தைப் பற்றிக் கூறுங்கள், எனப் பார்வதிதேவி கேட்க, முனிவர் பதில் கூறுகின்றனர். மாற்றுந் தாயின் முற்பிறவியைக் கேளுங்கள். மயிலத்துக்கு மேற்கில் உள்ளதொரு சிற்றூரில் ரெட்டியார் குலத்தில்பிறந்து சிறப்புள்ள குடும்பியாகி வாழ்ந்துவரும் காலத்தில்;

வேறு

11. பஞ்சையா யேழை மாது பாலர்க்கு வன்னம் வேண்டிக்
கெஞ்சினள் மாது பக்கல் கிளிமொழி வார்த்தை யின்றி
மிஞ்சின வார்த்தை சொல்லி விரட்டினு ளேழை தன்னை
வஞ்சியு மனவெ றுப்பா லறைந்திட்ட சாபங் கேண்மோ.

ஏழைப் பெண் ஒருத்தி தன்னுடைய குழந்தைக்கு வேண்டி இவளிடம் சென்று யாசித்தாள். இவளும் தாழ்மை முள்ள வார்த்தைகளைக் கூறுமல் கோபங்கொண்டு கடுமை ஒ[illegible]களைக் கூறி விரட்டி விட்டாள். ஏழைப்பெண்ணும் தோ[illegible]க் கூறிய சாபத்தைக் கேளுங்கள்.

12. பாலர்சோ நீயாப் பாவி பெருகாது சுதர்கள் தாமுஞ்
சாலவே பின்ஜன் மத்தில் ஜனித்திடார் சுதர்கள் தாமும்
ஏலவே சொல்லிச் சென்ரூள் எய்திற்று வந்தச் சாபம்
ஆலம்போல் வேறு வொன்று அணுகிற்றுத் தோஷம்
[தானே.

12. குழந்தையின் பசிக்குப் பாலோ அன்னமோ கொடுக்காத பாவியே! உனக்குப் புத்திரர் நிலையார். அடுத்த பிறவியிலும் குழந்தைகள் தோன்ரு என்று சொல்லிவிட்டுச் சென்ரூள். அந்தச் சாப மிவளைத் தொடர்ந்தது. அது தவிர, கொடிய விஷம்போல் அணுகிய வேறு ஒரு தீவினையையுஞ் சொல்லுகின்ரோம்.

13. தன்னுடைக் கொல்லை தன்னில்
தங்கிற்றுக் கருப்பன் சாமி
முன்னோர்கள் தோத்த ரிப்பார்
முதல்வியுந் தொழாமல் நின்ரூள்
துன்முனி புகலுஞ் சாபஞ்
சுதர்களை யாவுங் கொல்வேன்
பின்வருஞ் ஜன்மங் தன்னில்
புதல்வர்க ளுதிக்கா வண்ணம்;

13. ஜாதகன் மாற்ருந்தாயின் வீட்டுக் கொல்லையில் கருப்பன்சாமி யாகிய முனி வசித்து வந்தது. அந்த முனீச்வரனை இவளுடைய முன் னோர் யாவரும் தோத்தரித்து வந்தனர். மாற்ருந் தாய் அலட் சியமாக அந்த முனியைத் தொழாமல் இருந்து வந்தாள். வெகுகால மாக இருந்த அம்முனி சாபமிட்டது. உனக்குத் தோன்றும் எல்லாக் குழந்தைகளையும் கொல்லுவேன். இனிவரும் ஜன்மங்கள்தோறும் உனக்குப் புத்திரர் தோன்ரு வண்ணம்;

14 செய்குவே னுன்பால் யானுங்
தினங்கூடி வாழ்வே னென்று
ஐயமாய்ச் சொல்லி யேதான்
அணுகிற்று வேறு சாகை
தையலுக் கந்தத் தோஷஞ்
சார்ந்தது வென்று சொல்வோம்
வையமேல் தவங்கள் செய்யும்
மங்கையே கேட்டி டாயே.

14. செய்வேன். உன்னிடம் நான் குடிகொண்டிருப்பேன். உன்னு டன் சேர்ந்து வாழ்வேன் என்று பயப்படும்படி கூறிவிட்டுச் சென்றது. அதுவும் வேறு வீட்டுக்குச் சென்றுவிட்டது. ஜாதகனுடைய மாற்ருந்

தாய்க்கு அந்தத்தோஷம் ஏற்பட்டது என்று சொல்லுகின்றோம். உலகில் பல தவங்களைச் செய்யும் தேவியே! கேளுங்கள்.

புத்திரதோஷம் நீங்கச் சாந்தி செய்யு முறை

15. இந்ததோர் ஜன்மந் தன்னில் இருவித சாபத் தாலே
சந்ததி காணு ளாகுஞ் சாற்றுவீர் கிரியை யொன்று
முந்திய கரும சாந்தி முறைப்படி செய்து மேதான்
அந்தரி மூலந் தன்னை யறுகோண மதனி லிட்டு;

15. இந்தப் பிறவியில் அவளுக்கு இரு விதத் தோஷங்கள் தொடர்ந்ததால் புத்திரர் தோன்றார். இந்தத் தோஷங்கள் தீரச் சாந்தியொன்று கூறுங்கள், முனிவரே! உயர்ந்ததான கரும சாந்தியை வேதங்களில் சொல்லியபடி செய்து வந்து காளிதேவியின் மூலாட்சரத்தை அறுகோணத் தகட்டில் வரைந்து;

16. சகத்திரஞ் ஜபித்து மேதான் சத்தியு மதைய ணிந்து
பகையிலா வெள்ளி வாரம் பாவையும் விரதங் கொள்ளத்
தகைமையாய்ப் புதல்வர் தோன்றுஞ் சந்ததி யாண்பா
[லொன்று
பகையென்று செய்யா ளாகில் பாலர்கள் காணு ளாகும்.

16. அத்தகட்டை பூஜை செய்து, ஆயிரம் தடவை அம்மூல மந்திரத்தை ஜபித்து ஜாதகன் மாற்றுந்தாய் அணிந்து, தீங்குகளில்லாத வெள்ளிக்கிழமைகளில் நோன்பு நோற்பாளாகில் (விரதம் இருப்பாளாகில்) நிண்ணமாகப் புத்திரபாக்கிய மேற்படும். ஒருபுத்திரன் தோன்றுவான். மனத்தில் குரோதங்கொண்டு செய்யாவிடில் புத்திரபாக்கியம் ஏற்படாது.

மாற்றுந்தாயின் மறுபிறவி தந்தையின் முற்பிறவிகளின் வரலாறு

17. பின்ஜன்மம் காஞ்சி கீழ்ப்பால்
பிறப்பாளஞ் செங்குந்த வம்சம்
தந்தையின் பூர்வஞ் சொல்வேன்
தணிகைக்கு மேல்பா லாக
முந்தின வூரி லேதா
னுதித்தன னிரட்டி வம்சம்
வந்ததோர் வினையை யாங்க
ளறைகிறே மினிமே லாக.

17. ஜாதகனுடைய மாற்றுந்தாய் மறுபிறவியில் காஞ்சிபுரத்துக்குக் கிழக்கில் உள்ள ஊரில் செங்குந்த வமிசத்தில் பிறப்பாள் என்றோம். இனி தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருத்தணிக்கு

மேற்குப்பாகத்தில் உள்ள பெரிய ஊரில் ரெட்டியார் குலத்தவனுகப் பிறந்தான். அக்காலத்தில் ஏற்பட்ட தீவினையை நாங்கள் இனிக் கூறுகின்றோம்.

தந்தையின் முற்பிறவி வரலாற்றின் தொடர்ச்சி

18. ஏழையை மோசஞ் செய்து வில்லத்தைப் பறித்துக்
[கொண்டான்
தாழ்வுளோர் வருத்த முற்றுச் சாற்றுவார் சாபந் தானும்
ஆழியில் பின்ஜன் மத்தில் அண்ணன்தம் பிகளு மின்றி
வாழ்மனை யிரண்டு மாயும் வளமிலாக் குடும்பி யாவாய்.

18. ஏழைகளை மோசம் செய்து அவருடைய வீடுகளை அபகரித்துக் கொண்டான். ஏழைகள் மனம் வருந்திச் சாபம் இடுகின்றனர். இனி ஏற்படும் மறுபிறவியில் உனக்குச் சகோதரர்களின்றி இருமனைவியரையும் அடைந்து செழிப்பில்லாத குடும்பத்தையும் பெற்றுவாழ்வாய்.

தந்தைக்கு முற்பிறவியில் ஏற்பட்ட சாபபலன்

19. சொல்லியே சென்ரு ரென்ரேஞ்
சேர்ந்தது வந்தச் சாபம்
அல்லல்க ளனந்த மூண்டாய்
அந்தகன் பக்கல் சென்று
எல்லையை யளந்தோன் மைந்தன்
எழுதியே வந்தா னென்ரேம்
புல்கிற்று வேழை சாபம்
பூவையு மிரண்டு மாகும்.

19. என்று சொல்லிவிட்டுச் சென்ரார் என்ரேம். அந்தச் சாபம் இவனைப் பற்றியது. தன் கடைசிக் காலத்தில் எல்லையில்லாத துன்பங்களைப்பெற்று மரண மடைந்து திரிவிக்ரமாவதாரம் எடுத்த திருமாலின் மைந்தனுகிய பிரம தேவனுல் மீண்டும் படைக்கப்பட்டுப் பிறந்தான். ஏழைகளின் சாபத்தால் இரு மனைவியரை அடையும்படி நேரிட்டது.

தந்தையின் மறுபிறவியும் பெற்றதாயின் முற்பிறவியும்

20. *சுகமிலாக் குடும்பி யாகத்
தரணியில் வாழ்வா னுகுந்
தகைமையா யிவன்பின் ஜன்மந்
தக்கோல மருகி லேதான்

---

*இப்பாடலில் ஓர் அடி மிகுந்துள்ளது.

உகமையா யிக்கு லத்தில்
உதிப்பனு மென்று சொல்வோம்
பகைவரைச் சம்ம ரிக்கும்
பார்வதி கேட்டி டாயே
செகமதி லன்னை பூர்வஞ்
செப்புவோ மினிமே லாக.

20. சுகமில்லாத குடும்பத்தை யடைந்து உலகில் வாழ்ந்து வருவான். இனி இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். தக்கோலத்துக்கருகில் இதே குலத்தில் பிறப்பான் என்று சொல்லுகின்றோம். விரோதிகளை ஒழிக்கும் பார்வதி தேவியே! கேளுங்கள். உலகில் இனி ஜாதகனைப் பெற்ற தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம்.

ஜாதகன் தாயின் முற்பிறவி வரலாறு

21. தென்திசைத் தில்லை மேல்பால்
சிறுவூரில் வன்னிய சேயாய்
இன்னவ ளுதித்து மேலும்
எழிலான குடும்பி யாகி
முன்னோர்க்கு வன்ன மீந்து
மேதினி நல்லோ ளாகித்
தனவரன் முன்னே மாண்டு
ஜனித்தன ளென்று சொல்வோம்.

21. தெற்குத் திசையிலுள்ள சிதம்பரத்துக்கு மேற்கில் உள்ள சிற்றூரில் வன்னிய குலத்தவளாகப் பிறந்து செயலான குடும்பியாகி அந்தணர்கட்கு அன்னமளித்து வந்து உலகில் நல்லவளாக வாழ்ந்து தன் கணவனுக்கு முன்பாகவே மரணமடைந்து இப்பிறவியில் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம்.

தாயின் மறுபிறவியும் ஜாதகனின் திருமணக் காலமும்

22. மறுஜன்மங் கோகர் ணத்தில் வருவளாம் பிரம்ம
[சேயாய்ப்
பொருளது பெருக்க மாகிப் பூவையும் வாழ்வா ளாகுந்
திருமகன் மணத்தின் காலஞ் செப்புவோ மினிமே லாக
இருபது வைந்தாண் டுக்குள் எய்திடுந் தென்பால் பாரி.

22. மறுபிறவியில் கோகர்ணத்தில் அந்தணர் குலத்தவளாகப் பிறந்து பொருளை அதிகமாகப் பெற்று வாழ்ந்து வருவாள் என்றோம். இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகனுக்கு இருபத்தைந்தாம் வயதுக்குள் திருமணம் நிகழும். தெற்குப் பக்கத்திலிருந்து மனைவி வாய்ப்பாள்.

மனைவியின் இயல்புகள்

23. பாரியின் குணத்தைச் சொல்வேன் பரவுப காரி யாகுஞ்
சீரிடாள் நற்கு ணத்தாள் தேவதாப் பத்தி பூண்பள்
மாறிடாள் பெரியோர் வார்த்தை மறித்துரை யதிகம்
[கூரூள்
காரிழை வந்த பின்பு கணவனுக் கதிக யோகம்.

23. இனி மனைவியின் குணங்களைக் கூறுகின்றோம். பிறருக்கு உபகாரம் செய்பவள். கோபங்கொள்ளாதவள். நல்ல குணமுடைய வள். தெய்வ பக்தியுள்ளவள். பெரியோர்களின் வாக்கியங்களை மீறுத வள். (பெரியோர்களின் வார்த்தைகட்கு எதிர் வார்த்தை கூறுவதையோ, தவறுவதையோ செய்யாதவள்.) மனைவி வந்த பிறகு கணவனுக்கு (ஜாதகனுக்கு) யோகம் விருத்தியாகும்.

ஜாதகனது புத்திரபாவமும் முற்பிறவியும்

24. சுதர்களு மாண்பா லிரண்டு
தோகையு மவ்வாறு தீர்க்கம்
பதராகு மொன்று வென்றோம்
பாலகன் பூர்வஞ் சொல்வேன்
அதிதிவாழ் பழனி தன்னில்
ஆண்மையாய் வைசியச் சேயாய்
நிதிமிக வுடைய னாகி
நிமலியு மதலை யுண்டாய்:

24. இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள் என்றோம். ஒரு குழந்தை நிலையாது என்றோம். ஜாதகனின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். பரதேசிகள் வாழ்ந்து வரும் பழனி க்ஷேத்திரத்தில் வைசிய குலத்தில் செல்வம் மிக்க உள்ளவனுக்குப் புத்திரனாகப் பிறந்து மனைவி மக்களைப் பெற்று;

ஜாதகனுக்கு யோகம் எய்துங்காலம்

25. மூன்வினை யில்லா னாகி
யொதுங்கினன் கால நாடு
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறப்பது மென்று சொல்வோம்
அன்னவன் யோகச் சேதி
யறிவிப்போ மினிமே லாக
முன்சொன்ன வாண்டின் மேலாய்
மேதினில் வறுமை காணுன்.

25. முற்பிறவியில் செய்த தீவினைகள் இல்லாதவனுக வாழ்ந்து மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப் பிறவியில் பிறந்தான் என்றேம். இனி ஜாதகனுடைய யோகச் செய்தி களைக் கூறுகின்றேம். முன்னுல் கூறிய வருடத்துக்குமேல் ஏழரை மையை அடையாதவன்.

வேறு

தந்தை ஜாதகன் இவர்களின் மரண காலங்கள்

26. கேதுதசை பின்பாதி முதலா யோகங்
கண்ணியமாய் வாழ்ந்திடுவ னிந்தப் பாலன்
ஒதுவேன் முப்பான்மூன் றுண்டு தன்னில்
உடலமது வாடுமென்றேந் தந்தைக் கேதான்
சாதகர்க்கு வறுபத்தொன் பாண்டு தன்னில்
தேள்மாதம் கிரியாணஞ் சாற்று கின்றேம்
நீதியாய்ச் பின்ஜன்மங் காஞ்சி தன்னில்
நேருவா னெனவுரைத்தோம் கிமலி யேகேள்.

26. கேது மர்காதசையில் பின்பாதி முதல் (28-ஆம் வயதுக்கு மேல்) யோகம் விருத்தியாகும். இந்த ஜாதகன் கௌரவமாக வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய முப்பத்து மூன்றும் வயதில் தந்தைக்கு மரணம் ஏற்படும். ஜாதகன் தனது அறுபத்தொன்பதாம் வயதில் கார்த்திகை மாதத்தில் மரணமடைவான். இனி ஜாதகனுடைய மறு பிறவியைச் சொல்லுகின்றேம். அடுத்த பிறவியில் காஞ்சீபுரத்தில் தோன்றுவான் என்று சொன்னேம். பார்வதி தேவியே! கேளுங்கள்.

வேறு

ஜனனகால தசை

27. அன்னவன் ஜனன காலம் அனுடத்தின் மூன்றும்
[பாதம்
துன்சனி தசையி ருப்புச் செப்புவோ மாண்டு வேழும்
பன்னுவோந் திங்க ளேழும் பகர்ந்தனம் பூர்வ பாகம்
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

27. ஜாதகனுடைய ஜனன காலத்தில் அனுஷ நட்சத்திரம் மூன்றும் பாதமாகும். அக்காலத்தில் சனி மகாதசையில் செல்லுப்போக இருப்பு ஏழு வருடங்களும் ஏழு மாதங்களுமாம். இதுவரை முதல்பாகம் சொன்னேம். உயர்ந்த கணவனைப்பெற்ற புண்ணிய வதியே! கேளுங்கள்.

ஜாதகம் 59

1. அரியது ஜன்ம மாக வாரலுங் குருவு மெட்டில்
பரிதியு மதியு மைந்தில் பளிங்கனு புதனு நாலில்
கரியவ னிரண்டி லாகக் கார்க்கோடன் நவம தாக
உரையுமே பலனை யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சிம்மம் லக்கினமாகவும், செவ்வாய் குரு எட்டாமிடமாகிய மீனத்திலும், சூரியன் சந்திரன் ஐந்தாமிடமாகிய தனுசிலும், சுக்கிரன் புதன் நான்காமிடமாகிய விருச்சிகத்திலும், சனி இரண்டாமிடமாகிய கன்னியிலும், ராகு ஒன்பதாமிட மாகிய மேஷத்திலும், (கேது துலாத்திலும்) இருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கலானார்.

கிரகநிலை

செவ்வாய் குரு	ராகு		
	இராசி சக்கரம்		லக்கினம்
சூரியன் சந்திரன்	சுக்கிரன் புதன்	கேது	சனி

ஜாதகனின் வீட்டு நிலை

2. அத்திரி புகலு கின்றார்
ஆணது ஜனன மாகும்
வித்தகன் தந்தை யில்லம்
விளம்புவோ மேற்குப் பார்வை
உத்தரந் தென்பால் வீதி
ஓங்காளி வடகீ ழாகும்
அத்தியின் கோஷ்ட முத்ரம்
அறுமுகன் கோஷ்டம் பாழாம்.

2. அத்திரி முனிவர் கூறுகின்றார். இஃது ஆண்மகனுடைய ஜாதகமாகும். இவன் தந்தையின் வீட்டில் பிறந்தான் என்றும், அவ்வீடு வடக்குத் தெற்கான தெருவில் மேற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது என்றும், காளிகோவில் வடகிழக்குத் திக்கில் உள்ளது என்றும், வடபுறத்தில் விநாயகருடைய ஆலயமும், சுப்பிரமணியக் கடவுளின் பாழடைந்த கோவிலும் உள்ளன என்றும் கூறுகின்றோம்.

இதுவுமது

3. தந்தியு மேல்பால் தங்குஞ்
ஜலக்கரை யருகில் தோன்றுந்
தென்திசை கீழ்ப்பால் மார்க்கஞ்
செப்புமிவ் வடையா ளத்துள்
இந்தசேய் நான்காஞ் ஜன்ம
மிறங்குவான் கங்கை சேயாய்
வந்தவன் குடும்பச் சேதி
வரைகிறே மிந்நூல் தன்னில்.

3. மேற்குப் பக்கத்தில் மற்றொரு விநாயகர் ஆலயம் ஒன்றும் இருக்கும். அருகில் ஒரு நீர்நிலையுள்ளது (நீரோடையுள்ளது என்றும் கொள்ளலாம்). தெற்குப் பக்கத்தில் கிழக்கில் சாலை யொன்று போகும். நாங்கள் கூறிய இவ்வித அடையாளங்களுள்ள வீட்டில் வேளாளர் குலத்தவனாக இந்த ஜாதகன் தன் தந்தைக்கு நான்காம் புத்திரனாகத் தோன்றுவான் என்று சொல்லுகின்றோம். இனி ஜாதகனுடைய (தந்தையின்) குடும்பச் செய்திகளை இந்நூலில் எழுதுகிறோம்.

தந்தையின் குணங்கள்

வேறு

4. தந்தைகுணங் கூறுகின்றே மாஞ்சி வப்பன்
சமர்த்தாக வார்த்தையுளன் தைரி யத்தன்
தந்தமது தரளமொக்கு மீகை யாளன்
சண்முகன்தன் பத்திமிகுஞ் சரச வார்த்தை
தன்பந்து மதிக்கவுய்வ ணாகை வாளுஞ்
சகராஜர் பேட்டிமிகும் தரணி விருத்தி
தன்மகுண மிருகல்வி தலங்கள் செல்வன்
சத்தான வஸ்து விஷ்டஞ் சகடு முள்ளான்.

4. இனி ஜாதகனுடைய தந்தையின் குணங்களைக் கூறுகின்றோம். மானிற முடையவன். சாமர்த்தியமாகப் பேசுபவன். தைரிய சாலி. முத்துக்களைப்போன்ற வெண்மையான பற்களுள்ளவன். கொடையாளி. முருகக்கடவுள் மீது பக்தியுடையவன். சரசசல்லாபமாகப் பேசுபவன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். ஈகமுடையவன். அரசாங்கத்தாருடன் தொடர்புள்ளவன். பூமிகள் விருத்தியாகும். தர்மம் செய்வதில் விருப்பமுள்ளவன். இருவிதமான கல்விகற்றவன். பல புண்ணியத்தலங்களுக்குச் செல்லுவான். புஷ்டியான வஸ்துக்களை அருந்துவதில் பிரியமுள்ளவன். வண்டி வைத்திருப்பவன்.

இதுவுமது

5. அரிராசி யம்மிகா ளுதிப்பா ளுகும்
அரசரால் ஜீவன மாயுள் மட்டும்
நெறிதவரு ஞானவுசுகம் நீத்தோர் நேயன்
நிலையிலார் தமைக்காப்பன் நிலம ளப்பன்
மருமநூல் தனையறிவன் மாமிரண்டு
ஆளடிமை பணையோர்க ளறத்தி லிச்சை
உறன்முறையார் மதிக்க வுய்வன் புகழுமேற்பன்
உடன்துணையா ணென்று கன்னி யவ்வாறு தீர்க்கம்.

5. சிம்ம லக்கினம் ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தவன் என்றேரும். அவன் ஆயுள்வரை அரசாங்க உத்தியோகம் ஏற்று ஜீவனத்தை நடத்துவான். நெறி தவறுதவன். நேர்மையுடன் நடப்பவன். சௌக்கியமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். துறவிகட்குப் பிரியமுள்ளவன். வீடுகளில்லாத ஏழைகளைக் காப்பவன். நிலத்தை அளக்கும் கணக்கன் வேலையைச் செய்து வருவான். ரகசிய நூல்களைக் கற்றுணர்வான். இருமணைவியரை அடைவான். பண்ணையாட்கள், பணியாட்கள், ஏர் முதலியவைகளின் விருத்தியுடையவன். தருமம் செய்வதில் விருப்பமுடையவன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். கீர்த்தியை யடைவான். அவனுக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரி யொருத்தியும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும்.

ஜாதகனுடைய தந்தையின் சகோதரனது குணஞ்செயல்கள்

6. துணைவனுமே வேரூவன் கிருஷி செய்வன்
சிலவேநாள் கிராமச்செட்டுச் செய்வா ளுகும்
பணையோர்கள் விருத்திசெய்வன் பதரில் செல்லான்
பாவையுமே வொன்றென்றேஞ் சுதரா ணிரண்டு
சினமிலாக் கன்னியர்கள் நான்குந் தீர்க்கஞ்
செல்லுமே மற்றவெல்லாம் வறுமை காணுன்
கனமான குடும்பமுறும் வறுமை காணுன்
காதலனும் வயதுதீர்க்கங் கருதி னேமே.

6. ஜாதகனுடைய தந்தையின் சகோதரன் அவனிடமிருந்து பிரிந்து சென்றுவிடுவான். விவசாயம் செய்து வருவான். சின்னட்கள் கிராமக் கணக்கனது (வியாபாரம்) தொழிலைச் செய்து வருவான். ஒரே மனைவியை அடைந்தவன். இரு புதல்வர்களையும் நான்கு புதல்விகளையும் பெற்றவன். அவ்வறுவரும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். மற்றும் தோன்றுபவர் நிலையார். தரித்திரமடையாதவன். செழிப்புள்ள

குடும்பத்தை அடைவான். தரித்திரமடையாதவன். நீண்ட ஆயுள் உள்ளவன் என்று கூறுகின்றோம்.

தந்தையின் முற்பிறவி

7. கருதுவோர் தந்தையின் பூர்வந் தன்னைக்
காஞ்சிக்குக் கீழ்ப்பாலில் பேரூர் தன்னில்
தரித்தொழிலாஞ் செங்குந்த மரபில் தோன்றித்
தனமிகுதி யுடையவனுய்ச் சான்றோர்க் கன்னம்
வருமார்க்கந் தாகப்பந்தல் வைத்து யின்னேன்
வறுமுகன்தன் தொண்டுசெய்து வறத்தி லிச்சை
திருகாகக் காலன்பதி சென்று யின்னேன்
சிரநான்கோன் வரைய வந்தான் தீரன்தானே.

7. இனி ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சிபுரத்துக்குக் கிழக்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் நெசவுத்தொழில் செய்துவரும் செங்குந்த மரபினனுகப் பிறந்து செல்வம் அதிகமாகப்பெற்றுப் பெரியோர்கட்கு அன்னமளித்து வந்து சாலை யோரங்களில் வழிப்போக்கரின் நன்மைக்காகத் தண்ணீர்ப்பந்தல்களை அமைத்து சுப்பிரமணியக் கடவுளுக்குப்பல தொண்டுகளைச் செய்து தருமம் செய்வதில் விருப்பங்கொண்டு வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவன் ஜாதகனுடைய தந்தை என்றோம்.

ஜாதகனுடைய குணங்கள்

8. சொன்னவிந்த குணத்தானுக் கிந்தப் பாலன்
தோன்றுவா னிவன்குணத்தைச் செப்பக் [கேண்மோ
கன்னெனமொழி யூகமுளன் கல்வி மேன்மை
கனராசர் பேட்டிமிகுங் காம னெப்பாம்
மன்னர்க்கு விவன்சொல்லே மேன்மை யாகும்
வார்த்தையுமே தந்திரந்தா மனது திப்பன்
பன்னியே பேசவல்லன் பணிந்தோர் நேயன்
பார்விருத்தி பரிவண்டி பலநூல் தேர்வன்.

8. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவனது குணங்களைக் கூறுகின்றோம், கேளுங்கள். இனிய வார்த்தைகளையே பேசுபவன். ஊக முடையவன். கல்வியில் மேன்மையுள்ளவன். மதிப்புக்குரிய அரசர்களைப் பேட்டி காணும் வாய்ப்பு மிகுதி (அரசாங்கத் தொடர்பு உள்ளவன்.) மன்மதனை யொத்த அழகிய சரீரமுடையவன். அரசாங்கத்தாருக்கு இவன் வார்த்தைகளில்

மதிப்புண்டு. தந்திரமாகவே பேசுபவன். மனத்தால் துதி செய்பவன். பன்னிப் பன்னிப் பேசுபவன். விலாங்கிலங்களைப் பெருக்குவான். குதிரை வண்டி வைத்திருப்பவன். பல நூல்களில் தேர்ச்சி யுள்ளவன்.

இதுவுமது

9. தேரினோர் நேசமுறுஞ் சிறப்பாய் வாழ்வன்
சீவனமு மரசரினுல் செப்ப லாகுங்
கோரியதை முடிக்க வல்லன் பலர்க்குநேயன்
குழவிபோல் வார்த்தையுண்டு குமரன் பத்தி
நாரிகள்மேல் மோகமுளன் துணையா ணென்று
நவிலுவோர் தீர்க்கமதாய்க் கன்னி யிரண்டு
கூறினதோ ராண்துணையு முன்னே லுகுங்
குமரன்பலன் தான்புகல்வேன் கோதை யேகேள்.

9. முதிர்ந்த அறிவாளிகளுடன் நட்புக்கொள்ளுவான். சிறப்பாக வாழ்ந்து வருவான். அரசாங்க உத்தியோகம் ஏற்று ஜீவனம் நடத்துவான் என்று கூறலாம். எண்ணிய காரியத்தை வெற்றியுடன் முடிக்கும் திறமையுள்ளவன். பலபேருக்கு நண்பன். சிறிய குழந்தைபோலப் பேசுபவன். முருகக் கடவுள்மீது பக்தியுள்ளவன். பெண்களின்மேல் மோக முடையவன். இவனுக்கு சகோதரன் ஒருவன் இருப்பான். இரு சகோதரிகள் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பர். நாங்கள் மேலே கூறிய சகோதரன் ஜாதகனுக்கு முன் பிறந்தவன் என்றேம். அந்தச் சகோதரனுடைய செய்தி விவரங்களைக் கூறுகின்றேம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் மூத்தசகோதரனின் செய்தி

வேறு

10. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட லுவன்
சொல்லது சுகமே யாகுஞ் சுந்தர முடைய லுகுங்
கல்வியு மிரண்டு தேர்வன் கசடரை யுறவு கொள்ளான்
மல்லின்முன் செல்லா லுகும் வாயுநோய் கொஞ்ச [முண்டு.

10. நல்லவர்கட்கு நல்லவனுகவும் தீயவர்கட்குத் தீயனுகவும் இருப்பவன். இன்பமாகவே பேசுபவன். அழகுள்ளவன். இருவிதமான கல்வியில் தேர்ச்சியுள்ளவன். மூடர்களுடன் நட்புக் கொள்ளாதவன். வீண் சண்டைக்கு முன் செல்லாதவன். சிறிது வாயுநோய் உள்ளவன்.

இதுவுமது

11. அன்னிய பாஷை யாலே யரசுமே செய்வா னுகும்
மன்னரால் ஜீவனங்கள் மாநிலம் விருத்தி செய்வன்
தன்மனங் கவடு மில்லான் தனமது பெருக்கஞ் செய்வன்
பொன்ரத்ன பணிகள் சேர்ப்பன் பிரபல கீர்த்தி
[யேற்பன்.

11. அன்னிய பாஷையில் பாண்டித்யம் பெற்று அதனால் ஒரு பொறுப்பான பதவியை வகித்து வருவான். அரசாங்க உத்தியோகத்தால் இவனுக்கு ஜீவனம் ஏற்படும் விஸ்தாரமாகப் பெருக்குவான். மனத்தில் கபடமில்லாதவன். செல்வத்தைப் பெருக்குவான். பொன் இரத்தினம் முதலானவற்றாலான ஆபரணங்களைச் சேர்ப்பான். எங்கும் பரவுகின்ற புகழையடைவான்.

மூத்த சகோதரன் புத்திரபாவம்

12. பாரியு மொன்றே யாகும்
பாலர்கள் தவத்தால் தோன்றுங்
கூறுவோ மாண்பா லொன்று
கோதையு மிரண்டு யென்றும்
மாரனும் வயது தீர்க்க
மங்கைமார் சேதி பின்னல்
தீரமாய்ச் சொல்லு கின்றோம்
தேவியே கேட்டி டாயே.

12. மனைவியொருத்தியே நீண்ட ஆயுள் உள்ளவள் என்றும். முற்பிறவியில் செய்த தவத்தால் (நல்வினையால்) புத்திரபாக்கியமேற் படும். ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும். ஜாதகனுடைய சகோதரனும் நீண்ட ஆயுள் உளளவன் என்றும். ஜாதகன் சகோதரியின் விவரங்களைப் பிற் பாகத்தில் சொல்லுகின்றோம். தேவியே! கேளுங்கள்.

ஜாதகன் தாயின் குணங்கள்

13. அன்னையின் சேதி சொல்வே னன்புள மனத்த ளாகும்
அன்னமு மன்பா யீவள் ஆளனுக் கினிய ளாகும்
அன்னியர் மதிக்க வாழ்வ ளடாவடி தன்னில் செல்லாள்
அன்னையு மிரண்டு மாகும் அதிதிகட் கன்ன மீவள்.

13. இனி ஜாதகன் தாயின் விவரங்களைச் சொல்லுகின்றோம். அன்புள்ள மனத்தினள். அன்புடன் அன்னமளிப்பவள். தன் கணவனுக்குப் பிரியமானவள். பிறர்கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள்.

அடாவடி வழியில் செல்லாதவள். இரு தாய்மார்களை உடையவள். கர்
யற்றவர்கட்கு அன்னமளிப்பவள்.

இதுவுமது

14. புத்திமான் கல்வி மானும் பொருத்தமாய்ப் பேச வல்லள்
சித்தமுங் கரப்பு மில்லாள் தேவதாப் பத்தி பூண்பள்
சுத்தத்தார் மதிக்க வாழ்வள் தேகமு முணச்சல் கீட்சி
குத்தமாய் வாயு நோயுங் குருவுப தேச மேற்பள்.

14. புத்திசாலி. கல்வியறிவுள்ளவள். பொருத்தமாகப் பேசு
பவள். மனத்தில் தீய எண்ணங்களில்லாதவள். தெய்வபக்தியுடை
யவள். தன் உறவினர்கள் கொண்டாடும்படி வாழ்ந்து வருபவள்.
மெல்லிய சரீரமுடையவள். உயரமான சரீரமுள்ளவள். வாயுரோக
முடையவள். சிறந்த ஆசிரியரிடம் உபதேசத்தைக் கேட்பவள்.

தாயின் சகோதரபாவம்

15. அறுமுகன் பத்தி பூண்பள் ஆசார முடைய ளாகுந்
திருமனை யொப்ப தாகுந் தேவிக்குத் துணையாண் தோஷம்
அரிவைமா ரிருவர் தீர்க்கம் அற்றிடும் எழுவர் தாமுங்
கரிமத வாணை பெற்ற காதலி கேட்டி டாயே.

15. ஆறுமுகக் கடவுளிடம் பக்தியுள்ளவள். ஆசாரமுடையவள்.ம்
இலக்குமியைப் போன்றவள். அவளுக்குச் சகோதர தோஷமுண்டு;
இரு சகோதரிகளைப் பெற்றவள். உடன்பிறந்தவர் எழுவர் இறந்து
விடுவர். கரிய மதயானையைப்போன்ற முகத்தையுடைய விநாயகனைப்
பெற்ற தேவியே! கேளுங்கள்.

தாயின் முற்பிறவி

16. மாதுரு பூர்வந் தன்னை யறைகிறேம் தணிகை யுத்திரம்
மேதினில் பேரூர் தன்னில் விளங்கிய னிரட்டி வம்சம்
போதன மதிக முண்டாய்ப் புகழான குடும்பம் பெற்று
மாதவர் பத்தி யாயும் வருவோரை யாதரித்தும்;

16. இனி, தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம்.
தணிக்கு வடக்கில் உள்ள பெரிய ஊரில் செட்டியார் மரபில் பிற
மிகுந்த செல்வங்களைப் பெற்று, சேர்த்தியுள்ள குடும்பத்தை
தெய்வபக்தியுள்ளவளாகவும் (தவம் செய்பவரின்மீது
டும்) அண்டி வந்தவரை ஆதரித்தும் வாழ்ந்து;

மேற்படி தொடர்ச்சி

17. காலன்தன் னுடை டைந்து கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமில் லாத கங்கைக் குலமதி லுதித்தா ளென்றேரும்
ஞாலமேல் வறுமை யின்றி நாதனுர் பத்தி பூண்பாள்
சாலவே யிவள்பின் ஜன்மஞ் சாற்றுவோம் தாயே
[கேளும்.

17. கடைசியில் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு நல்லொழுக்கமில்லாத இந்த வேளாளர் குலத்தில் பிறந்தாள் என்றேரும். உலகில் தரித்திரமில்லாதவளாக வாழ்ந்து வருவாள். சிவபெருமான்மீது பக்தியுள்ளவள். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

தாயின் மறுபிறவி

18. உத்தரங் காசி தன்னில் உதிப்பளா மறைக்கு லத்தில்
மெத்தெனக் குடும்பி யாகி வித்தகி வாழ்வா ளாகும்
பத்தினிக் கிச்சென் மத்தில் படர்ந்தபுண் ணியங்க
[ளென்ன
முத்தினேர் தொண்டு பூண்டு முலகுக்கு நல்லோ ளாயும்;

18. வடக்கில் உள்ள காசி க்ஷேத்திரத்தில் அந்தணகுலத்தவளாகப் பிறந்து பெரிய குடும்பியாக வாழ்ந்து வருவாள் என்றார். ஜாதகனுடைய தாய்க்கு இப்பிறவியில் ஏற்பட்ட நல்வினைகள் யாவை? அடுத்த பிறவியில் அந்தண குலத்தில் தோன்றுவதற்குரிய காரணங்கள் யாவை?). முதிர்ந்த அறிவாளிகட்குத் தொண்டுகள் பலவற்றைச் செய்தும் உலகிலுள்ளவர்கட்கு நல்லவளாகவும்;

உயர் குலப்பிறவிக் காரணம்

). தோகைவா கனத்தோன் பத்தி
துறவிக்கு வன்ன மீந்தும்
ஆகம முணர்வ தாலும்
அதுவித மறிவ தாலும்
நாகரி கங்க ளுண்டாய்
நாயகி வாழ்வ தாலே
பாகமாய்ப் பிரம்ம சேயாய்ப்
பிறப்பளா மென்று சொல்வோம்.

: மயிலே வாகனகமாக வுடைய சுப்பிரமணியக் கடவுளிடம்
ப்பக்தியும், துறவிகட்கு அன்னமளித்து வந்தும், வேதங்
அந்தணர்கட்குத் தொண்டுகளைச் செய்து வந்ததாலும்
ள அறிவதாலும், நாகரிகமாக வாழ்ந்து வருவதாலும்,

பொருத்தமாக அடுத்த பிறவியில் அந்தண குலத்தவளாகப் பிறப் பாள் என்று சொல்லுகின்றோம்.

தந்தை தாயார் மரணகாலம்

20. மூப்பது வாறு வாண்டில்
விளம்புவோ மன்னை கண்டஞ்
செப்புவோ மிருபா னென்பான்
ஆண்டினில் தந்தை கண்டம்
ஒப்புட னிவன்பின் ஜன்மம்
உரைக்கிறேந் தணிகை யுத்தரம்.
மெயப்புடன் பேரூர் தன்னில்
விளங்குவான் சத்திரியச் சேயாய்.

20. ஜாதகனுடைய முப்பத்தாரும் வயதில் தாய் மரண மடை வாள். இருபத்தொன்பதாம் வயதில் தந்தை மரணமடைவான். தந்தையின் மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருத்தணிக்கு வடக்கி லுள்ள பெரிய ஊரில் சத்திரிய குலத்தவனுகப் பிறப்பான் என்றோம்.

நற்செயல்கள்

21. இந்ததோர் ஜன்மந் தன்னில் இவன்செய்த புண்ணிய [மென்ன
முந்தவே கூறு மென்ன மொழியதைக் காத்த லாலுங்
கந்தன்மேல் பத்தி யாயுங் கடந்தோர்க்கு வன்ன மீந்தும்
தன்மனங் கவடு மின்றித் தேவதா தலங்கள் சென்றும்;

21. இந்த ஜன்மத்தில் என்ன நற்செயல்கள் செய்ததால் அடுத்த பிறவியில் உயர்ந்த குலமாகிய சத்திரிய குலத்தில் பிறப்பான் ? சொல்லுங்கள், என்று ரிஷிகளைக் கேட்டபோது அவர்கள் பதில் கூறு கின்றனர். தன்னுடைய வார்த்தைகளைக் காத்து வருவதாலும் முருகக் கடவுள் மீது பக்திகொண்டு வாழ்ந்து வருவதாலும், துறவிகட்கு அன்னமளிப்பதாலும், மனத்தில் வஞ்சனைகளில்லாததாலும், தெய் வங்கள் வாழும் புண்ணியத் தலங்களுக்குச் செல்வதாலும்;

இதுவுமது

22. திருப்பணி செய்வ தாலுஞ் ஜனிப்பலுஞ் சத்திரியக்

கரிபரி யுடைய னுகிக் காலாட்க ளதிக முண்டா
அரசுமே செய்வா னுகும் அறைந்தது தப்பா
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி

22. ஆலயத் திருப்பணி செய்து வருவதாலும் உயர்ந்த குலமாகிய க்ஷத்திரிய குலத்தில் பிறப்பான். யானை குதிரை முதலியவைகளை உடையவனுகியும் ஏவலாட்கள் பெருக்க முள்ளவனுகவும் இருந்து அரசன் போல் வாழ்ந்து வருவான். நாங்கள் கூறியது தவருது. பெரிய வயிற்றையுடைய விநாயகனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

திருமணக்காலமும் மனைவியின் இயல்புகளும்

23. பாலகன் மணத்தின் காலம் பகருவோ மிருப தாண்டில்
நீலியு முத்தி ரத்தில் நேருவாள் குணத்தைச் சொல்வேன்
சீலியா முன்கோ பத்தாள் சிறப்பான குடும்பி யாவள்
மால்மனை யொப்ப தாவள் வருவோரை யாத ரிப்பள்.

23. இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லு கின்றேம். அஃது இவனுடைய இருபதாம் வயதில் நிகழும். மனைவி வடக்குப் பக்கத்திலிருந்து வாய்ப்பாள். அவளுடைய குணங்களைக் கூறுகின்றேம். நல்லொழுக்க முள்ளவள். முன் கோபமுடையவள். சிறப்புள்ள குடும்பத்தை யுடையவள். திருமாலின் மனைவியாகிய இலக்குமியை யொத்த செல்வி. அடைந்தவரை ஆதரிப்பாள்.

மனைவியின் குணங்கள் தொடர்ச்சி

24. அன்னம்போல் சாய லொக்கும்
அடாவடி தன்னில் செல்லாள்
தன்வரன் மனத்துக் கேத்தோள்
சலித்தோர்க்கு வன்ன மீவள்
கன்னிகை யோக சாலி
கடந்தோர்போல் வார்த்தை யுண்டு
பொன்னிற முடைய ளாகும்
பூவைக்கு வயது தீர்க்கம்.

24. அன்னம்போல் அழகிய நடையுள்ளவள். அடாவடியாக நடக்காதவள். தன் கணவன் மனத்திற் கொப்ப நடந்து கொள்ளுவாள். தன்னைத்தவர்கட்கு அன்ன மளிப்பவள். அதிர்ஷ்டமுள்ளவள். முற்றும் துறந்த ஞானிபோல் பேசுபவள். பொன்னிறமும் நீண்ட ஆயுளும் உடையவள்.

புத்திர பாவம்

[illegible]களு மாண்பா லிரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
[illegible]கு மூன்று வென்றேம் பாலர்கள் யோக வான்கள்
[illegible]தன் பூர்வந் தன்னை யறைகிறே மினிமே லாக
[illegible]யுயர்வ தான நற்சேது பதியி லேதான்;

25. இனி ஜாதகனுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். இரு ஆண் குழந்தைகளும் இரு பெண் குழந்தைகளும் தோன்றி நீண்ட ஆயுள் உள்ளவையாக இருக்கும். மூன்று குழந்தைகள் நிலையாமல் இறந்துபோகும். புத்திரர்கள் ஜாதகனைவிட அதிர்ஷ்ட முள்ளவர்களாக இருப்பர். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். புண்ணிய தீர்த்தங்களில் உயர்ந்த சேதுவுக்கு அருகில் உள்ள ஊரில் ;

முற்பிறவி

26. வன்னிய குலமு தித்து மனிவிமைந் தருமுண் டாகி
முன்னமே குடும்பி யாகி முருகன்தன் பத்தி பூண்டு
பன்னுவோர்க் கன்ன மீந்து பலதல வாசஞ் சென்று
துன்மையாய்க் கால நாடு சேர்ந்துமே பிரம னிலக்கம் ;

26. வன்னிய குலத்தில் பிறந்து, மனிவி மக்களைப்பெற்று உயர்ந்த குடும்பியாகி, முருகப்பிரானிடம் பக்தி பூண்டு, அண்டி வந்தவர் கட்கு அன்புடன் அன்னமளித்து வந்து, பல புண்ணிய க்ஷேத்திரங் களுக்குச் சென்று இறுதியில் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு ;

யோக விவரம்

27. உதிப்பனு மிந்தப் பாலன் உரைக்கிறோ மிவனின் யோகம்
அதிகாரத் தொழிலுஞ் செய்வன் அரசர்பூ சிதமு மாவன்
துதிசெய்தோர்க் குதவி செய்வன் தொடுத்ததை வெல்வா [னகும்
நதிபல தீர்த்தந் தோய்வன் நாட்டினில் வறுமை காணன்.

27. இப் பிறவியில் இந்த ஜாதகனுகப் பிறந்தான். இனி இவனுடைய யோக வரலாற்றைச் சொல்லுகின்றோம். அரசாங்க உத்தியோகத்தை ஏற்று அதிகாரங்களையுடைய பதவியை வகிப்பான். அரசரால் நன்கு மதிக்கப்படுவான். தன்னைத்தோத்திரம் செய்தவர்கட்கு உபகாரி. ஆரம்பித்த காரியங்களை வெற்றியுடன் முடிப்பான். பல புண்ணிய நதிகளில் நீராடுவான். உலகில் வறுமையை யடையாதவன்.

இதுவுமது

28. இருபது வாண்டு தன்னில்
எய்திடு மிராஜ யோகம்
பிறைபோலே வரசு வோங்கும்
புகலுவோ அன்பா ஞறுங்

குறைவிலா விருத்தி யென்றேங்
குறுமுனி தடுத்துச் சொல்வார்
திருகுக விதற்குள் ளாகச்
சேராவோ விவரஞ் சொல்வீர்.

28. ஜாதகனுடைய இருபதாம் வயதில் ராஜயோகம் ஏற்படும். வளர்பிறைச் சந்திரன்போல் உத்தியோகம் உயரும். அவனுடைய ஐம்பத்தாரும் வயது வரையில் குறைவுகளில்லாமல் அதிர்ஷ்டம் பெருகும் என்று கூறுகின்றேம். அகத்திய முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். இவ்வயதுக்குள் தீங்குகள் ஏதும் ஏற்படாதோ. அவ்விவரத்தைச் சொல்லுங்கள், முனிவரே!

29. மூப்பது மூப்பத் தெட்டு மேவிய நாற்பா னைந்து
செப்பிய வாண்டு தன்னில் சிலசில பகையு நேருந்
தப்பித மணுகா தாகுஞ் சல்லிய ஞலில் தங்க
ஒப்புட னதற்கு வைந்தில் உயர்குரு விருப்ப தாலே;

29. ஜாதகனுடைய மூப்பதாம் வயது, மூப்பத்தெட்டாம் வயது, நாற்பத்தைந்தாம் வயது இவ் வருடங்களில் சிற்சில விரோதங்கள் ஏற்படும். தீங்குகள் உண்டாகும். ஆனல் ஒருவிதமான பெரிய சங்கடங்களோ நஷ்டங்களோ ஏற்படா. சுக்கிரன் நான்காமிடத்தில் இருப்பதாலும் அவ்விடத்திற்கு ஐந்தாமிடத்தில் குரு இருப்பதாலும்;

கேசரி யோகம் வேசி யோகம் இவைகள் ஏற்படுதற்குரிய கிரகநிலை

30. பரிதிமுன் பனிபோல் நீங்கும்
பராசருந் தடுத்துச் சொல்வார்
குருகுஜ னெட்டில் தங்கக்
குறித்திட்டீர் யோக மெவ்வாறு
மறையவன் தனக்குப் பத்தில்
மதிநிற்கக் கேசரி யோகம்
அருணனுக்கீ ராறில் வெள்ளி
யமர்ந்ததால் வேசி யோகம்.

30. சூரியன்முன் பனிபோல் உடனே விலகி விடும். பராசர முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். குருவும் செவ்வாயும் எட்டாமிடத்தில் இருப்பதால் யோகம் ஏற்படும் என்று எவ்விதம் கூறுகிறீர்கள்? குரு வீற்குமிடத்துக்குப் பத்தாமிடத்தில் சந்திரன் இருப்பதால் கேசரி யோகமும் சூரியனிருக்குமிடத்துக்குப் பன்னிரண்டில் சுக்கிரன் இருப்பதால் வேசி யோகமுமேற்படும்.

நளயோகம்—யோகங்களின் பலன்

31. அதுவின்றித் தசத்தில் ராகு அணுகின பலமே வொன்று
இதுநள யோக மென்றோம் இயம்பின மூன்று யோகஞ்
சதியிலாப் பூமி வீடு தனம்பணி முப்பா யிரம்பொன்
அதிபனுஞ் சேர்ப்பா னென்றே மங்கையே கேட்டி
டாயே.

31. இவை யிரண்டும் தவிர பத்தாமிடத்தில் ராகு இருக்கும் பலத்தால் நளயோகமும்) ஆக மூன்று யோகங்கள் ஜாதகனுக்கு ஏற்படும். தீங்குகளில்லாத பூமி வீடு செல்வம் ஆபரணங்கள் இவை யெல்லாம் சேர்த்து முப்பதாயிரம் பொன் மதிப்புள்ள சொத்துக்களைச் சேர்ப்பான் என்றும் சொன்னோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகன் மரணகாலம்

32. ஜாதகன் மரண காலஞ்
சாற்றுவோ மறுபா னென்பான்
தீதிலாத் தனுசு மாதஞ்
செப்புவோ மார கங்கள்
ஓதுவே னிவன்பின் ஜன்மம்
உயர்தில்லை தன்னி லேதான்
மாதவர் குலமு திப்பான்
மங்கையே கேட்டி டாயே.

32. இனி ஜாதகனுடைய மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். அறுபத்தொன்பதாம் வயதில் தீதுகளில்லா மார்கழி மாதத்தில் மரண மடைவான். இவன், மறுபிறவியில் உயர்ந்த க்ஷேத்திரமாகிய சிதம்பரத்தில் மிகுந்த தவமியற்றும் அந்தண குலத்தவனாகப் பிறப்பான். தாயே! கேளுங்கள்.

ஜனனகாலதசை

33. பிறந்திடு காலந் தன்னில் பூராட மூன்றும் பாதஞ்
சிறந்தசுக் கிரனி ருப்புச் செப்புவோ மாண்டு வைந்தும்
உறைந்திடுந் திங்கள் நாலும் உரைத்தனம் பூர்வ பாகம்
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

33. ஜாதகன் பிறக்கும் காலத்தில் பூராட நட்சத்திரம் மூன்றும் பாதமாகும். அக்காலத்தில் சுக்கிர மகாதசையில் சொல்லு போக மீதி யிருப்பு ஐந்து வருடங்களும் நான்கு மாதங்களுமாம். இது வரையில் முதல் பாகத்தைச் சொன்னோம். தருமத்தை வளர்க்கும் எங்கள் உயிருக்குயிரான தாயே! கேளுங்கள்.

ஜாதகம் 60

1. அரியது வுதைய மாக வம்புலி யிரண்டில் தங்கக்
குருராகு தேள தாகக் [1]கூரிய னலவன் புக்கக்
கரியவன் மேரு வாகக் [2]கலிபானு லாப மேறத்
தரைமகன் கேது வுந்தான் தப்பாமல் புல்லில் தங்க
*உரையுமே பலனே யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சிம்மம் லக்கினமாகவும், சந்திரன் இரண்டாமிடமாகிய கன்னியிலும், குரு ராகு விருச்சிகத்திலும், புதன் கடகத்திலும், சனி தனுசிலும், சுக்கிரன் சூரியன் லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், செவ்வாய் கேது விருஷபத்திலும் இருந்தால் பலனென் வாறு என்று பார்வதி தேவி கேட்கலானாள்.

கிரகநிலை

		செவ்வாய் கேது	சுக்கிரன் சூரியன்
	இராசி சக்கரம்		புதன்
			லக்கினம்
சனி	குரு ராகு		சந்திரன்

ஜனன வீட்டுநிலை

2. தென்முனி புகலு கின்றார் ஜன்மமு மாண்பா லாகும்
வந்தவில் வடதென் வீதி வாசலு மிந்திர லோக்கங்
கந்தனே யீன்றோன் கீழ்ப்பால் கனக்காத கோஷ்ட
[முண்டு
அந்தரி காளி யுத்திரம் அருகருந் தென்கீ ழாகும்.

2. அகத்திய முனிவர் பதில் உரைக்கின்றார். இஃது ஆண் மகனுடைய ஜாதகம். இவன் பிறந்த வீடு தெற்குவடக்கான தெருவில் கிழக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. முருகக்கடவுளைப்பெற்ற சிவபெருமானின் கோவில் கிழக்குத் திக்கில் இடிந்துள்ளது. மாரியம்மன் கோவிலும், காளி கோவிலும் வடக்குப்பக்கத்தில் உள்ளன. அருகேதவனின் ஆலயம் தென்கிழக்கில் இருக்கும்.

---

1. புதன்
2. சுக்கிரன்
* இப்பாடலில் ஓரடி மிகுந்துளது

ஜாதகன் குலம்

3. மாரியுந் தென்மே லாகு மறைந்தயிவ் வடையா ளத்துள்
கூறுவோஞ் சமவூர் தன்னில் குழவியு மிரண்டாஞ்
[ஜன்மந்
தீரமா யுதிப்பா லுகுஞ் சினகுல மென்று சொல்வோம்
பாரினில் குடும்பச் சேதி பகருவோ மிந்நூல் தன்னில்.

3. மாரியம்மன் கோவில் தென்மேற்குத் திக்கில் உள்ளது. இவ்வித அடையாளங்களுள்ள சமஸ்லியான ஊரில் ஜாதகன் ஜைனர் குலத்தில் தன் தந்தைக்கு இரண்டாம் புத்திரனுகப் பிறந்தான் என்று சொல்லுகின்றோம். இனி இவ்வுலகில் அவனுடைய குடும்பச் செய்திகளை இந்தச் சோதிடநூலில் சொல்லுகின்றோம்.

வேறு

தந்தையின் குணங்கள்

4. தந்தைகுணங் கூறுகிறே மாகி றத்தன்
சரசமாய் வார்த்தையுளன் சமமாங் கல்வி
தந்தைமொழிக் கிடருரையான் சான்றோர் நேயன்
ஜகராசர் பேட்டிகொள்வன் தரணி விருத்தி
தந்தமது தரளமொக்கு மூக முள்ளான்
சகடுநாள் மைராசி தானு திப்பான்
தன்பந்து புகழவுய்வன் கிராமச் செட்டுச்
சத்தான வஸ்துவிஷ்டன் தனவா னுவன்.

4. இனி ஜாதகனுடைய தந்தையின் குணங்களைச் சொல்லுகின்றோம். மாகிறமுள்ளவன். சரசசல்லாபமாகப் பேசுபவன். சமமான (அவசியம் எவ்வளவு தேவையோ அவ்வளவு) கல்வியைக் கற்றவன். தன் தந்தையின் வார்த்தைகளுக்கு எதிர்வார்த்தை கூறுதவன். பெரியோர்கட்குப் பிரியமுள்ளவன். அந்நிலவரசருடன் தொடர்பு கொண்டவன். விளைநிலங்களைப் பெருக்குவான். பற்கள் முத்துக்களைப் போன்று வெண்மையுள்ளவை. ஊகமுடையவன். உரோகிணி நட்சத்திரத்தில் மேஷ லக்கினத்தில் பிறந்தவன் என்றோம். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். கிராமாதிகாரியாக இருப்பான். புஷ்டியுள்ள ஆகாரங்களைப் புசிப்பதில் விருப்பமுடையவன். செல்வமுடையவன்.

5. பலபாவை மோகமுளன் வாத தேகி
பரிந்தகுணம் புத்திமான் பலர்க்கு நேயன்
தலவாசஞ் சென்றிடுவன் சோலை கூவல்
சமைப்பானு மூன்கோபி யிளம னத்தன்

நிலகாப்ப னிருகுணத்தா னன்ன மீவன்
நேர்சகடு பரியுடையான் சீல னுவன்
திலகம்போல் யாவருக்கும் பணியேர் விருத்தி
சித்ரயில்லந் தான்செய்வன் சிலுகுஞ் செய்வன்.

5. பல பெண்களின்மீது மையல் கொண்டவன். (சிற்றின்பப் பிரியன்). வாயுரோகமுடையவன். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்வான். தோட்டம் துறவுகளை அமைப்பான். முன்கோபமுள்ளவன். உடனே சாந்தமடைவான். (இளகிய மனமுள்ளவன்.) தன்னுடைய அந்தஸ்தைக் காத்துக்கொள்வான். இருவிதமான குணங்களுள்ளவன். பசித்தவர்கட்கு அன்னமளிப்பவன். நேர்மையான குதிரை வண்டி வைத்திருப்பவன். நல்லொழுக்கமுள்ளவன். நெற்றிக்குத் திலகம் எவ்விதம் இன்றியமையாததோ அவ்விதம் எல்லோருக்கும் முக்கியமானவன். பண்ணை ஏர் முதலியவைகளின் பெருக்கமுடையவன். அழகிய வீட்டைக் கட்டுவான். சிறிது குறும்புகளும் செய்பவன்.

6. செய்ந்நன்றி மறவாதான் மாமி நான்கு
செப்புகிரேந் தேவபத்தி கொஞ்ச முண்டு
வையமேல் வறுமையிலா னடிமை யோனும்
மாதுருவின் வர்க்கத்தால் பெருமை யேற்பன்
மைவிழிமார் தம்மாலே மனமுந் துக்க
மடிமையேர் குடிப்பெருக்க மால்ரேகை யுண்டு
கைகாலில் வடுவுடைய னென்று சொல்வோங்
காதலிமா ரிருவர்க ளிளையா ளுக்கு;

6. பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். நான்கு மனைவியரை அடைவான். தெய்வபக்தி சிறிதுள்ளவன். உலகில் தரித்திரமடையாதவன். அடிமைத்தொழிலைச் செய்து வருவான். தன்னுடைய தாயின் வர்க்கத்தாரால் பெருமையை அடைவான். மைதீட்டிய அழகிய கண்களையுடைய பெண்களால் மனதுக்குக் கஷ்டம் நேரிடும். இவன் ஏவலாட்கள் குடிகள் ஏர் முதலியவைகளின் பெருக்குமுள்ளவன். விஷ்ணுரேகையுள்ளவன். கால் கைகளில் வடுக்கள் உள்ளவன். அவனுக்கு ஏற்பட்ட மனைவியர் இருவரில் இளைய மனைவிக்கு;

வேறு

ஜாதகன் குணஞ்செயல்கள் : பின்வரும் மூன்று பாடல்களில் கூறுவர்

7. பாலக னுதிப்பா னுகும் பகருவோ மிவன்கு ணத்தைச்
சீலவான் வாத தேகி சிந்தையில் கவடு மில்லான்
மால்மக ளெப்ப தாகும் வருவோரை யாத ரிப்பன்
காலத்தை யறிந்து வாழ்வன் காலாட்க ளதிகஞ்

[சேர்ப்பன்.

7. ஜாதகன் பிறப்பான். இனி ஜாதகனுடைய குணத்தைக் கூறுகின்றோம். நல்லொழுக்கமுள்ளவன். வாயுரோகமுடையவன். மனத்தில் சூதுகளில்லாதவன். திருமாலின் மகளாகிய முன்மதனைப் போன்ற அழகுள்ளவன். யாசித்து வந்தவர்கட்கு உபகாரம் செய்பவன். வருங்காலத்தை முன்கூட்டியே யறிந்து அதற்கொப்ப வாழ்க்கையை வகுத்து நடப்பவன். ஏவலாட்களை அதிகமாகவுடையவன்.

8. வித்தையு மூன்று கற்பன்
வேந்தர்கள் பேட்டி கொள்வன்
புத்தியில் பெரியோ னுவன்
பொய்யது வழுத்தா நெஞ்சம்
அத்திபோல் நடையு மாவன்
அகசிய வார்த்தை கூறுன்
எத்திசை நல்லோ னுவன்
இடரென்றோர்க் குதவி செய்வன்.

8. மூன்றுவிதக் கல்விகளைக் கற்பான். அரசாங்கத் தொடர்பு உள்ளவன். அறிவில் பெரியவன். பொய் பேசாதவன். யானையைப் போல் கம்பீரமான நடையுடையவன். அசிங்கமான வார்த்தைகளைப் பேசாதவன். எல்லாத் திக்குகளிலும் நல்லவன் என்ற பெயரையடைவான். துன்பமுற்றவருக்கு உபகாரம் செய்பவன்.

9. மாந்தளிர் மேனி யாகும்
வாததே கத்தா னென்றோங்
கூர்ந்துமே வார்த்தை சொல்வன்
குறிப்பினில் கொடுமை காணுங்
தேர்ந்தோர்க்கு வன்ன மீவன்
சிங்கம்போல் கோப முண்டு
ஏந்திழை மார்கள் மோகன்
இரணியஞ் சேர்ப்பா னுகும்.

9. மாந்தளிர் போன்ற மென்மையான சரீரமுடையவன். வாயு ரோகமுடைய சரீரமுள்ளவன். நன்றாக ஆராய்ந்து பார்த்துப் பேசுபவன். முகத்தில் கொடூர முள்ளவன். துறவிகட்கு அன்னமளிப்பவன். சிங்கம் போல் கோபங் கொள்ளுபவன். பெண்கள்மீது மையல் கொள்ளுபவன். பொன்னை அதிகம் சேர்ப்பவன்.

ஜாதகன் சகோதரபாவம்

10. இன்னவன் செங்கை தன்னி
லிலகடுங் கமல ரேகை
தன்துணை முன்பெண் ணொன்று
சாற்றுவோம் தீர்க்க மாக

அன்னவள் சேதி சொல்வேன்
அழகுளா னிருசி வப்பள்
தன்சொலு மடக்க முண்டு
சாந்தமுங் கோப மேற்பள்.

10. இவனுடைய கைகளில் பத்மரேகை யுடையவன். உடன் பிறந்தவரில் ஜாதகனுக்கு மூத்த சகோதரி யொருத்தி உண்டு என்றும் அவள் நீண்ட ஆயுள் உள்ளவள் என்றும் சொல்லுகின்றோம். அந்தச் சகோதரியின் செய்திகளைக் கூறுகின்றோம். கருமை கலந்த சிவந்த நிறமுடையவள். (அடக்கமாகப் பேசுபவள்.) அடக்கமுடைய வள். முன்கோபமுள்ளவள். விரைவில் சாந்தமடைவாள்.

சகோதரியின் குணநலங்கள்

11. பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா ளாகுங்
கன்னிகை யோக சாலி கடவுளர் பத்தி பூண்பள்
முன்னோர்க்குத் தொண்டு பூண்ப ளுலகினில் நல்லோ
[ளாவள்
இன்னவள் தீர்க்க ஜீவி இளமன முடைய ளாமே.

11. ஊனமில்லாத தேகமுடையவள். பிறர்மீது குற்றம் கூறுத வள். அதிர்ஷ்டமுடையவள். தெய்வபக்தியுடையவள். பெரியோர் கட்கு (அந்தணர்கட்கு)ப் பல தொண்டுகளைச் செய்பவள். உலகில் நல்ல வளாக வாழ்ந்து வருவாள். நீண்ட ஆயுள் உள்ளவள். இளகிய மனமுடையவள்.

12. மங்கைக்கு வரனு முள்ளூர் மருவிடுஞ் சுதரா ணிரண்டு
நங்கைமா ரவ்வா ருகும் நாயகன் மனத்துக் கேத்தோள்
பொங்கிய குடும்பி யாவள் பூடண மதிகஞ் சேர்ப்பள்
சங்கையென் றுரைச் சேராள் சத்திக்கு வயது தீர்க்கம்.

12. ஜாதகனுடைய சகோதரிக்கு உள்ளூரிலிருந்தே கணவன் வரப்பான். ஆண் குழந்தைகள் இரண்டையும் பெண்கள் இருவரையும் பெற்றவள். வளம்பெற்ற குடும்பத்தையுடையவள். அதிகமான ஆபரணங்களைச் சேகரிப்பாள். சந்தேகப்படக்கூடிய நிலையிலிருப்ப வருடன் சேராதவள். நீண்ட வயதுடையவள்.

13. மாரன்பின் தூணைகள் காண னறைகுவீ ரந்தச் சங்கை
காரியத் தானந் தன்னில் கேதுவுஞ் சேயுந் தங்கக்
கூறினேந் தூணபின் தோஷங் [1]கொடுவிஷம் நாலில்
[தங்கக்
காரிழை யாளை மாள்வள் காணுரே தூணவ ரென்றோம்.

1. ராகு

13. ஜாதகனுக்குப்பின் பிறந்த சகோதரர்களில்லை. அவ்விதம் நேரிடக்காரணம் யாது என்று சொல்லுங்கள், முனிவரே! கருமஸ்தானத்தில் (பத்தாமிடமாகிய ரிஷபத்தில்) கேதுவும் செவ்வாயும் தங்கியிருப்பதால் நாங்கள் பின்னல் தோன்றும் சகோதர்கட்குத் தோஷமுண்டு என்று சொன்னேம். ராகு மாதுர்ஸ்தானமாகிய (நான்காமிடமாகிய) விருச்சிகத்தில் இருப்பதால் ஜாதகனுடைய தாய் இறந்து விடுவள். அதனல் ஜாதகனுக்குப் பின்பிறந்த சகோதரரில்லை என்று சொன்னேம்.

தாயின் மரணகாலம்

14. எந்தக்கா லத்தில் மாள்வள் இயம்புவீ ரந்தச் சங்கை
வந்தவன் திங்கட் குள்ளே மாதுரு நாச மாவள்
பிந்திவே றொருத்தி சேர்வள் பேசுவோ மவள்கு
[ணத்தைச்
செந்திரு மாது வொப்பாஞ் சீலியும் பொறுமை சாலி.

14. எந்தக் காலத்தில் ஜாதகனுடைய தாய் மரணம்டைவாள் என்று சொல்லுங்கள், முனிவரே! ஜாதகன் பிறந்த மாதத்திற்குள் ளாகவே தாய் மரணமடைவாள். அதற்குப் பிறகு வேற்று மாது ஒருத்தி மாற்றுந்தாயாக வாய்ப்பாள். அவளுடைய குணங்களைச் சொல்லுகின்றேம். இலக்குமியைப் போன்ற அழகும் செல்வமுமுடையவள். நல்லொழுக்கமுடையவள். பொறுமையுடையவள்.

இளையதாயின் புத்ரபாவம்

15. வந்தபின் யோக மெய்து மறுமொழி யதிகங் கூறுள்
தந்தையி லுள்ளூ ராகுஞ் சாற்றிலே மாண்பா லொன்று
சந்திர வதன மொத்த தையல ரிருவ ராகும்
இந்தவள் தீர்க்க ஜீவி யிடரிலா வாழ்வா ளாகும்.

15. அவளை மணந்த பிறகு தந்தைக்கு யோகம் விருத்தியாகும். எதிர்த்துப் பேசும் வழக்கமில்லாதவள். அவளுடைய தந்தையின் வீடு உள்ளூரிலேயே உள்ளது என்றேம். அவளுக்குப் புத்திர பாவத்தைச் சொல்லுகின்றேம். ஒரு புத்திரனும் அழகிய முகமுடைய இரு பெண்களும் தோன்றுவர். இவள் நீண்ட ஆயுள் உள்ளவள். துன்பங்களில்லாமல் வாழ்ந்து வருவாள் என்றேம்.

பெற்றதாயின் குணங்கள்

16. அத்திரி தடுத்துச் சொல்வார்
அன்னையின் குணமெவ் வாறு
சித்தமே கரப்பு மில்லாள்
சீலியாம் பொறுமை சாலி

நத்தினோர்க் குதவி செய்வள்
நாதனர் விரத மேற்பள்
புத்தியில் பெரியோ ளாவள்
பூவையுந் துணைவர் காணுள்.

16. அத்திரி முனிவர் இடைமரித்துச் சொல்லுகின்றார். ஜாதக னுடைய தாயின் குணங்கள் எவ்வாறுள்ளனவென்று சொல்லுங்கள். மனத்தில் தீய எண்ணங்களில்லாதவள். நல்லொழுக்கமுள்ளவள். பொறுமையுடையவள். அண்டி வந்தவர்கட்கு உபகாரம் செய்பவள். சிவபெருமானுக்குரிய நோன்புகளை இயற்றுவாள். (ஸோமவார விரதம் இருப்பவள்). பெரியவர்களைப்போல் புத்தியுடையவள். சகோதரர் களில்லாதவள்.

மறுதாயின் விவரம் : குணங்கள்

17. மறுமாதா வொன்று நேரு
மைந்தர்கள் விருத்தி யென்றோம்
அரிவையு முள்ளூ ராகும்
அவள்பூர்வம் புகலக் கேண்மோ
அருணைக்கு மேல்பா லாக
அணுகிய சிறுவூர் தன்னில்
தரித்தொழில் புரியும் வர்க்கஞ்
ஜனித்துமே வறுமை யின்றி ;

17. ஜாதகனுக்கு மாற்றுந்தாய் ஒருத்தி வாய்ப்பாள் என்றோம். அவளுக்குப் புத்திர விருத்தி உண்டு என்று சொல்லுகின்றோம். அவளுக்குப் பிறந்த வீடு உள்ளூராகும். அவளுடைய முற்பிறவியைச் சொல்லக் கேட்பீராக. திருவண்ணுமலைக்கு மேற்கில் உள்ள சிற்றூரில் நெசவுத்தொழிலைச் செய்துவரும் செங்குந்த மரபில் பிறந்து தரித்திர மடையாமல் ;

சாபம்

18. மாதவு வாழு நாளி லடைந்தவூழ் தன்னைக் கேண்மோ
பாதக வார்த்தை யொன்று பகர்ந்தனள் நாத்தி பேரில்
ஓதுவா ளந்த மாது ஊர்சினஞ் சொன்ன பாவி
மேதினில் மறுஜன் மத்தில் விளங்காரே துணைவர் தாமும்.

18. வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லக் கேளுங்கள். தன்னுடைய கணவனுடைய சகோதரியின் மீது தீய வார்த்தைகளைக் கூறினள். அந்தப்பெண்ணும் பதில் சொல்லுகின் றாள். ஊரார் கோபம் கொள்ளுமாறு அடாத வார்த்தைகளைக் கூறிய பாவியே ! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உடன்பிறந்தவர் நிலை யில்லாதவராவர்.

19. அன்னையால் சுகமு மின்றி யவனியில் வாழ்வாய் நீயும்
இன்னமும் பலவாறு சொன்னஞ் எய்திற்று வந்தச் சாபந்
தென்திசைக் கால நாடு சென்றுமே பிரம னிலக்கங்
கன்னிகை யுதித்தா ளென்றேங் காதலி சாபத் தாலே.

19. உனக்கு உன்னுடைய தாயால் சுகமுமில்லாமல் உலகில் வாழ்ந்து வருவாய் என்றும் இன்னும் பலவிதமாகவும் சொன்னஞ். அந்தச்சாபம் இவளைத் தொடர்ந்தது. இவளும் (ஜாதகனுடைய மாற்றாந் தாயும்) மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப் பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றோம். நாத்தியின் சாபத்தால்;

மறுபிறவி

20. துணைதோஷ மன்னையி ரண்டாஞ்
செப்புவோ மிவள்பின் ஜன்மங்
கனமுள துவாரை தன்னில்
கலப்பளாஞ் சத்திரியச் சேயாய்த்
திணிபெருங் குடும்பி யாவள்
செப்பின மொழிகுன் றுவே
அனையவே தவங்கள் செய்யும்
அம்பிகை யாளே கேளாய்.

20. உடன் பிறந்தவருக்குத் தோஷமேற்படும். இரு தாய்மார்களை அடைவாள். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். பெயர் பெற்ற துவாரகையில் சத்திரிய குலத்தவளாகப் பிறப்பாள். பெரிய குடும்பமுடையவளாக இருப்பாள். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. தாயே! சதா தவங்கள் புரியும் தேவியே! கேளுங்கள்.

திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

21. பாலகன் மணத்தின் காலம்
பகருவோம் பதினே ழாண்டுள்
நீலியு முள்ளூர் தன்னில்
நேருவாள் குணத்தைச் சொல்வோம்
மால்மனை யொப்ப தாவள்
வருவோரை யாத ரிப்பள்
சீலியாம் விரத மேற்பள்
ஜனவுப காரி யாவள்.

21. ஜாதகனுடைய திருமணக்காலத்தை இனிக் கூறுகின்றோம். அவனுடைய பதினேழாம் வயதுக்குள், மனைவி உள்ளூரிலிருந்தே வாய்ப்பாள். அவளுடைய குணத்தைக் கூறுகின்றோம் இலக்குமி

யைப்போன்றவள். அண்டிவந்தவரை ஆதரித்து வருவாள். நல் லொழுக்கமுடையவள் விரதத்தை ஏற்பவள். ஜனங்களுக்கு உபகாரி யாக இருப்பாள்.

இதுவுமது

22. அன்னம்போல் வடிவு மொக்கு மாளன்தன் வடிவுக்
[கேத்தோள்
அன்னமு மன்பா யீவள் அதிதிபோல் வார்த்தை யுண்டு
பின்னமில் லாத தேகி பிறர்பொரு ளிச்சை யில்லாள்
சொன்னசொல் சுகமே யாகுஞ் சுந்தரி வயது தீர்க்கம்.

22. அன்னத்தைப்போன்ற நடையழகுள்ளவள். தன் கணவனது (மனத்திற்கு) உருவத்திற்கு ஏற்றவள். அன்புடன் அன்னமளிப்பவள். முற்றும் துறந்தவரைப்போல் பேசுபவள். ஊனமில்லாத சரீரமுடைய வள். பிறருடைய பொருளின்மீது விருப்பமில்லாதவள். அவளது வார்த்தைகள் மேன்மையுள்ளவை. அழகுள்ளவள். நீண்ட ஆயுளுள் ளவள்.

ஜாதகனது புத்திர பாவம்

23. புத்திர ரெழுவர் தோன்றும் போகிடு முதலி லிரண்டு
சித்தமா யாண்பா லிரண்டு செல்விமா ரவ்வாறு தீர்க்கங்
குத்தமாங் கடையோர் தாமுங் குறித்தது தப்பா தாகும்
எத்தகைப் பலத்தி னலே யியம்பினீர் புத்திர தோஷம்.

23. ஜாதகனுக்கு ஏழு குழந்தைகள் தோன்றுவர். அவர்களில முதலில் தோன்றும் இரு குழந்தைகள் நிலையா. இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். கடைசியில் தோன்றும் குழந்தை மாண்டு போகும். நாங்கள் கூறியது தவறுது. ரிஷிகளே! எவ்விதக் கிரக பலத்தால் ஜாதகனுக்குப் புத்திரதோஷம் உண்டு என்று சொன்னீர்கள்? அதைச் சொல்லுமின்!

புத்திர தோஷமேற்படக் காரணங்கள்—கிரகநிலை

24. அஞ்சினுக் குடையோன் தானும் அரவோடு கூடி
[நான்கில்
அஞ்சினில் காரி தங்க வறைந்தன மந்தச் சங்கை
மிஞ்சிய ஜன்மந் தன்னில் மேவிற்றுச் சிலவே தோஷம்
வஞ்சனை யென்ன செய்தா னறைவீரே முனியே நீர்தாம்.

24. ஐந்தாமிடமாகிய புத்திரஸ்தானத்துக்குரிய குருவுடன் ராகு கூடி நான்காமிடத்தில் இருப்பதாலும் (புத்திரஸ்தானத்துக்கு விரயஸ் தானத்தில் இருப்பதாலும்) புத்திரஸ்தானத்தில் சனி தங்கியிருப்ப தாலும் நாங்கள் அவ்விதம் சொன்னோம். அது தவிர, முற்பிறவியில்

செய்த தீவினையும் அவனுக்குச் சேர்ந்தது. என்ன தீவினைகள் செய்தான்? அவற்றைக் கூறுங்கள், முனிவரே! தாங்கள்.

முற்பிறவி

25. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகிரேரும் கொங்கு நாட்டில்
அன்னவன் விசுவச் சேயா யணுகியே மதலை யுண்டாய்ப்
பொன்பணி வேலை செய்து புகழொடு வாழு நாளில்
தன்துணை மோசஞ் செய்தான் சாற்றுவான் துணைவன்
[தானும்.

25. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். கொங்கு நாட்டில் பொற்கொல்லர் மரபில் தோன்றிப் புத்திரர்களைப் பெற்று பொன்னுபரணங்களைச் செய்துவரும் பொற் கொல்லனுக கீர்த்தியடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் தன்னுடைய சகோதரனே மோசம் செய்தான். துன்புற்ற சகோதரன் சாபமிட்டான்.

சகோதரனது சாபம்

26. மற்றொரு ஜன்மந் தன்னில் வருந்துணை யாணில் லாமல்
பெற்றதாய்ச் சுகமு மின்றிப் பூமியில் வாழ்வாய் நீயுங்
குற்றமாய்ச் சொல்ல லுற்றான் குலவிற்று வந்தத்
[தோஷம்
வித்தக னந்தி யத்தில் மேலோர்க்கு வன்ன மீந்து;

26. உனக்கு ஏற்படும் மறுபிறவியில் சகோதரர்களின்றியும் பெற்ற தாயின் சுகமில்லாமலும் உலகில் வாழ்ந்து வருவாய் என்று தீய வார்த்தைகளை மனம் நொந்து சொன்னன். அந்தத் தோஷம் இவனை வந்தடைந்தது. ஜாதகனும் தன் கடைசிக் காலத்தில் அந்தணர்களுக்கு அன்னமளித்து வந்து;

27. பலதல வாசஞ் செய்து பற்றினன் கால நாடு
தலைநான்கோன் வரையப் பட்டுச் சினகுலந் தனிலு
[திப்பான்
குலவிடு முன்னூழ்ச் சாபங் குழவிகள் முதலில் பீடை
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன் ரூவே.

27. பல புண்ணியத்தலங்களில் வசித்துக் கடைசியில் மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் ஜைன குலத்தில் பிறந்தான் முற்பிறவித் தோஷம் இப்பிறவியிலும் தொடரும். முதலில் தோன்றும் குழந்தைகட்குத் தோஷமுண்டாகும். மலையரசனின் மகளே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவரு.

தந்தையின் முற்பிறவி

28. தந்தையின் பூர்வஞ் சொல்வேன்
தென்பாண்டி நாட்டி லேதான்
மூந்தின குலமு தித்து
முயற்சியாய்ச் செட்டுச் செய்து
அந்தவன் வாழு நாளில்
அணுகின வினையைக் கேண்மோ
விந்தையாய் நாக மில்ல
மேவிற்று மகுடத் தாலே.

28. இனி ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். பாண்டிய நாட்டில் (மதுரையில்) உயர்ந்த குலமாகிய அந்தண குலத்தில் பிறந்து செழிப்புள்ள குடும்பியாகி, வர்த்தகத்தைப் புரிந்து வாழ்ந்துவந்த காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். ஒரு சர்ப்பம் இவனுடைய வீட்டில் படமெடுத்து ஆடிவந்தது.

பாம்பினை யடித்தது கருவழித்தது முதலிய தோஷங்கள்

29. மறலியின் பதிக்குச் செல்ல வாட்டினன் கழியி னுலே
உறைந்தது வந்தத் தோஷம் உரைக்கிறோம் வேறு [வொன்று
வரனின்றி மாது போக மருவியே கருவு தங்கத்
திருகுக ளதற்குச் செய்தான் தேவியு மரண மானாள்.

29. அந்தச் சர்ப்பத்தை ஜாதகன் தந்தை ஒரு தடியினால் அடித்துக் கொன்றான். அந்தத்தோஷம் இவனைப்பற்றியது. இது தவிர வேறு ஒன்றும் சொல்லுகின்றோம். கணவனில்லாத பெண்ணுடன் (ஒரு கைம்பெண்ணுடன்) சிற்றின்பம் அனுபவித்து வந்தான். அதனால் அவளுக்குக் கருத்தங்கியது ஜாதகன்தந்தையும் அக்கருவை நீக்க வைத்தியம் செய்தான். அதனால் அப்பெண் மரணமடைந்தாள்.

.....ஏழைகளின் சாபம்

30. அதுவொரு தோஷ மாச்சு
அதுவின்றி வேறு சொல்வேன்
நிதியிலார் தமக்குப் பொன்னை
நேர்ந்துமே முறியுந் தீட்டிப்
பதிபூமி தன்கைக் கொண்டான்
பகருவா ரேழை யோர்கள்
சதிசெய்ய மனமே வைத்தாய்ச்
சாரும்பின் ஜன்மந் தன்னில் ;

30. அது ஒரு தோஷமாச்சு. அதுவல்லாமல் வேறு ஒன்றும் கூறுகின்றேம். பணம் காசில்லாத ஏழைகட்குச் சிறிது பொருளைக் கொடுத்து அதற்குப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு அவர்களுடைய வீட்டையும் விளைநிலங்களையும் அபகரித்துக் கொண்டான். அதை யறிந்த ஏழைகள் மனமொடிந்து சாபமிடுகின்றனர். எங்களுக்குத் தீங்கிழைக்க மனத்தில் எண்ணினாய். உனக்கு ஏற்படும் மறுபிறவியில் ;

ஏழைகளின் சாபம்

31. தன்துணை யில்லா னுயுந்
தன்மனை யநேக மாயுந்
தன்சுத ரில்லா னுயுந்
தரணிபால் வாழ்வா யென்று
பொன்னிலார் சொல்ல லுற்றார்
புக்கிற்று வந்தத் தோஷம்
இன்னமுஞ் சிலவே குற்றம்
எய்திற்று வென்று சொல்வோம்.

31. உடன்பிறந்தவர்களில்லாதவனையும் அநேக மனைவிகளைப் பெற்றும் புத்திரபாக்கிய மில்லாதவனையும் வாழ்ந்து வருவாய் என்று ஏழைகள் சொல்லிவிட்டுச் சென்றனர். அந்தத்தோஷம் இவனை யடைந்தது. இன்னும் சில தோஷங்கள் இவனைப்பற்றியது என்றும் சொல்லுகின்றேம்.

32. அந்திய காலந் தன்னில் அறுமுகன் பத்தி யாயும்
முந்தின சேதுச் சென்று முயர்வோர்க் கன்ன மீந்து
அந்தக நாட டைந்து அயனுமே வரையப் பட்டு
வந்தவ னென்று சொல்வோ மருவிடு மேழை சாபம்.

32. இவன் தனது கடைசிக் காலத்தில் ஆறுமுகக் கடவுள்மீது பக்திகொண்டு வாழ்ந்து, உயர்ந்த தலமாகிய சேதுவுக்குச் சென்று நீராடி வந்து, உயர்ந்த குலத்தவர்கட்கு அன்னமளித்து வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவன் என்று சொல்லுகின்றேம். ஏழைகளின் சாபம் இவனைத் தொடரும்.

ஏழைகளின் சாபபலன்

33. கன்னிமா ரனேக மாகுங்
காணரே துணைவர் தாமுந்
தென்முனி யிவ்வா றுசொல்ல
ஐயமுனி தடுத்துச் சொல்வார்

முன்ஜன்ம மநேக பாவ
மேவிற்று வென்று சொன்னீர்
பொன்பூமி விசேஷ மாகப்
பொருந்துங்கா ரணங்க ளெவ்வாறு.

33. மநுவிமார் அநேகராவர். உடன்பிறந்தவர் இல்லாதவனு வான். இவ்வாறு அகத்திய முனிவர் சொல்லும்போது ஐய முனிவர் மறுத்துச் சொல்லுகின்றீர். ஜாதகனுக்கு முற்பிறவியில் அநேக தோஷங்கள் ஏற்பட்டன என்று சொன்னீர்களே! ஆனால் பொன் பூமி இவைகள் அதிகமாக அடையும் காரணங்கள் என்னவென்று கூறுங்கள்.

34. பலவிதத் துன்பஞ் செய்தும் பாலக னந்தி யத்தில்
நலமுள சேதுச் சென்றும் நாதனர் பத்தி பூண்டும்
கிலையிலார்க் கன்ன மீந்தும் நேமியில் வாழ்ந்த தாலே
தலைவனு மிச்சென் மத்தில் சம்பத்தாய் வாழ்வா
[னென்றோம்.

34. ஜாதகன், பலவிதமானத் தீவினைகளைச் செய்துவந்தபோதி லும் தன் கடைசிக்காலத்தில் நன்மை மிக்க தலமாகிய சேதுவுக்குச் சென்று வந்ததாலும், சிவபெருமான்மீது பக்திபூண்டு வாழ்ந்ததாலும், ஏழைகட்கு அன்னமளித்து வந்ததாலும் இப்பிறவியில் சம்பத்துடன் வாழ்ந்து வருவான் என்றோம்.

தந்தையின் மரணமும் மறுபிறவியும்

35. மூப்பது வாண்டு தன்னில்
விளம்புவோந் தந்தை கண்டஞ்
செப்புவோ மிவன்பின் ஜன்மஞ்
செழிப்புள பிரயாகை தன்னில்
தப்பித மின்றி யேதான்
சாருவா னிக்கு லத்தில்
அப்பணி சடையோன் தேவி
அருளிய மொழி குன்றுவே.

35. ஜாதகனுடைய முப்பதாம் வயதில் தந்தைக்கு மரணம் ஏற் படும். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். பிரயாகையில் தவறுகளில்லாமல் இதே குலத்தில் பிறப்பான் என்றோம். கங்கை யைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

ஜாதகன் மரணகாலம்

36. அறுபது வொன்ப தாண்டில் ஆடுமா தத்தி லேதான்
திருமக னுடல மேகுஞ் செப்புவோ மிவன்பின் ஜன்மம்
திருகணு மலைநா டன்னில் ஜனிப்பனுஞ் சத்திரியச்
[சேயாய்ப்
பெருவயி ரோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

36. ஜாதகன், தனது அறுபத்தொன்பதாம் வயதில் சித்திரை மாதத்தில் மரணமடைவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். குற்றமற்ற மலைநாட்டில் (திருவண்ணாமலையில்) க்ஷத்திரிய குலத்தவனுகப் பிறந்து வாழ்வான். பெரிய வயிற்றையுடைய விநாயகனைப்பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய பொதுயோகம்

37. வந்தவன் யோகச் சேதி வரைகிரே மினிமே லாகத்
தந்தைநாள் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
எந்திடம் பெருமை யேற்பன் ஏவலா ளதிகஞ் சேர்ப்பன்
பந்துவு மதிக்க வாழ்வன் பால்பாக்கிய முடைய னுகும்.

37. இனி ஜாதகனுடைய பொது யோகத்தை இந்தச் சோதிட நூலில் எழுதுகின்றேரும். பிதுரார்ஜிதமாகவுள்ள பூமியைப் பெருக்குவான். சென்றவிடங்களிலெல்லாம் கீர்த்தியை யடைவான். பணியாட்களை அதிகமாகவுடையவன். தன் சுற்றத்தார் மேன்மையாக எண்ணும்படி வாழ்ந்து வருவான். ஊழ்வினைப்பாக்கியமுள்ளவன்.

மேற்படி செய்திக்கு மறுப்பும் விடையும்: கிரகநிலை

38. பிருகுவுந் தடுத்துச் சொல்வார்
புகன்றிட்டீர் யோகந் தானுங்
குருவுடன் ராகு கூடக்
கூரியன் விரயம் புக்கப்
பெருமையா யோக மெவ்வாறு
பேசினீர் விவரஞ் சொல்வீர்
அருணனும் புகரு மிலாபம்
அம்புவி யிரண்டி லேற;

38. பிருகு முனிவர் மறுத்துச் சொல்லுகின்றார். ஜாதகனுக்கு யோகம் ஏற்படும் என்று சொன்னீர்களே! பஞ்சமாதிபதியாகிய குருவுடன் ராகுவும், புதன் விரயஸ்தானத்திலும் இருப்பதால் ஜாதகனுக்கு யோகம் எவ்விதம் ஏற்படும்? அதை விவரமாகச் சொல்லுங்கள். சூரியனும் சுக்கிரனும் லாபஸ்தானத்தில் இருப்பதாலும், சந்திரன் இரண்டாமிடத்திலிருப்பதாலும்;

அழகேசயோகம் சர்ப்பயோகம் பிரகநிலை

39. ஆறலுந் தசம மேற அழகேச யோக மொன்று
தீரமாய்ச் சர்ப்ப யோகஞ் செப்பிலே மிரண்டு யோகம்
போர்வெல்வ னரச ரிஷ்டன் புயபலம் பொருந்த
[வுரைப்பன்
காரியச் சமர்த்த னுகுங் கணக்கினில் வல்லோ னுமே.

39. செவ்வாய் பத்தாமிட்டத்திலும் தங்க, அழகேசயோகம் ஒன்றும் சர்ப்பயோகம் ஒன்றும் ஆகிய இவ்விரு யோகங்களும் இவனுக்கு உண்டு. இவன் சண்டையில் ஜயிப்பான். அரசருக்குப் பிரியமானவன். புயபலம் பொருந்தியவன். பொருத்தமாகப் பேசுபவன். காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்பவன். கணக்கில் அதிக கெட்டிக்காரன் என்றும்.

ஜாதகனுடைய ஜனனகாலதசை

40. ஜனித்திடு காலந் தன்னில் சந்திரன் தசையி ருப்புக்
குனித்திடு நவமா மாண்டு கூடிப்ப தினேர் திங்கள்
சினமிலாப் பூர்வஞ் சொன்னேஞ் செப்புவோம் பின்பால்
[சேதி
கனமுள தவங்கள் செய்யுங் காதலி கேட்டி டாயே.

40. ஜாதகன் பிறக்கும்போது சந்திரமகாதசையில் செல்லுபோக இருப்பு ஒன்பது வாண்டுகளும் பதினெரு மாதங்களுமாம். இதுவரை முதல் பாகத்தைச் சொன்னேம். இனிப் பிற்பாகத்தில் மற்றவற்றைச் சொல்லுகின்றேம். மிகுந்த தவங்கள் இயற்றும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 61

1. அரியது வுதய மாக அரவுமே ஜன்மந் தங்கக்
கரியவன் ஆறி லேறக் கனகனு மிருநான் காகப்
பிறையொன்பான் புதன்சேய் பானு புக்குமே தசம மாக
உரையுமே பலனை யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சிம்மம் லக்கினமாகவும், ராகு லக்கினத்திலும், (கேது கும்பத்திலும்) சனி ஆரு மிடமாகிய மகரத்திலும், குரு எட்டாமிடமாகிய மீனத்திலும், சந்திரன் ஒன்பதாமிடமாகிய மேஷத்திலும், புதன் செவ்வாய் சூரியன் சுக்கிரன் பத்தாமிடமாகிய ரிஷபத்திலுமாக நவக்கிரகங்கள் இருப்பின் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் எனப் பார்வதிதேவி கேட்கலானாள்.

கிரகநிலை

குரு	சந்திரன்	புதன் செவ்வாய் சூரியன் சுக்கிரன்	
கேது	இராசி சக்கரம்		
சனி			லக்கினம் ராகு

ஜாதகனது வீட்டுநிலை

2. மங்கையுங் கேட்கும் போது மாமுனி புகலு கின்றார்
இங்கிவன் ஆண்பால் ஜன்மம் இல்லமுங் கீழ்மேல் வீதி
தங்கிடும் வடபால் வாசல் ஜகராசர் வாச மாகும்
பொங்கிய வாரி கீழ்ப்பால் பெரிதான நகர மாகும்.

2. இங்ஙனம் பார்வதிதேவி கேட்கும்போது முனிவர்கள் கூறுகின்றனர். இஃது ஆண் மகனுடைய ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. அவ்வூரில் அரசர் வாழ்ந்து வருவார். அது பொங்கும் அலைகளையுடைய சமுத்திரம் கிழக்குத்திக்கில் உள்ள பெரியதொரு நகரமாகும்.

ஜாதகனுடைய குலம்

3. இந்திர நகர மொப்பாம் எழில்பல பாஷை யோங்குங்
கந்துகங் கெடியு முண்டு கழறின வடையா ளத்துள்
மைந்தனு மாரஞ் ஜன்மம் வருவலுங் கீயின் வம்சஞ்
சந்ததங் குடும்பச் சேதி சாற்றுவோ மிந்நூல் தன்னில்.

3. இந்திரனுடைய தேவலோகத்திற்கு ஒப்பான செல்வமுள்ள நகரமாகுமது. அவ்வூரில் பல பாஷைகள் பேசப்படும். அங்கே கோட்டை கொத்தளங்கள் உள்ளன. இவ்விதம் கூறப்பட்ட அடையாளங் களுள்ள ஊரிலுள்ள வீட்டில் ஜாதகன் வன்னிய குலத்தில் தன் தந்தைக்கு ஆரும் புத்திரனாகப் பிறப்பான் என்று சொல்லுகின்றோம். அவனுடைய குடும்பச் செய்திகளை இனிக் கூறுகின்றோம்.

வேறு

ஜாதகனுடைய தந்தையின் குணங்கள்

4. தந்தைதுணை யிருமூன்றில் யாவுந் தீது
சத்தியுமே யொன்றென்று சாற்ற லாகுந்
தந்தைகுணங் கூறுகின்றோம் மால்கி றத்தான்
சமகல்வி பாட்டாளி சரச வார்த்தை
தன்தனமு மாதியினி லில்லா னாகுந்
தரித்திரமாய் வடகீழ்ப்பால் வேறூர் செல்வன்
தந்தைசொல் கடவாதான் வெகுளி யாவன்
சதுஷ்பாதம் விருத்தியுளன் தனம்பின் சேர்ப்பன்.

4. ஜாதகனுடைய தந்தைக்கு உடன்பிறந்தவர் அறுவரில் சகோதரி ஒருத்தியைத் தவிர மற்றவர் ஒருவரும் நிலையில்லாதவர் என்றோம். இனித் தந்தையின் குணங்களாக கூறுகின்றோம். அவன் திருமாலைப்போன்ற கரிய நிறமுடையவன். சமமான கல்வியறிவுள்ள வன். உழைப்பாளி. சரசசல்லாபமாகப் பேசுபவன். ஆதிகாலத்தில் தன்னால் சம்பாதிக்கப்பட்ட பொருள் இல்லாதவன். மிகுந்த வறுமையுடன் கிழக்குப்பக்கத்திலுள்ள வேறூர் ஊருக்குச் செல்லு வான். தன் தந்தையின் வார்த்தைகளை மீறுதவன். வெள்ளை மன முடையவன். கால்நடைப் பெருக்கமுள்ளவன். பிற்காலத்தில் பொரு ளைச் சேர்ப்பான்.

இதுவுமது

5. ஈகையாளன் யாவர்க்கும் இடர்செய் யாதான்
இனமதையே யாதரிப்பன் இன்பச் சொல்லன்
தோகைசொல் கடவாதான் வனவா சங்கள்
செய்வானுஞ் சின்னுட்கள் துயர மாகப்
பாகமாய்ப் பின்தனமு மில்லம் சேர்ப்பன்
பச்சைமயி லோன்பத்தி பணிவா னாகும்
வேகமாய் நடக்கவல்லன் நல்லோ னவன்
விளம்புவோம் பூர்வமதை விமலி யேகேள்.

5. கொடுக்கும் குணமுடையவன். எல்லோருக்கும் நல்லவன். ருவருக்கும் துன்பமிழையாதவன். தன் பந்து ஜனங்களையே ஆத

சித்து வருவான். இன்புறும்படி பேசுபவன். மனைவியின் வார்த்தை களை மீறுதவன். சின்னட்கள் துயரமடைந்து தனியாக (காட்டில் வாழ்வதுபோல) வாழ்ந்து வருவான். பிற்காலத்தில் பொருத்தமான செல்வத்தைச் சேர்ப்பான். பச்சை நிறமுடைய மயிலை வாகனமாக வுடைய சுப்பிரமணியக்கடவுளிடம் பக்தியுள்ளவன். வேகமாக நடக்கும் இயல்பினன். நல்லவனுக வாழ்ந்து வருவான். இவனுடைய முற் பிறவியின் விவரங்களைக் கூறுகின்றோம்.

இனிவரும் மூன்று பாடல்கள் ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியை யும் அவன் செய்துள்ள தீவினையையும் பலனையும் சொல்லும்

6. தக்கோல மருகினிலே பேரூர் தன்னில்
ஜனித்தனன்காண் கங்கைகுலந் தரணி தன்னில்
மிக்கவே கிருஷிசெய்து மனைவி மைந்தர்
வித்தகன் வாழ்நாளில் வினையைச் சொல்வேன்
முக்கியமாய்க் கொல்லைதனில் விருட்ச மொன்று
முனிவாச மம்மரத்தை வேலைக் காகப்
பக்குவமா யதைத்தரித்தான் மரத்தில் வாழும்
பிசாசுவுமே தங்குதற்கி டமில் லாமல் ;

6. தக்கோலத்திற்கு அருகில் உள்ள பெரிய ஊரில் வேளாள குலத்தவனுகப் பிறந்தான். விவசாயத்தை அதிகமாகச் செய்து வந்து மனைவி மக்களைப்பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினை யொன்றைச் சொல்லுகின்றோம். இவனுடைய வீட்டுக் கொல்லையில் பெரிய நல்ல மரம் ஒன்று இருந்தது. அம்மரத்தில் ஒரு முனி வாழ்ந்து வந்தது. இவன் அம்மரத்தை தனது வீட்டு வேலை நிமித்தமாக வெட்டி விட்டான். அம்மரத்தில் வாழ்ந்து வந்த முனி தான் வசிப்ப தற்கு இடமின்றி ;

முனியின் சாபம்

7. புகன்றதையே கேள்தாயே யில்க லித்த
பாவிக்கு மறுஜன்மம் பிறந்த யில்லம்
ஆகம்பூமி தான்விலகி வேறூர் வாசம்
அணுகியே துணைதோஷம் அலைச்சல் முன்னல்
பகையாகச் சொல்லியது வந்தச் சாபம்
பற்றிற்று யென்றுசொல்வோ மின்னை னுக்குத்
தகமையாய் வேறுவினை காண னுகிச்
சண்டன்தன் பதிக்குப்போய்ப் பிரமன் லக்கம் ;

7. கூறிய சாபத்தைக் கேளுங்கள். தாயே ! என்னுடைய குடி யிருப்பைக் கலைத்த (நான் குடியிருந்த வீடாகிய மரத்தை வெட்டிய)

பாவியே ! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உன் பிறந்த வீடு நிலங் கள் முதலியன இல்லாமல் வேறு ஊருக்குச் சென்று வாழ்ந்து வரு வாய். உன் உடன்பிறந்தவருக்கும் தோஷமேற்படும். முன்பாதியில் குடும்பம் மிகவும் துன்பமடையும் என்று தீம்பாகக் கூறியது. அந்தச் சாபம் இவனைத் தொடர்ந்தது. இது தவிர வேறு தீவினைகளில்லாமல் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு ;

8. வந்தவனும் முனிசாப மிச்சென் மத்தில்
மருவினதால் தந்தையில்ல மடையா னாகும்
மூந்தினுள் வறுமையுளன் துணையின் தோஷம்
முருகர்தம் மருளாலே முயர்வாம் பின்னல்
இந்ததொரு குணத்தானுக் கிவனு திப்பான்
இயம்புவோ மிவன்குணத்தை யினிமே லாக
விந்தையதாய் வார்த்தையுளன் மேலோர் பத்தி
வித்தைமிகும் புத்தியுளன் வேந்தர் நேயன்.

8. இப்பிறவியில் பிறந்தவன் என்றேரும். முனியினுடைய சாபம் இப்பிறவியில் ஏற்பட்டதால் தன் தந்தையின் வீட்டைப் பெறுதவன். ஆதிகாலத்தில் தரித்திர தசையையடைவான். உடன்பிறந்தவர்கட்குத் தோஷமுண்டாகும். முருகக்கடவுளின் அருளால் பிற்காலத்தில் தரித்திரதசை யொழிந்து மேன்மையுண்டாகும். இவ்விதம் கூறப் பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இனி இவனுடைய குணங்களாகக் கூறுகின்றேரும். வேடிக்கையாகப் பேசுப வன். பெரியோர்களிடம் பக்தியுள்ளவன். கல்வியறிவு அதிகமுடைய வன். நல்ல புத்திசாலி. அரசாங்கத்தாருக்குப் பிரியன்.

இப்பாடலுக்கு முன்பாட்டின் பின் நான்கு அடிகளிலும் இப்பாட்டிலும் ஜாதகனுடைய குணங்கள் கூறப்படுகின்றன

9. அஞ்சாத நெஞ்சுடையன் அரிபோல் கோபம்
அவனியிலே வறுமையிலான் வாத தேகி
கஞ்சமாம் ரேகையது கரத்தில் தங்குங்
கனத்தசெட்டுத் தான்செய்வன் கருதான் பொய்யும்
பஞ்சணைமெத் தையுடையன் பசித்தோர் நேயன்
பால்பாக்கிய முடையனும் பகவான் பத்தி
வஞ்சனைகள் எவர்க்குமெண்ணன் உதவி செய்வன்
வண்டிவா கனமுடையன் வறுமை காணன்.

9. எதற்கும் பயப்படாத மனமுடையவன். சிம்மம்போல் கோபம் கொள்ளுபவன். உலகில் தரித்திரமடையாதவன். வாயுநோயுடைய தேக முள்ளவன். கையில் பத்மரேகையுடையவன். விரிவான வர்த்தகத்

தைப் புரிந்து வருவான். பொய் பேச மனத்தாலும் நினையாதவன். படுப்பதற்குரிய நல்ல சாதனங்களை உடையவன். பசித்து வந்தவர்கட்கு அன்புடன் அன்னமளிப்பவன். ஊழ்வினைப் பாக்கியமுள்ளவன். தெய்வபக்தியுள்ளவன். ஒருவருக்கும் தீங்குகளைச் செய்ய மனமுட் படாதவன். பிறருக்கு உதவி செய்பவன். வண்டி முதலிய வாகன வசதிகளுள்ளவன். தரித்திரமில்லாதவன்.

சகோதரனின் குணங்கள்

10. தன்துணைகள் முன்னுண்பா லிரண்டும் தீர்க்கஞ்
சத்தியுமே தோன்றிமத்தில் சேத மாகும்
முன்துணையாண் சேதிசொல்வேன் மொழியைக் காப்பன்
உலகநல்லான் சமகல்வி யூகை சாலி
அன்னைதந்தை சொற்கடவான் உணச்சல் நீட்சி
அடாவடியில் தான்செல்லான் அரசர் நேயன்
பொன்கடனே கொள்ளானும் புகழ்ந்தோர்க் கன்பன்
போஜனங்கள் வறுமையிலான் புறஞ்சொல் லாதான்

10. ஜாதகனுக்கு முன்பிறந்த சகோதரர்கள் இருவர் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும். சகோதரி ஒருத்தி பிறந்து இடைக் காலத்தில் மரணமடைவாள். ஜாதகனுக்கு முன்பிறந்த சகோதரனைப் பற்றிச் சொல்லுகின்றும். சொன்ன வார்த்தைகளைக் காப்பவன். உலகில் நல்லவன் என்ற பெயரையடைவான். சமமான (அவச்யமான) கல்வியறிவுடையவன். ஊகமுள்ளவன். தாய் தந்தையரின் வார்த்தை களை மீறுதவன். நீண்டதும் மெல்லியதுமான சரீரமுள்ளவன். அடா வடியான காரியங்களில் செல்லாதவன். அரசருக்குப் பிரியமானவன். பணம் கடன் வாங்காதவன். தன்னைத் துதிசெய்தவருக்குப் பிரியமான வன். சாப்பாட்டுக்குத் தரித்திரமடையாதவன். கோட் சொல்லாதவன்.

சகோதரன் மனைவியின் விவரமும் புத்திரபாவமும்

11. [1]மனைவியொன்று தானுறுமே தவத்தி னேலே
மைந்தர்களு மாண்டெண்டு கன்னி யவ்வா று
வினையிலா தீர்க்கமுறும் உத்திராட நாளாம்
விருச்சிகத்தில் தானுதிப்பான் வேந்த ராலே
கனமிக்க தானுய்வன் கடந்தோர்க் கன்பன்
கந்தன்மேல் பக்தியுளன் கருதான் பொய்யுஞ்
சினமுண்டு வெளிக்காட்டான் வயதுந் தீர்க்கஞ்
செப்புகிறோம் அவன்பின்னே சேதி தன்னை.

---

1. குறிப்பு :—இப்பாடலும் பின்வரும் பாடலும் அந்தாதித் தொடையாக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

11. முற்பிறவியில் செய்த தவத்தின் பயனக ஜாதகனுடைய சகோதரனுக்கு மனைவியொருத்தியே வருவாள். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றித் திங்குகளில்லாமல் நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள். அவன் பிறந்த நட்சத்திரம் உத்திராடமும் லக்னம் விருச்சிகமுமாகும். அரசாங்க உத்தியோகத்தை ஏற்றுக் கண்ணியமாக வாழ்ந்து வருவான். துறவிகட்குப் பிரியமானவன். முருகக்கடவுள் மீது பக்தி கொள்ளுவான். பொய்யைப்பேசாதவன். முன்கோபம் கொள்ளுபவன். ஆனல் அதை வெளியில் காட்டாதவன். நீண்ட வயதுள்ளவன். அவனுக்குப் பின் பிறந்த சகோதரனின் செய்தியைக் கூறுகின்றேம்.

இளையசகோதரன் செய்திகள்

12. சேதிசொல்வேன் தனுராசி கடைநாள் தன்னில்
ஜனிப்பனும் இருகல்வி சமம தாகும்
நீதிமான் இருசொல்லன் மாநி றத்தன்
நிருபரால் சின்னட்கள் உய்வா னகுஞ்
சாதிப்பான் சிலசங்கை தரித்திர மில்லான்
சார்ந்திடுமே பாரியொன்று ஜனச காயன்
ஒதுவேன் சுதர்ஸவமாம் உதிக்கு மென்றேரும்
உதித்ததிலே ஆண்மூன்று கன்னி யொன்று ;

12. (இளைய சகோதரனின்) செய்தியைக் கூறுகின்றேரும். தனுர் ராசியில் ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவன். இருவிதக் கல்விகளைக் கற்பான். நேர்மையுடையவன். இருவிதமாகப் பேசுபவன். மாநிற முடையவன். அரசாங்க உத்தியோகத்தைச் சின்னட்கள் ஏற்று வாழ்ந்துவருவான். சில சந்தேகங்களை நிவிர்த்தி செய்வான். தரித்திரமில்லாதவன். மனைவி ஒருத்தியே யாவள். ஜனங்களுக்கு உபகாரம் செய்பவன். ஒன்பது குழந்தைகள் தோன்றும். அவர்களில் மூன்று புத்திரர்களும் ஒரு புத்திரியும்;

தாயின் குணங்கள்

13. [1]செப்புகிறேரும் தீர்க்கமதாய் வயது முண்டு
செட்டுக்கள் பின்னலே செய்வா னகும்
மைப்படிமார் மோகமுளன் கடனில் லாதான்
வழுத்துகிறேரும் பின்பாகம் விவர மாக

---

1. இதுவும் அடுத்தபாடமும் அந்தாதியாக அமைந்துள்ளமை காண்க.

ஒப்புடனே ஜாதகனின் அன்னை சேதி
யுரைக்கின்றோம் மாஞ்சிவப்பள் உவமை வார்த்தை
தப்பிதமாங் குணமில்லாள் சாந்த மாவள்
சார்ந்தபின்பு வரன்யோகஞ் சாற்ற லாகும்.

13. (உண்டு எனச்) சொல்லுகின்றோம். அவர்களும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். பிற்காலத்தில் வர்த்தகத்தைச் செய்து வருவான். பெண்கள்மீது மோகம் கொள்ளுபவன். கடன் உபத்திரம் இல்லாதவன் என்றோம். மற்றவற்றைப் பிற்பாகத்தில் விவரமாகக் கூறுகின்றோம். இனி ஜாதகனுடைய தாயின் செய்திகளைக் கூறுகின்றோம். மாநிறமுடையவள். உபமானங்களுடன் பேசுபவள். தீய குணங்களில்லாதவள். பொறுமையுடையவள். இவளை மணந்த பிறகு தந்தைக்கு யோகம் பெருகும் என்று சொல்லுகின்றோம்.

தாயின் சகோதரபாவமும் முற்பிறவியும்

14. சாற்றுகிறோங் துணையாண்பால் மூன்றே யாகுஞ்
சத்தியுமே யொன்றென்றோம் மற்றோள் சேதம்
போற்றுகிறோம் பின்னுண்பால் சிலவே நஷ்டம்
பேதையின்தன் பூர்வமதைப் புகலக் கேண்மோ
ஆற்றவிலா தென்மயிலந் தென்பா லாக
அருகினிலே சிறுவூரி லிரட்டி வம்சங்
காத்திரமாய்க் குடும்பியதாய் வாழ்ந்து யின்னோள்
கந்தன்தன் னடியாருக் கன்ன மீந்து ;

14. ஜாதகனுடைய தாய்க்குச் சகோதரர் மூவராவர். சகோதரி ஒருத்தியே யாவள். மற்றவள் நிலையாள். இவளுக்குப் பிறகு தோன்றும் சகோதரரும் நிலையில்லாமல் இறந்து விடுவார். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். தென்மயிலத்துக்குத் தெற்கில் அருகிலுள்ள சிற்றூரில் ரெட்டியார் மரபில் பிறந்து பெரிய குடும்பத்தையடைந்து வாழ்ந்து வருவாள். முருகப்பிரானுக்கு அடியவர்களாகிய பரதேசிகட்கு அன்புடன் அன்னமளித்து ;

வேறு

தாயின் மறுபிறவி

15. வினையது யில்லா தாகி
மேவினள் கால னடு
கனமுள பிரம னிலக்கங்
காதலி யுதித்தா ளென்றோஞ்

சினமிலா விவள்பின் சென்மஞ்
செப்புவோம் வாரி யோரம்
வனிதைமா பலியி லேதான்
வருவளா மறைக்கு லத்தில்.

15. வேறு தினிணகளில்லாமல் மரணமடைந்து பெரியவராகிய பிரமதேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தாள் என்றேரும். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். இவள் கடலுக்குச் சமீபமாகவுள்ள மகாபலிபுரத்தில் அந்தண குலத்தில் தோன்றுவாள்.

இப்பிறவியில் செய்த நல்வினைகள்

16. இந்ததோர் ஜன்மந் தன்னி
லிவள்செய்த புண்ணிய மென்ன
பந்துவை யாத ரித்தும்
பசித்தோருக் குதவி யாயுஞ்
சிந்தையும் நல்ல தாயுந்
தீரன்தன் மனம்போல் வாழ்ந்தும்
அந்தவள் வாழ்வ தாலே
யறுமறைக் குலமு திப்பாள்.

16. இப்பிறயில் இவள் செய்த நற்செயல்கள் எவை? அவற்றைக் கூறுங்கள். தன் சுற்றத்தாரை ஆதரித்து வந்ததாலும், பசித்து வந்த ஏழைகட்கு அன்னமளித்து வந்ததாலும், நல்ல மனமுள்ளவளாகவும் தன்கணவன் மனம் போல வாழ்ந்து வந்ததாலும் அந்தண குலத்த வளாகப் பிறப்பாள்.

தாய் தந்தையின் மரணகாலமும் வயதும்.

17. இருபது வொன்று வாண்டில்
இயம்புவோ மன்னை கெண்டங்
திருகிலா யிருப தாண்டில்
செப்புவோந் தந்தைக் கேதான்
வருஞ்சென்மந் துவாரை தன்னில்
வருவனு மிக்கு லத்தில்
கரிமத வானை பெற்ற
காதலி கேட்டி டாயே.

17. ஜாதகனுடைய இருபத்தோராம் வயதில் தாய் மரண மடை வாள். இருபதாம் வயதில் தந்தை இறந்து விடுவான். தந்தை அடுத்த பிறவியில் துவாரகையில் இதே குலத்தில் பிறப்பான். கரிய மத யானையின் முகத்தைப் போன்ற திருமுகமுடைய விநாயகனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

உயர்குலப் பிறவிக்குக் காரணம்

18. தந்தையிச் சென்மந் தன்னில் செய்தபுண் ணியங்க
[ளென்ன
கந்தன்மேல் பத்தி யாயுங் கவடுக ளில்லாத் தாலும்
பந்துவை யாத ரித்தும் பகித்தோர்க்கு வன்ன மீந்தும்
வந்ததா லுதிப்பா னவன் வடதிசை துவாரை தன்னில்.

18. ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் என்ன நற்செயல்கள் செய்தான்? அவற்றைக் கூறுங்கள் எனப் பார்வதிதேவி வினவ, ரிஷிகள் பதில் கூறுகின்றனர். முருகக் கடவுள் மீது பக்தி கொண்டு வாழ்ந்து வந்ததாலும், வஞ்சனையில்லாததாலும் தன் சுற்றத்தாரை ஆதரித்து வந்ததாலும் பசியென்று வந்தவர்கட்கு அன்னமளித்து வந்ததாலுமாகிய நல்வினைப் பயனால் வடக்கிலுள்ள துவாரகையில் பிறப்பான்.

ஜாதகனின் திருமணக் காலமும் மனைவியின் குணங்களும்

19. ஜாதகன் மணத்தின் காலஞ்
சாற்றுவோம் பதினே ழாண்டில்
காதலி யன்னை வர்க்கங்
கலப்பளாங் குணத்தைச் சொல்வேன்
வேதனை யொருவர்க் கெண்ணாள்
விவேகியாம் முன்கோ பத்தாள்
போதனம் பணிகள் சேர்ப்பள்
புகழான குடும்பி யாவள்.

19. இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைக் கூறுகின்றோம். அவனுடைய பதினேழாமாண்டில் நடைபெறும். வரும் மனைவி தாயின் வர்க்கத்திலிருந்து வாய்ப்பாள். அவளுடைய குணங்களைச் சொல்லுகின்றோம். பிறர் மனம் புண்படுப்படியான காரியங்களைச் செய்யாதவள். நன்மை தீமைகளைப் பாகுபாடு செய்யும் வகையறிந்தவள். முன்கோப முள்ளவள். மிகுந்த செல்வத்தையும் ஆபரணங்களையும் சேர்ப்பாள். கீர்த்திபெற்ற குடும்பியாவாள்.

இருதார மேற்படுதற்குரிய கிரகநிலை

20. கன்னிக்கு வயது தீர்க்கங் கௌசிகர் மறித்துச் சொல்வ
மன்னனுக் கிரண்டு தாரம் வரைகிறே முனியே யா
என்னகா ரணத்தி னலே யியம்பினீர் விபரஞ் செ
துன்மையாய்க் கேது வேழில் சரத்தினி லேழோ

20. நீண்ட வயதுள்ளவள். கௌசிக முனிவர் தடுத்து
கின்றார். ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டு என்று கூ
முனிவரே! தாங்கள் எந்தக் காரணத்தால் அவ்விதம் கூறுகி

அதை விவரமாகச் சொல்லுங்கள் என்று கேட்க, ஏழாமிடத்தில் கேது இருப்பதாலும், ஏழாம் வீட்டுக்குரிய சனி சரத்தில் இருப்பதாலும் ;

முதல்மனைவி இறக்குங் காரணம்

21. சொல்லினேம் பாரியி ரண்டு
தோகைமா ரிருவ ருந்தான்
வெல்லவே தீர்க்க மூண்டோ
விரயங்க ளுண்டோ சொல்வாய்
அல்லலாய் முதல்ம னைதான்
அவளுக்குக் கர்ப்பந் தோன்றிச்
செல்லுவாள் கால நாடு
தேவியே கேட்டி டாயே.

21. இரு மனைவியர் உண்டு என்று சொன்னீர். அவ்விரு மனைவியரும் தீர்க்காயுள் உள்ளவரோ, அல்லது அற்பாயுள் உள்ளவரோ அவ்விஷயத்தைச் சொல்லுங்கள். என தேவி வினவ, முனிவர் கூறுகிறார். ஜாதகனுடைய முதல் மனைவிக்குக் கர்ப்பத்தால் மரணமேற்படும் என்று சொல்லுகின்றோம். தேவியே ! கேளுங்கள்.

முதல்மனைவி இறக்கும் காலமும் மறுமணமும்

22. எந்தக்கா லத்தில் செல்வா ளியம்புவீர் முனியே நீர்தாம்
வந்தவ னிருபா னெட்டு வாண்டினில் மரிப்பா ளாகும்
அந்ததோ ராண்டு தன்னில் அணுகிடும் வேறு மாது
பிந்திய மாது தீர்க்கம் புகலுவோம் புத்திர பாவம்.

22. ஜாதகனுடைய எந்த வயதில் முதல் மனைவி இறந்து விடுவாள் ? சொல்லுங்கள் முனிவரே ! தாங்கள். ஜாதகனுடைய இருபத்தெட்டாம் வயதில் முதல் மனைவி இறப்பாள். அதே வருடத்தில் வேற்றுப் பெண் ஒருத்தி மனைவியாக வருவாள். அப்பெண் நீண்ட ஆயுள் உள்ளவள். அவளுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய புத்திரபாவம்

23. சுதர்களு மாண்பா லொன்று தோகையு மூன்று [வென்றோம்
எதுவித பாரிக் கேதா னியம்பினீர் அந்தச் சங்கை
முதல்மாது தனக்குப் புத்திரர் மேவாது மேவில் நீதாஞ்
சதமுட னினையா ளுக்குச் சந்ததி விருத்தி சொன்னேம்.

23. ஜாதகனுக்கு ஓர் ஆண் குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும் தோன்றுவர் என்று கூறுகின்றோம். எந்த மனைவிக்குப் புத்திரர் தோன்றுவர் ? சொல்லுங்கள். ஜாதகனுடைய முதல் மனை

கூறாக்கியமில்லை. புத்திரர் தோன்றினும் நிலையார். இஃது கதாரவிருத்தி ஏற்படும் என்றோம்.

தட்ட முற்பிறவி ; ஏழைகளின் பொருளை அபகரித்தது.

தவ னிருந்த ஜன்மம்
30.மொழிகிறேங் கூடல் தன்னில்
அன்னவன் கர்ண சேயா
யணுகியே வாழு நாளில்
பின்னவர் பொருளைப் பெற்றுப்
பூமியைத் தாரே னென்று
சொன்னதில் தவறு செய்தான்
செப்புவார் ஏழை யோர்கள்.

24. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கூடலூரில் (திருமுக்கூடல் என்னும் க்ஷேத்திரத்தில்) கருணீகர் குலத்தில் பிறந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். பல ஏழைகளிடமிருந்து நிலங்களைத் தருவதாகச் சொல்லிப் பணத்தைப் பெற்றுக்கொண்டு நிலத்தைத் தராமலிருந்துவிட்டான். ஏழைகள் மனம் வருந்திச் சொல்லுகின்றார்.

ஏழைகளின் சாபம்

25. வஞ்சனை செய்த பாவி மருஜன்மம் மனைவி யிரண்டாய்த்
தஞ்சமாய் நேரு மென்றோம் தன்துணை மூன்றின்
[னின்றிக்
கெஞ்சியே வாழ்வா யென்றார் குலவிற்று வந்தச் சாபம்
மிஞ்சியே காண் ஞகும் வித்தக னந்தி யத்தில் ;

25. வஞ்சனைகள் செய்த பாவியே ! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் இருமனைவியரை அடைந்து, உடன் பிறந்தவர்கள் ஒருவருமில்லாமல் வாழ்ந்து வருவாய் என்று கூறினர். அந்தச் சாபம் தொடர்ந்தது. அதனால் சகோதர தோஷ மேற்பட்டது. ஜாதகனும் தன் கடைசிக் காலத்தில் ;

26. அரிபஜ னைகள் செய்து அந்தக நாட டைந்து
பிரமனால் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
மருவிடும் பாரி ரண்டு வறைந்தது தப்பா வாமே
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

26. ஹரிநாம பஜனைகளைச் செய்து மரணமடைந்து மீண்டும் பிரம தேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். ஏழைகளின்

சாபத்தால் இரு மனைவியரை அடைவான். நாங்கள் கூ
பெரிய வயிற்றையுடைய விநாயகனைப்பெற்ற
கேளுங்கள்.

ஜாதகன் யோகங்கள்

27. வந்தவன் யோகச் சேதி வறைகிறேம் தாயே கே
சந்ததஞ் செட்டுச் செய்வன் தனமது பெருக்க
பந்தினேர்க் குதவி செய்வன் பாரினில் தானியச் செடு
விந்தையாய் மேலாய்ச் செய்வன் மேன்மக்க ளுறவு
[கொள்வன்.

27. ஜாதகனுடைய பொது யோகச் செய்திகளை இனிக் கூறு
கின்றேம். தாயே! கேட்பீராக. நல்ல வர்த்தகத்தைப் புரிந்து வருவான்.
செல்வம் விருத்தியாகும். தன் உறவினர்கட்கு உபகாரம் செய்பவன்.
உலகில் மேன்மையான தானிய வியாபாரம் செய்து வருவான். பெரி
யோர்களுடைய தொடர்புள்ளவன்.

இதுவுமது

28. இல்லமு மூன்று நேரும் எந்தக்கா லங்கள் சொல்வாய்
வல்லவ னிரண்டா மாண்டில் மருவிடு மில்ல மொன்று
சொல்லுவேன் பத்தா மாண்டில் சித்திர யில்லம் வாங்கல்
எல்லைகள் அதன்பின் சேர்ப்பன் ஈச்வரி கேட்டி டாயே.

28. ஜாதகனுக்கு மூன்று வீடுகள் கிடைக்கும். அஃது எந்தக்
காலத்தில் நேரிடும்? சொல்லுங்கள். ஜாதகனுடைய இரண்டாம்
வயதில் ஒரு வீடு கிடைக்கும். அவனுடைய பத்தாம் வயதில் அழகிய
வீடு ஒன்று இவனுக்காக வாங்கப்படும். அதற்குப் பின் இவன் விளை
நிலங்களைச் சேர்ப்பான். தாயே! கேளுங்கள்.

ஜாதகன் மரணகாலம்

29. மன்னவன் மரண கால மறைகிறே மன்பா னென்பான்
உன்னத வாண்டு தன்னில் உயர்மேட மாதந் தன்னில்
இன்னவ னுடல மேகு மியம்புவா ரத்திரி தாமுந்
துன்மையாய் நாலாண் டுக்குள் சுதனுக்குக் கண்ட
[மென்றேம்.

29. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றேம்.
அஃது அவனுடைய ஐம்பத்தொன்பதாம் வயதில் சித்திரை மாதத்தில்
ஏற்படும். அத்திரி முனிவர் ஒரு சந்தேகத்தைக் கேட்டு விளக்குகிறார்.
ஜாதகனுடைய நான்காம் வயதுக்குள்ளாகவே (மரணம்) கண்டம்
ஏற்படும் என்றார்.

30. எந்தநோய் வந்த போதும் ஈரஞ்சில் புக்கும் பானும்
வந்ததால் தாய்தந் தைக்கு மாரனுங் கருமஞ் செய்வன்
மைந்தனுந் தீர்க்க மென்றே மாமுனி எடுத்துச் சொல்வார்
வந்தநோய் நீங்கி யேதான் அன்பதொன் பாண்டி
[ருப்பன்.

30. எவ்வித நோய் ஏற்பட்ட போதிலும் பத்தாமிடத்தில் (கர்ம ஸ்தானத்தில்) சுக்கிரனும் சூரியனும் இருப்பதால் இந்த ஜாதகன் தன் தாய் தந்தையருக்குக் கருமங்களைச் செய்தே ஆகவேண்டும். ஆதலால் ஜாதகன் நீண்ட ஆயுள் உள்ளவன் என்றேரும். முனிவர் அதை இன்னும் பலமாகக் கூறுகின்றார். எந்த வியாதி ஏற்பட்டாலும் அது நீங்கி ஜாதகன் தன் ஐம்பத்தொன்பதாம் வயது வரையிலிருப்பான்.

ஜாதகனது மறுபிறவியும் ஜனனகாலதசையும்

31. பின்ஜன்மந் தணிகை தன்னில் பிறப்பனு மிரட்டி வம்சம்
பொன்பொரு ளுடைய னாகிப் பூமியில் ஜீவிப் பானும்
அன்னவன் ஜனன காலம் [1]அடுப்புநாள் கடைப்பா
[தத்தில்
துன்புக ராண்டு மூன்றுந் திங்களும் நாலு மாகும்.

31. மறுபிறவியில் திருத்தணியில் ரெட்டியார் மரபில் பிறப்பான். பொன் ஆபரணங்களை உடையவனாக விருந்து விவசாயம் செய்து ஜீவனம் நடத்தி வருவான். அவனுடைய ஜனன காலத்தில் பரணி நட்சத்திரம் கடைசிப் பாதம் நடைபெறும். அப்போது சுக்கிரம்காதசையில் மூன்று வருடங்களும் நான்கு மாதங்களும் மீதமாகும்.

---

1. பரணி

ஜாதகம் 62

1. மதிகுரு தேள தாக மங்கலன் புக்கும் வண்டி
புதன்பானு வீணை யாகப் பணிமீனங் காரி சாடி
இதுவிதக் கோளு நின்று விலக்கினஞ் சீய மாக
வதுபலன் புகலு மென்று அம்பிகை கேட்க லுற்றாள்.

1. சந்திரன் குரு விருச்சிகத்திலும், செவ்வாய் சுக்கிரன் கடகத்திலும், புதன் சூரியன் மிதுனத்திலும், ராகு மீனத்திலும், சனி கும்பத்திலும், கேது கன்னியிலுமாக நவக்கிரகங்கள் இருந்து இலக்கினம் சிம்மமானுல் ஏற்படும் பலன்களைக் கூறுங்கள் எனப் பார்வதிதேவி கேட்கலானாள்.

கிரகநிலை

ராகு			புதன் சூரியன்
சனி	இராசி சக்கரம்		செவ்வாய் சுக்கிரன்
	சந்திரன் குரு		கேது

ஜாதகனுடைய வீட்டுநிலை

2. பிருகுவும் புகலு கின்றார் பிறந்திடு மாண்பால் ஜன்மம்
வருமில்லங் கீழ்மேல் வீதி வாசலு மெமனின் பார்வை
நரிவா கனத்தாள் கீழ்ப்பால் நாட்டிய சிறுவூர் தன்னில்
வருவனு மிரண்டாஞ் ஜன்மம் வன்னிய குலமே
[யென்றோம்.

2. பிருகு முனிவர் கூறுகின்றார். இந்த ஆண்பிள்ளையின் ஜாதகம். அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான வீதியில் தெற்கு நோக்கிய வ புடையது. சிங்கத்தை வாகனமாகவுடைய காளி கோவில் கி திக்கில் உள்ள ஒரு சிற்றூரில் வன்னிய குலத்தில் தன் இரண்டாம் புதல்வனுகப் பிறந்தவன், இந்த ஜாதகன்

ரவன் ஜனன யோகம்
நில்பெருந் தந்தை யோகம்
பின் துணைவர் யோகம்
ன்மனை புத்திர யோகம்

முன்பின்ஜன் மங்கள் யாவு
முரைக்கிறே மிந்நூல் தன்னில்
உன்னத வானைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

3. ஜாதகனுடைய பொது யோகங்கள், அழகிய தந்தை தாய் உடன்பிறந்தவர் மனைவி மக்கள் இவர்களின் யோகங்கள், முற்பிறவி மறுபிறவி முதலிய எல்லாவற்றையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேம். உயர்ந்த மதயானையைப் போன்ற முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

பின்வரும் நான்கு பாடல்கள் ஜாதகனைப்பெற்ற தந்தையின் குணங்களைக் கூறுவனவாம்

4. தந்தையின் துணையாண் காணன் சத்திமார் மூவ ராகும்
அந்தவர் சேதி பின்பால் அறிவிப்போந் தாயே யாமும்
தந்தையின் சேதி சொல்வேன் சரசமாய் வார்த்தை
[சொல்வன்
தந்தமுங் குறைவு நேருந் தாட்சிண்யன் கனத்த புத்தி.

4. ஜாதகனுடைய தந்தைக்கு உடன்பிறந்தவர்களில் சகோதரர்கள் இல்லை. சகோதரிகள் மூவருண்டு என்றேம், அவர்களின் விவரங்களைப் பின்பாகத்தில் கூறுகின்றேம். தாயே! இனி ஜாதகனுடைய தந்தையின் விவரங்களைச் சொல்லுகின்றேம். சரச சல்லாபமாகப் பேசுபவன். பற்கள் தேய்வுற்று (குறைந்து) இருக்கும். தாட்சிண்யமுள்ளவன். பெரிய புத்திசாலி.

5. வித்தையு மில்லா னுகும் மாஞ்சிவப் புடைய னுகும்
பத்தினி நேய னுவன் பாருகள் சேர்ப்பா னுகுங்
குத்தமாய் விரயம் செய்வன் குலத்துளோர் மதிக்க
[வாழ்வன்
நத்தினோர்க் குதவிசெய்வன் நல்லோர்க்கு நல்லோ னுவன்.

5. கல்வியறிவில்லாதவன். மாநிறமுடையவன். மனைவிக்குப் பிரியமானவன். விளைநிலங்களைப் பெருக்குவான். ஆனால் அதிகரியால் அவற்றை அழித்து விடுவான். தன் சுற்றத்தார் பெருமை எண்ணும்படியாக வாழ்ந்து வருவான். அண்டிவந்தவர்கட்கு உதவி செய்பவன். நல்லெண்ணம் பொருந்தியவர்கட்கு நல்லவனாவான்.

6. பலதொழில் புரிவா னுகும் பஞ்சைபோல் குடும்பி யாவன்
செலவுக ளதிகஞ் செய்வன் சண்முகன் பத்தி பூண்பன்
தலமது வொதுக்க மாகுந் தைரியன் காமி யாவன்
புலவன்போல் மொழிவா னுகும் புயபல முடைய னுமே.

6. பலவிதமான தொழிலைச் செய்து வருவான். எளியவர்களைப் போன்ற குடும்பத்தை யுடையவன். அதிகமான செலவுகளைச் செய்து வருவான். முருகக் கடவுள்மீது பக்தியுள்ளவன். வீடு ஒருபக்கமாக ஒதுங்கி இருக்கும். தைரியமுள்ளவன். சிற்றின்பத்தில் விருப்ப முள்ளவன். புலவன்போல் பேசுபவன். புயபலமுடையவன்.

7. சுகதுக்கங் கலந்து வாழ்வன்
தொடுத்ததை வெல்வா னுகும்
பகையோரை நசிக்க வைப்பன்
பால்பாக்கிய மில்லா னுகும்
உகமையாய்ப் பேச வல்லான்
உத்தம னுகி வாழ்வன்
மிகுதவம் புரியு மெங்கள்
வித்தகி கேட்டி டாயே.

7. சுகதுக்கம் கலந்து வாழ்ந்து வருவான். எடுத்த காரியத்தை வெற்றியுடன் செய்து முடிப்பவன். எதிரிகளை ஒழித்து விடுவான். ஊழ்வினைப்பாக்கிய மில்லாதவன். உபமானங்களுடன் பேசும் வழக்க முள்ளவன். நல்லவன் என்ற பெயருடன் வாழ்ந்து வருவான். மிகுந்த தவங்களைப் புரியும் எங்கள் உத்தமியே! கேளுங்கள்.

பின்வரு மிரு பாட்டுகள் ஜாதகனின் விவரங்களைச் சொல்லும்

8. இன்னெறி யுடையா னுக்கு விவனுமே வுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் [மாகி றத்தான்
பின்னமில் லாத தேகி புயபல முடைய னுகும்
பொனனது தேட வல்லான் பொய்யது வழுத்தா னுமே.

8. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாத [illegible]ந்தவன். அவனுடைய குணத்தைக் கூறுகின்றேம். அழகுள் [illegible]மாகிறமுடையவன். ஊனமில்லாத சரீர முள்ளவன். புயபல செல்வத்தைத் தேடும் ஆற்றலுள்ளவன். பொய் [illegible]வன்.

9. காரியச் சமர்த்த னுகுங் கல்வியு மில்லா னுகுந்
தேறின புத்தி யேற்பன் தேசமேல் செல்வா னுகும்
வாரிமேல் செல்வா னுகு மரசர்க ளுறவு கொள்வன்
பார்பின்னல் சேர்ப்பா னுகுங் கட்டுவான் சித்திர வில்லம்.

9. காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்து முடிப்பவன். கல்வி யறிவில்லாதவன். முதிர்ந்த அறிவாளி. சமுத்திரத்தைத் தாண்டி அக்கரையிலுள்ள வேறு தேசங்களுக்குச் செல்லுவான். அரசாங்கத் தொடர்புள்ளவன். பிற்காலத்தில் பூமி, நிலங்கள் இவற்றைச் சேர்ப் பான். அழகிய வீட்டைக் கட்டுவான்.

10. எந்தக்கா லத்தி லேதான்
இடம்விட்டுச் செல்வான் சொல்வீர்
சந்தத மீரெட் டாண்டில்
தலமது பேத மாகி
வந்தயில் லதற்கு [1]வாய்வில்
மருவியே வறுமை பூண்டு
பிந்தியு மெட்டாண் டில்தான்
போகுவான் சோங்கின் பேரில்

10. ஜாதகன் எந்தக்காலத்தில் ஊரைவிட்டுச் செல்லுவான்? சொல்லுங்கள் என்று வினவ, முனிவர் பதில் கூறுவார். ஜாதகன் தனது பதினாறும் வயதில் இடம்விட்டு நீங்கி (வீட்டில் கலகம் ஏற்பட்டு) பிறந்த வீட்டுக்கு வடமேற்குத் திக்கில் சென்று, தரித்திரமடைந்து பிறகு அதிலிருந்து எட்டாம் வருடத்தில் கப்பல் மீது சென்று சமுத் திரத்தைக் கடப்பான்.

11. சிலதுகாள் அங்கி ருந்து தனமது பெருக்கஞ் செய்து
குலவுவான் சொந்த நாட்டைக் கூறுவீ ரக்கா லத்தை
நிலைசேர முப்பா னளில் சேருவான் தனமும் பெற்று
உலகினில் புகழு மேற்பன் உத்தமி கேட்டி டாயே.

11. சிலகாலம் அங்கிருந்து பொருளைச் சேகரித்துக்கொண்டு தன் சொந்த ஊருக்குத் திரும்பி வருவான். அது எந்தக்காலம் என்று சொல்லுங்கள். ஜாதகன் தனது முப்பதாம் வயதில் பெரிய செல்வத் தைச் சம்பாதித்து ஊருக்குத் திரும்புவான். உலகில் கீர்த்தியை யடைவான். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

12. தன்துணை யிருநான் காக
ஜனித்திடும் பாதி சேதம்
பின்னங்கள் விவரஞ் சொல்வாய்
புதல்வன்பின் னளவாய் மூன்றும்

---

1. வாயு = வடமேற்குத்திக்கு.

மன்னிய யேழாஞ் ஜன்மம்
மரித்திடு மென்று சொல்வோம்
நின்னது வாண்பால் நான்கு
நிகழ்த்துவோர் தீர்க்க மாக.

12. ஜாதகனுடைய உடன்பிறந்தவர் எட்டுப்பேரில் பாதிப்பேர் நிலையாமல் இறந்துவிடுவர் என்றோம். ஜாதகனுக்குப் பின் தொடர்ந்து பிறந்த மூன்று குழந்தைகளும், ஏழாம் குழந்தையும் இறந்துவிடும் என்று சொல்லுகின்றோம். இறந்ததுபோக மீதி நான்கு சகோதரர்கள் நிலையானவர் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகனுக்கு முன்பிறந்த சகோதரன் விவரம்

13. முன்னவன் சேதி சொல்வேன மொழியது சுகமே யாகுந்
தன்மனங் கபடு மில்லான் தரித்திர முடைய னாகும்
முன்கோபி மாநி றத்தன் முன்கல்வி காண னாகுந்
தன்மனை வடபால் நேருஞ் சந்ததி யாண்பா லிரண்டு :

13. ஜாதகனுக்கு முன்பிறந்த சகோதரனின் விஷயங்களைக் கூறுகின்றோம். இன்புறும்படிப் பேசுபவன். சூதுகளில்லாத மனத்தினன். தரித்திரமுள்ளவன். முன்கோபி. மாநிறமுடையவன். உயர்ந்த கல்வியறிவைப் பெறுதவன். வடக்குத் திக்கிலிருந்து அவனுக்கு மனைவி வருவாள் என்றோம். இரு புத்திரர்களும் ;

இதுவுமது

14. கன்னிகை மூவர் தீர்க்கங் கனக்காவே மற்ற வெல்லாம்
அன்னவன் வயது தீர்க்கம் அவனுக்குப் பின்னல்
[யோகம்
பொன்பூமி சேர்ப்பா னாகும் பேசுவோம் பின்பால் சேதி
கன்னென மொழியை யொக்குங் காதலி கேட்டி டாயே.

14. மூன்று சகோதரிகளும் பிறந்து நிலையானவராவர். மற்றும் தோன்றுபவர் நிலையார் என்றோம். அச்சகோதரன் நீண்ட ஆயுள் உள்ளவன். அவனுக்குப் பிற்காலத்தில் அதிர்ஷ்டம் உண்டாகும். செல்வம் பூமி இவைகளைச் சேகரிப்பான். பிற்பாகத்தில் மற்ற விவரங்களைக் கூறுகின்றோம். இனிய வார்த்தைகளைப் பேசும் தேவியே! கேட்பீராக.

15. உதித்தவன் பின்னோர் சேதி யுறைக்கிறோம் பின்பா
[கத்தி
லதிபதி யன்னை சேதி யறைகிறோம் பொறுமை சாலி
சதியிலா மனத்த ளாகுந் தன்வரன் மனதுக் கேத்தோள்
நிதிபணி யில்லா ளாகும் நிமலியும் வாத தேகி.

15. ஜாதகனுடைய இளைய சகோதரரைப்பற்றி பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். இனி ஜாதகன் தாயின் விவரங்களை கூறுகிறேம். பொறுமையுடையவள். தீங்குகளை எண்ணுத மனத்தினள். தன் கணவன் மனமறிந்து நடப்பவள். செல்வமும் ஆபரணங்களு மில்லாத வள். வாயுரோகமுள்ள சரீரமுடையவள்.

ஜாதகன் தாயின் வரலாறு

16. மானிறம் பலவீ னத்தாள் வாததே கத்தா ளாகும்
தேன்மொழி கூறு வாளாம் சிலுகான புத்தி யில்லாள்
பான்மைச்சொல் பலித முண்டு பெற்றதா யில்ல முத்திரம்
ஆனதோர் துணையா ணென்று வறைந்தனந் தீர்க்க மாக.

16. மாநிறமுள்ளவள். பலவீனமுடையவள். வாயு ரோகமுடைய சரீரி. இனிய வார்த்தைகளையே பேசுபவள். சிக்கலுள்ள புத்தியில்லா தவள். சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவள். (இவள் வார்த்தை கள் மதிப்புள்ளவை) இவளது தாயின் வீடு வடக்குத்திசையிலுள்ளது. ஒரு சகோதரன் நீண்ட ஆயுள் உள்ளவன் என்றேம்.

தாயின் சகோதரபாவம்—கிரகநிலை

17. பெண்துணை தோன்றுந் தீதாம்
பேசுவீ ரந்தச் சங்கை
கன்னியில் கேது தங்கக்
கலையுமே நீச மாக
அன்னவள் துணைப்பெண் தோஷம்
அதுவின்றிப் பூர்வந் தன்னில்
பின்னங்க ளதிகஞ் செய்தாள்
போகுந் துணைப்பெண் ணுந்தான்.

17. சகோதரி ஒருத்தி பிறப்பாள். ஆனால் அவள் நிலையில்லாத வள். அதற்குக் காரணமென்னவென்று சொல்லுங்கள். தாயின் உடன்பிறந்தவர் விவரங்களைச் சொல்லும் ஐந்தாமிடமாகிய கன்னியில் கேது இருப்பதாலும், மாதுர்காரகனுகிய சந்திரன் விருஷபத்தில் நீச மாக இருப்பதாலும் ஜாதகனுடைய தாய்க்குச் சகோதரியில்லை. அதுவல்லாமல் முற்பிறவியில் தீவினைகள் பலவற்றைச் செய்தாள். அதனால் தாய்க்குச் சகோதரி தோஷமுண்டு.

தாயின் முற்பிறவியும் தீவினையும்

18. மாதுசெய் வினையைச் சொல்வீர்
மாபூரங் கீழ்ப்பா லாக
மேதினில் சிறுவூர் தன்னில்
விளங்கிளுள் வைசியச் சேயாய்க்

காதலி சுகமாய் வாழுங்
காலத்தில் வினையைச் சொல்வேன்
பாதக வார்த்தை யொன்று
பகர்ந்தனள் ஒருத்தி பேரில்.

18. தாய் செய்த தீவினையைச் சொல்லுங்கள். மாயவரத்துக்குக் கிழக்கிலுள்ள சிற்றூரில் வைசிய குலத்தவளாகப் பிறந்தாள். சௌகர்யமாக வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். வேற்றுப்பெண் ஒருத்தியின்மீது இல்லாத வார்த்தைகளைக் கூறினள் (தீய வார்த்தைகளைச் சொன்னள்).

பெண் சாபம்

19. மங்கையின் வரனுங் கேட்டு
மாதுவை விரட்டும் போது
அங்கவள் தேக நொந்து
அறைகிறாள் சாபந் தானும்
நங்கமாய் வார்த்தை யென்மேல்
நவின்றிட்ட பாவிக் கேதான்
மங்கிடும் தூணப்பெண் ணுந்தான்
மறுஜன்மந் தூணப்பெண் ணின்றி ;

19. அப்பெண்ணின் கணவன் அவ்வார்த்தைகளைக் கேட்டு மனைவியை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். மனம் வாடிய அப்பெண் சாபமிடுகிறாள். என்மீது அபாண்டமானதும் இழிவானதுமான வார்த்தைகளைக் கூறிய பாவிக்கு இப்பிறவியில் சகோதரி இறப்பாள். மறுபிறவியிலும் உடன்பிறந்த சகோதரியில்லாமல் ;

இதுவுமது

20. சுதர்கன்னி தோஷ மாகித் தொல்புவி வறுமை யாகிப்
பதிபந்து அல்ப மாயும் பணிகளு மில்லா தாயும்
அதிபதி வாழ்வா யென்று வாரிளள் தெருத்தாள் தானும்
இதுதோஷஞ் சேர்ந்த தென்றேம் ஈச்வரி கேட்டி டாயே.

20. புத்திரர்களுக்கும் புத்திரிகளுக்கும் தோஷம் ஏற்பட்டும் உலகில் தரித்திரமடைந்தும், கணவனின் சுற்றத்தார் இல்லாமலும் ஆபரணங்கள் இல்லாதவளாகவும் வாழ்ந்து வருவாய் என்று கூறித் தெருமண்ணை வாரி யிறைத்தாள். இந்தத் தீவினை அவளைச் சேர்ந்தது என்று சொன்னேம். தாயே! கேளுங்கள்.

21. மங்கையும் மரண மாகி மால்மகன் வரையப் பட்டு
இங்கிவ ளுதித்தா ளென்றேரும் எய்திடும் மாது சாபம்
நங்கைக்குத் தூணைப்பெண் தோஷம் நற்சுதர்
[பெண்ணு மவ்வாறு
மங்கின குடும்ப மாகும் மனதுசஞ் சலமாய் வாழ்வள்.

21. ஜாதகனுடைய தாயும் மரணமடைந்து திருமாலின் புத்திர னுகிய பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என் றேரும். பெண்ணிட்ட சாபம் இவளைப் பற்றியதால் உடன்பிறந்த சகோதரிகட்கும் பிறக்கும் பெண் குழந்தைகட்கும் தீங்குண்டாகும். குடும்பம் குறைவுள்ளதாகும். மனத்தில் சஞ்சலங்களும் ஏற்பட்டு வாழ்ந்து வருவாள்.

தாயின் மறுபிறவி

22. பின்ஜன்மம் விரிஞ்சி தன்னில் பிறப்பளாஞ் சைவச்
[சேயாய்
என்னபுண் ணியங்கள் செய்தா ளியம்புவீ ரந்தச் சங்கை
தன்வரன் மனம்போல் வாழ்ந்துந் தன்மனங் கபடு மின்றி
அன்னியர் குற்றந் தன்னே யவளுமே ஓதாத் தாலும்;

22. மறுபிறவியில் விரிஞ்சி காட்டில் சைவ குலத்தவளாகப் பிறப்பாள். ஜாதகனுடைய தாய் உயர்ந்த குலமாகிய சைவ குலத்த வளாகப் பிறக்க என்ன நல்வினைகள் செய்தாள்? அவற்றைக் கூறுங்கள். (என வினவ, முனிவர்கள் பதில் சொல்லுகின்றனர்). தன் கணவ னுடைய மனம்போல் வாழ்ந்து வருவதாலும், மனத்தில் சூதுகளில்லா மலும் பிறர்மீது குற்றம் கூருமல் வாழ்ந்து வருவதாலும்;

தந்தையின் முற்பிறவி

23. தேவதாப் பத்தி யோடுந் தேவியும் உதிப்பா ளாகும்
ஆவலாய்த் தந்தை பூர்வம் அறிவிப்போ மினிமே லாகச்
சேவலங் கொடியோன் வாழுந் திருப்பரங் குன்றந்
[தன்னில்
தாவிஞன் கர்ண சேயாய்த் தன்மனே மதலை யுண்டாய்;

23. தெய்வபக்தியுடனும் இருந்து வருவதாலும் இவள் சைவகுலத்தில் பிறப்பாள். இனித் தந்தையின் முற்பிறவியைக் கூறுகின்றேரும். சேவலைக்கொடியில் கொண்டுள்ள சுப்பிரமணியக் கடவுள் எழுந்தருளியிருக்கும் திருப்பரங்குன்றத்தில் கருணீகர் குலத் தில் பிறந்து மனைவி மக்களைப்பெற்று;

தீச்செயல்கள்

24. அன்னகர் கணக்கு வேலை
யவனுமே பார்க்குங் காலை
பின்னேர்பால் பொருளை வாங்கிப்
பூமியைத் தாரே னென்று
கன்மன மாக வேதான்
கனத்தோர்க்குப் பூமி சேர்த்தான்
பொன்தந்த வேழை யோர்கள்
புகலுவார் மனவெ றுப்பால்.

24. அவ்வூரில் கணக்கன் வேலையை அவன் செய்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கூறுகின்றேரும். வறுமையடைந்த எளியவர்களிடம் பொருளைப் பெற்றுக் கொண்டு நிலம் வாங்கித் தருவதாக ஆசை வார்த்தைகளைச் சொல்லிக் கடினமனத்தோடு அவர்களுக்குத் தராமல் செல்வந்தர்கட்குப் பூமிகளைச் சேர்த்துக் கொடுத்தான். பொருளைக் கொடுத்த ஏழை மக்கள் மனம் வருந்திக் கூறுகின்றனர்.

ஏழைகளின் சாபம்

25. ஆசையாய் வார்த்தை சொல்லி யரும்பொருள் பரித்த [பாவி
நாசமாய்ப் போவாய் நீயும் நல்கும்பின் ஜன்மந் தன்னில்
வாசமா மில்ல மட்டு மருவுவாய் ஒருசா கைதான்
போஜன வறுமை யாலும் பூமியு மில்லா தாயும் ;

25. ஆசை யேற்படும்படியான வார்த்தைகளைக் கூறி எங்களிடமிருந்து அரிய பொருள்களைப் பரித்த பாவியே! நீ நாசமடைந்து அழிந்து விடுவாய். உனக்கு ஏற்படும் மறுபிறவியில் நீ வசித்து வரும் வீட்டை விட்டு விலகி வேற்று வீட்டில் வசிப்பாய் என்றும் சாப்பாட்டுக்குத் தரித்திரமடைந்தும் விளைநிலங்களில்லாமலும் ;

இதுவுமது

26. தந்தமுங் குறைவு முண்டாய்த்
தடமது வில்லா தாயுஞ்
சிந்தையுஞ் சதாக லக்கம்
துணையாண்பா லின்றி வாழ்வாய்
இந்தவா று சொல்லி யேதான்
இறைத்தனர் தெருமண் வாரி
அந்ததோர் சாபந் தானும்
அணுகிற்றுப் பால னுக்கு ;

26. பற்களும் தேய்வுற்று (குறைந்து) குடியிருக்க வீடு கிடைக்காமல் மனத்தில் எப்போதும் சஞ்சலங்கள் ஏற்பட்டு, உடன்பிறந்த சகோதரர்களில்லாமல் வாழ்ந்து வருவாய் என்று கூறித் தெருமண்ணீர வாரி இறைத்தனர். அந்தச் சாபம் ஜாதகனுடைய தந்தைக்கு ஏற்பட்டது.

27. வறுமைக ளந்தி யத்தில்
மருவியே மரண மாகிப்
பிரமனுல் வரையப் பட்டுப்
பிறந்தன னென்று சொல்வோம்
மருவிடு மேழை சாபம்
வளமிலாக் குடும்ப மெய்துந்
தரைசேரும் நிவிர்த்தி செய்வன்
தன்துணை யாண்பால் தோஷம்.

27. ஜாதகனின் தந்தை தன் கடைசிக் காலத்தில் தரித்திரத்தை அடைந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான் என்று சொல்லுகின்றோம். ஏழைகளின் சாபம் தொடரும். செழிப்பில்லாத குடும்பம் ஏற்படும். நிலங்கள் சேரும். ஆனுல் அவற்றை விற்று விடுவான். உடன்பிறந்த சகோதரருக்குத் தோஷமுண்டாகும்.

நற்காலம்

28. இல்லமு மேகு மென்றேரும் இடுக்கமாங் குடும்ப மெய்தும்
அல்லலாய் மத்தில் வாழ்வன் அந்தியக் காலந் தன்னில்
நல்லதோர் குடும்ப மெய்தும் நற்சித்திர வில்லம் நேரல்
எல்லையும் பெறுத லுண்டு இடுக்கண்கள் நிவிர்த்தி
[யாகும்.

28. ஜாதகனுடைய தந்தையின் வீடு தனது கையைவிட்டுப் போகும். குடும்பம் துன்பமடையும். இடைக்காலத்தில் மிகுந்த துன்பங்களையடைந்து வாழ்ந்து வருவான். தன் கடைசிக் காலத்தில் குடும்பம் சிறிது நலனடையும். அழகிய வீடு கிட்டும். பூமி பெருகும். அடைந்த துன்பங்கள் ஒழியும்.

தந்தையின் மறுபிறவி

29. மறுஜன்மந் தணிகை தன்னில் மறைக்குல முதிப்பா
[ருகும்
திருமக னிச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன
முருகர்தம் பத்தி யாயும் மொழியதைக் காத்த லாலும்
வருவோரை யாத ரித்தும் மனமது கபடு மின்றி ;

29. தந்தை மறுபிறவியில் திருத்தணியில் அந்தண குலத்தவனுகப் பிறப்பான். ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் செய்த என்ன நற்செயல்களால் உயர்ந்த குலத்தில் பிறப்பான்? ஆறுமுகக் கடவுள்மீது பக்தியுடன் வாழ்ந்து வருவதாலும் சொன்ன வார்த்தைகளின்படி நடந்து வருவதாலும் அண்டி வந்தவர்களுக்காத்து வருவதாலும் மனத்தில் மறைவின்றி;

30. மாரனும் வாழ்வ தாலே மறைக்குல முதிப்பா னுகும்
பாரிய குடும்பி யாகிப் பார்மன்னர் தன்னு லுய்வன்
கூறின மொழிகுன் றுவே கோமளி யருளால்
[சொன்னேம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

30. ஜாதகனுடைய தந்தை வாழ்ந்து வருவதால் (அடுத்த பிறவியில்) அந்தண குலத்தவனுகப் பிறப்பான். பெருங் குடும்பத்தையடைந்து அரசரால் உத்தியோகம் ஏற்று வாழ்ந்து வருவான். நாங்கள் சொன்ன அருள் மொழிகள் தவறு. தாயே! உன் அருளால் அவ்விதம் கூறியிருக்கிறேம். ஆறுமுகக்கடவுளைப்பெற்ற தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

31. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ:முப்பா னைந்தில்
காதலி உள்ளூர் தன்னில் கலப்பளாங் குணத்தைச்
[சொல்வேன்
சூதிலாள் முன்கோ பத்தாள் சிவந்தமெய் புத்தி சாலி
பாதக மனமில் லாதாள் பரிந்துப சாரம் செய்வள்.

31. இனி ஜாதகனுடைய திருமணக்காலத்தைச் சொல்லுகின்றேம். முப்பத்தைந்தாம் வயதில் உள்ளூரிலிருந்தே மனைவி வாய்ப்பாள். அவளுடைய குணங்களைக் கூறுகின்றேம். கபடமில்லாதவள். முன்கோபமுள்ளவள். சிவந்த உடலுள்ளவள். புத்திசாலி. தீய எண்ணங்களில்லாத மனத்தினள். அன்புடன் உபசாரம் செய்பவள்.

32. பால்பாக்கிய முடைய ளாகும் பந்துவுக் கினிய ளாகுஞ்
சீலியாம் நடையு நன்மை சிறுத்தோர்க்கு அன்ன மீவள்
பாலிகை வயது தீர்க்கம் பணிகளு மதிகஞ் சேர்ப்பள்
மால்மனை வாச மெய்தும் மரித்துரை யதிகங் கூறுள்.

32. ஊழ்வினைப் பாக்கியமுள்ளவள். தன் சுற்றத்தாருக்குப் பிரியமானவள். நன்னடத்தையும் நல்லொழுக்கமும் உள்ளவள். துன்பமடைந்தவர்கட்கு அன்னமளிப்பவள். நீண்ட வயதுள்ளவள். அதிகமான ஆபரணங்களைச் சேர்ப்பாள். இலக்குமி இவளுடைய வீட்டில் வாசம் செய்து வருவாள். எதிர்வார்த்தைகளை அதிகமாகப் பேசாதவள்.

புத்திரபாவம்

33. சுதர்களு மாண்பா விரண்டு
தோகையு மவ்வா ருகும்
இதுதான்குந் தீர்க்க மெய்தும்
இடருண்டு விரண்டு வென்றேம்
முதலோங்குஞ் சேத மெய்தும்
மொழிகுவீர் அந்தச் சங்கை
புதல்வகா ரகனு ஞலில்
பிறையுமே சேர்ந்த தோஷம் ;

33. இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்காயு ளுடனிருப்பர். இரு குழந்தைகள் நிலையா. முதல் குழந்தை நிலை யானது. மற்றுமிரு குழந்தைகள் இறந்துபோம். அதற்குரிய காரணத்தைச் சொல்லுங்கள். புத்திரகாரகனும் புத்திரஸ்தானுதிபதியு மாகிய குரு நான்காமிடத்தில் (புத்திரஸ்தானத்துக்கு விரயஸ்தானத் தில்) இருப்பதாலும் அவருடன் சந்திரன் சேர்ந்ததுமான தோஷத் தால் ;

34. சொல்லினே முனியே யாங்கள்
சுதனுடைப் பூர்வங் கேளாய்
அல்லலைத் தவிர்க்கு கின்ற
அருணைக்குத் தென்பா லாக
நல்லதோர் சிறுவூர் தன்னில்
நல்கினு னிக்கு லத்தில்
வல்லியு மதலை யுண்டாய்
வாழ்நாளில் வினையைச் சொல்வேன்.

34. அவ்விதம் நாங்கள் கூறுகின்றேம். முனிவரே ! நாங்கள். இனி ஜாதகனுடைய முற்பிறவியைக் கேளுங்கள். துன்பங்களை அகற்றும் திருவண்ணுமலைக்குத் தெற்குப் பக்கத்தில் உள்ள ஒரு சிற்றூரில் இதே குலத்தில் பிறந்தான். மனைவி மக்களையடைந்து வாழுகின்ற காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கூறுகின்றேம்.

வேற்றுப்பெண்ணிடம் சிற்றின்பம் அனுபவித்துப் பிறகு கர்ப்பம் மறுத்தது

35. அன்னிய மாது போகம்
அவன்செய்து வருகா டன்னில்
தன்வர னதனைக் கண்டு
சத்தியை விலக்கும் போது

கன்னிகை யிவன்பால் சென்று
கணவன்செய் கொடுமை சொல்லி
என்னிடீ காப்பா யென்ன
என்பாரி பொல்லாள் செல்வாய் ;

35. வேற்றுப்பெண் ஒருத்தியிடம் ஜாதகன் சிற்றின்பம் அனுபவித்து வந்தான். அதை அவளுடைய கணவன் பார்த்து அப்பெண்ணைத் தன் வீட்டை விட்டு விலக்கினன். அவளும் ஜாதகனுடைய வீட்டுக்குச் சென்று தன் கணவன் தன்னை நீக்கிய விவரத்தைச் சொல்லித் தன்னை ஆதரிக்கும்படி வேண்டினாள். அதற்கு ஜாதகன், என் மனைவி பொல்லாதவள். நீ போ.

நம்பிவந்த பெண்ணைக் காக்க மறுத்ததால் ஏற்பட்டசாபம்

36. மாரனு மிவ்வாறு சொல்ல
மங்கையு மனது வாடி
கூறுவாள் சாபந் தானுங்
குறிக்கும்பின் ஜன்மந் தன்னில்
பாரிய குடும்பந் தாழ்ந்து
பிறந்தவில் லடையா தாயும்
நாரியாந் துணைப்பெண் ணின்றி
நேபாள தேசம் செல்வாய் ;

36. என்று ஜாதகன் சொல்வியதைக் கேட்ட அப்பெண் மனம் வருந்திச் சாபமிடுகிறாள். இனி ஏற்படும் மறுபிறவியில் பெரிய குடும்பமாக இருந்து, பிறகு தாழ்வுற்று, பிறந்த வீட்டைப் பெறுதவளாகவும் உடன்பிறந்த சகோதரிகளில்லாதவளாகவும் இருந்து நேபாள தேசத்துக்குச் செல்லுவாய் ;

சாப பலன்

37. இன்னமும் பலவாறு சொல்லி
பிறந்தனள் ஜலத்தில் மாது
கன்னிகை சாபந் தானுங்
கலந்திடு மிச்சென் மத்தில்
தன்துணைப் பெண்பால் தோஷஞ்
சாறுவான் சோங்கின் மேலே
பொன்சேர்த்துப் பின்பால் சேர்வன்
பூவையே கேட்டி டாயே.

37. என்றும் இன்னும் பலவிதமாகவும் சொல்லி விட்டுத் தண்ணீரில் விழுந்து உயிரை மாய்த்துக் கொண்டாள் அப்பெண். அவளின் சாபம் ஜாதகனுக்கு இப்பிறவியில் ஏற்படும். உடன்பிறந்த சகோதரம் யில்லாதவனுவான். கடல்தாண்டி வேறு தேசத்துக்குச் செல்லு பொருளைச் சம்பாதித்துக் கொண்டு பிறகு தன்னூருக்கு வ ன். தாயே! கேளுங்கள்.

38. மறுநகர் செல்வா னென்றீர் வரைவீரே தொழிலு
[மேதான்
அரசர்பால் கூலி வேலை யவனுமே செய்வா னுரும்
இருமூன்று வஞ்சு வாண்டு மிருப்பனே யன்ன டன்னில்
பெருவயி றோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

38. வேறுதேசம் செல்வான் என்று சொல்லுகிறீர்களே! அவன் செய்யும் தொழில் என்னவென்று கூறுங்கள். அரசரிடம் (அரசாங்கத்தில்) கூலி வேலை செய்து வருவான். அந்நாட்டில் தன்னுடைய முப்பதாம் வயது வரையில் வசிப்பான். பெரிய வயிற்றையுடைய விநாயகனைப்பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய பெற்றோரின் இறுதிக்காலம்

39. ஆறாறு வாண்டு தன்னில் அணுகிடுந் தந்தை கண்டந்
தீரமாய் நாற்பா லொன்றில் செல்லுவா ளன்னை தானுங்
கூறிய மொழிகுன் றுவே குடும்பமு மதன்மேல் வேறும்
மாரனை யெரித்தோன் பாரி வரைந்தவை தப்பா வாகும்.

39. ஜாதகனுடைய முப்பத்தாறும் வயதில் தந்தை மரணமடைவான். நாற்பத்தோராம் வயதில் தாய் மரணமடைவாள். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. அதற்குப் பிறகு குடும்பம் வேறுகும். மன்மதனைச் சுட்டெரித்த சிவபெருமானின் தேவியே! நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகனுடைய மரணகாலமும் மறுபிறவியும்

40. பாலகன் மரண காலம் பகருவோ மறுபா னேழில்
சாலவே தேளின் மாதஞ் சஷ்டியாங் குறைபக் கத்தில்
காலன்தன் பதிக்குச் சேர்வன் கழறுவோ மிவன்பின்
[ஜன்மம்
மால்வாழும் வேங்க டத்தில் மருவுவான் பின்கு லத்தில்.

40. ஜாதகனுடைய மரணகாலம் அறுபத்தேழாம் வயது என்றும் அது கார்த்திகை மாதம் கிருஷ்ணபட்சம் சஷ்டி திதி என்றும் சொல்லுகின்றோம். அவனுடைய மறுபிறவியைக் கூறுகின்றோம். திருமால் எழுந்தருளியிருக்கும் திருப்பதியில் நான்காம் வருணத்தவனுகப் பிறப்பான்.

ஜாதகனின் ஜனனகாலதசை

41. அன்னவன் ஜனன காலம்
அனுடத்தி னிரண்டாம் பாதந்
துன்சனி யொன்ப தாண்டுந்
திங்களு மேழ தாகும்
முன்பாகம் விவரஞ் சொன்னேம்
மொழிகிறேம் பின்பால் சேதி
உன்னத வரனைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

41. ஜாதகனுடைய ஜனன காலத்தில் நடைபெறுவது அனுட நட்சத்திரம் இரண்டாம் பாதமாம். அக்காலத்தில் சனிமகாதசையில் ஒன்பது ஆண்டுகளும் ஏழு மாதங்களும் மீதமாகும். இதுவரை முதல் பாகத்தைச் சொன்னேம். பிற்பாகத்தில் மற்ற விவரங்களைக் கூறுகின்றேம். உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

4. பலவிதமான வியாபாரத்தைச் செய்து வருவான். கீர்த்தியை யடைவான். சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். தன் கடைசிக் காலத்தில் வாயுரோகமுடையவன். வீட்டை அழகுபடுத்து வான். தன்னுடைய அந்தஸ்தைக் காத்துக்கொள்ளுவான். எண்ணிய காரியங்களைச் செய்து முடிப்பான். அரசாங்கத்தாருக்கு இவனுடைய வார்த்தை மதிப்புள்ளவையாகும். சொன்ன வார்த்தைகளின்படி நடப் பவன். அழகுள்ளவன். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவன்.

ஜாதகனுடைய இயல்புகள்

5. பாலகன் சேதி பகருவோ மினிமேல்
பரிந்துப சாரமே செய்வன்
சீலம்போல் காட்டு மிருவிதக் கல்வி
செப்புவா னரசர்பூ ஜிதவான்
ஞாலங்க ளமைப்பன் மன்னரா லுய்வன்
நாற்காலி பணையேர்க ளுளனும்
வேலுடைக் கடவு ளருளது வோங்கும்
விதேசமேல் சிலவேநாள் வாசம்.

5. இனி ஜாதகனுடைய செய்திகளைக் கூறுகின்றோம். பரிவுடன் உபசாரம் செய்பவன். நல்லொழுக்கமுள்ளவன்போல் வெளியார் நினைக்கும்படி நடப்பவன். இருவிதமான கல்விகளைக் கற்பான். அரசாங் கத்தாரால் கொண்டாடப்படுபவன். விளைநிலங்களைப் பெருக்குவான். அரசாங்கத்தாரால் மதிக்கப் பெறுபவன். கால்நடைகள் பண்ணை ஏர் முதலியவைகளின் பெருக்கமுள்ளவன். வேலையுடைய முருகப்பிரா னுடைய அருள் விருத்தியாகும். வேறு தேசத்தில் சிலகாலம் வாழ்ந்து வருவான்.

வாசியோகம்

6. வாசியோ கத்தை யுடையவ னுவான்
அதிதிகட் கன்னமு மீவன்
நேசர்க ளதிகஞ் சகடுவா கனத்தோன்
நிருபர்க்கு விவன்சொ லுமேன்மை
காசுமே லாசை வீண்செல வில்லான்
கவடிலான் சாந்தவான் (சிவந்தமெய்)குள்ளன்
போசனச் சுகியன் பொருத்தமா யுரைப்பன்
புண்ணியத் தலங்களுஞ் செல்வன்.

6. வாசியோகமுடையவன். விருந்தினருக்கு அன்புடன் அ படைப்பவன். நண்பர்களை அதிகமுடையவன். வண்டி வாகன வசதியுள்ளவன். அரசாங்கத்தாருக்கு இவனுடைய வ கள் மேன்மையுள்ளவை என்றும். காசு பணத்தில் ஆ வன். வீண்செலவு செய்யாதவன். கபடமில்லாதவன்.

யுடையவன். சிவந்த நிறமும் குட்டையான சரீரமுமுள்ளவன். சாப்பாட்டில் சுகமுடையவன். பொருத்தமாகப் பேசுபவன். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான்.

இதுவுமது

7. சேயிழைக் கஞ்சான் ஜனவுப காரி
தீரமா மனத்தனு மாமே
தூயநன் மனத்தன் வாதநோ யுடையன்
தோகையர் மோகவா னுகும்
தாயதைக் காப்பன் சர்ச்சன ருறவு
சற்றினில் கோபவா னுகும்
சாயலாய்க் காண்பன் குருவுப தேசஞ்
சதாவுமே தவசிக ளிஷ்டன்.

7. மனவிக்குப் பயப்படாதவன். ஜனங்களுக்கு உபகாரி. தைரியமுள்ள மனத்தினன். தூய்மையான நல்ல மனமுடையவன். வாயுரோகமுடைய சரீரி. பெண்களின்மீது மையல் கொள்ளுபவன். தன் தாயை ஆதரித்து வருவன். நல்லவருடைய உறவுள்ளவன். விரைவில் கோபங் கொள்ளுவான். ஓரப்பார்வை உள்ளவன். குரு வினிடம் உபதேசம் கொள்ளுபவன். தவம் செய்பவரிடம் பிரியமுள்ளவன்.

இளைய சகோதரனின் குணங்களும் விவரங்களும்

8. சல்லியங் கொள்ளான் தன்துணை யாண்பால்
சாற்றுவோ மொருவனுந் தீர்க்கம்
வல்லியு மவ்வா றறைகிறேந் தாயே
வாண்துணை யிளையனே யாகும்
புல்குவோங் குணத்தைப் பூமியும் விருத்தி
புவிதனில் தானியச் செட்டும்
வெல்லுஞ்சொல் லுடையன் கிராமாதி கார
மேவிடுஞ் சிலவேளை யென்றேறும்.

8. கடன் உபத்திரவமில்லாதவன். உடன்பிறந்தவரில் சகோதரன் ஒருவனும் சகோதரி ஒருத்தியும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாயிருப்பர். சகோதரன் இவனுக்கு இளையவனாகும் என்றேறும். [illegible]டைய குணத்தைக் கூறுகின்றேறும். விளைநிலங்களைப் [illegible]வான். உலகில் தானிய வியாபாரம் செய்து வருவான். [illegible]சொல்லுடையவன். (வாக்கு வன்மையுள்ளவன்). கிராமாதிபத்[illegible]ளுட்கள் இருந்து வருவான் என்றேறும்.

இதுவுமது

9. சிலவேளை யொன்றுய் ஜீவித்துப் பின்னுல்
செல்லுவான் வேறதா யவனும்
நிலம்விருத்தி பாரி யொன்றென மொழிவோம்
நிமிடத்தில் கோபியே யாவன்
குலவிடுஞ் சுதரா ணிரண்டுமே தீர்க்கங்
கோதைய ரிரட்டிப்பு மாகும்
அலைகடல் தன்னில் வறுமையே காணுன்
அதிதிகள் நேசமே கொள்ளான்.

9. சின்னட்கள் ஜாதகனுடன் ஒன்றுக வாழ்ந்து பிற்காலத்தில் வேறுகச் சென்று விடுவான். நிலம் பெருகும். மனைவி யொருத்தியே யாவள். அவன் விரைவில் கோபங்கொள்ளும் இயல்பினன். இரு புத்திரர் தோன்றி நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பர். பெண் கள் நால்வராகத் தோன்றுவர். கடல் தாண்டிச் செல்லுவான். தரித் திரமடையாதவன். சான்றோர்களின் சேர்க்கையில்லாதவன்.

உடன்பிறந்தோர் குணங்கள்

10. கொள்ளவும் விற்க வல்லனுஞ் சமர்த்தன்
குண்டைகோ விருத்தியு முண்டு
வில்லவே யுரைப்பன் மனத்தினில் கவடன்
வீரியன் வயதுமே தீர்க்கங்
கன்னியின் குணத்தைக் கழறுவோ மினிமேல்
கணவனுக் கினியளாந் தாயே
துள்ளுவாள் மத்தில் சுதராண்பால் தோஷம்
தோகையர் நான்குமே யென்றோம்.

10. (கொடுக்கல் வாங்கல்களைச் செய்வதிலும்) சாமான்களை வாங்கு வது விற்பது முதலியவற்றிலும் சமர்த்தியமுடையவன். பசு எருது முதலியவற்றின் விருத்தியுள்ளவன். கண்டித்துப் பேசுபவன். மனத்தில் கபடமுள்ளவன். நீண்ட வயதுடையவன். இனி, சகோதரியின் குணங் களைக் கூறுகின்றோம். தன் கணவனுக்குப் பிரியமானவள். இடைக் காலத்தில் சற்றுப் பெருமிதத்துடன் இருப்பாள். புத்திர பாக்கிய மில்லாதவள். நான்கு புத்திரிகள் மாத்திரம் தோன்றுவர் என்றோம்.

சகோதரியின் இயல்பும் ஜாதகன் நிருமணக்காலமும்

11. வரன்மத்தில் மாண்டு மாதரு யில்லம்
மருவுவாள் மனசஞ் சலத்தால்
பொருளது பெற்று வருவளா மென்றோம்
புதல்விமார் சுகமிலா வாழ்வர்

மறுபாகம் விவரம் விளம்புவோர்ந் தாயே
மாரனின் மணங்கள்ளாள் புகல்வோம்
இருபது விரண்டு வாண்டினில் பாரி
வெய்திடு மவள்குணம் புகல்வேன்.

11. இடைக்காலத்தில் கணவனை இழப்பாள். பிறகு தாயின் வீட்டில் வாழ்ந்து வருவாள். மனத்தில் சஞ்சலமுடையவள். பொருளைப் பெற்றுக் கொண்டு வருவாள் என்றேரும். (புத்திர பாக்கியமில்லாததால் கணவன் வீட்டிலிருந்து ஜீவனம்சப் பொருளை பெற்று வாழ்ந்து வருவாள் எனக் கொள்ள வேண்டும்). இவள் புத்திரிகளும் சௌக்கியமில்லாமல் வாழ்ந்து வருவர் என்றேரும். மற்ற விஷயங்களைப் பிற்பாகத்தில் விவரமாகக் கூறுகின்றேரும் தாயே! இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேரும். அவனுடைய இருபத்திரண்டாம் வயதில் மனைவி வாய்ப்பாள். அவளுடைய குணங்களைக் கூறுகின்றேரும்.

மனைவியின் குணங்கள்

12. பாரிய குடும்பி பரவுப காரி
பரமர்தன் னடிமைக்கு வடிமை
தேரின புத்தி சீலியாங் கல்வி
சிறப்புறும் ஞானவா லுகும்
மாரன்தன் மனத்துக் கேற்றவ ளாகும்
வளமுள தலங்களுஞ் செல்வள்
சோருமே கரங்கள் வாயுவால் பாதை
சிரித்தோர்மேல் பிரியளா மென்னே.

12. பெரிய குடும்பியாக இருப்பாள். பிறருக்கு உபகாரி. கடவுளின் தொண்டர்க்குத் தொண்டராக இருப்பாள். (பாகவதர்களிடத்தில் பக்தியுடையவள் என்பது கருத்து). முதிர்ந்த அறிவாளி. கல்லொழுக்கமுள்ளவள். கல்வி கேள்விகளில் சிறப்புள்ளவள். தெளிந்த ஞானமுள்ளவள் என்றேரும். தன் கணவன் மனத்துக்கேற்றவள். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவாள். கைகளில் வாயுபாதையால் கோர்வுறப்படும். சிரித்தவர்மீது பிரியமுடையவள். (தன்மீது அன்புடையவர்பால் தானும் அன்புடன் பழகுவாள் எனக்கொள்ளல் வேண்டும்).

13. .....முத்தவர் செவித்திடுமாது இகபரன்
பத்தி சாதனமுங் காப்பாள்
.....தோகைபோல் நிறத்தாள்
தொல்புவி நல்லவ ளென்பார்
பன்னுவோர்க் கன்னம் படைப்பாளா மென்றேரும்
பாவத்தில் மனமுஞ்செல் லாதாள்
கன்னிகை யோக சாலியாந் தாயே
கட்டுரை பகர்ந்திடா ளென்றேரும்.

13. .....சிவபக்தியுள்ளவள்..... .....மயிலேப்போன்ற நிறமுடையவள். உலகில் நல்லவளென்று சொல்லப்படுபவள். தன்னையண்டி வந்தவர்கட்கு பரிவுடன் அமுது அளிப்பவள். தீயச்செயல்களில் மனம் செல்லாதவள். அதிர்ஷ்டமுள்ளவள். இல்லாத வார்த்தைகளேச் சொல்லாதவள் என்றேரும்.

புத்திரபாவம்

14. மங்கைக்குச் சுதராண் மருவிடு மிரண்டு
மாதுவு மவ்விதந் தீர்க்கஞ்
சங்கையா மொன்று துகைசென்மந் தான்
சந்ததி யோகமே யடைவார்
பிந்திய பாகஞ் சுதர்குணம் புகல்வேன்
பிறந்தவ னன்னையின் சேஷி
சந்ததம் வாத தேகத்தா ளென்றேஞ்
சிவந்தமெய் யோகசா லிகளாம்.

14. (ஜாதகனுக்கு) அவளுக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவையாக இருக்கும். ஒரு குழந்தை நிலேயில்லாதது. இவளுடைய புத்திரர்கள் யோகமுடையவர்கள் என்று சொன்னேம். மற்ற விஷயங்களேப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேரும். இனி, ஜாதகனின் தாயின் செய்தியைக் கூறுகின்றேரும். தாய் வாயு ரோக முள்ளவள். சிவந்த உடலுள்ளவள். யோகசாலி என்றேரும்.

ஜாதகனின் தாயின் சகோதர பாவமும் முற்பிறவியும்

15. தன்னடை மிருது வார்த்தையே யாகும்
நவிலுமுன் கோபியே யாகுந்
தன்துணை யைந்து சாற்றுவோ மதிலாண்
தங்கிடு மிரண்டினி லொன்று
நேர்ந்திடுங் கன்னி மூன்றென மொழிவோரும்
நிமலியின் பூருவம் புகல்வோந்
தந்திவாழ் மலேநா டதனிலிம் மாது
ஜனித்தனள் கருணிகர் குலத்தில்.

15. மெதுவாக நடப்பவள். அடக்கமாகப் பேசுபவள். முன் கோபமுடையவள். அவளுக்கு உடன்பிறந்தவர் ஐவராவர். அவர்களில் இருவர் சகோதரர்கள் ஆவர். ஒரு சகோதரன் நிலேயில்லாதவன். ஒருவனே நீண்ட ஆயுள் உள்ளவன். மூன்று சகோதரிகள் நிலேயானவர் என்று கூறுகின்றேரும். தாயினுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். யானேக்கூட்டம் வாழ்ந்து வரும் மலேநாட்டில் கருணீகர் குலத்தில் பிறந்தாள்.

தாய் செய்த தீவினை : பரதேசிகளுக்கு அன்னமிட மறுத்தது

16. சுதர்களு முண்டாய்த் தோகைவாழ் நாளில்
செய்ததோர் வினைதனைக் கேண்மோ
அதிதிக ளோர்நா ளந்தியி லன்னம்
அணுகுவா யம்மையே யென்னச்
சதியான வார்த்தை செப்பினள் மாது
சங்கர னடியவர் வெறுப்பால்
இதுமொழி தகாது மறுஜன்மந் தந்த
மேகிடு மந்தியக் காலம்.

16. புத்திரபாக்கியம் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் தாய் செய்த தீவினையைக் கேளுங்கள். பரதேசிகள் ஒருநாள் மாலையில் இவள்பால் அணுகி, தாயே! பசிக்குச் சிறிது உணவு அளிப்பாய் என்று வேண்டினர்கள். அவர்களிடம் பணிவான வார்த்தைகளைக் கூறுமல் தகாத வார்த்தைகளைக் கூறினள். சிவனடியார் மன மொடிந்து சொல்லுகின்றார். இங்ஙனம் கொடிய வார்த்தைகளைக் கூற லாகாது. தாயே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் கடைசிக் காலத் தில் பற்களெல்லாம் அற்றுப்போம்.

பரதேசிகளின் சாப விளைவு

17. இன்னமும் பலவாறு சொல்லியே சென்றார்
எய்திற்று வடியவர் சாபங்
கன்னியைந் தாண்டில் கணவனு மாண்டு
கவலையா யறுமுகன் தொண்டு
தென்திசைக் காலன் நாடது புகுந்து
சிரநான்கோன் வரையவே வந்தாள்
முன்ஜன்ம சாபந் தந்தமுங் குறைவாய்
மேவிடு மென்றன முனியே.

17. இன்னும் பலவிதமாகச் சொல்லி விட்டுச் சென்றார். அந்தச் சிவனடியாரின் சாபம் இவளைப் பற்றியது. தாய் அதற்குப் பிறகு ஐந்து வருடங்களில் கணவனை யிழந்து மனத்தில் சஞ்சலங்கள் கொண்டு அறுமுகக்கடவுள்மீது பக்தியுடன் வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள். முற்பிறவியில் அடியாரிட்ட சாபத்தால் இப்பிறவியில் பற்கள் குறைந்துவிடும் என்றோம்.

தாயின் மறுஜன்மமும் தந்தையின் முற்பிறவியும்

18. பின்ஜன்மம் போரூ ரிக்குல முதிப்பாள்
பேசுவோர் தந்தைமுன் ஜன்மங்
கன்னியா குமரி நாடதில் குலாலன்
கலந்துமே யடியவர் தொண்டு
பன்னுவோர் பத்தி பலசகா யங்கள்
பாரினில் நல்லவ னாகி
முன்வினை யின்றி மறலியி நாட்டை
மேவியே வந்தவ னிவனே.

18. ஜாதகனுடைய தாய் மறுபிறவியில் திருப்போரூரில் இதே குலத்தில் பிறப்பாள். இனி, தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கன்னியாகுமரியில் குயவர் மரபில் பிறந்து சிவனடியாருக்குத் தொண்டுகள் பல செய்து தெய்வபக்தியுடன் பலருக்குச் சகாயங்கள் செய்து உலகில் நல்லவன் என்ற பெயரடைந்து வேறு தீவினைகளில்லாமல் மரணமடைந்து இப்பிறவியில் பிறந்தவன் என்றோம்.

தந்தையின் மறுபிறவியும் இப்பிறவியில் செய்த நற்செயல்களும்

19. மறுஜன்மங் கொங்கு மாநகர் தன்னில்
மறைக்குல முதித்துமே யின்னேன்
அரசரால் தொழிலு மணுகியே வாழ்வன்
ஆகிலு மிச்சென்ம புண்ணிய
முரையுநீர் முனியே வுமைதிருப் பணியும்
உலகினில் மார்க்கங்கள் செய்தும்
வருவோரைக் காத்து மறமதி லிச்சை
வைத்ததா லுதித்தன னென்றோம்.

19. ஜாதகனுடைய தந்தை மறுபிறவியில் கொங்கு நாட்டில் அந்தணர் குலத்தில் பிறந்து அரசாங்கத்தொழிலை ஏற்று வாழ்ந்து வருவான், தாயே! ஜாதகனுடைய தந்தை அடுத்த பிறவியில் அந்தணர் குலத்தவனாகப் பிறக்க இப்பிறவியில் என்ன நற்காரியங்கள் செய்தான்? கூறுங்கள், முனிவரே! நீர். அம்மையே! அம்மன் கோயிலுக்குத் திருப்பணி செய்தும் ஜனங்களின் சௌகர்யத்துக்காகச் சாலைகளை அமைத்தும், அண்டி வந்தவரைக் காத்தும் தருமம் செய்வதில் விருப்பங் கொண்டும் வாழ்ந்து வந்ததால் அவ்விதம் பிறந்தான் என்று சொன்னோம்.

MAHARAJA'S COLLEGE LIBRARY

ஜாதகனுடைய முற்பிறவி

20. ஜாதகன் பூர்வஞ் சாற்றுவோங் காஞ்சி
கலத்துக்குக் கீழ்த்திசை யருகில்
மேதினில் பேரூர் நல்வீர வர்க்கம்
விளங்கியே பொருளுமே படைத்து
மாதர்கள் மானங் காக்கும் தொழில்செய்து
வருவோர்க்குத் தாகமு மீந்து
சாதவா கனத்தோன் தொண்டுமே பூண்டு
சண்டன்தன் பதிக்குமே சென்று ;

20. இனி ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சீபுரத்துக்குக் கிழக்கில் சமீபமாக உள்ள பெரிய ஊரில் வீர சைவனுகப் பிறந்து பெருஞ் செல்வம் படைத்துப் பெண்களின் மானத்தைக் காக்கும் புடவை முதலிய நெய்யுந்தொழிலேச் செய்து வந்து அண்டி வந்தவர்கட்குப் பசிக்கு அன்னபானதிகளே அளித்து மயிலே வாகனமாகவுடைய சுப்பிரமணியக் கடவுளுக்குத் தொண்டுகள் பலவற்றைச் செய்து மரணமடைந்து ;

21. சிரநான்கோன் வரைய வருகுவான் தாயே
செப்புவோம் பாலகன் யோகம்
அரசர்பூ சிதமுந் தொழிலுமுமே வாய்க்கும்
அறுமூன்று நான்காண் டதன்மேல்
பிறையது போலே தொழிலது விருத்தி
பேசுவோ மன்பத்தா ருண்டுங்
குறைவுரு தென்றே மதற்குமேல் விலகுங்
கொடுமைக ளின்றியே புகன்றோம்.

21. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறப்பான். தாயே ! இனி ஜாதகனுடைய யோகத்தைக் கூறுகின்றோம். அரசாங்கத்தாரால் கொண்டாடப்படும் உத்தியோகம் கிட்டும். ஜாதகனுடைய இருபத்திரண்டாம் வயதுக்குமேல் வளர்பிறைச் சந்திரன்போல் தொழில் விருத்தியடையும். அவனுடைய ஐம்பத் தாரும் வயது வரையில் எவ்விதக் குறைகளும் ஏற்படா. அதற்குமேல் யோகம் நீங்கும். ஆனல் நீங்குகளின்றியே வாழ்வான். தாயே !

வேறு

ஜாதகனின் தாய் தந்தையரின் மரண காலங்கள்

22. மைந்தனி னுயுள் மட்டு மன்னரால் தனமு நேருந்
தந்தைக்கு விருபா னுலுள் சார்ந்திடு மார கங்கள்
பிந்தியு மன்பா லொன்றுள் பேசுவோ மன்னை கண்டங்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழிகுன் ருவே.

22. ஜாதகனுடைய மரணகாலம் வரையில் அரசாங்கத்தாரால் தனம் கிடைக்கும். (உதவிச்சம்பளம் பெறுவான்). ஜாதகனுடைய இருபத்துநான்காம் வயதுக்குள் தந்தை மரணமடைவான். பிறகு ஜாதகனின் ஐம்பத்தோராம் வயதில் தாய் மரணமடைவாள். முருகப் பிராஜைப் பெற்ற தாயே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவரு.

ஜாதகனின் இறுதிநாளும் மறுபிறவியும்

23. அறுபது வைந்து வாண்டில் அணுகிய தனுசு மாதந்
திருமக னுடல மேகுஞ் செப்புவோ மிவன்பின் ஜன்மம்
பெருமையாய்த் தணிகை யுத்திரம் பேரூரில் சத்திரியச்
[சேயாய்க்
கரிபரி யுடையோ னெங்கள் காவலன் வாழ்வா னுமே.

23. தனது அறுபத்தைந்தாம் வயதில் மார்கழி மாதத்தில் ஜாதகன் மரணமடைவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருத்தணிக்கு வடக்கில் உள்ள ஒரு பெரிய ஊரில் சத்திரிய குலத்தவனாகப் பிறந்து யானை குதிரை முதலியவற்றைப் பெற்று அரசனைப்போல் வாழ்ந்து வருவான்.

24. இன்னதோர் ஜன்மந் தன்னில் ஈகையுங் குறைவ தாயும்
பொன்பொரு ளிச்சை யாயும் பூமியில் சிலர்க்குத் துன்பம்
அன்னவன் செய்வ தாலே அரசர்தங் குலமெவ் வாறு
சொன்னீர்கள் விவரஞ் சொல்லுஞ் ஜயமுனி புகலு
[கின்றார்.

24. இப்பிறவியில் அற்பமாக தருமம் செய்வதும் பொன் பொருள் முதலியவற்றில் விருப்பங் கொண்டும் வாழ்ந்து உலகில் சிலருக்குத் துன்பம் விளைவித்து வந்தபோதிலும் அடுத்த பிறவியில் சத்திரிய குலத்தில் பிறக்கும் காரணங்கள் என்னவென்று கூறுங்கள். ஜயமுனிவர் விவரமாகச் சொல்லுகின்றார்.

25. தோகைவா கனத்தோன் பத்தி துறவிக்கு வன்ன மீந்தும்
ஆகம முணர்வ தாலும் அனேத்தையு மறிவ தாலுந்
தாகமென் றோர்க்கு வீந்துந் தானுப தேசம் பெற்றும்
பாகமாய் வாழ்வ தாலே பிறப்பனு மென்று சொல்வோம்.

25. மயிலே வாகனமாகவுடைய சுப்பிரமணியக் கடவுளிடம் பக்தி கொண்டு வாழ்வதாலும் பரதேசிகட்கு அன்புடன் அன்னமளித்து வருவதாலும் வேதங்களின் பொருளைத் தெரிந்து கொள்வதாலும் அறியவேண்டிய இன்னும் முக்கிய பல விஷயங்களையும் உணர்ந்தவனாக இருப்பதாலும் பசி தாகமடைந்தவர்கட்கு அன்னமளிப்பதாலும் உப

தேசங்களைப் பெற்றுப் பொருத்தமாக வாழ்ந்து வருவதற்கும் அவ்விதம் சொன்னேம்.

26. ஞானங்கள் புகல்வோர் தன்னை
நவிலுவீர் முனியே நீர்தாம்
வானவர் போற்று மன்ன
னறுமுக னடிமை வர்க்கம்
ஊனமில் லாத தேகி
உயர்வுளான் செங்குந்த வம்சம்
மான்மழு தரித்தோன் பூசை
மறவாதான் வறுமை யோனே.

26. உபதேசம் செய்பவரைப்பற்றிச் சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். தேவர்கள் போற்றும் அறுமுகக்கடவுளின் அடிமைகளாகிய செங்குந்த மரபில் பிறந்தவன். ஊனமில்லாத தேகமுடையவன். உயர்ந்த சரீரமுள்ளவன். மான் மழு இவைகளைத் திருக்கையில் கொண்டுள்ள சிவபெருமானுக்கு மறவாமல் பூசைகள் புரிந்து வருவான். தரித்திர மடைந்தவன்.

27. பாரியு மதலை யுண்டாய்ப் பாலர்மேல் பகையு மாகித்
தீரமாய் வெளியில் சென்று தேசமேல் திரிந்து வன்னென்
பேரறி ஞானந் தன்னைப் பிரம்மமென் றனுச ரித்து
வேறொரு வர்பால் கேட்டு விவேகமுங் குறைவ தாகி;

27. மனைவி மக்களைப் பெற்று குழந்தைகளிடம் (வெறுப்புக் கொண்டு) விரோதமடைந்து வெளிநாடுகட்குச் சென்று உலகில் பல விடங்களில் திரிந்து, பெரிய ஞானிகளிடத்தில் பலகாலம் தொண்டு செய்து உபதேசமாகப் பெறவேண்டிய விஷயங்களை சாதாரணமாக வுள்ள மற்றவரை யடுத்து, அவர்களைத் தத்துவம் உணர்த்தும் ஆசிரியராக நினைத்து, அவர்களிடம் மெய்ஞ்ஞான உபதேசங்கேட்டு, தனக்கு இயல்பாக உள்ள நல்லறிவும் கெட்டு;

வேறு

28. சாதனை செய்து பிணிகளுண் டாகிச்
சாருவான் சாதகன் பக்கல்
போதனை செய்தவன் கபடுமே கொஞ்சம்
பொருந்திடுஞ் சிலர்களுக் கிவனுஞ்
சாதனை செய்தவ னணுகுங்கா லங்கள்
சாற்றுவீ ராரூறு ஆண்டுள்
மாதவம் போலே வந்தணுகு மென்றோம்
மனிவிக்கும் ஞானம்போ திப்பான்.

28. (யோகம் முதலிய) சாதனைகள் பலவற்றைச் செய்து அதனால் ரோகமடைந்து திரும்பவும் தனக்கு உபதேசம் செய்த ஆசாரியனிடம் சென்று வினவ உபதேசம் செய்த குரு மனத்தில் சிறிது வஞ்சனையுடன் சில மந்திரங்களைப் போதனை செய்வான். இவனும் அதைச் சிலருக்குச் சொல்லிக் கொடுப்பான். சாதனைகளைச் செய்யும் காலங்களைக் கூறுங்கள், முனிவரே! அவனுடைய முப்பத்தாரும் வயதில் பெரிய தவம் செய்தவன்போல் வந்து இவனுடைய மனைவிக்கும் ஞானம் போதிப்பான்.

29. சிலசில நாட்கள் வெளியிடஞ் சென்று
சேருவான் மைந்தனின் பக்கல்
தலைவனுக் கன்பா னிரண்டுவாண் டதனில்
தன்னிடஞ் சாதனை யாலே
குலவுவான் சோதி யோடுற வாவன்
குமரனுங் கருமங்கள் செய்வன்
நிலையது வைம்ப தாண்டினில் தனக்கு
நேர்ந்திடுஞ் சாதனை தானே.

29. சிற்சில நாட்கள் வெளியூர்கள் சென்று, பிறகு தன் மகனிடம் வருவான். ஜாதகனுடைய ஐம்பத்திரண்டாம் வயதில் தன்னுடைய சாதனையால் ஜோதியொடு கலப்பான் (மரணமடைவான்). புத்திரன் அவனுக்குக் கருமங்கள் செய்வான். ஐம்பதாம் வயதில் சாதனை ஏற்படும்.

30. இன்னமும் விவர மியம்புவோம் பின்பால்
இறங்குகா ளாயில்லிய மாகுஞ்
[1] சந்திரன் மகனின் தசையீரெட் டாண்டுஞ்
சாற்றினேந் திங்களு மொன்று
முன்பாகம் புகன்றோம் பலன்தனைக் கேளா
யுயர்வுண்டு தந்தைக்கு யோகம்
பின்துணை விருத்தி கல்வியும் நேரல்
பெருமையாய்ப் புகழுமே யெய்தும்.

30. இன்னும் மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகன் பிறக்கும் காலம் ஆயில்ய நட்சத்திரம் (முதல் பாதம்). சந்திரனுடைய மகனுகிய புதமகாதசையில் பதினேறு வருடங்களும் ஒரு மாதமும் மீதமாகும். இதுவரை முதல் பாகம் சொன்னேம். அப்பலனைக் கேளுங்கள். உயிர்வாக இருக்கும் தந்தைக்கும் யோகம் பெருகும். உடன்பிறந்தவர் விருத்தியாவர். வித்தியாப்யாசம் ஏற்படும். பெருமையையும் கீர்த்தியையும் அடைவான்.

---

1. புதன்

ஜாதகம் 58

1. மதியும் புகருந் தேள்தனில்
மால்சேய் பானு கோலதனில்
விதியன் கேது புல்லதனில்
வேந்தன் வீணை யரிஜன்மம்
அதுவே பலன்க ளெவ்வாறு
அறிவிப் பீர்கள் தவமுனியே
துதிசெயும் பராசர் தாஞ்சொல்வார்
ஜனிக்கு மாண்பால் ஜனனமாமே.

1. சந்திரன் சுக்கிரன் (ராகு) விருச்சிகத்திலும், புதன் செவ்வாய் சூரியன் துலாத்திலும், சனி கேது ரிஷபத்திலும், குரு மிதுனத்திலுமாக நவக்கிரகங்கள் இருந்து இலக்கினம் சிம்மமானால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள், முனிவரே! என்று பார்வதிதேவி கேட்கும் போது முனிவர்கள் துதி செய்யும் பராசரர் கூறுகின்றார். இஃது ஆண் மகனுடைய ஜாதகம்.

கிரகநிலை

		சனி கேது	குரு
	இராசி சக்கரம்		
			லக்கினம்
	ராகு சந்திரன் சுக்கிரன்	புதன் செவ்வாய் சூரியன்	

2. ஆமே தந்தை பால்சொல்வேன்
அருக்கன் வீதி வடவாசல்
தீமை விலக்குங் காளியுத்திரஞ்
சிரமற் றேணு மதன்தன்மேல்
காமன் தனையே யெரித்தவனுங்
கிலமா தென்கீ ழுதன்மேற்கில்
நாம மிடுவன் குடிநகிக்கும்
நல்குங் கிழ்ப்பால் தந்தியுமே.

2. அவன் பிறந்த வீடு தந்தையினுடையது என்றும். அது கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. தீமைகளை யொழிக்கும் காளிகோவில் வடக்குத் திக்கிலும் அதற்குத் தென்மேற்குத் திக்கில் அரவான் கோவிலும் தென்கிழக்கில் மன்மதனை

3. அருகினில் மேல்பா லீசன்
அணுகிய பேரூர் தன்னில்
வருகுவான் நானகாஞ் ஜன்ம
மால்மதம் வடுகர் வர்க்கம்
உரைக்கிறேரும் குடும்பச் சேதி
யுயர்தந்தை துணைகள் காணுன்
மறுமாதா தந்தைக் குண்டு
வரைகிறேரும் பெண்பா லொன்று ;

3. மேற்குப் பக்கத்தில் வீட்டுக்குச் சமீபமாகச் சிவபெருமான் ஆலயமொன்றுளது. இவ்விதமான அடையாளங்களுள்ள ஒரு பெரிய ஊரில் இந்த ஜாதகன் விஷ்ணு மதத்தில் வன்னிய குலத்தில் தன் தந்தைக்கு நான்காமவனுகப் பிறப்பான். அவனுடைய குடும்பச் செய்தி களைக் கூறுகின்றேரும். ஜாதகனுடைய தந்தைக்கு உடன்பிறந்தவ ரில்லை. தந்தையின் தந்தைக்கு இரண்டாம் மனைவி யொருத்தி யுண்டு. அவளுக்குப் புத்திரி யொருத்தி தோன்றுவாள் என்றேரும்.

கீழ்வரும் மூன்று பாடல்களில் தந்தையின் குணங்கள் கூறப்படுகின்றன

4. தீர்க்கமா மென்று சொல்வோர்
தந்தையின் குணத்தை யாங்கள்
ஏர்க்கவே குள்ள னவன்
இருநிறம் யூகை வாளும்
மார்க்கமாம் குணத்தா னகும்
மர்மமில் லாதா னென்றேரும்
மூர்க்கமில் லாதா னென்றே
மேதினில் சல்லியங் காணுன்.

4. அவள் நீண்ட ஆயுள் உள்ளவள் என்றும் கூறுகின்றேரும். இனி ஜாதகனின் தந்தையின் குணங்களைக் கூறுகின்றேரும். குட்டை யானவன். கருமை கலந்த செம்மை நிறமுள்ளவன். ஊகமுடைய வன். நல்வழியில் நடக்குங் தன்மையுள்ளவன். இரகசியமில்லாதவன். மூர்க்க குணங்களில்லாதவன். உலகில் கடன் உபத்திரவமில்லாதவன்.

5. வருவோரை யாத ரிப்ப
னடிமைகள் சேர்ப்பா னகுங்
குறையென்றேர்க் குதவி செய்வன்
குண்டகோ விருத்தி யில்லான்
பெருமவர் நேசங் கொள்வன்
பிறர்பொரு ளிச்சை யில்லான்
மாளி செய்வா னகும்
தேறின புத்தி யேற்பன்.

5. விரும்பி வந்தவரை நன்கு உபசரிப்பான். பணியாட்கள் உள்ளவன். துன்பமடைந்தவரைக் காப்பான். பசு எருதுகளின் விருத்தி யில்லாதவன். பெரியோர்களுடன் நட்புக் கொள்ளுபவன். அயலா ருடைய பொருள்களின்மீது விருப்பமில்லாதவன். அழகிய வீட்டைக் கட்டுவான். முதிர்ந்த அறிவாளிகளின் நல்லுபதேசங்களை நன்கு மனத்தில் கொள்ளுவான்.

6. சங்கீதப் பணியுஞ் செய்வன் தலவாசஞ் செய்வா னுகும்
எங்கள்போ லதிதிக் கன்ன மீவனும் வறுமை காணன்
தங்கிடும் பித்த வாயு தருமமாங் குணத்த னுகும்
நங்கைசொல் கடவா னுகும் நவிலுவோ மிவன்முன் [ஜன்மம்.

6. சங்கீத சாஸ்திரத்தை அறிந்து, திருப்பணியையும் (பஜனை முதலியவற்றையும்) செய்து வருவான். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். எங்களைப்போன்ற துறவிகட்கு அன்புடன் அமுது படைப்பவன். தரித்திரமில்லாதவன். பித்தவாயுவுள்ள சரீரமுடையவன். தருமம் செய்ய விருப்பமுடையவன். மனைவியின் சொல்லை மீறுதவன். இவனுடைய முற்பிறவியைச் சொல்லுகிறோம்.

தந்தையின் முற்பிறவி

7. தென்திசை யாழி தன்னில் ஜனித்தன னிக்கு லத்தில்
உன்னதச் செட்டுச் செய்து வுத்தமன் வாழு நாளில்
தன்குலத் திருவர் தானுஞ் சண்டைகள் மிகவே கொண்டு
இன்னவன் தன்பால் சொல்ல விருவர்க்குப் பாகஞ் [செய்ய ;

7. தெற்குப் பக்கத்தில் உள்ள கடற்கரை யோரமுள்ளதொரு கேஷத்திரத்தில் (திருவாழியில்) இக்குலத்தில் பிறந்து உயர்வான வர்த்தகத்தைச் செய்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினை யைச் சொல்லுகின்றோம். தன் குலத்தவர் இருவருக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு சண்டையிட்டுக்கொண்டு இவனிடம் சென்று பாகப்பிரிவினை செய்யும்படி கேட்டுக் கொண்ட பொழுது ;

ஓரவஞ்சனை செய்தலின் பலன்

8. வஞ்சனை யாகச் செய்தான் மற்றவன் சாபஞ் சொல்வான்
மிஞ்சிய ஜன்மந் தன்னில் விளங்கார்கள் துணைவர் தாமுங்
கொஞ்சநா ளன்னை மாண்டு குடியது வலைச்ச லாயும்
வெஞ்சின மாகச் சொன்னன் மேவிற்று வந்தச் சாபம்.

8. ஓரவஞ்சனையாகப் பாகப்பிரிவினை செய்தான். நஷ்டமடைந்த ஒருவன் அதை யறிந்து சாபமிடுகின்றான். அடுத்த பிறவியில் உனக்குச் சகோதரர் விளங்கார். சின்னஞ்சிறிலேயே பெற்ற

இழந்து, குடும்பம் துன்பமுற்று வாழ்வாய் என்று கடுங்கோபத்துடன் கூறினன். அந்தச் சாபம் இவனைத் தொடர்ந்தது.

9. அந்திய காலந் தன்னில் அல்லலாங் குடும்ப மாகித்
தென்திசைக் கால நாடு சென்றுமே பிரம னிலக்கம்
வந்தவ னிவனே யென்றே மருவிடு முன்னூழ்ச் சாபந்
தன்துணை தோஷ மெய்துந் தாயது மிரண்டு மாகும்.

9. தன் கடைசிக் காலத்தில் குடும்பத்தில் துன்புற்று தந்தை மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவன் இவன் என்றேரும். முற்பிறவியில் செய்த தீவினையால் இப்பிறவியில் சகோதர தோஷம் ஏற்படும். இரு தாய்மார்களையும் அடைவான்.

பின்வரும் மூன்று பாடல்கள் ஜாதகனின் குணங்களைக் கூறும்

10. சொன்னவிக் குணத்தா னுக்குச்
சுதனுமே வுதிப்பா னுகும்
பன்னுவோ மவன்கு ணத்தைப்
பகருமுன் கோபி யாகுந்
தன்சொலே மேன்மை யாகச்
சாதிப்பான் சமமாங் கல்வி
அன்னியர் மதிக்க வாழ்வன்
அடாவடி கொஞ்ச முண்டு.

10. இவ்விதம் கூறப்பட்ட குணங்கள் உள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றேரும். முன்கோபி. தன் வார்த்தைகளே மேன்மையுள்ளவை என்று உறுதியுடன் கூறுபவன். சமமான கல்வி யறிவுடையவன். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். சிறிது அடாவடியாகவும் பேசுபவன்.

11. குலத்தொழில் புரிவா னுகும் குணமது விரண்டு முண்டு
விலைமாதர் மோகங் கொள்வன் மேம்பாடாய்ச் செட்டுச்
[செய்வன்
பலபேரால் பெருமை யேற்பன் பாரினிலி டம்ப னுவன்
நிலமது சேர்ப்பா னுகும் நினைத்ததை முடிக்க வல்லன்.

11. தன் குலத்தொழிலையே செய்து வருவான். இருவிதமான குணங்களுள்ளவன். வேசையர்மீது விருப்பமுடையவன். மேன்மையான வர்த்தகம் புரிந்து வருவான். பல பேரால் நல்லவன் என்று சொல்லப்பட்டுப் பெருமையை அடைவான். ஆடம்பரமான வாழ்க்கை நடத்துவான். விலைநிலங்களை வாங்குவான். எண்ணிய காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பவன்.

12. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன்
உறைப்பொடு புளிப்பி லிச்சை
வண்டிவா கனமு முண்டு
மருவிடும் மூலச் சூடு
எண்டிசைப் புகழு மேற்பன்
எதிரியை நசிக்கச் செய்வன்
துண்டமாங் குணமுங் கொஞ்சந்
தோகையே கேட்டி டாயே.

12. நன்றுகவும் சுகமாகவும் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவன். காரத்துடன் சேர்ந்த புளிப்புப் பதார்த்தங்களை அருந்துவதில் பிரிய முடையவன். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். மூலச் சூட்டு நோயுள்ளவன். எல்லாத் திக்குகளிலும் கீர்த்தியை அடைவான். விரோதிகளை ஒழித்து விடுவான். கண்டித்துப் பேசும் சுபாவமுடைய வன். தாயே! கேளுங்கள்.

ஜாதகன் உடன்பிறப்பு

13. தன்துணை யாண்பால் மூன்று
சத்தியு மொருத்தி யென்றேழுஞ்
சொன்னவர் நான்குந் தீர்க்கஞ்
சோர்வுறு மவ்வா றென்றேறும்
பின்பாக மவர்கள் சேதி
பேசுவோ முனியே யாங்கள்
அன்னையே யாங்கள் சொல்லு
மருள்மொழி குன்று வென்றேறும்.

13. ஜாதகனுக்குச் சகோதரர் மூவரும் சகோதரி யொருத்தியும் ஆகிய நால்வரும் தீர்க்காயுள் உள்ளவர்கள் என்றேறும். நால்வர் நிலை யாமல் இறந்து விடுவர். அவர்களுடைய செய்திகளைப் பிற்பாகத்தில் நாங்கள் சொல்லுகின்றேறும். தாயே! முனிவர்களாகிய எங்களது அருள்வாக்கியங்கள் பொய்யாகா.

ஜாதகனுடைய திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

14. மங்களம் பதினே ழாண்டில்
மருவிடுந் தென்பால் தன்னில்
அங்கவள் குணத்தைச் சொல்வேன்
அறிவுளாள் பொறுமை சாலி
சங்கையா மனத்த ளாகுஞ்
சான்றோருக் கன்ன மீவள்
பொங்கிய குடும்ப மேற்பள்
பூமியில் வறுமை காணுள்.

14. ஜாதகனுடைய பதினேழாம் வயதில் திருமணம் நிகழும். மனைவி தெற்குப் பக்கத்திலிருந்து வருவாள். அவளுடைய குணத்தைச் சொல்லுகின்றேம். அறிவாளி. பொறுமையுடையவள். சந்தேகப்படும் குணமுள்ளவள். பெரியோர்களுக்கு அமுது படைப்பவள். செல்வங் கொழிக்கும் குடும்பமுடையவள். தரித்திரமடையாதவள்.

புத்திரபாவம்

15. மாதுக்கு வயது தீர்க்க மறைகிறேம் புத்திர யோகம்
மேதினி லாண்பா லிரண்டு வித்தகி மார்க ளவ்வாறு
ஓதுவேன் தீர்க்க மாக வுறங்கிடு மூன்று வென்றேம்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

15. ஜாதகனுடைய மனைவிக்கு நீண்ட ஆயுள் உண்டு என்று சொல்லுகின்றேம். ஜாதகனது புத்திர பாவத்தைப் பற்றிக் கூறுகின்றேம். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் நீண்ட வயதுள்ளவர்கள். மூன்று குழந்தைகள் பிறந்து இறந்து போம். பெரிய யானை முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

ஜாதகனின் தாயின் குணங்கள்

16. அன்னையுஞ் சிவந்த மேனி
அழகுளாள் வாத தேகி
தன்சொல்லு மடக்க முண்டு
தன்வரன் மனம்போல் வாழ்வள்
அன்னியர் மதிக்க வாழ்வள்
அவள்துணை யாண்பா லொன்று
கன்னிமா நிருவ ரென்றேங்
காதலி யில்ல முத்தரம்.

16. ஜாதகனுடைய தாய் சிவந்த உடலும் அழகுமுள்ளவள். வாயு ரோகமுடைய சரீரி. அடக்கமாகப் பேசுபவள். தன் கணவனது மனமறிந்து நடப்பவள். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். ஒரு சகோதரனையும் இரு சகோதரிகளையும் உடையவள். அவள் பிறந்த வீடு வடக்குப் பக்கத்திலுள்ளது.

தாயின் முற்பிறவி

17. பூருவங் கொங்கு நாட்டில் பிறந்தனள் தீயின் வம்சம்
மாரனு மதலை யுண்டாய் மங்கையுஞ் சுகமாய் வாழ்ந்து
காரிவள் பவமில் லாமல் காலன்றன் னுட டைந்து
ஆரியன் வரையப் பட்டு அணுகினு ளிவளே யென்றேம்.

17. தாய் முற்பிறவியில் கொங்குநாட்டில் வன்னிய குலத்தவளாகப் பிறந்து மனைவி மக்களையடைந்து சௌக்கியமாக வாழ்ந்து

தீவினைகளில்லாமல் இருந்து மரணமடைந்து மீண்டும் பிரம்தேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றோம்.

தாயின் மறுபிறவி

18. பின்ஜன்ம மாவலி தன்னில்
பிராமண குலமு திப்பாள்
கன்னிகை யிச்சென் மத்தில்
கலந்தபுண் ணியங்க ளென்ன
தன்வரன் மனம்போல் வாழ்ந்தும்
சகலர்க்கு நல்லோ ளாகி
முன்னோர்கள் தம்மேல் பக்தி
முதல்வியுங் கொண்ட தாலே;

18. மறுபிறவியில் மகாபலிபுரத்தில் அந்தணர் குலத்தில் பிறப்பாள். ஜாதகனுடைய தாய் இப்பிறவியில் செய்த நற்செயல்கள் எவை என்று கூறுங்கள். தன் கணவன் மனம்போல வாழ்ந்து வந்து எல்லோருக்கும் நல்லவளாகவும், பெரியோர்கள் மீது பக்தியுடனும் இருந்து வந்ததால்;

தாய், தந்தையரின் இறுதிக்காலம்

19. உதிப்பளா மென்று சொல்வோம்
உதித்தவன் தனக்கு மேதான்
சதியிலா முப்பா னலில்
தாய்க்குமே கண்ட மென்றோம்
இதற்குமுன் னிருபா னறில்
ஏகுவான் தந்தை தானும்
அதிதியே யிவன்பின் ஜன்மம்
அறைகிறோங் கேட்டி டாயே.

19. அவ்விதம் பிறப்பாள் என்றோம். ஜாதகனுடைய முப்பத்து நான்காம் வயதில் தாய் மரணமடைவாள். அதற்கு முன்பே இருபத்தாறும் வயதில் தந்தை மரணமடைவான். தாயே! தந்தையினுடைய மறுபிறவியைக் கூறுகின்றோம். கேளுங்கள்.

தந்தையின் மறுபிறவியும், ஜாதகன் முற்பிறவியும்

20. பிருதிவி தலத்தி லேதான் பிறப்பனஞ் சௌராஷ்டிர [வம்சம்
பொருளது பெருக்க முண்டாய்ப் பூமியில் வாழ்வா னகும்
திருமகன் பூர்வ ஜன்மந் தில்லைமா நகரந் தன்னில்
மறவர்தங் குலமு தித்து மாநிலங் கிருஷி செய்து;

20. காஞ்சிபுரத்தில் சௌராஷ்டிர வமிசத்தவனுகப் பிறப்பான். செல்வத்தை அதிகமாகப் பெற்று உலகில் வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்ருேம். சிதம்பரத்தில் பறவர் குலத்தில் பிறந்து, உலகில் விவசாயம் செய்து வந்து;

21. காலன்தன் நாட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டு
ஞாலமே லுதிப்பா னுகும் நவிலுவோ மிவனின் யோகம்
பால்பாக்கிய முடைய னுகும் பாரது சேர்ப்பா னுகுஞ்
சீலமு முடைய னுகுஞ் சென்றிடம் பெருமை யேற்பன்.

21. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு உலகில் பிறப்பான். இனி ஜாதகனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்ருேம். பால் பாக்கியமுள்ளவன். விளைநிலங்களைச் சேர்ப் பான். நல்லொழுக்கமுடையவன். சென்ற விடங்களிலெல்லாம் பெரு மையை யடைவான்.

புதையல் கிட்டும் காலம்

22. ஈரேழு வாண்டு மேலா யெய்திடு நிதிநிட் சேபம்
வேரொரு வில்லஞ் செய்தல் வெற்றியாந் தொடுவ ழக்குச்
சீரிய குணமுங் கொஞ்சந் தேவதா பத்தி பூண்பன்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

22. ஜாதகனுடைய பதினுன்காம் வயதுக்கு மேல் புதையல் கிடைக்கும். வேறு புதிய வீட்டைக் கட்டுவான். வழக்குகளில் ஜயமடை வான். சிறிது கோபங் கொள்ளும் குணமுள்ளவன். தெய்வபக்தி யுடையவன். ஆறுமுகக்கட வுளைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

ஜாதகன் ஜனனகால தசை

23. முன்துணை மேலாய் வாழ்வன்
விளம்புவோம் பின்பால் சேதி
அன்னவன் ஜனன காலம்
ஆதிரை யிரண்டாம் பாதந்
துன்ராகு தசையி ருப்புச்
செப்புவோ மாண்டு வொன்பான்
மன்னிய திங்க ளொன்பான்
வரைகிறேம் பால னுக்கு.

23. ஜாதகன், தன்னுடைய மூத்த சகோதரனுக்கு மேலாக வாழ்ந்து வருவான். மற்ற விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லு கின்ருேம். ஜாதகனுடைய ஜனன காலத்தில் திருவாதிரை நட்சத்திரம் இரண்டாம் பாதமாம். ராகு மகாதசையிருப்பு ஒன்பது வருடங்களும் ஒன்பது மாதங்களுமாம் என்று குறிக்கின்ருேம்.

24. செலவுக ளதிக நேருஞ் ஜனித்திடுந் துணையின் விருத்தி
பலமுள வேறு செட்டுப் புக்கிடு மாட்கள் சேர்க்கை
குலவிடு மாது தானுங் கூறுவோம் பின்பால் சேதி
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன்
[றுவே.

24. அக்காலத்தில் செலவுகள் பெருகும். சகோதர விருத்தி ஏற்படும். பலமான வேறு வர்த்தகத்தை ஆரம்பிப்பான். பணியாட்களைச் சேர்ப்பான். மாற்றுந்தாய் வருவாள். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். மலையரசின் மகளே ! நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகம் 55

1. மதிதேளில் கேது மானில் மங்கலன் பானு வீணை
புதன்சனி ராகு நண்டில் புகர்சீயம் பொன்னேன்
[கோலில்
உதயமுஞ் சிம்ம மாக வுரைப்பீர்கள் பலனை யென்று
அதிபதி கேட்கும் போது வதிஷ்டருங் கூறு கின்றார்.

1. சந்திரன் விருச்சிகத்திலும், கேது மகரத்திலும், செவ்வாய் சூரியன் மிதுனத்திலும், புதன் சனி ராகு கடகத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும், குரு துலாத்திலும் இருந்து பிறந்த லக்கினம் சிம்மமானால் ஏற்படும் பலனெவ்வாறு என்று பார்வதிதேவி கேட்கும்போது வசிஷ்ட முனிவர் கூறுகின்றார்.

கிரகநிலை

<table>
<tr><td></td><td></td><td></td><td>செவ்வாய்
சூரியன்</td></tr>
<tr><td></td><td rowspan="2">இராசி
சக்கரம்</td><td></td><td>புதன்
சனி
ராகு</td></tr>
<tr><td>கேது</td><td></td><td>லக்கினம்
சுக்கிரன்</td></tr>
<tr><td></td><td>சந்திரன்</td><td>குரு</td><td></td></tr>
</table>

ஜாதகன் வீட்டுநிலை

2. இந்தசே யாணைஞ் ஜன்மம் இல்லமும் வடதென் வீதி
முந்துமேல் வாச லாகும் மூஷிகன் மேல்பால் தங்கும்
அந்தரி காளி யுத்திரம் அரன்கோஷ்டந் தென்மேல்
[தங்குந்
தென்திசை நதியு முண்டு திருமாலுங் கீழ்ப்பால் தங்கும்.

2. இந்த ஜாதகம் ஆண் மகனுடையது. இவன் பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியில் மேற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. மூஞ்சுறுவை வாகனமாகவுடைய விநாயகர் மேற்குப் பக்கத்தில் கோயில் கொண்டுள்ளார். மாரியம்மன் கோவிலும் காளி கோவிலும் வடக்குத் திக்கிலும் சிவபெருமான் ஆலயம் தென்மேற்கிலும் உள்ளன. தெற் குத்திக்கில் ஓர் ஆறு இருக்கும். கிழக்குப் பக்கத்தில் திருமாலின் ஆலயம் உள்ளது.

3. இன்னமும் பலதே வாசம்
இலகிய சமவூர் தன்னில்
கந்தன்தன் னடிமை வர்க்கங்
கலப்பனும் நான்காஞ் ஜன்மம்
தந்தைதாய்த் துணைவர் யோகந்
தன்மனை புத்திர யோகம்
வந்தவன் முன்பின் ஜன்ம
மறைகிறே மிந்நூல் தன்னில்.

3. இன்னும் பல தெய்வங்கள் வசித்து வரும் சமநிலையான ஊரில் சுப்பிரமணியக் கடவுளின் அடிமை வர்க்கமாகிய செங்குந்த மரபில் தன் தந்தைக்கு நான்காம் புதல்வனாக ஜாதகன் பிறந்தான். இவனுடைய தந்தை தாய் உடன்பிறந்தவர் மனைவி, மக்கள் முதலியவர்களின் யோகத்தையும் ஜாதகனுடைய முற்பிறவி மறுபிறவி ஆகிய வற்றையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றோம.

வேறு

பின்வரும் நான்கு பாடல்கள் ஜாதகனின் தந்தையின் குணங்களைக் கூறும்

4. தந்தைதுணை யீராறில் ஆண்பா லிரண்டு
சாற்றுகிறேம் பெண்மூன்று ஜனன காலம்
பிந்தியுமே சிலமாது சேத மெய்தும்
பெரிதான குடும்பியதாய்க் கூடி வாழ்வர்
அந்தவர்கள் சேதிபின்பால் அறிவிப் போம்யாம்
அறைகிறேம் பிதாகுணத்தை யிருநி றத்தான்
சிந்தையது கவடில்லா னீகை கொஞ்சஞ்
சீலத்தொழில் செய்திடுவன் தீர நெஞ்சன்.

4. ஜாதகனுடைய தந்தைக்கு உடன் பிறந்தவர் பன்னிருவர் ஆவர். அவர்களில் சகோதரர்கள் இருவரும் சகோதரிகள் மூவரும் நிலையானவர். மற்றும் தோன்றும் சில சகோதரிகள் இறந்துவிடுவர். மற்றவர்கள் ஒரே குடும்பமாக வாழ்ந்து வருவார்கள். அவர்களுடைய செய்திகளைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். இனி ஜாதகனுடைய தந்தையின் குணங்களைக் கூறுகின்றோம். அவன் கரியநிறமுடையவன். மனத்தில் கபடமில்லாதவன். சிறிது கொடுக்கும் குணமுள்ளவன். நெசவுத்தொழிலைச் செய்து வருவான். தைரியம் பொருந்திய மனமுடையவன்.

வேறு

5. பண்டுகாள் பூமி யில்லான் பெருகிடும் பூமிபின் னல்
குண்டைகோ விருத்தி யுண்டு குத்திர வார்த்தை கூறான்
தண்டமிழ் நுணுக்கந் தேரான் சாந்தவா னுகை சாலி
முண்டக ரேகை யுண்டு வுலகினில் நல்லோ னுவன்.

5. பிதுரார்ஜிதமான பூமிகளில்லாதவன். பிற்காலத்தில் நிலங்களைப் பெருக்குவான். பசு எருதுகள் முதலியன உள்ளவன். குதர்க்கமாகப் பேசாதவன். சிறந்த தமிழ் மொழியில் உள்ள நுணுக்கங்களைக் கற்காதவன். பொறுமையுடையவன் ஊகமுள்ளவன். கையில் தாமரை ரேகையுள்ளவன். உலகில் நல்லவனுக இருப்பவன்.

6. ஆபத்தைச் சிலர்க்குச் காப்பான்
அறுமுகன் பத்தி பூண்பான்
பாவத்தில் மனஞ்செல் லாதான்
பணியோர்கள் காலா வுள்ளான்
தீபம்போல் பந்துக் கட்கு
சித்திர வில்லஞ் செய்வன்
மேவுவான் தலவா சங்கள்
வீண்பழி யேற்கா னுகும்.

6. சிலருக்கு ஏற்பட்ட ஆபத்தை விலக்குவான். ஆறுமுகக் கடவுளிடம் பக்தியுடையவன். தீயசெயல்களில் மனம் செல்லாதவன். பணிவு ஏர் ஏவலாட்கள் முதலியன உள்ளவன். தன் சுற்றத்தாருக்கு உபகாரம் செய்பவன். குன்றின்மேல் விளக்குப்போல் உறவினர்களுள் விளங்குபவனுய் எல்லாருக்கும் உபகாரி. அழகிய வீட்டைக் கட்டுவான். புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். வீண் அபவாதத்தை அடையாதவன்.

7. போஜன சுகிய னுகும் பொய்யது வழுத்தா நெஞ்சம்
நேசங்க ளதிகஞ் செய்வன் நேரிழை தன்னுல் யோகந்
தூசுபோல் மனத்த னுகுந் தொல்லேயு மில்லா னுகுங்
காசுமே லாசை யுண்டு (வ) காவுகள் சோலே செய்வன்.

7. சௌக்கியமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். பொய் பேசாதவன். பலபேரிடம் நட்புக்கொள்பவன். மனைவியால் பெருமை அடைவான். தூய்மையான மனமுள்ளவன். துன்பங்களில்லாதவன். காசு பணங்களில் ஆசையுடையவன். (காவுகளைக் கொடுப்பவன்.) அழகிய சோலைகளை அமைப்பான்.

ஜாதகனின் சகோதரனின் குணங்கள்

8. சொல்லிய குணத்தா னுக்குச்
சுதனுமே வுதிப்ப னுகும்
வல்லவன் துணைவ ராண்பா
லறைகிறே மொருவன் தீர்க்கம்
நில்லாவே மற்ற வெல்லாம்
நிகழ்த்துவோ மவன்தன் சேதி
மல்லின்முன் செல்லா னுகு
மருமமில் லாதா னென்றேம்.

8. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடன் பிறந்த சகோதரன் ஒருவன் நீண்ட ஆயுள் உள்ளவன். மற்றும் தோன்றுபவர் நிலையார். சகோதரனுடைய செய்திகளைக் கூறுகின்றேம். சண்டைக்கு முன்னே செல்லாதவன். மனத்தில் மறைவில்லாதவன் என்று சொல்லுகிறும்.

9. சுயதொழில் செய்வா னுகுஞ் சுந்தர முடைய னென்றேம்
பயமுள மனத்த னுகும் பாரினில் வறுமை காணன்
நயமுள வார்த்தை சொல்வன் நாயகி யொன்றே தீர்க்கம்
தயையுள சுதரா ணிரண்டு சத்தியு மூன்று வென்றேம்.

9. தன்னுடைய குலத்தொழிலைச் செய்து வருவான். அழகுள்ளவன். பயந்த மனத்தன். உலகில் தரித்திர மடையாதவன். இனிமையாகப் பேசுபவன். மனைவி யொருத்தியே நீண்ட ஆயுள் உள்ளவள். இரு புத்திரர்களையும் மூன்று புத்திரிகளையும் பெறுவான்.

இதுவுமது

10. உடன்கூடி வாழ்வா னுகும் உத்தமன் வயது தீர்க்கம்
தடபுடல் செய்கை யுண்டு சண்முகன் பத்தி பூண்பன்
கடன்கொளா னிடுக்க ணில்லான் கனத்தபுத் திகளு
[மேற்பன்
படைதனில் செல்லா னுகும் பார்வதி கேட்டி டாயே.

10. ஜாதகனுடன் கூடிவாழ்ந்து வருவான். நீண்ட ஆயுள் உள்ளவன். ஆடம்பரச் செய்கையுள்ளவன். ஆறுமுகக்கடவுள்மீது பக்தியுடையவன். கடன் வாங்காதவன். துன்பங்களுமில்லாதவன். பெரிய புத்திசாலி. சண்டைக்கு முன்னே செல்லாதவன். பார்வதியே! கேளுங்கள்.

பின்வரும் மூன்று பாடல்களில் ஜாதகனின் குணங்கள் கூறப்படுகிறது

11. பாலகன் குணத்தைக் கேளாய்ப்
பஞ்சைபோ லுணச்சல் தேகி
சீலவான் சமமாங் கல்வி
தேரின புத்தி யுண்டு
காலத்தை யறிந்து ரைப்பன்
கட்டுவார்த் தைகளுஞ் சொல்வன்
வேல்விழி மார்கள் மோகன்
வெஞ்சின முடைய னுமே.

11. இனி ஜாதகனுடைய குணங்களைக் கேளுங்கள். ஏழையைப் போல் மெல்லிய சரீரமுடையவன். நல்லொழுக்க முடையவன். சமமான கல்வியறிவுள்ளவன். முதிர்ந்த அறிவாளி. காலத்துக்குத் தகுந்தபடி பொருத்தமாகப் பேசுபவன். சிறிது பொய்யும் பேசுபவன். வேலைப் போன்ற அழகிய விழிகளையுடைய பெண்கள்மீது மையல் கொள்ளு பவன். மிகுந்த கோபங்கொள்ளுபவன்.

12. தன்தொழில் புரிவா னுகுந்
தந்தையார் ஜிதங்கள் விருத்தி
அன்னிய ருறவு கொள்வன்
அணுகிடு மாமி யிரண்டு
உன்னத விழிகள் தன்னில்
ஊனமா மொன்று சொல்வோம்
பன்னியே பேச வல்லான்
பகையோரை நசிக்க வைப்பன்.

12. தன்னுடைய குடும்பத் தொழிலையே செய்து வருவான். தந் தையால் சம்பாதிக்கப்பட்ட பொருள்கள் இவன் காலத்தில் விருத்தி யாகும். பிறருடன் நட்புக்கொள்ளுபவன். இரு மனைவியரை அடை வான். உயர்ந்த கண் விழிகளுளொன்றில் பார்வைக்குறைவு உள்ள வன். பன்னிப் பன்னிப் பேசுபவன். விரோதிகளை அடியோடு அழிப் பவன்.

13. சல்லியங் கொள்ளா னுகும்
தமையன்சொல் லடுத்து வாழ்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான்
இருவித வார்த்தை சொல்வன்
நல்லவர் பலபே ராலே
நாட்டினில் புகழு மேற்பன்.
எல்லைகள் சேர்ப்பா னுகும்
எய்திடும் நாபிச் சூடு.

13. கடன் வாங்காதவன். தன் சகோதரனது வார்த்தையை மீறுமல் வாழ்ந்து வருவான். யாசித்தவர்கட்கு இல்லை யென்று கூறுது கொடுத்து உதவுபவன். இருவிதமாகப் பேசுபவன் நல்ல குண முடைய பல பெரியோர்களது உதவியினுல் நாட்டில் கீர்த்தியையடை வான். விரோ நிலங்களைப் பெருக்குவான். நாபிச் சூட்டு நோயுள்ளவன்.

ஜாதனின் திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

14. பாரியு மீரெண் ணைண்டுள் பரவிடு முள்ளூர் தன்னில்
நாரியின் குணத்தைச் சொல்வேன் நயம்பட வுரைப்பா [ளாகுங்
காரியச் சமர்த்த ளாகுங் கடந்தோர்க்கு வன்ன மீவள்
கூறுமுன் கோபி யாகுங் கோதைக்கு வன்னையி ரண்டு.

14. ஜாதகனுடைய பதினைரும் வயதில் திருமணம் நிகழும். மனைவி உள்ளூரிலிருந்தே வருவாள். இனி அவளுடைய குணங்களைக் கூறுகின்ரேம். நியாயமாகப் பேசுபவள். காரியங்களைச் சாமர்த்திய மாகச் செய்பவள். துறவிகட்கு அன்புடன் அன்னமளிப்பவள். ஒருவர் அவளிடம் வந்து பேசத் தொடங்குமுன் இன்னதென்று உணராமல் கோபமடைவாள். இரு தாய்மார்கள் உள்ளவள்.

இதுவுமது

15. வறுமைக ளடையா ளாவள்
மாதுநன் னடக்கை யுள்ளாள்
குறையென்ரோர்க் குதவி செய்வள்
வயதுமே தீர்க்க மாகும்
பராசருந் தடுத்துச் சொல்வார்
பெருகாது முதல்ம னைதான்
இருமனை யணுகு மென்ரேம்
எப்படிச் சொல்லு மென்ன ?

15. தரித்திரத்தை அடையாதவள். நன்னடத்தை யுள்ளவள். துன்பமடைந்தவர்கட்கு உபகாரம் செய்பவள். நீண்ட ஆயுள் உள்ள வள். பராசர முனிவர் மறுத்துச் சொல்லுகின்ரார். ஜாதகனுக்கு முதல் மனைவி நிலையில்லை. இரண்டாம் மனைவியொருத்தி திண்ண மாக வருவாள் என்ரார். என்ன காரணத்தால் அவ்விதம் ஏற்படும்? சொல்லுங்கள், என்று வினவு ;

இருதாரமேற்படுதற்குரிய கிரகநிலை

16. சத்தமஞ் சனியே யாகித் தனத்துளோன் பணியுங் கூடிக்
குத்தமா மீராறில் தங்கக் குலவிடஞ் சரமே யாக
இத்தகைப் பலத்தி னுலே யிருதார மென்று சொல்வோம்
வித்தகர் மறித்துச் சொல்வார் வெண்மதி நாலில் தங்க ;

16. ஏழாம் வீட்டுக்குரியவன் சனியேயாகி, அவனும் இரண்டாம் வீட்டிற்குரியவனுகிய புதனுடன் ராகுவும் சேர்ந்து விரய ஸ்தானத்தில் இருப்பதாலும் அவ்விடம் சர ராசியாக இருப்பதுமான பலத்தினுல் ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டு என்று சொன்னேம். மற்ற மூனிவரொருவர் தடுத்துச் சொல்லுகின்ருர். சந்திரன் நான்காமிடத்தில் இருப்பதாலும் ;

ஜாதகனுக்கு இருமனைவியர் இல்லை என்பதற்கு ஆதாரமாகக் கிரக நிலைகளைக்கொண்டு இப்பாடலில் விளக்குவார்

17. அதற்கேழோன் ஐன்மந் தங்க வணுகாது தார மிரண்டு
அதிபதி மனைவி வர்க்க மறைகிழோந் தார மிரண்டு
சதியிலாப் பால னுக்குச் சாற்றிணை வந்த வார்த்தை
இதற்குநேர் தந்தை வர்க்கம் எய்திடுந் தார மிரண்டு.

17. அவ்விடத்திற்கு, விருச்சிகத்துக்கு, ஏழாமிடமாகிய விருஷபத்திற்குரிய சுக்கிரன் லக்கினத்தில் இருப்பதாலும் இரு மனைவியர் ஏற்பட நியாயமில்லை. ஜாதகனுடைய மனைவியின் வர்க்கத்தினருக்கு இரு தாரம் ஏற்பட இடமிருக்கிறது. நீங்குகளில்லாத ஜாதகனுக்கு அவ்வண்ணம் கூறக் கிரகபல மில்லை. அல்லது தந்தையின் வர்க்கத்தினருக்கும் இரு மனைவியர் ஏற்படுவர்.

புதிரபாவம்

18. சுதர்களு மெழுவர் தோன்றுஞ் சோர்வுறுஞ் சிலவே [யென்றேஞ்
சதமுட னண்பால் மூன்று தையலு மிரண்டு வென்றேரும்
முதல்சுதர் தோஷ மெய்து முரைக்கின்றேரும் பால னுக்கு
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

18. ஜாதகனுக்கு ஏழு குழந்தைகள் தோன்றும். அவைகளில் சில நிலையாமல் இறந்துபோம். மூன்று புத்திரர்களும் இரு புத்திரிகளும் நிலையாயுள்ளனர். ஜாதகனுக்கு முதலில் தோன்றும் குழந்தை இறந்து விடும் என்றேரும். கதியற்றவரைக் காக்கும் தேவியே ! கேளுங்கள்.

இனி கீழ்வரும் 6 பாடல்களில் ஜாதகனுக்குப் புத்திரதோஷம் ஏற்படுவதற்கு முற்பிறவி வரலாறுகளிலிருந்து காரணங் கூறுவர்

19. ஜாதகன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோ மூத்துக்
[காட்டில்
கோதிலா வீன வம்சங் குதித்துமே நெசவு செய்து
மேதினில் மனைவி மைந்தர் விளங்கியே வாழு நாளில்
தீதாக வந்த வூழைச் செப்புவோந் தாயே கேளும்.

19. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். ஊத்துக் காட்டில் தீமைகளில்லாத தாழ்ந்த வம்சத்தில் பிறந்து நெசவுத் தொழிலைச்செய்து வந்து மனைவி மைந்தருடன் வாழ்ந்து வருங்காலத் தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். தாயே! சொல்லுகின்றோம்.

20. குறைதலை கோஷ்டந் தன்னில் குமரனுந் தீபம் பார்த்து
வருகிற காலந் தன்னில் மனத்தினில் கவடு கொண்டு
குறைத்தனன் தீபந் தன்னைக் கூறுவோ மின்னு
[மொன்று
நிறைமன மாக வாவின் நெய்தனை யொருவர் தந்து;

20. மாரியம்மன் கோவிலில் இந்த ஜாதகன் பூசைகள் புரிந்து வந்தான். அக்காலத்தில் தீப கைங்கர்யம் செய்யும்போது தீய எண் ணத்தை மனத்தில் கொண்டு தீபத்தைக் குறைத்து விட்டான். (எண்ணெயை மீதஞ் செய்து சொந்த உபயோகம் செய்தான்). இது தவிர வேறு ஒன்றும் கூறுகின்றோம். நிறைந்த மனத்துடன் ஒருவன் பசுவின் நெய்யை இவனிட்ந் தந்து;

21. சத்தியின் முன்பாய்த் தீபஞ் சாற்றுவா யென்று
[சொன்னர்
வித்தக னுவின் நெய்யை விளக்கது வைக்கா மல்தான்
சுத்தினன் இல்லத் திற்குச் சூழ்ந்தது வதுவோர் தோஷம்
பத்தினி பிராம ணப்பெண் பேரினில் பலமாய்க் குற்றம்;

21. மாரியம்மனின் முன்பாகத் தீபம் ஏற்று என்று சொன்னர். ஜாதகன் அந்த நெய்யை விளக்கு ஏற்றுமல் தன் வீட்டில் சொந்த உப யோகத்துக்கு வைத்துக்கொண்டான். அஃது ஒரு தோஷமாக ஏற் பட்டது. கற்புள்ளவளாகிய அந்தணர் குலப் பெண்மீது அபாண்ட மாகப் பழிகூ;

22. சொல்லினு னிந்தப் பாலன் தோகையும் வருத்த முற்றுப்
புல்குவான் மறுஜன் மத்தில் பெண்துணை தோஷ மாகும்
நில்லாது முதலில் புத்திரர் நுவன்றன ளந்த மாது
அல்லல்க ளந்திய யத்தில் அணுகியே மரண மாகி;

22. இந்த ஜாதகன் சொன்னன். கற்புள்ள ஸ்திரீ மனவருத்த முற்றுக் கூறுகின்றாள். உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உடன் பிறந்த சகோதரிக்குத் தோஷம் ஏற்பட்டும் முதலில் தோன்றும் புத்திரர் கட்குத் தோஷமுண்டாகும் என்று அந்தணப் பெண் சொன்னாள். ஜாதகன் தன் கடைசிக்காலத்தில் துன்பமடைந்து மரணமடைந்து ;

23. வந்தவ னிவனே யென்றே மறைமாது சாபந் தானுந்
தன்துணை பெண்பால் தோஷந் தங்கிடு மாரி குற்றம்
உன்னத விழிக்குக் குற்றம் உரைப்பீர்க ளெந்தக் காலம்
ஐந்தாண்டின் முதலே யாக அணுகிடும் பால னுக்கு.

23. இப்பிறவியில் பிறந்தவன் இந்த ஜாதகன் என்றேரும். அந்தணகுலப் பெண்ணிட்ட சரபத்தால் சகோதரிக்குத் தோஷம் உண்டாகும். மாரியம்மனுக்குச் செய்த தீங்குகளால் அழகிய விழிக ளுக்குக் குறை ஏற்படும். ஜாதகனுக்கு எந்தக் காலத்தில் அவ்விதம் ஏற்படும் என்று சொல்லுங்கள். ஜாதகனுடைய ஐந்தாம் வயது முதல் ஜாதகனுக்கு அவ்விதம் நேரும் ;

கண்பார்வைக்கு ஏற்பட்ட தீங்குகள் தீரச் சாந்தி செய்யும் விவரங்கள்

24. வினையது நிவர்த்தி செய்ய விளம்புவீர் சாந்தி தானுந்
தனையனு மவ்வூர் சென்று சத்திக்கு வபிடே கித்துக்
கனமுள மலர்க ளுத்தான் காதலி தனக்குச் சாத்தி
அனையவே தீப மொன்று அயத்தினுல் செய்து வைக்க ;

24. தீவினை நீங்க ஒரு சாந்தி கூறுங்கள், முனிவரே ! ஜாதகனும் அவ்வூர் (பிறந்த ஊருக்குச்) சென்று மாரியம்மனுக்கு அபிஷேகம் செய்து (கண்மலர்கள் செய்து அம்மனுக்குச்சாத்தி) நல்ல வாசனையுள்ள புஷ்பங்களை அம்மனுக்குச் சாத்தித் தூங்காவிளக்கு ஒன்று இரும்பால் செய்து வைத்தால் ;

சாந்தியில்லாத தீவினை. ஜாதகனின் தாயின் குணங்கள்

25. சோகியின் குற்றம் நீங்குந் தோகையின் சாபந் தீர்க்க
ஒதவே மாட்டோம் யாங்கள் உரைத்தது போலே நேரும்
மாதுரு குணத்தைத் சொல்வேன் மாஞ்சிவப் புடைய
[ளாகுங்
காதலி யில்லந் தெற்குக் கவடுமே கொஞ்ச முண்டு.

25, கண்பார்வையில் ஏற்பட்ட குற்றம் விலகும். அந்தணப்பெண் இட்ட சாபம் தீரச் சாந்தி யொன்றும் கூறமாட்டோம். அவள் சொல்லியது போலவே கட்டாயமாக ஏற்படும். இனி தாயின் குணத் தைச் சொல்லுகின்றோம். மாநிற முடையவள். அவளுடைய வீடு தெற்குப்பக்கத்திலுள்ளது. சிறிது வஞ்சகமுள்ள மனத்தினள்.

இதுவுமது

26. புத்திமான் பொறுமை சாலி புண்ணிய மனத்த ளாகுங்
குற்றமில் லாதா ளென்றேங் குணமது நல்ல தாகுஞ்
சுத்தமு முடைய ளாகுந் துணையாண்பா லொன்றே
[தீர்க்கம்
வித்தகி யவ்வா றுமே மேவிடும் பித்தச் சூடு.

26. புத்திசாலி. பொறுமையுடையவள். நல்லெண்ணம் பொருந்திய மனத்திலள் குற்றமில்லாதவள். நல்ல குண முடையவள். தூய்மை உள்ளவள். சகோதரன் ஒருவனே நீண்ட ஆயுள் உள்ளவன். சகோதரியும் ஒருத்தியே யுள்ளவள். பித்தச்சூட்டுச் சரீர முடையவள்.

தாயின் முற்பிறவி

27. மாதுரு பூர்வந் தன்னை யறைகிறே முனியே கேளும்
மேதினி லவ்வூர் கீழ்ப்பால் விளங்கினன் தீயின் வம்சங்
கோதைக்கு மதலை யுண்டாய்க் குவலயம் நல்லோ ளாகித்
தீதிலா வாழு நாளில் தும்பியின் கோஷ்டத் திற்கு ;

27. இனித் தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். முனிவரே ! அவ்வூருக்குக் கிழக்கில் உள்ள சிற்றூரில் வன்னிய குலத்தவளாகப் பிறந்து கணவன் புத்திரர்கள் இவர்களை யடைந்து உலகில் நல்லவளாக வாழ்ந்து வருங்காலத்தில், யானை முகத்தையுடைய விநாயகரின் ஆலயத்துக்கு ;

விநாயகரின் ஆலயத்துக்குத் தீபம் வைத்த புண்ணியம்

28. தீபமு மொன்று வைத்துத் தேவியுஞ் சுகமாய் வாழ்ந்து
பாவத்தில் மனம்வை யாமல் பரங்களுக் கன்ன மீந்து
தாவினள் கால நாடு சதுர்முகன் வரையப் பட்டுப்
பாவையு மிக்கு லத்தில் பரவினு ளென்று சொல்வோம்.

28. தீபம் ஒன்று வைத்து, சௌக்கியமாக வாழ்ந்து பாவச் செயல்களில் மனம் வைக்காமல் பரதேசிகட்கு அன்னமளித்து வந்து மரண மடைந்தாள். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தாள் என்று சொன்னேம்

29. முன்ஜன்மந் தீப புண்ணிய
மொழிகிறே மாண்பா லிரண்டு
தன்சுதர் விருத்தி யென்றேங்
தரணியில் வறுமை காணுன்

பின்ஜன்மந் தணிகை கீழ்ப்பால்
பிறப்பளா மிரட்டி வம்சம்
உன்னத வரஜனப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

29. முற்பிறவியில் விநாயகரின் ஆலயத்தில் தீப கைங்கர்யம் செய்து வந்த புண்ணியத்தால் ஜாதகனுடைய தாய்க்கு இரு புத்திரர்கள் தோன்றித் தீர்க்கமாவர். உலகில் வறுமையடையாதவள். என்றேரும். அடுத்த பிறவியில் திருத்தணிக்குக் கிழக்கில் ரெட்டியூர் மரபில் பிறந்து வாழ்வாள். உயர்ந்த யானைமுகத்தோனைப் பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

30. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் தக்கோல மூரின் [கீழ்ப்பால்
வந்தன னிரட்டி வம்ச மதிதிகட் கன்ன மீந்து
விந்தையாய்க் கிருஷி செய்து மேதினில் நல்லோ னாகி
அந்தகன் பக்கல் சென்று அயனுமே வரையப் பட்டு;

30. இனி ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். தக்கோலத்துக்கருகிலுள்ள ஊரில் கிழக்குத் திக்கில் ரெட்டியார் மரபில் பிறந்து, துறவிகட்கு அன்னமளித்து, அதிசயமாக விவசாயம் செய்து வந்து உலகில் நல்லவனாக வாழ்ந்து, மரண மடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு;

தந்தையின் மறுபிறவியும், மரணகாலமும்

31. பிறந்தன னென்று சொல்வேன்
பூமியில் வறுமை காணான்
மறுஜன்மம் வேங்க டத்துள்
வருவனும் பிரம்ம சேயாய்
அறைகிறேரும் கரும காலம்
அறஞ்சு வாண்டி லேதான்
திருமகன் தந்தை கண்டஞ்
ஐயமுனி தடுத்துச் சொல்வார்.

31. பிறந்தான் என்று சொல்லுகின்றேரும். பூமியில் தரித்திரத்தை அடையாதவன். மறுபிறவியில் திருமலையில் அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான். இனி ஜாதகனுடைய கரும காலங்களைக் கூறுகின்றேரும். ஜாதகனின் முப்பதாம் வயதில் தந்தை மரண மடைவார். ஐயமுனிவர் மறுத்துச் சொல்லுகின்றார்.

ஜயமுனிவரின் மறுப்பு

32. [1]அருணன்தன் தசைசக்கா லத்தில்
அசுரர்மந் திரிபு குத்தி
உறைந்திடும் பதினே ழாண்டில்
உரைக்கிறேங் கண்ட மொன்று
ஓதுங்கிடில் முப்ப தாண்டில்
மருவிடு மார கங்கள்
கேதுவில் சுயபு குத்தி
கூறுவோங் கரும மொன்று.

32. புத மகா தசையில், சுக்கிர புக்தியில், பதினேழாம் வயதில் தந்தைக்கு ஒரு பலமான கண்டம் ஏற்படும். அந்தக் கண்டம் விலகினால் முப்பதாம் வயதில் மரணம் ஏற்படும். கேது மகாதசையில கேது புக்தியில் திண்ணமாக ஒரு கருமம் ;

தாயின் மரணகாலம்

33. நேரிடு மென்று சொல்வோம் நிகழ்த்துவோ மன்னைக்
[கேதான்
ஆறாறு விரண்டு வாண்டில் ஆனிமா தத்தி லேதான்
நற்புகர் தசையி லேதான் நிகர்சுய புகுத்தி யாகும்
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

33. ஏற்படும் என்று சொல்லுகின்றேரும். அதற்குப்பின் முப்பத் தெட்டாம் வயதில் ஆனி மாதத்தில் ஜாதகனுடைய சுக்கிர மகா தசையில் சுக்கிர புக்தியில் தாய் மரணம் மடைவாள். உலகில் தவங்கள் இயற்றும் தேவியே ! பார்வதியே ! கேளுங்கள்.

ஜாதகன் மரணகாலமும், மறுபிறவியும்

34. அன்பது வெட்டு வாண்டில்
ஆனிமா தத்தி லேதான்
இன்னவ னுடல மேகும்
இயம்புவோ மிவன்பின் ஜன்மம்
அந்நகர் தன்னி லேதான்
அருளுவான் வைசியச் சேயாய்
உன்னத வரனைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

34. தனது ஐம்பத்தெட்டாம் வயதில் ஆனி மாதத்தில் ஜாதகன் மரணமடைவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். அவ்வூரிலேயே வைசிய குலத்தவளுக்குப் பிறப்பான். உயர்ந்த கணவனைப் பெற்ற உத்தமியே ! கேளுங்கள்.

---

1. புதன்

ஜாதகனின் யோகநிலை

35. பாலகன் குடும்பச் சேதி பகருவோ மினிமே லாகச்
சாலவே யிருப தாண்டில் தன்பிதா துணைவர் வேறாய்
ஞாலமேல் பாக மூன்று யெய்திடு மென்று சொன்னேம்
ஆலத்தை யுண்டோன் தேவி யறைந்தயிம்
[மொழிகுன் றுவே.

35. இனி ஜாதகனுடைய பொது யோகங்களைக் கூறுகின்றோம். அவனுடைய இருபதாம் வயதில் தந்தையின் உடன்பிறந்தவர் தனியாகச் செல்லுவர். உலகில் அவர்களுடைய பாகம் மூன்றாகப் பிரியும். விஷத்தை யுண்ட நீலகண்டனின் தேவியே! நாங்கள் கூறிய அருள் வாக்கியங்கள் பொய்யாகா;

இதுவுமது

36. இன்னமும் யோகஞ் சொல்வேன்
ஈன்றநாள் முதலே யாக
அன்னவன் மரண மட்டும்
அம்புலி போலே யோகந்
தந்தைமேல் வாழ்வா னாகுந்
தனம்பூமி யதிகஞ் சேர்ப்பன்
முன்துணை நாற்ப தாண்டில்
வேறுவ னென்று சொல்வோம்.

36. இன்னும் ஏற்படும் யோகத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகன் பிறந்தநாள் முதல் அவனுடைய மரணகாலம் வரையில் வளர் பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். தன் தந்தைக்குமேல் யோகவானாக வாழ்ந்து வருவான். செல்வம் பூமி இவைகளைப் பெருக்குவான். முன்பிறந்த சகோதரன் நாற்பதாம் வயதில் வேறாகச் செல்லுவான்.

யோக மேற்படுதற்குரிய கிரகநிலை: சாமரை யோகம்

37. ஜாதகன் யோக மெவ்வாறு சாற்றினீர் விவரஞ் சொல்வீர்
ஆதவன் சேயுமி லாபம் அசுரனுஞ் ஜன்மந் தங்க
மாதவன் ஜன்மம் பார்க்க வறைந்தனஞ் சாமரை
[யோகம்
மேதினில் புகழு மேற்பன் வித்தகி கேட்டி டாயே

37. ஜாதகனுக்கு யோகம் ஏற்படும் என்று எச் கூறினீர்கள்? விவரமாகச் சொல்லுங்கள். சூரியனுஞ் செ ஸ்தானமாகிய மிதுனத்திலும், சுக்கிரன் லக்கினத்தி லக்கினத்தைப் பார்ப்பதாலும் சாமரை யோகம்

என்று சொல்லுகின்றோம். உலகில் கீர்த்தியடைவான். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் ஜனனகாலதசை விவரம்

38. அன்னவன் ஜனன காலம்
அனுடத்தி லிரண்டாம் பாதந்
துன்சனி யீரா றுண்டுந்
திங்களுந் தசமே யாகும்
முன்பாகம் புகன்றோம் யாங்கள்
மொழிகிறோம் பின்பால் சேதி
உன்னத வரனைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

38. ஜாதகனது ஜனன காலத்தில் அனுட நட்சத்திரத்தில் இரண்டாம் பாதம் நடைபெறும். அக்காலத்தில் சனி மகாதசையில் இருப்பு பன்னிரண்டு வருடங்களும் பத்து மாதங்களும் ஆகும். இது வரை முதல் பாகத்தைச் சொன்னோம். நாங்கள் மற்றவற்றைப் பிற் பாகத்தில் கூறுகின்றோம். உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜாதகம் 56

1. அரியது ஜனன மாக ஆரலு மதிலே தங்கப்
பரிதிமால் காரி பொன்னேன் பற்றிடங் கன்னி யாகப்
பிறைகேது நந்தி யாகப் புகர்பணி தேள தாக
உரையுமே பலனே யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

1. சிம்மம் லக்கினமாகவும், செவ்வாய் லக்கினத்திலும், சூரியன் புதன் சனி குரு கன்னியிலும், சந்திரன் கேது விருஷபத்திலும், சுக்கிரன் ராகு விருச்சிகத்திலும் இருந்தால் பலனைச் சொல்லுங்கள் என்று உத்தமியாகிய பார்வதி தேவி கேட்கும்போது ;

கிரகநிலை

		சந்திரன் கேது	
	இராசி சக்கரம்		
			லக்கினம் செவ்வாய்
	சுக்கிரன் ராகு		சூரியன் புதன் சனி குரு

ஜாதகன் பிறந்தவீட்டின் அடையாளங்கள்

2. அத்திரி சொல்லு கின்றார் ஆணது ஜனன மாகும்
வித்தக னுதித்த வில்லம் வடக்குத்தென் வீதி யாகுங்
குத்தமாங் கீழ்ப்பால் வாசல் கோதண்ட பாணி மேற்கில்
அத்தியு மீசன் மாயோன் அணுகிடுந் தென்மேல் திக்கில்.

2. அத்திரி முனிவர் கூறுகின்றார். இஃது ஆண்மகனின் ஜாதகம். ஜாதகன் பிறந்த வீடு தெற்கு வடக்கான தெருவில் கிழக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. கோதண்டத்தைக் கையில் உடைய ஸ்ரீராமபிரான் கோயில் மேற்குத் திக்கிலும், தென்மேற்குத் திக்கில், விநாயகர், சிவபெருமான், திருமால் முதலியவர்களும் கோயில் கொண்டுள்ளனர்.

3. சிங்கவா கனத்தாள் தென்பால் சிறப்புள நதியு மே[illegible]ன.
தங்கிடுஞ் சிறுவூர் தன்னில் ஜனிப்பனும் வடுகர் [illegible]மன்
அங்கவன் மூன்றுஞ் ஐன்மம் அருளுவோ மிந்

3. சிங்கத்தை வாகனமாகவுடைய காளி கோவில் தெற்குப் பக்கத்திலும் பெயர் பெற்ற ஆறு ஒன்று மேற்கிலுமுள்ள ஒரு சிற் றூரில் ஜாதகன் வன்னியர் குலத்தவனுகப் பிறந்தவன். அவன் தன் தந்தைக்கு மூன்றுவது புத்திரனுகப் பிறந்தான் என்றேரும். அவனு டைய குடும்பச் செய்திகளை இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேரும்.

தந்தையின் குணங்கள்

4. தந்தையின் தூணயா ணென்று
சாற்றுவோ மத்தில் சேதந்
தந்தையின் குணத்தைச் சொல்வேன்
தரணியை விருத்தி செய்வன்
தந்தமுங் குறைவ தாகுந்
தரணியில் வறுமை காணன்
தன்பந்து மதிக்க வாழ்வன்
தனதான்யஞ் செட்டுச் செய்வன்.

4. ஜாதகனுடைய தந்தையோடு பிறந்த சகோதரன் ஒரு வனே. அவனும் இடைக்காலத்தில் இறந்து விடுவான். இனி, தந்தையின் குணத்தைக் கூறுகின்றேரும். விளைநிலங்களைப் பெருக்கு வான். பற்கள் தேய்ந்துபோம். உலகில் தரித்திரமடையாதவன். தன் சுற்றத்தார் மதிக்கும்படி வாழ்வான். பணங் கொடுக்கல் வாங்க லும் தான்ய வியாபாரமும் செய்து வருவான்.

இதுமது

5. தன்மனங் கவடு மில்லான் சதுஷ்பாதம் விருத்தி லாபம்
நிந்தைக ளேற்கா னுகும் நினைத்தது முடிக்க வல்லன்
முந்திமால் பத்தி கொள்வன் முனிவுண்டு வெளிக்காட்
[டாதான்
சந்தத மாஞ்சி வப்பன் சோலைகள் செய்வா னுமே.

5. மனத்தில் கபடமில்லாதவன். கால்நடைகள் பெருகும். வீண் பழி அவமானங்கள் இவற்றை அடையாதவன். எண்ணிய காரியங் களைச் செய்து முடிக்கவல்லவன். திருமாலின்மீது பக்தியுள்ளவன். முன்கோப முடையவன். ஆனல் வெளியில் தெரியும்படி நடந்து கொள் ளாதவன். சிவந்த நிறமுடையவன். பல சோலைகளை ஏற்படுத்துவான்.

இதுவுமது

கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன்
கருதிடான் கட்டு வார்த்தை
பின்முன் செல்லா னுகும்

தொடையினில் வடுவு முண்டு
சீலவா னென்று சொல்வேன்
தடைசொல்லான் பெரியோ ருக்குச்
சங்கரி கேட்டி டாயே.

6. கடன் வாங்குவான். அதைத் தீர்த்து விடுவான். வார்த்தை களைப் புனைந்து பேசாதவன். பொய்யைப் பேச எண்ணமில்லாதவன். வீண்சண்டைக்கு முன்னே செல்லாதவன். தன் சுற்றத்தாருக்குப் பிரியமானவன். தொடையில் ஒரு வடு உள்ளவன். நல்லொழுக்க முள்ளவன் என்று சொல்லுகின்றேம். பெரியோர் வார்த்தைகட்குத் தடை சொல்லாதவன். பார்வதிதேவியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

7. ஆதியில் வறுமை கொஞ்சம் அலைச்சலாய் வாழ்வா னுகும்
ஓதுவே னிவன்முன் ஜன்மம் ஓதூரு தலத்தி லேதான்
சூதான வைசியச் சேயாய் ஜனித்துமே செட்டுச் செய்து
காதலி மதலை யுண்டாய்க் காவலன் வாழு நாளில்;

7. ஆதிகாலத்தில் சிறிது தரித்திரமுள்ளவன். துன்பமுற்ற வாழ்க்கையை நடத்துவான். இவனுடைய முற்பிறவியைச் சொல்லு கின்றேம் ஓதூர் என்ற தலத்தில் வைசிய குலத்தவனுகப் பிறந்து வர்த்தகம் புரிந்து வாழ்ந்து மனைவி மக்களையடைந்து வாழ்ந்து வருங் காலத்தில்;

அந்தணப்பெண்ணிட்ட சாபம்

8. வந்ததோர் வினையைக் கேண்மோ
மறைமாது தன்மேல் மாரன்
நிந்தையாய் வார்த்தை சொல்ல
நிமலியு மனங்க லங்கி
அந்தவள் சாபஞ் சொல்வாள்
அடாநிந்தை சொன்ன பாவி
பிந்திய ஜன்மந் தன்னில்
பற்களுங் குறைவ தாயும்;

8. ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். அந்தணர் குலத்தின. பெண் ஒருத்திமீது ஜாதகனுடைய தந்தை பழிச்சொற்களைக் கூறின ன். அந்தணப்பெண் மனம் வருந்திச் சாபமிட்டாள். எ அபாண்டமான பழியைச் சுமத்தினாய். உனக்கு ஏற்படும்

ஏழைகளின் கணக்கில் மோசக்கருத்துடன் தவறு செய்தல்

9. தன்துணை தோஷ மாயுந்
தனியாக வாழ்வா யென்று
மூன்குல மாது சொல்ல
மேவிற்றுப் பால னுக்கு
இன்னும்வே றொன்று சொல்வேன்
ஏழைக்குப் பொருளீ யீந்து
சந்ததங் கணக்கில் மோசஞ்
செய்தன னென்று சொல்வோம்.

9. உடன்பிறந்தவருக்குத் தோஷமேற்பட்டுத் தனியளாக வாழ்ந்து வருவாய் என்று அவ்வந்தணர் குலத்துப்பெண் கூறினள். அந்தச் சாபம் இவனுக்கு ஏற்பட்டது. இதுதவிர, வேறு ஒன்றும் கூறுகின்றேரும். ஏழைகள் சிலருக்குச் சிறிது பொருளைக் கொடுத்துக் கணக்கில் அதிகமாக எழுதி அவர்களை மோசம் செய்தான் என்றேரும்.

ஏழைகளின் சாபம்

10. பஞ்சையு மனவெ றுப்பால்
பகருவார் சாபந் தானுங்
கொஞ்சமாய்ப் பொருளீ யீந்து
குறைத்திட்டீர் கணக்கில் மோசம்
மிஞ்சிய ஜன்மந் தன்னில்
விளங்காரே துணைவர் தாமும்
நஞ்சுபோல் தந்தந் தாழ்ந்து
நாட்டினில் வாழ்வா யென்று ;

10. பரம ஏழைகளான அவர்கள் மன வருத்தமடைந்து சாப மிடுகின்றனர். சிறிதளவே பொருளைக் கொடுத்து கணக்கில் அதிக மாக எழுதி மோசம் செய்தீர். அடுத்த பிறவியில் உமக்குச் சகோதரர் விளங்கமாட்டார். கொடிய விஷம்போல் பற்களும் விழுந்து உலகில் வாழ்ந்து வருவீர் என்றனர் ;

11. இன்னமுஞ் சிலவே தோஷம்
எய்திற்றுப் பால னுக்குத்
அ துன்னிய கால நாடு
ம் சேர்ந்துமே பிரம னிலக்கம்
ன்னவ னுதிப்பா னுகும்
அடைந்தது முன்னூழ்ச் சாபஞ்
ன்னவிக் குணத்தா னுக்குச்

11. இன்னுஞ் சில தோஷங்கள் ஜாதகனுடைய தந்தைக்கு ஏற் பட்டன. இவன் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட் டுப் பிறந்தான். முற்பிறவித் தோஷம் தொடர்ந்தது இவ்விதம் கூறப் பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறந்தவன் என்றேும்.

கீழ் வரும் ஐந்து பாடல்களில் ஜாதகனின் குணங்களைக் கூறுவார்

12. பாலகன் நிறங்கு ணத்தைப் பகருவோஞ் சிவந்த மேனி
மால்பத்தி கொள்வா னாகும் வருவோரை யாத ரிப்பன்
காலத்தை யறிந்து வாழ்வன் கண்முகம் வசிய முண்டு
பால்பாக்கிய முடைய னாகும் பசித்தோருக் கன்ன மீவன்.

12. ஜாதகனுடைய நிறம் குணம் இவைகளைச் சொல்லுகிறேும். சிவந்த உடலுள்ளவன். திருமாலின்மீது பக்தியுள்ளவன். தன்னை யண்டிவந்தவரை ஆதரிப்பான். வருங்காலத்தை அறிந்து அதற் கொப்ப வாழ்ந்து வருவான். முகம் கண்கள் இவை வசீகரமாக விருக்கும். முற்பிறவியில் செய்த புண்ணியத்தால் பால் பாக்கிய முடையவன். பசித்தவர்கட்கு அன்புடன் அன்ன மளிப்பவன்.

13. போஜன வறுமை காணன் புண்ணிய மனத்த னாகுங்
காசுகள் சேர்ப்பா னாகுங் காலாட்க ளுடைய னாகும்
பேச்சினில் சோரா னாகுங் பேதைமார் மோக னவன்
கூசியே வார்த்தை கூர்வன் குஞ்சர நடையு மாவன்.

13. சாப்பாட்டுக்குத் தரித்திரமில்லாதவன். நல்லெண்ணம் பொருந்திய மனத்தினன். காசுகளைச் சேர்ப்பவன். ஏவலாட்களை உடையவன். வாதாடிப் பேசுவதில் சோர்வை அடையாதவன். பெண்கள் மீது மையல் கொள்ளுபவன். (ஆனால் அவர்களிடம்) பேசுவதற்குக் கூச்சமுள்ளவன். யானையைப் போன்ற கம்பீரமான நடையுள்ளவன்.

14. இன்னவன் கரத்தி லேதான்
இலகிடு முருத்திர ரேகை
சொன்னதைக் காப்பா னாகுந்
தொடுவழக் கதனில் வெல்வன்
அன்னியர் மதிக்க வாழ்வன்
அவனியை விருத்தி செய்வன்
மன்னர்க்கு விவன்சொல் மேன்மை
மருவிடும் பித்தச் சூடு.

14. இவனுடைய கையில் உருத்திர ரேகையுண்டு. வார்த்தைகளைக் காப்பவன். எடுத்த காரியத்தை வெற்றியுட

வருவான். விசே நிலங்களைப் பெருக்குவான். அரசாங்கத்தாருக்கு இவன் வார்த்தைகள் உயர்ந்தவையாம். பித்தச்சூட்டு நோயுள்ளவன்.

15. வித்தையு முடைய னுகும் விசேபுலம் விருத்தி செய்வன்
புத்தியில் பெரியோ னுவன் புகழ்ந்தோரை யாத ரிப்பன்
பத்தினிக் கன்ப னுகும் பலவித வணிபஞ் செய்வன்
சுத்தத்தார் மதிக்க வாழ்வன் சோம்பிடான் காரி யத்தில்

15. கல்வி யறிவுமுள்ளவன். விசேநிலங்களைப் பெருக்குவான். புத்திசாலி. பெரியோர்களைப் போல் மேதாவியாக இருப்பான். தோத்திரம் செய்தவரை ஆதரிப்பவன். மனைவிக்குப் பிரியமானவன். பல விதமான வர்த்தகம் புரிந்துவருவான். தன் பந்து ஜனங்கள் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவன்.

16. கடன்கொளா னிடுக்க மில்லான் காரிய மறிந்து செய்வன்
உடன்படான் பிழைக ளுக்கு உபாயங்க ளதற்குச் [செய்வன்
விடவாக்கு வுடைய னுகும் வீண்வம்பு புகலா னுகுந்
தடவரை மகளே யாங்கள் சாற்றின மொழிகுன் றுவே.

16. கடன் வாங்காதவன். துன்பமில்லாதவன். தான் செய்யும் காரியங்களின் பலாபலன்களை அறிந்து செய்பவன். தவறான காரியங்களைச் செய்ய மனம் ஒப்பாதவன். அத்தவறுகளை விலக்குவதற்கு உபாயங்களைச் செய்வான். பேச்சில் கொடுமையுள்ளவன். வீண் வம்பு பேசாதவன். மலையரசனின் புதல்வியே! நாகள் கூறியவை தவறு.

ஜாதகனின் சகோதரபாவமும் மூத்த சகோதரியின் வரலாறும்

17. தன்துணை யாண்பால் காணன்
தையல ரிருவர் தீர்க்கம்
முன்துணை யாகச் சொல்வோ
மொழிகிறே முன்னுள் சேதி
உன்னத வார்த்தை சொல்வள்
உயர்வான புத்தி யேற்பள்
சொன்னசொல் காப்பா ளாகுஞ்
சிவந்தமெய் யுணைச்சல் தேகி.

17. உடன் பிறந்த சகோதரரில்லாதவன். இரு சகோதரிகள் துணை உண்ட ஆயுள்ளவர் என்றும். அவர்களும் ஜாதகனுக்கு உள்ளவர்கள் என்றும். மூத்த சகோதரியைப்பற்றிச் சொல்லு உயர்ந்த வார்த்தைகளையே பேசுபவள். மேலான புத்தியை சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவள். சிவந்த உட

மூத்த சகோதரியின் குணங்களும் புத்திரபாவமும்

18. மாந்தளிர் மேனி யாவள் வளமுள குடும்ப மேற்பள்
சாந்தவாள் யோக சாலி தன்வரன் தென்பா லாகுங்
கூர்ந்துமே வார்த்தை சொல்வள் குழவிக ளாண்பா
[லிரண்டு
ஏந்திழை மார்க ளவ்வா றியம்புவோம் வறுமை காணுள்

18. மாந்தளிரைப்போன்ற மேன்மையான சரீர முடையவள். செழிப்புள்ள குடும்பத்தை அடைவாள். பொறுமையையுடையவள். அதிஷ்டமுள்ளவள் இவளுக்குத் தெற்குத்திசையிலிருந்து கணவன் வருவான். ஆராய்ந்து பார்த்துப் பேசுபவள். இரு புத்திரர்களையும் இரு புத்திரிகளையும் பெற்றவள். தரித்திரமடையாதவள்.

ஜாதகனின் இளைய சகோதரியின் செய்தி

19. தீர்க்கமாம் வயது மூண்டு செப்புவோ மவள்பின் சேதி
நாக்கினி லினிமை யுண்டு நாயகி சிவந்த மேனி
ஆர்க்கவே தந்திர வார்த்தை யன்பான மனத்த ளாகும்
நாக்கது சுத்த மூண்டு நம்புவோர்க் கன்ன மீவன்.

19. நீண்ட ஆயுள் உள்ளவள். (அவளுடைய செய்திகளைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம்.) பின் பிறந்த சகோதரியைப் பற்றிச் சொல்லுகின்றோம். இனிமையாகப் பேசுபவள். சிவந்தநிறமுள்ள மேனியள். தந்திரமாகவும் பேசுபவள். அன்புள்ள மனத்தினள். பொய் பேசாதவள். தன்னை நம்பி வந்தவர்கட்கு அன்னமளிப்பவள்.

இதுவுமது

20. வரனுமே மேல்பால் நேரு மருவிடும் பித்தச் சூடு
கரமதில் கமல ரேகை கழறுவோம் புத்திர பாவந்
திருமக ளெப்ப தான செல்வனு மொன்றே தீர்க்கம்
அரிவைமார் மூன்று வென்றோம் அம்பிகை யாளே
[கேளாய்

20. அவளுக்கு மேற்குப் பக்கத்திலிருந்து கணவன் வருவான். பித்தச்சூட்டு நோயுள்ளவள். கையில் பத்மரேகையுள்ளவள். அவளது புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். மன்மதனைப்போன்ற அழகிய புத்திரன் ஒருவனே நீண்ட ஆயுள் உள்ளவன் என்றோம். மூன்று புத்திரிகள் பிறப்பார்கள் என்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய திருமணக்காலமும் மனைவியின் இயல்புகளும்

21. ஜாதகன் மணத்தின் காலஞ்
சாற்றுவோம் பதினு ருண்டில்
காதலி மேற்குத் திக்கில்

ஓதுவே னவள்கு ணத்தை
உவமையாய் வார்த்தை சொல்வள்
தீங்குக ளொருவர்க் கெண்ணுள்
சீலியா மென்று சொல்வோம்.

21. ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய பதினாறும் வயதில் மேற்குப்பக்கத்திலிருந்து மனைவி வருவாள். தன் தாயின் வர்க்கத்திலிருந்தே வருவாள் என்றோம். அவளது இயல்புகளைக் கூறுகின்றோம். அவள் உபமானங்களுடன் பேசுபவள். ஒருவருக்குந் தீங்குகளைச் செய்ய மனத்தாலும் நினையாள். நல்லொழுக்க முடையவள் என்றோம்.

இதுவுமது

22. தோகைபோல் சாய லொக்குந் தோழன்தன் மனம்போல் [வாழ்வள்
நாகரீ கங்க ளுள்ளாள் நல்லோர்க்கு நல்லோ ளாவள்
வேகமாய் நடக்க வல்லாள் வீணப வாத மேற்காள்
ஆகம முணர்ந்தோ ருக்கு அன்னமு மன்பா யீவள்.

22. மயிலைப் போன்ற அழகையுடையவள். தன் கணவன் மனத்திற்கொப்ப வாழ்ந்து வருவாள். நாகரிகங்களுடன் வாழ்ந்து வருவாள் நல்லவர்கட்கு நல்லவளாவள். வேகமாய் நடக்கக் கூடியவள். வீண் பழியை அடையாதவள். வேத முணர்ந்த அந்தணர் கட்கு அன்புடன் அன்ன மளிப்பவள்.

புத்திரபாவம்

23. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் நவமே தோன்றுஞ்
சுத்தமா யாண்பா லிரண்டு செல்விமார் நால்வர் தீர்க்கஞ்
செத்திடு மூன்று வென்றேஞ் செப்புவீ ரந்தச் சங்கை
குற்றமா முதலு மூன்றுங் குலவாவே யெட்டுந் தாமே.

23. ஜாதகனுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். ஒன்பது குழந்தைகள் தோன்றும். அவைகளில் இரு புத்திரர்களும் நான்கு புத்திரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். எந்தக் குழந்தை இறந்துவிடும் என்று சொல்லுங்கள். ஜாதகனின் மூத்த குழந்தையும் மூன்றுவதும் எட்டாவதுமாகிய மூன்று குழந்தைகளும் [illegible]யா.

[illegible]திர தோஷம் ஏற்படுதற்குரிய கிரகநிலையும் ஜாதகனின் முற்பிறவியும்

[illegible]ஆரணம் யாது வென்னக் காரியும் பானு மைந்தில்
[illegible]யிருப்ப தாலே செப்பினே மந்தச் சங்கை
[illegible]வா மிவன்தன் பூர்வங் குற்றல காட்டி லேதான்

24. அவ்விதம் ஏற்படுவதற்குரிய காரணம் என்னவென்று சொல்லுங்கள். சனியும் சூரியனும் புத்திர ஸ்தானத்தில் இருப்பதால் அவ்விதம் சொன்னேம். இனி ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். குற்றாலத்தில் பெரியதொரு வைசிய குலத் தனவானுக்கு மைந்தனாகப் பிறந்தான்.

ஜாதகனின் முற்பிறவி வரலாறு

25. பாரியு மதலை யுண்டாய்ப் பலவிதச் செட்டுச் செய்து
மாரனு வாழ்ந்து மேதா னறமதி லிச்சை யின்றிக்
காரியச் சமர்த்த னாகிக் காலன்தன் பதிக்குப் புக்கு
ஆரியன் வரையப் பட்டு அணுகினு னிவனே யென்றோம்.

25. மனைவி மக்களை யடைந்து பலவிதமான வர்த்தகம் புரிந்து வாழ்ந்து வந்தான். தருமம் செய்வதில் விருப்பமின்றிக் காரியங்களைச் செய்வதில் சமர்த்தனாக இருந்து, மரண மடைந்து, மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான் என்றோம்.

ஜாதகனின் யோக விவரம்

26. வந்தவன் யோகச் சேதி யறைகுறு மினிமே லாகத்
தந்தைக்கு மேலாய் வாழ்வன் தன்பந்தை யாத ரிப்பன்
வந்தவர்க் கன்ன மீவன் மாநிலஞ் சல்லியங் கொள்ளான்
விந்தையாய்ப் பூமி சேர்ப்பன் விதவிதச் செட்டுச் செய்வன்

26. இனி ஜாதகனுடைய யோகச் செய்திகளைக் கூறுகின்றோம். தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். சுற்றத்தாரை ஆதரித்து வருவான். அண்டி வந்தவர்கட்கு அன்ன மளிப்பவன். உலகில் கடன் படாதவன். பூமியை அதிகமாக வாங்கிப் பெருக்குவான். விதவிதமான வர்த்தகம் புரிந்து வருவான்.

இதுவுமது

27. இரசவர்க்க செட்டு வாலே இலாபமும் மதிகம் நேரும்
அசைவிலாக் குடும்ப மேற்பன் அரசர்பூ சிதமு மேற்பன்
கசிவுள மனத்த னாகுங் கன்றுகா லிகளும் விருத்தித்
திசையெலாம் புகழு மேற்பன் தேவியே கேட்டி டாய்

27. ரஸவர்க்க (எண்ணெய் வாசனைத் தைலங்கள்) வியாபாரத்தால் லாபம் அதிகமாகக் கிடைக்கும். திடமபத்தை அடைவான். அரசாங்கத்தாரால் நன்கு மதிக்கப்பட்டு இரக்கமுள்ள மனத்தினன். கால்நடைகள் பெருகும். எல்லாவிலும் கீர்த்தியை அடைவான். தாயே! கேளும்

இதுவுமது

28. வண்டிவா கனமு மேற்பன் வளவுமே வேறு செய்வன்
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்
அண்டினோர் தம்மைக் காப்பன் ஆவுக ளேர்ப்பெ ருக்கங்
கண்டித முரையா னுகுங் கடந்தோர்க்கு வன்ன மீவன்.

28. வண்டி முதலிய வாகன வசதிகளை அடைவான். வேறு வீட்டைக் கட்டுவான். வெகு காலமாக விருந்த விளை நிலங்களைப் பெருக்குவான். தன்னை யண்டிவந்தவரைக் காப்பவன். பசு ஏர்க்ளின் பெருக்க முடையவன். கண்டிப்பாகப் பேசாதவன். துறவிகட்கு அமுது படைப்பவன்.

தாயின் குணங்கள்

29. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அன்புள மனத்த
[ளாகுந்
தன்னுடல் மெலிவு நீட்சி சந்ததங் கோப மூண்டு
பன்னியே பேச வல்லாள் பதர்செல்லாள் பித்த தேகி
பின்னமில் லாத தேகி போசன வறுமை காணுள்.

29. ஜாதகனின் தாயின் குணங்களைக் கூறுகின்றோம். அன்புள்ள மனத்தினள். மெலிந்த சரீரமுடையவள். உயரமானவள். எப்பொழுதும் கோபங்கொள்ளும் இயல்பினள். பன்னிப் பன்னிப் பேசுபவள். அற்ப காரியங்களில் மனம் செல்லாதவள். பித்த சரீர முடையவள். ஊனமில்லாத சரீரி. சாப்பாட்டுக்குத் தரித்திரமில்லாதவள்.

இதுவுமது

30. வந்தபின் யோகம் வாய்க்கும் வளவுமே மேற்கு
[வென்றோந்
தன்துணை யாண்பா லொன்று தையலா ரறுவ ரென்றோம்
அந்தமோர் மாமன் தானும் அலைச்சலாங் குடும்ப
[மென்றோம்
பிந்தின பாகந் தன்னில் பேசுவோ மவன்கு ணத்தை.

இந்த ஜாதகனின் தாயை) மணந்தபின் கணவனுக்கு (ஜாதகத்துக்கு) யோகம் விருத்தியாம். இவளுக்குப் பிறந்தவீடு நடுத்திலுள்ளது. தாய்க்குச் சகோதரன் ஒருவன் என்றும் பி அறுவர் என்றும் சொல்லுகின்றோம். அந்தத் தாய் சுற்ற குடும்பத்தை யுடையவன் என்கிறோம். பிற்பாகத்

ஜாதகம் 63

1. அரியது வுதய மாக அலரியின் மகனுஞ் ஜன்மம்
பிறை ரண்டில் கேது நாலில் பொன்னேழில்
[பணியும் பத்தில்
பரிதியும் புகரும் லாபம் பார்மகன் புதனீ ராறில்
மருவினுல் பலனெவ் வாறு வறைவீரே முனியேஃதீர்தாம்.

1. சிம்மம் இலக்கினமாகவும், சூரியனுடைய புதல்வனுகிய சனி லக்கினத்திலும், சந்திரன் இரண்டாமிடமாகிய கன்னியிலும், கேது நான்காமிடமாகிய விருச்சிகத்திலும், குரு ஏழாமிடமாகிய கும்பத்திலும், ராகு பத்தாமிடமாகிய விருஷபத்திலும், சூரியன் சுக்கிரன் லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், செவ்வாய் புதன் பனிரண்டாமிடமாகிய கடகத்திலும் இருந்தால் ஏற்படும் பலனைக் கூறுங்கள் முனிவரே! தாங்கள்.

கிரகநிலை



ஜாதகியின் வீட்டுநிலை

2. அத்திரி புகலு கின்ருர் அச்சென்மம் பெண்பா லாகும்
வித்தகி யில்லஞ் சொல்வேன் மேல்வாடை வடதென் வீதி
உத்தர மாரியின் வாசம் உமையவ ளீசன் மீனம்
பத்திர காளி கீழ்ப்பால் பகருவோர் தென்பால் மாரி.

2. அத்திரி முனிவர் சொல்லுகின்ருர். இந்த ஜாதகம் ஒரு பெண்ணுடையதாகும். அவளுடைய வீட்டைப் பற்றிக் கூறுகின்ருேம். அது தெற்குவடக்கான வீதியில் மேற்கு வரிசையில் உள்ளது. வடக்குப் பக்கத்தில் மாரியம்மன் கோவிலும் தென்மேற்குத் திக்கில் சிவபெருமான் ஆலயமும் அம்மன் கோவிலும் உள்ளன. காளி கோவில் கிழக்குத்திக்கிலும் தெற்கில் மற்ருரு மாரியம்மன் கோவிலும் உள்ளன.

ஜாதகியின் குலம்

3. சொல்லிய வடையா ளத்துள்
சிறுவூரில் கர்ண சேயாய்
வல்லியு மிரண்டாஞ் ஜன்மம்
வருவளா மென்று சொல்வோம்
தல்லியுந் தந்தை யோகந்
தன்துணை வரனின் யோகம்
புல்குவோம் முன்பின் ஜன்மம்
புண்ணிய வதியே கேளாய்.

3. இவ்விதம் கூறப்பட்ட அடையாளங்களுள்ள சிற்றூரில் இந்த ஜாதகி கருணீகர் குலத்தவளாகத் தன் தந்தைக்கு இரண்டாம் பிறவியாகப் பிறந்தவள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய தாய்தந்தையர் உடன் பிறந்தவர் கணவன் இவர்களின் யோகம் முற்பிறவி, மறு பிறவி ஆகிய இவற்றைக்கூறுகின்றோம். புண்ணியவதியே! கேளுங்கள்.

ஜாதகி தந்தையின் குடும்ப விவரங்கள்

4. தாதைக்குத் தார மிரண்டில்
தரித்திடு மிளையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும்
நிகழ்த்துவோ மிவளின் தந்தை
ஒதுவேன் துணைவர் நான்கு
உதித்திடுந் தீதே யாகும்
மேதினில் தனியாய் வாழ்வன்
பிருகுவுந் தடுத்துச் சொல்வார்.

4. ஜாதகியின் பாட்டனுக்குற்ற இரு மனைவியரில் இளையவளுக்குப் பிறந்தவன் இந்த ஜாதகியின் தந்தை என்று சொல்லுகின்றோம். அவனுக்கு நால்வர் சகோதரராவர். ஆனால் அவர்களில் ஒருவரும் நிலையில்லாதவர். தந்தை தனியனாகவே வாழ்ந்து வருவான். பிருகு முனிவர் இடைமறித்துச் சொல்லுகின்றார்.

தந்தையின் சகோதரன்

5. முன்மாதா வொன்று வென்றீர்
மொழிவீரே யவட்குப் புத்திரர்
மன்மதன் போலா ணொன்று
மருவிடும் தீர்க்க மாக

அன்னவன் வேறுய்ச் செல்வன்
அவன்குணஞ் சிவந்த மெய்யன்
மன்னரால் கணக்கு வேலை
மருவிடும் வறுமை காணன்.

5. ஜாதகியுடைய தந்தைக்கு மூத்த தாய் ஒருத்தியுண்டு என்று சொன்னீர்களே! அவளுக்குப் புத்திரருண்டா? கூறுங்கள், என, மன்மதனைப்போல் அழகிய ஆண் மகன் ஒருவன் தோன்றித் தீர்க்கமானவன். ஆனால் அவன் தனியாகச் செல்லுவான் என்றேம். அவனுடைய குணங்களைக் கூறுகின்றேம். அவன் சிவந்த உடலுடையவன். அரசாங்கத்துக் கணக்குவேலையைப் பார்த்து வருவான். தரித்திரமடையாதவன்.

தந்தையின் சகோதரனுடைய இயல்புகள்

6. ஊளுகவான் தனமே லிச்சை யுவமையாய்ப் பேச
[வல்லான்
நாகரி கங்க ளுண்டு நல்லோர்க்கு நல்ல னுவன்
ஆகம வொழுக்கந் தோரா னறுமுகன் பத்தி பூண்பன்
தோகையர் மோக னுவன் சொல்லதைக் காப்பா னுகும்.

6. ஊகமுடையவன். பணத்தின்மீது விருப்பமுள்ளவன். உபமானங்களுடன் பேசுபவன். நாகரிகமாக வாழ்ந்து வருவான். நல்லவர்கட்கு நல்லவனுக இருப்பான். வேதங்களில் கூறப்பட்ட ரகசியங்களை (தத்துவார்த்தங்கள்) அறியாதவன். முருகக்கடவுள்மீது பக்தியுள்ளவன். பெண்கள்மீது மோகமுடையவன். சொன்ன வார்த்தைகளைக் காப்பவன்.

தந்தையின் சகோதரன் புத்திரபாவம்

7. சுதர்களு மாண்பா லொன்று தோகைய ரிருவ ராகும்
பதராகு மற்ற வெல்லாம் பற்களுங் குறைவு முண்டு
ததிநெய்பால் பிரிய னுகுந் தைரியன் பித்த தேகி
அதிதிகள் நேசங் கொள்வன் அடாவடி கொஞ்ச முண்டு.

7. ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்காயுள் உள்ளவர்கள். மற்றும் தோன்றுபவர்கள் நிலையார். பற்கள் தேய்வுற்றிருக்கும் (குறைந்திருக்கும்). தயிர் நெய் பால் இவைகளை அருந்துவதில் பிரியமுடையவன். தைரியசாலி. பித்தசரீரமுள்ளவன். கதியற்றவருடைய நட்பைக் கொள்ளுவான். சிறிது அடாவடியான காரியங்களையும் செய்பவன்.

வேறு

பின்வரு மிரு பாடல்களில் தந்தையின் இயல்புகள் விவரிக்கப்படும்

8. தந்தைகுணங் கூறுகிறேம் மாநி றத்தான்
சரசமாய் வார்த்தையுண்டு சந்தே கத்தன்
தந்தமது பிணிகுறைவு சாந்த னுவன்
தரணிவிருத்தி பின்விரயந்தான் செய்வா னுகுந்
தந்தைமொழிக் கிடருரையான் உள்ளன் போடும்
சர்ச்சனர்க ளுறவுகொள்வன் சாத்தான் பொய்யுந்
தன்தனமுஞ் சிலவுசெய்வன் கல்வி மானும்
சண்முகன்தன் பத்திகொள்வன் சஞ்ச லத்தன்.

8. இனி தந்தையின் குணங்களைக் கூறுகின்றேம். மாநிற முடையவன். சரசசல்லாபமாகப் பேசுபவன். சந்தேகமுள்ள மன முடையவன். பற்களில் நோய் ஏற்பட்டு அவை குறைவுள்ளதாக விருக்கும். பொறுமையுடையவன். விளைநிலங்களின் பெருக்கமுடையவன். பிற்காலத்தில் அவை குறைந்துபோம். (அழித்து விடுவான்). தன் தந்தையின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசாதவன். மிகுந்த உள்ளன்புடன் நல்லவர்களின் நட்பைக் கொள்ளுவான். பொய்யைப் பேசாதவன். தன்னுல் சம்பாதிக்கப்பட்ட பொருளைச் செலவு செய்து வருவான். கல்வியறிவுள்ளவன். முருகக்கடவுள்மீது பக்தியுள்ளவன். அசைபாயும் மனத்தினன்.

9. [1]மாதுஜன்மம் உத்தராட மருவு வானும்
வன்மையாய்ப் பூர்வயில்லம் பின்னுல் தாழ்வு
மாதவர்கள் பத்திகொள்வன் தந்திர வார்த்தை
மருமநூல் சோதிடங்கள் வழுத்த வல்லன்
மாத்தானை லகுவில்வெல்வன் கத்தரி யோகம்
மாரன்சில நாள்கணக்கு மருவு மென்றேரும்
மாதர்மே லாசையுளன் மறுவூர் சின்னுள்
வாசமுறும் மத்தியில் கத்திரி மென்றேரும்.

9. கன்னியா லக்கினத்தில் உத்தராட நட்சத்திரத்தில் பிறந்தவன். பிதுரார்ஜிதமான வீடுள்ளவன். பிற்காலத்தில் அது (அளவில்) குறையும். மிகுந்த தவம் புரிபவர்களிடம் பக்தியுள்ளவன். தந்திரமாகப் பேசுபவன். இரகசிய சாத்திரங்கள் ஜோதிடநூல்கள் முதலியவற்றை அறிந்து சொல்லக் கூடிய சக்தியுள்ளவன். விரோதிகளை எளிதில் வெல்லுவான். கத்தரியோகம் உள்ளவன். சின்னஞ்சிறுகள் கணக்கனதி வேலையைச் செய்து வருவான். பெண்கள்மீது விருப்ப

1. கன்னியாவிராசி

முடையவன். சின்னட்கள் வேற்றூரில் வாழ்ந்து வருவான். இடைக் காலத்தில் கத்தரியோகமுள்ளவன்.

ஜாதகியின் குணங்கள்

10. சொன்னவிந்தக் குணத்தானுக் கிந்தப் பாவை
தோன்றுவா ளிவள்குணத்தைச் செப்பக்
[கேண்மோ
அன்னம்போல் சாயலொக்கும் மாஞ்சி வப்பள்
அறிவுண்டு அரிபோலே கோப மேற்பள்
தன்மனத்தில் கபடில்லாள் வறுமை காணுள்
சான்றோர்கள் புத்திமிகுஞ் சரச வார்த்தை
பின்னமிலாள் நடைநன்மை சீலி யாகும்
பொய்புகலாள் பிறர்குற்றம் பேசா ளாகும்.

10. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகி பிறப்பாள். இனி அவளுடைய குண விசேஷங்களைக் கூறு கின்றேம். கேட்பீராக. அன்னத்தைப்போன்ற அழகிய (நடை) சரீரமுள்ளவள். மாநிறமுடையவள். அறிவாளி. சிங்கம்போல் கோபங் கொள்ளுவாள். தன் மனத்தில் ஒளிவு இல்லாதவள். தரித் திரமடையாதவள். பெரியோர்களுடைய சகவாசத்தால் புத்தி நல்ல தாகும். சரசசல்லாபமாகப் பேசுபவள். ஊனமில்லாத சரீரமுடைய வள். நன்னடத்தையுள்ளவள். நல்லொழுக்கம் உடையவள். பொய்யைப் பேசாதவள். பிறருடைய குற்றங்களை எடுத்துக் குறை கூறுதவள்.

சகோதரபாவமும், தோஷமேற்படக் கிரகநிலையும்

11. ஆகும்வரன் மனம்போல யிரவை வாழ்வள்
அதிதிகட் கன்னமீவள் அடிசில் நேயள்
போகபாக்யம் பின்னுல்தான் பெருவ ளாகும்
பூவைக்குத் தூணான்கு பொருந்திச் சேதந்
தோகையுமே தனியாக வாழ்வா ளாகுந்
தூணசேதங் காரணத்தைச் செப்பு மையா
பாகமாய் மூன்றைச்சனி குசனும் பார்க்கப்
பறந்திடுமே தூணயென்றும் பராச ரேகேள்.

11. தன்னுடைய கணவன் மனமறிந்து வாழ்க்கையை நடத்து வாள். கதியற்ற ஏழைகட்கு அன்புடன் அமுது படைப்பவள். சுவை யுடன் சமைப்பதில் வல்லவள். பிற்காலத்தில் போகபாக்கியங்களை யடைவாள். இவள் நான்கு சகோதரரையடைந்து அவர்கள் எல்லோரை யும் இழந்து தன்னந்தனியளாக வாழ்ந்து வருவாள். முனிவரே! ஜாத கிக்குச் சகோதரதோஷம் ஏற்படக் காரணத்தைக் கூறுங்கள். மூன்றுமிட

மாகிய சகோதரஸ்தானத்தைச் சனியும் செவ்வாயும் பார்ப்பதால் உடன் பிறந்தவர்கள் நிலையார் என்றேும். பராசரமுனிவரே ! கேளுங்கள்.

ஜாதகியின் திருமணக்காலமும் கணவனின் விவரங்களும்

12. மங்கைக்கு மூவைந்தில் வரனும் நேரும்
மாரனுமே மேல்பாலில் மருவு மென்றேும்
அங்கவன்தன் குணஞ்சொல்வேன் கல்வி மானும்
அறிவுளனும் எவர்மேலும் அன்பு பூண்பன்
தங்கமனஞ் செய்நன்றி மறவா னுருஞ்
சோம்பிடான் காரியத்தில் துருசாய் வார்த்தை
திங்களைப்போல் முகமுடையன் தீர மில்லான்
செலவுசெய்வன் நன்வழியில் தேவி நேயன்.

12. ஜாதகிக்கு பதினைந்தாம் வயதில் திருமணம் நிகழும். கணவன் மேற்குப் பக்கத்திலிருந்து வந்து இவளை மணம் செய்து கொள்வான். இனி கணவனைப்பற்றிய விவரங்களைக் கூறுகின்றேும். கல்வியறிவுள்ளவன். அறிவாளி. எல்லோரிடத்திலும் பிரியமாக இருப்பான். தங்கம் போன்று பரிசுத்தமான மனமுடையவன். பிறர் செய்த சிறு உபகாரத்தையும் மறவாதவன். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவன். வேகமாகப் பேசுபவன். (விருவிருப்பான பேச்சுக்களுள்ளவன்). சந்திரனைப்போன்ற அழகிய முகமுடையவன். தைரியமில்லாதவன். நல்ல காரியங்களில் பணத்தைச் செலவு செய்பவன். மனைவிக்குப் பிரியமானவன்.

கணவனது தொழில்

13. தனவான்கள் உதவியினல் ஜீவிப் பானுஞ்
சத்தான வஸ்துயிஷ்டன் ஜனச காயன்
இனமதிப்புக் கொண்டிடுவன் இராஜர்க் கிஷ்டன்
ஏவலாள் போலுய்வ னிளைத்த புத்தி
கனமாகப் புகழ்பின்னல் கருத லாகுங்
கந்தன்மேல் பத்திகொள்வன் காம னெப்பாந்
தினஞ்சீலன் எதிரியுற வாகி வாழ்வன்
சிலுகான புத்தியிலான் தேவி யேகேள்.

13. பணக்காரர்களின் உதவியால் ஜீவனம் செய்து வருவான். புஷ்டியான ஆகாரங்களைப் புசிப்பதில் பிரியமுள்ளவன். ஜனங்களுக்கு உபகாரி. தன் பந்து ஜனங்களின் நன்மதிப்புள்ளவன். அரசாங்கத்தாருக்குப் பிரியமானவன். வேலைக்காரனைப்போல் ஜீவனம் நடத்துவான். தாழ்வு மனப்பான்மையுள்ளவன். பிற்காலத்தில் கீர்த்தியையடைவான் என்று சொல்லக்கூடும். முருகக்கடவுள்மீது பக்தியுள்ளவன். மன்மதனை யொத்த அழகுள்ளவன். தினம் நல்லொழுக்க

முள்ளவன், விரோதிகளையும் நண்பராக்கி வாழ்ந்து வருவான். (அற்ப) சிக்கலான புத்தியில்லாதவன். தேவியே! கேளுங்கள்.

ஜாதகியின் புத்திரபாவமும் முற்பிறவியும்

14. தேவிக்குச் சுதர்ஸவமாய் ஜனிக்கு மென்றேஞ்
சிலநஷ்டந் தீர்க்கமதைச் செப்பக் கேண்மோ
பூவையரு மூவரென்றே மாண்பா லிரண்டு
போற்றுகிறேம் முதல்நான்கு மேழு மெட்டும்
மேவாவே வெனவுரைத்தோம் இவளின் பூர்வம்
விளம்புகிறேம் விதர்ப்பனு டதனி லேதான்
பாவமிலாக் கங்கைகுல மதனி லுதித்துப்
பலருக்கு நல்லோளாய் வாழு நாளில்;

14. ஜாதகிக்கு ஒன்பது குழந்தைகள் தோன்றும் எனவும், அவைகளில் சில நிலையில்லாமல் மரித்து விடும் என்றும் மூன்று புத்திரிகளும் இரு புத்திரர்களும் நிலையானவர் என்றும் சொல்லுகின்றேம். முதலாவது குழந்தையும் நான்காவது குழந்தையும் ஏழாவது எட்டாவது குழந்தைகளும் இறந்து விடும் என்று சொல்லுகின்றேம். இனி ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். விதர்ப்ப தேசத்தில் நீச்செயல்களில்லாததொரு வேளாள குலத்தில் பிறந்து பலருக்கும் நல்லவளாக இருந்து வாழுங் காலத்தில்;

வேறு

நாத்தியின் மீது பழி சொல்லுதலும், பலனும்

15. வந்ததோர் வினையைக் கேண்மோ வரனுடைத் தங்கை [பேரில்
நிந்தையாய் வார்த்தை சொல்ல நிமலியுந் திகில டைந்து
எந்தன்மேல் பழிகள் தம்மை யியம்பின பாவிக் கேதான்
தன்துணை தோஷ மாயுந் தாய்ச்சுக மில்லா தாயும்;

15. ஏற்பட்ட நிவினையைக் கேளுங்கள். தன் கணவனுடைய இளைய சகோதரியின்மீது அபாண்டமான பழி வார்த்தைகளைக் கூறினாள். அப்பெண்ணும் பயந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். என்மீது அபாண்டமான பழியைச் சொன்ன பாவிக்கு (ஏற்படும் மறுபிறவியில்) உடன்பிறந்தவர்கட்குத் தோஷமாயும் தாயின் சுகத்தைப் பெறுதவளாகவும்;

புருடன் வார்த்தையை மீறி நடந்த தோஷம்.

16. மறுவன்னை தன்பால் வாழ்வாய்
வளமிலாக் குடும்ப மாயும்
உரைத்துமே தெருத்தூள் விட்டாள்
உறைந்தது வந்தச் சாபம்

வரன்சொல்லைத் தடுத்து வாழ்ந்தாள்
மருவிற்று வதுவோர் தோஷம்
அரிவைக்கு அந்தி யத்தில்
அணுகியே வாயில் ரோகம்;

16. மாற்றுந்தாயிடத்தில் வாழும்படி நேரிடும். செழிப்பில்லாத குடும்பம் ஏற்படும் என்று கூறித் தெருமண்ணை வாரி இறைத்தாள். அந்தச் சாபம் இவளைப் பற்றியது. தன்னுடைய கணவன் வார்த்தையின்படி நடவாமல் மீறி நடந்ததால் அதுவும் ஒரு தோஷமாயிற்று. இவற்றின் பயனைத் தன் இறுதிக் காலத்தில் ஜாதகிக்கு வாயில் புண் ஏற்பட்டு;

17. பாதையால் மரண மாகிப் பிரமனுல் வரையப் பட்டுக்
காதலி யுதிப்பா ளாகுங் கலந்திடு மூன்னூழ்ச் சாபந்
தீதாகுந் துணைவர் தாமுந் தாயுமே ஆதில் மாள்வள்
ஓதுவீர் காலந் தன்னை யொன்பதா மாண்டில் சாவாள்.

17. உபத்திரவம் தாங்காமல் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் ஜாதகியாகப் பிறந்தாள். முற்பிறவித்தோஷம் தொடரும். அதனுல் உடன்பிறந்தவர்கள் நிலையார். பெற்றதாயும் ஆதிகாலத்திலேயே மரணமடைவாள். தாயின் மரணகாலத்தைக் கூறுங்கள். ஜாதகியின் ஒன்பதாம் வயதில் அவள் இறந்து விடுவாள்.

தாயின் குணங்கள்

18. பின்மாதா வொன்று நேரும் பேசுவீ ரன்னை சேதி
தன்மனங் கபடு மில்லாள் சலித்தோர்க்கு வன்ன மீவள்
அன்னியர் மதிக்க வாழ்வள் அடாவடி தன்னில் செல்லாள்
மன்னவன் மனம்போல் வாழ்வள் மறுத்துரை யதிகங்
[கூறுள்.

18. ஜாதகிக்கு (இளைய தாய்) மாற்றுந்தாய் ஒருத்தி வருவாள். தாயினுடைய குணங்களைக் கூறுங்கள். மனத்தில் கபடமில்லாதவள். துன்பமடைந்தவர்கட்கு அன்புடன் அன்னமளிப்பவள். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். அடாவடியான காரியங்களில் போகாதவள். தன் கணவனது மனமறிந்து வாழ்ந்து வருவாள். எதிர்வார்த்தை பேசாதவள்.

தாயின் முற்பிறவித் தீவினை

19. அவளுடைத் துணைவர் தம்மை யறையவே பலமி ராது
தவசிபோல் தனியாய் வாழ்வள் சாற்றுவோ மிவளின்
[பூர்வம்
நவனியில் கடையூர் தன்னில் நல்கினுள் செக்கான் வம்சம்
பவமதைப் புகலக் கேண்மோ பட்சியு மில்லம் வாசம்;

19. தாய்க்குச் சகோதரர்கள் உண்டு என்று சொல்லக் கிரக பல மில்லை. தவம் செய்பவரைப்போல் தனித்து வாழ்ந்து வருவாள். இனி (தாயின்) முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருக்கடையூர் என்ற தலத்தில் வாணியர் மரபில் தோன்றி வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். இவளுடைய வீட்டில் ஒரு பட்சி கூடுகட்டி வாழ்ந்து வந்தது ;

வேறு

பட்சியைக் கொன்ற தோஷம்

20. கருவதை யழித்து பட்சியைக் கொன்றுள்
கலந்தது அடைக்கலான் சாபம்
வரனன்னை தன்னை மருவ வொட்டாமல்
வனவாச மாகவே செய்தாள்
அரிவையின் சாபம் அணுகிற்று யென்றோம்
அம்மையு மந்தியக் காலம்
இருவிழி வூன மாகியே வாழ்ந்து
இகபரன் பத்தியு மாகி ;

20. ஜாதகியின் தாய், அதனைக்கொன்றுக் கூட்டைக் கலைத்து முட்டைகளையும் குஞ்சுகளையும் அழித்துவிட்டாள். பட்சியின் சாபம் தொடர்ந்தது. இதுதவிர கணவனுடைய தாயை (மாமியார்) தன் மகனை அணுகவொட்டாமல் தனித்து வாழச்செய்தாள். அதனால் மாமி யின் சாபம் ஏற்பட்டது. அத்தீவினையால் அவள் தன் கடைசிக் காலத் தில் இருகண்களும் குருடாகி வாழ்ந்து சிவபெருமான் மீது பக்தியுள்ள வளாகி ;

பயன்

21. மரணமே யாகி மலரயன் வகுத்து
வந்தவ னென்றனந் தாயே
பெருஞ்சுதர் நஷ்டங் துணைவருந் தோஷம்
பேதையுஞ் சுதரினால் மாள்வள்
வருஞ் சென்மம் விரிஞ்சி மாநகரந் தன்னில்
வருவளாஞ் சைவச்சே யாக
அறந்தனை வளர்க்கு மாத்துமத் தாயே
அறைந்தவிம் மொழிகுன் றுவே.

21. மரணமடைந்து தாமரை மலரில் வாசம் செய்யும் பிரமதேவ னால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றோம். இவள் பெற்ற குழந்தைகட்கும் உடன்பிறந்தவர்கட்கும் தோஷமேற்படும். அவளும் பிள்ளைப் பேற்றினால் இறந்து விடுவாள். அவளுடைய மறு பிறவியில் விரிஞ்சி நாட்டில் சைவ குலத்தவளாகப் பிறப்பாள். தரு

மத்தை வளர்க்கும் எங்கள் உயிருக்குயிரான தாயே! நாங்கள் கூறிய அருள்மொழிகள் தவரு.

தந்தையின் முற்பிறவி

22. தந்தையின் பூர்வஞ் சாற்றிடக் கேண்மோ
சட்டநா தேசர்வாழ் நாட்டில்
வந்தனன் சேடர் வமிசந் தன்னில்
மாநிலம் நெசவுமே செய்து
மைந்தரு மனைவி வளமுள குடும்பம்
வாழ்நாளில் வினைகளைச் சொல்வேன்
பந்துவுக் கிவனே பெருதன முண்டாய்ப்
பாவைமேல் சிலசில நிந்தை;

22. ஜாதகியின் தந்தையின் முற்பிறவியைக் கூறுகின்றேரும். கேட்பீராக. சட்ட நாதேச்வரர் வாழும் சிகாழியில் சேடர் வம்சத்தில் பிறந்து உலகில் நெசவுத் தொழிலைச் செய்து வந்து, மனைவி மக்களை யடைந்து, செழிப்புள்ள குடும்பத்தைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேரும். கேளுங்கள். தன் சுற்றத்தாரில் இவன் ஒருவனே பெரிய செல்வமுள்ளவனாக வாழ்ந்து வந்தான். அக்காலத்தில் வேற்றுப் பெண்ணொருத்திமீது ஜாதகியின் தந்தை பழி வார்த்தைகளை;

காணதபழியைச் சுமத்துதலும், அதன் பலனும்

23. சொல்லவும் மாரன் மாதுவை விலக்கத்
தோகையும் மனமது வாடி
அல்லல்கள் சொன்ன வரும்பாவி தனக்கு
அணுகாது என்போலே துணைவர்
புல்லும்பின் சென்மந் துணைவரு மின்றிப்
பேதைய ரிருவரு மாகும்
நல்லதோ ரில்லந் தாழ்வது மாகி
நாயகன் தொழிலுமே கேடாம்.

23. கூறினன். அதை அப்பெண்ணின் கணவன் கேட்டு அப் பெண்ணை விலக்கி விட்டான். அப்பெண்ணும் மனம் கலங்கிச் சொல்லுகின்றாள். என் மீது துன்பமுறும்படியான வார்த்தைகளைக் கூறிய பாவிக்கு என்போன்ற பெண்கள் உடன் பிறந்தவர்களாகத் தோன்றார் என்றும் அடுத்த பிறவியிலும் உடன் பிறந்தவரில்லாமல் மனைவியர் இருவரை யடைந்து இவனுடைய வீடு மிகவும் தாழ்வுற்றும், செய்துவரும் தொழிலுக்கு கேடு ஏற்பட்டும் வாழ்வான்;

24. மாதுவுந் சொல்ல வடைந்தது சாபம்
மைந்தனு மந்தியந் தன்னில்
காதலி மாண்டு கலவர மனதாய்க்
காலன் தன்நாடது சேர்ந்து
வேதனும் வரைய விளங்கினு னிவனே
மேவிடும் மங்கையின் சாபம்
ஆதலால் துணையுதி யாதென மொழிவோம்
அணுகிடும் மறுமனை தானே.

24. என்றும் கூறினுள். அந்தச் சாபம் இவனைப் பற்றியது. ஜாதகியின் தந்தையும் தன் கடைசிக் காலத்தில் மனைவியை இழந்து சஞ்சலமுள்ள மனத்துடன் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். பெண்ணின் சாபம் இப் பிறவியிலும் தொடரும். அத்தோஷத்தால் சகோதரிகள் நிலையார் என்றும் முதல் மனைவி இறந்து விடுவாள் என்றும் வேறு மனைவி வாழ்க்கைப்படுவாள் என்றும் சொல்லுகின்றோம்.

வேறு

தந்தையின் மறுமனைவியின் குணம்

25. மருமனை குணத்தைதச் சொல்வேன்
மால்நிறம் உணைச்சல் தேகி
உரையுமுன் கோபங் கொஞ்சம்
உள்மனங் கபடு முள்ளாள்
துருசான வார்த்தை யுண்டு
தோகையுஞ் சமயோ கத்தாள்
நரைமல ரிஷ்டங் கொள்வள்
நாயகன் மனத்துக் கேத்தோள்.

25. ஜாதகியின் மாற்றுந் தாயின் குணங்களைக் கூறுகின்றோம். திருமாலைப்போன்ற கரியநிறமுடையவள். மெல்லிய சரீர முள்ளவள். கூறுவதற்கு முன் கோபம் கொள்ளுவாள். உள் மனத்தில் கபட முள்ளவள். வேகமாகப் பேசுபவள். சமமான யோகமுடையவள். வாசனைப்புஷ்பங்களின் மீது விருப்பமுள்ளவள். தன் கணவன் மனத் திற்கு ஒப்ப வாழ்ந்து வருவாள்.

26. தோகைபோல் சாய லொக்குஞ் சுதர்களு மாண்பா
[லொன்று
பாகமாய்ப் பெண்பா லொன்று பகருவோந் தீர்க்க மாக
ஊகமு முடைய ளாகும் உறுதியா மனத்த ளாகும்
போகவா ரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

26. மயிலைப்போன்ற அழகிய சரீரமுடையவள். ஒரு புத்திரனும் ஒரு புத்திரியும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள். ஊக முடையவள். திடமான மனத்தினள். போக சமுத்திரமாகிய கணவ னைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

ஜாதகி தந்தையின் யோகம்

27. தந்தையின் யோகஞ் சொல்வேன்
தரணியால் உய்வா னாகும்
பந்துவுக் கிணங்க வாழ்வன்
படையின்முன் செல்லா னாகும்
எந்திடங் கணக்கு வேலை
எய்திடுங் கத்தரி யோகம்
அந்தமூ வாண்டின் மேலாய்
அணுகிடுந் தொழிலு மென்றோம்.

27. ஜாதகியின் தந்தையினுடைய பொது யோகத்தைச் சொல்லு கின்றோம். விவசாயத்தைச் செய்து ஜீவித்து வருவான். தன் சுற்றத் தாருக்கு அடங்கி வாழ்ந்து வருவான். சண்டைக்கு முன்னே செல்லாத வன். எல்லாவிடங்களிலும் கணக்கு வேலைசெய்து வருவான். கத்தரி யோகமுள்ளவன். அவனுடைய பதினேந்தாம் வயதுக்குமேல் ஒரு தொழில் வாய்க்கும் என்று சொல்லுகின்றோம்.

28. அதுமுதல் மூவெட் டாண்டும் அணுகிடுங் கணக்கு வேலை
எதுவிடம் புகலு மென்ன எமன்திசை தன்னில் நேரும்
முதல்நேர்ந்து பிரித லாகி மேவிடு மென்று சொல்வோம்
இதுமொழி குன்று வாகும் ஈச்வரி கேட்டி டாயே.

28. அதுமுதல் இருபத்துநான்கு வருடங்களுக்கு கணக்கன் வேலையைச் செய்து வருவான். எந்த விடத்தில் செய்வான்? கூறுங்கள், என்று வினவ, தெற்குப்பக்கத்தில் உத்தியோகம் கிடைக்கும். முதலில் கிடைத்துப் பிறகு அது நீங்கி வேறு ஒன்று கிடைக்கும் இவ் வார்த்தைகள் தவறு. தாயே! கேளுங்கள்.

கண்டம்

29. ஆறாறு வாண்டு தன்னில் அணுகிடும் தந்தை கெண்டங்
கூறுவோ மிவன்பின் சென்மங் குத்தால நகரி லேதான்
பாரிய தனவா னுக்குப் பிறப்பனுங் கங்கை சேயாய்த்
தீரமாய்த் தவங்கள் செய்யுஞ் செல்வதி கேட்டி டாயே.

29. ஜாதகியின் முப்பத்தாரும் வயதில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். (மரணமடைவான்) இவனுடைய மறுபிறவியைச் சொல்லு

கின்றோம். குத்தாலத்தில் பெரியதொரு தனவானுக்குப் புத்திரனாகப் பிறப்பான். வேளாள குலத்தில் தோன்றுவான். சிரத்தையுடன் தவங்கள் செய்யும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகியின் ஆயுளும், இளைய தாயின் மரண காலமும்

30. அன்பது வாண்டு தன்னில் அணுகிடுங் கண்டந் தானும்
பின்மாதா வென்று சொல்வோம் பூவைக்கு வன்பா
[னைந்தில்
கன்னியா மாதந் தன்னில் காதலி யுடல மேகும்
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

30. ஜாதகியின் ஐம்பதாம் வயதில் இளைய தாய்க்கு மரணம் சம்பவிக்கும். ஜாதகிக்கு ஐம்பத்தைந்தாம் வயதில் புரட்டாசி மாதத்தில் மரணம் நேரிடும். உயர்ந்த யானை முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகியின் மறுபிறவியும் ஜனனகால தசையும்

31. மறுஜன்மங் காஞ்சி தன்னில் மறைக்குல முதிப்ப ளாகுந்
திருமகள் ஜனன காலஞ் சித்திரை யிரண்டாம் பாதந்
தரைமகன் தசையி ருப்புச் செப்புவோம் நாலு வாண்டு
மருவிடுந் திங்க ளாந்தே வரைந்தனம் பூர்வ பாகம்.

31. ஜாதகி மறுபிறவியில் காஞ்சீபுரத்தில் அந்தண குலத்தவளாகப் பிறப்பாள். அவளுடைய ஜனன காலத்தில் சித்திரா நட்சத்திரம் இரண்டாம் பாதமாம். செவ்வாய் மகா தசையிலிருப்பு நான்கு வருடங்களும் ஐந்து மாதங்களுமாகும். இதுவரையில் முதல் பாகத்தைச் சொன்னோம்.

ஜாதகம் 64

1. மதிமீனங் கேது வீணை மங்கலன் வண்டி யாகப்
புதனிரவி சனியுந் தேளில் பொன்கோலில் ராகு மேரு
இதுவிதக் கோள்கள் சேர்ந்து மிலக்கினஞ் சிம்ம மாக
அதுசேதி சொல்லு மென்று அம்பிகை கேட்க லுற்றாள்.

1. சந்திரன் மீனத்திலும், கேது மிதுனத்திலும், செவ்வாய் கடகத்திலும், புதன் சூரியன் சனி விருச்சிகத்திலும், குரு துலாத்திலும், ராகு தனுசிலுமாக நவக்கிரகங்களின் நிலை இருந்து இலக்கினம் சிம்மமானால் ஏற்படும் பலனைக் கூறுங்கள் எனப் பார்வதி கேட்கலானாள்.

கிரகநிலை

சந்திரன்			கேது
	இராசி சக்கரம்		செவ்வாய்
			லக்கினம்
ராகு	புதன் சூரியன் சனி	குரு	

ஜாதகனின் வீட்டுநிலை

2. பிறந்தசே யாணைஞ் ஜன்மம் பேசுவோங் கீழ்மேல் வீதி
திறமுடன் வடக்கு வாசல் தந்தியு மாயோன் மேற்கில்
குறைதலை மாரி வேலன் குறித்தனங் கீழ்ப்பா லாகும்
பெருநதி வுத்தர மாகும் பேசுவோஞ் சிற்றூர் தன்னில்;

2. இஃது ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. விநாயகர் ஆலயமும் திருமாலின் ஆலயமும் மேற்குப்பக்கம் உள்ளன. மாரியம்மன் கோவிலும் வேல்முருகன் கோவிலும் கிழக்குத் திக்கில் இருக்கும். பெரியதான (புண்ணிய) நதியொன்று வடக்குப் பக்கத்திலுள்ள ஒரு சிற்றூரில்;

3. இன்னமுஞ் சோலை சூழி யிலகிடு மவ்வூர் தன்னில்
அன்னவன் சேஷ்ட னாக யறைந்தனந் தந்தை யோகந்
துன்னிய மனைவி மைந்தர் சோதர ரன்னி யோகந்
தன்னிலே முன்பின் ஜன்மஞ் சாற்றுவோ மிந்நூல்

[தன்னில்.

3. தோட்டங்கள் பல சூழ்ந்து சம நிலையாகவுள்ள ஊரில் இந்த ஜாதகன் தன் தந்தைக்கு மூத்த புதல்வனுகப் பிறப்பான். இவனு டைய தாய் தந்தையர் மனைவி மக்கள் உடன் பிறந்தவர் இவர்களின் யோகம், முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றின் பலனை இந்தச் சோதிட நூலில் கூறுகின்றோம்.

பின்வரும் நான்கு பாடல்களால்
ஜாதகன் தந்தையின் இயல்புகள் கூறப்படும்

4. தந்தையின் சேதி சொல்வேன்
சமர்த்துளா னுகை சாலி
பொன்னெடு பணிதி சேர்க்கை
புகழ்கணக் கினிலே யூகி
சொன்னசொல் பிசகா னுகுந்
தொடுத்திடு கருமம் வெல்வன்
இந்நிலங் கல்வி மூன்று
யியம்புவோ மிவனுக் கேதான்.

4. தந்தையின் விவரங்களைக் கூறுகின்றோம். சமர்த்தியமுள்ள வன். ஊகமுடையவன். பொன்னுபரணங்களின் பெருக்கமுள்ளவன். கீர்த்தியுடையவன். கணக்கில் அதிக ஊகமுடையவன். சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவன். எடுத்த வேலைகளை வெற்றியுடன் செய்து முடிப்பவன். இந்நாட்டிலுள்ள மூன்றுவிதக் கல்விகளைக் கற்றுணர்வான்.

5. கருநிறஞ் சமதே கத்தன் கண்முகம் வசிய முள்ளான்
மறுவூரில் சின்னுள் வாசம் மாமிக னிரண்டே யாகும்
அரிபத்தி கொஞ்ச முண்டு யாரையு முறவு கொள்வன்
பெருமையாய்க் குடும்ப முண்டாம் போஜனச் சுகிய
[னென்றோம்.

5. கரியநிறமுடையவன். சமமான உடலமைப்புள்ளவன். கண் கள் முகம் இவை வசீகரமாக வுள்ளவன். சின்னட்கள் வேற்றூரில் வாழ்ந்து வருவான். இரு மனைவிகள் உள்ளவன். மகாவிஷ்ணுவிடத் தில் பக்தியுள்ளவன். எல்லோரிடத்திலும் நட்புக் கொள்ளுவான். பெருமையுள்ள குடும்பமுடையவன். சாப்பாட்டுச் சுகி என்று சொல்லுகிறோம்.

6. நாபிச்சூ டுடைய னுகும் நயம்படக் கூறு வானும்
பாவத்தில் மனம்வை யாதான் பலபலச் செட்டுச்
பூமியுஞ் சேர்ப்பா னுகும் புதிதான கிரகஞ் செ
காமனை விருப்பங் கொள்வன் காலாட்க ளுன

6. வயிற்றில் சூடுடையவன். இனிமையாக (நியாயமாக)ப் பேசு பவன். தீய காரியங்களில் மனம் செல்லாதவன். பற்பல வர்த்தகங் களைப் புரிந்து வருவான். வீர நிலங்களையும் பூமிகளையும் சேகரிப் பான். புதிய வீடு ஒன்றைக் கட்டுவான். மன்மதனைப் போன்றவன். (சிற்றின்பத்தில் விருப்பமுள்ளவன்.) ஏவலாட்களுள்ளவன்.

7. சொன்னசொல் மறுத்துக் கூரான் சுகதுக்க மிரண்டு
[மூள்ளான்
அன்னவன் ஜனன காலம் அன்னைபால் குறைவு முண்டு
இன்னவ னிரட்டை ஜன்மம் இருநான்கு ஜனன மாகுந்
தன்துணை யொன்ப தெனறோஞ் சேத்திர பாக மாரும்.

7. சொன்ன வார்த்தைகளை மீறுதவன். சுகதுக்கம் கலந்து வாழ்ந்து வருவான். அவனுடைய ஜனன காலத்தில் பெற்ற தாயின் சுகமில்லாதவன். (தாய்ப்பால் குறைவாக உள்ளவன்) இவன் இரட்டையாகவும் எட்டாமவனுகவும் பிறந்தவன். உடன்பிறந்தவர் ஒன்பதின்மர் என்றும் இவனுடைய வீடு ஆறுபாகங்களாக்கப்படும் என்றும் கூறுவோம்.

பின்வரு மிருபாடல்களில் ஜாதகனின் குணங்கள் கூறப்படும்

8. இக்குண மூடையோ னுக்கு விருதார மிளையா ளுக்குத்
தக்கவே சேஷ்ட னுகத் தரணியி லுதிப்பா னுகும்
மிக்கவே யிவன்கு ணத்தை விளம்புவோஞ் சிவந்த மேனி
சிக்கன மில்லா னுகுஞ் சிகையது நீட்சி யில்லான்.

8. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு ஏற்பட்ட இரு மனைவியரில் இளையவளுக்கு இந்த ஜாதகன் மூத்த புதல்வனுகப் பிறந்தவன். இவனுடைய குணங்களைக் கூறுகின்றோம். சிவந்த உட லுள்ளவள். செட்டாக இருக்கத் தெரியாதவன். தலை மயிர்கள் நீண்டு இல்லாதவன்.

9. நன்னய மஞ்ச மெத்தை யடிமையோர்ப் பெருக்க முண்டு
பொன்னது கொடுக்கல் வாங்கல் பூமியில் செல்வ மெய்தல்
தன்னினத் தவர்க்கு மேலாய்த் தனிகனுய் வாழ்வா
[னுகுஞ்
சுத்தமு முடைய னுகுந் தொல்புவி கீர்த்தி யேற்பன்.

9. மிருதுவான பஞ்சு மெத்தைகள் அதிகமாகவுள்ளவன். ஏவ லின் பெருக்கமுள்ளவன். பணம் கொடுக்கல் வாங்கல் செய்வான் செல்வம் பெருகும் (புதையல் கிடைக்கும்) தன் சுற்றத்தாருக்கு செல்வவானுக வாழ்ந்துவருவான். சுத்தமுள்ளவன். கீர்த்தியையடைவான்.

ஜாதகனின் சகோதரபாவம்

10. இன்னவன் தூணவர் தம்மை
யியம்புவோ மிருமூன் ரூகுந்
தன்னிலே யண்பா லிரண்டு
சத்தியு மவ்வா ரூகும்
பின்னமா மற்ற வெல்லாம்
புயண்டரிவ் விதமாய்க் கூற
உன்னத பராசர் தாமு
மறைகுவா ரதிலோர் சங்கை.

10. ஜாதகனுடைய உடன் பிறந்தவர்களோ இனிக் கூறுகின்றேரும். அவர்கள் ஆறு பேராகும். அவர்களில் இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் திர்க்கமாகவுள்ளனர். மற்றவர்கள் இறந்து விடுவர். இவ்விதம் புயண்ட முனிவர் சொல்லும்போது பராசர முனிவர் அதில் ஒரு சந்தேகத்தைக் கூறுவர்.

11. முதல்மாதா வொன்று யென்று
மொழிந்திட்டீர் புயண்ட ரோநீர்
சுதர்களு மவளுக் குண்டோ
சொல்லுவீர் விவர மாக
மதிமுகப் பெண்பா லிரண்டு
வருவித்து மரிப்பா லென்றேரும்
அதுவின்றிப் பெண்பா லிரண்டு
அணுகிடு மிவன்பின் ஞலே.

11. புயண்ட முனிவரே! தாங்கள் ஜாதகனுக்கு முதல் தாய் ஒருத்தியுண்டு என்று சொன்னீர்களே. அவளுக்குப் புத்திரபாக்கிய முண்டோ? விவரமாகச் சொல்லுங்கள். சந்திரனப்போன்ற அழகிய முகமுடைய பெண்களிருவர் பிறந்து இறந்து விடுவர் என்றும் இவனுக்குப் பிறகு இரு பெண்கள் பிறப்பார்கள் என்றும் சொல்லுகின்றேரும்.

தாயின் விவரங்கள்

12. அன்னைமாஞ் சிவப்ப ளாகும்
அழகுளாள் சமதே கத்தாள்
சொன்னசொல் மிருது வாகுஞ்
சொல்லுமுன் கோபங் கொஞ்சம்
பின்னமில் லாத தேகி
பந்துவுக் கினிய ளாகுந்
தன்வரன் மனம்போல் வாழ்வள்
தருமமாங் குணத்தா ளாகும்.

12. தாய் மாகிறமுடையவள். அழகுள்ளவள். சம்மான உடல் அமைப்புள்ளவள். தன்மையாகப் பேசுபவள். கூறுவதற்கு முன் கோபம் கொள்ளுவாள். ஊனமில்லாத தேகமுடையவள். தன் சுற்றத்தாருக்குப் பிரியமானவள். தன் கணவன் மனமறிந்து வாழ்ந்து வருவாள். தரும குணமுள்ளவள்.

13. தந்தைக்குத் தார மூன்றில் தரித்திடு மிரண்டா மாது
இந்ததோர் கன்னி யெல்லோ மிவள்துணை யைந்தே [தோன்றும்
வந்ததி லொன்று சேத மாணது ஒன்று தீர்க்கஞ்
சந்திர வதனம் போலே தையல்மார் மூன்று என்றோம்.

13. தந்தைக்கு ஏற்பட்ட மனைவியர் மூவரில் இரண்டாம் மனைவி இந்த ஜாதகனின் தாய் என்று சொன்னோம். இவளுக்கு உடன் பிறந்தவர் ஐவர் தோன்றுவர். அவர்களில் ஓர் ஆண் குழந்தை நிலையாக விருக்கும். ஒரு குழந்தை இறந்து போம். அழகிய முகத்தையுடைய மூன்று சகோதரிகள் உண்டு என்றோம்.

14. இல்லமு முத்திர மாகும் குடும்பம லேச்ச லுண்டு
வல்லவன் மாமன் சேதி வரைகிறோ மிரண்டி லேதான்
நல்லதோர் மாதுரு பூர்வம் நாட்டுவோ மினிமே லாக
அல்லலை யகற்று மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

14. அவளுடைய பிறந்த வீடு வடக்குத் திக்கிலுள்ளது என்றோம். குடும்பம் துன்புற்று இருக்கும். ஜாதகனின் மாமன் செய்திகளை இரண்டாம் பாகத்தில் எழுதுகின்றோம். இனி தாயின் முற்பிறவியைக் கூறுகின்றோம். எங்களுடைய துன்பங்களை யகற்றும் உயிருக்குயிரான தேவியே! கேளுங்கள்.

தாயின் முற்பிறவி

15. கந்தன்வாழ் மலைக்குக் கீழ்பா லருகினில் சிற்றூர் [தன்னில்
விந்தையா யிரட்டி வம்சம் விளங்கிய லிவளே யம்மா
சேர்ந்திடத் துத்தி ரத்தி லருகினில் பேரூர் தன்னில்
தூனுடை வரனுண் டாகிச் சந்ததி யதிக முண்டாய்;

15. அருகக் கடவுள் எழுந்தருளி யிருக்கும் (திருத்தணி) மலைக் கிழக்குப் பக்கமாகவுள்ள சிற்றூரில் ரெட்டியார் மரபில் பவள் என்றோம். தாயே! அவ்விடத்துக்கு வடக்குப் க்கிலுள்ள பெரிய ஊரிலிருந்து கணவனையடைந்து கம் பெற்று;

16. பெரிதான குடும்பி யாகிப்
பேதையும் வாழ்ந்தா ளென்றேரும்
அறமதி லிச்சை யின்றி
அவள்வரன் முன்னே மாண்டு
பிரமனுல் வரையப் பட்டுப்
பிறந்தவ ளிவளே யென்றேந்
திருமகள் பின்ஜன் மத்தைச்
செப்புவோங் கேளுந் தாயே.

16. பெரிய குடும்பத்தை யடைந்து வாழ்ந்து வந்தாள் என்றேரும். தருமம் செய்வதில் விருப்பமில்லாமல் தன் கணவனுக்கு முன்பாகவே மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவள் இவள் என்று சொல்லுகின்றேரும். இவளுடைய மறு பிறவியைக் கூறுகின்றேரும். தாயே! கேட்பீராக.

தாயின் மறுபிறவி

17. தன்னகர் தன்னி லேதான் தாயாதி தனக்குப் புத்திரி
இன்னவ ளுதிப்பா ளாகும் இடருக ளில்லா வாழ்வள்
மன்னிய தந்தை பூர்வ மறைகிறே மினிமே லாகக்
கன்னென மொழியை யொக்குங் காதலி மேலுங் கேளே.

17. அவ்வூரிலேயே தன்னுடைய பங்காளிக்குப் புத்திரியாகத் தோன்றித் துன்பங்களில்லாமல் வாழ்ந்து வருவாள். இனி ஜாதகனின் தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். இனிய வரர்த்தை களைப் பேசும் தேவியே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

18. தந்தையின் பூர்வந் தன்னைச்
சாற்றுவோங் காஞ்சி தன்னில்
வந்தனன் சௌராஷ்டிர வம்சம்
வளமுள தனவா னுக்கு
இந்தவன் மகவாய்த் தோன்றி
யிணையிலாக் குடும்பி யாகித்
தன்மன மதலை யுண்டாய்த்
தரணியில் செட்டுச் செய்தான்.

18. தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். புரத்தில் சௌராஷ்டிர குலத்தைச் சேர்ந்த செயலுள்ள தனவானுக்குப் புத்திரனுகப் பிறந்து நிகரில்லாத குடும்பி பெற்று மனவிமக்களை யடைந்து உலகில் வர்த்தகம் புரிந்து வந்தான்.

தாயாதி சாபம்

19. ஞாதிகள் தம்மை மோசம் நாயகன் செய்து மேதான்
மேதினில் பாக மீயாது வித்தகன் வாழ்ந்தா னென்றேரும்
ஓதுவார் ஞாதி தாமும் உதித்திடுங் ஜன்மந் தன்னில்
நீதாகு மனைவி தானுஞ் ஜனித்திடு காலந் தன்னில்.

19. அக்காலத்தில் தன் பங்காளிகளே மோசம் செய்து அவர்களுக்குரிய பர்கத்தைத் தராமல் வாழ்ந்து வந்தான். பங்காளிகளும் சாபமிடுகின்றனர். இனி தோன்றும் மறுபிறவியில் உனக்கு மனைவி இறந்து விடுவாள். நீ பிறக்கும்போது ;

இதுவுமது

20. உன்னுடை யிளையோ னுக
வுதித்துமே வுன்பால் பாகம்
பின்னமில் லாமல் கொள்வேன்
பேசியே நீங்க லுற்றான்
அன்னதோர் சாபந் தானும்
அணுகிற்று யிவனுக் கேதான்
இன்னமுந் தோஷ மொன்று
மியம்புவோங் கேட்டி டாயே.

20. உனக்கு இளையவனுகப் (இரட்டைக் குழந்தையாகப் பிறந்து) பிறந்து, பாலில் உன்னுடைய பாகத்தையும் தாயிடமிருந்து பருகுவேன் என்று கூறிவிட்டுச் சென்றான். அந்தச் சாபம் இவனைப் பற்றியது. இதுவல்லாமல் வேறு ஒன்றும் சொல்லுகின்றேம். கேளுங்கள்.

திருமாங்கலியந் தர மறுத்தது

21. ஏழையோன் மணத்துக் காக விவனைமாங் கலியங்
[கேட்கத்
தாழ்விலாத் தாரே னென்று தைரியங் கூற லுற்றான்
ஆதியில் சுபங்கள் கூட்டி யடுத்தநாள் தன்னில் கேட்கப்
பாழான மறதி யாலே பணிசெய்ய மறந்தே னென்ன,

21. ஏழையொருவன் தன்னுடைய திருமணத்துக்காக இவனை மாங்கலியம் தருவாய் என்று கேட்கத் தடையில்லாமல் தருவ தெரியம் கூறினன். அவ்வேழையும் கலியாணத்துக்கு மற்ற யெல்லாம் செய்துகொண்டு இவனைத் திருமாங்கலியம் அவ்வாபரணத்தைச் செய்ய மறந்து விட்டேன் என்று டான்.

22. வேறொரு முத்திரை வாங்கி வறுமையோர் சுபமு டித்துப்
பாரிய தனவான் போல் பகையது கூற லுற்றார்
தீறமாய்த் தாரே னென்று சொல்லது பிறண்ட பாவி
வேறொரு ஜன்மந் தன்னில் விளைந்திடும் மனைவி
[யிரண்டாய்;

22. ஏழைகளும் வேறு திருமாங்கல்யத்தை வாங்கித் திரு மணத்தை முடித்துக்கொண்டு பெரியதனவானுகிய ஜாதகனுடைய தந்தையைக் குறித்துச் சாபமிட்டனர். திண்ணமாகத் தருவதாகத் தைரியம் சொல்லிவிட்டுப் பிறகு வார்த்தை பிசகிய பாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் இரு மனைவியரை யடைந்து;

ஏழை சாபம்

23. சுந்தரன் வாழ்வா யென்று செப்பினர் யேழை யோர்கள்
அந்ததோர் சாப மொன்று வணுகிற்று விவனுக் கேதான்
அந்தியக் காலந் தன்னில் அந்தகன் பக்கல் சென்று
பிந்தியும் மலரோ னுலே பூமியில் வரையப் பட்டு;

23. வாழ்ந்து வருவாய் என்று ஏழைகள் கூறினர். அந்தச் சாபமும் இவனை வந்தடைந்தது. இவனும் தன் கடைசிக்காலத்தில் (துன்புற்று)ப்பிறகு மரணமடைந்து மீண்டும் தாம்ரையில் அவதரித்த பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பூமியில்;

24. வந்தவ னிவனின் தந்தை வரைகிறே மிச்சென் மத்தில்
தன்மனை யிரண்டு மாகுந் தாயாதி சாபம் போலே
பிந்தின துனைவர் ஒன்று பிறப்பனு மொருகர்ப் பத்தில்
கந்தனை யீன்ற மாதே கழறுவோ மேலுங் கேளே.

24. பிறந்தவன் இவனுடைய தந்தை என்று குறிக்கின்றேரும். இப்பிறவியில் இரு மனைவியரை அடைவான். தன் பங்காளியின் சாபத்தைப்போல் ஒரே கர்ப்பத்தில் இரட்டைக் குழந்தையாகப் பிறப் பான். முருகக் கடவுளைப்பெற்ற தேவியே! மேலும் சொல்லுகின்றேரும், கேட்பீராக.

தந்தையின் மறுபிறவி

25. பின்ஜன்ம காஞ்சி கீழ்ப்பால் பேரூரில் செங்குந்
அன்ன வனுதித்து மேலு மனேகவா ணிபங்
கந்தன்தன் பத்தி கொண்டு கௌரவக் குடி
பின்னமில் லாமல் வாழ்வன் புண்ணிய

25. மறு பிறவியில் காஞ்சீபுரத்துக்குக் கிழக்கிலுள்ள பெரிய ஊரில் செங்குந்த மரபினருகப் பிறந்து பலவிதமான வியாபாரங்களைச் செய்துவந்து முருகக்கடவுள்மீது பக்தியுடன் வாழ்ந்து கண்ணியமுள்ள குடும்பத்தைப் பெற்றுத் துன்பங்களில்லாமல் வாழ்ந்துவருவான். நல் லெண்ணம் பொருந்தியவளே ! கேளுங்கள்.

ஜாதகனின் திருமணக்காலம்

26. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோம் பதினே
[ராண்டில்
கோதிலா வுத்த ரத்தில் குறித்தனம் மாமன் பெண்ணை
ஓதுவே னவள்கு ணத்தை யுறுதியா மனத்த ளாகுஞ்
சூதிலாள் மிஞ்சிய வார்த்தை சிவந்திடு மேனி யாவள்.

26. இனி ஜாதகனின் திருமணக்காலத்தைச் சொல்லுகின்றோம். பதினேராம் வயதில் தீங்குகளில்லாத வடக்குப் பிரதேசத்தில் தன்னு டைய மாமன் மகளைத் திருமணம் புரிந்துகொள்வான். அவளுடைய குணங்களைச் சொல்லுகின்றோம். திடமான மனத்தினள். கபடமில்லா தவள். அதிகமாகப் பேசுபவள். சிவந்த உடலுள்ளவள்.

மனைவியின் குணங்கள்

27. பித்தசூ டுடைய ளாகும் பிழையான புத்தி யில்லாள்
சுத்தமு முடைய ளாகும் தீர்த்தயாத் திரையுஞ் செய்வள்
பத்தியோர்க் கன்ன மீவள் பணிதிக ளிச்சை யுள்ளாள்
முத்தின குடும்பி யாவள் முதல்வியே கேட்டி டாயே.

27. பித்தசூட்டு நோயுடையவள். தீங்கான எண்ணங்களில்லாத வள். சுத்தமுடையவள். பல புண்ணிய ஸ்தலங்களில் நீராடுவாள். பக்தியுடைய அடியார்கட்கு அன்னமளிப்பவள். ஆபரங்களை அணி வதில் விருப்பமுடையவள். முதிர்ந்த குடும்பத்தை யுடையவள். உல குக்கெல்லாம் மூத்தவளே ! கேளுங்கள்.

புத்திரபாவம்

28. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தை காணுஞ்
சித்தாமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று
[சொன்னோம்
வித்தகர் புயண்டர் சொல்லப் பிருகுவுங் கேட்க வுற்றார்
நிர தோஷ மெவ்வாறு புகன்றீரே கார ணஞ்சொல்.

ஜாதகனுக்குப் புத்திரவிருத்தியுண்டு என்று சொல்லக் அவ் ஒருக்கால் தோன்றினாலும் அவை நிலையாமல் இறந்து புயண்ட முனிவர் சொல்லும்போது பிருகுமுனிவர்

கேட்கலானார். ஜாதகனுக்குப் புத்திரதோஷம் உண்டு என எவ்விதம் சொன்னீர்? காரணத்தைக் கூறுங்கள்.

புத்திர தோஷத்திற்குரிய கிரகநிலை

29. அஞ்சினில் ராகு நிற்க வதற்கைந்தோன் விரையம் புக்கத்
துஞ்திடு மதலை யென்றோஞ் சுதனுமே முன்ஜன் மத்தில்
மிஞ்சிய தோஷஞ் செய்தான் மேவிற்று வந்தத் தோஷஞ்
தஞ்சமாய் வந்த வூழை சாற்றுவோம் விவர மாக.

29. புத்திர ஸ்தானத்தில் ராகு இருப்பதாலும் அவ்விடத்துக்கு ஐந்தாமிடமாகிய மேஷத்துக்குரிய செவ்வாய் பன்னிரெண்டாமிடத்தில் இருப்பதாலும் புத்திரபாக்கியமில்லை. (புத்திர பாவம் கூறுமிடத்துப் புத்திர ஸ்தானத்தில் இருக்கும் கிரகங்களின் நிலையையும், பாபக்கிரகங்கள் அவ்வீட்டிலிருந்தால் அவ்வீட்டுக்குரியவன் நல்ல இடத்தில் இருந்தாலும், நல்லவர்களால் பார்க்கப்பட்டாலும், புத்திரருண்டு என்று சொல்லுவர். அல்லது அவ்வீட்டுக்குப் புத்திர ஸ்தானத்துக்குரியவன் ஜாதகத்தில் பலம் பெற்றிருந்தாலும் புத்திர பாக்கியமுண்டு என்று கூறுவர். இங்குப் புத்திர ஸ்தானத்தில் பொதுவாக ராகு இருந்து அவ்வீட்டுக்குப் புத்திர ஸ்தானமாகிய மேஷலக்னத்துக்குரிய செவ்வாயும் விரயஸ்தானத்திலிருப்பதால் அவ்விதம் கூறப்பட்டது. கிரகங்கள் லக்கினத்திலிருந்து 6, 8, 12 ஆமிடங்களில் பலம் குறைந்து இருக்கும். நல்ல பலனளிப்பதில்லை.) முற்பிறவியில் செய்த தீவினையும் ஏற்பட்டது. அத்தோஷத்தை விவரமாகக் கூறுகின்றோம்.

ஜாதகனுடைய முற்பிறவி

30. வந்தசேய் ஜனன முன்னுள் வகுத்திட கேளு மையா
கந்தன்வாழ் மலைக்குத் தெற்கி லருகினில் சிற்றூர்
[தன்னில்
முந்திய குலமு திர்த்து முதுமறை யதிகந் தேர்ந்து
தன்மனை மதலை யுண்டாய்த் தனிகனாய் வாழு நாளில்;

30. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லக் கேளுங்கள். முருகக்கடவுள் வாழ்ந்து வரும் (திருத்தணி, திருப்பரங்குன்றம், பழநி, திருச்செந்தூர் முதலிய இடங்களில் ஏதேனுமொன்றிலுள்ள) அருகிலுள்ள சிற்றூரில் அந்தண குலத்தவனாகப் பிறந்து வேகசடறக் கற்றுணர்ந்து மனைவி மக்களைப் பெற்றுப் பெருவாழ்க்கை வாழ்ந்து வருங்காலத்தில்.

31. பலவித வழக்குச் செய்வன்
பலபாவை மோகங் கொள்வன்
கலகங்கள் சிலர்க்குச் செய்வன்
கட்டுவார்த் தைகளுஞ் சொல்வன்
குலத்துளோர் பகையு மாவன்
குமரனிவ் விதமாய் வாழ்ந்தான்
நிலமையாய் வந்த வூழை
நிகழ்த்துவோங் கேளுந் தாயே.

31. பலவிதமான வழக்குகளாடி வந்தான். பலபெண்களின்மீது மோகங்கொண்டு வாழ்ந்து வந்தான். சிலருக்குச் சண்டைகளை மூட்டி விட்டான். சில பொய்களைக் கூறிவந்தான். தன் சுற்றத்தாருக்கு விரோதியாகவும் வாழ்ந்தான். இவ்விதமான தீச்செயல்களைச் செய்து வந்தான். அக்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம் தாயே! கேட்பீராக.

விதவையுடன் சிற்றின்பம் துய்த்தது

32. தன்குல விதவை போகந் தான்வெகு நாளாய்ச் செய்து
அன்னவள் தனக்குக் கர்ப்ப மணுகியே யிவன்பால்
[செல்ல
பின்னங்கள் செய்ய வெண்ணிப் பலவித அவிழ்த மீய
நன்னிய கருவு நீங்கி நங்கையுஞ் சுகமே யானுள்.

32. தன் குலத்தில் தோன்றிய ஒரு கைம்பெண்ணுடன் இவன் வெகுகாலமாக கட்புக் கொண்டிருந்து சிற்றின்பம் அனுபவித்து வந்தான். அதனால் அப்பெண்ணுக்குக் கருவேற்பட்டது. அப்பெண்ணும் இவனிடம் சென்று தான் கருவுற்றிருப்பதைக் கூறினாள். இவன் அக்கருவைப் போக்கப் பலவித மருந்துகளைக் கொடுத்தான். அதனால் கருவு நீங்கக் கைம்பெண்ணும் உடல் நலம் பெற்றாள்.

காப்பத்தை யழித்த தோஷமும் மாரியம்மன் கோயிலில் வாழ்ந்த சர்ப்பத்தைக் கொன்றதும்

33. இப்படி மூன்று கர்ப்ப மிவனுமே யழித்தா னென்றோஞ்
செப்புவோ மந்த தோஷஞ் சேயனைப் பற்றிற் றம்மா
ஒப்புடன் வேறு வொன்று வுரைக்கிறோம் மாரி
[கோவ்டம்
எப்போது நாக மொன்று யிருந்தது வோர்நாள் தன்னில்;

இவ்விதம் இவன் மும்முறை கர்ப்பத்தை அழித்தான். கர்ப் அழித்த தோஷம் இவனைப் பற்றியது. இது தவிர வேறு தால்லுகிறோம். மாரியம்மன் கோவிலில் வெகுகாலமாக ஒரு ந்து வந்தது. அஃது ஒரு நாளில்,

34. மகுடத்தால் வெளியில் செல்ல மறையவ னதனைக் கண்டு
பகையாகக் கழியால் வாட்டப் பரலோகம் நாகஞ் சேரத்
தகமையாயந்தத் தோஷந் தங்கிற்று விவனுக் கேதான்
இகபரன் பூசை செய்யு மீச்வரி கேட்டி டாயே.

34. வெளியில் சென்று படமெடுத்து ஆடியது. இவ்வந்தணனும் அதைப் பார்த்துத் தீய எண்ணங்களுடன் அதைத் தடியால் அடித்துக் கொன்றான். அந்தத் தோஷம் இவனைச் சார்ந்தது. சிவபெருமானைப் பூசைபுரியும் தேவியே! கேளுங்கள்.

35. பூமியில் சிலகாள் வாழ்ந்து பொருளது யாவுந் தோற்றுத்
தீமையை விலக்கு கின்ற திருக்கூடல் தன்னில் சென்று
எமன்பக்கல் புக்கி யேழு நரகினில் சென்று வின்னென்
றேமங்க ளொழுகும் வேத நிருமிக்க வந்தா னென்றோம்.

35. இவன் சிலகாலம் பூமியில் வாழ்ந்து தன்செல்வங்கள் எல்லாவற்றையும் இழந்து பாவத்தை விலக்கும் திருமுக்கூடல் தன்னில் வாழ்ந்து, மரணமடைந்து ஏழு நரகத்திற்கும் சென்று (துன்பமடைந்து) வேதங்களுணர்ந்த பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவில் பிறந்தான் என்றோம்.

36. அத்திரி சொல்லு கின்றார் அவனுமுன் சென்மம் வேதம்
பெத்தவ னிஞ்ஞென் மத்தில் படியேறுக் கார ணம்சொல்
வித்தகன் முன்ஜென் மத்தில் வேதங்க ளறிந்தா னன்றி
சுத்தமு மில்லா ஜகிச் சுருதிபோல் நடவாத் தாலும்;

36. அத்திரி முனிவர் கூறுகின்றார். ஜாதகன் முற்பிறவியில் வேதங்கள் ஓதும் அந்தணகுலத்தில் பிறந்தும் அதற்குமேல் செல்லாத காரணத்தை (குலம் தாழ்வாகப் பிறந்ததை)ச் சொல்லுங்கள். ஜாதகன் முற்பிறவியில் வேதங்களைக் கற்றிருந்தும் சுத்தமில்லாதவனாகவும் வேதங்களில் சொல்லப்பட்டபடி நடவாததாலும்.

37. பிறந்தன னிக்கு லத்தில் பேதையின் கருவின் தோஷங்
குறைதலை மாரி நாகங் கொன்றவ ழிரண்டுஞ் சேர்ந்து
பருகிற்று விச்சென் மத்தில் பாலர்கள் தோஷ மெய்துங்
குறுகிய தோஷந் தீரக் கூறுவோஞ் சாந்தி தானே.

37. இப்பிறவியில் இக்குலத்தில் பிறந்தான் என்றோம். கைம்பெண்ணின் கரு வழித்த தோஷத்தாலும், மாரியம்மன் கோவிலிலிருந்த சர்ப்பத்தைக் கொன்ற தோஷத்தாலும், இப்பிறவியில் தோஷம் ஏற்படும். அத்தோஷங்கள் தீரச் சாந்திகள் செய்யுமாறும்.

புத்திரதோஷம் விலகச் சாந்தி

38. தன்னகர் கீழ்ப் பாலாகச் சலக்கரை யருகில் நிற்கும்
உன்னத மாரி பக்கல் உரகனுங் செய்து வின்னோன்
எந்நாளுந் தீப மொன்று வைத்திடத் தோஷ நீங்கி
மன்மதன் போலே புத்ரர் வறைந்தன மிவனுக்
[கேதான்.

38. தன்னூருக்குக் கிழக்கில் உள்ள நதியின் அருகில் இருக்கும் உயர்ந்த மாரியம்மன் கோவிலுக்குப் பக்கத்தில் (கோவிலில்) இவன் சர்ப்பத்தைப்போல் கல்லால் ஓர் உருவத்தைச் செய்துவைத்துத் தூங்கா விளக்கு ஒன்றும் ஏற்றி வைத்தால் தோஷங்கள் விலகி மன்மதன்போல் அழகிய புத்திரர் தோன்றுவர், என்று உரைக்கின்றோம்.

தந்தையின் மரண காலம்

39. முன்வினை நிவிர்த்தி செய்தா லுதித்தசே யாண்பா
[லொன்று
பெண்ணது விரண்டு மாகும் பேசுவோ மூன்றுந் தீர்க்கம்
மன்னிய கரும காலம் வரைகிறோம் முப்பா னுலில்
துன்னிய வானி மாதந் தந்தைக்குக் கண்ட மென்றோம்.

39. முற்பிறவியில் செய்த தீவினைக்குப் பரிகாரம் செய்தால் ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் தோன்றி நீண்ட ஆயுள் உடையவர் களாக இருப்பர். இனிக் கரும காலங்களைச் எழுதுகின்றோம். ஜாதக னுடைய தந்தை இவனுடைய முப்பத்து நான்காம் வயதில் ஆனிமாதத் தில் மரண மடைவான்.

தாயின் மரணகாலமும் ஜாதகனின் மரண காலமும்

40. எண்ணஞ்சு நாலு வாண்டி லைப்பசி மாதந் தன்னில்
திண்ணமாய் மாதுர் கண்டஞ் செனித்தசேய்
[தனக்கு மேதான்
வண்ணமா யறுப தாண்டி லைப்பசி மாதம் தன்னில்
பின்பக்கந் துவாதேசி பிறந்தசேய் தனக்குக் கண்டம்.

40. நாற்பத்தி நான்காம் வயதில் ஐப்பசி மாதத்தில் தாய் நிச்சய மாக மரண மடைவாள். ஜாதகன் தன் அறுபதாம் வயதில் ஐப்பசி மாதத்தில் கிருஷ்ணபட்சம் துவாதசி திதியன்று மரண மடைவான்.

ஜாதகன் ஆயுர்பாவம்—கிரகநிலை

41. இது மத்தில் ஜாதகர்க்கு இலகாதோ மார கங்கள்
விதங்களைச் சொல்லு மென்ன வேதியன் மூன்றில் நிற்கப்
பன்புகர் சனியு நாலில் பொருந்தியே யிருப்ப தாலே
தித நோய்கள் வந்து மிடருகள் செய்யா வென்றோம்.

41. இதற்கிடையில் ஜாதகனுக்குக் கண்டங்கள் ஏற்படாவோ? அவற்றைச் சொல்லுங்கள். என, குரு மூன்றும் இடத்தில் இருக்கும் பலத்தாலும், புதன் சுக்கிரன் சனி சுகஸ்தானமாகிய நாலாமிடத்தில் இருப்பதாலும் எவ்வித வியாதிகள் ஏற்பட்டாலும் மரணம் சம்பவிக்காது என்றேம்.

பொது யோகம்

42. அறுபது வாண்டு மட்டு மறைந்தனந் தீர்க்க மாகப்
பொதுயோகந் தன்னைச் சொல்வேன் புகருமே
[நாலில் கிற்க
நிதியது நேரு மென்றேரும் நிமலியுங் கேட்க லுற்றுள்
எதுவிட மெந்தக் கால மிலகிடும் நிதிநிட் சேபம்.

42. அறுபதாம் வயது வரையில் ஜாதகன் நீண்ட ஆயுள் உள்ளவன். அவனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றேரும். சுக்கிரன் நான்காமிடத்தில் இருப்பதால் அவனுக்குப் பூமியிலிருந்து புதையல் கிடைக்கும் என்றார். பார்வதி தேவி கேட்கலானார். எந்த விடத்தில் எந்தக் காலத்தில் ஜாதகனுக்குப் புதையல் கிடைக்கும்?

43. பனிரெண்டு வாண்டு தன்னில் பூமியில் தனங்கள் நேருந்
தனிமையா யிரண்டி லேதான் சாற்றுவேன் விவர மாகக்
கனதன மேன்மே லோங்குங் காரிய சமர்த்த னுகும்
இனமது மெச்ச வாழ்வன் எதிரிக்கு வஞ்சா னென்றேரும்.

43. ஜாதகனுடைய பன்னிரண்டாம் வயதில் பூமியிலிருந்து புதையல் கிடைக்கும். அவ்விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேரும். பெருஞ் செல்வம் கிடைத்து விருத்தியாகும். காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்வான். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். விரோதிகட்குப் பயப்படாதவன் என்றேரும்.

44. நினைத்தகா ரியமு டிப்பன் நிருபர்க ளுறவு கொள்வன்
அனைத்துளோர் வசியங் கொள்வ னவன்சல்லியங்
[கொள்ளா னுகுஞ்
ஜனித்தநாள் முதலே யாக சதுராண்டு வரைக்குந் துன்பந்
தனமூல மலைச்ச லாகுஞ் சல்லியப் பாதை நேரும்.

44. எண்ணிய காரியங்களைச் செய்து முடிப்பான். அரசாங்கத்தாருடன் தொடர்புள்ளவனுவன். எல்லோரையும் வசியப்படுத்தும் இயல்பினன். கடன் வாங்காதவன் என்றேரும். பிறந்த நாள் முதல் நான்காம் வயது வரையில் துன்பம் ஏற்படும். பண விஷயமாக அலைச்சலும் துன்பமும் ஏற்படும்.

45. அதற்குமேல் வறுமை யில்லா ஸ்திகள் மொத்தஞ்
[சொல்வேன்
பதிபூமி பணிகள் யாவும் பெருமேயெண் ணாயி ரம்பொன்
மதிபிறை போலே யோகம் வறைந்தன மிவனுக்
[கேதான்
அதிதியை யாதரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

45. அதற்குப் பிறகு தரித்திர மில்லாதவன். அவனுடைய ஆஸ்திகள் யாவும் சேர்த்துக் கணக்கிட்டால் வீடு நிலங்கள் ஆபரணங்கள் முதலியவைகளின் பெறுமானம் எட்டாயிரம் பொன் என்றும். வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் இவனுக்கு விருத்தியாகும். கதியற்றவரைக் காக்கும் தேவியே! கேளுங்கள்.

ஜனன காலதசை

46. பிறந்தசேய் ஜனன காலம்
பொன்தசை தனிலி ருப்புச்
சிறந்திடு திங்க ளொன்பான்
செப்புவோம் பலனா யாங்கள்
உறைந்திடு நலிகள் தாமும்
ஓங்கிய செல்வங் குன்றும்
மறைந்திடுஞ் சிலது செம்பொன்
வறைகிறோம் விவர மிரண்டில்.

46. ஜாதகனது ஜனன காலத்தில் குருமகாதசையில் இருப்பு ஒன்பது வருடங்கள் ஆகும். அக்காலத்திய பலன்களைக் கூறுகின்றோம். துன்பங்கள் ஏற்படும். பெருகிய செல்வம் குறையும். சில பொருள்கள் காணமல் போகும். மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 65

1. அரியது ஜனன மாக வரவுமே நாலி லாகப்
பிறையைந்தில் புகர்பொன் கேது புதன்பத்தில்
[சேய்வி யத்தில்
கரியவன் பானு மொன்பான் கழறுவீர் பலனை யென்று
நிறைபரா பரியும் கேட்க நீள்சடை முனிவர் சொல்வார்.

1. சிம்மம் இலக்கினமாகவும், ராகு நான்காமிடத்திலும், சந்திரன் ஐந்தாமிடத்திலும், சுக்கிரன் குரு கேது புதன் பத்தாமிடத்திலும், செவ்வாய் விரயஸ்தானத்திலும், சனி சூரியன் ஒன்பதாமிடத்திலும் இருப்பின் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதி தேவி கேட்க, நீண்ட ஜடையைத் தரித்த முனிவர் கூறுகின்றார்.

கிரகநிலை

	சனி சூரியன்	சுக்கிரன் குரு கேது புதன்	
	இராசி சக்கரம்		செவ்வாய்
			லக்கினம்
சந்திரன்	ராகு		

ஜாதகியின் வீட்டு நிலை

2. இந்தசேய்ப் பெண்பால் ஜன்ம மில்லமுங் கீழ்மேல் வீதி
தென்வாடை கீழ்ப்பால் மாரி சலக்கரை யருகில் தங்கும்
அந்தரி காளி தந்தி யணுகிடுஞ் சிறுவு ராகும்
இந்திர சதனம் போன்ற எழில்மாது ரில்ல மென்றோம்.

2. இந்த ஜாதகம் பெண்ணினுடையது. அவள் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு வரிசையிலுள்ளது. கிழக்குப் பக்கத்தில் மாரியம்மன் கோவிலும் சமீபத்தில் ஒரு நீர் நிலையும் உள்ளன. காளி கோவிலும், விநாயகர் ஆலயமும் பக்கத்திலுள்ள சிற்றூரில் தேவலோகம் போன்ற அழகிய தாயின் வீட்டில் பிறந்தவள் என்றோம்.

ஜாதகியின் குலம்

3. வடுகர்தங் குலமே யாகு மாதவு மூன்றுஞ் ஜன்மந்
திடமூடன் தந்தை யன்னை ஜனித்திடு புத்திரர் போகம்
அடைவுடன் முன்பின் ஜன்மம் அதனுடன் சாந்தி தானுந்
தடவரை மகளே யாங்கள் சாற்றுவோ மிந்நூல் தன்னில்.

3. ஜாதகி வன்னிய குலத்தில் தன் தந்தைக்கு மூன்றும் பிறவியர்கப் பிறந்தாள் என்றேரும். ஜாதகியின் தந்தை தாய் புத்திரர் இவர்களின் யோகம் முற்பிறவி மறுபிறவி ஆகிய இவைகளையும் சாந்தி விவரங்களையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேரும். மலையரசனின் மகளே! கேளுங்கள்.

தந்தையின் உடன்பிறந்தவர்

4. தந்தையின் துணைவ ரெட்டி
லாணிரண்டு கன்னி யவ்வாறு
சந்ததந் தீர்க்க மெய்துஞ்
சந்ததி சிலர்க்கு வுண்டு
அந்தயில் விட்டு நீங்கி
யன்னைபால் சேர்வான் தந்தை
விந்தையாய்ச் செட்டுச் செய்வன்
வீண்வார்த்தை புகலா னுகும்.

4. ஜாதகியின் தந்தையின் உடன்பிறந்தவர் எட்டுப்பேராவர். இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் பிறந்து நீண்ட ஆயுளுடன் இருப்பர். அவர்களில் சிலருக்குப் புத்திர பாக்கியமுண்டு. அவர்களை விட்டுப் பிரிந்து ஜாதகியின் தந்தை தன் மனைவியின் வீட்டிற்குச் சென்று அங்கு வாழ்ந்து வருவான். அற்புதமான வியர்பாரத்தைச் செய்து வருவான். வீண் வார்த்தைகளைப் பேசாதவன்.

தந்தையின் குணங்கள்

5. கல்விமா னுண்மை யாளான் கசடரை யுறவு கொள்ளான்
நல்லவ னுகி வாழ்வன் நயம்படக் கூறு வானும்
இல்லையென் றுரைக்க மாட்டான் இருநிறம் சமதே [கத்தான்
சொல்லதைக் காப்பா னுகுஞ் சோம்பிடான் காரி யத்தில்.

5. கல்வியறிவுள்ளவன். உண்மையையே பேசுபவன். அற்பர்களுடன் நட்புக் கொள்ளாதவன். நல்லவனுக வாழ்ந்து வருவான். நியாயமாகப் பேசுபவன். யாசித்தவர்கட்கு இல்லையென்று சொல்லாதவன். கரியநிறமும் சமமான உடலமைப்புமுள்ளவன். தன் வார்த்தைகளைக் காப்பவன். காரியங்களைச் சேரம்பலில்லாமற் செய்து முடிப்பவன்.

இதுவுமது

6. தந்திர மொழியு முண்டு தந்தையி னுஸ்தி காணன்
வந்தவர்க் கன்ன மீவன் மர்மத்தை வெளிக்காட் டாதான்
நிந்தைக ளேற்கா னுகும் நிமிஷத்தில் கோபி யாவன்
சொந்தயில் செய்யா னுகுந் தேவதா பத்தி பூண்பன்.

6. தந்திரமாகப் பேசுபவன். தன் தந்தையின் சொத்துக்களில் லாதவன். அண்டி வந்தவர்கட்கு அன்னமளிப்பவன். ரகசியத்தை வெளிவிடாதவன். வீண் அபவாதத்தை யடையாதவன். சீக்கிரத்தில் கோபங்கொள்ளும் இயல்பினன். சொந்த வீடில்லாதவன். தெய்வ பக்தி யுள்ளவன்.

தந்தையின் முற்பிறவி

7. முன்னவ னிருந்த ஜன்மம்
மொழிகிறேரும் பழனி நாட்டில்
அன்னவன் சூத்திர ஜாக
வணுகியே மனைவி மைந்தர்
பொன்னெடு பணிதி யுண்டாய்ப்
புகழ்ச்சியாய் வாழு நாளில்
தன்னுடன் பிறந்தோன் பாகந்
தராமலே மோசஞ் செய்தான்.

7. ஜாதகியின் தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். பழனி என்ற க்ஷேத்திரத்தில் நான்காம் வருணத்தவனுகப் பிறந்து மனைவி மக்களைப்பெற்று பொன் ஆபரணங்களை யடைந்து கீர்த்தி யுடன் வாழ்ந்து வருங்காலத்தில் (ஏற்பட்ட தெவினையைச் சொல்லு கின்றேரும்). தன்னுடைய சகோதரனுக்குரிய பாகத்தைத் தராமல் மோசம் செய்தான்.

சகோதர சாபம்

8. மனமது வருத்த முற்று
வறைகிறுன் சாபந் தானுங்
துணைவன்தன் பாக மீயா
துர்வார்த்தை சொன்ன பாவி
சினமுடன் பின்ஜன் மத்தில்
தந்தையார் ஜிதங்கள் விட்டு
மனையிலே வாழ்வா யென்று
வறைந்தனன் துணைவன் தானும்.

8. மனம் வருந்திய சகோதரன் சாபமிடுகின்றன். கூடப்பிறந்த வனுடைய பாகத்தைத் தராமல் கெட்ட வார்த்தைகளைக் கூறிய பாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில், நீ, தந்தையின் ஆஸ்திகளைப் பெருமல் வீட்டைவிட்டு நீங்கி மனைவியின் வீட்டில் வாழ்ந்து வருவாய் என்றன்.

9. இன்னமும் பலவாறு சொன்னு
னெய்திற்று வந்தந் தோஷம்
அன்னவ னந்தி யத்தில்
அவன்செல்வங் குறைவு நேர்ந்து
தென்திசைக் கால நாடு
சேர்ந்துமே பிரமன் லக்கம்
பின்னமாய்ச் சலமாம் பக்கம்
பொருந்துமிக் குலத்தி லேதான்;

9. இன்னும் பலவிதமாகச் சொன்னன். அந்தத் தோஷம் இவனே வந்தடைந்தது. இவனும் தன் கடைசிக் காலத்தில் செல்வங் களே யிழந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு ஜலக்கரைக்குப் பக்கத்திலுள்ள இவ்வூரில் இக்குலத்தில்

ஜாதகியின் சகோதர பாவம்

10. வந்தவ னென்று சொல்வோம்
வறைந்தவிக் குணத்தா னுக்கு
இந்தமா துதிப்ப ளாகும்
இவள்துணை யாண்பால் காணுள்
முந்திப்பெண் ணிரண்டுந் தீர்க்கம்
மொழிகிறோம் பின்பால் சேதி
சுந்தர வதனுள் சேதி
செப்புவோ மினிமே லாக.

10. பிறந்தான் என்றோம். இவ்விதம் சொல்லப்பட்ட குணங்க ளுள்ளவனுக்கு இந்த ஜாதகி பிறப்பாள் என்றோம். இவளுக்குச் சகோதரனில்லை இவளுக்கு மூத்த சகோதரிகள் இருவர் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். அவர்களைப் பற்றிய செய்திகளைப் பிற்பாகத் தில் சொல்லுகின்றோம். இனி அழகிய முகத்தையுடைய ஜாதகியின் விவரங்களைக் சொல்லுகின்றோம்.

பின்வரும் இரு பாடல்கள் ஜாதகியினுடைய குணங்களைக் கூறும்

11. பாலிகை குணத்தைச் சொல்வேன் பரவுப காரி யாகுஞ்
சீலியா நற்கு ணத்தாள் செப்புமுன் கோபி யாவள்
ஞாலமேல் நல்லோ ளாவள் நாயகன் மனத்துக்
[கேத்தோள்
மால்மனை யொப்ப ளாவள் மாநிற முடைய ளாகும்.

11. ஜாதகியின் குணங்களைச் சொல்லுகின்றோம். பிறருக்கு உபகாரியாக இருப்பாள். நல்லொழுக்கமும் நற்குணமும் பொருந்தியவள்.

சொல்வதற்குமுன் கோபங் கொள்ளுவாள். இலக்குமியைப்போன்ற செல்வி. மாநிறமுள்ளவள்.

12. வறுமையெப் போதுங் காணுள் மாதுரு சுகமு முண்டு
பெறுந்தந்தைச் சுகமில் லாதாள் பின்துணை காணு
[ளாகுந்
தரையது விருத்தி யுண்டு தனம்பணி யுடைய ளாகும்
பறைபள்ளு முடைய ளாவள் பணிந்தோரை யாத ரிப்பள்.

12. ஒருகாலத்திலும் தரித்திரத்தை யடையாதவள். தாயினல் சுகத்தையடைவாள். தந்தையால் அடையக்கூடிய நலனில்லாதவள். பின்பிறந்த சகோதரரில்லாதவள். விளைநிலங்களின் பெருக்கமுள்ளவள். செல்வம் ஆபரணங்கள் இவற்றை உடையவள். ஆட்படைகள் உள்ளவள். தன்னை அண்டி வந்தவர்களைக் காப்பவள்.

ஜாதகியின் திருமணக்காலமும் கணவனின் குணங்களும்

13. ஈரேழு வாண்டுக் குள்ளே யிவளுக்குச் சுபமு நேரும்
மாரனுந் தென்பால் நேரும் வறைகிறே மவன்கு
[ணத்தைப்
பாரது விருத்தி செய்வன் பலவணி பங்கள் செய்வன்
கூறுவான் சுகமாய் வார்த்தை புன்சிரிப் புடைய னுமே.

13. ஜாதகியின் பதினன்காம் வயதுக்குள் அவளுக்குத் திருமணம் நிகழும். கணவன் தெற்குப் பக்கத்திலிருந்து வரய்ப்பான். அவனுடைய குணங்களைக் கூறுகின்றேம். பூமியைப் பெருக்குவான். பலவிதமான வர்த்தகங்களைப் புரிந்து வருவான். இன்புறும்படி பேசுபவன். புன்சிரிப்புள்ள முகத்தினன்.

இதுவுமது

14. மால்நிறம் உணச்சல் தேகி
மர்மமில் லாதா னுகுங்
காலத்தை யறிந்து வாழ்வன்
காலிகள் பணையோர் விருத்தி
சீலம்போல் வெளிம யக்கன்
செரிந்திடும் பித்தச் சூடு
ஞாலமேல் வறுமை காணன்
சுவமதாந் துணைவ ரென்றேறும்.

14. திருமாலைப்போன்று கரிய நிறமுள்ளவன். மெல்லிய சரீரமுடையவன். இரகசியமில்லாதவன். வருங்காலத்தை அறிந்து வாழ்ந்து வருவான். கால்நடைப் பெருக்கம் பண்ணை ஏர் முதலியன

உள்ளவன். நல்லொழுக்கமுள்ளவன்போல் பிறர் நினைக்கும்படி வாழ்ந்து வருவான். பித்தசீரூட்டு நோயுள்ளவன். உலகில் தரித்திரமில்லாதவன். உடன்பிறந்தவர் ஒன்பதின்மரென்றேரும்.

கணவரின் சகோதரபாவம்

15. அதுகளில் சிலவே தோஷ
மழகிய கன்னி நான்கு
இதுகளுந் தீர்க்க மெய்து
மிடரென்றேர்க் குதவி செய்வன்
பதியது பின்னல் செய்வன்
பரவுப காரி யாகுந்
துதிசெய்தோர்க் குதவு வாளுஞ்
சலத்தொழில் செட்டுச் செய்வன்.

15. அவர்களில் சிலர் நிலையில்லாதவர். அழகிய சகோதரிகள் நால்வர் நீண்ட ஆயுள் உள்ளவர் என்றேரும். துன்பமடைந்தவர்கட்கு உபகாரம் செய்வான். பிற்காலத்தில் வீட்டைக் கட்டுவான். அயலாருக்கு உதவியாக இருப்பவன். தோத்திரம் செய்பவர்கட்கு உபகாரம் செய்பவன். நீரில் செய்யக்கூடிய வியாபாரம் செய்து வருவான்.

சகோதர தோஷம்

16. தன்துணை யாண்பால் காணன் சாற்றுவீ ரந்தச் சங்கை
அன்னவன் கன்னி ஜன்மம் அஸ்தங்கா ளுதிப்பா ளுகும்
மன்னுமூன் ரூமி டத்தில் மங்கலன் கேது நிற்பான்
இன்னவாறு பலத்தி னுலே யிவனுக்குத் துணையாண்
[தோஷம்.

16. ஜாதகியினுடைய கணவனுக்குச் சகோதரரில்லை என்று சொல்லுகிறீர்களே! அதற்குரிய காரணத்தைச் சொல்லுங்கள். கணவன் கன்னியா லக்கினத்தில் அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவன். அவனுக்கு இராசி சக்கரத்தில் மூன்றுமிடத்தில் அங்காரகனும் கேதுவும் இருப்பதால் அவனுக்குச் சகோதர தோஷமுண்டு என்று சொன்னேம்.

குணஞ் செயல்கள்

17. பூர்வமாந் தந்தை யில்லம் புகாமலே தென்பா லில்லஞ்
சேருவான் பூமி யில்லஞ் சிறப்புறும் என்று சொல்வோம்
மாரனும் வயது தீர்க்க மாநிலஞ் சல்லியங் காணன்
தீரமில் லாத நெஞ்சஞ் சிறுத்தோர்க்கு வுதவி செய்வன்.

17. தன் தந்தையின் வீட்டை அடையாமல் அதற்குத் தெற்குப் பக்கத்தில் புதிய வீட்டை அமைத்து அவ்வீட்டில் வசித்து வருவான்.

பூமிகள் வீடு முதலியவை சிறப்புள்ளவை என்றும் கூறுகின்றோம். அவன் நீண்ட ஆயுள் உள்ளவன். உலகில் கடன் உபத்திரவமில்லாதவன். தைரியமில்லாத மனமுள்ளவன். ஏழைகளுக்கு உபகாரம் செய்பவன்.

இதுவுமது

18. தந்தையின் வர்க்கந் தானுந் தாமரைத் தடாக மொப்பாஞ்
தந்தையின் துணைவர் வர்க்கஞ் சாற்றவே பல முரைத்து
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விவர மாகச்
சந்ததி பலத்தை யாங்கள் சாற்றுவோ மினிமே லாக.

18. அவனுடைய தந்தையின் வர்க்கத்தார் தாமரைக்குளத்துக்குச் சமமானவர் என்றும் தந்தையின் சகோதரர் வர்க்கம் விருத்தியுள்ளது என்று சொல்ல இடமில்லை. பிற்பாகத்தில் அவ்விவரங்களைப்பற்றி விரிவாகச் சொல்லுகின்றோம். இனி ஜாதகியின் புத்திர பாவத்தைக் கூறுகின்றோம்.

ஜாதகியின் புத்திரபாவம்

19. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பல முரைத்து
சித்தமா யுதித்தா னுந்தான் தீங்காகு மென்று
[சொல்வோம்
எத்தகைப் பலத்தி னுலே யியம்பினீ ரந்தச் சங்கை
புத்திர நாதன் பத்தில் புதன்புகர் கேது வோடு;

19. ஜாதகிக்குப் புத்திரவிருத்தி யுண்டு என்று கூறக் கிரக பலமில்லை. ஒருக்கால் பிறந்தாலும் அவை நிலையாமல் இறந்து விடும் என்று சொல்லுகின்றோம். எவ்விதக் கிரக பலத்தால் அவ்விதம் கூறுகின்றீர்கள்? அதைச் சொல்லுங்கள். புத்திர ஸ்தானுதிபதியாகிய (புத்திரகாரகனுகிய) குரு பத்தில் புதன் சுக்கிரன் கேது இவர்களுடன் கூடியிருப்பதாலும்;

இதுவுமது

20. அஞ்சினில் மதியு நிற்க அலரியின் மகனு நீசந்
தஞ்சமா யிருப்ப தாலே சாற்றினேம் புத்திர தோஷம்
மிஞ்சிய ஜன்மந் தன்னில் மேவிற்று வினைய நேகம்
வஞ்சனை யென்ன செய்தா ளறிப்பீ ரந்தச் சங்கை.

20. புத்திர ஸ்தானத்தில் சந்திரனும் அவ்விடத்துக்கு ஐந்தாமிடமாகிய மேஷத்தில் சனி நீசமாகவும் இருப்பதாலும் புத்திர தோஷமுண்டு. (புத்திர பாவத்தைச் சொல்லுங்கால் ஐந்தாமிடத்துக்கு ஐந்தாமிடத்தைப் பார்த்து அவ்விடத்திலிருக்கும் கிரகபலத்தைக் கூறுவது மரபு. சான்று, ஜாதகம் 65, பாட்டு 29, பக்கம் 806).

முற்பிறவியில் அநேகத் தீவினைகளைச் செய்ததன் பயனாலும் அவ்விதம் நேரிட்டது. என்ன தீவினைகள் செய்தாள்? அவற்றைக் கூறுங்கள்.

ஜாதகியின் முற்பிறவி

21. மாதுமுன் ஜன்மஞ் சொல்வோ மாயூர மருகில் கீழ்ப்பால்
தீதிலா வன்னிய சேயாய் ஜனித்துமே வரனு முண்டாய்க்
காதலி வாழ்ந்து மேதான் கனத்ததோர் குடும்பி யாகி
மேதினில் வாழு நாளில் மேவின வினையைக் கேண்மோ.

21. ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். மாயவரத்துக்கு அருகில் கிழக்குத் திக்கிலுள்ள ஊரில் தீங்குகளில்லாத வன்னிய குலத்தில் பிறந்து கணவனைப் பெற்று, பெரிய குடும்பியாகவும் வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேட்பீராக.

தீவினை: முனி சாபம்

22. தன்னுடைக் கொல்லை தன்னில்
தங்கிற்றுக் கருப்பன் சாமி
முன்னோர்கள் தோத்த ரிப்பார்
முதல்வியுந் தொழாமல் நின்றாள்
துன்முனி புகலுஞ் சாபந்
தொழாமலே நின்ற பாவி
உன்சுதர் யாவுங் கொல்வேன்
உதிக்கும்பின் ஜன்மந் தன்னில்;

22. தன்னுடைய வீட்டுக் கொல்லையில் ஒரு கருப்பன்சாமி வாழ்ந்து வந்தது. அந்தச் சுவாமியை இவளுடைய முன்னோர்கள் தோத்திரம் செய்து துதித்து வந்தனர். இவள் அச்சுவாமியை வணங்காமலிருந்து வந்தாள். அந்த முனி கூறிய சாபத்தைக் கேட்பீராக. என்னைத் தொழாமல் இருந்த பாவியே! உன் புத்திரர்கள் எல்லோரையும் அழிப்பேன். இனிவரும் அடுத்த பிறவியிலும்;

இதுவுமது

23. துணையாண்பா லில்லா தாயுஞ் சுதர்களு மில்லா தாயுங்
கனமுள தந்தை யாலே காதலி சுகமில் லாமல்
வினைமன மாகச் சொல்லி மேவிற்று அந்தச் சாபஞ்
சினமுடன் வேறு வொன்று செப்புவேன் தோஷந்
[தானே.

23. உடன்பிறந்த சகோதரரில்லாமலும் புத்திரர்களில்லாமலும் தன்னைப்பெற்ற தந்தையால் சுகமடையாதவளாகவுஞ் செய்வேன் என்று பழி வாங்கும் மனத்துடன் அது சொல்லியது. அந்தச் சாபம் இவளைப் பற்றியது. இதுதவிர வேறு ஒன்றும் கூறுகின்றோம்.

ஏழை சாபம்

24. பஞ்சையா யேழை மாது பாலர்க்கு வன்னம் வேண்டி
வஞ்சிபால் வினவும் போது வரிபோலே கோப முற்று
மிஞ்சிய வார்த்தை சொல்லி விரட்டினள் மாதைத் தானும்
நஞ்சுபோல் மனத்த ளாகி நவிலுவாள் சாபந் தானும்.

24. ஏழைப்பெண் ஒருத்தி தன் குழந்தைக்குச் சிறிது அன்னம் கொடுக்க அவளைக் கேட்கும்போது அவள் சிங்கம்போல் கோபங் கொண்டு கடுமையான வார்த்தைகளைக் கூறி அவளை விரட்டி விட்டாள். கொடிய விஷம்போல் மனமுடையவளாகி, ஏழைப்பெண் சாப மிடுகின்றாள்.

இதுவுமது

25. பாலர்சோ றீயாப் பாவி பிறக்கினும் மறுஜன் மத்தில்
சாலவே சுதர்க ளின்றித் தன்துணை யாண்பா லின்றி
ஞாலமேல் வாழ்வா யென்று நவின்றுவே றில்லம்
[சென்றாள்
ஆலம்போ லந்தச் சாப மணுகிற்று வென்று சொல்வோம்.

25. குழந்தையின் பசிக்கு அன்னம் தராத பாவியே! இனி ஏற்படும் மறுபிறவியிலும் நீ புத்திரர்களில்லாமலும் உடன்பிறந்த சகோதரர்களில்லாமலும் உலகில் வாழ்ந்து வருவாய் என்று கூறி விட்டு வேறு வீட்டுக்குச் சென்றாள். கொடிய விஷம்போல் அந்தச் சாபமும் இவளை அடைந்தது என்று சொல்லுகின்றோம்.

26. மாதுவுக் கந்தி யத்தில் மைந்தர்கள் தோஷ மாயும்
வேதனை மனத்த ளாயும் மேவினள் கால நாடு
தீதிலாப் பிரமன் லக்கஞ் ஜனித்தன னென்று
[சொல்வோங்
கோதிலா முனியின் சாபங் கோதையின் சாப முந்தான்;

26. அப்பெண்ணுக்குத் தன் கடைசிக் காலத்தில் புத்திர தோஷ மேற்பட்டுத் துன்புற்ற மனமுள்ளவளாகி மரணமடைந்தாள். வேறு தினுசுகளில்லாமல் பிரமனால் படைக்கப்பட்டுப் பிறந்தவள் இவள் என்று சொல்லுகின்றோம். முனியின் சாபமும் ஏழைப்பெண்ணின் சாபமும்;

சாந்தி

27. இந்ததோர் ஜன்மந் தன்னி லெய்திடுஞ் சுதர்கள்
[தோஷம்
வந்ததோர் வினைகள் தீர வறைவீரே கிரியை தானுஞ்
சந்ததங் கரும சாந்தி செய்துமே சத்தி பீஜம்
விந்தையாய் ரேக்கில் கீரி மெல்லியின் மூலந் தன்னை;

27. ஏற்பட்டதால் இப்பிறவியில் புத்திரதோஷம் ஏற்படும். அவளுக்கு ஏற்பட்ட தீவினைகள் நீங்கச் சாந்தி யொன்று கூறுகின்றேம். வேதத்தில் சொல்லப்பட்ட கருமசாந்தி செய்து சக்தியின் பீஜாட்சரத்தை மெல்லிய தகட்டில் வரைந்து அத்தகட்டை பூஜை செய்து சக்தியின் பீஜாட்சரத்தை;

நோன்பு

28. சகஸ்ரமுஞ் ஜபித்து மேதான் சத்தியின் தகடு தன்னைச்
சுகமூட னணிந்துக் கொண்டு சுக்கிர வார நோன்பு
பகையிலா வாண்டு கொள்ளப் பாலர்கள் விருத்தி யாவர்
உகமையாய்ச் செய்யா ளாகில் உதிக்காவே யுதிக்கில்
[தீதாம்.

28. ஆயிரம் தடவை ஜபித்து அத்தகட்டை பக்தியுடன் அணிந்து வந்து வெள்ளிக்கிழமை தினத்தன்று விரதம் தொடர்ச்சியாக ஒரு வருடகாலம் இருப்பாளாகில் புத்திர தோஷம் விலகி புத்திர பாக்கியமுண்டாகும். அலட்சியமாகச் செய்யாவிடில் புத்திரர் தோன்றுவர். தோன்றினும் நிலையார்.

29. சொற்படி செய்வா ளாகில்
தோன்றிடு மாண்பா லொன்று
மைப்படி பெண்பா லிரண்டு
வறைகிறேம் தீர்க்கந் தானே
ஒப்புடன் சுதனு மேதான்
உயர்வான ..... வியக்கும்
அப்பணி சடையோன் தேவி
அருளிய மொழிகுன் றுவே.

29. நாங்கள் கூறியபடி செய்து வருவாளாகில் ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள் என்றேம். அப்புத்திரனும்.....
.....கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபிரானின் தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

தாயின் குணம்

30. மாதரு குணத்தைச் சொல்வேன் மாநிறம் வாத தேகி
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுள்மனங் கபடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பரிந்துப சாரஞ் செய்வள்
சூதிலாள் பொறுமை சாலி துறவோர்கள் பத்தி
[யேற்பள்.

30. இனி தாயின் குணங்களைக் கூறுகின்றேம். மாநிறமுடையவள். வாயுரோகமுடையவள். இன்புறும்படிப் பேசுபவள். மனத்தில் கபடமில்லாதவள். தீய மலமில்லாதவள். பரிவுடன் உபசாரம் செய்பவள். ஒளிவில்லாதவள். பொறுமையுடையவள். துறவிகளிடத்தில் பக்தியுள்ளவள்.

சகோதர பாவம்

31. தன்துணை யாண்பா லாறு சத்தியு மிரண்டு வென்றேம்
பின்னமா மற்ற வெல்லாம் பேதையும் வறுமை காணுள்
அன்னையின் வர்க்கத் தாரும் அதிகமா யோக மேற்பர்
முன்னைம மன்னைக் கேதான் மொழிகிறேங் தாயே
[கேளும்.

31. தாய்க்குச் சகோதரர் அறுவரும் சகோதரிகள் இருவரும் உண்டு என்றேம். மேலும் தோன்றுபவர் நிலையார். ஜாதகியின் தாய் தரித்திரமடையாதவள். அவளுடைய வர்க்கத்தார் அதிகமான யோகமடைவர். இனி தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தாயே! கேளுங்கள்.

தாயின் முற்பிறவி

32. சொக்கர்வாழ் பாண்டி நாட்டில் ஜனித்தனள் கங்கை
[சேயாய்த்
தக்கவே குடும்பி யாகித் தன்வரன் மதலை யுண்டாய்
மிக்கவே வாழு நாளில் மேவின வினையைக் கேண்மோ
நக்கற்குத் திருவிழா நாள் நாயகி வரணு மொத்து;

32. சொக்கநாதர் வாழ்ந்து வரும் பாண்டிய நாட்டில் (மதுரையில்) வேளாள குலத்தவளாகப் பிறந்தாள். பொருத்தமுள்ள குடும்பத்தைப் பெற்றுத் தக்க கணவனையடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். சிவபெருமானுக்கு உற்சவம் நடக்கும் காலத்தில் தன் கணவனுடன் மனமொத்து;

வணிகன் சாபம்

33. அரனடி பணிந்து மாது
வணுகிளுள் கடைவீ திக்கு
உறைமஞ்சள் சிகப்புச் சீப்பு
வொண்டொடி வாங்கிக் கொண்டு
பொருளது தராமல் சென்றுள்
புகலுவான் வணிபன் தானும்
மர்மமாய்ச் சென்ற பாவி
மாரணு மாண்டில் மாள்வன்

33. சிவபெருமானை அடிபணிந்து வணங்கிய பிறகு கடைவீதிக்குச் சென்றுப் பூசுமஞ்சள், குங்குமம், சீப்பு இவைகளை வாங்கிக் கொண்டு அதற்குரிய பணத்தைத் தராமல் சென்றுள். கடைக்காரன் அதையறிந்து கூறுகின்ற சாபத்தைக் கேளுங்கள். இரகசியமாக ஓடிச்சென்ற பாவிக்குக் கணவன் ஒரு வருடத்துக்குள் இறந்து விடுவான்.

இதுவுமது

34. மற்றொரு ஜன்மந் தன்னில் மத்தியில் வரனு மாண்டு
சுத்தமாய்த் தாயில் லத்தில் தொடர்ந்துமே வாழ்வாய் நீயுங்
குத்தமாய் சொல்ல லுற்றுன் குலவிற்று வந்தத் தோஷம்
வித்தகிக் கந்த வாண்டில் வரனுமே மாண்டா
[னென்றேரும்.

34. அடுத்த பிறவியில் இடைக்காலத்தில் கணவனை இழந்து உன் தாயில்லத்தில் எப்போதும் வாழ்ந்து வருவாய் என்று நிய மனத்துடன் கூறினுன். அந்தத் தோஷம் இவளைப் பற்றியது. அந்தச் சாபத்தின்படியே அந்த ஆண்டிலேயே கணவன் இறந்தான்.

சகோதரனில்லத்தில் வாழ்தல்

35. மனமது சஞ்ச லத்தால் மறலியின் பதிக்குச் சென்று
கனமுடன் பிரமன் லக்கங் கௌரியின் குலமு தித்தாள்
வினையது சேர்ந்த தாலே வரனுமே மத்தில் மாள்வன்
துணையில்லம் வாழ்வா ளாகுந் தோகையே கேட்டி டாயே.

35. மனத்தில் சஞ்சலமடைந்து மரணமடைந்தாள். மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டுக் கௌரீகர் குலத்தில் பிறந்தாள். முற் பிறவியில் செய்த தீவினைப் பயனுல் இப்பிறவியிலும் அவளுடைய கணவன் இடைக்காலத்தில் இறந்து விடுவான். ஆதலால் அவள் தன் சகோதரனின் வீட்டில் வாழ்ந்து வருவாள். தாயே! கேளுங்கள்.

மறுபிறவி

36. மறுஜன்மந் துவாரை தன்னில்
மருவுவாள் சத்திரிய சேயாய்ப்
பெருமையாய்க் குடும்பி யாகிப்
பூவையும் வாழ்வா ளாகுங்
கருமகா லங்கள் சொல்வேன்
காதலிக் காரு ரூண்டில்
மறலியின் நாட்டுக் கன்னை
மாளுவா ளென்று சொல்வோம்.

36. மறுபிறவியில் துவாரகையில் சத்திரிய குலத்தவளாகப் பிறந்து பெருமையுள்ள குடும்பியாக வாழ்ந்து வருவாள். இனி ஜாதகியுடைய கருமகாலங்களைச் சொல்லுகின்றோம். ஜாதகிக்கு முப்பத்தாரும் வயதில் தாய் மரணமடைவாள்.

தந்தையின் மரணமும் மறுபிறவியும்

37. இரண்டாண்டுள் தந்தை கண்ட
மியம்புவோஞ் சீக்கி ரத்தில்
வருஞ்ஜன்மங் காஞ்சி தன்னில்
மருவுவான் சௌராஷ்டர வம்சம்
பெருநிதி யுடைய னாகிப்
பூமியில் வாழ்வா னாகும்
அருமறை முடிவி லாடும்
அம்பிகை யாளே கேளாய்.

37. ஜாதகி பிறந்து இரண்டு வருடத்தில் தந்தை மரணமடைவான். விரைவில் மறுபிறவி யெடுத்து காஞ்சிபுரத்தில் சௌராஷ்டிர வம்சத்தில் பிறப்பான். பெருஞ் செல்வம் உள்ளவனாகப் பூமியில் வாழ்ந்து வருவான். அரிய வேதங்களின் முடிவில் சொல்லப்படும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகியின் மரணகாலமும் மறுபிறவியும்

38. அன்பது வாறு வாண்டி லவள்வரன் கண்ட மெய்த்துங்
கன்னிக்கு வறுபான் மூன்றில் கடகமா தத்தி லேதான்
இன்னவ ளுடல மேகு மியம்புவோ மிவள்பின் ஜன்மந்
தென்திசைத் தில்லை தன்னில் ஜனிப்பளாங் கங்கை
[சேயாய்.

38. ஜாதகியின் ஐம்பத்தாரும் வயதில் கணவன் இறந்து விடுவான். ஜாதகி தனது அறுபத்து மூன்றும் வயதில் ஆடி மாதத்தில் இறப்பாள். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். தெற்குத் திசையில் உள்ள தில்லைமாநகரில் வேளாள குலத்தவளாகப் பிறப்பாள் என்றோம்.

ஜனன காலதசை

39. ஜனித்திடு காலந் தன்னில்
சிகிதசை திங்க ளொன்று
குனித்திடு நாட்கள் மூவேழ்
கூறுவோம் பூர்வ பாகங்

கனமுட னதன்மேல் வெள்ளி
கழறுவோந் தசைப்ப லத்தை
வனிதையின் வரன்தாய் தந்தை
மறலியின் பதிக்குச் செல்வர்.

39. ஜாதகி பிறக்கும் காலத்தில் கேது மகாதசையில் ஒரு மாதமும் இருபத்தொரு நாட்களும் மீதமாம். (இதுவரை முதல் பாகத்தைச் சொன்னும்.) பிறகு சுக்கர மகாதசையின் பலத்தைச்சொல்லுகின்றோம். ஜாதகியின் கணவனுடைய தாய்தந்தையர் இறந்துவிடுவர்.

சுக்கிர மகாதசையின் பலன்

40. மங்கையின் தந்தை கண்ட
மாதமுன் தூணசு பங்கள்
சங்கையா யன்னை வர்க்கந்
தடபேதம் என்று சொல்வோந்
துங்கமாம் பின்பா கத்தில்
செப்புவோம் விவர மாகப்
பங்கய முகத்தி னளே
பகர்ந்தனம் பூர்வ பாகம்.

40. ஜாதகியின் தந்தை இறந்து விடுவார். ஜாதகியின் முன் பிறந்த சகோதரனுக்குச் சுபகாரியங்கள் நிகழும். தாயின் வர்க்கத்தில் இடமாற்றம் ஏற்படும். மற்ற விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். தாமரையைப் போன்ற முகத்தையுடையவளே ! இதுவரையில் முதல் பாகம் சொன்னேனும்.

ஜாதகம் 66

1. அரியது ஜன்ம மாக வாரலு மிரண்டி லேறக்
குருபுதன் கேது கோலாங் குருடனு மேரு வாக
பரிதியுந் தேள தாகப் பணிமேடங் காரி மானில்
பிறையது சாடி யாகப் பேசுவீர் பலனைத் தானே.

1. சிம்மம் இலக்கினமாகவும், செவ்வாய் இரண்டாமிடமாகிய கன்னியிலும், குரு புதன் கேது துலாத்திலும் சுக்கிரன் தனுசிலும், சூரியன் விருச்சிகத்திலும், ராகு மேஷத்திலும், சனி மகரத்திலும், சந்திரன் கும்பத்திலுமாக நவகிரகங்கள் இருப்பின் பலனைச் சொல்லுங்கள், (எனப் பார்வதி தேவி கேட்கும்போது ;)

கிரகநிலை

	ராகு		
சந்திரன்	இராசி சக்கரம்		
சனி			லக்கினம்
சுக்கிரன்	சூரியன்	குரு புதன் கேது	செவ்வாய்

ஜாதகியின் தந்தையின் வீட்டு நிலை

2. தென்முனி புகலு கின்றார்
ஜனித்திடும் பெண்பால் ஜன்மம்
தந்தையி னில்லஞ் சொல்வேன்
தென்வாசல் கீழ்மேல் வீதி
அந்தரி கன்னி தென்பால்
ஆனையான் கோஷ்டங் கீழ்ப்பால்
உன்னத தடாகஞ் சோலை
யுரைக்கிறேஞ் சிறுவ ராகும்.

2. அகத்திய முனிவர் கூறுகின்றார். இது பெண்மகளின் ஜாதகம். இவள் பிறந்த தந்தையின் வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றோம். அது கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. காளி, மாரியம்மன் இவர்களது கோவில் தெற்குப் பக்கமுள்ளன. கிழக்குப் பக்கத்தில் விநாயகரின் ஆலயமும் உயர்ந்ததொரு குளமும் தோட்டமும் உள்ள சிற்றூராகும்.

ஜாதகியின் குலம்

3. இத்தகை யடையா ளத்து
எிறங்கினுள் நான்காஞ் ஜன்மம்
முத்தின குலமே யாகு
முதல்வியின் யோகந் தானும்
பெத்ததாய் தந்தை யோகம்
புத்திரன் வரனின் யோகஞ்
சுத்தமாய் முன்பின் ஜன்மஞ்
செப்புவோ மிந்நூல் தன்னில்

3. இவ்வித அடையாளங்களுள்ள ஊரில் ஜாதகி தன் தந்தைக்கு நான்காம் புத்திரியாக அந்தணகுலத்தில் பிறந்தாள். அவளுடைய யோகங்களையும் பெற்ற தாய், தந்தை, கணவன், புத்திரர், முற்பிறவி மறுபிறவி ஆகிய இவைகளையும் இந்த ஜோதிட நூலில் கூறுகின்றோம்.

தந்தையின் சகோதரபாவம்

4. தந்தையின் துணைவ ராறில் ஆண்மூன்று கன்னி
[யவ்வாறு
நொந்திடுஞ் சிலவே மத்தில் நுகருவோம் பின்பால் சேதி
இந்தவன் தந்தை சேதி யியம்புவோஞ் சிவந்த மேனி
முந்துமால் பத்தி பூண்ப னுயர்வான குடும்ப மேற்பன்.

4. ஜாதகியின் தந்தையின் உடன் பிறந்தவர் அறுவரில் சகோதரர் மூவரும் சகோதரிகள் மூவருமாவர். அவர்களில் சிலர் இறந்திடுவர். அவ்விஷயங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். இனி ஜாதகியின் தந்தையின் விவரங்களைக் கூறுகின்றோம். சிவந்த உடலுள்ளவன். திருமாலின்மீது பக்தியுள்ளவன். மேன்மையுள்ள குடும்பத்தை அடைவான்.

தந்தையின் குணஞ்செயல்கள்

5. சிலநாட்கள் கிராமச் செட்டுச் செய்வனுங் கல்வி மானும்
நலமுளோர் நேசங் கொள்வன் நற்குணம் பொறுமை சாலி
விலைமாதர் மோகங்கொள்ளான் வீண்கல கங்கள் கூறான்
தலவாசஞ் செய்வா னுவன் தரணியை விருத்தி செய்வன்.

5. சின்னட்கள் கிராம வியாபாரத்தைச் செய்து வருவான். கல்வியறிவுள்ளவன். நல்லவருடைய நட்பைக் கொள்ளுவான். நற்குணமுள்ளவன். பொறுமையுடையவன். வேசையர்மீது விருப்பங் கொள்ளாதவன். அனுவசியச் சண்டைகளை விளைவிக்காதவன். பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லுவான். நிலங்களைப் பெருக்குவான்.

இதுவுமது

6. கடன்கொள்வான் நிவிர்த்தி செய்வன் கண்முகம் வசிய
[மூள்ளான்
உடன்படான் பிழைக ளுக்கு வுண்மையா மனத்த னுகும்
படையின்முன் செல்லா னுகும் பாரினுல் சீவிப் பானும்
விடம்போலே வாயுப் பீடை மேவிடு மந்தந் தன்னில்.

6. கடன் வாங்குவான். அதைத் தீர்த்துவிடுவான். கண்கள் முகம் இவை வசிகரமாகவுள்ளவன். தீயகாரியங்களைச் செய்ய மனமொப் பாதவன். உண்மையான மனத்தினன். சண்டைக்கு முன் செல்லாத வன். விளை நிலங்களில் விவசாயத்தைச் செய்து ஜீவனம் நடத்துவான். கொடிய விஷம்போன்ற வாயுரோகம் கடைசிக் காலத்தில் ஏற்படும்.

நற்செயல்களும் முற்பிறவியும்

7. சோலைகள் துறவு செய்வன் துறவோர்க்கு வன்ன மீவன்
சாலவே யிவன்முன் ஜன்மஞ் சாற்றுவோம் பாண்டி
[நாட்டில்
சீலமாம் சைவச் சேயாய் ஜனித்துமே கிருஷி செய்து
காலனை யுதைத்தோன் பத்தி கனத்தவர் தொண்டு பூண்டு;

7. தோட்டம் துறவுகள் அமைப்பான். பரதேசிகட்கு அன் புடன் அன்னமளிப்பவன். இவனுடைய முற்பிறவியைச் சொல்லு கின்றோம். பாண்டிய நாட்டில் நல்லொழுக்கமுள்ள தொரு சைவ குலத்தவனுகப் பிறந்து விவசாயம் செய்து சிவபெருமான் மீது பக்தி கொண்டு வாழ்ந்து, பெரியோர்கடகுப் பக்தியுடன் பல தொண்டுகளைச் செய்து.

ஜாதகியின் குணங்கள்

8. முன்வினை யில்லா தாகி
மேவினன் கால நாடு
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறந்தவ னிவனே யென்றோம்
சொன்னயிக் குணத்தா னுக்குத்
தோகையு முதிப்பா ளாகும்
அன்னவள் குணத்தைச் சொல்வேன்
அழகுளாள் சிவந்த மேனி.

8. தீவினைகள் இல்லாதவனுக வாழ்ந்து மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகி பிறப்பாள் என்றோம். அவளுடைய குணங்களைக் கூறுகின்றோம். அவள் அழகுள் ளவள். சிவந்த உடலுள்ளவள்.

ஜாதகியின் குணங்கள்—தொடர்ச்சி

9. புத்திமான் பொறுமை சாலி
புண்ணிய மனத்தா ளாகும்
சித்தமே கரப்பு மில்லாள்
தீங்கதை யொருவர்க் கெண்ணுள்
பத்தியா னவர்க்கு வன்னம்
படைப்பாளாம் வறுமை காணுள்
குத்தத்தை மனத்தி லெண்ணுள்
புன்சிரிப் புடைய ளாமே.

9. புத்திசாலி. பொறுமையுடையவள். நல்லெண்ணம் பொருந்திய மனத்தினள். மனத்தில் தீய எண்ணங்களில்லாதவள். ஒருவருக்கும் தீங்குகளைச் செய்ய எண்ணுதவள். பக்தியுள்ள அடியார்களுக்கு அன்புடன் அமுது அளிப்பவள். தரித்திர மில்லாதவள். பிறர் செய்யும் குற்றங்களை மனத்தில் எண்ணுதவள். புன் சிரிப்புடைய முகமுடையவள்.

சகோதரபாவம்

10. தன்துணை முன்னு ணைன்று தங்கிடுந் தீர்க்க மாகப்
பின்துணை யாண்பால் நான்கு பேசுவோந் தீர்க்க மாக
அன்னவர் சேதி யாவு மறைகிறேம் பின்பா கத்தில்
உன்னத வாணை பெற்ற வுத்தமி கேட்டி டாயே.

10. ஜாதகிக்கு முன்பிறந்த சகோதரன் ஒருவன்மீண்ட ஆயுள் உள்ளவன் என்றும் இளைய சகோதரர்கள் நால்வர் தீர்க்கமாயுவர் என்றும் கூறுவோம். அவர்களுடைய விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். உயர்ந்த யானைமுகத்தோனைப் பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

திருமணக் காலம்

11. கன்னிகை மணத்தின் காலங்
கழறுவோ மீரஞ் சாண்டில்
மன்னவன் வடபால் நேர்வன்
வரைகிறே மவன்கு ணத்தைச்
சொன்னசொல் சுகமே யெய்தும்
துரைராசர் தன்னு லுய்வன்
சின்னதோர் பால ருக்குச்
செப்புவான் கல்வி தன்னை.

11. இனி ஜாதகியின் திருமணக் காலத்தைக் கூறுகின்றேம். அவளுடைய பத்தாம் வயதில் வடக்குப் பக்கத்திலிருந்து கணவன் வாய்ப்பான் என்றேம். இனி அவனுடைய குணங்களை எழுதுகின்

ரேம். இன்பமாக பேசுபவன். அரசாங்கத்து உத்தியோகத்தை ஏற்று ஜீவிப்பான். (அயல் நாட்டவரிடம் வேலைபார்த்து ஜீவிப்பான்.) சின்னஞ் சிறு குழந்தைகட்குப் பாடம் கற்பிக்கும் வேலைப் பார்த்துவருவான்.

ஜாதகியின் கணவனின் குணம்

12. மனமது கபடு மில்லான் மறுத்துரை யதிகங் கூரான்
இனமது மதிக்க வாழ்வன் ஏகிடுந் தந்தை யாஸ்தி
கனமான கல்வி யேற்பன் கசடரை யுறவு கொள்ளான்
வினைசெய்யான் யாவ ருக்கும் வீண்வம்பு புகலா னவன்.

12. வஞ்சனைகளில்லாதவன். எதிர்த்துப்பேசும் வழக்கமில்லாத வன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். தந்தை யின் ஆஸ்தியை அழித்து விடுவான். பெரிய (விரிவான) கல்வியைக் கற்பான். முட்டாள்களுடைய நட்பைக்கொள்ளாதவன். ஒருவருக்கும் தீங்கிழையாதவன். வீண்வம்பு பேசாதவன்.

இருவுமது

13. பொய்யுரை பகரான் மிஞ்சிய புத்திநல் லறிவு முண்டு
ஐயமே லிச்சை யுண்டு அதிதிகள் நேயங் கொள்வன்
தையலுக் கினிய னாகுஞ் சத்துரு வணங்க வாழ்வன்
வையமேல் புகழு மேற்ப னம்பிகை யாளே கேளாய்.

13. பொய் பேசாதவன். புத்திசாலி. நல்ல அறிவாளி. தருமம் செய்வதில் விருப்பமுடையவன். கதியற்றவரிடம் நட்பைக்கொள்ளு வான். தன் மனைவிக்குப் பிரியமானவன். விரோதிகளும் இவனை வணங்கி வரும்படி அடக்கி வாழ்ந்து வருவான். உலகில் கீர்த்தியை யடைவான். தாயே ! கேளுங்கள்.

புத்திரபாவம்

14. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலமு ரைது
சித்தமா யிரண்டு தோன்றி ஜீரணம் நீயே கண்டாய்
குத்தத்தைச் சொல்லு மென்னக் குருடனு மைந்தில் தங்க
வித்தகர் குருவி னேடு மெய்ஞ்ஞானி கூடி மூன்றில் ;

14. ஜாதகியின் புத்திரபாவத்தைக் கூறுகின்றேம். உண்டு என்று கூற கிரகபலமில்லை. இரு குழந்தைகள் பிறந்து இறந்துவிடும். அதற்குரிய காரணத்தைச் சொல்லுங்கள் என வினவ, சுக்கிரன் ஐந்தா மிடத்தில் தங்கி, அவ்விடத்துக்குரிய குரு மூன்றுமிடத்தில் கேது வுடன் கூடி ;

முற்பிறவி

15. இருப்பதால் தோஷஞ் சொன்னேம்
இதுவின்றிப் பூர்வந் தன்னில்
திருமக ளநேக மாகத்
தீவினை செய்தா ளென்றேரும்
உரைவீரே பூர்வந் தன்னை
யுரைக்கிறேரும் தாயே கேளுர
மருணைக்கு மேல்பா லாக
அணுகிய சிறுஊர் தன்னில் ;

15. இருப்பதால் அவ்விதம் தோஷம் என்று சொன்னேம். இது தவிர முற்பிறவியிலும் ஜாதகி அதிகமான தீவினைகளைச் செய்தாள் என்றேரும். ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுங்கள். கூறுகின்றேரும். கேட்பீராக. திருவண்ணுமலைக்கு மேற்கிலுள்ள சிற்றூரில் ;

16. இந்ததோர் குலமு தித்து ஏழிலான குடும்பி யாகித்
தன்சுத ருடைய ளாகிச் சக்தியும் வாழு நாளில்
பின்னமாய் வந்த வூழைப் பேசுவோ மினிமே லாகத்
தன்னுடைச் கொல்லை தன்னில் தங்கிற்றுக் கருப்பன்
[சாமி.

16. இதே குலத்தில் பிறந்து சிறப்புற்ற குடும்பியாகப் புத்திர பாக்கியம் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கூறுகின்றேரும். இவளுடைய வீட்டுக்குப் பின்புறத்தில் கருப்பன் சாமி ஒன்று குடியிருந்து வந்தது.

முனிசாபம் பின்வரும் மூன்று பாட்டுக்களில் கூறப்படும்

17. குலதெய்வ மாக முன்னேர்
கோடிப்பார் முனியைத் தானும்
தலைவியுந் தொழாமல் நின்றுள்
சாத்திய முனியைத் தானும்.
உலகினில் எவரும் போற்றும்
உத்தமத் தெய்வ மொன்றை
விலக்கின பாவி யேஈ
வீண்செய்வேன் சுதரை யானும்

17. தன்னுடைய குல தெய்வமாக இவளுடைய முன்னேர்கள் அதைத் தொழுது வந்தார்கள். இவள் அம்முனியை வணங்காமல் இருந்து வந்தாள். அதனல் அம்முனீச்வரன் கூறியதாவது. உலகத்தவர்கள் யாவரும் தொழுது வரும் தெய்வமாகிய என்னைத் தொழா

மல் விலக்கி இருக்கும் பாவியே ! உன்னுடைய புத்திரர்கள் யாவரையும் கொல்லுவேன்.

18. மற்றொரு ஜன்மந் தன்னில் மருவுவேன் உன்பால் யானும்
பெற்றிடுஞ் சுதரைக் கொல்வேன் புத்தியைக் கெடுப்பே
[னென்று
குற்றமாய்ச் சொல்லி யேதான் குலவிற்று வேறு சாகை
பற்றிற்று வந்தச் சாபம் பார்வதி கேட்டி டாயே.

18. அடுத்த பிறவியிலும் உன்னிடம் நான் வசித்து வருவேன். நீ பெறும் குழந்தைகளை யான் கொன்றுவிடுவேன். உன்னுடைய புத்தியையும் குலைப்பேன் என்று தீய மனத்துடன் சொல்லி வேறு வீட்டுக்குச் சென்றது. (பிசாசு பிடித்து ஆட்டுவது என்று கூறும் வழக்கம் நம் தமிழ் நாட்டில் இருந்து வருவதும் அவ்விதம் சொல்லப் படுபவர்கட்குச் சித்தஸ்வாதீனம் இல்லாமலிருப்பதும் இதற்குச் சான்று.) அந்தச் சாபம் இவளைப் பற்றியது. பார்வதியே ! கேளுங்கள்.

19. சுதர்களு மந்தில் மாண்டு தோகையுஞ் சஞ்ச லத்தால்
மதியது சபல மாகி மறலியின் பதிக்குப் புக்கி
விதியவன் வரையப் பட்டு விளங்குவா ளிவளே
[யென்றேரும்
அதிதிபோல் முனியன் சாப மணுகிடு மிச்சென் மத்தில்.

19. தன் கடைசிக் காலத்தில் புத்திரர்களை இழந்து, மனத்தில் கலக்கமுற்று (புத்திமாறாட்ட மேற்பட்டு) மரணமடைந்து மீண்டும் பிரம்தேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தவள் இவள் என்றேரும். இப்பிற வியில் முனியின் சாபம் இவளைப்பற்றியது.

20. மதலைகள் தோன்றில் தீதாம் மாமுனி தோஷத் தாலே
விதவிதக் குணமே யாகும் மேவுங்கா லங்கள் சொல்வாய்ச்
சதியிலா மூவே ழாண்டில் சார்ந்திடு மந்தக் குற்றம்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

20. புத்திரர் தோன்றினும் நிலையார். முனியின் தோஷத்தால் குணங்கள் மாறுபட்டுள்ளதாக விருக்கும். அவ்விதம் நேரிடும் காலத் தைச் சொல்லுவீர்கள். ஜாதகியின் இருபத்தோராம் வயதில் அவ் விதம் ஏற்படும். கதியற்றவரைக் காக்கும் தேவியே ! கேளுங்கள்.

முனியின் சாபம் விலகச் சாந்தி

21. பெருமுனி சாபந் தீரப் பேசுவீர் கிரியை யொன்று
கருமசாந் திகளுஞ் செய்து காதலி பீஜந் தன்னை
இரணிய ரேக்கில் கீரி ஈச்வரி மூலந் தன்னை
மருமமாய்ச் சகஸ்ரஞ் சொல்லி மாதுவும் ரேக்க ணிந்து ;

21. முனீச்வரனின் சாபம் நீரச் சாந்தி யொன்று கூறுகின்றேம். கரும சாந்திகள் செய்து தேவியின் பீஜாட்சரத்தைத் தங்கத்தகட்டில் எழுதி அந்த பீஜாட்சரத்தை மௌனமாக ஆயிரம் தடவை ஜபித்து அத்தகட்டை அணிந்து கொண்டு ;

22. சுக்கிர வார னேன்பு தோகையோ ராண்டு கொள்ள
முக்கிய முனியின் தோஷம் விலகிடுஞ் சுதர்வி ருத்தி
தக்கவே செய்யா னகில் சார்ந்திடும் வினைய னேகம்
முக்கியத் தவங்கள் செய்யு முதல்வியே கேட்டி டாயே.

22. ஒரு வருடகாலம் வெள்ளிக் கிழமைதோறும் விரதம் இருப்பா ளாகில் தீவினையாக வந்த முனியின் சாபம் நீங்கிப் புத்திர விருத்தி ஏற்படும். அலட்சியமாகச் செய்யாவிடில் பல விதமான துன்பங்கள் நேரும். முக்கியமாகத் தவங்கள் செய்யும் தேவியே ! கேளுங்கள்.

தாயின் குணம்

23. அன்னையின் குணத்தைச் சொல்வேன்
அழகுளாள் பொறுமை சாலி
அன்னமு மன்பா யீவள்
ஆளன்தன் மனத்துக் கேத்தோள்
அன்னியர் குற்றஞ் சொல்லாள்
யாவர்க்கு நல்லோ ளாவள்
அன்னம்போல் சாய லொக்கும்
அதிகமாய் விரத மேற்பள்.

23. இனித் தாயின் குணத்தைக் கூறுகின்றேம். அழகுள்ளவள். பொறுமையுடையவள். அன்புடன் அன்னமளிப்பவள். தன் கணவன் மனமொப்ப வாழ்ந்து வருவாள். பிறர்மீது குற்றம் கூறுதவள். எல் லோருக்கும் நல்லவள். அன்னத்தைப்போன்ற அழகிய (நடை) உருவ முள்ளவள். நோன்புகளை அதிகமாக இயற்றுவாள்.

சகோதர பாவம்

24. தன்துணை யாண்பால் நான்கு
தங்கிடும் பெண்பா லிரண்டு
இன்னவர் தீர்க்க மெய்து
மியம்புவோம் பின்பால் சேதி
முன்ஜன்மங் கொங்கு நாட்டி
லுதித்தனள் சைவச் சேயாய்ச்
பொன்பணி யுடைய ளாகிப்
புகழான குடும்பம் பெற்று ;

24. தாய்க்கு ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும். மற்றும் பிற் பாகத்தில் விவரத்தைச் சொல்லுகின்றும். முற்பிறவியில் கொங்கு நாட்டில் சைவ குலத்தவ ளாகப் பிறந்தாள். பொன் ஆபரணங்களே உடையவளாகவும் கீர்த்தி யுள்ள குடும்பத்தை அடைந்தவளாகவும் ;

25. அறமதி லிச்சை யாயு மடைந்தோர்க்கு வன்ன மீந்தும்
பெருநதி சேதுச் சென்றும் புக்கிளள் கால நாடு
பிரமனல் வரையப் பட்டுப் பிறந்தவ ளிவளே யென்றும்
வருஞ்ஜன்ம மரங்கந் தன்னில் வருவளா மிக்கு லத்தில்.

25. தருமம் செய்வதில் விருப்பமுள்ளவளாகவும் அண்டி வந்த வர்கட்கு அன்புடன் அமுதுபடைத்தும் பெரிய புண்ணியத்தலமாகிய சேதுவுக்குச் சென்று நீராடியும் பிறகு மரணமடைந்தாள். மீண்டும் பிரம தேவனல் படைக்கப்பட்டுப் பிறந்தவள் இவள் என்றும். அடுத்த பிறவியில் திருவரங்கத்தில் இதே குலத்தில் பிறப்பாள்.

தாய்தந்தையரின் மரணகாலம்

26. ஆறு மூன்று வாண்டி லன்னைக்குக் கண்ட மெய்தும்
தீரமாய் முப்பா ளென்றில் செப்புவோந் தந்தை கண்டங்
கூறுவோ மிவன்பின் ஜன்மங் கோகர்ண நகரி லேதான்
தீரமா யிக்கு லத்தில் ஜனிப்பனு மென்று சொல்வோம்.

26. ஜாதகியின் முப்பத்தொன்பதாம் வயதில் தாய் மரணமடை வாள். முப்பத்தோராம் வயதில் தந்தை காலமாவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றும். கோகர்ணத்தில் இதே குலத்தில் பிறப்பாள் என்று சொன்னேம்.

கணவனின் மரணகாலமும், ஜாதகியின் மறுபிறவியும்

27. அன்பது வாறு ஆண்டில்
அறைந்தனம் வரனுங் கண்டங்
கன்னிக்கு வறுபான் மூன்றில்
கார்த்திகை மாதந் தன்னில்
இன்னவ ளுடல மேகு
மியம்புவோ மிவள்பின் ஜன்மம்
தென்திசைத் தில்லைக் கீழ்ப்பால்
ஜனிப்பளா மிக்கு லத்தில்.

27. ஜாதகியின் ஐம்பத்தாரும் வயதில் கணவன் இறந்து போவான். ஜாதகி தன் அறுபத்து மூன்றும் வயதில் கார்த்திகை மாதத்தில் மரணமடைவாள். இவளுடைய மறுபிறவியைச் சொல்லு

கின்ரேம். தெற்குப்பக்கத்திலுள்ள சிதம்பரத்தில் இதே குலத்தில் பிறப்பாள்.

28. அத்திரி தடுத்துச் சொல்வார் அறைந்தீரே கரும சாந்தி
சுத்தமாய் விபரஞ் சொல்வீர் தென்முனி புகலு கின்ரூர்
சத்தியின் பூசை தன்னைச் சாற்றுவோ மைந்தாங்
[காண்டம்
அத்தியை வளர்த்த மாதே யறைந்தனம் பூர்வ பாகம்.

28. அத்திரி முனிவர் தடுத்துச் சொல்லுகின்ரூர். கரும சாந்தி செய்யவேண்டும் என்று கூறினீர்கள். அதன் விவரத்தைச் சொல்லுங்கள் என, அகத்திய முனிவர் கூறுகின்ரூர். அது செய்ய வேண்டிய கிரமத்தை ஐந்தாம் காண்டத்தில் சொல்லுகிரேம். விநாய கனைப் பெற்று வளர்த்த தேவியே! இது வரை முதல் பாகத்தைச் சொன்னேம்.

ஜனன காலதசை

29. ஜனித்திடு காலந் தன்னில் செக்குநாள் மூன்ரும் பாதங்
கனமூள ராகு தன்னில் கழறுவோ மாண்டு வாறுஞ்
சினமிலாத் திங்களாறுஞ் செப்புவோம் பலனை யாங்கள்
வினையிலாத் தவங்கள் செய்யும் வித்தகி கேட்டி டாயே.

29. ஜாதகி பிறக்கும் காலத்தில் சதய நட்சத்திரம் மூன்ரும் பாதமாகும். ராகு மகாதசையில் ஆறு வருடங்களும் ஆறு மாதங்களும் மீதமாகும். தீங்குகளில்லாத தவங்களை யியற்றும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 67

1. புலியது வுதையம் புதன்கேது விரண்டில்
புரவியோன் மூன்றினில் தங்க
நிலமக னஞ்சில் குருபணி யெட்டில்
நீலனும் லாபம தாகச்
சலக்கோளு நாலில் சந்திரன் விரயஞ்
சாற்றுவீர் பலனதை யென்று
மலைமகள் கேட்க வதிஷ்டரும் புகல்வார்
ஆணது ஜனனமே யாகும்.

1. சிம்மம் இலக்கினமாகவும், புதன் கேது இரண்டாமிடமாகிய கன்னியிலும், செவ்வாய் ஐந்தாமிடமாகிய தனுசிலும், குரு ராகு எட்டாமிடமாகிய மீனத்திலும், சனி லாபஸ்தானமாகிய மிதுனத்திலும், சுக்கிரன் நான்காமிடமாகிய விருச்சிகத்திலும், சந்திரன் விரயஸ்தானமாகிய கடகத்திலும் இருப்பின் ஏற்படும் பலன்களைக் கூறுங்கள்என்று ஹிமவானின் புத்திரியாகிய பார்வதி தேவி கேட்க வசிஷ்ட முனிவர் பதில் உரைக்கின்றார். இஃது ஆண்மகனுடைய ஜாதகம்.

கிரகநிலை

குரு ராகு			சனி
	இராசி சக்கரம்		சந்திரன்
			லக்கினம்
செவ்வாய்	சுக்கிரன்	சூரியன்	புதன் கேது

ஜாதகனின் (பாட்டனின்) வீட்டு நிலை

2. தாதையி னில்லந் தென்வட வீதி
சனிப்பார்வை யொருபுற மில்லம்
போதக வாணைக் கோஷ்டமு முத்தர
பூர்வம் மிலேசர்க ளூராம்
பாதையுங் கீழ்ப்பால் பகருவோந் தாயே
பதிந்திடுஞ் சிறுகை ராகுஞ்
சூதிலாக் கங்கை குலத்தில் தோன்றுஞ்
செப்புவோங் குடும்பத்தின் சேதி.

2. ஜாதகனுடைய பாட்டனின் வீடு தெற்கு வடக்கான தெரு வில் வடகிழக்கு மூலையை நோக்கியுள்ளது ஒரு பக்கத்தில் வீடிருக்கும். பெரியதொரு விநாயகரின் ஆலயம் வடக்குத் திக்கிலுள்ளது. அது வெகு நாட்களாக முகம்மதியர்கள் வாழ்ந்து வரும் ஊராகும். கிழக்குப் புறத்தில் ஒரு நடை பாதை உண்டு என்று சொல்லுகின்றோம். தாயே! இங்ஙனமுள்ள சிறு ஊரில் கபடமில்லாத வேளாள குலத்த வனுக ஜாதகன் பிறந்தவன். இனி அவனுடைய குடும்பச் செய்தி களைக் கூறுகின்றோம்.

பின்வரும் இரு பாடல்களில் ஜாதகனின் தந்தையின் விவரங்கள் கூறப்படும்

3. தந்தையின் குணங்கள் சிவந்த மெய்யூகி
ஜகராசர் பேட்டியே கொள்வன்
சிந்தையு நல்லோன் திருப்பணி செய்வன்
செல்வோர்க்கு மார்க்கமு மமைப்பன்
அந்தரி காளி யருமுகன் பத்தி
யரசரால் செட்டுக்கள் செய்வன்
வந்தவர்க் கன்னம் தரணிகள் சேர்ப்பன்
அடிமையுங் குடிகளு முண்டு.

3. தந்தையின் குணங்களாவன. சிவந்த உடலுடையவன். ஊக முடையவன். அரசாங்கத் தொடர்புள்ளவன். நல்ல மனமுள்ளவன். ஆலயத்திருப்பணிகள் செய்வான். பொதுஜனங்கள் நடப்பதற்குப் பாதைகளை அமைத்துக் கொடுப்பன். காளிதேவியிடமும் முருகக்கடவுள் மீதும் பக்தியுடையவன். அரசாங்கச் சார்புள்ள வர்த்தகத்தைச் செய் வான். பசியுடன் வந்தவர்கட்கு உணவளிப்பான். வீடு நிலங்களைச் சேர்ப்பான். குடிபடைகளாலாகிய பணி மக்கள் உள்ளவள்.

4. பலவித வணிபம் பண்ணுவான் புகழும்
பந்துவு மதிக்கவே வுய்வன்
குலவிடும் வாயுப் பாதையு மந்தங்
குடியது சித்திரஞ் செய்வன்
நிலையதை காற்பன் நினைவதை முடிப்பன்
நிருபர்க்கு யிவன்சொல்லே மேன்மை
சொல்மொழி காப்பன் சுந்தர முடையன்
சோம்பிடான் காரியந் தன்னில்.

4. பலவிதமான வர்த்தகமும் செய்து வருவான். கீர்த்தி யடை வான். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். வாயு ரோகமுள்ளவன். தன் கடைசிக்காலத்தில் தொந்திரவு அதிக முடைய

வன். வீட்டைச் சித்திரங்களால் அழகுபடுத்துவான். தன்னுடைய அந்தஸ்தைக் காத்துக் கொள்வான். எண்ணிய காரியங்களை முடிப்பான். அரசருக்கு (அரசாங்கத்தாருக்கு) இவனுடைய வார்த்தைகள். மதிப்புள்ளவை. தான் கூறும் வார்த்தைகளின்படி நடப்பவன். அழகன். காரியங்களைச் சோம்பலில்லாது செய்து முடிப்பவன்.

பின்வரும் மூன்று பாடல்களில் ஜாதகனின் குண விசேஷங்கள் கூறப்படுகின்றன.

5. பால்கன் சேதி பகருவோ மினிமேல்
பரிந்துப சாரமே செய்வன்
சீலம்போல் காட்டும் இருவிதக் கல்வி
செப்புவான் அரசர்பூ சிதவான்
ஞாலங்கள் அளப்பன் மன்னரா லுய்வன்
நாற்காலி பணியேர்க ளுள்ளான்
வேலுடைக் கடவு ளருளது வோங்கும்
விதேசமேல் சிலநாட்கள் வாசம்.

5. இனி ஜாதகனுடைய விவரங்களைக் கூறுகின்றோம். அன்புடன் உபசரிப்பான். நல்லொழுக்க முள்ளவன் போல் பிறர் நினைக்கும்படி நடப்பவன். இருவிதமான கல்வியறிவுள்ளவன். அரசாங்கத்தாரால் கௌரவிக்கப்படுவான். பூமியை அளக்கும் கணக்கன் வேலை செய்து வருவான், அரசாங்க உத்தியோகம் ஏற்று வாழ்வான். கால் நடைகள் பண்ணை ஏர்கள் உள்ளவன். வேலையுடைய முருகக் கடவுளது அருள் பெருகும். சின்னட்கள் வேறுதேசத்தில் சென்று வாழ்ந்து வருவான்.

6. வாசியோ கத்தை யனுசரிப்பா னுவான்
வதிதிகட் கன்னமு மீவன்
நேசர்க ளதிகஞ் சகடுவா கனத்தோன்
நிருபர்க்கு விவன்சொல்லே மேன்மை
காசுமே லாசை வீண்செல வில்லான்
கபடிலான் (சாந்தன்) சிவந்தமெய் குள்ளன்
போஜன சுகியன் பொருத்தமா யுரைப்பன்
புண்ணியத் தலங்களுஞ் செல்வன்.

6. வாசி யோகத்தை அனுசரிப்பான். துறவிகட்கு அன்னமளிப்பவன். நண்பரின் பெருக்க முள்ளவன். வண்டி முதலிய வாகனத்தை யுடையவன். அரசாங்கத்தார் இவனுடைய வார்த்தைகளை கௌரவிப்பார். காசைச் சேர்ப்பதில் ஆசையுடையவன். வீண் செலவில்லாதவன். சூதுகளில்லாதவன். (பொறுமையுடையவன்.) சிவந்தும்

குள்ளமுமான சரீரத்தைப் பெற்றவன். சாப்பாட்டில் பிரியன். பொருத்தமாகப் பேசுபவன். பலபுண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான்.

7. சேயிழைக் கன்பன் ஜனவுப காரி
தீரமா மனத்தனுந் தாயே
தூயகன் மனத்தன் வாதகோ யுடையன்
தோகையர் மோகவா னுவன்
தாயதைக் காப்பன் சற்சன ருறவு
சாற்றுவோங் கோபவா னுவான்
சாயலாய்க் காண்பன் குருவுப தேசஞ்
சதாவுமே தவசிக ளிஷ்டன்.

7. தன் மனைவிக்குப் பிரியமானவன். ஜனங்களுக்கும் உபகாரம் செய்பவன். தைரியமுள்ள மனத்தினன். தாயே! நல்ல மனமுள்ளவன். வாயுரோகமு முடையவன். பெண்களின்மீது மையல் கொள்ளுபவன். தன் தாயை நன்கு ஆதரித்து வருவான். நல்லவர்களின் உறவையுங் கொள்ளுவான். முன்கோபமுடையவன். சாய்ந்த பார்வையை யுடையவன். நல்ல பெரியோர்களிடம் உபதேசத்தைக் கேட்பவன். எப்போதும் தவம் செய்பவரிடம் பிரிய முள்ளவன்.

ஜாதகனின் உடன் பிறந்தவர்

8. சல்லியங் கொள்ளான் தன்துணை யாண்பால்
சாற்றுவோ மொருவனே தீர்க்கம்
வல்லியு மவ்வார் வரைகிறேம் தாயே
யாண்துணை யிளையனு மாகும்
புல்குவோங் குணத்தைப் பூமியை விருத்தி
புவிதனில் தானியச் செட்டும்
வெல்லுஞ்சொல் லுடையன் கிராமாதி காரம்
மேவிடுஞ் சிலநா ளென்றேம்.

8. கடன் படாதவன். உடன் பிறந்தவரில் சகோதரன் ஒருவனும் சகோதரி ஒருத்தியும் தீர்க்கமாக உள்ளனர் என்றும், சகோதரன் இவனுக்குப்பின் பிறந்தவன் என்றும் எழுதுகின்றேம். இனிச் சகோதரனின் குணத்தைச் சொல்லுகின்றேம். பூமியைப் பெருக்குவான். உலகில் தானிய வியாபாரத்தைச் செய்து வருவான். வாக்கு வன்மை யுள்ளவன். சின்னட்கள் கிராமாதிகாரியாக உத்தியோகம் பார்ப்பான்.

புத்திரபாவம்

9. சிலதுநா ளொன்றுய் ஜீவித்துப் பின்னுல்
செல்லுவான் வேறதா யவனும்
நிலம்விருத்தி பாரி யொன்றென மொழிவோம்
நிமிஷத்தில் கோபியே யாவன்

குலவிடுஞ் சுதரா ணிரண்டுமே தீர்க்கங்
கோதைய ரிரட்டிப்பு மாகும்
அலைகடல் மண்ணில் வறுமையே காணுன்
அதிதிகள் நேசமே கொள்ளான்.

9. சின்னுட்கள் ஜாதகனுடன் ஒன்றுக வாழ்ந்துவருவான். பிறகு பிரிந்து தனியாகச் சென்று விடுவான். விரோ நிலங்களைப் பெருக்குவான். மனைவி ஒருத்தியே யாவள். விரைவில் கோபங் கொள்ளுவான். இரு புத்திரர் தோன்றுவர். அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். பெண்கள் இரு மடங்காக உள்ளவர்கள் (நால்வர்) என்றும். கடல் சூழ்ந்த இவ்வுலகில் தரித்திர மடையாதவன். துறவிகளிடம் நட்புக் கொள்ளாதவன்.

உடன்பிறந்தவர்களின் இயல்புகள்

10. கொள்ளவும் விற்கவும் வல்லவன் சமர்த்தன்
குண்டைகோ விருத்தியு முள்ளன்
வள்ளவே யுரைப்பன் மனத்தினில் கபடன்
வீரியன் வயதுமே தீர்க்கம்
கன்னியின் குணத்தைக் கழறுவோ யினிமேல்
கணவனுக் கினியளாந் தாயே
துள்ளுவான் மத்தில் சுதராண்பால் தோஷந்
தோகையு நான்குமா மென்றோம்.

10. சாமான்களை வாங்குவதிலும் விற்பதிலும் சாமர்த்திய முடையவன். பசு எருதுகளின் விருத்தியை யுடையவன். கண்டித்துப் பேசுபவன். மனத்தில் கபட முள்ளவன். நீண்ட ஆயுளை உடையவன். இனிச் சகோதரியின் குணங்களைக் கூறுகின்றோம். தன் கணவனுக்குப் பிரியமானவள். தாயே! இடைக்காலத்தில் கணவன் மரணமடைவான். ஆண் குழந்தைகளுக்குத் தோஷமுண்டு என்றும் பெண்கள் நால்வர் தோன்றுவர் என்றும் சொல்லுகின்றோம்.

சகோதரியின் குணங்களும் ஜாதகன் திருமணக்காலமும்

11. வரன்மத்தில் மாண்டு மாதுரு யில்லம்
மருவுவாள் மனசஞ் சலத்தால்
பொருளது பெற்று வருவளா மென்றோம்
புதல்விமார் சுகமிலா வாழ்வர்
மறுபாகம் விவரம் வரைவோமே தாயே
மாரனின் மணங்கள்நாள் புகல்வோம்
இருபது இரண்டு வாண்டினில் பாரி
எய்திடுங் குணமதைப் புகல்வோம்.

11. இடைக்காலத்தில் கணவன் இறந்து விடுவான். பிறகு தன் தாயில்லத்தில் வாழ்ந்து வருவாள். கணவனைச் சேர்ந்தவர்களிட மிருந்து தன் ஜீவனத்துக்காகப் பொருளைப் (ஜீவனும்சமாக) பெற்று மனத்தில் சஞ்சலத்துடன் வாழ்ந்து வருவாள் என்றேரும். இவளுடைய புத்திரிகள் சுகமில்லாமல் வாழ்ந்து வருவார்கள். அவ்விஷயங்களைப் பிற் காலத்தில் விரிவாக எழுதுகின்றேரும் தாயே! இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேரும். இருபத்திரண்டாம் வயதில் அவனுக்குத் திருமணம் நிகழும். இனி அவளுடைய குணங்களைக் கூறுகின்றேரும்.

மனைவியின் குணங்கள்

12. பாரியக் குடும்பி பரவுப காரி
பரமர்த் மடிமைக்கு வடிமை
தேரின புத்தி சீலியாங் கல்வி
சிறப்புறுஞ் ஞானமு முள்ளாள்
மாரன்தன் மனதுக் கேத்தோ ளாகும்
வளமுள தலங்களுஞ் செல்வள்
கரங்காலில் வாயு பாதையு முள்ளாள்
சிரித்தோர்மேல் பிரிய ளாமே.

12. பெருங் குடும்பத்தை யடைவாள். பிறருக்கு உபகாரி. சிவபெருமானுடைய அடியார்களுக்கு அடிமை செய்து வருவாள். முதிர்ந்த அறிவாளி. நல்லொழுக்கமுள்ளவள். கல்வியில் மேன்மை யடைவாள். தன் கணவன் மனத்துக்கு ஏற்றவள். பல பிரசித்தி பெற்ற புண்ணியத்தலங்களுக்குச் செல்வாள். கை கால்களில் வாயு நோயால் துன்ப மேற்படும். அன்புடனும் இன்முகத்துடனிருப்பவர் களிடம் பிரியமுள்ளவள்.

இதுவுமது

13. என்னுமே உத்தமர் சேவிக்கு மாது
யிகபரன் பத்திசா தனமுஞ்
சொன்னதைக் காப்பள் தோகைபோல் நிறத்தள்
தொல்புவி நல்லோளா மென்பார்
பன்னுவோர்க் கன்னம் படைப்பளா மென்றேரும்
பாவத்தில் மனதுசெல் லாதாள்
கன்னிகை யோக சாலியாங் தாயே
கட்டுரை பகரிடா ளென்றேரும்.

13. மிகச்சிறந்தவர்களும் எக்காலமும் வணங்கும்படி வாழ்வாள். சிவபெருமானிடம் பக்தியுள்ளவள். சொன்ன சொற்படி நடப்பவள். மயிலைப் போன்ற அழகுள்ளவள். உலகில் இவளை நல்லவள் என்று எல்லோரும் கூறுவர். யாசித்தவாகட்குப் பிரியத்துடன் அமுதை

அளிப்பவள். தீய காரியங்களில் மனம் செல்லாதவள் அதிர்ஷ்டசாலி என்றேரும். வார்த்தைகளைப் புனைந்து பேசாதவள்.

புத்திரபாவம்

14. மங்கைக்குச் சுதராண் மருவிடு மிரண்டு
மாதுவு மவ்விதந் தீர்க்களுஞ்
சங்கையா மொன்று துதியை ஜன்மஞ்
சந்ததி யோகமே யடைவார்
பிந்திய பாகம் சுதர்குணம் புகல்வேன்
பிறந்தவ னன்னையின் சேதி
செந்திரு வொப்பாம் வாததே கத்தாள்
சிவந்தமெய் யோகசா லிகளாம்.

14. (ஜாதகனுக்கு) ஜாதகனின் மனைவிக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து தீர்க்காயுள் உள்ளவர்கள் என்றேரும். தாயே! இரண்டாம் குழந்தை நிலையில்லாமல் இறந்துவிடும். மற்ற குழந்தைகள் யோகமுள்ளவைகளாக இருக்கும். பிற்பாகத்தில் குழந்தைகளின் குணத்தைச் சொல்லுகின்றேரும். இனி ஜாதகனின் தாயின் விவரங் களைக் கூறுகின்றேரும். இலக்குமியைப் போன்றவள். வாயுரோக முடையவள். சிவந்த உடலுள்ளவள். அதிருஷ்டமும் உள்ளவள்.

தாயின் விவரங்கள்

15. நன்னடை மிருது வார்த்தையே யாகும்
நவிலுவோ முன்கோபி யாவள்
தன்துணை யைந்து சாற்றுவோ மதிலாண்
தங்கிடு மிரண்டினி லொன்று
நொந்திடுங் கன்னி மூன்றென மொழிவோம்
நிமலியின் பூர்வமும் புகல்வோந்
தந்திவாழ் மலை டதனிலிம் மாது
ஜனித்தனள் கருணிகர் குலத்தில்.

15. நன்னடத்தையுள்ளவள். மெதுவாகப் பேசுபவள். பேசுவ தற்கு முன்பாகவே கோப மடைவாள். தாய்க்கு உடன்பிறந்தவர் ஐவர். அவர்களில் இருவர் சகோதரர். அவ்விருவரில் ஒருவர் இறந்து விடுவர் என்றும் சகோதரிகள் மூவர் என்றும் சொல்லுகின்றேரும். இனித் தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். விநாயகக் கடவுள் வாழ்ந்து வரும் மலை நாட்டில் கருணீகர் குலத்தில் இவள் பிறந்தாள் என்றேரும்.

சிவநேயரது சாபம்

16. சுதர்களு முண்டாய்த் தோகைவாழ் காளில்
செய்ததீ வினைகளைக் கேண்மோ
அதிதிக ளொருநாள் அந்தியி லன்னம்
தந்திடு வம்மையே யென்னச்
சதியான வார்த்தை செப்பினள் மாது
சங்கர னடியவர் வெறுப்பால்
இதுமொழி தகாது மறுஜன்மந் தந்தம்
எகிடும் அந்தியக் காலம்.

16. புத்திரர்களைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் அவள் செய்த தீவினையைக் கேளுங்கள். ஒரு சிவனடியார் இவளைப் பொழுது சாயும் காலத்தில் அணுகி, தாயே! சிறிது அன்னம் அளிப்பாய், என்று தாழ்வுடன் கேட்டார். இவள் தியவார்த்தைகளைக்கூறி அவரை வெருட்டினள். சிவனடியாரும் மனவெறுப்புற்று, தாயே! இந்த வார்த்தைகளைத் சொல்வது உனக்கழகல்ல. உனக்கு ஏற்படும் மறுபிறவியில் கடைசிக் காலத்தில் பற்கள் குறைந்துபோம்.

சாபபலன்

17. இன்னமும் பலவாறு சொல்லியே சென்ரு
ரெய்திற்று வடியவர் சாபங்
கன்னிகை யந்தம் கணவனு மாண்டு
கவலையா யறுமுகன் தொண்டு
தென்திசை காலன் நாட்டது புகுந்து
சிரகான்கோன் வரையவே வந்தாள்
முன்ஜன்ம சாபம் தந்தமும் குறைவாய்
மேவிடும் என்றன முனியே.

17. இன்னும் பலவிதமாகக் கூறிவிட்டுச் சென்ரார். அந்தச் சிவனடியாரின் சாபம் இப்பொழுது இவளைப் பற்றியது. அவள் தன் கடைசிக் காலத்தில் கணவனை யிழந்து மனக்கலக்கத்துடன் வாழ்ந்து ஆறுமுகக் கடவுளின் மீது பக்தி பூண்டு இருந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள். முற் பிறவியில் ஏற்பட்ட சாபத்தால் பற்கள் குறைவுள்ளதாம் என்று கூறினேம். முனிவரே!

தாயின் மறுபிறவியும் தந்தையின் முற்பிறவியும்

18. பின்ஜன்மம் போரு ரிக்குல முதிப்பாள்
பேசுவோர் தந்தைமுன் ஜன்மங்
கன்னியா குமரி நாட்டினில் குலாலன்
பிறந்துமே யடியவர் தொண்டு

பன்னுவோர் பத்தி பலசகா யங்கள்
பாரினில் நல்லவ னாகி
முன்வினை யின்றி மறலியின் நாட்டை
மேவியே வந்தவ னிவனே.

18. மறுபிறவியில் திருப்போரூரில் இதே குலத்தில் பிறப்பாள். இனி தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கன்னியா குமரிக் கருகில் உள்ள ஊரில் குலால வமிசத்தில் பிறந்து அடியார்கட்குத் பல தொண்டுகளைச் செய்து பலருக்கும் உதவி செய்து வந்து, உலகில் நல்லவனாக வாழ்ந்து முற்பிறப்புத் தீவினையின்றி மரணமடைந்து பிறகு பிறந்தவன் இவன் என்றோம்

தந்தையின் மறுபிறவி

19. மறுசென்மங் கொங்கு மாநகர் தன்னில்
மறைக்குல மூதித்துமே யின்னேன்
அரசனல் தொழிலு மணுகியே வாழ்வன்
ஆகிலு மிச்சென்ம புண்ணியம்
உரைகுவீர் முனியே யுமைதிருப் பணியும்
உலகினில் மார்க்கங்கள் செய்தும்
வருவோரைக் காத்தும் அறமதி லிச்சை
வைத்ததா லுதித்திடு வானும்.

19. தந்தை மறுபிறவியில் கொங்கு நாட்டில் அந்தணர் குலத்தில் பிறந்து அரசாங்க உத்தியோகத்தை ஏற்று வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் செய்த புண்ணியங்கள் யாவை? அவற்றைக் கூறுவீர், முனிவரே! பார்வதிதேவிக்குப் பல திருப்பணிகளைச் செய்து வந்தும் பொது ஜனங்கள் நடமாட்டச் சாலைகளை அமைத்து வந்தாலும், அண்டி வந்தவரைக் காத்தும், தருமம் செய்வதில் விருப்பமுள்ளவனாக இருந்தும் வந்ததால் அவ்வண்ணம் தோன்றுவான்.

ஜாதகனுடைய முற்பிறவி

20. ஜாதகன் பூர்வஞ் சாற்றுவோங் காஞ்சி
தலத்துக்குக் கீழ்த்திசை யருகில்
மேதினில் பேரூர் நவவீர வர்க்கம்
விளங்கியே பெரும்பொருள் படைத்து
மாதரின் மானங் காக்கிற தொழிலைச்
செய்வோர்க்குத் தாகமு மீந்து
தோகைவா கனத்தோன் தொண்டுமே பூண்டு
சண்டன்தன் பதிக்குமே சென்று;

20. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். காஞ்சி புரத்துக்குச் சமீபத்தில் கிழக்குப்பக்கமாக உள்ள பெரிய ஊரில் க்ஷத்திரிய குலத்தில் பிறந்து பெருஞ் செல்வத்தைப்பெற்றுப் பெண்களின் மானத்தைக் காக்க உதவும் சேவுத் தொழில் செய்து வரும் செங்குந்த மரபில் தோன்றிய சேவாளருக்குப் பல உதவிகளும் செய்து, பசித்தவருக்கு அன்னமு மளித்து, மயிலை வாகனமாக வுடைய சுப்பிரமணியக் கடவுளுக்குப் பல தொண்டுகளைச் செய்து வாழ்ந்து மரணமடைந்து ;

21. சிரநான்கோன் வரைய வருவனுந் தாயே
செப்புவோம் பாலகன் யோகம்
அரசர்பூ சிதமுந் தொழிலுமே வாய்க்கும்
அறுமூன்று நான்குவாண் டதன்மேல்
பிறையது போலே தொழிலது விருத்தி
பேசுவோ மைம்பத்தா ருண்டுங்
குறைவுரு தென்றே மதற்குமேல் விலகுங்
கொடுமைக ளின்றியே புகன்றோம்.

21. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறப்பான். தாயே ! இனி ஜாதகனுடைய யோகத்தைக் கூறுகின்றோம் அரசரால் கொண்டாடப்படும் தொழிலை ஏற்று வாழ்வான். ஜாதகனுடைய இருபத்திரண்டாம் வயதுக்குமேல் வளர்பிறைச் சந்திரன் போல் தொழில் விருத்தியடையும். ஐம்பத்தாரும் வயது வரையில் யோகம் குறையாது. அவ்வாண்டிற்குப் பிறகு குறையும். தீதுகளில்லாமல் (சந்தேகமில்லாமல்) இதைச் சொல்லியுள்ளோம்.

வேறு

தந்தை தாயரின் மரணகாலம்

22. மைந்தனின் ஆயுள் மட்டும் மன்னனுல் தனமும் நேருந்
தந்தைக்கு இருபா னுலுள் சார்ந்திடு மார கங்கள்
பிந்தியும் அன்பா னென்றுள் பேசுவோ மன்னை கண்டங்
கந்தனை யின்ற மாதே கழறினை மொழி குன்றுவே.

22. ஜாதகன், தனது ஆயுள் மட்டும் அரசாங்கத்தாரிட மிருந்து பொருள் (உபகாரச் சம்பளம்) பெற்று வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய தந்தைக்கு இருபத்துநான்காம் வயதுக்குள் மரணம் சம்பவிக்கும். பிறகு ஐம்பத்தோராம் வயதில் தாய் மரணமடைவாள். முருகக் கடவுளைப் பெற்ற தேவியே ! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

ஜாதகன் மரணகாலமும் மறுபிறவியும்

23. அன்பது வைந்து வாண்டி லணுகிய தனசு மாதந்
திருமக னுடல மேகுஞ் செப்புவோ மிவன்பின் ஜன்மம்
பெருமையாயத் தணிகை யுத்தரம் பேரூரில் சத்திரியச்
[சேயாய்க்
கரிபரி யுடைய னுகிக் காவலன் வாழ்வா னுமே.

23. ஜாதகனுடைய அறுபத்தைந்தாம் வயதில் மார்கழி மாதத்தில் ஜாதகன் மரணமடைவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். பெருமையுள்ள திருத்தணிக்கு வடக்குப் பக்கத்திலுள்ளதொரு பெரிய ஊரில் க்ஷத்திரிய குலத்தில் தோன்றி, யானை குதிரை முதலியவைகளைப் பெற்று அரசனைப்போல் வாழ்வான்.

உயர்குலப்பிறவிக்குக் காரணம்

24. இந்ததோர் ஜன்மந் தன்னி லீகையுங் குறைவ தாயும்
பொன்பொரு ளிச்சை யாயும் பூமியில் சிலர்க்குத் துன்பம்
அன்னவன் செய்ததாலே யரசர்தங் குலமெவ் வாறு
சொன்னீரே விபரஞ் சொல்வீர் ஐயமுனி புகலு கின்றார்.

24. இப்பிறவியில் தருமம் குறைவாகச் செய்பவனுகவும் பொன் செல்வம் இவைகளில் விருப்பமுள்ளவனுகவும் பூமியில் சிலருக்குத் துன்பம் விளைவிப்பவனுகவு மிருந்துவந்தவன் சத்திரிய குலத்தில் எங்ஙனம் பிறப்பான் என்று சொல்லுங்கள். அதற்குக் காரணத்தைக் கூறுவீர் என்று வினவ, ஐயமுனிவர் பதில் உரைக்கின்றார்.

25. தோகைவா கனத்தோன் பத்தி துறவிக்கு வன்ன [மீந்தும்
ஆகம முணர்வ தாலும் அதன்படி நடப்ப தாலுந்
தாகமென் றோர்க்கு வீந்துந் தானுப தேசம் பெற்றுப்
பாகமாய் வாழ்வ தாலே பிறப்பனு மென்று சொல்வோம்.

25. மயிலே வாகனமாகவுடைய சுப்பிரமணியக் கடவுளிடம் பக்தி கொண்டும் துறவிகட்கு அன்னமளித்து வந்தும் வேதங்களைக் கற்றுணர்ந்தும், அதன்படி நடந்து வந்ததாலும், பசிதாகமுள்ளவர்கட்கு வேண்டுவன கொடுத்து வந்தும், பெரியவர்களிடம் உபதேசங்கள்பெற்று வந்தும், பொருத்தமாக வாழ்ந்து வருவதாலும் அங்ஙனம் பிறப்பான் என்றோம்.

ஆசார்யனது விவரம்

26. ஞானங்கள் புகல்வோர் தம்மை
நவிலுவீர் முனியே நீர்தாம்
வானவர் போற்று மன்னன்
மருகன்த னடிமை வர்க்கம்

ஊனமில் லாத தேகி
யுயர்வுளன் செங்குந்த வம்சம்
மான்மழு தரித்தோன் பூசை
மறவாதான் வறுமை யோனே.

26. இவனுக்கு ஞானோபதேசம் செய்பவர் யார் என்று கூறுங்கள். முனிவரே! தாங்கள். தேவர்கள் போற்றும் மகாவிஷ்ணுவினுடைய மருகனுகிய சுப்பிரமணியக் கடவுளின் அடியவர் வர்க்கத்தில் தோன்றியவன் ஒரு செங்குந்தன். குறைகளில்லாத தேகமுடையவன். அவன் மான் மழு முதலியவற்றைத் தரித்த சிவபெருமானுக்குப் பூசைகள் புரிந்து வருபவன். தரித்திரமுள்ளவன்.

27. பாரியு மதலை யுண்டாய்ப் பாலர்மேல் பகையு மாகிப்
தீரமாய் வெளியில் சென்று தேசமேல் திரிந்து வன்னேன்
பேரறி ஞானி தன்னைப் பிரம்மமென் றனுச ரித்து
வேறொரு வர்பால் கேட்டு விவேகமுங் குறைவ தாகி;

27. மனைவி மக்களைப் பெற்று வாழ்ந்து புத்திரர்கள் மீது விரோதமுற்று வெளிநாட்டுக்குச் சென்று (வீட்டைவிட்டு வெளிச் சென்று) உலகில் திரிந்து அவன் பெரிய ஞானி ஒருவரை அணுகி உபதேசம் பெற்று வாழ்ந்து பிறகு வேறொருவரிடம் சில விஷயங்களைக் கேட்டு தன்னுடைய (சுபாவமான நல்லறிவை யிழந்து) விவேகங் குறைந்து;

வேறு

28. சாதனை செய்து பிணிகளுண் டாகிச்
சாருவான் ஜாதகன் பக்கல்
போதனை செய்வன் கபடுமே கொஞ்சம்
பொருந்திடுஞ் சிலர்களுக் கிவனுஞ்
சாதனை செய்வன் அணுகுங்கா லத்தைச்
சாற்றுவீர் ஆறு வாண்டுள்
மாதவம் போலே வந்தவ னவனும்
மனைவிக்கும் ஞானம்போ திப்பன்.

28. சாதனைகள் செய்து நோய்களை அடைந்து பிறகு போதித்த குருவின் பக்கம் சென்று அக்குருவானவன் மனத்தில் வஞ்சக எண்ணங்களுடன் இவனைச் சாதனைகளைக் கேட்கச் செய்வான். அஃது எந்தக் காலங்கள் என்று சொல்லுங்கள். அது அவனுடைய முப்பத்தாரும் வயதில் நேரும். பெரிய தவம் செய்பவன்போல் வாழ்ந்து வருவான். தன் மனைவிக்கும் ஞானோபதேசம் செய்வான்.

29. சிலசில நாட்கள் வெளிகளில் சென்று
சேருவான் மைந்தனின் பக்கல்
தலைவனுக் கன்பா னிரண்டுவாண் டதனில்
தன்னுடைச் சாதனை யாலே
குலவுவான் சோதி யோடுற வாவன்
குமரனுங் கருமங்கள் செய்வன்
நிலையது அன்ப தாண்டினில் தனக்கு
நேர்ந்திடுஞ் சாதனை தானே.

29. சிற்சில நாட்கள் வெளியில் சென்று கடைசியில் தன் புத்திரனிடம் செல்லுவான். தன்னுடைய ஐம்பத்திரண்டாம் வயதில் தன் சாதனையால் அருட்பெருஞ் சோதியுடன் கலந்து விடுவான். இவனுடைய புத்திரனும் இறுதிக் கடன்களைச் செய்து முடிப்பான். ஐம்பதாம் வயதில் இவனுக்கு ஒரு நிலை ஏற்படும். அதுவும் இவனுடைய சாதனையால் ஏற்படும்.

ஜாதகனது ஜனனகாலதசை

30. இன்னமும் விவர மியம்புவோம் பின்பா
லிரங்குநாள் ஆயில்ய மாகுஞ்
[1]சந்திரன் மகனின் தசையீரெட் டாண்டுஞ்
சாற்றினேஞ் திங்களு மொன்று
முன்பாகம் புகன்றோம் பலன்தனைக் கேளா
யுயர்வுண்டு தந்தைக்கு யோகம்
பின்துணை விருத்தி கல்வியு நேரும்
பெருமையாய்ப் புகழுமே யெய்தும்.

30. மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். இவன் பிறந்தது ஆயில்ய நட்சத்திரம். ஜனனகாலத்தில் புதமகாதசையில் பதினாறு ஆண்டுகளும் ஒரு மாதமும் மீதமாகும். இதுவரை இங்ஙனம் முதல் பாகத்தைச் சொன்னோம். அக்காலத்தில் உயர்வேற்படும். தந்தைக்கு அதிர்ஷ்டமுண்டாகும். சகோதர விருத்தி யேற்படும். வித்தியாப்பியாசம் செய்து வைக்கப்படுவான். பெருமையையும் கீர்த்தியையும் அடைவான்.

---

1. புதன்.

ஜாதகம் 68

1. சிங்கலக் கினம தாகச் சிஙிஜன்மங் காரி மூன்றில்
பங்கயன் புகரு மொன்பான் பாகனுந் தசத்தி லேறத்
திங்களு மிருநான் காகச் சீவனு மீரா ருகச்
சங்கையைச் சொல்லு மென்ன சத்தியுங் கேட்க லுற்றாள்.

1. சிம்மம் இலக்கினமாகவும், கேது ஜன்மத்திலும், சனி மூன்றாமிடமாகிய துலாத்திலும், சூரியன் சுக்கிரன் ஒன்பதாமிடமாகிய மேஷத்திலும், புதன் பத்தாமிடமாகிய விருஷபத்திலும் சந்திரன் எட்டாமிடமாகிய மீனத்திலும் குரு பன்னிரண்டாமிடமாகிய கடகத்திலும், இருந்தால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் எனப் பார்வதிதேவி கேட்கலானாள். (செவ்வாயின் நிலை ஏட்டில் காணப்பெறவில்லை.)

ராசிநிலை

சந்திரன்	சூரியன் சுக்கிரன்	புதன்	
ராகு	இராசி சக்கரம்		குரு
			லக்கினம் கேது
		சனி	

ஜாதகியின் வீட்டுநிலை

2. பிருகுவும் புகலு கின்றார்
பிறந்திடும் பெண்பால் ஜன்மம்
பெருந்தந்தை யில்லஞ் சொல்வேன்
பெருவயி றப்ப னுத்தரம்
இருமார்க்கம் மேற்கு வாச
லியம்பின சிறு வூராகும்
அரிவையு மைந்தாஞ் ஜன்மம்
அணுகுமுன் வைசிய வர்க்கம்.

2. பிருகு முனிவர் கூறுகின்றார். இது பெண் குழந்தையின் ஜாதகம். இவள் பிறந்த தந்தையின் வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றோம். அவ்வீட்டுக்கு வடக்கில் விநாயகரின் ஆலயமும், இரு புறங்களிலும் பொது வழியும் உள. அது மேற்கு நோக்கியுள்ள வாயிலையுடையதாகவு மிருக்கும். இது ஒரு சிற்றூராகும். இப்பெண் தன் தந்தைக்கு ஐந்தாம் பிறவியாக வைசிய குலத்தில் பிறந்தவள் என்றோம்.

3. கன்னிகை யோகச் சேதி
காதலன் குடும்பச் சேதி
அன்னையின் தந்தை யோகம்
அவள் துணை புத்திர யோகம்
இன்னவள் முன்பின் ஜன்ம
மியம்புவோ மிந்நூல் தன்னில்
உன்னத வரனைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

3. ஜாதகியின் யோக விவரங்களையும் அவளுடைய கணவனின் குடும்பச் செய்திகளையும் தாய் தந்தையரின் யோகத்தையும் உடன் பிறந்தவர் புத்திரர்கள் இவர்களின் யோகத்தையும் முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றோம். உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

வேறு

தந்தையின் குணம்

4. ஆகிய தந்தை குணங் கேளாய்
அறிவோர் நேயன் அரசரிஷ்டன்
நேய ரதிக மூக முளன்
நீத்தோர்க் கன்னந் தானீவன்
தூய மனத்தன் உயர மிலான்
சோர்வோர்க் கன்னம் தானீவன்
காயான் தனத்தி லிச்சை யுளன்
காலா ளுடையன் கனவானே.

4. இனி ஜாதகியின் தந்தையின் குணங்களைக் கேட்பீராக. அறிவாளிகட்குப் பிரியமானவன். அரசாங்கத்தாருக்கு நண்பன். அதிகமான நண்பர்களைப் பெற்றவன். ஊகமுடைவன். துறவிகட்கு அன்புடன் அன்னமளிப்பவன். பரிசுத்தமான மனமுடையவன். குட்டையன். பசிதாகத்தால் கஷ்டத்தவர்கட்கு அன்னமளிப்பவன். செல்வம் சேர்ப்பதில் விருப்பமுடையவன். ஏவலாட்கள் உள்ளவன். கனவான்.

5. வானோர் பணிவன் வாயுப்பிணி
மர்ம தானந் தானணுகும்
ஊன மில்லான் அரசரினல்
உய்வான் ஆயுள் பரியந்தம்
ஊன மட்டும் ஞானமர்ம
(நூலறிவன்) நந்திச் சகடு முடையவனே
மானின் சொல்லை மறிக்காதான்
மாமி ரண்டு மருவிடுமே.

5. தெய்வத்தைத் தொழுவான். மர்மஸ்தானத்தில் வாயு ரோக முடையவன். குறைகளில்லாத சரீரமுடையவன். அரசரால் ஆயுள் பரியந்தம் ஜீவனம் செய்து வருவான். இரகசிய நூலைக் கற்றறிவான். மாட்டுவண்டி உடையவன். தன் மனைவியின் சொல்லை மீறுதவன். இரு மனைவியரை யுடையவன்.

6. அஞ்சா நெஞ்சன் பகை காணன்
அவனி விருத்தி ஆளடிமை
கொஞ்சு மொழியன் சிவந்த மெய்யன்
குலத்தோர் மதிப்புக் கொண்டிடுவன்
வெஞ்சி னத்தை வெளிக் காட்டான்
விதேச மதிலே வாசமுறும்
பஞ்சு மெத்தைக் கட்டி லுமே
படைப்பன் அம்மி யரிராசி.

6. பயமில்லாத நெஞ்சம் படைத்தவன். விரோதிகளில்லாதவன். பூமியைப் பெருக்குவான். ஏவலாட்கள் உள்ளவன். கிளியைப்போல் (கொஞ்சம்) இனிய வார்த்தைகளைப் பேசுபவன். சிவந்த உடலுடைய வன். தன் பந்து ஜனங்களின் மதிப்புக்கொள்வான். முன்கோபமுடைய வன். ஆனால் அதை வெளிவிடாதவன். வேறு தேசம் சென்று வாழ்ந்து வருவான். பஞ்சு, மெத்தை கட்டில்கள் முதலிய சயனசுகமுள்ளவன். ஆயில்ய நட்சத்திரத்தில், சிம்ம லக்கினத்தில் ;

தந்தையின் முற்பிறவி

7. உதிப்பான் பூர்வந் தான்புகல்வேன்
உயர்வாங் காஞ்சி கீழ்ப்பாலில்
பதியும் பேரூர் நெசவுகுலம்
பிறந்து பலர்க்கு உதவியுமே
அதிதிக் கன்னந் தானீந்து
ஆறுமா முகத்தோன் பத்தியதாய்
விதியு முடிந்து வேதனுமே
வரைய வந்தான் மெல்லியரே.

7. பிறந்தவன். இனி அவனுடைய முற்பிறவியைச் சொல்லுகின் றேம். உயர்ந்த காஞ்சி நகரத்துக்குக் கிழக்கில் உள்ள பெரிய ஊரில் நெசவுத்தொழில் செய்துவரும் செங்குந்த மரபில் பிறந்து பல பேருக்கு உதவி செய்து, சக்தியற்ற ஏழைகட்கு அன்னபானதிகளை அளித்து ஆறுமுகக் கடவுளின் மீது பக்திகொண்டு வாழ்ந்து, மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். மெல்லிய இடையையுடைய பார்வதி தேவியே !

ஜாதகியின் குணங்கள்

8. அறவே குணத்தா னுக்குயிவள்
அணுகு மாது குணங்கேளாய்
பெருமைக் குணமுங் கிளிமொழியும்
பித்த னடியார்த் தொண்டுகளுங்
குறையென் றோர்க்கு வுதவியுமே
கொழுநன் மனத்துக் கேத்தவளாய்ப்
பொறையில் லாதாள் கல்வியுமே
பொருந்த வுரைப்பள் பூவையரே.

8 இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகி பிறப்பாள் என்றோம். இனி ஜாதகியின் குணத்தைக் கேட்பீராக. பெருந்தன்மையான குணமுள்ளவள். கொஞ்சும் வார்த்தையுள்ளவள். சிவனடியார்கட்குப் பல தொண்டுகளைச் செய்வாள். துன்புற்றவர்கட்கு உதவி செய்து வருவாள். தன் கணவன் மனத்துக்த ஏற்றபடி நடப் பவள். பொய்யைப் பேசாதவள். கல்வியறிவுள்ளவள். பொருத்தமாகப் பேசுபவள். தாயே!

வேறு

இதுவுமது

9. பூவைமா நிறமுங் கரத்தினில் வடுவும்
பொருந்திடும் வறுமையே காணுள்
பாவைமுன் தோன்றல்கள் ஆனது விரண்டு
பகர்ந்தனங் கன்னியு மொன்று
சேவலங் கொடியோ னருளினுல் தீர்க்கஞ்
செப்புவோம் அவர்பலன் கேளாய்
மேவிய முன்னுண் ஜனவுப காரி
வேந்தனுல் ஜீவன மெய்தும்.

9. மாநிற முள்ளவள். கையில் வடு உள்ளவள். தரித்திரமடை யாதவள். இவளுக்கு இரு மூத்த சகோதரர்களும் ஒரு சகோதரியும் பிறந்து சேவல் கொடியோனுகிய சுப்பிரமணியக் கடவுளினருளால் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். அவர்களுடைய பலனைச் சொல்லுகின்றோம். மூத்த சகோதரன் ஜனங்களுக்கு உபகாரி. அரசாங்க உத்தியோகத்தை ஏற்று ஜீவிப்பான்.

ஜாதகியின் மூத்த சகோதரனின் வரலாறு

10. தந்தைமேல் வாழ்வன் சகடுவா கனத்தோன்
தரணியை விருத்தியே செய்வன்
வந்திடும் பாரி யொன்றென வுரைத்தோம்
மைந்தர்கள் தவத்தினுல் தோன்றும்

விந்தையா யாண்பால் ஒன்றென மொழிவோம்
மெல்லியு மிரண்டுமே தீர்க்கம்
நிந்தைக ளேற்கான் கடனது கொள்ளான்
நிருபனு மாகியே வாழ்வன்.

10. தன்னுடைய தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். வண்டி முதலிய வாகன வசதியுள்ளவன். விளைநிலங்களைப் பெருக்குவான். மனைவி ஒருத்தியையே உடையவன். முற்பிறவிப் பயனால் புத்திரபாக்கிய முண்டாகும். ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்க மாவார். அவமானங்களை அடையாதவன். கடன் வாங்காதவன். அரசனைப்போல் வாழ்ந்து வருவான்.

இளைய சகோதரனின் குண விசேஷங்கள்

11. அதற்குபின் வந்தோன் குணமதைப் புகல்வேன்
அறிவுளன் தந்திர வார்த்தை
பதரினில் செல்லான் பலபாவை மோகன்
பாரபட் சங்களுஞ் செய்வன்
நிதிமிகச் சேர்ப்பன் கல்வியில் மேன்மை
நிருபனால் உய்வனே யாவன்
நதிசேது காசி சென்றிடு வானும்
நாட்டினில் வறுமையே காணன்.

11. ஜாதகியின் சகோதரரில் இளையவனின் குணங்களைக் கூறக் கேட்பீராக. அறிவுள்ளவன். தந்திரமாகப் பேசுபவன். அற்ப காரியங்களில் மனம் செல்லாதவன். பல பெண்களின் மீது விருப்ப முள்ளவன். ஒருதலைப்பக்கமாகப் பேசுபவன். மிகுந்த செல்வத்தைச் சேர்ப்பான். கல்வியறிவில் மேன்மையடைவான். அரசாங்கத்தாரால் மேன்மேலும் விருத்திக்கு வருவான். புண்ணிய தீர்த்தங்களாகிய சேது காசி முதலிய இடங்களுக்கும் பல புண்ணிய நதிகட்கும் செல்லு வான். உலகில் வறுமையை அடையாதவன்.

ஜாதகியின் சகோதரியின் குணங்கள்

12. மனைவியு மொன்றே மைந்தரா னிரண்டு
மங்கைமா ரவ்விதந் தீர்க்கம்
வினையாகு மூன்று பெரும்புக ழேற்பன்
வித்தகன் வயதுமே தீர்க்கந்
துணைவியின் சேதி செப்புவோ மினிமேல்
துறவிபோல் வார்த்தையு முண்டு
சினமுடன் மூர்க்கம் பலவீன முடையாள்
சிறுத்தோர்க்கு வன்னமு மீவள்.

12. ஒரு மனைவியையே அடைவான். இரு புத்திரர்களையும் இரு புத்திரிகளையும் பெற்றவன். மூன்று குழந்தைகள் இறந்துபோம். கீர்த்தியையடைவான். நீண்ட ஆயுள் உள்ளவன். இனி ஜாதகியின் சகோதரியின் விவரங்களைக் கூறுகின்றேம். முற்றும் துறந்த முனிவர்களைப்போல் பேசுபவள். கோபம் கொள்ளுவாள். கொடூர சுபாவ முடையவள். பலவீனமுடையவள். துன்புற்றவர்கட்கு அன்புடன் அமுது படைப்பாள்.

13. கல்விமான் அடக்கம் கழுத்தினில் ரோகங்
கருமூனி தோஷமு மேற்பள்
இல்லையென் றுரையாள் சீலமு முள்ளாள்
இதிகாச மறிகிற குணத்தாள்
வல்லிக்குச் சுதர்கள் தவத்தினுல் தோன்று
மாணென்று கன்னியு மவ்வாறு
தல்லிநற் குணத்தாள் சாதமன் பாகத்
தருவளாம் வயதுமே தீர்க்கம்.

13. கல்வியறிவுள்ளவள். அடக்கமுள்ளவள் கழுத்தில் ரோக முள்ளவள். முனீச்வரனின் தோஷமுடையவள். யாசித்தவருக்கு இல்லையென்று கூறுதவள். நல்லொழுக்கமுடையவள். புராண இதிகாஸங்களைக் கற்றறியும் குணமுள்ளவள். முற்பிறவிப் புண்ணியப் பயனுல் அவளுக்குப் புத்திரபாவமுண்டு. ஒரு புத்திரனும் ஒரு புத்திரியையும் பெற்றவள். பெற்ற தாயைப் போன்று அன்புடன் ஆதரித்து வருவாள். பரிவுடன் அன்னமளிப்பவள். நீண்ட வயதுடையவள்.

தாயின் குணங்கள்

14. மாதுரு குணத்தை யறைகிறே மினிமேல்
மாகிறம் உணச்சலாம் நீட்சி
ஓதுவாள் சுகமாய் ஞானநூ லறிவாள்
உயர்வான புத்தியு மேற்பள்
தீதுகள் விலக்குந் திவ்வியத் தலங்கள்
செல்வளாந் தேரினேர்க் கன்பள்
காதலி யோகங் கணவனுக் குண்டு
கல்வியு மேன்மையே காண்பள்.

14. இனி தாயின் குணநலங்களை கூறுகின்றேம். மாகிறமுடையவன். மெல்லிய சரீரமுள்ளவள். உயரமானவள். இன்புறும்படிப் பேசுபவள். வேதாந்தநூலை நன்கு அறிந்தவள். உயர்ந்த புத்தியுள்ளவள். பாவங்களை யொழிக்கும் பலபுண்ணியத்தலங்களுக்குச் செல்வாள். அறிவாளிகட்குப் பிரியமானவள். இவளுடைய யோகத்தால் கணவன் மேன்மையடைவாள். கல்வியறிவிலும் உயர்வையடைவாள்.

தாயின் முற்பிறவி

15. சிவனடி யாரா லிகபர பூஜை
செய்வளாம் யோகமு மணுகும்
தவசிபோல் பின்னுல் தன்துணை யாண்பால்
சாராவே கன்னிகை யிரண்டு
நவனியில் தீர்க்கம் நவிலுவோம் மறுதாய்
நல்கிடு மெனவுரைத் தனமே
இவளுடைப் பூர்வம் பெருமலைத் தென்பால்
எய்திஞ ரிரட்டியின் குலத்தில்;

15. சிவனடியார் ஒருவரின் உதவியால் சிவபூசைகள் புரிந்து வருவாள். அதனுல் யோகம் கிட்டும். பிற்காலத்தில் தவசிபோல் வாழ்ந்து வருவாள். பின் பிறந்த சகோதர ரில்லாதவள். இரு சகோதரிகள் உள்ளவள். அவ்விருவரும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும். தாயே! ஜாதகியின் தாய்க்கு மாற்றுந்தாய் ஒருத்தி வருவாள் என்றும் கூறுகின்றும். இனி தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றும். பெரிய மலையாகிய திருப்பதிக்குத் தெற்கிலுள்ள ஊரில் ரெட்டியார் குலத்தில் பிறந்து;

16. தனமது பெற்றுச் சந்ததி யுண்டாய்ச்
சான்றோர்க்கு வன்னமு மீந்து
இனமதைக் காத்து முருகர்தம் பத்தி
யெய்தியே வரன்முன்னே மாண்டு
வினையிலாக் கங்கை குலமதில் வந்தாள்
விளம்புவோ மிவளின்பின் ஜன்மங்
கனமுள காசி நகரினில் மறையோர்
குலத்தினில் கலப்பளா மென்றும்.

16. செல்வங்களை யடைந்து புத்திரபாக்கியத்தைப் பெற்று பெரியோர்கட்கு அன்னமளித்து வந்து தன் சுற்றத்தாரை ஆதரித்து வந்து முருகக் கடவுள் மீது பக்தி கொண்டு வாழ்ந்து தன் கணவனுக்கு முன்பாகவே மரணமடைந்து தீங்குகளில்லாத இந்த வேளாள குலத்தில் பிறந்தாள். இனி தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றும். பெரிய புண்ணியத் தலமாகிய காசி நகரத்தில் அந்தண குலத்தவளாகப் பிறப்பாள், என்றும்.

தாய் செய்த நல்வினை

17. மங்கையிச் சென்ம மடைந்தபுண் ணியங்கள்
வருவிப்பீர் விவரமாய் முனியே
எங்கள்போ லதிதி நேசமுங் கொண்டு
இடரென்றோர்க் குதவியு மாகித்

துங்கமாந் தலங்கள் சென்றதால் முன்னல்
பிறவியில் பெற்றதா யுதிப்பாள்
ஐங்கரன் முருகன் தனைவளர்த் திட்ட
அம்பிகை கேட்டிடு வாயே.

17. ஜாதகியின் தாய் இப்பிறயில் செய்த நல்வினைகள் எவை? அவைகளை விவரமாகத் தெரிவியுங்கள், முளிவரே! எங்களைப் போன்ற துறவிகளிடத்தில் பிரியத்துடன் இருந்து துன்பமடைந்தவர்கட்கு உபகாரம் செய்து வந்து பல தூய்மையான தலங்களுக்குச் சென்று வந்ததால் அவ்விதம் அந்தண குலத்தில் தோன்றுவாள். ஐந்தாம் கையாகிய தும்பிக்கையையுடைய விநாயகனையும முருகப்பிரானையும் பெற்று வளர்த்த தேவியே! கேளுங்கள்.

ஜாதகியின் திருமணக் காலமும், கணவனின் குணங்களும்

18. ஜாதகி மணங்கள் சாற்றுவோ மினிமேல்
சஷ்டிகள் இரட்டித்த வாண்டில்
காதலன் வடபா லணுவான் தாயே
கழறுவோ மவன்குண மதனை
நீதிமா னிரண்டு கல்வியும் நேரும்
நிருபர்க ளிஷ்டமே கொள்வன்
தீதிலாக் குணத்தான் தேரின புத்திச்
சிவநாம முடையவ னுமே.

18. ஜாதகியின் திருமணக் காலத்தை இனிக் கூறுகின்றேம். அஃது அவளுடைய பன்னிரண்டாம் வயதில் நேரிடும். கணவன் வடக்குப் பக்கத்திலிருந்து வருவான். இனி அவனுடைய குணங்களைக்கூறுகின்றேம். நேர்மையுள்ளவன். இருவிதமான கல்விகளைக் கற்பான். அரசாங்கத்தாருக்குப் பிரியமானவன். தீங்குகளில்லாத குணமுடையவன். முதிர்ந்த அறிவாளி. சிவபெருமானுடைய பலபெயர்களில் ஒன்றைப் பெற்றவன்.

இதுவுமது

19. மன்னரால் தொழிலு மருவிடு மென்றேம்
அன்னியப் பாஷையில் மேன்மை
பின்னமில் லாத தேகியு மாவன்
பூவையின் மனத்திற் கேற்றோன்
அன்னியர் மதிக்கப் புகழது மேற்பன்
அவனியில் வறுமையே காணன்
சொன்னனே மாது வரன்குண மதனைச்
சுந்தரி கேட்டிடு வாயே.

19. அரசாங்கத் தொழிலை ஏற்பான். (அரசாங்கச் சார்புள்ள தொழிலை நடத்துவான்.) அன்னிய பாஷையில் தேர்ச்சிபெற்று உயர்வையடைவான். ஊனமில்லாத தேகமுள்ளவன். தன் மனைவிக்குப் பிரியமானவன். பிறர் கொண்டாடும்படியான கீர்த்தியையடைவான். உலகில் தரித்திரத்தையடையாதவன். இதுவரை ஜாதகியின் கணவனுடைய குணங்களைச் சொன்னேம். அழகியே! கேட்டிடுவாய்.

வேறு

புத்திர பாவம்

20. சுதர்களு மாண்பால் மூன்று
தோகையு மவ்வாறு தீர்க்கம்
முதல்சுதர் தோஷ மெய்தும்
மொழிகுவீ ரந்தச் சங்கை
புதல்வர்தா னத்தோன் பொன்னன்
பொருந்திட மீரா ரூக
அதுதோஷ மொன்று மேழு
மணுகாது பாவைக் கேதான்.

20. ஜாதகிக்கு மூன்று புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் தோன்றித் தீர்க்கமாவர். முதலில் தோன்றும் குழந்தை நிலையாது. அவ்விதம் நேரிடக் காரணத்தைக் கூறுங்கள் என்று வினவ, புத்திரஸ்தானத்துக்குரிய குரு பன்னிரண்டாமிடத்தில் (விரயஸ்தானத்தில்) இருப்பதால் புத்திரதோஷம் ஏற்படும் அந்தத் தோஷத்தால் முதலில் தோன்றும் குழந்தையும் ஏழாவது குழந்தையும் நிலையுறாது.

ஜாதகியின் முற்பிறவி

21. பாவையின் பூர்வஞ் சொல்வேன் பெருங்குன்ற நாட்டி-
[லேதான்
சீலமாங் குலமு தித்துத் தேரின குடும்பி யாகி
ஞாலமேல் நல்லோ ளாகி நலிந்தோர்க்கு முதவி செய்து
தேவியும் வாழ்ந்து மேதான் சென்றனள் வரன்மூன் னுக.

21. இனி ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருப்பரங்குன்றத்தில் நல்லொழுக்கமுடைய (அந்தணர்) குலத்தில் பிறந்து முதிர்ந்த குடும்பத்தையடைந்து உலகில் நல்லவளாக வாழ்ந்து துன்புற்றவர்கட்கு உதவிசெய்து வந்து, தன் கணவனுக்கு முன் பாகவே மரண மடைந்தாள்.

22. சிரநான்கோன் வரையப் பட்டு ஜனிப்பளா மிந்த மாது
உரைக்கிறோ மிவளின் யோகம் உணவுக்குக் குறைவு
[றுதாள்
பெருஞ்பணி சேர்ப்பா ளாகும் புண்ணிய மனத்த ளாகும்
முருகர்க்குத் தொண்டு பூண்ப ளுலகுக்கு நல்லோ ளாவள்.

22. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள். இனி ஜாதகியின் யோகத்தைக் கூறுகின்றேம். சாப்பாட்டிற்குக் குறைவில்லாதவள். பெருஞ் செல்வம் ஆபரணம் இவைகளைச் சேர்ப்பாள். நல்லெண்ணம பொருந்திய மனத்தினள். முருகப்பிரானுக்குப் பல தொண்டுகளைச் செய்வாள். உலகத்தவருக்கு நல்லவள்.

ஜாதகி தந்தையின் மரணகாலமும் மறுபிறவியும்

23. இருபது வைந்து ஆண்டில்
இயம்புவோர் தந்தை கண்டம்
மறுஜன்மந் தணிகை யுத்திர
மருவுவான் சத்திரிய சேயாய்க்
கரிபரி யுடைய னுகிக்
காவலன் வாழ்வனுகும்
பெருவயி றேரனைப் பெற்ற
புண்ணிய சாலி கேளாய்.

23. ஜாதகியின் இருபத்தைந்தாம் வயதில் தந்தை மரண மடைவான். மறுபிறவியில் திருத்தணிகைக்கு வடக்கில் சத்திரிய குலத்தவனுகப் பிறந்து யானை குதிரைகள் முதலியவற்றைப் பெற்று அரசன் போல் வாழ்ந்து வருவான். பெரிய வயிற்றையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

தாயின் மரணமும், கணவன் ஜாதகி இவர்களின் இறுதிக் காலமும்

24. மூப்பது யிரண்டு வாண்டில்
விளம்புவோ மன்னை கண்டம்
ஒப்புட னைம்ப தாண்டி
லுரைக்கிறேம் வரனின் கண்டம்
மெய்ப்புட னறுபான் மூன்றில்
விளம்புவோஞ் ஜாத கிக்குச்
செப்புவோந் துலாமா தத்தில்
சேயிழை கண்ட மெய்தும்.

24. மூப்பத்திரண்டாம் வயதில் தாய் மரண மடைவாள். ஐம்பதாம் வயதில் கணவன் இறந்துவிடுவான். அறுபத்து மூன்றும் வயதில் ஜாதகி இறந்துவிடுவாள். ஐப்பசி மாதத்தில் அஃது ஏற்படும் என்று சொல்லுகின்றேம்

ஜாதகியின் மறுபிறவியும் ஜனன காலதசையும்

25. மறுஜன்மங் காஞ்சி தன்னில்
மருவுவாள் பிரம்ம சேயாய்த்
திருமகள் ஜனன காலஞ்
சனிதசை நடக்கு மென்றேம்
பெருமையாய்ப் பூர்வஞ் சொன்னேம்
புகலுவோம் பின்பால் சேதி
அருமறை முடிவி லாடும்
அம்பிகை யாளே கேளாய்.

25. மறுபிறவியில் காஞ்சிபுரத்தில் அந்தண குலத்தவளாகப் பிறப்பாள். ஜாதகியின் ஜனன காலத்தில் சனிமகாதசை நடக்கும் என்றேம். இவ்விதம் முதல் பாகத்தைக் கூறியுள்ளோம். இனி மற்ற விவரங்கள் பிற்பாகத்தில் கூறப்படும். தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 69

1. சிங்கலக் கினம தாகச் செம்பொன்னு மூன்றி லாகப்
பங்கயன் காரி வெள்ளி பனிமதி நாலி லாகப்
பொங்கிய புதனும் ராகு பஞ்சமங் கேது லாபம்
மங்கல னீரா ருக வரைகுவீர் பலனை யென்று ;

1. சிம்மம் இலக்கினமாகவும் குரு மூன்றுமிடமாகிய துலாத்திலும், சூரியன் சனி சுக்கிரன் சந்திரன் நான்காமிடமாகிய விருச்சிகத்திலும் புதன் ராகு ஐந்தாமிடமாகிய தனுசிலும், கேது லாபஸ்தான மாகிய மிதுனத்திலும், அங்காரகன் பன்னிரண்டாமிடமாகிய கடகத்திலும் இருந்தால் ஏற்படும் பலன எழுதுங்கள் என்று ;

கிரகநிலை

<table>
<tr><td></td><td></td><td></td><td>கேது</td></tr>
<tr><td></td><td rowspan="2">இராசி
சக்கரம்</td><td></td><td>செவ்வாய்</td></tr>
<tr><td></td><td></td><td>லக்கினம்</td></tr>
<tr><td>புதன்
ராகு</td><td>சூரியன்
சனி
சுக்கிரன்
சந்திரன்</td><td>குரு</td><td></td></tr>
</table>

ஜாதகனின் வீட்டுநிலை

2. பார்வதி கேட்கும் போது பிருகுவும் புகலு கின்றார்
சீர்புக ழாண்பால் ஜன்மஞ் ஜனிக்குமில் தென்பால் [நோக்கந்
தார்புகழ் பேரு ராகுஞ் ஜகராசர் வாச மெய்தும்
வாரியுங் கீழ்ப்பா லாகும் வானவர் நகர மொப்பாம்.

2. இங்ஙனம் பார்வதிதேவி கேட்கும்போது பிருகு முனிவர் பதில் உரைக்கின்றார். இது புகழுடைய ஆண்மகனின் ஜாதகம். இவன் பிறந்த வீடு தெற்குப் பக்கத்தைத் நோக்கியுள்ளது. கீர்த்தியுடைய பேரூராகுமது. அவ்வூரில் அந்நாட்டு மன்னர் வசித்து வருவார். கிழக்குப் பக்கத்தில் சமுத்திரம் உள்ளது. தேவலோகத்திற்குச் சமான நகராகுமது.

3. பலஜாதி யவ்வூர் வாசம் பருத்ததோர் செட்டு வோங்குங்
குலவிய வடையா ளத்துள் குழவியுஞ் சேஷ்ட லக
உலவுவான் வடுகர் வர்க்கம் உதித்தவன் குடும்பச் சேதி
தலைவன்தன் முன்பின் ஜன்மஞ் சாற்றுவோ மிந்நூல். [தன்னில்.

3. அவ்வூரில் பல ஜாதிப் பேர்கள் வசித்து வருவார்கள். அது பெரிய வியாபார ஸ்தலமாகும். இல்லிதம் கூறப்பட்ட அடையாளங்களுள்ள ஊரில் ஜாதகன் தன் தந்தைக்கு மூத்த புதல்வனுகப் பிறந்தவன். அவன் தோன்றியது வன்னிய குலம். இனி அவனுடைய குடும்பச் செய்திகளையும் அவனுடைய முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றையும் இந்த ஜோதிட நூலில் கூறுகின்றேம்.

தந்தையின் சகோதர பாவம்

4. தந்தையின் தூணயா ணிரண்டு
சத்தியு மொருத்தி தீர்க்கம்
நொந்திடு மற்ற வெல்லாம்
நுகர்ந்தவாண் சேதி சொல்வேன்
மூந்தினேன் வேரூய்ச் செல்வன்
மொழியதைக் காப்பா னுகும்
சிந்தையு மிரண்டு மாகுஞ்
[1]சம்மான்மேல் சிலநாள் வாசம்.

4. ஜாதகனின் தந்தைக்கு இரு சகோதரர்களும் சகோதரி யொருத்தி மீண்ட ஆயுள் உடையவர்கள் என்றேம். மற்றும் தோன்றுபவர் நிலையார். நாங்கள் கூறிய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். (தந்தைக்கு) மூத்தவன் பிரிந்து தனியாகச் சென்றுவிடுவான். சென்ன சொற்படி நடப்பவன். இருவிதமான மனமுள்ளவன். தோணியின்மீது பொருள்களை ஏற்றிச் சென்று வந்து வியாபாரஞ் செய்து சின்னட்கள் வசித்து வருவான்.

5. வறுமையில் லாமல் வாழ்வ
னரசனு லுய்வா னுகும்
அரிவையு மொன்றே தீர்க்க
மணுகிடுஞ் சுதரா ணிரண்டு
வறுமையுஞ் சுகமு முள்ளான்
வாயது விருத்தி யென்றேம்
நிறைசெய்வ னவன்பின் சேதி
நிகழ்த்துவோங் கேளுந் தாயே.

5. தரித்திரமில்லாமல் வாழ்ந்து வருவான். அரசாங்க உத்தியோகத்தை ஏற்று வாழ்ந்து வருவான். மனைவி யொருத்தியே யாவள். இரு புத்திரர் தோன்றுவர். சிறிது வறுமையுடையவனுவான். ஆனல் சுகமுள்ளவனுக இருப்பான். அதிகமாகப் பேசுபவன். எல்லாவற்றையும் முடித்து வைக்கக்கூடியவன். பித்த சரீரி. இனிய சகோதரரின் செய்திகளைக் கூறுகின்றேம் தாயே! கேளுங்கள்.

---

1. சிறுதோணி.

இஷ்ய தந்தையின் வரலாறு

6. அரசனுல் தொழிலு மேற்பன். அவனிகள் சேர்ப்பா னுகும்
பெரும்பொருள் தேடு வானும் பிறநாடு செல்வா னுகுந்
திரைகடல் மேலே போவான் ஐகராசர் பேட்டி யெய்தும்
வருவோரை யாத ரிப்பன் வர்க்கத்தைக் காப்பா னுகும்.

6. அரசாங்கத் தொழிலை ஏற்று வாழ்வான். பிற்காலத்தில் பூமிகளை அதிகமாக வாங்குவான். அயல் நாட்டுக்குச் செல்வான். அரசாங்கத் தொடர்புள்ளவன். தன்னை அண்டி வந்தவரை ஆதரித்து வருவான். தன் இனத்தவரையும் ஆதரித்து வருவான்.

7. பித்தவாய் வுடைய னுகும் பேதைய ரொன்றே தீர்க்கம்
புத்திரர் காண் னுகும் பிறக்கினும் தீதே யாகுங்
குத்தத்தைச் சொல்லு மென்னக் குமரன்முன் வினையா [மென்றும்
பத்தின வினைக ளென்ன பகருவீர் முனியே நீர்தாம்.

7. பித்தவாயு உள்ள சரீரி. மனைவி ஒருத்தியே யாவாள். அவள் நீண்ட ஆயுள் உள்ளவள் என்றும். புத்திரர்கள் தோன்றூர் தோன்றினும் நிலையார். அவ்விதம் ஏற்படக் காரணம் என்னவென்று கூறுங்கள். அவன் முற்பிறவியில் செய்த தீவினையால் அவ்விதம் நேரிட்டது. அவனைப் பற்றிய தீவினையைச் சொல்லுங்கள், முனிவரே! தாங்கள்.

இஷ்யதந்தையின் முற்பிறவி

8. முன்னவ னிருந்த ஐன்ம மொழிகிற்றேம் திருவா ரூரில்
நன்னிய சைவச் சேயாய் நாயக னுதித்து மேலும்
பொன்னெடு பணிகி யுண்டாய்ப் பூவையு மதலை யுண்டாய்
அன்னவன் வாழு நாளி லணுகின வினையைக் கேண்மோ.

8. அவனுடைய முற் பிறவியைச் சொல்லுகின்றேம். திருவாரூரில் நல்லதொரு சைவகுலத்தில் பிறந்து, பொன் ஆபரணங்களை யடைந்து, மனைவி மக்களைப்பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினைகளைக் கேளுங்கள்.

பேய்ச்சாட்சி சொல்லுதல்

9. மறையவ ரிருவர் தாமும்
வளவினில் விரோத முற்று
அரசர்பால் செல்லும் போது
அவர்களில் ஒருவன் பக்கல்

தெரியாத வார்த்தை சொல்லச்
சொல்லினுல் மற்றோ னுக்குக்
குறையுண்டாய்ப் புக லும் சாபங்
கொடுமையாய்ப் பொய்கள் சொன்னுய்.

9. இரு அந்தணர்கள் பாகத்துக்காக ஒருவருக்கொருவர் சண்டையிட்டு அரசாங்கத்தாரிடம் முறையிட்டுத் தன் வழக்கைக் கூறும்போது இவன் அவர்களில் ஒருவன் பக்கமாகப் பொய்ச்சாட்சி சொன்னுன். (தனக்குத் தெரியாததைச் சொன்னுன்). அதனுல் மற்ற வனுக்குத் தீங்கேற்பட்டது. மனம் வருந்திய அவ்வந்தணன் கூறிய சாபத்தைக் கேளுங்கள். மனமறிந்து எனக்குத் தீங்கேற்படக் கூடிய பொய் சொன்ன பாவியே!

அந்தணனின் சாபம்

10. மற்றொரு ஜன்மந் தன்னில் மகவுக ளில்லா தாயும்
பெற்றதாய் தந்தை யாஸ்தி போகிடு மடையொ ணாது
சுத்தமாய் வேறு நாடு சென்றுமே வாழ்வா யென்ன
பற்றிற்று வந்தச் சாபம் பாலக னந்தி யத்தில்;

10. உனக்கு ஏற்படும் மறுபிறவியில் புத்திரபாக்கிய மில்லாம லும் பிதுரார்ஜிதமான சொத்துக்களில்லாமலும் அழிந்து, அடைய முடி யாது போகும். பிறந்த வீட்டை அடையாமலும் வேறு நாட்டுக்குச் சென்றும் வாழ்ந்து வருவாய் என்று சொன்னுன். அந்தச் சாபம் இவனைப் பற்றியது. இவனும் தன் கடைசிக் காலத்தில்;

11. அறமதி லிச்சை யுண்டா
யிரபத்தி லூண்டு யின்னேன்
வருமார்க்கந் தாகம் வைத்து
வாங்கினுன் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப்
பிறந்தவ னென்று சொல்வோ
முறைந்திடு மறையோர் சாபம்
உதிக்காரே சுதர்க ளென்றோரும்.

11. தருமம் செய்வதில் விருப்பமுள்ளவனுக வாழ்ந்து, தெய்வ பக்தியுடன் இருந்து, ஜனங்கள் நடமாடும் சாலையோரங்களில் தண் ணீர்ப் பந்தல்களை அமைத்து இறுதியில் மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவன் இவன் என்று கூறுகின்றோம். அந்தணனிட்ட சாபம் இவனைப் பற்றியது. அதன் பயனுகப் புத்திரபாக்கியம் ஏற்படாது.

அத்திரி முனிவரின் ஐயம்

12. அத்திரி புகலு கின்ரூர்
அவனுமிச் சென்மந் தன்னில்
மெத்தவே பொருள்ப டைத்து
மேலோரை யொத்து வாழ்ந்து
உத்தமன் வாழ்வ தென்ன
உரைப்பீர்க ளந்தச் சங்கை
முந்திய ஜன்மந் தன்னில்
முகுந்தனின் பக்திக் கொண்டு ;

12. அத்திரி முனிவர் கூறுகின்ரூர். அவன் இப்பிறவியில் பெருஞ் செல்வத்தைப் பெற்று உயர்ந்தவரைப்போல் வாழ்ந்து வருவ தற்குக் காரணமென்ன வென்று கூறுங்கள். ஜாதகன் தந்தையின் சகோதரன் முற்பிறவியில் மகாவிஷ்ணுவிடம் (கண்ணபிரானிடம்) பக்தியுடன் ;

13. தருமத்தி லிச்சை யாயுந் தானவன் வாழ்வ தாலே
அரசரால் தொழிலும் பெற்று அவனுமே வாழ்வா ளுகும்
வருமனை தன்னுல் யோகம் வந்திடு மவனுக் கேதான்
திருமகள் குணத்தை யெவ்வாறு செப்புவீர் முனியே
[நீர்தாம்.

13. தருமம் செய்வதில் விருப்பங் கொண்டு வாழ்ந்து வருவதா லும் இப்பிறவியில் அரசாங்கத்தில் தொழிலைப் பெற்று உய்வான். இவனுக்கு வரும் மனைவியால் யோகம் விருத்தியாகும். இனி ஜாதக னுடைய இளைய தந்தையின் மனைவியின் குணங்கள் எவ்விதமுள்ளன வென்று கூறுங்கள், முனிவரே ! தாங்கள்.

சிறியதந்தையின் மனைவியின் இயல்புகள்

14. தோகைபோல் நிறத்த ளாகுஞ் சொல்லது சுகமே யாகும்
நாகரி கங்க ளுண்டு நாயகன் மனத்துக் கேத்தோள்
தாகமென் ரூர்க்கு யீவள் சகலர்க்கு நல்லோ ளாவள்
போகபாக் கியங்க ளேற்பள் பொய்யது புகலா ளாகும்.

14. மயிலைப்போன்ற அழகிய நிறமுடையவள். இன்புறும் படியே பேசுபவள். நாகரிகமாக வாழ்ந்து வருவாள். தன் கணவன் மனத்துக்குத் தக்கபடி வாழ்ந்து வருவாள். பசி தாகமுடையவர் கட்கு சோற்றையும் நீரையுங் கொடுப்பவள். எல்லோருக்கும் நல்ல வளாக இருப்பவள். போக பாக்கியங்களை அடைவாள். பொய்யைப் பேசாதவள்.

தோஷம் நீங்கச் சாந்தி யொன்று கூறுங்கள், முனிவரே! ஜாதகன் சிற்றன்னை செய்த தீவினைகள் தீரத் தேவிக்குக் கரும சாந்தியை;

21. விதிபோலே செய்வா ளாகில்
விளங்கிடு மாண்பா லொன்று
சதியென்று செய்யா ளாகில்
சந்ததி காணு ளாகு
மதிபன்செய் வினைக ளுக்கு
வரைகிரேங் கிரியை யொன்று
அதிதிவா முருணைக் கேகி
அக்கிரி வலமாய் வந்து;

21. வேதத்தில் கூறப்பட்டிருப்பதுபோல் செய்து வருவாளாகில் ஓர் ஆண் குழந்தை தோன்றும். அலட்சிய மனப்பான்மையுடன் செய்து வராவிடில் புத்திரபாக்கிய மேற்படாது. இனி இவளுடைய கணவன் செய்த தீவினைகள் தீரச் சாந்தி யொன்று சொல்லுகின்றேரும். தவம் செய்பவர் வாழ்ந்து வரும் திருவண்ணுமலைக்குச் சென்று கிரிப் பிரதட்சிணம் செய்து;

22. அரனடி சகஸ்திர மாக வர்ச்சித்து வடிப ணிந்து
மறையவர் மூவேழ் பேர்க்குஞ் சந்தர்ப் பணையுஞ் செய்தால்
மருவின வினைகள் நீங்கி மாரன்போ லொருவன் தீர்க்கங்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

22. சிவபெருமான் பொன்னடிகளில் ஆயிரம் தடவை அருச்சனைகள் செய்து, பணிந்து, போற்றி, இருபத்தோர் அந்தணர்கட்குச் சமாராதனை செய்து வந்தால் இவனுக்கேற்பட்ட தீவினைகள் நீங்கி மன்மதன் போல் அழகிய புத்திரன் ஒருவன் பிறந்து தீர்க்காயுள் உள்ளவனுவான். கரிய யானை முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகனின் தந்தையின் வரலாறு

23. தந்தையின் சேதி கேளாய்த் தரணியா லுய்வா னுகும்
பந்தினர் மதிக்க வாழ்வன் பருகாது தந்தை யாஸ்தி
மூந்தினேன் தன்னுல் பூமி மேவிடும் பூர்வ மூரில்
சிந்தையு மிரண்டு மாகுஞ் சீக்கிரங் கோபஞ் சாந்தம்.

23. இனித் தந்தையின் விவரங்களைக் கூறுகின்றேரும், கேட்பீராக. விவசாயத்தைச் செய்து ஜீவித்து வருவான். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். தந்தையின் ஆஸ்தியில்லாதவன். இவனுக்கு மூத்த சகோதரனுல் பூமி சேரும். அதுவும் இவனுடைய சொந்த ஊரிலிருந்து கிடைக்கும். இருவிதமான மனப்பான்மையுள்ளவன். விரைவில் கோபம் கொள்ளுவன். உடனே அது தாழ்வடையும்.

24. துணைவனுல் பெருமை யேற்பன்
தொல்புவி வறுமை காணுன்
துணைவன்சொல் கடவா னுகுந்
தொல்லபில் லாமல் வாழ்வன்
அணைபாரி முன்னேள் தன்னுல்
ஆதர வுடைய னுகுங்
கனமுடன் வாழ்வா னுகுங்
காலாட்கள் பணியேர் விருத்தி.

24. இவன், தன் சகோதரனுல் பெருமையையடைவான். உலகில் தரித்திரமடையாதவன். தன் சகோதரனின் வார்த்தையை மீருதவன். உபத்ரவமில்லாமல் வாழ்ந்து வருவான். தன் மூத்த சகோதானுடைய மனைவியினுல் அதிக ஆதரவு உள்ளவன். பெரிய செல்வாக்குடன் வாழ்ந்து வருவான். ஏவலாட்கள் பணியாள் ஏர் முதலியவற்றின் பெருக்கமுடையவன்.

ஜாதகன் குணநலங்கள்

25. சொல்லிய குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப்
[பாலன்
புல்குவோ மிவன்கு ணத்தைப் பூமியில் புகழு மேற்பன்
வல்லியர் மோக னுவன் மானிலம் விருத்தி செய்வன்
நல்லவ னுகி வாழ்வன் நயம்படக் கூறு வானும்.

25. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இனி ஜாதகனுடைய குணத்தைக் கூறுகின்றேம். பூமியில் கீர்த்தியையடைவான். பெண்கள்மீது மோகம் கொள்ளுவான். உலகில் விளைநிலங்களைப் பெருக்குவான். நல்லவனுக வாழ்ந்து வருவான். இனிமையாகப் பேசுபவன்.

26. வித்தையு மிரண்டு கற்பன் விவேகியா முன்கோ பத்தன்
புத்தியில் பெரியோ னுவன் போஜன வறுமை காணுன்
எத்திசை நல்லோ னுவன் ஏவலா ளுடைய னுகும்
நத்தினேர்க் குதவி செய்வன் நாதனுர் பத்தி பூண்பன்.

26. இருவிதமான கல்விகளைக் கற்பான். விவேகமுடையவன். முன்கோபமுள்ளவன். புத்தியில் பெரியவனுக விருப்பான். சாப்பாட்டிற்கு வறுமையில்லாதவன். எல்லாத் திக்குகளிலும் நல்லவன் என்ற பெயரை யடைவான். ஏவலாட்கள் உள்ளவன். தன்னை வந்தடைந்த வர்கட்கு உதவி செய்பவன். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன்.

அவளுடைய சகோதரபாவம்

15. வறுமையெப் போதுங் காணுள்
வரனுக்கு யிவளால் யோகம்
அரிவைக்குத் துணைக ளேழு
அணுகிடு மாண்பால் தோஷந்
திருமக ளொப்ப தாகச்
செல்விமார் மூவர் தீர்க்கம்
பெறுஞ்சுதர் காணு ளாகும்
பேசுவீ ரந்தச் சங்கை.

15. ஒருகாலத்திலும் தரித்திரமடையாதவள். இவளால் இவளுடைய கணவனுக்கு அதிர்ஷ்டம் பெருகும். ஜாதகனுடைய சிற்றன்னைக்கு உடன் பிறந்தவர் எழுவர். ஆனல் சகோதரனில்லாதவள். இலக்குமியைப் போன்று, அழகிய மூன்று சகோதரிகள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். இவள் பெற்ற குழந்தைகள் நிலையா. நிலையாமைக் குரிய காரணத்தைப் புகலுவீராக.

அவளுடைய முற்பிறவி

16. பாலிகை பூர்வந் தன்னில் பற்றிற்று வந்தத் தோஷம்
நீலிசெய் வினைக ளென்ன நுவலுவீ ரந்தச் சங்கை
வேல்விழி பூர்வங் கேளாய் விலாடதே சத்தி லேதான்
ஞாலங்கள் விருத்தி செய்யும் நற்கங்கை குலமு தித்து ;

16. ஜாதகனின் சிற்றன்னை முற்பிறவியில் செய்த தீவினையால் அங்ஙனம் நேரிட்டது. இவள் செய்த தீவினைகள் யாவை? அவற்றைக் கூறுவீராக. (என்று பார்வதி கேட்க மற்றொரு முனிவர் பதில் உரைக்கிறார்). ஜாதகனின் சிற்றன்னையின் முற்பிறவியைக் கேளுங்கள். விராடதேசத்தில் பூமியில் விவசாயம் செய்து வரும் நல்ல வேளாள குலத்தில் பிறந்து ;

17. சுகமுளக் குடும்பி யாகிச் சுந்தரி வாழு நாளில்
பகையதைப் புகலக் கேண்மோ பஞ்சையா யேழை மாது
மிகுபசி நோய்க ளாலே வேண்டினு ளன்னந் தானும்
முகவெறி கொண்டு யின்னுள் முடுக்கினு ளேழை
[தன்னை.

17. சுகமுடைய குடும்பத்தை யடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேட்பீராக. எளிய ஏழைப்பெண் ஒருத்தி பசியின் வேதனை தாங்காமல் இவளை அன்னமளிப்பாய் என்று கெஞ்சிக் கேட்டாள். இவள் கோபங் கொண்டு அன்னமளிக்காது ஏழையை விரட்டி விட்டாள்.

ஏழைப்பெண்ணின் சாபம்

18. பஞ்சையு மனவெ றுப்பால்
பகர்ந்தசா பத்தைக் கேண்மோ
நஞ்சுபோல் வார்த்தை சொன்னாய்
நல்கும்பின் ஜன்மந் தன்னில்
கொஞ்சிடு மதலை யின்றிக்
குலவிய துணையா ணின்றி
வஞ்சியும் வாழ்வா யென்றும்
வரன்சுத ரேகு மென்றாள்.

18. ஏழைப்பெண்ணும் மனத்தில் வருத்தமுற்றுக் கூறிய சாபத்தைக் கேளுங்கள். கொடிய விஷம் போன்ற வார்த்தைகளைச் சொன்ன பாவியே! உனக்கேற்படும் மறுபிறவியில் கொஞ்சும் வார்த்தைகளைச் சொல்லும் புத்திரர்களும், உடன்பிறந்த சகோதரனுமில்லாமலும் வாழ்ந்து வருவாய் என்று சொன்னாள். கணவனும் புத்திரர்களும் இல்லையில்லாதவராவர் என்றாள்.

19. அந்ததோர் சாபந் தானும்
அணுகிற்றுப் பாவைக் கேதான்
பிந்தியோர் வினையைச் சொல்வேன்
பெருமுனி கோஷ்டந் தன்னில்
இந்தவள் விழாக்கா லத்தி
லேகினாள் முனிகோ பத்தால்
சந்ததி யற்று மாண்டு
சஞ்சல மனத்தா ளாகி;

19. அந்தச் சாபம் இவளைப் பற்றியது. இது தவிர வேறு ஒன்றும் சொல்லுகின்றோம். பெரியதொரு முனீச்வரனுடைய கோவிலில் திருவிழாக் காலத்தில் அம்முனியைத் தொழாமல் சென்று விட்டாள். (கோவிலுக்குச் செல்லக் கூடாத காலத்தில் சென்றாள்). அதனால் முனியும் கோபித்துக் கூறியதாவது. உனக்குப் பிறக்கும் சந்ததி யழிந்து கலக்கமுள்ள மனமடைந்து (வாழ்வாய் என்றது).

20. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டு
நீலியு முதித்தா ளென்றே நேர்ந்திடு மிரண்டு தோஷம்
பாலர்கள் தோஷ மெய்தும் பகருவீர் கிரியை யொன்று
சீலிசெய் வினைக ளுக்குத் தேவியே கரும சாந்தி;

20. மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றோம். ஜாதகனுடைய சிற்றன்னைக்கு இருவிதத் தோஷங்கள் ஏற்பட்டு புத்திரதோஷம் ஏற்படும். புத்திர

27. கடன்படா னிடுக்க மில்லான் காரியச் சமர்த்த னுகும்
தடபுடல் செய்கை கொஞ்சந் தாட்சண்யன்
[பெரியோர்க் கிஷ்டன்
மடயரைச் சேரா னுகும் விரோவுகள் செய்வா னுகும்
படைசெலான் சொல்லில் வெற்றி பங்கய ரேகை யுண்டு.

27. கடன் வாங்காதவன். துன்பமில்லாதவன். காரியங்களைச் செய்வதில் சாமர்த்தியமுள்ளவன். ஆடம்பரச் செய்கையையுடையவன். தாட்சண்ய மனப்பான்மையுள்ளவன். பெரியோர்கட்குப் பிரியமானவன். முட்டாள்களுடைய உறவைக் கொள்ளாதவன். விவசாயத்தைச் செய்து வருவான். சண்டைக்கு முன்னே செல்லாதவன். வாக்கு வன்மை யுள்ளவன். கையில் பத்மரேகையை யுடையவன்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

28. தன்துணை யெழுவர் தோன்றுங்
தங்காரே பின்னோர் தாமுங்
கன்னிகை யிரண்டு தீர்க்கங்
காளையுள் ஒருவன் தீர்க்கம்
அன்னவர் சேதி பின்னல்
அறிவிப்போங் தாயே யாங்கள்
உன்னத வரனைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

28. ஜாதகனுக்கு உடன்பிறந்தவர் எழுவராவர். பின்னல் தோன்றும் குழந்தைகள் நிலையா. இரு சகோதரிகளும் சகோதரர்களில் ஒருவனும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். அவர்களின் செய்தியைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். தாயே! உயர்ந்த கணவனைப் பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜாதகனின் திருமணக்காலம்

29. பாலிகை நேருங் காலம் பகருவோ மிருப தாண்டில்
நீலியும் மேல்பால் நேரும் நுவலுவோ மவள்கு ணத்தைச்
சீலமுங் கொஞ்ச முண்டு ஜனவுப காரி யாகும்
ஆலம்போல் கோப மேற்பள் அவசர மனமுங் கொஞ்சம்.

29. ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். அவனுடைய இருபதாம் வயதில் மணம் நிகழும். மனைவி மேற்குப் பக்கத்திலிருந்து வருவாள். இனி அவளுடைய குணத்தைக் கூறுகின்றோம். சிறிது நல்லொழுக்கமுள்ளவள். ஜனங்களுக்கு உபகாரி. கொடிய சர்ப்பத்தைப்போல் கோபங் கொள்ளுவாள். சிறிது அவசர மனமுடையவள்.

இதுவுமது

30. மங்கைபாட் டாளி யாகு மருவிடு நாபிச் சூடு
சங்கையா மனத்த ளாகுஞ் சத்தியுந் தீர்க்க ஜீவி
பொங்கிய குடும்ப மேற்பள் புதல்வர்கள் பலத்தைச்
[சொல்வோந்
தங்காரே முதலில் புத்திரர் சாற்றுவீ ரந்தச் சங்கை.

30. அவள் உழைக்கும் சுபாவமுடையவள். நாபிச்சூட்டு நோயுள்ளவள். சந்தேகப்படும் மனத்தினள். நீண்ட ஆயுளை உடைய வள். விருத்தியடையும் குடும்பத்தை அடைவாள். இனி புத்திர பாவத்தைச் சொல்லுகின்றோம். முதலில் தோன்றும் புத்திரர் நிலையார். அதற்குரிய காரணத்தைச் சொல்லுவீராக.

புத்திரதோஷத்திற்குரிய கிரகநிலை

31. அஞ்சினில் ராகு தங்க வறைந்தன மந்தச் சங்கை
தஞ்சமா யதன்பின் ஞக ஜனித்தசேய்த் தீர்க்க மெய்துங்
கொஞ்சிய வாண்பா லிரண்டு கோதையர் மூவர் தீர்க்கந்
துஞ்சிடு மிரண்டு வென்றோந் துறவியே கேட்டி டாயே.

31. புத்திர ஸ்தானத்தில் ராகு இருப்பதால் நாங்கள் அவ்விதம் சொன்னோம். பின்னுல் பிறக்கும் குழந்தைகள் தீர்க்காயுள் உள்ளவை. இரு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுள் உள்ளவை. (முதலில் தோன்றும்) இரு குழந்தைகள் நிலையா. துறவிகளைப் போன்றவளே! கேளுங்கள்.

ஜாதகனுடைய முற்பிறவி

32. ஜாதகன் பூர்வந் தன்னைச் சாற்றுவோஞ் சிறுபாக்
[கத்தில்
ஏ(தீ)திலா யிரட்டி வம்ச மெய்தியே வறுமை யின்றிக்
காதலி மதலை யுண்டாய்க் கனத்ததோர் பூமி யுண்டாய்
மேதினில் வாழ்ந்து யின்னேன் வினையின்றி மரண மாகி;

32 இனி ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். சிறுபாக்கத்தில் தீங்குகளில்லாத ரெட்டியார் மரபில் பிறந்து தரித்திர மில்லாமல் மனைவி மக்களைப்பெற்று பெரும் பூமியைப்பெற்று உலகில் வாழ்ந்து வந்து தினையின்றி மரணமடைந்து;

யோகம்

33. பிரமனல் வரையப் பட்டுப் பிறப்பனும் வடுகர் வர்க்கம்
உரைக்கிறோ மிவனின் யோகம் உறுந்தந்தை முன்னே
[னலே
தரைசேரு மில்லஞ் செய்தல் தனமிகப் பெருக்க மாகுங்
குறையிலா வாழ்வா னுகுங் குலமதிப் புடனே வாழ்வன்.

33. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் வன்னிய குலத்தில் பிறந்தான். இனி இவனுடைய யோக வரலாற் றைச் சொல்லுகின்றேம். தந்தைக்கு முன் பிறந்தவனுல் விரோதிலங் கள் சேரும். புது வீட்டைக் கட்டுவான். செல்வம் அதிகமாகப் பெருகும். குறைகளில்லாமல் வாழ்ந்து வருவான். தன் குலத்தவர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான்.

இதுவுமது

34. எப்போதும் வறுமை காணுன்
இடரென்றேர்க் குதவி செய்வன்
செப்புவேன் பிறைபோல் யோகந்
தரணிகள் சேர்ப்பா னுகும்
மெய்ப்புடன் தலங்கள் செல்வன்
விசித்திர யில்ல மிரண்டு
ஒப்புடன் செய்வா னுகும்
உத்தமி கேட்டி டாயே.

34. ஒருகாலத்திலும் தரித்திரமடையாதவன். துன்பமுற்ற வர்கட்கு உபகாரம் செய்பவன். வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். விரோதிலங்களைச் சேர்ப்பான். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். அழகிய இரு வீடுகளைக் கட்டுவான். தாயே! கேளுங்கள்.

தாயின் குண நலங்கள்

35. அன்னையின் குணத்தைச் சொல்வேன்
அழகுளாள் இருநி றத்தள்
முன்கோப முடனே சாந்தம்
மேதினில் பட்டாளி யாகும்
பின்னமில் லாத தேகி
பொருத்தமாய்ப் பேசு வாளாம்
மன்னவன் மனத்துக் கேத்தோள்
வருவோரை யாத ரிப்பள்.

35. இனி தாயின் குண விசேஷங்களைக் கூறுகின்றேம். அழகுள்ளவள். கரிய நிறமுடையவள். முன்கோபி. ஆனல் விரை வில் தாழ்வுறும். உலகில் உழைத்து வாழும் குடும்பத்தைச் சேர்ந்த வள். ஊனமில்லாத தேகமுடையவள். பொருத்தமாகப் பேசுபவள். தன் கணவன் மனத்துக்கேற்றவள். அண்டி வந்தவரை ஆதரித்து வருவாள்.

இதுவுமது

36. பித்ததே கத்தா ளாகும்
பூமியில் வறுமை காணுள்
சத்தமர் துணைவ ரென்றேழுந்
தங்காது வாண்பால் தானுஞ்
சுத்தமாய்க் கன்னி மூன்று
தீர்க்கமா மென்று சொல்வோம்
எத்தகைப் பலத்தி னுலே
யிவள்துணை யாண்பால் தோஷம் ?

36. பித்த தேகமுடையவள். உலகில் தரித்திரத்தையடையாத வள். உடன்பிறந்தவர் எழுவர் என்றேழும். சகோதரரில்லாதவள். மூன்று சகோதரிகள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்று சொல்லு கின்றேழும். எவ்விதக் காரணங்களால் இவ்விதம் தாய்க்குச் சகோதர ரில்லே என்று சொல்லுங்கள்.

தாய்க்குச் சகோதர தோஷம்—கிரகநிலே

37. காரியு மதியு மொன்றுய்க் கலந்ததால் துணையாண்
[தோஷம்
நாரிதந் தைமூன் னேற்கு நல்காதே சுதரு மேதான்
தீரமா யிம்மா துக்குத் தந்தைதாய்த் தோஷ மெய்தும்
கூறுவோ மிவளின் பூர்வங் குற்றுல நாட்டி லேதான்.

37. சனியும் சந்திரனும் ஒன்றுகக்கூடி இருப்பதால் நாங்கள் அவ்விதம் சொன்னேம். (மாதுர்காரனுகிய சந்திரனுடன் சனி கூடி யிருப்பதால் மாதுலனுக்குத் தோஷமேற்பட்டது.) தாயின் தந்தையின் உடன்பிறந்த மூத்த சகோதரருக்கும் புத்திர பாரக்கியமில்லே. இப் பெண்ணின் பெற்றேர்கள் இருவருக்கும் தோஷமுண்டு என்று கூறு கின்றேழும். இனித் தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேழும். குற் றுலத்தில் ;

தாயின் முற்பிறவி—மைத்துனன்மீது அபவாதங் கூறல்

38. வன்னிய குலமு தித்து
மைந்தர்க ளதிக மூண்டாய்க்
கன்னிகை வாழு நாளில்
கலந்ததோர் வினேயைக் கேண்மோ
தன்வரன் தம்பி பேரில்
சதியான வார்த்தை சொல்ல
அன்னவன் வருத்த முற்று
அறைந்தசா பத்தைக் கேண்மோ.

38. வன்னிய குலத்தில் பிறந்து புத்திர பாக்கியத்தைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேட்பீராக. தன்னுடைய மைத்துனன்மீது அடாத வார்த்தைகளைக் கூறினாள். அவனும் மனத்தில் வருத்தமடைந்து சொன்ன சாபத்தைக் கேளுங்கள்.

மைத்துனனின் சாபம்

39. நிந்தைகள் சொன்ன பாவி
நேரும்பின் ஜன்மந் தன்னில்
தன்துணை யாணில் லாமல்
தந்தைமூன் சுதரு ஸ்தி
தன்வர ஸ்தி யின்றித்
தரணியில் வாழ்வா யென்னத்
துன்மையுஞ் சேர்ந்த தென்றேந்
தோகையு மந்தி யத்தில் ;

39. என்மீது அடாத பழி வார்த்தைகளைக் கூறிய பாவியே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உடன்பிறந்த சகோதரரில்லாமலும் தந்தையின் மூத்த சகோதரருக்கும் புத்திர பாக்கியமில்லாமலும் தன் கணவனுடைய ஆஸ்தியை அடையாமலும் உலகில் வாழ்ந்து வருவாய் என்றான். அத்தீய சாபம் இவளைச் சேர்ந்தது. இவளும் தன் கடைசிக் காலத்தில் ;

மறுபிறவி

40. வாய்ப்புண் ணால் மரண மாகி மறையவன் வரையப் பட்டு
நேயமா யுதித்தா ளென்றே நேர்ந்திடு முன்னாழ்ச் சாபம்
ஓயுமே துணையா ணந்தான் உத்தமி பின்ஜன் மங்கேள்
மாயன்தன் மலையி லேதான் வருவளா மிரட்டி வம்சம்.

40. வாயில் புண் ஏற்பட்டு மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றேரும். முற்பிறவித் தோஷம் தொடரும். உடன்பிறந்த சகோதரன் நிலையான். இவளுடைய மறுபிறவியைக் கேளுங்கள். திருமால் கோயில் கொண்டுள்ள திருமலையில் ரெட்டியார் மரபில் பிறப்பாள்.

தந்தையின் முற்பிறவி

41. தந்தையின் முன்ஜன் மத்தைச்
சாற்றுவேன் காஞ்சி தன்னில்
நிந்தைசெய் வைசியச் சேயாய்
நேர்ந்துமே வணிபஞ் செய்து

அந்தவன் வாழு நாளில்
அணுகின வினையைக் கேண்மோ
முந்திஞேர்க் கிடைஞ்சல் செய்தான்
மொழிவரா மறையோர் தாமும்.

41. இனி தந்தையின் முற்பிறவியைப் பற்றிச் சொல்லுகின் ரேம். காஞ்சீபுரத்தில் பல பேரால் பழி சொல்லப்படும். வைசிய குலத்தவனுகப் பிறந்து வர்த்தகம் புரிந்து வாழ்ந்து வருங்காலத் தில் ஏற்பட்ட தீவினையைக் கேளுங்கள். அந்தணருக்குப் பல துன் பங்களை விளைவித்தான். துன்புற்ற அந்தணர் கூறுகின்றனர்.

அந்தணர் சாபம்

42. கெடுதிகள் செய்த பாவி
இளைக்கும்பின் ஐன்மந் தன்னில்
அடைவுடன் தந்தை யாஸ்தி
யணுகாமல் வாழ்வா யென்ன
விடம்போலே சேர்ந்த தென்ரேம்
வித்தக னந்தி யத்தில்
கடனுண்டாய் வறுமை யாகிக்
காலன்தன் பதிக்குச் சென்று ;

42. எங்களுக்குத் தீங்கிழைத்த பாவியே! இனி ஏற்படும் மறு பிறவியில் தந்தையின் ஆஸ்தியை அடையாமல் வாழ்ந்து வருவாய் என்றனர். கொடிய விஷம் போல் அச்சாபம் இவனுக்கு இப்பொழுது ஏற்பட்டது. ஜாதகனுடைய தந்தையும் தன் கடைசிக் காலத்தில் கடனுபத்ரவமடைந்து தரித்திரனுகி மரணமடைந்து ;

தந்தையின் மறுபிறவி

43. கஞ்சனுல் வரையப் பட்டுக் கலந்தன னிக்கு லத்தில்
துஞ்சிடுந் தந்தை யாஸ்தி துணைவனுல் பெருமை யேற்பன்
தஞ்சமா யவன்பின் ஐன்மஞ் சகாழி தன்னி லேதான்
கொஞ்சுவான் வேளா ளகக் குறையிலா வாழ்வா னுகும்.

43. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். தந்தையின் ஆஸ்தி அழிந்துபோம். தன் சகோதரனுல் பெருமையையடைவான். இனி இவனுடைய மறுபிறவியைக் கூறுகின் ரேம். சோழியில் வேளாள குலத்தவனுகப் பிறப்பான். குறைவு களில்லாமல் வாழ்ந்து வருவான்.

தாய் தந்தையரின் மரணக்காலமும் ஜாதகன் ஆயுளும்

44. முப்பது வாறு வாண்டில் விளம்புவோர் தந்தை கண்டஞ்
செப்புவோ மதன்மே லெட்டு வாண்டினி லன்னை கண்டம்
மெய்ப்புடன் அறுபா னேழில் விருச்சிக மாதந் தன்னில்
தப்பிதஞ் ஜாத கர்க்குச் சாற்றுவோ மார கங்கள்.

44. முப்பத்தாரும் வயதில் ஜாதகனுடைய தந்தை மரணமடைவான். அதற்குப் பிறகு எட்டு வருடங்களில் தாய் மரணமடைவாள். அறுபத்தேழாம் வயதில் கார்த்திகை மாதத்தில் ஜாதகனுக்கும் மரணம் சம்பவிக்கும்.

ஜாதகன் மறுபிறவியும் ஜனனகால தசையும்

45. பின்ஜன்மம் வள்ளூர் தன்னில்
பிறப்பனு மிக்கு லத்தில்
அன்னவன் ஜனன காலம்
அனுடத்தின் முதல்பா தத்தில்
துன்சனி வாண்டீ ரெட்டும்
திங்களும் நவமே யாகும்
முன்பாகம் விவரஞ் சொன்னேம்
மொழிகிறோம் பின்பால் சேதி.

45. ஜாதகன் அடுத்த பிறவியில் திருவள்ளூரில் இதே குலத்தில் பிறப்பான். அவனுடைய ஜனன காலத்தில் அனுட நட்சத்திரம் முதல் பாதம் நடைபெறும். அக்காலத்தில் சனிமகாதசையில் பதினேறு வருடங்களும் ஒன்பது மாதங்களும் மீதமாகும் என்று இங்ஙனம் முதல் பாகத்தை விவரமாகச் சொன்னேம். மற்றவற்றைப் பின்பாகத்தில் கூறுவோம்.

தந்தையின் மூத்தவனதும் அவன் மனைவியினது மறுபிறவிகளும்

46. முன்தந்தை பின்ஜன் மத்தை
மொழிகிறோஞ் காசித் தன்னில்
முன்குலந் தனிலு திப்பான்
மொழிகிறோம் பாரி ஜன்மம்
உன்னதத் துவாரைத் தன்னில்
உதிப்பளாங் கோகு லத்தில்
கன்னென மொழியை யொக்குங்
காதலி கேட்டி டாயே.

46. ஜாதகனுடைய தந்தையின் மூத்த சகோதரனுடைய மறு பிறவியைச் சொல்லுகின்றோம். காசி க்ஷேத்திரத்தில் அந்தண

குலத்தவனுகப் பிறப்பான். அவனுடைய மனைவியின் மறுபிறவியைச் சொல்லுகின்றேம். உயர்ந்த துவாரகையில் இடையர் மரபில் பிறந்து வாழ்வாள் இனிய வார்த்தைகளையே பேசும் தேவியே! கேளுங்கள்.

47. சொன்னேரின் கருமக் காலஞ்
செப்புவீர் முனியே நீர்தாம்
முன்னவன் தனக்கு மேதான்
இருபதா மாண்டில் தந்தை
தென்திசைச் செல்லு வாளுஞ்
சேயிழை நாற்பான் மூன்றில்
துன்மையாய்க் கால நாடு
செல்லுவா ளென்று சொல்வோம்.

47. மேற்கூறியவர்களின் (தந்தையின் சகோதரர்) இறுதிக் காலங்களைச் சொல்லுங்கள், முனிவரே! ஜாதகனுடைய இருபதாம் வயதில் அவன் மரணமடைவான். அவனுடைய பெரிய தாய் நாற்பத்து மூன்றும் வயதில் மரணமடைவாள் என்று சொல்லுகின்றேம்.

ஜாதகம் 70

1. கலிசாடி கேது மீனங் கதிர்புகர் மேரு வாகப்
புலவன்பொன் காரி மானில் பூமகன் ராகு கன்னி
தலமது சிம்ம மாகச் சாற்றுவீர் பலனை யென்று
மலையிறை மகளுங் கேட்க வதிஷ்டருங் கூறு கின்றார்.

1. சந்திரன் கும்பத்திலும், கேது மீனத்திலும், சூரியன் சுக்கிரன் தனுசிலும், புதன் குரு சனி மகரத்திலும், செவ்வாய் ராகு கன்னியிலும், இருந்து இலக்கினம் சிம்மமானால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என மலையரசனின் மகளாகிய பார்வதி கேட்க, வதிஷ்ட முனிவர் பதில் சொல்லுகின்றார்.

கிரகநிலை

கேது			
சந்திரன்	இராசி சக்கரம்		
புதன் குரு சனி			லக்கினம்
சூரியன் சுக்கிரன்			செவ்வாய் ராகு

ஜாதகியின் வீட்டுநிலை

2. இந்ததோர் ஜனனம் பெண்பால்
இல்லமுங் குடகு நோக்கம்
அந்தரி யுத்தர மாகும்
அழிந்ததோர் கெடியுந் தென்பால்
விந்தையா யருகில் மலைதான்
மேல்திசைத் தந்தி மார்க்கஞ்
சந்ததஞ் சமவு ராகுந்
சாகைக்கு மேல்பால் பாழாம்.

2. இது பெண் குழந்தையின் ஜாதகம். இவள் பிறந்த வீடு மேற்கு நோக்கியுள்ளது. காளி கோயில் வடக்குப் பக்கத்திலுள்ளது. தெற்குப் பக்கத்தில் இடிந்த கோட்டையொன்று இருக்கும். சமீபத்தில் மலையொன்று உளது. மேற்குப் பக்கத்தில் விநாயகர் ஆலயமொன்றும் பொது வழியொன்றும் உள்ள சமநிலையுள்ள ஊராகுமது. வீட்டின் மேற்குப் பக்கத்தில் பாழிடம் உளது.

3. துருவசா கரமுங் கீழ்ப்பால்
தோன்றிடு மடையா ளங்கள்
திருமகள் கங்கைச் சேயாய்
ஜனிப்பளா மைந்தாஞ் ஜன்மம்
பெருமன்னி தந்தை யோகம்
பேதையின் புத்திர யோகம்
வரன்யோகம் முன்பின் ஜன்மம்
வரைகிரே மிந்நூல் தன்னில்.

3. கிழக்குப் பக்கத்தில் சமுத்திரமுள்ள துமான அடையாளங்களை யுடைய வீட்டில் ஜாதகி வேளாள குலத்தவளாகத் தன் தந்தைக்கும் ஐந்தாம் புத்திரியாகப் பிறப்பாள். இனி ஜாதகியின் தாய் தந்தையர் புத்திரபாவம் கணவனுடைய யோக வரலாறு முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றை இந்தச் சோதிடநூலில் எழுதுகின்றேம்.

ஜாதகியின் தந்தையின் உடன்பிறந்தவர்

4. தந்தையின் துணைய னேகந்
தங்காவே சிலவா மென்றேம்
இந்தவன் ஜனிக்குங் காலை
யிருப்பனே யோரா ணுந்தான்
விந்தையாய்க் கன்னி மூன்று
மேவிடுந் துணைவன் தானுஞ்
சிந்தையும் வேற தாகிச்
செல்லுவா னிவரை விட்டு.

4. ஜாதகியின் தந்தைக்கு உடன்பிறந்தவர் பலர். அவர்களில் சிலர் நிலையாமல் இறந்து விடுவர். ஜாதகியின் தந்தை பிறக்கும்போது அவனுக்கு ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளு மட்டுமே இருப்பர். இவனுக்கு முன் பிறந்த சகோதரன் மனம் வேறுபட்டு (மனத்தாங்க லடைந்து) இவர்களை விட்டுத் தனியாகச் சென்று விடுவான்.

ஜாதகியின் தந்தையின் சகோதரனுடைய குணங்கள்

5. குணமது புகலக் கேண்மோ
கூறுஞ்சொல் லிரண்டு முண்டு
துணிவுள மனத்தா னுகும்
தோகைசொல் கடவா னுகும்
மணமொன்று சுதரா ணிரண்டு
மங்கையு நால்வ ராகும்
துணைவி ரோத முண்டு
துருசான கோப மேற்பன்.

5. தந்தையின் சகோகரனுடைய குணங்களைச் சொல்லக் கேளுங் கள். இருவிதமாகப் பேசுபவன். தைரியமுள்ள மனத்தினன். மனை வியின் வார்த்தைகளை மீறுதவன். மனைவி ஒருத்தியேயாவள். அவளுக் குப் புத்திரர் இருவரும் புத்திரிகள் நால்வரு மாவர். சகோதரர்கட்குள் விரோத மேற்படும். விரைவில் கோபம் கொள்ளுபவன்.

இதுவுமது

6. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன்
காசுகள் செலவு செய்யான்
குடல்வாதம் பித்த தேகி
குலமதிப் புடனே வாழ்வன்
அடைவுடன் மாஞ்சி வப்பன்
அவனியில் செட்டுச் செய்வன்
தடபுடல் செய்கை யுண்டு
சலித்தோர்மேல் பிரிய மற்பம்.

6. கடன் வாங்குபவன். அதைத் தீர்த்து விடுவான். காசு களைச் செலவு செய்யாதவன். குடல் நோயுள்ளவன். பித்த ரோக முடைய சரீரி. தன் குலத்தவர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். சிவப்பு நிறமுள்ளவன். உலகில் வர்த்தகம் புரிந்து வருவான். ஆடம்பரச் செய்கைகள் உள்ளவன். ஏழைகளின்மீது சிறிதளவே பிரியமுள் ளவன்.

இதுவுமது

7. அன்னமுங் குறைவு றுதான்
அவனியை விருத்தி செய்வன்
இன்னவன் வயது தீர்க்க
மியம்புவோம் பிதாகு ணத்தைக்
கன்னென மொழியே சொல்வான்
கனவான்க ளுறவு கொள்வன்
உன்னதக் கல்வி மாலு
மூகைவான் நுணுக்கந் தேர்வன்.

7. சாப்பாட்டுக்குக் குறைவில்லாதவன். விளைநிலங்களைப் பெருக்குவான். நீண்ட ஆயுள் உள்ளவன். இனி ஜாதகியின் தந்தை யின் குணங்களைக் கூறுகின்றோம். இனிய வார்த்தைகளையே பேசு பவன். பெரியவர்களுடைய நட்பைக் கொள்ளுவான். உயர்ந்த கல்வி யறிவுள்ளவன். ஊகமுடையவன். இரகசிய சாஸ்திரங்களையறிந்தவன்.

ஜாதகியின் தந்தையின் குணங்கள்

8. அறமதி லிச்சை யுண்டு வாபத்தைச் சிலர்க்குக் காப்பன்
நரைமல ரிஷ்டங் கொள்வன் நற்சக டுகளு மேற்பன்
பொறைசொலா னிளம னத்தன் புகழ்ந்தோரை
[யாத ரிப்பன்
தரையதை விருத்தி செய்வன் சல்லிய மென்ரு லச்சம்.

8. தருமம் செய்வதில் பிரியமுள்ளவன். சிலருக்கு ஏற்பட்ட ஆபத்தை விலக்குவான். வாசனைப் புஷ்பங்களின்மீது விருப்பமுடைய வன். பொய்யைப் பேசாதவன். இனிய மனமுடையவன். தன்னைத் துதி செய்தவரை ஆதரித்து வருவான். விசேஷிலங்களைப் பெருக்கு வான். கடன் வாங்குவது என்றாலே பயப்படுபவன்.

இதுவுமது

9. மால்மக னெப்ப னுகும் வருவோரை யாத ரிப்பன்
வேலன்மேல் பத்தி பூண்பன் வீண்கல கங்கள் கூரான்
சீலவான் சுகபு சிப்பன் சிறுத்தைபோல் கோப முண்டு
ஆலம்போல் பகைவ ருக்கு வவனுமே கருட னுவன்.

9. மன்மதனைப் போல் அழகுள்ளவன். அண்டி வந்தவரை ஆதரித்து வருவான். முருகக்கடவுள்மீது பக்தியுள்ளவன். வீண் கலகங்களைச் செய்யாதவன். நல்லொழுக்கமுடையவன். நன்றுகச் சாப் பிடுவதில் பிரியமுள்ளவன். புலிபோல் கோபம் கொள்ளும் இயல் பினன். கொடிய சர்ப்பம் போனற விரோதிகட்குக் கருடனைப் போல் பகைவனுவன்.

தந்தை பிறந்த ராசி

10. சாடியுங் கேட்டை நாளில் ஜனிப்பனு முயர மில்லான்
மூடர்க ளுறவு கொள்ளான் மேவிடுஞ் சொற்ப வாயு
தேடுவான் பூமி பொன்னுந் தேவதாத் தலங்கள் செல்வன்
மாடகூ டங்கள் செய்வ னரிநாம மதிப்பாய் வாழ்வன்.

10. கும்பலக்கினத்தில் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவன். உயரமில்லாதவன் முட்டாள்களுடைய நட்பைக் கொள்ளாதவன். சிறிது வாயுரோகமு முடையவன். விசேஷிலங்கள் செல்வம் இவற்றைச் சேகரிப்பான். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்வான். மாட மாளிகைகளை அமைப்பான். விஷ்ணுவின் பெயரையுடையவன். கண் ணியமுடன் வாழ்ந்து வருவான்.

பிறக்குமிடம்

11. வஞ்சனை செய்வோர் தம்மை
மனத்தினில் வையா ளுகும்
பஞ்சனை மெத்தை யேற்பன்
பலதானியச் செட்டுச் செய்வன்
அஞ்சிடான் எதிரிக் கேதான்
அவனுடைப் பூர்வம் கேளாய்
நஞ்சணி யாலங் காட்டில்
நல்கிளை னிந்தப் பாலன்.

11. பிறர் செய்த வஞ்சனைகளைப் பாராட்டாதவன். பஞ்சு மெத்தைகளை யுடையவன். பலவிதமான தானிய வியாபாரத்தைச் செய்து வருவான். விரோதிகட்குப் பயப்படாதவன். இனி தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். சர்ப்பத்தை அணியாகக் கொண்ட நீலகண்டன் எழுந்தருளியிருக்கும் திருவாலங்காட்டில் இக்குலத்தில் பிறந்தான்.

தொழில்

12. இரணிய வேலை செய்து விடரென்றோர் குதவிசெய்து
அரனடி தொண்டு பூண்டு வழகான சேதுச் சென்று
மறலியின் பதிக்குப் புக்கி மறையவன் வரையப் பட்டு
வரநதிக் குலமு தித்தான் வறுமையெப் போதுங் காணன்.

12. தங்கவேலை செய்து வந்து (பொற் கொல்லர் வேலையைப் பார்த்து) துன்புற்றவர்கட்கு உதவிசெய்து, சிவபெருமானுக்குப் பல தொண்டுகளைச் செய்துவந்து, புண்ணியத்தலமாகிய சேதுவுக்குச் சென்று மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் சைவ வேளாளகுலத்தில் பிறந்தான். ஒருக்காலும் தரித்திர மடையாதவன்.

ஜாதகியின் குணநலங்கள்

13. சொல்லிய குணத்தா னுக்குத்
தோன்றுவா ளிந்தப் பாவை
புல்குவோ மிவள்கு ணத்தைப்
பூமக ளெரப்ப தாகும்
வெல்லுஞ்சொல் சுகமாய் வார்த்தை
விவேகியாஞ் சிவந்த மேனி
தல்லிபோ லாத ரிப்பள்
தலைகான்கோன் மனையை யொப்பாம்.

13. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகி பிறந்தாள். இனி இவளுடைய குணத்தைக் கூறுகின்றோம். கேளுங்கள். இலக்குமியை யொத்த அழகும் செல்வமுமுடையவள். வாக்கு வன்மை யுடையவள். இன்புறும்படிப் பேசுபவள். நன்மை தீமை களைப் பாகுபாடு செய்தறியக் கூடியவள். சிவந்த உடலுள்ளவள். பெற்றதாயைப்போல் பிறரை ஆதரித்து வருவாள். பிரும்மாவின் மனைவியாகிய சரஸ்வதிக் கொப்பான படிப்பாளி இவள் என்றோம்.

14. ஞானகா வியம்ப டிப்பள் நாதனுர் பத்தி பூண்பள்
தேன்மொழி பூகை சாலி திகைத்தபேர்க் கன்ன மீவள்
ஊனமில் லாத தேகி யுலகோர்க்கு நல்லோ ளாவள்
மேன்மையாய்க் குடும்ப மேற்பள் விரதங்கள் பூண்பா
[ளாகும்.

14. வேதாந்த சாஸ்திரங்களை யுணர்த்தும் காவியங்களைக் கற்று ணர்வாள். சிவபெருமான்மீது பக்தியுடையவள். இனிய வார்த்தை களைப் பேசுபவள். ஊகமுடையவள். கணவனுக்கு அழகு படைப் பவள். ஊனமில்லாத சரீரமுடையவள். உலகத்தவருக்கு நல்லவளாவள். மேன்மையுள்ள குடும்பத்தை அடைவாள். நோன்புகளை நோற்பாள்.

ஜாதகியின் சகோதரபாவம்

15. தன்துணை முன்னு ணிரண்டு சத்திமா ரவ்வாறு தீர்க்கம்
அன்னவர் சேதி சொல்வேன் அரிமக னெப்ப தாகும்
மன்னரால் ஜீவ னங்கள் மருவிடுங் கல்வி மேன்மை
முன்கோபி கன்னி ஜன்மம் மூலமுன் னுளே தோன்றும்.

15. ஜாதகிக்கு முன்பிறந்த சகோதர நிருவரும் சகோதரிகள் இருவரும் தீர்க்காயுளுடன் இருப்பர் என்றோம். அவர்களில் மூத்த சகோதரனின் விவரங்களைச் சொல்லுகின்றோம். மன்மதனைப் போன்ற அழகன். அரசாங்க உத்தியோகத்தை ஏற்று வாழ்ந்து வருவான். கல்வியில் தேர்ச்சிபெற்று உயர்வடைவான். முன்கோபமுள்ளவன். கன்னியா லக்கினத்திலும் கேட்டை நட்சத்திரத்திலும் பிறந்தவன்.

16. கல்வியால் பெருமை யேற்பன்
கனராஜர் பேட்டி கொள்வன்
எல்லைகள் சேர்ப்பா னகும்
எதிரியை நாசம் செய்வன்
வெல்லுஞ்சொல் பாக்கிய வானும்
மேன்மையாய்ப் புகழு மேற்பன்
அல்லலில் லாமல் வாழ்வன்
அதிகாரத் தொழிலு மேற்பன்.

16. கல்வியால் ஏற்றம் அடைவான். அரசாங்கத் தொடர்புள்ள வன். விசேஷிலங்கள் பூமி இவைகளைப் பெருக்குவான். விரோதிகளை ஒழித்து விடுவான். வாக்குவன்மை யுள்ளவன். (இவனுடைய வார்த் தைக்கு மதிப்புண்டு). பாக்கியமுடையவன். உயர்ந்த கீர்த்தியை யடைவான் துன்பங்களில்லாமல் வாழ்ந்து வருவான். அதிகாரமுள்ள (உத்தியோகத்தை) பதவியை வகித்து வருவான்.

ஜாதகியின் சகோதரன் விவரங்கள்

17. பலசகா யங்கள் செய்வன் பகவானின் பத்தி பூண்பன்
விலைமாதர் மோகங் கொள்வன் வயதுமே தீர்க்க மெய்துந்
தலைவியும் ஒன்றே தீர்க்கஞ் சந்ததி யாண்பால் மூன்று
குலவிடும் பெண்பா லவ்வாறு குறித்தன மென்று
[சொல்வோம்.

17. பலருக்கும் சகாயங்களைச் செய்து வருவான். தெய்வபக்தி யுடையவன். வேசையர் மீது மோகம் கொள்ளுவான். நீண்ட வய துடையவன். மனைவியும் ஒருத்தியே யாவாள். மூன்று புத்திரிகளும் மூன்று புத்திரர்களும் தோன்றுவர் என்றும் சொல்லுகின்றோம்.

ஜாதகியின் சகோதரரில் இளையவனின் இயல்புகள்

18. மற்றொரு துணைவன் சேதி வரைகிறேந் தாயே கேளு
உத்தரட் டாதி நாளாம் உறைந்திடுஞ் சிம்ம ராசி
சுத்தவா னடக்க மாவன் துரைராஜர் தம்மால் செட்டு
வித்தகன் செய்வா னுகும் மேன்மையாய்க் குடும்ப
[மேற்பன்.

18. ஜாதகியின் மற்ற சகோதரனுடைய செய்திகளை எழுது கின்றோம். தாயே! கேளுங்கள். அவன் உத்தரட்டாதி நட்சத் திரம் சிம்ம லக்கினத்தில் பிறந்தவன். சுத்தமுள்ளவன். அடக்க மான சுபாவமுடையவன். அரசாங்கச் சார்புள்ள வர்த்தகத்தைப் புரிந்து வருவான். மேன்மையுள்ள குடும்பத்தை அடைவான்.

19. தந்தைபோல் தொழிலு மேற்பன் சல்லியங் கொள்ளா
[லுகுஞ்
சுந்தர முடைய னுகுஞ் சொல்லது சுருக்க மாகுஞ்
செந்திரு விலாசம் பெற்றுச் செல்வனும் வாழ்வா னுகும்
இந்திர போக மேற்பன் எய்திடும் பாரி யொன்று.

19. தன் தந்தையைப்போல் தொழில் செய்து வருவான். கடன் படாதவன். அழகுள்ளவன். சுருக்கமாகப் பேசுபவன். லெட்சுமி கடாட்சம்பெற்றுச் செல்வவானாக வாழ்ந்து வருவான். தேவேந்திரனைப் போன்ற சுகத்தை யடைவான். மனைவி ஒருத்தியே யாவாள்.

சகோதரன் புத்திரபாவம்

20. மைந்தரா னிரண்டு மாகும் மங்கையு மவ்வாறு தீர்க்கம்
பந்துவை யாத ரிப்பன் பழிபெரூன் பெரியோர் நேயன்
சிந்தையு நல்ல தாகுஞ் ஜனவுப காரி யாகுஞ்
கந்தன்தன் னருளு மோங்குங் காதலி கேட்டி டாயே.

20. இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உடையவர்களாவர்கள். தன் சுற்றத்தாரை ஆதரித்து வருவான். பிறரை ஏற்காதவன். பெரியோர்களுக்குப் பிரியமானவன். நல்ல மனமுடையவன். ஜனங்களுக்கு உபகாரி. முருகக் கடவுளின் அருள் விருத்தியாகும். தாயே! கேளுங்கள்.

மூத்த சகோதரியின் இயல்புகள்

21. முன்துணைப் பெண்பால் சேதி மொழிகிறேன் தாயே கேளு
கன்னிக்குத் தென்பால் மாரன் கழறுவோம் வறுமை [காணுள்
பின்னமில் லாத தேகி பொய்யது புகலா ளாகும்
அன்னம்போல் சாய லொக்கு மடாவடி கூரு ளாகும்.

21. தாயே! ஜாதகியின் மூத்த சகோதரியின் செய்திகளைக் கூறுகின்றேம். கேட்பீராக. அவளுக்குத் தெற்குப்பக்கத்திலிருந்து கணவன் வாய்ப்பான். தரித்திரமடையாதவள். ஊனமில்லாத சரீர முடையவள். பொய்யைப் பேசாதவள். அன்னத்தைப்போன்று அழகிய (சரீரம்) நடை உள்ளவள். அடாவடியாகப் பேசாதவள்.

இதுவுமது

22. வறுமைக ளில்லா வாழ்வள் மறுத்துரை யதிகங் கூரள்
சிறுமையோர்க் குதவி செய்வள் சேயர்க ளாண்பா [லிரண்டு
அரிவையர் மூவர் தீர்க்கம் அழகான குடும்ப மேற்பள்
மருவிடுங் கோபங் கொஞ்சம் வயதுமே தீர்க்க மெய்தும்.

22. தரித்திரமில்லாமல் வாழ்ந்து வருவாள். பெரியோர் பேசுவதற்கு எதிர்மொழி பேசாதவள். ஏழை எளியவர்கட்கு உபகாரம் செய்பவன். இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உடையவர்கள். அழகான குடும்பத்தை யடைவாள். சிறிது கோபம் கொள்ளுவாள். நீண்ட ஆயுள் உள்ளவள்.

23. பின்னெரு துணைவி சேதி
பேச்சினில் சோரா ளாகும்
உன்னதக் கல்வி மாளு
மூகைவான் உணச்சல் தேகி

தன்வரன் மனத்துக் கேத்தோள்
தரணியில் வறுமை காணுள்
முன்னோர்க்குத் தொண்டு பூண்ப
ளுயர்வான புத்தி யேற்பள்.

23. அதற்குப்பின் பிறந்த சகோதரியின் செய்திகளைக் கூறுகின்றோம். பேசுவதில் சோர்வை அடையாதவள். உயர்ந்த கல்வியைக் கற்றவள். ஊகமுடையவள். மெல்லிய சரீரமுள்ளவள். தன் கணவன் மனத்துக் கேற்றவள். உலகில் தரித்திர மடையாதவள். பெரியோர் கட்குப் பல தொண்டுகளைச் செய்வாள். உயர்ந்த புத்திசாலி.

24. மாரனும் வடகீழ் நேரும் மங்களச் சொல்லு முண்டு
நாரிக்குச் சுதரா ணென்று நங்கைமார் நால்வ ராகும்
வேறுபுத் திகளு மெண்ணுள் விரதங்கள் பூண்பா ளாகுந்
தீரமா மனத்த ளாகுந் தீர்க்கமாம் வயது மேற்பாள்.

24. கணவன் வடகிழக்குத் திசையிலிருந்து வருவான். எப்போதும் நல்ல வார்த்தைகளையே பேசுபவள். ஒரு புத்திரனும் நான்கு புத்திரிகளும் தோன்றுவர். தீய புத்திகளில்லாதவள். விரதங்களை ஏற்பாள். தைரியமுடைய மனத்தினள். நீண்ட வயதுடையவள்.

ஜாதகியின் திருமணக்காலம்

25. பின்துணை தோன்றுந் தீதாம் பேசுவோ மணத்தின் [காலங்
கன்னிக்குப் பதினா லாண்டுள் காவலன் வடகீழ் தன்னில்
மன்னனும் வருவா னகு மறைகிறோ மவன்கு ணத்தைப்
பொன்னிறம் புத்தி மானும் புவிராஜர் பேட்டி கொள்வன்.

25. ஜாதகிக்குப் பின் பிறக்கும் குழந்தைகள் நிலையா. இனி ஜாதகியின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகியின் பதினன்காம் வயதுக்குள் வடகிழக்குத் திக்கிலிருந்து கணவன் வருவான். இனி அவனுடைய குணவிசேஷங்களைக் கூறுகின்றோம். பொன்னிறமுடையவன். புத்திசாலி என்றோம். அரசாங்கத்தொடர்புள்ளவன்.

ஜாதகியின் கணவனின் இயல்புகள்

26. அரசரா தொழிலு மேற்பன்
அறுமுகன் பத்தி கொள்வன்
பெருமையும் புகழு மேற்பன்
புண்ணிய மனத்த னகும்
அரிவையும் போன பின்பு
அம்புலி போலே யோகந்
திருகிலா வாழ்வா னகுஞ்
செம்பொன்னு மதிகம் சேர்ப்பன்.

26. அரசாங்க உத்தியோகத்தை வகிப்பான். ஆறுமுகக் கட வுளின் மீது பக்தியுடையவன். பெருமையையும் கீர்த்தியையும் அடை வான். நல்லெண்ணம் பொருந்திய மனத்தினன் ஜாதகியை மணந்த பிறகு கணவனுக்கு வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தி யாகும். தீங்குகளில்லாமல் வாழ்ந்து வருவான். அதிகமான செல் வத்தைச் சேர்ப்பான்.

27. வீண்செல வில்லா ஒகும் விப்பிரர் நேசங் கொள்வன்
பூணுமா பரணஞ் சேர்ப்பன் பெரிதான தலங்கள்
[செல்வன்
நாணியே பேசா ஒகுஞ் ஙவிலுவோம் புத்திர பாவம்
ஆணென்று கன்னி ரண்டு யருந்தவத் தாலே தோன்றும்.

27. அநாவசியச் செலவைச் செய்யாதவன். அந்தணர்களுடைய நட்பைக்கொள்ளுபவன். சரீரத்தில் தரிக்கக்கூடிய ஆபரணங்கள் பல உள்ளவன். பெரிய புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். பேசுவ தற்கு கூச்சப்படாதவன். இனி ஜாதகியின் புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் பிறப்பார்கள். அவர்களும் முற்பிறவியில் செய்த (சாந்தி செய்தபின்) தவப்பயனல் தோன்றுவார்கள்.

புத்திரபாவம் கிரகநிலை

28. காரணம் யாது வென்ன கதிர்புக ரஞ்சில் தங்க
ஆரலும் ராகு ரண்டில் அணுகின பலத்தி னலே
கூறினே மந்தச் சங்கை கோதையின் பூர்வங் கேளாய்
வாரியி னேரந் தன்னில் மாதேவி நகரந் தன்னில்;

28. தாங்கள் அவ்விதம் கூறக் காரணம் யாது வென்று வினவ (மற்றவர் பதில் உரைக்கின்றார்). சூரியன், சுக்கிரன் புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடத்திலும் (ரண்டுத் தனுசில்) செவ்வாய் ராகு இரண்டாமிட மாகிய கன்னியிலும் தங்கி இருப்பதால் நாங்கள் அவ்வண்ணம் கூறு கின்றோம். தாயே! இனி ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கேட்பீராக சமுத்திரக்கரைக்குப் பக்கத்தில் உள்ள (தேவிப்பட்டணத் தில்) கன்னியாகுமரியில்;

29. உதித்தனள் சத்திரிய சேயா யுலகினில் வறுமை யின்றி
மதித்திடக் குடும்பி யாகி வாழுநாள் வினையைச்
[சொல்வேன்
முதல்குல மதலைக் கேதான் மாதாவு மரண மாகி
அதிபதி யிவள்பால் சென்று மகவுபால் வினவும் போது;

29. சத்திரிய குலத்தில் பிறந்தாள். உலகில் தரித்திரமின்றி பெருமையுள்ள குடும்பத்தை யடைந்து வாழ்ந்துவரும் காலத்தில் ஏற்

பட்ட தீவினையைச் சொல்லுவேன். அந்தண குலத்தில் பிறந்த குழந்தையொன்று (தன் தாயை இழந்த பிறகு) பசியால் வாடியிருக்குங்கால் இவளிடம் ஒருவர் சென்று பாலைக் கேட்கும்போது ;

அந்தணர் சாபம்

30. குறைவுள வார்த்தை சொல்லிக் குழவிபா லில்லை யென்ன
மறையவர் மனவெ றுப்பால் வறைந்தசா பத்தைக்
[கேண்மோ
பெருஞ்சுதர் தோஷ மாகும் பின்வருஞ் ஜன்மம் தன்னில்
உறையாது சுதர்கள் தாமு முதிக்கினுந் தீதே யாகும்.

30. தீங்கான வார்த்தைகளைக் கூறிக் குழந்தைக்குப் பால் இல்லை யென்று சொல்லி விட்டாள். அவ்வந்தணரும் மனத்தில் வருத்த மடைந்து கூறிய சாபத்தைக் கேட்பீராக. இப்பிறவியில் நீ பெற்ற குழந்தைகளுக்குத் தோஷமுண்டாகும். அடுத்த பிறவியிலும் புத்திரர் பிறவார். பிறக்கினும் நிலையார்.

31. இன்னமும் பலவாறு சொன்னு ரெய்திற்று வந்தச் சாபங்
கன்னிக்கு வந்தி யத்தில் காளைக ளுதித்து மேதான்
தன்மனச் சஞ்ச லத்தால் தந்தியின் கோஷ்டத் திற்கு
அன்னவள் தீபம் வைத்து அந்தகன் பக்கல் சென்று ;

31. இன்னும் பலவிதமாகக் கூறினர். அந்தச் சாபம் இவளுக்கு ஏற்பட்டது. கடைசியில் இவளும் புத்திரர்களை யடைந்து மனத்தில் கலக்கமுற்று விநாயகரின் ஆலயத்துக்குத் தீப கைங்கர்யம் செய்து வந்து இறுதியில் மரணமடைந்து ;

தோஷம் நீங்கச் சாந்தி

32. பிறப்பளா மிந்தப் பாவை பாலர்பா லீயாச் சாபம்
பிறக்குஞ்சேய் தோஷ மெய்தும் பேசுவோ மதற்குச்
[சாந்தி
அருணைமா நகர்க்குச் சென்று அக்கினி வலமாய் வந்து
திருகிய வில்வத் தாலே தேவனுக் கர்ச்சித் தேத்தி ;

32. இந்த ஜாதகி தோன்றுவாள். குழந்தைக்குப் பால் தராத தால் ஏற்பட்ட சாபத்தால் பிறக்கும் குழந்தைகளுக்குத் தோஷமேற் படும். அத்தோஷம் நீங்கச் சாந்தியொன்று கூறுகின்றோம். திருவண்ணாமலைக்குச் சென்று அக்கினி ஸ்வரூபமாக உள்ள சிவபெருமானை வலம் வந்து (கிரிப்பிரதக்ஷணம் செய்து) வில்வ தளங்களால் தேவர்கட்குத் தேவனாகிய சிவபெருமானுக்கு அருச்சனை செய்து துதித்து ;

33. அடியவர் தசம்பே ருக்கு வன்னமு மன்பா யீந்து
விடகந்தங் தனமுந் தானம் வியர்த்தமில் லாம லீந்து
உடன்நகர் சென்று வின்னெள் ஒருறு முகத்தோ ளுளில்
படிமிசைத் திங்கள் தோறு மொருபரத்துக் கன்ன மீய;

33. சிவனடியார் பத்துப் பேருக்கு அன்புடன் அமுது படைத்து புஷ்பம் சந்தணம் தாம்பூலம் இவற்றுடன் சிறிது தட்சிணையையும் சேர்த்து முழுமனத்துட னளித்து உடனே உள்ளூருக்குத் திரும்பி ஆறுமுகக் கடவுளுக்கு உகந்த நாளாகிய ஒவ்வொரு கார்த்திகை யன்றும் (ஒவ்வொரு மாதமும்) ஒரு பரதேசிக்கு அன்னமளித்து வந்தால்;

தாயின் குணங்கள்

34. முன்வினை நிவிர்த்தி யாகு முதித்திடுஞ் சுதர்கள் தாமும்
அன்னையின் குணத்தைச் சொல்வே னன்புள மனத்த
[ளாகுந்
தன்மனங் கபடு மில்லாள் சலித்தோர்க்கு வன்ன மீவள்
பின்னமில் லாத தேகி பொய்யது புகலா ளாகும்.

34. முற்பிறவியில் செய்த தீவினை நீங்கிப் புத்திர பாக்கியம் ஏற்படும். இனி தாயின் குண விசேஷங்களைக் கூறுகின்றோம். அன்புள்ள மனமுடையவள். சூதுகளில்லாத மனத்தினள். துன்புற்ற வர்கட்கு (ஏழைகட்கு) அன்புடன் அமுதைப் படைப்பவள். ஊனமில் லாத சரீர முடையவள். பொய்யைப் பேசாதவள்.

இதுவுமது

35. சிலவேளை தந்த நோயுஞ் சிவந்தமெய் வாத தேகி
தலைவியும் யோக சாலி தாய்போலே வன்ன மீவள்
பலர்மெச்ச வாழ்வ ளர்கும் பர்த்தாவின் மனத்துக்
[கேத்தோள்
கலையுண்டு வுகை சாலி கட்செவி கோபஞ் சாந்தம்.

35. சில வேளைகளில் பற்களில் வேதனை ஏற்படும். சிவந்த உடலும் வாயுரோகமுடைய சரீரமும் உள்ளவள். அதிர்ஷ்டமுள்ள வள். பெற்ற தாயைபோல் முகமறிந்து பரிவுடன் அன்னமளிப்பவள். பிறர் (பலபேரும்) கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். தன் கணவனின் மனத்துக்கு ஏற்றவள். கலையை நன்குணர்ந்தவள். ஊகமுடைய வள். சர்ப்பத்தைப் போல் விரைவில் கோபம் கொள்ளுவாள். சீக்கிரத்தில் தாழ்வடைவாள்.

தாயின் முற்பிறவி

36. மாதுரு யில்லக் தென்கீ ழாண்டுணை யிரண்டு தீர்க்கம்
ஒதுவே னிவளின் பூர்வ மும்பர்வாழ் தேயு தன்னில்
போதன முடையா னுக்குப் பிறந்தனள் பிரம்ம சேயாய்
வேதனை யில்லா ளாகி மேவினுள் கால நாடு.

36. தாயின் வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றேரும். அது தென் கிழக்கில் உள்ளது. இரு சகோதரர் நீண்ட ஆயுள் உள்ளவர் என்றேரும். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும் தேவர்கோனுகிய அருணுசலேச்வரர் தேஜஸ்வரூபியாக எழுந்தருளியிருக்கும் திருவண்ணுமலையில் பெருத்த தனவான் ஒருவனுக்கு அந்தண குலத்தில் பிறந்து தீவினைகளில்லாமல் வாழ்ந்து மரணமடைந்தாள்.

தாழ்ந்தகுலப் பிறவிக்குக் காரணம்

37. பொன்னவன் வரையப் பட்டுப் பிறந்தன ளிந்த மாது
முன்ஜன்ம மறைக்கு லத்தி லுதித்துமே வினையில்
[லாளாய்த்
தன்குலந் தாழ்வாய் வந்த சங்கையைச் சொல்லு
[மென்னக்
கன்னிகை விரதந் தன்னைக் கலக்காத தோஷத் தாலே ;

37. பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள். முற்பிறவியில் அந்தண குலத்தில் பிறந்தவளாகிய இவள் தீவினைகள் இல்லாதவளாக வாழ்ந்தும் இப்பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறக்குங் காரணங்களென்னவென்று கூறுங்கள். இவள் முற்பிறவியில் விரதங் களைச் செய்து வராததால் (செய்யவேண்டிய கடமைகளிலிருந்து வழுவியதால்).

தாயின் மரணகாலமும், மறுபிறவியும்

38. வந்தவ ளென்று சொல்வோ மாறஞ்சு மூன்று வாண்டில்
விந்தையாய்த் தனுசு மாதம் விடுவாளா மாவி தானும்
பிந்திய ஜன்மஞ் சொல்வேன் பிராமண குலமு திப்பாள்
எந்திடம் புகல்வீ ரையா எழில்திரு கணுவி லேதான்.

38. இப்பிறவியில் குலம் தாழ்வாகப் பிறந்தவள் என்று சொல்லுகின்றேரும். ஜாதகியின் தாய் முப்பத்திமூன்றும் வயதில் மார்கழி மாதத்தில் மரணமடைவாள். மறு பிறவியில் அந்தண குலத்தவளாகப் பிறப்பாள் என்றார். எந்த விடத்தில் தோன்றுவாள்? சொல்லுங்கள், முனிவரே! அழகிய திருவண்ணுமலையில் பிறப்பாள்.

39. மாதுக்கு யிச்சென் மத்தில் வடைந்தபுண் ணியங்க
[ளென்னப்
பாதக மனங்க ளின்றிப் பர்த்தாவின் மனம்போல்
[வாழ்ந்துங்
கீதுகள் சிலர்க்குத் தீர்த்துந் தேவதா பத்தி யாயுங்
காதலி வாழ்வ தாலே கலப்பளா மென்று சொல்வோம்.

39. ஜாதகியின் தாய் இப்பிறவியில் செய்த நல்வினைகள் எவை? தீய மனமில்லாமல் தன் கணவனின் மனத்துக்கு ஏற்ப வாழ்ந்து வந்ததாலும் சிலருக்குற்ற துன்பங்களை விலக்கியும் தெய்வபக்தியுடன் வாழ்ந்து வந்ததாலும் அவ்வண்ணம் சொல்லுகின்றோம்.

ஜாதகியின் தந்தையின் மரணகாலமும் மறுபிறவியும்

40. முப்பது வாண்டு தன்னில் விருச்சிக மாதந் தன்னில்
செப்புவோந் தந்தை கண்டஞ் சேரும்பின் ஜன்மம்
[கேளாய்
மெய்ப்புடன் மாலின் பாதம் வேண்டிடினேன் ஈகரந்
[தன்னில்
ஒப்புவான் மறைக்கு லத்தி லுத்தமி கேட்டி டாயே.

40. ஜாதகியின் முப்பதாம் வயதில் கார்த்திகை மாதத்தில் தந்தைக்குக் கண்டம் ஏற்படும் (மரணமுண்டாகும்). அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருமால் தன் சிறு பாதகமலங்களால் மகாபலியை மூன்றடி மண் வேண்டிய மகாபலிபுரத்தில் அந்தணக் குலத்தவனுகப் பிறப்பான். தாயே! கேளுங்கள்.

உயர்குலப் பிறவிக் காரணம்

41. பலவணி பங்கள் செய்தும் பகலில்சம் போகஞ் செய்துங்
குலவுங்கா ரணங்க ளெவ்வாறு கூறுவீர் முனியே நீர்தாம்
நிலையிலார்க் குதவி செய்தும் நீத்தோர்க்கு வன்ன மீந்துந்
தலவாசஞ் சென்ற தாலுஞ் ஜனிப்பனு மென்று
[சொல்வோம்.

41. பலவிதமான வர்த்தகம் செய்தும் பட்டப்பகலில் சிற்றின்பம் அனுபவித்தும் வந்தவனுகிய ஜாதகியின் தந்தை மறுபிறவியில் அந்தண குலத்தில் தோன்றும் காரணங்கள் என்னவென்று சொல்லுங்கள்? முனிவரே! ஏழைகளுக்கு உதவி செய்துவந்ததாலும் துறவிகட்கு அன்புடன் அன்னமளித்து வந்ததாலும் பல புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வந்ததாலும் அவ்வண்ணம் சொன்னேம்.

கணவனின் மரணகாலம்

42. எண்ணஞ்சு மேழா மாண்டி லிவள்வரன் மரண மாவன்
திண்ணமா யன்பா னறில் சாடிமா தத்தி லேதான்
மண்ணுண்டோன் பட்சம் சஷ்டி மாதுவும் மரிப்ப ளாகும்
வண்ணமாய்ப் பின்ஜன் மங்கள் வரைகிறேந் தாயே
[கேளு

42. ஜாதகியின் நாற்பத்தேழாம் வயதில் அவளுடைய கணவன் மரணமடைவான். நிச்சயமாக ஐம்பத்தாரும் வயதில் (கும்ப) மாசி மாதத்தில் கிருஷ்ணபட்ச சஷ்டி திதியில் ஜாதகி மரணமடைவாள். திட்டமாக மறு பிறவியை எழுதுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

ஜாதகியின் மறுபிறவி

43. உத்தரந் துவாரை தன்னி லுதிப்பளா மறைக்கு லத்தில்
வித்தகி யிச்சென் மத்தில் மேவின புண்ணிய மென்ன
அதுவிதக் குணத் திலு மறிவோர்கள் நேயங்
[கொண்டுஞ்
சுத்தமா மனத்த ளாயுந் தோகையும் வாழ்வ தாலே;

43. மறு பிறவியில் வடக்கிலுள்ள துவாரகையில் அந்தண குலத்தவளாகப் பிறப்பாள். ஜாதகி இப்பிறவியில் செய்த நல்வினைகள் எவை? அன்புள்ள குணமுள்ளவளாகவும் அறிவாளிகளிடம் நட்புக் கொண்டும் சுத்தமுள்ள மனமுடையவளாகவும் வாழ்ந்து வருவதால்;

ஜனன காலதசை

44. ஜனிப்பளாஞ் ஜனன காலஞ் சக்கர நாளே யாகுங்
கனமுள சேயி ருப்புக் கலந்திடு மாண்டி ரண்டு
வினையிலாத் திங்கள் பத்து விளம்பிலும் பூர்வ பாகம்
அனையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

44. அவ்விதம் தோன்றுவாள். ஜாதகியின் ஜனனகாலத்தில் அவிட்ட நட்சத்திரம், செவ்வாய் மகாதசையிலிருப்பு இரு வருடங்களும் பத்து மாதங்களும் மீதமாகும். இவ்வண்ணம் முதல் பாகத்தைச் சொல்லுகின்றேரும். தவங்களை இயற்றும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 71

1. மதிகன்னி குஜனுங் தூக்கம் மால்தனு புக்குஞ் சாடி
நிதிகுரு சீய மாக [1]நீலனு மிரவி மானில்
அதிகயர் நந்தியாக அற்றசெம் பாம்பு தேளில்
இதுநவக் கோளு நின்று இலக்கினம் சிம்ம மாக;

1. சந்திரன் கன்னியிலும், செவ்வாய் துலாத்திலும், புதன் தனுசிலும், சுக்கிரன் கும்பத்திலும், குரு சிம்மத்திலும், சனி சூரியன் மகரத்திலும், ராகு விருஷபத்திலும், கேது விருச்சிகத்திலுமாக நவகிரகங்கள் இருந்து இலக்கினம் சிம்மமாக இருப்பின் ;

கிரகநிலை

<table>
<tr><td></td><td></td><td>ராகு</td><td></td></tr>
<tr><td>சுக்கிரன்</td><td colspan="2" rowspan="2">இராசி
சக்கரம்</td><td></td></tr>
<tr><td>சனி
சூரியன்</td><td>லக்கினம்
குரு</td></tr>
<tr><td>புதன்</td><td>கேது</td><td>செவ்வாய்</td><td>சந்திரன்</td></tr>
</table>

ஜாதகனின் விட்டுநிலை

2. சொல்லுவீர் பலனே யென்று சுந்தரி கேட்கும் போது
வல்லவர் வசிஷ்டர் தாமு மறைகிரு ராண்பால் ஜன்ம
மில்லமும் வடதென் வீதி இந்திரன் வாச லாகும்
அல்லலா முருக னுத்தர மரன்கோஷ்டங் கீழ்ப்பா லாகும்.

2. ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதி தேவி கேட்கும்போது எல்லாமறிந்த வசிஷ்டமுனிவர் கூறுகின்றார். இஃது ஆண் பிள்ளையின் ஜாதகம். இவன் பிறந்த வீடு வடக்குத் தெற்கான தெருவில் கிழக்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. முருகக் கடவுளின் ஆலயம் வடக்குப் பக்கத்திலும், சிவபெருமான் கோயில் கிழக்கு பக்கத்திலும் இருக்கும்.

வேறு

3. ஆடுதின் னுமுனிய்ம்மன் தெற்கில் தங்கும்
அருகினில் மாரியுண்டு அரனுநிற்கும்
நீடுபுகழ் மாரிதந்தி காளி [1]மாயோன்
நிகழ்த்துவோர் தென்கீழ்ப்பால் தங்கு வாரே

1. நீலன் = சனி

நாடியதோர் சமவூரில் சங்கை சேயாய்
நல்குவான் தந்தைக்கு நாலாஞ் ஜன்மந்
தேடியே விவனு திப்பான் தெற்கில் சந்தாம்
சேத்திரமுங் கெட்டியதாஞ் செப்பு வோமே.

3. ஆடுகளைப் பலியாகக் கொள்ளும் முனீசுவரன் கோவிலும் அம்மன்கோவிலும் தெற்குப் பக்கத்தில் இருக்கும். சமீபத்தில் மாரியம்மன்கோவிலும் சிவபெருமான் ஆலயமும் உண்டு. உலகெல்லாம் புகழ் பெற்ற மற்றொரு மாரியம்மன், விநாயகர், காளிதேவி, திருமால், முதலிய வர்கள் தென்கிழக்கில் கோயில்கொண்டுள்ளனர் என்று சொல்லுகின்றோம். இவ்விதமுள்ள சமஸ்கிலியுள்ள ஊரில் வேளாள குலத்தில் இவன் பிறப்பான் என்றும் கூறுவோம். அவன் தந்தைக்கு நான்காம் பிறவியாகத் தோன்றுவான் என்றோம். தெற்குப்பக்கத்தில் சந்து ஒன்று உண்டு. இவனுடையது ஒரு கெட்டி வீடு என்றும் சொல்லுகின்றோம்.

ஜாதகனுடைய தந்தையின் சகோதரபாவம்

4. தந்தைதுணை யிருநான்கு வென்று சொன்னேஞ்
சதிருடனே யாணிரண்டு விருத்தி யென்றோம்
பிந்தியதோர் துணைவரென்று பேச லாகும்
பிரியாமல் சிலகாலம் வாழ்வா ராகும்
அந்தவர்கள் குடும்பியரென் றறைய லாகும்
அவன்தந்தை சேதிதா னறையக் கேளாய்த்
தந்தங்கள் சுகமுடையான் சிவந்த மேனி
சகலருக்குந் தனமுதவி மூர்க்க முள்ளான்.

4. ஜாதகனுடைய தந்தைக்கு உடன் பிறந்தவர் எட்டுப்பேராவர் என்று சொல்லுகின்றோம். அவர்களில் இரு சகோதரர்கள் நிஜீலயானவர் என்றும். அவர்களும் ஜாதகனுடைய தந்தைக்குப் பின் பிறந்தவர்கள் என்றோம். அவர்கள் சிலகாலம் ஒருவரை யொருவர் விட்டுப் பிரியாமல் வாழ்ந்து வருவார்கள். அவர்கள் பெரிய குடும்பியாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இனி ஜாதகனின் தந்தையின் விவரங்களைக் கூறுகின்றோம். கேட்பீராக. அழகிய பற்களையுடையவன். சௌக்கிய முள்ளவன் சிவந்த உடலுடையவன். எல்லோருக்கும் பணத்தைக் கொடுத்து உபகாரம் செய்பவன். மூர்க்க குணமுள்ளவன்.

இதுவுமது

5. பொருளிச்சை பூமிவிருத்தி செட்டுச் செய்வன்
போஜனமுஞ் சுகமுடையன் புயப லத்தோன்
திருமகளின் வாசமுள்ளான் ஈகை கொஞ்சஞ்
செய்ந்நன்றி மறவாதான் கவடு மில்லான்

அரிபத்தி முன்கோபம் பணையேர் விருத்தி
அபயமென்றோர் தமைக்காப்பன் தைரி யத்தன்
கரமதனில் பத்மத்தின் ரேகையுள் ளான்
காலாட்க ளுடையவனுங் கல்வி கொஞ்சம்.

5. பொருளின்மீது அபாரப் பிரியமுள்ளவன். விளை நிலங்களைப் பெருக்குவான். சாப்பாட்டுச் சுகமுடையவன். புயபலமுள்ளவன். இவன் வீட்டில் இலக்குமி வசித்து வருவான். தருமகுணம் சிறிது உடையவன். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். சூதுகளில்லாதவன். திருமாலின்மீது பக்தியுள்ளவன். முன்கோபம் கொள்ளுவான். பண்ணை ஏர் முதலியவற்றின் பெருக்க முடையவன். அண்டி வந்தவரை ஆதரித்து வருவான். தைரியமுள்ளவன். கையில் பத்மரேகை யுடையவன். ஏவலாட்கள் உள்ளவன். கல்வியறிவு சிறிதளவே யுள்ளவன்.

ஜாதகனுடைய குண நலங்கள்

6. சொல்லியதோர் குணத்தானுக் கிந்தப் பாலன்
சுதனுக வவதரிப்பான் சிவந்த மேனி
கல்வியுளான் நீட்சியுளன் சமதே கத்தன்
காலாட்கள் விருத்தியுளான் யாவ ருக்கும்
நல்லவனுய் வாழ்ந்திடுவன் வறுமை யில்லான்
நாயகிமேல் பட்சமுள்ளான் பொறுமை யுள்ளான்
புல்லியரை யாதரிப்பன் சல்லியங் கொள்ளான்
பூமியதை விருத்திசெய்வன் பித்த தேகி.

6. இவ்விதம் சொல்லப்பட்ட குணங்களை யுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவன் சிவந்த உடலுடையவன். கல்வியறிவுடையவன். உயரமானவன். சமமான உடலமைப்புள்ளவன். ஏவலாட்களின் பெருக்கமுடையவன். எல்லோருக்கும் நல்லவனுக வாழ்ந்து வருவான். தரித்திரமடையாதவன். மனைவிமேல் அன்புடையவன். பொறுமைசாலி. ஏழைகளை ஆதரித்து வருவான். கடன் படாதவன். விளைநிலங்களைப் பெருக்குவான். பித்த சரீரமுடையவன்.

இதுவுமது

7. அறமதனி லிச்சையுளன் காட்சின்ய னுவன்
அவன்கரத்தில் விஷ்ணுரேகை யுள்ளோனும்
பெருமவர்கள் நேசமுளன் பகைவ ரில்லான்
பெருதந்தஞ் சுகமாகப் பேசு வானுஞ்
சிறுமையிலான் பூமியதை விருத்தி சிலன்
சினேகிதர்க ளதிகமுளன் சிறப்பாய் வாழ்வன்
வருந்துணைக ளேழாகு மூத்தோ ரில்லான்
வருமிளையோ ராணென்று பெண்ணு மொன்றே.

7. தருமம் செய்வதில் விருப்பமுடையவன். தாட்சிண்ய மனப் பான்மையை யுடையவன். கையில் விஷ்ணுரேகையை யுடையவன். பெரியோர்களின் நட்பைக் கொள்ளுவான். விரோதிகளில்லாதவன். பற் கள் பெரியவையாகக் காட்டும். இன்புறும்படி பேசுபவன். சிறுமையை யடையாதவன். விசேஷ நிலங்களைப் பெருக்குவான். நல்லொழுக்க முடையவன். அதிகமான நண்பர்களை உடையவன். சிறப்புடன் வாழ்ந்து வருவான். அவனுக்கு உடன்பிறந்தவர் எழுவராகும். தனக்கு முன்பிறந்த சகோதரரில்லாதவன். இவனுக்குப் பின் பிறந்த வரில் சகோதரன் ஒருவனும் சகோதரி ஒருத்தியும் நிலையானவர்.

ஜாதகனுடைய இளைய சகோதரனின் விவரம்

8. பின்வந்தோன் சேதிசொல்வே னுகை வானும்
பேச்சதுவுந் தந்திரமாங் கல்வி யுள்ளான்
தன்சொல்லே மேன்மையாய்ச் சாதிப் பானுந்
தைரியத்தன் மனக்கவடன் வாயு முள்ளான்
அன்னியரை யுறவுகொள்வ னதிக மாக
அவன்சுகபோ ஜனமுடைய னுணவு மிஷ்டன்
வின்னமில் லாததேகன் செட்டுச் செய்வன்
விசேடபூ மிகளுடையன் விளம்பி னேமே.

8. ஜாதகனின் இளைய சகோதரனது செய்தியைச் சொல்லுகின றேம். ஊகமுடையவன். தந்திரமாகப் பேசுபவன். கல்வி யறிவுள்ளவன். தனது வார்த்தைகளே மேன்மையுள்ளவை என்று திடமாகக் கூறு வான். தைரியமுள்ளவன். மனத்தில் கபடமுடையவன். வாயு ரோக முள்ளவன். அன்னியருடன் அதிகமாக உறவாடுவான். சௌக்கிய மாக (அறுசுவையுடன்) புசிப்பதில் விருப்பமுள்ளவன். ஊனமில்லாத சரீரமுடையவன். வர்த்தகத்தைப் புரிந்து வருவான். பூமிப் பெருக்க முடையவன் என்று சொல்லுகின்றேம்.

சகோதரியின் குணங்கள்

9. இவனுடனே கூடியொன்றாய் வாழ்வா ளாகும்
இவனுக்குத் தாரமொன்று வியம்பி னேமே
நவமதனில் புத்திரர்க ளாண்பா லிரண்டு
நாயகிமார் மூன்று வென்றோஞ் சுகமாய் வாழ்வன்
அவனிபால் பெண்ஜன்மங் கடைசி ஜன்மம்
அவள்நிறத்தைப் புகலுகின்றே னிருநி றத்தாள்
உவமைகள் சொல்லிடுவ ளடக்க முள்ளாள்
உறன்முறைக்கு யினியவளா முரைப்பக் கேளாய்.

9. அவன் இந்த ஜாதகனுடன் ஒன்றுகக்கூடி வாழ்ந்து வருவான். அவனுக்கு மனைவி ஒருத்தியேயாவள் என்று கூறுகின்றோம். இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் தோன்றித் தீர்க்காயுளுடன் சௌக்கியமாக வாழ்ந்து வருவார்கள். நாங்கள் முன்பு கூறிய உடன் பிறந்தவர்களுள் சகோதரி கடைசியில் பிறந்தவள் என்றோம். அவளுடைய நிறத்தைச் சொல்லுகின்றோம். அவள் கரிய நிறமுடையவள். உபமானத்துடன் பேசுபவள். அடக்கமுள்ளவள். தன் சுற்றத்தாருக்குப் பிரியமானவள். மேலும் சொல்லுகின்றோம். கேட்பீராக.

வேறு

10. வரன்மனம் போலே வாழ்வள் வறுமைக ளில்லா ளாகும்
வருந்தந்தை தாயின் யோகம் வந்திடு மிவளுக் கேதான்
பெருமையும் புகழு முள்ளாள் புத்திர ராண்பா லொன்று
அறைகின்றோம் பெண்பா லிரண்டு அம்பிகை யாளே
[கேளாய்.

10. தன் கணவனது மனம்போல் வாழ்ந்து வருவாள். தரித்திரத்தை யடையாதவள். இவளுடைய தாய் தந்தையரின் அதிர்ஷ்டம் இவளுக்கு ஏற்படும். அதனால் கீர்த்தியையும் பெருமையையும் அடைவாள். ஒரு புத்திரனையும் இரு புத்திரிகளையும் பெறுவாள். தாயே! கேளுங்கள்.

11. மத்திய வயதி லேதான் வரனுமே மாள்வா னென்றோம்
வித்தகி சிலகாள் தாழு மேதினில் விதவை யாகிச்
சித்தமாய் வாழ்வா ளாகுஞ் சிலசில நிந்தை யுள்ளாள்
அத்தியைப் பெற்ற மாதே யறைகின்றோம் விவர மிரண்டில்.

11. இவளுடைய நடுவயதில் (இடைக்காலத்தில்) கணவன் இறந்து விடுவான். இவளும் சிலகாலம் கைம்பெண்ணாகி, உலகத்தவரால் சிற்சில பழிச்சொற்கள் சொல்லப்பட்டு வாழ்ந்து வருவாள். விநாயகக் கடவுளைப்பெற்ற தாயே! மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகனின் திருமணக்காலம்

12. ஜாதகன் மணத்தின் காலஞ்
சாற்றுவோ மிருபா லென்றில்
மேதினில் வடகீழ் தன்னில்
மேவிய சிற்றூர் தன்னில்
போதவே மனைவி வாய்ப்பள்
புகலுவோ மவள்கு ணத்தை
வேதனை யொருவர்க் கெண்ணாள்
மேதினில் பொறுமை யுண்டு.

12. இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேம் இருபத்தேராம் வயதில் வடகிழக்குத் திக்கிலிருக்கும் சிற்றூரிலிருந்து மனைவி வாய்ப்பாள். இனி அவளுடைய குண விசேஷங்களைக் கூறுகின்றேம். பிறர் மனத்தைத் தன் சொற்களாலும் செயலாலும் புண்படுத்த எண்ணுதவள். பொறுமையை யுடையவள்

மனைவியின் குண நலங்கள்

13. சிவந்திடு மேனி யாவள் செல்வியும் வாத தேகி
நவனியில் நல்லோ ளாவள் நாயகன் மனம்போல்
[வாழ்வள்
இவளுமே யோக சாலி யிடரான புத்தி யில்லாள்
அவள்குலங் குற்ற முண்டு அம்பிகை யாளே கேளாய்.

13. சிவந்த உடலுள்ளவள். வாயு ரோகமுடைய சரீரி. உலகில் நல்லவள் என்ற பெயரையுடையவள். தன் கணவனது மனம்போல் வாழ்ந்து வருவாள். அதிர்ஷ்டமுடையவள். தீய புத்தியில்லாதவள். அவள், தனது குலத்தில் குற்றமுள்ளவள் (அபவாதமுடையவள்.) தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய புத்திரபாவம்

14. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பா லிரண்டு
சித்தமாய்ப் பெண்பா லவ்வாறு செப்புவோந் தீர்க்க மாக
உத்தது மூன்று நஷ்ட முரைக்கிறோ மிவனுக் கேதான்
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தவிம் மொழிகுன்
[றுவே.

14. ஜாதகனது புத்திரபாவத்தைச் சொல்லுகின்றேம். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்கமாயிருப்பார்கள். பிறந்த குழந்தைகளில் மூன்று நிலையா என்று கூறுகின்றேம். விநாயகக்கடவுளை உலகுக்களித்த தாயே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

ஜாதகனுடைய தாயின் குண நலங்கள்

15. அன்னையு மிருநி றத்தாள் அழகுளாள் வாத தேகி
பின்னமில் லாத தேகி புருடனுக் கினிய ளாகும்
இன்னவள் பொறுமை சாலி யிவளுநன் னடக்கை
[யுள்ளாள்
அன்னிய ருறவு கொள்வள் அன்புள மனத்த ளாமே.

15. ஜாதகனுடைய தாய் கரிய நிறமுள்ளவள். அழகுடையவள். வாயு ரோகமுள்ள சரீரி. ஊனமில்லாத தேகத்தைப் பெற்றவள். தன் கணவனுக்குப் பிரியமானவள். பொறுமையுடையவள். நன்னடத்தை

யுள்ளவள். பிறருடன் (அயலாருடன்) சிநேக மனப்பான்மை யுள்ள வள். அன்புள்ள மனத்தினள்.

தாயின் சகோதரபாவம்

16. அவளுடைத் துணைவர் தம்மை யறையவே பலத்தைக் [காணைந்
தவமுனி சொல்லும் போது சங்கரி கேட்க லுற்றாள்
இவளுக்குத் துணைவர் தாமு மில்லாத கார ணஞ்சொல்
நவனியில் சொல்லு கின்றேன் நாயகி கேட்டி டாயே.

16. ஜாதகனுடைய தாயின் உடன்பிறப்பைப் பற்றிச் சொல்லு கின்றோம். உண்டு என்று கூறக் கிரக பலமில்லை. இங்ஙனம் முனிவர் கள் கூறும்போது பார்வதிதேவி கேட்கலானார். இவளுக்கு (தாய்க்கு)ச் சகோதரரில்லை என்று சொல்லக் காரணம் என்னவென்று சொல்லுங் கள். தாயே! கூறுகின்றோம். கேட்பீராக.

தாய்க்குச் சகோதர தோஷத்திற்குரிய கிரகநிலை

17. அம்புலி தனக்கு மூன்றில் அற்றசெம் பாம்பு தங்கத்
துன்மையா யதற்கு மூன்றில் சூரிய னிருப்ப தாலே
இன்பமாய்த் துணைவர் காணு னிவள்வர்க்கம் நாச மாகு
மன்னிய கேது நாலில் வந்ததால் பூர்வ தோஷம்.

17. சந்திரனுக்கு மூன்றில் கேது இருப்பதாலும் அவ்வீட்டுக்கு மூன்றுமிடத்தில் சூரியன் இருப்பதாலும் தாய் உடன்பிறந்தவர்களில் லாதவள். (மாதுர்காரகனுகிய சந்திரனிருக்கு மிடத்துக்குச் சகோதர ஸ்தானமாகிய விருச்சிகத்தில் கேதுவும் அவ்விடத்துக்குச் சகோதர ஸ்தானமாகிய மகரத்தில் சூரியனும் இருப்பதால் அவ்விதம் சொன் னோம்). தாயின் வர்க்கத்தாருக்கு அழிவுண்டு. இதுதவிர, மாதுர் ஸ்தானமாகிய நான்காமிடத்தில் கேது விருக்கும் பலத்தாலும் ஜாதக னுடைய தாய்க்கு முற்பிறவித் தோஷமு மேற்பட்டது.

தாயின் முற்பிறவி

18. துணைவர்க ளில்லா ளாகுஞ்
சொல்லுவீர் முன்ஜன் மத்தை
வினையிலா சொல்லு கின்றேன்
வித்தகி வாரி யோரங்
கனமுடன் மாவலி யில்தான்
காதலி வைசிய வம்சம்
அனையவே யுதித்தா ளென்றோம்
அம்பிகை யாளே கேளாய்.

18. உடன்பிறந்த சகோதரரில்லாதவள். தாயே! முற்பிறவியின் விசேஷங்களைக் கூறுவீராக. மறைவில்லாமல் சொல்லுகின்றேம். ஜாதகனுடைய தாய் சமுத்திரக்கரையிலுள்ள பெரிய க்ஷேத்திரமாகிய மகாபலிபுரத்தில் வைசிய குலத்தவளாகப் பிறந்தாள் என்றேம். தாயே! கேளுங்கள்.

இதுவுமது

19. அங்ஙகர் தனக்கு மேல்பால் அணுகிய பட்சி தன்னில்
தன்வரன் பக்கல் சேர்ந்து தனம்பணி யதிக முண்டாய்
உன்னத மதலை யுண்டாய் உத்தமி வாழு நாளில்
தன்னிலே வந்த வூழைச் சாற்றுவோங் கேளுந் தாயே.

19. அவ்வூருக்கு மேற்கில் உள்ள திருக்கழுக்குன்றத்தில் வாழ்க்கைப்பட்டுத் தன் கணவனுடன் சேர்ந்து பொருள் ஆபரணங்கள் முதலியவற்றை அடைந்து மக்களைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். தாயே! கேளுங்கள்.

தீவினை

20. பஞ்சைகள் சிவவேடங் கொண்டு பாலர்கள் மனைவி யோடு
தஞ்சமா யவ்வூர்க் கேகித் தான்பல பிச்சை செய்து
வஞ்சியி னில்லந் தன்னில் வந்தன ரிரவு தன்னில்
அஞ்சாமல் சயனஞ் செய்தார் அம்பிகை யாளே கேளாய்.

20. ஏழை மக்கள் சிலர் (சுவாமி தரிசனத்துக்காக) அடியார் களைப்போல் வேடம் தரித்துத் தங்கள் மனைவி மக்களுடன் அவ்வூருக்குச் சென்று பிச்சை யெடுத்து வந்து கொண்டிருக்கும் காலையில் ஜாதகனுடைய தாயின் வீட்டுப் பக்கம் வரும்போது இரவு காலமாகி விட்டபடியால், பயமின்றி இவளுடைய வீட்டுத் திண்ணையில் படுத்துறங்கினர். தாயே! மேலும் கேளுங்கள்.

ஏழைமக்களை வெறுத்தது

21. காலையில் செல்லும் போது கனமிலாப் பஞ்சை மக்கள்
கோலங்கள் மிகவே செய்யக் கோவைசிய மாது பார்த்துப்
பாலர்கள் தம்மை நோக்கிப் பலபல வார்த்தை பேசி
ஆலம்போல் சீறி யேதான் அவருடன் விரோத மூற்று;

21. அதிகாலையில் அவ்வேழை மக்கள் வீட்டுத் திண்ணையைத் திருந்த அலங்கோலத்தை வீட்டுக்காரியாகிய (ஜாதகன் தாய்) குலத்துப்பெண் பார்த்து குழந்தைகளை நோக்கிப் பலவாறு [illegible]ள். பிறகு வெகுவாகக் கோபங்கொண்டு விரோத மனல் [illegible]டன்;

ஏழைகளின் தாபம்

22. அந்திடஞ் சுத்தி செய்ய அகதிகள் சொல்லு கின்றார்
நொந்திடும் பேரை யிவ்வாறு நுவலொணு தாயே நீர்தாம்
எந்தையுஞ் சொல்லொ ணாது வென்றுமே யேழை
[சொல்ல
இந்தவாறு மாது தானும் இவர்பேரில் கோபம் பேச.

22. அவர்கள் படுத்துறங்கிய விடத்தைச் சுத்தம் செய்தாள். அகதிகளாகிய ஏழை மக்கள் கூறுகின்றனர். மனம் வாடிய ஏழைகளை இவ்விதம் சொல்லித் துன்புறுத்தலாகாது. தாயே! என்று பெரியவராகிய ஓர் ஏழை சொல்லும்போது இவள் வெகுண்டு மீண்டும் கோபத்துடன் பேசலானாள்.

ஏழைகளின் சாபம்

23. அகதியு மனவெ றுப்பால் அறைகுவார் சாபந் தானுந்
தகைமையாய்ப் பின்ஜன் மத்தில் தன்துணை யில்லா ளாகி
வகையுடன் வர்க்க நாசம் வரும்புத்திரர் முதலில் பீடை
ஜகமதில் வரணு லேதான் செப்புவோம் யோகந் தானே;

23. அவ்வகதிகளாகிய ஏழை மக்கள் மனம் நொந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். தாயே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உடன்பிறந்த சகோதரரில்லாதவளாகி உன் வர்க்கமும் அழிந்து முதலில் தோன்றும் புத்திரர்கட்குத் தீங்கு ஏற்படும் என்றும் உன்னுடைய கணவனுல் யோகம் ஏற்படும்;

24. இப்படிச் சொல்லி யேதான்
ஏழைவே றில்லஞ் சென்றார்
செப்புவோ மந்தத் தோஷஞ்
செல்வியைப் பற்றி யேதான்
ஒப்புட னந்தி யத்தில்
உத்தமி குன்ம நோயால்
மெய்ப்புடன் மறலி பக்கல்
வித்தகி சேர்ந்தா ளென்றோம்.

24. என்றும் இவ்விதமாக ஏழைகள் கூறி விட்டு வேறு வீட்டுக்குச் சென்றனர். அந்தத் தோஷம் ஜாதகனுடைய தாயைப் பற்றியது. அதனுல் அவள் தன் கடைசிக் காலத்தில் வயிற்று வலியால் அவஸ்தைப்பட்டு மரணமடைந்தாள் என்றோம்.

25. கஞ்சனுல் வரையப் பட்டுக்
காதலி யிச்சென் மத்தில்
தஞ்சமாய்க் காஞ்சி யுத்தரந்
தானவ ஞதித்தா ளென்றேரும்
வஞ்சிக்கு முன்னூழ்த் தோஷம்
வந்ததா லிச்சென் மத்தில்
துஞ்சிடும் வர்க்க மென்றேரந்
தோகையே கேட்டி டாயே.

25. மீண்டும் பிரம்தேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் காஞ்சிபுரத்துக்கு வடக்கில் உள்ள ஊரில் பிறந்தாள் என்றேரும். முற் பிறவியின் தோஷம் இவளைப் பற்றியதால் அவளுக்கு இப்பிறவியில் இவ்விதமாக வர்க்கம் அழிந்துபோம் என்றேரும். தாயே! கேளுங்கள்.

தாயின் மறுபிறவி

26. பின்ஜன்மங் காஞ்சி தன்னில் பிறப்பளே கர்ண வம்சந்
தன்னிலே சுகமாய் வாழ்வள் தனமிக வுடைய ளாகி
உன்னத புத்திர ருண்டாய் உத்தமி வாழ்வா ளாகுங்
கந்தனை யின்ற மாதே கழறின மொழிகுன் ரூவே.

27. மறுபிறவியில் காஞ்சிபுரத்தில் கருணீகர் குலத்தவளாகப் பிறப்பாள். பிறந்து செல்வம் மிக்க உடையவளாகவும் உயர்ந்த புத்திரர்களைப் பெற்றவளாகவும் சௌக்கியமாகவும் வாழ்ந்து வருவாள். முருகக்கடவுளைப் பெற்ற தாயே! நாங்கள் கூறிய வார்த்தைகள் பொய்யாகா.

வேறு

தந்தையின் முற்பிறவி வரலாறு

27. தந்தையின்முன் ஜன்மத்தைச் சாற்றக் கேளாய்த்
தக்கோல மாநகரில் செங்குந்த வம்சம்
வந்தவனும் நெசவுசெய்து மனைவி மைந்தர்
வளமையாய்க் குடும்பமதாய் வாழு நாளில்
தன்தனமு மதிகமதாய்ச் சகல ருக்குந்
தனமுதவி சங்கரிக்குத் தொண்டு செய்து
இந்தவிதம் யாவருக்கு நல்லோர் ஞகி
எமபதிக்குச் சென்றுன்கா ணிந்தப் பாலன்.

26. ஜாதகனுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும் கேட்பீராக. தக்கோலத்தில் செங்குந்த மரபிலனுகப் பிறந்து நெசவுத் தொழிலைச் செய்து வந்து மனைவி மக்களைப்பெற்றுச் செழிப்புள்ள குடும்பத்தையடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் தன்னுல் சம்

பாதிக்கப்பட்ட பொருள் அதிகமாகி எல்லோருக்கும் பொருளுதவி செய்து பார்வதிதேவிக்குப் பல தொண்டுகளைச் செய்து வந்து இங்ஙனம் எல்லோருக்கும் நல்லவன் என்ற பெயருடன் வாழ்ந்து இறுதியில் மரணமடைந்தான்.

தந்தையின் மறுபிறவி

28. தலைநான்கோன் வரையவந்தான் கங்கை வம்சந்
தன்னிலே விவனுதித்தான் சுகமாய் வாழ்வன்
நலமுடனே பின்ஜன்ம மரங்கந் தன்னில்
நாயகனு மிக்குலத்தில் நல்கு வானும்
பலமான குடும்பியதாய் மனைவி புத்திரர்
பஞ்சைகள்மே லிரக்கமுண்டாய் வாழ்வா னுகும்
கலைகங்கைச் சடையணிந்தோன் தேவி யாளே
கழறினவுந் தப்பாவா மேலுங் கேளே!

28. நான்கு தலைகளையுடைய பிரமதேவனால் படைக்கப்பட்டு வேளாள குலத்தவனைப் பிறந்தான். இப்பிறவியில் சுகமாக வாழ்ந்து வருவான். இனி தந்தையின் மறுபிறவியைக் கூறுகின்றோம். திருவரங்கத்தில் இதே குலத்தில் பிறப்பான் என்றோம். பெரிய குடும்பத்தைப் பெற்று மனைவி மக்களையடைந்து ஏழைகளின் மீது இரக்கமுடையவனாய் வாழ்ந்து வருவான். சந்திரன் கங்கை இவைகளைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. மேலும் கூறுகின்றோம். கேட்பீராக.

ஜாதகனின் முற்பிறவி

29. இன்னவன்தன் முன்ஜன்ம மியம்பக் கேளாய்
எழில்காஞ்சி தட்சிணத்தி லருகி லேதான்
உன்னதமாய் வைசியகுலந் தனிலு தித்து
உயர்வான செட்டுச்செய்து பூமி யுண்டாய்த்
தன்மனையாள் புத்திரர்க ளுள்ளா னுகி
ஜகத்துளோர்க் குதவிசெய்து பந்து மெச்ச
அன்னவனும் வாழ்நாளில் வந்த வூழை
அறைகிறோ நவநூலே யாய்ந்து தானே.

29. இனி ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. காஞ்சிபுரத்துக்கு அருகில் தெற்குப் பக்கத்தில் உள்ள ஊரில் உயர்ந்த வைசிய குலத்தில் பிறந்து விரிவான வர்த்தகத்தைப் புரிந்துவந்து வீடு நிலங்களைப் பெற்று மனைவி, மக்களையடைந்து சொத்துக்கள் உள்ள செல்வவான்களுக்கு உபகாரம் செய்து தன் சுற்றத்தார்கள் கொண்டாடும்படி வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட

தீவினையை, இந்த நவக்கிரக நிலையை ஆராய்ந்து சொல்லக்கூடிய ஜோதிட சாஸ்திரத்தை நன்கு பார்த்துக் கூறுகின்றோம்.

வேறு

தவசி நிந்தை

30. அகதியு மதுபு கித்து அதிகமாய் வெறியுங் கொண்டு
தகைமையா யவன்பால் சென்று சண்டைகள் மிகவே [செய்ய
உகமையாய்ப் பேசா னுகி உதாசீன மிகவே சொல்ல
வகையிலாக் கோப முற்று வடியரைப் பேச லுற்றான்.

30. ஏழை யொருவன் கள்ளுண்ட வெறியில் இவனிடம் சென்று சண்டையிட இவன் சாவதானமாகச் சமாதான முறையில் பேசாத வனுகி அவனை உதாசீனம் செய்து கோபமுற்று விரட்டித் திட்டலானான். (சுயநினைவில் இல்லாமல் பேசும்போது அதை நிலையாகக் கொள்ளுதல் தவறு என்பது இப்பாட்டின் மூலம் சொல்லப்படுகிறது.)

தவசி சாபம்

31. தவசியுஞ் சொல்லு கின்றார் தானவன் பின்ஜன் மத்தில்
அவனியில் துணைவர் முன்பின் அணுகியே தோஷ மாகி
நவனியில் முதலில் புத்திரர் நல்கியே தோஷ மாகி
இவனுடை மாதர் வர்க்க மில்லாமல் நசிக்கு மென்று ;

31. ஏழையாகிய பரதேசி சொல்லுகின்றார், நீ எடுக்கும் அடுத்த ஜன்மத்தில் உலகில் உனக்கு முன்பின் பிறந்த சகோதரர் நிலையில்லாமலும் பிறக்கும் புத்திரர்களில் மூத்தவன் நிலையாக இல்லாமலும் தாய் வர்க்கம் அழிந்தும் போய்விடும் என்று ;

32. சொல்லியே வகதி சென்றார் சேர்ந்தது வந்தத் தோஷம்
வல்லியே வைசி யன்தான் மறலிதன் பதிக்குச் சென்று
நல்லதோர் கங்கை வம்சம் நாயக னுதித்தா னென்றோம்
புல்லிடு முன்னூழ்ச் சாபம் புண்ணிய வதியே கேளாய்.

32. கூறிவிட்டுப் பரதேசி சென்றுவிட்டார். அந்தத்தோஷம் இவனைப்பற்றியது. வைசியனுகிய அந்த ஜாதகன் மரண மடைந்து இப் பிறவியில் வேளாள குலத்தவனுய்ப் பிறந்தான். தாயே! முற்பிறவியின் தீவினையால் ஏற்பட்ட சாபம் இப்பிறவியிலும் தொடர்ந்தது. நல்லெண்ணம் பொருந்தியவளே! கேளுங்கள்.

சாபபலன்

33. துணைவர்கள் முன்பின் சேதஞ் சுதர்களு முதலில் பீடை
கனமிலா மாதுர் வர்க்கங் கழறுவோ மிவனுக் கேதான்
அனையவே மனைவி பூர்வ மறைகிறேம் தணிகைக்
[கீழ்ப்பால்
வினையிலா யிரட்டி வம்ச மேவினு ளிவளே யென்றேரும்.

33, ஜாதகனுக்கு முன் பின்னுகப் பிறந்த சகோதரர்கள் இறந்து விடுவர். முதலில் தோன்றும் புத்திரர் நிலையார். தாய் வர்க்கமும் இல்லாமல் அற்றுப்போம். தாயே! இனி மனைவியின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். திருத்தணிக்குக் கிழக்கில் உள்ள ஊரில் ரெட்டி யார் மரபில் பிறந்தவள் இவள் என்றேரும்.

மனைவியின் முற்பிறவி

34. உதித்தமே யவ்வூர் தன்னில் உயர்வர னுள்ளா ளாகி
நிதிமிக வுடையோ னுக்கு நிமலியு மாலை யிட்டுப்
பதியினில் திருவு முண்டாய்ப் பாலர்க ளுள்ளா ளாகிச்
சதியிலா வரனின் முன்னே தானவள் மரண மாகி ;

34. பிறந்து அவ்வூரில் உள்ள உயர்ந்தவனும் செல்வவானு மாகிய புருடனைக் கணவனுகப் பெற்று வீட்டில் இலக்குமி கடாட்சம் பெற்று விளங்கிப் புத்திரர்களை யடைந்து தீங்குகளில்லாமல் வாழ்ந்து தன் கணவனுக்கு முன்பாகவே மரண மடைந்து;

மனைவியின் மறுபிறவி

35. வேதத்தோன் வரையப் பட்டு வித்தகி யிக்கு லத்தில்
நீதியா யுதித்தா ளென்றே நிகழ்த்துவோ மிவள்பின்
[ஜன்மம்
மேதினில் தணிகை தன்னில் வித்தகி கர்ண வம்சம்
போதவே யுதிப்பா ளாகும் புண்ணிய வதியே கேளாய்.

35. மீண்டும் வேதங்களையுணர்ந்த பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள் என்றேரும். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். திருத்தணியில் கருணீகர் குலத்தவளாகப் பிறப் பாள் என்றேரும். நல்லெண்ணம் பொருந்தியவளே! கேளுங்கள்.

ஜாதகனின் பொது யோகம்

36. உதித்தவன் பொதுயோ கத்தை யுரைக்கிறேஞ்
[ஜனனந் தொட்டு
அதிபன்தன் மரண மட்டும் வளர்பிறை போலே யோகம்
நிதிமிக வுடையா னுகும் நிலமது விசேடஞ் சேர்ப்பன்
பதியினில் திருவும் வாசம் பத்துவின் மேலாய் வாழ்வன்.

36. இனி ஜாதகனுடைய பொது யோகத்தைக் சொல்லுகின்றேம். பிறப்பு முதல் மரணம் இறுதியாக வளர் பிறைச் சந்திரன் போல் யோகம் விருத்தியாகும். செல்வம் மிக்க உடையவனுவான். அதிகமாக விளை நிலங்களை வாங்கிச் சேர்ப்பான். வீட்டில் இலக்குமி தாண்டவமாடுவாள். தன் சுற்றத்தாருக்கு மேம்பாடாக வாழ்ந்து வருவான்.

இதுவுமது

37. வறுமைக ளில்லா னுவான் மாடுகள் விருத்தி யுள்ளான்
பெருமையும் புகழு முள்ளான் பூமியால் செட்டுச் செய்வன்
நிறையவே குடும்பி யாவன் நேரிழை யாளைக் காப்பன்
ஒருவர்க்கு விரோத மெண்ணு னுண்மையா மனத்த
[னுமே.

37. தரித்திரமில்லாதவன். கால் நடைப்பெருக்கமுள்ளவன். பெருமையும் கீர்த்தியும் உள்ளவன். விளை நிலங்களை வைத்துக் கொண்டு அதனால் வரும் பலன்களால் வர்த்தகத்தைப் புரிவான். பெருங் குடும்பத்தை அடைவான். மனைவியைப் பரிவுடன் காப்பவன். அயலாருக்குத் தீங்குகளை எண்ணுதவன். உண்மையான மனத்தினன்.

குடும்ப பாகம்

38. குடும்பத்தின் சேதி தம்மைக் கூறுவீர் முனியே நீர்தாம்
அடைவுடன் தந்தை யாஸ்தி யறைகிறேம் பாக மூன்று
நடுவது பாகத் தோனும் நல்குவான் வேற தாக
அடைவுடன் கடைபா கத்தோ னவனிவ னுடனே
[வாழ்வன்.

38. ஜாதகனுடைய குடும்பச் செய்திகளைக் கூறுங்கள். முனிவரே! இவர்களுடைய தந்தையின் ஆஸ்தி மூன்று பாகங்களாக்கப்படும். தாயே! நடு பாகத்துக்குரியவன் வேராகப் பிரிந்து செல்வான். கடைசிப் பாகத்துக்குடையவன் ஜாதகனுடன் சேர்ந்து வாழ்ந்து வருவான்.

இதுவுமது

39. எந்தக்கா லத்தி லேதான் இவனில்லம் வேற தாகும்
அந்ததோர் சேதி சொல்வா யையைந்து வாண்டு மேலாய்ச்
சந்ததம் விரோத மெய்துஞ் சாற்றுவோ மிருபா னெட்டில்
பந்தமாய்க் குடும்பம் வேறு பகருவோங் கேளுந் தாயே.

39. எந்த காலத்தில் இவனுடைய வீடு வேறுகும்? அந்த விவரங்களைச் சொல்லுங்கள். ஜாதகனுடைய இருபத்தைந்தாம் வயதுக்கு மேல் விரோதம் ஏற்படும். இருப்பத்தெட்டாம் வயதில் குடும்பம் வேறுகும். தாயே! மேலும் கூறுகின்றேம். கேளுங்கள்.

குடும்ப பாகக்காரணம்

40. வேறது யெவரால் நேரும் விளம்புவீர் முனியே நீர்தாம்
கூறுவோம் நடுவோன் பாரி கோபியா மடக்க மில்லாள்
சீறிய குணத்தா ளாகுந் தேவியால் கலக மாகும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

40. எந்தப் புத்திரனால் குடும்பம் பிரிந்துபோகும் அவ்விவரத்தைச் சொல்லுங்கள். முனிவரே! தாங்கள். நடுவில் (இடையில்) பிறந்தவனுடைய மனைவியால் அஃது ஏற்படும். அவள் கோபமுள்ளவள் அடக்கமில்லாதவள். சதா கோபங்கொள்ளும் குணத்தள். அவளால் குடும்பத்தில் கலகம் ஏற்படும். ஆறுமுகக் கடவுளைப் பெற்ற தாயே! கேளுங்கள்.

தந்தையின் மரண காலம்

41. கடைத்தந்தை பாக மொன்ரு யக் கலந்திடு மிவனுக்
[கேதான்
அடைவுடன் தந்தை கால மறைகிரே மூப்பா னலில்
திடமுடன் [1]தேளின் மாதஞ் செப்புவோங் கருமந் தானும்
தடவரை மகளே யாங்கள் சாற்றின மொழிகுன் ருவே.

41. இறுதியில் தந்தையின் பாகம் ஒன்றுக இவனுக்கே வந்து சேரும். இனி தந்தையின் மரண காலத்தைச் சொல்லுகின்றேம். ஜாதகனுடைய முப்பத்து நான்காம் வயதில் கார்த்திகை மாதத்தில் தந்தை மரணமடைவான். மலையரசனின் மகளே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

தாயின் மரணகாலம்

42. அன்னைக்கு மூப்பா னென்பான் ஐப்பசி மாதந் தன்னில்
தன்னிலே கண்ட மென்ரேஞ் ஜாதகன் தனக்குச்
[சொல்வேன்
பின்னையு மறுபா னேழில் புரட்டாசி மாதந் தன்னில்
பின்பக்கஞ் சதுர்த்தி நாளில் பேசுவோ மார கங்கள்.

42. ஜாதகனுடைய தாய்க்கு முப்பத்தொன்பதாம் வயதில் ஐப்பசி மாதத்தில் மரணம் ஏற்படும். இனி ஜாதகனுடைய இறுதிக் காலத்தைக் கூறுகின்றேம். அஃது அவனது அறுபத்தேழாம் வயதில் புரட்டாசி மாதத்தில் கிருஷ்ண பட்சம் சதுர்த்தியன்று நேர்ந்து அவன் இறப்பான்.

---

1. கார்த்திகை மாதம்.

ஜாதகனின் மறுபிறவி

43. மறுஜன்மந் துவாரை கீழ்ப்பால் மறைக்குல முதிப்பா
[ஞகு ம்
திருமகள் விலாசம் பூண்டு செல்வங்கள் மிகவே யுண்டாய்
உறைவனு மென்று சொன்னேம் வருமனை யறுபா
[ஞென்றில்
வருமனை கெண்ட மென்றே மங்கையே மேலுங் கேளே.

43. ஜாதகன் மறு பிறவியில் துவாரகைக்குக் கிழக்கில் உள்ள ஊரில் அந்தண குலத்தில் பிறப்பான். இலக்குமி கடாட்சத்தைப் பெற்று மிகுதியாகச் செல்வத்தை யடைந்து வாழ்ந்து வருவான். அறுபத்தோராம் வயதில் மனைவி மரணமடைவாள். தாயே! மேலும் கேளுங்கள்.

ஜனன காலதசை

44. பாலகன் ஜனிக்குங் காலம் பரிதிதன் தசையி ருப்புச்
சீலமா யைந்து வாண்டுந் திங்களு மொன்ப தாகுங்
கோலமாய் நாட்க ளைந்துங் கூறுவோம் பலனை யாங்கள்
பாலகன் தனக்கு ரோகம் பெருகிப்பின் நிவிர்த்தி
[யாகும்.

44. ஜாதகனின் ஜனனகாலத்தில் சூரிய மகாதசையில் இருப்பு ஐந்து ஆண்டுகளும் ஒன்பது மாதங்களும் ஐந்து நாட்களுமாம். அக் காலத்திய பலனைச் சொல்லுகின்றோம். ஜாதகனுக்கு நோய் ஏற்பட்டுப் பிறகு விலகும்.

சூரிய மகாதசையின் பலன்

45. பூமியும் பலிதம் நஷ்டம் போற்றுவோங் காலி பீடை
நேமியில் செலவ னேகம் நிகர்தந்தை தமக்கு ரோகம்
ஆவலாய் விரோதங் காணும் அணுகிடுந் துணைவர் தாமுஞ்
சேவலங் கொடியோ னலே செப்புவோம் விவர
[மிரண்டில்.

45. பூமியில் பலன் அற்பமாகும். கால் நடைகளுக்குத் தீங்கு ஏற்படும். உலகில் செலவு அதிகமாகும். தந்தைக்கு ரோகம் ஏற்படும். அதிகமான விரோதமும் ஏற்படும். சகோதரவிருத்தியுண்டு. சேவலைக் கொடியாகக் கொண்ட சுப்பிரமணியக் கடவுளருளால் மற்றவைப் பின் பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 72

1. மதிமீனஞ் சேயும் வீணை மறைசீயம் ஞானி நண்டு
உதயனுங் காரி தேளில் [1]ஒருகண் ணேண் பணியு மானில்
புதன்தனு வுதையஞ் சிம்மம் புகலுவீர் பலனை யென்று
வதிபதி கேட்கும் போது வதிஷ்டருங் கூறு கின்றார்.

1. சந்திரன் மீனத்திலும், செவ்வாய் மிதுனத்திலும், குரு சிம்மத்திலும், கேது கடகத்திலும், சூரியன் சனி விருச்சிகத்திலும், சுக்கிரன் ராகு மகரத்திலும், புதன் தனுசிலுமாக நவகிரகங்களிருந்து இலக்கினம் சிம்மமானால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் எனப் பார்வதி தேவி வினவ வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார்.

கிரகநிலை

சந்திரன்			செவ்வாய்
	இராசி சக்கரம்		கேது
சுக்கிரன் ராகு			லக்கினம் குரு
புதன்	சூரியன் சனி		

ஜாதகனின் வீட்டுநிலை

2. இந்தசே யாணஞ் ஜன்மம் இல்லமு மேல்பால் நோக்கந்
தென்வட வீதி யாகுஞ் சிறப்புறு வூரே யாகுந்
தந்தியு மார்க்க மால்தான் தங்கிடும் மேல்பால் தன்னில்
நொந்ததோர் கெடியுந் தெற்கு நிகழ்த்திய வடையா
[ளத்துள் ;

2. இஃது ஆண் குழந்தையின் ஜாதகம். இவன் பிறந்த வீடு மேற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. அது தெற்கு வடக்கான தெருவிலுள்ளது. அந்த ஊர் ஒரு புகழ் பெற்றதுவாகும். மேற்குப் பக்கத்தில் ஒரு விநாயகர் ஆலயமும், ஜனங்கள் நடமாடும் சாலையும், திருமாலின் ஆலயமும் உள்ளன. தெற்குப் பக்கத்தில் ஓர் இடிந்த கோட்டை உள்ளது. இவ்வித அடையாளங்களுள்ள ;

---

1. சுக்கிரன்.

3. உதிப்பனு மூன்ரஞ் ஜன்மம்
உரைக்கிறோ மிவனின் யோகம்
மதிநுத லன்னை தந்தை
மனைவியின் புத்திர யோகம்
சதியிலாத் துணைவர் யோகஞ்
சாற்றுவோ முன்பின் ஜன்மம்
அதிதியே நவநா லாய்ந்து
அறிவிப்போங் தாயே கேளுர.

3. (ஊரில்) ஜாதகன் தந்தைக்கு மூன்றும் பிறவியாகப் பிறப்பான். இவனுடைய யோகம் அழகிய புருவங்களையுடைய தாய் தந்தை மனைவி மக்கள் இவர்களுடைய யோகங்கள், தீங்குகளில்லாத சகோதரர் முற்பிறவி மறுபிறவி ஆகிய இவற்றை இந்த நவக்கிரக நிலைகளின் பலத்தைச் சொல்லும் ஜோதிட சாஸ்திரத்தை நன்கு பார்த்துத் தெரிவிக்கின்றோம். தாயே! கேளுங்கள்.

தந்தையின் உடன்பிறப்பு

4. தந்தையின் துணைவ ரேழில்
ஆணிரண்டு கன்னி மூன்று
இந்தவாறு விருத்தி யென்றோம்
இவனுமே வுதிக்கா முன்னம்
அந்தவாண் வேரூய்ச் செல்வர்
அவர்பலன் பின்பால் சொல்வேன்
இந்தவன் தந்தை சேதி
யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகனின் தந்தைக்கு ஏற்பட்ட உடன் பிறந்த எழுவரில் இரு சகோதரரும் மூன்று சகோதரிகளும் விருத்தியுள்ளவர் என்றோம். ஜாதகன் பிறக்கு முன்பாகவே அந்தச் சகோதரர் தனியாகச் சென்று விடுவர். அவருடைய பலன்களைப் பிறபாகத்தில் சொல்லுகின்றோம். இனி ஜாதகனின் தந்தையின் விவரங்களைக் கூறுகின்றோம்.

பின்வரும் நான்கு பாடல்களால் ஜாதகனைப் பெற்ற தந்தையின் இயல்புகள் கூறப்படும்

5. கும்பமுங் கேட்டை நாளில் குதிப்பனுங் குணத்தைச்
[சொல்வேன்
வம்புகள் செல்லா னகும் வாக்கதைக் காப்பா னகுங்
கம்பீர குடும்ப மேற்பன் கீதங்கள் கேட்க யிச்சை
கும்பினோர் தம்மைக் காப்பன் நலிந்தோரை யாத ரிப்பன்.

5. ஜாதகனுடைய தந்தை கும்பலக்கினத்தில் கேட்டை நட்சத்திரத்தில் பிறந்தவன். இனி அவனுடைய குணகங்களைக் கூறுகின்றேம். வீண் வம்புகளில் செல்லாதவன். சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவன். கம்பீரமான குடும்பத்தையுடையவன். சங்கீதத்தைக் கேட்பதில் பிரியமுள்ளவன். நம்பி வந்தவரைக் காப்பவன். ஏழைகளை (துன்புற்றவரை) ஆதரித்து வருவான்.

6. தானியச் செட்டுச் செய்வன் சல்லிய மென்ரு லச்சம்
ஈனரை யுறவு கொள்ளான் இடுக்கமாங் குணங்க
[ளில்லான்
மானனை யார்க்கு நேயன் வருவோரை யாத ரிப்பன்
பான்மையாய்ப் பேசு வானும் பதரினில் செல்லா னகும்.

6. தானிய வியாபாரத்தைச் செய்து வருவான். கடன் வாங்கப் பயப்படுவான். அற்பர்களுடைய சகவாசத்தைக் கொள்ளாதவன். தன் மனைவிக்குப் பிரியமானவன். அண்டி வந்தவரை ஆதரித்து வருவான். பொருத்தமாகப் பேசுபவன். அற்பகாரியங்களில் மனம் செல்லாதவன்.

7. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன் உறுதியில் லாத
[நெஞ்சன்
பண்டுநாள் பூமி விருத்தி பாரினில் புகழு மேற்பன்
துண்டமாய்க் கூரு னகுங் தொடுத்ததை வெல்வா னகுந்
தண்டமிழ் நுணுக்கந் தேர்வன் சங்கரன் பத்தி பூண்பன்.

7. சுகமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். திடமில்லாத மனத்தினன். வெகுகாலமாகவுள்ள (பிதுரார்ஜிதமாக) பூமியைப் பெருக்குவான். உலகில் கீர்த்தியை அடைவான். கண்டித்துப் பேசாதவன். எடுத்தக் காரியங்களை வெற்றியுடன் செய்து முடிக்க வல்லவன். அரிய தமிழ் வேதத்திலுள்ள நுண்ணிய அர்த்தங்களை நன்கு அறிவான். சிவபெருமானிடம் பக்தியுள்ளவன்.

ஜாதகனின் தந்தையின் பெயர்

8. நடையது தருசு மூண்டு நாயகன் சிவந்த மேனி
விடம்போலே பித்த வாயு மேவிடு மற்ப மென்ரேங்
கடன்படா னுயர மில்லான் கரியமால் நாமங்
[கொண்டோன்
தடவரை மகளே பூர்வஞ் சாற்றுவோ மினிமே லாக,

8. வேகமாக நடக்கும் இயல்பினன். சிவந்த உடலுள்ளவன். சிறிது வாயுரோகத்தால் அவஸ்தையுறுவான். கடனை வாங்காதவன். உயரமில்லாதவன். கரியதிருமாலின் பெயரை உடையவன். மலையரசியின் புத்திரியே! இனி தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம்.

தந்தையின் முற்பிறவி

9. மூன்னவ னிருந்த ஜன்ம மொழிகிறேம் பாண்டி தன்னில்
பொன்வேலை செயுங்கு லத்தில் பிறந்துமே வறுமை
[யின்றி
பன்னுவோர்க் குதவி செய்து பஞ்சைமே லிரக்க மாகி
உன்னதச் சேது சென்று வுயர்வோருக் கன்ன மீந்து ;

9. தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். பாண்டிய நாட்டில் பொன்வேலை செய்யும் பொற்கொல்லன் (தட்டான்) குலத்தில் பிறந்து தரித்திரமடையாமல் உலகத்தவர்கட்கு உதவிசெய்து ஏழை களிடத்தில் மனவிரக்கங் கொண்டு உயர்ந்த சேதுவுக்குச் சென்று (அந்தணர்கட்கு) துறவிகட்கு அன்புடன் அன்னமளித்து;

10. காலன்தன் நாட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமில் லாத கங்கைக் குலமதி லுதித்தா னென்றேம்
ஞாலமேல் வறுமை காணுன் நவின்றயிக் குணத்தா
[னுக்குப்
பாலக னுதிப்பா னுகும் பகருவோ மவன்கு ணத்தை.

10. மரண மடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு நல்லொழுக்கமில்லாத வேளாளகுலத்தில் பிறந்தான் என்றேம். உல கில் தரித்திரமடையாதவன். இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ள வனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இனி அவனுடைய குணங்களை கூறுகின்றேம்.

ஜாதகனுடைய இயல்புகள்

11. சொல்லிடு வசன மெல்லாஞ் சோர்வுறு சொகுசு பூண்பன்
வெல்லுவா னெதிரி தன்னை வீண்வழக் கோரம் பேசான்
நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
அல்லலெப் போதுங் காணுன் அழகனு மாஞ்சி வப்பன்.

11. ஜாதகன் பேசும் வார்த்தைகட்கு மதிப்புள்ளவன். ஆடம்பரப் பிரியன். விரோதிகளை ஜயிப்பான். வீண்சண்டைக்குச் செல்லாத வன். நல்லவர்கட்கு நல்லவனுகவும் தீயவர்கட்குத் தீயனுகவும் இருப் பான். ஒருக்காலும் துன்பங்களை அடையாதவன். அழகுள்ளவன். மாநிறமுடையவன்.

12. வித்தையு மிரண்டு கற்பன்
விவேகியா மெவர்க்கு நண்பன்
புத்தியில் பெரியோ னுவன்
பொய்யது வழுத்தா நெஞ்சன்

சத்தியந் தவறு ஞகுஞ்
சண்முகன் பத்தி பூண்பன்
நத்தினோர்க் குதவி செய்வன்
நற்கர்ம சிந்தை யுள்ளான்.

12. இருவிதமான கல்விகளைக் கற்பான். விவேகி (நன்மைதீமை களை அறியக்கூடியவன்). எல்லோருக்கும் பிரியமானவன். புத்தியில் பெரியவனாக இருப்பவன். பொய் பேசாத மனமுள்ளவன். சொன்ன வார்த்தைகளையும் சத்தியத்தையும் மீறுதவன். முருகக்கடவுள்மீது பக்தியுள்ளவன். அண்டி வந்தவர்கட்கு உதவிசெய்பவன். நல்லகாரியங் களைச் செய்வதில் மனமுடையவன்.

இதுவுமது

13. ஊகவான் நுணுக்கந் தேர்வ னுண்டியும் லகுவா
[யுண்பன்
பாகமாய்ப் பேசு வானும் பாருகள் சேர்ப்பா ஞகும்
ஆகம நுணுக்கந் தேர்வன் அரசர்பூ சிதழு மாவன்
நாகரி கங்க ளுள்ளான் நாவது காப்பா ஞகும்.

13. ஊகமுடையவன். இரகசியங்களையறிந்தவன். உணவைச் சிக்கிரத்தில் சாப்பிடுவான். பொருத்தமாகப் பேசுபவன். விளாநிலங் களைச் சேர்ப்பான். வேதாந்த ரகசியங்களை அறிவான். அரசரால் நன்கு மதிக்கப்படுவன். நாகரிகமாக இருப்பவன். சொன்ன சொற்படி நடப்பவன்.

இதுவுமது

14. மன்னரால் செட்டுச் செய்வன்
வணிபங்கள் பலவா யுண்டு
சொன்னசொல் சுருக்க மாகும்
துரகமுஞ் சகடு மேற்பன்
தன்துணை தனைக்காப் பானுந்
தந்தைக்கு மேலாய் வாழ்வன்
பொன்தனம் பணிகள் சேர்ப்பன்
புயபல மில்லா ஞகும்.

14. அரசாங்கத்தாரால் (அரசாங்கச் சார்புள்ள) உதவியைப் பெற்று வர்த்தகத்தைச் புரிவான். பலவிதமான வியாபாரங்களைச் செய்துவருவான். சுருக்கமாக பேசுபவன். குதிரை வண்டி வைத் திருப்பவன். தன் சகோதரர்களை ஆதரித்து வருவான். தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான். பொன் செல்வம் ஆபரணங்கள் இவை களைச் சேர்ப்பவன். புயபலமில்லாதவன்.

மால்யோக மேற்படுதற்குரிய கிரகநிலை

15. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தைச் [சங்கை
பாகனு மஞ்சில் தங்கப் பார்மக னிலாப மேற
ஆகமன் ஜன்மந் தங்க அலரியுங் காரி நாலில்
ஏகனுய் மதியு மெட்டி லிருப்பதால் மாலின் யோகம்

15. ஜாதகனுக்கு யோகம் ஏற்படுமென்று எங்ஙனம் சொன்னீர்கள்? அதைச் சொல்லுங்கள். புதன் ஐந்தாம் இடத்திலும் செவ்வாய் லாபஸ்தானத்திலும் குரு ஜன்மலக்கினமாகிய சிம்மத்திலும் சூரியன் சனி நான்காமிடத்திலும் சந்திரன் தனியுகை எட்டாமிடமாகிய மீனத்திலும் இருப்பதால் மால் யோகம் ஏற்படும் என்றேம்.

16. வடதிசை யரசன் போலே வாழ்வனு மிந்தப் பாலன்
தடமது வேறு செய்வன் சதுஷ்பாதம் விருத்தி செய்வன்
கெடுமதி யில்லா னுகுங் கம்பீர மாக வாழ்வன்
குடரேகை மாலின் ரேகை குலவிடுங் கரத்தி லேதான்.

16. வடக்குத் திசைக்கு அரசனுகிய குபேரன்போல் வாழ்ந்து வருவான். ஒரு வீட்டைக் கட்டுவான். கால் நடைகளின் பெருக்கமுள்ளவன். கெட்ட புத்தியில்லாதவன். கம்பீரமாக வாழ்ந்து வருவான். கையில் பத்மரேகை விஷ்ணுரேகைகள் உள்ளவன்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

17. இன்னவன் தூணவர் தம்மை
யியம்புவோ முன்பெண் ணிரண்டு
அன்னவர் தீர்க்க மென்றே
மவன்பின்னு லாண்பா லொன்று
கன்னிகை யிருவ ரென்றேங்
கழறுவோம் பின்பால் சேதி
உன்னத வரனைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

17. ஜாதகனுடைய சகோதர பாவத்தைச் சொல்லுகின்றேம். அவனுக்கு இரு மூத்த சகோதரிகள் உண்டு என்றும் அவர்கள் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றும் சொல்லுகின்றேம். ஜாதகனுக்குப் பின் பிறந்த ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் உண்டு என்றும் சொல்லுகின்றேம். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேம். உயர்ந்த கணவனைப் பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜாதகன் திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

18. ஜாதகன் மணத்தின் காலஞ்
சாற்றுவோ மிருபொன் பானில்
காதலி தென்பால் நேருங்
கழறுவோ மவள்கு ணத்தைச்
சூதிலா யிருநி றத்தாள்
சுந்தர முடைய ளாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை
யுவமையாய் வார்த்தை சொல்வள்.

18. இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். இருபத்தொன்பதாம் வயதில் தெற்குப்பக்கத்திலிருந்து மனைவி வாய்ப்பாள். இனி அவளுடைய குணங்களைக் கூறுகின்றோம். சூதுகளில்லாதவள். கரிய நிறமும் அழகும் உள்ளவள். இன்புறும் படியும் உபமானங்களுடனும் பேசுபவள்.

இதுவுமது

19. அன்னம்போல் சாய லொக்கும் அடாவடி கூரு ளாகும்
அன்னியர் மதிக்க வாழ்வ ளாளன்தன் மனத்துக்
[கேத்தோள்
அன்னவள் வயது தீர்க்க மடிசி லுக்கினிய ளாகும்
அன்னவள் யோக சாலி அம்பிகை யாளே கேளாய்.

19. அன்னத்தைப் போன்ற அழகுள்ளவள். அடாவடியாகப் பேசாதவள். பிறர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். தன் கணவனது மனமறிந்து வாழ்ந்து வருவாள். நீண்ட வயதுள்ளவள். உருசியாகச் சமைப்பதில் வல்லவள். அதிர்ஷ்டமுள்ளவள். தாயே! கேளுங்கள்.

ஜாதகன் புத்திரபாவம்

20. புத்திர ரெழுவர் தோன்றும்
போகிடுஞ் சிலவே யென்றோம்
சுத்தமா யாண்பா லிரண்டு
செல்விமா ரவ்வாறு தீர்க்கம்
பத்தாது முதலில் புத்திரர்
பகருவீ ரந்தச் சங்கை
குத்தமாய்ப் புதனு மஞ்சில்
குலவின பலத்தால் சொன்னோம்.

20. ஜாதகனுக்கு ஏழு குழந்தைகள் தோன்றும். அவற்றில் சிலர் இறப்பார். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து

நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேும். முதலில் தோன்றும் புத்திரன் நிலையான். அதற்குரிய காரணத்தைக் கூறுங்கள். புதன் புத்திரஸ்தானமாகிய தனுசில் இருக்கும் பலத்தால் அவ்விதம் சொன்னேம்.

ஜாதகன் முற்பிறவி

21. பாலன்முன் ஜன்மஞ் சொல்வோம் பரங்குன்ற மேல்பா
[லாகச்
சாலவே சிறுவூர் தன்னில் ஜனித்தனன் சேடர் வம்சம்
ஞாலமேல் செட்டுச் செய்து நலிந்தோர்க்கு வன்ன மீந்து
வேலன்மேல் பத்தி யாகி வினையது மில்லா தாயும் ;

21. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேும். திருப்பரங்குன்றத்துக்கு மேற்கில் உள்ள சிற்றூரில் சேடர் மரபில் பிறந்து உலகில் வர்த்தகத்தைப் புரிந்து வந்து ஏழைகளுக்கு அன்னத்தையளித்து வந்தும் முருகக்கடவுள் மீது பக்தியுள்ளவனுகியும் தீவினைகள் இல்லாதவனுகவும் வாழ்ந்து !

குணமும் செயலும்

22. தென்திசைச் சேது சென்று சென்றனன் கால நாடு
பொன்னவன் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
அன்னவன் யோகஞ் சொல்வேன் அரசர்பூ சிதனு
[மாவன்
தன்னினத் தவரைக் காப்பன் சத்துரு நாசஞ் செய்வன்.

22. தெற்குப்பக்கத்தில் உள்ள சேதுவுக்குச் சென்று நீராடி பிறகு மரண மடைந்தான். மீண்டும் பிரம தேவனுல் படைக்கப்பட்டுப் பிறந்தவன் இவன் என்றேும். இனி அவனுடைய யோக வரலாற்றைச் சொல்லுகின்றேும். அரசாங்கத்தாரால் கொண்டாடப்படுபவன். தன் சுற்றத்தாரைக் காப்பவன். விரோதிகளே அறவே ஒழிப்பான்.

இதுவுமது

23. தந்தைநாள் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
பிந்தியும் பூமி சேர்ப்பன் பிறர்க்குப காரி யாவன்
விந்தையாய் மூன்றூர் பூமி வித்தகன் சேக ரிப்பன்
கந்தன்தன் தொண்டு பூண்பன் கனத்தோருக் கன்ன
[மீவன்.

23. தன் பிதுரார்ஜிதமாகவுள்ள பூமியைப் பெருக்குவான். இன்னும் அதிகமாகவும் நிலத்தை வாங்குவான். அயலாருக்கு உபகாரம் செய்பவன். மூன்று ஊர்களில் பூமியைச் சேகரிப்பான். கந்தபிரானுக்குப் பல தொண்டுகளைச் செய்பவன். பெரியோர்கட்கன்னமளிப்பவன்.

இதுவுமது

24. பலவணி பங்கள் செய்வன் பார்மன்னர் தம்மா லேதான்
தலமிரண்டு செய்வா லுகுஞ் சாராட்க ளதிக முண்டு
விலைமாதர் விருப்பங் கொள்ளான் விதவிதப் பெருமை
[யேற்பன்
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன் ருவே.

24. பலவிதமான வியாபாரங்களைச் செய்துவருவான். அரசாங்கச் சார்புள்ள வர்த்தகத்தையும் புரிவான். இரு வீடுகளைக் கட்டுவான். ஏவலாட்களின் பெருக்கமுள்ளவன். வேசையர் மீது விருப்பமில்லாதவன். விதவிதமான பெருமைகளை அடைவான். மலையரசனின் மகளே! நாங்கள் கூறியவை தவரு.

தாயின் விவரங்கள்

25. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாகும்
ஒதுவாள் சுகமாய் வார்த்தை யுள்மனங் கவடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பரிந்துப சாரஞ் செய்வள்
நீதிமான் பொறுமை சாலி நிகர்வாத தேகி யாமே.

25. ஜாதகனின் தாயின் குணங்களைக் கூறுகின்றோம். மாந்தளிர் போன்று மென்மையான சரீரமுள்ளவள். இன்புறும்படி பேசுபவள். மனத்தில் கபடமில்லாதவள். தீய மனமுமில்லாதவள். பரிவுடன் உபசாரத்தைச் செய்பவள். நேர்மையுள்ளவள். பொறுமையுடையவள். வாயுரோகமுள்ள சரீரி.

இதுவுமது

26. அடிசிலுக் கினிய ளாகும் ஆபத்தைச் சிலர்க்குக் காப்பள்
நடைநன்மை விரத சாலி நாயகன் மனத்துக் கேத்தோள்
விடவுரை பகரா ளாகும் வெஞ்சினம் வெளிக்காட்
[டாதாள்
மடையரை யுறவு கொள்ளாள் மால்மனை யொப்ப தாகும்.

26. உருசியுடன் சமைப்பதில் வல்லவள். பிறருக்கு ஏற்பட்ட ஆபத்தை விலக்குவாள். நன்னடத்தை யுள்ளவள். விரதங்களை ஏற்பவள். தன் கணவனது மனமறிந்து நடப்பவள். தீய வார்த்தைகளைப் பேசாதவள். முன்கோபி. ஆனால் அதைப் பிறர் அறியும்படி காண்பிக்காதவள். முட்டாள்களுடன் உறவாடாதவள். இலக்குமியைப் போன்றவள்.

இதுவுமது

27. இல்லமுந் தென்கீ ழாகும்
இவள்துணை யாண்பா லிரண்டு
சொல்லுவோர்க் தீர்க்க மாகத்
தோகைமார் காணு ளென்றேஞ்
சொல்லது சுருக்க மாகுந்
தாய்போலே வன்ன மீவள்
மல்லுக்குச் செல்லா ளாகும்
வந்தபின் வரன்யோ கந்தான்.

27. தாயின் பிறந்த வீடு தென்கிழக்குத்திக்கில் உள்ளது. இரு சகோதரர்களை மட்டும் உடையவள். சகோதரிகள் இல்லாதவள். சுருக்க மாகப் பேசுபவள். பெற்ற தாயைப்போல் பரிவுடன் அன்னத்தைப் படைப்பவள். வீண் சண்டைக்கு முன் செல்லாதவள். இவளை மணந்த பிறகு கணவனுக்கு யோகம் பெருகும்.

தாயின் முற்பிறவி

28. இவளுடைப் பூர்வந் தன்னை யியம்புவோர் தாயே கேளு
தவசிவா முருணை தன்னில் ஜனித்தனள் பிரம்ம சேயாய்
அவனியோர் மதிக்க வாழ்ந்து அழகான குடும்பி யாகி
நவனியில் மரண மாகி நாற்றலை வரையப் பட்டு ;

28. தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். தாயே ! கேளுங் கள். தவம் செய்பவர் வாழும் திருவண்ணுமலையில் அந்தணர் குடியில் தோன்றி உலகத்தவர் கொண்டாடுப்படி வாழ்ந்து வருவாள். பெரிய குடும்பத்தையடைந்து இறுதியில் மரண மடைந்து நான்கு தலைகளை யுடைய பிரமனுல் படைக்கப்பட்டு ;

வசிஷ்ட முனிவரின் ஐயம்

29. வந்தவ ளென்று சொல்வோ
மாமுனி தடுத்துச் சொல்வார்
முன்ஜன்ம மறைக்கு லத்தி
லுதித்தவ ளிச்சென் மத்தில்
தன்குலந் தாழ்வாய் வந்த
சங்கையைச் சொல்லு மென்னத்
தென்முனி புகலு கின்றார்
தேவியு முன்ஜன் மத்தில் ;

29. இப்பிறவியில் பிறந்தவள் என்று சொல்லுகின்றேம். மாமுனிவராகிய வசிஷ்டர் மறுத்துச் சொல்லுகின்றார். முற்பிறவியில்

அந்தணர் குலத்தில் தோன்றியவளாகிய ஜாதகன் தாய் இப்பிறவியில் தாழ்வான குலத்தில் பிறக்கும் காரணத்தைச் சொல்லுங்கள் என்று கேட்க, அகத்திய முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகன் தாய் முற்பிறவியில் ;

அகத்தியமுனிவரின் சமாதானம்

30. விரதங்கள் மூட்டுச் செய்து வித்தகி வாழ்ந்த தாலே
குறைவான குலமு தித்தாள் கூறுவோ மிவள்பின்
[ஜன்மந்
திருகண மலையி லேதான் ஜனிப்பளாம் பிரம்ம சேயாய்க்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

30. செய்யவேண்டிய அனுஷ்டானங்களைச் செய்யாமலிருந்து வாழ்ந்து வந்ததால் குலம் தாழ்வாக ஏற்பட்டது. இனி இவளது மறு பிறவியைச் சொல்லுகின்றோம். திருவண்ணாமலையில் அந்தணர் குலத்தவளாகப் பிறப்பாள். கரிய யானை முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே ! கேளுங்கள்.

தாய் இப்பிறவியில் செய்த நற்காரியங்கள்

31. இந்ததோர் ஜன்மந் தன்னில்
இவள்செய்த புண்ணிய மென்ன
முந்தவே கூறு மென்ன
மொழியதைக் காத்த லாலுஞ்
சிந்தையுந் நல்ல தாயுஞ்
சலித்தோர்க்கு வன்ன மீந்தும்
நிந்தைக ளில்லா தாலும்
நிருபன்தன் மனம்போல் வாழ்ந்தும் ;

31. ஜாதகனுடைய தாய் இப்பிறவியில் என்ன என்ன நல்ல காரியங்களைச் செய்தாள்? அவற்றை முதலில் கூறுங்கள் என்று கேட்க, (மற்றவர் பதிலுரைக்கின்றார்). தான் சொன்ன வார்த்தைகளின்படி நடந்ததாலும் நல்ல மனத்துடனிருந்ததாலும் கஷ்டமடைந்தவரின் பசிக்கு உணவு அளித்ததாலும் வேறு தீவினைகளில்லாததாலும் கணவன் மனம்போல் வாழ்ந்து வந்ததாலும் ;

மரணகாலம்

32. மாதுவும் வாழ்வ தாலே மறைக்குல முதிப்பா ளாகும்
ஒதுவீர் கரும காலம் உரைக்கிறேன் தாயே கேளு
தீதிலா முப்பா னென்பா னுண்டினில் தனுசு மாதஞ்
சூதான கால நாடு சேருவ ளன்னை யென்றோம்.

32. தாய் இருப்பதால் அந்தணர் குலத்தில் தோன்றுவாள். ஜாதகனுடைய கரும காலங்களைச் சொல்லுங்கள். கூறுகின்றேம் தாயே! கேளுங்கள். ஜாதகனது முப்பத்தொன்பதா மாண்டில் மார்கழி மாதத்தில் தாய் மரணமடைவாள் என்றேம்.

தந்தையின் மரணகாலம்

33. ஆறாறு வாண்டு தன்னில் ஆனிமா தத்தி லேதான்
தீரமாய்த் தந்தை கண்டஞ் செப்புவோ மிவன்பின்
[ஜன்மம்
வாரியி னோரந் தன்னில் மாவலி நகரி லேதான்
சேருவான் பிரம்ம சேயாய்ச் செப்பின மொழிகுன் றுவே.

33. ஜாதகனது முப்பதாறும் வயதில் ஆனி மாதத்தில் திண்ண மாகத் தந்தை மரணமடைவான். இனி அவனுடைய மறு பிறவியைச் சொல்லுகின்றேம். சமுத்திரத்துக்கு அருகிலுள்ள மகாபலிபுரத்தில் அந்தண குலத்தவனாகப் பிறப்பான். நாங்கள் கூறியவை தவறு.

34. மன்னவ னிஜ்ஜன் மத்தில் மருவின புண்ணிய மென்ன
அன்னமும் அதிதிக் கீந்து ஆபத்தைச் சிலர்க்குக்
[காத்தும்
உன்னதத் தலங்கள் சென்றும் ஓராறு முகத்தோன்புத்தி
பின்னங்க ளின்றி யவனும் சொல்லதைக் காத்த லாலே;

34. ஜாதகனுடைய தந்தை இப்பிறவியில் செய்த நற்செயல்கள் எவை (உயர்ந்த குலத்தில் தோன்றக்காரணம் யாது?) கதியற்றவர்கட்கு அன்னமளித்து வந்ததாலும் சிலருக்கு ஏற்பட்ட ஆபத்தைக் காத்து வந்ததாலும், உயர்ந்த புண்ணியத் தலங்களுக்குச் சென்றதாலும், முருகக்கடவுள் மீது பக்தியுடன் இருந்து வந்ததாலும் சொன்ன வார்த்தைகளின்படி நடந்து வந்ததாலும்;

மரணகாலம்

35. பிறப்பனும் பிரம்ம சேயாய்ப் பெம்மானை பூசை பூண்டு
அரசன்போல் வாழ்வா னாகும் அறுபது நாலு வாண்டில்
நிகரிலா வளர்பக் கத்தில் நிகர்சஷ்டி திதியி லேதான்
திருமக னுடல மேகுஞ் செப்பின மொழிகுன் றுவே.

35. அந்தணர் குலத்தவனாகப் பிறப்பான். சிவபெருமானுக்குப் பூசைகளைப் புரிந்துகொண்டு அரசனைப்போல் வாழ்ந்து வருவான். ஜாதகனுடைய அறுபத்துநான்காம் வயதில் சுக்கிலபட்சம் சஷ்டித் திதியில் மரணமடைவான். நாங்கள் கூறியவை தவறு.

சகடை தோஷம்—கிரகநிலை

36. எப்படி வயது தீர்க்கம்
இரணியன் தனக்கு வெட்டில்
தப்பித மதியுந் தங்கச்
சகடைதோ ஷங்க ளொன்று
மெய்ப்புடன் பனிரண் டாண்டுள்
மேவிடுங் கண்ட மென்றேஞ்
செப்பின மொழியைக் கேட்டு
ஜயமுனி தடுத்துச் சொல்வார்.

36. ஜாதகனுக்கு வயது தீர்க்கம் என்று எங்ஙனம் சொல்லுகிறீர்கள்? குருவிருக்கு மிடத்துக்கு எட்டாமிடத்தில் சந்திரன் இருப்பதால் சகடை தோஷம் உண்டு என்று சொல்லுகின்றோம். அதனால் அவனுடைய பன்னிரண்டாம் வயதுக்குள் ஒரு கண்டம் ஏற்படும். அவ்விதம் சொன்னதைக்கேட்டு ஜயமுனிவர் மறுத்துச் சொல்லுகிறார்.

சகடைதோஷ பங்கம்—கிரகநிலை

37. பொன்னவன் லக்னந் தங்கப் புரவியோன் காரி நாலில்
நன்மதி மீனந் தங்க நல்காது சகடை பங்கம்
என்னநோய் வந்த போது மிரவிமுன் பனிபோல் நீங்கும்
அன்னவன் வயது தீர்க்கம் அம்பிகை யாளே கேளாய்.

37. குரு இலக்கினத்திலும் சூரியன் சனி நான்காமிடத்திலும் சந்திரன் மீனத்திலுமிருப்பதால் அவ்விதம் நேராது. சகடை தோஷம் பங்கமாகிவிடும். எவ்வித நோய் ஏற்பட்டபோதிலும் அது சூரியன் முன் பனி போல் விரைவில் விலகி விடும். ஜாதகன் நீண்ட ஆயுள் உடையவன். தாயே! கேளுங்கள்.

மறுபிறவி

38. பின்ஜன்மந் தோகை தன்னில் பிறப்பனு மிரட்டி வம்சம்
பொன்பொரு ளுடைய னுகிப் பூமியு மதிக முண்டாய்
அன்னவன் வாழ்வா னுகும் அறைந்தவிம் மொழிகுன்
[றுவே
உன்னத வரனைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

38. மறுபிறவியில் தோகை நாட்டில் செட்டியார் மரபில் பிறந்து பொன் பொருள் உடையவனுகி விளை நிலங்களின் பெருக்க மதிகம் ஏற்பட்டு வாழ்ந்து வருவான். உயர்ந்த கணவனைப்பெற்ற உத்தமியே! கேளுங்கள்.

ஜனனகாலதசை

39. ஜாதகன் ஜனிக்குங் காலை சனிதசை மூவைந் தாண்டும்
நீதியாய்த் திங்க ளொன்பான் நேர்ந்திடு நாள்மூ வைந்துஞ்
சூதிலாப் பூர்வஞ் சொன்னேஞ் செப்புவோம் பின்பால்
[சேதி
போதக வாஜை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

39. ஜாதகனின் ஜனன காலத்தில் சனி மகாதசையில் பதினைந்து வருடங்களும் ஒன்பது மாதங்களும் பதினைந்து நாட்களும் மீதமாம். இது வரையில் ஒளிவில்லாமல் முதல் பாகத்தைச் சொன்னேம். மற்ற விவரங்களைப் பிறபாகத்தில் சொல்லுகிறேம். உயர்ந்த யாஜை முகத்தை யுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 73

1. அரியது வுயிரு மாக வரவுமே ஜன்மந் தங்கக்
குருகுஜ னிரண்டில் தங்கக் [1]குபேரனும் புதனு நாலில்
பரிதியோ னஞ்சி லாகப் பார்க்கவன் கேது வேழில்
கரியனு மிலாப மாகக் கழறுவீர் பலனை யென்று ;

1. சிம்மம் இலக்கினமாகவும், ராகு இலக்கினத்திலும், குரு செவ்வாய் இரண்டாமிட மாகிய கன்னியிலும், சந்திரன் புதன் நான்காமிடமாகிய விருச்சிகத்திலும், சூரியன் ஐந்தாமிடமாகிய தனுசிலும், சுக்கிரன் கேது ஏழாமிடமாகிய கும்பத்திலும், சனி லாபஸ்தான மாகிய மிதுனத்திலும் இருப்பின் ஏற்படும் பலனைக் கூறுங்கள் என,

ராசிசக்கரம்

			சனி
சுக்கிரன் கேது	இராசி சக்கரம்		
			லக்கினம் ராகு
சூரியன்	சந்திரன் புதன்		குரு செவ்வாய்

வீட்டுநிலை

2. அந்தரி கேட்கும் போது அத்திரி முனிவர் சொல்வார்
இந்தசே யாணஞ் ஜன்மம் இவன்தந்தை யில்லஞ்
[சொல்வேன்
தென்வாசல் கீழ்மேல் வீதி சிவன்கோஷ்டம் வடமே
[லாகும்
மூந்துமால் மேல்பா லாகு மொழிகின்றே சிறுவு ராகும்.

2. பார்வதிதேவி கேட்கும்போது அத்திரி முனிவர் பதில் உரைக்கின்றார். இஃது ஆண் மகனின் ஜாதகம். இவன் பிறந்த (தந்தையின்) வீட்டைச் சொல்லுகின்றோம். அது கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு நோக்கியுள்ள வாயிலையுடையது. வடமேற்குத் திக்கில் சிவ பெருமானது ஆலயமும் மேற்குத் திக்கில் திருமாலின் ஆலயமும் உள்ள சிற்றூராகும் அது.

---

1. சந்திரன்.

3. இத்தகை யடையா ளத்துள் இப்பாலன் கங்கை சேயாய்
வித்தக னேந்தாஞ் ஜன்மம் விளங்குவா னிந்தப் பாலன்
பெத்தாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகஞ்
சுத்தமாய் மூன்பின் ஜன்மஞ் செப்புவோம் தாயே கேளு.

3. இவ்வித அடையாளங்களுள்ள வீட்டில் ஜாதகன் வேளாள குலத்தவனுகத் தன் தந்தைக்கு ஐந்தாம் பிறவியாகப் பிறந்தவன் என்றேரும். இவனைப் பெற்ற தாய் தந்தையர் யோகம் மனைவி மக்களின் யோகம் முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றை இந்தச் சோதிட நூலில் சொல்லுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

தந்தையின் சகோதரபாவம்

4. தந்தையின் துணையா ணென்று சத்தியு மவ்வா றாகும்
அந்தவாண் மூன்றே னாகும் அவனுமே வேறாய்ச்
[செல்வன்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதரன் ஒருவனும் சகோதரி ஒருத்தியுமாவார். தூச்சகோதரன் தந்தைக்கு மூத்தவன் என்றேரும். அவனும் தனியாகச் சென்று விடுவான். அவர்களின் விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேரும். இவனுடைய தந்தையின் விவரங்களை இனிச் சொல்லுகின்றேரும்.

தந்தையின் குண நலங்கள்

5. இருசிவப் புடைய னாகும் ஈகைவா னின்பச் சொல்லன்
தரையினு லுய்வா னாகுந் தடமது சித்திரஞ் செய்வன்
குறையென்றோர்க் குதவி செய்வன் கொடுமையை
[யெவர்க்கு மெண்ணன்
தறிபடக் கூறு னாகுந் தலையற்றோ நாமங் கொண்டோன்.

5. அவன் இருசிகப்புடையவன். கொடையாளி. இன்புறும்படி பேசுபவன். விவசாயத்தைச் செய்து வாழ்ந்து வருவான். வீட்டைச் சித்திரங்களால் அழகுப்படுத்துவான். துன்புற்றவர்கட்கு (குறையடைந்தவர்கட்கு) உபகாரத்தைச் செய்பவன். ஒருவருக்கும் தீங்கைச் செய்ய எண்ணுதவன். கண்டித்துப் பேசாதவன். தலையற்றோனுகிய அரவானின் பெயரைக் கொண்டவன்.

இதுவுமது

6. சீலவா னறத்தி லிச்சை சிந்தையு நல்ல தாகும்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நாதனுர் பத்தி பூண்பன்
காலத்தை யறிந்து ரைப்பன் காலிகள் விருத்தி யுண்டு
ஆலம்போல் கோபஞ் சாந்தம் அம்பிகை யாளே கேளாய்.

6. நல்லொழுக்கமுள்ளவன். தருமத்தைச் செய்வதில் விருப்ப முள்ளவன். நல்ல மனமுடையவன். விளைநிலங்களைப் பெருக்குவான். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன். வருங்காலத்தை அறிந்து சொல் லக்கூடியவன். கால் நடைகளின் பெருக்கமுள்ளவன். கொடிய சர்ப்பம் போல் விரைவில் கோபங்கொள்ளுபவன். சிக்கிரத்தில் சாந்தமடை வான். தாயே! கேளுங்கள்.

தந்தையின் முற்பிறவி

7. முன்னவ னிருந்த ஐன்ம மொழிகுறேங் காஞ்சி தன்னில்
வன்னிய குலமு திந்து வளமுள குடும்பி யாகித்
தன்மனை மதலை யுண்டாய்த் தருமத்தி லிச்சை யாகி
அன்னவன் வினையில் லாமல் அணுகினன் கால நாடு.

7. தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சிபுரத் தில் வன்னியர் குலத்தில் பிறந்து செழிப்புள்ள குடும்பத்தை யடைந்து மனைவி மக்களை யடைந்து தருமத்தைச் செய்வதில் விருப்பமுள்ள வனாகி வேறு தீவினைகளில்லாமல் வாழ்ந்து மரண மடைந்தான்.

ஜாதகன் குணம்

8. வேதனல் வரையப் பட்டு
விளங்கினி னிவனே யென்றேம்
ஓதின குணத்தி னுக்கு
வுதிப்பனு மிந்தப் பாலன்
ஜாதகன் குணத்தைச் சொல்வேன்
சிவந்தமெய் கல்வி மானுஞ்
சூதிலான் சொல்காப் பானுந்
துணிவன்சொல் தடுக்கா னுகும்.

8 மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்த வன் என்றேம். இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இனி ஜாதகனுடைய குணங்களைக் கூறுகின் றேம். சிவந்த உடலுள்ளவன் கல்விமான். கபடமில்லாதவன். சொன்ன வார்த்தைகளின்படி நடப்பவன். சகோதரனது வார்த்தைகளை மீறுதவன்.

இதுவுமது

9. சிலவேநாள் வெளியூர் வாசஞ்
ஜகராசர் பேட்டி கொள்வன்
விலகிடுந் தொழிலு மேதான்
மேவுவான் துணைவர் பக்கல்

நலமுடன் வாழ்ந்துப் பின்பு
நழுவுவான் தன்னூர் தன்னில்
பலர்களு மதிக்க வாழ்வன்
பதர்குண மில்லா னுகும்.

9. சின்னுட்கள் வெளியூரில் வசித்து வருவான். அரசாங்கத் தொடர்புள்ளவன். தான் செய்துவருந் தொழில் நீங்கித் தன் சகோ தரனை அடைவான். அவனுடன் சின்னுட்கள் வாழ்ந்து பிறகு தன் னூருக்குத் திரும்புவான். பலபேர் கொண்டாடப்படும்படி வாழ்ந்து வருவான். அற்ப குணங்களில்லாதவன்.

10. தந்தைநாள் பூமி கொஞ்சந் தான்மிகத் தேடு வானும்
பிந்தியு மொருவர் பக்கல் புக்கியே ஜீவிப் பானும்
வந்தவர்க் கன்ன மீவன் மலர்க்கரம் விஷ்ணு ரேகை
நிந்தைக ளேற்கா னுகும் நிருபர்க ளிஷ்டங் கொள்வன்.

10. தன் தந்தையின் ஆஸ்தி மிகச் சிறிதளவே யுள்ளவன். தானே அதிகமான பூமிகளை வாங்குவான். பிறகு ஒருவரை அடைந்து அவருடைய உதவியால் ஜீவித்து வருவான். அண்டி வந்தவர்கட்கு அன்னமளிப்பவன். கையில் விஷ்ணு ரேகையை யுடையவன். அபவா தங்களை அடையாதவன். அரசாங்கத்தாருக்குப் பிரியமானவன்.

11. சிலவேநாள் வனவா சங்கள் செல்லுவான் குடும்ப [முன்னம்
விலகியே வள்ளூர் சேர்வன் மேதினில் வறுமை காணுன்
பலர்களு மதிக்க வாழ்வன் பாரபட் சங்கள் பேசான்
நல்லனென் றெவருஞ் சொல்வார் நாயகி கேட்டி டாயே.

11. சின்னுட்கள் வனவாசம்போல் துன்பப்படுவான். முதலில் குடும்பத்தை விட்டு விலகி வசிப்பான். பிறகு வந்து சேருவான். உலகில் வறுமையை யடையாதவன். பலர் மதிக்கும்படியாக வாழ்ந்து வருவான். ஒரு தலைப் பட்சமாகப் பேசாதவன். எல்லோரும் நல்லவன் என்று சொல்லும்படி வாழ்வான். தாயே! கேளுங்கள்.

சகோதரன் குணங்கள்

12. தன்துணை முன்னு ணென்று
தங்கிடுங் கன்னி யிரண்டு
சொன்னவாண் சேதி சொல்வேன்
சுகமுள வார்த்தை சொல்வன்
அன்னிய வூரில் சின்னுள்
யவனுமே வாசஞ் செய்வன்
தன்னக ரடைந்து வின்னேன்
தரணியை விருத்தி செய்வன்.

12. ஜாதகனுக்கு முன் பிறந்த சகோதரன் ஒருவரும் சகோதரிகள் இருவரும் உள்ளனர். நாங்கள் கூறிய மூத்த சகோதரனின் விவரங்களைக் கூறுகின்றோம். இன்புறும்படி பேசுபவன். வேற்று ஊரில் சின்னாட்கள் வசித்து வருவான். பிறகு தன் சொந்த ஊரை அடைந்து விரோ நிலங்களைப் பெருக்குவான்.

மூத்த சகோதரன் புத்திர பாவம்

13. பாரியு மொன்றே தென்பால் பகருவோர்ந் தூர தேசம்
நாரிக்குச் சுதரா ணிரண்டு நங்கையு மவ்வாறு தீர்க்கம்
வீரது முதலில் புத்திரர் வித்தகன் வயது தீர்க்கம்
வேறதாய்ப் பின்னல் செல்வன் விமலியே மேலுங்
[கேளே.

13. மனைவி ஒருத்தியே யாவள். அவள் தெற்கே வெகு தூரத்திலிருந்து வருவான். அவளுக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். மூதலில் தோன்றும் புத்திரன் நிலையான். மூத்த சகோதரனுக்கு நீண்ட வயதுண்டு. பின்னல் பிரிந்து வேறுகச் செல்வான். தாயே! மேலும் கேளுங்கள்.

திருமணக் காலம்

14. மற்றவர் கன்னி சேதி யறைகிறோம் பின்பா கத்தில்
வித்தகன் மணத்தின் காலம் விளம்புவோ மிருபா லறில்
பத்தினி தென்பால் நேரும் பகருவோ மவள்கு ணத்தைச்
சுத்தமு மாகி றத்தாள் சோம்பிடாள் காரி யத்தில்.

14. மற்ற சகோதரியின் விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். அஃது அவனுடைய இருபத்தாரும் வயதில் நேரும் தெற்குப் பக்கத்திலிருந்து மனைவி வருவாள். இனி அவளுடைய குணங்களைக் கூறுகின்றோம். மாசிறமுடையவள். காரியங்களைச் செய்வதில் சோம்பலில்லாதவள்.

மனைவியின் குணம்

15. சீலமும் விரத மேற்பள் செய்ந்நன்றி மறவா ளாகும்
ஞாலமேல் நல்லோ ளாவள் நாயகன் மனத்துக்
[கேத்தோள்
பால்பாக்கிய முடைய ளாகும் பஞ்சைமே விரக்க மாவள்
நீலியுந் தீர்க்க ஜீவி நிமிலியே புகன்றிட் டோமே.

15. நல்லொழுக்கமுடையவள். விரதங்களை ஏற்பாள். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவள். உலகில் நல்லவள் என்ற பெயரை யடைவாள். தன் கணவனது மனத்துக்கு ஏற்றபடி நடப்பவள். முற் பிறவியில் செய்த பாக்கியத்தையுடையவள். ஏழைகளின் மீது இரக்க

முடையவள். அவள் நீண்ட ஆயுள் உள்ளவள். தாயே! நாங்கள் மேலும் கூறுகின்றோம்.

பிருகு முனிவரின் ஐயம்

16. பிருகுமே புகலு கின்றார் புனிதனுக் கிளைய தாரம்
வருமென்று சொல்லு வோமே யறைவீரே யந்தச் சங்கை
அரிவையின் தானந் தன்னில் அசுரர்மந் திரியுங் கேது
இருப்பதால் புகன்றோம் யாங்கள் இயம்புவார் பராசர்
[தாமும்.

16. பிருகு முனிவர் கூறுகின்றார். ஜாதகனுக்கு இருமனைவியர் வருவார் என்று சொல்லுகின்றோம். அதற்குரிய காரணத்தைச் சொல்லுங்கள். களத்திரஸ்தானத்தில் சுக்கிரனும் கேதுவும் தங்கி இருப்பதால் நாங்கள் அவ்விதம் சொன்னோம். பராசர முனிவர் மறுத்துக் கூறுகின்றார்.

பராசரமுனிவரின் மறுப்பும் சமாதானமும்

17. பொன்னவன் சேயு மிரண்டில் புதனுமே நாலி லாகக்
கன்னிகை யொன்றே தீர்க்கங் காதலி யிவன்முன் னலே
தென்திசைக் கால நாடு சேருவா ளென்று சொல்வோம்
பின்மனை காணு மகும் பேசுவோ மந்தந் தன்னில்.

17. குருவும் செவ்வாயும் குடும்பஸ்தானத்திலும் அவ்விடத்துக்குரிய புதன் நான்காமிடத்திலும் இருப்பதால் ஜாதகனுக்கு மனைவி ஒருத்தியே நீண்ட ஆயுள் உள்ளவள் என்றோம். ஆனால் அவள் இவனுக்கு முன்பாக மரண மடைவாள் என்றோம். அவளுக்குப் பிறகு அவன் மறுமணம் செய்து கொள்ளாதவன். அவற்றைப் பிற்பாகத்தில் கூறுவோம்.

புத்திர பாவமும் முற்பிறவியும்

18. சுதர்களு மாண்பா லிரண்டு தோகையு மவ்வார் தீர்க்கம்
இதுநிற்க வுதித்தோன் பூர்வம் இயம்புவோ முனியே
[கேளு
அதிதிவா ழருணைக் கீழ்ப்பால் அணுகிய சிறுவூர் தன்னில்
அதிபனும் வைசியச் சேயாய் விளங்கியே கிரியை செய்து;

18. ஜாதகனுக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் தோன்றித் தீர்க்காயுளுடனிருப்பர். இஃது இங்ஙனமாக இனி ஜாதகனின் முற்பிறவியைக் கூறுகின்றோம். முனிவரே! கேளுங்கள். கதியற்ற வரைக் காக்கும் முனிவர்கள் வாழும் திருவண்ணாமலைக்குக் கிழக்கில் உள்ள சிற்றூரில் வைசிய குலத்தவனாகப் பிறந்து வாழ்ந்து ;

பிறவி

19. வறுமையில் லாமல் வாழ்ந்து வளமான சேதுச் சென்று
சிறுமையோர்க் குதவி செய்து தேவதாப் பத்தி கொண்டு
மறலியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக னுதிப்பா லுகுஞ் செப்புவோ மிவனின் யோகம்.

19. தரித்திரமில்லாமலிருந்து புண்ணிய ஸ்தலமாகிய சேதுவுக்குச் சென்று நீராடி, ஏழைகளுக்குதவி செய்து தெய்வபக்தியுடனிருந்து மரணமடைந்து, மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு, இப்பிறவியில் பிறந்தவன் என்றேம். இனி அவனுடைய யோகத்தைக் கூறுகின்றேம்.

ஜாதகனது யோகம்

20. இருபது வாரூண் டின்மேல் இவனுமே வறுமை காணன்
தரைசேர்க்கை பெரியோர் நேசஞ் சஞ்சலம் நிவர்த்தி
[யாகும்
ஒருவர்பா லணுகி யேதான் உத்தமன் ஜீவிப் பானுஞ்
சிறுமைகள் நிவர்த்தி யாகுஞ் சொல்லது மேம்பா டாகும்.

20. ஜாதகன், தனது இருபத்தாரும் வயதுக்குமேல் தரித்திரமடையாதவன். விசேஷ நிலங்களைப் பெருக்குவான். பெரியோர்களின் நட்பைக்கொள்வான். மனக்கலக்கம் விலகும். ஒருவரை அணுகி வாழ்ந்து வருவான். இவன் அடைந்த துன்பங்கள் நிவர்த்தியாகும். இவனது வார்த்தைகள் மேன்மையுள்ளவை.

துன்பம்

21. அதற்குமுன் வனவா சங்கள் அலைச்சலாம் நினைத்த
[வோங்கா
விதவிதக் கலகம் நேரும் வேண்டினோர் பகையு மாகும்
பதிவிட்டு வெளியூர் வாசம் பகர்ந்தவாண் டதன்மே லாக
அதிபனுஞ் சுகமே யாவ னறைகுறேம் பின்பால் சேதி.

21. அக்காலத்துக்கு முன் வனவாசங்கள் போல் துன்பங்கள் ஏற்படும். இவன் நினைத்த காரியங்கள் நடைபெறு. விதவிதமான கலகங்கள் ஏற்படும். நண்பர்கள், உற்றார் உறவினர் இவர்களின் விரோதமேற்படும். சொந்த வீட்டைவிட்டு வெளியூர் சென்று வசித்து வருவான். நாங்கள் சொன்ன வருடத்துக்கு மேலாக ஜாதகன் சுகமடைவான். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகிறேம்.

தாயின் குணங்கள்

22. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாநிறம் பொறுமை [சாலி
சூதிலா ளடக்க வார்த்தை சொல்லதைக் காப்பா ளாகுந்
தீதான குணமில் லாதாள் செறிந்திடும் பித்த வாயு
காதலி தூணயா னிரண்டு கன்னியு மவ்வா றாகும்.

22. இனி ஜாதகனின் தாயின் குணங்களைச் சொல்லுகிறோம். அவள் மாநிறமுள்ளவள். பொறுமையுள்ளவள். கபடமில்லாதவள். அடக்கமாகப் பேசுபவள். சொன்ன சொற்களின்படி நடப்பவள். தீய குணங்களில்லாதவள். பித்தவாயுவுள்ள சரீரி. தாய்க்குச் சகோதரர் இருவரும் சகோதரிகள் இருவருமாவர்.

தாயின் முற்பிறவி

23. மத்தியில் யாவுஞ் சேதம் மங்கையு மொருத்தி யாகும்
வித்தகி முன்ஜன் மத்தை விளம்புவோம் வள்ளு ருத்திரஞ்
சுத்தமா யிக்கு லத்தில் தோன்றியே வறுமை யின்றி
முத்திளோர் தொண்டு பூண்டு வினையது மில்லா ளாகி;

23. இடைக்காலத்தில் எல்லோரும் இறந்துவிடுவர். தாய் தனியாக இருப்பவள். தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருவள்ளுருக்கு வடக்கில் உள்ள ஊரில் இதே குலத்தில் பிறந்து தரித்திரமில்லாமல் பெரியோர்கட்குத் தொண்டுகள் பல செய்து தீவினைகள் இல்லாதவளாகி;

மறுபிறவி

24. காலன்தன் னடைந்து
கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமாங் கங்கை சேயாய்
ஜனித்தன ளென்று சொல்வோஞ்
சாலவே யிவள்பின் ஜன்மஞ்
செப்புவோம் பட்சி தன்னில்
பாலிகை யிக்கு லத்தில்
பிறப்பளா மென்று சொல்வோம்.

24. மரண மடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு நல்லொழுக்கமுள்ள வேளாள குலத்தவளாகப் பிறந்தவளென்று சொன்னோம். இவளுடைய மறுபிறவியைக் கூறுகின்றோம். திருக்கழுக்குன்றத்தில் இதே குலத்தில் பிறப்பாள் என்றும் சொல்லுகின்றோம்.

தந்தையின் இறுதிக்காலமும் மறுபிறவியும்

25. இருபது விரண்டு வாண்டில்
இயம்புவோ மன்னை கண்டம்
மருவாது வன்னை தீர்க்க
மடிவனே தந்தை யென்றேரும்
வருஞ்ஜன்மங் காஞ்சி தன்னில்
வருவனும் வைசியச் சேயாய்ப்
பெருவயி றேனைப் பெற்ற
புண்ணிய சாலி கேளாய்.

25. ஜாதகனுடைய இருபத்திரண்டாம் வயதில் தாய் மரண மடைவாள். (என்று ஒரு முனிவர் கூறும்போது மற்றவர் மறுத்து உரைக்கிறார்). அஃது ஏற்படாது. தாய் நீண்ட ஆயுளுடையவள். அக் காலத்தில் தந்தை இறந்து போவான் என்றேரும். தந்தையின் மறுபிற வியைச் சொல்லுகின்றேரும். காஞ்சீபுரத்தில் வைசிய குலத்தவனுகப் பிறந்து வாழ்வான். பெரிய வயிற்றையுடைய விநாயகனைப் பெற்ற புண்ணியவதியே! கேளுங்கள்.

தாயின் மரணகாலமும் ஜாதகன் வயதும்

26. ஆறஞ்சு வொன்று வாண்டி லன்னையு மடிவ ளாகுந்
தீரமா யறுபான் மூன்றில் தேள்மாதஞ் ஜாத கர்க்குக்
கூறுவோ மார கங்கள் குறித்தவிம் மொழிகுன் றுவே
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

26. ஜாதகனுடைய முப்பத்தோராம் வயதில் தாய் மரணமடை வாள். ஜாதகன் தனது அறுபத்துமூன்றும் வயதில் கார்த்திகை மாதத்தில் மரண மடைவான். நாங்கள் எழுதிய இவ்வார்த்தைகள் தவறு. உலகில் தவங்களியற்றும் பார்வதி தேவியே! கேளுங்கள்.

ஜாதகனின் மறுபிறவியும் ஜனனகாலதசையும்

27. பின்ஜன்மஞ் சென்னை தன்னில்
பிறப்பனும் வைசியச் சேயாய்ப்
பொன்னெடு பணிதி யுண்டாய்ப்
பெரிதான செட்டுச் செய்வன்
அன்னவன் ஜனன காலம்
அனுடத்தி னிரண்டாம் பாதந்
துன்சனி தசையி ருப்புச்
செப்புவோ மீரா றுண்டும்;

27. மறுபிறவியில் சென்னை மாநகரில் வைசிய குலத்தவனுகப் பிறப்பான். பொன் ஆபரணங்கள் இவைகளைப் பெற்றுப் பெரிய வர்த்தகத்தைப் புரிந்து வருவான். அவனுடைய ஜனன காலத்தில் அனுட நட்சத்திரம் இரண்டாம் பாதம் நடைபெறும். சனி மகாதசையில் செல்லுபோக அக்காலத்தில் இருப்பு பன்னிரண்டு வருடங்களும்;

ஜனனகாலதசைத் தொடர்ச்சி

28. திங்களு மேழ தாகுஞ்
செப்பிலேம் பூர்வ பாகம்
மன்னற்குப் பிணிய னேகம்
வரவுக்குச் செலவ திகம்
அன்னையின் வர்க்கஞ் சூதம்
அவன்துணை நஷ்ட மெய்தும்
இன்னமும் பின்பா கத்தில்
இயம்புவோந் தாயே கேளும்.

28. ஏழு மாதங்களுமாம். இதுவரையில் முதல் பாகத்தைச் சொன்னேம். அக்காலத்தில் ஜாதகனுக்கு நோய் அதிகமாக ஏற்படும். வீட்டில் வரவுக்கு மேல் செலவு உண்டாகும். தாய் வர்க்கத்தில் அசுபம் நிகழும். சகோதரருக்குத் தீங்கு ஏற்படும். இன்னும் மற்ற விவரங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றேம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் யோக பாவம்

29. வந்தவன் யோகச் சேதி வாக்கது விரண்டு மூண்டு
முன்கோபி பெரியோ ரிஷ்ட மேவியே ஜீவிப் பானுந்
தந்தையூர் வாழ்வா னுகுஞ் சாற்றுவோம் பின்பா கத்தில்
விந்தையாய்த் தவங்கள் செய்யும் வித்தகி கேட்டி டாயே.

29. ஜாதகனுடைய யோக பாவத்தைக் கூறுகின்றேம். இருவிதமாகப் பேசுபவன். முன்கோபமுள்ளவன். பெரியோர்கட்குப் பிரியமானவன். அவர்களுடைய உதவியை நாடி ஜீவித்து வருவான். தன் தந்தையின் ஊரில் வசித்து வருவான். மற்றவற்றைப் பின்பாகத்தில் கூறுகின்றேம். அதிசயிக்கத்தக்க முறையில் தவங்களியற்றும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 74

1. பிறை[1] துலை ராகு மாதை புதன்குசன் மேட மாக
மறைசீய மந்தன் வீணை மழைக்கோளு மிரவி நந்தி
[2]குறைப்பாம்பு மீன மாகக் [3]குஞ்சரம் பகையுஞ் ஜன்மந்
திறமையாய்க் கோளு நின்றூல் செப்புவீர் பலனைத்
[தானே.

1. சந்திரன் துலாத்திலும், ராகு கன்னியிலும், புதன் செவ்வாய் மேஷத்திலும், குரு சிம்மத்திலும், சனி மிதுனத்திலும், சுக்கிரன் சூரியன் விருஷபத்திலும் கேது மீனத்திலுமாக நவக்கிரகங்கள் நின்று ஜன்ம லக்கினம் சிம்மமானூல் ஏற்படும் பலனைக் கூறுங்கள் முனிவரே.

கிரகநிலை

கேது	புதன் செவ்வாய்	சுக்கிரன் சூரியன்	சனி
	இராசி சக்கரம்		
			லக்கினம் குரு
		சந்திரன்	ராகு

வீட்டுநிலை

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்றூர்
மேதினி லாண்பால் ஜன்மம் விளம்புவோ மில்லந் தன்னை
ஓதுவோங் கீழ்மேல் வீதி யுத்தரம் வாடை யாகுந்
தீதிலா மாரி கீழ்ப்பால் திருமாலு மருகில் தங்கும்.

2. என்று பார்வதிதேவியார் கேட்கின்ற சமயத்தில் கௌசிகர் என்னும் முனிவர் பெருமான் சொல்லுகின்றூர். தாங்கள் கூறிய கிரக நிலைகளுடன் பிறந்தது ஆண் பிறப்பு. பிறந்த வீட்டுக்கு அடையாளங்களைச் சொல்லுவோம். அவ்வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு வரிசையிலுள்ளது. மாரியம்மன் கோவில் வீட்டுக்குக் கிழக்குப்

---

1. துலாம்

2. கேது

3. யானை. இதற்கு விரோதி சிங்கம். சிம்மலக்னம் என்பதனை ஆசிரியர் இங்ஙனம் குறித்தனர்.

பக்கத்தில் இருக்கின்றது. விஷ்ணு ஆலயம் வீட்டுக்குச் சமீபத்தில் உளது.

3. அரனவ னதன்கீழ்த் தங்கு மதற்குத்தட் சிணத்தில் தந்தி
அரிவாக னத்தாள் நிற்கும் அருகினில் நதியு முண்டு
துருவசக் கரமுங் கீழ்ப்பால் தோன்றிடு மிதுவல் லாமல்
வரநதி சூழியு முண்டு மாமுனி தெற்கி லென்றோம்.

3. சிவபெருமான் ஆலயம் அதற்குக் கீழ்ப்புறம் இருக்கும். அவ்வாலயத்துக்குத் தெற்கில் விநாயகரின் கோவிலும், சிங்க வாக னத்தையுடைய துர்க்கையம்மன் கோயிலும் இருக்கின்றன. அதற்குச் சமீபமாக நதியொன்று உளது. இவற்றைத் தவிர சிறந்ததொரு நதியும் கோட்டையும் அங்குண்டு. பெரிய முனியாண்டவரொருவர் ஊருக்குத் தென்திசையில் கோயில் கொண்டிருப்பார்.

ஜாதகனின் பிறந்த வீட்டுநிலை

4. இத்தகை யடையா ளத்துள் இலகிய சமவூர் தன்னில்
வித்தக னில்லந் தானும் விளம்புவோங் கூரை யாகும்
பத்திய மாது ரில்லம் பாகமூ மிரண்ட தாகும்
அத்தியைப் பெற்ற மாதே அறைகிறோம் பலனை யாங்கள்.

4. இவ்விதமாகச் சொல்லப்பட்ட அடையாளங்களுடன் விளங்கு கின்றதோரூரில், ஜாதகன் பிறந்த வீடு கூரை வேயப்பெற்றதாகும் என்று சொல்லுவோம். அஃது இவனுடைய தாய் வீடாகும். அஃது இரு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கும். யானைமுகக் கடவுளை மைந்த னைப் பெற்ற தாயே! ஜாதகனின் குடும்ப பலன்களை இனிக் கூறுகின் றோம், நாங்கள்.

5. இன்னவன் ஜனன யோகம்
எழில்பெறுந் தந்தை யோகம்
மன்னிய வன்னை யோகம்
வரும்புத்தி ரகளத்தி ரயோகந்
தன்னிலே துணைவர் யோகஞ்
சாற்றுவோ முன்பின் ஜன்மம்
பன்னிய குடும்ப யோகம்
பகருவோ மிந்நூல் தன்னில்.

5. ஜாதகனின் ஜனனகால யோகங்கள் அவனுடைய தந்தை தாயார், பிறக்கும் புதல்வர்கள், மனைவி உடன்பிறந்தோர் ஆகியோரின் யோகங்கள், மேற்சொல்லப்பட்டவர்களின் முற்பிறவி, மறுபிறவி குடும்ப நலன்கள் முதலான பலவற்றையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுவோம்.

தந்தையின் சகோதரபாவமும் சகோதரியினியல்பும்

6. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றவாண் பலத்தைக்
[காணும்
பிந்தியும் பெண்பா லொன்று பேசுவோர் தீர்க்க மாக
எந்தையே யவள்கு ணத்தை யியம்புவோ மிருசி வப்பள்
சந்தத மிளம னத்தள் தன்வரன் மனம்போல் வாழ்வள்.

6. ஜாதகனுடைய தகப்பனருடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுவோமென்றல், அவனுக்குச் சகோதரன் இல்லை. இளையவளாகிய சகோதரி யொருத்தியே தீர்க்க வயதுடன் இருப்பாள் என்று சொல்லுவோம். அவள் குணங்களைக் கூறுவோம். கருமை கலந்த செந்நிற முடையவள். இளகிய மனத்தினள். தன் கணவனது மனமறிந்து வாழ்க்கையை நடத்துபவள்.

மேற்படி தொடர்ச்சி

7. சுகமுளாள் பொறுமை சாலி
சுந்தரி யதிர்ஷ்ட முள்ளாள்
தகைமையாய்க் குடும்பி யாவள்
சந்ததி யதிக மில்லாள்
வகையான பெண்பா லொன்று
மைந்தராண் விருத்தி யென்றும்
பகையிலா விரண்டுந் தீர்க்கம்
பெருகாவே வைந்து தாமே.

7. சுகமுள்ளவள். பொறுமையுடையவள். அதிர்ஷ்டமுள்ளவள். அந்தஸ்துக்குத் தக்கபடி குடும்பத்தை யடைந்தவள். சந்ததி களதிக மில்லாதவள். செயலுள்ள பெண் ஒருத்தியும் புத்திரன் ஒருவனும் நிலையானவரென்றும், அவர்கள் தீங்குகளில்லாதவரென்றும் சொன்னேம். ஐந்து குழந்தைகள் பிறந்து இறக்கும்.

மேற்படி தொடர்ச்சியும் தந்தையின் குணங்களும்

8. அந்தவாண் பவமொ ழிந்தால்
அணுகிடும் விருத்தி யென்றும்
எந்தையே வயது தீர்க்கம்
இவன்தந்தை குணத்தைச் சொல்வேன்
பந்தமாய்ச் சிவந்த மேனி
பாரினி லொடிசல் தேகி
சந்ததங் கல்வி யுள்ளான்
சன்மார்க னடக்க முள்ளான்.

8. அந்தப் புத்திரனுடைய தீவினைகள் ஒழிந்தால் மற்றும் புத்திர விருத்தி யேற்படும். அவர்கட்கும் நீண்ட ஆயுள் ஏற்படும். தாயே! இனி ஜாதகனின் தந்தையின் குண விசேஷங்களைக் கூறுகின்றேம். சிவந்த நிறமுள்ளவன். மெல்லிய சரீரமுடையவன். கல்வியறிவுள்ளவன். நல்வழிப்படி நடப்பவன். அடக்கமுள்ளவன்.

தொட்ர்ச்சி

9. முகமதில் வடுவு முள்ளான் முன்கோபந் தரித்திர [முள்ளான்
ஜகமதில் நல்லோ னுவன் செய்ந்நன்றி மறவா னுகுந்
தகைமையாய்த் தந்தை யாஸ்தி தானவ னடையா னுகும்
வகையுடன் மனைவி யாலே வந்திடும் யோக மென்றோம்.

9. முகத்தில் வடுவுள்ளவன். மூன்கோபி. வறுமையுள்ளவன். உலகில் நல்லவன் என்ற பெயரையடைவான். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். தான் நியாயமாகப் பெற வேண்டிய தந்தையின் ஆஸ்திகளைப் பெறுதவன். ஆனால் இவனுடைய மனைவியால் இவனுக்கு அதிர்ஷ்டம் உண்டாகும்.

இதுவுமது

10. பயிர்த்தொழில் செய்வா னுகும்
பாருகள் விருத்தி யுள்ளான்
நயமுட னுரைக்க வல்லான்
நற்பொரு ளிச்சை யுள்ளான்
அயலானுல் பெருமை யுள்ளான்
அவன்கரங் கத்திரி ரேகை
வியமான சுழியு முள்ளான்
வீணப வாத மில்லான்.

10. விவசாயத்தைச் செய்து வருவான். பூமிப் பெருக்கமுடையவன். இனிமையாகப் பேசுபவன். செல்வத்தின்மீது விருப்பமுடையவன். பிறருடைய உதவியால் பெருமையை அடைவான். கையில் கத்திரிரேகையும் நீங்கு செய்யும் சுழியும் உள்ளவன். அவச்யமில்லாத பழிச்சொற்களை ஏற்காதவன்.

ஜாதகனுடைய இயல்புகள் பின்வரும் நான்கு பாடல்களில் கூறப்படும்

11. இக்குண முடையோ னுக்கு விவனுமே யுதிப்பா னுகும்
மிக்கவே விவன்கு ணத்தை விளம்புவோ மிருசி வப்பன்
தக்கவே வுணச்சல் தேகி தன்கர முருத்திர ரேகை
சிக்கன மில்லா னுகுந் தேவியால் பெருமை யுள்ளான்.

11. இவ்விதமான குணங்களையுடையவனுக்கு இந்த ஜாதகன் பிறந்தவன் என்றேரும். இனி இவனுடைய குணங்களைக் கூறுகின்றேரும். கருமை கலந்த சிவந்த நிறமுள்ளவன். மெல்லிய சரீரி. கையில் உருத்திரரேகையை யுடையவன். செட்டாக இல்லாதவன். தன் மனைவியால் பெருமையை யடைவான்.

12. கல்வியுங் கொஞ்ச முள்ளான் காதலி பட்ச னுவன்
நல்லவ னெனி வாழ்வன் நற்காலி விருத்தி யுள்ளான்
இல்லறம் புதிதாய்ச் செய்வ னிளக்கமா மனத்த னுகுஞ்
சொல்லது தவரு னுகுந் துணைவரை யாத ரிப்பன்.

12. சிறிதளவே கல்வி யறிவுள்ளவன். மனைவிக்குப் பிரியமானவன். நல்லவனென்ற பெயரைப் பெற்று வாழ்ந்து வருவான். கால் நடைகளின் பெருக்கமுள்ளவன். புதிய வீடு ஒன்றைக் கட்டுவான். இளகிய மனமுடையவன். சொன்ன சொற்கள் தவருதவன். உடன் பிறந்தவரை ரட்சித்து வருவான்.

13. பால்பாக்கிய முடைய னுகும்
பகைவரை வசியங் கொள்வன்
ஞாலமேல் பூமி சேர்ப்பன்
நற்சக டுகளு முள்ளான்
சாலவே கோபி யாவன்
ஜனபந்து மெச்ச வாழ்வன்
வேலுடைக் கடவுள் பத்தி
விரும்புவா னிவனே யென்றேரும்.

13. ஊழ்வினைப் பாக்கியமுள்ளவன். விரோதிகளையும் தன் வயப்படுத்தக் கூடியவன். உலகில் விளைநிலங்களைச் சேர்ப்பான். நல்ல வண்டி யொன்றை வைத்திருப்பவன். கோபிஷ்டன். தன் சுற்றத்தார்கள் கொண்டாடும்படியாக வாழ்க்கையை நடத்துவான். வேலைக் கையிலுடைய முருகக் கடவுள்மீது பக்தி அதிகமாக உள்ளவன் என்றேரும்.

14. மனைவியும் வந்த பின்பு
வளர்ந்திடும் யோகந் தானுங்
கனமுள குடும்பி யாவன்
கதித்திடுஞ் செல்வ மேலும்
வினையதை யொருவர்க் கெண்ணன்
வீணப வாதங் கொள்ளான்
அனைவர்க்கு முதவி செய்வன்
அம்பிகை யாளே கேளாய்.

14. இவனுக்குத் திருமணம் நிகழ்ந்த பிறகு யோகம் விருத்தி யாகும். பெரியதொரு குடும்பத்தை அடைவான். செல்வம் மேன் மேலும் விருத்தியடையும். ஒருவருக்கும் தீங்கிழைக்க மனமில்லாத வன். அளவசியமான அபவாதங்களை அடையாதவன். எல்லோருக் கும் உதவியையே செய்பவன். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் சகோதரபாவம்

15. இவனுடைத் துணைவர் தம்மை
யியம்புவோ மாண்பால் நான்கு
நவனியில் பெண்பா லிரண்டு
நாட்டுவோ மிவனுக் கேதான்
பவமுள மற்ற வெல்லாம்
பெருகாவே யென்று சொன்னேம்
இவர்களுஞ் சிலநா ளொன்று
யிருந்துப்பின் வேறாய்ச் செல்வர்.

15. இனி ஜாதகனுடைய சகோதர பாவத்தைச் சொல்லுகின் றோம். நான்கு சகோதரரும் இரு சகோதரிகளும் உண்டு என்று சொல்லுகின்றோம். மற்றும் தோன்றும் குழந்தைகள் நிலையா என் றோம். எல்லாச் சகோதரர்களும் சிலகாலம் ஒரே குடும்பமாக விருந்து பிறகு பிரிந்து செல்வார்கள் என்றோம்.

குடும்பம் பிரிவதற்குரிய காரணம்

16. எப்படி வேறாய்ச் செல்வர்
இயம்புவீர் முனியே நீர்தாஞ்
செப்புவேன் கேளு மம்மா
தேவியால் வேறாய்ச் செல்வன்
ஒப்புடன் துணைவன் சேதி
யுரைக்கிறோ மிரண்டி லேதான்
மெய்ப்புடன் மணத்தின் காலம்
விளம்புவோங் கேளுந் தாயே.

16. என்ன காரணத்தால் அச்சகோதரர் பிரிந்து செல்லுவார்? சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். தாயே! நாங்கள் அதற்குக் காரணம் கூறுகின்றோம். கேட்பீராக. இவனுடைய மனைவி செய்யும் கலகத்தால் அவ்விதம் ஏற்படும் என்றோம். இனிச் சகோதரர்களின் விஷயங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனின் திரு மணக் காலத்தைக் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகனின் திருமணக்காலம்

17. உதித்தவன் மணத்தின் காலம்
உரைக்கிறே மிருப தாண்டில்
சதியிலா வுள்ளூர் தன்னில்
தந்தையின் துணைவி புத்திரி
விதியினுல் வருவா ளாகும்
விளம்புவோ மவள்கு ணத்தைச்
சதியிலா மனத்த ளாகுந்
தானவ ளிருநி றத்தள்.

17. இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின் றேம். அஃது அவனுடைய இருபதாம் வயதில் நிகழும். மனைவி உள்ளூரிலிருந்தே வாய்ப்பாள். அவளும் ஜாதகனுடைய தந்தையின் சகோதரியினுடைய மகளாவள். ஆன்றோர்களின் ஆஜ்ஞைப்படி அவள் இவனே மணப்பாள் என்றேம். இனி மனைவியினுடைய குணங்களைக் கூறுகின்றேம். தீங்குகளில்லாத மனத்தள். கரிய நிறமுள்ளவள்.

மனைவியின் இயல்புகள்

18. புத்திமா னடக்க முள்ளாள் புண்ணிய மனத்தா ளாகும்
சித்தமுங் கரப்பு மில்லாள் செய்ந்நன்றி மறவா ளாகும்
உத்தமி யோக சாலி யுலகுக்கு நல்லோ ளாவள்
வித்தையு முடைய ளாகு மெல்லிநன் னடக்கை
[யுள்ளாள்.

18. புத்திசாலி. அடக்கமுள்ளவள். நல்லெண்ணம் பொருந்திய மனமுடையவள். மனத்தில் தீய எண்ணங்களில்லாதவள். பிறர் செய்த உதவியை மறவாதவள். உயர்ந்த குணமுள்ளவளாகவும் அதிர்ஷ்டமுடையவளாகவு மிருப்பாள். உலகத்தவர் நல்லவள் என்று சொல்லும்படி நடப்பவள். கல்வி யறிவுள்ளவள். நன்னடத்தை யுள்ளவள்.

மனைவிக்கு யோக மேற்படுதற்குரிய கிரகநிலை

19. எப்படி மனைவி யோகம் இயம்பினீர் முனியே நீர்தாஞ்
சத்தமஞ் சனியே யாகித் தானவன் லாபம் நிற்க
உத்தமன் குருவு மேழை யுவந்துமே பார்ப்ப தாலே
பத்தியே யோக மென்றேம் பார்வதி மேலுங் கேளே.

19. ஜாதகனுடைய மனைவிக்கு யோக மேற்படும் என்று என்ன காரணத்தால் கூறுகிறீர்கள்? முனிவரே! தாங்கள். (என்று ஒருவர் வினவ மற்றவர் சமாதானம் கூறுகின்றார்). ஏழாம் வீட்டுக்குரியவன்

(களத்திர ஸ்தானதிபதி) சனியாகி அவன் லாப ஸ்தானமாகிய மிது னத்தில் இருப்பதாலும் சுபக்கிரகமாகிய குரு களத்திர ஸ்தானத்தைப் பார்ப்பதாலும் அவளுக்கு யோக மேற்பட்டது என்றேரும். பார்வதி தேவியே! மேலும் கேளுமின்.

ஜாதகனுடைய புத்திரபாவம்

20. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பா லிரண்டு
சித்தமாய்ப் பெண்பா லவ்வாறு செப்புவோ மிவனுக் [கேதான்
பத்திய மூன்று நஷ்டம் பகர்ந்தனம் பாலர் யோகம்
அத்தியை யீன்ற மாதே யறைகிறேம் மேலுங் கேளே.

20. ஜாதகனுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றேரும். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நிலையானவர் என்றேரும். பிறந்த குழந்தைகளில் மூன்று நிலையாமல் இறந்துபோம். விநாயகனைப் பெற்ற தேவியே! மேலும் கூறுவதைக் கேட்பீராக.

ஜாதகனின் தாயின் குணவரலாறு

21. மாதுரு விருநி றத்தாள் மர்மவாள் பொறுமை சாலி
சூதிலா ளடக்க முள்ளாள் துருசான வார்த்தை சொல்வள்
பாதக மெண்ணு ளாகும் பலவீன முடைய ளாகுங்
கோதிலா வாத தேகி குணமது விரண்டு முள்ளாள்.

21. ஜாதகனுடைய தாய் கரிய நிறமுள்ளவள். மறைவுள்ள எண்ணமுள்ளவள். பொறுமை யுடையவள். கபடமில்லாதவள். அடக்க முள்ளவள். வேகமாகப் பேசும் இயல்பினள். ஒருவருக்கும் தீங்கிழைக்க எண்ணுதவள். பலவீன முடையவள். வாயுரோக முள்ள வள். இருவிதமான குணங்களுள்ளவள்.

தாயின் சகோதரபாவம்

22. அவளுடைத் துணைவர் தம்மை யறையவே பலத்தைக் [காணேந்
தவமுனி சொல்லும் போது சங்கரி கேட்க லுற்றாள்
இவளுக்குத் துணைகள் விருத்தி யிலகாத காரணஞ்சொல்
அவனியி லாரேன் தானு மதற்காறி லிருப்ப தாலும்;

22. ஜாதகனுடைய தாய்க்குச் சகோதர பாவத்தைக் கூறுகின் றேரும். உண்டு என்று கூறக் கிரகப்பலமில்லை. இவ்விதம் முனிவர் கள் சொல்லும்போது பார்வதி தேவி கேட்கலானாள். ஜாதகனுடைய தாய்க்குச் சகோதர விருத்தி ஏற்படாத காரணத்தைச் சொல்லுங்கள். இந்த ஜாதகனுக்கு ஆரும் வீட்டுக்குரிய சனி அவ்வீட்டுக்கு ஆரு மிடத்தில் தங்கி இருப்பதாலும்; (ஆரும் வீட்டிற்குரியவனின்

நிலையைக்கொண்டு தாய் மாமன் விஷயங்களைக் கூறுதல் மரபு. ஈண்டு ஆருமிடத்துக்குரிய சனி அவ்வீட்டுக்கு, மகரத்துக்கு, ஆருமிடமாகிய மிதுனத்தில் இருப்பதாலும் ஆருமிடம் மறைவு ஸ்தானமானபடியாலும் பலமில்லை என்று சொல்லப்படுகிறது.

தாயின் முற்பிறவி

23. முன்ஜன்ம வினையி னலும் முயலாது துணைவர் தாமும்
என்னவூழ் செய்தா ளதனை யியம்புவீர் முனியே நீர்தாம்
அன்னவள் பூர்வந் தன்னில் அச்சிறு வாக்க முத்ரம்
தன்னிலே பேரூர் தன்னில் தானவள் வடுக சாதி ;

23. ஜாதகனுடைய தாய் முற்பிறவியில் செய்த தீவினையாலும் அவளுக்கு சகோதரர் இல்லை. அவள் என்ன தீவினை செய்தாள்? அதைக் கூறுங்கள், முனிவரே! தாங்கள். அவள் முற்பிறவியில் அச்சிறுபாக்கத்துக்கு வடக்கில் உள்ள ஓர் ஊரில் வன்னிய குலத்தில் ;

முற்பிறவித் தீவினை

24. பிறந்துமே வறுமை யின்றிப் புத்திர ருள்ளா ளாகிச்
சிறந்திடு குடும்பி யாகிச் செல்வியும் வாழு நாளில்
உறைந்தவூழ் தன்னைச் சொல்வே னுறையில்
[தன்னில் வாழுஞ்
சிறகுள வடைக்க லான்தன் சேயரைப் பற்றி யேதான் ;

24. பிறந்து தரித்திரமில்லாதவளாகிப் புத்திரபாக்கியத்தைப் பெற்றுச் செழிப்புள்ள குடும்பியாகவும் செல்வமுடையவளாகவும் வாழ்ந்துவருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கூறுகின்றேம். இவள் வசித்துவந்த வீட்டில் ஒரு பட்சி கூடுகட்டி வசித்து வந்தது. அதனுடைய சிறு குஞ்சுகளைப் பிடித்து;

பட்சியின் குஞ்சுகளைக் கூட்டிலடைத்தது

25. வேறொரு கூடு தன்னில் வித்தகி வைத்துக் கொண்டு
சிறியவள் விளையாட் டாகச் செய்துபின் பூனை யாலே
குருவியு மாண்ட தென்றே குஞ்சுதாய்க் கூட்டைப்
[பார்த்து
வருஞ்சுத நில்லாத் தாலே வறைந்தது சாபந் தானே.

25. வேறு ஒரு கூட்டில் அடைத்து வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள். சிறியவளான அவள் வைத்திருப்பதைப் பூனை பார்த்து அக்குருவியைப் பிடித்து தின்றது. இறந்த குஞ்சின் தாய்ப் பறவை தன் கூட்டைப் பார்த்து குஞ்சு இல்லாமலிருந்ததைக் கண்டு சாபமிட்டது.

26. ஆகையா லந்தத் தோஷ மடைந்தது விவளுக் கேதான்
தோகையு மந்தி யத்தில் துணைவரு மில்லா ளாகி
வாகையால் வாயு நோயால் மறலிதன் பதிக்குச் சென்று
பாகமா யிக்கு லத்தில் பிறந்தன ளிவளே யென்றேரும்.

26. அதனால் அந்தத் தோஷம் இவளைப் பற்றியது. ஜாதகனின் தாயும் தன் கடைசிக் காலத்தில் உடன் பிறந்த சகோதரரில்லாதவளாகி வாயுநோய் ஏற்பட்டு அதனால் மரணமடைந்து அடுத்த பிறவியாக இக்குலத்தில் தோன்றினள் என்றேரும்.

27. முன்பட்சி தோஷத் தாலே முயலாது துணைவர் தாமுந்
தந்தையி னில்லந் தன்னில் தானவள் வாழ்வா ளாகும்
பின்ஜன்ம மவ்வூர் மேற்கில் பிறப்பளா மிக்கு லத்தில்
இன்னவள் வறுமை யின்றி வாழ்வளா மென்று
[சொன்னேம்.

27. பட்சியின் சாபத்தால் அவளுக்குச் சகோதரரில்லை. அவள் தன் தந்தையின் வீட்டில் வசித்து வருவாள். (கணவன் வீட்டில் வாழாதவள் எனக்கொள்ள வேண்டும்). மறுபிறவியில் அவ்வூருக்கு மேற்கிலுள்ள ஊரில் இதே குலத்தில் பிறந்து தரித்திரமில்லாமல் வாழ்ந்து வருவாள் என்றேரும்.

ஜாதகனுடைய தந்தையின் விவரம்

28. தந்தையின் பூர்வந் தன்னைச்
சாற்றுவோம் போரூர் கீழ்ப்பால்
தொந்தமாய்ச் சிற்றூர் தன்னில்
தோன்றினன் வன்னிய னுகச்
சந்ததங் கிருஷிகள் செய்துந்
தனமது மில்லா னுகிப்
பந்தமாய் மனைவி மைந்தர்
பாரினில் வாழு நாளில்;

28. இனி ஜாதகனுடைய தந்தையின் விவரங்களைக் கூறுகின்றேரும். திருப்போரூருக்குக் கிழக்கில் உள்ள சிற்றூரில் வன்னிய குலத்தவனுகப் பிறந்து சதா வியவசாயம் செய்து வந்து செல்வமதிகமில்லாதவனுகி மனைவி மக்களை அடைந்து வாழ்ந்துவருங்காலத்தில்;

வேறு

29. தம்பிபா கத்தைத் தானப கரித்தான்
பிந்தியு மிளையோன் புகலுவான் வெறுப்பால்
எந்தன்பா கத்துக் கிசைந்தபா விக்கே
வம்புக ளதிகம் விளைந்திடு மல்லால்;

29. தன்னுடைய சகோதரனுக்குரிய பாகத்தை அவனுக்குக் கொடாமல் அபகரித்துக்கொண்டான். இவ்விய சகோதரன் மனம் வருந்திச் சாபமிடுகின்றான். என்னுடைய பாகத்தைத் தராமல் எடுத்துக் கொண்ட பாவிக்கு அதிகமாக நீங்குகள் ஏற்படுவதல்லாமல் ;

30. மறுபிறப் பதனி லுன்தந்தை யாஸ்தி
திருகது நேர்ந்து செல்லுவாய்க் குடகில்
வருமனை யாளால் வேட்டகந் தன்னில்
மரணமட் டுந்தான் வாழுவா யென்று ;

30. மறுபிறப்பில் உன் தந்தையின் ஆஸ்திகளை அடையாமல் அதற்குத் தீங்குகள் ஏற்பட்டு மேற்குப் பக்கமாகச் செல்லுவாய். பிறகு மனைவியின் பிறந்த விட்டில் உன் ஆயுள் மட்டும் வாழ்ந்து வருவாய் என்று ;

வேறு

சாப காரணம்

31. இப்படி வெறுப்பால் சொல்லி யிறைத்தனன் மண்ணை
[வாரித்
தப்பிதந் துணைவன் சாபஞ் சார்ந்தது யிவனுக் கேதான்
மெய்ப்புடன் ஓடம் விட்டு ஜீவனஞ் செய்வா னவான்
அப்பவு மறையோ னுக்கு வசத்தியஞ் செய்தா
[னென்றோம்.

31. இவ்விதமாகக் கூறி மனவெறுப்படைந்து தெரு மண்ணை வாரி இறைத்தான். தவறுகளிழைக்கப்பட்ட சகோதரனுடைய சாபம் இவனைப்பற்றியது. இவன் தன்னுடைய சொந்த இடத்தைவிட்டு ஜீவனத்துக்காக வேறு இடம் சென்று வாழ்வான். ஆற்றில் ஓடக்காரனாக ஜீவனம் செய்துவருவான். (வேறு ஒரு தீவினையையும் கூறுகின்றோம்.) அவ்விடத்திலும் ஓர் அந்தணனுக்கு எதிராகப் பொய் பேசினான். (பொய்ச் சாட்சி சொன்னான்.)

மறையவன் சாபம்

32. மறையவன் மனவெ றுப்பால் வறைகிரு னிவனைப் பற்றிக்
குறைவான குடும்பி யாகிக் குறித்ததோர் துணைவ ரின்றி
விரைவினில் பிறந்த வில்லம் விளங்காம லன்னிய தேசந்
தரையினில் செல்வா யென்று சாற்றினன் அந்த
[ணன்தான்.

32. அந்தணன் மனத்தில் துன்பமடைந்து இவனைப்பற்றிச் சொல்லுகின்றான். நீ, குடும்பத்தில் குறைவேற்பட்டு அடைந்த சகோதரர்களை இழந்து சீக்கிரத்திலேயே பிறந்த விட்டை அடையாமல்

வேற்றுத் தேசத்துக்குச் செல்லுவாய் என்று அந்தணன் சாப மிட்டான்.

33. அதுவொரு தோஷ மாச்சு வாகவிவ் விரண்டு தோஷஞ்
சதாவுமே யிவனைச் சூழ்ந்துஞ் சாதங்கள் குறைவுண் டாகி
வதிபனும் போரூர் சென்று அறுமுக னுல யத்தில்
நிதமுமே தீபம் பார்த்து நித்தியம் புஷ்பங் கொய்து ;

33. அஃது ஒரு தோஷமாயிற்று. ஆக இவ்விரண்டு தோஷங் களும் ஜாதகனுடைய தந்தையைச் சேர்ந்தன. அதனால் இவனுக்குக் கடைசியில் உண்ண உணவின்றி வேறு ஊருக்குச் சென்று (திருப் போரூருக்குச் சென்று) அங்குள்ள ஆறுமுகக்கடவுளின் ஆலயத்தில் தீப கைங்கர்யம் செய்து தினந்தோறும் புஷ்பங்கள் கொண்டு வந்து ;

ஆலயத்தில் தீபகைங்கரியம் செய்ததின் பலன்

34. முருகர்க்கு வனித்து வந்து முதல்வனுஞ் ஜீவித் தானுஞ்
சிறுமைக ளில்லா னுகித் திருப்போரூர் மரண மாகிப்
பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தவ னிவனே யம்மா
அறைகிறே மிச்சென் மத்தி லவன்துணை மறையோர்
[சாபம் ;

34. முருகப்பிரானுக்கு அருச்சனைக்காக அளித்து வந்து அத னால் ஜீவனம் செய்து வாழ்ந்தான். வேறு தீவினைகள் இல்லாமல் அத்திருப்போரூரிலேயே மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். அதனால் இவனுக்கு முற் பிறவியில் ஏற்பட்ட சகோதரனுடைய சாபத்தாலும் அந்தணனுடைய சாபத்தாலும் ;

பார்வதி தேவியின் ஐயம்

35. சொல்லாலே நேரு மென்றேஞ் சுந்தரி கேட்க லுற்றாள்
வல்லவன் மூன்ஜன் மத்தில் வன்னிய மரபில் தோன்றி
அல்லல்க ளதிக முண்டா யடைந்தவ னிச்சென் மத்தில்
நல்லதோர் கங்கை வம்சம் நல்குங்கா ரணங்க ளென்ன.

35. அவர்கள் கூறியது போல் ஏற்படும் என்றேம். பார்வதி தேவி கேட்கலானாள். ஜாதகனுடைய தந்தை முற்பிறவியில் வன்னிய குலத்தில் பிறந்தும், தீவினைகள் அதிகமாகச் செய்தும் இப்பொழுது இப்பிறவியில் நல்லதான வேளாள குலத்தில் பிறக்கும் காரணங்கள் என்னவென்று சொல்லுங்கள்.

நல்வினையும் மறுபிறவியும்

36. சேவலங் கொடியோ னுக்குத் தினமலர் கொய்து வந்தும்
ஆவலாய்த் தீபம் பார்த்தும் ஆலயஞ் சென்ற புண்ணியம்
மேவினு னிக்கு லத்தில் விளம்புவோ மிவன்பின் ஜன்மந்
தே(வு)[யு]தன் னூட்டு வுத்தரஞ் சிறப்புள பேரூர் தன்னில்;

36. சேவலைக்கொடியாகக் கொண்ட சுப்பிரமணியக் கடவுளுக்குத் தினந்தோறும் புஷ்பங்களைக் கொண்டு கொடுத்தும், விருப்பத்துடன் தீப கைங்கர்யம் செய்தும் கோவிலுக்குச் சென்று வந்த புண்ணியத்தாலும் இக்குலத்தில் பிறந்தான். இவனுடைய மறுபிறவியைக் கூறுகின்றோம். திருவண்ணாமலைக்கு அருகில் வடக்குப் பக்கத்திலுள்ள பெரிய ஊரில்;

37. வைசிய குலமு தித்து மாநிலஞ் செட்டுச் செய்து
திசையெலாங் கீர்த்தி பெற்று ஜனபந்து மெச்ச வாழ்ந்து
வசையிலா வாழ்வா னுகும் வந்தவன் பூர்வஞ் சொல்வேன்
நிசமன முடையர் தம்மை நிதங்காக்குந் தாயே கேளாய்.

37. வைசிய குலத்தில் பிறந்து உலகில் விவசாயத்தைச் செய்து வந்து எல்லாத் திக்குகளிலும் புகழை யடைந்து தன் சுற்றத்தாரால் மேன்மையாக நினைத்து கொண்டாடும்படி வாழ்ந்து அபவாதங்களில் லாமல் இருந்து வருவான். இனி ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். உண்மையான பக்தியுடனிருப்பவரைக் கைவிடாது காக்கும் தேவியே! கேளுங்கள்.

முற்பிறவி

38. பிருதிவி தலத்தி லேதான் பிரபலத் தீர்த்தங் கீழ்ப்பால்
அரிவாச மடத்து மேல்பா லவனுங்கோ வைசியச்
[சேயாய்ப்
பெருமையாய்க் குடும்பி யாகிப் புத்திர ருள்ளா னகித்
திருமகள் விலாசம் பூண்டு செட்டுக்கள் மிகவே செய்து;

38. காஞ்சீபுரத்துக்கு அருகிலிருக்கும் புண்ணிய தீர்த்தத்துக்குக் கிழக்கில் அரிவாச மடத்துக்கு மேற்கில் (திருமால் எழுந்தருளியிருக்கும் கோவிலுக்கு மேற்குப் பக்கத்தில்) கோவைசியனுகப் பிறந்து பெருமையுள்ள குடும்பத்தைப் பெற்று புத்திர பாக்கியத்தையடைந்து லட்சுமிகடாட்சம் பெற்று விரிவான வர்த்தகத்தைச் செய்து வந்து;

யோகம்

39. அறத்தின்மே லிச்சை யின்றி
யவனுமே மரண மாகிப்
பிரமனால் வரையப் பட்டுப்
பிறந்தவ னிவனே யென்றோம்
அறைகிறோ மிவனின் யோகம்
அறுமூன்று வாண்டு மேலாய்
வரவரப் பிறைபோல் யோகம்
வளர்ந்திடு மென்று சொன்னோம்.

39. தருமம் செய்வதில் விருப்பமில்லாதவனாக வாழ்ந்து மரண மடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந் தான் என்றோம் இனி இவனுடைய யோக பாவத்தைச் சொல்லு கின்றோம். பதினெட்டாம் வயதுக்கு மேலாக மேன்மேலும் வளர்பிறைச் சந்திரன் போல் யோகம் விருத்தியாகும் என்று சொல்லுகின்றோம்.

40. பாரியை தன்னால் யோகம்
பகருவோம் பாக்கிய முள்ளான்
தீரமாய்ப் பூமி சேர்ப்பன்
சல்லியங் கொள்ளா னவன்
பேரது வுடைய னவன்
பிரபலச் செட்டுச் செய்வன்
கூறுவோஞ் சித்திர வீடு
கொள்ளுவா னிவனே யென்றோம்.

40. இவனுக்கு மனைவியால் யோகம் பெருகும். பாக்கியமுள்ள வன். திண்ணமாகப் பூமி சேரும். கடன் வாங்காதவன். நல்ல பெயரை யடைவான். வர்த்தகத்தை விரிவாகச் செய்வான். அழகிய வீட்டைக் கட்டுவான் என்றும் கூறுகின்றோம்.

வீடு கட்டுங் காலம்

41. எந்திட மெந்தக் காலம் இவன்வீடு செய்வா னென்றீர்
வந்தவ னிருபா னைந்தில் வளர்தெற்கு வாடை தன்னில்
சொந்தமா யில்லஞ் செய்வன் தோகையின் வர்க்கத்
[தாலே
தன்தன முதவி யாலே சாற்றினோம் யோகந் தானே.

41. எந்த விடத்தில் எந்தக் காலத்தில் ஜாதகன் வீட்டைக் கட்டுவான்? அவற்றைக் கூறுங்கள் (என தேவி வினவ, முனிவர் பதில் கூறுவார்). ஜாதகன், தனது இருபத்தைந்தாம் வயதில் தெற்கு வரிசையில் சொந்த வீடு ஒன்றைக் கட்டுவான். அதை, மனைவியின்

வர்க்கத்தவர் உதவியையும் சொந்த சம்பாத்தியத்தையும் சேர்த்துக் கட்டுவான். யோகமும் ஏற்படும்.

தந்தையின் மரணகாலம்

42. தந்தையின் மரண காலஞ் செப்புவோ முப்ப தாண்டில்
எந்தையே மகர மாதம் இயம்புவோங் கர்மந் தானும்
புந்தியின் தசையி லேதா னவன்சுய புத்தி தன்னில்
எந்தையே தந்தை காலம் இயம்பின மொழிகுன் ரூது.

42. ஜாதகனுடைய தந்தையின் இறுதிக் காலத்தைக் கூறுகின்றோம். ஜாதகன், தனது முப்பதாம் வயதில் தை மாதத்தில் தன் தந்தைக்கு இறுதிக் கடன்களைச் செய்வான். அப்போது புத மகா தசையில் புத புக்தி நடைபெறும். தாயே! நாங்கள் கூறிய தந்தையின் மரணகாலம் தவறுது.

தாயின் மரணகாலம்

43. அன்னைக்கு நாற்பா னென்றில்
ஆவணி மாதந் தன்னில்
உன்னதக் கண்ட மென்றோம்
உரைக்கிறோ மந்தக் காலம்
புந்தியின் தசைக்கா லத்தில்
பொன்னவன் புத்தி தன்னில்
வந்திடுங் கரும மென்றோ
மங்கையே மேலுங் கேளே.

43. ஜாதகனுடைய தாய் அவனது நாற்பத்தோராம் வயதில் ஆவணி மாதத்தில் இறப்பாள் என்றோம். அக்காலத்தில் புத மகா தசையில் குருபுக்தி நடைபெறும். அந்த சமயத்தில்தான் தாயின் கர்மம் ஜாதகனுக்கு ஏற்படும். தாயே! கேளுங்கள்.

ஜாதகனது மரணகாலம்

44. ஜாதகன் மரண காலஞ் சாற்றுவோ மன்பா னென்பான்
மேதினில் வைகாசி மாதம் விசாகநாள் தன்னி லோய்வான்
போதவே மத்தி யத்தில் புகலுவோம் நாற்பா னறில்
தீதுண்டு ஜாத கர்க்குச் சிலசில கண்டம் நேரும்.

44. ஜாதகனுடைய மரண காலத்தைக் கூறுகின்றோம். ஐம்பத் தொன்பதாம் வயதில் வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில் ஜாதகன் மரணமடைவான். இடைக்காலத்தில், அஃதாவது நாற்பத் தாறும் வயதில் ஜாதகனுக்கு சிற்சில கண்டங்கள் ஏற்படும்.

இலக்கினத்தில் குரு இருப்பதன் விசேஷம்

45. என்னநோய் வந்த போதும்
இலக்கினங் குருவே நிற்க
மின்னலைப் போலே மாறும்
விளம்பிலே மன்பா லென்பான்
இன்னவன் பின்ஜன் மங்கள்
இயம்புவோந் தணிகை மேலாய்
உன்னதப் பேரூர் தன்னில்
உதிப்பனு மிரட்டி வமிசம்.

45. எந்தவிதமான வியாதி ஏற்பட்ட போதிலும் இலக்கினத்தில் குரு இருக்கும் பலத்தால் மின்னலைப்போல் அது விரைவில் நீங்கும். நாங்கள் கூறிய ஐம்பத்தொன்பதாம் வயது வரையில் உயிரோடிருப் பான். இனி மறுபிறவியைச் சொல்லுகின்றோம். திருத்தணிக்கு மேற்கில் உள்ள பெரிய ஊரில் ரெட்டியார் மரபில் பிறப்பான்.

ஜனனகாலதசை

46. பிறந்தசேய் ஜனன காலம்
பொன்தசை தனிலி ருப்புச்
சிறந்திடு மொன்பா லண்டுஞ்
செப்புவோம் பலனி யாங்கள்
விரைவினில் துணைவர் விருத்தி
யவன்தாயின் வர்க்கஞ் சூதங்
குறைந்திடுங் காலி யென்றோங்
குணமது சஞ்ச லங்கள்.

46. ஜாதகனுடைய ஜனன காலத்தில் குரு மகாதசையில் இருப்பு ஒன்பது ஆண்டுகளாகும். அக்காலத்திய பலனைச் சொல்லு கின்றோம். சிக்கிரத்தில் சகோதர விருத்தி ஏற்படும். தாயின் வர்க்கத் தாருக்கு அசுபம் நிகழும். கால் நடைகளுக்குச் சேதமுண்டாகும். மனச் சஞ்சலங்களேற்படும்.

பாவங்கள்

47. சமமான யோக மாகுஞ்
சல்லிய முடையா னுகும்
அபவாதங் களவு போகும்
அல்பமாஞ் சுகமு மென்றோங்

கனதந்தை பின்வந் தோர்க்குக்
கலக்கமாம் புத்திரர் தாமும்
உமையேகேள் விவர மாக
உரைக்கிறேம் மிரண்டி லேதான்.

47. நிதானமான யோகம் ஏற்படும். அப்போது கடன் உபத்திரவம் இருக்கும். அபவாதங்கள் ஏற்படும். வீட்டில் களவு போகும். சரீரச் சுகக் குறைவுண்டு. தன் தந்தையின் உடன்பிறந்தவருக்குப் புத்திரரால் மனக்கலக்கம் ஏற்படும். (தந்தையின் உடன்பிறந்தவருடைய புத்திரருக்குத் தீங்கு உண்டாகும் எனவும் கொள்ளலாம்.) உமாதேவியே! மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் விவரிக்கின்றேம்.

குடும்பச் செய்தி

48. இன்னவன் குடும்பச் சேதி
யியம்புவோ மூப்பா னிரண்டில்
இன்னவன் வேறுய்ச் செல்வன்
இவன்மனை யாளா லேதான்
பின்னவர் நான்கு பேரும்
பிரியாமல் சிலநாள் நின்று
தன்னிலே பதினை ராண்டு
மேலேதான் வேறுய்ச் செல்வர்.

48. இவனுடைய குடும்பச் செய்திகளைக கூறுகின்றேம். மூப்பத்திரண்டாம் வயதில் இவன் தனியாகச் சென்று விடுவான். அதற்குக் காரணம் இவனுடைய மனைவியாகும். இவனுக்குப் பிறகு தோன்றிய நால்வரும் இணை பிரியாமல் சிலகாலம் ஒன்றுக இருந்து பதினைரு வருடங்களுக்குப் பிறகு தனியாகப் பிரிந்து விடுவர்.

49. சடைமுனி சொல்லும் போது சாற்றுவா ளம்மன் தாமும்
அடைவுடன் துணைவர் சேதி யறிவிப்பாய் விவர மாகத்
திடமதா யாவ ருக்குஞ் செப்புவோ மிரண்டி லேதான்
தடவரை மகளே யாங்கள் சாற்றிய மொழிகுன் றுவே.

49. ஜடாமுனிவர் அவ்விதம் கூறும்போது பார்வதிதேவி கூறுகின்றாள். இனி அவனுடைய சகோதரர்களின் செய்தியை விரிவாகச் சொல்லுங்கள். திண்ணமாக அவர்கள் எல்லோரது செய்திகளையும் இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றேம். மலையரசின் மகளே! நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகம் 75

1. [1]பீதகன் தேள தாகப் பிறைராகு மீன மாக
[2]ஆதவன் புந்தி நந்தி யாரலு [3]மழைக்கோள் வீணை
நீதியாய்க் கேது கன்னி [4]நீலனுங் [5]கலசம் புக்க
மேதினில் ஜன்மஞ் சிம்மம் விளம்புவீர் பலனைத் தானே.

1. குரு விருச்சிகத்திலும் சந்திரன் ராகு மீனத்திலும், சூரியன் புதன் விருஷபத்திலும், செவ்வாய் சுக்கிரன் மிதுனத்திலும், கேது கன்னியிலும், சனி கும்பத்திலுமாக நவக்கிரகங்களிலிருந்து பிறந்த லக்கினம் சிம்மமானுல் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள்.

கிரகநிலை

சந்திரன் ராகு		சூரியன் புதன்	செவ்வாய் சுக்கிரன்
சனி	இராசி சக்கரம்		
			லக்கினம்
	குரு		கேது

பிறந்த வீட்டுநிலை

2. அம்பிகை கேட்கும்போது அத்திரி முனிவர் சொல்வார்
இன்பமா யாண்பால் ஜன்மம் இல்லமும் வடதென் வீதி
நன்மையாய் மேற்கு வாடை நந்திவா கனத்தோன்
[கீழ்ப்பால்
நம்பியான் கோஷ்ட முண்டு நதியுமே மேற்கில் தங்கும்.

2. பார்வதிதேவி கேட்கும்போது அத்திரி முனிவர் பதில் உரைக்கின்றார். இந்த ஜாதகம் ஓர் ஆண் குழந்தையினுடையது. அவன் பிறந்த வீடு தெற்கு வடக்கான வீதியில் மேற்கு வரிசையில் உள்ளது. கிழக்குப் பக்கத்தில் விருஷபத்தை வாகனமாகவுடைய சிவபெருமான் ஆலயமும் திருமால் கோயிலும் உள்ளன. மேற்குப் பக்கத்தில் ஒரு புண்ணிய நதியும் ஓடும்.

---

1. குரு
2. சூரியன்
3. சுக்கிரன்
4. சனி
5. கும்பம்

இதுவுமது

3. மீனத்தில் சூழி யுண்டு வுத்தரம் புத்த ருண்டு
ஏனத்தின் முகத்தான் தென்கீழ் யானையின் கோஷ்ட [முண்டு
ஆனவிவ் வடையா ளத்துள் ஆகிய சமவூர் தன்னில்
தானவன் கங்கை சேயாய் ஜனிப்பனும் நவம தாக.

3. தென்மேற்குத் திக்கில் ஒரு கோட்டை உண்டு. வடதிசையில் புத்தராலயமும் வராக அவதாரமெடுத்த திருமால் கோயிலும் தென் கிழக்கில் விநாயகரின் ஆலயமும் உள்ளன. இங்ஙனமான அடையாளங் களுடன் விளங்குகின்ற சமநிலையான ஓர் ஊரில் வேளாளர் மரபில் இந்த ஜாதகன் தன் தந்தைக்கு ஒன்பதாம் பிறப்பாகத் தோன்றுவான்.

4. ஆகிய பிவனின் யோகம் அவன்தந்தை தாயின் யோகம்
பாகமாய்த் துணைவர் யோகம் பாரியை புத்திர யோகம்
மோகமாய் முன்பின் ஜன்ம மொழிகிறே மிந்நூல் [தன்னில்
தோகைவா கனனைப் பெற்ற சுந்தரி மேலுங் கேளே.

4. ஜாதகனுடைய யோகம் அவனைப் பெற்ற தாய் தந்தையரின் யோகம் உடன்பிறந்தவர் மனைவி மக்கள் இவர்களுடைய யோகம் முற்பிறவி மறுபிறவி ஆகிய இவற்றையும், பலன்களையும் இந்தச் சோதிட நூலில் கூறுகின்றேம். மயிலை வாகனமாகவுடைய சுப்பிர மணியக் கடவுளைப் பெற்ற சுந்தரியே! கேளுங்கள்.

தந்தையின் சகோதரபாவமும் அவன் இயல்புகளும்

5. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றவாண் பலத்தைக் [காணேம்
வந்திடுங் கன்னி நான்கு யறைகிறே மிவனுக் கேதான்
சந்ததம் பிதாகு ணத்தைச் சாற்றுவோ மிருநி றத்தான்
மூந்திய கோபி யாவன் மூலச்சூ டுடைய னென்றேம்.

5. ஜாதகனின் தந்தையின் வர்க்கத்தினரைப் பற்றிக் கூறுகின் றேம். சகோதரருண்டு என்று கூறக் கிரக பலமில்லை. சகோதரிகள் நால்வர் நிலையானவர் என்று சொல்லுகின்றேம். ஜாதகனுடைய தந்தை யின் குணங்களைச் சொல்லுகின்றேம். அவன் கரிய நிறமுள்ளவன். முன்கோபி. மூலச்சூட்டு நோயுடையவன் என்றேம்.

இதுவுமது

6. நந்தியும் பணிசே யில்லும் நற்பயி ரடிமை யுண்டு
வந்திடும் நிதியுஞ் செந்நெல் மாநில முதவி செய்வன்
செந்திரு கடாட்ச மெய்துஞ் சொன்னசொல் கேட்பா
[ளுகுஞ்
சிந்தையில் மரும மில்லான் செழிப்பான குடும்பி யாவன்.

6. காளைகள், பண்ணை, பசுக்கள் வீடு ஏவலாட்கள் பயிர் வகைகள் முதலியவற்றின் பெருக்கமுள்ளவன். இவனுக்குச் செந்நெற்பயிரால் வெகுவாகப் பொருள் சேரும். இவன் அதிகமாக நிலப் பெருக்கம் உள்ளவன். இலக்குமி கடாட்சம் பெற்று வாழ்ந்து வருவான். பிறர் சொல்லும் வார்த்தைகளை (சூசுதுகளில்லாமல்) கேட்பவன். மனத்தில் இரகசியமில்லாதவன். பெரியதொரு குடும்பத்தை அடைந்தவன்.

இதுவுமது

7. பரவுப காரி யாவன் பகைவரை ஜயிப்பா ளுகுஞ்
சிரமதில் வடுவு முள்ளான் சரீரமு முயர மில்லான்
கரங்காலு வலிவு முண்டு காரிழை விருப்பங் கொள்வன்
நிறையவே வார்த்தை கூறுவன் நிமலியே மேலுங்
[கேளே.

7. பிறருக்கு உபகாரம் செய்பவன். விரோதிகளை வெல்லுவான். தலையில் ஒரு வடு உள்ளவன். குட்டையான சரீரமுள்ளவன். உறுதியான கைகால்களை உடையவன். பெண்கள் இவனையடைய விரும்புவர். மனம் நிறைந்த வார்த்தைகளைப் பேசுபவன். தாயே! மேலுங் கேளுங்கள்.

ஜாதகனுடைய குணங்களைப் பின்வரும் இரு பாடல்கள் கூறும்

8. ஜாதக னிருசி வப்பன் சன்மார்க்கன் சமதே கத்தன்
[(பொறுமை யுண்டு)
சூதிலான் கிருஷி செய்வன் சுகபுசிப் பிச்சை யுள்ளான்
நாதனூர் பத்தி பூண்பன் நடனசங் கீதங் கேட்பன்
மேதினி யோர்க்கு நல்லன் விஷவாக்கு வுடைய னுமே.

8. ஜாதகன் கரிய நிறமுள்ளவன். நேர்வழியில் நடப்பவன். சமமான உடலமைப்புள்ளவன். (பொறுமையுள்ளவன்). மறைவில்லாதவன். விவசாயத்தைச் செய்து வருவான். உருசியுடன் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். சிவபெருமான்மீது பக்தியுடையவன். நாட்டியம் சங்கீதம் இவைகளைக் கேட்பதில் பிரியமுள்ளவன். உலகத்தவருக்கு நல்லவன். ஆனால் பேசும் வார்த்தைகளில் கொடுமை உள்ளவன்.

ஜாதகனுக்கு யோகமேற்படும் காலம்

9. மூப்பது வாண்டு மேலே மொழிகிறேம் பிரபல யோகம்
ஒப்புடன் கன்று காலி யுயர்நவ தானி யங்கள்
எப்பவும் வறுமை யில்லான் யாவரும் புகழ வாழ்வன்
எப்படி யோகஞ் சொன்னீர் இயம்புவீர் விவர மாக.

9. ஜாதகனுக்கு அவனது முப்பதாம் வயதுக்குமேல் விரிவான யோகம் ஏற்படும். கன்று கால்நடைகள் இவைகளின் பெருக்கம் அதிக மாகும். நவதானியங்கள் அதிகமாகக் கிடைக்கும். ஒருகாலத்திலும் தரித்திரமடையாதவன். எல்லோரும் கொண்டாடும்படியாக கீர்த்தி யுடன் வாழ்ந்து வருவான். ஜாதகனுக்கு யோகம் ஏற்படும் என்று எவ்விதம் சொல்லுகிறீர்கள்? அதை விவரமாகக் கூறுங்கள்.

யோகத்திற்குரிய கிரகநிலை

10. ஒன்பது பத்தோன் சேர்ந்து வுறைந்திட விலாபந்
[தன்னில்
நன்மையா யேழில் காரி நான்கினில் குருவும் நிற்க
அன்னவன் தனக்கு யோகம் அணுகிடு மினிமே லாகத்
துன்பமில் லாமல் வாழ்வன் தொல்புவி கீர்த்தி யேற்பன்.

10. ஒன்பது பத்துக்குடைய கிரகங்கள் (பாக்கியாதிபதியும் கர்மாதிபதியும் சேர்ந்து) லாபஸ்தானத்தில் இருப்பதாலும் சப்தமாதி பதியாகிய சனி ஏழாமிடத்தில் தன் வீட்டிலேயே இருப்பதாலும் நான் காம் வீட்டில் குரு இருப்பதாலும் ஜாதகனுக்கு யோகம் மேன்மேலும் விருத்தியாகும். அவன் துன்பங்களில்லாமல் வாழ்ந்து வருவான். உலகில் கீர்த்தியை அடைவான்.

யோக பலன்

11. வண்டியு நந்தி யெய்தும் வழக்கதிற் செல்லா னுகுந்
தண்டமு மற்ப மூண்டு திரவியஞ் செய்ய லாபங்
கண்டவர்க் கீத லுண்டு கடன்கொ ளான் முதலு மூண்டு
அண்டின பேருக் கெல்லாம் அருநிதி வுதவி செய்வன்.

11. மாட்டு வண்டியை வைத்திருப்பவன். வீண் வழக்கில் செல் லாதவன். வீண் செலவு சிறிது உண்டு. திரவிய லாபமும் உள்ள வன். யாசித்தவருக்குக் கொடுப்பவன். (பார்த்தவர்களுக்கெல்லாம் கொடுக்கும் குணமுள்ளவன்). கடன் வாங்காதவன். பெரிய முதற் பொருளை வைத்திருப்பவன். தன்னை யண்டி வந்து யாசித்தவருக்குப் பொருளுதவி செய்பவன். (லேவாதேவி செய்து வருபவன்).

சகோதரபாவம்

12. இப்பலன் மூப்பான் மேலே
யியம்பிலே மிவனுக் கேதான்
செப்புவோர் துணைவர் தம்மைத்
தீர்க்கமா மாண்பால் நான்கு
ஒப்புடன் மூத்தோர் மூன்று
உரைக்கிறே மிளையோ னென்று
தப்பித மில்லை நான்குஞ்
சங்கரி மேலுங் கேளே.

12. இவ்விதமான யோகங்கள் ஜாதகனுடைய மூப்பதாம் வயதுக்குமேல் ஏற்படும் தாயே! இனி ஜாதகனுடைய சகோதர பாவத்தைக் கூறுகின்றேரும். நான்கு சகோதரர்கள் தீர்க்காயுள் உள்ளவர் என்றேரும். இவனுக்கு மூத்தவர் மூவரும் இளையவர் ஒருவரும் ஆகிய நால்வரும் தீர்க்கமானவர் என்றும் கூறுகின்றேரும். பார்வதிதேவியே! கேளுங்கள்.

தாயின் குணங்கள்

13. அன்னையுஞ் சிவந்த மேனி
யழகுளா ளன்ன மீவள்
மன்னிய கணவ னோடு
மருவியும் பலமாய் வாழ்வள்
சொன்னசொல் தவறு ளாகுஞ்
சுகதுக்கங் கலந்து வாழ்வள்
தன்னுடை யினத்தா ருக்கு
மேன்மையாய் வாழ்வா ளாவாள்.

13. ஜாதகனுடைய தாய் சிவந்த நிறமும் அழகுமுடையவன். அன்புடன் அன்னமளிப்பவள். தன் கணவனுடன் சேர்ந்து சுகமாக வாழ்ந்து வருவாள். சொன்ன வார்த்தைகளை மீறுதவள். சுக துக்கங்கள் கலந்து வாழ்ந்து வருவாள் தன்னுடைய இனத்தவருக்கு மேலாக வாழ்ந்து வருவாள்.

தாயின் சகோதரபாவம்

14. பொறுமைநற் குணத்த ளாகும்
பொறுமையை நீக்கு வாளாம்
வருந்துணை யாண்பா லொன்று
மங்கையு மூன்று மாகும்
அறைகிறேந் துணைவன் சேதி
யாவர்க்கு நல்லோ னவன்
நிறையவே வார்த்தை கூர்வன்
நிருபர்கள் நேசங் கொள்வன்.

14. பொறுமையுடையவள். நற்குணமுடையவள். பொருமையில்லாதவள். உடன்பிறந்தவரில் சகோதரன் ஒருவனும் சகோதரிகள் மூவருமாவார்கள். இனி தாயின் சகோதரனுடைய பலத்தைச் சொல்லுகின்றேம். அவன் எல்லோருக்கும் நல்லவன். நிறைந்த மனத்துடன் பேசுபவன். அரசாங்கத் தொடர்புள்ளவன்.

ஜாதகன் தாய்மாமனின் குணம்

15. கல்வியை விருத்தி செய்வன்
காலாட்க ளுடைய னுகுஞ்
சொல்லிலே சிலேடை யுள்ளான்
சுபஞ்செய்வன் விஞ்தைஞ் செய்வன்
எல்லையால் ஜீவிப் பானும்
எடுத்தகா ரியஞ்ஜ யிப்பன்
அல்லலே வெளிக்காட் டாதான்
அனேகமா தரையே சேர்வன்.

15. கல்வியறிவைப் பெருக்குவான். ஏவலாட்கள் உள்ளவன். பேசும்போது இரு பொருள் படும்படியாகவே பேசுபவன். நல்ல காரியங்களைச் செய்பவன். வேடிக்கைகளையுஞ் செய்வான். பூமியினுல் ஜீவனம் செய்து வருவான். தான் ஆரம்பித்த காரியங்களை வெற்றியுடன் முடிப்பான். துன்பத்தை வெளியில் தெரிவிக்காதவன். பல பெண்களோடு சிற்றின்பம் அனுபவிப்பான்.

தாயின் முற்பிறவி

16. அன்னையின் பூர்வந் தன்னை
யறைகுறேம் பிருதிவி தன்னில்
பொன்பட்டு நெசவு செய்யும்
புகல்சௌராஷ் டிரரின் வம்சம்
இன்னவள் தனவா னுக்கு
விவளுமே வுதித்து மேலு
மன்னிய குடும்பி யாகி
மைந்தர்க ளுடைய ளாகி ;

16. தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சிபுரத்தில் சரிகைப்பட்டு நெசவைச் செய்யும் சௌராஷ்டிர வமிசத்தில், பெரிய தொரு செல்வவானுக்கு மகளாகப் பிறந்து, பெரிய குடும்பத்தையடைந்து புத்திர பாக்கியத்தைப் பெற்று ;

இறப்பு

17. பரவுப காரி யாகிப் பந்துவும் புகழ வாழ்ந்து
குலதெய்வந் தனிப்பூ சித்துக் குஞ்ஜரன் கோஷ்டத்
[துக்குப்
பலபல தீபம் வைத்துப் பஞ்சைகட் கன்ன மீந்து
நலமிலாக் காலன் பக்கல் நாயகி சென்ரு ளென்ரேரும்.

17. பிறருக்கு உபகாரம் செய்து வந்து தன் சுற்றத்தார் கொண்டாடும்படியாக உய்ந்து தன் குல தெய்வத்தை வழிபட்டுப் பூசைகளைப் புரிந்து யானை முகத்தையுடைய விநாயகரின் ஆலயத்தில் தீப கைங்கர்யத்தைச் செய்து வந்தாள். பல ஏழைகளுக்கு அன்னமளித்தும் வந்து இறுதியில் மரணமடைந்தாள்.

மறுபிறவி

18. குறைதலைக் கஞ்சன் தன்னுல்
குணமுடன் வரையப் பட்டுத்
திறமையாய்க் கங்கை சேயாய்
ஜனித்தவ ளிவளே யென்ரேரும்
அறைகிரே மிவள்பின் ஜன்மம்
அறுமுகன் தணிகை தன்னில்
மறைக்குல முதிப்பா ளாகும்
மங்கையுங் கேட்க லுற்ரூள்.

18. மீண்டும் குறைந்த தலைகளையுடைய பிரமதேவனுல் படைக்கப்பட்டு வேளாள குலத்தவளாகப் பிறந்தவள் இந்த ஜாதகனுடைய தாய் என்ரேரும். இனி இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்ரேரும். ஆறுமுகக்கடவுள் வாழும் திருத்தணிகையில் அந்தணகுலத்தவளாகப் பிறப்பாள். பார்வதிதேவியும் கேட்கலானுள்.

19. கங்கையின் குலமு தித்துக் காதலி மறுஜன் மத்தில்
பொங்கிய மறைக்கு லத்தில் புகுங்கா ரணங்க ளென்ன
மங்கையு மிச்சென் மத்தில் மனமது தளர்ச்சி யாயும்
எங்கள்போ லொத்தோ ருக்கு விவளன்ன மளித்த
[தாலும்;

19. இப்பிறவியில் வேளாள குலத்தவளாகப் பிறந்த இந்த ஜாதகனுடைய தாய் அடுத்த பிறவியில் செயலுள்ள அந்தண குலத்தவளாகப் பிறக்கும் காரணங்களென்ன? (கூறுங்கள் எனப் பார்வதிதேவி வினவ, முனிவர் பதில் உரைக்கின்றனர்). ஜாதகனுடைய தாய் இப்பிறவியில் இளகிய மனமுடையவளாகியும் எங்களைப்போலுள்ள துறவிகட்கு அன்னமளித்து வந்ததாலும்;

திருமணக்காலம்

20. தேவதாப் பத்தி கொண்டு சிந்தையுங் கவடில் லாமல்
தாவிய பேரைக் காத்துந் தானவ னிருப்ப தாலே
மேவுவாள் பிரம்ம சேயாய் வேந்தனு நாலில் தங்க
நேமியி லுதிப்பா ளென்றே நிகழ்த்துவோ
[மணத்தின் காலம்.

20. தெய்வபக்தியுடன் மனத்தில் சூதுகளில்லாமலும், அண்டி வந்தவரைக் காத்து வந்தாலும், அடுத்த பிறவியில் அந்தண குலத்தவளாகப் பிறப்பாள். குரு நான்காமிடத்தில் தங்கியிருப்பதால் தாய் அடுத்த பிறவியில் அந்தண குலத்தவளாகப் பிறப்பாள் இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேம்.

ஜாதகனின் திருமணக்காலமும் மனைவியின் குணமும்

21. இருபது விரண்டு வாண்டில் இவனூர்க்கு மேற்கி லேதான்
வருகுமே பாரி தானு மவளுமே யிருநி றத்தள்
பெரும்புத்தி பித்த தேகி பேசுமுன் கோபங் கொஞ்சம்
நெறியுளாள் யோக சாலி நிமலியே மேலுங் கேளே.

21. ஜாதகனுக்கு, இருபத்திரண்டாம் வயதில் திருமணம் நிகழும். மனைவி இவனுடைய ஊருக்கு மேற்கிலிருந்து வருவாள் அவள் இரு நிறமுடையவள். தாராள புத்தியுள்ளவள். பித்த தேக முடையவள். பேசுவதற்குமுன் கோபங் கொள்ளுவாள். நேர்மையையுடையவள். அதிர்ஷ்டமுள்ளவள். தாயே! மேலுங் கேளுங்கள்.

புத்திரபாவம்

22. சுதனுமே வாண்பால் மூன்று
தோகையு மொன்றே தீர்க்கஞ்
சதமாகும் நான்கு தானுஞ்
சஞ்சலம் நான்கு வென்றேரும்
முதலிலே வுதிக்கும் பீடை
யாகுமே விவனுக் கேதான்
வதிபன்தன் மூன்ஜன் மத்தை
யறைகிறேங் கேளுந் தாயே.

22. ஜாதகனுக்கு மூன்று புத்திரர்களும் ஒரு புத்திரியும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். நான்கு குழந்தைகள் தீர்க்காயுள் பெற்றவை. நான்கு குழந்தைகள் நிலையாமல் இறந்துபோம். முதலில் தோன்றும் குழந்தை நிலையாது. அது முற்பிறவித் தீவினையால் நேரிட்டது. ஆதலின் அவனுடைய முற்பிறவி விவரத்தைச் சொல்லுகிறேரும். தாயே! கேளுங்கள்.

23. வாரியி னேரந் தன்னில் மாபலி தனக்கு வுத்திரம்
பாரிய வூரி லேதான் பாலன்கோ குலமு தித்து
நாரியு மதலை யுண்டாய் நற்பசு விருத்தி யாகிச்
சீரிய குணமில் லாமல் செல்வங்க ளுடைய னாகி ;

23. சமுத்திரத்துக்குச் சமீபமாகவுள்ள மகாபலிபுரத்துக்கு வடக்கில் உள்ள பெரிய ஊரில் இடையர் மரபில் பிறந்து மனைவி மக்களைப் பெற்றுப் பசுக்களின் பெருக்கத்தை யடைந்து கோபங் கொள்ளாமல் வாழ்ந்து மிகுதியாகச் செல்வத்தைப் பெற்று ;

குணங்கள்

24. மறையவ ருறவு கொண்டு வள்ளல்மேல் சிந்தை யுண்டாய்
வருவோர்க்கு வன்ன மீந்து மாநிலங் கிருஷி செய்தும்
அரன்பூசை தனக்கு வின்னென் ஆவின்பா லளித்து
[வந்து
மறலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டு;

24. அந்தணர்களுடன் இனிய தொடர்பு கொண்டவன். தெய்வ பக்தி உள்ளவன். தன்னை அண்டி வந்தவர்கட்கு அன்னமளித்து வந்தான். உலகில் விவசாயம் செய்து சிவபெருமானுடைய பூசைக்குப் பசுவின் பாலைக் கொடுத்து வந்து இறுதியில் மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு ;

தந்தையின் முற்பிறவி

25. உதித்தவ னிவனே யென்றே முரைக்கிறேந்
[தந்தைக் கேதான்
சதியிலாப் பூர்வந் தன்னைச் சாற்றுவோங் காஞ்சி தன்னில்
வதிபனிக் குலத்தி லேதான் வந்துமே செட்டுச் செய்து
நிதிமிக வுடைய னாகி நேமியோர்க் குதவி செய்து ;

25. இப்பிறவியில் பிறந்தவன் ஜாதகன் என்றேரும். இனி ஜாதக னுடைய தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். காஞ்சி புரத்தில் இதே குலத்தில் பிறந்து வர்த்தகம் புரிந்து வந்து, செல்வ முடையவனாகி, உலகத்தவருக்கு பல உதவிகளைச் செய்து ;

மறுபிறவி

26. வஞ்சக வஞ்ச னாகி வள்ளல்மேல் பத்தி யின்றி
நஞ்சான காலன் பக்கல் நாயகன் சென்று மேதான்
கஞ்சனுல் வரையப் பட்டுக் கங்கையின் குலமு தித்தான்
தஞ்சமா யிவன்பின் ஜன்மஞ் சாற்றுவோங் கேளுந்
[தாயே.

26. வஞ்சக மனமுள்ளவர்கட்கும் வஞ்சகனுக இருந்து தெய்வ பக்தி யில்லாமல் வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் வேளாள குலத்தவனுகப் பிறந்தான். தாயே! இனி இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். கேளுங்கள்.

யோகம்

27. தன்னுடை வூர்க்கு மேற்கி லருகினில் பேரூர் தன்னில்
அன்னவன் நெசவு செய்யு மக்குலந் தனிலு தித்துப்
பொன்னுடன் பணியு முண்டாய்ப் புகழும்பூ மிகளு [முண்டாய்
இன்னவன் வாழ்வா னுகும் ஈச்வரி கேட்டி டாயே.

27. தன்னுடைய ஊருக்கு மேற்கில் அருகிலேயே உள்ள ஊரில் நெசவுத் தொழிலைச் செய்து வரும் செங்குந்த மரபினனுகப் பிறந்து பொன் ஆபரணங்கள் முதலியவற்றைப் பெற்று, பூமிகளை யடைந்து, வாழ்ந்து வருவான். பார்வதிதேவியே! கேளுங்கள்.

தந்தை தாயரின் இறுதிக்காலம்

28. மூன்றுண்டில் மேட மாத
மொழிகிறேந் தந்தைக் கேதான்
ஈன்றதோர் மாதா வுக்கு
இயம்புவோ மூப்பா னங்தில்
சான்றிடு தனுசு மாதந்
தசமியாங் கண்ட மென்றேம்
வேண்டியோர்க் குதவி செய்யு
மெல்லியே மேலுங் கேளே.

28. ஜாதகனுடைய மூன்றும் வயதில் சித்திரை மாதத்தில் தந்தை மரணமடைவான். அவனுடைய முப்பத்தைந்தாம் வயதில் மார்கழி மாதம் தசமி திதியில் தாய் மரணமடைவாள். வேண்டித் துதி செய்தவருக்கு உதவி புரியும் மெல்லிய இடையுடைய பார்வதியே! மேலும் கேளுமின்!

ஜாதகன் வயது

29. இன்னவன் மரண காலம்
இயம்புவோ மறுபா லென்றில்
மன்னிய துலாமா தத்தில்
வளர்பிறைத் திரயோ தசியில்

கன்னவில் மார்பு நோயால்
காலன்தன் பதிக்குச் செல்வன்
பின்வருஞ் ஜன்மந் தன்னை
பேசுவோந் தாயே கேளும்.

29. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றோம். அறுபத்தோராம் வயதில் ஐப்பசி மாதத்தில் சுக்கிலபட்சத் திரயோதசி திதியில் இரவில் மார்பு வலியால் மரணமடைவான். இனி மறுபிறவியைச் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

மறுபிறவி

30. உத்தரங் காசி தன்னில் உதிப்பனு மிக்கு லத்தில்
சித்தனு யரசன் பக்கல் செல்வனுஞ் ஜீவிப் பானும்
நித்திய முண்மைப் பத்தி நிமலனின் பூசை செய்வன்
அத்தியைப் பெற்ற மாதே யறைந்தன மொழிகுன் றுவே.

30. வடக்குத் திசையிலுள்ள காசியில் இதே குலத்தில் பிறப்பான். அரசாங்க உத்தியோகத்தை ஏற்று வாழ்ந்து வருவான். தினந்தோறும் உண்மையான பக்தியுடன் சிவபெருமானுக்குப் பூசைகளைப் புரிந்து வருவான். விநாயகக்கடவுளைப் பெற்ற தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

யோகம்

31. இன்னவன் பொதுயோ கத்தை
யியம்புவோங் கேளுந் தாயே
தன்னூரில் பாதி பாகம்
தந்துமே சேர்ப்பா னுகும்
அன்னவன் வறுமை யில்லான்
அவனுமே சல்லியங் கொள்ளான்
மன்னுதிருப் பணியுஞ் செய்வன்
வளர்சோலை செய்வா னுகும்.

31. ஜாதகனுடைய பொது யோகத்தை இனிக் கூறுகின்றோம். தாயே! கேளுங்கள். தன்னுடைய ஊரில் பாதி பாகத்தை (பாதி வீடுகளை) வாங்கிச் சேர்ப்பான். தரித்திரமில்லாதவன். கடன் வாங்காதவன். ஆலயத் திருப்பணிகளைச் செய்வான். சோலைகளை அமைப்பான்.

32. குடும்பமு முப்பா னுறில் கூறுவோம் வேற தாகும்
அடைவுட னைந்து பங்கு வறைந்தன மிவனுக் கேதான்
திடமதாய் வேறு யில்லஞ் செய்வனும் பொறுமை சாலி
உடன்பிறந் தோர்க்கு நேயன் உத்தமி மேலுங் கேளே.

32. ஜாதகனுடைய முப்பத்தாரும் வயதில் குடும்பம் வேருகும். இவனுக்கு ஐந்து பங்குகள் சேரும் (ஐந்தில் ஒரு பங்கு இவனுக்குக் கிடைக்கும் என்றும் கொள்ளலாம்.) பெரியதான வேறு வீடு ஒன்றைக் கட்டுவான். பொறுமையையுடையவன். உடன் பிறந்தவரிடத்தில் பிரியமுள்ளவன். தாயே! மேலும் கேளுங்கள்.

33. முத்துடன் மணிக லன்க ளெய்திடுங் கோவின் விருத்தி
பத்தினிக் கன்ப லுகும் பகைவரை யுறவு கொள்வன்
உத்தமக் குணத்த லுகும் உபாயமாய் வார்த்தை
[சொல்வன்
அத்தியை யீன்ற மாதே அம்பிகை யாளே கேளாய்.

33. ஜாதகனுக்கு முத்து மணிகள் முதலியவைகள் பதிக்கப் பெற்ற அணிகலன்கள் (பரிசிலாகக்) கிடைக்கும். பசுக்கள் பெருகும். மனைவிக்குப் பிரியமானவன். விரோதிகளை நட்பினராகச் செய்துவிடுவான். உயர்ந்த குணமுள்ளவன். தந்திரமாகப் பேசுபவன். விநாயகனைப் பெற்ற தாயே! அம்பிகையே! கேளுங்கள்.

ஜனன காலதசை

34. ஜனித்திடு காலந் தன்னில் சனிதசை யிருப்பு வொன்பான்
குனித்திடுந் திங்க ளிரண்டுங் குறைவுநா ளிருப தாகுங்
கனமுள துணைவர் விருத்தி கருமமுந் தந்தைக் கேதான்
சினமுன்டு ஜாதி பீடை சிலசில விரய மாமே.

34. ஜாதகன் பிறக்கும் காலத்தில் சனி மகாதசையிலிருப்பு ஒன்பது வருடங்களும் இரு மாதங்களும் இருபது நாட்களுமாம். அத்தசை காலத்தில் சகோதர விருத்தி ஏற்படும். தந்தைக்கு இறுதிக்கடன் களைச் செய்ய நேரிடும். பங்காளிகட்கும் பீடையுண்டு. விரோதத்தால் சிற்சில பொருட் செலவும் ஏற்படும்.

பயன்

35. பலவிதப் பிணியுங் காட்டும் பாலகன் தனக்கு மேதான்
நலமுளோர் விரோத மாகும் நற்றுணை சேத மாகுங்
குலவிய மாதுர் வர்க்கங் குறித்தனஞ் சூத கங்கள்
மலையிறை மகளே பின்பா லறைகிறேம் விவர மாக.

35. ஜாதகனுக்குப் பலவிதமான நோய்களுமேற்படும். நல்லவர்களின் பகை உண்டாகும். உடன் பிறந்தவர்கட்குத் தீங்கு நேரிடும். தன் தாயின் வர்க்கத்தினருக்கும் துன்பம் ஏற்படும். அசுபமும் நிகழும். மலையரசனின் தேவியே! மற்றதைப் பிறகு கூறுகிறேம்.

3. யானையின் கோஷ்டந் தங்கு
மிதுவலால் தெற்கில் காளி
மானமா யரசர் வாச
மருவிய பேரூர் தன்னில்
ஆனையும் வாச மாகும்
அநேகவா லயங்க ளுண்டு
தேன்மொழி மாதே யிவ்வாறு
சொல்லிய வடையா ளத்துள் ;

3. அப்பக்கத்திலேயே விநாயகரின் ஆலயமுள்ளது. இதுவின்றி மற்றொரு காளி கோயில் தெற்குப் பக்கத்திலும் இருக்கும். அரசர் அவ்வூரில் வாழ்ந்து வருவார். அத்தகைய பெரிய ஊரில் ஜாதகி தோன்றுவாள். அவ்வூரில் யானைகள் வசித்து வரும். கோவில்கள் அதிகமாக உள்ளன. இனிய வார்த்தைகளைப் பேசும் தேவியே ! நாங்கள் கூறிய இவ்வித அடையாளங்களுள்ள ;

4. உதிப்பளா மிந்தச் சேயும் உரைக்கிறே மிவளின் யோகம்
மதிக்கிற வன்னை யோக மவள்தந்தை தூணவர் யோகஞ்
சதியிலாப் புத்திர யோகந் தன்வரன் முன்பின் ஜன்மம்
விதியதாய் நவக்கோ ளாய்ந்து விளம்புவோ மிந்நூல்
[தன்னில்.

4. (வீட்டில்) ஜாதகி பிறப்பாள் என்றேரும். இவளுடைய யோகம், தாய் தந்தையர், உடன் பிறந்தவர், புத்திரர்கள், கணவன் இவர்களின் யோகம், முற்பிறவி மறுபிறவியின் விவரங்கள் ஆகிய இவற்றை நவக்கிரகங்களின் நிலையை ஆராய்ந்து பார்த்து இந்தச் ஜோதிட சாஸ்திரத்தில் சொல்லுகின்றேரும்.

தந்தையின் சகோதர பாவம்

5. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றுவோம் நவம தாகும்
விந்தையா யாண்பா லொன்று மேவிய கன்னி யிரண்டு
சந்ததம் விருத்தி யென்றேஞ் சீரண மற்ற வெல்லா
முந்திய பிதாகு ணத்தை மொழிகிறேங் கேளுந் தாயே.

5. தந்தையின் வர்க்கத்தாரைப்பற்றிக் கூறுகின்றேரும். உடன் பிறந்தவர் ஒன்பதின்மராவர் அவர்களில் சகோதரன் ஒருவனும் சகோதரிகளிருவரும் நீண்ட ஆயுளுள்ளவர் என்றேரும் மற்றும் தோன்றியவரெல்லோரும் நிலையில்லாதவர் இனி தந்தையின் குணவரலாறுகளைக் கூறுகிறேரும். தாயே ! கேளுங்கள்.

ஜாதகியின் தந்தையின் குணவிசேஷங்கள்

6. இருநிற நீட்சி யுள்ளா
னின்பமாய் வார்த்தை சொல்வன்
பெருமவர் நேசங் கொள்வன்
பூமியோர்க் குதவி செய்வன்
அரன்பத்தி பூண்பா னுகும்
ஆவுகள் விருத்தி யுள்ளான்
சிறுமையென் றோரைக் காப்பன்
ஐயஞ்செய்வ னெடுத்த வெல்லாம்.

6. கருமை கலந்த சிவந்த நிறமும் உயரமுமான சரீரம் உள்ளவன். பிறர் இன்புறும்படி பேசுபவன். பெரியோர்களின் நட்பைக்கொள்ளுவான். நிலச்சுவான்தார்கட்கு உபகாரம் செய்பவன். சிவபக்தியுள்ளவன். பசுக்களின் பெருக்கமுடையவன். ஏழைமையை யடைந்தவர்கட்கு உதவியளிப்பவன். எடுத்த காரியங்களை வெற்றியுடன் செய்து முடிப்பான்.

பத்மரேகை

7. தடபுடல் செய்கை யுள்ளான் சந்தேக மனத்த னுகும்
விடம்போலே கோப முன்னல் மேவிப்பின் சாந்த
[முண்டாம்
மடையரை நாஸ்தி செய்வன் மறுமொழி யதிகங் கூறுன்
படபட நடையு முள்ளான் பங்கய ரேகை யுண்டு.

7. ஆடம்பரச் செய்கையுள்ளவன். சந்தேகப்படும் இயல்பினன். சர்ப்பம்போல் விரைவில் கோபம் கொள்ளுவான். ஆனல் சீக்கிரத்தில் சாந்தமடைவான். மூடர்களின் உறவை அறவே ஒழித்து விடுபவன். எதிர் வார்த்தை பேசாதவன். வேகமாக நடக்கும் இயல்பினன். கையில் பத்மரேகையுள்ளவள்;

தந்தையின் மனைவியர்

8. ரோமங்க ளதிக மில்லான் நூவலுப தேசங் கொள்வன்
சேமமாங் குடும்பி யாவன் ஜனசகா யங்கள் செய்வன்
மாமிக ளிரண்டே யாகும் வந்தவர்க் கன்ன மீவன்
நேமியோர் மெச்ச வாழ்வன் நிமலியே மேலுங் கேளே.

8. தலையில் அதிக ரோமங்களில்லாதவன். வேதாந்த உபதேசங்களைத் தருந்த ஆசிரியர் மூலம் கேட்பவன். சுகமுடைய குடும்பமுள்ளவன். ஜனங்களுக்கு உபகாரி. இரு மனைவியரை அடைந்தவன். அண்டிவந்தவர்கட்கு அன்புடன் அமுதைப் படைப்பவன். உலகத்தவர் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். தாயே! மேலும் கேட்பீராக.

தந்தையின் இயல்புகள்

9. வித்தையி லபாரன் நூலு மிகுதியாய்க் கொள்வா னுகும்
புத்திமார் தமக்கு நேயன் பாலர்மே லாசை யுள்ளான்
சித்திர வீடு செய்வன் செப்புவான் கட்டு வார்த்தை
நித்தியஞ் சீல னுவன் நிகர்தந்தை யாஸ்தி காணுன்.

9. வித்தையை நன்கு அப்யசித்தவன். நூல்களை நன்கு ஆராய்ச்சி செய்து அறிந்தவன். புத்திசாலிகட்குப் பிரியமானவன். குழந்தைகளின் மீது விருப்பமுள்ளவன். அழகிய வீட்டைக் கட்டுவான். வார்த்தைகளைப் புனைந்து பேசுபவன். நல்லொழுக்கமுள்ளவன். தன் தந்தையினுஸ்திக ளில்லாதவன்.

ஜாதகியின் ஜனனம்

10. இக்குண முடையா னுக்கு இருதார மினையா ளுக்கு
மிக்கவே நான்காஞ் ஜன்ம மேவிடு மிந்த மாது
மைக்கண்ணி குணத்தைச் சொல்வேன் வாததே கத்தா
[ளாகும்
சிக்கன முடையா ளாகுந் தீரமாம் நெஞ்ச முள்ளாள்.

10. இவ்விதக் குணங்களுடையவனுக்கு ஏற்பட்ட இரு மனைவியரில் இளையவளுக்குப் பிறந்தவள் இந்த ஜாதகி என்றேரும். அவள் நான்காவது குழந்தையாகத் தோன்றியவள். மையைத் தீட்டும் அழகிய கண்களையுடைய பெண்ணின் குணத்தைக் கூறுகின்றேரும். வாயு ரோகமுடைய சரீரி. செட்டாக இருப்பவள். தைரியமுள்ள மனத்தள்.

ஜாதகியின் குணங்கள்

11. பால்பாக்கிய முடைய ளாகும் பந்துவும் புகழ வாழ்வள்
சீலமுங் கொஞ்ச முண்டு சிறுத்தவர்க் குதவி செய்வள்
ஞாலமேல் பொறுமை சாலி நற்புத்தி யூக முண்டு
காலத்தை யறிந்து சொல்வள் கண்முகம் வசிய முள்ளாள்.

11. ஊழ்வினைப் பாக்கியமுள்ளவள். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவாள். சிறிது நல்லொழுக்கமுள்ளவள். சிறுமையடைந்த ஏழைகட்கு உபகாரம் செய்பவள். உலகில் பொறுமை யுடையவள். புத்திசாலி. ஊகமுடையவள். வருங்காலத்தை யறிந்து சொல்லக் கூடியவள். முகம் கண்கள் இவை வசீகரமாக உள்ளவள்.

12. பலபணி யுடைய ளாகும் பஞ்சைமே லீரக்க மாவள்
குலவிடும் மூலச் சூடு கோதையும் மர்ம முள்ளாள்
தலமது தோய்ந்தோர்க் கன்பள் தான்பெரு தனமு
[முள்ளாள்
நிலைமையாம் புத்தி சாலி நிகழ்த்துவோர் துணைவன்
[தன்னை.

12. பலவித ஆபரணங்களுள்ளவள். ஏழைகளின் மீது இரங்கும் சுபாவத்தினள். மூலச்சூட்டு நோயுள்ளவள். இரகசியமுள்ளவள். பல புண்ணிய தேசத்துக்குச் செல்வாள். பரதேசிகளிடம் பரிவுள்ளவள். பெருஞ் செல்வமுள்ளவள். தான் என்ற அகம்பாவமுடையவள். நிலையான புத்தியுள்ளவள். (சஞ்சலமில்லாதவள்) இனி உடன் பிறந் தவரைப்பற்றிக் கூறுகின்றேம்.

ஜாதகியின் உடன்பிறப்பு

13. ஜாதகி தனையவர் தம்மைச் சாற்றுவோ மேழு தாகும்
மேதினி மூத்தோ ருண்டு விளங்கிடும் பெண்பா லாக
நீதியா யிளையோ னுண்பால் நிகழ்த்துவோ மொன்றே [யாகும்
மாதவத் தாலே தோன்றும் வருங்கன்னி யொன்று [மாகும்.

13. ஜாதகியின் உடன் பிறந்தவரைப் பற்றிக் கூறுகின்றேம் அவர் எழுவராவர். அவர்களில் மூத்தவர் இருவர் பெண்குழந்தை களாம். இவளுக்குப் பின் பிறந்த சகோதரன் ஒருவனே என்றேம். மிகுந்த தவங்களியற்றியபின் தோன்றிய இளைய சகோதரி ஒருத்தி யுண்டு.

14. ஆகிய பெண்ணி ரண்டு அவனியில் ஆணு மொன்று
பாகமாய் மூன்றுந் தீர்க்கம் பிருகுமே யிவ்வா றுசொல்ல
வேகமாய்ப் பராசர் தாமும் விளம்புவார் சங்கை யொன்று
மோகமாய் தனையவர் தோஷ மேவிய காரணம் சொல்.

14. ஆகிய பெண்குழந்தைகள் இருவரும் ஆண்குழந்தை யொன் றும் ஆகிய அம்மூவரும் நிலையானவர். பிருகு முனிவர் இவ்விதம் சொல் லப் பராசர முனிவர் கூறுகின்றார். ஜாதகிக்குச் சகோதர தோஷ மேற் படக் காரணமென்னவென்று சொல்லுமின் !

15. .....முனியே கீர்தாம்
செப்புவாய் விவரந் தன்னைச் சனியுமே வுச்ச மாக
மெய்ப்புடன் குஜனு மாட்சி மேவியே பார்ப்ப தாலே
செப்பினேம்.....

15. .....முனிவரே! தாங்கள் விவரமாகக் கூறுங்கள். சகோதர ஸ்தானமாகிய துலாத்தில் சனி உச்ச மாகவும் சகோதரகாரகனாகிய அங்காரகன் ஆட்சியாகவுமிருந்து சகோதர ஸ்தானத்தைப் பார்ப்பதால் அவ்விதம் நாங்கள் சொன்னோம்.

16. ஜயமுனி யிதனைக் கேட்டுத் திடுக்கென வுரைக்க லுற்றூர்
வியத்தவன் சனியோ டுற்று மேவியே யிருப்ப தாலே
.....
.....தவத்தி னலே நிலைத்திடுந் தீர்க்க மாக.

16. ஜயமுனிவர் இவ்வார்த்தைகளைக் கேட்டு திடீரென்று பேச லானார். விரயஸ்தானத்துக்குரிய சந்திரன் சனியுடன்கூடி துலாத்தில் (சகோதர ஸ்தானத்தில்) இருப்பதால்..... .....
.....முற்பிறவியில் செய்த தவத்தால் தீர்க்காயுளுடன் இருக்கும்.

17. .....
.....புரிய வேண்டும்
பவங்களு முன்ஜன் மத்தில் புகலு வீரந்தச் சங்கை
அவனியில் சங்கை தன்னை யறிவிப்பீர் விவர மாக.

17. ....
.....முற்பிறவித் தீவினையால் ஏற்பட்டது என்றோம். அந்தத் தீவினையைக் கூறுங்கள். உலகில் முற்பிறவியில் ஏற்பட்ட தீவினையை விவரமாகக் கூறுகின்றார்.

தாயின் முற்பிறவி

18. அன்னையால்.....
.....சொல்வா ராயகன் மனம்போல் வாழ்வள்
பின்னமில் லாத தேகி பித்ததே கத்தா ளாகும்
அன்னவள் மூர்க்கங் கொஞ்சம் அணுகிப்பின் சாந்த
[முண்டு.

18. தாயாரால்..... .....
.....சொல்லுவாள். தன் கணவனது மனமறிந்து வாழ்க்கையை நடத்துவாள். ஊனமில்லாத சரீரத்தையுடையவள். பித்தரோகமுடையவள். சிறிது முன் கோபமுமுள்ளவள். அது விரைவில் சாந்தமடையும்.

19. .....
வந்தவ ளிவளே யென்றே மன்னம்போல் சாய
[லுள்ளாள்
நிந்தையு மில்லா ளாகும் நிமலியும் யோக சாலி
தந்தமுந் தேய்வு முள்ளாள் சங்கரி மேலுங் கேளே.

19. இவ்விதம் தோன்றியவள் என்று கூறுகின்றோம். அன்னத்தைப் போன்ற அழகிய (நடையுள்ள)வள். பழியேற்காதவள். அதிர்ஷ்டமுடையவள். பற்கள் தேய்வுற்று இருக்கும். பார்வதி தேவியே! மேலும் கேளுமின்.

20. .....என்று சொல்வோங் கன்னியு மவ்வாறு
கனமுட னிரண்டுந் தீர்க்கங் கனத்ததா யில்ல நீங்கும்
வினையாலே யவள்தன் பூர்வம் விளம்புவோங் [1]தேயு
[வுத்தரம்
அனையவே பேரூர் தன்னிற்.....குலமு திந்து ;

20. .....என்று கூறுகின்றேம். புத்திரியும் அவ்விதமே என்றும் அவ்விருவரும் நீண்ட ஆயுள் உள்ளவர் என்றும் பெற்றதாயின் வீட்டைவிட்டு விலக நேரிடும் என்றும் கூறுகின்றேம். அஃது அவள் செய்த முற்பிறவித் தீவினையால் நேரிடும். இனி அவளுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். திருவண்ணுமலைக்கு வடக்கில் உள்ள பெரிய ஊரில்.....குலத்தில் பிறந்து ;

தாயின் முற்பிறவி

21. வறுமைக ளில்லா ளாகி மைந்தர்க ளுள்ளா ளாகிப்
பெரும்பணி யதிய முண்டாய்ப் பிரபலக் குடும்பி யாகித்
திருமகள் வாழு நாளில் தீங்கதைச் சொல்லக் கேளாய்ப்
பரம்பரை முனியு மொன்று பெருகிற்றுக் கொல்லை
[தன்னில்.

21. தரித்திரமடையாதவளாகிப் புத்திரபாக்கியத்தைப் பெற்று ஆபரணங்களின் பெருக்கமடைந்து கீர்த்தி பெற்ற குடும்பத்தை அடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். கேட்பீராக. இவளுடைய வீட்டுக்கொல்லையில் வெகுகாலமாக முனியொன்று வசித்து வந்தது.

முனியைத் தொழாமலிருந்ததாலேற்பட்ட சாபம்

22. குலதெய்வ மாக முன்னோர் போற்றினர் வெகுநா ளாகத்
தலைவியு மதன்மே லிச்சை தான்வையா ளாகி யேதான்
நிலைமையாய் நின்று விட்டாள் நேமியில் முனியுந் தானுந்
தலம்விட்டு வேறு யில்லஞ் சார்ந்துப்பின் கோப முற்று ;

22. அம்முனியை இவளுடைய முன்னோர்கள் குல தெய்வமாக எண்ணித் தோத்திரம் செய்து வெகுகாலமாக வணங்கி வந்தனர். இவள் அத் தெய்வத்தின் மீது பக்தியில்லாதவளாகி அம்முனியைத் தொழாமலிருந்தாள். அம் முனியும் அவ்வீட்டைவிட்டு வேறு வீடு சென்றது. பிறகு கோபங்கொண்டு ;

---

1 திருவண்ணுமலை. இது பஞ்சபூதத் தலங்களில் ஒன்று 426 ஆம் பக்கங் கீழ்க் குறிப்பைக் காண்க.

முனியின் சாபம்

23. முன்னோர்க ளென்னைத் தானு
முதற்குல தெய்வ மென்று
தன்பந்து யாவும் போற்றிச்
சண்டாளி மதிக்கா விட்டாள்
அன்னவன் சுதர்க ளெல்லாம்
அந்தகன் பக்கல் சேர்ப்பேன்
பின்ஜன்மந் தோன்றி னாலும்
பிழைசெய்வேன் சேயா ணுக்கு.

23. (உன்னுடைய) முன்னோர்கள் என்னை முதல் குல தெய்வமாக எண்ணித் தன் சுற்றத்தாருடன் வணங்கி வந்தனர். ஆனால் பெரிய பாவியாகிய இவள் என்னை மதிக்காமலிருந்து விட்டாள். அதனால் நான் இவளுடைய குழந்தைகளை யெல்லாம் அழிப்பேன். மறுபிறவி எடுத்தபோதிலும் தோன்றும் ஆண் குழந்தைகளைக் கொல்லுவேன்.

இதுவுமது

24. இவளில்லம் பாழாய்ச் செய்வேன் ஏகின ஜன்மந்தானும்
அவபங்க ளடையச் செய்வேன் அம்முனி யிவ்வாறு [சொல்ல
வவ்வியே வந்தத் தோஷ மறுவிற்று விச்சென் மத்தில்
புவ்விய புத்திர ரெல்லாம் போகிற்று யெமன்ப திக்கு.

24. பிறந்த வீட்டையும் பாழடையச் செய்வேன். மறுபிறவியில் ஈண் அபவாதங்களை அடையும்படி செய்வேன் என்றும் முனி சொல்லியது. அந்தத்தோஷம் இவளைப்பற்றி இப்பிறவியிலும் தொடர்ந்தது. பெற்ற குழந்தைகளெல்லாம் மரண மடைந்தன.

சாப பலன்

25. மாதுவு மந்தி யத்தில்
வருஞ்சுதர் சஞ்ச லத்தால்
நீதியாய்க் காலன் பக்கல்
நேர்ந்தன ளவளே யென்றோம்
போதவே பிரம னாலே
பூமியில் வரையப் பட்டுக்
கோதிலாச் செக்கான் வம்சங்
கோதையு முதித்தா ளென்றோம்.

25. இப் பெண்ணும் தன் கடைசிக்காலத்தில் புத்திர சோகத்தால் மரண மடைந்தாள். மீண்டும் பிரமதேவனால் இப்பூமியில் படைக்கப்பட்டு வாணியர் மரபில் பிறந்தாள் என்று சொல்லுகிறோம்.

26. இந்ததோர் ஜன்மந் தன்னில் இலகிடும் முனியின் குற்றந்
தந்தையில் பாழ தாகுந் தன்வர னில்ல மில்லாள்
வந்திடு சுதராண் தோஷ மங்கையுங் கேட்க லுற்றுள்
முந்தியே தோஷந் தீரக் கூறுவீர் கிரியை யொன்று.

26. இப்பிறவியில் முனியின் சாபம் தொடரும். தான் பிறந்த வீடு பாழடையும். தன் கணவனுடைய வீடும் இவளுக்குக் கிடைக்காது. இவள் பெறும் புத்திரர்கட்குந் தீங்குண்டாகும். பார்வதி தேவி வினவலானர். முதலில் இத் தோஷங்கள் தீரச்சாந்தியொன்று சொல்லுங்கள்.

புத்திரதோஷம் நீங்கச் சாத்தி

27. கிரகசாந் திகளுஞ் செய்து கௌரியின் மூலந் தன்னை
விரும்பியே தகடு தன்னில் வைத்துமே பலியுந் தந்து
தருமமாய் மூலந் தன்னைச் சகத்திரஞ் ஜபித்து மேதான்
திருமக ளணிவா ளாகில் தீவினை விலகு மென்றோம்.

27. நவக்கிரக சாந்தி செய்து அம்மனின் மூலாட்சரத்தை நன் மனத்துடன் (செப்புத்) தகட்டில் எழுதி, அதற்கு வேண்டிய பலியைக் கொடுத்து, சக்தியின் பீஜாட் சரத்தை ஆயிரம் தடவை ஜபித்து, இவள் அத்தகட்டினை அணிந்துவந்தால் தீவினைகள் நீங்கும் என்றோம்.

சாந்தி செய்யும் முறை

28. மாதுவுங் கேட்க லுற்று ளறைந்திட்டீர் கிரக சாந்தி
ஓதுவீர் விவரந் தன்னை யுரைக்கிறோங் கேளுந் தாயே
தீதிலாக் கலசந் தானியஞ் சமித்தினு லோமந் தானும்
போதவே நவமாய் வைத்துப் பிம்பமு மிரண்டு மாக ;

28. பார்வதி தேவி மீண்டும் வினவலானள். கிரகசாந்தி செய்ய வேண்டிய கிரமத்தைச் சொல்லுங்கள். தாயே! கூறுகின்றோம். தீங்குகளில்லாத ஒன்பது கலசங்கள் வைத்து அவற்றில் நவதானியத்தைச் சேர்த்து ஒன்பது சமித்தால் ஹோமம் செய்து பிறகு (ஸ்திரீபுருஷ) உருக்கள் இரண்டு செய்து ;

இதுவுமது

29. ஆடையு மவட்டுச் சாத்தி யவள்கையா லோமஞ் செய்து
நீட்டிய சத்தி பூசை நுவலுவோ மது மாமிசங்கள்
கூடிய முன்பாய்.....கூறுவோ மூலந் தன்னை
ஆடியே அய்யுங் கிலியுஞ் சவ்வுமங் வென்று மேதான்.

29. (அவ்வுருக்களுக்கு) அந்தக் கலசங்களுக்குப் புத்தாடைகள் சாத்தி அப்பெண்ணின் கையால் ஹோமம் செய்யவும் நீண்ட சக்தி பூஜையைச் செய்யும் விவரங்களைக் கூறுகின்றோம் (மது மாமிசங்களை

நிவேதனம் செய்து முனியின் ஆத்மத் திருப்திக்காக) அதற்கு எதிரில் சக்தியின் மூலாட்சரத்தைச் சொல்லி, ஏ, ஐ, கிலி, சவ், மவ் என்ற ;

30. ஈச்வரி யைந்தெ ழுத்தை யின்பமாய் ஓதி யேதான்
.....தோஷம் நீங்கி
பதியினில் சுதராண் தோன்றிப் பெருகியே தீர்க்க மாக
வதிபதி செய்யா ளாகில் மதலையாண் விருத்தி தோஷம்.

30. ஈச்வரியின் ஐந்தெழுத்தை மனமுருகிச் சொல்லி.....
.....புத்திர தோஷம் நீங்கி வீட்டில் ஆண் குழந்தை தோன்றி நீண்ட ஆயுளுடனிருக்கும். ஜாதகி செய்யாவிடில் ஆண் குழந்தைக்குத் தோஷமுண்டு.

தாயின் மறுபிறவி

31. அன்னையின் பின்ஐன் மத்தை
யறைகிறேங் கடையூர் தன்னில்
இன்னவள் சத்திரியச் சேயாய்
இயம்புவோம் பெருமை யுண்டாய்ப்
பொன்னெடு பணிதி பெற்றுப்
புகழ்ச்சியாய் வாழ்வா ளாகுஞ்
சொன்னசொல் குன்றி டாவே
தோகையே மேலுங் கேளே.

31. இனி தாயின் மறுபிறவியைச் சொல்லுகின்றேம். திருக்கடையூரில் சத்திரிய குலத்தவளாகப் பிறந்து பெருமையுடைய வளாகப் பொன் ஆபரணங்களைப் பெற்றுக் கீர்த்தியுடன் வாழ்ந்து வருவாள். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. தாயே! மேலும் கேட்பீராக.

தந்தையின் முற்பிறவி

32. தந்தையின் முன்ஐன் மத்தைச் சாற்றுவோங் காஞ்சி
[கீழ்ப்பால்
மூந்திய பேரூர் தன்னி லுதித்தனன் கௌரி வம்சந்
தன்தன மூடையோ ஞகிச் செட்டுக்க ளதிகஞ் செய்து
சந்தத மணவி மைந்தர் தன்னுடன் வாழு நாளில் ;

32. இனி தந்தையின் முற்பிறவியைக் கூறுகின்றேம். காஞ்சீபுரத்துக்குக் கிழக்கில் உள்ள பெரிய ஊரில் கௌரிகர் வம்சத்தில் பிறந்து தன்னுல் சம்பாதிக்கப்பட்ட பொருளை அதிகமாக உடைய வணிக வர்த்தகத்தை விரிவாகப் புரிந்து வந்து மனைவி மைந்தருடன் வாழ்ந்து வருங்காலத்தில் ;

முற்பிறவித் தீவினை

33. மறையவ னொருவன் தானு மாரன்பால் நேசஞ் செய்து
பொருளது கொடுக்கல் வாங்கல் செய்துமே வாழு நாளில்
அரிவையர் கற்பின் மிக்காள் அம்மறை மனைவி தானுந்
திருமக ளொப்ப தாகுந் தேவிமேல் காதல் கொண்டு ;

33. அந்தணர் குலத்தில் தோன்றியவன் ஒருவன் இவனிடம் நட்புக் கொண்டு கொடுக்கல் வாங்கல் செய்து வாழ்ந்து வருங்காலத்தில் கற்பில் உயர்ந்தவளாகவும் இலக்குமியையொத்த அழகியாகவும் செல்வியாகவு மிருந்த அவ்வந்தணனின் மனைவியின்மீது ஜாதகியினுடைய தந்தை மையல்கொண்டு ;

அந்தணருல மாதின் கற்பையழித்தது

34. வரனில்லா வேளை பார்த்து மாதுபா லணுகி யேதான்
குறையான வார்த்தை சொல்லக் கோதையு மதைய
[றிந்து
மறைமாது மோகம் வேண்டா மருவினுல் நரக மெய்தும்
விரைவினில் புத்தி நீக்கு வித்தகி சொல்லும் போது ;

34. கணவனில்லாத வேளை பார்த்து அவ்வந்தண குலப் பெண்ணை அடைந்து தீய வார்த்தைகளைச் சொன்னன். அப்பெண்ணும் இவனுடைய கருத்தை அறிந்து கூறலானாள். "அந்தண குலத்துப் பெண்ணாகிய என்மீது வீண் மோகம் கொள்ளலாகாது. என்னைப் புணர்ந்தால் உன் குலத்துக்கு அழிவு ஏற்படும். விரைவில் இவ்வெண்ணத்தை ஒழி" என்று அப்பெண் சொல்லும்போது ;

35. இந்தவாறு மாது சொல்ல விவள்பேரி லாசை யாலே
மூண்டிய பலவந் தத்தால் மாதையும் போகஞ் செய்தான்
அந்தநேர மாது தானு மறைகுவாள் மனவெ றுப்பால்
எந்தனைக் கற்ப ழித்து என்வார்த்தை கேளாப் பாவி ;

35. இவ்விதமாக அந்தணர் குலத்துப்பெண் சொல்லும்போது அவள்மீது உள்ள காமத்தால் இவன் பலாத்காரமாக அவளிடம் இன்பம் அனுபவித்தான். அந்தண குலத்துப்பெண் மனத்தில் வெறுப்புற்றுக் கூறுகிறாள். "என்னுடைய கற்பை அழித்து மான பங்கப்படுத்தி என்னுடைய வார்த்தைகளைக் கேளாத பாவியே!

சாபம்

36. வமிசமும் விளங்கா தென்று மறைமாது கூறிச்
[சென்றாள்
துன்மையா யந்தச் சாபந் தொடர்ந்தது விதுவல் லாமல்
இன்பமில் லாத வேழை யீன்றதஞ் சுதர்க்கு வன்னம்
நன்மையாய்க் கேட்கும் போது காயகன் கோப முற்று ;

36. உன்னுடைய வம்சம் விளங்காது" என்று கோபத்துடன் சொல்லி விட்டுச் சென்றுள். தீங்கான அந்தச் சாபம் இவனைப் பற்றியது. இதுதவிர வேறு ஒன்றும் கூறுகின்றேம். சுகமில்லாத ஏழைப் பெண் ஒருத்தி தன் குழந்தையின் பசியைப் போக்க இவன்பால் அணுகிச் சிறிது அன்னம் அளிப்பாய் எனத் தாழ்வுடன் கேட்கும் போது அவன் கோபங் கொண்டு ;

ஏழை சாபம்

37. பலவித வார்த்தைச் சொல்லப் பாவையு மனமே வெட்கி
நிலையிலாக் குடும்பி யாகி நிகழ்த்திய பின்னன் மத்தில்
பலமுறுச் சுதரா னென்று பாவையுஞ் சொல்லிச்
[சென்றுள்
உலவிற்று வந்தத் தோஷம் உத்தமி கேட்டி டாயே.

37. பலவிதமான அடாத வர்த்தைகளைக் கூறினன். அப் பெண்ணும் மனமொடிந்து கூறுகின்றுள். உன் குடும்பம் நிலையில்லாத தாகி மறுபிறவியில் குழந்தைகள் தோன்றினும் நிலையாது என்று சொல்லி விட்டுச் சென்றுள். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது. தாயே ! கேளுங்கள்.

38. அச்சென்ம மந்தி யத்தில் அவர்சுதர் யாவு நீங்கித்
துச்சான காலன் பக்கல் தொடர்ந்துப்பின் மறையோ
[னுலே
தொல்புவி வரையப் பட்டுத் தோன்றிய விப்பி றப்பில்
மல்கிய செக்கான் வம்ச மீன்றனனென்று சொன்னேம்.

38. அப்பிறவியின் இறுதியில் தன் புத்திரர்கள் யாவரையும் இழந்து தீய மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பூமியில் பிறந்தான். இப்பிறவியில் வாணியர் குலத்தில் பிறந்தான் என்று கூறுகின்றேம்.

புத்திரதோஷம்

39. மாதவள் சாபத் தாலே
மைந்தராண் தோஷ மெய்தும்
ஓதுவே னதற்குச் சாந்தி
யொண்டொடி யாட்குச் சொன்னப்
போதவே கிரியை செய்யில்
பேதையர் சாப நீங்கி
மேதினில் சுதராண் விருத்தி
விளம்புவோ மிவனுக் கேதான்,

39. அந்தணப்பெண்ணிட்ட சாபம்போல் புத்திரதோஷ மேற்படும். அதற்குச் சாந்திகளைச் சொல்லுகின்றோம். ஜாதகியின் தாய்க்குச் சொல்லியதுபோல் இவனுக்கும் சாந்தி செய்தால் பெண்ணின் சாபம் விலகி உலகில் புத்திர பாக்கியம் ஏற்படும் என்றோம்.

பின்ஜன்மம்

40. தந்தையின் பின்ஜன் மத்தைச் சாற்றுவோங் கலிங்க [நாட்டில்
மூந்திய சத்திரியச் சேயா யுதித்துமே பெருமை யாகிக்
[1]கந்துகந் துரக முண்டாய்க் காளையும் வாழ்வா னுகும்
இந்திர னிறைஞ்சு மாதே இம்மொழி தப்பா வாமே.

40. தந்தையின் மறுபிறவியை இனிக் கூறுகின்றோம். கலிங்க நாட்டில் சத்திரிய குலத்தவனுகப் பிறந்து பெருமையுடன் யானை குதிரைகளைப் பெற்று அரசன்போல் வாழ்ந்து வருவான். இந்திரன் தோத்தரிக்கும் தாயே! இவ்வார்த்தைகள் தவறு.

தந்தை, தாய், ஜாதகி மரண காலங்கள்

41. இருபது வைந்து வாண்டில்
இயம்புவோந் தந்தை கண்டம்
நிறையவே விருபத் தொன்பான்
நேர்ந்திடுந் தாய்க்குத் தோஷந்
திருமகள் ஜாத கிக்குச்
செப்புவோ மன்பா னுலில்
மருமமா யிடப மாத
மறைந்தனங் கண்டங் தானே.

41. ஜாதகிக்கு இருபத்தைந்து வயது நிறையும்பொழுது அவளுடைய தகப்பனுருக்கு மரணம் ஏற்படும். இருபத்தொன்பதாம் வயது (ஜாதகிக்கு) நிறையும்பொழுது தாயாருக்கு மரணம் சம்பவிக்கும். ஐம்பத்துநான்காம் வயதில் வைகாசி மாதத்தில் ஜாதகிக்கு மரணம் உண்டாகும் என்று சொல்லுவோம்.

ஜாதகியின் கணவனின் இயல்புகள்

42. ஜாதகி மணத்தின் காலஞ் சாற்றுவோ மீரஞ் சாண்டில்
மேதினி லுள்ளூர் தன்னில் வித்தகன் வரனுண் டாகுக்
தீதான குணமில் லாதான் செட்டுக்கள் செய்வா னுகும்
போதன முடைய னுகும் புகழ்பெற வாழ்வா
[னென்றோம்.

---

1. யானை

42. ஜாதகியின் திருமணக் காலத்தைக் கூறுகின்றோம். அஃது அவளுடைய பத்தாம் வயதில் ஏற்படும். உள்ளூரிலிருந்து கணவன் வாய்ப்பான். அவன் தீய குணங்களில்லாதவன். வர்த்தகங்களை விரிவாகச் செய்து வருவான். பெருந் தனமுடையவன். கீர்த்தியுடன் வாழ்ந்து வருவான் என்றோம்.

புத்திரபாவமும் முற்பிறவியும்

43. புத்திர ராண்பா லிரண்டு பெண்ணதவ் வாறு தீர்க்கம்
உத்தமி பூர்வந் தன்னை யுரைக்கிறோங் கேளுந் தாயே
வித்தகி வேலங் காட்டில் விளங்கிளள் கங்கைச் சேயாய்ச்
சுத்தமு முடைய ளாகிச் சுதர்களும் வரனு முண்டாய் ;

43. ஜாதகிக்கு இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். இனி ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம் கேட்பீராக. வேலங்காட்டில் வேளாள குலத்தவளாகப் பிறந்து சுத்தமுடையவளாகவும் கணவனையும் புத்திர பாக்கியமும் பெற்று வாழ்ந்து ;

மறுபிறவி

44. பந்துவுக் கினிய ளாகிப் பாவையு மரண மெய்தி
முந்திய பிரம னிலக்க மேதினில் வரையப் பட்டு
வந்தவ ளிவளே யென்றே மறைகிறே மிவள்பின்
[ஜன்மம்
இந்திர நகர மொத்த விக்காஞ்சி தன்னி லேதான் ;

44. தன் சுற்றத்தாருக்குப் பிரியமானவளாகி இறுதியில் மரணமடைந்து உயர்ந்த பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தவள் என்றோம். இனி இவளுடைய மறுபிறவியைக் கூறுகின்றோம். இந்திர நகரத்தைப் போன்ற காஞ்சிபுரத்தில் ;

யோகம்

45. மறையவர் குலமு திக்து வாழ்வளாஞ் சுகமுண் டாகித்
திருமக ளிச்சென் மத்தில் செப்புவோம் யோகந் தானும்
பிறந்தநாள் முதலே யாகப் பேசுவோ மரண மட்டுங்
குறைவிலாக் குடும்பி யாவள் கொம்பனை யாளே கேளாய்.

45. அந்தணர் குலத்தில் பிறந்து வாழ்ந்து வருவாள். செள்க்கியமுண்டாகி வாழ்வாள். ஜாதகியின் இப்பிறவியின் யோகங்களைக் கூறுகின்றோம் அவள் பிறந்த நாள் முதல் மரணமடையும் வரை எவ்வித சுகக் குறைவில்லாத குடும்பத்தை அடைவாள். தாயே ! கேளுங்கள்.

46. நாலாண்டு மேலாய் வீடு நல்கிடுந் தந்தைக் கேதான்
சாலவே விலாப மெய்துந் தனமது வதிகஞ் சேரும்
ஞாலவே பின்பா கத்தி லியம்புவோ விவர மாக
ஆலத்தை யுண்டோன் தேவி யறைந்தவை தப்பா வாமே.

46. இவளுடைய நான்காம் வயதுக்குமேல் தந்தைக்கு வீடு கிடைக்கும். எல்லா விதத்திலும் லாபமேற்படும். செல்வம் பெருகும். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். விஷத்தையுண்ட நீலகண்டனின் தேவியே! நாங்கள் கூறியவை தவறு.

ஜாதகம் 77

1. சந்திரன் புகரும் ராகு தனுவினில் சனியு மீனம்
புந்தியு மிரவி மானில் பூமகன் நந்தி யாக
மந்திரி சாடி யாக வீணையில் கேது புக்க
இந்தவாறு கிரகம் நின்று விலக்கினஞ் சீய மாக ;

1. சந்திரன் சுக்கிரன் ராகு தனுசிலும், சனி மீனத்திலும், புதன் சூரியன் மகரத்திலும், செவ்வாய் விருஷபத்திலும், குரு கும்பத்திலும், கேது மிதுனத்திலுமாக நவக்கிரகம் இருந்து இலக்கினம் சிம்மமானால்;

கிரகநிலை

சனி		செவ்வாய்	கேது
குரு	இராசி சக்கரம்		
புதன் சூரியன்			லக்கினம்
சந்திரன் சுக்கிரன் ராகு			

ஜாதகனது வீட்டுநிலை

2. பலன்தனைச் சொல்லு மென்று பார்வதி கேட்கும் போது
நலமுறு வதிஷ்டர் சொல்வார் நாயகன் ஜனன மாகுங்
குலவிய வில்லங் கீழ்மேல் குபேரன்தன் வாடை யாகும்
பலமிலாக் கூரை யாகும் பெருவயி றப்பன் கீழ்ப்பால்.

2. ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கும்போது நன்மை மிக்க வசிஷ்ட முனிவர் கூறுகின்றார். இஃது ஆண் மகனுடைய ஜாதகமாகும். இவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் வடக்கு வரிசையில் உள்ளது. அவ்வீடு சிறிய கூரை வீடாகும். கிழக்குப் பக்கத்தில் விநாயகரின் ஆலயமுள்ளது.

3. அருகினில் சப்த காளி யணுகிடு மிதுவல் லாமல்
குறைதலை மாரி தெற்கில் கூறுவோ மீசன் கோஷ்டம்
பெருநதி யருகில் தங்கும் பேசுமிவ் வடையா ளத்துள்
சிறுவூரில் தந்தை யில்லஞ் செப்பலாம் பிரம்ம சேயாய் ;

3. சமீபத்தில் சப்த காளி கோவில் ஒன்று உளது. இதுவன்றி மாரியம்மன் கோவிலொன்று தெற்குப் பக்கத்திலும், சிவபெருமான் ஆலயமொன்றும், பெரிய நதி யொன்றும் சமீபத்திலுமுள. இவ்வித அடையாளங்களுள்ள சிற்றூரில் ஜாதகன் தன் தந்தையின் வீட்டில் அந்தண குலத்தவனாக;

4. உதிப்பனு மைந்தாஞ் ஜன்ம
முரைக்கிறே மிவனின் யோகம்
மதிமுக வன்னி யோக
மவன்தந்தை தூணவர் யோகஞ்
சதியிலாக் களத்திர புத்திரர்
சாற்றுவோ முன்பின் ஜன்மம்
விதியதை யறிந்து சொல்வோம்
வித்தகி கேட்டி டாயே.

4. பிறப்பான். அவன் தன் தந்தைக்கு ஐந்தாம் பிறவியாகப் பிறந்தவன். அவனுடைய யோகத்தையும் அழகிய முகத்தையுடைய தாயீ தந்தை உடன்பிறந்தவர் திங்குகளில்லாத மனவி மக்கள் இவர்களின் யோகத்தையும், முற்பிறவி, மறுபிறவி, இவனது ஆயுள் இவற்றை ஆராய்ந்து பார்த்துக் கூறுகின்றேம். தாயே! கேட்பீராக.

தந்தையின் சகோதரபாவம்

5. தந்தையின் தூணவர் தம்மைச்
சாற்றுவோ மைவ ராகும்
எந்தையே யாண்பா லிரண்டு
எழிலுள கன்னி யொன்று
சந்ததம் விருத்தி யாகிச்
சீரணஞ் சிலவே தாமும்
முந்திய பிதாகு ணத்தை
முயலுவோங் கேட்டி டாயே.

5. ஜாதகனுடைய உடன்பிறந்தவரைப் பற்றிச் சொல்லுகின்றேம். அவர்கள் ஐவராகும். தாயே! இரு சகோதரர்களும் அழகிய சகோதரி ஒருத்தியும் நீண்ட ஆயுளுள்ளவர்கள் என்றேம். அவர்களில் சிலர் நிலையில்லாதவர் என்றேம். தாயே! இனி தந்தையின் குண விசேஷங்களைக் கூறுகின்றேம். கேட்பீராக.

வேறு

பின்வரும் நான்கு பாடல்களில்
ஜாதகன் தந்தையின் குணநலங்கள் கூறப்படும்

6. நல்லகுண முடையனஞ் சிவந்த மேனி
நயமுரைப்பன் உணச்சலுளான் நீட்சியாவன்
வல்லமையாய் வார்த்தையுளன் கவடு முண்டு
மாநிலத்தில் புகழுடையன் கல்வியாலே
சல்லியமு முடையவனுந் தரள தந்தஞ்
சத்தியெனுந் தேவதையை வசியங்கொள்வன்
தொல்புவி யதிகமுளன் செலவ நேகஞ்
செய்வானஞ் சிவபூஜை தீரநெஞ்சன்.

6. நல்ல குணமுடையவன். சிவந்த நிறமுடையவன். இனிமையாகப் பேசுபவன். மெல்லிய சரீரமுள்ளவன். உயரமானவன். கடுமையாகப்பேசுபவன். (வாக்குவன்மையுள்ளவன்.) கபடமுள்ளவன். உலகத்தில் கல்வியறிவால் கீர்த்தியையடைவான். கடனுபத்ரவமுடையவன். முத்துக்கனிப் போன்ற வெண்மை நிறமுள்ள பற்களையுடையவன். சக்தி என்ற தேவதையைப் பூஜை செய்து அதைத் தன் வயப்படுத்திய வன். விரோதிலங்களின் பெருக்கமுள்ளவன். அதிகமான செலவுகளைச் செய்பவன். சிவபூஜையைச் செய்து வருவான். தைரியமுள்ள மனத்தினன்.

7. அதிகார முடையவனுங் கிராமச் செட்டு
அபயமென்றோர் தமைக்காப்ப னன்பு பூண்பன்
புதிதாகச் செய்திடுவன் வெளிம யக்கன்
பாருளோர் தமைவசியம் பண்ணு வானும்
விதவிதவார்த் தையுரைப்பன் வியாதி தீர்ப்பன்
மெல்லியர்கள் மோகமுளன் பெரியோர் நேயன்
அதிதிகள்போல் தவம்புரிவன் சுபங்கள் சொல்வன்
ஆள்காரர் ஏர்ப்பெருக்க மறைவான்பொய்யும்.

7. அதிகாரமுடைய பதவியை வகிப்பவன். கிராமாதிகாரியாக விருப்பவன். அபயமென்று அடைந்தவரை அன்புடன் ஆதரித்து வருவான். அன்புள்ளவன். புதிய பொருள்களில் விருப்பமுள்ளவன். வெளியில் ஆடம்பரத்துடன் இருப்பவன். உலகத்தவர்களைத் தன்வயப் படுத்துவான். விதவிதமாகவும் வேடிக்கையாகவும் பேசுபவன். பிறருக் குற்ற நோயைத் தீர்ப்பவன். பெண்கள் மீது மையல் கொள்ளும் இயல் பினன். பெரியோர்களிடத்துப் பிரியமானவன். தவசிகளைப்போல் தவம் புரிந்து வருவான். நல்ல வார்த்தைகளைப் பேசுவான். ஏவலாட்களின் பெருக்கமும் ஏர்ப்பெருக்கமும் உள்ளவன். பொய் பேசுபவன்.

வேறு

8. முன்கோபம் பின்பு சாந்த மூலச்சூ டுடைய ஞகும்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பான் சுகபு சிப்பன்
அன்னமு மன்பா யீவன் அகசியஞ் சொல்லா ஞகும்
முன்வய தினிலே யோக மொழிகிறேம் பின்னல் தாழ்வு.

8. முன்கோபமுள்ளவன். விரைவில் சாந்தமடைவான். மூலச் சூட்டு நோயுள்ளவன். தன் வார்த்தைகளே மேன்மையுள்ளவை யென்று சாதிப்பான். சௌக்கியமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். அன்புடன் அன்னமளிப்பவன். அசிங்கமான வார்த்தைகள் பேசாத வன். முன் வயதில் அதிகமான யோகம் ஏற்பட்டும் பிறகு குறைந்து போம்.

9. பண்டுநாள் பூமி யுண்டாம்
பலபாவை மோகங் கொள்வன்
தண்டமி ழதிகங் கற்பன்
சகலர்க்கு வுபதே சிப்பன்
துண்டமாய்ப் பேச மாட்டான்
சுகதுக்க முடைய ஞகுங்
கொண்டதோர் நிந்தை தானுங்
கொள்ளுவா னிவனே யென்றேம்.

9. வெகு காலத்திய பூமியுள்ளவன். (பிதுரார்ஜிதமான சொத் துக்களுடையவன்) பலபெண்களின் மீது மோகம் கொள்ளுபவன். அரிய தமிழை நன்கு கற்றவன். எல்லோருக்கும் அதை உபதேசம் செய் பவன். கண்டிதத்துப் பேசாதவன். சுகமும் துக்கமும் கலந்து வாழ்வான் அவமானத்தையும் பழியையும் அடைவான் என்றேம்.

ஜாதகனின் குணநலங்கள்

10. சொல்லிய குணத்தா னுக்குச் சுந்தர னுதிப்பா ஞகும்
சொல்லுவே னிவன்தி றத்தைச் சுகமுள வார்த்தை [சொல்வன்
சொல்லுவார் தந்திர மாகச் சுபங்களுஞ் செய்வா ஞகுஞ்
சொல்லிலே கவடு முண்டு சோம்பலுங் கொஞ்ச முண்டு.

10. இவ்விதம் கூறப்பட்ட குணமுள்ளவனுக்கு இந்த ஜாத கன் பிறப்பான் என்றேம். இவனுடைய குணங்களைக் கூறுகின் றேம். இன்பமுள்ள பேச்சுக்களையே பேசுபவன். தந்திரமுடையவ னென்றும் பிறர் சொல்லுவார்கள். நல்ல காரியங்களையே செய்பவன். பேசுவதில் வஞ்சனையுடையவன். சிறிது சோம்பலும் உள்ளவன்.

இதுவுமது

11. வல்லவன் சிவந்த மேனி யாதியில் வறுமை யுள்ளான்
வல்லியர் மோக வாஞ மரசர்கள் பேட்டி கொள்வன்
நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட ஞவன்
நல்லறஞ் செய்வா ஞகும் நாதனர் பூஜை பூண்பன்.

11. அவன் சிவந்த உடலுடையவன். ஆதிகாலத்தில் தரித்திர தசையுடன் வாழ்வான். பெண்கள் மீது மோகமுடையவன். அரசாங் கத்தாருடன் தொடர்புள்ளவன். நல்லவர்கட்கு நல்லவனுகவும் தீயவர் கட்குத் தீயவனுகவும் வாழ்ந்து வருவான். நன்மைமிக்க இல்ல றத்தைச்செய்து வருவான். சிவபெருமான்மீது பக்தியுள்ளவன். (பூசைகளைப் புரிந்து வருவான்).

இதுவுமது

12. தந்தைநாள் சல்லி யத்தால் தன்பூமி விரயஞ் செய்வன்
தன்தனம் விரய முன்னுல் சலமதில் தோய வல்லன்
தந்தமுந் தரள மொக்குந் தனமுமே பின்னுல் சேர்ப்பன்
தந்தையின் பாக மிரண்டாய்ச் சார்ந்திடு மென்று
[சொன்னேம்.

12. தன் தந்தையினுல் ஏற்பட்ட கடனைத் தீர்க்க இவனுடைய நிலங்களை விற்று விடுவான். தன்னுடைய சம்பாத்தியத்தையும் ஆதி காலத்தில் செலவு செய்து வருவான். பல புண்ணிய நீரில் ஆடுபவன். பற்கள் முத்துக்களைப்போன்று வெண்மையானவை. பிற்காலத் தில் பொருளைச் சேர்ப்பான். அவனுடைய தந்தையின் பாகம் இரு பங்காகும் என்றும் சொல்லுகின்றேம்.

இதுவுமது

13. மந்திர மறைகள் கற்பன் மாநிலங் கிருஷி செய்வன்
நொந்திடும் பேரைக் காப்பன் நேமியில் நல்லோ ஞவன்
.....செய்தன்
வந்தவர்க் கன்ன மீவன் மருமத்தை வெளிக்காட்
[டாதான்.

13. மந்திர சாஸ்திரங்களைக் கற்றுணர்வான். நிலங்களில் விவ சாயத்தைச் செய்து வருவான். துன்புற்றவரைக் காப்பவன். உலகில் நல்லவன் என்ற பெயரையடைவான்.....அண்டிவந்தவர்களுக்கு அன்புடன் அன்னமளிப்பவன். இரகசியத்தை வெளிவிடாதவன்.

இதுவுமது

14. ரோமங்கள் கீட்சி யுள்ளான் நுவலுப தேசஞ் செய்வன்
காமனை யொத்த தேகன் கட்டுவார்த் தைக ளுண்டு
.....பெண்கள் மோகன்
சேமமாங் குடும்பி யாவன் தந்தைபோல் வாழ்வா
[னென்றோம்.

14. நீண்ட உரோமங்கள் உள்ளவன். வேதாந்த உபதேசங்களைச் செய்பவன். மன்மதனை ஒத்த அழகிய சரீரமுள்ளவன். வார்த்தை களைப் புனைந்து பேசுபவன்.....பெண்கள் மீது மோகம் கொள்ளுபவன். சௌக்கியமுள்ள குடும்பத்தைப் பெற்றவன். தன் தந்தையைப்போல் வாழ்ந்து வருவான்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

15. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பால்
[காணுன்
றவ.....
அவர்களு முன்பா லாக வறைகிறோ மிவனுக் கேதான்
தவசியே யவர்கள் சேதி சாற்றுவோம் விவர மாக.

15. இனி ஜாதகனுடைய சகோதர பாவத்தைக் கூறுகின்றோம். சகோதரர்கள் இல்லாதவன்.....அவர்களும் இவனுக்கு மூத்தவர்கள் என்றோம். தாயே! அவர்களுடைய விவரங்களைக் கூறு கின்றோம்.

16. .....சுகமுமுள்ளாள் முன்கோபி.....
.....
.....திசையில் மன் னெய்திடும் வறுமை யில்லான்
பிந்திநாள் யோக மெய்தும் புருடனுக் கினிய ளாவள்.

16. .....
.....சுகமுள்ளவன். முன்கோபி.....திக்கில் ஏற்படும். வறுமை யில்லாதவன். பிற்காலத்தில் யோகமேற்படும். கணவனுக்குப் பிரியமானவள்.

17. .....
.....
.....மனத்த ளாகு மெலிந்திடு தேகி யாவள்
தயையுள மனத்த ளாகுந் தாயில்லம் வாழ்வா ளாவள்.

மூலப்பிரதி மிகவும் சிதைந்திருப்பதால் 16, 17 ஆம் பாட்டுக்க ளின் முழுவுருவமுங் கிடைக்கவில்லை.

17. .....
.....மனமுடையவள். மெலிந்த தேகமுள்ளவள். தயவுள்ள மனத்தினள். தன் தாயின் வீட்டில் வசித்து வருவாள்.

18. வரன்மனம் போலே வாழ்வள் மறுமொழி யதிகங் கூறும்
பெருமையும் புகழு.....
.....வதிட்டரிவ் விதமாய்க் கூறக்
குறுமுனி புகலு கின்றார் கோதைக்குப் புத்திர தோஷம் ;

18. தன் கணவனது மனம்போல் வாழ்ந்து வருவாள். எதிர் வார்த்தைகளே அதிகமாய்ப் பேசுபவள். பெருமையையும் கீர்த்தி யையும் அடைவாள்.....இங்ஙனம் வசிஷ்ட முனிவர் கூறும் போது அகத்திய முனிவர் வினவுகின்றார். இவளுக்குப் புத்திர தோஷம் ;

19. ஏதுகா ரணத்தி னலே யியம்பினீ ரந்தத் தோஷம்
மாதிவள் முன்ஜன் மத்தில் வந்ததோர் தோஷந் தானும்
சோதரி தோஷம் தீரச் செப்புவேன் கிரியை யொன்று
போதவே வரன்தன் னோடு பட்சியின் மலைக்குச் சென்று.

19. எந்தக் காரணத்தால் ஏற்பட்டது? அந்தக் காரணத்தைக் கூறுங்கள். இவள் முற்பிறவியில் செய்த தீவினையால் ஏற்பட்டது எனக் கூறுகின்றோம். ஜாதகனுடைய சகோதரி செய்த தீவினை விலகச் சாந்தியொன்று சொல்லுகின்றோம். தன் கணவனுடன் சேர்ந்து திருக் கழுக்குன்றத்துக்குச் சென்று ;

20. அங்குள தீர்த்தந் தோய்ந்து வக்கிரி தன்னைச் சுற்றிப்
பங்கய மலர்க ளாலே பரமனை யருச்சித் தேத்தித்
துங்கமா மனத்த ரான சுருதியோ ரொன்பான் பேர்க்கு
இங்கிவ ளன்ன மீந்து இளவலு நகரஞ் சார்ந்து ;

20. அங்குள்ள சங்க தீர்த்தத்தில் நீராடி, அக்கிரியை வலம் வந்து, தாமரைப் புஷ்பங்களால் அங்குள்ள வேதகிரீச்வரனை அருச்சித்துத் துதித்துத் தூய்மையான மனத்துடன் (தூய்மையான மனமுடைய வரான) ஒன்பது அந்தணர்கட்கு அன்புடன் அன்னமளித்துத் திரும்பித் தன் கணவனுடன் ஊருக்குச்சென்று ;

21. மங்கள வார நோன்பு
மங்கையுங் கொள்வா ளாகில்
சங்கைகள் விலகி யேதான்
ஜனித்திடு மதலை தானும்

சிங்கம்போ லாண்பா லொன்று
சேயிழை யிரண்டுந் தீர்க்கஞ்
சங்கையாய்ச் செய்யா ளாகில்
ஜனிக்காவே ஜனிக்கில் தீதாம்.

21. செவ்வாய்க்கிழமைகளில் விரதம் இருந்து வருவாளாகில் ஏற்பட்ட தீவினைகள் நீங்கிப் புத்திரர் தோன்றுவர். சிங்கம்போல் ஒரு புத்திரனும் இரு புத்திரிகளும் பிறந்து தீர்க்காயுள் உடையவராவார் என்றேரும். சந்தேகங்கொண்டு செய்யாவிடில் புத்திரபாக்கிய மேற்படாது. பிறந்தாலும் நிலையாது.

திருமணக்காலம்

22. இன்னமும் விவர மாக
வியம்புவோ மிரண்டி லேதான்
அன்னவன் மன்றல் காலம்
அறைகுவோ மிருபா லொன்றில்
கன்னிகை.....திக்கில்
கழறுவோ மவள்கு ணத்தை
உன்னத வார்த்தை சொல்வள்
உண்மையா மனத்த ளாகும்.

22. இன்னும் விவரமாக இரண்டாம் பாகத்தில் கூறுகின்றேரும். தாயே! இனி ஜாதகனுடைய திருமணக்காலத்தைக் கூறுகின்றேரும். அஃது அவனுடைய இருபத்தோராம் வயதில் நேரும். மனைவி..... பக்கத்திலிருந்து வாய்ப்பாள். இனி அவளுடைய குணங்களைக் கூறு கின்றேரும். உயர்வான பேச்சுக்களையே பேசுபவள். உண்மையையே பேசும் மனமுடையவள்.

மனைவியின் குணநலங்கள்

23. அடிசிலுக் கினிய ளாகும் ஆளன்றன் மனம்போல்
[வாழ்வள்
படிமீதி லவர்க்கு நல்லள் பஞ்சைமே லிரக்க மாவள்
விடவுரை பகரா ளாகு மெல்லியும் வந்த பின்பு
திடமான குடும்பி யாவன் திருமகள் யோக சாலி.

23. உருசியுடன் சமைப்பதில் வல்லவள். தன் கணவனது மன மறிந்து வாழ்ந்து வருவாள். பூமியில் யாவருக்கும் நல்லவள். ஏழை களின் மீது இரக்கமுடையவள். தீய வார்த்தைகளைப் பேசாதவள். இவளை மணந்தபிறகு கணவனுக்குத் திடமான குடும்பம் ஏற்படும். அதிர்ஷ்டமுள்ளவள்.

24. புத்திமா னீகை சாலி புண்ணிய தீர்த்தந் தோய்வள்
குத்தமில் லாதா ளாகுங் கூறுவோம் புத்திர பாவஞ்
சுத்தமாய்ப் புதல்வர் காணுள் தோன்றினுந் தீதே யாகும்
இத்தகை வதிட்டர் கூற ஈச்வரி கேட்க லுற்றாள்.

24. புத்தியில் ஊகமுடையள். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவாள். குற்றங்களில்லாதவள். இனி அவர்களின் புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். திண்ணமாகப் புத்திரர் தோன்றார். ஒருக்கால் பிறந்தாலும் நிலையார் என்றோம். இங்ஙனம் வசிஷ்ட முனிவர் சொல்லுங்கால் பார்வதிதேவி கேட்கலானாள்.

புத்திரதோஷம்—கிரகநிலை

25. சுதர்களுந் தோஷ மாகத் தோன்றுங்கா ரணங்க
[ளென்ன
விதங்களைக் சொல்லு மென்ன மேருவில் கயிறு நின்றும்
மதிபுகர் தம்மோ டுற்று மந்தனு மைந்தைப் பார்க்க
இதுவிதக் கார ணத்தால் இலகாரே சுதர்கள் தாமே.

25. ஜாதகனுக்குப் புத்திரதோஷம் ஏற்படுவதற்கு உரிய காரணங்கள் என்ன? அதற்குற்ற கிரகநிலை என்ன? சொல்லுங்கள். தனுசில் ராகு நின்று அவருடன் சந்திரன் சுக்கிரன் இருப்பது, சனி புத்திர ஸ்தானத்தைப் பார்ப்பதுமாகிய இக்காரணங்களால் புத்திர பாவமில்லை என்றோம்.

முற்பிறவி தோஷம்—கிரகநிலை

26. தசமத்தில் [1]குரூதி நின்று சனியுமே பார்த்த தாலே
வசையது முன்ஜன் மத்தில் வந்ததால் சுதர்கள் தோஷம்
நசிந்தவூழ் தன்னை நீங்கள் நவிலுவீர் விவர மாக
அசைவின்றிச் சொல்லு கின்றேன் அம்பிகை யாளே
[கேளாய்.

26. பத்தாம் வீட்டில் செவ்வாய் இருந்து அதைச் சனி பார்ப்பதால் முற்பிறவியில் செய்த தீவினையால் அங்ஙனம் புத்திரதோஷம் நேரிட்டது என்றோம், முனிவரே! முற்பிறவியில் ஏற்பட்ட தீவினைகளை விவரமாகத் தவறுகளில்லாமல் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகன் முற்பிறவி

27. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகின்றோம் விவர மாக
அன்னவ னலங் காட்டுக் கருகினில் கங்கை சேயாய்
இன்னவ னுதித்து மேலும் எழிலுள பூமி யுண்டாய்த்
தன்மனை புத்திர ருண்டாய்ச் சேத்திரம் வறுமை யின்றி;

1. செவ்வாய்.

27. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திரு பாலங்காட்டுக்கருகில் வேளாள குலத்தவனுகப் பிறந்து, மேலும் நல்ல பலனளிக்கும் பூமியைப் பெற்று மனைவி மக்களையடைந்து தரித்திர மடையாமல் ;

ஸர்ப்ப தோஷம்

28. தனம்பலர்க் குதவி செய்து தானவன் வாழு நாளில்
மனையினி லுரக னொன்று மகுடத்தால் வெளியே செல்லப்
பிணையான கழியி னலே பணிதனை வாட்டும் போது
அனையவே காலன் பக்கல் அடைந்தது வுரகந் தானே.

28. பல பேருக்குப் பொருளுதவியைச் செய்து வாழ்ந்து வருங் காலத்தில் இவனுடைய வீட்டில் ஒரு சர்ப்பம் படமெடுத்து வெளியில் வருங்கால் தீய எண்ணத்துடன் அதை ஒரு தடியால் அடித்தான். அந்தச் சர்ப்பமும் மரணமடைந்தது.

விதவையைச் சேர்ந்த தோஷம்

29. இதுவொரு தோஷ மாச்சு
வியம்புவோ மின்னு மொன்று
நதிக்கரை யரசின் கீழே
நாகமுங் கணேச னுண்டு
விதவையை மரத்தின் கீழே
வரைவினில் போகந் துய்த்தான்
அதுவொரு தோஷந் தானும்
அணுகிற்று விவனுக் கேதான்.

29. இஃது ஒருதோஷமாக ஆயிற்று. இது தவிர வேறு ஒன்றும் சொல்லுகின்றோம். இவனிருந்த ஊரில் ஓர் நதிக்கரையில் ஒரு அரசமரம் இருந்தது. அதனடியில் நாகமும் விநாயகரும் இருந்து வந்தனர். அம்மரத்தினடியில் இவன் ஒரு கைம்பெண்ணுடன் அவசர மாக சிற்றின்பம் அனுபவித்தான். அந்த ஒரு தோஷமும் இவனைப் பற்றியது.

பொருள் தருவதாக வாக்களித்துச் சிற்றின்ப மனுபவித்துப் பிறகு தர மறுத்தது

30. மற்றொரு நாளி லேதான்
மார்க்கத்தில் வேறு மாதைச்
உற்றதோர் வார்த்தை சொல்லிக்
சொர்ணமுந் தாரே னென்று

வித்தகி தன்னைப் போகம்
விரும்பிப்பின் பொன்னீ யாமல்
சித்தனுங் செல்ல லுற்றான்
தேவியும் புகல லுற்றாள்.

30. வேறு ஒரு நாளில் இவன் தெருவில் செல்லும்போது வேறு ஒரு பெண்ணைப் பார்த்து அவளுக்குப் பொருள் தருவதாகக் கூறி ஆசை வார்த்தைகளைச்சொல்லி, அவளுடன் சிற்றின்பத்தை அனுபவித்தான். புணர்ந்த பிறகு கொடுப்பதாகச் சொன்ன பணத்தைக் கொடுக்காமல் சென்றான். அப்பெண்ணும் மனம் வருந்திக் கூறுகின்றாள்.

பெண் சாபம்

31. மறுஜன்ம முதித்து மேலு மாகிலம் நிந்தை யாகி
வருந்துணை யாணில் லாமல் மாதுரு சுகமு மின்றிக்
குறைவுண்டு குடும்பத் தன்னில் குலத்தினில் நிந்தை யாயுந்
திருகுக ளனந்த மாயுஞ் சேயர்க ளில்லா தாயும் ;

31. மறுபிறவியில் உனக்கு உலகில் வீண் அவமானங்கள் ஏற்பட்டு உடன் பிறந்த சகோதரரில்லாமல் தாயின் சுகமுமில்லாமல் குடும்பத்திலும் குறைவுகள் ஏற்பட்டு, குலத்திலும் அபவாதங்களைடைந்து, கடைசிக் காலத்தில் அதிகமான துன்பங்களைப் பெற்று புத்திரபாக்கியமில்லாமலும் வாழ்வாய் என்றும் ;

32. பலவித வசனங் கூறிப் பாவையுஞ் செல்ல லுற்றாள்
குலவிற்று வந்தச் சாபங் குமரனு மந்தி யத்தில்
நலமுள சுதர்கள் மாண்டு நன்மனச் சஞ்ச லத்தால்
தலமது தீர்த்தந் தோய்ந்து தட்சிணஞ் சென்றா
[னென்றோரும்.

32. இன்னும் பலவிதமாகவும் சொல்லி அப்பெண் செல்லலானாள். அந்தச் சாபமும் இவனை வந்தடைந்தது. இவன் தன் கடைசிக் காலத்தில் தன்னுடைய புத்திரர்களை இழந்து மனச் சஞ்சலங்களையடைந்து பல புண்ணியத்தலங்களில் நீராடி, தெற்குப் பக்கத்திலுள்ள புண்ணியத் தலங்களுக்குச் சென்றான்.

இதுவுமது

33. [1]அல்லலை யகற்று கின்ற வரிராமர் தலங்கள் புக்கி
நல்லதோர் சேதுச் சென்று விராமலிங் கத்தைப் போற்றி
வல்லியுந் தானு மாக வளமுள தீர்த்தந் தோய்ந்து
இல்லறந் தன்னில் வந்து இகபரன் தனைப்பூ சித்துப்
புல்கினன் காலன் பக்கல் புகுந்தன னிவனே யென்றோரும்.

1. இப்பாடலில் ஓர் அடி மிகுந்துளது.

33. துன்பங்களைப் போக்கும் மகா விஷ்ணுவின் அவதாரமாகிய ராமனுடைய க்ஷேத்திரமாகிய ராமேச்வரம் சேது முதலிய புண்ணிய தலங்களுக்குச் சென்று அங்குள்ள (ராமநாதனை) ராமலிங்கத்தைத் துதி செய்து, தன் மனைவியுடன் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, உள்ளூருக்குத் திரும்பிச் சிவபெருமானுக்குத் தொண்டுகளைச் செய்து இறுதியில் மரணமடைந்தான். மீண்டும் பிறந்தவன் இவன் என்றேரும்.

மறைக்குலப்பிறவி

34. கஞ்சனுல் வரையப் பட்டுக் கனமுள பிரம்ம சேயாய்த்
தஞ்சமா யுதித்தா னென்றேஞ் ஜயமுனி கூறு கின்றார்
மிஞ்சிய ஜன்மந் தன்னில் மேவினன் கங்கை சேயாய்
வஞ்சனை யதிகஞ் செய்து மறைக்குல முதித்த தென்ன.

34. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு அந்தண குலத்தவனுகப் பிறந்தான் என்றேரும். ஜயமுனிவர் கூறுகின்றார். முற்பிறவியில் வேளாள குலத்தில் பிறந்த இவன் பலவிதமான தீச்செயல்களைச் செய்திருந்தபோதிலும் இப்பிறவியில் அந்தண குலத்தவனுகப் பிறக்கும் காரணமென்ன ? சொல்லுங்கள்.

மறைக்குலப் பிறவிக்குரிய நற்செயல்கள்

35. முன்ஜன்மந் தலங்கள் தோய்ந்து
முயர்சேது சென்ற தாலுந்
தன்னக ரடைந்து பின்னுல்
சங்கரன் பூஜை செய்தும்
அன்னங்கள் சிலர்க்கு யீந்தும்
அப்பல னுலே யிங்கு
முன்குலந் தனிலு தித்தான்
முன்வினை விலகா தென்றேரும்.

35. முற்பிறவியில் பலபுண்ணியத் தலங்களுக்குச் சென்றதாலும், உயர்ந்த தலமாகிய சேதுவுக்குச் சென்றதாலும், பிறகு சொந்த ஊருக்குத் திரும்பிச் சிவபெருமானுக்குப் பூசைகளைப் புரிந்து வந்ததாலும், சிலருடைய பசிக்கு உணவு அளித்து வந்ததாலும் இப்பிறவியில் அந்தண குலத்தில் பிறந்தான். ஆனுல் மேற்சொன்ன நல்வினைகளால் தீச்செயல்களின் வெம்மை விலகாது என்றேரும்.

பாவபலன்

36. வினையினுல் வந்த குற்றம் விளம்புவீர் முனியே நீர்தாஞ்
சினமுண்டு குடும்பந் தன்னில் சல்லிய மிகவே யுண்டு
அனையவே மாதிரு பீடை யவன்குலங் குற்ற மாகும்
பிணையாகும் வம்சந் தானும் பிறராலே நிந்தை யுண்டு.

36. முற்பிறப்புத் தீவினையால் ஏற்பட்ட பலன்களைக் கூறுங்கள், முனிவரே ! தாங்கள். குடும்பத்தில் துன்ப மேற்படும். கடன் உபத்ர வமும் உண்டாகும். தாய்க்கு நோயால் பாதை ஏற்படும். அவனுடைய குலத்திலும் அபவாதமுண்டு. தன்னுடைய வம்சம் நாசமாகும். பிற ரால் அவமானமும் நேரிடும்.

சாந்தி

37. உரகன்தன் தோஷத் தாலே
வுதித்திடு மதலை யினம்
திறமையாய்த் தோஷந் தீரச்
செப்புவோங் கிரியை யொன்று
அரசுமே வொன்று வைத்து
அப்பணி யதன்கீழ்ச் செய்து
பெருமையாய்ப் பிரதிஷ்டை பண்ணப்
பிறந்திடுஞ் சுதர்கள் தாமே.

37. சர்ப்பத்தைக் கொன்ற தோஷத்தால் பிறக்கும் குழந்தைகள் நிலையா. அத்தோஷங்கள் தீரச் சாந்திகளைச் சொல்லுகின்றோம். (நதிக் கரையில்) அரசமரம் ஒன்று வைத்து அதன் கீழ் நாகம் ஒன்றைக் கல் லால் சமைத்துப் பக்தியுடன் பிரதிஷ்டை செய்தால் புத்திர பாக்கிய மேற்படும்.

புத்திரப்பேறு

38. சொற்படி செய்யா ஞகில் தோன்றாரே புத்திரர் தாமுஞ்
சொற்படி செய்வா ஞகில் தோன்றிடு மதலை தானும்
மெய்ப்புட ஞண்பா லொன்று மேவிய கன்னி யிரண்டு
செப்புவோ மூன்றுந் தீர்க்கந் தேவியே கேட்டி டாயே.

38. நாங்கள் கூறியபடி செய்யாவிட்டால் புத்திர பாக்கிய மேற்படாது. நாங்கள் சொல்லியபடி செய்தால் புத்திர பாக்கிய முண்டாகும். ஓர் ஆண் குழந்தையும் இரு பெண் குழந்தைகளும் தோன்றி அம் மூன்றும் நிலையுள்ளவையாக விருக்கும். தேவியே ! கேளுங்கள்.

கஷ்டங்கள்

39. குறுமுனி யிதனைக் கேட்டுக் கூறுவார் வதிட்ட ருக்கு
வறுமைக ளெதுவ ரைக்கும் வந்திடுஞ் சல்லி யங்கள்
உரையுமே வென்று கேட்க உதித்தவன் மூவெட்
[டாண்டுந்
திருகாகும் பூமி தானுஞ் சல்லிய மிகவே நேரும்.

39. அகத்திய முனிவர் இவற்றைக் கேட்டு வசிஷ்ட முனிவரிடம் ஓர் ஐயப்பாட்டை வினவுகின்றார். ஜாதகனுக்கு எந்தக்காலம் வரை

துன்பங்கள் ஏற்படும். அதனை விவரமாகச் சொல்லுங்கள் என்று கேட்க, வசிஷ்டர் பதில் உரைக்கின்றனர். ஜாதகனுக்கு இருபத்து நான்காம் வயது வரை பூமியால் துன்பமேற்படுக் கடன் தொல்லையும் உண்டு.

யோகப்பெருக்கம்

40. அதற்குமேல் வறுமை யின்றி யம்புலி போலே யோகம்
பதியினில் திருவு மோங்கிப் பண்டுநாள் பூமி தன்னை
நிதியினுல் தன்கைக் கொண்டு நிமலனும் வாழ்வா னுகுங்
குதர்க்கங்க ளணுகா வென்றேங் குறுமுனி கேட்க
[லுற்றார்.

40. அதற்கு மேல் தரித்திரமில்லாமல் வளர்பிறைச் சந்திரன் போல் யோகம் விருத்தியாகும். இவனுடைய வீட்டில் இலட்சுமி கடாட்சம் பெருகும். பிதுரார்ஜிதமாகவும் வெகு நாட்களாகவுமுள்ள விளை நிலங்களை (தன் சம்பாத்தியத்தால் திரும்ப வாங்கி) வைத்துக் கொண்டு அவைகளில் பயிர்த் தொழில் செய்து வாழ்ந்து வருவான். வேறு துன்பங்கள் ஏற்படா. அகத்தியமுனிவர் கேட்கலானார்.

நற்கிரக பலம்

41. பூருவ பூமி யெவ்வாறு புக்கிடும் பொருள்கள் சேருங்
கூறுவீர் விவர மாகக் குமரனுக் கிருபா னேழில்
பாரினில் நிதிகிட் சேபம் பருகிடும் பலத்தி னுலே
வீரியன் தனக்கு யோகம் விளம்பினேங் கேட்டி டாயே.

41. பிதுரார்ஜிதமான பூமிகள் எவ்விதம் இவனுக்குக் மீண்டும் கிடைக்கும்? எங்ஙனம் பொருள்கள் சேரும்? அவற்றை விவரமாகச் சொல்வீராக. ஜாதகனுக்கு இருபத்தேழாம் வயதில் பூமியிலிருந்து புதையல் கிடைக்கும். அவ்வித பலத்தால் ஜாதகனுக்கு யோகம் உண்டு என்று நாங்கள் சொன்னோம். தேவியே! கேளுங்கள்.

புதையல் கிடைக்குமிடம்

42. எந்திடம் நேரு மென்றீ ரியம்புவீ ரந்தச் சங்கை
தென்திசை சிவன்தன் கோஷ்டஞ் சோலையு மருகில்
[தங்கும்
அந்திடம் நேரு மென்றே மப்பணி யாலே யிங்கு
சொந்தபூ மிகளுஞ் சேர்ப்பன் துறவியே மேலுங் கேளே.

42. எந்த விடத்திலிருந்து புதையல் கிடைக்கும்? அதைச் சொல்லுங்கள், முனிவரே! தெற்குப் பக்கத்தில் ஒரு சிவன் கோவில் இருக்கும். அதனருகில் ஒரு தோட்டம் உண்டு. அவ்விடத்திலிருந்து புதையல் கிடைக்கும். அதிலிருக்கும் பொன்னுபரணங்களை விற்றுச்

சொந்தமாகப் பூமிகளே வாங்குவான். இருடிகளே! மேலும் கேட் பீர்களாக.

ஜீவனத்தொழில்

43 அரசனுல் ஜீவ னங்க ளணுகாவே விவனுக் கேதான்
குருதியுந் தசம மாகக் [1]கூத்தனு மதனைப் பார்க்க
உரையாது அரசர் மூல முத்தமன் திருஷி யாலும்
பெருமையாய்ச் செட்டு வாலும் புண்ணியன் வாழ்வா
[ணமே.

43. அரசாங்க உத்தியோகம் இவனுக்குக் கிடைக்காதோ? அவ் விவரத்தைக் கூறுவீர். செவ்வாய் பத்தாமிடத்திலிருப்பதாலும் சனி அவ்விடத்தைப் பார்ப்பதாலும் அரசாங்க உத்தியோகம் கிட்டாது. விவசாயத்தாலும் வர்த்தகம் புரிவதாலும் புண்ணியவானான இந்த ஜாதகன் வாழ்ந்து வருவான்.

தந்தையின் முற்பிறவி

44. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோங் காஞ்சி
[தென்மேல்
வந்தன னருகர் வம்சம் வளமுள பூமி யுண்டாய்ப்
பந்துவும் புகழ வாழ்ந்து பாலர்கள் மனைவி யுண்டாய்ச்
சந்ததங் கடவுள் பத்தி தானவன் கொண்டு மேதான்;

44. இனி தந்தையின் முற்பிறவியைக் கூறுகின்றேம். காஞ்சீ புரத்துக்குத் தென்மேற்குத் திக்கில் சமண குலத்தவனுகப் பிறந்து செழிப்புள்ள விளைநிலங்களைப் பெற்றுத் தன் சுற்றத்தார் கொண்டா டும்படி வாழ்ந்து வந்து புத்திரர்கள் மனைவியர் இவர்களை யடைந்து சதா கடவுள் பக்தியுடன் வாழ்ந்து;

ஜாதகனுடைய தந்தையின் குலமும் வறுமையடையக் காரணமும்

45. அறமதி லிச்சை வைத்து
அந்தகன் நாட டைந்து
மறையவன் வரையப் பட்டு
மறைக்குல மதிலு திக்து
உறைந்தன னிவனே யென்றே
முரைக்கிறே மிச்சென் மத்தில்
பெருமையாய்க் கட்டு வார்த்தை
புகன்றதால் திருவு நீங்கும்.

---

1. சனி.

45. தருமம் செய்வதில் விருப்பங் கொண்டு மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் அந்தண குலத் தவனுகத் தோன்றினன். இப்பிறவியில் இல்லாத வார்த்தைகளைக் கூறி வருவதால் இலட்சுமி கடாட்சம் விலகும்.

மறுபிறவி

46. குடும்பமு மலைச்ச லாகும்.....
.....அடாநிந்தை யதிக மாகுந்
திடமுடன் பின்ஜன் மத்தைச் செப்புவா மினிமே லாக
உடனேதான் காசி தன்னி லுதிப்பனு மிக்கு லத்தில்.

46. குடும்பம் துன்பமடையும். .....
..... அடாத அபவாதங்கள் அதிகமாக ஏற்படும். இனி தந்தையின் மறுபிறவியைச் சொல்லுகின் றேம். விரைவில் காசி க்ஷேத்திரத்தில் இதே குலத்தில் பிறப்பான்.

47. எப்படி யிச்சென்ம.....
.....
ஒப்புடன் மேல்கு லத்தி லுதிப்பனு மென்று சொன்னீர்
செப்புவீ ரந்தச் சங்கை சேயனு மிச்சென் மத்தில் ;

47. இப்பிறவியில் .....
.....
எவ்விதம் மேல் குலமாகிய அந்தணர் குலத்தில் பிறப்பான் என்று கூறுகிறீர்கள் அதைக் கூறுங்கள். ஜாதகனுடைய தந்தை இப் பிறவியில் ;

நற்செயல்கள்

48. அரன்பத்தி கொண்ட தாலும் .....
.....
திருமக னிருப்ப தாலே செய்வினை யிதனுல் நீங்கிப்
பெருமையாய்க் காசி தன்னில் பிறப்பனு மறையோ னுக.

48. சிவபக்தி கொண்டு .....
.....
ஜாதகனுடைய தந்தை அவ்விதமிருப்பதால் செய்த தீவினைகள் நீங்கி காசி க்ஷேத்திரத்தில் அந்தணர் குலத்தவனுகப் பிறப்பான்.

(49 முதல் 53 வரையுள்ள பாட்டுகள் மூலப்பிரதியில் மிகவுஞ் சிதைந்து காணப்படுகின்றன).

தந்தை, தாயரின் மரணகாலம்

54. உதித்தவ ளுவு வாண்டி லுயராடி மாதந் தன்னில்
சதியினு லன்னை கண்டஞ் சாற்றுவோ மிருபா னேழில்
கதிதருந் தேவரின் மாதங் கழறுவோங் தந்தைக் கேதான்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

54. ஜாதகனுக்கு நான்காம் வயது நடக்குங்கால் ஆடி மாதத்தில் சூதுகளால் அவனுடைய தாய் மரணமடைவாள். அவனுடைய இரு பத்தேழாம் வயதில் கார்த்திகை மாதத்தில் தந்தை மரணமடைவான். கதியற்றவரைக் காக்கும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகன் மரணகாலம்

55. ஜாதகன் மரண காலஞ் சாற்றுவோ மன்பா னேழில்
மேதினில் தனுசு மாதம் வளர்பிறைத் தசமி தன்னில்
தீதான சுரத்தி னலே தேகமே வாடு மென்றும்
போதவே பின்ஜன் மத்தைப் போற்றுவோங் கேளுங்
[காயே.

55. ஜாதகனுடைய மரண காலத்தைக் கூறுகின்றோம். ஐம்பத் தேழாம் வயதில் மார்கழி மாதம் சுக்லபட்சம் தசமிதிதியன்று துன்பந் தரும் ஜ்வரத்தால் ஜாதகனுக்கு மரண மேற்படும், இனி மறுபிறவி யைச் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

ஜாதகன் மறுபிறவி

56. கஞ்சியி லிக்கு லத்தில் காவல னுதித்து மேலு
மிஞ்சியே யரசர் பக்கல் மேவியே ஜீவிப் பானுந்
தஞ்சமா யிவனின் யோகஞ் சாற்றுவோ மினிமே லாகக்
கஞ்சம்போல் கரத்தில் ரேகை காலாள்க ளுடைய னுகும்.

56. காஞ்சிபுரத்தில் இதே குலத்தில் பிறந்து அரசாங்க உத்தி யோகத்தை ஏற்று வாழ்ந்து வருவான். இனி அவனுடைய யோகத் தைச் சொல்லுகின்றோம். கையில் பத்மரேகை யுள்ளவன். ஏவலாட் களை யுடையவன்.

யோகபாவம்

57. நந்தியா வுடைய னுகும் நாட்டினில் புகழு மேற்பன்
பிந்திநாள் யோக முள்ளான் பூமியை விருத்தி செய்வன்
கந்தன்த னருளு முண்டாங் காவலர் நேசங் கொள்வன்
தன்தன முடைய னுகுங் சல்லிய மில்லா னென்றும்.

57. பசு எருதுகளின் பெருக்கமுள்ளவன். உலகில் கீர்த்தியை யுடையவன். பிற்காலத்தில் அதிர்ஷ்டமுள்ளவன். விளைநிலங்களைப்

பெருக்குவான். முருகக்கடவுளின் அருள் ஓங்கும். அரசாங்கத் தொடர்புள்ளவன். தன்னால் சம்பாதிக்கப்பட்ட சொத்து உள்ளவன். கடனுபத்ரவ மில்லாதவன்.

ஜனனகாலதசை

58. திருப்பணி வேலை செய்வன் தேவதாப் பூஜை பூண்பன்
பெருமையாய்க் கிருஷி செய்வன் பேசுவோஞ் ஜனன
[காலம்
பிருகுதன் தசையி லேதான் பேசுவோ மீரா றுண்டும்
வரும்பலன் மாதிரு பீடை யலைச்சலாங் குடும்பந் தானே.

58. ஆலயத் திருப்பணி வேலைகளைச் செய்வான். தெய்வபூஜையையும் செய்வான். பெருமையுடன் விவசாயத்தைச் செய்து வருவான். இனி ஜனன காலத்தைச் சொல்லுகின்றோம். அப்பொழுது சுக்கிர மகாதசையில் பன்னிரண்டு வருடங்கள் மீதமாகும். அக்காலத்தில் தாயிக்குப் பீடையுண்டு. (தாய் மரணமடைவாள்). குடும்பமும் துன்பமடையும்.

சுக்கிரமகா தசையின் பலன்

59. சல்லிய மிகவே யுண்டு தன்துணை சுபமு மாகும்
அல்லல்க ளதிக முண்டு அவன்தந்தை வர்க்கத் தார்க்கு
நல்லதோர் சுபமு முண்டு நல்கிடுஞ் சூத கங்கள்
இல்லறம் புதிதாய்ச் செய்வ னியம்புவோம் விவர
[மிரண்டில்.

59. கடன் உபத்ரவமுண்டு. உடன்பிறந்தவர்கட்குச் சுபகாரியங்கள் நடைபெறும். துன்பங்க ளதிகம் உண்டு. தன் தந்தையின் வர்க்கத்தாருக்குச் சுபகாரியங்கள் நிகழும். அசுபமும் ஏற்படும். தந்தை புதிய வீட்டைக் கட்டுவான். அவ்விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம்.

செல்வமீளுதல்

60. தந்தைநா ளந்தி யத்தில் சல்லிய நிவிர்த்தி யாகுந்
தந்தைநாள் விட்ட பூமி தானவன் கொள்வா னுகுந்
தன்தனம் பூமி வீடு சதிரான பூஷ ணங்கள்
எந்தையே மூவா யிரம்பொன் னெய்திடு மென்று
[சொன்னேம்.

60. தந்தையின் ஆயுளிலேயே கடைசிக் காலத்தில் கடன் உபத்ரவம் விலகும். தந்தையின் ஆர்ஜிதமான பூமிகளைத் திரும்பவும் இவன் வாங்குவான். தன்னால் சம்பாதிக்கப்பட்ட பொருள் வீடு அழகிய ஆபரணங்கள் ஆகிய இவையெல்லாம் மூப்பதாயிரம் பொன் மதிப்புள்ளவை என்றோம்.

தொழில்—கிரகநிலை

61. பத்தினில் குசனும் நிற்கப் பத்தவ னஞ்சி லேற
வித்தகன் கிராமச் செட்டு மேன்மையாய்ச் செய்வா
[னகுஞ்
சித்தமா யிருபான் மூன்றில் செய்வனு மதிகா ரங்கள்
சத்தியே விவர மாகச் சாற்றுவோ மிரண்டி லேதான்.

61. பத்தாமிடத்தில் செவ்வாய் இருப்பதாலும் அவ்வீட்டுக் குரியவன் ஐந்தாமிடத்தில் இருப்பதாலும் ஜாதகன் கிராமாதிகாரம் செய்து மேன்மையையடைவான். அவனுடைய இருபத்துமூன்றும் வயதில் அதிகாரமுள்ள பதவி வாய்க்கும். தாயே! மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 78

1. மதிபுத னிரவி சேயும் வண்டியி லதற்கி ரண்டில்
விதிசனி யாறில் கேது வில்லுமன் னுடனே நிற்கச்
சதியிலா விரயம் ராகு சல்லியன் லாப மேற
இதற்குமே இரண்டாம் வீடு இதுஜன்ம முதய மாகில் ;

1. சந்திரன் புதன் சூரியன் செவ்வாய் கடகத்திலும், சனி அவ்வி டத்திற்கிரண்டா மிடமா கிய சிம்மத்திலும், கேது அவ்விடத்துக்கு (கடகத் துக்கு) ஆறுமிடமாகிய தனுசில் குரு வுடன் சேர்ந்தும், ராகு (கடகத் துக்கு) விரயஸ்தானமா கிய மிதுனத்திலும், சுக் கிரன் லாபஸ்தானமாகிய விருஷபத்திலும் அவ்வி டத்துக்கு (கடகத்துக்கு) இரண்டாமிடமாகிய சிம் மம் ஜன்ம லக்கினமாக வும் இருந்தால் ;

கிரகநிலை

		சுக்கிரன்	ராகு
	இராசி சக்கரம்		சந்திரன் புதன் சூரியன் செவ்வாய்
			லக்கினம் சனி
கேது குரு			

பிறந்த வீட்டுநிலை

2. பலனதைச் சொல்லு மென்று பார்வதி கேட்கும் போது
குலகுரு வதிஷ்டர் சொல்வார் கூறுமில் வடதென் வீதி
நலமுடன் கிழக்கு வாடை விநாயக னருகில் மேற்கில்
தலமதற் கருகி லேதான் சார்ந்திடும் ரதங்கள் தாமே.

2. ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கும்போது, குலகுருவாகிய வசிஷ்ட முனிவர் பதில் சொல்லுகின் ரூர். (ஜாதகியின்) பிறந்த வீடு தெற்குவட்க்கான தெருவில் கிழக்கு வரிசையில் உள்ளது. விநாயகரின் ஆலயம் சமீபத்தில் மேற்குப் பக்கம் இருக்கும். இவ்வீட்டுக்கு அருகில் தேர் நிற்கும். (தேரடிக்கு அருகிலுள்ள வீடு எனவும் கொள்ளலாம்.)

இதுவுமது

3. அதற்குமேல் மாரி தங்கு மருகினில் மாயோ னிற்குஞ்
சதமுட னதற்குக் கீழ்ப்பால் சங்கரன் கோஷ்ட மாகும்
விதவித துருவங் கீழ்ப்பால் மேவிடு மக்கினி காளி
பதிக்குநேர் தெற்கி லேதான் பாலகீர்த் தங்க ளுண்டு.

3. அவ்வீட்டுக்கு மேற்குப் பக்கத்தில் மாரியம்மன் கோவில் ஒன்று உண்டு. அருகாமையில் திருமாலின் ஆலயமும், அதற்குக் கிழக்கில் சிவபெருமான் ஆலயமும், இன்னும் பலவிதமான கோட்டை கொத்தளங்களும், காளி கோவில் தென்கிழக்கிலு முள்ளன. இவ் வீட்டுக்கு நேர்த்தெற்கில் ஒரு நீர்நிலையு முள்ளது.

ஜாதகியின் பிறவி

4. அருகினில் சோலை சூழி யாத்தாளு நிற்கு மென்றேரும்
உரைக்கிறேஞ் சமவூர் தன்னி லுத்தமி ஜனன மாகி
வருவளா மென்று சொன்னேம் மாதிரு தந்தை புத்திரர்
திறமையாய் முன்பின் ஜன்மஞ் செப்புவோங் கேளுந்
[தாயே.

4. சமீபத்தில் தோட்டம் துரவு முதலியனவும் மாரியம்மன் கோவிலும் இருக்கும் ஒரு சமநிலையுள்ள ஊரில் ஜாதகி பிறப்பாள் என்றேரும். அவளுடைய தாய் தந்தையர் புத்திரர் ஆகியோர் பற்றியும் முற்பிறவி மறுபிறவி முதலியவற்றின் பலனையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் சொல்லுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

பின்வரும் ஐந்து பாடல்களால் தந்தை நிறம், குணங்கள் கூறப்படும்

5. தந்தையின் வர்க்கந் தன்னைச்
சாற்றுவோ மிரண்டு மாகும்
வந்திடுங் கன்னி மூன்று
வகையுடன் தீர்க்க மாகும்
நொந்திடும் மற்ற வெல்லாம்
நுவலுவோம் பிதாகு ணத்தைச்
சந்தத மிருகி றத்தன்
தாட்சிண்ய னாகை சாலி.

5. தந்தையின் வர்க்கத்தினரைப் பற்றிச் சொல்லுகின்றேரும். சகோதரர் இருவராவர். தந்தைக்கு மூன்று சகோதரிகள் தீர்க்காயு ளுட்னிருப்பார்கள். மற்றும் சிலர் தோன்றி நிலையாமல் மரித்து விடு வர். இனி, தந்தையின் குண வரலாறுகளைச் சொல்லுகின்றேரும். அவன் கரிய நிறமுடையவன். தாட்சிண்ய புத்தியும் ஊகமுமுடை யவன்.

6. மங்கையர் மோக னவன் மறுமொழி யதிகஞ் சொல்வன்
இங்கித வார்த்தை சொல்வன் யாரையு முறவு கொள்வன்
சங்கீதப் பிரிய னவன் சரசமாய் வார்த்தை சொல்வன்
துங்கமா மனத்த னவன் சுந்தரி கேட்டி டாயே.

6. தந்தை, பெண்கள்மீது மையல் கொள்ளும் இயல்பினன். அதிகமாக எதிர்த்துப் பேசும் வழக்கத்தினன். முகக்குறிப்பை யறிந்து பதிலைச் சொல்லக்கூடியவன். எல்லோரிடத்திலும் நண்பனுக உறவாடுபவன். சங்கீதத்தைக் கேட்பதில் பிரியமுடையவன். சரசசல்லாபமாகப் பேசுபவன். தூய்மையான மனமுள்ளவன். அழகியே! கேளுங்கள்.

7. கல்வியை யுபதே சிப்பன் காலாட்க ளுடைய னுவன்
இல்லையென் றுரைக்க மாட்டா னீகைவா னெவர்க்கு [நண்பன்
நல்லவ னுகி வாழ்வன் நடனசங் கீத மிஷ்டன்
தொல்லையு முடைய னுவன் சுந்தரி மேலுங் கேளே.

7. கல்வியைப் பிறருக்கு உபதேசம் செய்து வருபவன். ஏவலாட்களை உடையவன். யாசித்தவருக்கு இல்லையென்று கூறுதவன். கொடையாளி. எல்லோருக்கும் நண்பனுக விருப்பவன். நல்லவனுக வாழ்ந்து வருபவன். சங்கீதம் நாட்டியம் இவைகளைக் கேட்டும் கண்டும் அனுபவிப்பதில் பிரியமுள்ளவன். துன்பங்கள் உள்ளவன். அழகியே! மேலுங் கேட்பீராக.

8. பகைவரை வசியங் கொள்வன் பகருவான் சிலேடை [வார்த்தை
முகமதில் வடுவு முள்ளான் முன்கோபன் பின்பு சாந்தன்
சுகபுசிப் புடைய னுவன் சுந்தரி நன்ம னத்தன்
அகமது புதிதாய்ச் செய்வன் அவனிள மனமு முள்ளான்.

8. விரோதிகளைத் தன்வயப்படுத்துபவன். இரு பொருள்படும்படி பேசுபவன். முகத்தில் வடு உள்ளவன். முன்கோபமும் விரைவில் சாந்தமடையும் குணமுமுடையவன். இன்பமாகச் சாப்பிடுவதில் விருப்பமுடையவன். நல்ல மனத்தையுடைய மனைவியைப் பெற்றவன். (மனைவியிடத்தில் அன்புள்ளவன்) புதிய வீட்டைக் கட்டுபவன். இளகிய மனமுடையவன்.

9. பொய்யது வதிகம் பேசான் புத்திமான் செட்டுச் செய்வன்
மெய்யது பித்தச் சூடு விரலது மூன முள்ளான்
ஐயமே விச்சை யுள்ளான் அவன்பூமி கிருஷி செய்வன்
நய்யவே கூரு னுவன் நாயகி கேட்டி டாயே.

9. அதிகம் பொய்யைப் பேசாதவன். புத்திசாலி. வர்த்தகத்தைப் புரிந்து வருபவன். பித்தச்சூட்டு சரீரமுள்ளவன். விரலில் ஊனமுடையவன். தருமம் செய்வதில் விருப்பமுள்ளவன். விவசாயத்தைச் செய்து வருவான். பிறர் மனம் புண்படும்படி பேசாதவன். தேவியே! கேளுங்கள்.

10. இக்குண முடையோ னுக்கு இருதார மிரண்டுக் குள்ளே
மிக்கவே யிஷ்யா ளுக்கு மேவிளை விவளே யென்றேங்
தக்கவே யிவள்கு ணத்தைச் சாற்றுவோ மாகி றத்தாள்
பக்குவ மான வார்த்தை பகருவாள் கோபம் கொஞ்சம்.

10. இவ்விதம் கூறப்பட்ட குணங்களுள்ளவனுக்கு ஏற்பட்ட மனைவியர் இருவரில் இஷ்யவளுக்குப் பிறந்தவள் இந்த ஜாதகி என்றேம். இனி இவளுடைய குணங்களைக் கூறுகின்றேம். மாகிற முடையவள். பொருத்தமாகப் பேசுபவள். சிறிது கோபமும் கொள்ளுமியல்பினள்.

ஜாதகியின் இயல்புகளைப் பின்வரு மிருபாடல்களில் கூறுவர்

11. சிறுமைக ளில்லா ளாகுஞ்
செல்விநன் னடக்கை யுள்ளாள்
பொறுமையும் பெருமை யுள்ளாள்
புருடனுக் கினிய ளாகுந்
திருமகள் வாச முள்ளாள்
தேன்மொழி கூறு வாளாம்
நறுமலர்ப் பிரிய முள்ளாள்
நாயகி சீலி யென்றேம்.

11. சிறுமைகளையடையாதவள். நன்னடத்தையை யுடையவள். பொறுமையுள்ளவள். ஏற்றத்தை அடைவாள். தன் கணவனுக்குப் பிரியமானவள். இலட்சுமி கடாட்சம் உள்ளவள். இனிய வார்த்தை களையே பேசுபவள். வாசனைப் புஷ்பங்களின்மீது விருப்பமுடையவள். நல்லொழுக்கமுள்ளவள்.

12. அவசர வார்த்தை சொல்வா ளவள்மனம் வெகுளி
[யாவள்
நவனியி லிவள்தன் னலே நாயகன் யோக வானும்
இவள்மனம் கபடு மில்லாள் யாவர்க்கு நல்லோ ளாவள்
தவசிகட் கன்ன மீவள் தயாளமாங் குணத்த ளாகும்.

12. அவசரமாகப் பேசும் இயல்பினள். வெள்ளையான மனமுடை யவள். இவளை மணந்த பிறகு கணவனுக்கு அதிர்ஷ்டம் பெருகும். சூதுகளில்லாத மனத்தள். எல்லோருக்கும் நல்லவள். துறவிகட்கு அன்புடன் அமுதைப் படைப்பவள். இளகியதும் தாராளமுள்ள துமான மனப்பான்மையை யுடையவள்.

ஜாதகியின் சகோதரபாவம்

13. அவளுடைத் துணைவர் தம்மை யறைகிறே மைந்து மாகும்
நவனியி லாண்பா லொன்று நாயகி யவ்வா றுகுஞ்
ஜயமுனி யிதனை கேட்டுத் திடுக்கென வுரைக்க லுற்றார்
இவளுக்குத் துணைவ ரிரண்டு எப்படிச் சொன்னீ ரையா.

13. இவளுடைய உடன்பிறந்தவரைப் பற்றிச் சொல்லுகின்றேம். அவர்கள் ஐவராவர். ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் மட்டுமே நிலையானவர். இதை ஜயமுனிவர் கேட்டுத் திடீரென்று வினவலானர். ஜாதகிக்கு உடன்பிறந்தவர் இருவர் நிலையானவர் என்று எவ்விதம் சொன்னீர்கள்? முனிவரே!

சகோதர பாவக் கிரகநிலை

14. மூணுக்கு மூன்றில் மன்னன்
மெய்த்ததால் துணைவர் விருத்தி
காணினுந் தீதே யாகுங்
கதிர்மகன் மூன்றைப் பார்க்கத்
தோணினுந் தோஷ மென்றேஞ்
சொல்லுவீ ரந்தச் சங்கை
[1]நாணது லாப மேற
நற்புகர் மூணுக் கெட்டில்;

14. மூன்றுமிடமாகிய (சகோதரஸ்தானம்) துலாத்துக்கு மூன்று மிடமாகிய தனுசில் குரு இருப்பதால் சகோதர விருத்தியுண்டு என்றார். அதற்கு மற்றவர் பதில் கூறுகின்றார். சகோதரர் தோன்றினும் நிலையார். காரணம் யாதுவெனில் சனி மூன்றுமிடத்தைப் பார்ப்பதால் தோஷம் என்றேம். அஃது இல்லையென்று வேறொருவர் சமாதானம் சொல்லுகிறார். ராகு லாபஸ்தானத்தில் இருப்பதாலும் (ஈண்டு விருஷபத்தில்) சுக்கிரன் சகோதர ஸ்தானத்துக்கு எட்டாமிடத்தில்;

15. இருப்பதால் தந்தை யாலே
யிலகிற்று பூர்வத் தோஷம்
உரைப்பீர்கள் முன்னுழ் தன்னை
யுமையேகேள் தந்தை பூர்வம்
திருப்புலி வனத்தி லேதான்
செல்வனும் வைசிய வம்சம்
பெருமையா யுதித்தா னென்றேம்
பிரபல செட்டுச் செய்து;

1. ராகு

15. இருப்பதாலும் ஜாதகியின் தந்தையால் முற்பிறவியில் சில தீவினைகள் ஏற்பட்டன. அத்தீவினைகளைக் கூறுங்கள். பார்வதி தேவியே! கேளுங்கள். தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றேம். திருப்புலிவனத்தில் வைசிய குலத்தில் பெருமையுள்ள குடும்பத்தில் பிறந்து விரிவான வர்த்தகத்தைப் புரிந்து வந்து;

16. பூமியும் பரிபா லித்துப் புகழுண்டாய் மதலை யுண்டாய்
நேமியோர்க் குதவி செய்து நிதானமாய் வாழு நாளில்
தீமையாய் வந்த வூழைச் செப்புவோம் விவர மாகத்
தாமத குணத்தா னை செங்குந்தன் ஒருவன் தானும்;

16. பூமியில் விவசாயத்தைச் செய்து வந்து கீர்த்தியைப் பெற்றுப் புத்திர பாக்கியத்தை யடைந்து உலகத்தவருக்கு உதவி செய்து நேர்மையுடன் வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றேம். தாமத குணங்களுள்ள செங்குந்த வமிசத்தில் பிறந்தவன் ஒருவன்;

தீவினை

17. நேசங்கள் வெகு நாளாக நிமலன்பால் செய்து வந்தான்
பாசமா யிருக்கு நாளி லவன்பாரி பேரில் மோகம்
ஆசைகள் மிகவே கொண்டு வவள்வர னில்லா வேளை
காசுமே யிவனு மீந்து கலந்தனன் சிலநாள் சென்று;

17. இவனுடன் வெகு நாட்களாக சிநேகமாக இருந்து வந்தான். அவ்விதமிருக்குங்கால் அவனுடைய மனைவியின்மீது ஜாதகியின் தந்தை மோகம் கொண்டு அவளுடைய புருடனில்லாத வேளையில் அவளிடம் சென்று பொருள் கொடுத்துச் சிற்றின்பத்தை அனுபவித்து வந்தான். சின்னட்கள் சென்றதும்;

18. பலருக்குந் தெரிந்த தாலே பாவையை விலக்க லுற்றான்
தலைவியும் வைசியன் பக்கல் தானவள் செல்ல லுற்றாள்
நலமுள நேசன் தானும் நவிலுவான் மனவெ றுப்பால்
சிலநாட்கள் சினேகஞ் செய்து தேவியைக் கெடுத்த பாவி;

18. அவ்விஷயத்தைப் பலர் அறியலாயினர். அதனால் கணவன் அப்பெண்ணை விலக்கி விட்டான். அவளும் வைசியனுகிய ஜாதகியின் தந்தையை வந்து அடைந்தாள். நன்மை மிக்க நண்பன் மனம் ஒடிந்து சாபமிடுகிறான். சின்னட்கள் என்னுடன் சிநேகம் கொண்டிருந்த பிறகு என்னுடைய மனைவியைக் கெடுத்த பாவியே!

19. உன்னுடைச் செல்வ நீங்கி யுலகினில் வசையு மாகி
உன்மனை புத்திர ரெல்லா முறைவரே யெமப திக்குப்
பின்வருஞ் ஜன்மந் தன்னில் பேதைய ரிருவ ராயுங்
கன்மங்கள் செய்ய வேண்டிக் காளாக ளில்லா மல்தான்;

19. உன்னுடைய செல்வங்கள் யாவும் நீங்கி உலகில் அவமானங்கள் ஏற்பட்டு மனைவி மக்களையெல்லாம் இழந்து மறுபிறவியிலும் மனைவியர் இருவரையடைந்து இறுதிக் கடன்கள் செய்யப் புத்திரரில்லாமல் ;

20. வாழுவா யென்று சொல்லி
வசனித்தான் நேசன் தானுஞ்
சூழ்ந்தது வந்தத் தோஷஞ்
செப்புவோ மின்னுங் கேளு
ஆழியி லபிமா னப்பெண்
அவள்மனம் வெட்கங் கொண்டு
ஏழைக்கு விவ்வாறு குற்றம்
இலகிற்றுத் தனவா னேகேள்.

20. வாழ்ந்து வருவாய் என்று நண்பன் சாபமிட்டான். அந்தத் தோஷம் இவளுடைய தந்தையைப் பற்றியது. இது தவிர வேறு ஒரு சாபத்தையும் கூறுகின்றோம். (நண்பனுடைய மனைவியாகிய) அப் பிரியமான பெண் மனத்தில் வெட்கம் கொண்டு தனவானுகிய வைசியனிடம் சென்று "ஏழையாகிய எனக்கு இவ்வாறு அவச்சொல் ஏற்பட்டது. செல்வவானே கேள்.

21. உன்னுடை மதியால் கெட்டேன்
உலகினில் வசையு மானேன்
என்னயான் செய்யப் போறேன்
என்றுமே வாடும் போது
என்னுடை யாயுள் மட்டும்
இடைவிடே னுன்னை யானும்
பன்னியே பலவாய்ச் சொல்லிப்
பாவையைக் காக்க லுற்றான்.

21. "உன்னுடைய தீய எண்ணங்களாலேற்பட்ட புத்தியால் கெட்டேன். உலகில் பழி அவமானங்களை அடைந்தேன். இனி நான் என்ன செய்வது? எங்கு வாழ்ந்து வருவது?" என்று இரங்கி மனம் வருந்துமபோது வைசியன் கூறினன், "என்னுடைய ஆயுள் மட்டும் உன்னைக் கைவிடமாட்டேன்" என்றும் இன்னும் பலவிதமாகவும் கூறி அப்பெண்ணை ஆதரித்து வந்தான்.

கருவழித்த தோஷம்

22. அப்படிச் சிலநாள் செல்ல வவளுக்குக் கருவு தங்கச்
செப்புவேன் பண்டி தத்தால் சிலசில அவிழ்த மீந்து
ஒப்புடன் கருவை நீக்க உத்தமி மாண்டா ளென்றோம்
மெய்ப்புடன் அந்தத் தோஷ மேவிற்று யிவனுக்

[கேதான்,

22. அவ்விதம் சிலகாலம் இருக்குங்கால் அவளுக்குக் கருவேற் பட்டது. அக்கருவை ஔஷதங்களைக் கொடுத்து அழிக்க வைத்தியம் செய்தான். கருவும் நீங்க, அப்பெண்ணும் இறந்து விட்டாள். பெண் இறந்த தோஷம் இவனை வந்தடைந்தது.

23. அந்தியக் காலந் தன்னி லவன்செல்வங் குறைவு நேர்ந்து
வந்திடு மனைவி மாண்டு மறலியின் பதிக்குச் சென்று
முந்திய பிரம லோ மேதினில் வரையப் பட்டு
வந்தவ னிவளின் தந்தை யறைகிறே மிச்சென் மத்தில்.

23. தன் கடைசிக் காலத்தில் அவனுக்குச் செல்வம் குறைந்தது. அவனுக்குற்ற மனைவியும் மாண்டாள். இவனும் மாண்டான். மீண்டும் உயர்ந்தவராகிய பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் ஜாதகியின் தந்தையாகப் பிறந்தான் என்றோம்.

தோஷங்களின் பயன்

24. மனைவிக்குத் தோஷ முண்டு மறுமன வருவா ளாகும்
அனையவே யாண்பால் தோஷ மணுகினுந் தீதே யாகும்
பிணையான தோஷந் தீரப் புகலுவோஞ் சாந்தி தானும்
பனிவரை மகளாய் வந்த பார்வதி கேட்டி டாயே.

24. அவனுடைய மனைவிக்குத் தோஷமுண்டு. இரண்டாம் மனைவி ஒருத்தி வருவாள் என்றோம். ஆண் குழந்தைகள் ஜனிக்கா. ஒருக்கால் பிறந்தாலும் அவை நிலையா. நீங்குதரும் தோஷம் விலகச் சாந்தியொன்றைச் சொல்லுகின்றோம். பனிக்கு உறைவிடமாகிய ஹிமய மலையரசனுகிய ஹிமவானின் புத்திரியாக வந்த பார்வதியே! கேளுங்கள்.

சாந்தி விவரம்

25. தந்தையுந் தாயு மாகச் சக்கரத் தோனும் வாழும்
முந்திய வள்ளூர் சென்று முகுந்தனை யர்ச்சித் தேத்தி
இந்தவா றைந்து திங்கள் இடைவிடாச் சென்று மேதான்
சந்ததம் ரஜதந் தன்னல் சுதனைப்போல் செய்து

[யின்னேன்

25. ஜாதகியின் தந்தையும் தாயும் சேர்ந்து சக்கரத்தையுடைய திருமால் வாழ்ந்து வரும் திருவள்ளூருக்குச் சென்று அங்குள்ள வீரராகவப்பிரானை அருச்சித்து வணங்கி ஐந்து மாதங்கள் (அமாவாசையன்று) இடைவிடாமல் சென்று, வெள்ளியினால் குழந்தையைப்போல் உருச்செய்து;

26. விடம்புஷ்பங் கந்தத் தோடு
விப்பிர மாதுக் கீந்து
அடைவுடன் முன்னூழ் தன்னை
யவரிட மோதி யேதான்
திடமுடன் பொறுத்தே னென்று
திருவாக்கா லர்ச்சித் தேத்தி
உடனேதான் உள்ளூர் சென்று
ஓராண்டு யேகா தேசி ;

26. வெற்றிலை பாக்கு புஷ்பம் சந்தனம் இவைகளுடன் (தட்சி ணையைச் சேர்த்து) அந்தண குலத்துப் பெண்மணியிடம் கொடுத்துத் தன் முற்பிறவித் தீவினையை அவளிடம் சொல்லி அவளுடைய வாக்கால் பொறுத்தோம் என்று ஆசி பெற்று மீண்டும் உள்ளூருக்குத் திரும்பி ஒரு வருட காலம் ஏகாதசியன்று ;

27. விரதமே கொள்வா னுகில்
விளங்கின சுதரான் தீர்க்கங்
குறையென்று செய்யா னுகில்
குழவிகள் பிறக்கில் தீதாம்
பெருமையாய்ச் சொல்போல் செய்யில்
பேசுவோ மாண்பா லொன்று
திருவெனப் பெண்பா லொன்று
செப்புவோந் தீர்க்க மாக.

27. விரதம் இருந்து வருவார்களாகில் தோன்றும் புத்திரன் நிலையாக விருப்பான். அலட்சியமாகச் செய்யாமலிருந்தால் குழந் தைகள் பிறந்தாலும் நிலையா. பெருமையுடன் நாங்கள் கூறியது போல் செய்து வந்தார்களாயின் ஆண் குழந்தையொன்றும் இலக்குமி யையொத்த பெண்குழந்தையொன்றும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பர்.

ஜாதகியின் திருமணக்காலம்

28. ஜாதகி மணத்தின் காலஞ் செப்புவோம் பதினே
[ராண்டுள்
மேதினில் மேட திக்கில் விளங்கிடுந் தந்தை வர்க்கங்
கோதிலா வருவா னுகுங் கூறுவோஞ் சிவந்த மேனி
நீதிலான் கல்வி யுள்ளான் செட்டுக்கள் செய்வா னுவான்.

28. ஜாதகியின் திருமணக் காலத்தைச் சொல்லுகின்றோம். கணவன் அவளுடைய பதினேராம் வயதில் கிழக்குத் திக்கில் தன் தந் தையின் வர்க்கத்திலிருந்து வாய்ப்பான். கணவனுடைய குணங்களைக்

கூறுகின்றேம். சிவந்த உடலுடையவன். தீமையில்லாதவன். கல்வி யறிவுள்ளவன். வர்த்தகத்தைப் புரிந்து வருவான்.

29. இன்னவள் வந்த பின்பு இளம்பிறை போலே யோகந்
தன்னிலே பணிகள் பாக்கியஞ் சகலமுங் குறைவு றாது
உன்னதப் பந்து மேலா யுத்தமி வாழ்வா ளாகுஞ்
சொன்னசொல் குன்றி டாவே சுந்தரி மேலுங் கேளே.

29. இவனுக்கு மனைவி வந்த பிறகு (ஜாதகியை மணந்த பிறகு) வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். ஆபரணங்கள் பாக்கியம் இவைகட்குக் குறைவேற்படாது. தன் பந்துக்களுக்கு மேலாக ஜாதகி வாழ்ந்து வருவாள். நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு. அழகியே! மேலும் கேளுங்கள்.

ஜாதகியின் புத்திரபாவம்

30. புத்திர ரொன்ப தாகும் புகலுவோ மாண்பா லிரண்டு
சித்தமாய்ப் பெண்பா லிரண்டு செப்பினேந் தீர்க்க மாக
மற்றவை சேத மென்றே மைந்தனும் யோக முள்ளான்
அத்தியைப் பெற்ற மாதே யறைகின்றேம் மேலுங் கேளே.

30. ஜாதகிக்கு ஒன்பது குழந்தைகள் தோன்றுவர். அவர்களில் இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக விருப்பர். மற்றும் பிறப்பவர் நிலையார் என்று சொல்லுகின்றேம். புத்திரன் அதிர்ஷ்டமுள்ளவன். விநாயகனைப் பெற்ற தேவியே! மேலும் சொல்லுகின்றேம் கேட்பீராக.

தாயின் குணநலங்கள்

31. அன்னையுஞ் சிவந்த மேனி
யவளுமுன் கோபங் கொஞ்சம்
நன்னிய ஒடிச்சல் தேகி
நாயகி மூர்க்க முள்ளாள்
பன்னியே யுரைக்க வல்லாள்
பந்துவும் பகைய தாகுந்
தன்தந்தை குலத்திற் குற்றஞ்
சகோதர களத்திரங் குற்றம்.

31. ஜாதகியின் தாய் சிவந்த உடலுடையவள். முன்கோபம் சிறிதுள்ளவள். மெல்லிய சரீரமுள்ளவள். மூர்க்க குணமுமுள்ளவள். பன்னிப் பன்னிப் பேசுபவள் சுற்றத்தாரிடம் விரோதமுடையவள். தன் தந்தையின் குலத்தில் நிந்தையுள்ளவள். உடன்பிறந்தவருக்கும் அவருடைய மனைவி முதலியவர்கட்கும் அபவாதமுண்டு.

தாயின் சகோதரபாவம்

32. துணைவர்க ளிருவான் காகுஞ்
சொல்லுவோ மாண்பா லிரண்டு
அனையவே பெண்பா லவ்வா
றறைகிறேம் தீர்க்க மாகப்
பிணையாகு மற்ற வெல்லாம்
பேசுவோ மிவளுக் கேதான்
கனமுடன் துணைவர் சேதி
கழறுவோ மூத்தோ னுக்கு.

32. தாயினுடைய சகோதரர் எட்டுப் பேராவர். அவர்களில் இரு சகோதரர்களும் இரு சகோதரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும். மற்றும் தோன்றியவர் நிலையார். இவளுடைய மற்ற சகோதரர்கள் இறந்து விடுவர். தாயின் மூத்த சகோதரனது விவரங் களைக் கூறுகின்றேரும.

தாயின் உடன்பிறந்தவர் விவரம்

33. இளமன முடைய னுவ னீகைவான் சோம்ப னுள்ளான்
கலவர புத்தி யுள்ளான் காவலன் வேறுய்ச் செல்வன்
இவளுமே பிறந்த வாண்டி லிசைந்திடு மனைவி தானும்
நலமிலா மனைவி யென்றேரும் காயகி குலத்தில் குற்றம்.

33. இளகிய மனமுடையவன். கொடையாளி. சோம்பலுள்ள வன். கலவரமடையும் புத்தியுள்ளவன். இவன் மற்றவரிடமிருந்து பிரிந்து வேறுகச் செல்வான். ஜாதகி பிறந்த வருடத்தில் மாமனுக்குத் திருமணம் நிகழும். வரும் மனைவி நலமில்லாதவள் என்றேரும். அவள் தனது குலத்தில் அபவாதமுடையவள்.

ஜாதகியின் மாமன் மனைவி விவரங்கள்

34. பரவச முடைய ளாகும்
பாவையும் வேறுய்ச் செல்வள்
உரைக்கிறே மறும னீதான்
உறைத்திடு மிவனுக் கேதான்
திறமிலா யிளையோன் சேதி
செல்வதி யொன்றே யாகும்
அறைகிறேம் தாய்தந் தைக்கு
அவன்குண வாளு மென்றேரும்.

34. பிறர் வசம் ஆனவள் அவள் இவனை விட்டு விட்டு வேறுகச் சென்று விடுவாள். ஜாதகியின் மாமன் வேறு ஒருத்தியை மணப்பான்

என்றேரும். இஃாய மாமனின் செய்தியைக் கூறுகின்றேரும். அவனுக்கு மனைவி ஒருத்தியேயாவள். தன் தாய் தந்தையருக்குப் பிரியமானவன். மிக்க நல்ல குணம் வாய்ந்தவன்.

35. தந்திர வாதி யாகுந் தன்சொல்லே மேன்மை யாகுந்
தந்தையால் சல்லிய முள்ளான் சகலர்க்கு நல்லோ னவன்
வந்திடு புத்திர ராண்பால் வரைகிறே மாண்பா லிரண்டு
சந்ததம் பெண்பா லிரண்டு சாற்றுவோந் தீர்க்க மாக.

35. தந்திரசாலி என்றேரும். அவன் தனது வார்த்தைகள் மேன்மையுள்ளவை என்று திடமாகக் கூறுபவன். தன் தந்தையால் ஏற்பட்ட கடனுடையவன். எல்லோருக்கும் நல்லவன். அவனுக்கு நான்கு குழந்தைகள் தோன்றும். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றேரும்.

தாயின் முற்பிறவி

36. இன்னமுஞ் சிலவே சேதி யியம்புவோ மிரண்டி லேதான்
அன்னையின் பூர்வந் தன்னை யறைகிறே மினிமே லாக
மன்னவன் பதவி சேர்ந்த மாபலி நகரந் தன்னில்
உன்னதக் கோகு லத்தி லுதித்தவ ளிவளே யென்றேரும்.

36. மற்றும் சில விவரங்களை இரண்டாம் பாகத்தில் விவரமாகக் கூறுகின்றேரும். இனி தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றேரும். அரசனுகிய மகாபலிச்சக்கரவர்த்தி முக்தியடைந்த மகாபலிபுரத்தில் இடையர் மரபில் பிறந்தவள் இவள் என்றேரும்.

37. புத்தியும் பெருமை யுண்டு புத்திர ருள்ளா ளாகி
உற்றோர்கள் மெச்ச வாழ்ந்து வுலகுக்கு நல்லோ ளாகி
வித்தகி வரனின் முன்னே மேவிஞ ளெமப தித்குப்
பத்திய பிரமன் தன்னுல் பாரினில் வரையப் பட்டு ;

37. புத்திசாலி. பெருமையுள்ளவள். புத்திரபாக்கியத்தைப் பெற்றவள். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து உலகத்தில் நல்லவள் என்ற பெயருடனிருந்து தன் கணவனுக்கு முன்பாக மரண மடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு உலகில் ;

தாயின் மறுபிறவி

38. வந்தவ ளிவளே யென்றே மறைகிறே மிவள்பின்
[ஜன்மம்
சந்ததம் வள்ளூர் தன்னில் தானவள் பிரம்ம சேயாய்
மூந்தியே யுதித்து மேலு முயற்சியாய்க் குடும்பி யாகிப்
பந்தமாய் வாழ்வா ளென்றேரும் பார்வதி கேட்டி டாயே.

38. பிறந்தவள் இவள் என்றேம். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேம். திருவள்ளூரில் அந்தண குலத்தவளாகப் பிறந்து செயலுள்ள குடும்பியாகப் பொருத்தமான வாழ்க்கையை நடத்துவாள். தாயே! கேளுங்கள்.

ஜாதகியின் முற்பிறவி

39. உதித்தவள் பூர்வந் தன்னை யுரைக்கிறேஞ் காஞ்சி
[தன்னில்
சதியிலாக் கங்கை வம்சந் தானவ ளுதித்தா ளென்றேம்
பதியினில் திருவு முண்டாய்ப் பாக்கிய மதிக முண்டாய்ச்
சதியுடன் மதலை யின்றிச் சேத்திரந் தீர்த்தந் தோய்ந்து;

39. இனி ஜாதகியின் முற்பிறவியைச் சொல்லக் கேளுங்கள். காஞ்சிபுரத்தில் தீங்குகளில்லாத வேளாள குலத்தில் பிறந்தவள் என்றேம். வீட்டில் இலக்குமி கடாட்சம் பெற்று, அதிகமான பாக்கியத்தை யடைந்து தீய செயலால் புத்திர பாக்கியமில்லாமல் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி;

40. தேவதாப் பத்தி கொண்டு தேவியின் விரதம் பூண்டு
மேவியே வாழும் நாளில் விளங்கிற்றுச் சுதர்க
[ளென்றேம்
ஆவலாய் மரண மாகி யரிமகன் வரையப் பட்டுத்
தாவிய விக்கு லத்தில் தானவ ளிவளே யென்றேம்.

40. தெய்வ பக்தியுடன் லட்சுமி விரதம் இருந்து வருங்காலத்தில் புத்திரபாக்கிய மேற்பட்டது. பிறகு மரணமடைந்து திருமாலின் மைந்தனுகிய பிரமதேவனுல் படைக்கப்பட்டு இக்குலத்தில் பிறந்தாள் என்றேம்.

ஜாகியின் மறுபிறவி

41. இவளுடைப் பின்ஜன் மத்தை யியம்புவோங் காஞ்சி
[தன்னில்
சிவமதஞ் சைவ வம்சஞ் ஜனித்துமே பெருமை பூண்டு
நவனியில் வாழ்வா ளாகு நாட்டினில் கீர்த்தி யேற்பள்
தவமுடை யோரை காக்குந் தயாபரி கேட்டி டாயே.

41. ஜாதகியின் மறுபிறவியைச் சொல்லுகின்றேம். காஞ்சிபுரத்தில் சிவமதத்தில் சுத்த (வீர) சைவ குலத்தவளாகப் பிறந்து பெருமையுடன் வாழ்ந்து வருவாள். உலகில் கீர்த்தியை யடைவாள். தவம் செய்பவரைக் காக்கும் தேவியே! கேளுங்கள்.

தந்தை தாயரின் மரண காலம்

42. இவள்பிதா மரண கால மியம்புவோ மிந்நூல் தன்னில்
அவனியில் தேவரின் மாத மறைகிரேரங் கண்டங் தானே
நவனியில் மாதிரு வுக்கு நாட்டுவோ முப்பான் மூன்றில்
தவசியே சிம்ம மாதஞ் சாற்றுவோங் கண்டங் தானே.

42. ஜாதகியின் தந்தையின் மரண காலத்தை இந்தச் சோதிட சாஸ்திரத்தில் கூறுகின்ரேரம். இவ்வுலகில் கார்த்திகை மாதத்தில் அவனுக்கு கண்டம் ஏற்படும். தாய்க்கு ஜாதகியின் முப்பத்து மூன்ரும் வயதில் ஆவணி மாதத்தில் மரணம் ஏற்படும்.

ஜாதகியின் மரணகாலம்

43. இன்னவள் மரண கால மியம்புவோ மன்பா னலில்
தன்னிலே சாடி மாதஞ் சாற்றுவோங் கண்டங் தானே
மன்னிய யிவளின் யோக மறைகிரேரஞ் சுகமு முள்ளாள்
உன்னதப் பணியு முள்ளாள் ஒங்கிடுஞ் செல்வந் தானே.

43. ஜாதகியின் மரண காலத்தைச் சொல்லுகின்ரேரம் அஃது அவளுடைய ஐம்பத்து நான்காம் வயதில் மாசி மாதத்தில் ஏற்படும். இனி இவளுடைய யோக வரலாற்றைச் சொல்லுகின்ரேரம். சுகமுடையவள். உயர்ந்த ஆபரணங்களுள்ளவள். செல்வம் பெருகும்.

44. அன்னைக்கு மேலாய் வாழ்வள்
யாவர்க்கு நல்லோ ளாவள்
சொன்னசொல் பிசகா ளாகுந்
துர்ச்சனர் நேசச் கொள்ளாள்
இன்னமுஞ் சிலவே யோக
மியம்புவோ மிரண்டி லேதான்
தந்தியைப் பெற்ற மாதே
தாயாபரி மேலுங் கேளே.

44. தன்னுடைய தாய்க்கு மேலாக வர்ழ்ந்து வருவாள். எல்லோருக்கும் நல்லவளாகவும் இருப்பாள். சொன்ன சொல் தவருதவள். கெட்டவர்களுடைய சகவாச மில்லாதவள். இன்னும் சில யோகங்களை இரண்டாம் பாகத்தில் கூறுகின்ரேரம். விநாயகரைப் பெற்ற தேவியே! தயாநிதியே! கேட்பீராக.

தந்தையின் யோகம்

45. பன்னிரண்டு வாண்டு மேலாய்ப்
பகருவோந் தந்தைக் கேதான்
இனிமையாய்ச் சல்லியம் நீங்கு
மிடருகள் விலகு மென்ரேரங்

கனமுள பூமி சேருங்
கனத்திடுஞ் செட்டு மேலாய்
வினையுள வறுமை நீங்கும்
வித்தகி கேட்டி டாயே.

45. ஜாதகியின் பன்னிரண்டாம் வயதுக்குமேல் தந்தைக்கு ஏற்பட்ட கடன்கள் விலகும். துன்பங்களும் விட்டொழியும். வினைநிலங்கள் அதிகமாகச் சேரும். வர்த்தகம் விரியும். தீமைதரும் வறுமை நீங்கும். தேவியே! கேளுங்கள்.

இதுவுமது

46. இதற்குமுன் பூமி மூலம் ஏகிடுஞ் சல்லிய முண்டு
குதர்க்கங்கள் குடும்பந் தன்னில் குலத்துளோர் பகையு
[மாவர்
சதமான செலவ னேகஞ் சஞ்சல மனங்க ளுண்டு
பதியினில் திருவு நீங்கும் பார்வதி கேட்டி டாயே.

46. இதற்கு முன்னுல் பூமியுல் கடன் உபத்திரவமுண்டு. குடும்பத்தில் விரோதமுண்டு. தன் பந்து ஜனங்களும் பகையாவர். செலவுகள் பெருகும். அலைபாயும் மனமுண்டாகும். வீட்டிலுள்ள லட்சுமி அகலுவாள். தாயே! கேளுங்கள்.

47. பதின்மூன்று வாண்டு மேலாய்ப் பாருகள் சேரு
[மென்றேஞ்
சதிசெய்தோ ருறவே யாவர் சஞ்சல நிவிர்த்தி யாகும்
அதிபதி யாக வாழ்வன் அவன்செயுஞ் செட்டு மேலாய்
அதிபனும் வாழ்வா னகு மங்கையே கேட்டி டாயே.

47. ஜாதகியின் பதின்மூன்றும் வயதுக்கு மேலாக நிலங்கள் சேரும். தீங்கு செய்யச் சதி செய்தவரே உறவினராக மாறுவர். ஏற்பட்ட துன்பங்கள் விலகும். எஜமானனுக வாழ்ந்து வருவான். அவன் செய்யும் வர்த்தகம் பெருகும். இவ்விதம் தந்தை வாழ்ந்து வருவான். தாயே! கேளுங்கள்.

ஜாதகியின் ஜனனகாலதசை

48. பிறந்தசேய் ஜனன காலம் புததசை தனிலி ருப்புச்
சிறந்திடு மாண்டு மைந்துந் திங்களஞ் சறையு மாகும்
விரைந்திடுந் துணைவர் விருத்தி மேவியே நஷ்ட மாகுங்
குறைந்திடுந் தனமு மென்றேங் கோதையே மேலுங்
[கேளே.

48. ஜாதகியின் ஜனன காலத்தில் புதமகாதசையில் இருப்பு ஐந்து வருடங்களும் ஐந்து மாதங்களும் பதினைந்து நாட்களுமாகும்.

அக்காலத்தில் சகோதர விருத்தி ஏற்பட்டு அழிந்துவிடும். உள்ள செல்வமும் குறையும். தாயே! கேளுங்கள்!

ஜனனகால பலன்

49. தந்தையின் தம்பீ சேதஞ் சல்லிய மிகவே நேருஞ்
சொந்தஜன் மனிதன் சேதஞ் சுகதுக்கங் கலந்து
[வாழ்வன்
எந்தையே செலவ னேகம் இவன்பந்து விரோத மாகும்
கந்தனைப் பெற்ற மாதே கழறுவோஞ் சித்தி ரங்கள்.

49. தந்தையின் இளைய சகோதரன் இறந்து விடுவான். துன்பங்கள் அதிகமாக ஏற்படும். நல்ல மனிதராகவும், சொந்த மனிதாரகவு முள்ளவர் இறந்து விடுவார். சுகமும் துக்கமும் கலந்து வாழ்வான். தாயே! செலவு பெருகும். இவனுக்குப் பந்துக்களின் பகை ஏற்படும். முருகக் கடவுளைப் பெற்ற தாயே! மற்றும் கூறுகின்றேம்.

ஜாதகம் 79

1. திங்களு மிராகு மேரு சேய்மேடங் காரி தேளில்
பங்கயன் கேது வீணை [1]பார்க்கவன் புதனு நண்டு
பொங்கமாய்க் குருவுங் கன்னி புலியது ஜன்ம மாக
இங்கிவை கோளுங் கூடி லியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரன் ராகு தனுசிலும், செவ்வாய் மேடத்திலும், சனி விருச்சிகத்திலும், சூரியன் கேது மிதுனத்திலும், சுக்கிரன் புதன் கடகத்திலும், குரு கன்னியிலுமாக நவக்கிரக நிலையிருந்து ஜன்ம விலக்கினம் சிம்மமானால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள்.

கிரகநிலை

	செவ்வாய்		சூரியன் கேது
	இராசி சக்கரம்		சுக்கிரன் புதன்
			லக்கினம்
சந்திரன் ராகு	சனி		குரு

ஜாதகனுடைய தந்தையின் சகோதரபாவம்

2. உமையவள் கேட்கும் போது
உரைக்கிறார் பராசர் தாமும்
அமைந்திடு மாண்பால் ஜன்ம
மவன்தந்தை துணையா ரென்று
நவனியில் பெண்பா லிரண்டு
நவின்றனந் தீர்க்க மாகத்
தவசியே பின்பால் சேதி
சாற்றுவோந் தாயே யாங்கள்.

2. இவ்விதம் பார்வதிதேவி கேட்கும்போது பராசர முனிவர் பதில் கூறுகின்றார். இந்து ஆண் மகனுடைய ஜாதகம். அவனுடைய தந்தைக்கு உடன்பிறந்தவரில் ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள் என்றோம். தவமியற்றுபவளே! அவர்களின் விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம்.

---

1. சுக்கிரன்

வேறு

தந்தையின் குணங்கள் பின்வரும் நான்கு பாடல்களில் கூறுவர்

3. நோயிந் நாளில் மைராசி
நிலைப்பான் சிவந்த மேனியினன்
ஐய மனத்தன் பொறுமையுளன்
அறிவோர் நேயன் அன்னமீவன்
வையம் புகழு மிளமனத்தான்
வணிப மதனல் பொருள்சேர்ப்பன்
தையல் மார்கள் மோகமுளன்
தாய்வழி யதனில் சிலகுற்றம்.

3. ஜாதகனுடைய தந்தை அசுவினி நட்சத்திரம் மேஷ இராசியில் பிறந்தவன். சிவந்த உடலுடையவன். சந்தேகப்படும் மனமுள்ளவன். பொருமையுடையவன். அறிவாளிகட்கு நண்பன். பசித்தவர்கட்கு அன்னமளிப்பவன். உலகத்தவர் எல்லோரும் கொண்டாடுமளவுக்கு இளகிய மனமுடையவன். வர்த்தகத்தைப் புரிந்து வந்து அதனல் பொருளீட்டுவான். பெண்கள்மீது மையல் கொள்ளுபவன். அபவாதமுள்ள தாயின் வர்க்கத்தை யுடையவன்.

4. குற்றஞ் செய்தோர் குறையெண்ணன்
கோவல ராலே தானுய்வன்
சுத்த மனத்தன் யாவரையுஞ்
சூழ விரும்பும் குணவானும்
வெற்றி யுடனே நினைத்த வெலாம்
புகலான் வம்பு வாதமெய்யன்
கற்றோ ரினையோர் தமக்கீவன்
கருதான் கட்டு வார்த்தைதனை.

4. பிறர் செய்த குற்றங்களைப் பாராட்டாதவன். அரசரால் ஜீவித்து வருவான். தூய்மையான மனமுள்ளவன். எல்லோரும் சூழ்ந்து ஒருமிக்க ஒத்து வாழ விரும்புங் குணமுள்ளவன். எண்ணிய காரியங்கள் கைகூடும். வீண் அரட்டை வம்பு முதலியவற்றுக்குப் போகாதவன். வாயு நோயுள்ள சரீரி. படித்தவர்கட்கும் ஏழை எளியவருக்கும் கொடுக்கும் இயல்புடையவன். பொய் பேச மனத்தாலும் நினையான்.

5. கடவுள் பத்தி யுட்கருத்து
கதித்த குடும்பி பரிவண்டி.
திடமாம் பூமி சோலைகளுஞ்
சேர்ப்பன் கல்வி யால்பெருமை

படையில் செல்லான் சுகபுசிப்பு
பாராள் மன்னர் வயமாகும்
அடைவோர்க் குதவி யயல்நாடு
அரசு ஓங்கும் அம்பிகையே.

5. உள்மனத்தில் தெய்வபக்தி யுடையவன். கோபங் கொள்ளுப வன். பெரிய குடும்பத்தையுடையவன். குதிரைவண்டி வைத்திருப் பவன். பெரிய சோலைகளையும் நிலங்களையும் வாங்கிச் சேர்ப்பான். கல்வியறிவால் மேன்மையடைவான். சண்டைக்கு முன்னே செல்லா தவன். இன்பமாகச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவன். உலகத்தை ஆண்டு வரும் மன்னன் இவனிடம் மதிப்பைக் கொள்வான். அண்டி வந்தவரை ஆதரிப்பான். வெளிநாட்டுவர்த்தகம் விரிவடையும். தாயே!

6. அருந்தும் உறைப்புப் புளிப்பதனை
யருமைத் தலங்கள் தான்செல்வன்
நெறியுந் தவறுன் மூலப்பிணி
நேருஞ் சிலநாள் வனவாசம்
பெருமைக் குணமும் அரிகோபம்
பின்பு சாந்த முயிர்கொடுப்பன்
பறைபள் ளுகளுக் கினியவனும்
பாரில் வறுமை யடையானே.

6. காரத்துடன் சேர்ந்த புளிப்புப் பதார்த்தங்களைப் புசிப்பதில் விருப்பங் கொள்ளுவான். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்லு வான். நேர்மை தவறுதவன். மூல ரோகமுள்ளவன். சின்னுட்கள் மட்டும் காட்டில் வாழ்ந்து வருவதுபோல் துன்பத்தையடைவான். பெருமைப்படக் கூடிய குணமுள்ளவன். சிங்கத்தைப்போல் விரைவில் கோபங் கொள்ளுவான். விரைவில் சாந்தமடைவான். பிறருக்குற்ற ஆபத்துக்களைத் தவிர்ப்பான். ஏவலாட்களுள்ளவன். உலகில் தரித்திர மடையாதவன்.

7. முன்னேன் தன்னை யாதரிப்பன்
முயல்வான் பெரிய தொழிலென்றும்
இன்னேன் தனக்கு விப்பாலன்
எய்தும் மூன்றுஞ் ஜனனமதாய்
அன்னேன் குணத்தைப் புகல்வேன்யான்
அதிகக் கல்வி மூன்றுமே
தன்சொல் லடக்கம் பித்தப்பிணி
சாருஞ் சிவந்த மேனியனே.

7. ஜாதகனுடைய தந்தை தன்னுடைய மூத்த சகோதரனை ஆதரித்து வருவான். தன் முயற்சியால் பெரியதொரு தொழில் நடக்கும். இனி ஜாதகனின் குணங்களைக் கூறுகின்றேம். மூன்று விதமான கல்விகளில் நல்ல தேர்ச்சிப் பெற்றவன். அடக்கமாகப் பேசுபவன். பித்தரோக முள்ளவன். சிவந்த உடலுடையவன்.

ஜாதகனுடைய குணங்கள்

8. மேம்பா டாக வரசரிஞல்
வணிபஞ் செய்வன் மிகுதனவான்
பான்மை வார்த்தை பரிவண்டி
படைப்பன் யூகம் பலர்நேயன்
தேம்பித் திரிவோர் தமைக்காப்பன்
திரமனத் தாஞந் தெய்வபத்தி
சோம்ப லுடையன் பிறர்பொருள் மேல்
செல்லு மனத்தன் ஜனவசியம்.

8. அரசாங்கச் சார்புள்ள வர்த்தகத்தை விரிவாகச் செய்து வருவான். பொருத்தமாகப் பேசுபவன். குதிரை வண்டி வைத்திருப்பவன். ஊகமுள்ளவன். பலருக்கு நண்பனாக இருப்பவன். பசியால் வாடிய ஏழைகளை நன்கு ஆதரிப்பான். திடமான மனமும் தெய்வபக்தியு முள்ளவன். சிறிது சோம்பலுடையவன். அயலார் பொருள்களின் மீது மனமாட்டம் உடையவன். ஜனங்கள் இவன் வார்த்தைகளில் மயங்குவார்.

இதுவுமது

9. பிறந்த வூரில் தான் வாழான்
பெம்மான் பத்தி பணி செய்வன்
கரைப்பான் இரும்பு மனத்தோரை
கட்டு வார்த்தை கழறுவனும்
நெறியில் தவர்வன் அரிகோபம்
எதிரிக் கஞ்சான் நேமி விருத்தி
வறுமை யடையான் சிவிரேகை
மருவுங் கரத்தில் மாமுனியே.

9. தான் பிறந்த ஊரில் வசித்து வராதவன். சிவபெருமானிடம் பக்தி யுள்ளவன். திருப்பணிகளைக் செய்து வருவான். கடினமனமுள்ளவரையும் இவன் தனது வார்த்தைகளால் இரக்கங் கொள்ளும்படி செய்பவன். பொய்யைப் பேசுபவன். நேர்மையுடன் நடவாதவன். சிங்கம்போல் கோபங் கொள்ளுபவன். விரோதிகட்குப் பயப்படாதவன். விளைநிலங்களின் பெருக்கமுள்ளவன். தரித்திரத்தை யடையாதவன். கையில் பல்லக்குரேகை உள்ளவன். தவமுனியே.

ஜாதகனுடைய மூத்த சகோதரியின் இயல்புகள்

10. முன்னுல் துணைக ளிரண்டுமே
விருத்தி யென்றே மங்கையுமாண்
சொன்னேன் குணத்தை மாதுவுமே
சிவந்த மேனி கல்வியுண்டு
பொன்னு பரண மிச்சை யுண்டு
பிதாவால் பெருமை புறஞ்சொல்லாள்
கன்னென மொழியும் நடைநன்மை
கதித்த புத்தி யுடையவளே.

10. இவனுக்கு இருவர் உடன்பிறந்தவாரவர். அவர்கள் இவனுக்கு மூத்தவர்கள். ஒருவர் ஆணும் மற்றவர் பெண்ணுமாவர். அவர்களிருவரும் நீண்ட ஆயுள் உள்ளவர்கள். இனி சகோதரியின் குணங்களைக் கூறுகின்றேம். அவள் சிவந்த உடலுடையவள். பொன்னு பரணத்தை அணிவதில் விருப்பமுள்ளவள் தன் தந்தையால் பெருமையை யடைவாள். கோட் சொல்லாதவள். இனிய வார்த்தைகளையே பேசுபவள். நன்னடத்தை யுடையவள். கோபங் கொள்ளும் மனமுடையவள்.

இதுவுமது

11. உடையோள் தனக்குச் சுதராண்பால்
உரைப்போ மிரண்டு கன்னியொன்று
திடமாங் குடும்பந் தானுமுளள்
தேவி யருள்போல் நடந்திடுவள்
முடையே சொல்லாள் யாவருக்கும்
வயது தீர்க்க மொய்குழலே
உடையாள் தனக்குப் பின்சேதி
யுரைப்பக் கேண்மோ யுத்தமியே.

11. இவ்விதக் குணங்களுள்ளவளுக்கு இரு புத்திரர்களும் ஒரு புத்திரியும் தோன்றுவர். பெரிய குடும்பத்தைப் பெற்றவள். தேவியின் அருளைப் பெற்று வாழ்ந்து வருவாள். ஒருவருக்கும் தீங்கு செய்யும் வார்த்தைகளைப் பேசாதவள். நீண்ட ஆயுள் உள்ளவள். வண்டுகள் மொய்க்கும் குழற்கற்றையைப் பெற்றவளே! இவ்விதமுடையவளுக்கு மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுகின்றேம். உத்தமியே! கேளுங்கள். (இவ்விதக் குணங்களுள்ளவளுக்கு இளைய சகோதரன் குணங்களைக் கூறுகின்றேம்).

சகோதரன் குண நலங்கள்

வேறு

12. உத்தம குணத்தா னுவான் உறுதியில் லாத நெஞ்சஞ்
சுற்றத்தார் மதிக்க வாழ்வன் சிறப்புள குடும்பி யாவன்
வெற்றிசே ரரசர் பக்கல் மேவியே ஜீவிப் பானும்
நத்தினோர்க் குதவி செய்து நல்லோர்க்கு நல்ல னுவன்.

12. உயர்ந்த குணமுள்ளவன். திடமில்லாத மனமுடையவன். தன் பந்து ஜனங்கள் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். சீர் பெற்ற குடும்பத்தை அடைவான். வெற்றியடைந்த அரசர்பாலணுகி ஜீவித்து வருவான். யாசித்தவர்கட்கு உபகாரம் செய்து வருவான். நல்லவர்கட்கு நல்லவனுக இருப்பவன்.

13. பாரியு மொன்றே யாகும் பாலர்க ளாண்பா லிரண்டு
நாரியு மவ்வாறு தீர்க்க நாட்டினில் புகழு மேற்பன்
மாரனை யொத்த தேகன் மானிலம் விருத்தி செய்வன்
ஆறுமா முகத்தோன் பத்தி யடைந்தோரை யாத ரிப்பன்.

13. மனைவி ஒருத்தியே யாவள். இரு புத்திரர்களையும் இரு புத்திரிகளையும் பெற்று வாழ்வான். அவர்களும் நீண்ட ஆயுள் உள்ள வர்கள். உலகில் கீர்த்தியை அடைவான். மன்மதனை யொத்த சரீரமுள் ளவன். பூமியைப் பெருக்குவான். ஆறுமுகக்கடவுளின்மீது பக்தி யுள்ளவன். தன்னை அண்டி வந்தவரைக் காப்பவன்.

இதுவுமது

14. தந்தைக்குச் சமமாய் வாழ்வன்
தையலர் மோக னுவன்
வந்தவர்க் வன்ன மீவன்
வருந்துனை தனைக்காப் பானும்
நிந்தைக ளேற்கா னுகும்
நிருபர்க ளிஷ்டங் கொள்வன்
சந்ததந் தந்தை யாஸ்தி
தானவன் விருத்தி செய்வன்.

14. தன் தந்தைக்குச் சமானமாக வாழ்ந்து வருவான். பெண் களின்மீது மோகம் கொள்ளுபவன். பசித்து வந்தவர்கட்கு அன்புடன் அன்னமளிப்பவன். உடன்பிறந்த சகோதரரை ஆதரித்து வருவான். வீண் அபவாதங்களை யடையாதவன். அரசாங்கத்தாருக்குப் பிரிய மானவன். தன் தந்தையின் ஆஸ்தியைப் பெருக்கம் செய்வான்.

15. செப்பிலே முன்னோர் சேதி
சிறுவன்பின் ணண்பா லிரண்டு
மெய்ப்புடன் கன்னி யொன்று
விருத்தியா மொன்று சேதம்
தப்பித மாரூஞ் ஜன்மஞ்
சார்ந்திடும் பால னுக்கு
அப்பணி சடையோன் தேவி
அருளிய மொழி குன்றுவே.

15. இவனுடைய மூத்தவரின் குணங்களைக் கூறினேம். இந்த ஜாதகனுக்கு இளைய சகோதரர் இருவரும் சகோதரி ஒருத்தியும் உள்ளனர். ஒரு குழந்தை நிலையில்லாதது. ஆறுவது குழந்தை தவறி விடும். கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானின் தேவியே! நாங்கள் கூறிய வார்த்தைகள் தவறு.

ஜாதகனுடைய இளைய சகோதரன் விவரங்கள்

16. பின்துணை யாண்பால் யோகம்
பிரபலப் புகழு மேற்பன்
மன்னர்கள் வணங்க வாழ்வன்
மண்டலா திபனை யொப்பான்
அன்னியர் குற்றந் தீர்ப்பன்
அதிகார நியாயஞ் சொல்வன்
பின்னமில் லாத தேகி
பிதாமேலாய் வாழ்வா னவன்.

16. ஜாதகனுக்குப் பின் பிறந்த சகோதரனுடைய யோகத்தைச் சொல்லுகின்றோம். பிரபலமான கீர்த்தியையடைவான். அரசாங்கத்தாரும் இவனிடம் மதிப்புக்கொள்ளும்படி வாழ்ந்து வருவான். தேசங்களுக்கெல்லாம் அதிபதிபோல் பெருமையுடனும் கீர்த்தியுடனும் வாழ்ந்து வருவான். பிறர் செய்த குற்றங்களை விசாரித்துத் தீர்த்து வைப்பவன். அதிகாரமுள்ள பதவியை ஏற்று நியாயாதிபதியாக விருப்பவன். ஊனமில்லாத தேகமுள்ளவன். தன் தந்தைக்கு மேலாக வாழ்ந்து வருவான்.

17. மனைவியு மொன்றே யாவ ளபிமான மாது வொன்று
வினையதால் நேரு மென்றோம் விருத்தியா மாண்பா [லிரண்டு
கனமுள பெண்பா லவ்வாறு கழறுவோர் தீர்க்க மாக
நினைப்பதை முடிப்பா னவன் நிமலியே கேட்டி டாயே.

17. ஒரு மனைவியையே அடைவான். ஆனால் அபிமானப்பெண் ஒருத்தி வாய்ப்பாள். அஃது இவன் செய்த (முற்பிறப்புத்) தவினையால்

ஏற்படும் என்றேரும். இரு புத்திரர்களும் இரு புத்திரிகளும் பிறந்து நீண்ட ஆயுள் உள்ளவர்களாவார்கள். எண்ணிய காரியத்தைச் செய்து முடிப்பான். தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

18. அதற்குப்பின் தூணைவர் சேதி
யறிவிப்போம் பின்பா கத்தில்
அதிபன்தன் மணத்தின் காலம்
வரைகிறே மீரே ழாண்டில்
மதிமுக மாது சேர்வ
ளறிவிப்போ மவள்கு ணத்தைக்
கதிதருங் கடவுள் பத்தி
கலப்பளாஞ் சிவந்த மேனி.

18. அவனுக்குப் பின் பிறந்தவர்களின் செய்தியைப் பிற்பாகத்தில் கூறுகின்றேரும். ஜாதகனுடைய திருமணக்காலத்தை எழுதுகின்றேரும. பதினன்காம் வயதில் அழகிய சந்திரனைப்போன்ற முகமுடைய பெண் இவனுக்கு மனைவியாக வாய்ப்பாள். அவளுடைய குணங்களைக் கூறுவோம். முக்தியை யளிக்கும் தெய்வபக்தியுடையவள். சிவந்த உடலுடையவள்.

மனைவியின் குணவிசேஷங்கள்

19. மடமயி லொப்ப தாகும் மைந்தரா ணென்று தோன்றி
உடன்மர ணங்க ளெய்து முதிப்பளா மறும னைதான்
திடமுடன் சுதரா ணிரண்டு தேவியு மவ்வாறு தீர்க்கம்
அடைவுட னிருமனைதா னணுகுங்கா ரணங்க ளென்ன

19. மயிலைப்போன்ற அழகிய உடலையுடையவள். ஒரு புத்திரன் தோன்றிய உடனே அவள் மரணமடைவாள். பிறகு வேற்று மனைவி ஒருத்தி வாய்ப்பாள். திண்ணமாக தீர்க்காயுள் உள்ள இரு புத்திரர்களையும் இரு புத்திரிகளையும் பெற்று வாழ்வான். இரு மனைவிகள் ஏற்படும் காரணத்தை விளக்குவீராக.

களத்திர தோஷமேற்படக் கிரகநிலை

20. தனத்துளோன் விரயம் புக்கச் சத்தமத் தோனு நாலில்
வினையாக யிருப்ப தாலே விளம்பினேங் தார மிரண்டு
கனமுள சுதர்க ளெவ்வாறு கழறினீர் ராகு ஐந்தில்
பினையாக விருப்ப தாலே புத்திர தோஷஞ் சொல்வோம்.

20. குடும்பஸ்தனுதியதியாகிய புதன் விரயஸ்தானமாகிய கடகத்திலிருப்பதாலும், ஏழாம் வீட்டுக்குரிய சனி நான்காம் வீட்டில்

இருப்பதாலும், ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டு என்று சொன்னேம். ராகு புத்திரஸ்தானத்திலிருப்பதால் புத்திரர்கள் உண்டு என்று எவ்விதம் சொல்லலாகும். புத்திர தோஷம் உண்டு என்று நாங்கள் சொல்லுகின்றோம்.

மறுப்பு—கிரகநிலை

21. அப்படிச் சொல்லொ ணாது அம்புலி யைந்தில் தங்க
ஒப்புடன் குருவு மிரண்டில் ஒன்பதில் குஜனு மாட்சி
தப்பித மின்றி நிற்கச் சந்ததி விருத்தி யாகும்
மெய்ப்புடன் பூர்வ தோஷம் மேவிடும் பாரி யிரண்டு.

21. அவ்விதம் கூறலாகாது. சந்திரன் புத்திரஸ்தானத்தில் இருப்பதாலும் அவனீட்டுக்குரிய குரு இரண்டாம் வீடாகிய குடும்பஸ்தானத்தில் இருப்பதாலும், நான்கு ஒன்பதாமிடங்களுக்கு உரிய செவ்வாய் ஆட்சியாக மேஷத்திலிருப்பதாலும் புத்திர விருத்தி ஏற்படும். ஆனால் முற்பிறவித் தீவினையால் இருமனைவியர் ஏற்படுவர்.

ஜாதகனுடைய முற்பிறவி

22. பூருவஞ் சொல்லு மென்னப் பிறங்கினில் சைவச் சேயாய்
நாரியு மதலை யுண்டா யரசர்பா லரசு செய்து
மாரனு வாழு நாளில் மனைவியின் தங்கை தானும்
பாரினில் கயிறி ழந்து பத்தினி தன்பால் வாழ்ந்தாள்.

22. முற்பிறவியைச் சொல்லுங்கள் என்று வினவ (முனிவர் கூறுகின்றார்). ஜாதகன் முற்பிறவியில் பிறங்கில் சைவ குலத்தில் பிறந்து மனைவி மக்களை யடைந்து அரசாங்க உத்தியோகம் செய்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். இவனுடைய மனைவியின் சகோதரி கணவனை இழந்த பிறகு இவனுடைய வீட்டில் வசித்தாள்.

விதவையிடம் சிற்றின்பமனுபவித்துக் கருவழித்தது

23. மாதுமேல் மோக முற்று மருவியே கருவுத் தங்கச்
சூதுக ளதற்குச் செய்யத் தோன்றிய கருவு நீங்கி
வேதனை யதிக முண்டாய் மேவினள் காலநாடு
தீதாக வந்தத் தோஷஞ் சேர்ந்தது யென்று சொல்வோம்.

23. அப்பெண்மீது இவன் மோகமடைந்து இன்புற்று வருங்காலத்தில் அதனால் அவளுக்குக் கருத் தங்கியது. அக்கருவை அழிக்க ஔடதங்களைக் கொடுத்தான். கருவை நீக்கியதனால் அதிகமான துன்பங்களை யடைந்து அபபெண் மரணமடைந்தாள். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது என்றோம்.

திருமாங்கல்யம் தரமறுத்தது

24. இதுவன்றி வேறு வொன்று
யியம்புவோந் தாயே யாங்கள்
நிதியிலா யேழை தானும்
நேர்ந்ததோர் சுதர்மணத் துக்குக்
கதியின்றி யிவன்பால் முத்திரை
கழறினர் தருவே னென்றான்
துதிசெய்து மற்ற சாமான்
சேகரித் திவன்பால் சென்று ;

24. இதுவல்லாமல் வேறு ஒன்றும் சொல்லுகின்றோம். தாயே! கேட்பீராக. செல்வமில்லாத ஏனழியொருவன் தன்னுடைய புத்திரனுடைய திருமணத்துக்கு மாங்கலியம் செய்ய வழியின்றி இவனிடம் சென்று யாசித்தபொழுது இவன் தருவதாக வாக்களித்தான். ஏழை மற்ற சாமான்களைச் சேகரித்துக்கொண்டு மீண்டும் இவ்விடம் சென்று;

25. சொன்னதைத் தருவா யென்னத்
திரிச்சலால் மறந்தே னென்ன
அன்னவன் வருத்த முற்று
அயலார்பால் முத்திரை வாங்கி
தன்சுதர் மண முடித்துச்
சாற்றுவான் சாபந் தானும்
பின்வருஞ் ஜன்மந் தன்னில்
பேதைய ரிருவ ராயும் ;

25. முன்பு கூறியபடி திருமாங்கல்யம் தரும்படி கேட்ட்போது வேலைத் தொந்தரவால் மறந்து விட்டேன் என்று சொன்னான். ஏழையும் மனவருத்தமடைந்து வேறு ஒருவரிடம் மாங்கலியத்தைக் கேட்டு வாங்கித் தன் புத்திரனுடைய திருமணத்தை முடித்துக்கொண்டு கூறினன். இனி வரும் மறுபிறவியில் உனக்கு இருமனைவியர் ஏற்பட்டு;

சாபம்

26. ஜனித்தவூர் தன்னை விட்டுச் செல்லுவாய் வெளிதே [சத்தில்
வினைமன மாகச் சொன்னர் மேவிற்று வந்தத் தோஷந்
தனயனு மந்தி யத்தில் சண்முகன் தொண்டு பூண்டு
அன்னமு மதிதிக் கீந்து அந்தகன் பக்கல் சென்று ;

26. பிறந்த ஊரை விட்டு வெளிதேசத்துக்குச் சென்று வாழ்ந்து வருவாய் என்று துன்புற்ற மனத்துடன் கூறினன். அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது. இவனும் தன் கடைசிக் காலத்தில் ஆறுமுகக்

க்டவுளுக்குப் பல தொண்டுகளைச் செய்து கதியற்ற ஏழைகளுக்கு அன்னமளித்து வந்து மரணமடைந்து ;

சாப பலன்

27. தலைநான்கோன் வரையப்பட்டு ஜனிப்பனு மிந்தப்பாலன்
உலவிடு முன்னூழ்த் தோஷம் உறைந்திடும் பாரி யிரண்டு
நிலையது பேத மெய்துஞ் சொன்னது தப்பா தாகும்
மலையிறை மகளே யாங்கள் வழுத்துவோர்த் தாய்க்கு
[ணத்தை.

27. மீண்டும் நான்கு தலைகளையுடைய பிரமதேவனால் படைக்கப் பட்டு இப்பிறவியில் பிறந்தான். முற்பிறவித் தோஷம் இவனைத் தொடரும். அதனால் இருமனைவியரை அடைவான். தன் வீட்டை விட்டு (ஊரைவிட்டு) வெளிநாடு செல்லுவான். நாங்கள் கூறியது தவறுது. மலையரசின் மகளே! இனி தாயின் குணங்களைக் கூறு கின்றேம்.

தாயின் இயல்புகள்

28. சுகமுள வார்த்தை சொல்வள் துறவோர்க்கு வன்ன
[மீவள்
இகபரன் பத்தி பூண்பள் இடரென்றோர்க் குதவி செய்வள்
ஜகமதில் நல்லோ ளாவள் ஜனபந்தை யாத ரிப்பள்
பகையென்று மனத்தில் வையாள் பாரினில் வறுமை
[காணள்.

28. இன்புறும்படி பேசுபவள். துறவிகட்கு (பரதேசிகட்கு) அமுதைப் படைப்பாள். தெய்வ (சிவபெருமான் மீது) பக்தியுள்ளவள். துன்புற்றவர்கட்கு உபகாரி. உலகத்தில் நல்லவள் என்ற பெயரடை வாள். தன் சுற்றத்தாரை ஆதரித்து வருவாள். விரோதத்தைப் பாராட்டாதவள். உலகில் வறுமையை யடையாதவள்.

29. வந்தபின் வரன்யோ கந்தான்
வரன்துணை யொன்றே தீர்க்கம்
விந்தையாய்க் கன்னி யிரண்டு
விளங்காது வொன்று யென்றோம்
அந்ததோர் குடும்பச் செய்தி
யறைகிறோம் பின்பால் சேதி
முந்தின ஜன்மஞ் சொல்வே
னுயர்வான துவாரை தன்னில் ;

29. இவளை மணந்தபின் கணவனுக்கு அதிர்ஷ்டம் பெருகும். கணவனுக்குச் சகோதரன் ஒருவனே யுண்டு. இரு சகோதரிகள்

உள்ளவள். அவர்களில் ஒருத்தி நிலையில்லாதவள். அக்குடும்பத்தின் மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். இனி தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். துவாரகையில் ;

தாயின் முற்பிறவி

30. பிறந்தனள் தீயின் வம்சம்
பலமுள குடும்பி யாகி
அறிவோர்க்கு வன்ன மீந்து
அச்சென்மம் பவமில் லாமல்
வரன்முன்னே மரண மாகி
மறையவன் வரையப் பட்டுத்
திருமக ளிலங்கைத் தீவில்
ஜனிப்பளா மென்று சொல்வோம்.

30. வன்னிய குலத்தில் பிறந்து பிரபலமான குடும்பத்தை யடைந்து அறிவாளிகட்கு அன்புடன் அமுதை அளித்து அப்பிறவியில் தீவினையில்லாமல் மரணமடைந்து மீண்டும் பிரம்மதேவனால் படைக்கப்பட்டு இலங்கைத் தீவில் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம்.

தாயின் மரணகாலமும், மறுபிறவியும்

31. முப்பது யேழு ஆண்டில்
மேடமா தத்தி லேதான்
செப்புவோ மன்னை கண்டஞ்
சேடனின் தசையா மென்றோம்
ஒப்புடன் பின்ஜன் மத்தை
யுரைக்கிறோம் அவ்வூர் தன்னில்
மெய்ப்புடன் சைவச் சேயாய்
விளங்குவா ளென்று சொல்வோம்.

31. ஜாதகனுடைய முப்பத்தேழாம் வயதில் சித்திரை மாதத்தில் தாய் மரணமடைவாள். ராகு மகாதசையில் அது நிகழும். அவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். அவ்வூரிலேயே சைவகுலத்தவளாகப் பிறப்பாள் என்று கூறுகின்றோம்.

தந்தையின் முற்பிறவி

32. தந்தையின் பூர்வந் தன்னைச்
சாற்றுவோம் பாண்டி நாட்டில்
தோன்றியே மறைக்கு லத்தில்
மனைவிமைந் தருமுண் டாகி

நிந்தைகள் மன்னர் தம்பால்
நிர்மித்தான் வார்த்தை யாலே
பிந்தினேர் குற்றம் நேரப்
புகலுவார் சாபந் தானே.

32. இனி தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். பாண்டிய நாட்டில் அந்தண குலத்தில் பிறந்து மனைவி மக்களைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் அரசாங்கத்தாரிடம் சில இல்லாத வார்த்தைகளைக் கூறினன். (பொய்ச்சாட்சி சொன்னன்) அதனால் துன்புற்ற ஏழைகள் சாபமிட்டனர்.

ஏழைகளின் சாபம்

33. முன்குல மதிலு தித்தோன்
மொழிந்திட்டா யற்ப வார்த்தை
பின்ஜன்மந் தந்தங் குற்றம்
பிறதேச வாச மாகுந்
தன்குலந் தாழ்வ தாகுஞ்
செப்பியே சென்ரு ரென்ரோம்
அந்ததோர் தோஷந் தானும்
அணுகிற்று வென்று சொல்வோம்.

33. முதல் குலமாகிய அந்தண குலத்தில் பிறந்தவனாகிய நீ அற்ப வார்த்தைகளைக் கூறினையே! அதனால் மறுபிறவியில் பற்கள் குறைந்துபோம். வேற்று தேசத்தில் சென்று வாழ்வாய். தாழ்ந்த குலத்தில் தோன்றுவாய் என்றும் சொல்லிவிட்டுச் சென்றார். அந்தத் தோஷம் இவனை யடைந்தது என்று கூறினோம்.

34. மாரனு மந்தி யத்தில் மலர்சோலை யதிதிக் கன்னந்
தீரமாய்ப் பணியுஞ் செய்து சென்றனன் கால நாடு
ஆரியன் வரையப் பட்டு வணுகினு னிலங்கை நாட்டில்
சீறிய சாபந் தானுஞ் சேர்ந்திடு மிச்சென் மத்தில்.

34. ஜாதகனும் தன் கடைசிக் காலத்தில் பூஞ்சோலைகளை அமைத்து ஏழைகட்கு அன்னமளித்து வந்து தெய்வத் திருப்பணியும் செய்து இறுதியில் மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் இலங்கையில் பிறந்தவன். ஏழைகள் கோபத்துடன் இட்ட சாபம் இப்பிறவியில் தொடர்ந்தது.

சாப பலன்

35. தந்தமு மூன மாகுந் தன்குலந் தாழ்வாய்த் தோன்றும்
வந்தவூர் தன்னில் வாழான் மறுதேச வாச மாகும்
இந்தவாறு முனிவர் கூற யியம்புவா ரத்திரி தாமுஞ்
சந்ததம் ராஜ யோகஞ் சார்ந்தகா ரணங்க ளென்ன,

35. அதனல் பற்கள் ஊனமாகும். குலமும் தாழ்வாகும். பிறந்த ஊரில் வாழ்ந்து வராதவன். வேற்று ஊரில் வசித்து வருபவன். இவ்விதம் முனிவர்கள் சொல்லும்போது அத்திரி முனிவர் வினவுகின்றார். ராஜயோகம் ஏற்படக் காரணமென்ன ?

36. அதிதிகட் கன்ன மீந்து அவன்திருப் பணியுஞ் செய்து
நதிசடை யணிந் தோனுக்கு நன்மலர் சோலை செய்து
கதியிலுல் ராஜயோகங் கலப்பனு மென்று சொல்வோம்
எதுமட்டும் அரசு செயவன் ஈரொன்ப தாண்டு மட்டும் ;

36. கதியற்றவர்கட்கு அன்னமளித்து ஆலயத் திருப்பணியும் செய்து கங்கையைச் சடைமுடியில் தரித்த சிவபெருமானுக்கு அருச்சனைக்குப் புஷ்பத்தோட்டம் அமைத்ததால் அவனுக்கு ராஜயோகம் ஏற்படும் என்று சொல்லுகிறோம். எந்தக் காலம் வரையில் ராஜயோகம் உண்டு ? என்று வினவ, பதினெட்டாம் வயது வரையில் ;

தந்தையின் மரணகாலம்

37. ஓங்கிடும் ராஜயோகம் உரைக்கிறோ மதன்பின் னுகத்
தீங்கிலா மரண மட்டுஞ் செம்பொன்னு மவனுல் நேரும்
பாங்கியே யிருபா னைந்தில் பரமன்தன் ஊர்தி மாதம்
மங்குவான் காலநாடு வரைகிறோம் பின்னுன் மத்தை.

37. ராஜயோகம் ஏற்பட்டு விருத்தியாகும். அதற்குப் பின்னுல் மரணமடையும் வரையில் தீங்குகள் ஏற்படா. அரசனுல் பொருளும் கிடைக்கும். (உபகாரச் சம்பளம் அரசாங்கத்திலிருந்து பெருவான்.) ஜாதகனுடைய இருபத்தைந்தாம் வயதில் (சிவபெருமானுடைய வாகனமாகிய விருஷப) வைகாசிமாதத்தில் தந்தை மரணமடைவான். தந்தையினுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம்.

தந்தையின் மறுபிறவி

38. அரங்கமா நகரந் தன்னி லருளுவான் சத்திரிய சேயாய்த்
துரகமு முடைய னுகித் தொல்புவி யரசு செய்வன்
திருமக னிச்சென் மத்தில் சேர்ந்தபுண் ணியங்க ளென்ன
சிறுமையோர்க் குதவி செய்துந் தேவதாத் தலங்கள்
[சென்றும் ;

38. ஸ்ரீரங்கத்தில் சத்திரிய குலத்தவனுகப் பிறப்பான். குதிரை (வண்டி) உள்ளவனுகவும் உலகத்தை ஆண்டுவரும் அரசனைப் போல வாழ்ந்து வருபவனுகவுமிருப்பான். ஜாதகன் இப்பிறவியில் செய்த நற் செயல்கள் எவை ? ஏழைகட்கு உபகாரம் செய்து வந்ததாலும் தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் புண்ணியத் தலங்கள் பலவற்றுக்குச் சென்றதாலும் ;

39. மனமது கபடு மின்றி வர்க்கத்தைக் காத்த லாலும்
இனமதை யாத ரித்து யாவர்க்கு நல்லோ னுஞ்
சினமிலா வாழ்வ தாலே ஜனிப்பனுஞ் சத்திரிய சேயாய்க்
கனமத வாணி பெற்ற காதலி கேட்டி டாயே.

39. மனத்தில் சூதுகளின்றித் தன் சுற்றத்தாரையும் பந்து ஜனங்களையும் காத்து வந்ததாலும், எல்லோருக்கும் நல்லவனுக வாழ்ந்து தீவினைகளில்லாமலிருந்ததாலும், சத்திரிய குலத்தில் பிறப்பான். பெரிய மதயானையைப் போன்ற முகமுடைய விநாயகனைப்பெற்ற தேவியே! கேளுங்கள்.

40. ஜாதகன் பொதுயோ கத்தைச் சாற்றுவோஞ் சிம்ம [யோகம்
மேதில்மல் லாரி யோகம் விளம்புவோம் பால னுக்குப்
போதனஞ் சேர்ப்பா னுகும் புவிராஜர் தம்மால் செட்டு
மேதினில் செய்வா னுகும் பூமிகள் சேர்ப்பா னுகும்.

40. இனி ஜாதகனுடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றேம். சிம்மயோகம் மல்லாரியோகம் என்ற இவ்விரண்டு யோகங்களையும் அடைவான். அவைகளின் பலன்களாவன:—பெருஞ் செல்வத்தைச் சேகரிப்பான். அரசாங்கத்தாரால் உதவியைப் பெற்று வர்த்தகத்தைப் புரிவான். விளை நிலங்களைச் சேர்ப்பான்.

41. அரசர்பூ சிதமும் மெய்தும் அவனியில் புகழு மேற்பன்
பரிவண்டி யுடைய னுகும் பகைத்தோரை நசிக்க [வைப்பன்
திருமகள் வாச முண்டு சென்றிடம் பெருமை யேற்பன்
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

41. அரசாங்கத்தாரின் நன்மதிப்பைக் கொண்டிடுவான். உலகில் கீர்த்தியையடைவான். குதிரைவண்டி உள்ளவன். விரோதிகளை அறவே ஒழித்துவிடுவான். லட்சுமி இவன் வீட்டில் வசித்து வருவாள். சென்ற விடங்களில்லாம் கீர்த்தியையடைவான், தருமத்தை விருத்தி செய்யும் எங்கள் உயிருக்குயிரான தாயே! கேளுங்கள்.

ஜாதகன் மரணகாலம்

42. அறுபது வாறு வாண்டில் அத்தனுர் மாதந் தன்னில்
நிறைபக்க மேகா தசி நீங்கிடு முடல மென்றும்
வருஜன்மஞ் சேது தன்னில் மறைக்குல முதிப்பா னுகும்
பெருவயி றேனப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

42. ஜாதகனுடைய அறுபத்தாறும் வயதில் மார்கழி மாதத்தில் சுக்ல பட்சம் ஏகாதசியன்று அவன் மரணமடைவான். மறுபிறவியில்

சேதுவில் அந்தண குலத்தவனுகப் பிறப்பான். பெரிய வயிற்றை யுடைய விநாயகனேப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகன் ஜனனகாலதசை

43. பிறந்திடு காலந் தன்னில் பூராடம் மூன்றும் பாதஞ்
சிறந்தசுக் கிரனி ருப்பு சஷ்டமா மாண்டு வென்றேறும்
உறைந்திடுந் துணேபின் விருத்தி யுயர்வான குடும்ப
[மென்றேறும்
பெருகிடுஞ் செல்வந் தானும் பந்துவில் சூத மெய்தும்.

43. ஜாதகனது ஜனன காலத்தில் பூராட நட்சத்திரத்தில் மூன்றும் பாதம் நடைபெறும். அக்காலத்தில் சுக்கிர மகாதசையில் ஆறு வருடங்கள் மீதமாகும். அத்தசையில் உடன் பிறந்த சகோதர விருத்தியுண்டு. குடும்பம் மேன்மையையடையும். செல்வம் விருத்தியாகும். சுற்றத்தாருக்கு அசுபம் நிகழும்.

44. தந்தைதாய்ப் பிணியு மெய்துஞ் சடுதியில் நிவிர்த்தி யாகும்
நொந்திடுஞ் ஞாதி தானும் நேமித்த வதுவும் கூடும்
முந்தின தொழிலு மோங்கும் மொழிகிறேறும் பின்பால்
[சேதி
இந்திர னிறைஞ்சு மாதே யிதுபூர்வ பாக மாமே.

44. தாய் தந்தையருக்கு நோய் ஏற்பட்டு விரைவில் நீங்கும். பந்து ஜனங்களில் மனஸ்தாபம் ஏற்பட்டுப் பிறகு அது சீக்கிரத்தில் விலகும். தந்தையின் தொழிலுக்கு அபிவிருத்தி ஏற்படும். மற்றவற்றைப் பின்பாகத்தில் கூறுகின்றேறும். இந்திரன் தோத்தரிக்கும் தேவியே! இது முதல் பாகமாகும்.

ஜாதகம் 80

1. மதிகுஜ னிரவி வீணை மால் நண்டு புகருஞ் சீயம்
விதிமானில் பொன்னேன் கன்னி மெய்ஞ்ஞானி கோல
[தாக
சதிகயர் மேட மாக ஜன்மமுஞ் சிம்ம மாக
இதுவிதக் கோளு நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1, சந்திரன் செவ்வாய் சூரியன் மிதுனத்திலும், புதன் கடகத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும், சனி மகரத்திலும், குரு கன்னியிலும், கேது துலாத்திலும், ராகு மேஷத்திலும் இருந்து இலக்கினம் சிம்மமாக நவக்கிரகங்கள் இருப்பின் பலனைச் சொல்லுங்கள்.

கிரகநிலை



ஜாதகன் வீட்டுநிலை

2. குறுமுனி புகலு கின்ரூர் குறித்தது வாண்பால் ஜன்மம்
வருமில்லங் கீழ்மேல் வீதி வாசலு மெமனின் பார்வை
அரசர்கள் வாச மாகும் அநேக வாலயங்க ளுண்டு
பெரிதான நகர மாகும் பொன்னக ரொப்ப தாகும்.

2. அகத்திய முனிவர் சொல்லுகின்ரூர். இஃது ஆண் மகனுடைய ஜாதகமாகும. அவன் பிறந்த வீடு கிழக்கு மேற்கான தெருவில் தெற்கு நோக்கிய வாயிலையுடையது. அவ்வூரில் அரசர் வசித்து வருவார். பல கோயில்கள் உள்ள பெரிய நகரமாக விருக்கும். அது தேவலோகத்துக்குச் சமமாகவிருக்கும்.

3. இத்தகை யடையா ளத்து ளிளவலுஞ் ஜனன மாவன்
வித்தகன் தந்தை சேதி விளம்புவோஞ் சிவந்த மேனி
புத்தியிற் பெரியோ னவன் பொய்யது வழுத்தா நெஞ்சம்
அத்தியை யாத ரித்தோன் அவர்பத்தி கொள்வா னுமே.

3. இவ்வித அடையாளங்களுள்ள ஊரில் இந்த ஜாதகன் தோன்றுவான். இனி அவனுடைய தந்தையின் விவரங்களைச் சொல்லுகின்றேம். அவன் சிவந்த உடலுள்ளவன். புத்திசாலி. பொய் பேசாதவன். விநாயகனை பூஜித்துவருவான். (கதியற்ற ஏழைகளைக் காத்து வருவான்) அவர்மீது பக்தியுமுள்ளவன்.

தந்தையின் குணநலங்கள்

4. ஆதியில் வறுமை யில்லான் அவனில்ல மடையா னுகும்
நீதிமான் பலபேர் நேயன் நேமியில் செட்டுச் செய்வன்
வேதனை யொருவர்க் கெண்ணன் மெல்லியாள் வர்க்கம்
[நாஸ்தி
பாதக மனமில் லாதான் பஞ்சைமே லிரக்க மாவன்.

4. ஆதி காலத்தில் தரித்திரமில்லாதவன். தன் தந்தையின் வீட்டை அடையாதவன். நேர்மையுள்ளவன். பலருக்கும் நண்பனுக இருப்பவன். உலகில் வர்த்தகத்தைச் செய்து வருவான். ஒருவருக்கும் தீங்கிழைக்க மனமில்லாதவன். தன் மனைவியின் வர்க்கத்தாரில்லாதவன். தீய மனமில்லாதவன். ஏழைகளின்மீது இரக்கமுள்ளவன்.

5. சீலவான் சுகபு சிப்பன்
செய்ந்நன்றி மறவா னுகும்
பால்தயிர் பிரிய னுவன்
பாக்கியம் பின்னல் சேர்ப்பன்
ஏலவே பெரியோர் நேய
னினத்துளோர் மதிக்க வாழ்வன்
சாலவே தலங்கள் செல்வன்
தன்துணை யாண்பா லொன்று ;

5. நல்லொழுக்கமுள்ளவன். சௌக்கியமர்கச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவன். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். பால் தயிர் இவைகளைப் புசிப்பதில் விருப்பமுடையவன். பிற்காலத்தில் பாக்கியத்தையடைவான். பெரியோர்களிடம் பிரியமுள்ளவன். தன் சுற்றத்தார் கொண்டாடும்படி வாழ்ந்து வருவான். பல புண்ணியத் தலங்களுக்குச் செல்லுவான். ஒரே ஒரு சகோதரனுள்ளவன்.

ஜாதகனுடைய இயல்புகள்

6. தீர்க்கமா மூன்று சேதஞ் செப்புவோம் பின்பால் சேதி
ஏற்கவே யிவன்கு ணத்தை யியம்புவோஞ் சிவந்த
[மெய்யன்
ஆர்க்கவே யிரண்டு கல்வி யணுகிடு மன்னிய பாஷை
மார்க்கமாய்ப் பலனைக் காணன் மால்பத்தி யுடைய னுமே.

6. அவன் நீண்ட ஆயுள் உள்ளவன். மூன்று சகோதரர்கள் தோன்றி நிலையாமல் இறந்துவிடுவர். அவ்விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம். இனி ஜாதகனுடைய குணங்களைக் கூறுகின்றோம். சிவந்த உடலுடையவன். இருவிதக் கல்விகளைக் கற்பான். அன்னிய பாஷையில் நல்ல தேர்ச்சியை யடைவான். திருமாலின்மீது பக்தி யுடையவன்.

7. பொய்யுரைப் பகரான் மிஞ்சி புத்திநல் லறிவு முண்டு
ஐயமா மனத்த னாகும் அல்பமாந் தந்தை யாஸ்தி
கைமுதல் நிவிர்த்தி செய்வன் கடன்கொள்வன்
[பெரியோர் நேயன்
தையல்மேல் பிரிய னாகுஞ் சதாமனச் சஞ்ச லத்தன்.

7. பொய்யைப் பேசாதவன் புத்திசாலி. நல்ல அறிவாளி. சந்தேகப்படும் இயல்புள்ள மனத்தினன். தன் தந்தையின் ஆஸ்தியில்லாதவன். கைப்பொருளைச் செலவு செய்து வருவான். கடன் வாங்குவான். பெரியோர்களுக்குப் பிரியமானவன். மனைவியின் மீது விருப்பமுடையவன். எப்போதும் மனக் கலக்கமுள்ளவன்.

இதுவுமது

8. சொல்லதைக் கேட்பா னாகுஞ்
சுகபுஷிப் புடைய னென்றோம்
இல்லையென் றுரைக்க மாட்டான்
இனியசொல் நிலையில் லாதான்
தல்லியால் பெருமை யேற்பன்
தந்தைக்குத் தாழ்வாய் வாழ்வன்
வல்லியும் வந்த பின்பு
மாண்டிடுந் தனங்கள் தாமே.

8. பிறர் சொல்வதைக் கேட்டு நடப்பவன். சௌக்கியமாகச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவன். யாசித்தவருக்கு இல்லை என்று கூறாதவன். இன்பமாகப் பேசுபவன். திடமான மனமில்லாதவன். தன் தாயினால் பெருமையை அடைவான். தன் தந்தைக்குத் தாழ்வாக வாழ்ந்து வருவான். மனைவியை மணந்த பிறகு பணங்கள் அதிகமாகச் செலவாகும்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

9. இன்னவன் துணைவர் தம்மை
யியம்பவே பலத்தைக் காணும்
என்னகா ரணத்தி னாலே
யியம்பினீர் முனியே கீர்தாம்

துன்னிய மூன்றில் கேது
சனியுமே பார்ப்ப தாலே
பின்னமாந் தூணவ னென்றோம்
பிறக்கானே பிறக்கில் தீதாம்.

9. ஜாதகனுக்கு உடன் பிறந்தவர் உண்டு என்று கூறக் கிரக பலமில்லை. என்ன காரணத்தால் அவ்விதம் சொல்லுகிறீர்கள்? முனிவரே! மூன்றுமிடமான துலாத்தில், (சகோதரஸ்தானத்தில்) கேது இருப்பதாலும் அவரைச் சனி பார்ப்பதாலும் உடன்பிறந்தவருக்குத் தோஷமுண்டு என்றோம். சகோதரர் தோன்றார். தோன்றினும் நிலையார்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

10. ஈரெட்டு வாண்டு தன்னி லிவனுக்குப் பாரி வாய்க்கும்
நாரியு முள்ளூராகும் நற்றூணை யாண்பா லிரண்டு
தீரமாய்ப் பெண்பா லொன்று செப்புவோந் தீர்க்க மாகக்
கூறுவோ மவள்கு ணத்தைக் கோதையும் புத்தி சாலி.

10. ஜாதகனுக்குப் பதினாறும் வயதில் திருமணம் நிகழும். மனைவி உள்ளூரிலிருந்தே வாய்ப்பாள். அவளுக்கு இரு சகோதரரும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுள் உள்ளவர்களாக இருப்பர். இனி அவளுடைய குணங்களைச் சொல்லுகின்றோம். அவள் புத்திசாலி.

மனைவியின் குணங்கள்

11. வரன்மனம் போலே வாழ்வள் வித்தையு முடைய ளாகும்
பொறுமையும் பெருமை யேற்பள் புகழ்ந்தோரை யாத [ரிப்பள்
திருமகள் வந்த பின்பு சிரித்திடுங் குடும்பந் தானும்
நரைமல ரிஷ்டங் கொள்வள் நாயகி யிருநி றத்தாள்.

11. தன் கணவனது மனமறிந்து வாழ்ந்து வருவாள். கல்வியறிவுள்ளவள். பெருமை பொறுமை (சகிப்புத்தன்மை) இவைகளை அடைவாள். தன்னைத் துதிசெய்தவரைக் காத்து வருவாள். இவளை மணந்த பிறகு இவளுடைய குடும்பம் சந்தோஷநிலையை எய்தும். வாசனைப் புஷ்பங்களின் மீது விருப்பமுடையவள். கரிய நிற முள்ளவள்.

புத்திரபாவம்

12. அடிசிலுக் கினிய ளாகும்
அடக்கமுஞ் சமயோ கத்தாள்
துடியிடை தனக்குப் புத்திரர்
செப்புவோ முதலில் பீடை

அடைவுடன் பின்னுல் விருத்தி
யணுகிடும் பெண்பால் மூன்று
திடமதா யாண்பால் மூன்று
செப்புவோ மிவளுக்கே தான்.

12. உருசியாகச் சமைப்பதில் வல்லவள். அடக்கமுள்ளவள் சமமான யோகமுடையவள். மெல்லிய இடையுள்ளவள். இவளுக்குத் தோன்றும் குழந்தைகளில் முதல் பிறக்கும் குழந்தை நிலையாது. பின்னுல் தோன்றுபவை விருத்தியாகும். மூன்று பெண் குழந்தைகளையும் மூன்று ஆண் குழந்தைகளையும் பெற்றவள்.

தாயின் குணங்கள்

13. புத்திரன் தன்னுல் யோகம்
பொருந்திடு மிவளுக் கேதான்
பெத்ததாய்க் குணத்தைச் சொல்வேன்
பொய்யது புகலா ளாகுஞ்
சித்தமே கரப்பு மில்லாள்
தீங்கதை யொருவர் கெண்ணுள்
நத்தினோர்க் குதவி செய்வள்
நல்லோர்கள் பத்தி பூண்பள்.

13. இவளுக்குத் தன்னுடைய புத்திரனுல் யோகம் விருத்தியாகும். இனி தாயின் குணங்களைக் கூறுகின்றோம். அவள் பொய்யைப் பேசாதவள். மனத்தில் சூதுகளில்லாதவள். ஒருவருக்கும் தீங்குசெய்ய மனத்திலும் நினையாதவள். தன்னை வந்து யாசித்தவருக்கு உதவி செய்பவள். நல்லவர்கள்மீது பக்தியுடையவள்.

இதுவுமது

14. மால்பத்தி வாத தேகி வளமுள தலங்கள் செல்வள்
சீலியாஞ் சேதுச் செல்வள் ஜனவுப காரி யாவள்
சாலவே தூணகள் காணுள் தன்வரன் மனம்போல்
[வாழ்வள்
வேலனை யீன்ற மாதே மேலவர் பத்தி பூண்பள்.

14. திருமாலின் மீது பக்தியுடையவள். பல புண்ணியத்தலங்களுக்குச் செல்லுவாள். நல்லொழுக்கமுள்ளவள். சேதுவுக்குச் செல்லுவாள். ஜனங்களுக்கு உபகாரத்தைச் செய்பவள். உடன் பிறந்தவர்களில்லாதவள். தன் கணவன் மனம்போல் வாழ்ந்து வருவாள். முருகக் கடவுளைப்பெற்ற தேவியே! தெய்வபக்தியுள்ளவள்.

தாயின் முற்பிறவி

15. மாதுரு பூர்வஞ் சொல்வேன் விரிஞ்சியின் மேல்பா லாக
மேதினில் சிறுவூர் தன்னில் விளங்கிஞ ளிரட்டி வம்சம்
போதன முடைய ளாவள் புகழான குடும்பம் பெற்றுக்
காதலி வாழு நாளில் கழறுவோ மூழி தானே.

15. இனி தாயின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். விரிஞ்சி நாட்டிற்கு மேற்கிலுள்ள சிற்றூரில் ரெட்டியார் மரபில் பிறந்து பெருஞ் செல்வ முடையவளாகிக் கீர்த்திபெற்ற குடும்பத்தை யடைந்து வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம்.

தாயின் முற்பிறப்புத் தீவினை

16. வரனுடைத் தங்கை பேரில்
வசனித்தாள் விசேஷ வார்த்தை
உரன்முறை தன்பால் சொல்லி
யொதுக்கினள் அந்த மாதை
அரிவையுந் திகில டைந்து
யறைவளாஞ் சாபந் தானும்
மறுஜன்ம மகவாய்த் தோன்றி
வருந்துணை காணுய் வாழ்வாய் ;

16. தன்னுடைய கணவனுடைய சகோதரியின் மீது இல்லாத வார்த்தைகளை அவளுடைய சுற்றத்தினரிடம் சொன்னாள். அதனால் அந்தப்பெண்ணை அவர்கள் ஒதுக்கிவிட்டனர். அப்பெண் பயந்து கூறிய சாபத்தைக் கேளுங்கள். மறுபிறவியில் நீ பெண்ணைப் பிறந்து உடன் பிறந்தவரில்லாமல் வாழ்ந்து வருவாய்.

17. பந்துவு மில்லா ளாகிப்
பாரினில் வாழ்வா யென்று
அந்தவள் சொல்லிச் சென்றாள்
அடைந்தது வந்தத் தோஷம்
பிந்தியும் வேறு வொன்று
புகலுவோந் தாயே கேளு
நொந்திடும் பேர்க்குப் பொன்னை
யீந்துபின் அதிகந் தந்தேன் ;

17. சுற்றத்தாருமில்லாதவளாகி வாழ்வாய் என்று கூறிவிட்டுச் சென்றாள். அந்தத் தோஷம் இவளைப் பற்றியது. இது தவிர வேறு ஒன்றும் சொல்லுகின்றோம். தாயே ! கேளுங்கள். ஏழையோர் பல ருக்குச் சிறிதளவு பொருளைக் கொடுத்து உதவி, பிறகு தான் அதிக மாகக் கொடுத்ததாகக் ;

18. என்றுமே வாங்கிக் கொண்டா
ளியம்புவா ரேழை யோர்கள்
குன்றுபோல் பொருள்படைத்துக்
குலவினோர் தமக்கு வீந்து
கன்றற்ற தாயைப் போலக்
கதறியே மனது வாடி
அன்னவள் வாழ்வா யென்று
அறைந்தனர் யேழை தாமும்.

18. கூறி வாங்கிக்கொண்டாள். அவ்வேழைகள் பின்வருமாறு சாபமிட்டனர். "பெரிய (மலை) குன்றைப்போல் செல்வம்ப டைத்து உன் னை அண்டி வந்தடைந்தவர்கட்குக் கொடுத்து (புத்திர பாக்கியமில் லாமல்) கன்றையிழந்த தாய்ப் பசுவைப்போல் கதறி, மனம்வருந்தி வாழ்ந்து வருவாய்" என்று ஏழைகள் கூறினர்.

19. மங்கைக்கு வந்தத் தோஷம்
மருவிற்று வென்று சொல்வோம்
அந்தகன் பக்கல் சென்று
வயனுமே வரையப் பட்டு
வந்தன ளிவளே யென்றும்
மருவிடும் முன்னூழ்த் தோஷம்
பொங்கிய குடும்ப மாகிப்
போகிடு மந்தி யத்தில்.

19. தாய்க்கு அந்தத் தோஷம் ஏற்பட்டது. அவள் மரண மடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டுப் பிறந்தாள் இவள் என்றும். முற்பிறவித் தோஷம் தொடரும். செல்வம் பெருகும் குடுமபத்தை யடைந்து, இறுதியில் செல்வம் போய்விடும்.

தாயின் மரணகாலம்

20. பஞ்சைபோல் வாழ்வா ளாவள் பாலகன் மூப்பா னலில்
நஞ்சான கால நாடு நாயகி செல்வா ளாவள்
மிஞ்சிய ஜன்மம் தன்னில் விளம்புவோ மரங்கந் தன்னில்
வஞ்சியும் பிரம்ம சேயாய் வருவளா மென்று
[சொல்வோம்.

20. ஏழையைப்போல் வாழ்ந்து வருவாள். ஜாதகனுடைய முப் பத்திநான்காம் வயதில் அவள் மரணமடைவாள். மறுபிறவியில் ஸ்ரீரங் கத்தில் அந்தணகுலத்தவளாகப் பிறப்பாள் என்றும்.

21. இந்ததோர் ஜன்மந் தன்னி லிவள்செய்த புண்ணிய
[மென்ன
அந்தவள் மாலோன் பத்தி யறிவுளோர் நேயங் கொண்டு
சிந்தையில் கபடு மின்றி ஜனவுப சாரி யாயும்
வந்தவர்க் கன்ன மீந்து வளமுள தலங்கள் சென்று ;

21. ஜாதகனுடைய தாய் இப்பிறவியில் செய்த நற்செயல்கள் எவை என்று கூறுங்கள். திருமாலின் மீது பக்தியுள்ளவளாகவும் அறிவாளிகளிடம் பக்தி கொண்டும் மனத்தில் கடபமில்லாமலும் வாழ்ந்து வருவதாலும், ஜனங்களுக்கு உபகாரியாகவும் அண்டி வந்தவருக்கு அன்னமளிப்பதாலும் பலபுண்ணியத் தலங்களுக்குச் செல்வதாலும் ;

தந்தையின் முற்பிறவி

22. பலத்தினு லுதிப்பா ளென்றேரும் பகருவோர்ந் தந்தை
[பூர்வம்
நலமுள பாண்டி தன்னில் நல்கினுன் வைசியச் சேயாய்
அலைகடல் துயின்றேரன் பத்தி யகதிகட் கன்ன மீந்து
தலந் திருப் பணியுஞ் செய்து சண்டன்தன் பதிக்கு புக்கி ;

22. இங்ஙனமான நற்செயல்களால் அவ்விதம் தோன்றுவாள் என்றேரும் இனி தந்தையின் முற்பிறவியைக் கூறுவோம். நன்மை மிக்க பாண்டிய நாட்டில் வைசிய குலத்தவனுகப் பிறந்தான். பெரிய அலைகளையுடைய பாற்கடலில் துயிலும் திருமாலின்மீது பக்திகொண்டு கதியற்றவருக்கு அன்னமளித்து வந்து ஆலயத் திருப்பணிகளைச் செய்து இறுதியில் மரணமடைந்து ;

ஜாதகனுடைய குலம்

23. பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தனன் வடுகர் வர்க்கம்
பெருமையும் புகழு மேற்பன் புகலுவோ மீரெட் டாண்டில்
மருமமாய்த் தேளின் மாதம் மால்பதி சேர்ந்து யின்னேன்
உறைவனுந் தேவ னுக உத்தமி கேட்டி டாயே.

23. மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் வன்னிய குலத்தில் பிறந்தான், பெருமையையும் கீர்த்தியையும் அடைவான். தந்தை ஜாதகனது பதினேரும் வயதில் கார்த்திகை மாதத்தில் விஷ்ணுபதம் அடைவான். பிறகு தேவனுவான் (முக்தியடைவான்) தாயே! கேளுங்கள்.

24. இந்ததோர் ஜன்மந் தன்னி லிவன் செய்த புண்ணிய
[மென்ன
அந்ததோர் சேதி சொல்வீர் அரிபத்தி மிகுதி யாயும்
கொந்தபேர்க் குதவி யாயும் நிகர்திருப் பணியுஞ் செய்து
வந்ததால் மறுபி றப்பு வானவ னுவா னென்றோம்.

24. இப்பிறவியில் ஜாதகன் தந்தை செய்த நற்செயல்கள் எவை? அவற்றைக் கூறுங்கள் என்று வினவ, அவ்விஷயங்களை ரிஷிகள் கூறுகின்றனர். திருமாலின்மீது பக்தி அதிகமுள்ளவனுகவிருந்து மனம் வருந்திய ஏழைகட்கு உதவிசெய்து, ஆலயத் திருப்பணிகளைச் செய்து வந்ததால் மறுபிறவியில் தேவனுவான் என்றோம்.

ஜாதகன் முற்பிறவியில் பெற்றோரைத் தூஷித்தது

25. ஜாதகன் பூர்வந் தன்னைச்
சாற்றுவோங் கடையூர் மேல்பால்
மாதவர் குலமு திக்து
மனிவிமைந் தருமுண் டாகி
மேதினில் வாழு நாளில்
விளம்புவோ மூழி தானுஞ்
சாதித்தான் கட்டு வார்த்தை
தாய்தந்தை தமக்கு யின்னேன்.

25. இனி ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருக்கடையூருக்கு மேற்குப் பக்கத்தில் இடையர் மரபில் பிறந்து மனிவி மக்களுடன் உலகில் வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைச் சொல்லுகின்றோம். இல்லாத (அடாத) வார்த்தைகளைத் தன் பெற்றோரிடம் (பெற்றோரின்மீது) கூறினன்.

26. உடலுயிர் போலே நின்றான்
உத்தமன் வைசியன் தானுங்
கடனது அவன்பாற் பொன்னைக்
கவர்ந்துபின் மோசஞ் செய்தான்
அடைவுடன் நேசன் சாப
மணுகிற்றுப் பால னுக்கு
திடமான குடும்பந் தாழ்வாய்த்
தெரிந்தது அந்தி யத்தில்.

26. இவன் ஒரு வைசியனுடன் மிக்க நட்புக்கொண்டு வாழ்ந்து வந்தான். அவனிடம் இவன் சிறிது பொருளைப் பெற்று (கடனுகப் பெற்று)ப் பிறகு மோசம் செய்துவிட்டான். நண்பனுடைய சாபம்

இவனே அணுகியது. பெரியதாக விருந்த குடும்பம் இறுதியில் தாழ்வாயிற்று.

27. தென்திசைக் காலை நாடு சேர்ந்துப்பின் பிரமன் லக்கம்
இந்தநேர் குலமு தித்தான் இசைந்தது நண்பன் சாபந்
தன்துணை காணு னுகுந் தந்தையார்ஜ் ஜிதமுங் காணன்
வந்தவன் யோகச் சேதி வரைகிறேன் தாயே யாங்கள்.

27. இறுதியில் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். நண்பனுடைய சாபத்தால் கூடப் பிறந்தவனில்லாதவன். தன் தந்தையால் சம்பாதிக்கப்பட்ட பொருளில்லாதவன். இனி ஜாதகனுடைய யோகச்செய்திகளை எழுதுகின்றேரும், தாயே! கேளுங்கள்.

ஜாதகனுடைய யோகம்

28. ஈரொன்ப தாண்டு மட்டு
மிளம்பிறை போலே யோகந்
தீரமா மணங்க ளெய்துஞ்
செம்பொன்னும் பணிகள் சேரும்
மாறிடு மதன்பின்னைகக்
குறைமதி போலே யோகங்
கூறுவோஞ் சல்லியப் பாதை
கூடாவே நினைத்த வெல்லாம்.

28. ஜாதகனுடைய பதினெட்டாம் வயது வரையில் வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் விருத்தியாகும். தைரியமாக இருப்பான். திருமணம் நிகழும். பொன்னுபரணங்கள் சேரும். அதற்குப் பிறகு அவைதேய்பிறைச் சந்திரன்போல் குறையும். துன்பங்கள் ஏற்படும். எண்ணிய காரியங்கள் நடைபெரு.

29. எந்தக் காரியமுங் கூடா யிடர்வரும் யாவுந் தானுந்
தன்பிணி யாவுஞ் நீங்குங் சாதமுங் குறைவு நேரும்
இன்னவாறு ஈராரூண்டு மிடுக்கமாம் வெளிதீ பம்போல்
அன்னவன் மனது வாடும் அம்பிகை யாளே கேளாய்.

29. எண்ணிய காரியங்கள் ஒன்றும் கை கூடாது எல்லாக் காரியங்களுக்கும் தடங்கல் வரும். ஜாதகனுக்கு நோய் ஏற்படும். செல்வங்களெல்லாம் அழியும். சாப்பாட்டிற்குக் குறைவுண்டு. இவ்விதம் பன்னிரண்டு ஆண்டுகள் இருக்கும். மனத்தில் சஞ்சலம் ஏற்படும். தாயே! கேளுங்கள்.

30. சொல்லிய வாண்டின் மேலாய்ச் சுகம்பெருங் குடும்பந்
[தானும்
நல்லவர் பலபே ராலே நயப்புறுந் தொழிலே யென்றும்
அல்லல்க ளணுகி டாவே அரசனுல் தொழிலு நேரும்
நில்லாது வறுமை தானு நிகழ்த்துவோம் பின்பால் சேதி.

30. நாங்கள் கூறிய வருடத்துக்கு மேல் குடும்பம் நன்மையை யடையும். பல பேருடைய உதவியால் நலம் பெருகும். தொழில் மேன்மை யடையும். துன்பங்கள் ஏற்படாது. அரசரால் தொழில் கிடைக்கும். தரித்திரம் நிலையாது. மற்றவற்றைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகன் மரணகாலம்

31. அன்பது வாறு ஆண்டில் ஆனிமா தத்தி லேதான்
இன்னவ னுடல மேகு மியம்புவோம் பின்ஐன் மத்தை
[1]மூன்தலக் தன்னி லேதா னுதிப்பானும் வைசியச் சேயாய்
உன்னத வாணபெற்ற உத்தமி கேட்டி யாயே.

31. ஐம்பத்தாரும் வயதில் ஆனி மாதத்தில் ஜாதகன் மரண மடைவான். இவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம். முதன் மையான காஞ்சீபுரத்தில் வைசிய குலத்தவனுகப் பிறப்பான். உயர்ந்த கணவனைப்பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய ஜனனகாலதசை

32. பிறந்திடு காலந் தன்னில்
பொன்தசை பதின்மூன் றாண்டுஞ்
சிறந்திடுங் குடும்பந் தானுஞ்
சிறப்புறும் பணிதி பாத்திரம்
அறம்செய்தல் பலச காய
மறைகிறோம் விவர மிரண்டில்
கரிமத வாண பெற்ற
காதலி கேட்டி டாயே.

32. ஜாதகனது ஜனன காலத்தில் குருமகாதசையில் பதிமூன்று வருடங்கள் மீதமாகும். அக்காலத்திய பலனைச் சொல்லுகின்றோம். குடும்பம் மேன்மையையடையும். ஆபரணங்கள் பாத்திரங்கள் இவைகள் வாங்கப்படும். தருமத்தைச் செய்து வருவான். பல பேருக்குச் சௌகர் யங்களைச் செய்வான். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் கூறுகின்றோம். கரிய யானை முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

---

1. பஞ்சபூத ஸ்தலங்களில் முதன்மையான பிருதிவி - காஞ்சீபுரம்.

ஜாதகம் 81

1. பிறைவீணை வெள்ளி தேளில் புதன்கேது பானு கோவில்
குருகுஜன் கன்னி யாகக் கொடுவிஷ மேட மாகக்
கரியவன் மான தாகக் கலந்துமே ஜன்மஞ் சீயம்
கூறுவீர் பலனை யென்று காதலி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் மிதுனத்திலும், சுக்கிரன் விருச்சிகத்திலும், புதன் கேது சூரியன் துலாத்திலும், குரு செவ்வாய் கன்னியிலும், ராகு மேஷத்திலும், சனி மகரத்திலுமாக நவக்கிரகங்களிருந்து இலக்கினம் சிம்மமானால் ஏற்படும் பலனைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கலானாள்.

கிரகநிலை

	ராகு		சந்திரன்
	இராசி சக்கரம்		
சனி			லக்கினம்
	சுக்கிரன்	புதன் கேது சூரியன்	குரு செவ்வாய்

ஜாதகன் பிறந்த விட்டுநிலை

2. தென்முனி புகலு கின்றார்
ஜனித்திடு மாண்பால் ஜன்மந்
தந்தையி னில்லஞ் சொல்வேன்
தென்வட வீதி யாகும்
இந்திர நோக்கம் வாயில்
யாளிவா கனத்தாள் கீழ்ப்பால்
செந்தீயி லுதித்தோள் தெற்கில்
ஜலக்கரை யருகில் தங்கும்.

2. அகத்திய முனிவர் கூறுகின்றார். இஃது ஆண் மகனுடைய ஜாதகம். இவன் பிறந்த வீட்டு நிலையைப் பற்றிச் சொல்லுகின்றோம். தெற்கு வடக்கான வீதியில் கிழக்கு நோக்கியுள்ள வீட்டில் பிறந்தவன். அவ்வீட்டுக்குக் கிழக்குத் திக்கில் யாளியை வாகனமாகக் கொண்ட காளிதேவி கோவிலும் திரௌபதியம்மன் கோவில் தெற்குத் திக்கிலும் அருகில் ஒரு நீர்நிலையும் உள்ளன.

3. முந்திய மார்க்க முண்டு மேவிடும் பத்தாஞ் ஜன்மம்
அந்தவன் வைசியச் சேயா யருளுவா னன்னை தந்தை
தன்துணை களத்திர புத்திரர் ஜாதகன் முன்பின் ஜன்மம்
விந்தையாய் நவநூ லாய்ந்து விளம்புவோர்ந் தாயே கேளுர்.

3. பெரியதொரு சாலை அருகில் இருக்கும். இவ்வித அடையாளங்களுள்ள வீட்டில் ஜாதகன் வைசிய குலத்தவனுகத் தன் தந்தைக்குப் பத்தாம் குழந்தையாகப் பிறப்பான். அவனுடைய தாய் தந்தையர் மனைவி மக்கள் உடன்பிறந்தவர் முற்பிறவி மறுபிறவி ஆகியவற்றை நவக்கிரக சாஸ்திரத்தை நன்கு ஆராய்ந்து பார்த்துக் கூறுகின்றேம். தாயே! கேளுங்கள்.

தந்தையின் சகோதரபாவம்

4 தந்தையின் வர்க்கந் தன்னி
லாண்மூன்று கன்னி யொன்று
நொந்திடும் யாவுந் தானும்
நிகழ்த்துவோர்ந் தந்தை சேதி
கந்தன்மேல் பத்தி பூண்பன்
கடந்தோர்க்கு வன்ன மீவன்
விந்தையாய்ச் செட்டுச் செய்வன்
வீண்வம்பு புகலா னுமே.

4. ஜாதகனுடைய தந்தைக்கு சகோதரர் மூவரும் சகோதரி யொருத்தியும் பிறந்து அவ்வெல்லோரும் இறந்து விடுவர். இனி தந்தையின் விவரங்களைக் கூறுகின்றேம். முருகக்கடவுள்மீது பக்தி யுள்ளவன். துறவிகட்கு (பரதேசிகட்கு)ப் பரிவுடன் அன்னமளிப் பான். பிறர் அதிசயிக்கும்படியான வர்த்தகத்தைப் புரிந்து வருவான். வீண் வார்த்தைகளைப் பேசாதவன்.

தந்தையின் இயல்புகள்

5. அவசர மனத்த னுகு மவனிகள் சேர்ப்பா னுகுந்
தவசிபோல் வார்த்தை சொல்வன் தானிள மனத்த
[னுகும்
இவன்தனி யாக வாழ்வன் இருசிவப் புடைய னுகும்
பவமன மில்லா னுகும் பாரினில் வறுமை காணுன்.

5. அவசரமுள்ள மனமுடையவன். விளைநிலங்களைச் சேர்ப்பான். முற்றும் துறந்த தவசியைப்போல் பேசி வருபவன். இளகிய மனமுடைய வன். தன்னந் தனியனுக வாழ்ந்து வருவான். கருமை கலந்த சிவப்பு நிறமுள்ளவன். தீய எண்ணமில்லாத மனத்தினன். உலகில் தரித் திரத்தை யடையாதவன்.

6. குருவுப தேசங் கொள்வன் குத்திர வார்த்தைக் கூறுன்
அறையுமிக் குணத்தா னுக்கு அவனுமே யுதிப்பா னுகும்
உரைக்கிறே மிவன்கு ணத்தை யுறுதியில் லாத நெஞ்சம்
நரைமல ரிஷ்டங் கொள்வன் நவிலுமுன் கோபி யாவன்.

6. தகுந்த ஆசாரியனிடம் உபதேசத்தைக் கேட்பவன். குதர்க்க மான வார்த்தைகளைப் பேசாதவன். இவ்விதம் கூறப்பட்ட குணங் களுள்ளவனுக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இனி இவனுடைய குணங்களைக் கூறுகின்றேரும். திடமில்லாத மனமுடையவன். வாசனைப் புஷ்பங்களின்மீது விருப்பமுடையவன். முன்கோபங் கொள்ளுவான்.

பின்வரும் இருபாடல்களால் ஜாதகன் இயல்புகளைக் கூறுவர்

7. கொள்ளவும் விற்க வல்லன் குறிப்பினில் கொடுமை [தோன்றும்
விள்ளவே யுரைப்பா னுகும் வாயுதே கத்தா னுகுங்
கள்ளமும் கொஞ்ச முண்டு கண்சாய லுடைய னுகுந்
தள்ளொணன் முன்னேன் வார்த்தை தரணிகள் [சேர்ப்பா னுகும்.

7. சாமான்களை வாங்குவதிலும் விற்பதிலும் சாமர்த்தியமுள்ள வன். முகத்தில் கொடூரம் தோன்றும். கண்டிதத்துப் பேசுபவன். வாயு ரோகமுடைய சரீரமுடையவன். சிறிது திருட்டுத்தனமும் உள்ள வன். பார்வை ஒரு பக்கமாகச் சாய்ந்து இருக்கும். சகோதரனுடைய வார்த்தைகளை மீறுதவன். விரோதிகளைச் சேர்ப்பான்.

8. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வ
னூகைவான் பெருமை யேற்பன்
வண்டிவா கனமு முள்ளா
னடிமைக ளுடைய னுவன்
அண்டினேர் தம்மைக் காப்ப
னவன்கரம் ருத்திர ரேகை
தண்டமிழ் நூணுக்கந் தேரான்
தந்தைக்குத் தாழ்வி ராதான்.

8. திருப்தியுடன் சாப்பிடுவான். ஊகமுடையவன். பெருமையை யடைவான். வண்டி முதலிய வாகன வசதிகள் உள்ளவன். ஏவலாட் கள் உள்ளவன். தன்னை யண்டி வந்தவரை ஆதரித்து வருவான். கையில் உருத்திரரேகை யுள்ளவன். அரிய தமிழில் உள்ள ரகசியங்களை நன்கு உணராதவன். தன் தந்தைக்குத் தாழ்வில்லாத கௌரவ முடையவன்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

9. இவனுடைத் துணைவர் தம்மை
யியம்புவோ மாண்பா லொன்று
நவனியில் கன்னி யிரண்டு
நாட்டுவோர் தீர்க்க மாகத்
தவசியே யாண்பால் சேதி
சாந்தவான் வணிபஞ் செய்வன்
சிவன்துதி யிளம னத்தன்
சிறப்புள குடும்பி யாவன்.

9. ஜாதகனுடைய உடன்பிறந்தவரைப் பற்றிச் சொல்லுகின்றேம். ஒரு சகோதரனும் இரு சகோதரிகளும் நிலையானவர். (மற்றவர் இறந்து விடுவர்). தாயே! இனி சகோதரனின் விவரங்களைக் கூறுகின்றேம். அவன் பொறுமையுள்ளவன். வர்த்தகத்தைப் புரிந்து வருவான். சிவபெருமானைத் துதி செய்து வருவான். இரக்கமுள்ள மனமுடையவன். சிறப்பான குடும்பத்தை யுடையவன்.

பின்வரும் இருபாடல்கள் சகோதரன் இயல்புகளைக் கூறும்

10. உடன்கூடி வாழ்வா ளுகும் ஓணநாள் வீணை ராசி
அடைவுட னுதிப்பா ளுகு மாலய வாசஞ் செல்வன்
கடன்கொளான் பாரி யொன்று கழறுவோம் வடமே
[லாகுந்
தடபுடல் செய்கை யுண்டு சந்ததி யொன்று தோஷம்.

10. தன் சகோதரர்களுடன் ஒன்றுகூடி வாழ்ந்து வருவான். அவன் திருவோண நட்சத்திரத்தில் மிதுன லக்கினத்தில் பிறந்தவன் என்றேம். பல தேவாலயங்களுள்ள க்ஷேத்திரங்களுக்குச் செல்வான். கடன் படாதவன். மனைவி யொருத்தியே யுள்ளவன். அவளும் வடமேற்குத் திசையிலிருந்து வாய்ப்பாள். ஆடம்பரச் செய்கைகள் உள்ளவன். பிறக்கும் குழந்தைகளில் ஒன்றுக்குத் தோஷமுண்டு.

11. மரித்திடு மென்று சொல்வோ மனைவிமெய் பலமு றுதே
குறித்தினீர் குழவித் தோஷங் கூறுவீ ரந்தச் சங்கை
திருத்தமாய்ப் பூர்வ தோஷஞ் சேர்ந்ததால் புத்திர வினம்
அருமையாய்ச் சொல்லு மென்ன அவனுடைப் பூர்வங்
[கேளாய்.

11. அக்குழந்தை இறந்து விடும். மனைவிக்கும் சரீரம் பலமற்றதாக இருக்கும். அவனுக்குப் புத்திரதோஷம் ஏற்படக் காரணம் என்னவென்று சொல்லுங்கள். முற்பிறவியில் செய்த தீவினையால்

அவ்வண்ணம் நேரிட்டது. அஃது எதனால் என்று சொல்லுங்கள். அவனுடைய முற்பிறவியைக் கேளுங்கள்.

சகோதரனுடைய முற்பிறவி

12. மைந்தனும் பழனி நாட்டில் வன்னிய குலமு திக்துப்
பொங்கிய குடும்பி யாகிப் பேதையர் மதலை யுண்டாய்
வந்தவூழ் தன்னைக் கேண்மோ சீரிய வடியா ரோர்நாள்
அந்தியி லன்னங் கேட்க அரிபோலே கோப முற்று ;

12. ஜாதகனுடைய சகோதரன் முற்பிறவியில் பழனி நாட்டில் வன்னிய குலத்தில் பிறந்து கொழிக்கும் குடும்பத்தையடைந்து மனைவி மக்களைப் பெற்று வாழ்ந்து வருங்காலத்தில் ஏற்பட்ட தீவினையைக் கேட்பீராக. ஒருநாள் மாலைப்பொழுதில் ஒரு நல்லொழுக்கமுள்ள சிவனடியார் இவனைச் சிறிது அன்னம் அளிக்கும்படி வேண்ட, இவன் சிங்கம்போல் கோபம் கொண்டு ;

சிவனடியாருக்கு அன்னமளிக்க மறுத்தது

13. உதவாது வன்ன மென்ன
வுரைக்கிறு ரதிதி தாழுஞ்
சதியான வார்த்தை சொன்னாய்
ஜனிக்கும்பின் ஜன்மந் தன்னில்
நிதியது பெருக்க மாகும்
நின்குலம் விளங்கா தாகும்
இதுமொழி சொல்லிச் சென்று
ரெய்திற்று வதுவோர் தோஷம்.

13. அன்னம் அளிக்க முடியாது என்று கண்டித்துச் சொன்னான். அதைக்கேட்ட சிவனடியார் பதில் சொல்லுகின்றார். என்னை நோக்கித் தீய வார்த்தைகளைக் கூறியவனே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் செல்வம் பெருகியிருந்தபோதிலும் உன் குலம் விளங்காது (புத்திர பாக்கிய மேற்படாது) என்று கூறிவிட்டுச் சென்றார். அஃது ஒரு தோஷமாக வேற்பட்டது.

அந்தணனின் குழந்தைக்குப் பசுவின் பாலளிக்க மறுத்ததும்
சகோதரனுக்குரிய பாகத்தைக் கொடாமல் மோசம் செய்ததும்

14. மறையவர் மதலைக் காக
வாவின்பால் கேட்கும் போது
குறைவான வார்த்தை சொன்னன்
குலவிற்று வதுவோர் தோஷந்

தரையதை மோசஞ் செய்தான்
தன்னுடன் பிறந்தா னுக்கு
உறைந்தது வந்தத் தோஷம்
உத்தம னந்தி யத்தில் ;

14. (இது தவிர வேறு ஒன்றும் சொல்லுகின்றேம்). ஒரு அந்தணர் தன் குழந்தைக்காகச் சிறிது பசுவின் பாலைக் கேட்கும்போது வணக்கத்தோடு வார்த்தைகளைக் கூறாமல் இல்லையென்று கோபத்துடன் சொல்லி அனுப்பி விட்டான். அது ஒரு தோஷமாக ஏற்பட்டது. உடன்பிறந்த சகோதரனுக்குரிய பாகத்தைத் தராது மோசம் செய்தான். அது ஒரு தோஷமாகச் சேர்ந்தது. இவன் தனது கடைசிக்காலத்தில் ;

15. பலவிதத் தலங்கள் சென்று
பரவினன் கால நாடு
தலைநான்கோன் வரையப் பட்டு
ஜனித்தன னிவனே யென்றோங்
குலவிடு முன்னூழ்த் தோஷங்
குழவிகள் தோஷ மெய்தும்
விலகவே சாந்தி யொன்று
விளம்புவீர் முனியே நீர்தாம்.

15. பலவிதமான புண்ணியத் தலங்களுக்குச் சென்று இறுதியில் மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான். முற்பிறவித் தோஷம் தொடர்ந்ததால் புத்திரதோஷ முண்டாகும். அத்தோஷங்கள் விலகச் சாந்தி யொன்று சொல்லுங்கள். முனிவரே ! தாங்கள்.

தோஷங்கள் நீங்கச் சாந்தியில்லை

16. எச்சாந்தி செய்தா லுந்தான்
இலகாது முன்னூழ்த் தோஷம்
நஞ்சுபோல் சேரு தென்றோம்
[1]நாரதர் தடுத்துச் சொல்வார்
கச்சணி மாது வேறு
கலந்திட்டால் சுதர்க ளுண்டோ
அச்சமாய்க் காண லுரு
மணுகிடுஞ் சுதர்கள் காணன்.

---

1. சப்த ரிஷிகளில் நாரதர் ஒருவராக இல்லாதபோதிலும் நாரதரும் கூட இருந்திருப்பதாகக் கொள்ளல் வேண்டும்.

16. எந்தச் சாந்தி செய்தாலும் முற்பிறவியில் செய்த தீவினையை ஒழிக்க முடியாது. அது கொடிய விஷம் போல் பற்றும். நாரதமுனிவர் இடைமரித்துச் சொல்லுகின்றார். கச்சையணியும் வேறு பெண்ணை மணந்தால் புத்திர பாக்கிய மேற்படுமோ? திண்ணமாக ஏற்படாது. புத்திரர் பிறந்தாலும் நிலையார். இறந்துபோம்.

17. அவனுக்குக் கர்மஞ் செய்வோர்
யார்சொல்வாய் முனியே நீர்தாம்
நவனியி லிளையோன் புத்திரன்
நாயகன் செய்வா னுகும்
அவனியில் வயது தீர்க்க
மறைகிறேரும் பின்பால் சேதி
தவநிலை யோரைக் காக்குந்
தயாபரி கேட்டி டாயே.

17. அவனுக்கு இறுதிக் கடன்களை யார் செய்வார்கள்? சொல்லுங்கள், முனிவரே! தாங்கள். உலகில் அவனுடைய சகோதரனுடைய புத்திரன் (ஜாதகனுடைய மகன்) செய்வான். அவனுக்கு நீண்ட ஆயுள் உண்டு என்றேரும். மற்ற விவரங்களைப் பிற்பாகத்தில் சொல்லுகின்றேரும். நிலையான தவங்களை யியற்றுபவரைக் காக்கும் தேவியே! கேளுங்கள்.

ஜாதகனுடைய திருமணக்காலம்

18. உதித்தவன் மணத்தின் கால மொருபதி னெட்டு
[வாண்டில்
மதிமுக மினவி வாய்க்கும் வரைகிறே மவள்கு ணத்தைச்
சதியிலா மனத்த ளாவாள் சாற்றுமுன் கோபி யாவள்
துதிசெய்தோர்க் கன்ன மீவள் தோகையில் கீழ்ப்பா
[லாகும்.

18. இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேரும். பதினெட்டாம் வயது நிகழுங்கால் சந்திரனைப் போன்ற அழகிய முகமுடைய மனவி வாய்ப்பாள். இனி அவளுடைய குணத்தை எழுதுகின்றேரும். தீங்குகளில்லாத மனமுள்ளவள். கூறுவதற்கு முன் கோபம் கொள்ளுபவள். தோத்திரம் செய்தவரைக் காப்பவள். அவளுடைய வீடு கிழக்குப் பக்கம் உள்ளது.

மனவியின் இயல்புகள்

19. தோகைபோல் சாய லொக்குஞ்
சிவந்தமெய் யோக சாலி
பாகமாய் வார்த்தைக் கூறுவள்
பர்த்தாவின் மனம்போல் வாழ்வள்

நாகரி கங்க ளுள்ளாள்
நற்புத்தி தேவ பத்தி
போகபாக் கியங்க ளுள்ளாள்
பெரிதான விரத மேற்பள்.

19. மயிலைப் போன்ற அழகுள்ளவள். சிவந்த உடலுள்ளவள். அதிர்ஷ்டமுள்ளவள். பொருத்தமாகப் பேசுபவள். தன் கணவன் மனமறிந்து நடப்பவள். நாகரிகமாக இருப்பவள். நல்ல புத்தியும் தெய்வபக்தியு முள்ளவள். சகல சௌபாக்கியங்களையும் அடைவாள். பெரிய நோன்புகளை நோற்பாள்.

புத்திரபாவம்—கிரகநிலை

20. சுதர்களுங் காண ளாவள் தோன்றினுந் தீதே யாகும்
அதுகுற்றம் புகலு மென்ன அரவுமே வொன்பா னிற்கக்
குருவுக்கு வைந்தில் காரி குலவியே யிருப்ப தாலும்
இதுவிதத் தோஷத் தாலே யியம்பினேம் புத்திர
[தோஷம்.

20. புத்திரபாக்கிய மில்லாதவள். ஒரு சமயம் பிறந்தாலும் நிலையாது. அதற்குக் காரணம் என்னவென்று சொல்லுங்கள். ராகு ஒன்பதாமிடத்திலிருப்பதாலும் (புத்திர ஸ்தானமாகிய தனுசுக்குப் புத்திர ஸ்தானமாகிய மேஷத்தில் ராகு இருப்பதாலும்,) புத்திர ஸ்தானத்துக்கு அதிபதியும் புத்திரகாரகனுமான குருவிருக்குமிடத்துக்கு ஐந்தாமிடத்தில் (புத்திரஸ்தானத்தில்) சனி இருப்பதாலும், இவ்விதம் பல கிரக தோஷங்களிருப்பதால் அவ்விதம் புத்திரதோஷம் ஏற்பட்டது.

21. முன்ஜன்ம வினைய னேக மேவிற்றுப் பாலர் குற்றம்
என்னவூழ் செய்தா னத்தை யியம்புவீர் முனியே நீர்தாம்
அன்னவன் பூர்வஞ் சொல்வேன் அப்புலி யூரி லேதான்
மன்னர்தங் குலமு தித்து மனிவிமைந் தருமுண் டாகி;

21. முற்பிறவியில் செய்த பல தீவினைகளால் அவ்வண்ணம் புத்திரதோஷம் உண்டாயிற்று. என்ன தீவினைகள் செய்தான்? அவற்றைக் கூறுங்கள், முனிவரே! தாம். இனி அவனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றேம். புலியூரில் (சிதம்பரத்தில்) சத்திரிய குலத்தில் பிறந்து மனைவி மக்களை யடைந்து;

முற்பிறவித் தீவினை

22. பெருதன முடைய னகிப் புகழுடன் வாழு நாளில்
அரிவையர் விதவை மாது வவள்பேரில் வேறொ ருத்தன்
மருவவே வார்த்தைப் பேச மங்கையு மிசையா ளாகித்
துரிதமாய்ப் பலவந் தத்தால் தோகையைப் போகந்
[துய்த்தான்.

22. பெருஞ் செல்வமுடையவனுகிக் கீர்த்தியுடன் வாழ்ந்து (இவன் ஒரு நீதிபதியாக இருந்த) காலத்தில், கைம்பெண் ஒருத்தியின்மீது வேறொருவன் மையல் கொண்டு அவளுடன் சிற்றின்பமனுபவிக்க எண்ணி அவளிடம் அடாத வார்த்தைகளைச் சொன்னன். அப்பெண் அவனுடைய விருப்பத்திற்கு இசையாமலிருந்தாள். ஆனல் அவன் அவளுடன் பலவந்தமாகப் புணர்ந்தான்.

லஞ்சம்பெற்றுத் தவருகத் தீர்ப்பளித்தது

23. மாதுவுந் திகில டைந்து
அவள்துணை தன்பால் சொல்ல
மேதினில் கோப முற்று
விரைவினி லிவன்பால் சொல்லத்
தீதுகள் செய்தோன் தன்னை
சீக்கிரம் அழைத்துக் கேட்டுப்
போதனம் அவனல் பெற்றுப்
பேதைமேல் குற்றஞ் சொன்னன்.

23. அப்பெண் பயந்து தன் சகோதரனிடம் சென்று நடந்ததைக் கூறினுள். அவ்விருவரும் மிகுந்த கோபம் கொண்டு இவனிடம் சென்று முறையிட்டனர். தீங்குகளைச் செய்தவனை இவன் அழைத்துக் கூப்பிட்டு விசாரிக்கையில் அவனிடம் கொஞ்சம் பொருளைக் கைக்கூலியாகப் பெற்றுக்கொண்டு அப்பெண்மீதே இவன் குற்றம் கூறினன்.

கைம் பெண்ணின் சாபம்.

24. கன்னிகை வருத்த முற்றுக் கழறுவாள் சாபந் தானும்
பொன்னதை வாங்கிக் கொண்டு பேதைமேல் பழியுஞ்
[சொன்னுய்
பின்வருஞ் ஜன்மந் தன்னில் புத்திர தோஷ மாயுந்
தன்துணை யிரண்டு பங்கு சண்டன்தன் பதிக்குச் செல்லும்;

24. அக்கைம்பெண் மனம் நொந்து சாபமிடுகிருள். கைக்கூலியைப் பெற்றுக்கொண்டு அபலையாகிய என்மீது அபாண்டமாகப் பழி சொன்னுயே! உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உனக்குப் புத்திர தோஷமுண்டாகும். உடன் பிறந்தவரில் இருபங்கு இறந்து விடுவர்.

25. வம்மிச தோஷ மெய்து
மாதுமே சொல்லி யேதான்
அம்மண்ணைத் தூற்றிச் சென்ரு
ளடைந்தது அந்தத் தோஷம்

நம்பியான் தனக்குப் பொய்யை
நாட்டினன் அரசர் பக்கல்
துன்மைகள் அதனல் நேர்ந்து
செப்பினன் மறையோன் தானும்.

25. உன்னுடைய வம்சம் நாசமாகும் என்று கூறிவிட்டுத் தெரு மண்ணுவாரி இறைத்துவிட்டுச் சென்றுள். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது. ஓர் அந்தணரின் விஷயமாக அரசாங்கத்தாரிடம் (நியாயாதி பதியிடம்) பொய்யைச் சொன்னன். அதனல் துன்பங்களடைந்த அந்த அந்தணன் சாபமிடுகின்றன்.

26. மருஜன்மம் வம்ச தோஷ மருவிடு மென்று சொன்னர்
திருமக னந்தி யத்தில் செல்வங்கள் குறைவு நேர்ந்து
பெருநதி சேதுச் சென்று புக்கினன் கால நாடு
பிரமனல் வரையப் பட்டுப் பிறப்பனு மிவனே யென்றேரும்.

26. உனக்கு மறுபிறவியில் வம்சம் அழிந்து போகும் என்றன். ஜாதகன் தன் இறுதிக் காலத்தில் செல்வங்களை இழந்து பெரிய புண்ணியத் தீர்த்தமாகிய சேதுவுக்குச் சென்று மரணமடைந்தான். மீண்டும் பிரமதேவனல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தான்.

மனைவியின் முற்பிறவி

27. ஆகையா லிச்சன் மத்தில் அணுகிடும் முன்னூழ்ச் சாபந்
தோகையால் சிலவே துன்பஞ் சேர்ந்தது புகலக்
[கேண்மோ
வாகமா நகரி லேதான் மருவினன் கங்கை சேயாய்ப்
போகபாக் கியங்க ளுண்டாய்ப் பேதையும் வாழு நாளில் ;

27. ஆகையால் இப்பிறவியில் ஜாதகனுக்கு முற்பிறவித்தோஷம் ஏற்படும். மனைவியால் சில துன்பங்கள் ஏற்பட்டன. அவற்றைச் சொல்லுகிறேரும், கேளுங்கள்.....நகரில் வேளாள குலத்த வளாகப் பிறந்தாள். சகல சௌபாக்கியங்களையடைந்து வாழ்ந்து வருங் காலத்தில் ;

மனைவியால் ஏற்பட்ட தீவினைகள்

28. பஞ்சைய ரேழை மாது பாலர்க்கு வன்னம் வேண்டிக்
கெஞ்சினுள் மாது பக்கல் கருவத்தால் கோப மூற்று
மிஞ்சியே வார்த்தை சொல்லி விரட்டினு ளேழை மாதை
பஞ்சையு மனவெ றுப்பால் பகருவாள் சாபந் தானும்.

28. பசியால் வாடிய ஏழைப் பெண் ஒருத்தித் தன் குழந்தையின் பசியைப் போக்கச் சிறிது அன்னம் அளிக்கும்படி பணிவுடன் இவளை (ஜாதகன் மனைவியை) கேட்டாள். இவள் செல்வச் செருக்கால் மிகுந்த

கோபங்கொண்டு அடாத வார்த்தைகளைக் கூறி அவளை விரட்டிவிட்டாள். அவ்வேழையும் மனத்தில் வாட்டமுற்றுச் சாபமிட்டாள்.

29. பாலர்சோ றீயாப் பாவி பருகாரே சுதர்கள் தாமுஞ்
சாலவே பின்ஜன் மத்தில் ஜனிக்காது ஜனிக்கில் தீதாம்
ஏலவே சொல்லிச் சென்ரு ளெய்திற்று அந்தத் தோஷம்
வேல்விழி கொல்லை தன்னில் மேவிற்றுக் கருப்பன் சாமி.

29. குழந்தையின் பசியைப் போக்கச் சிறிது அன்னம் அளிக்காத பாவியே! உனக்குப் புத்திரர் நிலையார். நீ பிறக்கும் அடுத்த பிறவியிலும் புத்திர பாக்கியமிராது. ஒருக்கால் பிறந்தாலும் தீர்க்காயுளுடன் வாழாது என்று கூறிவிட்டுச் சென்ருள். அந்தத் தோஷம் இவளைப் பற்றியது. இவளுடைய வீட்டுக் கொல்லையில் கருப்பன்சாமி (முனீச்வரன்) ஒன்று வாழ்ந்து வந்தது.

முனியை வணங்காததும் முனியின் சாபமும்

30. முன்னோர்கள் தோத்த ரிப்பா ருயர்குல தெய்வ மென்று
கன்னிகை நினைக்கா விட்டாள் குருமுனி சாபங் கேளாய்
என்னைநீ நினைக்கா விட்டாய் எமபுறஞ் சுதரைச்
[சேர்ப்பேன்
பின்வருஞ் ஜன்மம் தன்னில் பிழைசெய்வேன்
[சுதர்க ளுக்கு.

30. அம்முனியை இவளுடைய முன்னோர்கள் தன் குலதெய்வமாகத் தொழுது வந்தனர். இவள் அம்முனியை மனத்தாலும் நினைக்காமல் வாழ்ந்து வந்தாள். அம்முனி கோபமுற்றுக் கூறும் சாபத்தைக் கேட்பீராக. என்னை நீ தொழாமலும் மனத்தாலும் நினையாமலும் இருக்கிருய். உன்னுடைய புத்திரர்களை இப்பிறவியிலும் பின்வரும் பிறவியிலும் கொல்வேன்.

31. இல்லத்தில் குடியாய் வாழ்வே
னிடர்செய்வேன் சிறிது வேளை
சொல்லிற்றுக் கருப்பன் தானுஞ்
சேர்ந்தது வந்தத் தோஷம்
வல்லிக்கு அந்தி யத்தில்
வருஞ்சுதர் யாவு நீங்கி
அல்லலால் மரண மாகி
அயனுமே வரையப் பட்டு;

31. உன்னுடைய வீட்டில் குடியாக வாழ்ந்து வருவேன். சில வேளைகளில் உன்னையே பிடித்து ஆட்டுவேன் என்று கூறியது.

அதனால் அப்பெண்ணுக்கு அப்பிறவியில் கடைசிக் காலத்தில் புத்திரர் எல்லோரும் இறந்து மன வருத்தமுற்று மரணமடைந்து மீண்டும் பிரமதேவனால் படைக்கப்பட்டு;

32. வருவளா மிவனின் பாரி மாமுனி சாப மொன்று
அரிவையா மேழை சாபம் அணுகிடு மிஞ் ஜன்மத்தில்
உருஞ்சுதர் தோஷ மெய்து முரைப்பீர்கள் அதற்குச்
[சாந்தி
மருமமாய்க் கரும சாந்தி மங்கைக்குச் செய்து மேதான்;

32. இப்பிறவியில் ஜாதகனுடைய மனைவியாகப் பிறப்பாள். முனியின் சாபம் ஒன்றும் ஏழைப் பெண்ணின் சாபம் ஒன்றும் இப் பிறவியில் தொடரும். அதனால் பிறக்கும் புத்திரர்களுக்குத் தோஷ முண்டாக்கும். அத்தோஷங்கள் விலகச் சாந்தி யொன்றைக் கூறுங்கள். இரகசியமாக கருமசாந்தியை ஜாதகனுடைய மனைவிக்குச் செய்து;

கருமசாந்தி செய்யும் விவரம்

33. இரணிய ரேக்கி லேதா னீசுவரி பீஜந் தன்னை
வருவியே சகஸ்திரஞ் சொல்லி மங்கையின் பூஜை வைத்து
அரிவையு மணிந்து கொண்டு அம்புலி வார நோன்பு
திருகிலா வாண்டு கொள்ளச் சேயர்கள் விருத்தி
[யென்றோம்.

33. தங்கத்தகட்டில் ஈச்வரியின் பீஜாட்சரத்தை எழுதி ஆயிரம் தடவை அப்பீஜாட்சரத்தைச் சொல்லி ஈசுவரிக்குப் பூசைகளைச் செய்து அதை அவள் அணிந்துகொண்டு ஒரு வருடகாலம் சோமவார விதம் இருந்து வந்தால் புத்திர பாக்கிய மேற்படும்.

ஜாதகனுக்கு ஏற்பட்ட புத்திரதோஷம் விலகச் சாந்தி

34. மாரன்தன் வினைக்குச் சாந்தி வரைகிறோ மனைவி யோடு
தீரனு மருணைக் கேகிச் சிகரத்தை வலமாய் வந்து
மாரனை யெரித்தோ னுக்கு மாயிர மர்ச்சித் தேத்தித்
தீரனு முள்ளூர் மீண்டு சோமன்தன் வார நோன்பு;

34. ஜாதகன் செய்த தீவினை தீரச் சாந்தியை எழுதுகின்றோம். அவன் தன் மனைவியுடன் திருவண்ணாமலைக்குச் சென்று கிரியை வலம் வந்து (மன்மதனைச் சுட்டெரித்த) சிவபெருமானுக்கு ஆயிரம் தடவைகள் அருச்சனைகளைச் செய்து, துதித்துத் திரும்பி உள்ளூருக்கு வந்து, சோமவார விரதம்;

35. கொள்ளவு மனைகள் புக்கிக் குழவிகள் விருத்தி யாகும்
நள்ளிருள் மதிபோல் தோன்று நவிலுவோ மாண்பா
[லிரண்டு
விள்ளவே பெண்பா லவ்வாறு விளங்கிடுந் தீர்க்க மாகச்
சள்ளையை விலக்குந் தாயே சாற்றின மொழிகுன் ரூவே.

35. இருந்து வருவானுகில் புத்திரபாக்கியம் ஏற்படும். நடு இரவில் தோன்றும் சந்திரன்போல் குலத்தை விளங்க வைக்க இரு புத்திரர்கள் தோன்றுவர். அவ்வண்ணம் இரு புத்திரிகளும் பிறந்து தீர்க்காயுள் உள்ளவராவர். துன்பங்களைத் தவிர்க்கும் தாயே! நாங்கள் கூறியவை தவரு.

தாயின் குணங்கள்

36. அன்னையின் குணத்தைச் சொல்வே
னன்புள மனத்த ளாகுந்
தன்சொலு மடக்க முண்டு
சற்பாத்திரி துணையா ணென்று
கன்னியுங் வடகி ழாகுங்
கருதிடாள் கட்டு வார்த்தை
முன்ஜன்ம மிலங்கைக் நாட்டி
லுதித்தனள் கர்ண சேயாய்;

36. இனி தாயின் குணங்களைக் கூறுகின்றேரும். அன்புள்ள மனமுடையவள். அடக்கமாகப் பேசுபவள். சற்பாத்திரி யோகமுடை யவள். உடன்பிறந்த சகோதரன் ஒருவனே யுடையவள். வடகிழக்குத் திக்கில் சொந்த வீடு உள்ளவள். வார்த்தைகளைப் புனைந்து பேசாத வள். அவள் முற்பிறவியில் இலங்கையில் கருணீகர் குலத்தில்பிறந்து;

தாயின் மரணகாலம்

37. சுகமுளக் குடும்பி யாகிச்
சண்டன்தன் பதிக்குச் சென்று
ஜகபதி வரையப் பட்டு
ஜனித்தன ளென்று சொல்வோம்
பகையாக வைந்து வாண்டுள்
பரமன்தன் பதிக்குச் செல்வள்
தகமையா யிவள்பின் ஜன்மஞ்
சாற்றுவோ மினிமே லாக.

37. சௌக்கியமுள்ள குடும்பியாக வாழ்ந்து மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு இப்பிறவியில் பிறந்தாள். ஜாதகனுடைய ஐந்தாம் வயதுக்குள் மரணமடைவாள். இவளுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றேரும்.

தாயின் மறுபிறவியும் தந்தையின் முற்பிறவியும்

38. கொங்குநா டதனி லேதான்
குதிப்பளாஞ் சைவச் சேயாய்த்
தீங்கிலாத் தந்தை பூர்வஞ்
செப்புவோம் பாண்டி நாட்டில்
பாங்கியின் குலமு தித்துப்
பாவைக்குக் கல்வி சொல்லி
வாங்கினன் சிலது பொன்னும்
மருமமாம் வார்த்தை யாலே.

38. கொங்கு நாட்டில் சைவ குலத்தவளாகப் பிறப்பாள். தீங்கு களில்லாத தந்தையின் முற்பிறவியைச் சொல்லுகின்றோம். பாண்டிய நாட்டில் வேளாள குலத்தில் பிறந்து பெண்களுக்குக் கல்வி போதிக் கும் ஆசிரியனுக இருந்து வருங்காலத்தில் சில இரகசிய வார்த்தைகளை அவர்களிடம் கூறி பொருளை வாங்கினன்.

39. கன்னியர் வருத்த முற்றுக்
கழறுவார் சாபந் தானும்
பின்வருஞ் ஜன்மந் தன்னில்
பிறப்புக்கள் தோஷ மெய்தும்
இன்னமும் பலவாறு சொல்ல
யெய்திற்று வந்தத் தோஷம்
அந்தகன் பக்கல் சென்று
அயனுமே வரையப் பட்டு;

39. அப்பெண்கள் வருத்தமடைந்து சாபமிடுகின்றனர். உனக்கு ஏற்படும் மறுபிறவியில் உடன்பிறப்பில்லாதவனுவாய் என்றும் இன் னும் பலவிதமாகவுங் கூறினர். அந்தத் தோஷம் இவனைப் பற்றியது. இவன் மரணமடைந்து மீண்டும் பிரமதேவனுல் படைக்கப்பட்டு;

தந்தையின் மரணகாலம்

40. வந்தவ னிவனே யென்றே
மங்கையர் சாபத் தாலே
தன்துணை தோஷ மெய்துந்
தனியனுய் வாழ்வா னென்றேம்
தென்திசைக் கால நாடு
சேருவான் மூவைந் தாண்டுள்
பின்ஜன்மங் காளத்தி தன்னில்
பிறப்பனும் பிரம்ம சேயாய்.

40. இப்பிறவியில் பிறந்தவன் ஜாதகனுடைய தந்தை என்றேரும். பெண்களுடைய சாபத்தால் உடன்பிறந்தவருக்குத் தோஷமுண்டாகித் தன்னந் தனியனாக வாழ்ந்து வருவான். ஜாதகனது பதினேந்தாம் வயதுக்குள் மரணமடைவான். மறுபிறவியில் திருக்காளத்தியில் அந்தண குலத்தவனாகப் பிறப்பான்.

ஜாதகன் மரணகாலம்

41. அறுபது வொன்ப தாண்டி லானிமா தத்தி லேதான்
திருமக னுடல மேகுஞ் செப்புவோ மிவன்பின் ஜன்ம
மருணையில் பிரம்மச் சேயா யருளுவா னென்று
[சொல்வோம்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

41. ஜாதகன் தனது அறுபத்தொன்பதாம் வயதில் ஆனி மாதத்தில் மரணமடைவான். இவனது மறுபிறவியைச் சொல்லுகின்றேரும். திருவண்ணாமலையில் அந்தண குலத்தவனாகப் பிறப்பான் என்று கூறுகின்றேரும். பெரிய வயிற்றையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

42. வந்தவன் பொதுயோ கத்தை
வரைகிறேரும் வணிபஞ் செய்வன்
விந்தையாய்ப் பூமி சேர்ப்பன்
மேதினில் சல்லியங் காணன்
சந்திரன் பிறைபோல் யோகந்
தங்கிடும் பால னுக்குச்
சந்ததம் வறுமை காணன்
தனமது பெருக்கஞ் செய்வன்.

42. ஜாதகனுடைய பொது யோகத்தை எழுதுகின்றேரும். அவன் வர்த்தகத்தைப் புரிந்து வருவான். விளைநிலங்களை வாங்குவான். உலகில் கடன்படாதவன். வளர்பிறைச் சந்திரன்போல் யோகம் பெருகும். எக்காலத்திலும் தரித்திரத்தை அடையாதவன். பொருளை விருத்தி செய்வான்.

சகோதரனுடைய மரணகாலம்

43. நாற்பது வொன்ப தாண்டில் நற்றுணை மரண மெய்தும்
ஏற்கவே மிவன்பின் ஜன்மஞ் யெழில்காஞ்சி தன்னி
[லேதான்
ஆற்கவே சௌராஷ்டர வம்ச மருளுவா னிந்தப் பாலன்
தீர்ப்பாகச் சொன்னேம் யாங்கள் செல்வதி கேட்டி டாயே.

43. நாற்பத்தொன்பதாம் வயதில் உடன்பிறந்தவன் மரணமடைவான். அவன் மறுபிறவியில் காஞ்சீபுரத்தில் சௌராஷ்டிர குலத்தில் பிறப்பான் எனத் திண்ணமாக நாங்கள் கூறியுள்ளோம். செல்வியே! கேளுங்கள்.

ஜனனகால தசை

44. அன்னவன் ஜனன கால மாதிரை மூன்றும் பாதந்
துன்ராகு தனிலி ருப்புச் செப்புவோ மாண்டு வெட்டு
மன்னிய திங்க ளொன்றும் வரைந்தன மென்று
[சொல்வோம்
உன்னத வாணை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

44. ஜாதகனுடைய ஜனனகாலம் திருவாதிரை நட்சத்திரம் மூன்றும் பாதமாகும். அக்காலத்தில் ராகு மகாதசையில் எட்டு ஆண்டுகளும் ஒரு மாதமும் மீதமாகும். இதுவரை முதல் பாகத்தைச் சொன்னேம். உயர்ந்த யானை முகத்தையுடைய விநாயகனைப் பெற்ற தேவியே! கேளுங்கள்.

ஜாதகம் 82

1. பொன்னவன் கன்னி யாகப் புதன்குஜ னிரவி கோலில்
மன்னுசுக் கிரனும் ராகு மகமேரு தன்னில் தங்கப்
பின்னமா மதியுங் கும்பம் [1]பங்குமே யரியி லேதான்
துன்னிகி வீணை யாகத் தோன்றிடுஞ் ஜன்மஞ் சிம்மம் ;

1. குரு கன்னியிலும், புதன் செவ்வாய் சூரியன் துலாத்திலும், சுக்கிரன் ராகு தனுசிலும், சந்திரன் கும்பத்திலும், சனி சிம்மத்திலும், கேது மிதுனத்திலுமாக நவக்கிரக நிலைகளிருந்து இலக்கினம் சிம்மமானால்;

கிரகநிலை

			கேது
சந்திரன்	இராசி சக்கரம்		
			லக்கினம் சனி
சுக்கிரன் ராகு		புதன் செவ்வாய் சூரியன்	குரு

ஜாதகன் பிறந்த ஊரின்நிலை

2. பிறந்தசே யாணஞ் ஜன்மம்
பேசினேங் காஞ்சி தென்பால்
வரன்பெற்றான் பனைக்குக் கிழ்ப்பால்
மண்டுக மலைக்கு யுத்தர
மரசர்வாழ் மேரு வுக்கு
வன்புடன் குடகு மாகுந்
திரமீது மத்தி லேதான்
ஜனித்தது பேரூ ராமே.

2. பிறப்பது ஆண் மகன். அவன் பிறந்த ஊர் காஞ்சீபுரத்திற்குத் தெற்கில்மகாபலிச் சக்கரவர்த்தியிடம் திருமால் யாசித்த ஊராகிய மகாபலிபுரத்துக்குக் கிழக்கில் தவளை மலைக்கு வடக்கில் உள்ளது. அரசர்கள் வாழ்ந்துவரும் பெரிய ஊருக்கு மேற்குத் திக்கில் உள்ளது அவ்வூர். இவ்வித இடங்களுக்கு இடையில் உள்ள ஊரில் பிறந்தவன் இந்த ஜாதகன் என்றேரும்

---

1. சனி

பிறந்தவீட்டு நிலை

3. ஜனித்தயில் லடையா ளத்தைச் செப்புவோங் கிழக்கில் [மாரி
கனிவுகள் மேற்கில் மூத்தோன் காரியு மாயோன் நிற்குந்
தனிமையாய்த் தெற்கி லோடை சாமுண்டி சூழி யாகு
மினிமையா யுத்தர திக்கி லியல்நதி பத்திர காளி;

3. இனி ஜாதகன் பிறந்த வீட்டின் அடையாளத்தைச் சொல்லுகின்றேரும். கிழக்குப் பக்கத்தில் மாரியம்மனும்..... மேற்கில் விநாயகன், சனி பகவான், திருமால் இவர்களின் ஆலயங்களும் உள்ளன. தெற்குப் பக்கத்தில் தனியாக ஒரு ஓரோடை ஓடும். சாமுண்டீச்வரியின் குளம் ஒன்றுமுண்டு. இவ்வீட்டிற்கு வடக்கில் புண்ணிய நதியும் காளி கோவிலும்;

இதுவுமது

4. அரனவன் மீன திக்கி லணுகிடும் பலதே வாசம்
உறமுள கீழ்மேல் வீதி யுயர்வாசல் தெற்குப் பார்வை
பரம்பரைக் கங்கை வம்சம் பாலகன் சைவ ஜாதி
பெருமையாய்க் கீர்த்தி பெற்ற பிரபல குலத்தில்
[வந்தோன்.

4. வடமேற்குத் திக்கில் சிவபெருமானும் கோவில் கொண்டுள்ள ஊரில் பல தெய்வங்களும் வாழ்ந்து வரும் இடத்துக்கு அருகில் பெரியதொரு தெருவொன்று கிழக்கு மேற்காக விருக்கும். அத்தெருவில் தெற்கு நோக்கியுள்ள வீட்டில் பரம்பரையாக உள்ள சைவ வேளாள குலத்தில் சிரும் சிறப்பும் கீர்த்தியும் பெற்றதொரு குடும்பத்தில் பிறந்தவன் இந்த ஜாதகன்.

5. இன்னவன் ஜனன யோக
மெழில்பெருந் தந்தை யோக
மன்னிய யன்னை யோகம்
வரும்புத்திர களத்திர யோகந்
தன்னிலே சகோதர யோகஞ்
சாற்றுவோ மிவன்முன் ஜன்ம
மன்னையே யனைத்தும் யாங்க
ளறைகிறேரங் கேளு மம்மா.

5. இனி ஜாதகனது ஜனன யோகம் அவனுடைய தந்தை தாய் புத்திரர் மனைவி உடன்பிறந்தவர் இவர்களின் முற்பிறவி மறுபிறவி ஆகிய வனைத்தையும் இந்தச் சோதிட சாஸ்திரத்தில் கூறுகின்றேரும். தாயே! கேளுங்கள்.

6. தந்தைக்குத் தார மூன்றில் தரித்திடு முதல்மா தின்ற
தீதிலா மைந்தன் தானு நிகழ்த்துவோ மிவனின் தந்தை
மாதுவே யவன்கு ணத்தை வரைகிறே மொடிச்சல் தேகி
தீதிலா குணத்த ளுகுஞ் செப்புவோ மேலுங் கேளே.

6. ஜாதகனுடைய பாட்டனுக்குற்ற மனைவியர் மூவரில் மூத்த மனைவிக்குப் பிறந்தவன் இந்த ஜாதகனுடைய தந்தை என்று சொல்லுகின்றோம். தாயே! இனி ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் குறிக்கின்றோம். மெல்லிய சரீரமுள்ளவன். தீய குணங்களில்லாதவன். தாயே! மேலும் கூறுகிறோம் கேட்பீராக.

பின்வரும் ஆறுபாட்டல்களில் தந்தையின் குணநலங்கள் கூறப்படும்

7. தானமுந் தருமஞ் செய்வன் சற்சனர் நேச முள்ளா
னினரை மனத்தி லெண்ணு னெதிரியை வசியஞ்
[செய்வன்
மானமு முடைய னுவன் வழக்குகள் தீர்ப்புச் செய்வன்
தேனென மொழியார் தம்மைச் சேருவா னநேக மாக.

7. தான தருமம் செய்வதில் விருப்பமுடையவன். நல்லவருடைய நட்பைக் கொள்ளுபவன். அற்பர்களுடைய சகவாசத்தை மனத்தாலும் நினையாதவன். விரோதிகளையும் தன் வயப்படுத்தக் கூடியவன். மானி. கண்ணியமுள்ளவன். வழக்குகளைத் தீர்ப்புச் சொல்லும் நியாயாதிபதியாக விருப்பான். இனிய வார்த்தைகளைப் பேசும் பல பெண்களிடம் நட்பைக் கொள்ளுபவன்.

8. அதிகார முடைய னுவ
னரசர்க ளிஷ்ட னுவன்
பொதிகையின் முனியைப் போலே
புகலுவான் கல்வி தானும்
நிதம்வரு வோர்க்குத் தான
மீவனுங் கீர்த்தி யுள்ளான்
மதிமுக வதன முள்ள
மங்கையே மேலுங் கேளே.

8. அதிகாரமுள்ள பதவியையும் அரசாங்க உத்தியோகத்தையும் பெற்றவன். அரசருக்குப் பிரியமானவன். அகத்தியரைப்போல் கல்வியறிவில் மேன்மையடைவான். தன்னை யண்டி வரும் யாசகர்கட்குத் தானம் கொடுப்பான். புகழுடையவன். சந்திரனைப்போன்ற அழகிய முகத்தையுடைய தேவியே! மேலும் கேளுங்கள்.

9. ஆலயம் நிருமிப் பாலு மநேகசோ லையுமே செய்வன்
சாலையுஞ் செய்து வைப்பன் தடமடங் கட்டு வாலு
மேலவே யெதிரிக் கஞ்சா னெத்திசைக் கீர்த்தி
[கொள்வன்
மாலையுங் குழலா ளிரண்டு வந்திடு மிவனுக் கம்மா.

9. ஆலயத் திருப்பணியைச் செய்வான். தோட்டங்களை அமைப்பான். சாலைகளையும் அமைப்பான். வீடுகள் மடாலயங்கள் முதலிய வற்றைக் கட்டுவான். விரோதிகட்குப் பயப்படாதவன். எல்லாத் திக்குகளிலும் புகழடைவான். மாலையை யணியும் குழலை யடைந்த மனைவிமார்கள் இருவர் உள்ளவன்.

10. வாகன முடைய னுவன் வள்ளல்மேல் பத்தி யுள்ளான்
போகமு முடைய னுவன் புண்ணிய வேலை செய்வன்
ஊகமு முடைய னுவ னுறுதியா மனத்த னுவன்
யாகமுஞ் செய்வா னுவ னண்டின பேரைக் காப்பன்.

10. வாகன வசதி யுள்ளவன். சிவபெருமான்மீது பக்தி யுடைய வன். சுகபோக பாக்கியமுள்ளவன். புண்ணிய வேலைகளையே செய்து வருவான். ஊகமுடையவன். திடமான மனமுள்ளவன். யாகம் செய்வான். தன்னை யண்டி வந்தவரைக் காப்பான்.

11. ஏழைமேல் பிரிய முள்ளா
னீனமாஞ் சொல்லு முள்ளான்
தாழ்வான நிந்தை யுள்ளான்
ஜனப்பகை யநேக முள்ளான்
ஆழிசூழ் புவியில் துன்ப
மநேகமாய் வந்த போதுந்
[1]தழல்கதிர் முன்னே பனிபோல்
தீர்ந்திடு மென்று சொன்னேம்.

11. ஏழைகளின்மீது பிரியமுள்ளவள். அற்ப வார்த்தைகளைப் பேசுவான். தாழ்வான அவச்சொல்களை யடைவான். ஜனங்களிடம் விரோதம் கொள்ளுவான். சமுத்திரம் சூழ்ந்த பூமியில் எந்த விதமான துன்பம் நேரிட்டபோதிலும் சூரியன் முன் பனிபோல் விரைவில் தீர்ந்துவிடும் என்று சொன்னேம்.

---

1. சூரியன்

12. சுபங்களு மதேகஞ் செய்வன்
தொல்லையு முடைய னவன்
நயமான வார்த்தை யுள்ளான்
நாட்டினில் சாப முள்ளான்
கயவரை மனத்தி லெண்ணன்
கபடுக ளுள்ளா னவன்
தயையுளான் தனங்கள் சேர்க்கான்
சல்லிய முடைய னவன்.

12. பல சுபக்காரியங்களைச் செய்து வருவான். ஆனல் துன்பங்களே அதிகமாகவுடையவன். இனிய வார்த்தைகள் பேசுபவன். உலகில் அபவாதமுடையவன். அற்பர்களுடைய சகவாசத்தை மனத்தாலும் நினையாதவன். கபடமுள்ளவன். தயையுள்ளவன். செல்வத்தைச் சேர்க்காதவன். கடன் உள்ளவன்.

அடியில்கண்ட ஐந்துபாடல்கள் ஜாதகன் இயல்புகளைக் கூறும்

13. இப்படி யிருக்குந் தந்தை
யிவனுக்கு வுதித்த பாலன்
செப்புவோம் பலன்கள் யாவுஞ்
செல்வியே கேளு மம்மா
மெய்ப்புடன் மனையா ளிரண்டு
வகுக்கிறேம் பொறுமை யுள்ளான்
தப்பித மொருவர்க் கெண்ணன்
சாந்தவன் மோக முள்ளான்.

13. இவ்விதக் குணங்களுடைய தந்தைக்கு இந்த ஜாதகன் பிறப்பான். இவனுடைய பலன்களை யெல்லாம் கூறுகின்றேம். தாயே! கேளுங்கள். இரு மனைவியரை யுடையவன். பொறுமை யுள்ளவன். பிறருக்குத் தீங்கைச் செய்ய எண்ணுதவன். சாந்தமுள்ளவன். பெண்கள்மீது மோகமுடையவன்.

14. இருநிற முடைய னவ னிவன்முக வடிவு முள்ளான்
நிரந்தர மான கீர்த்தி சத்தியந் தப்பா னவன்
பெருமையு முடைய னவன் பலத்திடு முத்தி யோகம்
அரனடி பணிப்பா னவ னம்மையே மேலுங் கேளே.

14. இருவித நிறமுள்ளவன். வசீகரமான முகமுடையவன். அழிவில்லாத கீர்த்தி யுடையவன். சத்தியம் தவருதவன். பெருமை யுள்ளவன். பிரபலமான உத்தியோக முள்ளவன். சிவபெருமானுடைய பாத கமலங்களைப் பூசித்து வருவான். தாயே! மேலுங் கேளுங்கள். (சிவனடியார் மீது பக்தியுள்ளவன்.)

15. அரசர்பூ சிதமு மூள்ளா னதிகாரம் பெற்றே வாழ்வன்
பரம்பரைத் தொழிலே யுள்ளான் பந்துபூ ஜிதமு
[மூள்ளான்
கரங்கால்கள் வலுவு மூள்ளான் காலேக ளதிக மூள்ளான்
திறமையாய்க் கல்வி யில்லான் விலேகில மதிக மில்லான்.

15. அரசாங்கத்தாருடைய மதிப்பைக் கொண்டவன். அதிகார மூள்ள பதவியை வகித்து வாழ்ந்து வருவான். தன்னுடைய பரம் பரைத் தொழிலேயே செய்து வருவான். சுற்றத்தாரால் நன்மதிப்புக் கொண்டிடுவான். கால் கைகள் வலுவுள்ளவைகளாக இருக்கும். காலேகளின் பெருக்கமுடையவன். பெரிய கல்வி யறிவில்லாதவன். விலேகிலங்களின் பெருக்கமுமில்லாதவன்.

16. இன்னவன் செங்கை தன்னி லிலகிடு மச்ச ரேகை
நன்னிய சுழியு முண்டு நகங்கைகால் வரிசை யுண்டு
அன்னிய பாலேஷ யுண்டு வதுவுமே யல்ப மாகுஞ்
சொன்னசொல் தப்பா லுகுந் தோத்திரப் பிரிய னுவன்.

16. இவனுடைய கையில் மச்சரேகை உள்ளவன். அழகிய சுழியு முடையவன். நகம் கை கால்கள் இவை வரிசையாகவும் அழகாகவும் உள்ளவை. பிறபாஷையில் (அன்னிய பாஷையாகிய ஆங்கிலத்தில்) சிறிதளவே பயிற்சி யுள்ளவன். தான் சொன்ன வார்த்தைகளே மீறுத வன். புகழ்ச்சி செய்யப்படுவதில் பிரியமுள்ளவன்.

17. தந்தையின் பூமி தன்னே ஜாதக னடைய மாட்டான்
சிந்தையில் கபடுங் கொஞ்சந் தீரமு மில்லா னுவன்
வந்தவர்க் கன்ன மீவன் மனத்தினில் குறைவு மூள்ளான்
தன்தன மில்லா லுகுஞ் செலவுளான் அற்ப போகி.

17. தன்னுடைய தந்தையால் சம்பாதித்து வைக்கப்பட்ட நிலங்களே ஜாதகன் பெறுதவன். மனத்தில் சிறிது சூது உடையவன். தைரியமில்லாத மனத்தன். அண்டி வந்தவரை அன்னமிட்டு உபசரிப் பான். மனத்தில் குறையுள்ளவன். தன்னுல் தேடப்பட்ட பொருள் அதிகமில்லாதவன். செலவாளி. சிறிதளவே சுகமுடையவன்.

ஜாதகனுடைய சகோதரபாவம்

18. ஜாதகன் சகோத ரர்கள் சாற்றவாண் பலத்தைக்
[காணேம்
பேதைய ரொருத்தி யுண்டு பலக்காது வதுவு நஷ்டஞ்
சீதள குணமு மூள்ளான் சிறுத்தவர் தம்மைக் காப்பன்
நீதியா யார்ஜி தங்கள் நிலேக்காவே விவனுக் கம்மா.

18. ஜாதகனுக்குச் சகோதர பாவம் உண்டு என்று சொல்லக் கிரகபலமில்லை. ஒரு சகோதரியே தோன்றுவாள். ஆனால் அவளும் நிலையாமல் இறந்து விடுவாள். குளிர்ந்த மனப்பான்மையுள்ளவன். (தன்மையான குணமுள்ளவன்) எளியவரை ஆதரித்து வருவான். இவனுடைய சம்பாத்தியங்கள் நிலையாமல் செலவழிந்து போகும்.

பிறருடைய உதவியால் ஜீவனம்—கிரகநிலை

19. ஜயமுனி யிவ்வாறு சொல்லச் செப்புவார் புசண்டர்
[தாமும்
வியமதி யேழி லேற மிக்கபொன் னிரண்டில் நிற்க
அயலார்க ளார்ஜி தத்தை யனுபவிப் பானு மென்றோம்
தயையுடன் சங்கை தன்னைத் தானெடுத் தியம்பு வீரே.

19. இவ்விதம் ஜய முனிவர் கூறும்போது புஜண்ட முனிவர் தடுத்துக் கூறுகின்றார். விரயஸ்தானத்துக்குரிய சந்திரன் ஏழாமிடத்தில் இருப்பதாலும் குரு இரண்டாமிடத்திலிருப்பதாலும் இவன் பிறருடைய சம்பாத்தியத்தை அடைந்து ஜீவித்து வருவான் என்றார். தயைசெய்து அந்த விவரத்தைச் சொல்லுங்கள், முனிவரே! தாம்.

வேறு

மேற்சொன்னதற்கு மறுப்பும் அதற்குச்சான்றாக கிரகநிலையும்

20. சொல்லுவேன் ஜயமுனியே சூரியன்றான்
நீசனுய்ச் சேயுடனே சேர்ந்து நிற்கில்
வெல்லுமிந்த விரயத்தோ னதற்கு வெட்டில்
மேவிநிற்கில் தந்தையினுல் விரய மாகும்
அல்லல்களு மெத்தவுண்டி சல்லிய முண்டு
ஆகையால் ஆர்ஜிதமும் அழியுமப்பா
வல்லவனு மிவனுக்கு ருண மிராது
வழுத்துவோம் பின்வயதில் வந்து சேரும்.

20. ஜய முனிவரே! சொல்லுகிறேன், கேட்பீராக. சூரியன் நீசனுகி செவ்வாயுடன் சேர்ந்து துலாத்தில் இருப்பதாலும், விரயஸ்தானாதிபதியாகிய சந்திரன் அவ்விடத்துக்கு, (விரயஸ்தானமாகிய கடகத்துக்கு) எட்டாமிடத்தில் இருப்பதாலும், தந்தையினுல் ஏற்பட்ட கடன்கள் தீர ஆஸ்திகள் அழிந்து போகும். துன்பங்கள் அதிகமாக ஏற்படும். கடன் உபத்ரவமுண்டாகும். ஆகையால் இவனுடைய சம்பாத்தியங்களும் அழிந்து விடும். ஆனால் ஜாதகனுக்குக் கடன் உபத்ரவ மிராது. பிற்காலத்தில் இவனுக்குத் தந்தையின் ஆஸ்தி வந்து சேரும்.

வேறு

21. தந்தையின் ஆர்ஜி தங்கள் தானது வந்து சேரும்
நீதியாய்த் தந்தை யாஸ்தி நிலைக்காது விவனுக் கேதான்
மாதிவ ளிரண்டு யென்று வகுத்ததன் கார ணத்தைச்
சோதித்துச் சொல்லு மென்று செப்புவார் புசண்டர்
[தாமும்.

21. ஜாதகனுடைய தந்தையின் ஆஸ்திகள் இறுதிக் காலத்தில் வந்து சேரும். ஆனால் அவை நிலையா. ஜாதகனுக்கு இரு மனைவியர் உண்டு என்று கூறக் காரணம் என்னவென்று நன்றுகப் பார்த்துச் சொல்லுங்கள் என, புயண்ட முனிவர் கூறுகின்றார்.

வேறு

இருதாரமேற்படக் கிரகநிலை

22. சொல்லுவேன் மூன்றினிலே புந்தி செவ்வாய்
சூரியனுங் கூடிநிற்கத் தார மிரண்டாம்
மெல்லியர்க ளிருவருமே தீர்க்க மாகும்
விளம்புவோம் முதல்வந்த மாதுக் கேதான்
இல்லையே புத்திரர்கள் இரண்டா மாது
இசைந்தபின் புத்திரர்கள் விருத்தி யாகும்
நல்லவனாய்ப் பூமியிலே கீர்த்தி யேற்பன்
நாட்டும்புத் திரசங்கை நாங்களம்மா.

22. குடும்ப ஸ்தான்த்துக்குரிய புதன் மூன்றாமிடத்தில் செவ்வாயுடனும் சூரியனுடனும் சேர்ந்து இருப்பதால் அவனுக்கு மனைவியர் இருவர் என்றோம். அவ்விரு மனைவியரும் தீர்க்காயுள் உள்ளவர். முதலில் வந்த மனைவிக்குப் புத்திரபாக்கியமில்லை. இரண்டாம் மனைவி வந்தபிறகு புத்திரபாக்கிய மேற்படும். உலகில் நல்லவள் என்ற பெயர் பெற்றுப் புகழடைவான். புத்திர தோஷம் ஏற்படக் காரணத்தைச் சொல்லுங்கள்.

வேறு

ஜாதகனுடைய முற்பிறவி

23. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகிறே மருணை கீழ்ப்பால்
நன்னிய சிற்றூர் தன்னில் நற்கரு ணீகர் வம்சந்
தன்னிலே யுதித்துப் பூமி தனங்களுங் குறைவில் லாமல்
மன்னிய மனைவி மைந்தர் மகிழ்ச்சியாய் வாழு நாளில் ;

23. ஜாதகனுடைய முற்பிறவியைச் சொல்லுகின்றோம். திருவண்ணாமலைக்குக் கிழக்கில் உள்ள சிற்றூரில் கருணீகர் குலத்தில் பிறந்து செல்வம் பூமி இவைகளைக் குறைவில்லாமல் பெற்று மனைவி மக்களுடன் இன்பமுடன் வாழ்ந்து வருங்காலத்தில் ;

24. பசனையும் பத்தி யோடு பாவலன் செய்து வந்தான்
திசையெல்லாஞ் சுமக்கு மாதி சேடனை யிவனுங் கண்டு
வாசுகி யென்றெண் ணுமல் மைந்தனு மடித்து விட்டான்
நேசமாய்ச் சாபம் வந்து நின்றது விவனுக் கம்மா.

24. பக்தியுடன் பஜனைகளைச் செய்து வந்தான். உலகை யெல்லாம் சுமக்கும் ஆதிசேடனுடைய வபிசத்தில் தோன்றிய சர்ப்பத்தை வாஸுகி என்று பக்தியுடன் எண்ணுமல் அதை அடித்து விட்டான். அதனல் இவனுக்குச் சர்ப்பதோஷம் ஏற்பட்டது.

25. இதுவலா லிச்சென் மத்தில்
இவன்சர்ப்பந் தன்னைக் கொன்றான்
அதுவுமே தோஷம் வந்து
அணுகிற்று வத்தோ ஷத்தால்
நிதியிலான் புத்திர ரில்லான்
நீங்குவ தற்கே சாந்தி
மதிநிகர் வதனத் தாளே
மங்கையே மேலுங் கேளே.

25. இதுவல்லாமல் இப்பிறவியிலும் இவன் ஒரு சர்ப்பத்தைக் கொன்றான். அதுவும் ஒரு தோஷமாயிற்று. அவ்விரு தோஷங்களால் செல்வமில்லாதவன். புத்திரதோஷம் ஏற்படும். அவ்விருதோஷங்கள் நீங்கச் சாந்தியொன்று கூறுகின்றேம். சந்திரனைப்போன்ற அழகிய முகத்தையுடைய தேவியே! மேலுங் கேட்பீராக.

சாந்தி

26. ஜாதக சுருதி தன்னில் சாற்றிய வைந்தாம் பாகம்
நீதியாய்ப் பார்க்கும் போது நேரிடும் பலன்கள் யாவுங்
கோதிலா சாந்தி தன்னைக் கூறுவீ ரென்று கேட்கத்
தீதிலாப் பராசர் தாமுஞ் செப்புவார் சாந்தி தானே.

26. ஜாதக நூலில் (ஜோதிட சாஸ்திரத்தில்) கூறப்பட்ட ஐந்தாம் பாகத்தால் பார்த்து அதற்குச் சாந்திகள் என்னவென்று தெரியும். சாந்தி செய்யும் விதத்தைக் கூறுங்கள் என்று கேட்க, தீங்குகளில்லாத பராசர முனிவர் சாந்தி செய்யும் விதத்தைக் கூறுகின்றார்.

சாந்தியின் விவரம்

27. வடதிசை நதியின் பக்கல் மைந்தனு மரசு வைத்துப்
படமுள நாகஞ் செய்தால் பாலர்கள் விருத்தி யாவர்
அடைவுடன் முதல்மா துக்கே வணுகாது குழவி தானுந்
திடமதா யிரண்டாந் தாரஞ் சந்ததி விருத்தி யாகும்.

27. வடக்குத் திசையிலுள்ள (கங்கை) நதிக்கரையில் அரச மரம் ஒன்றை வைத்து அதற்கடியில் படமெடுத்தாடும் சர்ப்பத்தைப் போல் சிலையில் ஓர் உருச்செய்து வைத்தால் புத்திர விருத்தி ஏற்படும். ஆனால் முதல் மனைவிக்குப் புத்திர பாக்கிய மேற்படாது. திண்ணமாக இரண்டாம் மனைவிக்குப் புத்திர விருத்தி யுண்டாகும்.

ஜாதகன் திருமணக்காலம்

28. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவே னிருபா லுலில்
நீதியாய் வடக்கி லுள்ளூர் நிருமித்த மாதைக் கொள்வன்
போதவே யிரண்டாந் தாரம் புகலுவே னுள்ளூர் தன்னில்
தீதிலா வடகீழ் தன்னில் செல்வியும் வருவா ளம்மா.

28. இனி ஜாதகனுடைய திருமணக் காலத்தைச் சொல்லுகின்றேம். அஃது அவனுடைய இருபத்துநான்காம் வயதில் நேரும். இவனுடைய ஊருக்கு வடக்கில் உள்ள ஊரிலிருக்கும் பெண்ணை மணப்பான். இரண்டாம் மனைவியின் விவரங்களைச் சொல்லுகின்றேம். இவனுடைய ஊரிலேயே வடகிழக்குப் பக்கத்திலிருந்து மனைவி வருவாள்.

29. செல்வியும் வந்த பின்புச் செல்வங்க ளதிக மோங்கும்
நல்லபுத் திரரு முண்டு நாடெல்லாங் கீர்த்தி யோங்கும்
அல்லலு மணுகி டாது வரசர்கள் இஷ்ட மாகும்
வல்லவ னாகி வாழ்வன் மாளிகை சுபிக்ஷ முண்டாம்.

29. இரண்டாம் மனைவி வந்த பிறகு செல்வம் பெருகும். புத்திர பாக்கிய மேற்படும். உலகெல்லாம் புகழ் பரவும். துன்பங்கள் ஏற்படா. அரசாங்கத்தாருடன் தொடர்பும் நன்மதிப்பும் ஏற்படும். பெரிய மனிதனாக வாழ்ந்து வருவான். வீடு லக்ஷ்மி கடாட்சம் பெற்றுச் சுகமடையும்.

மறுமணக்காலமும் புத்திரபாவமும்

30. மறுதாரங் காலந் தன்னை
வரைகிறே முப்பா லுலில்
திருவென மனைவி வாய்க்குஞ்
செல்விக்குப் புத்திரர் சொல்வேன்
பெருமையா யாண்பா லொன்று
பேசுவோங் கன்னி யிரண்டு
உரன்முறை தீர்க்க மாகும்
உத்தமி கேட்டி டாயே.

30. முப்பத்து நான்காம் வயதில் இரண்டாம் மனைவி வருவாள் என்று எழுதுகிறேம். அம்மனைவி இலக்குமியை யொத்த செல்வி அவளது புத்திரபாக்கியத்தைக் கூறுகின்றேம். ஒரு புத்திரனும்

இரு புத்திரிகளும் பிறப்பார்கள். சுற்றத்தார் அதிகமுள்ளவள். தாயே! கேளுங்கள்.

ஜாதகன் மரணகாலம்

31. இன்னவன் மரண கால மிசைகுவே னறுபா னுலில்
மன்னிய கன்னி மாதம் வளர்பிறை நவமி தன்னில்
இன்னவன் உடலம் வாடி யேகுவான் ஏமப திக்கு
உன்னத மறுஜன் மந்தான் உரைக்கிறேன் கேளு மம்மா.

31. ஜாதகனுடைய மரண காலத்தைச் சொல்லுகின்றோம். அறுபத்துநான்காம் வயதில் புரட்டாசி மாதத்தில் சுக்கிலபட்ச நவமி திதியில் மரண மடைவான். அவனுடைய மறுபிறவியைச் சொல்லுகின்றோம் கேட்பீராக.

வேறு

ஜாதகன் மறுபிறவி

32. காஞ்சிநா டதனில் தீர்த்தத்தின் கீழ்ப்பால்
கனமுள பிரம்மகோத் திரத்தில்
வாஞ்சையா யுதித்து தனமது பெற்று
வரசர்பால் தொழிலுமுண் டாகிக்
காஞ்சின மில்லா மனத்தனுய் வாழ்வன்
கடவுளைப் பூசையே செய்வன்
தாஞ்சையாய்ப் பின்பு பரகதி யடைவன்
தையலே கேட்டிடு வாயே.

32. காஞ்சிபுரத்தில் வேகவதி நதிக்குக் கிழக்கிலுள்ள இடத்தில் புகழ்பெற்றதொரு அந்தணர் குடியில் பிறந்து செல்வத்தை யடைந்து அரசாங்கத் தொழிலைப்பெற்று தியமனமில்லாமல் வாழ்ந்து வருவான். தெய்வத்தை நன்கு பூஜைகள் புரிந்து வருவான். இறுதியில் பரகதி யடைவான். தாயே! கேளுங்கள்.

தாய், தந்தை, மனைவியரின் மரணகாலம்

33. தாரங்கள் தமக்கு நிரியாண காலஞ்
சாற்றுவேன் ஜாதகன் பின்னுல்
தீரமாய் மரண மாகும் முந்தி
செல்லாது வன்னையின் காலஞ்
சேரயே ழாண்டில் துஞ்சிடு மதன்மேல்
செப்புவேன் தந்தையின் காலங்
கோரவே மூப்பான் மூன்றிலரிட்டங்
கொண்டிடு மம்மையே கேளாய்.

33. ஜாதகனுடைய மனைவிகளின் மரணகாலங்களைச் சொல்லுகின்றேம். அவை ஜாதகனுக்குப் பிறகு நேரிடும். அவர்கள் இவனுக்கு முன்னால் மரணமடைய மாட்டார்கள். தாயின் மரண காலத்தைச் சொல்லுகின்றேம். ஏழாம் வயதில் தாய் மரணமடைவாள். அதற்குப் பிறகு தந்தை முப்பத்துமூன்றும் வயதில் இறந்து விடுவான். தாயே! கேளுங்கள்.

தொழில்

வேறு

34. ஜீவன மிவனுக் கேதான் செப்புவேன் அர்சர் பக்கல்
கோவென அதிகா ரங்கள் கொண்டவன் ஜீவிப் பானுந்
தாவிய கிராமச் செட்டு ஜாதகன் செய்வா னம்மா
பூமியும் விருத்தி செய்வன் புகன்றனம் ரிஷிக ளம்மா.

34. அரசாங்கத்தில் ஜாதகனுக்கு ஜீவனம் ஏற்படும். அதிகாரங்களுள்ள பதவியை வகித்து ஜீவித்து வருவான். ஜாதகன் கிராமாதிகாரியாக வாழ்ந்து வருவான். பூமியைப் பெருக்குவான். இவ்விதம் ரிஷிகளாகிய நாங்கள் பலன்களைச் சொன்னேம். தாயே!

ஜாதகம் 83

1. [1]கலைவிருச் சிகத்தி லாகக் [2]காரியும் [3]பெண்ணில் தங்கத்
[4]துலையினில் கேது நிற்க [5]மங்கலன் [6]புந்தி [7]பானும்
மலை[8]புகர் கடக மாக [9]மன்ன னும் ரிடப மாக
நிலை[10]கருங் கோளு மேடம் நிகர்ஜன்மஞ் சிம்ம மாக ;

1. சந்திரன் விருச்சிகத்திலும், சனி கன்னியிலும், கேது துலாத்திலும், அங்காரகன் புதன், சூரியன் சுக்கிரன் கடகத்திலும், குரு ரிஷபத்திலும், இராகு மேஷத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் சிம்ம மாஞல்.

கிரகநிலை

	ராகு	குரு	
	இராசி சக்கரம்		செவ்வாய் புதன் சூரியன் சுக்கிரன்
			லக்கினம்
	சந்திரன்	கேது	சனி

அனுஷம் 1-ஆம் பாதம். சனி தசை இருப்பு ஷ 18-7-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் இராகுவும், மிதுனத்தில் சனியும், கன்னியில் சூரியனும், துலாத்தில் கேதுவும், விருச்சிகத்தில் புதனும், மகரத்தில் அங்காரகனும், கும்பத்தில் குருவும், மீனத்தில் சுக்கிரனும் ஆகும்.

ஜாதகர் பிறந்த நகரச் சிறப்பு

2. இப்படிக் கிரகம் நின்றூல்
இதுபலன் சொல்வீ ரென்று
ஓப்புட னுமையாள் கேட்க
உரைக்கிறூர் முனிவர் தாமும்

---

1. கலை - சந்திரன்
2. காரி - சனி
3. பெண் - கன்னி
4. துலை - துலாம்
5. மங்கலன் - அங்காரகன் - செவ்வாய்
6. புந்தி - புதன்
7. பானு - சூரியன்
8. புகர் - சுக்கிரன்
9. மன்னன் - குரு
10. கருங்கோள் - ராகு

செப்புவோ மாண்பால் ஜன்மஞ்
ஜனித்தயில் கீழ்மேல் வீதி
மெய்ப்புடன் தெற்குப் பார்வை
விளம்புவோம் எதிர்வீ டில்லை.

2. இவ்விதமாகக் கிரகங்கள் இருக்குமானால் இந்த ஜாதகத்தினுடைய பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதி அம்மையார் கேட்கும்போது அகஸ்திய மகா முனிவர் சொல்லுகின்றார். இக்கிரக நிலையுள்ள ஜாதகத்திற்கு ஆண்குழந்தை ஜனனமாகும். அது பிறந்த வீடு கிழக்கு மேற்கு வீதியில் தெற்குப் பார்த்த வீடாகவிருக்கும் என்று சொல்லுகிறோம். எதிர்ப்பக்கத்தில் வீடுகளில்லை.

பிறந்த வீட்டின் நிலை

3. மூத்தவன் மேற்கில் வாச முயலுவோஞ் சிற்றூர் தன்னில்
தீர்க்கமாம் வயது பெற்று ஜனித்தவன் மூன்றஞ் ஜன்மம்
ஆர்க்கவே பலன்க ளெல்லா மறைகிறே மிந்நூல் தன்னில்
ஏர்க்கவே முன்பின் ஜன்ம மியம்புவோங் கேளு மாதே.

3. மூத்தவராகிய விநாயகக் கடவுளின் கோயில் மேற்குப் பக்கமாக விருக்கும். இவ்விதம் அடையாளங்களுள்ள ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் நீண்ட ஆயுளை உடையவராகவும் தன் தந்தைக்கு மூன்றுவது பிறவியாகவும் ஜனனமாவார். இவருடைய எல்லாப் பலன்களையும் நாங்கள் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம். மேலும் இவருடைய முன் ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றியும் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! நீங்கள் கேட்பீராக.

ஜாதகனுடைய தகப்பனரின் உடன்பிறந்தவர் விஷயம்

4. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மாண்பால் [மூன்று
வந்திடுங் கன்னி யொன்று வகையுடன் தீர்க்க மாக
எந்தையே யிதன்மேல் தோன்றி லிலகாது நஷ்ட மாகுஞ்
சந்தத மிவன் குணத்தைச் சாற்றுவோங் கேளு மாதே.

4. ஜாதகருடைய தகப்பனருடன் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் பிறப்பர். அவர்கள் நல்ல அந்தஸ்துடையவர்களாகவும் நீண்ட ஆயுளை உடையவர்களாகவும் இருப்பார்கள். இதற்கு அதிகமாகச் சகோதரர்கள் பிறந்தாலும் உயிருடன் இருக்காமல் இறந்து விடுவார்கள். இனிமேல் ஜாதகரின் தகப்பனருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

தந்தையின் குணங்கள்

5. சிவந்திடு மேனி யாவன்
தேகமு மொடிச்ச லுள்ளான்
நவமதில் கல்வி யற்பம்
நாட்டுவோ மூக சாலி
அவனிபால் பொய்கள் சொல்லான்
ஆவுகள் விருத்தி யுள்ளான்
எவரையும் நேசங் கொள்வன்
எப்போதுங் கிருஷியே செய்வன்.

5. ஜாதகருடைய தகப்பனுர் சிகப்பு நிறமுள்ள தேகத்தை யுடையவராவர். இவருடைய தேகம் ஒல்லியாக விருக்கும். சிறிதே கல்வி யறிவுடையவர் என்று சொல்லுகின்றோம். இவர் புத்திசாலியானவர். பூமியில் இவர் பொய் பேசமாட்டார். இவருக்குப் பசுக்கள் விருத்தியாகும். இவர் எல்லோரிடத்திலுஞ் சிநேகஞ் செய்து கொள்ளுவார். எந்தக் காலத்திலும் இவர் விவசாயத் தொழிலையே செய்து வருவார்.

இதுவுமது

6. தைரிய மனத்த னுகுந் தாட்சிண்யன் கனவா னுகும்
நயமாக வார்த்தை சொல்வன் நற்சுகப் புசிப்ப னுகும்
அயலார்பொன் னிச்சை யில்லா னவன் தெய்வ பத்தி
[மானுங்
கயவரை நேசங் கொள்ளான் காரியச் சமர்த்த னுகும்.

6. ஜாதகருடைய தகப்பனுர் தைரியமான மனத்தை உடையராவர். தயாள குணமுடையவர். பணக்காரராக விருப்பர். ஜாதகரின் தகப்பனுர் இனிமையாகப் பேசுபவர். நன்றுகச் சாப்பிடுவதில் விருப்பமுள்ளவர். பிறருடைய சொத்துக்களின் மேல் ஆசையில்லாதவர். இவர் தெய்வத்தினிடம் பக்தியும் விசுவாசமும் உடையவராவர். கீழ்மக்களுடன் சிநேகஞ் செய்துகொள்ளமாட்டார். இவர் தான் எடுத்தக் காரியங்களைச் செய்துமுடிக்குஞ் சாமர்த்தியம் உள்ளவராவார்.

இதுவுமது

7. பித்தநோ யுடைய னுவன் பிறர்மெச்ச வாழ்வா னுகும்
உத்தம குணத்த னுகு முறுதி யில்லா மனத்தான்
நித்திய நெய்பா லிஷ்டன் நிலத்தின்மேல் பிரிய னுவன்
சத்தியம் தப்பா னுகுஞ் சாற்றுவோங் கேளு மம்மா.

7. ஜாதகருடைய தகப்பனுர் பித்த சம்மந்தமான ரோகத்தை யுடையவராவர். அயலார் இவரைப் புகழ்ந்து பேசும்படி இவர்

வாழ்பவராவர்; இவர் மேன்மையான குணங்களை யுடையவர். இவர் திடமான மனத்தை யுடையவரல்லர். தினந்தோறும் நெய் பால் இவைகளைச் சாப்பிடுவதில் பிரியமுள்ளவர். வீண புலங்களின் மேல் ஆசையுடையவராக விருப்பார். சொல்லிய வார்த்தைகளைத் தவறுமல் காப்பாற்றுபவராவர் என்று சொல்லுகின்றோம். பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய குணநிசயங்கள் முதலியன

8. இப்படி யிருக்குந் தந்தை யிவனுக்கு வுதித்த பாலன்
செப்புவோம் பலன்கள் யாவுந் தீரமா மனத்த ளுகும்
ஒப்புடன் கல்வி கொஞ்சம் ஊரெல்லாங் கீர்த்தி யேற்பன்
மைப்படி பெண்கள் மோகன் மன்னவர் பேட்டி செய்வன்

8. இதுவரையிலும் மேலே சொல்லப்பட்ட குண குணங்களை யுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இனிமேல் இவருடைய பலாபலன்களைச் சொல்லுகின்றோம். ஜாதகர் தைரியமான மனதை யுடையவராவர். இவருக்கு வித்தை கொஞ்சமாக விருக்கும். இவர் எல்லாக் கிராமங்களிலும் எவ்விடத்திலும் புகழும் பெருமையும் உடைய வராவர். இவர் பெண்களின் மேல் மையல் கொள்ளுபவராவர். இவர் அரசர்களுடைய தரிசனத்தை அடையக் கூடியவராவர்.

9. கணக்கினி லுக வானுங்
காலிகள் விருத்தி யுள்ளான்
பிணக்குகள் செய்யா ளுகும்
பேச்சுக்கள் தவறு னென்றோம்
இணக்கங்க ளுடைய னுவன்
யாரையும் வசியங் கொள்வன்
இணக்கமில் லாத நெஞ்சன்
மருமத்தை யதிகஞ் சொல்வன்.

9. ஜாதகர் கணக்குகளைப் போடுவதில் அதிக விவேகியாய் இருப் பார். இவருக்குக் கால் நடைகளும் பசுக்கூட்டங்களும் விருத்தியாகும். இவர் சண்டை சச்சரவுகள் போடமாட்டார். இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறுமல் காப்பாற்றுவார் என்று சொல்லுகின்றோம். இவர் ஒற்றுமை, தைய தாட்சிண்யம் இவைகளை உடையவராக விருப் பார். இவர் எல்லோரையும் தன்பக்கமாகக் கைவசம் செய்து கொள்ளு வார். இவர் அஞ்சாத மனதை யுடையவராவர். இவர் ரகசியமான வார்த்தைகளை அதிகமாகச் சொல்லுவார்.

10. பூமியு மதிகஞ் சேர்ப்பன் புத்திர விருத்தி யுள்ளான்
சேமமாங் குடும்ப முள்ளான் சித்திர வீடு செய்வன்
காமனை யொத்த தேகன் கனத்தவர் நேசங் கொள்வன்
நேமியோர்க் குதவி செய்வன் நிதானமாய் வாழ்வா
[னென்றோரும்.

10. ஜாதகர் அதிகமான நிலங்களைச் சேகரிப்பார். இவர் சந்தான விருத்தியுடைவவராவர். இவர் சௌக்கியமான நல்ல குடும்பத்தை யுடையவராவர். அழகான வீட்டைக் கட்டுவார். இவர் மன்மதனுக்குச் சமமான அழகான தேகத்தையுடையவர். பெரிய மனிதர்களுடைய சிநேகத்தை அடையக் கூடியவர். உலகிலுள்ளவர்களுக்கு உபகாரஞ் செய்வார். இவர் நிதானமான ஒரு சமஸ்கிலியிலிருந்து வாழ்வார் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு: ஜன்ம லக்கினத்திற்கும் சந்திர லக்கினத்திற்கும் புத்திர ஸ்தானாதிபதியும் புத்திரகாரகருமாகிய குரு கேந்திரத்திலிருப்பதால் புத்திரவிருத்தியைச் சொல்லியிருக்கின்றார். தர்ம கர்மாதிபதிகளான அங்காரகனும் சுக்கிரனும் தன லாபாதியான புதனும் லக்கினாதிபதியான சூரியனும் சம்பந்தப்பட்டிருப்பதாலும் ஐந்திற்குடைய குரு பத்தில் கேசரியோகத்துடன் இருப்பதாலும் இந்த நல்ல பலன்களை இந்தச் செய்யுளில் சொல்லி இருக்கின்றார். சந்திரனுக்கு ஏழில் குரு இருப்பது கேசரியோகம் என்று சொல்லப்படும். சுப ஆதிபத்தியங்களை யடைந்த சூரியனும் புதனும் சுக்கிரனும் கூடியிருப்பது தமிழ் ஜாதக சிந்தாமணி 20, 29-ஆவது பாடல் பிரகாரம் சாமரையோகம் என்று சொல்லப்படும்.

11. பகைவரை ஜயிக்க வல்லான் பந்துவு மெச்ச வாழ்வன்
தகமையாய்த் தந்தை யாஸ்தி தந்தையு நாஸ்தி செய்வன்
வகையுடன் சுயார்ஜி தங்கள் மன்னனுந் தேடு வானும்
பாகமா யன்பு கூறுவ னிவன்பல பெண்கள் மோகன்

11. ஜாதகர் தன்னுடைய எதிரிகளை ஜெயிக்குஞ் சாமர்த்திய முடையவராவர். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னைப் புகழும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவருடைய முன்னோர்களுடைய, தகப்பனாருடையதுமான ஆஸ்திகளை இவருடைய தகப்பனாரே அழித்து விடுவார். இவர் சுயார்ஜிதமான சொத்துக்களைச் சேகரிப்பார். இவர் பக்குவமாக நல்ல அன்புள்ள வார்த்தைகளையே சொல்லுவார். இவர் அநேக ஸ்திரிகளிடத்தில் காம ஆசை உடையவராவர்.

குறிப்பு: ஜன்ம லக்கினத்திற்கு அதிபதியான சூரியனும் காம காரனாகிய சுக்கிரனும் கூடி இருக்கின்றார்கள். மேலும் ஜன்ம லக்கினத்திற்கு ஏழிற்குடைய சனி இரண்டில் இருக்கின்றார். ஆகையால் ஜாத

கர் அநேக ஸ்திரீகளிடத்தில் காம ஆசை உடையவர் என்று சொல்லி யிருக்கின்றார். தமிழ் ஜாதக சிந்தாமணி 1040-ஆவது பாடலைப் பார்க்கவும்.

12. முகமதில் வடிவு முள்ளான் மூலரோ யுடைய னுவன்
வகையுடன் பெருமை யுள்ளான் வண்டிவா கனமு
[மூள்ளான்
பகைவர்க ளில்லா னுகும் பாரெல்லாங் கீர்த்தி யேற்பன்
அகமதில் திருவுஞ் சேரு மறைகிறே மேலுங் கேளே.

12. ஜாதகர் தன்னுடைய முகத்தில் அழகு உடையவராவர். இவர் மூலரோகமும் உடையவராவர். இவர் நல்ல பெருமையை யுடையவராவர், வண்டியையும் வாகனங்களையும் உடையவராவர். இவருக்குச் சத்துருக்கள் இருக்கமாட்டார்கள். இவர் பூமி முழுவதிலும் பெருமை புகழ்களை உடையவராவர். இவருடைய வீட்டில் செல்வம் வந்து சேரும். இன்னம் அதிகமாகச் சொல்லுகின்றோம். கேட்பீராக.

குறிப்பு :—ஜன்ம லக்கினாதிபதியாகிய சூரியனும் புதனும் அங்காரகனும் கூடிப் பன்னிரண்டாவது பாவத்தில் இருப்பதால் மஹ தேவரால் செய்யப்பட்ட சமஸ்கிருத "ஜாதக தத்வம்" என்ற புத்தகத்தில் பிரகீர்ணதத்வம், சஷ்ட விவேகா, அறுபத்தினன்காவது சுலோகத்தில் சொல்லியுள்ள பிரகாரம் ஜாதகருக்கு மூலரோகம் உண்டாம்.

ஜாதகருடைய சகோதர விஷயம்

13. இன்னவன் துணைவர் தம்மை யிசைகிறே மாண்பா
[லொன்று
கன்னியு மிரண்ட தாகுங் கழறினேங் தீர்க்க மாக
பின்னமா மற்ற வெல்லா பலக்காவே துன்ப மாகும்
அன்னமே யாங்கள் சொல்லு மடைமொழி குன்றி டாவே.

13. ஜாதகருடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு ஓர் சகோதரனும் இரண்டு சகோதரிகளும் தோன்றி நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். மற்ற சகோதரர்கள் எல்லாம் வலுவில்லாமல் பின்னப்பட்டுப் போய் நாசத்தை அடைந்து விடுவார்கள். அன்னத்தைப்போல அழகுடைய பார்வதியம்மையே! தேவதைகளுக்குப் படைப்பதுபோல உம்முன் நாங்கள் சொல்லுகின்ற வார்த்தைகள் தவறிடாமல் பலிக்கும்.

ஜாதகருடைய தாயார் விஷயம்

14. மாதுரு குணத்தை யாங்கள் வறைகிறே சிவந்த மேனி
மேதினில் வாயு தேகி வித்தகி யூக முள்ளாள்
கோதிலா வதிர்ஷ்ட முள்ளாள் கூறுமுன் கோபங்
[கொஞ்சந்
தீதிலா குணத்த ளாகுஞ் செப்புநன் னடக்கை யுள்ளாள்.

14. ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்களைப் பற்றி நாங்கள் சொல்லுகிறோம். தாயார் சிவப்பு நிறமான தேகத்தையுடையவளாவள். இவள் வாயுவுள்ள தேகத்தை உடையவள். செல்வவதியான இவள் நல்ல சூட்சமமான புத்தியையுடையவள். இவள் குற்றமில்லாத நல்ல அதிர்ஷ்டத்தை யுடையவள். இவள் பேசுவதற்கு முன்னமே கொஞ்சம் கோபத்தை யுடையவளாவள். இவள் குற்றமில்லாத நல்ல குணங்களை யுடையவளாவள். புகழப்பட்ட நல்ல நடவடிக்கையை இவள் உடைய வளாவள்.

15. இவளுடைத் துணைவர் தம்மை
யியம்புவோ மாண்பால் நான்கு
நவனியில் பெண்பால் மூன்று
நாட்டுவோ மிவளுக் கேதான்
அவர்களு மீன திக்கில்
அநேகமாங் குடும்ப முள்ளார்
சிவனுடைப் பாகத் தாளே
செல்வியே மேலுங் கேளே.

15. ஜாதகரின் தாயாருடன் கூடப்பிறந்த சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவளுக்கு நான்கு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவர்கள் வடக்குத் திக்கில் பெரிய குடும்பத்தை யுடையவர்கள் என்று சொல்லுகின்றோம். பரம்சிவனுடைய பாதிபாகத்தை அடைந்த செல்வவதியாகிய பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் சொல்லப் போவதைக் கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜென்மம்

16. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம்
[தொண்டை நாட்டில்
பந்தமாய்ப் பேரூர் தன்னில் பாலகன் சைவ னாக
வந்துமே மனவி மைந்தர் வளமுள பூமி யுண்டாய்க்
கந்தனைப் பூசை செய்து காளையும் வாழு நாளில்;

16. ஜாதகரின் தகப்பனாருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தொண்டை நாட்டில் ஒரு பெரிய கிராமத்தில் சைவகுலத்திற் பிறந்து மானவி மக்களையும் நன்முக விளங்கின்ற நிலங்களையும் உடையவராகி ஆறுமுகக் கடவுளைப் பூஜைசெய்து கொண்டு வாழுகின்ற காலத்தில்;

17. அடியார்க்கு வன்ன மீந்து யரிபஜ னைகள் செய்து
குறைவில்லா வாழு நாளில் கூறுவோ மூழி தானே
படிதனி லனந்தம் பேரைப் பாலகன் போகந் துய்த்துக்
கடிவுடன் ஸ்தான மின்றிக் காளையு மேது செய்தான்.

17. ஜாதகருடைய தகப்பனார் பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டும் வைஷ்ணவ பஜனைகளைச் செய்துகொண்டும் யாதொரு கஷ்டங்களும் இல்லாமல் க்ஷேமமாய் வாழ்ந்துகொண்டிருக்கின்ற காலத்திலே இவருக்கு வந்து சம்பவித்த இதற்கு முன் ஜன்மத்திய விஷயைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் பூமியில் அநேக ஸ்திரீகளிடத்தில் போகஞ் செய்துவிட்டுத் தன்னுடைய தேகத்தை அழகுசெய்து கொள்ள அஃதாவது ஸ்நானஞ் பரிசுத்தஞ் செய்துகொள்ளத் தகுந்த இடம் கிடைக்காததால் என்ன செய்தார் என்றால்;

18. பஜனைகள் செய்ய வேண்டிப் பரிந்துமே சென்ற னப்போ
நயமுட னந்தத் தோஷ நல்கியே இச்சென் மத்தில்
கயவர்க ளுதவி செய்து கௌரிதன் குலத்தில் வந்தான்
ஜயமுனி யிதனைக் கேட்டுத் திடுக்கென வார்த்தை
[சொல்வார்.

18. ஜாதகருடைய தகப்பனார் பஜனைகளைச் செய்வதற்காகத் தன்னுடைய தேகத்தைச் சுத்தி செய்து கொள்ளாமல் அவசரமாகப் பஜனை மடத்திற்குப் போனார். ஆகையால் இந்தத் தோஷம் இவரை இந்த ஜன்மத்தில் வந்து அணுகியது இவர் முன் ஜன்மத்தில் கீழ் மக்களுடைய உதவியை அடைந்து பிறகு இறந்து இந்த ஜன்மத்தில் கௌரிகுலம் என்ற வேளாளர் குலத்தில் வந்து பிறந்தார். இந்த விஷயத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ஜயமுனி என்பவர் திடுக்கிட்டு அச்சமடைந்து பின்வருமாறு கேட்க ஆரம்பித்தார்.

19. முன்ஜன்மஞ் சைவ னுயுங் முன்னோனைப் பூசை செய்துங்
கந்தன்மேல் பிரிய னுயுங் கனத்திடு மடியா ருக்கு
அன்னங் களீந்து வந்து அப்படி யிருந்த ஜன்மம்
இன்னவ னிக் குலத்தில் இசைந்த காரணத்தைச்
[சொல்வீர்.

19. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய முன் ஜன்மத்தில் சைவ சமயத்திற் பிறந்து விநாயகக் கடவுளைப் பூஜை செய்துகொண்டு ஆறுமுகக் கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உடையவராகி, மேன்மை தங்கிய அடியார்களுக்குச் சாப்பாடுபோட்டு இவ்விதமாக வாழ்ந்து கொண்டு வந்தவருக்கு இந்த ஜென்மத்தில் இவ்விதமான குலத்தில் ஜனனம் நேரிடுவதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்டார்.

20. ஐயமுனி கேட்கும் போது செப்புவார் புசண்டர் தாமும்
நயமுள போக மது நாயகன் நிதான மின்றி
வியமுட னலயத்தில் மேவின காரணத்தால்
தயையுட னிக்கு லத்தில் சார்ந்தன னிவளே யையா.

20. இவ்விதமாக ஜெயமுனிவர் கேட்டபோது புஜண்ட மகாரிஷி பதில் சொல்லுகின்றார். ஜாதகருடைய தகப்பனார் தனக்கு இன்பத்தைத் தரக்கூடிய சம்போகத்தைத் தாமதிக்காமல் அவசரப்பட்டுப் பெருமையுடன் அதாவது தைரியத்துடன் கோவிலிலேயே செய்து கொண்டு வந்த காரணத்தினால் இவர் இந்த ஜன்மத்தில் இந்தக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம், முனிவரே!

ஜாதகரின் தகப்பனாருடைய பின்ஜென்மம்

21. இவனுடை பின்சென் மத்தை
யியம்புவோ மதுரை தன்னில்
அவனியில் சைவ னுகப்
பூஜைக ளதிகஞ் செய்து
நவமதில் பூமி யாலும்
நாடெல்லாஞ் செட்டு செய்தும்
அவனுமே வாழ்வா னென்றோம்
அம்மையே மேலுங் கேளே.

21. ஜாதகரின் தகப்பனாருடைய பின் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் மதுரைமா நகரத்தில் சைவ குலத்தில் பிறந்து அநேக பூஜைகளைச் செய்து, நல்ல விளைபுலங்களை வைத்துக் கொண்டு அவைகளின் உதவியால் பல விடங்களில் வியாபாரஞ் செய்து கொண்டு வாழ்ந்து கொண்டிருப்பார் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் சொல்லப்போவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய விவாகம்

22. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோம் ஒருபா னுறில்
மாதிவள் வடகீழ் தன்னில் மாதுரு வர்க்கந் தன்னில்
கோதிலா யுதித்த மாதைக் குணமுடன் மணமே செய்து
நீதியா யவர்க்குப் புத்திரர் நிகழ்த்துவோங் கேளு மம்மா.

22. ஜாதகருக்கு விவாகம் நடக்கக்கூடிய காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பதினேழாவது வயதில் இவர் தன்னுடைய தாயார் வர்க்கத்தில் வடகிழக்குத் திக்கில் பிறந்த ஒரு குற்றமும் தோஷமுமில்லாத நல்லகுணங்களையுடைய ஒரு பெண்ணை நல்லபடியே விவாகஞ் செய்து கொள்ளுவார். இவர்களுக்குப் பிறக்கும் சந்தானத்தைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு: விவாக விஷயம்:—இவருக்கு வயது ஹ 15—0—0 முதல் 16—0—0 வரையிலும் சனி தசையில் இராகு புக்தி நடக்கின்றது. ஜன்ம லக்கினத்திற்குக் களத்திரஸ்தானமாகிய கும்பராசிக்குடைய சனி இரண்டாமிடமான குடும்பஸ்தானத்தில் இருக்கின்றார். இவர் போகஸ்தானமாகிய நான்காவது பாவமாகிய விருச்சிகத்தைப் பார்க்கின்றார். ஆகையால் சனிக்குத் தன் தசையில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்கும் அமைப்பு இருக்கின்றது. மேலும் ராகு நான்கு ஒன்பதாவது வாதிபயாகிய அங்காரகன் வீட்டில் இருந்துகொண்டு ஏழாவது பாவத்தைப் பார்க்கின்றார். இராகு போககாரகர். ஆகையால் ஜாதக பாரிஜாதம் பதினன்காவது அத்தியாயம் 29-ஆவது சுலோகம் ஜாதக சந்திரிகை பன்னிரண்டாவது சுலோகம் ஆகிய இவைகளின் பிரகாரம் விவாகம் ஜாதகருக்கு செய்துவைக்க இராகுவிற்கு அமைப்பு இருக்கின்றது. சாமி என்ற லக்கினாதிபதியாகிய சூரியனும் பத்திற்குடைய சுக்கிரனும் இரண்டிற்குடைய புதனும் நான்கிற்குடைய அங்காரகனும் கூடியிருப்பதால் தமிழ் ஜாதக சிந்தாமணி தொள்ளாயிரத்து எழுபத்துநான்காவது பாடல் பிரகாரம் ஜாதகருக்கு வாலிபத்தில் விவாகம் நடக்கும் அமைப்பு அதிகமாக விருக்கின்றது. விவாக காலத்தைப்பற்றி ஜாதக பாரிஜாதம் பதினன்காவது அத்தியாயம் முப்பதாவது சுலோகத்தையும் பார்க்கவும்.

ஜாதகருடைய புத்திரபாவம்

23. இன்னவன் தனக்குப் புத்திர
ரியம்புவோ மாண்பா லிரண்டு
கன்னிகை நால்வ ராகுங்
கனத்திடுந் தீர்க்க மாக
அன்னமே யிதன்பின் தோன்றில்
அரிட்டமா மதலை தானுந்
தன்னிலே யிவன்முன் ஜன்மஞ்
சாற்றுவோங் கேளு மம்மா.

23. ஜாதகருக்குப் பிறக்கும் சந்ததிகளைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இரண்டு ஆண்குழந்தைகளும் நான்கு பெண் குழந்தை

களும் பிறந்து நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். பார்வதியம்மையே! இதற்கு அதிகமாகக் குழந்தைகள் பிறந்தால் இக்குழந்தைகள் இறந்துவிடுவார்கள். இனிமேல் ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். பார்வதியம்மையே!

குறிப்பு: ஜன்ம லக்கினத்திற்கும் சந்திர லக்கினத்திற்கும் ஐந்திற்குடையவரான குரு பெண் ராசியாகிய ரிஷபத்தில் இருந்து கொண்டு பெண் கிரகமாகிய சந்திரனுல் பார்க்கப்பட்டிருக்கின்றார். ஜன்ம லக்கினத்திற்கு ஐந்தைக் கேதுவும், சந்திர லக்கினத்திற்கு ஐந்தைச் சனியும் பார்க்கின்றார்கள். ஆகையால் பெண்கள் அதிகம் என்றும் சில குழந்தைகள் இறந்து விடும் என்றும் சொல்லியிருக்கின்றது.

ஜாதகருடைய முன் ஜன்மம்

24. பேரூரில் மறையோ னுக விளைபுல மதிகம் பெற்று
ஊரெல்லாங் கீர்த்தி யாகி யுயர்ந்ததோர் செட்டுச் செய்து
பாரினில் மனைவி மைந்தர் பண்புடன் வாழ்ந்து பின்பு
வேரொரு தீங்கில் லாமல் வித்தகன் மரண மானான்.

24. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் ஒரு பெரிய ஊரில் பிராமணராகப் பிறந்து, நன்மை விளையக்கூடிய நிலகங்களை அதிகமாக வுடையவராகித், தன் ஊரில் எவ்விடத்திலும் புகழும் பெருமையும் உடையவராகி, மேன்மையான ஒரு பெரிய வியாபாரத்தைச் செய்து கொண்டு, பூமியில் மனைவி, மக்கள், இவர்களை உடையவராகி மேன்மையுடன் வாழ்ந்து, பிறகு யாதொரு தோஷங்களும் இல்லாமல் இவர் இறந்துவிட்டார்.

25. உதித்தவ னிவனே யம்மா வுயர்முனி சொல்லும் போது
சதியில்லா புஜண்டர் தாமுஞ் சாற்றுவார் கோப மாக
வதிபனு முன்ஜன் மத்தில் மறையவர் குல முதித்து
விதியினு லிச்சென் மத்தில் மேவுமிக் குலத்தில் வந்த;

25. ஜாதகர் பிறகு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். பார்வதியம்மையே! இவ்விதமாக ரிஷி சிரேஷ்டர் சொல்லிவந்ததைக் குற்றமில்லாத புஜண்ட மகாரிஷியானவர் கேட்டுக் கோபமாகச் சொல்லுவார். ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறந்திருந்தும் இந்த ஜன்மத்தில் இந்த வேளாளர் குலத்திற் பிறந்ததற்கு;

26. காரணந் தன்னை நீருங் கழறுவீ ரென்று சொன்னேங்
தீரமாய் முனிவர் சொல்வார் சேயனு முன்சென் மத்தில்
பாரிய மறைகள் தன்னைப் பகராம லிருந்த தாலே
கூறுவோ மிச்சென் மத்தில் குலவுவான் கௌரி வம்சம்.

26. என்ன காரணம் அதனை நீர் சொல்லுவீரென்று கேட்கின்றோம். இதற்கு அகஸ்திய மகா முனிவர் தைரியமாகப் பதில் சொல்லுகின்றார். ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் அரிய பெரிய வேதங்களைச் சொல்லாமல் இருந்ததால் இந்த ஜன்மத்தில் தாழ்ந்த குலமாகிய வேளாளர் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய பின் ஜன்மம்

27. பிறப்பனு மிவனே யம்மா பின்ஜன்மம் வேங்க டத்தில்
சிறப்புடன் சத்திரி யனுகச் சேயனு முதித்து மேலும்
நிறப்பான பூமி யுண்டாய் நிகரில்லாச் சேனை பெற்று
இருப்பனே யிவனே யென்றே மின்னமும் மேலும்
[கேளே.

27. ஜாதகர் இவ்விதமாக இந்த ஜன்மத்தில் பிறந்தார் என்று சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் வேங்கடம் என்று சொல்லப்பட்ட திருப்பதி ஸ்தலத்தில் மேன்மையுடன் ஒரு க்ஷத்திரியராகப் பிறந்து, வளமான நிலங்களையுடையவராகியும், சமானமும் இணையும் இல்லாத சேனையை யுடையவராகியும் இருந்து வாழ்வார் என்று சொல்லுகின்றோம் நாங்கள் இன்னும் அதிகமாகச் சொல்லப்போவதைக் கேட்பீராக.

தாய்தந்தையர் கர்மம்—தன் மரணம்

28. இவனுடைத் தந்தை காலமியம்புவோ மூப்பா னேழில்
அவனியில் மாதுர் காலமரைகிறே மதின்மே லாறும்
நவமதி லிவனின் காலம் நாட்டுவோம் எழுபா னிரண்டில்
அவனியில் ஆனி மாதம் அஷ்டமி பூர்வ பக்ஷம்;

28. ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்து விடுவார் என்று சொல்லுகின்றோம். இதற்குமேல் ஆறு வருஷம் கழித்து இவருடைய தாயார் இறந்து விடுவார் என்று சொல்லுகின்றோம். இவருடைய மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். இவர் தனது எழுபத்திரண்டாவது வயதில் ஆனி மாதத்தில் வளர் பிறை அஷ்டமியில்;

குறிப்பு: தந்தை மாரக விஷயம்: (1) ஜாதகருக்கு வயது 36-0-0 முதல் 37-0-0 வரையிலும் கேது தசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது.

ஜாதகரின் பிதாவினுடைய லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். மேஷ லக்கினத்திற்குப் பராசரஹோரை, ஜாதக சந்திரிகை நாற்பத்திமூன்று, நாற்பத்திஞன்காவது சுலோகங்கள் பிரகாரம் சுக்கிரன், புதன், சனி இவர்கள் மாரகராகின்ருர்கள். மேஷத்திற்கு மாரகஸ்தானமாகிய ஏழாவது பாவத்தில் கேது இருக்கின்ருர். ஆகையால் ஜாதக சந்திரிகை இருபத்து மூன்ருவது, பன்னிரண்டாவது சுலோகங்களின் பிரகாரம் கேது பிதாவிற்குத் தனது தசையில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்ருர். மேலும் மேஷத்திற்கு லக்கின அஷ்டமாதிபதி யாகிய அங்காரகனுடன் சுக்கிரன் கூடி இருக்கின்ருர். ஆகையால் சுக்கிரனைப்பற்றி மேற்சொல்லிய ஜாதக சந்திரிகையின் சுலோகங்களின் பிரகாரமும் தமிழ் துய்ய கேரளம் எட்டாம் பாவம் இருபதாவது பாடல், கார்க்கேய நாடி 12000 என்ற கார்க்கேய ஜோதிடம் முதற்காண்டம் அறுநூற்றெண்பதாவது பாடல் பிரகாரமும் சுக்கிரனுக்குத் தன்னுடைய புக்தியில் பிதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு இருக்கின்றது.

(2) **தாய்மாரக விஷயம்:** ஜாதகருக்கு வயது ஹ 42-0-0 முதல் ஹ 43-0-0 வரையிலும் கேது தசையில் புதபுக்தியும் சுக்கிர தசையில் சுக்கிர புக்தியும் நடக்கின்றன. மாதுரு லக்கினம் நான்காவது பாவமாகிய விருச்சிகம் ஆகும். விருச்சிக லக்கினத்திற்குப் பராசரஹோரை, ஜாதக சந்திரிகை ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் சுக்கிரன் புதன் அங்காரகன் இவர்கள் மாரகராகின்ருர்கள். சுக்கிரன் விருச்சிகத்திற்கு மாரகஸ்தானமாகிய ஏழிற்குடையவராகி லக்கினாதிபதியாகிய அங்காரகனுடனும் அஷ்டமாதிபதியாகிய புதனுடனும் கூடி கேதுவைவிட அதிக மாரக செய்யும் அமைப்பை உடையவராக விருப்பதால் மேற்கண்ட துய்ய கேரளம் கார்க்கேயர்நாடி பாடல்களின் பிரகாரம் சுக்கிரன் தன் தசையில் தன் புத்தியில் மாதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்ருர்.

29. சுரத்தினுல் மரண மாவான்
தோகையு மிவன்பின் னுலே
இறப்பளா மென்று சொன்னேம்
இயல்மூனி யிவ்வாறு கூற
அறந்தனை வளர்க்கும் மாது
அறைகிருள் இவன்ப லத்தைத்
திரமுடன் சொல்வீ ரென்னச்
செப்புவார் பராசர் தாமும்.

29. ஜுரம் கண்டு இறந்து விடுவார். ஜாதகருடைய மனைவி இவருக்குப் பின்னல் இறந்துவிடுவாள் என்று சொல்லுகின்ருேம்,

இவ்விதமாக அகஸ்திய முனிவர் சொல்லவே, தருமத்தை வளர்க்கின்ற அம்மையாகிய பார்வதி ஜாதகருடைய யோக பாவ பலாபலன்களோத் தையியமுடன் சொல்லுவீர் என்று கேட்கவே, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார்.

குறிப்பு :—ஜாதகரின் மரண விஷயம் : ஜாதகருக்கு வயது ஹ 71 0-0 முதல் 72-0-0 வரையிலும் சந்திர தசையில் இராகு புக்தியும் குருபுக்தி யும் நடக்கின்றன. ஆனால் ஆனிமாதத்தில் குரு புக்திதான் நடக்கின் றது. பராசரரேஹாரை, ஜாதக சந்திரிகை ஐம்பத்திரண்டாவது சுலோகம் இவற்றின்படி சுக்கிரன் புதன் இவர்கள் மாரகராகின்றார்கள். ஜாதக சந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகம் பிரகாரம் சுக்கிரன் புதன் இவர்கள் மாரகராகின்றார்கள். ஜாதக சந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகம் பிரகாரம் இரண்டாமிடம் ஏழாமிடம் பன்னிரண்டாமிடங்கள் மாரகஸ்தானங்களாகின்றன. சந்திரன் மாரகஸ்தானமாகிய பன்னிரண் டாம் பாவத்திற்குடையவராகி எட்டிற்குடையவராகிய குருவின் பார் வையாகிய சம்பந்தத்தை அடைந்து இருக்கின்றார். ஆறு எட்டிற்குடை யவருடன் சம்பந்தப்பட்டவர் கூட மாரகர் என்று குமாரசாமியம் மகா தசைப்படலம் நான்காவது பாடலில் சொல்லியிருக்கின்றது. சந்திரன் நீச மடைந்து எட்டிற்குடையவராகிய குருவின் பார்வையாகிய சம்பந் தத்தை அடைந்திருப்பதாலும் துய்யகேரளம் எட்டாம்பாவம் இருபதா வது சுலோகப் பிரகாரமும் சந்திரன் மாரகராகின்றார். குரு எட்டிற் குடையவராகி ஜாதக சந்திரிகை ஐம்பத்திரண்டாவது சுலோகப் பிரகாரம் மாரகராகிய சுக்கிரனது வீட்டில் இருப்பதால் ஜாதக சந்திரிகை இருபத்துமூன்றுவது சுலோகப் பிரகாரம்கூட குரு மாரக ராகின்றார். மேலும் ஜம்புரிஷி வாக்கியப் பிரகாரம் லக்கினத்திற்கு நான்கில் இருக்கின்றவரது தசையில் லக்கினத்திற்குப் பத்தில் இருக் கின்றவரது புக்தியில் மரணமுண்டாகும், ஆகையால் குருபுக்தியில் மாரக அமைப்பு உண்டு.

ஜாதகருடைய யோக விஷயம்

30. சாதகர் ஜனனந் தொட்டுச் சாற்றிய மரண மட்டும்
மேதினில் செல்வ மோங்கும் விளைபுல னதிகம் சேர்ப்பன்
கோதிலாத் தனமுஞ் சேர்ப்பன் குண்டைகோ விருத்தி
[யுள்ளான்
நீதியாய்ச் சந்திரன் போலே நிலைத்திடும் யோகந் தானே.

30. ஜாதகருக்குத் தன்னுடைய ஜனனகாலம் முதற்கொண்டு தனனுடைய மரணகாலம் வரையிலும் செல்வம் விருத்தியாகிக் கொண்டே யிருக்கும். இவர் நிலங்களில் விளைகின்ற தான்ய வகைய ராக்களை அதிகமாகச் சேகரிப்பார். குற்றமில்லாமல் தனத்தை அதிக மாகச் சேகரிப்பார். ஆடுமாடுகள் பசுக்கள் ஆகிய இவைகளின் விருத்

தியை யுடையவராவர். இவருக்கு யோகமானது நியாயமாக வளர்பிறை சந்திரனைப்போல் ஓங்கி வளர்த்துகொண்டே நிலைத்து இருக்கும்.

குறிப்பு: இந்த ஜாதகத்தில் (1) தர்மகர்மாதியோகம் (2) கேசரி யோகம், (3) சாமரையோகம் (4) மந்திரியோகம் (5) லக்ஷ்மியோகம் ஆகிய ஐந்துவித ராஜயோகங்கள் இருக்கின்றன. (1) ஒன்பதிற்குடைய அங்காரகனும் பத்திற்குடைய சுக்கிரனும் கூடி இருப்பதால் தர்ம கர்ம யோகம் ஏற்பட்டிருக்கின்றது. (2) சந்திரனுக்கு எழில் குரு இருப்பதால் கேசரியோகம் என்ற கஜகேசரியோகம் ஏற்பட்டிருக்கின்றது. (3) சூரியனும், புதனும் சுக்கிரனும் ஒன்றுய்க்கூடி யிருப்பதால் சாமரை யோகம் ஏற்பட்டிருக்கின்றது. (4) கேந்திராதிபதியும் திரிகோணாதி பதியும் கூடியிருப்பதால் மந்திரியோகம் ஏற்பட்டிருக்கின்றது. (5) வாக னாதிபதியாகிய அங்காரகனும் கோணாதிபதியாகிய சூரியனும் கூடி யிருப்பதால் லக்ஷ்மியோகம் ஏற்பட்டிருக்கின்றது (1) தர்ம கர்ம யோகத் தைப் பற்றிப் பராசரஹோரை ஜாதக சந்திரிகை பதினன்காவது சுலோ கத்தையும் ஜாதக அலங்காரம் முன்னூற்றிரண்டாவது பாடலையும், தாண்டவ மாலை பதின்மூன்றுவது பதினன்காவது பாடல்களையும், சந்திரகாவியம் பதினேந்தாவது பாடலையும், இன்னும் இதர கிரந்தங் களையும் பார்க்கவும். (2) கேசரி யோகத்தைப்பற்றி ஜாதகபாரி ஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றுப்பதினேழாவது சுலோகம், பல தீபிகை ஆறுவது அத்தியாயம் பத்தாவது சுலோகம், தமிழ் ஜாதக அலங்காரம் இருநூற்றி எழுபத்தினன்காவது பாடல் இருநூற்றி எழுபத்தாறுவது பாடல் ஆகிய இவைகளைப்பார்க்கவும். (3) சாமரை யோகத்தைப்பற்றி ஜாதக சிந்தாமணி இரண்டாயிரத்து இருபத் தொன்பதாவது பாடலைப் பார்க்கவும். (4) மந்திரியோகத்தைப் பற்றி தமிழ் ஜாதக அலங்காரம் முன்னூற்றுத் தொண்ணூற்றேழாவது பாடல், தாண்டவமாலை பதினேந்தாவது பத்தொன்பதாவது பாடல் கள், சந்திரகாவியம் பதினேழாவது பத்தொன்பதாவது பாடல்கள் பார்க்கவும். இங்கு முதலாவது பாவாதிபதியையும் ஐந்தாவது ஒன்ப தாவது பாவாதிபதிகளுடன் சேர்த்துப் பொதுவாய் கோணாதிபதிகள் என்று கருதப்பட்டிருக்கின்றது. (5) லக்ஷ்மியோகத்தைப்பற்றி ஜாதக அலங்காரம் முன்னூற்றுத் தொண்ணூற்றேழாவது பாடலைப் படிக்க வும். இங்கு லக்கின பாவாதிபதியாகிய சூரியன் கோணாதிபதியாகப் பாவிக்கப்பட்டுளார்.

31. நல்லதோர் கிருஹஞ் செய்வன் நற்பந்து மெச்ச வாழ்வன்
மெல்லியாள் திருவுஞ் சேரும் விளங்கிடுந் தனமுந் தானும்
சல்லிய மில்லா லுகுஞ் சஞ்சலம் கிவிர்த்தி யாகும்
வல்லவர் புகழு கின்ற மங்கையே மேலுங் கேளே.

31. ஜாதகர் ஒரு நல்ல வீட்டைக் கட்டுவார், நல்ல பந்துக்கள் இவரைப் போற்றும்படியான அந்தஸ்திலிருந்து இவர் வாழ்வார். லக்ஷ்மியின் கிருபையும் மேன்மையான செல்வமும் உண்டாகும். கடன்படாமல் வாழ்வார், மனக்கவலை நிவர்த்தியாகி விடும். அறிஞர் கள் போற்றுகின்ற பார்வதியம்மையே! நாங்கள் இனிமேல் சொல்லு வதைக் கேட்பீராக.

32. அன்னவன் ஜனன கால மனுட மேராம் பாதம்
துன்சனி பதினெட் டாண்டுந் திங்களும் ஏழ தாகும்
இந்ததோர் பலனை யாங்க ளியம்புவோம் பின் பாகத்தில்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழிகுன் ருவே.

32. ஜாதகர் பிறக்கும்போது ஜன்ம நட்சத்திர அனுஷத்தின் முதலாவது பாதமாகும். இதற்குரிய சனி மகாதசை இருப்பு பதினெட்டு வருஷங்களும் ஏழு மாதங்களும் ஆகும். இந்தச் சனி மகா தசையின் பலன்களை நாங்கள் அடுத்த பாகத்தில் சொல்லுகின்றோம். அறு முகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் இதுவரை யிலும் சொல்லிவந்த விஷயங்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 84

1. [1]பொன்னவன் [2]தெறுக்கா லேறப் புதன்சனி ராகு [3]வண்டி-
[4]மன்ரவி [5]புகருஞ் சிம்ம [6]மதிதனு துலையில் [7]செவ்வாய்த்
துன்னிய [8]சுரூவில் கேது தோன்றிடுஞ் ஜன்மஞ் சிம்மம்
பன்னிய வாண்பா லாகும் பகருவோம் பலன்கள் தாமே.

1. குரு விருச்சிகத்திலும், புதன் சனி ராகு கடகத்திலும், சூரியன் சுக்கிரன் சிம்மத்திலும், சந்திரன் தனுசிலும், அங்காரகன் துலாத்திலும், கேது மகரத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் சிம்மமானுல் ஆண் குழந்தை ஜனனமாகும். இவருடைய பலாபலன்களைச் சொல்லுகிறோம்.

கிரகநிலை

	ராகு		
	இராசி சக்கரம்		புதன் சனி ராகு
கேது			லக்கினம் சூரியன் சுக்கிரன்
சந்திரன்	குரு	அங்காரகன்	

மூலம் 1-ஆம் பாதம். கேது தசை இருப்பு வரு 5-3 மீ.

குறிப்பு : இந்த ராசி சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சூரியனும் சந்திரனும், ரிஷபத்தில் அங்காரகனும், கடகத்தில் சுக்கிரனும், கன்னியில் குருவும் ராகுவும், மகரத்தில் சனியும் புதனும், மீனத்தில் கேதுவும் ஆகும். சுக்கிரன் அஸ்தமனத்திலிருக்கின்றார். ஆனால் இவர் உதயமாகுஞ் சமயத்திலிருக்கின்றார்.

---

1. குரு
2. விருச்சிகம்
3. கடகம்
4. சூரியன்
5. சந்திரன்
6. துலாம்
7. அங்காரகன்
8. மகரம்

ஜாதகர் பிறந்த நகரச் சிறப்பு

2. உதித்திடும் வடதென் வீதி யுயர்மேற்குப் பார்வை யாகும்
பதிக்குமே வடக்கி லீசன் பாஞ்சாலி கன்னி மாயோன்
மதியணிந் தோனுஞ் சூழி மடமுமே மேற்கில் தங்குங்
கதிர்வேலன் தென்மேல் வாசங் கரிமுகன் ரதமுங்
[தெற்கில்.

2. ஜாதகர் பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேற்குப் பார்த்த வீடாக விருக்கும். பிறந்த வீட்டிற்கு வடக்கில் சிவபெருமானுடைய கோயிலும், திரௌபதியம்மன் கோயிலும், பார்வதியம்மன் கோயிலும், மகாவிஷ்ணுவின் கோயிலும், மேற்கில் சந்திரனுத் தன்னுடைய சிரசின் ஜடையில் தரித்துள்ள பரமசிவனுடைய கோயிலும் குளமும் சத்திரமும் தர்மசாலையும் இருக்கும். ஆறுமுருகக் கடவுளின் கோயில் தென்மேற்கிலும், யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயிலும் தேரும் தெற்கிலும் இருக்கும்.

3. பலவித தேவர் வாசம் பருகிடும் பேரூர் தன்னில்
குலமது பறவை வம்சங் கூறுவோம் பலன்கள் யாவும்
நலமுள தந்தை மாதா நற்சகோதரமும் புத்திரன்
இலகிய முன்பின் ஜன்ம மியம்புவோ மினிமே லாக.

3. இன்னும் பலவிதமான கோயில்களும் தேவர்களும் வாசஞ் செய்கின்ற ஒரு பெரிய கிராமத்தில் பறவை என்ற (தேவ அடியார் என்ற) ஒரு குலத்தில் ஜாதகர் பிறப்பார். இவருடைய சகல விதமான பலாபலன்களையுஞ் சொல்லுகின்றோம். இவருடைய தகப்பனார் தாயார் சகோதரர்கள் சந்ததிகள் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளை இனிமேல் சொல்லுகின்றோம்.

4. தந்தையின் குணத்தை யாங்கள்
சாற்றுவோஞ் சிவந்த மேனி
எந்தையே சம தேகத்தன்
எழிலிசை யைந்துங் கற்பன்
சிந்தையில் கபடு மில்லான்
சிறந்த னன்மேனி யாவன்
வந்தவர் தம்மைக் காப்பன்
வள்ளல்மேல் பத்தி யுள்ளான்.

4. ஜாதகரின் தகப்பனாருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் சிகப்பு நிறமும் சம அளவுமுள்ள தேகத்தை உடையவராவர். இவர் அழகானதும் இனிமையானதுமான ஐந்து விதராகங்களோடு கூடிய சங்கீதங்களை கற்றுக்கொள்ளுவார். இவர்

தன்னுடைய மனதில் கள்ளம் கபடு ஒன்றும் இல்லாதவர். மேன்மையான நல்ல தேஜசையுடையவராவர். தன்னிடம் வந்து அடைந்தவர்களைக் காப்பாற்றும் குணத்தையுடையவர். இவர் ஆதிசேஷன் மேல் பள்ளிகொண்டுள்ளவரும் கொடுத்துதவுங் குணமுள்ளவரும்மான மகாவிஷ்ணுவின்மேல் பக்தியும் விசுவாசமும் உள்ளவராவர்.

5. வித்தையும் புத்தி யுள்ளான் மேன்மக்க ளுறவு முள்ளான்
பத்தினி யொருத்தி யாவள் பாலர்மேல் பிரிய முள்ளான்
குத்தமு மில்லா வார்த்தை கூறுவான் வெகுபேர்க்
[கன்பன்
சித்தினி மாது கட்குச் சிலம்பங்கள் சொல்லு வானும்.

5. ஜாதகருடைய தகப்பனார் கல்வியறிவுடையவராவர். பெரியோர்களுடைய சிநேகத்தையும் அடையக்கூடியவர். இவருக்கு மனைவி ஒருத்தியேயாவாள். இவர் புத்திரர்களின்மேல் விசுவாசமுடையவராவர். இவர் தோஷமில்லாத நல்ல வார்த்தைகளையே சொல்லுவார். இவர் பலபேர்களுக்கு இஷ்டமுள்ளவராவர். நால்வகை ஸ்திரீகளில் பத்மினி ஜாதி ஸ்திரீக்கு அடுத்த ஜாதி ஸ்திரீயாகிய சித்தினி ஜாதி ஸ்திரீக்கு கைசிலம்பு வித்தை, தந்திரோபாயவித்தை கூத்துப்பயிற்சி இவைகளைச் சொல்லிக் கற்றுக்கொடுப்பார்.

குறிப்பு :—சித்தினி ஜாதி ஸ்திரீயானவள் சங்கீத சாஸ்திரம், சிற்ப சாஸ்திரம் இவைகளை அறிந்தவள். மழமழப்பான அழகிய தேகத்தையுடையவள். மானைப்போன்ற கண்களையும், தாமரையைப் போன்ற முகத்தையும், யானையின் நடைபோன்ற கம்பீரமான நடையையும், மயிலைப்போன்ற குரலையும், அதிசயமான தொனியையும் உடையவள். வித்தையில் அதிக விருப்பமுள்ளவள். மகா கவிஞர்களுக்குப் பிரியமானவள் ஆவாள்.

6. அடக்கமு மொடுக்க முள்ளான்
யாரையும் நேசஞ் செய்வன்
துடுக்கென வார்த்தைக் கூறன்
சோதர ரில்லா னுகும்
மடக்கொடி யார்க்கு நேயன்
மன்னவர் தமக்கு மிஷ்டன்
இடுக்குக ளெண்ணைச் சித்த
னிவன்சொலைத் தவறு னென்றோம்.

6. ஜாதகருடைய தகப்பனார் அமைதியும் சாந்தமும் உடையவர். எல்லோரையுஞ் சிநேகஞ் செய்து கொள்ளும் சாமர்த்தியமுடையவர். திடுக்கிடும்படியாய்க் கடினமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவர் சகோதரர்கள் இல்லாதவராவர். ஸ்திரீகளுக்குப் பிரியமானவர்,

அரசர்களுக்கும் இஷ்டமானவர். பிறருக்குக் கெடுதிகளை நினைக்காத மனத்தையுடையவர். இவர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறாமல் காப்பாற்றுவார் என்று சொல்லுகின்றோம்.

7. தந்தையின் சகோத ரர்கள்
சாற்றவாண் பலத்தைக் காணேம்
பிந்திய பெண்பா லொன்று
பேசுவோர்த் தீர்க்க மாகும்
எந்தையே யிதன்மேல் தோன்றில்
இலகாது அரிட்ட மாகும்
பந்தமா மிக் குணத்தான்
பகருவோ மிவனிற் தந்தை.

7. ஜாதகரின் தகப்பனாருடைய சகோதரங்களின் விஷயத்தைச் சொல்லுகின்றோம். ஆண் சகோதரர்கள் இருப்பதற்குப் பலம் (வலிவு) ஒன்றுங் கிடையாது. தந்தைக்கு இளைய சகோதரி ஒருத்தி நீண்ட ஆயுளை உடையவள் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! இதற்குமேல் சகோதரர்கள் பிறந்தாலும் உயிருடன் இல்லாமல் இறந்து விடுவார்கள். ஜாதகருடைய தகப்பனார் இங்கு இதுவரையிலும் சொல்லப்பட்ட குணங்களை யுடையவராவர்.

குறிப்பு :—ஜன்மலக்கின ரீதியாய்ப் பிதிருலக்கினம் ஒன்பதாமிட மாகிய மேஷம். இதற்கு இளையசகோதர ஸ்தானமாகிய மிதுனத்திற் குடைய புதன் சனி ராகு இவர்களுடன் கூடி இருப்பது தோஷ மாகும். ஆனால் மூன்றைச் சந்திரன் பார்க்கின்றார். புதனைக் குரு பார்க்கின்றார். ஆகையால் இளைய ஆண் சகோதரர்களுக்குத் தோஷம் இருக்கின்றது. மேஷத்திற்கு மூத்த சகோதர ஸ்தானமாகிய கும்பத் திற்குடைய சனி ராகுவுடனும், ஆறுக்குடைய புதனுடனும் சம்மந்தப் பட்டுக் கும்பத்திற்கு ஆறுவது பாவத்தில் இருப்பதும் மூத்த சகோதர காரகனாகிய குரு மேஷத்திற்கு எட்டில் மறைந்திருப்பதும் மூத்த சகோதரனுக்குத் தோஷமாகும். புதனைச் சில கிரந்தங்களில் பொது வாய் இளைய சகோதர காரகன் என்று சொல்லி இருப்பதையும் இங்கு அவர் ராகு சனி இவர்களுடன் கூடி இருப்பதையும் கவனிக்கவும். ஆண் பெண் சகோதரர்கள் இருவர்களுக்குப் பொதுவான காரகராகிய அங்காரகன் மேஷத்திற்கு ஏழில் இருந்து மேஷத்தையே பார்க்கின்றார். இதுவும் ஓர் அனுக்கூலமான விஷயம்.

[மேலும் சந்திர லக்கின ரீதியாய்த் தனுசிற்குப் பிதிரு ஸ்தான மாகிய சிம்மத்திற்கு இளைய சகோதர ஸ்தானமாகிய துலாத்திற்குடைய சுக்கிரன் சூரியனுடன் கூடியிருக்கின்றதால்

" பரிதியும் மூன்றோன் கூடிற் பாலன் பின்னில்லை மாதே "

என்ற மணிகண்டகேரளம் சகோதரகாண்டம் ஆறுவது பாடல் பிரகாரம் இளைய சகோதரனுக்குத் தோஷமிருக்கின்றது. இந்த சிம்மத்திற்கு மூத்த சகோதர ஸ்தானமாகிய மிதுன ராசி அதிபதி புதன் சனி இராகுவுடன் கூடி இருப்பது மூத்த சகோதரனுக்குத் தோஷமாகும்.]

ஜாதகருடைய குணநிசயங்கள் முதலியன

8. இப்படி யிருக்குந் தந்தை யிவனுக்கு வுதித்த பாலன்
செப்புவோம் பலன்கள் யாவுஞ் சிவந்திடு மேனி யாவன்
ஒப்புடன் சம தேகத்தா னுயர்கல்வி யதிக முள்ளான்
மைப்படி மனையா லிரண்டு வகுத்திட்டோ மிவனுக்

[கம்மா.

8. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய பலாபலன்கள் எல்லாவற்றையும் இனிமேல் சொல்லுகின்றோம். இவர் சிவப்பான நிறத்தையுடையவர். அவயவங்கள் எல்லாம் ஒழுங்காக அமைந்துள்ள சமமான அளவுள்ள தேகத்தையுடையவர். மேன்மையான வித்தை அதிகமாகவுடையவர். இவருக்கு இரண்டு மனைவிகள் ஏற்படுவார்கள் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே!

9. நித்திரை யதிக முள்ளா னீராட்டப் பிரிய னுவன்
வித்தையு மிரண்டு நேரும் விளைபுல மதிகஞ் சேர்ப்பன்
நத்தின பேரைக் காப்பன் நாடெல்லாங் கீர்த்தி யேற்பன்
பத்திமான் பாரிக் கன்பன் பந்துவி னேசங் கொள்வன்.

9. ஜாதகர் அதிகமாகத் தூங்குபவராவர். ஜலத்தில் விளையாட ஆசையுடையவர். இவருக்கு இரண்டு விதமான வித்தைகள் உண்டாகும். நன்றாக விளையக்கூடிய நிலங்களை இவர் அதிகமாகச் சேகரிப்பார், தன்னிடம் வந்து அடைந்தவர்களைக் காப்பாற்றுவார். இவர் எல்லா விடங்களிலும் புகழையும் பெருமையையும் அடைவார், பக்தியும் விசுவாசமும் உடையவர். இவர் ஸ்திரீகளுக்கு இஷ்டமானவர். இவர் பந்துக்களிடத்தில் சிநேகமாக விருப்பார்.

10. ஆசார முடைய னுவன் யாரையும் நேசஞ் செய்வன்
வாசியாம் யோகங் கொள்வன் மாதர்க்குக் கல்வி கற்பன்
பாசங்க ளதிக முள்ளான் பாக்கிய முடைய னுவன்
கூசிய மனத்த னுகுங் கூந்தலு மதிக முள்ளான்.

10. ஜாதகர் நல்ல ஒழுக்கம், அனுஷ்டானம், சுத்தம், வழிபாடு ஆகிய இவைகளையுடையவர். இவர் எல்லோரையும் சிநேகஞ் செய்து கொள்ளுவார். அதிகமான யோகத்தை யுடையவராவர். வாசி

யோகம் என்ற ஒருவித யோகத்தையும் உடையவராவர். இவர் பெண்களுக்கு வித்தையைக் கற்றுக் கொடுக்கும் உபாத்தியாயராக இருப்பார். அதிகமான ஆசைகளையும் அன்பையும் உடையவர். இவர் செல்வம் உடையவராகவும் இருப்பார்.

குறிப்பு :—வாசியோக விஷயம் :—சூரியனுக்குப் பன்னிரண்டாவது பாவத்தில் சந்திரனைத் தவிர மற்றச் சுபக்கிரகங்களாகிய குரு அல்லது சுக்கிரன் அல்லது புதன் இவர்கள் இருந்தால் பலதீபிகை ஆருவது அத்தியாயம் எட்டாவது சுலோகப் பிரகாரம் வாசியோகம் உண்டாகின்றது. இந்த ஜாதகத்தில் சூரியனுக்குப் பன்னிரண்டாமிடத்தில் புதன் இருக்கின்றதால் வாசியோகம் ஏற்பட்டிருக்கின்றது.

11. பதகடை சொகுசு முள்ளான் பங்கைய ரேகை யுண்டு
இதமான வசனங்கள் கூறுவ னெழிலிசை ராகஞ்
[சொல்வன்
விதவித வாத்தி யங்கள் மேன்மையாய்க் கற்ப னுவான்
நதிபல தீர்த்தந் தோய்வன் நாதனர் பூசை செய்வன்.

11. ஜாதகர் பக்குவமான தும் அழகான தும் நல்ல துமான நடவடிக்கையும் நாகரிகமும் சௌக்கியமும் உடையவர். இவருடைய உள்ளங்கையில் பங்கயரேகை என்ற ஒருவிதமான தாமரைரேகை இருக்கும். இவர் இன்பமான நல்ல வார்த்தைகளையே சொல்லுவார். அழகான தும் இனிமையான துமான ராகங்களைப் பாடுவார். பலவிதமான சிறந்த வாத்தியங்களை நல்ல திறமை அடையும்படியாகக் கற்றுக் கொள்ளுவார். இவர் அநேக விதமான புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். இவர் கடவுளைப் பூசை செய்வார்.

12. அதிதிகள் பத்தி யுள்ளா னகநிய மதிகஞ் சொல்வன்
பதியது சித்திர முள்ளான் பாலர்க ளதிக முள்ளான்
மதிநிகர் வதன மாவன் மங்கையர் விருப்ப முள்ளான்
ததிநெய்பாற் பிரிய முள்ளான் காட்சிண்ணிய முடைய
[னுமே.

12. ஜாதகர் பரதேசிகளிடத்தில் அன்பும் ஆசையும் உடையவர். வேடிக்கையையும் சிரிப்பையும் உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளை அதிகமாகச் சொல்லுவார். அழகிய வீட்டை உடையவர். இவருக்குக் குழந்தைகள் அதிகமாகப் பிறப்பார்கள். இவர் சந்திரனுக்கு ஒப்பான அழகிய முகத்தை உடையவராவர். இவர் ஸ்திரீகளிடத்தில் ஆசையுடையவர். ஸ்திரீகளும் இவரிடத்தில் ஆசையுடையவர்களாக விருப்பார்கள். இவர் தயிர், நெய், பால் இவைகளின்மேல் ஆசையுடையவராக விருப்பார். இரக்கம் பிறருக்கு உதவி செய்யுங் குணம் ஆகிய இக்குணங்களை உடையவராவர்.

குறிப்பு :—குழந்தைகள் விஷயம் :—ஜன்ம லக்கினத்திற்குப் புத்திர ஸ்தானமாகிய ஐந்தாவது பாவத்திற்குடையவரும் புத்திரகாரகருமாகிய குரு நான்காவது கேந்திர பாவத்தில் இருக்கின்றார். ஐந்தில் பெண் கிரகமாகிய வளர்பிறைச் சந்திரன் இருக்கின்றார். இவைகள் சந்ததிக்கு அனுகூலமான அம்சங்கள் ஆகும். ஒன்பதிற்குடையவராகிய அங்காரகன் மூன்றில் இருந்து கொண்டு ஒன்பதைப் பார்ப்பது அனுகூலமும் பிரதிகூலமுமான அம்சங்களாகும். ஒன்பதைச் சனி பார்ப்பது பிரதிகூலமான அம்சமாகும். சந்திர லக்கினத்திற்கு ஐந்திற்குடைய அங்காரகன் பதினொன்றில் இருந்து கொண்டு ஐந்தைப் பார்ப்பது அனுகூலமான அம்சமாகும். ஆனால் குரு சந்திரனுக்குப் பன்னிரண்டில் இருப்பது பிரதிகூலமானது. சந்திரனுக்கு ஐந்தைச் சனி பார்ப்பதும் பிரதிகூலமானதாகும். சந்திரனுக்கு ஒன்பதிற்குடைய சூரியன் ஒன்பதிலேயே இருந்து கொண்டு பெண் கிரகமாகிய சுக்கிரனுடன் கூடி இருப்பது அனுகூலமானது. ஆகையால் பல குழந்தைகள் பிறக்கும். ஆனால் அவைகளில் சில குழந்தைகள் இறந்து விடும். முப்பதாவது பாடலைப் பார்க்கவும்.

ஜாதகருடைய சகோதரர்களின் விஷயம்

13. ஜாதகன் துணைவர் தம்மைச்
சாற்றுவோ மெழுவ ராகும்
தீதிலாப் பெண்பால் மூன்றும்
தீர்க்கமா மாண்பால் காணும்
மேதினி லரிட்ட மாகும்
விளம்புவோ மவர்கள் சேதி
நீதியா யுரைப்போம் யாங்கள்
நிமலியே மேலுங் கேளே.

13. ஜாதகருடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். அவர்கள் ஏழு பேர் ஆகும். இவைகளில் குற்றமில்லாதப் பெண் சகோதரிகள் மூன்று பேர் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். ஜாதகருக்கு ஆண் சகோதரம் கிடையாது. அல்லது ஆண் சகோதரமும் சில பெண் சகோதரங்களும் இறந்து விடுவார்கள். இந்தச் சகோதரர்களின் விஷயங்களைப் பற்றி நாங்கள் நியாயமாக சாஸ்திர ஆதாரங்களைக் கொண்டு சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! இனி நாங்கள் மேற்கொண்டு சொல்லப்போவதைக் கேட்பீராக.

குறிப்பு :—சகோதரர்கள் விஷயம் :—இளைய சகோதர ஸ்தானமாகிய மூன்றாவது பாவத்திற்குரிய சுக்கிரன் லக்கினத்தில் இருப்பது அனுகூலமானது. ஆனால் அஸ்தமனமடைந்திருப்பது பிரதிகூலமானது,

மூன்றில் அங்காரகன் இருப்பது ஆண் சகோதரர்கள் விஷயத்தில் அதிகப் பிரதிகூலமானது.

"பரிதியும் மூன்றேறுன் கூடில் (அஃதாவது இங்குச் சூரியனுடன் சுக்கிரன் கூடியிருப்பது) பாலன்பின் னில்லைமாதே"

என்று மணிகண்டகோளம் சகோதரகாண்டம் ஆறுவது பாடலில் சொல்லி யிருப்பதால் இளைய ஆண் சகோதரம் கிடையாது. மூத்த சகோதர ஸ்தானாதிபதியாகிய புதன் பன்னிரண்டில் சனி ராகுவுடன் கூடியிருப்பது தோஷமாகும். மூத்த ஆண் சகோதரகாரகனாகிய குருவைக் கேது பார்த்திருப்பது மூத்த சகோதரனுக்குத் தோஷமாகும்.

வேறு

14. மங்கையர்கள் மூவரிலே மூத்தவட்கு
மணமுண்டு வரனு முண்டு
பொங்கமுடன் புத்திரர்க ளாணென்று
பெண்ணிரண்டு புகல்வேங் தீர்க்கஞ்
சங்கையிலா யிரண்டரிட்டஞ் சாற்றினேஞ்
சுகமுடையாள் சம்பத் துள்ளாள்
இங்கிவர்க்கு யிளையவளு மெழில்
முருகனடி யாராயிருப்பா ளம்மா.

14. ஜாதகருடைய மூன்று சகோதரிகளில் மூத்த சகோதரிக்குக் கலியாணம் நடந்து அவளுடைய புருஷனும் இருப்பான். இவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளு உடையவராக விருப்பார்கள். இரண்டு குழந்தைகள் இறந்து விடும் என்று சொல்லுகின்றோம். இந்த மூத்த சகோதரி சௌக்கியமாக விருக்கக் கூடியவள். செல்வமுடையவளாவாள். இந்தச் சகோதரிக்கு இளைய சகோதரி அறுமுகக்கடவுளின் கோயில் அடியாராக (அஃதாவது தாசியாக) இருப்பாள் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே!

குறிப்பு:—இந்த மூத்த சகோதரி தாசி வம்சத்தைச் சேர்ந்தவளான படியால் இவளுக்குக் கலியாணம் நடக்குமா இல்லையா என்பதை நிவிர்த்தி செய்வதற்காக இந்தப் பாடலில் முனிவர் இவளுக்கு "மண முண்டு, வரனுமுண்டு" என்று விவரமாகச் சொல்லி இருப்பது பேர்லத் தோற்றுகின்றது.

வேறு

15. அன்னநடை முன்கோபி சிவந்த மேனி
யமிர்தமொழி யெதிர்க் கிணையா ளரசரிஷ்ட
வின்னவளும் பிதிரு வர்க்கஞ் சிக்கியேதா
னியல்தத்து புத்தியா யிசைவா ளம்மா

நன்னயமாய்க் கீர்த்திக்கொள்வள் நகைகள் சேர்ப்பள்
நடனசங் கீதத்தில் மேன்மை யாவள்
சொன்னமொழி தவருதாள் பத்தி யுள்ளாள்
சுத்தமன துடையவளாய்ச் சுகித்து வாழ்வாள்.

15. ஜாதகருடைய இந்த இரண்டாவது சகோதரி அன்னத்தைப் போன்ற அழகிய நடையையுடையவள். முன்கோபத்தையுடையவள். சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவள். அமிர்தத்தைப் போன்ற இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். தன்னுடைய எதிரிக்கு இளைக்காமல் சமானமானவளாக விருப்பாள். அரசர்கள் இவளிடத்தில் பிரியமாய் இருப்பார்கள். இவள் தன்னுடைய பிதாவின் பந்துக்களின் அதிகாரத்தில் அகப்பட்டுக் கொண்டு, தாழ்ந்த புத்தியினலே அடங்கி நடப்பாள் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! இவள் நல்ல கீர்த்தியை அடைவாள். ஆபரணங்களைச் சேர்த்து வைப்பாள். நாட்டியம், சங்கீதம் இவைகளில் தேர்ச்சியடைந்து நல்ல பெயரெடுப்பாள். தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவாள். தெய்வபக்தியும் அன்பும் உடையவள். நல்ல மனத்தையுடையவளாக விருந்து சுபபோகங்களை அனுபவித்து வாழ்பவளாவாள்.

வேறு

16. தனங்களு மதிக முள்ளாள் தரித்திர மில்லா ளாகும்
இனங்களை யாத ரிப்ப ளிசைவோமே புத்திர விருத்தி
கனமுடன் பெண்பா லிரண்டு காளையு மொருவ ராகும்
வினயமு மொருவர்க் கெண்ணுள் மேன்மக்க ளுறவு
[கொள்வள்.

16. ஜாதகருடைய இந்த இரண்டாவது சகோதரி பணம் அதிகமாக உள்ளவளாவள். இவளுக்குத் தரித்திரமும் கஷ்டங்களும் கிடையா. இவள் தன்னுடைய பந்துக்களைக் காப்பாள். இவளுக்குச் சந்தான விருத்தி உண்டு என்று சொல்லுகின்றோம். இவளுக்கு இரண்டு பெண் குழந்தைகளும் ஓர் ஆண் குழந்தையும் உண்டு. இவள் வஞ்சம், கபடம், கொடுமை என்பதை எவருக்கும் நினைக்கவுமாட்டாள், செய்யவுமாட்டாள். பெரிய மனிதர்களுடைய சிநேகத்தை இவள் அடைவாள்.

குறிப்பு :—வினயம் - இங்கு வஞ்சம், கபடம், கொடுமை எனப் பொருள்படும்.

17. அற்பரை நேசஞ் செய்யா ளவள்பித்த தேக முள்ளாள்
கற்புமே யில்லா ளாகுங் கனத்ததோர் குடும்ப முள்ளாள்
பொற்புபோல் கீர்த்தி யுள்ளாள் புண்ணிய மனத்த
[ளாகும்
நற்பயிர் பூமி சோலை நாயகி சேர்ப்பா ளாமே.

17. ஜாதகருடைய இரண்டாவது சகோதரி, தாழ்ந்ததும் கெட்ட துமான குணங்களை யுடையவர்களுடன் சிநேகஞ் செய்து கொள்ளமாட் டாள். இவளுடைய தேகம் பித்த குணமுள்ளதாக விருக்கும். இவளி டத்தில் கற்பு என்ற பதிவிரதையின் குணம் இருக்காது. இவள் ஒரு பெரியதும் மேன்மையானதுமான குடும்பத்தை யுடையவளாவாள். இவள் ஆபரணம் மாலை இவைகளின் அழகைப் போன்ற பிரகாசமான புகழும் பெருமையும் உடையவளாவாள். இவள் நல்ல மனதை உடை யவளாவாள். நல்ல விளைவுள்ள நிலங்களையும் தோட்டங்களையும் இவள் சேகரித்து வைப்பவளாவாள்.

வேறு

ஜாதகரின் தாயாருடைய விஷயம்

18. அதற்கு விளையோள் மாதுக்கு மணமு முண்டு
யநேகமைந்த ருண்டாகுஞ் சுகமு முள்ளாள்
இதற்குமேல் மாதிருதன் குணத்தைச் சொல்வே
னெழில்கற்பு முடையவளாம் பொறுமை யுள்ளாள்
சதமான தமையன் தம்பிதானு மில்லை
சகோதரிகள் மூவரென்று சாற்ற லாகும்
பதியதுவு மூள்ளூரில் மேற்கே யென்று
பகருவோ மாதிருவர்க்கம் பாண்பாய்ச்
[சொன்னேன்.

18. ஜாதகருடைய மூன்றாவது சகோதரிக்கு விவாகம் நடக்கும். பல பிள்ளைகள் பிறப்பார்கள். இவள் சுகமாக விருந்து கொண்டு வாழ்வாள். இனிமேல் நான் ஜாதகரின் தாயாருடைய குணாதி சயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் சிறந்த கற்புடைய ஸ்திரீயாவள். சாந்தமானவள். இவளுக்கு நிலையான அண்ணனும் தம்பியும் கிடையாது. இவளுக்கு மூன்று சகோதரிகள் இருப்பார் கள் என்று சொல்லக் கூடும். இவளுடைய தாயார் வீடு உள்ளூரி லேயே மேற்குத் திக்கில் இருக்கும் என்று சொல்லுகின்றோம். இவ் விதமாக ஜாதகருடைய தாயாரின் பந்துக்களின் விஷயத்தைத் தகுதி யாய்ச் சொல்லி விட்டேன்.

ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மம்

19. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோங் கோணந்
[தன்னி
லெந்தையே கங்கை வம்ச மிசைந்தன னிவனே யம்மா
சந்ததங் கடவுள் பத்தி சைவனுய்க் குலத்தில் வந்து
சொந்தமா யால யத்தில் தீபங்கள் வைத்தா னம்மா.

19. ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே! இவர் கோணம் என்ற ஊரில் (திரிகோணமலையில்) கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் ஆணுகப் பிறந்தார். பார்வதியம்மையே! இவர் எப்போதும் கடவுள் மேல் பக்தியும் ஆசையும் உடைய சைவராக விருந்து கொண்டு ஒரு கோயிலில் தன்னுடைய சொந்தமான ஒரு விளக்கை ஏற்றி வைத் திருந்தார். பார்வதியம்மையே!

20. பூமியும் பொரு ளனேகம் பெற்றுமே வாழு நாளில்
காமத்தால் வேசி மாரைக் கனவிலு நினைக்கா ஞகி
நேமியில் கீர்த்திப் பெற்று நிமலனும் வாழு நாளில்
தீமையா யூழி வந்த சேதியைச் சொல்வே னம்மா.

20. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய முன்ஜன்மத்தில் நிலமும் சொத்தும் தனமும் அதிகமாக அடைந்தும் தாசிகளைக் காம ஆசையால் கனவில்கூட நினைக்காதவராகவுமிருந்து பூமியில் புகழும் பெருமையும் அடைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் இவருக்குக் கெடுதியை விளைவிக்கக் கூடியதாய் அதற்கு முன்ஜன்மத் திய வினை வந்து சம்பவித்த விஷயத்தைப் பற்றிச் சொல்லுகின் றேன். பார்வதியம்மையே!

21. கோவிலில் குடங்கள் தாங்குங் கோதையை யிகழ்வாய்ச்
[சொன்னன்
மாதுவு மனது நொந்து வகுத்திட்டாள் சாபந் தானும்
பாதகன் மறுஜன் மத்தில் பாவையின் குலமு தித்து
மாதர்க்கு வபதே சிக்க மன்னவா பிறப்பா யென்றாள்.

21. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய முன்ஜன்மத்தில் கோவிலில் குடங்களைத் தாங்கிக் கொண்டு போகிற ஒரு ஸ்திரீயைப் பற்றி இகழ்ச்சியாய்ச் சொல்லி அவளை அவமானப்படுத்தினர். இந்த ஸ்திரீ தன்னுடைய மனத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டு பின்வருமாறு ஒரு சாபத்தைக் கொடுத்தாள். "இவ்விதமாகப் பழியைச் சாற்றிய துஷ்டனுகிய நீ, உன்னுடைய பின்ஜன்மத்தில் பெண்ணின் (தாசிப் பெண்ணின்) குலத்தில் பிறந்து பெண்களுக்குக் கல்வி முதலியவை

கனைக் கற்றுக் கொடுக்கக் கடவது என்று இவரைப் பார்த்து இந்த ஸ்திரீ சொன்னாள்.

22. இப்படி வேசிக் கூற யிவனுடை யுடலம் வாடித்
தப்பிலாக் கஞ்சன் தம்மால் தானது வரையப் பட்டு
மெய்ப்புட னடியார் வம்ச மீதினி லுதித்தா னம்மா
அப்பணி சடையோன் பக்க லமர்ந்திடு மம்மா கேளாய்.

22. ஜாதகருடைய தகப்பனாரின் முன்ஜன்மத்தில் கோயிலில் குடங்களைத் தாங்கும் ஸ்திரீயாகிய தாஸி இவ்விதங் சொல்லவே தகப்பனார் தன்னுடைய தேகம் வாடி இறந்து.பிறகு குற்றமும் வஞ்சனையுமில்லாத பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு உண்மையிலே தேவ அடியார்.(தாஸி) குலத்தில் வந்து இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார். பார்வதியம்மையே! பரம்பைத் தன்னுடைய ஜடையில் தரித்துக் கொண்டிருக்கின்ற பரமசிவனுடைய இடது பாகத்தில் அமர்ந்துள்ள பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனாருடைய மறுஜன்மம்

23. தேவதா பத்தி யுள்ளான் செய்ந்நன்றி மறவா னுகுங்
கேவல புத்தி யில்லான் கண்ணிய முடைய னவன்
நாவலர் புகழ வாழ்வன் நாட்டுவோ மறுஜன் மத்தில்
மேவலர் புகழு கின்ற விரிஞ்சியில் பிரம்ம சேயாய்;

23. ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் தெய்வபக்தி உடையவராவர். இவர் பிறர் தனக்குச் செய்த உதவியை மறக்காமல் இருப்பார். தாழ்ந்த புத்தியில்லாதவர். பெருந்தன்மை யுடையவராவார். புலவர்கள், அமைச்சர்கள் இவரைப் புகழும்படியாக விருந்து இவர் வாழ்வார். ஜாதகரின் தகப்பனாருடைய பின்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். பகைவர்களும் போற்றுகின்ற விரிஞ்சி மாநகரத்தில் பிராமணக் குழந்தையாக;

ஜாதகருடைய முன்ஜன்மம்

24. பிறப்பன மிவனே யம்மா
புரவலர் தம்பால் சென்று
சிறப்பான தொழிலும் பெற்று
ஜீவிப்பா னிவனின் தந்தை
குறிப்புட னிவன்முன் ஜன்மங்
கூறுவோங் காஞ்சி தன்னில்
கறுப்பிலாக் கங்கை வம்சங்
காவலன் பிறந்தா னம்மா.

24. ஜாதகருடைய தகப்பனார் மறுஜன்மத்தில் பிறப்பார். பார் வதியம்மையே! இவர் அரசர்களிடம் போய் மேன்மையான உத்தியோ கத்தை அடைந்து ஜீவனஞ் செய்து வருவார். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் தன்னுடைய முற் பிறப்பில் காஞ்சிமா நகரத்தில் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுப விக்காத ஒரு வேளாளர் குலத்தில் பிறந்தார். பார்வதியம்மையே!

25. பூமியில் கொடிக்கால் வேலை
புண்ணியன் செய்து வந்து
நேமியில் பொருள் படைத்து
நிமலன்தன் பத்தி யுண்டாய்ச்
சேமமாய் வாழு நாளில்
செய்தவுழ் தன்னைச் சொல்வேன்
மாமியென் றெண்ணு னுகி
மைந்தனும் போகஞ் செய்தான்.

25. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் வெற்றிலைக் கொடி யுள்ள தோட்டங்களில் வேலை செய்து கொண்டு தனத்தைச் சம்பா தித்து, கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகிச் சௌக்கி யங்களுடன் நல்ல நிலையில் வாழ்ந்து கொண்டிருந்தக் காலத்தில் இவர் செய்தப் பாவத் தொழிலைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் ஒரு ஸ்திரீயினிடத்தில் அவள் தன்னுடைய மாமியார் என்று நினைத்து அஞ்சிடாமல் காமலீலை செய்தார்.

ஜாதகருடைய விவாகம்: மனைவி விஷயம்

26. ஆகையால் தோஷம் வந்து
யணுகிற்று விவனுக் கம்மா
பாகமா யிக்கு லத்தில்
பாலகன் பிறந்தா னம்மா
தோகைமா ரிருவ ரென்று
சொல்லுவோ மிவனுக் கேதான்
வாகைசேர் மணத்தின் காலம்
வறைகிறேம் ரிஷிகள் தானே.

26. அதனால் ஜாதகருக்கு இந்த ஜன்மத்தில் முன் ஜன்மத்திய தோஷம் வந்தடைந்தது. பார்வதியம்மையே! ஜாதகருக்குத் தன்னு டைய முன்ஜன்மத்திய தோஷத்தின் பயனை இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள் என்று சொல்லுகின்றேம். இவருக்கு விவாக காலத் தைப் பற்றி முனிவர்களாகிய நாங்கள் இனி மேல் சொல்லுகின்றேம்.

27. ஈரொன்ப தாண்டி லேதான் இவனுடை யுள்ளூர் [மேற்கில்
காரியும் வருவா ளம்மா நாட்டுவோ மறு மணந்தான்.
கூறுவோ மிருபா னெட்டில் கோதையுந் தக்ஷி ணத்தில்
பாரியும் வருவாள் சொன்னேம் பார்வதி கேட்டி டாயே.

27. ஜாதகருக்குத் தன்னுடைய பத்தொன்பதாவது வயதில் தன்னுடைய கிராமத்திலேயே மேற்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சம்பவிப்பாள். பார்வதியம்மையே! இரண்டாவது விவாகத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஜாதகருக்கு இருபத்தெட்டாவது வயதில் ஒரு ஸ்திரீ தெற்குத் திக்கிலிருந்து இரண்டாவது மனைவியாக வந்து சம்பவிப்பாள் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—விவாக விஷயம் :—ஜாதகருக்கு வயது ஹ 18-0-0 முதல் வயது ஹ 19-0-0 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் குருபுக்தியும் சனிபுக்தியும் நடக்கின்றன. சுக்கிரன் களத்திரகாரகனுயும் பத்தாவது பாவத்திற்கு அதிபதியாயும் இருந்து கொண்டு லக்கினத்திலிருந்து ஏழாவது பாவத்தையே பார்க்கின்றார். ஆகையால் ஜாதகபாரிஜாதம் பதினுன்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் பத்திற்குடையவராகிய சுக்கிரன் தன் தசையில் ஜாதகருக்கு விவாகஞ் செய்து வைக்க அமைப்பு உள்ளவராக இருக்கின்றார். சுக்கிரன் சுபராகிச் சிம்மத்தில் பாபியாகிய சூரியனுடைய ராசியில் இருப்பதால் அடுத்த சுலோகமாகிய முப்பதாவது சுலோகப் பிரகாரம் சுக்கிரதசையில் நடுபாகத்தில் விவாகம் நடக்கும். நடுப்பாகத்தில் சனி புக்திகூட இருக்கின்றது. சனி ஏழிற்குடையவராகிக் குடும்பாதிபதியாகிய புதனுடனும் போககாரகனுகிய இராகுவுடனும் கூடிக் களத்திரஸ்தானுதிபதியாக விருப்பதால் சனி தனது புக்தியில் விவாகஞ் செய்து வைக்க, குருவைவிட அதிக அமைப்புடையவராக இருக்கின்றார்.

28. இப்படிப் புயண்டர் சொல்ல
வியல்செய முனிவர் சொல்வார்
மைப்படி மனையா ளிரண்டு
வகுத்திடில் முதல் மாதுக்கு
மெய்ப்புடன் தோஷ மென்ன
விளம்புவீ ரென்று கேட்கச்
செப்பமாய்ப் புயண்டர் சொல்வார்
தேவியே மேலுங் கேளே.

28. இவ்விதமாகப் புஜண்டமகாரிஷியானவர் சொல்லவே ஜய முனிவர் தடுத்துக் கேட்கின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்களுண்டு என்று சொல்லுகின்றீர்! முதல் மனைவிக்கு எவ்விதமான

தோஷம் இருக்கின்றது? அதன் விவரத்தைச் சொல்லுவீர் என்று ஜயமுனிவர் கேட்க, புஜண்டமகாரிஷியானவர் பதில் சொல்லுகின்றார். பார்வதியம்மையே! இன்னும் அதிகமாகக் கேட்பீராக.

29. குடும்பத்தோ னேழோன் தானுங் கூடியே விரய மேறித்
திடமுடன் ராகு வுந்தான் சேர்ந்ததால் முதல் மாதுக்கு
அடைவுடன் கர்ப்பந் தோன்றி யதனலே மரண மாகித்
திடமுட னிரண்டாம் மாது சீக்கிரம் வருவா ளென்றோம்.

29. குடும்பாதிபதியான இரண்டிற்குடைய புதனும், ஏழிற் குடையவரான சனியும் கூடி விரயஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்தில் இருந்து கொண்டு வலிவான இராகுவுடன் சேர்ந்திருப்பதால் முதல் மனைவிக்குக் கர்ப்பம் நேரிட்டு அதனால் அவள் இறந்து விடுவாள். வலிவான இரண்டாவது மனைவி சீக்கிரத்திலேயே ஜாதகருக்கு வந்து சம்பவிப்பாள் என்று சொன்னோம்.

குறிப்பு :—முதலாவது இரண்டாவது மனைவி விஷயம் :— இருபத்தேழாவது பாடலிலும் இந்த இருபத்தொன்பதாவது பாடலிலும் முதல் மனைவி ஜாதகருக்கு இருபத்தெட்டாவது வயதில் கர்ப்பத்தால் இறந்து, உடனே அஃதாவது இந்த வயதிலேயே இரண்டாவது மனைவியும் வருவாள் என்று சொல்லியிருக்கின்றது.

முதல் மனைவி மரண விஷயம் :— முதல் மனைவி ஸ்தானம் ஏழாவது வீடாகிய கும்பம் ஆகும். இதற்கு அதிபதியாகிய சனி தன் வீட்டிற்கு ஆறில் லக்கினத்திற்குப் பன்னிரண்டில் இருக்கின்றார். குடும்பாதிபதியாகிய புதன் லக்கினத்திற்குப் பன்னிரண்டில் மறைந்திருக்கின்றார் ஆறுமிடமும் பன்னிரண்டாமிடமும் துஸ்ஸ்தானங்களாகும். சனியும் புதனும் இராகுவுடன் சேர்ந்து இருப்பது தோஷமாகும். சூரியன் ஏழைப் பார்ப்பதுவும் தோஷமாகும். கெட்ட ஆதிபத்தியமாகிய எட்டாவது பாவத்திற்குடைய குரு புத்திரபாவமாகிய ஐந்தாவது பாவத்திற்கும் உடையவராகிச் சனியையும் புதனையும் பார்க்கின்றார். இதுவும் தோஷமாகும். ஆகையால் மனைவி கர்ப்பந்தரித்து இறப்பதற்கு அமைப்பு இருக்கின்றது. முதல் மனைவியின் லக்கினம் கும்பமாகும். ஜாதகருக்கு வயது ஹ 27 0-0 முதல் வயது ஹ 28-0-0 முடியும் வரையிலும் சூரியதசையில் இராகுபுக்தியும் குருபுக்தியும் நடக்கின்றன. இந்தக் கும்பலக்கினத்திற்குப் பராசரஹோரை, ஜாதக சந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகம் இவற்றின்பிரகாரம் ஏழாவது பாவத்திற்குடைய சூரியன் மாரகனாகின்றார். இவர் களத்திரகாரகனாகிய சுக்கிரனுடன்கூடி கும்பத்திற்கு ஏழாவதான மாரகஸ்தானத்திலேயே ஆட்சியாகி வலிவாக விருக்கின்றார். ஆகையால் சூரியனுக்குத் தன்னுடைய தசையில் களத்திரத்திற்கு (அஃதாவது கும்பலக்கின ஜாதகிக்கு, மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். மேலும்

கும்பலக்கினத்திற்கு எட்டிற்குடையவரான புதன் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை அறுபத்தைந்தாவது சுலோகப் பிரகாரம் மாரகரா கின்றார். இராகு இந்தப் புதனுடனும் லக்கினாதிபதியாகிய சனியுட னும் அஷ்டமாதியாகிய புதனுடனுங் கூடி ஆறுவது ஸ்தானத்திலிருப்ப தால் ஜாதகசந்திரிகை பன்னிரண்டாவது, இருபத்துமூன்றுவது சுலோ கங்களின்பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம்பாவம் இருபதாவது பாடல் பிரகாரமும் கார்க்கேயநாடி அறுநூற்றெண்பதாவது பாடல் பிரகாரமும் இராகு தனது புக்தியில் களத்திரத்திற்கு மாரகஞ்செய்ய அமைப்புடைய வராகின்றார். குருலக்கினத்திற்குப் போகஸ்தானமாகிய நான்காவது பாவத்தில் இருந்து கொண்டும் சந்திரனுக்குப் போகஸ்தானமாகிய மீனத்திற்கு அதிபதியாகியும் மீனத்தையும் லக்கினத்திற்குப் பத்தா வது பாவத்தையும் போககாரகனுகிய ராகுவையும் பார்ப்பதால் குரு உடனே தனது புக்தியில் ஜாதகருக்கு இரண்டாவது விவாகம் செய்து வைக்கும் அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

ஜாதகரது சந்ததி விஷயமும்
ஜாதகருடைய தகப்பனாரது கர்மவிஷயமும்

30. இன்னவன் தனக்குப் புத்திர ரிசைவாயே யாண்பா [லொன்று
கன்னியு மவ்வா றுகுங் கனத்திடுந் தீர்க்க மாகும்
மன்னிய தந்தை காலம் வரைகிறே மூப்பா னுண்டில்
தன்னிலே தனுசு மாதந் தந்தையு மரண மாவன்.

30. ஜாதகரது புத்திரப் பாவத்தைப் பற்றிச் சொல்லுகின் றோம். இவருக்கு ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். ஜாதகருடைய தகப்ப னாரின் மரண காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருடைய தகப்பனார் ஜாதகரது மூப்பதாவது வயதில் மார்கழி மாதத்தில் இறந்து விடுவார்.

குறிப்பு :—பிதிருமாரக விஷயம் :—ஜாதகருக்கு வயது ஹ 29-0-0 முதல் வயது ஹ 30-0-0 முடியும் வரையிலும் சூரியதசையில் சனிபுக்தி புதபுக்தி கேதுபுத்திகள் நடக்கின்றன. பிதிருலக்கினம் ஒன்பதா மிடமாகிய மேஷம் ஆகும். பராசரஹோரை, ஜாதகசந்திரிகை நாற் பத்து மூன்றுவது சுலோகம் இவற்றின் பிரகாரம் சுக்கிரன், சனி, புதன் இவர்கள் மாரகாளாவார்கள். சூரியன் சுக்கிரனுடன்கூடி இருப்பதால் ஜாதகசந்திரிகை இருபத்துமூன்றுவது சுலோகப் பிரகாரம் சூரியன் தன் தசையில் மாரகஞ்செய்ய அமைப்புடையவராகின்றார். புதனும் மேற்சொல்லிய இருபத்துமூன்றுவது நாற்பத்துமூன்றுவது சுலோகங் களின் பிரகாரம் புதன் தனது புக்தியில் மாரகஞ்செய்ய அமைப்புடைய வராகிறார்.

ஜாதகருடைய தாயாரின் கர்மமும் ஜாதகரது மரணகாலமும்

31. மாதிரு காலந் தன்னை வகுக்கிறே முப்பா னேழில்
தீதிலாத் தேளின் மாதந் தேவியு மரண மாவாள்
ஜாதகன் மரண காலஞ் சாற்றுவே னறுபா னெட்டில்
நீதியாய் மகர மாதம் நிகரமா வாசை தன்னில்.

31. ஜாதகரின் தாயாருடைய மரண காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் தேள்மாதம் என்ற கார்த்திகை மாதத்தில் இவருடைய தாயார் இறந்து விடுவாள். ஜாதகருடைய மரணகாலத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் தமது அறுபத்தெட்டாவது வயதில் மகரமாதம் என்ற தை மாதத்தில் அமாவாசை திதியில் இறந்து விடுவார்.

குறிப்பு :—தாயார் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 36-0-0 முதல் வயது வருஷம் 37-0-0 முடியும் வரையிலும் சந்திரதசையில் சனிபுக்தி நடக்கின்றது. மாதிருலக்கினம் சிம்மத்திற்கு நான்காவது பாவமாகிய விருச்சிகமாகும். இரண்டாமிடமாகிய தனுசு பராசர ஹோரை, ஜாதகசந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகப் பிரகாரம் மாரகமாகும். ஜாதகசந்திரிகை இருபத்துமூன்றுவது சுலோகப் பிரகாரம் சந்திரன் இரண்டில் இருப்பதால் மாரகராகின்றார். ஐந்தாவது பாவத்தில் சந்திரன் இருப்பது மாதாவுக்குத் தோஷம் என்று கிரந்தங்களில் சொல்லி இருக்கின்றது*. சந்திரன் பொதுவாய்த் தன் தசையில் மாதிருமாரகஞ் செய்வாரென்றும் சில கிரந்தங்களில் சொல்லி இருக்கின்றது. ஆகையால் சந்திரன் தனது தசையில் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்புடையவராக விருக்கின்றார். மேலும் ஜாதகசந்திரிகை ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் விருச்சிக லக்கினத்திற்குப் புதன் மாரகராகின்றார். சனி எட்டிற்குடையவரான புதனுடன்கூடி இருப்பதால் துய்யகேரளம் எட்டாம்பாவம் இருபதாவது பாடல் பிரகாரமும் ஜாதக சந்திரிகை இருபத்துமூன்றுவது சுலோகப் பிரகாரமும் சனி தன் புக்தியில் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

ஜாதகருடைய மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 67-0-0 முதல் வயது வருஷம் 68-0-0 முடியும் வரையிலும் குருதசையில் குரு புக்தி நடக்கின்றது. சிம்மலக்கினத்திற்கு குரு எட்டிற்குடையவரான படியால் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை இருபத்தைந்தாவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம்பாவம் பதினொன்றாவது பாடல் பிரகாரமும் குரு தனது தசையில் தனது புக்தியில் ஜாதகருக்கு மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகின்றார். அப்போது சந்திரனுக்குப் பன்னிரண்டில் சனி ஏழரைநாட்டுச் சனியாகவும் வருகின்றார்.

---

*ஜாதகாலங்காரம் 590-ஆவது பாடலைப் பார்க்கவும்.

32. தேகத்தில் பருவுங் கண்டு செல்வனும் மரண மாகித்
தோகைமேல் சிற்றூர் தன்னில் சுதனுமே ரெட்டி வம்சம்
பாகமா யுதிப்பான் மேலும் பார்பூமி யதிக முண்டாய்
ஏகலுய்த் தனங்கள் பெற்று இசைகுவா னிவனே யம்மா.

32. ஜாதகர் தன்னுடைய உடம்பில் பருவு உண்டாகி அதனால் இறந்து தோகை (மைலம்) என்ற ஊருக்கு மேற்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் ரெட்டியாருடைய குலத்தில் மறுஜன்மத்தில் மேன்மையாகப் பிறப்பார். மேலும் இவர் பூமி நிலம் இவைகளை அதிகமாக அடைந்து செல்வமுடையவராகித் தனியாக் விருந்து வாழ்வாரென்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே!

ஜாதகருடைய தொழில்

33. ஜாதகன் தொழிலே யாங்கள் சாற்றுவோம் பூமி யாலும்
நீதியாய்ச் செட்டு வாலும் நேர்மூத்த சோதரி யாலும்
போதகக் கல்வி யாலும் பொருளது அதிகஞ் சேர்ப்பன்
பார்தனி லதிக யோகம் படைத்திடு வானு மென்றோம்.

33. ஜாதகருடைய தொழிலை இனிமேல் நாங்கள் சொல்லுகின்றோம். ஜாதகர் நியாயமான வியாபாரத்தாலும், அடுத்த மூத்தசகோதரியினுடைய உதவியாலும், தன்னுடைய வித்தையினாலும் அதிகமாகப் பொருளைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் பூமியில் அதிக யோகத்தை அனுபவிப்பார் என்று சொல்லுகின்றோம்.

34. அன்னவன் ஜனனகால [1]மன்றியி [2]லாதி பாகம் கடை
உன்னிய வருஷ மைந்தும் உயர்திங்கள் மூன்று [3]மற்றை
பன்னிய பலனே யாங்கள் பகருவோம் பின்பா கத்தில்
உன்னத யானை பெற்ற உத்தமி! மொழிகுன் றுதே.

34. ஜாதகருடைய ஜனன காலத்தில் ஜன்ம நட்சத்திரமான மூல நட்சத்திரத்தின் முதல் பாதத்தின் கடைசியாகும். ஜனன காலத்தில் கேது தசையில் ஐந்து வருஷமும் மூன்று மாதமும் இருப்பு ஆகும். இந்தத் தசையின் பலாபலன்களை நாங்கள் அடுத்த பாகத்தில் சொல்லுகின்றோம். மேன்மையான யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லியது தவறிடாமல் நடக்கும்.

---

1. மூலம்
2. ஓராவது பாதம் கடைசியில்
3. கேது

ஜாதகம் 85

1. மதி[1]கன்னி புதனுந் தேளில் [2]மங்கலன் [3]மழைக்கோள்[4]
[சிம்மம்
நிதிகுரு விரவி[5] கோலில் [6]லீலனுங் [7]கறுங்கோள் [8]வண்டி[9]
அதிசிகி [10]மானில் [11]தங்க அரியுமே [12]ஜன்ம மாகக்
கதிருடன் [13]நவக்கோ ளிவ்வாறு சார்ந்ததால்
[பலன்சொல் வீரே.

1. சந்திரன் கன்னியிலும், புதன் விருச்சிகத்திலும், அங்காரகனும் சுக்கிரனும் சிம்மத்திலும், செல்வத்தைக் கொடுக்கக்கூடிய குருவும் சூரியனும் துலாத்திலும், சனியும் ராகுவும் கடகத்திலும், கேது மகரத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் சிம்மமாகி இவ்விதமாகச் சூரியன் முதலான் ஒன்பது கிரகங்களும் இருந்தால் பலாபலன்களை, முனிவர் வரே ! சொல்லுவீராக.

கிரகநிலை

	இராசி சக்கரம்		சனி ராகு
கேது			லக்கினம் அங்காரகன் சுக்கிரன்
	புதன்	குரு சூரியன்	சந்திரன்

சித்திரை 2-ஆம் பாதம் அங்காரகதசை.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் குருவும், மிதுனத்தில் அங்காரகனும், கடகத்தில் புதனும், சிம்மத்தில் கேதுவும், கன்னியில் சந்திரனும், துலாத்தில் சூரியனும், விருச்சிகத்தில் சனியும், தனுசில் சுக்கிரனும், கும்பத்தில் ராகுவும் ஆகும்.

---

1. சந்திரன்
2. விருச்சிகம்
3. அங்காரகன்
4. சுக்கிரன்
5. சூரியன்
6. துலாம்
7. சனி
8. ராகு
9. கடகம்
10. கேது
11. மகரம்
12. சிம்மம்
13. சூரியன்

ஜாதகர் பிறந்த நகரச் சிறப்பு

2. அம்மையுங் கேட்கும் போது
அத்திரி முனிவர் சொல்வார்
செம்மையா யாண்பால்
ஜன்மம் ஜனித்தயில் வடதென் வீதி
இம்மையா யிந்திர லோக்கம்
எமன்திசை கணேசன் காளி
துன்மை யில்லாத தீர்த்தந்
தோன்றிடு மென்று சொன்னேம்.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது அத்திரி மகாமுனிவர் சொல்லுகின்றார். பெருமையாக ஓர் ஆண் குழந்தை பிறக்கும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் கிழக்குத் திக்கைப்பார்த்த வாயிற்படியை உடையாகும். விநாயகக் கடவுளின் கோயிலும் காளியம்மன் கோயிலும் கெடுதியில்லாத சுத்தமான ஜலத்தையுடைய ஒரு புண்ணிய தீர்த்தமும் அஃதாவது நீர்வசதியும் தெற்குத்திக்கில் இருக்கும் என்று சொல்லுகின்றோம்.

3. உத்தர திக்கில் தந்தி யுயர்கோரி சமாதி யுண்டு
பத்தினி தவங்கள் செய்யும் பங்கைய நதியுங் காணும்
அத்தியு மவ்வூர் வாசம் அனேக ஆலயங்க ளுண்டு
தத்திய பேரூர் தன்னில் ஜனிப்பனுங் கங்கை சேயாய்.

3. வடக்குத்திக்கில் ஓர் ஆண்யானையும், மேன்மையான முஸ்லிம் மசூதியும் சமாதியும் இருக்கும். பார்வதியம்மையார் தவங்கள் செய்கின்றதும் தாமரைப் புஷ்பங்களை உடையதுமான ஒரு நதியும் (கம்பா நதியும்) இருக்கும். இந்தப் பட்டணத்தில் ஒரு பெண் யானையும் வாசஞ்செய்து கொண்டிருக்கும். இந்தப் பட்டணத்தில் அநேகவிதமான கோயில்களும் உண்டு. இவ்விதமான ஒரு பெரிய நகரத்தில்* இந்த ஜாதகர் கங்கைகுலம் என்கின்ற வேளாளர் குலத்தில் வந்து பிறப்பார்.

குறிப்பு:—இந்தப் பெரிய நகரம் பின்னால் வருகின்ற இருபத்தைந்தாவது பாடலிலிருந்து காஞ்சிமாநகரம் எனப்புலப்படுகின்றது.

4. ஜாதகன் தந்தை மாதுர்
சகோதரர் களத்திர புத்திரர்
மேதினில் மாமன் யோகம்
விளம்புவோம் முன்பின் ஜன்மம்
போதவே குடும்பச் செய்கை
புகலுவோ மிந்நூல் தன்னில்
மாதவர் துதிக்கா நின்ற
மங்கையே மேலுங் கேளே.

4. ஜாதகருடைய தகப்பனர், தாயார், சகோதரர்கள், மனைவி, சந்ததி, அம்மான் ஆகிய இவர்கள் எல்லோருடைய யோக பலாபலன் களையும், மேலும் முன் ஜென்மம் மறு ஜன்மம், குடும்பத்தினுடைய விஷயங்கள் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லு கிறோம். முனிவர்கள் தொழுகின்ற பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் சொல்லப்போகின்றதைக் கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனர் விஷயம்

5. தந்தையின் றுணைவர் தம்மைச் சாற்றவே பலத்தைக் [காணும்
பந்தமா யவன் குணத்தைப் பகருவோஞ் சிவந்த மேனி
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குகள் தப்பா ஞகுஞ்
சந்ததம் ஒடிச்சல் தேகி சதாசிவ பூசை செய்வன்.

5. ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லு வதற்கு யாதொரு வலிவும் காணப்படவில்லை; அஃதாவது தகப்பனருக் குச் சகோதரர்கள் கிடையாது*. தகப்பனருடைய குணாதியங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடைய வர். இவர் தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடுபோடுவார். இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். இவர் எப்போதும் நீண்டு ஒல்லியாகவுள்ள தேகத்தையுடையவர். இவர் எப்பொழுதும் சிவபெருமானைப் பூஜை செய்வார்.

குறிப்பு :—தகப்பனரின் சகோதர விஷயம் :—தகப்பனருடைய லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மேஷமாகும். இதற்கு இளைய சகோதர ஸ்தானம் மிதுனம். இதற்கு அதிபதியும் இளைய சகோதர காரகனு மாகிய புதன் மேஷத்திற்கு எட்டிலும் மிதுனத்திற்கு ஆறிலும் மறைந் திருக்கின்றார். மேலும் மிதுனத்தைக் குரு மேஷத்திற்கு விரயாதி பதியாகிப் பார்க்கின்றார். ஆகையால் இளைய சகோதர பாவத்திற்குத் தோஷம் ஏற்பட்டிருக்கின்றது மேலும் மேஷலக்கினத்திற்கு மூத்த சகோதர ஸ்தானம் கும்பம். இதை அங்காரகன் எட்டிற்குடைய வராகிப்பார்ப்பது தோஷமாகும். கும்பத்திற்குடைய சனி இராகு வுடன் கும்பத்திற்கு ஆறில் இருப்பது தோஷமாகும். மூத்த சகோ தரகாரகனுகிய குரு சூரியனுடன் கூடி இருப்பது தோஷமாகும். புதனைக் கேதுவும் அங்காரகனும் பார்ப்பதுகூட இளைய சகோதரர் களுக்குத் தோஷமாகும்.

6. அடக்கமு முடை யனுவன் ஆசாரன் பலபேர்க் கன்பன்
துடுக்கென வார்த்தை கூறன் சுகபுஷிப் புடைய னுவன்
இடுக்கங்க ளெண்ணுச் சித்தன் இவனுகி கல்வி மானும்
நடக்கையு நல்ல தாகும் நாற்றிசை கீர்த்தி யேற்பன்,

6. ஜாதகருடைய தகப்பனார் பொறுமையும் அமைதியும் உடையவராவர். இவர் ஒழுக்கம், சுத்தம் வழிபாடு ஆகிய இவைகளை உடையவர். பலருக்கு இஷ்டமானர். பிறர் திடுக்கிடும்படியான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். சுகமாகச் சாப்பிடக்கூடியவராவார். இவர் பிறருக்குக் கெடுதிகளை நினைக்காத மனத்தையுடையவராவர். இவர் நுட்பமான புத்தியையுடையவர். வாசித்தவராவார். இவருடைய நடவடிக்கையும் நல்லதாகவிருக்கும். இவர் எல்லாத்திக்குகளிலும் பெருமையும் புகழும் உடையவராவர்.

7. பூமியும் பரிபா லிப்பன் புண்ணிய மனத்த னாகும்
நேமியோர்க் குதவி செய்வன் நிதானமாய் வார்த்தை
[கூறுவன்
சேமமாங் குடும்ப மூள்ளான் சித்திர வீடு செய்வன்
தீமைய யெண்ணுச் சித்தன் சென்றிடம் பெருமை
[யுள்ளான்.

7. ஜாதகருடைய தகப்பனார் நிலங்களை வைத்துக்கொண்டு ஆளுவார். நல்ல பரிசுத்தமான மனத்தையுடையவராவார். இவர் பூமியிலுள்ளவர்களுக்கு உபகாரஞ் செய்வார். சாந்தமாகவும் மெதுவாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் சௌக்கியமாயுள்ள குடும்பத்தையுடையவர். சித்திரங்களையுடைய அழகான வீட்டைக்கட்டுவார். இவர் யாருக்குங் கெடுதிகளை நினைக்காத மனத்தையுடையவராவர். இவர் தான் போகின்றவிடங்களில் எல்லாம் மேன்மையையும் புகழையும் அடையக்கூடியவராவர்.

8. உத்தமர் நேசங் கொள்வன் உபதேசங் கொள்வா னாகும்
நித்தியா னந்த ஞான நிமலன்மேல் பத்தி பூண்பன்
புத்திமான் பொறுமை யுள்ளான் பூஷணஞ் சேர்ப்பா
[னாகும்
வித்தகி பூசை செய்வன் மேதினில் நிருஷி யுள்ளான்.

8 ஜாதகனுடைய தகப்பனார் நல்லவர்களுடைய சிநேகத்தை அடைவார். குருவின் உபதேசத்தைப் பெற்றுக்கொள்ளுவார். இவர் மோட்சத்தையும் ஞானத்தையும் தருகின்ற கடவுளின்மேல் அன்பு, விசுவாசம் இவைகளை உடையவராவர். இவர் அறிவுடையவர், சாந்தமான குணத்தையுடையவர், ஆபரணங்களைச் சேர்த்து வைப்பார், பார்வதியம்மையைப் பூஜை செய்வார். இவர் பூமியில் விவசாயத் தொழிலைச் செய்வார்.

9. ஆள்காரருடைய ஜகும் அனேக தர்மங்கள் செய்வன்
பால்பாக்கிய விருத்தியுள்ளான் பந்துவை யாதரிப்பன்
சாலவே சகடமுள்ளான் சத்தியந் தவறு ஜகும்
வேலனைப் பெற்ற மாதே விளம்பின மொழி குன்றுது.

9. ஜாதகருடைய தகப்பனார் வேலைக்காரர்களையுடையவராவர். அநேகவிதமான தர்ம காரியங்களைச் செய்வார். இவருக்குப் பசுசம்பத்து பால் சம்பத்து ஆகிய இவை விருத்தியாகும். இவர் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவர். நல்ல வாகன வசதியை உடையவர். இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். அறுமுகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் அஃதாவது பலாபலன்கள் தவறாமல் நடக்கும்.

ஜாதகருடைய குணதிசயங்கள் முதலியன

10. இப்படி யிருக்குந் தந்தை யிவனுக்கு உதித்த பாலன்
செப்புவோம் பலன்கள் யாவுஞ் சிவந்திடு மேனி யாவன்
ஒப்புடன் ஒடிச்சல் தேகி யுறுதியா மனத்த ஜகும்
மைப்படி மனையாள் மோகன் மர்மவான் கல்வி கொஞ்சம்.

10. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் வந்து பிறந்தார். ஜாதகருடைய பாலாபலன்கள் எல்லாவற்றையும் இனிமேல் சொல்லுகின்றோம். இவர் சிவப்பான நிறமுள்ள தேகத்தையுடையவராவர். இவர் ஒழுங்கான மெலிந்த தேகத்தையுடையவர். திடமான மனத்தையுடையவராவார். இவர் தன்னுடைய மனைவியிடத்தில் காம ஆசையையுடையவராவர். இவர் இரகசியமான மனத்தையுடையவர். இவருக்குப் படிப்பு கொஞ்சமாக விருக்கும்.

11. நித்திரை விருப்ப முள்ளான் நீள்நிலம் பரிபா லிப்பன்
குத்தமில் லாத தேகன் கோபமுங் கொஞ்ச முள்ளான்
சத்துரு யில்லா ஜகுந் தன்பந்து மெச்ச வாழ்வன்
சித்தச னெப்ப தாகுஞ் சீலனு மென்று சொன்னேம்.

11. ஜாதகர் தூங்குவதில் ஆசையையுடையவர். நீண்ட விசாலமான நிலங்களை வைத்துக்கொண்டு காப்பாற்றுவார்; ஆளுவார். இவர் யாதொரு அவயவபங்கம் இல்லாத தேகத்தையுடையவர். இவர் கொஞ்சங் கோபமான குணத்தையுமுடையவராவர். இவருக்கு விரோதிகள் கிடையா. இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னைப் பெருமையாகப் பாராட்டும்படியான நிலையிலிருந்து வாழ்வார். இவர் மன்மதனுக்குச் சமானமானவராக விருப்பார். இவர் நல்ல ஒழுக்கம், குணம், சுத்தம் ஆகிய இவைகளையுடையவர் என்று சொல்லுகிறோம்.

12. வண்டி வாகனமு முள்ளான் வணிபங்கள் செய்வா னுகும்
குண்டைகோ விருத்தி யுள்ளான் குணமது யிரண்டு
[முள்ளான்
எண்டிசைக் கீர்த்தி யுள்ளான் இனபந்து மெச்ச வாழ்வன்
கண்டித வார்த்தை யுள்ளான் காதலி மேலுங் கேளே.

12. ஜாதகர் வண்டி முதலிய வாகனவசதிகளையுடையவர். இவர் வியாபாரங்களைச் செய்பவராவர். எருதுகள் பசுக்கள் ஆகிய இவைகள் இவருக்கு விருத்தியாகும். இரண்டுவிதமான குணங்களையும் உடையவராவர். எல்லாத்திக்குகளிலும் இவர் பெருமையும் புகழும் உடையவராவர். தன் குலபந்துக்கள் இவரைக் கொண்டாடும் படியான நிலையிலிருந்து இவர் வாழ்வார். இவர் கண்டிதமான தும் ஒரே விதமானதுமான நிலையான வார்த்தையுடையவர். பார்வதியம்மையே! இன்னும் அதிகமாகச் சொல்லுகின்றேம். கேட்பீராக.

13. தனதானியம் விருத்தி செய்வன் சற்சன ருறவு
[கொள்வன்
மனதினில் கபடு கொஞ்ச மாதர்கள் மோக முள்ளான்
கனமுள குடும்ப முள்ளான் கரங்களில் பத்ம ரேகை
அனையவே சுழியு முள்ளா னவன்நடைச் சொகுச
[னென்றேம்.

13. ஜாதகர் பணம் தான்யம் இவைகளை விருத்தியாக்குவார் இவர் நல்ல குணங்களையுடையவருடைய சிநேகத்தையுடையவராவர். இவர் தன்னுடைய மனத்தில் சிறிது கள்ளம், கபடு, வஞ்சனை இவைகளையுடையவராவர். இவர் ஸ்திரீகளின்மேல் காமஆசையையுடைய வராவர். மேன்மையான குடும்பத்தையுடையவராவர். இவருடைய இரண்டு உள்ளங்கைகளிலும் பத்மரேகை என்ற ஒருவிதமான தாம்பரை ரேகை இருக்கும். இவர் தன்னுடைய தேகத்தில் சுழியையும் உடையவராவர். இவர் அழகான நல்ல நடையையும் நடவடிக்கையையும் உடையவராவர் என்று சொல்லுகின்றேம்.

ஜாதகருடைய சகோதரர்கள் விஷயம்

14. ஜாதகன் தூணவர் தம்மைச் சாற்றவாண் பலமு மில்லை
நீதியாய்க் கன்னி யொன்று நிலைத்திடுந் தீர்க்க மாக
மாதிவள்தன் னில்லத்தில் வளருவா ளென்று சொன்னேம்
தீதிலா முனிவர் யாங்கள் சொலுமொழி குன்றி டாது.

14. ஜாதகருடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவருக்கு ஆண் சகோதரர் கிடையாது. ஒரு சகோதரி மட்டும் நீண்ட ஆயுளுடன் நிலைத்திருப்பாள். இவள் தன்னுடைய தகப்பனுருடைய

வீட்டிலேயே இருந்துகொண்டு வாழ்வாள் என்று சொல்லுகிறோம். குற்றமில்லாத முனிவர்களாகிய நாங்கள் சொல்லுகின்ற வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

குறிப்பு : சகோதரர் விஷயம் :—இளைய சகோதரஸ்தானம் மூன்றும் இடமாகிய துலாம் ஆகும். இதற்குரிய சுக்கிரன் அங்காரகனுடன் கூடி இருப்பது தோஷமாகும். இளைய சகோதர காரகராகிய புதனை அங்காரகனும் கேதுவும் பார்ப்பது தோஷமாகும். எட்டிற்குடைய குரு மூன்றில் இருப்பதும் தோஷமாகும். மூன்றில் சூரியன் இருப்பதால் ஸம்ஸ்கிருத சம்புஹோரா பிரகாசா சகோதரபாவம், ஐம்பத்தேழாவது சுலோகம், ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் எத்தனை சகோதரர் பிறந்தாலும் அத்தனை சகோதரர்களும், மூத்த சகோதரர்களும் இறந்துவிடுவார். மூத்த சகோதர ஸ்தானம் பதினோராவது பாவமாகிய மிதுனமாகும். இதை அஷ்டமாதிபதியாகிய குரு பார்ப்பது தோஷமாகும். மூத்த சகோதர காரகனுகிய குரு சூரியனுடன் இருப்பது தோஷமாகும். மூத்த சகோதர ஸ்தானாதிபதியாகிய புதனைக் கேதுவும் அங்காரகனும் பார்ப்பதும் தோஷமாகும். ஆகையால் ஆண் சகோதரர்கள் நிலைத்திருப்பது கஷ்டம். ஆனால் சுக்கிரனும் புதனும் கேந்திரங்களில் இருப்பதால் பெண் சகோதரம் கொஞ்சமாக நிலைத்திருக்கக்கூடும். சுக்கிரன் பிதிருஸ்தானாதிபதியாகிய அங்காரகனுடன் கூடி இருப்பதாலும் புதன் இந்த அங்காரகன் வீட்டில் நான்கில் இருப்பதாலும் இந்தத் தங்கை தாய் தகப்பனாரது வீட்டிலேயே இருப்பாள்.

ஜாதகருடைய விவாகம்

15. இவனுடை மணத்தின் காலமியம்புவோ மீரட்டாண்டில்
அவனியில் துணைவி புத்திரி யவளையே கொள்வா
[னென்றோம்
நவமதில் புத்திர பாகம் நவிலுவோ மாண்பா லிரண்டு
பவழுள பெண்பா லிரண்டு பருகிடு மிவனுக் கேதான்.

15. ஜாதகருக்கு விவாகம் நடக்குங் காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பதினேழாவது வயதில் இவர் தன்னுடைய சகோதரியின் மகளை விவாகஞ் செய்துகொள்வார் என்று சொல்லுகின்றோம். ஜாதகருக்குச் சந்தான விஷயத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறப்பார்கள்.

குறிப்பு : விவாக விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 15 முதல் வயது வருஷம் 16 முடியும் வரையில் ராகு தசையில் கேது புக்தியும் சுக்கிர புக்தியும் நடக்கின்றன. களத்திர ஸ்தானமாகிய ஏழாவது

பாவத்திற்குடைய சனியுடன் இராகு கூடி பன்னிரண்டாவது. பாவத்தில் இருக்கின்றார். இந்தப் பன்னிரண்டிற்குடைய சந்திரன் குடும்ப ஸ்தானமாகிய இரண்டாவது பாவத்திலிருக்கின்றார். இராகு சந்திரனையும் இந்த இரண்டாவது பாவத்தையும் பார்க்கின்றார். இராகு பத்தாவது பாவத்தையும் பார்க்கின்றார். இராகு போககாரகனுவான். ஆகையால் இராகு தனது தசையில் ஜாதகருக்கு விவாகஞ் செய்து வைக்கும் அமைப்பு உடையவராக விருக்கின்றார். இதற்கு ஆதாரமாக ஜாதகபாரிஜாதம் பதினென்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகத்தைப் பார்க்கவும். லக்கினத்தில் சுக்கிரனுகிய ஒரு சுபக்கிரகம் இருப்பதும், லக்கினத்திற்குக் கேந்திரங்களில் சுக்கிரனும் புதனும் இருப்பதும் தமிழ் ஜாதகசிந்தாமணி ஏழாம் பாவம் தொள்ளாயிரத்து எழுபத்துமூன்றுவது பாடல் பிரகாரம் வாலிப விவாகத்திற்கு அனுகூலமான அம்சமாகும். சுக்கிரன் பத்திற்குடையவராகியும் களத்திரகாரகனுகியும் ஒன்பதிற்குடையவரும் போக ஸ்தானமாகிய நான்கிற்குடையவருமான அங்காரகனுடன் கூடி லக்கினத்தில் இருந்து கொண்டு ஏழைப் பார்க்கின்றார். ஆகையால் சுக்கிரன் தனது புக்தியில் விவாகஞ் செய்து வைக்கக் கேதுவைவிட அதிக அமைப்புடையவராக ஜாதக பாரிஜாதம் பதினென்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் இருக்கின்றார். இந்தப் பாடலில் ஜாதகருடைய மனைவி தன்னுடைய சகோதரியின் புத்திரி என்று சொல்லி இருக்கின்றது. களத்திர ஸ்தானாதிபதியாகிய சனி பன்னிரண்டில் இருந்து கொண்டு இரண்டாவது வீடாகிய குடும்ப ஸ்தானத்தைப் பார்க்கின்றார். சந்திர லக்கினத்திற்குக் களத்திர ஸ்தானமாகிய மீனத்திற்குடைய குரு சந்திரனுக்கு இரண்டாவது வீடாகிய குடும்ப ஸ்தானத்தில் பிதிருகாரகனுகிய சூரியனுடன் கூடி இருக்கின்றார். மேலும் லக்கினாதிபதியாகிய சூரியனும் களத்திரகாரகனுகிய சுக்கிரனும் பரிவர்த்தனை அடைந்திருக்கின்றார்கள். ஆகையால் களத்திரம் ஜாதகருடைய குடும்பத்தையும் பிதிருவர்க்கத்தையும் சார்ந்தது என்று சொல்லக்கூடும்.

ஜாதகரின் தாயாருடைய விஷயம்

16. மாதிரு குணத்தை யாங்கள் வரைகிறோஞ் சிவந்த மேனி
நீதியா யொடிச்சல் தேகி நிகர்கற்பு மூடைய ளாகும்
மாதவர்க் கன்ப ளாவள் வந்தவர்க் கன்ன மீவள்
நீதிலாக் குணத்தா ளாகுந் திருமக ளொப்ப தாகும்.

16. ஜாதகரின் தாயாருடைய குண குணங்களைப்பற்றி நாங்கள் சொல்லுகின்றோம். இவள் சிவப்பான நிறத்தையுடையவள். இவள் ஒல்லியான தேகத்தை உடையவள். மேன்மையான கற்பை உடைய வளாவள். முனிவர்களுக்கு இஷ்டமானவளாவள். தன்னிடம் வந்தவர்

களுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். குற்றமில்லாத நல்ல குணங்களை உடையவளாவள். இவள் லக்ஷிமிக்குச் சமானமானவளாக விருப்பாள்.

17. புத்திமான் பொறுமை சாலி புண்ணிய மனத்தா ளாகுங்
குத்தமில் லாத நெஞ்சங் கூறிய மிருது வார்த்தை
வித்தகி யதிர்ஷ்ட சாலி வரனுக்கு நேய முள்ளாள்
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

17. ஜாதகருடைய தாயார் அறிவாளியாக விருப்பாள். சாந்த முடையவளாவள். நல்ல மனத்தையுடையவள். கள்ளம் கபடு வஞ்சனை இல்லாத மனத்தையுடையவள். இனிப்பானதும் சாந்தமானதுமான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் அதிர்ஷ்டம் உடையவள். தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவள். யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே! இன்னும் அதிகமாக நாங்கள் சொல்லப்போவதைக் கேட்பீராக.

ஜாதகனின் தகப்பனுடைய முன்ஜன்மம்

18. இப்படி முனிவர் கூற
ஈச்வரி கேட்க லுற்றாள்
செப்புவாய் தந்தைக் கேதான்
சிறந்ததோர் முன்ஜன் மத்தை
யொப்புடன் சொல்லு மென்ன
யுரைக்கிறார் முனிவர் தாமு
மப்பணி சடையோன் தேவி
யருளுவோங் கேளு மம்மா.

18. இவ்விதமாக அத்திரிமகரிஷியானவர் சொல்லவே, பார்வதியம்மையார் கேட்கின்றார். ஜாதகரின் தகப்பனுடைய பூர்வஜன்மத்தைப் பற்றிச் சொல்லுவீராக. இதன்மேல் முனிவர் சொல்லுகின்றார். தன்னுடைய ஜடையில் சர்ப்பத்தைத் தரித்துக் கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றோம். கேட்பீராக.

19. பாண்டிய தேசந் தன்னில் பறங்குன்றம் நகரி லேதான்
பூண்டசெங் குந்தர் வம்சம் பிறந்துமே தனங்கள் பெற்று
வேண்டிய வணிபஞ் செய்து விளைபுல மதிகஞ் செய்து
சான்றோர்கள் பெருமை பூண்டு தனிகனும் வாழ்ந்தா
னம்மா.

19. ஜாதகருடைய தகப்பனார் பாண்டிய தேசத்தைச் சேர்ந்த பறங்குன்றம் என்ற திருப்பன்றங்குன்றம் என்னும் பெரிய கிராமத்தில் செங்குந்தர் என்ற கைக்கோளர் குலத்தில் முன்ஜன்மத்திற் பிறந்து, செல்வமுடையவராய் அநேக விதமான வியாபாரங்களைச் செய்து கொண்டு, நன்றாய் விளையக்கூடிய நிலங்களை அதிகமாக உடையவராகிப் பெரியோர்களுடைய கிருபையை அடைந்து, பணக்காரராக விருந்து வாழ்ந்து வந்தார். பார்வதியம்மையே!

20. அந்நகர் தன்னி லேதா னறுமுக ஞல யத்தில்
பன்னியே தீபம் வைத்துப் பாரினில் ரதமுஞ் செய்து
தன்னிலே வருவோ ருக்குத் தாகப் பந்தலு மமைத்து
உன்னத வகதி கட்கு வுத்தம னன்ன மீந்தான்.

20. ஜாதகருடைய தகப்பனார் அந்தத் திருப்பறங்குன்றத்தில் உள்ள ஓர் ஆறுமுக ஸ்வாமியாகிய முருகக்கடவுளின் கோயிலில் ஒரு விளக்கை ஏற்றி வைத்ததுமன்றி அந்தக் கோயிலுக்காக ஒரு திருத்தேரையும் செய்து வைத்து, அவ்விடத்திற்கு வருகின்றவர்களுக்குத் தாகவிடாயைத் தணிப்பதற்காக ஒரு நீர்மோர் பந்தலையும் ஏற்படுத்தி, மேன்மையான உயர்ந்த நிலையிலுள்ள திக்கற்றப் பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு வந்தார்.

21. சேதுவில் தீர்த்தந் தோய்ந்து ஸ்ரீராமன் பூஜை செய்தும்
அதிதியர் பரமனுக்கு மர்ச்சித்துத் தான மீந்து
நீதியா யுள்ளூர் மீண்டு நிருபனுஞ் சிலநாள் சென்று
வேதனை யில்லா தாகி விந்தகன் மரண மானான்.

21. ஜாதகருடைய தகப்பனார் சேது ஸ்தலத்திலுள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பரதேசிகளுக்கு அதிபதியாகிய சிவபெருமானுக்கு அர்ச்சனை பூஜை முதலியவைகளைச் செய்து, தருமத்தையுஞ் செய்து, பிறகு நியாயமாக நல்லவழியாகத் தன்னுடைய ஊருக்குத் திரும்பி வந்து சிலகாலம் வாழ்ந்து பிறகு கஷ்டமில்லாமல் இறந்து விட்டார்.

ஜாதகனின் தகப்பனருடைய மறுஜன்மம்

22. கஞ்சனல் வரையப் பட்டுக்
காளையு மிச்சென் மத்தில்
மிஞ்சிய கங்கை வம்ச
மீதினி லுதித்தா னம்மா

தஞ்சமா யிவன்பின் ஜன்மஞ்
சாற்றுவோ மவ்வூர் தன்னில்
வஞ்சியே பிரம்ம சேயாய்
வருவனு மென்று சொன்னேம்.

22. ஜாதகருடைய தகப்பனார் பிறகு பிரமதேவனால் பிரம்லிபி யுடன் எழுதப்பட்டு மேன்மையான சிறந்த கங்கைகுலம் என்ற வேளாளர் குலத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். பார்வதியம்மையே! ஜாதகரின் தகப்பனாருடைய பின்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் அதே ஊராகிய காஞ்சிமாநகரில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாக வந்து பிறப்பார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

23. பின்ஜன்மந் தன்னி லேதான் பிஞ்ஞகன் தனைப் பூசித்து
இலச்சையில் லாமல் வாழ்ந்து நாதர்பால் செல்வா னம்மா
அச்சுதன் தங்கை யாளே யறைகிறோஞ் ஜாத கர்க்கு
உச்சித முன்ஜன் மத்தி லுறுந்தில்லை மேல்பா லாக ;

23. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மறுஜன்மத்தில் சிவபெருமானைப் பூஜைசெய்து அச்சம் கஷ்டம் இவை இல்லாமல் வாழ்ந்து கடவுளுடைய பதவியை அடைவார். பார்வதியம்மையே! மகாவிஷ்ணுவினுடைய இளையசகோதரியாகிய பார்வதியம்மையே! ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். தன்னுடைய முன்ஜன்மத்தில் தில்லை என்று சொல்லப்பட்டச் சிதம்பரத்தின் மேற்கில் ;

24. வன்னிய மரபில் தோன்றி
மனைவிமைந் தருமுண் டாகிப்
பன்னிய பயிரி னுலே
பாலகன் பெருமை பூண்டு
அன்னியர் மெச்ச வாழ்ந்து
யனேகமாய்த் தனங்கள் பெற்றுப்
பின்னமில் லாமல் வாழ்ந்து
பெரியோர்க ளுறவு கொண்டான்.

24. ஜாதகர் வன்னியருடைய குலத்தில் பிறந்து மனைவி, மக்கள் இவர்களை உடையவராகி விவசாயத் தொழிலைச்செய்து அதனாலே பெருமையையும் கீர்த்தியையும் அடைந்து, பிறர் இவரை மெச்சும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்ந்து, திரவியத்தை அதிகமாகவடைந்து, யாதொரு குற்றமும் தோஷமுமில்லாமல் வாழ்ந்து, பெரிய மனிதர்களுடைய சிநேகிதத்தையும் அடைந்தார்.

25. தென்தேசத் தலங்கள் யாவுந்
தீர்த்தங்கள் தோய்ந்து மேதான்
அன்புட னுள்ளூர் மீண்டு
அவனுமே மரண மாகி
இன்பமாய்க் காஞ்சி தன்னில்
இவனுமே வுதித்தா னம்மா
துன்மையில் லாமல் வாழ்வன்
சுந்தரி மேலுங் கேளே.

25. ஜாதகர் பிறகு தென்தேசத்திலுள்ள எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து பிறகு ஆசையுடன் தன்னுடைய கிராமத்திற்கு வந்து பிறகு இறந்து சுகமாய்க் காஞ்சிமாநகரத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார். யார்வதியம்மையே! நாங்கள் இன்னும் அதிகமாகச் சொல்லப் போவதைக் கேட்பீராக.

ஜாதகனின் தாயாருடைய சகோதரபாவம்

26. முனிவரிவ் வாரூய்க் கூற
மொழிவரே புஜண்டர் தாமும்
இனிமையா யம்மா துவுக்கு
விசைந்ததோர் துணைவர் தம்மைக்
கனிவுட னுரைப்பா ரம்மா
கழறுவார் முனிவர் தாமும்
அனையவே யாண்பா லொன்று
வறைகிறேரும் பெண்பா லைந்து.

26. இவ்விதமாக அத்திரிமகமுனிவர் சொல்லவே, புஜண்ட மகாரிஷி சொல்லுகின்றார். ஜாதகரின் தாயாருடன் பிறந்தவர்களைப் பற்றி இனி அத்திரிமகரிஷி ஆசையுடன் சொல்லுவார். பார்வதி யம்மையே! அதன்மேல் அத்திரிமகாமுனிவர் சொல்லுகின்றார். தாயாருக்கு ஓர் ஆண் சகோதரமும் ஐந்து பெண் சகோதரங்களும் உண்டு என்று சொல்லுகின்றேரும்.

ஜாதகனின் தகப்பனுருக்குக் கர்மம்

27. இவர்களுந் தீர்க்க மாகு மிலகாது மற்ற வெல்லாம்
பவமூள கர்ம காலம் பகருவீ ரென்று கேட்க
நவனியி லிருபா னைந்தில் நற்குரு தசையி லேதான்
தவசனி புசிப்பி லேதான் சாற்றுவோந் தந்தைக்
[கேதான்.

27. தாயாருடைய சகோதரர்களாகிய இந்த ஆறு பேர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இதர சகோதரர்

களெல்லாம் இறந்து விடுவார்கள். ஜாதகரின் தகப்பனாருக்கு எப் போது கர்மம் நேரிடும் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே, ஜாதகருக்கு இருபத்தைந்தாவது வயதில் குருதசையில் சனிபுக்தியில் இவருடைய தகப்பனார் இறந்து விடுவார் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—தகப்பனாருடைய மரண காலம் : ஜாதகருக்கு வயது வருஷம் 24-0-0 முதல் வயது வருஷம் 25-0 0 முடியும் வரையிலும் குருதசை யில் சனிபுக்தி நடக்கின்றது. சிம்மலக்கினத்திற்குப் பிதிருஸ்தான மாகிய ஒன்பதாவது பாவம் மேஷம் ஆகும். இந்த மேஷலக்கினத் திற்கு மாரகஸ்தானமாகிய ஏழாவது பாவத்தில் குரு இருக்கின்றார். பராசரஹோரை, ஜாதகசந்திரிகை இருபத்துமூன்றுவது சுலோகப் பிரகாரம் குரு தன்னுடைய தசையில் பிதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். பராசரஹோரை, ஜாதக சந்திரிகை நாற்பத்துநான்காவது சுலோகப் பிரகாரம் மேஷலக்கினத் திற்குச் சனி மாரகராகின்றார். இந்தச் சனி பதினேராவது பாவமான மாரகஸ்தானத்திற்கு அதிபதியாகி மேஷத்தையும் பார்க்கின்றார். ஆகையால் சனி தன் புக்தியில் பிதாவுக்கு மாரகத்தைச் செய்யும் அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

ஜாதகனின் தாயாருக்குக் கர்மகாலமும் ஜாதகருடைய மரணகாலமும்

28. அதற்குமேல் ஆறுண் டில்தான்
அரசன்தன் தசையி லேதான்
நிதிபுகர் புசிப்பி லேதான்
நிகர்மாதிரு கண்ட மாகுஞ்
சதமான ஜாத கர்க்குச்
சாற்றுவோ மன்பா லலில்
விதவித நோய்கள் கண்டு
மேலிந்திடு முடலந் தானும்.

28. இதற்குமேல் ஆறுவது வருஷத்தில் அரசன் என்ற குரு வினது தசையில் புகர் என்ற சுக்கிரனதுபுக்தியில் ஜாதகருடைய தாயார் இறந்து விடுவாள். ஜாதகருக்குத் தன்னுடைய ஐம்பத்து நான்காவது வயதில் பலபல விதமான நோய்கள் உண்டாகி அவை களால் தேகம் இளைத்துப்போய் விடும்.

குறிப்பு :—தாயாரது மரண காலம் : ஜாதகருக்கு வயது வருஷம் 30-0-0 முதல் வயது வருஷம் 31-0 0 முடியும் வரையிலும் குருதசையில் சுக்கிர புக்தி நடக்கின்றது. சிம்மலக்கினத்திற்கு மாதிருஸ்தானமாகிய நான் காவது வீடு விருச்சிகமாகும். ஆகையால் மாதிருலக்கினம் விருச்சிகம்.

விருச்சிகலக்கினத்திற்குக் குரு மாரகஸ்தானமாகிய இரண்டாவது வீட்டிற்கு அதிபதியாகி மாரகஸ்தானமாகிய பன்னிரண்டாவது பாவத்தில் இருக்கின்றார். ஆகையாலும் மேலும் கடகலக்கின ஜாதகங்கள் அடங்கிய சப்தரிஷி வாக்கியம் 'வால்யூம் நான்கு' என்ற புத்தகத்தில் எண்பத்துமூன்றுவது ஜாதகத்தின் இருபத்துநான்காவது பாடலின் கீழ்ச் சொல்லியுள்ள காரணங்களாலும் குரு தனது தசையில் மாதாவுக்கு மாரகஞ்செய்யும் அமைப்பு உடையவராக விருக்கின்றார். பராசர ஹோரை, ஜாதகசந்திரிகை ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் சுக்கிரன் அங்காரகன் இவர்கள் மாரகராகின்றார்கள். சுக்கிரன் மாரக ஸ்தானங்களாகிய ஏழு, பன்னிரண்டிற்கு உடையவராகி இன்னொரு மாரகாதிபதியும் லக்கினாதிபதியுமாகிய அங்காரகனுடன்கூடி இருக்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம்பாவம் இருபதாவது பாடல் பிரகாரமும் சுக்கிரன் தன் புக்தியில் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

29. பண்டிதம் பலவுஞ் செய்து பருகாது ரோகந் தானுங்
கொண்டதோ ரறுபா லுறில் கோளரி மாதந் தன்னில்
விண்டதோர் பூர்வ பக்கம் விளங்கிய தசமி தன்னில்
கண்டங்கள் கருத்தோன் பாதங் காவலன் செல்வா
[னென்றோம்.

29. பலவிதமான வைத்தியங்கள் செய்வதால் நோய்கள் வளராமல் குறைந்து விடும். ஜாதகருக்கு அறுபத்தாறுவது வயதில் அரிமாதம் என்ற ஆவணி மாதத்தில் வளர்பிறைத் தசமிதிதியில் ஜாதகர் கண்டங்களினால் இறந்து கடவுளுடைய பாதத்தை அடைவார் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு:—ஜாதகருடைய மரணம்: ஜாதகருக்கு வயது வருஷம் அறுபத்தாறில் ஆவணி மாதத்தில் புததசையில் அங்காரகபுக்தி நடக்கின்றது. சிம்மலக்கினத்திற்குப் பராசரஹோரை, ஜாதகசந்திரிகை ஐம்பத்திரண்டாவது சுலோகப் பிரகாரம் புதன், சுக்கிரன் இவர்கள் மாரகராகின்றார்கள். புதன் மாரகஸ்தானங்களாகிய இரண்டாவது பதினேராவது பாவங்களுக்கு அதிபதியாகி இருக்கின்றார். ஆகையால் புதன் தனது தசையில் ஜாதகருக்கு மாரகஞ்செய்யும் அமைப்பு உடையவராக விருக்கின்றார். அங்காரகன் மேலே சொல்லிய பிரகாரம் மாரகாதிபதியாகிய சுக்கிரனுடன்கூடி லக்கினத்தில் இருந்து கொண்டு எட்டையும் பார்க்கின்றார். ஆகையால் ஜாதகசந்திரிகை இருபத்து மூன்றுவது சுலோகப் பிரகாரம் அங்காரகன் தனது புக்தியில் ஜாதகருக்கு மாரகஞ்செய்யும் அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

ஜாதகருடைய பின்ஜன்மம்

30. இவனுடைப் பின்ஜன் மத்தை யியம்புவோ மவ்வூர்
[தன்னில்
தவமுள வைசியச் சேயாய்த் தானவ னுதித்து மேலு
மவனியில் செட்டுச் செய்து யனேககீர்த் திகளுண் டாகி
ந்வனியில் வாழ்வா னென்றேம் நாயகி மேலுங் கேளே.

30. ஜாதகருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். அதே ஊராகிய காஞ்சிமாநகரத்தில் இரஜோ குணத்தையுடைய ஒரு வைசியராக இவர் பிறந்து பூமியில் வியாபாரத்தைச் செய்து கொண்டு புகழும் பெருமையும் உண்டாகிப் பூமியில் வாழ்வார் என்று சொல்லு கின்றேம். பார்வதியம்மையே! இன்னும் அதிகமாக நாங்கள் சொல் லுவதைக் கேட்பீராக

ஜாதகனின் மனைவி விஷயம்

31. இவன்பின்னுல் மனையா ளுக்கு யிசைகிறேம் துணைக
[ளுண்டு
அவனியில் முனிவர் கூற யறைகிறார் புஜண்டர் தாமுங்
கனியுள யேழோன் தானுங் கடகமாம் விரைய மேறப்
பனியுமே கூடி நிற்கப் பார்மன்னன் யேழைப் பார்க்க;

31. ஜாதகர் இறந்த பிறகு இவருடைய மனைவி இறந்து விடு வாள். இவளுக்குச் சகோதரர்கள் இருப்பார்கள். இவ்விதமாக அத்திரிமுனிவர் சொல்லவே, புஜண்டமகரிஷியானவர் கேட்கின்றார் ஏழாவது பாவத்திற்குடையவரான சனி கடகத்தில் லக்கினத்திற்கு விரையதானமாகிய பன்னிரண்டாவது பாவத்தில் இருப்பதாலும், இவரைப் பணி என்ற இராகுவும்கூடி இருப்பதாலும் பார்மன்னன் என்ற பூமி புத்ரியாகிய அங்காரகன் ஏழாவது பாவத்தைப் பார்ப்ப தாலும்;

குறிப்பு :—மனைவிக்குத் தோஷ விஷயம்: கடகம் என்பது சரராசியாகும். ஏழாம் பாவாதிபதியாகிய சனி கடகராசியாகிய சரராசியில் இருப்பதால் தமிழ் ஜாதகாலங்காரம் அறுநூற்றிநாற்பத்தெட்டாவது பாடலின் முதல் இரண்டுவரி பிரகாரம் ஜாதகருக்குத் தோஷம் இருக்கின்றது.

32. எப்படி யிவன்பின் னுலே யேகுவாள் மனையா ளென்றீர்
அப்படி யல்ல முந்தி யவளுமே மரண மாவாள்
செப்பினர் புஜண்டர் தாமுஞ் ஜயமுனி கூறு கின்றார்
ஒப்புடன் விரையத் தோனு முத்தம னுகி யேதான்;

32. எந்தக் காரணங்களினுல் ஜாதகருடைய மனைவி இவருக்குப் பின்னுல் இறந்து போவாள் என்று சொல்லுகின்றீர். இவ்விதம்

நடக்காமல் மனைவி ஜாதகருக்கு முன்னமே இறந்து போவாள் என்று புஜண்டமகரிஷியானவர் சொன்னார். இதற்கு ஜயமுனிவர் சொல்லுகின்றார். விரயாதிபதியாகிய சந்திரன் நல்லவராகி ;

33. இரண்டிடந் தனிலி ருக்க விதுவலால் பொன்னேன் [தானுந்
திரண்டயே ழாமி டத்தைச் சீராகப் பார்ப்ப தாலுஞ்
சிறந்தகோர் ஜாத கன்பின் செல்வியு மரண மென்றேரும்
நிரந்தர மாக யாங்கள் நிருமித்த மொழிகுன் றுவே.

33. லக்கினத்திற்கு இரண்டாவது பாவமாகிய குடும்பஸ்தானத்தில் இருப்பதாலும், ஏழாவது பாவத்தைப் பொன்னேன் என்ற குருநன்மையாகப் பார்ப்பதாலும், ஜாதகருக்குப் பின்புதான் இவருடைய மனைவி இறந்து போவாள் என்று சொல்லுகின்றோம். நாங்கள் வெளிப்படையாக மறைக்காமல் சொல்லிய வார்த்தைகள் தவறிப்போகாமல் நடக்கும்.

குறிப்பு :—களத்திரஸ்தானாதிபதியாகிய சனி விரயஸ்தானத்தில் மறைந்து இராகுவுடன்கூடி இருப்பது முதல் மனைவிக்குப் பிரதிகூலமான அம்சமாகும். ஏழிற்குடைய சனி சரராசியாகிய கடகராசியிலிருப்பது 31-வது பாடலின்கீழ் கண்டபட பிரதிகூலமான அம்சம் ஆகும். குடும்பாதிபதியாகிய புதன் அங்காரகனாலும் கேதுவாலும் பார்க்கப்படுவது பிரதிகூலமான அம்சம் ஆகும். இரண்டாவது களத்திரஸ்தானம் ஒன்பதாமிடமாகிய அங்காரகனுடைய வீடாகவே ஆகிறது. இந்த அங்காரகன் குடும்பாதிபதியாகிய புதனைப் பார்ப்பது இரண்டாவது மனைவி நேரிட அனுகூலமான அம்சமாகும். லக்கினாதிபதியாகிய சூரியன் இரண்டாவது மனைவி ஸ்தானமாகிய ஒன்பதாவது பாவத்தைப் பார்ப்பது இரண்டாவது மனைவி நேரிடுவதற்கு அநுகூலமான அம்சம் ஆகும். ஏழிற்குடையவரான சனி ஒன்பதாவது பாவத்தைப் பார்ப்பது இரண்டாவது மனைவி நேரிடுவதற்குப் பிரதிகூலமான அம்சம் ஆகும். ஏழிற்குடையவராகிய சனி குடும்பஸ்தானமாகிய இரண்டைப் பார்ப்பது முதல் மனைவிக்கு அநுகூலமான அம்சம் ஆகும். ஆகையால் ஆயுர்தோஷமின்றி விதவை தோஷம் ஏற்படும்.

ஜாதகருடைய யோகபாவம்

34. ஜாதகன் ஜனனந் தொட்டுச் சாற்றிய யாயுள் மட்டும்
ஆதியாய் நிறைந்த செல்வ மணுகிடு மிவனுக் கென்றேரும்
வேதனை யில்லா னாகி விளைபுலம் விருத்தி யாகி
நீதியாய் வாழ்வா னென்றேரும் நிமலியே மேலுங் கேளே.

34. ஜாதகருக்குத் தன்னுடைய ஜனனகாலம் முதற்கொண்டு தன்னுடைய மரணகாலம் பரியந்தம் முதலிலிருந்தே அதிகமான செல்வ

மும் சம்பத்தும் இருந்து கொண்டேவிருக்கும் என்று சொல்லுகின் றோம். துன்பங்களும் கஷ்டங்களும் இல்லாதவராகி நன்றுக வீணா கின்ற நிலங்கள் நாளுக்குநாள் விருத்தியை அடைந்து ஜாதகர் நியாய மான நல்ல மார்க்கத்திலிருந்து கொண்டு தன்னுடைய வாணாளைக் கழிப்பார் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் அதிகமாகச் சொல்லப் போவதைக் கேட்பீராக.

குறிப்பு :—யோக விஷயம் :—யோகத்திற்குச் சம்மந்தமான கிரகங் களாகிய ஒன்பதிற்குடைய அங்காரகன் லக்கினத்திலும், பத்திற் குடைய சுக்கிரன் லக்கினத்திலும் பதினொன்றிற்குடைய புதன் நான்கி லும் இரண்டிற்குடைய புதன் நான்கிலும் நான்கிற்குடைய அங்காரகன் லக்கினத்திலும் இவ்விதம் நல்ல ஸ்தானங்களில் இருப்பது யோகத் திற்கு அநுகூலமான அம்சமாகும். ஐந்தாவது பாவத்திற்குடையவரா கிய குரு மூன்றுவது பாவத்தில் இருப்பது பிரதிகூலமான அம்சமாகும். ஆகையால் மொத்தம் ஆறு அம்சங்களில் ஐந்து அம்சங்கள் அநுக் கூலமாக விருக்கின்றன. மேலும் ஒன்பதிற்குடைய அங்காரகன் பத்திற் குடைய சுக்கிரனுடன்கூடி லக்கினகேந்திரத்தில் இருப்பது ஒரு நல்ல தர்மகர்மயோகமாகும். மேலும் குருவிற்குப் பன்னிரண்டில் தேய்பிறைச் சந்திரன் இருப்பது சகடயோகமாகும். சூரியனுக்கு இரண்டில் புதன் இருப்பது பலதீபிகை ஆறுவது அத்தியாயம் எட்டாவது சுலோகப் பிரகாரம் வேசியோகமாகும். தர்மகர்மயோகத்தைப்பற்றி தமிழ் ஜாத காலங்காரம் முன்னூற்றிரண்டாவது பாடல், ஜாதகசந்திரிகை பதினொன் காவது சுலோகம் தாண்டவமாலை பதிமூன்று பதினொன்காவது பாடல் கள், சந்திரகாவியம் பதினைந்தாவது பாடல் இவைகளைப் பார்க்கவும். சகடயோகத்தைப்பற்றி பலதீபிகை ஆறுவது அத்தியாயம் பத்தாவது சுலோகத்தையும் ஜாதகாலங்காரம் முன்னூற்றறுபத்துமூன்றுவது பாடலையும் பார்க்கவும்.

35. இன்னவன் ஜனனந் தொட்டு வீரேழு யாண்டு மட்டுந்
தன்னிலே சல்லியப் பாதை சாற்றுவோ மிவனுக்
[கேதான்
அன்னமே யதன்மேல் தானு மணுகாவே சல்லி யங்கள்
சொன்னசொல் குன்றி டாவே சுந்தரி மேலுங் கேளே.

35. ஜாதகருடைய ஜனனகாலம் முதற்கொண்டு பதினொன்று வயது வரையிலும் இவருடைய குடும்பத்தாருக்கு கடனுல் உபத்திரவ மும் துன்பமும் இருக்கும் என்று சொல்லுகின்றோம். பார்வதியம் மையே! இந்த வயதிற்கு மேற்பட்டு ஜாதகருக்கும் குடும்பத்திற்கும் கடன்கள் நேரிடாமல் இருக்கும். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும். பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் அதிக மாகச் சொல்லப் போவதைக் கேட்பீராக.

36. இப்படி யிருக்குந் தந்தை யிவன்செய்யுந் தவத்தி னாலே
செப்புவே னிந்தப் பாலன் ஜனிப்பனே யிவனே யம்மா
ஒப்புடன் முனிவர் கூற யுரைக்கிறு ளம்மன் தானு
மெப்படித் தவங்கள் செய்தா னிசைவீரே யென்று கேட்க;

36. இவ்விதமான பலாபலன்களை அனுபவிக்கக்கூடிய ஜாதகருடைய தகப்பனார்தான் தன்னுடைய முன்ஜன்மத்தில் செய்த தவத்தினால் அஃதாவது புண்ணியத்தினால் இந்த ஜாதகர் ஜனனமானார் என்று, பார்வதியம்மையே! நான் சொல்லுகின்றேன். இவ்விதமாக அத்திரி மகரிஷியானவர் சொல்லவே பார்வதியம்மையார் அவரைக் கேட்கின்றார். ஜாதகருடைய தகப்பனார் எவ்விதமானத் தவங்களைச் செய்தார் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே;

37. உரைக்கிறார் முனிவர் தாமு முறுந்தந்தை விசுவ நாதர்
தரைபுகழ் ராம லிங்கந் தானதை பூசைச் செய்து
விரைவினி லிந்தப் பாலன் விண்ணினி லுதித்தா னம்மா
அருமறை விருத்திச் செய்யு மம்மையே மேலுங் கேளே.

37. அத்திரிமகரிஷி சொல்லுகின்றார். ஜாதகருடைய தகப்பனார் விசுவநாதஸ்வாமியையும், பூமியிலுள்ளவர்களால் புகழப்பட்ட இராமலிங்கசுவாமியையும் பூஜைசெய்து இறந்து பூமியில் சீக்கிரம் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். பார்வதியம்மையே! அருமையான வேதங்களை விருத்தியாக்குகின்ற பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் அதிகமாகச் சொல்லப்போவதைக் கேட்பீராக.

38. இன்னவன் ஜனன காலம்
இயல்சித்திரை யிரண்ட தாகும்
மன்னிய மங்கலன் வருஷம்மூன்
றுகுந் திங்களு மேழதாகும்
உன்னிய பலன்கள் யாவும்
உறைக்கிறேம் பின்பா கத்தில்
கண்ணிய களிறைப் பெற்ற
காதலி மொழி குன்றுவே.

38. ஜாதகருடைய ஜனனகாலத்தில் ஜன்மநட்சத்திரம் சித்திரை இரண்டாம் பாதமாகும். ஜனனகாலத்தில் மங்கலன் என்ற அங்காரகனுடைய தசையில் இருப்பு மூன்று வருஷங்களும் ஏழு மாதங்களும் ஆகும். இந்தத் தசையின் பலாபலன்களை அடுத்த பாகத்தில் சொல்லுகின்றேம். கனம்பொருந்திய, மேன்மையான ஆண்யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் இதுவரையிலும் சொல்லிய விஷயங்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 86

ஜனனகால கிரகநிலை

1. [1]கலி[2]சாடி [3]காரி [4]மேரு [5]கனகனும் ராகு [6]தேளில் [7]நிலமகன் [8]புகரும் [9]வீணை [10]நீத்தோனும் [11]நந்தி புக்கப் [12]புலவனும் [13]பானும் [14]நண்டில் [15]புலியது ஜன்ம மாகப் பலனதைச் சொல்லு மென்று பார்வதி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் கும்பத்திலும், சனி தனுசிலும், குருவும் இராகுவும் விருச்சிகத்திலும், அங்காரகனும் சுக்கிரனும் மிதுனத்திலும், கேது ரிஷபத்திலும், புதனும் சூரியனும் கடகத்திலும் இருந்து ஜன்மலக்கினம் சிம்மமானால் பலா பலன் களைச் சொல்லுவீ ரென்று பார்வதியம்மை யார் கேட்டார்.

கிரகநிலை

			கேது
சந்திரன்	இராசி சக்கரம்		
			லக்கினம் சனி
சுக்கிரன் ராகு		புதன் செவ்வாய் சூரியன்	குரு

சதயம் 2-ஆம் பாதம்: இராகுதசை வருஷம் 11-0 0.

குறிப்பு :— இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்மைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்: மேஷத்தில் சுக்கிரனும் சனியும், ரிஷபத்தில் கேதுவும், துலாத்தில் புதனும் குருவும், விருச்சி கத்தில் ராகுவும், தனுசில் அங்காரகனும், மகரத்தில் சந்திரனும், கும் பத்தில் சூரியனும் ஆகும். குருவும் சனியும் வக்கிரகதியில் இருக்கின் றார்கள்.

---

1. சந்திரன்
2. கும்பம்
3. சனி
4. தனுசு
5. குரு
6. விருச்சிகம்
7. அங்காரகன்
8. சுக்கிரன்
9. மிதுனம்
10. கேது
11. ரிஷபம்
12. புதன்
13. சூரியன்
14. கடகம்
15. சிம்மம்

ஜாதகன் பிறந்த நாட்டுச் சிறப்பு

2. குறுமுனி புகலு கின்றார்
குறித்தது யாண்பால் ஜன்மம்
வருமில்லங் கீழ்மேல் வீதி
வாசலும் வடக்குப் பார்வை
அரிவா கனத்தாள் உத்திரம்
அரன்கோஷ்டம் வடகீ ழாகும்
உருவிலா மாரி தெற்கில்
உரைக்குமிவ் வடையா ளத்துள் ;

2. குறுமுனிவராகிய அகஸ்தியமகரிஷி சொல்லுகின்றார். இந்த ஜாதகத்தினுல் குறிக்கப்பட்ட குழந்தை ஆண் குழந்தையாக ஜனிக்கும். பிறந்த வீடு கிழக்குமேற்குத் தெருவாகும். வீட்டின் வாயிற்கால் வடக்குத்திக்கைப் பார்த்திருக்கும். சிம்மவாகனத்தை யுடைய காளியம்மன்கோயில் வடக்கிலும் சிவபெருமானுடைய கோயில் வடகிழக்குத்திக்கிலும் சிலையில்லாத மாரியம்மன்கோயில் தெற்குத் திக்கிலும் இருக்கும் என்று சொல்லுகின்றேரும். இவ்விதமான அடை யாளங்களை உடைய கிராமத்தில் ;

3. உதிப்பனும் மாறுஞ் ஜன்ம முரைக்கிறே மிவனின்
[யோகம்
மதிநுத லன்னை தந்தை வருந்துணை களத்திர புத்திரர்
பதியது யோகச் சேதி பகருவோ முன்பின் ஜன்மம்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

3. ஜாதகர் ஆருவது குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லு கின்றேரும். இவருடைய யோகத்தைப்பற்றியும் சந்திரனைப்போலப் பிரகாசமாகவும் அழகாகவும் உள்ள முகத்தையுடைய தாயார் தகப்ப னுர் கூடப்பிறந்த சகோதரர்கள் மனைவி சந்ததிகள் இருக்கும் வீடு அந்தஸ்து யோகம் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றி யும் சொல்லுகின்றேரும். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம் மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரின் சகோதரனின் விஷயம்

4. தந்தையின் துணையா ணைன்று
சாற்றுவோந் தீர்க்க மாக
அந்தவன் சேதிச் சொல்வேன்
அதிகமாய் வார்த்தைச் சொல்வன்

நிந்தைக ளேற்பா ளகும்
நிலையினில் வாழ்வா ளகுஞ்
சுந்திர முடைய ளகுங்
தோகைய ரிரண்டு நேரும்.

4. ஜாதகரின் தகப்பனுருடைய கூடப்பிறந்தது ஓர் ஆண் சகோதரனுகும். இந்தச் சகோதரன் நீண்ட ஆயுளை உடையவராவார். இவருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் அதிகமாகப் பேசுவார். அஃதாவது வாயாடியாக விருப்பார். குற்றம் அபவாதம் இவைகளை அடையமாட்டார். தன்னுடைய நிலையிலிருந்தே அஃதாவது தான் இருக்கும் இடத்திலிருந்தே தன்னுடைய காலத்தைக் கழிப்பார். இவர் அழகான தேகத்தையுடையவராவர். இவருக்கு இரண்டு மனைவிமார்கள் வந்து சம்பவிப்பார்கள்.

குறிப்பு :—தகப்பனரின் சகோதரனின் விஷயம் :—தகப்பனுருடைய லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். இதற்கு இளைய சகோதரஸ்தானம் மிதுனம் ஆகும். மிதுனத்திற்குடைய புதன் சூரியனுடன் கூடியிருப்பதால் மணிகண்டகேரளம் சகோதரகாண்டம் ஆறுவது செய்யுள் நான்காவது வரிப் பிரகாரம் இளையசகோதரன் கிடையாது. இந்த மிதுனத்தில் அங்காரகன் இருப்பதும் சனி பார்ப்பதும் இளையசகோதரனுக்குத் தோஷமுண்டு. ஆகையால் இங்குச் சொல்லப்பட்டச் சகோதரன் மூத்தசகோதரனுவான். மேஷத்திற்கு மூத்த சகோதரஸ்தானம் கும்பம் ஆகும். கும்பலக்கினத்திற்குக் களத்திரஸ்தானம் ஏழாமிடமாகிய சிம்மம் ஆகும். சிம்மத்திற்குரிய சூரியன், கும்பத்திற்கு ஆறுவது பாவத்திலும், சிம்மத்திற்குப் பன்னிரண்டாவது பாவத்திலும் மறைந்து இருக்கின்றார். சூரியன் கும்பத்திற்கு அஷ்டமாதிபதியாகிய புதனுடன் கூடியிருக்கின்றார். கும்பத்திற்குக் குடும்பாதிபதியாகிய குரு இராகுவுடன் கூடியிருக்கின்றார். களத்திரகாரகனுகிய சுக்கிரன் அங்காரகனுடன் கூடிச் சனியால் பார்க்கப்பட்டிருக்கின்றார். ஆகையால் தகப்பனுருடைய சகோதரனுக்கு இரண்டு தாரம் நேரிட அமைப்பு இருக்கிறது.

5. மன்னல் சிலனள் உய்வன் மாஞ்சிவப் புடைய ளகும்
தன்சுதர் ஆண்பா லொன்று தையலர் இரண்டு தீர்க்கம்
எந்தமா துக்குப் புத்திரர் இயம்பினீர் விபரஞ் சொல்வாய்
மூந்தின மாதுக் கேதான் மேவாரே சுதர்கள் தாமும்.

5. தகப்பனரின் சகோதரன் சிலகாலம் விவசாயஞ் செய்து ஜீவிப்பார். இவர் மாமரத்தின் துளிரின் நிறத்தைப்போன்ற சிகப்பு நிறமுடைய தேகத்தை யுடையவராவர். இவருடைய சந்ததிகளில் ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை

உடையவர்களாக விருப்பார்கள். எந்த மனைவிக்குக் குழந்தைகளைச் சொன்னீர்? அதனுடைய விவரத்தைச் சொல்லுவீர். முதல் மனைவிக்குக் குழந்தைகள் இருக்கா என்று முனிவர் பதில் சொல்லுகின்றார்.

*குறிப்பு :—தகப்பனாரின் மூத்த சகோதரனுடைய ஸ்தானம் கும்பமாகும். இதற்கு முதல் மனைவி ஸ்தானம் ஏழாவது பாவமாகிய சிம்மம் ஆகும். இதற்குப் புத்திரஸ்தானம் ஐந்தாவது பாவமாகிய தனுசு ஆகும். இதற்குடைய குரு தனுசிற்குப் பன்னிரண்டில் இராகுவுடன் கூடி இருப்பது புத்திரதோஷமாகும். தனுசில் சனி இருப்பதும் புத்திரதோஷமாகும். புத்திரகாரகனுடைய குரு பன்னிரண்டில் மறைந்து ராகுவுடன் இருப்பதும் தோஷமாகும். ஒன்பதிற்குடையவராகிய அங்காரகனைச் சனி பார்ப்பதும் புத்திரதோஷமாகும். சிம்மத்திற்கு ஏழிற்குடையவரான சனி சிம்மத்திற்கு ஐந்தில் இருப்பதால் தமிழ் ஜாதகாலங்காரம் ஐந்நூற்றுத் தொண்ணூற்றுமூவது பாடலிலுள்ள நான்காவது வரியாகிய

"பூணேழோன் பாவனையைந்துற்றிடிற் புதல் வரில்லை"

என்ற வசனப் பிரகாரம் முதல் மனைவிக்குச் சந்ததி தோஷம் இருக்கின்றது. மேலும் கும்பலக்கினத்திற்கு இரண்டாவது மனைவி ஸ்தானம் ஒன்பதாமிடமாகிய துலாம் ஆகும். ஆகையால் துலாம் இரண்டாவது மனைவி லக்கினம். இதற்கு ஐந்தாமிடமாகிய கும்பத்திற்குடைய சனி துலாத்திற்கு மூன்றிலும் கும்பத்திற்குப் பதினொன்றிலும் இருக்கின்றார். கும்பத்தில் சந்திரன் இருக்கின்றார். சனியைச் சுக்கிரனும் அங்காரகனும் பார்க்கின்றார்கள். குரு துலாத்திற்கு இரண்டில் ராகுவுடன் இருக்கின்றார். ஆகையால் இரண்டாவது மனைவிக்கு முதல் மனைவியைப்போல் அவ்வளவு சந்ததிதோஷம் கிடையாது.

ஜாதகரின் தகப்பனாருடைய விஷயம்

6. இருமனை தீர்க்க மோசொல் லேகிடு முதல்ம னைதான்
பிரிதலில் லாமல் வேரூர் பிழைப்புக்குச் செல்வா னகும்
உரைகேரும் பின்பால் சேதி யுதித்தவன் தந்தை [செய்கை
வரிவிப்போ மினிமே லாக வரிராசி கடைநாள் [தோன்றும்.

6. தகப்பனாரின் சகோதரருக்கு இரண்டு மனைவிமார்களும் உண்டா ஆயுள் உடையவர்களாக விருப்பார்களா இல்லையா என்பதைச் சொல்லுவீராக என்று கேட்கவே முதல் மனைவி இறந்து விடுவாள் என்று முனிவர் சொல்லுகின்றார். சகோதரர் குடும்பப்பாகப்பிரிவினை செய்துகொள்ளாமல் வேறே ஒரு கிராமத்திற்கு ஜீவன விஷயமாகப் போவார். இவரது இதர விஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றோம்.

இனிமேல் ஜாதகரின் தகப்பனாருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் சிம்ம ராசியில் கடைநாள் என்ற ரேவதி நட்சத்திரத்தில் பிறந்தவராவார்.

7. கல்விமா னுகை சாலி கனத்தவர் நேசங் கொள்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் ராஜபூ சிதனு மாவன்
சொல்லதைக் காப்பா னுகுஞ் சாருவான் வெளியூர்
[தன்னில்
மல்லினில் செல்லா னுகும் மாற்றா னை லகுவில் வெல்வன்.

7. ஜாதகருடைய தகப்பனார் படித்தவராவார். புத்திசாலியாக விருப்பார். பெரியோர்களுடைய சிநேகிதத்தை அடைவார். பிறருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வார். அரசர்களால் மதிக்கப் பட்டவராவார். தான் சொன்ன வார்த்தையைத் தவறிடாமல் காப் பாற்றுவார். வெளியூருக்குப்போய் வாசஞ் செய்வார். சண்டையில் தலையிடமாட்டார். இவர் தன்னுடைய எதிரியைச் சிக்கிரத்தில் ஜயித்து விடுவார்.

8. கிராமதி காரஞ் செய்வான் கௌரவ குடும்பி யாவன்
தராதர மறிவா னுகுந் தரணியைச் சேர்ப்பா னுகும்
அரிபத்தி பூண்பா னுகும் அண்டினோர் தம்மைக் காப்பன்
பரைபள்ளு உடைய னுகும் பரிந்துப சாரஞ் செய்வன்.

8. ஜாதகருடைய தகப்பனார் கிராம் உத்தியோகஸ்தராக விருந்து கொண்டு உத்தியோக அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டிருப்பார். கௌரவமான குடும்பத்தை உடையவராக விருப்பார். இவர் நல்லது கெட்டது, உயர்வு தாழ்வு என்பவைகளைத் தெரிந்துகொண்டு அதற் கேற்றபடி நடந்துகொள்ளுவார். நிலங்களைச் சேகரித்து வைப் பார். மகா விஷ்ணுவினிடத்தில் பக்தியும் அன்பும் உடையவராவார். இவர் தன்னிடத்திற்கு வந்து அடைந்தவர்களைக் காப்பாற்றுவார். பறைப்பள்ளு ஆகியவர்களை உடையவராக விருப்பார். இவர் தயங்கா மல் முன்னுக்கு வந்து பிறருக்கு வலியவே உதவி ஊழியம் செய்வார்.

9. குலமதில் குற்ற மேற்பன் கோபம்முன் சாந்தம் பின்னல்
பலபேரால் பெருமை யேற்பன் பாரினில் வறுமை
[காணன்
புலவனும் புகழு மேற்பன் புண்ணியத் தலங்கள் செல்வன்
சலம்தோய்வன் சிவந்த மெய்யன் சித்திர யில்லஞ்
[செய்வன்.

9. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய குலத்தில் ஒரு தவ றான காரியத்தைச் செய்வார். இவருக்கு முதலில் கோபம் வந்து அது

பின்னல் சாந்தமாகிவிடும். இவர் அநேக மனிதரால் பெருமை யாகப் பாராட்டப் படுவார். பூமியில் தரித்திரம் கஷ்டம் இவை இல் லாமல் வாழ்வார். புலவன், பண்டிதன் என்ற பெயரையும் கீர்த்தியை யும் எடுப்பார். புண்ணியமான தெய்வ க்ஷேத்திரங்களுக்குப் போவார். புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். சிவப்பு நிறமுடைய தேகத்தையுடையவர். இவர் அழகான சித்திரங்கள் அமைந்த வீட் டைக் கட்டுவார்.

10. காரியச் சமர்த்த னுகுங் கணக்கினி லூகை வானுந்
தீரமில் லாத நெஞ்சன் தினஞ்சுக போஜ னத்தன்
வேறொரு கிராம வாசம் வெற்றிச்சொல் லுடைய னுகும்
பாரியும் வந்த பின்பு பகருவோம் யோகந் தானே.

10. ஜாதகருடைய தகப்பனார் தான் எடுத்த காரியத்தைச் செய்து முடிப்பதில் வல்லமை யுடையவராவர். சாமர்த்திய முடையவ ராவர். கணக்குப் போடுவதில் புத்திசாலியாகவும் கெட்டிக்காரராகவு மிருப்பார். தைரியமான மனத்தை யுடையவரல்ல. தினந்தோறும் சுக மான நல்ல போஜனத்தைச் சாப்பிடுவார். இவர் இன்னொரு கிரா மத்தில் வாசஞ் செய்வார். இவர் சொல்லுகின்ற வார்த்தைகள் பிறரால் அங்கீகரிக்கக் கூடியவையாக விருக்கும். இவருக்கு மனைவி வந்து சம்பவித்தபிறகுதான் யோகம் உண்டு என்று சொல்லு கின்றோம்.

ஜாதகருடைய குணநிசயங்கள்

11. சொன்னயிக் குணத் தானுக்குச் சுதனுமே யுதிப்பா
[னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வே னழகுளான்
[சிவந்த மெய்யன்
பன்னியே பேசு வானும் பகருமுன் கோபி யாவன்
உன்னத வார்த்தை சொல்வன் உயர்வான புத்தி
[யேற்பன்.

11. இதுவரையிலுஞ் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் வந்து பிறப்பார். இனிமேல் இவருடைய குண குணங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இவர் அழகான விருப்பர், சிவந்த நிறமுடைய தேகத்தை யுடையவராவர். இவர் தான் சொன்னதையே திருப்பித் திருப்பி விவரமாகச் சொல்லித் திறமை யாய்ப் பேசுந் தன்மையுடையவராவர். பேசுவதற்கு முன்னமேயே கோபத்தை அடைபவராவர். மேன்மையான அழகிய வார்த்தை

களையே இவர் சொல்லுவார். இவர் மேன்மையான சிறந்த அறிவை யுடையவராவர்.

12. இருவிதக் கல்வி கற்பன் இராசபூ சிதனு மாவன்
அரசால் தொழிலு மேற்பன் அதிகார முடைய னுவன்
பொருளது சேர்ப்பா னுகும் புரவியுஞ் சகடு மேற்பன்
நிறையவே குடும்பி யாவன் நீள்நிலம் வறுமை காணுன்.

12. ஜாதகர் இரண்டு விதமான வித்தைகளைக் கற்றுக்கொள்ளு வார். இவர் அரசர்களால் மதிக்கக்கூடியவராகவும் பாராட்டப்பட்டவ ராகவுமிருப்பார். இவர் அரசாங்க உத்தியோகத்தை உடையவராவர். இவர் தனத்தைச் சேர்த்து வைப்பவராவர், குதிரையையும் வாகன வண்டிகளையும் உடையவராவர், பெரிய மேன்மையான குடும்பத்தை உடையவராவர். இவர் நீண்ட பெரிய நிலங்களை உடையவராவர், இந்தப் பெரிய உலகத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அநு பவிக்கமாட்டார்.

13. தூணவிபால் சிலனுள் வாசஞ் செல்லுவான் கல்வி மூலம்
வினையிலா மனத்த னுகும் வெளிதேசம் வாச முண்டு
அனைவனு மனேக மாதை யல்பரை யுறவு கொள்ளான்
மனமது பிரிய னுகும் பித்தச்சூ டுடைய னுகும்.

13. ஜாதகர் வாசிப்பதற்காகக் கொஞ்சகாலம் தன்னுடைய சகோதரியின் வீட்டில் வாசஞ்செய்து கொண்டிருப்பார். இவர் கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாத மனத்தை உடையவராவர். இவர் வெளிதேசத்திற்குப்போய் அவ்விடத்தில் வசித்துக் கொண்டிருப்பார். இவர் அநேக ஸ்திரீகளோடு சம்போகஞ் செய்வார். தாழ்ந்த குணங்களையும் அந்தஸ்தையும் உடையவர்களிடத்தில் சிநேகஞ்செய்து கொள்ளமாட்டார். தன்னுடைய மனத்தில் அன்பும் ஆசையும் உடையவராவர். இவர் பித்தச்சூடுடைய தேகத்தை உடையவராவர்.

குறிப்பு :—ஜன்மலக்கினத்திபதியாகிய சூரியன் பன்னிரண்டில் மறைந்திருப்பதால் ஜோதிட சாஸ்திரங்களின் பிரகாரம் ஜாதகர் வெளி தேசம் வாசஞ்செய்யும் அமைப்பு உடையவராவார். ஜன்மலக்கினத் திற்கு ஏழில் சந்திரன் இருப்பதாலும் ஏழிற்குடைய சனியை அங்கார கனும் சுக்கிரனும் பார்ப்பதாலும் குடும்பாதிபதியாகிய புதன் லக்கி னாதிபதியாகிய சூரியனுடன் கூடி பன்னிரண்டில் இருப்பதாலும் இவர் குடும்பத்தில் நிலையாகத் தங்காமல் அநேக ஸ்திரீகளிடத்தில் வாசஞ் செய்யும் அமைப்பு உள்ளவராவர்.

ஜாதகருடைய சகோதரர்களது விஷயம் (சகோதரபாவம்)

14. தன்துணை யாண்பா லொன்று தையலர் நால்வர் தீர்க்கம்
மூன்னெனெய் விளம்ப லாகு மொழி வோமே யாண்பால்
[சேதி
பொன்னிறங் கோலாம் ராசி புகழுஞ்சித் திரைநாள்
[தோன்றுங்
கன்னியர் மோக னுவன் கல்வியுஞ் சமம தாகும்.

14. ஜாதகருடைய சகோதரர்களில் ஒரு சகோதரனும் நான்கு சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இந்த சகோதரன் ஜாதகருக்கு மூத்தசகோதரனாக விருப்பார். மூத்தசகோதரருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் பொன்னைப்போன்ற ஒருவிதமான மஞ்சள் நிறத்தையுடையவராவர். இவர் கோல்ராசி என்ற துலாலக்கினத்திலும் சித்திரை நட்சத்திரத்திலும் பிறந்தவராவர். இவர் இளம்பிராயமுள்ள ஸ்திரீகளிடத்தில் காம ஆசையை உடையவராவர். இவர் நடுத்தரமான வித்தையை உடையவராவர்.

குறிப்பு :—மூத்தசகோதரஸ்தானம் பதினோராமிடமாகிய மிதுனம் ஆகும். இந்த மிதுன லக்கினத்திற்கு ஏழில் சனி இருக்கின்றார். ஏழாவது பாவத்தைச் சுக்கிரனும் அங்காரகனும் பார்க்கின்றார்கள். ஏழிற்குடைய குரு போககாரகனாகிய ராகுவுடன் கூடி ஏழிற்குப் பன்னிரண்டில் இருப்பதால் ஜாதகர் காமாக்கினி அதிகமுடையவராகிப் பெண்களிடத்தில் ஆசையுடையவராக விருப்பார். ஸ்திரீகளும் இவரை ஆசைபடுவார்கள்.

15. பயிர்த் தொழில் புரிவா னுகும் பரவுப காரனுவன்
நயமான வார்த்தை சொல்வன் நாற்காலி விருத்தி யுண்டு
ஐயஞ் செய்வ னெடுத்தவேலை செப்பிய மொழி தப்பாது
கயவரை யுறவு கொள்ளான் கடூரவார்த் தைகளும்
[பேசான்.

15. ஜாதகருடைய மூத்தசகோதரர் விவசாயத் தொழிலைச் செய்வார். இவர் பிறருக்கு உதவி செய்யுங் குணத்தையுடையவராவர். இனிப்பான அன்புள்ள வார்த்தைகளையே இவர் சொல்லுவார். ஆடு மாடு முதலிய கால்நடைகள் இவருக்கு விருத்தியாகும். இவர் தான் எடுத்து ஆரம்பித்த காரியங்களை வெற்றி பெறும்படியாகச் செய்து முடிப்பார். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும். இந்த மூத்தசகோதரர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றும் தன்மை உடையவர். இவர் கீழ்மக்களுடன் சிநேகஞ்

செய்து கொள்ளமாட்டார். இவர் நிஷ்டூரமானவும் கடினமானவுமான கெடீட வார்த்தைகளைச் சொல்லமாட்டார்.

16. பாரியும் ஒன்றே யாகும் பாவையும் வடகீ ழாகுந்
தீரமாய்ச் சுதரா னிரண்டு செல்விமார் அவ்வாறு
[தீர்க்கம்
வீரியன் ஒன்றுய் வாழ்வன் வேந்தர்கள் நேசங்
[கொள்வன்
ஆறுமா முகத்தோன் பத்தி யவனியில் வறுமை காணன்.

16. ஜாதகருடைய மூத்த சகோதரருக்கு ஒரே ஒரு மனைவியாகும். அவள் வடகிழக்குத் திக்கிலிருந்து வருவாள். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவர் மனைவி மக்களுடன் கூட விருந்து வாழ்வார். இவர் அரசர்களுடைய சிநேகத்தை அடைவார். இவர் ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுளின்மேல் பக்தியும் ஆசையும் உடையவர். இவர் பூமியில் தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாதவராவர்.

17. தந்தைக்கு மேலாய் வாழ்வன் சலித்தோர்க் குதவி
[செய்வன்
சுந்திரன் கட்டில் மெத்தை சோம்பிடான் காரிய த்தில்
வந்தவர்க் கன்ன மீவன் மருவிடுஞ் சகடு தானும்
பந்துவுக் கிணக்கஞ் சொல்லான் பார்வதி கேட்டி டாயே.

17. ஜாதகருடைய மூத்தசகோதரன் தன்னுடைய தகப்பனுரை விட அதிகமான அந்தஸ்தில் இருந்து வாழ்வார். ஏழைகளுக்கு உபகாரஞ் செய்வார். இவர் அழகுள்ளவராக விருப்பார். இவர் கட்டில் மெத்தை இவைகளை அனுபவிப்பார். தான் செய்யும் காரியத்தில் சோம்பல் இல்லாதவர். தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். இவருக்கு வாகனவண்டிகளும் வந்து சேரும். இவர் தன்னுடைய பந்துக்களுக்கு வணங்கி இருக்கமாட்டார். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக விஷயமும் மனைவி விஷயமும்

18. மற்றது தனைவி சேதி வரைகிறேம் பின்பா கத்தில்
வித்தகன் மணத்தின் காலம் விளம்புவோம் ஈரைஞன்
[பாண்டில்
பத்தினி வருவா ளாகும் பாவையும் வடபால் நேருஞ்
சத்தியின் குணத்தைச் சொல்வேன் சரசமாய் வார்த்தை
[சொல்வள்.

18. ஜாதகருடைய சகோதரிமார்களைப் பற்றியும் மூத்தசகோதரனுடைய மற்ற விஷயங்களைப் பற்றியும் அடுத்தப் பாகத்தில் சொல்லுகின்றேம். ஜாதகருக்கு விவாகம் நடக்குங் காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவருக்குப் பதினெட்டாவது வயதில் மனைவி வருவாள். இவள் வடக்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் இனிமையாகப் பேசுவாள். பரிகாசமான வார்த்தைகளையும் சொல்லுவாள்.

குறிப்பு :—விவாக விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 17-0-0 முதல் 18-0-0 முடியும் வரையிலும் குருதசையில் புதன் கேது இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. குரு போகஸ்தானமாகிய நான்காவது பாவத்தில் போககாரகனுகிய இராகுவுடன் கூடி இருக்கின்றார். இவருடைய வீட்டில் களத்திரஸ்தானமாகிய ஏழிற்கு உடைய சனி இருக்கின்றார். குரு குடும்பாதிபதியாகிய புதனைப் பார்க்கின்றார். லக்கினாதிபதியாகிய சூரியனையும் பார்க்கின்றார். ஆகையால் குரு தன்னுடைய தசையில் ஜாதகருக்கு விவாகஞ்செய்து வைக்க அமைப்பு உடையவராக விருக்கின்றார். புதன் குடும்பாதிபதியாகி லக்கினாதிபதியுடன் கூடிப் பன்னிரண்டில் இருக்கின்றார். மேலும் கேது ஜாதக சந்திரிகை பன்னிரண்டாவது சுலோகப் பிரகாரம் தான் இருக்கின்ற ராசிக்குடையவராகிய சுக்கிரனுடைய பலனைக் கொடுக்க வேண்டும். சுக்கிரன் களத்திரக்காரகனும் பத்தாவது பாவத்திற்குடையவராகவுமாகிப் போகஸ்தானாதிபதியும் ஒன்பதிற்குடையவருமாகிய அங்காரகனுடன் கூடி இருக்கின்றார். ஆகையால் ஜாதகபாரிஜாதம் பதினான்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் விவாகம் செய்துவைக்கும் அமைப்புடையவர். கேது, இவருடைய பலனைக் கொடுத்து விவாகஞ்செய்து வைக்கப் புதனைவிட அதிக அமைப்பு உடையவராகிறார்.

19. பால்பாக்கிய முடைய ளாகும் பரிந்துப சாரஞ் செய்வள்
காலத்தை யறிந்து ரைப்பாள் கணவனுக் கினிய ளாவள்
சீலவான் அன்ன மீவள் தேவியும் விரத மேற்பள்
மால்மனை யொப்ப ளாவள் மருவிடும் நாபிச் சூடு.

19. ஜாதகருடைய மனைவி பால்பாக்கியம் உடையவளாக விருப்பாள். இவள் தானுகவே வலிய முன்னுக்கு வந்து உபகாரம் ஊழியம் இவைகளைச் செய்வாள். இவள் காலத்தை நன்றாய் அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடியாகப் பேசுவாள். இவள் தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவளாவாள். நல்ல ஒழுக்கமும் நடையும் உள்ளவள். சாப்பாடு போடுவாள். இவள் விரதங்களை அனுஷ்டிப்பாள். மகாவிஷ்ணுவினுடைய மனைவியாகிய லக்ஷ்மிக்குச் சமானமானவளாக விருப்பாள். இவளுக்கு வயிற்றில் நாபிச்சூடு இருக்கும்.

ஜாதகருடைய சந்ததி விஷயம் (புத்திரபாவம்)

20. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணெஞ்
சித்தமா யுதித் தாலுந்தான் தீங்காகு மென்று
[சொல்வோம்
அத்திரி புகலு கின்றார் அறைந்தீரே புத்திர தோஷங்
குத்தத்தைச் சொல்லு மென்னக் குறுமுனி புகலு
[கின்றார்

20. ஜாதகருக்குச் சந்ததி விருத்தியைப் பற்றிச் சொல்லுவ தற்கு வலிவு கிடையாது. ஒருசமயம் குழந்தைகள் பிறந்தாலுங்கூட அவை இறந்துவிடும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக அகஸ்தியமுனிவர் சொல்லவே அத்திரிமகரிஷியானவர் கேட்கின்றார். நீர் புத்திரதோஷத்தைச் சொன்னீரே! அதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று அத்திரிமுனிவர் கேட்கவே, குருமுனியாகிய அகஸ்தியமகரிஷி பதில் சொல்லுகின்றார்.

21. அஞ்சினில் காரி தங்க வஞ்சவ னுடனே பாம்பு
கொஞ்சியே நாலில் தங்கக் குடும்பத்தோன் விரையம் புக்க
தஞ்சமாய்ச் சுதர்கள் தோஷஞ் சார்ந்திடும் பால னுக்கு
நஞ்சுபோல் முன்னூழ்த் தோஷம் நல்கிற்று மென்று
[சொன்னேனும்.

21. ஐந்தாவது பாவத்தில் சனி இருப்பதாலும், ஐந்திற்குடையவ ரான (புத்திரகாரகரான) குருவுடன் இராகு கூடி நான்காவது பாவத்தில் இருப்பதாலும் குடும்பாதிபதியாகிய இரண்டிற்குடைய புதன் விரயஸ் தானமாகிய பன்னிரண்டாவது பாவத்தில் இருப்பதாலும் ஜாத கருக்குப் புத்திரதோஷம் உண்டாகும். பாம்பின் விஷத்தைப்போல் ஜாதகருடைய முன்ஜன்மத்திய தோஷம் இவரை இந்த ஜன்மத்தில் வந்து அடைந்தது என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு: புத்திரதோஷம்:—சிம்ம லக்கினத்திற்கு ஏழிற்குடையவ ரான சனி சிம்மத்திற்குப் புத்திரஸ்தானமாகிய ஐந்தாவது பாவத்தில் இருப்பதால் தமிழ் ஜாதகாலங்காரம் ஐந்நூற்றுத் தொண்ணூற்றாறு வது செய்யுளிலுள்ள நான்காவது வரியாகிய

"பூணேழோன் பாவனுய் ஐந்துற்றிடிற் புதல்வரில்லை"

என்ற வசனப் பிரகாரம் புத்திரதோஷம் இருக்கின்றது. மேலும் புத்திர சம்மந்தமான ஒன்பதாவது வீட்டிற்குடைய அங்காரகனைச் சனி ஆறுக்குடையவராகவிருந்து பார்ப்பதும் கூட ஒருவித புத்திர தோஷமாகும். ஏழில் சந்திரன் இருப்பதும் அங்காரகனுடன் பெண் கிரகமாகிய சுக்கிரன் இருப்பதும் லக்கினாதிபதியான சூரியனையும் குடும் பாதிபதியான புதனையும் குரு பார்ப்பதும் அனுகூலமான அம்சமாகும்.

22. முன்வினை சொல்லு மென்ன மொழிகிறேரும் முனியே [கேளு
கன்னியா குமரி தன்னில் கலந்தனள் சேடர் வம்சம்
தன்மனை மதலை யுண்டாய்த் தரணியில் நெசவு செய்து
அன்னவன் வாழு நாளில் யரைகுறே மூழி தானே.

22. ஜாதகருடைய முன் ஜன்மத்திய தோஷத்தைச் சொல்லுவீர் என்று அத்திரிமகரிஷி கேட்கவே, அகஸ்திய மகாமுனிவர் அவரைப் பார்த்து அந்தத் தோஷத்தைச் சொல்லுகின்றேரும். முனிவரே! கேட்பீராக. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் கன்னியாகுமரி என்ற ஊரில் சேடர் என்ற ஓர் அடிமைக்கார ஜாதியில் பிறந்து தன்னுடைய மனைவிமக்கள் இவர்களை உடையவராகிப் பூமியில் தரி நெய்யும் வேலையைச் செய்துகொண்டு இவர் வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த இதற்கு முன்ஜன்மத்திய வினையைச் சொல்லுகின்றேரும்.

23. அங்ஙகர் நதியின் பக்கல் அணுகிய அரசன் கீழே
தங்கியும் நாகம் நிற்குந் தானவர் வாசஞ் செய்வார்
மந்திரம் ஓதும் வேத மறையவர் பூசை செய்வார்
இந்தவா றிடத்தி லேதான் இரவினில் யேது செய்தான்.

23. அந்தக் கன்னியாகுமரியிலுள்ள ஓர் ஆற்றின் கரை ஓரமாயுள்ள ஓர் அரசமரத்தின் கீழே ஒரு யானைமுகத்தையுடைய விநாயகர் கோயிலும் நாகபாசமும் இருக்கும் அவ்விடத்தில் தானவர் என்ற (அசுரர், அவுணர்) வாசஞ் செய்வார்கள். இந்தக் கோவிலையும் நாகபாசத்தையும் மந்திரங்களையும் வேதங்களையும் சொல்லுகின்ற பிராமணர் பூஜைசெய்துகொண்டு வருவார். இப்படிப்பட்ட தெய்விகமான விடத்தில் இராத்திரி காலத்தில் ஜாதகர் ஒரு காரியத்தைச் செய்தார். அதைச் சொல்லுகிறேரும்.

24. விதவையை மரத்தின் கீழே வித்தகன் போகந் துய்க்க
அதிலேலே கருவு தங்கி யனேகபண் டிதங்களுஞ் செய்யச்
சதியினல் கருவு நீங்கிச் சத்தியும் தீர்க்க மானுள்
இதுவிதம் முன்னுள் செய்தான் எய்திற்று அந்த தோஷம்.

24. ஜாதகர் ஒருவிதவை ஸ்திரீயை அந்த அரசமரத்தின் கீழே புணரவே, அதனல் அந்த ஸ்திரீக்குக் கர்ப்பம் நேரிட்டு அதற்கு அநேகவிதமான வைத்தியங்களைச் செய்யவே, அந்தக் கர்ப்பம் கலைந்து போய்விட்டது. ஆனல் அந்த ஸ்திரீ பிழைத்துக்கொண்டு உயிருடன் இருந்தாள். இவ்விதமாக ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் செய்தார். அதனல் அந்த தோஷம் வந்து சேர்ந்தது.

25. இதுவன்றி வேறு தோஷ
மேழைக்கு விடைஞ்சல் செய்தான்
அதுவொரு தோஷ மாச்சு
ஆவின்பால் அந்த கன்தான்
சதிசெய்தான் மறையோ னுக்குச்
சேர்ந்தது இவைக ளெல்லா
மதிபனு மந்தி யத்தில்
மதலைகள் பகையு மானுர்.

25. முன்சொல்லிய தோஷமும் இல்லாமல் இன்னொரு தோஷமும் ஏற்பட்டது. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் ஓர் ஏழைக்குக் கெடுதியைச் செய்யவே அந்தத்தோஷமும் ஒரு வினையாக வந்து சம்பவித்தது. ஒரு பிராமணருக்குப் பசுவின்பால் விஷயமாக ஜாதகர் மோசஞ் செய்து ஏமாற்றினர். ஆகவே இந்தத் தோஷங்கள் எல்லாம் ஜாதகரை வந்து அணுகின. இவர் முன்ஜன்மத்தில் தன்னுடைய கடைசி காலத்தில் தன்னுடைய சந்ததியார்களுடன் விரோதம் செய்து கொண்டார்.

26. காலன்தன் னுட்டைச் சேர்ந்து கஞ்சனுல் வரையப் பட்டு
ஞாலமே லுதிப்பா னுகு நல்கிடு மூன்னூழ்த் தோஷம்
பாலர்கள் தோஷ மெய்தும் பகருவோ மதற்கு வொன்று
வேலங்காட் டதற்குச் சென்று விமலர்க்கு வர்ச்சித்
[தேத்தி ;

26. ஜாதகர் பிறகு இறந்து எமனுடைய பட்டணத்திற்குப்போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்தப் பூமியில் வந்து இந்த ஜன்மத்தில் பிறந்தவராவர். இவருக்கு முன்ஜன்மத்திய தோஷங்கள் வந்து சம்பவிக்கும். அதனுல் இவருடைய புத்திரர்களுக்குத் தோஷம் உண்டாகும். இதற்கு ஒரு பரிகாரத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகர் வேலங்காட்டிற்கு (அஃதாவது திருவாலங்காடு என்ற க்ஷேத்திரத்திற்கு)ப்போய் அங்குள்ள சிவபெருமானுக்குப் அபிஷேகம் அர்ச்சனை முதலியவைகளைச் செய்வித்து ;

27. அங்குள மறையோ ருக்கு ஐயைந்து பேருக் கன்னந்
சங்கையில் லாமல் சென்று தன்னக ரடைந்து யின்னென்
துங்கமா மேகாதசி சுதனுமே விரதங் கொள்ளப்
பொங்கமாய்ச் சுதர்கள் விருத்தி புண்ணிய சாலி கேளாய்.

27. அவ்விடத்திலுள்ள பிராமணர்களுக்குள் ஐந்துபேருக்குச் சாப்பாடு போட்டு யாதொரு அச்சமும் ஐயமுமில்லாமல் போய்த் தன்னுடைய பட்டணத்தை அடைந்து இவர் மேன்மையான ஏகாதசி

விரதத்தை அநுஷ்டித்து வருவாராஞல் இவருக்குச் சந்தோஷம் உண்டாகும்படியாய்ப் பிள்ளைகள் பிறப்பார்கள். புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

28. சொற்படி செய்யா ஞகில் துலங்காரே சுதர்கள் தாமுஞ்
சொற்படி செய்வா ஞகில் தோன்றிடு மாண்பா லொன்று
மைப்படி பெண்பால் மூன்று வரைகிரேரும் தீர்க்க மாக
அப்பணி சடையோன் தேவி யருளிய மொழி குன்ரு வே.

28. நாங்கள் சொன்னபடி பரிகாரத்தை ஜாதகர் செய்யாமற் போவாராஞல் இவருக்குப் பிள்ளைகள் பிறக்கமாட்டார்கள்; அல்லது ஜீவித்திருக்கமாட்டார்கள். நாங்கள் சொல்லியபிரகாரம் ஜாதகர் செல்வாராஞல் ஓர் ஆண் குழந்தையும் மூன்று பெண்குழந்தைகளும் நீண்ட ஆயுள் உடையவர்களாக விருப்பார்கள் *என்று சொல்லுகின் ரோம். சர்ப்பத்தைத் தன்னுடைய சிரசின் ஜடையில் அடைந்துள்ள சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள். அஃதாவது பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

குறிப்பு :—இருபத்தோராவது செய்யுளின் கீழ் வியாக்கியானத்தில் சொல்லிய அனுகூலமான காரணங்களினுல் இங்குச் சொல்லப்பட்ட குழந்தைகள் உண்டாவார்கள். ஏழில் பெண் கிரகமாகிய சந்திரனும் அங்காரகனுடன் பெண் கிரகமாகிய சுக்கிரனும் இருப்பதால் பெண் குழந்தைகளே அதிகமாகச் சொல்லியிருக்கின்ரூர்.

ஜாதகருடைய தாயார் விஷயம் (மாதிருபாவம்)

29. அன்னையுஞ் சிவந்த மேனி யாளன்தன் மனம்போல்
[வாழ்வள்
நன்னடை யோக சாலி நற்புத்தி யடக்க முண்டு
தன்துணை யாண்பா லிரண்டு தையலர் ஒன்றே தீர்க்கம்
பின்னமில் லாத தேகி பிறர்குற்றஞ் சொல்லா ளாகும்.

29. ஜாதகருடைய தாயார் சிவப்பு நிறமுடைய தேகத்தை யுடையவள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்கு ஒத்தாற் போல விருந்து வாழ்வாள். இவள் நல்ல நடவடிக்கையும் ஒழுக்கமும் உள்ளவள், யோகமுள்ளவள், நல்ல அறிவுடையவள், அடக்கமும் அமைதியும் சாந்தமும் உடையவள். இவளுடன் கூடப் பிறந்தவர்கள் இரண்டு ஆண் சகோதரர்களும் ஒருபெண் சகோதரியும் நீண்ட ஆயுளை உடையவர்களாய் இருப்பார்கள். இவள் தன்னுடைய அவயவத்தில் யாதொரு குறைவும் இல்லாதவளாவள். இவள் அயலார்கள் மேல் யாதொரு குற்றத்தையோ குறைவுகளையோ சொல்லமாட்டாள்.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

30. மாதிரு பூர்வஞ் சொல்வேன் மலைநாட்டில் கர்ண சேயாய்க்
காதலி யுதித்து மேதான் கணவனு மதலை யுண்டாய்ப்
பாதக மனமில் லாமல் பரவுப காரி யாயுஞ்
சூதான கால நாடு சேர்ந்த னளிந்த மாது.

30. ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மலைப்பிரதேசத்தில் கருணீகர் குலத்திற் பிறந்து புருஷனும் குழந்தைகளும் உடையவளாகிக் கெட்ட மனமில் லாதவளாகிப் பிறருக்கு உபகாரஞ் செய்பவளாக விருந்துகொண்டு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

ஜாதகரின் தாயாருடைய பின்ஜன்மம்

31. பிரமனுல் வரையப் பட்டு
பிறந்தன ளென்று சொன்னேம்
வருஞ்ஜன்மம் வள்ளூர் கீழ்ப்பால்
வன்னிய குலமே தோன்றி
குறைவிலாக் குடும்பி யாவள்
குலத்துளோர் மதிக்க வுய்வள்
அருமறை முடிவி லாடும்
அம்பிகை யாளே கேளாய்.

31. ஜாதகரின் தாயார் பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகிறேம். இவள் மறுஜன்மத்தில் வள்ளூர் என்ற ஊருக்குக் கிழக்குத் திக்கில் வன்னிய ஜாதியில் பிறந்து கஷ்டம் இல்லாதக் குடும்பத்தை யுடையவளாவள். இவள் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வாள். அருமை யான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனுருடைய முன்ஜன்மம்

32. தந்தையின் பூர்வஞ் சொல்வேன்
சேரனு டதனி லேதான்
பிந்தின குலமு தித்து
பேதையர் மதலை யுண்டாய்ச்
சந்ததம் செட்டுச் செய்து
வாழுநாள் வினையைக் கேண்மோ
கிந்தையோர் மாதின் பேரில்
நிருமித்தா ளென்று சொல்வோம்.

32. ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சேரநாட்டில் ஒரு தாழ்ந்த குலத்திற் பிறந்து, மனைவி பெண் பிள்ளை இவர்களை உடையவராகி எப்போதும் வியாபாரத்தைச் செய்துகொண்டு வாழ்ந்துகொண்டிருந்த காலத்தில் இவருக்கு வந்து சேர்ந்த ஒரு தோஷத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். கேட்பீராக. இவர் வேறொருவடைய ஸ்திரீயின்மேல் ஓர் அபவாதத்தைச் சாட்டினர் என்று சொல்லுகின்றோம்.

33. மாதுவும் மனங் கலங்கி வரைகிறுள் சாபந் தானுந்
தீதான வார்த்தை யென்மேல் செப்பின பாவிக் கேதான்
மேதினில் மறுஜன் மத்தில் விளங்காது துணைப்பெண்
[ணுந்தான்
ஓதுவாள் குலத்திற் குற்றம் உன்தந்தை யாஸ்தி காணுய்.

33. அந்த ஸ்திரீ தன்னுடைய மனத்தில் கலக்கத்தையும் திகிலையும் அடைந்து ஒரு சாபத்தைக் கொடுக்கின்றுள். "என்மேல் கெடுதியான ஓர் அபவாதத்தைச் சொல்லிய பாவியாகிய உனக்குப் பூமியில் உன்னுடைய பின்ஜன்மத்தில் சகோதரிமார்கள் இல்லாமல் இருக்கக்கடவது. மேலும் உன்னுடைய குலத்தில் ஒரு தோஷம் நேரிடக்கடவது. நீ உன்னுடைய தகப்பனருடைய சொத்தில்லாதவராய் இருக்கக்கடவாய்" என்று ஜாதகருடைய தகப்பனரைப் பார்த்து அந்த ஸ்திரீ சொன்னுள்.

34. இன்னமும் பலவாறு சொல்லி
யிறைத்தனள் தெருத்தூள் தானும்
அந்ததோர் சாபந் தானு
மணுகிற்று யிவனுக் கேதான்
துன்னிய கால நாடு
சேர்ந்துமே பிரமன் லக்கம்
மன்னவன் வந்தா னென்றோம்
மருவிடும் முன்னூழ்ச் சாபம்.

34. அந்த ஸ்திரீ இன்னும் அதிகமாகப் பலவிதமாகச் சொல்லித் தெருவிலிருந்த மண்தூளை எடுத்துத் தூற்றினுள். அவள் கொடுத்த சாபமானது ஜாதகருடைய தகப்பனரை வந்து அடைந்தது. இவர் முன் ஜன்மத்தில் இறந்து எமபட்டணத்திற்குப்போய் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவரை முன் ஜன்மத்திய சாபம் வந்து அடையும்.

35. தன்துணைப் பெண்பால் காணுன்
தந்தையார் ஜிதத்தால் வாழான்
தன்குலங் குற்ற மெய்துஞ்
ஜயமுனி கூறு கின்றூர்
மன்னலல் கிராம செட்டு
மருவுங்கா ரணங்க ளெவ்வாறு
முன்ஜன்ம மறை யோருக்கு
முதவினுன் அன்னந் தானும்.

35. ஆகையால் ஜாதகருடைய தகப்பனுர் சகோதரிகள் இல்லாத வாக இருப்பார். இவர் தன்னுடைய தகப்பனுருடைய சொத்தாகிய வீட்டில் இருந்து வாசஞ்செய்யமாட்டார். இவருடைய குலத்தில் ஒரு குறைவு ஏற்படும். இதன்மேல் இவருக்கு அரசர்களால் எவ்விதம் கிராம உத்தியோகம்* வியாபாரம் இவை கிடைக்கும் என்பதையும் காரணங்களையும் சொல்லுவீர் என்று ஜய முனிவர் கேட்கவே, அதற்கு அகஸ்தியர் பதில் சொல்லுகின்ருர். இவர் தன்னுடைய முன்ஜன்மத்தில் பிராமணர்களுக்குச் சாப்பாடுபோட்டு உதவிசெய்தார்.

*குறிப்பு :—எட்டாவது செய்யுளில் ஜாதகருடைய தகப்பனுர் கிராமாதிகாரம் செய்வார் என்று சொல்லி இருப்பதை இங்குக் கவனிக்கவும். ஒன்பதாவது பாடலில் "குலமதில் குற்றம் ஏற்பான்" என்று சொல்லி இருப்பதையும் இங்குக் கவனிக்கவும்.

ஜாதகரின் தகப்பனுருடைய பின்ஜென்மம்

36. மார்க்கத்தில் தாகப் பந்தல்
வைத்தபுண் ணியத்தி னலும்
ஏற்கவே அரசு செய்வான்
எப்போதுஞ் வறுமை காணுன்
ஆர்க்கவே யிவன்பின் ஜன்மம்
ஆகாச தலத்தி லேதான்
தீர்ப்பாகச் சத்திரிய சேயாய்
ஜனிப்பனு மென்று சொல்வோம்.

36. ஜாதகருடைய தகப்பனுர் ஜனங்கள் போக்குவரவுள்ள வழியில் தாகவிடாயைத்தீர்ப்பதற்காக ஒரு நீர்மோர்ப் பந்தலை வைத்த புண்ணியத்தினுலும் இவர் இராஜாங்கத்தில் ஓர் அதிகாரியாக விருந்து தன் கிராமத்தில் அரசாட்சி செய்வார். *இவருக்கு எப்போதும் தரித்திரமும் கஷ்டங்களும் நேரிடாமலிருக்கும்.

ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய மறுஜன்மத்தில் ஆகாச ஸ்தலம் என்று சொல்லப்பட்ட சிதம்பரத்தில் க்ஷத்திரியர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லுகின்ருேம்.

குறிப்பு :—ஜாதகரின் தகப்பனுர் ஸ்தானம் ஒன்பதாமிடமாகிய மேஷம் ஆகும். இதற்கு ஜீவனஸ்தானுதிபதியாகிய சனி மேஷத்திற்கு அதிகாரஸ்தானமாகிய ஒன்பதில் இருந்துகொண்டு லக்கினுதிபதியாகிய அங்காரகனைப் பார்க்கின்ருர். சனி கிராம உத்தியோக காரகரானபடியால் தகப்பனுர் கிராமாதிகாரியாக விருந்து அதிகாரஞ் செலுத்த அமைப்புடையவராக விருக்கின்ருர்.

37. இருபது ஐந்து ஆண்டில் இடபமா தத்தி லேதான்
வருங் கண்டங் தந்தைக் கென்றேரும் மன்னவன்
[தசையே யாகுங்
கரும்பாம்பு புத்தி தானுங் கலந்திடு மந்தக் காலம்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

37. ஜாதகருக்கு இருபத்தைந்தாவது வயதில் இடப மாதமாகிய வைகாசி மாதத்தில் இவருடைய தகப்பனுர் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றேரும். அப்பேரது மன்னவன் என்ற குருவினுடைய தசையும் கரும்பாம்பு என்ற இராகுவின் புக்தியும் நடைபெறும். பெரிய வயிற்றையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணிய சாலியாகிய பார்வதியம்மையே! கேட்பாயாக.

குறிப்பு : தகப்பனுரது மரண காலம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 24-7-6 முதல் வயது வருஷம் 27-0-0 வரையிலும் குரு தசையில் இராகு புக்தி நடக்கின்றது. இவருக்கு இருபத்தைந்தாவது வயதில் வைகாசி மாதத்தில் குரு தசையில் இராகு புக்திதான் நடக்கின்றது. பிதிரு ஸ்தானம் மேஷம் ஆகும். பராசரஹோரை, ஜாதகசந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகம் இருபத்தைந்தாவது சுலோகப் பிரகாரம் பன்னிரண்டாமிடமும் எட்டாமிடமும மாரகஸ்தானங்கள் ஆகின்றன. மேஷத்திற்குக் குரு பன்னிரண்டாமிடத்திற்குடையவராகி எட்டாமிடத்தில் இருந்துகொண்டு பிதிருகாரஞ்சுரியனைப் பார்க்கின்ருர். ஜாதக சந்திரிகை இருபத்து மூன்றுவது சுலோகப் பிரகாரம் குரு தன் தசையில் மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்ருர். மேலும் குரு சந்திரனுக்குச் கர்மஸ்தானத்திலும் இருக்கின்ருர். இராகு மேஷத்திற்கு எட்டில் இருப்பதாலும் சந்திரனுக்குக் கர்மஸ்தானத்திலிருப்பதாலும் தன்புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்ருர்.

தந்தையின் கர்மம், தாய் கர்மம், ஜாதகருடைய மரணம்
ஜாதகருடைய பின்ஜன்மம்

38. ஆறைந்து நாலு வாண்டி லாவணி மாதந் தன்னில்
கூறுவோ மன்னே கண்டங் குழவிக்கு வறுபா ஞென்பான்
காரிழை மாதந் தன்னில் கழருவோங் கண்டந் தானே
மாரன்பின் ஜன்மந் தில்லை மருவுவான் சைவச் சேயாய்.

38. ஜாதகருக்கு முப்பத்து நான்காவது வயதில் ஆவணி மாதத்தில் இவருடைய தாயார் இறந்துவிடுவாள். என்று சொல்லுகின்றோம். ஜாதகர் தனக்கு அறுபத்தொன்பதாவது வயதில் காரிழை மாதம் என்ற புரட்டாசி மாதத்தில் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றோம். ஜாதகர் தன்னுடைய பின்ஜன்மத்தில் தில்லை என்ற சிதம்பர க்ஷேத்திரத்தில் சைவ குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார்.

குறிப்பு : (1) தாயார் மரண விஷயம் :—ஜாதகருக்கு முப்பத்து நான்காவது வயதில் ஆவணி மாதத்தில் (அஃதாவது வயது வருஷம் 33 0-3 மூதல் வருஷம் 33-1-3 வரை) சனி மகாதசையில் கேது புக்தி நடக்கின்றது. சிம்மலக்கினத்திற்கு மாதிரு ஸ்தானம் நான்காவது பாவம் ஆகிய விருச்சிகம் மாதிருலக்கினம் ஆகும் இந்த விருச்சிக லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதக சந்திரிகை ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரமும் இதர கிரந்தங்கள் பிரகாரமும் அங்காரகன் புதன் சுக்கிரன் சனி இவர் மாரகராகின்றார்கள். சனி மூன்றிற் குடையவராகி இரண்டாவது பாவத்தில் இருக்கின்றார். ஜாதக சந்திரிகை இருபத்திரண்டாவது, இருபத்தைந்தாவது சுலோகங்கள் பிரகாரம் இரண்டாமிடமும் மூன்றுமிடமும் மாரகஸ்தானங்களாகும். சனி மாதிருலக்கினாதிபதியாகிய அங்காரகனைப் பார்க்கின்றார். மாதிரு காரகனுகிய சந்திரனையும் சனி பார்க்கின்றார். பார்ப்பதும் சம்பந்த மானபடியால் துய்யகேரளம் எட்டரம் பாவம் இருபதாவது பாடல் பிரகாரம் கூட சனி மாரகராகின்றார். இவ்வித காரணங்களால் சனி தன் தசையில் மாதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். கேது மாரகாதிபதியாகிய சுக்கிரனுடைய வீட்டில் இருந்துகொண்டு மாரகாதிபதியாகிய புதனைப் பார்க்கின்றார். ஆகையால் பராசரஹோரை ஜாதகசந்திரிகை பன்னிரண்டாவது இருபத்து மூன்றுவது சுலோகங்களின் பிரகாரம் கேது மாரகராகின்றார். மேலும் கேது சிம்மலக்கினத்திற்குக் கர்மஸ்தானமாகிய பத்தாவது பாவத்தில் அஃதாவது விருச்சிகத்திற்கு மாரகஸ்தானமாகிய ஏழாவது பாவத்தில் இருக்கிறார். ஆகையால் கேது தன் புத்தியில் மாதாவுக்கு மாரகஞ்செய்யும் அமைப்பும் உடையவராக விருக்கின்றார்.

ஜாதகர் மரண விஷயம் :—ஜாதகருடைய ஜன்மலக்கினமாகிய சிம்ம லக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை ஐம்பத்திரண்டாவது சுலோகப் பிரகாரமும் இதர கிரந்தங்கள் பிரகாரமும் புதன், சுக்கிரன், சனி இவர்கள் மாரகாதிபதிகளாகின்றார்கள். கேது மாரகாதிபதியாகிய சுக்கிரனுடைய வீட்டில் இருந்துகொண்டு மாரகாதிபதியாகிய புதனைப் பார்க்கின்ற சம்பந்தமும் உடையவராக விருக்கின்றார். மேலும் கேது லக்கினாதிபதியாகிய சூரியனைப் பார்க்கின்ற சம்பந்தமும் உடையவராக விருக்கிறார். ஆகையாலும் துய்யகேரளம் எட்டாம்

பாவம் இருபதாவது பாடல் பிரகாரமும், ஜாதகசந்திரிகை பன்னிரண்டாவது, இருபத்து முன்றாவது சுலோகங்கள் பிரகாரமும் கேது சுக்கிரனுடைய மாரகத்தைத் தான் ஏற்றுக்கொண்டு தன் தசையில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். சனி சிம்மலக்கினத்திற்கு ஏழிற்குடையவரானபடியால் ஜாதகசந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகப் பிரகாரம் மாரகராகின்றார். மாரகாதிபதிகளாகிய அங்காரகன், சுக்கிரன் ஆகிய இவர்களோப் பார்க்கின்ற சம்பந்தத்தையும் சனி அடைந்திருக்கின்றார். ஆகையால் சனி தன்னுடைய புக்தியில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். மாரகாதிபதியாகிய சனி சந்திரலக்கினாதிபத்தியம் பெற்றதால் மாரகஞ்செய்ய அமைப்பு இல்லை என்று சில கிரந்தங்களில் சொல்லியிருந்தபோதிலும் சந்திரனுக்கு மாரகஸ்தானமாகிய பன்னிரண்டாமிடத்து ஆதிபத்தியமும் அடைந்திருப்பதால் சனி மாரகஞ்செய்யும் அதிகாரமுடையவராகின்றார்.

39. வந்தவன் பொதுயோ கத்தை வரைகிறேஞ்
[ஜனனந் தொட்டுச்
சந்திரன் பிறைபோல் யோகந் தங்கிடும் பால னுக்குத்
தன்மகன் மாதி யோகஞ் சார்ந்திடு மிவனுக் கேதான்
மன்னரால் ஜீவிப் பானும் வளமுள புகழு மேற்பன்.

39. ஜாதகருக்கு உண்டாகியிருக்கின்ற பொதுவான யோகவிஷயத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குத் தன்னுடைய ஜனனகாலம் முதற்கொண்டு வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகம் நாளுக்குநாள் விருத்தியாகிக் கொண்டேவரும். இவருக்குத் தர்மகர்மாதியோகம் என்ற ஒரு விதமான யோகம் ஏற்படுகிறது. இவர் அரசர்கள் மூலமாகத் தொழிலேச்செய்து ஜீவிப்பார். நல்ல மேன்மையான கீர்த்தியையும் பெருமையையும் அடைவார்.

குறிப்பு:—தர்ம கர்ம யோக விஷயம்:—சிம்மத்திற்குத் தர்மாதிபதியாகிய ஒன்பதிற்குடைய அங்காரகனும் கர்மாதிபதியாகிய பத்திற்குடைய சுக்கிரனும் கூடி இருப்பது தர்ம கர்மாதி யோகம் என்று சொல்லப்படும். இது விஷயமாகத் தமிழ் ஜாதகாலங்காரம் முன்னூற்றிரண்டாவது பாடல், ஜாதக சந்திரிகை பதினன்காவது சுலோகம், தாண்டவமாலே பதின்மூன்றாவது பதினன்காவது செய்யுள்கள், சந்திரகாவியம் பதினைந்தாவது பாடல் ஆகிய இவைகளோப் பார்க்கவும்.

ஜாதகருக்கு யோகவிஷயம்

40. தாதையின் ஞாதி யாஸ்தி சார்ந்திடும் பால னுக்கு
மேதினில் பூமி பொன்னும் விளம்புமுப் பதாயிரம் பொன்
ஓதினே னிதுவு மன்றி யுயர்திருப் பணியுஞ் செய்வன்
போதக வானே பெற்ற புண்ணிய சாலி கேளாய்,

40. ஜாதகருக்குத் தன்னுடைய தகப்பன், பாட்டன் இவர்களுடைய பங்காளிகளின் சொத்து வந்துகிடைக்கும். இவருக்கு நிலம் பணம் ஆகிய இவை மொத்தம் முப்பதாயிரம் பெறக்கூடிய சொத்து ஏற்படும் என்று சொல்லுகின்றேம் இதுவுமல்லாமல் ஜாதகர் மேலான கோயில் வேலை திவ்வியதொண்டு ஆகிய இவைகளையுஞ் செய்வார். இளம் பருவமுள்ள யானையின் முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

41. ஜனித்திடுங் காலந் தன்னில் செக்குநா ளிரண்டாம்
[பாதங்
குனித்திடு பணியி ருப்புக் கூறுவோம் பதினே ராண்டும்
துணைவர்க்குச் சுபமு நேருந் தொல்புவி விருத்தி யாகும்
கனமுள குடும்பம் நேருங் காளைபின் துணைசே தங்கள்.

41. ஜாதகர் ஜனனமான காலத்தில் செக்குநாள் என்று சொல்லப்பட்ட சதய நட்சத்திரத்தின் இரண்டாவது பாதம் ஜன்ம நட்சத்திரமாகும். ஜனன காலத்தில் இராகு தசையில் இருப்பு பதினேரு வருஷம் ஆகும். இந்தத் தசைக் காலத்தில் ஜாதகருடைய சகோதரர்களுக்கு விவாகம் முதலிய சுபங்கள் நடைபெரும். விசேஷபுலங்கள் விருத்தியையடைந்து நல்ல பலன்களைக் கொடுக்கும். இவருடைய குடும்பம் மேன்மையை அடைந்து விருத்தியுமாகும். இவருக்குப் பின்னால் பிறந்த சகோதரர்கள் இறந்துவார்கள்.

குறிப்பு :—இளைய சசோதர மரணம் :—ஜாதகருக்கு இளைய சகோதரஸ்தானம் துலாம். துலாலக்கினத்திற்குப் பராசரரேஹாரை ஜாதகசந்திரிகை ஐம்பத்தாருவது சுலோகப்பிரகாரம் குருமாரகராகிறார். இராகு இவருடன் சம்மந்தப்பட்டு மாரகஸ்தானமாகிய இரண்டில் இருப்பதால் ஜாதகசந்திரிகை பன்னிரண்டாவது இருபத்து மூன்றுவது சுலோகங்களின் பிரகாரம் சகோதரங்களுக்கு மாரகம் செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

42. தந்தையின் தாயின் கண்டஞ் சதுஷ்பாதம் விருத்தி
[சேதம்
பிந்தியுங் கிழ்ப்பா லில்லம் பெறுவனுங் கல்வி மேன்மை
மந்தனும் பிணிகள் வந்து விலகிடுங் கலகங் கொஞ்சம்
இந்திர னிறைஞ்சு மாதே யிதுபூர்வ பாக மாமே.

42. ஜாதகருடைய தகப்பன் வழி பாட்டியார் இறந்துவிடுவாள். ஆடுமாடுகள் விருத்தியையடையும். பிறகு கிழக்குத் திக்கில் ஒரு வீடு வந்துகிடைக்கும். வித்தையில் இவர் விருத்தியடை

வார். இவருக்கு நோய்கள் சம்பவித்துப் பிறகு நிவிர்த்தியாகி விடும். சில சுலகங்கள் ஏற்படும். தேவேந்திரன் வணங்குகின்ற பூஜை செய்கின்ற பார்வதியம்மையே! இது வரையிலும் நாங்கள் சொல்லிவந்தவை பூர்வ பாகம் என்று சொல்லப்பட்ட முதலாவது பாகத்தைச் சேர்ந்தவைகள் ஆகும்.

குறிப்பு : **தகப்பன் வழிபாட்டிக்குக் கண்டம்**:—ஜாதகருக்குத் தகப்பனார் ஸ்தானம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். இதற்குத் தாயார் பாவமாகிய நான்காமிடம் அஃதாவது பன்னிரண்டாவது பாவமாகிய கடகம் ஆகும். இதை ஜன்ம லக்கினத்திற்கு எட்டிற் குடைய குரு பார்க்கின்றார்; கேதுவும் பார்க்கின்றார். குருவுடன் சம்மந்தப்பட்ட இராகு தன்னுடைய தசையில் குருவினுடைய பலனைத் தகப்பன் வழி பாட்டிக்கு மரணத்தை உண்டு பண்ணுவார்.

ஜாதகம் 87

ஜனன கால கிரகநிலை

1. [1]மதியுஞ் சனியுந் தனுசிலுற
[2]மாலு [3]மிரவி[4]சேய் [5]மானதில்
[6]நதிகோன் [7]சாடி குருராகு
நல்குங் [8]தேளில [9]சிங்[10]கந்தி
[11]பதியுஞ் சிம்மம் பலனெவ்வாறு
பகருவீர் முனியே விபரமதா
யிதுவே வாண்பால் ஜனனமுறு
மில்லங் கீழ்மேல் வீதியதே.

1. சந்திரனும் சனியும் தனுசிலும், புதனும் சூரியனும் அங்காரகனும் மகரத்திலும், சுக்கிரன் கும்பத்திலும், குருவும் இராகுவும் விருச்சிகத்திலும், கேது ரிஷபத்திலும் இருந்து ஜன்மலக்கினம் சிம்ம ராசியாயுல் பல பலன்களை விவரமாகச் சொல்லுவீர் முனிவரே! என்று பார்வதியம்மையார் கேட்கவே முனிவராகிய அத்திரி மகரிஷி அவர்கள் சொல்லுகின்றார். இந்த ஜனனகால குழந்தை ஆண் குழந்தை ஆகும். இந்த ஜாதகர் பிறந்த வீடு மேற்குத் தெருவில் இருக்கும்.

கிரகநிலை

		கேது	
சுக்கிரன்	இராசி சக்கரம்		
புதன் சூரியன் அங்காரகன்			லக்கினம்
சந்திரன் சனி	குரு ராகு		

உத்திராடம் 1-ஆம் பாதம். சூரிய தசை வருஷம் 5-8-0.

---

1. சந்திரன்
2. புதன்
3. சூரியன்
4. அங்காரகன்
5. மகரம்
6. சுக்கிரன்
7. கும்பம்
8. விருச்சிகம்
9. கேது
10. ரிஷபம்
11. லக்கினம்

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்னவரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சனியும் ரிபத்தில் அங்காரகனும், மிதுனத்தில் சூரியனும் புதனும், சிம்மத்தில் கேதுவும், விருச்சிகத்தில் குருவும், தனுசில் சந்திரனும், கும்பத்தில் இராகுவும், மீனத்தில் சுக்கிரனும் ஆகும். அங்காரகனும் புதனும் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்கள். பின்வரும் ஏழாவது பாடலிலிருந்து இங்குக் குறிக்கப்பட்ட முனிவர் அத்திரிமகரிஷி என்று ஏற்படுகின்றது.

ஜாதகர் பிறந்த நாட்டுச் சிறப்பு

2. அதுவே தென்பால் வாடையாகு
மானமு கத்தோன் மேற்கிலுறும்
நதியுந் தென்பால் வடகீழில்
நரிவா கனத்தாள் தான்தங்கும்
பதியுஞ் சிறுவூர் கூரையில்லம்
பகருவோர் தந்தை தாய்யோகம்
அதிபன் துணைவர் களத்திரபுத்திரர்
வருவிப்போ மிந்நூல் தன்னில்.

2. ஜாதகர் பிறந்த வீடு தெற்கு வாடையில் இருக்கும். யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயில் மேற்குத் திக்கில் இருக்கும். தெற்குத்திக்கில் ஓர் ஆறு ஓடும். சிங்கவாகனத்தையுடைய காளியம்மன் கோயில் வடகிழக்குத்தில் இருக்கும். பிறந்த வீடு ஒரு சிறிய கிராமத்தில் கூரை வீடாகவிருக்கும் என்று சொல்லுகின்றோம். ஜாதகருடைய தகப்பனர், தாயார் இவர்களுடைய யோக விஷயங்களையும் ஜாதகருடைய சகோதரர்கள், மனைவி, சந்ததி, யோகம் ஆகிய இவைகளைப் பற்றியும் இந்த சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம்.

வேறு

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரபாவம்

3. தந்தைதுணை யாண்ணென்று மேசாற்றக்
கேண்மோ வவன்கு ணத்தை
முந்திதுணையாண் கிருஷிச் செய்வன்
மூலச்சூ டுடைய வனே
சிந்தையில் மருமமில் லாதான்
சிறப்பாய்க் குடும்பம் பூர்வத்தில்
பிந்தி வறுமை செலவுடையன்
பேதை யொன்று போற்றிடுமே.

3. ஜாதகரின் தகப்பனருடைய சகோதரன் ஒருவரே ஆவர். இவருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம் கேட்பீராக. இவர் மூலச்சூட்டு ரோகத்தை உடையவராவர். தன்னுடைய மனத்தில் ரகசியம் கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவர். இவருடைய வாழ்நாளின் முற்பாகத்தில் இவருடைய குடும்பம் மேன்மையை யுடையதாக விருக்கும். பிற்காலத்தில் அது தரித்திரத்தையும் கஷ்டங்களையும் செலவுகளையும் அடையும். இவருக்கு ஒரே ஒருமனைவியே நேரிடும்.

4. இடுமே சுதராண் ணென்றேயா
மிசையுங் கன்னி யிரண்டென்றேங்
திடமாய்த் தீர்க்கம் மற்றவெல்லாஞ்
சேருங் காலன் பக்கலிலே
உடனே யிரண்டா மாண்டினிலே
யொதுங்கு வானுங் காலன்பதி
நடமதாய் வேறுய்த் தான்செல்வன்
நவிலுவோம் பின்பால் சேதி.

4. தந்தையின் மூத்த சகோதரருக்கு ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறக்கும் என்று சொல்லுகின்றோம். இந்தக் குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். மற்றக் குழந்தைகளெல்லாம் இறந்து எமனிடம் போய்ச் சேருவார்கள். இவர் சிக்கிரத்தில் இரண்டாவது வருஷத்தில் இறந்து எமனிடத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடுவார். இவர் வேறு குடும்பமாகப் பிறிந்துபோய் விடுவார். இவருடைய மற்ற விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனர் விஷயம்

5. தந்தை குணத்தைத் தான்சொல்வேன்
சமர்த்தாய் வார்த்தை கபடில்லான்
தந்தம் பிணியுங் குறைவுள்ளான்
சல்லியப் பாதை யுடையவனே
தன்தேகமுமே மாஞ்சி வப்பன்
சாத்தான் பொய்யுங் கிருஷிச்செய்வான்
தந்தை பூமி குறைவுபடான்
சதுஷ்பாதங்கள் விருத்தி யுளன்.

5. ஜாதகரின் தகப்பனருடையகுணாதிசயங்களைபபற்றிச் சொல்லுகின்றேன். இவர் சாதுர்யமாக வார்த்தைகளை உபயோகிப்பார். கள்ளம் கபடம் வஞ்சனை இவைகள் இல்லாத மனத்தை உடையவராவர். பற்ளும் ரோகமும் குறைவாகவுள்ளவர். இவர் பொய்யைச் சொல்லமாட்

டார். விவசாய வேலையைச் செய்வார். இவருடைய தகப்பனருக்கு நிலங்கள் குறைவில்லாமல் இருக்கும். நாற்கால் ஜந்துக்களாகிய கால் நடைகள் இவருக்கு விருத்தியாகும்.

6. கல்வியு முடையன் பொறுமையுளன்
கடந்தோர்க் கன்னந் தானீவ
னில்லம் விட்டுத் தான்செல்ல
யெய்து மனமே செல்லாதான்
சொல்லிற் குற்றஞ் சுகமில்லான்
தேகம ரிட்டம் பலமில்லான்
அல்ல லணுகிடு மென்றுரைத்தோ
மசையா திருக்கில் சுகமுளான்.

6. ஜாதகருடைய தகப்பனர் வித்தையையுடையவராவர். சாந்த மும் அமைதியுமுடையவர். கடவுளின் பேரில் பக்தியுள்ளவர்களாகிய பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுவார். இவர் வீட்டைவிட்டுப் பிரிந்து போய்விடுவதற்கு மனத்தில் இஷ்டம் இல்லாதவராகவிருப்பார். இவர் பேசுவதில் குற்றத்தை உடையவர். சரியாகப் பேசமாட்டார். சௌக் கிய மில்லாதவர். தேகத்தில் தோஷமும் குறைவுமுண்டு. இவர் வலி வில்லாதவராவர். இவருக்குக் கஷ்டங்கள் வந்து சம்பவிக்கும் என்று சொல்லுகின்றோம். இவர் ஓடித்திரியாமல் அஃதாவது ஒரேவிடத்தில் இருந்தால்தான் இவருக்குச் சௌக்கியமுண்டாகும்.

குறிப்பு :—பிதிரு ஸ்தானபதியாகி அங்காரகன் ஆறுவது பாவத் தில் சூரியனுடன் கூடி அஸ்தமனம் அடைந்திருக்கின்றார். பிதிரு காரணுகிய சூரியனும் ஆறில் மறைந்திருக்கின்றார். அங்காரகன் உச்சத் தில் இருந்தபோதிலும் தனக்கு விரோதியான புதனுடன் கூடி அஸ்தமனமடைந்து இருக்கின்றார். ஆகையால் பிதாவுக்குத் தோஷம் இருக்கின்றது.

7. புத்தி சபலந் தானணுகும்
புதுமை புகல்வீ ரத்திரியே
குத்த மாகச் சேயாறில்
குலவி ரவியுந் தான்கூடில்
பத்தி யிருக்கில் ருணம்நேரும்
பகருவீர் திக்கு தென்திசையாம்
முத்துங் காலந் தான்புகல்வீர்
மூன்றுண் டதனி லிவ்விதியே.

7. ஜாதகருடைய தகப்பனுருக்குப் புத்தி சபலம் என்ற ஒருவிதமான நோய் உண்டாகும். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று அத்திரி மகரிஷியைப் பார்வதியம்மையார் கேட்கவே அத்திரி மகரிஷியானவர் சொல்லுகின்றார். சேய் என்ற அங்காரன் ஆருவது பாவத்தில் குற்றம் என்று சொல்லப்பட்ட மறைவை அடைந்து ரவியாகிய சூரியனுடன் கூடி இருப்பதால் ஜாதகருக்குக் கடன் நேரிடும். இது நேரிடும் திக்கைச் சொல்லுவீரென்று கேட்கவே இவருக்குத் தெற்குதிசையில் இது நேரும் என்றார். இவ்விதமாக ஜாதகருடைய மூன்றுவது வயதில் ஏற்படும் என்று கேள்விக்குப் பதில் சொல்லுகின்றார். இது முன் ஜன்மத்திய விதிப் பயனுகும்.

குறிப்பு :—ருணம். மேஷமாகிய ஒன்பதாவது பாவத்திற்குடைய அங்காரகன் ஒன்பதிற்கு அஷ்டமாதிபதியாகி உச்சம் பெற்று மேஷத்திற்கு ருணஸ்தானாதிபதியாகிய புதனுடன் கூடி பிதிரு காரகனுகிய சூரியனுடன் கூடி இருப்பதால் ருணம் ஏற்படும். பிதிரு லக்கினாதிபதியாகிய அங்காரகனும் பிதிரு காரகனுகிய சூரியனும் புத்திமாருட்டம் உண்டு பண்ணக்கூடியவரும் ஆறுக்குடையவருமான புதனும் கூடிராகுவால் பார்க்கப்பட்டிருப்பதால் தகப்பனுக்குப் புத்தி சபலம் ஏற்படும்.

8. விதியால் தாதை சென்றபின்பு
மேவுஞ் சபல குணமாகுஞ்
சதிராய் மூன்ராண் டின்மேலாய்ச்
சல்லியம் நீங்குந் தவமுனியே
இதுசொல் தவரு சிலபூமி
யெய்தும் பின்னல் தனதானியம்
மதிமூன் பிறைபோல் வளருமென்றே
மங்கைக் கரசி தான்கேளாய்.

8. ஜாதகருடைய தகப்பனுருக்கு இவருடைய தகப்பனுர் முன் ஜன்மத்திய பயனுக இறந்த பிறகு புத்தி சபலம் உண்டாகும். மூன்று வருஷங்களுக்குப் பின்னல் நான்கு வருஷங்களுக்குள் இந்தக் கடன் நிவிர்த்தியாகிவிடும். தவங்களைச் செய்கின்ற முனிவர்களே! நான் சொல்லிய இந்த வார்த்தை தவருமல் நடக்கும். பிறகு சில நிலங்களும் வந்து சேரும். பிறகு செல்வமும் தான்ய சம்பத்தும் வளர்பிறைச் சந்திரனைப்போல விருத்தியாகும். என்று சொல்லுகின்றேரும். பெண்களுக்கு அரசியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

வேறு

ஜாதகருடைய மூத்த சகோதரர்கள் (சகோதரபாவம்)

9. இங்கெறி யுடையா னுக்கு
யிவனுமே மூன்றாஞ் ஜன்மம்
அன்னவ னுதிப்பா னகும்
அவன்துணை நேர்மூன் காணன்
கன்னிகை முதல்மா தொன்று
கழறுவோர் தீர்க்க மாக
அன்னவள் சேதி சொல்வேன்
ஆனையி னிறத்த ளாமே.

9. இங்கு இதுவரையிலும் சொல்லப்பட்ட குணங்களையுடைய நகப்பனருக்கு இந்த ஜாதகர் மூன்றுவது பிறவியாகப் பிறப்பார். இவருக்கு நேர் மூத்த சகோதரன் கிடையாது. ஒரு சகோதரி முதல் சகோதரியாகப் பிறப்பாள். இந்த மூத்த சகோதரி நீண்ட ஆயுளை உடையவளாகவிருப்பாள். இவளுடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் யானையின் நிறமாகிய கறுப்பு நிறத்தையுடையவளாவாள்.

குறிப்பு :—மூத்த சகோதர ஸ்தானம் பதினோராவது பாவமாகிய மிதுனம் ஆகும். இதற்குடைய புதன் லக்கினத்திற்கு ஆறாவது பாவத்திலும் மிதுனத்திற்கு எட்டாவது பாவத்திலும் மறைந்து அங்காரகனுடனும் சூரியனும் கூடி இருப்பதும் மூத்த சகோதரகாரகனாகிய குரு இராகுவுடன் கூடி மிதுனத்திற்கு ஆறாவது பாவத்தில் மறைந்திருப்பதும் மூத்த சகோதரனுக்குத் தோஷமாகும். இனைய சகோதரப் பாவத்தைப்பற்றிப் பதினாறாவது செய்யுளை வாசிக்கவும்.

10. சீலமில் லாதா ளாகுஞ்
செய்ங்கன்றி மறவா ளாகும்
பால்பாக்கியம் விருத்தி யுள்ளாள்
பரவுப காரி யாவள்
ஞாலம்மேல் வறுமை காணுள்
நாயகன் மனம்போல் வாழ்வள்
ஏலவே வரனுங் கீழ்ப்பா
லெய்திடு மென்று சொல்வோம்.

10. ஜாதகருடைய மூத்த சகோதரி நல்ல ஒழுக்கமும் நடையும் இல்லாதவளாகவிருப்பாள். இவள் பிறர் தனக்குச்செய்த உபகாரத்தை மறக்காதவளாக விருப்பாள். இவளுக்குப் பால் பாக்கியம் விருத்தியாகும். இவள் பிறருக்கு உதவியைச் செய்வாள். இவள் பூமியில் தரித்

திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்கு ஒத்தாப்போல் இருந்து வாழ்வாள். இவளுக்குப் புருஷன் கிழக்குத் திக்கில் இருந்துவந்து நேரிடுவான் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய குணாதிசயங்கள்

11. புத்திரர் ஆண்பால் மூன்று பெண்ணது அவ்வாறு
[தீர்க்கம்
பத்தினி வயது தீர்க்கம் பகருவோம் பின்பால் சேதி
வித்தகன் சேதி கேளாய் விஷவாக்கு கல்வி மானும்
அத்திபோல் நடையு மாவன் ஆனையி னிறத்த னுமே.

11. ஜாதகனுடைய மூத்தசகோதரிக்கு மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுள் உடையவர்களாக விருப்பார்கள். இவளும் நீண்ட வயதுடையவளாவாள். மற்றவிஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றோம். ஜாதகருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவர் விஷவாக்கை உடையவர். அஃதாவது இவர் சொல்லுவது பலித்துவிடும். இவர் படித்தவராவர். யானையைப்போல கம்பீரமான நடையையும் கறுத்த நிறமுடைய தேகத்தையுடையவராவர்.

12. முத்துடன் அணிகலன்கள் மொழிந்திடுந் துயில்கள ளற்பம்
பெத்திடும் பூமி தானும் பிதாமேலாய் வாழ்வா னுகுஞ்
சுத்தவா னுகை யாளன் ஜனவுப காரஞ் செய்வன்
வித்துவான் போலே வார்த்தை விளம்புவா னுகை சாலி.

12. ஜாதகனுக்கு முத்துக்களுடன் அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்களும் வந்து சேர்ந்திடும் என்று சொல்லுகின்றோம். இவர் கொஞ்சமாகத் தூங்குவார். இவருக்கு நிலங்கள் வந்து சேரும். இவர் தன்னுடைய தகப்பனருடைய அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்வார். பரிசுத்தமுள்ளவராயிருப்பார். நுட்பமான புத்தியை உடையவர். ஜனங்களுக்கு உதவியைச் செய்பவராவர். பண்டிதனைப்போல இவர் வார்த்தைபேசுவார். இவர் ஊகித்தறியுந்திறமையை யுடையவராவர்.

13. தாதையின் குடும்பம் போலே தானவன் வாழ்வா னுகும்
பூதலம் அதிகஞ் சேர்ப்பன் பிதுராஸ்தி விருத்தி செய்வன்
ஓதுவான் சுகமாய் வார்த்தை யுயர்வான குடும்பி யாவன்
மாதவர் பத்தி கொள்வன் மன்னர்கள் பேட்டி.
[கொள்வன்.

13. ஜாதகர் தன்னுடைய பாட்டன் தகப்பன் இவர்களுடைய குடும்பத்தைப்போன்ற ஒரு குடும்பத்துடனிருந்து வாழ்பவராவர். இவர் அதிகமான நிலங்களைச் சேர்ப்பார். தன்னுடைய தகப்பனுடைய சொத்துக்களை விருத்தியாக்குவார். இவர் இனிமையான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார். மேன்மையான குடும்பத்தை உடையவராவர். இவர் முனிவர்களிடத்தில் அன்பும் பிரியமும் உடையவராவர். அரசர்களுடைய தரிசனத்தையும் இவர் அடையக்கூடியவராவர்.

14 நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னவன்
புல்லிய புத்தி யில்லான் புகழது யேற்பா னகும்
வல்லியர் மோகங் கொள்வன் மருமத்தை வெளிக்காட்
[டாதான்
சொல்லுமே தெறியுள் ளோனுஞ் சோம்பிடான்
[காரியத்தில்.

14. ஜாதகர் நல்ல மனிதர்களிடத்தில் நல்லவராகவே நடந்து கொள்வார். இவர் முரடர்களுக்கு வலிவுடையவராகவாவார்; அஃதாவது இவர் அவர்களுக்கு இளைக்கமாட்டார். இவர் இழிவான புத்தியையுடையவரல்லர். இவர் நல்ல கீர்த்தியையும் பெருமையையுமடைவார். ஸ்திரீகளிடத்தில் காம ஆசையையுடையவராவர், தன்னுடைய மனத்திலுள்ள ரகசியங்களைப் பிறருக்குத் தெரியும்படியாக வெளியே காட்டிக்கொள்ளமாட்டார். இவர் புகழப்பட்ட ஒழுங்கு சன்மார்க்கம் நீதிமுறை இவைகளையுடையவராவர். இவருடைய வார்த்தைகளும் ஒழுங்காகவும் நீதிமுறையை யனுசரித்தவைகளாகவுமிருக்கும். இவர் தான் செய்கின்ற வேலைகளில் சோம்பலையும் தளர்ச்சியையுங் காட்டமாட்டார்.

15. தந்தைமேல் பிரிய னவன் தானியச் செட்டுச் செய்வன்
வந்தவர்க் கன்ன மீவன் வண்டிவா கனமு முள்ளான்
கந்தன்மேல் பத்தி கொள்வன் கரமதில் சங்கு சக்கரஞ்
சிந்தையும் நல்ல தாகுந் திருப்பணி வேலை செய்வன்.

15. ஜாதகர் தன்னுடைய தகப்பனரின்மேல் ஆசையும் அன்பும் உடையவராக விருப்பார். தானியங்களில் வியாபாரஞ் செய்வார். இவர் தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். வண்டியும் வாகனமும் உடையவர். ஆறுமுகக் கடவுளின்மேல் பக்தியும் அன்பும் உடையவராவர். இவருடைய உள்ளங்கையில் சங்குசக்கர ரேகை இருக்கின்றது. இவர் நல்ல மனத்தையும் எண்ணத்தையுமுடையவராவர். இவர் கோவில் வேலைகளைச் செய்வார்.

ஜாதகருடைய இளைய சகோதரர்கள் (சகோதர பாவம்)

ஜாதகருடைய விவாகம்

16. பின்துணை யாண்பா லொன்று
பேசுவோங் கன்னி யவ்வாறு
அன்னவர் தீர்க்க மெய்தும்
அவர்பலன் இரண்டில் சொல்வோங்
தன்னுடை மணத்தின் காலஞ்
சாற்றுவோம் பதினொ ருண்டில்
கன்னிகை மாமன் பெண்ணைக்
காதலன் மாலை பூண்பன்.

16. ஜாதகருக்கு ஓர் இளைய சகோதரனும் ஓர் இளைய சகோதரியும் உண்டு என்று சொல்லுகின்றோம். இவர்கள் இருவரும் நீண்ட ஆயுளை உடையவர்களாவார். இவர்களுடைய பலாபலன்களை இரண்டாவது பாவத்தில் சொல்லுகின்றோம். ஜாதகனுடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய பதினொரு வது வயதில் தன்னுடைய அம்மான் பெண்ணை விவாகஞ்செய்து கொள்ளுவார்.

குறிப்பு :—மூத்த சகோதர பாவத்தைப்பற்றி ஒன்பதாவது பாடலை வாசிக்கவும்.

(2) **விவாக விஷயம்** :—ஜாதகருக்கு வயது வருஷம் 15-0-0 முதல் வயது வருஷம் 16-0-0 முடியும் வரையிலும் சந்திர தசையில் சுக்கிர புக்தியும் சூரிய புக்தியும் அங்காரக தசையில் அங்காரக புக்தியும் நடக்கின்றன. ஜென்ம லக்கினத்திற்கு ஏழாவது பாவத்தில் சுக்கிரனும் நான்காவது பாவத்தில் குருவும் ஆகி இவர்கள் கேந்திரத்தில் இருப்பதால் தமிழ் ஜாதக சிந்தாமணி ஏழாம் பாவம் முதல் பாடலாகிய தொள்ளாயிரத்து எழுபத்து மூன்றாவது பாடல் பிரகாரம் ஜாதகனுக்கு வாலிபத்தில் விவாகம் நடக்கும் அமைப்பு இருக்கின்றது. அங்கார கன் போகஸ்தானம் என்ற நான்காவது பாவத்திற்கும் விவாகஞ் செய்து வைக்க அமைப்பு உள்ள ஒன்பதாவது பாவத்திற்கும் அதிபதியாகி குடும்பாதிபதி யாகிய புதனுடனும் லக்கினாதிபதியாகிய சூரியனுடனும் கூடி ஒன்பதாவது பாவத்தையும் லக்கின பாவத்தையும் பார்க்கின்றார். ஆகையால் ஜாதக பாரிஜாதம் பதினைங்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் சந்திர தசையைவிட அங்கார தசையில் சுயபுக்தியில் ஜாதகருக்கு விவாகம் நடக்க அதிக அமைப்பு இருக்கின்றது.

மனைவி அம்மான் பெண் என்ற விஷயம்.—சிம்மலக்கினத்திற்கு அம்மான் ஸ்தானம் ஆறாவது பாவமாகிய மகரம் ஆகும். இந்த அம்மாள்

லக்கினத்திற்குப் புத்திர ஸ்தானம் மகரத்திற்கு ஐந்தாவது வீடாகிய ரிஷபம் ஆகும். ரிஷபத்திற்குடைய சுக்கிரன் சிம்மத்திற்குக் களத்திர ஸ்தானமாகிய ஏழாவது பாவமாகிய கும்பத்தில் இருப்பதால் ஜாதகருக்குக் களத்திரம் அம்மானுடைய புத்திர சம்மந்தம் ஏற்படுகின்றது. மேலும் அம்மான் லக்கினத்திற்குக் களத்திர ஸ்தானாதிபதியாகிய சந்திரன் சிம்மத்திற்குக் களத்திர ஸ்தானாதிபதியாகிய சனியுடன் கூடி இருக்கின்றார். ஆனால் ஜாதகருடைய மனைவி அம்மான் மனைவியுடைய சம்மந்தமுள்ளவளாவாள். மேலும் சந்திரன் மாதிருகாரனுகிச் சிம்மத்திற்குக் களத்திரபதியாகிய சனியுடன்கூடி இருப்பதால் ஜாதகருடைய மனைவி தன்னுடைய தாயாருடைய வர்க்கத்தைச் சம்மந்தப்பட்டவளாவாள். புதன் அம்மான்காரகன். இவர் குடும்பாதிபதியாகி லக்கினாதிபதியாகிய சூரியனுடன்கூடி அம்மான் ஸ்தானமாகிய மகரத்தில் இருக்கின்றார். ஆகையால் ஜாதகருக்குத் தன்னுடைய தாயாருடைய வர்க்கத்தில் அஃதாவது அம்மான் பெண் மனைவியாக வந்து வாய்க்கும் அமைப்பு இருக்கின்றது.

ஜாதகருடைய மனைவியின் குணாதிசயங்கள்

17. மாதுவின் குணத்தைச் சொல்வோம் மாஞ்சிவப் புடைய [ளாகும்
ஓதுவாள் சுகமர்ய் வார்த்தை யுருதியில் லாத நெஞ்சம்
பாதக மனமில் லாதாள் பஞ்சை கட்கன்ன மீவள்
சூதிலாள் தீர்க்க ஜீவி செப்புவோம் புத்திர பாகம்.

17. ஜாதகருடைய மனைவியின் குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒரு விதமான சிவப்பு நிறமுடையவளாவாள். இவள் இனிமையான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவாள். திடமான மனத்தை உடையவள் அல்லள். அஃதாவது தைரியமுள்ளவளல்ல. இவள் கெட்ட மனத்தை உடையவள் அல்லள். ஏழைகளுக்கு இவள் சாப்பாடு போடுவாள், இவள் கள்ளம் கபடு வஞ்சனை இவைகளை உடையவள் அல்லள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவாள். இனிமேல் இவளுடைய சந்ததிகளைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய புத்திரவிஷயம் (புத்திர பாவம்)

18. சுதர்களு மிருநான் காகத் தோன்றிடுஞ் சிலவே சேதஞ்
சதமாகு மாண்பா லொன்று சத்திமார் மூவ ரென்றோம்
இதுதான்குந் தீர்க்க மெய்தும் ஏகடு முதலி ரண்டு
அதுபலன் சொல்லு மென்ன அந்தக னஞ்சில் நிற்க;

18. ஜாதகருக்கு எட்டு குழந்தைகள் பிறப்பார்கள். இவைகளில் சில குழந்தைகள் இறந்துபோய்விடும். ஓர் ஆண் குழந்தையும் மூன்று

பெண் குழந்தைகளும் நிலைத்திருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இந்த நான்கு குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப் பார்கள். முதலில் இரண்டு குழந்தைகள் இறந்து விடுவார்கள். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீரென்று கேட்கவே அத்திரி மக ரிஷி சொல்லு கின்றார். அந்தகன் என்ற சனி ஐந்தாவது பாவத்தில் இருப்பதாலே ;

ஜாதகரின் தாயார் விஷயம்

19. புத்திர தோஷ மெய்தும் பிறைகூடி யிருப்ப தாலே
சித்தசன் போலே யாண்பால் தீர்க்கமா மென்று
[சொல்வோம்
சத்தியா மன்னை சேதி சாற்றுவோந் தாயே கேளு
வித்தகி மால்னி றத்தாள் விருந்தினர் பிரிய மில்லாள்.

19. ஜாதகனுக்கு புத்திரதோஷம் உண்டாகும். ஆனால் சனி யுடன் பிறை என்ற சந்திரன் சேர்ந்து இருப்பதாலே சித்தசன் என்ற மன்மதனைப்போலே ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்து நீண்ட ஆயுளை உடையதாகவிருக்கும் என்று சொல்லுகின்றோம். இனிமேல் ஜாதகருடைய தாயைப் பற்றிச் சொல்லுகின்றோம். பார்வதி யம்மையே! கேட்பீராக. தாயார் மஹாவிஷ்ணுவின் நிறத்தைப் போன்ற ஒரு விதமான நீலமேகவர்ணம் என்று சொல்லப்பட்ட நிறத் தையுடையவளாவள். இவள் பரதேசிகள், விருந்தாளிகள், புதிய மனு ஷர்கள் இவர்களிடத்தில் அன்பு இல்லாதவளாவாள்.

குறிப்பு :—புத்திர தோஷ விஷயம் :—புத்திர ஸ்தானமாகிய ஐந்தா வது பாவமாகிய தனுசில் சனி இருப்பது புத்திர தோஷமாகும். சனி ஏழாவது பாவத்திற்குடையவராகி ஐந்தாவது பாவத்தில் இருப்பது ஜாதக பாரிஜாதம் எட்டாவது அத்தியாயம் பன்னிரண்டாவது சுலோகப் பிரகாரம் புத்திர தோஷமாகும். மேலும் குரு புத்திர ஸ்தா னாதிபதியும் புத்திர காரகனுமாகிப் புத்திர ஸ்தானத்திற்குப் பன் னிரண்டில் இராகுவுடன் இருப்பது புத்திர தோஷமாகும். சுக்கிரன் ஏழில் இருப்பது பெண் சந்ததிக்கு அனுக்கூலமானதாகும். சனியுடன் விரோதியாகிய சந்திரன் இருப்பதால் சனியினுடைய தோஷம் சிறிது குறையும்.

20. பின்புத்தி யுடைய ளாகும்
பொருந்தவே யுரைக்கா ளாகுந்
தன்வரன் மனம்போல் வாழ்வள்
தன்மனங் கபடுமில்லாள்

வந்தபின் வறுமை யுண்டு
மாதுநன் நடக்கை நன்மை
அன்னவள் வாத தேகி
யறையுமுன் கோபி யாவள்.

20. ஜாதகருடைய தாயார் பின்புத்தியுடையவளாகவிருப்பாள். இவள் பொருத்தமாகவிருக்கும்படியாகப் பேசமாட்டாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்துகொண்டு வாழ்பவளாவள். இவள் தன்னுடைய மனத்தில் கள்ளம் வஞ்சனை கபடு ஆகிய இவைகளை உடையவளல்லள். இவளுக்கு விவாகம் நடந்த பிறகு தரித்திரமும் கஷ்டங்களும் ஏற்படும். இவள் நல்ல நடவடிக்கையும் ஒழுக்கமும் உடையவளாவள். இவள் வாவுநோயுள்ள தேகத்தை யுடையவள். இவள் பேசுவதற்கு முன்னமே கோபத்தை யுடையவளாவள்.

தாயாரின் சகோதரர்கள் (சகோதரபாவம்)

21. இல்லமுந் தென்பா லாகும்
இவன்துணை யாண்பால் மூன்று
வல்லியர் அவ்வாறு தீர்க்கம்
மறுத்துரை கூரு ளாகுஞ்
சொல்லுவோம் பின்பால் சேதி
துணைவர்கள் சேதி யாவும்
அல்லலை யகற்று மெங்கள்
ஆத்தும தாயே கேளாய்.

21. ஜாதகரின் தாயாருடைய வீடு தென் திசையில் இருக்கும். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் மூன்று ஆண் சகோதரங்களும், மூன்று பெண் சகோதரங்களும் நீண்ட ஆயுளை யுடையவர்களாகவிருப்பார்கள். இவள் புருஷனுக்கு எதிர்த்து பேசர்தவளாவள். இவளுடைய சகோதரர்களுடைய விஷயங்கள் எல்லாவற்றையும் பின்னால் சொல்லுகின்றோம். எங்களுடைய குறைகளையும் துன்பங்களையும் நிவிர்த்தி செய்கின்ற எங்களுடைய உயிரைப்போல அருமையான தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

தாயாரின் முன்ஜென்மம்

22. மாதிரு பூர்வஞ் சொல்வேன் அருணைக்குத் தென்பா லாக
ஓதுவேன் சிறுவூர் தன்னில் உதித்தன ளிக்கு லத்தில்
போதவே சுதர்க ளுண்டாய்ப் புகழான குடும்பி யாகி
மாதவர் பத்தி யின்றி யறமதை விரும்பா ளாகி;

22. ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். அருணை என்று சொல்லப்பட்ட திருவண்ணாமலை தெற்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலத்திலேயே பிறந்தாள். இவள் முன் ஜன்மத்தில் குழந்தைகளுடையவளாகியும் பெரிய குடும்பத்தையுடையவளாகியும் இருந்து முனிவர்களிடத்தில் அன்பில்லாமலும் தருமத்தை விரும்பாதவளுமாக விருந்து வாழ்ந்து ;

தாயாரின் பின் ஜன்மம்

23. காலன்தன் னுட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டு
ஞாலமேல் தீயின் வர்க்கம் நல்குவா னிந்த மாது
சாலவே யிவள்பின் ஜன்மஞ் சாற்றுவோங் காஞ்சிக்
[கீழ்ப்பால்
ஏலவே கங்கைச் சேயா யெய்துவா னிவளே யென்றோம்.

23. பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரம தேவனுல் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு இந்தப் பூமியில் தீயின் குலம் என்ற ஒரு விதகுலத்தில் (அஃதாவது வன்னிய குலத்தில்) இவள் வந்து பிறந்தாள். ஜாதகரின் தாயாருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் காஞ்சிமா நகரத்திற்குக் கிழக்குத் திக்கில் கங்கை சூலம் என்கிற வேளாளர் குலத்தில் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம்.

தகப்பனரின் முன் ஜன்மம்

24. தந்தையின் பூர்வஞ் சொல்வேன்
சீகாழி தன்னி லேதான்
வந்திவன் வைசியச் சேயாய்
மானிலஞ் செட்டு செய்து
தன்மனை மதலை யுண்டாய்ச்
சான்றோர்கள் பத்தி கொண்டுந்
தென்திசைத் தலங்கள் சென்று
சிறப்புடன் வாழுந் நாளில் ;

24. ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சீயாழியில் ஒரு வைசியகுலத்தில் பிறந்து அதிக நிலங்களையுடையவராகி, வியாபாரஞ்செய்து கொண்டு மனைவி மக்களையுடையவராகி அறிஞர்களின் மேல் அன்புடையவராகித் தெற்குத்திக்கிலுள்ள புண்ணிய ஸ்தலங்களுக்குப் போய்ப் பெருமையுடன் வாழுகின்ற காலத்தில் ;

25. மறையவர் தமக்கு மோசம்
வறைந்தனன் கணக்கி லேதான்
உறைக்கிறார் மனவெ றுப்பால்
உதித்திடு மறுஜன் மத்தில்
வருந்துணை தோஷ மாயும்
வளமிலாக் குடும்பி யாயுங்
குறையான மனத்தா னுயுங்
குவலயம் வாழ்வா யென்று ;

25. இவர் ஒரு பிராமணருக்குக் கணக்கில் மோசஞ்செய்தார். அந்தப் பிராமணர் மனத்தில் கஷ்டத்தை யடைந்து சொல்லுகின்றார். "நீ உன்னுடைய பின் ஜன்மத்தில் சகோதர தோஷம் உடையவராகி யும் மேன்மையில்லாத குடும்பத்தையுடையவராகியும் கஷ்டப்படும்படி யான மனத்தையுடையவராகியும் பூமியில் வாழக்கடவாய்" என்று அந்தப் பிராமணர் இவரைப்பார்த்து :

26. சொல்லியே சென்ற ரென்றோர் தொடர்ந்தது வந்தத்
[தோஷம்
வல்லவ னந்தி யத்தில் வாயுவால் மரண மெய்திப்
புல்கினன் கால நாடு பிரமனுல் வரையப் பட்டு
அல்லலா யிக்கு லத்தி லணுகினு னிவனே யென்றோம்.

26. சொல்லிவிட்டுப் போய்விட்டார் என்று சொல்லுகின்றோம். ஆகையால் அந்த முன் ஜன்மத்திய சாபம் அந்த ஜன்மத்திலேயே அவரை வந்து அடைந்தது. அவர் தன்னுடைய கடைசி காலத்தில் வாயு நோயால் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிறகு பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டுக் கஷ்டத்துடன் இந்த ஜன்மத் தில் இந்தக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லு கின்றோம்.

27. முதல்குலத் தோர்கள் சாப மேவிடு மிச்சென் மத்தில்
நிதியது காணு னுகுங் நிலைக்காரே துணைவர் தாமும்
பதியது சுகமே காணுன் பலபல விசார மெய்தும்
அதிபன்பின் ஜன்மஞ் சொல்வேன் மலைநாட்டில் குடகு
[தன்னில்.

27. முதல் குலத்தோர் என்று சொல்லப்பட்ட பிராமணருடைய சாபம் ஜாதகருடைய தகப்பனருக்கு இந்த ஜன்மத்தில் வந்து சம்பவிக் கும். அதனுல் இவர் பணமில்லாதவராக விருப்பார். இவருக்குச் சகோதரர்கள் நிலைத்திராமல் இறந்துவிடுவார்கள். தன்னுடைய நிலை மையும் வீடும் நல்லதாகவிருக்காது. இவருக்குப் பற்பலவிதமான

துன்பங்கள் உண்டாகும். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றி இனி மேல் சொல்லுகின்றேன். மலைநாட்டிலுள்ள குடகு தேசத்தில்

ஜாதகரின் தகப்பனரின் பின்ஜன்மம்

28. உதிப்பனு மறைக்கு லத்தி லுத்தம னிச்சென் மத்தில்
சதியுள மனத்த னுயுஞ் சஞ்சல புத்தி யாயும்
அதிபனும் வாழ்வ தாலே மறைக்குல முதிக்கும் வண்ண
மதுபலன் சொல்லு மென்ன வத்திரி சொல்லு கின்ரூர்.

28. ஜாதகரின் தகப்பனர் தன்னுடைய மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறப்பார். இவர் இந்த ஜன்மத்தில் கெட்ட மனத்தை உடையவராகியும் நிலையில்லாத துன்பத்தை விலைவிக்கக்கூடிய புத்தியையுடையவராயும் வாழ்கின்றபடியால் இவர் தன்னுடைய மறு ஜன்மத்தில் பிராமணகுலத்திற் பிறப்பதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே அத்திரி மகாரிஷியானவர் சொல்லுகின்ரூர்.

29. மனமது தளர்ச்சி யாயு மதிதிமே லன்பு கொண்டுஞ்
சினமதை வெளிக்காட் டாமல் தேவதா பத்தி யாயும்
வினையதை யெண்ணு தாலும் வித்தகன் வாழ்வ தாலே
கனமான மறைக்கு லத்தில் கலப்பனு மென்று
[சொல்வோம்.

29. ஜாதகருடைய தகப்பனர் இளகிய அஃதாவது பரிதாபப்பட்டு உதவியைச் செய்யக் கூடிய மனத்தையுடையவராகியும் பரதேசிகளிடத்தில் பக்தியும் ஆசையும் உடையவராகியும் கோபத்தைப் பிறருக்குத் தெரியும்படியாக வெளியே காட்டாதவராகவும் தெய்வங்களிடத்தில் அன்பு உடையவராயும் கெடுதியைப் பிறருக்கு நினைக்காதவராயும் இருந்து வாழ்கின்றதாலே மேன்மையான சிறந்த பிராமணர் குலத்தில் பிறப்பார் என்று சொல்லுகின்ரோம்.

ஜாதகருடைய முன் ஜன்மம்

30. ஜாதகன் பூர்வஞ் சொல்வேன் தாமிர பரணி தன்னில்
சூதிலா பிக்கு லத்தில் ஜனித்தனன் கிருஷி செய்து
பாதக மனமில் லாமல் பரவுப காரி யாயும்
போதவே தலங்கள் சென்று பிராமணர் பத்திக்
[கொண்டு;

30. இனிமேல் ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். தாமிரபாணியில் கபடில்லாத இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்திலேயே (அஃதாவது வன்னியருடைய வம்சத்தில்) இவர் பிறந்தார். இவர் வியசாயத்தொழிலைச் செய்துகொண்டு கெட்டமனமில்லாமல்

பிறருக்கு உதவியைச் செய்துகொண்டு புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போயும் பிராமணர்களிடத்தில் அன்பு உடையவராயும் இருந்து ;

ஜாதகருடைய யோக பாவம்

31. மறலியின் பதிக்குப் புக்கி மால்மகன் வரையப் பட்டு
வருவனு மிந்தப் பாலன் வறைகிறே மிவனின் யோகந்
திருமகன் ஜனனந் தொட்டுச் சதுர்த்தச யாண்டு மட்டுங்
குறையான குடும்ப மெய்துங் குவலையஞ் சல்லிய முண்டு.

31. இறந்து எமபட்டணத்திற்குப்போய் மகாவிஷ்ணுவின் குமாரராகிய பிரமதேவனுல் பிரமலியுடன் எழுதப்பட்டு ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் ; ஜாதகருடைய யோக பாவத்தைப்பற்றி இனிமேல் சொல்லுகின்ருேம். இவருடைய ஜனனகாலம் முதற்கொண்டு பதினன்கு வயது முடியும் வரையிலும் இவருடைய குடும்பம் கஷ்டங்களே அனுபவித்துக்கொண்டிருக்கும். பூமியில் குடும்பத்திற்குக் கடன்கள் ஏற்படும்.

32. புத்தியுஞ் சலப மாகும் போகிடுங் காலி தானும்
நித்தியஞ் செலவு மாகும் நீங்குவான் தந்தை முன்னேன்
குத்தமாந் தாதை தானுங் கூடாவே நினைத்த வெல்லா
மெத்திசை மதிப்பில் லாதா னியம்புவோ மதன்மே லாக.

32. ஜாதகருக்குப் புத்தி நல்லபடியாகவிராது. பசுக்கள் இறந்து போய்விடும். தினந்தோறும் செலவுகள் எற்பட்டுக்கொண்டேவிருக்கும். இவருடைய தகப்பனரின் மூத்த சகோதரர் இறந்துபோய்விடுவார். தகப்பனருக்கும் துன்பங்கள் நேரிடும். நினைத்த காரியங்கள் எல்லாம் கைகூடி வராமல் கெட்டுப்போய்விடும். எந்தத்திக்கிலும் குடும்பத்திற்கு மதிப்பும் கௌரவமும் இல்லாமலிருக்கும். இதற்குமேல் நடக்கும் பலாபலன்களேச் சொல்லுகின்ருேம்.

குறிப்பு : தகப்பனரின் மூத்த சகோதரர் விஷயம் :—ஜாதகருக்கு இரண்டாவது வயதில் தகப்பனருடைய மூத்த சகோதரர் இறந்துவிடுவார் என்று நான்காவது செய்யுளில் சொல்லியிருப்பதை வாசிக்கவும். தகப்பனருடைய ஸ்தானம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். இந்த மேஷத்திற்கு மூத்தசகோதரஸ்தானம் பதினேராவது பாவமாகிய கும்பம் ஆகும். கும்பலக்கினத்திற்கு பராசரஹோரை ஜாதகசந்திரிகை அறுபந்தைந்தாவது சுலோகம் பிரகாரம் புதன் முதலியோர் மாரகாதிபதிகள் ஆவார்கள். இந்தப் புதனுடன் ஜாதக சந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகப் பிரகாரம் மாரகாதிபதி ஏழிற்குடைய சூரியன் ஆகின்ருர். ஜாதக சந்திரிகை இருபத்து முன்ருவது சுலோகப் பிரகாரங்கூட புதனுடன் சம்மந்தப்பட்ட சூரியன் மாரகாதிபதி

யாகின்றார். மேலும் இந்தச் சூரியன் கும்பத்திற்கு அஷ்டமாதி பதியாகிய புதனுடன் கூடி இருப்பதால் துய்யகோளம் எட்டாம்பாவம் இருபதாவது சுலோகப் பிரகாரங்கூட சூரியன் மாரகாதிபதியாகின்றார். ஆகையால் சூரியன் தனது தசையில் ஜாதகரின் பெரிய தகப்பனருக்கு மாரகராவார்.

33. பிறையது போலே யோகம் பெருகிடும் நாட்கு நாளாய்த்
தரையது சேரு மென்றேஞ் சல்லியங் காணு ஞகுந்
திருமாளி செய்த லுண்டு செய்யுங்கா லங்கள் சொல்வா
யறுவாண்டி லற்ப யில்ல மணுகிடுங் கீழ்ப்பா லாக.

33. ஜாதகருக்கு யோகம் வளர் பிறை சந்திரனைப் போல நாளுக்கு நாள் விருத்தியாகும். பூமியும் நிலங்களும் வந்து சேரும் என்று சொல்லுகின்றோம். இவருக்குக் கடன் ஏற்படாது. இவர் அழகிய மாளிகையைப்போன்ற வீட்டைக் கட்டுவார். இவ்விதமாக வீட்டைக் கட்டுகின்ற காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு ஆறுவது வயதில் ஒரு சிறிய வீடு கிழக்குத் திக்கில் கிடைக்கும்.

குறிப்பு :–ஜாதகருக்கு வயது வருஷம் 5-0-0 முதல் வயது 6-0-0 முடியும் வரையிலும் சூரிய தசையில் சுக்கிர புக்தியும் சந்திரதசையில் சந்திரபுக்தியும் நடக்கின்றன, பிதிரு லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். மேஷத்திற்கு நான்காவது பாவமாகிய கடகம் வீடு மனை கட்டடம் முதலியவைகிடைப்பதற்கு அதிகாரமுடையதாகும். இதற்குடைய சந்திரன் பிதிரு லக்கினத்திற்கு ஒன்பதாவது பாவத்தில் பத்திற்கும் பதினொன்றிற்கும் உடையவராகிய சனியுடன் கூடி இருப்பதாலும் அங்காரகன் கடகத்தைப் பார்ப்பதாலும் சந்திரதசையில் சந்திரபுக்தியில் வீடு கிடைக்க அமைப்பு இருக்கின்றது. சூரியதசையில் சுக்கிரபுக்தியில் இவ்விதமான அமைப்பு இல்லை.

34. ஈரு று வாண்டு தன்னி
லெய்திடுஞ் சித்திர யில்லம்
பாருகள் சேர்த்த லுண்டு
பணியோர்கள் மேன்மே லோங்கும்
பேரது விளங்கு மென்றேரும்
புதையலு மூவைந் தாண்டில்
தீரமாய் நேரு மென்றேஞ்
செப்புவீ ரந்தச் சங்கை ;

34. ஜாதகருக்குப் பன்னிரண்டாவது வயதில் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட ஓர் அழகிய வீடு கிடைக்கும். பூமியும் நிலங்களும் வந்து சேரும். உழவு செய்கின்ற ஏர்களும் மாடுகளும் நிலங்

களும் மேல்மேலாக அதிகமாக வந்து கொண்டேயிருக்கும். இவருடைய கீர்த்தியும் புகழும் அதிகப்பட்டுக் கொண்டேயிருக்கும் என்று சொல்லுகின்றோம். ஜாதகருக்குப் பதினைந்து வயதிற்குள்ளே புதையல்நிச்சயமாகக் கிடைக்கும் என்று சொல்லுகின்றோம். இவ்விதம் சொல்லுவதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே ;

குறிப்பு :—ஜாதகருக்கு வயது வருஷம் 11-0-0 முதல் வயது வருஷம் 12-0-0 முடியும் வரையிலும் சந்திரதசையில் சனி புக்தியும் புதபுக்தியும் நடக்கின்றன. மேலே முப்பத்துமூன்றுவது பாடலின் கீழ்ச்சொல்லிய காரணங்களினால் சந்திரதசையில் பத்திற்கும் பதினைந்திற்கும் உடையவரான சனி புக்தியில் ஓர் அழகிய வீடு கிடைக்கும்.

35. தனலாபம் பாக்கியத் தோனுஞ்
சேர்ந்துமே மதிக்கு ரண்டில்
கனமுடன் வாழ்வ தாலே
கழறினேம் யோகந் தானு
மனையவே யிதற்கு நேரா
யணுகுஞ்ஜா தகதால் தன்னில்
சினமில்லாப் பார்க்கில் சேருஞ்
சேதியைப் பின்பால் சொல்வேன்.

35 தனலாபம் என்று சொல்லப்பட்ட இரண்டாவது பதினைந்துவது பாவங்களுக்கு அதிபதியாகிய புதனும் பாக்கியம் என்று சொல்லப்பட்ட ஒன்பதாவது பாவத்திற்குடைய அங்காரனும் ஒன்றுய்க் கூடிக் கொண்டு மதியாகிய சந்திரனுக்கு இரண்டாவது பாவத்தில் வலிவாக விருப்பதாலே ஜாதகருக்கு யோகத்தைச் சொல்லுகின்றோம். ஜாதகத்தைப்பற்றிச் சொல்லுகின்ற சாஸ்திரங்களைப் பார்த்தால் இதற்குச் சாதகமான தகுந்த காரணம் ஏற்படும். கோபமில்லாமல் நிதானமாக ஆராய்ந்து பார்த்தால் கிடைக்கும். இதர விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகின்றேன்.

குறிப்பு :—லக்கினாதிபதியாகிய சூரியனும் தனலாபாதிபதியாகிய புதனும் பாக்கியாதிபதியாகிய அங்காரகனும் கூடியிருப்பது தமிழ் ஜாதக சிந்தாமணி இரண்டாம் பாவம் நானூற்றிருபதாவது பாடல் பிரகாரம் விசேஷமானதாகும்.

தந்தை கர்மம்

36. இருபது வொன்ப தாண்டி லிடபமா தத்தி லேதான்
வருங்கண்டந் தந்தைக் கென்றே மாநாகந் தசையி
[லேதான்
கரியவன் புத்தி யாகுங் கழறின மொழி குன்றுவே
அருமறை முடிவி லாடு மம்பிகை யாளே கேளாய்.

36. ஜாதகருக்கு இருபத் தொன்பதாவது வயதில் இடபமாதம் என்ற வைகாசி மாதத்தில் இவருடைய தகப்பனார் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றோம். அப்போது மாநாகம் என்ற இராகுவின் தசையில் கரியவன் என்ற சனியினுடைய புக்தி நடக்கும். நாங்கள் சொல்லிய வார்த்தை தவறாமல் நடக்கும். அருமையான வேதாங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதி யம்மையே! கேளுங்கள்.

குறிப்பு: பிதிரு மாரக விஷயம்:—சிம்மலக்கினத்திற்கு ஒன்பதாவது பாவமாகிய மேஷம் பிதிரு லக்கினமாகும். இதற்குப் பராசரரேஹாரை ஜாதகசந்திரிகை நாற்பத்துமூன்றுவது நாற்பத்துநான்காவது சுலோகங்களின் பிரகாரம் சுக்கிரன் சனி புதன் இவர்கள் மாரகராகின்றார்கள். இராகு அங்காரனுடைய வீட்டில் பிதிரு லக்கினத்திற்கு ஜாதகசந்திரிகையின் இருபத்தைந்தாவது சுலோகம் பிரகாரம் மாரகஸ்தானமாகிய எட்டாவது பாவத்தில் இருக்கின்றார். இவர் ஜாதக சந்திரிகையின் பன்னிரண்டாவது சுலோகப் பிரகாரம் அங்காரகனுடைய பலனைக் கொடுக்கவேண்டியவர். அங்காரகன் எட்டாவது பாவத்திற் குடைய வராகி மாரகாதிபதியாகிய புதனுடன் கூடி மாரகாதிபதியாகிய சனியுடைய வீட்டில் பிதிரு காரகனாகிய சூரியனுடனும் கூடியிருப்பதால் பிதாவை மாரகஞ்செய்ய அங்காரகனுக்கு ஜாதகசந்திரிகை இருபத்தொன்றுவது சுலோகம் பிரகாரம் அதிகாரம் இருக்கின்றது. ஆகையால் இந்த அதிகாரத்தை இராகு ஏற்றுக்கொண்டு தன் தசையில் பிதாவுக்குமாரகஞ்செய்யும் அமைப்பு உடையவராக விருக்கிறார். இந்த ராகு பிதிருகாரகனாகிய சூரியனையும் மூன்றுவது பார்வையுடன் பார்த்திருக்கின்றார்: சனி ஜாதகசந்திரிகை நாற்பத்து நான்காவது சுலோகப் பிரகாரம் மேஷலக்கினத்திற்கு மாரகராகிப் பத்திற்குடைய வராகவும் இருப்பதால் துய்யகேரளம் எட்டாம் பாவம் பதினெண்காவது பாடல் கார்க்கேயர் ஜோதிடம் அறுநூற்றெழுபத்து நான்காவது பாடல் பிரகாரம் சனி தன்னுடைய புத்தியில் பிதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

மாதுர் கர்மம்

37. மூப்பத்து மொன்று மாண்டி
லுயர்கன்னி மாதந் தன்னில்
செப்புவோ மன்னை கண்டஞ்
சேடன்தன் தசையி லேதான்
ஒப்புடன் புதன்பு சிப்பு
உறைந்திடு மந்தக் காலம்
அப்பணி சடையோன் தேவி
அருளிய மொழி குன்றுவே.

37. ஜாதகருக்கு முப்பத்தோராவது வயதில் கன்னி மாதம் என்ற புரட்டாசி மாதத்தில் இவருடைய தாயார் இறந்துவிடுவாள் என்று சொல்லுகின்றோம். சேடன் என்ற பாம்பாகிய இராகுமகாதசையில் புதனுடைய புக்தி அக்காலத்தில் நடக்கும் என்று சொல்லுகின்றோம். சர்பத்தைத் தன்னுடைய ஜடையில் தரித்துக்கொண்டிருக்கிற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லியவார்த்தை தவறுமல் நடக்கும்.

குறிப்பு: மாதிரு மாரகம்:—சிம்மலக்கினத்திற்கு மாதிரு ஸ்தானம் நான்காவது பாவமாகிய விருச்சிகம் ஆகும் விருச்சிக லக்கினத்திற்குப் பராசரரேஹாரை, ஜாதகசந்திரிகை ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் புதன் அங்காரகன் சுக்கிரன் இவர்கள் மாரகராகின்றார்கள். இராகு அங்காரகனுடைய வீட்டில் இருப்பதால் ஜாதகசந்திரிகை பன்னிரண்டாவது சுலோகப் பிரகாரம் அங்காரகனுடைய பலனைக் கொடுக்கவேண்டும். அங்காரகன் மேற்சொன்ன காரணத்தினால் ஏற்கனவே மாரகாதிபதியாகி மாரககிரகமாகிய புதனுடன் சம்மந்தப்பட்டு விருச்சிகத்திற்கு மாரகஸ்தானமான மூன்றாவது பாவத்தில் இருக்கின்றார். ஆகையால் அங்காரகன் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றார். ராகு இவருடைய மாரகத்தை ஏற்றுக்கொள்ளுகின்றார். மேலும் இராகு நான்காவது பாவத்திலேயே இருப்பதால் நான்காவது பாவத்தால் குறிக்கப்பட்ட மாதாவுக்கு ஜோதிட சாஸ்திரப் பிரகாரம் மாரகஞ்செய்யும் அமைப்புடையவராகின்றார். புதன் விருச்சிக லக்கினத்திற்கு மாரகாதிபதி என்று மேலே சொல்லி இருக்கின்றோம். இவர் எட்டிற்குடையவராகி அங்காரகனுடன் கூடியிருப்பதால் துய்ய கேரளம் எட்டாம்பாவம் இருபதாவது பாடல் பிரகாரம் மாரகஞ் செய்வார்.

ஜாதகருடைய மரணமும் பின்ஜன்மமும்

38. அன்பது யெட்டு வாண்டில்
ஆடிமா தத்தி லேதான்
இன்னவ னுடல மேகு
மியம்புவோம் பின்ஜன் மத்தைக்
கன்னியா குமரி பக்கல்
காவலன் சைவச் சேயாய்ப்
பொன்பணி யுடையோ னுக்குப்
பிறப்பனு மென்று சொன்னோம்.

38. ஜாதகருக்குத் தனது ஐம்பெத்தெட்டாவது வயதில் ஆடி மாதத்தில் மரணம் நேரிடும். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச்

சொல்லுகின்றோம். கன்னியாகுமரிக்குச் சமீபத்தில் சைவர் குலத்தில் தனமும் ஆபரணங்களும் உடையவருக்கு ஆண் குழந்தையாகப் பிறப் பார் என்று சொல்லுகின்றோம.

குறிப்பு : ஜாதகர் மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 57-0-0 முதல் வயது வருஷம் 58-0-0 முடியும் வரையிலும் சனி மகா தசையில் சனி புத்தி நடக்கின்றது. சிம்மலக்கினத்திற்குப் பராசர ஹோரை ஜாதகசந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகப் பிரகாரம் ஏழாவது பாவாதிபதியாகிய சனி மாரகராகின்றார். மேலும் சனி ஆறுவது பாவத்திற்குடையவராயிருப்பதால் குமாரசாமியம்மகாதிசைப் பலப்படலம் நான்காவது பாடல் பிரகாரமும் ஜாதகசந்திரிகை இருபத் தாறுவது சுலோகப் பிரகாரமும் மாரகாதிபதியாகின்றார். ஜன்ம லக்கினத்திற்கு அஷ்டமாதிபதி இருக்கிற நவாம்சராசித்திரிகோணத் தில் சனி கோசாரத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது மாரகம் என்று சந்திரகலாநாடியிலும் சொல்லியிருக்கின்றது. இங்கு அஷ்டமாதிப தி யாகிய குரு அம்சத்தில் விருச்சிகத்தில் இருப்பதால் சனி கோசாரத் தில் விருச்சிகத்தில் சஞ்சாரஞ் செய்யும்போது ஜாதகருக்கு மரணம் நேரிடும். ஜாதகருக்கு ஐம்பத்தெட்டாவது வயதில் ஆடி மாதத்தில் சனி கோசாரத்தில் விருச்சிக ராசியில் சஞ்சாரஞ் செய்கின்றார். இந்தக் காரணங்களால் சனி தன் தசையில் சுய புக்தியில் ஐம்பத்தெட்டாவது வயதில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக் கின்றார்.

39. பாலகன் ஜனிக்குங் காலை பரிதியின் தசை யிருப்புச்
சாலவே வாண்டு ஐந்துஞ் சார்ந்திடுந் திங்க ளெட்டும்
ஞாலமேல் வறுமை காணன் நல்கிடுந் துணைபின் ஞலே
ஏலவே தந்தை முன்னே னேகுவான் கால நாடு.

39. ஜாதகர் ஜெனனமான காலத்தில் சூரியனுடைய தசையில் ஐந்து வருஷங்களும் எட்டு மாதங்களும் இருப்பு ஆகும். இந்தத் தசை காலத்தில் ஜாதகருக்கு பூமியில் தரித்திரமும் கஷ்டங்களும் ஏற்ப டாது. இவருக்கு இளைய சகோதரன் உண்டாவான். இவருடைய தகப்பனரின் மூத்த சகோதரர் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவர்.

குறிப்பு:—ஜாதகரின் தகப்பனருடைய மூத்த சகோதரன் விஷயமாய் நான்காவது பாடலையும் முப்பத்திரண்டாவது பாடலையும் வரிக்கவும், இந்த மூத்த சகோதரன் ஜாதகருக்கு இரண்டாவது வயதில் இறந்து விடுவார் என்று சொல்லிருப்பது தெரியவரும்.

40. தந்தையின் தந்தை கண்டந் தாய்துணை சுபமு மெய்தும்
பந்தமாங் குடும்ப மென்றேரும் பாரினில் சல்லிய முண்டு
சிந்தையில் கலக்க மெய்தும் தேசமேல் திரித லுண்டு
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விவர மாக.

40. ஜாதகருடைய தகப்பனுருடைய தகப்பனுர் அஃதாவது பிதிரு வழிப்பாட்டன் இறந்துபோய் விடுவார். ஜாதகருடைய தாயாரின் சகோதரருக்குச் சுபகாரியம் நடைபெறும். ஜாதகருடைய குடும்பம் ஒரு கைவிளக்கைப் போல் பிரகாசமாகவும் அழகுடையதாகவும் இருக்கும் என்று சொல்லுகின்றேரும். இவருக்குப் பூமியில் கடன் ஏற்படும். மனத்தில் பலவித கஷ்டங்கள் நேரிடும். பூமியில் பல விடங்களில் அலையவேண்டியதாக விருக்கும். இன்னும்மற்ற விஷயங்களோ அடுத்த பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்றேரும்.

குறிப்பு:—முப்பத்தொன்பதாவது, நாற்பதாவது பாடல்களில் சூரிய தசை நடக்கும் காலமாகிய ஐந்து வருஷம் எட்டுமாத காலத்திய பலாபல்ன்களைச் சொல்லியிருக்கின்றது. இக்காலத்தில் ஜாதகர் குழந்தைப் பருவத்தில் இருப்பதால் ஜாதகருக்குச் சொல்லியுள்ள பலன்கள் எல்லாம் பெரும்பாலும் குடும்பத்தாருக்கு நேரிடும் என்று ஊகிக்கவேண்டியதாகவிருக்கிறது. பிதிரு ஸ்தானம் ஒன்பதாமிடமாகிய மேஷமாகும். இதற்குப் பிதிரு ஸ்தானம் மேஷத்திற்கு ஒன்பதாமிடமாகிய தனுசு ஆகும். ஆகையால் பிதிரு வழிபாட்டனது லக்கினம் தனுசாகும். இதற்குடைய குரு தனுசிற்குப் பன்னிரண்டில் ராகுவுடன் கூடியிருப்பது பிதிரு பாட்டனுக்குத் தோஷமாகும். பிதிரு பாட்டன் லக்கினத்தில் சனி இருப்பது தோஷமாகும். தனுசிற்கு எட்டிற்குடையவரான சந்திரன் தனுசில் இருப்பது பிதிரு பாட்டனுக்குத் தோஷமாகும். தனுசிற்கு மாரகஸ்தானமாகிய இரண்டில் சூரியன் இருப்பதாலும் தனுசிற்கு பசாரஹோரை, ஜாதகசந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகம் பிரகாரம் ஏழிற்குடையவரான புதன் மாரகாதிபதியாகி சூரியனுடன் கூடியிருப்பதால் சூரியன் தன்சையில் பிதிரு வழி பாட்டனுக்கு மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகவிருக்கின்ரூர்.

ஜாதகம் 88

ஜனனகால கிரகநிலை

1. [1]பிறை[2]தனு [3]பொன்னேன் [4]சாடி [5]பூமகன் [6]சீய மாகக் [7]கரியவன் [8]வெள்ளி [9]புந்தி [10]கதிர்கன்னி [11]சிகியுங் [12]தேளில் [13]அரவுமே [14]நந்தி யாக [15]அரிய தஜன்ம மாக உரைவீரே பலனை யென்று வுத்தமி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் தனுசிலும், குரு கும்பத்திலும், அங்காரகன் சிம்மத்திலும், சனியும் சுக்கிரனும் புதனும் சூரியனும் கன்னியிலும், கேது விருச்சிகத்திலும், ராகு ரிஷபத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் சிம்மமானால் பலா பலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மை யார் கேட்கலானார்.

கிரகநிலை

		ராகு	
குரு	இராசி சக்கரம்		
			லக்கினம் அங்காரகன்
சந்திரன்	கேது		சூரியன் புதன் சுக்கிரன் சனி

குறிப்பு :—இந்த ராசிசக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சந்திரனும் புதனும், கடகத்தில் சூரியனும், கன்னியில் சுக்கிரனும் கேதுவும், தனுசில் அங்காரகனும், மகரத்தில் சனியும், மீனத்தில் குருவும் ராகுவும் ஆகும். குரு வக்கிரமாக விருக்கின்றார். சுக்கிரன் அஸ்தங்கதராக விருக்கின்றார்

---

1. சந்திரன்
2. தனுசு
3. குரு
4. கும்பம்
5. அங்காரகன்
6. சிம்மம்
7. சனி
8. சுக்கிரன்
9. புதன்
10. சூரியன்
11. கேது
12. விருச்சிகம்
13. இராகு
14. ரிஷபம்
15. சிம்மம்

ஜாதகர் பிறந்த வீட்டின் சிறப்பு

2. அத்திரி சொல்லு கின்றார்
ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன்
மேல்வாசல் வடதென் வீதி
உத்தரந் திசையி லீசன்
உயர்மேற்கில் தந்தி கோஷ்டஞ்
சுத்தமாய் நதியுங் கீழ்ப்பால்
துரகவா கனத்தோன் தங்கும்.

2. இந்த ஜாதகன் ஆண் குழந்தையாகப் பிறப்பார் என்று அத்திரி மகரிஷி சொல்லுகின்றார். இவருடைய ஜனன வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றேன். வடக்குத் தெற்குத் தெருவில் மேற்குப் பக்கம் வாயிற்படியை யுடையதாகப் பிறந்த வீடு இருக்கும். வடக்குத் திக்கில் சிவபெருமானுடைய கோயில் இருக்கும். மேற்குத்திக்கில் விநாயக ருடைய கோயில் இருக்கும். கிழக்குத்திக்கில் ஒரு பரிசுத்தமான ஜலத் தையுடைய நதியும் இருக்கும். ஓர் அண்ணன்மார் கோயிலும் கிழக் குத்திக்கில் இருக்கும்.

3. இவ்வித வடையா ளத்து ளிலகிய யன்னை யில்ல
மொவ்விய விந்தப் பால னுதிப்பனுஞ் ஜேஷ்ட னுகப்
பவ்வமா யன்னை தந்தை பாலகன் களத்திர புத்திரர்
திவ்விய மூன்பின் ஜன்மஞ் செப்புவோ மிந்நூல்
[தன்னில்.

3. இப்படிப்பட்ட அடையாளங்களையுடைய ஒரு கிராமத்தில் ஜாதகர் தன்னுடைய தாயாருடைய வீட்டில் மூத்தகுமாரனுகப் பிறப் பார். இவருடைய தாயார் தகப்பனர் மனைவி சந்ததி முன்ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றி இந்தச் சாஸ்திரத்தில் சொல்லு கின்றோம்.

ஜாதகருடைய தகப்பனர் விஷயம்

4. தந்தையின் சேதி சொல்வேன் சரசமாய் வார்த்தைச்
[சொல்வன்
சிந்தையில் கபடு மில்லான் சல்லியப் பாதை யுள்ளான்
நொந்திடு மனத்த னுகும் நிகர்சோலை துரவு செய்வன்
முந்துமால் நிறத்த னுகு முனிவுண்டு யுடனே தாழ்வு.

4. ஜாதகரின் தகப்பனருடைய விஷயங்களைச் சொல்லுகின் றேன். இவர் இனிமையாகவும் ஒழுங்காகவும் வார்த்தைகளைச் சொல்லு வார். தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை முதலியவைகள்

இல்லாதவர். இவர் கடனால் துன்பத்தை அடையக்கூடியவர். இவருக்கு மனக்கஷ்டங்கள் நேரிடும். மேன்மையான தோப்பு பெரிய கிணறு இவைகளை உண்டு பண்ணுவார். இவர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேகவர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தையுடையவராவர். இவருக்குக் கோபம் உண்டாகும். ஆனால் அஃது உடனே தணிந்து விடும்.

5. பிறர்பொரு ளிச்சை யில்லான்
பிழையதை யொருவர்க் கெண்ணான்
மறுநகர் லாப மேற்பன்
வளமையாய்க் கிருஷிச் செய்வன்
குறையென்றோர்க் குதவிச் செய்வன்
குலமதில் குற்ற மேற்பன்
முருகர்தம் பத்திக் கொள்வன்
மூலச்சூ டுடைய னுமே.

5. ஜாதகருடைய தகப்பனார் அன்னியர்களுடைய சொத்தின் மேல் ஆசையில்லாதவர். இவர் யாருக்கும் எவ்விதமான தீங்கையும் விளைவிக்க நினைக்கமாட்டார். இன்னொரு பட்டணத்திலிருந்து லாபத்தை அடைவார். விவசாயத்தை மேன்மையாகச் செய்வார். கஷ்டத்தை அனுபவிக்கின்றோம் என்று சொல்லுகிறவர்களுக்கு உபகாரஞ் செய்வார். இவருடைய குலத்தில் ஒரு பழி உண்டாகும். இவர் ஆறுமுகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவர். இவர் மூலச்சூட்டுத் தேகத்தையுடையவரென்று சொல்லக்கூடும்.

தகப்பனரின் முன்ஜன்மம்

6. தூணவரால் அவமா னத்தன்
சுகதுக்கங் கலந்து வாழ்வன்
பிணையதை யொருவர்க் கெண்ணான்
பூர்வமும் புகலக் கேண்மோ
கனமுள கலிங்கு நாட்டில்
கலந்தனன் ரெட்டி வம்ச
மனையவே பாரி யுண்டா
யவனியை விருத்திச் செய்து ;

6. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய சகோதரர்களால் அவமானத்தை அடையக் கூடியவராவர். இவர் நல்லதையும் கெட்டதையும் கலந்து அனுபவித்து வாழ்வார். அஃதாவது இன்பத்தையும் துன்பத்தையும் கலந்து அனுபவிப்பார். எவரிடத்திலும் பொய் சொல்ல நினைக்கமாட்டார். ஜாதகரின் தகப்பனாருடைய முன்ஜன்மத்

தைப் பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. மேன்மையான சிறந்த கலிங்கதேசத்தில் ரெட்டியாருடைய குலத்தில் இவர் முன்ஜன்மத்தில் பிறந்தார். இவர் மனைவியை உடையவராகிப் பூமியைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்கிக் கொண்டு ;

7. சுகமுள குடும்பி யாகிச்
சுந்தரன் வாழு நாளில்
பகையதைப் புகலக் கேண்மோ
பஞ்சையா யேழை யோர்க்குத்
தகமையாய்ப் பொருளை யீந்து
தான்மூரி யவரால் பெற்று
மிகுசில நாளி ருந்து
வேண்டினன் பொருளை யின்னேன்.

7. ஜாதகருடைய தகப்பனார் ஒரு சௌக்கியமான குடும்பத்தை யுடையவராகி வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த வினையைப் பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. அனுதனக விருக்கின்ற ஓர் ஏழைக்குத் தன்னுடைய பணத்தை நல்லவிதமாகக் கொடுத்து அவரிடம் இருந்து ஒரு பத்திரத்தைப் பெற்றுக் கொண்டு சிலநாள் பொறுத்திருந்து பிறகு அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்டார்.

8. இன்னமுஞ் சிலநாள் சென்று
யீகுறேன் பொருளை யென்ன
மன்னர்பால் முறியுங் காட்டி
வளவந்தா ரணியுங் கொண்டா
னன்னவன் மனவெ றுப்பா
லறைந்தசா பத்தைக் கேண்மோ
பின்வருஞ் ஜன்மந் தன்னில்
பிதுராஸ்தி விரயஞ் செய்து ;

8. இன்னமும் சிலநாள் பொறுத்துத் திருப்பித் தருகின்றேன் அந்தப் பணத்தை என்று பிராமணர் ஜாதகருடைய தகப்பனாருக் குப் பதில் சொன்னார். அதன்மேல் இந்தத் தகப்பனார் அரசாங் கத்தாரிடம் போய்ப் பத்திரத்தைத் தாக்கல் செய்து வியாஜ்யம் பண்ணி நிலத்தையும் அதன்மேலிருந்த மகசூலையும் கைப்பற்றிக் கொண்டார். அந்தப் பிராமணர் தன்னுடைய மனத்தில் கஷ்டப்பட்டுச் சொல்லிய சாபத்தைத் தெரிவிக்கின்றேன், கேட்பீராக. "நீ உன்னு டைய மறுஜன்மத்தில் உன்னுடைய பிதுரார்ஜிதச் சொத்தை செலவு செய்து விடுவதுமன்றி ;

9. தன்துணை தன்னில் நிந்தை சார்ந்திடு மிதுவல் லாம
லன்னிய நகரம் வாச மாகுவா யென்று சொல்லி
மண்வாரி விட்டுச் சென்ரு ரடைந்தது வந்தத் தோஷந்
தன்துணை பாகந் தன்னில் தான்சில மோசஞ் செய்தான்.

9. உனக்கு உன்னுடைய சகோதரரால் அவமானமும் பழியும் நேரிடும். இதுவுமல்லாமல் நீ அயல்நாட்டிற்குப்போய் வாசஞ் செய்யக் கடவது" என்று அந்தப் பிராமணர் ஜாதகருடைய தகப்பனுரைப் பார்த்துச் சொல்லி விட்டுப் பூமியில் இருந்த மண்தூளை வாரித் தூவி விட்டுப் போய்விட்டார். அதனுல் அந்தச் சாபமானது தகப்பனுரை வந்து அடைந்தது. மேலும் தன்னுடைய சகோதரனுடைய பாகத்தில் தகப்பனுர் முன்ஜன்மத்தில் சிறிது மோசஞ் செய்து ஏமாற்றினுர்.

10. ஞாதியின் சாபங் கேளாய் நல்காது தந்தை யாஸ்தி
பாதியாம் வயது மேலாய்ப் பறந்திடும் வேறூர் தன்னில்
தீதாகச் சொல்லிச் சென்ரூர் சேர்ந்தது வந்தத் தோஷங்
காதல னந்தி யத்தில் கால்கரஞ் சோர்வு முண்டாய்;

10. அதனுல் பங்காளி கொடுத்தச் சாபத்தைச் சொல்லுகின் றேன், கேட்பீராக. "நீ உன்னுடைய தகப்பனுருடைய சொத்தை அடையமாட்டாய். உன்னுடைய பாதி வயதிற்குப் பிறகு நீ அயலூ ருக்குப் போய்விடக் கடவது" என்று கெடுதியாகச் சொல்லிவிட்டு அப் பங்காளி போய் விட்டார். அந்தத் தோஷமும் தகப்பனுரை வந்து அடைந்தது. இந்தத் தகப்பனுர் தன்னுடைய கடைசி காலத்தில் தன்னுடைய கால் கை இவைகள் தளர்ச்சி யடைந்து;

11. அறுமுகன் பத்தி கொண்டு அந்தகன் பக்கல் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தன னென்று
[சொன்னேஞ்
சிறுமையின் சாபந் தானுஞ் சேர்ந்திடு மிச்ஜன் மத்தில்
பெறுந்தந்தை யாஸ்தி நீங்கும் போவனும் வேரூர்
[தன்னில்.

11. ஆறுமுகக்கடவுளாகிய முருகர்மேல் அன்பும் ஆசையும் உடையவராகி இறந்து எமனிடத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்து இருக்கின் ரூர் என்று சொல்லுகின்ரோம். அந்த ஏழையின் சாபமானது ஜாதக ருடைய தகப்பனுரை தன்னுடைய இந்த ஜன்மத்தில் வந்து அடை யும். இவரிடமிருந்து இவருடைய பிதிரார்ஜித சொத்து விலகிப் போய் விடும். இவர் வேறு ஓர்ஊருக்குப் போய் வீடுவார்.

12. என்னகா ரணத்தி னலே யிவன்தந்தை யாஸ்தி நீங்கும்
முன்னமே சொல்லு மென்ன முன்னோர்கள் கடனுக்
[காகத்
தன்னில்லஞ் சோலை நீங்குந் தான்வேறூர் வாச மாகும்
அந்திடஞ் சுகங்களுண்டோ அறிவிப்பீர் முனியே நீர்தாம்.

12. ஜாதகரின் தகப்பனாருக்கு அவருடைய பிதிரார்ஜித சொத்து எந்தக் காரணத்தினால் விலகிப் போய் விடும் என்பதை உடனே சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரிமகரிஷி சொல்லுகின்றார். இவருடைய தகப்பன் பாட்டன் இவர்கள் பட்ட கடனுக்காக இவருடைய வீடு தோப்பு இவரை விட்டு விலகிப் போய் விடும். இவரும் தன்னுடைய ஊரை விட்டு வேறூருக்குப் போய் விடுவார். இவர் புதியதாகப் போய் வசிக்கின்ற ஊரில் இவருக்குச் சௌக்கியங்கள் உண்டாகுமோ ஆகாதோ என்பதை, முனிவரே! நீங்கள் சொல்லுவீர்கள் என்று கேட்டார்.

13. சுகமுண்டாய்த் தனமும் சேர்ந்து சோலையை விலக்கு
[வானும்
அகஞ்செய்வன் கிருஷி மேன்மை யாள்காரு டைய
[ஞகும்
மிகுகீர்த்தி பந்து மேன்மை வித்தகன் வாழ்வா ஞகும்.
செகமதில் நல்லோனவன் செப்புமிக் குணத்தானுக்கு.

13. ஜாதகருடைய தகப்பனார் அன்னிய ஊருக்குப் போன பிறகு இவருக்குச் சௌக்கியங்கள் ஏற்பட்டுப் பணம்கிடைத்துத் தன்னுடைய தோப்பைக் கடனிலிருந்து நிவிர்த்தி செய்வார். இவர் புதிய வீட்டைக் கட்டுவார். இவருக்கு விவசாயத் தொழில் மேன்மையை அடைந்து விருத்தியாகும். இவர் வேலைக்காரர்களை உடையவராக ஆவார். இவருக்கு அதிகப் பெருமையும் புகழும் உண்டாகும். பந்துக்கள் இவரைப் பெருமையாகப் பாராட்டுவார்கள். இப்படிப்பட்ட அந்தஸ்துடையவராக விருந்து காலத்தைக் கழிப்பார். இவர் பூமியில் நல்லவரென்று பெயர் எடுப்பார். இவ்விதமான குணங்களும் பலன்களும் உள்ள தகப்பனாருக்கு;

ஜாதகருடைய குணாதிசயங்கள் முதலியன

14. உதிப்பனு மிந்தப் பாலன்
உரைக்கிறே மிவன்கு ணத்தைத்
துதிசெய்தோர்க் கன்ன மீவன்
தோகையர் மோக வானும்

பதியது சித்திரஞ் செய்வன்
பலவித வணிபஞ் செய்வன்
ததிநெய்பா லிஷ்டஞ் கொள்வன்
தன்பந்து புகழ வாழ்வன்.

14. இந்த ஜாதகர் பிறப்பார் ஜாதகருடைய குணதிசயங்களைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றேரும். இவர் தன்னைப் புகழ்ந்து பேசுகின்றவர்களுக்குச் சாப்பாடு போடுவார். இவர் ஸ்திரீகளிடத்தில் காம ஆசையையுடையவராவர். இவர் தன்னுடைய வீட்டைச் சித்திரங்களால் அலங்கரித்து அழகுபடுத்துவார். இவர் பலவிதமான வியாபாரங்களைச் செய்வார். இவர் தயிர் நெய் பால் இவைகளின் மேல் பிரியமுள்ளவராக விருப்பார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னைக் கௌரவப்படுத்தக் கூடிய அந்தஸ்திலிருந்து வாழ்வார்.

15. வித்தையு மல்ப முண்டு வீண்வம்பு புகலா னுகும்
பத்தினி நேய னுகும் பாரினில் சல்லியங் கொள்ளான்
சுத்தவா னாக சாலி தொடுத்ததை வெல்வ னுகுங்
குத்தத்தை மனத்தில் வையான் குஞ்ஜர நிறத்த னுமே.

15. ஜாதகருக்குப் படிப்பு கொஞ்சமாக் விருக்கும். வீணுகச் சண்டையை விளைவிக்கக் கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவர் தன்னுடைய மனைவியிடத்தில் பிரியமுள்ளவராக விருப்பார். இவரிடத்தில் இவருடைய மனைவியும் ஆசையுள்ளவளாக விருப்பாள். இவர் பூமியில் கடன்படமாட்டார். நல்லொழுக்கமும் பரிசுத்தமும் உடையவராக விருப்பார், நுட்பமான புத்தியையுடையவராவர். தான் எடுத்த காரியத்தை இவர் பூர்த்தி செய்து நிறைவேற்றுவார். தன்னுடைய மனத்தில் கெட்ட எண்ணத்தை வைத்துக் கொண்டிருக்க மாட்டார். யானையின் நிறத்தைப்போன்ற கறுநிறமுடைய தேகத்தை உடையவராவர்.

16. தந்தைக்குத் தாழ்வு றுதான் தலவாசஞ் செய்வா னுகுங்
கந்தன்மேல் பத்தி பூண்பன் கஞ்சமாம் ரேகை யுண்டு
பொன்பணி பின்னல் சேர்ப்பன் பராசரும் தடுத்துச்
[சொல்வார்
எந்தக்காலத்தில் யோக மியம்புவீர் விபரஞ் சொல்வாய்.

16. ஜாதகர் தன்னுடைய தகப்பனருடைய அந்தஸ்திற்குக் குறைந்த அந்தஸ்தில் இருக்கமாட்டார். இவர் புண்ணிய ஸ்தலங்களுக்குப் போவார். ஆறுமுகக்கடவுளாகிய முருகர்மேல் அன்பும் ஆசையும் உடையவராக விருப்பார். இவருடைய உள்ளங்கையில் கஞ்சரேகை என்று சொல்லப்பட்ட ஒருவிதமான கமலரேகை அல்லது தாமரை ரேகை இருக்கும். இவர் தன்னுடைய பிற்காலத்தில் தனம் ஆபரணம்

இவைகளைச் சேர்த்து வைப்பார். இவ்விதமாக அத்திரிமகரிஷி சொல்லிக் கொண்டு வரவே பராசர மகரிஷியானவர் தடுத்துக் கேட்கின்றார். ஜாதகருக்கு எந்த வயதில் யோகம் உண்டாகும் என்பதை விவரமாகச் சொல்லுவீராக.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

17. ஈரேழு வாண்டு மேலா யிவனுக்குப் பிறைபோல் யோகங்
கூறுவோம் வறுமை காணுன் குறிக்கின்றோம் பின்பால் [சேதி
மாரன்தன் துணையாண் ஒன்று மங்கைய ரிருவர் தீர்க்கம்
வீரது மூன்று தானும் வித்தகி கேட்டி டாயே.

17. ஜாதகருக்குப் பதினான்கு வயதிற்குமேற்பட்டு வளர்பிறைச் சந்திரனைப்போல யோகம் வளர்ந்து கொண்டே போகும் என்று சொல்லுகிறோம் என்று அத்திரிமகரிஷி சொல்லுகின்றார். ஜாதகர் தரித்திரத்தையும் கஷ்டத்தையும் அனுபவிக்கமாட்டார். மற்ற விஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றோம். ஜாதகருக்கு ஓர் ஆண் சகோதரமும் இரண்டு பெண் சகோதரங்களும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். இவர்கள் மூன்று பேரும் இவரை விட்டுப் பிரிந்திருக்க மாட்டார்கள். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய விவாககாலம்: மனைவி விஷயங்கள்

18. மணமது யிருபத் தொன்றில் மருவிடும் பாரி தானுங்
கணிகையும் அன்னை வர்க்கங் கலப்பளாங் தாரம் ஒன்றே
குணமது நல்ல தாகுங் குலத்தோரை யாத ரிப்பள்
தணிவான புத்தி யேற்பள் சான்றோருக் கன்ன மீவள்.

18. ஜாதகருக்குத் தனக்கு இருபத்தொன்றுவது வயதில் விவாகம் நடந்து மனைவி வந்து சேருவாள். இவள் ஜாதகருடைய தாயாருடைய பந்துக்களிலிருந்து வருவாள். ஜாதகருக்கு ஒரே ஒரு மனைவி உண்டு. மனைவி நல்ல குணங்களை உடையவளாக விருப்பாள். இவள் தன்னுடைய குலபந்துக்களைக் காப்பாற்றுவாள், நல்ல புத்தியையுடையவள். இவள் அறிஞர்களுக்குச் சாப்பாடு போடுவாள்.

குறிப்பு :—விவாக விஷயம் :— ஜாதகருக்கு வயது வருஷம் 20-0-0 முதல் வயது வருஷம் 21-0-0 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் சனிபுக்தி நடக்கின்றது. சுக்கிரன் பத்திற்குடையவராகி ஏழிற்குடைய வராகிய சனியுடன்கூடி இருக்கின்றார். ஆகையால் ஜாதகபாரிஜாதம் பதினான்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் சுக்கிரன் தன்னுடைய தசையில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்கும் அமைப்பு உடையவராக விருக்கின்றார். சனி களத்திர

ஸ்தானமாகிய ஏழாவது பாவத்திற்குடையவராகிக் களத்திரக்காரகனு கிய சுக்கிரனுடன்கூடி யிருப்பதால் ஜாதகபாரிஜாதம் பதினொன்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகத்தின் ஓராவது வரிப் பிரகாரம் சனி தன்னுடைய புக்தியில் ஜாதகருக்கு விவாகஞ் செய்து வைக்க அமைப்பு உடையவராக விருக்கின்றார். ஆகையால் சுக்கிர தசையில் சனிபுக்தியில் இருபத்தொன்றுவது வயதில் ஜாதகருக்கு விவாகம் நடக்கும் என்று சொல்லி யிருக்கின்றது.

தாய் பந்து விஷயம்:—சிம்மத்திற்குக் களத்திரஸ்தானம் ஏழாவது பாவமாகிய கும்பம் ஆகும். இதை மாதிருஸ்தானாதிபதியாகிய அங் காரகன் பார்க்கின்றார். சந்திரலக்கினத்திற்குக் களத்திரஸ்தானம் ஏழாவது பாவமாகிய மிதுனம் ஆகும். இதைச் சந்திரலக்கினத்திற்கு மாதிருஸ்தானாதிபதியாகிய குரு பார்க்கின்றார். ஜன்மலக்கினத்திற் குக் களத்திரஸ்தானாதிபதியாகிய சனி அம்சையில் புதனுக்கும் சுக்கிர னுக்கும் தூரத்தில் இருக்கின்றார். ஆகையால் அங்காரகன் குரு இவர் கள் பலனுக மனைவி தாய் வழியிலிருந்துவர அதிக அமைப்பு இருக் கின்றது.

19. அன்னம்போல் சாய லொக்கும் அவள்வந்த பின்பு
[யோகம்
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா ளாகும்
சொன்னசொல் சுகமே யெய்துஞ் சுதர்களு மாண்பா
[லிரண்டு
கன்னிகை யவ்வாறு தீர்க்கங் காதலி கேட்டி டாயே.

19. ஜாதகருடைய மனைவி அன்னத்தைப்போன்ற வடிவத்தை யுடையவளாவள். இவள் இவருடன் வந்து சேர்ந்த பிறகு இவ்ருக்கு யோகம் ஏற்படும். இவள் தன்னுடைய அவயவங்களில் யாதொரு குறைவும் இல்லாதவளாக விருப்பாள். இவள் அயலார்மேல் யாதொரு தோஷத்தையுஞ் சொல்லமாட்டாள். இவ்ள் சொல்லுகின்ற வார்த்தைகள் இனிமையானவையாகவும் நல்லவையாகவும் இருக்கும். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைக ளும்நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். பார்வதியம் மையே! இன்னும் கேட்பீராக.

ஜாதகருடைய தாயார் விஷயம் (மாதுருபாவம்)

20. அன்னையு மால்கி றத்தாள் ஆளன்தன் மனம்போல்
[வாழ்வள்
பன்னியே பேசு வாளாம் பகையொன்று மனத்தில்
[வையாள்
தன்மனம் கபடு மில்லாள் தன்துணை யாண்பா லிரண்டு
கன்னிகை யொன்றே தீர்க்கங் காதலி யில்ல மூத்திரம்.

20. ஜாதகருடைய தாயார் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்று சொல்லப்பட்ட ஒருவிதமான நிறத்தையுடையவளாக விருப்பாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனதிற்கு ஒத்தாப் போல விருந்து வாழ்வாள். இவள் நல்ல தேர்ச்சியை யடைந்தவள் போலத் திறமையாகவும் சமர்த்தியமாகவும் பேசுகின்றவளாவாள். இவள் தன்னுடைய மனதில் யாதொரு கெட்ட எண்ணங்களையும் வைத்துக்கொண்டிருக்கமாட்டாள். இவள் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை இவைகள் இல்லாதவளாக விருப்பாள். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு ஆண் சகோதரங்களும் ஒரு பெண் சகோதரமும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். இவளுடைய தாயாருடைய வீடு வடக்குத் திக்கில் இருக்கும்.

தாயாருடைய முன்ஜன்மம்

21. முகத்திலே வடிவு முண்டு முன்கோபி சமயோ கத்தாள்
உகமையாய் வார்த்தை சொல்லாள் உரைக்கிறே
[மிவள்தன் பூர்வஞ்
ஜகமதில் உயர்வ தான சீகாழி நகரந் தன்னில்
வகையான வன்னிய சேயாய் மருவியே வறுமை யின்றி ;

21. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முகத்தில் அழகை யுடையவள், முன்கோபத்தை யுடையவளாவாள். உபமானங்களை உபயோகப்படுத்தி அழகாக வார்த்தைகளை இவள் சொல்லுவாள். ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மத்தைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். பூமியில் மேன்மையான சிறந்த சீகாழி என்ற பட்டணத்தில் வளமான ஒரு வன்னிய குலத்தில் பெண்ணாகப் பிறந்து தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமல் வாழ்ந்து ;

தாயாருடைய பின்ஜன்மம்

22. சுதருண்டாய்ச் சோர்வோ ருக்குத் துன்பத்தை விலக்கு
[வாளாம்
நதிசேது பதிக்குச் சென்று நமன்பதிக் காளா யின்னாள்
விதியவன் வரையப் பட்டு விளங்கினாள் இந்த மாது
அதிபதி பின்ஜன் மத்தை வரைகிறே மினிமே லாக.

22. சந்ததிகளை உடையவளாய், ஏழைகளுடைய கஷ்டங்களை நிவிர்த்தி செய்பவளாக விருந்தாள். இவள் சேது ஸ்தலத்திற்கும் அதிலுள்ள புண்ணிய தீர்த்தத்திற்கும் போய் நல்ல புண்ணியத்தை அடைந்து பிறகு இறந்து பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். ஜாதகரின் தாயாருடைய மறுஜன்மத்தைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

23. உத்தரம் தணிகைக் கீழ்ப்பால் உதிப்பளாம் ரெட்டி வம்சம்
முத்தின குடும்பி யாகி முதல்வியும் வாழ்வா ளாகும்
வித்தகன் பூர்வஞ் சொல்வேன் மேல் ஸட்டில் யிக்கு
[லத்தில்
சித்தமா யுதித்த யின்னேன் ஜனஉப காரி யாவாள்.

23. ஜாதகருடைய தாயார் வடக்குத்திக்கிலுள்ள திருத்தணிக்குக் கிழக்குத் திக்கில் ஒரு ரெட்டியாருடைய குலத்தில் பிறப்பாள். இவள் ஒரு நல்ல சிறந்த குடும்பஸ்தையாகி வாழ்வாள். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றேன். மேற்குத்திக்கி லுள்ள ஒரு தேசத்தில் இந்த ஜன்மத்திற் பிறந்த வேளாளர் ஜாதி யிலேயே ஜாதகர் பிறந்து ஜனங்களுக்கு உதவி செய்பவராகவிருந்து ;

24. ஆலய பணிகள் செய்து அச்சென்மம் பவமில் லாமல்
காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமாங் கங்கை சேயாய் ஜனிப்பனு மிந்த பாலன்
சாலவே யிவனின் யோகஞ் சகடுவா கனமு மேற்பன்.

24. கோயிலில் தொண்டு செய்துகொண்டு பூர்வஜன்மத்தில் யாதொரு பாவத்தையும் செய்யாமல் வாழ்ந்து இறந்து எமபட்டணத் திற்குப்போய்ப் பிரம்தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டுச் சுத்தமான மேன்மையான கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் வந்து பிறந் திருக்கின்றார் இந்த ஜாதகர். இவருடைய யோகத்தைப்பற்றி இனிச் சொல்லுகின்றேன். இவர் வண்டி வாகனம் இவைகளை உடையவராவர்.

25. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தானியச் செட்டுச் செய்வன்
வந்தவ னீரே ழாண்டு மேலேதான் வரைந்தேன் யோகம்
பிந்தியு மரண மட்டும் பேசுவோம் வறுமை காணுன்
விந்தையா யிருபா னைந்தில் மேவிடு நிதிநிட் சேபம்.

25. ஜாதகர் தன்னுடைய தகப்பனுருடைய அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்வார். நவதான்ய வியாபாரத்தைச் செய்வார். இவருடைய பதினன்குவயதிற்குப் பிறகு இவருக்கு யோகம் உண்டாகும் என்று சொல்லுகின்றேன். இதற்குப் பிறகு இவருடைய மரணகாலம் வரையிலும் இவருக்குத் தரித்திரமும் கஷ்டங்களும் உண் டாகாமல் இவர் வாழ்வார் என்று சொல்லுகின்றேரும். இவருக்கு இருபத் தைந்தாவது வயதில் ஆச்சரியமாகத் தனமும் புதையலும் கிடைக்கும்.

குறிப்பு : யோக விஷயம் :—ஒரு ஜாதகத்தில் யோகத்திற்குச் சம்பந்தப்பட்ட கிரகங்கள் (1) ஒன்பதிற்குடையவர் (2) பத்திற்குடைய வர் (3) பதினொன்றிற்குடையவர், (4) இரண்டிற்குடையவர் (5) ஐந்

திற்குடையவர் (6) நான்கிற்குடையவர் ஆவர். தனகாரகர்கள் குரு வும் இராகுவும் ஆவார்கள். இவர்கள் எல்லாரும் இந்த ஜாதகத்தில் கேந்திரங்களிலும் திரண்டிலும் இருக்கின்றார்கள். மேலும் நான்கு கேந்திரங்களிலும் கிரகங்கள் இருப்பது ஜாதகாலங்காரம் இருநூற்றுத் தொண்ணூற்றேழாவது பாடல் பிரகாரம் பர்வதயோகமாகும். ஆகை யால் இந்த ஜாதகம் யோகமுள்ளதாகும். புலிப்பாணி ஜோதிடம் எண்பத்தோராவது பாடலையும் பார்க்கவும்.

ஜாதகருடைய பிதிருகர்மகாலமும், தந்தையின் மறுஜன்மமும்

26. மூப்பது எட்டு வாண்டில்
மேவிடுந் தந்தை கண்டஞ்
செப்புவோம் பின்ஜன் மத்தில்
சிறந்தகா ளாத்தி தன்னில்
ஒப்புடன் பிரம சேயாய்
உரைகுவா னிவனே யென்றோம்
மெய்ப்புட னிச்சென் மத்தில்
மேவிய புண்ணிய மென்ன.

26. ஜாதகருக்கு மூப்பத்தெட்டாவது வயதில் இவருடைய தகப் பனார் இறந்து விடுவார் என்று சொல்லுகின்றோம்.

பிதிரு மார்கம் :—ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மறு ஜன் மத்தில் மேன்மையான ஸ்ரீகாளஹஸ்தி என்ற புண்ணிய க்ஷேத்திரத் தில் மேன்மையான ஒரு பிராமணர் குலத்தில் ஆண்குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லுகின்றோம் என்று அத்திரி மகரிஷி சொல்லவே, தகப்பனார் பிராமணராகப் பிறப்பதற்கு இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணியங்களைச் செய்தார் என்று கேட்டார்.

குறிப்பு : பிதிருமாரக விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 37-0-0 முதல் வயது வருஷம் 38-0-0 முடியும் வரையிலும் சந்திர தசை யில் சனிபுக்தி நடக்கின்றது. பிதிருபாவம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். பராசரஹோரை ஜாதகசந்திரிகை இருபத்திரண்டா வது சுலோகம், இருபத்தாருவது சுலோகம் இவற்றின் பிரகாரம் மேஷத் திற்குப் பன்னிரண்டாமிடம் பதினோராமிடம் மாரகஸ்தானங்களாகும். பன்னிரண்டிற்குடையவராகிப் பதினொன்றில் இருந்துகொண்டு மேஷாதிபதியாகிய, சிம்மத்திற்குப் பிதிருஸ்தானாதிபதியாகிய அங்கார கனைப் பார்ப்பதால் குரு மாரகாதிபதியாகின்றார். இவருடைய வீடாகிய தனுசில் இருக்கின்ற சந்திரன் ஜாதகசந்திரிகை இருபத்துமூன்றாவது சுலோகப் பிரகாரம் பிதாவுக்குத் தன் தசையில் மாரகஞ்செய்ய அனுப்பு உடையவராகின்றார். மேஷ லக்கினத்திற்கு ஜாதக சந்திரிகை நாற்பத்து

மூன்றுவது நாற்பத்துநான்காவது சுலோகங்கள் பிரகாரம் சனி புதன் சுக்கிரன் இவர்கள் மாரகாதிபதிகள் ஆவதால் பிதிருகாரகனுகிய சூரிய னுடனும் சிம்மத்திற்குக் கர்மாதிபதியாகிய சுக்கிரனுடனும் சம்பந்தப் பட்ட சனி தன் புக்தியில் மாரகஞ் செய்வார்.

27. ஈகையு முடைய னுயும் எளியோரை யாத ரித்துந்
தோகைவா கனத்தோன் பத்தி சொல்லதைக் காத்த
[லா லும்
பாகமாய் மறுஜன் மத்தில் பிறப்பனும் பிரம்ம சேயாய்ப்
போகவா ரிதியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

27. ஜாதகருடைய தகப்பனுர் தயாள குணமும் கொடுக்கும் தன் மையும் உடையவராகி ஏழை மக்களைக் காப்பாற்றிக்கொண்டிருந்தும், மயில் வாகனத்தையுடைய ஆறுமுகக்கடவுளின் மேல் அன்பும் ஆசை யும் உடையவராகித் தன்னுடைய வார்த்தைகள் பிரகாரம் நடந்து கொண்டும் வந்ததல் தன்னுடைய பின்ஜன்மத்தில் மேன்மையான பிராமண குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். ஆனந்தத்தை விளைவிக்கக்கூடிய கடலையும் நாகலோகத்தையும் உடைய பூமிதேவி யைப் பெற்றெடுத்தப் புண்ணிய மாதாவாகிய பரர்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மாதிரு மாரகமும் ஜாதகரது மாரகமும்

28. நாற்பது விரண்டு வாண்டில் நற்றேளின் மாதந் தன்னில்
கூப்பிடு வானுங் காலன் குறித்ததோ ரன்னை தன்னை
ஏற்கவே ஜாத கற்கு யியம்புவோ மெழுப தாண்டில்
ஆற்கவே தனசு மாதம் அந்தகன் பக்கல் சேர்வன்.

28. ஜாதகருக்கு நாற்பத்திரண்டாவது வயதில் தேளின் மாத மாகிய கார்த்திகை மாதத்தில் இவருடைய தாயார் இறந்துபோவாள். இவர் தனக்கு எழுபதாவது வயதில் தனுர் மாதம் என்ற மார்கழி மாதத்தில் இறந்து எமனிடத்திற்குப்போய்ச் சேருவார்.

குறிப்பு: (1) மாதுர் மாரகவிஷயம்:—ஜாதகருக்கு வயது வருஷம் 41-0-0 முதல் வயது வருஷம் 42-0-0 வரையிலும் கார்த்திகை மாதத்தி லும் சந்திரதசையில் சுக்கிர புத்தி நடக்கின்றது. சிம்ம லக்கினத் திற்கு மாதிருஸ்தானம் விருச்சிகம் பராசரஹோரை ஜாதகசந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகப் பிரகாரம் விருச்சிகத்திற்கு இரண்டா வது வீடாகிய தனுசு மாரகஸ்தானமாகும். ஜாதகசந்திரிகை இரு பத்து மூன்றுவது சுலோகப் பிரகாரம் தனுசில் அஃதாவது இரண் டாவது பாவத்திலுள்ள சந்திரன் மாரகராகின்றார். மேலும் லக்கினத் திற்கு ஐந்தாவது பாவத்தில் சந்திரன் இருந்தால் மாதாவுக்குத்

தோஷம் என்றும் சூரியன் இருந்தால் பிதாவுக்குத் தோஷம் என்றும், குருவிருந்தால் புத்திரனுக்குத் தோஷம் என்றும் இவ்விதமாக ஜோதிடக் கிரந்தங்களில்* சொல்லியிருப்பதாலும் சிம்மத்திற்கு ஐந்தில் சந்திரன் இருப்பதாலும் மாதாவுக்குச் சந்திரன் தோஷத்தைக் காட்டுவார். மேலும் அந்த அந்தக்காரகர் அந்த அந்தக்காரக மனிதர்களுக்குத் தன் தசையில் மாரகஞ் செய்யும் அமைப்புடையவர் என்றும் ஜோதிடப் புத்தகங்களிலும் நாடிகளிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் சந்திரன் தன்னுடைய தசையில் மாதாவுக்கு மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். மேலும் ஜாதகசந்திரிகை ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் சுக்கிரன் விருச்சிகத்திற்கு மாரகராகின்றார். இந்தச் சுக்கிரன் நீசமாகி பதினேராவது மாரகஸ்தானத்தில் எட்டாவது பாவமாகிய மிதுனத்திற்குரிய புதனுடன் கூடியிருப்பதால் துய்யகேரளம் எட்டாம் பாவம் இருபதாவது பாடல் பிரகாரம் கூட மாரகராகின்றார். ஆகையால் சுக்கிர புத்தியில் மாதாவுக்கு மரணம் நேரிட அமைப்பு இருக்கின்றது. *தமிழ் ஜாதகாலங்காரம் 590-வது பாடலைப் பார்க்கவும்.

(2) ஜாதகர் மரணவிஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 69-0-0 முதல் வயது வருஷம் 70-0-0 வரையிலும், அப்போது தனுசு மாதத்திலும் குரு தசையில் சனி புக்தி நடக்கின்றது. பராசர ஹோரை ஜாதக சந்திரிகை இருபத்தைந்தாவது சுலோகம் துய்ய கேரளம் எட்டாம் பாவம் பதினொன்காவது பாடல் இவற்றின் பிரகாரம் எட்டிற்குடைய குருமாரகர். மேலும் ஜாதக சந்திரிகை இருபத்திரண்டாவது இருபத்து மூன்றுவது சுலோகங்களின்படி ஏழிலுள்ள குருமாரகராகின்றார். ஆகையால் குரு தன் தசையில் மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றார். சனி ஆறு ஏழிற்குடையவராகி லக்கினத்திபதியாகிய சூரியனுடன் கூடி இரண்டாமிடமாகிய மாரகஸ்தானத்தில் இருப்பதால் மேற்கண்ட சுலோகங்களின் பிரகாரமும் குமாரசாமியம் மகாதசைபலப்படலம் நான்காவது பாடல் பிரகாரமும் துய்ய கேரளம் எட்டாம் பாவம் இருபதாவது பதினொன்காவது பாடல்களின் பிரகாரமும் சனி மாரகராகின்றார்.

ஜாதகருடைய மறுஜன்மம்

29. மறுஜன்மங் காஞ்சி தன்னில் வைசிய குலமு தித்துப்
பெருமையாய்ச் செட்டிச் செய்து புகழது யேற்பா லுகுங்
குறுமுனி புகலு கின்றார் குழவிக்கு இதற்குள் ளாக
மருவாதோ கெண்டங் தானு மரசனு மேழில் தங்க ;

29. ஜாதகர் தன்னுடைய மறுஜன்மத்தில் காஞ்சிமாநகரத்தில் வைசிய குலத்தில் பிறந்து மேன்மையாக வியாபாரஞ் செய்துகொண்டு பெருமையையும் கீர்த்தியையும் அடைவார். இவ்விதமாக அத்திரிமக

ரிஷியானவர் சொல்லவே குறுமுனிவராகிய (அஃதாவது குள்ளமாகிய முனிவராகிய) அகஸ்திய மகா முனிவர் எதிர்த்துக் கேட்கின்றார். இந்த எழுபது வயதிற்கு முன்னமே ஜாதகருக்கு மரணம் நேரிடாதோ என்று கேட்கவே, இதற்குப் பதிலாக் அந்திரி மகரிஷி சொல்லுகின்றார். அரசன் என்ற குரு ஏழாவது பாவத்தில் இருப்பதால்;

30. என்னநோய் வந்த போதும் இரவிமுன் பனிபோல்
[நீங்கும்
மன்னவன் வயது தீர்க்கம் மனிபணி பொருள்கள் யாவும்
உன்னுமுப் பாயி ரம்பொன் உத்தமன் சேர்ப்பா னுகுங்
கன்னென மொழியை யொக்குங் காதலி கேட்டி டாயே.

30, ஜாதகருக்கு எவ்விதமான ரோகங்கள் வந்து சம்பவித்த போதிலும் அவை எல்லாம் சூரியன் முன்னே இருந்த எவ்விதமான பனியும் பறந்து மறைந்து போவதுபோல் நீங்கிப்போய்விடும். ஆகையால் ஜாதகருக்கு நீண்ட ஆயுள் (அஃதாவது தீர்க்காயுள்) உண்டு. வீடு ஆபரணங்கள் சொத்துக்கள் இவைகள் யாவும் முப்பதாயிரம் பொன் பெறக்கூடியதாக ஜாதகர் சேர்த்து வைப்பார். சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தைகளே உபயோகிக்கின்ற பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

குறிப்பு: தீர்க்காயுள் விஷயம்:—மணிகண்ட கேரளம் அரிஷ்ட காண்டம் பதினெட்டாவது பாடலாகிய

"உலகினில் உதித்தபேர்கட்கு .....சாகவும் ஒட்டார்மாதே"
என்ற பாடல் பிரகாரமும்,

"பூரண பலத்திலோடு புண்ணியா சுபமேயாகில் காரணமில்லை மாதே கனக்கவே வயதுமுண்டு"

என்ற மணிகண்ட கேரளம் பிரதி அரிஷ்டகாண்டம் நாற்பதாவது பாடல் பிரகாரமும் ஜாதகருக்கு நீண்ட ஆயுள் ஏற்படுகிறது. இங்கு குரு சுக்கிரன் புதன் சந்திரன் இவர்கள் நல்ல ஸ்தானங்களில் இருக்கின்றார்கள். லக்கினாதிபதியாகிய சூரியனும் சந்திரலக்கினாதிபதியாகிய குருவும் ஒருவருக்கொருவர் நட்பான கிரகங்களாகும். பல தீபிகை ஏழாவது அத்தியாயம் இருபத்தாருவது இருபத்தொன்பதாவது சுலோகங்களின் பிரகாரமும் தமிழ் ஜாதகாலங்காரம் இருநூற்றுத் தொண்ணூற்று நான்காவது செய்யுள் பிரகாரமும் சுக்கிரனுடைய நீசம் பங்கமாகி விடுகின்றது. லக்கினத்தைக் குருவும் பார்க்கின்றார். ஆகையால் ஜாதகருக்கு நீண்ட ஆயுள் அமைப்பு இருக்கின்றது.

31. ஜனித்திடுங் காலந் தன்னில் சிதசை யாண்டு ஆறுங்
குனித்திடுந் திங்க ளெட்டுங் கூறுவோம் பலனே யாங்கள்
துணைவிருத்தி காலி சேதந் துக்கமுஞ் செலவ னேகங்
கனமுள பூர்வ பாகங் கழறினேங் தாயே யாங்கள்.

31. ஜாதகர் ஜனனமாகுங் காலத்தில் கேது தசை வருஷம் ஆறும் கணிதப்படி மாதம் எட்டும் ஆகும். இந்தத் தனசயின் பலா பலன்களோ நாங்கள் சொல்லுகின்றோம். ஜாதகருக்குச் சகோதரர்கள் உண்டாகி விருத்தியாவார்கள். இவருடைய குடும்பத்திய பசுக்கள் இறந்துவிடும். குடும்பத்தில் கஷ்டமும் அதிகமான செலவும் ஏற்படும். இவ்விதமாக மேன்மையான பூர்வ பாகமாகிய முதலாவது பாகத்தைப் பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிவிட்டோம்.

ஜாதகம் 89

ஜனனகால கிரகநிலை

1. [1]மதி[2]தனு [3]பணியுஞ் [4]சாடி [5]மால்குரு [6]பரிதி வண்டி[7] [8]விதி [9]கோலில் [10]வெள்ளி [11]மாதை [12]மெய்ஞ்ஞானி [13]சேயுஞ் சிம்மம்

[14]பதியது [15]அரிய தாகும் பகருவீர் பலனை யென்று அதிபதி கேட்கும் போது வசிஷ்டரும் புகலு கின்றார்.

1. சந்திரன் தனுசிலும், இராகு கும்பத்திலும், புதனும் குருவும் சூரியனும் கடகத்திலும், சனி துலாத்திலும், சுக்கிரன் கன்னியிலும், கேதுவும் அங்காரகனும் சிம்மத்திலும் இருந்து ஜன்மலக்கினம் சிம்மராசியானால் இதற்குப் பலா பலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும் போது வசிஷ்ட மகரிஷியானவர் சொல்லுகின்றார்.

கிரகநிலை

ராகு	இராசி சக்கரம்		சூரியன் புதன் குரு
			லக்கினம் அங்காரகன் கேது
சந்திரன்		சனி	சுக்கிரன்

மூலம் 3 ஆம் பாதம். கேதுதசை வரு 3-2-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்த முடையதாகும் :—மேஷத்தில் ராகுவும், மிதுனத்தில் சந்திரனும் அங்காரகனும், கடகத்தில் குருவும், துலாத்தில் புதனும் கேதுவும், விருச்சிகத்தில் சனியும், தனுசில் சூரியனும், மகரத்தில் சுக்கிரனும், ஆகும். சனி வக்கிரகதியில் இருக்கின்றார். புதன் அஸ்தங்கதமாக விருக்கின்றார்.

---

1. சந்திரன்
2. தனுசு
3. இராகு
4. கும்பம்
5. புதன்
6. சூரியன்
7. கடகம்
8. சனி
9. துலாம்
10. சுக்கிரன்
11. கன்னி
12. கேது
13. அங்காரகன்
14. ஜென்ம லக்கினம்
15. சிம்மம்.

ஜாதகர் பிறந்த நாட்டுச் சிறப்பு

2. ஐனித்தசே யாணுஞ் ஐன்மம் இல்லமுங் கீழ்மேல் வீதி
தென்திசை வாடை யாகுஞ் சிவன்கோஷ்டம் மேல்பால்
[தங்கும்
அந்தரி தென்பா லாகும் அழகிய நந்தியு முத்தரம்
இன்னமுஞ் சிலது கோஷ்ட மியம்புவோஞ் சமஷ் ராகும்.

2. பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தென்னண்டை வாடையில் இருக்கும். சிவபெருமானுடைய கோயில் மேற்குத் திக்கில் இருக்கும். பார்வதியம்மன் துர்க்கை இவர்களின் கோயில் தெற்குத் திக்கில் இருக்கும். அழகான நந்தி தேவருடைய கோயில் வடக்குத் திக்கில் இருக்கும். இன்னும் சில கோயில்களும் இருக்கும். பிறந்த ஊர் பெரியதும் சிறியது மல்லாத சமமான கிராமமாக விருக்கும் என்று சொல்லுகின்ரோம்.

3. துருவமுங் கீழ்ப்பா லோடுஞ் செப்பினேங் தந்தை யில்லம்
பெருமையாய் வடுகர் வர்க்கஞ் பேசுவோஞ் சேஷ்ட ஜகத்
திருமக னன்னை தந்தை சேயர்கள் மனைவி யோகம்
உரைகிரோம் முன்பின் ஐன்ம முத்தமி கேட்டி டாயே.

3. மேலயும் கிழக்குத் திக்கை நோக்கிச் செல்லும். பிறந்த வீடு ஜாதகரின் தகப்பனுருடைய வீடாகவிருக்கும் என்று சொல்லுகின்ரோம். ஜாதகர் மேன்மையான சிறந்த ஒரு தெலுங்கருடைய குலத்தில் ஜேஷ்ட குமாரனுகப் பிறப்பார் என்று சொல்லுகின்ரோம். இவருடைய தாய் தந்தை, சந்ததிகள் மனைவி ஆகிய இவர்களைப் பற்றியும், யோகம் முன்ஜன்மம் மறுஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றியும் சொல்லுகின்ரோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் தூணையாண் காணின்
சத்தியு மொருத்தி யாகும்
அந்தவள் குணத்தைச் சொல்வேன்
அழகுளாள் சிவந்த மேனி
சிந்தையும் நல்ல தாகுஞ்
சிறப்பான குடும்ப மேற்பள்
பந்தினோர் மதிக்க வாழ்வள்
பாவைநன் நடக்கை நன்மை

4. ஜாதகருடைய தகப்பனுருக்கு ஆண்சகோதரம் இடையாது. ஒரே ஒரு சகோதரி இருப்பாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் அழகானவளாக விருப்பாள். சிகப்பு நிறத்தை யுடையவள். இவளுடைய மனம் நல்ல மனதாக விருக்கும். மேன்மையான குடும்பத்தை இவள் உடையவளாக விருப்பாள். பந்துக்கள் இவளை மதிக்கும்படியான அந்தஸ்தில் இருந்து வாழ்வாள். இவளுடைய நல்ல நடவடிக்கை இவளுக்கு நன்மையை உண்டாக்கும்.

5. வரனுமே மேல்பால் நேரும் மைந்தர்கள் கன்னி யிரண்டு
திருமகன் போலே யாண்பால் செப்புவோ மிரண்டே யாக
அரிவைக்கு விரண்டு நாலு அணுகாது யென்று
[சொல்வோம்
மருமமா யில்லம் விட்டு மாதிரு நகரைச் சேர்ந்து ;

5. தகப்பனின் சகோதரிக்குப் புருஷன் மேற்குத் திக்கிலிருந்து வருவார். இவளுக்கு இரண்டு பெண் குழந்தைகளும் மகாவிஷ்ணு வைப்போல இரண்டு ஆண்குழந்தைகளும் உண்டு என்று சொல்லுகின்றோம். இவளுக்கு இரண்டாவது குழந்தையும் நான்காவது குழந்தையும் உயிருடன் இராமல் இறந்துபோய் விடும் என்று சொல்லுகின்றோம். இவள் ரகசியமாய்த் தன்னுடைய புருஷனுடைய வீட்டை விட்டுவிட்டுத் தன்னுடைய தாயாருடைய கிராமத்திற்குப் போய் ;

ஜாதகரின் தகப்பனர் விஷயம்

6. மங்கையும் வாழ்வா ளாகுந் மாரனு மவளோ டொத்துச்
சங்கையில் லாமல் செட்டுச் செய்துமே தனமுஞ்
[சேர்ப்பான்
நங்கைக்கு வயது கீர்க்கம் நற்றந்தை சேதி கேளாய்
பொங்கிய குடும்பி யாவன் பிரபலச் செட்டுச் செய்வன்.

6. தகப்பனுருடைய சகோதரி வாழ்பவளாவாள். இவளுடைய புருஷனும் இவளோடு ஒற்றுமையாக விருந்து யாதொரு அச்சமும் மில்லாமல் வியாபாரஞ்செய்து பணத்தைச் சேர்த்து வைப்பான். இவளுக்கு நீண்ட வயது உண்டு. இனிமேல் தகப்பனுருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக, இவர் மேன்மையான குடும்பத்தை யுடையவராவர். பிரபலமான வியாபாரங்களைச் செய்வார்.

7. பரணிநாள் மாது ராசி பகர்ந்தனம் அன்னை யிரண்டு
இருநிறம் நீட்சி யாவன் இன்பச் சொல் லடக்க மாவன்
தரையது அதிகஞ் சேர்ப்பன் சல்லியங் காணு வன்
அருபாகந் தந்தை யாஸ்தி யணுகிடு மென்று
[சொல்வோம்.

7. ஜாதகரின் தகப்பனாருடைய ஜன்ம நட்சத்திரம் பரணி யாகும். இவருடைய ஜன்ம லக்கினம் மாதுராசி என்ற கன்னியா ராசியாகும் என்று சொல்லுகின்றோம். இவருக்கு இரண்டு தாய்மார் கள் ஏற்படுவார்கள். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை யுடையவராவர். இவர் நீண்ட தேகத்தையுடையவர், இனிமையான வார்த்தைகளை யுடையவராவர், அடக்கமாக விருப்பார் இவர் நிலங்களை அதிகமாகச் சேர்த்து வைப்பார். இவருக்குத் தரித் திரமும் கஷ்டங்களும் உண்டாகமாட்டா. இவருக்கு அருமையான தகப்பனாருடைய சொத்து வந்து கிடைக்கும் என்று சொல்லு கின்றோம்.

குறிப்பு : இரண்டு தாயார்கள் விஷயம் :—ஜாதகருக்கு பிதிருஸ்தானம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். இதற்கு பிதிரு ஸ்தானம் ஒன்பதாமிடமாகிய தனுசு ஆகும். ஆகையால் பாட்டன் லக்கினம் தனுசு ஆகும். இதற்குக் களத்திரஸ்தானம் மிதுனம் ஆகும். இதற் குரிய புதன் தனுசிற்கு எட்டில் சூரியனுடன் கூடி மறைந்திருப்ப துடன் சனியால் பார்க்கப்பட்டிருக்கின்றார். ஏழாவது பாவமாகிய மிது னத்தைக் கேதுவும் தனுசிற்கு அஷ்டமாதிபதியாகிய சந்திரனும் பார்ப் பது தாரதோஷமாகும். தனுசு லக்கினத்திற்கு அதிபதியாகிய குரு வுடன் இரண்டாவது களத்திரஸ்தானமாகிய சிம்மத்தின் அதிபதி யாகிய சூரியன் கூடியிருப்பது இரண்டுதாரயோகத்தைக் கொடுக்கும் தன்மை யுடையது. ஆகையால் ஜாதகருடைய பாட்டனாருக்கு இரண்டு தாரயோகம் இருக்கின்றது, அஃதாவது ஜாதகருடைய தகப்பனாருக்கு இரண்டு தாயார் யோகம் இருக்கின்றது.

8. வண்டிவா கனமு மேற்பன் மர்மமுங் கொஞ்ச முண்டு
குண்டனி கூரு ஞகுங் குணமது நல்ல தாகும்
பண்டுநாள் பூமி விருத்தி பால்தயிர் பிரிய ஞகும்
அண்டினோர் தம்மைக் காப்பன் அதிதிகட் கன்ன மீவன்.

8. ஜாதகருடைய தகப்பனார் வண்டி முதலிய வாகனங்களை யுடை யவராவர். இவர் சிறிது இரகசியமாகவும் மௌனமாகவும் இருப்பார். இவர் கோள் சொல்லமாட்டார். இவர் நல்ல குணங்களை யுடையவராக விருப்பார். பழையகாலத்து நிலங்களைப் பயிர்செய்து தான்யங்களை உண்டு பண்ணி விருத்தியாக்குவார். இவர் பால் தயிர் இவைகளின் மேல் ஆசை யுடையவராக விருப்பார். இவர் தன்னிடத்திற்கு வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவார், பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுவார்,

9. உண்டியா முணவின் மீது உறைப்பொடு புளிப்பி லிச்சை
தண்டமி மூடைய ளுகுஞ் சங்கீதங் கேட்க விச்சை
வண்டணி மார்கள் மோகன் வாக்குச்சொல் தப்பா ளுகும்
எண்டிசைச் புகழு மேற்பன் ஈகைவா னென்று
[சொல்வோம்.

9. ஜாதகருடைய தகப்பனார் நல்ல காரசாரமான புளிப்பான துமான சாப்பாட்டின்பேரில் ஆசையுடையவர். இவர் இனிமையான தமிழை உபயோகிப்பவராவர். இவருக்குச் சங்கீதத்தைக் கேட்க ஆசையுண்டு. வீணையல்லாத அணிந்துகொண்டிருக்கும் ஸ்திரீகளிடத்தில் காம ஆசையை யுடையவராவர். இவர் தான் சொல்லுகின்ற வார்த்தை களைத் தவறுமல் காப்பாற்றுபவராவர். எட்டுத்திக்குகளிலும் இவர் பெருமையையுங் கீர்த்தியையும் அடைவார். இவர் பிறருக்குக் கொடுக்குந் தன்மையையும் தயாள குணத்தையும் உடையவராவர் என்று சொல்லுகின்றோம்.

10. பலசகா யங்கள் செய்வான் பணிந்தோரை யாதரிப்பன்
நலமுள காரி யத்தில் நாயகன் செல்வா ளுகுஞ்
சலந்தோய்வன் சந்தே கத்தன் தலவாசஞ் செல்வா ளுகுங்
தலைவன்தன் மரணம் மட்டுஞ் சல்லியங் கொள்ளா னுமே.

10. ஜாதகருடைய தகப்பனார் பிறருக்கு அநேக விதமான உதவிகளைச் செய்வார், தன்னை வணங்குகின்றவர்களைக் காப்பாற்றுவார், நன்மையை உண்டாக்குகின்ற நல்ல காரியங்களைச் செய்யப் பிரவேசிப்பார். புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். இவர் சந்தேகமான மனத்தை உடையவராவர். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவார். இவர் தன்னுடைய ஆயுட்காலம் முடியும் வரையிலும் கடன்பட மாட்டார்.

11. அத்திரி தடுத்துச் சொல்வார்
அவனுக்குத் தூணையாண் தோஷம்
பெத்தகா ரணங்க ளென்ன
பணியேழில் காரி மூன்றில்
சுத்தமா யிருப்ப தாலே
செப்பினேந் தூணையாண் தோஷஞ்
செத்திடும் ஒன்று என்றோஞ்
செல்வதி கேட்டி டாயே.

11. இவ்விதமாக வசிஷ்டர் சொல்லிக்கொண்டுவரவே அத்திரி மகரிஷி தடுத்துக் கேட்கின்றார். ஜாதகருடைய தகப்பனாருக்கு ஆண் சகோதர தோஷம் ஏற்படுவதற்குக் காரணம் என்னவென்று கேட்கவே வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார். பணி என்ற இராசு ஏழிலும் காரி

என்ற சனி மூன்றிலும் இருப்பதாலே ஆண் சகோதரனுக்குத் தோஷத்தைச் சொன்னேம். ஒரு சகோதரன் இறந்து போய் விடுவான் என்று சொன்னேம். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

குறிப்பு: சகோதர தோஷ விஷயம்:—ஜாதகருக்குப் பிதிருபாவம் ஒன்பதாமிடமாகிய மேஷம் ஆகும். இதற்கு இளைய சகோதரஸ்தானம் மூன்றுவது பாவமாகிய மிதுனம் ஆகும். இதற்கு அதிபதியாகிய புதன் சூரியனுடன் கூடி யிருக்கின்றார். மணிகண்ட கேரளம் சகோதர காண்டம் ஆறுவது பாடல் கடைசி வரியாகிய

"பரிதியும் மூன்றோன் கூடிற் பாலன் பின்னில்லை மாதே"

என்றபடி சகோதர தோஷம் இருக்கின்றது. மேலும் இந்தப் புதனைச் சனியும் பார்ப்பது தோஷமாகும். மேஷத்திற்கு மூத்த சகோதர ஸ்தானமாகிய கும்பத்தில் ராகு இருப்பதும் கும்பத்தை அங் காரகன் பார்ப்பதும் மூத்த சகோதரன் காரகராகிய குரு சூரியனுடன் கூடி சனியால் பார்க்கப் படுவதும் தோஷமாகும். ஆகையால் ஜாதக ருடைய தகப்பனாருக்கு ஆண் சகோதரதோஷம் இருக்கின்றது.

ஜாதகருடைய குணநிசயங்கள்

12. சொன்னயிக் குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னழகுளான் சிவந்த மேனி
பன்னுவான் மூன்று கல்வி
பகவானின் பத்தி பூண்பன்
நன்னய மிருது வார்த்தை
நவிலுவான் கோபங் கொஞ்சம்.

12. இதுவரையிலுஞ் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணநிசயங் களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் அழகுள்ளவராக விருப்பார், சிவப்பு நிறமுள்ளவராக விருப்பார். இவர் மூன்று விதமான வித்தை களைப் படிப்பார், கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராவர், இனிமையானதும் மெதுவானதுமான வார்த்தைகளையே சொல்லுவார், இவருக்குச் சிறிதுகோபமுண்டு.

13. தந்தைக்குத் தாழ்வு றுதான் தரணியை விருத்தி செய்வன்
பொன்பல முடைய னவன் பூமியில் புகழு மேற்பன்
முந்துமால் பத்தி கொள்வன் மூலச்சூ டுடைய னவன்
நிந்தைக ளேற்கா னவன் நிருபர்க்கு யிவன்சொல்

[மேன்மை.

13. ஜாதகர் தன்னுடைய தகப்பனுருடைய அந்தஸ்திற்குத் தாழ்ந்த அந்தஸ்தில் இருக்கமாட்டார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார், அதிக திரவிய பலத்தையுடையவராவர். இவர் பூமியில் கீர்த்தியையும் பெருமையையும் அடைவார், மேன்மையான மகாவிஷ்ணுவின் மேல் அன்பும் ஆசையும் உடையவராவார். இவர் மூலச்சூடு என்ற ஒருவிதமான ரோகத்தை உடையவராவர், அபவாதங்களை அடையமாட்டார். அரசர்களிடத்தில் இவருடைய வார்த்தை மேன்மையை யடையக் கூடியதாக விருக்கும்.

14. வஞ்சக வஞ்ச னுவன் மரு வாரை வகுத்தே வெல்வன்
கஞ்சமாம் ரேகை யுண்டு காலாள்கள் காலி விருத்தி
செஞ்சொலி னுணுக்கந் தேர்வன் தீறமில் லாத நெஞ்சம்
பஞ்சணை மெத்தை யுண்டு பலதல வாசஞ் செல்வன்.

14. ஜாதகர் தன்னுடைய மனத்தில் அதிக கபடும் கள்ளமும் வஞ்சனையும் உடையவராவர். இவர் தன்னுடைய பகைவர்களைப் பிரியச் செய்து அவர்களை ஜயிப்பார். இவருடைய உள்ளங்கையில் கஞ்சமாம் ரேகை என்ற ஒருவித தாமரை ரேகை இருக்கும். இவருக்குக் கால் நடைக்காரர்களான வேலையாட்களும் பசுமாடுகளும் அதிகப்படும். இவர் செஞ்சொல் என்று சொல்லப்பட்ட வெளிப்படையான சொற்களின் சூட்சுமத்தை அறியுஞ் சாமர்த்திய முடையவராவர். இவர் தைரியமில்லாத மனத்தை யுடையவராவர். இவருக்கு இளம் பஞ்சால் செய்யப்பட்ட தலையணைகளும் மெத்தைகளும் உண்டு. இவர் அநேக புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவார்.

யோக விஷயம்

15. எப்படி யோகஞ் சொன்னீர் ஈரஞ்சோன் நீச்ச மாயும்
அப்பணி யேழில் தங்க அருணன்தூ துவனீ ராறில்
ஒப்புட னிருப்ப காலே யுரைத்தீரே யோக மெவ்வாறு
செப்புவாய் முனியே நீர்தாம் சனியுச்சங் குருவு முச்சம்.

15. எந்தக் காரணத்தினால் ஜாதகருக்கு யோகத்தைச் சொன்னீர்? பத்தாவது பாவத்திற் குடையவரான சுக்கிரன் நீசம் அடைந்திருப்பதாலும் பணி என்ற இராகு ஏழாவது பாவத்தில் இருப்பதாலும் அருணன் என்ற சூரியனும் தூதுவன் என்ற புதனும் பன்னிரண்டாவது பாவத்தில் இருப்பதாலும் எவ்விதமாக யோகத்தைச் சொன்னீர் என்று தடுத்து, முனிவரே! நீர் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார். சனி உச்சமாக விருக்கின்றார். குருவுங்கூட உச்சமாக விருக்கின்றார்.

16. மதிபுகர் கேந்திர மாக மதிகுரு வொருவர் வீட்டில்
சதியிலா மாரி நிற்கச் சாமரை யோக மொன்று
துதிமிரு தங்க யோகஞ் செப்பினேம் பலத்தால் யாங்கள்
அதிகமாய்க் குபேரன் போலப் பாலன் வாழ்வா னுமே.

16. மதி என்ற சந்திரனுக்குப் புகர் என்ற சுக்கிரன் கேந்திரத்தி விருப்பதாலும், சந்திரனும் குருவும் ஒருவர் வீட்டில் மற்றொருவராகக் குற்றமில்லாத விதமாக மாறி யிருப்பதாலும் அஃதாவது பரிவர்த்தனை அடைந்து இருப்பதாலும், "சாமரை" யோகம் என்ற ஒருவிதமான யோகம் உண்டாகியிருக்கின்றது. துதிக்கப்பட்ட அஃதாவது சிறந்த "மிருதங்க" யோகம் என்ற இன்னொரு யோகமும் உண்டாகி யிருக்கின்றது. இவ்விதமான யோக பலன்களால் நாங்கள் இவ்விதமான பலாபலன்களைச் சொன்னேம் என்று வசிஷ்டர் பதில் சொன்னார்.

குறிப்பு: சாமரை யோக விஷயம்:—சாமரையோக விஷயமாக பல தீபிகை ஆரூவது அத்தியாயம் நாற்பது நாற்பத்தோராவது சுலோகங்களையும், ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றுமுப்பத்தாரூவது சுலோகத்தையும், ஜாதக சிந்தாமணி இரண்டாயிரத்து இருபத்தோராவது பாடல் முதல் இரண்டாயிரத்து முப்பத்தோராவது பாடல் வரையிலும் உள்ள பாடல்களையும், புலிப்பாணி மகாமுனிவருடைய ஜோதிடயோகமஞ்சரி ஒன்பதாவது பாடல் முதல் பதினோராவது பாடல் வரையிலுமுள்ள பாடல்களையும் பார்க்கவும். இங்கு இந்தப்பாடலில் "சாமரை யோகம் என்றதற்குப் பதிலாகக் "சாமரையோக வகையரு யோகம்" என்று சொல்லியிருந்தால் பொருத்த முடையதாக விருக்கும் என்று தோற்றுகிறது. இந்தப் பாடலில் சனியும் குருவும் உச்சமாக விருப்பதைக் கண்டிருக்கின்றது. பல தீபிகை ஆரூவது அத்தியாயம் நாற்பதாவது சுலோகப் பிரகாரம் ஆரூவது பாவத்தைக் குருவும் புதனும் பார்த்து ஆரூவது பாவாதிபதியாகிய சனி உச்சம் பெற்று, ஆறு எட்டு பன்னிரண்டு இப்பாவங்கள் நீங்கலாகவுள்ள இதரபாவங்களில் ஒன்றாகிய மூன்றாவது பாவத்தில் இருப்பது "சத்திரயோகம்" என்ற ஒருவிதயோகம் ஆகும். இந்தச் சத்திரயோகம் என்பது "சாமரை யோக வகையரூவைச் சேர்ந்ததாகும். சத்திர யோக பலனைப் பல தீபிகை ஆரூவது அத்தியாயம் நாற்பத்தைத்தாவது சுலோகத்தில் சொல்லியிருப்பதைக் கவனிக்கவும்.

மிருதங்க யோக விஷயம்:—இது விஷயமாக ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தியாம் நூற்றுநாற்பத்திரண்டாவது சுலோகத்தையும் ஜாதகாலங்காரம் முற்நூற்றுநாற்பத்தேழாவது பாடலையும் பார்க்கவும். இங்கு உச்சமாக விருக்கின்ற குரு நவாம்ச சக்கரத்தில் சந்திரனுடைய

வீடாகிய கடகத்திலிருப்பதாலும், இந்தக் கடகத்திற்கு அதிபதியாகிய சந்திரன் இராசிச் சக்கிரத்தில் ஐந்தாவது பாவமாகிய திரிகோணத்தில் குரு வீட்டில் இருப்பதாலும் இந்தச் சந்திரன் இருக்கின்ற வீட்டிற் குடையவராகிய குருவே உச்சமாகியிருப்பதாலும் லக்கினாதிபதியாகிய சூரியன் புதன் குரு இவர்களுடன் கூடியதால் பலவானாயிருப்பதாலும் ஜாத பாரிஜாதம் ஏழாவது அற்தியாயம் நூற்றுநாற்பத்திரண்டாவது சுலோகப் பிரகாரம் மாத்திரம் முக்கால்வாசி மிருதங்கயோகம் உண்டாகி இருக்கிறதென்று சொல்லியிருப்பதாகத் தோற்றுகின்றது. இதைத் தான் இந்தப் பாடலில் மிருதங்கயோகம் என்று இப்பாடலில் கூறப் பட்டதாகத் தோற்றுகின்றது. லக்கினாதிபதியாகிய சூரியன் பன்னிரண்டில் மறைந்திருப்பதால் மிருதங்கயோகம் முழுமையும் ஏற்பட வில்லை என்று ஒரு சமயம் சொல்லக்கூடும். ஆகையால்தான் சுமாராக முக்கால்வாசி ஏற்பட்டிருக்கின்றது என்று மேலே சொல்லப்பட்டிருக் கின்றது. சூரியனும் புதனும் கூடி ஒன்றுக்கொன்று கேந்திரத்தில் இருக்கும் விஷயத்தைப்பற்றி தமிழ் ஜாதகசிந்தாமணியில் இரண்டா யிரத்து இருபத்தொன்பதாவது பாடலில் வாசிக்கவும். இதன் பிர காரமும் ஒருவிதமான சாமரை யோகம் சிறிது ஏற்பட்டிருப்பதாகத் தோற்றுகிறது. தமிழ் ஜாதகச் சிந்தாமணி இரண்டாயிரத்து அறுப தாவது பாடல் பிரகாரம் மிருதங்கயோகம் முழுமையும் இரண்டாயிரத்து ஐம்பத்தாறுவது பாடல் பிரகாரம் முக்கால்வாசி மிருதங்கயோகமும் ஏற்பட்டிருக்கின்றது.

ஜாதகருடைய சகோதரர்கள் விஷயம் சகோதரபாவம்

17. தன்னுணை யிருநான் காகச் ஜனித்திடு மதிலாண் மூன்று
கன்னிகை யிருவ ரென்றேங் கழிறினை வைத்துங் கீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பிரித்துமே பின்பால்
[சொல்வோம்
உன்னத வானை பெற்ற வுத்தமி கேட்டி டாயே.

17. ஜாதகருடைய சகோதரர்கள் மொத்தம் எட்டுப்பேர் ஆவார் கள். அவர்களில் ஆண் சகோதரங்கள் மூன்று என்றும் பெண் சகோதரங்கள் இரண்டுபேர் என்றும் சொல்லுகின்றோம். இங்கு சொல் லப்பட்ட ஐந்து சகோதரர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாகவிருப் பார்கள். மற்ற மூன்று சகோதரர்களும் இறந்து விடுவார்கள். இவர்கள் விஷயமாக விபரத்தைப் பின்னால் சொல்லுகின்றோம். மேன் மையான சிறந்த யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற் றெடுத்த பார்வதி யம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—இறந்துவிடக்கூடிய சகோதரங்களில் ஆண் எத்தனை பெண் எத்தனை என்ற விவரத்தை இங்கு சொல்லவில்லை. இதைய

சகோதரஸ்தானத்தில் சனி இருப்பதால் சம்புஹோராப்பிரக்சா சகஜ பாவம் ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் சகோதரதோஷம் உண்டு. இளைய சகோதர ஸ்தானாதிபதி சுக்கிரன் நீசமடைந்து நீச பங்கமும் ஏற்பட்டிருக்கின்றது. இளைய சகோதரகாரகனை புதன் பன்னிரண்டில் இருக்கின்றார். ஆகையால் இளைய சகோதரர்களுக்குச் சிறிது தோஷம் இருக்கின்றது. மூத்தசகோதரஸ்தானமாகிய மிதுனத்திற்குடைய புதன் பன்னிரண்டில் மறைந்து சனியால் பார்க்கப் பட்டிருப்பதும் மூத்த சகோதரனுக்குத் தோஷமாகும். கேது மூத்த சகோதரஸ்தானத்தையும் இளைய சகோதரஸ்தானத்தையும் பார்க்கின்றார். இதுவும் ஒரு தோஷமாகும்.

ஜாதகரது திருமணக்காலமும் மனைவியின் குணங்களும்

18. மங்கள மிருப தாண்டில் மருவிடுந் மிவருக்கே தான்
நங்கையும் மேல்பால் நேரும் நாயகி குணத்தைச்
[சொல்வேன்
துங்கமா மனத்தா ளாகும் துறவிகட் கன்ன மீவள்
பங்கய முகத்தா ளாகும் பால்பாக்கிய முடைய ளாகும்.

18. ஜாதகருக்கு விவாகம் இருபதாவது வயதில் நடக்கும். இவருக்கு மனைவி மேற்குத்திக்கிலிருந்து வருவாள். இவளுடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மேன்மையான மனத்தையுடையவளாக விருப்பாள், பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுவாள். இவள் பங்கயம் என்று சொல்லப்பட்ட தாமரைப்பூவைப் போல அழகான முகத்தை உடையவளாவாள். இவள் பால்பாக்கியத்தை உவடையவளாகவும் இருப்பாள்.

குறிப்பு : விவாக விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 19-0-0 முதல் வயது வருஷம் 20-0-0 வரையிலும் சுக்கிரதசையில் சனிபுக்தியும் புதபுக்தியும் நடக்கின்றன. சுக்கிரன் களத்திரகாரகனுகியும் பத்தாவது பாவத்திற்குடையவராகியும் களத்திர சம்பந்தமுடைய இரண்டாவது பாவத்தில் இருப்பதால் ஜாதக பாரிஜாதம் பதினன்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் சுக்கிரன் தன்னுடைய தசையில் ஜாதகருக்கு விவாகஞ்செய்யும் அமைப்பு உளைவராக விருக்கின்றார். சனி களத்திரஸ்தானுபதியாகிச் சூரியனையும் குடும்பாதிபதியாகிய புதனையும் பார்த்திருக்கின்றார். இவருடைய வீட்டில் போக காரகனுகிய இராகு இருக்கின்றார். ஆகையால் சனிக்குப் புதனைவிட தனது புக்தியில் விவாகஞ்செய்துவைக்க அதிக அமைப்பு இருக்கிறது.

19. சீலியாஞ் சிவந்த மேனி ஜனபந்து மதிக்க வாழ்வள்
காலத்தை யறிந்து வாழ்வள் கழறுமுன் கோபி யாவள்
பாலிகை வயது தீர்க்கம் பராசரு மறித்துச் சொல்வார்
சாலவே யிரண்டு தாரந் தங்கிடும் பால னுக்கு.

19. ஜாதகருடைய மனைவி நல்லொழுக்கம் உடையவள். சிவப்பு நிறத்தை யுடையவள். தன்னுடைய பந்து ஜனங்கள் இவளை மதிக்கும்படியான அந்தஸ்தில் இருந்து வாழ்வாள். இவள் காலத்திற்குத் தகுந்தபடி நடந்துகொண்டு வாழ்வாள். இவள் முன்கோபத்தை யுடையவள் என்று சொல்லுகின்றோம். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவாள். இவ்விதமாக வசிஷ்டர் சொல்லவே பராசர முனிவர் தடுத்துச் செல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் ஏற்படுவார்கள்.

20. காரணம் யாது வென்னக் கட்செவி யேழில் தங்கப்
பாரிய தனத் தோனும் பங்கயன் பின்னே யாகித்
தீரமாய்ச் சரத்திற் றங்க செப்பினேந் தார மிரண்டு
மாறியே யத்திரி சொல்வார் மனைவியு மொன்றே யாகும்.

20. என்ன காரணம் என்று கேட்கவே, பராசரமுனிவர் பதில் சொல்லுகின்றார். கட்செவி என்ற இராகு ஏழாவது பாவத்தில் இருப்பதாலும், தனத்தோன் என்ற இரண்டிற்குடையவரான புதன் பங்கயன் என்ற சூரியனுக்குப் பின்னே அவருடன்கூடி யிருப்பதாலும், இந்தப் புதன் சராசியாகிய கடகத்தில் இருப்பதாலும் இரண்டு மனைவிமார்கள் ஏற்படுவார்கள் என்று சொன்னோம். இதற்கு வித்தியாசமாக அத்திரிமகரிஷியானவர் சொல்லுகின்றார். ஜாதகருக்குத் தாரம் ஒன்றுதான் ஏற்படும்.

குறிப்பு :—ஏழாவது பாவமும் இரண்டாவது பாவமும் களத்திர சம்பந்தமான பாவங்களாகும்.

"ஏழ் வீட்டினிற் கதிபன் சரத்தினிற்கில் இரு மனைவி"
என்று தமிழ் ஜாதகாலங்காரம் நானூற்றறுபத்தெட்டாவது பாடலில் சொல்லி யிருக்கின்றது. இதைக் கொண்டே இரண்டாவது பாவாதிபதியும் சரத்தில் இருந்தால் இரண்டு மனைவி யோகம் ஏற்படும் என்று சொல்லி யிருப்பது போலத் தோற்றுகிறது.

21. எப்படிச் சொல்லு மென்ன விரவிபொன் புதனைக் காரி
மெய்ப்புடன் பார்த்த தாலே விளம்பினேந் தார
[மொன்றே
தப்பிதந் நேரா காகுந் தென்முனி புகலு கின்றார்
இப்படி யேன்வி னோத மிருவர்சொல் சரியே ஐயா.

21. இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். இரவியாகிய சூரியனையும், பொன் என்ற குருவையும், புதனையும், காரியாகிய சனி பார்த்திருப்பதால் ஒரே தாரந்தான் ஏற்படும் என்று சொல்லுகின்றோம். யாதொரு தவறுதலும் நேரிடாது. இதன்மேல் தென்முனி என்ற அகஸ்திய முனிவர் சொல்லுகின்றார். இவ்விதமாக ஏன் ஒருவொருக்கொருவர் விரோதமாகப் பலன்களைச் சொல்லுகின்றீர்கள்? நீங்கள் இருவரும் சொல்லிய பலன் சரியே யாகும். முனிவர்களே!

22. ஆகிலு மனைவி யொன்றே யம்மனைக் கிரண்டு முத்திரை
பாகமாய்ச் செய்வா ளகும் பகருவீ ரந்தச் சங்கை
தோகையின் முதல்மாங் கல்யஞ் சோர்வுறுங் கள்ள ராலே
ஏகுங்கா லங்கள் சொல்வா யேழைந்து வாண்டில் நேரும்.

22. இவ்விதமாக விருந்தபோதிலும் ஜாதகருக்கு ஒரே ஒரு மனைவிதான் ஏற்படுவாள். அந்த மனைவிக்கு ஜாதகர் ஒழுங்காக இரண்டு தாலிகளைக் கட்டுவார் என்று அகஸ்தியமுனிவர் சொல்லவே, இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, மனைவிக்குக் கட்டின முதல் மாங்கலியம் திருடர்களால் அபகரிக்கப்படும் என்று அகஸ்தியர் பதில் சொல்லவே, இவ்விதமாக நடக்குங் காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்க முப்பத்தைந்தாவதுவயதில் இவ்விதமாகச் சம்பவிக்கும் என்று அகஸ்தியர் பதில் சொல்லுகின்றார்.

குறிப்பு:—மனைவியின் தாலிக்குப் பங்கம் நேரிடும் விஷயம்:—களத்திரஸ்தானமாகிய கும்பத்தில் இராகு இருப்பது களத்திர தோஷமாகும். இரண்டாவது தாரபாவம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். போகஸ்தானமாகிய நான்காவது பாவம் விருச்சிகம் ஆகும். இவ்விரண்டு பாகங்களுக்கும் அதிபதியாகிய அங்காரகன் ஏழாவது பாவத்தையும் எட்டாவது பாவத்தையும் பார்ப்பது தாரதோஷமாகும். ஏழிற்குடைய சனியும் இரண்டிற்குடைய புதனும் சரராசிகளாகிய துலாம் கடகம் இவைகளில் இருப்பது இருபதாவது பாடலின் கீழ் வியாக்கியானத்தில் சொல்லிய பிரகாரம் தாரதோஷமாகும். சனியைக் கேது பார்ப்பது தாரதோஷமாகும். சுக்கிரன் நீசனுகி விருப்பது (இவர் நீசபங்கம் அடைந்திருந்தபோதிலும் களத்திர சம்மந்தப்பட்டவரையிலும்) களத்திரத்திற்குத் தோஷமாகும். சனி உச்சமாகிவிருப்பது களத்திரத்திற்கு வலிவு ஆகும். குடும்பஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பது களத்திரத்திற்கு வலிவாகும். போகஸ்தானத்தைக் குரு பார்ப்பது வலிவாகும். குடும்பாதிபதியாகிய புதனுடன் குரு கூடியிருப்பது தாரத்திற்கு வலிவாகும். இராகு அங்காரகன் இவர்கள் திருடர் மூலமாகக் கஷ்டத்தையுண்டு பண்ணக் கூடியவர்கள். இவ்வ

கள் ஏழாவது பாவத்துடன் சம்மந்தம் அடைந்திருக்கின்றார்கள். ஆகையால் மணவிக்குத் திருடர்களால் பங்கம் நேரிட அமைப்பு இருக்கின்றது. பின்னால் சொல்லியுள்ள ஜாதகத்தை உடையவருக்குக்கூட இங்குச் சொல்லியுள்ளதைப் போலவே ஒரு மணவிக்கே இரண்டுதரம் தாலி கட்டுவார் என்று இந்த சப்தரிஷிநாடியிலேயே சொல்லி இருக்கின்றது. இந்தக் கீழ்கண்ட ஜாதகம் செங்கல்பட்டு ஜில்லா காஞ்சிபுரம் தாலுகாவைச்சார்ந்த ஒரு கிராமவாசியின் ஜாதகமாகும். இந்த ஜாதகத்தில் மிதுனத்தில் அங்காரகனும் கேதுவும் லக்கினமும், கடகத்தில் சந்திரனும், கன்னியில் சூரியனும், புதனும் குருவும், விருச்சிகத்தில் சனியும் சுக்கிரனும், தனுசில் இராகுவும் இருக்கிறார்கள். ஜனனகாலத்தில் ஜன்மநட்சத்திரம் ஆயில்யம் நான்காம்பாதம் ஆகும். ஜனனகாலத்தில் புததசையில் இருப்பு மூன்று வருஷங்களும் இரண்டு மாதங்களும் ஆகும். இந்த ஜாதகத்திற்குத் தார விஷயமாய்ப் பின் வருமாறு சொல்லப்பட்டிருக்கின்றது.

(1) "(மணவி) அடிசிலுக்கினியளாகும் அயல் குற்றம்புகலாளாகும்,
துடுக்கென வார்த்தை சொல்லாள் சோம்பிடாள் காரியத்தில்,
விடவுரை புகலாளாகும் வயதுமே தீர்க்கமெய்தும்,
சடைமுனி மறித்துச் சொல்வார் சத்திமாரிருவராகும்.

(2) காரணம் யாது யென்ன கறும்பாம்பு (ராகு) ஏழில் தங்க,
ஆரலும் (அங்காரகனும்) ஜன்மம் தங்க அணுகிடும் தாரம் இரண்டு,
கூறுவார் பாரசர் தாமும் குறைமதி (சந்திரன்) இரண்டில் தங்க,
தீரமாய் நாலில் புந்தி (புதன்) செம்பொன்னும் (குருவும்) இருப்பதாலே ;

(3) மற்றுமணி காணுனுகும் மங்கைக்கு இரண்டு முத்திரை,
திருமகன் அணிவானுகும், செப்புவீர் அந்தச் சங்கை,
அறுஆறு (36) ஆண்டு தன்னில் அறுபடுங்கள்ளராலே,
குறியது தப்பாதாகும் கோதையும் ஒன்றே தீர்க்கம்."

இவ்விரண்டு ஜாதகங்களிலும் லக்கினத்தில் அங்காரகனும் கேதுவும் ஏழில் இராகுவும் இருக்கின்றதுமல்லாமல் சூரியனும் புதனும் குருவும் ஒன்றுய்க்கூடி இருக்கின்றார்கள். முதலாவது ஜாதகத்தில் முப்பத்தைந்தாவது வயதிலும் இரண்டாவதான உதாரண ஜாதகத்தில் முப்பத்தாறுவது வயதிலும் மாங்கல்யம் திருடரால் அறுபடும் என்று சொல்லி யிருப்பதையுங் கவனிக்கவும். இவ்விரண்டு ஜாதகங்களிலும் இலக்கினாதிபதியுடன் குரு சம்மந்தப்பட்டிருக்கின்றார். போகஸ்தானமாகிய நான்காவது பாவத்திற்கு இரண்டு ஜாதகத்திலும் குருவினுடைய சம்மந்தம் (சம்மந்தம் என்பது கூடுவதும் பார்ப்பதுமாகும்) ஏற்பட்டிருக்கின்றது. இரண்டு ஜாதகங்களிலும்

எட்டாவது பாவத்திற்கும் பன்னிரண்டாவது பாவத்திற்கும் குருவினுடைய சம்மந்தம் ஏற்பட்டிருக்கின்றது. இரண்டு ஜாதகங்களிலும் பன்னிரண்டாவது பாவத்தைச் சனி பார்த்திருக்கின்றார். இவ்விதமாக இந்த இரண்டு ஜாதகங்களிலும் களத்திர சம்மந்தப்பட்டவரையிலும் பல அம்சங்கள் பொதுவாக விருப்பதைக் கவனிக்கவும். இந்த இரண்டாவது ஜாதகம் ஆயிரத்துத்தொள்ளாயிரத்துஇருபத்தோராவது ஆங்கில வருஷத்தில் இறந்துவிட்ட என்னுடைய தகப்பனார் இந்த சப்தரிஷிஸாடி செங்கல்பட்டு ஜில்லா காஞ்சீபுரம் தாலுக்காவைச் சார்ந்த பென்னகர் என்ற பெருநகர் கிராமத்தில் பொன்னம்பலப் பண்டாரம் இவர் குமாரர் கனகசபைப் பண்டாரம் இவர்களிடத்தில் இருந்தபோது இவர்களிடமிருந்து ஆயிரத்துத்தொள்ளாயிரத்துப்பதின் மூன்றுவது ஆங்கில வருடத்தில் தன் கைப்பட எழுதி வந்த உதாரணமான ஜாதகங்களில் ஒன்று ஆகும். இந்த ஜாதகத்தின் சக்கரங்கள் இங்குக் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.



ஆயில்யம் 4-ஆம் பாதம்



புததசை ஹ 3-2-0



சித்திரை 4-ஆம் பாதம்



அங்காரகதசை ஹ 2-6-11

இன்னொரு உதாரண ஜாதகங்கூட மேலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இஃது இப்போது திருச்சிராப்பள்ளியில் வாசஞ்செய்து கொண்டிருக்கின்ற ஒருவருடைய ஜாதகம் ஆகும். இந்த ஜாதகர் இதுவரையிலும் ஒரே மனைவிக்கு இரண்டுதரம் தாலிகட்டி இருக்கின்றார். மனைவியின் மாங்கல்யத்தைத் திருடன் அறுத்து எடுத்துக் கொண்டு போய்விடவே இரண்டாவது மாங்கல்யம் கட்டப்பட்டது. இவருக்கு இதுவரையிலும் ஒரே தாரந்தான். குருதசையில் கேது புக்தியில் ஓர் உயர்ந்த குலஸ்திரீயை சம்மந்தமும், குருதசையில் இன்னொருஸ்திரீமான உயர்ந்த குலத்திற்பிறந்த கலியாணமாகாத இன்னொரு ஸ்திரீயின் சம்மந்தமும் ஏற்பட்டது. இந்த ஜாதகத்தில்கூட மற்ற இரண்டு ஜாதகங்களைப் போலவே போகஸ்தானமாகிய நான்காவது பாவத்திற்கு அங்காரகனுடைய சம்மந்தம் (சம்மந்தம் என்பது இருப்பதும் பார்ப்பதும் ஆகும்) இருக்கின்றது. இந்த ஜாதகத்தில் ஏழாவது பாவாதிபதியாகிய சனியை இராகு பதினோராவது பார்வையுடன் பார்க்கின்றார். ஆகையால் இந்த மூன்று ஜாதகங்களிலும் ஏழாவது பாவம், ஏழாவது பாவாதிபதி, நான்காவது பாவம் ஆகிய இவைகளுக்கு அங்காரகன் ராகு இவர்களுடைய சம்மந்தம் (அஃதாவது கூடியிருப்பதும் பார்த்திருப்பதுமாகிய சம்மந்தம்) ஏற்பட்டிருக்கின்றது. இராகுவிற்கும் அங்காரகனுக்கும் திருடர் சம்மந்தம் என்பது உண்டு. ஓராவது ஜாதகமாகிய சிம்மலக்கின ஜாதகத்தில் சுக்கிரன் நீசனுகி (சிறிது பங்கம் அடைந்து) இருக்கின்றார். இரண்டாவது ஜாதகமாகிய மிதுனலக்கின ஜாதகத்தில் சுக்கிரன் பாபியான சனியுடன்கூடி ஆறுவது பாவத்தில் மறைந்திருக்கின்றார். மூன்றுவது ஜாதகமாகிய கடகலக்கின ஜாதகத்தில் சுக்கிரன் எட்டாவது பாவத்தில் மறைந்து இருப்பதுடன் விரயாதிபதியாகிய புதனுடன்கூடி சனியால் பார்க்கப் பட்டிருக்கின்றார். ஆகையால் மூன்று ஜாதகங்களிலும் சுக்கிரன் பல வீனமாக விருக்கின்றார். மூன்றுவது ஜாதகமாகிய கடகலக்கின ஜாதகத்தில் லாபாதிபதியாகிய சுக்கிரனும் களத்திர ஸ்தானாதிபதியாகிய சனியும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுவதால் தமிழ் ஜாதகாலங்காரம் அறுநூற்றெண்பத்தொன்பதாவது பாடல் பிரகாரமும், தமிழ் ஜாதக சிந்தாமணி தொள்ளாயிரத்துஎண்பத்துநான்காவது பாடல் பிரகாரமும் இந்த ஜாதகருக்குப் பல விவாகமான ஸ்திரீகளது போகம் உண்டு. இரண்டாவது தார அதிபதி ஒன்பதாவது பாவாதிபதியாகும். இந்த மூன்று ஜாதகங்களிலும் லக்கினாதிபதிக்கும் ஒன்பதாவது பாவாதிபதிக்கும் யாதொரு சம்மந்தமும் இடையாது. இது இரண்டாவது (விவாகமான்) மனைவி நேரிடாமலிருப்பதற்கு ஓர் அனுகூலமான அம்சம் ஆகும். இந்த மூன்றுவது ஜாதகத்தில் ஏழாவது பாவத்தை நைஸர்கிக சுப கிரகமாகிய ஆறிற்குடைய குருவும் இரண்டாவது பாவத்தை நைஸர்கிக சுபகிரகங்கமாகிய சுக்கிரனும்

பன்னிரண்டிற்குடைய புதனும் பார்ப்பது இரண்டாவது (விவாகமான) மனைவி நேரிடாமலிருப்பதற்கு ஓர் கூறுகூலமான அம்சம் ஆகும். ஆனால் ஏழிற்குடையவரும் பதினொன்றிற்குடையவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுவதாலும் குருவிற்கு ஆறுவது ஆதிபத்தியமும் புதனுக்குப் பன்னிரண்டாவது ஆதிபத்தியமும் வந்திருப்பதாலும் விவாகமான பல ஸ்திரீகள் ஏற்படுவதற்குப் பதிலாக விவாகமாகாத பல ஸ்திரீகளுடைய சம்மந்தம் உண்டாவதற்கு மூன்றுவது ஜாதகத்தில் அமைப்பு இருக்கின்றது.

ஜாதகருக்குப் புத்திரபாவம்

23. பின்னொரு முத்திரை செய்வான் புகலொணாத் தார
[மிரண்டு
கன்னிக்குச் சுதர்ப லத்தைக் கழறுவோ மினிமே லாக
மன்மதன் போலா ணொன்று மருவிடுந் தீர்க்க மாக
மின்னிடை மார்கள் நான்கு மேவிடுந் தீர்க்க மாக.

23. ஜாதகர் தன்னுடைய மனைவிக்கு இவ்விதமாக இரண்டாவது தாலியைக் காட்டுவார். இவருக்கு இரண்டு தாரம் என்று சொல்லக்கூடாது. இனிமேல் ஜாதகருடைய மனைவிக்குச் சந்ததி பலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவளுக்கு மன்மதனைப்போன்ற ஓர் அழகான ஆண் குழந்தை உண்டாகி நீண்ட ஆயுளையுடையதாக விருக்கும். மின்னலைப்போல மெல்லிய அழகிய இடுப்புகளையுடைய நான்கு பெண் குழந்தைகள் பிறந்து நீண்ட ஆயுள் யுடையவர்களாக விருப்பார்கள்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

24. மற்றவை மூன்று சேதம் வரைவீரே விபரந் தன்னைக்
குற்றமாம் முதலில் சேதங் குறித்தனம் நாலு மாறும்
செத்திடு மென்று சொல்வோந் தேவியே கேட்டி டாயே
வித்தகன் பூர்வந் தன்னை விளம்புவோ மினிமே லாக.

24 மற்ற மூன்று குழந்தைகளும் நாசமாகி விடும் என்று வசிஷ்டர் சொல்லவே அதனுடைய விவரத்தைச் சொல்லுவீர் என்று கேட்கப் பதில் சொல்லுகின்றார். முதலில் பிறக்கும் குழந்தை நஷ்டமாகி விடும். நான்காவது ஆறுவது குழந்தைகளும் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக. இனி மேல் ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

குறிப்பு :—புத்திரபாவம் :—புத்திரஸ்தானமாகிய ஐந்தாவது பாவம் தனுசு ஆகும். இதில் விரயாதிபதியும் பெண் கிரகமுமாகிய சந்திரன் இருப்பது ஆண் குழந்தைக்குத் தோஷமான அம்சமாகும். ஐந்தா

வது பாவத்தைச் சனியும் ராகுவும் பார்ப்பது சந்ததி தோஷத்தை விளைவிக்கக்கூடிய அம்சமாகும். ஒன்பதிற்குடைய அங்காரகன் கேது வுடன்கூடி யிருப்பது புத்திர தோஷமாகும். ஒன்பதை இராகு பார்ப்ப தும் புத்திர தோஷமாகும். ஏழாவது பாவத்திற்குடைய இரகம் பாபி யான சனியாகி ஐந்தாவது பாவத்தைப் பார்ப்பதால் ஜாதகாலங்காரம் ஐந்நூற்றுத்தொண்ணூற்றுருவது பாடலின் கடைசி வரியாகிய

"பூணேழோன் பாவனு யைந் துற்றிடிற் புதல்வரில்லை"

என்ற வரிப் பிரகாரம் ஜாதகருக்குச் சந்ததி தோஷம் இருக்கின்றது. (இங்குச் சனி ஏழிற்குடையவராய் ஐந்தில் இல்லாமல் பார்ப்பதும்கூட சிறிது தோஷமேயாகும்). ஆகையால் ஜாதகருக்குப் புத்திரதோஷம் இருக்கின்றது. ஆகையால் மூன்று குழந்தைகள் இறந்து விடுவார்கள் என்றும் பெண் குழந்தைகள்தான் அதிகமாக விருக்கும் என்றும் இங்கு சொல்லப்பட்டிருக்கின்றதைக் கவனிக்கவும்.

25. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகிறேங் திருவா ரூரில்
வன்னிய குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாகிப்
பொன்னெடு பணிதி பெற்றுப் புகழான குடும்பி யாகி
அன்னவன் வாழுங் காளி லரிபத்தி மிகவே பூண்டு;

25. ஜாதகர் முன்ஜன்மத்தில் இருந்ததைப் பற்றிச் சொல்லு கின்றேரும். இவர் திருவாரூரில் வன்னிய குலத்தில் ஆணுகப் பிறந்து மனைவியும் மக்களும் உடையவராகித் தனத்தையும் ஆபரணங்களையும் அடைந்து மேன்மையான கீர்த்தி பெற்ற குடும்பத்தை யுடையவராகி வாழுகின்ற காலத்தில் மகாவிஷ்ணுவின் மேல் அதிக அன்பும் ஆசையும் அடைந்து;

26. மறையவர் தொண்டு பூண்டு மார்கத்தில் தாகப் பந்தல்
திருமடங் கட்டி வைத்துச் சென்றனன் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தன னென்றுச்
[சொல்வோரம்
உரைகிறே மிவனின் யோகம் உத்தமி கேட்டி டாயே.

26. ஜாதகர் பிராமணர்களுக்குப் பணிவிடை செய்து, ஜனங்கள் போக்குவரத்து வழியில் அவர்களுடைய தாகவிடாவைத் தீர்ப்பதற் காக ஒரு நீர்மோர்ப் பந்தலை ஏற்படுத்தி ஓர் அழகிய சத்திரம் அல்லது தருமசாலை அல்லது வேதம் படிக்குமிடத்தைக் கட்டி ஏற்பாடு செய்து பிறகு இறந்து எமபட்டிணத்திற்குப் போனர். பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக் கின்றர் என்று சொல்லுகின்றேரும். இவருடைய யோக விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேரும். பார்வதியம்மையே! கேட்பீராக,

யோகபாவம்

27. பலதான்யச் செட்டுச் செய்வன்
பாரது மூன்று வூரில்
நிலமது சேர்ப்பா னுகும்
நினைத்தது முடிக்க வல்லன்
அலைகடற் றுயின்றோன் பத்தி
யாரையும் வசியங் கொள்வன்
விலைமாதர் மோகங் கொள்ளான்
வீண்வம்பு புகலா னுமே.

27. ஜாதகர் பலவிதமான தான்ய வியாபாரஞ் செய்வார். இவர் மூன்று கிராமங்களில் மனையையும் நிலங்களையும் சேர்த்து வைப்பவராவர். இவர் தான் நினைத்தக் காரியத்தைச் செய்து முடிக்குஞ் சாமர்த்தியத்தை யுடையவர். அலைகளையுடைய சமுத்திரத்தில் சயனஞ் செய்து கொண்டிருப்பவராகிய மகாவிஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையும் உடையவர். இவர் எல்லோரையும் தன் பக்கமாகக் கைவசப்படுத்திக் கொள்ளுவார். இவர் விலைமாதர் என்ற தாசிகளிடத்தில் காம ஆசையுடையவரல்லர். இவர் அதிகமாக விசாரித்துப் பேசமாட்டார்.

28. எண்ணைந்து வாண்டு தன்னி
லிவள்துணை வேறுய்ச் செல்வார்
வண்ணமாய்ப் பாகம் நான்காம்
வரைகின்றோம் பால னுக்குக்
கெண்ணிய னுக வாழ்வன்
கீதங்கள் பாடுவா னுங்
கண்ணன்தன் தங்கை யாளே
கழறின மொழி குன்றுவே.

28. ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய சகோதரன் பாகம் பிரித்துக் கொண்டு வேறு குடும்பியாகப் போய் விடுவான். ஜாதகருக்குப் பக்குவமாக நான்கு பாகங்கள் கிடைக்கும் என்று சொல்லுகின்றோம். இவர் மேன்மையையும் பெருமையையுமுடையவராக விருந்து வாழ்வார். இவர் கீதங்கள் முதலியவைகளைப் பாடுபவராவர். மகாவிஷ்ணுவினுடைய இளையசகோதரியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய தாயார் விஷயம் (மாதிருபாவம்)

29. மாதிரு மாஞ்சி வப்பள்
வருவோரை யாத ரிப்பள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை
யுள்மனங் கபடு மில்லாள்
தீதுக ளொருவர்க் கெண்ணுள்
திகைத்தோரை யாத ரிப்பாள்
பாதக மனமில் லாதாள்
பர்த்தாவின் மனம்போல் வாழ்வள்.

29. ஜாதகருடைய தயார் மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தையுடையவள். இவள் தன்னிடத்திற்கு வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் இனிமையான வார்த்தைகளை நல்லபடியே சொல்லுவாள். தன்னுடைய மனதிற்குள்ளே வஞ்சனை கள்ளம் கபடம் முதலியவை இல்லாதவள். இவள் ஒருவருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டாள் பிரமித்துக் கஷ்டப்படுகின்றவர்களை இவள் காப்பாற்றுவாள். கெட்ட மனத்தையுடையவளல்லள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனதிற்கு ஒத்தாப்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள்.

30. அன்னம்போல் வடிவு முண்டு வரிபோலே கோபங்
[கொஞ்சம்
நன்னடை யோக சாலி நல்கிடும் பித்த வாயு
தன்துணை யாண்பா லிரண்டு தையலு மூவர் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பெற்றதா யில்லம் மேற்கு.

30. ஜாதகருடைய தாயார் அன்னத்தைப் போன்ற அழகான உருவம் உடையவள். இவளுக்குச் சிம்மத்திற்குவருங் கோபம்போல கொஞ்சங் கோபமுண்டு. இவள் நல்ல நடவடிக்கையையும் ஒழுக்கத்தையும் உடையவள், யோகசாலியாக விருப்பவள். இவளுக்குப் பித்தவாயு ரோகம் வந்து சேரும். இவளுக்கு இரண்டு ஆண் சகோதரங்களும் மூன்று பெண் சகோதரங்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். மற்ற சகோதரர்கள் எல்லாம் இறந்து போய் விடுவர். இவளைப் பெற்றெடுத்தத் தாயார் வீடு மேற்குத் திக்கில் இருக்கும்.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

31. பூர்வமும் புதுவை தன்னிற் பிறந்தனள் சேடர் வம்சம்
மாரனு மதலை யுண்டாய் மனமது கபடு மின்றிச்
சீரியோர்க் குதவி செய்து தீவினை யில்லா தாகிப்
பாரிய தலங்கள் சென்று பர்த்தாவின் முன்னே மாண்டு;

31. ஜாதகருடைய தாயார் முன்ஜன்மத்தில் புதுவை என்ற புதுச்சேரிப் பட்டணத்தில் சேடர் குலத்திற் பிறந்தாள். இவள் புரு ஷனையும் மக்களையும் அடைந்து தன்னுடைய மனத்தில் வஞ்சனையும் கள்ளமுமில்லாமல் இருந்து ஏழைகளுக்கும் தரித்திரர்களுக்கும் உப காரஞ் செய்து கொண்டு, கெட்டவினை இல்லாதவளாகிப் பெரிய பெரிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போய்ப் பிறகு தன்னுடைய புருஷனுக்கு முன்னே சுமங்கலியாக இறந்து;

32. சிரஞ்ஜன்கோன் வரையப் பட்டு
ஜனித்தன ரிவளே யென்றும்
அரிவையிச் சென்மந் தன்னி
லன்னமுங் குறை வுறுதாள்
பெரும்புத்தி யுடைய ளாகும்
பணிதிபாத் திரங்கள் சேர்ப்பள்
நெறிதவ றுதா ளாகும்
நிமலியே கேட்டி டாயே.

32. ஜாதகருடைய தாயார் நான்கு தலைகளையுடைய பிரமதேவ னால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக் கின்றாள் என்று சொல்லுகின்றோம். இவள் இந்த ஜன்மத்தில் சாப் பாட்டிற்குக் கஷ்டப்படாமல் சுகமாக விருப்பாள், உயர்ந்த புத்தியை யுடையவளாவாள். ஆபரணங்களையும் சாமான்களையும் இவள் சேர்த்து வைப்பாள்.

ஜாதகரின் தாயாருடைய மறுஜன்மம்

33. மறுஜன்மந் தில்லை தன்னில்
மாதவுங் கங்கைச் சேயாய்
உரைகுவா ளென்று சொல்வோம்
உத்தமி யிச்சென் மத்தில்
மருவின புண்ணிய மென்ன
வரன்மனம் போலே வாழ்ந்து
திருகிலாக் குணத்த ளாயும்
திகைத்தோருக் குதவி யாயும்;

33. ஜாதகருடைய தாயார் தன்னுடைய பின்ஜன்மத்தில் தில்லை என்ற சிதம்பர க்ஷேத்திரத்தில் கங்கைகுலம் என்ற வெளாளர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம். இவள் இந்த ஜன்மத்தில் என்ன புண்ணியங்களைச் செய்தாள் என்று கேட்கவே, இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்கு ஒத்தாப் போல விருந்து வாழ்ந்து, கெட்ட குணங்கள் இல்லாதவளாக விருந்து பிரமித்துக் கஷ்டப்படுபவர்களுக்கு உபகாரங்களைச் செய்து கொண்டும்;

ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மம்

34 மங்கையும் வாழ்வ தாலே வருவளாங் கங்கைச் சேயாய்க்
தங்கமாந் தந்தை பூர்வஞ் செப்புவோ மினிமே லாகப்
பொங்கியே காஞ்சி தன்னில் பூவைசிய குலமு தித்து
நங்கையும் மதலை யுண்டாய் நாயகன் கிருஷிகள் செய்து ;

34. ஜாதகருடைய தாயார் வாழ்வதாலே இவள் தன்னுடைய மறுஜன்மத்தில் வேளாளர் குலத்தில் போய்ப் பிறப்பாள்.

மேன்மையான தகப்பனருடைய முன்ஜன்மத்தைப் பற்றி இனி மேல் சொல்லுகின்றோம். சிறந்த காஞ்சிமாநகரத்தில் பூமியையுடைய அல்லது பயிரிடுகின்ற வைசியருடைய ஜாதியிற் பிறந்து, மனைவியையும் மக்களையுமுடையவராகி இவர் விவசாயத் தொழிலைச் செய்துகொண்டு ;

35. அறமதி லிச்சை யுண்டா யதிதிகட் கன்ன மீந்து
திருமகன் வினையில் லாமற் சென்றனன் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தனன் கௌரி வர்க்கம்
வறுமையெப் போதுங் காணன் மாநிதி நிலமுஞ்
[சேர்ப்பன்.

35. ஜாதகருடைய தகப்பனர் தர்மஞ் செய்வதில் ஆசையுடையவராகிப் பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு யாதொரு வினையும் இல்லாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போனர். இவர் பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டுக் கௌரி என்ற பார்வதியின் குலமாகிய வேளாளர் குலத்திற் பிறந்தார். இவர் எந்தக் காலத்திலும் தரித்திரத்தையுங் கஷ்டத்தையும் அனுபவிக்கமாட்டார். பெரிய செல்வத்தையும் நிலங்களையும் இவர் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார்.

ஜாதகரின் தகப்பனருடைய மறு ஜன்மம்

36. பின்ஜன்ம மரங்கந் தன்னிற் பிறப்பனு மறையோ னுகப்
பொன்பல முடையனுகிப் புகழ்ச்சியாய் வாழ்வா னுகும்
அன்னவ னிச்சென் மத்தி லடைந்தபுண் ணியங்க
[ளென்னக்
கன்மன மில்லா னுயுங் கடந்தோர்க்கு வன்ன மீந்தும் ;

36. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய மறு ஜன்மத்தில் அரங்கம் என்ற ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் பிராமணராகப் பிறப்பார். இவர் செல்வ பலத்தையுடையவராகிப் பெருமையுடன் வாழ்பவராவர் என்று வசிஷ்டர் சொல்லவே இவர் இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணியங்களைச் செய்தார் என்று கேட்க, இவர் கன்மனதில்லாம

விருந்து அஃதாவது இளகிய மனத்தையுடையவராக விருந்துகொண்டு இல்லறத்தை விட்டுவிட்டுத் துறவறத்தை அடைந்தவர்களாகிய பரதேசிகட்குச் சாப்பாடு போட்டுக்கொண்டும் ;

37. சிலர்க்கு வாபத்தைக் காத்துந் தேவதாத் தலங்கள்
[சென்றுங்
கலகமே கூறுத தாலுங் கனத்தவர்க் குதவி யாயுந்
தலைவனும் வாழ்வ தாலே செனிப்பனு மென்று
[சொன்னேம்
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழி குன்றுவே.

37. ஜாதகருடைய தகப்பனார் சிலரை அவர்களுடைய கஷ்ட காலத்தில் காப்பாற்றியும் தெய்வஸ்தலங்களுக்குப் போயும் சண்டையை உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லாமலும் இருந்ததாலும் பெரிய மனிதர்க்கு உபகாரங்களைச் செய்துகொண்டும் வாழ்வதாலும் மறு ஜன்மத்தில் பிராமணராகப் பிறப்பார் என்று சொன்னேம். இமயமலைக்கு அரசனுகிய பர்வதராஜனுடைய புத்திரியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகரின் பிதிரு மாரகம் (பிதிரு கர்மம்)

38. மூப்பது நாலு ஆண்டில் விளம்புவோர் தந்தை கண்டம்
அப்போது மதியின் கால மலரியின் மகனின் புத்தி
ஒப்புடன் பகரு மென்றேமும் உரைத்தது தப்பா தாகும்
மெய்ப்புடன் தவங்கள் செய்யும் வித்தகி கேட் டிடாயே.

38. ஜாதகருக்கு முப்பத்து நான்கரவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றேம். அந்தக் காலத்தில் மதி என்ற சந்திரனுடைய தசையில் அலரி என்ற சூரியனுடைய மகனுகிய சனியினுடைய புக்தி நடக்கும் என்று சொல்லுகின்றேம். நாங்கள் சொல்லிய வார்த்தை தவருமல் நடக்கும். மெச்சும்படியாகத் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு:—பிதிரு கர்ம விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 33-0-0 முதல் வயது வருஷம் 34-0 0 முடியும் வரையிலும் சந்திரதசையில் குருவினுடைய புக்தியும் சனியினுடைய புத்தியும் நடக்கின்றன. பிதிரு லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். இதற்குப் பராசர ஹோரை ஜாதக சந்திரிகை நாற்பத்து மூன்றுவது நாற்பத்து நான்காவது சுலோகங்களின் பிரகாரம் சுக்கிரன், சனி, புதன் இவர்கள் மாரகராகின்றார்கள். சந்திரனுக்கு மேஷத்திற்குக் கேந்திராதிபத்திய தோஷம் வந்திருக்கின்றதால் சந்திரனை மேஷலக்கினத்திற்கு அசுபராகக் கருத

வேண்டும். இவர் மூலநட்சத்திரத்தில் கேதுவின் காலில் ஏறி இருக்கின்றார். கேது பிதிருஸ்தானாதிபதியாகிய அஃதாவது பிதிருலக்கினாதிபதியாகிய அங்காரகனுடன் கூடியிருக்கின்றார். ஆகையால் சந்திரனைப் பாபியாகவும் பிதாவுக்குக் கெடுதியைச் செய்பவராகவும் கருதவேண்டும். இவர் குருவினுடைய வீட்டில் இருக்கின்றார். குரு, ஜாதகசந்திரிகை மூப்பத்தொன்பதாவது சுலோகப்பிரகாரம் பன்னிரண்டிற்குடையவரான தால் மாரகாதிபதியாகின்றார் இந்த மாரகாதிபதியின் வீட்டில் சந்திரன் இருப்பதால் ஜாதகசந்திரிகை இருபத்து மூன்றாவது சுலோகப்பிரகாரம் சந்திரன் மாரகாதிபதியாகின்றார். இவ்விதக் காரணங்களால் சந்திரன் தனது தசையில் பிதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகிறார். ஏற்கனவே மாரகாதிபதி என்ற சனி ஏழில் இருப்பதால் தனது புக்தியில் மாரகஞ் செய்வார். சனி பிதிருஸ்தானத்தையும் சூரியனையும் பார்க்கின்றார். இதுவும் பிதாவுக்குத் தோஷமாகும்.

ஜாதகரின் தாயார் மாரகமும் (மாதிரு கர்மும்)
ஜாதகருடைய மரணகாலமும்

39. எண்ணஞ்சு வாண்டு தன்னி லியம்புவோ மன்னை கண்டங்
திண்ணமாய்ச் சேயின் காலஞ் சுயபுத்தி நடக்கு
[மென்றோம்
வண்ணமாய்ச் ஜாத கர்க்கு வரைகிறோ மறுபா றனில்
தண்மையாய்த் தனுசு மாதஞ் ஜாதக னேகு வானும்.

39. ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய தாயார் இறந்துவிடுவாள். அப்போது உண்மையாகச் சேய் என்ற அங்காரனுடைய தசையில் சுயபுக்தி என்ற அங்காரகனுடைய புக்தியே நடக்கும் என்று சொல்லுகின்றோம். அழகாக ஜாதகருக்கு மரண காலத்தைச் சொல்லுகின்றோம். இவர் அறுபத்தாறுவது வயதில் குளிர்ந்த தனுசு மாதம் என்ற மார்கழி மாதத்தில் இறந்து விடுவார்.

குறிப்பு :—தாய் மாரக விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 39-2-0 முதல் வயது வருஷம் 39-6-27 வரையிலும் அங்காரகதசையில் அங்காரக புத்தி நடக்கின்றது. மாதிரு லக்கினம் நான்காவது பாவமாகிய விருச்சிகம் ஆகும். பாராசரஹோரை ஜாதகசந்திரிகை ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் அங்காரகன் மாரகாதிபதியாகின்றார், இவர் மாதிரு ஸ்தானத்தையே பார்த்திருப்பதுமன்றி மாதுருஸ்தானாதிபதியுமாகின்றார். ஒரு பாவாதிபதி தன்னுடைய தசாகாலத்தில் அந்தப் பாவத்தால் குறிக்கப்பட்ட மனிதர்களுக்கு மாரகத்தைச் செய்வார் என்று ஜோதிடக்கிரந்தங்களிலும் நாடிக்கிரந்தங்களிலும் சொல்லி இருக்கின்றது. ஆகையால் மாதிருஸ்தானாதிபதியாகிய அங்காரகன் தனது தசையில் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்

ரூர். மாதிரு லக்கின்மாகிய விருச்சிக லக்கினத்திற்கு ஆருமிடத்தாதி பத்தியம் அங்காரகனுக்கு இருப்பதால் ஜம்புரிஷி வாக்கியத்தில் மாரக பாவம் என்ற தலைப்பின் கீழ்கண்டுள்ள விதிபிரகாரங்களுட அங்காரகன் மாதாவுக்கு மாரகஞ்செய்ய அதிகாரமுடையவராகிறார். மேலும் விருச்சிகலக்கினத்திற்கு எட்டிற்குடையவராகிய புதன் ஒன்பதாவது பாவத்தில் வலிவாக்விருப்பதால் ஜாதக பாரிஜாதம் பதினென்காவது அத்தியாயம் ஐம்பத்தேழாவது சுலோகப் பிரகாரம் லக்கினாதிபதியாகிய அங்காரன் மாரகஞ்செய்வார். அங்காரகனுக்கு அதிக பலமிருப்பதால் இவர் தனது தசையில் சுயபுக்தியில் மாதாவுக்கு மாரகஞ்செய்வார்.

ஜாதகருடைய மாரக விஷயம்:—ஜாதகருக்கு வயது வருஷம் 65-0-0 முதல் வயது வருஷம் 66-0-0 வரையிலும் குரு தசையில் குரு புக்தி நடக்கின்றது. சிம்மலக்கினத்திற்குப் பராசரரேஹரை ஜாதகசந்திரிகை ஐம்பத்திரண்டாவது சுலோகப்பிரகாரம் புதன் மகாதிபதி ஆகின்றார். இவருடன் சம்மந்தப்பட்ட குரு ஜாதகசந்திரிகை இருபத்துமூன்றுவது சுலோகப் பிரகாரம் மாரகராகின்றார். குரு எட்டிற்குடையவராய் இருப்பதாலும் இவருக்கு ஜாதகசந்திரிகை இருபத்தைந்தாவது சுலோகப் பிரகாரமும் மாரக அதிகாரம் வருகின்றது. மேலும் இவர் பன்னிரண்டில் லக்கினாதிபதியாகிய சூரியனுடன்கூடி இருப்பதால் துய்யகேரளம் எட்டாம்பாவம் இருபதாவது பாடல் பிரகாரமும் கார்க்கேய ஜோதிடம் முதற்காண்டம் அறுநூற்றெண்பதாவது பாடல் பிரகாரமும் மாரகஞ்செய்ய அமைப்பு இருக்கிறது. இவ்வித காரணங்களால் குரு விற்கு அதிகபலம் இருப்பதால் குரு தனது தசையில் சுயபுத்தியில் ஜாதகருக்கு மாரகத்தைச் செய்ய அமைப்பு உள்ளவராகின்றார்.

ஜாதகருடைய மறு ஜன்மம்

40. மறுஜன்மங் கலிங்க நாட்டில்
வருவனஞ் சௌராஷ்டர வம்சம்
பிருகுவும் புகலு கின்றார்
பொன்னனுக் காறில் திங்கள்
இருப்பதாற் சகடை தோஷ
மிருமூன்று வாண்டுட் கண்டம்
உரைக் கிறேம் அத்திரி
சொல்வா ருறையாவே மாரகங்கள்.

40. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில் கலிங்க தேசத்தி சௌராஷ்ட்ர குலம் என்ற பட்டுநூல்காரர் குலத்திற் பிறப்பார். இவ்விதமாக வசிஷ்டர் சொல்லவே பிருகுமகரிஷி சொல்லுகின்றார். பொன்னன் என்ற குருவிற்கு ஆருவது பாவத்தில் திங்கள் என்ற சந்திரன் இருப்பதால் "சகடை யோகம்" என்ற ஒருவித தோஷம்

இருக்கிறது. அதனல் ஜாதகருக்கு ஆறு வயதிற்குள் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்ரோம். இதற்கு ஆத்திரி மகரிஷியானவர் பதில் சொல்லுகின்ரார். ஜாதகருக்கு மரணம் நேரிடாது.

குறிப்பு : சகடை யோக விஷயம் :—சகட யோகத்தைப்பற்றித் தமிழ் ஜாதகாலங்காரம் இருநூற்றறுபத்துமூன்ருவது பாடலிலும் ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றெட்டாவது சுலோகத்தையும் பலதீபிகை ஆருவது அத்தியாயம பத்தாவது சுலோகத்தையும் பிருஹஜ் ஜாதகம் பன்னிரண்டாவது அத்தியாயம் நான்காவது சுலோகத்தையும் சாராவளி இருபத்தோராவது அத்தியாயம் பதினேந்தாவது சுலோகத்தையும் பார்க்கவும். ஜாதக பாரிஜாதத்திலும் பலதீபிகையிலும் குருவாவது சந்திரனுவது லக்கினத்திற்குக் கேந்திரத்தில் இருந்தால் சகடயோக பங்கம் உண்டாகின்றது என்று சொல்லியிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றதே தவிர சந்திரன் தனுசில் இருந்தால் சகட பங்கங் நேரிடும் என்று சொல்லவில்லே.

41. மதிதனு விருப்ப தாலே மருவாது சகடை பங்கம்
பதியதுக் கிரண்டில் வெள்ளி பகர்ந்துமே வயது தீர்க்கஞ்
சதியிலா யீரா ருண்டிற் சாற்றுவோங் கீழ்க்கண் பீடை
அதுநிற்க யிரொன் பாண்டில் அதுஒரு மதிகள் தோஷம்.

41. சந்திரன் தனு என்ற தனுசு இராசியில் இருப்பதால் மரணம் நேரிடாது. சகடை யோக பங்கப் பட்டுவிடுகிறது. மேலும் லக்கினத்திற்கு இரண்டில் சுக்கிரன் இருப்பதால் ஜாதகருக்கு நீண்ட ஆயுளுண்டு ஜாதகருக்குப் பன்னிரண்டாவது வயதில் இவருடைய இடது கண்ணில் நோகம் உண்டாகும். இதுவுமன்றி இவருக்குப் பதினெட்டாவது வயதில் புத்தி சபலம் என்ற தோஷம் உண்டாகும்.

குறிப்பு : சகடயோக பங்க விஷயம் :—ஜாதக பாரிஜாதம் பலதீபிகை இவைகளில் சந்திரன் தனுசில் இருந்தால் சகடயோக பங்கம் நேரிடுகின்றது என்று சொல்லவில்லே. ஆனல் நமக்குக் கிடைத்த ஓர் ஓலேப் புஸ்தகத்தில் கீழ்க்கண்டபடி சொல்லி இருக்கின்றது.

"நன்று கற்கடகத்திலேயும் நன்னிய விடையிலேயும் (ரிஷபத்திலும்)

தண்டு (மிதுனம்) வில் (தனுசு) மீனம், கன்னி தன்னி லம்புலியே (சந்திரன்) நிற்க அண்டருக்கதிபன் (சந்திரன்) பொன்னுக்கு (குருவிற்கு) ஆறு எட்டு பனனிரண்டில் பண்டு சொல் சகடதோஷம் பாபமேயில்லே கண்டாய்." இதைத் தான் இந்தப் பாடலில் குறிப்பிட்டு சந்திரன் தனுசில் இருப்பதால் சகடயோக பங்கம் நேரிடுகின்றது என்று சொல்லியிருப்பது போலத் தோற்றுகின்றது. மேலும் லக்கினத்திற்கு

இரண்டில் சுக்கிரனும் பன்னிரண்டில் குருவும் புதனும் இருப்பதால் கொஞ்சம் சுபகத்தாரியோகம் என்ற யோகமும் ஏற்பட்டிருக்கின்றது. இதனால் லக்கினத்திற்குக் கொஞ்சம் வலுவு ஏற்படுகின்றது.

ஜனன காலத்தில் தசை இருப்பு

42. ஜனித்திடுங் காலந் தன்னிற் சிகிதிசை யாண்டு மூன்றுங்
குனித்திடுந் திங்க ளிரண்டுங் கூறுவோம் பலனை யாங்கள்
வினையுண்டு ஜாத கர்க்கு விளங்கு நந் தனைபின் விருத்தி
கனகிதி தானியஞ் சேருங் கழறினேம் பூர்வ பாகம்.

42. ஜாதகர் பிறக்குங் காலத்தில் சிகி என்ற கேதுவின் தசை மூன்று வருஷங்களும் கணக்குப் பிரகாரம் இரண்டு மாதங்களுமாம். இந்தக் காலத்திய பலாபலன்களை நாங்கள் சொல்லுகின்றோம். ஜாதகருக்கு கஷ்டங்கள் உண்டாகும். பெருஞ்செல்வமும் தான்யமும் குடும்பத்தில் வந்துசேரும். இவ்விதம் பூர்வபாகமாகிய ஒராவது பாகத்தைச் சொல்லி முடித்தோம்.

ஜாதகம் 90

ஜனன கால கிரகநிலை

1. மதி[1] ரவி[2] வீணையாக[3] மறை[4] ஞானி[5] சாடி யாக[6]ப்
புதன் வண்டி[7] புகரும்[8] நந்தி[9] பூமகன்[10] ராகு சிம்மம்
விதி[11] துலாம் யாளி[12] ஜன்மம் விளம்புவீர் பலனை
[யென்று

வதிபதி கேட்கும் போது வதிஷ்டருங் கூறு கின்றார்.

1. சந்திரனும் சூரியனும் மிதுனத்திலும், குருவும் கேதுவும் கும்பத்திலும், புதன் கடகத்திலும், சுக்கிரன் ரிஷபத்திலும், அங்காரகனும் இராகுவும் சிம்மத்திலும், சனி துலாத்திலும் இருந்து சிம்மம் ஜன்ம லக்கினமாயுல், பலாபலன்களைச் சொல்லுவீரென்று பார்வதியம்மையார் கேட்கும் போது வசிஷ்ட மகரிஷியானர் சொல்லுகின்றார்.

கிரகநிலை

		சுக்கிரன்	சூரியன் சந்திரன்
குரு கேது	இராசி சக்கரம்		புதன்
			லக்கினம் ராகு அங்காரகன்
		சனி	

புனர்பூசம் 1-ஆம் பாதம். குரு தசை வரு 14-11-0.

குறிப்பு :— இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சந்திரனும் சனியும், ரிஷபத்தில் கேதுவும், சிம்மத்தில் அங்காரகனும் சுக்கிரனும், துலாத்தில் புதனும், விருச்சிகத்தில் இராகுவும், கும்பத்தில் குருவும், மீனத்தில் சூரியனும் ஆகும். சனி வக்கிரகதியில் இருக்கின்றார். சந்திரன் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார். பிரதமையில் ஜனனம் நேரிட்டிருக்கிறது. ஆகையால் அமாவாசையில் ஜனனமான ஜாதகம் அல்ல.

---

1. சந்திரன்
2. சூரியன்
3. மிதுனம்
4. குரு
5. கேது
6. கும்பம்
7. கடகம்
8. சுக்கிரன்
9. ரிஷபம்
10. அங்காரகன்
11. சனி
12. சிம்மம்

பிறந்த வீட்டின் லக்ஷணமும் நாட்டுச் சிறப்பும்

2. இந்தச்சே யாஞ்ஞ் ஜன்ம மில்லமும் வடதென் வீதி
இந்திர கோக்கம் வாசல் யாளிவா கனத்தாள் மாரி
சந்ததம் மேற்கில் தங்குந் தந்தியும் வடபா லாமே
சந்திரன் சடைய ணிந்தோன் தக்ஷிணம் பாழ தாகும்.

2. பிறந்த இந்தக் குழந்தை ஆண் குழந்தை யாகும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் இந்திரதிக்கு என்ற கிழக்குத் திக்கைப் பார்த்த வாயிற்காலையுடையதாக விருக்கும். சிம்ம வாகனத்தையுடைய காளியம்மன் கோயிலும் மாரியம்மன் கோயிலும் நிலையாக மேற்குத் திக்கில் இருக்கும், யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயிலும் வடக்குத் திக்கிலிருக்கும். சந்திரனைத் தன்னுடைய சிரசின் ஜடையில் அணிந்து கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய கோவில் தெற்குத் திக்கில் பாழடைந்து விருக்கும்.

3. இத்தகை யடையாளத்து
ளிலகிய சிறுவூர் தன்னில்
வித்தகன் மூன்றாஞ் ஜன்மம்
விளங்குவான் கங்கை சேயாய்ப்
பெத்ததாய்த் தந்தை யோகம்
பேதையர் புத்திர யோகஞ்
சுத்தமாய் முன்பின் ஜன்மஞ்
செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. இங்கு மேலே சொல்லப்பட்ட அடையாளங்களையுடைய மெலிந்த ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் மூன்றாவது குழந்தையாக வேளாளர் குலத்திற் பிறப்பார். இவரைப் பெற்றெடுத்த தாயார், தகப்பனார் இவர்களுடைய யோகங்களைப்பற்றியும், இவருடைய மனைவி மக்கள் இவர்களுடைய யோகங்களைப் பற்றியும், முன்ஜன்மம் பின் ஜன்மம் இவைகளைப் பற்றியும் விவரமாக இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனாருடைய சகோதர பாவம்
தகப்பனாருடைய குணாதிசயங்கள் முதலியன

4. தந்தையின் தூணவர் தம்மைச் சாற்றுவோ மாண்பால்
[மூன்று
வந்திடுங் கன்னி ரண்டு வரைகிற்றும் தீர்க்க மாக
அந்தவர் சேதி யாவும் மறைகிற்றும் பின்பா கத்தில்
எந்தையே பிதாகு ணத்தை யியம்புவோ மால்கி றத்தான்.

4. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு ஆண் சகோதரர்கள் மூன்றுபேர் ஆகும். சகோதரிமார்கள் இரண்டு பேர் ஆகும். இவர்கள் எல்லாம் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவர்களுடைய விஷயங்கள் எல்லாவற்றையும் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! ஜாதகரின் தகப்பனுருடைய குணதிசயங்களைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். இவர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தை யுடையவராவார்.

5. பயிர்த்தொழில் புரிவா னுகும் பாருகள் விருத்தி செய்வன்
நயமுள வார்த்தை கூறுவன் நல்லோர்க்கு நல்லோ னுவன்
அயலார் பொன் னிச்சை யில்லா னவசர மனத்த னுகுஞ்
ஜயஞ்செய்வ னெடுத்த வேலை சீக்கிர நடையு மாவன்.

5. ஜாதகருடைய தகப்பனுர் விவசாயத் தொழிலைச் செய்பவராகும். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். இவர் இனிமையான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார். நல்லவர்களிடத்தில் நல்லவராக நடந்து கொள்ளுவார். இவர் பிறருடைய பணத்தின்மேல் ஆசையில்லாதவராவர். அவசரமான ஆத்திரமுள்ள மனத்தை யுடையவராவர். இவர் தான் ஆரம்பித்த வேலையைப் பூர்த்திசெய்து ஜயத்தை அடைவார். விரைவாக நடக்கும் தன்மையை யுடையவராவர்.

6. மாமிக ளிரண்டே யாகும் வாக்குச் சொல்லி ரண்டு முண்டு
தீமையை யொருவர்க் கெண்ணன் சேயிழைப் பிரிய
[னுவன்
தாமதக் குணத்த னுகுஞ் சண்முகன் பத்தி பூண்பன்
நேமியில் நல்லோ னுவன் விருந்தினர்ப் பிரிய னுவன்.

6. ஜாதகருடைய தகப்பனுருக்கு இரண்டு மாமியார்கள் உண்டு. இவர் இரண்டுவிதமான வார்த்தைகளை அஃதாவது உண்மையும் பொய்யுமான இரண்டுவித வார்த்தைகளைச் சொல்லுபவராவார். இவர் எவருக்குங் கெடுதியை நினைக்கமாட்டார். ஸ்திரீகளிடத்தில் ஆசையுள்ளவராவர். இவர் தாமதமானதும் சாந்தமானதும் சுறுசுறுப்பில்லாததுமான குணத்தையுடையவராவர். ஆறுமுகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையு முடையவராவர். இவர் பூமியில் நல்லவராக விருப்பார். விருந்தாளிகளிடத்தில் ஆசையுள்ளவராக விருப்பார்.

குறிப்பு: இரண்டு மாமியார்கள் விஷயம்:—ஜாதகருடைய தகப்பனுருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்று இந்தப் பாடலில் கண்

டிருக்கின்றது. ஜாதகரின் தகப்பனாருடைய லக்கினம் சிம்மத்திற்கு ஒன்பதாமிடமாகிய மேஷம் ஆகும். இந்த மேஷ லக்கினத்திற்குக் களத்திரஸ்தானமாகிய ஏழாவது வீட்டில் பதினொன்றிற்குடைய சனி உச்சமாக விருக்கின்றார். ஏழாவது பாவமாகிய துலாத்தை இராகு மூன்றாவது பார்வையாகப் பார்க்கின்றார். ஒன்பதிற்கும் விரயஸ்தானத்திற்கும் அதிபதியாகிய குருவும் துலாத்தைப் பார்க்கின்றார். சுக்கிரன் இரண்டில் ஆட்சியாக விருக்கின்றார். மேஷ லக்கினத்திற்கு இரண்டாவதுமனைவி ஸ்தானம் ஒன்பதாவது பாவமாகிய தனுசு ஆகும். இந்தத் தனுசிற்குடைய குரு லக்கினாதிபதியாகிய அங்காரகனைப்பார்ப்பது இரண்டாவது தாரம் நேரிட அனுகூலமான அம்சமாகும். பதினொன்றுக்குடையவர் ஏழில் இருப்பதும் ஏழைப் பார்ப்பதும் அதிக தாரம் ஏற்படுவதற்கு அனுகூலமான அம்சம் ஆகும். ஆகையால் ஜன்ம லக்கின ரீதியாய்ப் பிதாவுக்கு இரண்டு தாரம் ஏற்படும் அமைப்பு அதிகமாக விருக்கின்றது. மேலும் சந்திர லக்கின ரீதியாய்ப் பிதிரு லக்கினம் கும்பம் ஆகும். கும்பத்திற்குக் களத்திரஸ்தானமாகிய சிம்மத்தில் அங்காரகனும், இராகுவும் இருப்பது களத்திரத்திற்குப் பிரதிகூலமான அம்சமாகும். கும்பத்திற்குப் பதினொன்றிற்குடைய குரு ஏழாவது பாவமாகிய சிம்மத்தையும் ஏழாவது பாவாதிபதியாகிய சூரியனையும் பார்ப்பது பல களத்திரங்கள் ஏற்படுவதற்கு அனுகூலமான அம்சமாகும். கும்பத்திற்கு இரண்டிற்குடையவரான குரு கேதுவுடன் கூடியிருப்பது களத்திற்குப் பிரதிகூலமானதாகும். கும்பத்திற்கு இரண்டாவதுகளத்திரஸ்தானமான ஒன்பதாவது பாவம் துலாம் ஆகும். இதில் கும்பலக்கினாதிபதியாகிய சனி உச்சமாக விருப்பது இரண்டாவது களத்திரம் ஏற்பட அனுகூலமான அம்சமாகும். ஆகையால் சந்திர லக்கின ரீதியாகக்கூட பிதாவுக்கு இரண்டு தாரம் ஏற்பட அதிக அமைப்பு இருக்கின்றது. ஆகையால் பிதாவுக்கு இரண்டு மாமிகள் என்று இந்தச் செய்யுளில் சொல்லி யிருக்கிறது.

7. கரமதிற் பிரம்ம ரேகை கனத்ததோர் குடும்பி யாவன்
மருவிடும் பித்தச் சூடு மனமது கபடு மில்லான்
பொரைசொல்லா வினம னத்தன் பேதையர் உறவு
[கொள்வன்
சிரமுகம் வடிவு முண்டு ஜனவுப காரி யாமே.

7. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய உள்ளங்கையில் பிரம்ம ரேகை என்ற ஒரு விதமான ரேகையை யுடையவராவர். இவர் மேன்மையான குடும்பத்தை யுடையவராவார். இவருக்குப் பித்தச்சூட்டு ரோகமுண்டு. இவர் தன்னுடைய மனத்தில் வஞ்சனையும் கள்ளமுமில்லாதவர். பிறர்மேல் குற்றத்தைச் சொல்லமாட்டார். இவர் இளகிய

மனதையுடையவர். ஸ்திரீகளுடைய சிநேகிதத்தை அடையக்கூடியவர். இவருடைய சிரசும் முகமும் அழகாக விருக்கும். இவர் ஜனங்களுக்கு உதவியைச் செய்பவராக விருப்பார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

8. சொன்னயிக் குணத்தா னுக்குச்
சுதனுமே யுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன்
னன்புள மனத்த னுகுங்
கந்தன்மேல் பத்தி பூண்பன்
கல்வியுஞ் சமம தாகும்
வந்தவர்க் கன்ன மீவன்
மானிற முடைய தேகன்.

8. இதுவரையிலும் மேலே சொல்லப்பட்ட குணகுணங்களை யுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இனிமேல் இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் பிறரிடத்தில் பிரியமும் ஆசையும் உள்ள மனத்தை யுடையவராவர். இவர் ஆறுமுகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையுமுடையவராவர். இவர் நடுத்தரமான வித்தையை யுடையவராவர். இவர் தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார், மாநிறமுள்ள தேகத்தை யுடையவராவர்.

9. இருவித குணத்தா னுகும்
யாரையும் வசியங் கொள்வன்
குறையென்றோர்க் குதவி செய்வன்
தோகையர் மோக னுவன்
நறைமல ரிஷ்டங் கொள்ளான்
நாற்காலி விருத்தி யுள்ளான்
குருவுப தேசங் கொள்வன்
குலத்துளோர் மதிக்க வாழ்வன்.

9. ஜாதகர் இரண்டு விதமான குணங்களை அஃதாவது நல்ல குணங்களையும் கெட்டகுணங்களையும் உடையவராவர். இவர் எல்லோரையும் தன்பக்கமாகவும் தனக்கு அநுக்கூலமாகவும் இருக்கும்படியாகச் செய்து கொள்ளுவார் இவர் கஷ்டப்படுகிறோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரஞ் செய்வார். ஸ்திரீகளின்மேல் காம ஆசையையுடையவராவர். இவர் வாசனையையுடைய புஷ்பங்களின்மேல் பிரியமில்லாதவர். இவருக்குக் கால் நடைகள் விருத்தியடையும். இவர் தன்னுடைய குருவிடமிருந்து உபதேசத்தைப் பெற்றுக்கொள்ளுவார்.

இவர் தன்னுடைய பந்துக்கள் இவரை போற்றும்படியான அந்தஸ்தி லிருந்து வாழ்வார்.

10. தந்தைசே மமாய் வாழ்வன்
சல்லியங் கொள்ளா னுகும்
விந்தையாய்க் காவற் சோலை
விருத்தியே செய்வா னுகும்
பின்துணை தனைக்காப் பானும்
பிதிராஸ்தி விருத்தி செய்வன்
நொந்தபேர்க் குதவு வானும்
நீர்தோய்வன் வெளிம யக்கன்.

10. ஜாதகருடைய தகப்பனர் சுகமாக விருந்து வாழ்வார். ஜாதகர் கடன்பட மாட்டார். இவர் ஆச்சரியப்படத்தக்கதான நல்ல பந்தோபஸ்து உள்ளச் சோலைகளையும் தோப்புகளையும் உண்டாக்கி விருத்தி செய்வார். இவர் தன்னுடைய இளைய சகோதரர்களைக் காப்பாற்றுவார், தன்னுடைய பிதுரார்ஜித சொத்துக்களை அழித்துவிடாமல் விருத்தியாக்குவார். இவர் தரித்திரர்களுக்கும் கஷ்டப்படுபவர்களுக்கும் உபகாரஞ் செய்பவராவர், நல்ல புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார், அன்னியர் இவரைப் பார்த்தவுடனே மயங்கிப்போகும் படியான சுபாவத்தை உடையவராவர், அஃதாவது படாடோபம் ஆடம்பரம் இவைகளையுடையவரார்.

ஜாதகருடைய சகோதரபாவம்

11. இவனுடை துணைவர் தம்மை
யியம்பவே முன்னோர் காணும்
நவனியில் பின்னே ருண்டு
நாட்டுவோ மாண்பா லொன்று
பவமுள கன்னி ரண்டு
பகருவோர்ந் தீர்க்க மாகத்
தவசியே துணைவன் சேதி
சாற்றுவோங் கேளுந் தாயே.

11. ஜாதகருடைய சகோதரர்களைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். இவருக்கு மூத்தச் சகோதரர்கள் இல்லை. ஆனால் இவருக்குப் பூமியில் இளைய சகோதரர்கள் உண்டு. அவர்களில் ஒருவர் சகோதரராவார். இருவர் மேன்மையான சகோதரிகளாவர். இந்த மூன்று சகோதரர்களும் நீண்ட ஆயுளையுடையவர்கள் என்று சொல்லுகின்றோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு: மூத்த சகோதரர்கள் விஷயம்:—சிம்ம லக்னத்திற்கு மூத்த சகோதர ஸ்தானம் பதினோரவது பாவமாகிய மிதுனம் ஆகும். இதில்

சூரியன் இருப்பது தோஷமாகும். விரயாதிபதியாகிய சந்திரன் மிதுனத்திலிருப்பது மூத்த சகோதரர்களுக்குப் பிரதிகூலமானது. எட்டாவது ஆதிபத்தியம் பெற்ற குரு மிதுனத்தைப் பார்ப்பது மூத்த சகோதரர்களுக்குப் பிரதிகூலமான அம்சம் ஆகும். மிதுனத்தை இராகு பதினோராவது பார்வையுடன் பார்ப்பது மூத்த சகோதரர்களுக்குத் தோஷத்தை யுண்டுபண்ணக்கூடிய அம்சமாகும். சனி மூன்றாவது பாவமாகிய துலாத்தில் உச்சமாக விருப்பதால் சமஸ்கிருத சம்பு ஹோரா பிரகாசா" என்ற கிரந்தத்தில் சகஜபாவத்தில் ஐம்பத்தெட்டாவது சுலோகத்திற் சொல்லியபடி மூன் பிறந்த சகோதரர்களுக்குத் தோஷம் உண்டு. சனி மூன்றாவது பாவத்தில் இருந்து மூன்றாவது பாவம் இராகுவால் பார்க்கப்படுவதால் இராமதயாளு என்பவரால் செய்யயப்பட்ட சங்கேத நிதியில் நான்காவது சங்கேதம் இருபத்திரண்டாவது சுலோகப் பிரகாரமும் மூத்த சகோதரர்களுக்குத் தோஷமிருக்கின்றது. மூத்தசகோதரஸ்தானாதிபதியாகிய புதன் பன்னிரண்டில் இருப்பதும் தோஷமாகும். மூத்த ஆண் சகோதரகாரகனுகிய குரு கேதுவுடன் இருந்து அங்காரகனால் பார்க்கப்படுவதும் தோஷமாகும். ஆகையால் மூத்த சகோதரர்களுக்குத் தோஷம் உண்டு.

ஜாதகரின் இளைய சகோதரனுடைய விஷயம்

12. வஞ்சக வஞ்ச னுவன் வார்த்தையும் தந்திர முண்டு
இஞ்சொலி னுணுக்கந் தேர்வன் இன்பச்சொல் ஈகை
[கொஞ்சம்
அஞ்சிடான் யாவ ருக்கு மற்பபுத் திகளுங் கொஞ்சம்
வஞ்சனை மனமு மாகும் வடதிசை பாரி வாய்க்கும்.

12. ஜாதகருடைய இளைய சகோதரர் கபடமுள்ளவர்களுள் அதிகக் கபடமுள்ளவராக விருப்பார். இவர் தந்திரமான வார்த்தைகளை உபயோகிப்பார். இனிமையான வார்த்தைகளின் நுட்பத்தை அறிவதில் இவர் சமார்த்தியமுள்ளவர். இன்பமான வார்த்தைகளை உபயோகிப்பார். இவர் சிறிது தயாள குணத்தையும் பிறருக்கு கொடுக்குந் தன்மையையும் உடையவராவர். இவர் யாருக்கும் பயப்படமாட்டார். இவருக்குச் சிறிது தாழ்ந்த புத்தியும் உண்டு. இவர் கள்ளம் கபடு வஞ்சனை உள்ள மனத்தையுடையவராவர். இவருக்குக் வடக்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சேருவாள்.

13. சுதர்களு மாண்பா லிரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
பதரூகும் மற்ற தெல்லாம் பாலக னுடனே சித்துப்
பதியது வேறுய்ச் செல்வன் பயிர்தொழில் செட்டு
[செய்வன்
நுதிசெய்தோர்க் குதவு வானுந் தோகையே கேட்டி டாயே.

13. ஜாதகருடைய இளைய சகோதரருக்குச் சந்ததிகளில் இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவராக விருப்பார்கள். மற்றக் குழந்தைகள் எல்லாம் உபயோக மற்றதாய் இறந்துவிடும். இவர் ஜாதகருடன் சிநேகமாகவிருந்து கொண்டே வெறே குடும்பியாகப் பிரிந்து வேறிடத்திற்குப் போய் விடுவார். இவர் விவசாயத் தொழிலையும் வியாபாரத்தையுஞ் செய்வார். இவர் தன்னைப் போற்றினவர்களுக்கும் வணங்கினர்களுக் கும் உபகாரஞ்செய்வார். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியும்

14. ஜாதகன் மணத்தின் காலஞ்
சாற்றுவே மிருபான் மூன்றில்
காதலி தந்தை வர்க்கங்
கலப்பளாங் குணத்தைச் சொல்வேன்
சூதிலாள் பொறுமை சாலி
சுகமிலா வார்த்தை சொல்வள்
மாதவர் பத்தி பூண்பள்
வரன்மனம் போலே வாழ்வள்.

14. ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின் றேம். இவருக்கு இருபத்து மூன்றுவது வயதில் தன்னுடைய தகப்ப னுடைய பந்துவர்க்கத்திலிருந்து மனைவி வந்து சேருவாள். இவ ளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இவள் கள்ளம் கபடு வஞ்சனை இல்லாதவள். சாந்தமான குணத்தையுடையவள். நன்மையைத்தரக்கூடாத இனிமையில்லாத வார்த்தைகளைச் சொல்லு வாள். முனிவர்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவளாவள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்கு ஒத்தாபோலவிருந்து வாழ்வாள்.

குறிப்பு: **விவாக காலம்**:—ஜாதகருக்கு வயது வருஷம் 23-0-0 முதல் வயது வருஷம் 33-0-0 முடியும் வரையிலும் சனி தசையில் சுக்கிரபுக்தி நடக்கின்றது. சனி களத்திரஸ்தானமாகிய கும்பத்திற் குடையவராகிக் குடும்பஸ்தானாதிபதியாகிய புதனைப் பார்க்கின்றார். இவர் ஒன்பதாவது பாவத்தைப் பார்க்கின்றார், இவரைப் போககாரக னாகிய இராகு மூன்றாவது பார்வையுடன் பார்க்கின்றார். ஆகையால் ஜாதக பாரிஜாதம் பதினான்காவது அத்தியாயம் இருபத்தொன்ப தாவது சுலோகப் பிரகாரம் சனி தன் தசையில் விவாகஞ்செய்து வைக்க அமைப்பு உடையவராக விருக்கின்றார். சுக்கிரன் பத்திற் குடையவராயும் களத்திரகாரகனாகியும் பத்திலேயே யிருந்துகொண்டு போகஸ்தானமாகிய நான்காவது பாவமாகிய விருச்சிகத்தைப் பார்க்

கின்றார். ஆகையால் மேற்சொல்லிய சுலோகப்பிரகாரம் சுக்கிரன் தனது புக்தியில் விவாகஞ் செய்துவைக்க அமைப்பு உடையவரா கின்றார்.

15. அன்னம்போல் சாய லொக்கு
மற்பபுத் திகளு மில்லாள்
தன்துணைகா ணாளாகுந் தாய
திரண்டுமாகும் முன்னமே மரிப்பளாகும்
அன்னவள் வயது தீர்க்க
மத்திரி மறுத்துச் சொல்வார்
கன்னிமா ரிரண்டு யென்றேங்
கழறுவீ ரந்தச் சங்கை.

15. ஜாதகருடைய மனைவி அன்னப்பட்சியைப்போல் அழகான உருவத்தையுடையவளாவள். தாழ்ந்த இழிவான குணங்களையும் புத்தியையுமுடையவளல்லள். இவளுக்குச் சகோதரர்கள் இல்லை. இவளுக்கு இரண்டு தாய்மார்கள் உண்டு. இவள் தன்னுடைய புருஷனுக்கு முந்தியே மாங்கல்யமுடையவளாக இறந்துவிடுவாள். இவள் நீண்ட வயதையுடையவளாவாள். இவ்விதமாக வசிஷ்டர் சொல்லவே அத்திரிமகரிஷி தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லவே இதற்குக் காரணத்தைச் சொல்லுவீராக என்று கேட்டார்.

குறிப்பு : மனைவியின் சகோதர விஷயம் :—மனைவிக்குச் சகோதரர்கள் இடையாது என்று இந்தப் பாடலில் சொல்லியிருக்கின்றது. சிம்மத்திற்குக் களத்திரஸ்தானம் கும்பமாகும். ஆகையால் கும்பலக்கினத்திற்கு இளைய சகோதரஸ்தானம் மேஷமாகும். இந்த மேஷத்தை விரயாதிபதியாகிய சனி பார்ப்பது தோஷமாகும். கேது மூன்றுவது பார்வையுடன் மேஷத்தைப் பார்ப்பதும் தோஷமாகும். இளைய சகோதரஸ்தானாதிபதியாகிய பொதுவாய்ச் சதோதரகாரகனுகிய அங்காரகன் இராகுவுடன் கூடியிரும்பதும் தோஷமாகும். இளைய ஆண் சகோதரகாரனுகிய புதன் கும்பத்திற்கு ஆறில் மறைந்து சனியால் பார்க்கப்பட்டிருப்பது தோஷமாகும். மூத்த ஆண் சகோதரகாரகனுகிய குரு கேதுவுடன் கூடி அங்காரனுல் பார்க்கப்பட்டிருப்பது தோஷமாகும். மூன்றுவது பாவத்திற்குச் சனியினுடைய சம்மந்தம் (சம்பந்தம் என்பது கூடுவதும் பார்ப்பதுமாகும்) ஏற்பட்டிருப்பதால் சம்புஹோரா பிரகாசா சகஜபாவம் ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் மூத்த இளைய சகோதரர்களுக்குத் தோஷமுண்டு. மேற்சொல்லிய எல்லாக்காரணங்களாலும் மனைவிக்குச் சகோதரர்கள் இல்லாமல் இருப்பதற்கு அமைப்பு இருக்கின்றது.

மனைவிக்கு இரண்டு தாயார் விஷயம் :—மனைவிக்கு இரண்டு தாயார் என்று சொல்லியிருக்கின்றது. அஃதாவது மனைவியின் தகப்பனுருக்கு இரண்டு தாரமாகும். மனைவியின் லக்கினம் கும்பம் ஆகும் இதற்குப் பிதிருஸ்தானம் ஒன்பதாமிடமாகிய துலாமாகும். ஆகையால் மனைவியின் பிதிரு லக்கினம் துலாமாகும். துலாத்திற்குக் களத்திரஸ்தானமாகிய மேஷத்தைச் சனி பார்ப்பதும் கேது பார்ப்பதும் தோஷமாகும். மேஷ அதிபதியாகிய அங்காரகன் இராகுவுடன் கூடியிருப்பது தோஷமாகும். ஏழிற்குடைய அங்காரகன் பதினொன்றில் இருப்பது அதிக களத்திரயோகத்திற்கு அனுகூலமானதாகும். இந்த அங்காரகனும் துலாத்திற்குக் குடும்பாதிபதியுமாகின்றார். துலாத்திற்கு எட்டில் களத்திரகாரகனுகிய சுக்கிரன் மறைந்திருப்பதும் தோஷமாகும். ஆகையால் மனைவியின் பிதாவுக்கு இரண்டு தாரயோக அமைப்பு இருக்கின்றது.

மனைவி புருஷக்கு முன்னமே இறந்துவிடுவாள் என்று இந்தச் செய்யுளில் சொல்லியிருக்கும் விஷயத்தைப்பற்றிப் பின்னல் வருகின்ற பாடலின் கீழ்க்கண்டுள்ள குறிப்பைப் பார்க்கவும்.

16. சத்தமங் கேது தங்கத்
தரைமகன் பார்ப்ப தாலே
பத்தினி யிரண்டு வென்றோம்
பாவைமுன் தீர்க்கமோசொல்
முத்தின மாது தீர்க்கம்
மறுமனை வாய்ந்த தாலே
சத்தமும் புத்திர ரின்றித்
தோகையும் வாய்க்கு மென்றோம்.

16, ஏழில் கேது இருப்பதாலும் தரைமகன் என்ற அங்காரகன் ஏழைப் பார்ப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் என்று சொல்லுகின்றோம் இவ்விதமாக அத்திரி மகரிஷியானவர் சொல்லவே முதல் மனைவி நீண்ட ஆயுளையுடையவளா அல்லது சீக்கிரம் இறந்துவிடுவாளா என்ற விவரத்தைச் சொல்லுவீரென்று கேட்க அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். முதல் மனைவி நீண்ட ஆயுளையுடையவளாவள். இவளுக்கு ஆண் சந்ததியில்லாததால் இரண்டாவது மனைவி ஜாதகருக்கு வந்து நேரிடுவாள் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு : இரண்டு மனைவிகள் விஷயம் :—ஏழில் கேது இருப்பதும் ஏழை அங்காரகன் பார்ப்பதும் தார தோஷமாகும். இரண்டாவது தாரபாவமாகிய ஒன்பதிற்குடையவராகிய அங்காரன் ஏழைப் பார்ப்பது இரண்டாவது தாரம் நேரிடுவதற்கு அனுகூலமான அம்சமாகும். குடும்பாதிபதியாகிய புதன் பன்னிரண்டில் மறைந்திருந்து சனியால்

பார்க்கப்படுவது தாரதோஷமாகும். எட்டிற்குடைய குரு ஏழில் இருப்பது சிறிது தாரதோஷமாகும். ஏழிற்குடைய சனி உச்சமாயிருப்பது தாரத்திற்கு வலிவாகும். களத்திரகாரணகிய சுக்கிரன் லக்கினத்திற்குக் கேந்திரத்தில் ஆட்சியாய் இருப்பது தாரத்திற்கு அநுகூலமாகும். ஏழிற்குடைய சனியை குரு அஷ்டமாதிபதியாகிப் பார்ப்பது பிரதிகூலமானது, ஐந்திற்குடையவராகிப் பார்ப்பது அனுகூலமானது. ராகு சனியைப் பார்ப்பது பிரதிகூலமானது. ஆகையால் முதல் மனைவிக்குப் பிரதிகூலமான அம்சங்களும் அநுகூலமான அம்சங்களும் இருக்கின்றன. முதல் மனைவிக்கு ஆயுளைக் கவனிப்போம் முதல் மனைவி லக்கினம் கும்பம். லக்கினத்தில் குரு இருப்பதும் நான்கில் சுக்கிரன் இருப்பதும் ஐந்தில் சந்திரன் இருப்பதும் லக்கினாதிபதியாகிய சனியும் சந்திர லக்கினாதிபதியாகிய புதனும் ஒருவருக்கொருவர் கட்பும் சமமுமாகி ஒருவர்க்கொருவர் கேந்திரத்தில் இருப்பதும் மணிகண்ட கேரளம் அரிஷ்ட காண்டம பதினெட்டாவது பாடலாகிய

"உலகினிலுதித்த பேர்கட்கு ஒளிர் மதி அரசன் சுங்கள்
.....தியர் தீம்பாய்ச் சாகவு மொட்டார் மாதே"

என்ற பாடல் பிரகாரம் முதல் மனைவிக்கு ஆயுள் உண்டு. மேலும் மணிகண்ட கேளரம் பிரதி அரிஷ்ட காண்டம் நாற்பதாவது பாடலாகிய

"பூரண பலத்திலேடு புண்ணியர் சுபமேயாகிற்
காரணமில்லை சாகக் கனக்கவே வயது முண்டு"

என்ற பாடல் பிரகாரம் முதல் மனைவிக்கு ஆயுள் உண்டு. கும்ப லக்கினத்திற் குருவிருப்பது ஆயுளுக்கு அநுகூலமானது. குரு சந்திரனைப் பார்ப்பதும் ஆயுளுக்கு அநுகூலமானது. மேலும் ஆயுள் சம்மந்தமான கிரகங்களாகிய லக்கினாதிபதி அஷ்டமாதிபதி பத்துக்குடையவர் ஆகிய இம்மூவரில் லக்கினாதிபதியும் ஆயுள்காரகனுமாகிய சனி உச்சமாக விருந்துகொண்டு குருவால் பார்க்கப்படுகின்றார். பத்திற்குடையவராகிய அங்காரகன் ஏழாவது கேந்திரத்தில் இருந்துகொண்டு குருவால் பார்க்கப்படுகின்றார். ஆகையால் சனியும் அங்காரனும் வலிவாக விருக்கின்றார்கள். எட்டிற்குடைய புதன் ஆறில் மறைந்து பகைவீடாகிய கடகத்தில் இருக்கின்றார். இவரைச். சனியும் பார்க்கின்றார். ஆகையால் புதன் வலிவாக வில்லை. மூன்று கிரகங்களில் இரண்டு கிரகங்கள் வலிவாய் இருப்பதால் துய்யகேரளம் எட்டாம்பாவம் ஐந்தாவது பாடலும், கார்க்கேயர் நாடி முதற்காண்டம் அறுநூற்றறுபத்தைந்தாவது பாடலுமாகிய

"நிலைவரம் பத்தோ னெட்டோ னிலக்கினத் துடையோன் மிக்கேல்
மலைவிலாத் தீர்க்கவாயுள் மத்தியம மிரண்டு மிக்கேல்"

என்ற பாடல் பிரகாரம் முதல் மனைவிக்கு மத்திமாயுள் என்ற மூப்பத்துமூன்று முதல் அறுபத்தாறு வயது வரையிலுமுள்ள ஆயுள்

ஏற்படுகின்றது. (இந்தப் பாடலைப்பற்றி ஜாதக பாரிஜாதம் பதினொன்காவது அத்தியாயம் ஐம்பதாவது சுலோகத்தையும் பார்க்கவும்.) ஆகையால் முதல் மனைவிக்கு ஆயுள் இருக்கின்றது என்று ஏற்படுகின்றது. முதல் மனைவிக்குப் புத்திரபாவத்தைக் கவனிப்போம் :—கும்பத்திற்குப் புத்திரஸ்தானமாகிய மிதுனத்தில் சூரியன் ஏழிற்குடையவராய் ஐந்தில் இருப்பதால்

தமிழ் ஜாதகாலங்காரம் 596-ஆவது பாடலின் நான்காவது வரியாகிய

" பூணேழோன் பாவனுய் ஐந்துற்றிடிற் புதல்வரில்லே "

என்ற வரிப் பிரகாரம் முதல் மனைவிக்கு ஆண் சந்ததி தோஷம் இருக்கின்றது. முதல் மனைவி லக்கினம் கும்பமாகவிருப்பதால் ஜாதகாலங்காரம் 592-ஆவது பாடலின் மூன்றுவது நான்காவது வரிகளாகிய

" எருது கும்பம் வித்தகையோரை
யார்க்கு மகவில்லே விளம்புங்காலே "

என்ற வரிகள் பிரகாரம் புத்திரதோஷமிருக்கின்றது. மேலும் ஆறுக்குடையவரான சந்திரன் ஐந்தில் இருப்பது ஆண் சந்ததிக்குத் தோஷமானது. ஐந்தாவது பாவத்தைக் குரு பார்ப்பதால் ஜாதகாலங்காரம் 590-ஆவது பாடல் ஏழு எட்டாவது வரிகளாகிய

" மஞ்சாறுங் குழன்மடவாய் யரசனேந்தின்
மேவவந்திடிற் சந்தான மத்திபமுதித்தற்றுனே "

என்ற வரிகளின் பிரகாரம் ஆண் சந்ததிகளுக்குத் தோஷமுண்டு. ஐந்தாவது பாவத்தை இராகு பார்ப்பதால் இதே பாடலின் ஐந்தாவது வரி பிரகாரம் ஆண் சந்ததிக்குத் தோஷமாகும். ஒன்பதில் சனி இருந்துகொண்டு ஒன்பதை இராகு பார்ப்பதும் குரு பார்ப்பதும் ஆண் சந்ததிக்குத் தோஷமாகும். ஆகையால் முதல் மனைவிக்கு ஆண் சந்ததி இருப்பதற்கு வலிவு ஒன்றுங்கிடையாது. ஜாதகருடைய ஜன்ம லக்கினத்திற்கு ஏழிற்குடையவராகிய சனி இருக்கின்ற துலாத்திற்குக் கோணத்தில் புத்திரகாரகனுகிய குரு இருக்கவும் (இந்தக் குருவுடன் சனி கூடுவதற்கும் அல்லது பார்ப்பதற்கும் பதிலாக) அவருடைய வீடும் புத்திர ஸ்தானமுமாகிய தனுசைச் சனி பார்ப்பதாலும் ஜாதகாலங்காரம் ஐந்தாம் பாவம் கடைசி பாடலாகிய 628-ஆவது பாடல் பிரகாரம் (ஏழாவது வீடும் சம்மந்தமுள்ள) முதல் மனைவிக்குச்

" சுத்தமாய்ப் புதல்வரில்லேயெனை மறை சொல்லுந்தானே."

இவ்வித காரணங்களால் ஜாதகருக்கு முதல் மனைவி மூலமாக ஆண் சந்ததி இல்லே என்று சொல்ல வேண்டும். மேலும் முதல் மனைவியைப் பங்கப்படுத்தக்கூடிய கிரகங்களாகிய கேது, அங்காரன், எட்டிற்குடைய குரு இவர்களில் குரு புத்திரகாரகராயும் ஐந்திற்குடையவராயும்

அங்காரகன் ஒன்பதிற்குடையவராயும் 'புத்திர சம்பந்தம்' உடையவர் களர்க இருப்பதால் முதல் மனைவிக்குப் புத்திர விஷயமாகப் பங்கம் உண்டாக அமைப்பு இருக்கின்றது. ஆகையால் புத்திரன் இல்லாததால் ஜாதகர் இரண்டாவது மனைவியை விவாகஞ் செய்து கொள்வார் என்று இந்தப் பாடலில் சொல்லியிருக்கிறது என்பதை யூகிக்கவும். தாரதோஷம் இருப்பதால் 15-ஆவது பாடலில் கண்டபடி முதல் மனைவி புருஷனுக்கு முன்னே இறந்து விடுவாள்.

இரண்டாவது விவாக காலம்

17. மறுமனை யெந்தக் காலம் வந்திடும் விபரஞ் சொல்வாய்
ஆரூறு வாண்டு தன்னி லணுகிடும் பால னுக்குத்
திருகுகள் தீர்க்கம் நேறுஞ் சுபகாலம் பால னுக்குத்
தரைமகன் பார்ப்ப தாலே செப்பினே மந்தச் சங்கை.

17. ஜாதகருக்கு இரண்டாவது மனைவி எந்த வயதில் வந்து சம்பவிப்பாள் என்பதை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்கவே அத்திரி மகரிஷி சொல்லுகின்றார். இவருக்கு முப்பத்தாறுவது வயதில் இரண்டாவது மனைவி வந்து சம்பவிப்பாள். இவருக்கு வலு வான பெரிய திருட்டுக்களும் வஞ்சனைகளும் நேரிடும். அப்போது இவ க்குருச் சுபங்களும் நடக்கும். தரைமகனாகிய அங்காரன் பார்ப்பதாலே இந்த விஷயங்களைச் சொன்னேம்.

குறிப்பு: இரண்டாவது விவாக விஷயம்:—ஜாதகருக்கு வயது வரு ஷம் 35-0-0 முதல் வயது வருஷம் 36-0-0 முடியும் வரையிலும் புத தசையில் புத புக்தி நடக்கின்றது. இந்தப் புதன் குடும்பஸ்தான மாகிய இரண்டாவது பாவத்திற்குடையவராகிப் பன்னிரண்டில் இருந்து கொண்டு களத்திரஸ்தானாதிபதியாகிய சனியால் பார்க்கப்பட்டுச் சனி யின் காலில் இருக்கின்றார். மேலும் புதன் பதினொன்றிற்குடைய வராக இருப்பதாலும் பதினேராமிடமும் ஒரு களத்திரஸ்தானமு மாக விருப்பதாலும் களத்திர லாபத்தைக் கொடுக்கும் தன்மையை யுடையவராக விருக்கின்றார். ஆகையால் புத தசையில் புதன் புக்தி யில் இரண்டாவது விவாகம் ஜாதகருக்கு நடக்கும் என்று இங்கு சொல்லப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது மனைவியின் குணங்கள்

18. பின்மனை குண மெவ்வாறு பேசுவீர் முனியே நீர்தாம்
கன்னென மொழியே சொல்வேன் கழறுமுன் கோபி
[யாவள்
பன்னியே பேச வல்லாள் பரவுப காரி யாகும்
நன்னடை யோக சாலி நாயகன் மனம்போல் வாழ்வள்.

18. இரண்டாவது மனைவியின் குணதிசயங்கள் எவ்விதமாக விருக்கும் என்பதைப்பற்றி, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்கச் சக்கரையைப்போல இனிமையான வார்த்தைகளை யுடைய பார்வதியம்மையே! சொல்லுகின்றேன். இவள் பேசுவதற்கு முன்னமே கோபத்தை யுடையவளாவள். இவள் திறமையாகப் பேசுவதில் தேர்ச்சியடைந்தவளைப் போலவும் பேசுவாள், சாமர்த்தியமுள்ளவள். பிறருக்கு உபகாரஞ் செய்பவளாக விருப்பாள், நல்ல நடவடிக்கையும் ஒழுக்கமும் உடையவள், யோகமுமுடையவள். இவள் தன்னுடைய, புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல விருந்து ஒற்றுமை யுடன் வாழ்வாள்.

இரண்டாவது மனைவிக்குப் புத்திரபாவம்
முதல் மனைவிக்குப் புத்திரபாவம்

19. புத்திர ராண்பா லிரண்டு பெண்மணி யவ்வார் தீர்க்கம்
முத்தின மாதுக் கேதான் மொழிவீரே புத்திர பாவஞ்
சத்திமார் மூன்று நேரும் தங்காது வாண்பா லுத்தான்
சுத்தமாய் விபர மிரண்டிற் சொல்லுவோங் காயே கேளும்.

19. இரண்டாவது மனைவிக்கு இரண்டு ஆண்குழந்தைகளும் இரண்டு பெண்குழந்தைகளும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். மூதிர்ந்த மனைவிக்கு அஃதாவது முதல் மனைவிக்கு உண்டாகும் சந்ததியைப் பற்றிச் சொல்லுவீராக என்ற கேட்கவே, முனிவர் சொல்லுகின்றார். இந்த முதல் மனைவிக்கு மூன்று பெண் குழந்தைகள் உண்டாவார்கள். ஆண் குழந்தை நிலைத்திருக்காது. இதனுடைய விபரத்தை இரண்டாவது பாகத்தில் நன்றாகச் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயின் குணகுணங்கள் முதலியன

20. அன்னையு மாஞ் சிவப்ப ளாளனுக் கினிய ளாகுந்
தன்சொல்லு மடக்க முண்டு தானிள மனத்த ளாகும்
முன்கோபி பின்பு சாந்த முதவுவா ளேழை யோர்க்கு
அன்னமு மன்பா யீவ ளணுகிடும் பித்த வாயு.

20. ஜாதகருடைய தாயார் மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தையுடையவள். இவள் தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவளாக விருப்பாள். இவள் அடக்கமாகவும் சாந்தமாகவும் வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் இளகிய மனத்தை யுடையவளாவள். இவள் பேசுவதற்குமுன்னே கோபத்தை அடையக் கூடியவள், ஆனால் அந்தக்கோபம் பின்னால் சாந்தத்தை அடையும். இவள் ஏழை மனுஷாளுக்கு உபகாரஞ் செய்வாள். இவள் ஆசையுடன்

பிறருக்குச் சாப்பாடு போடுவாள். இவளுக்குப் பித்தவாவு ரோகம் வந்து சம்பவிக்கும்.

ஜாதகருடைய தாயாரின் முன்ஜன்மம்

21. தன்துணை காணு ளாகுந்
தயது மிரண்டு யென்றேரும்
முன்தாய்க்கு விவளு திப்பாள்
விளங்காரோ துணைவர் தாமும்
பின்தாய்க்குச் சுதரா ணிரண்டு
பொருந்திடுங் கன்னி யொன்று
அன்னவள் பூர்வந் தன்னை
யரைகிறேந் தாயே கேளு.

21. ஜாதகருடைய தாயாருக்குச் சகோதரங்கள் கிடையாது இவளுக்கு இரண்டு தாய்மார்கள் உண்டு என்று சொல்லுகின்றேரும். இவள் மூத்த தாயாருக்குப் பிறந்தவளாவள். இவளுக்குச் சகோதரங்கள் கிடையாது. இவளுடைய இரண்டாவது தாயாருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண்குழந்தையும் இருப்பார்கள். ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு: தாயாரின் சகோதர விஷயம்:—ஜாதகரின் தாயாருடைய லக்கினம் நான்காவது பாவமாகிய விருச்சிகமாகும். இதற்கு இளைய சகோதரஸ்தானமாகிய மகரத்திற்குடைய சனி பன்னிரண்டில் மறைந்து இராகுவால் பார்க்கப்பட்டிருப்பது சகோதர தோஷமாகும். சகோதரகாரகனுகிய அங்காரகன் இராகுவுடன் கூடியிருப்பது சகோதர தோஷமாகும். மூத்த சகோதர ஸ்தானமாகிய கன்னிக்குடைய புதன் கடகத்தில் பகை க்ஷேத்திரத்தில் சனியால் பார்க்கப்பட்டிருப்பது சகோதரதோஷமாகும். ஆகையால் தாயாருக்குச் சகோதர தோஷம் ஏற்பட்டிருக்கின்றது;

(2) தாயாருக்கு இரண்டு தாய்மார்கள் விஷயம்:—தாயாருடைய லக்கினம் விருச்சிகம். இதற்குப் பிதிரு ஸ்தானமாகிய ஒன்பதாமிடமாகிய கடகம் பிதிரு லக்கினமாகும். இந்தக் கடகலக்கினத்திற்குக் களத்திர ஸ்தானம் மகரம் ஆகும். இந்த மகரத்திற்குடைய சனி துலாத்தில் சராசியில் உச்சமாக விருக்கின்ரூர். தமிழ் ஜாதகாலங்காரம் அறுநூற்று நாற்பத்தெட்டாவது பாடலின் முதலாவது இரண்டாவது வரிகளாகிய

"ஏழ் வீட்டினிற் கதிபன் சரத்தி நிற்கில் இரு மனைவி"

என்றவரிகள் பிரகாரம் இரண்டுதார அமைப்பு இருக்கின்றது. கடகத்திற்குக் குடும்பாதிபதியாகிய சூரியன் கடகத்திற்குப் பன்னிரண்டில்

மறைந்திருப்பது தாரதோஷமாகும். குடும்பத்தில் அங்காரகனும் இராகுவும் இருப்-து தாரதோஷமாகும். கடகத்திற்கு ஏழிற்குடைய சனியை அஃதாவது களத்திர ஸ்தானாதிபதியை இராகு பார்ப்பது தார தோஷமாகும். களத்திரஸ்தானாதிபதியாகிய சனியும் களத்திர காரகனாகிய சுக்கிரனும் ஒருவருக்கொருவர் ஆறுவது எட்டாவது பாவங் களில் வலிவாய் இருப்பது தாரதோஷமாகும். கடக லக்கினாதிபதி யாகிய சந்திரனைக் கடகத்திற்கு இரண்டாவது மனைவி ஸ்தானமாகிய மீனத்தின் அதிபதியாகிய குரு பார்ப்பது இரண்டாவது தாரம் நேரிடு வதற்கு அநுகூலமான அம்சமாகும். ஆகையால் ஜாதகருடைய தாயாரின் பிதாவுக்கு இரண்டுதாரம் ஏற்பட அமைப்பு இருக்கின்றது. அஃதாவது தாயாருக்கு இரண்டு தாய்மார்கள் ஏற்படக் காரணம் இருக்கின்றது. (3) தாயாருடைய தகப்பனாருடைய லக்கினம் கடகம் இதற்கு முதல் தாரபாவமானது மகரமாகும். கடக லக்கினத்திற்கு இரண்டாவது தார பாவம் ஒன்பதாவது பாவமாகிய மீனம் ஆகும். முதல் தார லக்கினமாகிய மகரத்திற்குப் புத்திர ஸ்தானம் ரிஷபமும் இதற்கு அதிபதி சுக்கிரனும் ஆகும். இரண்டாவது தார லக்கின மாகிய மீனத்திற்குப் புத்திரஸ்தானம் கடகமும் இதற்கு அதிபதி சந்திரனும் ஆகும். தாயாருடைய லக்கினம் விருச்சிகமும் ஆகும். இந்த விருச்சிகத்திற்கும் சுக்கிரனுக்கும் பார்வை சம்மந்தமும் விருச் சிகத்திற்கும் ரிஷபத்திற்கும் எதிர் எதிர் வீடு சம்மந்தமும் இருக்கின் றது. இந்த விருச்சிகத்திற்கும் சந்திரனுக்கும் கடகத்திற்கும் இவ்வித மான சம்மந்தம் ஒன்றும் இல்லை. ஆகையால் ஜாதகருடைய தாயார் தன்னுடைய முதலாவது தாயாரின் புத்திரியாக விருப்பதற்குக் காரணம் ஏற்படுகின்றது. இங்கு உபயோகப்படுத்தப்பட்ட வழியானது ஒரு ஜாதகருடைய நெறுங்கின பந்துக்களுடைய பலாபலன்களை அறிவ தற்குச் சுக்கிர நாடி தேவ கேரள நாடி சந்திரநாடி இவைகளிலும், பலதீபிகை பதினைந்தாவது அத்தியாயம் 20, 25-வது சுலோகங் களிலும் உபயோகப்படுத்தப்பட்ட வழியேயாகும்

22. பெண்ணை நதிக்கு வோரம் பெரும்பணை பட்டி தன்னில்
வன்னிய மரபிற் றோன்றி வளமுள குடும்பி யாகித்
தன்வரன் மதலை யுண்டாய்த் தையலும் வாழுங் நாளிற்
பின்னமாய் வந்த வுழைப் பேசுவோந் தாயே கேளும்.

22. பெண்ணை நதியின் கரையிலுள்ள பெரும்பணைபட்டி என்ற கிராமத்தில் ஜாதகருடைய தாயார் வன்னியர் குலத்திற் பிறந்து செழு மையான ஒரு குடும்பத்தினளாகிப் புருஷன் மக்கள் இவர்களை யுடைய வளாகி வாழுகின்ற காலத்தில் இவளுக்குக் கெடுதியாக வந்து நேரிட்ட வினையைப் பற்றிச் சொல்லுகின்றோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயார் முன்ஜன்மத்தில் செய்த பாவம்

23. இறப்பினிற் கூடு கட்டி யிருக்கின்ற பட்சி தன்னைக்
குறிப்பாகக் கலைத்து விட்டாள் குஞ்சுகள் மாண்ட
[வென்றோம்
அறியாத நாளிற் செய்தா ளணுகிற்று வந்தத் தோஷந்
திருமகள் வேறு தீங்கு செப்பொணு பாவைக் கேதான்.

23. வீட்டின் எறவானத்தில் கட்டியிருந்த ஒருபட்சியினுடைய கூண்டை ஜாதகருடைய தாயார் வேண்டுமென்றே கலைத்து விட்டாள். அதனால் அதிலிருந்த அந்தப் பறவையினுடைய குஞ்சுகள் இறந்து போய்விட்டன என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக இவள் தனக்கு நன்றாகப் புத்திவராமல் இருந்தகாலத்தில் செய்துவிட்டாள். அந்தத் தோஷமானது இவளுக்கு வந்து சம்பவித்தது. இவள் வேறு எவ்விதமான கெட்ட காரியங்களையாவது பாவத்தொழிலையாவது செய்தாள் என்று சொல்லுவதற்கு இடமில்லை.

24. அந்திய காலந் தன்னி லவள்வரன் தன்னை டுற்றுத்
தென்திசை சேது புக்கித் திகைத்தோர்க்கு வன்ன மீந்து
தன்வரன் முன்னே மாண்டு தலைநான்கோன்
[வரையப் பட்டு
வந்தன னிக்கு லத்தில் மருவிற்றுப் பட்சி தோஷம்.

24. ஜாதகருடைய தாயார் தன்னுடைய கடைசிக் காலத்தில் தன்னுடைய புருஷனுடன்கூடித் தெற்குத்திக்கிலுள்ள சேது ஸ்தலத்திற்குப்போய் அவ்விடத்தில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தவர்களுக்குச் சாப்பாடு போட்டுப் பிறகு தன்னுடைய புருஷனுக்கு முன்னமே இறந்து நான்கு சிரசுகளையுடைய பிரமதேவனால் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜாதியில் அஃதாவது கங்கை குலத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். முன்ஜன்மத்தில் பட்சியினால் உண்டான தோஷம் இந்த ஜன்மத்தில் வந்து இவளை அடைந்தது.

25. துணைகளுங் காண ளாகுஞ்
சுதர்களு முதலிற் பீடை
பிணையாகு மென்று சொன்னோம்
பராசரு மறுத்துச் சொல்வார்
வனிதையு முன்ஜன் மத்தில்
வன்னிய மரபில் வந்தாள்
அனையவே யிச்சென் மத்தி
லவள்கங்கை குலமு திக்கும் ;

25. ஆகையால் ஜாதகருடைய தாயாருக்குச் சகோதரர்கள் இல்லை. இவளுக்கு முதலில் பிறக்கும் குழந்தைகளும் இறந்து போய் விடும். இவ்விதமாக இவளுக்குத் தோஷங்களும் கஷ்டங்களும் இவளை இறுக்கும்படியாக வந்து நேரிடும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக வசிஷ்டமகா முனிவர் சொல்லவே பராசர முனிவர் தடுத்து அவரைக் கேட்கின்றார். இவள் தன்னுடைய முன்ஜன்மத்தில் வன்னியர் குலத்திற் பிறந்தாள். அவ்விதமிருக்க இவள் இந்த ஜன்மத்தில் வேளாளர் ஜாதியில் பிறந்ததற்கு ;

தாயார் கர்மம்

26. காரணம் யாதுவென்னக்
காதலி முன்ஜன் மத்தில்
தீரமாய்ச் சேதுச் சென்று
தீர்த்தபுண் ணியத்தால் வந்தாள்
மாறுதோ பட்சி தோஷம்
வாங்காது வென்று சொல்வோங்
கூறுவோம் நாற்பா ஞென்றிற்
கூனியி லன்னை கண்டம்.

26. காரணம் என்ன என்று பராசர முனிவர் கேட்கவே வசிஷ்டர் சொல்லுகின்றார். ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன் ஜன்மத்தில் தைரியமாய்ச் சேது ஸ்தலத்திற்குப் போய் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்த பலனாக இந்த ஜன்மத்தில் கங்கை குலத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று வசிஷ்டர் சொன்னார். அதன் மேல் முன்ஜன்மத்தில் உண்டான பட்சியின் தோஷம் மாறிவிடாதா என்று பராசரர் கேட்கவே அந்தப்பட்சி தோஷம் விலகாது என்று சொல்லுகிறோம் என்று வசிஷ்டர் சொல்லுகின்றார். ஜாதகருக்கு நாற்பத்தோராவது வயதில் கூனி மாதம் என்ற பங்குனி மாதத்தில் இவருடைய தாயார் இறந்து போய்விடுவாள்.

ஜாதகரின் தாயாருடைய மறு ஜன்மம்

27. மால்தசை யிரவி புத்தி வந்திடு மந்தக் காலஞ்
சாலவே யிவள்பின் ஜன்மஞ் சாற்றுவோங் கச்சி தன்னில்
ஏலவே வைசியச் சேயா யிறங்குவாள் சுகமுள் ளாளாய்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைந்தது தப்பா காகும்.

27. ஜாதகருடைய தாயர் இறந்துபோகின்ற காலத்தில் மால் என்ற புதனுடைய தசையில் இரவி என்ற சூரியனுடைய புக்தி நடக்கும். ஜாதகரின் தாயாருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் காஞ்சிமாநகரில் பொருத்தமான வைசியர் குலத்தில்

பெண் குழந்தையாகப் பிறந்து சௌக்கியத்தையுடையவளாக விருப் பாள். ஆலகால விஷத்தை அருந்திய சிவபெருமானுடைய மனைவி யாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லியவை தவருமல் நடக்கும்.

குறிப்பு :—தாயாருடைய மரண காலம் :—ஜாதகருடைய நாற்பத் தோராவது வயதில் பங்குனி மாதத்தில் புத தசையில் சூரிய புக்தி நடக்கின்றது. சிம்மலக்கினத்திற்கு மாதிரு ஸ்தானம் நான்காவது பாவமாகிய விருச்சிகம் ஆகும். இந்த விருச்சிக லக்கினத்திற்குப் பராசரரேஹாரை ஜாதகசந்திரிகை ஐம்பத்தெட்டாவது சுலோகம் ஆகிய இவைகளின் பிரகாரம் புதன் சுக்கிரன் அங்காரகன் இவர்கள் மாரகாதி பதிகளாகின்றார்கள். புதன் விருச்சிகத்திற்கு மாரகஸ்தானங்களாகிய எட்டாமிடம் பதினேராமிடம் ஆகிய இவைகளுக்கு அதிபதியாகவிருப் பதாலும் மாரகராகின்றார். ஆகையால் இவர் தனது தசையில் மாதா வுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். மேலும் இவர் சந்திர லக்கினத்திற்கு மாதிருஸ்தானாதிபதியுமாகின்றார். ஒரு பாவாதிபதியின் தசை நடக்கின்ற காலத்தில் அந்தப்பாவத்தால் குறிக் கப்படுகிற மனுஷனுக்கு மாரகம் என்று ஜோதிடகிரந்தங்களில் சொல்லி யிருக்கின்றதால் இங்குக் சந்திரனுக்கு நான்காவது பாவத்திற்குடையவ ராகிய புததசையில் நான்காவது பாவத்தால் குறிக்கப்படுகின்ற மாதாவுக்கு மாரகம் ஏற்படும்படியான அமைப்பு இருக்கின்றது. சூரியன் விருச்சிகத்திற்கு மாரகஸ்தானமாகிய எட்டாவது பாவத்தில் மாதிருகாரகனுகிய சந்திரனுடன் கூடி இருக்கின்றார். ஆகையால் சூரியன் தனது புக்தியில் மாதாவுக்கு மாரகஞ்செய்யும் அமைப்பு உடையவராக விருக்கின்றார்,

ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மம்

28. *தந்தையின் பூர்வந் தன்னைச் சாற்றுவோம் பாண்டி*
[நாட்டில்
வந்தனன் தீயின் வம்சம் மனைவிமைந் தருமுண் டாகி
நிந்தைக ளில்லா னுகி நேமியிற் சீவித் தேதான்
கந்தன்மேற் பத்தி கொண்டு கடவுளின் தொண்டு செய்து;

28. ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் பாண்டிய தேசத்தில் தீயின் வம்சம் என் கிற வன்னியர் குலத்திற்பிறந்து மனைவி மக்களையுடையவராகி யாதொரு பாவமும் பழியுமில்லாமல் இந்தப் பூமியில் வாழ்ந்து ஆறு முகக் கடவுளின் மேல் அன்பும் ஆசைசையும் உடையவராகிக் கடவுளை வழிபட்டு அவருக்கு வேலைகளைச் செய்து;

29. அதிதிகட் கன்ன மீந்தந்தகன் பக்கற் சென்று
விதியவன் வரையப் பட்டு விளங்கிழை னிவனே யென்றும்
அதிபனு முன்ஐன் மத்தில் வன்னிய குலமு தித்தோன்
நதிகுல முதிக்கும் வண்ணம் நவிலுவீர் முனியே நீர்தாம்.

29. பரதேசிகளுக்கு ஜாதகருடைய தகப்பனுர் சாப்பாடு போட்டு இறந்து எமனிடத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலிபிபுடன் எழுதப்பட்டு இவர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகின்றேரும். இவர் முன் ஜன்மத்தில் வன்னியர் குலத்தில் பிறந்திருந்தும் இந்த ஜன்மத்தில் நதிகுலம் என்ற கங்கை குலத்தில் பிறந்ததற்குக் காரணத்தை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்டார்.

ஜாதகரின் தகப்பனர் கர்மம்

30. அறமதி லிச்சை யுண்டா
யரன்தொண்டு புரிந்த புண்ணியம்
மருவினன் கங்கை சேயா
யாறெட்டு மூன்ரு மாண்டில்
பெருகிய கன்னி மாதம்
பேசுவோர்ந் தந்தை கண்டம்
அருணன்தன் தசையி லேதா
னந்தகன் புசிப்பே யாகும்.

30. ஜாதகருடைய தகப்பனுர் தருமஞ் செய்வதில் ஆசையுடைய வராகிச் சிவபெருமானுக்கு வேலே செய்து அவரைத் தொழுது வந்த புண்ணியத்தினுலே இந்த ஜன்மத்தில் வேளாளர் குலத்தில் பிறந்திருக்கின்ருர் ஜாதகருக்கு ஐம்பத் தோராவது வயதில் கன்னிமாதமாகிய புரட்டாசி மாதத்தில் இவருடைய தகப்பனுர் இறந்துபோய் விடுவார் என்று சொல்லுகின்ரேரும். அருணன் என்ற (இங்கு) புதமகாதசையில் அந்தகன் என்ற சனிபுத்தி அக்காலத்தில் நடக்கும். (அருணன் என்பது சூரியனுக்கும் புதனுக்கும் பொதுவான பெயராகும். இங்கு புதன் என்பது தான் பொருந்தும்.)

குறிப்பு:—பிதிரு மாரக விஷயம்:—ஜாதகருக்கு வயது வருஷம் 50-0-0 முதல் வயது வருஷம் 51-0-0 முடியும் வரையிலும் புத தசையில் சனி புக்தியும் கேது தசையில் கேது புக்தியும் நடக்கின்றன. ஆனல் ஐம்பத்தோராவது வயதில் புரட்டாசி மாதத்தில் சனி புக்தி தான் நடக்கின்றது. ஜாதகருடைய பிதிருலக்கினம் சிம்மத்திற்கு ஒன்பதாவது பாவமாகிய மேஷமாகும். இந்த மேஷ லக்கினத்திற்குப் பராசரரேஹாரை ஜாதகசந்திரிகை நாற்பத்துமூன்ருவது நாற்பத்து நான்காவது சுலோகங்களின் பிரகாரம் புதன், சனி சுக்கிரன் இவர்கள் மாரகாதிபதிகளாகின்ருர்கள். புதன் சனியினுடைய நட்சத்திரகாலா

கிய பூசநட்சத்திரத்தின் மூன்றுங்காலில் இருக்கின்றார். இந்தச் சனி மாரகாதிபதியாகி மேஷலக்கினத்தைப் பார்க்கின்றார். மேலும் புதன் ஆறுக்குடையவராகிச் சனியாலும் பார்க்கப்பட்டிருக்கிறார். ஆகையால் புதன் சனியினுடைய பலனையும் கொடுக்க அமைப்பு உள்ளவர். குமார சாமியம் மகாதசைப் பலப் படலம் நான்காவது பாடல் பிரகாரம் ஆறுக் குடைய புதன் மாரகராகின்றார். இக்காரணங்களால் புதன் தனது தசை யில் பிதாவுக்கு மாரகஞ் செய்யும் அமைப்பு உடையவராகிறார். சனி மேற்சொல்லிய சனியைப்பற்றிய நாரணங்களால் தன் புத்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராகின்றார்.

ஜாதகரின் தகப்பனருடைய மறு ஜன்மம்

31. மறுஜன்மத் தில்லை தன்னில் மறைக்குல முதிப்பா னகுந்
திருமக னிச்சென் மத்திற் செய்தபுண் ணியங்க ளென்ன
பெருநதி தலங்கட் சென்றும் பலமில்லார்க் குதவி யாயும்
வருவதால் மறைக்கு லத்தில் மருவுவா னிந்தப் பாலன்.

31. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய மறு ஜன்மத்தில் தில்லை என்ற சிதம்பர க்ஷேத்திரத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பவராவர். இவர் இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணிய காரியங்களைச் செய்திருக்கின்றார் என்று கேட்கவே வசிஷ்டர் சொல்லு கின்றார். இந்தத் தகப்பனர் பெரிய மகாநதிகளையுடைய புண்ணிய க்ஷேம்திரங்களுக்குப் போயும், தேகபலம் பணபலம் இல்லாதவர்களுக்கு உபகாரஞ்செய்து கொண்டும் வாழ்வதால் தன்னுடைய மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பார்.

ஜாதகருடைய முன் ஜன்மம்

32. ஜாதகன் பூர்வந் தன்னைச் சாற்றுவோ மருணை யுத்திரம்
நீதியாய்ப் பேரூர் தன்னில் நேர்ந்தனன் வைசியச்
[சேயாய்ப்
பாதக மனங்க னின்றிப் பஞ்சைமே லிரக்க மாகி
மேதினிற் செட்டுச் செய்து விருந்தினர்ப் பிரிய ஞகி ;

32. ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றி இனிமேல் சொல்லு கின்றோம். இவர் அருணை என்ற திருவண்ணாமலை திவ்ய க்ஷேத்திரத் திற்கு வடக்கிலுள்ள ஒரு பெரிய கிராமத்தில் நியாயமாக ஒரு வைசிய ருடைய குலத்தில் ஆணாகப் பிறந்தார். இவர் முன் ஜன்மத்தில் கெடு தியான மனத்தையுடையவராகவில்லாமல் ஏழைகளின் மேல் இரக்க மும் தயாள குணமுமுடையவராகி இந்தப் பூமியில் வியாபாரஞ் செய்து கொண்டு விருந்தாளிகளிடத்தில் பிரியத்துடனும் ஆசையுடனும் இருந்து பிறகு ;

ஜாதகருடைய யோகபாவம் முதலியன

33. காலன்தன் னுடைந்து
கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமாங் கங்கை சேயாய்
ஜனிப்பனு மிந்தப் பாலன்
சாலவே யிவன்தன்யோகஞ்
சாற்றுவோம் வறுமை காணுன்
ஞாலங்கள் விருத்தி செய்வன்
காட்டினிற் சல்லியங் கொள்ளான்.

33. ஜாதகர் எமபட்டணத்திற்குப் போய்ப் பிரம தேவனுல் பிரம லபியுடன் எழுதப்பட்டு நல்லொழுக்கமுள்ள ஒரு வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்தார். இனிமேல் ஜாதகருடைய யோகத் தைப் பற்றிச் சொல்லுகின்றோம், இவர் தரித்திரத்தையுங் கஷ்டங் களையும் அநுபவிக்கமாட்டார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான் யங்களை உண்டு பண்ணி விருத்தியாக்குவார். பூமியில் இவர் கடன் படமாட்டார்.

34. சாமரை வேசி யோகஞ்
சாற்றுவோம் பலனை யாங்கள்
பூமிகள் சேர்ப்பா னுமே
புரப்பனுங் காவல் சோலை
காமனை விருப்பங் கொள்வன்
காலாள்கள் சேர்ப்பா னுகுந்
தீமையை யொருவர்க் கெண்ணுன்
சிறப்பான குடும்பி யாவன்.

34. ஜாதகருக்குச் சாமரை என்ற யோகமும் வேசி யோகமும் இருக்கின்றன என்று சொல்லுகின்றோம். இவைகளின் பலாபலன் களைச் சொல்லுகின்றோம். ஜாதகர் நிலங்களைச் சேர்த்துவைப்பார், காவலாளர்களையும் சோலைகளையுந் தோப்புக்களையும் நிலையாக உடைய வராவர். இவர் மன்மதனிடத்தில் விசுவாசமாக விருப்பார், அஃதாவது ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையையுடையவராவர். இவர் கால்நடை வேலைக்காரர்களைச் சேர்த்து வைத்திருப்பவராவார். இவர் எவருக்குங் கெடுத்தியைச் செய்ய நினைக்க மாட்டார். இவர் மேன்மை யான வளமான குடும்பஸ்தராகவிருப்பார்.

குறிப்பு :—சாமரை யோக விஷயம் :—சாமரையோக விஷயமாய் ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றுமுப்பத்தாருவது சுலோகம், பலதீபிகை ஆருவது அத்தியாயம் நாற்பதாவது நாற்பத்

தோராவது சுலோகங்கள், ஜாதகசிந்தாமணி இரண்டாயிரத்து இருபத் தோராவது பாடல் முதல் இரண்டாயிரத்து முப்பத்தோராவது பாடல் வரையிலு முள்ள பாடல்கள் ஆகிய இவைகளைப் பார்க்கவும். குரு ஏழாவது பாவத்திலும் சுக்கிரன் பத்தாவது பாவத்திலும் இருப் பதால் ஜாதக பாரிஜாதகம் ஏழாவது அத்தியாயம் நூற்று முப்பத்தாருவது பாடல் பிரகாரம் இந்த ஜாதகத்தில் சாமரை யோகம் ஏற்படுகின்றது ஜாதக சிந்தாமணி இரண்டாயிரத்து இருபத்து நான்காவது பாடல் பிரகாரமும் சாமரை யோகம் ஏற்படுகின்றது. இந்தச் சாமரை யோகபலன்களைப் பற்றி ஜாதக பாரிஜாதம் நூற்று முப்பத்தேழாவது சுலோகத்தையும் ஜாதக சிந்தாமணி இரண்டா யிரத்து இருபத்து நான்காவது பாடலையும் பார்க்கவும்.

வேசி யோக விஷயம் :—வேசி யோகத்தைப்பற்றித் தமிழ் ஜாதக அலங்காரம் இருநூற்றெழுபத்தேழாவது பாடல் மதராஸ் கவர்ன் மெண்டு அச்சிட்ட ஜாதக சாரதீபா ஐம்பத்தோராவது அத்தியாயம் நூற்றிருபத்தோராவது சுலோகம், ஜாதக பாரிஜாதப் ஏழாவது அத்தி யாயம் நூற்றிருபத்தோராவது சுலோகம், பலதீபிகை ஆறுவது அத்தி யாயம் எட்டாவது சுலோகம், ஜாதக சிந்தாமணி இரண்டாயிரத்து நாற் பத்தொன்பதாவது ஐம்பதாவது பாடல்களையும் பார்க்கவும். இந்த ஜாதகத்தில் சூரியனுக்குப் பன்னிரண்டில் சுக்கிரன் இருப்பதால் வேசி யோகம் ஏற்பட்டிருக்கின்றது. சூரியனுக்கு இரண்டில் புதன் இருப் பதும் வாசி யோகமாகும். (சில கிரந்தங்களில் வேசி யோகத்தையும் வாசி யோகத்தையும் ஒன்றிற்கொன்றை மாற்றியும் சொல்லியிருக் கின்றதையுங் கவனிக்கவும்)

35. இருபது நாலாண் டுக்கு
எரிவன்தந்தை தூணைவர் வேறும்
உரைக்கிறேறும் பாகம் நான்கா
யுடன்வந்தோன் ஞற்பா னைந்தில்
திருகாக வேறுய்ச் செல்வன்
தந்தையின் தூணைவ ஞஸ்தி
மருவிடும் ஒன்று யென்றேறும்
விடையுநாள் நாற்பா ஞலாய்.

35. ஜாதகருக்கு இருபத்து நான்கு வயதிற்குள் இவருடைய தகப்பனரின் சகோதரர்கள் நான்கு பாகமாகச் சொத்தைப் பங்கிட்டுக் கொண்டு பிரிந்து வேறு குடும்பஸ்தர்களாகப் பொய் விடுவார்கள். இவருக்கு நாற்பத்தைந்தாவது வயதில் இவருடைய ஒரு சகோ தரன் வஞ்சனையுடன் பிரிந்து வேறு குடும்பியாகப் போய்விடு வார். இவருடைய தகப்பனருடைய சகோதரர்களில் ஒருவருடைய

ஆஸ்தி இவருக்கு நாற்பத்துநான்காவது வயதில் வைகாசி மாதத்தில் வந்து சேரும் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—ஜாதகருடைய தகப்பனருடன் கூடப் பிறந்த சகோதரர்கள் மூவர் என்று நான்காவது பாடலில் சொல்லியிருப்பதால் தகப்பனாரைச் சேர்த்து நான்கு பாகமாகச் சொத்து பங்கிடப்படும் என்று அர்த்தங்கொள்ள வேண்டுமே தவிர ஜாதகருடைய சொத்தை ஜாதகரும் இவருடைய ஒரு சகோதரரும் நான்காகப் பங்கிட்டுக் கொள்ளுவார்கள் என்று அர்த்தங்கொள்ளக்கூடாது.

ஜாதகருடைய மரணமும் மறுஜன்மமும்

36. பின்பாகம் விபர மாகப் பேசுவோந் தாயே யாங்கள்
மன்னவன் மரண கால மறுபது யேழு வாண்டில்
துன்னிய மகர மாதந் தேய்பிறைத் தசமி தன்னில்
இன்னவ னுடல மேகு மியம்புவோம் பின்ஜன் மத்தை.

36. மற்ற விஷயங்களைப் பின் பாகத்தில் விவரமாகச் நாங்கள் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! ஜாதகருடைய மரணம் இவருக்கு அறுபத்தேழாவது வயதில் நேரும். மகரமாதம் என்ற தைமாதத்தில் தேய்பிறையில் தசமிதிதியில் இவருடைய தேகம் மனறந்துபோய் விடும். இவருடைய மறு ஜன்மத்தை இனி மேல் சொல்லுகின்றோம்.

குறிப்பு :—**ஜாதகருடைய மரண விஷயம்** :—ஜாதகருக்கு வயது வருஷம் 66-0-0 முதல் வருஷம் 67-0-0 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் இராகு புத்தி நடக்கின்றது. ஜாதகருடைய ஜன்ம லக்கினமாகிய சிம்மலக்கினத்திற்குப் பாசரஹோரை ஜாதகசந்திரிகை ஐம்பத்திரண்டாவது சுலோகம் ஆகிய இவைகளின் பிரகாரம் புதனும் சுக்கிரனும் மாரகராகின்றார்கள். சுக்கிரன் மாரகஸ்தானமாகிய மூன்றுவது பாவத்திற்குடையவராகிப் பத்தாவது பாவத்தில் இருக்கின்றார். துய்ய கேரளம் எட்டாம் பாவம் பதினென்காவது பாடல், கார்க்கேயர் ஜோதிடம் அறுநூற்றெழுபத்துநான்காவது பாடல் பிரகாரம் சுக்கிரன் தன்னுடைய தசையில் மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். இராகு லக்கினத்தில் சூரியனுடைய வீட்டில் இருந்துகொண்டு எட்டிற்குடைய குருவால் பார்க்கப்பட்டு இருக்கின்றார். ஆகையால் இவர் ஜாதகசந்திரிகை பன்னிரண்டாவது சுலோகப் பிரகாரம் சூரியனுடைய பலனையும் கொடுக்க அதிகாரமுடையவராகின்றார். மேலும் சூரியன் லக்கினாதிபதியாக விருக்கின்றார். துய்யகேரளம் எட்டாம் பாவம் பதினென்காவது பாடல், கார்க்கேயர் நாடி அறுநூற்றெழுபத்து நான்சாவது பாடல் ஆகிய இவைகளின் பிரகாரம் சூரியனும் குருவும் மாரகராகின்றார்கள். இவாகளுடைய பலனைக் கொடுக்கவேண்டிய ராகு

தன் புக்தியில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின் ருர். மேலும் இந்த ஜாதகத்தில் சாமரையோகம் இருக்கின்றதென்று முப்பத்து நான்காவது பாடலில் சொல்லியிருக்கின்றது. சாமரை யோக ஜாகத்திற்கு வயது எழுபத்தொன்று வரையிலுமுண்டு என்று ஜாதக பாரிஜாதம். ஏழாவது அத்தியாயம் நூற்றுமுப்பத்தேழாவது சுலோகத்திலும், ஜாதக சிந்தாமணி இரண்டாயிரத்து இருபத்து நான்காவது பாடலிலும் கண்டிருப்பதையும் கவனிக்கவும். இங்கு ஜாதகருக்கு வயது எழுபதிற்கு நெருக்கமாகச் சொல்லியிருக்கிறது.

37. பிருதிவியிற் பிரம்ம சேயாய்ப் பிறப்பனு மென்று [சொன்னேங்
திருமக னிச்சென் மத்திற் தேவிகள் மோக மாயுங்
குருவுப தேசந் தப்பிக் குதர்க்கங்கள் சிலவே செய்து
வருவதால் மறைக் குலத்தில் வருகுங்கா ரணங்க [ளெவ்வா று.

37. ஜாதகர் பிருதிவிஸ்தலம் என்ற காஞ்சிமாநகரத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பாரென்று சொல்லுகின்றோம். இவ்விதமாக வசிஷ்டர் சொல்லவே ஜாதகர் இந்த ஜன்மத்தில் ஸ்திரீ களின் மேல் காம ஆசையை யுடையவராயும் தன்னுடைய குருவி னுடைய உபதேசத்தை விட்டுவிட்டு அதற்கு மாருக முறைகெட்ட தர்க்கம் என்ன வாதங்களைச் செய்து வந்துகொண்டிருப்பவராயுமிருந்து பிராமணர் குலத்திற் பிறப்பதற்குக் காரணங்கள் என்னவென்று கேட்டார்.

38. அறுமுகன் பத்தி கொண்டு
மண்டினேர்த் தம்மைக் காத்தும்
மறையவர்க் குதவி செய்து
மாபத்தைக் காத்த லாலும்
மறுஜன்மம் பிரம்ம சேயாய்
வருவனு மென்று சொல்வோம்
பெருவயி ரூனைப் பெற்ற
புண்ணிய சாலி கேளாய்.

38. ஜாதகர், அறுமுகன் என்ற முருகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகித் தன்னிடத்திற்கு வந்து சேர்ந்தவர் களைக் காப்பாற்றியும் பிராமணர்களுக்கு உபகாரஞ் செய்து கொண்டும் அவர்களுடைய சங்கடங்களையும் கஷ்டங்களையும் நிவிர்த்தி செய்த தாலும் தன்னுடைய பின்ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறப்பா ரென்று சொல்லுகின்றோம். பெரியவயிற்றையுடைய விநாயக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜனன காலத்தின் தசை விவரமும் பலனும்

39. ஜனித்திடுங் காலந் தன்னிற் செம்பொன்னின் தசையி
[ருப்புக்
குனித்திந் மீரே ழாண்டுங் கூறுவோம் பதினோர் திங்கள்
வினவருஞ் சாதகர்க்கு மேவிடுந் துணபின் விருத்தி
பிணையாகுங் காலி தானும் பேதையே கேட்டிடாயே.

39. ஜாதகர் பிறந்தகாலத்தில் செம்பொன் என்ற குருவினுடைய தசை இருப்பு கணிதப் பிரகாரம் பதினைந்து வருஷங்களும் பதினொன்று மாதங்களும் ஆகும். இந்தத் தசை காலத்தில் ஜாதகருக்குக் கெடுதி களும் நோய்களும் வந்து நேரிடும். இவருக்குப் பின்னால் சகோதரர்கள் பிறந்து விருத்தியடைவார்கள். பசுக்களுக்குக் கெடுதி ஏற்படும் பார்வதியம்மையே! கேட்பீராக.

40. தந்தையைப் பிணியு மாகுந் தன்பந்து சூத மெய்தும்
முந்தின குடும்ப மோங்கும் விருத்தியாம் பூமி தானும்
பிந்திய பாகந் தன்னிற் பேசுவோம் விபர மாக
இந்திர னிரைஞ்சு மாதே இயம்பின மொழி குன்றுவே.

40. ஜாதகருடைய தாயாருக்கும் தகப்பனாருக்கும் நோய்கள் வரும். இவருடைய பந்துக்களில் சூதகம் வந்து நேரிடும். முன்னிருந்த குடும்பம் ஓங்கி வளரும். நிலங்களும் விருத்தியாகி நல்ல பலனைத்தரும். மற்ற விஷயங்களை அடுத்த பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்றோம். இந்திரன் வணங்கிப் பூஜை செய்யும் பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 91

ஜன்ன கால கிரக நிலை

1. சிங்கலக் கினம தாகச் சந்திரன் குருவுந் தங்க
[1]மங்கல னிரண்டி லாக [2]மால்கேது நாலி லாகச்
செங்[3]கதிர் சனியு மைந்தில் சுக்கிர னுறி லாகப்
பொங்கிய ராகு பத்தில் புகலுவீர் பலனை யென்று ;

1. ஜன்மலக்கினம் சிம்மமாகி அதில் சந்திரனும் குருவும், இரண்டில் அங்காரகனும், நான்கில் புதனும் கேதுவும் ஐந்தில் சூரியனும் சனியும் ஆறில் சுக்கிரனும் பத்தில் ராகுவும் இருந்தால் பலா பலன்களைச் சொல்லுவீர் என்று ;

கிரகநிலை

		ராகு	
	இராசி சக்கரம்		
சுக்கிரன்			லக்கினம் சந்திரன் குரு
சூரியன் சனி	புதன் கேது		அங்காரகன்

மகம் 1-ஆம் பாதம். கேது தசை வரு 7-0-0.

குறிப்பு : இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சந்திரனும், ரிஷபத்தில் சூரியனும் சுக்கிரனும், மிதுனத்தில் அங்காரகனும், கடகத்தில் குருவும், கன்னியில் கேதுவும், விருச்சிகத்தில் சனியும், தனுசில் புதனும், மீனத்தில் இராகுவும் ஆகும்.

ஜாதகன் பிறந்த நாட்டுச் சிறப்பு

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்றார்
மேதினி லாண்பால் ஜன்மம் விளம்புவோ மில்லந் தானும்
நீதியாய்த் தென்பால் லோக்க மிரணியக் கடவுள் உத்தரஞ்
சாதிப்போஞ் சிறுவ ராகுந் தங்கிடு மூன்றுஞ் ஜன்மம்.

---

1. அங்காரகன். 2. புதன்.
3. சூரியன்.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது கௌசிக முனிவர் சொல்லுகின்றார். பூமியில் ஆண்குழந்தை பிறக்கும். இந்த ஜாதகர் பிறந்த வீட்டின் லக்ஷணத்தைச் சொல்லுகின்றோம். பிறந்த வீடு தெற்குத்திக்கைப் பார்த்தாற்போல விருக்கும். இரணியனைச் சம்மாரஞ் செய்த மகாவிஷ்ணுவின் கோயில் வடக்கில் இருக்கும். இவ்வடை யாளங்களையுடைய ஒரு சிறிய கிராமத்தில் மூன்றாவது குழந்தையாக

3. உதிப்பனு மிந்தப் பால னுரைக்கிறே மிவனின் யோகம்
மதிநுத லன்னை தந்தை வருந்துணை களத்திர புத்திரர்
சதியிலா முன்பின் ஜன்மஞ் சாற்றுவோ மிந்நூல்
[தன்னில்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

3. இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய யோகத்தைப் பற்றியும் சந்திரனைப்போல் அழகான முகத்தையுடைய தாயார், தகப்பனார், கூடப்பிறந்த சகோதரங்கள், மனைவி, சந்ததி ஆகிய இவர்களைப் பற்றியும், முன்ஜன்மம் மறுஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றியும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம். பரதேசிகளைக் காப்பாற்று கின்ற பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனாரின் சகோதரர்களின் விஷயம்

4. தந்தையுந் துணைவர் காணன்
தனியனுய் வாழ்வன் மாதே
சந்தக்கா ரணத்தி னுலே
யிவன்துணை தோஷஞ் சொன்னீர்
ஒன்பதா மிடத்தோ னிரண்டி
லுறுஞ்சனி பார்த்த தாலே
அன்னவன் தனிய னுவ
னறைகிறே மவன்கு ணத்தை.

4. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடன் கூடப்பிறந்த சகோதரர்கள் இல்லாதவராவர். இவர் ஒருவராக விருந்து வாழ்வார். பார்வதியம்மையே! இவருக்குச் சகோதர தோஷமுண்டு என்று எவ்விதமான காரணத்தினால் சொன்னீர் என்று கேட்கவே, கௌசிக முனிவர் பதில் சொல்லுகின்றார். ஒன்பதாவது பாவத்திற்குடைய வராகிய அங்காரகன் இரண்டாவது பாவத்தில் இருந்துகொண்டு சனியால் பார்க்கப்படுவதால் ஜாதகருடைய தகப்பனார் சகோதரர்கள் இல்லாமல் தனியாக விருந்து வாழ்வார். இவருடைய குணாதிசயங் களைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம்.

குறிப்பு : தகப்பனரின் சகோதரபாவ விஷயம் :—சிம்மத்திற்குப் பிதிரு ஸ்தானம் ஒன்பதாமிடமாகிய மேஷம் ஆகும். ஆகையால் பிதிரு லக்கினம் மேஷமாகும் இதற்கு இளைய சகோதர ஸ்தானம் மூன்றாவது பாவமாகிய மிதுனமாகும். இதைச் சூரியனும் சனியும் பார்ப்பது சகோதரதோஷமாகும். மூன்றிற்குடைய புதன் மேஷத்திற்கு எட்டிலும் மிதுனத்திற்கு ஆறிலும் கேதுவுடன இருப்பது தோஷமாகும். இளைய ஆண் சகோதரகாரகனுகிய புதன் மேஷத்திற்கு எட்டில் மறைந்திருப்பது தோஷமாகும். மூத்த சகோதர ஸ்தானம் மேஷத்திற்குப் பதினோராவது பாவமாகிய கும்பமாகும். இதற்குடைய சனி சூரியனுடன் இருந்துகொண்டு அஷ்டமாதிபதியாகிய அங்காரகனுல் பார்க்கப்படுவது மூத்த சகோதர தோஷமாகும். மேஷத்திற்குக் குரு விரயாதிபதியாகிச் சனியைப் பார்ப்பதும் தோஷமாகும். பொதுவாகச் சகோதரகாரகனுகிய அங்காரகன் மேஷத்திற்கு ஆறுவது பாவத்தில் பகை வீட்டில் மறைந்திருப்பதும் சகோதர தோஷமாகும். சகோதரகாரகனுகிய அங்காரகனைக் கேது பதினோராவது பார்வையுடன் பார்ப்பதும் சகோதர தோஷமாகும்.

தகப்பனரின் குணதிசயங்கள்

5. குணமது நல்ல தாகுங் குறிப்பினில் கொடுமை காணுங்
தணிவுள மனத்த னுகுஞ் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
மணமது யிஷ்டங் கொள்வன் மாந்துளிர் மேனி யாகுந்
துணிவுள மனத்த னுகுந் துன்பங்க ளெவர்க்கு
[மெண்ணுன்.

5. ஜாதகரின் தகப்பனருடைய குணம் நல்லதாக விருக்கும். ஆனுல் இவர் தோற்றத்தில் கெட்டவரைப்போலக் காணப்படுவார். இவர் குளிர்ந்த மனத்தை யுடையவராவர். இவருக்கு நாற்கால் ஜீவன்களாகிய கால் நடைகள் விருத்தியாகும். இவர் வாசனை வஸ்துக்களின் மேல் ஆசையுடையவராக விருப்பார். இவர் மாமரத்தின் துளிரின் நிறமாகிய ஒருவித சிவப்பான நிறத்தையுடையவராவர், தைரியமான மனத்தை உடையவராவர், யாருக்கும் கெடுதிகளைச் செய்ய நினைக்க மாட்டார்.

6. பூமியும் பரிபாலிப்பன் புதுயில்லஞ் சொய்வா னுகும்
தாமத குணத்த னுகுஞ் சாதமுங் குறை வுறுதான்
வாமனர் நாமங் கொண்டோன் வருவோர்க்குத் தாக
[மீவன்
காமிகள் போலே வார்த்தை கழறுவான் கல்வி யற்பம்.

6. ஜாதகருடைய தகப்பனர் நிலங்களை வைத்துக்கொண்டு ஆளுவார், காப்பாற்றுவார், புதிய வீட்டைக் கட்டுவார். நிதானமான குண

சாந்தமானதுமான குணத்தை உடையவராவர். ஏப்போதும் சாப் பாட்டிற்குக் கஷ்டப்படமாட்டார். இவர் சிவபெருமானுடைய பெயரை உடையவராவர், தன்னிடம வருபவர்களுக்குத் தாகவிடாய் தீர நீர்மோர் கொடுப்பார். இவர் காம ஆசையை அதிகமாக வுடையவர் களைப்போல வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் சிறிதே வித்தையை யுடையவராவர்.

7. கரமதில் மாலின் ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு
உறன்முறை மதிக்க வாழ்வன் உகமையாய் வார்த்தை
[கூறுவன்
பறைபள்ளு முடைய னவன் பத்தினிக் கிஷ்ட னவன்
விரைவினில் நடக்க வல்லன் வீண்பழி யேற்கா னவன்.

7. ஜாதகரின் தகப்பனருடைய உள்ளங்கையில் விஷ்ணுரேகை என்ற ஒருவித ரேகையும், கஞ்சரேகை என்ற தாமரை ரேகையும் இருக் கின்றன. தகப்பனர் தன்னுடைய பந்துக்கள் இவரை மதிக்கத்தக்க அந்தஸ்திலிருந்து வாழ்வார். உபமானங்களுடனும் உபமேயங்களுட னும் அழகாக வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் பறை பள்ளு என்ற வெலையாட்களை உடையவராவர், தனனுடைய மனைவிக்குப் பிரியமுள்ளவராக விருப்பார். இவர் சீக்கிரமாக நடக்குஞ் சாமர்த்திய முள்ளவர், வீணுகப் பழிபாவங்களை அடையமாட்டார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

8. சொல்லிய குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
புல்குவோ மிவன்கு ணத்தைப்
பொறுமையும் பெருமை யேற்பன்
அல்ல லெப்போதுங் காண
னரவுபோல் கோபங் கொஞ்சஞ்
சல்லியஞ் சேர்க்கா னுகுந்
தக்கோர்கள் நேசங் கொள்வன்.

8. இதுவரையிலுஞ் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இனிமேல் இவருடைய குண திசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் பொறுமையும் சாந்த மும் உடையவராவர், கீர்த்தியும் புகழும் உடையவராவர். இவர் ஒரு பொழுதும் கஷ்டங்களை அடையமாட்டார். இவர் பாம்பைப்போலச் சிறிது கோபத்தை யுடையவராவர். இவர் கடன் வாங்கமாட்டார், பெரியோர்களுடைய சிநேகத்தை யடைவார்.

9. இருசிவப் புடைய னுவ
னெதிரிக்கு விணக்கஞ் சொல்லான்
அறிவுளான் சமமாங் கல்வி
அடாவடி தன்னிற் செல்லான்
தரையதைச் சேர்ப்பவ னுவன்
தந்தைக்குத் தாழ் வுரு தான்
குருவுப தேசங் கொள்ளான்
குத்திரம் பேசா னுவன்.

9. ஜாதகர் இரண்டு விதமான நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தையுடையவராவர். தன்னுடைய எதிரிக்கு அடங்கி பதில் சொல்லாதவராக விருப்பார். இவர் புத்தியை யுடையவராவர், நடுத்தரமான படிப்புள்ளவராவர், மூரட்டுத்தனமாகவும் அநியாயமாகவும் நடந்துகொள்ளமாட்டார். இவர் நிலங்களைச் சேகரித்து வைப்பார், தன்னுடைய தகப்பனுருடைய அந்தஸ்திற்குக் குறைந்த அந்தஸ்தை அடையமாட்டார். இவர் ஒரு குருவினிடத்தில் உபதேசத்தைப் பெறமாட்டார், பொய் சுடுசொல் குரூரமான வார்த்தை இவைகளைச் சொல்லமாட்டார்.

10. சொல்லதைக் காப்பா னுவன் சுந்தர முடைய னுவன்
வல்லியர் மோக னுவன் மாடுகள் விருத்தி யுள்ளான்
தொல்லையுஞ் சுகமு மேற்பன் துர்வழக் கதனில்
[செல்லான்
நல்லவ னுகி வாழ்வன் நாதனுர் பத்தி பூண்பன்.

10. ஜாதகர் தான் சொல்லுகின்ற வார்த்தைகள் தவறிப்போகாமல் இருக்கும்படியாகக் காப்பாற்றிக் கொள்ளுவார், நடந்துகொள்ளுவார், அழகுடையவராகவிருப்பார். இவரை ஸ்திரீகள் பார்த்தால் காம ஆசையை யடையும்படியான நிலைமையில் இவர் இருப்பார். இவருக்குப் பசு மாடுகளும் கால் நடைகளும் விருத்தியாகும். இவர் கஷ்டத்தையும் சுகத்தையும் அடைவார், கெட்ட வியாஜ்யங்களில் தலையிட மாட்டார். இவர் எல்லோருக்கும் நல்லவராக விருந்து காலத்தைக் கழிப்பார், சிவபெருமானிடத்தில் அன்பும் ஆசையும் உடையவராக விருப்பார்.

11. பலரையும் நேசஞ் செய்வன்
பாருக விருவூர் சேர்ப்பன்
விலைமாதர் மோகங் கொள்ளான்
வெஞ்சினம் வெளிக்காட் டாதான்

கலகத்தைக் கூரு ஞகுங்
கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன்
புலவன்போல் ஊக வாணும்
புகழ்ந்தோரை யாத ரிப்பன்.

11. ஜாதகர் பலரிடத்தில் சிநேகஞ் செய்து கொள்ளுவார். இவர் இரண்டு கிராமங்களில் நிலங்களையும் மனைகளையும் சேர்த்து வைப்பார். விலைமாதர் என்ற தாசிகளின்மேல் இவர் காம ஆசையை உடையவராக விருக்கமாட்டார், தன்னுடைய கடுங்கோபத்தைப் பிறர் தெரிந்து கொள்ளும்படியாக வெளியே காட்டிக் கொள்ளமாட்டார். இவர் கலகங்களை உண்டுபண்ணக் கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார், கடன் வாங்குவார், ஆனால் அதனைத் திருப்பிக் கொடுத்து விடுவார். இவர் பண்டிதர்களைப்போல நுட்பமான அறிவை யுடையவராவர், தன்னைப் புகழ்ந்து பேசுகிறவர்களைக் காப்பாற்றுவார்.

ஜாதகருடைய சகோதர விஷயம் (சகோதர பாவம்)

12. தன்துணை யாண்பா லொன்று
சத்தியு மவ்வாறு தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம்
பேசுவோ மாண்பால் சேதி
சொன்னசொல் சுருக்க மாகுந்
துறவோர்கள் நேசங் கொள்ளான்
அன்னியர்க் கிணக்கங் கூரான்
ஆவுகள் பணையோர் விருத்தி.

12. ஜாதகருக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். மற்ற சகோதர்களெல்லாம் இறந்து விடுவார்கள். ஜாதகரின் சகோதரனுடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகிறோம். இந்தச் சகோதரர் சொல்லுகிற வார்த்தைகள் சுருக்கமாக இருக்கும். இவர் துறவிகளாகிய பரதேசிகளிடத்தில் சிநேகஞ் செய்துகொள்ளமாட்டார். இவர் பிறருக்கு அடங்கி வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவருக்குப் பசு மாடுகளும் நிலங் களும், விவசாயஞ் செய்ய உதவுகின்ற ஏர்களும் விருத்தியாகும்.

13. பயிர்த்தொழில் புரிவா ஞகும்
பஞ்சைபோல் உணவு கொள்வன்
அயலார்க்கு வுதவி செய்வன்
அவனியில் வறுமை காணுன்

ஜயஞ்செய்வ னெடுத்த வேலை
சேயிழை யொன்றே தீர்க்கங்
கயவரை யுறவு கொள்வன்
கல்வியு மற்ப மாகும்.

13. ஜாதகருடைய சகோதரர் விவசாயத் தொழிலைச் செய்வார், ஏழையைப்போலச் சாப்பிடுவார். இவர் பிறருக்கு உபகாரத்தைச் செய்வார், எப்போதும் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டத்தையும் அடையமாட்டார். இவர் தான்செய்ய ஆரம்பித்த வேலைகளைப் பூர்த்தி செய்து முடிப்பார். இவருக்கு நீண்ட ஆயுளையுடைய மனைவி ஒருத்தியே யாகும், அஃதாவது இவருக்கு மனைவி ஒருத்தியே, அவளும் தீர்க்க ஆயுளையுடையவளாக விருப்பாள். இவர் கீழ்மக்களிடத்தில் சிநேகஞ்செய்து கொள்ளுவார். இவருக்கு வித்தை கொஞ்சமாக விருக்கும்.

14. சுதர்களு மாண்பால் மூன்று தோகைய ரிருவர் தீர்க்கம்
பதராகு மற்ற வெல்லாம் பாலக ளென்ருய் வாழ்வன்
வதிபதி சேதி தன்னை வரைகிரே மந்தி யத்தில்
துதிசெய்தோர் தம்மைக் காக்குந் துறவியே கேட்டி
[டாயே.

14. ஜாதகருடைய சகோதரருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுள உடைய்வர்களாக விருப்பார்கள். மற்றக் குழந்தைகளெல்லாம் இறந்துவிடும். இவர் தன்னுடைய சகோதரருடன் கூடியிருந்து ஒற்றுமையாக வாழ்வார். இவருடைய மற்ற விஷயங்களைக் கடைசியில் சொல்லுகின்றோம். உம்மைப்போற்றித் தொழுகின்றவர்களைக் காப்பாற்றுகின்ற பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணங்களும்

15. மங்கள மிருபா ளென்றில் மருவிடுந் தென்மேல் பாரி
அங்கவள் குணத்தைச் சொல்வே னரிமனை யொப்ப
[தாவள்
திங்கள்போல் வதன மொக்குந் தேரின புத்தி யேற்பள்
எங்கள்போல் அதிதிக் கன்ன மீவளாம் நற்கு ணத்தள்.

15. ஜாதகருக்கு இருபத்தோராவது வயதில் விவாகம் நடக்கும். இவருக்கு மனைவி தென்மேற்குத் திக்கிலிருந்து வருவாள். இவளுடைய குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மகாவிஷ்ணுவினுடைய மனைவியாகிய லக்ஷ்மிக்குச் சமானமானவளாக விருப்பாள். இவளுடைய முகம் சந்திரனைப்போல அழகாக விருக்கும்.

இவள் மேன்மையான புத்தியை யுடையவளாக விருப்பாள். எங்களோப்போன்ற முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாடு போடுவாள். இவள் நல்ல குணங்களையுடையவளாவாள்.

குறிப்பு : விவாக கால விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 20-0-0 முதல் வயது வருஷம் 21-0-0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் சனி புக்தி நடக்கின்றது. சிம்ம லக்கினத்திற்குக் களத்திர பாவம் ஏழாவது வீடாகிய கும்பம் ஆகும். களத்திரகாரகனுகிய சுக்கிரன் பத்தாவது பாவத்திற்கு உடையவராகி ஏழாவது பாவாதிபதியாகிய சனியினுடைய வீட்டில் இருக்கின்றார். போககாரகனுகிய ராகுவும் பத்தாவது பாவத்தில் இருக்கின்றார். ஆகையால் ஜாதக பாரிஜாதம் பதினன்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகம் பிரகாரம் பத்தாவது பாவாதிபதியாகிய சுக்கிரன் தன்னுடைய, தசையில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்கும் அமைப்பு உடையவராக விருக்கின்றார். மேலும் சனி களத்திர ஸ்தானாதிபதியாகி லக்கினாதிபதியாகிய சூரியனுடன் கூடிக் களத்திரபாவத்தைப் பார்க்கின்றார்; குடும்பஸ்தானத்தையும் பார்க்கின்றார். அங்காரகன் ஒன்பதிற்குடையவராகி மனைவி சம்மந்தமான குடும்பஸ்தானத்திலிருந்து கொண்டு களத்திர சம்மந்தமான சனியைப் பார்க்கின்றார். ஆகையால் ஜாதகப்பாரிஜாதம் பதினன்காவது அத்தியாயம் இருபத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் சனிக்குத் தன் புக்தியில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்க அமைப்பு இருக்கின்றது.

16. பால்பாக்கிய முடையளாகும் பசித்தோர்க்குத் தாக மீவள்
சீலியாம் விரத மேற்பள் செய்ந்நன்றி மறவாளாவள்
காலத்தை யறிந் துரைப்பள் கண்முகம் வசிய முண்டு
நீலியும் நடக்கை நன்மை நேருமே பித்த பாதை.

16. ஜாதகருடைய மனைவி பால் பாக்கிய சம்பத்தை யுடையவளாக விருப்பாள், பசியினல் கஷ்டப்படுபவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுபவளாவாள், நல்ல ஒழுக்கமும் சீலமும் உடையவளாக விருப்பாள், விரதங்களை அநுசரிப்பவளாக விருப்பாள், தனக்குப் பிறர் செய்த உதவியை மறக்காதவளாக விருப்பாள். இவள் கால அநுபவங்களை நன்றாகத் தெரிந்துகொண்டு அவைகளுக்குத் தகுந்தபடி வார்த்தைகளைச் சொல்லுவாள். இவளுடைய கண்களும் முகமும் பிறரை வசியப்படுத்தும்படியாக அழகாக விருக்கும். இவள் நல்ல நடவடிக்கையை யுடையவளாவாள். இவளுக்குப் பித்த ரோகத்தினல் துன்பம் உண்டாகும்.

ஜாதகருடைய மனைவிக்குச் சந்ததிகள் (புத்திரபாவம்)

17. கன்னிகை வயது தீர்க்கங் கழறுவோம் புத்திர பாவம்
மன்னன்போ லாண்பா லிரண்டு மங்கையு மவ்வாறு
[தீர்க்கந்
தென்முனி புகலு கின்றார் ஜனிக்காவே ஜனிக்கிற் தீதாம்
என்னகா ரணத்தி னலே யியம்பினீ ரந்தச் சங்கை.

17. ஜாதகருடைய மனைவி தீர்க்காயுள உடையவளாவள், இனி மேல் இவளுடைய சந்ததிகளைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவளுக்கு அரசனைப்போல் இரண்டு ஆண்குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுள உடையவர்களாக விருப்பார்கள். இவ்விதமாகக் கௌசிக முனிவர் சொல்லவே இதைத் தடுத்துத் தென்முனியாகிய அகஸ்திய மகாமுனிவர் சொல்லுகின்றார். இவளுக்குக் குழந்தைகள் உண்டாகா. ஒரு சமயம் குழந்தைகள் பிறந்தாலும் அவைகளுக்கு ஆபத்து நேரும். அவைகள் இறந்துவிடும் என்று அகஸ்தியர் சொன்னார். இதன்மேல் எவ்விதகாரணத்தினல் இவ்விதமாகச் சொல்லுகின்றீர்? என்று அகஸ்தியரைக் கேட்டார்.

18. கதிரவன் சனியு மைந்திற்
கலந்தால் சொன்னேம் யாங்கள்
இதுவன்றிப் பூர்வந் தன்னில்
- இவன்சில கொடுமை செய்தான்
அதனலே சிலவே தோஷம்
அணுகிற்றுப் பால னுக்குச்
சதியென்ன செய்தா னத்தைச்
சாற்றுவீர் முனியே நீர்தாம்.

18. கதிரவன் என்ற சூரியனும் சனியும் ஐந்தாவது பாவத்தில் சேர்ந்து இருப்பதால் நாங்கள் இவ்விதமாகச் சொன்னேம். இதுவுமன்றி ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் சில பாவங்களைச் செய்தார். அதனல் சில தோஷங்கள் இவருக்கு ஏற்பட்டிருக்கின்றன என்று அகஸ்தியர் சொல்லவே ஜாதகர் என்ன கெடுதிகளைச் செய்தார்? அவைகளை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்டார்.

குறிப்பு:—புத்திர தோஷ விஷயம்:—சூரியனும் சனியும் புத்திரஸ்தானமாகிய ஐந்தாவது பாவத்தில் இருப்பது மேற்கண்டபடி புத்திர தோஷமாகும். ஏழிற்குடையவரான சனி நைஸர்க்கிக, அஃதாவது இயற்கைப் பாவியாகி ஐந்தாவது பாவத்தில் இருப்பதால் தமிழ் ஜாதகாலங்காரம் ஐந்நூற்றுத் தொண்ணூற்றுருவது பாடலின் நான்காவது வரியாகிய

"பூணேழோன் பாவனையந்துற்றிடிற் புதல்வரில்லை"

என்ற வசனம் பிரகாரம் புத்திர தோஷமுண்டு. மேலும் புத்திர ஸ்தானாதிபதியாகிய குரு கேந்திரத்திலும் ஏழாமாதிபதியாகிய சனி கோணத்திலும் இருப்பதாலும் ஆருவது பாவாதிபத்தியம் சனிக்கே வந்திருப்பதாலும் ஜாதகாலங்காரம் அறுநூற்றிருபத் தெட்டாவது பாடலாகிய

"புத்திரனேழாமாதி பொருந்து கேந்திர கோணத்தில்
உற்றிடப் பலவானாகி யோங்கு மாறதிபன்ருனுஞ்
சித்தமாய்க் கூடினாலும் தரிசனைப் பார்வையாலும்
சுத்தமாய்ப் புதல்வரில்லை"

என்ற பாடல் பிரகாரம் புத்திரதோஷம் ஏற்பட்டிருக்கின்றது. மேலும் குரு அஷ்டமாதிபதியாகி ஐந்தாவது பாவத்தைப் பார்ப்பது புத்திர தோஷமாகும். ஐந்தாவது பாவத்திற்குடைய குரு புத்திர காரகனாகி ஐந்தாவது பாவத்தையே பார்ப்பதும் (அல்லது ஐந்தில் இருப்பதும்) பலதீபிகை இருபத்தைந்தாவது அத்தியாயம் இருபத் தாருவது சுலோகப்பிரகாரம் புத்திர தோஷமாகும். அங்காரகன் புத்திர ஸ்தானத்தைப் பார்ப்பதும் புத்திர தோஷமாகும். புத்திர சம்மந்தமான ஒன்பதாவது பாவத்தைக் குரு அஷ்டமாதிபத்தியம் பெற்றுப்பார்ப்பது புத்திரதோஷமாகும். இந்த ஒன்பதாவது பாவ அதிபதியாகிய அங்கார கனைச் சனி ஆறுக்குடையவராகிப் பார்ப்பதும் புத்திரதோஷமாகும். புத்திரகாரகராகிய குரு விரயாதிபதியும் பெண் கிரகமுமாகிய சந்திர னுடன் கூடி இருப்பதும் ஆண் சந்ததிகளுக்குத் தோஷமாகும். ஜன்ம லக்கினமும் சந்திர லக்கினமும் ஆகிய இவ்விரண்டு லக்கினங்களும் ஒன்றுகவே இருப்பதும் பிரதிகூலமான விஷயங்களில் அதிக பிரதி கூலமானதாகும். அனுகூலமான விஷயங்களில் அதிக அனு கூலமாகும். ஆகையால் இந்த ஜாதகத்தில் புத்திரதோஷம் அதிகமாக விருக்கின்றது.

ஜாதகருடைய முன் ஜன்மமும் தோஷங்களும்

19. முன்னவ னிருந்த ஜன்மம்
மொழிகேரும் விரிஞ்சி தன்னில்
துன்மதி செக்கான் வம்சந்
தோன்றியே சுகமுள் ளோனுய்ப்
பொன்பணி யுடைய னுகிப்
பெரிதான வணிபஞ் செய்தான்
அன்னவன் வாழுங் நாளி
லணுகின வினையை கேண்மோ.

19 ஜாதகருடைய முன் ஜன்மத்தைபுபற்றிச் சொல்லுகின்ரோம். இவர் விரிஞ்சிபுரத்தில் செக்காடுகிற செட்டியார் ஜாதியிற் பிறந்து சுகபோகங்களையுடையவராகியும் தனம் ஆபரணம் இவைகளையுடையவ ராகியும் பெரிய வியாபாரத்தைச் செய்து கொண்டும் வாழுகின்ற காலத் தில் இவருக்கு வந்து சம்பவித்த தோஷத்தைச் சொல்லுகின்ரோம். கேட்பீராக.

20. விதவையைப் போகஞ் செய்தான் மேவிற்றுக் கருவு
[தானு
மதஞ்செய்தான் பண் டிதத்தா லவ்விதம் மூன்று
[செய்தான்
அதுவொரு தோஷமாச்சு யியம்புவோம் வேறு வொன்று
பதியினில் தத்தை தன்னைப் பாலகன் வளர்த்து வந்தான்.

20. ஜாதகர் தனது முன் ஜன்மத்தில் ஒரு விதவை ஸ்திரீயுடன் சம்போகஞ்செய்து அதனல் அவளுக்குக் கருத்தங்கிற்று இவர் இதை வைத்தியஞ்செய்து கலைத்துவிட்டார். இவர் இவ்விதமாக மூன்று தடவை கர்ப்பத்தை அழித்தார். இது ஒரு தோஷமாக நேர்ந்தது. இன்னெரு தோஷத்தைச் சொல்லுகின்ரோம். இவர் தன்னுடைய வீட்டில் தத்தை என்ற ஒரு கிளியை வளர்த்துக் கொண்டிருந்தார்.

21. மற்றொரு நாளி லேதான் மார்ச்சாலன் கொள்ளை
[கொண்டான்
பற்றிற்று வந்தத் தோஷம் பகருவோம் வேறு வொன்று
வித்தகன் அதிக பார மேற்றினன் நந்தி பேரில்
குத்தங்கள் வார்த்தை யொன்றுங் கூறினனெருபெண்
[பேரில்.

21. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் வளர்ந்துவந்த கிளியை ஒரு தினத்தில் மார்ச்சாலம் என்ற ஒரு பூனை அபகரித்துக் கொண்டுபோய்க் கொன்றுவிட்டது. இதனல் ஒரு தோஷம் ஜாத கருக்கு நேரிட்டது. இன்னெரு தோஷத்தைச் சொல்லுகின்ரோம். ஜாதகர் ஓர் எருதின்மேல் அது தாங்கமுடியாத அதிகபாரவான் சுமையை ஏற்றினர். மேலும் இவர் ஒரு ஸ்திரீயின்மேல் குற்றமான வார்த்தைகளைச் சொன்னர்.

22. மாதுவும் மனது வாடி வரைந்தசா பத்தைக் கேண்மோ
தீதான வார்த்தை யென்மேல் செப்பின பாவிக் கேதான்
மேதினில் மறுஜன்மத்தில் விளங்காரே சுதர்கள் தாமும்
போதன மில்லா ஜகிப் பூமியில் வாழ்வா யென்ன,

22. அந்த ஸ்திரீ தன்னுடைய மனம் நொந்து ஜாதகருக்குக் கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. "என்மேல் அபவாதமான கெட்ட வரர்த்தைகளைச் சொல்லிய பாவியாகிய உனக்கு பின் ஜன்மத்தில் குழந்தைகள் விருத்தியாகாமல் இருக்கக்கடவது. மேலும் போதனம் என்ற அறிவு இல்லாமல் நீ வாழக்கடவாய்" என்று ஜாதகரைப் பார்த்து அந்த ஸ்திரீ சொன்னாள்.

23. இன்னமும் பலவாறு சொன்னு ளெய்திற்று வந்தத்
[தோஷம்
மன்னனு மந்தி யத்தில் வாய்ப்புண்ணுல் மரண மாகி
முன்னவன் வரையப் பட்டு வதிப்பனு மிவனே யென்றேந்
தன்மையாய் முன்னூழ்ச் சாபஞ் சேர்ந்தது யென்று
[சொல்வேன்.

23. இன்னும் அநேகவிதமான வார்த்தைகளை அந்த ஸ்திரீ ஜாதகரைப் பார்த்துச் சொன்னுள். அவள் கொடுத்த சாபம் ஜாதகரை வந்து இப்பிறவியில் அணுகிற்று. இவர் தன்னுடைய முன்ஜன்மத்தில் கடைசி காலத்தில் வாயில் புண் முதலிய நோய் உண்டாகி அதனுல் இறந்து பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இவர்வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகின்றோம். முன் ஜன்மத்திய சாபங்களும் தோஷங்களும் இவருக்குக் கெடுதியை உண்டுபண்ண இவரை வந்து அடைந்தன என்று சொல்லுகிறேன்.

ஜாதகரின் மனைவியினுடைய முன்ஜன்மமும் தோஷங்களும்

24. ஆகையால் புத்திர தோஷம் அறைந்தனம் பால னுக்குத்
தோகையால் சிலவே தோஷஞ் சேர்ந்தன புகலக்
[கேண்மோ
பாகமாய் வாழை தன்னில் பிறந்தனள் வேளான் வம்சம்
நாகரி கங்க ளுண்டாய் நாயகி வாழுங் நாளில்;

24. ஆகையால் ஜாதகருக்குப் புத்திர தோஷத்தைச் சொன்னேம். மேலும் இவருடைய மனைவியாலுஞ் சில தோஷங்கள் நேரிட்டன. அவைகளைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவள் வளமுள்ள மேன்மையான வாழை என்ற வரழைப்பந்தல் என்றக் கிராமத்தில் ஒரு வேளாளர் குலத்திற் பிறந்து நாகரிகங்களையுடையவளாகி வாழுகின்ற காலத்தில்;

25. மறைமுவர் மதலைக் காக
வாவின்பா லிவளைக் கேட்கக்
குறையான வார்த்தை சொல்லிக்
கொடாமலே நின்ரு ளெள்ரேம்

உரைப்பாரே மறையோர் தாமு
முரகன்போல் வார்த்தை சொன்னாய்
மறுஜன்மஞ் சுதர்க்குத் தோஷ
மருவிடு மென்று சொல்ல ;

25. ஒரு பிராமணர் தன்னுடைய குழந்தைக்காகப் பசுவின் பாலைக் கொடு என்று இவளைக் கேட்கவே இவள் இழிவான கெட்ட வார்த்தைகளைச் சொல்லிவிட்டுப் பாலைக் கொடுக்காமல் சும்மா இருந்துவிட்டாள் என்று சொல்லுகின்றோம். அதன் மேல் அந்தப் பிராமணர் பதில் சொல்லுகின்றார். " ஆதிசேஷனைப்போல பாம்பைப் போல விஷமுள்ள வார்த்தைகளை நீ சொன்னாய், உனக்குப் பின்ஜன்மத் தில் புத்திரதோஷம் ஏற்படும் " என்று இவளைப் பார்த்துப் பிராமணர் சொல்லவே ;

26. அந்ததோர் சாபந் தானும் மணுகிற்றுப் பாவைக் [கேதான்
விந்தைகள் வேறு காணாள் வித்தகி யந்தி யத்தில்
தன்சுத ரில்லா ளாகிச் சண்டன்தன் பதிக்குச் சென்று
இந்தவ ளுதிப்பா ளாகு மெய்திடும் மறையோர் சாபம்.

26. அந்தத் தோஷமானது ஜாதகருடைய மனைவிக்கு வந்து சம்பவித்தது. வேறே எந்த ஆச்சரியமானப் பாபங்களையும் இவள்முன் ஜன்மத்தில் செய்யவில்லை. இவள் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசிகாலத்தில் புத்திரர்கள் இல்லாமல் இறந்து எமபட்டணத் திற்குப்போய்ப் பிறகு இந்த ஜன்மத்தில் வந்து பிறப்பாள். இவ ளுக்குப் பிராமணருடைய சாபம் வந்து சேரிடும்.

மனைவியின் முன்ஜன்ம சாபங்களும் நிவர்த்திக்குச் சாந்தியும்

27. முன்வினை தீர வேண்டி மொழிவீரே கிரியை யொன்று
மன்னனு மனைவி யோடு வருணமா நகரஞ் சென்று
இந்திர தீர்த்தந் தோய்ந்து ஈஸ்வரி தவங்கள் செய்யும்
அந்ததோர் கிரியைச் சுற்றி யரனுக்கு வார்ச்சித் தேத்தி ;

27. ஜாதகரின் மனைவியினுடைய முன் ஜன்மத்திய பாபம் நிவர்த்தியாவதற்காக ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்கவே அகஸ்தியர் சொல்லுகின்றார். ஜாதகர் தன்னுடைய மனைவியுடன் அருணமா நகரம் என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்திற்குப்போய் அவ்விடத்திலுள்ள இந்திர தீர்த்தம் என்ற குளத்தில் ஸ்நானஞ் செய்து பார்வதியம்மையார் தவங்களைச் செய்கின்ற மலையைச் சுற்றிப் பிறகு சிவபெருமானுக்கு அர்ச்சனை முதலியவற்றைச்செய்து அவரைத் தொழுது விளக்குகளை ஏற்றி வைத்து ;

28. இருபத்தோர் பரத்துக் கன்ன
மின்பமா யறிந்து யின்னேன்
பொருள்விடங் தந்துமே தான்
பின்நகர் டைந்து பாலன்
கரிமத தோஷத் திற்குக்
காளையுந் தீப மொன்று
நெறியுட னுண்டு வைக்க
நேர்ந்ததோர் வினைகள் நீங்கும்.

28. ஜாதகர் அன்புடன் இருபத்தொரு பரதேசிகளைப் பொறுக்கி எடுத்து அவர்களுக்குச் சாப்பாடுபோட்டு அவர்களுக்குத் தனமும் தங்குவதற்காக வசதியான இடமும் கொடுத்துப் பிறகு தன்னுடைய ஊருக்குத் திரும்பிப்போய் அவ்விடத்தில் முன்ஜன்மத்திய சாபம் நீங்குவதற்காகக் கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக்கடவுளின் கோயிலில் ஒரு விளக்கை நீதிமுறையுடனும் சன்மார்க்கத்துடனும் ஒரு வ்ருஷகாலம் ஏற்றி வைத்துக்கொண்டு வந்தால் இந்த ஜன்மத்தில் வந்து சம்பவித்த அப்பாவங்கள் நிவிர்த்தியாகி விடும்.

ஜாதகரின் தாயார் விஷயம்

29. பாலக னுதிக்கும் விருத்தி பகருவோ மன்னை சேதி
ஆலம்போல் கோபங் கொஞ்ச மன்னமு மன்பா யீவள்
சீலியாம் பொறுமை சாலி சிறுத்தோர்க்குத் தாக மீவள்
ஞாலமேல் நல்லோ ளாவள் நயப்புறு வார்த்தை யுண்டு.

29. ஜாதகருக்குக் குழந்தைகள் பிறக்கும். இனிமேல் இவருடைய தாயாருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவளுக்குப் பாம்பிற்கு வருவதைப்போலக் கொஞ்சங் கோபமுண்டாகும். இவள் சாப்பாட்டை ஆசையுடன் பிறருக்குப் போடுவாள். இவள் நல்லொழுக்கமும் நன்னடத்தையும் உடையவள், பொறுமையையுடையவள், ஏழைகளுக்குத் தாகவிடாய் தீர நீர்மோர் கொடுப்பாள். இவள் பூமியில் நல்லவளாக விருப்பாள், இன்பமான நல்ல வார்த்தைகளை உபயோகிப்பாள்.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

30. மனமது கபடு மில்லாள் மாஞ்சிவப் புடைய ளாவள்
வினையாக பித்த வாயு மேவிடும் பாவைக் கேதான்
துணைவர்க ளாண்பா லிரண்டு தோகையு மவ்வாறு
[தீர்க்கஞ்
ஞனமிலா யிவள்தன் பூர்வஞ் செப்புவோ மினி மேலாக.

30. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மனத்தில் கள்ளம், கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவளாக விருப்பாள். இவள் மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தையுடையவளாக விருப்பாள். இவளுக்குப் பித்த வாயு ரோகம் முன்ஜன்மத்தியப் பலனுக உண்டு. இவளுக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள். இனிமேல் கோபமில்லாதவளாகிய இவளுடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம்.

31. முக்கூடல் தன்னி லேதா னுதித்தனள் கௌரி வம்சந்
தக்கன குடும்பி யாகித் தாகமென் றேர்க்கு வீயந்து
சிக்கன மனமில் லாமற் சென்றனள் வரன்முன் னுக
மிக்கவன் வரையப் பட்டு விளங்கினள் ரெட்டி வம்சம்.

31. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன்ஜன்மத்தில் முக்கூடல் என்ற திருமுக்குடல் கிராமத்தில் ஒரு வேளாளர் குலத்திற் பிறந்து தகுந்த குடும்பத்தையுடையவளாகித் தாக மெடுக்கின்ற தென்று சொன்னவர்களுக்கு நீர்மோர் முதலியவைகளைக் கொடுத்துக் கெடுதியான மனத்தையுடையவளாக வில்லாமல் வாழ்ந்து தன்னுடைய புருஷனுக்கு முன்னமே இறந்து பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் ஒரு ரெட்டியார் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றுள்.

ஜாதகரின் தாயாரின் மரணகாலம் (மாதிருகர்மம்)

32. மூவெட்டு விரண்டு வாண்டில் மேவுவாள் காலநாடு
பூவைபின் ஜன்மஞ் சொல்வேன் புதுவையில்
[வைசியச் சேயாய்த்
தாவியே பெருமை பூண்டு தையலும் வாழ்வா ளாகும்
ஆவலாய்த் தவங்கள் செய்யு மம்பிகை யாளே கேளாய்.

32. ஜாதகருடைய தாயார் இருபத்தாருவது வயதில் இறந்து எமபட்டணத்திற்குப்போய்ச் சேருவாள். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் புதுவை என்ற புதுச்சேரியில் வைசியருடைய ஜாதியில் ஒரு பெண் குழந்தையாகப் பிறந்து மேன்மையுடன் வாழ்பவளாவாள். ஆசையுடன் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—ஜாதகரின் தாயாருடைய மரணகால விஷயம்: ஜாதகருக்கு வயது வருஷம் 25-0-0 முதல் வயது வருஷம் 26-0-0 முடியும் வரையிலும் சுக்கிரதசையில் புதபுக்தியும் கேது புக்தியும் நடக்கின்றன. மாதிருலக்கினம் நான்காவது பாவமாகிய விருச்சிகம் ஆகும். இதற்

குப் பராசர ஹோரை ஜாதக சந்திரிகை ஐம்பத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் சுக்கிரன் புதன் அங்காரகன் இவர்கள் மாரகராகின்றார்கள் சுக்கிரன் மாரகஸ்தானங்களாகிய விருச்சிகத்திற்கு ஏழாவது பாவம் பன்னிரண்டாவது பாவம் ஆகிய இந்தப் பாவங்களுக்கு அதிபதியாகி மாரகஸ்தானமாகிய மூன்றாவது பாவத்தில் இருப்பதால் ஜாதக சந்திரிகை இருபத்திரண்டாவது சுலோகம் முப்பத்தொன்பதாவது சுலோகம் இருபத்தைந்தாவது சுலோகம் ஆகிய இந்தச் சுலோகங்களின் பிரகாரம் மாரகராகின்றார். ஆகையால் இவர் தன்னுடைய தசையில் ஜாதகருடைய தாயாருக்கு மரணத்தை யுண்டுபண்ண அமைப்பு உடையவராக விருக்கின்றார். புதனும் மேற்சொன்னபடி விருச்சிக லக்கினத்திற்கு மாரகராகின்றார். இவர் மாரகஸ்தானங்களாகிய எட்டு பதினொன்று ஆகிய இந்த பாவங்களுக்கு அதிபதியாகி மாதிரு லக்கினத்திலேயே இருக்கின்றார். ஆகையால் இவர் மாரகராகின்றார். இவருடன்கூட கேது சம்பந்தப்பட்டு மாதிரு லக்கினத்திலேயே இருக்கின்றார். இவர் அஷ்டமாதிபதியாகிய புதனுடன் சம்பந்தப்பட்டு லக்கினாதிபதியாகிய அங்காரகனைப் பதினோராவது பார்வையுடன் பார்க்கின்றார். ஆகையால் கேது தூய்யகேரளம் எட்டாம் பாவம் இருபதாவது பாடல், கார்க்கேயர் நாடி அறுநூற்றொன்பதாவது பாடல், ஜாதக சந்திரிகை பன்னிரண்டாவது சுலோகம் இருபத்துமூன்றாவது சுலோகம், ஜாதக பாரி ஜாதம் பதினொன்காவது அத்தியாயம் அறுபதாவது சுலோகம் ஆகிய இவைகளின் பிரகாரம் புதனைவிட கேது மாதிருவுக்குத் தன் புத்தியில் மாரகஞ் செய்ய அதிக அமைப்பு உடையவராக விருப்பதால் புத புத்தியில் நோய் கண்டு கேது புத்தி முடிவு இருக்கின்றது.

ஜாதகரின் தகப்பனாருடைய முன்ஜன்மம்

33. தந்தையின் பூர்வந் தன்னைச்
சாற்றுவோங் காஞ்சி தன்னில்
விந்தையாய்ச் சௌராஷ்டர் வம்சம்
மேவியே வணிபஞ் செய்து
முந்திய தனமும் பெற்று
முதல்வனும் வாழுங் காளில்
வந்ததோர் வினையை யாங்கள்
வரைகிறோ முனியே கேளும்.

33. ஜாதகருடைய தகப்பனாரின் முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் காஞ்சிமா நகரத்தில் ஆச்சரியமாக ஒரு சௌராஷ்டிரர் என்கின்ற பட்டு நூற்காரர் குலத்தில் பிறந்து மேன்மையான வியாபாரஞ் செய்து அதிகமான தனத்தை அடைந்து இவர் வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தை நாங்கள் சொல்லுகின்றோம், முனிவரே! நீர் கேட்பீராக.

34. தன்துணை பாகந் தன்னைத்
தராமலே மோசஞ் செய்தான்
அன்னவன் வருத்த முற்று
கூறிய சாபங் கேண்மோ
பொன்கடன் தராத பாவி
பிறக்கும்பின் ஜன்மந் தன்னில்
என்னைப்போல் துணைவ ரின்றி
யிப்புவி தன்னில் வாழ்வாய்.

34. ஜாதகருடை தகப்பனுர் தன்னுடைய முன் ஜன்மத்தில் தன்னுடைய சகோதரனுக்கு அவனுடைய பாகத்தைக் கொடுக்காமல் அவனை மோசஞ் செய்துவிட்டான். அதனால் அந்தச் சகோதரன் துன்பத்தையும் மனக்கஷ்டத்தையும் அடைந்து கொடுத்தச் சாபத்தைச் சொல்லுகின்றேம், கேட்பீராக. "எனக்குக் கொடுக்கவேண்டிய கடனுகிய என் பாகத்தைக் கொடுக்காதப் பாவியாகிய நீ, உன்னுடைய மறு ஜன்மத்தில் என்னைப் போன்ற சகோதரன் இல்லாமல் இந்தப் பூமியில் வாழக்கடவாய்."

35. சிறையாக அந்தம் வாழ்வாய்ச் செப்பியே சென்ரு
[னென்றேம்
மருவிற்று வந்தச் சாப மாரனு மந்தி யத்தில்
வறுமைகள் மிகவே கொண்டு மால்பத்தி யுடைய னுகி
மரலியின் பதிக்குப் புக்கி மறையவன் வரையப் பட்டு ;

35. "உன்னுடைய கடைசி காலத்தில் நீ ஜெயிலிலிருந்து வாழக்கடவாய்" என்று சகோதரன் ஜாதகருடைய தகப்பனுரைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போய்விட்டான் என்று சொல்லுகின்றேம். அந்தச் சாபம் ஜாதகருடைய தகப்பனுரை முன் ஜன்மத்திலேயேவந்து அடையவே தகப்பனுர் தன்னுடைய கடைசி காலத்தில் தரித்திரத்தையும் கஷ்டத்தையும் அதிகமாகவடைந்து மகாவிஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையுமுடையவராகி இறந்து பிறகு எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலியியுடன் எழுதப்பட்டு ;

ஜாதகருடைய தகப்பனுரின் பின் ஜன்மம்

36. வந்தவ னென்று சொல்வோ மருவிடு முன்னூழ்ச் சாபந்
தன்துணை யில்லா னுவன் தரித்திரம் பூர்வ மாகுங்
கன்னியால் பெருமை யேற்பன் கழறுவோ மிவன்பின்
[ஜன்மம்
மன்னிய வருணை நாட்டில் மருவுவா னிக்கு லத்திஞ்.

36. ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் வந்து பிறந் திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவருக்குத் தன்னுடைய முன் ஜன்மத்திய பாவங்களும் சாபங்களும் வந்து சம்பவிக்கும். அத னால் இவர் தனக்குச் சகோதரன் இல்லாமல் இருப்பார். இவருடைய வயதின் முற்பாகத்தில் இவருக்குத் தரித்திரம் உண்டாகும். பிறகு இவர் தன்னுடைய மனைவியால் மேன்மை புகழ் இவற்றை அடைவார். இனிமேல் இவருடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். சிறந்த அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் இந்த ஜன் மத்திற் பிறந்த குலத்தில் (அஃதாவது முப்பத்தோராவது பாட்டில் கண்ட ரெட்டியார் வம்சத்தில்) பிறப்பார்.

ஜாதகரின் தகப்பனாரது மரணமும் ஜாதகர் மரணமும்

37. முப்பது முப்பா னேழில் விளம்பு வோ மாரகங்கள்
தப்பியே நாற்ப தாண்டில் சார்ந்திடுங் கண்ட மென்றோம்
ஒப்புடன் ஜாத கர்குக் வுரைக்கிறோ மறுபா னெட்டில்
மைப்படித் கூனி மாதம் வரைகிறோங் கண்டங் தானே.

37. ஜாதகருக்கு முப்பது முப்பத்தேழு இந்த வயதுகளில் இவ ருடைய தகப்பனாருக்கு மாரகத்திற்குச் சமானமான கண்டங்கள் நேரிடு மென்று சொல்லுகிறோம். அவை நீங்கிப் பிறகு ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய தகப்பனாருக்கு மாரகம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். மேலும் ஜாதகருக்கு, அவரது அறுபத் தெட்டாவது வயதில் மேன்மையான பங்குனி மாதத்தில் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு:—**ஜாதகரின் பிதிருமரண விஷயம்**:—ஜாதகருக்கு வயது வரு ஷம் 39-0-0 முதல் வயது வருஷம் 40-0-0 முடியும் வரையிலும் சந்திர தசையில் புத புக்தி நடக்கின்றது. பிதிரு லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். மேஷ லக்கினத்திற்குச் சந்திரன் கேந்திராதி பதியாவதால் பாபியாகின்றார். இவர் மேஷலக்கினத்திற்கு ஜாதக சந்திரிகை முப்பத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் மாரகாதிப தி யாகிய குருவுடன்கூடி இருப்பதால் ஜாதக சந்திரிகை இருபத்துமூன்று வது சுலோகப் பிரகாரம் மாரகராகின்றார். மேலும் சந்திரனுக்கு நான்கு பத்தில் பாபரும் சுபரும்கலந்திருக்கில் அப்பாபரது தசை மாரகம் என்று குமாரசாமியம் மகாதசைப் பலப்படலம் நான்காவது பாடலில் சொல்லி யிருப்பதால் சந்திரனுக்கு நான்கிலுள்ள பாபியாகிய கேது மாரகராகின் றார். இந்தக் கேதுவின் நட்சத்திரக் காலாகிய மகம் ஒன்றில் சந்திரன் இருக்கின்றார். இக்காரணங்களால் சந்திரன் தனது தசையில் பிதா வுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகவிருக்கின்றார். மேலும் மேஷலக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை நாற்பத்து

நான்காவது சுலோர்கம் ஆகிய இவைளின் பிரகாரம் புதன் மாரகராகின்ருர். இவர் மாரகஸ்தானமாகிய எட்டாவது பாவத்தில் இருக்கின்ருர். மேலும் இவர் மாரகஸ்தானங்களாகிய மூன்றுக்கும் ஆறுக்கும் உடையவராகவிருக்கின்ருர். ஆகையால் இவர் தனது புக்தியில் பிதாவுக்கு மாரகஞ்செய்யும் அமைப்பு உடையவராகவிருக்கின்ருர்.

ஜாதகருடைய மரண விஷயம் :—ஜாதகருக்கு வயது வருஷம் 67-0-0 முதல் வயது வருஷம் 68-0-0 முடியும் வரையிலும் இராகு தசையில் அங்கார புத்தி நடக்கின்றது. சிம்மலக்கினத்திற்குப் பராசரஹோரை ஜாதகசந்திரிகை ஐம்பத்திரண்டாவது சுலோகம் ஆகிய இவைகளின் பிரகாரம் சுக்கிரன் புதன் இவர்கள் மாரகராகிறர்கள். சுக்கிரன் மாரகஸ்தானமாகிய மூன்றிற்குடையவராய் ஜாதகசந்திரிகை இருபத்தாருவது சுலோகம் குமாரசாமியம் மகாதசைப் பலப்படலம் நான்காவது பாடல் ஆகிய இவைகளின் பிரகாரம் மாரக ஸ்தானமாகிய ஆருவது பாவத்தில் இருக்கின்ருர். ஆகையால் சுக்கிரன் மாரகாதிபதியாகின்ருர். இராகு இந்தச் சுக்கிரனுடைய வீடாகிய ரிஷபத்திலிருப்பதால் ஜாதகசந்திரிகை பன்னிரண்டாவது இருபத்துமூன்ருவது சுலோகங்களின் பிரகாரம் தனது தசையில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகவிருக்கின்ருர். அங்காரகன் இரண்டாவது பாவமாகிய மாரகஸ்தானத்தில் மாரகாதிபதியாகிய புதனுடைய வீட்டில் இருப்பதால் ஜாதகசந்திரிகை ஐம்பத்திரண்டாவது சுலோகம் இருபத்து மூன்ருவது சுலோகம் ஆகிய இவற்றின்படி தனது புத்தியில் ஜாதகருக்கு மாரகஞ்செய்ய அமைம்பு உடையவராக விருக்கின்ருர்.

ஜாதகருடைய மறு ஜன்மம்

38. பின்ஜன்மங் காஞ்சி தன்னிற் பிறப்பனும் பிரம்ம சேயாய்
மன்னவ னிச்சென் மத்தில் மருவின புண்ணிய மென்ன
உன்னத தலங்கள் சென்று உள்மனங் கபடு மின்றிப்
பின்னேர்க்கு வுதவி செய்து புதலவனும் வாழ்வ தாலே ;

38. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில் காஞ்சீமாநகரத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பார். இவ்விதமாக முனிவர் சொல்லவே பிரம்மணர் குலத்திற் பிறப்பதற்கு ஜாதகர் இந்த ஜன்மத்தில் எவ்விதப் புண்ணியங்களைச் செய்தார், என்று திடுத்துக் கேட்கவே முனிவர் பதில் சொல்லுகின்ருர். மேன்மையான சிறந்த பெரியக்ஷேத்திரங்களுக்கு ஜாதகர் போனதாலும் தன்னுடைய மனத்திற்குள்ளே யாதொரு கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகள் இல்லாமல் ஏழைகளுக்கும் தாழ்ந்தவர்களுக்கும் உபகாரஞ் செய்துகொண்டு வாழ்வதாலும் ;

ஜாதகருடைய யோக பாவம்

39. ஜனிப்பனு மென்று சொல்வோஞ்
செப்புவோ மிவனின் யோகம்
நினைத்ததை முடிக்க வல்லன்
நிலமது பெருக்கஞ் செய்வன்
தனமது சேர்ப்பா னுவன்
சாராள்க ளுடைய னுவன்
இனமதிப் புடனே வாழ்வ
னீகைவான் புகழு மேற்பன்.

39. ஜாதகர் தன்னுடைய பின் ஜன்மத்தில் பிராமணராகப் பிறப்பார் என்று சொல்லுகின்றோம். இனிமேல் இவருடைய யோகத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஜாதகர் தான் நினைத்தக் காரியத்தைச் செய்து முடிக்குஞ் சமர்த்தியமுடையவராவர். இவர் தன்னுடைய நிலங்களை அதிகமாக வாக்கி விடுவார். இவர் பணத்தைச் சேர்த்து வைப்பார். இவர் பக்கபலமான சேனையையுடையவராவார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னைக் கௌரவப்படுத்தும்படியான அந்தஸ்திலிருந்துகொண்டு வாழ்வார். பிறருக்குக் கொடுக்குந் தன்மையையுடையவராவர். கீர்த்தியையும் பெருமையையும் அடைவார்.

40. ஆறு வாண்டு மேலா யற்புத யோக மெய்தும்
வேறொரு பூமி சேரல் வெற்றியாந் தொடு வழக்கில்
கூறுஞ்சொல் மேம்பா டாகுங் குறைவுறு வாழ்வா னுவன்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

40. ஜாதகருக்கு முப்பத்தாறுவது வயதிற்கு மேலே அதிசயமான யோகம் உண்டாகும். இவர் இன்னொரு நிலத்தைச் சேர்ப்பார்; அல்லது இன்னொருவிடத்திற்குப் போவார். இவர் தான் ஆரம்பிக்கின்ற தொடுவழக்கு என்ற (பல கோர்ட்டுவளில் தொடர்ச்சியாக அஃதாவது ஒரிஜினல் கோர்ட்டு, முதலாவது அப்பீல் கோர்ட்டு, இரண்டாவது அப்பீல் கோர்ட்டு ஆகிய இவைகளில் நடக்கின்ற) தொடர்ச்சியான வியாஜ்யங்களில் ஜெயிப்பார் இவர் சொல்லுகின்ற வார்த்தைகள் பிறர் அங்கீகரிக்குந் தன்மையுடையவனவாக விருக்கும். இவர் யாதொரு கஷ்டங்கள் இல்லாமல் சுகமாகவிருந்து வாழ்பவராவர். ஆறு பெரிய முகங்களையுடைய முருகப்பெருமானைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜனன கால தசை இருப்பும் மனைவி மரணமும்

41. ஜனித்திடுங் காலந் தன்னில் சிகிதசை யாண்டு யேழுங்
குனித்தனம் பால னுக்குக் கூறுவோ முத்தர பாகம்
மனைவியும் இவன்பின் னலே மருவுவாள் காலந் நாடு
சினமிலாத் தவங்கள் செய்யுஞ் செல்வதி கேட்டி டாயே.

41. ஜாதகர் பிறக்குங்காலத்தில் சிகி என்ற கேது மகாதசை இருப்பு ஏழுவருஷங்களாகும். இதை ஜாதகருக்குக் கணிதம் பிரகாரஞ் சொன்னேம். இனிமேல் பின் பாகத்தைச் சொல்லுகின்றோம். இவருடைய மனைவி இவருக்குப் பின்னல் இறந்து ஏமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள். கோபமில்லாமல் தங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 92

ஜனனகால கிரகநிலை

[1]அரியது ஐன்ம மாக [2]அம்புலி புதன்சேய்[3] தங்கப்
[4]பரிதியு மிரண்டி லாகப் [5]பளிங்கனும் மூன்றி லாகக்
[6]கரியவ னேழி லாகக் [7]கனகனும் லாப மாக
[8]அரவுஈ ரிரிற் றங்க [9]அதிதியும் [10]மான தாக.

1. ஐன்ம லக்கினம் சிம்மமாகி அதில் சந்திரன் புதன் அங்காரகன் ஆகிய இவர்களும், இரண்டில் சூரியனும், மூன்றில் சுக்கிரனும், ஏழில் சனியும், லாபத்தில் அஃதாவது பதினொன்றில் குருவும், பன்னிரண்டில் இராகுவும், மகரத்தில் கேதுவும் இருந்தால்;

கிரகநிலை

			குரு
சனி	இராசி சக்கரம்		ராகு
கேது			லக்கினம் சந்திரன் புதன் அங்கார.
		சுக்கிரன்	சூரியன்

மகம் 4-ஆம் பாதம். கேது தசை ஆண்டு 0-10-20.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்தில் கேதுவும், மிதுனத்தில் அங்காரகனும், கடகத்தில் சந்திரனும், விருச்சிகத்தில் இராகுவும், தனுசில் புதனும் சனியும், மகரத்தில் சூரியனும், கும்பத்தில் குருவும், மீனத்தில் சுக்கிரனும் ஆகும். புதன் அஸ்தமனமடைந்திருக்கின்றார். சனி வக்கிரமாக விருக்கின்றார்.

---

1. சிம்மம்
2. சந்திரன்
3. அங்காரகன்
4. சூரியன்
5. சுக்கிரன்
6. சனி
7. குரு
8. இராகு
9. கேது
10. மகரம்

பிறந்த வீட்டின் லக்ஷணம்

2. சொல்லுவீர் பலனை யென்று சுந்தரி கேட்கும் போது
புல்குவார் பரசர் தாமும் பிறந்திடு மாண்பால் ஜன்மம்
இல்லமுங் கிழ்மேல் வீதி எமன்வாடை மேல்பா லீசன்
வல்லிமா காளி கீழ்ப்பால் வந்திடுந் தென்பா லாகும்.

2. பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்போது, பராசர முனிவர் சொல்லுகின்றார். ஜனனமாகுங் குழந்தை ஆண்குழந்தையாகும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெரு வில் தெற்கு வாடையில் இருக்கும். மேற்குத் திக்கில் சிவபெரு மானுடைய கோயில் இருக்கும், வல்லியின் கோயிலும் காளியம்மன் கோயிலும் கிழக்குத் திக்கிலும், மகாவிஷ்ணுவின் கோயில் தெற்குத் திக்கிலும் இருக்கும்.

3. இத்தகை யடையா ளத்து ளிப்பாலன் வடுகச் சேயாய்ச்
வித்தகன் நான்காஞ் ஜன்மம் விளங்குவா னிவனே [யாவன்
பெத்ததாய்த் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகஞ்
சுத்தமாய் முன்பின் ஜன்மஞ் செப்புவோ மிந்நூல் [தன்னில்.

3. இவ்விதமான அடையாளங்களையுடைய விடத்தில் இந்த ஜாதகர் தெலுங்கர் குலத்தில் நான்காவது ஆண் குழந்தையாகப் பிறப் பார். இவரைப் பெற்றெடுத்தத் தாயார் தகப்பனார் ஆகிய இவர்களு டைய யோகத்தையும் இவருடைய களத்திரம் சந்ததி ஆகிய இவர்களு டைய யோகத்தையும், முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் நன்றுகவும் தெளிவாகவும் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய விஷயம்

4. தந்தையுந் துணைவர் காணன் தனியனாய் வாழ்வா னம்மா
எந்தக்கா ரணத்தி னுலே யிவன்தனி சொன்னீ ரையா
ஒன்பதைக் காரி பார்க்க வுறைத்திட்டோ மந்தச் சங்கை
இந்தவன் தந்தை சேதி யியம்புவே னிரு நிறத்தான்.

4. ஜாதகருடைய தகப்பனருக்குக் கூடப்பிறந்த சகோதரர்கள் இல்லை. இவர் ஒருவராக விருந்து வாழ்வார் என்று சொல்லுகின் றோம். பார்வதியம்மையே! இவ்விதமாகப் பராசர முனிவர் சொல்லவே எந்தக் காரணத்தினுலே இவர் ஒண்டியாக விருப்பார் என்று சொன்னீர்? முனிவரே! என்று கேட்க, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். ஒன்பதாமிடத்தைக் காரியாகிய சனி பார்ப்பதால் இந்த விஷயத்தைச் சொன்னோம். இனிமேல் ஜாதகரின் தகப்பனருடைய விஷயங்களைப்

பற்றிச் சொல்லுகின்றேன். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தையுடையவராவர்.

குறிப்பு : தகப்பனாரது சகோதர பாவம் :—பிதிரு லக்கினம் ஒன்பதாமிடமாகிய மேஷம் ஆகும். இதற்கு இளைய சகோதர ஸ்தானம் மூன்றாவது பாவமாகிய மிதுனம் ஆகும். இதில் மேஷத்திற்கு விரயாதிபதியாகிய குரு இருப்பது இளைய சகோதரனுக்குத் தோஷமாகும். மிதுனத்திற்குடைய புதன் அஸ்தமனமடைந்து அஷ்டமாதிபதியாகிய செவ்வாயுடன் கூடிச் சனியால் பார்க்கப்படுவது இளைய சகோதரனுக்குத் தோஷமாகும். இளைய ஆண் சகோதரகாரகனுகிய புதன் அஸ்தமனம்டைந்து அஷ்டமாதிபதியாகிய அங்காரகனுடன் கூடிச் சனியால் பார்க்கப்பட்டிருப்பது இளைய ஆண் சகோதரனுக்குத் தோஷமாகும். மேஷத்திற்கு மூத்த சகோதர ஸ்தானம் கும்பம் ஆகும். இதையும் பதினொன்றிற் குடையவராகிய சனியையும் விரயாதிபதியாகிய குரு பார்ப்பதும் அஷ்டமாதிபதியாகிய அங்காரகனும் பார்ப்பதும் மூத்த சகோதரதோஷமாகும். மூத்த ஆண் சகோதரர்காரகனுகிய குருவும் மூன்றில் மறைந்திருப்பதும் மூத்த ஆண் சகோதர தோஷமாகும்.

5. வித்தையு மிரண்டு கற்பன் விவேகியாம் வணிபஞ்
[செய்வன்
சுத்தவான் அடக்க வார்த்தை சோம்பிடான் காரி யத்தில்
பத்தினி வர்க்க நாஸ்தி பதர்குண மில்லா னுகுஞ்
சத்தியங் கூறு னுகுஞ் சாராள்கள் சேர்ப்பா னுகும்.

5. ஜாதகருடைய தகப்பனர் இரண்டுவிதமான வித்தைகளைக் கற்றுக்கொண்டிருப்பார். இவர் புத்திசாலியாக விருப்பார். வியாபாரஞ் செய்வார். இவர் சுத்தமாகவும் ஒழுக்கத்துடனும் இருப்பார். சாந்தமான வார்த்தைகளை உபயோகிப்பார். தான் செய்யுங்காரியத்தில் சோம்பலைக் காட்டமாட்டார். இவருடைய மனைவியின் பந்துக்கள் நாசமாகி விடுவார்கள். இவர் அவசரப்பட்ட, அறிவீனமான, அல்லது அற்ப குணத்தையுடையவரல்லர். இவர் சத்தியம் என்று சொல்லமாட்டார். இவர் தன்னுடைய பக்கத்தில் ஆள்களைச் சேர்த்து வைப்பார்.

6. தாரணிகள் சேர்ப்பா னுகுஞ் சண்முகன் பத்தி பூண்பன்
பொருள்பூர்வ மில்லா னுகும் பிதிராஸ்தி நாஸ்தி யாகும்
முருகர்தன் பத்தி பூண்பன் முண்டக ரேகை யுண்டு
மருமத்தை வெளிக்காட் டாதான் வருணத்தோர்க் குதவி
[செய்வன்.

6. ஜாதகருடைய தகப்பனர் நிலங்களைச் சேர்த்துவைப்பார். இவர் முருகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக

விருப்பார். இவர் பூர்வ சொத்து அஃதாவது முன்னோர்களுடைய சொத்து இல்லாதவராக விருப்பார். இவருடைய தகப்பனுருடைய சொத்து அழிந்துபோய்விடும். இவர் ஆறுமுகக் கடவுளின் மேல் அன்பும் ஆசையுமுடையவராவர். இவருடைய உள்ளங்கையில் முண்டகம் என்ற தாமரை ரேகை இருக்கும். இவர் தன்னுடைய ரகசியத்தைப் பிறர் தெரிந்துகொள்ளும்படியாக வெளியே காட்டிக்கொள்ளமாட்டார். இவர் தன்னுடைய ஜாதியாருக்கு உபகாரஞ் செய்வார்.

குறிப்பு: தகப்பனுருடைய பிதிராஸ்தி நாஸ்தி விஷயம்:—ஜாதகரின் பிதிரு லக்கினம் ஒன்பதாம்பாவமாகிய மேஷமாகும். இதற்குப் பிதிருஸ்தானமாகிய தனுசிற்குடைய குரு மேஷத்திற்கு மூன்றில் மறைந்திருப்பது பிதிராஸ்திக்குத் தோஷமாகும். மேலும் மேஷத்திற்கு நான்கிற்குடைய சந்திரன் மேஷத்திற்கு அஷ்டமாதிபதியாகிய அங்காரகனுடனும் திரிதிக சஷ்டாதிபதியாகிய புதனுடனுங் கூடியிருப்பது ஜாதகருடைய பிதாவின் சொத்துக்களுக்கு அழிவு ஏற்படுவதற்கு அமைப்புள்ள காரணமாகும். மேலும் மேஷத்திற்கு ஆறில் பிதிருகாரகனுகிய சூரியன் இருப்பதும் பிரதிகூலமானதாகும்.

ஜாதகரின் தகப்பனுருடைய முன்ஜன்மம்

7. சல்லிய மென்ரு லச்சந் தங்கிடும் நாபி சூடு
சொல்லது சுருக்க முண்டு தொடுத்ததை வெல்வா னுகும்
நல்லவன் நல்ல வர்க்கு நற்றேளாம் மனுட ராசி
புல்குவே னிவன்முன் ஜன்மம் பூவையே கேட்டி டாயே.

7. ஜாதகருடைய தகப்பனுர் கடன் என்ற சொல்லைக் கேட்டால் பயப்படுவார். இவருக்கு நாபிச்சூட்டு ரோகமுண்டு. இவர் சுறுக்கமாகவும் கொஞ்சமாகவும் பேசுவார். தான் ஆரம்பித்த காரியத்தைச் செய்துமுடிக்குஞ் சாமர்த்திய முடையவ ராவர். இவர் நல்லவர்களுக்கு நல்லவராக விருந்து நடந்து கொள்ளுவார். இவர் தேள் என்ற விருச்சிக லக்கினத்தில் அனுஷ நட்சத்திரத்தில் பிறந்தவராவர். இவருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்ரேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

8. மங்கையும் பூசை செய்யும் வாழைமா நகரி லேதான்
தங்கினன் கர்ண சேயாய்ச் சந்ததி மனவி யுண்டாய்
அங்கவன் நகரத் திற்கு அணுகினன் கணக்கு வேலை
இங்கவன் வாழுந் நாளி லெய்தின வினையைக் கேண்மோ.

8. பார்வதியம்மையார் பூஜை செய்கின்ற வாழைமாநகரம் என்ற வாழைப்பந்தல் என்ற கிராமத்தில் ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய முன்ஜன்மத்தில் கருணீகர் குலத்தில் ஆண்குழந்தையாகப்

பிறந்து மனைவி மக்களை யுடையவராகி அந்தப்பட்டணத்திற்கே கிராமக் கணக்கு வேலையைச் செய்துகொண்டு வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக.

9. வறுமைக ளுடையோ ருக்கு
வவனியைத் தாரே னென்று
பொருளது அவர்பால் பெற்றுப்
பின்பதை மோசஞ் செய்தான்
சிறியோர்கள் மனது வாடிச்
செப்பின சாபங் கேண்மோ
குறைசெய்த பாவிக் கேதான்
குலவும்பின் ஜன்மந் தன்னில் ;

9. தரித்திரத்தால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஏழைகளுக்கு நிலங்களை அடமானஞ் செய்கிறேன் (அஃதாவது கொடுக்கிறேன்) என்று சொல்லி அவர்களிடமிருந்து பணத்தை வஞ்சமாகப் பெற்றுக் கொண்டு பிறகு நிலங்களை அடமானஞ் செய்யாமலும் திருப்பிக் கொடுக்காமலும் அவர்களை ஏமாற்றி விட்டார். அந்த ஏழைகள் தங்களுடைய மனத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டு கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. "எங்களுக்குக் கெடுதிகளை உண்டாக்கிய பாவியாகிய உனக்கு இனிவரப் போகின்ற பின்ஜன்மத்தில் ;

10. அண்ணன்தம் பிகளு மின்றி
அப்பன்த னுஸ்தி யின்றிக்
குன்னிய மனத்த னுகிக்
குவலயந் தன்னில் வாழ்வாய்
இன்னமும் விசேஷஞ் சொல்வா
ரெய்திற்று வந்தச் சாபங்
கண்ணன்தம் தங்கை யாளே
காதலன் அந்தி யத்தில் ;

10. "அண்ணன் தம்பிகள் இல்லாமலும் தகப்பனுருடைய சொத்து இலலாமலும் நொந்த மனத்தையுடையவராகி இந்தப் பூமியில் வாழக்கடவாய்" என்று ஜாதகருடைய தகப்பனுரைப் பார்த்துச் சொல்லி சாபங் கொடுத்தார்கள். அவர்கள் இன்னமும் அதிகமாகச் சொல்லிச் சாபங் கொடுத்தார்கள். அவர்களுடைய அந்தச் சாபம் ஜாதகருடைய தகப்பனுரை வந்து அடைந்தது. மகாவிஷ்ணுவின் இளைய சகோதரியாகிய பார்வதியம்மையே ! ஜாதகரின் தகப்பனுர் தன்னுடைய கடைசி காலத்தில் ;

11. இருவிழிக் குறைவு நேர்ந்து ஈச்வரி தொண்டு பூண்டு
மரலியின் பதிக்குப் புக்கி மறையவன் வரையப் பட்டு
உரைந்தன னிக்கு லத்தில் உறைந்திடு மேழைச் சாபம்
வருந்துணை காணு லகும் வாதியால் வறுமை யேற்பன்.

11. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய இரண்டு கண்களின் பார்வை குறைந்து, பார்வதியம்மையினிடத்தில் ஆசையும் அன்பும் உடையவராகி அம்மைக்கு வேலை செய்து இறந்து இந்த ஜன்மத்தில் இந்த ஜாதியில் வந்து பிறந்திருக்கின்ருர். முன்ஜன்மத்திய ஏழைகளுடைய சாபம் இவரை வந்து அடையும். அதனல் இவருக்குச் சகோதரர்கள் கிடையா. இவர் தன்னுடைய எதிரிகளால் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அனுபவிப்பார்.

ஜாதகருடைய தகப்பனுரது தொழில்

12. சொன்னயிக் குணத்தா னுக்குத்
தொழிலது யெவ்வா றென்றீர்
வெண்மைநூல் சிவப்புச் செய்து
வியாபாரந் தன்னி லுய்வன்
மண்பயிர் தொழிலு மேற்பன்
பொருளது பெருக்கஞ் செய்வன்
இன்நெறி யுடையா னுக்கு
இப்பாலன் தோன்று வானும்

12. இதுவரையில் சொல்லப்பட்ட குணங்களையுடைய ஜாதகருடைய தகப்பனுருக்கு என்ன ஜீவனத்தொழில் என்று சொல்லுவீர் என்று கேட்கவே முனிவர் சொல்லுகின்ருர். இவர் வெண்மையாக இருக்கும் நூல்களைச் சிவப்பாகச் செய்கின்ற சாயவேலையாகிய வியாபாரத்தைச் செய்து கொண்டும் நிலங்களில் விவசாய வேலைகளைச் செய்து கொண்டும் இருப்பார். இவைகளால் இவர் தனனுடைய சொத்தை அதிகப்படுத்துவார். இவ்விதமான குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

13. பாலகன் நிறம்கு ணத்தைப் பகருவோஞ் சிவந்த மேனி
ஞாலமேல் நல்லோ னுவன் நாகம்போல் கோப மேற்பன்
ஆலம்போல் பகைவ ருக்கு அவனுமே கருட னுவன்
வேலன்மேல் பத்தி பூண்பன் வெற்றியாந் தொடு வழக்கு.

13. ஜாதகருடைய நிறத்தையும் குணத்தையும் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் சிவப்பு நிறமுள்ளவராக விருப்பார். இவர் பூமியில் நல்லவராக விருப்பார். பாம்பைப்போலக் கோபத்தையுடையவர். பாம்

பைப் போன்ற எதிரிகளுக்கு இவர் கருடனைப் போன்ற வைரியாக விருப்பார். இவர் ஆறுமுகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவார். இவர் ஆரம்பிக்கின்ற தொடர்ச்சியான வழக்கு இவருக்கு ஜயமாகும்.

14. தன்சொல்லே மேன்மை யாகச்
சாதிப்பான் கல்வி மூன்று
அன்னிய பாஷை கற்ப
னடாவடி கொஞ்ச முண்டு
மன்னர்க ளிஷ்டங் கொள்வன்
வர்க்கத்தைக் காப்பா ளுகும்
மூன்னோர்சொல் தொழிலு மேன்மை
யுயர்வான குடும்பி யாவன்.

14. ஜாதகர் தான் சொல்லுகின்ற வார்த்தைகளே உயர்வானவை சிறந்தவை என்று சொல்லிச் சாதிக்குஞ் சாமர்த்தியமுள்ளவராவர். இவர் மூன்று விதமான வித்தையை யுடையவர். இவர் அன்னிய பாஷை என்று சொல்லப்பட்ட ஆங்கிலபாஷையைப் படிப்பார். இவர் சிறிது நியாயமில்லாமல் பேசக்கூடிய தன்மையை உடையவர். இவர் அரசர்களுடைய அன்பையும் நேசத்தையும் உடையவர். இவர் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுபவராவர். இவர் தன்னுடைய முன்னோர்களுடைய சொல்லையும் தொழிலையும் சிறந்தனவாகப் பாராட்டக்கூடியவர். இவர் மேன்மையான பெரிய குடும்பஸ்தராக விருப்பார்.

15. தந்தையி னஸ்தி யல்பந் தனமிகத் தேடு வானும்
பந்தின ராஸ்தி கொள்ளல் பாரினில் சல்லியங் காணன்
நந்தியும் விருத்தி யுண்டு நாயகி மார்க ளிஷ்டன்
இந்தவார் பராசர் சொல்ல இயம்புவார் அத்திரி தாமும்.

15. ஜாதகருக்குத் தன்னுடைய தகப்பனார் சொத்து அற்பமாக விருக்கும். இவர் தானாகவே அதிக தனத்தைச் சம்பாதிப்பார். இவர் தன்னுடைய பந்துக்களுடைய சொத்துக்களையும் அடைவார். இவர் பூமியில் கடன்படமாட்டார். இவருக்கு எருதுகள் விருத்தியாகும். இவர் ஸ்திரீகளிடத்தில் பிரியமாக விருப்பார். ஸ்திரீகளும் இவரிடத்தில் ஆசையாக விருப்பார்கள். இவ்விதமாகப் பராசர முனிவர் சொல்லவே அத்திரிமகரிஷி தடுத்துக் கேட்கின்றார்.

ஜாதகருடைய யோகவிவரம்

16. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்கள் [சொல்வீர்

ஆலமுங் கடக மாக வருக்கனு மிரண்டி லாக
நீலனு மேழில் தங்க நிற்புக ராட்சி யாக
வேல்யோகம் மச்ச யோகம் விளம்பினேம் பால னுக்கு.

16. ஜாதகருக்கு யோகங்களைச் சொன்னதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று அத்திரிமகரிஷியானவர் கேட்கவே பராசரமுனிவர் சொல்லுகின்றார். ஆலம் என்ற இராகு கடகத்திலும் அருக்கன் என்ற சூரியன் இரண்டிலும் நீலன் என்ற சனி ஏழிலும் புகர் என்ற சுக்கிரன் தன்னுடைய சொந்த வீடாகிய துலாத்திலும் இருக்கின்ற தால் வேல்யோகம் என்ற ஒரு யோகமும் மச்சயோகம் என்ற ஒரு யோகமும் ஜாதகருக்கு நேரிட்டிருக்கின்றதென்று சொல்லுகின்றோம் என்று பராசரமுனிவர் பதில் சொல்லுகின்றார்.

குறிப்பு :—(1) வேல்யோக விஷயம் :—வேல்யோகம் என்ன என்பது நமக்குக் கிடைத்த புத்தகங்களிலிருந்து புலப்படவில்லை. இந்தப் பாடலில் சூரியனையும் சுக்கிரனையும் கண்டிருக்கின்றது. சூரியனுக்கு இரண்டில் சுக்கிரன் இருக்கின்றார். சூரியனுக்கு இரண்டில் சுபக்கிரகமாகிய சுக்கிரன் இருப்பது "வேசி"யோகம் என்று பல தீபிகை ஆறுவது அத்தியாயம் எட்டாவது சுலோகம் ஜாதகசிந்தாமணி இரண்டாயிரத்து நாற்பத்தொன்பதாவது பாடல் ஆகிய இவைகளிலும் ஜாதகபாரிஜாதம் முதலிய இதரகிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்த ஜாதகத்தில் வேசியோகம் என்ற யோகம் இருக்கின்றது. ஆகையால் இந்தப் பாடலில் கண்டுள்ள "வேல்" என்பது "வேசி" என்பதற்குப் பதிலாகப் பிழையாக விருக்கலாம் என்ற ஓர் அபிப்பிராயம் தோன்றுகின்றது.

(2) மச்சயோக விஷயம் :—இந்த யோக விஷயமாய் ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றுநாற்பத்தாறுவது சுலோகம் தமிழ் ஜாதகசிந்தாமணி இரண்டாயிரத்து நூற்றைம்பத்தேழாவது பாடல் வரையிலுமுள்ள பாடல் இவைகளைப் பார்க்கவும். இவைகளின் பிரகாரம் லக்கினத்திற்கு ஒன்பதில் ஒருபாபகிரகம் இருந்து ஐந்தாவது பாவத்தில் சுபரும் பாபரும் இருந்து நான்கில் அல்லது எட்டில் பாபரிருந்தால் மச்சயோகம் ஏற்படுகின்றது. இந்த ஜாதகத்தில் ஒன்பதில் பாபர் இருப்பதற்குப் பதிலாக ஒன்பதைச் சனி பார்க்கின்றார். ஐந்தாவது பாவத்தில் சுபரும் பாபரும் கூடியிருப்பதற்குப் பதிலாக ஐந்தைக் குரு பார்க்கின்றார். நான்கு அல்லது எட்டு இந்தப் பாவத்தில் பாபர் இருப்பதற்குப் பதிலாக நான்கையும் எட்டையும் அங்காரகனும்

கேதுவும் பார்க்கின்றார்கள். சூரியனும் எட்டைப் பார்க்கின்றார். இந்தப் பாடலில் இராகு சூரியன் சனி சுக்கிரன் இவர்களைக் கண்டிருக்கின்றதைக் கவனிக்கவும். மேற்கண்ட கிரந்தங்களின் பிரகாரம் மச்சயோகம் முழுவதுமல்லாமல் சுமார் முக்கால்வாசி ஏற்பட்டிருக்கின்றது. இராகு கடகத்திலிருப்பதால் உண்டாகும் ராஜயோக விஷயமாய் தமிழ் ஜாதகாலங்காரம் இருநூற்றுத்தொண்ணூற்றேழாவது பாடலாகிய

"ஆமேட மெருது சுருநண்டு க்ன்னி ஐந்திடத்துங்
கருநாக ம்மர்ந்துகிற்கில் பூமேடைத் தனிற் றுயிலும்
ராஜயோகம்"

என்ற பாடலைப் பார்க்கவும்.

17. பகைவரை நாசஞ் செய்வன் பந்துவு மதிக்க வாழ்வன்
இகபரன் பத்தி பூண்பன் இளைத்தோர்மேல் பிரிய னுவன்
உகமையாய்ப் பேசு வானு முலகத்திற் புகழு மேற்பன்
அகமது சித்திரஞ் செய்வ னதிகபாக் கியமுஞ் சேர்ப்பன்.

17. ஜாதகர் தன்னுடைய எதிரிகளை அழித்து விடுவார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவார். ஏழைகளிடத்தில் ஆசையுடன் இருப்பார். இவர் உபமானம் உபமேயம் என்ற அலங்கார வார்த்தைகளை உபயோகப்படுத்தி அழகாகப் பேசுவார். பூமியில் கீர்த்தியையும் பெருமையையும் அடைவார். இவர் தனது வீட்டைச் சித்திரங்களால் அழகுபடுத்துவார். அதிகமான தனத்தையும் சம்பாதித்தும் சேர்த்தும் வைப்பார்.

18. வெள்ளியின் தசைபிற் பாகம்
விசேஷமாய் யோக மெய்தும்
பள்ளுகள் வணிப மோங்கும்
பாலகன் தசையாண் டின்மேல்
நள்ளிருள் விளக்குப் போலே
நாயகன் குடும்ப மோங்குங்
கள்ளமில் லாமற் சொன்னேங்
கழறுவோம் பின்பால் சேதி.

18. ஜாதகருக்கு வெள்ளி என்ற சுக்கிரதசையின் இரண்டாவது பாகத்தில் அதிக யோகமுண்டாகும். வியாபாரம் விருத்தியடையும். பள்ளு என்ற ஒரு ஜாதி மனிதர்கள் இவரிடம் அதிகமாக வந்து சேருவார்கள். ஜாதகர் தனக்குப் பத்தாவது வயதிற்குமேல் இவருடைய குடும்பமானது நல்ல இருட்டில் எவ்விதம் ஒரு விளக்கு ஜ்வாலிக்குமோ பிரகாசிக்குமோ அதைப்போலப் பிரகாசித்து விருத்தி

யடையும். இவைக்கீ நாங்கள் கபடில்லாமல் ஒளிக்காமல் சொல்லு கின்றோம். இன்னும் அதிகமாகப் பின்னல் சொல்லுகிறோம்.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

19. ஜாதகன் துணைவர் சொல்வோஞ்
சத்திமா ரிருவர் முன்னல்
ஒதுவோம் தீர்க்க மாக
உதித்தசேய் பின்பெண் ணென்று
ஆதவன் போலா ணென்று
அணுகிடுந் தீர்க்க மாகச்
சூதிலா துணைவர் சேதி
செப்புவோம் பின்பா கத்தில்.

19. ஜாதகருடைய சகோதரர்களைப் பற்றி இனிமேல் சொல்லு கின்றோம். இவருக்கு முன்னே பிறந்தவர்களாகிய இரண்டு சகோதரி கள் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். இவருக்குப் பின் னல் ஒரு சகோதரியும் சூரியனைப்போலப் பிரகாசிக்கின்ற ஒரு சகோ தரனும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். கள்ளங் கபடில்லாதவர்களாக விருக்கின்ற கூடப்பிறந்தவர்களின் விஷயங்களைப் பற்றிப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்கள் முதலியன

20. அன்னையின் குணத்தைச் சொல்வே
னன்புள மனத்த ளாகும்
அன்னமு மன்பா யிவள்
அயல்குற்றம் புகலா ளாகும்
அன்னம்போல் வடிவு மொக்கு
மாபத்தென் றோரைக காப்பள்
அன்னவள் வந்த பின்பு
ஆளற்கு யோகஞ் சொல்வோம்.

20. ஜாதகரின் தாயாருடைய குணகுணங்களைப் பற்றி இனி மேல் சொல்லுகின்றேன். இவள் பிறரிடத்தில் ஆசையாயுள்ள மனத்தையுடையவளாக விருப்பாள். இவள் பிறருக்குச் சாப்பாட்டை ஆசையுடன் கொடுப்பாள். பிறர்மேல் கோள் சொல்லமாட்டாள். பிறருடைய தவறுதல்களை எடுத்துக் காட்டிச் சொல்லமாட்டாள். இவள் அன்னப்பறவையைப்போல அழகான உருவத்தையுடைய வளாவள். கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரஞ் செய்து அவர்களைக் காப் பாற்றுவாள். இவள் தன்னுடைய புருஷனிடம் வந்து சேர்ந்த

பிறகு இவளுடைய புருஷனுக்கு யோகம் ஆரம்பிக்கும் என்று சொல்லுகின்றோம்.

21. மாந்துளிர் மேனி யாவள் வாக்கதைக் காப்பா ளாகுங்
காந்தம்போல் புத்தியுண்டு கணவன்தன் மனத்துக்
[கேத்தோள்
சீர்ந்தமுங் கோப மேற்பள் தாயில்ல முள்ளு ராகும்
ஏந்திழை துணைவர் காணுள் இயம்புவீ ரந்தச் சங்கை.

21. ஜாதகருடைய தாயார் மாமரத்தின் துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தையுடையவளாக விருப்பாள். இவள் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுகின்றவளாவாள். காந்தத்தைப்போல வலிக்கின்ற பிரகாசமான கூர்மையான புத்தியையுடையவளாவள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனதிற்கு ஒத்தாற்போல விருப்பாள். இவள் கோபத்தையடைந்து உடனே சாந்தத்தை அடைவாள். இவளுடைய தாயார் வீடு உள்ளூரிலேயே விருக்கும். இவளுக்குச் சகோதரர்கள் கிடையா. இதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று பராசரமுனிவரைக் கேட்டார்.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

22. ஆறினில் கேது தங்க அவள்துணை தோஷ மெய்துங்
காரிழை பூர்வ தோஷங் கலந்த தென்று சொல்வோங்
கூறுவீ ரந்தச் சங்கை கோதைமூன் ஜன்மங் கேளாய்
வாரியி னேர மாக மாபலி நகரிலே தான்.

22. பராசரமுனிவர் பதில் சொல்லுகின்றார். ஆறுவது பாவத்தில் கேது இருப்பதால் ஜாதகருடைய தாயாருக்குச் சகோதரதோஷ முண்டாகும். இதற்குக் காரணம் இவளுடைய முன்ஜன்மத்திய வினை இவளை வந்தடைந்ததேயாகும் என்று சொல்லுகின்றோம். அந்தத் தோஷத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே பராசரமுனிவர் பதில் சொல்லுகின்றார். இவளுடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. சமுத்திரத்தின் ஓரமாகவுள்ள மஹாபலிபுரம் என்ற ஊரில் ;

குறிப்பு :—ஜாதகரின் தாயாருக்குச் சகோதரதோஷ விஷயம் :—மாதுருஸ்தானம் நான்காவது பாவமாகிய விருச்சிகம் ஆகும். இதற்கு இளைய சகோதரஸ்தானம் மூன்றாவது வீடாகிய மகரம் ஆகும். இந்த மகரமே ஜாதகருடைய ஜன்மலக்கினமாகிய சிம்மத்திற்கு ஆறுவது பாவமாகும் ஆகையால் இந்தப் பாடலில் ஆறுவது பாவத்தில் கேது இருப்பது தாயாருக்குச் சகோதரதோஷம் என்று சொல்லியிருக்கின்றது. விருச்

சுகத்திற்கு மூன்றிற்குடையவரான சனியை அங்காரகன் பார்த்திருப்பது இளையசகோதர தோஷமாகும். இளைய ஆண் சகோதரகாரகராகிய புதனைச் சனி பார்ப்பதும் அங்காரகன் கூடியிருப்பதும் சகோதர தோஷமாகும். விருச்சிகத்திற்கு மூத்தசகோதர ஸ்தானமாகிய பதினோராவது பாவம் என்ற கன்னியில் சூரியன் இருப்பது மூத்தசகோதர தோஷமாகும். மூத்த ஆண் சகோதரகாரகராகிய குரு விருச்சிகத்திற்கு எட்டாவது பாவத்தில் மறைந்திருப்பதும் தோஷமாகும். மூத்த சகோதர ஸ்தானாதிபதியாகிய புதன் அங்காரகனுடன்கூடி சனியால் பார்க்கப்பட்டிருப்பதும் மூத்தசகோதர தோஷமாகும்.

23. பிறந்தனள் செக்கான் வம்சம்
பேதையும் வாழுங் காலில்
வரன்தம்பி மனைவி பேரில்
வருணித்தாள் கிந்தை வார்த்தை
யிரவையுந் திகில டைந்து
அறைந்தசா பத்தைக் கேண்மோ
குறையான வார்த்தை யென்மேற்
கூறின பாவிக்கே தான் ;

23. ஜாதகருடைய தாயார் செக்கை ஒட்டுகின்ற ஒரு செட்டியார் குலத்தில் பிறந்து வாழுகின்ற காலத்தில் தன் புருஷனுடைய இளைய சகோதரனின் மனைவியின்மேல் அபவாதமான கெட்ட வார்த்தைகளை உபயோகப்படுத்தி பிரசங்கஞ் செய்தாள். அதன்மேல் அந்த மனைவி தன்னுடைய மனத்தில் பயத்தையுடையவளாகி நடுங்கிக் கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. "என்மேல் அபாண்டமான இழிவான வார்த்தைகளைச் சொல்லிய பாவியாகிய உனக்கு ;

24. மற்றொரு ஜன்மந் தன்னில்
மைத்துனன் மூத்தோ ரின்றிச்
சுத்தமாய்த் துணையு மின்றித்
தொல்புவி தன்னில் வாழ்வாய்
இத்தகை சொல்லும் போது
வதிதிக ளதாஸ்து வென்ன
பற்றிற்று அந்தச் சாபம்
பார்வதி கேட்டி டாயே.

24. மறுஜன்மத்தில் மைத்துனர்களும் மூத்தார்மார்களும் இல்லாமலும் உனக்குச் சகோதரர்களும் இல்லாமலும் இந்தப் பழமையான உலகத்தில் வாழக்கடவாய்" என்று ஜாதகருடைய தாயாரைப் பார்த்துச் சொன்னாள். இவ்விதமாக இவள் சொல்லும்போது ஆகாயமார்க்

கத்தில் யாருக்குங் கண்ணிற்குத் தெரியாமல் பறந்து கொண்டிருந்த அதிதிகளாகிய சித்தர்கள் தேவர்கள் முனிவர்கள், "அதாஸ்து" அஃதாவது இவள் சொன்ன பிரகாரமே நடக்கக்கடவது என்று சொல்லவே, அதேவிதமாக அந்தச் சாபம் இவளை வந்து அடைந்தது. பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய பின்ஜன்மம்

25. மாதுவோ தோஷம் காண்பாள் வரன் முன்னே
[மரணமாகி
வேதியன் வரையப் பட்டு விளங்கிழை விந்த மாது
காதலி தூணையுங் காணாள் கழருவோ மிவள்பின் சென்மம்
தீதுகள் விலக்கு கின்ற திருவிட மருதூர் தன்னில்.

25. ஜாதகரின் தாயார் தோஷத்தை யடைந்து தன்னுடைய புருஷனுக்கு முன்னமே இறந்து பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப் பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். இவளுக்குச் சகோதரர்கள் கிடையா. இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். பாபங்களைப் போக்கடிக்கின்ற திருவிடைமருதூர் என்ற திவ்விய க்ஷேத்திரத்தில்;

ஜாதகரின் தாயாருடைய மரணம் (தாய் கர்மம்)

26. பிறப்பளாம் வேளாண் வம்சம் பெரிதான குடும்பி யாவள்
கரும காலங்கள் தன்னைக் கழருவீர் முனியே நீர்தான்
பிறைநிசை காலந் தன்னில் புதல்வனுக்கு முப்பா லலில்
மருவிடு மன்னை கெண்டம் வரைந்திடும் மொழி குன்றாது.

26. ஜாதகருடைய தாயார் தன்னுடைய பின் ஜன்மத்தில் வேளாளர் குலத்தில் பிறந்து ஒரு பெரிய குடும்பியாக விருப்பாள். இவளுடைய மரணகாலத்தை முனிவரே! நீர் சொல்லுவீர் என்று கேட்கவே பராசர முனிவர் சொல்லுகின்றார். பிறை என்ற சந்திர தசையில் ஜாதகருக்கு முப்பத்து நான்காவது வயதில் தன்னுடைய தாயாருக்கு மரணம் நேரிடும். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிப் போகாமல் நடக்கும்.

குறிப்பு:—மாதுருமாரக விஷயம்:—ஜாதகருக்கு வயது வருஷம் 33-0-0 முதல் வயது வருஷம் 34-0-0 முடியும் வரையில் சந்திர தசையில் புதபுக்தி நடக்கின்றது. மாதுருலக்கினம் நான்காவது பாவமாகிய விருச்சிகமாகும். விருச்சிக லக்கினத்திற்குப் பராசர ஹோரை ஜாதகசந்திரிகை ஜம்பதெட்டாவது சுலோகம் ஆகிய இவைகளின் பிரகாரம் புத அங்காரகன் சுக்கிரன் ஆகிய இவர்கள் மாரகராகின்றார்கள். புதன் விருச்சிகத்திற்கு மாரக ஸ்தானங்களாகிய

எட்டிற்கும் பதினொன்றிற்கும் உடையவராக விருக்கின்றார். அங்காரகன் குமாரசாமியம் மகாதசைப் பலப்படலம் நான்காவது பாடல் பிரகாரம் மாரகஸ்தானமாகிய ஆறுவது பாவத்திற்குடையவராக இருக்கின்றார். ஆகையால் மாரகராக நேரிடுகின்ற புதன் அங்காரகன் ஆகிய இவர்களுடன் சம்பந்தப்பட்ட சந்திரன் ஜாதக சந்திரிகை இருபத்து மூன்றுவது சுலோகப் பிரகாரம் ஜாதகருடைய தாயாருக்குத் தனது தசையில் மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராகின்றார். மேலும் ஒரு காரகர் தான் குறிக்கும் மனிதர்களுக்கு மரணத்தைத் தன்னுடைய தசாகாலத்தில் செய்வார் என்று நாடிக்கிரந்தங்களிலும் ஜோதிட சாஸ்திரங்களிலும் கண்டிருக்கின்றது. சந்திரன் மேற்கண்ட காரணங்களினால் தன்னுடைய தசையில் மாதாவுக்கு மாரகத்தைச் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். புதன் மேற்கண்ட காரணங்களால் தன்னுடைய புக்தியில் ஜாதகருடைய மாதாவுக்கு மாரகஞ்செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

ஜாதகரின் தகப்பனுரது மாரகமும் (பிதுர்கர்மமும்) மறுஜன்மமும்

27. இருபது ஆறுவாண்டி லிடருண்டு தந்தைக் கேதான்
மரலியைக் காணு ளுகும் மதிதிசை பூர்வந் தன்னில்
உரைகிறேம் பிறகு கண்ட முடல்நீங்குந் தந்தைக்
[கென்றேம்
வருஞ்ஜன்மம் காஞ்சி தன்னில் வருவனுஞ்
[சௌராஷ்டிர வம்சம்.

27. ஜாதகருடைய தகப்பனுருக்கு இருப்பத்தாருவது வயதில் கண்டம் நேரிடும்; ஆனால் இவர் அப்போது எமதரிசனத்தை அடையமாட்டார், அஃதாவது அப்போது இறந்துவிடமாட்டார். மதி என்ற சந்திரனது தசையில் முதல் பாகத்தில் ஜாதகருடைய தகப்பனுருக்குக் கண்டம் நேரிடும் என்று சொல்லுகின்றேம். இந்தக் கண்டத்தினால் இவர் இறந்து இவருடைய தேகம் மறைந்துபோய்விடும் என்று சொல்லுகிறேம். இவர் தன்னுடைய பின் ஜன்மத்தில் காஞ்சீநகரத்தில் சௌராஷ்டிரவம்சம் என்கிற பட்டுநூல்காரர் என்கிற ஜாதியில் பிறப்பார்.

குறிப்பு :—ஜாதகருடைய பிதுருமாரகம் :—ஜாதகருக்கு வயது 25-0-0 முதல் வயது வருஷம் 26-0-0 முடியும் வரையில் சூரிய தசையில் புதன் கேது சுக்கிரன் ஆகிய இவர்களுடைய புக்திகள் நடக்கின்றன. பிதுர் லக்கினம் ஒன்பதாவது பாவமாகிய மேஷம் ஆகும். மேஷ லக்கினத்திற்குப் பராசரரேஹாரை ஜாதக சந்திரிகை நாற்பத்து மூன்றுவது நாற்பத்து நான்காவது சுலோகங்கள் ஆகிய இவைகளின் பிரகாரம் சுக்கிரன் புதன் சனி ஆகிய இவர்கள் மாரகராகின்றார்கள். ஜாதக சந்திரிகை நாற்பத்

இரண்டாவது சுலோகப் பிரகாரம் சூரியன் சுபராகின்றார். சூரியன் மேஷத்திற்கு ஆறில் இருப்பதால் குமாரசாமியம் மகாதசைப் பலப்பட லம் நாலாவது பாடல் பிரகாரமும் ஜாதக சந்திரிகை இருப்பத்து மூன்று வது சுலோகப் பிரகாரமும் மாரகராய் இருந்தபோதிலும் சூரியன் சுபரான படியால் கண்டத்தை மாத்திரம் காட்டி மாரகத்தைச் செய்யாமல் விட்டு விடஅமைப்பு உள்ளவராக விருக்கின்றார். ஆனால் சந்திரன் மாரகாதி பதியாகிய புதனுடன்கூடி இருப்பதாலும் மேஷத்திற்கு லக்கினாதி அஷ்டமாதிபதி யாகிய அங்காரகனுடனும் கூடியிருப்பதாலும் ஜாதக சந்திரிகை இருபத்து முன்றாவது சுலோகப் பிரகாரமும் துய்ய கேரளம் எட்டாம்பாவம் இருபதாவது பாடல் பிரகாரமும் சந்திரன் தன்னுடைய தசையில் 26-10 20 க்கு மேல் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். பெரும்பாலும் தன்னுடைய சுயபுக்தியிலேயே மாரகஞ் செய்துவிடுவார்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயங்களும்

28. பதினாறு வாண்டு தன்னில் பாவையும் வடபால் நேரு
மதிபதி குணத்தைச் சொல்லேன் மங்கள வார்த்தை
[கூறுவள்
சதியிலா மனத்த ளாகும் தரணியில் நல்லோ ளாவள்
துதிசெய்தோர்க் குதவு வாளாந் தோகையுந் தீர்க்க ஜீவி.

28. ஜாதகருக்கு பதினாறுவது வயதில் வடக்குத் திக்கிலிருந்து மனைவி வந்து நேரிடுவாள். இவளுடைய குணங்களைப்பற்றிச் சொல்லு கின்றேன். இவள் அழகிய நல்ல வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் கெடுதியில்லாத நல்ல மனத்தையுடையவளாவள். இவள் பூமி யில் நல்லவளாக விருப்பாள். இவள் தன்னைப் பெருமையாகப் புகழ்ந்து பேசிப் போற்றுகின்றவர்களுக்கு உபகாரஞ் செய்வாள். இவள் நீண்ட ஆயுளை யுடையவளாவள்.

குறிப்பு :—விவாககால விஷயம் :—ஜாதகருக்கு வயது 15-0-0 முதல் வயது 16-0-0 முடியும் வரையிலும் சுக்கிர தசையில் சனிபுக்தி நடக் கின்றது. சுக்கிரன் களத்திரகாரகனாகிச் சிம்ம லக்கினத்திற்கு விவாக சம்மந்தமான பத்தாவது பாவாதிபதியாகி விவாக சம்மந்தமான ஒன்பதாவது பாவத்தைப் பார்க்கின்றார். ஆகையால் ஜாதக பாரி ஜாதம் பதினான்காவது அத்தியாயம் இருபத்தெட்டாவது சுலோகப் பிரகாரம் சுக்கிரன் தன்னுடைய தசையில் விவாகஞ் செய்து வைக்கும் அமைப்பு உடையவராக விருக்கின்றார். சனி களத்திர ஸ்தானாதிபதி யாகி களத்திரஸ்தானத்திலேயே இருந்துகொண்டு போகஸ்தானமாகிய நான்காவது பாவத்தைப் பத்தாவது பார்வையுடன் பார்க்கின்றார். இவர் ஒன்பதாவது பாவத்தையும் பார்க்கின்றார். லக்கின பாவத்தை

யும் பார்க்கின்றார். ஆகையால் இவர் தனது புத்தியில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்க அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

ஜாதகருடைய புத்திரபாவமும் முன் ஜன்மமும்

29. பாலகன் மனத்துக் கேத்தோள் பாலர்கள் பலத்தைச்
[சொல்வேன்
சாலவே யாண்பா லிரண்டு சத்திமார் மூவ ரென்றோம்
ஏலவே யிவனின் பூர்வ மியம்புவோந் தவளை தன்னில்
ஞாலங்கள் விருத்தி செய்யும் நற்சைவ குலமுதித்து ;

29. ஜாதகருடைய மனைவி இவருடைய மனத்திற்கு ஒத்தாற் போல நடந்துகொள்ளும் தன்மையுடையவளாவள். இவர்களுக்குப் புத்திர பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர்களுக்கு நன்மையாய் இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் உண்டு என்று சொல்லுகின்றோம். இவர் தவளை என்ற ஊரில் பூமியைப் பயிரிட்டுத் தானியங்களை உற்பத்தியாக்குகின்ற நல்ல சைவருடைய குலத்திற் பிறந்து.

30. அருகர்தம் பத்தி யாகி யணுகினன் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
வறுமையெப் போதுங் காணன் வணிபங்கள் பலவாய்ச்
[செய்வன்
தரைசேர்ப்பன் புகழு மேற்பன் தன்பந்து மதிக்க
[வாழ்வன்.

30. ஜாதகர் கடவுளின்மேல் அன்பும் ஆசையுமுடையவராகி இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். இவர் எந்தக் காலத்திலும் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்க மாட்டார். அநேகவிதமான வியாபாரங்களைச் செய்வார். இவர் நிலங்களையும் மனைகளையும் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். நல்ல கீர்த்தியையும் பெருமையையும் அடைவார். தன்னுடைய பந்துக்கள் இவரை மேன்மையாகப் பாராட்டும்படியான அந்தஸ்தில் இருந்து இவர் வாழ்வார்.

ஜாதகருடைய மரணகால விஷயம்

31. பொன்னவன் தசைகா லத்திற் புதல்வன்தன் னுடல
[மேகும்
மன்னிய அருபா னேழி லாவணி மாதந் தன்னில்
முன்பக்கம் சஷ்டி தன்னி லுதித்தசே யுடல மேகுங்
கன்னென மொழியை யொக்குங் காதலி புகன்றிட்
[டோமே.

31. ஜாதகர் பொன்னவன் என்ற குருவினுடைய தசை நடக்கின்ற காலத்தில் இறந்து இவருடைய தேகம் மறைந்துபோய்விடும். இவருக்கு அறுபத்தேழாவது வயதில் மேன்மையான ஆவணி மாதத்தில் வளர்பிறையில் சஷ்டி திதியில் இவர் இறந்து இவருடைய தேகம் அழிந்துவிடும். சர்க்கரையைப்போல் இனிமையாக விருக்கும் வார்த்தைகளை உபயோகிக்கின்ற பார்வதியம்மையே! நாங்கள் சொல்லி விட்டோம்.

குறிப்பு :—ஜாதகருடைய மரணகால விஷயம் :—ஜாதகருக்கு அறுபத்தேழாவது வயதில் ஆவணி மாதத்தில் குரு தசையில் புதபுக்தி நடக்கின்றது. சிம்ம லக்கின ஜாதகத்திற்குப் பராசரஹோரை ஜாதக சந்திரிகை ஐம்பத்திரண்டாவது சுலோகம் ஆகிய இவைகளின் பிரகாரம் புதன் சுக்கிரன் இவர்கள் மாரகராகின்றார்கள். புதன் மாரக ஸ்தானங்களாகிய இரண்டு பதினொன்றிற்குடையவராய் லக்கினத்திலேயே இருக்கின்றார். ஆகையாலும் புதன் ஜாதகசந்திரிகை இருபத்திரண்டாவது இருபத்தாருவது சுலோகங்களின் பிரகாரம் மாரகராகின்றார். குரு மாரகஸ்தானமாகிய எட்டாவது பாவத்திற் குடையவராகி மாரகாதிபதியாகிய புதனுடைய வீட்டில் மாரகஸ்தானமாகிய பதினேழாவது பாவத்தில் இருக்கின்றார். ஜாதக சந்திரிகை இருபத்து மூன்றாவது சுலோகப் பிரகாரமும் துய்யகேரளம் எட்டாம் பாவம் பதினொன்கானது பாடல் பிரகாரமும் கார்க்கோயர் ஜோதிடம் என்ற கார்க்கேயர் நாடி அறுநூற்றெழுபத்து நான்காவது பாடல் பிரகாரமும் குமாரசாமியம் மகாதசை பலப் படலம் நான்காவது பாடல் பிரகாரமும் குரு ஜாதகருக்குத் தன்னுடைய தசையில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார். புதன் மேற்சொல்லிய காரணங்களால் தனது புக்தியில் மாரகஞ் செய்ய அமைப்பு உடையவராக விருக்கின்றார்.

ஜாதகருடைய பின்ஜனமும் ஜனன தசை இருப்பும்

32. மறுஜன்மந் தணிகை தன்னில் வருவனும் ரெட்டி வம்சம்
பொருளது பெருக்க முண்டாய்ப் புகழுடன் வாழ்வா
[னுகுந்
திருமகன் ஜனன காலஞ் சிகிதசை திங்கள் பத்தும்
மருவிடும் மிருபான் ஒட்கள் வரைந்தனம் பூர்வ பாகம்.

32. ஜாதகர் தன்னுடைய பின் ஜன்மத்தில் தணிகை என்ற திருத்தணிகை க்ஷேத்திரத்தில் ரெட்டியாருடைய குலத்திற் போய்ப் பிறப்பார். இவர் பின்ஜன்மத்தில் அதிகமான சொத்து உடையவராகவும் கீர்த்தியுடனும் இருந்தும் வாழ்பவராவர். இவர் பிறந்த காலத்தில் சிகி என்ற கேதுவின் தசை பத்து மாதங்களும் இருபது நாட்களும் இருப்பு ஆகும். இவ்விதமாக இவருடைய முதல் பாகத்தைச் சொல்லி முடித்தோம்.

ஜாதகம் 93

ஜனனகால கிரகநிலை

1. சிங்கலக் கினம தாகச் சனிநாலில் கேது வாறில்
[1]திங்களு மெட்டிற் செம்[2]பொன் னும் [3]புகரும் பத்தில்
[4]மங்கலன் புதனும் [5]லாபம் [6]மார்த்தாண்டன் [7]பணியீ
[ராறில்
அங்கது பலன்க ளெவ்வா றறிவிப்பீர் முனியே நீர்தாம்

1. ஜன்ம லக்கினம் சிம்மமாக விருந்து, நாலில் சனியும், ஆறில் கேதுவும், எட்டில் சந்திரனும், பத்தில் குருவும் சுக்கிரனும், பதினொன்றில் அங்காரகனும் புதனும், பன்னிரண்டில் சூரியனும் இராகுவும் இருந்தால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதை, முனிவரே ! நீர் சொல்லுவீராக.

கிரகநிலை

சந்திரன்		குரு சுக்கிரன்	அங்காரகன் புதன்
	இராசி சக்கரம்		சூரியன் ராகு
கேது			லக்கினம்
	சனி		

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கரகிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மிதுனத்தில் புதனும், கடகத்தில் சூரியனும் ராகுவும், சிம்மத்தில் சந்திரனும் குருவும், கன்னியில் சுக்கிரனும், விருச்சிகத்தில் அங்காரகனும், மகரத்தில் கேதுவும், கும்பத்தில் சனியும் ஆகும்.

ஜனனநாட்டுச் சிறப்பு

2. குறுமுனி புகலு கின்றார் குறித்தது வாண்பால் ஜன்மம்
வருமில்லம் வடதென் வீதி வாசலு மேல்பால் நோக்கம்
அரன்கோஷ்டம் மாரி யுத்தர மாளிவா கனத்தோள்
[கீழ்ப்பால்
சிறுவூராங் கங்கை சேயாய் ஜனிப்பனு மிந்தப் பாலன்.

---

1. சந்திரன்
2. குரு
3. சுக்கிரன்
4. அங்காரகன்
5. பதினொன்று
6. சூரியன்
7. இராகு

2. குறுமுனி என்ற அகஸ்திய மகரிஷி சொல்லுகின்றார். இந்த ஜாதகத்திலுல் குறிக்கப்பட்ட குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேற்குப் பார்த்த வாசற்காலையுடையதாகும். சிவபெருமானுடைய கோவிலும் மாரியம்மன்கோவிலும் வடக்குத்திக்கில் இருக்கும். சிம்மவாகனத்தையுடைய காளியம்மன் கோயில் கிழக்குத்திக்கில் இருக்கும். இவ்விதமான அடையாளங்களையுடைய ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜாதகர் கங்கைகுளம் என்ற வேளாளர் குலத்திற் பிறப்பான்.

ஜாதகரின் தகப்பனுருடைய விஷயம்

3. பாலகன் ஜனன யோகம் பெற்றதாய் தந்தை யோகம்
ஏலவே துணைவர் யோகம் இவன்பாரி புத்திரர் யோகங்
கோலமாம் முன்பின் ஜன்மங் கூறுவோ மிந்நூல்
[தன்னில்
ஆலத்தை யுண்டோன் தேவி யறிவிப்போம் பிதாவின்
[சேதி.

3. ஜாதகருடைய யோகவிஷயம், இவரைப் பெற்றெடுத்த தாயார் தகப்பனார் ஆகிய இவர்களுடைய யோகவிஷயம், ஜாதகருடைய கூடப் பிறந்தவர்களின் யோகம் இவருடைய மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோக விஷயம, முன்ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளை எல்லாம் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம். விஷத்தை அருந்திய சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே! ஜாதகரின் தகப்பனுருடைய விஷயத்தை இனிமேல் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரர்கள்

4. தந்தையின் துணையா ணிண்டு சத்திமார் மூன்றே யாகும்
அந்தவாண் ஒன்றுய் வாழ்ந்து அவர்பின்னல் வேறுய்ச்
[செல்வர்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகருடைய தகப்பனுருக்கு இரண்டு சகோதரர்களும், மூன்று சகோதரிகளும் உண்டு. இந்தச் சகோதரர்கள் முதலில் இவருடன்கூடவே ஒன்றுக விருந்து வாழ்ந்து பின்னல் வேறு குடும்பஸ்தர்களாகப் பிரிந்து விடுவார்கள். இந்தச் சகோதரர்களுடைய விஷயங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். இனிமேல் தகப்பனுருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய குணநிசயங்கள்

5. மால்நிறஞ் சமதே கத்தான் மருமமில் லாதா னகும்
ஞாலத்தால் உய்வா னகும் நற்றந்தை யூரில் வாழ்வான்
சீலவான் மிதட்டதில் செல்லுவான் தென்கீழ் தன்னில்
வேலன்மேல் பத்தி கொள்வன் வேண்டினோர்க் குதவி
[செய்வன்.

5. ஜாதகருடைய தகப்பனர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீல மேக வர்ணம் என்ற ஒரு விதமான நிறத்தையுடையவர். சம அளவுள்ள நடுத்தரமான தேகத்தை யுடையவர். இவர் தன்னுடைய மனத்தில் இரசியமானதை யுடையவரல்லர். இவர் நிலங்களால் ஜீவிப்பவராவார். தன்னுடைய நல்ல தகப்பனருடைய ஊரில் இருந்து வாழ்வார். நல்ல ஒழுக்கத்தையுடையவர். மிதக்கின்ற கருவியாகிய கப்பலில் தென் கிழக்குத் திக்கில் பிரயாணஞ் செய்வார். இவர் ஆறுமுகக் கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராவர். தனக்கு இஷ்டமானவர் களுக்கும் தேவையுடையவர்களுக்கும் உபகாரத்தைச் செய்வார்.

6. ரோமங்க ளதிக மில்லான் நுண்ணிய புத்தி யுள்ளான்
தீமையை யொருவர்க் கெண்ணன் தேவதா தலங்கள்
[செல்வன்
சேமமாங் குடும்பி யாவன் செய்நன்றி மறவா னவன்
ஆமதைச் செய்வா னவ னறிவுளான் கல்வி மானும்.

6. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய தேகத்தில் ரோமங்கள் அதிகமாக இல்லாதவராவர். இவர் கூர்மையும் நுட்பமுள்ள அறி வையுடையவர். இவர் யாருக்குஞ் கெடுதியைச் செய்ய நினைக்க மாட்டார். இவர் தெய்வ ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வார். இவர் சௌக்கியமாக விருக்கின்ற குடும்பஸ்தராவர். இவர் தனக்குப் பிறர் செய்கின்ற உபகாரத்தை மறக்காதவராக விருப்பார். இவர் வீட்டைக் கட்டுவார், புத்தியுள்ளவராவர்.

7. இருவூரில் பூமி சேர்ப்பன்
ஏவலா ளுடைய னவன்
வருமன்னி தன்னல் யோகம்
மனதீர முடைய னவன்
தரையதை விருத்தி செய்வன்
தன்பந்துக் கிணக்கஞ் சொல்லான்
உரகன்போல் கோப மேற்பன்
உண்டியில் வறுமை காணன்.

7. ஜாதகருடைய தகப்பனார் இரண்டு கிராமங்களில் நிலங்களையும் மனைகளையும் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் வேலையாட்களை யுடையவராவர். இவருக்குத் தன்னுடைய தாயார் மூலமாக யோகம் வந்து சம்பவிக்கும். இவர் தன்னுடைய மனத்தில் தைரியமுடையவராக விருப்பார். இவர் நிலத்தைப் பயிர் செய்து தானியங்களை விளை விப்பார். இவர் தன்னுடைய பந்துக்களுக்கு அடக்கமாக விருக்க மாட்டார், இவருக்குப் பாம்பிற்குக் கோபம் வருவதைப்போலக் கோபம் வரும். இவர் சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டத்தையும் தரித்திரத்தை யும் அடையமாட்டார்.

ஜாதகருடைய குணநிசயங்கள்

8. இங்கெறி யுடையா னுக்கு விப்பாலன் னுதிப்பா னவன்
அன்னவன் குணத்தைச் சொல்வே னழகுளான் வாத
[தேகி
சொன்னதைக் காப்பா னவன் தொடுத்ததை வெல்வா
[னவன்
உன்னத தேகி யாவ னுறுதியில் லாத நெஞ்சன்.

8. இப்படிப்பட்ட குணநிசயங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இனிமேல் ஜாதகருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் அழகுள்ளவராக விருப்பார் வாத தேகத்தை யுடையவராக விருப்பார். இவர் தான் சொல்லியவார்த்தைகளைத் தவறவிடாமல் காப்பாற்றுவார். இவர் தான் செய்ய எடுத்தக் காரி யங்களைச் செய்து முடிக்குஞ் சாமர்த்தியத்தையுடையவராவர். இவர் மேன்மையானதும் உயரமானதுமான நீண்ட தேகத்தையுடையவராவர். இவருடைய மனம் தைரியமில்லாததாக விருக்கும், நிலையில்லாததாக வும் விருக்கும்.

9. வித்தையுஞ் சமம தாகும் விவேகியா மெவர்க்கு நல்லன்
சத்தியங் கூரு னவன் சங்கையென் றோரைச் சாரான்
குத்தத்தை மனத்தில் வையான் குணமது விரண்டு
[முள்ளான்
நத்தினோர்க் குதவி செய்வன் நாயகன் சல்லிய
[மேற்கான்.

9. ஜாதகருக்குப் படிப்பு நடுத்தரமானதாக விருக்கும. இவர் அறிவுடையவராவர். எல்லோருக்கும் நல்லவராக விருப்பார். இவர் சத்தியஞ் செய்யமாட்டார். பயங்கரமாக விருக்கின்றது, சந்தேகமாக விருக்கின்றது என்று சொல்லுகின்றவர்களுடன் சேரமாட்டார். இவர் தன்னுடைய மனத்தில் குற்றத்தையும் வஞ்சனையையும் வைத்துக்

கொண்டிருக்கமாட்டார். இவரிடம் இரண்டுவிதமான, அஃதாவது நல்ல குணம் கெட்ட குணம் இவை கலந்து இருக்கும். தன்னை வந்து அடைந்தவர்களுக்கு இவர் உபகாரத்தைச் செய்வார். இவர் கடன் வாங்கமாட்டார்.

10. தந்தைக்கு மேலாய் வாழ்வன் சதுஷ்பாதம் விருத்தி [யுள்ளான்.
நிந்தைக ளேற்கா னுவன் நீலிமார் மோக னுவன்
வந்தவர்க் கன்ன மீவன் மாமிக னிரண்டே யாகும்
சுந்தர முடைய னுவன் சோம்பலுங் கொஞ்ச முண்டு.

10. ஜாதகர் தன்னுடைய தகப்பனர் இருந்த அந்தஸ்திற்கு மேற்பட்ட அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவரிடம் கால் நடைகள் விருத்தியாகும். இவர் அபவாதங்கள் பழிகள் ஒன்றையும் அடைய மாட்டார். இவர் ஸ்திரீகளிடத்தில் காம ஆசையை யுடையவராவர். ஸ்திரீகளும் இவரிடத்தில் ஆசையுள்ளவர்களாக விருப்பார்கள். இவர் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். இவருக்கு இரண்டு மாமிமார்கள் உண்டு. இவர் அழகை யுடையவராவர். இவர் சிறிது சோம்பல் குணத்தையும உடையவராவர்.

குறிப்பு :—இந்தப்பாடலில் ஜாதகருக்கு இரண்டு மாமிமார்கள் உண்டு என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பின்வரும் இருபத்து நான்காவது பாடலில் இவருடைய தாயாருக்குச் சகோதரர் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. பதினேழாவது பாடலில் இவருடைய மனைவிக்கு இரண்டு தாய்மார்கள், அஃதாவது மாமனாருக்கு இரண்டு தாரம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் இந்தப் பாடலில் வருகின்ற "மாமிகள் இரண்டு" என்பதை ஜாதகருக்கு மனைவியைச் சார்ந்த இரண்டு மாமியார்கள் உண்டு என்று அர்த்தங்கொள்ள வேண்டுமே தவிர தாயாருடன் கூடப் பிறந்த அம்மான்மார்களின் மனைவிகளாகிய மாமிமார்கள் இருவர் என்று அர்த்தங் கொள்ளக் கூடாது.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதர பாவம்)

11. தன்துணை யாண்பா லொன்று சத்திமார் மூவ ராவர்
அன்தவா னிளையோ னுவ னனைகிழே மவன்கு ணத்தை
முன்கோபி தந்திர வார்த்தை மொழியது இரண்டு மாகும்
கன்மனங் கொஞ்ச முண்டு காசுவீண் செலவு செய்யான்.

11. ஜாதகருடன் கூடப்பிறந்தவர் ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் ஆவார்கள். இந்தச் சகோதரர் ஜாதகருக்கு இளைய சகோதரராவர். இந்தத் தம்பியினுடைய குணத்தைச் சொல்லுகின்

ரும். இவர் முன்கோபத்தையுடையவர். தந்திரமானதும் உபாய முள்ளதுமான வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். இரண்டுவித மான வார்த்தைகளை, அஃதாவது உண்மையும் பொய்யுங் கலந்த வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். இவர் கெட்டியானதும், இரக்க மில்லாததுமான மனத்தைச் சிறிது உடையவராவர். இவர் பணத்தை வீண்வழியிலும் கெட்ட விதத்திலும் செலவு செய்யமாட்டார்.

12. தரணியா லுய்வா னவன்
சாதமுங் குறைவு றுதான்
பொருள்கடன் கொள்ளா னவன்
பிதிருபூமி விருத்தி செய்வன்
அரிவையர் மோக னவன்
அடாவடி கொஞ்ச முண்டு
உரைப்பதில் சிலேடை யுண்டு
வுண்மையை வெளிவி டாதான்.

12. ஜாதகருடைய இளைய சகோதரர் நிலங்களைப் பயிரிட்டு ஜீவனஞ் செய்பவராவர். இவருக்குச் சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டம் ஏற்படாது. இவர் பணம் கடனாக வாங்கமாட்டார். இவர் தன் னுடைய தகப்பனாருடைய நிலங்களை விருத்தியாக்குவார். இவர் ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை யுடையவராவர், ஸ்திரீ களும் இவரிடத்தில் ஆயுடன் விருப்பார்கள். இவரிடத்தில் அடா வடித்தன்மை அஃதாவது காரணமில்லாமல் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளுங்குணம் சிறிது உண்டு. இவர் தான் பேசுவதில் இரண்டு அர்த்தங்களைத் தரக்கூடிய அலங்காரமான வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். இவர் தன்னுடைய மனத்திலிருக்கும் உண்மையான விஷயத்தை வெளியே காட்டிக் கொள்ளமாட்டார், சொல்லவும் மாட்டார்.

13. பாரியு மொன்றே தீர்க்கம் பாலர்கள் ஆண்பால் மூன்று
காரியு மிருவ ராவர் நாயகன் வயது தீர்க்கங்
காரியச் சமர்த்த னவன் கனமான குடும்ப மேற்பன்
வேரு தாய்ச் செல்வா னவன் வெள்ளியின் தசையங்
[தியத்தில்.

13. ஜாதகருடைய இளையசகோதரருக்கு மனைவி ஒருத்தியாகும். அவள் நீண்ட வயதை யுடையவளாவாள். இவர்களுக்கு மூன்று ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு. இளைய சகோ தரர் நீண்ட ஆயுளை உடையவராவார். இவர் வேலைகளைச் செய்து முடிப்பதில் சாமர்த்திய முடையவராவார். இவர் பெரிதும் மேன்மையா

னதுமான குடும்பத்தை உடையவராக ஆவார். இவர் தன்னுடைய தமயனுரிடமிருந்து பிரிந்துவேறொரு தனி குடும்பஸ்தராகப் போய்விடுவார். இவ்விதமான பிரிவு வெள்ளி என்ற சுக்கிரன் தசையின் கடைசியில் நேரிடும்.

ஜாதகரது விவாகமும் மனைவியின் குணங்களும்

14. இன்னமும் மர்மங் கேட்கி லியம்புவோம் பின்பா கத்தில்
மன்னவன் மணத்தின் காலம் வரைகிறே மிருபா
[னெட்டில்
கன்னிகை யுள்ளூர் மேற்கிற் கலப்பளாங் குணத்தைச்
[சொல்வேன்
பொன்னிற முடைய ளாவள் புகழ்ந்தோரை யாத ரிப்பள்.

14. ஜாதகருடைய இளைய சகோதரரின் விஷயங்களைப் பற்றி இன்னும் அதிகமாகக் கேட்பீராகில் அவைகளைப் பின் பாகத்தில் சொல்லுகின்றேரும். ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவருக்கு இருபத்தெட்டாவது வயதில் மனைவி உள்ளூரிலேயே மேற்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றி சொல்லுகின்றேன். இவள் பொன்னின் நிறத்தைப் போன்ற மஞ்சள்நிறமுடையளாவள். இவள் தன்னைப் புகழ்ந்து பெருமையாகப் பேசுகின்றவர்களைக் காப்பாற்றுவாள்.

குறிப்பு :— விவாக கால விஷயம் :— ஜாதகருக்கு வயது வருஷம் 27-0-0 முதல் வயது வருஷம் 28-0-0 முடியும் வரையில் புததசையில் ராகு புக்தி குரு புக்தி இவை நடக்கின்றன. புதன் களத்திர சம்மந்தமான இரண்டாவது பாவத்திற்குடையவராய், விவாக சம்மந்தமான ஒன்பதாவது பாவத்திற்கும் போகஸ்தானமாகிய நான்காவது பாவத்திற்கும் உடையவரான அங்காரகனுடன்கூடி பதினேராவது பாவத்தில் தன்னுடைய வீட்டிலேயே இருப்பதால் ஜாதக பாரிஜாதம் பதினைங்காவது அத்தியாயம் இருப்பத்தொன்பதாவது சுலோகப் பிரகாரம் புதன் தன்னுடைய தசையில் ஜாதகருக்கு விவாகஞ் செய்துவைக்கும் அமைப்பு உடையவராக விருக்கின்றார். இந்தச் சுலோகத்திற் கண்ட பிரகாரம் இரண்டிற்குடையவரான புதன் இருக்கின்ற வீட்டிற்குடையவர் புதனுகவே வருவதைக் கவனிக்கவும். குரு பத்தாவது பாவத்தில் இருந்துகொண்டு பத்திற்குடையவரான களத்திர காரகரான சுக்கிரனுடன்கூடிக் கொண்டு போகஸ்தானமாகிய நான்காவது பாவத்தையும் களத்திர ஸ்தானுதிபதியாகிய சனியையும் பார்க்கின்றார். இராகு பத்தாவது பாவத்தையும் குடும்ப ஸ்தானத்தையும் சுக்கிரனையும் பார்க்கின்றார். ஆகையால் இராகுவிற்குக்கூட மேற்சொன்ன சுலோகப் பிரகாரம் விவாகஞ்செய்து வைக்கச்சிறிது அமைப்பு இருக்கின்றது. மேற்கண்ட

காரணங்களால் மேற்கண்ட சுலோகப் பிரகாரம் இராகு புக்தியில் விவாகம் நிச்சயம் ஏற்பட்டு அதிக அமைப்புள்ள குரு புக்தியில் விவாகம் நடக்கும்.

15. மாரன்தன் மனத்துக் கேத்தோள்
வருவோரை யாதரிப்பள்
தீரமில் லாத நெஞ்சு
சிறுகான புத்தி யில்லாள்
காரிகை யோக சாலி
காதலி தீர்க்க ஜீவி
பாரினில் நல்லோ ளாவள்
பணிந்தோர்க்கு வுதவி செய்வள்.

15. ஜாதகருடைய மனைவி தன்னுடைய மனத்திற்குத் தகுந்தாப் போல ஒற்றுமையாக விருக்கக் கூடியவள். இவள் தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். தைரியமில்லாத மனத்தை உடையவளாவள். சண்டைபோடும்படியானதும் துன்பத்தை விளைவிக்கும் படியானதுமான தவருனதுமான புத்தியை யுடையவளல்லள். இவள் பூமியில் நல்லவளாக விருப்பாள். இவளை வணங்கித் தொழுபவர்களுக்கு உபகாரத்தைச் செய்வாள்.

16. அன்னையு மிரண்டு மாகு மணுகிய முன்தாய்க் கின்னேள்
பொன்பணி சேர்ப்பா ளாவள் பூவைக்குத் துணையா
[ணிரண்டு
கன்னிமா ரவ்வா ருகுங் கனமுடன் வாழ்வா ளாகும்
பின்னமில் லாத தேகி பித்தச்சூ டுடைய ளாவள்.

16. ஜாதகருடைய மனைவி இரண்டு தாய்மார்களை உடையவளாவள். இவள் மூத்த தாயாருக்குப் பிறந்தவளாவள். இவள் பணி ஆபரணம் இவைகளைச் சேர்த்து வைப்பவளாவள். இவளுக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு. இவளுக்கு இரண்டு சகோதரிமார்களுமுண்டு. இவள் பெருமையுடன் இருந்து வாழ்பவளாவாள். இவள் தன்னுடைய தேகத்தில் யாதொரு அவயவக் குறைவு மில்லாதவளாவாள். இவள் பித்தச் சூட்டு ரோகத்தை உடையவளாக விருப்பாள்.

குறிப்பு:—ஜாதகருடைய மாமனுக்கு இந்த விஷயம்:—ஜாதகருடைய மனைவி லக்கினம் ஏழாவது பாவமாகிய கும்பம் ஆகும். இதற்குப் பிதிரு ஸ்தானம் ஒன்பதாவது பாவமாகிய துலாம் ஆகும். இதற்கு முதல் களத்ர ஸ்தானாதிபதியாகிய ஏழிற்குடைய அங்காரகனும் இரண்டிற்குடைய அங்காரகனும் இரண்டாவது களத்ர ஸ்தானமாகிய ஒன்பதில் விரயாதிபதியும் இரண்டாவது களத்ர பாவாதிபதியு

மாகிய புதனுடன்கூடி இருக்கின்ரூர். சனி துலா லக்கினத்திற்குக் குடும்ப ஸ்தானத்தில் இருக்கின்ரூர். இந்தக் குடும்பஸ்தானத்தைக் கேது பார்க்கின்ரூர். மூன்றுக்கும் ஆறுக்கும் உடையவராகிய குரு களத்திரக்காரனுகிய சுக்கிரனுடன்கூடி இருப்பதுமன்றித் துலாத் திற்குக் குடும்பஸ்தானத்தையும் பார்க்கின்ரூர். களத்திரகாரனுகிய சுக்கிரன் துலாத்திற்கு எட்டில் மறைந்து சனியால் பார்க்கப்பட்டு இருக் கின்ரூர். ஆகையால் மாமனுருக்குத் தாரதோஷமிருக்கின்றது. களத் திர சம்மந்தமான அங்காரகனுடன் சம்மந்தப்பட்ட புதன் நைசர்க்கிக சுபன், களத்திர காரகனுகிய சுக்கிரனுடன் சம்மந்தப்பட்ட குருவும் நைசர்க்கிக சுபக்கிரகமாகும். துலாலக்கினத்திற்கு ஏழிற்குடைய அங் காரகன் கோணத்தில் உபயராசியாகிற மிதுனத்தில் இருக்கின்ரூர். ஆகையால் ஜாதகாலங்காரம் அறுநூற்று நாற்பத்தெட்டாவது பாட லாகிய

"ஏழ்வீட்டினிற்கதிபன் சரத்தினிற்கில் இருமனைவி,
திரமதனிலிருக்க நன்றே தாழ்விலாவுபயத்திலிருக்கின்
மாதர்சாவின்றிப் பலருளராம்"

என்ற பாடல் பிரகாரம் மாமனுருக்கு உயிருடன் இருக்கின்ற இரண்டு மனைவிமார்கள் இருக்கும் அமைப்பு இருக்கின்றது. பத்தா வது பாடலிலிருந்து ஜாதகருக்கு விவாகம் நடக்கும்போது இவ ருக்கு இரண்டு மாமியார்களும் உயிருடன் இருப்பார்கள் போலத் தோற்றுகிறது.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திர பாவம்)—முன்ஜன்மம்

17. மதலைகள் கன்னி மூன்று
மால்மகன்போ லாணி ரண்டு
சதமுடன் தீர்க்க மென்றேஞ்
சங்கையாஞ் சிலவே தாமும்
அதபலன் பின்பாற் சொல்வே
னரைகிறே மிவன்முன் ஜன்மம்
புதுவைக்கு அருகில் மேற்கிற்
பிறந்தனன் வைசியச் சேயாய்.

17. ஜாதகருக்கு மூன்று பெண் குழந்தைகளும் மகாவிஷ்ணு வின் பிள்ளையாகிய பிரம்மாவைப் போன்ற இரண்டு ஆண் குழந்தை களும் நீண்ட ஆயுள் உடையவர்களாக விருப்பார்கள். சில குழந்தை கள் இறந்து போய்விடும். இந்தக் குழந்தைகளின் பலாபலன்கள் விஷயமாகப் பின்னல் சொல்லுகின்றேன். ஜாதகருடைய முன் ஜன் மத்தைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றேன். புதுவை என்ற புதுச் சேரிக்குச் சமீபத்தில் மேற்கில் ஓர் ஊரில் வைசியருடைய ஜாதியில் பிறந்தார்.

18. பலவிதச் செட்டுச் செய்து பெரிதான குடும்பி யாகித்
தலைவியும் மதலை யுண்டாய்ச் சங்கரன் நாமங் கொண்டு
உலகினில் நல்லோ னெனு யுயர்வோர்கள் பத்தி யாகி
நிலையில்லார்க் குதவி செய்து நேர்ந்தனன் காலம் நாடு.

18. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் பலவகையான வியாபாரங்களைச் செய்து கொண்டு பெரிய குடும்பஸ்தராக விருந்து மனைவி மக்களை யுடையவராகிச் சிவபெருமானுடைய பெயரை வைத்துக் கொண்டு பூமியில் நல்லவரென்று பெயரெடுத்து பெரியோர்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவராகி நிலையான அந்தஸ்திலில்லாத ஏழைகளுக்கு உபகாரஞ் செய்துகொண்டு, இறந்து, எமப்பட்டணம் போய்ச் சேர்ந்தார்.

19. சிரஞ்ஜன்கோன் வரையப்பட்டுச் செனிப்பனு மிந்தப் [பாலன்
உரைக்கிறே மிவனின் யோக முணவுக்குக் குறைவு [ரு தான்
பொருளது பெருக்கஞ் செய்வன் பூமியை விருத்தி [செய்வன்
திருமாளி சித்திரஞ் செய்வன் ஜனவுப காரி யாவன்.

19. ஜாதகர் நான்கு சிரசுகளுடைய பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறப்பார். இவருடைய யோக விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் சரப்பாட்டிற்கு யாதொரு கஷ்டமும் இல்லாதவராவர். இவர் பணத்தை அதிகமாக வாக்குவார், அஃதாவது அதிக திரவியத்தைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவர் அழகிய மாளிகைகளைச் சித்திரங்களுடன் அழகு படுத்துவார். இவர் ஜனங்களுக்கு உபகாரத்தைச் செய்பவராவார்.

20. வறுமைகள் காணு னுவன்
மாதுசொல் கடவா னுவன்
பெரிதான தலங்கள் செல்வன்
பிழையான குணமு மில்லான்
அறிவோர்கள் நேசம் கொள்வன்
ஆள்கார ருடையா னுவன்
சிறியோரா பத்தைக் காப்பன்
ஜயமுனி தடுத்துச் சொல்வார்.

20. ஜாதகர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்க மாட்டார். இவர் தன்னுடைய மனைவின் வார்த்தையை மீறி நடக்க மாட்டார். பெரிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்

வார். இவர் தவறான கெட்ட குணங்களையுடையவரல்லர். இவர் அறிஞர்களிடத்தில் சிநேகஞ் செய்து கொள்ளுவார். இவர் வேலையாட்களை உடையவராக விருப்பார். இவர் சிறியவர்களுடைய ஏழைகளுடைய ஆபத்துக்காலத்தில் அவர்களைக் காப்பாற்றுவார். இவ்விதமாக அகஸ்தியர் சொல்லவே முனிவர் தடுத்துக் கேட்கின்றார்.

ஜாதகருடைய யோக விஷயம்

21. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்த காரணங்கள் [சொல்வாய்

மால்குஜன் லாபந் தங்க மன்னவன் புகர்ரிஷ பத்தில்
ஆலமுங் கடக மாக அமர்ந்ததோர் காலந் தன்னில்
சாலவே பத்ம யோகந் தங்கிடு மென்று சொல்வோம்.

21. ஜாதகருக்கு யோகத்தைச் சொன்னதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று ஜயமுனிவர் கேட்கவே அகஸ்தியர் பதில் சொல்லுகின்றார். மால் என்ற புதனும் குஜன் என்ற அங்காரகனும் லாபம் என்ற பதினொன்றில்கூடி இருப்பதாலும், மன்னவன் என்ற குருவும் புகர் என்ற சுக்கிரனும் ரிஷபத்திலிருப்பதாலும், ஆலம் என்ற இராகு கடகத்தில் இருப்பதாலும் ஜாதகருக்கு நல்ல பத்மயோகம் என்ற ஒரு வித யோகமுண்டாகும் என்று சொல்லுகின்றோம்.

22. இருவகை யோகத் தாலே யிவனுமே வறுமை காணுன்
உறன்முறை மதிக்க வாழ்வன் உயர்வான புத்தி யுண்டு
அறுமுகன் பத்தி கொள்வன் அறமதி லிச்சை யுண்டு
பெருவயி ரூனப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

22. இரண்டு விதயோகங்களாலே ஜாதகர் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான கௌரவமான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் மேன்மையான புத்தியையுடையவராவர். இவர் ஆறுமுகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவர். தருமத்தில் ஆசையுடையவராக விருப்பார். பெரிய வயிற்றை யுடைய விநாயக கடவுளைப் பெற்றெடுத்தப் புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—இன்னொரு யோகத்தைப் பாடலில் சொல்லவில்லை.

ஜாதகருடைய மாதாவின் குணாதிசயங்கள்

23. மாதுரு குணத்தைச் சொல்வோம்
மாந்தளிர் மேனி யாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை
யுறுதியில் லாத நெஞ்சம்

பாதக மன மில்லாதாள்
பணிந் தோரை ஆதரிப்பள்
வேதனை யொருவர்க் கெண்ணுள்
வீண்பழி யோற்கா ளாகும்.

23. ஜாதகரின் தாயாருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லு கின்றோம். இவள் மாமரத்தின் துளிரின் நிறத்தைப் போன்ற ஒரு விதமான சிவப்பு நிறத்தை உடையவளாவாள். இவள் இன்பமான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் நிலையில்லாத மனத்தை உடையவளாவாள். இவள் துரோகமான மனதை உடையவளல்ல. தன்னை வந்து வணங்கினவர்களைக் காப்பாற்றுவாள். இவள் எவ ருக்கும் துன்பத்தை நினைக்கமாட்டாள். வீணான பாவத்தை இவள் அடையமாட்டாள்.

24. பித்தநோ யுடைய ளாவள் பிறர்குற்றம் புகலா ளாவள்
சக்தியுந் துணையுங் காணுள் தனியளாய் வாழ்வா ளாவள்
குத்தத்தைச் சொல்லு மென்னைக் கேதுவு மாறில் தங்க
வித்தகி துணையுங் காணுள் வேறூரில் வாச மில்லாள்.

24. ஜாதகருடைய தாயார் பித்தரோகத்தையுடையவளாவாள். அயலார்கள்மேல் குற்றமான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். இவ ளுக்குக் கூடப்பிறந்தவர்கள் கிடையா, இவள் ஒருத்தியாக விருந்து வாழ்வாள். இதன் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே அகஸ்தியர் பதில் சொல்லுகின்றார். கேது ஆறுவது பாவத்தில் இருப்பதால் இவளுக்குச் சகோதரங்கள் இல்லை. இவள் வேறொரு கிராமத்தில் வாசஞ் செய்யமாட்டாள்.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

25. முன்னவ ளிருந்த ஜன்மம்
விளம்புவோம் பெருமுக்கல் மேற்பால்
சின்னவூர் தன்னி லேதான்
ஜனித்தனள் ரெட்டி வம்சம்
உன்னத குடும்பி யாகி
உத்தமி வாழுங் காளில்
துன்மைகள் வந்த சேதி
செப்புவோந் தாயே கேளும்.

25. ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் பெருமுக்கல் என்ற கிராமத்திற்கு மேற்குப் பக்கத்தில் ஒரு சிறிய கிராமத்தில் ரெட்டியாருடைய குலத்தில் பிறந் தாள். மேன்மையான சிறந்த குடும்பஸ்தையாகி வாழுகின்ற காலத்

தில் இவளுக்கு வந்து சம்பவித்த கெடுதிகளைச் சொல்லுகின்றோம், எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

26. கன்னிகை யொருத்தி பேரில்
கழறொணு வார்த்தை சொல்ல
அன்னவள் மனது வாடி
யறைந்தசா பத்தைக் கேண்மோ
துன்மைகள் என்மேல் வீணுய்ச்
செப்பின பாவிக் கேதான்
பின்வருஞ் ஜன்மந் தன்னில்
பிழையுண்டு துணைவி யிரண்டு.

26. ஜாதகருடைய தாயார் தனது முன்ஜன்மத்தில் ஓர் இளம் ஸ்திரீயின்மேல் சொல்லக்கூடாத வார்த்தைகளைச் சொல்லவே, அவள் தன்னுடைய மனத்தில் கஷ்டத்தை அடைந்து கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. என்மேல் வீணுக அபாண்ட வார்த்தைகளைச் சொல்லிய பாவியாகிய உனக்கு மறு ஜன்மத்தில் குற்றங்கள் நேரிடக் கடவது. இரண்டு சகோதரிகள் இருந்தும்:

27. தனியளாய் வாழ்வா யென்ன
சதாஸ்துவென் றந்தரம் பேச
வனிதைக்கு அந்தச் சாபம்
மருவிற்று யென்று சொல்வோம்
இனியொரு தோஷ மென்றூர்
இம்மாது அந்தி யத்தில்
கனமான தலங்கள் சென்று
கடந்தோர்க்குத் தாகந் தந்து;

27. "நீ தனியாக விருந்து வாழக் கடவது" என்று சொல்லவே அந்தச் சமயத்தில் ஆகாசமார்க்கத்தில் யாருடைய கண்களுக்கும் புலப்படாமல் பறந்து கொண்டிருந்த சித்தர்கள், அதிதிகள், தேவர்கள் முதலியவர்கள் "சதாஸ்து" என்ன, அஃதாவது அதேவிதமாக எப்போதும் நடக்கக் கடவது என்று சொல்லவே ஜாதகருடைய தாயாருக்கு அந்தச் சாபம் வந்து நேரிட்டது என்று சொல்லுகின்றோம். இவளுக்கு இன்னொரு தோஷமும் உண்டாயிற்று என்று சொல்லுகின்றூர். இவள் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் மேன்மையான ஸ்தலங்களுக்குப் போய் உலகப்பற்றுகளை விட்டு விட்டவர்களான பரதேசிகளுக்குத் தாகவிடாய் தீர நீர்மோர் கொடுத்து;

ஜாதகரின் தாயாருடைய பின்ஜன்மம்

28. வரன்முன்னே மரண மாகி
மலரயன் வரையப் பட்டு
அரிவையு முதித்தா லென்றேரும்
அணுகிடும் மாது சாபந்
திருமகள் தனியாய் வாழ்வள்
செப்புவோ மிவள்பின் ஜன்மங்
குறைதீர்க்கும் பட்சி தன்னி
லுதிப்பளாம் வைசியச் சேயாய்.

28. ஜாதகருடைய தாயார் தன்னுடைய புருஷனுக்கு முன்னே இறந்து தாமரைமலரில் எழுந்தருளியிருக்கும் பிரமதேவனுல் பிரமலிபி யுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றேரும். இவளுக்கு அந்தக் கன்னிகையின் சாபம் வந்து சம்பவிக்கும். இவள் சகோதரர்கள் இல்லாமல் தனியாக வாழ்வாள். இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின் றேரும். விணைகளை ஒழிக்கின்ற பட்சி ஸ்தலம் என்கிற திருக்கழுன்றத் தில் ஒரு வைசிய ஸ்திரீயாகப் பிறப்பாள்.

ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மம்

29. தந்தையின் முன்ஜன் மத்தைச்
சாற்றுவோ மருணை நாட்டில்
முந்திய தனவா னுக்கு
முதித்தனன் வன்னிய சேயாய்
விந்தையாய்க் கிருஷி செய்து
வித்தகி மதலை யுண்டா
யந்தவன் வாழுந் நாளில்
அணுகின வினையைக் கேண்மோ.

29. ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவர் அருணை என்கிற திருவண்ணுமலை க்ஷேத்தி ரத்தில் மேன்மையான ஒரு தனவானுக்கு வன்னிய குலத்தில் ஆண் கப் பிறந்தார். இவர் விவசாயத்தை ஆச்சரியமான முறையில் செய்து கொண்டு மணிவிமக்களையுடையவராகி வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்றேரும், கேட்பீராக.

30. மறையவ ரிருவர் தாமும்
வளவினில் விரோத முற்று
ஒருவன்பால் கட்டு வார்த்தை
யுரைத்தன னிவனே யென்றேரு

குறையுண்டாய் மற்றோ னுக்குக்
கூறுவான் சாபந் தானுந்
தெரியாத வார்த்தை யென்மேல்
செப்பின பாவி யேநீ ;

30. இரண்டு பிராமணர்கள் நிலத்தின் விளைச்சல் விஷயமாக விரோதப்பட்டுக் கொண்டிருக்கும்போது ஜாதகருடைய தகப்பனார் முன்ஜன்மத்தில் ஒருவருடைய பக்கமாகப் பொய் வார்த்தைகளைப் பிணைத்துச் சொன்னார் என்று சொல்லுகின்றோம். அதனால் மற்றொரு வனுக்குக் கெடுதி நேர்ந்தது. மற்றொருவன் சாபத்தை இவருக்குக் கொடுத்தான். " என்பேரில் உனக்குத் தெரியாத விஷயத்தைச் சொல் லிய பாவியாகிய நீ "

31. மற்றொரு ஜன்மந் தன்னில் வந்தயில் லடையா னகி
சுத்தமாய்ப் பரதேச த்தில் சேர்ந்துமே வாழ்வா யென்ன
பற்றிற்று அந்தச் சாபம் பாலனு மந்தி யத்தில்
வெத்திவேல் கடவுள் பத்தி விரும்பியே மரண மாகி ;

31. "உன்னுடைய அடுத்த ஜன்மத்தில் உன்னுடைய தகப்பனா ருடைய வீட்டை அடையாமலும் அதில் வசிக்காமலும் இன்னொரு ஊருக்குப்போய் அவ்விடத்தில் வாசஞ் செய்வாய்" என்று ஜாதகருடைய தகப்பனாரைப் பார்த்துச் சொன்னார். அந்தச் சாபம் இவரை வந்து அடைந்தது. இவர் முன்ஜன்மத்தில் கடைசிகாலத்தில் வெற்றியைத் தருகின்ற வேலையுடைய ஆறுமுகக் கடவுளின் மேல் அன்பும் ஆசை யும் உடையவராகி இருந்து இறந்து

32. வேதனால் வரையப் பட்டு விளங்கினி னிவனே யென்றோரும்
ஓதுவார் சாபந் தானும் உரைந்திடு மிச்சன் மீத்தில்
காதலி மனைவி யூரில் கலப்பனும் அவள்தன் ஆஸ்தி
மேதினி சேரு மென்றோரும் வித்தகி கேட் டிடாயே.

32. பிரதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லு கின்றோம். மறையை ஓதுகின்ற அந்த இன்னொரு பிராமணருடைய சாபமானது இவரை இந்தச் ஜன்மத்தில் வந்து அடையும். அதனால் இவர் தன்னுடைய மனைவியின் ஊருக்குப்போய் விடுவார். அவ ளுடைய சொத்து இவருக்கு வந்து சேர்ந்துவிடும் என்று சொல்லுகின் றோம். பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனுடைய பின்ஜன்மமும் மரணமும்

33. மறுஜன்மங் காஞ்சி தன்னில் வருவனு மிக்கு லத்தில்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா னம்மா
கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
பிருகுதன் தசையி லேதான் புகலுவோ நாற்பா னலில்;

33. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய பின் ஜன்மத்தில் காஞ்சிபுரத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்தில் பிறப்பார். இவர் அதிகமான தனத்தையும் பெருமையையும் கீர்த்தியையும் உடையவராகி வாழ்வார், பார்வதி யம்மையே !. இவருடைய மரணகாலத்தை முனிவரே ! நீரே இனிமேல் சொல்லுவீராக என்று கேட்கவே, அகஸ்திய முனிவர் சொல்லுகின்றார். பிருகு என்ற சுக்கிரனது தசையில் ஜாதகருக்கு நாற்பத்து நான்காவது வயதில் ;

ஜாதகரின் தாயாருடைய மரணமும் தன்மரணமும்

34. மருவிடுந் தந்தை கெண்ட மதற்குமே லிரண்டு வாண்டில்
உரைக்கிறே மன்னை கண்ட முரைத்தனம் மொழிகுன்
[றது
திருமக னெழுப தாண்டில் சித்திரை மாதந் தன்னில்
மரலியின் நாட்டை யின்னேன் வாங்குவா னென்று
[சொல்வோம்.

34. ஜாதகருடைய தகப்பனாருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். இதற்குப் பிறகு இரண்டு வருஷம் பொறுத்து அஃதாவது ஜாதகருக்கு நாற்பத்தாறுவது வயதில் இவருடைய தாயாருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும். ஜாதகர் தனக்கு எழுபதாவது வயதில் சித்திரை மாதத்தில் இறந்து எமபட்டணம் போய்ச் சேருவார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மறுஜன்மம்

35. பின்ஜன்மம் ..... தன்னில்
பிறப்பனும் பிரம்ம சேயாய்
அன்னவ னிச்சென் மத்தில்
அடைந்தபுண் ணியங்க ளென்ன
தன்மனங் கபடு மின்றிச்
சலித்தோர்க்கு வுதவி செய்தும்
பின்னோரா பத்தைக் காத்தும்
பெரிதான தலங்கள் சென்றும் ;

35. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில்.....பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறப்பார். இவர் இந்த பிறப்பில் என்ன புண்ணியங்களைச் செய்தார்? அதைச் சொல்லுவீர் என்று கேட்கவே அகஸ்தியர் சொல்லுகின்றார். இவர் தன்னுடைய மனத்தில் கள்ளம்கபடம் வஞ்சனை இவைகள் ஒன்றும் இல்லாமல் கஷ்டபட்டவர் களுக்கு உபகாரஞ் செய்துகொண்டும், ஏழைகளுடையவும் கீழ்மக்க ளுடையவும் ஆபத்துக் காலத்தில் அவர்களைக் காபாற்றிக் கொண்டும், பெரியபுண்ணியக்ஷேத்திரங்களுக்கு யாத்திரையாகப் போய்க்கொண்டும்;

ஜாதகரின் மனைவியின் மரணமும் ஜனனகாலதசையிருப்பும்

36. வருவதால் மறைக்கு லத்தில்
வருவனு மென்று சொல்வோம்
அரிவையு மிவன்பின் னுலே
அடைகுவாள்-காலந் தாடு
திருமகன் ஜனன காலஞ்
சனிதசை பதினைந் தாண்டும்
உரைத்திடுந் திங்க ளைந்தும்
முரைத்தனம் பூர்வ பாகம்.

36. இருப்பதால் ஜாதகர் மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறப்பார் என்று சொல்லுகின்றோம். இவருடைய மனைவி இறந்து எமபட்டணம்போய்ச் சேருவாள். இவர் பிறந்த காலத்தில் சனி மகா தசையில் இருப்பு பதினைந்து வருஷங்களும் ஐந்து மாதங்களும் ஆகும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக முன்பாகத்தைச் சொல்லி முடித்தோம்.

ஜாதகம் 94

ஜனன கால கிரகநிலை

1. சிங்கலக் கினம தாகச் சந்திரன் ராகு தங்க [1]மங்கலன் மூன்றி லாக [2]அதிதியுங் [3]காரி யேழில் [4]செங்கதிர் [5]புகர்[6]பொன் [7]புந்தி சேர்ந்திட கவம தாக அங்கது பலனைவ் வாறு வறிவிப்பீர் முனியே நீர்தான்

கிரகநிலை

	சுக்கிரன் சூரியன் குரு புதன்		
சனி கேது	இராசி சக்கரம்		
			லக்கினம் சந்திரன் ராகு
		அங்காரகன்	

1. ஜன்ம லக்கினம் சிம்மமாக விருந்து அதில் சந்திரனும் இராகுவும் இருந்து, அங்காரகன் மூன்றிலும், கேதுவும் சனியும் ஏழிலும், சூரியனும் சுக்கிரனும் குருவும் புதனும் ஒன்பதிலும் இருந்தால் பலாபலன்கள் எவ்விதமாகவிருக்கும் என்பதை முனிவரே! நீரே சொல்லுவீராக.

பூரம் 1-ம் பாதம். சுக்கிரதசை வரு 18-0-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கரகிரகநிலை பொருத்தமுடையதாகும்:—மேஷத்தில் அங்காரகனும், ரிஷபத்தில் புதனும், கடகத்தில் சுக்கிரனும் இராகுவும், சிம்மத்தில் சந்திரனும், துலாத்தில் குருவும் சனியும், தனுசில் சூரியனும், மகரத்தில் கேதுவும் ஆகும். அங்காரகனும் சுக்கிரனும் வக்கிரகதியிலும், குரு அஸ்தமனத்திலும் இருக்கின்றார்கள்.

ஜாதகர் பிறந்த நாட்டுச் சிறப்பு

2. பிருகுவும் புகழு கின்றூர் பிறந்திடு மாண்பா லாகும் வருமில்லங் கீழ்மேல் வீதி வாசலும் வடபால் நோக்கங் கரிமத வானை கோஷ்டங் கலந்திடு மேல்பால் தன்னில் அரிகோஷ்டம் வடமே லாகு மந்திரி வட கீழாகும்.

1. அங்காரன்
2. கேது
3. சனி
4. சூரியன்
5. சுக்கிரன்
6. குரு
7. புதன்

2. பிருகுமஹாரிஷியானவர் சொல்லுகின்றார், பிறந்த குழந்தை ஆண்யாகும், பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் வடக்கு பார்த்த வாயிற்காலை உடையதாக விருக்கும். கறுப்பு மதம் பிடித்த ஆண் யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயில் மேற்குத் திக்கில் இருக்கும், மஹாவிஷ்ணுவினுடைய கோவில் வடமேற்குத் திக்குவிருக் கும், பார்வதியம்மன் கோயில் வடகிழக்கில் இருக்கும்

3. வடதிசை நதியு முண்டு மருவிய சிறுவூ ராகும்
அடைவுடன் வன்னிய சேயா யமருவா னிந்தப் பாலன்
திடமதாய்க் குடும்பச் சேதி செப்புவோ மிந்நூல் தன்னில்
தடவரை மகளே யாங்கள் சாற்றின மொழி குன்றாது.

3. வடக்குத் திக்கில் ஒரு நதியும் இருக்கும், பிறந்த ஊர் சிறிய கிராமமாகும். இந்த ஜாதகர் வன்னியர் குலத்தில் ஆண் குழந்தை யாகப் பிறப்பார். இந்தச் சாஸ்திரத்தில் வலிவான குடும்பத்தினுடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். விசாலமான மலையாகிய இமயமலையின் அரசனுகிய பர்வதராஜனுடைய புத்திரியாகிய பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்களும் (சகோதர பாவமும்), குணதிசயங்களும்

4. தந்தையின் துணையாண் மூன்று சாற்றுவோங் தீர்க்கமாக
அந்தவ ரொன்றாய் வாழ்வ னறைகிறோம் பிதா
[குணத்தைச்
சிந்தையு மில்லா தாகுந் தீரமாம் மனத்த னாகுங்
கந்தன்மேல் பத்தி யுண்டு கருதிடான் கட்டு வார்த்தை.

4. ஜாதகரின் தகப்பனருடன் கூடப்பிறப்த மூன்று சகோ தரர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவர் களும் தகப்பனரும் ஒரே குடும்பமாக விருந்து வாழ்வார்கள். தகப்ப னருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தன் னுடைய மனத்தில் கவலை ஒன்றும் இல்லாதவராக விருப்பார், தைரிய மான மனத்தை உடையவராகும். இவர் முருகக்கடவுளின்மேல் அன் பையும் ஆசையையும் உடையவராவர். புனைந்த வார்த்தையையும், பொய்யான வார்த்தையையும் இவர் சொல்லமாட்டார்.

5. பயிர்த்தொழில் புரிவா னாகும் பரவுப காரி னவன்
நயமுள வார்த்தை கூறுவன் நல்லோர்க்கு நல்லோ னவன்
பயமுள மனத்த னவன் பஞ்சைமேல் பிரிய னவன்
தயையுள மனத்த னவன் சல்லியப் பாதை யேற்கான்.

5. ஜாதகருடைய தகப்பனர் விவசாயத் தொழிலைச் செய்பவராவர். பிறருக்கு உதவியைச் செய்பவராவர். இவர் இனிமையான உபசாரமான துமான வார்த்தைகளைச் சொல்லுவார். தல்லவர்களுக்கு இவர் நல்லவராக நடந்து கொள்ளுவார். இவர் பயந்த மனத்தை யுடையவராவர், இவர் ஏழைகளிடத்தில் அன்புள்ளவராக இருப்பார். இவர் தயாள குணமுடையவராவர். இவர் கடனால் துன்பத்தை அடையமாட்டார்.

6. மால்நிறஞ் சமதே கத்தான் மருமமில் லாதா னுவன்
ஊன மில்லாத தேஹ யுணவுக்கு வறுமை காணன்
தானெனக் கொஞ்ச முண்டு சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
பான்மையாய்ப் பேசு வானும் படிப்புகள் அற்ப மாகும்.

6. ஜாதகருடைய தகப்பனர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தையுடையவர். இவர் நடுத்தர அள வுள்ள தேகத்தை யுடையவர். தன்னுடைய மனத்தில் இரகசியத்தை வைத்திருக்காதவராவார். இவர் தன்னுடைய தேகத்தில் யாதொரு அவயவக்குறைவு மில்லாதவர். இவர் சரப்பாட்டு விஷயத்தில் கஷ் டத்தை அனுபவிக்க மாட்டார். இவர் தானென்ற அகங்காரம் கொஞ்சம் உடையவர். இவரிடம் நாற்கால் ஜந்துக்களும் கால்நடைகளும் விருத்தி யாகும். இவர் தகுதியாய்ப் பேசுபவராவர். இவருக்கு வித்தை கொஞ்ச மாக விருக்கும்.

ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மம்

7. இல்லமும் பின்னற் செய்வ னிடரூன புத்தி யில்லான்
வல்லியின் வர்க்க நாஸ்தி மானிலங் காவல் செய்வன்
அல்லல்க ளதிக முண்டா மவசர மனமுங் கொஞ்சம்
எல்லையை விருத்தி செய்வ னியம்புவோ மிவன்முன்
[ஜன்மம்.

7. ஜாதகரின் தகப்பனர் தன்னுடைய பிற்காலத்தில் வீட்டைக் கட்டுவார். இடக்கான புத்தியை இவர் உடையவரல்லர். இவருடைய மனைவியினுடைய பந்துக்கள் நாசமடைந்து விடுவரர்கள். இவர் பெரிய நிலங்களைக் காப்பாற்றி ஆளுவார். இவருக்குத் துன்பங்களும் அலைச் சலும் அதிகமாகவுண்டு. இவர் சிறிது அவசரமான ஸ்வபாத்தை யுடையவரரவர். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி யாக்குவார். இவருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

8. மாதுவும் பூசை செய்யும் வாழைமா நகரி லேதான்
சூதிலா நெசிவு வம்சந் தோன்றியே வறுமை யின்றிப்
பாதக மனங்க ளின்றிப் பாரியு மதலை யுண்டாய்த்
தீதிலா முருகன் பத்தி சிந்தையில் மிகவுங் கொண்டு;

8. பார்வதியம்மையார் பூஜை செய்கின்ற வாழைமா நகரம் என்ற வாழைப்பந்தல் கிராமத்தில் கபடமில்லாத நெசவு வம்சம் என்ற செங்குந்தர் குலத்திற் பிறந்து யாதொரு தரித்திரமும் கஷ்டமும் இல்லாமலும் கெடுதியான மனம் இல்லாமலும், மனைவியும் மக்களும் உடையவராகியும், கெடுதியையுண்டு பண்ணுத முருகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் தன்னுடைய மனத்தில் அதிகமாக உடையவராகியும்;

ஜாதகருடைய குணநிசயங்கள்

9. அறமதி லிச்சை யுண்டா
யந்தகன் நகரஞ் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப்
பிறந்தவ னென்று சொல்வோம்
உறைத்தயிக் குணத்தா னுக்கு
உதிப்பது மிரண்டாஞ் ஜன்மந்
திருமகன் குணத்தைச் சொல்வேன்
செல்வதி கேட் டிடாயே.

9. ஜாதகருடைய தகப்பனார் தருமஞ் செய்வதில் ஆசையுடையவராகி இறந்து எமனுடைய பட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இதுவரையிலும் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் இரண்டாவது குழந்தையாகப் பிறப்பார். இனிமேல் ஜாதகருடைய குணநிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன், பார்வதியம்மையே! கேட்பீராக

10. கல்வியுங் கொஞ்ச முண்டு கண்முகம் வசிய மாவன்
இல்லையென் றுரைக்க மாட்டா னிருவிதச் சொல்லு [முண்டு
நல்லவ னகி வாழ்வன் நயம்படக் கூறுவா னுவன்
வெல்லுவான் எதிரி தன்னை வீண்வழக் கோரம் பேசான்.

10. ஜாதகர் சிறிது படித்தவராக விருப்பார். இவர் பிறரைத் தன் வசமாக்கிக் கொள்ளக்கூடிய அழகிய கண்களையும் முகத்தையும் உடையவராவர். இவர் யாசிப்பவருக்கு தன்னிடம் ஒன்றுமில்லை என்று சொல்லமாட்டார். இவர் இரண்டுவிதமான வார்த்தைகளை அஃதாவது உண்மையான வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையும் உபயோகிப்பார். இவர் நல்லவராகவும் நல்லொழுக்கமுடையவராகவும் இருந்து வாழ்வார். இவர் இனிமையான வார்த்தைகளையும் உபாயமான வார்த்தைகளையும் சொல்லுவார். இவர் தன்னுடைய சத்துருவை ஜயித்து விடுவார். இவர் வீணை வழக்கில் வியாஜ்யத்தில் ஒரு பக்ஷமாகப் பேச மாட்டார்.

11. தந்தையி னஸ்தி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
பிந்தியும் பூமி சேர்ப்பன் பெற்றதாயா ராஸ்தி தன்னை
வந்தவர்க் கன்ன மீயன் மாடுகள் பணையோர் விருத்தி
விந்தையாய்ப் பேசு வானும் விசித்திர வேலை செய்வன்.

11. ஜாதகர் தன்னுடைய தகப்பனருடைய சொத்துக்களை அதிகப்படுத்துவார். இவர் பிறகு தன்னைப் பெற்றெடுத்தத் தாயாருடைய சொத்துக்களையும் பூமிகளையும் அடைந்து அவைகளையும் சேர்த்து வைப்பார். இவர் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். கால்நடைகள் நிலம் ஏர் இவைகளை அதிகப்படுத்துவார். இவர் ஆச்சரியப்படும்படியாகப் பேசுபவராவர், அதிசயமான வேலைகளைச் செய்வார்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

12. வறுமையெப் போதுங் காணன்
வறுமுகன் பத்தி பூண்பன்
பொருட்கட னில்லா வாழ்வன்
புகலுவோர் தலைவர் தன்னை
மருவிடும் மூன்ற ணைன்று
வரைகிறே மவன்கு ணத்தைத்
தரையதை விருத்தி செய்வன்
தாட்சிண்ணியன் கனத்த புத்தி.

12. ஜாதகர் எப்போதும் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவர் ஆறுமுகக்கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராவர். இவர் பணத்தைக் கடனுக வாங்காமல் இருந்து கொண்டு வாழ்வார். இவருடைய மூத்தச் சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு முன்னே ஒரு சகோதரர் தான் இருப்பார். இந்தத் தமயனுடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். தாட்சிண்ணியமானதும் பிறருக்கு உதவி செய்யக்கூடியதுமான குணத்தையுடையவர், மேன்மையான சிறந்த புத்தியை யுடையவர்.

13. மீனமு முத்ராட முதிப்பனு முன்கோ பத்தன்
ஆணவர் நேசங் கொள்வன் அடாவடி யில்லா னுவன்
மானனை யார்க்கு நேயன் வணிபங்கள் செய்வா னுவன்
ஊனமில் லாத தேகி யுண்மையாம் மனத்த னுவன்.

13. ஜாதகருடைய தமயனர் மீன லக்னத்தில் உத்திராட நட்சத்திரத்தில் பிறந்தவராவார். இவர் பேசுவதற்கு முன்னமே கோபத்தையுடையவராவர். தாங்கள் பெரியோர்கள் என்று எண்ணிக்கொள்

ளுங்குணத்தையுடையவர்களுடைய சிநேகத்தை அடைவார். இவர் அடாவடியாகவும் அநியாயமாகவும் நடந்துகொள்ளமாட்டார். இவர் மானிப்போன்ற உருவமுள்ள அழகிய ஸ்திரீகளுக்கு நண்பராக இருப்பார். வியாபாரங்களைச் செய்பவராவார். இவர் தன்னுடைய தேகத்தில் யாதொரு அவயவக் குறைவும் இல்லாதவராக விருப்பார். இவர் உண்மையானதும் மேன்மையானதுமான மனத்தை யுடையவராவர்.

14. பாரியு மொன்றே யாவள் பாலக ணெண்பா லிரண்டு
நாரிமார் மூவ ராவர் நாயகன் மனது தீர்க்கம்
காரிய சமர்த்த னவன் கடன்படா னென்று சொல்வோம்
யோரில் செல்வா னவன் புண்ணிய மனத்த னவன்.

14. ஜாதகருடைய தமயனுருக்கு மனைவி ஒருத்தியே யாவள். இவருக்கு இரண்டு ஆண்குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் ஆகும். இவர் பெருந்தன்மையான மனத்தை யுடையவராவர். இவர் வேலைகளைச் செய்து முடிப்பதில் கெட்டிக்காரராகவும் வல்லவராகவும் இருப்பார். இவர் கடன் வாங்கமாட்டார் என்று சொல்லுகின்றோம். இவர் வாகனத்தின்மேல் சவாரி செய்பவராவர். புண்ணியமான நல்ல மனதை யுடையவராவர்.

ஜாதகருடைய தாயாரின் குணாதிசயங்கள்

15. பாலன்பின் தூணைகள் தம்மைப்
பகருவோ மாண்பா லிரண்டு
வேல்விழி யவ்வா று தீர்க்கம்
விளம்புவோந் தீர்க்க மாக
ஏலவே யவர்கள் சேதி
யியம்புவோம் பின்பா கத்தில்
ஆலத்தை யுண்டோன் தேவி
யறிவிப்போந் தாய்க் குணத்தை.

15. ஜாதகருடைய இளைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இரண்டு இளைய சகோதரர்களும் இரண்டு இளைய சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இந்தச் சகோதரர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். ஆலகாலவிஷத்தை அருந்திய சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! ஜாதகருடைய தாயாரின் குணகுணங்களைப்பற்றித் தெரிவிக்கின்றோம்.

16. மாதிரு மால்நி றத்தாள் மனதினிற் கபடு மில்லாள்
சூதிலாள் முன்கோப மில்லாள் வகையான வார்த்தை
[கொஞ்சம்
வேதனை யொருவர்க் கெண்ணுள் விகடங்கள் கூரு ளாவள்
காதலி தீர்க்க ஜீவி கட்டுரை பகரா ளாவள்.

16. ஜாதகருடைய தாயார் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தையுடையவளாவள். இவள் தன்னுடைய மனத்தில் கள்ளம் வஞ்சனை கபடம் முதலியவைகளை உடையவளல்லள். இவள் சூதான மார்க்கத்தை யுடையவளல்லள். இவள் முன்கோபத்தை யுடையவளல்லள். இவள் சரியான தகுந்த வார்த்தைகளைச் சிறிதாக உபயோகப்படுத்துவாள். இவள் யாருக்குங் கெடுதியை நினைக்கமாட்டாள். வேடிக்கையான வார்த்தைகளையும் தொந்தரவை உண்டுபண்ணக்கூடிய வார்த்தைகளையும் சொல்லமாட்டாள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவள், புனைந்த வார்த்தைகளையும் பொய்யையும் சொல்லாதவளாக விருப்பாள்.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

17. இல்லமும் மேல்பா லாகும்
இவள்துணை யிருநான் காகும்
நில்லாது யாவு மென்றேரும்
நிமலியுந் தனியாய் வாழ்வாள்
சொல்லுவோ மிவள்முன் ஜன்மம்
திருவிடை மருதூர் தன்னில்
வல்லியுஞ் சேடர் வம்சம்
வாழ்நாளில் வினையைச் சொல்வேன்.

17. ஜாதகரின் தாயாருடைய வீடு மேற்குத் திக்கில் இருக்கும். இவளுடைய சகோதரர்கள் மொத்தம் எட்டு பேராவர். இவர்களில் ஒருவரும் உயிருடன் இருக்கமாட்டார்கள் என்று சொல்லுகின்றோம். இவள் ஒருத்தியாக விருந்து வாழ்வாள். இவளுடைய முன்ஜன்மத்தைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். திருவிடை மருதூர் என்ற அர்ஜுன க்ஷேத்திரத்தில் சேடர் என்ற ஒருவித அடிமைக்காரர் குலத்தில் பிறந்து வாழுகின்ற காலத்தில் இவளுக்கு நேர்ந்த பாவத்தைச் சொல்லுகின்றேன்.

18. வரனுடைத் தங்கை பேரில்
வர்ணித்தாள் சிலேடை வார்த்தை
அரிவையு மனது வாடி
அறைந்தசா பத்தைக் கேண்மோ

திருகான வார்த்தை யென்மேல்
செப்பின பாவிக் கேதான்
வருஞ்ஜன்மந் துணையு மற்று
மருவாது நாத்தி தானும்.

18. ஜாதகருடைய தாயார் தன்னுடைய புருஷனுடைய இளைய சகோதரியின்மேல் இரண்டு அர்த்தங்களை உடைய அபவாதமான வார்த்தைகளை விஸ்தாரமாகச் சொன்னாள். அதன்மேல் அந்தச் சகோதரி தன்னுடைய மனது நொந்து கொடுத்தச் சாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. "என்மேல் வஞ்சனையானதும் கபடமானதுமான கெட்டவார்த்தைகளைச் சொல்லிய பாபியாகிய உனக்கு அடுத்து வருகின்ற ஜன்மத்தில் சகோதரங்கள் இல்லாமலும் நாத்தனர் இல்லாமலும் நீ இருக்கக்கடவாய்" என்று சொல்லி,

19. இன்னமும் பலவாறு சொன்னாள்
எய்திற்று வந்தச் சாபங்
கன்னிக்கு அந்தச் சென்மங்
கனத்ததோர் வாய்ப்புண் கண்டு
துன்மையாய்க் காலங் நாடு
சென்றுமே பிரமன் லக்கம்
இங்நிலங் தனிலு தித்தா
ளெய்திடுங் மாது சாபம்.

19. இன்னமும் பலவிதமாகவும் ஜாதகருடைய தாயாரைப் பார்த்து இவளுடைய நாத்தனர் சொன்னாள். இந்தச் சாபமானது இவளை இப்பொழுது வந்து அடைந்தது. இவளுக்கு முன் ஜன்மத்தில் வாயில் ஒரு பெரிய நோய் உண்டாகி அதனால் துன்பத்தை அடைந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப்போய் பிரமதேவனால் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்தப் பூமியில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். அந்த நாத்தனருடைய சாபம் இவளைத்தொடர்ந்து வந்து அடைந்தது.

ஜாதகரின் தாயாருடைய மறுஜன்மம்

20. மாதுக்கு நாத்தி தோஷம் வருந்துணை நஷ்ட மாயும்
காதலி தனியாய் வாழ்வள் கழறுவோ மிவள்பின் ஜன்மந்
தீதிலாத் திருமா லூரில் ஜனிப்பளாம் செங்குந்த சேயாய்ப்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

20. ஜாதகருடைய தாயாருக்குத் தன்னுடைய நாத்தனருடைய சாபத்தினால் சகோதரர்கள் இறந்து இவள் அதன்மேல் ஒருத்தியாக விருந்து வாழ்வாள். இனிமேல் இவளுடைய பின்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். குற்றமில்லாத மகாவிஷ்ணுவினுடைய ஸ்தலத்

தில் செங்குந்தருடைய குலத்தில் ஒருபெண் குழந்தையாகப் பின் ஜன்மத்தில் பிறப்பாள். இளம் யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனருடைய மரணமும் (பிதுர் கர்மமும்)-
தகப்பனரது மறுஜன்மமும்

21. முப்பது யேழு வாண்டில் விளம்புவோர்ந் தந்தை கண்டஞ்
செப்புவோ மிவன்பின் ஜன்மந் திருத்தணி தன்னி
[லேதான்
ஒப்புவான் ரெட்டி வம்ச முயர்வான் குடும்பி யாவன்
அப்பணி சடையோன் தேவி யருளிய மொழி குன்றாது.

21. ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் இவருடைய தகப்பனருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். தகப்பனருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். திருத்தணிகை க்ஷேத்திரத்தில் ஒரு ரெட்டியாருடைய குலத்தில் பிறந்து மேன்மையான சிறந்த குடும்பஸ்தராக வாழ்வார். பாம்பை தன்னுடைய தலையின் ஜடையில் தரித்துக்கொண்டுள்ள சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறாமல் நடக்கும்.

ஜாதகரின் தாயார் மரணமும் (தாய் கர்மமும்) ஜாதகரின் விவாகமும்

22. நாற்பது வாறு வாண்டில் நமன்பதி யன்னை சேர்வள்
ஏற்கவே பால னுக்கு வியம்புவோம் மணத்தின் காலந்
தீர்ப்பாக இருபா னென்று ஆண்டினில் பாரி வாய்க்கும்
ஆற்கவே வடமேல் திக்கில் அமர்ந்திடுங் குணத்தைச்
[சொல்வேன்.

22 ஜாதகருக்கு நாற்பத்தாருவது வயதில் இவருடைய தாயார் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள். இவருக்கு நியாயமாக விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு நிச்சயமாக இருபத்தோராவது வயதில் விவாகம் நடந்து மனைவி வந்து சேருவாள். இவள் வடமேற்குத் திக்கிலிருந்து வருவாள். இவளுடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன்.

ஜாதகரின் மனைவியினுடைய குணநிசயங்கள்

23 மங்கையும் மானி றத்தாள் வருவோரை யாத ரிப்பள்
பொங்கின குடும்பி யாவள் புகழ்தோரை யாத ரிப்பள்
எங்கள்போல் அதிதிக் கன்ன மீவளாம் நற்கு ணத்தள்
திங்கள்போல் வதன மொக்குஞ் சீலியா மென்று
[சொல்வோம்

23. ஜாதகருடைய மனைவி மானிறமான தேகத்தையுடைய வளாக விருப்பாள். இவள் தன்னிடத்திற்கு வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் பெருமையான தழைத்துள்ள குடும்பஸ்தை யாக விருப்பாள். இவள் தன்னைப்பற்றிப் பெருமையாகப் பேசுகின்ற வர்களைக் காப்பாற்றுவாள். எங்களைப்போன்ற முனிவர்களுக்கும் பர தேசிகளுக்கும் சாப்பாடு போடுவாள். இவள் நல்ல குணத்தையுடைய வளாவாள், இவள் சந்திரனைப்போன்ற அழகான முகத்தையுடைய வளாவள், நல்ல ஒழுக்கமுடையவள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருக்குச் சந்ததிகளும் புத்திரபாவமும் ஜாதகரின் முன்ஜன்மமும்

24. மாதுவும் வயது தீர்க்கம் மைந்தர்கள் ளாண்பா லிரண்டு
காதலி யொன்றே தீர்க்கங் கழருவோ மிவன்முன்
[ஜன்மம்
மேதினி லுயர்வ தான விரிஞ்சிபால் வடுகச் சேயாய்ப்
போதன மூடைய ஞகிப் பெரிதான குடும்பி யாகி ;

24. ஜாதகருடைய மனைவி நீண்ட வயதை உடையவளாவள். இத்தம்பதிகளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந் தையும்நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். பூமியில் சிறந்த தான விரிஞ்சிபுரம் என்ற க்ஷேத்திரத்தில் தெலுங்கருடைய குலத்திற் பிறந்து அறிவுடையவராகவும் பெரிய குடும்பஸ்தராகவும் ஆகி ;

25. மாரனும் வாழுந் நாளில் மருவின லினையைக் கேண்மோ
பாரியின் வார்த்தை கேட்டுப் பெற்றமா தாவை யொத்த
நாரியும் மனது வாடி நவின்றசா பத்தைக் கேண்மோ
வேறொரு ஜன்மந் தன்னில் வினையுண்டு கால்க ளுக்கு ;

25. ஜாதகர் வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்ப வித்தப் பாவத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவர் தன்னு டைய மனைவியினுடைய சொற்களைக் கேட்டுக்கொண்டு தன்னைப் பெற் றெடுத்தத் தாயாரைத் தன்னுடைய கால்களால் எட்டி உதைத்தார். அதன்மேல் தன்னுடைய தாயார் மனது நொந்து கொடுத்தச் சாபத் தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. "உனக்கு இன்னொரு ஜன்மத் தில் உன்னுடைய கால்களுக்குக் கெடுதி நேரிடக் கடவது" என்று சொல்லி ;

26. பலவிதஞ் சொல்ல லுற்றுள் பற்றிற்று வந்தச் சாபந்
தலைவனு மந்தி யத்திற் சண்முகன் பத்தி யாகிக்
குலவினன் காலந் நாடு குறைதலை வரையப் பட்டு
நிலமதி லுதிப்பா னுவன் நேர்ந்திடு மாது சாபம்.

26. இன்னும் பலவிதமாக ஜாதகருடைய தாயார் இவரைப் பார்த்துச் சொன்னுள். அவளுடைய சாபமானது இவரை வந்து அணுகிற்று. இவரும் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் ஆறுமுகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகி இறந்து எமபட்டணத்திற்குப் போய்க் குறைந்த தலைகளையுடைய பிரம தேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்தப் பூமியில் வந்து பிறந் திருக்கின்ருர். இவருக்கு இந்த ஜன்மத்தில், இவருடைய தாயார் இவருக்குக் முன்ஜன்மத்தில் கொடுத்த சாபம் இவரை வந்து அடையும்.

27. காலினில் பிணியு மெய்துங் கழறுவோ மிவனின் யோகஞ்
சாலவே யன்னை யாஸ்தி சார்ந்திடும் பால னுக்கு
ஏலவே யன்னைக் கனவனில் யேகுவாள் தன்பால்
[தன்னில்
கோலமாம் மூன்ரு மாண்டிற் குலைந்திடுந் தாய்க் குடும்பம்.

27. ஜாதகருக்குத் தன்னுடைய கால்களில் நோய்வந்து சம்ப விக்கும். இனிமேல் இவருடைய யோக விஷயங்களைப் பற்றிச் சொல்லு கின்ருேம். இவருக்குத் தன்னுடைய தாயாரினுடைய சொத்து வந்து கிடைக்கும். இவருடைய தாயார் தான் சம்பந்தப்பட்டவரையிலும் தன்னுடைய புருஷனுடைய வீட்டிற்குப் போய்ச் சௌகரியமாக விருப் பாள். ஆனுல் இவளுடைய தாயாரின் குடும்பமானது மூன்ருவது வயதில் கலைந்து போய்விடும்.

ஜாதகருடைய தாய்வழிப் பாட்டன் பாட்டி இவர்களின் மரணமும் ஜாதகரின் மரணமும் மறுஜன்மமும்

28. அன்னையின் தந்தை கண்ட மணுகிடு மெட்டா மாண்டில்
அன்னையி னன்னை கண்ட மறுபது வொன்ப தாண்டில்
கன்னியா மாதந் தன்னில் காளையி னுடல மேகும்
பின்ஜன்மங் காஞ்சி தன்னிற் பிறப்பனு மிக்கு லத்தில்.

28. ஜாதகரின் தாயாருடைய தகப்பனுர் ஜாதகருக்கு எட்டாவது வயதில் இறந்து போய் விடுவார். இவருடைய தாய் வழிப்பாட்டியும் அப்பொழுது இறந்துபோய் விடுவாள். ஜாதகருக்கு அறுபத்தொன் பதாவது வயதில் கன்னியா மாதம் என்ற புரட்டாசி மாதத்தில் மரணம் சம்பவித்து இவருடைய தேகம் மறைந்துவிடும். இவர் தன்னுடைய மறு ஜன்மத்தில் காஞ்சிமா நகரத்தில் இந்த ஜன்மத்திற் பிறந்த குல மாகிய வன்னிய ஜாதியிலேயே பிறப்பார்,

ஜனனகால நட்சத்திரமும் தசையும் இருப்பும்

29. பிறந்திடுங் காலந் தன்னில் பூரத்தின் முதல்பா தத்தில்
சிறந்த சுக்கிர னிருப்புச் செப்புவோம் பதினெட் டாண்டும்
தரைவிருத்தி பூமி சோலை சண்முகன் கோஷ்டஞ் செய்தல்
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

29. ஜாதகருடைய ஜனன காலத்தில் ஜன்ம நட்சத்திரம் பூரத்தின் ஓராம்பாதம் ஆகும். மேன்மையான சுக்கிரதசையில் இருப்பு பதினெட்டு வருஷங்கள் என்று சொல்லுகின்றோம். இந்தத் தசையின் காலத்தில் நிலங்களும் மனைகளும் விருத்தியாகும். தோப்புகளையும் ஆறுமுகக் கடவுளின் கோயிலையும் முறையே உண்டாக்கவும் கட்டவும் நேரிடும். தருமத்தைக் காக்கின்ற எங்களுடைய உயிருக்குயிரான தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 95

ஜனன கால கிரகநிலை

1. சிங்கலக் கினம தாகச் [1]செங்கதிர் சனியுந் தங்க
[2]மங்கலன் கேது காலில் [3]மாலிரண்டில் [4]புகரும் மூன்றில்
[5]திங்களும் ராகு பத்திற் [6]செம்பொன்னு மாறி லேற
அங்கது பலன்க ளெவ்வாறு அறிவிப்பீர் முனியே

[நீர்தாம்.

1. ஜன்ம லக்கினம் சிம்மராசியாகி அதில் சூரியனுஞ் சனியும், நாலில் அங்காரகனும் கேதுவும், இரண்டில் புதனும், மூன்றில் சுக்கிரனும், பத்தில் சந்திரனும் இராகுவும், ஆறில் குருவும் இருந்தால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதை, முனிவரே! நீர் சொல்லுவீர், என்று பார்வதியம்மன் கேட்டார்.

கிரகநிலை

		சந்திரன் ராகு	
குரு	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன் சனி
	அங்காரகன் கேது	சுக்கிரன்	புதன்

மிருக சீர்ஷம் 2-ஆம் பாகம் : அங்காரகதசை வரு 3-6-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்தில் குருவும், மிதுனத்தில் புதனும், கன்னியில் சந்திரனும் சனியும் இராகுவும், துலாத்தில் சூரியனும், தனுசில் சுக்கிரனும், மீனத்தில் அங்காரகனும் கேதுவும் ஆகும். குரு வக்கிரமாகவும் சனி அஸ்தமனம் அடைந்தும் இருக்கின்றார்கள்.

---

1. சூரியன்
2. அங்காரகன்
3. புதன்
4. சுக்கிரன்
5. சந்திரன்
6. குரு.

ஜாதகர் பிறந்த வீட்டின் லக்ஷணம்

2. அத்திரி முனிவர் சொல்வார் ஆணது ஜனன மாகும்
வித்தக னுதித்த யில்லம் மேல்வாடை வடதென் வீதி
அத்தியு மாரி தென்மேல் அணுகிய வாடை யில்லஞ்
சத்தியே பாலன் தோன்றுஞ் செப்புவோ மிவனின்
[யோகம்.

2. அத்திரிமக ரிஷியானவர் பதில் சொல்லுகின்றார். இந்த ஜனனமான குழந்தை ஆண்குழந்தையாகும். ஜாதகர் பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேலண்டை வாடையில் இருக்கும். யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளின் கோயிலும் மாரியம்மன் கோயிலும் தென்மேற்குத் திக்கில் இருக்கும் வீடுகள் வரிசையாக விருக்கும். பார்வதியம்மையே! இவ்விதமான அடையாளங்கள் உள்ள விடத்தில் இந்த ஜாதகர் பிறப்பார். இனிமேல் இவருடைய யோகத்தைச் சொல்லுகின்றேம்.

ஜாதகரின் தகப்பனுடைய குணதிசயங்கள்

3. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சிவந்தமெய்
[யூகை சாலி
தந்தையாற் சுகமில் லாதான் தரித்திரம் பூர்வ மாகுந்
தந்தமுங் குறைவா மைந்துந் தரணிகள் சேர்ப்ப னவன்
தன்தன முடைய னவன் சமர்த்தான வார்த்தை யுண்டு.

3. ஜாதகரின் தகப்பனுருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சிவப்பு நிறமுள்ள தேகத்தையுடையவர். நுட்பமான தும் ஊகமுள்ளதுமான புத்தியை யுடையவர். இவர் தன்னுடைய தகப்பனாரால் சௌக்கியமில்லாதவராவார். இவருக்குத் தன்னுடைய வாழ்நாளின் முதற்பாகத்தில் தரித்திரமும் கஷ்டங்களும் நேரிடும். இவருக்கு ஐந்து பற்கள் குறைவாக விருக்கும் இவர் நிலங்களையும் மனைகளையுஞ் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் தானே சம்பாதித்த சுயார்ஜிதமான தனத்தை யுடையவராவார். இவர் சமர்த்தியமான வார்த்தைகளைச் சொல்லுவார்.

4. அரசரால் தொழிலு மேற்ப னறுமுகன் பத்தி கொள்வன்
பெரிதான தலங்கள் செல்வன் போசன சுகிய னவன்
மர்மநூல் அறிவா னவன் வண்டிவா கனமு மேற்பன்
பொருளது சேர்ப்பா னென்றோம் பிதுராஸ்தி யற்ப
[மென்றோம்.

4. ஜாதகருடைய தகப்பனார் இராஜாங்கத்தில் வேலையை உடையவராக விருப்பார். ஆறுமுகக் கடவுளின் மேல் அன்பும் ஆசையும்

உடையவராவார். இவர் பெரிய பெரிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவார். சாப்பாட்டுச் சுகத்தை உடையவராவார். மர்மநூல் என்ற காம சாஸ்திரத்தைத் தெரிந்தவராவார். இவர் வண்டி முதலிய வாகனங்களை யுடையவராவார். இவர் தனத்தைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பவராவார் என்று சொல்லுகின்றோம். இவருக்குத் தகப்பனருடைய சொத்துச் சிறிதாக விருக்கும் என்று சொல்லுகின்றோம்.

5. கன்னியுந் தேங்காய் நாளில் கலப்பனு மூக சாலி
மன்னனுல் ஜீவ னங்கள் மருவிடு மந்த மட்டுஞ்
சின்னட்கள் வெளியூர் வாசஞ் சீக்கிர கோபஞ் சாந்தங்
கன்னென மொழியு முண்டு கடன்படா னென்று
[சொல்வோம்.

5. ஜாதகருடைய தகப்பனர் கன்னியா ராசியில் தேங்காய் நாள் என்ற மிருகசீர்ஷ நட்சத்திரத்தில் பிறந்தவராவார். இவர் விவேகம் உடையவர். நுட்பமான புத்தியை யுடையவர். இவர் தன்னுடைய வாழ்நாள் முடியும் வரையிலும் அரசர்களிடத்தில் தொழிலைச் செய்வார். இவர் சிலகாலம் வெளியூரில் வாசஞ் செய்வார். இவருக்குச் சீக்கிரத்தில் கோபம் உண்டாகும், உடனே அது தணிந்து விடும். சர்க்கரையைப் போன்ற இனிப்பான வார்த்தைகளை இவர் உபயோகிப்பார். இவர் கடன் வாங்கமாட்டார் என்று சொல்லுகின்றோம்.

6. ரோமங்க ளதிக மில்லான் நுண்ணிய புத்தி யுள்ளான்
தீமையை யொருவர்க் கெண்ணுன் தேவியால் பெருமை
[யேற்பன்
மாமன்னர் மெச்ச வாழ்வன் மாற்றூனை ஞசஞ் செய்வன்
ஆமதைப் பின்னுற் செய்வ னரிஞ்மை முடைய னுகும்.

6. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய தேகத்தில் அதிகமாக மயிரில்லாதவராக விருப்பார். நுட்பமானதும் கூர்மையானதுமான புத்தியை யுடையவராவர். இவர் யாருக்குங் கெடுதியை நினைக்கமாட்டார். இவர் தன்னுடைய மனைவியால் கௌரவத்தை அடைவார். இவர் தன்னைப் பெரிய அரசர்கள் மெச்சும்படியாக அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் தன்னுடைய பகைவனை அழித்துவிடுவார். இவர் வீட்டைப் பின்னல் கட்டுவார், மகா விஷ்ணுவினுடைய நாமதேயத்தை யுடையவராவார்.

7. பித்தனே கத்தா னுவன் பெரிதான சோதி யுண்டு
சுத்தத்தார் மதிக்க வாழ்வன் தூணையாண்பால் ஒருவன்
[தீர்க்களுஞ்
சத்திமா ரிருவர் தீர்க்களுஞ் சம்பத்து வுடைய னுவன்
நித்தியஞ் சீல னுவன் நேமியில் நல்லோ னென்பார்.

7. ஜாதகருடைய தகப்பனுர் பித்தமுள்ள தேகத்தை யுடையவ ராவார். பெரிய கண்களை யுடையவராவார். இவர் தன்னுடைய பந்துக்கள் இவரை மதிக்கும்படியானதும் கௌரவப்படுத்தும்படி யானதுமான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவருக்குக் கூடப் பிறந்த ஒரு சகோதரர் நீண்ட ஆயுளை உடையவராவர். இரண்டு சகோதரிகள் தீர்க்காயுளை யுடையவராவார்கள். இவர் சகல சம்பத்துக்களும் செல்வ மும் உடையவராவர். இவர் எப்போதும் நல்லொழுக்கத்தை யுடையவ ராவார். இவரைப் பூமியிலுள்ளோர்கள் நல்லவர் என்று சொல்லுவர்.

8. அந்தரம் பறப்பான் போலே
யவன்கன வதையே காண்பன்
நந்தியா விருத்தி யுண்டு
நடையது துருசு மாவன்
சிந்தையு மிரண்டு மாவன்
சங்குசக் கரமுங் கரத்தில்
அந்தியம் வாழ்வில் வாயுபாதை
யணுகிடு மென்று சொல்வோம்.

8. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய கலவில் ஆகாயத்தில் பறப்பதைப்போல ஓர் உணர்ச்சியை அனுபவிப்பார். இவருக்கு எருது களும் பசுக்களும் விருத்தியடையும். இவருடைய நடை குற்றமுடைய தாகும். நடவடிக்கையும் கெட்டதாக விருக்கும். இவர் இரண்டு விதமான எண்ணங்களை உடையவராவர்; அஃதாவது நல்ல எண்ணமுங் கெட்ட எண்ணமு முடையவராவர். இவருடைய உள்ளங்கைகளில் சங்கு சக்கர ரேகைகள் இருக்கும். இவருடைய வாணுளின் கடைகொலத்தில் இவருக்கு வாயுரோக பாதையால் துன்பம் உண்டாகும் என்று சொல்லுகின்றோம்

9. சிலர்க்குவா பத்தைக் காப்பன்
சிலருக்குத் துன்பஞ் செய்வன்
பலரையும் வசியங் கொள்வன்
பரவுப காரனுவன்
சொல்மொழி காப்பா னுவன்
தூறவோர்க்கு வன்ன மீவன்
பலதல வாசஞ் செய்வன்
பார்வதி கேட் டிடாயே.

9. ஜாதகருடைய தகப்பனுர் சிலரை அவர்களுடைய ஆபத்துக் காலங்களில் காப்பாற்றுவார், இவர் சிலபேருக்குக் கெடுதியையுஞ் செய்வார். இவர் பலரைத் தன்வசமாகச் செய்து கொள்ளுவார், இவர் பிறருக்கு உதவியைச் செய்பவராவர். இவர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றிக் கொள்ளுபவராவார்.

பரதேசிகளுக்கும் எல்லாவற்றையுந் துறந்துவிட்டவர்களுக்குஞ் சாப்பாடு போடுவார்.

ஜாதகருடைய குணாதிசயங்கள்

10. சொன்னயிக் குணத்தா னுக்குத்
தோன்றுவா னிக்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னழகுளான் சிவந்த மேனி
பன்னியே பேசு வானும்
பஞ்சைமே லிரக்க னுவன்
தன்சொலே மேன்மை யாகச்
சாதிப்பான் புலிபோல் கோபம்.

10. இதுவரையிலுஞ் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இனிமேல் ஜாதகருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் அழகாக விருப்பார். இவர் சிவப்பு நிறத்தையுடையவராவர். இவர் சாமர்த்தியமாகவும் விமரிசையாகவும் பேசுபவர்களாவார். இவர் ஏழைகளிடத்தில் தயாள குணமுங் கிருபையு முடையவராவார்.

11. கிருஷ்யு முடைய னுவன் கௌரவக் குடும்பி யாவன்
பொரைசொலான் கல்வி யற்பம் புலவன்போல்
[வார்த்தை யுண்டு
தரையதை விருத்தி செய்வன் சகலர்க்கு நல்லோ னுவன்
பொருள்கடன் கொள்ளா னுவன் புயபல முடைய னுகும்.

11. ஜாதகர் விவசாயத் தொழிலை யுடையவராக விருப்பார். கௌரவமுள்ளதும் மேன்மையானதுமான குடும்பஸ்தராக விருப்பார் பிறர்மேல் இவர் குற்றத்தைச் சொல்லமாட்டார். கொஞ்சமான வித்தையை யுடையவர், ஆனால் இவர் பண்டிதனைப் போலச் சாமர்த்தியமாக வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். எல்லோருக்கும் நல்லவராக விருப்பார். இவர் பணத்தைக் கடனாக வாங்கமாட்டார். இவர் தோள்வலிவு உடையவராவர், சகோதரபலத்தை யுடையவராவர்.

குறிப்பு :—இவருக்கு மூன்று சகோதரர்கள் உண்டு என்று பதின் மூன்றுவது பாடலில் சொல்லி யிருப்பதைக் கவனிக்கவும்.

12. சொல்லிடும் வசன மெல்லாஞ் சுத்தமாஞ் சொகுச னுவன்
வெல்லுவான் எதிரி தன்னை வீண்வழக் கோரம் பேசான்
அல்லலைப் போதுங் காண னண்டின பேரைக் காப்பன்
எல்லையை விருத்தி செய்வன் ஏவலா ளுடைய னுவன்.

12. ஜாதகர் சொல்லுகின்ற வார்த்தைகள் எல்லாம் சுத்தமாகவும் ஒழுங்காகவும் இருக்கும். இவர் நேர்த்தியாகவும் நாகரிகம் உடையவராகவும் இருப்பார். இவர் தன்னுடைய பகைவனை ஜயித்துவிடுவார், வீணை வியாஜ்யத்தில் இவர் ஒருதலையாகப் பேசமாட்டார். இவர் எப்போதும் கஷ்டத்தையும் அலைச்சலையும் அடையமாட்டார் தன்னை வந்தடைந்தவர்களை இவர் காப்பாற்றி ஆதரிப்பார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார், இவர் வேலைக்காரர்களை உடையவராக விருப்பார்.

13. தன்துணை யைவர் தோன்றும்
தங்கிநி மாண்பால் மூவர்
கன்னிகை யொன்றே தீர்க்கங்
கனமான குடும்ப மெய்தும்
மன்னன்போல் வாழ்வா னுமே
மாளிகை சித்திரஞ் செய்வன்
பொன்பணி சேர்ப்பா னுவன்
புதையலும் வைப்பா னென்றோரும்.

13. ஜாதகருடன் கூடப்பிறந்த சகோதரர்கள் மொத்தம் ஐந்து பேராவர். இவர்களில் மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். இவர் பெரியதும், மேன்மையானதுமான குடும்பத்தை யுடையவராவார். இவர் அரசனைப் போலிருந்து வாழ்பவராவார். இவர் மாளிகைகளையும், பெரிய வீடுகளையும சித்திரங்களால் அலங்காரஞ் செய்வார். தனம் ஆபரணம் ஆகிய இவைகளை இவர் சம்பாதித்துச் சேர்த்து வைப்பவராவர். இவர் பணத்தைப் புதையலிப்போலப் புதைத்து வைப்பார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய யோக விஷயம்

14. யோகமெவ் விதமாய்ச் சொல்வீ ருரைப்பீர்க ளந்தச்
[சங்கை
பாகன்சேய் பரிதி வெள்ளி பற்றிட மாட்சி யாகத்
தாகவே புந்தி கேது சந்திர னுச்ச மாகப்
போகவா ரிதியே யோகம் புரந்தரன் யோக மொன்று.

14. ஜாதகரது யோகத்தை எந்தக் காரணங்களைக்கொண்டு சொல்லுவீர்? அந்தக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்கவே அத்திரி மகரிஷி பதில் சொல்லுகின்றார். பாகன் என்ற புதன், சேய் என்ற அங்காரகன், பரிதி என்ற சூரியன், வெள்ளி என்ற சுக்கிரன் ஆகிய இவர்கள் ஆட்சியாக விருப்பதாலும், புந்தி என்ற புதன், கேது,

சந்திரன் ஆகிய இவர்கள் உச்சமாக விருப்பதாலும் "போகவாரிதி யோகம்" என்ற ஒருவித லக்ஷ்மியோகமும், "புரந்தரயோகம்" என்ற இன்னொரு இந்திர யோகமும் இருக்கின்றன.

குறிப்பு :—அசலில் "போகவாரி யரியாகும் புறந்தினை யோகம்" என்று இருப்பது "போக வாரிதியோகம், புரந்தரயோகம்" என்று இருக்கவேண்டும் என்று தோற்றுகிறது. போகம் என்பது செல்வம். வாரிதி என்பது கடல் ஆகும். இலட்சுமிக்கு "கடற் பிறந்த கோதை" என்ற ஒரு பெயருண்டு. ஆகையால் "போகவாரிதியோகம்" என்பது இலட்சுமியோகமாகும். புரந்தரன் என்றால் இந்திரன் ஆகும். ஆகையால் புரந்தரயோகம் என்பது இந்திரயோகம் ஆகும். இலட்சுமி யோக விஷயமாய்ப் பலதீபிகை ஆறுவது அத்தியாயம் பதினேழாவது சுலோகம், ஜாதகாலங்காரம் 359,397,398-ஆவது பாடல்களையும், ஜாதக சிந்தாமணி 2068 முதல் 2071-ஆவது வரையிலுமுள்ள பாடல்களையும், ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் 152-ஆவது சுலோகத்தையும் பார்க்கவும். பலதீபிகையின்பிரகாரம் பாக்கியாதிபதியும் சுக்கிரனும் ஆட்சி, உச்சம், கேந்திரம், திரிகோணம் இவைகளில் இருந்தால் இலட்சுமி யோகமாகும். இந்த ஜாதகத்தில் பாக்கியாதியாகிய ஒன்பதிற்குடைய அங்காரகனும், சுக்கிரனும் ஆட்சியாய் இருப்பதால் இலட்சுமியோகம் ஏற்பட்டிருக்கின்றது. மேலும், இந்திரயோக விஷயமாய்த் தமிழ் ஜாத காலங்காரம் 333, 362-ஆவது பாடல்களையும் ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் 68-ஆவது சுலோகத்தையும், ஜாதக சிந்தாமணி 1987, 1994-ஆவது பாடல்களையும் பார்க்கவும். ஜாதகாலங்காரம் 333-ஆவது பாடல் பிரகாரம் சூரியன் லக்கினத்திலும் ஐந்திலும் இருந்து அங் காரகன், நான்கு ஏழு பத்து இவைகளில் இருந்தால் இந்திரயோக முண்டாகும். இந்த ஜாதகத்தில் சூரியன் லக்கினத்திலும் அங்காரகன் நான்கிலும் இருப்பதால் இந்திரயோகம் ஏற்பட்டிருக்கின்றது.

15. இருவகை யோகத் தாலே யிராசரு மெச்ச வாழ்வன்
திருமாளி மூவே ழாண்டின் மேலேதான் செய்வா னவன்
குறைவிலாக் குடும்ப மெய்துங் குணம்நலங் குருப்புத் தீமை
யுரைவதிற் சிலேடை யுண்டு உத்தமி கேட்டி டாயே.

15. இரண்டுவிதமான யோகங்களாலே ஜாதகர் அரசர்கள் இவரை மெச்சும்படியான அந்தஸ்தில் இருந்து வாழ்வார். இவர் அழகிய மாளிகையைத் தனக்கு இருபத்தோராவது வயதிற்கு மேலே செய்பவராவார். இவருடைய குடும்பம் கஷ்டத்தை அனுபவிக்காமல் இருக்கும், இவருடைய குணம் நல்லதாக விருக்கும். குருப்பு என்ற பரு, வேர்க்குரு முதலியவைகளால் இவருக்குத் துன்மைகள் ஏற்படும். இவர் பேசுவதில் இரண்டு அர்த்தங்களையுடைய வார்த்தைகளை உபயோகிப்பார். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணதிசயங்களும்

16. மங்கள மீரெண் பாண்டுள்
மருவிடும் வடமேல் பாரி
அங்கவள் குணத்தைச் சொல்வேன்
அரிமனை யொப்ப ளாவள்
பொங்கிய குடும்ப மேற்பள்
புருடன்தன் மனத்துக் கேற்றோள்
சங்கையென் றோரைச் சாராள்
சகலர்க்கு நல்லோ ளாவள்.

16. ஜாதகருக்கு விவாகம் பதினெட்டு வயதிற்குள்ளே நடக்கும். இவருக்கு மனைவி வடமேற்குத் திக்கிலிருந்து வருவாள். அவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். மகாவிஷ்ணுவினுடைய மனைவியாகிய லக்ஷ்மிக்குச் சமானமானவளாக விருப்பாள். இவள் மேன்மையான சிறந்த குடும்பத்தையுடையவளாக விருப்பாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவாள். இவள் அச்சமுடையவர்களுடன் சிநேகஞ் செய்து கொள்ளமாட்டாள். எல்லோருக்கும் இவள் நல்லவளாக விருப்பாள்.

17. தோகைபோல் சாய லொக்குஞ் சொல்லது சுருக்க மாகும்
ஆகம முணர்ந்தோ ருக்கு அன்னமு மன்பா யீவள்
நாகரி கங்க ளுண்டு நடைநன்மை யிளம னத்தாள்
தாகமென் றோர்க்கு நீவள் சத்தியுந் தீர்க்க ஜீவி.

17. ஜாதகருடைய மனைவி மயிலைப்போல் அழகிய உருவத்தை உடையவளாவாள், சுருக்கமாகப் பேசுவாள். இவள் ஆகமசாஸ்திரங்களைப் படித்தறிந்த பெரியோர்களுக்குச் சாப்பாட்டை ஆசையுடன் போடுவாள். இவள் நாகரிகங்களை உடையவளாக இருப்பாள், நல்ல ஒழுக்கத்தையுடையவளாவாள், இளகிய மனத்தை உடையவளாக விருப்பாள். இவள் தாகம் எடுக்கின்றது என்று சொல்லுகின்றவர்களுக்கு நீர்மோர் கொடுப்பாள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள்.

18. பால்பாக்கிய முடைய ளாகும்
பகையொன் றும்மனத்தில் வையாள்
சீலியாம் விரத சாலி
தீங்கதை யெவர்க்கு மெண்ணாள்
ஆலம்போல் கோப முண்டு
வப்போதே நிலைக்கு மென்றோம்
வேல்விழி யோக சாலி
வித்தகி கேட் டிடாயே.

18. ஜாதகருடைய மனைவி பால்பாக்கிய சம்பத்தை யுடையவளாவாள், விரோதத்தைத் தன்னுடைய மனத்தில் வைத்துக் கொண்டிருக்கமாட்டாள். இவள் நல்ல ஒழுக்கத்தை யுடையவளாவாள், விரதங்களை அநுஷ்டிப்பவளாவள், எவருக்குங் கெடுதியை நினைக்க மாட்டாள். இவளுக்குச் சர்ப்பத்திற்கு வருவதைப் போலக் கோபம் வரும், ஆனால் அஃது உடனே தணிந்து போய் விடும் என்று சொல்லுகின்றோம். வேலைப்போன்ற அழகான கண்களையுடைய இவள் யோகத்தையுடையவளாக விருப்பாள், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய சந்ததிகளும் (புத்திரபாவமும்) முன் ஜன்மமும்

19. சுதர்களி லாண்பால் மூன்று
தோகையு மவ்வாறு தீர்க்கம்
இதுநிற்க வுதித்தோன் பூர்வ
மியம்புவோம் புதுவை தன்னில்
சதிசெய்யும் வைசியச் சேயாய்
ஜனித்துமே செட்டு செய்து
அதிதிகட் கன்ன மீந்து
அறமதி லிச்சை யுண்டாய்;

19. ஜாதகருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். இந்த விஷயம் இவ்விதமாகவிருக்க, இனிமேல் ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் புதுவை என்ற புதுச்சேரியில் வஞ்சனையையுடைய ஒரு வைசியராகப் பிறந்து வியாபாரத்தைச் செய்து பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு தருமத்தில் ஆசையுடையவராக விருந்து;

20. முருகன்தன் பத்தி பூண்டு முன்வினை யில்லா னெஞ்சி
மரலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக னுதிப்பா னவன் செப்புவோ மிவனின் யோகம்
பெருமையாய்க் குடும்ப மேற்பன் புண்ணிய மனத்த னவன்

20. ஆறுமுகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகி முன்ஜன்மத்திய பாவம் ஒன்றும் இல்லாதவராக விருந்து இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப் பட்டு இந்த ஜன்மத்தில் இந்த ஜாதகர் பிறந்திருக்கின்றார். இவருடைய யோகவிஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், இவர் மேன்மையான குடும்பத்தை யுடையவர், நல்ல மனத்தை யுடையவராவர்.

21. தந்தையின் பூமிதன்னைத் தானவன் விருத்தி செய்வன்
பிந்தியும் பூமிசேர்ப்பன் பின்துணை தன்னைக் காப்பா
[னகும்
முந்திஞள் பொருளுந் தேரும் முயர் குருதிசை மத்தியத்தில்
இந்திரன் போலே வாழ்வன் ஈஸ்வரி கேட் டிடாயே.

21. ஜாதகர் தன்னுடைய தகப்பனருடைய நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். பிறகு நிலங்களையும் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் தன்னுடன் கூடப்பிறந்த இளைய சகோதரர்களைக் காப்பாற்றுபவராவார். இவருக்கு மூதாதைகளுடைய சொத்தும் குருதசையின் மத்தியில் வந்து சேரும். இவர் தேவேந்திரனைப் போலச் சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டு வாழ்வார். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக

ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்கள்

22. மாதிரு குணத்தைச் சொல்வேன்
மாஞ்சிவப் புடைய ளாவள்
சூதிலாள் பொறுமை சாலி
சொல்லது சுகமே யாகும்
வேதனை யொருவர்க் கெண்ணுள்
விசன மெப் போதுங் காணுள்
தீதென்றோர்க் குதவி செய்வள்
சீலமு முடைய ளாவள்.

22. ஜாதகருடைய தாயாரின் குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தையுடையவளாக விருப்பாள். இவள் கபடு கள்ளம் வஞ்சனை இவைகளை யுடையவளல்லள். இவள் பொறுமையை யுடைய வளாக விருப்பாள். இவள் நல்ல வார்த்தைகளை இனிமையாக உபயோகப்படுத்துவாள். இவள் எவருக்கும் துன்பத்தை நினைக்க மாட்டாள். இவள் எந்தக் காலத்திலும் துன்பத்தை அநுபவிக்க மாட்டாள். இவள் கஷ்டத்தை அநுபவிக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரத்தைச் செய்வாள், நல்ல ஒழுக்கத்தை உடையவளாகவுமிருப்பாள்.

23. அடிசிலுக் கினியா ளாவ ளாபத்தென் றோரைக் காப்பள்
நடைநன்மை பித்த வாயு நல்கிடும் பாவைக் கேதான்
உடன்துணை யாண்பால் நான்கு வுத்தமி மார்க வீரண்டு
குடதிசை வாயு மூலை கூறுவோ மில்ல மொன்று.

23. ஜாதகருடைய தாயார் சமையலை இனிமையாகவும் நன்றாகவுஞ் செய்வாள். நாங்கள் ஆபத்தை யடைந்திருக்கின்றோம் என்று

சொல்லுகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் நல்ல நடவடிக்கையை யுடையவளாவாள். இவளுக்குப் பித்தவாயு ரோகம் சம்பவிக்கும். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் நான்கு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் ஆவர். மேற்குத்திக்கு வடமேற்குத்திக்கு இவைகளில் இவளுக்கு ஒரு வீடு உண்டு என்று சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மம்

24. முன்னவ ளிருந்த ஜன்ம
மொழிகிறோம் பனங்காட் டூரில்
பொன்வேலை செய்யுங் குலத்திற்
பிறந்துமே வறுமை யின்றிப்
பின்னோர்க்குத் தாக மீந்து
பிழையான குணங்க ளின்றி
அன்னவள் வினையில் லாம
லந்தக னுலகஞ் சென்று ;

24. ஜாதகருடைய தாயாரின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் பனங்காட்டூர் என்ற கிராமத்தில் தட்டார ஜாதியில் பிறந்து தரித்திரமும் கஷ்டமும் இல்லாமல் இருந்து ஏழைகளுக்கு நீர்மோர் கொடுத்து தவருன கெட்ட குணங்களை உடையவளாகவில்லாமல் இருந்து பாவம் ஒன்றையும் அடையாமல் இறந்து எம பட்டணத்திற்குப் போய் ;

ஜாதகரின் தாயாருடைய மறு ஜன்மம்

25. தலைநான்கோன் வரையப் பட்டு ஜனித்தவ ளிந்த மாது
உலகினில் வறுமை காண ஞயர்வான புத்தி யேற்பள்
பலபேரும் நல்லோ ளென்பார் பாவைபின் ஜன்மங்
[கேளாய்
குலவுவா ளவ்வூர் தன்னில் குழவிக்குக் குழவி யாகி ;

25. நான்கு சிரசுகளையுடைய பிரமதேவனுல் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு ஜாதகருடைய தாயார் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள். இவள் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டத்தையும் அநுபவிக்கமாட்டாள். இவள் மேன்மையான சிறந்த புத்தியை யுடையவளாவாள். இவளை பலர் நல்லவள் என்று சொல்லுவார்கள். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. அதே ஊரிலேயே இவள் தன்னுடைய குழந்தைக்குக் குழந்தையாகப் பிறப்பாள்.

ஜாதகருடைய தகப்பனரின் முன் ஜன்மம்

26. தந்தையின் முன்ஜன் மத்தைச் செப்புவோந் தில்லை
[கீழ்பால்

பிந்தின ஊரி லேதான் பிறந்தனன் வேளாள ஜெக
அந்தவ னரசர் மூல மநேகமாய்ச் செட்டு செய்து
பத்தினி மதலை யுண்டாய்ப் பகரமா குடும்பி யாகி ;

26. ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தில்லை என்ற சிதம்பரத்திற்குக் கிழக்குத் திக்கில் ஒரு செல்வமற்ற கிராமத்தில் வேளாளர் குலத்திற் பிறந்தார். இவர் அரசாங்கத்தார் மூலமாக அநேக வியாபாரங்களைச் செய்து கொண்டு மனைவி மக்களையுடையவராகி ஒரு மேன்மையான குடும்பஸ்தராகவிருந்து ;

27. மாரனுந் தொழிலில் நஷ்ட மருவியே மனது வாடி
சீரியோர்க்குத் தாக மீந்து சேர்ந்தனன்காலந் நாடு
ஆரியன் வரையப் பட்டு வடைந்த னனிக் குலத்தில
பாரினிற் தவங்கள் செய்யும் பார்வதி கேட் டிடாயே.

27. ஜாதகருடைய தகப்பனர் முன் ஜன்மத்தில் தன்னுடைய தொழிலில் நஷ்டத்தை யடைந்து தன்னுடைய மனத்தில் துன்பத்தை யடைந்து ஏழைகளுக்கு நீர்மோர் கொடுத்து இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்த ஜாதியில் பிறந்திருக்கிறார். பூமியில் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

28. முன்ஜன்ம மரசர் மூல மோடின பொருளை எல்லாம்
இன்னவ னூழி செய்திழப்பனு மென்று சொன்னேங்
தென்முனி புகலு கின்றார் தந்தங்கள் குறைவு மூண்டு
துன்பத்தைச் சொல்லு மென்ன செப்புவோம் முனியே
[கேளும்.

28. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய முன் ஜன்மத்தில் அரசாங்கத்தார் மூலமாய் அனியாயமாகச் சம்பாதித்துத் தன் வயிற்றை நிறப்பிக்கொண்ட தனம் எவ்வளவோ அவ்வளவையும் அந்த ஜன்மத்திலேயே அதற்குரிய தொண்டைச்செய்து இழந்து விட்டார் என்று சொல்லுகின்றோம். இவருக்குப் பற்கள் குறைவாக விருக்கும் என்று (மூன்றுவது பாடலில்) சொல்லியதற்குத் தென்முனியாகிய அகஸ்தியமுனிவர் இந்தக் கஷ்டத்தை உண்டுபண்ணக்கூடிய காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, அவரை அத்திரிமகரிஷி பார்த்துச் சொல்லுகின்றார். முனிவரே ! நாங்கள் சொல்லுகின்றோம் கேட்பீராக.

29. இந்ததோர் ஜன்மம் தன்னில்
இவன்செய்யுந் தொழி லிலேதான்
முன்குலத் தோர்மேல் நிந்தை
மொழிந்தனன் அதலால் தோஷம்
இந்தவன் மரண மட்டு
மரசரால் பொருளும் பெற்றுச்
சந்ததஞ் ஜீவிப் பானுஞ்
சங்கரி கேட்டி டாயே.

29. ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் இவர் செய்கின்ற தொழிலில் முன் குலத்தோராகிய பிராமணர்களின் மேல் அபவாதங்களைச் சொன்னதால் இவருக்கு அந்தத் தோஷமாகிய பற்கள் குறைகின்ற தோஷம் சம்பவிக்கும். இவர் தன்னுடைய மரண காலம் வரையிலும் அரசாங்கத்தாரால் பணத்தைச் சம்பாதித்து எப்போதும் ஜீவிப்பவராவர். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனாருடைய மரணமும் (பிதிரு கர்மமும்)
தகப்பனாரின் மறு ஜன்மமும்

30. மூப்பது ஒன்று ஆண்டில்
விளம்புவோர் தந்தை கண்டம்
அப்போது குருவின் காலம்
அசுரர்குரு மந்திரி புக்தி
செப்பதாய் நடக்கு மென்றேஞ்
சேயன்பின் ஜன்மங் கேளாய்
ஒப்புட னருணை தன்னி
லுதிப்பனும் வேளான் வம்சம்.

30. ஜாதகருக்கு மூப்பத்தோராவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்து போய்விடுவார். இந்தக் காலத்தில் குருவினுடைய தசையில் அசுரர் குருவும் மந்திரியுமாகிய சுக்கிரனுடைய புக்தி உண்மையாய் நடக்கும் என்று சொல்லுகின்றோம். தகப்பனாருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம் கேட்பீராக. மேன்மையான அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் வேளாளர் குலத்தில் பிறப்பார்.

ஜாதகரின் தாயாருடைய மரணமும் (மாதுரு கர்மமும்)
ஜாதகருக்குக் கண்டமும்

31. நாற்பது ஆண்டு தன்னில் நவிலுவோ மன்னை கண்டங்
கீர்ப்பாக ஜாதகர்க்குச் செப்புவோ மைம்பத் தைந்தில்
ஏற்கவே பலவாய்க் கண்ட மெய்திடும் நமனைக் காணன்
ஆற்கவே அறுப தாண்டில் நற்றனூர் மாதந் தன்னில்;

31. ஜாதகருக்கு நாற்பதாவது யைதில் இவருடைய தாயாருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றேம். இவருக்குக் கண்டிப்பாக ஐம்பத்தைந்தில் ஒரு பலமான கண்டம் நேரிடும் என்று சொல்லுகின்றேம், ஆனல் அப்போது இவர் எமனுடைய தரிசனத்தை அடையமாட்டார், அஃதாவது இறந்துவிட மாட்டார். இவருக்கு அறுபத்தைந்தாவது வயதில் தனுர்மாதம் என்ற மார்கழி மாதத்தில் ;

ஜாதகருடைய மரணமும் மறு ஜன்மமும்

32. உதித்தசே யுடல மேகு முரைக்கிறே மிவன்பின் [ஜென்மம்
அதிதிவாழ் பழனி தன்னி லருளுவான் சைவச் சேயாய்
நிதிமிக வுடை யனகி நேமியில் புகழு மேற்பன்
சதியிலாத் தவங்கள் செய்யுஞ் சங்கரி கேட்டி டாயே.

32. ஜாதகர் இறந்து இவருடைய தேகம் மறைந்துபோய்விடும். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகின்றேம். அதிதிகள் என்ற பரதேசிகள் வாசஞ்செய்கின்ற பழனி ஸ்தலத்தில் சைவர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார் ; செல்வம் அதிகம் உடையவராக விருந்து பூமியில் கீர்த்தியையும் பெருமையையும் அடைவார். குற்றம் வஞ்சனை கபடம் இவை இல்லாமல் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகரின் மனைவியினுடைய மரணமும் ஜாதகரின் ஜனனகாலத்திய தசையும்

33. பாரியு மிவன்பின் னலே பறப்பளாங் காலக் நாடு
மாரனுஞ் ஜனிக்குங் காலை மான்றலை மத்தி யென்றேம்
ஆறலின் தசைமூன் றாண்டு மணுகிடுந் திங்க ளாகுங்
கூறுவோம் பூர்வ பாகங் கோதையே கேட்டி டாயே.

33. ஜாதகருடைய மனைவி இவருக்குப் பின்னல் இறந்து எமபட்டணம் போய்ச் சேருவாள். இவருடைய ஜனனகாலத்தில் மான்றலை என்ற மிருகசீர்ஷ நட்சத்திரத்தின் மத்தி என்ற இரண்டாவது பாதம் ஆகும், இதற்குரிய ஆறலின் தசை என்ற அங்காரக மகாதசையில் இருப்பு மூன்று வருஷங்களும் ஆறு மாதங்களும் ஆகும். இவ்விதமாகப் பூர்வ பாகமாகிய முதல் பாகத்தை நாங்கள் சொல்லி முடித்து விட்டோம். பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு :—"மான்றலை மத்தி" என்பது சந்திரன் ரிஷபத்தில் இருப்பதால் மிருகசீர்ஷத்தின் இரண்டாவது பாதம் என்று பொருள் படுமே தவிர மூன்றுவது பாதம் என்று அர்த்தமாகாது என்பதைக் கவனிக்கவும்.

ஜாதகம் 96

ஜனனகால கிரக நிலை

1. [1]மதிராகு [2]வீனை யாக [3]மந்தனுஞ் [4]சிய மாகப்
புதன்[5]மானில் [6]புகர்[7]பொன் [8]பானு பின்[9]சிகி [10]மேரு
[வாகச்
சதியிலாச் [11]சேயுங் [12]கோலில் ஜன்மமுஞ் சிம்ம மாக
இதுவிதக் கோளும் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரனும் இராகுவும் மிதுனத்திலும், சனி சிம்மத்திலும், புதன் மகரத்திலும், சுக்கிரனும் குருவும் சூரியனும் கேதுவும் தனுசிலும், அங்காரகன் துலாத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் சிம்மமாகி இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலா பலன் களைச் சொல்வீர் என்று;

கிரகநிலை

			சந்திரன், ராகு
புதன்	இராசி சக்கரம்		லக்கினம் சனி
சுக்கிரன் குரு சூரியன் கேது		அங்காரகன்	

புனர்பூசம் 3-ஆம் பாதம்: குருதசை ஹ 5—1—0

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்: —மேஷத்தில் புதனும், கடகத்தில் சனியும் கேதுவும், சிம்மத்தில் சுக்கிரனும், துலாத்தில் சூரியனும், சந்திரனும், தனுசில் குருவும், மகரத்தில் அங்காரகனும் இராகுவு ஆகும். குரு அஸ்தமன மடைந்திருக்கின்ரூர்.

---

1. சந்திரன்
2. மிதுனம்
3. சனி
4. சிம்மம்
5. மகரம்
6. சுக்கிரன்
7. குரு
8. சூரியன்
9. கேது
10. தனுசு
11. அங்காரகன்
12. துலாம்

2. சுந்தரி கேட்கும் போது ஜயமுனி புகலு கின்றார்
இந்தச்சே யாணஞ் ஜன்ம மில்லமுங் கீழ்மேல் வீதி
தென்வாடை கீழ்ப்பால் மாயோன் சஞ்ஜீவி ராயன்
[மேற்கில்
அந்தரி காளி யுத்தர மருகர்தங் கோஷ்டங் தென்பால்.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது ஜயமுனிவர் சொல்லு கின்றார். ஜனனமான இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகவும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தெற்கு வாடையில் இருக்கும். கிழக்குப் பக்கத்தில் மகாவிஷ்ணுவின் சோயிலும், மேற்குத் திக்கில் சஞ்சீவிராயன் கோயிலும் இருக்கும். பார்வதியம்மன் கோயிலும் காளி யம்மன் கோயிலும் வடக்குத் திக்கிலும், சமணர்களின் கோயில் தெற்குத் திக்கிலும் இருக்கும்.

ஜனனமான நகரச் சிறப்பு

3. இன்னமும் பலதே வாச
மிலகிய பேரு ராகுஞ்
சந்ததம் வடுகர் வர்க்கஞ்
ஜனிப்பனு மாரூஞ் ஜன்மம்
அன்னையின் தந்தை யோக
மவன்துணை களத்திர புத்திரர்
முன்பின் ஜன்மங்கள் யாவு
மூரைக்கிறே மிந்நூல் தன்னில்.

3. ஜாதகர் பிறந்த ஊரில் அநேக தேசத்தவர்கள் வாசஞ்செய்து கொண்டிருப்பார்கள். இந்த ஊர் பிரகசானமான ஒரு பட்டணமாகும். இந்த ஜாதகர் ஆறுவது குழந்தையாகத் தெலுங்கருடைய குலத்திற் பிறப்பார். இவருடைய தாயாருடைய யோகம், இவருடைய சகோ தரர்களின் யோகம், மனைவி புத்திரர் இவர்களுடைய யோகம், முன் ஜன்மம், மறு ஜன்மம் ஆகிய இவை எல்லாவற்றையும் இந்தச் சாஸ் திரத்திற் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் துணைவ ரைந்தில் தங்காரே சிலரா மென்றோம்
முந்திய துணைப்பெண் ஒன்று மொழிகிறோந் தீர்க்க மாக
அந்தவள் சேதி சொல்வோ மரிமனை யொப்ப ளாவள்
சிந்தையும் நல்ல தாகுஞ் சிவந்தமெய் வாத தேகி

4. ஜாதகரின் தகப்பனருடன் கூடப் பிறந்தவர் ஐந்து பேர் ஆவார். இவர்களில் சிலர் இறந்து போய்விடுவார்கள் என்று

சொல்லுகின்றோம். தகப்பனாருக்கு முன்னே பிறந்த ஒரு சகோதரி நீண்ட ஆயுளையுடையவளாக விருப்பாள். இவளுடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் மகாவிஷ்ணுவினுடைய மனைவியாகிய லக்ஷ்மிக்குச் சமானமானவளாக விருப்பாள். இவள் நல்ல மனத்தையுடையவளாகவிருப்பாள். இவள் சிவப்பான தேகத்தையும் வாதமான தேகத்தையும் உடையவளாவாள்.

5. வரனில்லம் வாழா வாரும் மாதிரு இல்லம் வாசம்
பெருமையாய்க் குடும்ப மேற்பள் போஜன வறுமை
[காணுள்
வருவோரை யாத ரிப்பள் மறுத்துரை யதிகங்கூரள்
கரிமத வானை பெற்றக் காதலி கேட் டிடாயே.

5. ஜாதகரின் தகப்பனாருடைய மூத்த சகோதரி தன்னுடைய புருஷனுடைய வீட்டிலிருந்து வாழமாட்டாள். இவள் தன்னுடைய தாயாருடைய வீட்டிலேயே வாசஞ்செய்து கொண்டிருப்பாள். இவள் பெருமையான குடும்பத்தையுடையவளாக விருப்பாள். இவள் சாப்பாட்டு விஷயத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அநுபவிக்கமாட்டாள். இவள் தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் அதிகமாகத் தடுத்துப் பேசமாட்டாள். கறுப்பு மதம் பிடித்த யானையின் முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றதைக் கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனாரின் மூத்த சகோதரியின் சந்ததிகளும் (புத்திரபாவமும்) பிதாவுடைய விஷயமும்

6. சுதர்களும் பதின்மூன்றுகத் தோன்றிடுஞ் சிலரே சேதஞ்
சதமாக வாண்பா லிரண்டு தையலும் மூவ ராவர்
இதுவைந்துந் தீர்க்க மெய்து மியம்புவோம் பின்பால் சேதி
அதிதியே தந்தை சேதி யறிவிப்போ மினி மேலாக.

6. தகப்பனாரின் மூத்த சகோதரிக்குப் பதின்மூன்று குழந்தைகள் பிறக்கும். இவைகளில் சில இறந்து விடும். இவளுக்கு நிலையாக இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் ஆக ஐந்து குழந்தைகள் தீர்க்கமான அஃதாவது நீண்ட ஆயுளை உடையனவாக விருக்கும். இவைகளுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகின்றேன். பார்வதி யம்மையே! இனிமேல் ஜாதகருடைய தகப்பனாரின் விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

7. கல்விமான் சிவந்த மெய்யன் கண்முகம் வசிய முண்டு
அல்லலெப் போதுங் கர்ணு னடாவடி தன்னிற்
[செல்லான்
வல்லியர் மோக னுவன் மால்பத்தி கொள்வா னுவன்
புல்லிய புத்தி கொஞ்சம் புண்ணிய மனத்த னுவன்.

7. ஜாதகருடைய தகப்பனுர் சிவப்பு நிறமுடைய தேகத்தை யுடையவர். இவருடைய கண்களும் முகமும் பிறரைத் தன் வசப்படுத் தும் படியான அழகுள்ளனவாக விருக்கும். இவர் எப்போதுங் கஷ்டங் களே அடையம்மாட்டார். இவர் அடாவடியான விஷயங்களில் பிரவே சிக்கமாட்டார். இவர் ஸ்திரீகளின் மேல் காம ஆசையை யுடையவ ராவார். இவர் மகாவிஷ்ணுவின் மேல் அன்பும் ஆசையும் உடையவ ராவர். தாழ்ந்த புத்தியைச் சிறிதுடையவராவார். இவர் நல்ல மனத்தை யுடையவராவார்.

8. காரத் தேக முண்டு காலிகள் பணியோர் விருத்தி
தீரமாம் மனத்த னுவன் சித்தினி ஜாதி யாவன்
போர்தனில் செல்லா னுவன் புலிபோலே கோப முண்டு
பாரினில் புகழு மேற்பன் பத்தினிப் பகையுஞ் சின்னுள்.

8. ஜாதகருடைய தகப்பனுரது தேகம் பித்தகாரகமாகவிருக் கும், அஃதாவது அவருக்கு மேகரோக மிருக்கும். இவரிடம் பசுக்களும் நிலங்களும் ஏர்களும் விருத்தியடையும். இவர் தைரியமான மனத்தை உடையவராவர். இவர் சித்தினி ஜாதியில் சேர்ந்தவராவர். இவர் சண்டையில் தலையிடமாட்டார். இவருக்கு புலிக்கு வருவதைப் போலக் கோபம் உண்டாகும். இவர் பூமியில் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார். இவருடன் இவருடைய மனைவி சிலகாலம் வரையிலும் விரோதியாக விருப்பாள்.

குறிப்பு :—சித்தினி ஜாதி விஷயமாகச் சிம்மலக்கின வாலுமில் சுலோ. 84-ஆவது ஜாதகம் ஐந்தாவது பாடலின் கீழ் கொடுத்துள்ள வியாக்கியானத்தைப் பார்க்கவும்.

9. இருவித குணக்கா னுவன்
யாரையும் வசியங் கொள்வன்
பரிசேர்ப்பன் சகடு முண்டு
பரவுப காரு னுவன்
அரசன்போல் உணவு கொள்வன்
ஆள்கார ருடைய னுவன்
திருகான மதுவியா பாரஞ்
செய்வனு மென்று சொல்லுவோம்.

9. ஜாதகருடைய தகப்பனார் இரண்டு விதமான குணங்களை உடையவராவர். அஃதாவது நல்ல குணமும் கெட்ட குணமும் கலந்துள்ள ரஜோ குணத்தை யுடையவராவர். இவர் எப்படிப்பட்டவரையும் தன் பக்கமாக விருக்கும்படியாக வசப்படுத்திக்கொள்வார். இவர் குதிரையையும் வண்டியையும் உடையவராவார். இவர் பிறருக்கு உதவியைச் செய்பவராவார். கள்ளம் கபடு வஞ்சனை முதலியவைகளை உண்டுபண்ணக்கூடிய கெட்ட மது என்ற கள்ளு சாராயம் முதலியலாகிரி வஸ்துக்களின் வியாபாரத்தைச் செய்வார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனாருடைய முன் ஜன்மம்

10. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகுறோம் வான்மீ யூரில்
மன்னர்தங் குலமு திக்து மனைவிமைந் தருமுண் டாகிப்
பொன்னெடு பணியும் பெற்றுப் புகழான வணிபஞ் செய்து
அன்னவன் வாழுந் நாளி லணுகின வினையைக்
[கேண்மோ.

10. ஜாதகரின் தகப்பனாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் திருவான்மியூரில் இராஜ குலத்திற் பிறந்து மனைவி மக்களையுடையவராகித் தனத்தையும் ஆபரணங்களையும் சம்பாதித்து மேன்மையான சிறந்த ஒரு வியாபாரத்தைச் செய்துகொண்டு வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக.

11. மனைவியின் வார்த்தை யாலே
மாதாவை யெத்தும் போது
சினமுண்டாய்ப் புகலு கின்றாள்
ஜனிக்கும்பின் ஜன்மந் தன்னில்
வினைவருங் கால்க ளுக்கு
விளம்பிலு ளதுவொரு தோஷம்
பிணையாக வேறு வொன்று
புகலுவேன் தாயே கேளும்.

11. ஜாதகருடைய தகப்பனார் முன் ஜன்மத்தில் தன்னுடைய மனைவியினுடைய பேச்சைக் கேட்டுத் தன்னுடைய தாயாரைக் காலால் எட்டி உதைக்கும்போது, தாயாருக்குக் கோபம் உண்டாகி அவள் "உன்னுடைய மறு ஜன்மத்தில் உனக்குக் கால்களில் நோய் அல்லது தீம்பு உண்டாகக் கடவது" என்று ஜாதகருடைய தகப்பனாரைப் பார்த்து சாபத்தைக் கொடுத்தாள். இது ஒரு பாபமாக நேரிடும். இதனுடன் வந்து சேர்ந்த இன்னொரு தோஷத்தையுஞ் சொல்லுகின்றேன். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

12. இல்லத்தில் மார்ஜா லந்தா னிடருகள் மிகவே செய்ய
வல்லவன் கருக்கு நீரை வாரியே யதன்மேல் தூற்ற
அல்லலாய் முத்து போலே யதுதேகம் பொங்கி மாள
புல்கிற் றதுவோர் தோஷம் புகலுவோம் வேறு
[வொன்று.

12. ஜாதகருடைய தகப்பனருடைய வீட்டில் இவருடைய முன் ஜன்மத்தில் ஒரு பூனை அதிகமான துன்பங்களை உண்டு பண்ணக் காய்ந்து சூடாக உள்ள நீரை வாரி அதன்மேல் தூற்றவே அது கஷ்டத்தை யடைந்து அதன் உடம்பு எல்லாம்பொங்கி முத்தைப்போலக் கொப்புளங்கள் உண்டாகிப் பிறகு இறந்துவிட்டது. இதனால் ஒரு தோஷம் இவருக்கு உண்டாயிற்று. இன்னொரு தோஷத்தைச் சொல்லுகின்றோம்.

13. பஞ்சையா யேழை மாது
பணிசெய்வோ ரில்லந் தன்னில்
கெஞ்சியே யன்னங் கேட்கக்
கோதையின் மனம்போல் மாரன்
தஞ்சமாய்க் காக்க லுற்றான்
தையலுந் துணைபோல் வாழ்ந்தாள்
வஞ்சியுஞ் சிலநாள் சென்று
மர்மமா யோர்நாள் தன்னில் ;

13. ஜாதகரின் தகப்பனரின் முன் ஜன்மத்தில் தரித்திரமுள்ள ஒரு ஏழை ஸ்திரீ இவரைப் பார்த்து "நான் உன்னுடைய வீட்டிலேயே வேலைசெய்கிறேன்" என்று சொல்லி அவரைக் கெஞ்சிச் சாப்பாட்டைக் கேட்கவே அவளுடைய இஷ்டம்போலவே சம்மதித்து அடைக்கலம் உற்றவர்களைக் காப்பாற்றுவதுபோல் அவளைக் காப்பாற்றிக்கொண்டு வந்தார். அவளும் இவருடைய சகோதரியைப்போலவிருந்து வசித்துக் கொண்டு வந்தாள். கபடமுள்ளவளாகிய இவள் சிலகாலம் சென்ற பிறகு கபடமாயும் ரகசியமாயும் ஒருநாள் ;

14. சிலபணி களவு கொண்டு சென்றனள் மானைப் போலத்
தலைவனும் பின்னல் சென்று தையலைத் தேடும் போது
அலைந்துமே காண வுகி யானையின் கோஷ்ட முன்பாய்ப்
புலம்பின மொழியைச் சொல்வேன் புண்ணிய வதியே
[கேளாய்.

14. சில ஆபரணங்களை இந்த ஜாதகரின் தகப்பனருடைய வீட்டிலிருந்து, முன்ஜன்மத்தில், திருடிக்கொண்டு மான் வேகமாய்ப் போய் மறைந்துவிடுவதைப்போல இவளும் வேகமாய்ச் சென்று மறைந்து

போய்விட்டாள். இவர் அவள் போனவழியே போய் அங்கும் இங்கும் ஓடி அலைந்து இவளைத் தேடிப் பார்க்கவே இவள் தென்படாமல் போய் விட்டதால் ஒரு யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளின் கோயிலின் முன்னே நின்றுகொண்டு இவர் மனக்கஷ்டத்துடன் சொல்லிய வார்த்தைகளைச் சொல்லுகிறோம், பார்வதியம்மையே! கேட்பீராக.

வேறு

15. முன்கடனே பின்கடனே அறியேன் யானும்
முன்பொருளே நீயறிவாய் என்று சொல்லித்
தன்கரத்தால் தெருத்தூளைத் தூற்றிச்சென்றான்
சார்ந்ததுவே அந்தசாபம் தையலுக்கு
என்னகுல மம்மாது புகல்வீரையா
இடையர்தஞ் ஜாதியென்றோம் இயல்பாகத்தான்
மன்னவனு மந்தியத்தில் பிணியுமாகி
மரலிபதி சேர்ந்து யின்னேன் பிரமன்லக்கம்;

15. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய முன் ஜன்மத்தில் "இவளுக்கு நான் முன் ஜன்மத்தில் கடன்காரனாக விருந்தேனே; அல்லது இவள் எனக்குப் பின் ஜன்மத்தில் கடனாளியாக நேரிடுவாளோ எனக்கு ஒன்றும் தோன்றவில்லையே! மூலாதாரப் பொருளாகிய நீர் இதனை அறிந்திருப்பீர்" என்று விநாயகக் கடவுளைப் பார்த்துச் சொல்லித் தன்னுடைய கைகளால் தெருவிலிருந்த மண்தூளை எடுத்து வாரித் தூற்றிவிட்டுப் போய்விட்டார். இந்த ஒருவினை இந்த ஸ்திரீக்கு வந்து சம்பவித்தது. இந்த ஸ்திரீ எந்த ஜாதி என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே, இவள் இடையர் ஜாதியைச் சேர்ந்தவள் என்று ஜயமுனிவர் பதில் சொன்னார். தகப்பனார் தன்னுடைய முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் நோய்வாய்ப்பட்டு இறந்து, எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு.

வேறு

16. வந்தவ னென்று சொல்வோ மருவிடு முன்னூழ்த்
[தோஷம்
மன்னையின் சாபத் தாலே யவன்காலி லூனம் நேருந்
துன்னுமார் ஜாலன் தோஷந் தேகமும் பிணியு மாகும்
பொன்பணி களவு செய்தோள் புகருவா ளபிமா
[னந்தான்.

16. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் இந்த ஜாதகரின் தகப்பனார் என்று சொல்லுகின்றோம். இவருக்குத் தன்னுடைய முன் ஜன்மத்திய வினைகளும் பாவங்களும் வந்து நேரும். இவருடைய தாயாரின் சாபத்தினால் இவருக்குத் தன்னுடைய காலில் ஊனம்

ஏற்படும். துன்பத்தைக்கொடுத்த பூனையைக் கொன்ற தோஷத்தினால் இவருடைய தேகத்தில்காரகநோய் ஏற்படும். இவரிடமிருந்து முன் ஜன்மத்தில் தனம், ஆபரணம் இவைகளைத் திருடிக்கொண்டுபோன ஸ்திரீ இவருக்கு இந்த ஜன்மத்தில் அபிமான மனைவியாக வந்து நேரிடுவாள்.

ஜாதகருடைய குணாதிசயங்கள்

17. முன்கடன் தீர வேண்டி
மேவுவா ளந்தி யத்தில்
மன்னவன் மரண மட்டும்
விலகிடா ளென்று சொல்வோஞ்
சொன்னயிக் குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னம்பிகை யாளே கேளாய்.

17. முன் ஜன்மத்தில் இந்த ஸ்திரீ தகப்பனுருடைய சொத்தைத் திருடியதால் இவருக்குக் கடன்பட்டுவிட்டாள். அதனால் இந்தக் கடனை இவள் தீர்ப்பதற்காக இவருடைய கடைசிகாலத்தில் இவருடன் வந்து சேருவாள். இவள். இவ்விதமாக அணுகி இவருடைய மரணகாலம் வரையிலும் இவருடன் வாழ்ந்து இவரை விட்டுப் பிரியாமல் இருப்பாள் என்று சொல்லுகின்றோம். இதுவரையிலும் சொல்லப்பட்ட குணாதிசயங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் வந்து பிறப்பார். இனிமேல் ஜாதகருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

18. மாருதி யுறவு மொப்பாம் வாய்மொழி யற்ப மாகுங்
கூறுமுன் கோபி யாவன் குண்டைகோ விருத்தி யுண்டு
பாருகள் பலித முண்டு பஞ்சைபோல் திரிவா னுவன்
வேறொரு கல்வி யில்லான் விசனமெப் போதுங் காணன்.

18. ஜாதகர் குரங்கின் குணத்தைப்போன்ற குணத்தையுடையவராவார். இவர் நன்றுகப் பேசுஞ்சக்தி யுடையவரல்ல, அஃதாவது இவருக்கு வாய்க் குளறுதல் உண்டாகும். இவர் பேசுவதற்கு முன்னமே கோபத்தை யுடையவராவார். இவரிடம் எருதுகளும், பசுக்களும் விருத்தியாகும். இவருக்கு நிலங்கள் அதிகப்பயனைத்தரும். இவர் பஞ்சு காற்றில் அகப்பட்டுக்கொண்டு அலைவதைப்போல பல விடங்களில் திரிந்துகொண்டே விருப்பார். இவருக்கு எவ்விதமான வித்தையும் கிடையாது. இவர் எப்போதும் துன்பத்தை அடையமாட்டார்.

19. என்னகா ரணத்தி னுலே
இவன்மொழி யில்லா னென்றீர்
முன்னமே கூறு மென்ன
முப்பூசை கொண்ட காளி
தன்குற்ற மொழிகள் காணுன்
சடைகாளி தனக்குப் பூசை
அன்னவன் செய்வா னுகில்
அரைவார்த்தை புகல்வா னென்றேரும்.

19. ஜாதகர் எந்தக் காரணத்தினுல் குளறிப் பேசுவார் என்று சொல்லுகின்றீர். இதைச் சீக்கிரமாகச் சொல்லுவீர் என்று கேட்கவே பதில் சொல்லுகின்ருர். மூன்று வேளைகளிலும் பூஜையை ஏற்றுக் கொள்ளுகின்ற காளியம்மையாருடைய தோஷம் இவருக்கு இருக்கின்றது. அதனுல் ஜாதகருக்கு குளறும் வார்த்தையுண்டு, ஜடையையுடைய காளியம்மனுக்கு ஜாதகர் பூஜை போடுவாரானுல் இவருக்கு அரைவாசி பேசுஞ்சக்தி உண்டாகும் என்று சொல்லுகின்ரேரும்.

ஜாதகருடைய சகோதரர்களும் (சகோதர பாவமும்) முன்ஜன்மமும்

20. இவனுடைத் துணேவர் தம்மை யியம்புவோர் தாயே
[கேளும்
நவனியில் முன்பெண் ணிரண்டு நவிலுவோர் தீர்க்கமாகப்
பவமாகு மூன்று மென்ரேரும் பார்மகன் மூன்றில் தங்கத்
தவசியே துணேயாண் தோஷஞ் சாற்றுவோ மிவன்முன்
[ஜன்மம்.

20. ஜாதகருடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்ரேரும், எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக. இவருக்கு முன்னே பிறந்த இரண்டு பெண்களும் நீண்ட ஆயுளே உடையவர்களாக விருப்பார்கள். மூன்று சகோதரர்கள் இறந்துபோய்விடுவர் என்று சொல்லுகின்ரேரும். பார்மகன் என்ற அங்காரகன் மூன்ருவது பாவத்தில் இருப்பதாலே, தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! இவருக்கு ஆண் சகோதர தோஷம் இருக்கின்றது என்று சொல்லுகின்ரேரும். இனிமேல் இவருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்ரேரும்.

21. சேரனு டன்னி லேதான்
ஜனித்தனன் மறையோ னுகப்
பாரியு மதலே யுண்டாய்ப்
பகரமாங் குடும்பி யாகித்

தீரனும் வாழுங் காளில்
செய்ததோர் வினையைக் கேண்மோ
காரிழைக் கற்பின் பேரில்
கழறினன் நிந்தை வார்த்தை.

21. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் சேரநாட்டிலே பிராமணராகப் பிறந்து மனைவி மக்களை யுடையவராகிப் பிரகாசமான, மேன்மையான குடும்பஸ்தராக விருந்து, தைரியமாக வாழ்ந்துகொண் டிருக்கின்ற காலத்தில் இவர் செய்த ஒரு பாவத்தைப்பற்றிச் சொல்லு கின்றோம். கேட்பீராக. ஒரு ஸ்திரீயினுடைய கற்பைப்பற்றி அவதூ றான வார்த்தைகளை இந்த ஜாதகர் சொன்னார்.

22. மாதுவும் மனது வாடி வரைந்திட்ட சாபங் கேண்மோ
பாதக னென்மேல் நீயும் பதரான வார்த்தை சொன்னாய்
நீதியாய்ப் பின்ஜன் மத்தில் நிலைக்காது துணையா
[னுன்தான்
ஓதிடா மொழிகள் தாமு முருவுமே மாற லாகும் ;

22. அந்த ஸ்திரீ தன்னுடைய மனம் நொந்து ஜாதகருக்கு முன் ஜன்மத்தில் கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. "துன்மார்க்கனாகிய நீ, என்மேல் திடுக்கிடும்படியான வார்த்தைகளை அவசரப்பட்டுச் சொல்லிவிட்டாய். நியாயமாக உன்னுடைய மறு ஜன் மத்தில் உனக்குச் சகோதரன் உயிருடன் இருக்கமாட்டான். நீயும் பேசுஞ்சக்தி இல்லாமல் இருக்கக் கடவாய். உன்னுடைய வடிவமும் நிறமும் மாறிப்போகக்கடவது" என்று ;

23. மாதுகற் புடையாள் சொல்ல
வானத்தில் ததாஸ்து வென்ன
வேதனை நேர்ந்த தென்றோம்
விளம்புவோம் வேறு வொன்று
ஆதிமால் கோஷ்டங் தன்னில்
அலம்பத்தைக் களவு செய்து
சூதாகப் பின்னஞ் செய்து
சேர்த்தனன் சுயவேலைக்கு.

23. கற்புடையவளாகிய அந்த ஸ்திரீ ஜாதகரை முன் ஜன்மத் தில் பார்த்துச் சொல்லவே, அப்போது ஆகாயத்தில் கண்களுக்குத் தெரியாமல் பறந்துகொண்டிருந்த சித்தர்களும்தேவர்களும் 'ததாஸ்து' என்று சொல்ல, அஃதாவது அவ்விதமே நடக்கக்கடவது என்று சொல்லவே, ஜாதகருக்கு அந்தச் சாபம் வந்து சம்பவித்தது என்று சொல்லுகின்றோம். இன்னொரு தோஷத்தையுஞ் சொல்லுகின்றோம்.

மகாவிஷ்ணுவின் கோயிலிருந்து சப்தத்தை உண்டாக்குகின்ற ஒரு மணியை ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் திருடிக்கொண்டு போய் அதைக் கபடமாகக் கெடுத்துவிட்டுத் தன்னுடைய வேலைக்கு உபயோகப்படுத்திக்கொண்டார்.

24. அந்திய காலங் தன்னி லவன்சொலில் குண முமுண்டாய்த்
தென்திசைக் காலந் நாடு சென்றுமே பிரமன் லக்கம்
இந்தகோர் குலமு திப்பா னெய்திடுங் கற்பின் சாபங்
தன்துணை யாண்பால் தோஷந் தைரிய மில்லா நெஞ்சம்

24. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் தான் சொல்லுகின்ற வார்த்தை குணமுடையவைகளாகவிருந்து பிறகு இறந்து தெற்குத்திக்கிலுள்ள எமபட்டணத்திற்குப் போய்ப் பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்த ஜாதியில் வந்து பிறந்திருக்கிறார். முன் ஜன்மத்தில் ஸ்திரீயால் கொடுக்கப் பட்ட சாபம் இவரை வந்து அடையும். ஆகையால் இவருக்குச் சகோதரன் இல்லை. இவர் தைரியமில்லாத மனத்தையுடையவராகவிருப்பார்.

25. உருவுமே மாற லாகு மூமைபோல் திரிவா னுவன்
திருமாலின் மணிக வர்ந்த தீவினை மொழிகள் குற்றம்
உரைக்கிறேம் சாந்தி தானு முத்தமி சடைகா ரிக்குப்
பெரும்பூசை செய்த பின்பு பெருமானின் கோஷ்ட
[த்திற்கு ;

25. ஜாதகருடைய உருவம் மாறிப்போய்விடும். இவர் ஊமையைப் போல கண்டவிடத்தில் திரிந்து கொண்டே விருப்பார். மகாவிஷ்ணுவினுடைய கோயிலின் மணியை முன் ஜன்மத்தில் திருடிவிட்ட தோஷத்தின் காரணமாக இவ்விதமாகப் பேசாமலிருக்கும் தோஷம் ஏற்படும். இந்தத் தோஷம் நிவிர்த்தியாவதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்றேம். பார்வதியம்மைக்கு ஒரு பெரிய பூஜை போட்டுப் பிறகு மகாவிஷ்ணுவிடைய கோயிலுக்கு ;

26. கொத்துப்போல் மணியுஞ் செய்யக் குழவிக்கு மொழிகள்
[கேரும்
மத்தமும் நீங்கு மென்றேம் பூமியில் சுகமாய் வாழ்வன்
குத்தமாய்ச் செய்யா னுஇல் கூறிடான் மொழிகள் தாமும்
அத்தியை வளர்த்த யெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

26. ஜாதகர் கொத்தைப்போல் ஒரு மணிக்கொத்தைச் செய்து வைப்பாரானுல் இவருக்குப் பேசுஞ் சக்தி உண்டாகும். வெறியும் நீங்கிவிடும் என்று சொல்லுகின்றேம். இவர் பூமியில் சுகங்களுடன் இருந்து வாழ்வார். நாங்கள் சொல்லுவது தவறு என்று நினைத்துக்

சாந்தியைச் செய்யாமலிருந்துவிட்டால் இவர் வரர்த்தைகளைச் சொல்ல முடியாமல் ஊமையாக விருப்பார். யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றுவளர்த்த எங்களுடைய உயிருக்கு உயிரான தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனுருடைய குணதிசயங்கள்

27. அன்னையின் குணத்தைச் சொல்வே னன்புள மனத்தா
[ளாவள்
அன்னமு மன்பா யிவள் அயல்குற்றம் புகலா ளாவள்
அன்னியர் மதிக்க வாழ்வ ளடாநிந்தை பேசா ளாவள்
அன்னம்போல் சாய லொக்கு மாளனுக் கினிய ளாவள்.

27. ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் பிரியமுள்ள மனத்தையுடையவளாவாள். இவள் பிறருக்குச் சாப்பாட்டைப் பிரியத்துடன் போடுவாள். இவள் பிறர்மேல் குற்றங்களைச் சாட்டாதவளாவாள். இவர் பிறர் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வாள். இவள் அடாவடியாக அபவாதமான வார்த்தைகளைச் சொல்லாதவளாக விருப்பாள். இவள் அன்னத்தைப் போன்ற அழகான உருவத்தையுடையவளாவாள். தன்னுடைய புருஷனுக்கு இவள் இஷ்டமானவளாக விருப்பாள்.

28. வறுமை யெப்போதுங் காணுள் வருவோரை யாத ரிப்பள்
சிறுமையோர்க் குதவி செய்வள் சீலியாம் விருத மேற்பள்
பொறுமையுங் கோப மூண்டு புண்ணிய மனத்த ளாவள்
கறைமனங் காந்த புத்தி கலந்திடும் பித்தச் சூடு.

28. ஜாதகருடைய தாயார் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் எப்போதும் அடையமாட்டாள். ஏழைகளுக்கு இவள் உபகாரஞ் செய்வாள். நல்ல ஒழுக்கமுடையவளாவாள். விரதங்களை அநுஷ்டிக்கின்றவளாவாள். இவள் சாந்தமுடையவளாவள். சில சமயம் கோபத்தையு முடையவளாக விருப்பாள். நல்ல மனத்தையுடையவளாக விருப்பாள். இவள் இளகிய மனத்தையுடையவள், பிரகாசமானதான சீக்கிரம் கிரகித்துக்கொள்ளக்கூடியதான அறிவையுடையவள். இவள் பித்தச்சூட்டு ரோகத்தையுடையவள்.

ஜாதகரின் தாயாருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

29. தன்துணை யாண்பால் மூன்று தையல ரவ்வாறு தீர்க்கங்
கன்னிமார் தம்மால் நிந்தை கலந்திடும் பாவைக் கேதான்
பின்பாகம் விபர மாகப் பேசுவோந் தாயே யாங்கள்
சொன்ன ஆண் சேதி தன்னைச் செப்புவோ மின்னே
[னுக்கு;

29. ஜாதகரின் தாயாருடைய சகோதார்களில் மூன்று ஆண்களும் மூன்று பெண்களும் நீண்ட ஆயுளுடையவர்களாக விருப்பார்கள். தாயாருக்குத் தன்னுடைய சகோதரிகளால் அபவாதங்கள் நேரிடும். இவைகளைப்பற்றிப் பார்வதியம்மையே! நாங்கள் அடுத்தப் பாகத்தில் விபரமாகச் சொல்லுகின்றோம். இங்கு சொல்லப்பட்ட ஆண் சகோதரர்களுடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம். ஒரு சகோதரனுக்கு

30. பாரியு மொன்றே யாகும் பாவையு மத்தில் மாள்வள்
கூறிய வார்த்தை தன்னில் குளறுகள் கொஞ்ச முண்டு
தீரமா மனத்த னுகுஞ் சிறுத்தைபோல் கோப முண்டு
யாரையு முறவு கொள்வன் யாத்திரைப் பிரிய னுகும்.

30. மனைவி ஒருத்தியே ஆவள். இவள் மத்திய வயதில் இறந்து போய் விடுவாள். இவருக்குத் தான் பேசும் வார்த்தைகளில் கொஞ்சந் தடுமாற்ற முண்டு. இவர் தைரியமான மனத்தை யுடையவர். இவருக்குச் சிறுத்தைப் புலிக்கு வருகின்ற கோபத்திற்குச் சமான மானக் கோபமுண்டு. இவர் எல்லோரையும் சிநேகஞ்செய்து கொள்ளுவார். இவர் பிரயாணஞ் செய்வதில் ஆசையுடையவராவர்.

31. ஊகைவான் நுணுக்கந் தேர்வ னுண்மையை
[வெளிக்காட் டாதான்
பாகமாய்ப் பேசு வானும் பரவுப காரி னவன்
தோகையர் மோக னுவன் சொல்லது இரண்டு முண்டு
ஆகம நுணுக்கந் தேரா னம்பிகை யாளே கேளாய்.

31. தாயாருடைய சகோதரன் ஊகிக்கும் தன்மையை யுடையவர். நுட்பமானவைகளைத் தெரிந்துகொள்வதில் சாமர்த்திய முடையவர். தன்னிடமுள்ள உண்மையான விஷயங்களைப் பிறர் அறிந்து கொள்ளும்படியாக வெளிக்குக் காட்டிக்கொள்ள மாட்டார். இவர் பக்குவமாகப் பேசுபராவார். பிறருக்கு உதவியைச் செய்வார். இவர் ஸ்திரீகளிடத்தில் காம ஆசையை யுடையவராவர். இவர் இரண்டு விதமான வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் ஆகம சாஸ்திரங்களின் நுட்பத்தை அறிந்தவராகார், பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

தாயின் இரண்டாவது சகோதரருடைய விஷயம்

32. பாலர்க ளாண்பா லிரண்டு பாவையு மொன்றே தீர்க்கஞ்
சாலவே வயது தீர்க்கஞ் சாற்றுவோ மவன்பின் சேதி
சீலம்போல் வெளிம யக்கன் தேரின புத்தி யுண்டு
ஆலம்போல் கோப முண்டு யாரையும் வசியங் கொள்வன்.

32. ஜாதகரின் தாயாருடைய முதல் சகோதரருக்கு ஆண் குழந்தைகள் இரண்டும் பெண் குழந்தை ஒன்று நீண்ட ஆயுளை யுடையதாக விருக்கும். இந்தச் சகோதரரும் தீர்க்கமான ஆயுளை யுடையவராக விருப்பார். இவருடைய அடுத்த இளைய சகோதர ருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் நல்ல ஒழுக் கம் உடையவரைப்போல் வெளியாரை ஏமாற்றஞ் செய்யுந் தன்மையை யுடையவராவர். இவர் உயர்ந்த புத்தியை யுடையவர். இவருக்குப் பாம்பிற்கு வருகின்ற கோபத்தைப்போலவே கோபம் வருவதுண்டு. இவர் எல்லோரையும் தன்பக்கமாக வசியஞ் செய்து கொள்ளுவார்.

33. பலவித வணிபஞ் செய்வன்
பலருக்கு நல்லோ னுவன்
தலமது சித்திரஞ் செய்வன்
தந்தையார் ஜிதத்தில் வாழான்
விலைமாதர் மோகங் கொள்வன்
வெற்றியாந் தொடு வழக்கு
சலத்தொழில் புரிவா னுவன்
சல்லியப் பாதை யேற்பன்.

33. தாயாரின் இரண்டாவது சகோதரர் பலவிதமான வியாபாரங் களைச் செய்வார். இவர் பலருக்கு நல்லவராக விருப்பார். இவர் வீட்டைச் சித்திரங்களால் அலங்காரஞ் செய்வார். இவர் தன்னு டைய தகப்பனருடைய சொத்தாகிய வீட்டில் இருந்துகொண்டு வாசஞ் செய்வார். இவர் விலை மாதர்கள் என்ற தாசி ஸ்திரீகளின் மேல் காம ஆசையை யுடையவராவர். இவர் தான் எடுத்தத் தொடர்ச்சியான வியாஜ்யங்களில் ஜயத்தைப் பெறுவார். இவர் ஜல ரூபமான வஸ்துக்களில் வியாபாரஞ் செய்வார். இவர் கடலால் உபத்திரவத்தை அடைய மாட்டார்.

34. தந்திர வாதி யாவன் துர்ஜன ரூறவு கொள்வன்
எந்திடம் பெருமை யேற்ப னேவலா ளுடைய னுவன்
சிந்தையும் நல்ல தாகுந் தேவியு மொன்றே தீர்க்கஞ்
சொந்ததோர் மாம னாலே சுகமிகப் பெருகு மென்றோம்.

34. தாயாரின் இரண்டாவது சகோதரர் தந்திரமுடையவராக விருப்பார். இவர் கெட்டவர்களுடைய சிநேகத்தை அடைவார். எவ் விடத்திலும் இவருக்குக் கீர்த்தியும் மேன்மையும் உண்டு. இவருக்கு வேலையாட்கள் இருப்பார்கள். இவருடைய எண்ணங்களும் நல்லவை யாகவே விருக்கும். இவருக்கு மனைவி ஒருத்தியே. அவளும் நீண்ட ஆயுளை யுடையவளாவாள். இவர் தன்னுடைய சொந்த அம்மானாலே அதிக சுகங்களை அடைவார் என்று சொல்லுகின்றோம்.

தாயாரின் இரண்டாவது சகோதரரின் புத்திரபாவம்

35. பாலர்கள் ஆண்பால் காணன் பாவையும் ஒன்றே தீர்க்கஞ்
சாலவே பராசர் சொல்வார் சந்ததி யாண்பால் தோஷம்
ஏலவே சொல்லு மென்ன இம்மாது பூர்வ தோஷங்
கோலமாய் நேர்ந்த தாலே குழவிகள் தோஷ மென்றோம்.

35. தாயாரின் இரண்டாவது சகோதரத்திற்கு ஆண்குழந்தை கிடையாது. ஒரே ஒரு பெண் நீண்ட ஆயுளை யுடையவளாக விருப்பாள். இவ்விதமாக ஜயமுனிவர் சொல்லவே பராசர முனிவர் கேட்கின்றார். இவருக்கு ஆண் சந்ததி விஷயமாய் நேரிட்ட தோஷத்தைப் பற்றி உடனே சொல்லுவீர் என்று கேட்க ஜெய முனிவர் சொல்லுகின்றார். இவருடைய மனைவியின் முன் ஜன்மத்திய வினை சம்பவித்ததாலே ஆண்குழந்தைகளுக்குத் தோஷம் நேர்ந்துவிட்டது என்று சொல்லுகின்றோம்.

36. அதற்கொரு கிரியை சொல்வே னம்பிகாய் கரும சாந்தி
விதிபோலச் செய்து மேதான் வித்தகி பீஜந் தன்னை
முதல்ரேக்கில் வருவி யேதான் மூலத்தைச் சகஸ்ரஞ் [சொல்லி
வதிபதி வணிவா ளாகில் மைந்தராண் ஒன்று தீர்க்கம்.

36. இந்தத்தோஷம் நிவிர்த்தியாவதற்காக ஒரு சாந்தியைச் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே! பூர்வீக கர்ம்ம ஒழிய ஒரு சாந்தியை சாஸ்திர விதிகளை அநுசரித்துச் செய்துவிட்டு பீஜம்என்ற ஆண்குறியை ஒரு முதல்தர்மான தங்கரேக்கில் எழுதி மூலப்பொருளைச் சகஸ்ரம் என்ற ஆயிரம் தடவை சொல்லிவிட்டுப் பிறகு இவள் இதை அணிந்து கொள்ளுவாளானால் இவளுக்கு ஓர் ஆண்குழந்தை நீண்ட ஆயுளை உடையதாக விருக்கும்.

37. எப்போதும் வறுமை காணு னெய்திடுங் கார கங்கள்
தப்பிதக் குணமில் லாதான் தனமது பின்னல் சேர்ப்பன்
ஒப்புடன் பூமி சேர்ப்பன் ஒதுக்குவான் பின்பு தானுஞ்
அப்பணி சடையோன் தேவி யருளின மொழி குன்றாது.

37. தாயின் இரண்டாவது சகோதரன் எந்தக் காலத்திலும் தரித்திரங்களையுங் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவருக்குக் காரகரோகம் வந்து சம்பவிக்கும். இவர் தவறுன குணங்களை யுடையவரல்லர். இவர் பணத்தைப் பிற்காலத்தில் சேர்த்து வைப்பார். இவர் நல்ல வழியில் நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் தன்னுடைய பிற்காலத்தில் பணத்தை ஒதுக்கி வைப்பார். (கங்கையை) பாம்பைத் தன்னுடைய ஜடையில் தரித்துக் கொண்டிருக்

கின்ற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

தாயாரின் கடைசி சகோதரருடைய விஷயங்கள்

38. கடையவன் சேதி சொல்வேன் கல்வியு மில்லா னுவன்
உடன்படான் பிழைக ளுக்கு வுவமையாய்ப் பேசா னுவன்
படையினில் செல்லா னுவன் பஞ்சைபோல் திரிவா னுவன்
நடையது நன்மை யாகும் நாயகி கேட்டி டாயே.

38. தாயாரின் கடைசியான சகோதரருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் படிப்பு இல்லாதவராவார். இவர் தவறான காரியங்களைச் செய்யச் சம்மதப்படமாட்டார். இவர் உபமானம் உபமேயம் இவைகளை உபயோகப்படுத்தித் தகுந்தபடியாகப் பேசமாட்டார். இவர் சண்டைக்குப் போகமாட்டார். இவர் ஏழையைப்போலவும் பஞ்சைப்போலவும் அங்கும் இங்கும் திரிந்து கொண்டே இருப்பார். இவர் நல்ல நடவடிக்கையை யுடையவராவர். பார்வதியம்மையே ! கேட்பீராக.

39. மனைவியு மொன்றே யென்றே மைந்தர்க ளாண்பா [லொன்று
கனமுள பெண்பா லிரண்டு கழறுவோர் தீர்க்க மாகப்
பிணையிலா ஒன்றுய் வாழ்வன் பூரண வயது யென்றேஞ்
சினமிலாத் தவங்கள் செய்யுஞ் செல்வதி கேட்டி டாயே.

39. தாயாரின் கடைசி சகோதரருக்கு ஒரே ஒரு மனைவி என்று சொல்லுகின்றேம். இவருக்கு ஓர் ஆண் குழந்தையும் இரண்டு மேன்மையான பெண் குழந்தைகளும் தீர்க்காயுள் உடையவர்களாக உண்டு என்று சொல்லுகின்றேம். இவர் இடக்கு சண்டை முதலிய வைகள் இல்லாமல் ஒன்றுக விருந்து வாழ்வார். இவருக்கு நீண்ட ஆயுள் உண்டு என்று சொல்லுகின்றேம். கோபமில்லாமல் தவங்களைச் செய்யாநின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

40. மாதிரு பூர்வஞ் சொல்வேன் மாயூரங் கீழ்ப்பா லாக
மேதினில் சிறுவூர் தன்னில் விளங்கினுள் கங்கை சேயாய்ப்
பாதக நினைவில் லாமல் பரவுப காரி யாயும்
மாதவர் தொண்டு பூண்டு மங்கையும் வினையில் லாமல் ;

40. ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாயூரம் என்ற மாயவரத்திற்குக் கிழக்குத் திக்கிலுள்ள பூமியில் ஒரு சிறிய கிராமத்தில் கங்கைகுலம் என்ற

வேளாளர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து கெட்ட எண்ணங்கள் இல்லாமல் பிறருக்கு உதவியைச் செய்பவளாகி. முனிவர்கள் மேல் ஆசையும் அன்பும் உடையவளாகி அவர்களுக்கு வேலையைச் செய்து கொண்டு யாதொரு பாபமும் இல்லாதவளாகி ;

ஜாதகரின் தாயாருடைய பின்ஜன்மம்

41. மரலியின் பதிக்குச் சென்று
மறையவன் வரையப் பட்டுத்
திருமக ளுதித்தா ளென்றேஞ்
செப்புவோ மிவள்பின் ஜன்மம்
பெருமையாய்க் காஞ்சி தன்னிற்
பிறப்பளாம் வைசியச் சேயாய்
அருமறை முடிவி லாடு
மம்பிகை யாளே கேளாய்.

41. இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரம்மதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து இவள் பிறந்திருக்கின்ருள் என்று சொல்லுகின்றேம். இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவள் மேன்மையான சிறந்த காஞ்சிமாநகரத்தில் வைசியருடைய குலத்தில் ஒரு பெண் குழந்தையாகப் பிறப்பாள். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனருடைய மரணம் (பிதிருகர்மம்)

42. இருபது வாண்டு தன்னி லிவன்தந்தை கண்ட மெய்தும்
மரலியைக் காண வவன் அதற்குமே லிரண்டு வாண்டில்
உரைவனும் காலந் நாடு வுரைத்தது தப்பா தாகுங்
கரிமத வானை பெற்றக் காதலி கேட்டி டாயே.

42. ஜாதகருக்கு இருபதாவது வயதில் இவருடைய தகப்பனருக்குக் கண்டம் நேரிடும். ஆனல் அப்போது தகப்பனருக்கு எமதரிசனம் உண்டாகாது. இதற்கு இரண்டு வருஷத்திற்குப் பிறகு தகப்பனர் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவார். நாங்கள் சொல்லியது தவறிடாமல் நடக்கும். கறுப்பு மதம் பிடித்த யானை முகத்தையுடைய விநாயக கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ; கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனுடைய மறுஜன்மம்

43. மறுஜன்மங் கலிங்க நாட்டில் மறைக்குல முதிப்பா னுவன்
திருமக னிச்சென்மத்திற் செய்தபுண் ணியங்க ளென்னப்
பெருமவர் நெஞ்சங் கொண்டும் பெம்மானின் பத்தி யாயுங்
குறையென்றோர்க் குதவி செய்துங் குவலயம் நல்லோ
[னுயும் ;

43. ஜாதகரின் தகப்பனார் தன்னுடைய பின் ஜன்மத்தில் கலிங்க தேசத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பார். இந்த ஜன்மத்தில் இவர் செய்தப் புண்ணியமான காரியங்கள் என்னவென்று கேட்கவே, ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். தகப்பனார் பெருமையான மனத்துடன் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவர்களிக் கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம் என்று சொன்ன வர்களுக்கு உபகாரங்களைச் செய்து கொண்டும் பூமியில் நல்லவராகவும் !

ஜாதகரின் தாயாருடைய மரணமும் (தாய்கர்மமும்) ஜாதகரின் விவாகமும்

44. இருப்பதா னுதிப்பா னுவன்
இயம்புவோ மன்னைக் கேதான்
ஆறாறு வாண்டு தன்னி
லந்தகன் நகரைச் சேர்வாள்
திருமகள் மணத்தின் காலஞ்
செப்புவோம் பத்தொன் பாண்டில்
அரிவையுந் தென்பால் நேரும்
அரைகிறோ மவள் குணத்தை.

44. ஜாதகருடைய தகப்பனார் இருப்பதால், பிராமணராகப் பிறப் பார். இனிமேல் ஜாதகரின் தாயாருடைய மரணகாலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பத்தொன்பதாவது வயதில் மனைவி தெற்குத் திக்கில் இருந்து வந்து சம்பவிப்பாள். இவளுடைய குண திசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் மனைவியின் குணதிசயங்களும் சந்ததிகளும்

45. மாந்தளிர் மேனி யாவள்
வருவோரை யாத ரிப்பள்
ஏந்திழை தனத்தா ளாவள்
மின்பச்சொல் லூக சாலி
(சாந்தவாள்) காந்தம்போலே புத்தி யேற்பள்
காளைகள் ஆண்பா லொன்று
நேர்ந்திடும் பெண்பா லிரண்டு
நிகழ்த்துவோந் தீர்க்க மாக.

45. ஜாதகரின் மனைவி மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒரு விதமான சிவப்பு நிறத்தையுடையவளாவாள். இவள் தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் பணத்தை யுடையவளாக விருப்பாள். இவள் இனிமையான வார்த்தைகளை உடையவளாவாள். நுட்பமான புத்தியை உடையவளாவாள். இவள் சாந்தமான குணத்தை யுடையவளாவாள். காந்தக் கல்லைப்போல வசீகரிக்கின்ற சிறந்த புத்தியை யுடையவளாவாள். இவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய யோக பாவம்

46. ஜாதகன் யோகச் சேதி
சாற்றுவோ மினிமே லாக
மாதுலன் தன்னுல் யோகம்
வறுமையெப் போதுங் காணன்
பாதக மொருவர்க் கெண்ணுள்
பகருவோ மறுபான் மூன்றில்
மேதினில் மகர மாதம்
விளம்பு வோம் மாரகங்கள்.

46. ஜாதகருடைய யோக பாவத்தைப்பற்றி இனிமேல் நாங்கள் சொல்லுகின்றோம். இவருக்குத் தன்னுடைய அம்மானுல் யோக முண்டாகும். இவர் எப்போதும் தரித்திரங்களையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் எவருக்குங் கெடுதிகளை நினைக்கமாட் டார், இவருக்கு அறுபத்து மூன்றுவது வயதில் பூமியில் மகரமாதம் என்ற தை மாதத்தில் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மறு ஜன்மமும் ஜனன கால தசையும்

47. பின்ஜன்ம மாவ்வூர் தன்னில் பிறப்பனுங் கங்கை [சேயாய்
முன்னமே குடும்பி யாகி முதல்வனும் வாழ்வா னவன்
அன்னவன் ஜனன காலம் ஆதிரை பின்னுள் தன்னில்
பன்னிய மூன்றும் பாதம் பாலக னுதித்தா னென்றோம்.

47. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில் ஆவ்வூர் என்ற கிராமத்தில் கங்கைகுலம் என்ற வேளாளர் குலத்தில் ஆண் குழந்தை யாகப் பிறந்து மேன்மையான சிறந்த ஒரு குடும்பஸ்தராக விருந்து கொண்டு வாழ்பவராவார். இவர் பிறக்கும்போது திருவாதிரைக்குப் பின்னலுள்ள புனர்பூச நட்சத்திரத்தில் மூன்றுவது பாதம் ஆகும் என்று சொல்லுகின்றோம்.

48. பொன்தசை யாண்டு வைந்தும் புக்கிடுந் திங்க ளொன்றும்
மன்னவன் பிணியு மாகும் மாதிரு வர்க்கஞ் சூதம்
இன்னமும் விபர மாக மியம்புவோம் பின்பா கத்தில்
கன்னென மொழியை யொக்குங் காதலி புகன்றிட்
[டோமே

48. ஜாதகர் பிறந்த காலத்தில் பொன் என்ற குருவினுடைய தசையின் இருப்பு ஐந்து வருஷங்களும் மாதம் ஒன்றும் ஆகும். இக் காலத்தில் ஜாதகருக்கு நோய்கள் உண்டாகும் தாயருடைய வம்சத்தில் சூதகங்கள் நேரிடும். இன்னும் விவரமாகப் பின் பாகத்தில் விஷயங் களைச் சொல்லுகின்றோம். சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தைகளை உடைய பார்வதியம்மையே! நாங்கள் பலரபன்களைச் சொல்லிவிட்டோம்.

ஜாதகம் 97

ஜனனகால கிரகநிலை

1. சிங்க லக்கினம தாகக் சுக்கிரன் நாலில் தங்கத் [1]திங்களும் புதன் [2]பான் ராகு சேர்ந்திட மைந்த தாகப் [3]பங்குமே யெட்டி லாகப் [4]பொன்னேழில் [5]சேய்[6]ந லத்தில் இங்கிவை கோளும் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1. சிம்மம் ஜன்ம லக்கினமாககிச் சுக்கிரன் நான்கிலும், சந்திரனும் புதனும் சூரியனும் இராகுவும் ஐந்திலும், சனி எட்டிலும், குரு ஏழிலும், அங்காரகன் ஒன்பதிலுமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன் களைச் சொல்வீராக என்று;

கிரகநிலை

சனி	அங்காரகன்		கேது
குரு	இராசி சக்கரம்		
			லக்கினம்
சந்திரன் புதன் சூரியன் ராகு	சுக்கிரன்		

பூராடம் 4-ஆம் பாதம்; சுக்கிரதசை வரு 2-2-0

குறிப்பு:—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்:—ரிஷபத்தில் கேதுவும், மிதுனத்தில் புதனும், விருச்சிகத்தில் சந்திரனும் அங்காரகனும் சுக்கிரனும் இராகுவும், தனுசில் சூரியனும் சனியும், மீனத்தில் குருவும் ஆகும். சந்திரன் அஸ்தமனம் அடைந்திருக்கின்ரூர். சனி வக்கிர கதியிலிருக்கிரூர்.

ஜனனமான நாட்டின் சிறப்பு

2. பார்வதி கேட்கும் போது பராசரும் புகலு கின்ரூர் சீர்புக ழாண்பால் ஜன்மஞ் செப்புவோ மில்லந் தானுந் தீரமாய்க் கீழ்மேல் வீதி தென்வாசல் மாயோன் மேற்கில் நாரியும் வடபா லாகும் நல்கிடுஞ் சிறுவு ராகும்.

---

1. சந்திரன்
2. சூரியன்
3. சனி
4. குரு
5. அங்காரகன்
6. ஒன்பது

2. பார்வதியம்மையார் கேட்கும்போது பராசர முனிவர் சொல்லுகிறார். செல்வமும் கீர்த்தியுமுடைய ஆண் குழந்தை பிறக்கும். பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றோம். அது மேன்மையான இழக்கு மேற்குத் தெருவில் தெற்கு வாயிற்படியையுடையதாக விருக்கும். திருமாலின் கோயில் மேற்குத்திக்கிலும் பார்வதியம்மனுடைய கோயில் வடக்குத் திக்கிலும் இருக்கும். பிறந்தவூர் ஒரு சிறிய கிராமமாகும்.

3. இத்தகை மாடி சூழ்
மிலகிய சிறுவூர் தன்னில்
வித்தகன் கங்கை சேயாய்
விளங்குவா னிரண்டாஞ் ஜன்மம்
பெற்றதாய் தந்தை யோகம்
பேதையர் புத்திர யோகஞ்
சுத்தமாய் முன்பின் ஜென்மஞ்
செப்புவோ மிந்நூல் தன்னில்

3. இப்படிப்பட்டதாயும் மெத்தை வீடுகள் உள்ளதாகவும் இருக்கின்ற ஒரு சிறிய கிராமத்தில் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் இரண்டாவது பிறவியையுடைய ஆண்குழந்தையாக ஜாதகர் பிறப்பார். இவரைப் பெற்றெடுத்த தாயார் தகப்பனார் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் மனைவி, சந்ததி ஆகிய இவர்களுடைய யோகங்களையும் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் விவரமாக இந்தச் சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுகிறோம்.

ஜாதகரின் தகப்பனருடைய விஷயங்கள் (பிதிருபாவம்)

4. தந்தையின் வர்க்கந் தன்னைச் சாற்றவே பல முரைது
தந்தையுந் தனியாய் வாழ்வன் செப்புவோ மவன்கு
[ணத்தை
விந்தையாய்ப் பேசு வானும் வித்தையு மிரண்டு மாகும்
தந்தையி னஸ்தி தன்னைத் தானவன் நாஸ்தி செய்வன்.

4. ஜாதகருடைய தகப்பனரின் பந்துக்களைப்பற்றிச் சொல்லுவதற்கு யாதொரு வலிவும்கிடையாது. தகப்பனார் தனியாகவிருந்து வாழ்வார். இவருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் ஆச்சரியப்படத்தக்கதாகப் பேசுவார். இவர் இரண்டுவிதமான கல்வியை யுடையவராவர். இவர் தன்னுடைய தகப்பனாருடைய சொத்துக்களை அழித்துவிடுவார்.

5. ஆதியில் வறுமை யேற்பன் அலைகடல் மீதில் செல்வான்
காதியும் பின்னு லேற்பன் கனராசர் பேட்டி கொள்வன்
போதனஞ் சேர்ப்பா லுவன் புண்ணிய மனத்த லுவன்
சாதிப்பான் சிலது சங்கை சந்தேக மனத்த லுவன்.

5. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய முற்காலத்தில் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அனுபவிப்பவராவர். அலைகளையுடைய சமுத்திரத்தில் பிரயாணஞ்செய்வார். இவர் பிறகு கீர்த்தியையும பெருமையையும் அடைவார். இவர் பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார். இவர் போதனம் என்ற அறிவை அதிகப் படுத்திக்கொள்வார். பணத்தையுஞ் சேகரித்து வைத்துக்கொள்ளுவார். இவர் நல்ல மனத்தையுடையவராவார். சில விஷயங்களில் தான் சொல்லுவதே சரியென்று வாதித்து ஜயமடைவார். இவர் சந்தேகமான மனத்தையும் உடையவராவர்.

6. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வன்
உயர்வான புத்தி யேற்பன்
கண்டித முறையா லுவன்
காலிகள் கடைய லுவன்
எண்டிசை நல்லோ லுவ
னரசரால் தொழிலு மேற்பன்
தண்டமிழ் நுணுக்கந் தேர்வன்
தர்மமாங் குணத்த லுவன்.

6. ஜாதகருடைய தகப்பனுர் சௌகரியமான நல்ல உணவை அருந்துவார். இவர் மேன்மையான சிறந்த அறிவை யுடையவராவர். இவர் கண்டிப்பாய்ப் பேசமாட்டார். பசுமாட்டுக் கூட்டங்களை இவர் இழந்து விடுபவராவர். இவர் எல்லாத் திக்குகளிலும் நல்லவரென்று பெயரெடுப்பார். இவர் அரசர்களிடத்தில் தொழிலை யுடையவராக விருப்பார். இவர் இனிமையானத் தமிழின் நூட்பத்தை நன்றாய் அறிந்து உபயோகப்படுத்துஞ் சாமர்த்தியமுடையவராவார். இவர் தர்மஞ் செய்கின்ற நல்ல குணங்களை யுடையவராக விருப்பார்.

ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மம்

7. முன்னவ னிருந்த ஜன்ம
மொழிவோமுக் கூடல் தன்னில்
வன்னிய குலமு திக்து
மானிலம் விருத்திச் செய்வன்

மனைவியு மதலை யுண்டாய்ப்
பின்வாழ்வான் வினையைச் சொல்வேன்
அன்னிய மாது பேரில்
அடாமொழி சொல்லும் போது ;

7. ஜாதகருடைய தகப்பனரின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். முக்கூடல் என்ற திருமுக்கூடல் என்ற கிராமத்தில் வன்னியர் ஜாதியிற் பிறந்து பெரிய நிலங்களைப் பயிரிட்டுக் கொண்டு மனைவி மக்களை யுடையவராகி வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். ஓர் அயலாருடைய ஸ்திரீயின்மேல் தகாத வார்த்தைகளைச் சொல்லும் போது ;

8. மாதுவுந் திகில டைந்து வரைந்தசா பத்தைக் கேளுமம்மா
பாதக வார்த்தை யென்மேல் பகர்ந்திட்ட பாவிக் கேதான்
மேதினில் மறுஜன் மத்தில் விளங்காரே துணைவர் தாமுந்
தீதாகுந் தந்தை யாஸ்தி செல்லுவாய் சம்மான் பேரில் ;

8. அந்த ஸ்திரீ பயத்தை யுடையவளாகிக் கொடுத்தச் சாபத்தை நாங்கள் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே ! கேட்பீராக. "என்மேல் கெட்ட வார்த்தைகளைச் சொன்ன பாபியாகிய உனக்கு மறு ஜன்மத்தில் பூமியில் சகோதரர்கள் விருத்தியாகமாட்டார்கள். உன்னுடைய தகப்பனருடைய சொத்துக்களும் அழிந்து விடும். நீயும் சம்மான் என்ற கப்பலின்மேல் ஏறி வெளியூருக்குப் போகக் கடவது" என்றும் ;

9. இன்னமும் பலவாறு சொன்னு ளெய்திற்று வந்தச்
[சாபம்
மன்னவ னந்தி யத்தில் மால்பத்தி மிகவுங் கொண்டு
துன்மையாய்க் காலங் நாடு சென்றுமே பிரமன் லக்கம்
மன்னவ னுதித்தா னென்றே மணுகிடும் மாது சாபம்.

9. இன்னும் பலவிதமாகவும் அந்த ஸ்திரீ சொன்னாள். அந்தச் சாபம் தகப்பனரை வந்து அடைந்தது. இவர் தன்னுடைய கடைசி காலத்தில் மகாவிஷ்ணுவின்மேல் அதிகமான அன்பும் ஆசையும் உடையவராகி இறந்து கெடுதியான எமபட்டணத்தினத்திற்குப் போய்ப் பிரமதேவனுடைய பிரமலிபியுடன் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். அந்த ஸ்திரீயின் சாபம் இவரை வந்து அடையும்.

10. தூணவர்க ளில்லா னுவன் சாருவான் சம்மான் பேரில்
வீணயாக வனவா சங்கள் விளங்கிடு மந்த மில்லான்
அணையவே வேறு பாரி யபீமான மாகக் கொள்வன்
சினமிலாத் தவங்கள் செய்யுஞ் செல்வதி கேட்டி டாயே.

10. ஜாதகரின் தகப்பனுர் தன்னுடன் கூடப்பிறந்த சகோதரர் கள் இல்லாதவராக விருப்பார். இவர் சம்மான் என்ற கப்பலின்மேல் ஏறி வெளி ஊருக்குப் போவார். முன்ஜன்ம பாவத்தின் பயனுக இவர் வனவாசஞ் செய்வதுபோல அங்குமிங்கும் அலேந்து திரிந்து கொண்டிருப்பார். இவர் அழகில்லாதவராக விருப்பார். இவர் இன் னெரு ஸ்திரீயை வைப்பாட்டியாக வைத்துக் கொள்ளுவார். கோபமில் லாமல் தவங்களேச் செய்கின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய குணதிசயங்கள்

11. இக்குண முடையா னுக்கு விப்பால னுதிப்பா னுவன்
மிக்கவே யிவன்கு ணத்தை விளம்புவேன் முனியே
[கேளும்
பக்குவ மாக வார்த்தை பகருவான் கல்வி யிரண்டு
சிக்கன மில்லா னுவன் தீரமா மனத்த னுவன்.

11. இப்படிப்பட்டக் குணங்களேயுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங்களே இனிமேல் அதிக மாகச் சொல்லுகின்றேன். முனிவரே ! நீர் கேட்பீராக. இவர் இன்ப மான தகுந்த வார்த்தைகளேச் சொல்லுவார். இவர் இரண்டு விதமான வித்தைகளே யுடையவராவர். இவர் அதிகம் செலவாளியாக விருப் பார். தைரியமான மனத்தை யுடையவராக விருப்பார்.

12. அரசரால் ஜீவ னங்க ளன்னவன் செய்வா னுவன்
திரைகடல் மீதில் செல்வான் செம்பொன்னு மதிகஞ்
[சேர்ப்பன்
பொருமையும் புகழு மேற்பன் போஜன சுகிய னுவன
தரிபடக் கூரு னுவன் தாட்சிண்ணியன் கனத்த புத்தி.

12. ஜாதகர் அரசர்களிடத்தில் வேலேயைச் செய்பவராக விருப் பார். அலேயையுடைய கடலின்மேல் பிரயாணஞ் செய்பவராவர். இவர் தனத்தை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் சாந்தமான குணத்தையும் கீர்த்தியையும் உடையவராக விருப்பார். இவர் சாப்பாட்டு விஷயமான சுகங்களே அநுபவிப்பராவர். இவர் தாமதமாகப் பேசமாட்டார். இவர் இரக்கம் உடையவராக விருப் பார். இவர் மேன்மையான அறிவை யுடையவராக விருப்பார்.

13. கரமதில் மாலின் ரேகை
கஞ்சமாம் ரேகை யுண்டு
மருவரை வசித்தே வெல்வன்
மானிலம் பின்னல் சேர்ப்பன்
தூரைராசர்க் கிவன்சொல் மேன்மை
சோம்பிடான் காரி யத்தில்
முருகர்தம் பத்தி பூண்ப
னுயர்வான குடும்பி யாவன்.

13. ஜாதகர் தன்னுடைய உள்ளங்கையில் விஷ்ணுரேகை என்ற ஒருவித ரேகையை உடையவராவார். கஞ்சம் என்று சொல்லப்பட்ட தாமரை ரேகையும் இவரது கையிலுண்டு. இவர் தன்னுடைய பகைவர் களிடம் சிநேகஞ் செய்துகொண்டே அவர்களை ஜயித்து விடுவார். இவர் பெரிய நிலங்களைப் பிற்காலத்தில் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். ஆளுகின்ற அரசர்களிடத்தில் இவருடைய சொற்கள் மேன்மையுடை யனவாக விருக்கும். இவர் தான் செய்கின்ற வேலைகளில் சோம்பல் இல்லாதவராக விருப்பார். இவர் முருகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக விருப்பார். இவர் மேன்மையான சிறந்த குடும்பஸ்தராவார்.

14. கடல்மீது வெந்தக் காலம்
காவலன் செல்வா னென்றீர்
அடைவுடன் சேயின் கால
மலைமீது செல்வா னுவன்
வடதிசை தன்னூர் சென்று
மெல்லியை மணங்கள் கொண்டு
உடன்செல்வான் மலாய்காட் டுக்கு
உயர்குரு திசை தன்னூரில் ;

14. சமுத்திரத்தின்மேல் எந்தக் காலத்தில் ஜாதகர் செல்லுவார் என்று சொல்லுகின்றீர் என்று பராசர முனிவரைக் கேட்க, இவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகர் சேய் என்ற அங்காரகனுடைய தசைக் காலத்தில் அலைகளையுடைய கடலின்மேல் பிரயாணஞ் செய்வார். இவ்விதமாகச் செய்வதற்கு முன்னே இவர் வடக்குத் திக்கிலுள்ள தன்னுடைய கிராமத்திற்குப் போய் அவ்விடத்தில் ஒரு ஸ்திரீயை விவாகஞ் செய்துகொண்டு உடனே மலயா தேசத்திற்குப்போய் அவ் விடத்தில் இருந்துகொண்டு பிறகு குருதசை காலத்தில் தன்னுடைய கிராமத்திற்கு ;

15. பாலகன் வருவா னுவன் பாக்கிய மிகவே யுண்டாய்
ஞாலங்கள் சேர்ப்பா னுவன் நாற்காலி பணையோர் விருத்தி
மாலவன் மருளு மோங்கு மானில மதன்பின் சேர்ப்பன்
மேலான குடும்பி யாவன் வித்தகி கேட்டி டாயே.

15. ஜாதகர் அதிகமான பணத்தைச் சம்பாதித்துச் சேர்த்துக் கொண்டு திரும்பி வருவார். நிலங்களை வாங்கிச் சேர்த்து வைப்பார். கால்நடைகளும் நிலங்களும் ஏர்களும் இவரிடம் விருத்தியடையும். இவருக்கு மகாவிஷ்ணுவினுடைய கிருபையும் அதிகரிக்கும். இதன் பிறகு இவர் பெரிய நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் ஒரு சிறந்த குடும்பஸ்தராக விருப்பார். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

16. தன்துணை மூன்பெண் ணைன்று
சாற்றுவோர்ந் தீர்க்க மாகப்
பின்துணை யாண்பால் மூன்று
பேதையு மிருவ ராவர்
சொன்னவாண் இருவர் சேதந்
தீர்க்கமா மொருவ னென்றோம்
அன்னவன் குணத்தைச் சொல்வேன்
அம்பிகை யாளே கேளாய்.

16. ஜாதகருடன் கூடப்பிறந்தவர்களில் ஒரு மூத்த சகோதரி நீண்ட ஆயுளை யுடையவளாக விருப்பாள். மூன்று இளைய சகோதரர்களும் இரண்டு இளைய சகோதரிகளும் உண்டு. இந்த மூன்று இளைய சகோதரர்களில் இரண்டு சகோதரர்கள் இறந்து விடுவார்கள். ஒரு இளைய சகோதரன் நீண்ட ஆயுளை யுடையவராக விருப்பார் என்று சொல்லுகின்றோம். இந்த இளைய சகோதரனுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் இளைய சகோதரனுடைய விஷயங்கள்

17. கல்விமான் கணக்கி லாகி காவலர் பேட்டிக் கொள்வன்
செல்லுவான் மலாய்தே சத்தில் செம்பொன்னு மிகவே
[சேர்ப்பன்
வல்லிமார் தமக்கு யிவன் வல்லாய னஞ்சா நெஞ்சன்
வெல்லுவான் எதிரி தம்மை வீண்பழி யேற்பா னுகும்.

17. ஜாதகரின் இளைய சகோதரர் படித்தவராக விருப்பார். கணக்குப் போடுவதில் புத்திநுட்ப முடையவராவர். அரசர்களுடைய தரிசனத்தை இவர் அடைவார். இவர் மலயா தேசத்திற்குப் போவார்,

இவர் அவ்விடத்தில் அதிகமான பணத்தைச்சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் தன்னுடைய பணத்தை ஸ்திரீகளுக்குக் கொடுப் பார். இவர் பேசுவதில் வெல்வாயனுக விருப்பார். இவர் பயப்படாத நெஞ்சை யுடையவராவர். இவர் தன்னுடைய பகைவர்களை ஜயித்து விடுவார். இவர் வீணன அபவாதங்களை அடையமாட்டார்.

18. பாரியு மொன்றே தீர்க்கம்
பலபாவை மோகங் கொள்வன்
தீரமாய்ச் சுதர்பெண் ணிரண்டு
தீங்கிலா வாண்பா லொன்று
கூறுவோர் தீர்க்க மாகக்
குமரனும் மேலாய் வாழ்வன்
மாரனுந் தீர்க்க ஜீவி
மங்கையே கேட்டி டாயே.

18. ஜாதகருடைய இளைய சகோதரர் ஒரே ஒரு மனைவியை யுடையவராவர். இந்த மனைவியும் நீண்ட ஆயுளை யுடையவளாவாள். இவர் அநேக ஸ்திரீகளிடத்தில் காம ஆசையை யுடையவராக விருப் பார். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகளும் ஓர் ஆண் குழந்தை யும் கெடுதியில்லாமல் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவர் மேன்மையாகவிருந்து வாழ்வார். இவர் நீண்ட ஆயுளை உடையவராக விருப்பார். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய விவாகமும் மனைவியின் குணங்களும்

19. உதித்தவன் மணத்தின் கால
மூரைக்கிறே மிருபா னேழில்
மதிமுக மனைவி வாய்க்கும்
வரைகிறே மவள்கு ணத்தைத்
துதிசெய்தோர்க் குதவு வாளாந்
துன்பங்க ளெவர்க்கு மெண்ணுள்
சதியிலா மனத்த ளாகுஞ்
சாதமு மன்பா யிவள்.

19. ஜாதகருடைய விவாவ காலத்தைப் பற்றிச் சொல்லுகின் றோம். இவருக்கு இருபத்தேழாவது வயதில் சந்திரனைப் போன்ற அழகான முகத்தையுடைய மனைவி வந்து சேரிடுவாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் தன்னைப் போற்றினவர்களுக்கு உபகாரஞ் செய்வாள். இவள் எவருக்கும் கெடு தியை நினைக்கமாட்டாள். இவள் கெட்ட மனத்தை யுடையவளல்லள். இவள் பிறருக்குச் சாப்பாட்டைப் பிரியத்துடன் போடுவாள்.

20. அன்னம்போல் வடிவு மொக்கு மரிமனை யொப்ப ளாவள்
அன்னவள் வறுமை காணு ளயல்குற்றம் புகலா ளாவள்
அன்னியர் மதிக்க வாழ்வ ளாளன்தன் மனத்துக்
[கேத்தோள்
அன்னவள் தீர்க்க ஜீவி யம்பிகை யாளே கேளாய்.

20. ஜாதகருடைய மனைவி அன்னத்தைப்போல அழகான ரூபத்தை யுடையவளாவள். மகாவிஷ்ணுவினுடைய மனைவியான இலட்சுமிக்குச் சமான மானவளாக விருப்பாள். இவள் தரித்திரத்தை யுங் கஷ்டங்களையும் அனுபவிக்க மாட்டாள். பிறருடைய குற்றங்களை எடுத்துச் சொல்லமாட்டாள். இவள் பிறர் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்தி லிருந்து வாழ்வாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி யிருந்து வாழ்வாள். இவள் நீண்ட ஆயுளை உடையவ ளாவாள். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

21. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பல முறுது
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று
[சொல்வேன்
எத்தகைப் பலத்தி னுலே யியம்புவீ ரிந்தச் சங்கை
குத்தமாய் ராகு வஞ்சில் கூடின பலத்தால் சொன்னேம்.

21. ஜாதகருக்குச் சந்தான விஷயத்தைச் சொல்லுவதற்கு யாதொரு வலிவும் இடையாது. ஒரு சமயம் இவருக்குக் குழந்தைகள் பிறந்தாலும் இறந்து விடும் என்று சொல்லுகின்றேன். எந்தக் காரணங்களினால் இவ்விதமாகச் சொல்லுகின்றீர் என்று கேட்கவே, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். கெடுதியாக ராகு ஐந்தாவது பாவத்தில் இருக்கின்ற பலத்தினால் இவ்விதமாகச் சொல்லுகின்றோம்.

22. பிருகுவும் புகலு கின்றார்
பொன்னவ னேழில் தங்க
மருவிடுஞ் சுதர்க ளென்றோம்
மைந்தனு முதித்தே னுக்குக்
கருமங்கள் நேரு மென்றோங்
கறும்பாம்பு அஞ்சில் தங்க
உரையாது முதலில் புத்திரர்
உறங்கிடு மென்று சொன்னேம்.

22. பிருகுமகரிஷியானவர் தடுத்துச் சொல்லுகின்றார். பொன்னவன் என்ற குரு ஏழாவது பாவத்தில் இருப்பதால் ஜாதகருக்

குக் குழந்தைகள் உண்டாவார்கள் என்று சொல்லுகின்றோம். ஜாதகருக்குப் புத்திரரால் கருமங்கள் செய்யப்படும் என்று சொல்லுகின்றோம். ஆனால் கறும்பாம்பு என்ற இராகு ஐந்தாவது பாவத்தில் இருப்பதால் முதலில் பிறக்கின்ற புத்திரர்கள் ஜீவிக்காமல் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

23. சுதர்களு மாண்பா லிரண்டு
தோகையு மவ்வாறு தீர்க்கம்
இதுநிற்க வுதித்தோன் பூர்வ
மியம்புவோம் பட்சி தன்னில்
நிதிமிக வுடையா னுக்கு
நேர்ந்தனன் வைசியச் சேயாய்
விதவித செட்டுச் செய்து
வித்தகி மதலை யுண்டாய் ;

23. ஜாதகருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இஃது இவ்விதமாக விருக்க, இனிமேல் ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் பட்சி என்ற திருக்கழுக்குன்றத்தில் அதிகச் செல்வத்தையுடைய ஒரு தனவானுக்கு வைசிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து பலவிதமான வியாபாரங்களைச் செய்து கொண்டு மனைவியையும் மக்களையும் உடையவராகி ;

24. அறமதி லிச்சை யுண்டாய் அதிதிகட் கன்ன மீந்து
மறையவர்க் குதவி செய்து வளமான தலங்கள் சென்று
திருமகன் வினையில் லாமல் சென்றனன் காலந் நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்.

24. ஜாதகர் தரும் காரியங்களைச் செய்வதில் ஆசையுடையவராகிப் பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டும் பிராமணர்களுக்கு உபகாரங்களைச் செய்து கொண்டும், செழிப்புற்றேங்கிய சிறந்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போய்க் கொண்டும் இருந்து யாதொரு பாவமுமில்லாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இவர் பிறந்திருக்கின்றார்.

ஜாதகருடைய யோகபாவம்

25. பாலகன் யோகச் சேதி
பகருவோ மினிமே லாக
ஞாலங்கள் பின்னுற் சேர்ப்பன்
நயம்புரு வார்த்தை யுள்ளான்

ஆலம்போல் பகைவ ருக்கு
வவனுமே கருட னுவன்
வேல்விழி மனைவிக் கிஷ்டன்
விருந்தோர்மேல் பிரிய னுவன்.

25. ஜாதகருடைய யோக விஷயங்களைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். இவர் நிலங்களைப் பின்னல் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் இனிமையான வார்த்தைகளை உபயோகிப்பார். விஷத்தை யுடைய பாம்பைப் போன்ற எதிரிகளுக்கு இவர் கருடனைப் போன்ற வைரியாவார். இவர் வேலைப்போன்ற அழகிய கண்களை யுடைய மனைவிக்கு இஷ்டமானவராக விருப்பார். இவரும் அவளிடத்தில் பிரியமாக விருப்பார்.

ஜாதகருக்கு யோக விஷயம்

26. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீரக ளந்தச் [சங்கை
ஆமக னேழிற் தங்க அசுரர்மந்திரி நாலி லேறப்
பாகமாய் நவத்தில் சேயும் பதிந்ததால் பத்ம யோகந்
தோகையாம் வேசி யோகஞ் செப்பினும் பால னுக்கு.

26. ஜாதகருக்கு யோகம் எந்தக் காரணத்தினால் நீர் சொன்னீர், முனிவரே! அதைத் தெரிவிப்பீராக என்று கேட்கவே, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். ஆகமன் என்ற குரு ஏழாவது பாவத்தில் இருப்பதாலும் அசுர மந்திரியாகிய சுக்கிரன் நான்காவது பாவத்தில் இருப்பதாலும் பக்குவமாக ஒன்பதாவது பாவத்தில் சேய் என்ற அங்காரகன் இருப்பதாலும் பத்மகயோகம் என்ற ஒருவித யோகமும் ஸ்திரீ என்று சொல்லப்பட்ட வேசியோகம் என்ற இன்னொருவித யோகமும் இந்த ஜாதகருக்கு உண்டு என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—மூலத்தில் "தோகையாம் வேறியோகம்" என்று இருப்பது "தோகையாம் வேசியோகம்" எனத் திறுத்தப்பட்டது.

27. இருவகை யோகத் தாலே
இராசரால் தொழிலு மேற்பன்
பொருளையு மதிகஞ் சேர்ப்பன்
பூமியும் பெருக்கஞ் செய்வன்
பிறைபோலே தொழிலு மோங்கும்
புதல்வனுந் தேடுஞ் செம்பொன்
இருபதா யிரம்பொன் னென்றே
ரீச்வரி கேட்டி டாயே.

27. இங்குச் சொல்லப்பட்ட இரண்டுவிதமான யோகங்களினுலே ஜாதகர் ,அரசாங்கத்தாரிடத்தில் ஒரு வேலையை அடைவார். இவர் பணத்தை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். நிலங்களே யும் மனைகளையும் அதிகப்படுத்துவார். இவருக்கு வளர்பிறைச் சந்தி ரனேப்போல தொழில் நாளுக்குநாள் விருத்தியாகும். இவர் சம்பாதித் துச் சேர்த்து வைக்கக்கூடிய தனம் இருபதாயிரம் பொன் பெறக்கூடிய தாக விருக்கும் என்று சொல்லுகின்றேம். பார்வதியம்மையே! நீர் கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்கள்

28. மாதிரு குணத்தைச் சொல்வேன்
மாந்தளிர் மேனி யாவள்
சூதிலாள் பொறுமை சாலி
சுந்தர மூடைய ளாவள்
பாதக மனமில் லாதாள்
கடந்தபேர்க் கன்ன மீவள்
வேதனே யொருவர்க் கெண்ணுள்
மேதினில் நல்லோ ளாவள்.

28. ஜாதகரின் தாயாருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல் லுகின்றேன். இவள் மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை யுடையவளாக விருப்பாள். இவள் கள்ளம் கபடம் வஞ்சனை முதலியவை இல்லாதவள். சாந்தமான குணத்தை யுடையவள், அழகுள்ளவளாக விருப்பாள். இவள் பிறரைத் துன்பப் படுத்தும்புடியான மனத்தை யுடையவளல்லள், இல்லறத்தை விட்டு துறந்தவர்களாகிய பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுவாள். இவள் யாருக்குங் கெடுதியை நினைக்கமாட்டாள். பூமியில் இவள் நல்லவளாக விருப்பாள்.

29. அடிசிலுக் கினிய ளாவள்
ஆளன்தன் மனத்துக் கேத்தோள்
விடவுரை பகரா ளாவள்
வீண்வம்பு புகலா ளாவள்
நடைநன்மை யுடைய ளாவள்
நலிந்தோரை யாத ரிப்பள்
தடவரை மகளே யாங்கள்
சாற்றின மொழிகுன் ரூவே.

29. ஜாதகருடைய தாயார் சமையல் செய்வதில் கெட்டிக்காரியாக விருப்பாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தபடி

நடந்து கொள்ளுபவளாக விருப்பாள். இவள் விஷ்மான கெட்ட வார்த்தைகளைச் சொல்லமாட்டாள், வீணான சண்டையை உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். இவளுடைய நடவடிக்கை நல்லதாகவே விருக்கும். ஏழைகளையும் நொந்து போன வர்களையும் இவள் காப்பாற்றுவாள். விசாலமான மலையாகிய இமய மலையின் அரசனுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல் லிய வார்த்தைகள் தவறிடா.

ஜாதகருடைய தாயாருடைய முன்ஜன்மம்

30. அன்னையின் முன்ஜன் மத்தை
யறிவிப்போ மாலங் காட்டில்
முன்குலந் தனிலு தித்து
வுயர்வான குடும்பி யாகி
இன்னவள் வாழ்ந்து மேதான்
ஏகினுள் காலன் நாடு
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறந்தவ ளிவளே யென்றோம்.

30. ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லு கின்றோம். இவள் ஆலங்காடு என்கின்ற திருவாலங்காட்டில் முன்குலம் என்று சொல்லப்பட்டப் பிராமணர் ஜாதியில் பிறந்து மேன்மையான ஒரு குடும்பஸ்தையராக விருந்து கொண்டு இவள் வாழ்ந்து இறந்து எமபட்டணத்திற்குப் போனுள். பிறகு பிரம்தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றுள் இவள், என்று சொல்லுகின்றோம்.

31. அத்திரி மறித்துச் சொல்வா ரவளு முன் ஜன்மந்
[தன்னில்
முத்தின குலமு தித்தோள் மேவுமிச் சென்மந் தன்னில்
வித்தகி குலந்தாழ் வாக வந்தகா ரணங்கள் சொல்வாய்
சத்தியு முன்ஜன் மத்தில் தடைசெய்தாள் விரதந் தன்னை.

31. அத்திரி மகரிஷியானவர் தடுத்துக் கேட்கின்றார். தன்னு டைய முன் ஜன்மத்தில் முத்தின அல்லது முந்தின குலமென்று சொல் லப்பட்டப் பிராமணர் குலத்திற் பிறந்தவளான ஜாதகருடைய தாயார் இந்த ஜன்மத்தில் தாழ்ந்த குலத்திற் பிறப்பதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்கப் பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் விரதங்களைத் தடுத்து விட்டாள்.

ஜாதகருடைய தாயாரின் மறுஜன்மம்

32. குலக்குண மின்றி வாழ்வள்
குலம்தாழ்வாய் வந்தா ளென்றேங்
தலைவிதின் ஜன்மஞ் சொல்வோம்
தக்கோல நகரிலே தான்
நலமுள சத்திரியச் சேயாய்
நாயகி யுதிப்பா ளாவள்
மலையிரை மகளே யாங்கள்
வழுத்தின மொழி குன்றுவே.

32. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன்ஜன்மத்தில் தன்னுடைய குலத்திற்குத் தகுந்த குணங்களில்லாமல் வாழ்ந்ததால் இந்த ஜன்மத்தில் தாழ்ந்த குலத்தில் பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம் இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் தக்கோலம் என்று சொல்லப்பட்ட ஒரு பெரிய கிராமத்தில் சிறந்த ஒரு க்ஷத்திரிய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். மலைகளுக்கு அரசனுகிய பர்வதராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லியவை தவறிடாமல் நடக்கும்.

ஜாதகரின் தாயாருடைய மரணகாலமும் (மாதிரு கர்மமும்) தகப்பனார் கர்மமும், தகப்பனரின் பின்ஜன்மமும்

33. இருபது ஐந்துதாண் டுள்ளே
ஏகுவாள் அன்னை தானும்
அரவுதன் தசைபிற் பாக
மாறேழு வாண்டு தன்னில்
மரலியின் நாட்டைத் தந்தை
வாங்குவா னென்று சொல்வோம்
வருஞ்ஜன்மங் காஞ்சி தன்னில்
வருவான்செள ராஷ்டிர வம்சம்.

33. ஜாதகருக்கு இருபத்தைந்து வயதிற்குள்ளே இவருடைய தாயார் இறந்து விடுவாள். அரவு என்ற இராகுவின் தசையில் பின் பாகத்தில் ஜாதகருக்கு நாற்பத்திரண்டாவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்து எமபட்டணத்திற்குப் போய் விடுவார் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் காஞ்சிபுரத்தில் சௌராஷ்டிர குலம் என்ற பட்டு நூல்கார ஜாதியில் பிறப்பார்.

ஜாதகருடைய மரணகாலமும் மறுஜன்மமும்

34. அன்பது வொன்ப தாண்டில் நற்றனு மாதந் தன்னில்
இன்னவ னுடல மேகு மியம்புவோ மிவன்பின் ஜன்மம்
உன்னத வள்ளூர் தன்னி லுதிப்பனுஞ் சத்திரியச்
[சேயாய்ப்
பொன்மிக வுடைய னுவன் பேதையே கேட்டி டாயே.

34. ஜாதகர் தன்னுடைய ஐம்பத்தொன்பதாவது வயதில் தனுர் மாதம் என்ற மார்கழி மாதத்தில் இறந்து இவருடைய தேகம் மறைந்து போய்விடும். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகிறோம். சிறந்த வள்ளூர் கிராமத்தில் இவர் க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். அதிக தனவானுகவும் இருப்பார். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

35. இதுமத்தில் ஜாத கர்க்கு வெய்தாவோ மார கங்கள்
விதவிதப் பிணிகள் நேரும் வேந்தனும் மேழில் தங்க
உதயன்முன் பனிபோல் நீங்கு முரைத்தனம் வயது
[தீர்க்கம்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

35. இதற்கு இடையிலே ஜாதகருக்கு மாரகம் நேரிடாதோ என்று தடுத்துக் கேட்கவே பராசர முனிவர் சொல்லுகின்றார். அநேக விதமான நோய்கள் ஜாதகருக்கு உண்டாகும். ஆனல் வேந்தன் என்ற குரு ஏழாவது பாவத்தில் இருப்பதால் உதயன் என்ற சூரியனுக்கு முன்னே பனி நிற்காமல் மறைந்து போவதைப்போல ரோகங்கள் எல்லாம் விலகிப்போய்விடும். ஜாதகருக்கு வயது தீர்க்கமாகும் என்று சொல்லுகின்றோம். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மனைவியின் மரணகாலமும், ஜனனகால தசையும்

36. பாரியு மிவன்பின் னுலே பறப்பளாங் காலன் நாடு
தீரனுஞ் ஜனிக்குங் காலஞ் சுக்கிரன் தசையிரண் டாகுங்
கூறுவோந் திங்க ளிரண்டுங் குறித்தனம் பூர்வ பாகம்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

36. ஜாதகருடைய மனைவி இவர் இறந்து போனதற்குப் பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச்சேருவாள். இவர் ஜனனமான காலத்தில் சுக்கிரனுடைய தசையில் இருப்பு இரண்டு வருஷங்களும் இரண்டு மாதங்களும் ஆகும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக முதலாவது பாகத்தைச் சொல்லி முடித்தோம். ஆறுமுகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 98

ஜனனகால கிரகநிலை

1. சிங்கலக் கினம தாகிச் [1]சிகிகாலில் [2]காரி யைந்தில் [3]திங்களும் [4]புகரு [5]மானுஞ் செங்[6]கதி ரேழி லாக அங்கராகன் புதனு மெட்டி [7]லரவுமே தசத்தி லாகப் பொங்கிய குருவும் [8]லாபம் புகலுவீர் பலனை யென்று ;

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகிக் கேது நான்கிலும், சனி ஐந்திலும் சந்திரனும் சுக்கிரனும் மகரத்திலும், சூரியன் ஏழிலும், அங்காரகனும் புதனும் எட்டிலும், இராகு பத்திலும், மேன்மையான குரு பதினொன்றிலுமாக இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று ;

கிரகநிலை

புதன் அங்காரகன்		ராகு	குரு
சூரியன்	இராசி சக்கரம்		
சந்திரன் சுக்கிரன்			லக்கினம்
சனி	கேது		

உத்திராடம் 2-ஆம் பாதம், சூரிய தசை வரு 3-8-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்தில் சூரியனும், மிதுனத்தில் சுக்கிரனும் குருவும், கடகத்தில் புதனும், சிம்மத்தில் இராகுவும், துலாத்தில் அங்காரகனும் சனியும், மகரத்தில் சந்திரனும், கும்பத்தில் கேதுவும் ஆகும். அங்காரகனும் புதனும் அஸ்தமன மடைந்திருக்கின்றார்கள். குரு வக்கிரகதியில் இருக்கின்றார்.

---

1. கேது
2. சனி
3. சந்திரன்
4. சுக்கிரன்
5. மகரம்
6. சூரியன்
7. இராகு
8. பதினொன்று

ஜனனமான நகரச் சிறப்பு

2. பார்வதி கேட்கும் போது பராசரும் புகலு கின்றார்
சீர்புக ழாண்பால் ஜன்மஞ் ஜனித்தயில் மேல்பால்
[கோக்கம்
வாரியுங் கீழ்ப்பால் தங்கு மரசர்கள் பேட்டி யுண்டு
பேரூராம் நாம மாகும் பேசின வடையா ளத்துள் ;

2. பார்வதியம்மையார் கேட்கும்போது பராசரமுனிவர் சொல்லு கின்றார். சிருஞ் செல்வமும் கீர்த்தியுமுள்ள ஆண் குழந்தை ஜனன மாகும். பிறந்த வீடு மேற்குத் திக்கைப் பார்த்தாற்போல விருக்கும். கிழக்குத் திக்கில் ஒரு சமுத்திரம் இருக்கும். இந்த ஊரை இராஜாக்கள் தரிசிப்பார்கள். இதற்குப் பெரிய நகரம் என்ற பெயரும் இருக்கும். இங்குச் சொல்லப்பட்ட அடையாளங்கள் உள்ள பட்டணத்தில் ;

ஜாதகரின் தகப்பனுடைய விஷயம்

3. வடுகர்தன் குலமுங் திப்பான் வாழ்வித வினனின் யோகம்
அடைவுட னன்னை தந்தை யவன்துணை மனைவி புத்திரர்
திடமுட னிவர்கள் யோகஞ் சேயன்தன்முன் ஜன்மம்
தடவரை மகளே சொல்வோங் தந்தையுந் தனிய னவன்.

3. ஜாதகர் தெலுங்கர் ஜாதியில் பிறப்பார். இவர் வாழ்கின்ற யோகத்தையும், இவருடைய தாயார் தகப்பனார் சகோதரங்கள் மனைவி சந்ததி ஆகிய இவர்களுடைய யோகங்களையும், ஜாதகருடைய முன் ஜன்மத்தையும், விசாலமான இமய மலையின் அரசனுகிய பர்வத ராஜனுடைய புத்திரியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லுகின் றோம். ஜாதகருடைய தகப்பனார் தனியனுக விருந்து வாழ்வார்.

4. குணமது புகலக் கேண்மோ
குலமதிப் புடனே வாழ்வன்
தனிவுள குணத்த னவன்
தந்தையார் ஜிதத்தில் வாழான்
உணவுகள் சுகமாய்க் கொள்வ
னுறைவனும் வேரூர் தன்னில்
அணையரி யவனல் யோக
மவசர மனமுங் கொஞ்சம்.

4. ஜாதகரது தகப்பனுருடைய குணதிசயங்களைச் சொல்லுகின் றேன். கேட்பீராக, இவர் தன்னுடைய குலத்தவர் தன்னை மதிக்கும் படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் சாந்தமானதும் நிதான மானதுமான குணத்தை யுடையவராவார். இவர் தன்னுடைய தகப்ப

ருடைய வீட்டிலிருந்து கொண்டு வாழ்வார். இவர் சுகமான நல்ல சாப்பாட்டைச் சாப்பிடுவார். இவர் அயலூருக்குப்போய் அவ்விடத்தில் வசிப்பார். இவருக்கு மகாவிஷ்ணுவினால் யோகம் உண்டாகும். இவர் கொஞ்சம் அவசரமான மனத்தையும் உடையவர்.

5. பலவணி பங்கள் செய்வான்
பர உபகார னுவன்
நிலையதைக் காப்பா னுவன்
நினைத்ததை முடிக்க வல்லன்
புலவன்போல் வார்த்தை சொல்வன்
பெரும்பொருள் தேடு வானும்
அலைந்திடு மாற்ரூன் தன்னால்
சொல்லினால் பொருளும் நஷ்டம்.

5. ஜாதகருடைய தகப்பனார் அநேக வியாபாரங்களைச் செய்வார். பிறருக்கு உதவியைச் செய்வார். தன்னுடைய அந்தஸ்தை இவர் காப்பாற்றிக் கொள்ளுவார். இவர் தான் எண்ணிய காரியத்தைச் செய்து முடிக்குஞ் சாமர்த்திய முடையவராவார். இவர் ஒரு பண்டிதரைப் போல வார்த்தைகளைச் சொல்லுவார். அதிகமான திரவியத்தைச் சம்பாதிப்பவராவர். ஓடித்திரிகின்ற பகைவர்களின் வார்த்தையினால் இவருக்குத் தன்மும் சொத்தும் நஷ்டமாகும்.

6. ஊகவான் நுணுக்கந் தேர்வ
னுண்மையா மனத்த னுவன்
பாகமாய்ப் பேசு வானும்
பாவைசொல் கடவா னுவன்
ஆகம நுணுக்கந் தேரா
னடைந்தோரை யாத ரிப்பன்
போகபாக் கியங்கள் பூர்வம்
பெறுவானு மந்தம் நஷ்டம்.

6. ஜாதகருடைய தகப்பனார் யூகித்தறியும்படியான புத்தியையுடையவராவர். இவர் நுட்பமானவைகளை அறிந்துகொள்ளுவதில் சமர்த்தர். இவர் சத்தியத்தைப் பாராட்டுகின்ற நேர்மையான மனத்தையுடையவராவர். இவர் பக்குவமாகவும் அழகாகவும் பேசுபவராவர். இவர் தன்னுடைய மனைவியின் வார்த்தையை மீறி நடக்காதவராவர். இவர் ஆகம சாஸ்திரத்தின் நுட்பங்களை யறியாதவராக விருப்பார் இவர் தன்னிடம் வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவார். இவர் சுகபோகங்களையும் செல்வத்தையும் தன்னுடைய வாழ்நாளின் முற்பாகத்தில் அனுபவிப்பார். பிற்காலத்தில் இவை நஷ்டமாம்.

ஜாதகருடைய தகப்பனருடைய முன்ஜன்மம்

7. இன்னவன் முன்சென் மத்தை
யியம்புவோங் கொங்கு தன்னில்
மனனர்தங் குலமே தோன்றி
மனுவிமைந் தருமுண் டாகி
அன்னவன் வாழுங் காளில்
அடாதசொல் லொருத்தி பேரில்
இன்னவன் சொல்லும் போது
இடிவிழு மரம்போ லாகி ;

7. ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் கொங்கு தேசத்தில் இராஜ வம்சத்திற் பிறந்து மனுவி மக்களை யுடையவராகி வாழுகின்ற காலத்தில் ஒரு ஸ்திரீயின் மேல் தகாத வார்த்தைகளை அடாவடியாகச் சொல்லும் போது அவள் இடிவிழுந்து வாடிப்போன மரத்தைப்போலத் திகில்டிந்து வாடி வருந்தி ;

8. மாதுவும் மன வருத்த முற்று வரைந்தசா பத்தைக்
[கேண்மோ
பாதக நிந்தை வார்த்தை பகர்ந்திட்ட பாவிக் கேதான்
மேதினிற் பின்ஜன் மத்தில் விளங்காரே துணைவர் தாமும்
போதன மந்த மின்றிப் பிதுரில்லாம் வாழா னெ.

8. அந்த ஸ்திரீ தன்னுடைய மனத்தில் துன்பத்தை யடைந்து கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. கெடுதியான சொற்களை என்மேல் சொல்லிய பாவியாகிய உனக்குப் பூமியில் மறு ஜன்மத்தில் சகோதரர்கள் இருக்கமாட்டார்கள். நீ அறிவும் அழகும் இல்லாமல் உன்னுடைய தகப்பனருடைய வீட்டில் வசிக்காமலும் ;

9. தரணியில் வாழ்வா யென்ன
தகாஸ்தென்று அந்தரம் பேச
மருவிற்று வந்தச் சாபம்
மாரனு மந்தி யத்தில்
குறைபுள மனத்த னெகிக்
குல்விஞன் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப்
பிறந்தவ னென்று சொல்வோம்.

9. பூமியில் வாழக் கடவது" என்று அந்த ஸ்திரீ இந்த ஜாதகரின் தகப்பனரைப் பார்த்துச் சொல்லவே அப்போது ஆகாயமார்க்க

மாக யாருடைய கண்களுக்கும் புலப்படாமல் யாத்திரை செய்துகொண் டிருந்த சித்தர்களும் தேவர்களும் ''த்தாஸ்து'' என்று சொல்ல அஃதாவது 'அவ்விதமாகவே நடக்கக் கடவது' என்று சொல்லவே, அந்தச் சாபமானது ஜாதகருடைய தகப்பனரை அடைந்தது. இவர் முன்ஜன்மத்தில் தன்னுடைய கடைசி காலத்தில்துன்பங்களை அனுப விக்து இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் பிரம லிபியுடன் எழுதப் பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவர் ஆவார் என்று சொல்லுகின்றோம்.

10. மாதுவின் சாபம் போலே வருந்துணை காணு னுவன்
காதலன் வேரூர் சென்று கனதனஞ் சேர்த்துப் பின்புத்
மேதினில் நஷ்டஞ் செய்வான் வீடுமே காணு னுவன்
கோதிலாக் குணத் தானுக்குத் குழவியுந் தோன்று
[மென்றோம்.

10. முன்ஜன்மத்தில் ஏற்பட்ட அந்த ஸ்திரீயினுடைய சாபத் தைப் போலவே இந்த ஜாதகருடைய தகப்பனர் சகோதரர்கள் இல்லாத வராகவே விருப்பார். இவர் இன்னொரு கிராமத்திற்குப் போய் அதிக மான பணத்தைச் சம்பாதித்துப் பூமியில் செலவு செய்து விடுவார். இவருக்கு வீடு கிடையாது. குற்றமில்லாத இவ்விதமான தகப்ப னருக்கு இந்த ஜாதகர் பிறப்பார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய குணாதிசயங்கள்

11. இன்னவன் குணத்தைச் சொல்வேன்
எதிரிக் கஞ்சா னுவன்
தன்மன மூர்க்கங் கொஞ்சஞ்
சாதிப்பான் சிலவே சங்கை
அன்னியர் மதிக்க வாழ்வ
ணுண்மையாய்க் குடும்ப மேற்பன்
மன்னரால் செட்டுச் செய்வன்
வறுமையு முடைய னுவன்.

11. ஜாதகருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் தன்னுடைய பகைவர்களுக்குப் பயப்படமாட்டார். இவர் முரட்டுத்தனமானதும் அறிவில்லாததுமான குணத்தை யுடையவ ராவர். சில விஷயங்களைச் சாதித்து நிலைநாட்டுவார். இவர் பிறர் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் மேன்மையான சிறந்த குடும்பத்தையுடையவராவர். இவர் அரசாங்கத் தாரோடும் வியாபாரஞ் செய்வார். இவருக்குக் கஷ்டங்களும் தரித் திரமும் உண்டு.

12. சல்லியப் பாதை யேற்பன் சகலர்க்கும் நல்லோ னவன்
நல்லவன் நல்ல வர்க்கு நாற்காலி விருத்தி யுண்டு
வல்லிய ரிஷ்டங் கொள்வன் மர்மமுங் கொஞ்ச முண்டு
வெல்லுவான் பகைவர் தம்மை வெஞ்சின முடைய னுமே.

12. ஜாதகர் கடன் வாங்கி அதனால் துன்பத்தை அடைவார். இவர் எல்லோருக்கும் நல்லவராக விருப்பார். இவர் நல்லவர்களுக்கு நல்லவராவே நடந்து கொள்ளுவார். இவரிடம் கால் நடைகள் விருத்தியாகும். இவர் ஸ்திரீகளிடத்தில் பிரியமுள்ளவராக விருப்பார், ஸ்திரீகளும் இவரிடத்தில் ஆசையுள்ளவர்களாக விருப்பார்கள். இவர் தன்னுடைய மனத்தில் சிறிது இரகசியத்தை உடையவராவர். இவர் தன்னுடைய பகைவர்களை ஜயிப்பார். இவர் கடுங்கோபத்தை யுடையவராவார்.

13. அண்டின பேரைக் காப்பன் அன்னமுங் குறைவு றாதான்
தண்டமாய் வார்த்தை கூறுவன் தொடுத்ததை
[வல்லவ னவன்
பண்டுநாள் பூமி மேலாய்ப் படைப்பனுங் காவல் செய்வன்
எண்டிசைப் புகழு மேற்ப னிருவிதக் குணமு முண்டு.

13. ஜாதகர் தன்னிடம் வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்று வார். இவருக்குச் சாப்பாட்டு விஷயத்தில் எவ்விதக் கஷ்டங்களும் கிடையா. இவர், தண்டிக்கும்போது சொல்லுகின்ற கடினமான வார்த்தைகளைச் சொல்லுகின்றவராவார் தான் எடுத்த காரியத் தைச் செய்து முடிக்குஞ் சாமர்த்தியத்தை யுடையவராவார். இவர் பழைய காலத்திய நிலங்களை அதிகமாக வடைவார், இவைகளை ஜாக்கிரதையாகவுங் காப்பாற்றுவார். இவர் எட்டுத் திக்குகளிலும் பெருமையையுங் கீர்த்தியையும் அடைவார். இவருக்கு இருவித குணங்களாகிய நல்ல குணமும் கெட்ட குணமும் உண்டு.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்) மூத்த சகோதரன் பலன்

14. தன்துணை முன்னு ணென்று
சாற்றுவோம் தீர்க்க மாக
அன்னவன் குணத்தைச் சொல்வே
னழகுளான் சிவந்த மேனி
தன்மனங் கபடு மில்லான்
சாற்றிடான் கட்டு வார்த்தை
பின்னேன்சொல் கடவா னவன்
பிறர்குற்றம் புகலா னவன்.

14. ஜாதகருடன் கூடப்பிறந்தவர் ஒரு மூத்த சகோதரராவார். இவர் நீண்ட ஆயுளையுடையவராவர். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் அழகுள்ளவராக விருப்பார். இவர் கள்ளம் கபடம் வஞ்சனை முதலியவைகளில்லாதவராவர். இவர் புனைந்த வார்த்தை பொய்யான வார்த்தை இவைகளைச் சொல்லமாட்டார். இவர் தன்னுடைய வார்த்தைக்கு அத்துமீறி நடக்காதவராவார், அன்னியர் மேல் குற்றங்களைச் சாட்டவும் மாட்டார், சொல்லவும் மாட்டார்.

15. போஜன வறுமை காணுன்
பெரிதான தலங்கள் செல்வன்
கூசியே வார்த்தை சொல்வன்
கொடூரத்தை வெளிக்காட் டாதான்
மாசிலாக் குணத்தா லுவன்
மனைவியு மொன்றே தென்கீழ்
வேசியர் மோகங் கொள்ளான்
வெஞ்சமர் தன்னிற் செல்லான்.

15. ஜாதகரது மூத்த சகோதரர் சாப்பாடு விஷயத்தில் தரித்திரத்தையுங் கஷ்டத்தையும் அனுபவிக்கமாட்டார். பெரிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவார். இவர் வார்த்தைகளைக் அச்சத்துடனே சொல்லுவார். இவர் குரூரமான கெட்ட குணத்தை வெளியே காட்டிக் கொள்ளமாட்டார். இவர் யாதொரு குற்றமுமில்லாத குணத்தையுடையவராவார். இவருக்கு ஒரே ஒரு மனைவியாவள். இவளுந் தென் கிழக்குத் திக்கிலிருந்து வருவாள். இவர் தாசி ஸ்திரிகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவரல்லர். இவர் சண்டைக்குப் போகமாட்டார்.

ஜாதகரின் மூத்த சகோதரருடைய புத்திரபாவம்

16. சுதர்களுங் காணு லுவன் செப்புவீர் அந்தச் சங்கை
அதிபன்தன் பூர்வந் தன்னில் மருவிற்று அந்தத் தோஷம்
அதுவிப ரங்கள் சொல்வாய் அவனுடைப் பூர்வங் கேளாய்
கதிதரும் மயிலந் தன்னிற் கலந்தனன் ரெட்டி வம்சம்.

16. ஜாதகருடைய மூத்த சகோதரருக்குக் குழந்தைகள் கிடையா. இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, பராசர முனிவர் சொல்லுகின்றார். இவருடைய முன் ஜன்மத்தில் இவருக்கு இந்தப் புத்திரதோஷம் சம்பவித்தது. அந்தத் தோஷத்தின் விவரத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, இவரது முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. என்று பராசர முனிவர் சொல்லுகின்றார். மோக்ஷத்தைக் கொடுக்கக்கூடிய மைலம் என்ற க்ஷேத்திரத்தில் ரெட்டியாருடைய குலத்தில் இவர் பிறந்தார்.

17. மனவியு மதலை யுண்டாய்
மானிலங் கிருஷிகள் செய்து
கனமுள பொருள்ப டைத்துக்
காவலன் வாழுங் நாளில்
அனவரும் போகும் மார்க்கம்
அடைந்தனன் அதனல் தோஷங்
கனமிலார்க் கிடைஞ்சல் செய்தான்
கழறுவார் சாபந் தானும்.

17. ஜாதகருடைய மூத்த சகோதரன் முன் ஜன்மத்தில் மனைவி மக்களையுடையவராகிப் பெரிய நிலங்களைப் பயிரிட்டுக் கொண்டும் அதிகமான சொத்தைச் சம்பாதித்துக்கொண்டும் வாழுகின்ற காலத்தில் அநேக ஜனங்கள் செல்லுகின்ற வழியிற் சென்றார்; அஃதாவது அநேக ஜனங்கள் செல்லுகின்ற கெட்ட வழியிற் சென்றார். அதனல் இவருக்கு ஒரு தோஷம் ஏற்பட்டது. மேலும் இவர் ஏழை ஜனங்களுக்குத் தொந்திரவை உண்டு பண்ணினர். அந்த ஏழைகள் சாபத்தைக் கொடுக்கின்றார்கள்.

18. பஞ்சைக்கு விரோதஞ் செய்த பாவிக்கு மறுஜன்
[மத்தில்
கொஞ்சிய மதலை யின்றித் குவலயஞ் சல்லிய முண்டாய்
நஞ்சான மனத்த னாகி நாட்டினில் வாழ்வா யென்னத்
தஞ்சமா யந்தச் சாபஞ் சார்ந்தது வென்று சொல்வோம்.

18. "ஏழைகளுக்கு விரோதமாகக் கெட்ட காரியங்களையும் இடைஞ்சலையுஞ் செய்த பாவியாகிய நீ கொஞ்சுதற்குரிய குழந்தைகள் இல்லாமலும் பூமியில் கடனல் துன்பங்கள் எற்பட்டும் கெட்ட மனத்தை யுடையவனாகியும் பூமியில் வாழக்கடவது" என்று ஏழைகள் ஜாதகருடைய மூத்த சகோதரரைப் பார்த்துச் சொல்லவே, கஷ்டத்தை உண்டு பண்ணக்கூடிய அந்தச் சாபம் இவரை அடைந்தது என்று சொல்லுகின்றோம்.

19. அந்தநோர் சாபத் தாலே யவனுக்கு யிச்சென் மத்தில்
மைந்தரு மில்லா ராவர் மனவியால் சிலகுறங்கள்
வந்தன புகலக் கேண்மோ வருணபால் கர்ணசேயாய்
இந்தவ னுதித்து மேதான் எழிலான குடும்பி யாகி;

19. இந்தச் சாபத்தின் பயனாக இவருக்கு இந்த ஜன்மத்தில் புத்திரர்கள் உண்டாகமாட்டார்கள். மேலும் இவருடைய மனைவியினல் சிலதோஷங்கள் நேரிட்டன. இதைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவள் திருவண்ணாமலையில் கருணீகர் குலத்தில் பெண்ணாகப்

பிறந்து அழகிய ஒரு குடும்பஸ்தையாக விருந்து கொண்டு வாழுகின்ற காலத்தில் ;

20. பஞ்சையுஞ் சுதருக் கன்னம்
பகருவா யென்று கேட்கச்
மிஞ்சின வார்த்தை சொன்னுள்
விரட்டினுள் யேழை தன்னை
வஞ்சியும் புகல்வாள் சாபம்
மைந்தர்சோ றீயாப் பாவி
துஞ்சிடுஞ் சுதர்கள் தாமுந்
தோன்றும்பின் ஜன்மந் தன்னில் ;

20. ஓர் ஏழை ஸ்திரீ தன்னுடைய குழந்தைக்குச் சாதம் கொடு என்று இவளைக் கேட்க, இவள் அதிகமான கெட்ட வார்த்தைகளைச் சொன்னுள். மேலும் அந்த ஏழையைப் பயமுறுத்தித் துரத்திவிட்டாள். அதன் மேல் அந்த ஏழை ஸ்திரீ சாபத்தைக் கொடுக்கின்றுள். "குழந்தைக்குச் சாதம் கொடுக்காதப் பாவியாகிய நீ உனது மறு ஜன்மத்தில் குழந்தைகளை இழந்துவிடக்கடவாய்";

21. கருமபுத் திரரு மின்றிக் காதலி வாழ்வாயென்ன
மருவிற்று வந்தச் சாபம் மாதுவு மந்திய யத்தில்
பெருஞ்சுதர் யாவு மாண்டு புக்கினள் காலன் நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று
[சொல்வோம்.

21. "கர்மஞ் செய்வதற்குப் புத்திரன் இல்லாமல் நீ வாழக் கடவாய்" என்று அந்த ஏழை ஸ்திரீ ஜாதகரின் மூத்தசகோதரருடைய மனைவியைப் பார்த்துச் சொல்ல அந்தச் சாபம் இவளை அடைந்தது. இவருடைய கடைசி காலத்தில் இவள் பெற்ற எல்லாக் குழந்தைகளும் இறந்து இவளும் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரம தேவனுல் பிரமலியுடன் எழுதப்பட்டுப் பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றோம்.

22. முன்ஜன்ம வினையி னலே
மேவாரே சுதர்கள் தாமுங்
கன்மபுத் திரனுந் தோன்றக்
கழறுவீர் முனியே நீர்தாம்
என்னசாந் திகள்செய் தாலு
மெய்தாரே சுதர்கள் தாமும்
அன்னவள் தனக்குக் கர்மம்
யார்செய்வார் விபரஞ் சொல்வாய்.

22. முன்ஜன்மத்தில் இவள் செய்தப் பாவத்தினாலே குழந்தைகள் உண்டாகா. கர்மஞ் செய்வதற்கு ஒரு புத்திரன் உண்டாவதற்கு ஒரு சாந்தியை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்க, என்ன சாந்தியைச் செய்தபோதிலும் இவளுக்குக் குழந்தைகள் உண்டாக மாட்டார்கள் என்று பராசர முனிவர் பதில் சொல்லவே, அதன்மேல் இவளுக்குக் கர்மகாரியங்களை யார் செய்வார்? அதனுடைய விபரங்களைச் சொல்லுவீர் என்று கேட்க;

மூத்தசகோதரரின் மனைவியின் மறுஜன்மமும் இவருடைய மறுஜன்மமும்

23. பின்துணைப் புதல்வன் செய்வான்
பேசுவோ மிவள்பின் ஜன்மந்
தென்திசை தில்லை தன்னில்
ஜனிப்பளா மறைக் குலத்தில்
அன்னவன் பின்ஜன் மங்கேள்
அக்காஞ்சி தன்னி லேதான்
மன்னனுஞ் சௌராஷ்ட்ர வம்சம்
மருவுவா னென்று சொல்வோம்.

23. இளைய சகோதரனுடைய பிள்ளை கர்மகாரியங்களைச் செய்வான். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச், சொல்லுகின்றோம். தெற்குத் திக்கிலுள்ள தில்லை என்ற சிதம்பர க்ஷேத்திரத்தில் பிராம்மணர் ஜாதியிற் பிறப்பாள். ஜாதகரின் மூத்த சகோதரருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இவர் காஞ்சிமாநகரத்தில் சௌராஷ்டிர குலம் என்ற பட்டு நூல்காரர் ஜாதியிற் பிறப்பார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணங்களும்

21. உதித்தவன் மணத்தின் கால
முரைக்கிறே மிருப தாண்டில்
அதிபதி தென்மேல் திக்கில்
வருவளாங் குணத்தைச் சொல்வேன்
கதியுண்டோன் மனையை யொப்பாள்
சர்ப்பம்போல் கோபஞ் சாந்தம்
அதிபதி யாக வாழ்வள்
சற்சனர் மனத்துக் கேத்தோள்.

24. ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபதாவது வயதில் தென்மேற்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். தயிரைச் சாப்பிட்ட கிருஷ்ண பகவானுடைய

மனைவியைப்போல இவள் விருப்பாள். இவளுக்குப் பாம்பிற்கு வருகின்றதைப் போலக் கோபம் உண்டாகி உடனே அது சாந்தத்தையும் அடையும். இவள் ஒரு எஜமானியைப்போல விருந்து வாழ்வாள். இவள் நல்ல குணத்தையுடைய தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல விருப்பாள்.

ஜாதகருடைய மனைவிக்குச் சகோதரர்களும் புத்திரரும்

25. எப்போதும் வறுமை காணுள் இருவித குணத்த ளாகுந்
தப்பித குணமில் லாதாள் தன்துணை காணு ளாவள்
செப்புவாள் சுகமாய் வார்த்தை சுதர்களுந் தோன்று
[றேதான் ;
எப்படிச் சொல்லு மென்ன இரவியின் மகனு மைந்தில் ;

25. ஜாதகருடைய மனைவி எந்தக் காலத்திலும் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டாள். இவள் தவருன கெட்ட குணத்தை யுடையவளல்லள். இவளுக்குச் சகோதார்கள் இடையாது. இவள் வார்த்தைகளை நல்லபடியாகவே சொல்லுவாள். இவளுக்குக் குழந்தைகள் பிறக்கா. எந்தக் காரணத்தினுல் இவ்விதமாகச் சொன்னீர் என்று கேட்கவே, பராசரர் பதில் சொல்லுகின்றார். சூரியனுடைய பிள்ளையாகிய சனி ஐந்தாவது பாவத்திலும் ;

ஜாதகருடைய முன்ஜன்மம்

26. ஒன்பதோ னெட்டி லேற
உரைத்திட்டோ மந்தச் சங்கை
முன்வினை ஜாத கர்க்கு
மேவின பலத்தால் நேரும்
அன்னேன்செய் வினையை நீரு
மறிவிப்பீர் முனியே யென்ன
மன்னவன் விரிஞ்சி தன்னில்
வந்தனன் சேடர் வம்சம்.

26. ஒன்பதிற்குடையவரான அங்காரகன் எட்டாவது பாவத்தில் இருப்பதால் இந்த விஷயத்தைச் சொன்னேம். ஜாதகருடைய முன் ஜன்மத்தி னுடைய பாவத்தின் பயனுக இவ்விதமாக நேரும். இவர் செய்த பாவத்தை, முனிவரே ! நீரே சொல்லுவீராக என்று கேட்கவே, பராசர முனிவர் சொல்லுகின்றார். ஜாதகர் விரிஞ்சிபுரத்தில் சேடர் என்ற ஒருவித தாழ்ந்த வேலைக்கார ஜாதியில் முன்ஜன்மத்திற் பிறந்தார்.

27. அங்ஙகர் நதியின் பக்க
லரசின்கீழ் விதவை போகம்
இன்னவன் செய்து வந்தான்
எய்திற்றுக் கருவு தானும்
உன்னத பண்டி தத்தா
லுடைத்தனன் கருவைத் தானும்
பின்னங்கள் நேர்ந்த வென்றேரும்
பேசுவோம் வேறு வொன்று.

27. அந்தப் பட்டணத்திலுள்ள ஓர் ஆற்றின் கரையிலுள்ள ஓர் அரசமரத்தின் கீழே ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் ஒரு விதவை ஸ்திரியுடன் சம்போகஞ் செய்தார். இவளுக்குக் கர்ப்பந் தரித்தது. இந்தக் கர்ப்பத்தை இவர் பெரிய வைத்தியங்களாச் செய்து கலைத்து விட்டார். இந்தக் கர்ப்பத்திற்குக் கெடுதிகள் உண்டாகி விட்டன என்று சொல்லுகின்றோம். மேலும் இன்னொரு தோஷத் தையுஞ் சொல்லுகின்றோம்.

28. இல்லத்தில் மார்ஜா லக்தா னிடருகள் செய்யுங் காலை
வல்லவன் கழியால் வாட்ட மரலியின் பதிக்குச் செல்லப்
புல்கிற்று வந்தத் தோஷம் புதல்வனு மந்தி யத்தில்
தொல்லையாய் மரண மாகிச் சிரஞ்ன்கோன் வரையப்
[பட்டு ;

28. வீட்டில் மார்ச்சாலம் என்ற ஒரு பூனை உபத்திரவத்தை உண்டுபண்ணிக்கொண்டிருந்ததால் ஜாதகர் அதைத் தடியால் அடிக்க அஃது இறந்து எமபட்டணத்திற்குப் போய் விட்டதால் இந்த ஒரு தோஷமும் ஜாதகரை வந்து அடைந்தது. இவர் தன்னுடைய கடைசி காலத்தில் கஷ்டங்களுடன் இறந்து நான்கு தலைகளையுடைய பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ;

ஜாதகருடைய மனைவியின் முன்ஜன்மம்

29. பிறப்பனு மிந்தப் பாலன் புக்கிடும் முன்னூழ்த் தோஷம்
மறித்திடுஞ் சுதர்க ளிரண்டு மனைவியா லிரண்டு குற்றம்
உறைந்ததைப் புகலக் கேண்மோ வுத்தமி பூர்வங்
[கேளாய்
வரமாக வில்லா மோரம் வன்னிய குல முதித்து ;

29. ஜாதகர் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார். முன் ஜன்மத்திய பாபம் இவரை இந்த ஜன்மத்தில் அடையும். ஆகை யால் இவருக்கு இரண்டு குழந்தைகள் இறந்து போய் விடும். மேலும் இவருடைய மனைவியால் இரண்டு தோஷங்கள் ஏற்பட்டதைப்

பற்றிச் சொல்லுகின்றேம், கேட்பீராக. பார்வதியம்மையே! இவளு டைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம், கேட்பீராக. மேன்மையாகவில்லாத மோரம் என்ற ஓர் ஊரில் வன்னியருடைய ஜாதியில் இவள் பிறந்து;

30. சுகமுள குடும்பி யாகித்
தோகையும் வாழுங் நாளில்
பகையலதப் புகலக் கேண்மோ
பாவையின் கொல்லை தன்னில்
மிகுதவ முனியும் வாசம்
வேணபேர் தோத்த ரிப்பார்
அகங்கொண்டு மாது தானு
மம்முனி தொழாமல் கின்ருள்.

30. சௌக்கியமுள்ள ஒரு குடும்பஸ்தையாக ஜாதகருடைய மனைவி வாழுகின்ற காலத்தில் இவளுக்குண்டான விரோதமான கெட்ட சம்பவத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இவளுடைய வீட்டின் தோட்டத்தில் அதிகமாகத் தவங்களைச் செய்கின்ற ஒரு தவ முனி என்கிற முனீசுவரன் வாசஞ்செய்து கொண்டிருந்தார். இவரை அநேக ஜனங்கள் தோத்தரித்து பூஜைசெய்து கொண்டு வந்தார்கள். ஆனால் இவள் கர்வத்தினால் இந்த முனீசுவரரைப் பூஜை செய்யாமல் இருந்து விட்டாள்.

31. என்னையே தொழாத பாவி
ஈன்றதோர் சுதரைக் கொல்வேன்
பின்வருஞ் ஜன்மந் தன்னில்
புதல்வரை யாவுங் கொல்வேன்
உன்னுடன் வாச மாவே
னுரைத்துவேறு சாகை செல்லத்
துன்மைகள் நேர்ந்த வென்றேங்
காதலி கேட்டி டாயே.

31. "என்னைப் பூஜை செய்யாத பாவியாகிய நீ பெறுகின்ற குழந்தைகளை நான் கொன்று விடுவேன். உன்னுடைய மறுஜன்மத் தில் உன்னுடைய எல்லாக் குழந்தைகளையும் நான் கொன்றுவிடுவேன். நான் உன்னைப் பிடித்துக் கொண்டு உன்னிடத்திலேயே வாசஞ்செய்து கொண்டிருப்பேன்" என்று சொல்லி விட்டு வேறொரு விடத்திற்கு அந்த முனீசுவரர் போய்விடவே, இவளுக்குக் கெடுதிகள் நேரிட் டன என்று சொல்லுகின்றேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

32. மாதுவுக் கந்த ஜன்ம மைந்தர்கள் யாவும் போக்கிக்
காதலி வருத்த முற்றுக் காலன்தன் பதிக்குச் சென்று
வேதனுல் வரையப் பட்டு விளங்கினு ளிந்த மாது
தீதாக முனியின் சாபஞ் சேர்ந்ததா லிச்சென் மத்தில்;

32. ஜாதகருடைய மனைவிக்குத் தன்னுடைய முன்ஜன்மத்தில் எல்லாக் குழந்தைகளும் இறந்து விடவே இவள் துன்பத்தையும் மனக்கஷ்டத்தையும் அடைந்து இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள். கொடுமையான அந்த முனீஸ்வரருடைய சாபம் இந்த ஜன்மத்தில் இவளை அடைந்ததால்;

33. துணைதோஷஞ் சுதருந் தோஷந்
தோகையில் வாச மாகும்
வினைதீரக் கிரியை யொன்று
விளம்புவீர் முனிவரே நீர்தாம்
வனிதைக்குக் கர்ம சாந்தி
மறைபோலே செய்வா னுகில்
கனமுள சுதரா னிரண்டு
கன்னியு மொன்று தீர்க்கம்.

33. ஜாதகருடைய மனைவிக்குச் சகோதர தோஷமும் புத்திர தோஷமும் சம்பவித்தன. மேலும் அந்த முனீசுவரன் இவளிடமே வாசஞ் செய்யும். இந்தத் தோஷங்கள் நிவிர்த்தியாவதற்கு ஒரு சாந்தியை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்கவே, பராசர முனிவர் சொல்லுகின்றார். வேதங்களில் சொல்லியுள்ள முறைப் பிரகாரம் இவளுக்குக் கர்மங்கள் விலகிவிடச் சாந்தியை ஜாதகர் செய்வாரானுல் பெருமையுள்ள இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்து நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள்.

ஜாதகரது தாயாருடைய குணதிசயங்கள்

34. மாதிரு குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனியாவள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுள்மனங் கபடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பரிந்து பசாரஞ் செய்வள்
சூதிலா ளடக்க வார்த்தை சொல்லது சுகமே யாகும்.

34. ஜாதகரின் தாயாருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை யுடையவளாவாள். இனிமையான நல்ல வார்த்தைகளை இவள் சொல்லுவாள். இவளுடைய மனத்திற்குள்ளே இவள்

கள்ளம் வஞ்சனை கபடம் ஆகிய இவைகள் இல்லாதவளாக விருப்பாள். இவள் கெடுதியைச் செய்யக்கூடிய மனத்தை உடையவளல்லள். இவள் பிறருக்குத் தானுகவே முன்னே வந்து உபசரணையைச் செய்வாள். இவள் கபடமில்லாதவள். இவள் வார்த்தைகளை அடக்கமாகச் சொல்லுபவள், இவளுடைய வார்த்தைகளும் இன்பமாக விருக்கும்.

ஜாதகரின் தாயாருடைய சகோதரர்கள்

35. பொறுமையும் பெருமை யேற்பள்
புண்ணிய மனத்த ளாவள்
அறிவைக்குத் துணையா னைந்து
அம்பிகை யொருத்தி யாவள்
பெருமையாய்க் குடும்ப மேற்பர்
பூமிகள் பலவூர் சேர்ப்பர்
உரைக்கிறேம் பின்பால் சேதி
உத்தமி கேட்டி டாயே.

35. ஜாதகருடைய தாயார் சாந்தத்தையும் புகழையும் உடையவளாவள். இவள் புண்ணியமான நல்ல மனத்தை யுடையவளாவள். இவளுக்கு ஐந்து சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு. இவர்கள் மேன்மையான குடும்பத்தை யுடையவர்கள். இவர்கள் நிலங்களை அநேக கிராமங்களில் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவளுடைய இதர விஷயங்களைப் பின்னல் சொல்லுகின்றேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரது தாயாருடைய முன்ஜன்மம்

36. மங்கைக்கு வாயுப் பீடை
மருவிடு மற்ப மாகச்
சங்கையென் றேரைச் சாரான்
சாந்தமும் வறுமை காணுள்
நங்கையின் பூர்வஞ் சொல்வேன்
நாற்றிலை பூஜை செய்யுந்
துங்கமாங் கிரிக்குக் கீழ்ப்பால்
சிறுவூரி லிக்கு லத்தில் ;

36. ஜாதகருடைய தாயாருக்கு வாயு ரோகம் சிறிது உண்டாகும். இவள் பயப்படுகின்றேம் சந்தேகப்படுகின்றேம் என்று சொல்லுகின்றவர்களிடம் சிநேகஞ் செய்யமாட்டாள். இவள் சாந்த குணமுடையவளல்லள். இவள் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அடையமாட்டாள். இவளுடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லு

கின்றேன். நான்கு தலைகளையுடைய பிரமதேவர் பூஜை செய்கின்ற சிறந்த மேன்மையான மலைக்குக் கிழக்குத் திக்கில் ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய வடுகர் ஜாதியில்;

ஜாதகரது தாயாருடைய மறு ஜன்மம்

37. ஜனித்துமே வறுமையின்றிச்
செல்வங்கள் மிகவுண்டாகி
அரிவையும் வாழ்ந்து மேதா
னச்சென்மம் வினையில் லாமல்
வினையான காலந் நாடு
மேவியே பிரமன் லக்கம்
வனிதையு முதித்தா னென்றேம்
வரைகிறே மிவள்பின் ஜன்மம்.

37. ஜாதகருடைய தாயார் பிறந்து தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமல் அதிகமான செல்வங்களையும் சமபத்துக்களையு முடைய வளாகி வாழ்ந்து அந்த முன்ஜன்மத்தில் யாதொரு பாபமும் இல்லாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றேம். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம்.

ஜாதகருடைய தாயார் தகப்பனாரது மரண காலங்கள் (கர்மங்கள்)

38. திருவள்ளூர் தன்னி லேதான்
ஜனிப்பளா மறைக்கு லத்தில்
கருமகா லங்கள் தம்மைக்
கழறுவீர் முனியே நீர்தாம்
ஆறுண்டில் தந்தை கண்ட
மாறுறு இரண்டு வாண்டில்
மருவிடு மன்னை கண்ட
மறலியைக் காணு ளாவள்.

38. ஜாதகருடைய தாயார் தன்னுடைய பின்ஜன்மத்தில் திருவள்ளூர் க்ஷேத்திரத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பாள். ஜாதகரது தாயார் தகப்பனாருடைய கர்மகாலங்களைப் பற்றி, முனிவரே! நீரே சொல்லுவீராக. இவருக்கு ஆறுவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்து விடுவார். இவருடைய தாயாருக்கு முப்பத்தெட்டாவது வயதில் கண்டங்கள் நேரிடும். ஆனால் இவள் அப்போது எமதரிசனத்தை அடையமாட்டாள்; அஃதாவது இறந்து விடமாட்டாள்,

ஜாதகருடைய மரணகாலம்

39. மூப்பது யெட்டு வாண்டில் விளம்பொணு மார கங்கள்
செப்புவோம் நாற்ப தாண்டில் செல்லுவா ளன்னை தாமுந்
தப்பித காலந் தன்னைச் சாற்றுவோ மெழுப தாண்டில்
ஒப்புடன் மகர மாத முரைத்திட்டோம் மார கங்கள்.

39. ஜாதகருடைய மூப்பத்தெட்டாவது வயதில் மாரகங்களைச் சொல்லக்கூடாது. இவருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய தாயார் இறந்து விடுவாள். இவரது கெட்ட காலங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு எழுபதாவது வயதில் மகரமாதம் என்ற தைமாதத்தில் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மறு ஜன்மமும் யோக விஷயமும்

40. மறுஜன்மங் காளாத்தி தன்னில் வருவனும் வைசியச் [சேயாய்ப்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா னுவன்
திருமகன் யோகச் சேதி செப்புவோந் தரணி சேர்ப்பன்
தரையினில் சல்லிய மேற்பன் சங்கரி கேட்டி டாயே.

40. ஜாதகர் தன்னுடைய பின்ஜன்மத்தில் காளஸ்திரி க்ஷேத்திரத்தில் வைசிய குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறந்து அதிகமான சொத்தையுடையவராகிப் பெருமையுடன் வாழ்பவராவார். இவருடைய யோக விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் நிலங்களையும் மனைகளையுஞ் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் நிலங்களினால் கடனை அடைவார். பார்வதியம்மையே! கேட்பீராக.

41. ஆறு மூன்று வாண்டி லணுகிடுஞ் சல்லியப் பாதை
பாரினில் செட்டு வாலும் பறந்திடுஞ் சல்லிய மென்றேங்
கூறிய ராசர் மூலங் குமரனுஞ் செட்டுச் செய்வன்
தார்புனை சுதரால் யோகந் தங்கிடு மென்று சொல்வோம்.

41. ஜாதகருக்கு முப்பத்தொன்பதாவது வயதில் கடனால் துன்பங்கள் ஏற்படும். இந்தக் கடன் நிலத்தினாலும் வியாபாரத்தினாலும் சீக்கிரத்தில் நிவிர்த்தியாகி விடும் என்று சொல்லுகின்றோம். இவர் அரசாங்கத்தார் மூலமாக வியாபாரஞ் செய்வார். இவருக்குப் பிள்ளைகளாலும் யோகம் உண்டாகும் என்று சொல்லுகின்றோம்.

42. இல்லமு மெதிரில் செய்த
லெண்ணஞ்சு வாண்டு தன்னில்
சொல்லிய சாந்தி செய்யில்
சுதர்தோன்றுஞ் சல்லியம் நீங்கும்

எல்லோக ளதிகஞ் சேர
லெடுத்தகா ரியங்கள் வெற்றி
சொல்மேன்மை யரசர் மூலஞ்
செட்டுக்க ளோங்கு மென்றோம்.

42. ஜாதகர் தனக்கு நாற்பதாவது வயதில் தன்னுடைய வீட்டிற்கு எதிரில் ஒரு வீட்டைக் கட்டுவார். இவர் நாங்கள் சொன்ன சாந்தியைச் செய்தால் இவருக்குக் குழந்தைகள் உண்டாகும். இவருக்குக் கடன் உபத்திரவமும் நீங்கி விடும். இவருக்கு நிலங்கள் அதிகமாகச் சேரும். இவர் தான் செய்ய வாரம்பித்தக் காரியங்களை ஜயத்துடன் செய்து முடிப்பார். இவருடைய வார்த்தை மேன்மையுடையனவாக விருக்கும். இவருக்கு அரசாங்கத்தார் மூலமாக வியாபாரங்கள் விருத்தியடையும் என்று சொல்லுகின்றோம்.

ஜனனகாலத்தில் தசையிருப்பு

43. திருப்பணிக் குதவி செய்தல் தேவதாத் தலங்கள் செல்லல்
பெருமையும் புகழு மெய்தல் புகலுவோம் பின்பா கத்தில்
திருமகன் ஜனன காலஞ் செங்கதிர் தசைமூன் றாண்டும்
மருவிடுந் திங்க ளெட்டும் வரைந்தனம் பூர்வ பாகம்.

43. ஜாதகர் கோயில் வேலைகளுக்கும் தொண்டுகளுக்கும் உதவியைச் செய்வார். புண்ணிய ஸ்தலங்களுக்குப் போவார். இவருக்குக் கீர்த்தியும் மேன்மையும் உண்டாகும். மற்ற விஷயங்களை அடுத்தப் பாகத்தில் சொல்லுகின்றோம். இவர் பிறந்த காலத்தில் செங்கதிர் என்ற சூரியனுடைய தசையின் இருப்பு மூன்று வருஷங்களும் எட்டு மாதங்களும் ஆகும். இவ்விதமாக முன்பாகத்தைச்சொல்லி விட்டோம்.

ஜாதகருடைய மனைவியின் மரணமும் குடும்ப விஷயமும்

44. பாரியு மிவன்பின் கண்டம்
பகருவோந் தாயே யாங்கள்
கார்க்கோடன் தசையந் தத்தில்
கலகங்க ளில்லந் தன்னில்
வேறின்றி வாழ்வா ளாகும்
விளம்புவோம் பின்பால் சேதி
ஆறுமா முகனைப் பெற்ற
அம்பிகை யாளே கேளாய்.

44. ஜாதகருடைய மனைவி இவர் இறந்த பிறகு இறந்து விடுவாள் என்று, எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றோம். கார்க்கோடன் என்ற இராகுதசையின் கடைசியில் குடும்பத்தில் கலகங்கள் உண்டாகும். ஆனால் குடும்பப் பிரிவினையில்லாமல் ஜாதகர் வாழ்வார். மற்ற விஷயங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம் ஆறு பெரிய முகங்களையுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 99

ஜனனகால கிரகநிலை

1. [1]மதிகுரு சிம்ம மாக [2]மால்கன்னி [3]புகருந் [4]தேளில்
[5]உதயனுங் [6]காரி [7]கோலி [8]ஓரகனும் [9]மான தாகச்
சதி[10]சேயும் [11]வீணை யாகச் [12]சிதி[13]வண்டி சிம்மஞ்
[ஜன்மம்
இதுவிதக் கோளுந் நின்ரு லியம்புவீர் பலனை யென்று ;

1. சந்திரனும் குருவும் சிம்மத்திலும், புதன் கன்னியிலும் சுக்கிரன் விருச்சிகத்திலும், சூரியனும் சனியும் துலாத்திலும், இராகு மகரத்திலும், அங்காரகன் மிதுனத்திலும், கேது கடகத்திலும் ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இருந்து இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று ;

கிரகநிலை

			அங்காரகன்
	இராசி சக்கரம்		கேது
ராகு			லக்கினம் சந்திரன் குரு
	சுக்கிரன்	சூரியன் சனி	புதன்

பூரம் 2-ஆம் பாதம் ; சுக்கிரதசை வரு 14-2-0.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்திற் சனியும், சிம்மத்திற் குருவும், கன்னியிற் சந்திரனும் ராகுவும், விருச்சிகத்தில் புதனும் சுக்கிரனும், தனுசில் அங்காரகனும், கும்பத்தில் சூரியனும், மீனத்தில் கேதுவும் ஆகும். புதனும் சனியும் அஸ்தமனமடைந்திருக்கின்றார்கள்.

---

1. சந்திரன்
2. புதன்
3. சுக்கிரன்
4. விருச்சிகம்
5. சூரியன்
6. சனி
7. துலாம்
8. இராகு
9. மகரம்
10. அங்காரகன்
11. மிதுனம்
12. கேது
13. கடகம்

ஜனன நாட்டுச் சிறப்பு

2. சங்கரி கேட்கும் போது சடைமுனி புகலு கின்றார்
இங்கிவை யாண்பால் ஜன்ம மில்லமூந் தனிய தாகும்
அங்கவன் மாலுந் தென்பா லாளிவா கனத்தா ளீசன்
தங்கிடுந் தென்கீழ் தன்னில் சத்தியு மாரி யுத்தரம்.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது ஜடை முனிவர் சொல்லு கின்றார். ஜனனமாகுங் குழந்தை ஆண் குழந்தை யாகும். ஜனன மானவீடு தனியாகவிருக்கும். மகா விஷ்ணுவினுடைய கோயில் தெற்கி லும் யாளி வாகனத்தையுடையவளாகிய காளியம்மன் கோயிலும் பரம சிவனுடைய கோயிலும் தென் கிழக்கிலும் பார்வதியம்மன் கோயிலும் மாரியம்மன் கோயிலும் வடக்கிலும் இருக்கும்.

3. இத்தகை யடையா ளத்து ளிலகிய சிறுவ ராகும்
வித்தகன் மூன்றாஞ் ஜன்மம் விளங்குவான் வடுகர்
[வர்க்கஞ்
சித்தசன் குடும்பச் சேதி செப்புவோ மிந்நூல் தன்னில்
அதிதியை வளர்த்த எங்க ளாத்துமத் தாயே கேளாய்.

3. இவ்விதமான அடையாளங்களை யுடைய வளமில்லாத ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் மூன்றாவது பிறவியாகத் தெலுங்கருடைய குலத்திற் பிறப்பார். மன்மதனுக்குச் சமானமான இவருடைய குடும்ப விஷயங்களைப்பற்றி இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம். பர தேசிகளைக் காப்பாற்றுகின்ற எங்களுடைய உயிருக்கு உயிராகிய் தாயா ரான பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரின் சகோதரங்கள்

4. தந்தைக்குத் துணையா ணென்று சாற்றுவோந் தீர்க்க மாக
அந்தவன் குணத்தைச் சொல்வே னரிநிறஞ் சமதே
[கத்தான்
சிந்தையு மிரண்டு மாகுந் தரணியால் ஜீவிப் பானும்
வந்தவர்க் கன்ன மீவன் மாடுகள் பணியேர் விருத்தி.

4. ஜாதகருடைய தகப்பனருக்கு ஒரு சகோதரர் உண்டு. இந்த சகோதரர் நீண்ட ஆயுளையுடையவர் என்று சொல்லுகிறோம். இவ ருடைய குணங்களைப்பற்றிச் சொல்லுகிறேன். இவர் மகா விஷ்ணுவினுடைய நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தையுடையவர். நடுத்தரமான தேகத்தையுடைவர். இவர் இரண்டுவிதமான எண்ணம் அஃதாவது நல்லனவும் தீயனவுமான

SARASWATI MAHAL LIBRARY MADRAS

எண்ணங்களை உடையவர். இவர் பூமியால் ஜீவிப்பவராவர். அஃதாவது விவசாயத் தொழிலையுடையவராவர். இவர் தன்னிடங்கள் வந்தவர்களுக்குச் சாப்பாட்டை போடுவார். இவரிடம் மாடுகளும் நிலங்களும் ஏர்களும் விருத்தியாகும்.

5. அவசர மனத்த னுவ னரிபோலே கோபங் கொஞ்சந்
தவசிசு ளுறவு கொள்ளான் சல்லியப் பாதை யுண்டு
நவமதில் பாரி யொன்று நவிலுவோங் கீழ்ப்பால் நேருந்
தவசியே சுதருந் தோன்றுந் தங்காது முதலில் சேதம்.

5. ஜாதகரது தகப்பனுருடைய சகோதரர் அவசரமான மனத்தையுடையவராவர், அஃதாவது படபடப்பாக விருப்பார். இவருக்குச் சிங்கத்திற்கு வருவதைப்போலக் கோபங் கொஞ்சமுண்டு. இவர் பரதேசிகளிடத்திலும் முனிவர்களிடத்திலும் சிநேகஞ் செய்துகொள்ளமாட்டார். இவருக்குக் கடனுல் துன்பம் ஏற்படும். இவருக்கு மனைவி ஒருத்தியாவள். இவள் கிழக்குத் திக்கிலிருந்து வருவாள் என்று சொல்லுகிறேம். தவஞ் செய்கின்ற பார்வதியம்மையே! இவருக்குச் சந்ததிகளும் உண்டாகும். முதலில் பிறப்பது நிலைக்காமல் இறந்து போய்விடும்.

6. அதற்குப்பின் விருத்தி யாகு
மாணிரண்டு கன்னி யொன்று
சதமுடன் தீர்க்க மென்றேஞ்
சங்கையாய் வேறுய்ச் செல்வன்
எதுகாலம் புகலு மென்ன
வீறுறு வாண்டில் நேரும்
பதியினில் வாழ்வா னுவன்
பார்வதி கேட்டி டாயே.

6. தகப்பனுடைய சகோதரருக்கு முதலிற் பிறக்குங் குழந்தைக்குப் பிறகு பிறக்கின்ற குழந்தைகள் உயிருடன் இருக்கும். இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் நீண்ட ஆயுளையுடையனவாக விருக்கும் என்று சொல்லுகின்றேம். இந்தச் சகோதரர் வேறு குடும்பஸ்தராகப் பிரிந்து போய்விடுவார். எந்தக் காலத்தில் இவ்விதம் நேரிடும் என்று கேட்கவே, ஜாதகருக்குப் பன்னிரண்டாவது வயதில் இவ்விதமாக நேரிடும் என்று ஜடை முனிவர் சொல்கின்றார். இந்தச் சகோதரர் தன்னுடைய நிலையிலிருந்து வாழ்பவராவார். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரது தகப்பனருடைய குணநிசயங்கள்

7. தந்தையின் சேதி கேளாய்த் தன்மனங் கபடு மில்லான்
விந்தையாய்ப் பேச வல்லன் விகடங்கள் கூறு னவன்
நிந்தைகள் பெறுவா னகும் நேமியில் சல்லிய முள்ளான்
முந்துமால் பத்தி கொஞ்சம் மொழியதைக் காப்பா னவன்.

7. ஜாதகரது தகப்பனருடைய விஷயங்களைக் கேட்பீராக. இவர் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை முதலியவைகளை உடையவரல்லர். இவர் ஆச்சரியப்படும்படியாகப் பேசும் திறமையுடைய வராவர். சிறிப்பை உண்டாக்கும்படியான வேடிக்கையான வார்த்தை களைச் சொல்லமாட்டார். இவர் அபவாதங்களை அடைவார். இவருக்குப் பூமியில் கடன்கள் ஏற்படும். முதலில் மகாவிஷ்ணுவின்மேல் இவ ருக்குச்சிறிது அன்பும் ஆசையும் இருக்கும். இவர் தான் சொல்லு கின்ற வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். நிறை வேற் றவுஞ்செய்வார்.

8. பயிர்த்தொழில் புரிவா னவன்
பஞ்சைகட் குதவி செய்வன்
நயமுள வார்த்தை கூறுவன்
நல்லோர்க்கு நல்லோ னவன்
தயையுள மனத்த னவன்
சாந்தமுங் கோப மேற்பன்
பயமுள மனத்த னகும்
பந்துவு மதிக்க வாழ்வன்.

8. ஜாதகருடைய தகப்பனர் விவசாயத் தொழிலைச் செய்வார். இவர் ஏழைகளுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் இன்பமான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் நல்லவர்களுக்கு நல்லவ ராக நடந்து கொள்ளுவார். இவர் இரக்கம் உடையவராவர். இவர் சாந்தமான குணத்தை யுடையவர், ஆனல் சில சமயம் இவருக்குக் கோபமும் உண்டாகும். இவர் பயந்த மனத்தை யுடையவராவர். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்தி லிருந்து வாழ்வார்.

9. இல்லமுஞ் செய்வா னவன் ஏவலா ளுடைய னவன்
வல்லிசொல் தடுக்கா னவன் மருமத்தை வெளிக்காட்
[டாதான்
சில்லரைப் புத்தி கொஞ்சஞ் சிலேடையாய்ப் பேசு வானும்
கல்வியுஞ் சமம தாகுங் கஞ்சமாம் ரேகை யுண்டு.

9. ஜாதகருடைய தகப்பனுர் வீட்டைக் கட்டுவார். இவர் வேலைக்காரர்களை உடையவராவர். இவர் தன்னுடைய மனைவியின் வார்த்தைகளைத் தடுத்துச் சொல்லமாட்டார். தன்னுடைய இரகசியத்தை வெளியே காட்டிக்கொள்ளமாட்டார். இவருக்குத் தாழ்ந்த புத்தியுங் குணமுங் கொஞ்சமுண்டு. இவர் இரண்டு அர்த்தங்களை உடைய வார்த்தைகளைச் சொல்லுவார். இவருக்குப் படிப்பு நடுத்தரமான தாகவிருக்கும். இவருடைய உள்ளங்கையில் கஞ்சரேகை என்ற தாமரைரேகை இருக்கும்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

10. சொன்ன யிக்குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னழகுளான் சிவந்த மேனி
பன்னியே பேசு வானும்
பஞ்சைமே லிரக்க மாவன்
கன்னென மொழியே சொல்வன்
கல்வியுஞ் சமம தாகும்.

10. இதுவரையிலுஞ் சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணகுணங்களைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றேன். இவர் சௌந்தரிய முடையராவர். சிவப்பு நிறத்தையுடைய தேகத்தை யுடையவர். இவர் அழகாகவும் திறமையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுவார். இவர் ஏழைகளிடத்தில் தயையுள்ளவர். இவர் சர்க்கரையைப் போல் இனிப்பான வார்த்தைகளையே சொல்லுவார். இவர் நடுத்தரமான வித்தையை யுடையவராவர்.

11. சோதியுஞ் சாயல் கொஞ்சஞ்
சொல்லதைக் காப்பா னுவன்
வேதனை யொருவர்க் கெண்ணன்
வெஞ்சினம் வெளிக்காட் டாதான்
சாதிப்பான் சிலவே சங்கை
சத்துரு நாசஞ் செய்வன்
போதனம் பின்னல் சேர்ப்பன்
பூமியு மதிகஞ் சேர்ப்பன்.

11. இவருடைய கண்கள் கொஞ்சம் சாய்ந்த பார்வையையுடையனவாக விருக்கும். இவர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவராவர். இவர் யாருக்குந் துன்பங்களை

நினைக்கமாட்டார். கடுங்கோபத்தை இவர் தெரியும்படியாகக் காண்பித்துக் கொள்ளமாட்டார். இவர் சில விஷயங்களில் தான் சொன்னதே சரி என்று வாதாடி நிலைநாட்டுவார். இவர் தன்னுடைய பகைவர்களை அழித்து விடுவார். இவர் "போதனம்" என்ற அறிவையும் தனம் என்ற பணத்தையும் பிற்காலத்தில் அடைவார், சேர்த்தும் வைப்பார். நிலங்களையும் மனைகளையும் அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார்.

12. சல்லியப் பாதை பூர்வந் தங்கிடு மீரெட் டாண்டுஞ்
சல்லிய மதன்மேல் காணன் மாடுகள் விருத்தி யுண்டு
நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
வெல்லுஞ்சொல் லுடைய னுவன் வீண்பழி யேற்கா
[னுவன்

12. ஜாதகருக்குத் தன்னுடைய வாழ்வின் முதற்பாகத்தில் கடனால் துன்பங்களும் கஷ்டங்களும் ஏற்பட்டிருக்கும். இப்படி இவருக்குப் பதினாறு வயது வரையிலும் கடனால் உபத்திரவம் இருக்கும். இதற்குமேல் இவருக்குக் கடன் இருக்காது. இவரிடம் கால் நடைகள் விருத்தியாகும். இவர் நல்லவர்களுக்கு நல்லவராகவே நடந்து கொள்ளுவார். இவர் முரடர்களுக்கு வலிவுடைய எதிரியாவர். இவர் பேசுவதில் ஜயத்தை அடையக்கூடிய வார்த்தைகளை உபயோகப்படுத்தக்கூடியவராவர். இவர் வீணாகப் பாவங்களையும் அபவாதங்களையும் அடையமாட்டார்.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்) மூத்த சகோதரியின் குணங்கள்

13. இவனுடைத் துணைவர் தம்மை
யியம்புவோம் முன்பெண் ணொன்று
அவளுமே தீர்க்க மெய்து
மரைகிறே மவள் குணத்தை
நவனியில் பொய்கள் சொல்லாள்
நதிதனை யொப்ப ளாவள்
தவசிகட் கன்ன மீவள்
சம்பத்து முடைய ளாமே.

13. ஜாதகருடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு முன்னே ஒரு சகோதரி உண்டு. இவள் நீண்ட ஆயுளையுடையவளாக விருப்பாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் பூமியில் பொய்யைப் பேசமாட்டாள். இவள் நதியைப்போல உபயோகமாக விருப்பாள். இவள் பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். இவள் பாக்கியங்களை உடையவளாக விருப்பாள்.

14. வரனுமே கீழ்ப்பால் நேரு மனமது சஞ்ச லத்தால்
உரைவளா மந்தச் சங்கை யுடையவன் வேறு மாதை
மருவியே வாழ்வா னுவன் மாதுவுஞ் சிறையாய்ச் சின்னுள்
திருகாக வாழ்வா ளாவள் தெய்வத்தின் பத்தியி னுலே ;

14. ஜாதகரது மூத்த சகோதரியினுடைய புருஷன் கிழக்குத் திக்கிலிருந்துவந்து நேரிடுவான். மூத்த சகோதரி மனக்கஷ்டத்தை யுடையவளாக விருப்பாள். இதற்குக் காரணத்தை முனிவர் சொல்லு கின்றார். இவளுடைய புருஷன் இன்னொரு ஸ்திரீயை மோகித்து அவளையடைந்து வாழ்வார். அதனல் இவள் சிறைச்சாலையில் வைக்கப் பட்டவளைப்போலப் புருஷனுடன் வாழாமல் சிறிதுகாலம் கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பாள். இவள் தன்னுடைய தெய்வபக்தியின் பலனுக :

ஜாதகரது மூத்த சகோதரியினுடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

15. உடன்கூடி வாழ்வாள் பின்னு லுயர்வான குடும்பி யாவள்
அடைவுடன் சுதரா ணிரண்டு அரிவையர் அவ்வா று
[தீர்க்கந்
தடையுரு குடும்ப மேற்பள் செல்வியுந் தீர்க்க ஜீவி
தடவரை மகளே யாங்கள் சாற்றின மொழி குன்ரு வே.

15. ஜாதகருடைய மூத்த சகோதரி உடனே தன்னுடைய புருஷ னுடன் சேர்ந்து வாழ்வாள். பிறகு இவள் மேன்மையான குடும்பஸ்தை யாக விருப்பாள். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். இவள் கஷ்டமில்லாத குடும்பத்தை யுடையவளாக விருப்பாள். இவள் நீண்ட ஆயுளை யுடையவளாவாள். விசாலமான இமயமலையின் அரச னுடைய மகளாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தை கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய இளையவர் (சகோதரபாவம்)

16. பின்துணை காண னுவன்
பிறக்கினுங் தீதே யாகும்
என்னகா ரணத்தி னுலே
யிவன்பின்னுல் தோஷஞ் சொன்னீர்
துன்மையாய்க் காரி பானு
சேர்ந்துமே மூன்றில் தங்கப்
பின்னமாந் துணைவ ரென்றேரும்
பேதையே கேட்டி டாயே.

16. ஜாதகருக்கு இளைய சகோதரர்கள் கிடையா. இளைய சகோதரர்கள் ஒரு சமயம் பிறந்தாலும் அவர்கள் இறந்து விடுவார்கள். எந்தக் காரணத்தினால் இவருக்கு இளைய சகோதர தோஷத்தைச் சொன்னீர் என்று கேட்கவே, ஜைடமுனிவர் பதில் சொல்லுகின்றார். கெடுதியாகக் காரி என்ற சனியும் பானு என்ற சூரியனும் கூடி மூன்றாவது பாவத்திலிருப்பதால் பின் சகோதரர்களுக்குக் கெடுதியுண்டாகும் என்று சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாககாலமும் மனைவியின் குணங்களும்

17. மைந்தனின் மணத்தின் காலம்
வரைகிறே மிருப தாண்டில்
பந்தணி மாது தானும்
பரவுவாள் கீழ்ப்பால் தன்னில்
அன்னையின் வர்க்க மாவள்
மவள்குணங் கூறக் கேண்மோ
செந்திரு மகளை யொப்பாள்
சீலியாம் விரத சாலி.

17. ஜாதகருக்கு விவாகம் நடக்குங் காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபதாவது வயதில் நிர்ணயிக்கப்பட்ட மனைவி கிழக்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவள் இவருடைய தாயாருடைய பந்துக்களைச் சார்ந்தவளாவாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவள் இலட்சுமிக்குச் சமான மானவளாக விருப்பாள். இவள் நல்ல ஒழுக்கத்தையும் குணங்களையும் உடையவளாக விருப்பாள், விரதங்களை அநுஷ்டிக்கின்றவளாகவு மிருப்பாள்.

18. புத்திமா னீகை யுள்ளாள் புண்ணிய மனத்த ளாவள்
பத்திமா னவர்க்கு அன்னம் படைப்பளாம் யோக சாலி
உத்தம குணத்த ளாவ ளுறுதியில் லாத நெஞ்சம்
சத்தியும் வயது தீர்க்கஞ் சங்கரி கேட்டி டாயே.

18. ஜாதகருடைய மனைவி அறிவாளியாக விருப்பாள். இவள் பிறருக்குக் கொடுக்குந் தன்மையை யுடையவளாவாள். இவள் நல்ல மனத்தையுடையவளாவாள். இவள் தெய்வபக்தி யுள்ளவர்களுக்குச் சாப்பாடு போடுவாள். இவள் யோகத்தை யுடையவளாவாள். இவள் நல்ல குணத்தையுடையவளாவாள். இவள் திடமான மனமில்லாதவளாவாள். இவளுக்கு நீண்ட ஆயுளுண்டு, பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரது சந்ததிகளும் (புத்திரபாவமும்) முன்ஜன்மமும்

19. சுதர்களும் நவமே தோன்றுஞ்
சோர்வுறுஞ் சிலவே யென்றேஞ்
சதமுட னுண்பால் மூன்று
சத்தியு மவ்வாறு தீர்க்கம்
முதல்நாலு மேழுஞ் சேதம்
மொழிகிறேந் தாயே யாங்கள்
அதிதியே யவனின் பூர்வ
மறிவிப்போ மினிமே லாக.

19. ஜாதகருக்கு ஒன்பது குழந்தைகள் பிறப்பார்கள். இவர்களில் சில குழந்தைகள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றேம். இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். முதலாவது குழந்தையும் நான்காவது குழந்தையும் ஏழாவது குழந்தையும் இறந்து விடும் என்று, பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றேம். பார்வதியம்மையே! இனிமேல் நாங்கள் ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம்.

20. கொங்கு நாடதனி லேதான் குதித்தனன் வைசியச்
[சேயாய்
திங்களாக் குடும்பி யாகித் தேவியு மதலை யுண்டாய்ப்
பாங்காக வணிபஞ் செய்து பாலகன் வாழுந் நாளில்
தாங்கின வினையைச் சொல்வேன் சங்கர ரடியா ருக்கு;

20. ஜாதகர் கொங்கு தேசத்தில் வைசிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்தார். கஷ்டங்களை அனுபவிக்காதக் குடும்பஸ்தராகி மனைவியையும் மக்களையும் உடையவராகி நல்ல பலனைத் தரக்கூடிய வியாபாரத்தைச் செய்துகொண்டு இவர் வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்றேன். இவர் சிவபெருமானுடைய அடியார்களுக்கு;

21. விகடங்கள் கூறும் போது வித்தகர் மனது வாடி
புகலுஞ்சா பத்தைக் கேண்மோ பிறக்கும்பின் ஜன்மந்
[தன்னில்
தகமையாய்த் துணையா னின்றிச் சல்லியப் பாதை யாயுஞ்
ஜகமதி லந்தம் வாயு செறிந்திடு மென்று சொல்ல;

21. விகடமான தொந்தரவை யுண்டுபண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொன்னபோது அவ்வடியார்கள் மனக்கஷ்டத்தை யடைந்து கொடுத்தச் சாபத்தைக் கேட்பீராக. ஜாதகர் மறு ஜன்மத்தில் ஆண் சகோதரர் இல்லாமலும் கடலால் துன்பத்தை அடைந்தும் பூமியில்

கடைசி காலத்தில் வாய்வுரோகம் சம்பவித்தும் துன்பத்துடன் வாழ்வார் என்று சொல்லவே ;

22. அந்தநேர் சாபந் தானு மணுகிடும் பால னுக்குப்
பிந்தியோர் தோஷங் காணுன் புதல்வனு மந்தி யத்தில்
தென்திசைச் சேது சென்று சென்றனன் காலன் நாடு
முந்தினேன் வரையப் பட்டு வதிப்ப னெமென்று
[சொன்னேம்.

22. அந்தச் சாபம் ஜாதகரை வந்து அடைந்துவிடும். இது தவிர இவருக்கு வேறொரு தோஷமும் கிடையாது. இவர் தன்னுடைய கடைசிகாலத்தில் தெற்குத்திக்கிலுள்ள சேதுமகாஸ்தலத்திற்குப்போய் ஸேதுஸ்னானம் செய்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போனர். பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்தார் என்று சொல்லுகின்றேம்.

ஜாதகருடைய யோகபாவம்

23. வந்தவன் யோகச் சேதி வரைகிறேந் தாயே கேளும்
இந்திரன் போலே வாழ்வ னிருபதாண் டதனின்
[மேலாய்த்.
தன் தனங் கையிருப்பு சல்லியப் பாதை காணன்
நந்தியாவு விருத்தி யுண்டு நளன்போலே வாழ்வா னவன்.

23. ஜாதகருடைய யோக விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேம் எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக, இவர் இருபது வயதிற்குப் பிறகு தேவேந்திரனைப்போலச் சகல பாக்கியங்களுடனிருந்து கொண்டு வாழ்வார். இவர் தன்னிடத்தில் பணத்தைச் சேர்த்து வைத்திருப்பார். இவருக்குக் கடனுல் கஷ்டங்கள் ஏற்படா. எருதுகளும் பசுக்களும் இவரிடம் விருத்தியாகும். இவர் நளசக்கிரவர்த்தியைப்போல தனவானுகவும் தரும சீலராகவும் விருந்து கொண்டு வாழ்வார்.

24. பூமியும் பரிபா லிப்பன் புதுயில்லம் வேறு செய்வன்
சேமமாங் குடும்பி யாவன் சேர்ப்பானு மிருவூர் பூமி
நேமியில் நல்லோ னவன் நிருபர்க்கு விவன்சொல்
[மேன்மை
காமனை விருப்பங் கொள்வன் காதலி கேட்டி டாயே.

24. ஜாதகர் நிலங்களை வைத்துக்கொண்டு அவைகளை அனுபவிப்பார். இவர் ஒரு புதிய வீட்டைக் கட்டுவார். இவர் சௌக்கியமான குடும்பஸ்தராக விருப்பார். இரண்டு கிராமங்களில் நிலங்களையும் மனைகளையும் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் பூமியில் நல்ல வராகவிருப்பார். இவருடைய வார்த்தைகள் அரசர்களுக்கு மேன்மை

யுடையவன விருக்கும். இவர் மன்மதனிடத்தில் ஆசையும் அன்பும் உள்வவராக விருப்பார், அஃதாவது இவர் காமாக்கினியை யுடைய வராக விருப்பார், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரது தாயாருடைய குணதிசயங்கள்

25. இன்னமும் விபர மாக
யியம்புவோம் பின்பா கத்தில்
அன்னையின் குணத்தைச் சொல்வே
னழகுளாள் வாத தேகி
மன்னவன் மனத்துக் கேற்றோள்
வருவோரை யாத ரிப்பள்
கன்னியுஞ் சிவந்த மேனி
கார்க்கோடன் போலே கோபம்.

25. இன்னமும் விஷயங்களை விபரமாகப் பின்பாகத்தில் சொல்லுகின்றேம். ஜாதகருடைய தாயாருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் சுந்தரியாக விருப்பாள். இவள் வாத தேகத்தை யுடையவளாவாள். இவள் தன்னுடைய புருஷனு டைய மனத்திற்குத் தகுந்தாற்போல நடந்து கொள்ளுவாள். இவள் தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் சிவப்பான நிறத்தையுடையவளாவாள். இவளுக்குப் பாம்பிற்குக் கோபம் வரு வதைப்போலக் கோபம் உண்டாகும்.

ஜாதகரது தாயாருடைய சகோதரர்கள்

26. அவள்துணை யாண்பால் மூன்று
அளகேச னெப்பாய் வாழ்வர்
நவனியில் கன்னி யிரண்டு
நாட்டுவோந் தீர்க்க மாகத்
தவசியே கீழ்ப்பா லில்லஞ்
சாற்றுவோ மன்னைக் கேதான்
சிவன்தனைப் பூஜை செய்யுஞ்
செல்வியே கேட்டி டாயே.

26. ஜாதகரது தாயாருடன் கூடப்பிறந்தவர்கள் மூன்று சகோ தரர்கள் ஆவார்கள். இவர் அளகேசன் என்ற குபேரனைப்போல செல்வவான்களாக விருந்து வாழ்வார்கள். தாயாருக்கு இரண்டு சகோதரிகள் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். பார்வதி யம்மையே! தாயாருடைய வீடு கிழக்குத்திக்கில் இருக்கும் என்று சொல்லுகின்றேம். பரமசிவனைப் பூஜை செய்கின்ற பார்வதியம் மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாருடைய முன்ஜன்மம்

27. மாதிரு பூர்வஞ் சொல்வே னுலங்கா டதனி லேதான்
ஓதுவார் குலமு நித்து வுயர்வான குடும்பி யாகிப்
பாதக மனமில் லாமல் பஞ்சைமே லிரக்க மாகித்
தீதான காலந் நாடு சென்றுமே பிரமன் லக்கம்;

27. ஜாதகருடைய தாயாரின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். ஆலங்காடு என்ற திருவாலங்காட்டு க்ஷேத்திரத்தில் ஓதுவார் என்ற ஒருவித குலத்திற் பிறந்து மேன்மையான குடும்பஸ்தையாகிக் கெடுதியான மனமில்லாதவளாகி ஏழைகளின்மேல் தயை உள்ளவளாகி இறந்து கெடுதியான எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு;

ஜாதகருடைய தாயாருடைய பின்ஜன்மமும் தகப்பனுருடைய முன்ஜன்மமும்

28. வந்தவ ளென்று சொல்வோம்
வருஞ்ஜன்மம் புதுவை தன்னில்
செந்திரு முருகன் போன்ற
செட்டியின் குலமு நித்துத்
தந்தையின் பூர்வஞ் சொல்வேன்
தாமிர பரணி தன்னில்
இந்ததோர் குலமு நித்து
எழிலான குடும்பி யாகி;

28. ஜாதகருடைய தாயார் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றேம். இவள் மறு ஜன்மத்தில் புதுவை என்ற புதுச்சேரியில் செல்வமும் அழகும் பொருந்திய முருகக்கடவுளைப் போல வுள்ள ஒரு செட்டியாரின் குலத்திற் பிறப்பாள். ஜாதகரின் தகப்பனுருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் தாமிரபரணியில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலமாகிய வடுகர் ஜாதியிற் பிறந்து அழகிய சிறந்த குடும்பஸ்தராகி;

ஜாதகரின் தகப்பனுருடைய மரணம் (பிதிருகர்மம்)

29. வினையது வில்லா னுகி மேவினன் காலந் நாடு
கனமுள பிரமன் லக்கங் கலந்தன னென்று சொல்வோம்
சினமிலா முப்பா னுலில் செப்புவோந் தந்தை கண்டம்
அனையவே தவங்கள் செய்யு மம்பிகை யாளே கேளாய்.

29. ஜாதகருடைய தகப்பனுர் யாதொரு பாவமு மில்லாதவராகி இறந்து எமபட்டணத்திற்குச் சென்றார். பிறகு மேன்மையான பிரமதேவருடைய பிரமலிபியுடன் இந்த ஜன்மத்தில் பிறந்தார் என்று சொல்லுகின்றேம். ஜாதகருக்கு முப்பத்து நான்காவது வயதில் இவருடைய தகப்பனுர் இறந்து விடுவார் என்று கோபம் இல்லாமல் அவ

சரப்படாமல் சொல்லுகின்றோம், தவங்களே இடைவிடாமல் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரின் மரணமும் (கர்மமும்) ஜாதகருடைய மரணமும்

30. நாற்பது வாண்டு தன்னில் நற்றுலா மாதந் தன்னில்
கூப்பிடு வானுங் காலன் குறித்ததோ ரன்னை தம்மை
ஏற்கவே வறுப தாண்டி லெழில்மீன மாதந் தன்னில்
தீர்ப்பாக ஜாத கர்க்குச் செப்புவோம் மார கங்கள்.

30. ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் நல்ல துலாமாதம் என்ற ஐப்பசி மாதத்தில் இவருடைய தாயாரை எமன் வந்து அழைப்பார். அஃதாவது தாயார் இறந்து விடுவாள். ஜாதகருக்கு அறுபதாவது வயதில் அழகிய மேன்மையான மீனமாதம் என்ற பங்குனி மாதத்தில் கண்டிப்பாகவும் உண்மையாகவும் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மறுஜன்மமும் ஜனனகால தசையிருப்பும்

31. மறுஜன்மங் காஞ்சி தன்னில் வருவனுஞ்செங் குந்த ரைகப்
பொருளது பெருக்க மாகிப் புனிதனுல் வாழ்வா னவன்
திருமகன் ஜனன காலஞ் சுக்கிர தசையி ருப்பு
உரைக்கிறோம் பதினு லாண்டு உரைந்திடுங் திங்க ளிரண்டு.

31. ஜாதகர் தன்னுடைய பின்ஜன்மத்தில் காஞ்சிமாநகரத்தில் செங்குந்தர் என்ற கைக்கோளராகப் பிறப்பார். சொத்துக்களே அதிகமாக வுடையவராகிப் பரிசுத்தமானவராக விருந்து வாழ்பவராவார். இவர் ஜனனமான காலத்தில் சுக்கிரதசையில் இருப்பு பதினுன்கு வருஷங்களும் இரண்டு மாதங்களும் ஆகும் என்று நாங்கள் சொல்லுகின்றோம்.

ஜனனகால தசையின் பலாபலன்கள்

32. பாலகன் பிணிய னேகம் பாகமு மில்ல மாகுஞ்
சாலவே சல்லியப் பாதை தன்துணை சுபமுந் துக்கம்
ஏலவே காலி பீடை யியம்புவேன் பூர்வ பாகம்
ஆலத்தை யுண்டோன் தேவி யறிவிப்போம் விபர
[மிரண்டில்.

32. இந்த ஜனனகாலதசையில் ஜாதகருக்கு அநேகவிதமான ரோகங்கள் வரும். இவருடைய வீடு பங்கிடப்படும். குடும்பத்தில் கட்டுல் உபத்திரவம் ஏற்படும். இவருடைய சகோதரருக்குச் சுகங்களும் விவாகம் முதலியவைகளும் கெடுதிகளும் நேரிடும். பசுக்களுக்கு நோய்கள் உண்டாகும். இவ்விதமாக முன்பாகத்தைச் சொல்லிவிட்டேன். ஆலகால விஷத்தை அருந்திய சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! மற்ற விபரங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 100

ஜனனகால கிரகநிலை

1. சந்திரன் சிம்ம மாகச் சனி[1]தனில் ராகு [2]மானில்
[3]புத்தியு [4]புகரு மேடம் [5]பூமகள் [6]சாடி யாக
[7]மந்திரி கன்னி யாகப் [8]பரிதியு மீன மாகப்
[9]பிந்திய கயிறும் [10]வண்டி பேசுவோஞ் ஜன்மஞ் [11]சீயம்.

1. சந்திரன் சிம்மத்திலும், சனி விருச்சிகத்திலும், இராகு மகரத்திலும், புதனும் சுக்கிரனும் மேஷத்திலும், அங்காரகன் கும்பத்திலும், குரு கன்னியிலும், சூரியன் மீனத்திலும், கேது கடகத்திலும் இருந்து ஜன்மலக்கினம் சிம்மம் என்றோம்;

கிரகநிலை

சூரியன்	புதன் சுக்கிரன்		
அங்காரகன்	இராசி சக்கரம்		கேது
ராகு			லக்கினம் சந்திரன்
	சனி		குரு

பூரம் 3-ஆம் பாதம்; சுக்கிரன் தசை ஆ 8—0—0

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைக் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்:—மேஷத்தில் அங்காரகனுஞ் சுக்கிரனும், ரிஷபத்திற் குருவும், மிதுனத்திற் புதனும், கடகத்திற் கேதுவும், துலாத்திற் சந்திரனும், விருச்சிகத்திற் சனியும், மகரத்திற் சூரியனும் இராகுவும் ஆகும். குருவக்கிரகதியில் இருக்கின்றார்.

---

1. விருச்சிகம்
2. மகரம்
3. புதன்
4. சுக்கிரன்
5. அங்காரன்
6. கும்பம்
7. குரு
8. சூரியன்
9. கேது
10. கடகம்
11. சிம்மம்

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. இந்தவாறு கோள்கள் சேரி லியம்புவீர் பலனை
[யென்றுள்

முந்திய முனிவர் சொல்வா ருதித்தது வாண்பா லாகும்
இந்திரன் குடகு வீதி எமன்வாடை கீழ்ப்பால் கன்னி
கந்தனு மீசன் மாரி கழறுவோர் தென்கீழ் தன்னில்.

2. இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்டார். முந்திய முனிவராகிய அகஸ்திய மகரிஷியானவர் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தெற்கு வாடையில் இருக்கும். கிழக்குத் திக்கில் கன்னிமார் கோயில் இருக்கும். முருகக்கடவுள் சிவபெருமான் மாரியம்மன் ஆகிய இவர்களுடைய ஆலயங்கள் தென்கிழக்குத் திக்கில் இருக்கும்.

3. மாலவன் மேற்கே தங்கு மடமூண்டு மஸ்தா ணுண்டு
சாலையு மோடை தெற்கில் சாற்றுமிவ் வடையா ளத்துள்
ஏலவே கௌரி வம்ச மெய்துவான் மூன்றுஞ் ஜன்மம்
பாலகன் யோகச் சேதி பகருவோ மினிமே லாக.

3. மகாவிஷ்ணுவினுடைய கோயில் மேற்கில் இருக்கும். இவ் வூரில் மடமும் சத்திரமும் இருக்கும். மசூதியுமுண்டு. ஒரு சாலையும் ஓடையும் தெற்கில் இருக்கும். இங்குச் சொல்லப்பட்ட அடையாளங்கள் உள்ள இடத்தில் கௌரி வம்சம் என்ற வேளாளர் குலத்தில் மூன்றுவது பிறவியாக இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய யோக விஷயங்களைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்களும் தகப்பனரின் குணங்களும்

4. தந்தையின் தூணவ ரெட்டில்
ஜனிக்குங்கா லாண்பால் நான்கு
வந்திடுங் கன்னி யிரண்டு
வரைந்தன மென்று சொல்வோம்
சந்ததம் பிதாகு ணத்தைச்
சாற்றுவோ மிருநி றத்தான்
எந்தையே வாத தேகி
யாஜையின் குழவி போலாம்.

4. ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்கள் எட்டுப் பேர்களில் இவர் பிறக்கின்ற காலத்தில் தகப்பனரின் சகோதரர்கள் நான்கு பேர்களும் சகோதரிமார்கள் இரண்டு பேர்களும் உயிருடன் இருப்பார்கள்

என்று சொல்லுகின்றோம். தகப்பனருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இரண்டு விதமான நிறங்கள் கலந்த நிறமாகிய மாநிறத்தை யுடையவராவார். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! இவர் வாத தேகத்தை யுடையவராவர். இவர் யானைக் குட்டியைப் போலப் பருமனுக இருப்பார்.

5. சுகமுள வார்த்தை சொல்வன்
தொடுத்தகா ரியமு டிப்பன்
பகையென்று மனத்தி லெண்ணன்
பகருமுன் கோப முண்டு
இகபர னன்பு பூணன்
யாரையு முறவு கொள்வன்
ஜகமதில் பூமி சேர்ப்பன்
தேசமேல் செட்டுச் செய்வன்.

5. ஜாதகருடைய தகப்பனர் இன்பமான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் செய்ய ஆரம்பித்தக் காரியத்தைச் செய்து பூர்த்தியாக்குவார். இவர் யாரையுந் தன்னுடைய விரோதி என்று தன்னுடைய மனத்தில் நினைக்கமாட்டார். இவருக்குப் பேசுவதற்கு முன்னமே கோபம் உண்டாகும். இவர் கடவுளின்மேல் ஆசையும் பக்தியும் இல்லாதவராவார். இவர் எல்லோரையுஞ் சிநேகஞ் செய்து கொள்ளுவார். இவர் பூமியில் நிலங்களையும் மனைகளையுஞ் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் பூமியில் வியாபாரஞ் செய்வார்.

6. இருவிதச் சொல்லு மூள்ளா னீகைவான் தந்திர வாதி
பெருமவர் நேசங் கொள்வன் புகலுவான் கல்வி யிரண்டு
மருமத்தை வெளிக்காட் டாதா னவன்குலத்
[தொழிலுஞ் செய்வன்
நிறையவே குடும்பி யாவன் நிமலியே மேலுங் கேளே.

6. ஜாதகருடைய தகப்பனர் நல்ல வார்த்தைகளையும் கெட்ட வார்த்தைகளையுஞ் சொல்லுவார். இவர் தயாளகுணமுடையவர். பிறருக்குக் கொடுக்குந் தன்மையுடையவராவர். இவர் உபாயமுள்ளவராவர், சமயத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுஞ் சாமர்த்தியத்தையுடையவராவர், பெருந்தன்மை யுடையவர்களின் சிநேகத்தை யுடையவராவர். இவருக்கு இரண்டுவித வித்தைகளுண்டு என்று சொல்லுகின்றேன். இவர் தன்னுடைய இரகசியத்தைப் பிறர் தெரிந்து கொள்ளும்படியாக வெளியே காட்டாதவராக விருப்பார். இவர் தன்னுடைய குலத்துத் தொழிலைச் செய்வார். இவர் பெரிய குடும்பஸ்தராக விருப்பார், பார்வதியம்மையே! நாங்கள் இன்னுஞ் சொல்லுவதைக் கேட்பீராக.

7. முன்வய தினிலே துன்ப
மோங்காத குடும்பி யாவன்
தன்தந்தை யாஸ்தி கீங்குந்
தனமதால் பின்பு சேர்ப்பன்
கன்னென மொழியைச் சொல்வன்
காலாட்க ளுடைய வுவன்
உன்னத கிருஷிகள் செய்வ
னுணவுகள் சுகிபு சிப்பன்.

7. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய ஆயுளின் முதல் பாகத்தில் கஷ்டங்களை அனுபவிப்பவராவார். இவருடைய குடும்பம் ஓங்காமல் தாழ்வடைந்து இருக்கும். இவருடைய பிதுரார்ஜிதச் சொத்துக்கள் இவரை விட்டு விலகிப் போய் விடும். இவர் பின்னல் பணத்தைச் சம்பாதித்து அந்தச் சொத்துக்களை அடைவார். இவர் சக்கரையைப்போன்ற இனிப்பான வார்த்தைகளைச் சொல்லுவார். கால்நடைகளையும் வேலைக்காரர்களையும் உடையவராக விருப்பார். மேன்மையான விவசாயங்களைச் செய்வார். இவர் நல்ல சுகமான உணவுகளைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பார்.

8. துணைவரை யாத ரிப்பன் சுகதுக்க முடைய வுவன்
அணிகலன் சேர்ப்பா வுவ னவன்பொரு ளிச்சை
[யுள்ளான்
பிணையது சிலர்க்குச் செய்வன் பூஷணப் பிரிய வுவன்
மணமது விரண்டு கேரு மங்கையே கேட்டி டாயே.

8. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய சகோதரர்களைக் காப்பாற்றுவார். இவர் சுகத்தையும் துக்கத்தையும் மாறிமாறி அனுபவிப்பவராவார். இவர் ஆபரணங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பவராவார், சொத்துக்களின்மேல் ஆசையுடையவராக விருப்பார். இவர் சிலருக்குச் சகாயஞ் செய்வார், ஆபரணங்களில் ஆசை யுடையவராக விருப்பார். இவருக்கு இரண்டு விவாகங்கள் நடக்கும், பார்வதியம்மையே! கேட்பிராக.

ஜாதகருடைய குணதிசயங்கள்

9. சொன்னயிக் குணத் தானுக்குச்
சுந்தர னுதிப்பா வுவன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன்
அழகுளா னிருநி றத்தோன்

பன்னியே பேச வல்லான்
பலபாவை மோகங் கொள்வன்
தன்சொலே மேன்மை யாகச்
சாதிப்பா னிவனே யம்மா.

9 இதுவரையிலுஞ் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங் களைச் சொல்லுகின்றேன். இவர் அழகுள்ளவராக விருப்பார், இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறத்தை யுடையவராவர். இவர் பேசுவதில் திறமையுஞ் சாமர்த்தியமும் உடையவராவர். அனேக ஸ்திரீகளிடத் தில் மையல் என்ற காம ஆசையை யுடையவராவர். இவர் தான் சொல்லுகின்ற வார்த்தைகளே மேன்மையானவை என்றும் சிலாக்கிய மானவை என்றுஞ் சொல்லி நிலைநாட்டுஞ் சாமர்த்தியமுடையவராவர், பார்வதியம்மையே!

10. கல்வியு மூன்று கற்பன் காலாட்க ளுடைய னவன்
நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னவன்
தொல்லையு மாதி யில்தான் செரிந்திடும் பூமி விருத்தி
வல்லவ னெருவர்க் கஞ்சான் வாக்குகள் தப்பா னுமே.

10. ஜாதகர் மூன்று விதமான வித்தைகளைக் கற்றுக் கொள்ளு வார், கால்நடைகளையும் வேலையாட்களையும் உடையவராவர். இவர் நல்லவர்களுக்கு நல்லபடியே நடந்து கொள்ளுவார். முரடர்களுக்கு இளைக்காத வலிவுடையவராக விருப்பார். இவருக்குத் தன்னுடைய ஆயுட்காலத்தின் முதல் பாகத்தில் கஷ்டங்கள் நேரிடும். நிலங்கள் விருத்தியடையும். இவர் கெட்டிக்காரர், சாமர்த்தியமுடையவர், யாருக் கும் பயப்படாதவராவர், தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடா மல் காப்பாற்றுபவராவர்.

11. வண்டிவா கனமு முள்ளான்
வணிபங்கள் அதிகஞ் செய்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான்
இன்பமாய்ப் பேச வல்லன்
அண்டினோர் தம்மைக் காப்பன்
ஆவுகள் விருத்தி யுள்ளான்
தண்டமிழ் நுணுக்கந் தேர்வன்
தரணியோர் மெச்ச வாழ்வன்.

11. ஜாதகர் சவாரி வண்டிகளையும் வாகனமாகவுள்ள பிராணி களையும் உடையவராவர். அநேக விதமான வியாபாரங்களைச் செய்வார். இவர் பிறருக்கு உதவி செய்யத் தன்னிடத்தில் ஒன்றும் இல்லை என்று

சொல்லமாட்டார், இனிமையாகப் பேசுந் திறமையை உடையவராவர். இவர் தன்னிடம் வந்தடைந்தவர்களைக் காப்பாற்றுவார். இவரிடம் பசுக்கள் விருத்தியாகும். இவர் இனிமையான தமிழின் நுட்பத்தை யுஞ் சாரத்தையும் நன்றாய் அறிந்தவராவர், பூமியிலுள்ளவர்கள் இவரைப் போற்றும்படியான கொண்டாடத்தக்க அந்தஸ்திலிருந்து வாழ்வார்.

12. பலவித தலங்கள் செல்வன்
பாத்திர மறிய வல்லன்
கலகங்கள் சிலர்க்குச் செய்வன்
கட்டுவார்த் தைகளுஞ் சொல்வன்
நிலைமையாய்த் தந்தை யாஸ்தி
நிமலனும் விருத்திச் செய்வன்
மலையிரை மகளே யாங்கள்
வரைந்தவை தப்பா வாமே.

12. ஜாதகர் அநேக விதமான க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வார், நல்லவர் கெட்டவர் என்று பகுத்தறிந்து கொள்ளுஞ் சாமர்த்தியமுடையவர். இவர் சிலருள் கலகங்களை உண்டு பண்ணுவார், பிணைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையுஞ் சொல்லுவார். இவர் தன்னுடைய பிதுரார்ஜிதத்தை நிலைத்திருக்கும் படியாகச் செய்து விருத்தியாக்குவார். மலைகளுக்கு அரசனுகிய பர்வதராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லியவை தவறிடாமல் நடந்தே தீரும்.

13. வாததே கத்தா வுவன் வடிவினில் குள்ள வுவன்
மாதவர் தம்மைப் பேணன் மால்ரேகை கரத்திற்
[தோன்றும்
காதியு முடைய வுவன் கனத்தபுத் திகளு முள்ளான்
பாதியாய் வடிவு கொள்ளும் பார்வதி கேட்டி டாயே.

13. ஜாதகர் வாதரோகமுள்ள தேகத்தையுடையவர், அஃதாவது பருத்த தேகத்தை யுடையவராவர், உருவத்தில் குள்ளமாக விருப்பார். இவர் முனிவர்களைத் தொழமாட்டார், வழிபடவும்மாட்டார், மதிக்கவும் மாட்டார். இவருடைய உள்ளங்கையில் விஷ்ணுரேகை என்ற ஒரு விதமான ரேகை இருக்கும். இவர் கீர்த்தியையும் பெருமையையும் உடையவராவர், அரிய பெரிய அறிவையுடையவராவர். சிவபெருமானுடைய தேகத்தில் பாதி பாகமாக விருக்கக்கூடிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய சகோதராகள் (சகோதரபாவம்)

14. இன்னவன் துணைவர் தம்மை
யியம்பவோ பலத்தைக் காணைங்
தன்னிலே யுதித்தா லுந்தான்
சடுதியில் நஷ்ட மெய்துங்
கன்னிகை மூத்தோ ரொன்று
கழறுவோர் தீர்க்க மாக
அன்னவள் சேதி சொல்வேன்
அழகுளாள் சிவந்த மேனி.

14. ஜாதகருடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகிறோம். சகோதரர்கள் பிறப்பதற்கு வலிவு ஒன்றுங் கிடையாது. ஒரு சமயஞ் சகோதரர்கள் பிறந்தாலுங்கூட அவர்கள் சீக்கிரத்தில் இறந்து விடுவார்கள். ஜாதகருக்கு ஒரு மூத்தசகோதரி நீண்ட ஆயுளை யுடைய வளாக விருப்பாள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன்.

ஜாதகருடைய மூத்தசகோதரியின் விஷயம்

15. புத்திமான் பொறுமை சாலி புண்ணிய மனத்த ளாவள்
சித்தமே கருப்பு மில்லாள் தீங்கிலா குணத்தா ளாவள்
சுத்தமு முடைய ளாவள் தோகைபோல் சாய லுள்ளாள்
வித்தகி வரனு மூத்தரம் விளம்புவோம் புத்திர பாவம்.

15. ஜாதகருடைய மூத்தசகோதரி அறிவுடையவளாவள், பொறுமையை யுடையவளாவள், நல்ல மனத்தை யுடையவளாக விருப்பாள். இவள் கெட்ட எண்ணங்களை உடையவளல்லள். இவள் கெடுதியில்லாத குணத்தை யுடையவளாக விருப்பாள். இவள் நல்ல ஒழுக்கங்களையும் பரிசுத்தத்தையும் உடையவளாக விருப்பாள், மயிலைப்போன்ற நீண்ட உருவத்தை உடையவளாக விருப்பாள். இவளுக்குப் புருஷன் வடக்குத் திக்கிலிருந்து வருவான், இவளுடைய சந்ததிகளைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மூத்தசகோதரியின் சந்ததிகள் (புத்திரபாவம்)

16. புத்திர ராண்பா லிரண்டு பெண்துணை யவ்வா றாகும்
சுத்தமாய் நான்குந் தீர்க்கஞ் ஜீரணம் மூன்று மாகுஞ்
சத்திகள் போன பின்பு தன்வரன் சுகமு மெய்தும்
வித்தகி நாற்ப தாண்டில் வரனுமே கெண்ட முண்டாம்.

16. ஜாதகருடைய மூத்தசகோதரிக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் நான்கு குழந்தை

கள் நீண்ட ஆயுள் யுடையவர்களாக விருப்பார்கள். மூன்று குழந்தைகள் இறந்து விடும். இந்தப் பெண் குழந்தைகள் விவாகமாகி வீட்டை விட்டுத் தங்களுடைய புருஷனுடைய வீட்டிற்குப் போன பிறகு மூத்தசகோதரியினுடைய புருஷனுக்குச் சௌக்கியங்கள் உண்டாகும். இவளுக்கு நாற்பதாவது வயதில் இவளுடைய புருஷன் இறந்து விடுவார்.

17. இன்னமு மவள்தன் சேதி
யியம்புவோ மிரண்டி லேதான்
தன்னிலே முனிவர் கூற
ஜயமுனி கேட்க லுற்றார்
அன்னவள் துணைவர் தோஷ
மணுகுங்கா ரணங்க ளென்னப்
பன்னியே நவக்கோ ளாய்ந்து
பகருவோங் கேட்டி டாயே.

17. இந்த மூத்தசகோதரியினுடைய விஷயங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்றோம். இவ்விதமாக அகஸ்தியமுனிவர் சொல்லவே ஜயமுனிவர் தடுத்துக் கேட்கின்றார். இவளுக்குச் சகோதர தோஷம் உண்டாவதற்குக் காரணங்கள் என்ன என்று கேட்கவே, அகஸ்தியர் பதில் சொல்லுகின்றார். ஒன்பது கிரகங்களையும் நன்றாகத் திறமையுடன் ஆராய்ச்சி செய்து சொல்லுகின்றோம், கேட்பீராக.

18. காரியும் நாலில் நிற்கக் குஜனுமே யதற்கு நாலில்
தீரமாய்க் குஜற்கு யேழில் சந்திர னிருப்ப தாலே
கூறிலே மன்னா கண்டங் குறித்திடுங் காலஞ்
[சொல்வாய்
மாறன்தன்மூன்று மாண்டி லாடிமா தத்தி லேதான்
நாரியுங் கர்ப்பத் தாலே நாட்டுவோங் கண்டந் தானே.

18. காரி என்ற சனி நான்கில் இருப்பதாலும், குசன் என்ற அங்காரகன் சனிக்கு நான்காவது பாவத்திலிருப்பதாலும், வலிவான அங்காரகனுக்கு ஏழாவது பாவத்தில் சந்திரனும் இருப்பதாலும் ஜாதகருடைய தாயாருக்குச் சீக்கிரத்தில் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக அகஸ்தியர் சொல்லவே, தாயாருக்கு மரணம் நேருங்காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, அகஸ்தியர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு மூன்றுவது வயதில் ஆடி மாதத்தில் இவருடைய தாயாருக்குக் கர்ப்பத்தினால் மரணம் உண்டாகும் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—இப்பாடலில் ஓரடி மிகுந்துள்ளது.

ஜாதகருடைய தகப்பனருக்கு இரண்டாவது மனைவியும்
இந்த மனைவிக்குச் சந்ததிகளும்

19. மறுமனை நான்கா மாண்டில் வந்திடு மம்மா துக்கு
உரைக்கிறேம் புத்திரர் காணு னுறைந்திடு மம்மா துக்கு
இருவருந் தீர்க்க மெய்து மிவளுமே வடபா லாக
வருவனு மென்று சொன்னே மாதுரு குணத்தைக்
[கேளாய்.

19. ஜாதகருடைய தகப்பனருக்கு இரண்டாவது மனைவி, ஜாதகருக்கு நான்காவது வயதில் சம்பவிப்பாள். இந்த மனைவிக்கு ஆண் சந்ததி கிடையாது என்று சொல்லுகிறேம். இரண்டு பெண் குழந்தைகள் பிறக்கும். இவர்கள் நீண்ட ஆயுளையுடையவர்களாக விருப்பார்கள். இரண்டாவது மனைவி வடக்குத் திக்கிலிருந்து வருவாள் என்று சொல்லுகிறேம். ஜாதகருடைய தாயாருடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேம், கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரின் குணாதிசயங்கள்

20. அன்னையுஞ் சிவந்த மேனி யன்புள மனத்த ளாவள்
உன்னத வார்த்தை சொல்வ ளுன்மனங் கபடு மில்லாள்
தன்வரன் மனம்போல் வாழ்வள் தானவன்
[சன்ன டக்கை
பன்னியே பேச வல்லாள் பார்வதி கேட்டி டாயே.

20. ஜாதகருடைய தாயார் சிவப்பு நிறமுடையவளாவாள். இவள் பிரியமான மனத்தையுடையவளாவாள். இவள் மேன்மையான வார்த்தைகளையே சொல்லுவாள். தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவை இல்லாதவளாக விருப்பாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போலே ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். இவள் நல்ல நடவடிக்கையையும் ஒழுக்கத்தையும் உடையவளாவாள். இவள் திறமையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுகிறவளாவாள், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாருடைய சகோதரர்களும் (சகோதரபாவமும்)
முன் ஜன்மமும்

21. அவள்துணை யாண்பால் காணுள்
அதுவின்றிப் பெண்பா லொன்று
இவளுமே துன்ப முள்ளாள்
இவளில்ல மலைச்ச லுண்டு

நவமதில் தாயின் பூர்வம்
நாட்டுவோர் தணிகை யுத்தரம்
தவசியே பேரூர் தன்னில்
ஜனித்தனள் விச்வச் சேயாய்.

21. ஜாதகரின் தாயாருடன் கூடப் பிறந்தவர்களில் சகோதரன் இல்லை. ஆனால் ஒரு சகோதரி மாத்திரம் இருப்பாள். இவளும் தனது வீட்டில் கஷ்டங்களை அனுபவிப்பாள். இனி மேல் ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் முன் ஜன்மத்தில் தணிகை என்ற திருத்தணி ஸ்தலத்திற்கு வடக்கில், பார்வதியம்மையே! ஒரு பெரிய கிராமத்தில் விச்வகர்மகுலம் என்ற கம்மாள ஜாதியில் ஒரு பெண் குழந்தையாகப் பிறந்தாள்.

22. சுகமான குடும்பி யாகித் தேவதா பத்தி கொண்டு
பகையிலா வரன்தன்னோடு பத்தினி சுகமாய் வாழ்ந்து
தகமையாய்க் காலன் பக்கல் சார்ந்தன ளென்று
[சொன்னோம்
ஜகபதி பிரமன் லக்கம்தீ விரைவினில் வரையப் பட்டு;

22. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஒருத் சௌக்கியமுள்ள குடும்பஸ்தையாக விருந்து கொண்டு தெய்வங்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவளாகி இவளுக்கு விரோதமாகவில்லாமல் இஷ்டமாகவிருந்த தன்னுடைய புருஷனுடன் சுகமாக வாழ்ந்து கொண்டிருந்து பிறகு தகுந்த காலத்தில் இறந்து எமனிடத்திற்குப் போனாள் என்று சொல்லுகின்றோம். உலகத்திற்கெல்லாம் அதிபதியாகிய பிரமதேவனால் பிரமலியுடன் அதிக சீக்கிரத்தில் எழுதப்பட்டு;

தாயாருக்கு இந்த ஜன்மத்தில் நேரிட்ட வினையின் விவரம்

23. வந்தவ ளிவளே யென்றோம் வரைகிறோ மிச்சென்
[மத்தில்
சந்தியி லோர்நாள் தன்னில் தபசியு மன்னங் கேட்க
முந்திய கோப முற்று முதல்வியு மீயா கின்றாள்
வந்தவர் மனவெ றுப்பால் வரைகிறார் சாபந் தானே.

23. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவளாவள் ஜாதகருடைய தாயார். இந்த ஜன்மத்திய வினையைச் சொல்லுகின்றோம். ஒரு தினம் சந்த்யா காலத்தில் தவஞ்செய்கின்ற ஒரு பெரியார் இவளைச் சாப்பாடு கொடு என்று கேட்கவே இவள் உடனே கோபத்தையடைந்து சாப்பாடு போடாமல் சும்மாய் நின்று கொண்டிருந்தாள். அந்தப் பெரியார் மனம் நொந்து சாபத்தைக் கொடுக்கின்றார்.

24. அகுதிமேல் கோப முற்று
வன்னமு மீயாப் பாவி
தகுதியாய்க் கற்பங் கொண்டாய்
ஜனித்திடுங் திங்கட் குள்ளே
மகவுமே நீயு மர்ள்வாய்
மருபாரி யில்லம் வாழ்வாள்
பகையாகச் சொல்லிச் சென்றார்
பற்றிற்று வந்தத் தோஷம்.

24. "அதிதியாகிய பரதேசியின் மேல் கோபத்தை அடைந்து சாப்பாட்டைக் கொடாத பாவியாகிய உனக்குத் தகுந்தபடியே கர்ப்பம் உண்டாகி இருக்கின்றது. இனி வரப்போகின்ற ஒரு மாதத்திற்குள்ளே நீயும் உன்னுடைய குழந்தையும் இறந்து விடக்கடவது. இன்னொரு பெண் மனிவியாக இந்த வீட்டில் வந்து வாழக்கடவது" என்று இவ் விதமாக விரோதமாக அந்தப் பரதேசி சொல்லிப்போய்விட்டார். இந்தத் தோஷம் இத் தாயாரை வந்து அடைந்தது.

ஜாதகரின் தாயாருடைய மறு ஜன்மம்

25. சுதர்கர்ப்பம் நான்காந் தோன்றித்
தோகையுஞ் சுதரு மாண்டு
அதிபதி பின்ஜன் மத்தை
வரைகிரே மவ்வூர் கீழ்ப்பால்
சதியிலாப் பேரூர் தன்னில்
ஜனித்தனள் ரெட்டி வம்சம்
அதிகமாய்த் தனங்கள் பெற்று
வவள்சுக மாக வாழ்ந்தாள்;

25. இவளுக்கு நான்காவது குழந்தை பிறந்து இவளும் அந்தக் குழந்தையும் இறந்துவிட்டார்கள். இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இதே ஊருக்குக் கிழக்கில் ஒரு பெரிய செழிப்பான நல்ல கிராமத்தில் ரெட்டியாருடைய குலத்திற் பிறந்து அதிகமான செல்வத்தை யடைந்து இவள் சுகமாக வாழ்ந்தாள்.

ஜாதகருடைய தகப்பனுருடைய முன்ஜன்மம்

26. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் திருவேல நகரின்
[கீழ்ப்பால்
சந்ததஞ் சிற்றூர் தன்னில் ஜனித்தனள் ரெட்டி வம்சம்
முந்திய குடும்பியாகி மூலமாம் வயது தன்னைச்
சிந்தையில் எண்ணு ஞகித் தேவியு மதலை யுண்டாய்;

26. ஜாதகருடைய தகப்பனரின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். திருவேல் நகர் என்ற பட்டணத்திற்குக் கிழக்கில் ஒரு சிறிய கிராமத்தில் ரெட்டியாருடைய குலத்திற் பிறந்தார், மேன்மையான குடும்பஸ்தராக விருந்துகொண்டு முதன்மையான அம்சமாகிய ஆயுளைப்பற்றிச் சிந்திக்காதவராக விருந்துகொண்டு மனைவியும் மக்களையும் உடையவராகி ;

27. கிராமாதி காரஞ் செய்து கனராசர் பேட்டி கொண்டு
திருமகள் விலாசம் பூண்டு சேயனு வாழுந் நாளில்
அரைகிறே மந்த வூழை யந்நகர் தன்னி லேதான்
வரனின்றி மாது தானு மாதிரு யில்லம் நின்றாள்.

27. தன்னுடைய கிராமத்தில் கிராமாதிகாரத்தைச் செலுத்திக் கொண்டும் பெரிய அரசர்களைத் தரிசித்துக்கொண்டும் லக்ஷ்மியினுடைய கிருபையையும் கடாக்ஷத்தையும் அடைந்துகொண்டும் வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த முன்ஜன்மத்திய விஷயைச் சொல்லுகின்றோம். அந்தப் பட்டணத்தில் புருஷனில்லாத ஒரு ஸ்திரீ தன்னுடைய தாயாருடைய வீட்டில் இருந்து வந்தாள்.

28. அண்டையா னொருவன் சின்ன
ளவள்பேரில் மோகங் கொண்டு
குண்டத்திற் குடமெ டுத்துத்
கோதையுஞ் செல்லும் போது
ஒண்டியா யிவன்பின் சென்று
வுத்தமி தன்கை பற்றித்
கொண்டதோர் காதல் தீர்ப்பாய்க்
கூறினன் குமரன் தானும்.

28. அண்டை வீட்டுக்காரனுகிய ஒருவன் சிலகாலம் இவள்மேல் மையல் என்ற காம ஆசையை யுடையவனுகி இவள் ஒரு குடத்தை எடுத்துக்கொண்டு குளத்திற்கு அல்லது கிணற்றிற்குப் போகும் போது இவன் தனியனுக இவள் பின்னல் போய் இவளுடைய கையைப் பிடித்துக்கொண்டு "உன்பேரில் எனக்கு இருக்கின்ற காம ஆசையைத் தீர்த்து விடுவாய்" என்று இவன் இவளுக்குச் சொன்னன்.

29. அதற்கவ ளிசையா ளாகி யாகாத்தியந் தானுஞ் செய்ய
அதிபதி கோபமூற்று அவள்துணை தன்னை டொத்த
அதிகாரி தன்பால் செல்ல அக்கணந் தூத னுப்பிச்
சதிசெய்தோன் தனைய ழைத்துச் சங்கதி வினவும் போது;

29. இதற்கு இவள் சம்மதிக்காமல் இருந்ததால் இவன் துன் மார்க்கமாய்ப் பலாத்காரஞ் செய்யவே இவள் கோபத்தை யடைந்து தன்னுடைய சகோதரனுடன் கூட ஒரு தகுந்த அதிகாரியிடம் அஃதாவது ஜாதகரின் தகப்பனரிடம் போய் நடந்த விஷயத்தைப் பற்றிப் பிரியாது செய்யவே, இந்த அதிகாரி அந்த க்ஷணமே ஓர் ஆளை அனுப்பி அந்தக் குற்றவாளியை வரவழைத்து நடந்த விஷ களை விசாரிக்கும்போது;

30. தனமது வவன்பால் பெற்றுச் சத்திமேல் குற்றஞ் சாற்றி
வனிதையு மனம்ப தைத்து வரைகிறுள் சாபந் தானும்
வினைசெய்தோன் தன்பால் பொன்னை வாங்கியே குற்றஞ்
[சொன்னுய்க்
கனமுடன் மனைவி மாண்டு காதலி தன்னுல் நிந்தை;

30. அந்தக் குற்றவாளியினிடமிருந்து அந்த அதிகாரி பணத் தைக் கைக்கூலியாகப் பெற்றுக்கொண்டு அந்த ஸ்திரீயின் மேலேயே குற்றத்தைச் சாட்டி விடவே அவள் கோபத்தை யடைந்து மனந் துடித்துச் சாபத்தைக் கொடுக்கின்றுள். "குற்றஞ் செய்வதனிட மிருந்து பணத்தை வாங்கிக்கொண்டு என்மேலேயே குற்றத்தைச் சுமற்றி விட்டாய், மேன்மையான உன்னுடைய மனைவி இறந்து அவ ளால் உனக்கு அபவாதமும் நேரிட்டு;

31. வருஞ்ஜன்ம மனைவி யிரண்டாய்
வருந்துணை விகளுந் துன்பம்
பெருகுவா யென்று சொல்லிப்
பேதையுந் தெருத்தூள் வாரித்
திருவருட் செயலே யென்று
தேவியு முரைத்தா ளென்றேரும்
உரைந்தது வந்தத் தோஷ
முத்தமி கேட் டிடாயே.

31. "உன்னுடைய அடுத்த ஜன்மத்தில் உனக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிட்டு உனக்குச் சகோதரர்கள் இல்லாமலும் துன் பத்தை யடைந்தும் இருக்கக்கடவது" என்று அந்த அறிவில்லாத ஸ்திரீ சொல்லித் தெருவிலுள்ள தூளை எடுத்து வாரித் தூவினுள். இவையெல்லாம் கடவுளினுடைய செயலாகும் எனறு அவள் சொன் னுள் என்று சொல்லுகின்றேரும். அந்தத் தோஷம் ஜாதகருடைய தகப்பனரை அடைந்தது, பார்வதியம்மையே! கேட்பீராக.

32. இதுவின்றி யேழை சாப மெய்திற்று விவனுக் கேதான்
திருமக னந்தி யத்தில் சேயிழை யில்லா னகி
மரலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப் பட்டுப்
பிருதிவி கீழ்ப் பாலாகப் பிறந்தன னென்று
[சொன்னேம்.

32. இந்தத் தோஷந் தவிர, ஓர் ஏழையினுடைய சாபமும் இந்த அதிகாரியை (அஃதாவது ஜாதகருடைய தகப்பனரை) அடைந்தது. இவர் கடைசி காலத்தில் தன்னுடைய மனைவியை இழந்து இறந்து எமபட்டணத்திற்குப்போய் மகாவிஷ்ணுவின் குமாரராகிய பிரமதேவனால் பிரம்லிபியுடன் எழுதப்பட்டுப் பிருதிவிஸ்தலம் என்கிற காஞ்சீவரத்திற்குக் கிழக்கிலுள்ள ஓர் ஊரில் பிறந்தார் என்று சொல்லுகின்றேம்.

33. இச்சென்மந் தன்னி லேதான்
இவன்சில கொடுமை செய்தான்
துர்ச்சன புத்தி யாலே
தோகையைப் பொருளீ யாமல்
இச்சகஞ் சொல்லிச் சேர்ந்து
யாதொன்று மீயா விட்டான்
நச்சுப்போல் சாபஞ் சொன்னள்
நாயகி மரண மெய்தும் ;

33. ஜாதகருடைய தகப்பனர் இந்த ஜன்மத்திலேயே சில பாபக் காரியங்களைச் செய்தார். இவர் கெட்ட புத்தியினால் ஒரு அயல் ஸ்திரீயினிடம் அவளுக்குப் பணத்தைக் கொடுக்காமல் நல்ல வார்த்தைகளைச் சொல்லிச் சம்போகஞ்செய்து விட்டுப் பிறகு அவளுக்கு ஒன்றுங் கொடுக்காமல் போய்விட்டார். அவள் விஷத்தை போலுள்ள ஒரு சாபத்தைக் கொடுத்தாள். "உன்னுடைய மனைவி இறந்துவிடக் கடவது";

34. குடும்பமு மலைச்ச லாகித்
குறைமன தாகி வாழ்வாய்
அடைவுடன் சொல்லிச் சென்றாள்
அணுகிற்று அந்தத் தோஷம்
மடமயில் மனைவி மாள்வாள்
வருந்துணை யவ்வாறு துன்பம்
உடனேதான் அணுகிற் றென்றோம்
உத்தமி கேட்டி டாயே.

34. "உன்னுடைய குடும்பமும் கலகலத்துப்போய்த் துன்பத்தை யடைந்த மனத்தை யுடையவராகி நீ வாழக்கடவாய்" என்று சொல்லி விட்டு உடனே போய் விட்டாள். அந்தத் தோஷம் ஜாதகருடைய தகப்பனுரை வந்து அடைந்தது. ஆகையால் இவருடைய இளம் பிராயமுள்ள மனைவி இறந்து விடுவாள். இவருடைய சகோதரங்களும் இவ்விதமாகவே கஷ்டத்தை உடனே அனுபவிப்பார்கள், இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றேம், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனருடைய மறு ஜன்மம்

35. மறுஜன்மங் காளாத்தி தன்னில் வைசிய குலமு தித்துப்
பெருமையாய்ச் செட்டுச் செய்து பூமியில் வாழ்வா னவன்
குறுமுனி யிவ்வாறு சொல்லத் கோதையுங் கேட்க
[லுற்றாள்
திருமக னிச்சென் மத்தில் சொல்லது தவறின தாலும்;

35 ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய பின் ஜன்மத்தில் காளாத்தி என்ற காளாஸ்திரி ஸ்தலத்தில் வைசியருடைய ஜாதியிற் பிறந்து மேன்மையான வியாபாரத்தைச் செய்துகொண்டு இந்தப் பூமியில் வாழ்பவராவார். இவ்விதமாகக் குறுமுனி என்ற அகஸ்தியர் சொல்லவே, பார்வதியம்மையார் கேட்க வாரம்பித்தார். இந்த தகப்பனர் இந்த ஜன்மத்தில் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறி நடந்திருந்தும்;

36. தேவதா பத்தி யின்றிச் செய்அற மில்லா தாகி
மேவினில் வாழ்வ தாலே மேவுவான் காளாத்தி யென்றீர்
பாவங்க ளனந்தஞ் செய்தும் பலதேசஞ் சென்றுஞ்
ஆவலாய் மறையோ ருக்கு வாபத்துக் குதவி செய்தும்;

36. தெய்வங்களின்மேல் அன்பும் ஆசையும் இல்லாமலிருந்தும், இவர் தர்மகாரியங்களைச் செய்யாமலிருந்தும், இவ்விதமாக இவர் பூமியில் வாழ்ந்துகொண்டிருந்தும் புண்ணியஸ்தலமாகிய காளஸ்திரியில் பிறப்பார் என்று சொன்னீரே! அஃது எவ்விதம், என்று தடுத்துக் கேட்கவே, அகஸ்தியர் பதில் சொல்லுகின்றார். இவர் அநேக பாவங்களைச் செய்திருந்தபோதிலும், இவரே அநேக தேசங்களுக்குப்போய் அதிக ஆசையுடன் பிராமணர்களுக்கு ஆபத்தான காலத்தில் உபகாரஞ்செய்து கொண்டும்;

37. பஞ்சைக்கு வோர்நாள் தன்னிற் பசியையுந் தீர்த்த காலே
மிஞ்சின காளாத்தி தன்னில் மேவினன் வைசியச்
[சேயாய்த்
துஞ்சிய துணைவர் சேதி சொல்லுவே னினிமே லாக
வஞ்சியே யிரண்டாம் பாகம் வருவிப்போம் விபர மாக.

37. ஏழைக்கு ஒரு தினத்தில் பசியின் கொடுமையினால் ஏற் பட்டதுன்பத்தை இவர் தீர்த்துவிட்டதாலும் மேன்மையான சிறந்த காளஸ்திரி ஸ்தலத்தில் வைசியருடைய குலத்தில் இவர் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இனிமேல் இவருடைய சகோதரர்களின் விஷயங்களைச் சொல்லவேண்டுமானால், பார்வதியம்மையே! இரண்டா வது பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணமும்

38. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மொருபா
[றில்
காதலி வள்ளூர் தன்னில் கனத்திடும் தந்தை வர்க்கம்
மேதினில் வருவா ளாவள் விளம்புவோ மவள்கு ணத்தைப்
பாதக மனமில் லாதாள் பஞ்சைமே லிரக்க மாவள்.

38. ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின் றோம். இவருக்குப் பதினேழாவது வயதில் உள்ளூரிலேயே சிறந்த தகப் பனாருடைய பந்துக்களிலிருந்து மனைவி வந்து சம்பவிப்பாள். இவளு டைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் கெடுதி யான மனத்தை உடையவளல்லள், ஏழைகளிடத்தில் தயாளகுணமும் இரக்கமும் உடையவளாவாள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

39. வருவோரை யாத ரிப்பள் மானிறஞ் சமதே கத்தாள்
திருமகள் யோக முள்ளாள் ஜனசகா யங்கள் செய்வாள்
பெரும்புத்தி யன்ன மீவள் புருடன்றன் மனம்போல்
[வாழ்வள்
அரைகிறேம் புத்திர பாவம் அம்பிகை யாளே கேளாய்.

39. ஜாதகருடைய மனைவி தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் மாநிறமும், நடுத்தரமுமான தேகத்தை யுடையவளாவள். இவள் யோகத்தை யுடையவளாக விருப்பாள், ஜனங்களுக்கு உபகாரங்களைச் செய்பவளாக விருப்பாள். இவள் அரிய பெரிய புத்தியை யுடையவள், பிறருக்குச் சாப்பாடு போடுவாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல்

ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். இனிமேல் சந்ததிகள் விஷயத்தைப் பற்றிச்சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! கேட்பீராக.

40. சுதர்களு மாண்பா லிரண்டு தோகையு மூன்று மாகுஞ்
சதமாகு மாது தானும் ஜீரணம் மூன்று யென்றோம்
முதலி ரண்டு சேதம் மொழிகிறோ மிவனுக் கேதான்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

40. ஜாதகருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருக்கும். இவர்களின்றி மூன்று பெண்குழந்தைகள் நாசமாகி விடும். இவருக்கு முதலில் பிறக்கும் இரண்டு குழந்தைகளும் இறந்து விடும்என்று சொல்லுகின்றோம். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய முன்ஜன்மம்

41. இன்னவன் முன்ஜன் மத்தை யியம்புவோஞ் காஞ்சி
[யுத்தரம்
உன்னதப் பேரூர் தன்னி லுதித்தனன் சேடர் வம்சம்
அன்னவன் நெசவு செய்து அவன்பாரி மதலை யுண்டாய்
தன்னிலே வாழுந் நாளில் சாற்றுவோம் ஊழி தானே.

41. ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் காஞ்சீவரத்திற்கு மேற்கிலுள்ள ஒரு பெரிய சிறந்த ஊரில் சேடர் என்ற வேலைக்கார ஜாதியில் பிறந்து நெசவுத் தொழிலைச் செய்துகொண்டு மனைவி மக்களையுடையவராகி வாழுகின்ற காலத்தில் இவருக்குச் சம்பவித்த முன் ஜன்மத்திய வினையைச் சொல்லுகின்றோம்.

42. கன்றுக்குப் பால் விடாமற் கறந்தனன் அதுவு மின்றி
சொன்னசொல் அகதி கட்குச் செய்யாமல் நிறுத்தி
[விட்டான்
மூன்குல மீன்ற சேய்க்கு முதல்வியு மில்லா தாகித்
தன்னுடை ஆவின் பாலைத் தாவென்று வினவும் போது

42. ஜாதகர் ஒரு (பசு) மாட்டினுடைய கன்றுக்குட்டிக்குக்காகப் பாலை விடாமல் எல்லாப் பாலையுங் கறந்துவிட்டார். இந்தத் தோஷமுமல்லாமல் இவர் பரதேசிகளுக்கு வாக்களித்த பிரகாரஞ் செய்யாமல் தவறிவிட்டார். மேலும் முதல் குலமாகிய பிராமணர் குலத்திற் பிறந்த குழந்தைக்கு முதல்வியாகிய தாயாரில்லாததால் இவருடைய பசுவின் பாலைக்கொடு என்று கேட்கும் போது;

குறிப்பு :— இங்குக் குறிப்பிட்ட மாடுபசு மாடு என்று இந்தப் பாட்டின் நான்காவது வரியிலிருந்தும் நாற்பத்தைந்தாவது பாடலிலிருந்தும் தெரிய வருகிறது.

43. அதற்கு மேயீயா னெரி யரைகிறர் சாபங் தானும்
அதிபனும் மறுஜன் மத்தில் மாதா பில்லா னெரி
முதலிலே அலேச்ச லாகி முற்பிறப் பிவ்வா றுக
விதியவன் வரைவா னென்று விளம்பியே சொன்னு
[ரென்றேரும்.

42. அந்தக் குழந்தைக்காகப் பாலேக்கொடுக்காததால் ஜாதகருக்குச் சாபத்தைக் கொடுக்கின்றார். "இவர் தன்னுடைய பின் ஜன்மத்தில் தாயார் இல்லாமல் முதலில் கஷ்டப்படுவார். இவ்விதமாக இவருக்கு மூன்று ஜன்மங்களிலும் நேரிடும். இவ்விதமாகப் பிரமதேவர் இவருடைய தலேயில் பிரமலிபியை எழுதக்கடவது" என்று சொன்னர் என்று நாங்கள் சொல்லுகின்றோம்.

44. அவ்வினே யிவனேச் சேர்ந்து அந்தகன் பக்கல் புக்கித்
திவ்விய பிரம்ம ஞலே தீவினில் வரையப் பட்டு
ஓவ்விய காஞ்சி கீழ்ப்பா லுதித்தனன் வடுகர் வம்சம்
பவ்வமாய் முன்னூழ் தானும் பரவிடுந் தாய்க்குத்
[தோஷம்.

44. அந்தச் சாபமானது ஜாதகரை அடைந்தது. இவர் முன் ஜன்மத்தில் இறந்து எமனிடம் போய் மேன்மையான சிறந்த பிரமதேவனுல் சீக்கிரத்தில் பிரமலியுடன் எழுதப்பட்டுச் சிறந்த காஞ்சீவரத்திற்குக் கிழக்குத் திக்கில் வடுகருடைய குலத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார். நகுந்த காலத்தில் முன் ஜன்மத்திய வினே இவரை யடையும். அதனுல் இவருடைய தாயாருக்குத் தோஷம் ஏற்படும்.

45. அந்ததோர் தோஷந் தீர அருளுவீர் சாந்தி தானும்
எந்தசாந் திகள்செய் தாலும் விலகாது மறையோர் சாபம்
விந்தையாய்த் கோவின் தோஷம் மருவிடு மென்று
[சொன்னேங்
கந்தனே யின்ற மாதே கழறின மொழி குன்றுவே.

45. அந்தத் தோஷத்தை நிவிர்த்தி செய்வதற்காக ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்கவே, அகஸ்தியர் பதில் சொல்லுகின்றார். எவ்விதமான சாந்தியைச் செய்தாலும் பிராமணருடைய சாபம் நீங்காது. ஆச்சரியமாக அந்தப் பசுவின் தோஷமானது இவரை அடையும் என்று சொல்லுகின்றோம் முருகக்கடவுளாப்

பெற்றெடுத்த பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் தவறிவிடாமல் பலன்கள் நடக்கும்.

ஜாதகருடைய யோக பாவம்

46. உதித்தவன் பொதுயோ கத்தை
. யுரைக்கிறேஞ் ஜன்னந் தொட்டு
அதிபன்தன் மரண மட்டும்
வளர்பிறை போலே யோகம்
அதிகமாய் நேரு மென்றே
மதுயெவ்வாறு சொல்லு மென்ன
மதிக்குமே யிரண்டிற் பொன்னேன்
வந்ததால் யோகங் கேளாய்.

46. ஜாதகருடைய பொதுவான யோகத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவருடைய ஜனன கால முதற்கொண்டு மரணகாலம் வரையிலும் வளர்பிறைச் சந்திரனைப்போல யோகம் நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே வரும் என்று சொல்லுகின்றேரும். அதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கும்போது, அகஸ்தியர் பதில் சொல்லுகின்றார். மதி என்ற சந்திரனுக்கு இரண்டில் பொன் என்ற குரு இருப்பதால் யோகத்தைச் சொன்னேம், கேட்பீராக.

குறிப்பு :—சந்திரனுக்கு இரண்டில் சூரியனைத் தவிர மற்றக்கிரகம் இருந்தால் சுனபாயோகம் உண்டாகின்றது என்று பல தீபிகை ஆரு வது அத்தியாயத்தில் ஐந்தாவது சுலோகத்திலும் இதர கிரந்தங்களி லும் சொல்லி இருக்கின்றது. குரு இருந்தால் சுனபாயோகம் ஏற்படு கின்றது. ஆனால் அப்போது குருவுக்குப் பன்னிரண்டில் சந்திரன் இருப்பதால் பலதீபிகை ஆரூவது அத்தியாயம் பத்தாவது சுலோகப் பிரகாரம் சகடயோகமும் ஏற்படுகின்றது. இந்தச் சந்திரன் லக்கின கேந்திரத்திலிருப்பதால் இந்தச் சுலோகம் பிரகாரம் சகடயோக பங்கமும் ஏற்படுகிறது.

47. தனமுளான் வறுமை யில்லான் சகலரை வசியங்
[கொள்வன்
இனமதைக் காப்பா ளவ னெதிரியை நாசஞ் செய்வன்
கனமுள குடும்ப மாவன் கனத்தபூ மிகளுஞ் சேர்ப்பன்
அனையவே வண்டி ஆள்க ளரசர்பூ சிதமு மாவன்.

47. ஜாதகர் செல்வத்தை உடையவராவர். தரித்திரமும் கஷ்டமும் இல்லாதவர். எல்லோரையும் தன்பக்கமாக விருக்கும்படிச் செய்துகொள்வார். இவர் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார்.

பகைவர்களை அழித்துவிடுவார். இவர் மேன்மையானதும் சிறந்ததுமான குடும்பத்தையுடையவராவர். பெரியனவும் விசாலமானவுமான, நிலங்களையும் மனைகளையுஞ் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் வண்டிகளும் ஆள்களும் அரசர்களின் போற்றுதலும் ஆகிய இவைகளை எல்லாம் உடையவராக விருப்பார்.

ஜாதகருடைய தாயாரின் மரணமும் ஜாதகரின் மரணமும்

48. ஆறு றுவாண்டு தன்னி லழகிய தனுசு மாதங்
கூறுவே மன்னை கண்டங் குழவிக்கு வறுப தாண்டில்
வீரிய மீன மாதம் வளர்பிறைச் சஷ்டி தன்னில்
மாரனுந் தனக்குக் கண்டம் விருதருங் கேட்க வுற்றார்.

48. ஜாதகருக்கு முப்பத்தாறுவது வயதில் சிறந்த தனர் மாதம் என்ற மார்கழி மாதத்தில் இவருடைய தாயார் இறந்துவிடுவாள் என்று சொல்லுகின்றோம். இவருக்கு அறுபதாவது வயதில் மீன மாதம் என்ற பங்குனி மாதத்தில் வளர் பிறையில் சஷ்டி திதியில் மரணம் நேரிடும். இதன் மேல் விருதர் என்ற முனிவர் சொல்ல வாரம் பித்தார்.

49. மூணுட னஞ்சி றாறு
மேவிய வாண்டிற் கண்டம்
பூணுவே மிவனுக் கேதான்
பெருமுனி தடுத்துச் சொல்வார்
காணவே யெட்டோன் பொன்னோன்
கனதனந் தன்னில் நிற்க
ஆணவன் தனக்குத் தோஷ
மணுகினும் நிவிர்த்தி யாமே.

49. ஜாதகருக்கு மூன்று, ஐந்து, பன்னிரண்டு ஆகிய இந்த வயதுகளில் கண்டம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாகச் சொல்லவே, பெருமுனியாகிய அகஸ்திய முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். எட்டிற்குடையவராகிய பொன்னோன் என்ற குரு தனம் என்ற இரண்டாவது பாவத்தில் நிற்பதால் ஜாதகருக்குக் கண்டம் நேரிட்டாலும் அது நிவிர்த்தியாகிவிடும்.

ஜாதகருடைய மறுஜன்மம்

50. முன்சொன்ன வறுப தாண்டும்
மேதினிற் தீர்க்க மெய்தும்
பின்ஜன்மம் வேங்க டத்தில்
பிறப்பனும் வைசியச் சேயாய்

அன்னவன் செட்டுச் செய்து
வதிககீர்த் திகளு முண்டாய்த்
தன்னிலே வாழ்வா னவன்
சங்கரி கேட்டி டாயே.

50. முன்னே சொல்லப்பட்டிருக்கின்ற பிரகாரமே ஜாதகர் அறு பது வயது வரை நீண்ட ஆயுளை யுடையவராக விருப்பார் என்று அகஸ்தியர் சொன்னர். இவர் மறு ஜன்மத்தில் வேங்கடம் என்று சொல்லப்பட்டத் திருவேங்கடமலையாகிய திருப்பதி ஸ்தலத்தில் வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் வியாபாரத்தைச் செய்துகொண்டு அதிகமான புகழும் பெருமையும் உடையவராகி வாழ்வார், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய குடும்பத்தின் விஷயம்

51 குடும்பத்தின் சேதி கேளாய்க் கூர்தந்தை பின்வந்
[தோர்கள்
அடைவுட னென்றுரய் வாழ்வ ராறே ழாண்டு மட்டுந்
திடமான குடும்பி யாகித் தேசமேல் செட்டுச் செய்வன்
மடமயில் வாச முண்டு மங்கையே மேலுங் கேளாய்.

51. ஜாதகருடைய குடும்பத்தின் விஷயங்களைச் சொல்லுகின் றேரும், கேட்பீராக. ஜாதகருடைய தகப்பனாருடன் பிறந்த இளைய சகோதரர்கள் நாற்பத்திரண்டு வயது வரையிலும் குடும்பத்தில் ஒற்று மையாகக் கூடியிருந்து வாழ்வார்கள். ஜாதகர் வலிவான குடும்பஸ்த ராகிப் பூமியில் வியாபாரஞ் செய்வார். குடும்பத்தில் லக்ஷ்மி வாசஞ் செய்வாள், பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் அதிகமாகச் சொல் லுகின்றேரும், கேட்பீராக.

ஜனனகால தசை இருப்பும் அதன் பலனும்

52. பிறந்திடுங் காலந் தன்னில்
புகர்தசை தனி லிருப்பு
சிறந்திடு மாண்டு வெட்டுஞ்
செப்புவோம் பலனை யாங்கள்
விரைவினில் துணைவர் விருத்தி
விளங்காரே துணைவர் கண்டம்
பெறுந்தந்தை கண்ட மெய்தும்
புண்ணிய வதியே கேளாய்.

52. ஜாதகர் பிறந்த காலத்தில் புகர் என்ற சுக்கிரனுடைய தசை யின் இருப்பு எட்டு வருஷங்கள் ஆகும். இந்தத் தசா காலத்தின் பலாபலன்களை நாங்கள் சொல்லுகின்றோம். ஜாதகருக்குச் சீக்கிரத்

தில் சகோதரர்கள் உண்டாகமாட்டார்கள். சகோதரர்களுக்குக் கண்டம் நேரிடும். இவரைப் பெற்றத் தகப்பனுருக்குக் கண்டம் உண்டாகும், புண்ணியசாலி யாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

53. சித்திர வீடு மெய்துஞ் சிரிய தந்தை சுபம்
விர்த்தகன் தந்தைக் கேதான் மேவிடு மினைய மாது
சுத்தமா யிரண்டி லேதான் செப்புவோம் விபர மாக
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தஇம் மொழி
[குன்றுவே.

53. சித்திரங்களால் அலங்கரிப்பட்ட அழகான வீடு கிடைக்கும். ஜாதகருடைய சிறிய தகப்பனுருக்குச் விவாகம் முதலிய சுபங்கள் நடக்கும். ஜாதகருடைய தகப்பனுருக்கு இரண்டாவது மனைவிவந்து சேரிடுவாள். இரண்டாவது பாகத்தில் மற்ற விஷயங்களை விபரமாகவும் நன்றாகவுஞ் சொல்லுகின்றோம். யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 101

ஜனனகால கிரகநிலை

1. [1]பிறை[2]தனு ராகு [3]சாடி [4]பூமகன் கேது சேய்[5] குருபுதன் [6]பரிதி [7]நண்டில் [8]காரிதுலாம் [9]புகருங் கன்னி [10]அரியது ஜனன மாக அதுபலன் புகலு மென்று பராபரி கேட்கும் போது பராசரும் புகலு கின்றார்.

1. சந்திரன் தனுசிலும், இராகு கும்பத்திலும், அங்காரகனும், கேதுவும் சிம்மத்திலும், குருவும் புதனும் சூரியனும் கடகத்திலும், சனி துலாத்திலும், சுக்கிரன் கன்னியிலும் இருந்து ஜன்ம லக்கினம் சிம்ம ராசியானல் இதற்குப் பலா பலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்போது பராசர மகரிஷியானவர் சொல்லுகின்றார்.

கிரகநிலை

ராகு	இராசி சக்கரம்		குரு புதன் சூரியன்
			லக்கினம் அங்காரகன் கேது
சந்திரன்		சனி	சுக்கிரன்

மூலம் 3-ஆம் பாதம். கேது தசை ஆரம்பம் 3.2.5.

குறிப்பு :— இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :— மேஷத்தில் ராகுவும், மிதுனத்தில் சந்திரனும் அங்காரகனும், கடகத்தில் குருவும், துலாத்தில் புதனும் கேதுவும், விருச்சிகத்தில் சனியும், தனுசில் சூரியனும் மகரத்தில் சுக்கிரனும் ஆகும். சனி வக்கிரகதியில் இருக்கின்றார். புதன் அஸ்தமனமடைந்தவராக விருக்கின்றார். இந்த ஜாதகமும் ஆயிரத்து நூற்றறுபத்தைந்தாவது பக்கத்திலுள்ள எண்பத்தொன்பதாவது ஜாதகமும் தசையின் இருப்பில் சிறிதும் வித்தியாசந்தவிர கிரஹநிலை நட்சத்திரம் இவைகளில் ஒத்திருப்பதைக் கவனிக்கவும்.

---

1. சந்திரன்
2. தனுசு
3. கும்பம்
4. அங்காரகன்
5. சிம்மம்
6. சூரியன்
7. கடகம்
8. சனி
9. சுக்கிரன்
10. சிம்மம்

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. சொல்லிய கிரகத் திற்கு ஜனித்திடு மாண்பால் ஜன்மம்
இல்லமுங் கீழ்மேல் வீதி எமன்வாடை மேல்பா லீசன்
வல்லிமா காளி தென்மேல் மால்கோஷ்டம் ரிடப கோணம்
நல்லதோர் குண்ட மூத்தரம் நல்கிடுஞ் சமவூ ராகும்.

2. இங்குச் சொல்லப்பட்ட கிரக உமைப்பிற்கு ஜனனமாகின்ற குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். ஜனன வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தெற்கு வாடையில் இருக்கும். சிவபெருமானுடைய கோயில் மேற்கில் இருக்கும். பார்வதியம்மன் கோயிலும் காளியம்மன் கோயிலும் தென்மேற்கில் இருக்கும். மகாவிஷ்ணுவினுடைய கோயிலும் நந்தி தேவருடைய கோவிலும் ஒரு குளமும் வடக்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் பெரியதும் சிறியதுமல்லாத சமமான ஊராக விருக்கும்.

3. இத்தகை யடையா ளத்துள்
இவனுமே சேஷ்ட னாக
வித்தகன் வடுகர் வர்க்கம்
விளங்குவா னென்று சொல்வோம்
பெத்ததாய் தந்தை யோகம்
பேதையர் புத்திர யோகஞ்
சுத்தமாய் முன்பின் ஜன்மஞ்
செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. இப்படிப்பட்ட அடையாளங்கள் உள்ள விடத்தில் ஜாதகர் ஜேஷ்ட குமாரராக வடுகர் என்ற தெலுங்கருடைய குலத்தில் பிறப்பார் என்று சொல்லுகின்றோம். இவரைப் பெற்றெடுத்த தாயார் தகப்பனார் ஆகிய இவர்களுடைய யோகங்களையும், முன் ஜன்மம் மறு ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் குற்றமில்லாமலும் உண்மையாகவும் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனாரது குணநிசயங்கள்

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சற்சன ருறவு [கொள்வன்
வந்தவர்க் கன்ன மீவன் மடந்தடஞ் சோலை கூவல்
விந்தையாய்ச் செய்வா னவன் வீண்பழி யேற்கா னவன்
சிந்தையில் நல்லோ னவன் சிறப்பான குடும்ப மேற்பன்.

4. ஜாதகரின் தகப்பனாருடைய குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் நல்ல குணங்களையுடையவர்களின் நேசத்தைப் பெறுவார். இவர் தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாடு

போடுவார். மடம் சத்திரம் ஓமகுண்டம் சோலை தோப்பு குளம் இணறு இவைகளை ஆச்சரியப்படும்படியான முறையில் உண்டு பண்ணுபவராவார். வீணை அபவாதத்தை அடையமாட்டார். இவருடைய எண்ணம் நல்லதாகவிருக்கும். இவர் மேன்மையான குடும்பத்தை உடையவராவர்.

5. பரணிநாள் கன்னி ராசி பிறப்பனு மாஞ்சி வப்பன்
உறன்முறை மெச்ச வாழ்வ னுலகினில் புகழு மேற்பன்
பரிவண்டி யுடைய னுவன் பரிகளு மதிகஞ் சேர்ப்பன்
பொருளது பெருக்கச் செய்வன் புண்ணிய மனத்த னுமே

5. ஜாதகருடைய தகப்பனார் பரணி நட்சத்திரத்தில் கன்னியா ராசியில் ஜனனமானவராவார். இவர் மாமரத்தின் துளிரைப்போன்ற ஒரு விதமான சிவப்பு நிறத்தையுடையவராவார். இவர் தன்னுடைய உறவினர்களும் பந்துக்களும் கொண்டாடும் படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் பூமியில் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார். இவர் குதிரை வண்டியையுடையவராவர், அநேக குதிரைகளையும் சேர்த்துவைத்திருப்பார். இவர் தன்னுடைய சொத்துக்களை விருத்தியாக்குவார், நல்ல மனத்தையுடையவராவர்.

குறிப்பு :—தகப்பனாருடைய ஜன்ம நட்சத்திரமும் ஜன்ம லக்கினமும் இந்தப் பாடலில் கண்டிருப்பதைப் போலவே முறையே பரணி, கன்னி என்று எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் ஏழாவது பாடலில் கண்டிருப்பதையுங் கவனிக்கவும்.

ஜாதகருடைய தகப்பனாரது சகோதரர்கள் (சகோதர பாவம்)

6. பால்தயிர்ப் பிரிய னுவன் பணிந்தோரை யாத ரிப்பன்
காலத்தை யறிந்து சொல்வன் கனதல வாசஞ் செய்வன்
வேல்விழி மனைவி பட்சன் விருத்தியாங் கன்று காலி
சாலவே துணைவ ரிரண்டு சாற்றுவோ மொன்று சேதம்.

6. ஜாதகருடைய தகப்பனார் பால் தயிர் இவைகளில் ஆசையுடையவராக விருப்பார். தன்னை வணங்கினவர்களைக் காப்பாற்றுவார். இவர் கால வர்த்தமானங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு சமயத்திற்குத் தக்கவாறு பேசுவார். இவர் பெரிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவார். இவர் வேலைப்போன்ற அழகான கண்களையுடைய மனைவியின் மேல் ஆசையுடையவர். இவரிடம் பசுக் கூட்டங்களும் கன்றுகளும் விருத்தியாகும். இவருக்குச் சகோதரர்கள் இருவராவர். இவர்களில் ஒருவர் இறந்துவிடுவார்.

குறிப்பு :—எண்பத் தொன்பதாவது ஜாதகத்தின் நான்காவது பாடலையும் கவனிக்கவும்.

ஜாதகருடைய தகப்பனுருடைய சகோதரி விஷயம்

7. மங்கையு மொருத்தி தீர்க்கம் வரைகிறே மவள்கு
[ணத்தைத்
துங்கமா மனத்த ளாவள் துறவிக்கு அன்ன மீவள்
பங்கைய முகத்த ளாவள் பத்தாவு மேல்பால் கேருந்
தங்காமல் தாயில் லத்தில் தன்வர னுடனே சித்து;

7. ஜாதகருடைய தகப்பனுருக்கு ஒரே ஒரு சகோதரி இருப்பாள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள். இவளுடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் மேன்மையான மனத்தை உடையவளாவள், பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுவாள். இவள் பங்கயம் என்ற தாமரைப் பூவைப்போன்ற அழகான முகத்தை யுடையவளாவள். இவளுக்குப் புருஷன் மேற்குத்திக்கிலிருந்து வருவார். இவள் தன்னுடைய வீட்டில் வசிக்காமல் தன்னுடைய புருஷனை அழைத்துக்கொண்டு தன்னுடைய தாயார் வீட்டிற்குவந்து;

குறிப்பு :—எண்பத் தொன்பதாவது ஜாதகத்தின் ஐந்தாவது, ஆருவது பாடல்களையும் கவனிக்கவும்.

8. விரோதமில் லாமல் வாழ்வள் வெகுதனம் பூமி யேற்பள்
அரிவைக்குச் சுதரா ணிரண்டு அம்பிகை மார்க ளவ்வாறு
திறமாகு நான்கு யென்றேரு ஞ்ணவரால் பெருமை
[யேற்பள்
திறமூட னில்லம் நேரல் செல்வதி வறுமை காணுள்.

8. விரோதமில்லாமல் ஒற்றுமையாகவிருந்து வாழ்வாள். இவள் அதிகமான பணத்தையும் நிலங்களையும் மனைகளையும் அடைவாள். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் நான்கு குழந்தைகள் நிலைத்திருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவள் தன்னுடைய சகோதரனால் பெருமையை அடைவாள். இவளுக்கு வலிவான வீடும் கிடைக்கும். இவள் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டாள்.

குறிப்பு :—சந்ததி விஷயமாக எண்பத் தொன்பதாவது ஜாதகத்தின் ஐந்தாவது பாடலை இந்தப் பாடலுடன் ஒற்றுப்பார்க்கவும்.

ஜாதகருடைய தகப்பனுருடைய முன்ஜன்மம்

9. தந்தையின் பூர்வந் தன்னைச் சாற்றுவோம் பிருதிவி
[தன்னில்
விந்தையாய்க் கங்கை சேயாய் மேவியே கிருஷிகள்செய்து
வந்தவர்க் கன்ன மீந்து வறுமுகன் பத்தி கொண்டு
நிந்தைக ளில்லா ஞகிச் சேர்ந்தனன் காலந் நாடு;

9. ஜாதகரின் தகப்பனுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். பிருதிவிஸ்தலம் என்கின்ற காஞ்சீவரத்தில் ஆச்சரியமாகக் கங்கைகுலம் என்கிற வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறந்து மேன்மையாக விவசாய தொழிலைச் செய்துகொண்டு தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டு ஆறு முகங்களையுடைய முருகக்கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடைய வராயிருந்து, அபவாதங்கள் ஒன்றையும் அடையாமல் இறந்து எம பட்டணத்திற்குப் போய்;

குறிப்பு :—தகப்பனரின் முன் ஜன்மத்தைப்பற்றி எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் முப்பத்துநான்காவது பாடலை இந்தப் பாடலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

10. மால்மகன் வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றோம்
ஞாலம்மேல் வறுமை காணன்
நராதிபன் போலே வாழ்வன்
சாலயிக் குணத்தா னுக்கு
ஜனிப்பனு மென்று சொன்னோம்
பாலகன் குணத்தை யாங்கள்
பகருவோ மினிமே லாக.

10. மகாவிஷ்ணுவினுடைய பிள்ளையாகிய பிரம்மதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருப்பவர் இந்த ஜாதகர் என்று சொல்லுகின்றோம். இவர் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். ஓர் அரசனைப்போல வாழ்வார். இந்த நல்ல குணங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறப்பார் என்று சொல்லுகின்றோம். இனிமேல் நாங்கள் ஜாதகருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

11. மாரனு மால்நி றத்தன்
வாததே கங்கள் பின்னுல்
கூறுவான் மூன்று கல்வி
கோவலர்க் கிவன்சொல் மேன்மை
போர்செலான் பெரியோர் நேயன்
புகழ்ந்தோரை யாத ரிப்பன்
காரியச் சமர்த்த னுவன்
காலாட்கள் பணையோர் விருத்தி.

11. ஜாதகர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவித நிறத்தையுடையவர். இவரது தேகம் தன்னுடைய பிற்காலத்தில் வாதரோயையுடையதாகப் போய்விடும், அஃதாவது இவரதுசரீரம் பருமனுகிவிடும். இவர் மூன்றுவிதமான வித்தைகளையுடையவராவார். கோவலனைப் போன்ற பணக்காரர்களுக்கும் அரசர்களுக்கும் இவருடைய வார்த்தைகள் சிறந்தனவாகவும் அங்கீகரிக்கக்கூடியனவாகவும் இருக்கும். இவர் சண்டைக்குப் போகமாட்டார். பெரிய மனிதர்களுடைய சிநேகத்தை யுடையவராவர். தன்னைப் புகழ்ந்து பேசுகின்றவர்களைக் காப்பாற்றுவார். இவர் தான் எடுத்த வேலைகளைச் செய்து முடிப்பதில் சாமார்த்திய முடையவராவர். கால்நடை வேலைக்காரர்கள் நிலங்கள் ஏர்கள் ஆகிய இவை இவருக்கு முறையே அதிகப்படும் ; விருத்தியாகும்.

குறிப்பு :—எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் பன்னிரண்டாவது பதின்மூன்றுவது பாடல்களை இந்தப் பாடலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

12. அன்னிய பாஷை யாலே
யவனுமே பெருமை யேற்பன்
மன்னரால் வணிபஞ் செய்வ
னவன்சோதி சாயல் கொஞ்சந்
தன்னினத் தவரைக் காப்பன்
தர்மமாங் குணத்த னுவன்
சொன்னசொற் காப்பா னுவன்
சோம்பிடான் கல்வி தன்னில்.

12. ஜாதகர் அன்னிய பாஷையைத் தெரிந்து கொண்டிருப்பதால் கீர்த்தியையும் புகழையும் அடைவார். இவர் அரசாங்கத்தாரிடத்தில் வியாபாரஞ் செய்வார். இவருடைய கண்கள் கொஞ்சஞ் சாய்ந்த பார்வையை யுடையவையாக விருக்கும். இவர் தன்னுடைய குலத்தார்களைக் காப்பாற்றுவார். இவர் தர்மஞ்செய்கின்ற குணத்தை உடையவராவார். இவர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவராவார். இவர் வித்தையைக் கற்றுக்கொள்வதில் சோம்பலில்லாதவராக விருப்பார்.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

13. தன்கரம் விஷ்ணு ரேகை தாமரை ரேகை யுண்டு
மன்னரால் புகழு மேற்ப னசுவவா கனமு மேற்பன்
பின்ன மில்லாத தேகி பிதா மேலாய் வாழ்வா னுவன்
தன்துணை யிருநான் காக ஜனித்திடு மூன்று சேதம்.

13. ஜாதகருடைய உள்ளங்கைகளில் விஷ்ணுரேகை தாமரை ரேகை என்ற இரண்டு விதமான ரேகைகள் இருக்கும். இவர் அரசர் களால் பெருமையையுங் கீர்த்தியையும் அடைவார். இவர் குதிரை வாக னத்தையும் உடையவராவர். இவர் யாதொரு அவயவக் குறைவும் இல்லாத தேகத்தை உடையவராவர். இவர் தன்னுடைய தகப்பனரு டைய அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்பவராவார். இவ ருடன் கூடப் பிறந்தவர்கள் மொத்தம் எட்டு பேராவார்கள். இவர்களில் மூன்று பேர்கள் இறந்து விடுவார்கள்.

குறிப்பு :—உள்ளங்கையிலுள்ள ரேகை விஷயமாகவும் சகோதரர் கள் விஷயமாகவும் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் பதினொன் காவது பதினேழாவது பாடல்களை இந்தப் பாடலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

14. மத்தது வைந்து தீர்க்க மாணது மூன்று மாகும்
வித்தகி மார்க ளிரண்டு விளம்புவோம் பால னுக்குக்
குத்தமில் லாம லொன்றுய்க் குலவியே வாழ்வா ளாகும்
அத்தியைப் பெற்ற மாதே யறைந்தவிம் மொழி
[குன்றுவே.

14. ஜாதகருடைய மற்ற ஐந்து சகோதரர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவர்களில் ஆண் மூவராவர். ஜாதகருக்கு இரண்டு சகோதரிகள் உண்டு என்று சொல்லுகின் றோம். இந்தச் சகோதரிகள் யாதொரு குறைவுமில்லாமல் ஒன்றுக விருந்துகொண்டு வாழ்பவர்களாவார்கள். யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் பார்வதியம்மையே! கேட் பீராக.

குறிப்பு :—ஜாதகருடைய சகோதர சகோதரிகளின் எண்ணிக்கை விஷயமாக எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் பதினேழாவது பாடலுடன் இந்தப் பாடலை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

15. துணைவிருத்தி யெவ்வி தத்தாற் செப்பினீ ரதுவு மின்றித்
கனமூள ராஜ யோகங் கழறினீர் காரணஞ் சொல்
பிணையிலா மூன்றே னிரண்டில் பொருந்தியே யைந்தில்
[திங்கள்
வினையிலா யைந்தோ னுச்ச மேவின பலத்தி னலே ;

15. ஜாதகரின் சகோதரர்களுடைய விருத்தியையும் க்ஷேமத்தை யும் எந்தக் காரணங்களினால் சொன்னீர்? இதுவுமல்லாமல் ஜாதக ருக்கு மேன்மையான இராஜயோகத்தையுஞ் சொன்னீரே! இதற்கும் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்டவே பராசர முனிவர்

பதில் சொல்லுகின்றார், கெடுதியில்லாத மூன்றுக்குடையவரானவர் (சுக்கிரன்) இரண்டாவது பாவத்தில் இருப்பதாலும், ஐந்தாவது பாவத்தில் திங்கள் என்ற சந்திரன் இருப்பதாலும், கெடுதியில்லாத ஐந்தாவது பாவாதிபதியான குரு உச்சமாகவும் இருக்கின்ற பலத்தின் வலுவாலும் ;

16. பின்துணை யதிகம் விருத்தி பேசினேம் யோகஞ்
[சொல்வோம்
பொன்னவன் காரி யுச்சம் பணியேழில் மதியு மைந்தில்
இன்னவா றிருப்ப தாலே யியம்பினேம் யோகந் தானுந்
தன்னினத் தவர்க்கு மேலாய்த் தனமிக யுடைய னுவான்.

16. ஜாதகரின் பின் சகோதரர்கள் அதிகமாகவும் விருத்தியாகவும் இருப்பார்கள் என்று சொன்னேம். இவரது யோக விஷயத்தையுஞ் சொல்லுகின்றோம். பொன்னவன் என்ற குருவும், காரி என்ற சனியும் உச்சமாக விருக்கின்றார்கள். பணி என்ற இராகு ஏழிலும் மதி என்ற சந்திரன் ஐந்திலும் இருப்பதால் ஜாதகருக்கு யோகத்தைச் சொன்னேம். இவர் தன்னுடைய ஜாதியாரைவிட அதிக மேலான அந்தஸ்திலிருந்து கொண்டு அதிகமான செல்வத்தையுடையவராவர்.

குறிப்பு :—ஜாதகருடைய யோக விஷயமாய் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் பதினைந்தாவது பதினாறுவது பாடல்களோ இந்தப் பாடலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணங்களும்

17. மங்களம் பதினா றுண்டுள் மருவிடுங் குடகு தன்னில்
சங்கையில் லாமல் தந்தை வர்க்கத்தி லணுகு மென்றோம்
அங்கவள் குணமெவ் வாறு அரிமனை யொப்ப ளாவள்
துங்கமா மனத்த ளாவள் துறவோர்கள் பத்தி யேற்பள்.

17. ஜாதகருக்கு விவாகம் பதினாறு வயதிற்குள்ளே நடக்கும். இவருடைய மனைவி மேற்குத் திக்கிலிருந்து நிச்சயமாகத் தன்னுடைய தகப்பனாருடைய பந்துக்களிலிருந்து வருவாள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய குணாதிசயங்கள் எவ்விதமாக விருக்கும் என்று கேட்பீரானால் சொல்லுகிறோம். இவள் மகா விஷ்ணுவினுடைய மனைவியாகிய இலட்சுமிக்குச் சமானமானவளாக விருப்பாள். இவள் மேன்மையானதும் சிறந்ததுமான மனத்தையுடையவளாக விருப்பாள், பரதேசிகளிடத்தில் அன்பும் ஆசையும் உடையவளாக விருப்பாள்.

குறிப்பு :—எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் பதினெட்டாவது பாடலுடன் இந்தப் பாடலை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

18. பிறையது போலே செல்வம் பெருகிடு நடையும் நன்மை
அரிவைக்கு வயது தீர்க்க மத்திரி தடுத்துச் சொல்வார்
இருமனை ஜாதகர்க்கு வியம்புவோம் முனியே யாமும்
வருமாறு சொல்லு மென்ன மங்கையின் ஸ்தானந்
[தன்னில் ;

18. ஜாதகருடைய மனைவிக்கு யோகம் வளர்பிறைச் சந்திரனைப் போல நாளுக்குநாள் விருத்தியாகும். இவளுடைய நடவடிக்கை நல்ல தாக விருக்கும். இவள் நீண்ட ஆயுளை உடையவள். இதன்மேல் அத்திரி மகரிஷியானவர் தடுத்துச் சோல்லுகின்ருர். "முனிவரே! ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் உண்டு என்று நான் சொல்லு கின்றேன்". இவ்விதமாக அத்திரி முனிவர் சொல்லவே, இவரை இதற்குக் காரணத்தைக் கேட்கவே, இவர் பதில் சொல்லுகின்ருர். மனைவியின் ஸ்தானமாகிய ஏழாவது வீட்டில் ;

குறிப்பு :—இந்தப் பாடலுடன் எண்பத்தொன்பதாவது ஜாதகத் தின் பத்தொன்பதாவது பாடலை ஒப்பிட்டுப் பார்க்கவும். இந்த ஒரு நூற்றொன்ருவது ஜாதகத்தில் பராசரர் பலனைச் சொல்லிக்கொண்டு வரும்போது அத்திரி தடுத்துச் சொல்லுகின்ருர். ஆனல் எண்பத் தொன்பதாவது ஜாதகத்தில் வசிஷ்டர் பலனைச் சொல்லிக்கொண்டு வரும்போது பராசரர் தடுத்துச் சொல்லுகின்ருர். இந்த விஷயத்தை நன்ருய்க் கவனிக்கவும்.

19. அரவுமே யிருப்ப தாலு மைந்தேழோன் சரத்திற் தங்க
உரைத்தனந் தார மிரண்டு வுயர்புக ரிரண்டிற் தங்கக்
குருவுமே நாலைப் பார்க்கக் கூரெணைத் தார மிரண்டு
ஒருமனை தீர்க்க மெய்து மொண்டொடி தனக்கி ரண்டு.

19. அரவு என்ற இராகு இருப்பதாலும், அந்த ஏழாவது வீட் டிற்குடையவரான சனி சரராசியான துலாராசியில் இருப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு தாரம் என்று சொல்லுகிறேன் என்று அத்திரி சொல்லுகின்ருர். இதற்குப் பராசரர் பதில் சொல்லுகின்ருர். புகர் என்ற சுக்கிரன் இரண்டாவது பாவத்திலிருப்பதாலும், குரு நான்கா வது பாவத்தைப் பார்ப்பதாலும் இரண்டு மனைவிகள் என்று சொல்லக் கூடாது. ஒரே ஒரு மனைவிதான் உண்டு. இந்த மனைவியும் தீர்க்க மான ஆயுளை உடையவளாவாள். ஆனல் இவளுக்கு இரண்டு ;

20. முத்திரை யணிவா னவ னுரைப்பீர்க ளந்தச் சங்கை
வித்தகன் முப்பா னைந்தில் விலகிடுங் கள்ள ராலே
பத்தினிக் கிரண்டா முத்திரை பாலக னணிவா னவன்
சுத்தமாய்த் தார மொன்றே தீர்க்கமா மென்று
[சொல்வோம்.

20. தாலிகளை ஜாதகர் கட்டுவார். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, இவருக்கு முப்பத்தைந்தாவது வயதில் திருடரலே மனைவியின் தாலி திருடிக்கொண்டுபோய் விடப்படும். அதன்மேல் ஜாதகர் தன்னுடைய மனைவிக்கு இரண்டாவது தாலியைக் கட்டுவார். நிஜமாக இவருக்கு ஒரே ஒரு மனைவிதான் ஏற்படும். இவள் நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—இந்த ஜாதகத்தில் பதினெட்டாவது பாடலின் பிரகாரம் பராசரர் ஒரு மனைவி என்று சொல்லவே, அத்திரி பதினெட்டாவது பத்தொன்பதாவது பாடல்களின் பிரகாரம் இரண்டு மனைவிமார்கள் என்று சொல்லுகின்றார். அதன்மேல் பராசரர் பத்தொன்பதாவது இருபதாவது பாடல்களின் பிரகாரம் ஒரே ஒரு மனைவிதான் என்றும் இந்த மனைவிக்கு இரண்டுதடவை தாலியைக் கட்டுவார் என்று சொல்லியிருக்கின்றார். எண்பத்தொன்பதாவது ஜாதகம் பத்தொன்பதாவது பாடலின் பிரகாரம் வசிஷ்டர் ஒரு தாரம் என்று சொல்லவே, பராசரர் பத்தொன்பதாவது இருபதாவது பாடல்கள் பிரகாரம் இரண்டுதாரம் என்று சொல்லவே. இதற்கு அத்திரி இருபதாவது பாடலின் பிரகாரம் ஒரு தாரம் தான் என்று சொல்லவே, அகஸ்தியர் இருபத்தோராவது இருபத்திரண்டாவது இருபத்திமூன்றுவது பாடல்களின் பிரகாரம் மனைவி ஒருத்தி தான் என்று தீர்ப்புக்கட்டி ஒரு மனைவிக்கே இரண்டு தடவை ஜாதகர் தாலியைக்கட்டுவார் என்று முடிவு செய்துவிட்டார். இந்த ஜாதகத்தினுல் களத்திரபாவ பலனைச் சொல்லுவது எவ்வளவு கஷ்டமான தென்று நன்றுகப் புலப்படுகின்றது. மேலும் இவ்விரண்டு ஜாதகங்களிலும் முப்பத்தைந்தாவது வயதில் திருடன் தாலியை அபகரித்துக்கொண்டுபோய் விடுவதால் ஒரே ஸ்திரீக்கு இரண்டு தடவை தாலி அணிவிக்கப்படும் என்று சொல்லி இருக்கின்றது. மேலும் இரண்டு ஜாதகங்களிலும் பராசரரும் அத்திரியும் எதிரிடையாகச் சொல்லியிருப்பதையுங் கவனிக்கவும். ஒரு ஜாதகத்திற் கண்டுள்ள அத்திரியும் பராசரரும் இன்னொரு ஜாதகத்திற் கண்டுள்ள அத்திரியும் பராசரரும் வெவ்வேறுனவர்களோ ஒன்று என்பது விளங்கவில்லை. ஒரு சமயம் பலாபலன்களை இரண்டு ஜாதகத்திலும் சொல்லிவந்த ஒரே ஜோதிடர் நினைவில்லாமல் விஷயங்களை வெவ்வேறுன ரிஷிகள் சொன்னர்கள் என்று சொல்லிவிட்டாரோ என்பதும் புலப்படவில்லை.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

21. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மிருனன் காகுஞ்
சுத்தமா யாண்பா லொன்று செப்புவோங் கன்னி நான்கு
இத்தகைத் தீர்க்க மெய்து மிலகாவே மற்ற வெல்லாம்
அத்தியைப் பெற்ற மாதே யறைந்தது தப்பா வாகுமே.

21. ஜாதகருடைய சந்ததிகளைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவருக்கு எட்டு குழந்தைகள் பிறக்கும். இவருக்கு உண்மையாக ஓர் ஆண் குழந்தையும் நான்கு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றேம். மற்றக் குழந்தைகள் எல்லாம் உயிருடன் இருக்கமாட்டார்கள். யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லிய பலாபலன்கள் தவறிப்போகாமல் நடக்கும்.

குறிப்பு :—இந்தப் பாடலையும் எண்பத்தொன்பதாவது ஜாதகத் தின் இருபத்து மூன்றுவது இருபத்து நான்காவது பாடல்களையும் ஒப்பிட்டுப்பார்க்கவும். எண்பத்தொன்பதாவது ஜாதகத்தில் முதல் குழந்தையும் நான்காவது ஆறுவது குழந்தைகளும் இறந்து விடுவார் கள் என்று சொல்லி இருக்கின்றது. இந்த விஷயத்தை அஃதாவது எந்த எந்த குழந்தைகள் உயிருடனிருப்பார்கள் எந்த எந்த குழந்தைகள் இறந்து விடுவார்கள் என்பது நூற்றோராவது ஜாதகத்தில் சொல்ல வில்லை.

ஜாதகருடைய முன்ஜன்மம்

22. பாலகன் பூர்வந் தன்னைப் பகருவோஞ் சோழ நாட்டில்
சீலமாந் திருவா ரூரில் ஜனித்தனன் தீயின் வம்சம்
ஏலவே மனைவி மைந்த ரியலான குடும்பி யாகி
மால்பத்தி மிகவே கொண்டு வருவோர்க்கு வன்ன மீந்து ;

22. ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் சோழ தேசத்தில் அழகான திருவாரூரில் தீயின் வம்சம் என்ற வன்னியர் குலத்திற் பிறந்தார். இவர் மனைவி மக்களை யுடையவராகி ஒழுங்கான ஒரு குடும்பஸ்தராக விருந்து மகாவிஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையும் அதிகமாக வுடையவராகித் தன்னிடம் வரு கின்றவர்களுக்குச் சாப்பாடு போட்டு ;

குறிப்பு :—இந்தப் பாடலை எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் இருபத்தைந்தாவது பாடலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஜாதகருடைய யோகபாவம்

23. அறமதி லிச்சை யுண்டா யருமறைத் தொண்டு பூண்டு
வருமார்க்கந் தாகப் பந்தல் வகுத்துமே வினையில் லாமல்
மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப்பட்டுத்
திருமக னுதித்தா னென்றோஞ் செப்புவோ மிவனின்

[யோகம்,

23. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் தர்மஞ் செய்வதில் பிரியமுடையவராய் அருமையான வேதங்களைப் படித்தவர்களுக்கு வேலையைச் செய்து, ஜனங்கள் போக்கு வரத்துக்கான வழிகளில் தாகப் பந்தலை ஏற்படுத்தி நீர்மோர் கொடுத்து, யாதொரு பாவமும் இல்லா மல் இறந்து எமபட்டணம்போய் மகாவிஷ்ணுவின் மகளுகிய பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந் திருக்கின்ருர் என்று சொல்லுகின்ருேம். இதன்மேல் இவருடைய யோகத்தைச் சொல்லுகின்ருேம்.

குறிப்பு :—இந்தப் பாடலை எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் இருபத்தாருவது பாடலுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

24. மன்னர்பால் செட்டுச் செய்வன் மானில மதிகஞ்
[சேர்ப்பன்
பொன்பணி சேர்ப்பா னுவன் புகழது பெருக்க முண்டு
தன்பந்தை யாத ரிப்பன் தர்க்கநூ லறிவா னுவன்
இன்னவ னதிக யூகி யிவன்திருப் பணியுஞ் செய்வன்.

24. ஜாதகர் அரசாங்கத்தாரிடம் வியாபாரஞ் செய்வார். பெரிய பெரிய நிலங்களை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் பணத்தையும் ஆபரணங்களையுஞ் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவருக்குக் கீர்த்தியும் பெருமையும் அதிகமாகும். இவர் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார். இவர் தர்க்க சாஸ்திரத்தைப் படித்து அதில் வல்லுநராவார். இவர் அதிகமான விவேகத்தை யுடையவர். இவர் கோயில் வேலைகளையுஞ் செய்வார்.

ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்கள்

25. இல்லமு நான்கு செய்வ னெதிரில வில்லா னுவன்
சொல்லதைக் காப்பா னுவன் சூக்ஷுமப் புத்தி யேற்பன்
செல்லுவான் சேது காசி தீர்த்தங்கள் தோய்வா னுவன்
தல்லியின் குணத்தை யாங்கள் சாற்றுவோந் தாயே
[கேளும்.

25. ஜாதகர் நான்கு வீடுகளைக் கட்டுவார். இவருக்குப் பகை வர்கள் கிடையாது. இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறி டாமல் காப்பாற்றுபவராவார். நுட்பமான புத்தியை யுடையவராவார். இவர் சேது காசி ஆகிய திவ்ய ஸ்தலங்களுக்குப் போவார். அங்கு புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். இனிமேல் இவருடைய தாயாருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்ருேம். எங்க ளுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—இந்த இருபத்துமூன்காவது இருபத்தைந்தாவது பாடல்களோ எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் இருபத்தேழாவது இருபத்தெட்டாவது பாடல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

26. நன்னடை மிருது வார்த்தை
நவின்றிடாள் கட்டு வார்த்தை
தன்னினத் தவரைக் காப்பள்
சாதழு மன்பா மீவள்
கன்னிகை யோக சாலி
கடந்தோர்க்கு வன்ன மீவள்
அன்னியர் குற்றஞ் சொல்லாள்
யாவர்க்கு நல்லோ ளாவள்.

26. ஜாதகருடைய தாயார் நல்லொழுக்கத்தை உடையவள், இனிமையானதும் சாந்தமானதுமான வார்த்தைகளோச் சொல்லக்கூடியவள், புனைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையுஞ் சொல்லமாட்டாள். இவள் தன்னுடைய பந்துக்களோக் காப்பாற்றுவாள். இவள் பிறருக்குச் சாப்பாட்டை ஆசையுடன் போடுவாள். இவள் யோகத்தை உடையவளாக விருப்பாள், உலகப் பற்றுக்களோ விட்டு விட்டவர்களாகிய பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். இவள் பிறருடைய பிழைகளோ எடுத்துக்காட்டிச் சொல்லாதவளாவள். இவள் எல்லோருக்கும் நல்லவளாகவே விருப்பாள்.

ஜாதகரின் தாயாருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

27. சொல்லதைக் காப்பா ளாவள் சுந்தர முடைய ளாவள்
அல்லலைப் போதுங் காணு ளரிபோலே கோபங்
[கொஞ்சம்
நில்லாது வுடனே தாழ்வு நிமலிக்குப் பித்தச் சூடு
புல்லிடுந் தூணை யாணிரண்டு பூவையு மூன்று மென்றோம்.

27. ஜாதகருடைய தாயார் தான் சொல்லிய வார்த்தைகளோத் தவறிடாமல் காப்பாற்றுபவளாவள். அழகுடையவளாக விருப்பாள். இவள் எப்போதும் கஷ்டங்களோ அடையமாட்டாள். இவளுக்குச் சிங்கத்திற்கு வருவதைப்போலக் கோபம் உண்டாகும். இவ்வாறு உடனே தணிந்து விடும், இவளுக்குப் பித்தச் சூட்டு ரோகமுண்டு. இவளுக்கு இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் உண்டு என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—இந்த இருபத்தாறுவது இருபத்தேழாவது பாடல்களோ எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் இருபத்தொன்பதாவது முப்பதாவது பாடல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஜாதகருடைய தாயாரின் முன்ஜன்மம்

28. மற்றவை சேத மெய்தும் வளவுமே கிட்டு மென்றேரும்
வித்தகி பூர்வஞ் சொல்வேன் வாரியி னோரந் தன்னில்
பத்திய கெடிலம் பக்கல் புதுவையில் சேடர் வம்சம்
உத்தம குணத்த ளாகி யுயர்வான குடும்பம் பெற்று ;

28. மற்றச் சகோதரர்கள் இறந்து விடுவார்கள் என்று சொல்லு கின்றேரும். ஜாதகருடைய தாயாருக்கு விகோவினுல் அனுகூல முண்டாகும் என்று சொல்லுகின்றேரும். இவளுடைய முன் ஜன்மத் தைப் பற்றிச் சொல்லுகின்றேன். சமுத்திரத்தின் ஓரமாக கெடிலம் என்ற ஊரின் பக்கத்திலுள்ளப் புதுலவ என்ற புதுச்சேரியில் சேடர் என்ற வேலேக்காரர் குலத்திற் பிறந்தாள். இவள் நல்ல குணத்தை யுடையவளாகி மேன்மையானதும் சிறந்ததுமான குடும்பத்தை யுடைய வளாகி ;

29. தேவதா பத்தி யாயுந் தேரினோர்க் கன்ன மீந்தும்
பாவத்தில் மனம்வை யாமற் பற்றினள் கால நாடு
பூவயன் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று சொல்வோர்
தாவினோர் தம்மைக் காக்குஞ் சங்கரி கேட்டி டாயே.

29. ஜாதகருடைய தாயார் தெய்வங்களின்மேல் ஆசையும் அன்பும் உடையவராகியும் அறிவில் தேர்ச்சியை யடைந்த கற்றவர் களுக்குச் சாப்பாடு போட்டும் பாபமான காரியங்களேச் செய்வதில் இஷ்டமில்லாதவளாகவும் இருந்து இறந்து எம்பட்டணத்திற்குப் போய் பூவயன் என்ற பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருள் என்று சொல்லு கின்றேரும். தம்மிடம் வந்து சேர்ந்தவர்களேயும் உலகப் பற்றைத் தாண் டினவர்களேயுங் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு :—இருபத்தெட்டாவது இருபத்தொன்பதாவது பாடல் களேயும் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் முப்பத்தோராவது முப்பத்திரண்டாவது பாடல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஜாதகருடைய தாயாருடைய மறுஜன்மம்

30. பின்ஜன்மந் தில்லை தன்னிற்
பிறப்பளாஞ் சைவச் சேயாய்ப்
பொன்னெடு பணிதி பெற்றுப்
புகழுடன் வாழ்வா ளாகுங்
கன்னிக்கு விச்ஜன் மத்திற்
கலந்தபுண் ணியங்க ளென்னத்
தன்வரன் மனம்போல் வாழ்ந்துஞ்
சலித்தோர்க்கு வன்ன மீந்தும் ;

30. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறு ஜன்மத்தில் தில்லை என்ற சிதம்பரத்தில் சைவ குலத்தில் பெண்குழந்தையாகப் பிறப்பாள். இவள் தனம் ஆபரணம் இவைகளை அடைந்து பெருமையுடனும் கீர்த்தியுடனும் வாழ்பவளாவள். இவளுக்கு இந்த ஜன்மத்தில் சம்பவித்தப் புண்ணியங்கள் என்னவென்று கேட்கவே, பராசரர் பதில் சொல்லுகின்றார். இவள் தன்னுடைய புருஷனுடைய மனதிற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருந்து வாழ்ந்தும் ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டும் ;

ஜாதகருடைய தாயாருடைய மரணகாலம் (மாதிருகர்மம்)

31. மனதினில் கபடு மின்றி மங்கையும் வாழ்வ தாலே
வனிதையு முதிப்பா ளாகும் வரைவீரே நிரியா ணத்தைத்
திருமகன் தனக்கு நாற்பா லுண்டினிற் கண்ட மெய்தும்
பெருவயி ரூனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

31. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகள் இல்லாமல் வாழ்ந்ததாலே சிதம்பரத்தில் சைவகுலத்தில் பெண் குழந்தையாக பிறப்பவளாவாள். இவளுடைய் மரண காலத்தைப்பற்றிச் சொல்லுவீர் என்று கேட்கவே, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய (தாயாருக்கு) மரணம் நேரிடும். பெரிய வயிற்றையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தப் புண்ணியவதியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு :—தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றி இந்தப் பாடலையும் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் முப்பத்து மூன்றுவது பாடலையும் ஒப்பிட்டுப்பார்க்கவும். தாயாருடைய மரணகாலத்தைப் பற்றி இந்தப் பாடலையும் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் முப்பத்தொன்பதாவது பாடலையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஜாதகரின் தகப்பனுருடைய மரணகாலமும் (பிதிருகர்மமும்) மறுஜன்மமும்

32. ஆரஞ்சு வாண்டு தன்னி
லறைந்தனந் தந்தை கண்டம்
வேறொரு ஜன்மந் தன்னை
விளம்புவோ மரங்கந் தன்னில்
பாரிய தனவா னுக்குப்
பிறப்பனு முதற் குலத்தில்
மாரனுக் கிச்சென் மத்தி
லடைந்த புண்ணியங்க ளென்ன.

32. ஜாதகருக்கு முப்பதாவது வயதில் இவருடைய தகப்பனாருக்கு மரணம் நேரிடும். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவர் அரங்கம் என்ற ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் பெரிய பணக்காரருக்கு முதற்குலம் என்ற பிராமணர் குலத்திற் பிறப்பார். இவ்விதமாகப் பராசரர் சொல்லவே இந்த ஜன்மத்தில் ஜாதகருடைய தகப்பனாருக்கு எவ்விதமான புண்ணியங்கள் வந்து சம்பவித்தன என்று கேட்டார்.

குறிப்பு :—தகப்பனாருடைய மரணகாலத்தைப்பற்றி இந்த பாடலில் முப்பதாவது வயது என்றும், எண்பத்தொன்பதாவது ஜாதகத்தில் முப்பத்தெட்டாவது பாடலில் முப்பத்து நான்காவது வயது என்று வித்தியாசமாகவுங் கண்டிருப்பதைக் கவனிக்கவும். தகப்பனார் மறு ஜன்மத்தில் ஸ்ரீரங்கத்தில் பிராமணர் குலத்தில் தனவானுக்குப் பிறப்பார் என்று இந்தப் பாடலிலும் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் முப்பத்தாறுவது பாடலிலும் ஒற்றுமையாகக் கண்டிருப்பதையுங் கவனிக்கவும்.

33. அறமதி லிச்சை யாயு
மாபத்தைச் சிலர்க்குக் காத்தும்
பெருமடஞ் சோலை செய்தும்
புண்ணிய தலங்கள் சென்றுந்
திருமகன் வாழ்வ தாலே
ஜனிப்பனு மென்று சொன்னேம்
அருமறை முடிவி லாடு
மம்பிகை யாளே கேளாய்.

33. ஜாதகருடைய தகப்பனார் தர்மத்தைச் செய்யப் பிரியமுடையவராயும், சிலருக்குத் தங்களுடைய ஆபத்துக் காலங்களில் உதவி செய்வதும், பெரிய மடங்களையும் சத்திரங்களையும் சோலைகளையும் உண்டாக்கிக்கொண்டும் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போய்க் கொண்டும் வாழ்வதால் மறு ஜன்மத்தில் ஸ்ரீரங்கத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பார் என்று சொன்னேம். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—முப்பத்திரண்டாவது பாடலின் நான்காவது வரியையும் முப்பத்து மூன்றுவது பாடலையும் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் முப்பத்தாறுவது பாடலின் மூன்றுவது நான்காவது வரிகள் முப்பத்தேழாவது பாடல் ஆகிய இவைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஜாதகருடைய மரணகாலமும் மறு ஜன்மமும்

34. அறுபது வாறு வாண்டி லழகிய தனுசு மாதந்
திருமக னுடல மேகுஞ் செப்புவோ மிவன்பின் ஜன்மம்
மருமமாய்ச் சௌராஷ்டர வம்சம் வருவனுங் கலிங்க
[ஞட்டில்
பெருநிதி யுடைய னுகிப் புகழுடன் வாழ்வா னுவன்.

34. ஜாதகருக்கு அறுபத்தாருவது வயதில் சிறந்த தனுர் மாதம் என்ற மார்கழிமாதத்தில் மரணம் நேரிட்டு இவருடைய தேகம் அழிந்துபோய்விடும். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இரகசியமாய் சௌராஷ்டிர வம்சம் என்ற பட்டுநூல் காரர் ஜாதியில் கலிங்கதேசத்தில் பிறந்து பெரிய செல்வத்தையுடைய வராகிக் கீர்த்தியுடனும் பெருமையுடனும் வாழ்பவராவார்.

குறிப்பு :—இந்தப் பாடலையும் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் நாற்பதாவது பாடலையும் ஒப்பிட்டுப் பார்க்கவும்.

35. இன்னவன் குடும்பச் சேதி
யியம்புவோந் தாயே கேளுந்
திண்ணமாய் நாற்பா னேழு
மாண்டினில் துணைவர் வேறு
வண்ணமாய்ப் பாகம் நான்காய்
மருவிடு மென்று சொல்வோங்
கண்ணன்தன் தங்கை யாளே
கழிறின மொழிகுன் றுவே.

35. ஜாதகருடைய குடும்ப விஷயத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக. நிச்சயமாக இவருக்கு நாற்பத்தேழாவது வயதில் சகோதரர்கள் வேறு குடும்பமாகப் பிரிந்து போய்விடுவார்கள். இவருக்கு நான்கு பாகங்கள் ஒழுங்காக வந்துசேரும் என்று சொல்லுகின்றோம். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய சகோதரியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

குறிப்பு :—இந்தப் பாடலுடன் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் இருபத்தெட்டாவது பாடலை ஒப்பிட்டுப் பார்க்கவும்.

ஜனனகால தசையும் இருப்பும்

36. மைந்தனுஞ் ஜனன காலம் வருங்கேது திசை யிருப்பு
விந்தையாய் மூப்பா னெட்டுத் திங்களும் நாட்கள் ஐந்தும்
இந்தவன் தனக்குப் பூர்வபாகமுஞ் சுறுக்கிச் சொன்னேம்
பிந்திய பாகந் தன்னிற் பேசுவோம் விபர மாக.

36. ஜாதகர் பிறந்த காலத்தில் கேதும்காதசையில் இருப்பு ஆச்சரியமாக முப்பத்தெட்டு மாதங்களும், ஐந்து நாள்களும் ஆகும். இவருக்கு இவ்விதம் பூர்வபாகத்தைச் சுறுக்கமாகச் சொன்னேம். பின் பாகத்தில் விவரமாகப் பலாபலன்களைச் சொல்லுகின்றோம்.

குறிப்பு :—இந்தப் பாடலுடன் எண்பத்தொன்பதாவது ஜாதகத்தின் நாற்பத்திரண்டாவது பாடலை ஒப்பிட்டுப் பார்க்கவும். தசை இருப்பில் இரண்டு ஜாதகத்திலும் ஐந்து நாட்கள்தான் வித்தியாசமாகமிருக்கின்றன. பிறந்த நாழிகை விநாடிகளில் இரண்டு ஜாதகங்களுக்கும் ஏழரை விநாடிகள்தான் வித்தியாசம் இருக்கின்றன. இந்த இரண்டு ஜாதகங்களில் பலாபலன்கள் பெரும்பாலும் ஒற்றுமையாகவிருப்பதைக் கவனிக்கவும். ஒரு லக்கினத்தில் துருவநாடி சத்திய சம்ஹிதை இவைகளின் பிரகாரம் முன்னூறு ஜாதகங்களும் சுக்கிரநாடி பிரகாரம் அறுநூறு ஜாதகங்களும் இராசிச்சக்கர கிரகநிலை சமமந்தப் பட்டவரையில் ஒரேமாதிரியாகவிருக்கக்கூடும். பலாபலன்களில் மிகவும் சூக்ஷ்மமான விஷயங்களிலும் பலன்கள் நடக்கின்ற காலங்களிலும் சிறிது வித்தியாசம் பிறந்த காலங்களின் வித்தியாசத்தை அனுசரித்து வித்தியாசம் ஏற்படக்கூடும்.

ஜாதகம் 102

ஜனனகால கிரகநிலை

1. [1]அரியது ஐன்ம மாக [2]வலரியும் [3]புகரும் நிற்கத்
[4]தரைமக னிரண்டில் மேவச் [5]சிகண்டியு மெட்டி லாகக்
[6]கரியவன் நவம தாகக் [7]கலைதசம் [8]ஞானி [9]லாபம்
[10]அறிவனு [11]விரயம் புக்க அப்[12]பணி அஞ்சி லேற ;

1. சிம்மம் ஐன்மலக்கினமாகி அதில் சூரியனும சுக்கிரனும், இருந்து அங்காரகன் இரண்டிலும், குரு எட்டிலும், சனி ஒன்பதிலும், சந்திரன் பத்திலும், கேது பதினொன்றிலும், புதன் பன்னிரண்டிலும், இராகு ஐந்திலும் இருந்து ;

கிரகநிலை

குரு	சனி	சந்திரன்	கேது
	இராசி சக்கரம்		புதன்
			லக்கினம் சூரியன் சுக்கிரன்
ராகு			அங்காரகன்

ரோகிணி 2-ஆம் பாதம். சந்திரதசை வரு 5-6-10

குறிப்பு :— இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சனியும், ரிஷபத்திற் சந்திரனும், கடகத்திற் சூரியனும் இராகுவும், தனுசிற் சுக்கிரனும், மகரத்தில் அங்காரகனும் கேதுவும், மீனத்திற் புதனும் குருவும் ஆகும். சனி வக்கிரகதியில் இருக்கின்றார்.

---

1. சிம்மம்
2. சூரியன்
3. சுக்கிரன்
4. அங்காரகன்
5. குரு
6. சனி
7. சந்திரன்
8. கேது
9. பதினொன்று
10. புதன்
11. பன்னிரண்டு
12. இராகு

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. இந்தவாறு கிரகம் நின்ரு லியம்புவீர் பலனை யென்று
சுந்தரி கேட்கும் போது ஜயமுனி புகலு கின்ரூர்
வந்திடு மாண்பால் ஜன்மம் வடவாசல் கீழ்மேல் வீதி
சந்திரன் தலைய ணிந்த சங்கரன் மேல்பா லாகும்.

2. இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்வீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்போது ஜயமுனிவர் என்ற ரிஷியானவர் சொல்லுகின்ரூர். பிறப்பது ஆண்குழந்தையாகும் பிறந்த விடு கிழக்கு மேற்குத் தெருவில் வடக்கில் வாயிற்காலை யுடைய தாக இருக்கும். சந்திரனைத் தன்னுடைய தலையில் அணிந்துகொண் டிருக்கின்ற சிவபெருமானுடைய கோயில் மேற்குத் திக்கில் இருக்கும்.

3. நிலவாக னத்தாள் தென்மேல் நாட்டிய சமவூர் தன்னில்
வருவனை மாரஞ் ஜன்மம் வர்க்கமே கௌரி சேயாய்
பெருந்தந்தை தாயின் யோகம் பேதையர் புத்திர யோகம்
திருமகன் முன்பின் ஜன்மம் செப்புவோ மிந்நூல்
[தன்னில்.

3. புலிவாகனத்தை யுடையவளாகிய காளியம்மன் கோயில் தென் மேற்கில் இருக்கும். இப்படிப்பட்ட அடையாளங்களையுடைய ஒரு நடுத்தரமான கிராமத்தில் ஜாதகர் ஆரூவது பிறவியாக கௌரி என்ற வேளாளர் குலத்தில் பிறப்பார். இவரைப் பெற்றத் தகப்பனூர் தாயார் இவர்களுடைய யோகங்களையும், இவருடைய மனைவி, மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும், ஜாதகருடைய முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் நாங்கள் சொல்லுகின்ரோம்.

ஜாதகருடைய தகப்பனரின் விஷயம்

4. தாதையின் தார மூன்றில் தரித்திடுங் கடைமா தின்ற
நீதியாய் மைந்தன் தானு நிகழ்த்துவோ மிவனின் தந்தை
ஒதுவேன் தூணவர் தம்மை யுதித்திடு மனேக மாக
மேதினில் விருத்தி கேளாய் மெல்லி மாரிரு வாவர்.

4. ஜாதகருடைய தகப்பனருக்கு மூன்று மனைவிகளில் மூன்ரு வது மனைவி நியாயமாகப் பெற்றெடுத்தப் பிள்ளை இந்த ஜாதகராவார் என்று நாங்கள் சொல்லுகின்ரோம். தகப்பனருடைய சகோதரர்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர்கள் பலராகப் பிறப்பார்கள். ஆனல் பூமியில் விருத்தியாகக் கூடியவர்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இரண்டு சகோதரிகள் நீண்ட ஆயுளை உடையவர்களாகவிருப்பார்கள்.

5. ஆண்சுத ரைவ ராவர் ரவர்களு மொன்ரூய் வாழ்ந்து
காணவே வேரூய்ச் செல்வர் காலுக்கு வீரே ழாண்டுள்
பேணுவார் பாக மாரூய்ப் பின்பாலில் விபர மாகப்
பூணுவோந் தந்தை சேதி புகழான குடும்ப மேற்பன்.

5 ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்கள் ஐந்து பேரா வார்கள். இவர்கள் இவருடன ஒன்ரூக விருந்து வாழ்ந்து இவருக்குப பதினனகு வயதிற்குள் பிரிந்துபோய் விடுவார்கள். ஆறு பாகங் களாகச் சொத்துக்களைப் பங்கிட்டுக்கொள்ளுவார்கள். இவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின் பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்ரோம். இனிமேல் தகப்பனருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்ரோம் இவர் பெருமையான குடும்பத்தை யுடையவராவர்.

6. தனம்பூமி சேர்ப்பா னுவன் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
இனமதை யாதரிப்ப னிவன்கிராமச் செட்டு செய்வன்
வினையதை யொருவர்க் கெண்ணன் வல்லியர் மோக
[னுவன்
சினமுண்டு யுடனே தாழ்வு சிலவணி பங்கள் செய்வன்.

6. ஜாதகருடைய தகப்பனர் பணம் நிலம் ஆகிய இவைகளைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவரிடம் கால் நடைகள் விருத்தி யாகும் இவர் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார். கிராம வியாபாரத்தை இவர் செய்வார். இவர் யாருக்குங் கெடுதியை நினைக்க மாட்டார். இவர் ஸ்திரீகளின் மேல் மையல் என்ற காம ஆசையுடைய வராவார். இவருக்குக் கோபம் வரும். ஆனல் அது உடனே தணிந்து போகும். இவர் சில வியாபாரங்களைச் செய்வார்.

ஜாதகரது தகப்பனருடைய முன்ஜன்மம்

7. மத்தியி லரசு.நேர்ந்து விலகியே மைந்தர் பேரில்
குத்தமில் லாமல் செய்வார் கோதையால் நிந்தை யேற்பன்
வித்தகன் அற்ப மாதை விரும்பியே போகந் துய்ப்பன்
சுத்தமாய்ப் பூர்வந் தன்னைச் செப்புவோந் தாயே கேளும்.

7. தகப்பனருக்கு மத்திய காலத்தில் இராஜாங்கத்தில் உத்தி யோகங் கிடைத்து அதை இவர் யாதொரு தவறுகள் இல்லாமல் இராஜினமா செய்துவிட்டு அதைத் தன் பிள்ளைக்கு வாங்கிக் கொடுப் பார். (இந்த உத்தியோகம் கிராம உத்தியோகஸ்தர் உத்தியோகம் போலத் தோற்றுகிறது). தகப்பனர் ஒரு ஸ்திரீயால் அபவாதத்தை அடைவார். இவர் ஒரு தாழ்ந்த ஸ்திரீயின்மேல் காதல்கொண்டு அவளிடத்தில் சம்போகஞ் செய்வார். இனிமேல் உண்மையாக இவரு

டைய மூன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம், எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

8. அரங்கத்துக் கீழ்பா லாக வணுகிய சிறுவூர் தன்னில்
மருமமாய் வணிபஞ் செய்யும் வம்மிசந் தனிலு தித்துப்
பெருமையாய்ச் செட்டுச் செய்து பேதையு மதலை
[யுண்டாய்த்
திருமகன் வினையில் லாமற் சென்றனன் காலந் நாடு;

8. அரங்கம் என்று சொல்லப்பட்ட ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் இரகசியமாக வியாபாரஞ் செய்கின்ற குலத்திற் பிறந்து மேன்மையுடன் வியாபாரஞ்செய்து மனைவி மக்களை உடையவராகி யாதொரு பாபங்களும் இல்லாமல் இறந்து எமபட்டணத்திற்குச் சென்று;

ஜாதகருடைய குணதிசயங்கள்

9. கஞ்சனுல் வரையப் பட்டுக் கௌரியின் குலமு தித்தான்
தஞ்சமா யிவனுக் கேதான் ஜாதகன் ஜனிப்பா னுவன்
செஞ்சொல்லி னுணுக்கந் தேர்வன் தீரமா மனத்த
[னுவன்
வஞ்சியர் மோக னுவன் மால்கிற சமதே கத்தன்.

9. பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு கௌரிகுலம் என்கிற வேளாளர் குலத்திற் பிறந்தார். இப்படிப்பட்டத் தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பவராவார். ஜாதகர் வெளிப்படைச் சொற்களினுடைய சூட்சுமத்தை அறியுந்திறமை யுடையவராவர். தைரியமான மனத்தை யுடையவராக விருப்பார். இவர் ஸ்திரீகளின் மேல் மையல் என்ற காம ஆசையை யுடையவரர்வர். மகா விஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒரு விதமான நிறத்தை யுடையவர். நடுத்தரமான அளவுள்ள தேகத்தை யுடையவராவர்.

10. ஊகவான் கல்வி மேன்மை யுலகினில் செட்டு செய்வன்
தோகையர் மோக னுவன் சொல்லது யிரண்டு முண்டு
போகபாக் கியமு முண்டு பொருத்தமாய்ப் பேசு வானும்
ஆகம நுணுக்கந் தேரான் அறிவுளான் ஈகை கொஞ்சம்.

10. ஜாதகர் ஆராயுந் தன்மையுள்ள புத்திமானுக விருப்பார், சிறந்த வித்தையை யுடையவராவர், பூமியில் வியாபாரத்தைச் செய்வார். இவர் ஸ்திரீகளின்மேல் காம ஆசையை யுடையவராவர். ஸ்திரீகளும் இவர்மேல் காதல் உள்ளவர்களாக விருப்பார்கள். இவர் இரண்டு விதமான வார்த்தைகளைச் சொல்லுவார், அந்தரவது

உண்மையையும் பொய்யையும் சொல்லுவார். இவர் சுகபோகங்களையும் எல்லாவித சம்பத்துக்களையும் அனுபவிப்பார். இவர் பொருத்தமாக பேசுபவராவர். ஆகம சாஸ்திரத்தின் நுட்பங்களை இவர் அறியாதவராக விருப்பார். இவர் புத்திமான். பிறருக்குக் கொடுத்துதவி செய்யுங் குணத்தைக் கொஞ்சமாக வுடையவர்.

11. முகமதில் மாரி யாலே வந்திடும் வடிவு மேதான்
பகையாகு மிடது சோதி பாரது விருத்தி செய்வன்
அகமது வேறு செய்வ னவனியில் வறுமை காணுன்
பகையோரைத் தவிக்க வைப்பன் பங்கைய ரேகை யுண்டு.

11. ஜாதகருக்கு அம்மையினுலே முகத்தில் வடுக்கள் என்ற அடையாளங்கள் இருக்கும். இவருக்கு இடதுகண் கெடுதியாக விருக்கும். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவர் இன்னெரு வீட்டைக் கட்டுவார். இவருக்குப் பூமியில் தரித்திரமுங் கஷ்டங்களும் கிடையா. இவர் தன்னுடைய எதிரிகளைத் துன்பத்தை அடையும்படியாகச் செய்து விடுவார். இவருடைய உள்ளங்கையில் பங்கயரேகை என்ற ஒரு விதமான தாமரை ரேகை இருக்கின்றது.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

12. தன்துணை யாண்பால் நான்கு தையலு மொருத்தி தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பேசின யாண்பா லொன்று
கன்னிகை மணமு முண்டாய்க் காளைக ளில்லா ஞகித்
துன்னிய காலன் நாடு சேருவா னென்று சொன்னேம்.

12. ஜாதகருடன் கூடப் பிறந்தவர் நான்கு சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். மற்ற சகோதரர்கள் எல்லாரும் இறந்து போய் விடுவார்கள். இந்த நான்கு சகோதரர்களில் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியுமுளர். இந்தச் சகோதரியும் விவாகமாகிச் சந்ததி இல்லாமல் இறந்து எம பட்டணம் போய் விடுவாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய சகோதரியின் விஷயம்

13. மற்றவர் தீர்க்க மெய்து மறுநான்கு மூன்று வாண்டுள்
குற்றமாய்ப் பாக நான்காய்க் குடும்பமும் வேறுய்ச்
[செல்வர்
வித்தகி பெண்பால் சேதி விளம்புவோ மிருநி றத்தள்
நத்தினோர்க் குதவி செய்வள் நாயகன் தென்மேல் நேரும்.

13. மற்ற மூன்று சகோதரர்களும் தீர்க்கமான வயதையுடையவராவார். ஜாதகருக்கு இருபத்தேழு வயதிற்குள்ளே விரோதங்கள் ஏற்பட்டுச் சொத்துக்களை நான்கு பாகமாகப் பங்கிட்டுக்கொண்டு மூன்று சகோதரர்களும இவரை விட்டுப் பிரிந்து வேறு குடும்பஸ்தர்களாகப் போய் விடுவார்கள். இந்தச் சகோதரியின் விஷயத்தைச் சொல்லுகின்றோம். இவள் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாகிறத்தை யுடையவளாவள். இவள் தன்னிடம் வந்தவர்களுக்கு உபகாரஞ் செய்வாள். இவளுக்குப் புருஷன் தென்மேற்குத் திக்கிலிருந்து வருவான்.

14. சிலதுகாள் வந்த பின்பு செல்லுவாள் தாயின் ஊரில்
நலமுடன் வரனே டொத்து நாயகி வாழ்வா ளாவள்
பலமான குடும்பி யாவள் புதல்வர்க ளாண்பா லிரண்டு
தலிவிகள் மூவ ராவர் சாதித்தோ மைந்துந் தீர்க்கம்.

14. ஜாதகருடைய சகோதரி சில காலஞ்சென்ற பிறகு தன்னுடைய தாயாருடைய கிராமத்திற்குப் போய் நன்மையுடன் தன்னுடைய புருஷனுடன் ஒற்றுமையாக விருந்து வாழ்ந்து கொண்டிருப்பாள். இவள் மிக மேன்மையான குடும்பத்தை யுடையவளாவாள். இவளுக்குக் குழந்தைகளில் ஆண் இரண்டு பேர்களும் பெண் மூன்று பேர்களும் ஆக இவ்வைந்து பேர்களும் தீர்க்காயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று உறுதியாகச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணதிசயங்களும்

15. இன்னமும் விபரமாக
யியம்புவோம் பின்பா கத்தில்
மன்னவன் மணத்தின் காலம்
வரைகுறே மிருப தாண்டில்
கன்னிகை தென்மேல் நேருங்
கழறுவோ மவள்குணத்தை
நன்னய வார்த்தை கூறுவள்
நலிந்தோர்க்கு வதிவி செய்வள்

15. நாங்கள் இன்னம் விஷயங்களை அதிகமான விவரத்துடன் பின்பாகத்திற் சொல்லுகின்றோம். ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபதாவது வயதில் மனைவி தென்மேற்குத் திக்கிலிருந்து சம்பவிப்பாள். இவளுடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் நல்ல இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள், ஏழைகளுக்கு உபகாரங்களைச் செய்வாள்.

16. தோகைபோல் நிறத்த ளாவள்
சொல்லுமுன் கோபி யாவள்
பாகமாய்ப் பேசு வாளாம்
பர்த்தாவின் மனம்போல் வாழ்வள்
நாகரி கங்க ளுண்டு
நல்கிடும் நாபிச் சூடு
தோகைக்கு வயது தீர்க்கஞ்
செப்புவார் அத்திரி தாமும்.

16. ஜாதகருடைய ம்னைவி ம்யிலைப்போன்ற நிறத்தை யுடைய வளாவாள். இவள் பேசுவதற்கு முன்னே கோபத்தை யுடையவளா வள். இவள் பக்குவமாகவும் சாமர்த்தியமாகவும் பேசுகின்றவளாவாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். இவள் நாகரிகங்களை உடைய வளாக விருப்பாள், இவளுக்கு நாபிச் சூட்டு ரோகம் உண்டு. இவள் நீண்ட ஆயுளை உடையவளாவாள், இவ்விதமாக ஜயமுனிவர் சொல்லவே, அத்திரி மகரிஷியானவர் தடுத்துச் சொல்லுகின்றார்

17. மாரனுக் கிரண்டு தார மருவிடு மென்று சொல்வோங்
காரணம் யாது யென்னக் காரியு மேழோ ளகித்
தீரமாய்ச் சரத்தி லேறித் தீங்காக நீச்ச மாயும்
ஆரலு மிரண்டில் தங்க அப்புதன் விரைய மாக ;

17. ஜாதகருக்கு இரண்டு ம்னைவிமார்கள் நேரிடுவார்கள் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லவே அதற் குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, அத்திரி மகரிஷி பதில் சொல்லுகின்றார். காரி என்ற சனி ஏழாவது பரவத்திற்குடையவராகிச் சரராசியாகிய மேஷத்தில் இருந்து கொண்டு உண்மையாய் நீசத்தில் கெட்டவராக விருப்பதாலும், ஆரல் என்ற அங்காரகன் இரண்டாவது பாவத்தில் இருப்பதாலும், இந்த இரண்டாவது பாவத்திற்குடையவ ரான புதன் விரையம் என்ற பன்னிரண்டாவது பாவத்தில் இருப்ப தாலும் ;

குறிப்பு :—ஏழாவது வீட்டிற்குடையவர் சரத்தில் இருக்கும் பலனைப்பற்றித் தமிழ் ஜாதகாலங்காரத்தின் அறுநூற்றுநாற்பத் தெட்டாவது பாடலின் முதல் இரண்டு வரிகளாகிய கீழ்கண்ட வரி களை வாசிக்கவும் :—

" ஏழ் வீட்டினிற் கதிபன் சரத்தி னிற்கில்
இரும்னைவி திர மதனி லிருக்க நன்றே ".

18. இவ்வித கிரகத் தாலே யியம்பினேந் தார மிரண்டு
ஒவ்விய பராசர் சொல்வார் உறையாது தார மிரண்டு
திவ்விய புகரும் பானு சத்தமந் தன்னைப் பார்த்தும்
பவ்வமாய்ச் சேயு மேதான் பங்குவைப் பார்த்த தாலே.

18. இவ்விதமாகக் கிரகங்கள் இருப்பதால் இரண்டு மனைவி மார்கள் என்று சொல்லுகின்றோம். இதற்குப் பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் ஏற்படமாட்டார்கள். நல்லவரானப் புகர் என்ற சுக்கிரனும் பானு என்ற சூரியனும் ஏழாவது பாவத்தைப் பார்ப்பதாலும், சேய் என்ற அங்காரகன் பங்கு என்ற சனியைப் பக்குவமாகப் பார்த்திருப்பதாலும்;

19. இருமனை யணுகா தாகு மிதிலொரு சங்கை யுண்டு
திருமகன் தனக்கு முன்னே செல்லுவா ளந்த மாது
பெருஞ்சுதர் காலந் தன்னிற் பூவைக்குக் கண்டம் நேரும்
மரலியைக் காணு ளாவள் மாதுவுந் தீர்க்க ஜீவி.

19. ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் நேரிடமாட்டார்கள். ஆனால் இதில் ஒரு விசேஷம் இருக்கின்றது. மனைவி ஜாதகருக்கு முன்னமே இறந்து விடுவாள். இவளுக்குப் பிரசவ காலத்தில் கண்டம் நேரிடும், ஆனால் இவள் அப்போது எம தரிசனத்தை அடைய மாட்டாள், அம்மாவது இறந்து விட மாட்டாள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவாள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

20. புத்திர விருத்தி தன்னைப்
புகலவே பலத்தைக் காணேஞ்
சித்தமா யுதித்தா லுந்தான்
தீங்காகு மென்று சொல்வோங்
குத்ததைச் சொல்லு மென்னக்
குழவியின் தானந் தன்னில்
வித்தகரி ராகு நிற்க
வியாழமு மெட்டிற் தங்க;

20. ஜாதகருக்குச் சந்ததிகளின் விருத்தியைப் பற்றிச் சொல்லுவதற்கு யாதொரு பலமுங் இடையாது. ஒரு சமயம் குழந்தைகள் பிறந்தாலும் இறந்துவிடும் என்று சொல்லுகின்றோம். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, ஜய முனிவர் சொல்லுகின்றார். புத்திரஸ்தானமாகிய ஐந்தாவது பாவத்தில் தனகாரகராகிய ராகு பகவான் இருப்பதாலும் வியாழன் என்ற குரு எட்டாவது பாவத்தில் இருப்பதாலும்;

21. பாலர்கள் தோஷஞ் சொன்னேம் பனிமதி தசமந் தங்கச்
சாலவே புத்திர ராலே தனக்குமே கருமம் நேரும்
மாலவன் விரையம் புக்க மலிகயிறு அஞ்சில் தங்க
ஞாலமேல் முன்னூழ்த் தோஷம் நல்கிற்று பால னுக்கு.

21. புத்திர தோஷம் உண்டு என்று சொன்னேம். ஆனல் பனிமதி என்ற குளிர்ந்த சந்திரன் பத்தாவது பாவத்தில் இருப்பதால் ஜாதகருக்குத் தன்னுடைய நல்ல புத்திரர்களாலே கர்மம் நேரிடும். மாலவன் என்ற புதன் விரையம் என்ற பன்னிரண்டில் இருப்பதாலும் மலிகயிறு என்ற இராகு ஐந்தாவது பாவத்தில் இருப்பதாலும் பூமியில் ஜாதகருக்கு முன்ஜன்மத்திய வினையினல் தோஷம் ஏற்பட்டிருக்கின்றது.

ஜாதகருடைய முன்ஜன்மம்

22. என்ன வூழ் செய்தான் தந்தை
யியம்புவீர் முனியே நீர்தாம்
முன்ஜன்மம் புகலக் கேண்மோ
மூலமாங் குடியி லேதான்
வன்னிய மரபில் தோன்றி
மனைவிமைந் தருமுண் டாகி
நன்னிலங் கிருஷிகள் செய்து
நாயகன் வாழுங் நாளில்;

22. தந்தையாகிய ஜாதகர் என்ன பாவத்தைத் தன்னுடைய முன்ஜன்மத்திற் செய்தார் என்பதை, முனிவரே! நீரே சொல்லுவீராக என்று கேட்கவே, ஜயமுனிவர் சொல்லுகின்றார். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றிக் சொல்லுகின்றேம், கேட்பீராக. மூலமாங்குடி என்ற பட்டணத்தில் வன்னியருடைய ஜாதியில் இவர் ஆண்குழந்தையாகப் பிறந்து மனைவி மக்களையுடையவராகி நல்ல விளை புலங்களைப் பயிரிட்டுக்கொண்டு வாழுகின்ற காலத்தில்;

23. அந்நகர் மாரி கோஷ்ட மவன்பூசை செய்து வந்தான்
பின்னமா யோர்நள் தன்னிற் பூவையைப் போகந்
[துய்த்து
நன்னீரில் லாடா மல்தான் நாயகி கோஷ்டஞ் சென்றான்
மன்னிய வேறெரு ருத்த னுவின்நெய் யிவன்பால் தந்து;

23. ஜாதகர் அந்தப் பட்டணத்தில் உள்ள மாரியம்மன கோயிலுக்குப் பூஜை செய்துகொண்டுவந்தார். ஒரு நாள் இவர் ஒரு ஸ்திரீயுடன் சம்போகஞ் செய்துவிட்டு நல்ல ஜலத்திற் குளிக்காமல் மாரியம்மன்கோயிலுக்குப் போனர். இன்னெருவன் பசுவினுடைய நெய்யை இவரிடங் கொடுத்து;

24. திரு விளக் கேற்றச் சொன்னன்
சேத்திரந் தனக்குத் தந்தான்
மருவிற்று வந்தத் தோஷம்
மனையதில் நாகம் வாசந்
தெருவினில் திகைத்து நிற்கச்
செலுத்தினன் காலன் பக்கல்
உரைந்தது வந்தத் தோஷ
முத்தமி கேட்டி டாயே.

24. கோயிலில் திருவிளக்கு ஏற்றிவைக்கும்படியாகச் சொன்னன். ஜாதகர் அதைச் சேத்திரம் என்ற தன்னுடைய உடம்பிற்குக் கொடுத்துவிட்டான். அஃதாவது அதைத் தானே சாப்பிட்டு விட்டார். இந்தத் தோஷமானது இவரை வந்து அடைந்தது. தன்னுடைய வீட்டில் வாசஞ்செய்து கொண்டிருந்த ஒரு நல்ல பாம்பு தெருவில்போய் மயங்கி நிற்கும்போது அதைக் கொன்று எமனிடம் அனுப்பிவிட்டார். இந்தத் தோஷமும் இவரை அடைந்தது, பார்வதியம்மையே! கேட்பீராக.

25. அந்திய காலந் தன்னி லவன்சோதி குறைவ தாயுந்
தன்சுதர் மரண மாகிச் சஞ்சல மனத்த னாகித்
தென்திசைக் காலந் நாடு சென்றுமே பிரமன் லக்கம்
இன்னவன் வருவா னுவா னெய்திடும் மாரி தோஷம்.

25. ஜாதகர் முன் ஜன்மத்தில் கடைசி காலத்தில் தன்னுடைய கண்களின் பார்வை குறைந்தும் தன்னுடைய குழந்தைகள் இறந்தும் தன்னுடைய மனத்தில் கஷ்டங்களை அடைந்தும் இறந்து தெற்குத் திக்கிலுள்ள எமபட்டணம் போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார். மாரியம்மனுடைய தோஷம் இவரை வந்து அடையும்.

26. சோதியி லொன்று தோஷஞ் சுதர்களின் விருத்தி யற்பம்
ஓதுவா ரதற்குச் சாந்தி யுரகனைச் சிலையில் செய்து
நீதியா யுத்தர திக்கில் நீர்க்கரை யரசின் கீழே
பாதகன் வைப்பா னுகிற் பணிதோஷம் விலகி யேதான்;

26. ஜாதகருக்கு ஒரு கண்ணும் குற்றமுடையதாகவிருக்கும். இவருக்குப் புத்திரர்கள் கொஞ்சமாக விருப்பார்கள். இதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்றார். கல்லினுல் ஓர் ஆதிசேஷன் சிலையைச் செய்து அதை நியாயமாக வடக்குத் திக்கிலுள்ள ஒரு ஜலக்கரையின் மேலுள்ள அரசமத்தின் கீழே பாபியாகிய ஜாதகர் ஸ்தாபனஞ் செய்வாராகில் பாம்பின் தோஷம் இவரை விட்டு நீங்கி ;

27. சுதர் தீர்க்க மனைவி தீர்க்கஞ் சொற்படிச் செய்யா னகில்
உதவாது மனைவி மைந்த ருத்தமன் செய்வா னகில்
மதன்போலே யாண்பா லொன்று மங்கைமா ரிருவர்
[தீர்க்கம்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

27. ஜாதகருக்குப் புத்திரர் நீண்ட ஆயுளை உடையவராவார். இவருடைய மனைவியும் நீண்ட ஆயுளை உடையவளாவாள். நாம் சொல்லியபிரகாரம் இவர் செய்யாவிட்டால் இவருக்கு மனைவியும் மக்களும் உதவமாட்டார்கள், உயிருடன் இருக்கமாட்டார்கள். இவர் சாந்திகளைச் செய்வாராகில் மதன் என்ற மன்மதனைப்போல ஓர் அழகான ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். பரதேசிகளைக் காப்பாற்று கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரது தாயாருடைய குணதிசயங்கள்

28. அன்னையின் குணத்தைச் சொல்வே
னன்புள மனத்த ளாவள்
தன்வரன் மனத்துக் கேத்தோள்
சலித்தோர்க்கு வுதவி செய்வள்
கன்னிகை வந்த பின்பு
.கணவனுக் கதிக யோகந்
தன்னினத் தவரைக் காப்பள்
தயாளமாங் குணத்த ளாமே.

28. ஜாதகருடைய தாயாரின் குணகுணங்களைப்பற்றிச் சொல்லு கின்றேன். இவள் பிரியமான மனத்தை யுடையவளாவாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமை யாக விருப்பாள். இவள் ஏழைகளுக்கும் கஷ்டப்படுபவர்களுக்கும் உபகாரத்தைச் செய்வாள். இவள் தன்னுடைய புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு இவளுடைய கணவனுக்கு அதிகயோகம் உண்டாகும். இவள் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவாள், இரக்கமான குணத்தை யுடையவளாவாள்.

ஜாதகரது தாயாருடைய சகோதரங்களும் முன் ஜன்மமும்

29. இல்லமு மேல்பா லாகு மிவள்துணை யாண்பா லிரண்டு
வல்லிமா ரவ்வா ரூகும் மத்தியிற் சிலவே தோஷஞ்
சொல்லுவோ மிவளின் பூர்வந் தென்திசைப் பழனி
நாட்டில்
வல்லியுங் கங்கை சேயாய் வந்தன னென்று சொல்வோம்.

29. ஜாதகரது தாயாருடைய வீடு மேற்குத்திக்கில் இருக்கும். இவளுடைய சகோதரர்கள் ஆண்கள் இரண்டு பேர்களும் பெண்கள் இரண்டு பேர்களும் ஆவார்கள். இவர்களுக்கு இடையில் சில சகோதரர்கள் இறந்து போய்விடுவார்கள். இனிமேல் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். தெற்கிலுள்ள பழனி என்ற க்ஷேத்திரத்தில் இவள் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள் என்று சொல்லுகின்றேம்.

30. சுகமூள குடும்பி யாகிச் சுதர்களு மதிக முண்டாய்ப்
பகையான காலந் நாடு பரவினுள் வரன் மூன்னுக
ஐகபதி வரையப் பட்டு ஜனித்தன னிந்த மாது
மிகுசெல்வ முடைய ளாவள் வித்தகி கேட்டி டாயே.

30. ஜாதகருடைய தாயார் முன் ஜன்மத்தில் சௌக்கியமுள்ள குடும்பஸ்தையாக விருந்து அதிகமான குழந்தைகளே யுடையவளாகித் தன்னுடைய புருஷனுக்கு முன்னே இறந்து கெடுதியான எமபட்டணம் போனுள். பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்திற் இவள் பிறந்திருக்கிருள். இவள் அதிக்மான தனத்தை யுடையவளாவள், பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரின் மரணமும் (தாய்கர்மமும்) மறுஜன்மமும்

31. மைந்தன்தன் பதினே ழாண்டில்
மறலியின் பதிக்கு வன்னே
சொந்தமாய்ச் சேர்வா ளாகுஞ்
செப்புவேன் பின்ஜன்மங் கேள்
கந்தன்வாழ் தணிகை தன்னிற்
கலப்பளாஞ் சைவச் சேயாய்த்
தந்திமா முகனைப் பெற்ற
தயாபரி கேட் டிடாயே.

31. ஜாதகருடைய தாயார் ஜாதகருக்குப் பதினேழாவது வயதில் இறந்து எமபட்டணம் போய்ச் சேருவாள். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். ஆறுமுகக் கடவுள் வரசஞ் செய்கின்ற தணிகை என்கிற திருத்தணிகை க்ஷேத்திரத்தில் சைவருடைய குலத்திற் பெண் குழந்தையாகப் பிறப்பாள். யானையின் முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்தக் கிருபாநிதியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனுடைய மரணமும் (பிதிருகர்மமும்) மறுஜன்மமும்

32. இருபது வேழு வாண்டி
லிவன்தந்தை கெண்ட மெய்தும்
மறுஜன்மம் வள்ளூர் தன்னில்
வருவனுஞ் சத்திரியச் சேயாய்
அரசர்பால் தொழிலும் பெற்று
வவனுமே வாழ்வா னுவன்
அரந்தனை வளர்க்கு மாதே
அரைந்தவிம் மொழிகுன் ருவே.

32. ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதில் இவருடைய தாயார் இறந்து விடுவாள். இவர் தன்னுடைய பின்ஜன்மத்தில் வள்ளூர் என்ற கிராமத்தில் சத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் அரசாங்கத்தில் ஒரு வேலையில் இருந்து கொண்டு வாழ்பவராவார். தர்மத்தைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடா மல் நடக்கும்.

ஜாதகரது மனைவியினுடைய மரணமும், இவருடைய மரணமும் மறுஜன்மமும்

33. அன்பத் தாரு ண்டி
லவன்பாரி கண்ட மெய்தும்
இன்னவன் தனக்குச் சொல்வே
னெழுப தாண்டு தன்னில்
உன்னத தனுசு மாத
முத்தம னுடல மேகும்
பின்ஜன்மங் காளாத்தி தன்னிற்
பிறப்பனும் க்ஷத்திரிய சேயாய்.

33. ஜாதகருக்கு ஐம்பத்தாருவது வயதில் இவருடைய மனைவி இறந்து போவாள். இவருடைய மரண காலத்தைப் பற்றிச் சொல் லுகின்றேன். இவருக்கு எழுபதாவது வயதில் சிறந்த தனு மாதம் என்ற மார்கழி மாதத்தில் இவர் இறந்து இவருடைய தேகம் அழிந்து போய் விடும். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் காள ஹஸ்தி ஸ்தலத்தில் க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார்.

34. இன்னவன் குடும்பச் சேதி யியம்புவோம் வறுமை [காணன்
உன்னதச் செட்டுச் செய்வ னுலகினில் புகழு மேற்பன்
பொன்தசைக் காலந் தன்னிற் பிரபல பாக்கியஞ் சேருந்
தன்துணை யவர்க்கு மேலாய்த் தானவன் வாழ்வா னவன்.

34. ஜாதகருடைய குடும்பத்தின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்க மாட்டார். இவர் மேன்மையான சிறந்த வியாபாரத்தைச் செய்வார். இவர் பூமியில் பெருமையையுங் கீர்த்தியையும் அடைவார். பொன் என்ற குருவினுடைய தசையில் இவருக்குப் பெருஞ் செல்வம் வந்து சேரும். இவர் தன்னுடைய சகோதரர்களுடைய அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்பவராக விருப்பார்.

35. மாரனுஞ் ஜனிக்குங் காலை மதிதசை யாண் டைந்துந்
தீரமாய்த் திங்க ளாறுந் தினமது தசம மாகுங்
கூறுவோம் பலனை யாங்கள் குழவிக்குப் பிணியு முண்டு
நேரிடுந் துணைபின் விருத்தி நிகழ்த்துவோம் பூர்வ பாகம்.

35. ஜாதகர் பிறந்த காலத்தில் மதி என்ற சந்திரனின் தசையின் இருப்பு ஐந்து வருஷங்களும் ஆறு மாதங்களும் பத்து நாட்களும் ஆகும். இந்தக் காலத்தின் பலாபலன்களை நாங்கள் சொல்லுகின்றோம். ஜாதகருக்கு நோய் உண்டாகும். இவருக்குப் பின் சகோதரர் பிறந்து விருத்தியை அடைவார்கள், இவ்விதமாகப் பூர்வபாகத்தை நாங்கள் சொல்லி முடித்தோம்.

ஜாதகம் 103

ஜனனகால கிரகநிலையும் ஜனன நாட்டுச் சிறப்பும்

1. [1]மதி[2]தேளில் குரு[3]மேரு [4]மாலும்
[5]புகர் [6]பான் [7]கந்தியுர
[8]விதியன்ராகு [9]சேய் [10]சாடிமெய்
[11]ஞானி சம[12]சீய முற
[13]பதியும் சிம்மம் பலனெவ்வார்
பகருவீர் முனியே விபரமதாய்
இதுவே ஆண்பால் ஜெனன
முறும்இல்லம் வடதென் வீதியதே.

1. சந்திரன் விருச்சிகத்திலும், குரு தனுசிலும், புதனும் சுக்கிரனும் சூரியனும் ரிஷபத்திலும், சனியும் இராகுவும் அங்காரகனும் கும்பத்திலும், கேது சிம்மத்திலும், ஜன்மலக்கினம் சிம்மத்திலு மிருந்தால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதை, முனிவரே! நீங்கள் விவரமாகச் சொல்லுவீர். இந்த ஜனனமான குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் இருக்கும்.

கிரகநிலை

		சூரியன் புதன் சுக்கிரன்	
அங்காரகன் சனி ராகு	இராசி சக்கரம்		
			லக்கினம் கேது
குரு	சந்திரன்		

விசாகம் 4-ஆம் பாதம்: குருதசை வருஷம் 1-6-0.

குறிப்பு:—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும்:—மேஷத்தில் சூரியனும்,

---

1. சந்திரன்
2. விருச்சிகம்
3. தனுசு
4. புதன்
5. சுக்கிரன்
6. சூரியன்
7. ரிஷபம்
8. சனி
9. அங்காரகன்
10. கும்பம்
11. கேது
12. சிம்மம்
13. ஜன்ம லக்கினம்

ரிஷபத்தில் புதனும், மிதுனத்தில் குருவும் சுக்கிரனும், கடகத்திற் சந்திரனும், சிம்மத்திற் கேதுவும், துலாத்தில் அங்காரகனும், கும்பத்தில் இராகுவும், மீனத்திற் சனியும் ஆகும். புதனும் குருவும் வக்கிரகதியில் இருக்கின்றார்கள். புதனும் சுக்கிரனும் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்கள்.

2. அதுவே மேல்பால் வாசலு
மரன்கோஷ் டமுமே மேல்பாலில்
சதிசெய்காளி தென் பாலில்
சலமும் வடபால் சமவூராம்
அதிப னிரண்டாஞ் ஜனனமுமாய்
வருவான் வன்னிய குலமாகுஞ்
சதிராய்க் குடும்பச் சேதியெல்லாஞ்
சாற்றக் கேண்மோ சங்கரியே.

2. ஜாதகர் பிறந்த வீடு மேற்குப் பக்கத்தில் வாயிற்காலை உடையதாகும். சிவபெருமானுடைய கோயில் மேற்குத் திக்கில் இருக்கும். கெடுதியை யுண்டு பண்ணுகின்ற காளியம்மன் கோயில் தெற்குத் திக்கிலும் ஜலாசயம் வடக்குத் திக்கிலும் இருக்கும். பிறந்த ஊர் நடுத்தரமான ஊராகவிருக்கும். ஜாதகர் வணிகருடைய ஜாதியில் இரண்டாவது பிறவியாகப் பிறப்பார். இவருடைய குடும்ப விஷயங்களை எல்லாம் சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரது தகப்பனருடைய சகோதரர்களும் குணதிசயங்களும்

3. தாதைக்குத் தார மிரண்டில்
தரித்திடு முதல் மாதின்ற
நீதியாய் மைந்தன் தானும்
நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணையாண் மூன்று
போற்றுவோர்ந் தீர்க்க மாகத்
தீதிலாப் பெண்பால் காணன்
செப்புவோம் பிதாகு ணத்தை.

3. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய தகப்பனாருடைய இரண்டு மனைவிகளில் முதல் மனைவி நியாயமாகப் பெற்றெடுத்தப் பிள்ளையே ஆவார் என்று சொல்லுகின்றோம். தகப்பனாருக்கு மூன்று சகோதரர்கள் நீண்ட ஆயுளை உடையவராக விருப்பார்கள். இவருக்குச் சகோதரி கிடையாது. இவருடைய குணதிசயங்களைச் சொல்லுகின்றோம்.

4. மாநிற மூணைச்சல் நீட்சி மர்மவான் பூமி சேர்ப்பன்
தானென அகமுஞ் கொஞ்சந் தைரிய மனத்த னுவன்
வானவர் பத்தி பூணன் மாதுவின் ராசி யாகும்
உன்னத உத்தராட நாளி லுதிப்பனு மூக சாலி.

4. ஜாதகருடைய தகப்பனுர் மாநிறமும் ஒல்லியுமான நீண்ட தேகத்தை யுடையவராவார். இவர் நிலங்களையும் மனைகளையுஞ் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவருக்குத் தானென்ற அகந்தை யும் கருவமும் கொஞ்சம் உண்டு. இவர் தைரியமான மனத்தை உடையவராவர். இவர் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவ ரல்லர். இவர் ஜனனமான லக்கினம் கன்னியா லக்கினமாகும். இவர் சிறந்த உத்தராட நட்சத்திரத்தில் பிறந்தவர், இவர் விவேகமுடை யவ ராவர்.

5. சிலதுநாள் கிராமச் செட்டுச் செய்வனுஞ் சமமாங் கல்வி
தல்லிமார் மோகங் கொள்வன் தனத்தின்மே லிச்சை
[யுண்டு
கலகத்தைக் கூறு நெஞ்சங் காலிகள் விருத்தி யுண்டு
நிலையிலா வார்த்தை யுண்டு நிமலியே மேலும் கேளே.

5. ஜாதகருடைய தகப்பனுர் சிலகாலம் கிரஹ வியாபாரத் தைச் செய்வார். இவருக்கு நடுத்தரமான வித்தையுண்டு. இவர் ஸ்திரீகளின்மேல் மையல் என்ற காம ஆசையை உடையவராவர். இவருக்குப் பணத்தின்மேல் ஆசையிருக்கும். இவர் கலகத்தை உண்டு பண்ணுகின்ற வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவரிடம் கால் நடைகள் விருத்தியாகும். இவர் ஒரே விதமான வார்த்தையை உடை யவரல்லர், அஃதாவது இவர் பேச்சைப் திருப்பியும் மாற்றியும் பேசு வார், பார்வதியம்மையே! நாங்கள் இன்னுஞ் சொல்லுவதைக் கேட் பீராக.

6. அயலார் பொன்னிச்சை யுண் டடாவடி தன்னிற்
[செல்வன்
பயமிலா னெதிரிக் கஞ்சான் பாரபட் சங்கள் கூறுவன்
நயம்பட வார்த்தை யுண்டு நற்துணை விரோத மாவன்
வியமுள மனத்த னுவன் விகடவார்த் தைகளுங் கொஞ்சம்.

6. ஜாதகருடைய தகப்பனுருக்குப் பிறருடைய பணத்தின்மேல் ஆசையுண்டு. இவர் அநியாயமான காரியங்களில் தலையிடமாட்டார். இவர் யாருக்கும் பயப்படாதவர், பகைவர்களுக்குப் பயப்படமாட்டார். இவர் ஒருதலையாகப் பேசமாட்டார். இவர் இனிமையான நல்ல வார்த் தைகளை உடையவராவர். தன்னுடைய நல்ல சகோதரர்களுக்கு

விரோதியாக விருப்பார். இவர் பெருமையான மனத்தை உடையவராக் விருப்பார். இவர் இரண்டு அர்த்தங்களையுடையனவும் வேடிக்கையையுண்டு பண்ணக்கூடியவையுமான வார்த்தைகளையுஞ் சிறிது உடையவராவர்.

7. வஞ்சக வஞ்ச னுவன் வண்டிவா கனமு மேற்பன்
இன்சொலி னுணுக்கங் தேர்வ னெதிரிவாழ் மனந்தா
[ளாதான்
அஞ்சிடான் யாவ ருக்கு மவசர மனத்த னுவன்
மிஞ்சிய தவங்கள் செய்யும் வித்தகி கேட்டி டாயே.

7. ஜாதகருடைய தகப்பனுர் கபடருக்குள்ளே அதிக கபடராவார். இவர் வண்டி வாகனம் இவைகளை உடையவராவர். இவர் நயமானவையும் இனிமையானவையுமான வார்த்தைகளின் நுட்பத்தை அறிந்தவராவர். இவர் எதிரி நன்றுக வாழ்வதைப் பார்த்தால் பொறுமையுடையவராக விருப்பார். இவர் எவருக்கும் பயப்படமாட்டார். இவர் படப்படப்பான மனத்தை யுடையவராவர். அதிகமாகத் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய குணதிசயங்கள்

8. சொன்னயிக் குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னழகுளா னிருசி வப்பன்
பன்னுவான் மூன்று கல்வி
பதர்செல்லா னுணச்சல் நீட்சி
உன்னத வார்த்தை சொல்வ
னுயர்வான புத்தி யேற்பன்.

8. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் அழகுள்ளவராக விருப்பார். இரண்டுவிதமான நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை யுடையவராவர். இவர் மூன்றுவிதமான வித்தைகளை யுடையவராவர். பலனற்றகாரியங்களில் பிரவேசிக்கமாட்டார், ஒல்லியானதும் நீண்டதுமான தேகத்தை யுடையவர். இவர் மேன்மையான வார்த்தைகளைச் சொல்லுவார், மேன்மையான சிறந்த அறிவை உடையவராவர்.

9. பலவணி பங்கள் செய்வன் பாரது விருத்தி யுண்டு
சலந்தோய்வ னீகை கொஞ்சஞ் சந்தேக மனத்த னுவன்
புலவன்போல் வார்த்தை கூறுவன் போஜன வறுமை
[காணன்
தலவாசஞ் செய்வ ணுகுஞ் சாற்று மூன்கோபி யாவன்.

9. ஜாதகர் அநேக வியாபாரங்களைச் செய்வார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவர் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார், பிறருக்குக் கொடுக்குந் தன்மையைச் சிறிது உடையவராவர். இவர் சந்தேகமான மனத்தை உடையவராவர் இவர் ஒரு பண்டிதனைப்போலத் திறமையுடன் வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் சாப்பாட்டு விஷயத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போவார். பேசுவதற்கு முன்னமேயே கோபத்தை உடையவராவர்.

10. இன்னவன் செங்கை தன்னி லிலகிடும் பிரம்ம ரேகை
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பா னுக சாலி
அன்னியர் மதிக்க வாழ்வ னகத்திய வார்த்தை கூறுவன்
பொன்பணி சேர்ப்பா னுவன் பூமியில் வறுமை காணன்.

10. ஜாதகருடைய சிவந்த உள்ளங்கையில் பிரமரேகை என்ற ஒருவிதமான ரேகை உண்டு. இவர் தான் சொல்லுகின்ற வார்த்தைகளே மேன்மையானவை என்று சொல்லி நிலைநாட்டக்கூடியவராவர் இவர் விவேகமுடையவராவர். இவர் தன்னைப் பிறர்கௌரவப் படுத்தும் படியான அந்தஸ்தி லிருந்து வாழ்வார். இலக்கணச் சிறப்பமைந்த வார்த்தைகளையே பேசுவார், அஃதாவது புலவரைப்போல இலக்கணச் சிறப்புடன் பேசுவார். இவர்பணம் ஆபரணம் இவைகளைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். பூமியில் இவர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார்.

ஜாதகருடைய சகோதரர்களும் (சகோதர பாவமும்)
மூத்த சகோதரியின் குணங்களும்

11. தன்துணை மூன்பெண் ணைன்று தக்கிடுந் தீர்க்க மாக
அன்னவள் குணத்தைக் கேண்மோ வழகுளா ளுகைசாலி
கன்னிக்குப் போக முண்டு கணவனுந் தென்பால்
[நேர்வன்
தன்சுத ருதிக்கில் தீதாந் தரணியில் வறுமை காணள்.

11. ஜாதகருக்கு ஒரு மூத்த சகோதரி நீண்ட ஆயுளை உடையவளர்க விருப்பாள். இவளுடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேரும், கேட்பீராக. இவள் அழகுள்ளவளாக விருப்பாள். விவேகியாக விருப்பாள். இவளுக்குச் சுகபோகங்கள் உண்டு. இவளுக்குப் புருஷன் தென்மேற்குத் திக்கிலிருந்து வருவான். இவளுக்குக் குழந்தைகள் பிறந்தால் இறந்துவிடும். இவள் பூமியில் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அனுபவிக்க மாட்டாள்.

12. சொல்லது காணு ளாவள் சோம்பிடாள் காரி யத்தில்
வல்லிக்கு வாயில் லாத மருமத்தைச் சொல்லு மென்ன
அல்லலாய்ப் பூர்வ தோஷ மணுகிற்றுப் பாவைக்
[கேதான்
நல்கின வினையைச் சொல்வீர் நாயகி பூர்வங் கேளாய்.

12. ஜாதகருடைய மூத்த சகோதரி பேசாமல் ஊமையாக விருப்பாள். இவள் வேலை செய்வதில் சோம்பலில்லாமல் இருப்பாள். இவளுக்கு ஊமைத்தனம் நேரிடுவதற்கு இரகசியத்தின் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்றார். இவளுக்குத் தன்னுடைய முன்ஜன்மத்தில் துன்பமாகத் தோஷங்கள் ஏற்பட்டன என்று சொல்லவே, அந்தத் தோஷங்களைச் சொல்லுவீர் என்று கேட்கவே, இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக என்று முனிவர் பதில் சொல்லுகின்றார்.

13. கொங்குநா டதனி லேதான்
குதித்தனள் கோகு லத்தில்
பாங்கிக்கு மதலை யுண்டாய்ப்
பாரினில் வாழுங் காளில்
தீங்கதைப் புகலக் கேண்மோ
தேரினேர் பெரியோர் தாமுஞ்
சாங்கமாய் இவள்பா லன்னந்
தருவாயே யென்று கேட்க ;

13. ஜாதகருடைய மூத்த சகோதரி கொங்குதேசத்தில் முன் ஜன்மத்தில் இடையர் ஜாதியிற் பிறந்தாள். இவளுக்குக் குழந்தைகள் உண்டாகி இவள் பூமியில் வாழுகின்ற காலத்தில் உண்டான வினையைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. அறிவில் முதிர்ச்சி அடைந்த ஒரு பெரியார் இவளிடஞ் சென்று சாப்பாட்டைக் கொடு என்று கேட்கவே ;

14. முகவெறி கொண்டு யின்னேள் முடிக்கிலு ளதிதி தன்னை
இகபர மனது வெக்கி யியம்புவார் சாபந் தானும்
பகையாக வார்த்தை சொன்னுய்ப் பிறக்கும்பின் ஜன்மந்
[தன்னில்
உகமையாய் வார்த்தை யின்றி யுன்சுதர் கெடுதி யாயும்;

14. ஜாதகருடைய மூத்த சகோதரி கோபத்தை யுடையவளாகிப் பரதேசியைப் பார்த்துக் கடிந்து பேசினுள். இந்தப் பரதேசியானவர் தன்னுடைய மனத்தில் வெட்கத்தையும் துன்பத்தையும் உடையவராகிச் சாபத்தைக் கொடுக்கின்றார். "நீ என்பேரில் விரோதமான கெட்ட வார்த்தைகளைச் சொன்னுய். பிறக்கப்போகின்ற உன்னுடைய மறு ஜன்மத்தில் நீ வார்த்தைப் பேசமுடியாத ஊமையாக விருக்கக் கடவாய். உனக்குக் குழந்தைகளும் நாசமாகி";

15. தரணியில் வாழ்வா யென்றூர் தங்கிற்று வந்தத் தோஷம்
அரிவையு மந்தி யத்தி லதிகமாய் வாய்ப்புண் கண்டு
மரலியின் பதிக்குச் சென்று மறையவன் வரையப் பட்டு
உரைந்தவ னிந்த மாது வுயர்வான அதிதி சாபம்;

15. பூமியில் வாழக்கடவாய்" என்று ஜாதகரின் மூத்தச் சகோதரியைப் பார்த்துச் அந்தப் பரதேசி சொன்னுர். அந்தச் சாபம் இவளை அடைந்தது. இவள் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் வாயில் புண்கள் அதிகமாக வுண்டாகி இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இவள் பிறந்திருக்கின்றுள். மேன்மை தங்கிய அந்தப் பரதேசியினுடைய சாபத்தின் பயனை;

16. மொழிகாணுள் சுதர்கள் தோஷ
முலகினில் வறுமை காணுள்
பழிதீரச் சாந்தி யொன்று
பகருவீர் முனியே நீர்தாம்
வழிபடு அடியார் சாபம்
விலகாது என்று சொல்வோம்
அழிவது வழிந்தே தீரு
மம்பிகை யாளே கேளாய்.

16. ஜாதகருடைய சகோதரி வார்த்தைகளைச் சொல்லச் சக்தியில்லாமல் ஊமையாக விருப்பாள். இவளுக்குப் புத்திரதோஷம் உண்டு. இவள் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடைய மாட்டாள். முன் ஜன்மத்திய சாபம் நீங்குவதற்காக, முனிவரே! நீரே ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்க, முனிவர் பதில் சொல்லுகின்றார்.

கடவுளைத் தொழுகின்ற பரதேசியினுடைய சாபம் நீங்காது என்று சொல்லுகின்றோம். கெடுதி உண்டாவது உண்டாகியே தீரும், பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய இளைய சகோதரரின் குணதிசயங்கள்

17. பாலகன்பி னுண்பால் சேதி
பகருவோர் தாயே கேளும்
ஞாலங்கள் விருத்தி செய்வன்
நயப்புறுந் தந்திர வார்த்தை
சீலன்போல் வெளிம யக்கன்
சிலவணி பங்கள் செய்வன்
காலத்தை யறிந்து சொல்வன்
கபடிலா மனத்த னுமே.

17. ஜாதகருடைய இளைய சகோதரனுடைய விஷயத்தைச் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக. இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார், நன்மையாகவும் இனிமையாகவும் பேசுவார். இவர் உபாயத்தையுடைய வார்த்தை களைச் சொல்லுவார். இவர் நல்லொழுக்கத்தை யுடையவரைப்போல வெளியே காட்டிக்கொண்டு பிறரை மயக்குந் தனமையுடையராவர். இவர் சில வியாபாரங்களையும் செய்வார். இவர் காலத்தின் தன்மையை நன்றாகத் தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்தாற்போலப் பேசுவார். இவர் வஞ்சனை கள்ளம் கபடம் ஆகிய இவைகள் உள்ள மனத்தை உடையவரல்லர்.

18. பாரியு மொன்றே யாவள் பாவையுந் தென்பால் நேர்வள்
கூறுவோஞ் சுதரா ணிரண்டு கோதைமார் மூவ ராகும்
மாரனு மொன்றுய் வாழ்வன் மானிலம் வறுமை காணன்
தீரமா மனத்த னுவன் தீர்க்கமாம் வயது மேற்பன்.

18. ஜாதகருடைய இளைய சகோதரருக்கு மனைவி ஒருத்தியே ஆவள். இவள் தெற்குத் திக்கிலிருந்து வந்து நேரிடுவாள். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் உண்டு. இவர் தன்னுடைய சகோதரனுடன் ஒன்றுகக் கூடி இருந்து வாழ்வார். இவர் இந்தப் பெரிய பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவர் தைரியமான மனத்தை உடையவராவார். இவர் நீண்ட ஆயுளை உடையவராக விருப்பார்.

ஜாதகரது விவாகமும் மனைவியின் குணமும்

19. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருப தாண்டில்
தென்திசை பாரி வாய்க்குஞ் செப்புவோ மவள்
[குணத்தைத்
தன்வரன் மனம் போல் வாழ்வள் சாந்தமுங் கோபமுண்டு
பின்ன மில்லாத தேகி பொருத்தமாய்ப் பேச வல்லள்.

19. ஜாதகரது விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபதாவது வயதில் தெற்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சேருவாள். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற் போல ஒற்றுமையாகவிருந்து வாழ்வாள். இவளுக்குச் சாந்தமும் கோபமும் ஆக இவ்விரண்டு குணங்களும் உண்டு. இவள் யாதொரு அவயக்குறைவும் இல்லாத தேகத்தை உடையவள். இவள் விஷயங்களுக்குப் பொருத்தமாகப் பேசுவதில் கெட்டிக்காரியாக விருப்பாள்.

20. மாதுக்கு வயது தீர்க்கம் மரித்துமே பராசர் சொல்வார்
சாதிப்போந் தாரம் மூன்று சனிகுசன் பணியின்
[தோஷம்
தீதிலா வதிஷ்டர் சொல்வார் சௌமியன் பரிதி வெள்ளி
ஓதிய தசத்திற் தங்க ஒருதாரந் தீர்க்க மென்றோம்.

20. ஜாதகருடைய மனைவி நீண்ட ஆயுளை உடையவளாவள். இவ்விதமாக முனிவர் சொல்லவே பராசர முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். இவருக்கு மூன்று மனைவிமார்கள் சேருவார்கள் என்று உறுதியாகச் சொல்லுகின்றோம். சனி, குஜன் என்ற அங்காரகன் பணி என்ற இராகு இம்மூவராலும் தோஷம் உண்டாகும். இதற்குக் குற்றமில்லாத வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார். சௌமியன் என்ற புதனும் பரிதி என்ற சூரியனும் வெள்ளி என்ற சுக்கிரனும் பத்தாவது பாவத்தில் இருப்பதால் ஒரே ஒரு மனைவி என்றும் இந்த மனைவி நீண்ட ஆயுளை உடையவள் என்றுஞ் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

21. மங்கையு மன்னை யிரண்டு மருவிடு மதுவே யின்றி
இங்கிவள் யோக தார மியம்புவோஞ் சுதர் பலத்தைச்
சிங்கம்போ லாண்பா லொன்று தேவிமா ரிருவ ராகுந்
தங்கிடும் மூன்றுந் தீர்க்கம் ஜெயமுனி தடுத்துச்
[சொல்வார்.

21. ஜாதகருடைய மனைவிக்கு இரண்டு தாய்மார்கள் உண்டு. இதுவுமில்லாமல் இவள் யோகமுள்ளவாக விருப்பாள். இனிமேல்

சந்ததிகளின் பலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். தம்பதிகளுக்குச் சிங்கத்தைப் போல வலிவும் பராக்கிரமமும் உள்ள ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் மூன்று குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவ்விதமாக முனிவர் சொல்லவே ஜயமுனிவர் மறுத்துச் சொல்லுகின்றார்.

22. கருமத்தை மதிசேய் பார்க்கக்
காஜைகள் விருத்தி யெவ்வாறு
உருமபுத் திரனு மெவ்வாறு
வுதிக்குங்கா ரணங்கள் சொல்வீர்
குருவுமே யாட்சி யாலே
கூறிலேஞ் சுதர்கள் விருத்தி
மருவாது வந்த வார்த்தை
மதிநீச மாகி யேதான் ;

22. கர்மஸ்தானமாகிய பத்தாவது வீட்டை மதி என்ற சந்திரனும் சேய் என்ற அங்காரகனும் பார்ப்பதாலே குழந்தைகள் எவ்விதமாக உண்டாகி விருத்தியாவார்கள் ? கர்மஞ் செய்வதற்கு எவ்விதமாகப் புத்திரன் உண்டாவார் ? காரணத்தை முனிவரே ! நீர் சொல்லுவீர் என்று தடுத்துக் கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்றார். குரு ஆட்சியாய் இருப்பதால் குழந்தைகள் பிறந்து விருத்தியாவார்கள் என்று சொன்னோம் என்று முனிவர் சொல்லவே, இன்னொரு முனிவராகிய ஜயமுனிவர் மறுபடியும் தடுத்துச் சொல்லுகின்றார். நீர் சொல்லுகின்ற வார்த்தைகள் பிரகாரம் நடக்காது. மதி என்ற சந்திரன் நீசமாகி இருப்பதாலும்;

23. குடும்பத்தோன் தன்னைப் பார்க்கக் குலவாது குழவி
[யென்றோர்
திடமதாய்ப் பூர்வந் தன்னிற் தீவினை யதிகஞ் செய்தான்
விடம்போலே யிச்ஜன் மத்தில் மேவிற்று வந்தத் தோஷம்
அடைவுடன் பூர்வந் தன்னை யறிவீப்பீர் முனியே நீர்தான்.

23. இந்தச்சந்திரன் குடும்பாதிபதியை (புதனை)ப் பார்ப்பதாலும் குழந்தைகள் உண்டாகமாட்டார்கள் என்று சொல்லுகின்றோம். ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் பாவத்தை அதிகமாகவும் வலிவாகவும் செய்திருக்கின்றார். அந்தப் பாவங்கள் விஷத்தைப்போல இவரை இந்த ஜன்மத்தில் வந்து அடைந்திருக்கின்றன. இவ்விதமாக ஜயமுனிவர் சொல்லவே இவருடைய முன் ஜன்மத்தைப்பற்றி முனிவரே ! நீரே சொல்லுவீராக என்றார்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

24. பாலகன் பூர்வஞ் சொல்வேன் பழகிநா டன்னி லேதான்
சீலமாங் கங்கை சேயாய் ஜனித்துமே செட்டுச் செய்து
ஞாலம்மேல் வாழு நாளில் நல்கின விணையைக் கேண்மோ
சாலவே யன்னை யைத்தான் தன்பாரி சொல்லக் கேட்டு ;

24. ஜாதகருவடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் பழனி ஸ்தலத்தில் நல்லொழுக்கமுடைய கங்கைகுலம் என்ற வேளாளர் ஜாதியில் ஓர் ஆண் குழந்தையாகப் பிறந்து வியாபாரத்தைச் செய்துகொண்டு பூமியில் வாழுகின்ற காலத்தில் இவருக்குச் சம்பவித்தப் பாவத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இவர் நல்லவளாகிய தன்னுடைய தாயாரைத் தன்னுடைய மனைவியின் பேச்சைக் கேட்டு ;

25. மிஞ்சின வார்த்தை பேச விளம்புவா ளன்னை தானுந்
துஞ்சிடுங் குழவி பாரி தோன்றுபின் ஜன்மந் தன்னில்
கொஞ்சாது குழவி தானுங் கூறினு ளன்னை தானும்
நஞ்சுபோ லந்தச் சாபம் நல்கிற்றுப் பால னுக்கு.

25. ஜாதகர் சொல்லத்தகாத அதிகமான வார்த்தைகளைச் சொல்லித் துன்பப்படுத்தியதால் இவருடைய தாயார் சொல்லுகின்றுள். "உன்னுடைய குழந்தைகளும் மனைவியும் இனி வரப்போகின்ற உன்னுடைய பின் ஜன்மத்தில் இறந்து போகக்கடவார்கள். உனக்குக் குழந்தைகள் கொஞ்சுவதைக் கேட்கும் பாக்கியம் கிடையாது" என்று சொன்னுள். இந்தச் சாபமானது விஷத்தைப்போல ஜாதகரை அடைந்தது.

26. இதுவன்றி வேறு சொல்வேன்
இவன்பாரி தன்னல் தோஷம்
அதுவிப ரங்கள் சொல்வேன்
அவள்பூர்வந் தில்லை தன்னில்
அதிபதி யிக்கு லத்தில்
மருவியே வாழுந் நாளில்
சதிசெயுங் கருப்பன் சாமி
தங்கிற்றுக் கொல்லை தன்னில்.

26. இந்தத் தோஷமும் அல்லாமல் இன்னொரு தோஷத்தையுஞ் சொல்லுகின்றேன். இவருடைய மனைவியாலும் தோஷம் ஏற்பட்டிருக்கின்றது. இதன் விவரத்தையுஞ் சொல்லுகின்றேன். இவள் தன்னுடைய முன்ஜன்மத்தில் தில்லை என்ற சிதம்பரத்தில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலமாகிய வன்னியர் குலத்திற் பிறந்து வாழுகின்ற

காலத்தில் கெடுதியை உண்டு பண்ணுகின்ற கருப்பன்சாமி என்கின்ற முனீசுவரன் இவளுடைய வீட்டின் கொல்லையில் வாசஞ் செய்து கொண்டிருந்தது.

27. முன்னோர்கள் தோத்த ரிப்பார்
முதல்வியுந் தொழாமல் நின்றாள்
துன்முனி புகலுஞ் சாபந்
தொழாமலே நின்ற பாவி
உன்சுதர் யாவுங் கொல்வே
னுதிக்கும்பின் ஜன்மந் தன்னில்
பின்னமாய்ச் சுதரைச் செய்வேன்
புகன்றது முனியுந் தானும்.

27. இவளுடைய முன்னோர்கள் அந்த முனீசுவரனைப் பூஜை செய்வார்கள். ஆனால் இவள் அதனைப் பூஜிக்காமல் இருந்து விட்டாள். இந்தக் கெட்ட முனீசுவரன் சாபத்தைக் கொடுக்கின்றார். "என்னைப் பூஜை செய்யாமல் இருக்கின்ற பாபியாகிய உனக்கு மறுஜன்மத்தில் உண்டாகின்ற குழந்தைகள் எல்லாவற்றையும் நான் கொன்று விடுவேன். குழந்தைகளை நாசஞ் செய்து விடுவேன். கர்ப்பப் பிரஷ்டங்களை உண்டு பண்ணுவேன்" என்று அந்த முனீசுவரன் சொன்னார்.

28. மங்கைக்கு வந்தச் சாப மருவிற்று வென்று சொல்வோஞ்
சங்கையாய்ப் பால னுக்குச் சாற்றுவோம் பிரமன் லக்கம்
இங்கிவ னுதிப்பா னவ னிருவர்க்கு முன்னூழ்ச் சாபந்
தங்கிற்று வந்தச் சாபஞ் சங்கரி கேட்டி டாயே.

28. ஜாதகருடைய மனைவிக்கு அந்த முனீசுவரனுடைய சாபம் சம்பவித்தது என்று, சொல்லுகின்றோம். இவ்விதமாக ஜாதகருக்குத் தன்னுடைய மனைவியாலும் தோஷம் நேர்ந்திருக்கின்றது. ஜாதகர் இறந்து பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார். தம்பதிகள் இருவரையும் முன்ஜன்மத்திய சாபமும் பாபமும் வந்து அடைந்தன. பார்வதியம்மையே! கேட்பீராக.

29. கன்னிசெய் வினைக ளுக்குக்
காதலி பீஜந் தன்னைப்
பொன்றேக்கில் கீறி யேதான்
பீஜத்தைச் சகஸ்திரஞ் சொல்லி
இன்னவ ணிந்து கொள்ள
இலகிடுந்தென் முனியோன் சாபம்
மன்னன்செய் வினைக ளுக்கு
வரைகிரேங் கிரியை தானே.

29. ஜாதகருடைய மனைவி செய்த பாவத்திற்குப் பீஜம் என்ற ஆண்குறியை ஒரு பொன்ரேக்கில் எழுதி ஆயிரம் நாமங்களைச் சொல்லி பூஜை செய்து அந்த ரேக்கை இவள் அணிந்து கொண்டால் அந்த முனீசுவரனுடைய சாபம் விலகிப் போய் விடும். ஜாதகர் செய்த பாபங்களுக்குச் சாந்தியைச் சொல்லுகின்றோம்.

30. மனைவியுந் தானு மாக வருணமா நகரஞ் சென்று
கனமான தீர்த்தந் தோய்ந்து கட்கிரி வலமாய் வந்து
சினமில வர்ச்சித் தேத்திச் சிவனடி பணிந்து வின்னோர்
பிணையிலா மூவேழ் பேர்க்குப் போஜன மளித்த
[பின்னே;

30. ஜாதகரும் இவருடைய மனைவியும் அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்திற்குப் போய் அவ்விடத்திலுள்ள மேன்மையான பெரிய தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து மலையை வலமாகச் சுற்றி வந்து கோபமில்லாமல் பூஜை செய்தும் தொழுதும் பிறகு குற்றமில்லாத இருபத்தொரு பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டுப் பிறகு;

31. மாத மோ ரேகாதசி மாரனும் விரதங் கொள்ள
தீதுகள் விலகி யேதான் ஜனித்திடுஞ் சுதர்கள் தாமும்
ஓதினேம் மூவேழ் பாட்டி லுரைத்தது போலே நேருஞ்
சூதென்று செய்யா லகிற் சுதர் தோன்றூர் தோன்றிற்
[றீதாம்.

31. ஜாதகர் ஒவ்வொரு ஏகாதசி திதி தினத்திலும் விரதம் இருந்து கொண்டு வந்தால் சாபங்கள் நிவிர்த்தியாகிக் குழந்தைகள் பிறக்கும். இருபத்தோராவது பாட்டில் நாம் முன்னமே சொல்லியுள்ள பிரகாரம் குழந்தைகள் உண்டாகும். நாம் சொல்லிய சாந்திகளைப் பொய் என்று எண்ணி ஜாதகர் செய்யாவிட்டால் குழந்தைகள் பிறக்கா, ஒரு சமயம் பிறந்தாலும் இறந்து விடும்.

ஜாதகருடைய தாயாரின் குணாதிசயங்கள்

32. மாதிரு குணத்தைக் கேண்மோ மாந்துளி ரொத்த தேகி
சூதிலாள் வறுமை காணாள் துறவிக்கு மன்ன மீவாள்
தீதான பித்த வாயு செரிந்திடுங் கொஞ்ச மாக
வேதனை யெண்ணு நெஞ்சம் விகடமாய் வார்த்தை
[கூறாள்.

32. ஜாதகரது தாயாருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். மாம்ரத்தின் துளிரினுடைய நிறத்தைப் போன்ற ஒரு விதமான சிவப்பு நிறத்தையுடைய தேகத்தை யுடையவளாவாள்,

இவள் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை உடையவளல்லள். இவள் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். இவள் எல்லாவற்றையும் துறந்தவர்களாகிய பரதேசிகளுக்குச் சாப்பாடு போடுவாள். இவளுக்குக் கெடுதியை யுண்டு பண்ணுகின்ற பித்தவாயு ரோகம் சிறிது நேரிடும். இவள் யாருக்கும் கெடுதியை நினைக்காத மனத்தை உடையவளாவள். இவள் இரண்டு அர்த்தங்களை கொடுக்கக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டாள்.

ஜாதகரது தாயாருடைய சகோதரர்களும் (சகோதர பாவமும்)
முன் ஜன்மமும்

33. இல்லமுந் தென்பா லாகு மிவள்துணை யாண்பா லிரண்டு
வல்லிமார் தோஷ மெய்தும் வரைகிரே மன்னை பூர்வம்
எல்லையி லுயர்வ தான யெழில்கொங்கு நாட்டில் மாரன்
வல்லியுஞ் சேடர் வம்சம் மருவினு ளென்று சொன்னேம்.

33. ஜாதகரின் தாயாருடைய வீடு தெற்குத்திக்கில் இருக்கும். இவளுக்குச் சகோதரர் இரண்டு பேராவர். இவளுக்குச் சகோதரிகள் கிடையாது. இவளுடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். பூமியில் மேன்மையானதும் அழகியதுமான கொங்கு தேசத்தில் இவள் சேடர் என்ற ஒருவித வேலைக்கார ஜாதியில் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம்.

34. வரனுடைத் தங்கை பேரில்
வருணித்தாள் சிலது வார்த்தை
அரிவையு மனது வெக்கி
யறைகிரள் சாபம் தானுங்
குறைவார்த்தை யென்மேல் சொன்னையக்
கூறும்பின் ஜன்மந் தன்னில்
மருவாது துணைப்பெண் ணுந்தான்
மைந்தர்பெண் தீதே யாகும்.

34. ஜாதகருடைய தாயார் தன்னுடைய புருஷனின் இளைய சகோதரியின்மேல் சில தகாத வார்த்தைகளை விசாலமாகச் சொல்லிப் பிரசங்கஞ் செய்தாள். அதன்மேல் இந்தச் சகோதரி தன்னுடைய மனத்தில் வெட்கத்தையடைந்து சாபத்தைக் கொடுக்கின்றாள். "நீ என்மேல் குற்றமான வார்த்தைகளைச் சொன்னாய். உன்னுடைய பின் ஜன்மத்தில் உனக்குச் சகோதரிமார்கள் உண்டாகக்கூடாது. உனக்கு ஆண் குழந்தைகளும் பெண் குழந்தைகளும் இறந்துவிடக் கடவது" என்று சொல்லியதுமன்றி ;

35. இன்னமும் பலவாறு சொன்னு
ளெய்திற்று வந்தத் தோஷ
கன்னிகை மரண மாகிக்
கலந்தன ளிக்கு லத்தில்
தன்துணைப் பெண்பால் காணுள்
தன்சுதர் கன்னி குற்றம்
முன்பழி நேர்ந்து தென்றேரும்
முதல்வியே கேட்டி டாயே.

35. அந்தச் சகோதரி இன்னமும் பலவிதமான வார்த்தைகளைச் சொன்னுள். அந்தச் சாபம் ஜாதகருடைய தாயாரை அடைந்தது. இவள் இறந்து இந்த ஜன்மத்தில் வடுகர் குலத்தில் பிறந்திருக்கின்றுள். இவளுக்குச் சகோதரிகள் இல்லை. இவளுடைய பிள்ளைகளும் பெண்களும் இறந்து விடுவார்கள். இவளுக்கு முன்ஜன்மத்திய வினை வந்து சம்பவித்தது என்று சொல்லுகின்றேரும், தலைவியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது மறு ஜன்மமும், தகப்பனுருடைய முன்ஜன்மமும்

36. மருஜன்மம் பாண்டி தன்னில்
வருவளாங் கங்கை சேயாய்த்
திருமகன் தந்தை பூர்வஞ்
செப்புவோ மினிமே லாகக்
குறவர்வாழ் மலைநா டன்னிற்
குதித்தனன் சத்திரி யனுக
அரசர்பால் தொழிலும் பெற்று
வவன்பாரி சுதர்க ளுண்டாய்;

36. ஜாதகருடைய தாயார் தன்னுடைய பின்ஜன்மத்தில் பாண்டிய தேசத்தில் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். ஜாதகருடைய தகப்பனரின் முன் ஜன்மத்தைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றேரும். குறவர்கள் வசிக்கின்ற மலை தேசத்தில் தகப்பனர் க்ஷத்திரிய குலத்தில் ஆணுகப் பிறந்து இராஜாங்கத்தில் ஒரு வேலையை யுடையவராகியும் மனவிமக்களை யுடையவராகியும்;

37. சுகமுள குடும்பி யாகிச் சென்றனன் காலன் நாடு
தகமையாய்ப் பிரமன் லக்கஞ் ஜனித்தன னிவனே
[யென்றேரும்
பகைவரும் ஞாதியாலே பகருவீர் காலந் தன்னை
உகமையா யிருபா னேழாண் டினில் நேரு மென்றேரும்.

37. சௌக்கியமான குடும்பஸ்தராகவுமிருந்து கொண்டு பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்த் தகுந்தபடியே பிரமலிபியுடன் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் இவர் என்று சொல்லுகின்றோம். இவருக்குத் தன்னுடைய பங்காளிகளால் விரோதம் ஏற்பட்டுக் கெடுதி உண்டாகும். இது ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதில் நேரிடும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகரது தகப்பனருடைய மறுஜன்மம்

38. அரசன்பா லாண்டு மூன்று மலைவராஞ் செலவு னேகம்
விரைவினில் சமம தாகும் விளம்புவோம் பின்பால் சேதி
மறுஜன்மந் தணிகை மேல்பால் வளமையாய்ச் சிறுவூர்
[தன்னில்
உரைவனும் ரெட்டி வம்ச முத்தமி கேட்டி டாயே.

38. ஜாதகருடைய தகப்பனருக்கும் இவருடைய பங்காளிகளுக்கும் அரசாங்கத்தாருடைய நியாய ஸ்தலத்தில் மூன்று வருஷங்கள் வரையிலும் வியாஜ்யங்கள் நடக்கும். தகப்பனர் அலைந்து திரிந்து அநேக செலவுகளைச் செய்து கடைசியில் சீக்கிரத்தில் சமாதானஞ் செய்து கொள்ளுவார். இதனுடைய விவரத்தைப் பின்னால் சொல்லுகின்றோம். தகப்பனர் தன்னுடைய பின்ஜன்மத்தில் தணிகை என்ற திருத்தணி க்ஷேத்திரத்திற்கு மேற்கேயுள்ள செழிப்பான ஒரு சிறிய கிராமத்தில் ரெட்டியாருடைய குலத்திற் பிறப்பார், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரது மரணமும் (பிதிர்கர்மமும்)
தாயாரது மரணமும் (மாதிர் கர்மமும்)

39. ஆறாறு வொன்றா மாண்டி லவன்தந்தை கண்ட மெய்துஞ்
சூரியன் தசையி லேதான் கூடிடுஞ் சனியின் புத்தி
தீரமாய் நாற்ப தாண்டில் செப்புவோ மன்னை கண்டம்
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

39. ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் இவருடைய தகப்பனர் இறந்து விடுவார். அப்போதுக் கூரியன் என்ற புதனுடைய தசையில் சனியினுடைய புக்திகாலம் ஆகும். நிச்சயமாக ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றோம். பூமியில் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மரணகாலமும் மறு ஜன்மமும்

40. அன்பது வொன்ப தாண்டி லானிமா தத்தி லேதான்
இன்னவ னுடல மேகு மியம்புவோம் பின்ஜன் மத்தைத்
தென்திசைச் சேது தன்னில் ஜனிப்பனஞ் சைவச் சேயாய்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

40. ஜாதகர் தனக்கு ஐம்பத்தொன்பதாவது வயதில் ஆனி மாதத்தில் இறந்து இவருடைய தேகம் அழிந்து போய் விடும். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தெற்குத் திக்கிலுள்ள சேது ஸ்தலத்தில் சைவ குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். மேன்மையான சிறந்த யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரது குடும்ப விஷயங்கள்

41. வந்தவன் குடும்பச் சேதி வரைகிறே மினி மேலாக
விந்தையாய்ச் செட்டுச் செய்வன் மேதினி விருத்தி யுண்டு
தன்தன முடைய னவன் சல்லியங் கொள்ளா னவன்
பிந்திய துணைவன் வேறாய்ப் போவனு நாற்பா னிரண்டில்.

41. ஜாதகருடைய குடும்ப விஷயங்களைப் பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். இவர் ஆச்சரியமான முறையில் வியாபாரங்களைச் செய்வார். இவரிடம் நிலங்கள் விருத்தியடையும். இவர் சுயார்ஜித மாகச் சம்பாதித்த பணத்தை யுடையவராவர். இவர் கடன் வாங்க மாட்டார். இவருடைய இளைய சகோதரர் நாற்பத்திரண்டாவது வயதில் குடும்பத்தை விட்டுப் பிரிந்து வேறு குடும்பஸ்தராகப் போய் விடுவார்.

ஜனன காலத்தின் தசையும் இருப்பும்

42. இன்னமும் விபர மாக
யியம்புவோம் பின்பா கத்தில்
அன்னவன் ஜனன கால
மந்தணன் தசை யிருப்புச்
சொன்னவ னண்டு ஒன்றுந்
திங்களு மாற தாகும்
முன்பாகம் புகன்றோம் யாங்கள்
முதல்வியே கேட்டி டாயே.

42. இன்னும் விவரமாகப்பலாபலன்களைப் பின் பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகருடைய ஜனன காலத்தில் அந்தணன் என்ற குருபகவானுடைய தசையின் இருப்பு ஒரு வருஷமும் ஆறு மாதங்களும் ஆகும். இவ்விதமாக முதல் பாகத்தை நாங்கள் சொல்லி முடித்துவிட்டோம். தலைவியாகிய பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 104

ஜனன கால கிரக நிலை

1. [1]அரியது ஜன்ம மாக [2]அம்புலி ராகு விரண்டில்
[3]பிருகுவும் நாலி லாகப்[4]பானுவும் ஐந்தி லாகக்
[5]கரியவன் புதன்[6]சேய் ஆறில் [7]கனகனு மேழி லாக
உரைகுவீர் பலனை யென்று வுத்தமி கேட்கும் போது ;

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகிச் சந்திரனும் இராகுவும் இரண்டிலும், சுக்கிரன் நான்கிலும், சூரியன் ஐந்திலும், சனியும் புதனும் அங்காரகனும் ஆறிலும், குரு ஏழிலும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதி யம்மையார் கேட்கும்போது;

கிரகநிலை

கேது			
குரு	இராசி சக்கரம்		
புதன் அங்காரகன் சனி			லக்கினம்
சூரியன்	சுக்கிரன்		சந்திரன் ராகு

உத்திரம் 3-ஆம்பாதம்: சூரிய தசைஎல் 1-10-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற் சனியும் மிதுனத்திற் குருவும், கன்னியிற் கேதுவும், துலாத்திற் செவ்வாயும், புதனும், சுக்கிரனும், விருச்சிகத்திற் சூரியனும், கும்பத்திற் சந்திரனும், மீனத்தில் இராகுவும் ஆகும். புதன் அஸ்தமனம் அடைந்தும் வக்கிரகதியை அடைந்தும் இருக்கின்றார். இராசிச் சக்கரத்தில் கேது மீனத்தில் இருக்கின்றார் என்பதைப் பாடலில் சொல்லாமல் இருந்தாலும் இது தானாகவே விளங்கும்.

---

1. சிம்மம்
2. சந்திரன்
3. சுக்கிரன்
4. சூரியன்
5. சனி
6. அங்காரகன்
7. குரு

ஜனன நாட்டுச் சிறப்பு

2. அத்திரி புகலு கின்ரு ராணது ஜனன மாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் மேல்வாடை வடதென்
[வீதி
உத்தரந் தந்தி கோஷ்ட மோங்காளி வடவாச லாகுஞ்
சித்தசன் தனையெ ரித்த தேவனும் வடகீ ழாவன்.

2. அத்திரி மகரிஷியானவர் சொல்லுகின்ரூர். பிறந்த குழந்தை ஆண் குழந்தை ஆகும். ஜாதகரது பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லு கின்றேன். வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேலண்டை வாடை யில் இருக்கும். காளியம்மன் கோயிலும் வடக்கே வாயிற்காலை உடைய தாக விருக்கும். மன்மதனை எரித்த பரமசிவனுடைய கோவில் வட கிழக்குத் திக்கில் இருக்கும்.

3. மாரியுந் தென்கீழ்த் தங்கும்
மால்கோஷ்டந் தென்பா லென்ரேங்
கூறினேஞ் சமவூராகுங்
குலமது கங்கை சேயா
யரிபணி யிரண்டாஞ் ஐன்மம்
மேவுவா னென்று சொல்வோம்
ஆறுமா முகனைப் பெற்ற
அம்பிகை யாளே கேளாய்.

3. மாரியம்மன் கோயில் தென்கிழக்குத் திக்கில் இருக்கும் என்று சொல்லுகின்ரோம். பிறந்த ஊர் நடுத்தரமான ஊராகும். பிறந்த குலம் கங்கைகுலம் என்ற வேளாளர் குலம் ஆகும். இவர் இரண்டாவது பிறவியாகவும் ஆண் குழந்தையாகவும் பிறப்பார் என்று சொல்லுகின் ரோம். ஆறு பெரிய முகங்களையுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத் தப் பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் தூணை வத்தி லாணிரெண்டு கன்னி நான்கு
இந்தவாறு விருத்தி யென்ரே மிவர்பலன் பின்பால்
[சொல்வேன்
எந்தையே தந்தை சேதி யிவம்புவோஞ் சிவந்த மெய்யன்
முந்திய குடும்பி யாவன் மொழியது சுத்த முண்டு.

4. ஜாதகரது தகப்பனருடைய ஒன்பது சகோதார்களில் இரண்டு சகோதரர்களும் நான்கு சகோரிகளும் நீண்ட ஆயுளை உடைய

வர்களாக விருத்தியையடைந்து இருப்பார்கள் என்று சொல்லுகின்றேம். இவர்களுடைய பலாபலன்களைப் பின்னால் சொல்லுகின்றேன். எங்களுடைய யத்மையே! ஜாதகரின் தகப்பனாருடைய விஷயங்களைச் சொல்லுகின்றேம், இவர் சிவப்பு நிறமுடையவர். இவர் மேன்மையான குடும்பஸ்தராக விருப்பார். இவர் பரிசுத்தமான வார்த்தைகளை உபயோகிப்பார்.

5. தரணிகள் விருத்தி செய்வன்
தனமது அதிக முண்டு
உறன்முறை மதிக்க வாழ்வ
னுண்மையை வெளிக்காட் டாதான்
டெருமையும் புகழு மேற்பன்
பெரிதான தலங்கள் செல்வன்
மருவரை யெதிர்த்தே வெல்வன்
வஸ்திர வணிபஞ் செய்வன்.

5. ஜாதகருடைய தகப்பனார் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவருக்கு அதிகமான செல்வமுண்டு. இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்த ஸ்திலிருந்து வாழ்வார். இவர் தன்னுடைய மனத்திலுள்ள ரகசியத்தைப் பிறர் தெரிந்துகொள்ளும்படியாக வெளியே காட்டிக் கொள்ளமாட்டார். இவர் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார். பெரிய பெரிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செல்வார். இவர் தன்னுடைய பகைவர்களை எதிர்த்து அவர்களை ஜயித்துவிடுவார். இவர் ஜவுளி வியாபாரத்தைச் செய்வார்.

6. அரவுநாள் வீணை ராசி யருளுவான் கல்வி மூன்று
உரைவனும் வறுமை காணு னுயர்வான புத்தி யேற்பன்
பரைகளு முடைய னவன் பணிந்தோரை யாத ரிப்பன்
மருமமுங் கொஞ்ச முண்டு மனைவியி னஸ்தி கொஞ்சம்.

6. ஜாதகருடைய தகப்பனார் அரவு நாள் என்ற ஆயில்ய நக்ஷத்திரத்தில் வீணை என்ற மிதுனராசியில் பிறந்தவராவார். இவர் மூன்று விதமான படிப்பை உடையவர். இவர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவர் மேன்மையான புத்தியை உடையவராவார். இவர் நிலங்களையுடையவராவார். தன்னை வணங்கினவர்களைப் காப்பாற்றுவார். இவர் சிறிது இரகசியத்தை யுடையவராவார். இவருக்கு மனைவியினுடைய சொத்து சிறிது உண்டு.

ஜாதகருடைய தகப்பனுருடைய முன் ஜன்மம்

7. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகேரூந் தில்லை தன்னில்
நன்மதி வைசியச் சேயாய் ஜனித்துமே யிடர்கள் செய்து
பின்னேருக் கன்ன மீந்து பூசுரர் தொண்டு பூண்டு
அன்னவன் வினையில் லாம லணுகினன் காலன் நாடு.

7. ஜாதகரின் தகப்பனுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவர் தில்லை என்ற சிதம்பரத்தில் வைசிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து கெடுதிகளைச் செய்து ஏழைகளுக்குச் சாப்பாடு போட்டுப் பூசுரர் என்ற அந்தணர்களுக்கு வேலைகளைச்செய்து யாதொரு பாபமும் இல்லாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போனர்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

8. சிரநான்கோன் வரையப் பட்டு
ஜனித்தவ னென்று சொல்வோம்
உரைத்தவிக் குணத் தானுக்
குதிப்பனு மிக்கப் பாலன்
திருமகன் குணத்தைச் சொல்வேன்
சிவந்தமெய் புயப லத்தான்
இருவிதக் கல்வி யேற்ப
னீகைவா னென்று சொல்வோம்.

8. ஜாதகரின் தகப்பனர் நான்கு தலைகளை உடைய பிரம்தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றர் என்று சொல்லுகின்றேரும். இங்கு சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருவடைய குணதிசயங்களைச் மொல்லுகின்றேன். இவர் சிவப்பு நிறமுள்ளவர், தோள்வலியை யுடையவர். இவர் இரண்டு விதமான வித்தைகளை யுடையவர், தயாள குணமுடையவர் என்று சொல்லுகின்றேரும்.

9. அன்னிய பாஷை மேன்மை
யரசரால் தொழிலு மேற்பன்
தன்சொல்லே மேன்மை யாகச்
சாதிப்பா னுக வானும்
பொன்பணி யதிகஞ் சேர்ப்பன்
பொய்மெய்யும் புகலு வானும்
கன்னியர் மோக னுவன்
கார்க்கோடன் போலே கோபம்

9. ஜாதகர் அன்னிய பாஷை என்ற ஆங்கில பாஷையை மேன்மையாகப் படித்தவர். இவர் இராஜாங்கத்தில் தொழிலை யுடையவராவர், தான் சொல்லுகின்ற வார்த்தைகளே சிறந்த என்று சொல்லி நிலைநாட்டக்கூடியவராவர். இவர் விவேக முடையவராவர். இவர் தனம் ஆபரணம் ஆகிய இவைகளை அதிகமாகச் சேர்த்து வைப்பார். இவர் பொய்யையும் மெய்யையும் கலந்து சொல்லுபவராவர். இவர் ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை யுடையவராவர். இவருக்குப் பாம்பிற்கு வருவதைப்போலக் கோபம் வரும்.

10. அஞ்சின வார்த்தை கூரு
னரசருக் கிவன்சொல் மேன்மை
பஞ்சுபோல் ரோம முள்ளான்
பாரபட் சங்கள் பேசான்
நஞ்சான மனமுங் கொஞ்சம்
நல்லோர்க்கு நல்லோ னுவன்
கஞ்சமாம் ரேகை யுண்டு
காதலன் வயது தீர்க்கம்.

10. ஜாதகர் பயப்படும்படியான கடினமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவருடைய வார்த்தைகள் அரசர்களுக்குச் சிறந்தனவாக விருக்கும். இவர் பஞ்சைப்போல மிருதுவான உரோமத்தை உடையவராவர். ஒருதலையாகப் பேசமாட்டார். இவருக்கு சிறிது விஷத்தன்மையுள்ள மனமும் உண்டு. இவர் நல்லவர்களிடம் நல்லபடியே நடந்துகொள்ளுவார். இவருடைய உள்ளங்கைகளில் கஞ்சம் என்ற தாமரை ரேகை இருக்கும். இவர் நீண்ட ஆயுளை உடையவராவார்.

ஜாதகருடைய சகோதரங்களும் (சகோதர பாவமும்)
மூத்த சகோதரனது குணமும்

11. தன்துணை முன்னு ணென்று
சாற்றுவோர் தீர்க்க மாக
அன்னவன் குணத்தைச் சொல்வே
னயல்குற்றம் புகலா னுவன்
பொன்பணி பூமி விருத்தி
பெரிதான குடும்பி யாவன்
சொன்னதைக் காப்பா னுவன்
தொடுவழக் கதனிற் செல்லான்.

11. ஜாதகருடன் கூடப் பிறந்தவர்களில் ஒரு மூத்த சகோதரன் நீண்ட ஆயுளை உடையவராக விருப்பார். இவருடைய குணகுணங்களைச் சொல்லுகின்றேன். இவர் பிறருடைய குற்றங்களை எடுத்துக்

காட்டிச் சொல்லமாட்டார். இவருக்குத் தனம் ஆபரணங்கள் நிலங்கள் ஆகிய இவை விருத்தியாகும், இவர் பெரிய குடும்பஸ்தராக விருப்பார். இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறுமல் காப்பாற்றுபவராவர். இவர் தொடர்ச்சியாக நடந்துகொண்டு வருகின்ற நீடித்த வியாஜ்யங்களில் தலையிடமாட்டார்.

12. கலைராசி யுத்த ரத்தில் கலப்பனுஞ் சிவந்த மேனி
புலவனும் பொறுமை சாலி பிதுராஸ்தி விருத்தி செய்வன்
நிலையிலார்க் குதவி செய்வன் நிஷ்டுர வசனங் கூறன்
பலபேரால் பெருமை யேற்பன் பகரமாங் குடும்பி

[யாவன்.

12. மூத்த சகோதரர் கலை என்ற மகர ராசியில் உத்தர நட்சத்திரத்திற் பிறந்தவராவர். இவர் சிவப்பான நிறத்தை யுடையவர். இவர் பண்டிதராக விருப்பார். இவர் பெருமையை யுடையவராவர். தன்னுடைய தகப்பனுருடைய சொத்துக்களை விருத்தியாக்குவார். ஒரு நிலையான அந்தஸ்தி லில்லாதவர்களுக்கு இவர் உபகாரஞ் செய்வார். விரோதமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவர் பலரால் புகழப் பட்டவராவர். பிரகாசமானதும் மேன்மையானதுமான குடும்பஸ்தராவர்.

13. பாரியு மொன்றே யாவள் பாலர்க ளாண்பா லொன்று
கூறுவோம் பெண்பால் மூன்று குறித்தனந் தீர்க்க மாக
வீரிய னுடனே வாழ்வன் வயதுமே தீர்க்க மெய்துந்
தீறமாய்த் தவங்கள் செய்யுஞ் செல்வதி சேட்டி டாயே.

13. மூத்த சகோதாருக்கு மனைவி ஒருத்தியே யாவள். இவருக்கு ஓர் ஆண் குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவர் தன்னுடைய இளைய சகோதரனுடனே கூடியிருந்து ஒன்றாய் வாழ்வார். இவருக்கு ஆயுள் தீர்க்கமானதாகும். தைரியமாகத் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்கள்

14. பாலன்பின் சிலவே சேதம் பகருவோங் கன்னி யொன்று
சாலவே தீர்க்க மெய்துஞ் செப்புவோம் பின்பால் சேதி
வேல்விழி யன்னை சேதி விளம்புவோஞ் சிவந்த மேனி
காலத்தை யறிந்து ரைப்பள் கணவனுக் கினிய ளாவள்.

14. ஜாதகருக்குப் பின்னால் சில சகோதரர்கள் இறந்து போய் விடுவார்கள். ஒரு இளைய சகோதரி நீண்ட ஆயுளை யுடையவளாக விருப்பாள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய விஷயங்களைப்

பின்னுல் சொல்லுகின்றேரும். வேலைப்போன்ற அழகான கண்களை யுடைய தாயாரின் விஷயங்களைச் சொல்லுகின்றேரும். இவள் சிவப்பு நிறத்தை யுடையவளாவள். காலப்போக்கை நன்றுகத் தெரிந்து கொண்டு அதற்குத் தகுந்தாற்போல பேசுவாள். இவள் தன்னுடைய புருஷனுக்குப் பிரியமானவளாக விருப்பாள்.

ஜாதகரின் தாயாருடைய சகோதரர்கள் (சகோதர பாவம்)

15. மால்மனை யொப்ப ளாவள் வருவோரை யாதரிப்பள்
சீலியாம் வறுமை காணுள் செய்நன்றி மறவா ளாவள்
பாலிகை வயது தீர்க்கம் பகரமாங் குடும்பி யாவள்
நீலிக்குத் துணையாண் காணுள் நிமலிமா ரிருவர் தீர்க்கம்.

15. ஜாதகருடைய தாயார் மகாவிஷ்ணுவினுடைய மனைவி யாகிய லக்ஷ்மிக்குச் சமானமானவளாக விருப்பாள். இவள் தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவர் நல்லொழுக்கம் உடைய வளாவள், தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். பிறர் இவளுக்குச் செய்த உதவியை இவள் மறந்துவிடாதவளாக விருப்பாள். இவளுக்கு நீண்ட ஆயுள் உண்டு. இவள் பிரகாசமான தும் மேன்மையானதுமான குடும்பத்தை யுடையவளாக விருப்பாள். இவளுக்குச் சகோதரர்கள் இல்லை, ஆனுல் இவளுக்கு இரண்டு சகோதரிமார்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள்.

ஜாதகரது தாயாருடைய முன்ஜன்மம்

16. இல்லமு முள்ளு ராகு மியம்புவோ மிவள்முன் ஜன்மஞ்
சொல்லுவோம் பெண்ணை யோரஞ் செழும்பணை பட்டி
[தன்னில்
வல்லியும் வைசியச் சேயாய் வளமான குடும்பி யாகி
நல்லவ ளாகி யேதான் நமன்பதிக் காளா யின்னேள் ;

16. ஜாதகரின் தகப்பனருடைய வீடு உள்ளூரிலேயே இருக்கும். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். பெண்ணை யாற்றின் கரையோரத்திலுள்ள செழிப்பான பணைப்பட்டி என்கிற கிராமத்தில் இவள் வைசியருடைய ஜாதியிற் பெண்ணுகப் பிறந்து ஒரு செழிப்பான குடும்பத்தை உடையளாகியும் நல்லவளாகவும் இருந்து கொண்டு பிறகு இறந்து எம்பட்டணத்திற்குப் போய் ;

ஜாதகரின் தாயாருடைய மறுஜன்மம்

17. கஞ்சனுல் வரையப் பட்டுக்
கலந்தன ளென்று சொல்வோம்
வஞ்சியும் வறுமை காணுள்
வரைகிறே மிவள்பின் ஜன்மந்

தஞ்சமாய்த் தேயு தன்னில்
ஜனிப்பளா மிக்கு லத்தில்
அஞ்சின பேரைக் காக்கு
மம்பிகை யாளே கேளாய்.

17. பிரமதேவனுல் பிராமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கிறுள் என்று சொல்லுகின்றேரும். இவள் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். தேயு என்ற அக்கினி ஸ்தலமாகிய திருவண்ணுமலை க்ஷேத்திரத்தில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்திலேயே பிறப்பாள். பாபஞ் செய்யப் பயந்தவர்களைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

18. பிருகுவும் புகலு கின்றூர்
பூவைக்குத் துணையாண் தோஷம்
உரைத்தினீர் தாய்தந் தைக்குக்
கருமங்கள் எவரே செய்வார்
பெரியதோர் தந்தை புத்திரன்
பேணுவான் கருமந் தானும்
தரையது ஜாத கர்க்குச்
சார்ந்திடு மென்று சொல்வோம்.

18. பிருகு மகாரிஷியானவர் கேட்கின்றூர். ஜாதகருடைய தாயாருக்குக் கூடப்பிறந்த ஆண் இல்லை என்று சொன்னீரே! இவளுடைய தாய் தகப்பன் இவர்களுக்கு யார் கர்மங்களைச் செய்வார் என்று கேட்கவே, இவளுடைய பெரிய தகப்பனருடைய பிள்ளை கர்மங்களைச் செய்வான் என்று அத்திரி மகரிஷி பதில் சொல்லுகின்றூர். ஜாதகருக்குத் தாயாருடைய நிலங்கள் வந்து சேரும் என்று சொல்லுகின்றேரும்.

ஜாதகரது தகப்பனருடைய மரணமும் (கர்மமும்) மறுஜன்மமும்

19. ஆறூறு வாண்டு தன்னி லணுகிடுந் தந்தை கண்டம்
வேறுஜன் மங்கள் சொல்வேன் வேலன்வாழ் தணிகை
[தன்னில்
சேருவான் பிரம்ம சேயாய்ச் செப்பின மொழிகுன் றுவே
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

19. ஜாதகருக்கு முப்பத்தாருவது வயதில் இவருடைய தகப்பனர் இறந்துபோவார். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் ஆறுமுகக் கடவுள் வாசஞ் செய்கின்ற தணிகை என்ற திருத்தணி க்ஷேத்திரத்தில் பிராமணர் குலத்தில் ஆண்

குழந்தையாகப் பிறப்பார். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும். ஆறு பெரிய முகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் இன்னம் சொல்லுவதைக் கேட்பீராக.

20. இந்ததோர் ஜன்மந் தன்னி
லிவன்செய்த புண்ணிய மென்ன
முந்தவே கூறு மென்ன
மொழியதைக் காத்த தாலும்
பிந்தினோர்க் குதவி செய்தும்
பெரிதான தலங்கள் சென்றும்
வந்ததா லுதிப்பா லுவன்
மங்கையே கேட்டி டாயே.

20. இவ்விதமாக அத்திரிமகரிஷி சொல்லவே, இந்த ஜன்மத்தில் ஜாதகருடைய தகப்பனார் எவ்விதமான புண்ணிய காரியங்களைச் செய்திருக்கின்றார், அவைகளை உடனே சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். தகப்பனார் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் நிறைவேற்றியதாலும், ஏழைகளுக்கு உபகாரஞ் செய்து கொண்டு வந்ததாலும், பெரிய பெரிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து கொண்டு வாழ்ந்ததாலும் மறு ஜன்மத்தில் இவர் பிராமணர் குலத்திற் பிறப்பார். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரின் மரணகாலமும் (மாதிருகர்மமும்) ஜாதகரின் விவாக காலமும் மனைவியின் குணமும்

21. நாற்பது வாண்டு தன்னில் நமன்பதி யன்னை சேர்வள்
ஏற்கவே ஜாத கர்க்கு மியம்புவோ மணத்தின் கால
மார்க்கவே பதினே ழாண்டி லணுகிடு முள்ளூர் பாரி
ஜாக்ரதை குணத்த ளாவள் தைரிய மனத்தா
[லென்றோம்.

21. ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய தாயார் இறந்து எமபட்டணம் போய்ச் சேருவாள். ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பதினேழாவது வயதில் உள்ளூரிலிருந்தே மனைவி வந்து நேரிடுவாள். இவள் ஜாக்கிரதையான உஷாரான குணத்தை யுடையவளாவள், தைரியமுள்ளனத்தை யுடையவள் என்று சொல்லுகின்றோம்.

22. அன்னம்போல் சாய லொக்கு மடாவடி கூரு ளாவள்
அன்னமு மன்பா யீவ ளடிசி லுக் கினிய ளாவள்
அன்னியர் குற்றஞ் சொல்லா ளழகுளாள் பொறுமை [சாலி
அன்னவள் தீர்க்க ஜீவி யம்பிகை யாளே கேளாய்.

22. ஜாதகருடைய மனைவி அன்னத்தைப்போல அழகான உருவத்தை உடையவளாவாள். இவள் நியாயமில்லாத வார்த்தைகளையும் முரட்டுத்தனமான வார்த்தைகளையும் சொல்லமாட்டாள். இவள் பிறருக்குச் சாப்பாட்டைப் பிரியத்துடன் போடுவாள். இவள் சமையல் செய்வதில் வல்லவளாக விருப்பாள். இவள் பிறருடைய குற்றங்களை எடுத்துக்காட்டிச் சொல்லமாட்டாள். இவள் அழகுள்ளவளாக விருப்பாள், சாந்தமான குணத்தையுடையவள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய சந்ததிகளும் (புத்திரபாவமும்) முன்ஜன்மமும்

23. சுதர்களு மாண்பால் மூன்று
தோகையு மவ்வாறு தீர்க்கம்
அதிபன்தன் முன்ஜன் மத்தை
வரைகிறேங் காஞ்சி தன்னில்
நிதிமிக வுடையா னுக்கு
நேர்ந்தனன் சத்திரியச் சேயாய்
அதிதிகட் கன்ன மீந்து
யச்சேது பதிக்குச் சென்று ;

23. ஜாதகருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். ஜாதகருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவர் காஞ்சி வரத்தில் அதிக தனவானுக்கு க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறந்து பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போட்டுச் சேது ஸ்தலத்திற்குப் போய் ;

ஜாதகருடைய யோக விஷயங்கள்

24. முன்வினை யில்லா னகி
மேவினன் காலந் நாடு
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறந்தவ னென்று சொல்வோம்

இன்னவன் யோகச் சேதி
யியம்புவோ மினிமே லாக
மன்னரால் தொழிலு மேற்பன்
வண்டிவா கனமு முள்ளான்.

24. முன்ஜன்மத்திய பாவம் யாதொன்றும் இல்லாமல் இறந்து எம்பட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப் பட்டு இந்த ஜன்மத்தில் இவர் பிறந்திருக்கின்றார் என்று சொல்லு கின்றோம். இனிமேல் நாங்கள் இவருடைய பொதுவான யோக விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் அரசாங்கத்தில் தொழிலை உடையவராவார். வண்டி வாகனம் ஆகிய இவைகளை இவர் உடையவராக விருப்பார்.

25. எந்தக்கா லத்தில் ராஜ
யோகத்தை யெய்வான் சொல்வாய்த்
துன்ராகு தசைபூர் வத்தில்
செரிந்திடு மரசு யென்றோம்
மன்னவன் தசைவ ரைக்கும்
வளர்பிறை போலே யோகம்
பின்னமில் லாமல் செய்வன்
பேதையே கேட்டி டாயே.

25. எந்த வயதில் ஜாதகருக்கு இராஜயோகம் உண்டாகும் என் பதை, முனிவரே! சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். இராகுமகாதசையின் ஆதி பாகத்தில் ஜாதக ருக்கு இராஜாங்க உத்தியோகம் கிடைக்கும் என்று சொல்லுகின்றோம். இந்த யோகம் மன்னவன் என்ற குருமகாதசை (முடியும்) வரைக்கும் வளர்பிறைச் சந்திரனைப்போல நாளுக்குநாள் விருத்தியாகிக் கொண்டு வரும். உத்தியோகத்தை யாதொரு குற்றமுமில்லாமல் ஜாதகர் செய் வார், பார்வதியம்மையே! கேட்பீராக.

26. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச்
[சங்கை
நாகமுங் கன்னி யாக ரவியுமே யஞ்சி லாக
ஆகமன் யேழி லாக அன்புள யோக மொன்று
தோகையும் வேசி யோகஞ் செப்புவோம் பால னுக்கு.

26. யோகத்தை எந்தக் காரணங்களைக் கொண்டு, முனிவரே! நீர் சொன்னீர். அந்தக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். நாகம் என்ற இராகு கன்னி யிலும் ரவி என்ற சூரியன் ஐந்தாவது பாவத்திலும் ஆகமன் என்ற குரு ஏழாவது பாவத்திலும் இருப்பதால் ஒரு நல்ல யோகம் இருக்

கின்றது. வேசியோகமும் ஜாதகருக்கு இருக்கின்றது என்று சொல் லுகின்றோம்.

குறிப்பு :— இராகு கன்னியில் இருப்பதைப்பற்றித் தமிழ் ஜாதகா லங்காரம் இருநூற்றுத்தொண்ணூற்றேழாவது பாடலாகிய

"ஆமேட மெருது சுரு நண்டுகன்னி
ஐந்திடத்துங் கறுவாக மமர்ந்து நிற்கில்"

என்ற பாடலைப் பார்க்கவும் வேசி யோகத்தைப் பற்றி இந்தப் புத்த கத்தில் இருநூற்றெழுபத்தேழாவது பாடலாகிய

"இரவிக்குப் பன்னிரண்டிற் சுக்கிரன்றன்கூடி இருந்தக்கால்
அது வேசியோகமென விசைப்பர்"

என்ற பாடலையும் பார்க்கவும். குரு ஏழில் இருப்பதைப்பற்றி இரு நூற்றுத்தொண்ணூற்றொன்பதாவது பாடலைப் பார்க்கவும்.

27. பலனதைப் புகலக் கேண்மோ
பார்மன்னர் மெச்ச வாழ்வன்
தலமது யிரண்டு செய்வன்
தரணிக ளதிகஞ் சேர்ப்பன்
நலமுளோர் நேசஞ் செய்வன்
நற்சேது காசி செல்வன்
நிலதமா யெவருக்குஞ் ஜயஞ்
செய்வனு மெடுத்த வேலை.

27. இந்த யோகங்களின் பலாபலன்களைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. ஜாதகர், பூமியிலுள்ள அரசர்கள் இவரை மெச்சும்படி யாகக் கொண்டாடும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் இரண்டு வீடுகளைக் கட்டுவார், அநேக நிலங்களையும் மனைகளையும் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் நன்மையைச் செய்யக்கூடிய வர்களுடன் சிநேகஞ் செய்து கொள்வார், சிறந்த சேதுஸ்தலம் காசி க்ஷேத்திரம் ஆகிய இவைகளுக்கு யாத்திரை செய்வார். இவர் நெற்றி யிலுள்ளப் பொட்டைப்போல எல்லோருள்ளும் சிறந்தவராக விருப் பார், தான் செய்ய ஆரம்பித்தக் காரியத்தைச் செய்து முடித்து ஜயத்தை அடைவார்.

28. தந்தையின் தந்தை பாக மேழாறு வாரூண்டுள் நேரும்
தந்தையின் பாகஞ் சொல்வேன் தந்தைபின் பாக மாகும்
முந்தின குடும்ப மாகு முயற்சியாய் வாழ்வா னம்மா
தன்தனம் பூமி வீடு சேர்ப்பனெண்ப தாயிரம் பொன்.

28 ஜாதகருடைய தகப்பனாரின் தகப்பனாராகிய பாட்டனுடைய சொத்து ஜாதகருக்கு நாற்பத்திரண்டாவது வயதிற்குள் வந்து சேரும்.

இவருடைய தகப்பனருடைய பாகத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இது தகப்பனருக்குப் பின்னுல் பாகப்பிரிவினை ஆகும். இவருடைய குடும்பம் மேன்மையான குடும்பமாக விருக்கும். இவர் உன்னத நிலையில் இருந்து வாழ்பவராவர், பார்வதியம்மையே! இவர் பணம் நிலம் வீடு ஆகிய இவையெல்லாம் எண்பதாயிரம் பொன் பெறக்கூடியனவாக விருக்கும்படியாகச் சொத்துக்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார்.

ஜாதகருடைய மரணகாலமும் மறுஜன்மமும்

29. அறுபது வாறு வாண்டி லழகிய கன்னி மாதந்
திருமக னுடல மேகுஞ் செப்புவோம் பின்ஜன் மத்தை
நரிபரி யாக்குந் நாட்டில் நல்குவான் பிரம்ம சேயாய்க்
கரிமத வானை பெற்றக் காதலி கேட்டி டாயே.

29. ஜாதகர் தன்னுடைய அறுபத்தாருவது வயதில் சிறந்த கன்னி மாதம் என்ற புரட்டாசி மாதத்தில் இறந்து இவருடைய தேகம் அழிந்து போய் விடும். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவர் நரியைப் பரி என்ற குதிரையாக மாணிக்கவாசகர் காலத்திற் சிவபெருமானுல் மாற்றப்பட்ட பட்டணமாகிய மதுரையில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். கறுப்பு மதம் பிடித்த ஆண் யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜனனகால தசையின் இருப்பு

30. உதித்திடுங் காலந் தன்னி லுத்தர மூன்றும் பாதங்
கதிர்தசை வாண் டொன்றுங் கலந்திடுந் திங்கள் பத்தும்
இதுமுதல் பாகஞ் சொன்னே மியம்புவோம் பின்பால்
[சேதி
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

30. ஜாதகர் பிறந்த காலத்தில் ஜன்ம நக்ஷத்திரம் உத்தரம் மூன்றும் பாதம் ஆகும். இதற்குக் கதிர் என்ற சூரியமகாதசை ஒரு வருஷமும் பத்து மாதங்களும் இருப்பு ஆகும். இதுவரையிலும் முதலாவது பாகத்தைச் சொல்லி விட்டோம். இனிமேலுள்ள விஷயங்களைப் பின்பாகத்திற் சொல்லுகின்றேரும். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

31. பொன்னவன் தனக்கு யெட்டிற்
பிறையுமே யிருப்ப தாலே
இன்னவன் வயது தீர்க்க
மியம்பின காரணஞ் சொல்வோம்

மன்னவ னேழிற் றங்க
மழைக் கோளு நாலிலாக
அன்னவன் தீர்க்க ஜீவி
யம்பிகை யாளே கேளாய்.

31. பொன்னவன் என்ற குருவிற்கு எட்டில் பிறை என்ற சந்திரன் இருந்தபோதிலும் ஜாதகருக்கு நாங்கள் தீர்க்கமான ஆயுளைச் சொல்லி யிருப்பதற்குக் காரணத்தைச் சொல்லுகின்றோம். மன்னவன் என்ற குரு ஏழாவது பாவத்தில் இருப்பதாலும் மழைக்கோள் என்ற சுக்கிரன் நான்காவது பாவத்தில் இருப்பதாலும் ஜாதகர் நீண்ட ஆயுளை உடையவராவார், பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—குருவிற்கு எட்டிற் சந்திரன் இருப்பதால் பல தீபிகை ஆறுவது அத்தியாயம் பத்தாவது சுலோகப் பிரகாரமும் தமிழ் ஜாதகர் லங்காரம் இருநூற்றறுபத்துமூன்றுவது பாடலின் பிரகாரமும் சகட யோகம் என்ற ஒருவித கெட்ட யோகம் உண்டாகின்றது. ஆனால் குரு லக்கினத்திற்குக் கேந்திரத்தில் இருந்தால் ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றேழாவது சுலோகப் பிரகாரம் சகடயோக பங்கம் நேரிடுகின்றது. புண்ணிய கிரகங்களாகிய குருவும் சுக்கிரனும் கேந்திரங்களில் இருப்பதால் உண்டாகும் பலனைப் பற்றி மணிகண்டகேரளம் பிரதியரிஷ்டகாண்டம் நாற்பதாவது செய்யுளைப் பார்க்கவும்.

ஜாதகம் 105

ஜனனகால கிரகநிலை

1. [1]ஆலோன் [2]புந்தி ராகுகன்னி
[3]அருக்கன் [4]கோலிற் [5]சேய்[6]தேளில்
[7]நீலன் [8]மானில் குரு[9]சாடி
[10]மீத்தோன் மீனம் [11]புகர்[12]சீயம்
சாலஅஸ்தங் கடைப் பாதஞ்
ஜன்மஞ் சிம்மம் பலனெவ்வாறு
வேலன் தன்னை யாதரித்த
விமலி கேட்க விரதர்சொல்வார்.

1. சந்திரனும் புதனும் இராகுவும் கன்னியிலும், சூரியன் துலாத்திலும், அங்காரகன் விருச்சிகத்திலும், சனி மகரத்திலும், குரு கும்பத்திலும், கேது மீனத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும் இருந்து அஸ்த நட்சத்திரத்தின் நான்காவது பாதத்தில் சிம்ம லக்கினத்தில் ஜனனம் நேர்ந்தால் எவ்விதமான பலாபலன்கள் உண்டாகும் என்று ஆறுமுகக் கடவுளைக் காப்பாற்றின பார்வதியம்மையார் கேட்கும்போது விரதர் என்ற மகரிஷியானவர் சொல்லுகின்றார்.

கிரகநிலை

கேது			
குரு	இராசி சக்கரம்		
சனி			லக்கினம் சுக்கிரன்
	அங்காரகன்	சூரியன்	புதன் ராகு சந்திரன்

அஸ்தம் 4-ஆம் பாதம் : சந்திரதசை ஞ 0-2-0.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் குருவும் இராகுவும், மிதுனத்திற் புதனும், கடகத்திற் சந்திரனும், துலாத்திற்

1. சந்திரன்
2. புதன்
3. சூரியன்
4. துலாம்
5. அங்காரகன்
6. விருச்சிகம்
7. சனி
8. மகரம்
9. கும்பம்
10. கேது
11. சுக்கிரன்
12. சிம்மம்

சூரியனும் கேதுவும், தனுசிற் சுக்கிரனும், கும்பத்திற் சனியும், மீனத்தில் அங்காரகனும் ஆகும். குரு வக்கிரகதியில் இருக்கின்றார். சந்திரன் அஸ்தமனத்திலிருக்கின்றார்.

ஜனனநகரச் சிறப்பு

2. சொல்வோ மாண்பால் ஜனனமுமே
செப்பு மில்லங் கீழ்வாசல்
வல்லி காளி பீசனுத்தர
மார்க்கந் தென்பால் மருவிடுமே
அல்லல் தவிர்க்குந் தந்திதென்மே
லணுகுஞ் சமவூ ரெனவுரைப்போம்
நல்ல மூன்றாஞ் ஜனனமுமே
நவிலு வார் களில் வர்க்கமுறும்.

2. இந்த ஜாதகர் ஆண் குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லுகின்றோம். பிறந்த வீடு வாயில் கிழக்குப் பக்கத்தில் உள்ளதாக விருக்கும். வள்ளியம்மன் காளியம்மன் சிவபெருமான் ஆகிய இவர்களுடைய ஆலயங்கள் வடக்கில் இருக்கும். தெற்குப் பக்கத்தில் ஒரு பாட்டை இருக்கும். கஷ்டங்களை விலக்குகின்ற விநாயகக்கடவுளின் கோயில் தென்மேற்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் நடுத்தரமான கிராமமாகும் என்று சொல்லுகின்றோம். ஜாதகர் களி என்றகள் வியாபாரஞ் செய்யும் கிராமணியார் ஜாதியில் மூன்றாவது குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லுகின்றார்.

ஜாதகரின் தகப்பனுடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

3. உறுமே தந்தை தாய்யோக
முற்ற துணைவர் தான்யோகம்
அரிவை மனைவி புத்திரர்க
ளப்பா லகனின் யோகமெலாந்
தெரிய வுரைப்போ மிந்நூலில்
தந்தை துணைகள் சத்தமத்தில்
நெறியா யாண்பால் மூன்றுறுமே
நிமலி யிரண்டு நிகழ்த்திடலாம்.

3. ஜாதகரின் தகப்பனார் தாயார் ஆகிய இவர்களின் யோகங்களையும் கூடப்பிறந்தவர்களின் யோகங்களையும் மனைவி மக்கள் ஜாதகர் ஆகிய இவர்களின் யோகங்களையும் இந்தச் சாஸ்திரத்தில் நன்றாக விளக்கிச் சொல்லுகின்றோம். தகப்பனாருடன் பிறந்தவர்கள் எழுவரில் மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லக்கூடும்.

ஜாதகரது தகப்பனருடைய குணதிசயங்கள்

4. திடமா யவர்கள் வேறுவர்
செப்பும் பின்பால் சேதிதனை
அடவே தந்தை குணங்கேளா
யறிவோர் நேய னறிவாளி
மடைய ருறவு கொள்ளாதான்
வஸ்திரத்தொழிலுந் தான் செய்வன்
கடனென் றுலே யச்சமுறுங்
கல்வி சமமாங் கந்தன்பத்தி.

4. ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்கள் வேறு குடும்பஸ் தர்களாக விருப்பார்கள். இவர்களுடைய விஷயங்களைப் பின்னல் சொல்லுகின்றேன். தகப்பனருடைய குணதிசயங்களைச் சொல்லுகின் றேன், கேட்பீராக. இவர் அறிவாளிகளுடைய சிநேகிதத்தை யுடைய வராவர். இவர் புத்திமானுகவும் படித்தவராகவும் இருப்பார். இவர் அறிவில்லாதவர்களுடைய சிநேகத்தை விரும்பாதவராவர். இவர் நெசவுத் தொழிலைச் செய்வார். இவர் கடன் என்ற பேச்சைக் கேட்ட மாத்திரத்திலே பயப்படுவார். இவர் நடுத்தரமான வித்தையை யுடையவராவார். இவர் முருகக்கடவுளின்மேல் ஆசையும் அன்பும் உடையவராவர்.

5. பத்தியு முடையன் பலர்நேயன்
பாருகள் பின்னல் சேர்த்திடுவன்
சுத்த முடையன் முன்கோபி
சொற்காத் திடுவன் துருசுநடை
நத்தி னுரை யாதரிப்பன்
நல்கும் பித்ததேகி யென்றுஞ்
சித்த மிரண்டு பொருளாசைச்
சிறப்பாய்ப் பின்னல் வாழ்வானே.

5. ஜாதகருடைய தகப்பனர் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவார். இவரிடத்தில் அநேகர் விசுவாசமுள்ளவராக விருப் பார்கள். இவர் நிலங்களைப் பிற்காலத்தில் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் பரிசுத்தமாக விருப்பார், முன்கோபத்தையுடையவர், தான் சொல்லுகின்ற வார்த்தைகளைத் தவறிடாமல் நிறைவேற்றுவார். இவர் கெட்ட நடவடிக்கையை யுடையவர். இவர் தன்னிடத்திற்கு வந்து உதவியைக் கோரினவர்களுக்கு உபகாரஞ் செய்து காப்பாற்று வார். இவர் பித்த தேகத்தை யுடையவர் என்று சொல்லுகின்றோம். இவர் இரண்டு விதமான எண்ணங்களை உடையவர், பொருளின்மேல் பிரியம் உடையவர், பிற்காலத்தில் மேன்மையுடன் வாழ்பவராவார்.

ஜாதகரது தகப்பனருடைய முன்ஜன்மம்

6. அவனின் பூர்வந் தான்சொல்வே
னழகர் வாழும் நாட்டினிலே
இவனே கங்கை சேயா
யுதித்தெழிலான குடும்பி தானகித்
தவசிக் கன்னந் தானளித்துத்
தலவா சங்கள் சென்றுதான்
பவமே யின்றித் தான்மரித்துப்
பிரமன் எழுத வந்தவனே.

6. ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். அழகர் வாழுகின்ற நாட்டில் (திருமாலிருஞ்சோலைமலையில்) இவர் தன்னுடைய முன்ஜன்மத்தில் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து அழகிய மேன்மையான குடும்பஸ்தராகித் தவஞ் செய்கின்ற பெரியார்களுக்குச் சாப்பாடு போட்டுப் புண்யஸ்தலங்களுக்கு யாத்திரை செய்து எவ்விதப் பாபமும் இல்லாமல் இறந்து பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

7. வந்தோன் தனக்கு விப்பாலன்
வருவா னிவனின் குணங்கேளாய்
கந்தன் பத்தி கல்விமிகுங்
கணக்கி லாகி தயையுளனும்
பந்து மதிக்க வாழ்ந்திடுவன்
பார பட்சந் தான்புகலான்
நந்தி யாவு விருத்தியுளன்
நல்லோர்க் கிவனும் நல்லவனும்.

7. இவ்விதமாகப் பிறந்த தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இவர் ஆறுமுகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவர். இவருக்கு வித்தை அதிகப்படும். இவர் கணக்குப் போடுவதில் நுட்பமான புத்தியையுடையவர், விவேகமுடையவர், இரக்கமுடையவர். இவர் தன்னுடைய பந்துக்கள் மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் ஒருதலையாகப் பேசமாட்டார். இவர் எருது பசுக்கள் ஆகிய இவற்றின் விருத்தியை உடையவராவர். இவர் நல்லவரிடம் நல்ல விதமாகவே நடந்து கொள்ளுவார்.

8. நேமந் தவறான் நிமலிக்கிஷ்டன்
நீத்தோர் நேயன் நீர்தோய்வன்
காமன் தனையே வென்றிடுவன்
கார்க்கோடன் போல் கோபமிகும்
தீமை யெவர்க்கு மெண்ணுதான்
திகைத்தோர்க் குதவி செய்திடுவன்
ஆமும் வேறு செய் திடுவன்
அஞ்சாதநெஞ்ச னெனவு றைப்போம்.

8. ஜாதகர் நியமம் நிஷ்டை ஆகிய இவைகளைத் தவறுமல் அநுஷ்டிப்பவராவர். இவர் தன்னுடைய மனைவிக்குப் பிரியமானவராவார், உலகப்பற்றை விட்டுவிட்டவர்களாகிய பரதேசிகளுக்கு இஷ்டமானவராவார். இவர் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்வார். இவர் மன்மதனை ஜயித்துவிடுவார், அஃதாவது இவர் காம ஆசையை அடக்கிக்கொள்ளுந் திறமை உடையவராவர். இவருக்குப் பாம்பிற்கு வருவதைப் போலக் கோபம் அதிகமாக உண்டாகும். இவர் எவருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டார். இவர் கஷ்டப்பட்டுக் கொண்டு திகிலடைந்து கொண்டிருப்பவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் வீட்டைக் கட்டுவார். இவர் பயப்படாத மனத்தை உடையவரென்று சொல்லுகின்றோம்.

9. உரைப்போம் பத்ம ரேகையுளன்
உற்றோர்க் குதவி உண்ணயிஷ்டன்
தரையே நாளுக்குநாள் சேர்ப்பனுந்
தாதை போலே வாழ்ந் திடுவன்
குறிகள் முகமுஞ் சிரமுரைப்பன்
கோதை மார்கள் மோகமுளன்
நிறைசெய் வணிபஞ் செய்திடுவன்
நேமியில் வறுமை காணுதான்.

9. ஜாதகருடைய உள்ளங்கைகளில் பத்மரேகை என்ற தாமரை ரேகை இருக்கும். இவர் உறவினர்களுக்கு உபகாரத்தைச் செய்வார், சாப்பிடுவதில் பிரியமுள்ளவர். இவர் நிலங்களையும் மனைகளையும் நாளடைவில் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் தன்னுடைய தகப்பனாரைப்போல அவருடைய அந்தஸ்திலிருந்தே வாழ்வார். இவருடைய முகத்தில் அடையாளங்கள் இருக்கும். முகமும் மேன்மையுடையதாக விருக்கும். இவர் ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையையுடையவராக விருப்பார். ஸ்திரீகளும் இவரிடத்தில் காதலையுடையவர்களாக விருப்பார்கள். இவர் தராசினால் எடைபோடும் வியாபாரங்களை அதிகமாகச் செய்வார். பூமியில் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அடைய மாட்டார்.

ஜாதகருடைய யோக விஷயம்

10. யோகம் புகன்றீர் காரணஞ்சொல்
உரகன் புந்தி மதியிரண்டில்
பாக நான்கில் சேயாட்சி
பத்தோன் ஜன்மம் பதிந்ததால்
தோகை யாறும் யோகமுறுந்
துரக யோக மிருவகையால்
போக பாக்கிய முடையவனும்
பத்தா மாண்டின் மேல்யோகம்.

10. ஜாதகருக்கு யோகத்தைச் சொன்னீர். அதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, உரகன் என்ற இராகுவும் புந்தி என்ற புதனும் மதி என்ற சந்திரனும் இரண்டாவது பாவத்திலும் நான்காவது பாவத்தில் சேய் என்ற அங்காரகன் ஆட்சியாயும் பத்திற் குடையவராகிய சுக்கிரன் ஜன்மத்தில் இருப்பதாலும் தோகையர் யோகம் துரகயோகம் ஆகிய இவ்விரண்டு யோகங்களால் இவர் போக பாக்கியங்களை பத்து வயதிற்குப் பிறகு அனுபவிப்பார்.

வேறு

11. பிறையது போலே தொழில் விருத்தி
பூமியும் போற் றிடுவானும்
குறையே யின்றி வாழ்வன் ஆட்கள்
சேர்க்கை குடிசெய்தல் குலமதிப்பாதல்
பொருளது பெருக்கம் தீரமாமனமும்
புக்கிடும் பாலகன் தனக்கு
கரிமத வாணை தன்னையே
வளர்த்த காதலி கேட்டி டுவாயே.

11. ஜாதகருக்கு வளர் பிறை சந்திரனைப் போல நாளுக்குநாள் தொழில் விருத்தியாகிக் கொண்டேவரும். இவர் நிலங்களையும் மனைகளையும் பெருமையுடன் பாராட்டிச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பவராவர். இவர் யாதொரு கஷ்டங்களும் இல்லாமல் வாழ்வார். இவர் வேலை ஆட்களைச் சேர்த்துவைப்பார், வீடு கோயில் இவைகளைக் கட்டுவார். இவர் தன்னுடைய குலத்தாரிடத்தில் மதிப்புடன் இருப்பார். இவர் சொத்துக்களை அதிகமாக்குவார், தைரியமான மனத்தையுடையவராவார். கறுப்பு மதம்பிடித்த ஆண் யானை முகத்தையுடைய விநாயக்கடவுளை வளர்த்த பார்வதியம்மையே! கேட்பீராக.

வேறு

ஜாதகருடைய விவாககாலமும் மனைவியின் குணநிசயங்களும்

12. பாலகன் மணங்கள் பகருவோர் தாயே
பத்தொன்ப தாண்டினில் கீழ்ப்பால்
நீலியும் வருவாள் குணத்தைப் புகல்வேன்
நீத்தோர்போல் வார்த்தையு முடையாள்
சீலியாம் பொறுமை தோகைபோல் சாயல்
சிந்தையும் நல்லதே யாகும்
ஆலம்போல் கோப மற்புத வார்த்தை
ஆபத்தைச் சிலர்க்குமே காப்பள்.

12. ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! இவருக்குப் பத்தொன்பதாவது வயதில் கிழக்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணநிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் உலகப்பற்றை நீக்கிவிட்டவர்களாகிய பரதேசிகளைப் போல வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் நல்லொழுக்கமுடையவள், பொருமையையுடையவள். மயிலைப்போன்ற அழகான நீண்ட உருவத்தை உடையவளாவள் இவளுடைய எண்ணங்களும் நல்லனவாகவே இருக்கும். இவளுக்கு பாம்பிற்கு வருகின்ற கோபத்தைப்போல கோபம் உண்டாகும், ஆச்சரியமான வார்த்தைகளை உபயோகப்படுத்துவாள். இவள் சிலருடைய ஆபத்துக்காலத்தில் அவர்களைக் காப்பாற்றுவாள்.

வேறு

13. மங்கையுந் தீர்க்க ஜீவி
மறித்துமே பராசர் சொல்வார்
இங்கிவன் தனக்குத் தார
மிரண்டென மொழிவோம்
சங்கையைச் சொல்லு மென்ன
சத்தமத் தோனு மாறில்
தங்கின பலத்தால் சொன்னேம்
ஜயமுனி மறித்துச் சொல்வார்.

13. ஜாதகருடைய மனைவி நீண்ட ஆயுளை உடையவளாவள், இவ்விதமாக விரதர் சொல்லவே பராசரமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிகள் நேரிடுவார்கள் என்று நாங்கள் சொல்லுகின்றோம். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, பராசரர் பதில் சொல்லுகின்றார். ஏழிற்குடையவராகிய சனி ஆருவது பாவத்தில் இருக்கின்ற பலத்தால் சொல்லுகின்றோம் என்று சொல்லவே, ஜயமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார்.

14. தனத்துளோன் சுகத்தோ னேழோன் சதிருட னுட்சி
[யாகக்
கனகனு மேழில் தங்கக் காதலி யொன்றே தீர்க்கம்
வனிதைய ரிருவர் காணன் மால்பொன்னின் பலத்தி னுலே
கனமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

14. தனம் என்ற இரண்டிற் குடையவராகிய புதனும் சுகத்தோனுகிய நான்கிற்குடைய அங்காரகனும் ஏழோனுகிய சனியும் ஆட்சியாக விருப்பதாலும், கனகன் என்ற குரு ஏழாவது பாவத்தில் இருப்பதாலும் ஜாதகருக்கு மனைவி ஒருத்தியே ஆகும். இவளும் நீண்ட ஆயுளை உடையவளாவள். மால் என்ற புதன் பொன் என்ற குரு இவர்களுடைய பலத்தால் இவருக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிடார்; மேன்மையான மதயானையினுடைய முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரது சந்ததிகளும் (புத்திர பாவமும்) முன் ஜன்மமும்

15. சுதர்களு மர்ண்பா னன்கு தோகைய ரிருவர் தீர்க்கம்
அதிபன்தன் பூர்வஞ் சொல்வேன் மால்மனை தன்னி
[லேதான்
நிதிமிக வுடையோ னகி நேமிக ளதிக முண்டாய்
அதிபனும் வாழ்ந்து மேதான் மறலியின் பதிக்குப் புக்கி.

15. ஜாதகருக்கு நான்கு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் தீர்க்கர்யுளை உடையவர்களாக விருப்பார்கள். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் மால்மனை என்ற ஊரில் பிறந்து அதிக தனவானுகவும் அநேக நிலங்களை உடையவராகவும் வாழ்ந்து இறந்து எமபட்டணத்திற்குப் போய்;

ஜாதகரது யோக விஷயம்

16. மலரயன் வரையப் பட்டு வருகுவனு மிந்தச் சேயுந்
தலிவன்தன் யோகச் சேதி சாற்றுவோ மினிமே லாகத்
திலதம்போல் பந்து கட்குச் சேய்த்தசை அந்தந் தன்னில்
குலவிடும் வேறு யில்லங் கொடுவிஷந் தசைக் காலத்தில்,

16. பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறப்பார். இவருடைய யோக விஷயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். சேய் என்ற அங்காரகனின் தசையின் கடைசி காலத்தில் ஜாதகர் தன்னுடைய பந்துக்களுக்கு நெற்றியிலுள்ள ஒரு பொட்டைப்போல விளங்குவார், சிறந்தவராவர். இவருக்குக் கொடுவிஷம் என்ற இராகுதசையின் காலத்தில் வேறு ஒரு வீடும் கிடைக்கும்.

17. நிதிநேரும் தரணி யாலே
நிகழ்த்துவீ ரந்தச் சங்கை
புதனுட்சி யொண்பா லுட்சி
பெறுவனும் பூர்வ பொன்னும்
அதுகால மெட்டாண் டின்மே
லணுகிடு மென்றே சொல்வோர்
துதிசெய்தோர் தம்மைக் காக்கும்
தோகையே கேட்டி டாயே.

17. ஜாதகருக்கு நிலங்களின் மூலமாக தனம் கிடைக்கும் என்று விரதர் சொல்லவே, இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்றார். புதன் ஆட்சியாகவும் ஒன்பதிற் குடையவராகிய அங்காரகனும் ஆட்சியாகவும் இருப்பதால் பூர்வதனம் அஃதாவது புதையல் முதலிய பழைய சொத்து ஜாதகருக்குக் கிடைக்கும். இவ்விதமாக ஜாதகருடைய எட்டு வயதிற்கு மேலே சொத்து கிடைக்கும் என்று சொல்லுகின்றோம். உம்மை வணங்கிப் பூஜை செய்கின்றவர்களைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

18. பணிதசை காலந் தன்னில் பொருள்களைச் சேர்க்க லாகும்
அணியணி வணிப மோங்கு மத்தமுஞ் சேர்த்த லுண்டு
பணிவுள மனங்க ளாகுந் தொடுத்தது ஐயமே யாகும்
மணிகளு மதிகந் நேரல் மாளிகை சித்திரஞ் செய்தல்.

18. பணி என்ற இராகுதசை காலத்தில் ஜாதகருக்குச் சொத்துக்கள் வந்து சேரும். அணிந்துகொள்ளுகின்ற ஆபரணங்கள், மாலை ஆகிய இவைகளின் வியாபாரம் விருத்தியாகும். ஜாதகர் பணத்தைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் வணக்கமான குணத்தையும் சிந்தைகளையும் உடையவராவர். இவர் செய்ய வாரம்பித்தக் காரியத்தில் ஜயத்தை அடைவார். இவருக்குப் பொன் முதலியவற்றால் செய்யப் பட்ட மணி, முத்து, இரத்தினம் ஆகிய இவை வந்து சேரும். இவர் மாளிகையைச் சித்திரவேலைகளால் அலங்காரஞ் செய்வார்.

19. தரித்திரங் காணு னுவன் சாரார்கள் சேர்த்த லுண்டு
மருமவா ணிபங்கள் செய்தல் மாடுகள் பலித மாகும்
பொறுமையும் புகழு மெய்தல் பாரியும் புதல்வர் நேரல்
அருமறை பூமி வாங்க லந்தகன் திசை பக்கத்தில்.

19. ஜாதகர் வறுமையை அடையமாட்டார். இவருக்கு சாரர்கள் என்ற பண்ணைக்காரர்கள் அஃதாவது வயற் செய்கைக்காரர்கள் வந்து சேருவார்கள். இவர் இரகசியமான வியாபாரங்களைச் செய்வார்.

இவரிடம் கால்நடைகள் விருத்தியாகும், பலன் தரும். இவர் பொறுமையையும் கீர்த்தியையும் உடையவராவர். இவருக்கு மனைவி மக்கள் உண்டாவார்கள். இவர் அருமறை என்ற மேலான வேதங்களைப் படிப்பார், தெற்குத் திக்கில் நிலங்களையும் மனைகளையும் வாங்குவார்.

20. இன்னமும் விபர மாக
இயம்புவோம் பின்பா கத்தில்
தன்துணை மூன்பெண் ணொன்று
சாற்றுவோந் தீர்க்க மாக
அன்னவள் குணத்தைச் சொல்வே
னழகுளா ளிருகி வப்பள்
பொன்பணி யதிகஞ் சேர்ப்பள்
பிழையான குணமில் லாதாள்.

20. இன்னமும் அடுத்தப் பாகத்தில் விபரமாக விஷயங்களைச் சொல்லுகின்றேம். இவருடன் கூடப் பிறந்தவர்களில் ஒரு மூத்த சகோதரி தீர்க்காயுள உடையவள் என்று சொல்லுகின்றேம், இவளுடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் அழகுள்ளவளாக விருப்பாள், இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தையுடையவளாவாள். இவள் தனம் ஆபரணம் ஆகிய இவைகளை அதிகமாகச் சேர்த்து வைத்திருப்பாள், தவறானதும் குற்றமானதுமான குணங்களை யுடையவள் அல்லள்.

21. மாதுவும் யோக சாலி வருவோரை யாத ரிப்பள்
சூதிலா ளடக்க வார்த்தை துருசான கோப மேற்பள்
மேதினில் நல்லோ ளாவள் மேவிடும் பித்த தேகி
காதலி வரனுங் கீழ்ப்பால் கழறுவோந் தாயே யாங்கள்

21. ஜாதகரின் மூத்த சகோதரி யோகத்தை யுடையவளாவாள், தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை உடையவளல்லள், அடக்கமான சாந்தமான வார்த்தைகளை யுடையவள், கெடுதியை விளைவிக்கக்கூடிய கோபத்தையுடையவளாவாள். இவள் பூமியில் நல்லவளாகவிருப்பள். இவள் பித்தரோகமுடைய தேகத்தையுடையவளாவள். இவளுக்குப் புருஷன் கிழக்குத் திக்கிலிருந்து வந்து சேருவான் என்று, பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லுகின்றேம்.

22. மதலைக ளாண்பா லொன்று மங்கையர் மூவர் தீர்க்கம்
நிதிமிக வுடைய ளாகி நேமியில் வாழ்வா ளாவள்
அதிபன்பின் கன்னி யிரண்டு மருவிடு மாண்பா லொன்று
அதுபலன் பின்பால் சொல்வே னம்பிகை யாளே

[கேளாய்.

22. ஜாதகருடைய மூத்த சகோதரிக்கு ஒரு ஆண் குழந்தையும் மூன்று பெண்குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவள் தனத்தை அதிகமாக உடையவளாகிப் பூமியில் வாழ்பவளாவள். ஜாதகருக்குப் பின்னுல் இரண்டு இளைய சகோதரிகளும் இளைய சகோதரனும் உண்டாவார்கள். இவர்களுடைய பலாபலன்களைப் பின்னுல் சொல்லுகின்றேன், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய குணாதிசயங்கள்

23. மைந்தனின் அன்னை சேதி வரைகிறேம் நற்கு லத்தள்
செந்திரு மகள்போ லொப்பாஞ் சீலியாம் புத்தி மானும்
வந்தவர் கன்ன மீவள் மாரன்தன் மனத்துக் கேத்தோள்
நிந்தைக ளேற்கா ளாவள் நேமியில் நல்லோ ளாவள்.

23. ஜாதகருடைய தாயாருடைய விஷயங்களைச் சொல்லுகின்றேம். இவள் நல்ல குணத்தையுடையவள். இவள் இலட்சுமிக்குச் சமான மானவளாக விருப்பாள், நல்லொழுக்கத்தை யுடையவளாவள். புத்தியும் அறிவும் உள்ளவளாவள். இவள் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவாள், தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருப்பாள். இவள் யாதொரு பழிகளையும் அபவாதங்களையும் அடையமாட்டாள், பூமியில் நல்லவளாக விருப்பாள்.

ஜாதகரது தாயாருடைய முன் ஜன்மம்

24. இல்லமுங் கீழ்ப்பா லாகும் இவள்துணை யாண்பா லிரண்டு
வல்லியு மவ்வா றுதீர்க்கம் வரைகிறேம் மிவளின் பூர்வம்
அல்லலை யகற்று கின்ற வருணைபால் சேடர் வம்சம்
புல்கினள் சுகமுள் ளோளாய்ப் பெரிதான குடும்பி யாகி;

24. ஜாதகரின் தாயாருடைய வீடு கிழக்குத்திக்கில் இருக்கும். இவளுக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவளுடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம், கஷ்டங்களை நிவிர்த்தி செய்கின்ற அருணை என்ற திருவண்ணுமலை க்ஷேத்திரத்தில் சேடர் என்ற ஒருவித வேலைக்காரர் ஜாதியில் பிறந்தாள். இவள் சுகங்களை அனுபவித்துக் கொண்டு பெரிய குடும்பத்தையுடையவளாகி;

ஜாதகருடைய தாயாருடைய மறு ஜன்மம்

25. அறமதி லிச்சை யின்றி யந்தக னகரஞ் சென்று
பிரமனல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
வருஞ்ஜன்மங் கொங்கு நாட்டில் வருவளாஞ் சத்திரிய
[சேயாய்க்
கரிமத வானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

25. ஜாதகருடைய தாயார் தர்மஞ்செய்வதில் பிரியமுள்ளவளாக விருந்து இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலிபி யுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் கொங்கு தேசத்தில் க்ஷத்திரிய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள் என்று சொல்லுகின்றேம். கறுப்பு மதம்பிடித்த ஆண்யானையின் முகத்தையுடைய விநாயகக் கடவு ளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரின் மரண காலமும் மறு ஜன்மமும்

26. நாற்பதா மாண்டி லேதான்
நவிலுவோந் தந்தை கண்டம்
ஏற்கவே யிவன்பின் ஜன்ம
மிடக்காடர் வாழு நாட்டில்
ஆற்கவே வைசியச் சேயா
யருளுவா ளென்று சொன்னேம்
மார்க்கமாய்த் தவங்கள் செய்யும்
மங்கையே கேட்டி டாயே.

26. ஜாதகருடைய நாற்பதாவது வயதில் இவருடைய தகப்பனர் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றேம். இவர் தன்னுடைய பின் ஜன்மத்தில் இடைக்காடர் வாழுகின்ற நாட்டில் அஃதாவது இடைக் கழிநாடு என்னும் ஊரில் (இடகு நாட்டில்) வைசிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லுகின்றேம். சாஸ்திரங்களில் சொல்லியுள்ள முறைப்படி தவங்களைச் செய்யாகின்ற பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரின் மரண காலமும் ஜாதகரின் மரண காலமும்

27. எண்ணஞ்சு நாலா ண்டி
லியம்புவோ மன்னை கண்டம்
திண்ணமாய்ச் ஜாத கர்க்குப்
செப்புவோ மறுபா ளென்பான்
வண்ணமாய்க் கன்னி மாதம்
வளர்பிறை யேகா தசி
அண்ணலின் பாதஞ் சேர்வன்
அம்பிகை யாளே கேளாய்.

27. ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய தாயார் இறந்துவிடுவாள். ஜாதகருக்கு அறுபத்தொன்பதாவது வயதில் சிறந்த கன்னிமாதம் என்ற புரட்டாசி மாதத்தில் வளர்பிறையில் ஏகாதசிதிதியில் உண்மையாக மரணம் நேரிட்டு இவர் கடவுளின் பாதார விந்தத்தை அடைவார், பார்வதியம்மையே! கேட்பீரேக.

ஜாதகருடைய மறு ஜன்மமும் ஜனன கால தசையிருப்பும்

28. பின்ஜன்மந் தில்லை நாட்டில் பிறப்பனுஞ் சைவச் சேயாய்
உன்னத குடும்பி யாகி யுத்தமன் வாழ்வா னுவன்
அன்னவன் ஜனன கால யம்புலி தசை யிருப்புச்
சொன்னேனே திங்க ளிரண்டுஞ் செப்பினேம் பூர்வ
[பாகம்.

28. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில் தில்லை நாடு என்ற சிதம்பர க்ஷேத்திரத்தில் சைவர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார், மேன்மையான குடும்பஸ்தராகியும் நல்ல குணங்களையுடைய வராகியும் வாழ்பவராவார். இவர் பிறந்த காலத்தில் அம்புலி என்ற சந்திரபகவானுடைய தசையில் இருப்பு இரண்டு மாதங்கள் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாகப் பூர்வ பாகத்தைச் சொல்லி முடித்து விட்டோம்.

ஜாதகம் 106

ஜனனகால கிரகநிலை

1. [1]அரியது ஜன்ம மாக
[2]வதிதியு மாறில் தங்கக்
[3]கரியவன் யேழி லாகக்
[4]கலிபுதன் [5]புகர்[6]பா னெட்டில்
குருதசம் [7]பணியீ ராறிற்
[8]குஜன்நவமு மிவ்வாரூய் கின்ரூல்
உரைப்பீரே பலனை யென்று
வுமையவள் கேட்கும் போது ;

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகி, கேது ஆறிலும், சனி ஏழிலும், சந்திரனும் புதனும் சுக்கிரனும் சூரியனும் எட்டிலும், குரு பத்திலும், இராகு பன்னிரண்டிலும், அங்காரகன் ஒன்பதிலும் ஆக இவ்விதம் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மை கேட்கும்போது ;

கிரகநிலை

சூரியன் சந்திரன் புதன் சுக்கிரன்	அங்காரகன்	குரு	
சனி	இராசி சக்கரம்		ராகு
கேது			லக்கினம்

ரேவதி 4-ஆம் பாதம் : புததசை வரு 0.1.20.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற் குருவும், கடகத்திற் கேதுவும் அங்காரகனும், துலாத்திற் சூரியனும், விருச்சிகத்திற் புதனும், தனுசிற் சனியும், மகரத்திற் சுக்கிரனும், கும்பத்தில் இராகுவும், மீனத்திற் சந்திரனும் ஆகும். புதன் வக்கிரகதியில் அஸ்த

1. சிம்மம்
2. கேது
3. சனி
4. சந்திரன்
5. சுக்கிரன்
6. சூரியன்
7. இராகு
8. அங்காரகன்

மனம் அடைந்து இருக்கின்றார். மூலத்தில் "குஜன் சனியு மிவ்வா ருய்" என்றிருப்பது முப்பத்தெட்டாவது பாடலிலிருந்து "குஜன் நவமு மிவ்வா ருய்" என்று இருக்க வேண்டும் என்று புலப்படுகிறது.

ஜனனமான நகரத்தின் சிறப்பு

2. பிருகுவும் புகலு கின்றார் பிறந்திடு மாண்பால் ஜன்மம்
பெருந்தந்தை யில்லம் மேற்குப் பேசுவோம் வடதென் [வீதி
அறுபட்ட மாரி மேற்கில் யானையின் கோஷ்ட முத்திரம்
நேரிடும் நரிவாக னத்தாள் வாயுநல்கிடும் வடகீ ழீசன்.

2. பிருகு மகரிஷியானவர் பதில் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாக ஜனனமாகும். ஜாதகரைப் பெற்ற தகப்பனருடைய வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேற்கு வாடையில் இருக்கும் என்று சொல்லுகின்றோம். பின்னப்பட்டுள்ள மாரியம்மன் கோயில் மேற்குத் திக்கில் இருக்கும். விநாயகக்கடவுளின் கோயில் அல்லது யானையின் தொழுவம் வடக்குத் திக்கில் இருக்கும். புலி வாகனத்தையுடைய காளியம்மன் கோயில் வடமேற்கிலும் சிவபெருமானுடைய கோயில் வடகிழக்கிலும் இருக்கும்.

3. இன்னமும் பலதே வாச மிலகிய பேரூ ராகும்
அன்னவன் சேஷ்ட னுக அருளுவான் வன்னிய சேயாய்
மன்னியக் குடும்பச் சேதி வரைகிறே மிந்நூல் தன்னில்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

3. ஜாதகர் பிறந்த ஊரில் அநேக கோயில்களும் பல தேசத்தைச் சேர்ந்தவர்களும் வாசஞ் செய்வார்கள். இந்த ஊர் பெரிய ஊராகும் இவர் வன்னியருடைய ஜாதியில் ஜேஷ்ட குமாரராகப் பிறப்பார். இவருடைய குடும்ப விஷயங்களைப் பற்றி இந்தச் சாஸ்திரத்திற் சொல்லுகின்றோம். மேன்மையான யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரது தகப்பனருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் துணையா ணிரண்டு சாற்றுவோந் தீர்க்க மாக
இந்தவ னுதிக்குங் காலை யிரவி கன்னி பாலனுக்கு
அந்தவர் முன்னே னுவ னழகான குடும்ப மொன்றுப்
பந்தமாய் வாழ்வா னுவன் பகருவோ முன்னேன் சேதி.

4. ஜாதகரது தப்பனருக்கு இரண்டு சகோதரர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பகார்கள் என்று சொல்லுகின்றோம். தகப்பனர் பிறக்கும்போது இரவி என்ற அசுவினி நட்சத்திரமும்

கன்னியா ராசியும் ஆகும். தகப்பனுருடைய சகோதரர்கள் இவருக்கு மூத்தவர்களாக விருப்பார்கள். இவர்கள் எல்லோரும் ஒரே குடும்பத்திலிருந்து கொண்டு நேர்த்தியாகவும் மேன்மையாகவும் வாழ்வார்கள். தகப்பனுருடைய முதல் மூத்தசகோதரருடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனரின் முதல் மூத்தசகோதரரின் விஷயம்

5. மனதினில் கபடு மில்லான்
மறுத்துரை யதிகங் கூறான்
இனமதிப் புடனே வாழ்வ
னில்லமுஞ் சிலர்க்குச் செய்வன்
துணைவரை யாத ரிப்பன்
சொல்லது சுகமே யாகுஞ்
சினமுண்டு வெளிக்காட் டாதான்
சுருக்கசொல் காப்பா னவன்.

5. தகப்பனரின் மூத்தசகோதரர் தன்னுடைய மனத்தில் வஞ்சனை கள்ளம் கபடம் ஆகிய இவை இல்லாதவராக விருப்பார். இவர் அதிகமாகத் தடுத்துப் பேசமாட்டார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் சிலருக்கு வீட்டைக் கட்டிக் கொடுப்பார். இவர் தன்னுடைய சகோதரர்களைக் காப்பாற்றுவார். இவர் இனிமையான வார்த்தைகளை உபயோகிப்பார். இவருக்குக் கோபம் வரும், ஆனால் இதை வெளியே காண்பித்துக் கொள்ளமாட்டார், சுருக்கமாகவும் கொஞ்சமாகவும் பேசுவார், தன் சொல்லையுங் காப்பாற்றிக் கொள்ளுவார்.

6. பாரியு மொன்றே தீர்க்கம் பாலர்க ளாண்பா லிரண்டு
கூறுவோந் தீர்க்க மாகக் குடிசொந்தஞ் செய்வா னவன்
மாறிடான் பெரியோர் வார்த்தை மாடுகள் பணையோர்
[விருத்தி
வேறுயில் செய்து வாழ்வன் வித்தகன் வயது தீர்க்கம்.

6. தகப்பனரின் மூத்தசகோதரருக்கு ஒரே ஒரு மனைவியாகும். இவளும் நீண்ட ஆயுள் உடையவளாவள். இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகள் தீர்க்காயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவர் சொந்த வீட்டைக் கட்டுவார். இவர் பெரியவர்களுடைய வார்த்தைகளுக்கு மீறி எதிரிடையாக நடந்து கொள்ளமாட்டார். இவரிடம் மாடுகள் நிலம் ஏர் ஆகிய இவை விருத்தியடையும். இவர் வேறே ஒரு வீட்டைக் கட்டி அதில் வாழ்வார். இவர் நீண்ட ஆயுளை உடையவராவர்.

தகப்பனுடைய இரண்டாவது மூத்தசகோதரர் விஷயம்

7. அதற்குப்பின் தூணவன் சேதி
யடாவடி கொஞ்ச மூண்டு
ததிநெய்பா லிஷ்டங் கொள்வன்
தரணியைப் பரிபா லிப்பன்
அதிபதி யொன்றே தீர்க்க
மைந்தர்க ளாண்பா லிரண்டு
மதிமுக பெண்பா லிரண்டு
வரைகிறேம் தீர்க்க மாக.

7. தகப்பனுருடைய இரண்டாவது மூத்தசகோதரருடைய விஷயங்களாவன :—இவர் சிறிது மூரட்டுத்தனமாகவும் நியாயமில்லாமலும் நடந்து கொள்ளுவார். இவர் தயிர் நெய் பால் இவற்றின்மேல் பிரியமுள்ளவராவர். இவர் நிலங்களை வைத்துக் கொண்டு காப்பாற்றுவார். இவருக்கு மனைவி ஒருத்தியேயாகும். இவளும் நீண்ட ஆயுளை உடையவளாவாள். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் சந்திரனைப்போன்ற அழகான முகங்களையுடைய இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றோம்.

8. உடன்கூடி வாழ்வா னுவ னுறுதியில் லாத நெஞ்சந்
தடபுடல் செய்கை யுண்டு தைரிய மனத்த னுவன்
அடைமொழி கூரு னுவன் அற்பபுத் திகளு மில்லான்
தடவரை மகளே யாங்கள் சாற்றினேம் வயது தீர்க்கம்.

8. இவர் ஒற்றுமையாகக் கூடி இருந்து வாழ்பவராவர். இவர் நிலையில்லாத மனத்தை உடையவராவர். இவர் இடம்பமாகவும் அவசரமாகவும் காரியங்களைச் செய்யத் தக்கவர். தைரியமான மனத்தை உடையவராவர். இவர் விசேடண மொழிகளை அஃதாவது பகுத்தறியக் கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவர் தாழ்ந்த புத்தியையுடையவரல்லர். விசாலமான மலைகளின் அரசனை இமவானுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் இவருக்கு வயது தீர்க்கமானது என்று சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனுருடைய குணாதிசயங்கள்

9. பாலகன் தந்தை சேதி பகருவோம் மால்நி றத்தன்
ஞாலத்தா லுய்வா னுவன் நன்முக வடிவு முண்டு
காலத்தை யறிந்து ரைப்பன் காலிகள் பலித முண்டு
சீலம்போல் வெளிம யக்கன் சித்திர நடையு மாவன்.

9. ஜாதகரின் தகப்பனாருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேகம் வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தையுடையவராவர். இவர் நிலங்களினால் ஜீவனஞ் செய்வார். இவர் நல்ல முகவடிவு என்ற முகத்தின் அழகையுடையவராவர். இவர் காலவர்த்தமானங்களைத் தெரிந்து கொண்டு அவைகளுக்குத் தகுந்தபடியாகப் பேசுவார்: இவரிடம் பசுக்கள் விருத்தியாகும், நல்ல பலனையும் தரும். இவர் நல்ல ஒழுக்கங்களை உடையவர்போல வெளியாருக்குக் காண்பித்துக் கொண்டு இவர்களை மயக்குந் தன்மையை யுடையவராவர், அழகான நடையையும் உடையவராவர்.

10. சொல்லது அதிக முண்டு
சீக்கிர கோபஞ் சாந்தம்
நல்லவ னாகி வாழ்வன்
நம்பினோர் தம்மைக் காப்பன்
தொல்லையுஞ் சுகமு மேற்பன்
சுற்றத்தார் மதிக்க வாழ்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான்
இடரான புத்தி யில்லான்.

10. ஜாதகருடைய தகப்பனார் அதிகமாகப் பேசுவார். இவருக்குச் சீக்கிரத்தில் கோபம் வந்து அது உடனே தணிந்து போய் விடும். இவர் நல்லவராக விருந்து வாழ்வார், நம்பினவர்களை இவர் காப்பாற்றுவார், ஆதரிப்பார். இவர் கஷ்டங்களையும் சுகங்களையும் அடைவார். தன்னுடைய பந்துக்கள் இவரை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து இவர் வாழ்வார். இவர் யாருக்கும் தன்னிடத்தில் உதவி செய்ய ஒன்றும் இல்லையென்று சொல்லமாட்டார். இவர் இடக்கான துன்மார்க்கமான புத்தியை உடையவரல்ல.

11. ரோமங்க ளதிக மில்லான் நுவலுப தேசங் கொள்ளான்
காமனை விருப்பங் கொள்வன் கபடிலான் வெகுளி யாவன்
மாமிக ளிருவ ராவர் மனமது தளர்ச்சி யாவன்
சேமமாங் குடும்பி யாவன் ஜனசகா யங்கள் செய்வன்.

11. ஜாதகருடைய தகப்பனார் தேகத்தில் உரோமம் அதிகமாக உடையவரல்லர். இவர் குருவினிடத்தில் உபதேசத்தைப் பெற்றுக் கொள்ளமாட்டார். இவர் காம ஆசையை உடையவராவர். இவர் கள்ளம் வஞ்சனை கபடம் ஆகிய இவைகளை உடையவரல்லர். இவர் கோபத்தை யுடையவராவர். இவருக்கு இரண்டு மாமிமார்கள் உண்டு. இவர் இரக்கமுள்ள மனத்தை யுடையவராவர். இவர் சௌக்கியமுள்ள குடும்பஸ்தராக விருப்பார், ஜனங்களுக்கு உபகாரங்களைச் செய்வார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

12. இங்கெறி யுடையா னுக்கு
விருதார மிளையா ளுக்கு
மன்னவ னுதிப்பா னுவன்
வறைகிறே மவன்கு ணத்தைப்
பின்னமில் லாத தேகன்
பொருத்தமாய்ப் பேசு வானும்
அன்னியர் நேசங் கொள்வ
னற்புத வார்த்தை சொல்வன்.

12. இப்படிப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருக்கு (ஜாதகர் பிறக்கின்ற காலம் வரையிலும்*) ஏற்பட்ட இரண்டு மனைவிமார்களில் இரண்டாவது மனைவிக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் யாதொரு அவய பங்கமும் இல்லாத தேகத்தை யுடையவராவர். இவர் விஷயங்களுக்குப் பொருத்தமாக விருக்கும்படியாகப் பேசுவார். இவர் பிறரிடத்திற் சினேகத்தை அடைவார், ஆச்சரியமான வார்த்தைகளைச் சொல்லுவார்.

*குறிப்பு :—ஜாதகருடைய தகப்பனுருக்கு மொத்தத்தில் மூன்று தாரங்கள் என்று பதினெட்டாவது, முப்பத்திரண்டாவது, முப்பத்து நான்கரவது பாடல்களிலிருந்து ஏற்படுகின்றது.

13. மாகிறஞ் சமதே கத்தான் வடிவினி லுயர மில்லான்
வானவர் பத்தி பூண்பன் மங்கையர் மோக னுவன்
ஈனரைச் சேரா னுவ னிடுக்கணென் றோரைக் காப்பன்
தேன்மொழி கல்வி யுண்டு தேவதாப் பணியுஞ் செய்வன்.

13. ஜாதகர் நடுத்தரமான தேகத்தை யுடையவராவர். இவர் உருவத்தில் உயரமாக விருக்கமாட்டார். இவர் கடவுளின்மேலும் தேவர்களின்மேலும் அன்பும் ஆசையும் உடையவராவர். ஸ்திரீகளிடத்தில் காதலை உடையவராவர். இவர் தாழ்ந்த குணத்தையுடையவருடன் சினேகஞ் செய்து கொள்ளமாட்டார். நாங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களை இவர் காப்பாற்றுவார். இவர் இனிமையான வார்த்தைகளை உடையவராவர். இவர் படித்தவராவார். இவர் தெய்வங்களுக்கு வேலைகளையுஞ் செய்வார்.

11. தந்தையி னஸ்தி தன்னைத் தானவன் விருத்திச் செய்வன்
சுந்தர முடைய னுவன் சொல்லதைக் காப்பா னுவன்
வந்தவர்க் கன்ன மீவன் வீடுகள் பணையோர் விருத்தி
பந்துவை யாத ரிப்பன் பாரினில் வறுமை காணுன்.

14. ஜாதகர் தன்னுடைய தகப்பனருடைய சொத்துக்களை விருத்தியாக்குவார். இவர் சௌந்தரியமுள்ளவராக இருப்பார். தன்னுடைய் சொற்களைத் தவறிடாமல் காப்பாற்றிக் கொள்ளுவார். இவர் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார். இவரிடம் வீடுகளும் நிலங்களும் ஏர்களும் விருத்தியாகும். இவர் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார், பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார்.

ஜாதகருடைய யோக விஷயம்

15. யோகமெவ் விதமாய்சொன்னீ ருடுபதி தரணியன் வெள்ளி
பாகமா யெட்டில் தங்கப் பகர்ந்தினீர் யோக மெவ்வாறு
ஆகமன் தசத்தில் தங்க அசுரர்மந் திரியு முச்சம்
நாகமுங் கடக மாக நவின்றனம் யோக மென்றோம்.

15. ஜாதகருக்கு யோகத்தை எந்தக் காரணத்தினால் சொன்னீர். உடுபதி என்ற சந்திரனும், தரணியன் என்ற சூரியனும், வெள்ளி என்ற சுக்கிரனும் எட்டாவது பாவத்தில் இருக்கும்போதுகூட எவ்விதமாக ஜாதகருக்கு யோகத்தைச் சொல்லி விட்டீர் என்று கேட்கவே, பிருகுமகரிஷி பதில் சொல்லுகின்றார். ஆகமன் என்ற குரு பத்தாவது பாவத்தில் இருப்பதாலும், அசுரர் மந்திரியாகிய சுக்கிரன் உச்சமாக இருப்பதாலும், நாகம் என்ற இராகு கடகத்தில் இருப்பதாலும் நாங்கள் யோகத்தைச் சொன்னோம் என்று சொல்லுகின்றோம்.

16. ஆகையால் மச்ச யோக
மசுவயோ கங்க ளாலே
போகபாக் கியங்க ளேற்பன்
புவிவிருத்தி வணிபஞ் செய்வன்
தாகமென் றோர்க்கு வீவன்
தடம்வேறுய்ச் செய்வா னுவன்
நாகரி கங்க ளுள்ளான்
நாட்டினில் வறுமை காணன்.

16. மேலே சொல்லிய காரணங்களால் மச்சயோகமும் அசுவயோகமும் உண்டு. இவைகளாலே ஜாதகர் சுகபோகங்களையும் சகல சம்பத்தையும் அனுபவிப்பார். இவரிடம் நிலங்கள் விருத்தியாகும். இவர் வியாபாரங்களைச் செய்வார். இவர் தாகம் எடுக்கின்றது என்று சொல்லுகின்றவர்களுக்கு நீர்மோர் கொடுப்பார். இவர் வேறு ஒரு வீட்டைக் கட்டுவார். இவர் நாகரிகங்களை உடையவராவார், பூமியில் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார்.

ஜாதகருடைய சகோதரர்களும் (சகோதரபாவமும்) தாயின் மரணமும்

17. தன்துணை யாண்பா லொன்று ஜனித்திடு மிவன்பின் [னுலே
அன்னையு முடனே மாள்வ ளறிவிப்பீ ரந்தச் சங்கை
துன்மையாய் மதியு மெட்டில் சுக்கிரன் கூடி நிற்க
அன்னையு மடிவா ளாவ ளெம்பிகை யாளே கேளாய்.

17. ஜாதகருடன் கூடப்பிறந்தவர்களுள் ஓர் இளைய சகோதர னுண்டு. இந்தச் சகோதரன் பிறந்த உடனே தாயார் இறந்து விடுவாள். இவ்விதமாகச் சொல்லவே இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, பிருகுமகரிஷி பதில் சொல்லுகின்றார். துன்பத்தை விளைவிக்கக் கூடியவராகி மதி என்ற சந்திரன் எட்டாவது பாவத்தில் சுக்கிரனுடன்கூடி இருப்பதால் தாயார் இறந்து விடுவாள், பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகரது தகப்பனருக்கு மூன்றுவது மனைவியும் இவளது சந்ததிகளும்

18. மங்கைக்குப் பின்னுள் தானும்
வருவளா மந்த வாண்டில்
அங்கவள் தனக்குப் புத்திரர்
ஆணென்று கன்னி யவ்வாறு
இங்கிவை விருத்தி தீர்க்க
மியம்புவா ரத்திரி தாமுஞ்
சங்கையாய் முதலன் னைக்குச்
சந்ததி யுண்டோ சொல்வோய்.

18. இந்தத் தாயாருடைய தங்கை, தாயார் இறந்த வருஷத்தி லேயே தகப்பனருக்கு மூன்றுவது மனைவியாக வந்து சம்பவிப்பாள். இவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் உண்டாகி நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். அத்திரிமகரிஷி யானவர் கேட்கின்றார். முதலாவது தாயாருக்குப் புத்திரர்கள் உண்டோ? இல்லையோ? என்று சொல்லுவீர்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயங்களும்

19. சுதர்களு மில்லா ளாகித்
தோகையு மடிவா ளாவள்
இதுநிற்க வுதித்தோ னுக்கு
வியம்புவோ மணத்தின் காலம்

பதினேழு வாண்டு தன்னில்
பாவையும் வடபால் நேரும்
அதிபதி குணத்தைச் சொல்வேன்
மாநிற முடைய ளாவள்.

19. முதலாவது தாயார் குழந்தைகள் இல்லாதவளாகவிருந்து இறந்து விடுவாள். இந்த விஷயம் இப்படியிருக்க இனிமேல் ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பதினேழாவது வயதில் வடக்கிலிருந்து மனைவி வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணாதியயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாநிறமான தேகத்தையுடையவளாக விருப்பாள்.

20. ஊகமு முடைய ளாவ
ளுண்மையா மனத்த ளாவள்
தாகமென் றோர்க்கு வீவள்
சாதமு மன்பா யீவள்
நாகரி கங்க ளுள்ளாள்
நளினமாய் வார்த்தைச் சொல்வாள்
போகபாக் கியங்க ளேற்பள்
பொருத்தமாய்ப் பேசு வாளாம்.

20. ஜாதகருடைய மனைவி விவேகமுடையவளாவாள், உண்மையான நல்ல மனத்தை யுடையவளாவள். இவள் தாகமாக விருக்கின்றது என்று சொல்லுகின்றவர்களுக்கு நீர்மோர் கொடுப்பாள், பிறருக்குச் சாப்பாட்டைப் பிரியத்தோடு போடுவாள். இவள் நாகரிகங்களை உடையவளாக விருப்பாள், இனிமையான வார்த்தைகளையும் பரிகாசமான வார்த்தைகளையும் நயமுடன் சொல்லுவாள். இவள் சுக போகங்களையும் சகல சம்பத்துக்களையும் அனுபவிப்பாள், விஷயங்களுக்குப் பொருத்தமாக விருக்கும்படியாகந் பேசுகின்றவளாக விருப்பாள்.

21. பாலிகை வயது தீர்க்கம் பாரபட் சங்கள் பேசாள்
ஞாலம்மேல் நல்லோ ளாவள் நாயகி சீலி யாவள்
மால்மனை யொப்ப ளாவள் வருவோரை யாத ரிப்பள்
ஆலத்தை யுண்டோன் தேவி யறைந்தவிம் மொழி
[குன்றுவே.

21. ஜாதகருடைய மனைவி நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள். இவள் ஒருதலையாகப் பேசமாட்டாள். இவள் பூமியில் நல்லவளாக விருப்பாள், நல்லொழுக்கமுடையவளாக விருப்பாள். இவள் மகாவிஷ்ணுவினுடைய மனைவியாகிய இலட்சுமிக்குச் சமான

மானவளாக விருப்பாள், தன்னிடம் வருகின்றவர்களைக் காப் பாற்றுவாள். ஆலகால விஷத்தை அருந்திய பரமசிவனுடைய மஹிஷியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய சந்ததிகளும் (புத்திரபாவமும்) முன் ஜன்மமும்

22. சுதர்களு மாண்பால் மூன்று
தோகைய ரவ்வா ருவர்
புதல்வர்கள் வறுமை காணர்
புகலுவோ மிவன்முன் ஜன்மம்
நதியினி லுயர்வ தான
நற்சேது பதியி லேதான்
சதிசெயும் வைசியச் சேயாய்
ஜனித்துமே செட்டுசெய்து.

22. ஜாதகருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் இருப்பார்கள். பிள்ளைகள் தரித்திரத்தையும் கஷ்டங் களையும் அனுபவிக்கமாட்டார்கள். ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். க்ஷேத்திரங்களில் மிகவும் சிறந்ததான நல்ல சேது ஸ்தலத்தில் வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாய் ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்திற் பிறந்து வியாபாரத்தைச் செய்து கொண்டு;

23. சுகமுடன் வாழுங் காளில்
செய்ததோர் வினையைக் கேண்மோ
இகபர னன்பு பூண்ட
வதிதிக்கு விடைஞ்சல் செய்யப்
பகையுளோர் புகலுஞ் சாபம்
பதராகச் செய்கை செய்தபாவி
மிகுசெல்வங் குறைவு நேர்ந்து
மேதினில் வறுமை யாயும்;

23. ஜாதகர் முன்ஜன்மத்தில் சௌக்கியமாக வாழ்கின்ற காலத் தில் இவர் செய்த பாவத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. கட வுளிடத்தில் ஆசையும் பக்தியும் உள்ள ஒரு பரதேசிக்கு ஜாதகர் கெடுதியைச் செய்யவே, விரோதத்தை யடைந்த அந்தப் பரதேசி சாபத் தைக் கொடுக்கின்றார். "அவசரப்பட்டுக் கெட்ட காரியத்தைச் செய்த பாபியாகிய உனக்குப் பெரிய செல்வமானது குறைந்து போய் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவித்து;

24. மற்றொரு ஜன்மந் தன்னில் மாதிரு சுகமு மின்றி
உற்றதோர் துணையு நஷ்ட மொண்டியாய் வாழ்வாய்
[நீயும்
இத்தகை சொல்ல லுற்று ரெய்திற்று வந்தச் சாபஞ்
சுத்தமாய்த் தவங்கள் செய்யுஞ் செல்வதி கேட்டி டாயே.

24. நீ உன்னுடைய மறுபிறப்பில் மாதாவினுடைய சுகத்தை அடையாமலும் கூடப்பிறந்த சகோதரன் இறந்தும் தனியாக விருந்து கொண்டு வாழக்கடவாய்" என்று ஜாதகரைப் பார்த்து அந்தப் பரதேசி சொன்னார். இந்தச் சாபம் ஜாதகரை அடைந்தது. பரிசுத்தமாக விருந்து கொண்டு தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

25. மாரனு மந்தி யத்தில் வறுமைக ளுடை யனுகிப்
பாரிச வாயுங் கண்டு பறந்தனன் காலங் நாடு
ஆரியன் வரையப் பட்டு வக்கினி குலமு திப்பன்
நேரிடு மதிதி சாப நிமலனும் தனிய னென்றோம்.

25. ஜாதகர் முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அனுபவித்து பார்சுவ வாயு ரோகத்தினால் இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு அக்கினி குலம் என்ற வன்னியருடைய ஜாதியில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார். இவருக்கு அந்தப் பரதேசியினுடைய சாபம் வந்து சம்பவிக்கும், ஆகையால் இவர் சகோதரர் இல்லாமல் ஒண்டியாக விருப்பார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய பொது யோகங்கள்

26. வந்தவன் பொதுயோ கத்தை வரைகிறோந் தாயே
[கேளும்
இன்னவன் ஜனனந் தொட்டு விவனுடை யாயுள் மட்டும்
சிந்தையில் கலக்க மில்லான் சல்லியப் பாதை காணன்
நிந்தைக ளேற்கா னவன் நிதானமாங் குடும்பி யாவன்.

26. ஜாதகருடைய பொதுவான யோகத்தைச் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக. இவருடைய ஜனனகாலம் முதற் கொண்டு மரணகாலம் வரையிலும் இவர் தன்னுடைய மனத்தில் கஷ்டங்களை அனுபவிக்கமாட்டார். இவருக்குக் கடனால் ஏற்படுகின்ற உபத்திரவங் கிடையாது, அபவாதங்களையும் பழிகளையும் அடையமாட்டார், ஒரு நடுத்தரமான அந்தஸ்திலுள்ள குடும்பஸ்தராக விருப்பார்,

27. இனங்களு மதிப்பு கொள்ள னெதிரியை நாசஞ் செய்வன்
நினைவதை முடிக்க வல்லன் நேசம்வே ருண்டு பண்ணல்
தனமது கொடுக்கல் வாங்கல் சாதமும் குறைவு ரூதான்
வினைசெயான் யாவ ருக்கும் விமலியே கேட்டி டாயே.

27. ஜாதகருடைய பந்துக்கள் இவரைக் கௌரவத்துடன் பாராட்டுவார்கள். இவர் தன்னுடைய பகைவர்களை நாசமாக்கி விடுவார். இவர் நினைத்த காரியத்தைச் செய்து முடிக்குஞ் சாமர்த்திய முடையவராவர். இவர் இன்னொரு ஸ்திரீயினிடத்தில் விசுவாச முடையவராக விருப்பார். இவர் தன்னுடைய பணத்தைப் பிறருக்குக் கொடுப்பார், அதைத் திருப்பியும் வாங்கி கொள்ளுவார். பணவிஷயத்தில் இலாவாதேவி உடையவராக விருப்பார். இவர் சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டத்தை அடையமாட்டார். இவர் யாருக்குங் கெடுதியைச் செய்யமாட்டார், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாருடைய குணாதிசயங்கள்

28. மாதிரு குணத்தைச் சொல்வேன் மாநிறம் பித்த தேகி
ஒதுவாள் சுகமாய் வார்த்தை யுண்மையை வெளிக்காட்
[டாதாள்.
தீதிலாக் குணத்தா ளாவள் ஜனவுப காரி யாவள்
சாதிப்பாள் சிலது சங்கை தன்வரன் மனத்துக் கேற்றாள்

28. ஜாதகருடைய தாயாருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாநிறமுள்ளதும் பித்தரோகமுள்ளதுமான தேகத்தையுடையவளாவாள். இவள் இனிமையாக வார்த்தைகளைச் சொல்லுவாள், இரகசியத்தை வெளியே காட்டிக்கொள்ளமாட்டாள். இவள் கெடுதியான குணத்தை உடையவளல்லள், ஜனங்களுக்கு உபகாரத்தைச் செய்பவளாவாள். சில விஷயங்களில்தான் சொன்னதே சரி என்று வாதித்து நிலைநாட்டுவாள். இவள் தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தபடி நடந்து கொள்ளுவாள்.

ஜாதகரின் தாயாருடைய சகோதரர்களும் முன்ஜன்மமும்

29. இல்லமும் வடகீ ழாகு மிவள்துணை யாண்பா லொன்று
வல்லிமா ரெழுவ ராவர் வரைகிரே மிவளின் பூர்வங்
கொல்லூடு தன்னி லேதான் குதித்தனள் செக்கான்
[வம்சம்
நல்லவ ளாகி யேதான் நலிந்தோர்க்குத் தாக மீந்து;

29. ஜாதகருடைய தாயாருடைய வீடு வடகிழக்குத்திக்கில் இருக்கும். இவளுக்கு ஒரு சகோதரனும் ஏழு சகோதரிமார்களும் உண்டு என்று சொல்லுகின்றோம். இவளுடைய முன்ஜன்மத்தைப் பற்றிச்

சொல்லுகின்றோம். இவள் கொல்லூடு என்ற கிராமத்தில் செக்காடு கின்ற செட்டியாருடைய குலத்திற் பிறந்தாள். இவள் நல்லவளாகவே யிருந்து ஏழைகளுக்கு நீர்மோர் கொடுத்து ;

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்.

30. புல்கினுள் காலந் நாடு பிரமனுல் வரையப் பட்டுத்
தல்லியும் வந்தா னென்றேஞ் சாற்றுவோ மிவள்பின்
ஜன்மம்
எல்லையி லுயர்வ தான எழில்சோழ நாட்டி லேதான்
வல்லியு மிக்கு லத்தில் வருவளா மென்று சொல்வோம்.

30. இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய மறு ஜன்மத்தைப் பீற்றிச் சொல்லுகின்றோம். பூமியில் சிறந்ததும் அழகியதுமான சோழ தேசத் தில் இவள் இந்த ஜன்மத்திய குலமாகிய வன்னியர் ஜாதியில் மறு ஜன் மத்தில் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மம்

31. தந்தையின் முன்ஜன் மத்தைச்
சாற்றுவோந் திருவ லத்தில்
இந்தகோர் குலமு தித்து
வியலான குடும்பி யாகி
அந்தவன் வாழுந் நாளில்
அணுகின விணையைக் கேண்மோ
நிந்தைக ளோர்பெண் பேரில்
நேமித்து விலக்க லுற்றுள்.

31. ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் திருவலத்தில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலமாகிய வன்னியர் ஜாதியில் பிறந்து மேன்மையான குடும்பஸ்தராகி வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பழியைச் சொல்லு கின்றோம், கேட்பீராக. இவர் ஒரு ஸ்திரீயின்மேல் பழியைச் சாட் டவே அவள் தன்னுடைய குடும்பத்திலிருந்து விலக்கி வைக்கப்பட் டார்கள்.

32. மாதுவு மனது வாடி வரைந்தசா பத்தைக் கேண்மோ
தீதுகள் சொல்லி யேதான் துரத்தின பாவிக் கேதான்
மேதினில் மறுஜன் மத்தில் விளங்காது துணையென்
[ணப்போல்
காதலி மனைவி மூன்றுய்க் கலந்திடு மிதுவு மன்றி.

32. அந்த ஸ்திரீ தன்னுடைய மனத்தில் கஷ்டத்தை அடைந்து நொந்து கோடுத்தச் சாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. "என்மேல் குற்றங்களைச் சாட்டியே என்னைத் துரத்திவிட்ட பாவியாகிய உனக்குப் பூமியில் பின்ஜன்மத்தில் என்னைப்போன்ற சகோதரி விருத்தியாகமாட்டாள். உனக்கு மூன்று மனைவிமார்கள் வாய்க்கக் கடவார்கள். இதுவுமல்லாமல்

33. தந்தையி னில்ல மின்றித் தரணியில் வாழ்வா யென்னப்
பந்தணி மாது சாபம் பற்றிற்று வென்று சொல்வோம்
அந்திய காலந் தன்னி லதிகவாய்ப் புண்க ளுண்டாம்
அந்தகன் நகர டைந்து வயனுமே வரையப் பட்டு ;

33. தகப்பனருடைய வீடில்லாமல் பூமியில் வாழக்கடவர்ய்" என்று அந்த முன்ஜன்மத்திய ஸ்திரீ இந்த ஜாதகரின் தகப்பனரைப் பார்த்துச் சொல்லவே அந்தச் சாபம் இவரை வந்து அடைந்தது என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய கடைசி காலத்தில் வாயில் அதிகமான புண்கள் ஏற்பட்டு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ;

ஜாதகரின் தகப்பனருடைய மறுஜன்மம்

34. வந்தவ னென்று சொல்வோ மாதுவின் சாபம் போலே
தந்தையு மில்லங் காணன் தாரமு மூன்று மாகும்
பந்தணி துணையுங் காணன் பகருவோ மிவன்பின் ஜன்மம்
இந்திர நகர மொத்த எழில்கா ஞ்சி தன்னி லேதான் ;

34. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவராவார் ஜாதகருடைய தகப்பனர் என்று சொல்லுகின்றோம். அந்த ஸ்திரீயினுடைய சாபப் பிரகாரம் இவர் தன்னுடைய தகப்பனருடைய வீடு இல்லாதவராவர். இவருக்கு மூன்று மனைவிமார்கள் ஏற்படுவார்கள். இவருக்குச் சகோதரரும் இல்லை. இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். தேவேந்திரனுடைய பட்டணத்திற்குச் சமானமான பட்டணமாகிய அழகிய காஞ்சீவரத்தில் ;

35. பிறப்பனும் வேளாள னகப் பெரிதான குடும்பி யாவன்
இருபது வாறு வாண்டி லியம்புவோ மந்தை கண்டங்
திருகிய வாண்டி லேதான் செப்புவோ மன்னை கண்டங்
கரிமத வானைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

35. இவர் வேளாளர் குலத்திற் பிறப்பார், பெரிய குடும்பஸ்தராவார். ஜாதகருக்கு இருபத்தாருவது வயதில் இவருடைய தகப்பனர் இறந்து விடுவார் என்று சொல்லுகின்றோம். ஜாதகருக்கு மூன்றுவது வயதில் இவருடைய தாயார் இறந்துபோய் விடுவாள்

என்று சொல்லுகின்றோம். கறுப்பு மதயானையின் முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மரணகாலமும் மறுஜன்மமும்

36. அன்பது வொன்ப தாண்டி லெப்பசி மாதந் தன்னில்
இன்னவ னுடல மேகு மியம்புவோ மிவன்பின் ஜன்மங்
கன்னியா குமரி தன்னில் கலப்பனும் சைவச் சேயாய்
உன்னத வானைப் பெற்ற வுத்தமி கேட்டி டாயே.

36. ஜாதகருக்கு ஐம்பத்தொன்பதாவது வயதில் ஐப்பசி மாதத்தில் மரணம் நேரிட்டு இவருடைய தேகம் மறைந்துபோய் விடும். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் கன்னியாகுமரியில் சைவ குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். மேன்மையான சிறந்த யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய ஜனனகால நட்சத்திரமும் தசையிருப்பும்

37. காவலன் ஜனிக்குங் காலை கடைநாளில் கடைப்பா தத்தில்
மேவிய புதனி ருப்பு விளம்புவோந் திங்க ளொன்றுந்
தாவிய தினம் நாலைந்துஞ் சாற்றினும் பூர்வ பாகம்
ஆவலாய்த் தவங்கள் செய்யு மம்பிகை யாளே கேளாய்.

37. ஜாதகர் பிறக்கும்போது ஜனன நட்சத்திரம் கடைநாளாகிய ரேவதி நட்சத்திரத்தின் நான்காவது பாதம் ஆகும். இதற்குரிய புதமகாதசையில் ஒரு மாதமும் இருபது நாட்களும் இருப்பு என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக முதல் பாகத்தைச் சொல்லி முடித்து விட்டோம். அதிக ஆசையுடன் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

38. மங்கல னென்பா னிற்க வுரைப்பீரே பலனைத் தானே
அங்கவன் வயது தீர்க்க மதிதியின் தசையந் தத்தில்
சங்கையா யில்லந் தானுந் தைத்திய குருவின் காலம்
பங்குவு மூன்றாய் நேரும் பார்வதி கேட்டி டாயே.

38. மங்கலன் என்ற அங்காரகன் ஒன்பதில் இருப்பதால் அதனால் உண்டாகும் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று கேட்கவே, பிருகுமகரிஷியானவர் பதில் சொல்லுகின்றார். இதனால் ஜாதகருக்கு தீர்க்கமான வயது ஏற்படும். அதிதி என்ற கேதுமகாதசையின் கடைசியில் குருவினுடைய புக்தியில் வீடு மூன்று பாகமாகப் பங்கிடப்படும், பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—மணிகண்ட கேரளத்தில் தீர்க்காயுள் காண்டத்தில் பதினெட்டாவது பத்தொன்பதாவது பாடல்களைப் பார்க்க அங்காரகன் ஒன்பதாவது திரிகோண பாவத்தில் இருப்பது ஜாதகரின் தீர்க்காயுளுக்கு அனுகூலமான அம்சம் என்பது ஏற்படும்.

ஜாதகம் 107

ஜனன கால கிரகநிலை

1. [1]பிறை[2]தேவில் [3]காரி [4]மானில்
[5]பொன்மேடஞ் [6]சேயும் [7]வண்டி
[8]பரிதியும் [9]வெள்ளி [10]புந்தி
[11]பணியுமே [12]சிய மாக
[13]அரியது [14]வுயிரு மாக
[15]அதிதியுங் [16]குடம தாக
உரைப்பீரே பலனை யென்று
உத்தமி கேட்கும் போது ;

1. சந்திரன் விருச்சிகத்திலும், சனி மகரத்திலும், குரு மேஷத்திலும், அங்காரகன் கடகத்திலும், சூரியனும் சுக்கிரனும் புதனும் இராகுவும் சிம்மத்திலும், கேது கும்பத்திலும், ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்போது ;

கிரகநிலை

	குரு		
கேது	இராசி சக்கரம்		அங்காரகன்
சனி			ல. சூ. சு. பு. ரா.
	சந்திரன்		

விசாகம் 4-ஆம் பாதம் : குரு தசை ஆ 3-10 0.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சூரியனும்,

1. சந்திரன்
2. விருச்சிகம்
3. சனி
4. மகரம்
5. குரு
6. அங்காரகன்
7. கடகம்
8. சூரியன்
9. சுக்கிரன்
10. புதன்
11. இராகு
12. சிம்மம்
13. சிம்மம்
14. லக்கினம்
15. கேது
16. கும்பம்

மிதுனத்தில் குருவும் கேதுவும், கடகத்திற் சந்திரனும், சிம்மத்திற் சுக்கிரனும் சனியும், கன்னியில் அங்காரகனும், தனுசில் புதனும் இராகுவும் ஆகும். சனி வக்கிரகதியில் இருக்கின்றார்.

ஜனன நகரச் சிறப்பு

2. அத்திரி முனிவர் சொல்வார் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் வடவாடை கீழ்மேல் வீதி
பத்திர காளி கீழ்ப்பால் பரமனுந் தென்கீ ழாகும்
வித்தகி மாரி மேற்கில் வடதிசைக் கம்பா னுண்டு.

2. அத்திரிமகரிஷியானவர் சொல்லுகின்றார். ஆண் குழந்தை ஜனனமாகும். ஜாதகர் பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றேன். இது கிழக்கு மேற்குத் தெருவில் வடவண்டை வாடையில் இருக்கும். பத்திரகாளியம்மன் கோயில் கிழக்குத் திக்கிலும் சிவபெருமானுடைய கோயில் தென்கிழக்குத் திக்கிலும் பார்வதியம்மன் கோயில் மாரியம்மன் கோயில் ஆகிய இவை மேற்கிலும் வடக்குத் திக்கில் கம்பான் என்ற கப்பத்துறையும் கப்பற்கயிறும் இருக்கும்.

3. பலஜாதி யவ்வூர் வாசம் பெரியதோ ரூரே யாகுங்
குலவுவா னிரண்டாஞ் ஜன்மங் குழவியும் ரெட்டி வம்சந்
தலிவன்தன் குடும்பச் சேதி சாற்றுவோ மிந்நூல்
[தன்னில்
மலையிரை மகளே யாங்கள் வழுத்தின மொழி குன்றுவே.

3. ஜாதகர் பிறந்த ஊரில் அநேக ஜாதியார்கள் வாசஞ் செய்வார்கள். இஃது ஒரு பெரிய ஊராகும். ஜாதகர் ரெட்டியாருடைய குலத்தில் இரண்டாவது குழந்தையாகப் பிறப்பார். இவருடைய குடும்ப விஷயங்களே இந்தச் சாஸ்திரத்திற் சொல்லுகின்றோம். மலைகளுக்கு அரசனுகிய பர்வதராஜனுடைய புத்திரியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகரின் தகப்பனுடைய சகோதரர்களும் குணதிசயங்களும்

4. தந்தைக்குத் தார மிரண்டில் தரித்திடு முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானுங் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
ஓதுவேன் துணைவர் காணு னுரைக்கிறே மிவன்
[குணத்தை
மேதினி விருத்தி செய்வன் வேவுகா ரதிக முண்டு.

4. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய தகப்பனருடைய இரண்டு மனைவிமார்களில் முதல் மனைவிக்கு நியாமாகப் பிறந்தவராவார் என்று சொல்லுகின்றோம். தகப்பனருக்குச் சகோதரர்கள்

இல்லை. இவருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவருக்கு அதிக வேலையாட்கள் உண்டு.

5. குடராசி கார்த்தி நாளில்
குதிப்பனு மூக சாலி
திடமுள குடும்ப மேற்பன்
சித்திர யில்லஞ் செய்வன்
மடயரை யுறவு கொள்ளான்
வாக்குச் சொல்காப்பா னவன்
படையின்முன் செல்லா னவன்
பணிந்தோரை யாத ரிப்பன்

5. ஜாதகருடைய தகப்பனார் கும்ப லக்கினத்தில் கார்த்திகை நட்சத்திரத்திற் பிறந்தவராவர், விவேக முடையவராவர். இவர் வலி வானதும் மேன்மையானதுமான குடும்பத்தை உடையவராவர், சித்திரங் கள் அமைந்த அழகான வீட்டைக் கட்டுவார். இவர் மடையர்களுடன் சிநேகஞ்செய்து கொள்ளமாட்டார், தன்னை வணங்குகின்றவர்களைக் காப்பாற்றுவார்.

6. உண்டியும் சுகமாய்க் கொள்வன்
உறைப்பொடு புளிப்பி லிச்சை
கண்டித முரையா னவன்
காலிகள் விருத்தி யுண்டு
துண்டமாய்க் கூரு னவன்
தொடுத்ததை வெல் வானவன்
தண்டமிழ்ச் சமர்த்த னவன்
தந்தையார் ஜிதங்க ளற்பம்.

6. ஜாதகருடைய தகப்பனார் சுகமான நல்ல ஆகாரத்தைச் சாப்பிடுவார். புளிப்பு காரம் இவைகளில் இவருக்குப் பிரியமுண்டு. இவர் கண்டிப்பான் வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவரிடம் பசுக்கள் விருத்தியாகும். இவர் கண்டிப்பாயும் தண்டிப்பவர்கள் பேசுகிறவிதமாகவும் பேசமாட்டார். இவர் தான் செய்ய ஆரம்பித்த காரியங்களைச் செய்துமுடிப்பவராவார். இவர் இனிமையான தமிழில் வல்லவரகவிருப்பார். இவருக்குப் பிதுரார்ஜித சொத்து அற்பமாகும்.

7. கரமதில் மாலின் ரேகை
கஞ்சமாம் ரேகை யுண்டு
இருகிற முணைச்சல் தேகம்
இடரென்றோர்க் குதவி செய்வான்

அறுமுகன் பத்தி கொள்வ
ஞபத்தைச் சிலர்க்குக் காப்பன்
பறைபள்ளு முடைய ஞவன்
பலபேர்க்கு மன்ன மீவன்.

7. ஜாதகருடைய தகப்பனரின் உள்ளங்கைகளில் விஷ்ணுரேகையும் தாமரை ரேகையும் இருக்கும். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறத்தையுடையவராவர், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றும் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரஞ்செய்வார். இவர் ஆறுமுகக் கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராவர். இவர் பறை பள்ளு என்கிற வாத்தியம் மேளம் தாளம் பிரபந்தம் ஆகிய இவைகளை உடையவராவார், அநேகருக்குச் சாப்பாடு போடுவார்.

ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மம்

8. முன்னவ னிருந்த ஜன்மம்
மொழிகின்றேங் காரைக் காலில்
வன்னிய குலமு தித்து
மானிலங் கிருஷிகள் செய்து
அன்னவன் வாழுங் காளி
லணுகின வினையைக் கேண்மோ
கன்னிகை யொருத்தி பேரிற்
கழறுஞ வார்த்தை சொல்ல ;

8. ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவர் காரைக்காலில் வன்னியருடைய ஜாதியிற் பிறந்து பெரிய பெரிய நிலங்களைப் பயிரிட்டுக்கொண்டு வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாவத்தைச் சொல்லுகின்றேம், கேட்பீராக. இவர் இளம்பருவத்தையுடைய ஒரு ஸ்திரீயின் மேல் சொல்லத்தகாத வார்த்தைகளைச் சொல்லவே;

9. மாதுவு மனது வாடி
வரைந்தசா பத்தைக் கேண்மோ
பாதக வார்த்தை யென்மேல்
பகர்ந்திட்ட பாவிக் கேதான்
மேதினில் மறுஜன் மத்தில்
விளங்காரே துணைவர் தாமும்
மாதிரு சுகமு மின்றி
மாமன்பால் சிலகா ளுய்வன்.

9. அந்த ஸ்திரீ தன்னுடைய மனம் நொந்து கொடுத்தச் சாபத்தைச் சொல்லுகிறேம், கேட்பீராக. "என்மேல் அபவாதமான

வார்த்தைகளைச் சொல்லிய பாவிக்குத் தன்னுடைய மூறு ஜன்மத்தில் சகோதரர் விருத்தியாக மாட்டார்கள். அவர் தன் தாயாருடைய சுகமில்லாதவராகிச் சிலகாலம் அம்மான் வீட்டில் வாழக்கடவார்."

10. உதித்தசேய் முதலில் நஷ்ட முயர்விலாக் குடும்பம் பூர்வம்
விதவிதஞ் சொல்ல லுற்றுள் மேவிற்று அந்தச் சாபம்
அதிபனு மந்தி யத்தில் மறையவர் தொண்டு பூண்டு
அதிதிகட் கன்ன மீந்து வணிகினுன் காலந் நாடு.

10. ஜாதகருடைய தகப்பனுருக்கு முன்னே பிறக்கின்ற குழந்தைகள் இறந்து போகக்கடவர். இவருடைய குடும்பம் முதலில் மேன்மை யில்லாமல் இருக்கடவது" என்று அந்த ஸ்திரி இவரைப் பார்த்துச் சொன்னுள், இன்னும் பலவிதமாகவும் சொன்னுள். அந்தச் சாபம் இவரை வந்து அடைந்தது. இவர் தன்னுடைய மூன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் பிராமணர்களுக்கு வேலைசெய்து அவர்களைத் தொழுது பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

11. சிரநான்கோன் வரையப் பட்டு
ஜனிப்பனு மிந்தப் பாலன்
மருவிடு மாது சாப
மவன்துணை காணுனுவன்
உறைவானும் வேறூர் தன்னி
லுயரன்னைச் சுகமில் லாதான்
குறுகிய குடும்ப பூர்வங்
கோதையே கேட்டி டாயே.

11. நான்கு தலைகளையுடைய பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஜாதகருடைய தகப்பனுர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்த வராவார். அந்த ஸ்திரீயினுடைய சாபம் இவருக்கு வந்து சம்பவிக்கும். இவருக்குச் சகோதரர்கள் இல்லை. இவர் இன்னெரு கிராமத்தில் வாசஞ் செய்வார். இவருக்கு மேன்மையான தாயாராலுண்டாகுஞ் சௌக்கியங்கள் கிடையா. இவருடைய குடும்பம் முதலில் சிறப்பில் லாமல் சிறியதாகவும் குன்றியும் இருக்கும், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய குணதிசயங்கள்

12. சொன்னயிக் குணத் தானுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னழகுளா னிரு சிவப்பன்

உன்னதக் கல்வி யிரண்டு
வுணருவா னாக சாலி
பொன்பணி சேர்ப்பானவன்
பிதிராஸ்தி விருத்தி செய்வன்.

12. இதுவரையிலும் சொல்லப்பட்டக் குணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங்களைச் சொல்லுகின்றேன். இவர் அழகாகவிருப்பார், இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறத்தையுடையவராவர். இவருக்கு இரண்டுவித மானவும் மேன்மையானவுமான வித்தைகள் உண்டு. இவர் விஷயங்களை நன்றாய் அறிந்துகொள்வார். இவர் புத்திசாலி, இவர் தனம் ஆபரணம் ஆகிய இவைகளைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார், தன்னுடைய பிதிரார்ஜித சொத்துக்களை விருத்தியாக்குவார்.

13. ஊகவான் நுணுக்கந் தேர்வ னுறுதியில் லாத நெஞ்சம்
பாகமாய்ப் பேசு வானும் பதர்குண மில்லா னவன்
நாகரி கங்க ளுள்ளான் நல்லோர்க்கு நல்லோ னவன்
ஆகம முணர்ந் தோருக்கு அன்னமு மன்பா யீவன்.

13. ஜாதகர் விவேகமுள்ளவர், நுட்பமான விஷயங்களை அறிவதில் வல்லவராக விருப்பார். இவர் நிலையில்லாத மனத்தை உடையவராவார். இவர் நாகரிகங்களை உடையவராகவிருப்பார், நல்லபடியே நடந்துகொள்ளுவார். ஆகம சாஸ்திரங்களைப் படித்தறிந்த பெரியார்களுக்குச் சாப்பாட்டை அன்புடன் போடுவார்.

14. தந்தைக்கு மேலாய் வாழ்வன்
காலாள் பணியேர் விருத்தி
விந்தையாய்ப் பேசு வானும்
விளைபுலம் மூன்று சேர்ப்பன்
வந்தவர்க் கன்ன மீவன்
மன்னர்க ளுறவு கொள்வன்
கந்தன்மேல் பத்தி பூண்பன்
கனத்தவர் நேசங் கொள்வன்.

14. ஜாதகர் தன்னுடைய தகப்பனாருடைய அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவரிடம் கால்நடைகளும் வேலையாட்களும் ஏர்களும் விருத்தியாகும். இவர் பிறர் ஆச்சரியப்படும்படியாகச் சாமர்த்தியமாகப் பேசுவார். இவர் நன்றாய் விளைகின்ற மூன்று விதநிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாடு போடுவார், அரசர்களுடைய சிநேகத்தை அடைவார். இவர் முருகக் கடவுளின் மேல் அன்பும் ஆசை

யும் உடையவராவார். பெரிய மனிதர்கள் மேதாவிகள் ஆகிய இவர்களுடைய சிநேகத்தை அடைவார்.

15. அறமதி லிச்சை யுள்ளா னுபத்தென் றோரைக் காப்பன்
துருசான நடையு மாவன் சோம்பிடான் காரி யத்தில்
வரிவிழி மார்கன் மோகன் மஹாதலஞ் சேது செல்வன்
உரன்முறை மதிக்க வாழ்வ னுலகமேல் நல்லோ னுவன்.

15. ஜாதகர் தர்மஞ் செய்வதில் ஆசை யுடையவராவர், ஆபத்தில் சிக்கிக்கொண்டிருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களைக் காப்பாற்றுவார். இவர் கெட்ட நடவடிக்கையையும் உடையவராவர். இவர் வேலைகளில் சோம்பலில்லாதவராவர், அழகான கண்களை உடைய ஸ்திரீகளின்மேல் மையல் என்ற காம ஆசையை உடையவராவர். பெரிய க்ஷேத்திரமாகிய சேதுஸ்தலத்திற்குப் போவார். இவர் தன்னுடைய பந்துக்கள் இவரை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து கொண்டு வாழ்வார். பூமியில் நல்லவராக விருப்பார்.

ஜாதகருடைய யோக விஷயங்கள்

16. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ரூரைப்பீர்க ளந்தச்
[சங்கை
ஆகமன் நவத்தி லாக அசனனும் புதனுஞ் ஜன்மம்
ஏகனுய்ச் சனியு மாறி லிருப்பதால் நாபி யோகம்
நாகயோ கங்க ளொன்று நல்யோக மென்று
[சொல்வோம்.

16. ஜாதகருக்கு யோகம் எந்தக் காரணங்களினால் சொன்னீர்? அவைகளைச் சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரி மகரிஷியானவர் பதில் சொல்லுகின்றார். ஆகமன் என்ற குரு ஒன்பதிலிருப்பதாலும், அசனன் என்ற சுக்கிரனும் புதனும் ஜன்மத்திலிருப்பதாலும் சனி ஒருவனுக ஆறுவது பாவத்தில் இருப்பதாலும் நாபியோகம் என்ற ஒரு யோகமும், நாகயோகம் என்ற ஒரு யோகமும் ஆக இவ்விரண்டமான நல்ல யோகங்களும் உண்டு என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—மூலத்தில் "அந்தகனும் புதனும் ஜன்மம்" என்றிருப்பது "அசனனும் புதனும் ஜன்மம்" என்றும், நாசியோகம் என்பது நாபியோகம் என்றும் நம்மால் திருத்தப்பட்டன. நாபியோக விஷயமாய்த் தமிழ் ஜாதகாலங்காரம் முந்நூற்றுப் பத்தாவது பாடலையும் ஜாதக சிந்தாமணி 1963-ஆவது பாடலையும் பார்க்கவும். நாகயோகம்விஷயமாய்த் தமிழ் ஜாதகாலங்காரம் முந்நூற்று நாற்பதாவது பாடலையும், மூந்நூற்று நாற்பத்தோராவது பாடலையும் பார்க்கவும். நாசிகா யோகம் என்ற ஒருவித யோகமுமுண்டு. இது விஷய

மாக ஜாதகசிந்தாமணி இரண்டாயிரத் தைந்தாவது பாடலைப் பார்க்க வும். இந்த ஜாதகத்தில் சூரியனும் சுக்கிரனும் புதனும் லக்கினத்திற் கூடி இருப்பதால் ஜாதகசிந்தாமணி இரண்டாயிரத்து இருபத் தொன்பதாவது பாடல் பிரகாரம் சாமரையோகம் என்ற ஒருவிந நல்ல யோகம் ஏற்பட்டிருக்கிறது. இங்கு குறிப்பிடப்பட்ட சில பாடல்களின் பிரகாரம் நாபியோகம் நாகயோகம் ஆகிய இவ்விரண்டு யோகங்களும் ஏற்படுவதற்கு இந்த ஜாதகத்தில் எல்லா அம்சங்களும் அமைந்திரா மல் சில அம்சங்கள்மாத்திரம் அமைந்திருப்பதையுங் கவனிக்கவும்.

17. ஆகிய மூன்று யோக
மணுகிடும் பால னுக்குப்
போகபாக் கியங்க ளேற்பன்
புரந்தரன் போலே வாழ்வன்
நாகமென் றோர்க்கு வீவன்
தடமது மூன்று செய்வன்
நாகத்தை யணிந்தோன் தேவி
லக்ஷம்பொன் படைப்பா னென்றோம்.

17. இந்த ஜாதகருக்கு மூன்று யோகங்கள் இருக்கின்றன. இவர் சுக போகங்களையும் சகல சம்பத்துகளையும் அனுபவிப்பார். இவர் புரந்தரன் என்ற தேவேந்திரனைப்போல விருந்து வாழ்வர். இவர் தாகம் எடுக்கின்றது என்று சொல்லுகின்றவர்களுக்கு நீர்மோர் ஆகிய இலைகளைக் கொடுப்பார். இவர் மூன்று குளங்களை அல்லது வழிகளை உண்டுபண்ணுவார். நாகப்பாம்பைத் தன்னுடைய தலையில் தரித்துக் கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே! இவர் ஒரு லக்ஷம் பொன் மதிப்பிடக்கூடிய பணத்தைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—இந்தப் பாடலில் மூன்று யோகங்கள் ஜாதகருக்கு இருக் கின்றன என்று அத்திரிமகரிஷி சொல்லி இருக்கின்றார். ஆனால் பதினாறாவது பாடலில் (1) நாபி (அல்லது நாசி) யோகம், (2) நாக யோகம் ஆகிய இவ்விரண்டு யோகங்கள் மாத்திரம் வெளிப்படையாகக் குறித்திருக்கின்றார். மூன்றாவது யோகமாகிய சாமரையோகத்தை இவர் குறிப்பிடவில்லை. இந்த சாமரையோகத்தையுஞ் சேர்த்துத்தான் மூன்று யோகங்கள் உண்டு என்று சொல்லி இருக்கின்றாரோ இல்லையோ என்பதும் புலப்படவில்லை. பதினாறாவது பாடலில் நான்காவது வரியில் மூலத்தில் "நன்யோகமென்று" கண்டிருப்பது "நன்யோக மொன்று" என்று இருக்கவேண்டும் என்று கருதி "நன்யோகம்" என் பதைச் "சுபயோகம்" என்று பொருள்படுத்துவோமானால் புதனும் சுக்கிரனும் லக்கினத்தில் இருப்பதால் ஜாதகபாரிஜாதம் ஏழாவது

அத்தியாயம் நூற்றிருபத்தைந்தர்வது சுலோகப் பிரகாரம் 'சுபயோகம்' ஏற்பட்டிருக்கின்றது. பதினேழுவது பாடலில் இரண்டாவது வரியிலிருந்து சுக்கிரனும் புதனும் லக்கினத்தில் இருப்பதை அத்திரி மகரிஷியானவர் கவனித்துக் குறிப்பிட்டிருக்கின்றார் என்று ஏற்படுகின்றது. ஆனால் இதே பாட்டிலிருந்து இராகுவும் சூரியனும் லக்கினத்தில் இருப்பதால், "அசுபயோகமும்" ஏற்படுகின்றது. இராகுவும் சூரியனும் பாபிகள் என்று கவனிப்போமானால் அசுபயோகமும் ஏற்படுகிறது. சூரியன் லக்கினாதிபதியாகி லக்கினத்திலேயே இருப்பதால் இவர் இந்த ஜாதகத்தில் சுபர் என்று கருதக் கூடும். இராகு தன்னுடன் கூடியிருப்பவர், தன்னைப் பார்ப்பவர், தான் இருக்கும் இடம் இவைகளை அனுசரித்து ஜாதக சந்திரிகை பன்னிரண்டாவது சுலோகப் பிரகாரம் பலனைக் கொடுக்கவேண்டியவராகின்றார். இவர் புதன் சுக்கிரன் சுபராக பாவிக்கப்பட்ட சூரியன் இவர்களுடன் கூடி குருவால் பார்க்கப்பட்டிருக்கின்றார். ஆகையால் இவரை யோகபாவம் சம்பந்தப்பட்டவரையில் சுபராக பாவிக்கக் கூடும். இவ்விதமாக பாவிப்போமானால் முழுவதும் "சுபயோகமே" என ஏற்பட்டுவிடுகிறது. ஆதலால் அத்திரி சொல்லியபிரகாரம் (1) நரபியோகம், (2) நாகயோகம், (3) சுபயோகம் என்ற மூன்று யோகங்கள் ஏற்படக்கூடும்.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதர பாவம்)

18. தன்துணை முன்னோர் நஷ்டந் தங்கும்பின் கன்னி யிரண்டு
மன்னன்போ லாண்பா லொன்று மருவிடுந் தீர்க்க மாக
அன்னவர் சேதி பின்னு லறிவிப்போந் தாயே யாங்கள்
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

18. ஜாதகருக்கு மூத்த சகோதரர்கள் இறந்து விடுவார்கள். இவருக்குப் பின்னால் உள்ள இரண்டு இளைய சகோதரிகளும் அரசனைப் போன்ற ஓர் இளைய சகோதரனும் இருப்பார்கள். இவர்கள் நீண்ட ஆயுயு உடையவர்களாக விருப்பார்கள். இவர்களுடைய விஷயங்களைப் பார்வதியம்மையே! நாங்கள் பின்னால் தெரிவிக்கின்றோம். மேன்மையானதும் சிறந்ததுமான யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணங்களும்

19. மங்கள மீரா றைன்பான் மருவிடும் வடபால் பாரி
அங்கவ ளன்னை வர்க்க மணுகிடுங் குணத்தைச்
[சொல்வேன்
திங்கள்போல் வதன மொக்குந் தேரின புத்தி யுண்டு
எங்கள்போ லதிதிக் கன்ன மீவளாம் நற்கு ணத்தாள்.

19. ஜாதகருக்கு விவாகம் இருபத் தொன்றுவது வயதில் நடக்கும். மனைவி வடக்குத்திக்கிலுள்ள இவருடைய பந்துக்களிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் சந்திரனைப்போன்ற அழகான முகத்தையுடையவளாவள். இவள் மேன்மையான புத்தியை யுடையவளாவள். எங்களைப் போன்ற முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போடுவாள், நல்ல குணத்தையுடையவளாவாள்.

20. அரிமனை யொப்ப ளாவ ளன்னமு மன்பா மீவள்
வருவோரை யாத ரிப்பள் வரனுக்கு நல்லோ ளாவள்
பொரைசொலா வளம னத்தாள் பூஷண மதிகஞ்
[சேர்ப்பள்
நெறியதைக் காப்பா ளாவள் நிமலியுந் தீர்க்க ஜீவி.

20. ஜாதகருடைய மனைவி மகாவிஷ்ணுவினுடைய மனைவியாகிய இலட்சுமிக்குச் சமானமானவளாக விருப்பாள். இவள் பிறருக்குச் சாப்பாட்டைப் பிரியத்துடன் கொடுப்பாள். இவள் எவர் மேலும் குற்றங்களைச் சொல்லமாட்டாள், இனிய குணமுள்ள மனத்தையுடையவளாவள். இவள் ஆபரணங்களை அதிகமாகச் சேர்த்து வைப்பாள். இவள் தன்னுடைய நல்ல ஒழுக்கத்தைப் பாதுகாப்பவளாவள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவள்.

21. ஐயமுனி மிதனைக் கேட்டுச் செப்புவார் முனிவ ருக்கு
வியமாகு முதல்ம னைதான் மேவிடு மிரண்டாம் பாரி
பயமிலை சொன்ன சங்கை பகருவீர் முனியே நீர்தாம்
நயமிலாக் கேது யேழில் நாலினுக் குடையோன் நீசம்.

21. இவ்விதமாக அத்திரி முனிவர் சொல்லியதை ஐய முனிவர் கேட்டு, அத்திரி முனிவருக்குத் தடுத்துச் சொல்லுகின்றார். முதல் மனைவி இறந்துபோய்விடுவாள். இரண்டாவது மனைவி வந்து சம்பவிப்பாள். நான் இப்போது சொல்லிய பலன் சந்தேகமில்லாமல் நடக்கும், இவ்விதமாக ஐயமுனிவர் சொல்லவே, இவரை அத்திரி முனிவர் பார்த்து இதற்குக் காரணங்களை நீரே சொல்லுவீர் என்று கேட்கவே, ஐய முனிவர் பதில் சொல்லுகின்றார். நன்மையாக இல்லாத கேது ஏழாவது பாவத்திலும் நான்கிற்குடையவராகிய அங்காரகன் நீசமாகவும் ;

22. இருப்பதால் தார மிரண்டு மியம்பினே முனியே யாமும்
பிருகுவு மறித்துச் சொல்வார் புகலொணாத் தார மிரண்டு
வருவிப்பீ ரந்தச் சங்கை மன்னவ னவத்தில் நின்றும்
கரியவ ளட்சி யாகக் கணக்கனுஞ் ஜன்மந் தங்க ;

22. இருப்பதால் ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள் என்று, அத்திரி முனிவரே! நான் சொல்லுகின்றேன். இவ்விதமாகச் சொல்லிய ஜய முனிவரைப் பிருகு மகரிஷியானவர் தடுத்துச் சொல்லுகின்றார். இரண்டு மனைவிகள் என்று சொல்லக்கூடாது. இவ்விதமாகப் பிருகு மகரிஷி சொல்லவே, இவரை ஜய முனிவர் பார்த்து இதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, பிருகு மகரிஷி பதில் சொல்லுகின்றார். மன்னவன் என்ற குரு ஒன்பதாவது பாவத்திலிருப்பதாலும் கரியவன் என்ற சனி ஆட்சியாகவும் கணக்கன் என்ற புதன் ஜன்மலக்கினத்திலும் இருப்பதாலும்;

குறிப்பு :—நான்காவது வரியில் மூலத்தில் உள்ள "கனகனும் ஜன்மம்,தங்க" என்பது "கணக்கனுஞ் ஜன்மந் தங்க" என்று நம்மால் திருத்தப்பட்டது. ஏனெனில் கனகன் ஜன்மத்தைப்பார்க்கின்றாரே தவிர அதில் இவர் இல்லை.

23. இந்ததோர் விதத்தா லேயே யிருதார மில்லா னென்றும்
அந்ததோர் பாரிக் கேதான் அணிவிப்ப னிரண்டு
[முத்திரை
சந்தேகம் புகல்வீ ரையா தறிபடுங் கள்ள ராலே
எந்தக்கா லத்தி லேதா னெய்திடு மந்தச் சங்கை.

23. இந்தக் காரணத்தினால் ஜாதகர் இரண்டு மனைவிகளை உடையவர் அல்லர் என்று சொல்லுகின்றோம். ஆனால் முதல் மனைவிக்கு இரண்டு தாலிகளை ஜாதகர் கட்ட நேரிடும். இவ்விதமாக பிருகு மஹரிஷியானவர் சொல்லவே அதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று ஜய முனிவர் கேட்க, பிருகு மஹரிஷி பதில் சொல்லுகிறார். முதலாவது மாங்கல்யம் திருடர்களாலே அறுத்துக்கொண்டு போய் விடக்கூடும். இவ்விதமாக பிருகு மஹரிஷி சொல்லவே, ஜாதகருக்கு எந்தக் காலத்தில் இவ்விதமாக நேரிடும் என்பதை ஜய முனிவர் கேட்டார்.

24. புததசை காலந் தன்னில் புதல்வனுக் காரு ரூண்டில்
இதுகுற்ற நேரு மென்றே மிதுவின்றி வேறு காணன்
அதிபதி யொன்றே தீர்க்க மங்கல மிரண்டு யென்றும்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

24. ஜாதகருக்கு முப்பத்தாறுவது வயதில் புததசை நடக்கும் பொழுது இவ்விதமானத் திருட்டு நேரிடும் என்று சொல்லுகிறோம். இவ்விதமாக நடக்குமேயன்றி ஜாதகருக்கு இன்னொரு மனைவி நேரிடமாட்டாள். இவருக்கு ஒரே மனைவிதான் உண்டு இந்த மனைவியும் நீண்ட ஆயுளை உடையவள். ஆனால் ஜாதகர் முதல் மனைவியை வைத்துகொண்டே இரண்டு தடவைகள் (அஃதாவது முன் சொல்லப்

பட்ட இருபத்தோராவது வயதிலும் முப்பத்தாறுவது வயதிலும்) இரண்டு கலியாணத்தைச் செய்வார் என்று பிருகு மஹரிஷி பதில் சொன்னார். பரிதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதி அம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திர பாவம்)

25. சுதர்களு மெழுவர் தோன்றுங் தீர்க்கமா மாண்பா
[லிரண்டு
மதிமுகப் பெண்பால் மூன்று வரைகிறேரும் தீர்க்க மாக
அதுவிப ரங்கள் யாவு மறிவிப்போம் பின்பா கத்தில்
நதிசடை யணிக்தோன் பாரி நவின்றவை தப்பா தன்றே.

25. இந்த ஜாதகருக்கு ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். இவர்களில் இரண்டு ஆண் குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். சந்திரனைப்போல அழகான முகத்தையுடை மூன்று பெண் குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகிறோம். இவர்களுடைய எல்லா விஷயங்களையும் பற்றி அடுத்த பாகத்தில் நாங்கள் விபரமாகச் சொல்லுகின்றோம். கங்காதேவியைத் தன்னுடைய சடையில் தரித்துக்கொண்டிருக்கின்ற பரம சிவனுடைய மனைவியாகிய பார்வதி அம்மையே! நாங்கள் சொல்லிய பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும் அல்லவா; அஃதாவது நடந்தே தீரும்.

ஜாதகருடைய முன் ஜன்மம்

26. பாலகன் மூன்றன் மத்தை பகருவோ மாழி தன்னில்
சீலமில் லாத கங்கை குலமதி லுதித்து மேலும்
நூலங்கள் விருத்தி செய்து நாயதி மதலை யுண்டாய்
மேலோர்கள் கொண்டு பூண்டு மார்கத்தில் தாகம் வைத்து.

26. ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றி நாங்கள் சொல்லுகின்றோம். இவர் சிகாழியில் நல்லொழுக்கமில்லாத கங்கைகுலம் என்ற வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை உண்டாக்கியும் மனைவியையும் மக்களையும் உடையவராகியும் பெரியார்களுக்கு வேலை செய்துகொண்டும் அவர்களிடத்தில் அன்பை உடையவராக இருந்தும் ஜனங்கள் போக்கு வரத்து வழியில் தாகத்தை தீர்க்க நீர் மோர் பந்தலை ஏறபடுத்தியும் ;

ஜாதகருடைய யோக பாவம்

27. அறமதி லிச்சை யுண்டா யக்ககன் நகரஞ் சென்று
பிரமனல் வரையப் பட்டுப் பிறப்பது மிந்தப் பாலன்
உரைக்கிறே மிவனின் யோக முதித்தகாள் முதலா யாகத்
திருமகன் மரண மட்டுக் கரித்திர மில்லா னவன்.

27. ஜாதகர் தர்ம காரியங்களைச் செய்வதில் ஆசை உடையவராகியும் இருந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரம்ம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கிறார். இனிமேல் இவருடைய யோகங்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் பிறந்தது முதற்கொண்டு இறந்து போகின்ற வரையிலும் வறுமையும் கஷ்டங்களும் இல்லாதவராக இருப்பார்.

28. பந்துவு மதிக்க வாழ்வன்
பகரமாங் குடும்பி யாவன்
இந்திரன் போலே வாழ்வ
னிடுக்க மென்றேரைக் காப்பன்
செந்திரு விலாசம் பெற்று
ஜயம்செய்வ னெடுத்த வேலை
எந்திடம் பெருமை யேற்ப
னிவன்திருப் பணியுஞ் செய்வன்.

28. ஜாதகர் தன்னைப் பந்துக்கள் மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்பவர் ஆவர். இவர் மேன்மையானதும் சிறந்ததுமான குடும்பஸ்தராக இருப்பார். இவர் தேவேந்திரனைப் போல சகல போக பாக்யங்களையும் அனுபவித்துக்கொண்டு வாழ்வார். நாங்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களைக் காப்பார். இலட்சுமியினுடைய கடாக்ஷத்தை அடைந்து இவர் தான் செய்ய ஆரம்பித்தக் காரியங்களில் ஜயத்தை அடைவார். இவர் எல்லாவிடங்களிலும் கீர்த்தியையும் புகழையும் அடைவார். இவர் கோயில்களில் கடவுளுடைய வேலைகளைச் செய்வார்.

ஜாதகருடைய தாயாரது குணதிசயங்கள்

29. அன்னையின் குணத்தைச் சொல்வேன்
அழகுளாள் மாஞ்சி வப்பள்
அன்னமு மன்பா யீவ
ளடாவடி கூரு ளாவள்
அன்னியர் மதிக்க வாழ்வ
ளடிசிலுக் கினிய ளாவள்
அன்னம்போல் சாய லொக்கு
மரிபோலே கோபம் கொஞ்சம்.

29. ஜாதகருடைய தாயாருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் அழகுள்ளவளாக இருப்பாள். மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவளாக இருப்

பாள். இவள் பிறருக்குச் சாப்பாட்டைப் பிரியத்துடன் கொடுப்பாள். முரட்டுத்தனமாகவும் நியாயமில்லாமலும் பேசாதவளாக இருப்பாள். பிறர் இவளை மதிக்கத்தகுந்த அந்தஸ்திலிருந்து இவள் வாழ்வாள். இனிப்பாகச் சமையல் செய்வதில் வல்லவளாக இருப்பாள். இவள் அன்னப்பட்சியைப் போல அழகான உருவத்தை உடையவளாக இருப்பாள். இவளுக்குச் சிம்மத்திற்கு வருவது போலக் கோபம் சிறிது உண்டாகும்.

30. பாலபாக்கிய முடையளாவள் பசித்தோர்க்குத் தாக மீவள்
சீலியாம் புத்தி மாளுஞ் சிலுகான குணமில் லாதாள்
காலத்தை யறிந்து ரைப்பள் கண்முகம் வசிய மூண்டு
வேல்விழி தீர்க்க ஜீவி விமலியே கேட்டி டாயே.

30. ஜாதகருடைய தாயார் பால் பாக்கியத்தை உடையவளாக இருப்பாள். பசியோடு இருப்பவர்களுக்குத் தாகவிடாய் தீர மோரைக் கொடுப்பாள். இவள் நல்ல ஒழுக்கம் உடையவள் ஆவள். இவள் அறிவுடையவளாக இருப்பாள். இவள் கெட்ட குணங்களை உடையவள் அல்லள். இவள் கால வர்த்தமானங்களை நன்றாகத் தெரிந்துகொண்டு அவைகளுக்குத் தகுந்தபடியாகப் பேசுவாள். இவளுடைய கண்கள் பிறரை வசியப்படுத்தும்படியாகச் சுந்தரமாக இருக்கும். வேலைப் போன்ற அழகான கண்களுடைய இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய சகோதரங்களும் (சகோதரபாவமும்) முன்ஜன்மமும்

31. இல்லமும் வடபா லாகு மிவள்துணை யாண்பா லிரண்டு
வல்லிமார் மூவ ராவர் வரைந்தனந் தீர்க்க மென்றேம்
நில்லாவே மற்ற வெல்லாம் நிமலியின் பூர்வங் கேளாய்
எல்லையி லுயர்வ தான எழில்சேர நாட்டி லேதான்.

31. ஜாதகரது தாயாரின் வீடு வடக்குத் திக்கில் இருக்கும். இவளுக்கு இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் இருப்பார்கள் என்றும் இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்கள் என்றும் சொல்லுகின்றோம். மற்றச் சகோதரங்கள் எல்லாம் நிலையில்லாமல் இறந்து போய் விடுவார்கள். தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. பூமியில் சிறந்ததும், மேன்மையானதுமான ;

32. மங்கையுங் கர்ண சேயாய்
மருவியே சுகமாய் வாழ்ந்து
பொங்கின குடும்பம் பெற்றுப்
பெரியோர்க்குத் தொண்டு பூண்டு

அங்கவள் வினையில் லாம
லணுகிளுள் காலந் நாடு
புங்கவன் வரையப் பட்டுப்
பிறந்தவ ளென்று சொல்வோம்.

32. ஜாதகருடைய தாயார் கருணீகர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து சௌக்கியமாக வாழ்ந்து கொண்டும் பெருமையான பெரிய குடும்பத்தை அடைந்து பெரியார்களுக்கும் பரதேசிகளுக்கும் வேலைசெய்து அவர்களிடத்தில் அன்பு உடையவளாகியும் யாதொரு பாபத்தையும் அடையாதவளாயும் இருந்து பிறகு இறந்து எமப்பட்டணத்திற்குப் போனுள். பிரம தேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்து இருக்கின்றுள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரின் மறுஜன்மம்

33. மாதுவும் வருமை காணுள் வரைகிறோம் பின்ஜன் மத்தை
ஒதுரு தலத்தி லேதான் உதிப்பளாஞ் சைவச் சேயாய்
போதன முடைய ளாகிப் புகழுடன் வாழ்வா ளாவள்
நீதியாய்த் தவங்கள் செய்யும் நிமலியே கேட்டி டாயே.

33. ஜாதகருடைய தாயார் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையாதவளாக இருப்பாள். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஒதுரு ஸ்தலம் என்கிற நான்கு வேதங்களையும் ஒதுகின்ற ஸ்தலமாகிய சிதம்பர க்ஷேத்திரத்தில் சைவருடைய குலத்தில் பெண் குழந்தையாக இவள் மறு ஜன்மத்தில் பிறப்பாள். இவள் போதனம் என்ற அறிவையும் செல்வத்தையும் உடையவளாகிப் பெருமையுடனும் கீர்த்தியுடனும் வாழ்பவள் ஆவள்.

ஜாதகருடைய தகப்பனரது மரணமும் மறுஜன்மமும்

34. முப்பதா மாண்டு தன்னில்
விருச்சிக மாதந் தன்னில்
செப்புவோந் தந்தை கண்டந்
தீரன்பின் ஜன்மங் கேளாய்
மெய்ப்புடன் தோகை மேல்பால்
மேவிய சிறுவூர் தன்னில்
ஒப்புவான் அருகர் வர்க்க
முயர்வான குடும்பி யாவன்.

34. ஜாதகருக்கு முப்பதாவது வயதில் விருச்சிக மாதம் என்ற கார்த்திகை மாதத்தில் இவருடைய தகப்பனருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். தகப்பனருடைய மறுஜன்மத்தைப் பற்றிச்

சொல்லுகின்றேம், கேட்பீராக. உண்மையாக தோகை என்ற மலைம் என்ற ஸ்தலத்திற்கு மேற்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் அருகர் என்ற சமணருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் போய்ப் பிறப்பார். இவர் மேன்மையான குடும்பஸ்தராக இருப்பார்.

ஜாதகருடைய தாயாரது மரணமும் ஜாதகருடைய மரணமும்

35. அன்னைக்கு நாற்பா னிரண்டி லாவணி மாதந் தன்னில்
உன்னத கண்ட மென்றே முதித்தசேய் தனக்குச்
[சொல்வேன்
மன்னிய அறுபா லுறில் மார்கழி மாதந் தன்னில்
இன்னவ னுடல மேகு மீச்வரி கேட்டி டாயே.

35. ஜாதகருக்கு நாற்பத்திரண்டாவது வயதில் ஆவணி மாதத்தில் இவருடைய தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றேம். இவருக்கு அறுபத்தாருவது வயதில் சிறந்த மார்கழி மாதத்தில் இவர் இறந்து இவருடைய தேகம் அழிந்துபோய் விடும், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மறுஜன்மம்

36. பின்ஜன்மம் பட்சி தன்னில் பிறப்பனும் பிரமச் சேயாய்
மன்னரால் தொழிலும் பெற்று மானில மதிக முண்டாய்
அன்னவன் வாழ்வா னவ னறைந்தஇம் மொழி
[குன்றுவே
இன்னவாறு முனிவ ருக்கு வியம்புவார் பராசர் தாமும்.

36. ஜாதகர் தன்னுடைய மறுஜன்மத்தில் பட்சி என்ற திருக்கழுக்குன்ற ஸ்தலத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் அரசாங்கத்தில் உத்தியோகத்தை அடைந்து பெரிய பெரிய நிலங்களை உடையவராகி வாழ்பவர் ஆவார். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். இவ்விதமாக அத்திரிமகரிஷி சொல்லவே, இவருக்கு பராசரமுனிவர் மறுத்துச் சொல்லுகின்றார்.

ஜாதகரது கண்டங்கள்

37. இதுமத்தில் ஜாத கர்க்கு வெய்தாவோ மார கங்கள்
விதவிதப் பிணி யநேக மேவிடும் நிவிர்த்தி யாகும்
நிதிகுரு வொன்பா னிற்க நிமலனுந் தீர்க்க ஜீவி
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

37. இதற்கு இடையில் ஜாதகருக்கு கண்டங்கள் நேரிடாவோ என்று பராசரர் அத்திரியைக் கேட்க, அத்திரி பதில் சொல்லுகின்றார்.

அங்கவள் வினையில் லாம
லணுகினுள் காலந் நாடு
புங்கவன் வரையப் பட்டுப்
பிறந்தவ ளென்று சொல்வோம்.

32. ஜாதகருடைய தாயார் கருணீகர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து சௌக்கியமாக வாழ்ந்து கொண்டும் பெருமையான பெரிய குடும்பத்தை அடைந்து பெரியார்களுக்கும் பரதேசிகளுக்கும் வேலைசெய்து அவர்களிடத்தில் அன்பு உடையவளாகியும் யாதொரு பாபத்தையும் அடையாதவளாயும் இருந்து பிறகு இறந்து எமப்பட்டணத்திற்குப் போனுள். பிரம தேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்து இருக்கின்றுள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரின் மறுஜன்மம்

33. மாதுவும் வருமை காணுள் வரைகுறோம் பின்ஜன் மத்தை
ஒதுரு தலத்தி லேதான் உதிப்பளாஞ் சைவச் சேயாய்
போதன முடைய ளாகிப் புகழுடன் வாழ்வா ளாவள்
நீதியாய்த் தவங்கள் செய்யும் நிமலியே கேட்டி டாயே.

33. ஜாதகருடைய தாயார் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையாதவளாக இருப்பாள். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஒதுரு ஸ்தலம் என்கிற நான்கு வேதங்களையும் ஓதுகின்ற ஸ்தலமாகிய சிதம்பர க்ஷேத்திரத்தில் சைவருடைய குலத்தில் பெண் குழந்தையாக இவள் மறு ஜன்மத்தில் பிறப்பாள். இவள் போதனம் என்ற அறிவையும் செல்வத்தையும் உடையவளாகிப் பெருமையுடனும் கீர்த்தியுடனும் வாழ்பவள் ஆவள்.

ஜாதகருடைய தகப்பனுரது மரணமும் மறுஜன்மமும்

34. முப்பதா மாண்டு தன்னில்
விருச்சிக மாதந் தன்னில்
செப்புவோந் தந்தை கண்டந்
தீரன்பின் ஜன்மங் கேளாய்
மெய்ப்புடன் தோகை மேல்பால்
மேவிய சிறுவூர் தன்னில்
ஒப்புவான் அருகர் வர்க்க
முயர்வான குடும்பி யாவன்.

34. ஜாதகருக்கு முப்பதாவது வயதில் விருச்சிக மாதம் என்ற கார்த்திகை மாதத்தில் இவருடைய தகப்பனுருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். தகப்பனுருடைய மறுஜன்மத்தைப் பற்றிச்

சொல்லுகின்றேம், கேட்பீராக. உண்மையாக தோகை என்ற மலம் என்ற ஸ்தலத்திற்கு மேற்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் அருகர் என்ற சமணருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் போய்ப் பிறப்பார். இவர் மேன்மையான குடும்பஸ்தராக இருப்பார்.

ஜாதகருடைய தாயாரது மரணமும் ஜாதகருடைய மரணமும்

35. அன்னைக்கு நாற்பா னிரண்டி லாவணி மாதந் தன்னில்
உன்னத கண்ட மென்றே முதித்தசேய் தனக்குச்
[சொல்வேன்
மன்னிய அறுபா றறில் மார்கழி மாதந் தன்னில்
இன்னவ னுடல மேகு மீச்வரி கேட்டி டாயே.

35. ஜாதகருக்கு நாற்பத்திரண்டாவது வயதில் ஆவணி மாதத்தில் இவருடைய தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றேம். இவருக்கு அறுபத்தாறுவது வயதில் சிறந்த மார்கழி மாதத்தில் இவர் இறந்து இவருடைய தேகம் அழிந்துபோய் விடும், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மறுஜன்மம்

36. பின்ஜன்மம் பட்சி தன்னில் பிறப்பனும் பிரமச் சேயாய்
மன்னரால் தொழிலும் பெற்று மானில மதிக முண்டாய்
அன்னவன் வாழ்வா னவ னறைந்தஇம் மொழி
[குன்றுவே
இன்னவாறு முனிவ ருக்கு வியம்புவார் பராசர் தாமும்.

36. ஜாதகர் தன்னுடைய மறுஜன்மத்தில் பட்சி என்ற திருக்கழுக்குன்ற ஸ்தலத்தில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் அரசாங்கத்தில் உத்தியோகத்தை அடைந்து பெரிய பெரிய நிலங்களை உடையவராகி வாழ்பவர் ஆவார். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். இவ்விதமாக அத்திரிமகரிஷி சொல்லவே, இவருக்கு பராசரமுனிவர் மறுத்துச் சொல்லுகின்றார்.

ஜாதகரது கண்டங்கள்

37. இதுமத்தில் ஜாத கர்க்கு வெய்தாவோ மார கங்கள்
விதவிதப் பிணி யனேக மேவிடும் நிவிர்த்தி யாகும்
நிதிகுரு வொன்பா னிற்க நிமலனுந் தீர்க்க ஜீவி
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

37. இதற்கு இடையில் ஜாதகருக்கு கண்டங்கள் நேரிடாவோ என்று பராசரர் அத்திரியைக் கேட்க, அத்திரி பதில் சொல்லுகின்றார்.

ஜாதகருக்கு அநேகவிதமான நோய்கள் உண்டாகும். ஆனால் அவை நிவிர்த்தியாகி விடும். செல்வத்தைத் தருகின்ற அஃதாவது செல்வ காரகனுகிய குரு ஒன்பதாவது பாவத்திலிருப்பதால் ஜாதகர் நீண்ட ஆயுளை உடையவராவர். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய ஜனனகாலத்திய ஜன்மநட்சத்திரமும் தசை இருப்பும்

38. சுதனுமே ஜனிக்குங் காலை துறவுநாள் கடைப்பா தத்தில்
நிதிகுரு தசைமூன் றாண்டும் நேர்ந்திடுந் திங்கள் பத்தும்
இதுமுதல் பாகஞ் சொன்னே மியம்புவோம் பின்பால்
[சேதி
கதிதருந் தவங்கள் செய்யுங் காதலி கேட்டி டாயே.

38. ஜாதகர் பிறந்த காலத்தில் துறவுநாள் என்ற விசாக நட்சத் திரத்தின் நான்காவது பாதம் ஜன்ம நட்சத்திரம் ஆகும். செல்வகார கனுகிய குருமகாதசையில் இருப்பு மூன்று வருஷங்களும் பத்து மாதங் களும் ஆகும். இதுவரையிலும் நாங்கள் முதல் பாகத்தைச் சொல்லி முடித்து விட்டோம். இனிமேல் மற்ற விஷயங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். மோட்சத்தைத் தருகின்ற தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 108

ஜனனகால கிரகநிலை

1. [1]அரியது வுதய மாக [2]யந்தணன் ராகு நாலில்
[3]கரியவ னஞ்சி லாகக் கேதுவு [4]சேயும் பத்தில்
[5]பிறை[6]புகர் [7]லாப மாகப் புதன்[8]பானு வீரா ருக
திருவாதிரை முதல் காலத்தில் ஜனித்தவன் பலனெவ்
[வாறு.

1. சிம்மம் ஜன்மலக்கினமாகிக் குருவும் இராகுவும் நான்கிலும், சனி ஐந்திலும், கேதுவும் அங்காரகனும் பத்திலும், சந்திரனும் சுக்கிரனும் பதினொன்றிலும், புதனும் சூரியனும் பன்னிரண்டிலும் இருந்து திருவாதிரை நட்சத்திரன் முதலாவது பாதத்தில் பிறந்த குழந்தை எவ்விதமான;

கிரகநிலை

		அங்காரகன் கேது	சந்திரன் சுக்கிரன்
	இராசி சக்கரம்		சூரியன் புதன்
			லக்கினம்
சனி	குரு ராகு		

திருவாதிரை 1-ஆம் பாதம் : இராகுதசை வரு 15-0-0.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற் சுக்கிரனுஞ் சனியும், ரிஷபத்திற் கேதுவும், கடகத்திற் புதனும், கன்னியிற் சூரியனும் அங்காரகனும், துலாத்திற் குருவும், விருச்சிகத்தில் இராகுவும், தனுசிற் சந்திரனும் ஆகும். புதன், குரு, சுக்கிரன், சனி இவர்கள் வக்கிரகதியில் இருக்கின்றார்கள். புதன் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்.

---

1. சிம்மம்
2. குரு
3. சனி
4. அங்காரகன்
5. சந்திரன்
6. சுக்கிரன்
7. பதினொன்று
8. சூரியன்

ஜனனமான நாட்டின் சிறப்பு

2. பலனதைப் புகலு மென்று பார்வதி கேட்கும் போது
நலமுள பிருகு சொல்வார் நாயகன் ஜனன மாகுந்
தலமது வடதென் வீதி சனிப்பார்வை வடகீழ் காளி
நிலவணிந் தோனுந் தந்தி நிற்பனே உத்தர திக்கில்.

2. பலன்களை உடையதாக இருக்கும் என்பதைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்போது, நன்மையான பிருகுமகரிஷியானவர் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேற்குத் திக்கைப் பார்த்ததாக இருக்கும். காளியம்மன் கோயில் வடகிழக்குத் திக்கில் இருக்கும். சந்திரனைத் தன்னுடைய ஜடையில் தரித்துள்ள சிவபெருமானுடைய கோயிலும் விநாயகருடைய கோயிலும் வடக்குத் திக்கில் இருக்கும்.

ஜாதகருடைய குடும்ப விஷயம்

3. அரவணிந் தோளு மாயோன்
அனல்காளி மேல்பா லாகுஞ்
சிறுவூராங் கங்கைச் சேயாய்
ஜனிப்பனு மிரண்டாஞ் ஜன்மந்
திருமகன் குடும்பச் சேதி
செப்புவோ மினிமே லாகக்
கரிமத வாணை பெற்றக்
காதலி கேட்டி டாயே.

3. சர்ப்பத்தைத் தன்னுடைய ஜடையில் அணிந்தவராகிய பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதியம்மையினுடைய கோயிலும் மகாவிஷ்ணுவினுடைய கோயிலும் அக்கினியை உடைய காளியம்மன் கோயிலும் மேற்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் சிறிய கிராமம் ஆகும். ஜாதகர் கங்கைகுலம் என்ற வேளாளர் குலத்தில் இரண்டாவது பிறவியை உடைய ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவருடைய குடும்ப விஷயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். கறுப்பு மதயானையின் முகத்தை உடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரின் சகோதரங்களும் (சகோதரபாவமும்)
தகப்பனருடைய விஷயங்களும்

4. தந்தையின் தூணியாண் மூன்று சத்திமார் நால்வ ராவர்
பிந்தியுஞ் சிலவாண் சேதம் பேசுவோம் பின்பால் சேதி
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மிருநி றத்தன்
சிந்தையு மிரண்டு மாகுந் தேய்சலாம் நாமங்

[கொண்டோன்.

4. ஜாதகருடைய தகப்பனருக்கு மூன்று சகோதரர்களும் நான்கு சகோதரிகளும் இருப்பார்கள். பிறகு சில சகோதரர்கள் இறந்து விடுவார்கள். இவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னால் சொல்லுகிறோம். ஜாதகருடைய தகப்பனரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை யுடையவர். இவருக்கு இரண்டுவிதமான எண்ணங்களும், அஃதாவது நல்ல எண்ணமும் கெட்ட எண்ணமும் உண்டு. இவர் தேய்தலையுடைய சந்திரபகவானுடைய நாமதேயத்தை* உடையவர் ஆவர்.

*குறிப்பு :—தேவாங்கு என்ற பெயரை உடையவர் என்றும் அர்த்தம் கொள்ளக்கூடும்.

5. கிருஷிகளுஞ் செய்வா னவன்
கெடுதிக ளொருவர்க் கெண்ணன்
வருந்துணை வேறாய்ச் செய்வன்
மாளிகை செய்வா னவன்
பொருள்கடன் கொள்ளா னவன்
புகழ்ந்தோர்க்கு வுதவி செய்வன்
நெறிகாப்பன் நீண்ட சொல்லன்
நிதானமாங் குடும்ப மென்றோம்.

5. ஜாதகருடைய தகப்பனர் விவசாயத் தொழிலைச் செய்பவர் ஆவர். இவர் ஒருவருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டார். இவர் தன்னுடைய சகோதரர்களை வேறு குடும்பஸ்தர்களாகப் பிரித்து வைத்து விடுவார். இவர் ஒரு மாளிகையைக் கட்டுவார். இவர் பணத்தைக் கடனாக வாங்கமாட்டார். இவர் தன்னைப் புகழ்ந்து பேசுபவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் தன்னுடைய நல்ல குணத்தையும் சன்மார்க்கத்தையும் காப்பாற்றிக் கொள்வார். இவர் நீண்ட சொற்களை உடையவர், அஃதாவது அதிகமாகப் பேசுவார். இவருடைய குடும்பம் சமமான குடும்பம் என்று சொல்லுகின்றோம்.

6. அன்னமுங் குறைவு றாதா
னதிதிகள் நேசங் கொள்ளான்
பொன்பணி பின்னற் சேர்ப்பன்
பூமியை விருத்தி செய்வன்
தன்சொலு மடக்க முண்டு
தன்மனம் வெகுளி யாவன்
சொன்னதைக் காப்பா னவன்
சுற்றத்தார்க் கினக்கஞ் சொல்லான்.

6. ஜாதகருடைய தகப்பனுர் சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டத்தை அனுபவிக்கமாட்டார், பரதேசிகளிடத்தில் விசுவாசமாக இருக்க மாட்டார், அவர்களுடைய சினேகத்தையும் அடையமாட்டார். இவர் தனம் ஆபரணங்கள் ஆகிய இவைகளைப் பிற்காலத்தில் சம்பாதித் துச் சேர்த்து வைப்பார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி யாக்குவார். இவர் சாந்தமாகப் பேசுவார். இவர் தன்னுடைய மனத்தில் கோபத்தை யுடையவராக இருப்பார். இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார், தன்னுடைய பந்துக்களுக்கு வணங்கித் தாழ்மையாக பதில் சொல்லமாட்டார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

7. சொல்லிய குணத்தா னுக்குச்
சுதனுமே ஜனிப்பா னவன்
வல்லவன் குணத்தைச் சொல்வேன்
மாந்தளிர் மேனி யாவன்
இல்லையென் றுரைக்க மாட்டான்
யாவர்க்கும் நல்லோ னவன்
சல்லியப் பாதை யேற்கான்
தைரிய மனத்த னவன்.

7. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறந்தவர் ஆவார். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் மாந்துளிரின் நிறம்போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவர் ஆவர். இவர் பிறருக்குக் கொடுப்பதற்குத் தன்னிடத்தில் யாதொன்றும் இல்லை என்று சொல்லமாட்டார். இவர் எல்லோருக்கும் நல்லவராக இருப்பார். இவர் கடனுல் துன்பத்தை யடையமாட்டார், தைரியமுள்ள மனத்தை உடையவராக இருப்பார்.

8. வித்தையு முடைய னவன் விருந்தினர்ப் பிரிய னவன்
பத்தினிக் கிஷ்ட னவன் பதர்குண மில்லா னவன்
சுத்தவான் கிருஷி செய்வன் சோம்பிடான் தரணி
[விருத்தி
வெற்றிச்சொல் லுடைய னவன் விமலியே கேட்டி டாயே.

8. ஜாதகர் கல்வியை உடையவராக இருப்பார், விருந்தாளிகளிடத்தில் அன்புடையவராக இருப்பார். இவர் தன்னுடைய மனைவியிடம் ஆசை உள்ளவராக இருப்பார், இவருடைய மனைவியும் இவரிடத்தில் அன்புடையவளாக இருப்பாள், இவர் பிரயோஜனமில்லாத இழிவான குணத்தை உடையவர் அல்ல, அவசரமான குணத்தையும்

உடையவரும் அல்லர். இவர் பரிசுத்தமாக இருப்பார், விவசாயத் தொழிலைச் செய்வார், சோம்பலை உடையவர் அல்லர், நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவருடைய வார்த்தைகள் மேன்மையையும் ஜயத்தையும் உடையனவாக இருக்கும், பார் வ்தியம்மையே ! கேட்பீராக.

9. பந்துவு மதிக்க வாழ்வன்
பார்கூவ லுண்டு செய்வன்
விந்தையாய்ப் பேசு வானும்
மேலோர்கள் பத்திக் கொள்வன்
நொந்தபேர்க் குதவி செய்வன்
நேமிப்பான் வேறு சாகை
நிந்தையில் லாமல் வாழ்வன்
நிருபனும் வயது தீர்க்கம்.

9. ஜாதகர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலேயே இருந்து கொண்டு வாழ்வார். இவர் பாறைக்கிணற்றை அல்லது நடபாவிக்கிணற்றை உண்டாக்குவார். இவர் ஆச்சரியப்படும் படியாகப் பேசுபவர் ஆவர், பெரியார்களிடத்திலும் தெய்வங்களிடத்திலும் அன்பும் ஆசையும் உடையவர் ஆவர். இவர் கெட்டுப்போய் விட்டவர்களுக்கும் ஏழைகளுக்கும் உபகாரத்தைச் செய்வார். இவர் இன்னொரு வீட்டை அல்லது வாசஸ்தலத்தை ஏற்படுத்திக் கொள்ளுவார். இவர் அபவாதம் ஒன்றும் இல்லாமல் வாழ்வார். இவர் நீண்ட ஆயுளை உடையவராக இருப்பார்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

10. தன்துணை முன்னல் நஷ்டம்
தங்கும்பின் கன்னி யொன்று
அன்னவள் தீர்க்க ஜீவி
அத்திரி மறித்துச் சொல்வார்
என்னக்கா ரணத்தி னலே
யிவள்துணை யாண்பால் தோஷம்
பொன்னுடன் ராகு கூடிப்
புகரையுங் காரி பார்க்க ;

10. ஜாதகருடைய மூத்தசகோதரர்கள் இறந்து விடுவார்கள். இவருக்கு ஓர் இளைய சகோதரியுண்டு. இவள் நீண்ட ஆயுளை உடைய வளாக இருப்பாள். இதன்மேல் அத்திரிமகரிஷியானவர் தடுத்து, என்ன காரணங்களினால் இவருக்கு சகோதரர்கள் இல்லை என்று கேட்கின்றார். இதன்மேல் பிருகுமகரிஷி சொல்லுகின்றார். பொன் என்ற

குருவுடன்* இராகு கூடியிருப்பதாலும் புகர் என்ற சுக்கிரனைக்* காரி என்ற சனி பார்ப்பதாலும் ;

*குறிப்பு :—குரு மூத்த ஆண் சகோதர காரகர் ஆவார். இந்த ஜாதகத்தில் சுக்கிரன் இளைய சகோதர பாவாதிபதி ஆகின்றார்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணமும்

11. சொல்லினே மந்தச் சங்கை
சுதனுக்கு மணத்தைக் கேளாய்
வல்லிபத் தொன்பா னுண்டில்
மருவிடுந் தென்கீழ் பாரி
தல்லியின் வர்க்க மாவள்
சத்தியின் குணத்தைக் கேளாய்
புல்லிய நுறவுக் கொள்ளாள்
புண்ணிய மனத்த ளாவள்.

11. சகோதரர்களுடைய தோஷத்தைச் சொன்னேம் என்று பிருகுமகரிஷி பதில் சொன்னார். ஜாதகருடைய விவாகத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவருக்கு பத்தொன்பதாவது வயதில் மனைவி தென்கிழக்குத் திக்கிலிருந்து வந்து சேருவாள். இவளும் இவருடைய தாயாரது பந்துக்களிலிருந்து வருவாள். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவள் தாழ்ந்த மக்களுடன் சினேகம் செய்து கொள்ள மாட்டாள். இவள் புண்ணியமான நல்ல மனத்தை உடையவள் ஆவள்.

12. துடியிடை யோக சாலி
துன்பங்க ளெவர்க்கு மெண்ணாள்
நடைநன்மை சுத்த முண்டு
நாயகன் மனத்துக் கேத்தாள்
அடிசிலுக் கினிய ளாவ
ளாபத்தைச் சிலர்க்குக் காப்பள்
தடபுடல் செய்கை யுண்டு
சத்தியுந் தீர்க்க ஜீவி.

12. ஜாதகருடைய மனைவி யோகத்தை உடையவளாக இருப்பாள். இவள் யாருக்கும் கெடுதியை நினைக்கமாட்டாள். இவள் நல்லொழுக்கத்தை உடையவள் ஆவள், நல்ல குணத்தையும் உடையவள் ஆவள், தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருப்பாள். இவள் இனிமையாகச் சமையலைச் செய்வாள். இவள் சிலரை ஆபத்துக் காலத்தில் காப்பாற்றுவாள். இவள் இடம்

பத்துடனும் படாடோபத்துடனும் விரைவாகவும் காரியங்களைச் செய்பவள் ஆவள். இவள் நீண்ட ஆயுளை உடையவள் ஆவள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

13. சுதர்களு மிருவான் காக வனித்திடுஞ் சிலவே சேதஞ்
சதமுட னெண்பா லிரண்டு சத்திமார் நால்வர் தீர்க்கம்
முதலிரண்டுஞ் சேத மெய்து மொழிவீரே யந்தச் சங்கை
புதல்வர்தா னத்திற் காரி பொருந்தியுஞ் சேயும் பார்க்க ;

13. ஜாதகருக்கு எட்டுக் குழந்தைகள் பிறப்பார்கள். சில குழந்தைகள் இறந்து விடுவார்கள். நிலையாக இரண்டு ஆண் குழந்தைகளும் நான்கு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். முதலிற் பிறக்கின்ற இரண்டு குழந்தைகளும் இறந்து விடுவார்கள். இவ்விதமாகப் பிருகுமகரிஷியானவர் சொல்லவே, இதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்கவே, பிருகுமகரிஷி பதில் சொல்லுகின்றார். புத்திரஸ்தானமாகிய ஐந்தாவது பாவத்திற் காரி என்ற சனி இருப்பதாலும் இவரைச் சேய் என்ற அங்காரகன் பார்ப்பதாலும் ;

ஜாதகருடைய முன்ஜன்மம்

14. ஆகையால் தோஷஞ் சொன்னே
மறைகிறே மிவன்முன் ஜன்மம்
தோகையின் மலைக்கு வோரஞ்
சிறுவூரில் வடுகர் சேயாய்ப்
பாகமா யுதித்து யின்னேன்
பாரது விருத்திச் செய்து
போகபாக் கியங்க ளுண்டாய்ப்
பூமியில் வாழுங் நாளில் ;

14. இவ்விதக் காரணங்களினால் புத்திர தோஷத்தைச் சொன்னேம். ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். தோகை என்ற மலைத்திற்கருகிலுள்ளதும் மலையின் ஓரத்திலுள்ளதுமான ஒரு சிறிய கிராமத்தில் தெலுங்கருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து நிலங்களைப் பயிரிட்டுக் கொண்டு சகல பாக்கியங்களை உடையவராகிப் பூமியில் வாழுகின்ற காலத்தில் ;

15. அந்திய காலந் தன்னி லரண்டி யாரும் வந்து
மைந்தன்பா லணுகிச் சொல்வார் வளவினி லிரவில் [தங்கிப்
பிந்திநாள் வேறூர் செல்வேன் புகலவுங் கோப முற்று
இந்திடந் தகாது நீயு மேகுவாய் வேறு சாகை ;

15. மாலே சந்திப்பொழுதில் ஒரு சிவனடியார் இவரிடம் போய்ச் சொல்லுகின்றார். "நான் இந்தத் தினத்தின் இரவில் இந்த வீட்டின் வளவி என்ற வீட்டிறப்பின் கீழே தங்கி இருந்து மறுதினம் இன்னெரு கிராமத்திற்குப் போய் விடுகின்றேன்" என்று சொல்லவே, ஜாதகர் கோபமுண்டாகி "நீர் இந்த இடத்திற் தங்குவதற்கு தக்க வர் அல்லர் நீர் இன்னெரு விடத்திற்குப் போய்விட வேண்டும்" என்று;

16. துன்பமாய்ச் சொல்லும் போது துறவியு மனமு நொந்து
பின்வருஞ் ஜன்மந் தன்னிற் புத்திர தோஷ மாயுந்
தன்துணை யாணில் லாமற் தனியனுய் வாழ்வா யென்ன
அன்னவர் சாபந் தானு மணுகிற்று வென்று
[சொல்வோம்.

16. கோபமாய் ஜாதகர் சிவனடியாருக்குப் பதில் சொல்லவே, இந்தப் பரதேசியும் தன்னுடைய மனத்தில் துன்பத்தை யடைந்து சாபத்தைக் கொடுக்கின்றார். "உன்னுடைய மறுஜன்மத்தில் உனக் குப் புத்திரதோஷம் உண்டாகக்கடவது. உனக்குக் கூடப்பிறந்தவர் களில் ஆண் இல்லாமல் நீ ஒருவனுக விருந்து வாழக்கடவது" என்று சிவனடியார் ஜாதகரைப் பார்த்துச் சொல்லவே, இவருடைய சாபம் ஜாதகரை வந்து அடைந்தது என்று சொல்லுகின்றோம்.

17. மாரனு மந்தி யத்தி லறுமுகன் தொண்டு பூண்டு
பாரினில் மரண மாகிப் பிரமனுல் வரையப் பட்டுத்
தீரமாய்க் கங்கைச் சேயாய் ஜனிப்பனு மென்று
[சொல்வோம்
நேரிடு முன்னூழ்ச் சாபம் நேராது முதலிற் புத்திரர்.

17. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் ஆறுமுகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையுமடைந்து அவருக்கு வேலை களைச் செய்து கொண்டு பிறகு பூமியில் இறந்து பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வேளாளர் குலத்தில் வந்து ஆண் குழந்தையாய்ப் பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவருக்கு முன்ஜன்மத்திய சாபம் வந்து சம்பவிக்கும். முதலில் பிறக்கும் குழந்தைகள் இறந்து விடுவார்கள்.

ஜாதகருடைய யோக பாவம்

18. துணைவனு மில்லா னவன் சுதனுமே தனியாய் வாழ்வன்
சினமிலா யிவனின் யோகஞ் செப்புவோ மினிமே லாக
நினைவதை முடிக்க வல்லன் நேமியை விருத்திச் செய்வன்
கனமான குடும்பி யாவன் காலாள்க ளுடைய னுமே.

18. ஜாதகர் சகோதரன் இல்லாதவராகவிருப்பார், ஒருவராகவே விருந்து வாழ்வார். இவருடைய யோகங்களைப் பற்றிக் கோபமில்லாமல் இனிமேல் சொல்லுகின்றோம். இவர் தான் நினைத்த காரியங்களைச் செய்து முடிக்குஞ் சாமர்த்தியத்தை உடையவராவர். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவர் மேன்மையுள்ளதும் பெரியதுமான குடும்பஸ்தராக விருப்பார் கால்நடை வேலையாட்களை உடையவராகவிருப்பார்.

19. வந்தவன் ஜனனந் தொட்டு வாறிரண் டாண்டு மட்டுந்
தன்தனஞ் செலவு முண்டு ஜாகையு மனைக்குச் செய்தல்
சிந்தையுங் கலக்க மாகுஞ் ஜனங்களும் நஷ்ட மெய்தும்
இந்தவா றுரு மென்றோ மியம்பின வாண்டு மேலாய்.

19. ஜாதகர் பிறந்த காலம் முதற் கொண்டு பன்னிரண்டு வயது வரையிலும் பணச்செலவு ஏற்படும். வீடு கட்டுவதற்காக ஒரு மனையை ஏற்படுத்துவதும் நேரிடும். மனத்தில் கஷ்டங்கள் நேரிடும். பந்துக்களும் இறந்து விடுவார்கள். இவ்விதமாகப் பலாபலன்கள் நடக்கும் என்று சொல்லுகின்றோம். இங்கு மேலே சொல்லப்பட்ட பன்னிரண்டு வயதிற்குமேல் ;

20. தனமது பெருக்க முண்டு தாணிகள் பலித மோங்கும்
உறன்முறை மதிப்புக் கொள்ள லுலகமேல் புகழு
[மேற்பன்
அரசர்கள் நேசங் கொள்ள லாவுகள் பணையோர் விருத்தி
பிறைபோலே யோக மெய்தும் புகலுவா ரத்திரி தாமும்.

20. பணம் அதிகமாக உண்டாகும். நிலங்களில் இருந்து ஏற்படும் விளைவு அதிகப்படும். ஜாதகருடைய பந்துக்கள் இவருடைய குடும்பத்தைக் கௌரவமாகக் கருதுவார்கள். இவருக்குப் பூமியில் பெருமையும் கீர்த்தியும் உண்டாகும். இவர் அரசர்களுடைய சிநேகத்தை அடைவார். பசுமாடுகள் நிலங்கள் ஏர்கள் ஆகிய இவை இவருக்கு விருத்தியாகும். இவருக்கு யோகம் வளர்பிறை சந்திரனைப் போல நாளுக்குநாள் அதிகப்படும் என்று பிருகுமகரிஷியானவர் சொல்லவே, அத்திரிமகரிஷி இவரைக் கேட்கின்றார்.

21. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச்
[சங்கை
ஆகமன் ராகு நாலி லம்புலி புகரும் லாபம்
பாகமாய்ச் சேயும் பத்திற் பதிந்ததால் வேசி யோகம்
நாகயோ கங்க ளொன்று நளபதி யோக மொன்றும் ;

21. ஜாதகருக்கு யோகத்தை எந்தக் காரணங்களினுற் சொன்னீர்? அந்தக் காரணங்களைச் சொல்லுவீர் என்று அத்திரிமகரிஷி கேட்கவே, பிருகுமகரிஷி பதில் சொல்லுகின்றார். ஆகமன் என்ற குருவும் இராகுவும் நான்காவது பாவத்திலும், அம்புலி என்ற சந்திரனும் புகர் என்ற சுக்கிரனும் லாபம் என்ற பதினொராவது வீட்டிலும் பக்குவமாகச் சேய் என்ற அங்காரகன் பத்தாவது பாவத்திலும் இருப்பதால் வேசியோகம் என்ற ஒரு யோகமும், நாகயோகம் என்ற ஒருவித யோகமும் நளபதியோகம் என்ற ஒரு யோகமும்;

குறிப்பு:—சூரியனுக்குப் பன்னிரண்டில் சுக்கிரன் இருப்பதால் தமிழ் ஜாதகாலங்காரம் இருநூற்றெழுபத்தேழாவது பாடல் பிரகாரமும், ஜாதக சிந்தாமணி இரண்டாயிரத்து நாற்பத்தொன்பதாவது பாடல் பிரகாரமும் ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றிருபத்தோராவது சுலோகப் பிரகாரமும், வேசியோகம் ஏற்பட்டிருக்கின்றது. ஜாதகாலங்காரம் முந்நூற்று நாற்பதாவது பாடல் பிரகாரம் பத்திற்குடைய சுக்கிரன் இருக்கின்ற அம்சராசியாதிபதியாகிய அங்காரகன் மாத்திரம் பத்தில் இருப்பதால் சிறிது நாகயோகம் ஏற்பட்டிருக்கின்றது. ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றறுபத்தாருவது சுலோகத்தில் கிரகங்கள் எல்லாம் உபயராசிகளில் இருந்தால் நளயோகம் உண்டாகின்றது என்று கண்டிருக்கின்றது. இந்த ஜாதகத்தில் மூன்று கிரகங்கள்தான் உபயராசிகளில் இருக்கின்றன. இந்த மூன்று கிரகங்களில் சுக்கிரன் சந்திரன் ஆகிய இவ்விரண்டு கிரகங்களை மாத்திரம் இந்தப் பாடலில் கண்டிருப்பதையும் கவனிக்கவும். நளபதியோகமும் நளயோகமும் ஒரேவிதமான யோகமா வெவ்வேறானவையா என்பதும் புலப்படவில்லை.

22. திருதிய யோகத் தாலே தீரனும் வாழ்வா னவன்
குருதசை முதலா யாகக் கூறுவோம் விசேஷ யோகம்
பறைபள்ளு சேர்த்த லுண்டு பலர்களும் வசியங் [கொள்வன்
பொருளது கையி ருப்புப் பேசினேம் பால னுக்கு.

22. ஆக இவ்விதம் மூன்று யோகங்களாலே ஜாதகர் இங்கு மேலே சொல்லியவிதமாக வாழ்வார். இவருக்குக் குருதசை முதற் கொண்டு விசேஷமான யோகத்தைச் சொல்லுவோம். இவருக்கு மேளவாத்தியங்களும் பிரபந்தங்களும் ஆள் படைகளும் வந்து சேரும். இவர் பலரைத் தன்வசப்படுத்திக் கொள்ளுவார். இவருக்குப் பணம் கையிருப்பாக இருக்கும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தாயாருடைய குணாதிசயங்கள்

23. மாதிரு குணத்தைச் சொல்வேன்
வருவோரை யாத ரிப்பள்
காதக மனமும் கொஞ்சங்
கபடிலாள் நற்கு ணத்தாள்
வேதனை யொருவர்க் கெண்ணாள்
வீண்பழி யேற்கா ளாவள்
சாதிப்பாள் சிலவே சங்கை
சாதமு மன்பா யீவள்.

23. ஜாதகரது தாயாருடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் தன்னிடத்திற்கு வருகிறவர்களைக் காப்பாற்றுவாள். இவளுக்குச் சிறிது பொறுமையுள்ள மனம் இருக்கும், வஞ்சனை கள்ளம் கபடம் ஆகிய இவைகள் இல்லாதவள் ஆவள், நல்ல குணத்தை உடையவள் ஆவள். இவள் யாருக்கும் கெடுதியை நினைக்க மாட்டாள், வீணான அபவாதத்தையும் நிந்தனையையும் அடைய மாட்டாள். இவள் சில விஷயங்களைப்பற்றித் தான் சொல்லுவது சரியான தென்று சொல்லி நிலைநாட்டுவாள், சிலருக்கு அன்னத்தைப் பிரியமுடன் கொடுப்பாள்.

ஜாதகரின் தாயாருடைய சகோதரங்களும் (சகோதர பாவமும்)
முன் ஜன்மமும்

24. பித்தச்சூ டுடைய ளாவள்
பிறர்குற்றம் புகலா ளாவள்
பெத்ததா யில்லந் தென்கீழ்
பேதைக்குத் துணையாண் மூன்று
வித்தகி மார்க ளிரண்டு
விளம்புவோ மிவள்முன் ஜன்மம்
சுத்தமாய் நாகூர் தன்னில்
ஜனித்தன ளிக்கு லத்தில்.

24. ஜாதகருடைய தாயார் பித்தச்சூடான தேகத்தை யுடையவள் ஆவள், அன்னியர்மேல் குற்றங்களைச் சொல்லமாட்டாள். இவளைப் பெற்ற தாயாருடைய வீடு தென்கிழக்குத் திக்கில் இருக்கும். இவளுக்கு மூன்று சகோதரர்களும், இரண்டு சகோதரிகளும் இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் சுத்தமான நாகூர் நகரத்தில் இந்த ஜன்மத்தில் இவள் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்தில் பிறந்தாள்.

25. மங்கையுஞ் சுகமாய் வாழ்ந்து வருவோரை யாத ரித்தும்
எங்கள் போ லதிதிக் கன்ன மீந்துமே வினையில் லாமல்
அங்கவள் மரண மாகி யயனுமே வரையப் பட்டுத்
தங்கிலை லென்று சொல்வோர்க் தரித்திர மில்லா ளாகி ;

25. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன் ஜன்மத்தில் சௌக்கியத்துடன் வாழ்ந்துகொண்டும் தன்னிடம் வருகிறவர்களைக் காப்பாற்றிக்கொண்டும் எங்களைப்போன்ற முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டும் யாதொரு பாபத்தையும் அடையாமலிருந்து, பிறகு இறந்து பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றேம். இவள் வறுமையையும் கஷ்டங்களையும் அடையாமல்,

ஜாதகரின் தாயாருடைய மறு ஜன்மமும் தகப்பனருடைய முன் ஜன்மமும்

26. பின்ஜன்மந் திருவ லத்திற் பிறப்பளா மிக்கு லத்தில்
பொன்பொரு ளுடைய ளாகிப் பூமியில் வாழ்வா ளாவள்
இன்னவள் தந்தை பூர்வ மியம்பு வோமினி மேலாகத்
தென்சேர நாட்டி லேதான் ஜனித்தனள் வன்னிய
[சேயாய்.

26. ஜாதகருடைய தாயார் திருவலத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்திற்போய் மறு ஜன்மத்தில் பிறப்பவள் ஆவள். இவள் தனம் சொத்து ஆகிய இவைகளை உடையவள் ஆகிப் பூமியில் வாழ்பவள் ஆவள். ஜாதகரின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றேம். தகப்பனர் சேர தேசத்தின் தென்பாகத்தில் வன்னியருடைய குலத்தில் ஆண் குழந்தையாக முன் ஜன்மத்திற் பிறந்தார்.

27. சிலசில வணிபஞ் செய்து
தேவதா பத்தி யாகி
நலமுளோர் நேசங் கொண்டு
நமன்பதிக் காளா யின்ஞென்
தலைநான்கோன் வரையப் பட்டு
ஜனித்தவ னிவனே யென்றேம்
மலையிரை மகளே யாங்கள்
வழுத்தின மொழி குன்றுது.

27. ஜாதகருடைய தகப்பனர் பற்பல வியாபாரங்களைச் செய்து கொண்டும் தெய்வங்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவர் ஆகியும் நல்லவர்களுடைய சினேகத்தை யடைந்துகொண்டும் இருந்து

பிறகு இறந்து எம்பட்டணம் போய் நான்கு தலைகளையுடையவராகிய பிரம்மதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவர் ஆவர் என்று சொல்லுகின்றோம். இமய மலையின் அரசனுகிய பர்வதராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய தகப்பனாரது மரணமும் மறுஜன்மமும்

28. நாற்பது விரண்டு வாண்டில் நவிலுவோர் தந்தை கண்டம்
ஏற்கவே யிவன்பின் ஜன்ம மியம்புவோர் திருமா லூரில்
ஆர்க்கவே வைசியச் சேயா யருளுவா னென்று
[சொல்வோர்
தீர்ப்பாகத் தவங்கள் செய்யுஞ் செல்வதி கேட்டி டாயே.

28. ஜாதகருக்கு நாற்பத்திரண்டாவது வயதில் இவருடைய தகப்பனர் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றோம். இவருடைய பின் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் மஹாவிஷ்ணுவினுடைய ஸ்தலத்தில் வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லுகின்றோம். உண்மையாகத் தவங்களைச் செய்கின்ற செல்வவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது மரணமும் ஜாதகருடைய மரணமும்

29. அதற்குமேல் மூன்ரு மாண்டி
லன்னைக்குக் கண்ட மெய்துஞ்
சுதனுக்கு வறுபா னுறிற்
சித்திரை மாதந் தன்னில்
அதிபன துடல மேகும்
மாமுனி தடுத்துச் சொல்வார்
இதற்குள்ளே மார கங்க
ளெய்தாவோ விபரஞ் சொல்வீர்.

29. இதற்குப் பிறகு மூன்ருவது வருஷத்தில் அம்மாவது ஜாதகருக்கு நாற்பத்தைந்தாவது வயதில் இவருடைய தாயார் இறந்துவிடுவாள். ஜாதகர் தன்னுடைய அறுபத்தாருவது வயதில் சித்திரை மாதத்தில் இறந்து இவருடைய தேகம் மறைந்து போய்விடும். இதன்மேல் மாமுனி என்ற வசிஷ்ட மஹரிஷியானவர் தடுத்து இதன் இடையில் ஜாதகருக்கு மரணம் நேரிடாதோ என்பதைப்பற்றி விவரமாகச் சொல்லுவீர் என்று பிருகு மஹரிஷியைக் கேட்டார்.

ஜாதகருடைய கண்டங்கள்

30. ஆதியி லரசன் கால மதுவின்றிச் சகடை தோஷம்
நீதியாய் நடப்ப தாலே நேர்ந்திடும் பலவாறு கண்டம்
வேதியன் நாலிற் றங்க வரும்வினை நிவிர்த்தி யாகும்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

30. இதற்கு பிருகுமகரிஷி பதில் சொல்லுகின்ரூர். ஜாதக ருடைய வயதின் பூர்வபாகத்தில் அரசன் என்ற குருபகவானுடைய தசை நடப்பதாலும், இதுவுமல்லாமல் ஜாதகருக்குச் சகடயோக தோஷம் இருப்பதாலும் இவருக்குப் பலவிதமான ரோகங்கள் ஏற்பட்டு கண்டங்கள் உண்டாகும். ஆனால் வேதியன் என்ற குரு நான்காவது வீட்டில் இருப்பதால் நேரிடுகின்ற எல்லாக் கண்டங்களும் நிவிர்த்தி யாகிவிடும். இளம் யானையின் முகத்தையுடைய வினயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணிய மாதாவாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

குறிப்பு :—சகட யோகத்தைப்பற்றித் தமிழ் ஜாதகாலங்காரம் இருநூற்றமுபத்துமூன்ருவது பாடலையும், பலதீபிகை ஆருவது அத்தியாயம் பத்தாவது சுலோகத்தையும், ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றெட்டாவது சுலோகத்தையும் பார்க்கவும். இந்த ஜாதகத்தில் குருவிற்கு எட்டில் சந்திரன் இருப்பதால் சகடயோகத் தோஷம் இருக்கின்றது. ஆனால் லக்கினத்திற்குக் கேந்திரத்தில் குரு இருப்பதால் சகடயோக பங்கமும் உண்டாகி விருக்கின்றது.

ஜாதகருடைய மறு ஜன்மமும் ஜனனகால தசையின் இருப்பும்

31. மறுஜன்மங் கலிங்க நாட்டில் வருவனு மிக்கு லத்தில்
அரசராற் ருெழிலும் பெற்ற வவனுமே வாழ்வா னவன்
திருமகன் ஜனன காலம் வாதிரை முதல்பா தத்தில்
அரவுதன் தசையி ருப்பு வைம்மூன் ரு வாண்டு
[வென்ரேரும்.

31. ஜாதகர் தன்னுடைய பின் ஜன்மத்தில் கலிங்கதேசத்தில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். அரசர்களிடத்தில் உத்தியோகத்தை அடைந்து இவர் வாழ்பவர் ஆவர். இவருடைய ஜனனகாலத்தில் ஜன்மநட்சத்திரம் திருவாதிரையின் முதற்பாதம் ஆகும். இதற்குரிய அரவு என்ற இராகு மஹாதசை இருப்பு பதினேந்து வருஷங்கள் என்று சொல்லுகின்ரோம்.

ஜாதகருடைய ஜனனகால தசையின் பலாபலன்கள்

32. பலனதைப் புகலக் கேண்மோ பாலகன் பிணியு முண்டு
குலஞாதி நஷ்ட மெய்துங் குடியது புதிதாய்ச் செய்தல்
நிலமது பலித முண்டு நுவலுவோம் பின்பாற் சேதி
மலையிரை மகளே யாங்கள் வழுத்தின மொழி குன்றுவே.

32. ஜனன கால தசையின் பலாபலன்களைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இக்காலத்தில் ஜாதகருக்கு நோய்கள் உண்டாகும். ஜாதகருடைய குலத்திற்கும் பங்காளிகளுக்கும் கெடுதி ஏற்படும். இவருடைய வீடு புதுப்பிக்கப்படும்; அல்லது ஒரு புதிய வீடு கட்டப் படும். இவருடைய நிலங்கள் நல்ல பலிதத்தைத் தரும், மற்ற விஷயங் களைப் பின்னால் சொல்லுகின்றோம். மலைகளின் அரசனுகிய பர்வதராஜ னுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தை களின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 109

ஜனன கால கிரகநிலை

1. சிங்கலக் கினம தாகச் சனியிரண்டில் கேது மூன்றில் [1]திங்களும் [2]பணி[3]பொன் மேடஞ் [4]செங்கதிர் [5]நந்தி யாக [6]மங்கலன் [7]புந்தி [8]வெள்ளி மிதுனத்தில் பரணியி ரண்டில் அங்கது பலன்க ளெவ்வா றறிவிப்பீர் முனியே நீர்காம்.

1. சிம்மம் ஜன்மலக்கினமாகி, சனி இரண்டிலும், கேது மூன்றிலும், சந்திரனும் இராகுவும், குருவும் மேஷத்திலும், சூரியன் ரிஷபத்திலும், அங்காரகனும் புதனும், சுக்கிரனும் மிதுனத்திலும் இருந்து ஜன்மநட்சத்திரம் பரணி இரண்டாவது பாதமானால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதை, முனிவரே! நீர் தெரிவிப்பீராக.

கிரகநிலை

	சந்திரன் ராகு குரு	சூரியன்	அங்கார புதன் சுக்கிரன்
	இராசி சக்கரம்		
			லக்கினம்
		கேது	சனி

பரணி 2-ஆம்பாதம், சுக்கிர தசைஹ 13-0-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்தில் அங்காரகனும் இராகுவும், மிதுனத்திற் சனியும், கன்னியிற் சூரியனும் சந்திரனும், துலாத்திற் புதனும், விருச்சிகத்திற் கேதுவும், தனுசிற் குருவுஞ் சுக்கிரனும் ஆகும். புதன் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்.

ஜனன நகரச் சிறப்பு

2. பிருகுவும் புகலு கின்றார் பிறந்திடு மாண்பால் ஜன்மம் வருமில்லம் வடபால் நோக்க·மாரியு மேல்பாற் றங்கும் பிறையணிந் தோனு முத்தரம் பேரூரா மிந்தப் பாலன் வருவனு மேழாஞ் ஜன்மம் வரநதி குலமே யாகும்.

---

1. சந்திரன்
2. இராகு
3. குரு
4. சூரியன்
5. ரிஷபம்
6. அங்காரகன்
7. புதன்
8. சுக்கிரன்

2. பிருகு மகரிஷியானவர் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாக ஜனனமாகும். பிறந்த வீடு வடக்குத் திக்கைப் பார்த்தாப்போல விருக்கும். மாரியம்மன் கோயில் மேற்குத் திக்கில் இருக்கும். சந்திரனைத் தன்னுடைய ஜடையில் தரித்துக்கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய கோயில் வடக்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் ஒரு பெரிய ஊராக விருக்கும். இந்த ஜாதகர் ஏழாவது பிறவியாக நதிகுலம் என்ற வேளாளர் குலத்தில் வந்து பிறப்பார்.

3. இன்னவன் ஜனன யோக
மெழில்பெருந் தந்தை யோகம்
அன்னையின் துணைவர் யோக
மவன்மனை புத்திர யோகம்
முன்பின்ஜன் மங்கள் யாவு
முரைக்கிலே மிந்நூல் தன்னில்
உன்னத வாணைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

3. ஜாதகருடைய ஜனன காலத்திய யோகத்தையும், இவருடைய தகப்பனுருடைய அழகிய யோகத்தையும், இவருடைய தாயார் சகோதரர்களின் யோகங்களையும், ஜாதகருடைய மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும், முன் ஜன்மம், பின் ஜன்மம் ஆகிய இவை எல்லாவற்றையும் இந்தச் சாஸ்திரத்திற் சொல்லுகின்றோம். மேன்மையான சிறந்த யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப்பெற்றெடுத்த பார்வதியம்மையே கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரின் சகோதரர்களும் (சகோதர பாவமும்) தகப்பனருடைய குணங்களும்

4. தந்தையின் துணையா ணென்று சத்தியு மவ்வாறு தீர்க்கம்
அந்தவாண் வேறுய்ச் செல்வ னவர்பலன் பின்பாற்
[கேளாய்
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மிருநி றத்தான்
சிந்தையு மிரண்டு மாகுஞ் சிலேடையாய்ப் பேசுவா னும்.

4. ஜாதகரது தகப்பனருக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் ரீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இந்தச் சகோதரன் வேறு குடும்பஸ்தராகப் பிரிந்து போய்விடுவார். இவருடைய பலன்களைப் பின்னால் சொல்லுகின்றோம், கேட்பீராக. ஜாதகருடைய தகப்பனரின் விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாளிறமுடையவராவர். இவர் இரண்டுவித எண்ணங்களாகிய நல்ல எண்ணத்தையும் கெட்ட

எண்ணத்தையும் உடையவராவர். இவர் அலங்காரம்காகவும் இரண்டு அர்த்தங்களை உடையனவாகவும் உள்ள வார்த்தைகளைச் சொல்லுவார்.

5. தந்தையி னில்லம் வாழான் தன்மனை யூரில் வாசம்
அந்திடம் வனவா சங்க ளணுகிப்பின் சொந்த யில்லம்
இந்தவன் செய்வா னவ னிடுக்கமாங் குடும்பம் பூர்வம்
நிந்தைக ளேற்கா னவன் நேமிகள் கொஞ்ச மூண்டு.

5. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய தகப்பனருடைய வீட்டில் வாசஞ்செய்யமாட்டார். ஆனல் இவர் தன்னுடைய மனைவியி னுடைய கிராமத்தில் வசித்துவருவார். இவர் இந்தக் கிராமத்தில் வனவாசஞ் செய்வதைப் போலச் சில காலம் வசித்திருந்து பிறகு சொந்த வீட்டைக் கட்டிக்கொள்வார். இவருடைய குடும்பம் முதல் பாகத்தில் கஷ்டங்களை அனுபவிக்கும். இவர் அபவாதங்களையும் பழிகளையும் அடையமாட்டார். இவருக்கு நிலங்கள் கொஞ்சமாக விருக்கும்.

6. கைமுத லில்லானவன் கலவர புத்தி யேற்பன்
செய்நன்றி மறவா னவன் ஜன வுபகாரி யாவன்
ஐயமாங் குணத்த னவ னணுகிடும் பித்த வாயு
பொய்யுரை பகரா னவன் பின்புத்தி யுடைய னுமே.

6. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய கையில் பணத்தைச் சேர்த்து வைத்திருக்காதவராக விருப்பார். இருக்குக் கலவரமுள்ள தும் நிலையில்லாததுமான புத்தி இருக்கும். இவர் தனக்குப்பிறர் செய்த உதவியை மறவாதவராக விருப்பார். இவர் ஜனங்களுக்கு உதவி யைச் செய்பவராவர். இவர் சந்தேகத்தையுடையவராவர். இவருக்குப் பித்தவாய்வு ரோகம் உண்டாகும். இவர் பொய்யான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவர் பின் புத்தியை யுடையவராக விருப்பார்.

7. கல்வியுஞ் சமம தாகுங் கட்டுரை பகரு னவன்
நல்லவ னுகி வாழ்வான் நற்றந்தை யாஸ்தி நாஸ்தி
வல்லிடு சொல்லு வானும் மாடுகள் விருத்தி யற்பம்
இல்லையென் றுரைக்க மாட்டா னீச்வரி மேலுங் கேளே.

7. ஜாதகருடைய தகப்பனருக்கு வித்தை நடுத்தரமானதாக விருக்கும். இவர் கட்டு வார்த்தைகளையும் பொய்யான வார்த்தை களையுஞ் சொல்லமாட்டார். இவர் நல்லவராக விருந்தே வாழ்வார். நல்லவரான தன்னுடைய தந்தையின் சொத்துக்களை இவர் அழித்து விடுவார். இவர் கடுமையான விஷவார்த்தைகளைச் சொல்லுபவராவர். இவருக்குக் கால்நடைகளின் விருத்தி அற்பமாகும். இவர், பிறருக்கு

உதவிசெய்ய தன்னிடத்தில் ஒன்றும் இல்லே என்று சொல்ல மாட்டார், பார்வதியம்மையே! இன்னமும் நாங்கள் அதிகமாகச் சொல்லப்போகின்றதைக் கேட்பீராக.

ஜாதகருடைய குணதிசயங்கள்

8. இக்நெறி யுடையா னுக்கு
விப்பாலக னுதிப்பா னுவன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னவனிரு நிறத்த னுவன்
பன்னியே வார்த்தை சொல்வன்
பரஉப காரி யாவன்
துன்மையை யெவர்க்கு மெண்ணன்
துர்வழக் கதனிற் செல்லான்.

8. இப்படிப்பட்டக் குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இனிமேல் இவருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மானிறத்தையுடையவராவர். இவர் சாமர்த்தியமாகவும் விமரிசை யாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார், பிறருக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் எவருக்குங் கெடுதியை நினைக்கமாட்டார், கெட்ட வியாஜ்யங்களிற் பிரவேசிக்கமாட்டார்.

9. மனைவியால் பெருமை யேற்பன்
மானிலம் விருத்தி செய்வன்
கனமிலாக் குடும்பம் பூர்வங்
காதலி தன்னல் யோகஞ்
சினமுண்டு வுடனே தாழ்வு
சல்லியப் பாதை யேற்கான்
வினையிலா வேட்ட கத்தில்
மேவுவா னென்று சொல்வோம்.

9. ஜாதகர் தன்னுடைய மனைவியின் மூலமாகக் கீர்த்தியையும் மேன்மையும் அடைவார். இவர் பெரிய பெரிய நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவருக்குத் தன்னுடைய வாழ்வின் முதல் பாகத்தில் குடும்பம் மேன்மையில்லாமல் இருக்கும். இவருக்குத் தன்னுடைய மனைவியால் யோகம் உண்டாகும். இவருக்குக் கோபம் வரும், ஆனல் அஃது உடனே தணிந்து அடங்கி விடும். இவர் கடனல் உண்டாகும் துன்பங்களை அடையமாட்டார். இவர் கெடுதியில்லாத மாமியார் வீட்டிற்குப் போய்ச் சேர்ந்துவிடுவார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய சகோதரங்களும் (சகோதர பாவமும்)
தாயாருடைய விஷயங்களும்

10. தன்துணை யாண்பால் நான்கு சத்திமா ரிருவர் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பேசுவோம் பின்பால் சேதி
அன்னையின் சேதி சொல்வே னற்புத வார்த்தை
[சொல்வள்
பன்னியே பேசு வாளாஞ் சொல்லுமுன் கோபி யாவாள்.

10. ஜாதகருடன் பிறந்தவர்கள் நான்கு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுள் உடையவர்களாக விருப்பார்கள். மற்ற சகோதரர்கள் எல்லாம் நாசமாகிவிடுவர். இவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னல் சொல்லுகின்றேரும். இனிமேல் இவருடைய தாயாரது விஷயங்களைச் சொல்லுகின்றேன். இவள் ஆச்சரியப் படும்படியாக வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் சாமர்த்தியமாகவும் விமரிசை யாகவும் பேசுகின்றவளாவள். இவள் முன் கோபத்தையுடையவளாக விருப்பாள்.

11. அவசர மனத்த ளாவ
ளாளன்தன் மனத்துக் கேத்தோன்
தவசிக ளுறவு கொள்ளாள்
சாதமு மன்பா யிவள்
உவமை யாய்ப்பேசு வாளா
முண்மையாம் மனத்த ளாகும்
சிவன்தனைப் பூசை செய்யுஞ்
செல்வதி கேட்டி டாயே.

11. ஜாதகருடைய தாயார் அவசரமாகவும் படபடப்பாகவுள்ள மனத்தையுடையவளாவள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத் திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருப்பாள். இவள் தவங் களைச் செய்கின்ற பெரியார்களுடைய சிநேகிதத்தை அடையமாட்டாள். இவள் பிறருக்குச் சாபப்பாட்டைப் பிரியத்துடன் போடுவாள். இவள் அலங்காரமாகவும் உபமானம் உபமேயகங்களுடனும் பேசுவாள். இவள் உண்மையான மனத்தை உடையவளாவள், அஃதாவது உண்மை யானபடி நடந்துகொள்ளுவாள். சிவபெருமானைப் பூஜை செய்கின்ற செல்வவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாருடைய சகோதரங்களும் (சகோதர பாவமும்)
முதல் சகோதரியினுடைய விஷயங்களும்

12. தன்துணை யாண்பா லிரண்டு
சத்திமார் ஒருத்தி தீர்க்கஞ்
சொன்னவாண் மூன்னேன் சேதி
சுதராணு மில்லா னவன்
கன்னிகை யொருத்தி தீர்க்கங்
காளையும் வேறாய்ச் செல்வன்
அன்னவன் கிருஷிகள் செய்வ
னுயுசு தீர்க்க மென்றோம்.

12. ஜாதகரின் தாயாருடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியுமாவர்கள். அவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாவார்கள். இங்கு சொல்லப்பட்ட சகோதரர்களில் முதலாவது சகோதரனுடைய விஷயங்களைச் சொல்லுகின்றேன். இவருக்கு ஆண் குழந்தைகள் கிடையா. ஒரு பெண் குழந்தை தீர்க்காயுளை உடையவளாகவிருப்பாள். இந்தச் சகோதரன் வேறு குடும்பஸ்தராகப் பிரிந்து போய்விடுவார். இவர் விவசாயத் தொழில்களைச் செய்வார். இவர் நீண்ட ஆயுளை உடையவர் என்று சொல்லுகின்றோம்.

13. இருகுண முடையா னவ னிடரான புத்தி யில்லான்
தரைவிருத்தி சல்லிய முள்ளான் சடுதியில் நிவிர்த்தி
[செய்வன்
மருமமு மில்லாதா னவன் வாஞ்சையாய்ப் பேசு வானும்
கரிமத வாணைப் பெற்ற காதலி கேட்டி டாயே.

13. தாயாருடைய முதல் சகோதரர் இரண்டு விதமான குணங்களை யுடையவராவர், அஃதாவது சாந்தமான குணத்தையும் கோபமான குணத்தையும் உடையவராவர். இவர் கெட்ட குணங்களையும் புத்தியையும் உடையவரல்லர். இவரிடம் நிலங்கள் விருத்தியடையும். இவர் கடன்படுவார், ஆனால் இதை உடனே கொடுத்து விடுவார். இவர் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை உடையவரல்லர். இவர் பிறரிடத்தில் பிரியத்துடனும் உபசாரத்துடனும் பேசுபவராவர். கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

தாயாருடைய இரண்டாவது சகோதரனின் விஷயங்கள்

14. அதற்குப்பின் துணைவன் சேதி யறிவுளான் யார்க்கு
[நல்லான்
பதமுடன் வாழ்வா னவன் பாருகள் சேர்ப்பா னென்றோம்
உதவுவான் யேழை யோர்க்கு வள்மனங் கபடு மில்லான்
தனிகெய்பா லிஷ்டங் கொள்வன் தங்கிடும் காபிச் சூடு.

14. தாயாருடைய இரண்டாவது சகோதரனுடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் புத்திமான், எல்லோருக்கும் நல்லவராவர். இவர் பக்குவமாக விருந்து கொண்டு வாழ்பவராவர், நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார் என்று சொல்லுகின்றோம். இவர் எழைகளுக்கு உபகாரஞ் செய்வார். இவர் தன்னுடைய மனத்திற்குள்ளே கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவரல்லர். இவர் தயிர் நெய் பால் ஆகிய இவைகளின்மேல் பிரியமுடையவராவர். இவருக்கு நாபிச்சூட்டு ரோகம் உண்டு.

15. பாரியு மொன்றே யாவள் பாலர்க ளாண்பா லொன்று
நாரியு மவ்வாறு தீர்க்கம் நாயகன் வறுமை காணுன்
சீரியோர்க் குதவி செய்வன் செய்நன்றி மறவா னவன்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

15. தாயாருடைய இரண்டாவது சகோதரனுக்கு மனைவி ஒருத்தியேயாவள். இவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இந்தச் சகோதரர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவர் ஏழைகளுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் தனக்குப் பிறர் செய்த உபகாரத்தை மறக்காதவராக விருப்பார். ஆறு பெரிய முகங்களையுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

16. மாதிரு முன்ஜன் மத்தை வரைகிறேங் கொச்சி தன்னில்
சூதிலா வன்னியச் சேயாய்த் தோன்றியே வறுமை
[யின்றிப்
பாதக மனமில் லாமல் பஞ்சைமே லிரக்க மாகித்
காதலி பவமில் லாமற் கலந்தனள் காலந் நாடு.

16. ஜாதகருடைய தாயாரின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் கொச்சி தேசத்தில் வஞ்சனை இல்லாத வன்னிய ருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமலும் கெட்ட மனத்தையுடையவளாக வில்லாமலும் ஏழைகளிடத்தில் தயையை உடையவளாகவும் யாதொரு பாவத்தையும் அடையாமலும் இருந்து கொண்டு பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

17. சிரநான்கோன் வரையப் பட்டு
ஜனித்தவ ளென்று சொல்வோம்
வரும்ஜன்மம் பட்சி தன்னி
லுதித்துமே சிருஷிகள் செய்து

பொருளது பெருக்க மாகிப்
புகழுடன் வாழ்வா ளம்மா
கரிமத வாஜைப் பெற்ற
காதலி கேட்டி டாயே.

17. ஜாதகருடைய தாயார் நான்கு தலைகளையுடைய பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின் ருள் என்று சொல்லுகின்ருேம். இவளுடைய மறுஜன்மத்தில் இவள் பட்சி என்ற திருக்கழுக்குன்ற க்ஷேத்திரத்தில் பிறந்து விவசாயத் தொழில்களைச் செய்து கொண்டு தனத்தை அதிகமாகச் சம்பாதித்துக் கீர்த்தியுடனும் பெருமையுடனும் வாழ்வாள், பார்வதியம்மையே! கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மம்

18. தந்தையின் முன்ஜன் மத்தைச்
சாற்றுவோந் தவளை தன்னில்
முந்திய வருகர் வர்க்க
முதித்துமே கிருஷி செய்து
அந்தவன் வினையில் லாம
லணுகினன் கால நாடு
விந்தையாய்ப் பிரமன் லக்கம்
மேதினி லுதித்தா னென்ருேம்.

18. ஜாதகரின் தகப்பனருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்ருேம். இவர் தவளை என்ற ஊரில் மேன்மையான சிறந்த அருகர் வர்க்கம் என்ற சமணருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து விவசாயத் தொழிலைச் செய்து கொண்டு யாதொரு பாவத்தை அடையாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போய் ஆச்சரியமாகப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்தப் பூமியில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருர் என்று சொல்லுகின்ருேம்.

19. அத்திரி மறித்துச் சொல்வா ரணுகாது தந்தை யாஸ்தி
பத்தினி பூரில் வாசம் பகர்ந்தகா ரணங்கள் சொல்வாய்
வித்தகன் முன்ஜன் மத்தில் முன்குலத் தோரை மோசஞ்
சுத்தமாய்ச் செய்த தாலே சேர்ந்தது மறையோர் சாபம்.

19. இவ்விதமாகப் பிருகுமகரிஷியானவர் சொல்லிக் கொண்டு வரவே அத்திரிமகரிஷியானவர் தடுத்துக் கேட்கின்ருர். ஜாதகருடைய தகப்பனருக்குத் தன்னுடைய தகப்பனரது சொத்து கிடைக்காது என்று சொன்னீரே! இவர் தன்னுடைய மனைவியின் கிராமத்தில்

வாசஞ் செய்வார் என்றும் சொன்னீர்! இவைகளுக்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று அத்திரிமகரிஷி கேட்கவே, பிருகுமகரிஷி பதில் சொல்லுகின்றார். தகப்பனார் தன்னுடைய முன்ஜன்மத்தில் முதல் குலத்தோராகிய பிராமணர்களை உண்மையாக ஏமாற்றி விட்டதால் அவர்களுடைய சாபம் இவரை வந்து அணுகிற்று.

ஜாதகரின் தகப்பனாருடைய மறுஜன்மம்

20. மறையவர் சாபத் தாலே மருவாது தந்தை யாஸ்தி
அரிவையர் வாச மாகு மற்பமாங் குடும்பம் பூர்வந்
திருமகன் பின்ஜன் மங்கள் செப்புவோம் வேலங் காட்டில்
வருவனு மிக்கு லத்தி லம்பிகை யாளே கேளாய்.

20. பிராமணர்களுடைய சாபத்தின் பயனாக ஜாதகருடைய தகப்பனாருக்குத் தன்னுடைய பிதுரார்ஜித சொத்து இவ்விதமாகப் போய் விட்டது, அஃதாவது நாசமாகி விட்டது இவரும் தன்னுடைய மனைவியினுடைய கிராமத்தில் வாசஞ் செய்வார். தன்னுடைய பூர்வ காலத்தில் தன்னுடைய குடும்பம் சிறியதாகவும் சிறுமையை யடைந்ததாகவும் இருக்கும். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் வேலங்காட்டையுடைய திருவாலங்காட்டில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயமும்

21. பாலகன் மணத்தின் காலம்
பகருவோம் பத்தொன் பாண்டுள்
நீலியு மன்னை வர்க்கம்
நேருவா ளுள்ளூர் தன்னில்
வேல்விழி குணத்தைச் சொல்வேன்
விகடங்கள் கூரு ளாவள்
பால்பாக்கிய முடைய ளாவள்
பசித்தோர்க்கு வன்ன மீவள்.

21. ஜாதகருடைய விவாகக் காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பத்தொன்பது வயதிற்குள் இவருடைய தாயாரின் பந்துக்களிலிருந்து இவருக்கு மனைவி உள்ளூரிலிருந்தே வந்து சேருவாள். வேலைப்போன்ற அழகான கண்களையுடைய மனைவியின் குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் வேடிக்கையை உண்டுபண்ணக் கூடியதும் இரண்டு அர்த்தங்களை உடையதுமான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். இவள் பால் பாக்கியத்தை உடையவளாக இருப்பாள், பசித்தவர்களுக்குச் சாப்பாட்டைக் கொடுப்பாள்.

22. மங்கையும் யோக சாலி மானில மவளால் சேரும்
பொங்கிய குடும்ப மேற்பள் பிழையிலாள் நற்கு ணத்தாள்
எங்கள்போ லதிதி கட்கு வன்னமு மீவாள் சீலி
பங்கைய முகத்த ளாவள் பகவானின் பக்தி யுள்ளாள்.

22. ஜாதகருடைய மனைவி யோகசாலியாக இருப்பாள். இவளால் பெரிய பெரிய நிலங்கள் வந்து சேரும். இவள் மேன்மையான தும் சிறந்ததுமான குடும்பத்தை உடையவளாக இருப்பாள், தவருன காரியங்களைச் செய்யமாட்டாள். நல்ல குணத்தை உடையவளாக இருப்பாள். எங்களைப் போன்ற முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைக் கொடுப்பாள். இவள் நல்லொழுக்கம் உடையவள் ஆவள். இவள் தாமரைப்பூப்போல அழகான முகத்தை உடையவள் ஆவள். கடவுளின்மேல் அன்பையும் ஆசையையும் உடையவளாக இருப்பள்.

23. மாதுயில் மாரன் சென்று வயிற்றையும் வளப்பா லவள்
தீநான குணமில் லாதாள் திகைத்தோர்க்குத் தாக மீவள்
சாதிப்பாள் சிலவே சங்கை சந்தேக மனத்த ளாவள்
சூதிலா ளதிக வார்த்தை சுந்தரி தீர்க்க ஜீவி.

23. மனைவியினுடைய வீட்டிற்கு ஜாதகர்போய் வசித்திருந்து அவ்விடத்தில் சாப்பிட்டு கொண்டு தன்னுடைய காலத்தைக்கழித்துக் கொண்டு இருப்பார். மனைவி கெட்ட குணத்தை உடையவள் அல்லள். கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டு மனம் கலங்கி மயங்கி இருப்பவர் களுக்கு தீர்மோசரைக் கொடுத்து உதவி செய்வாள். சில விஷயங்களில் இவள் தான் சொன்னதே சரியென்று வாதித்து நிலைநாட்டுவாள். இவள் தன்னுடைய மனத்தில் சந்தேகத்தை உடையவளாக இருப் பாள். இவள் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகள் இல்லாதவள் ஆவள், அதிகமாகப் பேசுவாள். இவள் நீண்ட ஆயுளை உடையவ ளாக இருப்பாள்.

ஜாதகருக்குப் புத்திரர்களும் (புத்தரபாவமும்) ஜாதகருடைய முன்ஜன்மமும்

24. சுதர்களி லாண்பால் மூன்று தோகைமா ரிருவ ராவர்
இதுநிற்க உதித்தோன் பூர்வ மியம்புவோந் திருமா னூரில்
சதியிலாச் செங்குந்த சேயாய் ஜனித்துமே நெசவு செய்து
பதியினில் வருமை யின்றிப் பரங்களுக் கன்ன மிட்டு;

24. ஜாதகருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் இருப்பார்கள். இவ்விதமாக விஷயங்கள் இருக்க இனிமேல் இவருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

இவர் மகாவிஷ்ணுவினுடைய ஸ்தலத்தில் குற்றமில்லாத செங்குந்தர் என்ற கைக்கோளர் ஜாதியில் ஆண் குழந்தையாகப் பிறந்து தரி வேலையைச் செய்து கொண்டு யாதொரு தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமல் இருந்து கொண்டும் பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டு கொண்டும் ;

25. முருகர்தம் பத்தி யாகி மேலான தலங்கள் சென்று
திருமகன் வினையில் லாமல் சென்றனன் காலங் காடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
உரைகிறே மிவன்பின் யோக முதித்தனுள் முதலா
[யாக ;

25. ஆறுமுகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகி மேன்மையான சிறந்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப் போய் யாதொரு பாபமும் இல்லாமல் வாழ்ந்து பிறகு இறந்து எமப்பட்டணத்திற்குப் போனர். பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றர் இந்த ஜாதகர். இவருக்குப் பிற் காலத்தில் உண்டாகின்ற யோகங்களைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் பிறந்தது முதற்கொண்டு ;

26. பதினேழு வாண்டு மட்டும்
பகரமில் லாத யில்லம்
வரவுக்குச் செலவ னேகம்
மனதுசஞ் சலமே யாகும்
தரணிக ளற்ப மாகுந்
தந்தையார் ஜீதத்தை வேண்டான்
உரைத்தவாண் டதன்மே லாக
உத்தமன் மரண மட்டும் ;

26. இவருக்கு பதினேழு வயது ஆகின்ற வரையிலும் இவரு டைய குடும்பம் பெருமையும் மேன்மையும் இல்லாத குடும்பமாகும். வருமானத்திற்குமேல் செலவு ஏற்படும். இவரது மனம் துன் பத்தை அடைந்து கொண்டேயிருக்கும். நிலங்களும் கொஞ்சமாக இருக்கும். அவையும் சிறிய பலனையே கொடுக்கும். இவர் தன் னுடைய பிதுரார்ஜிதத்தை விரும்பமாட்டார். முன்னே சொல்லப் பட்ட வயதிற்குப் பிறகு இவரது மரணகாலம் வரையிலும் ;

27. பிறைபோலே செல்வம் வாய்க்கும்
போஜன வறுமை காணன்
அரிவையால் சுகமு மெய்தும்
யாவரு மதிப்புக் கொள்ளல்

கரையது சேர்த்த லுண்டு
தன்கடன் கொள்ளா லுவன்
கரிமத வாணைப் பெற்ற
காதலி கேட்டி டாயே.

27. ஜாதகருக்கு வளர்பிறைச் சந்திரனைப்போல் செல்வம் வளர்ந்து கொண்டே வரும். இவர் சாப்பாட்டு விஷயத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவருக்குத் தன்னுடைய மனைவியினால் சௌக்கியங்கள் ஏற்படும். இவரை எல்லோரும் கௌரவப்படுத்துவார்கள். இவர் நிலங்களையும் மனைகளையும் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் கடன் வாங்கமாட்டார். கற்றுப் பதயான முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாய்தந்தையர்களின் மரணம் (தாய்தந்தையர்களின் கர்மம்)

28. இருபது விருபான் லுலில்
இவன்தந்தை கெண்ட மெய்தும்
மரலியைக் காணு லுவன்
வரைகிரே மிருபா னெட்டிற்
கருமங்கள் தந்தைக் கென்ரேங்
காதலி யன்னைக் கேதான்
மருமமாய் முப்பா னுறில்
மடிவளே யென்று சொல்வோம்.

28. ஜாதகருக்கு இருபத்துநான்காவது வயதில் இவருடைய தகப்பனருக்குக் கண்டம் நேரிடும், ஆனால் இவருக்கு எமதரிசனம் நேரிடாது. ஜாதகருக்கு இருபத்தெட்டாவது வயதில் தகப்பனருக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகின்ரோம். ஜாதகருக்கு முப்பத்தாரு வது வயதில் தாயார் இறந்துபோய் விடுவாள் என்று சொல்லுகின் ரோம்.

ஜாதகருடைய கண்டமும் (மரணமும்) மறுஜன்மமும்

29. அன்பது வாண்டு தன்னி லணுகிடும் பாலன் கண்டங்
துன்பமே காணு லுவன் செப்புவோ மன்பா னெட்டில்
கன்னியா மாதங் தன்னிற் காவல னுடல மேகும்
பின்னுன்மங் தணிகை தன்னிற் பிறப்பனுஞ் சத்திரியச்
[சேயாய்.

29. ஜாதகருக்குத் தன்னுடைய ஐம்பதாவது வயதில் ஒரு கண்டம் நேரிடும், ஆனால் அதனால் கெடுதி ஏற்படாது. இவருக்கு ஐம்பத்தெட்டாவது வயதில் கன்னியா மாதம் என்ற புரட்டாசி மாதத்

தில் மரணம் நேரிட்டு இவருடைய தேகம் மறைந்து போய் விடும் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் தணிகை என்ற திருத்தணிகை க்ஷேத்திரத்தில் க்ஷத்திரியர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார்.

ஜனனகால தசை இருப்பும் பலனும்

30. பாலகன் ஜனிக்குங் காலை பரணியி னிரண்டாம் பாதஞ்
சாலசுக் கிரனி ருப்புத் தங்கிடும் பதின்மூன் றாண்டும்
ஏலவே நலமாந் தலங்க ளியம்பினேம் பூர்வ பாகம்
ஆலத்தை யுண்டோன் தேவி யறைந்தவிம் மொழிகுன்
[றாவே.

30. ஜாதகர் பிறக்கும்போது ஜன்மநட்சத்திரம் பரணியின் இரண்டாவது பாதம் ஆகும். இதற்குரிய சுக்கிரமகாதசை இருப்பு பதிமூன்று வருஷங்கள் ஆகும். இக்காலத்தில் நல்ல பலன்கள் நடக்கும். நிலங்களும் வந்து சேரும். இவ்விதமாக முன்பாகத்தை நாங்கள் சொல்லி முடித்து விட்டோம். ஆலகால விஷத்தை அருந்தின சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 110

ஜனனகால கிரகநிலை

1. [1]அரியது வுதய மாக [2]வந்தன னிரண்டி லேறக்
[3]கரியவன் நாலி லாகக் [4]கரும்பாம் பாறில் தங்கப்
[5]பருதியும் [6]புகரு மெட்டில் புதன்நவஞ் [7]சேயு மேழில்
[8]பிறைகேது யீரா ருகப் பேசுவீர் பலனைத் தானே.

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகி, குரு இரண்டிலும், சனி நான்கிலும், இராகு ஆறிலும், சூரியனும் சுக்கிரனும் எட்டிலும், புதன் ஒன்பதிலும், அங்காரகன் ஏழிலும், சந்திரனும் கேதுவும் பன்னிரண்டிலும் இருந்தால் பலாபலன் களைச் சொல்லுவீர் என்று கேட்டார்.

கிரகநிலை

சூரியன் சுக்கிரன்	புதன்		
அங்காரகன்	இராசி சக்கரம்		சந்திரன் கேது
ராகு			லக்கினம்
	சனி		குரு

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்திற் புதனும் குருவும், மிதுனத்திற் கேதுவும், விருச்சிகத்திற் சந்திரனும் சனியும், தனுசிற் சூரியனும் இராகுவும், மீனத்தில் அங்காரகனும் சுக்கிரனும் ஆகும். குருவும் சனியும் வக்கிரகதியில் இருக்கின்றார்கள்.

ஜனன நகரச் சிறப்பு

2. பிருகுவும் புகலு கின்றார்
பிறந்திடும் பெண்பால் ஜன்மம்
வருமில்லங் கீழ்மேல் வாசல்
வீதியுந் தென்பால் நோக்கம்

---

1. சிம்மம்
2. குரு
3. சனி
4. இராகு
5. சூரியன்
6. சுக்கிரன்
7. அங்காரகன்
8. சந்திரன்

அருகினில் சந்து முண்டு
அரன்கோஷ்டங் காளியுத்தரந்
திருமாலுந் தென்கீழ் பாழாஞ்
சிரமறுத்தோன் தென்பா லாகும்.

2. பிருகுமகரிஷியானவர் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை பெண்குழந்தையாகும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தெற்குத் திக்கைப் பார்த்ததாக விருக்கும். இதற்குச் சமீபத்தில் ஒரு சந்து இருக்கும். சிவபெருமானுடைய கோயிலும் காளியம்மன் கோயிலும் வடக்குத் திக்கில் இருக்கும். பாழடைந்த ஒரு மகாவிஷ்ணு வினுடைய கோயிலும் தென்கிழக்குத் திக்கில் இருக்கும். பிரமாவின் தலையை அறுத்தவராகிய முருகக்கடவுளின் கோயில் தெற்குத் திக்கில் இருக்கும்.

3. இத்தகை யடையா ளத்து
ளிலகிய பேரு ராகும்
முத்தின யில்லந் தன்னில்
முதிப்பளா மிந்தப் பாலன்
பெற்றத்தாய்த் தந்தை யோகம்
பேதையர் புத்திர யோகஞ்
சுத்தமாய் மூன்பின் ஜன்மஞ்
செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. இவ்விதமான அடையாளங்களையுடைய சீதேவி வாசஞ் செய்கின்ற ஒரு பெரிய கிராமம் ஆகும். ஒரு முதிர்ச்சியையடைந்த பழைய வீட்டில் இந்த ஜாதகி வந்து பிறப்பாள். இவளைப் பெற் றெடுத்தத் தாயார் தகப்பனார் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் இவளுடைய சந்ததிகளின் யோகத்தையும் முன்ஜன்மம் மறுஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் உண்மையாகச் சொல்லு கின்றோம்.

ஜாதகியின் தகப்பனருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோம் பதினென் [ருகும்
நொந்திடு மிருமூன் ருக நிகரமா மாண்பா லிரண்டு
பந்தணி மார்கள் மூன்று பகருவோந் தீர்க்க மாக
எந்தையே மூத்தோன் சேதி யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகியினுடைய தகப்பனருடைய சகோதரர்கள் பதினேரு பெயர்கள் ஆவார்கள் என்று சொல்லுகின்றோம். ஆறு சகோதரர்கள் இறந்து விடுவார்கள். இரண்டு சகோதரர்களும் மூன்று சகோதரி

களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! மூத்த சகோதரனுடைய விஷயங்களை இனிமேல் சொல்லுகின்றோம்.

தகப்பனுடைய மூத்தசகோதரனுடைய குணங்கள்

5. இல்லம்விட் டேகு வானை மிதரவு ருத்தி ரத்தில்
அல்லலாங் குடும்ப மென்றே மவன்தந்தை யாஸ்தி
[காணன்
வல்லியர் மூவ ராகு மைந்தர்க ளாண்பா லிரண்டு
புல்கிடும் மகள்மார் மூன்று பேசுவோம் வயது தீர்க்கம்.

5. ஜாதகியின் தகப்பனுருடைய மூத்தசகோதரர் தன்னுடைய வீட்டை விட்டுப்போய் விடுவார். வடக்கில் இன்னொரு கிராமத்தில் கஷ்டமான குடும்பத்தை யுடையவராவார் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய தகப்பனுருடைய சொத்தில்லாதவராவார். இவருக்கு மூன்று மனைவிமார்கள் நேரிடுவார்கள். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்கள் என்று சொல்லுகின்றோம்.

6. சுகமிலாக் குடும்ப மேற்பன்
தந்தையின் துணைவன் சேதி
அகமதை விட்டு நீங்கான்
ஆதிமால் பத்த னவன்
பகையென்று மனத்தில் வையான்
பாரது விருத்தி செய்வன்
ஜகமதில் நல்லோ னவன்
சீலையின் தொழிலுஞ் செய்வன்.

6. தகப்பனுருடைய மூத்தசகோதரர் சௌக்கியமில்லாத குடும்பத்தை உடையவராவர். இவருடைய இன்னொரு சகோதரனுடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம். இவர் வீட்டை விட்டு வேறு குடும்பமாகப் பிரிந்து போகமாட்டார். இவர் மகாவிஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவார். இவர் தன்னுடைய மனத்தில் விரோதத்தை வைத்திருக்கமாட்டார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவர் பூமியில் நல்லவராக விருப்பார். இவர் வஸ்திரத் தொழிலைச் செய்வார்.

7. மூன்னேன்சொல் கடவா னவன்
மொழியதைக் காப்பா னவன்
அன்னமுங் குறைவு றுதான்
அறுமுகன் பத்திப் பூண்பன்

பொன்கடன் கொள்ளா னவன்
பூருவம் பூமி யற்பம்
பின்பூமி சேர்ப்பா னவன்
பாரியு மொன்றே தீர்க்கம்.

7. தகப்பனுருடைய இந்தச் சகோதரர் தன்னுடைய தமையனுடைய வார்த்தைகளை மீறி நடக்காதவராக இருப்பார். தன்னுடைய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பவர் ஆவர். இவர் சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டத்தை அனுபவிக்கமாட்டார். ஆறுமுகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவர் ஆவார். இவர் பணத்தைக் கடனுக வாங்கமாட்டார். இவருடைய வாழ்நாளில் முதல் பாகத்தில் இவருக்கு நிலங்கள் வந்து சேரும். நிலங்களால் லாபமும் கிடைக்கும், இவருடைய பிற்காலத்தில்கூட பூமி நிலங்களைச் சம்பாதித்து சேர்த்து வைப்பார். இவருக்கு ஒரே மனைவியுண்டு. இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள்.

ஜாதகியின் தகப்பனுருடைய குணதிசயங்கள்

8. சுதர்களு மாண்பா லொன்று
தீர்க்கமா மென்று சொல்வோம்
அதிபனே டொத்து வாழ்வன்
வரைகிரேரும் பிதாகு ணத்தைத்
துதிசெய்தோர்க் குதவிச் செய்வன்
சிவத்தொண்டு சிலகாள் செய்வன்
பதிவேறு செய்த லுண்டு
பகைசெய்வன் மூன்னோன் தன்னை.

8. தகப்பனுருடைய இந்த சகோதரருக்கு ஓர் ஆண் குழந்தை நீண்ட ஆயுளை உடையதாக இருக்கும் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய சகோதரனுடன் ஒத்து வாழ்வார் அல்லது தன்னுடைய பிள்ளையுடன் ஒத்து வாழ்வார். இனிமேல் ஜாதகியினுடைய தகப்பனரது குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். தகப்பனர் தன்னை வணங்கிப் போற்றுகின்றவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் சிலகாலம் சிவபெருமானுக்கு வேலைகளைச் செய்து வருவார். இவர் வேறு ஒரு வீட்டைக் கட்டுவார், தன்னுடைய மூத்தசகோதரனுடன் விரோதம் செய்து கொள்வார்.

9. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன்
கஞ்சமா நிறத்த னவன்
தடபுடல் செய்கை யுண்டு
தரித்தொழில் புரிவா னவன்

விடமனங் கொஞ்ச முண்டு
வீண்பழி யேற்கா னுவன்
துடியிடை வர்க்க நாஸ்தி
சொல்லது யிரண்டு முண்டு.

9. தகப்பனுர் கடன் வாங்குவார், ஆனுல் அதைத் திருப்பிக் கொடுத்து விடுவார். இவர் தாமரைப்பூவைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவர் ஆவார். இவர் இடம்பமாகவும் அவசர மாகவும் படாடோபமாகவும் காரியங்களைச் செய்வார், நெசவுத் தொழி லைச் செய்பவர் ஆவர். இவர் சிறிது வஞ்சனை உள்ள மனத்தை உடையவர் ஆவர், வீணுக அபவாதத்தையும் நிந்தனைகளையும் அடையம்மாட்டார். இவருடைய மனைவியின் பந்துக்கள் நாசத்தை அடைந்து விடுவார்கள். இவர் இரண்டுவிதமான வார்த்தைகளை அஃதாவது உண்மையானவும் பொய்யானவுமான வார்த்தைகளையும் நல்லனவும் கெட்டனவுமான வார்த்தைகளையும் சொல்லுவார்.

10. பொய்யதை மெய்யாய்ச் சொல்வன்
போஜனப் பிரிய னுவன்
அய்யமுங் கொஞ்சஞ் செய்வன்
அவசர மனத்த னுவன்
கைதனில் கமல ரேகை
கண்முகம் வசிய முண்டு
செய்வனஞ் சிலர்க்குத் துன்பஞ்
சீர்மறை பகையு மாவன்.

10. ஜாதகியின் தகப்பனுர் பொய்யை உண்மையே என்று வாதித்துச் சொல்லுவார். இவர் சாப்பாட்டில் ஆசையுடையவர் ஆவர். இவர் கொஞ்சம் பிச்சையும் கொடுப்பார், தர்மமுஞ் செய்வார். இவர் அவசரமான மனத்தை உடையவர் ஆவர். இவர் தன்னுடைய உள்ளங்கையில் கமலரேகை என்ற தாமரைரேகையை உடையவர் ஆவர். இவருடைய கண்களும் முகமும் பிறரைத் தன் வசப்படுத்திக் கொள்ளும்படியாக அல்லது கவரும்படியாக அழகாக இருக்கும். இவர் சிலருக்கு உபத்திரவத்தை உண்டு பண்ணுவார். இவர் சிறந்த வேதங்களுக்கு விரோதியாக இருப்பார், அல்லது பிராமணர் களுக்கு விரோதியாக இருப்பார்.

ஜாதகியினுடைய குணநிசயங்கள்

11. இன்நெறி யுடையா னுக்கு
விக்கன்னி யுதிப்ப ளாவள்
கன்னியின் குணத்தைச் சொல்வேன்
கண்முகம் வசிய முண்டு

நன்குணம் நடையு நன்மை
நவி லுமுன் கோபங் கொஞ்சம்
பன்னியே பேசுவா ளாம்
பதர்குண மில்லா ளாவள்.

11. இவ்விதமான குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகி பிறந்தவளாவள். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவளுடைய கண்களும் முகமும் பிறரைத் தன் வசப்படுத்திக் கொள்ளும்படியாகவும் கவர்ச்சிச் செய்துகொள்ளும்படியாகவும் அழகாக இருக்கும். இவள் நல்ல குணங்களை உடையவள் ஆவள், நல்ல ஒழுக்கத்தையும் உடையவள் ஆவள். இவள் பேசுவதற்கு முன்னே சிறிது கோபத்தை அடைபவளாக இருப்பாள். இவள் சாமார்த்தியமாகவும் விமரிசையகவும் பேசக்கூடியவள் ஆவள். இவள் அவசரமான அல்லது தாழ்வானகுணத்தை உடையவள் ஆவள்.

12. மங்கையும் யோக சாலி வருவோரை யாத ரிப்பள்
சங்கையென் றோரைச் சாராள் சாதிப்பாள் சிலவே
[சங்கை
எங்கள்போ லதிதிக் கன்ன மீவளா மென்று சொல்வோர்
தங்கிடும் பித்தச் குடு சந்ததி தீர்க்க ஜீவி.

12. ஜாதகி யோகத்தை உடையவளாக இருப்பாள். இவள் தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள், அச்சமாக இருக்கின்றது என்றுச் சொல்லுகின்றவர்களோடு சேரமாட்டாள், சில விஷயங்களைத் தான் சொல்லுவதே சரியென்று வாதித்து நிலை நாட்டுபவளாவள், எங்களைப்போன்ற முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போடுவாள் என்றுச் சொல்லுகிறோம். இவளுக்குப் பித்தசூட்டு ரோகம் உண்டு. இவளுக்கு குழந்தைகள் உண்டு. இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள்.

ஜாதகியினுடைய சகோதரர்கள் (சகோதர பாவம்)

13. தன்துணை தசமே தோன்றுந் தங்காவே சிலவே
[யென்றோங்
கன்னிகை முன்னு லொன்று கனத்திடுந் தீர்க்க மாகப்
பின்துணை கன்னி யொன்று பேசுவோம் பலமு றுது
அன்னவர் சேதி யாவு மறிவிப்போம் பின்பா கத்தில்.

13. ஜாதகியின் கூடப் பிறந்தவர்கள் மொத்தம் பத்துப்பேர் ஆவர். இவர்களில் சிலர் நிலைக்காமல் இறந்து விடுவார்கள். இவளுக்கு இளைய சகோதரி ஒருத்தி உண்டு. இவள் நீண்ட ஆயுளை

உடையவள் அல்லள். இந்த சகோதரர்களுடைய எல்லாவிஷயங்களைப் பற்றி அடுத்த பாகத்தில் சொல்லுகின்றேம்.

ஜாதகியின் விவாக காலமும் புருஷனின் குணங்களும்

14. மங்களம் பதின்மூன் றாண்டில் மருவிடும் வடபால் மாரன்
அங்கவன் குணத்தைச் சொல்வே னழகுளான்
[சிவந்த மேனி
பொங்கின குடும்ப மேற்பன் போஜன வறுமை காணன்
இங்கிவள் போன பின்பு வெய்திடும் யோகந் தானே.

14. ஜாதகிக்கு பதிமூன்றுவது வயதில் விவாகம் நடக்கும். வடக்குத் திக்கிலிருந்து புருஷன் வருவார். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சுந்தரனாக இருப்பார். சிவந்த நிறத்தை உடையவராவர். இவர் மேன்மையான குடும்பத்தை உடையவராவர். சாப்பாட்டு விஷயத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவர் தன்னுடைய மாமியார் வீட்டிற்குப் போன பிறகு இவருக்கு யோகம் வந்து சேரிடும்.

ஜாதகியினுடைய சந்ததிகளும் (புத்திர பாவமும்) முன்ஜன்மமும்

15 பெரிதான குடும்ப மேற்பன் பந்துவின் மதிப்பு கொள்வன்
அரிவைக்குச் சுதராண் மூன்று வம்பிகை மார்க ளிரண்டு
உரைகிறேந் தீர்க்க மாக வுதித்தசேய் பூர்வஞ்
[சொல்வேன்
அருணையில் வேளான் வம்ச மணுகிய பெருமை பூண்டு.

15. ஜாதகியினுடைய புருஷன் பெரிய குடும்பத்தை உடையவர் ஆவர். இவரைத் தன்னுடைய பந்துக்கள் கௌரவமாகப் பாராட்டுவார்கள். ஜாதகிக்கு மூன்று ஆண் குழந்தைகளுக்கும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றேம். ஜாதகியின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் வேளாளர் குலத்தில் இவள் முன் ஜன்மத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து பெருமையும் மேன்மையும் உடையவளாகி ;

16. அறமதி லிச்சை யுண்டா யச்சென்மம் வினையில் லாமல்
மறலியிந் நாடு சென்று மறையவன் வரையப் பட்டு
அறுமுக னடிமை வர்க்க மருளுவா ளிந்த மாது
கரிமத வானை பெற்றக் காதலி கேட்டி டாயே.

16. ஜாதகி தர்மத்தில் ஆசை உடையவளாகியும் முன் ஜன்மத்தில் யாதொரு பாபத்தையும் அடையாதவளாகியும் இருந்து பிறகு

இறந்து எம்பட்டணம் போய் பிரதேவனுல் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு ஆறுமுகக்கடவுளுக்கு அடியார்களாகிய செட்டியார் குலத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள்.

ஜாதகியின் தாயாருடைய குணதிசயங்கள்

17. மாதிரு குணத்தைச் சொல்வேன்
மனமது தளர்ச்சி யுண்டு
சூதிலாள் முன்கோ பத்தாள்
சொல்லதைக் காப்பா ளாவள்
பாதக மனமில் லாதாள்
பதர்குண மில்லா ளாவள்
காதலி துணையாண் காணுள்
கன்னிகை யொன்றே தீர்க்கம்.

17. ஜாதகியின் தாயாருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவளுடைய மனம் இளகியதாகவும் தயாளமானதாகவும் இருக்கும். இவள் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை உடையவள் அல்ல. இவள் முன் கோபத்தை உடையவள், தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் கர்ப்பாற்றுவாள். இவள் கெட்ட மனத்தை உடையவள் அல்லள், அவசரமான அல்லது இழிவான குணத்தை உடையவள் அல்லள். இவளுக்குச் சகோதரர்கள் கிடையாது. ஒரே ஒரு சகோதரி உண்டு. இந்தச் சகோதரி நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள்.

ஜாதகியின் தாயாருடைய முன்ஜன்மம்

18. இல்லமுந் தென்மே லாகு மேகுமே வந்தயில்லந்
தல்லியின் பூர்வஞ் சொல்வேன் தண்டகா வனத்தி
[லேதான்
புல்கிளள் செக்கான் வம்சம் புகழான குடும்பி யாகி
வல்லியும் வாழுந் நாளில் மருவின வினையைக் கேண்மோ.

18. ஜாதகியின் தாயாருடைய வீடு தென்மேற்குத் திக்கில் இருக்கும். அந்த வீடு அழிந்து போய்விடும். தாயாருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் தண்டகாவனத்தில் செக்கு ஆடுகிற செட்டியார் குலத்தில் முன் ஜன்மத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து கீர்த்தியுள்ள ஒரு குடும்பத்தை உடையவள் ஆகி வாழ்கின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த பாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக.

19. இறப்பினில் கூடு கட்டி யிருக்கிற பட்சி தன்னைக்
குறிப்பாக வதனைக் கண்டு கூட்டையுங் கலைத்தா
[ளென்றேஞ்
சிறகிலாக் குஞ்சு தானுஞ் சென்றது காலந் நாடு
மறுவிற்று வந்த்த் தோஷ மங்கையே கேட்டி டாயே.

19. வீட்டின் இறவாணத்தில் கூடு கட்டியிருந்த ஒரு பட்சியை ஜாதகியின் தாயார் தன்னுடைய முன் ஜன்மத்தில் குறிப்பாகக் கவனித்து அதனுடைய கூட்டை அழித்துவிட்டாள் என்றுச் சொல்லுகின்றேம். அதனால் அதிலிருந்த இறக்கைகள் இல்லாத குஞ்சிகள் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டன. அந்தத் தோஷமானது இவளுக்கு வந்து சம்பவித்தது, பார்வதி யம்மையே ! கேட்பீராக.

ஜாதகியின் தாயாருடைய மறு ஜன்மம்

20. ஆகையா லிச்சென் மத்தி
லவட்குத்தா யில்லம்நாஸ்தி
போகிடுஞ் சுதர்கள் தாமும்
பேதைக்குத் துணையாண் தோஷம்
பாகமா யிவள்பின் ஜன்மம்
பகருவோங் காஞ்சி தன்னில்
ஆகம குலமு திப்பாள்
அத்திரி மறித்துச் சொல்வார்.

20. ஆகையால் ஜாதகியின் தாயாருக்கு இந்த ஜன்மத்தில் இவளுடைய தாயாருடைய வீடு ஆஸ்தி எல்லாம் அழிந்து போய்விடும், பிள்ளைகளும் இறந்துவிடுவார்கள், இவளுக்குச் சகோதரர்கள் கிடையாது. இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம் இவள் காஞ்சிவரத்தில் மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். இவ்விதமாக பிருகு மஹரிஷி சொல்லவே, அத்திரி மஹரிஷியானவர் தடுத்துக் கேட்கின்றார்.

21. இந்ததோர் ஜன்மந் தன்னி
லிவள்செய்த புண்ணிய மென்ன
வந்தவர்க் கன்ன மீந்தும்
வரன்மனம் போலே வாழ்ந்தும்
பிந்தினோர் தாகந் தந்தும்
பேச்சதைக் காத்து வந்தும்
முந்தின குலமு திப்பாள்
முதல்வியே கேட்டி டாயே.

21. ஜாதகியின் தாயார் இந்த ஜன்மத்தில் என்ன புண்ணியங் களைச் செய்தாள்? என்று கேட்கவே, பிருகு மஹரிஷி பதில் சொல்லு கின்றார். இவள் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டும், தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல் ஒற்றுமையாக வாழ்ந்தும் ஏழைகளுக்குத் தாகந் தீர நீர்மோர் கொடுத்தும் தன்னுடைய வார்த்தைகளை தவறிடாமல் காப்பாற்றியும் வந்ததால் இவள் மறு ஜன்மத்தில் முந்தின குலமாகிய பிராமணர் குலத் திற் பிறப்பாள். எங்கள் தலைவியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகியின் தகப்பனருடைய முன் ஜன்மம்

22. தந்தையின் முன்ஜன் மத்தைச்
சாற்றுவோம் பட்சி தன்னில்
முந்தின சௌராஷ்டர வம்ச
முதித்துமே செட்டு செய்வன்
தன்தன முடைய ஞகி
வாழுநாள் வினையைக் கேண்மோ
முந்தின மறையோ ருக்கு
மொழியதை மாற்றிச் செய்தான்.

22. ஜாதகியின் தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் பட்சித் ஸ்தலமாகிய திருக்கழுக்குன்ற க்ஷேத்திரத்தில் சிறந்த ஒரு சௌராஷ்டிரர் வம்சம் என்ற பட்டுநூல் காரர் குலத்தில் முன் ஜன்மத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து வியா பாரங்களைச் செய்துகொண்டு தன்னுடைய சொந்த பணத்தை உடை யவராகி வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்தப் பாபத் தைச் சொல்லுகிறோம், கேட்பீராக, மேன்மையான ஒரு பிராமணருக்கு தான் சொல்லிய வார்த்தை தவறி நடந்துவிட்டார்.

23. அதுவொரு தோஷ மாச்சு வறைகிறோம் வேறு வொன்று
பதியினில் கிளிவ ளர்த்துப் பலவித மொழியுஞ் சொல்ல
அதைப்பூனை பிடித்துக் கொள்ள வணுகிற்று வதுவோர்
[தோஷஞ்
சதியான மாதிரு சாபஞ் சார்ந்தது வென்று சொல்வோம்.

23. இது இந்தத் தகப்பனருக்கு ஒரு தோஷமாக வந்து சம்ப விக்கத்தது. இன்னொரு தோஷத்தையும் சொல்லுகின்றோம். இவர் தன் னுடைய வீட்டில் ஒரு கிளியை வளர்த்து அதற்குப் பலவிதமான வார்த்தைகளைக் கற்றுக் கொடுத்துவந்தார். அதை ஒரு பூனை பிடித்து கொண்டு போய்விட்டது. இந்த ஒரு தோஷமும் தகப்பனரை வந்து

அடைந்தது. இவைகளுமின்றி இவருக்கு விரோதியான தாயாருடைய சாபமும் இவரை வந்து அணுகிற்று என்று சொல்லுகின்றோம்.

24. அன்னையின்சாப மெவ்வாறுவறிவிப்பீர் முனியே நீர்தாந்
தன்மனை வார்த்தை கேட்டுத் தாயதை யெத்த லுற்றுன்
துன்மைகள் சேர்ந்த தென்றேஞ் சேயனு மந்தி யத்தில்
தன்னில்லம் வறுமை யாகிச் சண்டன்தன் பதிக்குப்புக்கி;

24. இவ்விதமாக பிருகு மஹரிஷி சொல்லவே தாயாருடைய சாபம் எவ்விதமாக இந்தத் தகப்பனாருக்கு வந்து சம்பவித்தது என்பதை, முனிவரே! நீரே சொல்லுவீராக. இதன்மேல் பிருகுமஹரிஷி பதில் சொல்லுகிறார். இந்தத் தகப்பனார் தன்னுடைய மனைவியின் வார்த்தைகளைக் கேட்டுத் தன்னுடைய தாயாரைக் காலால் எட்டி உதைத்தார். இதனால் கெடுதிகள் வந்து சம்பவித்தன என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய கடைசிகாலத்தில் தன்னுடைய வீட்டில் தரித்திரமும் கஷ்டங்களும் உண்டாகி இறந்து பிறகு எமபட்டணத்திற்குப் போய்;

ஜாதகியின் தகப்பனாருடைய மறு ஜன்மம்

25. பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று
[சொல்வோம்
உரைந்திடும் முன்னோர் சாப முதித்தயி லடையா லுகும்
பிறந்தசேய் தீதே யாகும் பேசுவோ மிவன்பின் ஜன்மம்
பிருதிவி தலத்திலே தான் பிறப்பனும் சைவ சேயாய்.

25. பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இவர் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். பிராமணருடைய சாபம் இவருக்கு வந்துச் சம்பவிக்கும். இவர் தான் பிறந்த வீட்டை அடையமாட்டார். இவருக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளும் இறந்து போய்விடும். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் பிருதிவி ஸ்தலம் என்ற கரஞ்சீவரத்தில் சைவருடைய குலத்தில் போய் ஆண் குழந்தையாக மறு ஜன்மத்தில் பிறப்பார்.

ஜாதகியின் தகப்பனாருடைய மரணகாலம் (பிதுர் கர்மம்)

26. *அத்திரி மரித்துச் சொல்வா ரவருக்குக் கருமஞ் செய்தார்
சுத்தமாய் சொல்லு மென்ன துணைவ னவன் தலங்கள்
[செல்வன்
சத்தியே யிருபா னிரண்டிற் சாற்றுவோம் மாரகங்கள்
இத்தகை சொல்லும் போ தியம்புவார் வதிஷ்டர் தானே
நித்தியம் வாதபீடை நேர்ந்திடுங் கரங்கால் குற்றம்.

*இப்பாடலில் ஓரடி மிகுந்திருக்கின்றதைக் கவனிக்கவும்.

26. இவ்விதமாக பிருகுமஹரிஷிச் சொல்லவே, அத்திரிமஹரிஷி யானவர் தடுத்துக் கேட்கின்றார். ஜாதகியின் தகப்பனாருக்கு யார் கர்ம காரியங்களைச் செய்வார்கள் என்பதை உண்மையாகச் சொல்லுவீர் என்று கேட்கவே, பிருகுமஹரிஷி பதில் சொல்லுகின்றார். இந்தத் தகப்பனார் தன்னுடைய சகோதரருடைய வீட்டிற்குப் போய்ச் சேர்ந்து விடுவார். ஜாதகிக்கு இருபத்திரண்டாவது வயதில் இவர் இறந்து விடுவார். இவ்விதமாக பிருகுமஹரிஷி சொல்லவே வசிஷ்டமஹரிஷியானவர் தடுத்துச் சொல்லுகிறார். இந்தத் தகப்பனாருக்குத் தினந்தோறும் வாதரோகம் உண்டாகும். கால் கைகளில் கெடுதிகள் உண்டாகும்.

ஜாதகியின் தாயாருடைய மரண காலம்

27. வருகுநோய் தீர வேண்டி வரைகிறேங் கிரிகை யொன்று
கரும சாந்திகளும் செய்ய கருமூனி தோஷம் நீங்கும்
திருகிலா னற்ப தாண்டில் செப்புவோ மன்னை கெண்டம்
பெரு வயிறேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

27. இவ்விதமான ரோகங்கள் நிவிர்த்தியாவதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்றோம். கர்ம சாந்திகளைச் செய்தால் முனீசுவரருடைய தோஷமானது நிவிர்த்தியாகும். ஜாதகியின் நாற்பதாவது வயதில் இவளுடைய தாயார் இறந்து போய்விடுவாள். பெரிய வயிற்றை உடைய வினயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகியின் மரண காலமும் மறு ஜன்மமும்

28. அன்பது ஒன்ப தாண்டி லாடி மாதத்திலே தான்
இன்னவ ளுடல மேகு மியம்புவோ மிவள் பின்ஜன்மம்
தென்திசைத் தில்லை தன்னில் ஜனிப்பளாம் வேளான் [வம்சம்
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேடடி டாயே.

28. ஜாதகி தனக்கு ஐம்பத்தொன்பதாவது வயதில் ஆடிமாதத்தில் இறந்துபோகவே இவளுடைய உடம்பு மறைந்து போய்விடும். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். தெற்குத்திக்கிலுள்ள தில்லைஸ்தலம் என்ற சிதம்பரக்ஷேத்திரத்தில் ஜாதகி மறு ஜன்மத்தில் வேளாளர் குலத்திற் பெண்குழந்தையாகப் பிறப்பாள். மேன்மையான சிறந்த யானைமுகத்தையுடைய வினயகக்கடவுளைப் பெற்றெடுத்த உத்தமியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகியின் புருஷனுடைய மரணகாலமும் தன்னுடைய ஜனனகால தசை இருப்பும்

29. அன்பது ஆண்டிலேதான் அவள்
வரன் கெண்ட மெய்தும்
கன்னியும் ஜனன காலங்
கரியவன் திசை ஞலாண்டுந்
தன்னுடன் திங்கள் ஞலும்
சாற்றினேம் பூர்வ பாகம்
அன்னையே யாங்கள் சொல்லுமருள்
மொழிகுன்ரு தென்ரேம்.

29. ஜாதகிக்கு ஐம்பதாவது வயதில் இவளுடைய புருஷன் இறந்து போய்விடுவார். இவள் பிறந்த காலத்தில் கரியவன் என்ற சனிபகவானுடைய தசை இருப்பு நான்கு வருஷங்களும் நான்கு மாதங்களும் ஆகும். இவ்விதமாக நாங்கள் பூர்வபாகத்தைச் சொல்லி முடித்துவிட்டோம். எங்களுடைய தயாராகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய அருள் வாக்குப் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும் என்று சொல்லுகின்ரோம்.

ஜாதகம் 111

ஜனனகால கிரகநிலை

1. [1]அரியது உதயமாக [2]அரவு [3]சேய் யிரண்டி லேற
[4]கரியவ னூறில் தங்க [5]கனகனு மேழி லாக
[6]பரிதியும் புதனும் பத்தில் [7]பார்க்கவன் [8]லாப மேற
குறை[9]மதி [10]விரைய மாகக் கூறுவீர் பலனைத் தானே.

1. சிம்மம் ஜன்மலக்கினமாகி, இராகுவும் அங்காரகனும் இரண்டிலும், சனி ஆறிலும், குரு ஏழிலும், சூரியனும் புதனும் பத்திலும், சுக்கிரன் பதிஞென்றிலும், சந்திரன் பன்னிரண்டிலும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று கேட்கவே;

கிரகநிலை

கேது		சூரியன் புதன்	சுக்கிரன்
குரு	இராசி சக்கரம்		சந்திரன்
சனி			லக்கினம்
			அங்காரகன் ராகு

பூசம் 4-ஆம் பாதம் : சனிதசை வரு 0-1-15

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்திற் சூரியனும், மிதுனத்திற் குருவும் சுக்கிரனும் சனியும், கடகத்தில் இராகுவும், சிம்மத்தில் புதனும், விருச்சிகத்தில் சந்திரனும், மகரத்திற் கேதுவும், மீனத்தில் அங்காரகனும் ஆகும். புதனும் சனியும் வக்கிரகதியில் இருக்கின்றார்கள்.

---

1. சிம்மம்
2. இராகு
3. அங்காரகன்
4. சனி
5. குரு
6. சூரியன்
7. சுக்கிரன்
8. பதிஞென்று
9. சந்திரன்
10. பன்னிரண்டு

ஜனனமான நகர சிறப்பு

2. அத்திரி புகலு கின்ற ரதுஜன்மம் பெண்பா லாகும்
விசித்தகி உதித்த யில்லம் விளம்புவோங் கீழ்பால் வாசல்
உத்திரந் தென்பால் வீதி ஒங்காளி தென்கீ ழாகுஞ்
சித்தசன் தனை யெரித்த தேவனும் வடகீ ழாகும்.

2. அத்திரி மகரிஷி சொல்லுகின்றார். ஜனனமான குழந்தை பெண்ணும். ஜாதகி பிறந்த வீடு கிழக்குப் பார்த்த வாயிற்காலை உடைய தாக இருக்கும். அது வடக்குத் தெற்கு வீதியில் இருக்கும். காளி யம்மன் கோயில் தென்கிழக்குத் திக்கில் இருக்கும். மன்மதனை எரித்த சிவபெருமானுடைய கோயில் வடகிழக்குத் திசையில் இருக்கும்.

3. மாலவன் வடமே லாகும் மருவியபேரூ ராகுஞ்
சாலவே அடை யாளங்கள் சாற்றியே மன்னர் வாசம்
சீல மில்லாத கங்கை குலமதில் மூன்றாஞ் ஜன்மம்
பாலிகை தோன்று மென்றோம் பகருவோங் குடும்பச்
[சேதி.

3. மஹாவிஷ்ணுவினுடைய கோயில் வடமேற்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் பெரிய கிராமம் ஆகும். அதில் அரசர்கள் வாசஞ் செய்வார்கள். இவ்விதமான அடையாளங்களையுடைய ஊரில் ஒரு நல்லொழுக்கமில்லாத கங்கைகுலம் என்ற ஒரு வேளாளர் குலத்தில் மூன்றாவது பிறவியாக ஜாதகி பிறப்பாள் என்று சொல்லு கின்றோம். இவளுடைய குடும்ப விஷயத்தைப் பற்றிச் சொல்லு கின்றோம்.

ஜாதகியின் தகப்பனுடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

4. தந்தையின் துணையாண் நான்கு சத்திமார் மூவ ராவர்
அந்தவர் தீர்க்க ஜீவி யணுகாவே மற்ற வெல்லாம்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோ மவர்கள் சேதி
கந்தனைப் பெற்ற மாதை கழறுவோம் பிதாகு ணத்தை.

4. ஜாதகியின் தகப்பனாருடன் பிறந்தவர்கள் நான்கு சகோதரர் களும் மூன்று சகோதரிகளும் ஆவார்கள். இந்த எழுவரும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். மற்றச் சகோதரங்கள் எல்லாரும் இறந்து விடுவார்கள். இந்தச் சகோதரர்களின் விஷயங்களைப் பற்றி அடுத்த பாகத்தில் சொல்லுகின்றோம். முருகக்கடவுளைப் பெற் றெடுத்த பார்வதியம்மையே! ஜாதகியின் தகப்பனாருடைய குணா திசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகியின் தகப்பனுடைய குணதிசயங்கள்

5. மாந்துளிர் மேனி யாவன் மருமழு மில்லா னென்றேரும்
கூர்ந்துமே வார்த்தை சொல்வன் கொடுமையை
[மெவர்க்கு மெண்ணுன்
சாந்தவான் தனுசு ராசி சகடுநாள் தோன்று வானும்
ஏந்திழை மார்கள் மோகன் ஏவல்கள் செய்வா னவன்.

5. ஜாதகியின் தகப்பனுர் மாந்துளிரின் நிறமாகிய ஒருவித சிவப்பு நிறத்தையுடையவர் ஆவர். இவர் ரகசியத்தை உடையவர் அல்ல என்று சொல்லுகின்றேரும். இவர் அதிகமாகவும் சிறப்பாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் கெடுதியை யாருக்கும் நினைக்க மாட்டார். இவர் சாந்த முடையவர், தனுராசியில் உரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தவராவர். இவர் ஸ்திரீகளிடத்தில் காம ஆசை உடையவர் ஆவர். இவர் கட்டளை யிடுவார். பிசாசுகளை யேவிவிடுவார், தொண்டு செய்வார்.

6. ஒருவர்பா லணுகி யுய்வ
னுத்தம குணத்த னவன்
பெருமையும் புகழும் பின்னுல்
பெறுவனும் வகையா யென்ன
குறையென் றேர்க்குதவி செய்வன்
கொடூரத்தை வெளிக்காட் டாதான்
திருமாலின் பத்தி கொள்வன்
சேயிழைப் பிரிய னவன்.

6. ஜாதகியின் தகப்பனுர் ஒருவரிடத்தில் அண்டி வேலை செய்து ஜீவிப்பார் இவர் நல்ல சிறந்த குணங்களுடையவராக இருப்பார். இவர் பெருமையையும் புகழையுங் பிற்காலத்தில் தகுந்தபடி அடைபவர் ஆவர். இவர் கஷ்டத்தை அடைந்து இருக்கின்றேரும் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார், கொடுமையானதைப் பிறருக்குத் தெரியும்படி வெளியில் காட்டிக்கொள்ளமாட்டார். இவர் மஹாவிஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார், தன்னுடைய மனைவியின்மேல் ஆசையுடையவராக இருப்பார். இவருடைய மனைவியும் இவரிடத்தில் அன்புள்ளவளாக இருப்பாள்.

7. பலசெட்டுச் செய்வா னவன் பரிந்துப சாரஞ் சொல்வன்
கலகத்தைக் கூரு னவன் காரிய சமர்த்த னவன்
விலைமாதர் மோகங் கொள்ளான் வீண்வம்பில் செல்லா
[னவன்
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழி குன்றுவே.

7. ஜாதகியின் தகப்பனுர் பலவிதமான வியாபாரங்களைச் செய்பவர் ஆவர். இவர் தானுகவே முன் வந்து பிறருக்கு உபசாரமான வார்த்தைகளைச் சொல்லுபவராவர். இவர் கலகத்தை உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார். காரியங்களைச் செய்து முடிப்பதில் சாமர்த்தியம் உடையவராக இருப்பர். இவர் தாசிகளிடம் மையல் என்ற காம ஆசையை உடையவர் அல்லர். வீணன சண்டையில் இவர் தலையிட்டுக் கொள்ளமாட்டார். மலையின் அரசனுகிய பர்வத ராஜனுடைய புத்திரியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகியின் தகப்பனுருடைய முன் ஜன்மம்

8. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகுரேந் தாயே கேளுங்
கன்னியா குமரி தன்னில் கலந்தனன் ரெட்டி வம்சம்
பொன்னெடு பணிதி பெற்றுப் புகழான குடும்பி யாகித்
துன்மையாய்க் காலக் நாடு சென்றுமே பிரமன் லக்கம்;

8. ஜாதகியின் தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்ரேம். பார்வதியம்மையே! கேட்பீராக. இவர் கன்னியா குமரியில் ஒரு ரெட்டியாருடைய குலத்தில் ஆண் குழந்தையாக முன் ஜன்மத்தில் பிறந்தார். தனமும் ஆபரணங்களும் ஆகிய இவைகளை உடையவராகவும் மேன்மையையும் கீர்த்தியையும் உடைய ஒரு குடும்பஸ்தராகவும் இருந்து பிறகு இறந்து கஷ்டத்தைக் கொடுக்கின்ற யம்பட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு;

ஜாதகியின் குணதிசயங்கள்

9. வந்தவ னென்று சொல்வோம்
வரைந்தயிக் குணத் தானுக்கு
இந்தமா துதித்தா ளாவா
ரியம்புவோ மிவள்கு ணத்தைச்
செந்திரு மகளை யொப்பள்
சிறப்பான குடும்ப மேற்பள்
நிந்தைக ளேற்கா ளாவள்
நிமிஷத்தில் கோபி யாவள்.

9. ஜாதகியின் தகப்பனுர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கிறுர் என்று சொல்லுகின்ரேம். இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகி பிறந்தவள் ஆவள். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்ரேம். இவள் இலட்சுமியைப் போல அழகாக இருப்பாள், மேன்மையான குடும்பத்தை உடையவள் ஆவள். இவள் அபவாதங்களையும் பழி

களையும் அடையமாட்டாள். இவள் ஒரு க்ஷணத்திற்குள் கோபத்தை உடையவள் ஆவள்.

10. கல்வியு முடைய ளாவள் கணவனுக் கினிய ளாவள்
இல்லையென் றுரைக்க மாட்டா ளிடர்செய்யாள் யாவ
[ருக்கும்
நல்லபு ஷணங்கள் சேர்ப்பள் நலிந்தோரை யாதரிப்பள்
சொல்லது சுகமே யாகுஞ் சுருக்கமாம் வார்த்தை யுண்டு.

10. ஜாதகி படித்தவளாக இருப்பள். இவள் தன்னுடைய புருஷனுக்குப் பிரியமானவளாக இருப்பாள். இவள் பிறருக்குக்கொடுப் பதற்குத் தன்னிடத்தில் ஒன்றும் இல்லை என்று சொல்லமாட்டாள். இவள் எவருக்கும் தீங்கைச் செய்யமாட்டாள். இவள் அழகிய சிறந்த ஆபரணங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பாள், ஏழைகளைக் காப் பாற்றுவாள். இவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். விரிவில்லாமல் சுருக்கமாகப் பேசுவாள்.

11. பலருக்கும் பந்தி னர்க்கும் பரிந்துப சாரஞ் செய்வள்
கலகத்தைக் கூரு ளாவள் காரிய சமர்த்த ளாவள்
திலகம்போல் பந்துக் கட்குச் சீக்கிர நடையு மாவள்
தலைவியும் யோக சாலி சாதிப்பாள் சிலவே சங்கை.

11. ஜாதகி தன்னுடைய பந்துக்களுக்கும் மற்ற எல்லோருக்கும் தானே வலிய வந்து உபசரணைகளை செய்வாள். சண்டையை உண்டுபண்ணக்கூடிய கலகமான வார்த்தைகளை ஜாதகி சொல்லமாட்டாள், காரியங்களைச் செய்வதில் சாமர்த்தியம் உடைய வளாக இருப்பாள். இவள் தன்னுடைய பந்துக்களுக்குள் நெற்றியி லுள்ள ஒரு பொட்டைப்போலச் சிறந்தவளாக இருப்பாள். சீக்கிர மாக நடக்கக் கூடியவளாக இருப்பாள். இவள் யோகத்தை உடைய வளாக இருப்பாள். சில விஷயங்களில் தான் சொன்னதே சரியானது என்று வாதித்து நிலைநாட்டக் கூடியவளாக இருப்பாள்.

ஜாதகியின் சகோதரங்கள் (சகோதர பாவம்)

12. தன்துணை முன்னோர் நஷ்டந்
தங்கும்பி ணண்பா லிரண்டு
கன்னிகை யவ்வாறு தீர்க்கங்
கழறுவோம் பாவைக் கேதான்
என்னகா ரணத்தி னலே
யிவள்துணை முன்னல் நஷ்டம்
துன்மையாய்ப் புகரும் லாபந்
தோன்றின பலத்தால் சொன்னேம்.

12. ஜாதகியினுடைய மூத்த சகோதரர்கள் இறந்துவிடுவார்கள். இவளுக்கு இரண்டு இளைய சகோதரர்களும் இரண்டு இளைய சகோதரிகளும் நீண்ட ஆயுள் உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக அத்திரி மஹரிஷி சொல்லவே, எந்தக் காரணங்களினால் இவளுடைய மூத்த சகோதரர்கள் இறந்து விடுவார்கள் என்று சொன்னீர் என்று கேட்கவே, அத்திரி மஹரிஷி பதில் சொல்லுகிறார். கெடுதியை விளைவிக்கக்கூடிய புகர் என்ற சுக்கிரன் லாபம் என்ற பதினோராவது வீட்டில் இருக்கின்ற பலத்தால் இவ்விதமான பலனைச் சொன்னோம்.

ஜாதகியின் விவாக காலமும் புருஷனுடைய குணாதிசயங்களும்

13. மங்களம் பதின்மூன் றண்டில் மாதிரு வர்க்கந் தன்னில்
சங்கையில் லாமல் நேருஞ் சாற்றுவோம் வரன்குணத்தை
துங்கமாம் மனத்த னுவன் துறவோர்கள் பத்தி பூண்பன்
பொங்கிய குடும்ப மாவன் பூவையும் பேரன் பின்பு.

13. ஜாதகிக்குப் பதின்மூன்றுவது வயதில் தன்னுடைய தாயாருடைய பந்துவர்க்கத்திலிருந்து புருஷன் சந்தேகமில்லாமல் வந்து நேருவார். இவருடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் மேன்மையானதும் உயர்ந்ததுமான மனத்தை உடையவர் ஆவர். இவர் உலகப்பற்றைத் துறந்துவிட்டவர்களிடத்தும் பரதேசிகளிடத்தும் அன்பும் ஆசையும் உடையவர் ஆவர். இவர் பெருமை வாய்ந்த ஒரு சிறந்த குடும்பத்தை உடையவர் ஆவர். இவர் தன்னுடைய பிற்காலத்தில் இலட்சுமியின் பேரப்பிள்ளையைப் போல. செல்வம் உடையவராக இருப்பார்.

14. அரசர்பா லதிகா ரங்க ளவனுமே பெற்று வாழ்வன்
உரன்முறை மதிக்க உய்வ னுத்தமர் பூசை பூண்பன்
திருநிலாக் குணத்தா னுவன் சிவந்தமெய் யுணச்சல் நீட்சி
பொருளது பெருக்கஞ் செய்வன் புகழது மேற்பா னுவன்.

14. ஜாதகியின் புருஷன் அரசனிடத்தில் அதிகாரங்களை அடைந்து வாழ்பவர் ஆவர். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார், பெரியோர்களிடத்தில் அன்புடனும் ஆசையுடனும் இருப்பார். இவர் கெடுதியான குணங்களை உடையவர் அல்லர். இவர் சிவப்பாகவும் நீண்டும் ஒல்லியாகவுமிருக்கின்ற தேகத்தை உடையவர் ஆவர். இவர் தனத்தை அதிகமாகச் சம்பாதிப்பார், கீர்த்தியையும் பெருமையையும் அடைபவர் ஆவர்.

15. பந்துவை யாத ரிப்பன் பாவைசொல் கடவா னுவன்
வந்தவர்க் கன்ன மீவ னரசர்க்கு விவன்சொல் மேன்மை
சிந்தையில் நல்ல னுவன் தேவதா தலங்கள் செல்வன்
கந்தனே யீன்ற மாதே கழறின மொழி குன்றுவே.

15. ஜாதகியின் புருஷன் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்று வார், தன்னுடைய மனைவியின் வார்த்தையைமீறி நடக்கமாட்டார். இவர் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாட்டைக் கொடுப்பார். இவருடைய வார்த்தைகள் அரசர்களிடத்தில் மேன்மையை உடைய னவாக இருக்கும். இவருடைய எண்ணங்கள் நல்லவையாக இருக்கும். இவர் தெய்வ ஸ்தலங்களுக்குப் போவார். முருகக்கடவுளே பெற் றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகியின் சந்ததிகள் (புத்திர பாவம்)

16. புத்திர விருத்தி தன்னைப்
புகலுவோம் நவமே தோன்றுஞ்
சித்தமா யாண்பால் மூன்று
செல்விமா ரவ்வார் தீர்க்கம்
எத்தகைப் பலத்தி னுலே
யியம்புவீ ரந்தச் சங்கை
சுத்தமாய்க் குருவு மேழில்
தோன்றின பலத்தால் சொன்னேம்.

16. ஜாதகியினுடைய சந்ததிகளைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவளுக்கு மொத்தத்தில் ஒன்பது குழந்தைகள் பிறப்பார்கள். மூன்று ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவ்விதமாக அத்திரிமகரிஷி சொல்லவே, இவரைப் பார்த்து, நீர் எந்தக் காரணங்களினால் இவ்வித மாகப் பலன்களைச் சொன்னீர் என்று கேட்கவே, இவர் பதில் சொல்லு கிறார். குற்றமில்லாமல் குரு ஏழாவது வீட்டில் இருக்கின்ற பலத் தினால் இவ்விதமான பலனைச் சொன்னேம்.

ஜாதகியினுடைய முன் ஜன்மம்

17. சேதமா மூன்று வென்றீர் செப்புவீ ரந்தச் சங்கை
ஓதுவேன் விபரந் தன்னை யொன்பது ஐந்து மூன்றும்
பாதக நஷ்ட மெய்தும் பாவையின் பூர்வஞ் சொல்வேன்
சூதிலா பட்சி தன்னில் தோன்றினாள் வடுகச் சேயாய்.

17. ஜாதகியினுடைய மூன்று குழந்தைகளும் இறந்துவிடுவார் கள் என்று சொன்னீரே இதன் விபரத்தைச் சொல்லுவீர் என்று

அத்திரிமகரிஷியைக் கேட்க, இவர் பதில் சொல்லுகின்றார். இதற்கு நான் விபரத்தைச் சொல்லுகின்றேன் என்று அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். மூன்றுவது ஐந்தாவது ஒன்பதாவது குழந்தைகள் இறந்து போய்விடுவார்கள் என்கிறேன். இனிமேல் ஜாதகியினுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். சிறந்த பட்சிஸ்தலமாகிய திருக்கழுக்குன்ற க்ஷேத்திரத்தில் தெலுங்கருடைய குலத்தில் ஜாதகி தன்னுடைய முன் ஜன்மத்தில் பெண்குழந்தையாகப் பிறந்தாள்.

ஜாதகியினுடைய யோகங்கள்

18. சுகமுள குடும்பி யாகிச் சுதர்களு மதிக முண்டாய்
இகபரன் பத்தி யாகி யேகினுள் காலந் நாடு
ஜகபதி வரையப் பட்டு ஜனிப்பளா மிந்த மாது
தகமையா யவளின் யோகஞ் சாற்றுவோந் தாயே கேளும்.

18, ஜாதகி தன்னுடைய முன்ஜன்மத்தில் சௌக்கியமான குடும்பத்தை உடையவளாகியும் அதிகமான சந்ததிகளை உடையவளாகியும் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவர்களாகியும் இருந்து பிறகு இறந்து எமப்பட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருப்பவள் ஆவள். இவளுடைய யோகங்களைப்பற்றித் தகுந்தவிதமாக நாங்கள் சொல்லுகின்றோம், எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

19. எப்போதும் வறுமை காணு ளேவலா ளுடைய ளாகும்
தப்பித மொருவர்க் கெண்ணுள் சகலபாக் கியமு மேற்பள்
மெய்ப்புட னறத்தி லிச்சை விளம்புவோம் பாவைக்
[கேதான்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழி குன்றுவே.

19. ஜாதகி எந்தக் காலத்திலும் தரித்திரங்களையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். இவள் வேலையாட்களை உடையவளாக இருப்பாள். இவள் யாருக்கும் கெடுதியை நினைக்கமாட்டாள். இவள் சகலவித செல்வங்களையும் சம்பத்துக்களையும் உடையவள் ஆவள். இவள் உண்மையில் தர்ம காரியங்களைச் செய்வதில் பிரியமுள்ளவள் என்று சொல்லுகின்றோம். நாகப்பாம்பை தன்னுடைய ஜடையில் தரித்துக்கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய மனோவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலா பலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகியின் தாயாருடைய குணநிசயங்கள்

20. மாதிரு குணத்தைச் சொல்வேன்
வருவோரை யாத ரிப்பள்
சூதிலாள் பொறுமை சாலி
சொல்லது சுகமே யாகும்
வேதனை யொருவர்க் கெண்ணுள்
வீண்பழி யேற்கா ளாவள்
ஓதுமுன் கோபங் கொஞ்ச
முயர்வான புத்தியு முண்டு.

20, ஜாதகியின் தாயாருடைய குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவள் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை உடையவள் அல்லள், சாந்தமான குணத்தை உடையவளாக இருப்பாள். இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் யாருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டாள், வீணான அபவாதங்களையும் நிந்தனைகளையும் அடையமாட்டாள். இவள் பேசுவதற்கு முன்னமே சிறிது கோபத்தை உடையவளாக இருப்பாள். இவள் சிறந்ததாகவும் மேன்மையாகவும் உள்ள புத்தியை உடையவளாக இருப்பாள்.

ஜாதகியின் தாயாருடைய சதோதரங்களும் (சகோதர பாவமும்)
தாயாரின் முன் ஜன்மமும்

21. தன்துணை யாண்பால் மூன்று சத்தியு மொன்றே தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பித்தனே கத்தா ளாவள்
அன்னவள் பூர்வஞ் சொல்வே னப்புவின் தலத்தி
[லேதான்
முன்குலந் தனிலு தித்து வுயர்வான குடும் பியாகி ;

21. ஜாதகியின் தாயாருக்கு மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் மாண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள், மற்ற சகோதரர்கள் எல்லாம் இறந்து போய்விடுவார்கள். இவள் பித்தமான தேகத்தை உடையவள் ஆவள். இவளுடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் அப்புஸ்தலம் என்ற திருவானைக்காவல் க்ஷேத்திரத்தில் முன்குலம் என்ற பிராமணர் ஜாதியில் பெண் குழந்தையாகப் பிறந்து மேன்மையான குடும்பினியாகி ;

22. காலன்தன் நாட டைந்து கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமில் லாத கங்கை குலமதி லுதித்தா ளென்றோம்
சாலவே பராசர் சொல்வார் சதுர்மறை குலத்தில்
[வந்தோள்
நீலியுங் குலந்தாழ்வாக நேர்ந்தகா ரணங்க ளென்ன.

22. ஜாதகியின் தாயார் இறந்து எமனுடைய பட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டுச் சுத்தமில்லாத ஒரு கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் பெண் குழந்தையாக இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக அத்திரிமகரிஷி சொல்லவே, பராசரமகரிஷி தடுத்துக் கேட்கின்றார். நான்கு வேதங்களையறிந்தவர்களுடைய குலமாகிய பிராமணர் குலத்தில் முன்ஜன்மத்தில் பிறந்த இவள் இந்தஜன்மத்தில் அதனைவிடத் தாழ்ந்த குலமாகிய வேளாளர் குலத்தில் பிறந்ததற்குக் காரணங்கள் என்ன என்று கேட்டார். இதற்கு அத்திரிமகரிஷி பதில் சொல்லுகிறார்.

ஜாதகியினுடைய மறுஜன்மம்

23. முன்ஜன்மம் விரதந் தன்னை
முட்டுக்கள் செய்த தொன்று
தன்வரன் சொல்ல டுத்துச்
சத்தியும் வாழ்ந்த தாலே
கன்னிகை யுதித்தா ளென்றோங்
கழறுவோ மிவள்பின் ஜன்மம்
அந்தகர் தன்னி லேதான்
அருளுவாள் வைசியச் சேயாய்.

23. ஜாதகி தன்னுடைய முன்ஜன்மத்தில் விரதங்களைச் சரியாக அனுஷ்டிக்காமல் விரத பங்கங்களைச் செய்தாள். இஃது ஒரு தோஷமாயிற்று. இவள் தன்னுடைய புருஷனுடைய வார்த்தைகளின் பிரகாரம் நடந்து கொண்டு இருக்காமல் விரோதமாக நடந்து கொண்டு வாழ்ந்தது மற்றொரு தோஷமாகும். இவ்வித தோஷங்களால் இந்த ஜன்மத்தில் தாழ்ந்த குலத்தில் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் அதே பட்டணத்தில் அஃதாவது திருவானைக்காவல் என்னும் க்ஷேத்திரத்தில் வைசியருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள்.

ஜாதகியின் தாயாருடைய மரணகாலமும் மறுஜன்மமும்

24. ஆறஞ்சு வாண்டு தன்னி
லறைகுறை மன்னை கண்டங்
கூறுவோ மிவள்பின் ஜன்மங்
குற்றல நாட்டி லேதான்
தீறமாய்ப் பிரம்ம சேயாய்
ஜனிப்பளா மென்று சொன்னே
மிவளுமிச் சென்மந் தன்னில்
செய்தப்புண் ணியங்க ளென்ன,

24. ஜாதகிக்கு முப்பதாவது வயதில் இவளுடைய தாயாருக்கு மரணம் நேரிடும். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் குற்றால க்ஷேத்திரத்தில் வலிவான குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லவே, இவள் இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணிய காரியங்களைச் செய்திருக்கின்றாள் என்று இம்முனிவரைப் பார்த்துக்கேட்டார்.

25. அறமதி லிச்சை யாயு மாபத்தைச் சிலர்க்குக் காத்தும்
பெரியவ ரிஷ்ட மாயும் பூமியில் வாழ்வ தாலே
திருமாலின் பத்தி யாயுஞ் சொல்லதைக் காத்த லாலும்
மறைக்குல முதிப்பா ளாவள் மங்கையே கேட்டி டாயே.

25. ஜாதகியினுடைய தாயார் தர்மத்தில் அன்புடையவளாகியும் சிலரைத் தங்களுடைய ஆபத்தான கஷ்ட காலங்களில் காப்பாற்றிக் கொண்டும் பெரியாரிட்டத்தில் பிரியமாய் இருந்து கொண்டும் பூமியில் இச்சென்மத்தில் வாழ்ந்து கொண்டு இருப்பதாலும் மகாவிஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையும் உடையவள் ஆகி இருப்பதாலும் இவள் தன்னுடைய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றிக் கொண்டு வருவதாலும் இவள் தன்னுடைய பின்ஜன்மத்தில் பிராமணருடைய குலத்தில் பிறப்பவள் ஆவள், பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகியின் தகப்பனருடைய மரணமும் புருஷனுடைய மரணமும் ஜாதகியின் மரணமும்

26. முப்பது நாலு வாண்டில்
விளம்புவோர் தந்தை கண்டஞ்
செப்புவோ மன்பா லுலில்
செல்வியின் வரனின் கண்டம்
ஒப்புடன் வித்த கிக்கு
யுறைகிறே மறுப தாண்டில்
மெய்ப்புடன் மாசி மாதம்
விளம்புவோம் மார கங்கள்.

26. ஜாதகிக்கு முப்பத்துநான்காவது வயதில் இவளுடைய தகப்பனார் இறந்து விடுவார். இவளுக்கு ஐம்பத்துநான்காவது வயதில் இவளுடைய புருஷன் இறந்து விடுவார் என்று சொல்லுகின்றோம். இவளுடைய மரண காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் தன்னுடைய அறுபதாவது வயதில் மாசி மாதத்தில் உண்மையாக இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றோம்.

27. மறித்துமே பராசர் சொல்வார்
மன்னனுக் காறில் திங்கள்
இருப்பதால் சகடை தோஷ
மெப்படித் தீர்க்கஞ் சொன்னீர்
பிறையுமே கடகந் தங்கப்
பேசொணு கண்டந் தானுந்
திருமகள் தீர்க்க ஜீவி
செப்பின மொழி குன்றுவே.

27. இவ்விதமாக அத்திரிமகரிஷி சொல்லவே, பராசரமகரிஷி யானவர் தடுத்துக் கேட்கின்றார். மன்னன் என்ற குருவிற்கு ஆறு வது பாவத்தில் திங்கள் என்ற சந்திரன் இருப்பதால் சகடை யோகம் என்ற ஒரு தோஷம் ஏற்பட்டிருப்பதால் ஜாதகிக்கு எவ்விதமாக நீண்ட ஆயுள் உண்டு என்று சொன்னீர் என்று அத்திரியைப் பார்த்துக் கேட்கவே, அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். பிறை என்ற சந்திரன் கடக ராசியில் இருப்பதால் ஜாதகிக்கு இஃது இடையில் மர ணத்தைச் சொல்லக்கூடாது. இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன் கள் தவறிடாமல் நடக்கும்.

குறிப்பு :—குருவிற்கு ஆறு எட்டு பன்னிரண்டில் சந்திரன் இருந் தால் சகடயோகம் என்ற ஒருவித கெட்ட யோகம் உண்டாகின்றது என்று தமிழ் ஜாதகாலங்காரத்தின் இருநூற்றுபத்துமூன்றுவது பாடலிலும், பலதீபிகை ஆறுவது அத்தியாயம் பத்தாவது பாடலிலும், ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றெட்டாவது சுலோகத் திலும் கண்டிருப்பதை ஞாபிக்கவும். மேலும் இந்த ஜாதகத்தில் ஜன்ம லக்கினத்திற்கு ஏழாவது பாவமாகியகேந்திர ஸ்தானத்தில் குரு இருப்ப தால் சகடயோகபங்கம் ஏற்பட்டுஇருக்கிறது. மேலும் சந்திரன் கடக ராசியில் இருப்பதாக இந்தப்பாடலில் சொல்லியிருக்கின்றது. சந்திரன் கடகராசியில் இருந்தால் சகடயோக பங்கம் ஏற்படுகிறதென்று கீழ்க் குறித்துள்ள பாடலினால் புலப்படும் :—

"நன்று[1]கற் கடகத் திலேயும் நன்னிய [2]விடையி லேயும்
[3]தண்டு [4]வில் மீனம் கன்னி தன்னி[5]லம் புலியே நிற்க
[6]அண்டருக் கதிபன் [7]பொன்னுக் காறெட்டு பன்னி ரண்டில்
பண்டுசொல் சகட தோஷம் பாபமே யில்லை கண்டாய்."

---

1. கடகம்
2. ரிஷபம்
3. மிதுனம்
4. தனுசு
5. சந்திரன்
6. சந்திரன்
7. குரு

ஜாதகியினுடைய பின்ஜன்மம்

28. மறுஜன்மங் காஞ்சி தன்னில்
வருவளாஞ் சௌராஷ்டர வம்சம்
பொருளது பெருக்க முண்டாய்ப்
புகழான குடும்பி யாவள்
திருமகள் ஜனன காலம்
பூசனுள் கடைப்பா தத்தில்
கரியவன் தசை யிருப்புக்
கழறுவோம் திங்க ளொன்று ;

28. ஜாதகி தன்னுடைய பின்ஜன்மத்தில் காஞ்சிவரத்தில் சௌராஷ்டிர குலம் என்ற பட்டுநூல்காரர் ஜாதியில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். இவள் அதிக செல்வத்தை உடையவளாகி யும் மேன்மையையும் கீர்த்தியையும் உடைய ஒரு குடும்பினியாகியும் இருப்பாள். இவள் பிறந்த காலத்தில் ஜன்ம நட்சத்திரம் பூசத்தின் நான்காவது பாதம் ஆகும். இதற்குரிய கரியவன் என்ற சனிமகாதசை இருப்பைச் சொல்லுகின்றோம். மாதம் ஒன்றும் ;

29. தினமது பதினேந் தாகுஞ் செப்புவோ மதன்மே லாகக்
கனமுள புந்தி காலங் கழறுவோந் தாயே யாங்கள்
தினமிலாப் பூர்வ பாகஞ் செப்பினேந் தாயே யாங்கள்
அனையவே பின்பா கத்தி லறிவிப்போம் விவர மாக.

29. தினங்கள் பதினேந்தும் ஆகும். இதற்குமேல் சிறந்த புத மகாதசை நடக்கும் என்று நாங்கள் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே ! இவ்விதமாகப் பூர்வ பாகத்தைக் குற்ற மில்லாமல் நாங்கள் சொல்லி முடித்து விட்டோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே ! அடுத்து வருகின்ற பின்பாகத்தில் பலாபலன்களை விபரமாகச் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 112

ஜனனகால கிரகநிலை

1. [1]பிறை[2]புகர் கடக மாகப் [3]பூமகன் [4]பணியுங் கன்னி [5]கரியவன் [6]மான தாகக் [7]கனகனுங் கேதுங் [8]கெண்டை [9]பரிதியும் புதனும் [10]நந்தி பரவியே சிங்கஞ் ஜன்மம் உரைகுவீர் பலனை யென்று வுத்தமி கேட்கும் போது ;

1. சந்திரனும் சுக்கிரனும் கடகத்திலும், அங்காரகனும் இராகுவும் கன்னியிலும், சனி மகரத்திலும், குருவும் கேதுவும் மீனத்திலும், சூரியனும் புதனும் ரிஷபத்திலும் இருந்து ஜன்மலக்கினம் சிம்மமானால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்போது ;

கிரகநிலை

குரு கேது		சூரியன் புதன்	
	இராசி சக்கரம்		சந்திரன் சுக்கிரன்
சனி			லக்கினம்
			அங்காரகன் ராகு

பூசம் 4-ஆம் பாதம் : சனிதசை வரு 3-7-0.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் புதனும், ரிஷபத்திற் சூரியனும் அங்காரகனும் சனியும், கடகத்திற் குருவும் சுக்கிரனும் இராகுவும், விருச்சிகத்திற் சந்திரனும், மகரத்திற் கேதுவும் ஆகும். சனி வக்கிரகதியில் இருக்கின்றார். புதன் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்.

---

1. சந்திரன்
2. சுக்கிரன்
3. அங்காரகன்
4. இராகு
5. சனி
6. மகரம்
7. குரு
8. மீனம்
9. சூரியன்
10. ரிஷபம்

ஜனனமான நகரச் சிறப்பு

2. குறுமுனி புகலு கின்றார் குறித்தது பெண்பால் ஜன்மம்
வருமில்லம் வடதென் வீதி வாசலுங் கீழ்ப்பால் நோக்கம்
நரிவா கனத்தாள் தென்கீழ் நமன்தனை வுதைத்தோன்
[மீனந்
திருமாலின் கோஷ்டம் வாயு செப்பிய பேரூ ராகும்.

2. குறுமுனி என்ற அகஸ்தியமகரிஷியானவர் சொல்லுகின்றார். இங்கு குறித்த குழந்தை பெண் குழந்தை யாகும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் கிழக்குப் பார்த்த வாயிற்காலை உடையதாக விருக்கும். புலி வாகனத்தையுடைய காளியம்மன் கோயில் தென்கிழக்குத் திக்கிலும் எமனை உதைத்தவராகிய பரமசிவனுடைய கோயில் வடக்கிலும், மகாவிஷ்ணுவினுடைய கோயில் வடமேற்குத் திக்கிலும் இருக்கும். இங்கு சொல்லப்பட்ட கிராமம் ஒரு பெரிய கிராமம் ஆகும்.

3. இத்தகை யடையா ளத்து ளிம்மாது மூன்றாஞ் ஜன்மஞ்
சுத்தமில் லாத கங்கை குலமதில் தோன்று மென்றோம்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
வித்தகி வரனின் யோகம் விளம்புவோ முன்பின்
[ஜன்மம்.

3. இவ்விதமான அடையாளங்களை உடைய விடத்தில் இந்த ஜாதகி மூன்றாவது பிறவியாக ஒரு பரிசுத்த மில்லாத கங்கை குலம் என்ற வேளாளர் ஜாதியில் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம். இவளைப் பெற்ற தாயார் தகப்பனார் ஆகிய இவர்களுடைய யோகங் களையும், ஆண் குழந்தை பெண் குழந்தை ஆகிய இவர்களுடைய யோகங்களையும், இவளுடைய யோகத்தையும், இவளது புருஷனுடைய யோகத்தையும், முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையுஞ் சொல்லுகின்றோம்.

ஜாதகியின் தகப்பனாருடைய குணாதிசயங்கள்

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன்
சரசமாய் வார்த்தை யுண்டு
தந்தமுந் தரள மொக்குஞ்
சகலர்க்கு நல்லோ னவன்
தன்தனம் பின்னல் சேர்ப்பன்
சமகல்வி பொறுமை சாலி
தன்பந்துக் கிணக்கஞ் சொல்லான்
சாரூள்போ லுய்வா னவன்.

4. ஜாதகியின் தகப்பனுருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் நன்மையாகவும் இனிப்பாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். இவருடைய பற்களும் முத்தைப்போல விருக்கும். இவர் எல்லோருக்கும் நல்லவராக விருப்பார். இவர் தன் சொந்த பணத்தைப் பின்னல் சேர்த்து வைப்பார், நடுத்தரமான வித்தையை யுடையவராவர், சாந்தமான குணத்தை யுடையவராவர். இவர் தன்னுடைய பந்துக்களுக்கு இணங்கிச் சொல்லமாட்டார், விவசாயியைப்போல விருந்து ஜீவிப்பவராவர்.

5. சகடுநாள் தனுசு ராசி ஐனிப்பனு மூகை சாலி
அகமது செய்வா னவ னறிவுளான் வணிபஞ் செய்வன்
இகபரன் பத்தி பூண்ப னிடர்செய்யான் யாவ ருக்கும்
மிகுதவத் தோர்கள் நேயன் விசனங்கள் பூர்வ மாகும்.

5. ஜாதகியின் தகப்பனுர் உரோகிணி நட்சத்திரத்தில் தனுர் ராசியில் பிறந்தவராகி இருப்பார். இவர் விவேகம் உள்ளவர். இவர் வீட்டைக் கட்டுவார், இவர் அறிவுள்ளவராக இருப்பார், வியாபாரங்களைச் செய்வார். இவர் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவர். இவர் யாருக்கும் கெடுதிகளைச் செய்யமாட்டார். இவர் அதிகமாகத் தவங்களைச் செய்கின்றவர்களிடத்தில் பிரியமாக இருப்பார். தன்னுடைய வாழ்நாளின் முதற்பாகத்தில் துன்பங்களை அடைபவராக இருப்பார்.

ஜாதகியின் தகப்பனுருடைய முன்ஜன்மம்

6. தன்துணை யாண்பால் நான்கு சத்திமார் மூவ ராவர்
நொந்திடு மற்ற வெல்லாம் நுகர்ந்தனை வேரூய்ச்
[செல்வான்
வந்தவர்க் கன்ன மீவன் வாக்குச்சொல் காப்பா னவன்
இந்தவன் பூர்வந் தன்னை யியம்புவோ மினிமே லாக.

6. ஜாதகியின் தகப்பனுருடன் கூடப்பிறந்தவர்கள் நான்கு சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் ஆவார். மற்றச் சகோதரர்கள் எல்லாம் இறந்தும் விடுவார்கள். இவருடைய சகோதரர்கள் இவரை விட்டுப் பிரிந்து வேறு குடும்பஸ்தர்களாகப் போய் விடுவார்கள். இவர் தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவார், தன்னுடைய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். இனிமேல் இவருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

7. சேரநாட தனி லேதான் ஜனித்தனன் செக்கான் வம்சம்
பாரியு மதலை வுண்டாய்ப் பலவணி பங்கள் செய்து
தேரினோர்க் கன்ன மீந்து செங்கண்மால் பத்தி பூண்டு
மாரணும் வினையில் லாமல் மறைந்தனன் காலந் நாடு.

7. ஜாதகியின் தகப்பனார் சேர தேசத்தில் செக்காடுகின்ற செட்டியார் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்தார். இவர் மனைவி மக்களை உடையவராகி அனேகவிதமான வியாபாரங்களைச் செய்து கொண்டும் பெரியார்களுக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டும் மகாவிஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகி இருந்தும், யாதொரு பாபத்தையும் அடையாமல் இருந்தும் பிறகு இறந்து எம்ப் பட்டணத்திற்குப் போய் ;

8. புங்கவன் வரையப் பட்டுப்
பிறந்தன னென்று சொல்வோம்
இங்கிவன் தனக்குப் பாவை
யெய்துவா ளென்று சொன்னேம்
நங்கையின் குணத்தைச் சொல்வேன்
நயம்படக் கூறு வாளாம்
பங்கய முகத்தா ளாவள்
பதர்குண மில்லா ளென்றோம்.

8. பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவ்விதமான குணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகி வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். இனிமேல் இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் நயமாகவும் இனிமையாகவும் பேசுபவள் ஆவள். இவள் தாமரைப்புஷ்பத்தைப் போன்ற அழகான முகத்தை உடையவள் ஆவள், அவசரமானதும் இழிவானதுமான குணங்களை உடையவள் அல்லளென்று சொல்லுகின்றோம்.

9. புத்திமான் கல்வி கற்பள்
புருடன்தன் மனத்துக் கேத்தோள்
பத்திமா னவர்க்கு வன்னம்
படைப்பளாம் வறுமை காணள்
சுத்தத்தார் மதிக்க வாழ்வள்
சுதந்தர முடைய ளாவள்
நத்தினோர்க் குதவி செய்வள்
நற்பணி யதிகஞ் சேர்ப்பள்.

9. ஜாதகி அறிவுடையவள் ஆவள், வித்தையைக் கற்றவளாக இருப்பாள். தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல் ஒற்றுமையாக இருப்பள். இவள் பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போடுபவள் ஆவள். தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டாள். தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான

அந்தஸ்திலிருந்து கொண்டு வாழ்வாள் இவள். இவள் அக்குபாத்தி யதைகளை உரிமைகளை உடையவளாக இருப்பாள். இவள் தன்னிடம் வந்தவர்களுக்கு உபகாரம் செய்வாள், நல்ல ஆபரணங்களை அதிக மாகச் சேர்த்து வைப்பாள்.

ஜாதகியின் சகோதரங்கள் (சகோதரபாவம்)

10. அன்னம்போல் சாய லுள்ளா
ளாசார மற்ப கோபி
மன்னவன் மனத்துக் கேத்தோ
ளடிசலுக் கினிய ளாவள்
கன்னிகை யோக சாலி
காலத்தை யறிந்து ரைப்பள்
தன்துணை முன்னல் நஷ்டங்
தங்கும்பின் வாண்பா லிரண்டு.

10. இவள் அன்னப்பட்சியைப் போன்ற அழகான உருவத்தை உடையவள் ஆவள். ஆசாரம் நல்லொழுக்கம் ஆகிய இவைகளை உடையவள் ஆவள். சிறிது கோபத்தை உடையவளாக இருப் பாள். இவள் தன்னுடைய புருஷனின் மனத்திற்குத் தகுந்தாற் போல் நடந்து கொள்ளுவாள், இனிமையாகச் சமையல் செய்வதில் சாமர்த்தியம் உடையவளாக இருப்பாள். இவள் யோகமுடையவளாக இருப்பாள், காலத்தின் போக்கை அறிந்து அதன் பிரகாரம் பேசு வாள். இவளுடைய சகோதரர்களில் இவளுக்கு முன்னே பிறந்தவர் கள் இறந்து விடுவார்கள். இவளுக்குப் பின்னல் பிறந்தவர்களில் இரண்டு இளைய சகோதரர்களும்;

ஜாதகியின் விவாககாலமும் புருஷனுடைய குணதிசயங்களும்

11. மங்கைமார் பூவ ராவர்
மற்றவை யிரண்டு சேதஞ்
சங்கையா மனத்த ளாவள்
சாதிப்பாள் சிலவே சங்கை
நங்கைக்குப் பதிஞ லாண்டில்
நல்கிடு மணமு மென்றோம்
அங்கவன் குணத்தைச் சொல்வே
னழகுளான் மாஞ்சி வப்பன்.

11. ஜாதகிக்கு மூன்று இளைய சகோதரிகளும் இருப்பார்கள். மற்ற இரண்டு சகோதரர்களும் இறந்துபோய் விடுவார்கள். இவள் அச்சமும் சந்தேகமுமுள்ள மனத்தை உடையவளாக இருப்பாள். சில விஷயங்களில் தான்சொன்னதே சரியென்று வாதித்து நிலைநாட்டு

வாள். இவளுக்குப் பதினன்காவது வயதில் விவாகம் நடக்கும் என்று சொல்லுகின்றோம். இவளுடைய புருஷனது குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சௌந்தரியமாக இருப்பார். மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவராக இருப்பார்.

12. இருவிதக் கல்வி கற்ப னிராசரால் தொழிலு மேற்பன்
பெருமையும் புகழு மேற்பன் புண்ணிய மனத்த னுவன்
அரிபோலே கோபங் கொஞ்ச மடாவடி செல்லா னுவன்
நரைமல ரிஷ்டங் கொள்வன் நல்லோர்க்கு நல்லோ
[னுவன்.

12. ஜாதகியின் புருஷன் இரண்டு விதமான வித்தைகளைக் கற்றவராக இருப்பார். இவர் இராஜாங்கத்தில் தொழிலை உடையவராக இருப்பார். இவர் கீர்த்தியையும் மேன்மையையும் அடைவார். இவர் நல்ல மனத்தை உடையவராக இருப்பார். இவருக்குச் சிம்மத்திற்கு வருவதைப் போலச் சிறிது கோபம் வரும். அநியாயமானதும் மூரட்டுத்தனமானதுமான வழிகளில் நடந்து கொள்ளமாட்டார். இவர் வாசனையையுடைய புஷ்பங்களின்மேல் பிரியமுள்ளவர், நல்லவர்களுக்கு நல்லவிதமாகவே நடந்து கொள்ளுவார்.

13. அதிகாரத் தொழிலுஞ் செய்வ னற்புத வார்த்தை யுண்டு
பதியது சித்திரஞ் செய்வன் பாக்கியஞ் சேர்ப்பா னுவன்
துதிசெய்தோர்க் குதவு வானுந் தோகைசொல் கடவா
[னுவன்
நதிசேது செல்வா னுவன் நாயகன் வயது தீர்க்கம்.

13. ஜாதகியின் புருஷன் அதிகாரத்தையுடைய வேலையைச் செய்வார், ஆச்சரியமான வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். இவர் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட வீட்டைக் கட்டுவார், பணத்தைச் சம்பாதித்து சேர்த்து வைப்பார். இவர் தன்னைப் போற்றினவர்களுக்கு உபகாரம் செய்பவர் ஆவர், தன்னுடைய மனைவியின் வார்த்தையைக் கடந்து நடந்து கொள்ளமாட்டார். இவர் சேது ஸ்தலத்திற்கும் புண்ணியநதி தீர்த்தங்களுக்கும் போகின்றவர் ஆவார். இவர் நீண்ட ஆயுளை உடையவர் ஆவார்.

ஜாதகியின் புருஷனுடைய யோக பாவமும் சந்ததிகளும் (புத்திரபாவமும்)

14. வரனுக்கு யோக மெவ்வாறு
வருவித்தீர் விபரஞ் சொல்வாய்
கருபாம்பு சேயு மிரண்டில்
கலுகுரு சனியு மாட்சி

இருப்பதால் யோகஞ் சொன்னே
மிம்மாது வந்த பின்பு
பிறைபோல யோகம் வாய்க்கும்
புகலுவோம் புத்திர பாவம்.

14. ஜாதகியினுடைய புருஷனுக்கு எந்தக் காரணங்களினால் யோகத்தைச் சொன்னீர்? அதை விபரமாகச் சொல்வீர் என்று அகஸ்திய மகரிஷியைக் கேட்கவே, இவர் பதில் சொல்லுகின்றார். கரும் பாம்பு என்ற இராகுவும் சேய் என்ற அங்காரகனும் இரண்டாவது வீட்டில் இருப்பதாலும் கலை என்ற சந்திரனும் குருவும் சனியும் ஆட்சியாக இருப்பதாலும் யோகத்தைச் சொன்னேம். ஜாதகி தன்னுடைய புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு இவளுடைய புருஷனுக்கு யோகம் வளர்பிறைச் சந்திரனைப்போல நாளுக்குநாள் விருத்தியாகும். இவர்களுடைய சந்ததிகளைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

15. சுதர்களு மிருநான் காகத்
தோன்றுவர் சிலரே சேதஞ்
சதமுடன் வாண்பால் மூன்று
தையலு மிருவ ரென்றோம்
பதராகு மொன்று நாலு
மெட்டுமே யென்று சொன்னேம்
அதிதியை யாத ரிக்கு
மம்பிகை யாளே கேளாய்.

15. ஜாதகிக்கு மொத்தம் எட்டு குழந்தைகள் பிறப்பார்கள். இவைகளில் சில குழந்தைகள் இறந்து விடுவார்கள். மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் கிலேத்திருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். முதலாவது நான்காவது எட்டாவது குழந்தைகள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகியினுடைய முன்ஜன்மம்

16. ஜாதகி முன்ஜன் மத்தைச்
சாற்றுவோங் கொச்சி தன்னில்
சூதான வைசியச் சேயாய்
ஜனித்துமே சுகமாய் வாழ்ந்து
வேதனை மனமில் லாமல்
வீண்பழி யில்லா ளாகித்
தீதான காலங் நாடு
சென்றுமே பிரமன் லக்கம்;

16. ஜாதகியினுடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் கொச்சி தேசத்தில் வைசியருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து சௌக்கியத்துடன் வாழ்ந்து கொண்டு யாதொரு கஷ்டங்கள் இல்லாமலும் வீணன அபவாதத்தையும் நிந்தனையையும் அடையாமலும் வாழ்ந்து பிறகு கெடுதியான எமபட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு;

17. உதிப்பளா மிந்த மாது வுரைகிறோ மிவளின் யோகஞ்
சதியிலா மனத்த ளாவள் சாதமுங் குறைவு றாதாள்
நிதிமிக வுடைய ளாவள் நேர்ந்திடும் பித்தச் சூடு
துதிசெய்தோர்க் குதவு வாளாந் தொல்புவி வறுமை
[காணுள்.

17. ஜாதகி இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய யோகங்களைப்பற்றி இனி மேல் சொல்லுகின்றோம். இவள் கெடுதியில்லாத மனத்தை உடையவள் ஆவள். இவள் சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டங்களை அடையமாட்டாள். இவள் அதிகமான தனத்தை உடையவளாக இருப்பாள். இவளுக்குப் பித்தச்சூட்டு ரோகம் ஏற்படும். இவள் தன்னைப் போற்றினவர்களுக்கு உபகாரம் செய்பவள் ஆவள். இவள் இந்த பழமையான பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டாள்.

18. இருநான்கு வாண்டு மேலா
யிவளுடைத் தந்தைக் கேதான்
பெருகிடும் வணிபஞ் சொந்தம்
பெரும்பொருள் சேர்ப்பா ளவன்
தரைசேர்க்கை யில்லஞ் சேரல்
சஞ்சலம் நிவர்த்தி யாகும்
பிறைபோலே யோக மென்றோம்
புண்ணிய வதியே கேளாய்.

18. ஜாதகியினுடைய தகப்பனருக்கு இவளுக்கு எட்டு வயதிற்குப் பிறகு வியாபாரங்கள் சொந்தமாக ஏற்பட்டு விருத்தியடையும். அதிகமான தனத்தைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவருக்கு நிலங்களும் மனைகளும் வந்து சேரும். இவருடைய வருத்தங்களும் கஷ்டங்களும் விலகிப்போய்விடும். இவருக்கு யோகம் வளர் பிறைச் சந்திரன் நாளுக்குநாள் வளர்கின்றதைப்போல ஓங்கி வளரும் என்று சொல்லுகின்றோம். புண்ணியசாலியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகியின் தாயாருடைய குணநிசயங்கள்

19. இன்னமுஞ் சிலவே சங்கை யியம்புவோம் பின்பா கத்தில்
அன்னையின் சேதி சொல்வே னற்பமாங் கோப மேற்பள்
பன்னியே பேசு வாளாம் பர்த்தாவுக் கினிய ளாவள்
கன்னென மொழியைச் சொல்வள் கண்முகம் வசிய
[முண்டு.

19. இன்னும் சில விஷயங்களைப்பற்றிப் பின்பாகத்திற் சொல்லுகின்றேம். இனிமேல் ஜாதகியினுடைய தாயாரின் விஷயங்களைச் சொல்லுகின்றேன். இவளது தாயார் கொஞ்சங் கோபத்தையுடையவளாவள். இவள் விமரிசையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுகின்றவளாவள், தன்னுடைய புருஷனுக்குப் பிரியமானவளாகவிருப்பாள், இவளும் தன்னுடைய புருஷனிடத்தில் அன்புள்ளவளாக விருப்பாள். இவள் சர்க்கரையைப்போன்ற இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவளுடைய கண்களும் முகமும் பிறரைக் கவரும் படியாக அழகாய் இருக்கும்.

20. தோகைபோல் நிறத்த ளாவள் சொல்லது சுருக்க மாகும்
நாகரி கங்க ளுண்டு நலிந்தோர்க்குத் தாக மீவள்
போகபாக் கியங்கள் பின்னுல் பெருவளாம் பித்தத் தேகி
ஊகையாள் நுணுக்க புத்தி யுடையளா மென்று
[சொன்னேம்.

20. ஜாதகியினுடைய தாயார் மயிலைப்போன்ற ஒருவிதமான அழகான நிறங்களை உடையவளாவள். இவள் சுறுக்கமாகவும் கொஞ்சமாகவும் பேசுவாள். இவள் நாகரிகங்களை உடையவளாக விருப்பாள், ஏழைகளுக்கு நீர்மோர் கொடுப்பாள். இவள் தன்னுடைய வாழ்நாளின் பிற்காலத்தில் சகலவித போகங்களையும் செல்வத்தையும் அனுபவிப்பாள், இவள் பித்தச்சூடான தேகத்தை யுடையவளாவள். இவள் விவேகமுடையவளாவள், சூட்சுமமான புத்தியையுடையவளாவள் என்று சொல்லுகின்றேம்.

ஜாதகியின் தாயர்டைய சகோதரங்களும் (சகோதர பாவமும்)
மூன்ஜன்மமும்

21. தூணையா ண்பால் மூன்றே யாகுந்
தோகையு மொன்றே தீர்க்கம்
பிணையாகு மற்ற வெல்லாம்
பேசுவோ மிவள்முன் ஜன்மங்

கனமுள பேரூர் தன்னில்
கலந்தனள் வைசியச் சேயாய்
வினைமன மில்லா ளாகி
வித்தகி வாழும் நாளில்.

21. ஜாதகியின் தாயாருக்கு மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுள் உடையவர்களாக விருப்பார்கள். இதர சகோதரர்கள் எல்லரம் இறந்துவிடுவார்கள். இவளுடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்ரேம், இவள் மேன்மையான ஒரு பெரிய கிராமத்தில் வைசியருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள். இவள் யாதொரு பாவத்தையும் அடையாதவளாகவிருந்து வாழ்கின்ற காலத்தில் ;

22. இறப்பினில் கூடு கட்டி யிருக்கிற பட்சி தன்னைக்
குறிப்பாக வதனைக் கண்டு கூட்டையுங் கலைத்தா
[ளென்ரேங்
கருவுமே யுடைந்த தென்ரேங் கழரெணு வேறு குற்றம்
அறிவைக்கு வந்தந் தன்னி லவள்சுதர் மரண மாகி.

22. ஜாதகியின் தாயார் தன்னுடைய வீட்டின் இறவாணத்தில் கூட்டைக் கட்டிக்கொண்டிருந்த ஒரு பட்சியைக் குறிப்புடன் கவனித்து அந்தக் கூட்டைக் கலைத்துவிட்டாள் என்று சொல்லுகின்ரேம். இவ்விதமாகச் செய்யவே பட்சியின் முட்டைகளிலிருந்து கருக்கள் கெட்டுப்போய்விட்டன என்று சொல்லுகின்ரேம். இந்தத் தோஷந்தவிர வேரெரு தோஷத்தையுஞ் சொல்லக்கூடாது. இவளுக்குத் தன்னுடைய முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் தன்னுடைய சந்ததிகள் இறந்து ;

23. சஞ்சல மனத்த ளாகிச் சண்டன்தன் பதிக்குச் சென்று
கஞ்சத்தில் லுதித்தோன் லக்கங் கலந்தன ளிக்கு லத்தில்
வஞ்சிக்குப் பூர்வ தோஷம் மைந்தர்கள் முதலில் கஷ்டம்
தஞ்சமாய்ப் பூர்வ யில்லஞ் சாராது வென்று சொல்வோம்.

23. ஜாதகியினுடைய தாயார் துன்பமான மனத்தையுடைய வளாகி இறந்து எமபட்டணத்திற்குப் போய்த் தாமரையில் உதித்த வராகிய பிரம்தேவனிடம் சென்று பிறகு இந்த ஜன்மத்தில் இந்தக் குலத்தில் வந்து பிறந்திருக்கின்ரூள், இவளுக்குத் தன்னுடைய முன் ஜன்மத்திய தோஷத்தினுல் முதலில் பிறக்குங் குழந்தைகள் இறந்துவிடுவார்கள். இவளுடைய பூர்வீகமான வீடும் இவளுக்குக் கிடைக்காது என்று சொல்லுகின்ரேம்.

ஜாதகியின் தாயாருடைய மறு ஜன்மமும் மரண காலமும்
(மாதிரு கர்மமும்)

24. பின்ஜன்மங் காஞ்சி தன்னில் பிறப்பளாஞ்
[சௌராஷ்டர வம்சங்
கன்மகா லங்கள் தன்னைத் கழறுவீர் முனியே நீர்தாம்
மன்னிய மூப்பா னறில் மாதிரு கண்ட மென்றோம்
உன்னத வானை பெற்ற வுத்தமி கேட்டி டாயே.

24. ஜாதகியினுடைய தாயார் தன்னுடைய மறு ஜன்மத்தில் காஞ்சீவரத்தில் சௌராஷ்டிரர் என்ற பட்டுநூல்காரர் ஜாதியில் பிறப்பாள். இவளது கர்ம காலங்களை, முனிவரே! நீர் சொல்லுவீர் என்று கேட்கவே, அகஸ்திய மகரிஷி பதில் சொல்லுகின்றார். ஜாதகிக்கு மூப்பத்தாறுவது வயதில் இவளுடைய தாயார் இறந்துவிடுவாள் என்று சொல்லுகின்றோம். மேன்மையான சிறந்த யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த உத்தமியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகியின் தகப்பனுருடைய மரண காலமும் (பிதிரு மாரகமும்)
மறு ஜன்மமும்

25. மூப்பது விரண்டு வாண்டில்
விளம்புவோர் தந்தை கண்டஞ்
செப்புவோ மிவன்பின் ஜன்மங்
திருக்கடை யூரி லேதான்
ஒப்புவான் பிரம்ம சேயா
யுயர்வான குடும்பந் தன்னில்
மெய்ப்புடன் யிச்சென் மத்தில்
மேவின புண்ணிய மென்ன.

25. ஜாதகிக்கு மூப்பத்திரண்டாவது வயதில் இவளுடைய தகப்பனர் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றோம். தகப்பனருடைய பின் ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். இவர் திருக்கடையூரில் பிராமணர் குலத்தில் சிறந்த ஒரு குடும்பத்தில் ஆண் குழந்தையாக மறு ஜன்மத்திற் பிறப்பார். இவர் இந்த ஜன்மத்தில் மேன்மையாகச் செய்த புண்ணிய காரியங்கள் என்ன வென்று கேட்கவே;

26. சிலர்க்குவா பத்தைக் காத்துஞ் சிந்தையும் நல்ல தாயும்
நலமுளோர் நேசங் கொண்டும் நாதனர் பத்தி யாயுங்
கலகத்தைக் கூறுத தாலுங் காதலன் வாழ்வ தாலே
குலவுவான் பிரம்ம சேயாய்க் குறித்தன மொழி குன்றாது.

26. ஜாதகியினுடைய தகப்பனர் சிலருக்கு அவர்களுடைய கஷ்டகாலத்தில் உதவியைச்செய்து அவர்களைப் காப்பாற்றியதாலும்

நல்ல எண்ணங்களை உடையவராயும் நல்வர்களுடைய சிநேகிதத்தை அடைந்துகொண்டும் கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடைய வராகியும் இருந்ததாலும் சண்டையை உண்டுபண்ணக் கூடிய வார்த்தைகளைச் சொல்லாமல் வாழ்ந்துகொண்டிருப்பதாலும் இவர் மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பார் என்று அகஸ்தியர் பதில் சொன்னார். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலா பலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகியின் புருஷனுடைய மரண காலமும், இவளுடைய மரண காலமும், மறு ஜன்மமும்

27. அன்பது நாலா மாண்டி
லவன்வரன் கண்ட மெய்தும்
இன்னவள் தனக்கு வன்பா
னெட்டினில் கும்ப மாதந்
துன்மையாய்க் காலந் நாடு
சேருவா னென்று சொன்னேம்
பின்ஜன்மங் காஞ்சி தன்னில்
பிறப்பளாம் வைசியச் சேயாய்.

27. ஜாதகிக்கு ஐம்பத்து நான்காவது வயதில் இவளுடைய புருஷன் இறந்துவிடுவான். இவள் தனக்கு ஐம்பத்தெட்டாவது வயதில் கும்ப மாதம் என்ற மாசி மாதத்தில் இறந்து கெடுதியை விளைவிக்கின்ற எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள் என்று சொல்லுகின்றோம். இவள் தனனுடைய மறு ஜன்மத்தில் காஞ்சி வரத்தில் வைசியருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள்.

ஜனன காலத்தில் ஜன்ம நட்சத்திரமும் தசையின் இருப்பும்

28. பிறந்திடுங் காலந் தன்னில் பூசத்தின் கடைப்பா தத்தில்
கரியவன் தசைமூன் றுண்டுங் கலந்திடுந் திங்க ளேழும்
அரிவைக்குப் பிணியு மெய்து மகாலமாம் விரய மெய்தும்
உறன்முறை சூத மெய்து முத்தமி கேட்டி டாயே.

28. ஜாதகி பிறந்த காலத்தில் ஜன்ம நட்சத்திரம் பூசத்தின் நான்காவது பாதம் ஆகும். இதற்குரிய கரியவன் என்ற சனிபக வானுடைய தசை இருப்பு மூன்று வருஷங்களும் ஏழு மாதங்களும் ஆகும். இந்தத்தசைக் காலத்தில் ஜாதகிக்கு அநேக நோய்கள் நேரிடும். காலமில்லாத காலங்களில் அதிகச் செலவுகள் ஏற்படும். பந்துக்களுக் குள் சூதகங்கள் நேரிடும், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 113

ஜனன கால கிரகநிலை

1. [1]அரியது வுயிரு மாக [2]வரவுமே ஜன்மந் தங்கக்
குருமூன்றில் [3]மதியும் நாலில் [4]குஜன் கேது யேழிலாக
[5]பரிதியும் [6]புந்தி யெட்டில் [7]பார்க்கவன் நவமதி லேறக்
[8]கரியவன் [9]லாபந் தங்கக் கழறுவீர் பலனே யென்று ;

1. சிம்மம் ஜன்மலக்கினமாகி அதில் இராகுவும், குரு மூன்றி லும். சந்திரன் நான்கி லும், அங்காரகனும் கேதுவும் ஏழிலும், சூரி யனும் புதனும் எட்டி லும், சுக்கிரன் ஒன்பதி லும், சனி பதினென்றி லும் இருந்தால் பலா பலன்களைச் சொல்லு வீர் என்று ;

கிரகநிலை

சூரியன் புதன்	சுக்கிரன்		சனி
அங்காரகேது	இராசி சக்கரம்		
			லக்கினம் ராகு
	சந்திரன்	குரு	

அனுஷம் 4-ஆம் பாதம் : சனிதசை வரு 2-0-0

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற் சுக்கிரனும். ரிஷபத்திற் சனியும் இராகுவும், மிதுனத்தில் அங்காரகனும், கடகத் திற் சூரியனும், கன்னியிற் புதனும், விருச்சிகத்திற் சந்திரனும் கேது வும், மகரத்திற் குருவும் ஆகும். அங்காரகனும் புதனும் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்கள். புதனும் குருவும் சனியும் வக்கிரகதியில் இருக்கின்றார்கள்.

---

1. சிம்மம்
2. இராகு
3. சந்திரன்
4. அங்காரகன்
5. சூரியன்
6. புதன்
7. சுக்கிரன்
8. சனி
9. பதினென்று

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. பார்வதி கேட்கும் போது பராசரும் கூறு கின்றார்
சீர்புக ழாண்பால் ஜன்மஞ் செப்புவோ மில்லந் தானுந்
தீரமாங் கீழ்மேல் வீதி தென்வாடை காளி கீழ்ப்பால்
ஆறுமா முகத்தோன் மேற்கி லணுகிய தென்பால்
[தீர்த்தம்.

2. பர்ர்வதியம்மையார் கேட்கும்பொழுது பராசர மகரிஷியானவர் சொல்லுகின்றார். சீரும் பெருமையும் உள்ள ஆண் குழந்தை பிறக்கும். ஜனன வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றோம். கிழக்குமேற்கு வீதியில் தென்னண்டை வாடையில் பிறந்த வீடு வலிவாக இருக்கும். காளியம்மன் கோயில் கிழக்குத் திக்கில் இருக்கும். ஆறு பெரிய முகங்களையுடையவராகிய முருகக்கடவுளின் கோயில் மேற்கில் இருக்கும். தெற்குப் பக்கத்தில் ஒரு தீர்த்தம் இருக்கும்.

3. இத்தகை யடையா ளத்து ளிலகிய சிறுவூ ராகும்
முத்தின கங்கை சேயா யுதிப்பனுஞ் சேஷ்ட னுகப்
பெத்ததாய்த் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகஞ்
சுத்தமாய் முன்பின் ஜன்மஞ் செப்புவோ மிந்நூல்
[தன்னில்.

3. இவ்விதமான் அடையாளங்களையுடைய ஒரு சிறிய கிராமமாக இருக்கும் ஜாதகர் பிறந்த ஊர். இவர் ஒரு சிறந்த கங்கைகுலம் என்ற வேளாளர் குலத்தில் முதலாவது ஆண் குழந்தையாகப் பிறப் பார். இவரைப் பெற்ற தாய் தகப்பன் ஆகிய இவர்களுடைய யோகத்தையும் இவருடைய மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகத்தையும் முன் ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்த சாஸ்திரத்தில் உண்மையாகச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனுடைய சகோதரங்களும் (சகோதர பாவமும்), தகப்பனுடைய குணங்களும்

4. தந்தையின் தூணவர் நான்கி லாணுமே யிரண்டு தீர்க்கம்
அந்தவாறு வேறுய்ச் செல்வ ரவர்பலன் பின்பால்
[சொல்வேன்
எந்தையே தந்தை சேதி யியம்புவோ மிருநிறத்தன்
தந்தமும் பெரியதாய்க் காட்டுந் தன்னுடல் மெலிவு முண்டு

4. ஜாதகரின் தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் நான்குபேர் ஆவர், இவர்களில் இரண்டு சகோதரர்கள் நீண்ட ஆயுளை உடைய வர்கள் ஆவர். இல்விரண்டுபேர்களும் தகப்பனரைவிட்டுப் பிரிந்து வேறு குடும்பஸ்தர்களாகப் போய்விடுவார்கள். இவர்களுடைய பலர

பலன்களைப் பின்னல் சொல்லுகின்றேன். எங்கள் தாயாராகிய பார்வதி யம்மையே! தகப்பனருடைய விஷயங்களைச் சொல்லுகின்றேம். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறத்தை உடையவராவர். இவருக்குப் பற்கள் பெரியளவாக இருக்கும். இவருடைய உடம்பு ஒல்லியாக இருக்கும்.

5. மாந்தலை சிம்ம ராசி
வருவானுங்கிருஷிகள் செய்வன்
சாந்தவான் தந்தைதாயர்
தனத்தினை விரயஞ் செய்வன்
கூர்ந்துமே வார்த்தை சொல்வன்
கோதையில் லணுகி வாழ்வன்
நேர்ந்திடும் பித்தச் சூடு
நிமலியே கேட்டி டாயே.

5. ஜாதகரின் தகப்பனார் மான்றலை என்ற மிருகசீரஷ நட்சத்திரத்தில் சிம்ம ராசியில் பிறந்தவராவர். இவர் விவசாயத் தொழில் களைச் செய்பவராவர். இவர் சாந்தமான குணத்தை உடையவராவர். தன்னுடைய தகப்பனருடைய வீட்டையும் பணத்தையும் செலவு செய்துவிடுவார். இவர் மேன்மையான சிறந்த வார்த்தைகளைச் சொல்லுவார். தன்னுடைய மனைவியின் வீட்டிற்குப்போய் அவ்விடத்தில் வாழ்வார். இவருக்குப் பித்தச்சூட்டு ரோகம் உண்டாகும், பார்வதி யம்மையே! கேட்பீராக.

6. சுகதுக்கங் கலந்து வாழ்வன்
சோர்வோர்க்குத் தாக மீவன்
பகையென்று மனத்தில் வையான்
பாரபட் சங்கள் பேசான்
அகமது பின்னல் செய்வ
னறுமுகன் பத்தி கொள்வன்
லெகமதில் சல்லிய மேற்கான்
செய்ந்நன்றி மறவா னவன்.

6. ஜாதகருடைய தகப்பனார் சுகங்களையும் கஷ்டங்களையும் இன்பங்களையும் துன்பங்களையும் கலந்து அனுபவிப்பார். இவர் இளைப்பை அடைந்தவர்களுக்கு நீர்மோரைக் கொடுப்பார். இவர் தன்னுடைய மனத்தில் விரோதத்தை வைத்துக்கொண் டிருக்கமாட்டார். இவர் ஒருதலையாகப் பேசமாட்டார். இவர் தன்னுடைய பிற்காலத்தில் ஒரு வீட்டைக் கட்டுவார். ஆறுமுகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவர் ஆவர். இவர் பூமியில் கடன் வாங்கமாட்டார், தனக்குப் பிறர் செய்த உதவியை மறக்காதவர் ஆவார்.

ஜாதகருடைய தகப்பனருடைய முன்ஜன்மம்

7. முன்னவ னிருந்த ஜன்மமொழிகுரேந் தில்லை தன்னில்
வன்னிய குலமு தித்து வளமான குடும்பி யாகி
அன்னவன் வாழுங் காளி லணுகின வினையைக்
[கேண்மோ
கன்னிகை யொருத்தி பேரில் காணுத வார்த்தை சொல்ல.

7. ஜாதகருடைய தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவர் தில்லை என்கிற சிதம்பர க்ஷேத்திரத்தில் வன்னியர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து செழுமையான குடும்பத்தை உடையவராகி வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாபத்தைச் சொல்லுகின்றேரும் கேட்பீராக. இவர் ஓர் இளம் வயதுள்ள ஸ்திரீயின்மேல் தான் பார்க்காத சம்பவத்தைச் சொல்லி குற்றஞ் சாட்டினர்.

8. மாதவும் திகில டைந்து வரைந்தசா பத்தைக் கேண்மோ
பாதக வார்த்தை யென்மேல் பகர்ந்தபா விக்கேதான்
மேதினில் மறுஜன் மத்தில் விளங்காது துணையெனைப்
[போல்
தீதாகுந் தந்தை ஆஸ்தி தேவிபா லணுகி வாழ்வாய்.

8. அதன்மேல் அந்த ஸ்திரீ பயத்தையும் துன்பத்தையும் உடையவளாகிக் கொடுத்தச் சாபத்தைச் சொல்லுகின்றேரும், கேட்பீராக "என்மேல் அபவாதமான வார்த்தைகளைச் சொன்ன பாவியாகிய உனக்குப் பூமியில் மறு ஜன்மத்தில் என்னைப்போன்ற சகோதரி இருக்கக்கூடாது. தகப்பனருடையச் சொத்துக்களும் அழிந்துவிடக் கடவது. தன்னுடைய மனைவியின் வீட்டிற்குச் சென்று அவ்விடத்தில் வாழக்கடவது";

9. இன்னமும் பலவாறு சொன்னு
ளெய்திற்று வந்தச் சாபம்
மன்னனு மந்தி யத்தில்
வாய்புண்ணுல் மரண மாகிப்
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறந்தவ னென்று சொல்வோம்
முன்ஜன்ம வினையி னலே
யோங்காளே துணைப்பெண் ணுந்தான்.

9. என்றுச் சொன்னதுமல்லாமல் இன்னமும் பலவிதமாக ஜாதகருடைய தகப்பனரைப் பார்த்து அந்த ஸ்திரீ சொன்னள். அந்தச் சாபம் இவரை வந்தடைந்தது. இவர் தன்னுடைய முன்ஜன்மத்தின் கடைசி

காலத்தில் தன்னுடைய வாயில் புண்கள் ஏற்பட்டு மரணத்தை அடைந்து பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவர் என்று சொல்லுகின்றோம். இவருக்கு முன் ஜன்மத்தின் பாபத்தின் பயனுகச் சகோதரிகள் இருக்கமாட்டார்கள்.

ஜாதகருடைய குணநிசயங்கள்

10. தந்தையி னஸ்தி யின்றித்
தையலி லணுகி வாழ்வன்
இந்தவோர் குணத்தா னுக்கு
விப்பாலக னுதிப்பா னுவன்
அந்தவன் குணத்தைச் சொல்வே
னவனிகள் சேர்ப்பா னுவன்
விந்தையாய்ச் செட்டுச் செய்வன்
மெலிந்தமெய் யிருநி றத்தன்.

10. ஜாதகரின் தகப்பனுர் தன்னுடைய பிதுரார்ஜிதம் இல்லாதவராகி மனைவியினுடைய வீட்டிற்குப் போய் அவ்விடத்தில் வாழ்வார். இங்கு சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறந்தவர் ஆவார். ஜாதகருடைய குணநிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் நிலங்களையும் மனைகளையும் சம்பாதித்துச் சேர்த்துவைப்பவர் ஆவர். இவர் ஆச்சரியமான முறையில் வியாபாரங்களைச் செய்வார். இவர் இளைத்த தேகத்தை உடையவர், இரண்டு நிறங்கள் கலந்த நிறமாகிய மாநிறத்தை உடையவர் ஆவர்.

11. சுகையுங் கொஞ்ச முண்டு விருவித குணத்த னுவன்
பாகமாய்ப் பேசு வானும் பதர்குண மில்லா னுவன்
ஆகம நூணுக்கந் தேரா னம்மையால் வடுவு மேற்பன்
போகபாக் கியங்கள் பின்னல் பெறுவனு மில்லஞ்
[செய்வன்.

11. ஜாதகர் பிறருக்குக் கொடுக்கின்ற தயாள குணமுடையவர் ஆவர். இவருக்கு இரண்டுவிதமான குணங்களும் உண்டு, அஃதாவது நல்ல குணங்களும் கெட்ட குணங்களும் உண்டு. இவர் இனிமையாகவும் பக்குவமாகவும் பேசுபவர் ஆவர். இவர் அவசரப்படுகின்றவராகவும் இழிவான குணத்தையும் உடையவராகவும் இருக்கமாட்டார். இவர் ஆகம சாஸ்திரங்களின் நுட்பங்களில்*தேர்ச்சியை அடையாதவராக இருப்பார். இவருடைய தேகத்தில் அம்மையால் உண்டான அடையாளங்கள் இருக்கும். இவர் தன்னுடைய வயதின் பிற்காலத்தில் சகலவிதமான போகங்களையும் சௌக்கியங்களையும் சம்பத்துக்களையும் அனுபவிப்பவர் ஆவர், ஒரு வீட்டையுங் கட்டுவார்.

12. சொல்லதைக் காப்பா னுவன் சுகமிலான் பூர்வந் தன்னுல்
வல்லியும் வந்த பின்பு வளர்பிறை போலே யோகஞ்
சல்லியங் கொள்ளா னுவன் சந்தேக மனத்த னுவன்
வெல்லுவா னெதிரி தம்மை வீண்வழக் கோரம் பேசான்.

12. ஜாதகர் தன்னுடைய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவர் ஆவர். தன்னுடைய பூர்வ சொத்துக்களினுல் இவர் யாதொரு சௌக்கியத்தையும் அடையமாட்டார். இவருக்கு மனைவி வந்து சேர்ந்தபிறகு வளர்பிறைச் சந்திரன் நாளுக்குநாள் விருத்தியாவதுபோல யோகம் விருத்தியாகும். இவர் கடன் வாங்காதவராவர், சந்தேகமான மனத்தை உடையவர் ஆவர். இவர் தன்னுடைய பகைவர்களை ஜயிப்பார். வீணன வழக்குகளில் ஒருதலையாகப் பேசமாட்டார்.

13. இருபது வொன்றுண் டுக்கு மியல்பிலாக் குடும்ப மெய்தும்
பிறைபோலே யோகம் பின்னுல் பெறுவனும் வணிபத்
[தாலுந்
தரையதைச் சேர்த்த லுண்டு சேத்திர மைந் தாமாண்டில்
பெருமையாய்ச் செய்வா னுவன் பூமியில் சல்லியங் காணன்.

13. ஜாதகருக்குத் தன்னுடைய இருபத்தோராவது வயது வரையிலும் குடும்பம் விருத்தியடையாது. இதற்குப் பிறகு இவர் வியாபாரம் மூலமாக வளர்பிறைச் சந்திரனைப் போல யோகத்தை நாளுக்கு நாள் அதிகமாக உடையவராக இருப்பார், நிலங்களையும் மனைகளையும் வாங்குவார். ஐந்து வருஷத்திற்குள் ஒரு வீட்டையும் பெருமையாகக் கட்டுவார். இவர் இந்த பூமியில் கடன் வாங்கமாட்டார்.

14. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச்
[சங்கை
பாகனும் பானு மெட்டில் பார்மகன் கேது வேழில்
வேகமா யிருப்ப தாலே விரும்பினேம் யோகந் தானுந்
தோகையே கேதுபின்பால் செப்புவோம் விசேஷயோகம்

14. ஜாதகருக்கு யோகத்தை எவ்விதமாகச் சொன்னீர்? அதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். பாகன் என்ற புதனும் பானு என்ற சூரியனும் எட்டாவது வீட்டில் கூடியிருப்பதாலும் பார்மகன் என்ற அங்காரகனும் கேதுவும் ஏழாவது வீட்டில் கூடி வலிவாய் இருப்பதாலும் ஜாதகருக்கு யோகத்தைச் சொன்னேம். பார்வதியம்மையே! கேது தசையின் பின்பாகத்தில் விசேஷமான யோகம் உண்டாகும் என்று செரல்லுகின்றேம்.

15. பலசெட்டால் லாப மெய்தும் பாருக ளில்லம் கேரல்
நிலையிலார்க் குதவி செய்தல் நேர்ந்திடுஞ் சகடு தானுங்
குலமதிப் புடனே வாழ்வன் கூடியே நினைத்த வெல்லாம்
மலையரை மகளே யாங்கள் வழுத்தின மொழி குன்றுவே.

15. பலவித வியாபாரங்களால் ஜாதகருக்கு லாபம் கிடைக்கும். இவருக்கு நிலங்கள் மனைகள் வீடு இவைகள் கிடைக்கும். இவர் நிலையான அந்தஸ்தில் இல்லாதவர்களுக்கும் ஏழைகளுக்கும் உபகாரத்தைச் செய்வார். இவருக்கு ஒரு வாகனம் ஏற்படும். இவர் தன்னுடைய பந்துக்கள் இவரை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவருக்கு நினைத்த காரியங்கள் எல்லாம் அனுகூலமாகும். மலையின் அரசனுகிய பர்வத ராஜனின் மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் நடந்தே தீரும்,

ஜாதகருடைய சகோதரங்களும் விவாகமும்

16. தன்துணை யாண்பால் மூன்று தையல ரிருவர் தீர்க்கம்
பின்பாக மவர்கள் சேதி பேசுவோந் தாயே யாங்கள்
இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மூவெட்
[டாண்டில்
கன்னிகை யுத்த ரத்தில் கலப்பளா மன்னை வர்க்கம்.

16. ஜாதகருக்கு மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். அவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்பாகத்தில், பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றோம். ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருப்பத்துமான்காவது வயதில் தனது தாயாருடைய வடக்குத்திக்கிலுள்ள பந்துக்களிலிருந்து மனைவி வந்து சேருவாள்.

ஜாதகரின் மனைவியினுடைய குணதிசயங்கள்

17. மாதுவின் குணத்தைச் சொல்வேன்
வருவோரை யாத ரிப்பள்
ஓதுமுன் கோபங் கொஞ்ச
முண்மையை வெளிக்காட் டாதாள்
தீதென்றோர்க் குதவி செய்வள்
சீலியாம் விரத மேற்பள்
மாதவர்க் கன்ன மீவள்
மறுத்துரை யதிகங் கூறாள்.

17. ஜாதகரின் மனைவியினுடைய குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள். இவளுக்குப் பேசுவதற்கு முன்னமே கொஞ்சங் கோபம் உண்டாகும், இரகசியங்களைப் பிறர் தெரிந்து கொள்ளும்படியாக வெளியே காட்டிக்கொள்ளமாட்டாள். இவள் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றேம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரத்தைச் செய்வாள், நல்லொழுக்கமுடையவளாவள், விரதங்களை அநுஷ்டிப்பாள். இவள் முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போடுவாள், தடுத்தும் எதிரிடையாகவும் அதிகமாகச் சொல்லமாட்டாள்.

18. மங்கையும் வந்த பின்பு வரனுக்கு யோக மெய்தும்
பொங்கின குடும்ப மேற்பள் புகழ்ந்தோர்க்கு வுதவி
[செய்வள்
தங்கிடும் நாபிச் சூடு தையலுக் தீர்க்க ஜீவி
ஐங்கரன் தனைவ ளர்த்த அம்பிகை யாளே கேளாய்.

18. ஜாதகருக்குத் மனைவி வந்துசேர்ந்த பிறகு யோகங்கள் உண்டாகும். மனைவி மேன்மையான பெரிய குடும்பத்தை உடையவளாவள், இவளைப் புகழ்ந்து பெருமையாகப் பேசுகிறவர்களுக்கு உபகாரங்களை செய்வாள். இவளுக்கு நாபிச்சூட்டு ரோகம் இருக்கும். இவள் நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள். ஐந்து கைகளை உடைய விநாயகக்கடவுளை வளர்த்த பார்வதியம்மையே! கேட்பீராக.

19. ஜயமுனி புகலுகின்றார் தேவிமா ரிருவ ராவர்
பயமிலாச் சொன்ன சங்கை பகருவீர் முனியே நீர்தாம்
நயமிலா யேழில் கேது நல்கின பலத்தி னாலே
வியமிலாச் சொன்னேம் யாங்கள் விரதரு மறித்துச்
[சொல்வார்.

19. ஜயமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார், ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் வாய்ப்பார்கள். நீங்கள் பயப்படாமல் இவ்விதமாகச் சொன்னதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். நல்லவராகவில்லாத கேது ஏழாவது பாவத்தில் இருக்கின்ற வலுவினால் நாங்கள் பெருமையில்லாமல் இவ்விதமாகச் சொன்னேம். இவ்விதமாக ஜயமுனிவர் சொல்லவே, விரதர் என்ற முனிவர் தடுத்துச் சொல்லுகின்றார்.

20. குருவுமே யேழைப் பார்க்கக் கூறுணத் தார மிரண்டு
வரும்மனை யொன்றே தீர்க்க மங்கைக்கு விரண்டுமுத்திரை
திருமக ணிவா ஞவன் செப்புவீ ரந்தச் சங்கை
ஆறாறு விரண்டு வாண்டி லறுபடுங் கள்ள ராலே.

20. குரு ஏழாவது வீட்டைப் பார்ப்பதால் இரண்டு மனைவிமார்கள் என்று சொல்லக்கூடாது. ஒரே ஒரு மனைவிதான். இவளும் நீண்ட ஆயுளை உடையவளாவாள். ஆனால் ஒரே ஒரு மனைவிக்கு இரண்டு மாங்கல்யங்களை இவளுடைய புருஷன் கட்டுவார். இவ்விதமாக விரதர் என்பவர் சொல்லவே, இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, விரதர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு முப்பத்தெட்டாவது வதில் மனைவியினுடைய முதல் மாங்கல்யம் திருடர்களால் அறுத்துக்கொண்டு போய்விடப்படும்.

ஜாதகருக்குச் சந்ததிகள் (புத்திரபாவம்)

21. ஆகையா லிரண்டு முத்திரை யம்மாதுக் கணிவா ளவன்
பாகமாய்ப் புத்திர பாவம் பகருவோ மினிமே லாகத்
தோகைய ரிருவ ராவர் சுதனுமே யவ்வா றுதீர்க்கம்
நாகவா பரணன் தேவி நவின்றவை தப்பா வாமே.

21. ஆகையால் ஜாதகர் இந்த முதல் மனைவிக்கே இரண்டாவது மாங்கல்யத்தைக் கட்டுவதால் இவர் மனைவி இரண்டு முத்திரைகளை அணிந்து கொள்ளுபவளாவாள். இனிமேல் இவருக்குப் புத்திரரைப் பற்றிப் பக்குவமாகச் சொல்லுகின்றோம். இவருக்கு இரண்டு பெண் குழந்தைகளும் இரண்டு ஆண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். சர்பத்தை ஆபரணமாக அணிந்து கொண்டுள்ள பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய பலாபலன்கள் தவறுதலையாகும்.

ஜாதகருடைய முன் ஜன்மம்

22. பாலன்முன் ஜன்மந் தன்னைப் பகருவோங் கொங்கு [நாட்டில்
சீலமாம் வைசியச் சேயாய் ஜனித்துமே வணிபஞ் செய்து
வேல்விழி மனைவி மைந்தர் மேன்மையாய்க் குடும்பி யாகிக்
காலன்தன் நாட் டடைந்து கஞ்சனுல் வரையப் பட்டு ;

22. ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் கொங்கு தேசத்தில் ஒரு நல்லொழுக்கமுள்ள வைசிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து வியாபாரங்களைச் செய்துகொண்டு மனைவி மக்களை உடையவராகி மேன்மையான குடும்பஸ்தராகி இறந்து யமபட்டணத்திற்குப்போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு;

ஜாதகருடைய யோகபாவம்

23. உதிப்பனு மிந்தப் பால னுரைக்கிறே மிவனின் யோகம்
மதித்திடாக் குடும்பி யாவ னாறுகான்கு வாண்டு மேலாய்
நிதிகடன் கொள்ளா னுவன் நீர்புகர் தசைவி சேஷம்
எதுநினைத் தாலு மோங்கு மேவலாள் பணையேர் விருத்தி.

23. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவராவர் ஜாதகர். இவருடைய யோகங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இருபத்துநான்கு வயது வரையில் பெருமையில்லாத குடும்பஸ்தராக இருப்பார். இதற்கு மேல் இவர் கடனை வாங்காதவராக இருப்பார். இவருக்குச் புகர் என்றசுக்கிர தசை அதிகயோகமுள்ளதாக இருக்கும். இவர் நினைத்த காரியங்களையெல்லாம் செய்து முடிப்பார். வேலையாட்களும் நிலங்களும் ஏர்களும் இவருக்கு விருத்தியடையும்.

குறிப்பு :—இந்தப் பாடலில் மூன்றுவது வரியில் "நீர் புகழ் தசை" என்று இருப்பது "நீர் புகர் தசை" என்று நம்மால் திருத்தப் பட்டது.

ஜாதகருடைய தாயாரின் குணதிசயங்கள்

24. நிதிபூர்வம் நேரு மென்றோம் நீர் புகர் தசையி லேதான்
இதுநிற்க வன்னை சேதி யியம்புவோ மினிமே லாகச்
சதியிலா மனத்த ளாவள் தந்தமும் பெரிதாய்த் காட்டும்
கதியென்றோர்க் குதவி செய்வள் கேவல மில்லாச் சித்தம்.

24. ஜாதகருக்கு சுக்கிரதசையில் பூர்வதனம் அஃதாவது முன்னோர்களுடைய சொத்து வந்துசேரும் என்றுச் சொல்லுகின்றோம். இந்த விஷயங்கள் இப்படியிருக்க, இனிமேல் ஜாதகருடைய தாயாருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் கெடுதியில்லாத மனத்தை உடையவள் ஆவள். இவளுக்குப் பற்கள் பெரியனவாக இருக்கும். கஷ்டங்களை அனுபவிக்கின்றோம், நீங்கள் தான் எங்களுக்குக் கதி என்று சொல்லுகின்றவர்களுக்கு உதவியைச் செய்வாள். இவளது மனம் தாழ்ந்ததாகவும் இழிவாகவும் இராது.

ஜாதகருடைய தாயாரின் சகோதரர் (சகோதரபாவம்)

25. வருமையும் பொறுமை யுண்டு
மைந்தனுல் யோக மெய்தும்
பெருமையும் பின்னுல் சேர்ப்பள்
பேதையர் துணை யிரண்டு
திருமக ளொன்றே தீர்க்கஞ்
செப்புவோம் பின்னுல் சேதி
கரிமத வானை பெற்ற
காதலி கேட்டி டாயே.

25. ஜாதகருடைய தாயாருக்குத் தரித்திரமும் கஷ்டங்களும் பொறுமையும் உண்டு. இவளுக்குத் தன்னுடைய புத்திரனுல் யோகம் உண்டாகும். இவள் தன்னுடைய வாணுளின் பிற்பாகத்தில் பொறுமையையும் மேன்மையையும் அடைவாள் இவளுக்கு இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுஸ் உடையவர்களாக இருப்பார்கள். இவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னுல் சொல்லுகின்றேரும். கருப்பு மதயானை முகத்தையுடைய வினுயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மம்

26. மாதிரு பூர்வந் தன்னை வரைகிறேனுஞ் சிறுபாக் கத்தில்
சூதிலா ரெட்டி வம்சந் தோன்றியே வறுமை யின்றி
மாதவர்க் கன்ன மீந்து வளமுள தலங்கள் சென்று
தீதான காலந் நாடு சென்றுமே பிரமன் லக்கம் ;

26. ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவள் சிறுப்பாக்கம் என்ற கிராமத்தில் கபடில்லாத ஒரு ரெட்டியாருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமலிருந்து முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போட்டுக் கொண்டிருந்து செழிப்பான புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்துகொண்டு பிறகு இறந்து கெடுதியான எமபட்டணத்திற்குப்போய்ப் பிரமதேவனுல் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு ;

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மமும் மரண காலமும்

27. வந்தவ ளென்று சொல்வோம் வரைகிறே மிவள்பின் [ஜன்மஞ்
செந்திமா மலையி லேதான் ஜனிப்பளாம் பிரம சேயாய்ச்
சந்ததம் முப்பா னேழில் தாய்க்குமே கண்ட மெய்துங்
கந்தனை யீன்ற மாதே கழிறின மொழிகுன் ரூவே.

27. ஜாதகருடைய தாயார் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்ருள் என்று சொல்லுகின்றேரும். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவள் செந்திமாமலை என்ற க்ஷேத்திரத்தில் பிராமணர் குலத்திற் பெண் குழந்தையாகப் பிறப்பாள். இவளுக்கு ஜாதகரது முப்பத்தேழாவது வயதில் மரணம் நேரிடும். முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடந்தே தீரும்.

ஜாதகரின் தகப்பனருடைய மரண காலமும் மறுஜன்மமும்

28. ஆறஞ்சு வொன்ரு மாண்டி லணுகிடுந் தந்தை கண்டம்
வேறுஜன் மங்கள் சொல்வேன் வேலங்கா டதனி
[லேதான்
பாரிய தனவா னுக்குப் பிறப்பனு மிக்கு லத்தில்
தீரமாய்த் தவங்கள் செய்யுஞ் செல்வதி கேட்டி டாயே.

28. ஜாதகருக்கு முப்பத்தோராவது வயதில் இவருடைய தகப்பனர் இறந்து போய்விடுவார். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் திருவாலங்காட்டில் பெரிய பணக்காரருக்கு இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்திலேயே பிறப்பார். தைரியமாய் தவங்களைச் செய்கின்ற செல்வ வதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மரண காலமும் மறு ஜன்மமும்

29. அறுபது நாலு வாண்டி லானிமா தத்தி லேதான்
குறைகந்த சஷ்டி தன்னில் குழவியி னுடல மேகும்
வருஞ்ஜன்மங் காஞ்சி தன்னில் வருவனு மிக்குலத்தில்
கரிமத வானை பெற்றக் காதலி கேட்டி டாயே.

29. ஜாதகர் தன்னுடைய அறுபத்துநான்காவது வயதில் ஆனி மாதத்தில் தேய்பிறையில் கந்த சஷ்டி தினத்தில் இறப்பார் இவ்விதம் இவருடைய தேகம் மறைந்துவிடும். இவர் தன்னுடைய மறுஜன்மத் தில் காஞ்சீவரத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்திலேயே பிறப்பார். கறுப்பு மதயானை முகத்தையுடைய விஞயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய ஜனனகால நட்சத்திரமும் தசையின் இருப்பும்

30. அன்னவன் ஜனன கால மநுடத்தின் கடைப்பா தத்தில்
துன்சனி யிரண் டாண்டுமே செப்பினேம் பூர்வ பாகம்
பின்பாகம் விபரமாகப் பேசுவோந் தாயே யாங்கள்
உன்னத வானை பெற்ற வுத்தமி கேட்டி டாயே.

30. ஜாதகர் பிறந்த காலத்தில் ஜன்ம நட்சத்திரம் அனுஷத்தின் நான்காம் பாதம் ஆகும். இதற்குரிய கெட்ட சனிமகா தசையின் இருப்பு இரண்டு வருடங்களாகும். இவ்விதமாகப் பூர்வபாகத்தை நாங்கள் சொல்லி முடித்துவிட்டோம். பின்பாகத்தை, பார்வதி யம்மையே! நாங்கள் விபரமாகச் சொல்லுகின்றோம். மேன்மையான சிறந்த யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த உத்தமியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜனன கால தசையின் பலாபலன்கள்

31. அன்னையின் குடும்பம் வேரு யணுகிடும் பாகம் மூன்றுய்ச்
சொன்னதி லொருவன் தானுஞ் சோர்வுறுங் கேது
[வந்தம்
மன்னவர் கன்னி தீர்க்கம் வரைந்தது தப்பா தாகுங்
கன்னென மொழியை யொக்குங் காதலி கேட்டி டாயே.

31. ஜாதகருடைய தாயாருடைய குடும்பம் மூன்று பாகங்களாகப் பிரிந்து வேருகப் போய்விடும். இங்கு சொல்லப்பட்டவர்களுள் ஒரு குடும்பத்தை உடையவர் கேது தசையின் கடைசி காலத்தில் இறந்து விடுவார். மற்ற இரண்டு குடும்பஸ்தர்களும் ஒரு ஸ்திரீயும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். நாங்கள் சொல்லிய பலா பலன்கள் தவறிடாமல் நடக்கும். சர்க்கரையைப்போன்ற இனிமையான வார்த்தைகளையுடைய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 114

ஜனன கால கிரகநிலை

1. [1]மதி [2]குஜன் [3]பொன்னு [4]மானில்
[5]மால் [6]புகர் [7]பானு கேது
சதியிலாத் [8]தேளில் தங்கச்
சனி[9]சியம் [10]பணியும் [11]நந்தி
இதுவிதக் கோளும் நின்ரு
லிலக்கினஞ் சிம்ம மாக
அதுபலன் புகலு மென்று
அம்பிகை கேட்கும் போது.

1. சந்திரனும் அங்காரகனும் குருவும் மகரத்திலும், புதனும் சுக்கிரனும் சூரியனும் கேதுவும் விருச்சிகத்திலும், சனி சிம்மத்திலும், இராகு ரிஷபத்திலுமாக கிரகங்கள் இருந்து ஜன்ம லக்கினம் சிம்மம் ஆதல் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும் பொழுது;

கிரகநிலை

		ராகு	
சந்திரன் அங்கார குரு	இராசி சக்கரம்		லக்கினம் சனி
	சூரியன் புதன் சுக்கிரன் கேது		

அவிட்டம் 1-ஆம் பாதம், அங்காரக தசை வரு 6-4-0

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்தில் குருவும், மிதுனத்தில் அங்காரகனும், சிம்மத்திற் சூரியனும் சந்திரனும் புதனும் இராகுவும், விருச்சிகத்திற் சனியும், மகரத்திற் சுக்கிரனும், கும்பத்திற் கேதுவும் ஆகும். புதன் அஸ்தமனம் அடைந்திருக்கிறார்.

---

1. சந்திரன்
2. அங்காரகன்
3. குரு
4. மகரம்
5. புதன்
6. சுக்கிரன்
7. சூரியன்
8. விருச்சிகம்
9. சிம்மம்
10. இராகு
11. ரிஷபம்

ஜனனமான நகரச் சிறப்பு

2. அத்திரி முனிவர் சொல்வா ரதுஜன்ம மாண்பா லாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் வடவாடை கீழ்மேல் வீதி
சித்தசன் தனையெ ரித்த தேவனுங் கீழ்ப்பா லாக
பத்திர காளி யுத்தரம் பெருவயி ரேனும் மேல்பால்.

2. அத்திரிமகரிஷியானவர் பலாபலன்களைச் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். ஜாதகர் பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றேன். இந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் வடவண்டை வாடையில் இருக்கும். மன்மதனை எரித்தவராகிய சிவ பெருமானுடைய கோயில் கிழக்குத் திக்கில் இருக்கும். பத்திரகாளி யம்மன் கோயில் வடக்குத் திக்கிலும் பெரிய வயிற்றை யுடையவராகிய விநாயகருடைய கோயில் மேற்குத்திக்கிலும் இருக்கும்.

3. இன்னமும் பலதே வாச
மிந்திர நகர மொப்பாம்
மன்னர்கள் வாச மாகும்
வாரண மோங்கு மென்றேரும்
சொன்னயிவ் வடை யாளத்துள்
சுதனுமே பிரம்ம சேயாய்
அன்னவன் சேஷ்ட னுக
வருளுவா னென்று சொன்னேம்.

3. இன்னும் பலவிதமான தெய்வங்களும் பல தேசத்தார்களும் இந்தப் பட்டணத்தில் வாசஞ்செய்வார்கள். இந்தப்பட்டணம் தேவேந்திரனுடைய நகரத்திற்குச் சமானமானதாக விருக்கும் இதில் அரசர்கள் வாசஞ் செய்வார்கள். யானையும் இருந்துகொண்டு விருத்தியாகும், இங்கு சொல்லப்பட்ட அடையாளங்கள் உள்ள விடத்தில் ஜாதகர் பிராமண குலத்தில் ஜேஷ்ட குமாரராகப் பிறப்பார் என்று சொல்லுகின்றேம்.

ஜாதகருடைய தகப்பனரின் விஷயங்கள்

4. பாலகன் ஜனன யோகம் பெற்றதாய் தந்தை யோகஞ்
சாலவே துணைவர் யோகந் தன்மனை புத்திர யோகம்
ஏலவே முன்பின் ஜன்ம மியம்புவோ மிந்நூல் தன்னி
லாலத்தை யுண்டோன் தேவி யறிவிப்போந் தந்தை
[சேதி.

4. ஜாதகருடைய ஜனனகாலத்திய யோகத்தையும், இவரைப் பெற்ற தாயார் தந்தையாகிய இவர்களுடைய யோகங்களையும் இவருடைய சகோதரர்களுடைய யோகங்களையும் இவருடைய மனைவி மக்க

ஞுடைய யோகங்களீயும் முன் ஜன்மத்தையும் பின் ஜன்மத்தையும் இந்தச் சாஸ்திரத்திற் சொல்லுகின்ரேம். ஆலகால விஷத்தை விழுங்கிய சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! ஜாதகரின் தகப்பனருடைய விஷயங்களீப்பற்றிச் சொல்லுகின்ரேம்.

வேறு

ஜாதகரின் தகப்பனருடைய குணதிசயங்கள்

5. தந்தைகுணங் கூறுகின் ரேரு மாஞ்சி வப்பன்
ஜகராசர் பேட்டிகொள்வ ணுணச்சல் நீட்சி
தந்தமது தேய்வுகொஞ்சந் தனவா ஞவன்
தரணிவிருத்தி செய்வன் சமர்த்தாய் வார்த்தை
தந்தைமொழிக் கிடருறையா ணுள்ளன் போடுஞ்
சனவசியஞ் செய்திடுவ ணுக வானந்
தன்பந்து மதிக்கவுய்வன் சல்லியங் கொள்ளான்
தன்கரத்தில் பத்மவரி தங்கு மென்ரேரும்.

5. ஜாதகரின் தகப்பனருடைய குணகுணங்களீச் சொல்லு கின்றேன். இவர் மாந்துளிரின் நிறத்தைப்போல் ஒருவிதமான சிவப்பு நிறத்தையுடையவராவர். இவர் பெரிய பெரிய அரசர்களுடைய தரி சனத்தை அடைபவராவர், ஒல்லியாகவும் நீண்டும் உள்ள தேகத்தை யுடையவராவர். இவருடைய பற்கள் சிறிது தேய்வடைந்து இருக்கும். இவர் பணக்காரராக விருப்பார், நிலங்களீப் பயிரிட்டுத் தான்யங்களீ விருத்தியாக்குவார், சாமர்த்தியமாகப் பேசுபவராவர். இவர் தன்னுடைய தகப்பனரது வார்த்தைகளுக்கு எதிரிடையாகப் பேசமாட்டார். இவர் தன்னுடைய மனத்தில் பூர்ண அன்புடையவராகி ஜனங்களீத் தன் பக்கமாக வசியஞ் செய்துகொள்வார். இவர் பிறரைக் கவரும்படியான குணத்தை யுடையவராவர். இவர் விவேகமுடைய வராவார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்துகொண்டு வாழ்பவராவார். இவர் கடன் வாங்க மாட்டார். இவருடைய உள்ளங்கையில் பத்மவரி என்ற தாமரைரேகை இருக்கும் என்று சொல்லுகின்ரேம்.

6. நடைகடிய னரசராவே வுய்வா ஞவன்
நயப்பான வார்த்தையுளன் நங்கைக் கிஷ்டன்
உடன்படான் பிழைகளுக்கு வுபாயஞ் செய்வன்
உறுதிமன மிருகுணத்தையு முடைய ஞவன்
படையில்செலான் பலர்நேயன் பணிந்தோர்க் கிஷ்டன்
பணத்தின்மேல் விருப்பமுளன் பகவான் பத்தி
விடமனமு முடன்சாந்தம் விகடங் கூரான்
விசனமிலான் தொழில்மூலம் விதேசஞ் சின்னள்.

6. ஜாதகருடைய தகப்பனார் வேகமான நடையை உடையவர்; அல்லது கடுமையான ஒழுக்கத்தை யுடையவராவர். இவர் அரசர் களால் ஜீவிப்பவராவர், இனிமையான நல்ல வார்த்தைகளை உடையவர் இவர் தன்னுடைய மனைவிக்குப் பிரியமானவர். இவர் குற்றங்களையும் அபவாதங்களையும் முறையே செய்வதற்கும் சொல்வதற்கும் சம்ம திக்கமாட்டார், தந்திரமாக நடந்துகொள்ளுவார், தந்திரமான மார்க்கங்களையும் ஏற்படுத்துவார். இவர் நிலையான திடமான மனத்தை யுடையவராவர், இரண்டுவிதமான குணங்களை உடையவராவர், அஃதாவது நல்ல குணத்தையும் துர்க்குணத்தையும் உடையவராவர், சாந்தியையும் கோபத்தையு முடையவராவர். இவர் சண்டைக்குப் போகமாட்டார், பலரிடம் சிநேகமாக விருப்பார், தன்னை வணங்கு கின்றவர்களிடம் பிரியமாக விருப்பார், இவர் தனத்தின்மேல் ஆசையுடையவராவர். கடவுளிடத்தில் அன்பும் ஆசையும் உடைய வராவர். இவர் விஷமும், கொடுமையும், கோபமுமுள்ள மனத்தை உடையவராவர். இவருக்கு உடனே சாந்தம் ஏற்பட்டுவிடும். வேடிக் கையை உண்டுபண்ணக்கூடிய அல்லது இரண்டுவித அர்த்தமுள்ள வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவர் துன்பத்தையும் மனக் கஷ்டத்தையும் அடையமாட்டார், உத்தியோக விஷயமாகக் கொஞ்ச காலம் வெளியூரில் வசிப்பவராவர்.

ஜாதகருடைய தகப்பனருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

7. தன்துணை யாண்காணன் கன்னி யொன்று
சாற்றுகிறேம் தீர்க்கமதாய்த் தாயேயாங்கள்
என்னகா ரணந்துணை யாண் தோஷஞ்சொன்னீர்
இரவிசிகி ஞலில்தங்க சேயுமாறில்
பொன் னவனு நீசனு யிருப்பதாலே
புகன்றிட்டோம் துணைதோஷம் பூர்வந் துன்பம்
பின்னமாய்ச் சேர்ந்ததினுல் புகன்றேம்யாங்கள்
புகலுவீர் பூர்வவினை புனிதனுக்கு.

7. ஜாதகரின் தகப்பனருக்குச் சகோதரன் கிடையாது. இவருக்கு ஒரு சகோதரி நீண்ட ஆயுளை உடையவராக விருப்பாள் என்று, பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றேம். எவ்விதமான கார ணங்களினுல் இவருக்குச் சகோதரன் கிடையாது என்று சொன்னீர் என்று கேட்கவே, அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். இரவி என்ற சூரியனும் சிகி என்ற கேதுவும் நான்காவது வீட்டில் கூடி இருப்பதாலும், சேய் என்ற அங்காரகன் ஆறுவது பாவத்திலிருப்ப தாலும், பொன் என்ற குரு நீசமாக விருப்பதாலும் இவருக்குச் சகோதர தோஷத்தைச் சொன்னேம். மேலும் இவரது முன் ஜன்

மத்திய வினை இவரை வந்தடைந்திருக்கின்றது என்று நாங்கள் சொல்லுகின்றோம் என்று அத்திரி மகரிஷி சொல்லவே, முன் ஜன்மத்திய பாவத்தைச் சொல்லுவீர் என்று கேட்டார்.

வேறு

8. முன்ஜன்ம மருணை நாட்டி லுதித்தனள் வைசியச்
[சேயாய்ப்
பொன்பொரு ளுடைய னெகிப் பேதையு மதலை யுண்டாய்
உன்னதச் செட்டு செய்து வுத்தமன் வாழுங் காளில்
தன்துணை பாகந் தன்னைத் தராமலே மோசஞ் செய்தான்.

8. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய முன் ஜன்மத்தில் அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் ஒரு வைசியராகப் பிறந்தார். இவர் தனம் சொத்து ஆகிய இவைகளை உடையவராகியும் மனைவி மக்களை உடையவராகியும் மேன்மையான வியாபாரத்தைச் செய்து கொண்டும் வாழ்கின்ற காலத்தில் தன்னுடைய சகோதரனுடைய பாகத்தை அவருக்குக் கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார்.

9. பின்துணை வருத்த முற்றுப்
புகன்றசா பத்தைக் கேண்மோ
பொன்கடன் தராத பாவி
பிறக்கும்பின் ஜன்மந் தன்னில்
என்னைப்போல் துணையா னின்றி
இப்புவி தன்னில் வாழ்வாய்
இன்னமும் பலவாறு சொன்னை
னெய்திற்று வந்தச் சாபம்.

9. ஜாதகரின் தகப்பனாருடைய இளைய சகோதரன் தன்னுடைய மனத்தில் கஷ்டத்தை யடைந்து கொடுத்தச் சாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. "எனக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடாத பாவியே! உன்னுடைய பின் ஜன்மத்தில் என்னைப்போல சகோதரன் இல்லாமல் இந்தப் பூமியில் வாழக்கடவது" என்றும், இன்னமும் பலவிதமாகவும் தகப்பனாரைப் பார்த்து இந்தச் சகோதரர் சொன்னார். இந்தச் சாபம் தகப்பனாரை வந்தடைந்தது.

10. மாரனு மந்தி யத்தில் மஹாதலஞ் சேது சென்று
தேறினோர்க் கன்ன மீந்து தேவதா பணியுஞ் செய்து
தீரமாய்க் காலங் நாடு சென்றுமே பிரமன் லக்கம்
பாரினி லுதித்தா னென்றோம் பராசரு மறித்துச்
[சொல்வார்.

10. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் பெரிய ஸ்தலமாகிய சேது ஸ்தலத்திற்குப் போய்ப் பெரியார்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டும், தெய்வங்களுக்கு வேலிக காச் செய்துகொண்டும் இருந்து பிறகு இறந்து தைரியத்துடன் எமபட்டணத்திற்குப் போய்ப் பிறகு பிரம தேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த பூமியில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இதன் பேரில் பராசர மகரிஷி தடுத்துக் கேட்கின்றார்.

11. முன்ஜன்மம் வைசியச் சேயா
யுதித்தவ னிச்சென் மத்தில்
முன்குல முதிக்கும் வண்ண
முரைப்பீர்கள் முனியே நீர்தாம்
முன்ஜன்மஞ் சேது சென்று
முயர்வோர்க்கு வன்ன மீந்துந்
தன்பலம் பிரம்ம சேயாய்
ஜனித்தவ னென்று சொல்வோம்.

11, தன்னுடைய முன் ஜன்மத்தில் வைசியராகப் பிறந்த ஜாதகரின் தகப்பனார் இந்த ஜன்மத்தில் முதற்குலம் என்ற பிராமணர் ஜாதியிற் பிறந்ததற்குக் காரணத்தை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று பராசர முனிவர் கேட்கவே, அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். தகப்பனார் தன்னுடைய முன் ஜன்மத்தில் சேதுஸ்தலத்திற்கு யாத்திரை செய்தும் பெரியார்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டும் இருந்த புண்ணியங்களின் பலத்தால் இந்த ஜன்மத்திற் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாய்ப் பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

12. சேதுவின் பலத்தி னலே தீராதோ வந்தச் சாபங்
காதலன் வருத்த முற்றுக் கழறின சாபம் நீங்கா
தோதின குணத் தானுக்கு வுதிப்பனு மிந்தப் பாலன்
காதலன் குணத்தை யாங்கள் கழறுவோந் தாயே
[யாங்கள்.

12. ஜாதகருடைய தகப்பனார் சேதுஸ்தலத்திற்கு யாத்திரை செய்த பலத்தினால் முன் ஜன்மத்தில் துணைவன் கொடுத்த சாபம் நிவர்த்தியாகாதோ என்று கேட்கவே, இவருடைய சகோதரன் துன்பத்தை அடைந்து கொடுத்த சாபம் விலகாது. இதுவரையிலும்

சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங்களைப் பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றோம்.

13. பாலக னிருசி வப்பன் பலகலை யுணர்வா னவன்
சீலவான் பெறுமை சாலி ஜனவசி யங்கள் கொள்வன்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நல்லோர்க்கு நல்லோ
[னவன்
ஆலம்போல் பகைவருக்கு வவனுமே கருட னவன்.

13. ஜாதகர் இரண்டுநிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை யுடையவராவார். இவர் அநேகவிதமான சாஸ்திரங்களைப் படித்தறிந் தவராவர். இவர் நல்லொழுக்கத்தை யுடையவராவர், சாந்த குணத்தை உடையவராவர், ஜனங்களைத் தன் பக்கமாக விருக்கும்படி வசியப் படுத்திக்கொள்ளுவார், கவருவார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். இவர் நல்லவர்களிடம் நல்லபடியே நடந்துகொள்ளுவார். விஷத்தைப்போன்ற விரோதிகளுக்கு இவர் கருடனைப்போன்ற வைரியாக விருப்பார்.

14. அன்னிய பாஷை மேன்மை
யரசரால் தொழிலு மேற்பன்
சொன்னதைக் காப்பா னவன்
சோம்பிடான் காரி யத்தில்
பொன்பணி சேர்ப்பா னவன்
புதையலும் வைப்பா னமே
கன்னியர் மோக னவன்
கசடரை உறவு கொள்ளான்.

14. ஜாதகர் அன்னிய பாஷை என்ற ஆங்கில பாஷையில் மேன் மையை அடைந்தவராக விருப்பார், அஃதாவது அதிகமாகப் படித் தவராக விருப்பார். இவர் இராஜாங்கத்தில் உத்தியோகத்தை உடை யவராவர். இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப் பாற்றுவார், தான் செய்ய வாரம்பித்த வேலைகளில் சோம்பலாக விருக்கமாட்டார். இவர் தனம் ஆபரணங்கள் ஆகிய இவைகளைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் பணத்தைப் புதைத்தும் வைப்பவராவர். இவர் ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை யுடையவராக விருப்பார், ஸ்திரீகளும் இவரிடத்தில் காதலை யுடைய வர்களாக விருப்பார்கள். இவர் குற்றமான குணங்களை யுடையவர்க ளிடத்திலும் கீழ்மக்களிடத்திலும் சிநேகஞ் செய்துகொள்ளமாட்டார்.

15. தந்தைமேல் தொழிலு மேற்பன் சகடுவா கனமு முண்டு
சிந்தையில் நல்ல னுவன் தேவதா பத்தி கொள்வன்
பந்தினர் மதிப்பு கொள்வன் பலபேரால் பெருமை
[யேற்பன்
நிந்தைக ளேற்கா னுவன் நினைத்தது முடிக்க வல்லன்.

15. ஜாதகர் தனது தகப்பனருடைய தொழிலைவிட உயர்ந்ததா யுள்ள தொழிலை யுடையவராவர். இவருக்கு வாகனமான வண்டிகளும் உண்டு. இவர் நல்ல எணணத்தை யுடையவராக விருப்பார், இவர் தெய்வங்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவராக விருப்பார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கத்தக்க அந்தஸ்தி லிருந்து வாழ்வார். இவர் பலரால் கீர்த்தியை அடைவார். இவர் யாதொரு அபவாதங்களையும் கெட்ட பெயரையும் அடையமாட்டார், தான் எண்ணிய காரியங்களைச் செய்து முடிக்குஞ் சாமர்த்தியத்தை உடையவராவர்.

ஜாதகருடைய யோகபாவம்

16. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச்
[சங்கை
நாகமுந் தசத்தி லாக நிலவுசே யாறில் தங்கப்
பாகனும் பானு வெள்ளி பற்றிடம் நான்க தாக
ஆகையால் கமல யோக மளகேச யோக முண்டு.

16. ஜாதகருக்கு எவ்விதமாக யோகங்களைச் சொன்னீர்? அதற் குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரி மகரிஷி பதில் அளிக்கின்றார். நாகம் என்ற இராகு பத்திலிருப்பதாலும் நிலவு என்ற சந்திரனும் சேய் என்ற அங்காரகனும் ஆறுவது வீட்டில் இருப் பதாலும், பாகன் என்ற புதனும் பானு என்ற சூரியனும் வெள்ளி என்ற சுக்கிரனும் நான்காவது வீட்டில் இருப்பதாலும், ஜாதகருக்குக் கமலயோகம் என்ற ஒருவித யோகமும், அளகேச யோகம் என்ற குபேர யோகமும் உண்டாகி இருக்கின்றன.

குறிப்பு :—சூரியன் புதன் சுக்கிரன் இவர்கள் ஒருவருக்கொருவர் கேந்திரத்தில் இருப்பதாலும் அல்லது கூடியிருப்பதாலும் ஜாதக சிந்தாமணி இரண்டாயிரத்து இருபத்தொன்பதாவது பாடலின் பிரகார மும், இந்த ஜாதகத்தில் சாமரையோகம் என்ற ஒருவித யோகமும் இருக்கின்றதைக் கவனிக்கவும். லாபாதிபதி நான்கில் இருந்தால் குபேரயோகம் உண்டாகின்றது என்று பிருகுசம்ஹிதா யோகாவளி என்ற கிரந்தத்திற் சொல்லியிருப்பதைக் கவனிக்கவும் இந்த ஜாத கத்தில் லாபாதிபதியாகிய புதன் நான்கில் இருக்கின்றார். கமல யோகத்தைப்பற்றி ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்

றறுபத்தொன்பதாவது சுலோகத்தையும் ஜாதகசிந்தாமணி இரண்டாயிரத்து முப்பத்தைந்தாவது பாடலையும் பார்க்கவும். பிருஹஜ்ஜாதகம் பன்னிரண்டாவது அத்தியாயம் ஐந்தாவது சுலோகத்திலும் கமலயோகம் குறிக்கப்பட்டிருக்கின்றதையும் கவனிக்கவும். இந்த ஜாதகத்தில் கேசரியோகங்கூட இருக்கின்றது.

17. இருவித யோகத் தாலே யிவனுக்கு விராச மூலம்
மருவிடுஞ் ஜீவ னங்கள் வரைவீரே காலந் தன்னே
இருபத்துவிரண்டாண்டி லெய்திடுந் தொழிலு மென்றேரந்
திருகிலா அன்பான் மூன்றுஞ் செய்வனு மரசு தானே.

17. இங்கு (பதினேழாவது பாடலில்) சொல்லப்பட்ட இரண்டுவித யோகங்களின் பலத்தால் ஜாதகருக்கு அரசாங்கத்தார் மூலமாகத் தொழில் ஏற்படும். இவ்விதமாகத் தொழில் ஏற்படுகின்ற காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரி மகரிஷி பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இருபத்திரண்டாவது வயதில் தொழில் ஏற்படும் என்று சொல்லுகின்றோம். இவர் தனக்கு ஐம்பத்துமூன்று வயது வரையிலும் யாதொரு குற்றமும் குறைகளும் இல்லாமல் இராஜாங்கத்தில் அரசுரிமையை அஃதாவது அதிகாரத்தைச் செலுத்துவார்.

18. குருதசை காலந் தன்னில் கூறுவோம் விசேஷ யோகம்
பரிவண்டி யதிகா ரங்கள் பாக்கியஞ் சேர்த்த லுண்டு
பெருமையும் புகழு மெய்தும் பிறைபோலே தொழிலு
[மோங்குங்
கரியவன் தசையு மவ்வாறு கழறுவோம் யோகந் தானே.

18. ஜாதகருக்குக் குருதசை நடக்குங் காலத்தில் விசேஷமான யோகம் உண்டாகும் என்று சொல்லுகின்றோம். ஜாதகருக்கு குதிரை வண்டியும் அதிகாரங்களும் செல்வமும் வந்து சம்பவிக்கும். இவருக்குக் கீர்த்தியும் புகழும் பெருமையும் உண்டாகும். வளர்பிறைச் சந்திரனைப்போல இவருடைய உத்தியோகமும் நாளுக்குநாள் உயர்ந்து கொண்டே போகும். கரியன் என்ற சனிதசையும் இவ்விதமாகவே யோகத்தைக் கொடுக்கும் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—அஷ்டமாதிபதியாகிய குருவும், விரயாதிபதியாகிய சந்திரனும் கூடி துஸ்ஸ்தானம் என்ற ஆறுவது பாவத்தில் இருப்பது ஒரு விசேஷ யோகத்திற்குரிய அம்சம் ஆகும். ஆகையால் கேசரியோத்தை யடைந்த குரு தனது தசையில் விசேஷ யோகத்தைக் கொடுக்க அமைப்பு உடையவராக விருக்கின்றார். குருவினுடைய நீசபங்க ராஜயோகத்தைப்பற்றிப் பலதீபிகை ஏழாவது அத்தியாயம் இருபத்தாறு இருபத்தேழு இருபத்தொன்பதாவது சுலோகங்களைப் பார்க்கவும்.

ஜாதகருடைய சகோதரங்களும் (சகோதர பாவமும்)

சகோதரனுடைய குணங்களும்

19. தன்துணை யாண்பா லொன்று சத்திமா ரிருவர் தீர்க்கம்
சொன்னவாண் குணத்தைச் சொல்வேன் தொல்புவி
[விருத்தி செய்வான்
உன்னதச் செட்டு செய்வ னுறுதியா மனத்த னவன்
பன்னியே பேசுவானும் பாக்கியம் விருத்தி செய்வன்.

19. ஜாதகருக்குக் கூடப்பிறந்த ஒரு சகோதரனும் இரண்டு சகோதரிகளும் இருப்பார்கள். இவர்கள் நீண்ட ஆயுளை யுடையவர்களாக விருப்பார்கள். இந்தச் சகோதரனுடைய குணகுணங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் பழைய நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். இவர் மேன்மையான வியாபாரத்தைச் செய்வார், நிலையான மனத்தை யுடையவராவர். இவர் சாமர்த்தியமாகவும் விமரிசையாகவும் பேசும் திறமையை யுடையவராவர், செல்வத்தை அதிகப்படுத்துவார்.

20. வித்தையுஞ் சமம தாகும் விருந்தோர்மேல் பிரிய னவன்
பத்தினிக் கிஷ்ட னவன் பகர்வதில் கிலேடை யுண்டு
வெத்திச் சொல் லுடைய னவன் விரதங்கள் பூண்பா
[னவன்
நத்தினோர்க் குதவி செய்வன் நவி லுவான் கட்டு வார்த்தை.

20. ஜாதகருடைய சகோதரருக்குக் கல்வி சமநிலையை யுடையதாக விருக்கும், அஃதாவது நடுத்தரமானதாக விருக்கும். இவர் விருந்தினர்களிடத்தில் அன்புடையவராக விருப்பார். இவர் தன்னுடைய மனைவிக்குப் பிரியமானவராக விருப்பார். இவர் பேசுவதில் இரண்டு அர்த்தங்களை உடைய வார்த்தைகளைச் சொல்லுவார். இவருடைய வார்த்தைகள் மேன்மை யுடையனவாகவும் சிறந்தவையாகவும் இருக்கும். இவர் விரதங்களை அனுஷ்டிப்பவராவர். இவர் தன்னிடம் நிற்கு வந்து உதவியை எதிர்பார்ப்பவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். புனைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையும் இவர் உபயோகப்படுத்துவார்.

21. இன்னவன் செங்கை தன்னி
லிலகிடும் பிரம ரேகை
பொன்னது செலவு செய்யான்
பெரியோர்சொல் தடுக்கா னவன்
அன்னியர் மதிப்பு கொள்வான்
ஆள்காரர் பணையோர் விருத்தி
தன்மனை யொன்றே தீர்க்கஞ்
சங்கரி மேலுங் கேளே.

21. ஜாதகருடைய சகோதரர் தன்னுடைய உள்ளங்கையில் பிரம் ரேகை என்ற ஒருவித ரேகையை உடையவராவர். இவர் பணத்தைச் செலவு செய்யமாட்டார், பெரியோர்களுடைய வார்த்தைகளுக்குத் தடுத்துப் பேசமாட்டார். இவரிடத்தில் பிறர் கௌரவத்தைக் காட்டிக் கொள்பவராக விருப்பார்கள். இவருக்கு வேலைக்காரர்கள், நிலங்கள் ஏர்கள் ஆகிய இவை விருத்தியாகும். இவருக்கு மனைவி ஒருத்தியே யாவள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவள். பார்வதியம்மையே! நாங்கள் இன்னுஞ் சொல்லப்போவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய் முதலாவது சகோதரியினுடைய குணதிசயங்கள்

22. சுதர்களு மாண்பா லிரண்டு தோகையர் நால்வர் தீர்க்கம்
அதிபனும் வயது தீர்க்க மங்கைமுன் சேதி கேளாய்
அதிதிபோல் வார்த்தையுண்டு வழகுளாள் ரதியை [யொப்பாள்
சதியிலா மனத்த ளாவள் சீலியாம் விரத மேற்பள்.

22. ஜாதகருடைய சகோதரருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் நான்கு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவருக்கு வயது தீர்க்கமாகும். இவருடைய முதலாவது சகோதரியினுடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவள் பரதேசிகளைப் போல வார்த்தைகளைச் சொல்லுவாள். அழகில் இவள் மன்மதனுடைய மனைவியாகிய ரதியைப்போல சௌந்தரியமுள்ளவளாகவிருப்பாள். இவள் கொடுமையான மனத்தை உடையவளல்லள், நல்லொழுக்கமுடையவள், விதரங்களை அநுஷ்டிப்பவளாவள்.

23. வருமையெப் போதுங் காணுள் வரன்மனம் போலே [வாழ்வள்
பெருமையாய்ப் புத்தி யுண்டு பிறர்குற்றம் புகலா ளாகும்
நறைமல ரிஷ்டங் கொள்வள் நாயகி வயது தீர்க்கம்
வரனுமே கீழ்ப்பால் நேருமைந்தர்க ளாண்பால் மூன்று ;

23. ஜாதகருடைய முதலாவது சகோதரி எந்தக் காலத்திலும் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அடையமாட்டாள். இவள் தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக வாழ்பவளாவாள். இவள் மேன்மையான சிறந்த புத்தியையுடையவளாவாள், அன்னியர்மேல் அபவாதங்களையும் நிந்தைகளையுஞ் செரல்லமாட்டாள். இவள் வாசனையையுடைய புஷ்பங்களில் பிரியமுள்ளவள். இவள் நீண்ட வயதையுடையவளாவள். இவளுக்குப் புருஷன் இழக்குத் திக்கிலிருந்து வருவார். இவளுக்கு மூன்று ஆண் குழந்தைகளும்;

ஜாதகருடைய இரண்டாவது சகோதரியின் விஷயங்கள்

24. கன்னிகை யிருநான் காகுங்
கணவனுக் கிவளால் யோகம்
பின்கன்னி சேதி சொல்வேன்
பொருத்தமாய்ப் பேசு வாளாம்
அன்னமுங் குறை வுறுதா
ளாபத்தைச் சிலர்க்குக் காப்பள்
தன்சொலே மேன்மை யாகச்
சாதிப்பாள் பித்த தேகி.

24. ஜாதகருடைய முதலாவது சகோதரிக்கு இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு இவளால் புருஷனுக்கு யோகம் உண்டாகும். ஜாதகருடைய இரண்டாவது சகோதரியின் விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் விஷயங்களுக்குப் பொருத்தமாக இருக்கும் படி பேசுபவள் ஆவள். இவள் சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டங் களை அனுபவிக்கமாட்டாள். சிலருடைய ஆபத்துக் காலங்களில் இவள் இவர்களைக் காப்பாற்றுவாள். இவள் தான் சொல்லுகின்ற வார்த்தைகளே மேன்மையானவை என்றும் சிறந்தவை என்றும் வாதித்து நிலைநாட்டுவாள். இவள் பித்த ரோகமுள்ள தேகத்தை உடையவளாவள்.

25. வரனுமே மேல்பால் நேரு மைந்தர்க ளாண்பா
[லொன்று
அரிவையு மிரண்டு தீர்க்க மழகான குடும்ப மேற்பன்
திருமகன் வயது தீர்க்கஞ் செப்பின மொழி குன்றுவே
பெருவயி றுறுனப் பெற்றப் புண்ணிய சாலி கேளாய்.

25. ஜாதகருடைய இரண்டாவது சகோதரிக்குப் புருஷர் மேற்குத் திக்கிலிருந்து வருவார். இந்தச் சகோதரிக்கு ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப் பார்கள். இவள் மேன்மையான குடும்பத்தை உடையவளாக இருப் பாள். இவள் நீண்ட வயதை உடையவள். நாங்கள் சொல்லிய வார்த் தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். பெரிய வயிற்றை உடைய விஜயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதி யாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரின் குணதிசயங்கள்

26. இன்னமும் விபர மாக யியம்புவோம் பின்பா கத்தில்
அன்னையின் சேதி கேளா யாளன்தன் மனதுக்
[கேத்தோள்
கன்னென மொழியு முண்டு கன்மனங் கொஞ்ச முண்டு
அன்னியர் மதிக்க வாழ்வ ளணுகிடும் பித்தச் சூடு.

26. நாங்கள் பின்பாகத்தில் இன்னமும் விஷயங்களை விபரம்ாகச் சொல்லப்போகின்ரோம். ஜாதகரின் தாயாருடைய குணாதியங்களைப்பற் றிச் சொல்லுகின்ரோம், கேட்பீராக. இவள் தனது புருஷனுடைய மனத் திற்குத் தகுந்தாற்போல் ஒற்றுமையாக இருப்பாள், சக்கரைப்போன்ற இனிப்பான வார்த்தைகளைச் சொல்லுவாள், கடினமான மனத்தைச் சிறிது உடையவள் ஆவள். இவள் பிறர் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்பவள் ஆவள். இவளுக்குப் பித்தச் சூட்டு ரோகம் உண்டு.

ஜாதகரின் தாயாருடைய சகோதரங்களும் (சகோதரபாவமும்) முன் ஜன்மமும்

27. முன்கோப முடனே சாந்தம்
மூலச்சூ டுடைய ளாவள்
தன்னுடல் மெலிவு முண்டு
சந்தேக மனத்த ளாவள்
தன்துணை யாண்பா லிரண்டு
தங்காது வொன்று வென்ரோம்
முன்ஜன்மம் புகலு கின்ரோம்
மூதல்வியே கேட்டி டாயே.

27. ஜாதகருடைய தாயார் பேசுவதற்கு முன்னே கோபத்தை உடையவளாக இருப்பாள். இவள் மெலிந்த தேகத்தை உடையவள் ஆவள். இந்தக் கோபம் உடனே தணிந்துவிடும். இவள் மூலச்சூட்டு ரோகத்தை உடையவளாக இருப்பாள். இவள் மெலிந்த தேகத்தை உடையவளாவள், சந்தேகத்தை உடைய மனத்தை உடையவளாக இருப்பாள். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள் ஆவார்கள். இவர்களில் ஒருவர் இறந்துவிடுவார் என்று செசல்லு கின்ரோம், இந்தத் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லு கின்ரோம், தலைவியே ! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

28. வித்தகி பூர்வஞ் சொல்வேன் வெண்குன்ற மலைக்குத் தென்பால்
புத்தர்கள் குலமு தித்துப் புதல்வர்க ளதிக முண்டாய்ச்
சுத்தமாய் விரதங்கள் பூண்டு துன்பமு மில்லா ளாகிப்
பத்தினிள் கால நாடு பிரமனும் வரையப் பட்டு ;

28. ஜாதகருடைய தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்ரோம். வெண்குன்றம் என்ற மலைக்குத் தெற்கில் ஒரு கிரா மத்தில்பௌத்தமதத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து அதிக சந்ததி களை உடையவளாகிச் சுத்தமான விரதங்களை அனுஷ்டித்து யாதொரு

கஷ்டங்களும் இல்லாதவளாகி வாழ்ந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப்போய் பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு;

ஜாதகரின் தாயாருடைய மறுஜன்மமும் மரணமும்

29. வந்தவ னென்று சொல்வோம்
மறு ஜன்மம் வேங்கடத்தில்
இந்த தோர்குல முதிப்பா
னியம்புவீர் கருமு காலம்
மந்திரி திசை அந்தியத்தி
லாரு ரென்ரண்டு தன்னில்
விந்தையாய்த் தேளின் மாதம்
விளம்புவோ மன்னை கெண்டம்.

29. ஜாதகரின் தாயார் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றேம். இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் வேங்கடம் என்ற திருப்பதி க்ஷேத்திரத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய பிராமணர் குலத்தில் பிறந்தாள். இவருடைய மரண காலத்தைப்பற்றிச் சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரி மஹரிஷி பதில் சொல்லுகின்ரார். மந்திரி என்ற குரு பகவானுடைய தசையின் கடைசி பாகத்தில் ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் தேளின் மாதம் என்ற கார்த்திகை மாதத்தில் இவருடைய தாயார் ஆச்சரியமாக இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றேம்.

ஜாதகரின் தகப்பனுருடைய மரணமும் மறுஜன்மமும்

30. நாற்பது வாண்டு தன்னில் நற்றனுர் மாதந் தன்னில்
கூப்பிடு வானுங் காலன் குறித்ததோர் தந்தை யேதான்
ஏற்கவே யிவன்பின் ஜன்ம மியம்புவோம் வான்மீ பூரில்
தீர்ப்பாக யிக்கு லத்தில் ஜனிப்பனு மென்று சொல்வோம்.

30. ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் சிறந்த தனுர் மாதம் என்ற மார்கழி மாதத்தில் இவருடைய தகப்பனுரை எமன் வந்து அழைப்பார், அஃதாவது தகப்பனுர் இறந்து விடுவார். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவர் வான்மீயூர் என்ற திருவான்மியூர் என்ற க்ஷேத்திரத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய பிராமணர் குலத்திலேயே கண்டிப்பாகப் பிறப்பார் என்று சொல்லுகின்றேம்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணதிசயங்களும்

31. உதித்தவன் மணத்தின் கால
முரைக்கிறே மொருபா லுறுள்
அதிபதி மேற்கு நேரும்
வரைகிறே மவள்கு ணத்தைச்
சதியிலா மனத்த ளாவள்
சாதமு மன்பா யீவள்
துதிசெய்தோர்க் குதவு வாளாக்
துன்பங்க ளெவர்க்கு மெண்ணுள்.

31. ஜாதகருடைய விவாகக் காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவருக்குப் பதினாறு வயதிற்குள்ளே மனைவி மேற்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவள் கெடுதியில்லாத மனத்தை உடையவளாக இருப்பாள். இவள் பிறருக்குச் சாப்பாட்டைப் பிரியத்துடன் போடுவாள். இவள் தனைப்போற்றினவர்களுக்கு உபகாரத்தைச் செய்பவளாக இருப்பாள். இவள் யாருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டாள்.

32. மாந்துளிர் மேனி யாவள் வருவோரை யாத ரிப்பள்
சாந்தமுங் கோப மேற்பள் சற்பாத்திரி யோக சாலி
காந்தம்போல் புத்தி யுண்டு கல்விமான் நற்கு ணத்தாள்
நேர்ந்திடும் பித்தச் சூடு நிமலியுந் தீர்க்க ஜீவி.

32. ஜாதகருடைய மனைவி மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒரு விதமான சிவப்பு நிறத்தை உடையவளாக இருப்பாள். இவள் தன்னிடம் வருகிறவர்களைக் காப்பாற்றுவாள். இவள் சாந்தமான குணத்தையும் கோபமான குணத்தையும் உடையவளாக இருப்பாள். இவள் நல்ல தர்மங்களைச் செய்பவள், நல்ல உடலை உடையவளாகவும் யோகசாலியாகவும் இருப்பாள். இவள் காந்தத்தைப் போல வசீகரிக்கின்ற புத்தியை உடையவள் ஆவள். இவருக்குப் பித்தச் சூட்டு ரோகம் இருக்கும். இவள் நீண்ட ஆயுளை உடையவள்.

33. தோகைபோல் சாய லொப்பள் சுந்தர முடைய ளாவள்
ஆகம முணர்ந்தோ ருக்கு வன்னமு மன்பா யீவள்
நாகரி கங்க ளுண்டு நாட்டாண்மை யுடைய ளாவள்
போகபாக் கியங்க ளேற்பள் புண்ணிய சாலி கேளாய்.

33. ஜாதகருடைய மனைவி மயிலைப்போன்ற நீண்ட அழகான சரீரத்தை உடையவளாக இருப்பாள். இவள் சௌந்தரியத்தை உடையவளாக இருப்பாள். ஆகம சாஸ்திரங்களை யறிந்த பெரியார்களுக்கும், பரதேசிகளுக்கும் இவள் சாப்பாட்டைப் பிரியத்துடன் போடுவாள்

இவள் நாகரிகங்களை உடையவளாக இருப்பாள், நாட்டாண்மை என்ற அதிகாரத்தை உடையவளாக இருப்பாள். இவள் சகல போக பாக்கியங்களையும் அனுபவிப்பாள், சகல சம்பத்துக்களையும் உடையவளாக இருப்பாள், புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய சந்ததிகளும் (புத்திர பாவமும்) முன் ஜன்மமும்

34. மதலைக ளெழுவர் தோன்று மறித்திடு முதலில் தானுஞ்
சதமுட னுண்பா லிரண்டு சத்திமார் மூவர் தீர்க்கம்
இதுநிற்க வுதித்தோன் பூர்வ மியம்புவோங் கடையூர்
[தன்னில்
நிதிமிக வுடையா னுக்கு நேர்ந்தனன் வேளாள னுக.

34. ஜாதகருக்கு மொத்தத்தில் ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். முதலில் பிறக்கும் குழந்தைகள் இறந்துவிடுவார்கள். ஜாதகருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நிலைத்து நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இந்த விஷயம் இப்படியிருக்க, இனிமேல் ஜாதகருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் கடையூர் என்ற திருக்கடையூர் க்ஷேத்திரத்தில் அதிகமாகச் செல்வத்தையுடைய ஒரு வேளாள தனவந்தனுக்கு முன் ஜன்மத்தில் பிறந்தார்.

35. தரணியை விருத்தி செய்து தாகப்பந் தலும மைத்து
மறையவர்க் குதவி செய்து வளமிலார்க் கன்ன மீந்து
திருப்பணி செய்து வின்னோன் தீவினை யில்லா னுகி
உறைந்தனன் காலந் நாடு உலகவன் வரையப் பட்டு;

35. ஜாதர் நிலங்களைப்பயிரிட்டுத் தானியங்களை விருத்திசெய்து வழிப்போக்கர்களுடைய தாகத்தைத் தீர்ப்பதற்காக நீர்மோர் பந்தலை ஏற்படுத்தியும் பிராமணர்களுக்கு உபகாரங்களைச் செய்துகொண்டும் செழிப்பாய் இல்லாதவர்களுக்கும் ஏழைகளுக்கும் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டும் கோயில்களில் தெய்வங்களுக்கு வேலை செய்துகொண்டும் யாதொரு பாபங்களும் இல்லாமலிருந்து பிறகு இறந்து எம பட்டணத்திற்குப் போய் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு;

ஜாதகருடைய யோகபாவம்

36. பிறப்பனு மிந்தப் பாலன் பேசுவோ மிவனின் யோகங்
குறைவிலாக் குடும்பி யாவன் கோவலர் மதிக்க வுய்வன்
அரசரால் தொழிலு மேற்ப னவனிக ளதிகஞ் சேர்ப்பன்
கருவினோர் நசிக்க வைப்பன் காலாட்க ளுடைய னுவன்,

36. ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கிறார். இவருடைய யோகபாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் யாதொரு கஷ்டங்களையும் அடையாத குடும்பஸ்தராக இருப்பார். கோவலனைப் போல உள்ள தனவான்களும் அரசர்களும் இவரை மதிக்கும்படியான அந்தஸ்தியிலிருந்து கொண்டு வாழ்வார். இவர் அரசாங்கத்தில் உத்தியோகத்தை அடைவார். நிலங்களையும் மனைகளையும் அதிகம்மாகச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் தன்னுடைய பகைவர்களை நாசஞ்செய்துவிடுவார். கால்நடை வேலையாட்கள் இவர்களை உடைய வராக இருப்பார்.

ஜாதகருடைய மரண காலம்

37. சித்திர யில்ல மொன்று செய்வனுங் குருவின் காலம்
விதகன் மரண காலம் விளம்புவோ மன்பா னெட்டில்
சத்தியே கன்னி மாதஞ் சதுர்த்தசி வளர்ப்க கத்தில்
குத்தமாய்க் காலந் நாடு கொள்ளுவா னென்று
[சொல்வோம்.

37. ஜாதகர் குரும்காதசை காலத்தில் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு வீட்டைக் கட்டுவார். இவருடைய மரண காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தனக்கு ஐம்பத்தெட்டாவது வயதில், பார்வதி யமமையே! கன்னிமாதம் என்ற புரட்டாசி மாதத்தில் வளர் பிறையில் சதுர்தசிதிதியில் இறந்து கெடுதியை உடைய எமப் பட்டணத்திற்குப் போவார் என்றுச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மறுஜன்மமும் ஜனனகால தசையும் இருப்பும்

38. மருஜன்மந் தணிகை தன்னில் வருவனுஞ் சத்திரியச்
[சேயாய்
திருமனை ஜனன காலஞ் சேய்தசை யாண்டு ஆறும்
உறைந்திடுந் திங்கள் நாலு முரைத்தனம் பூர்வ பாகம்
அருமறை முடிவி லாடு மம்பிகை யாளே கேளாய்.

38. ஜாதகர் தன்னுடைய மறுஜன்மத்தில் தணிகை என்ற திருத்தணிகை க்ஷேத்திரத்தில் க்ஷத்திரியர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவருடைய ஜனன காலத்தில் சேய் என்ற அங்காரகனின் தசையில் இருப்பு ஆறு வருடங்களும் நான்கு மாதங்களும் ஆகும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாகப் பூர்வ பாகத்தைச் சொல்லி முடித்துவிட்டோம். அருமையான வேதங்களின் முடிவு என்ற உப நிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 115

ஜனன கால கிரகநிலை

1. [1]கலிபுதன் [2]வெள்ளி [3]பானு [4]கெண்டையில் கேது [5]வண்டி [6]நிலமகன் [7]சாடி யாக [8]லேனுங் [9]தேள தாகக் குலகுரு கன்னி யாகக் [10]கொடுவிஷம் [11]மான தாகத் [12]தலமது சிம்ம மாகச் சாற்றுவீர் பலனை யென்று ;

1. சந்திரனும் புதனும் சுக்கிரனும் சூரியனும் மீனத்திலும், கேது கடகத்திலும், அங்காரகன் கும்பத்திலும், சனி விருச்சிகத்திலும், குரு கன்னியிலும், இராகு மகரத்திலும் இருந்து ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இருந்தால் பலா பலன்களைச் சொல்லுவீர் என்று ;

கிரகநிலை

சந்திரன் புதன் சுக்கிரன் சூரியன்			
அங்காரகன்	இராசி சக்கரம்		கேது
ராகு			லக்கினம்
	சனி		குரு

உத்தரட்டாதி 3-ஆம் பாதம் : சனி தசை வரு 9-0-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரக நிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்தில் குருவும், கடகத்தில் கேதுவும், கன்னியில் சூரியனும், துலாத்திற் சந்திரனும், விருச்சிகத்தில் சனியும், தனுசில் அங்காரகனும், சுக்கிரனும், மகரத்தில் இராகுவும், கும்பத்தில் புதனும் ஆகும். குரு வக்கிரகதியில் இருக்கின்றார்.

---

1. சந்திரன்
2. சுக்கிரன்
3. சூரியன்
4. மீனம்
5. கடகம்
6. அங்காரகன்
7. கும்பம்
8. சனி
9. விருச்சிகம்
10. இராகு
11. மகரம்
12. லக்கினம்.

ஜனன நகரச் சிறப்பு

2. சுந்தரி கேட்கும் போது ஜயமுனி கூறு கின்றார்
இந்தசே யாணஞ் ஜன்ம மில்லமும் வாடை யாகும்
மூந்திய பேரூ ராகு மொழிகிறே மந்தச் சங்கை
அந்தவ னிரண்டாஞ் ஜன்ம மருளுவா னிந்தப் பாலன்.

2. பார்வதியம்மையார் கேட்கும் பொழுது, ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். பிறந்த இந்தக் குழந்தை ஆண் குழந்தை யாகும், பிறந்த வீடு வீடுகள்வரிசையாக உடைய ஒரு வாடையில் இருக்கும். பிறந்த ஊர் சிறப்பான ஒரு பெரிய ஊராக இருக்கும். பிறந்த விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஜாதகர் இரண்டா வது குழந்தையாகப் பிறப்பார்.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்களும் (சகோதரபாவமும்) குணதிசயங்களும்

3. தந்தையின் தூணையா னிரண்டு சத்திமா ரொருத்தி யாவள்
அந்தவாண் வேறார் வாச மவர்பலன் பின்னுல்
[சொல்வேன்
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மிருநி றத்தான்
தந்தையி னில்லம் வாழான் தான்வேறு ருத்தரம் வாசம்.

3. ஜாதகரின் தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் ஆவர். இந்தச் சகோதரர்கள் வெளி யூரில் வாசஞ் செய்வார்கள். இவர்களுடைய பலாபலன்களைப் பின்னுல் சொல்லுகின்றேன். ஜாதகரின் தகப்பனருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிற மாகிய மாநிறத்தை உடையவராவர். இவர் தன்னுடைய தகப்பனரின் வீட்டில் வாசஞ் செய்யமாட்டார், வடக்கில் இன்னோர் ஊரில் வாசஞ் செய்வார்.

4. மதுத்தொழில் புரிவா னுவன் வடிவினில் குள்ள னுவன்
சதியிலா மனத்த னுவன் சாப்பாட்டுச் சுகிய னென்றோம்
நிதிசேர்ப்பன் செலவு செய்வன் நினைத்தகாரிய முடிப்பன்
சதியிலா மனத்த னுவன் தருமமாங் குணமு முள்ளான்.

4. ஜாதகருடைய தகப்பனர் சாராயம் கள் முதலிய லாகிரி வஸ் துக்களில் வியாபாரம் செய்பவராவர். இவர் உருவத்தில் குள்ளமாக இருப்பார். இவர் கெடுதியில்லாத மனத்தை உடையவராக இருப்பார், சுகமான சாப்பாட்டை சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பார் என்றுச் சொல்லுகின்றோம். இவர் தனத்தைச் சேர்த்து வைப்பார், செலவும் செய்வார், தான் செய்ய எண்ணிய காரியங்களைச் செய்து முடிப்பார்,

இவர் குரோதமில்லாத மனத்தை உடையவராவர். இவர் தரும்ம் செய்யும் குணத்தை உடையவராக இருப்பார்.

குறிப்பு :—சதியில்லாத மனத்தனுகும் என்பது மூலத்தில் இரண்டு தடவை வந்திருப்பதைக் கவனிக்கவும். நல்ல மனத்தை உடையவர் என்று உறுதியாகச் சொல்ல இவ்விதமாக இரண்டு தடவை குறிப்பிட்டிருப்பதாகத் தோற்றுகிறது.

5. அறுமுகன் பக்தி கொள்வ னுள்கார ருடைய னுவன்
வருவோரை யாதரிப்பன் வாக்குச் சொல் காப்ப னுவன்
மறுவரை வசித்தே வெல்வன் மனத்திற மில்லா னுவன்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

5. ஜாதகருடைய தகப்பனுர் ஆறுமுகக் கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவர் வேலைக்காரர்களை உடையவராக இருப்பார். இவர் தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவார், தன்னுடைய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவர் ஆவர். இவர் பகைவர்களைத் தன் பக்கமாக ஆக்கிகொண்டு அவர்களை ஜயித்து விடுவார், தைரியமான மனத்தை உடையவர் அல்லர். கருப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய குணதிசயங்கள்

6. சொல்லிய குணத்தா னுக்குத் தோகையு மூவர் தம்மில்
இன்னவன் கடைமா துக்கு விறங்குவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வே னழகுளா னிருங்
[றத்தன்
தன்சொலு மடக்க முண்டு சந்தேக மனத்த னுவன்.

6. இங்கு சொல்லப்பட்ட குணங்களையுடைய தகப்பனுருடைய மூன்று மனைவிமார்களுக்குள் மூன்றுவது மனைவி பெற்றப்பிள்ளையாவர் இந்த ஜாதகர். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் அழகுள்ளவராக இருப்பார், இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை உடையவராவர். இவர் சாந்தமாகவும் வணக்கத்துடனும் பதில் சொல்லுவர். இவர் சந்தேகத்தை உடைய மனத்தை உடையவராவர்.

7. வித்தையு மிரண்டு கற்பன் விவேகியா யெவர்க்கு
[நல்லோன்
உத்தம குணத்த னுவ னேறுறு முகத்தோன் பக்தி
எத்திசைப் புகழு மேற்ப னேவலா ளுடைய னுவன்
நத்தினோர்க் குதவி செய்வன் நயம்படக் கூறு வானும்.

7. ஜாதகர் இரண்டு விதமான கல்விகளைக் கற்றவராவர். இவர் அறிவுடையராக இருப்பார், எல்லோருக்கும் நல்லவராக இருப்பார். இவர் சிறந்த நல்ல குணத்தை உடையவராக இருப்பார், ஆறுமுகக் கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவர் எல்லாத் திக்குகளிலும் பெருமையையும் கீர்த்தியையும் உடையவராக இருப்பார். இவர் வேலையாட்களை உடையவராவர், தன்னிடம் வந்து சகாயத்தை எதிர்பார்ப்பவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார், நயமாகவும் இனிமையாகவும் பேசுபவர் ஆவர்.

8. பலவண்ணி பங்கள் செய்வன் பரவுப காரனுவன்
விலைமாதர் மோகங் கொள்ளான் வெஞ்சினம்
[வெளிக்காட் டாதான்
சிலதுநாள் மாமன் பக்கல் சென்றுமே ஜீவிப்பானும்
கலகத்தைக் கூறு னுவன் கஞ்சமாம் ரேகை யுள்ளான்.

8. ஜாதகர் பலவிதமான வியாபாரங்களைச் செய்வார். இவர் பிறருக்குச் சகாயங்களைச் செய்பவராவர். இவர் தாசிகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவர் அல்லர். இவர் தன்னுடைய கடுமையான கோபத்தை வெளியில் தெரியும்படியாகக் காண்பித்துக் கொள்ளமாட்டார். இவர் சிறிது காலம் தன்னுடைய அம்மானிடம் போய் அவ்விடத்தில் ஜீவிப்பவர் ஆவர். இவர் சண்டையை உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லாதவராக இருப்பார். இவருடைய உள்ளங்கையில் தாமரைரேகை என்ற ஒருவிதமான ரேகை இருக்கும்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

9. தன்துணை யாண்யா லொன்று சத்திமார் மூவர் தீர்க்கம்
தென்முனி புகலுகின்றார் செப்பினீர் முன்தா யிரண்டு
அன்னவர் தமக்குப் புத்தி ரறிவிப்பிர் முனியே கீர்தாம்
மூன்தாய்க்குக் கன்னி யொன்று மோங்குமுந் தீர்க்க மாக.

9. ஜாதகருடன் கூடப்பிறந்தவர்களில் ஒரு சகோதரரும் மூன்று சகோதரிகளும் ஆவர். இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவ்விதமாக ஜயமுனிவர் சொல்லவே, தென் முனிவர் என்ற அகஸ்திய மகரிஷியானவர் தடுத்துக் கேட்கின்றார். இவருக்குப் பெரிய தாய்மார்கள் இருவர் என்று சொன்னீரே! அவர்களுக்குச் சந்ததிகள் உண்டா? இல்லையா? என்பதை முனிவரே, நீரே சொல்லுவீராக. இதற்கு ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். இவருடைய மூத்த தாயாருக்கு ஒரு பெண் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள்.

10. மறித்துமே பின்தானென்று மருவிடு மாண்பா லொன்று
உரைத்திட்டோந் தீர்க்க மாக வுத்தமி மரிப்பா ளாவள்
திருத்தமா யிவனின் தாயார் தீர்க்கமா மென்று
[சொல்வோங்
கருத்திடு குழலி னளே கழறின மொழிகுன் றுவே.

10. ஜாதகருடைய மூத்தத் தாயார் இறந்தபிறகு இரண்டாவது தாய் வந்து சேரிடுவாள். இவளுக்கு ஆண் குழந்தை ஒன்று நீண்ட ஆயுளை உடையதாக இருக்கும் என்று சொல்லுகின்றோம். இந்த இரண்டாவது தாயாரும் இறந்து விடுவாள். ஜாதகருடைய தாயார் நீண்ட ஆயுளை உடையவள் என்று சொல்லுகின்றோம். கருத்த கூந்தலையுடைய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய தாயாரின் குணாதிசயங்கள்

11. மாதிரு குணமெவ் வாறு வறிவிப்பீர் முனியே நீர்தாம்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுயர்வான புத்தி யேற்பள்
சூதிலாள் நற்கு ணத்தாள் தோழன்தன் மனத்துக்
[கேத்தோள்
வேதனை யொருவர்க் கெண்ணாள் வித்தகி யோக சாலி.

11. ஜாதகரின் தாயாருடைய குணங்கள் எவ்விதமாக விருக்கும் என்பதைப்பற்றி, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்கவே, ஜய முனிவர் பதில் சொல்லுகின்றார். இவள் வார்த்தைகளை இனிமையாகச் சொல்லுவாள். இவள் மேன்மையான சிறந்த புத்தியை உடையவளாவாள். இவள் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகள் இல்லாதவளாக விருப்பாள், நல்ல குணங்களை உடையவளாக விருப்பாள். தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருப்பார்கள், இவள் யாருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டாள். இவள் யோகசாலியாக விருப்பாள்.

12. அறமதி லிச்சை யுண்டு யாவர்க்கு நல்லோ ளாவள்
தரிபடக் கூறு ளாவள் தானின மனத்தா ளாவள்
வருந்துணை யாண்பா லிரண்டு மங்கையர் நால்வ ராவர்
பெறுமன்னை யிரண்டு மாவர் பேசிய யிளையா ளுக்கு;

12. ஜாதகருடைய தாயார் தர்மத்தில் பிரியமுள்ளவளாவள், எல்லோருக்கும் நல்லவளாக விருப்பாள். இவள் கொடுமையாகவும் கண்டிப்பாகவும் பேசமாட்டாள், இளகிய மனத்தை யுடையவளாக விருப்பாள். இவளுக்கு இரண்டு சகோதரர்களும் நான்கு சகோதரிகளும் இருப்பார்கள். இவளுக்கு இரண்டு தாயார்கள் உண்டு. இவளுடைய இளைய தாயாருக்கு;

ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மம்

13. உதிப்பளா மிந்தப் பாவை யுயர்விலாத் தாய்க் குடும்பம்
பதியது வலைச்ச லெய்தும் பகருவோ மிவள்முன் ஜன்மம்
நதியினி லுயர்வ தான நற்சேது பதியி லேதான்
விதியவன் குலமு தித்து வித்தகி சுகமாய் வாழ்ந்து;

13. ஜாதகருடைய தாயார் பிறந்தவளாவாள். இவளுடைய குடும்பம் மேன்மையை உடையதாக விராது. இவளுடைய புருஷனுக்கு அலைச்சல் திரிச்சல்கள் ஏற்படும். இவளுடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். க்ஷேத்திரங்களில் சிறந்ததான சேது ஸ்தலத்திலே இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் பிராமண்ர் குலத்திற் பிறந்து சௌக்கியத்துடன் வாழ்ந்து;

ஜாதகருடைய தாயாரது மறு ஜன்மம்

14. அதிதிக்கு வன்ன மீந்து வந்தகன் நகரஞ் சென்று
விதியவன் வரையப் பட்டு விளங்கிலை எரிந்த மாது
அதிபதி பின்ஜன் மங்கேள் மாயூர நாட்டிலேதான்
முதற்குலந் தனிலு திப்பாள் வித்தகி கேட்டி டாயே.

14. பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப்போட்டு இறந்து எம்பட்டணம்போய்ப் பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இவள் வந்து பிறந்திருக்கின்ருள். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவள் மாயூரம் என்ற மாயவரத்தில் முதற் குலம் என்ற பிராமணர் ஜாதியிற் பிறப்பாள், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனுரது முன் ஜன்மம்

15. தந்தையின் முன்ஜன் மத்தைச்
சாற்றுவோந் தாயே கேளுந்
தென்திசை சேர நாட்டில்
ஜனித்தனன் மறவ னாக
முந்திய குடும்பி யாகி
முதல்வனும் வாழுந் நாளில்
வந்தவூழ் தன்னைச் சொல்வேன்
மங்கையே கேட்டி டாயே.

15. ஜாதகருடைய தகப்பனுரது முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே! கேட்பீராக. இவர் தெற்குத் திக்கிலுள்ள சேரதேசத்தில் மறவருடைய குலத்தில் ஆண் குழந்தை

யாக முன்ஜன்மத்திற் பிறந்தார். இவர் சிறந்த ஒரு குடும்பஸ்தராகி வாழுகின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த வினையைச் சொல்லுகின்றேன், பார்வதியம்மையே! கேட்பீராக.

16. கன்னிகை யொருத்தி பேரில்
கழறொணு வார்த்தை சொல்ல
அன்னவள் மனமும் வெக்கி
வறைந்த சாபத்தைக் கேண்மோ
தன்மையாய் வார்த்தை யென்மேல்
செப்பின பாவிக் கேதான்
பின்வருஞ் ஜன்மந் தன்னில்
பாரியு மனேக மாகும்.

16. ஜாதகருடைய தகப்பனர் ஓர் இளம்பிராயமுள்ள ஸ்திரீயின் மேல் சொல்லக்கூடாத வார்த்தைகளை அபாண்டமாகச் சொல்லவே இவள் தன்னுடைய மனத்தில் வெட்கத்தை அடைந்து கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. "என்மேல் கெட்ட வார்த்தைகளைச் சொல்லிய பாவிக்குத் தன்னுடைய மறு ஜன்மத்தில் அநேக ம்னைவிகள் ஏற்படக்கடவது";

17. தந்தையி னஸ்தி காணன்
தானவன் வாசஞ் செய்வன்
விந்தையாய் மதுமோ கத்தால்
மேவுவான் காலந் நாடு
இந்தவாறு சொல்ல லுற்ரு
ளெய்திற் றந்தச் சாபங்
கந்தனே யின்ற மாதே
கழறின மொழி குன்ரு வே.

17. இவருக்குப் பிதுரார்ஜிதம் கிடைக்கக் கூடாது. இவ்விதமாக இவர் வாழக்கடவது. இவர் கள் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களில் ஆச்சரியப்படும்படியாக அளவு மீறிய ஆசையை யுடைய வராகி அதனல் இறந்துவிடக் கடவது". இவ்விதமாக இந்த ஸ்திரீ முன்ஜன்மத்தில் ஜாதகருடைய தகப்பனரைப் பார்த்துச் சொன்னள். இவளுடைய இந்தச் சாபமானது இவரை அணுகிற்று. முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

18. முன்னமுஞ் சிலது துன்ப
மெய்திற்று வென்று சொல்வோம்
மன்னனு மந்தி யத்தில்
வாய்ப்புண்ணல் மரண மாகிப்
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறந்தனன் சான்றோர் வம்சம்
முன்ஜன்ம வினைக ளெல்லாம்
மேவிடு மென்று சொல்வோம்.

18. ஜாதகருடைய தகப்பனுருக்கு இன்னமும் சில பாவங்கள் வந்து சம்பவித்தன என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் வாயில் புண்கள் உண்டாகி அதனால் இறந்து பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு சாணூர் குலத்தில் பிறந்திருக்கின்றார். முன்ஜன்மத்திய பாவங்கள் இந்த ஜன்மத்தில் இவரை அடையும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனுரது மரணகாலம்

19. பாரியும் மூவ ராவர் மனையில்ல மடையா னவன்
வேறூரில் வாச மாவன் மேவிடும் நீரால் பாதை
கூறுவீர் கரும காலங் குழவிக்கு மூப்பா னெட்டில்
சேருவான் காலந் நாடு தென்முனி தடுத்துச் சொல்வார்.

19. ஜாதகருடைய தகப்பனுருக்கு மூன்று மனைவிமார்கள் சம்பவிப்பார்கள். இவர் வேறு ஸ்திரீகளுடைய வீட்டிற்குப் போகமாட்டார், அஃதாவது தாசிகளை வைத்துக்கொண்டிருக்கமாட்டார். இவர் வேறொரு கிராமத்தில் வாசஞ் செய்வார். இவருக்கு ஜலத்தால் துன்பங்கள் உண்டாகும். இவரது மரண காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, ஜாதகருக்கு முப்பத்தெட்டாவது வயதில் இவருக்கு மரணம் நேரிட்டு, இவர் எமபட்டணம் போய்ச் சேருவார் என்று ஜயமுனிவர் சொல்லவே, தென்முனி என்ற அகஸ்திய மகரிஷியானவர் தடுத்துச் சொல்லுகின்றார்.

20. புந்தியின் தசையில் பூர்வம் பொருந்திடு மீரா ரூண்டில்
வந்திடுங் கண்ட மென்றே மறலியைக் காணு னவன்
முந்திய கரும சாந்தி முறைப்படிச் செய்வா னகில்
அந்ததோர் வினைகள் நீங்கி யாரூறு விரண்டுந் தீர்க்கம்.

20. ஜாதகருக்கு பன்னிரண்டாவது வயதில் புதன்தசையின் முன் பாகத்தில் இவருடைய தகப்பனுருக்குக் கண்டம் நேரிடும் என்று அகஸ்திய மஹரிஷி சொல்லவே, ஜயமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். இவர் சாஸ்திரங்களில் சொல்லியபடி முன்பாகவே கர்ம சாந்தி

யைச் செய்வாராஞல் இவருக்கு ஏம் தரிசனம் நேரிடாது, இந்தக் கண்டங்கள் நிவிர்த்தியாகிவிடும். இந்த ஜாதகர் முப்பத்தெட்டு வயது வரையிலும் தீர்க்கமான ஆயுளை உடையவராக இருப்பார்.

ஜாதகருடைய தகப்பனரது மறு ஜன்மம்

21. சொல்லிய படிசெய் யானேல்
துன்பங்கள் மிகவு முண்டாஞ்
சொல்லிய படிசெய் வானேல்
தொடர்ந்ததோர் வினைகள் நீங்கும்
வல்லவன் பின்ஜன் மங்க
ளறுமுகன் வாழ்செந் தூரில்
புல்குவான் பிரம சேயாய்ப்
பிருகுவு மறித்துச் சொல்வார்.

21. நாம் சொல்லியபிரகாரம் கர்மசாந்தியை ஜாதகருடைய தகப்பனர் செய்யாவிட்டால் இவருக்கு அதிகமான கஷ்டங்கள் உண்டாகும். நாம் சொல்லியபிரகாரம் செய்வாராகில் இவருக்குச் சம்பவிக்கின்ற கண்டங்களும் கஷ்டங்களும் நிவிர்த்தியாகிவிடும். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் ஆறுமுகக் கடவுள் வாழ்கின்ற செந்தூர் என்ற திருச்செந்தூர் ஸ்தலத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பார். இவ்வித மாக ஜயமுனிவர் சொல்லவே, பிருகு மஹரிஷி தடுத்துக்கேட்கின்றார்.

22. இந்ததோர் ஜன்மந் தன்னி லிவன்மதுத் தொழிலைச்
[செய்தும்
வந்தவன் மறுபி றப்பு மறை குல முதிக்கும் வண்ணம்
முந்தவே கூறு மென்ன மொழியதைக் காத்த லாலுஞ்
சிந்தையு நல்ல தாயுஞ் சிலர்க்குவா பத்தைக் காத்தும்;

22. ஜாதகருடைய தகப்பனர் இந்த ஜன்மத்தில் கள் சாராயம் முதலிய லாகிரி வஸ்துக்களில் வியாபாரம் செய்துகொண்டு இருந்தும் மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பதற்குக் காரணங் களை உடனே சொல்லுவீர் என்று பிருகு மஹரிஷி கேட்கவே ஜய முனிவர் பதில் சொல்லுகின்றார். இவர் தன்னுடைய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவதாலும் நல்ல எண்ணத்தை உடையவராகிச் சிலருக்கு ஆபத்துக் காலங்களில் உபகாரங்களைச் செய்துகொண்டும்.

23. அறுமுகன் பத்தி யாயு மடைந் தோரை யாதரித்தும்
பெரிதான தலங்கள் சென்றும் பூமியில் வாழ்ந்த தாலே
உரைவலு முதற்கு லத்தி லுரைத்தது தப்பா காகுங்
கரிமத வாஜி பெற்றக் காதலி கேட்டி டாயே.

23. ஆறுமுகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகியும் தன்னிடம் வந்தவர்களைக் காப்பாற்றிக்கொண்டும் பெரிய பெரிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்துகொண்டும் இந்தப் பூமியில் வாழ்ந்துகொண்டும் இருப்பதாலே ஜாதகருடைய தகப்பனார் முதற்குலமாகிய பிராம்மணர் குலத்தில் மறு ஜன்மத்தில் பிறப்பார். நாங்கள் சொல்லிய பலன்கள் தவறிப்போகாமல் நடக்கும். கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரின் மரண காலமும் ஜாதகருடைய விவாககாலமும்

24. நாற்பத்து நாலா மாண்டில்
நற்றனுர் மாதந் தன்னில்
கூப்பிடு வானுங் காலன்னுடு
குறித்ததோ ரன்னை தன்னை
ஏற்கவே ஜாத கர்க்கு
வியம்புவோ மணத்தின் காலந்
தீர்ப்பாக விருபா னிரண்டில்
சேயிழை வருவா ளாவாள்.

24. ஜாதகருக்கு நாற்பத்து நான்காவது வயதில் சிறந்த தனுர்மாதம் என்ற மார்கழி மாதத்தில் இவருடைய தாயாரை எமன் தன்னுடைய பட்டணத்திற்கு அழைப்பார், அஃதாவது தாயார் இறந்து விடுவாள். ஜாதகரது விவாகத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபத்திரண்டாவது வயதில் மனைவி வந்து சம்பவிப்பாள் என்று கண்டிப்பாகச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மனைவியின் குணாதிசயங்கள்

25. மங்கையின் குணத்தைச் சொல்வேன்
மறித்துரை யதிகங் கூரூள்
பொங்கின குடும்ப மேற்பள்
புகழ்ந்தோர்க்கு வுதவி செய்வள்
எங்கள்போ லதிதிக் கன்ன
மீவளாம் பொறுமை சாலி
சங்கையென் றோரைச் சாராள்
தன்வரன் மனத்துக் கேத்தோள்.

25. ஜாதகருடைய மனைவியின் குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் அதிகமாகத் தடுத்துப் பேசமாட்டாள். இவள் மேன்மையான குடும்பத்தை உடையவளாக இருப்பாள். தன்னைப் போற்றினவர்களுக்கு உபகாரங்களைச் செய்வாள். எங்களைப்போன்ற

முனிவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போடுவாள். இவள் பொறுமை உள்ளவளாக இருப்பாள். சந்தேகமாக இருக்கின்றது பயமாக இருக்கின்றது என்று சொல்லுகின்றவர்களுடன் சேரமாட்டாள், தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருந்து வாழ்வாள்.

26. அடிசி லுக்கி னியள ளாவ ளரிமனை யொப்ப ளாவள்
நடைநன்மை மானி றத்தள் நாதனர் பத்தி பூண்பள்
துடியிடை யோக சாலி துன்பங்க ளெவர்க்கு மெண்ணுள்
படிமிசை நல்லோ ளாவள் பாவையுந் தீர்க்க ஜீவி.

26. ஜாதகருடைய தாயார் இனிப்பாகச் சமையலைச் செய்பவள் ஆவள். இவள் மஹாவிஷ்ணுவின் மனைவியாகிய இலட்சுமிக்குச் சமானமானவளாக இருப்பாள். இவள் நல்ல ஒழுக்கத்தை உடையவளாக இருப்பாள், மாநிறமுள்ள தேகத்தை உடையவள் ஆவள், கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவளாக இருப்பாள். இவள் யோகங்களை உடையவளாக இருப்பாள், யாருக்கும் கெடுதிகளை நினைக்க மாட்டாள். இவள் பூமியில் நல்லவளாக இருப்பாள், நீண்ட ஆயுளை உடையவள் ஆவள்.

ஜாதகருடைய சந்ததிகளும் (புத்திர பாவமும்) முன்ஜன்மமும்

27. சுதர்களு மாண்பா லிரண்டு
தோகைய ரிருவர் தீர்க்கம்
அதிபனின் மூன்ஜன் மத்தை
வரைகிறேம் வான்மி யூரில்
நிதிமிக வுடையா னுக்கு
நேர்ந்தனன் வன்னியச் சேயாய்
விதவிதச் செட்டு செய்து
வேதியர் தொண்டு பூண்டு;

27. ஜாதகருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவர் வால்மியூர் என்ற திருவான்மியூரில் வன்னியர் குலத்தில் அதிக தனமுள்ளவனுக்கு முன் ஜன்மத்தில் ஆண்குழந்தையாகப் பிறந்தார். இவர் பலவிதமான வியாபாரங்களைச் செய்துகொண்டும் பிராமணர்களிடத்தில் ஆசையும் அன்பும் உடையவராகி அவர்களுக்கு வேலைகளைச் செய்துகொண்டும்

ஜாதகருடைய யோக பாவம்

28. வினைகளு மில்லா ஞகி மேவினுள் காலன் நாடு
கனமுள பிரமன் லக்கங் கலப்பனு மிக்கு லத்தில்
தனையன்தன் யோகச் சேதி சாற்றுவோ மினிமே லாக
நினைவதை முடிக்க வல்லன் நிருபர்க ளிஷ்டங்
[கொள்வன்.

28. ஜாதகர் யாதொரு பாவங்களையும் அடையாதவராக வாழ்ந்து கொண்டு பிறகு இறந்து எம்பட்டணத்திற்குப் போனர். மேன்மையான பிரம்தேவனுடைய பிரம்லிபியுடன் எழுதப்பட்டு இவர் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றர். இனிமேல் இவருடைய யோகங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தான் நினைத்த காரியங்களைச் செய்து முடிக்கும் சாமர்த்தியத்தை உடையவராவர், அரசர்களுடைய சினேகத்தை அடைபவர் ஆவர்.

29. பலதொழில் செய்வா னுவன்
பாருகள் சேர்ப்பா னென்றேங்
திலதம்போல் பந்துக் கட்கு
தந்தைபோல் வாழ்வா னுவன்
நலமதை யெவர்க்குஞ் செய்வன்
நற்பந்தை வாத ரிப்பன்
சொல்மொழி காப்பா னுவன்
துறவிகட் கன்ன மீவன்.

29. ஜாதகர் பலவிதமானத் தொழில்களைச் செய்பவராவர். இவர் நிலங்களையும் மனைகளையும் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய பந்துக்களுக்கு நெற்றியிலுள்ள பொட்டைப்போலச் சிறந்தவராக இருப்பார். இவர் தன்னுடைய தகப்பனரைப்போல நல்ல அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் எல்லோருக்கும் நன்மைகளைச் செய்வார், தன்னுடைய நல்ல பந்துக்களைக் காப்பாற்றுவார், இவர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவராவர். உலகப் பற்றுக்களைத் துறந்தவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போடுவார்.

30. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச்
[சங்கை
நாகமு மாறி லேற நற்சனி நாலி லாக
ஆகம னிரண்டில் தங்க வம்புலி புக்கி யெட்டில்
பாகமா யிருப்ப தாலே பத்மயோ கங்க ளொன்று ;

30. ஜாதகருக்கு யோகத்தை எவ்விதமாகச் சொன்னீர்? அதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்கவே, ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். நாகம் என்ற ராகு ஆறில் இருப்பதாலும் நல்லவராகிய சனி நான்காவது வீட்டில் இருப்பதாலும் ஆகமன் என்ற குரு இரண்டாவது விட்டில் இருப்பதாலும் அம்புலி என்ற சந்திரன் எட்டாவது பாவத்தில் தங்கி நன்மையாக இருப்பதாலும் பத்மயோகம் என்ற ஒரு யோகமும்;

31. துரகமாம் யோக மொன்றுஞ்
செப்பிலேம் பால னுக்கு
இருவித யோகத் தாலே
யாரையும் வசியங் கொள்வன்
பொருளது மூவைந் தின்மேல்
பெருக்கமே செய்வா னுவன்
தரையினில் சல்லிய மேற்கான்
சகலர்க்கு மிவன்சொல் மேன்மை.

31. துரகயோகம் என்ற இன்னொரு யோகமும் ஜாதகருக்கு உண்டு என்று சொல்லுகின்றோம் என்று ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். இந்த இரண்டுவித யோகங்களினாலே ஜாதகர் எல்லோரையும் தன்பக்கமாக இருக்கும்படியாக வசியஞ் செய்துகொள்ளுவார். பதினைந்து வயதிற்குமேல் பணத்தையும் சொத்துக்களையும் சம்பாதித்து அவற்றை அதிகமாக ஆக்கிக்கொள்ளுவார். இவர் பூமியில் கடன் வாங்கமாட்டார். இவருடைய வார்த்தைகள் எல்லோரிடத்திலும் மேன்மையை உடையனவாக இருக்கும்.

ஜாதகருடைய மரண காலமும் மறு ஜன்மமும்

32. இன்னமும் விபரமாக யியம்பு வோம் பின்பாகத்தில்
மன்னவன் மரண கால மறுபத் தேழா மாண்டில்
கன்னியா மாதந் தன்னில் காவல னுடல மேகும்
பின்ஜன்மந் தணிகை மேல்பால் பேரூரில் வேளாள னாக;

32. இன்னும் விபரமாக அடுத்த பாகத்தில் நாங்கள் யோக பலன்களைச் சொல்லப்போகின்றோம். இவருடைய மரணகாலத்தைச் சொல்லுகின்றோம். தனக்கு அறுபத்தேழாவது வயதில் கன்னியாமாதம் என்ற புரட்டாசி மாதத்தில் இறந்து இவருடைய தேகம் மறைந்துபோய் விடும். இவர் தன்னுடைய மறு ஜன்மத்தில் தணிகை என்ற திருத்தணிகை ஸ்தலத்திற்கு மேற்கில் ஒரு பெரிய கிராமத்தில் வேளாளராக;

ஜனனகால தசையும் இருப்பும்

33. ஜனிப்பனு மென்று சொன்னேஞ் சேயனுஞ் ஜனிக்குங் [காலே
சனிதசை ஆண் டொன்பான் செப்பினேம் பூர்வ பாகம்
இனிஉத்திர பாகந் தன்னி லியம்புவோம் விபர மாகக்
கனமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

33. ஜாதகர் பிறப்பார் என்று சொல்லுகின்றேம். இவர் பிறந்த காலத்தில் சனிமகாதசை இருப்பு ஒன்பது வருஷங்கள் ஆகும். இவ்விதமாகப் பூர்வபாகத்தை நாங்கள் சொல்லி முடித்துவிட்டோம். இனி மேல் பின்பாகத்தில் விஷயங்களை விபரமாகச் சொல்லப்போகின்றேம். மேன்மையான மதயானையின் முகத்தை உடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 116

ஜனனகால கிரக நிலை

1. [1]திங்க[2]ளரி சனி கன்னி [3]சிஞ்[4]கோலில் [5]சேய் [6]சாடி [7]பங்கையனும் புதனுங் [8]தண்டில் [9]பளிங் [10]கலவன்சேரச் சங்கையிலாப் [11]பொன்ராகு மேடம் [12]புலி ஐன்மம் பலனெவ்வாறு பன்னுவீர் பலன்விபரம் பார்.

1. சந்திரன் சிம்மத்திலும், சனி கன்னியிலும், கேது துலாத்திலும், அங்காரகன் கும்பத்திலும், சூரியனும் புதனும் மிதுனத்திலும், சுக்கிரன் கடகத்திலும், சந்தேகமில்லாமல் குருவும் ராகுவும் மேஷத்திலும், சிம்மத்தில் ஜன்மலக்கினமும் இருந்தால் எவ்விதமான பலாபலன்களைச் சொல்வீரோ! அவைகளை விவரமாகச் சொல்லுவீர்.

கிரகநிலை

	குரு ராகு		சூரியன் புதன்
அங்காரகன்	இராசி சக்கரம்		சுக்கிரன்
			லக்கினம் சந்திரன்
		கேது	சனி

பூரம் 4-ஆம் பாதம் : சுக்கிரதசை ஞரு 3-4-0

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற் குருவுங் கேதுவும், ரிஷபத்திற் புதனும், கடகத்திற் சுக்கிரனும், கன்னியில் இராகுவும், துலாத்தில் அங்காரகனும், விருச்சிகத்திற் சந்திரனும், மகரத்திற் சனியும், கும்பத்திற் சூரியனும் ஆகும். சுக்கிரன் வக்கிரகதியில் இருக்கின்றார். புதன் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்.

---

1. சந்திரன்
2. சிம்மம்
3. கேது
4. துலாம்
5. அங்காரகன்
6. கும்பம்
7. சூரியன்
8. மிதுனம்
9. சுக்கிரன்
10. கடகம்
11. குரு
12. சிம்மம்

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. பார்தனிலே யாண் ஜனனம் பிறக்குமில்லம் மேல்வாசல்
மாரிதென்மேல் விஞையகனும் வட பாலில்
சீர்காளி மீனத்தில் தங்கு மீசன் குடிபா ழுத்தரம்
.....ஆனவடுகர் குலமாம்.

2. பூமியில் ஆண் குழந்தை பிறக்கும். பிறந்த வீடு மேற்குப் பார்த்த வாயிற்காலே உடையதாக இருக்கும். மாரியம்மன் கோயில் தென்மேற்குத் திக்கிலும் விநாயகர் கோயில் வடக்குத் திக்கிலும் இருக்கும். சிறந்த காளியம்மன் கோயில் வடகிழக்குத் திக்கிலும் ஒரு பாழடைந்த சிவபெருமானுடைய கோயில் வடக்குத் திக்கிலும் இருக்கும். இந்த ஜாதகர் தெலுங்கர் ஜாதியில் பிறப்பார்.

3. ஆகுமேழாஞ் சன்மம் அவன் யோக மன்னை தந்தை
தோகை மனை புத்திரர்கள் துணை யோகம்
பாகமாய் முன்பின் ஜன்மங்க ளுரைக்கிறே மிந்நூலில்
அன்னையே விபரம தாயறிவிப்போ மினிமேலாக.

3. ஜாதகர் ஏழாவது குழந்தையாகப் பிறப்பார். இவருடைய தாயார் தகப்பனார் மனைவி மக்கள் சகோதரர்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் பக்குவமாகவும் விபரமாகவும், பார்வதியம்மையே ! இனி மேல் சொல்லுகின்றேம்.

வேறு

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்களும் அவர்களின் குணங்களும்

4. ஆகுந் தந்தை துணையதிகம் அதிலா ணென்று பெண்
[ணென்று
.தீமை யிலா வந்து ஆண் சேதி செப்பக் கேண்மோ
யூகை யுளனே மாமி யிரண்டு மருவிடுமே வளவு தங்கி
மருவூரில் போவான் வட பால் பூமி விருத்தி
புகழ்ந் தோர்க் கன்பன் புயப லத்தன்.

4. ஜாதகருடைய தகப்பனருக்குக் சகோதரங்கள் அதிகமாக இருப்பார்கள். அவர்களில் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் கெடுதியில்லாமல் அஃதாவது நீண்ட ஆயுளே உடையவர்களாக இருப்பார்கள். சகோதரருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேம். கேட்பீராக. இவர் விவேகமுள்ளவர், இவருக்கு மாமியார்கள் இருவர் ஆவர். இவருக்கு இரண்டு கிராமத்தில் நிலங்களில் விளைவு உண்டாகும். இவர் வடக்குத் திக்கை நோக்கிச் செல்வார். நிலங்கள் விருத்தியாகி நல்ல பலனைத் தரும். இவரைப் புகழ்ந்து பேசினவர்களிடம்

இவர் பிரியமுள்ளவராக இருப்பார். இவர் தோள்பலத்தை உடைய வராக இருப்பார்.

5. தனமுங் குணமு மீகையுளன்
சாத்தான் கட்டு வார்த்தைகளைத்
சொன்ன சொல்லைத் தான்காப்பன்
தோகை யொன்று தீர்க்கமுறுங்
கனம் புத்திர னென்றுறுமே
காணுன் கன்னியென வுரைப்போம்
முன்னுல் கடனும் பின்கிவிர்த்தி
முயற்சியாக வாழ்ந் திடுவன்.

5. இவர் செல்வம் நல்ல குணம் தயை இரக்கம் ஆகிய இவை களை உடையவராக இருப்பார். இவர் புனைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையும் சொல்லமாட்டார். இவர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். இவருக்கு ஒரே மனைவிதான் உண்டு. இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள். இவருக்கு ஒரே ஒரு மேன்மையான புத்திரன் உண்டு. இவருக்குப் பெண் குழந்தை கிடையாது என்று சொல்லுகின்றோம். இவருக்கு முன்னுல் கடன் ஏற்படும். ஆனுல் அஃது உடனே தீர்ந்து விடும். இவர் மேன்மையாகவும் சிறப்பாகவும் இருந்து வாழ்வார்.

6. இடுவ னேழை தனக் கன்னமெதிரிக்
கஞ்சா னிள மனத்தன்
படையில் செல்லான் பலர்நேயன்
படைப்பான் புதிதா யில்லமுமே
விடம்போல கோபமுடன் சாந்தம்
மிக்க வயது தீர்க்கமுமே
நடையில் கடியன் நளினமொழி
நங்கை சேதி தான் புகல்வோம்.

6. தகப்பனுருடைய சகோதரர் ஏழைகளுக்குச் சாப்பாடிடைப் போடுவார், பகைவர்களுக்குப் பயப்படமாட்டார், இளகிய மனத்தை உடையவராக இருப்பார். இவர் சண்டைக்குப் போகமாட்டார். அனேக ருடைய சிநேகத்தை அடைபவராவர், ஒரு புதிய வீட்டைக் கட்டு வார். இவருக்குப் பாம்புக்கு வருவதைப்போலக் கோபம் வரும். அஃது உடனே தணிந்து போய்விடும். இவர் நீண்ட ஆயுளை உடையவராக இருப்பார். இவர் நடவடிக்கையில் கண்டிப்பாக இருப் பார். இவர் இனிப்பாகவும் நயமாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார். தகப்பனுருடைய சகோதரியின் விஷயங்களைச் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரியின் குணதிசயங்கள்

7. புகல்வோ மதிக பாட்டாளி
புலிபோல் கோபம் புறஞ்சொல்லாள்
உகமை யாகப் பேசிடுவாள்
உதிக்குஞ் சுதரி லாஞ்ஞென்று
தகமை யாகப் பெண்ஞென்று
சாறுந் தீர்க்கம் வரனுள்ளூர்
பகையா மத்தில் விதவையுறும்
பாவை தீர்க்கம் பாங்கினியே.

7. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரி அதிகமாகக் கஷ்டப் பட்டு வேலை செய்பவள் என்று சொல்லுகின்றோம். இவளுக்குப் புலிக்குக் கோபம் வருவதுபோல கோபம் வரும். இவள் கோள் சொல்ல மாட்டாள். இவள் உபமான உபமேயங்களுடன் அலங்காரமாகப் பேசுவாள். இவளுக்கு ஓர் ஆண்குழந்தையும் ஒரு பெண் குழந்தை யும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவளுக்குப் புருஷன் உள்ளூரிலிருந்தே வருவார். இவள் தன்னுடைய வாழ்ளின் மத்திய காலத்தில் தன்னுடைய புருஷனுடன் விரோதஞ் செய்து கொண்டு பிறகு விதவையாகப் போய்விடுவாள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பள். பார்வதியம்மையே!

ஜாதகரின் தகப்பனுருடைய குணதிசயங்கள்

8. தந்தை குணத்தைத் தான்புகல்வேன்
தரணி தன்னில் தானுய்வன்
சிந்தை வெகுளி மானிறத்தன்
செய்நன் றிகளு மறவாதான்
நிந்தை யேற்கான் பொறுமையுள்ளன்
நிருப ரிஷ்டங் கொள்ளாதான்
தந்தம் பிணியுங் கால்வளவுஞ்
சமதே கத்தான் சங்கரியே.

8. ஜாதகரின் தகப்பனுருடைய குணதிசயங்களைப்பற்றி சொல்லு கின்றேன். இவர் நிலங்களை விவசாயம் செய்துகொண்டு ஜீவிப்பவ ராவர். இவர் கோபமான மனத்தை உடையவர். இவர் மானிறத்தை உடையவர். பிறர் தனக்குச் செய்கின்ற உபகாரங்களை இவர் மறக்காத வர் ஆவர். இவர் அபவாதங்களையும் பழிகளையும் அடையமாட்டார். பொறுமையும் சாந்தமும் உள்ளவராக இருப்பார். இவர் அரசர்களிடம் சினேகம் செய்துகொள்ளாம லிருப்பார். இவருடைய பற்கள் ரோகத்தை உடையனவாக இருக்கும். இவருக்குக் கால்கள் வளைந்

திருக்கும். இவர் நடுத்தரமான தேகத்தை உடையவர், பார்வதி யம்மையே!

9. பெருமையி லாதான் புறஞ்சொல்லான்
பின்யோ சனையு முடையவனே
நெறியைக் காப்பன் பொய்புகலான்
நிதான மாக வாழ்வானும்
அறிவோர் சொல்லைக் கடவாதான்
அல்ப ருறவு கொள்ளாதான்
பரைபள் ளுகளு மில்லாதான்
பாரில் வறுமை காணுதான்.

9. ஜாதகரின் தகப்பனார் பெருமையும் புகழும் இல்லாதவராக இருப்பார், கோள் சொல்லமாட்டார். ஒரு காரியத்தைச் செய்து விட்ட பிறகு யோசனையைச் செய்பவராக இருப்பார். இவர் நல்ல மார்க்கத்தைக் காப்பாற்றுவார், பொய்யைச் சொல்லாதவராக இருப்பார், சமமான, அந்தஸ்திலிருந்து வாழ்பவராக இருப்பார். இவர் அறிவாளிகளுடைய புத்திமதிகளுக்கு மீறி நடந்து கொள்ளாதவராக இருப்பார், தாழ்ந்த குணத்தையும் அந்தஸ்தையும் உடையவர்களுடைய சிநேகத்தை விரும்பமாட்டார். மௌனம் வாத்தியம் தாளம் பிரபந்தம் படையாள் ஆகிய இவைகளை இல்லாதவராக இருப்பார். இவர் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையாதவராக இருப்பார்.

வேறு

ஜாதகருடைய குணநிசயங்கள்

10. சொன்னயிக் குணத் தானுக்குத்
தோன்று வானிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னிவனிரு நிறத்த னுவன்
பன்னியே பேசு வானும்
பாவையர் மோக னுவன்
பின்னமில் லாத தேகி
பொருத்தமாய்ப் பேச வல்லன்.

10. இதுவரையிலும் சொல்லப்பட்ட குண குணங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணநிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள மாநிறத்தை உடையவராக இருப்பார். இவர் சாமர்த்திய மாகவும் விமரிசையாகவும் பேசுவார், ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவராக இருப்பார். இவர் யாதொரு அவயவக்

குறைவும் இல்லாத தேகத்தை உடையவர். இவர் விஷயங்களுக்கு பொருத்தமாக இருக்கும்படி பேசுந்திறமையை உடையவராவர்.

11. வித்தையுங் கொஞ்ச மூண்டு
விவேகியா மெவர்க்குந் நண்பன்
பத்தினிக் கிஷ்ட னுவன்
பாரினில் சீவிப் பானும்
நத்தினோர்க் குதவி செய்வன்
நாற்காலி விருத்தி யுண்டு
சுத்தத்தார்க் கிணக்கஞ் சொல்லான்
சோம்பிடான் காரி யத்தில்.

11. ஜாதகருக்கு அற்பமான கல்வி உண்டு. இவர் அறிவுடைய வராக இருப்பார், எல்லோருக்கும் நண்பராக இருப்பார். இவர் தன்னுடைய மனைவிக்குப் பிரியமுள்ளவராக இருப்பர். இவர் விவ சாயத் தொழிலைச் செய்து ஜீவிப்பவராவர், தன்னிடம் வந்து சகாயத் திற்காக எதிர்பார்க்கின்றவர்களுக்கு உபகாரத்தைச் செய்வர். இவரிடம் கால் நடைகள் விருத்தியாகும். இவர் தன்னுடைய பந்துக் களுக்கு வணங்கி வார்த்தைகளைச் சொல்லமாட்டார், தான் செய்கின்ற காரியத்தில் சோம்பலைக் காட்டிக் கொள்ளாதவராக இருப்பார்.

12. கரமதில் கமல ரேகை கார்முகில் ரேகை யுண்டு
விரைவினில் நடக்க வல்லன் விடம்போலே கோப மூண்டு
இருவித குணமு மூண்டு வேவலா ளுடைய னுவன்
வறுமையில் லாமல் வாழ்வன் மாடுகள் விருத்தி யுண்டு.

12. ஜாதகருடைய உள்ளங்கைகளில் கமலரேகை என்ற ஒருவித தாமரைரேகை உண்டு. கார்முகில் ரேகை என்ற ஒரு விதமான அழ காண நீர்மேக ரேகையும் உண்டு. இவர் வேகமாக நடக்கும் சாமர்த்தி யத்தை உடையவராவர். இவருக்குப் பாம்பிற்குக் கோபம் வருவதைப் போலக் கோபம் உண்டாகும். இவருக்கு இரண்டு விதமான குணங் களும் உண்டு, அஃதாவது நல்ல குணமும் கெட்ட குணமும் உண்டு. இவர் வேலையாட்களை உடையவராக இருப்பர். இவர் தரித்திரத் தையும் கஷ்டங்களையும் அடையாமல் வாழ்வார். இவரிடம் கால் நடைகள் விருத்தியாகும்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

13. இன்னவன் தூணவர் தம்மை
யியம்புவோ மாண்பால் நான்கு
கன்னியு மொருத்தி யாவள்
கழறுவோ மாண்பால் சேதி

தன்மனங் கபடு மில்லாள்
சாந்தவான் இருசி வப்பன்
கன்னென மொழியு மூண்டு
கடன்படா னிடுக்க மில்லான்.

13. ஜாதகருடைய சகோதரங்களைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவருக்கு நான்கு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருப்பார்கள். சகோதரருடைய விஷயங்களைப்பற்றிச்சொல்லுகின்றேரும். இவர் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவர் அல்லர். இவர் சாந்தமான குணத்தை உடையவர், இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை உடையவர். சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தையை இவர் சொல்லுவார். இவர் கடன் வாங்கமாட்டார், கஷ்டங்களை அனுபவிக்காதவராக இருப்பார்.

14. பாரியு மொன்றே தீர்க்கம் பாலர்க ளாண்பா லிரண்டு
தீரமாம் பெண்பா லவ்வாறு தீர்க்கமாம் வறுமை காணுன்
மாரனே டொத்து வாழ்வன் மானிலம் விருத்தி செய்வன்
கூறுவான் சுகமாய் வார்த்தை குறித்தனம் வயது தீர்க்கம்

14. ஜாதகருடைய சகோதரருக்கு மனைவி ஒருத்தியே ஆவள். இவளும் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் தீர்க்க ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் தன்னுடைய சகோதரருடன் ஒற்றுமையாக இருந்து வாழ்வார். இவர் பெரிய பெரிய நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி செய்வார். இவர் இனிமையான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் நீண்ட ஆயுளை உடையவர் என்று சொல்லுகின்றேரும்.

ஜாதகரின் இரண்டாவது சகோதரருடைய விஷயங்கள்

15. அதற்குப் பின்துணைவன் சேதி
யறிவிப்போ மூக வாணும்
குதர்க்கமாய்க் கரங்கால் வாயு
கொண்டிடும் வணிபஞ் செய்வன்
சதியான வாயுப் பீடை
சார்ந்தகா ரணங்க ளென்ன
அதிபன் சேய் வினையாந்தாயே
யறிவிப்பீ ரந்தச் சங்கை.

15. ஜாதகரின் இரண்டாவது சகோதரருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவர் விவேகியாக இருப்பார். இவருக்கு

கைகால்கள் வாயு ரோகத்தினால் முடக்கமாக இருக்கும். இவர் வியாபாரங்களைச் செய்வார். இவருக்குக் கெடுதியை விளைவிக்கக் கூடிய வாயுரோகம் வருவதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க முனிவர் பதில் சொல்லுகின்றார். இந்த ரோகம் ஜாதகரின் முன் ஜன்மத்திய ஊழ்வினையின் பயனாக வரும் என்று முனிவர் பதில் சொல்ல, அதனை விபரமாகச் சொல்லுவீர் என்று கேட்டார்.

ஜாதகரின் இரண்டாவது சகோதரருடைய முன் ஜன்மம்

16. முன்ஜன்மம் மலாய்தே சத்தி
லுதித்துமே செக்கா னாக
அன்னவன் வணிபஞ் செய்து
வாழ்நாளின் வினையைக் கேண்மோ
தன்மனை வார்த்தை கேட்டுத்
தாய்தம்மை யெற்ற லுற்றான்
துன்மைகள் சேர்ந்த வென்றேஞ்
செப்புவோம் வேறு வொன்று.

16. ஜாதகரின் இரண்டாவது சகோதரர் தன்னுடைய முன் ஜன்மத்தில் மலயாதேசத்தில் செக்காடுகின்றவராகப் பிறந்து வியாபாரங்களைச் செய்துகொண்டு வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாபத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இவர் தன்னுடைய மனைவியின் பேச்சைக் கேட்டு தாயாரை எட்டி உதைத்தார். இதனால் இவருக்கு ஒரு தோஷம் ஏற்பட்டுவிட்டது என்று சொல்லுகின்றோம். இதுவுமின்றி இன்னொரு தோஷத்தையும் சொல்லுகின்றோம்.

17. தேவனுக்கு வர்ச்சித்த மலர்மிதித்தான்
சேர்ந்தது வந்தத் தோஷ மதிபனுக்குத்
தாவினோர் தம்மையுமே மோசஞ் செய்தான்
சார்ந்ததுமே யிச்சென்மங் காலிராளும்
பாவங்கள் தீர்வதற்குக் கிரிகை யொன்று
பகருவீர் தவமுனியே பகரோம் யாங்கள்
ஆவலா யன்னைதனை உதைத் தாற்கு
அவள்சாபம் நீங்காது அறையக் கேண்மோ.

17. ஜாதகருடைய இரண்டாவது சகோதரர் கடவுளுக்கு அர்ச்சனை செய்து அலங்கரித்த புஷ்பங்களை மிதித்தார். இதனால் இந்தத் தோஷம் உண்டாயிற்று. மேலும் இவர் தன்னை வந்தடைந்தவர்களை மோசஞ் செய்துவிட்டார். இந்தத் தோஷங்களெல்லாம் இவரை இந்த ஜன்மத்தில் வந்தடைந்தன. ஆகையால் இவருக்கு கால்களில்

தோஷம் உண்டாயிற்று. இந்தத் தோஷங்கள் நிவிர்த்தியாவதற்கு ஒரு சாந்தியை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்க, அதற்கு முனிவர் பதில் சொல்லுகின்றார். தவங்களைச் செய்கின்ற முனிவர்களே! இதற்கு என்னால் பதில் சொல்ல இயலாது. வேண்டுமென்றே ஆசையுடன் தன்னுடைய தாயாரை எட்டி உதைத்தவருக்கு, அவள் கொடுத்த சாபம் நீங்காது என்று சொல்லுகின்றோம், கேட்பீராக.

18. மனையில்லான் மதலையிலான் வயதுந் தீர்க்கம்
வறுமையிலான் கொடுமைசெ யான் மாரு னுக்குத்
துணிவில்லான் பின்னுன்மம் விரிஞ்சி மேல்பால்
சிறுவூரில் வைசியனுய் னனிப்பா னவன்
தனிவான குடும்பந் தாய் புகழும் பெற்றுத்
தான்வாழ்வன் னனித்தோனுக் காரஞ் சாண்டில்
பிணையாக மரலியிடம் புகுவா னவன் பேதையரே யவன்
பின்னேன் சேதி சொல்வேன்.

18. ஜாதகரின் இரண்டாவது சகோதரர் விவாகமில்லாதவராக இருப்பார். இவருக்கு குழந்தைகளும் கிடையா. இவர் நீண்ட ஆயுளை உடையவராக இருப்பார். இவர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவர் தன்னுடைய சகோதரர்களுக்குக் கெடுதிகளைச் செய்யமாட்டார். இவர் தைரியத்துடனும் துணிச்சலுடனும் இருக்கமாட்டார். இவர் தன்னுடைய மறு ஜன்மத்தில் விரிஞ்சிபுரத்திற்கு மேற்கில் ஒரு சிறிய கிராமத்தில் வைசியர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் மேன்மையான குடும்பத்தையும் புகழையும் அடைந்து வாழ்பவர் ஆவர். இவர் ஜாதகருக்கு முப்பதாவது வயதில் இறந்து எமனிடம் போய்ச் சேருவார், பார்வதியம்மையே! இவருக்குப் பிறகு உள்ள சகோதரருடைய விஷயங்களைச் சொல்லுகின்றேன்,

வேறு

ஜாதகரின் மூன்றாவது சகோதரருடைய குணநிசயங்கள்

19. இருவித குணத்தா னவன னிடுக்க மென்றோரைக்
[காப்பன்
அரிவையர் மோக னவ னடாவடி கொஞ்ச முண்டு
தரணியா லுய்வா னவன் சந்தேக மனத்த னவன்
பொருளது பெருக்கஞ் செய்வன் புயபல முடைய னுமே.

19. ஜாதகரின் மூன்றாவது சகோதரர் இரண்டு குணங்களை உடையவராக இருப்பார், நாங்கள் கஷ்டங்களை அடைந்திருக்கிறோம் என்று சொல்லுகிறவர்களைக் காப்பாற்றுவார். இவர் ஸ்திரீகளின் மேல் மையல் என்ற காம ஆசையை உடையவர். இவர் சிறிது முரட்

டுத்தனம்காகவும் நியாயமில்லாமலும் நடந்துகொள்ளுவார். இவர் நிலங் களைப் பயிரிட்டு ஜீவிப்பவராவர், சந்தேகமான மனத்தை உடையவ ராவர். இவர் சொத்துக்களை அதிகமாக்குவார், தோள்வலியை உடையவராக இருப்பார்.

20. தந்தைபோல் வாழ்வா னுவன்
சல்லியங் கொள்ளா னுவன்
சுந்தர முடைய னுவன்
சோம்ப லுங் கொஞ்ச முண்டு
வந்திடும் மனைவி யொன்று
மைந்தர்க ளாண்பால் மூன்று
விந்தையாய்ப் பெண்பால் மூன்று
விருத்தியாம் வயது தீர்க்கம்.

20. ஜாதகரின் மூன்றுவது சகோதரர் தன்னுடைய தகப்பனு ருடைய அந்தஸ்திலிருந்து அவரைப்போல வாழ்பவராவர். கடனை வாங்கமாட்டார். இவர் சௌந்தரியத்தை உடையவராக இருப்பார். இவருக்குச் சிறிது சோம்பலான குணமும் உண்டு. இவருக்கு ஒரே மனைவிதான் உண்டு. இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் ஆச் சரியமான மூன்று பெண் குழந்தைகளும் விருத்தியாவார்கள். இவ ருக்கு நீண்ட ஆயுள் உண்டு.

ஜாதகரின் நான்காவது சகோதரருடைய விஷயங்கள்

21. கடையவன் சேதி சொல்வேன் கல்வியு மற்ப மாகுந்
தடபுடல் செய்கை யுண்டு தந்தையி னில்லம் வாழான்
வடகீழ்ப் பாலருகில் செல்வன் மாதினைக் கணேசன்
[போலே
உடன்கூடி வாழ்வா னுவ னுலகினில் வறுமை காணன்.

21. ஜாதகருடைய கடைசியான அஃதாவது நான்காவது சகோதர ரின் விஷயங்களைப்பற்றி சொல்லுகின்றேன். இவருக்கு வித்தை அற்ப மாக இருக்கும். இவர் இடம்பமாகவும் அவசரமாகவும் படாடோபத்துட னும் காரியங்களைச் செய்வார். தன் தகப்பனுருடைய வீட்டிலிருந்து வாழாதவர் ஆவர். இவர் வடகிழக்குத் திக்கில் சமீபத்தில் உள்ள ஒரு கிராமத்திற்குப் போய்விடுவார். இவர் வினயகக் கடவுளைப்போல தன்னுடைய மனைவியுடன் கூடி வாழ்பவர் ஆவர். பூமியில் தரித்திரத் தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார்.

22. மனைவியு மொன்றே தீர்க்கம் மைந்தர்க ளாண்பா
[லொன்று
கணிகையர் மூவ ராவர் கனக்காவே மற்ற வெல்லாம்
பிணைசெய்யான் யாவ ருக்கும் பூமிக ளதிகஞ் சேர்ப்பன்
தணிவுண்டு கோப முண்டு தந்தையி னஸ்தி காணன்.

22. ஜாதகருடைய நான்காவது சகோதரருக்கு ஒரே மனைவி உண்டு. இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள். இவருக்கு ஓர் ஆண் குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும் தீர்க்க ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். மற்ற குழந்தைகள் எல்லாம் நிலைத்திராமல் சிக்கிரம் இறந்து விடுவார்கள். இவர் யாருக்கும் கெடுதிகளைச் செய்ய மாட்டார். நிலங்களை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவருக்குக் கோபம் வரும், ஆனால் அஃது உடனே தணிந்து அடங்கிப் போய்விடும். இவர் தன்னுடைய பிதுரார்ஜிதத்தை அடையமாட்டார்.

23. பாரியால் பெருமை யேற்பன் பாரினில் வறுமை காணன்
காரிய சமர்த்த னவன் கடனது வேற்கா னவன்
தீரமா மனத்த னவன் தீர்க்கமாம் வயது மூண்டு
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

23. ஜாதகருடைய நான்காவது சகோதரர் தன்னுடைய மனைவியினால் மேன்மையையும் கீர்த்தியையும் அடைபவராவர். இவர் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் காரியங்களைச் செய்து முடிப்பதில் வல்லவராக இருப்பார், கடன் வாங்க மாட்டார். இவர் தைரியமுள்ள மனத்தை உடையவராக இருப்பார். இவருக்கு நீண்ட ஆயுள் உண்டு. ஆறு பெரிய முகங்களை உடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் சகோதரியினுடைய குணங்கள்

24. மங்கையின் சேதி சொல்வேன்
மனமது கபடு மில்லாள்
சங்கையா மனத்த ளாவள்
சலித்தோர்க்குத் தாக மீவள்
பொங்கின குடும்பம் பின்னல்
பெறுவளாம் வறுமை காணாள்
திங்கள்போல் வதன மொக்குந்
தீர்க்கமங் கிலிய மேற்பள்.

24. ஜாதகரின் சகோதரியினுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் கள்ளம் கபடம் வஞ்சனை இவைகள் இல்லாதவளாக இருப்பாள். இவள் அச்சமும் சந்தேகமும் உள்ள மனத்தை

உடையவளாக இருப்பாள். களைப்பை அடைந்தவர்களுக்குத் தாகம்தீர நீர்மோரைக் கொடுப்பாள். இவள் தன் பிற்காலத்தில் மேன்மையான குடும்பத்தை அடைபவள் ஆவள். தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். இவள் சந்திரனைப்போல அழகான முகத்தை உடையவள் ஆவள், தீர்க்கமான மாங்கல்யத்தை உடையவளாக இருப்பாள், அஃதாவது இவளுடைய புருஷன் தீர்க்க ஆயுள உடையவர் ஆவர்.

25. மாரனு மேற்பால் நேரு மைந்தர்க ளாண்பால் மூன்று
காரிழை மார்க ளிரண்டு கழறுவோம் பாவைக் கேதான்
கூறுமூன் கோபங் கொஞ்சங் கோதையுந் தீர்க்க ஜீவி
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

25. ஜாதகரின் சகோதரிக்கு புருஷன் மேற்குத் திக்கிலிருந்து வருவார். இவளுக்கு மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு என்று சொல்லுகின்றோம். இவள் பேசுவதற்கு முன்னே சிறிது கோபத்தை உடையவளாவள். இவள் நீண்ட ஆயுள உடையவள் ஆவள். பூமியில் தவங்களைச் செய்கின்ற பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய குணாதிசயங்கள்

26. ஜாதக னன்னை சேதி சாற்றுவோ மினிமே லாக
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுறுதியில் லாத நெஞ்சஞ்
சாதிப்பாள் சிலவே சங்கை தன்துணை யாண்பா லொன்று
காதலி யவ்வா றுகுங் கழறுவோ மாமன் சேதி.

26. ஜாதகரின் தாயாருடைய குணாதிசயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். இவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள், நிலையான மனத்தை உடையவள் அல்லள். இவள் சில விஷயங்களில்தான் சொன்னதே சரியென்று வாதித்து நிலைநாட்டுவாள். இவளுக்கு ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் இருப்பார்கள். ஜாதகருடைய அம்மானின் விஷயங்களைச் சொல்லுகிறோம்.

ஜாதகரின் அம்மானுடைய குணாதிசயங்கள்

27. பூமியால் சீவிப் பானும் புத்திர ராண்பால் காணன்
தாமத குணத்தா னுவன் சத்தியு மொன்றே தீர்க்கம்
நேமியில் நல்லோ னுவன் நிதானமாங் குடும்ப மேற்பன்
சாமிமேல் பத்தி பூண்பன் ஐயமுனி தடுத்துச் சொல்வார்.

27. ஜாதகருடைய அம்மான் விவசாயத் தொழிலால் ஜீவிப்பவர் ஆவர். இவருக்கு ஆண் குழந்தை கிடையாது. இவர் தாம்தமான

குணத்தை உடையவராக இருப்பார். இவருக்கு மனைவி ஒருத்தியே யாவள். இவளும் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள். இவர் பூமியில் நல்லவராக இருப்பார். இவர் நடுத்தரமான குடும்பத்தை உடையவராவர். இவர் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவ்விதமாக முனிவர் சொல்லவே ஜயமுனிவர் தடுத்துக் கேட்கின்றார்.

28. மாதுல னுஸ்தி யாவு மடைபவர் விபரஞ் சொல்வீர்
ஜாதகன் முன்னை னுக்குச் சார்ந்திடு மென்று
[சொல்வோம்
ஓதுவேன் பின்பா கத்தில் உத்தமன் சேதி யாவுங்
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

28. ஜாதகரின் அம்மானுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் யார் அடைவார்? என்ற விபரத்தை, முனிவரே! நீரே சொல்லுவீராக. இதற்குப் பதில் சொல்லிவந்த முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருடைய தமையனுக்கு, அம்மானுடைய சொத்துபோய்ச் சேர்ந்துவிடும் என்று சொல்லுகின்றோம். அடுத்த பாகத்தில் அம்மானுடைய விஷயங்கள் எல்லாவற்றையும் சொல்லுகின்றேன். இளம் யானையின் முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மம்

29. மாதிரு பூர்வஞ் சொல்வேன்
வடதிசை தணிகை மேல்பால்
மேதினில் பேரூர் தன்னில்
விளங்கினள் மருத்துவச் சேயாய்க்
காதலி சுகமாய் வாழ்ந்து
காலன்தன் ஈட டைந்து
வேதனுல் வரையப் பட்டு
விளங்கினு ளென்று சொல்வோம்.

29. ஜாதகரின் தாயாருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். வடக்குத் திக்கில் தணிகை என்ற திருத்தணிகை க்ஷேத்திரத்திற்கு மேற்கிலுள்ள ஒரு பெரிய ஊரில் மருத்துவருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள். இவள் சௌக்கியத்துடன் வாழ்ந்து பிறகு இறந்து எம்பட்டணம் போய் பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தாயாருடைய பின் ஜன்மமும்
தகப்பனுருடைய முன் ஜன்மமும்

30. மறுஜன்ம மொற்றியூரில்
வருவளாஞ் சைவச் சேயாய்த்
திருமகள் விலாசம் பெற்றுச்
செல்வதி வாழ்வா ளாவள்
உரைக்கிறேம் தந்தை பூர்வ
மோதுரு தன்னி லேதான்
தரித்தொழில் செய்கு லத்தில்
ஜனித்துமே வறுமை யின்றி ;

30. ஜாதகரின் தாயார் தன்னுடைய மறு ஜன்மத்தில் திரு வொற்றியூரில் சைவருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். இலட்சுமியினுடைய கடாக்ஷத்தை அடைந்து இவள் தனவதியாக இருந்து வாழ்பவள் ஆவள். ஜாதகரின் தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் செயல்லுகின்றேம். நான்கு வேதங்களையும் ஓதுகின்ற ஸ்தலமாகிய சிதம்பர க்ஷேத்திரத்தில் நெசவுத்தொழிலைச் செய்கின்றவர்களுடைய குலமாகிய செங்குந்தர் ஜாதியில் இவர் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து தரித் திரத்தையும் கஷ்டங்களையும் அடையாமல் இருந்துகொண்டும் ;

ஜாதகரின் தகப்பனுருடைய மறுஜன்மம்

31. அறுமுகன் பத்தி கொண் டலைவோர்க்கு வன்ன மீந்து
திருமகன் பவமில் லாமல் சென்றனன் காலங் காடு
பிறமனல் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று
[சொன்னேம்
வருஞ்ஜன்மம் வேங்க டத்தில் வைசிய குலமு திப்பன்.

31. ஆறுமுகக் கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவ ராகியும் யாதொரு கிலேயும் இல்லாமல் இங்கும் அங்கும் திரிந்து கொண்டிருப்பவர்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போட்டுக் கொண்டும் யாதொரு பாபத்தையும் அடையாமலும் வாழ்ந்து கொண்டு இருந்து பிறகு எமப்பட்டணத்திற்குப் போனர். பிறகு பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவர் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றர் என்று சொல்லுகின்றேம். ஜாதகரின் தகப்பனர் தன்னுடைய மறுஜன்மத்தில் வேங்கடம் என்ற திருப்பதி ஸ்தலத்தில் வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார்.

ஜாதகரின் தாயார் தகப்பனர் பிதிருபாட்டன் பிதிருபாட்டி இவர்களுடைய மரண காலங்கள் (கர்மங்கள்)

32. மூவைந்து வாண்டு தன்னில் விளம்புவோ மன்னை கண்டன்
தாவிய யிருப தாண்டில் தந்தைக்குக் கண்ட மெய்தும்
ஆவலா யீராறுண்டு ளணுகிடுந் தந்தை தந்தை கண்டம்
மேவிடும் பதினைந் தாண்டில் விளம்புவோர் தந்தை
[யன்னை.

32. ஜாதகருக்கு பதினைந்தாவது வயதில் இவருடைய தாயாருக்கு மரணம் நேரிடும். இவருக்கு இருபதாவது வயதில் இவருடைய தகப்பனருக்கு மரணம் நேரிடும். இவருக்குப் பன்னிரண்டு வயதிற்குள் தன்னுடைய தந்தையின் தந்தையாகிய பிதிரு பரட்டனருக்கு மரணம் நேரிடும். இவருக்குப் பதினைந்தாவது வயதில் இவருடைய தந்தையின் அன்னையாகிய பிதிரு பாட்டிக்கு மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியும்

33. பாவகன் மணத்தின் காலம் பகருவோம் பத்தொன்
[பாண்டில்
நீலியும் மேல்பால் நேரும் நுகலுவோ மவள்கு ணத்தைச்
சீலியாம் முன்கோ பத்தள் சிலுகான குணமுங் கொஞ்சம்
மால்மனை வாச முண்டு வருவோரை யாத ரிப்பள்.

33. ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பத்தொன்பதாவது வயதில் மேற்குத்திக்கிலிருந்து இவருடைய மனைவி வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் நல்ல ஒழுக்கம் உடையவளாக இருப்பாள். முன் கோபத்தை உடையவளாவள். சிறிது கெட்ட குணத்தையும் உடையவளாக இருப்பாள். இவளிடத்தில் மஹாவிஷ்ணுவின் மனைவியாகிய லட்சுமி வாசஞ்செய்து கொண்டிருப்பாள். இவள் தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுவாள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

34. வந்தபி னதிக யோகம் வயதுமே தீர்க்க மெய்தும்
பந்துவு மதிக்க வாழ்வள் பதரினில் செல்லா ளாவள்
மைந்தர்க ளாண்பா லிரண்டு மங்கையு மவ்வாறு தீர்க்கம்
நேர்ந்திடும் முதலில் புத்திரர் நுகலுவீ ரந்தச் சங்கை.

34. ஜாதகருக்குத் தன்னுடைய மனைவி வந்த பிறகு அதிக யோகம் உண்டாகும். இவருடைய மனைவி நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள். இவள் தன்னுடைய பந்துக்கள் தன்னை

மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வாள். இவள் உபயோகமில்லாத இழிவான காரியங்களில் பிரவேசிக்கமாட்டாள். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் தீர்க்க ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவருக்கு முதலில் பிறக்கின்ற குழந்தைகள் இறந்து விடுவார்கள். இதற்குக் காரணத்தைச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய முன் ஜன்மம்

35. அரவுடன் குருவுங் கூட அப்பலன் முதலில் நஷ்டம்
திருமகன் பூர்வஞ் சொல்வேன் செந்திமா மலையி லேதான்
அறுமுக னடியா ரான அம்மாதர் தனக்குக் கல்வி
வருவிக்குங் குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாகி;

35. அரவு என்ற இராகுவுடன் குரு கூடியிருப்பதால் இங்கு முன்னே சொல்லப்பட்ட பிரகாரம் குழந்தைகள் முதலில் இறந்து விடுவார்கள். ஜாதகனின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் தன்னுடைய முன் ஜன்மத்தில் செந்திமாமலை என்ற க்ஷேத்திரத்தில் ஆறுமுகக் கடவுளின் அடியார்களாகிய தாஸிகளுக்கு வித்தையைக் கற்றுக்கொடுக்கின்ற ஜாதியாராகிய நட்டுவஜாதியில் பிறந்து மனைவியையும் மக்களையும் உடையவராகி ;

36. பலதல வாசஞ் செய்து பாவங்க ளில்லா னகிக்
குலவினன் காலந் நாடு குறைதலை வரையப் பட்டு
வருவனு மிந்தப் பாலன் வரைகிறே மிவனின் சேதி
குறையென்றோர்க் குதவி செய்வன் கொடுமையை
[யெவர்க்கு மெண்ணன்.

36. அனேக புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைசெய்து யாதொரு பாபங்களையும் அடையாதவராகி வாழ்ந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தார். குறைக்கப்பட்ட தலைகளையுடைய பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவர் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவருடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரங்களைச் செய்வார். யாருக்கும் இவர் கெடுதியை நினைக்கமாட்டார்.

37. தந்தையின் குடும்பம் வேறு சார்ந்திடும் பாகம் மூன்று
விந்தையா யில்லஞ் செய்தல் மதிதசை யந்தந் தன்னில்
மூந்திநாள் பூமி விருத்தி மேவிடுஞ் சிலது பூமி
பந்தினர் மதிக்க வாழ்வன் பராசரும் தடுத்துச் சொல்வார்.

37. ஜாதகரின் தகப்பனருடைய குடும்பம் மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படும். மதிதிசை என்ற சந்திர தசையின் கடைசி காலத்தில் இவர் ஆச்சரியமாக ஒரு வீட்டைக் கட்டுவார். இவருடைய பூர்விகமான நிலங்கள் நல்ல பலனைக்கொடுக்கும். சில நிலங்கள் வந்து சேரும். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்குப்படியான அந்தஸ்தி லிருந்து கொண்டு வாழ்வார். இவ்விதமாக முனிவர் சொல்லவே, பராசர முனிவர் தடுத்துக் கேட்கின்றார்.

ஜாதகருடைய யோக பாவம்

38 யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச் [சங்கை
பாகனும் ரவியும் லாபம் பனிமதி ஜன்மந் தங்க
ஆகஆசா னர வொன்பா னணுகிட பேரி யோகந்
தோகையே சேயின் காலஞ் செப்புவோம் யோகந்தானே.

38. ஜாதகருக்கு எவ்விதமாகயோகங்களைச் சொன்னீர், அதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று பராசரமுனிவர் கேட்க? பலன்களைச் சொல்லிவந்த முனிவர் பதில் சொல்லுகின்றார். பாகன் என்ற புதனும் ரவி என்ற சூரியனும் லாபம் என்ற பதினொன்றுவது வீட்டில் இருப்பதாலும் பனிமதி என்ற குளிர்ந்த சந்திரன் ஜன்மம் என்ற லக்கினத்தில் இருப்பதாலும் ஆசான் என்ற குருவும் அரவு என்ற இராகுவும் ஒன்பதாவது வீட்டில் இருப்பதாலும் ஜாதகருக்குப் பேரியோகம் என்ற பேரிகை யோகம் ஏற்பட்டிருக்கின்றது. பார்வதியம்மையே! சேய் என்ற அங்காரகனின் மகாதசையில் ஜாதகருக்கு யோகங்கள் உண்டாகும்.

குறிப்பு :—குருவுக்கு மூன்றுவது பாவத்தில் புதன் இருந்தால் பேரிகை என்ற ஒருவிதமான யோகம் உண்டாகின்றது. இந்த ஜாதகத்தில் குருவிற்கு மூன்றில் புதன் இருப்பதைக் கவனிக்கவும். இராகு இருக்கின்ற ராசி அதிபதி உச்சம் கேந்திரம் திரிகோணம் இவைகளிலிருந்து இராகு சுபராசியில் சுபவர்க்கம் பெற்றால் ஒருவித பேரியோகம் ஏற்படுகிறது. இந்த ஜாதகத்தில் இராகு இருக்கின்ற ராசியின் அதிபதியாகிய அங்காரகன் லக்கினத்திற்கு ஏழாவது வீட்டில் இருக்கின்றார். இராகு நைசர்கிக சுபராகிய குருவுடனும் கூடியிருக்கின்றார். ஆகையால் பேரியோகம் சிறிது ஏற்பட்டிருக்கின்றது. இந்தப் பாடலில் குருவும் இராகுவும் ஒன்பதில் இருப்பதைப்பற்றிச் சொல்லியிருப்பதையும் பேரியோகத்தைப்பற்றி ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்று நாற்பதாவது சுலோகத்தையும் ஜாதகசிந்தாமணி இரண்டாயிரத்து நூற்றிருபத்தாறுவது பாடலையும் இரண்டாயிரத்து நூற்றிருபத்தெட்டாவது பாடலையும் பார்க்கவும்.

39. அதுமுதல் மரண மட்டு மம்புலி போலே யோகம்
நிதிமிகப் பெருகு மென்றேரும் நீர்சுனை சோலை செய்தல்
விதவித லாபம் நேரும் வேற்றூரில் பூமி சேர்க்கை
அதுவிப ரங்கள் பின்னு லறிவிப்போந் காயே யாங்கள்.

39. ஜாதகருக்கு அங்காரக தசை முதற்கொண்டு தன்னுடைய மரண காலம் வரையிலும் வளர் பிறைச் சந்திரன் போல யோகம் ஓங்கி அதிகப்பட்டுக் கொண்டே போகும். இவருக்கு அதிகமான தனம் உண்டாகும் என்று சொல்லுகின்றோம். இவர் சோலைகளையும் நீரோட்டச் சுனைகளையும் உண்டாக்குவார். இவருக்கு அநேகவிதமான வழிகளில் லாபம் ஏற்படும். அன்னிய கிராமத்தில் இவருக்கு நிலங்களும் மனைகளும் உண்டாகும். இவைகளைப்பற்றி விவரமாகப் பின்னால் நாங்கள் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே !

ஜாதகருடைய மரணமும் மறுஜன்மமும்

40. அன்பது வெட்டு வாண்டி லாவணி மாதந் தன்னில்
இன்னவ னுடல மேகு மியம்புவோ மிவன்பின் ஜன்மந்
தென்திசை கடையூர் தன்னில் ஜனிப்பனுங் கோகு
[லத்தில்
பொன்பூமி யுடையனுகிப் புதல்வனும் வாழ்வா னுமே.

40. ஜாதகருக்கு தன்னுடைய ஐம்பத்தெட்டாவது வயதில் ஆவணி மாதத்தில் மரணம் நேரிட்டு இவருடைய தேகம் மறைந்து போய்விடும். இவருடைய பின் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். தெற்குத்திக்கில் உள்ள கடையூர் என்ற திருக்கடையூர் க்ஷேத்திரத்தில் இடையர் ஜாதியில் இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் பிறந்து பொன் செல்வம் நிலங்கள் ஆகிய இவைகளை உடையவராகி வாழ்பவர் ஆவர்.

ஜனன கால நட்சத்திரமும் தசை இருப்பும்

41. பிறந்திடுங் காலந் தன்னில் பூரத்தின் கடைப் பாதத்தில்
சிறந்தசுக் கிரனி ருப்பு திருதிய வாண்டு மாகும்
உறைந்திடுந் திங்கள் நாலு முரைத்தனம் பூர்வ பாகம்
அறந்தனை வளர்க்கு மெங்க ளாத்துமத் தாயே கேளாய்.

41. ஜாதகர் பிறந்தகாலத்தில் ஜன்ம நட்சத்திரம் பூரத்தின் நான்காவது பாதம் ஆகும். இதற்குரிய மேன்மையான சுக்கிரனுடைய தசையின் இருப்பு மூன்று வருடங்களும் நான்கு மாதங்களும் ஆகும். இவ்விதமாக முன் பாகத்தைச் சொல்லி முடித்துவிட்டோம். தருமங்களை வளர்க்கின்ற எங்களுடைய உயிருக்கு உயிராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகம் 117

ஜனன கால கிரகநிலை

1. [1]சிங்கலக் கினமு தாகச் சனிஜன்மஞ் [2]சேயு நாலில்
[3]திங்களுங் கேது மைந்தில் [4]சிகண்டியு மாறி லாகப்
[5]பங்கயன் [6]புகரு மெட்டில் புதனேழில் ராகு [7]லாபம்
இங்கிவை கிரகம் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1. ஜன்ம லக்கினம் சிம்மமாகி, சனி லக்கினத்திலும், அங்காரகன் நான்கிலும், சந்திரனுங் கேதுவும் ஐந்திலும், குரு ஆறிலும், சூரியனும் சுக்கிரனும் எட்டிலும் புதன் ஏழிலும், இராகு பதினொன்றிலும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர்கள் என்று;

கிரகநிலை

சூரியன் சுக்கிரன்			ராகு
புதன்	இராசி சக்கரம்		
குரு			லக்கினம் சனி
சந்திரன் கேது	அங்காரகன்		

பூராடம் 3-ஆம் பாதம்: சுக்கிரதசை வரு 8-4-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்தில் குருவும், மிதுனத்திற் சனியுங் கேதுவும், கடகத்திற் சூரியனும், கன்னியிற் சுக்கிரனும், துலாத்திற் சந்திரனும், விருச்சிகத்தில் அங்காரகனும், தனுசில் இராகுவும், மகரத்திற் புதனும் ஆகும். சனி வக்கிரகதியில் இருக்கின்ரூர். சுக்கிரன் அஸ்தமனம் அடைந்திருக்கின்ரூர்.

---

1. சிம்மம்
2. அங்காரகன்
3. சந்திரன்
4. குரு
5. சூரியன்
6. சுக்கிரன்
7. பதினொன்று

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. அந்தரி கேட்கும் போது
அத்திரி முனிவர் சொல்வார்
இந்தசே யாணுஞ் சென்ம
மிவன்தந்தை யில்லஞ் சொல்வேன்
தென்பார்வை கூரை யில்லஞ்
சிறுவூராந் தென்பால் மார்க்கம்
இந்தவன் சேஷ்ட ஜக
வரைகிரேங் கங்கை சேயாய்.

2. பார்வதியம்மையார் கேட்கும்பொழுது அத்திரி மஹரிஷியானவர் பலாபலன்களைச் சொல்லுகின்றார். இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். ஜாதகருடைய தகப்பனரின் வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றேன். இந்த வீடு கூரை வீடாகும், தெற்குத் திக்கைப் பார்த்திருக்கும். இஃது ஒரு சிறிய கிராமத்தில் இருக்கும். இதற்குத் தெற்குப் பக்கத்தில் ஒரு பாட்டை இருக்கும். ஜாதகர் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் முதல் குழந்தையாகப் பிறந்தவராவார்.

3. பாலகன் ஜனன யோகம் பெற்றதாய்த் தந்தை யோகஞ்
சாலவே துணைவர் யோகந் தன்மனை புத்திர யோகம்
ஏலவே முன்பின் ஜன்ம மியம்புவோ மிந்நூல் தன்னில்
ஆலத்தை யுண்டோன் தேவி யறிவிப்போம் பிதாகு
[ணத்தை.

3. ஜாதகருடைய பிறந்த காலத்திய யோகத்தையும் இவரைப் பெற்ற தாயார் தகப்பனர் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் இவருடன் கூடப்பிறந்த சகோதரர்களுடைய யோகங்களையும் இவர்களுடைய மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம். ஆலகால விஷத்தை அருந்திய சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! ஜாதகரின் தகப்பனருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் துணைந வத்தி லாண்மூன்று கன்னி யொன்று
இந்தவார் தீர்க்க மென்றே மிவர்களும் வேறுய்ச் செல்வர்
பந்தணி மாது தானும் பரவுவாள் தன்னில் லத்தில்
அந்தவள் குணமெவ் வாறு வறிவிப்பீர் முனியே தீர்தாம்.

4. ஜாதகரின் தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் ஒன்பது பேர் ஆவர். இவர்களில் மூன்று சகோதரர்களும் ஒரு சகோ

தரியும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இந்த மூன்று சகோதரர்களும் ஜாதகருடைய தகப்பனுரைவிட்டுப் பிரிந்து வெவ்வேறான குடும்பஸ்தர்களாகப் போய் விடுவார்கள். சகோதரி மாத்திரம் தன்னுடைய தகப்பனுருடைய வீட்டிலேயே இருந்து கொண்டு வாழ்வாள். இவளுடைய குணகுணங் களைப்பற்றி, முனிவரே நீரே ! சொல்லுவீராக.

ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரியின் விஷயங்கள்

5. மாந்தளிர் மேனி யாவள் வார்த்தையு மதிக மேற்பள்
கூர்ந்துமே வார்த்தை சொல்வள் கோளரி போலே
[கோபஞ்
சேர்ந்தவர் தம்மைக் காப்பள் சீலம்போல் வெளிம யக்கங்
காந்தம்போல் புத்தி யுண்டு கண்முகம் வசிய முண்டு.

5. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரி மாந்துளிரைப்போன்ற ஒரு விதமான சிவப்பு நிறத்தை உடையவளாக இருப்பாள். இவள் வார்த்தைகளை அதிகமாகப் பேசுவாள். இவள் கண்டிப்பான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவளுக்கு ஆண் சிங்கத் திற்குக் கோபம் வருவதைப்போலக் கோபம் வரும். இவள் தன்னிடம் வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவாள், நல்லொழுக்கத்தை உடையவள்போல வெளிக்குக் காண்பித்துகொண்டு பிறரை ஏமாற்றும் தன்மை உடையவள். இவள் காந்தத்தைப்போல கிரகிக்கின்றதான புத்தியை உடையவள். இவளுடைய கண்களும் முகமும் பிறரைத் தன்பக்கமாக வசியப்படுத்திக் கொள்ளும்படி அழகாக இருக்கும்.

6. மணமுண்டாய் மதலை யின்றி வரனுமே மரண மாக
வினையாகத் தாயில் லத்தில் மேவுவா ளிந்த மாது
கனமுடனதிகா ரங்கள் காணுவா ளென்று சொல்வோம்
வனிதையின் பூர்வ தோஷ மணுகிற்று வென்று
[சொல்வோம்.

6. இவளுக்குக் கலியாணம் ஆகி குழந்தைகள் இல்லாதவளாகிப் புருஷனை இழந்து பூர்வஜன்மத்தின் பாபத்தின் பயனாக தன்னு டைய தாயார் வீட்டிற்கு வந்து சேர்ந்து விடுவாள். இவள் தன தாயார் வீட்டில் அதிகாரங்களைச் செலுத்துபவளாக இருப்பாள் என்று சொல்லுகின்றோம்.

7. என்னவூழ் செய்தா ளத்தை யியம்புவீர் முனியே நீர்தாம்
தென்திசை பெண்ணை யோரஞ் ஜனித்தனள் கர்ண
[சேயாய்
முன்னமே குடும்பி யாகி முதல்வியும் வாழும் நாளில்
உன்னத திருவி ழாவுக் குறைந்தன ளிந்த மாது.

7. இவளுடைய பூர்வ ஜன்மத்திய பாவத்தின் பயனாக இவ்விதமாக நேரிட்டிருக்கின்றது என்று சொல்லுகின்றோம். இவள் தன்னுடைய முன்ஜன்மத்தில் என்ன பாபத்தைச் செய்தாள் என்பதை முனிவரே நீரே சொல்லுவீர் என்று கேட்க, முனிவராகிய அத்திரி மஹரிஷி பதில் சொல்லுகிறார். இவள் தெற்குத் திக்கிலுள்ள பெண்ணை ஆற்றின் கரையோரத்தில் ஒரு கருணீகர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து மேன்மையான குடும்பத்தை உடையவளாகி வாழ்கின்ற காலத்தில் ஒரு சிறந்த கோயிலின் திருவிழாவிற்குப் போனாள்.

8. அறுமுக னடிபணிந்து வணுகினள் கடைவீதிக்கு
உறைமஞ்சள் சிவப்புச் சீப்பு வொண்டொடி வாங்கிக்
[கொண்டு
பொருளாயு மீயா ளாகிப் புள்ளிமான் போல்ப றந்தாள்
மறுபடி வணிபன் பார்த்து மங்கையைக் காண வில்லை;

8. இவள் ஆறுமுகக் கடவுளை வணங்கித் தரிசித்துப் பிறகு கடைத்தெருவிற்குச் சென்றாள். உறைத்துப் பூசிக்கொள்ளுகின்ற மஞ்சள் சிவப்புக் குங்குமம் சீப்பு ஆகிய இவைகளை வாங்கிக்கொண்டு இவைகளின் விலையைக் கடைக்காரனுக்குக் கொடுக்காமல் ஒரு புள்ளி மானைப்போல வேகமாகப் போய் மறைந்து விட்டாள். வியாபாரி இவளைத் தேடிப்பார்த்து இவள் காணமற்போனபடியால்;

9. மனமது வருத்த முற்று வரைந்தசா பத்தைக் கேண்மோ
இனமது வாகா முன்னம் ஏகுவான் வரனு மேதான்
வனிதைபின் ஜன்மந் தன்னில் வரனுண்டாய் மதலை
[யின்றி
வினையாக நாணி ழந்து வித்தகி வாழ்வா யென்று;

9. தன்னுடைய மனத்தில் துன்பத்தை அடைந்து இந்த வியாபாரி கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. "நீ வாங்கிய சாமான்கள் செலவாவதற்கு முன்னமே உன்னுடைய புருஷன் இறந்துவிடக்கடவது. உன்னுடைய மறுஜன்மத்தில் உனக்குப் புருஷன் எற்பட்டுக் குழந்தைகள் இல்லாமல் ஊழ்வினையின் பயனாக உன்னுடைய மாங்கல்யத்தை இழந்துவிட்டு நீ வாழக்கடவது" என்று இந்த வியாபாரி இவளைப் பார்த்து;

10. சொல்லியே தெரு தூள் விட்டான் சேர்ந்தது வந்தத்
[தோஷம்
வல்லிக்கு வந்த வாண்டில் வரனுமே வந்த பின்பு
தொல்லையாய்க் காலந் நாடு சென்றுமே பிரமன் லக்கம்
புல்குவா ளிந்த மாது பொறுந்திடு முன்னூழ்ச் சாபம்.

10. சொல்லிவிட்டுத் தெருவிலிருந்த மண்தூளை எடுத்துச் தூவினன். இந்தத் தோஷமானது இவளை வந்து அணுகியது. இவளுக்கு முன் ஜன்மத்தில் அதே வருஷத்தில் புருஷன் வந்து அமைந்து பிறகு கஷ்டத்தை அனுபவித்து இறந்து எம்பட்டணத்திற்குப்போய் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். இவளை முன் ஜன்மத்திய சாபம் வந்தடையும்.

11. பாவைக்கு வரனு மாண்டு
பகருவாள் தாயில் லத்தில்
நீலிபின் ஜன்மஞ் சொல்வேன்
நுகருங்கா ளாத்தி தன்னில்
சீலமாஞ் சைவச் சேயாய்
ஜனிப்பளா மென்று சொல்வோம்
ஆலத்தை யுண்டோன் தேவி
அறிவிப்போம் பிதாகு ணத்தை.

11. இவளுடைய புருஷன் இறந்துவிடவே இவள் தன்னுடைய தாயார் வீட்டிற்குப்போய்ச் சேர்ந்துவிடுவாள். இவளுடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் நல்லொழுக்கமுள்ள ஒரு சைவ குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம். ஆலகால விஷத்தை அருந்திய சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! ஜாதகரின் தகப்பனருடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய குணாதிசயங்கள்

12. தனுராசி மகநாள் தன்னில் ஜனிப்பனுங் கிருஷி செய்வன்
இனமதிப் புடனே வாழ்வ னீகைவான் மானி றத்தான்
நினைத்ததை முடிக்க வல்லன் நேமியில் நல்லோ னவன்
தனைவரைப் பிரிதல் செய்வன் தந்தையில் வாழ்பவ
[னவன்.

12. ஜாதகரின் தகப்பனார் தனுசு ராசியில் மகம் நட்சத்திரத்தில் பிறந்தவராவர். இவர் விவசாயத் தொழிலைச் செய்வார். இவர் தன்னுடைய பந்துக்கள் மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் பிறருக்குக் கொடுக்கும் தன்மையை உடையவர், மானிறம்

என்ற ஒருவித நிறத்தை உடையவராவர். இவர் தான் செய்ய எண்ணின காரியங்களைச் செய்து முடிக்கும் சாமர்த்தியத்தை உடையவர். இவர் பூமியில் நல்லவராக இருப்பார். இவர் தன்னுடைய சகோதரர்களைத் தன்னை விட்டுப் பிரிந்து வேறு குடும்பஸ்தர்களாகப்போய் விடும்படி செய்வார். இவர் தன்னுடைய தகப்பனுருடைய வீட்டில் இருந்து கொண்டு வாழ்பவராவர்.

13. உண்டியில் வறுமை காணு
னுறுதியில் லாத நெஞ்சன்
குண்டைகோ விருத்தி யுள்ளான்
கொடுமையை யெவர்க்கு மெண்ணன்
தண்டமிழ் நூணுக்கந் தேரான்
சல்லியப் பாதை காணன்
துண்டமாய்க் கூரு னுவன்
தொடுவழக் கதனில் செல்லான்.

13. ஜாதகருடைய தகப்பனுர் சாப்பாட்டு விஷயத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவர் நிலையில்லாத மனத்தை உடையவராக இருப்பார். இவரிடம் எருதுகளும் பசுக்களும் விருத்தியாகும், யாருக்கும் கெடுதியை நினைக்கமாட்டார். இவர் இனிமையான தமிழின் நுட்பத்தை யறியும் சக்தியில்லாதவர். இவர் கடனுல் உபத்திரவத்தை யடையமாட்டார். இவர் கண்டிப்பாகவும் கடினமாகவும் உள்ள வார்த்தைகளைச் சொல்லமாட்டார், தொடர்ச்சியாய் நடக்கின்ற வியாஜியங்களில் தலையிடமாட்டார்.

14. அன்னிய ருதவி யாலே அவனுமே வாழ்வா னுவன்
தன்கரம் மாலின் ரேகை தங்கிடும் பித்தச் சூடு
கன்னிக் கிஷ்ட னுவன் காலிகள் விருத்தி யுண்டு
சொன்னசொல் காப்பா னுவன் தொல்புவி வறுமை
[காணன்.

14. ஜாதகரின் தகப்பனுர் பிறருடைய சகாயத்தினுல் ஜீவனம் செய்பவராக இருப்பார். இவருடைய உள்ளங்கைகளில் விஷ்ணுரேகை என்ற ஒருவிதமான ரேகை இருக்கும். இவர் பித்தச் சூட்டு ரோகத்தை உடையவராக இருப்பார். இவர் தன்னுடைய மனைவிக்குப் பிரியமானவராவர். இவரிடம் பசுக்கள் விருத்தியாகும். இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவராவர், இந்தப் பழமையான பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

15. சொல்லிய குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன்
அரிநிறஞ் சமதே கத்தன்
கல்வியுஞ் சமம தாகுங்
கடுரமுஞ் சாந்த முண்டு
எல்லையை விருத்தி செய்வ
னேவலா ளுடைய னவன்.

15. இது வரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் மஹா விஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான கறுப்பு நிறத்தை உடையவராக இருப்பார். இவர் நடுத்தரமான தேகத்தை உடையவராவர். இவருக்கு வித்தையும் நடுத்தரமாக இருக்கும். இவர் கடுமையான குணத்தையும் உடனே சாந்தத்தை அடையும்படியான குணத்தையும் உடையவராக இருப்பார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி ஆக்குவார். இவர் வேலையாட்களை உடையவராவர்.

16. வறுமை யெப்போதுங் காணன்
வளவுமே சித்திரஞ் செய்வன்
உறன்முறை மதிக்க வாழ்வ
னுள்மனங் கபடு மில்லான்
விரைவினில் நடக்க வல்லன்
விண்வம்பிற் செல்லா னவன்
முருகர்தம் பத்தி பூண்பன்
மொழியதைக் காப்பா னவன்.

16. ஜாதகர் எப்போதும் கஷ்டத்தையும் தரித்திரத்தையும் அடையமாட்டார். இவர் தன்னுடைய வீட்டைச் சித்திரங்களால் அலங்காரம் செய்வார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னைக் கௌரவப் படுத்தும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார், தன்னுடைய மனத்திற்குள்ளே கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகள் இல்லாதவராக இருப்பார். இவர் வேகமாக நடக்கும் சக்தியை உடையவர், வீணான சண்டை சச்சரவுகளில் பிரவேசிக்கமாட்டார். இவர் முருகக் கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார், தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவர் ஆவர்.

ஜாதகருடைய சகோதரங்களும் (சகோதரபாவமும்) விவாகமும்

17. தன்துணை யாண்பால் மூன்று தங்கிடும் பெண்பா லிரண்டு
அன்னவர் சேதி பின்பா லறிவிப்போந் தாயே யாங்கள்
இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருப தாண்டுள்
கன்னிகை தென்பால் நேருங் கழறுவோ மவள்கு
[ணத்தை.

17. ஜாதகருடன் கூடப் பிறந்தவர்கள் மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் ஆவர். இவர்களுடைய விஷயங்களைப்பற்றி, பார்வதியம்மையே! நாங்கள் பின்னால் சொல்லுகின்றோம். ஜாதகரின் விவாகக் காலத்தைப்பற்றி சொல்லுகின்றோம். இவருக்கு இருபது வயதிற்குள் தெற்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சேருவாள். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் மனைவியினுடைய குணதிசயங்கள்

18. தோகைபோல் நிறத்த ளாவள் தொல்புவி நல்லோ
[ளாவள்
பாகமாய்ப் பேசு வாளாம் பதர்குண மில்லா ளாவள்
ஆகம முணர்ந்தோருக்கு வன்னமு மன்பா யீவள்
நாகரி கங்க ளுண்டு நவின்றிடாள் கட்டு வார்த்தை.

18. ஜாதகருடைய மனைவி மயிலைப்போன்ற ஒருவிதமான அழகான நிறத்தை உடையவளாவாள். இந்த பழமையான பூமியில் இவள் நல்லவளாக இருப்பாள். இவள் இனிமையாகவும் பக்குவமாகவும் பேசுபவள் ஆவள், அவசரமில்லாத இழிவான குணங்களை உடையவள் அல்லள். இவள் ஆகமசாஸ்திரங்களை அறிந்துள்ள பெரியார்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் பிரியத்துடன் போடுவாள். இவள் நாகரிகங்களை உடையவளாக இருப்பாள், புனைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையும் இவள் சொல்லமாட்டாள்.

19. பாலபாக்கிய முடைய ளாவள் பஞ்சைமே லிரக்க மாவள்
பாலிகை வந்த பின்பு பகருவோம் விசேஷ யோகம்
நீலிக்கு வயது தீர்க்கம் நிமலன்தன் மனத்துக்
[கேத்தோள்
காலத்தை யறிந்து ரைப்பள் காதலி தீர்க்க ஜீவி.

19. ஜாதகருடைய மனைவி பால் பாக்கியத்தை உடையவளாக இருப்பாள், ஏழைகளிடத்தில் தயாளமான குணத்தை உடையவளாக இருப்பாள். இவள் புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு விசேஷ யோகம் உண்டாகும் என்று சொல்லுகின்றோம். இவள் நீண்ட வயதை உடையவள் ஆவள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத்

தகுந்தாற்போல ஒற்றுமையாக இருப்பாள். இவள் கால வர்த்தமானங் களை நன்முகத் தெரிந்துகொண்டு அவைகளுக்குத் தகுந்தபடி பேசு பவள் ஆவள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள்.

குறிப்பு :—இந்தப் பாடலில் மூன்றுவது வரியிலும் நான்காவது வரி யிலும் ஜாதகிக்குத் தீர்க்க ஆயுளை இரண்டு தடவை சொல்லியிருப்ப தால் ஆயுள் விசேஷித்து சொல்லப்பட்டிருக்கின்றது எனக் கருத வேண்டும்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

20. புத்திர ரிருநான் காகப் பிறந்திடும் முதலில் சேதஞ்
சுத்தமா யாண்பா லிரண்டு தோகையு மூவர் தீர்க்கம்
எத்தகைப் பலத்தி னலே யிவன்சுதர் முதலில் தோஷங்
குத்தமா யஞ்சில் சேஷன் கூடின பலத்தால்
[சொன்னேம்.

20. ஜாதகருக்கு மொத்தம் எட்டுக் குழந்தைகள் பிறப்பார்கள். முதலில் பிறக்கும் குழந்தைகள் இறந்து விடுவார்கள். இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உண்மை யாக உடையவர்களாக இருப்பார்கள். இவ்விதமாக அத்திரி மஹரிஷி சொல்லவே, எந்தக் காரணத்தினல் இவருக்கு முதலில் பிறக்கும் குழந் தைகள் இறந்து விடுவார்கள் என்று சொன்னீர், என்று கேட்கவே அத்திரி மஹரிஷி பதில் சொல்லுகின்றார். ஐந்தாவது வீட்டில் கெடுதி யான கேது இருக்கின்ற பலத்தினல் இவ்விதமாகச் சொன்னேம்.

ஜாதகரது முன்ஜன்மம்

21. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகிறேம் விரிஞ்சி தன்னில்
வன்னிய குலமு தித்து வளமுள குடும்பி யாகி
அன்னவன் வாழுந் நாளி லணுகின வினையைக்
[கேண்மோ
தன்னிலம் நாக மொன்று சார்ந்தது வெகுநா ளாக.

21. ஜாதகருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் விரிஞ்சிபுரத்தில் வன்னியர் குலத்தில் பிறந்து செழிப்பான குடும்பத்தை உடையவராகி வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்றேம், கேட்பீராக. இவரு டைய விட்டில் ஒரு நாகப்பாம்பு வெகு நாளாக வசித்துக் கொண் டிருந்தது

22. மகுடத்தால் முற்றஞ் செல்ல மாரனுங் கழியால் வாட்டப்
பகையான காலை நாடு பற்றிற்று நாகந் தானுந்
தகைமையா யந்தத் தோஷஞ் சார்ந்தது பாலனுக்கு
மிகுதவம் புரியோ ருக்கு வித்தக னுதவி செய்து ;

22. இந்தப் பாம்பு மோடி வாத்தியத்தால் ஜாதகரின் வீட்டு வர்சலின் முற்றத்தில் வரவே அதை இவர் ஒரு தடியால் அடிக்க அம்பு இறந்து கெடுதியான எமப்பட்டணத்திற்குப் போய்விட்டது. இந்தத் தோஷம் தகுதியாக ஜாதகரை வந்து அடைந்தது. அதிக தவத்தைச் செய்கின்றவர்களுக்கு இந்த ஜாதகர் உபகாரங்களைச் செய்துகொண்டு ;

23. அறமதி லிச்சை யுண்டா யந்தக னகரஞ் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று
[சொல்வோம்
உறைந்திடும் நாக சாப முதிக்குஞ்சேய் முதலில் நஷ்டம்
திருமகள் யோகச் சேதி செப்புவோந் தாயே கேளும்.

23. ஜாதகர் தர்ம காரியங்களில் பிரியமுள்ளவராகி பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலியுடன் எழுதப் பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லு கின்றோம். ஜாதகருக்கு முன் ஜன்மத்தில் உண்டான நாகப்பாம்பின் தோஷம் வந்து அடையும். இவருக்கு முதலில் பிறக்கின்ற குழந்தைகள் இறந்து போய்விடுவார்கள். இனிமேல் இவருடைய யோக விஷயங் களைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய யோகபாவம்

24. பாலகன் ஜன்னந் தொட்டுப் பத்தொன்ப தாண்டு மட்டும்
ஏலவே சமமாம் யோக மிரணிய மதிகம் நேரா
ஞாலங்கள் பலித மற்பம் நாயகன் பிணிய னேகஞ்
சாலவே ஆண்டு மேலாய்ச் சந்திரன் பிறைபோ
[லோங்கும்.

24. ஜாதகருடைய ஜனனகாலம் முதற்கொண்டு இவருக்குப் பத்தொன்பதாவது வயது வரையிலும் யோகம் சமமான நிலையில் இருக்கும். பணம் அதிகமாக உண்டாகாது. இவருடைய நிலங்கள் அற்பமான பலத்தைத் தரும். இவருக்கு அநேகவிதமான நோய்கள் உண்டாகும். இதற்குமேல் இவருக்குச் சந்திரதசையில் வளர்பிறைச் சந்திரனைப்போல் யோகம் நாளுக்கு நாள் விருத்தியாகிக்கொண்டே போகும்.

25. இல்லமுஞ் சித்திரஞ் செய்த லிருபது ஐந்தா மாண்டில்
எல்லைகள் சேர்த்த லுண்டு இடருகள் நிவிர்த்தி யாகும்
வல்லியும் வந்த பின்பு வளர்ந்திடுந் தனதா னியங்கள்
நல்லதோர் புகழு மெய்தல் நாற்காலி பலித மென்றோம்.

25. ஜாதகர் தன்னுடைய வீட்டைச் சித்திரங்களால் அலங்காரம் செய்வார். இவருக்கு இருபத்தைந்தாவது வயதில் நிலங்கள் வந்து

சேரும். கஷ்டங்கள் விலகிப் போய்விடும். இவருக்கு மனைவி வந்தபிறகு தன தான்யங்கள் அதிகப்படும். நல்ல பெருமையையும் கீர்த்தியையும் இவர் அடைவார். இவருக்குக் கால்நடைகள் பலித்தத்தைக் கொடுக்கும் என்று சொல்லுகின்றோம்.

26. பாலபாக்கியம் விருத்தி யுண்டு பலபேர்க்கு வுதவி செய்தல்
ஆலம்போல் பகையு மெய்த லணுகிடும் கிதிகிட் சேபங்
காலத்தை யுணர்வ னையா கழறுவோ மூவெட் டாண்டில்
ஏலவே தனலா பத்தோ னேழினி லிருப்ப தாலே.

26. ஜாதகருக்குப் பால் பாக்கியம் விருத்தியாகும். இவர் அநேக ருக்கு உபகாரம் செய்வார். இவர் பாம்பைப்போன்ற பகைவரை உடையவராவர். இவருக்கு, செல்வமும் புதையலும் கிடைக்கும். இவ் விதமாக அத்திரி மஹரிஷி சொல்லவே, இவ்விதமான பலன்கள் உண் டாகின்ற காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, அத்திரி இருபத்து நான்காவது வயதில் நேரிடும் என்று பதில் சொன்னார். தனலாபாதிபதி என்ற முறையே இரண்டாவது வீட்டிற்கும் பதினேராவது வீட்டிற்கும் உடையவராகிய புதன் ஏழாவது வீட்டில் இருப்பதால்;

27. நேரிடும் நிமல னுக்கு மரண மட்டுங்
கூரெண்ணத் தரித்தி ரங்கள் குலமதிப் புடனே வாழ்வன்
பாரினில் கூவல் சோலை பண்ணுவான் சொற்ப கோவில்
மாரனுஞ் செய்வா னவண் மானிலம் புகழு மேற்பன்.

27. இவ்விதமான யோகம் ஜாதகருக்கு இவருடைய மரணகாலம் வரையிலும் சம்பவிக்கும். இவருக்குத் தரித்திரத்தையும் கஷ்டங்களை யும் சொல்லக்கூடாது. இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும் படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் பூமியில் சோலைகளையும் தோப்புக்களையும் கிணறுகளையும் உண்டுபண்ணுவார். இவர் ஒரு சிறிய கோயிலையும் கட்டுவார். இவர் பெரிய பெரிய நிலங்களையும் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார்.

ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்கள்

28. இன்னமும் விபர மாக
யியம்புவோம் பின்பா கத்தில்
அன்னையின் குணத்தைச் சொல்வே
னரிகிறம் நீட்சி யாவள்
முன்கோப முடனே சாந்தம்
மொழியது மதிக மெய்துந்
தன்மனங் கபடு மில்லாள்
சாதமு மன்பா யீவள்.

28. ஜாதகருடைய யோகத்தைப்பற்றி இன்னும் அதிக விபரமாகப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். இவருடைய தாயாரின் குணாதிசயத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் மஹாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவித கறுநிறத்தையும் நீண்ட தேகத்தையும் உடையவளாக இருப்பாள். இவளுக்கு முன்கோபம் வரும். அஃது உடனே தணிந்துபோய்விடும். இவள் அதிகமாகப் பேசுவாள். இவள் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை தன்னுடைய மனத்தில் உடையவளாக இருக்கமாட்டாள். இவள் அன்னத்தைப் பிறருக்கு பிரியத்துடன் கொடுப்பாள்.

ஜாதகரின் தாயாருடைய சகோதரங்களும் (சகோதர பாவமும்) முன் ஜன்மமும்

29. வந்தபின் வறுமை காணுள் வார்த்தையும் பிசகா ளாவள்
தன்துணை யாண்பா லொன்று தையல ரிருவ ராவர்
தென்திசை யில்ல மாகுஞ் செப்புவோ மிவள்முன் ஜன்மங்
கன்னமா புரியி லேதான் கலந்தனள் செக்கான் வம்சம்.

29. ஜாதகரின் தாயார் தன்னுடைய புருஷனுடைய வீட்டிற்கு வந்தபிறகு தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். இவள் தான் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் தவறிடாமல் நடந்து கொள்ளுவாள். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் ஒரு சகோதரரும் இரண்டு சகோதரிகளும் ஆவர். இவளுடைய தாயாரின்வீடு தெற்குத்திக்கில் இருக்கும். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் தன்னுடைய பின் ஜன்மத்தில் கன்னமாபுரி என்கின்ற விஷ்ணுஸ்தலத்தில் செக்காடுகின்றவர்களுடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து;

30. சுகமுள குடும்பி யாகிச் சுந்தரி வாழ்ந்து மேதான்
ஜகமதில் நல்லோ ளாகிச் சென்றனள் காலங் நாடு
பகையிலா பிரமன் லக்கம் பிறந்தவ ளென்று
[சொல்வோரம்
மிகுதவம் புரியு மெங்கள் வித்தகி கேட்டி டாயே.

30. சௌக்கியத்தையுடைய ஒரு குடும்பினியாகி இவள் வாழ்ந்து கொண்டும் பூமியில் நல்லவளாக இருந்துகொண்டும் இறந்து எம்பட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். பிறகு விரோதமில்லாத பிரமதேவனுல் பிரம்மியுடன் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். அதிகமாகத் தவங்களைச் செய்கின்ற எங்களுடைய செல்வவதியாகிய பார்வதியம்மையே! தேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய பின் ஜன்மமும் தகப்பனுருடைய முன் ஜன்மமும்

31. பின்ஜன்மங் காஞ்சி தன்னில்
பிறப்பளாஞ் சைவச் சேயாய்ப்
பொன்பொரு ளுடைய ளாகிப்
புண்ணிய வதியும் வாழ்வள்
தன்தந்தைமுன் ஜன்மந் தன்னைத்
சாற்றுவோந் தோகை தன்னில்
அன்னவன் ரெட்டி வம்ச
மணுகியே வறுமை யின்றி ;

31. ஜாதகரின் தாயார் தன்னுடைய மனுஜன்மத்தில் காஞ்சீ வரத்தில் ஒரு சைவருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். இவள் தனம் சொத்து ஆகிய இவைகளை உடையவளாகி யும் புண்ணியசாலியாகியும் இருந்துகொண்டு வாழ்வாள். ஜாதகரின் தகப்பனுருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தோகை என்ற மயிலம் க்ஷேத்திரத்தில் ஒரு ரெட்டியாருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையாமல் வாழ்கின்ற காலத்தில் ;

32. வினையதைப் புகலக் கேண்மோ
வேதத்தோர்க் கிடைஞ்சல் செய்தான்
சினமுண்டாய்ப் புகலு கின்றார்
தந்தையில் லடையா ளுகிக்
கனமுடன் வேறு சாகை
கலந்துமே வாழ்வா யென்ன
வணிபனுக் கந்தச் சாப
மணுகிற்று வென்று சொல்வோம்.

32. ஜாதகருடைய தகப்பனுருக்கு முன் ஜன்மத்தில் சம்பவித்த பாபத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. வேதங்களை ஓது கின்ற பிராமணர்களுக்கு இவர் கெடுதியைச் செய்தார். இவர்கள் கோபத்தை உடையவர்களாகிச் சாபத்தைக் கொடுக்கின்றார்கள். "நீ உன்னுடைய தகப்பனுருடைய வீட்டை அடையாதவராகி வேறொரு இடத்திற்குச் சென்று வாழக்கடவது" என்று இந்த பிராமணர்கள் இந்த தகப்பனுரைப் பார்த்துச் சொல்லவே இவரை இந்தச் சாபம் வந்து அடைந்தது என்று சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய மரண காலம்

33. ஆகையா லிச்சென் மத்தி லவன்தந்தை யில்லஞ் சேரான்
ஏகுவான் வேறு சாகை யிடரின்றி வாழ்வா னுவன்
சாகுங்கா லங்கள் தம்மைச் சாற்றுவீர் முனியே நீர்தாம்
ஏகுவான் நாற்ப தாண்டி லிவனுடைத் தந்தை
[யென்றோம்.

33, ஆகையால் ஜாதகருடைய தகப்பனர் இந்த ஜன்மத்தில் தன்னுடைய தகப்பனருடைய வீட்டில் வாசஞ்செய்யமாட்டார். இவர் இன்னோரிடத்திற்குப் போய்விடுவார். இவர் கஷ்டங்கள் இல்லாமல் வாழ்பவர் ஆவர். இவர் இறந்துபோகும் காலத்தைப்பற்றி, முனிவரே! நீர் சொல்லுவீர் என்று அத்திரி மஹரிஷியைக் கேட்க. இவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய தகப்பனர் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தாயாருடைய மரண காலமும், தகப்பனுடைய மறு ஜன்மமும்

34. அதற்குமேல் மூன்று மாண்டி
லம்பிகை யன்னை மாள்வள்
சதமுடன் பிதாபின் ஜன்மஞ்
சாற்றுவோங் காஞ்சி தன்னில்
முதற்குல முதித்து யின்னோன்
மேலவர் தம்மா லுய்வன்
அதிபனுக் கிச்சென் மத்தில்
மறுவின புண்ணிய மென்ன.

34. இதற்குமேல் மூன்றுவது வருஷத்தில் அம்மாவது ஜாதகருக்கு நாற்பத்துமூன்றுவது வயதில், பார்வதியம்மையே! இவருடைய தாயார் இறந்துபோய்விடுவாள். இவருடைய தகப்பனருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். தகப்பனர் காஞ்சீவரத்தில் முதற்குலம் என்ற பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து பெரியார்களுடைய சகாயத்தினால் ஜீவனம் செய்பவர் ஆவர். இவ்விதமாக அத்திரி மஹரிஷி சொல்லவே, இந்தத் தகப்பனர் இந்த ஜன்மத்தில் எப்படிப்பட்ட புண்ணியங்களைச் செய்தார் என்று கேட்டார்.

35. மனமி ளகலாயும் வருவோரை யாத ரித்தும்
சினம்வெளிக் காட்டா தாலுந் தேவதா பத்தி யாயுங்
கனமிலார்க் குதவி செய்துங் காவலன் வாழ்வ தாலே
தனயனு முதிப்பா லுவன் சங்கரி கேட்டி டாயே.

35. ஜாதகருடைய தகப்பனர் இளகிய மனத்தை உடையவராகவும் தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுபவராகவும் இருந்து

கொண்டு தன்னுடைய கோபத்தைப் பிறருக்குத் தெரியும்படி வெளியே காட்டிக்கொள்ளாமல் இருந்துகொண்டும் தெய்வங்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவராகியும் தனம் இல்லாதவர்களுக்கும் ஏழைகளுக்கும் உபகாரங்களைச் செய்துகொண்டும் வாழ்ந்துகொண்டு இருப்பதால் தன்னுடைய மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்திற்போய்ப் பிறப்பவர் ஆவர், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மரண காலமும், மறு ஜன்மமும்

36. அறுபது வொன்ப தாண்டி
லாடிமா தத்தி லேதான்
திருமக னுடலை மேகுஞ்
செப்புவோ மிவன்பின் ஜன்மம்
பெருமையாய்த் தணிகை தன்னில்
பிறப்பனுஞ் சத்திரியச் சேயாய்ப்
பெருமையாய்ச் செட்டு செய்வன்
பூவையே கேட்டி டாயே.

36. ஜாதகர் தன்னுடைய அறுபத்தொன்பதாவது வயதில் ஆடி மாதத்தில் இறந்து இவருடைய தேகம் மறைந்து போய்விடும். இவருடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தணிகை என்ற திருத்தணிகை க்ஷேத்திரத்தில் க்ஷத்திரிய குலத்தில் ஒரு பெருமைவாய்ந்த ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் சிறப்பாக வியாபாரங்களைச் செய்வார், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜனனகால நட்சத்திரமும் தசை இருப்பும்

37. பிறந்திடுங் காலந் தன்னில் பூராடம் மூன்றும் பாதம்
பிரசுரன் தசையி ருப்புப் புகலுவோ மாண்டு வெட்டும்
உரைந்திடுந் திங்கள் நாலு முரைத்தனம் பூர்வ பாகங்
கரிமத வானை பெற்றக் காதலி கேட்டி டாயே.

37. ஜாதகர் பிறந்த காலத்தில் ஜன்ம நட்சத்திரம் பூராடத்தின் மூன்றுவது பாதம் ஆகும். இதற்குரிய பிரசுரன் என்ற சுக்கிரம்கா தசை இருப்பு எட்டு வருஷங்களும் நான்கு மாதங்களும் ஆகும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாகப் பூர்வ பாகத்தைச் சொல்லி முடித்து விட்டோம். கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 118

ஜனனகால கிரகநிலை

1. [1]மதியுஞ் சனியும் மீனமுற
[2]மாலும் [3]புகரும் மேடமுற
[4]உதயன் [5]நந்தி [6]சேய் [7]வீணை
[8]உரகன் [9]பொன்னேன் [10]மானதிலே
[11]அதிதி [12]நண்டு [13]யரிஜன்ம
மறைவீர் பலனைச் சுகமுனியே
இதுவே யாண்பால் ஜனனமுறு
மில்லம் வடபால் வாடையுமே.

1. சந்திரனும் சனியும் மீனத்திலும், புதனும் சுக்கிரனும் மேடத்திலும், சூரியன் ரிஷபத்திலும், அங்காரகன் மிதுனத்திலும், ராகுவும் குருவும் மகரத்திலும், கேது கடகத்திலும், சிம்மத்தில் லக்கினமும் இருந்தால் பலாபலன் கணிச் சொல்லுவீர், சுகமுனிவரே! என்று சுகப்பிரமரிஷியைக் கேட்க, இவர் பதில் சொல்லுகின்றார். இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். இது பிறந்த வீடு வடக்கு வாடையில் இருக்கும்.

கிரகநிலை

சந்திரன் சனி	புதன் சுக்கிரன்	சூரியன்	அங்காரகன்
	இராசி சக்கரம்		கேது
குரு ராகு			லக்கினம்

உத்தரட்டாதி 1-ஆம் பாதம் : சனிதசை ஹ 15-0-0.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சூரியனும்,

---

1. சந்திரன்
2. புதன்
3. சுக்கிரன்
4. சூரியன்
5. ரிஷபம்
6. அங்காரகன்
7. மிதுனம்
8. இராகு
9. குரு
10. மகரம்
11. கேது
12. கடகம்
13. சிம்மம்

ரிஷபத்தில் குருவும் சுக்கிரனும், கடகத்திற் சனியும், சிம்மத்தில் இராகுவும், துலாத்தில் சந்திரனும் புதனும், கும்பத்திற் கேதுவும், மீனத்தில் அங்காரகனும் ஆகும்.

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. வீதி கீழ்மேல் குடதிக்கில்
விளங்கும் கண்ணன் வடகீழ்ப்பால்
பாதி பிறையை யணிந்தவனும்
படருங் கீழ்ப்பால் கன்னியுமே
மேதில் வடபால் நதியுண்டு
விளங்குஞ் சமவூர் கங்கைகுலம்
நீதியாகச் சதுர்த்த ஜன்மம்
விளங்கு வானும் வேந்தரசே.

2. ஜாதகர் பிறந்த வீதி கிழக்குமேற்கு வீதியாகும். கண்ண பிரானின் கோயில் மேற்குத் திக்கில் இருக்கும். சந்திரனைத் தன்னுடைய ஜடையில் தரித்துக் கொண்டிருக்கும் சிவபெருமானுடைய கோயில் வடகிழக்கில் இருக்கும். கன்னிமார் கோயில் கிழக்குத்திக்கில் இருக்கும். வடக்குத்திக்கில் ஓர் ஆறு ஓடும். பிறந்த ஊர் பெரியதும் சிறியதுமல்லாத நடுத்தரமான ஒரு கிராமம் ஆகும். ஜாதகர் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் நான்காவது குழந்தையாக நியாயமாகப் பிறந்தவராவர். அரசர்களுக்கு அரசராகியவரே!

குறிப்பு :—முதலாவது பாடலில் "சுகமுனியே!" என்று கண்டிருக்கின்றது. இந்தப் பாடலில் "வேந்தரசே" என்று கண்டிருக்கின்றது. பதிமூன்றுவது பாடலில் "மன்னு கேளாய்" என்று கண்டிருக்கின்றது. முப்பத்துமூன்றுவது பாடலில் "மதிகுலமன்னு" என்று கண்டிருக்கின்றது. ஆகையால் சுகப்பிரமரிஷி பரீக்ஷித்து மகாராஜருக்குப் பலாபலன்களைச் சொல்லி வருவதாகத் தோற்றுகின்றது. இந்த ஜாதகம் சுகர்நாடியைச் சேர்ந்தது போலத் தோற்றுகின்றது.

ஜாதகரின் தகப்பனுடைய சகோதரர்களும் (சகோதரபாவமும்) குணதிசயங்களும்

3. அரசே தந்தை துணைமூன்று
வாணு மொன்று கன்னியொன்று
விரய மென்றோர் தந்தைகுணம்
விளம்புங் கிருஷி செய்திடுவன்
உறவோர் மதிப்பு யில்லாதா
னுரகன் போல்குண முடையவனுந்
தரையா லுய்வன் சல்லியமுந்
தனமு மில்லான் கல்விசமம்.

3. அரசராகிய எங்களுடைய தலைவரே! ஜாதகரின் தகப்பனு ருடன் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் மூன்றுபேர் ஆவர். இவர்களில் ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். தகப்பனரின் குணதிசயங்களைப் பற்றிச் சொல்லு கின்றோம். இவர் விவசாயத் தொழிலைச் செய்வார். இவரைப் பந்துக் கள் மதிக்கமாட்டார்கள். இவர் பாம்பைப்போல விஷமான குணத்தை உடையவராவர். இவர் நிலங்களால் ஜீவிப்பவராவர். இவர் கடனும் தனமும் இல்லாதவராவர். இவருக்கு வித்தை நடுத்தரமாக இருக்கும்.

4. அறிவோ ருறவு கொள்ளாதான்
ஆவு விருத்தி பணியேர்கள்
நெறித வறுதல் செய்திடுவன்
நேருஞ்சல்லிய பாதை யென்றோம்
மர்ம மில்லான் மால்நிறத்தன்
வஞ்ச மனமு மில்லாதான்
பெருமை பூர்வம் பின்வறுமை
புகலான் கட்டு வார்த்தைகளை.

4. ஜாதகரின் தகப்பனர் படித்தவர்களுடைய சினேகிதத்தை உடையவர் அல்லர். இவரிடம் பசுக்கள் விருத்தியாகும். நிலங்களும் ஏர்களும் விருத்தியாகும். இவர் நல்ல மார்க்கத்திலிருந்து தவறிப் போய் விடுவார். இவருக்குக் கடனால் உபத்திரவங்கள் உண்டாகும் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய மனத்தில் ரகசியத்தை வைத்திருக்காதவராவர். இவர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தை உடையவராவர். தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடு வஞ்சனை இவைகள் இல்லாதவராக இருப்பார். இவர் தன்னுடைய வாழ்நாளின் முதற் பாகத்தில் பெருமையையும் பின் பாகத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் உடையவராவர். இவர் புனைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையும் சொல்ல மாட்டார்.

குறிப்பு :—மூன்றாவது பாடலில் "சல்லியமும் தனமும் இல்லா தான்" என்றும், நான்காவது பாடலில் "நேருஞ் சல்லிய பாதை" என்றும் சொல்லியிருப்பதைக் கவனிக்கவும். இந்த நான்காவது பாட லிலேயே "பெருமை பூர்வம் பின்வறுமை" என்றும் கண்டிருக்கின் றது. ஆகையால் தகப்பனர் தன்னுடைய பூர்வகாலத்தில் கடன் இல்லாதவர் எனவும் பின்பாகத்தில் கடனால் துன்பத்தை அடைவார் எனவும் அர்த்தங் கொள்ளுவது பொருத்தமுடையதாக இருக்கும் என்று தோற்றுகிறது.

வேறு

5. என்னகா ரணத்தி னலே
விவன்துணை தோஷஞ் சொன்னீர்
ஒன்பதில் புகருந் தங்க
ஒருபத்தில் பானு தங்க
அன்னவர் பலத்தி னலே
அவன்துணை தோஷஞ் சொன்னேம்
முன்ஜன்ம வினையி னலே
மேவாரே துணைவ ரென்றேரும்.

5. எந்தக் காரணங்களினால் ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்கள் இறந்து விடுவார்கள் என்று சொன்னீர் என்று கேட்கவே, சுகப்பிரமமகரிஷி பதில் சொல்லுகின்றார். ஒன்பதாவது பர்வதத்தில் புகர் என்ற சுக்கிரன் இருப்பதாலும் பத்தாவது வீட்டில் பானு என்ற சூரியன் இருப்பதாலும் தகப்பனருக்கு சகோதரத் தோஷத்தைச் சொன்னேம். தகப்பனருக்குத் தன்னுடைய முன்ஜன்மத்தின் பாபத்தின் பயனைச் சகோதரர்கள் நிலைத்திருக்க மாட்டார்கள் என்று சொன்னேம்.

6. சொல்லுவீர் வினையை நீங்கள் சுதரது பூர்வங் கேளாய்
எல்லையி லுயர்வ தான யெழில்கொங்கு நாட்டி லேதான்
வல்லவன் ரெட்டி வம்ச மருவியே கிருஷிகள் செய்துந்
தொல்லையு மில்லா னகிச் சுகமுடன் வாழுந் நாளில் ;

6. இவ்விதமாகச் சுகப்பிரமரிஷி சொல்லவே தகப்பனருடைய முன்ஜன்மத்தின் பாபத்தைப்பற்றி நீர் சொல்லுவீர் என்று கேட்க, இவருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீர், என்று சுகர் பதில் சொல்லுகின்றார். பூமியில் மேன்மையான அழகிய கொங்கு தேசத்தில் ஒரு ரெட்டியாருடைய குலத்தில் இவர் பிறந்து விவசாயத் தொழிலைச் செய்து கொண்டு யாதொரு கஷ்டங்களும் இல்லாதவராகிச் சௌக்கியத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் ;

7. தன்துணை மோசஞ் செய்தார்
சாற்றுவான் பின்னேன் தானும்
என்பாகம் மோசஞ் செய்தா
யினிவருஞ் ஜன்மந் தன்னில்

உன்துணை தீதே யாகு
மொண்டியாய் வாழ்வா யென்னத்
துன்மைகள் நேர்ந்த வென்றேஞ்
சுதனுமே யந்தி யத்தில் ;

7. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய சகோதரனை ஏமாற்றி விட்டார். இவருடைய இளையசகோதரர் இவருக்கு சாபத்தைக் கொடுத்தார். "என்னுடைய பாகத்தை எனக்குக் கொடுக்காமல் ஏமாற்றி விட்டாய். உன்னுடைய மறுஜன்மத்தில் உனக்குச் சகோதரர்கள் இல்லாமல் நீ இருக்கக்கடவது. நீ ஒண்டியாக வாழக்கடவது" என்று இளையசகோதரர் இந்தத் தகப்பனரைப் பார்த்துச் சொன்னதால் தகப்பனருக்குக் கெடுதிகள் நேர்ந்தன என்று சொல்லுகின்றோம். தகப்பனர் தன்னுடைய முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் ;

8. வறுமைக ளுடைய ளுகி வறுமுகன் பக்தி பூண்டு
மறலியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக னுதிப்பா னுவன் சேர்ந்திடும் முன்னூழ்த் தோஷங்
குறையுறுந் துணைவ ரென்றேங் கூறின குணத்தா
[னுக்கு ;

8. தரித்திரத்தையும் கஷ்டங்களையும் உடையவராகி ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகிப் பிறகு இறந்து எமபட்டணத்திற்குப்போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்த தகப்பனர் பிறந்திருக்கின்றார். இவருக்கு முன்ஜன்மத்திய பாபம் வந்து சம்பவிக்கும். ஆகையால் இவருடைய சகோதரர்கள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். இதுவரையிலும் சொல்லப்பட்ட குணதிசயங்களையுடைய தகப்பனருக்கு ;

ஜாதகருடைய குணதிசயங்கள்

9. பாலக னுதிப்பா னுவன் பகருவோ மிவன் குணத்தைச்
சீலவான் மால்கி றத்தன் சீக்கிர கோபஞ் சாந்தம்
ஞாலங்கள் விருத்திச் செய்வன் நாதனர் பக்தி கொஞ்சம்
சாலவே செட்டு செய்வன் சாதமுங் குறைவு றுதான்.

9. இந்த ஜாதகர் பிறந்தவராவர். ஜாதகருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் நல்லொழுக்கம் உடையவராவர். மகாவிஷ்ணுவினுடைய நிறமாகிய நீலமேகவர்ணம் என்ற ஒரு விதமான நிறத்தை உடையவராவர். இவருக்குச் சீக்கிரத்தில் கோபம் உண்டாகும். ஆனால் அஃது உடனே தணிந்து போய் விடும். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவர் கட

வுளின்மேல் சிறிது அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவர் நன்முக வியாபாரங்களைச் செய்வார், சாப்பாட்டு விஷயத்தில் யாதொரு கஷ்டங்களையும் அடையமாட்டார்.

10. கரமதில் மாலின் ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு
உறன்முறை மதிக்க வாழ்வ னுள்மனங் கபடு கொஞ்சம்
விரைவினில் நடக்க வல்லன் வீண்பழி யேற்கா னுவன்
பொருள்பின்னல் பெருக்கஞ் செய்வன் புதுயில்லஞ்
[செய்வா னுவன்.

10. ஜாதகர் தன்னுடைய உள்ளங்கையில் விஷ்ணுரேகையும் தாமரைரேகையும் இருக்கும். இவர் தன்னுடைய பந்துக்கள் கௌரவப்படுத்தும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் தன்னுடைய மனத்திற்குள்ளே சிறிது கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவராக இருப்பார். இவர் சீக்கிரமாக நடக்கும் சாமர்த்தியத்தை உடையவர். இவர் வீணான அபவாதத்தையும் நிந்தனையையும் அடையமாட்டார். இவர் தன்னுடைய வாழ்நாளின் பிற்காலத்தில் சொத்துக்களை அதிகமாக்கி விடுவார். இவர் ஒரு புதிய வீட்டைக் கட்டுபவராவர்.

11. தந்தையால் சுகமி லாதான் தாயினல் சுகமு மேற்பன்
தந்தையின் முகத்தைப் பாரான் சமகல்வி யூக வானும்
தன்தனங் கொடுக்கல் வாங்கல் சாரூள்க ளற்ப மெய்தும்
தந்தைமேல் வாழ்வா னுவன் தந்தமுந் தரள மொக்கும்.

11. ஜாதகர் தன்னுடைய தகப்பனாரால் சுகங்களை அடையாதவராவர். இவர் தன்னுடைய தாயினல் சௌக்கியங்களை அடைபவர் ஆவர். இவர் தன்னுடைய தகப்பனாருடைய முகத்தைப் பார்க்கமாட்டார். இவர் நடுத்தரமான வித்தையை உடையவராவர், ஆனல் விவேகமுடையவராக இருப்பார். இவர் தன்னுடைய பணத்தைப் பிறருக்குக் கொடுப்பார், மறுபடியும் அதைத் திருப்பி வாங்கிக் கொள்ளுவார். அஃதாவது பணத்தில் லாவாதேவி உடையவராக இருப்பார். இவருக்கு விவசாயம் செய்கின்ற ஆட்கள் சிலரே இருப்பார்கள். இவர் தந்தைக்கு அதிகமான அந்தஸ்திலிருந்து வாழ்பவர் ஆவர். இவருடைய பற்கள் முத்தைப்போல வெண்மையாகவும் அழகாகவும் இருக்கும்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

12. முன்துணை யாண்பா லிரண்டு மங்கையு மொருத்தி
[யென்றும்
அன்னவர் வேறுய்ச் செல்வ ரதுகாலம் புகல்வீ ரையா
புந்தியின் தசைப்பின் பாகம் பிரிதலாம் பாகம் மூன்றும்
பிந்தியும் பூமி சேர்ப்பன் பலவிதச் செட்டு செய்வன்.

12. ஜாதகருக்கு முன்னே பிறந்தவர்களில் இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு என்று சொல்லுகின்றோம். இந்தச் சகோதரர்கள் இவரை விட்டுப் பிரிந்து வேறு குடும்பஸ்தர்களாகப் போய் விடுவார்கள். இப்படிப் பிரிந்து போகும் காலத்தைப் பற்றி, முனிவரே! சொல்லுவீர் என்று கேட்க, சுகப்பிரமரிஷி பதில் சொல்லுகின்றார். புதமகாதசையின் பின்பாகத்தில் குடும்பச் சொத்துக்கள் மூன்று பாகமாகப் பிரிக்கப்படும். இதன் பிறகு ஜாதகர் நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் பலவிதமான வியாபாரங்களைச் செய்வார்.

13. கடன்கொள்வன் நிவிர்த்திச் செய்வன்
கேதுவின் காலந் தன்னில்
திடமதாய்ச் செட்டு ஒங்கல்
சேத்திரஞ் செய்த லுண்டு
உடன்தூண் யொருவர் சேத
முயர்வோர்கள் நேசங் கொள்வன்
குடதிசை பூமி சேர்க்கை
கூறுவோ மன்னு கேளாய்.

13. ஜாதகர் கடன் வாங்குவார், அதைத் திருப்பிக் கொடுத்து விடுவார். கேதுமகாதசையில் பெரிய வியாபாரங்கள் விருத்தியாகும். இவர் வீட்டைக் கட்டுவார். இவருடன் கூடப்பிறந்த சகோதரர் ஒருவர் இறந்து விடுவார். இவர் பெரியோர்களுடைய சினேகிதத்தை அடைவார், இவர் மேற்குத்திக்கில் நிலங்களைச் சம்பாதிப்பார் என்று சொல்லுகின்றோம், அரசரே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்கள்

14. மாதிரு குணத்தைச் சொல்வேன் மானிறம் பித்த தேகி
சீதள குணத்த ளாவள் சீக்கிர கோபஞ் சாந்தம்
காதக மனமுங் கொஞ்சங் கடந்தோர்க்குத் தாக மீவள்
மேதினியில் நல்லோ ளாவள் வீண்வம்பில் செல்லா
[ளாவள்.

14. ஜாதகரின் தாயாருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாநிறத்தை உடையவள், பித்தமுள்ளதேகத்தை உடையவள், சீதளமான குணத்தையுடைய தேகத்தை உடையவள். இவளுக்குச் சீக்கிரம் கோபம் வரும், ஆனால் அது உடனே தணிந்து போய் விடும். இவள் சிறிது பொறுமையுள்ள மனத்தை உடையவளாக இருப்பாள். இவள் உலகப்பற்றை விட்டு விட்டவர்களுக்கும் பரதேசிகளுக்கும் தாகம் தீருவதற்காக நீர்மோரைக் கொடுப்பாள். இவள்

பூமியில் நல்லவளாக நடந்து கொள்ளுவாள், வீண்சண்டையை விலை விக்கக் கூடிய காரியங்களில் பிரவேசிக்கமாட்டாள்.

ஜாதகரின் தாயாருடைய சதோதரங்களும் முன்ஜன்மமும்

15. தன்துணை யாண்பா லொன்று
சத்தியு மவ்வாறு தீர்க்கம்
முன்ஜன்ம மன்னைக் கேதான்
மொழிகிறே மாழி தன்னில்
பொன்மிக வுடையா னுக்குப்
பிறந்தனள் ரெட்டி வம்சம்
அன்னவள் வாழுங் காளி
லணுகின வினையைக் கேண்மோ.

15. ஜாதகரின் தாயாருடன் கூடப்பிறந்தவர்கள் ஒரு சகோதர ரும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். தாயாருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் ஆழி என்ற சீகாழி க்ஷேத்திரத்தில் ரெட்டியாருடைய குலத்தில் ஒரு பெரிய தனவானுக்கு முன்ஜன்மத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள். இவள் வாழ்கின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த பாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக.

16. வரனுடன் கோவி லுக்கு
மருவிலை எரிந்த மாது
அரனடி போற்றி செய்து
வணுகினள் கடை வீதிக்கு
உரைமஞ்சள் சிவப்பு சீப்பு
ஒண்டொடி வாங்கிக் கொண்டு
பொருளீயா திந்த மாது
புள்ளிமான் விரைவில் சென்றாள்.

16. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன்ஜன்மத்தில் தன் புருஷனுடன் ஒரு கோயிலுக்குப் போய்ச் சிவபெருமானைத் தரிசித்து விட்டு ஒரு கடைத்தெருவுக்குப் போனாள். உறைத்துக் கொள்ளு கின்ற மஞ்சள் சிவப்புக் குங்குமம் சீப்பு ஆகிய இவைகளை வாங்கிக் கொண்டு இவைகளின் கிரையத்தைக் கொடுக்காமல் ஒரு புள்ளி மானைப்போல ஓடி மறைந்துபோய் விட்டாள் என்று சொல்லுகின்றோம்.

17. வணிபனும் பின்னுல் பார்த்து மாதுவைக் காணு னுகிச்
சினமுண்டாய்ப் புகலுஞ் சாபஞ் சிலபொருள் வாங்கிக்
[கொண்ட
இனமது வாகா முன்ன மேகுவான் வரனு மேதான்
வனிதைபின் ஜன்மந் தன்னில் மத்தியில் நாணி ழந்து ;

17. வியாபாரி பிறகு இவளைத் தேடிப் பார்த்து இவள் காணும்ற் போய் விடவே கோபத்தை அடைந்து சாபத்தைக் கொடுத்தார். "வாங்கிக் கொண்ட சில சாமான்கள் செலவாவதற்கு முன்னமே இவளுடைய புருஷன் இறந்துவிடக் கடவது, இவளுடைய மறுஜன்மத்தில் இவள் தன்னுடைய மத்திய வயதில் மாங்கலியக் கயிற்றை இழந்து ;

18. சஞ்சல மனத்த ளாகித் தரணியில் வாழ்வா யென்ன
நஞ்சுபோ லந்தச் சாபம் நல்கிற்றுப் பாவைக் கேதான்
வஞ்சிக்கு வைந்து வாண்டில் மாரனு மரண மாகித்
துஞ்சிய மனத்த ளாகிச் சேர்ந்தனள் காலந் நாடு.

18. துன்பத்தை அடைந்து பூமியில் வாழக்கடவது" என்று முன் ஜன்மத்தில் வியாபாரி சொல்லவே, விஷத்தைப் போலவே அவருடைய அச்சாபம் ஜாதகருடைய தாயாருக்கு வந்து சம்பவித்தது. இவளுக்கு ஐந்தாவது வருஷத்தில் முன்ஜன்மத்தில் புருஷன் இறந்து துன்பத்தை அடைந்த மனத்தை உடையவளாகி இறந்து இவள் எம பட்டணத்திற்குப் போனுள்.

19. பிரமனுல் வரையப் பட்டுப்
பிறந்தவ ளென்று சொல்வோம்
மருவிடும் வணிபன் சாப
மத்தியில் விதவை யாவள்
அரிவைபாட் டாளி யாவள்
அறைகிறே மிவள்பின் ஜன்மம்
பிருதிவி தலத்தி லேதான்
பிறப்பளா மிக்கு லத்தில்.

19. பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஜாதகருடைய தாயார் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றேரும். முன்ஜன்மத்திய வியாபாரியின் சாபம் இவளை வந்து அடையும். இவள் தன்னுடைய மத்திய வயதில் விதவையாகி விடுவாள். இவள் பிறகு கஷ்டப்பட்டு உழைத்து ஜீவிப்பவள் ஆவாள். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவள் 'பிருதிவிஸ்தலம் ;என்ற காஞ்சிவரத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்தில் பிறப்பாள்.

ஜாதகரின் தாயாருடைய மரணமும் பிதுரின் கர்மமும் மறுஜன்மமும்

20. ஆறாறு வாண்டு தன்னி லணுகிடுங் கண்ட மொன்று
தீரமாய் முப்பா லென்பா லண்டினில் செல்வா ளாவள்
மாரனுங் கர்ம காலம் மரணமாந் தந்தை தானுங்
கூறுவோ மிவன்பின் ஜன்மங் குற்ரல நாட்டி லேதான்;

20. ஜாதகருக்கு முப்பத்தாருவது வயதில் இவருடைய தாயாருக்குக் கண்டம் உண்டாகும், இவள் முப்பத்தொன்பதாவது வயதில் உண்மையாக இறந்துபோய் விடுவாள். ஜாதகருக்குக் கர்மகாலங்கள் நேரிடும். இவருடைய தகப்பனாரும் இறந்துபோய் விடுவார், இந்தத் தகப்பனாருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். குற்ரல க்ஷேத்திரத்தில் ;

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயங்களும்

21. உதிப்பனு மிக்கு லத்தி
லுயர்வான குடும்பி யாகி
வதிபன்தன் மணத்தின் காலம்
வரைகிரே மையந் தாண்டில்
மதிமுக மாது தானும்
வருவுவளாந் தென்கீழ் தன்னில்
சதியிலா மனத்த ளாவள்
சர்ப்பம்போல் குணமு மேற்பள்.

21. ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்திப குலமாகிய வேளாளர் குலத்தில் போய் மறுஜன்மத்திற் பிறப்பார். இவர் மேன்மையான குடும்பத்தையுடையவராவர். ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபத்தைந்தாவது வயதில் சந்திரனைப்போல அழகான முகத்தையுடைய மனைவி தென்கிழக்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவள் கெடுதியில்லாத மனத்தையுடையவளாவள். இவள் பாம்பைப்போலக் கோபத்தையுடைய குணத்தையுள்ளவளாக விருப்பாள்.

22. அன்னமு மன்பா யீவ
ளயல்குற்றம் புகலா ளாவள்
கன்னியும் வந்த பின்பு
கணவனுக்கு யோக மெய்துஞ்
சொன்னசொல் காப்பா ளாவள்
சோம்பிடாள் காரி யத்தில்
மன்னவன் மனத்துக் கேத்தோள்
வருவோரை யாத ரிப்பள்.

22. ஜாதகருடைய மனைவி பிறருக்குப் பிரியத்துடன் சாப்பாட்டைப் போடுவாள். பிறர் மேல் குற்றங்களைச் சொல்லமாட்டாள். இவள் தன்னுடைய புருஷனிடத்திற்கு வந்து சேர்ந்த பிறகு இவளுடைய புருஷனுக்கு யோகம் உண்டாகும். இவள் தான்சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவளாவள், வேலை செய்வதில் சோம்பலையுடையவளல்லள். இவள் தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருப்பாள், தன்னிடம் வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள்.

23. வறுமைக ளடையா ளாவள் வஞ்சனை மனமில் லாதாள்
பெரும்புத்தி யுடையா ளாவள் பிழையான குணமில் [லாதாள்
அரிவைக்குச் சுதர்கள் தோஷ மறிவீப்பீ ரந்தச் சங்கை
குருவுமே யைந்தோ னுகிக் கூடிட மாறில் நீசம் ;

23. ஜாதகருடைய மனைவி தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். இவள் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை உடைய மனத்தை உடையவளல்லள். இவள் மேன்மையான புத்தியையுடையவளாக விருப்பாள், தப்பிதமான குற்றமான குணத்தையுடையவளல்லள். இவளுக்குப் புத்திரதோஷம் இருக்கின்றது என்று சுகப்பிரமரிஷி சொல்லவே, இந்தத் தோஷத்தின் காரணத்தைப் பற்றிச் சொல்லுவீர் என்று கேட்கவே, சுகர் பதில் சொல்லுகின்றார். குரு ஐந்தாவது பாவத்திற்கு அதிபதியாகி ஆறுவது பாவத்தில் நீசமாகிவிருப்பதாலும் ;

ஜாதகருடைய முன் ஜன்மம்

24. புத்திரத் தானந் தன்னைப்
பூமகன் சனியும் பார்க்கப்
புத்திர தோஷஞ் சொன்னேம்
புதல்வனின் பூர்வங் கேளாய்ச்
சித்தர் வா ழருணைதன்னில்
ஜனித்தனன் வைசியச் சேயாய்
முத்தின குடும்பி யாகி
முதல்வனும் வாழுந் நாளில் ;

24. புத்திர ஸ்தானமாகிய ஐந்தாவது வீட்டைப் பூமகன் என்ற அங்காரகனும் சனியும் பார்ப்பதாலும் புத்திர தோஷத்தைச் சொன்னேம். ஜாதகருடைய முன்- ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. முனிவர்கள் வாழ்கின்ற அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப்

பிறந்து ஒரு மேன்மையான குடும்பஸ்தராகி இவர் வாழ்கின்ற காலத்தில்;

25. பஞ்சையா யேழை மாது
பாலர்க்கு வன்னம் வேண்ட
மிஞ்சின வார்த்தை சொல்லி
விரட்டினு னேழை தன்னை
வஞ்சியும் மனவெ றுப்பால்
வரைந்தசா பத்தைக் கேண்மோ
நஞ்சுபோல் வார்த்தை சொன்னாய்
நல்கும்பின் ஜன்மந் தன்னில்;

25. பஞ்சைப்போல அங்குமிங்கும் அலைந்து கொண்டிருக்கின்ற ஓர் ஏழை ஸ்திரீ தன்னுடைய குழந்தைக்காக ஜாதகரை சாதம் கேட்க, இவர் அதிக கடுமையான வார்த்தைகளைச் சொல்லி அவளை பயப்படுத்தி துரத்திவிட்டார். அவள் தன்னுடைய மனத்தில் துன்பத்தை அடைந்து இவருக்குக் கொடுத்த சாபத்தைச் சொல்லுகின்றேன் கேட்பீராக. "விஷம் போன்ற கொடிய வார்த்தைகளை நீ சொன்னாய். உனக்கு உண்டாகின்ற மறுஜன்மத்தில்";

26. சுதர்களுந் தோஷ மெய்துந் தந்தையின் முகத்தைக் [காணாய்
இதுவிதஞ் சொல்லிச் சென்ற ளெய்திற்று வந்தச் சாபம்
அதிபனு மந்தி யத்தில் மறையோர்க்கு வுதவி செய்து
சதியான காலந் நாடு சென்றுமே பிரமன் லக்கம்;

26. "குழந்தைகள் இறந்தும் நீ உன்னுடைய தகப்பனாரின் முகத்தைப் பார்க்காமலும் இருக்கக்கடவது" என்று ஜாதகரைப் பார்த்து அந்த ஏழை ஸ்திரீ சொல்லிவிட்டுப் போய்விட்டாள். அந்தத் தோஷமானது இவரைவந்து அடைந்தது. இவர் முன் ஜன்மத்தில் தன்னுடைய கடைசி காலத்தில் பிராமணர்களுக்கு உபகாரத்தைச் செய்து இறந்து கெடுதியான எமபட்டணத்திற்குப் போய் பிரமலிபியுடன்;

27. உதிப்பனு மிந்தப் பால னுறைந்திடு முன்னாழ்ச் சாபஞ்
சுதர்களுந் தோஷ மெய்துஞ் செப்புவீர் கிரியை யொன்று
அதிபனு மனைவி யோடு வருணமா நகரஞ் சென்று
திருநாள் கிரியைச் சுத்தி தேவனுக் கர்ச்சித் தேத்தி;

27. இந்த ஜன்மத்தில் ஜாதகர் பிறந்திருக்கின்றார். இவருக்கு முன் ஜன்மத்திய சாபம் வந்தடையும். இவருக்குப் பிள்ளைகள் இறந்து விடுவார்கள் என்று சுகப்பிரம ரிஷி சொல்லவே, இதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்க, இந்த ரிஷி பதில் சொல்லுகின்றார்.

ஜாதகர் தன்னுடைய மனைவியினுடன் அருணை என்ற திருவண்ணா மலை க்ஷேத்திரத்திற்குப் போய் மூன்று தினங்கள் அவ்விடத்திலுள்ள மலையைச் சுற்றி அங்குள்ள சிவ பெருமானுக்கு அர்ச்சனை செய்து அவரைத் தொழுது ;

28. கடை நாளில் மூவேழ்பேர்க்குக் கருத்துட னன்ன [மீந்து
விடஞ்சோர்மை தான மீந்து மீண்டுமே தன்னூர் சென்று
அடைவுடன் கணேச னுக்கு வபிஷேகஞ் செய்து பின்பு
சுடரொன்று வாண்டு வைக்கச் செய்வினை நீங்கி யேதான்;

28. கடைசி தினத்தில் இருபத்தோரு பேர்களுக்கு மனப்பூர்த்தி யுடனும் பிரியத்துடனும் சாப்பாட்டைப்போட்டு இளைப்பாறுவதற் காக இடம் தந்து தானத்தைக் கொடுத்துப் பிறகு தன்னுடைய ஊருக் குத் திரும்பிப்போய் விநாயகக் கடவுளுக்கு உடனே அபிஷேகங்களைச் செய்வித்து பிறகு ஒரு தீபத்தை ஒரு வருஷகாலம் வரையில் ஏற்றி வைத்து வருவாராஞல் முன் செய்த பாபம் இவரைவிட்டு விலகி;

ஜாதகருடைய யோக பாவம்

29. பாலர்க ளுதிக்குந் தீர்க்கம் பகருவோ மாண்பா லிரண்டு
வேல்விழி மார்க ளவ்வாறு விளங்கிடு நான்கும் தீர்க்கஞ்
சாலவே யிவனின் யோகஞ் செப்புவோ மினி மேலாக
ஞாலங்கள் விருத்தி செய்வன் நயப்புறுஞ் செட்டு [செய்வன்.

29. இவருக்குக் குழந்தைகள் பிறந்து நீண்ட ஆயுளை உடைய வர்களாக இருப்பார்கள். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் வேலைப்போல அழகான கண்களையுடைய இரண்டு பெண் குழந்தை களும் ஆக மொத்தம் நான்கு குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர் களாக இருப்பார்கள். இனிமேல் ஜாதகருடைய யோக பாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவர் வியாபாரங்களை நன்மையுடனும் நயப்பாக வும் செய்து வருவார்.

30. சிகிபுகர் தசையில் யோகஞ்
செப்புவோஞ் சல்லியங் காணுன்
பகையோரை நசிக்க வைப்பன்
பகரமாங் குடும்ப மேற்பன்
இகபரன் பத்தி பூண்ப
னேகுவான் தலங் களுக்கு
மிகுதனம் படைப்ப னுவன்
விசனமே காண னென்றோம்.

30. சிகி என்ற கேது புகர் என்ற சுக்கிரன் ஆகிய இவர்களுடைய தசைகளில் ஜாதகருக்கு யோகங்கள் உண்டாகும் என்று சொல்லுகின்றோம். இவர் கடன் வாங்கமாட்டார். இவர் தன்னுடைய பகைவர்களை அழித்துவிடுவார். இவர் மேன்மையையும் பெருமையையும் உடைய குடும்பத்தை அடைபவர் ஆவார். இவர் கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராவர், புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வார், அதிகமான செல்வத்தை அடைபவராவார். வருத்தத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மரண காலமும் மறு ஜன்மமும்

31. இன்னமும் விபரங் கேட்கி லியம்புவோ முத்திர பாகம்
பின்னவன் மரண கால மறுபது வொன்ப தாண்டில்
கன்னியா மாதந் தன்னில் காளையி னுடல மேகும்
பின்ஜன்மம் புலியூர் தன்னில் பிறப்பனும் பிரம சேயாய்.

31. இன்னமும் விபரமாக விஷயங்களைச் சொல்வேண்டுமென்று கேட்பீராகில் அவைகளைப் பின் பாகத்தில் சொல்லுகின்றோம். இவருக்குத் தன்னுடைய அறுபத்தொன்பதாவது வயதில் கன்னியா மாதம் என்ற புரட்டாசி மாதத்தில் மரணம் நேரிட்டு இவருடைய தேகம் மறைந்து போய்விடும். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் புலியூரில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார்.

32. இந்ததோர் ஜன்மந் தன்னி லிவன்செய்த புண்ணிய [மென்ன
உன்னத தலங்கள் சென்று மோராறு முகத்தோன் பத்தி
பின்னோரா பத்தைக் காத்தும் புதல்வனும் வாழ் வதாலே
முன்குல முதிப்பா னவன் மேன்மையாய்க் குடும்பியாகி ;

32. இந்த ஜன்மத்தில் ஜாதகர் எவ்விதமான புண்ணிய காரியங்களைச் செய்தார் என்று கேட்கவே, சுகப் பிரம்மரிஷி சொல்லுகின்றார். ஜாதகர் மேன்மையான பெரிய க்ஷேத்திரங்களுக்குப் போயும் ஆறுமுகங்களையுடைய முருகக்கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராகியும் ஏழைகளுக்கு ஆபத்துக்காலத்தில் அவர்களைக் காப்பாற்றி கொண்டும் வாழ்ந்து வருவதால் முதல் குலமாகிய பிராமண குலத்தில் உதித்து ஒரு சிறந்த குடும்பஸ்தராக இருப்பார்,

ஜனன கால ஜன்ம நட்சத்திரமும் தசை இருப்பும்

33. உதித்திடுங் காலந் தன்னி லுத்தரட் டாதி தன்னில்
முதல்பாதங் காரி தன்னில் மூவைந் தாண்டு மாகும்
இதுமுதல் பாகஞ் சொன்னே மியம்புவோம் பின்பால்
[சேதி
மதிகுல மன்ன யானும் வரைந்தனமிம் மொழிகுன் ரூவே.

33. ஜாதகர் பிறந்த காலத்தில் ஜன்ம நட்சத்திரம் உத்தரட்டாதி முதலாவது பாதம் ஆகும். இதற்குரிய காரி என்ற சனிமகாதசையின் இருப்பு பதினைந்து வருஷங்கள் ஆகும். இவ்விதமாக முதல் பாகத்தைச் சொல்லி முடித்துவிட்டோம். பின்னல் மற்ற விஷயங்களைச் சொல்லுகின்றோம். சந்திரவம்சத்து அரசராகிய பரீக்ஷித்து மகாராஜரே நாம் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 119

ஜனன கால கிரகநிலை

1. [1]அரியது [2]வுதய மாக [3]வம்புலி மூன்றில் தங்கக்
[4]கரியவ னெட்டி லாகக் [5]கதிரவன் பத்தி லாகக்
குரு[6]புகர் பன்னி ரண்டி லாகக் [7]குஜன்புதன் ராகு
[8]லாபம்
உரைவீரே பலனே யென்று வுமையவள் கேட்கும் போது.

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகிச், சந்திரன் மூன்றிலும், சனி எட்டிலும், சூரியன் பத்திலும், குருவும் சுக்கிரனும் பன்னிரண்டிலும், அங்காரகனும் புதனும் இராகுவும் பதினொன்றிலும், இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்போது;

கிரகநிலை

சனி		சூரியன்	அங்காரன் புதன் ராகு
	இராசி சக்கரம்		குரு சுக்கிரன்
			லக்கினம்
கேது		சந்திரன்	

விசாகம் 3-ஆம் பாதம்: குரு தசை வரு 5-9-0

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடைய தாகும் :—மேஷத்தில் அங்காரகனும், மிதுனத்திற் சந்திரனும், கடகத்திற் கேதுவும், சிம்மத்திற் சுக்கிரனும், கன்னியிற் சூரியனும் சனியும், தனுசிற் குருவும், மகரத்தில் இராகுவும், கும்பத்திற் புதனும் ஆகும் புதன் வக்கிரகதியில் இருக்கின்றார்.

---

1. சிம்மம்
2. லக்கினம்
3. சந்திரன்
4. சனி
5. சூரியன்
6. சுக்கிரன்
7. அங்காரகன்
8. பதினொன்று

ஜனன நாட்டுச் சிறப்பு

2. அத்திரி புகலு கின்ரு ராணது ஜனன மாகும்
வித்தக னில்லஞ் சொல்வேன் மேல்வாசல் வடதென் வீதி
உத்தரம் நதியுங் கன்னி யுறைந்திடுஞ் சிறுவு ராகும்
வித்தக னேழாஞ் ஜன்மம் வரைகிரேரும் வன்னியச்
[சேயாய்.

2. அத்திரி மஹரிஷி பதில் சொல்லுகின்ரூர். ஜாதகருடைய பிறந்த வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றேன். இந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேற்கு வாயிற்காலை உடையதாக இருக்கும். வடக்குத் திக்கில் ஓர் ஆறும் கன்னிமார் கோயிலும் இருக்கும். பிறந்த கிராமம் சிறிய கிராமமாக இருக்கும். ஜாதகர் வன்னியர் குலத்தில் ஏழாவது குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லுகின்ரோம்

ஜாதகருடைய தகப்பனுரது குணங்கள்

3. பாலகன் ஜனன யோகம் பெற்றதாய் தந்தை யோகஞ்
சாலவே துணைவர் யோகந் தன்மனை புத்திர யோகம்
ஏலவே முன்பின் ஜன்ம மியம்புவோ மிந்நூல் தன்னில்
ஆலத்தை யுண்டோன் தேவி யறிவிப்போம் பிதாகு
[ணத்தை.

3. ஜாதகருடைய ஜனனகாலத்திய யோகம் இவரைப் பெற்ற தாயார் தந்தையார் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் ஜாதகருடைய சகோதரர்களின் யோகங்களையும் இவருடைய மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் முன் ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்ரோம். ஆலகால விஷத்தையுண்ட சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே! இவருடைய தகப்பனுருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்ரோம்.

4. தந்தையின் துணையா ணென்று சத்தியு மிருவ ராவர்
அந்தவாண் பின்னே னுவனறிவிப்போ மவன்கு ணத்தை
மூந்திய கோபி யாவன் மொழியது விரண்டு மூண்டு
சுந்தர முடைய னுவன் துராசையு முடைய னுவன்.

4. ஜாதகருடைய தகப்பனுருடன் கூடப்பிறந்தவர் ஒரு சகோதரரும் இரண்டு சகோதரிகளும் ஆவர். இந்தச் சகோதரர் தகப்பனுருக்கு இளைய சகோதரராவார். இளைய சகோதரருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் முன்கோபத்தை உடையவராக இருப்பார். இவர் இரண்டுவிதமான வார்த்தைகளைச் சொல்லுவார். அஃதாவது உண்மையையும் பொய்யையும் கலந்து பேசுவார். இவர்

சௌந்தரியம் உடையவராக இருப்பார், கெட்ட ஆசையை உடையவராகவும் இருப்பார்.

5. அகவிலை யறியா னவன் மடாவடி யுடைய னவன்
பகையாக வருவா னவன் பாரினல் சீவிப்பா னவன்
இகரன் பத்தி பூண்ப னெதிரிசொல் கேட்பா னவன்
அகம்விட்டுப் பாரி யில்ல மடைவனஞ் சிலநாள் தானும்.

5. ஜாதகரின் தகப்பனருடைய இளைய சகோதரர் வஸ்துக்களின் அகவிலையை அறியாதவராக இருப்பார். இவர் முரட்டுத்தனமாகவும் நியாயமில்லாமலும் நடந்துகொள்ளுபவர் ஆவர். இவர் விரோதியாக இருப்பார். நிலங்களைப் பயிரிட்டு ஜீவிப்பவராக இருப்பார். கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார், பகைவருடைய பேச்சைக் கேட்பவராவர். இவர் தன்னுடைய வீட்டை விட்டுவிட்டுத் தன்னுடைய மனைவியின் வீட்டிற்குப்போய் அவ்விடத்தில் சிறிது காலம் வாசஞ்செய்வார்.

6. பாரியு மொன்றே தென்பால் பாலர்க ளாண்பால்
[தோஷங்
காரிழை மார்க ளிரண்டு கழறுவோர்ந் தீர்க்க மாக
வீரிய ரொன்ரூய் வாழ்ந்து வேரூவ னிரண்டா மாண்டில்
போரது புரிந்து செல்வன் புகலுவோம் பின்பால் சேதி.

6. ஜாதகரின் தகப்பனருடைய இளைய சகோதரருக்கு ஒரே ஒரு மனைவி உண்டு. இவள் தெற்குத் திக்கிலிருந்து வருவாள். இவர்களுக்கு ஆண் குழந்தைகள் கிடையா. இரண்டு பெண் குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இந்த இளைய சகோதரர் ஜாதகரின் தகப்பனருடன் ஏக குடும்பமாக வாழ்ந்துகொண்டு ஜாதகருக்கு இரண்டாவது வயதில் பிரிந்து வேறு குடும்பஸ்தராகப் போய்விடுவார். இவர் குடும்பத்தில் சண்டைப் போட்டுவிட்டுப் பிரிந்து போய்விடுவார். இவருடைய மற்ற விஷயங்களைப் பின்னல் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய விஷயங்கள்

7. தந்தையின் சேதி சொல்வேன் சகலர்க்கு நல்லோ னவன்
வந்தவர்க் கன்ன மீவன் மானிறம் பணையோர் விருத்தி
தந்தழுந் தரள மொக்குஞ் சல்லியப் பாதை யேற்கான்
தன்மனங் கபட மில்லான் சாந்தவான் மானி றத்தான்.

7. ஜாதகரின் தகப்பனருடைய விஷயங்களைச் சொல்லுகின்றேன். இவர் எல்லோருக்கும் நல்லவராக நடந்துகொள்ளுவார். இவர் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவார்,

மாகிறமான தேகத்தை உடையவர். இவருக்கு நிலங்கள் ஏர்கள் ஆகிய இவை விருத்தியடையும். இவருடைய பற்கள் முத்துக்களைப்போல வெண்மையாகவும் அழகாகவும் இருக்கும். இவர் கடலில் உண்டாகக் கூடிய உபத்திரவத்தை அடையமாட்டார். இவர் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவர் அல்லர். இவர்சாந்தமான குடும்பத்தை உடையவர். இவர் மாகிறமுள்ள நிறத்தை உடையவராவர்.

குறிப்பு :—இந்தப் பாடலில் ஜாதகரின் தகப்பனார் மாகிறத்தை உடையவர் என்று இரண்டுதரம் கண்டிருப்பதைக் கவனிக்கவும்.

8. வித்தையு மில்லா னவன் வீண்வம்பில் செல்லா னவன்
பத்தினிக் கிஷ்ட னவன் பாருகள் சேர்ப்பா னவன்
சித்திர யில்லஞ் செய்வன் செய்நன்றி மறவா னவன்
உத்தம குணத்த னவ னுறுதியில் லாத நெஞ்சன்.

8. ஜாதகருடைய தகப்பனார் கல்வியை உடையவர் அல்ல. இவர் வீணுக சண்டையை உண்டுபண்ணக்கூடிய விஷயங்களில் பிரவேசிக்க மாட்டார். இவர் தன்னுடைய மனைவிக்குப் பிரியமுள்ளவராக இருப்பார். நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பவராவர். இவர் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட வீட்டைக் கட்டுவார். இவர் பிறர் தனக்குச் செய்த உபகாரத்தை மறக்காதவர் ஆவர். இவர் நல்ல சிறந்த குணங்களை உடையவராவர், நிலையில்லாத மனத்தை உடையவர்.

ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மம்

9. முன்னவ னிருந்த ஜன்ம மூலமாங் குடியி லேதான்
இன்னவன் வடுகச் சேயா யெய்தியே வருவா யின்றிப்
பொன்னது பெருக்க முண்டாய்ப் பூமியை விருத்தி செய்து
தன்னினத் தவர்க்கு மேலாய்த் தானவன் வாழ்ந்து
[மேதான் ;

9. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய முன் ஜன்மத்தில் மூலமாங்குடி என்ற கிராமத்தில் தெலுங்கருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து பொருள்வரும்படி இல்லாமல் இருந்து தனத்தை அதிகமாகச் சம்பாதித்து நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி செய்து தன்னுடைய பந்துக்களைவிட அதிகமான அந்தஸ்திலிருந்து வாழ்ந்துகொண்டு ;

10. அறமதி லிச்சை யுண்டா யறுமுகன் பத்தி பூண்டு
மறலியின் நாடு சென்று மலரயன் வரையப் பட்டு
உறைந்தவ னென்று சொல்வே னுரைத்தயிக் குணத் தா
[னுக்குத்
திருமக னுதிப்பா னகுஞ் செப்புவோ மிவன்கு ணத்தை.

10. தர்மம் செய்வதில் ஆசை உடையவராகி ஆறுமுகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகிப் பிறகு இறந்து எமப் பட்டணத்திற்குப்போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இதுவரையில் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம.

ஜாதகருடைய குணதிசயங்கள்

11. மானிறஞ் சமதே கத்தன் வாக்கது சுத்த முண்டு
தானென்ற கருவங் கொஞ்சந் தரித்திர மில்லா னவன்
ஊனமில் லாத தேகி வுயர்வான புத்தி யேற்பன்
வானவர் பத்தி கொள்வன் மாடுகள் பணையோர் விருத்தி.

11. ஜாதகர் மானிறத்தையும் நடுத்தரமான அளவையும் உடைய தேகத்தை உடையவராவர். இவர் நல்ல வார்த்தைகளைச் சொல்லுவார், இவருக்குத் தான் என்ற அகங்காரம் சிறிது இருக்கும். இவர் தரித்திரத்தை அடையாதவராக இருப்பார். இவர் எவ்வித அவயவக் குறைவு மில்லாத தேகத்தை உடையவராவர், மேன்மையான சிறந்த புத்தியை உடையவர். இவர் தெய்வங்களிடத்திலும் தேவர்களிடத்திலும் அன்பும் ஆசையும் உடையவராவர். இவரிடம் கால்நடைகள் நிலங்கள் ஏர்கள் ஆகிய இவை விருத்தியடையும்.

12. கல்வியு முடைய னவன் கார்க்கோடன் போலே கோபம்
இல்லையென் றுரைக்க மாட்டா னெதிரியை நாசஞ்
[செய்வன்
சொல்லது மதிக மேற்பன் சுற்றத்தார் மதிக்க வாழ்வன்
வல்லியர் மோக னவன் வருவோரை யாத ரிப்பன்.

12. ஜாதகர் வித்தையை உடையவராவர். இவருக்குப் பாம்பிற்குக் கோபம் வருவதைப்போல கோபம் உண்டாகும். இவர் பிறருக்கு உதவிசெய்ய தன்னிடத்தில் ஒன்றும் இல்லை என்று சொல்லமாட்டார். தன்னுடைய பகைவர்களை அழித்துவிடுவார். இவர் அதிகமாக பேசுபவர் ஆவர். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும் படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவராவர். தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுவார்.

13. கடன்கொளா னிடுக்க மில்லான் காரியச் சமர்த்த னவன்
உடன்படான் பிழைக ளுக்கு வுறுதியாம் மனத்த னவன்
தடபுடல் செய்கை யுண்டு சாதுர்ய வார்த்தை யுண்டு
மடையரை வுறவு கொள்ளான் மானிலம் விருத்தி
[செய்வன்.

13. ஜாதகர் கடன் வாங்கமாட்டார். கஷ்டங்களை அனுபவிக்க மாட்டார். காரியங்களைச் செய்து முடிப்பதில் சாமர்த்தியம் உடைய வராவர். தவருன காரியங்களைச் செய்யச் சம்மதிக்கமாட்டார். இவர் நிலையான மனத்தை உடையவராவர். இவர் காரியங்களை இடம்ப மாகவும் அவசரமாகவும் படாடோபத்துடனும் செய்வார். இவர் சாமர்த் தியமாக வர்த்தைகளை உயயோகிப்பார். இவர் புத்தியில்லாதவர் களுடன் சிநேகஞ் செய்துகொள்ளமாட்டார். இவர் பெரிய பெரிய நிலங் களைப் பயிரிட்டு தான்யங்களை விருத்தியாக்குவார்.

14. தந்தைதாள் பூமி தன்னைத்
தானவன் விருத்தி செய்வன்
இந்திரன் போலே வாழ்வ
னிடரென்றோர்க் குதவி செய்வன்
பந்தினர் மதிக்க வாழ்வன்
பசித்தோர்க்குத் தாக மீவன்
எந்திடம் பெருமை யேற்ப
னெதிரிக் கஞ்சா னுவன்.

14. ஜாதகர் தன்னுடைய முன்னோர்களுடைய நிலங்களைப் பயி ரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார், நிலங்களையும் அதிக மாக்கு வார். இவர் தேவேந்திரனைப்போல சகல போகங்களையும் அனுபவித்துக் கொண்டு வாழ்பவர் ஆவர், கஷ்டங்களை அடைந்துகொண்டிருக் கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னைக் கௌரவப்படுத்தக்கூடிய நிலைமையிலிருந்து வாழ்வார், பசிதாகமுடையவர்களுக்குத் தாகம் தீரு வ்தற்காக மோரைக் கொடுப்பார். இவர் எல்லாவிடங்களிலும் மேன் மையை அடைவார், பகைவர்களுக்குப் பயப்படாதவராக இருப்பார்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

15. இன்னவன் துணைவர் தம்மை
யியம்புவோ மாண்பா லிரண்டு
கன்னிகை யொருத்தி யென்றோங்
கனக்காவே மற்ற வெல்லாம்
அன்னவர் சேதி யாவு
மறிவிப்போம் பின்பா கத்தில்
உன்னத வானை பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

15. ஜாதகருடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருப்பார்கள்

என்று சொல்லுகின்றோம். மற்ற சகோதரங்கள் எல்லாம் நிலைக்காமல் இறந்துவிடுவார்கள். இவர்களுடைய விஷயங்கள் எல்லாவற்றையும் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். மேன்மையான சிறந்த யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய குணாதிசயங்கள்

16. மாதிரு குணத்தைச் சொல்வோ மாநிற முடையா
[ளாவள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுள்மனங் கபடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பதர்குண மில்லா ளாவள்
காதலி யோக சாலி கணவன்தன் மனத்துக் கேத்தோள்.

16. ஜாதகரின் தாயாருடைய குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாநிறமுள்ள தேகத்தை யுடையவளாவாள். இவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் தன்னுடைய மனத்திற்குள்ளே கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை உடையவளல்லள். இவள் கெடுதியான மனத்தை உடையவளல்லள். இவள் அவசரமான, இழிவான, குணங்களை உடையவளல்லள். இவள் யோகத்தை உடையவளாக விருப்பாள், தன் புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருப்பாள்.

17. சொல்லது சுருக்க மெய்துஞ்
சோர்வோர்க்குத் தாக மீவள்
இல்லையென் றுரைக்க மாட்டா
ளிவள்துணை யாண்பா லொன்று
வல்லவ னென்ரூய் வாழ்வன்
மனைவிக ளிருவ ராவர்
அல்லலாங் குடும்ப மென்றே
மறைகிறோம் பின்பால் சேதி.

17. ஜாதகருடைய தாயார் சுருக்கமாகவும் கொஞ்சமாகவும் பேசுவாள். கேட்டவர்களுக்குத் தாகந்தீர நீர்மோர்கொடுப்பாள். இவள் பிறருக்கு உபகாரம் செய்ய தன்னிடத்தில் ஒன்றும் இல்லை என்று சொல்லமாட்டாள். இவளுடன் கூடப்பிறந்தவர்களில் ஒரு சகோதரருளர். இந்தச் சகோதரர் இவளுடன்கூட இருந்து வாழ்வார். இவருக்கு இரண்டு மனைவிகள் உண்டு. இவருடைய குடும்பம் கஷ்டத்தை உடையதாக இருக்கும் என்று சொல்லுகின்றோம். இவருடைய மற்ற விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

18. அன்னையின் முன்ஜன் மத்தை யறிவிப்போங் காயே [கேளுந்
தென்திசை யாழி யோரஞ் சிறுவூரி லிக்கு லத்தில்
கன்னிகை யுதித்து மேலுங் கனமான குடும்பி யாகி
முன்னோர்க்குத் தொண்டு பூண்டு மேதினில் நல்லோ ளாகி;

18. ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மத்தைப்பற்றி செரல்லு கின்ரோம், பார்வதியம்மையே! கேட்பீராக. தெற்குத்திக்கில் சமுத்திர கரையோரத்தில் ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய வன்னியர் குலத்தில் ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன் ஜன்மத்தில் பிறந்து மேன்மையான குடும்பினியாகி பிராமணர் களுக்கு வேலைகளைச்செய்து பூமியில் நல்லவளாக நடந்துகொண்டு;

ஜாதகரின் தாயாரது மறுஜன்மம்

19. வரன் முன்னேமரண மாகி
மறையவன் வரையப் பட்டு
அரிவையு முதித்தா ளென்ரே
மவள்வந்த பின்பு யோகம்
பெருமையாய் வாழ்வா ளாவள்
பேசுவோ மிவள்பின் சென்மம்
திருவண்ணு மலையி லேதான்
ஜனிப்பளாஞ் சைவச் சேவாய்.

19. தன்னுடைய புருஷனுக்கு முன்னே இறந்து பிரம தேவனால் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு ஜாதகருடைய தரயார் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ரள் என்று சொல்லுகின்ரோம். இவள் தன் னுடைய புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு இவளுக்கு யோகம் உண்டா கும். இவள் சிறப்புடனும் மேன்மையுடனும் வாழ்பவள் ஆவள். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்ரோம், இவள் திரு வண்ணுமலை க்ஷேத்திரத்தில் சைவருடைய குலத்தில் ஒரு பெண் குழந்தையாகப் பிறப்பாள் என்று சொல்லுகின்ரோம்.

ஜாதகருடைய தகப்பனரது முன்ஜன்மம்

20. தந்தையின் முன்ஜன் மத்தைச்
சாற்றுவோம் விரிஞ்சி தன்னில்
முந்தின சைவச் சேயா
யுதித்துமே பெருமை பூண்டு

வந்தவர்க் கன்ன மீந்து
வாழ்வளி மென்று சொல்வோங்
கந்தனை யீன்ற மாதே
கழறினை மொழி குன்றுவே.

20. ஜாதகருடைய தகப்பனாரின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் விரிஞ்சிபுரத்தில் ஒரு மேன்மையான சைவருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து மேன்மையை அடைந்து தன்னிடம் வந்தவர்கட்குச் சாப்பாட்டைப்போட்டு வாழ்ந்தவர் என்று சொல்லுகின்றோம். அறுமுகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதி யம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலா பலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய தகப்பனாரது மரணமும், தாயாரது மரணமும்
ஜாதகருடைய விவாகமும் மனைவியும்.

21. ஆறஞ்சு வாண்டு தன்னி லணுகிடுந் தந்தை கண்டந்
தீரமாய் மூப்பா னலில் செப்புவோ மன்னை கண்டம்
மாறன்தன் மணத்தின் காலம் வரைகிறோம் பதினே
[ழாண்டில்
காரிகை வடபால் நேருங் கழறுவோ மவள்கு ணத்தை.

21. ஜாதகருக்கு மூப்பதாவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்து போய்விடுவார். ஜாதகருக்கு மூப்பத்து நான்காவது வயதில் இவருடைய தாயார் இறந்து விடுவாள் என்று தைரியமாகவும் உறுதியாகவும் சொல்லுகின்றோம். ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பதினேழாவது வயதில் மனைவி வடக்குத்திக்குலிருந்து வந்து நேரிடுவாள், இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மனைவியின் குணதிசயங்கள்

22. பால்பாக்கிய முடைய ளாவள்
பசித்தோர்க்குத் தாக மீவள்
சீலம்போல் வெளி மயக்கஞ்
சிறப்பான குடும்பி யாவள்
ஞாலம்மேல் நல்லோ ளாவள்
நாயகன்தன் மனத்துக் கேத்தோள்
காலத்தை யறிந்து ரைப்பள்
கணவன்தன் மனத்துக் கேத்தோள்.

22. ஜாதகருடைய மனைவி பால் பாக்கியத்தை உடையவளாக இருப்பாள், பசித்தவர்களுக்கு மோரைக் கோடுப்பாள். இவள் நல்

லொழுக்கத்தை உடையவளாப்போல வெளிக்குகாட்டிக்கொண்டு ஜனங்களை மயக்குவாள். இவள் மேன்மையான குடும்பினியாவள். இவள் பூமியின்மேன் நல்லவளாக நடந்துகொள்ளுவாள், தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருப்பாள். இவள் காலப்போக்கைத் தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்தபடி பேசுவாள். இவள் தன்னுடைய புருஷனுக்கு உகந்தவளாக இருப்பாள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திர பாவம்)

23. அன்னத்தை வடிவி லொப்பாள்
 ளயல்குற்றம் புகலா ளாவள்
பொண்பணி யுடைய ளாவள்
 புகலுவோம் புத்திர பாவம்
பின்னமா முதலி லிரண்டு
 பேசுவீ ரந்தச் சங்கை
துன்மையாய்க் கேது வைந்தில்
 தொடர்ந்ததால் சொன்னேம் யாங்கள்.

23. ஜாதகருடைய மனைவி அன்னத்தைப்போல அழகான உருவத்தை உடையவளாக இருப்பாள். இவள் அன்னியர்மேல் அபவாதத்தையும் நிந்தனைகளையும் சொல்லமாட்டாள். இவள் தனம் ஆபரணங்கள் ஆகிய இவைகளை உடையவளாக இருப்பாள். ஜாதகருடைய புத்திரபாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு முதலில் இரண்டு குழந்தைகள் நாசமாகி விடுவார்கள். இதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, அத்திரி மகரிஷி பதில் சொல்லுகின்றார். கெடுதியை உடையவராகிக் கேது ஐந்தாவது வீட்டில் இருப்பதால் நாங்கள் இவ்விதமான பலனைச் சொன்னும்.

ஜாதகருடைய முன் ஜன்மம்

24. அதற்குமேல் விருத்தி சொல்வோம்
 ஆணென்று கன்னி யிரண்டு
இதுமூன்றுந் தீர்க்க மெய்து
 மியம்புவோ மிவன்முன் ஜன்மம்
பதியினி லுயர்வ தான
 பட்சியின் தலத்தி லேதான்
நீதிமிக வுடையா னுக்கு
 நேர்ந்தனன் வைசியச் சேயாய்.

24. இதற்குமேல் உண்டாகும் சந்ததிகளைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண்குழந்தைகளும் ஆக

மொத்தம் மூன்று குழந்தைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப் பார்கள் என்று செசன்லுகின்றோம். ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். க்ஷேத்திரங்களில் சிறந்ததான பட்சி ஸ்தலம் என்ற திருக்கழுக்குன்றம் க்ஷேத்திரத்தில் அதிக தனவா னுக்கு வைசியகுலத்தில் ஆண் குழந்தையாக ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் பிறந்தார்.

25. பலவிதக் செட்டு செய்து பழனியின் பக்தி பூண்டு
நலமதை யெவர்க்குஞ் செய்து நற்றல வாசஞ் செய்து
புலியோர்க்குத் தாக மீந்து வச்சென்மம் வினையில் லாமல்
குலவினன் காலந்நாடு குறைதலை வரைப் பட்டு ;

25. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் பலவிதமான வியா பாரங்களைச் செய்துகொண்டு பழனி க்ஷேத்திரத்திலுள்ள ஆறுமுகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகி எல்லோருக்கும் நன்மைகளையே செய்துகொண்டும் நல்ல புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்துகொண்டும் ஏழைகளுக்கும் கீழ் மக்களுக்கும் தாகம் தணிய நீர் மோரைக் கொடுத்துக் கொண்டும் இந்த முன்ஜன்மத்தில் யாதொரு பாபத்தையும் செய்யாமல் இருந்து கொண்டும் இருந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குச் சென்றார். பிறகு முருகக்கட வுளினல் குறைக்கப்பட்ட தலைகளையுடைய பிரமதேவனல் பிரமலிபி யுடன் எழுதப்பட்டு ;

ஜாதகருடைய யோக பாவம்

26. வந்தவ னென்று சொல்வோம் வருவிப்போ மிவனின் [யோகம்
இந்திரன் போலே வாழ்வ னெதிரியை நாசஞ் செய்வன்
தன்தன முடைய னவன் சகலர்க்கு நல்லோ னவன்
பந்துவை யாத ரிப்பன் பசித்தோர்க்குத் தாக மீவன்.

26. ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவருடைய யோகபாவத்தைப்பற்றிச் சொல்லு கின்றோம். இவர் தேவேந்திரனைப்போல சகலசம்பத்துக்களுடன் வாழ் பவராவர், தன்னுடைய பகைவர்களை அழித்துவிடுவார். இவர் தன் னுடைய சுயார்ஜித செல்வத்தை உடையவராவர். எல்லோருக்கும் நல்ல வராக நடந்து கொள்ளுவார். இவர் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார். இவர் பசித்தவர்களுக்கு மோரைக் கொடுப்பார்.

27. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்கள் [சொல்வோம்

மால்குசன் ராகு லாபம் மன்னவன் உச்ச மாக
ஆலோனு மூன்றி லாக வலரியுந் தசமந் தங்கச்
சாலவே பத்ம யோகஞ் சாமரை யோக மொன்று ;

27. ஜாதகருக்கு யோகங்களைச் சொன்னதற்குக் காரணங்களைச் சொல்லுகின்றோம். மால் என்ற புதனும் குஜன் என்ற அங்காரகனும் இராகுவும் லாபம் என்ற பதினொன்றுவது வீட்டில் இருப்பதாலும் மன்னவன் என்ற குரு உச்சமாக இருப்பதாலும் ஆலோன் என்ற சந்திரன் மூன்றுவது வீட்டில் இருப்பதாலும் அலரி என்ற சூரியன் பத்தாவது பாலத்தில் இருப்பதாலும் ஜாதகருக்குப் பத்மயோகம் என்ற ஒரு யோகமும் சாமரையோகம் என்ற ஒருவித யோகமும்.

குறிப்பு :—பத்மயோகத்தைப் பற்றித் தமிழ் ஜாதகாலங்காரத்தில் முன்னூற்று நாற்பத்துமூன்றுவது பாடலாகிய

" அளவே யொன்பான் றநிற்புகரு மமர்ந்தே யொன்பானதி
வளமாம்திக்கே யொன்பதில் வந்தாற் பதும்யோகபலன்..... வருஷ மைந்தளவே "

என்ற பாடலைப் பார்க்கவும். இதன் பிரகாரம் பத்மயோகம் சிறிது ஏற்பட்டிருக்கின்றது. சாமரை யோகத்தைப் பற்றித் தமிழ் சாதகசிந்தாமணி இரண்டாயிரத்து இருபத்தாருவது பாடலாகிய

" பகரு மூன்றிற் பன்னொன்றிற் பாவரிருக்க....."

என்ற பாடலையும் பார்க்கவும் சாதகசிந்தாமணி இரண்டாயிரத்து இருப்பத்தெட்டாவது பாடலின் மூன்றுவது நான்காவது வரிகளையும் வாசிக்கவும். இதன் பிரகாரம் சாமரையோகம் முக்காற்பங்கிற்குமேல் அமைந்திருக்கின்றது. சாமியாகிய சூரியன் உச்சராசியிலிருப்பதற்குப் பதிலாகப் பத்திலிருக்கின்றார்.

28. இருவித யோக த்தாலே யியம்புவோம் வறுமை காணன்
பொருளது பெருக்கஞ் செய்வன் பிதிருதுணை நாஸ்தி [செய்வன்

சிறியோரா பத்தைக் காப்பன் தீரமா மனத்த னுவன்
அறிவுளா னென்று சொல்வோமம்பிகை யாளே கேளாய்

28. ஆக இவ்விதமான இரண்டு யோகங்களாலே ஜாதகரது யோகபலன்களைச் சொன்னோம். இவர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் சொத்துக்களை அதிகமாக்குவார், தன்னுடைய தகப்பனுருடைய சகோதரைக் கெடுத்துவிடுவார். இவர் ஏழைகளை ஆபத்துக் காலத்தில் காப்பாற்றுவார், தைரியமான மனத்தை உடையவராக இருப்பார். இவர் விவேகமுடையவராக இருப்பார் என்று சொல்லுகின்றோம், பார்வதியம்மையே ! கேட்பீராக.

29. இல்லமும் மூன்று பாக மெய்திடும் மூன்ரு மாண்டில்
புல்குவார் பராசர் தானும் பிதாவுக்குத் துணையொன்
[றென்றீர்
வல்லவன் குடும்பப் பாகம் வருவித்தீர் மூன்று மாகச்
சொல்லுவீ ரந்தச் சங்கை சுதனுடை மாம னுக்கு.

29. ஜாதகருக்கு மூன்ருவது வயதில் வீடு மூன்று பாகமாகப் பங்கிடப்படும். இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லவே, பராசர மகரிஷி தடுத்துக்கேட்கின்ருர். ஜாதகரின் தகப்பனருக்கு ஒரு சகோதரர் தான் என்று சொன்னீர். ஆனல் குடும்பச் சொத்து மூன்று பாகங்களாகப் பங்கிடப்படும் என்று சொன்னீர். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று பராசர முனிவர் கேட்க, அத்திரி முனிவர் பதில் சொல்லுகின்ருர். ஜாதகருடைய அம்மான் ;

30. தன்னுடன் வாழ்வ தாலே தனக்கோரா பத்து மில்லான்
பின்தந்தைக் கொருபா கங்கள் பேசிலே முனியே
[யாமும்
அன்னவ னுருண் டுக்கு ளந்தக னுலகஞ் சேர்வன்
என்னகா ரணங்கள் சொன்னீ ரியம்புவீர் விபர மாக.

30. ஜாதகருடைய குடும்பத்தில் இருந்துகொண்டு வாழ்வ தாலும் இவருக்கு வேறே ஒரு விதமான சொத்துக்கள் இல்லாததாலும் இவருக்கு அம்மாவது மாமனுக்கு ஒரு பாகமும் சிறிய தகப்பனருக்கு ஒரு பாகமும் ஜாதகருடைய தகப்பனருக்கு ஒரு பாகமும் ஆக மொத்தம் மூன்று பாகங்கள் என்று, முனிவரே ! நான் சொன்னேன் என்று அத்திரி மகரிஷி பதில் சொன்னர். ஜாதகருக்கு ஆறு வயதிற்குள் சிறிய தகப்பனர் இறந்து எமபட்டணத்திற்குப் போய் விடுவார். இவ்விதமாகச் சொன்னதற்குக் காரணங்கள் என்ன ? அவைகளை விபரமாகச் சொற்லுவீர் என்று கேட்க, அத்திரி முனிவர் பதில் சொல்லுகின்ருர்.

31. தந்தையின் மனவ ருத்தஞ் சாபமு மவனைச் சேர்ந்து
வந்திடு மாருண் டுக்குள் மரலியின் பதிக்குச் சென்று
அந்தவ னஸ்தி பாதி யணுகிடும் பால னுக்குப்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விபர மாக.

31. ஜாதகரின் தகப்பனருடைய மனவருத்தத்தினலும் சாபத்தினலும் ஜாதகருக்கு ஆறுவயதிற்குள் இவருடைய சிறிய தகப்பனர் இறந்து எம்புட்டணத்திற்குப் போய்விடவே இந்தச் சிறிய தகப்பனருடைய சொத்துக்களில் பாதிபாகம் ஜாதகருக்கு வந்து சேர்ந்துவிடும். இந்த விஷயங்களைப்பற்றிப் பின்பாகத்தில் விபரமாகச் சொல்லுகின்ரோம்.

ஜாதகருடைய மறுஜன்மமும் மரண காலமும்

32. அறுபது ஆறு ஆண்டி லேப்பசி மாதந் தன்னில்
குறை பக்க மேகாதேசி குழவியி னுடல மேகும்
வருஞ் சென்மங் காஞ்சி தன்னில் வருவான் வேளாளனாக
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா னம்மா.

32. ஜாதகர் தனக்கு அறுபத்து ஆறுவது வயதில் ஐப்பசி மாதத்தில் தேய்பிறை ஏகாதசிதிதியில் இறந்து இவருடைய தேகம் மறைந்து போய்விடும். இவர் காஞ்சிவரத்தில் வேளாளர் குலத்தில் மறு ஜன்மத்தில் பிறப்பார். சொத்துக்களோ அதிகமாக உடையவராகிப் பெருமையுடனும் கீர்த்தியுடனும் இவர் வாழ்பவராவரர், பார்வதி யம்மையே!

ஜனனகால நட்சத்திரமும் தசையின் இருப்பும்

33. சுதனுமே ஜனிக்குங் காலே துறவுநாள் மூன்றும் பாதஞ்
சதமுடன் குருவி ருப்புச் செப்புவோ மாண்டு வைந்தும்
அதனுடனந்திங்க ளொன்பா னணுகினபலனைக் கேளாய்
விதவித கலகம் வீட்டில் விரயமும் நேரு மென்றோம்.

33. ஜாதகர் பிறந்தபோது ஜன்ம நட்சத்திரம் துறவுநாள் என்ற விசாக நட்சத்திரத்தின் மூன்றுவது பாதம் ஆகும். இதற்குரிய குரு மகாதசையின் இருப்பு ஐந்து வருஷங்களும் ஒன்பது மாதங்களும் ஆகும். இந்தத் தசையின் பலாபலன்களைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. குடும்பத்தில் பலவிதமான கலகங்களும் விரயமும் உண்டாகும் என்று சொல்லுகின்றோம்.

34. தந்தைபின் துணையால் நேருஞ் சகலரும் பகையே யாகும்
மூன்றின வழக்கு நேரும் விசனமா மெடுத்த தோங்கும்
பிந்தியுஞ் ஜயமே யாகும் பிரிதலாம் பாகம் மூன்றாய்
இந்திர னிரைஞ்சு மாதே இதுபூர்வ பாகந் தாயே

34. குடும்பத்தில் இவ்விதமான சண்டை சச்சரவுகளும் செலவுகளும் தகப்பனுடைய சகோதரரால் நேரிடும். எல்லோரும் விரோதிகள் ஆவார்கள். ஒரு பெரிய வியாஜ்யம் நேரிடும். துன்பங்கள் உண்டாகும். தொடுத்த காரியம் விருத்தியாகும், பிறகு ஜயமுண்டாகும், அதன் பிறகு குடும்பச் சொத்து. மூன்று பாகங்களாகப் பங்கிடப்படும். தேவேந்திரன் வணங்கி பூஜை செய்கின்ற பார்வதியம்மையே! இது வரையிலும் நாங்கள் சொல்லியவைகள் பூர்வமாகும், பார்வதி யம்மையே!

ஜாதகம் 120

ஜனன கால கிரக நிலை

1. [1]சிங்கலக் கினம தாகச் சனிரண்டில் கேது மூன்றில் [2]மங்கல னுறி லாக [3]மறைராகு நவத் திலாகத் [4]திங்களுஞ் தசம மாகச் செங்[5]கதிர் புதனும் [6]வெள்ளி தங்கிடம் [7]லாப மாகச் சாற்றுவீர் பலனை யென்று ;

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகிச் சனி இரண்டிலும், கேது மூன்றிலும், அங்காரகன் ஆறிலும், குருவும் இராகுவும் ஒன்பதிலும், சந்திரன் பத்திலும், சூரியனும் புதனும் சுக்கிரனும் பதினொன்றிலும் இருந்தால் பலா பலன்களைச் சொல்லுவீர் என்று ;

கிரகநிலை

	குரு ராகு	சந்திரன்	சூரியன் புதன் சுக்கிரன்
அங்காரகன்	இராசி சக்கரம்		லக்கினம்
		கேது	சனி

ரோகிணி 4-ஆம் பாதம்: சந்திர தசை வரு 0-10-5

குறிப்பு :—இந்த 'ராசிச் சக்கர கிரக அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற் குருவும் கேதுவும், கடகத்திற் சந்திரனும் சுக்கிரனும், கன்னியில் அங்காரகனும், துலாத்தில் இராகுவும், தனுசில் சூரியனும், மகரத்தில் புதனும் சனியும் ஆகும். சுக்கிரன் வக்கிரகதியிலும் புதன் அஸ்தமனத்திலும் இருக்கின்றார்கள்.

---

1. சிம்மம்
2. அங்காரகன்
3. குரு
4. சந்திரன்
5. சூரியன்
6. சுக்கிரன்
7. பதினொன்று

ஜனன நகரத்தின் சிறப்பு

2. சுந்தரி கேட்கும் போது ஜயமுனி புகலு கின்றார்
இந்தச்சேய் பெண்பால் ஜன்ம மில்லமும் வடதென் வீதி
அந்தயில் மேல்பால் நோக்க மானயின் கோஷ்டங்
[தென்பால்
நொந்ததோர் கெடியு முண்டு நிமலிமா காளி யுத்தரம்.

2. பார்வதி யம்மையார் கேட்கும்போது ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். இந்தக் குழந்தை பெண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் மேற்குத் திக்கைப் பார்த்ததாக இருக்கும். யானையின் தொழுவம் தெற்குத் திக்கில் இருக்கும். பாழடைந்த கோட்டையும் இருக்கும். பார்வதியம்மையின் கோயிலும் பெரிய காளியம்மன் கோயிலும் வடக்குத் திக்கிலிருக்கும்.

3. குடதிசை மார்க்க முண்டு கூறிய வடையா ளத்துள்
அடைவுடன் கங்கை சேயா யருளுவா னிந்தப் பாவை
மடமயில் யோகச் சேதி மவள்தந்தை தாயின் யோகம்
உடன்ஜன்ம முன்ஜன் மங்க ளுரைக்கிறே மிந்நூல்
[தன்னில்.

3. மேற்குத் திக்கில் ஒரு பாட்டை இருக்கும், இவ்விதமான அடையாளங்களையுடைய இடத்தில் கங்கைகுலம் என்ற வேளாளர் குலத்தில் இந்த ஜாதகி பிறப்பாள். இவளுடைய யோகங்களைப்பற்றியும் இவளுடைய தகப்பனார் தாயார் ஆகிய இவர்களுடைய யோகங்களைப்பற்றியும் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளைப்பற்றியும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகியின் தகப்பனருடைய குணதிசயங்கள்

4. ஜாதகி தந்தை சேதி சிவந்த மெய் யூக சாலி
நீதிவா னிளம னத்தன் நிருபர்க ளிஷ்டங் கொள்வன்
கியாதியு முடைய னவன் கௌரவக் குடும்பி யாவன்
தீதக ளொருவர்க் கெண்ணன் செலவுக ளதிக முள்ளான்

4. ஜாதகியின் தகப்பனருடைய விஷயங்களாவன. இவர் சிவப்பான நிறத்தை உடைய தேகத்தை உடையவர், விவேகமுடையவர். இவர் நீதியுடன் நடந்துகொள்பவராவர், இளகியதும் தயாள குணம் உள்ளதுமான மனத்தை உடையவர். இவர் அரசர்களுக்குப் பிரியமான வராக இருப்பார். இவர் பெருமையும் புகழும் உடையவராவர், கௌரவ குடும்பஸ்தராவர். இவர் யாருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டார், அதிகமான செலவைச் செய்யமாட்டார்.

5. பலசெட்டு செய்வா னுவன் பாரதை விருத்தி செய்வன்
திலகம்போல் பந்து கட்குச் சகடுவா கனமு மேற்பன்
விலைமாதர் மோகங் கொள்ளான் வெற்றியாந் தொடு
[வழக்கு
தலமது சித்திரஞ் செய்வன் சாப்பாட்டுச் சுகிய
[னென்றோம்.

5. ஜாதகியின் தகப்பனார் பலவிதமான வியாபாரங்களைச் செய்பவராவர், நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி செய்வார். இவர் தன்னுடைய பந்துக்களுக்கு நெற்றியிலுள்ள ஒரு பொட்டைப் போலச் சிறப்பானவராக இருப்பார். இவர் வண்டி முதலிய வாகனங்களையும் உடையவராக இருப்பார். இவர் தாசிகளிடத்தில் மையல் என்ற காம் ஆசையை உடையவராக இருப்பார். இவர் ஆரம்பிக்கின்ற தொடர்ச்சியான வியாஜ்யங்களில் இவர் ஜயத்தை அடைவார். இவர் வீட்டைச் சித்திரங்களால் அலங்கரிப்பார். இவர் நல்ல இனிமையான உணவைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பார் என்று சொல்லுகின்றோம்.

6. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன்
கபடுளோர்க் குதவி செய்யான்
தடபுடல் செயலு முண்டு
தாட்சிண்ய னுயர மில்லான்
படைசெலான் செல்லில் வெற்றி
பலரையும் வசியங் கொள்வன்
நெடுமாலின் பத்தி கொள்வன்
நினைத்தகா ரியமு டிப்பன்.

6. ஜாதகியின் தகப்பனார் கடனை வாங்குவார், ஆனால் அதை உடனே திருப்பிக் கொடுத்துவிடுவார். இவர் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவர்களுக்கு உபகாரத்தைச் செய்யமாட்டார். இவர் காரியங்களை இடம்பமாகவும் அவசரமாகவும் படாடோபத்துடனும் செய்வார், தாட்சிண்யமான குணத்தை உடையவர். இவர் உயரமாக இரார். சண்டைக்குப் போகமாட்டார், ஆனால் சண்டைக்குச் சென்றால் அதில் ஜயத்தை அடைவார். இவர் பலரைத் தன்பக்கமாக இருக்கும்படி வசியஞ்செய்து கொள்வார், மஹா விஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவர், தான் எண்ணிய காரியங்களைச் செய்து முடிப்பார்,

ஜாதகியின் தகப்பனருடைய சகோதரங்களும் (சகோதர பாவமும்), முன்ஜன்மம்

7. தன்துணை யாண்பா லிரண்டு
சத்திமார் மூவர் தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம்
பேசுமாண் முன்பின் னுகும்
அன்னவர் வேறுரைச் செல்வ
ரவர்பலன் பின்பால் சொல்வேன்
முன்ஜன்மந் தந்தைக் கேதான்
மொழிகிறேன் தாயே கேளும்.

7. ஜாதகியின் தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் மூன்று சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். மற்றச் சகோதரங்கள் எல்லாரும் நாசமாகிவிடுவார்கள். இங்கு சொல்லப்பட்ட சகோதரர்கள் இருவரும் மூத்த சகோதரர் இளைய சகோதரர் ஆவர். இவர்கள் ஜாதகியின் தகப்பனரை விட்டுப்பிரிந்து வேறு குடும்பஸ்தர்களாகப் போய்விடுவார்கள். இவர்களுடைய பலாபலன்களைப் பின்னால் சொல்லுகின்றேன். இந்த தகப்பனருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன், பார்வதியம்மையே! கேட்பீராக.

8. சொக்கர்வாழ் நாட்டி லேதான்
ஜனித்தனன் மயன்கு லத்தில்
தக்கோர்கள் நேயங் கொண்டு
சேதுவின் பதிக்குச் சென்று
நக்கன்மேல் பத்தி யாகி
நலிந்தோர்க்கு வன்ன மீந்து
தொக்கிலன் காலந் நாடு
சிரனன்கோன் வரையப் பட்டு;

8. ஜாதகியின் தகப்பனர் சொக்கர் வாழ்கின்ற நாடாகிய மதுரையில் தச்சருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து பெரியார்களுடைய சினேகத்தை அடைந்து சேது ஸ்தலத்திற்குப்போய்ச் சிவபெருமான் மேல் அன்பும் ஆசையும் உடையவராகி ஏழைகளுக்குச் சாப்பாட்டைப்போட்டு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தார். பிறகு நான்கு தலைகளையுடைய பிரமதேவனுல் பிரம்மலிபியுடன் எழுதப்பட்டு ;

ஜாதகியினுடைய குணாதிசயங்கள்

9. வந்தவ ளென்று சொல்வோம் வரைந்தயிக் குணத்
[தானுக்கு
இந்தவ ளுதிப்பா ளாவ ளியம்புவோ மிவள்கு ணத்தைச்
சிந்தையில் நல்லோ ளாவள் தேகமு மொணச்ச லுள்ளாள்
சுந்தர முடைய ளாகுஞ் சோம்பலில் லாதா ளாவள்.

9. ஜாதகியின் தகப்பனார் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இது வரையிலும் சொல்லப்பட்ட குணாதிசயங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகி பிறந்தவளாவள். இவளுடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் நல்ல மனத்தை உடையவளாவள். இவருடைய தேகம் மெலிந்ததாக இருக்கும். இவள் அழகுள்ளவளாக இருப்பாள், சோம்பல் தன்மை இல்லாதவளாக இருப்பாள்.

10. பலருக்கும் பந்தி னர்க்கும்
பரிந்துப சாரஞ் செய்வள்
நலமதை யெவர்க்குஞ் செய்வள்
நாயகன் மனத்துக் கேத்தோள்
சொல்மொழி காப்பா ளாவள்
சோர்வோர்க்குத் தாக மீவள்
பலமுள குடும்பம் பின்னுல்
பெருவளா மென்று சொல்வோம்.

10. இவள் அனேகருக்கும் பந்துக்களுக்கும் தானே வலிய முன் வந்து உபகாரங்களைச் செய்வாள். இவள் எல்லோருக்கும் நல்லதையே செய்வாள். தன் புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ளுவாள், இவள் தான் சொல்லுகின்ற வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவள் ஆவள். களைப்படைந்தவர்களுக்குத் தாகம் தீர மோரைக் கொடுப்பாள். இவள் தன்னுடைய பிற்காலத்தில் பெரியதும் மேன்மையானதுமான குடும்பத்தை அடைபவள் ஆவள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகியின் விவாக காலமும் புருஷனுடைய குணமும்

11. அன்னமுங் குறை வுறுதா னடிசலுக் கினிய ளாவள்
மன்னவன் வருங்கா லத்தை வரைகிறே மீரெட் டாண்டுள்
அன்னவன் துணைதென் கீழி லணுகிடுங் குணத்தைச்
[சொல்வேன்
பின்னமில் லாத தேகி பூமியைப் பரிபா லிப்பன்.

11. ஜாதகி சாப்பாட்டு விஷயத்தில் கஷ்டங்களை அடையமாட்டாள். இவள் இனிமையாகச் சமையல் செய்பவள் ஆவள். இவளுக்குப் புருஷன் வந்து சம்பவிக்கின்ற காலத்தைச் சொல்லுகின்றேம். இவளுக்குப் பதினாறு வயதிற்குள் இவளுடைய புருஷன் தென்கிழக்குத் திக்கிலிருந்து வருவார். இவருடைய குணாதிசயங்களைச் சொல்லுகின்றேன். இவர் யாதொரு அவயவக் குறைவும் இல்லாத தேகத்தை உடையவராவர். இவர் நிலங்களை வைத்துக்கொண்டு ஆள்பவராவர்.

12. வித்தையுஞ் சமம தாகும்
விவேகியா மெவர்க்குந் நல்லோன்
சத்தியங் கூரு ஷவன்
சதுஷ்பாதம் விருத்தி யுள்ளான்
சித்தமு மிரண்டு முள்ளான்
சொல்லது தந்திர மாகும்
வெத்திச்சொல் லுடைய ஷவன்
வேந்திழை மாதே கேளாய்.

12. ஜாதகியின் புருஷன் நடுத்தரமான கல்வியை உடையவராவர். இவர் அறிவுடையவராக இருப்பார். இவர் எல்லோரிடமும் நல்லவராக நடந்துகொள்வார். இவர் சத்தியம் செய்யமாட்டார். இவரிடம் கால் நடைகள் விருத்தியடையும். இவர் இரண்டுவித மான எண்ணங்களை உடையவராக இருப்பார். இவர் தந்திரமாகவுஞ் சாமர்த்தியமாகவும் பேசுவார். இவர் தான் சொல்லுகின்றவார்த்தை களை நிலைநாட்டி வைப்பார். பார்வதியம்மையே! கேட்பீராக.

13. ஆதியில் வறுமை யுள்ளா னற்பமாங் குடும்ப மென்றேங்
காதலி வந்த பின்பு கலிபிறை போலே யோகஞ்
சூதான மனமுங் கொஞ்சந் துணையாண்பா லொன்றே
[தீர்க்கம்
நீதியாய்க் கன்னி யொன்று நிமலியி னன்னை யாகும்.

13. ஜாதகியின் புருஷன் தன்னுடைய முற்காலத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும அனுபவிப்பவராவர். இவருடைய குடும்பம் சிறியதாகவும் தாழ்ந்த அந்தஸ்தை உடையதாகவும் இருக்கும். இவருக்கு மனைவி வந்து சேர்ந்த பிறகு வளர்பிறைச் சந்திரனைப்போல யோகம் ஒங்கி வளரும். இவர் கொஞ்சம் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை உடைய மனத்தை உடையவராக இருப்பார். இவருக்கு ஒரே ஒரு சகோதரர் உண்டு. இந்தச் சகோதரர் நீண்ட ஆயுளை உடையவராக இருப்பார். இவருக்கு ஒரு சகோதரியும் உண்டு. இந்தச் சகோதரி இவருடைய மனைவியின் தாயார் ஆவர்.

14, இல்லமு மிருபானண் டின்மே
லெய்திடு மென்று சொல்வோம்
எல்லோகள் விருத்தி செய்வ
னேவலாள் பின்னல் சேர்ப்பன்
வல்லவன் முன்னண் சேதி
வசனமும் நல்ல தாகும்
அல்லலுஞ் சுகமு மேற்ப
லவுகள் விருத்தி யற்பம்.

14. ஜாதகியினுடைய புருஷனுக்கு இருபது வயதிற்குமேல் ஒரு வீடு கிடைக்கும் என்று சொல்லுகின்றோம். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி செய்வார், தன்னுடைய பிற்காலத்தில் வேலையாட்களை உடையவராவர். இவருடைய மூத்த சகோதரருடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம். இவர் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் துன்பங்களையும் துக்கங்களையும் அனுபவிப்பார், இவரிடம் பசுக்கள் விருத்தியடையும்.

15. வேறதாய்ச் செல்வர் லவன்
விளம்புவீர் காலந் தன்னை
நாரிக்கு இருப தாண்டில்
நாயகன் வேறுய்ச் செல்வன்
தீரமில் லாதா லவன்
சிலுகான குணமுங் கொஞ்சம்
பாரியு மொன்றே தீர்க்கம்
பகருவோம் வடமேல் திக்கில்.

15. ஜாதகியின் புருஷனுடைய மூத்த சகோதரர் தன்னுடைய இளைய சகோதரரிடமிருந்து பிரிந்து வேறு குடும்பஸ்தராகப் போய்விடுவார். இவ்விதமாகப் பிரிந்து போகும் காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகிக்கு இருபதாவது வயதில் இவ்விதமாகப் பிரிந்துபோய் விடுவார். இவர் தைரியமில்லாதவராக இருப்பார். இவர் சண்டை செய்கின்ற குணத்தைச் சிறிது உடையவராவர். இவருக்கு மனைவி ஒருத்தியே. இவள் வடமேற்குத் திக்கிலிருந்து வருவாள், நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள்.

16. சுதர்களு மாண்பா லிரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
நிதிய ததிகங் காணுன் நிமலியுந் தீர்க்க ஜீவி
சதியுள மனத்த ளாவாள் சாற்றுவோம் பின்பால் சேதி
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

16. ஜாதகியின் புருஷனுடைய மூத்த சகோதரருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் தீர்க்க ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவர் அதிகமான தனத்தை உடையவர் அல்லர். இவருடைய மனைவி தீர்க்க ஆயுளை உடையவள். இவள் கெட்ட மனத்தை உடையவளாக இருப்பாள். மற்ற விஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றோம். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகிக்கு சந்ததிகளும் (புத்திரபாவமும்) முன்ஜன்மமும்

17. ஜாதகி தனக்குப் புத்திரர் சாற்றுவோ மாண்பா லிரண்டு
காதலி மார்கள் மூவர் கழறுவோர்ந் தீர்க்க மாக
ஓதுவே னிவள்முன் ஜன்ம முருவற்ற மாரி வாழுர்
தீதிலா.....வே டன்னில் ஜனித்தனள் வன்னியச் சேயாய்.

17. ஜாதகியினுடைய சந்ததிகளைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். சிலையில்லாத மாரியம்மன் கோயிலையுடைய கெடுதியில்லாத.....,, என்ற கிராமத்தில் இவள் வன்னியருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள்.

18. மங்கையும் வறுமை யின்றி மைந்தர்க ளதிக முண்டாய்
அங்கவள் வாழ்ந்து மேதா னணுகினள் காலந் நாடு
புங்கவன் வரையப் பட்டுப் பிறப்பளா மிந்த மாது
செங்கமால் தங்கை யாளே செப்புவோ மன்னை சேதி.

18. ஜாதகி தன்னுடைய முன்ஜன்மத்தில் தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாமலும் அதிகம் பிள்ளைகளை உடையவளாகியும் வாழ்ந்து கொண்டிருந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போனாள். இவள் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். மகா விஷ்ணுவின் தங்கையாகிய பார்வதியம்மையே! ஜாதகியின் தாயாருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகியின் தாயாருடைய குணதிசயங்கள்

19. பலருக்கு நல்லோ ளாவள் பரவுப காரஞ் செய்வள்
தலைநான்கோன் மனைபோ லொப்பாள் தந்தலை
[யுடைய ளாவள்
கலைமுகங் கல்வி மானங் கதித்தபுத் திகளு மேற்பள்
மலைபோலே புகழு மேற்பள் வருவோரை ஆத ரிப்பள்.

19. ஜாதகியின் தாயார் பலருக்கு நல்லவளாக இருப்பாள். இவள் பிறருக்கு உதவியைச் செய்பவள் ஆவள். இவள் நான்கு தலைகளையுடைய பிரமாவின் மனைவியாகிய சரஸ்வதிக்குச் சமானமான வளாக இருப்பாள். இவள் பல்நோயை உடையவள் ஆவள். இவள் சந்திரனைப்போல அழகான முகத்தையுடையவள், வாசித்தவளாவள். இவள் சிறந்த பகுத்தறியும் புத்தியை அதிகமாக உடையவள் ஆவள். இவள் ஒரு மலையைப்போல கீர்த்தியையும் பெருமையையும் மிகவும் அதிகமாக அடைவாள். தன்னிடம் வருகிறவர்களைக் காப்பாற்று வாள்.

20. அரவுபோல் கோப மேற்ப
ளடிசி லுக் கினிய ளாவள்
நரைமல ரிஷ்டங் கொள்வள்
நடைநன்மை பொறுமை சாலி
பெருமையும் புத்தி சாலி
புண்ணிய மனத்த ளாவள்
திருமகள் தன்னில் யோகஞ்
செப்புவோம் வரனுக் கேதான்.

20. ஜாதகியினுடைய தாயார் பாம்பைப்போலக் கோபத்தை அடைபவள் ஆவாள். இவள் இனிமையாகச் சமையல் செய்பவளாவாள். இவள் வாசனையுடைய புஷ்பங்களின்மேல் விருப்பம் உள்ளவளாவள். நல்லொழுக்கத்தை உடையவள் ஆவள். சாந்தம் உடையவளாக இருப் பாள். இவள் மேன்மையை உடையவள். அறிவாளியாக இருப்பாள், புண்ணியமான நல்ல மனத்தை உடையவள் ஆவள். இவளால் இவளு டைய புருஷனுக்கு யோகம் ஏற்படும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகியின் தாயாருடைய முன்ஜன்மம்

21. முன்ஜன்ம மருணை தன்னி
லுதித்தனள் பிரம சேயாய்ப்
பொன்னெடு பணியு முண்டாய்ப்
புகழ்ச்சியாய் வாழ்ந்து மேதான்
தீதான காலந் நாடு
சென்றுமே பிரமன் லக்கங்
காதலி யுதித்தா ளென்றோங்
கௌசிகர் மறித்துச் சொல்வார்.

21. ஜாதகியினுடைய தாயார் தன்னுடைய முன்ஜன்மத்தில் அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் பிராமணர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள். இவள் தனம் ஆபரணங்கள்

ஆகிய இவைகளை உடையவளாகிப் பெருமையுடன் வாழ்ந்து பிறகு இறந்து கெடுதியான எமபட்டணத்திற்குச் சென்று பிரமலிபியுடன் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக ஜயமுனிவர் சொல்லவே, கௌசிக மஹரிஷி தடுத்துக் கேட்கின்றார்.

22. மறைக்குலம் முன்ஜன் மத்தில் வந்தவ ளிச்சென் மத்தில்
குறைவுள குலமு திக்குங் குறையதைப் புகலு மென்ன
அரிவைமுன் ஜன்மந் தன்னி லறமதி லிச்சை யின்றி
விரதங்கள் மூட்டுச் செய்தாள் விளங்கிழை யிக்கு லத்தில்.

22. முன் ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறந்த ஜாதகியினுடைய தாயார் இந்த ஜன்மத்தில் தாழ்ந்த குலத்தில் பிறந்ததற்கு இவள் என்ன பாபத்தைச் செய்தாள் என்பதைத் தெரிவிப்பீர் என்று கேட்க, ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் தர்மம் செய்வதில் பிரியம் இல்லாதவளாகி விரதங்களை அனுஷ்டிக்காமல் இடைஞ்சல் செய்தாள், ஆகையால் தாழ்ந்த குலத்தில் பிறந்திருக்கின்றாள்.

ஜாதகியினுடைய தாயாரது மரண காலமும் மறுஜன்மமும்

23. நாற்பது மூன்று மாண்டில் நமன்பதி யன்னை சேர்வள்
ஏற்கவே யிவள்பின் ஜன்ம மியம்புவோம் யாழ்ப்பா
[ணத்தில்
ஆர்க்கவே திருகா வகாவி லருளுவாள் பிரம சேயாய்
ஏற்கவே முனிவர் கூற யியம்புவா ரத்திரி தாமும்.

23. ஜாதகிக்கு நாற்பத்துமூன்றுவது வயதில் இவருடைய தாயார் இறந்து விடுவாள். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் யாழ்பாணத்தில் திருக்காவிலில் பிராமணர் குலத்தில் ஒரு பெண் குழந்தையாகப் பிறப்பாள். இவ்விதமாக ஜயமுனிவர் சொல்லவே, அத்திரி மகரிஷி தடுத்துக் கேட்கின்றார்.

24. கன்னிக்கு விச்சென் மத்திற்
கலந்தபுண் ணியங்க ளென்ன
தன்வரன் மனம்போல் வாழ்ந்துஞ்
சலித்தோர்க்குத் தூக மீந்தும்
அன்னியர்க் குதவி செய்து
மாபத்தைச் சிலர்க்குக் காத்தும்
உன்னத தலங்கள் சென்று
முத்தமி வாழ்வ தாலே;

24. ஜாதகியின் தாயார் என்ன புண்ணியங்களைச் செய்தாள் என்று கேட்க, ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருந்து வாழ்ந்துகொண்டு ஏழைகளுக்குத் தாகம் தீர நீர்மோரைக் கொடுத்தும் பிறருக்கு உபகாரத்தைச் செய்துகொண்டும் சிலரைத் தங்களுடைய ஆபத்துக் காலங்களில் காப்பாற்றிக் கொண்டும் பெரிய சிறந்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்துகொண்டும் இவள் வாழ்வதால்;

ஜாதகியின் தகப்பனுடைய மரண காலமும் மறுஜன்மமும்

25. உதிப்பளா மென்று சொன்னே
முரைக்கிறேம் நாற்ப தாண்டில்
சதியான காலந் நாடு
சேருவான் தந்தை தாமும்
அதிபன்பின் ஜன்மஞ் சொல்வேன்
மாபலி நகரி லேதான்
நிதிமிக வுடையா னுக்கு
நேருவான் மறை குலத்தில்.

25. ஜாதகியின் தாயார் தன்னுடைய மறுஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறப்பாள் என்று சொன்னேம். இவளுக்கு நாற்பதாவது வயதில் இவளுடைய தகப்பனார் இறந்து கெடுதியை உடைய எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவார். இவருடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகிறேன். இவர் மஹாபலிபுரத்தில் பிராமணர் குலத்தில் பெரிய தனவானுக்கு ஆண்குழந்தையாகப் பிறப்பார்.

26. மாரனிச் சென்மந் தன்னில் மருவின புண்ணிய மென்ன
கூறுவீர் முனியே நீர்தாங் குணமது நல்ல தாயுஞ்
சிறியோர்க் குதவி செய்துஞ் சிலர்க்கு வாபத்தைக்
[காத்தும்
பாரினில் நல்லோ னுயும் பலதல வாசஞ் செய்தும்;

26. ஜாதகியின் தகப்பனார் இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணியங்களைச் செய்தார் என்பதை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்க; ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகியினுடைய தகப்பனார் நல்ல குணங்களை உடையவராகியும் ஏழைகளுக்கும் தாழ்ந்தவர்களுக்கும் உபகாரத்தைச் செய்து கொண்டும் சிலரைத் தங்களுடைய ஆபத்துக்காலத்தில் காப்பாற்றிக் கொண்டும் பூமியில் நல்லவராக நடந்துகொண்டும் அனேக க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்துகொண்டும்;

ஜாதகியினுடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

27. உலகினில் வாழ்வ தாலே வுதிப்பனும் பிரம சேயாய்த்
தலைவிக்குத் தூணையா ணிரண்டு சத்தியு மவ்வாறு தீர்க்கம்
நிலையாரே மற்றே ரெல்லாம் நிகழ்த்துவோம் பின்பால்
[சேதி
மலையிரை மகளே யாங்கள் வழுத்துவோம் பின்பால் சேதி.

27. ஜாதகியின் தகப்பனார் இந்த உலகத்தில் இந்த ஜன்மத்தில் வாழ்வதால் மறுஜன்மத்தில் பிராமணருடைய குலத்தில் பிறப்பவராவர். ஜாதகியின் கூடப்பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் ஆவர். இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். மற்றச் சகோதரர்கள் எல்லாம் நிலைத்திராமல் இறந்து விடுவார்கள். இவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகின்றோம். மலைகளுக்கு அரசரான பர்வதராஜனுடைய புத்திரியாகிய பார்வதியம்மையே! நாங்கள் பின்னால் விஷயங்களைச் சொல்லுகிறோம்.

ஜாதகியின் மரணகாலமும் மறுஜன்மமும்

28. அன்பது வொன்ப தாண்டி லணுகிய தனுசு மாதம்
இன்னவ ளுடல மேகு மியம்புவோ மிவள்பின் ஜன்மம்
பொன்முக னற்றி னேரம் பேரூரில் சைவச் சேயாய்க்
கன்னிகை யுதிப்பா ளாகுங் கழறுவார் அத்திரி தாமும்.

28. ஜாதகி தன்னுடைய ஐம்பத்தொன்பதாவது வயதில் தனுர் மாதம் என்ற மார்கழி மாதத்தில் இறந்து இவளுடைய தேகம் மறைந்து போய்விடும். இவளுடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். ஓர் அழகிய ஆற்றின் கரையிலுள்ள ஒரு பெரிய கிராமத்தில் சைவருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். இவ்விதமாக ஜயமுனிவர் சொல்லவே, அத்திரிமகரிஷி தடுத்துக் கேட்கின்றார்.

29. இதுமத்தில் ஜாதகிக்கு வெய்தாதோ மார கங்கள்
சுதராலே யிரண்டு கண்டந் தோன்றிடும் நிவிர்த்தி யாகும்
அதிபதி நமனைக் காணுள் வயதுமே தீர்க்க மெய்தும்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

29. இதற்கு இடையில் ஜாதகிக்கு மரணம் நேரிடாதோ என்று கேட்க, ஜயமுனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகிக்குப் பிரசவ காலத்தில் இரண்டு தடவைகளில் கண்டங்கள் நேரிட்டு அவை நிவிர்த்தியாகிவிடும். இவள் இக்காலத்தில் எம தரிசனத்தை அடையமாட்டாள். இவள் நீண்ட வயதை உடையவள் ஆவள். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகியினுடைய புருஷனது மரணகாலமும் முன்ஜன்மமும்

30. எண்ணஞ்சு வாண்டு பத்தி
லிவள்வரன் மரண மாவன்
திண்ணமாய் வரனின் பூர்வஞ்
செப்புவாய் முனியே கேளும்
பின்னமாய் மலேசா டன்னில்
பிறப்பனும் வைசியச் சேயாய்க்
கெண்ணிய குடும்பி யாகிக்
குமரனும் வாழ்ந்து மேதான்;

30. ஜாதகிக்கு ஐம்பதாவது வயதில் இவளுடைய புருஷன் இறந்து விடுவார். புருஷனுடைய முன்ஜன்மத்தைப்பற்றி உண்மையாகவும் உறுதியாகவும் சொல்லுகின்றோம். முனிவரே! கேட்பீராக. இவர் மலே நாட்டில் ஒரு வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் மேன்மையான குடும்பஸ்தராக இருந்து வாழ்ந்து;

31. அறமதி லிச்சை யாகி அழகான செட்டு செய்து
மறலியின் நாடு சேர்ந்து மலரயன் வரையப் பட்டு
வரநதி குலமு தித்தான் மருஜன்மம் திருவ லத்தில்
பெருமையாய் செட்டி வம்சம் பிறப்பனு மென்று
[சொல்வோம்.

31. தருமத்தில் ஆசை உடையவராகியும் வியாபாரங்களை அழகாக செய்துகொண்டும் பிறகு இறந்து எமபட்டணத்திற்குப்போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் பிறந்திருக்கின்றார். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் மேன்மையான ஒரு செட்டியாருடைய குலத்தில் பிறப்பார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகியின் ஜன்ம நட்சத்திரமும் ஜனனகால தசை இருப்பும்

32. உத்தமி ஜனிக்குங் காலையு ரோகிணி கடைப்பா தத்தில்
சுத்தமாய்த் தசையி ருப்புத் திங்களுந் தசமே யாகும்
பத்தின திங்க ளைந்தும் பகர்ந்தனம் பூர்வ பாகம்
அத்தியை வளர்த்த எங்க ளாத்துமத் தாயே கேளாய்.

32. ஜாதகி பிறக்கும்போது ஜன்ம நட்சத்திரம் உரோகிணியின் கடைப்பாதம் என்ற நான்காவது பாதம் ஆகும். இதற்குரிய சந்திரமகா தசையின் இருப்பு பத்து மாதங்களும் ஐந்து தினங்களும் ஆகும். இவ்விதமாக நாங்கள் பூர்வ பாகத்தைச் சொன்னோம். யாஜ்ஞமுகத்தை

யுடைய வினையகக் கடவுளை வளர்த்தவரும் எங்களுடைய உயிருக்கு உயிரான தாயாரும் ஆகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

33. இருபது வாறு வாண்டி லியம்புவோ மன்னை யாங்கள்
திருகிலா மூவே ழாண்டின் மேலேதான் செல்வ
[மோங்கும்
வரிப்போம் பின்பாகத்தில் விபரமாம் வதிபதியே யானும்
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்தும தாயே கேளாய்.

33. ஜாதகிக்கு இருபத்தாறு வயதிற்குமேல் பார்வதியம்மையே! இருபத்தெரு வருஷங்கள் வரையிலும் இவளுக்கு, கெடுதியில்லாமல் செல்வம் அதிகரிக்கும் என்று நாங்கள் சொல்லுகின்றோம். மற்ற விஷயங்களைப் பின்பாகத்தில் விபரமாகச் சொல்லுகின்றேன். தருமங்களைச் செய்கின்றவரும் எங்கள் உயிருக்கு உயிராய் உள்ள தாயாரு மாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 121

ஜனனகால கிரகநிலை

1. [1]சிங்கலக் கினம தாகச் செம்[2]பொன்னு [3]புகரு மூன்றில்
[4]பங்கயன் [5]காரிநாலில் [6]பணி புத னைந்தி லாக
[7]மங்கலன் [8]மதியீ ரூரில் [9]அதிதியும் [10]லாபம் புக்க
இங்கிவை கிரகம் நின்று இகபல பூசம்பின் முதல்
[பாதத்தில் ;

1. சிம்மம் ஜன்ம லக்கினமாகிக் குருவும் சுக்கிரனும் மூன்றிலும், சூரியனும் சனியும் நான்கிலும், இராகுவும் புதனும் ஐந்திலும், அங்காரகனும் சந்திரனும் பன்னிரண்டிலும், கேது பதினொன்றிலும் இருந்து இவ்விதமாகக் கிரகங்கள் அமைந்து பூசத்திற்குப் பின்னுள்ள நட்சத்திரமாகிய ஆயில்ய நட்சத்திரத்தின் முதலாவது பாதத்தில் ;

கிரகநிலை

			கேது
	இராசி சக்கரம்		அங்காரகன் சந்திரன்
			லக்கினம்
புதன் ராகு	சூரியன் சனி	குரு சுக்கிரன்	

ஆயில்யம் 1-ஆம் பாதம் : புததசை ஞ 13-0-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர கிரக அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மிதுனத்திற் சுக்கிரனும், கடகத்திற் புதனும், கன்னியில் இராகுவும், விருச்சிகத்தில் அங்காரகனும், தனுசிற் சூரியனும் சந்திரனும் குருவும், மகரத்திற் சனியும், மீனத்திற் கேதுவும் ஆகும். சுக்கிரன் வக்கிரகதியில் இருக்கின்றார்.

---

1. சிம்மம்
2. குரு
3. சுக்கிரன்
4. சூரியன்
5. சனி
6. இராகு
7. அங்காரகன்
8. சந்திரன்
9. கேது
10. பதினொன்று

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. உதித்தவன் பலன் யெவ்வாறு
வுரைப்பீர்கள் முனியே ரீர்தாம்
அதுஜன்மம் வடபா லாகு
மந்தயில் வடபால் நோக்கங்
கதியுண்டோன் மேல்பால் தங்குஞ்
சாமுண்டி வடபா லாகுங்
சதியிலா சிறுஹூ ராகுங்
திருதிய ஜனன மென்றோம்.

2. பிறந்த குழந்தைக்கு எவ்விதமான பலாபலன்களோ, முனிவரே! நீங்கள் சொல்லுவீர்கள். ஜாதகர் பிறந்த வீடு வடக்கு வாடையில் இருக்கும், வடக்குப் பக்கம் பார்த்திருக்கும். தயிரைச் சாப்பிட்டவராகிய கிருஷ்ணபகவானின் கோயில் மேற்குத் திக்கில் இருக்கும். சாமுண்டீசுவரியம்மனின் கோயில் வடக்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் சிறுமையை அடையாத ஒரு சிறிய கிராமமாக விருக்கும். ஜாதகர் மூன்றுவது குழந்தையாகப் பிறந்தார் என்று சொல்லுகின்றோம்.

3. பாலகன் ரெட்டி வம்சம் பிறப்பனு மிவனின் யோகஞ்
சாலவே வன்னை தந்தை சகோதர களத்திர புத்திரர்
ஏலவே முன்பின் ஜன்ம மியம்புவோ மிந்நூல் தன்னில்
ஆலத்தை யுண்டோன் மாதே யறிவிப்போம் பிதாகு
[ணத்தை.

3. ஜாதகர் ரெட்டியாருடைய குலத்தில் பிறப்பார். இவருடைய யோகத்தையும் இவருடைய தாயார் தகப்பனார் சகோதரங்கள் மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் முன்ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம். ஆலகால விஷத்தை அருந்திய பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! தகப்பனாருடைய குணாதிசயங்களைச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனாரது குணாதிசயங்கள்

4. மானிற முயர முள்ளான் மருமமில் லாதா னவன்
ஈனரை யுறவு கொள்ளா னிடரான புத்தி யில்லான்
தானமுந் தரும மிச்சை தரணியா லுய்வா னவன்
வானவர் பூசை பூணன் மறுவூரில் வாச மாவான்.

4. ஜாதகருடைய தகப்பனார் மானிறமுள்ள தேகத்தையுடையவர், உயரமாக விருப்பார். இவர் தன்னுடைய மனத்தில் இரகசியத்தை உடையவரல்லர். இவர் தாழ்ந்த குணங்களையுடையவர்களுடன் சிநேகஞ் செய்துகொள்ளமாட்டார். இவர் கெட்ட புத்தியை யுடையவ

ரல்லர். இவர் தானம் தர்மம் இவைகளைச் சேய்வதில் பிரியமுள்ள வராவர். நிலங்களைப் பயிரிட்டு ஜீவிப்பவராவர். இவர் தேவர்களையும் கடவுளையும் பூஜை செய்யமாட்டார், இன்னோர் ஊரில் வசிப்பவராவார்.

5. உண்டியா முணவின் மீது
வுரைப்பொடு புளிப்பி லிச்சை
அண்டினோர் தம்மைக் காப்ப
னவசர மனமுங் கொஞ்சந்
தண்டமிழ் நூணுக்கந் தேரான்
சாதமுங் குறைவு றுதான்
எண்டிசை நல்லோ லுவ
னேவலா ளுடைய லுவன்.

5. ஜாதகருடைய தகப்பனர் காரமுள்ளதும் புளிப்புள்ளதுமான சாப்பாட்டிலும் உணவுப் பதார்த்தங்களிலும் ஆசையை யுடையவராவர். இவர் தன்னிடம் வந்தவர்களைக் காப்பாற்றுவார். சிறிது அவசரமான மனத்தை உடையவராவர். இவர் இனிமையான தமிழின் நூட்பத்தில் தேர்ச்சியை அடையாதவராக விருப்பார், சாப்பாட்டு விஷயத்தில் யாதொரு கஷ்டங்களையும் அடையாதவராக விருப்பார். இவர் எவ் விடத்திலும் நல்லவராக விருப்பார், வேலையாட்களை உடையவராக விருப்பார்.

6. ரோமங்க ளதிக மில்லான்
நுவலுமுப தேசங் கொள்ளான்
காமனை விருப்பங் கொள்வன்
கடந்தோர்க ளுறவு கொள்ளான்
பூமியும் வேறூர் சேர்ப்பன்
புகழ்ந்தோர்க் குதவி செய்வன்
ஆமது மிரண்டு செய்வ
னறிவுளோர் நேசங் கொள்வன்.

6. ஜாதகர் தன்னுடைய தேகத்தில் உரோமத்தை அதிகமாக உடையவரல்லர். இவர் குருவினிடத்தில் உபதேசத்தைப் பெற்றுக் கொள்ள மாட்டார். இவர் காமாக்கினியை உடையவராவர், உலகப் பற்றை விட்டுவிட்டவர்களுடனும் பரதேசிகளுடனும் சிநேகஞ் செய்து கொள்ளமாட்டார். இவர் இன்னொரு கிராமத்தில் நிலங்களையும் மனை களையுஞ் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் தன்னைப் போற்றியும் புகழ்ந்தும் பேசினவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் இரண்டு வீடுகளைக் கட்டுவார், விவேக முடையவர்களிடத்தில் சிநேகஞ் செய்துகொள்ளுவார்.

7. கரமதில் சங்கு சக்கரங்
கமலரே கையும் வேறுண்டு
உறன்முறை மதிக்க வாழ்வ
னுண்மையை வெளிக்காட் டாதான்
பிருதிவி தலத்தில் வாழ்வன்
பெம்மான்பேர் கொள்ளு வனுவன்
குறைமன மாக வாழ்வன்
கோமளி கேட்டி டாயே.

7. ஜாதகரின் தகப்பனருடைய உள்ளங்கைகளில் சங்கு சக்கர ரேகைகளும் கம்லரேகையும் வெவ்வேறுக விருக்கும். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னைக் கௌரவப் படுத்தும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் தன்னுடைய மனத்திலுள்ள உண்மையை வெளியே காட்டிக்கொள்ளாமல் மறைத்து வைத்திருப்பவராவர். இவர் பிருதிவி ஸ்தலம் என்ற காஞ்சீவரத்தில் வாசஞ் செய்பவராவர். இவர் கடவுளுடைய பெயரை உடையவராவர். இவர் கஷ்டத்தையடைந்த மனத்தையுடையவராகவிருந்து வாழ்வார், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

8. தன்துணை யாண்பா லொன்று
சத்திமா ரிருவ ராவர்
அன்னவர் சேதி பின்பா
லறிவிப்போந் தாயே யாங்கள்
சொன்னயிக் குணத்தா னுக்குத்
தோன்றுவா னிந்தப் பாலன்
மன்னவன் குணத்தை யாங்கள்
வருவிப்போந் தாயே கேளும்.

8, ஜாதகருடைய தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் ஒரு சகோதரரும் இரண்டு சகோதரிகளும் ஆவார்கள். இவர்களுடைய விஷயங்களைப்பற்றிப் பின்னல் நாங்கள் சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! இதுவரையிலும் சொல்லப்பட்டக் குணகுணங்களை உடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருடைய குணதிசயங்களைப்பற்றிப், பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றோம், கேட்பீராக.

ஜாதகருடைய குணதிசயங்கள்

9. வித்தையுஞ் சமம தாகும் வீண்வம்பு புகலா னுவன்
புத்தியில் பெரியோர் நேயன் பொய்யதும் புகலா னுவன்
சத்திய மென்ரு லச்சந் தரணியா லுய்வா னுவன்
எத்திசைக் கீர்த்தி யேற்ப னெதிரிக் கிணக்கஞ்

[சொல்லான்.

9. ஜாதகர் நடுத்தரமான கல்வியை யுடையவராவர். வீணுகச் சண்டையை விலைவிக்கக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார். அறிவில் பெரியவர்களாய் இருக்கின்றவர்களுடைய சிநேகிதத்தை இந்த ஜாதகர் உடையவராக விருப்பார், பொய்யைச் சொல்லமாட்டார். இவர் சத்தியஞ் செய்ய பயப்படுவார். நிலங்களைப் பயிரிட்டு ஜீவிப்பவராவர். இவர் எல்லாத் திக்குகளிலும் புகழை யுடையவராவர். பகைவர்களுக்குப் பயந்து அவர்களை வணங்கிப் பதில் சொல்லமாட்டார்.

10. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
எவ்லைகள் மூவூர் சேர்ப்ப னேவலா ளுடைய னுவன்
மல்லுக்கு முன்செல் லாதான் மாடுகள் பணையோர் விருத்தி
வெல்லுஞ்சொல் லுடைய னுவன் வேந்தர்க ளிஷ்டங்
[கொள்வன்.

10. ஜாதகர் நல்லவர்களிடம் நல்லவிதமாக நடந்துகொள்வார். முரடர்களுக்கு வலிவுடைய எதிரியாக விருப்பார். இவர் மூன்று கிராமங்களில் நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். வேலையாட்களை உடையவராக விருப்பார். இவர் சண்டைக்கு முன்னே போகமாட்டார். இவரிடம் கால்நடைகள் நிலங்கள் ஏர்கள் விருத்தியாகும். இவர் சொல்லுகின்ற வார்த்தைகள் மேன்மை யுடையனவாகவும் ஆமோதிக்கக் கூடினவாகவும் இருக்கும். இவர் அரசர்களுடைய சிநேகத்தை யுடையராக விருப்பார்.

11. பால்பாக்கிய முடைய னுவன்
பகைத்தோரை நாசஞ் செய்வன்
வேல்விழி மார்கள் மோகன்
மேம்பாடாய்க் குடும்பி யாவன்
ஆலம்போல் பகை வருக்கு
வவனுமே கருட னுவன்
சீலனு மென்று சொல்வோர்
தேவியே கேட்டி டாயே.

11. ஜாதகர் பால்பாக்கியத்தை உடையவராவர். இவர் தனுடைய எதிரிகளை அழித்துவிடுவார். இவர் வேலைப்போல அழகான கண்களையுடைய ஸ்திரீகளின்மேல் மையல் என்ற காம ஆசையை யுடையவராவர். இவர் பெருமையுள்ள குடும்பஸ்தராக விருப்பார். பாம்பைப்போன்ற விரோதிகளுக்கு இவர் கருடனைப்போன்ற வைரியாக விருப்பார், இவர் நல்லொழுக்கத்தை யுடையவரென்று சொல்லுகின்றேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

12. தன்துணை யாண்பா லொன்று
சத்தியு மவ்வாறு தீர்க்கம்
பின்னமா மொன்று வென்றோம்
பிருகுவும் மறித்துச் சொல்வார்
மன்னவன் தனக்கு யோகம்
வரைந்தகா ரணங்கள் சொல்வாய்
பொன்புகர் தனக்குப் பத்தில்
பூமகன் பிறையும் நிற்க ;

12. ஜாதகருடன் கூடப்பிறந்தவர்களில் ஒருசகோதரரும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். ஒரு சகோதரம் இறந்துபோய்விடும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக முனிவர் சொல்லவே, பிருகுமகரிஷி தடுத்துக்கேட்கின்றார். ஜாதகருக்கு யோகங்களைச் சொன்னதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, பலன் சொல்லிவந்த முனிவர் பதில் சொல்லுகின்றார். பொன் என்ற குருவிற்கும் புகர் என்ற சுக்கிரனுக்கும் பத்தாவது பாவத்தில் பூமகன் என்ற அங்காரகனும் பிறை என்ற சந்திரனும் இருப்பதாலும் ;

13. பரிதிக்கீ ழுறில் வெள்ளி பற்றின பலத்தி னலே
அரிவையாம் வேசி யோக மற்புத யோக மொன்று
இருவகை யோகத் தாலே யியம்பினேம் பால னுக்கு
மறுகர் வாச முண்டு வடகீழ் பால் பூமி சேர்க்கை.

13. பரிதி என்ற சூரியனுக்குப் பன்னிரண்டில் வெள்ளி என்ற சுக்கிரன் இருக்கின்ற பலத்தினாலும் வேசியோகம் என்ற ஒருவித யோகமும் அற்புத யோகம் என்ற ஒருவித யோகமும் உண்டு. ஆக மொத்தம் இவ்விரண்டு யோகங்களினால் ஜாதகருக்கு யோக பலன்களைச் சொன்னோம். இவர் அடுத்த பட்டிணத்தில் வாசஞ் செய்வார். வடகிழக்குத்திக்கில் நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார்.

குறிப்பு :—வேசியோக விஷயம் :—சூரியனுக்குப் பன்னிரண்டாவது வீட்டில் சுக்கிரன் இருந்தால் "வேசியோகம்" என்ற ஒருவித யோகம் உண்டாகும். இதன் விஷயமாகத் தமிழ் ஜாதகாலங்காரம் இருநூற் றெழுபத்தேழாவது பாடலையும், பலதீபிகை ஆறுவது அத்தியாயம் எட்டாவது சுலோகத்தையும், ஜாதக பாரிஜாதம் ஏழாவது அத்தி யாயம் நூற்றிருபத்தோராவது சுலோகத்தையும், ஜாதகசிந்தாமணி இரண்டாயிரத்து நாற்பத்தொன்பதாவது, ஐம்பதாவது பாடல்களையும் பார்க்கவும்.

14. மாரனும் வறுமை காணுன் வளமையாய்க் குடும்பி யாவன்
தீரவான் சல்லிய மேற்கான் ஜனவுத விகளுஞ்
[செய்வான்
காரியச் சமர்த்த லவன் காலாள்கள் பணையோர் விருத்தி
பாருகள் மூலூர் சேர்ப்பன் பார்வதி கேட்டி டாயே.

14. ஜாதகர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்க மாட்டார், செழுமையுள்ள குடும்பி ஆவார். இவர் தைரியமுடைய வராக இருப்பார், கடன் வாங்கமாட்டார், ஜனங்களுக்கு உபகாரங் களைச் செய்வார். இவர் காரியங்களைச் செய்துமுடிப்பதில் சாமர்த்திய முடையவராக இருப்பார். காலாள் வேலைக்காரர்களும் நிலங்களும் ஏர் களும் இவருக்கு விருத்தியாகும். இவர் மூன்று கிராமங்களில் நிலங் களைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணதிசயங்களும்

15. மன்னவன் மனத்தின் காலம் வரைகிரே மூவே
[ழாண்டில்
கன்னிகை வடகீழ் நேருங் கழறுவோ மவள்கு ணத்தை
உன்னதவார்த்தை சொல்வளுண்மையாம் மனத்தளாவள்
பின்னமில் லாத தேகி பிறர்குற்றம் புகலா ளாவள்.

15, ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவருக்கு இருபத்தோராவது வயதில் மனைவி வடகிழக்குத் திக்கி லிருந்து வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவள் மேன்மையான வார்த்தைகளைச் சொல்லு வாள். இவள் உண்மையானதும் கபடமற்றதுமான மனத்தை உடையவ ளாக இருப்பாள். இவள் யாதொரு அவயவக் குறைவும் இல்லாத தேகத்தை உடையவளாக இருப்பாள். இவள் அன்னியர்மேல் அபவாதத்தையும் நிந்தனைகளையும் சொல்லமாட்டாள்.

16. தோகைபோல் சாய லொக்குஞ் சொல்லது சுருக்க மாகும்
ஆகம முணர்ந் தோருக்கு வன்னமு மன்பா யீவள்
நாகரி கங்க ளுண்டு நன்னடை யுடைய ளாவள்
பாகமாய்ப் பேசு வாளாம் பதர்குண மில்லா ளாவள்.

16. இவள் மயிலைப்போன்ற நீண்ட உருவத்தை உடையவளா வள். இவள் சுருக்கமாகப் பேசுவாள். இவள் ஆகமசாஸ்திரங் களை அறிந்த பெரியார்களுக்குச் சாப்பாட்டைப் பிரியத்துடன் போடுவாள். இவள் நாகரிகங்களை உடையவளாக இருப்பாள், நல்லொழுக்கத்தை உடையவளாவள். இவள் பக்குவமாகவும் இனிமை

யாகவும் பேசுபவள் ஆவள். இவள் அவசரமானதும் இழிவானதுமான குணத்தை உடையவள் அல்லள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

17. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பல முரைது
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று
[சொல்வோங்
குத்ததைச் சொல்லு மென்னக் கொடுவிஷ மைந்தில் தங்க
இத்தகை பலத்தி னுலே யியம்பினே மந்தச் சங்கை.

17. ஜாதகருக்குக் குழந்தைகள் உண்டாவதைப் பற்றி சொல்லுவதற்கு யாதொரு வலிவும் இல்லை. ஒரு சமயம் குழந்தைகள் பிறந்தாலும் அவை இறந்து விடும் என்று சொல்லுகின்றோம். இந்தத் தோஷத்திற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்றார். கொடுவிஷம் என்ற இராகு ஐந்தாவது பாவத்தில் இருக்கின்ற பலத்தினால் இந்தத் தோஷத்தைச் சொன்னோம்.

குறிப்பு:—ஐந்தாவது பாவத்தில் புதன் இருப்பது ஆண் சந்ததிகளுக்குத் தோஷத்தை விளைவிக்கக் கூடியதாகும். புத்திரர்கள் சம்மந்தமான ஒன்பதாவது பாவத்திற்கு உடைய அங்காரகன் பன்னிரண்டாவது பாவத்தில் நீசமடைந்து விரயாதிபதியும் பெண் கிரகமுமாகிய சந்திரனுடன் கூடியிருப்பதைக் கவனிக்கவும். ஐந்திற்குடையவரும் புத்திரகாரகருமான குரு அங்காரகனாலும் இராகுவாலும் பார்க்கப் பட்டுப் பெண் கிரகமாகிய சுக்கிரனுடன் கூடியிருப்பதும் ஆண் சந்ததிகளுக்குத் தோஷத்தை விளைவிக்கக்கூடிய அம்சங்கள் ஆகும்.

18. அத்திரி மறித்துச் சொல்வா ரசுரர்மந் திரியு மாட்சி
புத்திர தானத் தானும் புகருடன் கூடி மூன்றில்
சுத்தமா யிருப்ப தாலே சுதராலே கர்மம் நேரும்
வித்தகன் முன்ஜன் மத்தில் மேவிற்றுச் சிலவே துன்பம்.

18. அத்திரிமகரிஷியானவர் தடுத்துச் சொல்லுகின்றார். அசுரமந்திரி என்ற சுக்கிரன் ஆட்சியாக இருப்பதாலும் புத்திரத்தானத்திற்குடைய குரு புகர் என்ற சுக்கிரனுடன்கூடி மூன்றில் வலிவாய் இருப்பதாலும் ஜாதகருக்குத் தன்னுடைய பிள்ளையால் கர்மம் நேரிடும். ஜாதகருக்குத் தன்னுடைய முன்ஜன்மத்தில் சில தோஷங்கள் ஏற்பட்டன.

ஜாதகருடைய முன்ஜன்மம்

19. என்னவூழ் செய்தா னத்தை
யியம்புவீர் முனியே கீர்தாம்
இன்னவன் முன்ஜன் மத்தை
யியம்புவோம் முனியே கேளுந்

தென்திசை பெண்ணை யோரஞ்
செழும்பனை பட்டி தன்னில்
துன்மதி வைசியச் சேயாய்த்
தோன்றியே வணிபஞ் செய்து ;

19. ஜாதகர் முன்ஜன்மத்தில் எவ்விதமான பாபங்களைச் செய்தார் என்பதை, முனிவரே ! நீரே சொல்லுவீராக. இவருடைய முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். முனிவரே! கேட்பீராக. தெற்குத்திக்கிலுள்ள பெண்ணையாற்றின் கரையில் செழும் பனைப்பட்டி என்ற கிராமத்தில் ஜாதகர் ஒரு வைசிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து வியாபாரத்தைச் செய்து கொண்டு ;

20. மாதுவு மதலை யுண்டாய் வளமான குடும்பி யாகிக்
காதலன் வாழுங் நாளில் கலந்ததோர் வினையைக்
[கேண்மோ
ஆதிசே டனுமே யில்ல மணுகியே வெகுநா ளாகத்
தீதாக ஓர்நாள் தன்னில் தியங்கிற்று முற்றந் தன்னில்.

20. மனைவியையும் மக்களையும் உடையவராகியும் செழிப்பான குடும்பத்தை உடையவராகியும் வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. ஓர் ஆதிசேடன் என்ற நாகப்பாம்பு இவருடைய வீட்டில் வெகுகாலமாக வசித்துக் கொண்டிருந்தது. அஃது ஒரு கெட்ட தினத்தில் வாசலில் வந்து மயங்கித் திகைத்து நின்றது.

21. அரங்கமே செய்து வின்னை
னடித்தனன் கழியி னுலே
மரலியின் நாட்டை நாக
மருவிற்று யதுவோர் தோஷம்
உறைகிறேம் வேறு வொன்று
வுயர்வோருக்குப் பொருளைத் தந்து
திருமகன் கணக்கில் செய்தான்
செப்புவார் மறையோர் தாமும்.

21. அதை ஜாதகர் மோடியினுல் நடனம் செய்யும்படி செய்வித்துப் பிறகு அதை ஒரு தடியினுல் அடித்தார். அதனுல் அந்த நாகம் இறந்து எமபட்டணம்போய்ச் சேர்ந்து விட்டது. இஃது ஒரு தோஷமாக நேரிட்டது. இன்னொரு தோஷத்தைச் சொல்லுகின்றேம். உயர்வோராகிய ஒரு பிராமணருக்கு ஜாதகர் பணத்தைக் கொடுத்துத் தன்னுடைய கணக்கில் மோசமாக எழுதிக் கொண்டார். அந்தப் பிராமணர் ;

22. பொருளதை மோசஞ் செய்தாய்ப்
பிறக்கும்பின் ஜன்மந் தன்னில்
கருமபுத் திரனு மின்றிக்
காசினி தன்னில் வாழ்வாய்
உரையாது பூர்வ யில்ல்
மூரைத்தனர் மறையோர் தாமும்
மருவிற்று யந்தச் சாபம்
மங்கையே கேட்டி டாயே.

22. ஜாதகரைப் பார்த்து "நீ என்னுடைய பொருளை மோசஞ் செய்து விட்டாய், ஆகையால் உன்னுடைய மறுஜன்மத்தில் உனக்குக் கர்மஞ் செய்வதற்குப் புத்திரன் இல்லாமல் பூமியில் வாழக்கடவது. உன்னுடைய பூர்விகமான வீடு உலக்குக் கிடைக்கக்கூடாது" என்று பிராமணர் சொன்னர். அவருடைய சாபமானது ஜாதகரை அடைந்தது, பார்வதியம்மையே! கேட்பீராக.

23. பாலக னந்தி யத்தில் பிறந்தசேய் நஷ்ட மாகுஞ்
சீலமாந் தலங்கள் சென்று சேர்ந்தனன் காலந் நாடு
மால்மகன் வரையப் பட்டு வருவனு மிந்தப் பாலன்
ஆலத்தைக் கொன்ற தோஷ மறுமறை சாபந் தானும்;

23. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் தனக்குப் பிறந்த குழந்தை இறந்து இவர் சிறந்த புண்ணிய க்ஷேத்திரங்களுக்குப்போய்ப் பிறகு இறந்து எமப்பட்டணத்திற்குப் போனர். மகாவிஷ்ணுவின் குமாரராகிய பிரமதேவனல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ரர். நாகப்பாம்பைக் கொன்ற தோஷமும் பிராமணருடைய சாபமும்;

24. இந்ததோர் ஜன்மந் தன்னி
லிவன்சுதர் தோஷ மெய்தும்
அந்ததோர் வினைகள் தீர
அறைகிரேங் கிரியை யொன்று
சந்ததஞ் சிலையில் நாகஞ்
செய்துமே மாரி கோஷ்டம்
இந்தவன் வைப்பா னுகி
லெய்தாது நாக தோஷம்.

24. ஜாதகருக்கு இந்த ஜன்மத்தில் வந்து அடையும். ஆகையால் இவருக்குப் புத்திர தோஷமுண்டாகும். இந்தத் தோஷங்கள் நிவிர்த்தியாவதற்குப் பரிகாரமாக ஒரு சாந்தியைச் சொல்லுகின்ரேம்.

ஒரு நாகப்பாம்புச் சிலையைச் செய்து மாரியம்மனின் கோயிலில் ஸ்தாபனஞ் செய்வாராகில் நாகத்தோஷம் விலகி விடும்.

25. வினையது நிவிர்த்தி யாகி விளங்கின சுதர்கள் விருத்தி
கனமுள வாண்பா லொன்று கன்னிகை யவ்வாறு
[தீர்க்கந்
தனயனுஞ் செய்யா லுகில் சந்ததி விருத்தி நஷ்டம்
அனையவே தவங்கள் செய்யு மம்பிகை யாளே கேளாய்.

25. ஜாதகருக்குப் பாபங்கள் விலகிப்போய் இவருக்குப் பிறக்கின்ற குழந்தைகள் விருத்தியடைவார்கள். மேன்மையான ஓர் ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவ்விதமாக ஜாதகர் சாந்தியைச் செய்யாவிடில் சந்ததிகள் விருத்தியடையாமல் இறந்து விடுவார்கள். விடாமல் தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்கள்

26. மாதிரு குணத்தைச் சொல்வேன் மாந்துளிர் மேனி
[யாவள்
காதக மனமில் லாதாள் கட்செவி போலே கோபம்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுள்மனங் கபடு மில்லாள்
சாதிப்பாள் சிலவே சங்கை சந்தேக மனத்த ளாவள்.

26. ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாந்துளிரின் நிறத்தைப் போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவளாவாள். இவள் பொறுமையுள்ள மனத்தை உடையவள் அல்லள். இவளுக்கு, பாம்பிற்குக் கோபம் வருவதைப் போலக் கோபம் உண்டாகும். இவள் இனிமையான வார்த்தைகளையே சொல்லுவாள். இவள் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவள் அல்லள். சில விஷயங்களில் இவள் தான் சொன்னதே சரியென்று வாதித்து நிலை நாட்டுவாள். இவள் சந்தேகத்தை உடைய மனத்தை உடையவள் ஆவள்.

27. மங்கைபாட் டாளி யாவள் மானிலம் நல்லோ ளாவள்
சங்கையென் றேரைச் சாராள் தங்கிடும் பித்த வாயு
பொங்கின குடும்பி யாவள் பொய்யது புகலா ளாவள்
துங்கமார் மனத்த ளாவள் சிலவேளை மூர்க்க மூண்டு.

27. ஜாதகருடைய தாயார் கஷ்டப்பட்டு வேலை செய்பவள் ஆவள். இவள் இந்தப் பெரிய பூமியில் நல்லவளாக நடந்து கொள்ளுவாள், அச்சமாக இருக்கின்றது, சந்தேகமாக இருக்கின்றது என்று

சொல்லுகின்றவர்களுடன் சேரமாட்டாள். இவளுக்குப் பித்தவாய்ு ரோகம் உண்டு. இவள் மேன்மையான குடும்பினி ஆவள். இவள் பொய்களைச் சொல்லமாட்டாள். இவள் மேன்மையான மனத்தை உடையவளாக இருப்பாள். சில சமயங்களில், இவளுக்குக் கோபமும் பிடிவாதமும் உக்கிரமும் உண்டாகும்.

ஜாதகருடைய தாயாரின் சகோதரங்கள் (சகோதரபாவம்)

28. மாதிரு துணையா னிரண்டு மருவிடு மென்று சொல்வோங்
காதலி மார்கள் காணுள் கழறுவோ மிவள்முன் ஜன்மம்
பாதகம் விலக்கு கின்ற பட்சியின் நகரந் தன்னில்
காதலி வன்னியச் சேயாய்க் கௌரவ குடும்பி யாகி;

28. ஜாதகரின் தாயாருடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள் ஆவார்கள். சகோதரிகள் கிடையாது என்று சொல்லுகின்றோம். தாயாரின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். பாபத்தைப் போக்கடிக்கின்ற பட்சி ஸ்தலம் என்ற திருக்கழுக்குன்றம் என்ற க்ஷேத்திரத்தில் வன்னியர் குலத்தில் பெண் குழந்தையாக பிறந்து இவள் ஒரு மேன்மையான குடும்பினியாகி;

29. சுதர்களு முடைய ளாகிச் சோர்வோர்க்குத் தாக மீந்து
அதுஜன்மம் வினையில் லாம லந்தக னகரஞ் சென்று
விதியவன் வரையப் பட்டு விளங்கிலு ளித்த மாது
அதிபதி வறுமை காணுள் மங்கையே கேட்டி டாயே.

29. ஜாதகரின் தாயார் சந்ததிகளை உடையவளாகிக் களைத்தவர்களுக்குத் தாகம் தீர நீர்மோரைக் கொடுத்து தன்னுடைய முன்ஜன்மத்தில் யாதொரு பாபத்தையும் அடையாதவளாகி இறந்து எம்பட்டணத்திற்குபோய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றுள். இவள் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது பின்ஜன்மமும், தகப்பனுருடைய முன்ஜன்மமும்

30. பின்ஜன்மந் தவளை மேல்பால்
பிறப்பளா மருகர் வர்க்கம்
பொன்பொரு ளுடைய ளாகிப்
பூவையும் வாழ்வா ளாவள்
இன்னவன் தந்தை பூர்வ
மியம்புவோ மினிமே லாகக்
கன்னியா குமரி தன்னில்
கலந்தன ளிக்கு லத்தில்.

30. ஜாதகருடைய தாயார் தன்னுடைய பின்ஜன்மத்தில் தவனை என்ற ஊருக்கு மேற்குத்திக்கில் சமணர்களுடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து தனமும் சொத்தும் உடையவளாகி வாழ்பவள் ஆவள். இனிமேல் ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். கன்னியாகுமரியில் இவர் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய ரெட்டியார் வம்சத்தில் முன்ஜன்மத்தில் பிறந்தார்.

31. வறுமைக ளுடைய ளுகி மனைவியு மதலை யுண்டாய்
அருமறைத் தொண்டு பூண்டு வறுமுகன் பத்தி யாகி
மரலியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டுப்
பெருமையா யிக்கு லத்தில் பிறந்தன னென்று
[சொல்வோம்.

31. ஜாதகருடைய தகப்பனார் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவித்துக் கொண்டு மனைவி மக்களை உடையவராகி அருமையான வேதங்களை ஓதுகின்ற பிராமணர்களுக்குப் பணிவிடைகள் செய்து கொண்டும் ஆறுமுகக்கடவுளின்மேல் அன்பும் பிரீதியும் உடையவராகியும் இருந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப்போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் ரெட்டியார் குலத்தில் மேன்மையாக வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனாரது மறுஜன்மமும் மரணமும்

32. மறுஜன்மங் காஞ்சி தன்னில் வருவனுஞ் சைவச் சேயாய்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வா னுவன்
கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர்தாம்
பிருகுதன் தசைபிற் பாகம் புகலுவோம் மார கங்கள்.

32. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மறுஜன்மத்தில் காஞ்சிமா நகரத்தில் ஒரு சைவருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார், சொத்துக்களை அதிகமாகச் செய்துகொண்டு பெருமையுடனும் கீர்த்தியுடனும் வாழ்பவராவார். இவருக்குக் கர்ம காலத்தைப் பற்றி, முனிவரே நீரே சொல்லுவீராக. பிருகு என்ற சுக்கிரமகாதசையில் பின்பாகத்தில் மாரகங்களைச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது மரணகாலமும் ஜாதகருடைய மரண காலமும்

33. ஆறஞ்சு விரண்டா மாண்டி
லணுகிடுந் தந்தை கண்டந்
தீரமாய் நாற்பான் மூன்றில்
செல்லுவாள் அன்னை தானும்

கூறின வம்சத் தார்க்குக்
குஜதசை கண்ட மெய்துங்
தீரமா யறுபா னிரண்டில்
தனுர்மாதங் கண்டஞ் சொல்வேன்.

33. ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்த போய்விடுவார். இவருக்கு நாற்பத்துமூன்றுவது வயதில் இவருடைய தாயார் உண்மையாக இறந்து போய் விடுவார். தன்னுடைய வம்சத்தைச் சேர்ந்தவர்களுக்குப் குஜதசை என்ற அங்காரக மகா தசையில் கண்டங்கள் நேரிடும். ஜாதகர் தனக்கு அறுபத்திரண்டாவது வயதில் தனுர்மாதம் என்ற மார்கழி மாதத்தில் இறந்து விடுவார் என்று சொல்லுகின்றேன்.

34. இதுமத்தில் ஜாத கர்க்கு வெய்தாவோ மார கங்கள்
விதவிதப் பிணிகள் நேரும் வெய்யவன் முன்பனி போல
அதுவினை நிவிர்த்தி யாகு மறுபத்து விரண்டு மாண்டுஞ்
சதமுடன் தீர்க்க மெய்துஞ் சங்கரி கேட்டி டாயே.

34. இதன் மத்தியில் ஜாதகருக்கு மரணம் நேரிடாதோ என்று கேட்க, பலன் சொல்லி வந்த முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாத கருக்குப் பலவிதமான நோய்கள் உண்டாகும். ஆனால் சூரியனுக்கு முன்னே எவ்விதமாகப் பனி மறைந்து போகின்றதோ அவ்விதமாக இந்த நோய்கள் எல்லாம் விலகிப்போய்விடும். ஜாதகருக்கு வயது அறுபத்திரண்டு தீர்க்கமாக இருக்கும், பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய மறுஜன்மம்

35. பின்ஜன்மம் வள்ளூர் தன்னில் பிறப்பனும் வைசியச்
[சேயாய்
உன்னத செட்டுச் செய்து வுத்தமன் வாழ்வா னுவன்
அன்னவன் ஜனன கால மாயில்யம் முதல்பா தத்தில்
மன்னிய புதனி ருப்பு வருடமோ பதின்மூன் றாகும்.

35. ஜாதகர் தன்னுடைய மறுஜன்மத்தில் வள்ளூர் என்ற திருவள்ளூர் க்ஷேத்திரத்தில் ஒரு வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் சிறந்த மேன்மையான வியாபாரத் தைச் செய்துகொண்டு வாழ்பவராவர். இவர் பிறந்த காலத்தில் ஜன்ம நட்சத்திரம் ஆயில்யத்தில் முதல் பாதம் ஆகும். இதற்குரிய புதமா தசையின் இருப்பு பதின்மூன்று வருடங்கள் ஆகும்.

ஜனன கால தசையின் பலாபலன்கள்

36. பலனதைப் புகலக் கேண்மோ பாருகள் வேறூர்
[சேர்க்கை
அலைமீது துரும்பு போலு மணுகிடு மனமுந் தானுங்
கலகமுங் கொஞ்ச முண்டு கலவர மனமு மாகுஞ்
செலவுக ளதிக மாகுஞ் செப்புவோம் பின்பால் சேதி.

36. இக் காலத்திய பலாபல்ன்களைச் சொல்லுகின்றோம். கேட்பீராக! இன்னொரு கிராமத்தில் நிலங்கள் வந்து சேரும். குடும்பத்தாருடைய மனங்கள் சமுத்திரத்தின் அலையில் சிக்கிக்கொண்டு அலைந்து கொண்டிருக்கின்ற துரும்பைப்போல சதா அலைந்துகொண்டிருக்கும், அஃதாவது கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும். குடும்பத்தில் கொஞ்சம் கலகங்கள் நேரிடும். குடும்பத்தாருக்குக் கலவரமான புத்திகள் ஏற்படும், செலவுகளும் அதிகப்படும். மற்ற விஷயங்களைப்பற்றிப் பின்னால் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய சகோதரரின் விஷயங்கள்

37. ஜாதகன் தூணவன் சேதி சகலர்க்கு நல்லோ னவன்
காதக மனமில் லாதான் கல்விமான் கணக்கி லாகி
மேதினி விருத்தி செய்வன் வேந்தர்க ளிஷ்டங் கொள்வன்
சாதிப்பான் சிலவே சேதி சாதமுங் குறைவு றுதான்.

37. ஜாதகருடைய சகோதரரின் விஷயங்களாவன். இவர் எல்லோருக்கும் நல்லவராவார், பொறுமையான மனத்தை உடையவர் அல்லர், படித்தவராவர், கணக்கில் விவேகமுடையவராக இருப்பார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார், அரசர்களுடைய பிரியத்தை உடையவராக இருப்பார். இவர் சில விஷயங்களில் தான் சொன்னதே சரியென்று வாதித்து நிலைநாட்டுவார். இவர் சாப்பாட்டு விஷயத்தில் யாதொரு கஷ்டத்தையும் அடையமாட்டார்.

38. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தனமது பெருக்க முண்டு
நிந்தையில் லாமல் வாழ்வன் நிமலியு மொன்றே தீர்க்கஞ்
சந்ததஞ் சுதரா னிரண்டு சத்திமார் மூவர் தீர்க்கம்
முந்தின குடும்பி யாவ னுலகினில் புகழு மேற்பன்.

38. ஜாதகருடைய சகோதரர் தன்னுடைய தகப்பனாருடைய அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவருக்குச் செல்வம் அதிகரிக்கும். இவர் யாதொரு அபவாதத்தையும் பழிகளையும் அடையாமல் வாழ்வார். இவருக்கு மனைவி ஒருத்தியே யாவள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள். இவர் மேன்மை

யான குடும்பியாவார், இந்த உலகத்தில் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார்.

39. மாரனுந் தீர்க்க ஜீவி வாக்கதைக் காப்பா னவன்
நாரியர் மோக னவன் நாற்காலி விருத்தி யுண்டு
போர்செ லான் செல்லில் வெற்றி புயபல முடைய னவன்
ஆறுமா முகனைப் பெற்ற வம்பிகை யாளே கேளாய்.

39. ஜாதகருடைய சகோதரர் தீர்க்கமான ஆயுளை உடைய வராவர். இவர் தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப் பாற்றுபவராவர். இவர் ஸ்திரீகளின் பேரில் காதலை உடையவராக இருப்பார். இவருக்குக் கால் மடைகள் விருத்தியாகும். இவர் சண் டைக்குப் போகமாட்டார், ஒரு சமயம் சண்டையில் சென்றாலும் ஜயத்தை அடைபவராவர். இவர் தோள் வலிமையை உடையவராவர். ஆறு பெரிய முகங்களை யுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 122

ஜனனகால கிரகநிலை

1. [1]அரிய[2]து யிரு மாக [3]வாறலுஞ் [4]ஜன்மந் தங்கப்
[5]பரிதியும் புதனு மிரண்டில் பனி[6]மதி [7]புகரு மூன்றில்
[8]கரியவ னேழி லாகக் [9]கனகனும் [10]லாபந் தங்க
[11]அரவுமே யீரு ருக [12]வதிதியு மாறி லேற ;

1. சிம்மம் ஜன்மலக்கினமாகி, அதில் அங்காரகன் இருந்து, சூரியனும் புதனும் இரண்டிலும், சந்திரனும் சுக்கிரனும் மூன்றிலும், சனி ஏழிலும், குரு பதினொன்றிலும், இராகு பன்னிரண்டிலும், கேது ஆறிலும், இருந்தால் ;

கிரகநிலை

			குரு
சனி	இராசி சக்கரம்		ராகு
கேது			லக்கினம் அங்காரகன்
		சந்திரன் சுக்கிரன்	சூரியன் புதன்

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற்குச் சந்திரனும் சுக்கிரனும், ரிஷபத்திற் கேதுவும், கடகத்தில் அங்காரகனும், விருச்சிகத்தில் இராகுவும், தனுசில் சனியும், கும்பத்தில் சூரியனும், மீனத்திற் புதனும் குருவும் ஆகும். புதன் அஸ்தமனத்திலும் சனி வக்கிரகதியிலும் இருக்கின்றார்கள்.

---

1. சிம்மம்
2. லக்கினம்
3. அங்காரகன்
4. லக்கினம்
5. சூரியன்
6. சந்திரன்
7. சுக்கிரன்
8. சனி
9. குரு
10. பதினொன்று
11. இராகு
12. கேது.

ஜனன நாட்டுச் சிறப்பு

2. இதுபல னெவ்வா ரென்று வீச்வரி கேட்கும் போது
வதிஷ்டரும் புகலு கின்ரு ராணது ஜனன மாகும்
பதியது வடபால் நோக்கம் பரமனும் வடமே லாகும்
நதிகுட மெடுத்த மாது நல்கிடும் மேல்பால் தன்னில்.

2. பலாபலன்கள் எவ்விதமாக இருக்கும் எனப் பார்வதியம்மை யார் கேட்கும்பொழுது, வசிஷ்ட மஹரிஷி பதில் சொல்லுகின்ரூர். இஃது ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்தவீடு வடக்குத் திக்கைப் பார்த்ததாக இருக்கும். சிவபெருமானுடைய கோயில் வடமேற்குத் திக்கில் இருக்கும். பார்வதியம்மையார் கோயில் மேற்குத் திக்கில் ஆற்றின் பாலத்தின்மேல் இருக்கும்.

3. அருகினில் கம்மா னுண்டு வணுகிய சமவூர் தன்னில்
திருமகன் துதிய ஜன்மஞ் ஜனிப்பனுங் கங்கை சேயாய்
உரைகுரேரும் குடும்பச் சேதி வுதித்தசேய் முன்பின்
[ஜன்மந்
தெரிவிப்போ மிந்நூல் தன்னில் செல்வதி கேட்டி டாயே.

3. சமீபத்தில் கப்பல்துறையும் கப்பற்கயிறும் இருக்கும். பிறந்த ஊர் ஒரு நடுத்தரமான கிராம்மாக இருக்கும். ஜாதகர் இரண்டாவது குழந்தையாக கங்கைகுலம் என்ற வேளாளர் குலத்தில் பிறப்பார். இவ ருடைய குடும்ப விஷயத்தைப்பற்றிச் சொல்லுகின்ரோம். இவருடைய முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்ரோம், பார்வதியமையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் துணையா ணென்று சத்திமார் மூவ ராவர்
அந்தவா னிளையோ ரவ னரைகுரே மவன்கு ணத்தை
விந்தையாய்ப் பேசு வானும் வேறூரி லரசு செய்வான்
கந்தன்மேல் பத்தி கொள்வன் கல்விமா னாக சாலி.

4. ஜாதகரின் தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் ஒரு சகோதர ரும் மூன்று சகோதரிகளும் ஆவார்கள். இந்தச் சகோதரர் இளையவ ராவர். இவருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்ரோம். இவர் ஆச்சரியப்படும்படியாகப் பேசுவார். இவர் இன்னோர் ஊரில் அரசாங்கத்தில் அதிகாரமான தொழிலைச் செய்வார். இவர் முருகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பர்ர். இவர் படித்தவர், விவேகமுள்ளவராக இருப்பார்.

5. தரணியை விருத்தி செய்வன் சாரூள்க ளுடைய னுவன்
பொறுமையுங் கோப மூண்டு புண்ணிய மனது கொஞ்சம்
பரைபள்ளு முடைய னுவன் பாலர்க ளாண்பால் மூன்று
அரிவைய ரிருவ றென்றே மவனுமே தீர்க்க ஜீவி.

5. ஜாதகருடைய தகப்பனாரின் இளைய சகோதரர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார், விவசாய வேலையாட்களை உடையவராவர். இவர் சாந்தத்தையும் கோபத்தையும் உடையவராவர். இவர் சிறிது புண்ணியமான நல்ல குணத்தை உடையவராவர். பறைபள்ளு என்கிற வாத்தியம் மேளம் தாளம் பிரபந்தம் ஆள்படை ஆகிய இவைகளை உடையவராவர் இவர். இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண்குழந்தைகளும் இருப்பார்கள். இவர் நீண்ட ஆயுளை உடையவராக இருப்பார்.

6. மனதீரன் சொல்காப் பாளு மாமிக ளிருவ ராவர்
வனிதையுங் கீழ்ப்பால் நேரு மானிலம் வறுமை காணன்
நினைப்பதை முடிப்பா னுவன் நீத்தோர்க ளுறவு
[கொள்ளான்
தனயன்சொல் தடுக்கா னுவன் சங்கரி கேட்டி டாயே.

6. இவர் தைரியமான மனத்தை உடையவராவர், தான் சொன்ன வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவராவர். இவருக்கு இரண்டு மாமியார்கள் உண்டு. இவருடைய மனைவி கிழக்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவர் இந்தப் பெரிய பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் தான் நினைத்த காரியங்களைச் செய்து முடிப்பவராவர், உலகப்பற்றை விட்டு விட்டவர்கள் பரதேசிகர் ஆகிய இவர்களுடைய சினேகிதத்தை அடையமாட்டார். இவர் தன்னுடைய தம்பனாரின் பேச்சைத் தடுக்காதவராவர், பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனாருடைய விஷயங்கள்

7. பாலகன் தந்தை சேதி பகருவோ மினி மேலாக
வேல்விழி கன்னி ராசி விளம்புமுத் திரட்டாதி நாளில்
சாலவே யுதிப்பா னுவன் தரணியைப் பரிபா லிப்பன்
காலத்தை யறிந் துரைப்பன் கண்முகம் வசிய முண்டு.

7. ஜாதகரின் தகப்பனாருடைய விஷயங்களைப்பற்றி இனிமேல் சொல்லுகின்றோம். இவர் கன்னியாராசியில் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவராவர். இவர் நிலங்களை வைத்துக்கொண்டு ஆள்வார். இவர் காலப்போக்கை அறிந்து அதற்குத் தகுந்தபடி நடந்துகொள்ளுவார். இவருடைய கண்களும் முகமும் பிறரைக் கவரும் படியான தன்மையுடையனவாய் அழகாக இருக்கும்.

8. தந்தைநாள் பூமி கொஞ்சந் தானதை விருத்தி செய்வன்
பிந்தியும் பூமி சேர்ப்பன் போஜன வருமை காணன்
பந்தணி மார்கள் மோகன் பதர்குணங் கொஞ்ச மூண்டு
வந்தவர்க் கன்ன மீவன் மருவிடும் பித்தச் சூடு.

8. இவர் தன்னுடைய தகப்பனார் காலத்திய அஃதாவது பிதுரார்ஜிதமான சில நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி செய்வார். பிறகு இவர் நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார், இவர் சாப்பாட்டு விஷயத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் ஸ்திரீகளின் மேல் மையல் என்ற காம ஆசையை உடையவராவர். இவர் சிறிது அவசரமான குணமான இழிவான குணத்தை உடையவராவர். இவர் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவார். இவருக்குப் பித்தச் சூட்டு ரோகம் இருக்கும்.

9. புத்திமான் பொறுமை கொஞ்சம் புயபல முடைய னவன்
வித்தையு முடைய னவன் வீண்பழி யில்லா னவன்
சத்தியங் கூறு னவன் சந்தேக மனத்த னவன்
எத்திசை நல்லோ னவ னெதிரிக்கு யினக்களுஞ்
[சொல்லான்.

9. இவர் அறிவுடையவர், சிறிது பொருமைக் குணத்தை உடையவராவர், தோள் பலத்தை உடையவராவர். இவர் படித்தவராக இருப்பார். வீணக அபவாதத்தையும் நிந்தையையும் அடையாதவராக இருப்பார், இவர் சத்தியம் செய்யமாட்டார், தன்னுடைய மனத்தில் சந்தேகத்தை உடையவராக இருப்பார். எல்லாத் திக்குகளிலும் இவர் நல்லவராக இருப்பார். இவர் தன்னுடைய பகைவர்களுக்கு அடங்கித் தாழ்மையுடன் வார்த்தைகளைச் சொல்லமாட்டார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

10. இந்நெறி யுடையா னுக்கு
யிப்பால னுதிப்பா னவன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னழகுளான் யிருசி வப்பன்
பன்னியே பேசு வானும்
பலகலை யுணர்வா னவன்
தன்சொலே மேன்மை யாகச்
சாதிப்பா னஞ்சா நெஞ்சன்.

10. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சுந்தரனக இருப்

பார். இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாகிறத்தை உடையவராவர். இவர் சாமர்த்தியமாகவும் விமரிசையாகவும் பேசுபவர் ஆவர், அனேக சாஸ்திரங்களைப் படித்து அறிந்தவராவர், தான் சொல்லிய வார்த்தைகளே மேன்மை உடையனவை சிறந்தவை என்று சொல்லி வாதித்து நிலைநாட்டக்கூடியவர் ஆவர். இவர் பயப்படாத மனத்தை உடையவர்.

11. அன்னியப் பாஷை மேன்மை
யரசர்க்கு விவஸ் சொல் மேன்மை
பொன்பணி சேர்ப்பா னுவன்
பூர்வமும் வறுமை கொஞ்சம்
கன்னியர் மோக னுவன்
கணக்கினில் வல்ல னுவன்
மன்னவ ருறவு கொஞ்சம்
மாளிகை சித்திரஞ் செய்வன்.

11. ஜாதகர் அன்னிய பாஷைபாகிய ஆங்கில பாஷையில் மேன்மையை அடைந்தவராவர். அரசர்களுக்கு இவருடைய வார்த்தைகள் மேன்மை உடையனவாகவும் சிறந்தனவாகவும் இருக்கும். இவர் தனம் ஆபரணம் ஆகிய இவைகளைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பவராவர். இவருக்குப் பூர்வகாலத்தில் சிறிது தரித்திரமும் கஷ்டங்களும் நேரிடும். இவர் ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவராவர், கணக்குப் போடுவதில் கெட்டிக்காரராக இருப்பார். இவர் அரசர்களுடைய சினேகத்தைச் சிறிது உடையவராவர். இவர் மாளிகைகளைச் சித்திரங்களால் அலங்காரம் செய்வார்.

12. சிலவேளாள் கிராமச் செட்டு செய்வனு மிந்தப் பாலன்
பலர்மெச்ச வாழ்வா னுவன் பணிந்தோரை யாத ரிப்பன்
நலமதை யெவர்க்குஞ் செய்வன் நடனசங் கீத மிஷ்டன்
நிலையதைக் காப்பா னுவன் நிமலியே கேட்டி டாயே.

12. ஜாதகர் சிலகாலம் வரையில் கிராம வியாபாரத்தைச் செய்வார். இவர் பலர் தன்னை மெச்சும்படியான நிலையில் இருந்து வாழ்பவர் ஆவர், தன்னை வணங்கினவர்களைக் காப்பாற்றுவார். இவர் எல்லோருக்கும் நல்லதையே செய்வார். இவர் நாட்டியங்களிலும் சங்கீதப் பாடல்களிலும் பிரியமுடையவராவர். இவர் தன்னுடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளுவார், பார்வதியம்மையே! கேட்பீராக,

ஜாதகருடைய யோகபாவங்கள்

13. பாலகன் யோகந் தன்னைப்
பகர்ந்தகா ரணங்கள் சொல்வாய்
நீலனும் புந்தி வெள்ளி
நின்றிட மாட்சி யாக
ஆலமுங் கடக மாக
வந்தணன் லாபம் நிற்க
வேல்யோகம் பத்ம யோகம்
வீணையோ கங்க ளொன்றும் ;

13. ஜாதகருடைய யோகங்களைப் பற்றிய காரணங்களைச் சொல்வீர் என்று கேட்கவே, வசிஷ்டமகரிஷி பதில் சொல்லுகிறார். நீலன் என்ற சனியும் புந்தி என்ற புதனும் வெள்ளி என்ற சுக்கிரனும் இருக்கின்ற ராசிகள் இவர்களுக்கு ஆட்சி என்ற சொந்த ராசியாக இருப்பதாலும் ஆலம் என்ற இராகு கடகராசியில் இருப்பதாலும் அந்தணன் என்ற குரு லாபம் என்ற பதினொன்றுவது வீட்டில் இருப்பதாலும் வேல்யோகம் என்ற ஒருவித யோகமும் பத்மயோகம் என்ற இன்னொரு யோகமும் வீணையோகம் என்ற மற்றும் இன்னொரு யோகமும் ;

14. திருதிய யோகத் தாலே சிறப்புடன் வாழ்வா னம்மா
அரசரால் தொழிலு மேற்ப ஞசாரன் வெகுபேர்க்
[கன்பன்
தரையது யதிக மேற்பன் சம்பத்தாய் வாழ்வா னம்மா
அரன்திருப் பணியுஞ் செய்வ னம்பிகை யாளே கேளாய்.

14. ஆகிய இவ்விதமான மூன்று யோகங்களினாலே, பார்வதியம்மையே! ஜாதகர் பெருமையுடனும் கீர்த்தியுடனும் வாழ்வார். இவர் இராஜாங்கத் தொழிலை உடையவராக இருப்பார். இவர் நல்ல ஆசாரங்களையுடையவர், அனேக ஜனங்களுக்குப் பிரியமானவராக இருப்பார். இவர் நிலங்களை அதிகமாகச் சம்பாதித்து சேர்த்து வைப்பார். இவர் எல்லாச் செல்வங்களையும் உடையவராக வாழ்பவராவர். இவர் சிவபெருமானுக்குக் கோயில் வேலைகளையும் செய்வார். பார்வதியம்மையே! நாங்கள் சொல்வதைக் கேட்பீராக.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

15. தன்துணை முன்பெண் ணொன்று
சாற்றுவோம் பாவைக் கேதான்
பின்துணை கன்னி யொன்று
புதல்வனு மவ்வாறு தீர்க்கம்

அன்னவர் சேதி யாவு
மறிவிப்போம் பின்பா கத்தில்
உன்னத வானை பெற்ற
வுத்தமி கேட்டி டாயே.

15. ஜாதகருக்குக் கூடப்பிறந்தவர்களில் ஒரு மூத்த சகோதரி உண்டு. ஓர் இளைய சகோதரியும் ஓர் இளைய சகோதரனும் உண்டு. இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவர்கள் எல்லோருடைய விஷயங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். மேன்மையான சிறந்த யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயங்களும்

16. மங்களம் பதினே ழாண்டில் மாதுவு மூள்ளூர் நேரும்
அங்கவள் குணத்தைச் சொல்வே னரிமனை யொப்ப [ளாவள்
திங்கள்போல் குணத்த ளாவள் சீலியாம் விரத மேற்பள்
சங்கையென் றோரைச் சாராள் சர்தமு மன்பா யீவள்.

16. ஜாதகருக்கு விவாகம் பதினேழாவது வயதில் நடக்கும். இவருடைய மனைவி உள்ளூரிலிருந்தே வருவாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மகாவிஷ்ணுவின் மனைவியாகிய லட்சுமிக்குச் சமானமானவளாக இருப்பாள். இவள் சந்திரனைப்போல அழகான குளிர்ந்த தன்மையை உடைய மனத்தை உடையவளாக இருப்பாள், நல்லொழுக்கத்தை உடையவள், விரதங்களை அனுஷ்டிப்பவளாவள், அச்சமாக இருக்கின்றது சந்தேகமாக இருக்கின்றது என்று சொல்லுகின்றவர்களுடன் சேரமாட்டாள் இவள் பிறருக்கு அன்னத்தைப் பிரியத்துடன் கொடுப்பாள்.

17. சுகமுள வார்த்தை கூறுவள்
சோர்வோர்க்குத் தாக மீவள்
ஜகமதில் நல்லோ ளாவள்
சிறப்புடன் வாழ்வா ளம்மா
பகையென்று மனத்தில் வையாள்
பாவையும் யோக சாலி
மிகுதவம் புரியு மெங்கள்
வித்தகி கேட்டி டாயே.

17. ஜாதகருடைய மனைவி இனிமையான வார்த்தைகளைச் சுகமாகச் சொல்லுவாள், களைத்தவர்களுக்குத் தாகம் தீர நீர்மோரைக் கொடுப்பாள். இவள் இந்த பூமியில் நல்லவளாக இருப்பாள், மேன்

மையுடனும் பெருமையுடனும் வாழ்பவள் ஆவள். இவள் தன்னுடைய மனத்தில் விரோதத்தை வைத்துக் கொண்டிருக்கமாட்டாள், யோகத்தை உடையவளாக இருப்பாள். அதிகமாகத் தவங்களைச் செய்கின்ற எங்களுடைய செல்வவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய சந்ததிகளும் (புத்திரபாவமும்) முன்ஜன்மமும்

18. புத்திர ரெழுவர் தோன்றும்
போகிடுஞ் சிலவே யென்றும்
சித்தமா யாண்பா லிரண்டு
செல்விமா ரவ்வாறு தீர்க்கம்
வித்தகன் முன்ஜன் மத்தை
விளம்புவோம் புதுவை தன்னில்
சத்திரிய குலமு தித்துச்
சம்பத்து மூடையோ னாகி;

18. ஜாதகருக்கு மொத்தம் ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். இவர்களில் சிலர் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் புதுவை என்ற புதுச்சேரி நகரத்தில் தன்னுடைய முன்ஜன்மத்தில் ஒரு க்ஷத்திரியருடைய ஜாதியில் ஆண் குழந்தையாகப் பிறந்து செல்வத்தை உடையவராகி;

19. அரசர்பா லடையா ளங்க ளவனுமே செய்து வந்து
மரலியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டுத்
திருமக னுதிப்பா லுவன் செப்புவோ மிவனின் யோகந்
தரைவிருத்தி யரசர் பக்கல் சார்ந்துமே ஜீவிப் பானும்.

19. இராசாங்கத்தில் அடையாளங்களையும் சின்னங்களையும் உண்டு பண்ணுகின்ற தொழிலை ஜாதகர் செய்து கொண்டு வந்து பிறகு இறந்து எமப்பட்டணத்திற்குப்போய் பிரமதேவனால் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். இவருடைய யோகங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவரிடம் நிலங்கள் விருத்தியாகும். இவர் அராசாங்கத்தாரை அடைந்து அவர்களால் ஜீவனஞ் செய்பவராவார்.

20. எந்தக்கா லத்தி லிராஜயோக மெய்திடு மென்று [சொல்வீர்
மைந்தனின் தசைமூற் பாக மருவிடு மரசு யென்றும்
சந்தத மூவே ழாண்டு மேலேதான் ராஜ யோகம்
இந்தவன் மரண மட்டு மெய்திடு மென்று சொல்வோம்.

20. ஜாதகருக்கு எந்த வயதில் இராஜயோகங்கள் சம்பவிக்கும் என்பதைச் சொல்லுவீர், என்று கேட்க, வசிஷ்டமகரிஷி பதில் சொல்லுகின்றார். மந்தன் என்ற சனியின்மகாதசையில் முன்பாகத்தில் இவருக்கு அரசாங்கத்தில் அதிகாரமான தொழில் உண்டாகும். இவருக்கு இருபத்தோராவது வயதிற்குப் பிறகு இராஜயோகம் உண்டாகும். இந்த யோகம் இவருடைய மரணம்வரை நீடித்திருக்கும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்கள்

21. இன்னமும் விபரங் கேட்கி
லியம்புவோ முத்தர பாகம்
அன்னையின் சேதி சொல்வே
னழகுளாள் சிவந்த மேனி
மன்னவன் மனத்துக் கேத்தோள்
வருவோரை யாத ரிப்பள்
தன்னினத் தவரைக் காப்பள்
தயாளமாம் மனத்த ளாவள்.

21. இன்னமும் அதிகமாக விபரங்களைக் கேட்பீராகில் அவைகளைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகருடைய தாயாரது விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் அழகுள்ளவளாக இருப்பாள், சிவந்த நிறத்தை உடையவள். தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருப்பாள், தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுவாள். இவள் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவாள், இளகிய மனத்தை உடையவள் ஆவள்.

ஜாதகருடைய தாயாரின் சகோதரங்கள் (சகோதரபாவம்).

22. புத்திமான் நடையுந் நன்மை புலிபோலே யற்பக் கோபி
பத்திமான் விரத சீலி பாவைக்குத் துணையா ணிரண்டு
சத்திமா ரவ்வா ருவர் தங்காரே மற்றே ரெல்லாம்
அத்தியை வளர்த்த யெங்க ளாத்துமத் தாயே கேளாய்.

22. ஜாதகருடைய தாயார் அறிவுடையவளாக இருப்பாள், நல்லொழுக்கத்தை உடையவள் ஆவள். இவளுக்குப் புலிக்குக் கோபம் வருவதைப்போல சிறிது கோபம் உண்டாகும். இவள் தெய்வங்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவள் ஆவள். விரதங்களை அனுஷ்டிப்பவள் ஆவள். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் ஆவர். மற்றச் சகோதரர்கள் எல்லாம் நிலைத்திராமல் இறந்து விடுவார்கள். யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைக் காப்பாற்றியவரும் எங்கள் உயிருக்கு உயிராயுள்ள தாயாருமாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

23. இவளுடை முன்ஜன் மத்தை யியம்புவோம் பெருமுக்கல் [தன்னில்
அவளுமே ரெட்டி வம்ச மணுகியே வறுமை யின்றித்
தவனிலை யோர்க்கு வன்னந் தந்துமே விரத முண்டாய்ப்
பவமது யில்லா ளாகிப் பறந்தனள் காலந் நாடு.

23. ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்ரோம். பெருமுக்கல் என்ற க்ஷேத்திரத்தில் இவள் தன்னுடைய முன்ஜன்மத்தில் ஒரு ரெட்டியாருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து தரித்திரங்களும் கஷ்டங்களும் இல்லாமலும் தவத்தைச் செய்து கொண்டிருந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டு கொண்டும் விரதங்களை அனுஷ்டித்துக் கொண்டும் யாதொரு பாபத்தையும் அடையாமலும் இருந்து இறந்து எமப்பட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தாள்.

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

24. வேதனுல் வரையப் பட்டு
விளங்கினு ளிவளே யென்ரோங்
காதலி வறுமை யில்லாள்
கழறுவோம் பித்த தேகி
மேதினில் மறுஜன் மத்தை
விளம்புவோங் காஞ்சி தன்னில்
சூதிலா ளிக்கு லத்தில்
தோன்றியே வாழ்வா ளம்மா.

24. ஜாதகருடைய தாயார் பிரமதேவனுல் பிரம்லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருள் என்று சொல்லுகின்ரோம். இவள் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் உடையவள் அல்லள். பித்தரோகத்தை உடைய தேகத்தையுடையவள் என்று சொல்லுகின்ரோம். பூமியில் இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்ரோம். கள்ளம் கபடு வஞ்சனை இவை இல்லாத இவள் காஞ்சிமாநகரத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்தில் மறுஜன்மத்தில் பிறந்து வாழ்வாள்.

ஜாதகருடைய தகப்பனுரது முன்ஜன்மம்

25. ஜாதகன் தந்தை பூர்வஞ் சாற்றுவோங் காஞ்சி [கீழ்ப்பால்
ஓதுவார் குலமு தித்து வுலகினில் கிருஷிகள் செய்து
காதலி மதலை யுண்டாய்க் கௌரவ குடும்பி யாகித்
தீதான காலந் நாடு சென்றுமே பிரமன் லக்கம்;

25. ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் காஞ்சிமாநகரத்தின் கிழக்குத்திக்கில் ஒதுவார் குலம் என்ற வேதங்களைச் சொல்லுகின்ற பிராமணர் குலத்தில் பிறந்து பூமியில் விவசாயத்தைத்தொழிலாச் செய்து கொண்டு மனைவி மக்கள் ஆகிய இவர்களை உடையவராகியும் ஒரு மேன்மையான குடும்பியாகியும் இருந்து பிறகு இறந்து கெடுதியையுடைய எமபட்டணத்திற்குப்போய்ப் பிரமலிபியுடன் ;

26. வந்தவ னென்று சொல்வோ
மாமுனி தடுத்துச் சொல்வார்
முந்தின குலமுற் ஜன்ம
முதித்தவ னிச்சென் மத்தில்
இந்ததோர் குல மெவ்வாறு
யிறங்கினன் காரணஞ் சொல்
சந்ததம் வேதந் தன்னை
யோதா செய்கை யாற்றுன்.

26. ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இதற்கு மாமுனிவர் என்ற வசிஷ்டமகரிஷி தடுத்து கேட்கின்றார். முன்ஜன்மத்தில் முந்தின குலமாகிய பிராமணர் குலத்தில் பிறந்தவராகிய ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் இதற்குத் தாழ்ந்த குலமாகிய வேளாளர் குலத்தில் பிறந்ததற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்டார். ஜாதகர் வேதங்களை எப்போதும் ஓதாமல் இருந்தது ஒரு காரணமாகும்.

குறிப்பு :—இந்தப் பாடலில் "மாமுனி தடுத்துச் சொல்வார்" என்று மூலத்தில் கண்டிருக்கின்றது. 'மாமுனி' என்றால் "அருகன் வசிஷ்டன்" என்று அகராதியில் கண்டிருக்கின்றது. சப்தரிஷிகள் நான்கு வகைகளாக ஒரு அகராதியில் காணப்பட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு வகையிலும் வசிஷ்டர் குறிக்கப்பட்டிருக்கின்றாரே தவிர அருகன் என்பவர் குறிக்கப்படவில்லை. ஆகையால் மாமுனி என்றால் வசிஷ்டர் என்று அர்த்தம் கொள்ள வேண்டியதாக விருக்கின்றது. இரண்டாவது பாடலிலிருந்து வசிஷ்டர் பலாபலன்களைச் சொல்லிக் கொண்டு வருகின்றார் என்று ஏற்படுகின்றது. இவ்விதமிருக்க வசிஷ்டரே தடுத்து கேட்கின்றார் என்று இந்த இருபத்தாறுவது பாடலில் சொல்லி இருப்பது விளங்கவில்லை. இங்கு மாமுனி என்று கண்டிருப்பது பிழையாக விருக்கக்கூடும். அவர் தம்மைத்தாமே கேட்டுக் கொண்டு பதில் சொல்வதாகவும் கொள்ளலாம்.

ஜாதகருடைய தகப்பனுரது மறுஜன்மம்

27. அறமதி லிச்சை யின்றி
யவனுமே வாழ்வ தாலே
குறைவான குலமு தித்தான்
குவலயம் வறுமை காணுன்
வருஞ்ஜன்மம் படவே டன்னில்
வருவனு மறையோ னுகப்
பொருளது பெருக்கஞ் செய்து
புகழுடன் வாழ்வா னென்றேரும்.

27. ஜாதகருடைய தகப்பனுர் தருமகாரியங்களில் பிரியமில்லா மல் வாழ்ந்து வந்ததாலே தாழ்ந்த குலத்தில் வந்து பிறந்திருக்கின்ருர். இவர் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட் டார். தன்னுடைய மறுஜன்மத்தில் படவேடு என்ற கிராமத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பார். இவர் சொத்துக்களை அதிக மாக்கிக் கொண்டு பெருமையுடனும் கீர்த்தியுடனும் வாழ்வார் என்று சொல்லுகிறேரும்.

28. இந்ததோர் ஜன்மந் தன்னி
லிவன்செய்த புண்ணிய மென்ன
அந்ததோர் சேதி சொல்வீர்
அவனுமிச் சென்மந் தன்னில்
பிந்திலை ரச்சங் காத்தும்
பெம்மானின் பத்தி யாயும்
முந்தின தலங்கள் சென்றும்
முதல்வனும் வாழ்வ தாலே ;

28. ஜாதகருடைய தகப்பனுர் இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணியங்களைச் செய்தார் என்பதைப் பற்றி சொல்லுவீர் என்று கேட்டார். இவர் இந்த ஜன்மத்தில் ஏழைகளை அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் காப்பாற்றிக் கொண்டும் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகியும் சிறந்த மேன்மையான க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து கொண்டும் வாழ்ந்து வருவதால் ;

ஜாதகருடைய தாய்தகப்பனர்களின் மரணகாலங்கள் (கர்மங்கள்)

29. பிறப்பனு மென்று சொல்வோம்
பேசுவீர் கர்ம காலங்
கரியவன் தசைபிற் பாகங்
கழறுவோம் தாய்தந் தைக்குத்

திருகிலா முப்பா ணெண்டில்
செப்புவோந் தந்தை கண்டம்
மருமமாய் முப்பா ஹனந்தில்
மரிப்பளா மன்ஹ யென்ரேரும்.

29. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய மறு ஜன்மத்தில் பிராம்மணருடைய குலத்தில் பிறப்பார் என்று சொல்லுகின்ரேரும். இவருடைய கர்ம காலங்களைப்பற்றிச் சொல்லுவீராக. கரியவன் என்ற சனிமகரதசையின் பின்பாகத்தில் இவருடைய தாய் தகப்பனருக்குக் கர்மங்கள் நேரிடும் என்று சொல்லுகின்ரேரும். ஜாதகருக்கு முப்பதாவது வயதில் இவருடைய தகப்பனர் இறந்து போய்விடுவார். ஜாதகருக்கு முப்பத்தைந்தாவது வயதில் தாயார் இறந்து போய்விடுவாள் என்று சொல்லுகின்ரேரும்.

ஜாதகருடைய மரணகாலம்

30. அன்பது யேழு வாண்டி லைப்பசி மாதந் தன்னில்
இன்னவ னுடல மேகு மியம்புவா ரத்திரி தாமு
மன்னனுக் கைந்தாண் டுள்ளே மாரகம் நேரு மென்ரேரும்
என்னநோய் வந்த போது மிரவிமுன் பனிபோல்
[நீங்கும்.

30. ஜாதகருக்குத் தன்னுடைய ஐம்பத்தேழாவது வயதில் ஐப்பசி மாதத்தில் மரணம் நேரிட்டு இவருடைய தேகம் மறைந்து போய்விடும். இவ்விதமாக வசிஷ்ட மகரிஷி சொல்லவே, அத்திரி மகரிஷி தடுத்துச் சொல்லுகின்ரார். ஜாதகருக்கு ஐந்து வயதிற்குள்ளே மரணம் நேரிடுமென்று சொல்லுகின்ரேரும். இதற்கு வசிஷ்டர் பதில் சொல்லுகின்ரார். ஜாதகருக்கு எவ்விதமான நோய்கள் வந்தபோதிலும் அவை சூரியனுக்கு முன்னே பனி எவ்விதமாக நீங்கிப்போகின்றதோ அவ்விதமாகவே நிவிர்த்தியாகிவிடும் என்று சொல்லுகின்ரேரும்.

ஜாதகருடைய மறுஜன்மம்

31. காரணம் யாது யென்னக் கவிமகன் மூன்றில் தங்க
ஆறினில் கேது நிற்க வவர்தசை கண்ட மெய்துங்
கூறுவோ மிவன்பின் ஜன்மங் குற்ரல நாட்டி லேதான்
சேருவா னிக்கு லத்தில் செல்வதி கேட்டி டாயே.

31. இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, பதில் சொல்லுகின்ரார். கவிமகன் என்ற சுக்கிரன் மூன்ரவது வீட்டில் இருப்பதாலும், ஆரவது பாவத்தில் கேது இருப்பதாலும் கேதுமகாதசை காலத்தில் மரணம் நேரிடும். ஜாதகருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்ரேரும். இவர் குற்ரலம் என்ற ஸ்தலத்தில் இந்த

ஜன்மத்தில் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்தில் தன்னுடைய மறு ஜன்மத்திற் பிறப்பார், செல்வவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜனனகால தசையிருப்பு

32. பிறந்திங் காலந் தன்னில்
பொன்தசை பதினைந் தாண்டும்
உறைந்திடும் பதினோர் திங்க
ளுரைக்கிறேம் பலனை யாங்கள்
திருமகன் பிணியு மூண்டு
ஜனித்திடுந் துணைவர் தாமும்
பொருள்பூமி விருத்தி யென்றேம்
புகலுவோம் பின்பால் சேதி.

32. ஜாதகர் பிறந்த காலத்தில் பொன்தசை என்ற குரும்கா தசையில் இருப்பு பதினைந்து வருடங்களும் பதினேரு மாதங்களும் ஆகும். இக்காலத்திய பலாபவன்களை நாங்கள் சொல்லுகின்றேரும், ஜாதகருக்கு நோய்கள் உண்டாகும். இவருக்குச் சகோதரர்கள் உண்டாவார்கள். சொத்துக்களும் நிலங்களும் விருத்தியடையும் என்று சொல்லுகின்றேரும். மற்ற விஷயங்களைப் பின்னல் சொல்லுகின்றேரும்.

ஜாதகம் 123

ஜனன கால கிரக நிலை

1. சந்திரன் சனியும் [1]வண்டி [2]சல்லியன் [3]சேயுஞ் [4]சாடி [5]புந்தியு [6]மிரவியு [7]மானில் [8]பொன் [9]சிகி [10]மேரு வாக மந்தரங் [11]கயிறு [12]வீணை [13]யரியது ஜன்ம மாக இந்தவாறு கோளுந் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரனும் சனியும் கடகத்திலும், சுக்கிரனும் அங்காரகனும் கும்பத்திலும், புதனும் சூரியனும் மகரத்திலும், குருவும் கேதுவும் தனுசிலும், இராகு மிதுனத்திலும், ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இருந்து கிரக வரிசை இவ்விதமாக விருந்தால் பலா பலன்களைச் சொல்லுவீர்;

கிரகநிலை

			ராகு
அங்காரகன் சுக்கிரன்	இராசி சக்கரம்		சந்திரன் சனி
சூரியன் புதன்			லக்கினம்
குரு கேது			

பூசம் 3-ஆம் பாதம் : சனி தசை வரு 8-10-0

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்திற் குருவும், மிதுனத்திற் புதனும் இராகுவும், துலாத்திற் சந்திரனும், தனுசிற் கேதுவும், கும்பத்திற் சூரியனும் அங்காரகனும், மீனத்திற் சுக்கிரனும் சனியும் ஆகும். சனி வக்கிரகதியில் இருக்கின்ரார்.

---

1. கடகம்
2. சுக்கிரன்
3. அங்காரகன்
4. கும்பம்
5. புதன்
6. சூரியன்
7. மகரம்
8. குரு
9. கேது
10. தனுசு
11. இராகு
12. மிதுனம்
13. சிம்மம்

ஜனன நாட்டுச் சிறப்பு

2. வந்தவ ளுரஞ் ஜன்மம் வாசலு மெமனின் பார்வை
அந்தயில் தனிய தாகு மதற் கெதிரில்.....
இந்திரன் தசையின் மார்க்கம் யாளிவா கனத்தாள் [மீனஞ்
சந்ததஞ் சிறுவூ ராகுந் தாயில்லங் கூரை யாகும்.

2. ஜாதகர் ஆருவது குழந்தையாகப் பிறப்பார். பிறந்த வீடு தெற்குத் திக்கைப்பார்த்து இருக்கும். அது தனியான வீடாக இருக்கும். கிழக்குத் திக்கில் ஒரு பாட்டை ஓடும். காளியம்மன் கோயில் வடக்குத்திக்கில் இருக்கும். பிறந்த ஊர் ஒரு சிறிய கிராமமாகும். பிறந்த வீடு தாயாருடைய கூரை வீடாகும்.

3. இவ்வித வடையா ளத்து ளின்னவன் ஜனன மாவன்
ஒவ்விய தந்தை தாயு முறுந்துணை களத்திர புத்திரர்
பவ்வமா யவர்கள் யோகம் பாலகன் முன்பின் ஜன்மம்
நவ்விய நவக்கோ ளாய்ந்து நாட்டுவோங் கேளுந் தாயே.

3. இவ்விதமான அடையாளங்கள் உள்ள இடத்தில் ஜாதகர் பிறப்பார். இவருடைய தகப்பனர் தாயார் சகோதரங்கள் மனைவி சந்ததிகள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் ஜாதகருடைய முன் ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் ஒன்பது கிரகங்களது நிலைகளை ஆராய்ந்து சொல்லுகின்றோம், எங்கள் தாயாராகிய பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

4. தந்தையின் துணையா ணென்று சத்திமா ரவ்வா ருவர்
மூந்திய துணைவ ளுகும் மொழிகிறே மவன் குணத்தைச்
சந்தத மிருநி றத்தன் சன்மார்க்க னாகை வானும்
நொந்திடும் பேரைக் காப்பன் நேமியோர் மெச்ச வாழ்வன்

4. ஜாதகரின் தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் ஆவர். இந்த சகோதரர் மூத்த சகோதரர் ஆவர். இவருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை உடைய வராவர், விவேகமுடையவராவர். இவர் கஷ்டங்களை அடைபவர் களையும் ஏழைகளையும் காப்பாற்றுவார். பூமியிலுள்ளவர்கள் இவரைப் புகழும்படியாக இவர் வாழ்வார்.

5. தந்தையி னில்லம் வாழான் தேவதா பத்தி கொள்வன்
தன்சுதர் காணு ளுவன் சந்தேக மனத்த ளுவன்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் கல்வி மானுந்
தன்நகர் வாழா ளுவன் தானுமே வேரூய்ச் செல்வன்.

5. ஜாதகருடைய தகப்பனாரின் மூத்த சகோதரர் தன்னுடைய தகப்பனாருடைய வீட்டில் இருந்து வாழமாட்டார், எல்லாக் கடவுள்களின் மேலும் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவருக்குக் குழந்தைகள் கிடையா. இவர் சந்தேகத்தை உடைய மனத்தை உடைவராவர். இவர் தான் சொல்லுகின்ற வார்த்தைகளே சிறந்தவை என்றும் மேன்மையானவை என்றும் வாதித்து நிலைநாட்டுவார், படித்தவராவர். இவர் தன்னுடைய ஊரில் வசிக்க மாட்டார். இவர் வேறு குடும்பஸ்தராக வேறூர் ஊருக்குப் போய் விடுவார்.

6. அன்னிய தேசந் தன்னி லநேகவா ணிபங்கள் செய்து
பொன்பொருள் முன்னல் சேர்த்துப் பின்பவன் செலவு
[செய்வன்
அன்னையுங் கேட்க லுற்ரு ளவனுக்குக் கருமஞ் செய்வர்
இன்னவாறு சொல்லு மென்ன மியம்புவா ரத்திரி தாமும்.

6. ஜாதகருடைய தகப்பனாரின் மூத்த சகோதரர் அந்நிய தேசத்தில் அனேகவிதமான வியாபாரங்களைச் செய்துகொண்டு தனம் சொத்து இவற்றைச் முதலில் சம்பாதித்துச் சேர்த்துவைத்துப் பிறகு அவைகளைச் செலவு செய்வார். பார்வதியம்மையார் கேடகின்ரூர். இவருக்குக் கர்மம் செய்பவர் யார்? இதைப்பற்றிச் சொல்லுவீர் என்று பார்வதியம்மை கேட்க, அத்திரி மஹரிஷி பதில் சொல்லுகின்ரூர்.

7. ஜாதகன் துணைவர் தம்மால் செய்வனுங் கருமந் தானும்
மாதவர் சொல்லும் போது மங்கையுங் கேட்க லுற்ரூள்
நீதியா யெந்த ஜன்மம் நிகழ்த்துவீர் விபர மாகச்
சாதிப்பா னெட்டாஞ் ஜன்மந் தானவன் செய்வா
[னென்ரூரும்.

7. ஜாதகருடைய (இளைய) சகோதரர் தன்னுடைய மூத்த சகோதரருக்குக் கர்ம காரியங்களைச் செய்வார். இவ்விதமாக முனிவர் சொல்லலே, பார்வதியம்மையார் கேட்கின்ரூர். எத்தனையாவது சகோதரர் என்பதை நீர் விபரமாக சொல்லுவீராக. எட்டாவது பிறவியாகப் பிறந்த சகோதரர் கர்ம காரியங்களைச் செய்வார் என்று சொல்லுகின்ரூரும்.

ஜாதகரின் தகப்பனருடைய குணாதிசயங்கள்

8. இதற்குமுன் உதித்த வாண்பா
லெமபதஞ் செல்லு மென்ரூரும்
அதிகமாய்ப் பலன்க ளொன்று
வறைகிரூரும் விபர மிரண்டில்

அதிபன்தன் தந்தை சேதி
வரைகிரே மினி மேலாகச்
சதியிலா மனத்த னுவன்
தயாளமாங் குணத்த னுவன்.

8. தகப்பனுருடைய மூத்த சகோதரருக்கு முன்னே பிறந்த சகோதரர் இறந்து விடுவார் என்று சொல்லுகின்ரேம். இன்னும் அதிகமான பலாபலன்களை விபரமாக இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்ரேம். இனிமேல் ஜாதகரின் தகப்பனுருடைய விஷயங் களைச் சொல்லுகின்ரேம். இவர் வஞ்சனையில்லாத மனத்தை உடைய வராக இருப்பார். இவர் இரக்கமான குணத்தை உடையவராவர்.

9. மானிறஞ் சமதே கத்தன் மருமமில் லாநெஞ்சன்
தேன்மொழி கூறு வானந் தீரமா மனத்த னுவன்
மானினை யார்க்கு நேயன் மானிலம் நல்லோ னுவன்
தானமுந் தருமஞ் செய்வன் சாதியின் தொழிலைச்
[செய்வன்.

9. ஜாதகருடைய தகப்பனுர் மாநிறமுள்ளவராயும் நடுத்தரமா யுள்ள தேகத்தை யுடையவராகவு மாவர். இவர் ரகசியமில்லாததும் கபடமில்லாததுமான மனத்தை உடையவராவர். இவர் மானைப்போல் அழகாய் உள்ள பெண்களுக்குப் பிரியமுள்ளவராக இருப்பார், இந்தப் பெரிய பூமியில் நல்லவராக நடந்து கொள்ளுவார். இவர் தானம் தருமம் ஆகிய இவைகளைச் செய்வார், தன்னுடைய குலத்தொழிலையே செய்வார்.

10. ஆதியில் வறுமை யுள்ளா னனேகதே சங்கள் செல்வன்
தாதையி னஸ்தி காணன் ஜனபந்து மெச்ச வாழ்வன்
சூதிலா னன்ன மீவன் துருசான நடையு மாவன்
சாதிப்பான் சிலவே சங்கை சாப்பாட்டுச்சுகிய னுவன்.

10. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய வாணாளின் முற்பாகத் தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் உடையவர். இவர் அனேக தேசங்களுக்குப் போவார், ஜனங்களும் தன்னுடைய பந்துக்களும் இவரைப் புகழும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் கள்ளம் கபடு வஞ்சனை இவைகளை உடையவர் அல்லர். இவர் பிறருக்குச் சாப்பாட்டைப் போடுவார், கெட்ட குணத்தையும் உடையவராவர். இவர் சில விஷயங்களில் தான் சொல்லுவதே சரி என்று வாதித்து நிலை நாட்டுவார். இவர் நல்ல சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுப விப்பார்.

11. ரோமங்கள் கீட்சி யுள்ளான் நுண்ணிய புத்தி யுள்ளான்
தாமத குணத்த னுவன் சிறுதீனி யிஷ்டங் கொள்வன்
பூமியு மில்லா னுவன் பின்வய தினிலே யோகஞ்
சாமிமேல் பத்தி யுள்ளான் தாம்பூல மிஷ்டங் கொள்வன்

11. ஜாதகருடைய தகப்பனுர் நீண்ட உரோமங்களை உடையவராவர். இவர் நிதானமான குணத்தை உடையவராவர். சிற்றுண்டியின் பேரில் பிரியமுள்ளவராக இருப்பார். இவருக்கு நிலங்கள் கிடையா. இவருக்குத் தன்டைய வாழ்வின் பின்பாகத்தில் யோகம் உண்டாகும். இவர் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவர். இவர் தாம்பூலத்தின்மேல் பிரியமுள்ளவர்.

12. பால்தயிர் பிரிய னுவன் பரவுப காரி யென்றேஞ்
சீலவா னன்ன மீவன் சொல்லது காப்பா னென்றேரும்
மூலச்சூ டுடைய னுவன் முன்கோபம் பின்பு சாந்தம்
ஆலத்தை யுண்டோன் தேவி யறைந்தது தப்பா வாமே.

12. ஜாதகருடைய தகப்பனுர் பால் தயிர் ஆகிய இவைகளின் மேல் ஆசையுடையவராவர். இவர் பிறருக்கு உதவியைக் செய்வார் என்று சொல்லுகின்றேரும். இவர் நல்லொழுக்கம் உடையவர். பிறருக்குச் சாப்பாட்டைப் போடுவார். தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார் என்று சொல்லுகின்றேரும். இவர் மூலச் சூட்டு ரோகத்தை உடையவராவர். இவருக்கு முன் கோபம் வரும். அது பின்னல் தணிந்துவிடும். ஆலகாலத்தை அருந்திய சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய பலா பலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

13. இங்நெறி யுடையா னுக்கு விவனுமே சேஷ்ட னுக
அன்னவ னுதிப்பா னுவ னனைகிறே மவன்கு ணத்தை
உன்னத வார்த்தை சொல்வா னுத்தமன் தன்னைச்
[சேரான்
இன்னவன் மாறு கண்ண னிகபர னன்பு பூணன்.

13. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் முதலாவது குழந்தையாக பிறப்பார். இவருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவர் மேன்மையான வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் நல்லவர்களுடன் சேரமாட்டார். இவர் சாய்ந்த பார்வையை உடைய கண்களையுடையவர், கடவுளின்மேல் அன்பு இல்லாதவராக இருப்பார்,

14. வித்தையு மற்ப முண்டு விவேகமு மில்லாதா னுவன்
சத்தியே வாய்நீர் தானுந் தானறி யாம லோடும்
பித்தரைப் போலே காட்டும் பலமுளான் மூரட னுவன்
சுத்தமு மில்லா னுவன் சுதனுமே யோக மில்லான்.

14. ஜாதகர் அற்பமான கல்வியை உடையவராவர். இவர் அறிவில்லாதவராக இருப்பார். பார்வதியம்மையே! இவருக்குத் தெரியாமல் இவருடைய வாயிலிருந்து உமிழ் நீர் வடியும். இவர் பைத்தியக்காரரைப் போலக்காணப்படுவார், வலிவுள்ளவராவர், மூரடராகவும் இருப்பார். இவர் சுத்தமாக இருக்கமாட்டார். இவருக்கு யோகமும் கிடையாது.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

15. இவனுடைத் துணைவர் தம்மை
யியம்புவோ மாண்பா லொன்று
அவனியில் கன்னி மூன்று
வறைகிறேந் தீர்க்க மாக
நவனியில் நான்கு நஷ்டம்
நவிலுவோந் துணைவன் தானும்
பவமுள யிளையோ னுகப்
பகருவோ மெட்டாஞ் ஜன்மம்.

15. ஜாதகருடன் கூடப்பிறந்தவர்களைப்பற்றிச் சொல்லுகின்றேம். இவருக்கு ஒரு சகோதரரும் மூன்று சகோதரிகளும் தீர்க்க ஆயுளை உடையவர்கள் என்று சொல்லுகின்றேம். பூமியில் நான்கு சகோதரங்கள் இறந்துவிடுவார்கள் என்று சொல்லுகின்றேம். இவருடைய சகோதரர் இளைய சகோதரர் ஆவர், இவர் எட்டாவது பிறவியை உடையவராவர்.

ஜாதகருடைய இளைய சகோதரரின் குணாதிசயங்கள்

16. அவன்குணந் துலையில் தோன்று
மவிட்டநாள் தனிலு திப்பன்
தவசிக ளுறவு கொள்ளான்
கல்வியுங் கற்பா னுவன்
நவனிக ளதிகஞ் சேர்ப்பன்
நாட்டினில் கீர்த்தி யேற்பன்
கவனங்கள் செய்வா னுவன்
கனராசர் பேட்டி கொள்வன்.

16. ஜாதகரின் இளைய சகோதரரின் குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் துலாராசியில் அவிட்ட நட்சத்திரத்தில் பிறப்

பார். இவர் தவங்களைச் செய்கிறவர்களுடைய சினேகத்தை அடைய மாட்டார். சகலவிதமான வித்தைகளையும் கற்றுக்கொள்பவராவார். இவர் நிலங்களை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார், பூமியில் பெருமையையும் புகழையும் அடைவார். இவர் காடுகளை உண்டாக்குவார், பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார்.

17. சொன்ன சொல் மறுத்துக்கூ றுன்
சுகம் பெறும் மனைவியாலே
நன்னய செல்வ முண்டு
நற்பொருள் பணிநற் றூசு
மன்னிய ராலே சேரும்
வாகன மஸ்வ மில்லும்
நன்னய மாகப் பெற்று
நலம்பெற வாழ்வா னென்றோரும்

17. ஜாதகருடைய இளையசகோதரர் தான் சொல்லிய வார்த்தைகளுக்கு விரோதமாக நடந்து கொள்ளமாட்டார். இவருக்குத் தன்னுடைய மனைவியால் சௌக்கியங்கள் உண்டாகும். இவருக்கு நல்ல தனமும் பாக்கியங்களும் ஏற்படும். நல்ல சொத்துக்களும் ஆபரணங்களும் பிறருடைய உதவியால் வந்து சேரும். இவர் நல்ல வாகனமான வண்டிகளையும் குதிரையையும் அடைந்தும் நன்மையை அடைந்து கொண்டும் வாழ்பவராவர் என்று சொல்லுகின்றோரும்.

18. புத்தியு மூகை யுள்ளோன்
புகலுமுன் கோபி யாவன்
வெத்தியாந் தொடுவ ழக்கு
வீண்வம்பு தன்னில் செல்லான்
சுத்தத்தார் மதிக்க வாழ்வன்
சுயம்பிர காசி யாவன்
எத்தொழில் செய்த போது
மிணங்கிடுஞ் செல்வ முண்டா

18. ஜாதகருடைய இளைய சகோதர் அறிவையும் விவேகத்தையும் உடையவராவர். இவர் பேசுவதற்கு முன்னே கோபத்தையுடையவராக விருப்பார். இவருக்குத் தொடர்ச்சியான வியாஜ்யம் ஜயமாகும். இவர் வீணுகச் சண்டை சச்சரவுகளில் தலையிடமாட்டார் இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து கொண்டு வாழ்பவராவர். இவர் தானுகவே பிறருடைய உதவியில்லாமல் பிரகாசிக்கக்கூடியவராவர், மேன்மையை அடையக் கூடியவராவர். இவர் எவ்வேலையைச் செய்தபோதிலும் அஃது இவருக்கு நன்மையையேவிளைவிக்கும். இவருக்குச் செல்வமும் ஏற்படும்.

19. தன்னுடை யினத்தார் மேலாய்த்
தனிகனுய் வாழ்வா னுவன்
பொன்னதைப் புதையல் செய்வன்
பூமியி லதிகஞ் செட்டு
நன்னய பரியுஞ் சாடி
நயப்புரூக் காலா லுள்ளான்
சொர்ணமும் பணிகள் சேர்ப்பன்
செய்குவான் மாட கூடம்

19. ஜாதகருடைய இளைய சகோதரர் தன்னுடைய பந்துக்களை விட அதிகமான அந்தஸ்திலும் தனவானுகவும் இருந்துகொண்டு வாழ்பவராவர். இவர் பொன்னை மாலையாகச் செய்துவைப்பார், அம்மாதாவது வராமாலை, பொற்காசுமாலையாகிய ஆபரணங்களைச் செய்துவைத்துக் கொண்டிருப்பவராவர். இவர் பூமியில் வியாபாரத்தை அதிகமாகச் செய்வார். இவர் நல்ல குதிரையையும் சீலைகளையும் வஸ்திரங்களையும் காலாள்வேலைக்காரர்களையும் உடையவராவர். இவர் தனத்தையும் ஆபரணங்களையும் சேர்த்து வைப்பார். இவர் மாட மாளிகைகளையும் கட்டுவார்.

20. பாரியை யொன்றே யாவள் பாலர்க ளாண்பா லிரண்டு
தீரமாய்ப் பெண்பால் மூன்று தீர்க்கமா மிவனுக் கேதான்
அதிபன்தன் துணை வனேடு வித்தகன் கூடி வாழ்வான்
ஆறுமா மூகனைப் பெற்ற வம்பிகை யாளே கேளாய்.

20. ஜாதருடைய இளைய சகோதரர் ஒரே ஒரு மனவியை யுடைவராவர். இவருக்கு இரண்டு ஆண்குழந்தைகளும் வலிவுள்ள மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவர் தன்னுடைய சகோதரனேடுகூடி ஏககுடும்பஸ்தராக விருந்து வாழ்வார். ஆறு பெரியமுகங்களையுடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதி யம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்கள்

21. அன்னையு மிருசிவப்ப ளன்புள மனத்தா ளாவள்
அன்னமு மன்பா யீவ ளதிகமாய் வார்த்தை கூறுவள்
அன்னவள் மெலிந்த தேகி அவள்வரன் மனம்போல்
[வாழ்வள்
அன்னியர் மெச்ச வாழ்வ ளதிதிக ளன்பு முள்ளாள்.

21. ஜாதகருடைய தாயார் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை உடையவளாவள். இவள் பிரியமுள்ள மனத்தையுடையவளாவள். இவள் சாப்பாட்டைப் பிறருக்கு ஆசையுடன்

கொடுப்பாள், அதிகமாக வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் இளைத்த ஒல்லிய தேகத்தையுடையவளாவள், தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள், பரதேசிகளிடத்தில் பிரியமுடையவளாக விருப்பாள்.

22. சொல்லது சுகமே யாகுஞ் சுத்தமு முடைய ளாவள்
இல்லையென் றுரைக்க மாட்டா ளேழைமேற் பிரிய [மாவள்
வல்லிக்கு மூர்க்கங் கொஞ்சம் வருவோரை யாத ரிப்பள்
புல்லிய புத்தி யில்லாள் பித்தச்சூ டுடைய ளர்வள்.

22. ஜாதகருடைய தாயார் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் பரிசுத்தமுள்ளவளாக இருப்பாள். இவள் பிறருக்குக்கொடுக்கத் தன்னிடத்தில் ஒன்றும் இல்லையென்று சொல்ல மாட்டாள், ஏழைகளிடத்தில் பிரியமுள்ளவளாக இருப்பாள். இவள் சிறிது கோபத்தையும் பிடிவாதத்தையும் உடையவளாக இருப்பாள். தன்னிடம் வருபவர்களைக் காப்பாற்றுவாள். இவள் இழிவானதும் தாழ்ந்ததுமான புத்தியை உடையவள் அல்லள், பித்தச் குட்டு ரோகத்தை உடையவளாவள்.

ஜாதகரின் தாயாருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

23. துணைவர்க ளெழுவராவர் தோகைமார் யிருவ ரென்றேரும்
கனமுட னுண்பா லுந்து கழறுவோ மிவளுக் கேதான்
பிணையாகுஞ் சிலவே தாமும் பிரிதலாஞ் சிலவே [யென்றேரும்
சினமிலா மாதிரு பூர்வஞ் செப்புவோங் கேளுந் தாயே

23. ஜாதகருடைய தாயாருடன் கூடப்பிறந்தவர்கள் ஏழுபேராவர். இவாகளில் சகோதரிகள் இரண்டுபேர் என்று சொல்லுகின்றேரும். இவளுக்கு மேன்மையான சகோதரர்கள் ஐந்து பேர் என்று சொல்லுகின்றேரும். சில சகோதரர்கள் இவளுடன் கூடி இருந்து வாழ்வார்கள். சிலர் இவளைவிட்டுப் பிரிந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றேரும். ஜாதகருடைய தாயாரது முன் ஜன்மத்தைப் பற்றி கோபமில்லாமல் சொல்லுகின்றேரும், 'எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

24. கடையூருக் கருகி லுத்தரங்
கனமிலாச் சிற்றூர் தன்னில்
திடமுள கங்கை சேயாய்
செனித்துமே பெருமை பூண்டு

அடவுடன் அவ்வூர் தன்னில்
அவன் வரனும் பின் வாழ்ந்து
மடமயில் தனக்குப் புத்திர
ரதிகமாய் வாழுங் நாளில் ;

24. ஜாதகருடைய தாயார் கடையூர் என்ற திருக்கடையூருக்குச் சமீபத்தில் பெருமையில்லாத ஒரு சிறிய கிராமத்தில் ஒரு வேளாளர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து மேன்மையை அடைந்து அதே ஊரில் இவள் தன்னுடைய புருஷனுடன் இருந்துகொண்டு அதிகமான புத்திராகளை அடைந்து வாழ்கின்ற காலத்தில்;

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

25. பலவித தலங்கள் சென்று
பாவையு முள்ளூர் மீண்டு
நலமிலாப் பாலன் பக்கல்
நாயகன் முன்னே மாண்டு
தலைநான்கோன் வரையப் பட்டு
ஜனித்தவ ளிவளே யென்றும்
குலவிய யிவள்பின் ஜன்மங்
கூறுவோங் கேட்டி டாயே.

25. ஜாதகருடைய தாயார் பலவிதமான புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து தன்னுடைய ஊருக்குத் திரும்பி வந்து தன்னுடைய புருஷனுக்கு முன்னே நல்ல அந்தஸ்த்தில் இல்லாத தன்னுடைய புத்திரர்களுக்கு அருகில் இறந்து நான்கு தலைகளையுடைய பிரம தேவரால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக.

26. மறுஜன்ம மருணை யுத்தரம்
வளமுள பேரூர் தன்னில்
திருமகள் விலாசம் பூண்ட
தனவைசிய மகளாய்த் தோன்றிப்
பெருமையும் புகழு முண்டாய்ப்
புண்ணிய வதியும் வாழ்வள்
அருமறை முடிவி லாடு
மம்பிகை யாளே கேளாய்.

26. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறு ஜன்மத்தில் அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்தில் செழிப்பான ஒரு கிராமத்தில் இலட்சுமி கடாட்சத்தையுடைய ஒரு தனவானுடைய வைசிய

ருக்குப் பெண் குழந்தையாகப் பிறந்து மேன்மையையும் கீர்த்தியையும் அடைந்து புண்ணியசாலியாக இருந்து வாழ்வாள். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனாரது முன் ஜன்மம்

27. தந்தையின் முன்ஜன் மத்தைச் சாற்றுவோ மதுரை
[தென்பால்
முன்திய பேரூர் தன்னி லுதித்தனன் சேடர் வம்சந்
தந்தன மதிக முண்டாய்த் தரணியில் செட்டு செய்து
வந்தவர்க் கன்ன மீந்து வளமுள தலங்கள் சென்று;

27. ஜாதகருடைய தகப்பனாரின் முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் மதுரைக்குத் தெற்கில் ஒரு சிறந்த பெரிய கிராமத்தில் சேடர்வம்சம் என்ற ஒரு தாழ்ந்த வேலைக்காரருடைய குலத்தில் பிறந்தார். இவர் சுயார்ஜிதமான பணத்தை அதிகமாகச் சம்பாதித்துப் பூமியில் வியாபாரம், செய்து கொண்டு தன்னிடம் வருபவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டுகொண்டும் செழிப்பான சிறந்த க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்துகொண்டும்;

28. ஆலயப் பணிகள் செய்தும் யாவர்க்கு நல்லோ னுயுஞ்
சோலைமார்க் கத்திலே தான் தாகப்பந் தலும மைத்துக்
காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனூல் வரையப் பட்டுப்
பாலனுஞ் சான்...ரும் வம்சம் பரவினு னிவனே
[யென்றோரும்.

28. கோவில்களில் தெய்வீக வேலைகளைச் செய்துகொண்டும் எல்லோருக்கும் நல்லவராக இருந்துகொண்டும் தோப்புகளின் உள்ளே செல்லுகின்ற ஜனங்கள் போக்குவரத்து வழிகளில் நீர்மோர் பந்தல் ஒன்றைத் தாகந் தீர்ப்பதற்கு ஏற்படுத்திப் பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில்...குலத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனாரது பின் ஜன்மம்

29. பின்ஜன்மந் தில்லை தன்னில் பிறப்பனு மறையோ னுக
அன்னையுங் கேட்க வுற்ற ளவனிந்த ஜன்மந் தன்னில்
என்னபுண் ணியங்கள் செய்தா னியம்புவீர் விபரமாகத்
தன்னிலே சொல்லு கின்றேன் சங்கரி கேட்டி டாயே.

29. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மறு ஜன்மத்தில் தில்லை என்ற சிதம்பரத்தில் ஒரு பிராமணர் குலத்தில் ஆண் குழந்தை

யாகப் பிறப்பார். இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லவே, பார்வதி யம்மையார் பின்வருமாறு கேட்க ஆரம்பித்தார். இவர் இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணியங்களைச் செய்தார் என்பதை விபரமாகச் சொல்லுவீராக. இதற்கு அத்திரி பதில் சொல்லுகின்றார். இதை நான் விபரமாகச் சொல்லுகின்றேன், பார்வதியம்மையே! கேட்பீராக.

30. நல்லோர்க்கு நல்லோ னுயும் நயம்படக் கூற லாலும்
புல்லிய புத்தி யின்றிப் புண்ணிய மனத்த னுயுஞ்
சொல்லது தவறு னுயுஞ் சுவாமிமேல் பத்தி கொண்டும்
வவ்லவ னறத்தி லிச்சை வைத்ததா லுதிப்பா
[னென்றோரும்.

30. ஜாதகருடைய தகப்பனார் நல்லவர்களுக்கு நல்லவராக இருந்துகொண்டு இனிமையாகவும் நயத்துடனும் பேசுவதாலும் இழிவான தாழ்ந்த குணங்கள் இல்லாதவராகவும் புண்ணியமான நல்ல மனத்தை உடையவராயும் இருந்து தான் சொல்லுகின்ற வார்த்தை களைத் தவறிடாமல் காப்பாற்றுவதாலும் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகித் தர்ம காரியங்களில் பிரியம் உள்ளவராயும் இருப்பதால் தன்னுடைய மறு ஜன்மத்தில் பிராமணராகப் பிறப்பார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய விவாககாலமும் மனைவியினுடைய குணாதிசயங்களும்

31. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மிருப தாண்டில்
மாதிரு வர்க்கந் தன்னில் வந்திடு மந்த மாது
ஒதுவே னவள்கு ணத்தை யுறுதியா மனத்த ளாவள்
தீதிலாக் குணத்தா ளாவள் சொல்லுமுன் கோபி யாவள்.

31. ஜாதகருடைய விவாககாலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபதாவது வயதில் தன்னுடைய தாயாரது பந்துக்களிலிருந்து மனைவி வந்து சேருவாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் நிலையான மனத்தை உடையவள் ஆவள். இவள் கெடுதியில்லாத குணத்தை உடையவளாவாள். இவள் பேசுவதற்கு முன்கோப மடைபவளாவாள்.

32. அதிகமாய் வார்த்தை சொல்வ ளவளுமே நல்லோ
[ளாவள்
அதிபதி தீர்க்க மாவள் வதிஷ்டருங் கேட்க லுற்றார்
மதிசனி விரயம் புக்க மங்கலன் புகரு மேழில்
புதனுமே ஆறில் நிற்கப் புகலுவேன் தாரந் தானே.

32. ஜாதகருடைய மனைவி அதிகமாகப் பேசுபவள் ஆவள். இவள் நல்லவளாக நடந்துகொள்ளுவாள். இவள் நீண்ட ஆயுளை

உடையவளாக இருப்பாள். இவ்விதமாக அத்திரி முனிவர் சொல்லவே வசிஷ்ட மகரிஷி தடுத்துக் கேட்கின்றார். மதி என்ற சந்திரனும் சனியும் விரையம் என்ற பன்னிரண்டாவது வீட்டில் இருப்பதாலும் மங்கலன் என்ற அங்காரகனும் புகர் என்ற சுக்கிரனும் ஏழாவது பாவத்தில் இருப்பதாலும் புதன் ஆறுவது வீட்டில் இருப்பதாலும் மனைவியினுடைய விஷயத்தைச் சொல்லுகின்றேன்.

33. இருமனை நேரு மையா யேழோனுஞ் சரத்தில் நிற்க
வருமுதல் மனையெவ் வாறு வறிவிப்பீர் விபர மாக
கருவுமே தோன்றியே தான் காதலி மரண மெய்தும்
மறுமனை தோன்று மென்றே மங்கையுங் கேட்க
[லுற்றாள்.

33. மேலும் ஏழாவது விட்டிற்குடையவரான சனி சரராசியாகிய (கடகத்தில்) இருப்பதாலும் ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள். இவருடைய முதல் மனைவி எவ்விதமாக இறந்து விடுவரள் என்பதை விபரமாகச் சொல்லுவீர். இதற்கு வசிஷ்ட மகரிஷி பதில் சொல்லுகின்றார். முதல் மனைவிக்குக் கர்ப்பம் நேரிட்டு அதனல் இவள் இறந்து விடுவாள். ஆகையால் ஜாதகருக்கு இரண்டாவது மனைவி வந்து சம்பவிப்பாள் என்று சொல்லுகின்றோம். இதன்மேல் பார்வதியம்மையார் கேட்கின்றார்.

34. எந்தக்கா லத்தி லேதா னிச்சங்கை நேருஞ் சொல்வாய்
வந்தவ னிருபா னெட்டில் மாதுவு மரண மெய்திப்
பிந்தியு முப்பா லண்டில் பேதையும் வருவா ளாவள்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழி குன்றுவே.

34. ஜாதகருக்கு எந்த வயதில் இவருடைய முதல் மனைவி இறந்துவிடுவாள் என்பதைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கவே, வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இருபத்தெட்டாவதுவயதில் இவருடைய முதல்மனைவி இறந்துவிடுவாள், பிறகு இவருக்கு முப்பதாவது வயதில் இரண்டாவது மனைவி வந்து வாய்ப்பாள். முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகரது சந்ததிகள் (புத்திர பாவம்)

35. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணுஞ்
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மிவனுக் கேதான்
அத்திரி சொல்லும் போது அம்பிகை கேட்க லுற்றாள்
குத்தமு மெவ்வா றென்று கழருவீர் முனியே ரீர்தாம்.

35. ஜாதகருக்குப் புத்திரர்கள் பிறந்து விருத்தியாவார்கள் என்று சொல்வதற்கு யாதொரு வலிவும் கிடையாது. ஒரு சமயம் இவருக்குக் குழந்தைகள் பிறந்தாலும் அவை இறந்துபோய்விடும். இவ்விதமாக அத்திரி முனிவர் சொல்லும்பொழுது, பார்வதியம்மையார் இவரைக் கேட்கின்றார். இதற்குக் காரணங்கள் எவை என்பதை, முனிவரே! நீரே சொல்வீர்.

ஜாதகருடைய முன் ஜன்மம்

36. அஞ்சினில் கேது நிற்க அந்தண னுடனே கூடத்
துஞ்சிடு மதலை யென்றேஞ் சுதனுமே முன்ஜன் மத்தில்
மிஞ்சிய தோஷஞ் செய்தான் மேவிற்று வந்தத் தோஷந்
தஞ்சமாய் முன்னூழ் தம்மைச் சாற்றுவீர் விபர மாக.

36. ஐந்தாவது பாவத்தில் கேது அந்தணன் என்ற குருவுடன் கூடி இருப்பதால் குழந்தைகள் இறந்துவிடுவார்கள் என்று சொல்லுகின்றோம். ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் அதிகமான பாவங்களைச் செய்யவே அப்பாவப் பயன்கள் இவரை வந்தடைந்தன. அந்தப் பாபங்களை விபரமாகச் சொல்லுவீர் என்று கேட்டார்.

37. இன்னவன் முன்ஜன் மத்தை
யெடுத்துநா முரைப்பக் கேளாய்
மன்னிய காஞ்சி மேல்பால்
வளமுள சமவூர் தன்னில்
அன்னவன் தீயின் வம்சந்
தன்னிலே யுதித்து மேலும்
பொன்பணி பூமி யுண்டாய்ப்
புகழுடன் வாழுந் நாளில்;

37. ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றி எடுத்துச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவர் மேன்மையான காஞ்சிவரத்திற்கு மேற்கேயுள்ள ஒரு நடுத்தரமான கிராமத்தில் தீயின் வம்சம் என்ற வன்னிய குடையது குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து தனம் ஆபரணம் ஆகிய இவைகளை அடைந்து பெருமையுடன் வாழ்கின்ற காலத்தில்;

38. அந்நகர் நதியின் பக்க லணுகிய வரசின் கீழே
தந்தியுங் நாகம் நிற்குந் தானவர் வாசங் கொள்வர்
மந்திர மோதும் வேத மறையவர் பூசை செய்வார்
இந்தவா றிடத்தி லேதான் யிரவினி லேது செய்தான்.

38. இந்தக் கிராமத்தின் ஆற்றின் பக்கத்திலுள்ள ஓர் அரச மரத்தின்கீழே ஒரு விநாயகக் கடவுளின் கோயிலும் நாகமும் பிரதிஷ்டை

செய்யப்பட்டிருக்கும். இவ்விடத்தில் தானவர் என்ற அசுரர் வாசஞ்செய்வார். இவ்விடத்தில் மந்திரங்களையும் வேதங்களையும் சொல்லுகின்ற பிராமணர் பூஜை செய்வார். இப்படிப்பட்ட விடத்தில் ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் ஓர் இரவில் என்ன காரியத்தைச் செய்தார் என்று கேட்டால், சொல்லுகின்றேன்.

39. விதவையை மரத்தின் கீழே வித்தகன் போகந் துய்த்து
அதிலுலே கருவு தங்கி யநேகபண் டிதங்கள் செய்யச்
சதியினுல் கருவு நீங்கி சத்தியு மரண மானுள்
இதுவொரு தோஷ மாச்சு யியம்புவோ மேலுங் கேளே.

39. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் இந்த மரத்தின் தின் அடியில் ஒரு விதவை ஸ்திரீயுடன் சம்போகஞ் செய்பவே அதனுல் அவளுக்குக் கர்ப்பம் நேரிட்டு இதை இவர் கலைக்க அநேகவிதமான வைத்தியங்கள் செய்ய இந்தக் கர்ப்பம் கலைந்து இந்த ஸ்திரீயும் இறந்துவிட்டாள். இஃது ஒரு பாவமாகச் சம்பவித்தது. இன்னம் அதிகமாகச் சொல்லுகின்றேரும், கேட்பீராக.

40. மறையவர் மதலே தானு மதிகமாய்ப் பணிகள் பூண்டு
வருவழி தன்னில் பார்த்து மாரனும் பிடித்துக் கொண்டு
கரங்காலைக் கட்டிப் போட்டுக் கழறுவாய் தனைய டைத்து
மருமமாய்ப் பணிகள் வாங்கி மறைந்தன னென்று
[சொன்னேம்.

40. ஒரு பிராமணருடைய குழந்தை அதிகமான ஆபரணங்களை அணிந்துகொண்டு தெருவழியில் போய்க்கொண்டிருந்ததை ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் பார்த்து, இவர் இந்தக் குழந்தையைப் பிடித்து இதனுடைய கைகால்களைக் கட்டிப்போட்டும், பேசுகின்ற வாயை அடைத்தும் பிறகு ரகசியமாக யாருக்குந் தெரியாமல் இந்தக் குழந்தையிடமிருந்த நகைகளைப் பிடுங்கிக்கொண்டு மறைந்து போய் விட்டார் என்று சொல்லுகின்றேரும்.

41. வேதியர் தேடிச் சென்று விளம்புவார் சாபந் தாமுந்
தீதுகள் செய்தோ னுக்கு ஜனித்திடு மறுஜன் மத்தில்
ஓதுவாய் குளரு முண்டா யுலவுகால் கரங்கள் குற்றந்
தீதாகு மனவி மைந்தர் தந்தையில் பாழு மாகும்.

41. பிராமணர் திருடனைத் தேடிப்பார்த்துத் திருடன் காணப்படாததால் சாபத்தைக் கொடுக்கின்றார். "கெடுதியை இவ்விதமாகச் செய்த திருடனுக்குத் தன்னுடைய மறு ஜன்மத்தில் பேசுகின்ற வாய் குளருதலாகியும், நடக்கின்ற கால்களும் கைகளும் பங்கம் உடையனவாகியும், மனைவியும் மக்களும் கெடுதியை யடைந்தும், தன்னுடைய தகப்பனுரது விடு பாழடைந்தும் இருக்கக்கடவது" என்றும்;

42. இன்னமும் விசேஷ மாக வியம்பியே சென்ரு
[ரென்ரேம்

முன்குல சாபந் தானும் மேவிற் றிவனுக்கே தான்
அந்திய காலந் தன்னி லவன்சுதர் யாவு மற்றுப்
பின்னமாய் வாயு நோயால் புக்கினன் காலன் பக்கல்.

42. இன்னும் விசேஷமாகவும் அதிகமாகவும் இந்தப் பிராமணர் திருடனுகிய இந்த ஜாதகரை இவருடைய முன் ஜன்மத்தில் பார்த்துச் சொல்லிப் போய்விட்டார் என்று சொல்லுகின்ரேம். இந்த முன் குலத்தைச் சார்ந்தவராகிய பிராமணருடைய சாபமானது ஜாதகரை வந்து அடைந்தது. இவருக்குத் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் எல்லாக் குழந்தைகளும் இறந்து இவர் வாயு ரோகத்தினுல் கை கால்களில் பங்கத்தை அடைந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

43. கஞ்சனுல் வரையப் பட்டுக் காளையுஞ் ஜனித்தா
[னென்ரே

மிஞ்சின மறையோர் சாபம் விதவையின் சாபந் தானும்
நஞ்சுபோல் சேர்ந்த தாலே நலியுமோ யிச்சென் மத்தில்
தஞ்சமாய் வாயு ரோகந் தங்குமே யிதுவல் லாமல்;

43. ஜாதகர் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கினரார் என்று சொல்லுகின்ரேம். பிராமணருடைய அதிக சாபமும் விதவை ஸ்திரீயினுல் உண்டான தோஷமும் இவரை விஷத்தைப்போல வந்து அடைந்ததால் இவருக்கு இந்த ஜன்மத்தில் நோய்கள் உண்டாகும். வாயு ரோகமும் உண்டாகி நிலைத்திருக்கும். இதுவுமல்லாமல்;

44. முதல்மனை தோஷ மெய்து முதித்திடுஞ் சுதர்கள் தோஷம்
இதுவித தோஷந் தீர வியம்புவீர் சாந்தி தானும்
எதுசாந்தி செய்தா லுந்தான் இரு..... ..பாளாசாம்
விதவையின் கருவின் தோஷம் விலகாது யென்று
[சொன்னேம்.

44. ஜாதகருடைய முதலாவது மனைவி இறந்துவிடுவாள். இவருக்குப் புத்திரதோஷம் ஏற்படும். இந்தத் தோஷங்கள் நிவிர்த்தி யாவதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்கவே எவ்வித மானச் சாந்தியைச் செய்தபோதிலும், விதவை ஸ்திரீயின் கருவைக் கலைத்த தோஷம் விலகாது என்று சொல்லுகின்ரேம்.

45. ஆகிலுஞ் சொல்லு கின்றே
னறுமுகன் தணிகைக் கேதான்
பாகமா யேழு கார்த்தி
யிடைவிடாச் சென்று மேதான்
ஏகமாய்க் கடைநாள் தன்னி
லிருபத்தோர் பேருக் கன்னம்
ஆகம விதியைப் போலே
வன்புட னளிப்பா னகில்;

45. ஆனபோதிலும் ஒரு சாந்தியைச் சொல்லுகின்றேன். ஆறுமுகக்கடவுள் வசிக்கின்ற ஸ்தலமாகிய திருத்தணிகை க்ஷேத்திரத்திற்கு ஏழு கார்த்திகை தினங்களிலும் இடைவிடாமல் அன்புடன் ஜாதகர் போய்ப் பிறகு கடைசி கார்த்திகை தினத்தில் இருபத்தோர் பரதேசிகளுக்குச் சாப்பாட்டை ஆகம சாஸ்திரங்களின் முறைபோல ஆசையுடன் போடுவாரர்கில்;

46. வாயுநோய் விலகு மென்றே
மைந்தனுஞ் சுகமே யாவன்
மாயன்தன் பத்தி யாலே
மறுமனை தனக்குப் புத்திரர்
ஆயவே யாண்பா லொன்று
வதுவின்றிப் பெண்பா லிரண்டு
ஞாயமாய்த் தோன்று மென்றேரும்
நாயகி கேட்டி டாயே.

46. ஜாதகருக்குத் தன்னுடைய வாயு ரோகம் நிவிர்த்தியாகி விடும் என்று சொல்லுகின்றேரும். இவர் சௌக்கியத்தை அடைவார். மகாவிஷ்ணுவின் மேலுள்ள அன்பினால் இவருடைய இரண்டாவது மனைவிக்கு ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நியாயமாக உண்டாவார்கள் என்று சொல்லுகின்றேரும், பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனர் தாயார் ஆகிய இவர்களின் மரண காலங்கள்

47. மூப்பது வெட்டு வாண்டி லுயராணி மாதந் தன்னில்
செப்புவோந் தாதை கண்டஞ் சென்றபின் நாற்பா
[னிரண்டில்
ஒப்புட னடி மாத முரைக்கிறே மன்னை கண்டம்
அப்பணி சடையோன் தேவி யருளிய மொழி குன்றுவே.

47. ஜாதகருக்கு முப்பத்தெட்டாவது வயதில் சிறந்த ஆனி மாதத்தில் இவருடைய தகப்பனர் இறந்துவிடுவார் என்று சொல்லு

கின்றேம். இதன்பிறகு ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் ஆடி மாதத்தில் இவருடைய தாயார் இறந்துவிடுவாள் என்று சொல்லு கின்றேம். நாகப்பாம்பைத் தன்னுடைய ஜடையில் அணிந்துகொண் டிருக்கும் சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடா மல் நடக்கும்.

ஜாதகருடைய மரண காலமும் மறு ஜன்மமும்

48. அறுபது வாரூ மாண்டி லழகிய கும்ப மாதங்
குறைபட்சந் தசமி தன்னில் கூறுவோஞ் ஜாத கர்க்கு
மறுஜன்மம் வேலங் காட்டில் மாரனும் வைசியச் சேயா
யுறைகுவான் சுகமுண் டாகி வுத்தமன் வாழ்வா னுமே.

48. ஜாதகருக்குத் தன்னுடைய அறுபத்தாருவது வயதில் சிறந்த கும்ப மாதம் என்ற மாசிமாதத்தில் தேய்பிறையில் தசமி திதியில் மரணம் நேரிடும். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் வேலங் காடு என்ற திருவாலங்காட்டு க்ஷேத்திரத்தில் ஒரு வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து சௌக்கியத்துடன் வாழ்பவர் ஆவர்.

ஜாதகருடைய யோக விஷயங்கள்

49. இதுமத்தில் ஜாத கர்க்கு விலகாவோ மார கங்கள்
எதுவிதப் பிணிகள் கண்டு மிரணிய னஞ்சில் நிற்கப்
பரிதிமுன் பனிபோல் நீங்கும் பாலகன் யோகச் சேதி
பொதுவாகச் சொல்லு கின்றேன் புண்ணிய வதியே
[கேளாய்.

49. இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லவே, இதற்கு இடை யில் ஜாதகருக்கு மரணம் நேரிடாதோ என்று கேட்க, அத்திரிமுனிவர் பதில் சொல்லுகின்றார். எப்படிப்பட்ட நோய்கள் சம்பவித்தபோதும் இரணியன் என்ற குரு ஐந்தாவது பாவத்தில் இருப்பதால் பரிதி என்ற சூரியனுக்கு முன்னே எவ்விதமாகப் பனி மறைந்துவிடுகின்றதோ அதுபோல இந்த நோய்கள் வலுகிப்போய்விடும். ஜாதகருடைய யோக விஷயங்களைப்பற்றிப் பொதுவாகச் சொல்லுகின்றேன், புண்ணியவதி யாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

50. ஜனித்தகாள் முதலா யாகச்
செப்புவோம் பனிரெண் டாண்டுள்
கனமான பிணியுங் கூடுங்
கனத்ததால் சல்லியம் நேருந்

தினந்தரித் திரமே யாகுந்
தூணவிருத்தி சேத மெய்தும்
அனையவே குடும்ப மலைச்ச
லணுகிடு மென்று சொன்னேம்.

50. ஜாதகர் பிறந்ததுமுதல் பன்னிரண்டு வயதிற்குள் இவருக்குப் பலமான நோய்கள் உண்டாகும். பெரிய கடன்களும் ஏற்படும் என்று சொல்லுகின்றோம். இவருக்குத் தினந்தோறும் தரித்திரமும் கஷ்டங்களும் உண்டாகும். சகோதரர்கள் பிறப்பார்கள், இறந்தும் விடுவார்கள். இவருடைய குடும்பத்தாருக்குக் கஷ்டங்களும் திரிச்சலும் உண்டாகும் என்று சொல்லுகின்றோம்.

51. ஈராறு வாண்டு மேலா யெய்திய செட்டு வோங்குந்
தீரமாய் ருணநி விர்த்தி சிறப்பான குடும்ப மாகுங்
காரிய மெல்லாங் கூடுங் கனத்ததோர் வீடு மெய்துங்
கூறினை மொழி குன்றுவே குவலயங் கீர்த்தி யெய்தும்.

51. ஜாதகருக்கு பன்னிரண்டு வயதிற்குமேல் இவருடைய குடும்பத்தாருக்கு வியாபாரம் விருத்தியடையும், கடன்கள் நிவர்த்தியாகிவிடும். குடும்பம் மேன்மையை அடையும். எல்லாக் காரியங்களும் அனுகூலமாகும். ஒரு பெரிய வீடும் கிடைக்கும். இந்தப் பூமியில் பெருமையும் புகழும் உண்டாகும். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

52. சோலிகள் துறவு சேருஞ் சூதக மதிக மெய்துஞ்
சாலவே மனக்க லக்கந் தானது விலகு மென்றும்
போலவே கையி ருப்பு பொருந்திடு மென்று சொன்னேம்
வேலனே யின்ற மாதே விளம்புவோ மேலுங் கேளே.

52. சோலிகளும் தோப்புகளும் கிணறுகளும கிடைக்கும். சூதகமும் அதிகமாக நேரிடும். மனத்துன்பமும் விலகிவிடும் என்று சொல்லுகின்றோம். கையில் பணமும் சொக்கமாக இருக்கும் என்று சொல்லுகின்றோம். முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! இன்னும் அதிகமாகச் சொல்லுகின்றோம். கேட்பீராக.

ஜாதகருடைய ஜனன கால தசை இருப்பும் அதன் பலாபலன்களும்

53. ஜாதகன் ஜனிக்குங் காலே சனிதசை யிருப்புத் தானும்
மேதினி லாண்டு வெட்டும் மேவிய திங்கள் பத்தும்
ஓதுவேன் ஜாத கர்க்கு வுரைந்திடும் பிணியுந் தானுந்
தீதாகுந் தொழிலுந் தானும் ஸ்தான பேதங்க ளுண்டாம்.

53. ஜாதகர் பிறந்தபோது சனிமகா தசையில் இருப்பு எட்டு வருஷங்களும் பத்து மாதங்களும் ஆகும். இந்தக் காலத்தில் ஜாதக

ருக்கு ரோகங்கள் உண்டாகும் என்று சொல்லுகின்றேன். இவருடைய குடும்பத்தாரது தொழில்கள் கெடுதியை அடையும். இடமாறுதல்களும் உண்டாகும்.

54. அன்னையின் துணைவர் சேத மதிகமாய்ச் செலவு நேறும்
பொன்னெடு பணிகள் சேதம் பலவிதச் சஞ்ச லங்கள்
இன்னமும் விபர மாக மியம்புவோ மிரண்டி லேதான்
கன்னென மொழிபி னுளே கழறின மொழி குன்றுவே.

54. ஜாதகருடைய தாயாரின் சகோதரர்கள் இறந்துவிடுவார்கள். இவருடைய குடும்பத்தில் அதிகச் செலவு நேரிடும். தனமும் ஆபரணங்களும் நஷ்டமாகும். பலவிதமான துன்பங்களும் நேரிடும். இரண்டாவது பாகத்தில் இன்னும் உள்ள விஷயங்களை விபரமாகச் சொல்லுகின்றேம். சர்க்கரையைப்போல இனிமையான வார்த்தைகளையுடைய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 124

ஜனனமான கால கிரகநிலை

1. [1]மதிசனி [2]யிரவி [3]கோலில் [4]மங்கலன் [5]வண்டி யாகப்
புதன் [6]தேளில் [7]புகரு [8]மேரு [9]பொன் [10]சுரு கேது
[11]கெண்டை

சதி[12]கருங் கோளுங் கன்னி ஜன்மமுஞ் சிம்ம மாக
இதுவிதக் கோளும் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே ;

1. சந்திரனும் சனியும் சூரியனும் துலாத்திலும், அங்காரகன் கடகத்திலும், புதன் விருச்சிகத்திலும், சுக்கிரன் தனுசிலும், குரு மகரத்திலும், கேது மீனத்திலும், ராகு கன்னியிலும், ஜன்மலக்கினம் சிம்மமாகவும் ஆகி இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று ;

கிரகநிலை

கேது			
	இராசி சக்கரம்		அங்காரகன்
குரு			லக்கினம்
சுக்கிரன்	புதன்	சூரியன் சந்திரன் சனி	ராகு

சித்திரை 4-ஆம் பாதம் : அங்கார தசை ஹ 1-8-0

குறிப்பு :— இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சூரியனும் சுக்கிரனும், கடகத்தில் அங்காரகனும், கன்னியிற் கேதுவும், விருச்சிகத்திற் சந்திரனும் புதனும், கும்பத்திற் குருவும், மீனத்திற் சனியும் இராகுவும் ஆகும். சனி அஸ்தமனம் அடைந்து இருக்கின்ரூர்.

---

1. சந்திரன்
2. சூரியன்
3. துலாம்
4. அங்காரகன்
5. கடகம்
6. விருச்சிகம்
7. சுக்கிரன்
8. தனுசு
9. குரு
10. மகரம்
11. மீனம்
12. இராகு

ஜனன நகரச் சிறப்பு

2. சுந்தரி கேட்கும் போது சுரகுரு புகலு கின்றார்
இந்தச்சே யாணஞ் ஜன்ம மில்லமும் வடதென் வீதி
தொந்தியன் தென்மே லாகுந் தோன்றிடு மருகில் மாரி
முந்துமால் காளி பில்ல மெய்திடு மிதுவல் லாமல் ;

2. பார்வதியம்மையார் கேட்கும்பொழுது தேவர்களுடைய குரு பலாபலன்களைச் சொல்லுகின்றார். இந்த ஜாதகர் ஆண் குழந்தையாகப் பிறப்பார். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் இருக்கும். பெரிய வயிற்றை உடைய விநாயகக்கடவுளின் கோயில் தென்மேற்குத் திக்கில் இருக்கும். அருகில் மாரியம்மன் கோயிலும் காளியம்மன் கோயிலும் இருக்கும். இவைகளுமல்லாமல் ;

3. மாரியுங் கீழ்ப்பா லாகு மாரணை யெரித்தோன் கோவ்டம்
கீருபோ லாகுங் கீழ்ப்பால் நேர்வடக் கதுபோ லாறு
கூறுமிவ் வடையா ளத்துள் குறித்தனந் தந்தை யில்லம்
வீரியன் மூன்றுஞ் ஜன்மம் விளங்குவா னிவனே யம்மா.

3. மாரியம்மன் கோயிலும் கிழக்குத்திக்கில் இருக்கும். மன்மதனை எரித்த சிவபெருமானுடைய கோயிலும் ஜலாசயமும் கிழக்குத் திக்கில் இருக்கும். நேர்வடக்குத்திக்கில் ஓர் ஆறு ஓடும். இவ்விதமான அடையாளங்கள் உள்ள இடத்தில் ஜாதகர் தன்னுடைய தகப்பனருடைய வீட்டில் மூன்றுவது குழந்தையாகப் பிறப்பார், பார்வதியம்மையே.

4. இன்னவன் ஜனன யோக
மெழில்பெருந் தந்தை யோக
மன்னவ னன்னை யோகம்
வரும்புத்திர களத்திர யோகந்
தன்துணை முன்பின் ஜன்மஞ்
சாந்தியுங் கூறு கின்றோம்
அன்னையே நவக்கோ ளாய்ந்து
யறைகிறோங் கேட்டி டாயே.

4. ஜாதகருடைய பிறந்த காலத்திய யோகமும் தகப்பனருடைய யோகமும் மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகமும் சகோதரர்கள் முன்ஜன்மம் பின்ஜன்மம் சாந்தி ஆகிய இவ்வெல்லாவற்றையும் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே ! இவைகளை எல்லாம் நவக்கிரகங்களையும் ஆராய்ந்து சொல்லுகின்றோம், கேட்பீராக.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

5. தந்தையின் தூணவ ரேழுந் தங்காமே யாவுந் தானும்
பிந்திய சிலநாள் தன்னில் புக்கிடும் யமப திக்கு
அந்தமோர் பிதாவின் சேதி யறைகிறே மிருகி றத்தன்
தன்தன முடையா னவன் சாந்தமுங் கோப முள்ளான்.

5. ஜாதகரின் தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் ஏழுபேர் ஆவார்கள். இவர்களெல்லாரும் கீடித்திருக்கமாட்டார்கள். இவர்கள் சிலகாலம் கழித்து இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்து விடுவார்கள். ஜாதகருடைய தகப்பனரது விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை உடையவராவர். இவர் தன்னுடைய சுயார்ஜிதமான பணத்தை உடையவராக இருப்பார். இவர் சாந்த குணத்தையும் கோபகுணத்தையும் உடையவராக இருப்பார்.

6. வித்தையு மில்லா னவன் விவேகியா மூகை வானும்
நத்தினோர்க் குதவி செய்வன் காட்டினில் புகழு மேற்பன்
சுத்தமு மில்லா னவன் துராசையு முடைய னவன்
சித்தினி சாதி யாவன் ஜயஞ்செய்வ னெடுத்த வேலை.

6. ஜாதகருடைய தகப்பனர் கல்வி இல்லாதவராவர். அறிவுடையவராவர். நுட்பமான புத்தியை உடையவராவர் தன்னுடைய சகாயத்தைக் கோரினவர்களுக்கு உபகாரஞ் செய்வார். இவர் தன்னுடைய கிராமத்தில் பெருமையையும் கீர்த்தியையும் உடையவராவர். இவர் சுத்தமாக இருக்கமாட்டார். கெட்ட ஆசையை உடையவராக இருப்பார். இவர் சித்தினிஜாதியைச் சேர்ந்த மனிதராக இருப்பார். இவர் தான் எடுத்தக் காரியங்களைச் செய்து முடிப்பார்.

குறிப்பு :—ஸ்திரீகள் பத்மினி ஜாதி என்றும் சித்தினி ஜாதி என்றும் சங்கினி ஜாதி என்றும் ஹஸ்தினி ஜாதி என்றும் நான்கு வகையாகப் பிரிக்கப்படுவார்கள். சித்தினிஜாதி ஸ்திரீயானவள் சங்கீத சாஸ்திரம் சிற்ப சாஸ்திரம் இவைகளை அறிந்தவளாவாள், மழமழப்புடைய அழகிய தேகத்தை உடையவளாவாள். மானைப்போன்ற கண்களையும் தாமரையைப்போன்ற முகத்தையும் யானையைப்போன்ற கம்பீரமான நடையையும் மயிலைப்போன்ற குரலையும் அதிசயமான தொனியையும் உடையவளாவாள், வித்தையில் அதிக விருப்பமுள்ளவளாவாள், மகாகவிஞர்களுக்குப் பிரியமானவள் ஆவாள். ஜாதகருடைய தகப்பனர் இந்த சித்தினிஜாதி ஸ்திரீயைப்போலப் பல குணங்களை உடையவராக இருப்பார் என்று இந்தப் பாடலில் சொல்லியிருக்கின்றது.

7. அன்னிய மாது மோக னதிகமாய்ப் பூமி சேர்ப்பன்
பன்னியே பேச வல்லான் பரவுப காரஞ் செய்யான்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பான் பொருள்மே
[லிச்சை
தன்மனங் கபடு கொஞ்சஞ் சங்கரி கேட்டி டாயே.

7. ஜாதகருடைய தகப்பனார் பிறருடைய ஸ்திரீகளின்மேல் மையல் என்ற காம ஆசையை உடையவராக இருப்பார். இவர் நிலங்களை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் விமரிசையாகவும் சாமர்த்தியமாகவும் பேசும் திறமையை உடையவராவார். இவர் பிறருக்கு உதவியைச் செய்பவராவர். இவர் தான் சொல்லுகின்ற வார்த்தைகளே சிறந்தவை என்று சொல்லி வாதித்து நிலைநாட்டக் கூடியவர் ஆவர். இவர் சொத்துக்களின்மேல் பிரியமுடையவராவர். இவர் தன்னுடைய மனத்தில் சிறிது வஞ்சனையையும் உடையவராக இருப்பார் பார்வதியம்மையே! கேட்பீராக.

8 மூலச்சூ டுடைய னுவ னுயர்ச்சியாய்க் குடும்பி யாவன்
கால்கரம் வலிவு முள்ளான் காலாட்க ளுடைய னுவன்
பால்பாக்கிய முடைய னுவன் பணிதிபாத் திரங்கள்
[சேர்ப்பன்
ஏலவே தந்த நோயு மெய்திடு மென்று சொல்வோம்.

8. ஜாதகருடைய தகப்பனார் மூலச்சூட்டு ரோகத்தை உடையவராக இருப்பார். இவர் மேன்மையான சிறந்த குடும்பஸ்தராக இருப்பார். இவர் தன்னுடைய கால்களிலும் கைகளிலும் வலிவு உள்ளவராக இருப்பார். இவருக்குக் கால்நடை வேலைக்காரர்கள் இருப்பார்கள். இவர் பால் பாக்கியத்தை உடையவராக இருப்பார். இவர் ஆபரணங்களையும் பாத்திரங்களையும் சாமான்களையும் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவருக்குப் பல்நோயும் இருக்கும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

9. இன்நெறி யுடையா னுக்கு யிவனுமே ஜனன மாவன்
அன்னவன் தூணைப்பின் னுக யணுகிடு மைந்தே யாகத்
தன்னிலே யாவுந் தீது சத்தியு மொருத்தி தீர்க்கம்
பின்னையு மவன்கு ணத்தைப் பேசுவோந் தாயே
[கேளாய்.

9. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருக்கு ஐந்து இளைய சகோதரர்கள் உண்டாவார்கள். இவர்கள் எல்லோரும் இறந்து விடுவார்கள். சகோதரி ஒருத்தி நீண்ட ஆயுளை உடையவளாக இருப்

பாள். ஜாதகருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

10. மால்நிற முயர முள்ளான் பாரியால் துன்ப முள்ளான்
சீலவா னாமை யென்று செப்பலா மணமு முள்ளான்
பாலர்க ளில்லா லுவன் பத்மினி சாதி யென்றோர்ந்
சாலவே யில்லம் நீங்கான் தபசிபோல் வாழ்வா னுமே.

10. ஜாதகர் மகாவிஷ்ணுவினுடைய நிறமாகிய நீலமேகவர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தை உடையவராவர். இவர் உயரமாக இருப்பார். இவர் தன்னுடைய மனைவியால் கஷ்டங்களை அடைபவராவர். இவர் நல்லொழுக்கம் உடையவர். இவரை ஊமை என்று சொல்லக்கூடும். இவருக்கு விவாகம் நடக்கும். இவருக்குக் குழந்தைகள் இல்லை. இவர் பத்மினி ஜாதியைச் சேர்ந்தவர் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய வீட்டை விடடுப் போய் விடமாட்டார். தவங்களைச் செய்கின்ற முனிவரைப்போல இருந்து வாழ்பவராவர்.

குறிப்பு :—மேலே ஆறாவது பாடலில் சொல்லிய பிரகாரம் ஸ்திரீகள் நான்கு வகுப்பைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். பத்மினி ஜாதியான ஸ்திரீ பூர்ண சந்திரனைப்போல அழகான முகத்தையுடையவள் ஆவள். அசைவில்லாத கண்களின் பார்வையை உடையவள் ஆவள். பெரிய ஸ்தனங்களை உடையவள், வலிவாக இருப்பாள், மிருதுவான அவயவங்களை உடையவள், மலர்ந்த தாமரைப் புஷ்பத்தின் வாசனையைப் போன்ற வாசனையை உடையவள், சிவப்பு அல்லது கருப்பு நிறத்தை உடையவள், சாப்பாட்டில் அல்லது சிற்றுண்டியில் சிறிது ருசியை உடையவளாவள், அன்னப்பட்சியைப்போன்ற குரலை உடையவள், தானம் செய்கிறவள், தெய்வங்களுடைய பூஜையில் மிகுந்த பிரியமும் சிரத்தையும் உடையவள், காமலீலையில் வல்லவள். ஜாதகர் பத்மினி ஸ்திரியினுடைய பல குணங்களை உடையவர் என்று இங்கு சொல்லியிருக்கிறது.

ஜாதகருடைய மூத்த சகோதரியின் குணாதிசயங்கள்

11. முன்துளை சேஷ்ட புத்திரி மொழிகிரே மவள்தன் சேதி
அன்னவள் சிவந்த மேனி யழுத்தமா நெஞ்ச முள்ளாள்
பன்னியே பேசு வாளாம் பாவையும் வாத தேகி
பின்னமில் லாதா ளாவள் பிழையிலாள் சஞ்ச லத்தாள்.

11. ஜாதகருடைய மூத்தசகோதரி ஜேஷ்ட குமாரியாவாள், இவளுடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் சிவப்பான நிறத்தை உடையவள், கடினமான மனத்தை உடையவள் ஆவள். இவள் விமரிசையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுபவள் ஆவள், வாதரோகத்தை உடையவள் ஆவள். இவள் யாதொரு

அவயவக்குறைவும் இல்லாத தேகத்தை உடையவளாக இருப்பாள் இவள் யாதொரு குற்றங்களையும் உடையவள் அல்லள். இவள் மனக்கஷ்டத்தை உடையவளாக ஆவள்.

12. சொல்லது சுகமே யாகுந் துராசையுங் கொஞ்ச மூண்டு
வல்லிக்கு வரனு முள்ளூர் வந்திடுஞ் சுதராண் காணுள்
புல்குவோம் பெண்பா லொன்று புக்கிடு மதுவே யன்றி
நல்லதோர் சுகமே காணுள் வளவுபோல் தேக
[மென்றோம்

12. ஜாதகருடைய மூத்தசகோதரி இனிமையான வார்த்தை களைச் சொல்லுபவள் ஆவள். இவளுக்குச் சிறிது கெட்ட ஆசையும் உண்டு. இவளுக்குப் புருஷன் உள்ளூரிலிருந்தே வருவார். இவளுக்கு ஆண் குழந்தைகள் கிடையா. இவளுக்கு ஒரு பெண் குழந்தைதான் இருக்கும். இதுவுமல்லாமல் இவளுக்குப் புத்திரசுகம் கிடையாது. இவளுடைய தேகம் சிறிது வளைந்து இருப்பதைப் போல இருக்கும் என்று சொல்லுகின்றோம்.

13. அவள்வரன் மத்தி யத்தி லந்தகன் பக்கல் சேர்வன்
தவமுனி யிவ்வா றுசொல்ல ஜயமுனி கூறு கின்றார்
இவளுக்கு மந்தி யத்தி லித்துன்பம் நேர்வ தென்ன
பவமுள வந்தச் சேதி பகருவோம் விவர மாக.

13. ஜாதகரின் மூத்தசகோதரியினுடைய புருஷன் இவளுடைய மத்திய வயதில் இறந்து எமனிடத்திற்குப் போய்ச் சேர்ந்து விடுவார். இவ்விதமாக தவமுனிவர் சொல்லவே, ஜயமுனிவர் தடுத்துக் கேட் கின்றார். இவளுக்கு நடுவயதில் இவ்விதமான கஷ்டம் நேரிடுவதற்குக் காரணம் என்ன என்று கேட்கவே, இந்தப் பாபமான் விஷயத்தை விபரமாகச் சொல்லுகின்றோம் என்று தவமுனிவர் பதில் சொன்னார்.

14. முன்ஜன்ம வினையி னலே மேவிடு மந்தத் தோஷம்
அன்னவள் வினை யெவ்வா றுவறிவிப்பீர் விவர மாகக்
கன்னிகை முன்ஜன் மத்தில் காஞ்சிக்கு யுத்தி ரத்தில்
தன்னிலே பேரூர் தன்னில் ஜனித்தனள் பிரம சேயாய்.

14. ஜாதகருடைய மூத்தசகோதரிக்குத் தன்னுடைய முன் ஜன்மத்திய ஊழ்வினைப் பயனாக இந்தத் தோஷம் நேரிட்டது. இவ ளுடைய பாபங்கள் எப்படிப்பட்டவை என்று விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்கவே, தவமுனிவர் பதில் சொல்லுகின்றார். இவள் தன் னுடைய முன்ஜன்மத்தில் காஞ்சிமாநகரத்திற்கு வடக்குத்திக்கில் உள்ள ஒரு பெரிய கிராமத்தில் ஒரு பிராமணருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள்.

15. சுகமுள குடும்பி யாகிச் சுதர்களு முடைய ளாகித்
தகைமையாய் வாழுங் காளில் சாற்றுவோ மூழி தானுஞ்
ஜகத்துளோர் போற்றுங் காஞ்சி திருவிழா யிவளுஞ் [சென்று
இகபரன் பாதம் போற்றி யேகினள் கடைவீ திக்கு.

15. ஜாதகருடைய மூத்தசகோதரி தன்னுடைய முன்ஜன்மத்தில் சௌக்கியமான குடும்பத்தை உடையவளாகியும் குழந்தைகளை உடையவளாகியும் தகுந்தபடியே வாழ்கின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த பாபத்தைச் சொல்லுகின்றோம். பூமியிலுள்ளவர்கள் புகழ்ந்து கொண்டாடுகின்ற காஞ்சிமாநகரத்தின் திருவிழா ஒன்றிற்கு இவள் போய், கடவுளுடைய பாதங்களைத் தொழுது கடைதெருவுக்குச் சென்றாள்.

16. குங்குமஞ் சீப்பு மஞ்சள் கொண்டுமே பொருளீ யாமல்
சங்கையாய் வந்து விட்டாள் ஜனக்கூட்டத் தாலே யம்மா
மங்கையு மறைந்த பின்பு வணிகனுந் தேடிச் சென்று
எங்கேயுங் காணு மதி யியம்புவான் மனவெ றுப்பால்.

16. ஜாதகருடைய மூத்தசகோதரி தன்னுடைய முன்ஜன்மத்தில் குங்குமம் சீப்பு மஞ்சள் ஆகிய இவைகளை ஒரு கடைக்காரனிடமிருந்து வாங்கி கொண்டு இவனுக்கு இவைகளின் கிரயத்தைக் கொடுக்காமல் ஜனக்கூட்டத்தில் மறைந்து போய் விட்டாள். பார் வதியம்மையே! இவ்விதமாக இவள் மறைந்துபோய் விட்ட பிறகு இந்த வியாபாரி இவளைத் தேடிப்போய் பார்க்க இவள் எவ்விடத்திலும் தென்படாமல் போய்விடவே, இவர் தன்னுடைய மனக்கஷ்டத்தினால் பின்வருமாறு சொல்லுகின்றார்.

17. மஞ்சள்குங்கு மங்கள் சீப்பு வாங்கியே பொருளீ யாமல்
வஞ்சனை செய்த பாவி மாரனு முதவா மதி
மிஞ்சிய செல்வங் குன்றி மேதினில் வாழ்வாய் நீயுந்
தஞ்சமாய் மறுஜன் மத்தில் தக்கன காலந் தன்னில்;

17. "மஞ்சள் குங்குமங்கள் சீப்பு ஆகிய இவைகளை வாங்கிக் கொண்டு இவைகளின் கிரயத்தைக் கொடுக்காமல் ஏமாற்றிய பாவியாகிய உனக்குப் புருஷன் உதவியில்லாமல் இருக்கக்கடவது. உன்னுடைய அதிகமான செல்வம் குறைந்து நீ பூமியில் வாழக்கடவது. உன்னுடைய மறுஜன்மத்தில் உன்னுடைய தகுந்த பருவக்காலத்தில்";

18. பருவகா லத்தி லேதான்
பர்த்தாவு மரண மெய்தி
யருஞ்சுத ராணில் லாமல்
தந்தையில் வாழ்வா யாகத்

குறையோர்கள் நிந்தை சொல்லக்
கோதையும் வாழ்வா யென்று
தெருத்தூள்கள் தம்மை வாரி
செட்டியு மிறைத்தா னென்றேரும்.

18. "உன்னுடைய நல்ல வயதில் உன்னுடைய புருஷன் இறந்து விடக்கடவது. உனக்குப் புத்திரன் இல்லாமல் நீ உன்னுடைய தகப்பனுருடைய வீட்டில் வாழக்கடவது" என்று கஷ்டத்தையடைந்த இந்த வியாபாரி மறைந்துபோய் விட்டவளை நோக்கிச் சாபத்தைக் கொடுத்துத் தெருவிலிருந்த மண்தூளை எடுத்து வாரி தூவினர் என்று சொல்லுகின்ருர்.

19. அந்ததோர் தோஷ மொன்று யணுகிற் றதுவு மின்றி
இந்தவள் குறைம ரக்கா லிட்டுமே யளந்தா னென்றேரும்
நொந்திடும் பேருக் கன்னம் நிமலியு மளிக்கா நின்ருள்
இந்தவாறு தோஷ மெல்லா மெய்தின விவளுக்கேதான்.

19. இந்தத் தோஷம் ஜாதகருடைய மூத்த சகோதரியை வந்து அடைந்தது. இதுவும் அல்லாமல் இவள் ஒரு குறைந்த அளவுள்ள மரக்காலால் அளந்து ஏமாற்றினுள் என்று சொல்லுகின்ரேரும். ஏழை களுக்கும் கஷ்டப்பட்டுக்கொண் டிருப்பவர்களுக்கும் இவள் சாப்பாட் டைக் கொடுக்காமல் சும்மா இருந்துவிட்டாள். இவ்விதமாகப் பல பாவங்கள் இவளை வந்து அடைந்தன.

20. மத்திய காலந் தன்னில் மன்னவன் மரண மெய்து
வித்தகி சிலகாள் சென்று மேவினுள் காலந் தன்னில்
சித்தமாய்ப் பிரமன் லக்கந் தீரனல் வரையப் பட்டுச்
சுத்தமாய்க் காஞ்சி தன்னில் ஜனித்தன னென்று
[சொல்வோம்.

20. ஜாதகருடைய மூத்த சகோதரிக்குத் தன்னுடைய முன் ஜன்மத்தில் மத்திய வயதில் தன்னுடைய புருஷன் இறந்துவிட்டார். பிறகு இவள் சிறிதுகாலம் உயிருடன் இருந்து தகுந்தகாலத்தில் இறந்துவிட்டாள். பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப் பட்டு இவள் இந்த ஜன்மத்தில் காஞ்சீவரத்தில் வந்து பிறந்தாள் என்று சொல்லுகின்ரேரும்.

ஜாதகருடைய மூத்தசகோதரியின் மறுஜன்மம்

21. முன்ஜன்மம் வணிபன் சாப
மெய்திற்று யிச்சென் மத்தில்
அன்னவ ளந்தி யத்தி
லாளனு மரண மாவான்

தன்சுத ராண்பால் காணுள்
தையலு மொருத்தி யென்றேரும்
பின்ஜன்மங் காஞ்சி தன்னில்
பிறப்பளே வைசியச் சேயாய்.

21. ஜாதகருடைய மூத்த சகோதரிக்கு இவளுடைய முன் ஜன்மத்தில் வியாபாரி கொடுத்த சாபம் இந்த ஜன்மத்தில் வந்து சம்பவித்தது. இவள் தன்னுடைய கடைசி காலத்தில் புருஷன் இறந்து பிள்ளைகளும் இல்லாமல் தனியாக இருப்பாள் என்று சொல்லுகின்றேரும். இவள் தன்னுடைய பின் ஜன்மத்தில் ஒரு வைசியருடைய குலத்திற்போய்ப் பெண் குழந்தையாகப் பிறப்பாள்.

ஜாதகருடைய மூத்தசகோதரியின் குமாரியினுடைய குணாதிசயங்கள்

22. அத்திரி சொல்லு கின்ரு
ரவளுக்குப் பெண்பா லொன்று
சித்தமாய் நேரு மென்று
செப்பினீ ரச்சேதி சொல்வாய்
உத்தம குணத்த ளாவ
ளுணச்சலாஞ் சிவந்த மேனி
சுத்தமாய் வார்த்தை சொல்வள்
தோழன்தன் மனம்போல் வாழ்வள்.

22. அத்திரி மகரிஷி கேட்கின்ரூர். ஜாதகருடைய மூத்த சகோதரிக்கு ஒரு பெண்குழந்தை இருப்பாள் என்று சொன்னீரே! இந்தக் குழந்தையினுடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுவீர் என்று கேட்டார். இதற்குத் தவமுனிவர் பதில் சொல்லுகின்ரூர். இந்தப் புத்திரி நல்ல நிறந்த குணத்தை உடையவளாவள். இவள் மெலிந்த சிவப்பு நிறமான தேகத்தை உடையவளாக இருப்பாள். இவள் பரிசுத்தமான நல்ல வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல் ஒற்றுமையாக இருந்து வாழ்வாள்.

23. வற்றுமைக ளடையா ளாவள்
வரனுமே உத்தர மென்றேரும்
அருகினில் சிறுவு ராகு
மவள்சுத ராண்பா லிரண்டு
வருங்கன்னி யிரண்டே யாவர்
மாதவுஞ் சுகமாய் வாழ்வள்
பெருமையாய்க் குடும்பி யாவள்
புண்ணிய வதியே கேளாய்.

23. ஜாதகரின் மூத்த சகோதரியினுடைய புத்திரி தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்க மாட்டாள். இவளுக்குப் புருஷன் வடக்குத் திக்கிலிருந்து வருவார். அவருடைய கிராமம் அருகிலுள்ள ஒரு சிறிய கிராமம் ஆகும். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் உண்டு. இவள் சௌக்கியத்துடன் இருந்து வரழ்பவள் ஆவள், இவள் மேன்மையையுடைய ஒரு குடும் பினியாக இருப்பாள், புண்ணியவதியாகிய பார்வதி யம்மையே! கேட்பீராக.

24. ஜாதகன் நிறங் குணத்தைச்
சாற்றுவோம் மால்நி றத்தான்
மேதினி லுயர மில்லான்
மெதுவான கல்வி யுள்ளான்
சூதிலான் கபடு மில்லான்
துணைவியால் பெருமை பூண்பன்
மாதவர் பத்தி கொள்ளான்
வளவுபோல் தேக மென்றேரும்.

24. ஜாதகருடைய குணத்தையும் நிறத்தையும் பற்றிச் சொல்லுகின்றேரும். இவர் மகாவிஷ்ணுவினுடைய நிறமாகிய நீலமேகவர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தை உடையவர். இவர் பூமியில் உயர மில்லாதவராக இருப்பார். இவர் சிறிது படித்தவராவர். இவர் கள்ளம் கபடம் வஞ்சனை இவை இல்லாதவர். இவர் தன்னுடைய சகோதரியினுல் மேன்மையை அடைபவர் ஆவர். இவர் முனிவர்களிடத்தில் ஆசையும் அன்பும் உடையவராக இருக்கமாட்டார். இவர் வளர்ந்ததைப்போல் தோன்றுகின்ற தேகத்தை உடையவராவர். அஃதாவது கூன்முதுகராக இருப்பார்.

25. அன்னைசொல் கடவா னுவ னையமில் லாத நெஞ்சன்
பொய்சொலான் பூமி விருத்தி யதிகமாங் கீர்த்தி
[கொள்ளான்
தையலா லிஷ்டங் கொள்வன் சந்தேக மனத்த னுவன்
வையமேல் வறுமை யில்லான் மாடுகள் விருத்தி யுள்ளான்.

25. ஜாதகர் தன்னுடைய தாயாரின் வார்த்தைகளுக்கு அத்து மீறி நடக்கமாட்டார். இவர் சந்தேகமில்லாத மனத்தை உடையவராவர்; பொய் பேசமாட்டார்; நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார், புகழையும் கீர்த்தியையும் பெருமையையும் அடையமாட்டார். இவர் தன்னுடைய மனைவியினது அன்பை உடையவராக இருப்பார், சந்தேகமான மனத்தை உடையவராவர். இவர் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடைய்மாட்டார். இவரிடம் கால்நடைகள் விருத்தியாகும்.

26. வம்பினிற் செல்லா னுவன் மறுமாத ரிச்சை கொள்ளான்
கம்பீரம குடும்பி யாவன் தனதானிய முடைய னுவன்
தன்பந்து மேலாய் வாழ்வன் கதிநெய்பா லிஷ்டங் [கொள்வன்
அம்புவி விருத்தி செய்வ னணுகிடும் பித்தச் சூடு.

26. ஜாதகர் சண்டைபிலும் சச்சரவிலும் பிரவேசிக்கமாட்டார். அன்னிய ஸ்திரீகளின்மேல் காதலை உடையவராக இருக்கமாட்டார். இவன் சகல சௌக்கியங்களையும் உடைய குடும்பஸ்தராக இருப்பார், செல்வத்தையும் தான்யங்களையும் உடையவராக இருப்பார். இவர் தன்னுடைய பந்துக்களைவிட அதிகமான அந்தஸ்திலிருந்து வாழ்பவர் ஆவர், தயிர் நெய் பால் இவைகளின்மேல் பிரியமுடையவராக இருப்பார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவருக்குப் பித்தச்சூட்டு ரோகம் உண்டாகும்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியினுடைய குணதிசயங்களும்

27. மணமது வீரொன் பானில்
வந்திடு முள்ளூர் பாரி
அணையவே யவள்கு ணத்தை
யறைகிறே மிருநி றத்தாள்
குணம திரண்டு முள்ளாள்
குறிப்பினில் கொடுமை தோன்றுஞ்
சினமதை வெளிக்காட் டாதாள்
தேவியும் வாத தேகி.

27. ஜாதகருக்குப் பத்தொன்பதாவது வயதில் உள்ளூரிலேயே இருந்து மனைவிவந்து சேருவாள். இவளுடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை உடையவள். இவன் இரண்டு விதமான குணங்களை உடையவன் ஆவள். அஃதாவது நல்ல குணத்தையும் கெட்ட குணத்தையும் உடையவள் ஆவள். இவள் பார்ப்பதற்குக் கெட்டவளைப்போலக் காணப்படுவாள். இவள் தன்னுடைய கோபத்தைப் பிறர் தெரிந்து கொள்ளும்படியாக வெளிக்குக் காட்டாதவளாக இருப்பாள். இவள் வாதமான தேகத்தை உடையவள், அஃதாவது பருமனை தேகத்தை உடையவள்.

28. அன்னம் போல் சாய லுள்ளா ளவளுமே நிந்தை [யுள்ளாள்
தன்னினத் தவர்க்கு நல்லள் தானவள் யோக சாலி
பொன்பணி யுடைய ளாவள் பிறந்தயில் லற்ப மாகும்
பின்னமில் லாத தேகி பிழையது வில்லா ளாமே.

28. ஜாதகருடைய மனைவி அன்னப் பறவையைப்போல அழகான ரூபத்தை உடையவள். இவள் அபவாதத்தையும் பழிகளையும் அடையமாட்டாள். இவள் தன்னுடைய பந்துக்களுக்கு நல்லவளாக நடந்து கொள்ளுவாள். இவள் யோகசாலியாக இருப்பாள். இவள் தனம் ஆபரணங்கள் ஆகிய இவைகளை உடையவளாக இருப்பாள். இவள் பிறந்த வீடு சிறிய வீடாக இருக்கும். இவள் யாதொரு அவயவக் குறைவும் இல்லாத தேகத்தை உடையவளாக இருப்பாள். இவள் யாதொரு குற்றத்தையும் உடையவளாக இருக்கமாட்டாள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்ர பாவம்)

29. புத்திர ரிருவர் தோன்றும் பெண்ணது மூன்றுந் தீர்க்கஞ்
சுத்தமா யாண்பா லொன்று செப்புவோந் தீர்க்க மாகச்
சித்தமாய் முதலில் பீடை செப்பலா மிவனுக் கேதான்
அத்திரி சொல்லு கின்ற ரவனுக்குச் சுதராண் விருத்தி;

29. ஜாதகருக்கு இரண்டு ஆண் குழந்தைகள் பிறப்பார்கள். மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். ஓர் ஆண் குழந்தை நீண்ட ஆயுளை உடையதாக இருக்கும் என்று சொல்லுகின்றோம். இவருக்கு முதலில் பிறக்கின்ற குழந்தை இறந்துவிடும் என்று சொல்லக்கூடும். இவ்விதமாக த்வமுனிவர் சொல்லவே, அத்திரி மகரிஷி தடுத்துக் கேட்கின்றார். இவருக்குப் பிள்ளையினுடைய விருத்தி ;

30. எப்படி நேருஞ் சொல்வா யெழில்புக ரஞ்சில் நிற்க
ஒப்புடன் குருவு மாறி லுறைந்துமே நீச ரையும்
தப்பித மாக நிற்கச் சனிக்கினுந் தீதே யாகும்
இப்படி அத்திரி சொல்ல விசைகுவார் பராசர் தாமும்.

30. எவ்விதமாக நேரிடும் என்பதைப்பற்றிக் காரணத்தைச் சொல்லுவீர். புகர் என்ற சுக்கிரன் ஐந்தாவது பாவத்தில் இருப்பதாலும் குரு ஆறுவது வீட்டில் நீசமாகி கெட்டவராக இருப்பதாலும் ஆண் குழந்தை பிறந்தாலும் இறந்து போய்விடும். இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லவே, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார்.

31. கருமத்தோ னஞ்சில் நிற்கக் காரியு மவரைப் பார்க்கப்
பெருஞ்சுதர் தன்னல் கர்மம் புகலுவோ மிவனுக் கேதான்
குறுமுனி சொல்லு கின்றார் குமரனு முன்ஜன் மத்தில்
திருகுக ளதிகஞ் செய்தான் சேர்ந்தது வந்தத் தோஷம்;

31. கருமத்தோன் என்ற பத்தாவது பாவத்திற்குடையவராகிய சுக்கிரன் ஐந்தாவது வீட்டில் இருப்பதாலும் இவரைக் காரி என்ற சனி பார்ப்பதாலும் ஜாதகருக்குத் தான் பெற்ற பிள்ளையினால் கர்மம்

நேரிடும் என்று சொல்லுகின்றோம். குறுமுனி என்ற குள்ளரான முனி வராகிய அகஸ்திய மகரிஷி சொல்லுகின்றார். ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் அதிகபான பாபங்களைச் செய்திருக்கிறார். அந்தப் பாபங்கள் இவரை வந்தடைந்திருக்கின்றன என்று சொல்லவே ;

ஜாதகருடைய முன் ஜன்மம்

32. என்னவூழ் செய்தா னத்தை யியம்புவீர் முனியே நீர்தாம்
அன்னவர் பூர்வஞ் சொல்வே னழகிய மதுரை தன்னில்
தென்மாட வீதி தன்னில் ஜனித்தனன் சைவச் சேயாய்
உன்னத மனவி மைந்த ருபதேசக் குருவாய்த் தோன்றி

32. ஜாதகர் என்ன பாபங்களைச் செய்தாரோ அவைகளை, முனி வரே ! நீரே சொல்லுவீர் என்று கேட்க, அகஸ்தியர் ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றார். ஜாதகர் அழகான மதுரைமா நகரத்தில் தெற்கு மாடவீதியில் ஒரு சைவருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து மேன்மையான மனவி மக்களை உடையவராகி யும் உபதேசத்தைச் செய்துவைக்கின்ற ஒரு குருவாகவும் இருந்து ;

33. பலருக்கு வுபதே சித்துப் பாலகன் வாழுங் காளில்
கலமுள மறையோன் ருனு கற்கல்வி யதிகம் பெற்று
உலகினில் கல்வி யாலே யுத்தமன் ஜீவித் தேதான்
பிலமிலாக் குடும்பி யாகிப் பிராமணன் வாழ்ந்தா
[னென்றோம்.

33. பலருக்கு உபதேசம் செய்துவைத்து ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் வாழ்கின்ற காலத்தில் சௌக்கியங்களை உடைய கல்விவரான பிராமணர் ஒருவர் வித்தையை அதிகமாக அடைந்து பூமியில் தன்னுடைய வித்தையினாலே ஜீவனம் செய்து கொண்டு ஒரு மேன்மையில்லாத குடும்பியாக இருந்து இந்த பிராமணர் வாழ்ந்தார் என்று சொல்லுகின்றோம்.

34. வந்தவூழ் தன்னைச் சொல்வேன்
மறையது வுணர்ந்தோன் பேரில்
இந்தவன் தர்க்க மிட்டு
வென்கல்வி சரியே யென்ன
அந்தநோர் மறையோன் பேரில்
சத்திய மதிகஞ் சொல்லப்
பிந்திய மறையோன் தானும்
பேசுவான் மனவெ ருப்பால்.

34. ஜாதகருக்குத் தன்னுடைய முன் ஜன்மத்தில் வந்து சம்ப வித்த பாபத்தைச் சொல்லுகின்றேன். வேதங்களைப் படித்தவராகிய

பிரமணருடன் ஜாதகர் வாதம் செய்து தன்னுடைய கல்வியே சரியானதென்று சொல்லி இந்தப் பிராமணரின் மேல் பொய்யான வார்த்தைகளை அதிகமாகச் சொல்லவே, இந்தப் பிராமணர் தன்னுடைய மனத்தில் கஷ்டத்தையும் அதிருப்தியையும் அடைந்து சொல்லுகின்றார்.

35. என்னுடைக் கல்வி தன்னை யிகழ்ச்சியாய்ச் சொன்ன
[பாவி
பின்வருஞ் ஜன்மந் தன்னில் பெரிதான வித்தை யின்றித்
தன்சுத ராணில் லாமல் தந்தைநீ தனியாய் வாழ்வாய்
வந்திடு மனைவி யாலே மானில நிந்தை யாகி;

35, "என்னுடைய வித்தைபைப்பற்றி இழிவாகப் பேசின பாவியாகிய நீ, உன்னுடைய மறுஜன்மத்தில் கல்வி அதிகமாக இராமலும் ஆண் குழந்தை இல்லாமலும் தகப்பனரை விட்டுப்பிரிந்தும் வாழக்கடவாய். உனக்கு ஏற்படுகின்ற மனைவியினாலே அபவாதத்தையும் அடையக்கடவாய்" என்றும்";

36. இன்னமும் பலவாய்ச் சொல்லி
யேகினன் யில்லந் தன்னில்
வந்தது வந்தத் தோஷம்
வரைகிறே மின்ன மொன்று
தன்பாரி சத்தி பூசை
தானவள் செய்தா ளென்றேரும்
பின்னங்கள் செய்தா ளென்றேரும்
பிரியாத நேச ரென்று.

36. இன்னமும் பலவிதமாகவும் ஜாதகரைப் பார்த்து இந்த பிராமணர் சொல்லிவிட்டுத் தன்னுடைய வீட்டிற்குப் போய்விட்டார் இந்தத் தோஷம் ஜாதகரை அடைந்தது. இதுவுமன்றி இன்னொரு தோஷத்தைச் சொல்லுகின்றோம். இவருடைய மனைவி சக்தி பூஜையைச் செய்துகொண்டு வந்தாள் என்று சொல்லுகின்றோம். ஜாதகரைவிட்டுப் பிரியாத ஒரு நண்பர்;

37. தன்னுடன் விருதங் கொண்டா னவன்தார்த்
[தின்மேல் மோகம்
இன்னவன் செய்து போக மிசைந்தனன் நேசன் கண்டு
உன்னுடை நேசங் கொண்டே னுத்தம னென்று சொல்லி
என்னையும் பாரா ஞகி யிணங்கினை யெந்தன் பெண்டை;

37. ஜாதகருடன் சினேகம் செய்துகொண்டார். இந்த சினேகி தருடைய மனைவியின்மேல் காதலை உடையவராகி அவளுடன் சம் போகம் செய்தார். இதை இவருடைய சினேகிதர் தெரிந்துகொண்டு சொல்லுகின்றார். "நான் உன்னுடன் நீ நல்ல குணத்தை உடையவர் என்று எண்ணி சினேகம் செய்துகொண்டேன். என்னை நீ உன்னு டைய சினேகிதன் என்று எண்ணுமல் என்னுடைய மனைவியினுடன் சம்போகம் செய்தாய்";

38. மறுஜன்மந் தோன்றி யேதான் வளமிலா தேக னுயும்
பெருஞ்சுத ராணில் லாமல் பேதையால் நிந்தை யாயும்
வருந்துணை சுகமில் லாமல் வாழ்குவா யென்று சொல்லித்
தெருத்தூளைத் தூற்றிச் சென்றான் சேர்ந்தது நேசன்
[தோஷம்.

38. "நீ உன்னுடைய மறு ஜன்மத்தில் சௌக்கியமில்லாத தேகத்தை உடையவனுயும் உனக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகள் உயிருடன் இல்லாமலும் உன்னுடைய மனைவியினுல் நீ அபவாதத் தையும் நிந்தையையும் அடைந்தும் சகோதரரால் சௌக்கியங்கள் ஏற்படாமலும் வாழக்கடவாய்" என்று ஜாதகரைப் பார்த்து இவ ருடைய சினேகிதர் சொல்லிவிட்டுத் தெருவிலுள்ள மண்தூளை வாரி எடுத்து தூற்றிவிட்டுப் போய்விட்டார். இந்தச் சினேகிதருடைய சாபம் ஜாதகரை வந்து அடைந்தது.

39. இப்படி பலவாய்த் தோஷ மெய்திற்று விவனுக் கேதான்
செப்புவே னந்தி யத்திற் சிறப்புள காஞ்சி தன்னில்
தப்பிதம் பேதி யாலே சண்டன்தன் பதிக்குச் சென்று
ஒப்புடன் மலரோ னுலே வுலகினில் வரையப் பட்டு;

39. இவ்விதம் பலவிதமான தோஷங்கள் ஜாதகரை வந்தடைந் தன. இவர் தன்னுடைய முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் சிறந்த காஞ்சிமா நகரத்தில் பேதிகண்டு இறந்து எமனுடைய பட்ட ணத்திற்குப் போய்ப் பிரமதேவரால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு;

40. வந்தவ னிவனே யென்றோம் வரைகிரோ மிச்சென் மத்தில்
முன்வினை பலவாய்ச் சேர்ந்து மூண்டன விவனுக் கேதான்
தன்துணை யாண்பால் காணுன் தன்சுத ராண்பால்
[தோஷம்
வந்திடு துணைவி மாரும் வளமிலா வாழ்வா ளாவள்.

40. ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவருக்கு இந்த ஜன்மத்தில் முன் ஜன்மத்திய பலவிதமான பாபங்கள் வந்து அடைந்தன. இவருக்குச் சகோதரன்

கிடையாது. இவருக்கு ஆண் குழந்தைகள் இறந்து விடுவார்கள். இவருடைய சகோதரிகளும் சிலர் இறந்து விடுவார்கள். ஒருத்தி மட்டுமே சுகமில்லாமல் விதவையாக வாழ்பவள் ஆவள்.

41. வந்தவூழ் தீர வேண்டி வரைகிரேரும் கிரியை யொன்று
முந்தின கர்ம சாந்தி முதன்வனுஞ் செய்து பின்னல்
சந்ததங் காளாத்தி சென்று தன்மனை யோடுங் கூடச்
சந்ததந் தீர்த்தந் தோய்ந்து சங்கரர்க் கர்ச்சித் தேத்தி;

41. ஜாதகருக்குச் சம்பவித்த தோஷங்கள் நிவிர்த்தியாவதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்ரேரும். இவர் ஒரு சிறந்த கர்ம சாந்தியைச் செய்த பிறகு காளஹஸ்தி க்ஷேத்திரத்திற்குப்போய்த் தன்னுடைய மனைவியுடன் அங்குள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சிவபெருமானுக்கு அர்ச்சனை செய்து அவரைத் தொழுது ;

42. ஆறஞ்சு மறையோர்க் கன்ன மன்புட னளித்து
[வின்னேன்
ஊரினில் தென்மேல் திக்கி லுதித்திடுங் கணேச னுக்கு
மாரன்தன் மரண மட்டு மணிவிளக் கொன்று செய்யத்
தூரிடு முன்னூழ்த் தோஷஞ் சுதராணின் விருத்தி
[யென்ரேரும்.

42. முப்பது பிராம்மணர்களுக்குச் சாப்பாட்டை பிரியத்துடன் போட்டு ஜாதகர் தன்னுடைய ஊரில் தென்மேற்குத் திக்கிலுள்ள விஞயகருடைய கோயிலுக்குத் தன்னுடைய மரணகாலம் வரையிலும் ஒரு மணிவிளக்கைச் செய்து ஏற்றிவைக்க இவருடைய முன் ஜன்மத்திய பாவங்கள் விலகிவிடும். இவருக்கு ஆண் குழந்தைகள் விருத்தியடைவார்கள் என்று சொல்லுகின்ரேரும்.

43. ஜயமுனி சொல்லு கின்ரூர் செப்பீனீர் கரும சாந்தி
தயையுடன் விபரஞ் சொல்வீர் சாற்றுவேன் கேளு
[மையா
நயமுள மறையோர் சாபம் நற்றுணை நேசன் சாபம்
வியமாகச் சொல்லு கின்றேன் வித்தகி கேட்டி டாயே.

43. ஜய முனிவர் கேட்கின்ரூர். ஒரு கரும சாந்தியைச் செய்ய வேண்டுமென்று சொன்னீர். தயை செய்து அதனுடைய விபரத்தைச் சொல்லுவீர் என்று கேட்க அதைச் சொல்லுகின்றேன், கேட்பீர், என்று அகஸ்தியர் பதில் சொன்னர். நயப்பையும் நல்ல தவத்தையும் உடைய பிராமணருடையதும் நல்ல சினேகிதனுடையதுமான சாபம் ஆகிய இவை நிவிர்த்தியாவதற்கு விபரத்தைக் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

வேறு

44. தானியஞ்சமித்துக் கலசமு மொன்பான்
சதிபதி பிம்பமு மிரண்டாம்
ஆனவஸ் திரமுமதற்குமே சாத்தி
அவனுக்குக் கொடி தூசவித்து
பான்மையா யாவின் நெய்யதனிலோதம்
பண்ணியே மூலத்தைக் கேளாய்
ஓம்-அய்யும் கிலியும் சவ்வும்-
மவ்வும் ரியும்-ஸ்ரீயும் சாபம்நீங்க
மௌனமாய்ச் சகஸ்ர முரைத்துப்பின்சலத்தை
விட்டபிடேகஞ் செய்துபின் கேளாய்;

44. நவதான்யங்கள் சமித்துக்கள் ஒன்பது கலசங்கள் ஏற்படுத்தி சிவன் பார்வதி இவர்களுடைய இரண்டு பிம்பங்களையும் செய்து வைத்து இவைகளுக்கு வஸ்திரம் தரிப்பித்து ஒரு கொடிச் சீலையை சாற்றிப் பசுவின் நெய்யினால் ஓமம் பண்ணிவைத்து மூலமந்திரமாகிய "ஓம் அய்யும் கிலியும் சவ்வும் மவ்வும் ரியும் ஸ்ரீயும் சாபம் நீங்க" என்ற மந்திரத்தை ரகசியமாக ஆயிரம் தடவை சொல்லிப் பிறகு அபிஷேகம் செய்து ;

வேறு

45. சத்தியின் பூசை செய்து சங்கர னடியா ருக்குச்
சுத்தமா யேழு பேர்க்குச் சுகமுட னன்ன மீய
பத்திய வினையும் போகும் பாலக னுதிக்கத் தீர்க்கம்
எத்திசை புகழு மெங்க ளீச்வரி கேட்டி டாயே.

45. பார்வதிக்குப் பூஜை செய்து சிவபெருமானுடைய அடியாராகிய சுத்தமான ஏழு பரதேசிகளுக்குச் சுகமான சாப்பாட்டைக் கொடுத்தால் ஜாதகருக்கு ஏற்பட்ட பாபங்கள் விலகிப்போய்விடும். ஆண் குழந்தை பிறந்தால் அது நீண்ட ஆயுளை உடையதாக இருக்கும், இவருக்கு எல்லாத் திக்குகளிலும் பெருமையும் கீர்த்தியும் உண்டாகும், எங்களுடைய ஈஸ்வரியாகிய பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது குணநிசயங்கள்

46. சொற்படிச் செய்வா னகில்
தோன்றிடுஞ் சுதரா ணென்று
சொற்படிச் செய்யா னகில்
துலங்காது வென்று சொன்னேம்

மைப்படி மாதிரு வுக்கு
வரைகிரே மிருங் றத்தாள்
தப்பித மில்லா ளாவள்
தன்மனங் கபடு மில்லாள்.

46. நாங்கள் சொல்லியபடி ஜாதகர் செய்வாராகில் இவருக்கு ஓர் ஆண் குழந்தை பிறக்கும், செய்யாவிட்டால் ஆண் குழந்தைப் பிறக்காது என்று சொல்லுகின்றோம். இவருடைய தாயாரது விஷயங்களைச் சொல்லுகின்றோம். இவள் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை உடையவளாவள். இவன் குற்றங்களைச் செய்யாதவளாக இருப்பாள். இவள் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனைகளில்லாதவளாக இருப்பாள்.

ஜாதகருடைய தாயாருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

47. வருவோரை யாத ரிப்பள்
மானில நல்லோ ளாவள்
திருமக ளொப்ப ளாவள்
தேவியும் யோக சாலி
பெரும்புத்தி யுடைய ளாவள்
புருடன்றன் மனம்போல் வாழ்வள்
திருகுகள் சொல்லா ளாவள்
துணைவரு மிருநான் கென்றோம்.

47. ஜாதகருடைய தாயார் தன்னிடம் வருகிறவர்களைக் காப்பாற்றுவாள். இவள் இந்தப் பூமியில் நல்லவளாக இருப்பாள். இவள் லட்சுமிக்குச் சமானமானவளாக இருப்பாள், யோகத்தை உடையவளாக இருப்பாள். இவள் மேன்மையான புத்தியை உடையவள், தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல் ஒற்றுமையாக இருந்து வாழ்வாள். இவள் குற்றமானவற்றைச் சொல்லமாட்டாள். இவளுக்குச் சகோதரங்கள் எட்டு பேர் ஆவர் என்று சொல்லுகிறோம்.

ஜாதகருடைய தாயாரது முன் ஜன்மம்

48. இல்லமு மருகி லுத்திர மிசைந்தன மிருவர் தீர்க்கம்
வல்லியின் பூர்வஞ் சொல்வே னருணைக்கு வுத்த ரத்தில்
புல்லிய சிற்றூர் தன்னில் பிறந்தனள் ரெட்டி வம்சம்
நல்லதோர் குடும்பி யாகி வடியார்க்கு வன்ன மீந்து.

48. ஜாதகருடைய தாயாரது வீடு சமீபத்தில் வடக்குத் திக்கில் இருக்கும். இவளுக்கு இரண்டு சகோதரர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவளுடைய முன்ஜன்மத்தைப்பற்றிச்

சொல்லுகின்றேன். அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத் திற்கு வடக்கில் ஒரு சிறப்பில்லாத சிறிய கிராமத்தில் ஒரு ரெட்டியாரு டைய குலத்தில் தன்னுடைய முன்ஜன்மத்தில் பிறந்தாள், ஒரு நல்ல அந்தஸ்திலுள்ள குடும்பினியாக இருந்து பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டு ;

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

49. வினையொன்று மில்லா ளாகி மேவினுள் காலன் பக்கல்
கனமுள பிரமன் லக்கங் கருதியே யுதித்தா ளென்றேஞ்
சினமிலாள் வறுமை யில்லாள் செப்புவோ மிவள்பின் [ஜன்மம்
அனையவே காளாத்தி தன்னில வளுமிக் குலத்தி லேதான்;

49. ஜாதகருடைய தாயார் யாதொரு பாபமும் இல்லாதவளாகி இறந்து எமபட்டணத்திற்குப்போனாள், மேண்மையான பிரமதேவரு டைய பிரமலிபியுடன் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். இவள் கோபமில்லாதவள், தரித்திரமும் கஷ்டங்களும் இல்லாதவள். இவளுடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். காளஹஸ்தி என்ற க்ஷேத்திரத்தில் இந்த ஜன்மத் தில் பிறந்த குலமாகிய வேளாளர் குலத்தில் ;

ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மம்

50. உதிப்பளாஞ் சுகமாய் வாழ்வ ளுரைக்கிறேந் தந்தை [பூர்வஞ்
சதியிலாத் திருகச் சூரில் ஜனித்தன னிக்கு லத்தில்
பதியினில் திருவு முண்டாய்ப் பலருக்குச் சகாய னாகி
அதிகார முடைய னாகி யவனியில் வாழுங் காளில் ;

50. ஜாதகருடைய தாயார் இந்த ஜன்மத்தில் பிறந்து சுகமாய் வாழ்வாள். ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம், இவர் கெடுதியில்லாத திருக்கச்சூர் என்ற ஸ்தலத் தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய வேளாளர்குலத்தில் பிறந்தார். இவர் நல்ல மேன்மையான அந்தஸ்திலிருந்துகொண்டு தன்னுடைய வீட்டில் லட்சுமி கடாட்சம் உடையவராகிப் பலருக்கு உபகாரியாக இருந்து கொண்டும் அதிகாரத்தைச் செலுத்துபவராகியும் இந்த பூமியில் வாழ்கின்ற காலத்தில் ;

51. அண்ணிய மாது தானு
மவள்தந்தை யில்லம் வாழப்
பின்னையு வேறொ ருத்தன்
பேதைமேல் மோகங் கொள்ளத்

கன்னிகை தனியே யோர்நாள்
குளத்துக்குச் செல்லும் போது
பின்னங்கள் செய்தா னென்றேரும்
பேதையு மனங் கலங்கி ;

51. வேறொரு ஸ்திரீ ஒருத்தி தன்னுடைய தகப்பனாருடைய வீட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும்பொழுது இன்னொருவன் இவள் மேல் மையல் என்ற காம ஆசையை உடையவனாகி இந்த ஸ்திரீ ஜலம் கொண்டுவர ஒரு குளத்திற்குத் தனியாய்ப் போகும்பொழுது அந்த வேறொருவன் அவளைக் கெடுத்து விட்டான் என்று சொல்லுகின்றோம். இந்த ஸ்திரீ தன்னுடைய மனத்தில் துன்பத்தையும் திகிலையும் அடைந்து ;

52. தன்னுடைத் தூணவ ரோடு
சாற்றினா ளந்தச் சங்கை
அன்னவர் கோபங் கொண்டு
வதிகாரி யுடனே சொல்லப்
பின்னங்கள் செய்தோன் தன்னைப்
பேதாவா லழைத்துக் கேட்கப்
பொன்பண மவனால் பெற்றுப்
பேதைமேல் குற்றஞ் சாட்ட ;

52. இந்த ஸ்திரீ நடந்த சம்பவங்களைத் தன்னுடைய சகோதரர் களிடத்தில் சொன்னாள். இவர்கள் கோபத்தை உடையவர்களாகி அதிகாரியாகிய ஜாதகருடைய தகப்பனாரிடம் சொல்லவே, இவர் குற்றத்தைச் செய்தவனை ஓர் ஆளிடம் உத்தரவு அனுப்பி வர வழைத்து அந்த அன்னியனைக் கேட்டுப், பிறகு அவனிடம் பொன்னாகிய பணத்தைக் கைக்கூலியாக வாங்கிக்கொண்டு. அந்த ஸ்திரீயின் மேலேயே குற்றத்தைச் சுமத்திவிட ;

53. மாதவு மனங்க லங்கி வரைகிரூள் சாபந் தானுஞ்
தீதுகள் செய்தோன் பக்கல் பொன்னது வாங்கிக்
[கொண்டு
பாதக மென்மேல் சொன்ன பாவிக்கு மறுஜன் மத்தில்
கோதிலாத் தூணவ ரின்றிக் குழவிகள் துன்ப மாயும் ;

53. அந்த ஸ்திரீ தன்னுடைய மனத்தில் திகிலடைந்து சாபத் தைக் கொடுக்கின்றாள். "கெடுதிகளைச்செய்தவனிடமிருந்து அல்லது குற்றவாளியிடமிருந்து சில பொருள்களை லஞ்சமாக வாங்கிக் கொண்டு என்மேலேயே குற்றத்தைச் சாட்டிவிட்ட பாபிக்குத் தன்னு டைய மறு ஜன்மத்தில் சகோதரர்கள் இல்லாமல் இருக்கக்கடவது, குழந்தைகள் இறந்து விடக்கடவது";

54. தந்தங்கள் குற்ற மாயுஞ் சரியிலா மாது வாலே
வந்திடு மனேக நிந்தை வகுத்துப்பின் சென்ரு
[ளென்ரேரும்
இந்தவாறு மன்னன் தானு மிகபரன் தொண்டு பூண்டு
அந்தகன் பக்கல் சென் றயனுமே வரையப் பட்டு ;

54, பற்கள் கெடுதியை அடையக் கடவது, நல்ல நடத்தை யில்லாத தன்னுடைய மனேவியால் பலவிதமான அபவாதங்கள் நேரிடக்கடவது'' இவ்விதமாக அந்த ஸ்திரீ அதிகாரியாகிய ஜாதக ருடைய தகப்பனுரைப் பார்த்துச் சொல்லிவிட்டு பிறகுபோய்விட்டாள் என்று சொல்லுகின்ரேரும். இப்படிப்பட்ட ஜாதகருடைய தகப்பனர் கடவுளிடத்தில் அன்பும் ஆசையும் உடையவராகி அக்கடவுளுக்கு வேலேகளேச் செய்துகொண்டு பிறகு இறந்து எமனிடம் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ;

55. கங்கையின் குல மு திதான் காதலி சாபம் போலே
பொங்கிய துணேவர் சேதம் புத்திரர் சுகமில் லாதான்
நங்கையால் நிந்தை யுண்டு நற்றந்தங் குற்றம் மெய்தும்
பங்கய தடாகம் போலே பருகிடுஞ் செல்வ மென்ரேரும்.

55. ஜாதகரின் தகப்பனர் இந்த ஜன்மத்தில் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் பிறந்தார். அந்த ஸ்திரீயினுடைய சாபத் தைப் போலவே இவருக்குச் சகோதரர்கள் இறந்து விடுவார்கள். இவர் புத்திர சுகம் இல்லாதவராக இருப்பார். இவருக்குத் தன்னுடைய மனேவியால் பழிகளும் ஏற்பட்டும் நல்ல பற்கள் கெடுதியை அடைந்தும் ஒரு காலத்தில் அழகாக இருந்த தாமரைக்குளம் இன்னெரு காலத் தில் வற்றிப்போய் அழகை இழந்து விடுவதைப்போல் ஒரு காலத்தில் அதிகமாய் இருந்த செல்வம் தற்சமயம் வற்றிப்போய்விடும், என்று சொல்லுகின்ரேரும்.

ஜாதகருடைய தகப்பனரது மரணகாலமும் மறுஜன்மமும்

56. நாற்பது வொன்று வாண்டில்
நன்மீன மாதந் தன்னில்
கூப்பிடு வானும் காலன்
குறித்ததோர் தந்தையைத் தான்
தீர்ப்பாகப் பின்ஜன் மத்தைச்
செப்புவோங் காஞ்சி தன்னில்
தோற்பிலா வைசியச் சேயாய்
ஜனிப்பனு மென்று சொன்னேரும்.

56. ஜாதகருக்கு நாற்பத்தொன்றுவது வயதில் சிறந்த மீன மாதம் என்ற பங்குனி மாதத்தில் இவருடைய தகப்பனுரை எமன் வந்து அழைப்பார், அஃதாவது தகப்பனுர் இறந்து விடுவார். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றி உண்மையாகவும் கண்டிப்பாகவும் சொல்லுகின்றேரும். இவர் காஞ்சிமா நகரத்தில் தோல்வியை அடையாத ஒரு வைசியராக மறுஜன்மத்தில் பிறப்பார் என்று சொல்லுகின்றேரும்.

ஜாதகருடைய தாயாரது மரணகாலமும் மூத்தசகோதரியின் மரண காலமும்

57. அன்னையு நாற்பா லலி லேப்பசி மாதந் தன்னில்
உன்னத கண்ட மென்றே முரைக்கிறே மைம்ப
[தாண்டில்
முன்துணவியுங் கண்டம் மொழிந்தது தப்பா வாகுங்
கன்னென மொழியி னுளே கழறுவோ மேலுங் கேளே.

57. ஜாதகருக்கு நாற்பத்துநான்காவது வயதில் ஐப்பசி மாதத்தில் இவருடைய தாயார் இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றேரும். இவருக்கு ஐம்பதாவது வயதில் இவருடைய மூத்த சகோதரி இறந்து விடுவாள். நாங்கள் சொல்லியவார்த்தைகளின் பிரகாரம் பலா பலன்கள் தவறிடாமல் நடக்கும். சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தைகளை யுடைய பார்வதியம்மையே! இன்னும் அதிகமாகச் சொல்லுகின்றேரும், கேட்பீராக.

ஜாதகருடைய கண்டமும் மரணகாலமும்

58. இன்னவன் மரண கால மியம்புவோ மைம்ப தாண்டில்
தன்னிலே கண்டம் வந்து சண்முகர் தன்னுல் நீங்கிப்
பின்னையு மன்பா லறில் புரட்டை மாதந் தன்னில்
தன்னிலே பரணி தன்னில் சாந்திடுங் கண்டந் தானே.

58. ஜாதகருடைய மரண காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவருக்கு ஐம்பதாவது வயதில் ஒரு கண்டம் நேரிடும், அஃது ஆறுமுகக் கடவுளின் அருளால் நிவிர்த்தியாகி மறுபடியும் ஐம்பத்தாருவது வயதில் புரட்டாசி மாதத்தில் பரணி நட்சத்திரத்தில் கண்டம் நேரிட்டு இறந்து விடுவார்.

குறிப்பு:—புரட்டை என்பது பூரட்டாதி நட்சத்திரம் ஆனபடியால் பூரட்டாதி நட்சத்திரத்திற்குடைய மாதங்களாகிய மாசிமாதம், பங்குனி மாதம் என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

ஜாதகருடைய மறுஜன்மம்

59. மறுஜன்மம் பெண்ணை யோரம் வடக்கினில் சிற்றூர்
[தன்னில்
உறைவனும் ரெட்டி வம்ச முறைபூமி அதிக முண்டாய்
நிறையவே குடும்பி யாகி நிமலனும் வாழ்வா னவன்
அருமறை முடிவி லாடு மம்பிகை யாளே கேளாய்.

59. ஜாதகர் தன்னுடைய மறுஜன்மத்தில் பெண்ணை ஆற்றின் வடக்குக் கரையோரத்தில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் ஒரு ரெட்டியா ருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் அதிகமான நிலங்களை உடையவராகியும் பெரிய குடும்பியாகியும் இருந்து வாழ்பவ ராவர். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய யோகபாவம்

60. ஜனித்தகாள் முதலா யாகச் சேயன்தன் மரண மட்டுந்
தனதானிய மேன்மே லோங்குஞ் சந்திரன் பிறைபோல்
[யோகம்.
வினையது வறுமை காணுன் மிகுந்தபூ மிகளுஞ் சேர்ப்பன்
துணைவியி னுதவி யாலே செழிப்பான குடும்பி யாவன்.

60. ஜாதகர் பிறந்த கால முதற்கொண்டு தன்னுடைய மரண காலம் வரையிலும் இவருக்குத் தனமும் தான்யங்களும் மேன் மேலும் வளர்ந்து கொண்டே போகும். இவருக்கு யோகம் வளர் பிறைச் சந்திரனைப்போல நாளுக்குநாள் விருத்தியாகிக் கொண்டே போகும். இவர் கஷ்டங்களையும் தரித்திரத்தையும் அனுபவிக்க மாட்டார், அதிகமான நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் தன்னுடைய சகோதரியின் உதவியால் செழுமையான குடும்பி யாக இருப்பார்.

61. கேசரி யோகஞ் சொல்வோங் கௌரவ குடும்பி யாவன்
தாசிதா சராளு முள்ளான் தயையிலா நெஞ்ச னவன்
பாசமாய்ப் பூமி வீடு பணிதிகள் முப்பாயி ரம்பொன்
பேசுவோ மிவனுக் கேதான் புண்ணிய வதியே கேளாய்.

61. ஜாதகருக்குச் கேசரியோகம் உண்டு என்று சொல்லுகின்றோம். இவர் கௌரவமான குடும்பஸ்தராக இருப்பார். இவருக்கு ஆண் வேலைக்காரர்களும் பெண் வேலைக்காரர்களும் இருப்பார்கள். இவர் இரக்கமில்லாத மனத்தை உடையவராவர். இவர் ஆசையுடன் நிலங் கள் வீடு ஆபரணங்கள் ஆகிய இவைகளை முப்பதாயிரம் பொன் பெறக் கூடியனவாகச் சேர்ப்பார் என்று சொல்லுகின்றோம். புண்ணியவதி யாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—கேசரியோகம் என்பது சந்திரனுக்குக் கேந்திரத்தில் குரு இருப்பதாகும். இந்த ஜாதகத்தில் சந்திரனுக்குச் சதுர்த்த கேந்திரமாகிய நான்காவது பாவத்தில் குரு இருப்பதால் கேசரியோகம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த யோக விஷயமாய்த் தமிழ் ஜாதகாலங்காரம் இருநூற்றெழுபத்து நான்காவதும் இருநூற்றெழுபத்தாருவதுமான பாடல்களையும் ஜாதக சிந்தாமணி இரண்டாயிரத்து நூற்றுத் தொண்ணூற்றிரண்டாவது பாடலையும் ஜாதக் பாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றுப்பதினாருவது சுலோகத்தையும், பலதீபிகை ஆருவது அத்தியாயம் பத்தாவது சுலோகத்தையும் பார்க்கவும்.

ஜனனகால தசை இருப்பும் பலனும்

62. ஜனித்திடுங் காலந் தன்னில் சேய்தசை தனிலி ருப்புக்
குனித்திடு மாண்டு வொன்று கூறிய திங்க ளெட்டும்
வினையுண்டு ஜாத கர்க்கு மேதினில் பலிதம் பூமி
கனமுள பின்பா கத்தில் கழறுவோ மேலுங் கேளே.

52. ஜாதகர் பிறந்த பொழுது சேய் என்ற அங்காரக மகா தசையில் இருப்பு கணிதப் பிரகாரம் ஒரு வருஷமும் எட்டு மாதங்களும் ஆகும். இந்தக் காலத்தில் ஜாதகருக்கு நோய்கள் உண்டாகும். நிலங்கள் நல்ல பலிதத்தைத் தரும் மற்ற விஷயங்களைச் சிறந்த பின் பாகத்தில் சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 125

ஜனனகால கிரகநிலை

1. [1]அரியது ஜனன மாக [2]வந்தகன் [3]மூடவன் [4]புந்தி [5]பரிதி[6]சேய் ஜன்மந் தங்கப் [7]பிறைமூன்றில் [8]சிகியு [நாலில்
குருயேழில் ராகு பத்தில் கூடிய கிரகம் நின்ருல்
உரைகுவீர் பலனே யென்று வுமையவள் கேட்க லுற்ருள்

1. சிம்மம் ஜன்மலக்கினமாகிச் சுக்கிரனும் சனியும் புதனும் சூரியனும் அங்காரகனும், ஜன்மலக்கினத்திலும், சந்திரன் மூன்றிலும், கேது நான்கிலும், குரு ஏழிலும், இராகு பத்திலும் இருந்து, இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்டார்.

கிரகநிலை

		ராகு	
குரு	இராசி சக்கரம்		
			ல. சூ. பு. சு. அ. சனி
	கேது	சந்திரன்	

சுவாதி 3-ஆம் பாதம், இராகு தசை வரு 7-10-15

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சை சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற் குருவும், மிதுனத்தில் அங்காரகனும், கன்னியிற் சுக்கிரனும் கேதுவும், துலாத்திற் சூரியனும், விருச்சிகத்திற் புதனும், தனுசிற் சனியும், கும்பத்திற் சந்திரனும், மீனத்தில் இராகுவும் ஆகும். புதனும் குருவும் வக்கிரகதியில் இருக்கின்றார்கள். அங்காரகனும் புதனும் சுக்கிரனும் சனியும் அஸ்தமனமடைந்திருக்கின்றார்கள்.

---

1. சிம்மம்.
2. சுக்கிரன்.
3. சனி.
4. புதன்.
5. சூரியன்.
6. அங்காரகன்.
7. சந்திரன்.
8. கேது.

2. பார்வதி கேட்கும் போது பிருகுவும் சொல்லு கின்றார்
சீர்புக ழாண்பால் ஐன்மஞ் செப்புவோம் தந்தை யில்லந்
தீரமாய்க் கீழ்மேல் வீதி தென்வாடை மேற்கில் தந்தி
மாரியுங் கந்தன் கீழ்ப்பால் வடதிசை நதிக ளுண்டு.

2. பார்வதி கேட்கும்பொழுது பிருகு மகரிஷி பலாபலன்களைச் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தை யாகும். இந்தக் குழந்தையினுடைய தகப்பனருடைய வீட்டைப்பற்றிச் சொல்லுகின் றோம். இந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் தென்னண்டை வாடை யில் இருக்கும், மேற்குத் திக்கில் விஞ்யகக் கடவுளின் கோயிலும் கிழக் குத் திக்கில் மாரியம்மனின் கோயிலும் முருகக் கடவுளின் கோயிலும் வடக்கு திக்கில் ஆறுகளும் இருக்கும்.

3. இந்தக ல்லடை யாளத்து
ளிலகிய சிற்றூர் தன்னில்
வந்தவன் கௌரி சேயாய்
வரைகிறே மிவனின் யோகம்
தந்தைதாய்த் துணைவர் புத்திரர்
தன்மனை யோகஞ் தானும்
வந்திடு முன்பின் ஜன்மம்
வரைகிறே மிந்நூல் தன்னில்.

3. இவ்விதமான நல்ல டையாளங்களுக்குள்ளே ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் கௌரிகுலம் என்ற வேளாளர் குலத் தில் பிறந்தவர் என்று சொல்லுகின்றோம். இவருடைய யோகத்தை யும் தகப்பனர் தரயார் சகோதரர்கள் சந்ததிகள் மனைவி ஆகிய இவர் களின் யோகங்களையும் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளை யும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரங்களும் (சகோதர பாவமும்) குணதிசயங்களும்

4. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ நவம தாகு
முந்திய துணைகள் நான்கு மொழிகிறோஞ் சிலவே சேதம்
இந்ததோர் தந்தை சேதி யியம்புவோம் மால்கி றத்தன்
சிந்தையில் கபடு மில்லான் சீலனு மென்று சொல்வோம்

4. ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்கள் மொத்தம் ஒன்பது பேர் ஆவார்கள். இவருக்கு மூத்த சகோதரர்கள் நான்கு பேர் ஆவர். சிலர் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். தகப்பனுடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் மஹாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தை உடையவர்.

இவர் தன்னுடைய மனத்தில் கள்ளம்கபடம் வஞ்சனை ஆகிய இவை இல்லாதவராவர். இவர் நல்லொழுக்கத்தை உடையவர் என்று சொல்லுகின்றோம்.

5. நல்லோர்க்கு நல்ல னுவன்
நயம்படக் கூறு வானும்
இல்லையென்று ரைக்க மாட்டான்
யாரையு முறவு கொள்வன்
நல்லவ னுகி வாழ்வன்
நாதனுர் பக்தி பூண்பன்
இல்லமும் புதிதாய்ச் செய்வ
னெளியோர்மேல் பட்ச முள்ளான்.

5. ஜாதகருடைய தகப்பனுர் நல்லவர்களிடம் நல்லபடியே நடந்து கொள்ளுவார், இனிமையாகப் பேசுபவர் ஆவர். இவர் பிறருக்கு உதவி செய்யத் தன்னிடத்தில் ஒன்றும் இல்லை என்று சொல்லமாட்டார், எல்லோரிடமும் சினேகம் செய்து கொள்வார். இவர் நல்லவராக இருந்து வாழ்வார், கடவுளிடத்தில் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவர் வீட்டைப் புதுப்பிப்பார், ஏழைகளிடத்தில் பிரியமுள்ளவராக இருப்பார்.

6. பலவித வணிபஞ் செய்வன் பாருகள் சேர்ப்பா னுவன்
விலைமாதர் விருப்பங் கொள்வன் விரைவாத முடைய
[னுவன்
தலைவிமேல் பட்ச முள்ளான் சாப்பாட்டுச் சுகிய னுவன்
கலவர புத்தி யுள்ளான் கல்வியுங் கொஞ்ச முள்ளான்.

6. ஜாதகருடைய தகப்பனுர் பற்பல வியாபாரங்களைச் செய்வார், நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். தாலிகளிடத்தில் அன்புள்ளவராக இருப்பார். இவருக்கு விரைவாத ரோகம் இருக்கும். இவர் தன்னுடைய மனைவியினிடத்தில் அன்புள்ளவராக இருப்பார், நல்ல சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிக்கக் கூடியவராவர். இவர் கலக்கத்தால் தெளிவில்லாத புத்தியை உடையவராவர். இவர் சிறிது வித்தையை உடையவராவர்.

7. பந்துவை யாத ரிப்பன் பாருளோர் வசியங் கொள்வன்
வந்தவர்க் கன்ன மீவன் மாடுகள் விருத்தி யுள்ளான்
முந்தின குடும்பி யாவன் முன்கரம் விஷ்ணு ரேகை
சொந்தலா ஸ்ரீவியா பாரஞ் செய்வனு மிவனே யம்மா.

7. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார். நிலங்களை உடையவர்களைத் தன் பக்கமாக இருக்கும்படி

கவர்ந்து கொள்வார், தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவார். இவரிடம் கால் நடைகள் விருத்தியுள்ளனவாக இருக்கும். இவர் ஒரு மேன்மையான சிறந்த குடும்பஸ்தராக இருப்பார். இவருடைய உள்ளங்கைகளில் விஷ்ணுரேகை என்ற ஒரு விதமான ரேகை இருக்கும். இவர் லாகிரி வஸ்துக்களில் வியாபாரத்தைச் சொந்தமாகச் செய்வார், பார்வதியம்மையே!

8. பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்
அண்டினோர் தம்மைக் காப்ப னரிபத்தி பூண்பா னவன்
எண்டிசை கீர்த்தி கொள்வ னெதிரிக ளில்லா னவன்
குண்டுணி கலகங் கூறன் குத்திரம் பேசா னென்றோம்.

8. ஜாதகருடைய் தகப்பனர் தன்முன்னோர்களுடைய பழைய காலத்து நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவர் தன்னிடம் வந்து சேர்ந்தவர்களைக் காப்பாற்றுவார், மஹா விஷ்ணுவின் மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவர் எட்டுத் திக்குகளிலும் புகழையும் பெருமையையும் உடையவராக இருப்பார். இவருக்குப் பகைவர்கள் கிடையா. இவர் கலகமான வார்த்தைகளையும் கோள்களையும் சொல்லமாட்டார்.

ஜாதகருடைய குணாதிசயங்கள்

9. இங்நெறி யுடையா னுக்கு விவனுமே சேஷ்ட னவன்
அன்னவ னுதிப்பா னவ னனைகிறோ மவன்குணத்தைப்
பின்னமில் லாத தேகி பொய்வார்த்தை புகலா
[னென்றோம்
பன்னியே பேச வல்லான் பலவித கல்வி கற்பன்

9. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணாதிசயங்களையுடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் மூத்த குழந்தையாகப் பிறப்பார். இவருடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் யாதொரு அவயவக்குறைவுகளையும் இல்லாத தேகத்தை உடையவராவர், பொய்யான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவர் விமரிசையாகவும் சாமர்த்தியமாகவும் பேசும் சக்தியை உடையவராவர், பலவிதமான வித்தைகளைக் கற்றுக்கொள்ளுவார்.

10. ஆனையி னிறத்த னவ னனேகமாம் வணிபஞ் செய்வன்
ஈனமாங் குணங்க ளில்லா னெதிரிக்கு வஞ்சா னவன்
மானனை யார்கள் மேலே மையலு மதிகங் கொள்வன்
தன்முகம் விளங்கச் செய்வன் தவத்தினு லுதிப்பா
[னென்றோம்.

10. ஜாதகர் யானையைப் போன்ற ஒருவிதமான கறுப்பு நிறத்தை உடையவராக இருப்பார். இவர் பலவிதமான வியாபாரங்களைச் செய்வார். இவர் இழிவான குணங்கள் இல்லாதவராக இருப்பார், தன்

னுடைய பகைவர்களுக்குப் பயப்படாதவராவர். இவர் மானிப்போன்ற அழகுள்ள ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை அதிகமாக உடையராவர். இவர் தன்னுடைய முகத்தை அழகு படுத்திக் கொள்ளுவார். இவர் தவத்தின் பயனுக ஜான மானவராக இருப்பார் என்று சொல்லுகின்றோம்.

11. குணமது சீல னவன்
குறிப்பபினில் கொடுமை தோன்றுங்
கணக்கினி லுாக வானுங்
காரியச் சமர்த்த னவன்
பிணக்குக ளொருவர்க் கொண்ணன்
பூமியு மதிகஞ் சேர்ப்பன்
வணக்கமு முடைய னவன்
மங்கையே மேலுங் கேளே.

11. இவர் நல்லொழுக்கமும் நல்ல குணங்களும் உடையவராவர். இவர் பார்வைக்குக் கொடூரமானவராகக் காணப்படுவார். இவர் கணிதம் செய்வதில் நுட்பமான அறிவை உடையவராவர், காரியங்களைச் செய்து முடிப்பதில் வல்லவராக இருப்பார். இவர் யாருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டார், நிலங்களை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் கீழ்ப்படிதலை உடையவராக இருப்பார். பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் சொல்வதைக் கேட்பீராக.

12. தந்தைதாள் பூமி தன்னைத் தானவன் விருத்தி செய்வன்
பிந்திய பூமி சேர்ப்பன் போஜன சுகிய னவன்
பிந்தினோர் தம்மைக் காப்பன் பலசகா யங்கள் செய்வன்
தன்தன முடைய னவன் சல்லியங் கொள்ளா
[னென்றோம்.

12. இவர் தன்னுடைய தகப்பனருடைய நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார், மேன்மேலும் நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் நல்ல சாபாட்டைச் சாபிட்டுச் சுகத்தை அனுபவிப்பவராவர். ஏழைகளை இவர் காப்பாற்றுவார். இவர் பிறருக்குப் பலவிதமான உபகாரங்களைச் செய்வார். இவர் தன்னுடைய சுயார்ஜிதமான சொத்தை உடையவராவர். இவர் கடன் வாங்கமாட்டார் என்று சொல்லுகின்றோம்.

13. கந்தியும் பணையே ரில்லம் நற்பணி தூயிலு முள்ளான்
வந்திடும் நிதியுஞ் செந்நெல் வரைந்திடு மிவனுக் கேதான்
செந்திரு கடாக்ஷ மெய்துஞ் செய்ந்நன்றி மறவா னவன்
பிந்தியு மடியார் பத்தி பேணுவா ணிவனே யம்மா.

13. ரிஷபங்களையும் நிலங்களையும் ஏர்களையும் வீடுகளையும் நல்ல ஆபரணங்களையும் உடையவராக இருப்பார். தாக்கச் சுகத்தையும்

உடையவராவார். இவருக்குத் தனமும் நல்ல நெல் தான்யங்களும் வந்து சேரும். இவருக்குக் கடவுளுடையவும் பெரியார்களுடையவும் கிருபையும் அருளும் உண்டாகும். இவர் தனக்குப் பிறர் செய்த உபகாரத்தை மறக்காதவராக இருப்பார். இவர் பரதேசிகளிடத்திலும் கடவுளின் பக்தர்களிடத்திலும் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார், பார்வதியம்மையே !

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

14. இன்னவன் தூணவர் தம்மை யியம்புவோ மிருமூன் ரூவர்
கன்னிகை யிரண்டு தீர்க்கங் காளையு மொருவன் தீர்க்கம்
அன்னவன் தூணவன் சேதி அறைகிரே மிருநி றத்தன்
கன்னியர் மோக ஞவன் கன்மன முடைய ஞமே.

14. ஜாதகருடன் கூடப்பிறந்தவர்களைப்பற்றிச் சொல்லுகின்ரோம். இவர்கள் மொத்தம் ஆறுபேர் ஆவர். இவர்களில் இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரரும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இந்தச் சகோதரருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்ரோம். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை உடையவராக இருப்பார். இவர் இளம் ஸ்திரீகளின் மேல் மையல் என்ற காம ஆசையை உடையவராக இருப்பார். இவர் கடினமான மனத்தை உடையவராக இருப்பார்.

15. வித்தையு மிரண்டு கற்பன் விவேகமா மறிவு மூள்ளான்
சித்தினி ஜாதி யாவன் சிறப்பான குடும்பி யாவன்
அத்திபோல் நடையு மாவ னகசியம் சொல்லா ஞவன்
எத்திசைக் கீர்த்தி கொள்வனிடருகள் கொஞ்ச மூள்ளான்

15. ஜாதகருடைய சகோதரர் இரண்டுவிதமான கல்விகளைக் கற்றுக்கொள்ளுவார். இவர் அறிவுடையராக இருப்பார். இவர் சித்தினி ஜாதியைச் சேர்ந்தவராவர். இவர் மேன்மையான குடும்பஸ்தராவர். இவர் யானையைப்போல கம்பீரமான நடையை உடையவர். இவர் வேடிக்கையையும் சிரிப்பையும் உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லாதவராக இருப்பார். இவர் எல்லாத் திக்குகளிலும் பெருமையையும் புகழையும் உடையவராக இருப்பார். இவர் சிறிது கெடுதிகளையுஞ் செய்வார்.

குறிப்பு :—சித்தினிஜாதி விஷயமாக நெ. 124-வது ஜாதகத்தின் 6-ஆவது பாடலின்கீழ் கொடுத்துள்ள குறிப்பை வாசிக்கவும்.

16. தனமதி லிச்சை யுள்ளான் தைரிய னீகை கொஞ்சஞ்
சினமது வதிக மூள்ளான் தந்தைக்கு மேலாய் வாழ்வன்
வினையிலா மனத்த ஞவன் விளம்புவான் கபடு வார்த்தை
கனமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

16. ஜாதகருடைய சகோதரர் பணத்தின் மேல் ஆசையுடையவராக இருப்பார். இவர் தைரியத்தை உடையவர், கொடுக்கின்ற தயாள குணத்தைச் சிறிது உடையவராவர். இவர் அதிகமான கோபத்தை உடையவர். இவர் தன்னுடைய தகப்பனாரது அந்தஸ்திற்கு மேற் பட்ட அந்தஸ்திலிருந்து வாழ்பவராவர். இவர் கெடுதியை நினைக்காத மனத்தை உடையவராவர். இவர் வஞ்சனை கள்ளம் கபடமுள்ள வார்த்தைகளைச் சொல்லுவார். மேன்மையான சிறந்த யானை முகத்தை யுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியமையே! கேட்பீராக.

17. பாரியு மொன்றே யாவள் பாலர்கள் தோஷ மெய்துங்
தீரமா யிந்தச் சேதி செப்புவோம் பின்பா கத்தில்
மாரனுந் தூணை வோடு மனமொத்து வாழ்வா னவன்
ஆறுமா முகனைப் பெற்ற வம்பிகை யாளே கேளாய்.

17. ஜாதகருடைய சகோதரருக்கு மனைவி ஒருத்தியே ஆவள். இவருக்குக் குழந்தைகள் இறந்து விடுவார்கள். இதைப்பற்றிய விஷயங்களைப் பின்பாகத்தில் உண்மையாய்ச் சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய சகோதரனுடன்கூடி ஒற்றுமை உடையவராக இருந்து வாழ்பவர் ஆவர். ஆறு பெரிய முகங்களை உடைய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணதிசயங்களும்

18. ஜாதகன் மணத்தின் காலஞ் சாற்றுவோ மிருப தாண்டில்
ஒதுவே னுத்த ரத்தி னுத்தமி மாதிர் வர்க்கம்
காதலி வருவா ளாவள் கழறுவோ மவள்கு ணத்தைப்
பாதக மனமில் லாதாள் பாவைநன் நடக்கை யுள்ளாள்.

18. ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபதாவது வயதில் வடக்குத்திக்கிலிருந்து தன்னுடைய தாயாருடைய பந்துவர்க்கத்திலிருந்து மனைவி வந்து வாய்ப்பாள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் கெட்ட மனத்தை உடையவள் அல்லள். இவள் நல்லொழுக்கத்தை உடையவளாக இருப்பாள்.

19. சிவந்திடு மேனி யாவள் சொல்லது சுகமே யாகும்
தவசிகட் கன்ன மீவள் தன்பந்து மெச்ச வாழ்வள்
பவமதில் மனம்வை யாதாள் பாவையும் யோக சாலி
உவமைகள் சொல்வா ளாவ ளுண்மையா மனத்த ளாமே.

19. ஜாதகருடைய மனைவி சிவப்பான நிறத்தை உடையவளாக இருப்பாள். இவருடைய வார்த்தைகள் சுகமானவாகவும் இனிமை

யானவராகவும் இருக்கும். இவள் தவங்களைச் செய்கின்ற பெரியார் களுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். இவளுடைய பந்துக்கள் இவளைக் கௌரவப்படுத்தும்படியான அந்த ஸ்திலிருந்து வாழ்வாள். பாபகாரி யங்களைச் செய்வதில் பிரியம் இல்லாதவளாக இருப்பாள். இவள் யோகத்தை உடையவளாக ஆவள். இவள் உபமானம் உபமேயம் ஆகிய இவைகளை உபயோகித்து அலங்கரமாகப் பேசுபவள் ஆவள், உண்மையான மனத்தை உடையவளாக இருப்பாள், அஃதாவது கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகள் இல்லாதவளாக இருப்பாள்.

ஜாதகரின் மனைவியிடையுடைய சந்ததிகள் (புத்திர பாவம்)

20. வரன்மனம் போலே வாழ்வள்
வரைகிற்றும் புத்திர பாவந்
தீரமாய் நவமே தோன்றுந்
தீர்க்கமா மாண்பால் மூன்று
உரமுடன் பெண்பா லவ்வாறு
உரைக்கிற்றே மவளுந் தீர்க்கந்
திருமகள் தனக்கு மேலாய்ச்
செப்பலாம் புத்திர யோகம்.

20 ஜாதகருடைய மனைவி தன்னுடைய புருஷனது மனத் திற்குத் தகுந்தாற்போல் ஒற்றுமையாக இருந்து வாழ்பவள் ஆவள். இவளுடைய புத்திரபாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவளுக்கு மொத்தம் ஒன்பது குழந்தைகள் பிறப்பார்கள் என்று உறுதியாகச் சொல்லுகின்றோம். இவளுக்கு மூன்று ஆண் குழந்தைகளும் வலிவான மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர் களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவளுடைய சந்ததி கள் இவளுடைய யோகத்திற்கு மேற்பட்ட யோகத்தை உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லக்கூடும்.

ஜாதகருடைய தகப்பனாரது முன் ஜன்மம்

21. தந்தையின் பூர்வந் தன்னைச் சாற்றுவோங் காஞ்சி
[மேலாய்
மூந்திய அருகில் சிற்றூ ருதித்தனன் வேளாள ஜகத்
தன்தன முடையா னகிச் சேர்ந்திடு மனைவி யுண்டாய்ச்
சிந்தையில் தெய்வ பக்தி செய்துமே கொண்டு தானும்;

21. ஜாதகருடைய தகப்பனாரது முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் காஞ்சிமா நகரத்திற்கு மிகவும் அருகிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் வேளாளராகப் பிறந்தார். இவர் சுயார்ஜித மான பணத்தை உடையவராகியும் மனைவியை உடையவராகியும் தன்

னுடைய மனத்தில் தெய்வங்களில் மேன் ஆசையும் அன்பும் உடைய வராகியும் இருந்து கொண்டும் ;

22. வறுமைக ளில்லா னுகி வாழ்கிற காளி லேதான்
அறைகிறேரும் வந்த வூழை அவன்கொல்லை தன்னி
[லேதான்
மரமதில் வெகுநா ளாக மாமுனி வாசஞ் செய்யுந்
தருவதை வெட்டி யேதான் தன்வேலைக் குதவி செய்தான்

22. தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையாதவராகியும் இருந்துகொண்டு வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாபத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவருடைய வீட்டின் புழக் கடையில் ஒரு மரத்தின் மேல் மாமுனி என்ற ஒரு முனீசுரர் வெகு நாளாக வாசஞ் செய்துகொண்டிருந்தார். ஜாதகருடைய தகப்பனர் இந்த மரத்தை வெட்டித் தன்னுடைய வேலைக்கு உபயோகப்படுத்தி கொண்டார்.

23. மரமது போன பின்பு மாமுனி கருப்பு தானும்
உரைவதற் கிடமு மின்றி வொதுங்கிற்று வேறு யில்லம்
மருமமா யிருந்த யில்லம் வாங்கின பாவிக் கேதான்
மருஜன்மம் பிறந்த யில்லம் மருவாது வேறு யில்லம்;

23. இந்த மரம் அழிந்துபோன பிறகு கருவுகளை அழிக்கும் தன் மையுள்ள இந்த முனீசுரர் தான் தங்கி வசிப்பதற்கு இடமில்லாமல் இன்னேர் இடத்திற்குப் போய்விட்டார். "ரகசியமாய் நான் வசித்துக் கொண்டிருந்த மரத்தை வெட்டிவிட்ட பாவி, தன்னுடைய மறுஜன்மத் தில் தான் பிறந்த வீடு தனக்குக் கிடைக்காமல் இன்னெரு வீட்டிற்குப் போய்" ;

24. வாசமா மென்று சொல்லி விரைந்தது முனியுந் தானும்
நேசனு மிச்சென் மத்தில் நேரிழை யுடனே வாழ்ந்து
பாசகன் பக்கல் சேர்ந்து பிரமனுல் வரையப் பட்டு
வீசிய கௌரி வம்சம் விளங்கினு னிவனே யென்றேரும்.

24. வாசஞ்செய்யக்கடவது" என்று சாபத்தைக் கொடுத்துவிட்டு இந்த முனீசுரர் வேகமாய்ப் போய்விட்டார். ஜாதகருடைய தகப் பனர் முன் ஜன்மத்தில் தன்னுடைய மனைவியினுடன் வாழ்ந்து கொண்டு இருந்து பிறகு இறந்து எமனிடத்திற்குப்போய்ப் பிரமதேவ னுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு வேளாளர் குலத்தில் இந்த ஜன்மத் தில் பிறந்திருக்கின்றர் என்று சொல்லுகின்றேரும்.

ஜாதகருடைய தகப்பனாரது மறுஜன்மம்

25. இந்ததோர் ஜன்மந் தன்னி லிவன்தந்தை யில்லம் நீங்கி
பிந்தியும் வேறே யில்லம் பேணுவா னென்று
[சொன்னேம்
பிந்திய ஜன்மந் தன்னைப் புகலுவோ மினிமே லாகச்
சந்தத மரங்கந் தன்னில் சதுர்குல முதிப்பா னம்மா.

25. ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் தன்னுடைய தகப்பனாருடைய வீட்டை விட்டு விட்டு இன்னொரு வீட்டிற்குப் போய் விடுவார் என்று சொல்லுகின்றோம். இனிமேல் இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். அரங்கம் என்ற ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் சதுர்குலம் என்ற நான்கு வேதங்களை ஓதுகின்ற குல மாகிய பிராமணருடைய குலத்திற் பிறப்பார், பார்வதியம்மையே!

26. எப்படி மறைக்கு லத்தி லிவனுமே வுதிப்பா னென்றீர்
இப்பிறப் பினிலே தானு மிழிவான செட்டு செய்து
மெய்ப்புட னற்ப மாதை விரும்பியே பொருள்மே லிச்சை
தப்பிதஞ் சிலவே செய்தான் தானவ னரங்கந் தன்னில்;

26. இவ்விதமாக பிருகுமகரிஷி சொல்லவே, ஜாதகருடைய தகப்பனார் எவ்விதமாக பிராமணர் குலத்திற் பிறப்பார் என்று சொன்னீர்? இந்த ஜன்மத்தில் இவர் இழிவான வியாபாரத்தைச் செய்து கொண்டு அற்பஸ்திரீகளிடத்தில் ஆசையை வைத்துக் கொண்டும் பணத்தின்மேல் பிரியம் உடையவராகியும் சில தவறான காரி யங்களைச் செய்திருப்பதாலும் அரங்கம் என்ற ஸ்ரீரங்க ஸ்தலத்தில்;

27. மறைக்குல முதிப்பா னென்றீர் வருவிப்பீர் விவர மாகத்
திருமக னிச்சென் மத்தில் திருமாலின் பத்தி பூண்டும்
வருவோருக் கன்ன மீந்து மனமது நல்ல தாயுஞ்
சிறுமையென் றோரைக் காத்துந் திருப்பணி யிச்சை
[வைத்தும்;

27. பிராமணர் குலத்தில் பிறப்பார் என்று எப்படிச் சொன்னீர்? இதை விபரமாகச் சொல்லுவீர் என்று கேட்டார். இதற்கு பிருகு மகரிஷி பதில் சொல்லுகின்றார். ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் மகாவிஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையும் உடையவராகி யும் தன்னிடம் வருபவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டுக் கொண்டும் நல்ல மனத்தை உடையவராகியும் கஷ்டங்களை அனுபவிக் கின்றோம் என்று சொல்லுகின்றவர்களைக் காப்பாற்றிக் கொண்டும் கோயில்களில் கடவுளின் வேலைகளைச் செய்வதில் ஆசை உள்ளவ ராகியும்;

ஜாதகருடைய தாயாரது விஷயங்கள்

28. ஆகையால் மறுஜன் மத்தி லந்தணர் குலமு திப்பான்
பாகமாய் மாதிரு சேதி பகருவோங் கேளுந் தாயே
நாகரி கங்க ளுள்ளாள் நயம்படக் கூறு வாளாம்
தோகையுஞ் சிவந்த மேனி சொற்பமாம் வாயு ரோகம்.

28. இருந்ததால் ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய மறு ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறப்பார் என்று புருகுமகரிஷி பதில் சொன்னுர். ஜாதகருடைய தாயாரின் விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேம், எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக. இவள் நாகரிகங்கள் உள்ளவளாக இருப்பாள், இனிமை யாக பேசுபவள் ஆவள். இவள் சிவப்பு நிறமான நீண்ட தேகத்தை உடையவளாவள். இவள் சிறிது வாத ரோகத்தை உடையவளாகவு மிருப்பாள்.

21. முகமதில் வடிவு முள்ளாள் முன்கோபம் பின்பு சாந்தம்.
பகையதை மனத்தில் வையாள் பர்த்தாவின்
[மனம்போல் வாழ்வள்
அகதிகட் கன்ன மீவ ளறைகிறேம் பித்தச் சூடு
இகபரன் பூஜை செய்யு மீச்வரி கேட்டி டாயே.

29. ஜாதகரின் தாயாருடைய முகத்தில் அழகு தங்கி இருக்கும். இவள் முன்கோபத்தை உடையவள், பிறகு சாந்தத்தை அடைபவ ளும் ஆவள். இவள் தன்னுடைய மனத்தில் விரோதத்தை வைத்துக் கொண்டிருக்கமாட்டாள், தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல் ஒற்றுமையாக இருந்து வாழ்வாள். இவள் பரதேசி களுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். பித்தச்சூட்டு ரோகத்தை உடையவள் என்று சொல்லுகின்றேம். சிவபெருமானைப் பூஜை செய் கின்ற எங்கள் ஈசுவரியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரின் சகோதரர்கள்

30. அவளுடைத் துணைவர் தம்மை யறைகிறே மெழுவ ராக
நவனியி லாண்பா லிரண்டு சத்திமா ரவ்வாறு நான்கு
இவர்களுந் தீர்க்க மெய்வ ரில்லமும் வடபா லாகுஞ்
தவசியே யிவள்தன் பூர்வஞ் சாற்றுவோங் கேளுந்
[தாயே.

30. ஜாதகருடைய தாயாருடன் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் ஏழுபேர் என்று சொல்லுகின்றேம். இவர்களில் இரண்டு சகோதரர் களும் இரண்டு சகோதரிகளும் பூமியில் நீண்ட ஆயுளை உடையவர் களாக இருப்பார்கள். இவள் பிறந்த வீடு வடக்குத்திக்கில் இருக்கும்.

தவம் செய்கின்ற பார்வதியம்மையே! தாயாருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகரின் தாயாருடைய முன்ஜன்மம்

31. அன்னையின் பூர்வந் தன்னை யறைகிறேம் விவர மாக
மன்னிய யருணை கீழ்ப்பா லருகினில் பேரூர் தன்னில்
முன்னமே குலமு தித்து முயற்சியாய்க் குடும்பி யாகித்
தன்சுதர் பணிக ளுண்டாய்த் தரணியில் வாழுங் காளில்;

31. ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மத்தைப் பற்றி விவரமாக சொல்லுகின்றேம். இவள் அழகிய சிறந்த அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்தின் கிழக்குத் திக்கில் சமீபத்திலுள்ள ஒரு பெரிய கிராமத்தில் முன்குலமாகிய பிராமணர் குலத்திற் பிறந்து மேன்மையான ஒரு குடும்பினியாகிச் சந்ததிகளையும் ஆபரணங்களையும் உடையவளாகிப் பூமியில் வாழ்கின்ற காலத்தில்;

32. விரதகா லங்கள் தன்னில் வித்தகி சுகியில் லாமல்
உரைந்தன ளதுவே யின்றி வுத்தமி சுகமாய் வாழ்ந்து
மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப் பட்டுக்
கௌரியின் குலத்தி லேதான் கந்தன்வாழ் மலைக்குத்
[தெற்கில்;

32. ஜாதகருடைய தாயார் விரதங்களை அனுஷ்டிக்கின்ற காலங்களில் சுத்தமாக இராமல் இருந்தாள். இதுதவிர இவள் வேறு பாபத்தைச் செய்யாமல் சுகமாய் வாழ்ந்து பிறகு இறந்து எமப்பட்டணத்திற்குப் போய் மகாவிஷ்ணுவின் குமாரராகிய பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வேளாளர் குலத்தில் ஆறுமுகக்கடவுள் வாழ்கின்ற மலைக்குத்தெற்கில் வந்து பிறந்திருக்கின்றாள்.

33. உதித்தவ ளிவளே யென்றே
முமையவள் கேட்க லுற்றாள்
அதிபதி முன்ஜன் மத்தில்
மறைக்குலந் தனிலு தித்துக்
குறைவான குலத்தி லேதான்
கோதையும் பிறந்த தென்ன
விதியதைச் சொல்லு மென்ன
விளம்புவார் பிருகுவுந் தாமே.

33. ஜாதகருடைய தாயார் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றேம். பிருகுமகரிஷியை பார்வதியம்

மையார் பின்வருமாறு கேட்கின்றார். இவள் முன்ஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறந்திருந்தும் இந்த ஜன்மத்தில் குலத்தாழ்வாகப் பிறப்பதற்குக் காரணம் என்ன? இவளுக்கு முன்ஜன்மத்திய பாபத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, பிருகுமகரிஷி பதில் சொல்லுகின்றார்.

34. முன்ஜன்மஞ் சிலவே நாளில் விரதகா லங்கள் தன்னில்
அன்னவள் சீல மின்றி யடைந்ததா லிச்சென் மத்தில்
உன்னத சத்தி வம்ச முதித்தன ளென்று சொல்வோங்
கன்னென மொழியி னுளே கழறுவோ மிவள்பின்
[ஜன்மம்.

34. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன்ஜன்மத்தில் விரத காலங்களில் சில தினங்களில் நல்ல ஆசாரத்தை உடையவளாக இராமல் இருந்ததால் இந்த ஜன்மத்தில் சிறந்த கௌரி குலமாகிய வேளாளர் குலத்தில் பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். சர்க்கரையைப்போன்ற இனிமையான வார்த்தைகளையுடைய பார்வதியம்மையே! இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச்சொல்லுகின்றோம்.

குறிப்பு:—32-ஆவது பாடலும் இக்கருத்தையே தழுவியுள்ளதைக் கவனிக்க.

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

35. உத்தரங் காளாத்தி தன்னி
லுதிப்பளாஞ் சத்திரியச் சேயாய்
வித்தகி வறுமை யின்றி
மேன்மாட கூட முண்டாய்ச்
சித்திர பணிக ளுண்டாய்ச்
சிறப்பான குடும்பி யாகி
அத்தியைப் பெற்ற மாதே
யறைந்தவிம் மொழிகுன் றுவே.

35. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறுஜன்மத்தில் வடக்குத் திக்கிலுள்ள காளஹஸ்தி ஸ்தலத்தில் ஒரு க்ஷத்திரியருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறப்பாள். இவள் தரித்திரங்களும் கஷ்டங்களும் இல்லாமல் சிறந்த மாடமாளிகைகளை உடையவளாகி சித்திரங்களால் அமைக்கப்பெற்ற அழகான ஆபரணங்களை உடையவளாகியும் மேன்மையான ஒரு குடும்பினியாகவும் இருந்து வாழ்வாள். யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

36. உதித்தவன் பூர்வந் தன்னை யுரைக்கிறேங் காஞ்சி
[தன்னில்
நதிகுலந் தனிலு தித்து நாயகி புத்திர ருண்டாய்
விதவிதச் சோலை வைத்து விளைபுலந் தன்னில் வாழ்ந்து
அதிபதி கறிகாய் விற்று மாலின்பூ ஜைக்கு வேற்ற ;

36. ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் காஞ்சிமாநகரத்தில் நதிகுலம் என்ற கங்கை குலமாகிய வேளாளர் குலத்தில் முன்ஜன்மத்தில் பிறந்து மனைவியும் மக்களும் உடையவராகி பற்பலவிதமான சோலைகளையும் தோப்புக்களையும் உண்டாக்கி நன்றாய் விளைகின்ற நிலங்களிலேலே ஜீவனம் செய்து கொண்டு கறிகாய்களை விற்றுக் கொண்டு மகாவிஷ்ணுவின் பூஜைக் குகந்த

37. மாலுக்கு மலரைத் தந்து மனமது கபடு மின்றிக்
குலவிய காலன் பக்கல் குமரனுஞ் சென்று மேதான்
மலரயன் வரையப் பட்டு வந்தனன் காஞ்சி மேற்கில்
நிலமையா யிவனின் யோக நிகழ்த்துவோங் கேளுந்
[தாயே.

37. புஷ்பங்களை ஜாதகர் மகாவிஷ்ணுவுக்கு அனுப்பிக் கொண்டும் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகள் ஒன்றும் இல்லாமல் வாழ்ந்து இறந்து எமனிடம் போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டுக் காஞ்சிமாநகரத்திற்கு மேற்கில் பிறந்திருக்கின்றார். இவருடைய நிலையான யோகத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

38. கடன்கொளா னிடுக்க மில்லான் காரிய சமர்த்த னவன்
நிலமது சேர்ப்பா னவன் நேமியில் செட்டு செய்வன்
விடவுரை பகரா னவன் வெகுளிபோல் தோன்று வானும்
உடன்படான் பிழை களுக்கு வுண்மையா மனத்த
[னவன்.

38. ஜாதகர் கடன் வாங்கமாட்டார். இவர் கஷ்டங்களை அனுபவிக்கமாட்டார். இவர் வேலைகளைச் செய்து முடிப்பதில் கெட்டிக்காரராக இருப்பார். இவர் நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் பூமியில் வியாபாரத்தைச் செய்வார். இவர் கெடுதியான வார்த்தைகளைச் சொல்லமாட்டார், கோபமுள்ளவர் போலக் காணப்படுவார். இவர் குற்றங்களைச் செய்வதற்குச் சம்மதிக்கமாட்டார், உண்மையான மனத்தை அஃதாவது கபடமில்லாத மனத்தை உடையவராக இருப்பார்.

39. மன்னர்கள் பேட்டி கொள்வன்
வாக்கது செல்லு மென்றேரும்
உன்னத பரியும் வண்டி
யோங்கிடும் பலவூர் பூமி
சொர்ணமும் பணிகள் பூமி
தொகைபதி னாயிரம் பொன்
அன்னவன் தனக்குச் சொன்னே
மறைந்தவை தப்பா வம்மா.

39. ஜாதகர் அரசர்களுடைய தரிசனத்தை அடைபவராவர். இவருடைய வார்த்தைகள் மதிக்கப்படத்தக்கனவாக இருக்கும். இவருக்குச் சிறந்த வாகனமான குதிரையும் வண்டியும் விருத்தியாகும். இவர் பல கிராமங்களில் நிலத்தை உடையவராவர். இவருக்குத் தனம் ஆபரணங்கள் நிலங்கள் கையிருப்புத்தொகை ஆகிய இவை எல்லாம் பத்தாயிரம் பொன் மதிப்பிடக்கூடியனவாக இருக்கும் என்று இவருடைய சொத்தைப் பற்றிச் சொன்னேம். நாங்கள் சொல்லிய பலன்கள், பார்வதியம்மையே! தவறிப்போகா.

ஜாதகருடைய தகப்பனாரது மரணகாலம்

40. தந்தையின் மரண காலஞ் சாற்றுவோ முப்பா னிரண்டில்
மூந்திய தனுசு மாத மூண்டிடும் வாயு நோயால்
எந்தையே கண்ட மென்றே மிம்மொழி தப்பா தாமே
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழிகுன் றுவே.

40. ஜாதகருடைய தகப்பனாரது மரணகாலத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில் சிறந்த தனுர் மாதம் என்ற மார்கழிமாதத்தில் வாயுரோகத்தால் தகப்பனாருக்கு மரணம் நேரிடும் என்று, எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே!,சொல்லுகின்றேரும். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகளின பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய தாயாரது மரணகாலமும் ஜாதகருடைய மரணகாலமும்

41. அன்னைக்கு முப்பா னேழி லழகிய ரிடப மாதம்
உன்னத பித்த பாண்டா லுரைத்தனங் கண்டந் தானும்
இன்னவன் தனக்கு மேதா னிசைக்கிறே மறுபத்
[தேழில்
பின்னையுந் துலாமா தத்தில் பிரதமை திதியி லேதான்.

41. ஜாதகருக்கு முப்பத்தேழாவது வயதில் சிறந்த ரிஷப மாதம் என்ற வைகாசி மாதத்தில் இவருடைய தாயாருக்குப் பித்தப்பாண்டு

ரோகத்தால் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். இவருடைய மரணகாலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு அறுபத் தேழாவது வயதில் துலாமாதம் என்ற ஐப்பசி மாதத்தில் பிரதமை திதியில்;

ஜாதகருடைய மறு ஜன்மம்

42. சூலையால் மரண மெய்வன்
சொல்லுவே னிவன்பின் ஜன்மஞ்
சாலவே காஞ்சி தன்னில்
சௌராஷ்டிர குலமு தித்து
ஞாலம்மேல் செட்டு செய்து
நாயகன் வாழ்வா னுவன்
ஆலத்தை யுண்டோன் தேவி
அறைகிறோம் மேலுங் கேளே.

42. சூல நோயால் ஜாதகருக்கு மரணம் நேரிடும். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் காஞ்சிமாநகரத்தில் சௌராஷ்டிரர் என்ற பட்டுநூல்காரர் ஜாதியில் மறுஜன்மத்தில் பிறந்து பூமியில் வியாபாரம் செய்து வாழ்பவராவர். ஆலகால விஷத்தை விழுங்கின சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் அதிகமாகச் சொல்லுகின்றோம். கேட்பீராக.

ஜனனகால தசை இருப்பும் இதன் பலாபலன்களும்

43. இங்கிலங் குடும்பச் சேதி யிசைக்கிறோம் விபர மாக
நன்னிய தசாப லத்தை நாட்டுவோங் கேளு மம்மா
மன்னிய ராகு தன்னி லாண்டேழு மாதம் பத்துச்
சொன்னநாள் பதினேந் தாகுஞ் சுகமதைக் கூறக்
[கேளாய்.

43. இனிமேல் ஜாதகருடைய குடும்ப விஷயத்தைப் பற்றி விவரமாகச் சொல்லுகின்றோம். தசையினுடைய பலாபலன்களையும் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக. சிறந்த இராகு தசையில் இருப்பு ஏழு வருடங்களும் பத்து மாதங்களும் பதினேந்து நாட்களும் ஆகும். ஜாதகருடைய சுகத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக.

44. பின்துணை விருத்தி யாகும் போய்விடுஞ் சிலவே
[யென்றோம்
தன்மனை பாக மாறுய்ச் சார்ந்திடும் ஸ்தான யோகம்
உன்னதச் செட்டு மோங்கு முயர்தந்தை துணைகள் சேதம்
இன்னமுங் குடும்பந் தன்னி லெய்திடுஞ் சுபங்கள் தாமே.

44. ஜாதகருக்கு இளையசகோதரர்கள் பிறப்பார்கள். சிலர் இறந்து விடுவார்கள் என்றும் சொல்லுகின்றோம். இவருடைய வீடு ஆறு பாகமாகப் பங்கிடப்படும். இவருக்கு ஓரிடம் கிடைக்கும். இவருக்கு மேன்மையான வியாபாரம் விருத்தியாகும். இவருடைய சிறந்த தகப்பனாருடைய சகோதரர்கள் இறந்து விடுவார்கள். இவருடைய குடும்பத்தில் சில சுபங்கள் நடைபெறும்.

45. தாய்ப்பிணி கண்டு நீங்குந் தனமது சிலவே யுண்டு
நேயரால் பொருள்கை கூடும் நிதமுக லாப மெய்துந்
தாய்வர்க்க நஷ்ட மெய்துஞ் சதுஷ்பாத விருத்தி சேதம்
மாயமா யிரண்டி லேதான் வரைகிறோம் விபர மாக.

45. ஜாதகருடைய தாயாருக்கு நோய் உண்டாகி அது நிவிர்த்தி யாகி விடும். பணம் செலவாகும். நண்பர்களால் பணம் கைக்கு வந்து சேரும். இவருக்கு லாபம் கிடைக்கும். தாயாருடைய பந்துக்கள் இறந்து விடுவார்கள். கால்நடைகள் நஷ்டமாகும். இரண்டாவது பாகத்தில் மற்ற விஷயங்களை விவரமாக சொல்லுகின்றோம்

ஜாதகம் 126

ஜனனகால கிரக நிலை

1. [1]மதிபுதன் [2]பானு மீன [3]மறை[4]நந்தி [5]புகரு மேடம்
[6]விதியனுங் கேது [7]வில்லில் [8]விடமது [9]வீணை புக்கக்
சதியிலா [10]சேயுங் கன்னி ஜன்மமுஞ் சிம்ம மாக
இதுவித கோளும் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரனும் புதனும் சூரியனும் மீனத்திலும், குரு ரிஷபத்திலும், சுக்கிரன் மேஷத்திலும், சனியும் கேதுவும் தனுசிலும், இராகு மிதுனத்திலும், அங்காரகன் கன்னியிலும் இருந்து ஜன்மலக்கினம் சிம்ம மாகி இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர்.

கிரகநிலை

சூரியன் சந்திரன் புதன்	சுக்கிரன்	குரு	ராகு
	இராசி சக்கரம்		
			லக்கினம்
சனி கேது			அங்காரகன்

ரேவதி 3-ஆம் பாதம் : புததசை ஏழு 6-1-0.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சுக்கிரனும், கடகத்தில் சனியும் கேதுவும், கன்னியில் சூரியனும் குருவும், விருச்சிகத்தில் புதனும், மகரத்தில் அங்காரகனும் இராகுவும், கும்பத்தில் சந்திரனும் ஆகும். புதன் அஸ்தமனம் அடைந்திருக்கின்ரூர். அங்காரகன் வக்கிரகதியில் இருக்கின்ரூர்.

---

1. சந்திரன்
2. சூரியன்
3. குரு
4. ரிஷபம்
5. சுக்கிரன்
6. சனி
7. தனுசு
8. இராகு
9. மிதுனம்
10. அங்காரகன்

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. தானே வாண்பால் ஜனனமுறும்
புகல்வேன் தந்தை யில்லமே
தேரின கீழ்மேல் வீதி யது
தென்பால் வாசல் கூறையில்லம்
மானைத் தரித்தோன் குடி மேற்கில்
மாரி வடபால் தங்கிடுமே
வானோர் புகழுங் கரிமுக னும்
வடமேல் தங்குஞ் சமவூரில்.

2. பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். இவர் பிறந்த தகப்பனுருடைய வீட்டைப் பற்றிச் சொல்லுன்றேன். இது கிழக்கு மேற்குத் தெருவில் தென்னண்டை வாடையில் ஒரு கூரை வீடாகும். சிவபெருமானுடைய கோயில் மேற்குத் திக்கிலும் மாரியம்மன் கோயில் வடக்குத் திக்கிலும் இருக்கும். தேவர்கள் போற்றுகின்ற யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளின் கோயில் வடமேற்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் நடுத்தரமான ஊராக இருக்கும்.

ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரங்கள்

3. சொன்ன யிந்த யடையா ளந்
தோன்றுஞ் சேஷ்ட னுகயிவன்
அன்னை தந்தை தீரன் யோக
மனையும் பாரி புத் திரர்கள்
இன்னேன் முன்பின் ஜென்மங் கள்
இயம்பக் கேண்மோ யிந்நூலில்
தந்தை துணைக ளொன்றுரு மே
தங்கா வென்றெஞ் சங்கரியே.

3. இங்குச் சொல்லப்பட்ட அடையாளங்கள் உள்ள இடத்தில் ஜாதகர் மூத்தகுமாரராகப் பிறப்பார். இவருடைய தாயார் தகப்பனார் இவர் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் இவருடைய மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம், கேட்பீராக. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரர்கள் யாரும் உயிருடன் இருக்கமாட்டார்கள் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே!

ஜாதகருடைய தகப்பனாரது குணதிசயங்கள்

4. தந்தை குணத்தைத் தான் புகல்வேன்
சமர்த்தாய் வார்த்தை யிருநிறத்தன்
நந்தி ராசி யுத்தராடம்
நவின்றோஞ் ஜனித்தா னீகையுளன்

சிந்தை மர்மமில்லா தான்
சிறுத்தோர் நேயன் தேவிபட்சன்
வந்தோர்க் கன்னந் தானீவன்
அரசரிஷ்டன் பொறுமை யுளன்
பிந்தி கிராம செட்டுசெய்வன்
பூமி யதிகஞ் சேர்ப்பனே.

4. ஜாதகருடைய தகப்பனாரது குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் வார்த்தைகளைச் சாமர்த்தியமாக பேசுவார். இவர் இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தையுடையவர். இவர் ரிஷப ராசியில் உத்தராட நட்சத்திரத்தில் பிறந்தவர் என்று சொல்லுகின்றேம். இவர் பிறருக்குக் கொடுக்குந் தன்மையுள்ள தயாள குணத்தை உடையவர். இவர் தன்னுடைய மனத்தில் ரகசியத்தை வைத்திராதவராவர். ஏழைகளிடத்தில் பிரியமுள்ளவராக இருப்பார், மனைவியிடத்தில் அன்புடையவர். இவர் தன்னிடம் வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவார். அரசர்களுக்குப் பிரியமுள்ளவராக இருப்பார், சாந்த குணத்தை உடையவர். பிற்காலத்தில் இவர் கிராம வியாபாரத்தைச் செய்வார். நிலங்களை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார்.

5. பெரியோர் நேயன் புகழேற்பன்
பிதிருமேலாய்த் தான் வாழ்வன்
நெறியைத் தவறுன் வறுமையிலான்
நுவலான் கட்டு வார்த்தைகளை
அரிபோல் கோபம் பின்சாந்த
மணையும் பாரி வந்தபின்பு
உரையும் யோகங்கடன் கொள்வ
னாக வாழ் முத்தமனே.

5. ஜாதகருடைய தகப்பனர் பெரியார்களிடம் சினேகமாக இருப்பார், கீர்த்தியையும் பெருமையையும் அடைவார். தன்னுடைய தகப்பனாரது அந்தஸ்திற்கு அதிகமான அந்தஸ்திலிருந்து வாழ்வார், நல்ல மார்க்கத்திலிருந்து தவறமாட்டார். தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் புனைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையும் சொல்லமாட்டார். இவருக்குச் சிங்கத்திற்கு வருவதைப்போல கோபம் வரும். அது பிறகு தணிந்து விடும். இவருக்கு மனைவி வந்த பிறகு யோகம் உண்டாகும். இவர் கடன் வாங்கமாட்டார், விவேகமுடையவர், நல்ல குணங்களை உடையவர் ஆவர்.

6. பந்து புகழத்தான் வாழ்வன்
பணையேர் விருத்தி சுகிபுசிப்பன்
விந்தையா யில்லம் பின்செய்வன்
மேவும் நாபிச் சூடென்றோங்
கந்தம் பிரியன் கரமதிலே
கஞ்ச ரேகை காலிவிருத்தி
மூந்திநாளில் வறுமையு ளன்
மூலச் சூடு தானெய்தும்.

6. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மெச்சும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவரிடம் நிலங்களும் ஏர்களும் விருத்தியாகும். இவர் நல்ல உணவுகளைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பார். இவர் தன்னுடைய பிற்காலத்தில் ஓர் அதிசயமான வீட்டைக் கட்டுவார். இவருக்கு நாபிச்சூட்டு ரோகம் இருக்கும் என்று சொல்லுகின்றோம். இவருக்குச் சந்தனம் முதலிய வாசனை வஸ்துக்களின்மேல் ஆசை இருக்கும். இவருடைய உள்ளங் கைகளில் கஞ்சரேகை என்ற தாமரைரேகை இருக்கும். இவரிடம் பசுக்கள் விருத்தியாகும். இவர் தன்னுடைய வாழ்வின் முதற் பாகத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிப்பராவர். இவருக்கு மூலச் சூட்டு ரோகம் சம்பவிக்கும்.

வேறு

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

7. சொன்னயிக் குணத் தானுக்குச்
சுதனுமே யுதிப்பா னவன்
முந்தின தூணைகள் காணன்
மேவிடும் பின்னே விருத்தி
வந்திடு மிருமூன் றாகும்
வளமிலா யிரண்டு யென்றோங்
சந்தத மாண்பால் மூன்றுஞ்
சத்தியு மொன்றே தீர்க்கம்.

7. இங்கு சொல்லப்பட்ட குணதிசயங்களை யுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருக்கு மூத்த சகோதரங்கள் இடையர. இளைய சகோதரங்கள் உண்டாவார்கள், இவருக்கு மொத்தம் ஆறு இளைய சகோதரங்கள் உண்டாவார்கள் இரண்டு சகோதரங்கள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள்.

குறிப்பு :—மூத்த சகோதர ஸ்தானமாகிய பதினொன்றில் இராகு இருப்பதாலும் இந்த பாவத்தைச் சனி பார்ப்பதாலும் மூத்த சகோதர ஸ்தானாதிபதியாகிய புதன் எட்டில் இருந்து கொண்டு அங்காரகனால் பார்க்கப்படுவதாலும் குடும்பஸ்தானமாகிய இரண்டில் அங்காரகன் இருந்துகொண்டு இவரும் இந்த ஸ்தானமும் சனியால் பார்க்கப்படுவதாலும் மூத்த சகோதரங்களுக்கும் இளைய சகோதரங்களுக்கும் தோஷத்தை விளைவிக்கக்கூடிய அம்சங்கள் உள்ளன. இளைய சகோதர ஸ்தானாபதியாகிய சுக்கிரனை அங்காரகன் பார்ப்பதும் இளைய சகோதரங்களுக்குத் தோஷமாகும்.

ஜாதகருடைய சகோதரியின் குணாதிசயங்கள்

8. மாதுவின் குணத்தைச் சொல்வேன் மாஞ்சிவப் புடைய [ளாவள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை யுள்மனங் கபடு மில்லாள்
தீதுக ளொருவர்க் கெண்ணுள் தேவிகன் நடக்கை [யுள்ளாள்
காதலி யோக சாலி கனத்ததோர் குடும்பி யாவள்.

8. ஜாதகருடைய சகோதரியின் குணகுணங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவள் ஆவள். இவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் தன்னுடைய மனத்திற்குள்ளே கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவள் அல்லள். இவள் யாருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டாள். இவள் நல்ல நடவடிக்கைகளை உடையவளாக இருப்பாள். இவள் யோகத்தை உடையவளாக இருப்பாள், ஒரு பெரிய மேன்மையான குடும்பினியுமாவள்.

9. தன்வரன் தென்பால் நேரும்
தாய்வர்க்க மென்று சொல்வோம்
அன்னவன் தூணைகள் காணு
னலகடல் குடும்ப மென்றோம்
மன்னர்கள் நேசங் கொள்வள்
வறுமைக ளில்லா ளவன்
கன்னியுஞ் சுதர்கள் காணுள்
கழறுவீ ரந்தச் சங்கை.

9. ஜாதகருடைய சகோதரிக்குப் புருஷன் தென்கிழக்கிலிருந்து வருவார். இவர் இவளுடைய தாயாருடைய பந்துக்களிலிருந்து வருவார். இவருக்குச் சகோதரங்கள் கிடையா. இவருடைய குடும்பம் சமுத்திரத்திலுள்ள அலைகளைப்போல அலைந்துகொண்டும் கஷ்டப்பட்டுக் கொண்டும் இருக்கும் என்றும் சொல்லுகின்றோம். இவர் அரசர்

களுடைய சினேகத்தை அடைவார். இவர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இந்தச் சகோதரிக்குச் சந்ததிகள் கிடையா. இதற்குக் காரணத்தைச் சொல்லுவீராக.

ஜாதகருடைய சகோதரியின் முன்ஜன்மம்

10. முன்ஜன்ம வினையி னலே
மேவிற்று வந்தத் தோஷம்
என்னவூழ் செய்தாள் சொல்வா
யியம்புவார் பராசர் தாமும்
அன்னவள் பூர்வங் கேளாய்
யருணைக்கு வுத்த ரத்தில்
சின்னவூர் தன்னி லேதான்
ஜனித்தனள் கர்ணச் சேயாய்.

10. ஜாதகருடைய சகோதரியின் முன் ஜன்மத்தின் பாபத்தின் பயனாக இந்தப் புத்திரதோஷம் சம்பவித்தது. இவ்விதமாக முனிவர் சொல்லவே, இவள் எப்படிப்பட்ட பாவத்தைச் செய்தாள் என்பதைப்பற்றிச் சொல்லுவீர் என்று கேட்க, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். இவளுடைய பூர்வ ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்திற்கு வடக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் ஒரு கருணீகர் குலத்தில் பெண் குழந்தையாக முன்ஜன்மத்தில் இவள் பிறந்தாள்.

11. சுகமுள குடும்பி யாகிச் சுந்தரி வாழுங் நாளில்
பகையதைப் புகலக் கேண்மோ பஞ்சையா யேழை மாது
தகமையாய் மதலைக் காகச் சாதமு மவளைக் கேட்க
முகவெறி கொண்டு யின்னேள் முடிக்கினள்
[யேழை மாதை.

11. ஜாதகருடைய சகோதரி தன்னுடைய முன்ஜன்மத்தில் சௌக்கியங்களையுடைய ஒரு குடும்பினியாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த பாபத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. பஞ்சைப்போல அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருக்கின்ற ஒரு ஏழை ஸ்திரீ இவளிடம் வந்து தன்னுடைய குழந்தைக்காக நல்ல முறையில் சாதத்தைக் கேட்க, இவள் கோபங் கொண்டு இந்த ஏழை ஸ்திரீயை விரட்டினாள்.

12. பஞ்சையு மனவெ றுப்பால் பகருவாள் சாபந் தானுஞ்
தஞ்சமா யிச்சென் மத்தில் சந்ததி தோஷ மாகும்
மிஞ்சிய ஜன்மந் தன்னில் விளங்காவே சேய்கள் தாமும்
பஞ்சையுஞ் சொல்லிச் சென்றாள் பரவிற்று வந்தத்
[தோஷம்.

12. இந்த ஏழை ஸ்திரீ தன்னுடைய மனத்தில் துன்பத்தை அடைந்து சாபத்தைக் கொடுக்கின்றாள். "இவளுக்கு இந்த ஜன்மத்தில் குழந்தைகள் இறந்து விடக்கடவது. மேலும் அடுத்த ஜன்மத்தில் கூட இவளுக்குச் சந்ததிகள் இறந்துவிடக்கடவது" என்று இந்த ஏழை ஸ்திரீ ஜாதகருடைய சகோதரியைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். இந்தச் சாபம் இவளை வந்தடைந்தது.

13. அதுவின்றி வேறு வொன்று யறைகிறே தாயே கேளும்
முதல்குல மாதுக் கேதான் மேவிற்றுச் சுதர்கள் தாமுஞ்
சுதருக்குப் பாலு மின்றித் தோகைபா லாவின் பாலைத்
துதிசெய்து கேட்கும் போது துன்பமாய்
[வார்த்தை சொல்ல.

13. இதுவுமன்றி இன்னெரு தோஷத்தைச் சொல்லுகின்றோம். எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக. ஒரு பிராமண குலத்து ஸ்திரீக்கு ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்குப் பால் இல்லாமல் இவள் ஜாதகருடைய சகோதரியை முன் ஜன்மத்தில் பசுவின் பாலைக் கொடு என்று கெஞ்சிக் கேட்கும்பொழுது இந்தச் சகோதரி கடினமான வார்த்தைகளைச் சொல்ல;

14. மறையவள் மனவெ றுப்பால்
வரைகிறுள் சாபந் தானும்
அரிபோலே கோபங் கொண்டா
யணுகாது சுதர்கள் தாமும்
மருஜன்மந் தோன்றி யேதான்
மதலைகள் காண ளாகி
உரைகுவா யென்று சொல்லி
யொதுங்கினுள் மறையோள் தாமும்.

14. இந்த பிராமண ஸ்திரீ மனத்தில் கஷ்டப்பட்டுக்கொண்டு அதிருப்தியால் சாபத்தைக் கொடுக்கிறுள். "நீ என்போில் ஒரு சிங்கத்தைப்போலக் கோபித்துக்கொண்டாய். உனக்குச் சந்ததிகள் இருக்காமல் போகக்கடவது. உன்னுடைய மறு ஜன்மத்திலும் நீ சந்ததிகள் இல்லாதவளாக இருந்து வாழக்கடவது" என்று இந்தப் பிராமண ஸ்திரீ இந்தச் சகோதரியைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

15. இன்னமுஞ் சிலவே தோஷ
மென்கின பாலர்க் கேதான்
தன்சுத ரந்தி யத்தில்
சண்டன்தன் பதிக்குச் சென்று

அன்னவள் தனியாய் வாழ்ந்து
வந்தகன் பதித்குச் செல்லப்
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறந்தவ ளென்று சொல்வோம்.

15. இந்தத் தோஷங்களும் அல்லாமல் ஜாதகருடைய சகோதரி யின் புருஷனுக்கும் சில தோஷங்கள் நேரிட்டன. ஜாதகருடைய சகோ தரிக்குத் தன்னுடைய கடைசிக்காலத்தில் குழந்தைகள் இறந்து எம பட்டணத்திற்குப் போய்விடவே இவள் ஒண்டியாக இருந்து வாழ்ந்து இறந்து எமபட்டணத்திற்குப்போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ருள் என்று சொல்லுகின்ருேம்.

16. இந்ததோர் ஜன்மந் தன்னி லெய்திற்று முன்னூழ்த்
[தோஷஞ்
சந்ததி தோஷ மெய்துஞ் சாற்றுவீ ரதற்குச் சாந்தி
விந்தையாய்ச் கர்ம சாந்தி வித்தகி தனக்குச் செய்ய
வந்திடுஞ் சுதர்க ளென்றே மத்திரி புகலு கின்ருர்.

16. ஜாதகருடைய சகோதரிக்கு இந்த ஜன்மத்தில் தன்னுடைய முன்ஜன்மத்திய பாபங்கள் சம்பவித்தன. இவளுக்குக் குழந்தைகள் இறந்துவிடும். இவ்விதமாகப் பராசரமுனிவர் சொல்லவே, இதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்டார். இவள் ஆச்சரியமாகத் தன்னுடைய கர்மசாந்தியைச் செய்வாளாகில் குழந்தைகள் பிறக்கும் என்று சொல்லுகின்ருேம் என்று பராசரமுனிவர் சொல்லவே, இவரை அத்திரி மகரிஷி கேட்கின்ருர்.

வேறு

17. சாந்தியின் விபர மெவ்வாறு
சாற்றுவீர் முனியே நீர்தான்
கூர்ந்துமே சொல்லு கின்றேன்
குழவியா கங்கள் தம்மைக்
தானியஞ் முத்துகலசமு மொன்பான்
சதிபதி பிம்பமு மிரண்டாம்
ஆனவஸ்திரமு மதற்குமே சாற்றி
யவளுக்குக் கோடிதா னளித்து ;

17. சாந்தியின் விபரங்களைப்பற்றி, முனிவரே ! நீரே சொல்லுவீர் என்று அத்திரி மகரிஷி கேட்கவே, பராசரமகரிஷி சொல்லுகின்ருர். இவள் யாகங்களைச் செய்யவேண்டும். நவதான்யங்களையும் சமித்துக் களையும் ஒன்பது கலசங்களையும் புருஷன் மனைவி இவர்களுடைய

இரண்டு பிம்பங்களையும் தயார் செய்துகொண்டு இந்த பிம்பங்களுக்கு வஸ்திரங்களைத் தரிப்பித்து இவளுக்கும் ஒரு சீலையை உடுத்தி ;

18. வானவர் பூசை மங்கைமுன் வைத்து
வரைகிரே மூலத்தைக் காணுய்ப்
பான்மையா யைந்தாங் காண்டத்தில் சொன்னேம்
பகருவாய்ச் சகஸ்ரந் தானே ;

18. இந்தச் சகோதரி தேவர்களைப் பூஜைசெய்து இந்தப் பிம்பங் களுக்கு முன்னே உட்கார்ந்துகொண்டு நாங்கள் சொல்லப்போகின்ற முன்னமே ஐந்தாங் காண்டத்தில் சொல்லப்பட்ட மூல மந்திரத்தை ஆயிரம்தடவை சொல்லி ;

குறிப்பு :—இந்தப் பாடலில் சாந்தியின் விபரம் நன்றாக விளங்க வில்லை. இந்த சாந்தியைப்போலவே கெ. 124-ஆவது ஜாதகத்தில் 43, 44, 45-ஆவது பாடல்களில் சொல்லிய சாந்தியின் விபரத் தையும் மந்திரத்தையும் இங்கு வாசிக்கவும்.

19. சேமந்திட வோமம் வளர்த்திடு
மென்றே திகம்பர பூசைசெய்து
அவனியில் வெள்ளை பூசினி பலியு
மறைகுவா யிரணியத் தகட்டில்
பவமுள சத்தி பீஜத்தை வருவிப்
பகருவாய்ச் சகஸ்ர ஜபமும்
நவனியில் செய்வோர்க் கானவுரையுந் தந்து
நாயகி தூசுமே அளித்து ;

19. ஒரு ஓமத்தைச் செய்யவேண்டும் என்று சொல்லுகின்றேம். கடவுளைப் பூஜை செய்யவேண்டும். ஒரு வெள்ளைப் பூசணிக்காயைப் பலியாகக் கொடுக்கவேண்டும். தங்கத்தட்டில் சத்தினியினுடைய பீஜத்தை எழுதி ஆயிரம் தடவை ஜபம் செய்யவேண்டும். இந்தச் சாந்தியைச் செய்துவைக்கின்றவர்களுக்கு வஸ்திரங்களைத் தாம்பூலமாக இந்தச் சகோதரி கொடுக்கவேண்டும்.

20. செய்திடு குளிசந் தேவியு மணிந்து
சுக்கிரவார விரதமுங் கொள்ள
ஐயமு நீங்கி சுதர்களும் விருத்தியாகும்
அப்படிக் கிரியை செய்யாரேல்
வையமேல் சுதர்கள் தானும் வரையவே மாட்டோம்
வரைந்ததைச் செய்திடு வாரேல்
பொய்யிலாச் சுதரா ணென்றுமே பெண்பால்
பொரிந்திடு மிரண்டு மென்றேம்.

20. ஒரு குளிசத்தைத் தயார்செய்து அதை ஜாதகருடைய சகோதரி அணிந்துகொண்டு சுக்கிரவார விரதத்தை அனுஷ்டித்துக் கொண்டு வந்தால் பாபங்கள் நிவிர்த்தியாகும். இவ்விதமர்கச் சாந்தியைச் செய்யாவிட்டால் இந்தப் பூமியில் இவளுக்குக் குழந்தைகள் பிறப்பார்கள் என்று சொல்லமாட்டோம். நாங்கள் சொல்லியபடி செய்தால் ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் உண்மையாகப் பிறப்பார்கள் என்று சொல்லுகின்றோம்.

வேறு

ஜாதகருடைய குணதிசயங்கள்

21. மற்றதோர் துணைவர் சேதி வரைகிறோம் பின்பாகத்தில்
சித்தசன் சேதி சொல்வேன் சிறப்புளான் கல்வி மானுங்
குற்றமில் லாதா னுவன் கூறுஞ்சொல் சுகமே யாகும்
பத்தினி நேய னுவன் பரவுப காரஞ் செய்வன்.

21. ஜாதகருடைய மற்றச் சகோதரங்களின் விஷயத்தைப்பற்றிப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் மேன்மை உடையவராக இருப்பார், வாசித்தவராக இருப்பார். இவர் யாதொரு குற்றங்களும் இல்லாதவராக இருப்பார். இவர் சொல்லுகின்ற வார்த்தைகள் இனிமையாக இருக்கும். இவர் தன்னுடைய மனைவிக்கு இஷ்டமானவராக இருப்பார். இவரும தன்னுடைய மனைவியினிடத்தில் அன்புடையவராக இருப்பார். இவர் பிறருக்கு உதவியைச் செய்வார்.

22. பூமியும் பரிபா லிப்பன் புகழான குடும்பி யாவன்
தாமத குணத்த னுவன் தாதையார் ஜிதங்கள் விருத்தி
தீமையை யொருவர்க் கெண்ணன் ஜகராசர் பேட்டி
[கொள்வன்
நேமியில் நல்லோ னுவன் நிகருவா ரற்பர் தம்மை ;

22. ஜாதகர் நிலங்களை வைத்துக்கொண்டு ஆள்வார். இவர் பெருமையை உடைய குடும்பஸ்தராக இருப்பார். இவர் தாமதமான குணத்தை உடையவர். இவருடைய பிதுரார்ஜித சொத்துக்கள் விருத்தியாகும். இவர் யாருக்கும் கெடுதிகளை நினைக்கமாட்டார். இவர் பெரிய பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார். இவர் பூமியில் நல்லவராக இருப்பார். இவர் அற்பர்களையும் தாழ்ந்தவர்களையும் சிநேகம் செய்துகொள்வார்,

23. கல்வியு முடைய னுவன்
காலாள்க ளுடைய னுவன்
சொல்லதைக் காப்பா னுவன்
தொடுத்ததை வெல்வா னுவன்

மல்லுக்குச் செல்லா னுவன்
வருந்துணை தனைக்காப் பானும்
நல்லவர் நேசங் கொள்வன்
நற்கிராமச் செட்டு செய்வன்.

23. ஜாதகர் வித்தையை உடையவராக இருப்பார். கால்நடை வேலைக்காரர்களை உடையவர். இவர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவராவர். இவர் தான் ஆரம்பித்த காரியங் களைச் செய்துமுடித்து ஜயம்பெறுபவர் ஆவர் இவர் சண்டைக்குப் போகமாட்டார், தன்னுடைய சகோதரர்களைக் காப்பாற்றுபவர் ஆவர். இவர் நல்லவர்களிடத்தில் சிநேகம் செய்துகொள்வார். இவர் நல்ல கிராம வியாபாரத்தைச் செய்வார்.

24. எந்தக் காலத்தி லேதா னெய்திடுங் கிராமச் செட்டு
வந்தவ னீரொன் பானி லவன்தந்தை தனக்கு கேரும்
பிந்திய முப்பா னெட்டில் புகழுவோங் கிராமச் செட்டுத்
தன்தன முடைய னுவன் சத்தியே மேலுங் கேளே.

24. ஜாதகருக்கு எந்தக் காலத்தில் கிராம வியாபாரம் சேர்ந்திடும் என்று கேட்க, பராசரமுனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்குப் பதினெட்டாவது வயதில் இவருடைய தகப்பனருக்குக் கிராம வியா பாரம் சம்பவிக்கும். பிறகு இவருக்கு முப்பத்தெட்டாவது வயதில் இந்த கிராம வியாபாரம் மேன்மையை அடையும். இவர் தன்னுடைய சுயார்ஜித சொத்தை உடையவராவர், பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் அதிகமாகச் சொல்லப்போவதை கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயங்களும்

25. இருபது நாலு வாண்டி
லிவனுக்குப் பாரி வாய்ப்பள்
வருங்கன்னி தென்மே லாவள்
மாதிவள் குணத்தைச் சொல்வேன்
பெரும்புத்தி யடக்க முண்டு
பிறர்குற்றஞ் சொல்லா ளாவள்
திருமக ளொப்ப ளாவள்
தேவியே மேலுங் கேளே.

25. ஜாதகருக்கு இருபத்துநான்காவது வயதில் தென்மேற்குத் திக்கிலிருந்து மனைவி நேரிடுவாள். இவளுடைய குணாதிசயங் களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் பெரிய புத்தியை உடைய வள், அதாவது சிறந்த புத்தியை உடையவளாவள். அடக்கமுடை யவள், பிறர்மேல் யாதொரு குற்றங்களையும் நிந்தனைகளையும் சொல்ல

மாட்டாள். இவள் இலட்சுமிக்குச் சமானமானவளாக இருப்பாள். பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் அதிகமாகக் சொல்லப் போவதைக் கேட்பீராக.

26. பால்பாக்கிய முடைய ளாவள்
பகையென்று மனத்தில் வையாள்
சாலவே துணையா ணென்று
சாற்றுவோ மவளுக் கேதான்
சீலமு மறத்தி லிச்சை
ஜனவுப காரி யாவள்
ஆலத்தை யுண்டோன் தேவி
யவளுக்கு வயது தீர்க்கம்.

26. ஜாதகருடைய மனைவி பால் பாக்கியத்தை உடையவளாக இருப்பாள். இவள் தன்னுடைய மனத்தில் விரோதங்களை உடையவள் அல்லள். இவளுக்கு ஒரு சகோதரர் உண்டு என்று சொல்லுகின்றோம். இவள் நல்லொழுக்கம் உடையவள், தர்மத்தில் பிரியமுள்ளவள், ஜனங்களுக்கு உதவியைச் செய்பவள் ஆவள். ஆலகால விஷத்தை அருந்திய சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! இவள் நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள்.

ஜாதகருடைய மனைவிக்குச் சந்ததிகள் (புத்திரபாவம்)

27. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணுஞ்
சித்தமா யுதித்தா லுந்தான் நிலையாவே யிவளுக்
[கேதான்
அத்திரி புகலு கின்ற ரவளுக்குப் புத்திர தோஷம்
பெற்றகா ரணத்தை நீங்கள் பேசுவீர் முனியே யென்றார்.

27. ஜாதகருடைய மனைவியின் சந்ததிகளைப் பற்றிச் சொல்லுவதற்கு யாதொரு வலிவும் தோற்றவில்லை. ஒரு சமயம் இவளுக்குக் குழந்தைகள் பிறந்தாலும் இவைகள் நீண்ட ஆயுளை உடையனவாக இருக்கமாட்டா. இவ்விதமாகப் பராசரமுனிவர் சொல்ல, அத்திரி முனிவர் தடுத்துக் கேட்கின்றார். இவளுக்குப் புத்திரதோஷத்தை எவ்விதமான காரணங்களினால் சொன்னீர்? அவைகளை, முனிவரே! நீங்களே சொல்லுவீர்களாக என்று அத்திரிமகரிஷி கேட்டார்.

28. அஞ்சினில் காரி கேது யணுகியே சேயும் பார்க்கத்
தஞ்சமாய்ப் புத்திர தோஷஞ் சார்ந்திடு மென்று
[சொன்னை
மிஞ்சின ஜன்மந் தன்னில் மேவின சிலவே தோஷம்
வஞ்சனை யென்ன செய்தா னுரைப்பீரே முனியே தாமும்.

28. ஐந்தாவது பாவத்தில் காரி என்ற சனியும் கேதுவும் கூடி இருப்பதாலும் இந்த ஐந்தாவது பாவத்தைச் சேய் என்ற அங்காரகனும் பார்ப்பதாலும் புத்திரதோஷம் உண்டாகும் என்று சொன்னேம். ஜாதகருக்குத் தன்னுடைய முன்ஜன்மத்தில் சில தோஷங்கள் நேரிட்டன என்று பிருகுமகரிஷி சொல்லவே, இவர் என்ன பாபங்களைச் செய்தார்? முனிவரே! அதை நீர் சொல்லுவீர் என்று கேட்டார்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

29. முன்னவ னிருந்த ஜன்ம மொழிகிறேம் பெண்ணை [யோரம்
உன்னத பேரூர் தன்னி லுதித்தனன் வேளாள னகப்
பொன்பணி யுடைய னகிப் பூமியும் பெருக்க முண்டாய்
அன்னவன் வாழும் நாளி லறைகிறே மூழி தானே.

29. ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் பெண்ணையாற்றின் கரையோரத்தில் ஒரு சிறந்த பெரிய கிராமத்தில் வேளாளராகப் பிறந்தார். இவர் தனம் ஆபரணம் ஆகிய இவைகளை உடையவராகி நிலங்களும் விருத்தியாகி வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாபங்களைச் சொல்லுகின்றேம்.

30. அந்நகர் நதியின் பக்க லணுகிய யரசின் கீழே
தந்தியு நாக நிற்குந் தானவர் வாசஞ் செய்வார்
மந்திர மோதும் வேத மறையவர் பூஜை செய்வார்
இந்தவா றிடத்தி லேதா னிரவினி லேது செய்தான்.

30. அந்தக் கிராமத்தில் நதியின் அருகில் உள்ள ஓர் அரச மரத்தின் கீழே ஒரு விநாயகக்கடவுளின் கோயிலும் ஒரு நாகப்பிரதிஷ்டையும் இருக்கும். அவ்விடத்தில் தானவர் என்ற அசுரர்கள் வாசம் செய்வார்கள். அவ்விடத்தில் மந்திரங்களையும் வேதங்களையும் சொல்லுகின்ற ஒரு பிராமணர் பூஜை செய்வார். இப்படிப்பட்ட இடத்தில் ஒருநாள் இரவில் ஜாதகர் என்ன செய்தார் என்பதைச் சொல்லுகின்றேம்.

31. விதவையை மரத்தன் கீழே
வித்தகன் போகந் துய்த்தான்
அதனலே கருவு தங்கி
யநேகபண் டிதங்கள் செய்யச்
சதியான கருவு நீங்கிச்
சத்தியுந் தீர்க்க மாளள்
இதுபோலே மூன்று செய்தா
னெய்திற்று வந்தத் தோஷம்.

31. ஜாதகர் இந்த மாதத்தின் கீழே ஒரு விதவை ஸ்திரீயுடன் சம்போகம் செய்தார். அதனால் இந்த ஸ்திரீக்குக் கர்ப்பம் தரிக்க, இவளுக்கு அனேகவிதமான வைத்தியங்களை இவர் செய்ய, அந்தக் கர்ப்பம் கலைந்து இவள் பிழைத்தாள். இதைப்போல இவர் மூன்று தடவை இந்தக் காரியத்தைச் செய்தார். ஆகையால் இவருக்கு இந்தத் தோஷம் வந்து சம்பவித்தது.

32. கன்றுக்குப் பால்வி டாமல் கறந்தனன் அதுவோர்
[தோஷஞ்
சந்தியி லதிதிக் கன்னந் தாராத தோஷம் மொன்று
இந்தவாறு தோஷத் தாலே யிவன்சுதர் யாவும் போகி
அந்தக னகர டைந் தயனுமே வரையப் பட்டு;

32. ஜாதகர் கன்றுக்குட்டிக்காகப் பசுவின் பாலை விட்டு வைக்காமல் பாலை முழுவதும் கறந்து விட்டார். இஃது ஒரு தோஷமாக நேரிட்டது. சந்திவேளையில் ஒரு பரதேசிக்கு இவர் சாப்பாடு போடாமல் இருந்தது இன்னொரு தோஷமாக நேரிட்டது. இவ்விதமான தோஷங்களினாலே இவர் தன்னுடைய முன்ஜன்மத்தில் தன்னுடைய எல்லாக் குழந்தைகளையும் இழந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப்போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு;

33. வந்தவ னிவனே யென்றேம் வந்தன முன்னூழ்த்
[தோஷஞ்
சந்தநி தோஷ மெய்துஞ் சாற்றுவீர் கிரியை யொன்று
முந்திசொல் சாந்தி போலே முறைப்படி செய்வா னெனில்
இந்திரன் போலே மைந்தர் யெய்வரே தீர்க்க மாக.

33. ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவருக்கு முன்ஜன்மத்திய வினையின் தோஷங்கள் வந்து சம்பவித்தன. இவருக்குப் புத்திரதோஷம் உண்டாகும் என்று பராசரமுனிவர் சொல்லவே, இதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுவீர் என்று கேட்டார். முன்னே நாங்கள் சொல்லிய சாந்தியைப்போல சாஸ்திர விதிப்பிரகாரம் ஒரு சாந்தியை இவர் செய்வாராகில் இவருக்குத் தேவேந்திரனைப்போல பிள்ளைகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக உண்டாவார்.

34. தன்துணை விக்குச் சொன்ன சாந்தியுங் கூடச் செய்யில்
முன்வினை நிவிர்த்தி யாகி யுதித்திடுஞ் சுதரான்
[ணென்று
வந்திடுங் கன்னி மூன்று வளமுறுந் தீர்க்க மாகத்
தந்திமா முகனைப் பெற்ற தையலே கேட்டி டாயே.

34. ஜாதகர் தன்னுடைய சகோதரிக்கும் நாங்கள் சொல்லிய சாந்தியைச் செய்வாராகில் முன்ஜன்மத்திய பாபங்கள் விலகி ஓர் ஆண் குழந்தையும் மூன்று பெண் குழந்தைகளும் செழிப்பாக வளர்ந்து நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். யானையின் பெரிய முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது குணதிசயங்களும் சகோதரங்களும்

35. அன்னையுஞ் சிவந்த மேனி
யழகுளாள் பித்த தேகி
தன்சொல்லு மடக்க முண்டு
தன்துணை யாண்பா லிரண்டு
கன்னிகை யவ்வாறு தீர்க்கங்
கழறுவோம் பின்பால் சேதி
இன்னவள் வந்த பின்பு
யிளம்பிறை போலே யோகம்;

35. ஜாதகருடைய தாயார் சிவப்பு நிறத்தை உடையவள், அழகுள்ளவளாக இருப்பாள், பித்த ரோகமுள்ள தேகத்தை உடையவள். இவள் சாந்தமாகவும் அமைதியாகவும் பேசுவாள். இவளுக்கு இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னால் சொல்லுகின்றோம். இவள் தன்னுடைய புருஷனிடம் வந்து சேர்ந்த பிறகு இளமையான வளர்பிறைச் சந்திரனைப்போல யோகம்;

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

36. வரனுக்கு நேரு மென்றே மங்கையின் பூர்வஞ்
[சொல்வோம்
பிரமனும் பூஜை செய்த பட்சியின் மலைக்கு யுத்திரஞ்
சிறுவூரி லிக்கு லத்தில் ஜனித்தனள் தீயின் வம்சங்
குறையிலாக் குடும்பி யாகிக் குவலய நல்லோ ளாகி;

36. இவளுடைய புருஷனுக்கு நாளுக்குநாள் அதிகப்படும் என்று சொல்லுகின்றோம். ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் பிரமதேவர் பூஜை செய்யும் ஸ்தலமாகிய பட்சிஸ்தலம் என்ற திருக்கழுக்குன்றம் கோத்திரத்தின் மலைக்கு வடக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜன்மத்தின் குலமாகிய தீயின் வம்சம் என்ற வன்னியர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள். இவள் யாதொரு கஷ்டங்களையும் அடையாத குடும்பினியாகவும் இந்தப் பூமியில் நல்லவளாகவும் இருந்தும்;

37. அறமதி லிச்சை யுண்டா
யந்தகன் பக்கல் சென்று
கிரகான்கோன் வரையப் பட்டு
ஜனித்தவ ளிவளே யென்றும்
வருஞ்ஜன்மங் காஞ்சி தன்னில்
வைசிய குலமு தித்து
பெருமையும் புகழு முண்டாய்ப்
புண்ணிய வதியும் வாழ்வள்.

37. தர்மத்தில் ஆசை உடையவளாகவும் இருந்து பிறகு இறந்து எமனிடத்திற்குப் போய்ப் பிறகு நான்கு தலைகளையுடைய பிரமதேவரால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஜாதகருடைய தாயார் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். இவள் தன்னுடைய மறுஜன்மத்தில் காஞ்சிமாநகரத்தில் ஒரு வைசியருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து மேன்மையும் கீர்த்தியும் உடையவளாகியும் புண்ணியங்களை உடையவளாகியும் வாழ்வாள்.

ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மம்

38. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் ஜலக்கண்டி யரசர்
[வாழு
முந்தின வூரி லேதா னுதித்தன னிக்கு லத்தில்
வந்திடு மனைவி யுண்டாய் வளமுள குடும்பி யாகி
இந்தவன் கிராமச் செட்டு யெய்தியே வாழுங் காளில்;

38. ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் ஜலக்கண்டியரசர் என்ற ஜலகண்டீசுவரர் கோயில் உள்ள ஒரு மேன்மையான கிராமத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய வன்னியர் குலத்தில் இவர் தன்னுடைய முன்ஜன்மத்தில் பிறந்தார். இவர் மனைவியை உடையவராகியும் செழிப்பான குடும்பத்தை உடையவராகியும் கிராம வியாபாரத்தைச் செய்து கொண்டும் வாழ்கின்ற காலத்தில்;

39. அன்னிய மாது தானு மவள்வர னின்றி யேதான்
தந்தையி னில்லம் வாழச் சத்திமேல் வேறெ ருத்தன்
விந்தையாய் மோகங் கொள்ள வித்தகி யிசையா ளாகி
இந்தவா றிலநாள் சென்று யிவள்தனி யாகச் செல்ல;

39. ஓர் அயல் ஸ்திரீ தனக்குப் புருஷன் இல்லாமல் தன்னுடைய தகப்பனாருடைய வீட்டில் வசித்துக் கொண்டிருக்கும்பொழுது இன்னொருவன் இவள்மேல் ஆச்சரியமாக மையல் என்ற காம

ஆசையை அடையவே, இவள் இவனுக்குச் சம்மதிக்காமல் சில நாள் கழித்து ஒருநாள் இவள் தனியாகப் போகும்பொழுது;

40. மோகித்தோன் பின்னல் சென்று
மாதுவைப் பலவந் தத்தால்
போகமே செய்தா னென்றேரும்
பாவையுந் திகில டைந்து
ஜாகைக்குச் சென்று மேதான்
தன்துணை பக்கல் சொல்லப்
பாகமாய்த் துணைவர் தாமும்
பகர்ந்தனரதி காரி பக்கல்.

40. இவள்மேல் காதலை உடையவன் இவள் பின்னாலேயே போய் இவளோடு பலவந்தமாக சம்போகம் செய்தான் என்று சொல்லுகின்றேரும். இவள் பயத்தை அடைந்து தன்னுடைய வீட்டிற்குப் போய்த் தன்னுடைய சகோதரர்களிடம் நடந்த விஷயத்தைச் சொல்லவே, இந்தத் துணைவர்கள் அதிகாரியாகிய ஜாதகரின் தகப்பனாரிடம் சங்கதிகளைச் சொன்னார்கள்.

41. தூதனு ளழைத்துக் கேட்கச்
செய்தன னென்ற றிந்து
போதன மவனுல் பெற்றுப்
பேதைமேல் விரோதஞ் சொல்ல
மாதுவுந் திகில டைந்து
வரைகிரூள் சாபந் தானுந்
தீதான வார்த்தைச் சொன்னுய்
ஜனித்திடும் மறுஜன் மத்தில்;

41. ஜாதகருடைய தகப்பனார் ஒரு வேலையாளை அனுப்பிக் குற்றம் செய்தவனை வரவழைத்து அவனை விசாரித்து அவன் குற்றத்தைச் செய்தான் என்று தெரிந்து கொண்டு, அவனிடம் பணத்தைக் கைக்கூலியாகப் பெற்றுக் கொண்டு இந்த ஸ்திரீயின் மேலேயே குற்றத்தைச் சாட்டிவிட, இந்த ஸ்திரீ தன்னுடைய மனத்தில் பயத்தை உடையவளாகிச் சாபத்தைக் கொடுத்தாள். "நீ என்மேல் அபவாதமான கெட்ட வார்த்தைகளைச் சொன்னாய். நீ, இனிமேல் பிறக்கும் மறுஜன்மத்தில்;

42. துணைகளைக் காண லுகித்
தனியாக வாழ்வா யென்ரூள்
வினைமன தாகச் சொன்னுள்
மேவிற்று யந்தத் தோஷங்

கனமுடன் யிச்சென் மத்தில்
காதலன் துணைகள் காணன்
அனையவே பின்ஜன் மத்தை
யறைகிறேற் தாயே யாங்கள்.

42. சகோதரர்கள் இல்லாதவனாகி ஒண்டியாக வாழக்கடவது" என்று ஜாதகருடைய தகப்பனாரைப் பார்த்துத் துன்பத்தை உடைய மனத்தை உடையவளாகிச் சொன்னாள். இந்தத் தோஷம் இவரை அடைந்தது. இவர் இந்த ஜன்மத்தில் சகோதரர்கள் இல்லாத வராக இருப்பார். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றி நாங்கள் சொல்லுகின்றோம், எங்களுடைய தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனாரது மறுஜன்மமும், மரணமும், தாயாருடைய மரணமும்

43. பிருதிவி தலத்தி லேதான்
பிறப்பனுஞ் சத்திரியச் சேயாய்
உரைக்கிறேறும் நாற்பா னிரண்டி
லுயராடி மாதந் தன்னில்
வருந்தந்தை கண்ட மென்றே
மதற்குமே விரண்டு வாண்டில்
அரிமாத மன்னை கண்ட
மறைந்தவை தப்பா வாமே.

43. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மறுஜன்மத்தில் பிருதிவி ஸ்தலம் என்ற காஞ்சீவரத்தில் ஒரு க்ஷத்திரியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். ஜாதகருடைய நாற்பத்திரண்டாவது வயதில் சிறந்த ஆடி மாதத்தில் இவருடைய தகப்பனார் இறந்து விடுவார் என்று சொல்லுகின்றோம். இதற்குப் பிறகு இரண்டாவது வருடத்தில் அரிமாதம் என்ற ஆவணி மாதத்தில் ஜாதகருடைய தாயார் இறந்துபோய் விடுவாள். நாங்கள் சொல்லிய பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய மரணமும் மறுஜன்மமும்

44. அறுபது வாறு வாண்டி லேப்பசி மாதந் தன்னில்
திருமகன் தனக்குக் கண்டஞ் செப்புவோம் பின்ஜன்
[மத்தை
அரங்கமா நகரந் தன்னி லந்தணர் குலமு திப்பான்
கரிமுகன் தன்னைப் பெற்றக் காதலி கேட்டி டாயே.

44. ஜாதகருக்குத் தன்னுடைய அறுபத்தாறுவது வயதில் ஐப்பசி மாதத்தில் மரணம் நேரிடும். இவருடைய பின்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். அரங்கமா நகரம் என்ற ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் ஒரு பிராமணர் குலத்தில் இவர் ஆண் குழந்தையாகப் பிறப்பார். யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜனன கால தசையிருப்பும் பலா பலன்களும்

45. பிறந்திடுங் காலந் தன்னில் புதன்தசை தானி ருப்புச்
சிறந்திடு மாண்டு வாறுந் திங்களு மொன்றே யாகும்
வருந்துணை விருத்தி சேத மாரனும் பிணியால் வாடும்
அறைகுறேம் பின்பால் சேதி யம்பிகை யாளே கேளாய்.

45. ஜாதகர் பிறந்த காலத்தில் புதமகா தசையின் இருப்பு ஆறு வருடங்களும் ஒரு மாதமும் ஆகும். இக்காலத்தில் இளைய சகோதரன் பிறந்து இறந்து போவான். இவரும் நோய்கள் உண்டாகிக் கஷ்டப் படுவார். மற்ற விஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றோம், பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 127

ஜனனகால கிரகநிலை

1. [1]மதி [2]புயங்கன் [3]சுந்தியும்
[4]மாலுங் கன்னி [5]புகர் [6]கோலில்
[7]விதியன் [8]பானு [9]சேய
முற [10]வேந்தன் [11]மானில் [12]சேய்கேது
[13]கதிசேரூட [14]மரி ஜன்மங்
கழறுவீர்கள் பல னெவ்வார்
இதுவே ஆண்பால் ஜனனமுறு
மில்லம் வடதென் வீதியதே.

1. சந்திரனும் இராகுவும் ரிஷபத்திலும், புதன் கன்னியிலும், சுக்கிரன் துலாத்திலும், சனியும் சூரியனும் சிம்மத்திலும் இருந்தால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதைச் சொல்லுவீராக. இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் இருக்கும்.

கிரகநிலை

		சந்திரன் ராகு	
	இராசி சக்கரம்		
குரு			லக்கினம் சூரியன் சனி
	அங்காரகன் கேது	சுக்கிரன்	புதன்

மிருக சீர்ஷம் 2-ஆம் பாதம்: அங்காரக தசை வரு 3-11-0

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—ரிஷபத்திற் குருவும்,

---

1. சந்திரன்
2. இராகு
3. ரிஷபம்
4. புதன்
5. சுக்கிரன்
6. துலாம்
7. சனி
8. சூரியன்
9. சிம்மம்
10. குரு
11. மகரம்
12. அங்காரகன்
13. விருசிக்கம்
14. சிம்மம்

மிதுனத்திற் புதனும், கன்னியிற் சந்திரனும் சனியும் இராகுவும், துலாத்திற் சூரியனும், விருச்சிகத்திற் சுக்கிரனும், மீனத்தில் அங்காரகனும் கேதுவும் ஆகும். குரு வக்கிர கதியில் இருக்கின்றார். சனி அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்.

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. அதுவே தென்பால் வாசலுறும் ஆனைமுகத் தோன் [மாரியும்
பதியும் குடகு சிற்றூரில் பகர்வோ மன்னை யில்லமுமே
அதிபன் சேஷ்ட லயுதிப்பன் மருவுந் தந்தை தாய்யோகஞ்
சதிராய் துணைவன் களத்திரபுத்திரர் சாறும் முன்பின்
[ஜன்மங்கள்.

2. ஜாதகர் பிறந்த வீடு தெற்குப் பக்கம் வாயிற் காலை உடையதாக இருக்கும் விஜயகக் கடவுளின் கோவிலும் மாரியம்மனின் கோயிலும் மேற்குத்திக்கில் இருக்கும். ஜாதகர் ஒரு சிறிய ஊரில் தாயாருடைய வீட்டில் முதல் குழந்தையாகப் பிறந்தார். இவருடைய தகப்பனார் தாயார் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் சகோதரங்கள் மனைவி மக்களையும் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனாரது குணநிசயங்கள்

3. சொல்வோர் தந்தை சேதிதனை
சுகமாய் வார்த்தை மால்நிறத்தன்
வல்லி மார்கள் மோகமுளன்
மன்னர் பக்கல் தான்சேர்ந்து
எல்லை யதிகந் தான்திரிவ
னெய்துந் தொழிலுஞ் ஜீவனங்கள்
அல்ல லென்றோர்க் குகவிடுவ
னணுகு மனைவி யிரண்டென்றோம்.

3. ஜாதகருடைய தகப்பனாரது விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் இனிமையாக வார்த்தைகளை உபயோகிப்பார். மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தை உடையவராவர். இவர் ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவராவர். இவர் அரசர்களுடன் சேர்ந்துகொண்டு அனேக இடங்களில் திரிந்து கொண்டிருப்பார். இவர் உத்தியோகத்தொழிலினால் ஜீவனம் செய்பவராவர். இவர் கஷ்டங்களை அடைந்துகொண்டிருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரங்களைச் செய்வார். இவருக்கு இரண்டு மனைவிகள் உண்டு என்று சொல்லுகின்றோம்.

4. மேட ராசி யாயில்யம்
மேவு மென்றோஞ் சுகபோஜன்
ஓடுந் தந்தை ஆஸ்தியிலா
னுற்றோர் மதிப்புக் கொண்டிடுவன்
கேடு நினையா னெருவருக்குங்
கீர்த்தி மிகவுந் தான்பெறுவன்
கூடும் பூர்வ மலைச்சலுங்
குறையாய் வாழ்வன் கொம்பனையே.

4. ஜாதகருடைய தகப்பனார் மேஷராசியில் ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்தவர் என்று சொல்லுகின்றோம். இவர் நல்ல சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பார். இவர் தன்னுடைய தகப்பனாருடைய ஆஸ்தி இல்லாதவராவர். இவர் தன்னுடைய பந்துக்களுடைய மதிப்பை உடையவராவர். இவர் யாருக்கும் கெடுதியை எண்ணமாட்டார். இவர் அதிகமான புகழையும் பெருமையையும் அடைவார். இவர் தன்னுடைய முற்காலத்தில் திரிச்சலையும் கஷ்டங்களையும் அடைந்துகொண்டு தாழ்ந்த அந்தஸ்திலிருந்துகொண்டு வாழ்வார், பார்வதியம்மையே!

வேறு

ஜாதகருடைய தகப்பனாரின் சகோதரங்கள்

5. தூனவர்கள் காணன் தோன்றினுந் தீதாந்
தோகையால் பூமியு மணுகிடுங்
கனமுளோர் நேயன் காரியச் சமர்த்தன்
கரமதில் கமலரே கையுமே
வினமன மில்லான் மெல்லியர் பட்சன்
விருந்தினர் தமக்குப காரி
பினையிலா யில்லம் பொருந்திடும் பின்னல்
புண்ணிய வதிபதி கேளாய்.

5. ஜாதகருடைய தகப்பனார் சகோதரர்கள் இல்லாதவராக இருப்பார். ஒரு சமயம் இவர்கள் பிறந்தாலும் இறந்து விடுவார்கள். இவருக்குத் தன்னுடைய மனைவியால் நிலங்கள் வந்துசேரும். இவர் பெரியோர்களுடைய சினேகத்தை உடையவராவர், காரியங்களைச் செய்து முடிப்பதில் வல்லவராக இருப்பார், தன்னுடைய உள்ளங்கைகளில் கமலரேகை என்ற தாமரைரேகையை உடையவர், கெடுதியான மனத்தை உடையவர் அல்லர், இளைத்தவர்களிடத்திலும் ஏழைகளிடத்திலும் பிரியமுள்ளவராக இருப்பார், இவர் விருந்தாளிகளுக்கு உபகாரத்தைச் செய்வார். இவருக்குப் பிற்காலத்தில் தனியான ஒரு வீடு கிடைக்கும் பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—இந்த ஜாதகத்தில் பிதிரு ஸ்தானம் ஒன்பதாவது வீடாகிய மேஷமாகும். இதற்கு இளைய சகோதர ஸ்தானமாகிய மூன்றிற் குடைய புதன் ஆறில் கேதுவால் பார்க்கப்பட்டிருப்பது இளைய சகோதரத்திற்கு ஒரு தோஷமான அம்சமாகும். இளைய ஆண் சகோதரகாரகராகிய புதன் ஆறில் இருப்பது இளைய ஆண் சகோதரர்களுக்குத் தோஷமான அம்சமாகும். மூத்த சகோதர ஸ்தானமாகிய கும்பத்திற்குடைய சனி சூரியனுடன் கூடி அஸ்தமனம் அடைந்திருப்பது மூத்த சகோதரர்களுக்குத் தோஷமான அம்சமாகும். மூத்த ஆண் சகோதரகாரகராகிய குரு நீசம் அடைந்து கேதுவால் பார்க்கப் பட்டிருப்பது மூத்த ஆண் சகோதரங்களுக்குத் தோஷமான அம்சமாகும். பொதுவான சகோதரகாரகராகிய அங்காரகன் மேஷத்திற்கு எட்டில் கேதுவுடன் கூடியிருப்பதும் பொதுவாகச் சகோதரர்களுக்குத் தோஷமான அம்சமாகும். மேஷத்திற்கு ஐந்தில் சனி இருப்பதும் புதனும் அங்காரகனும் ஆட்சியாய் இருப்பதும் புதனைக் குரு பார்ப்பதும் சிறிது அனுகூலமான அம்சங்களாகும். ஆகையால் ஜாதகருடைய தகப்பனாருக்குச் சகோதரர்கள் இடையாது என்றும் ஒரு சமயம் பிறந்தாலும் இறந்து விடுவார்கள் என்றும் இப்பாடலில் சொல்லியிருக்கிறதைப் பார்க்கவும். மேற்சொல்லிய கெட்ட அம்சங்களினால் சகோதரர்கள் பிறக்க மாட்டார்கள் என்று சொல்லி மேற் சொல்லிய சிறியதாக உள்ள நல்ல அம்சங்களால் சகோதரர்கள் ஒரு சமயம் உண்டானாலும் மேற்சொல்லிய அதிகமான அம்சங்களின் பலனாக இறந்துவிடுவார்கள் என்றும் சொல்லியிருக்கிறது.

ஜாதகருடைய குணதிசயங்கள்

6. இன்னெறி யுடையானுக் கிவனு மெய்துவான்
இவன் குணங் கேளாய்
அன்னியர் வசிய மரிபோலே கோபம்
அவனியில் கல்வியு மிரண்டு
மன்னர்பா லணுகி வாழ்ந்திடு வானும்
மறுத்துரை யதிகம் புகல்வன்
கன்னியர் மோகன் கபடிலான் பெரியோன்
காலாள்க ளுடையவ னுமே.

6. இது வரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் பிறப்பார். இவருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவர் பிறரைத் தன் பக்கமாக இருக்கும்படி கவர்ச்சி செய்துகொள்வார். இவருக்குச் சிங்கத்திற்குக் கோபம் வருவதைப்போல கோபம்வரும். இவர் பூமியில் இரண்டுவிதமான வித்தையை உடையவராவார். இவர் அரசாங்கத்தில் தொழிலை அடைந்து வாழ்பவராக இருப்பார். இவர் பிறர்

சொல்வதைத் தடுத்து அதிகமாகப் பேசுவார். இவர் இளம் பிராயம் உள்ள ஸ்திரீகளின்மேல் மையல் என்ற காம ஆசையை உடையவராவர். இவர் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவர் அல்லர். பெருந்தன்மை யுள்ளவராக இருப்பார், கால்நடை வேலைக்காரர்களை உடையவராக இருப்பார்.

7. ஆமே தந்தைதாய்க் கினிய னடைந்தோர்க் கன்ப
[னழகியவான்
தீமைகுணம் போல்தான் காட்டுஞ் சிந்தை வெகுளியாவன்
கூமி ஜன வசியன் சிறப்பாய்க் குடும்பிதே சொழுக்கன்
பூமியதிகந் தான் சேர்ப்பன் பிதாமேலாக வாழ்ந் திடுவன்.

7. ஜாதகர் தன்னுடைய தாய் தகப்பனருக்குப் பிரியமுள்ளவராக இருப்பார். இவர் தன்னிடம் வருபவர்களுக்குப் பிரியமாக இருப்பார். இவர் சௌந்தர்யமுள்ளவராக இருப்பார். இவர் வெளித் தோற்றத்திற்குக் கெட்டகுணங்களை உடையவர்போலக் காணப்படுவார். இவர் தன்னுடைய மனத்தில் கோபத்தை உடையவராக இருப்பார். இவர் ஜனங்களைத் தன் பக்கமாக இருக்கும்படி கவரக்கூடியவராக இருப்பார், மேன்மையான குடும்பத்தை உடையவராவர், நல்லொழுக்கத்தை உடையவராவர். இவர் அதிகமான நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். தன்னுடைய தகப்பனருடைய அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்தி லிருந்துகொண்டு வாழ்வார்.

வேறு

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

8. இவனுடை துணைவர் தம்மை
யியம்பநே ரிளையோன் காணன்
நவனியில் பெண்பா லுள்ளாள்
நாயகன் நலமே யாக
அவள்குணங் கூறக் கேண்மோ
அதிகபுத் திகளு முள்ளாள்
பவமிலா மனத்த ளாவள்
பரவுப காரி யாமே.

8, ஜாதகருடைய சகோதரங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு அடுத்த இளைய சகோதரர் கிடையாது. பூமியில் ஒரு சகோதரி இருப்பாள். இவள் இவருக்கு அனுக்கூலமானவளாக இருப்பாள். இவளுடைய குணதியங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. இவள் அதிகமான அறிவுள்ளவளாக இருப்பாள். இவள் கெடுதியான மனத்தை உடையவள் அல்லள், பிறருக்கு உபகாரங்களைச் செய்பவளாக இருப்பாள்,

9. புத்திமான் பொறுமை சாலி பூஷண மதிக முள்ளாள்
பத்திமா னெவர்க்கு நேயள் பதர்குண மில்லா ளாவள்
சுத்தமும் யோக சாலி துராசையு மில்லா ளாகும்
ரத்தின பணிகள் சேர்ப்பள் நல்லோர்க்கு நல்லோ
[ளாவள்.

9. ஜாதகருடைய சகோதரி புத்தியுடையவளாக இருப்பாள். சாந்தகுண முடையவள், அதிகமான ஆபரணங்களை உடையவள். தெய்வங்களிடத்தில் ஆசையும் அன்பும் உடையவள், எல்லோரிடத்திலும் இவள் சிநேகத்தை உடையவளாக இருப்பாள். அவசரமான இழிவான குணங்களை உடையவள் அல்லள். இவள் சுத்தமுள்ளவளாக இருப்பாள், யோகத்தை உடையவள் ஆவள். கெட்ட ஆசையை உடையவளாக இருக்கமாட்டாள். இவள் இஷ்டப்பட்ட ஆபரணங்களைச் சேர்த்துவைப்பாள், நல்லவர்களுக்கு நல்லவளாக நடந்து கொள்ளுவாள்.

10. வரனுமே குடகில் நேரும் மைந்தர்க ளாண்பா லிரண்டு
அரிவையொ ரொன்றே யென்றே மன்பிலா மனத்த ளாவள்
திருமக ளொப்ப ளாவள் தேகமு மிருநி றத்தள்
பொரையிலாள் வயது தீர்க்கம் புண்ணிய வதியே கேளாய்.

10. ஜாதகருடைய சகோதரிக்குப் புருஷன் மேற்குத் திக்கிலிருந்து வருவார். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண்குழந்தையும் உண்டு என்று சொல்லுகின்றோம். இவள் பிரியமில்லாத மனத்தை உடையவளாக இருப்பாள். இவள் இலட்சுமிக்குச் சமானமானவளாக இருப்பாள், இரண்டு நிறங்கள் கலந்துள்ள நிறமாகிய மாநிறத்தை உடைய தேகத்தை உடையவளாக இருப்பாள். இவள் யாதொரு குற்றமும் இல்லாதவளாக இருப்பாள். இவள் நீண்ட ஆயுளை உடையவள், புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயங்களும்

11. உதித்தவன் மணத்தின் கால முரைக்கிறோம் பதினே
[ழாண்டி
லதிபதி யன்னை வர்க்க மாதுலன் மகளைக் கொள்வள்
சதியிலா மனத்த ளாவள் சாந்தமு மடக்க முண்டு
அதிதியை யாத ரிப்ப ளாளனுக் கினிய ளாமே.

11. ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பதினேழாவது வயதில் தன்னுடைய தாயாரின் பந்துக்களிலிருந்து அம்மானுடைய மகளை விவாகம் செய்துகொள்வார். இவள் கெடுதியில்லாத மனத்தை உடையவளாக இருப்பாள். சாந்தத்தையும் அடக்கத்தையும் உடையவள் ஆவள். பரதேசிகளைக் காப்

பாற்றுபவளாவள். தன்னுடைய புருஷனுக்கு இஷ்டமானவளாக இருப்பாள்.

ஜாதகருடைய மனைவியின் சந்ததிகள் (புத்திர பாவம்)

12. பாலபாக்கிய முடைய ளாவள் பரஉப காரி யாவள்
ஞாலம்மேல் வறுமை காணுள் நற்புத்தி யோக சாலி
காலத்தை யறிந்து ரைப்பள் கழறுவோம் புத்திர பாவஞ்
சாலவே யெழுவர் தோன்றுந் தங்காவே சிலவே
[யென்றோம்.

12. ஜாதகருடைய மனைவி பால்பாக்கியத்தை உடையவள் ஆவள். பிறருக்கு உபகாரத்தைச் செய்பவள் ஆவள். இவள் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள், நல்ல புத்தியை உடையவள், யோகத்தை உடையவளாக இருப்பாள். காலப்போக்கை நன்றாக அறிந்து அதற்குத் தகுந்தாற்போல பேசுவாள். இவளுடைய சந்ததிகளைப் பற்றிச் சொல்லுகின்றோம். மொத்தம் ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். சில குழந்தைகள் இறந்துவிடுவார்கள்.

ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்கள்

13. கன்னிகை யிருவர் தீர்க்கங்
காளையு மவ்வா றுவர்
மூன்சுதர் நாலு மேழு
மோங்காது விவளுக் கேதான்
அன்னையின் குணத்தைச் சொல்வே
னழகுளான் யோக சாலி
பொன்பணி யுடைய ளாவள்
புருடன்தன் மனம்போல் வாழ்வள்.

13. இரண்டு பெண் குழந்தைகளும் இரண்டு ஆண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். முதலாவது குழந்தையும் நான்காவது குழந்தையும் ஏழாவது குழந்தையும் இந்த மனைவிக்கு இறந்து விடுவார்கள். ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்களைச் சொல்லுகின்றேன், இவள் அழகுள்ளவளாக இருப்பாள். யோகத்தை உடையவளாவள். இவள் தனம் ஆபரணங்கள் ஆகிய இவைகளை உடையவளாக இருப்பாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருந்து வாழ்வாள்.

14. மானில முணச்சல் தேகி மருமமில் லாதா ளாவள்
தேன்மொழி யீகை யுள்ளாள் திருமக ளொப்ப ளாவள்
ஊனமில் லாத தேகி வுத்தமி நடக்கை நன்மை
வானவர்க் கன்ன மீவள் மருவின யோக முண்டு.

14. இவள் பூமியில் நீண்டு மெலிந்த தேகத்தை உடையவளாக இருப்பாள், தன்னுடைய மனத்தில் வஞ்சனை இரகசியம் ஆகிய இவைகள் இல்லாதவளாக இருப்பாள். இவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். பிறருக்குக் கொடுக்கின்ற தயாள குணத்தை உடையவளாக இருப்பாள், இலட்சுமிக்குச் சமானமானவள் ஆவள். இவள் யாதொரு அவயவக் குறைவும் இல்லாத தேகத்தை உடையவள் ஆவள். இவள் நல்ல ஒழுக்கத்தையும் கடத்தையையும் உத்தமமான குணத்தையும் உடையவளாக இருப்பாள், சித்தர்களுக்கும் பரதேசிகளுக்கும் சரப்பரட்டைப் பேரடுவாள். இவள் யோகத்தை உடைய வளாக இருப்பாள்.

ஜாதகரின் மனைவியினுடைய சகோதரங்கள்

15. தன்துணை யோக முண்டு தங்காவே மூன்று வென்றேங்
கன்னிகை துணையா னிரண்டு கழறுவோர் தீர்க்க மாக
அன்னவர் மூத்தோர் சேதி யகஇய வார்த்தை சொல்வள்
உன்னத தேகி யாவ னுள்மனங் கபடில் லாதான்.

15. ஜாதகருடைய மனைவிக்குச் சகோதரயோகம் உண்டு. இவளுக்கு மூன்று சகோதரங்கள் இறந்து விடுவார்கள். இரண்டு சகோதரங்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றேம். இவர்களில் மூத்த சகோதரருடைய விஷயத்தைச் சொல்லுகின்றேம். இவர் சிரிப்பையும் வேடிக்கையையும் உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லுவார். உயர்ந்த அல்லது சிறந்த தேகத்தை உடையவராவர். இவர் தன்னுடைய மனத்தில் வஞ்சனை இல்லாதவராக இருப்பார்.

16. சல்லியப் பாதை யுள்ளான் தன்பூமி விருத்தி செய்வன்
இல்லையென் றுரைக்க மாட்டா னிவனுக்குப் பாரி மூவர்
வல்லியன் பதிக்குச் சென்று விளைபுல மநேகஞ் சேர்த்து
அல்லலைத் தீர்க்கு மெங்க ளாத்துமத் தாயே கேளாய்.

16. மனைவியின் மூத்த சகோதரர் கடனால் உபத்திரவத்தை உடையவராக இருப்பார். நிலங்களைப் பயிரிட்டுத் தானியங்களை விருத்தியாக்குவார். பிறருக்கு உபகாரம் செய்வதற்குத் தன்னிடம் ஒன்றும் இல்லை என்று சொல்லமாட்டார். இவருக்கு மூன்று மனைவிமார்கள் இருப்பார்கள். வல்லியன் என்ற வெள்ளாக்காரனுடைய இடத்திற்குப்போய் நன்றாக விளைகின்ற அனேக நிலங்களைச் சம்பாதிப்பார். எங்களுடைய கஷ்டங்களை நிவிர்த்தி செய்கின்றவரும் எங்களுடைய உயிருக்கு உயிரான தாயாருமாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

(17 முதல் 30 வரை பாடல்களுக்கு ஓலையில்லை, பேப்பரிலும் காணவில்லை.)

31. விலகிடு மந்த ரோகம் விளம்புவோ மின்னு மொன்று
நிலையாக விருபான் மூன்றில் நேர்ந்திடு பிணியதேகஞ்
சிலமிலான் கடவுள் பத்தி தீர்ந்திடு மந்த ரோகம்
உலகினில் முப்பா லுறு முத்தமன் வாழ்வா னுமே.

31. இந்த ரோகம் நிவிர்த்தியாகிவிடும். இன்னொரு விஷயத்தைச் சொல்லுகின்றேரும். ஜாதகருக்கு இருபத்து மூன்றுவது வயதில் இவருடைய தகப்பனுருக்கு அதேகவிதமான நோய்கள் அல்லது பெரிய நோய் உண்டாகும். இவர் கோபமில்லாதவராவர். இவர் கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவராய் இருந்து அவரைத் தொழுது இந்த நோயிலிருந்து நிவிர்த்தியடைவார். இவர் பூமியில் ஜாதகருக்கு முப்பத்தாறு வயது வரையில் ஜீவித்திருப்பார்.

ஜாதகருடைய தகப்பனுரது மறுஜன்மமும் ஜாதகருடைய முன்ஜன்மமும்

32. மறுஜன்மம் வள்ளுர் தன்னில்
மறையவர் குலமு திப்பான்
அரசரா லதிகார ரங்க
ளவனுமே செய்வா னுவன்
திருமகன் பூர்வஞ் சொல்வேன்
திருக்கூடல் தன்னி லேதான்
வருங்கங்கை குலமு தித்து
மானிலங் கிருஷிகள் செய்து ;

32. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய மறுஜன்மத்தில் வள்ளுர் என்ற திருவள்ளுரில் பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் அரசாங்கத்தில் அதிகாரமான வேலையைச் செய்வார். ஜாதகருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் முக்கூடல் என்ற திருமுக்கூடலில் ஒரு வேளாளர் குலத்தில் உதித்து பெரிய பெரிய நிலங்களைப் பயிரிட்டுக் கொண்டு ;

33. தேவதா பத்தி கொண்டு தேரினோர்க் கன்ன மீந்து
தாவினோர்க் குதவி செய்துத் தாகப்பந் தலும மைத்து
மேவினன் காலந் நாடு வேதியன் வரையப் பட்டு
ஆவலா யிக்கு லத்தி லருளுவா னிந்தப் பாலன்.

33. தெய்வங்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவராகி பெரியார்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட்டைப் போட்டு ஒரு தாகப் பந்தலும் வைத்து வாழ்ந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போனுர். பிறகு பிரமனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இக்குலத்தில் வந்து பிறந்திருக்கின்றுர்.

ஜாதகருடைய யோக விஷயங்கள்

34. வந்தவன் யோகச் சேதி வரைகிறே மேக யோகம்
முந்துசா மரையோ கங்கள் முக்கூடல் யோக மொன்று
இந்தவா று யோகத் தாலே யியம்புவோம் பலனே யாங்கள்
சந்தத மரச ராலே ஜாதகன் ஜீவிப் பானும்.

34. ஜாதகருடைய யோக விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு மேக யோகம் என்ற ஒருவித யோகமும் சிறந்த சாமரை யோகம் என்ற ஒருவித யோகமும் முக்கூடல் யோகம் என்ற ஒருவித யோகமும் இருக்கின்றன. இந்த மூன்றுவித யோகங்களினால் பலன்களை நாங்கள் சொல்லுகின்றோம். இவர் எப்பொழுதும் அரசரால் ஜீவிப்பவராவர்.

குறிப்பு :—சாமரையோகம என்பது தமிழ் ஜாதக சிந்தாமணி இரண்டாயிரத்து முப்பதாவது பாடலின் பிரகாரம் முக்காற்பங்கு அமைந்திருப்பதாகத் தோற்றுகிறது. இந்த ஜாதக சிந்தாமணிப் பாடலில் கண்ட பிரகாரம் நாலுக்குடையவர் உச்சமாய் இருப்பதற்குப் பதிலாக இந்த ஜாதகத்தில் ஆட்சியாய் இருக்கிறார். பத்திற்குடையவரான சுக்கிரன் சராசியாகிய துலாத்தில் இருக்கிறார். நான்கிற்குடைய வரான அங்காரகன் ஏழில் இருப்பவற்குப் பதிலாக ஏழைப் பார்க்கின்றார். சாமி என்ற லக்கினாதிபதியாகிய சூரியன் அம்சையில் சராசியாகிய துலாத்தில் இருக்கின்றார் ஆகையால் சாமரையோகம் சுமார் முக்காற்பங்கு உண்டாகி இருக்கின்றது. மேகயோகத்தைப் பற்றித் தமிழ்ஜாதக சிந்தாமணி ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து நாலாவதுபாடலில் சொல்லியிருக்கிறது. இந்தப் பாடல் இந்த ஜாதகத்திற்குப் பொருந்தவில்லை.

35. புகழது மதிக மேற்பன்
பொருளது மதிகஞ் சேர்ப்பன்
இகபரன் பத்தி பூண்ப
னிவன்தாய்செய் புண்ணியத் தாலே
ஜகமெலாம் வசியங் கொள்வன்
சென்றிடம் பெருமை யேற்பன்
அகமது வீரே ழாண்டி
லணுகிடும் பூரா வாக.

35. ஜாதகர் கீர்த்திபையும் பெருமையையும் அதிகமாக அடைவார். தனத்தை அதிகமாகச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவருடைய தாயார் செய்த புண்ணியங்களின் பயனாக இவர் உலகத்திலுள்ள எல்லோரையும் தன்பக்கமாக இருக்கும்படி சினேகம்

செய்துகொள்ளுவார். இவர் எவ்விடத்தில் போனலும் அவ்விடத்தில் பெருமையை அடைவார். இவருக்குப் பதினேழாவது வயதில் முழுவதும் வந்து சேர்ந்துவிடும்.

36. ஈரஞ்சு வாண்டுக் குள்ளே யெய்திடுஞ் சிலவே பூமி
பாருகள் பிறைபோல் சேரும் படிப்பினல் பெருமை [யேற்பன்
தீரமா யிருபா னிரண்டில் ஜகராசர் பேட்டி கொள்வன்
காரியத் தொழிலும் வாய்க்குங் கனத்திடு நாட்கு நாளாய்.

36. ஜாதகருக்குப் பத்து வருடத்திற்குள்ளே சில நிலங்கள் வந்து சேரும். இவருக்கு நிலங்கள் வளர்பிறைச் சந்திரனைப்போல நாளுக்கு நாள் அதிகமாக வந்து சேர்ந்து கொண்டிருக்கும். இவர் தன்னுடைய வித்தையினல் பெருமையையும் கௌரவத்தையும் அடைவார். இவருக்குப் பெரிய காரியங்களைச் செய்கின்ற உத்தியோகமும் கிடைத்து இந்த உத்தியோகம் நாளடைவில் விருத்தியாகும்.

37. பலதேசஞ் செல்வா னுவன்
பணிதிபொன் னிச்சை யுள்ளான்
குலவுமீ ரேழா யிரம்பொன்
குமரனுங் கொள்வா னுகும்
நிலையாகச் சொன்னேம் யாங்கள்
நிகழ்த்தின மொழிகுன் றுவே
மலையரை மகளே பின்பால்
வழுத்துவோம் விபர மாக.

37. ஜாதகர் அனேக தேசங்களுக்குப் போவார். இவர் ஆபரணங்களின்மேலும் தனத்தின் மேலும் ஆசையுடையவராக இருப்பார். இவர் பதினான்காயிரம் பொன் பெறக்கூடிய பணத்தையும் சொத்தையும் சம்பாதிப்பார். இந்தச் சொத்து இவருக்கு நிலைத்திருக்கும் என்று சொல்லுகின்றோம். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். மலைகளுக்கு அரசராகிய பர்வத ராஜனுடைய புத்திரியாகிய பார்வதியம்மையே! இந்த விஷயங்களைப்பற்றிப் பின் பாகத்தில் விபரமாக நாங்கள் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய பிதிருபாட்டிக்கும் ஜாதகருக்கும் மரணம்

38. பதினேந்து வாண்டு தன்னில் பகருவோம் பிதாம கிக்குச்
சுதனுக்கு வெழுப சூண்டில் தனுர்மாதங் கண்டம் நேரும்
அதிபதி மனைவி பின்னல் வரைகிறே மார கங்கள்
அதிதியை யர்த ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

38. ஜாதகருக்குப் பதினைந்தாவது வயதில் இவருடைய பிதிரு பாட்டி இறந்துவிடுவாள். இவருக்கு எழுபதாவது வயதில் தனுர் மாதம் என்ற மார்கழி மாதத்தில் இவர் இறந்து விடுவார். இவ ருக்குப் பின்னால் இவருடைய மனைவி இறந்து விடுவாள் என்று சொல்லுகின்றோம். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மறுஜன்மம்

39. பின்ஜன்மந் தில்லை கீழ்ப்பால்
பிறப்பனும் வைசியச் சேயாய்ப்
பொன்பொரு ளதிக முண்டாய்ப்
பூமியில் வணிபஞ் செய்து
இன்னவன் வாழ்வா னவன்
இயம்பின மொழிகுன் றுவே
உன்னத வானை பெற்ற
வுத்தமி கேட்டி டாயே.

39. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில் தில்லை என்ற சிதம்பர க்ஷேத்திரத்திற்குக் கிழக்குத் திக்கில் ஒரு வைசியருடைய குலத் தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் தனம் சொத்து ஆகிய இவைகளை அதிகமாக அடைந்து பூமியில் வியாபாரத்தைச் செய்து கொண்டு வாழ்பவராக இருப்பார். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். சிறந்த யானைமுகத்தை யுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பாவதியம்மையே! கேட்பீராக.

ஜனனகால தசை இருப்பும் பலாபலன்களும்

40. ஜனித்திடுங் காலந் தன்னில் சேய்த்தசை யாண்டு [மூன்றுங்
குனித்திடும் பதினேர் திங்கள் குலவிடு மந்தக் காலம்
வினைவருஞ் ஜாத கர்க்கு விளங்கிடுந் துணைவர் தாமுங்
கனமுள யோகம் வாய்க்குங் காவலன் தந்தைக் கேதான்.

40. ஜாதகர் பிறந்த காலத்தில் சேய்த்தசை என்ற அங்காரக மகாதசையில் கணிதப் பிரகாரம் மூன்று வருஷங்களும் பதினெரு மாதங்களும் இருப்பு ஆகும். இந்தக் காலத்தில் ஜாதகருக்கு நோய்க ளும் கஷ்டங்களும் உண்டாகும். இவருக்குச் சகோதரர்கள் பிறப்பார் கள். இவருடைய தகப்பனாருக்கு யோகங்கள் உண்டாகும்.

41. அன்னையும் பிணியு மெய்து மவ்வழி சூத மெய்தும்
பொன்னது செலவு முண்டு பேதமா மிடங்கள் தாமும்
இன்னமும் விபர மேதா னியம்புவோம் பின்பா
[கத்தில்
கன்னென மொழியை யொக்குங் காதலி கேட்டி டாயே.

41. ஜாதகருடைய தர்யாருக்கு நோய்கள் உண்டாகும். தாய் வழியில் சூதகங்கள் நேரிடும். பணம் செலவாகும். இடப்பெயர்ச்சி நேரிடும். பின்பாகத்தில் விபரமாக இன்னும் அதிகமான விஷயங்களைச் சொல்லுகின்றேம். சர்க்கரையைப்போன்ற இனிமையான வார்த்தை களையுடைய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 128

ஜனனகால கிரகநிலை

1. [1]மதி[2]புகர் [3]சேய மாக [4]மங்கலன் [5]கோல தாக [6]விதியவன் ராகு [7]பானு [8]மேதையும் [9]வண்டி யாக நிதிகுரு [10]தேள தாக [11]நீத்தோனு [12]மான தாக இதுவிதங் கிரகம் நின்று விலக்னஞ் சிம்ம மாக ;

1. சந்திரனும் சுக்கிரனும் சிம்மத்திலும், அங்காரகன் துலாத்திலும், சனியும் இராகுவும் சூரியனும் புதனும் கடகத்திலும், குருவிருச்சிகத்திலும், கேது மகரத்திலும் ஆக இவ்விதமாய்க் கிரகங்கள் இருந்து ஜன்மலக்கினம் சிம்மம் ஆனால் ;

கிரகநிலை

	இராசி சக்கரம்		சனி ராகு சூரியன் புதன்
கேது			லக்னம் சந்திரன் சுக்கிரன்
	குரு	அங்காரகன்	

மகம் 4-ஆம் பாதம் ; கேதுதசை வரு 1-5-0

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் அங்காரகனும், ரிஷபத்திற் சுக்கிரனும், கடகத்திற் சந்திரனும், சிம்மத்திற் குருவும், கன்னியிற் புதனும் இராகுவும், மகரத்திற் சனியும், கும்பத்திற் சூரியனும், மீனத்திற் கேதுவும் ஆகும். குரு வக்கிரகதியிலும் சனி அஸ்தமனம் அடைந்தும் இருக்கின்றார்கள்.

---

1. சந்திரன்
2. சுக்கிரன்
3. சிம்மம்
4. அங்காரகன்
5. துலாம்
6. சனி
7. சூரியன்
8. புதன்
9. கடகம்
10. விருச்சிகம்
11. கேது
12. மகரம்

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. உமையவள் கேட்கும் போது
வுரைக்கிறார் பராசர் தாமும்
அமைந்திடு மாண்பால் ஜன்ம
மருகனின் குடகு வீதி
எமன்வாச லருக ருத்தரம்
யாளிவா கனத்தாள் மீனஞ்
ஜமதக்கினி நந்தி மூலை
திருமாலின் கோஷ்டம் பாழாம்.

2. பார்வதியம்மையார் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று கேட்க, பராசர மகரிஷி பதில் சொல்லுகின்றார். இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு கிழக்கு மேற்குத் தெருவில் இருக்கும். தெற்குப்பார்த்த வாயிற்காலை உடையதாக இருக்கும். அருகர் என்ற சமணருடைய குருவின் கோயில் வடக்குத்திக்கில் இருக்கும். யாளிவாகனத்தையுடைய காளியம்மன் கோயில் வடகிழக்குத் திக்கில் இருக்கும். ஜமதக்கினியின் கோயில் நந்திமூலையில் இருக்கும். ஒரு பாழடைந்த மகாவிஷ்ணுவின் கோயிலும் இந்தத் திக்கில் இருக்கும்.

3. இத்தகை யடையா ளத்து ளிலகிய சிற்றூர் தன்னில்
வித்தக னுதிப்பா னுவன் விளம்புவோ மன்னை தந்தை
பத்தினி துணைவர் புத்திரர் பாலகன் யோகச் சேதி
சுத்தமாய்ச் சொல்லு கின்றேஞ் துறவியே கேட்டி டாயே.

3. இவ்விதமான அடையாளங்களையுடைய ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் பிறந்தவராவர். இவருடைய தாயார் தகப்பனார் மனைவி சகோதரர் சந்ததிகள் யோகம் ஆகிய இவைகளைப்பற்றி உண்மையாகச் சொல்லுகின்றேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரின் விஷயங்கள்

4. தந்தைக்குத் தார மிரண்டில்
தரித்திடு முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும்
நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைகள் காணான்
பிதுராஸ்தி தன்னில் வாழான்
மாதுல னில்லம் வாழ்வன்
வரைகிறே மவன்கு ணத்தை.

4. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய தகப்பனாருடைய இரண்டு மனைவிமார்களில் முதல் மனைவிக்கு நியாயமாகப் பிறந்த

பிள்ளை என்று சொல்லுகின்றோம். இவருக்குச் சகோதரர்கள் கிடையா. இவர் தன்னுடைய தகப்பனுருடைய வீட்டில் வசிக்கமாட்டார். இவர் தன்னுடைய அம்மான் வீட்டில் வாசஞ்செய்வார். இவருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம்

ஜாதகரின் தகப்பனுருடைய குணதிசயங்கள்

5. சுமைதாங்கி போலே வாழ்வன் சுகமில்லா னதி காலம்
இமையவர் பூசை பூண்பன் எதிரியை வசியங் கொள்வன்
நவனியை விருத்தி செய்வன் நல்லோர்க்கு நல்லோ
[னவன்
பவமிலாக் குணத்த னவன் பத்தினி நேய னவன்.

5. ஜாதகருடைய தகப்பனுர் சுமைதாங்கியைப் போலப் பிறருக்கு உபகாரத்தைச் செய்துகொண்டு பொறுப்பாளியாக இருப்பார். தன்னுடைய வாழ்நாளில் பூர்வபாகத்தில் சௌக்கியமில்லாதவராக இருப்பார். இவர் கடவுளர்களைப் பூஜை செய்வார். தன்னுடைய பகைவர்களைத் தன்பக்கமாக இருக்கும்படி கவர்ந்துகொள்ளுவார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். நல்லவர்களுக்கு நல்லவராக நடந்துகொள்ளுவார். இவர் பாபக்குணத்தை உடையவராக இருக்கமாட்டார். தன்னுடைய மனைவியின்மேல் ஆசையுடையவராக இருப்பார்: இவருடைய மனைவியும் இவரிடத்தில் அன்புள்ளவளாக இருப்பாள்.

6. ஊகவான் மாஞ்சி வப்ப னுறுதியில் லாதா னவன்
ஆகம நுணுக்கந் தேரா னகசிய வார்த்தை தேர்வன்
நாக ரிகங்க ளுள்ளான் நல்கிடும் வாயுப் பீடை
போகபாக் கியங்கள் பின்னல் பொருந்திடு மென்று
[சொல்வோம்.

6. ஜாதகருடைய தகப்பனுர் விவேகமுடையவராக இருப்பார். மாந்துளிரின் நிறமாகிய ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவர். நிலையான மனமில்லாதவராவார். இவர் ஆகம சாஸ்திரத்தின் தத்துவங்களில் தேர்ச்சியை அடையாதவராக இருப்பார். சிரிப்பையும் வேடிக்கையையும் உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைப் பேசுவதில் வல்லவராக இருப்பார். இவர் நாகரிகங்களை உடையவர். வாயுரோகம் இவருக்கு வந்து சம்பவிக்கும். இவர் தன்னுடைவ வாணுளின் பிற்காலத்தில் சுகபோகங்களையும் செல்வத்தையும் உடையவராக இருப்பார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

7. இத்தகை யுடையா னுக்கு
விவனுமே யுதிப்பா னுவன்
வித்தகன் தூணபின் காணுன்
முன்னுண்டு பெண்பா லிரண்டு
சத்திமார் குணத்தைச் சொல்வேன்
சிவந்தமெய் வாத தேகி
உத்தம குணத்த ளாவ
ளுலகுக்கு நல்லோ ளாவள்.

7. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணு குணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருடன் கூடப் பிறந்த இளையவர் கிடையா. இவருக்கு இரண்டு மூத்த சகோதரிகள் உண்டு. இவர்களுடைய குணுதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். முதலாவது மூத்த சகோதரி சிவப்பான நிறத்தையும் வாத ரோகமுள்ள தேகத்தையும் உடையவளாக இருப்பாள். இவள் நல்ல சிறந்த குணங்களை உடையவளாவள். பூமியிலுள்ளவர்களுக்கு நல்லவளாக நடந்து கொள்ளுவாள்.

8. வரன்மன மொத்த மாது வளமுள குடும்பி யாவள்
திருவிலாள் பொறுமை வேலை திகம்பரன் பத்தி பூண்பள்
பெருஞ்சுத ராண்பா லிரண்டு பேதையு மவ்வாறு தீர்க்கம்
அரிவைக்கு வரனுங் தென்பா லறைகிறேங்-தாயே
[யாங்கள்.

8. ஜாதகருடைய முதலாவது மூத்த சகோதரி தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருப்பாள். செழிப்பான குடும்பினியாக இருப்பாள். இவள் யாதொரு கஷ்டங்களையும் உடையவள் அல்லள். காரியங்களைச் சாந்தமாகச் செய்வாள். கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உள்ளவளாக இருப்பாள். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவளுக்குப் புருஷன் தெற்குத் திக்கிலிருந்து வருவான் என்று நாங்கள் சொல்லுகின்றேம். பார்வதியம்மையே!

ஜாதகருடைய இரண்டாவது மூத்த சகோதரியின் குணுதிசயங்கள்

9. பின்தூணை சேதி கேளாய்ப் பேசுமூன் கோபி யாவள்
பன்னியே பேச வல்லாள் பகருவாள் தந்திர வார்த்தை
தன்பந்து மதிக்க வுய்வள் சமையலுக் கினிய ளாவள்
கன்னிகை சமயோ கத்தாள் கணவனுக் கினிய ளாமே.

9. ஜாதகருடைய இரண்டாவது மூத்த சகோதரியின் விஷயங் களைச் சொல்லுகின்றேரும். கேட்பீராக. இவள் பேசுவதற்கு முன்னே கோபத்தை உடையவளாக இருப்பாள். இவள் விமரிசையாகவும் சாமர்த்தியமாகவும் பேசும் திறமையை உடையவளாவள். இவள் வார்த்தைகளைத் தந்திரமாகச் சொல்லுவாள். இவள் தன்னுடைய பந்துக்கள் தன்னைக் கௌரவப்படுத்தும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வாள். சமையலை இனிமையாகவும் நன்றாகவும் செய்யக்கூடியவள் ஆவள். இவள் நடுத்தரமான யோகத்தை உடையவளாவள். தன் னுடைய புருஷனுக்குப் பிரியமுள்ளவளாக இருப்பாள்.

ஜாதகருடைய இரண்டாவது மூத்த சகோதரி

10. மனமர்மம் வெளிக்காட் டாதாள் மாரனுஞ் சிம்ம கோணம்
தனதானிய முடைய ளாவள் தன்சுத ராண்பா லொன்று
கனமுள பெண்பா லிரண்டு கழறுவோர் தீர்க்க மாகச்
சினமிலாள் வயது தீர்க்கஞ் செல்வதி மேலுங் கேளே.

10. ஜாதகருடைய இரண்டாவது மூத்த சகோதரி தன்னுடைய மனத்திலுள்ள மர்மத்தையும் ரகசியத்தையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாதவளாக இருப்பாள். இவளுடைய புருஷன் சிம்ம கோணம் என்ற சிம்மத்திற்குத் திரிகோண ராசிகளாகிய சிம்மம், தனுசு, மேஷம் ஆகிய இந்த ராசிகளில் ஏதாவதொரு ராசியில் பிறந்தவராவர். இவள் பணத்தையும் தான்யங்களையும் உடையவளாக இருப்பாள். இவளுக்கு ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றேரும். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவள். கோபத்தை உடையவள் அல்லள். பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் சொல்லப் போவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய குணாதிசயங்கள்

11. உதித்தவன் குணத்தைச் சொல்வே
னுறுதிமான் மாஞ்சி வப்பன்
சதிசெய்யா மனத்த னவன்
சற்சன ருறவு கொள்வன்
அதிசய வார்த்தை சொல்வ
னடைந்தோரை யாத ரிப்பன்
பொதுமாதர் மோகங் கொள்வன்
பொருளது மிசையா னென்றேரும்.

11. ஜாதகருடைய குணாதி சயங்களைப்பற்றி சொல்லுகின்றேன். இவர் நிலையான மனத்தை உடையவர். வலியையுடையவர். மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவர். இவர்

கெடுதியைச் செய்யாத மனத்தை உடையவராவர். நல்லவர்களுடைய சிநேகிதத்தை அடைவார். அதிசயமான வார்த்தைகளே இவர் சொல்லுவார். தன்னிடம் வந்தவர்களைக் காப்பாற்றுவார். இவர் தாஸிகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவராவர். இவர் தன்னுடைய சொத்துக்களைப் பிறருக்குக் கொடுக்கமாட்டார்.

12. தானியச் செட்டுச் செய்வன் தந்தையார் ஜீதங்கள் [கொள்வன்
மானமாய் ஜீவிப் பானு மாற்றூனே லகுவில் வெல்வன்
ஈனமாங் குணங்க ளில்லா னிருவித கல்வி கற்பன்
தானென்று கொள்வா னுவன் சங்கையா மனத்த னுமே.

12. ஜாதகர் தான்யங்களில் வியாபாரம் செய்வார். தன்னுடைய பிதுரார்ஜித சொத்தை அடைவார். இவர் மானத்துடன் ஜீவிப்பவராவர். தன்னுடைய எதிரியைச் சுலபமாக ஜயித்துவிடுவார். இவர் தாழ்ந்த குணங்களை உடையவர் அல்லர். இரண்டுவிதமான வித்தைகளைக் கற்றுக்கொள்ளுவார். இவர் தான் என்ற அகங்காரம் சிறிது உடையவராக இருப்பார். சந்தேகத்தையும் அச்சத்தையும் உள்ள மனத்தை உடையவராவர்.

13. அரசரால் செட்டுச் செய்வ னவனியில் புகழு மேற்பன்
பரிவண்டி பின்னு லுள்ளான் பந்துவை யாத ரிப்பன்
சரிபட வுரைப்பா னுவன் தந்தைக்கு மேலாய் வாழ்வன்
மருமத்தை வெளிவி டாதான் மறுத்துரை யதிகங் [கூறுவன்.

13. ஜாதகர் அரசர்களிடத்தில் வியாபாரம் செய்வார். இவர் பூமியில் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார். இவர் தன்னுடைய வாழ்நாளின் பிற்காலத்தில் குதிரை வண்டியை உடையவராக இருப்பார். தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார். இவர் சரியாகவும் நன்றாகவும் பேசுபவராவர். தன்னுடைய தகப்பனாரது அந்தஸ்திற்கு அதிகமான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் தன்னுடைய இரகசியத்தை வெளிக்குக் காட்டிக்கொள்ளமாட்டார். இவர் அதிகமாகத் தடுத்துப் பேசுவார்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயங்களும்

14. ஈரொன்ப தாண்டு தன்னி லிவனுக்குப் பாரி வாய்ப்பள்
காரிழை தென்பால் நேர்வள் கழறுவோ மவள்கு [ணத்தைத்
தீரமில் லாத நெஞ்சஞ் சிவந்தமெய் வாத தேகி
கூறுஞ்சொல் சுகமே யாகுங் கோதைக்கு வயது தீர்க்கம்.

14. ஜாதகருக்குத் தன்னுடைய பதினெட்டாவது வயதில் மனைவி வரப்பாள். இவள் தெற்குத்திக்கிலிருந்து வருவாள். இவளுடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் தைரியமில்லாத மனத்தை உடையவளாக இருப்பாள். இவள் சிவப்பான நிறத்தையும் வாதரோகமுள்ள தேகத்தையும் உடையவளாக இருப்பாள். இவள் இனிமையான நல்ல வார்த்தைகளையே சொல்லுவாள். நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள்.

15. களத்திரத் தானத் தாதி
கரும்பாம்பு புதன்பான் சேர்ந்து
இளத்தியாய் விரையம் புக்கக்
கோதையு மிரண்டே யென்றோம்
வளர்த்தியாய்ப் பொன்னேன் ஞலில்
மருவியே விரையம் பார்க்கக்
களத்திர மொன்றே யாகுங்
கலந்திடு மபிமா னப்பெண்.

15 இவ்விதமாகப் பராசரமுனிவர் சொல்லவே, களத்திர ஸ்தானத்திற்கு அதிபதியாகிய (சனி) கரும்பாம்பு என்ற இராகு, புதன், பானு என்ற சூரியன் ஆகிய இவர்களுடன் கூடி விரயம் என்ற பன்னிரண்டாவது பாவத்தில் இருப்பதனால் ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் ஏற்படுவார்கள் என்று ஒரு முனிவர் தடுத்துச் சொன்னார். இதற்குப் பராசர முனிவர் சொல்லுகின்றார். பொன்னேன் என்ற குரு வலிவுடையவராகி நான்காவது வீட்டில் இருந்துகொண்டு விரையஸ்தானமாகிய பன்னிரண்டாவது வீட்டைப் பார்ப்பதால் ஜாதகருக்கு மனைவி ஒருத்தியே யாவள். ஆனால் இவருக்கு அபிமானமான மனைவி ஒருத்தி ஏற்படுவாள்.

குறிப்பு :—களத்திர ஸ்தானாதிபதியாகிய சனி பன்னிரண்டில் சூரியனுடன் கூடி அஸ்தமனம் அடைந்து இருப்பது களத்திர தோஷமுள்ள அம்சமாகும். சனி இராகுவுடன் கூடி இருப்பதும் களத்திரத்திற்குத் தோஷமான அம்சமாகும். தமிழ் ஜாதகாலங்காரத்தில் அறுநூற்றி நாற்பத்தெட்டாவது பாடலில்

"ஏழுவீட்டினிற்கு அதிபன் சரத்தினிற்கில் இருமனைவி"

என்று சொல்லியிருக்கின்றது. இந்த ஜாதகத்தில் ஏழாம் வீட்டிற்கு அதிபராகிய சனி சரராசியாகிய கடக ராசியில் இருப்பது இரண்டு மனைவியோகம் உள்ள அம்சமாகும். மேலும் இந்த ஜாதகத்தில் களத்திர ஸ்தானாதிபதியாகிய சனியும் லாபாதிபதியாகிய புதனும் கூடியிருக்கின்றார்கள். ஆகையால் தமிழ் ஜாதகாலங்காரம் அறுநூற்றெண்பத்தொன்பதாவது பாடலாகிய கீழ்க்கண்டபாடல் பிரகாரம் இந்த ஜாதகர் அதிகமான களத்திரத்தை உடைய அமைப்பு உடையவர்.

"கொள்ளும் லாபாதி களத்திராதி கூடினலும் பார்த்தாலும்
தெள்ளும் பல்வானுகி யிவர் திரிகோணத்தி லிருந்திடினும்
உள்ள விவாக மூன்றென்றே யுரைப்பர்கணித வல்லோர்கள்
கள்ளவிடம் போல்விழி மருட்டுங் கருமென் குழன்ற காரிகையே.

இந்த ஜாதகத்தில் சனியையும் புதனையும் குரு பார்த்திருக்கின்றார். இது விஷயமாகத் தமிழ் ஜாதக அலங்காரத்தின் அறுநூற்றெண்பத்தோராவது பாடலாகிய கீழ்க்குறித்த பாடலை வாசிக்கவும்.

"ஏயலா பாதி யேழோ னிருவரும் பலமாய்க் கூடித்
தூய கோணத் திருக்கச் சுபருடைப் பார்வை யாகில்
நேயமா மனேகம் பெண்க ணிறைச்சீவ னுள்ள ராக
ஆயவே மணங்கள் சூட்டி யவனியி லிருப்பன் ருனே"

16. எந்தக்கா லத்தில் நேரு மியம்புவீ ரந்தச் சங்கை
சந்ததம் முப்பா னலில் சார்ந்திடும் வடுக மாது
இந்திரன் திசையில் நேரு மியம்புவோம் பின்பால் சேதி
கந்தனே யீன்ற மாதே கழறுவோம் புத்திர பாவம்.

16. ஜாதகருக்கு எந்த வயதில் இந்த அபிமான மனைவி வந்து நேரிடுவர்ள் என்பதைப்பற்றிச் சொல்லுவீர் என்று கேட்க, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு முப்பத்து நான்காவது வயதில் ஒரு தெலுங்கஜாதியைச் சேர்ந்த ஸ்திரீ கிழக்குத் திக்கிலிருந்து அபிமான மனைவியாக வந்து சேருவாள். இந்த விஷயத்தைப் பற்றிப் பின்னல் சொல்லுகின்றோம். முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! புத்திரபாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதருடைய சந்ததிகள் (புத்திர பாவம்)

17. புத்திர ரறுவர் தோன்றும் போய்விடுஞ் சிலவே
[யென்றேஞ்
சித்தமா யாண்பா லிரண்டு செல்வதி மூன்று மாகுஞ்
சுத்தமா யைந்துந் தீர்க்கஞ் செப்புவோம் பின்பால் சேதி
அத்தியை யீன்ற மாதே யறைகிறேங் கேட்டி டாயே.

17. ஜாதகருக்கு ஆறு குழந்தைகள் பிறப்பார்கள். சில குழந்தைகள் இறந்தும் பின்னப்பட்டும் போய்விடும். இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் ஐந்து குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள் என்று உண்மையாகச் சொல்லுகின்றோம். இவர்களுடைய விஷயங்களைப் பற்றிப் பின்னல் சொல்லுகின்றோம். யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்யதியம்மையே! இன்னும் சொல்லுகின்றோம். கேட்பீராக.

குறிப்பு :—மொத்தம் ஆறு குழந்தைகள் பிறப்பார்கள் என்றும் ஐந்து குழந்தைகள் தீர்க்காயுள் உடையவர்கள் என்றும் ''பொங்கிடும் சிலவே'' என்று பன்மையாகச் சொல்லி யிருப்பதாலும் குழந்தைகள் சிலர் பிறந்து இறந்துவிடுவார்கள் என்றும் உயிருடன் பிறக்காமல் பின்னப்பட்டுப் போய்விடுவார்கள் என்றும் அர்த்தம் கொள்ளவேண்டியதாக இருக்கிறது.

ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்கள்

18. அன்னையு நற்கு ணத்தா ளன்புள மனத்த ளாவள்
தன்வர னில்லங் காணுள் தாயில்லம் வாச மெய்துந்
தன்துணை யாண்பா லொன்று சாற்றுவோந் தீர்க்க மாகத்
திண்ணமாய் விரதம் பூண்பள் செரிந்திடும் நாபிச் சூடு.

18. ஜாதகருடைய தாயார் நல்ல குணத்தை உடையவளாவள். பிரியமுள்ள மனத்தை உடையவளாவள். இவள் தன்னுடைய புருஷனது வீட்டில் வாழாமல் தன்னுடைய தாயாருடைய வீட்டிலேயே ''புருஷனுடன்'' வாழ்பவளாக இருப்பாள். இவளுக்கு ஒரு சகோதரன் நீண்ட ஆயுள் உடையவராக இருப்பார் என்று சொல்லுகின்றோம். இவள் விரதங்களை உண்மையாக அனுஷ்டிப்பாள். இவளுக்கு நாபிச் சூட்டுரோகம் உண்டு.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

19. மத்தியில் விதவை யாவள்
மனமது சஞ்ச லத்தாள்
குத்தமில் லாதா ளாவள்
குறிப்பினில் கொடுமை தோன்றும்
வித்தகி பூர்வஞ் சொல்வேன்
மேல்கோட்டை நகரந் தன்னில்
சத்திரிய குலமு தித்துச்
சம்பத்து முடைய ளாகி;

19. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மத்திய வயதில் விதவையாகிவிடுவாள். அதனால் மனத்தில் துன்பத்தை உடையவளாக விருப்பாள். இவர் யாதொரு குற்றத்தையும் பாபத்தையும் செய்யாதவளாக இருப்பாள். இவள் பார்ப்பதற்குக் கொடூரமானவளாகக் காணப்படுவாள். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். மேல்கோட்டை என்ற மேலைக்கோட்டைப் பட்டணத்தில் ஒரு க்ஷத்திரிய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து செல்வத்தை உடையவளாகி ;

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

20. அறமதி லிச்சை யுண்டாய் யாவர்க்கு நல்லோ ளாகி
நெறிபல முடைய ளாகி நேர்ந்தனள் கால நாடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தன ளிந்த மாது
மறுஜன்மம் புகலக் கேண்மோ மலைநாடு கொங்கு
[தன்னில்;

20. ஜாதகருடைய தாயார் தனது முன் ஜன்மத்தில் தர்மத்தில் பிரியம் உள்ளவளாகி எல்லோருக்கும் நல்லவளாக இருந்து நல்ல மார்க்கங்களை உடையவளாக இருந்து இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தாள். பிறகு பிரம்தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இவள் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். இவளுடைய மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. கொங்குதேசம் என்ற மலைநாட்டில்;

ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மம்

21. உதிப்பளா மிக்கு லத்தி லுரைக்கிறோம் தந்தை பூர்வம்
விதியவன் பூசை செய்யும் விளங்கிய வோதூர் தன்னில்
முதற்குலந் தனிலு தித்து வுயர்வான குடும்பி யாகிச்
சதியதைப் புகலக் கேண்மோ தன்குல விதவை தன்னை;

21. ஜாதகருடைய தாயார் இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்திலேயே பிறப்பாள். ஜாதகருடைய தகப்பனாரது முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். பிரமதேவர் பூஜை செய்கின்ற சிறந்த ஓதூர் என்ற ஸ்தலத்தில் ஒரு பிராமணர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து மேன்மையான சிறந்த ஒரு குடும்பஸ்தரானார். இவருக்குச் சம்பவித்த பாபத்தைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. தனது ஜாதியைச் சார்ந்த ஒரு விதவை ஸ்திரீயுடன்;

22. பலவந்த போகம் செய்து பந்தின ரதை யறிந்து
தலைவியை விலக்க லுற்றார் தன்பக்கல் வினவும் போது
அலைபோலே கோப முற்று யம்மொழி நிராக கரிக்கத்
தலைவியு மனது வாடி சாற்றுவாள் சாபந் தானும்.

22. ஜாதகருடைய தகப்பனர் துராக்ரம்மாக சம்போகம் செய்யவே இதை இவளுடைய பந்துக்கள் தெரிந்து கொண்டு இவளை குடும்பத்தை விட்டு விலக்கி விட்டார்கள். இவள் இதை இவருடன் சொல்லும்பொழுது இவர் அதிகமான கோபத்தை அடைந்து இந்த வார்த்தையை நிராகரித்து விட்டார். இவள் தன்னுடைய மனத்தில் கஷ்டத்தை அடைந்து சாபத்தைக் கொடுத்தாள்,

23. மறுஜன்மந் தோன்றி யேதான்
மாதிரு சுகமில் லாமல்
பெருந்தந்தை யாஸ்தி யின்றிப்
பின்னுமுன் துணைக ளின்றிக்
குறைமன மாக வாழ்வாய்
கூறியே ஜலத்தில் மாண்டாள்
உறைந்தது வந்தத் தோஷ
முத்தமி கேட்டி டாயே.

23. "நீ உன்னுடைய மறுஜன்மத்தில் தாயாருடைய சௌக்கி யத்தை அடையாமலும் தகப்பனாருடைய சொத்து இல்லாமலும் உனக்கு மூத்தவர்களும் இளையவர்களுமான சகோதரர்கள் இல்லாம லும் இருந்து கஷ்டத்தை அடைந்த மனத்தை உடையவராகவும் இருந்து வாழக்கடவது" என்று ஜாதகருடைய தகப்பனாரைப் பார்த்து இந்த விதவை ஸ்திரீ சொல்லி விட்டு ஜலத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள். இந்தத் தோஷமானது இவரை வந்து அடைந் தது. பார்வதியம்மையே! கேட்பீராக.

24. அந்திய காலந் தன்னி லணுகிற்று மேகத் தோஷம்
அந்தக நகர டைந்து யருநர கினிலே புக்கி
முந்திய பிரமன் லக்க மேதினில் வரையப் பட்டு
வந்தவ னென்று சொல்வோ மங்கையின் சாபம்
[போலே;

24. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் மேக ரோகத்தை அடைந்து இறந்து எமபட்டணத் திற்குப் போய் நரகத்தில் இருந்து பிறகு பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்படடு இந்த பூமியில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லு கின்றோம். முன்ஜன்மத்தில் விதவை ஸ்திரீ கொடுத்த சாபத்தைப் போலவே;

ஜாதகருடைய தகப்பனாரது மறுஜன்மம்

25. நேரிடுந் துணைகா ணானும் நிகர்தந்தை யாஸ்தி காணன்
பாரியின் பக்கம் வாழ்வன் பாரினில் வறுமை காணன்
வேறுஜன் மங்கள் சொல்வேன் வேலங்கா டதனி
[லேதான்
நீறணி மறைக்கு லத்தில் நிமலனு முதிப்பா னுமே.

25. ஜாதகருடைய தகப்பனாருக்குச் சகோதரர்கள் இல்லை. இவருக்கு பிதுரார்ஜித சொத்துக் கிடையாது. இவர் தன்னுடைய மனைவியின் வீட்டிற்குப் போய் வசிப்பார். இவர் கஷ்டங்களையும்

தரித்திரத்தையும் அடையமாட்டார். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் வேலங்காடு என்ற திருவாலங் காட்டில் விபூதியைத் தரித்துக் கொள்ளுகின்ற ஒரு பிராம்மணருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறப்பார்.

ஜாதகருடைய தகப்பனாரது மரண காலமும் தாயாரது மரண காலமும்

26. ஈறஞ்சு வொன்று வாண்டி லேகுவான் தந்தை தானுந்
தீரமா யிருபா னேழில் சேருவா னன்னை யென்றோம்
மாரன்தன் பூர்வஞ் சொல்வேன் மயிலமா மலைக்கு
[மேற்குச்
சீரிய வூரி லேதான் ஜனித்தனன் ரெட்டி வம்சம்.

26. ஜாதகருக்குப் பதினாறுவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்து விடுவார். இவருக்கு இருபத்தேழாவது வயதில் இவருடைய தாயார் இறந்து விடுவாள். ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் மயிலத்தில் பெரிய மலைக்கு மேற்கில் உள்ள ஒரு சிறிய கிராமத்தில் ரெட்டியாருடைய குலத்தில் தன்னுடைய முன்ஜன்மத்தில் பிறந்தார்.

27. சுகமுள குடும்பி யாகித் தோகையு மதலை யுண்டாய்
இகபரன் பத்தி பூண்டு வெழில்மார்க்கந் தாகப் பந்தல்
மிகுதொண்டு முருக ருக்கு மேதினில் பவமில் லாமல்
பகையான கால நாடு பறந்தன னிவனே யென்றோம்.

27. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் சௌக்கியமுள்ள குடும்பஸ்தராக இருந்து மனைவியையும் மக்களையும் உடையவராகிக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உள்ளவராகி ஜனங்கள் போக்கு வரத்துச் செய்யும் வழியில் ஒரு தாகப்பந்தலை ஏற்படுத்தி ஆறுமுகக் கடவுளுக்குப் பெரிய வேலைகளைச் செய்து பூமியில் யாதொரு பாவமும் இல்லாமல் இறந்து கெடுதியான எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய யோக பாவம்

28. வேதனுல் வரையப் பட்டு மேவினு னிக்கு லத்தில்
ஓதுவே னிவனின் யோக மொன்பது வாண்டு மேலாய்த்
தீதாகுங் குடும்பந் தானுஞ் சிலுகுண்டு யதன்பின் னுக
மாதிரு யாஸ்தி பாதி மருவிடு மென்று சொல்வோம்.

28. ஜாதகர் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் இந்த குலத்தில் பிறந்திருக்கின்றார். இவருடைய யோகங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவருக்கு ஒன்பது வயதிற்குப் பிறகு இவருடைய குடும்பம் கஷ்டத்தை அடையும். அதன்

பிறகு சில கஷ்டங்களும் சண்டைகளும் ஏற்படும். இவருடைய தாயாரின் சொத்தில் பாதிபாகம் இவருக்கு வந்து சேரும் என்று சொல்லுகின்றோம்.

29. ஈரெட்டு வாண்டு மேலா யிவன்தந்தை பூர்வ மாஸ்தி
நேரிடு மரசர் மூலம் நுகலுவீர் வழக்குத் தானுங்
காரியம் பின்னல் கூடுங் கனத்திடு மிரண்டு பூமி
பாரிய குடும்பி யாவன் படைப்பன்பின் நாலாயிரம்
[பொன்.

29. ஜாதகருக்குப் பதினேறு வயதிற்குமேல் இவருடைய தகப்பனாரது பூர்வசொத்து அரசாங்கத்தார் மூலமாக வந்து சேரும். ஒரு வியாஜ்யம் உண்டாகும். இது பின்னல் இவருக்கு அனுகூலமாகும். இரண்டு பெரிய நிலங்கள் வந்து சேரும். இவர் பெரிய குடும்பஸ்தராக ஆவார். பிறகு நாலாயிரம் பொன் பெறக்கூடிய தனத்தை அடைவார்,

30. மூப்பது வாண்டு மேலாய் வேந்தரால் செட்டுச் செய்வன்
அப்போது பரியும் வண்டி யணுகிடு மிவனுக்கேதான்
எப்போதும் வறுமை காணுன் யிளைத்தோர்மேல் பிரிய
[னவன்
செப்பிய தானியச் செட்டுந் தனமது வுதவி யாகும்.

30. ஜாதகர் தன்னுடைய மூப்பதாவது வயதிற்குப் பிறகு அரசர்கள் மூலமாக வியாபாரம் செய்வார். அந்தக் காலத்தில இவருக்கு ஒரு குதிரை வண்டி ஏற்படும். இவர் பிறகு எப்பொழுதும் கஷ்டத்தையும் தரித்திரங்களையும் அடையமாட்டார். ஏழைகளிடத்தில் அன்புள்ளவராக இருப்பார். இவருக்குத் தான்ய வியாபாரமும் பணமும் அனுகூலத்தைத் தரும்.

31. அன்னிய மாது சேதி யறிவிப்பீர் முனியே நீர்தாம்
முன்ஜன்ம மனைவி தங்கை வடவுயிர் போலே வாழ்ந்து
பொன்பணி மோசஞ் செய்தாள் பேதையு மிச்சென்
[மத்தில்
முன்கடன் தீர வேண்டி மேவுவாள் பணிக ளோடு.

31. அன்னிய ஸ்திரீயின் விஷயத்தைப் பற்றி, முனிவரே! நீரே சொல்லுவீராக. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் தன்னுடைய மனைவியின் இளைய சகோதரியினிடத்தில் உயிரும் உடலும்போல ஒற்றுமையாக இருந்து வாழ்ந்து அவளுடைய தனம் ஆபரணங்கள் ஆகிய இவைகளை மோசஞ் செய்து எடுத்துக் கொண்டார். அவள் தன்னுடைய சொத்துக்களைத் திருப்பி அடைவதற்காக இந்த ஜன்மத்தில் நகைகளுடன் ஜாதகரிடம் வந்து சேருவாள்.

32. நாற்பது நாலாண் டுக்கும் நாயகி வாழ்வாள் பின்பு
கூப்பிடு வானுங் காலன் கோதையும் பேதி யாலே
தீர்ப்பாகச் செல்வா ளாவள் செப்பின மொழிகுன் றுவே
ஏற்கவே தவங்கள் செய்யு மீச்வரி கேட்டி டாயே.

32. இவள் ஜாதகருடன் வந்து சேர்ந்த பிறகு நாற்பத்துநான்கு வருடம் உயிருடன் இருப்பாள். பிறகு இவள் பேதியால் இறந்து எமபட்டணத்திற்குப் போய் விடுவாள் என்று உண்மையாகவும் கண்டிப்பாகவும் சொல்லுகின்றோம். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். தவங்களைச் செய்கின்ற ஈசுவரியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மரணகாலமும் மறுஜன்மமும்

33. எண்ணென்ப தாண்டு தன்னி
லெழில்மீன மாதந் தன்னில்
திண்ணமாய் ஜாத கர்க்குச்
செப்பிலே மார கங்கள்
விண்ணமாய்ப் பின்ஜன் மத்தை
வரைகிறே மவர்கீழ்ப் பாலே
கண்ணிய வூரி லேதான்
நிளம்புவா னிக்கு லத்தில்.

33. ஜாதகர் தன்னுடைய எழுபத்திரண்டாவது வயதில் சிறந்த மீனமாதம் என்ற பங்குனி மாதத்தில் இறந்து விடுவார் என்று உண்மையாகச் சொல்லுகின்றோம். இவருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் கிழக்குத் திக்கில் ஒரு மேன்மையான கிராமத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்திலேயே பிறப்பார்.

34. இதுமத்தில் ஜாத கர்க்கு யிலகாவோ மார கங்கள்
சதியாகப் பலவாய் நேருஞ் சதுர்த்தகேந் திரத்தில்
[பொன்னேன்
மதிபுகர் ஜன்மந் தங்க வயதுமே தீர்க்க மெய்தும்
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

34. இதன் இடையில் ஜாதகருக்கு மரணம் நேரிடாதோ என்று தடுத்துக் கேட்க, பராசரமுனிவர் பதில் சொல்லுகின்றார். இவருக்குக் கண்டங்கள் நேரிடும். சதுர்த்தகேந்திரம் என்ற நான்காவது பாவத்தில் பொன்னேன் என்ற குருவும் ஜன்மலக்கினத்தில் மதி என்ற சந்திரனும் புகர் என்ற சுக்கிரனும் இருப்பதால் ஜாதகருக்குத் தீர்க்கமான ஆயுள் உண்டு. பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—ஆயுள் விஷயமாகக் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள மணிகண்ட கேரளத்தின் அரிஷ்டகாண்டம் பதினெட்டாவது பாடலையும் பிரதி அரிஷ்டகாண்டம் நாற்பதாவது பாடலையும் முறையே வரசிக்கவும்.

" உலகினி லுதித்த பேர்கட் கொளிர்[1]மதி [2]யரசன் [3]சுங்கன்
கலக்கமில் லாம னின்றுற் [4]கண்டவன் மதிவீட் டானும்
நிலமதி லுறவே யாகி னிச்சய நன்மை யுண்டு
சலமதாய்த் தீயர் தீம்பாய்ச் சாகவு மொட்டார் மாதே" 17

" பூரண பலத்தி னோடு [5]புண்ணியர் சுபமே யாகிற்
காரண மில்லை சாகக் கனக்கவே வயது முண்டு" 40

இந்த ஜாதகத்தில் கண்டவன் என்ற ஜன்மலக்கினாதிபதி மதி வீட்டான் என்ற சந்திர லக்கினாதிபதியான சூரியனுவார். இவ்விரண்டு பாடல்களின் பிரகாரம் ஜாதகருக்குப் பூர்ணயுள் யோகம் இருக்கிறது.

ஜனனகால தசை இருப்பும் பலாபலன்களும்

35. ஜனித்திடுங் காலந் தன்னில் செம்பாம்புத் தசையி ருப்புக்
குனித்திடு மாண்டு வொன்று குலவிடுந் திங்க ளைந்தும்
வினைவருஞ் ஜாத கர்க்கு மிக்கதாய்ப் பிணியு மாகுங்
கனமுள பந்து சூதங் கழறுவோந் தாயே யாங்கள்.

35. ஜாதகர் பிறந்த காலத்தில் செம்பாம்பு என்ற கேது தசையில் இருப்பு ஒரு வருஷமும் ஐந்து மாதங்களும் ஆகும். இக்காலத்தில் ஜாதகருக்குக் கஷ்டங்கள் நேரிடும். நோய்கள் அதிகம் நேரிடும். சிறந்த பந்துக்களில் சூதகங்கள் உண்டாகும் என்று நாங்கள் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே!

---

1. சந்திரன்
2. குரு
3. சுக்கிரன்
4. ஜன்மலக்கினாதிபதி
5. சுபர்

ஜாதகம் 129

ஜனனகால கிரகநிலை

1. [1]மதியுங் [2]குசனும் [3]வீணையுற
[4]மறையோன் [5]கோவில்[6]புகர்[7]மாதை
[8]விதியன் ராகு புதன்[9]வண்டி
[10]வெய்யோன் [11]புலியுங் கேதுவு[12]மான்
இதுவே கிரக [13]மரிஜன்ம
மியம்பும் பலன்க ளெவ்வாறு
அதுவே யாண்பால் ஜனனமுறு
மறைவோ மில்லம் வடதென்பால்.

1. சந்திரனும் அங்காரகனும் மிதுனத்திலும், குரு துலாத்திலும், சுக்கிரன் கன்னியிலும், சனியும் இராகுவும் புதனும் கடகத்திலும், சூரியன் சிம்மத்திலும், கேது மகரத்திலுமாக இவ்விதம் கிரகங்கள் இருந்து, சிம்மம் ஜன்ம லக்கினமானால் பலா பலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதைச் சொல்லுவீராக. இந்தக் குழந்தை ஆண்குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றோம். இந்த விடு வடக்குத் தெற்கு;

கிரகநிலை

			சந்திரன் அங்காரகன்
	இராசி சக்கரம்		சனி புதன் ராகு
கேது			லக்கினம் சூரியன்
		குரு	சுக்கிரன்

திருவாதிரை 4-ஆம் பாதம்: இராகுதசை வரு 0-11-0.

---

1. சந்திரன்
2. அங்காரகன்
3. மிதுனம்
4. குரு
5. துலாம்
6. சுக்கிரன்
7. கன்னி
8. சனி
9. கடகம்
10. சூரியன்
11. சிம்மம்
12. மகரம்
13. சிம்மம்

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகங்கள் பொருத்தமுடையதாகும் :—மேஷத்தில் சூரியனும், மிதுனத்தில் அங்காரகனும், கன்னியில் கேதுவும் சனியும், விருச்சிகத்தில் புதனும், மகரத்தில் குருவும், மீனத்திற் சந்திரனும் சுக்கிரனும் இராகுவும் ஆகும்.

ஜனனமான நகரச் சிறப்பு

2. வீதி யாகு மகிழ்.....
விமலி காளி குணக்கினி லும்
பாதி பிறையு மணிந்தவனும்
பிருகும் வடகீ ழுத்திரமாம்
சூதாய்க் கொடியுந் தெற்கிலுறுஞ்
சிகையும் வடக்கு பேரூராம்
மேதினி லடையா ளத்துள்ளே
விளங்கு மாரூஞ் ஜனனமுமே.

2. தெருவாகும்.....பார்வதியம்மன் கோயிலும் காளியம்மன் கோயிலும் கிழக்குத் திக்கில் இருக்கும். சந்திரப்பிறையை அணிந்துள்ள சிவபெருமானுடைய கோயிலும் ஜமதக்கினியின் கோயிலும் வடகிழக்கிலும் வடக்கிலும் முறையே இருக்கும். தெற்கில் ஒரு கோட்டை இருக்கும். வடக்குத் திக்கில் ஒரு மலை இருக்கும் ஜாதகர் பிறந்த ஊர் பெரிய ஊராகும். இவ்விதமான அடையாளங்களையுடைய இடத்தில் ஜாதகர் ஆறுவது குழந்தையாகப் பிறப்பார்.

ஜாதகருடைய தகப்பனரின் சகோதரர்கள்

3. ஜனித்தோ னன்னை தந்தைதுணை
தேவி புத்திரர் தான்யோகம்
குனித்தோ முன்பின் ஜன்மங்கள்
கூறக் கேண்மோ தந்தைதுணை
கனமா யாண்பா லிரண்டாகுங்
கன்னி யவ்வாறு தீர்க்கமுறும்
பிணையாய் வேறுய்ச் சென்றிடுவன்
பிறக்கா முன்னம் பின்சொல்வேன்.

3. ஜாதகருடைய தாயார் தகப்பனர் சகோதரர்கள் மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களைப் பற்றியும் முன்ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றியும் சொல்லுகின்றோம். கேட்பீராக. ஜாதகரின் தகப்பனருடன் கூடப்பிறந்த இரண்டு சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுள உடையவர்களாக இருப்பார்கள். ஜாதகர் பிறப்பதற்கு முன்னே இந்தச் சகோதரர்கள்

ஒன்றாக இருந்து பிறகு வெவ்வேறு குடும்பஸ்தர்களாகப் பிரிந்து போய் விடுவார்கள். மற்ற விஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றேன்.

ஜாதகருடைய தகப்பனாரது குணாதிசயங்கள்

4. சொல்லுந் தவறான் பதரில்லான்
அறவோர்க் கன்பன் சுகபுசிப்பன்
தலமே செல்வன் பொறுமையுளன்
சற்பாத் திரனுந் தனவானும்
விலைமா தர்கள்மேல் விருப்பமிலான்
விவசா யங்கள் தான்செய்வன்
நலமே செய்வன் யாவருக்கும்
நாட்டில் வணிபஞ் செய்திடுவன்.

4. ஜாதகருடைய தகப்பனார் தான் சொல்லுகின்ற வார்த்தைகளைக் காப்பாற்றுவார். அவசரப்படாதவராக இருப்பார். பரதேசிகளுக்குப் பிரியமுள்ளவராக விருப்பவராவர். நல்ல ஆகாரத்தைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பவராவர். புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வார். மேன்மையை உடையவராவர். நல்ல குணங்களை உடையவர். பணக்காரர் ஆவர். இவர் தாஸிகளின்மேல் மையல் என்ற காம ஆசையை உடையவர் அல்லர். இவர் பயிர்த்தொழிலைச் செய்வார். இவர் எல்லோருக்கும் நல்லதையே செய்வார். இவர் தன்னுடைய கிராமத்தில் வியாபாரத்தையும் செய்வார்.

5. இடுவ னன்னம் யாவருக்கும்
இடரோர்க்கு வுதவி செய்வன்
கடனே கொள்ளான் கபடில்லான்
கட்டு வார்த்தை தானுரைப்பான்
திடமாங் குடும்பி தானுவான்
சிவந்த மெய்ய னுயரமுளான்
தடைசொல் லாதான் யாவருக்கும்
தரிக்கான் துணைக்குப் பாகமதை.

5. ஜாதகருடைய தகப்பனார் எல்லோருக்கும் சாப்பாட்டைப் போடுவார். கஷ்டத்தை அனுபவித்து கொண்டிருப்பவர்களுக்கு உபகாரம் செய்வார். இவர் கடன் வாங்கமாட்டார். வஞ்சனையில்லாதவராவர். புனைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையும் சொல்லுவார். இவர் மேன்மையான குடும்பஸ்தராவர். சிவப்பு நிறத்தை உடையவர். உயரமில்லாதவர். இவர் யாருக்கும் தடுத்துச் சொல்லமாட்டார். தன்னுடைய சகோதரர்களுக்குச் சொத்தை பங்கிட்டுக் கொடுக்கமாட்டார்.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

6. பிரியம் பூமி காலின்மேல்
பெம்மான் பத்தி தனைக்கொள்வன்
நெறியைத் தவறு னறமிச்சை
நிலமுஞ் சேர்ப்பன் நிருபனுக்கு
வருவா னிந்த சுதரென்றோம்
வகுத்தோந் துணையா னிரண்டினையே
அரிய முன்னே தோன்றிடுமா
மணுகா மற்றோ ரம்பிகையே.

6. நிலங்களின் மேலும் பசுக்களின் மேலும் ஜாதகருடைய தகப்பனர் ஆசையுள்ளவராக இருப்பார். இவர் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். சன்மார்க்கத்திலிருந்து தவறி நடக்கமாட்டார். தர்மம் செய்வதில் பிரியமுள்ளவர். நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இப்படிப்பட்ட குணங்களை உடைய தகப்பனருக்கு இந்த ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகின்றோம். ஜாதகருடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு மூத்த சகோதரர்கள் ஆவார்கள். மற்ற சகோதரர்கள் நிலைத்திருக்கமாட்டார்கள்.

வேறு

ஜாதகருடைய முதலாவது மூத்த சகோதரின் குணாதிசயங்கள்

7. அரிநாளில் தேளின் ராசி
யமைந்தவன் பலனைச் சொல்வேன்
நெறியுளன் பகவான் பேரில்
நீலிகள் மோகங் கொள்வன்
திருமக ளொப்ப தாகும்
சங்கீத ஞான முண்டு
நரைமலர் கந்த மிஷ்டன்
நாட்டினில் வணிபம் கொள்வன்.

7. ஜாதகரின் முதல் மூத்த சகோதரர் அரிநாள் என்ற அரிதினமாகிய திருவோண நட்சத்திரத்திலும் தேள் ராசி என்ற விருச்சிக ராசியிலும் பிறந்தவராவர். இவருடைய பலாபலன்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவர் ஸ்திரீகளின் மேல் மையல் என்ற காம ஆசையை உடையவராக இருப்பார். மகா விஷ்ணுவுக்குச் சமானமானவராக இருப்பார். சங்கீதத்தில் அறிவுள்ளவராக இருப்பார். வாசனையுள்ள புஷ்பங்களின் மேலும் சந்தனம் முதலிய வாசனை வஸ்துக்களின் மேலும் பிரியமுள்ளவராக இருப்பார். இவர் கிராமத்தில் வியாபாரத்தைச் செய்வார்.

8. கொள்ளவும் விற்க வல்லன் குஞ்சிரிப் புடைய னுவன்
சள்ளக வில்லா னுவன் சரசமாய் வார்த்தை சொல்வன்
தள்ளொணு விருந்தி னுரைத் தந்தையை மிஞ்சி வாழ்வன்
துள்ளுவான் சிலவே நாட்கள் தோகையு மொன்று
[வென்றோம்.

8. ஜாதகருடைய முதலாவது தமையன் சாமான்களை வாங்கு வதிலும் விற்பதிலும் அஃதாவது வியாபாரம் செய்வதிலும் சாமர்த்திய முள்ளவராக இருப்பார். இவர் புன்சிரிப்பு உள்ளவராக இருப்பார். இவர் கஷ்டங்களை அடையாதவராக இருப்பார். இனிமையான வார்த்தைகளை நல்ல விதமாகச் சொல்லுவார். இவர் விருந்தாளிகளை விலக்கிவிட மாட்டார். இவர் தன்னுடைய தகப்பனாரது அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் சில காலம் கர்வத்துடன் வாழ்ந்துகொண்டிருப்பார். இவருக்கு மனைவி ஒருத்தியே ஆவள்.

ஜாதகருடைய இரண்டாவது தமையனரின் குணாதிசயங்கள்

9. மணமுண்டு மதலை காணன்
வடமேல்பால் மனைவி வாய்க்கும்
வினையாகு மத்தி யத்தில்
மேவுவான் கால நாடு
கனமுடன் பின்பா கத்தில்
கழறுவோ மந்தச் சங்கை
அனையவே யவன்பின் சேதி
அனுடன்பின் நாளே தோன்றும்.

9. ஜாதகருடைய முதலாவது தமையனருக்கு விவாகம் நடக்கும். ஆனால் இவருக்குச் சந்ததிகள் கிடையாது. இவருக்கு மனைவி வட மேற்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பாள். இவர் தன்னுடைய மத்திய வயதில் முன்ஜன்மத்தின் வினையின் பயனாக இறந்து எம பட்டணத்திற்குப் போய் விடுவார். இவருடைய மற்ற விஷயங் களைப்பற்றி அடுத்த பாகத்தில் சொல்லுகின்றோம். இவருடைய அடுத்த சகோதரருடைய பலாபலன்களைப்பற்றிச் சொல்லுகின்றோம், இந்தச் சகோதரர் அஃதாவது ஜாதகருடைய இரண்டாவது தமையன் அனுஷ நட்சத்திற்குப் பிந்திய நட்சத்திரமாகிய கேட்டை நட்சத் திரத்தில் பிறந்தவராவர்.

10. மான்ராசி தனிலு தித்தோன் மருமமில் லாத நெஞ்சன்
தேன்மொழி கூறு வானுஞ் சிவந்தமெய் யுணச்ச
[ளுள்ளான்
ஈனமில் லாதா னுவ னினைசகேட்கப் பிரிய னுவன்
தானமுந் தரும மிச்சை சங்கரன் பத்தி கொஞ்சம்.

10. ஜாதகருடைய இரண்டாவது தமையனூர் மான் ராசி என்ற மகர ராசியில் பிறந்தவராவார். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவர் அல்லர். இவர் தேனைப்போன்ற இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் சிவப்பு நிறத்தையும் மெலிந்த தேகத்தையும் உடையவராவர். இவர் இழிவான குணத்தை உடையவர் அல்லர், பாட்டைக் கேட்பதற்கு ஆசையுள்ளவராக இருப்பார். தானம் தருமம் ஆகிய இவைகளைச் செய்வதில் இவர் பிரியமுள்ளவராக இருப்பார். கடவுளின்மேல் சிறிது அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார்.

11. பலவித வணிபஞ் செய்வன் பரவுப காரி யாவன்
நலமுள பத்தி யுண்டு நாயகி யிஷ்ட னுவன்
குலவியே வார்த்தை சொல்வன் குறித்தனம் பித்தச் சூடு
அலமதைத் தொடரா னுவ னவசர மனத்த னுமே.

11. ஜாதகருடைய இரண்டாவது தமையனூர் வியாபாரங்களைச் செய்வார். இவர் பிறருக்கு உபகாரங்களைச் செய்பவராவர். இவர் கடவுளின் மேல் நன்மையை விளைவிக்கக்கூடிய அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இவர் தன்னுடைய மனைவியினிடத்தில் பிரியமாக இருப்பார். மனைவியும் இவரிடத்தில் பிரியமுள்ளவளாக இருப்பாள். இவர் சந்தோஷத்துடன் வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் பித்தச் சூட்டு ரோகத்தை உடையவராவர். அற்பமான காரியங்களில் பிரவேசிக்கமாட்டார். அற்பமான வஸ்துக்களிலும் ஆசையில்லாதவராக இருப்பார். அவசரமான மனத்தை உடையவராக இருப்பார்.

12. பாரியும் வடமேல் திக்கில் பருகிடுஞ் சுதரா ணிரண்டு
நாரியு மவ்வா ருவர் நாயகன் வயது தீர்க்கந்
தீரமா யிவன்தன் னோடு சிலகாலம் வாசஞ் செய்வன்
கூறுவோம் விபர மிரண்டில் குழவியின் சேதி கேளாய்.

12. ஜாதகருடைய இரண்டாவது தமையனூருக்கு மனைவி வடமேற்குத் திக்கிலிருந்து வந்து சேருவாள். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறப்பார்கள். இவர் நீண்ட ஆயுளை உடையவராக இருப்பார். இவர் ஜாதகருடன் சில காலம் ஒன்றாக இருந்து வாழ்வார். இவருடைய மற்ற விஷயங்களைப் பற்றி இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதகருடைய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக.

வேறு

ஜாதகருடைய குணதிசயங்கள்

13. உதித்தவன்தன் குணஞ்சொல்வேன் சிவந்த மெய்யன்
உயர்வான கல்விகற்ப னுறவோர்க்கன் பன்
மதித்திடவே குடும்பமதாய் வாழ்வா னவன்
மானிலத்தில் பலவணிபம் மாற்றுன் நேயன்
சதியான மனமுடைய னீகை கொஞ்சந்
தந்தைபொருள் விருத்திசெய்வன் தந்திர வார்த்தை
புதிதாக வேறுயில்லஞ் செல்வா னவன்
பூவையர் மோகமுளன் பொருளீ யாதான்.

13. ஜாதகருடைய குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சிவப்பு நிறமுள்ள தேகத்தை உடையவர். இவர் அதிகமான வித்தையை உடையவராக இருப்பார், தன்னுடைய பந்துக்களுக்குப் பிரியமுள்ளவராக இருப்பார். இவர் மேன்மையானதும் மதிக்கத் தகுந்ததுமான குடும்பத்தை உடையவராகி வாழ்பவராவர். இவர் இந்தப் பெரிய பூமியில் பலவிதமான வியாபாரத்தைச் செய்வார். தன்னுடைய பகைவர்களிடத்தில் சினேகமுள்ளவராக இருப்பார். இவர் கெட்ட மனத்தை உடையவராக இருப்பார். பிறருக்குக் கொடுக்குங் குணத்தை சிறிதளவு உடையவராக இருப்பார். இவர் தன்னுடைய பிதுரார்ஜிதச் சொத்தை விருத்தியாக்குவார். இவர் உபாயமான வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் ஒரு புதிய வீட்டைக் கட்டுவார். இவர் ஸ்திரீகளின் மேல் மையல் என்ற காம ஆசையை உடையவராவர். இவர் பிறருக்குப் பணத்தைக் கொடுக்கமாட்டார்.

14. சொல்லினிலே கபடுமுண்டு சோர்வு மில்லான்
துறவோர்கள் பத்திகொள்வன் துருசாய்ச் செல்வன்
அல்லலென்றோர்க் குதவிடுவன் லாபத் தாலே
அரனுப தேசங் கொள்வன் யவனிசேர்ப்பன்
தல்லிதந்தைக் கிஷ்டமுளன் வறுமை காணன்
சாந்தகுணம் போல்காட்டும் கடூர மாவன்
வல்லவன்பின் துணைகாணன் பதினு ருண்டில்
வருவாளென்றோரும் பாரியது மேல்பால் தன்னில்.

14. ஜாதகர் தான் சொல்லுகின்ற வார்த்தைகளில் சூது வஞ்சனை ஆகிய இவைகளை உடையவராக இருப்பார். இவர் கபடப்படைய மாட்டார். பரதேசிகளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். கெட்ட நடத்தையுடையவர். கஷ்டத்தை அடைந்திருக்கின்றோம் என்பவர்களுக்கு இவர் தனக்கு வரும் லாபத்திலிருந்து உபகாரம் செய்வார். சிவபெருமானுடைய உபதேசங்களை அடைவார்.

இவர் நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் தாய் தகப்பனர்களுக்குப் பிரியமுள்ளவராக இருப்பார். தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவர் பார்வைக்குச் சாந்தமான குணத்தை உடையவரைப்போல காணப்படுவார். ஆனல் இவர் கொடூரமாய் இருப்பார். இவர் சாமர்த்தனக இருப்பார். இவர் இளைய சகோதரரை உடையவர் அல்லர். இவருக்கு மேற்குத் திக்கிலிருந்து தன்னுடைய பதினுருவது வயதில் மனைவி வந்து சம்பவிப்பாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மனைவியின் குணதிசயங்கள்

15. நிறைந்தமொழி தவர்தலிலாள் நீத்தோர்க் கன்பள்
நிலையிலார்க் கன்னமீவள் நிதமுஞ் சீலி
பெருமைகுண மறிவுமுளாள் வயது தீர்க்கம்
பராசர்மறித் தோதுகின்றார் புனித னுக்கு
இருமனைவி தானணுகுங் கார ணஞ்சொல்
ஏழுளோன் சனியாகி யீரிரில் நிற்க
அரவுபுதன் கூடியதோன் சரத்தில் தோன்ற
அருளினே மதைமறித் தத்திரி சொல்வார்.

15. ஜாதகருடைய மனைவி பூர்ணமான வார்த்தையை உடையவள். குற்றமில்லாதவள். உலகப்பற்றுக்களை விட்டுவிட்ட பரதேசிகளிடத்தில் பிரியமுள்ளவளாக இருப்பாள். நிலையில்லாத அந்தஸ்தை உடையவர்களான ஏழைகளுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். எப்பொழுதும் நல்லொழுக்கத்தை உடையவளாக இருப்பாள். இவள் பெருந்தன்மையான குணத்தை உடையவளாக இருப்பாள். இவள் அறிவுடையவள் ஆவள். இவள் நீண்ட வயதை உடையவள். பராசர முனிவர் தடுத்துப் பின்வருமாறு சொல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் ஏற்படுவார்கள். இதற்குக் காரணத்தைக் கேட்க, பராசர முனிவர் பதில் சொல்லுகின்றார். ஏழுக்குடையவர் சனியாகி பன்னிரண்டில் இருந்துகொண்டு அரவு என்ற இராகுவும் புதனும் இவருடன் கூடி சராசியாகிய கடக ராசியில் இருப்பதாலும் இரண்டு தாரம் என்று சொன்னோம். இதைத் தடுத்து அத்திரி மகரிஷி சொல்லுகின்றார்.

வேறு

16. தார மிரண்டு தானடையான்
சுகத்தோன் லாபம் தன்னிலிருக்
கூறு மேழா மிடந்தன்னைக்
குருவும் பார்க்க மனையொன்று

வேறு மணமுங் காணு தான்
மெல்லி வேறு வபிமானஞ்
சேரும் முப்ப தாண்ட ளவில்
தென்மேல் திக்கில் கௌரிகுலம்.

16. ஜாதகர் இரண்டு மனைவிமார்களை அடையமாட்டார். சுகத்தோன் என்ற சுகாதிபதியாகிய நான்கிற்குடைய அங்காரகன் லாபம் என்ற பதினொராவது வீட்டில் இருப்பதாலும் ஏழாமிடத்தைக் குரு பார்ப்பதாலும் ஜாதகருக்கு மனைவி ஒருத்தியே யாவள். இவருக்கு இன்னொரு விவாகம் நடக்காது. ஆனால் வேறு ஒரு ஸ்திரீ இவருக்கு அபிமான மனைவியாக வந்து சம்பவிப்பாள், இவள் இவருக்கு முப்பதாவது வயதில் தென்மேற்குத் திக்கிலிருந்தும் கௌரி குலம் என்ற வேளாளர் குலத்திலிருந்தும் வந்து சம்பவிப்பாள்.

17. மாது வணுகு மணங்காணுள்
மதலை யின்றித் தான்வாழ்வள்
ஒது மனைக்குச் சுதரெட்டு
திக்குமதிலே யாணிரண்டு
போத கன்னி மூன்றாகும்
பொருளு மைந்துந் தீர்க்கமதாய்த்
தீதாய் மூன்று மென்றுரைப்போம்
செப்பு மிவன்தன் பூர்வமதை.

17. ஜாதகருக்கு இவ்விதமாக ஒரு ஸ்திரீ வந்து சேருவாள். ஆனால் இவளை இவர் விவாகஞ்செய்து கொள்ளமாட்டார். இந்த அபிமான ஸ்திரீ குழந்தைகள் இல்லாமல் இருந்து வாழ்வாள். விவாகமான மனைவிக்கு மொத்தம் எட்டுக் குழந்தைகள் பிறப்பார்கள். இவர்களில் இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். மூன்று குழந்தைகள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். ஜாதகருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

குறிப்பு :—இந்த ஜாதகத்தையும் நூற்று இருபத்தெட்டாவது ஜாதகத்தையும் ஒற்றுப்பார்க்க சனி இராகு புதன் ஆகிய இவர்கள் பன்னிரண்டாம் இடமும் சராசியும் ஆகிய கடக ராசியில் இருக்கின்றார்கள். இந்த ஜாதகத்தில் ஏழைக் குரு பார்க்கின்றார். நான்கிற்குடையவர் பதினொன்றில் இருக்கின்றார். இன்னொரு ஜாதகத்தில் குரு ஏழுக்குடையவரைப் பார்க்கின்றார். நான்கில் குரு இருக்கின்றார். இவ்விரண்டு ஜாதகங்களிலும் விவாகமான தாரம் ஒருத்தி உண்டு என்றும் அபிமான மனைவி ஒருத்தி உண்டு என்றும் கண்டிருப்பதைக் கவனிக்கவும்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

18. மதுரை நாட்டில் சேடர்குல
வர்க்கந் தன்னில் தானுதித்து
அதிக சேவுத் தொழில்செய்து
வறத்தி லிச்சை யரன் தொண்டு
கதியென் றோர்க்கு வன்மீந்து
கடந்தோர் குணம்பொன் தானீந்து
சதியாய்க் காலன் நாட்டடைந்து
தலைநான் கோனும் வரையவந்தான்.

18. ஜாதகர் முன்ஜன்மத்தில் மதுரைமா நகரத்தில் சேடர் குலம் என்ற ஒரு வேலைக்காரருடைய ஜாதியில் ஆண் குழந்தையாகப் பிறந்து அதிகமாகத் தறித்தொழிலை செய்துகொண்டு தரும்த்தில் பிரியமுடையவராகிச் சிவப்பெருமான் மேல் ஆசையும் அன்பும் உடைய வராகி அவருக்கு வேலை செய்துகொண்டும் ஏழைகளுக்குச் சாப்பாட் டைப் போட்டுக்கொண்டும் பரதேசிகளுக்குப் பணத்தைத் தானமாகக் கொடுத்து வாழ்ந்து கொண்டும் பிறகு இறந்து கெடுதியான எம பட்டணத்திற்குபோய் நான்கு தலைகளையுடைய பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார்.

ஜாதகருடைய யோக விஷயங்கள்

19. வந்தோன் யோகச் சேதிதனை
வரையக் கேண்மோ ஜனனமுதல்
இந்தோன் மரண மட்டுலகில்
இடரேகாணன் வறுமை யில்லான்
விந்தை யாகப் பலசெட்டும்
விவசா யங்கள் தானுண்டாங்
கந்தன் பத்தி பலர்நேயங்
கனகஞ் சேருஞ் காலாள்கள்.

19. ஜாதகருடைய யோக விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின் றோம். கேட்பீராக. இவருடைய ஜனனகால முதற்கொண்டு மரண காலம் வரையிலும் இந்தப் பூமியில் இவர் கஷ்டங்களை அனுபவிக்க மாட்டார். தரித்திரத்தையும் அடையமாட்டார். இவர் ஆச்சரியமான மார்க்கத்தில் பலவிதமான வியாபாரங்களைச் செய்வார். விவசாயத் தையும் செய்வார். இவர் முருகக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராவார். பலரிடம் சினேகமாக இருப்பார். இவருக்குத் தனம் வந்து சேரும். கால்நடை வேலைக்காரர்களை உடையவராக இருப்பார்.

20. தந்தை தனக்குத் தாழாதான்
ஐகரா சர்கள் பேட்டிகொள்வன்
வந்தோர்க் கன்ன முன்துணையின்
வார்த்தை கடவான் மகிழுடையன்
சொந்தக் கடவுள் பணிசெய்வன்
தொடுத்த காரியம் வென்றிடுவன்
இந்தோ ஞஸ்தி பூமிபணி
யில்ல மாரூ யிரம்பொன்னே.

20. ஜாதகர் தன்னுடைய தகப்பனருடைய அந்தஸ்திற்குக் குறையாத அந்தஸ்திலிருப்பார். பெரிய பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார். இவர் தன்னிடம் வருபவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவார். தன்னுடைய மூத்த சகோதரருடைய வார்த்தைகளுக்கு அத்துமீறி நடக்கமாட்டார். இவர் பெருமையை உடைபவராவர். இவர் தன்னுடைய குலத்துக் கடவுளுக்குக் கோயில் வேலைகளைச் செய்வார். தான் செய்ய ஆரம்பித்த காரியங்களைச் செய்து முடித்து ஜயத்தை அடைவார். இவருடைய சொத்து நிலம் ஆபரணங்கள் வீடு ஆகிய இவைகள் எல்லாம் ஆறுயிரம் பொன் மதிப்பிடக்கூடியனவாக இருக்கும்.

ஜாதகருடைய தகப்பனரது முன் ஜன்மம்

21. தந்தை பூர்வந் தானுரைப்பன்
தக்கோ லமதுக் கருகினில்தான்
பிந்தி யூரில் ரெட்டிகுலம்
பிறந்தா னென்றேரும் பூமியதால்
முந்திய குடும்பி தானுகி
யுயர்வோர் நேச மனமீந்து
விந்தை யாகத் தலஞ்சென்று
மேதினில் பவங்க ளில்லாமல் ;

21. ஜாதகருடைய தகப்பனரது முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் தக்கோலத்திற்கு அருகில் உள்ள ஒரு சிறப்பில்லாத கிராமத்தில் ரெட்டியாருடைய ஜாதியில் ஆண் குழந்தையாகப் பிறந்தார் என்று சொல்லுகின்றோம். இவர் விவசாயத் தொழில் செய்துகொண்டு ஒரு மேன்மையான குடும்பஸ்தராக இருந்து பெரியார்களுடைய சினேகிதத்தை அடைந்து அவர்களிடத்தில் பிரியமுள்ளவராக இருந்து ஆச்சரியமாகப் புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்து பூமியில் யாதொரு பாபத்தையும் அடையாதவராக இருந்து ;

22. காலன் பதிக்குத் தான்சென்று
கஞ்சன் வரைய ஜாதகனும்
சீல மில்லா கங்கைக்குலஞ்
ஜனித்தா னென்றேரும் தேவியரே
பாலன் தனக்கு முன்வறுமை
பகர்வோம் பின்பால் சுகமுள்ளான்
மாலின் மனைவி தானுறையும்
வகுத்தே யுரைப்போம் பின்ஜன்மம்.

22. இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரம்தேவனுல் பிரம விபியுடன் எழுதப்பட்டுச் சுத்தமில்லாத ஒரு கங்கைகுலம் என்ற வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாக இந்த ஜன்மத்தில் பிறந்தார் என்று சொல்லுகின்ரேரும். பார்வதியம்மையே! இவருக்குத் தன் னுடைய வாழ்வின் முற்காலத்தில் தரித்திரமும் கஷ்டங்களும் உண்டு. பிற்காலத்தில் சௌக்கியத்தை அடைவார் என்று சொல்லு கின்ரேரும். இவரிடத்தில் மகாவிஷ்ணுவின் மனைவியாகிய இலட்சுமி வாசஞ் செய்துகொண்டிருப்பாள். இவருடைய மறு ஜன்மத்தைப் பற்றிச் சோல்லுகின்ரேரும்.

வேறு

ஜாதகருடைய தகப்பனுரது மறு ஜன்மம்

23. மறுஜன்மஞ் சொல்லக் கேண்மோ வாயுவில்
[ரெட்டி வம்சம்
பெருமையா யுதித்து மேலும் பிரபல குடும்பி யாகி
இருவினை யில்லா னுகி யிகபரன் பத்தி பூண்பன்
அருமறை முடிவி லாடு மம்பிகை யாளே கேளாய்.

23, ஜாதகருடைய தகப்பனுரது பின் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்ரேரும். கேட்பீராக. இவர் வாயுஸ்தலம் என்ற காளஹஸ்தி யில் ஒரு ரெட்டியாருடைய குலத்தில் தன்னுடைய மறு ஜன்மத்தில் பெருமையுடன் பிறந்து ஒரு சிறந்த குடும்பஸ்தராகிப் பாபமும் புண்ணியமும் இல்லாதவராகிக் கடவுளின்மேல் அன்பும் ஆசையும் அடைவார். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக் களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

வேறு

ஜாதகருடைய தாயாரது குணதிசயங்கள்

24. [1]அன்னைகுணமாஞ்சி வப்ப ளன்புடைய
மனமுடையா ளறமும் கொஞ்ச
[2]பின்ன மிலாள் நன்னடை
பெரும் புத்தி யுபகாரி பெரியோர்க் கன்பன்

[3]தன் துணை யாண்வொன் றென்றேர்ந் தையலர்
நான்கென்றேஞ் சங்கை காணுள்
[4]மன்னு மில்லம் வடதுலையா மரித் துரையாள்
பூர்வமதை வகுப்போம் யாம்.

24. ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் மாந்துளிரின் நிறமாகிய ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவளாவாள். இவள் பிரியமுள்ள மனத்தை உடையவளாக இருப்பாள். இவள் சிறிது தர்மத்தையும் செய்வாள். இவள் யாதொரு அவயவக் குறைவும் இல்லா தேகத்தை உடையவளாக இருப்பாள். இவள் நல்லொழுக்கத்தை உடையவளாவாள். இவள் பெரிய புத்தியை உடையவளாவாள். பிறருக்கு உபகாரத்தைச் செய்பவளாவாள். இவர் பெரியோர்களிடத்தில் அன்புள்ளவளாக இருப்பாள். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் ஒரு சகோதரரும் நான்கு சகோதரிகளும் உண்டு என்று சொல்லுகின்றோம். இவள் அச்சத்தையும் சந்தேகத்தையும் உடையவள் அல்லள். இவளுடைய தாயார் வீடு வடக்குத் திக்கில் இருக்கும். இவள் தடுத்து வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றி நாங்கள் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது முன் ஜன்மம்

25. வகுத்துரைப்போம் விரிஞ்சிக்கு மேல் திசையில்
செங்குந்த மரபில் தோன்றி
மிககுடும்பி சுதருண்டாய் விண்ணப் பங்கள்
பத்தியதாய் விருந்தோர்க் கிஷ்டஞ்
ஜகமதனில் பவமின்றி சென்றனள் காண்
காலன்பதி சிரஞ்ஜன் கோனும்
தகமையா யெழுதவந்தாள் சங்கரியே.

25. ஜாதகருடைய தாயாரது முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் விரிஞ்சிபுரத்திற்கு மேற்குத்திக்கில் ஒரு செங்குந்தர் என்ற கைக்கோளர் ஜாதியில் பெண் குழந்தையாகப் பிறந்து பெரிய குடும்பினியாகியும் குழந்தைகளை உடையவளாகியும் கடவுள்களின்மேல் அன்பும் ஆசையும் உடையவளாகியும், விருந்தாளிகளிடம் அன்புள்ளவளாகியும் பூமியில் யாதொரு பாபத்தையும் செய்யாதவளாகியும் இருந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய் நான்கு தலைகளையுடைய பிரமதேவரால் தகுந்தபடியே பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்றாள். பார்வதியம்மையே! இவள் பூமியில் சௌக்கியத்துடன் வாழ்வாள்.

வேறு

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

26. மாதிரு மறுஜன் மத்தை யறைகிறேஞ் சேது தன்னில்
போதன முடைய பிரம புதல்வியா யுதித்து வின்னேள்
தீதில்லா வாழ்ந்து மேதான் தேவராய்ச் செல்வா ளாவள்
போதக வாஜ பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

26. ஜாதகருடைய தாயாரது மறு ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேரும். இவள் சேதுஸ்தலத்தில் அறிவையுடைய ஒரு பிராமணருடைய புத்திரியாகத் தன்னுடைய மறு ஜன்மத்தில் பிறந்து யாதொரு கஷ்டங்களும் இல்லாதவளாக வாழ்ந்து தேவராகப் போய்விடுவாள். இளம் யாஜனயின் முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனாரது மரண காலம்

27. இருபது வாறு வாண்டி லெழில்மீன மாதந் தன்னில்
கரியவன் தசையி லேதான் கவிபுத்தி நடக்குங் காலை
உரைகிறேந் தந்தை கண்ட முறைத்தவை தப்பா வாகும்
பெருவயி றேஜைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

27. ஜாதகருடைய இருபத்தாருவது வயதில் சிறந்த மீனமாதம் என்ற பங்குனி மாதத்தில் கரியவன் என்ற சனியினது தசையில் கவி என்ற சுக்கிரபுத்தி நடக்கின்ற காலத்தில் இவருடைய தகப்பனார் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றேரும். நாங்கள் சொல்லிய பலா பலன்கள் தவறிடாமல் நடக்கும். பெரிய வயிற்றை உடைய விநாயகக் கடவுளைப் பெற்ற புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது மரண காலம்

28. அன்னைக்கு மூப்ப தாண்டி லைப்பசி மாதந் தன்னில்
முன்னவன் தசையி லேதா னுதித்திடுஞ் சேயின் புத்தி
தன்னிலே கண்ட மென்றேஞ் சாற்றின மொழிகுன்
[றுவே
கன்னென மொழியி னுளே கழறுவோ மதன்மே லாக.

28. ஜாதகருக்கு மூப்பதாவது வயதில் ஐப்பசி மாதத்தில் இவருடைய தாயார் முன் சொல்லப்பட்ட தசையாகிய சனி தசையில் சேய் என்ற அங்காரகனுடைய புக்தியில் இறந்துவிடுவாள் என்று சொல்லுகின்றேரும். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் தவறிடாமல் நடக்கும். சர்க்கரையைப்போன்ற இனிமையான வார்த்தைகளையுடைய பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் அதிகமாகச் சொல்லுகின்றேரும்.

ஜாதகருடைய முதலாவது தமையன் இரண்டாவது தமையன் ஜாதகர் ஆகிய இவர்களுடைய மரண காலம்

29. ஈராறு வண்டு தன்னி லிவன்துணை முன்னென் கண்டங்
தீராது வதன்மே லாகச் செப்புவோ மைம்பா னென்றில்
கூறுவோ மவன்பின் வந்தோன் குழவிக் கறுபா
[னிரண்டில்
தேறிய மகர மாதஞ் செப்புவோங் கண்டந் தானே.

29. ஜாதகருக்குப் பன்னிரண்டாவது வயதில் இவருடைய முதலாவது மூத்த சகோதரர் இறந்துவிடுவார். இதற்குப் பிறகு ஜாதகருக்கு ஐம்பத்தோராவது வயதில் இவருடைய இரண்டாவது மூத்த சகோதரர் இறந்துவிடுவார். ஜாதகர் தன்னுடைய அறுபத் திரண்டாவது வயதில் சிறந்த மகரமாதம் என்ற தைமாதத்தில் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றோம்.

30. இதுமத்தில் மார கங்கள் யேற்காவோ ஜாத கர்க்குக்
குதர்க்கங்க ளதிக முண்டு கரும்புகர் மூன்றுள் நிற்க
எதுவித நோய்கள் நேர்ந்து மிரவிமுன் பனிபோ லேகுஞ்
சதமூட னறுபா னிரண்டுஞ் சாற்றினேங் தீர்க்க மாக.

30. இதற்கு இடையில் ஜாதகருக்கு மரணம் நேரிடாதோ என்று கேட்கவே முனிவர் பதில் சொல்லுகின்றார். இவருக்கு அனேக கண்டங்கள் நேரிடும். புகர் என்ற சுக்கிரன் மூன்று ராசிக்குள்ளே இருப்பதாலே எவ்விதமான நோய்கள் வந்த போதிலும் சூரியனுக்கு முன்னே பனி பறந்துவிடுவது போல நிவிர்த்தியாகிவிடும். இவர் அறுபத்திரண்டு வயது வரையிலும் தீர்க்கமான ஆயுளை உடையவராக இருப்பார் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :— இந்த ஜாதகத்தில் லக்கினாதிபதியாகிய சூரியன் லக்கினத்திலேயே ஆட்சியாக இருப்பது ஆயுளுக்கு அனுகூலமான அம்சமாகும். அஷ்டமாதிபதிவாகிய குரு மூன்றில் இருக்கின்றார். அஷ்டமாதிபதி மூன்றில் இருந்தால் ஆயுள் நூறு என்று ஜோதிடப் புத்தகங்களில் கண்டிருப்பதால் குரு மூன்றில் இருப்பது ஆயுளுக்கு அனுகூலமான அம்சமாகும். பத்துக்குடையவராகிய சுக்கிரன் இரண்டில் இருப்பது ஆயுளுக்கு அனுகூலமான அம்சமாகும். சுக்கிரன் நீசமடைந்திருக்கின்றார். இவர் இருக்கின்ற ராசி நாதனாகிய புதனும் சுக்கிரனுக்கு உச்ச ஸ்தானமாகிய மீனத்திற்குடைய குருவும் ஆக புதனும் குருவும் ஒருவருக்கொருவர் கேந்திரத்தில் இருப்பதால் பலதீபிகை ஏழாவது அத்தியாயம் முப்பதாவது சுலோகத்தின் பிரகாரம் சுக்கிரனுக்கு நீசபங்கம் ஏற்படுகிறது.

ஜாதகருடைய மறுஜன்மம்

31. பின்ஜன்மம் புகலக் கேண்மோ பிருதிவி தலத்தி லேதான்
முன்குல மதிலு திப்பான் முதல்வியுங் கேட்க லுற்றாள்
இந்ததோர் ஜன்மந் தன்னி லெய்தின புண்ணிய மென்ன
மன்னிய கடவுள் தொண்டு மைந்தனுஞ் செய்த லாலும்;

31. ஜாதகருடைய மறுஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. பிருதிவிஸ்தலம் என்ற காஞ்சிமாநகரத்தில் முன் குல மாகிய பிராமணர் குலத்தில ஜாதகர் ஆண் குழந்தையாகத் தன்னுடைய மறுஜன்மத்தில் பிறப்பார். இவ்விதமாக முனிவர் சொல்லவே தலீவியாகிய பார்வதியம்மையார் கேட்கின்றார். ஜாதகர் இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணியங்களைச் செய்தார் என்று கேட்க, முனிவர் பதில் சொல்லுகின்றார். இவர் கடவுளுக்குச் சிறந்த வேலைகளைச் செய்துகொண்டு வாழ்வதாலும்;

32. பலவித தலங்கள் சென்றும் பரவுப காரி யாயுங்
குலவியே வாழ்வ தாலே கூறினேம் பிரம சேயாய்
நலமுள குடும்பி யாகி நாதனார் பூஜை பண்ணி
மலையிறை மகளே யாங்கள் வரைந்தவை தப்பா வாமே.

32. பலவிதமான க்ஷேத்திரங்களுக்கு ஜாதகர் யாத்திரை செய்து கொண்டும் வாழ்வதாலும் நல்ல குடும்பஸ்தராகிக் கடவுளுக்குப் பூஜை செய்துகொண்டு வாழ்வதாலும் இவர் பிராமணராகப் பிறப்பார் என்று சொன்னேம். மலைகளுக்கு அரசனுகிய பார்வதராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய குடும்ப விஷயங்கள்

33. இன்னவன் குடும்பச் சேதி
யியம்புவோம் நாற்ப தாண்டில்
தன்துணை வேறாய்ச் செல்வன்
தந்தையின் பாகங் காணன்
முன்னமே தந்தைக் கேதா
னுரைத்தீரே துணையா னிரண்டு
அன்னவர் தமக்குப் பாக
மணுகாத காரணஞ்சொல்.

33. ஜாதகருடைய குடும்ப விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய சகோதரர் குடும்பத்தைவிட்டுப் பிரிந்து வேறு குடும்பஸ்தராகப் போய்விடுவார். இவர் தன்னுடைய தகப்பனாருடைய சொத்தின் பாகத்தை அடையமாட்டார்.

இவ்விதமாக முனிவர் சொல்ல, இவருடைய தகப்பனாருக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு என்று, முனிவரே ! நீர் முன்னமே சொல்லியிருக்கின்றீர். இவர்களுக்குப் பாகம் கிடைக்காததற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்டார்.

34. ஒருவனு மனைவி பக்க
மொதுங்குவான் மற்றோன் தானும்
பொருளதைப் பெற்றுக் கொண்டு
புக்குவான் வேறு கத்தான்
திருகிலா யிரண்டி லேதான்
செப்புவோ மவர்கள் சேதி
அருமறை முடிவி லாடு
மம்பிகை யாளே கேளாய்.

34. ஜாதகருடைய தகப்பனாருடைய ஒரு சகோதரர் தன்னுடைய மனைவியின் வீட்டிற்குப் போய்விடுவார். இருவரிருவர் பணத்தை வாங்கிக்கொண்டு இன்னொரு குடும்பஸ்தராகப் பிரிந்து போய்விடுவார். இவர்களுடைய மற்ற விஷயங்களைப்பற்றி இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்றோம். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜனன காலதசையும் பலாபலன்களும்

35. பாலகன் ஜனிக்குங் காலை பணிதசை பதினோர் திங்கள்
சாலவே யிருப்புச் சொல்வோந் தனயனும் பிணியில் வாடுங்
காலனைக் காணு லவன் கனகன்தன் தசைக்கா லங்கள்
கோலமாய்ப் பிணியு மெய்துங் கூறுவோ மிரண்டில்
[தானே.

35. ஜாதகர் பிறந்த பொழுது பணி என்ற இராகு மகாதசையில் இருப்பு பதினொரு மாதங்கள் ஆகும் என்று சொல்லுகின்றோம். இக்காலத்தில் ஜாதகர் நோயால் கஷ்டப்பட்டு இளைத்து விடுவார். ஆனால் இவர் அப்பொழுது எமதரிசனத்தை அடையமாட்டார். கனகன் என்ற குரு மகாதசைக் காலத்தில் இவருக்குக் கஷ்டங்களும் ரோகங்களும் உண்டாகும். மற்றவிஷயங்களைப்பற்றி இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 130

ஜனன கால கிரகநிலை

1. [1]பிறை[2]குசன் [3]புந்தி [4]பானு [5]பொன்ராகு [6]தேள தாகக் [7]கரியவன் [8]புகரும் [9]வில்லில் [10]காலையில் கேது தங்க [11]அரியது ஜன்ம மாக வறிவிப்பீர் பலனெவ் வாறு உரைகுவார் வதிஷ்டர் தாமு முதிக்குமே வாண்பால்

[ஜன்மம்.

1. சந்திரனும் அங்காரகனும் புதனும் சூரியனும் குருவும் இராகுவும் விருச்சிகத்திலும், சனியும் சுக்கிரனும் தனுசிலும், கேது ரிஷபத்திலும், ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இருந்தால் பலாபலன்கள் எவ்விதமாக விருக்கும் என்பதைப்பற்றித் தெரிவிப்பீராக, என்று கேட்கவே, வசிஷ்ட மகரிஷியானவர் பதில் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாக ஜனனமாகும்.

கிரகநிலை

		கேது	
	இராசி சக்கரம்		
			லக்கினம்
சனி சுக்கிரன்	சூரியன் சந்திரன் அ. பு. கு. ரா.		

அனுஷம் 4-ஆம் பாதம் : சனி தசை வரு 2-5-0.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குற் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற் சனியும், மிதுனத்திற் சுக்கிரனும், கடகத்திற் குருவும், கன்னியிற் கேதுவும், விருச்சிகத்திற் சந்திரனும் புதனும், தனுசிற் சூரியனும், மீனத்தில் அங்காரகனும் இராகுவும் ஆகும். சந்திரன், அங்காரகன் புதன் சனி ஆகிய இவர்கள் அஸ்தமனத்திலும், புதன் வக்கிரகதியிலும் இருக்கின்றார்கள்.

1. சந்திரன்
2. அங்காரகன்
3. புதன்
4. சூரியன்
5. குரு
6. விருச்சிகம்
7. சனி
8. சுக்கிரன்
9. தனுசு
10. ரிஷபம்
11. சிம்மம்

ஜனனமான நாட்டுச் சிறப்பு

2. வந்தயில் வடதென் வீதி வாசலுங் குடகு நோக்கம்
அந்தரி மாரி யுத்தர மழிவான கெடியு முண்டு
மூந்துமா லீசன் தெற்கில் மூத்தவன் கோவி லுண்டு
செந்தியி லுதித்தோள் கீழ்ப்பால் திருப்பள்ளி வாச
[லுண்டு.

2. ஜாதகர் பிறந்த வீடு வடக்குத்தெற்குத் தெருவில் மேற்குத் திக்கைப் பார்த்த வாயிற்காலை யுடையதாயிருக்கும். பார்வதியம்மன் கோயிலும் மாரியம்மன் கோயிலும் வடக்குத்திக்கில் இருக்கும். ஒரு பாழடைந்த கோட்டையும் இருக்கும். சிறந்த மகாவிஷ்ணுவின் கோயிலும் சிவபெருமானுடைய கோயிலும் தெற்குத்திக்கில் இருக்கும். விநாயகக் கடவுளின் கோயிலும் உண்டு. திரௌபதியம்மன் கோயில் கிழக்குத்திக்கில் இருக்கும். ஓர் அழகிய பள்ளிவாயிலும் இருக்கும்.

3. இன்னமும் பலதே வாச மெழில்பெரு மூரே யாகும்
மன்னர்கள் வாச மாகும் வணிபங்க ளதிக மோங்கும்
தன்னதா யில்ல மல்ல சாற்றினே மவர்பா லில்லம்
அன்னவ னுதிப்பா னவ மவனுமே ஜேஷ்ட னென்றோம்

3. ஜாதகர் பிறந்த கிராமத்தில் இன்னும் அனேக தெய்வங்களும் தேசத்தார்களும் வாசஞ் செய்வார்கள். இந்தக் கிராமம் ஓர் அழகிய பெரிய கிராமமாகும். இதில் அரசர்கள் வாசஞ் செய்வார்கள். அனேக விதமான வியாபாரங்கள் நடந்துகொண்டு விருத்தியாகும். ஜாதகர் தன்னுடைய தாயார் வீட்டிலில்லாமல் தன்னுடைய தகப்பனுருடைய வீட்டில் பிறந்தவராவார். இவர் ஜேஷ்ட குமாரருமாவர்.

4. இன்னவன் ஜனன் யோக
மெழில்பெருந் தந்தை யோகம்
அன்னவன் துணைவர் யோக
மவன்புத்திர களத்திர யோகம்
உன்னத முன்பின் ஜன்ம
முரைக்கிறே மிந்நூல் தன்னில்
கன்னென மொழியி னுளே
கழறுவோங் கேட்டி டாயே.

4. ஜாதகருடைய ஜனன காலத்தையும் தகப்பனுருடைய யோகத்தையும் தன்னுடைய சகோதரங்களுடைய யோகத்தையும் இவருடைய மனைவி மக்கள் ஆகிய இவர்களுடைய யோகத்தையும் இவருடைய சிறந்த முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளையும் இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம். சர்க்கரையைப் போன்ற இனிமையான

வார்த்தைகளையுடைய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனுரது குணதிசயங்கள்

5. மன்மத னெப்ப தாவன் மாந்துளிர் மேனி யாவன்
பின்னமில் லாத தேகன் பிறர்நகர் சிலநாள் வாசம்
பொன்பொருள் சேர்ப்பா னுவன் புவிராச ரிஷ்டங்
[கொள்வன்
அன்னியர்க் குதவி செய்வ னதிகார முடைய னுவன்.

5. ஜாதகருடைய தகப்பனுர் மன்மதனைப் போல அழகுள்ளவனுக இருப்பார். இவர் மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவராவர். இவர் யாதொரு அவயவக் குறைவும் இல்லாத தேகத்தை உடையவராவர். இவர் இதர நாட்டில் சில காலம் வாழ்வார். இவர் தனம் சொத்து ஆகிய இவைகளைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். பூமியிலுள்ள அரசர்களுடைய அன்பை உடையவராக இருப்பார். இவர் பிறருக்கு உபகாரத்தைச் செய்வார். அதிகாரத்தை உடையவராக இருப்பார்.

6. இருவித வித்தை யுள்ளா னெந்திடம் பெருமை யேற்பன்
மருமமில் லாதா னுவன் வாகன முடைய னென்றேர்ந்
திருமகள் வாச முள்ளான் சிரமுக வடிவு முண்டு
நரைமலர்க் கந்த மிஷ்டன் நாட்டினில் புகழு மேற்பன்.

6. ஜாதகருடைய தகப்பனுர் இரண்டுவிதமான கல்வியை உடையவராவர். எவ்விதத்திலும் பெருமையை உடையவராக இருப்பார். இவர் தன்னுடைய மனத்தில் இரகசியத்தை உடையவராக இருக்க மாட்டார். சவாரிக்குரிய வாகனங்களை உடையவர் என்று சொல்லுகின்றேம். இவரிடத்தில் இலட்சுமி வாசஞ்செய்துகொண்டிருப்பாள். இவருடைய தலையும் முகமும் அழகுள்ளனவாக இருக்கும். இவர் வாசனையை உடைய புஷ்பம், சந்தனம், வாசனையையுடைய வஸ்துக்கள் இவைகளிடத்தில் பிரியமுள்ளவராக இருப்பார். தன்னுடைய கிராமத்தில் பெருமையை அடைவார்.

7. சித்திரை கடக ராசி ஜனிப்பனும் வறுமை காணன்
பத்தினி வந்த பின்பு பருகிடும் விசேஷ யோகம்
உத்தம னுகி வாழ்வ னுண்மையா மனத்த னுவன்
சுத்தவான் மருமங் காட்டான் சொல்லது மேம்பா டாகும்.

7. ஜாதகருடைய தகப்பனுர் சித்திரை நட்சத்திரத்தில் கடக ராசியில் பிறந்தவராவர். தரித்திரத்தையும் கஷடங்களையும் அனுபவிக்கமாட்டார். தன்னுடைய மனைவி வந்து சேர்ந்த பிறகு

இவருக்கு அதிக யோகம் உண்டாகும். இவர் நல்ல குணங்களை உடையவராக இருந்து வாழ்வார். உண்மையான மன்த்தை உடையவராக இருப்பார். இவர் சுத்தமாக இருப்பார். தன்னுடைய இரகசியத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளமாட்டார். இவருடைய வார்த்தைகள் மேன்மையை உடையனவாக இருக்கும்.

8. கல்வியால் பெருமை பூண்பன்
காலாட்க ளுடைய னவன்
சொல்லதைக் காப்பா னவன்
தொடுத்ததை வெல்வா னவன்
அல்லல்க ளாதி யில்தா
னணுகிடு மலைச்சல் கொஞ்சம்
மல்லினில் செல்லா னவன்
மனமர்மம் வெளிக்காட் டாதான்.

8. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய வித்தையினல் மேன்மையை உடையவராக ஆவர். கால்நடை வேலைக்காரர்களை உடையவராக இருப்பார். இவர் தான் செல்லுகின்ற வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவராவர். தான் எடுத்த காரியங்களைச் செய்து முடித்து ஜயத்தை அடைபவராவர். இவர் தன்னுடைய வாழ்நாளின் முதற்பாகத்தில் கஷ்டங்களை உடையவராவர். சிறிது அலைச்சல்களையும் அனுபவிப்பார். இவர் சண்டையில் தலையிடமாட்டார். தன்னுடைய மனத்திலுள்ள இரகசியத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளமாட்டார்.

9. போஜன சுகிய னவன் பொய்யது வழுத்தா நெஞ்சன்
காசுமே லாசை யுள்ளான் கலவர புத்தி கொஞ்சம்
மாசிலா குணத்த னவன் மரணமட் டரசர் தம்மால்
பேசுவோஞ் ஜீவ னங்கள் பூமியந் தியத்தில் சேர்ப்பன்.

9. ஜாதகருடைய தகப்பனர் நல்ல சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பவராவர். பொய்யைச் செல்லாத மனத்தை உடையவராக இருப்பார். இவர் பணத்தின்மேல் ஆசை உடையவராக இருப்பார். இவர் சிறிது கலவரமான புத்தியை உடையவர். இவர் குற்றமில்லாத குணத்தை உடையவராவர். இவருக்குத் தன்னுடைய மரணகால பரியந்தம் அரசர்களால் ஜீவனங்கள் நேரிடும் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய கடைசிக் காலத்தில் நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

10. சொன்னவிக் குணத் தானுக்குச்
சுதனுமே யுதிப்பா லுவன்
அன்னவன் குணத்தைச் சொல்வே
னழகுளா னாக சாலி
தன்சொலே மேன்மை யாகச்
சாதிப்பான் கல்வி மூன்று
முன்கோபம் மூர்க்க லுவ
னுயர்வான குடும்பி யாவன்.

10. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருடைய குணதி சயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் சுந்தரனாக இருப்பார். விவேகமுடையவராக இருப்பார். இவர் தான் சொல்லுகின்ற வார்த் தைகளே சிறந்தவை என்று வாதித்து நிலைநாட்டுவார். இவர் மூன்றுவிதமான வித்தைகளை உடையவராவர். இவர் முன்கோபத்தை உடையவராக இருப்பார். மேன்மையான குடும்பியாக இருப்பார்.

11. அரசர்பூ ஜிதனு மாவ னடைந்தோரை யாத ரிப்பன்
பிறைவளர் போலே செல்வம் பெருகிடுங் குறைவு றுதான்
மறைபுலர் யுடையோன் தன்னை வைசியக் குலமு
[திப்பான்

.....

11. இவர் அரசர்களால் மதிக்கத் தகுந்தவராக இருப்பார். தன் னிடம் வந்து சேருகின்றவர்களைக் காப்பாற்றுவார். வளர்பிறைச் சந்திரனைப்போல இவருக்குச் செல்வம் நாளுக்குநாள் அதிகப்படும். இவர் யாதொரு கஷ்டங்களும் இல்லாதவராக இருப்பார்.....

குறிப்பு :—மூன்றுவது வரிக்கு அர்த்தம் புலப்படவில்லை. இருபது, இருபத்தொன்று, இருபத்துமூன்று, முப்பத்தொன்றுவது பாடல் களிலிருந்து ஜாதகர் பிராமணர் குலத்தில் பிறந்தவர் என்று தெரிகின் றது. இந்தப் பாடலில் மூன்றுவது வரியில் வைசிய குலத்தைப் பற்றிச் சொல்லியிருப்பது பொருத்தமாகத் தோன்றவில்லை.

12. மர்மமு மிவனே யுள்ளான்
மருவிடும் பித்தச் சூடு
நீத்தோர்க ளுறவு கொள்வான்
நிமலியர் மோக முள்ளான்
பார்த்திபர் மெச்ச வாழ்வன்
பகட்டான வார்த்தை சொல்வன்
சாத்திர ஞானஞ் சொல்வன்
சாதியா மச்வ முள்ளானே.

12. ஜாதகர் இரகசியத்தை உடையவராக இருப்பார். இவருக்குப் பித்தச்சூட்டு ரோகம் இருக்கும். இவர் உலகப்பற்றை விட்டு விட்டவர்களுடைய சினேகிதத்தை உடையவராக இருப்பார். ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவராக இருப்பார். அரசர்கள் இவரை மெச்சும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் இறுமாப்பாகவும் தந்திரமாகவும் பிறரை மயக்கும்படியான வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் சாஸ்திரங்களுக்கு வியாக்கியானம் சொல்லுவார். இவர் சிறந்த குதிரைகளை உடையவராக இருப்பார்.

ஜாதகருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

13. தன்துணை யறுவ ராவர் தங்கிடு மாண்பா லொன்று
கன்னிகை மூன்று தீர்க்கங் கனக்காவே மற்ற வெல்லாம்
பின்துணை யாண்பால் சேதி பேசுவோந் தந்திர வாதி
மன்னர்பா லதிகா ரங்கள் வாக்கது சுத்த மூண்டு.

13. ஜாதகருடன் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் ஆறு பேர்களாவர். இவர்களில் ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். மற்றவர்களெல்லாம் இறந்து விடுவார்கள். இவருடைய இளைய சகோதரருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் தந்திரமுள்ளவராக இருப்பார். இவர் அரசர்களிடத்தில் அதிகாரத்தை உடையவராக இருப்பார். இவர் வாக்குச் சுத்தம் உள்ளவராக இருப்பார்.

14. நந்தியு மவிட்ட நாளில் நாயக னுதிப்பா னென்றேஞ்
சிந்தையில் கபடு முள்ளான் சிறப்பான குடும்பி யாவன்
பிந்திஞை ரிஷ்டங் கொள்வன் பாரியு மொன்றே யாவள்
வந்திடுஞ் சுதரா ணிரண்டு வளமுறுங் கன்னி யொன்று.

14. ஜாதகருடைய இளையசகோதரர் நந்தி என்ற ரிஷபராசியில் அவிட்டநட்சத்திரத்தில் பிறந்தவர் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவர் அல்லர். இவர் மேன்மையான குடும்பியாக இருப்பார். இவர் ஏழைகளான கீழ்மக்களுடைய அன்பைப் பெற்றவராக இருப்பார். இவருக்கு மனைவி ஒருத்தியே ஆவள். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் உண்டு.

ஜாதகருடைய தகப்பனாரின் சகோதரர்கள் (சகோதரபாவம்)

15. இல்லமும் பிரியா தாகி யேகுவான் வெளியில் தானும்
நல்லதோ ரரசர் மூலம் நாயகன் ஜீவிப் பானுஞ்
சொல்லுவோந் தந்தைக் கேதான் தோன்றிடுந்
[துணைவ ரைவர்
நில்லாது வாண்பா லுந் தான் நிமலிய ரறுவர் தீர்க்கம்.

15. ஜாதகருடைய இளையசகோதரர் குடும்பத்தை விட்டுப் பிரியாமல் வெளியே போய் விடுவார். இவர் நல்ல அரசர்களின் மூலமாக ஜீவனம் செய்பவராவர். தகப்பனுருடன் கூடப்பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். மொத்தம் ஐந்து சகோதரர்கள் இவருக்கு உண்டு. அச் சகோதரர்கள் உயிருடன் இருக்கமாட்டார்கள். இரண்டு சகோதரிகள் மட்டும் உயிருடன் இருப்பார்கள்.

ஜாதகருடைய தாயாரது குணதிசயங்கள்

16. பின்பாகம் விவர மாகப்
பேசுவோ மவர்கள் சேதி
யன்னையின் குணத்தைக் கேளா
யழகுளாள் பொறுமை சாலி
பொன்னிற முடைய ளாவள்
புருடன்தன் மனம்போல் வாழ்வள்
அன்னியர் மதிக்க வாழ்வ
ளன்புள மனத்த ளாவள்.

16. ஜாதகரின் தகப்பனுருடைய சகோதரிகளின் விஷயங்களைப் பற்றிப் பின்பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்றோம். ஜாதகரின் தாயாரது குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவள் அழகுள்வளாக இருப்பாள். பொறுமையையும் சாந்தத்தை யும் உடையவளாக இருப்பாள். பொன்னைப் போன்ற ஒருவிதமான மஞ்சள் நிறத்தை உடையவளாக இருப்பாள். தன்னுடைய புருஷ னது மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருந்து வாழ் வாள். இவளைப் பிறர் மதிக்கத் தகுந்த அந்தஸ்திலிருந்து வாழ் வாள். பிரியத்தை உடைய மனத்தை உடையவளாக இருப்பாள்.

17. அடிசிலுக் கினிய ளாவ ளவளுமே யோக சாலி
கடினமா யுரைக்க மாட்டாள் கனத்தபுத் திகளு முண்டு
துடியிடை தூணையாண் தோஷஞ் சுந்தரி மாரு நால்வர்
மடமயி லில்லந் தெற்கு வலைச்சலா மன்னை யில்லம்.

17. ஜாதகருடைய தாயார் இனிமையாகச் சமையல் செய்பவளா வள். இவள் யோகத்தை உடையவளாக இருப்பாள் என்று சொல்லு கின்றோம். இவள் கடினமான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். சிறந்த புத்தியை உடையவள். இவள் சகோதர தோஷத்தை உடை யவள் ஆவள். இவளுக்கு நான்கு சகோதரிகள் இருப்பார்கள். இவ ளுடைய வீடு தெற்குத் திக்கில் இருக்கும். தாயாரின் வீடு அலைச்சலை யும் கஷ்டத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கும்.

18. தந்தைதா யிருவ ருக்குஞ் சாற்றினேந் துணைவர்
[தோஷம்
அந்ததோர் சேதி சொல்வா யருக்கனு மதியு நாலில்
பந்தமாய்ப் புயங்கன் சேர்ந்தும் பங்குமே லைவந்தில் நிற்க
வந்திடுந் துணைவர் தாமு மடிவுண்டு காணு னுவன்.

18. ஜாதகருடைய தகப்பனுர் தாயார் ஆகிய இவர்கள் இருவருக்கும் கூடப்பிறந்தவர்களின் தோஷத்தைச் சொல்லி யிருக்கின்ருேம். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, அதைச் சொல்லுகின்ருர். அருக்கன் என்ற சூரியனும் மதி என்ற சந்திரனும் நான்காவது பாவத்தில் புயங்கன் என்ற இராகுவுடன்கூடி இருப்பதாலும பங்கு என்ற சனி ஐந்தாவது வீட்டில் இருப்பதாலும் பிறக்கும் சகோதரர்கள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்ருேம்.

ஜாதகருடைய தாயாரது முன் ஜன்மம்

19. மாதிரு பூர்வஞ் சொல்வேன் மலைநாட்டில் சிறுவூர்
[தன்னில்
தீதிலாச் சைவச் சேயாய் ஜனித்துமே வறுமை யின்றிப்
பாதக மனமில் லாமல் பரங்களுக் கன்ன மீந்து
பூதலந் தனிலு யர்ந்த புகழ்சேது பதிக்குச் சென்று;

19. ஜாதகருடைய தாயாரது முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மலைத்தேசத்தில் ஒரு சிறிய கிராமத்தில் குற்றமில்லாத ஒரு சைவருடைய குலத்தில் பெண் குழந்தையாகத் தன்னுடைய முன்ஜன்மத்திற் பிறந்து தரித்திரமும் கஷ்டங்களுமில்லாமலும் கெட்ட மனத்தையுடையவளாக இல்லாமலும் பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டும் இந்தப் பூமியில் மேன்மையானதும் புகழப்பட்டதுமான சேது ஸ்தலத்திற்குப்போய்;

20. பலவினை களுமில் லாளாய்ப் பரவுப காரி யாயும்
குலவினுள் காலன் பக்கல் குறைதலை வரையப் பட்டு
நலமுள பிரம சேயாய் நாயகி யுதித்தா னென்ருேம்
நிலமதில் வறுமை காணுள் நேர்ந்திடும் பிணிய நேகம்.

20. ஜாதகருடைய தாயார் பலவித பாவங்கள் இல்லாதவளாகியும் பிறருக்கு உபகாரத்தைச் செய்பவளாகவும் இருந்துகொண்டு பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய் குறைக்கப்பட்ட தலையையுடையவராகிய பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு சிறந்த ஒரு பிராமணர் குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்ருேம். இவள் பூமியில் தரித்திரத்தையுங் கஷ்டங்களையும் அடையமாட்டாள். இவளுக்குப் பலவிதமான ரோகங்கள் உண்டாகும்.

21. முன்ஜன்மம் கங்கை சேயா
யுதித்தவ ளிச்சென் மத்தில்
முன்குல முதிக்கும் வண்ண
முரைப்பீர்கள் முனியே நீர்தாம்
முன்ஜன்மஞ் சேது தீர்த்தம்
முயன்றுமே பவமில் லாமல்
முன்னோர்க்கு வன்ன மீந்து
முயற்சியா லுதித்தா னென்றோம்.

21. இவ்விதமாக வசிஷ்ட மகரிஷி சொல்லவே முன்ஜன்மத்தில் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்திற் பிறந்தவளாகிய ஜாதக ருடைய தாயார் இந்த ஜன்மத்தில் பிராமணஜாதியில் வந்து பிறந்ததற்குக் காரணத்தை, முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்க வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார். இவள் முன்ஜன்மத்தில் சேது ஸ்தலத்திலுள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பாவ மொன்று மில்லாமலும் பெரியார்களுக்கும் பரதேசிகளுக்கும் சாப்பாட் டைப் போட்டுக்கொண்டும் வாழ்ந்து கொண்டிருந்ததால் பிராமண குலத்தில் பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது மறு ஜன்மமும் தகப்பனாரது முன் ஜன்மமும்

22. பின்ஜன்ம மைலந் தன்னில் பிறப்பளே யிக்கு லத்தில்
பொன்பொரு ளதிக முண்டாய்ப் பூமியில் வாழ்வா ளாவள்
அன்னவன் தந்தை பூர்வ மறைகிறோம் வாயு நாட்டில்
பின்குலஞ் சத்திரியச் சேயாய்ப் பிறந்துமே யரசர் மூலம்;

22. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறுஜன்மத்தில் மைலம் என்ற க்ஷேத்திரத்தில் இந்த ஜன்மத்திற் பிறந்துள்ள குலமாகிய பிராமண குலத்திற் பிறப்பாள். இவள் தனத்தையும் சொத் துக்களையும் அதிகமாக உடையவளாக விருந்துகொண்டு இந்தப் பூமியில் வாழ்பவளாக விருப்பாள். ஜாதகருடைய தகப்பனாரது முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் வாயு தேசம் என்ற காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் குறைந்த குலமாகிய க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து இராஜாங்கத்தில்;

23. சேவகத் தொழிலுஞ் செய்து செருக்களம் புரிந்து [வின்னேன்
கோவலர்க் குதவி செய்து கந்தன்தன் பதிக்குப் புக்கிப்
பூவயன் வரையப் பட்டுப் பிறந்தனன் பிரம சேயாய்
ஆவலாய்த் தவங்கள் செய்யு மம்பிகை யாளே கேளாய்.

23. ஒரு சேவகனது வேலையைச் செய்துகொண்டு சண்டை போடும் இடத்திற்குப் போய் இவர் அரசர்களுக்கு உபகாரத்தைச்

செய்துகொண்டு முருகக் கடவுளின் க்ஷேத்திரத்திற்குப் போய்ப் பிறகு இறந்து பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஒரு பிராம்மணராக இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கிறார். ஆசையுடன் தங்களைச் செய்யாகின்ற பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுவதைக் கேட்பீராக.

24. முன்ஜன்ம மரச ருக்கு வுயர்வான நன்றி செய்து
வந்ததால் யிச்ஜன் மத்தி லரசரால் லாப மெய்துந்
தன்மர ணங்கள் மட்டுந் தனம்வரு மரச ராலே
சொன்னவை குன்றி டாவே தோகையே மேலுங்
[கேளே.

24. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய முன்ஜன்மத்தில் அரசர்களுக்குச் சிறந்த உபகாரமான காரியங்களைச் செய்துகொண்டிருந்ததால் இவருக்கு இந்த ஜன்மத்தில் அரசரால் லாபங்கள் ஏற்படும். இவருக்குத் தன்னுடைய மரணகாலம் வரையிலும் அரசரால் பணம் (பென்ஷன் முதலிய சன்மானம்) வந்துகொண்டே இருக்கும். நாங்கள் சொல்லியவார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் சொல்லப்போவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனுரது மறு ஜன்மம்

25. மறுஜன்மங் காசி தன்னில் மாரனிக் குலமு திக்து
அரனது பூசைசெய்து வின்னேனுந் தேவ னுவான்
குறுமுனி சொல்லு கின்றார் குமரனு மிச்சென் மத்தில்
பொருளதி லிச்சை யாயும் பேசாமல் வேதந் தன்னை ;

25. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய மறு ஜன்மத்தில் காசி க்ஷேத்திரத்தில் இந்த ஜன்மத்தின் குலமாகிய பிராம்மண ஜாதியில் பிறந்து சிவபெருமானுக்குப் பூஜை செய்துகொண்டு தேவராகப் போய்விடுவார். இவ்விதமாக வசிஷ்டர் சொல்லவே, குறுமுனிவராகிய அகஸ்திய மகரிஷி தடுத்துக் கேட்கின்றார். இவர் இந்த ஜன்மத்தில் பணத்தின்மேல் ஆசை உடையவராகியும் வேதங்களை ஓதாமலும் ;

26. இருப்பதால் மறுபி றப்பு
யிக்குல முதிப்பா னெவ்வாறு
மருமமில் லாதா னுயு
மவனிள மனத்த னுயும்
பெருநதி தீர்த்தந் தோய்ந்தும்
புண்ணிய தலங்கள் சென்றும்
வருவதா லுதிப்பா னென்றே
மங்கையே மேலுங் கேளே.

26. ஜாதகருடைய தகப்பனார் இருந்து வருவதால் எவ்விதமாகத் தன்னுடைய மறு ஜன்மத்தில் இந்த ஜன்மத்திய குலமாகிய பிராமண குலத்திற் பிறப்பார் என்று கேட்கவே, வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார். தகப்பனார் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகள் இல்லாதவராகவும் இளகிய மனத்தையுடையவராகவும் பெரிய புண்ணிய நதி தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்துகொண்டு வருபவராகவும் இருப்பதால் பிராமண குலத்திலேயே மறுஜன்மத்திலும் பிறப்பார் என்று சொன்னோம். பார்வதியம்மையே! நாங்கள் இன்னும் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணங்களும்

27. உதித்தவன் மணத்தின் கால
முரைக்கிறே மீரே ழாண்டில்
மதிமுக வன்னை வர்க்க
மங்கையும் வருவா ளாவள்
அதிபதி குணத்தைச் சொல்வேன்
மால்மனை யொப்ப ளாவள்
கதிதருங் கடவுள் பத்தி
காதலி நடக்கை நன்மை.

27. ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குப் பதினான்காவது வயதில் தன்னுடைய தாயாருடைய வம்சத்திலிருந்து சந்திரனைப் போன்ற அழகான முகத்தையுடைய மனைவி நேரிடுவாள். இவளுடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவள் மகாவிஷ்ணுவின் மனைவியாகிய இலட்சுமியைப் போன்றவளாக விருப்பாள். இவள் மோட்சத்தைத் தருகின்ற கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவளாகி நல்ல நடத்தையையும் உடையவளாகி இருப்பாள்.

28. சீலமு மறத்தி லிச்சை தேன்மொழி யோக சாலி
பால்பாக்கிய முடைய ளாவள் பந்தினர் தம்மைக் காப்பள்
ஞாலமேல் நல்லோ ளாவள் நாயகன் மனம்போல்
[வாழ்வள்
காலத்தை யறிந்து ரைப்பள் கழறுவோம் புத்திர பாவம்.

28. ஜாதகருடைய மனைவி நல்ல ஒழுக்கத்தையுடையவளாகியும் தர்மத்தில் ஆசையுடையவளாகியும் இனிமையான வார்த்தைகளை உபயோகப்படுத்துபவளாகியும் யோகத்தையுடையவளாகியும் பால் பாக்கியத்தையுடையவளாகவும் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுபவளாகவும் இருப்பாள். இவள் பூமியின்மேல் நல்ல வளாகவிருப்பாள். தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல் ஒற்றுமையாக

விருந்துகொண்டு வாழ்வாள். இவள் காலப்போக்கை அறிந்து கொண்டு அதற்குத் தகுந்தபடி பேசுபவளாவாள். இவளுடைய சந்ததிகளைப்பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திர பாவம்)

29. சுதர்களு மிருநான் காகத் தோன்றிடு மாண்பா லிரண்டு
மதிமுக பெண்பா லவ்வா றுவறைகிரேந் தீர்க்க மாக
முதலிரண்டுஞ் சேத மெய்து மொழிகுவீ ரந்தச் சங்கை
சதியாக வைந்தில் வெள்ளி சனியுமே கூடி நிற்க;

29. ஜாதகருக்கு மொத்தம் எட்டுக் குழந்தைகள் பிறப்பார்கள். இவர்களில் இரண்டு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். முதலில் பிறக்கின்ற இரண்டு குழந்தைகளும் இறந்து விடுவார்கள். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார். கெடுதியைச் செய்யக்கூடியவராகி ஐந்தாவது பாவத்தில் வெள்ளி என்கிற சுக்கிரனும் சனியும் கூடி இருப்பதால்;

ஜாதகருடைய முன் ஜன்மம்

30. சேதமே யாகு மென்றேஞ் செப்புவோ மிவனின் பூர்வம்
மாதவர் வசிக்குந் தெருவில் வைசிய குலமே தோன்றிப்
பூதல மீதில் செட்டுப் பொருந்தியே நல்லோ னெனித்
தீதான குணங்க ளின்றிச் சேதுவின் பதிக்குப் புக்கி;

30. முதலில் இரண்டு குழந்தைகளும் இறந்துவிடுவார்கள் என்று சொன்னோம். ஜாதகருடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். முனிவர்கள் வாசஞ்செய்கின்ற ஒரு தெய்வீக ஸ்தலத்தில் வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து பூமியில் வியாபாரத்தை உடையவராகி, நல்லவராக விருந்துகொண்டும் கெடுதியான குணங்கள் இல்லாதவராகவும் இருந்து சேதுஸ்தலத்திற்கு யாத்திரை செய்தும்;

31. அகதிகட் கன்ன மீந்து மரன்பூசை செய்து வின்னேன்
வகையுடன் தாகப் பந்த லமைத்துமே கோப மின்றிப்
பகையான காலன் பக்கல் பறந்தன னிவனே யென்றேஞ்
ஜகபதி வரையப் பட்டு ஜனிப்பனும் பிரம சேயாய்.

31. ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டும் சிவபெருமானுடைய பூஜையைச் செய்துகொண்டும் ஒழுங்காக ஒரு தாகப்பந்தலை ஏற்படுத்தியும் கோபத்தை யுடையவராக இல்லாமலும் வாழ்ந்து இறந்து கெடுதியை

யுள்ள எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்தார் என்று சொல்லுகின்ரேம். பிறகு பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு பிராமண குலத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்திருக்கின்ரூர் இந்த ஜாதகர்.

ஜாதகருடைய யோக விஷயங்கள்

32. வந்தவன் பொதுயோ கத்தை யறைகிரேம் பத்ம யோகஞ்
செந்திரு லக்ஷ்மி யோகஞ் செப்புவோம் பலனை யாங்கள்
சந்தத மரசர் பக்கல் சார்ந்துமே ஜீவிப் பானுந்
தந்தைக்கு மேலாய் வாழ்வன் தரணிக ளதிகஞ்
[சேர்ப்பன்.

32. ஜாதகருடைய யோக விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்ரேம். இவருக்குப் பத்மயோகம் என்ற ஒருவித யோகமும் லக்ஷ்மி யோகம் என்ற இன்னெரு யோகமும் இருக்கின்றன. இந்த யோகங்களின் பலாபலன்களைச் சொல்லுகின்ரேம். இவர் எப்பொழுதும் அரசர்களுடைய உதவியினுல் ஜீவனத்தைச் செய்பவராக விருப்பார். தன்னுடைய தகப்பனுருடைய அந்தஸ்திற்கு மேன்மையான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் நிலங்களை அதிகமாகச் சம்பாதித்து சேர்த்துவைப்பார்.

குறிப்பு:—பத்மயோகம் என்பது ஜாதகசிந்தாமணி இரண்டாயிரத்து முப்பத்தைந்தாவது பாடல் பிரகாரம் கிரகங்கள் கேந்திரங்களில் இருந்தால் ஏற்படுகின்றது. இந்த ஜாதகத்தில் இராகு கேதுக்கள் உள்பட ஏழு கிரகங்கள் கேந்திரங்களில் இருக்கின்ரூர்கள். லக்ஷ்மி யோகம் என்பது தமிழ் ஜாதகாலங்காரம் முந்நூற்றுத் தொண்ணூற்றேழாவது பாடலின் பிரகாரம் ஏற்பட்டிருக்கின்றது.

"வாக னுதியுங் கோணத்தி னுதியுங் கூடமற்றுந்
தாகமா யொன்றுக் கொன்று சார்ந்துடன் பார்ப்பா ராயின்
எகமாய்ப் பதுமத் துற்ற விலக்குமி யோக மென்பர்
போகவான் சகல பாக்கியம் பூணும் பூபாலன் கண்டீர்." 397

1. வாகனுதி - நான்கிற்குடையவர். 2. கோணத்தினுதி - ஒன்று, ஐந்து ஒன்பதிற்குடையவர்கள். இந்த ஜாதகத்தில் 4,1,5,9-க் குடைய வர்களாகிய அங்காரகன் சூரியன் குரு ஆகிய இவர்கள் கூடி இருக்கின்ரூர்கள். பலதீபிகை ஆரூவது அத்தியாயம் பதினேழாவது சுலோகத்தையும் பார்க்கவும். இந்த ஜாதகத்தில் பாக்கியாதிபதியாகிய அங்காரகனும் சுக்கிரனும் கேந்திர திரிகோணங்களில் இருப்பதால் இந்தச் சுலோகப் பிரகாரங்கூட இலட்சுமியோகம் உண்டு.

33. சித்திர யில்ல மிரண்டு செய்வனுக் தீர நெஞ்சம்
புத்தியில் பெரியோ னுவன் புண்ணிய மனத்த னுவன்
சுத்தத்தார் மதிக்க வாழ்வன் வண்டிவா கனமு முண்டு
எத்திசைப் புகழு மேற்ப னீரெட்டா யிரம்பொன்
[னென்றும்.

33. ஜாதகர் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட இரண்டு வீடு களைக் கட்டுவார். இவர் தைரியமுள்ள மனத்தை யுடையவராவர். இவர் அறிவில் பெரியவராக இருப்பார். புண்ணியமான நல்ல மனத்தை யுடையவராக விருப்பார். இவர் தன்னுடைய பந்துக்கள் தன்னை மதிக்கத்தகுந்த அந்தஸ்தி லிருந்துகொண்டு வாழ்வார். சவாரிக்குரிய வண்டி முதலிய வாகனங்களை உடையவராவர். இவர் எல்லாத் திக்கு களிலும் பெருமையையும் கீர்த்தியையும உடையவராக விருப்பார். பதினாயிரம்பொன் பெறக்கூடிய சொத்தை உடையவராவர் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனாரது மரண காலமும் தாயாருடைய மரண காலமும்

34. இருபது வேழு வாண்டி லிடபமா தத்தி லேதான்
வருந்தந்தை தனக்குக் கண்ட மாறாறு விரண்டு வாண்டில்
திருமக ளென்னை கெண்டஞ் செப்பின மொழிகுன் றுவே
அருமறை முடிவி லாடு மம்பிகை கேட்டி டாயே.

34. ஜாதகருடைய இருபத்தேழாவது வயதில் இடபமாதம் என்ற வைகாசி மாதத்தில் இவருடைய தகப்பனார் இறந்துவிடுவார். இவருக்கு முப்பத்தெட்டாவது வயதில் இவருடைய தாயார் இறந்து விடுவாள். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். அருமையான வேதங்களின் முடிவு என்கிற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மரண காலம்

35. ஜாதகன் மரண காலஞ் சாற்றுவோ மிருபா னூறில்
தீதிலா மிதுன மாதந் தேய்பிறைச் சட்டி தன்னில்
கோதிலா மார்பு நோயால் குழவியி னுடல மேகும்
மாதவ ரிவ்வா றுசொல்ல விருத்தரும் கேட்க லுற்றார்.

35. ஜாதகருடைய மரணகாலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு அறுபத்தாறாவது வயதில் கெடுதியில்லாத மிதுனமாதம் என்ற ஆனிமாதத்தில் தேய்பிறைச் சட்டி திதியில் மார்பு நோயினால் இவர் இறந்து இவருடைய தேகம் மறைந்து பொய்விடும். இவ்விதமாக வசிஷ்ட மகரிஷி சொல்லவே, விருத்தர் என்ற முனிவர் தடுத்துக் கேட்கின்றார்.

36. எப்படி வயது தீர்க்க மிருநான்கோன் நாலில் தங்கத்
தப்பிதம் நாலா மாண்டில் ஜாதகன் கண்ட மென்றேரும்
ஓப்புட னந்தக் கால முறையாவே மார கங்கள்
செப்புவோந் தந்தைக் கேதான் செய்தொழில் கலகம்
[நேரும்.

36. ஜாதகருக்கு வயது தீர்க்கமானது என்று எவ்விதமாகச் சொன்னீர்? எட்டிற்குடையவரான குரு நான்காவது பாவத்தில் இருப்பது கெடுதியானதாகும். இவருக்கு நான்காவது வயதில் கண்டம் நேரிட்டு மரணம் உண்டாகும் என்று சொல்லுகின்றேரும். இவ்விதமாக விருத்தர் சொல்லவே, வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார். இந்த வயதில் இவருக்கு மரணம் நேரிடாது. ஆனால் இவருடைய தகப்பனாருக்குத் தான் செய்கின்ற தொழிலில் கலகங்கள் நேரிட்டுக் கஷ்டங்கள் நேரிடும்.

37. செய்தொழில் விலகா தாகுஞ்
செம்பொன்னு விரைய மாகும்
வையமேல் பலதுன் பங்கள்
வந்திடும் பொருள்மூ லத்தால்
ஐயமா மணங்க ளுண்டா
யதன்பின்னே சாந்த முண்டு
உய்யுமு னெட்டா மாண்டி
லுறைந்திடு மிதுபோல் நேரும்.

37. ஜாதகருடைய தகப்பனார் செய்கின்ற தொழில் பங்கமாகி இவரைவிட்டு நீங்கிப் போய்விடாது. தனம் செலவாகும். இவர் பூமியில் பண விஷயமாகக் கஷ்டங்களை அடைவார். இவருடைய குடும்பத்தில் விவாகங்கள் நடைபெறும். இதற்குப் பிறகு இவருடைய கஷ்டங்கள் தணிந்துபோகும். இதைப்போலவே ஜாதகருக்கு ஏட்டாவது வயதிற்கு முந்தியும் நடக்கும் என்று சொல்லுகின்றேரும். கேட்பீராக.

38. துன்பமே யடையா னுவன்
சொல்லுவோம் பின்பால் சேதி
அன்னவன் மூவெட் டாண்டு
மவன்தந்தை யரசு செல்லுஞ்
சொன்னவாண் டதன்மே னுலுஞ்
சுகமாக வாழ்வா னுவன்
பொன்வாங்கி ஜீவிப் பானும்
புண்ணிய வதியே கேளாய்.

38. ஜாதகருடைய தகப்பனார் கஷ்டங்களை அடையமாட்டார். மற்ற விஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றேரும். ஜாதகருக்கு

இருபத்து நான்காவது வயது வரையிலும் இவருடைய தகப்பனார் அரசாங்கத்தில் ஓர் அதிகாரமுள்ள வேலையைச் செய்வார், இந்த வயதிற்குப் பிறகுகூட இவருடைய தகப்பனார் சௌக்கியமாக விருந்து வாழ்வார். இவர் பணத்தைச் சர்க்காரிடமிருந்து பெற்றுக்கொண்டு ஜீவனஞ் செய்துவருபவராவர். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மறுஜன்மம்

39. ஜாதகன் பின்பி றப்புச் சேதுவி லிக்கு லத்தில்
நீதியா யுதித்து வின்னேன் நிமலனைப் பூசை பூண்பன்
மாதவர் பத்தி கொள்வன் மானிலம் வறுமை காணன்
போதக வானைப் பெற்ற புணிய சாலி கேளாய்.

39. ஜாதகர் தன்னுடைய மறு ஜன்மத்தில் சேதுஸ்தலத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய பிராமண குலத்தில் நியாயமாகப் பிறந்து கடவுளைப் பூஜை செய்வார். முனிவர்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார். இந்தப் பெரிய பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இளம் யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜன்னகால தசையிருப்பும் பலாபலன்களும்

40. ஜனித்திடுங் காலந் தன்னில்
சனிதசை யிரண்டு வாண்டுங்
குனித்திடுந் திங்க ளைந்துங்
கூறுவோர் துணைவர் விருத்தி
தனஞ்சேரும் தொழிலு மேன்மை
ஜகராசர்க் குதவி யுண்டு
வினைவருஞ் ஜாத கர்க்கு
வித்தகி கேட்டி டாயே.

40. ஜாதகர் பிறந்த காலத்தில் சனிமகாதசை இருப்பு இரண்டு வருஷங்களும் ஐந்து மாதங்களும் ஆகும். இக்காலத்தில் ஜாதகருக்குச் சகோதரர்கள் ஜனனமாகி விருத்தியடைவார்கள் என்று சொல்லுகின்றோம். பணம் வந்து சேரும். குடும்பத்திலுள்ளவர்களுக்குத் தொழில் மேன்மையை அடையும். பெரிய அரசர்களுடைய சகாயம் உண்டு. ஜாதகருக்குக் கஷ்டங்களும் நோய்களும் உண்டாகும். பார்வதியம்மையே! கேட்பீராக.

41. இல்லமும் பேத மெய்து மெய்திடு மன்னை நோயுந்
தல்லியின் வர்க்கஞ் சூதந் தடையின்றிப் பிணிகள்
[கொஞ்சம்
அல்லல்கள் வந்த போது மனல்மெழு காக நீங்கும்
நல்லவர் நேச மெய்தும் நற்றுரசுஞ் சேரு மென்றோம்.

41. ஜாதகருடைய வீடும் மாறுதலை அடையும். இவருடைய தாயாருக்கு நோய் உண்டாகும். தாயாருடைய வர்க்கத்தில் சூதகங்கள் நேரிடும். இவருக்குச் சில நோய்கள் யாதொரு தவக்கமும் இன்றி உண்டாகும். இவருக்குக் கஷ்டங்கள் வந்த காலத்தில் அவை நெருப்பில் காய்ச்சப்பட்ட மெழுகைப்போல உருகி நீங்கிப்போய்விடும். நல்லவர்களுடைய சிநேகம் உண்டாகும். நல்ல வஸ்திரங்களும் சீலைகளும் வந்து சேரும் என்று சொல்லுகின்றோம்,

42. புந்தியின் தசைக்கா லத்தில் பிரபல வித்தை யோங்குந்
தன்துணை விருத்தி யாகுந் தனம்பணி யதிக மெய்தும்
வந்திடு மனைவி தானும் வளமுள பூமி நேரும்
இந்திர போக முண்டு வெடுத்தகா ரியங்கள் வெற்றி.

42. புதமகாதசைக் காலத்தில் ஜாதகருக்குப் பிரசித்தியான சிறந்த வித்தை அதிகரிக்கும். இவருக்குச் சகோதரங்கள் உண்டாகி விருத்தியடைவார்கள். பணமும் ஆபரணங்களும் அதிகமாக வந்து சேரும். ஜாதகருக்கு மனைவி வந்து நேரிடுவான். செழிப்பான நிலங்கள் வந்து சம்பவிக்கும். ஜாதகர் தேவேந்திரனைப்போல சுகபோகங்களை அனுபவிப்பார். இவர் செய்ய ஆரம்பிக்கின்ற காரியங்கள் பூர்த்தியாகி ஜயத்தை அடைவார்.

43. சிலசில கலகம் நேருந் தேகமும் பிணிக ளாகுந்
தலபேத மத்தி யத்தில் தந்தைக்கு வாயு ரோகங்
குலவிப்பின் பண்டி தத்தால் குணமாகுந் தொழிலு
[மேன்மை
மலையிறை மகளே யாங்க ளறைகிறோஞ் சித்தி ரங்கள்.

43. சிற்சில கலகங்கள் உண்டாகும். உடம்பில் நோய்கள் உண்டாகும். மத்தியகாலத்தில் இடம்விட்டு இடம் மாறுதல் ஏற்படும். ஜாதகருடைய தகப்பனாருக்கு வாயுரோகம் உண்டாகும். இந்த நோய் வைத்தியம் செய்வதால் சொஸ்தமாகிவிடும். மேன்மையான தொழிலை உடையவராக இருப்பார். இமயமலையின் அரசனுகிய பர்வதராஜனுடைய குழந்தையாகிய பார்வதியம்மையே! நாங்கள் தசையின் பலனைச் சொல்லுகின்றோம்.

44. ஐயமுனி யிதனைக் கேட்டுத் திடுக்கென வுரைக்க லுற்றூர்
நயமுடன் ஜாத கர்க்கு விராசரா லதிகா ரங்கள்
தயைகளு மெந்தக் காலஞ் சாற்றுவீர் விபரஞ் சொல்வாய்
பயமிலா யிருபா னிரண்டில் பகர்ந்தனம் ராஜ யோகம்.

44. ஐயமுனிவர் இதைக்கேட்டுத் திடுக்கிட்டுத் தடுத்துக் கேட்கின்றூர். ஜாதகருக்கு நல்லவிதமாக எந்தக் காலத்தில் அரசர்களால் அதிகாரங்களும் கிருபைகளும் ஏற்படும் என்பதை விபரமாகச் சொல்லுவீர், என்று கேட்க, வசிஷ்டர் பதில் சொல்லுகின்றூர் இவருக்கு இருபத்திரண்டாவது வயதில் இராஜயோகம் உண்டாகும் என்று அச்சமில்லாமல் சொல்லுகின்றோம்.

45. இருபது வைந்து வாண்டு மெய்திடுஞ் சமம தாக
மருவிடு மதன்மே லாக வளர்பிறை போலே யோகம்
பெருகிடும் நாற்பா லூறும் புகழ்பொரு ளதிகம் சேருங்
குறைவுறு மதன்மே லாகக் கூறுவோம் பின்பால் சேதி.

45. இதற்குமேல் இருபத்தைந்து வயது வரையிலும் சமமான யோகம் உண்டாகும். அதற்குமேல் வளர்பிறைச் சந்திரனைப்போல யோகம் நாளுக்குநாள் நாற்பத்தாறு வயதுவரையிலும் அதிகரித்துக் கொண்டே போகும். நாற்பத்தாறு வயது வரையில் பெருமையும் கீர்த்தியும் தனமும் சொத்துக்களும் அதிகமாக உண்டாகும். இதற்கு மேல் யோகம் குறையும். இந்த இதர விஷயங்களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம்

ஜாதகம் 131

ஜனனகால கிரகநிலை

1. [1]மதிகுரு [2]சேயுங் [3]கோலில் [4]மால்[5]புக ரி[6]ரவி கன்னி [7]வியவன் [8]தேள தாக [9]வீணையில் கேது தங்கச் சதி[10]கயர் [11]மேரு வாக ஜன்மமுஞ் [12]சீய மாக இதுவித கோளுந் நின்ரு லியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரனும் குருவும் அங்காரகனும் துலாத்திலும், புதனும் சுக்கிரனும் சூரியனும் கன்னியிலும், சனி விருச்சிகத்திலும், கேது மிதுனத்திலும், இராகு தனுசிலும், ஜன்மலக்கினம் சிம்மமாகவும் இருந்து இவ்விதமாகக் கிரகங்கள் இருந்தால் பலன்களைச் சொல்லுவீர்.

கிரகநிலை

			கேது
	இராசி சக்கரம்		
			லக்னம்
ராகு	சனி	சந்திரன் குரு அங்காரகன்	சூரியன் சுக்கிரன் புதன்

சுவாதி 3-ஆம் பாதம்: இராகு தசை ஹ 6-3-0.

குறிப்பு :—இந்த ராசிச்சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்தமுடையதாகும் :—மேஷத்திற் குருவும் ராகுவும், கடகத்திற் சூரியனும், சிம்மத்திற் சுக்கிரனும், கன்னியிற் புதனும், துலாத்திற் கேதுவும், மகரத்திற் சனியும், கும்பத்திற் சந்திரனும், மீனத்தில் அங்காரகனும் ஆகும். புதனும் சுக்கிரனும் அஸ்தமனம் அடைந்திருக்கிள்ளார்கள்.

---

1. சந்திரன்
2. அங்காரகன்
3. துலாம்
4. புதன்
5. சுக்கிரன்
6. சூரியன்
7. சனி
8. விருச்சிகம்
9. மிதுனம்
10. இராகு
11. தனுசு
12. சிம்மம்

ஜனன நாட்டுச் சிறப்பு

2. அத்திரி சொல்லு கின்ற ராணது ஜனன மாகும்
வித்தக னுதித்த யில்லம் விளம்புவோம் வடதென் வீதி
பத்திய கீழ்ப்பால் வாசல் பக்கத்தி லொருபா லில்லை
அத்தியு மீசன் மீன மருகரு மருகில் தெற்கில் ;

2. அத்திரி மகரிஷியானவர் பதில் சொல்லுகின்றார். ஆண் குழந்தை பிறக்கும். ஜாதகர் பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் கிழக்குப் பக்கத்தில் வாயிற்காலை உடையதாகும். இந்த வீட்டின் ஒரு பக்கத்தில் வீடு கிடையாது. யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளினுடைய கோயிலும் சிவபெருமானுடைய கோயிலும் வடக்குத் திக்கிலும், அருகருடைய கோயில் தெற்கில் சமீபத்திலும் ;

3. வடதிசை கிரியு முண்டு மகம்மதர் கோஷ்டங் கீழ்ப்பால்
அடைவுடன் காளி தென்மே லணுகிய சிறுவூர் தன்னில்
இடமது மாது நில்ல மியம்புவோஞ் சேஷ்ட ஜெக
உடன்துணை யன்னை தந்தை யுறுஞ்சுதர் மனைவி
[யோகம் ;

3. வடக்குத்திக்கில் ஒரு மலையும் இருக்கும். முகம்மதியருடைய மசூதி கிழக்குத் திக்கில் இருக்கும், காளியம்மன்கோயில் தென்மேற்குத் திக்கில் இருக்கும் ஒரு சிறிய கிராமத்தில் தாயாருடைய வீட்டில் மூத்த குழந்தையாக ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகின்றோம். இவருடன் கூடப் பிறந்தவர்கள், தாயார், தகப்பனார், மனைவி, மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் ;

ஜாதகருடைய தகப்பனாருடைய சகோதரங்களும்
(சகோதர பாவமும்) குணங்களும்

4. சொல்லுவோ மிந்நூல் தன்னில்
தந்தையின் வர்க்க மாண்பால்
நில்லாது பெண்பா லிரண்டு
நிகழ்த்துவோந் தீர்க்க மாக
வல்லியே தந்தை சேதி
யறைகிறோம் மானி றத்தான்
அல்லல்க ளாதி யில்லா
னஞ்சின வார்த்தை சொல்வான்.

4. இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம். ஜாதகருடைய தகப்பனாரின் சகோதரங்களில் ஆண் சகோதரர்கள் உயிருடன் இருக்க மாட்டார்கள். இரண்டு பெண் சகோதரங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சகோதரிகள் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள் என்று சொல்லு

கின்றேரும். ஜாதகருடைய தகப்பனாரது விஷயங்களைப்பற்றிச் சொல்லு கின்றேரும். இவர் மானிறத்தை யுடையவராவர். இவருக்குத் தன் னுடைய வாணாளின் முதற்பாகத்தில் கஷ்டங்கள் உண்டாகும். இவர் பயப்படக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார். அஃதாவது கெட்ட வார்த்தைகளையும் கடூரமான வார்த்தைகளையுஞ் சொல்லமாட்டார்.

5. நல்லவன் நல்ல வர்க்கு நயம்படக் கூறு வானும்
இல்லையென் றுரைக்க மாட்டா னீகைவா னெவர்க்கு
[நண்பன்
மல்லுக்குச் செல்லா னுவன் வஞ்சியி னில்லம் வாழ்வன்
புல்லிய புத்தி யில்லான் புண்ணிய மனத்த னேமே.

5. ஜாதகருடைய தகப்பனார் நல்லவர்களுக்கு நல்லவராக விருப் பார். நயப்பாகவும் இனிமையாகவும் பேசுபவராவர். இவர் பிறருக்கு உதவி செய்வதற்குத் தன்னிடத்தில் ஒன்றும் இல்லையென்று சொல்ல மாட்டார். இவர் கொடுக்குந் தன்மையையுடைய தயாளமான குணத்தை யுடையவராவர். எல்லோருக்கும் சிநேகிதராக விருப்பார். இவர் சண்டைக்குப் போகமாட்டார். இவர் தாசியின் வீட்டில் வாழ மாட்டார். இவர் இழிவான புத்தியை யுடையவரல்லர். புண்ணியமான நல்ல மனத்தை யுடையவராவர்.

6. சமகல்வி தந்தை யில்லஞ்
சாராதான் வறுமை காணுன்
அமைவனுந் தூணவி பக்க
மவ்விடஞ் சிலநாள் வாசங்
சுமைதாங்கி போலே வாழ்ந்து
செல்லுவான் வேறி டத்தில்
நிமங்களு மேற்கா னுவன்
நிதானமாங் குடும்பி யாவன்.

6. ஜாதகருடைய தகப்பனார் நடுத்தரமான வித்தையை யுடைய வராவர். இவர் தன்னுடைய தகப்பனுடைய வீட்டில் இருக்கமாட்டார். தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். இவர் தன்னு டைய சகோதரியிடம்போய் அவ்விடத்தில் சிறிது காலம் வாசஞ் செய் வார். இவர் ஒரு சுமை தாங்கியைப்போலப் பிறருக்கு உபயோகமாக விருந்துகொண்டு வாழ்ந்து பிறகு இன்னொரு விடத்திற்குப்போய் விடுவார். இவர் கள்ளம் கபடம் வஞ்சனை கோள்மூட்டுதல் ஆகிய இவைகளை உடையவரல்லர். நிதானமான சம நிலையிலுள்ள குடும் பத்தை யுடையவராவார்.

7. பாரியை பக்கஞ் செல்வன் பகர்ந்தன ஞஸ்தி விருத்தி
கூறின மொழிதப் பாதான் கோதையால் பெருமை
[பூண்பன்
சீறிடான் சாந்த முண்டு தேவதா பத்தி கொள்வன்
பாரிய புத்தி யுள்ளான் பங்கைய ரேகை யுள்ளான்.

7. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய மனைவியினுடைய பந்துக்களிடம் போய்விடுவார். இவருக்கு நல்ல ஓர் ஆஸ்தி விருத்தியடையும். இவர் தான் சொல்லிய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுபவராவர். தன்னுடைய மனைவியினுல் இவர் மேன்மையை அடைவார். இவர் கோபித்துக்கொள்ள மாட்டார். சாந்தமான குணத்தை யுடையவராவார். தெய்வங்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவராவர். இவர் பெரிய புத்தியை உடையவர். இவருடைய உள்ளங்கைகளில் பங்கயரேகை என்ற தாமரை ரேகை உண்டு.

8. ரோமங்கள் நீட்சி யில்லான்
நுவலுப தேசங் கொள்வன்
நீமையை வெளிக்காட் டாதான்
தேவியுங் கேட்க லுற்றுள்
காமனு மெந்தத் திக்கில்
கருதுவான் சொல்லு மென்ன
வாமியே தெற்குத் திக்கில்
வாசமா மென்று சொல்வோம்.

8. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய தேகத்தில் நீண்ட உரோமங்களை உடையவரல்லர். இவர் தன்னுடைய குருவிடத்தில் உபதேசத்தை அடைவார். இவர் கெடுதிகளை வெளியே காட்டிக்கொள்ள மாட்டார். இவ்விதமாக அத்திரிமுனிவர் சொல்லவே, பார்வதியம்மையார் கேட்கின்றுர். இவருக்கு எந்தத் திக்கில் இருந்து மனைவிவந்து சம்பவிப்பாள் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரிமுனிவர் பதில் சொல்லுகின்றுர். பரமசிவனது இடப்பக்கத்திலமர்ந்துள்ள பார்வதியமையே! இவருடைய மனைவி தெற்குத்திக்கில் வசிக்குங் குடும்பத்திலிருந்து வருவாள் என்று சொல்லுகின்றேம்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

9. இன்நெறி யுடையா னுக்கு விவனுமே சேஷ்ட னுக
அன்னவ னுதிப்பா னுவ மவனுமே சிவந்த மெய்யன்
உன்னத கல்வி கற்ப னுறுதிமான் வறுமை காணன்
பன்னியே பேச வல்லன் பாவையர் மோக வானும்.

9. இதுவரையிலுஞ் சொல்லப்பட்ட குணகுணங்களை உடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் மூத்த குமாரனுகப் பிறப்பார். இவர்

சிவந்த நிறத்தை யுடையவர். இவர் மேன்மையான சிறந்த வித்தை யைக் கற்றுக்கொள்ளுவார். இவர் வலிவாக விருப்பார். தரித்திரத் தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டார். இவர் விமரிசையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுந்திறமை யுடையவர். ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை யுடையவராவர்.

10. துருசான கோபி யாவன் சொல்லதைக் காப்பா னவன்
மருவரை வசித்தே வெல்வன் வாக்குச்சொல் தவரு
[னவன்
திருமகள் வாச மூள்ளான் ஜனசகா யங்கள் செய்வன்
தரையது தேடு வானஞ் சல்லியங் கொள்ளா னென்றோம்.

10. ஜாதகர் கெடுதியை விளைவிக்கக்கூடிய கோபத்தை உடையவ ராவர். தான்சொல்லுகின்ற வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்று பவராவர். அவர் தன்னுடைய பகைவர்களுடன் சிநேகஞ் செய்து கொண்டே அவர்களை ஜயித்து விடுவார். தான் சொல்லிய வார்த்தை களைத் தவறிடாமல் காப்பாற்றுபவராவர். இவரிடத்தில் இலட்சுமி வாசஞ்செய்து கொண்டிருப்பாள். ஜனங்களுக்கு இவர் உபகாரத்தைச் செய்வார். இவர் நிலங்களைச் சம்பாதிப்பார். கடன் வாங்கமாட்டார். என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

11. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோம்.....
அவனிபா லாண்பா லொன்று வம்பிகை யிரண்டு தீர்க்கம்
நவனிபால் துணையாண் சேதி நாட்டுவோங் கடகஞ்
[ஜன்மஞ்
தவசியே பூர நாளில் ஜனிப்பனஞ் செயலைக் கேளாய்.

11. ஜாதகருடன் கூடப் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லுகின் றோம். இவருக்குப் பூமியில் ஒரு சகோதரனும் இரண்டு சகோதரி களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவருடைய சகோதரருடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம். இந்தச் சகோதரர் கடகராசியில், பார்வதியம்மையே! பூர நட்சத்திரத்தில் பிறப்பராவர். இவருடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம். கேட்பீராக.

12. கல்விமான் சிவந்த மெய்யன் காலாள்க ளுடைய னுமே
இல்லறஞ் செய்வா னவ னரசர்பூ சிதனு மாவன்
அல்லலென் றோரைக் காப்பன் யாரையும் வசியங்
[கொள்வன்
நல்லவர் பலர்க ளாலே நாட்டினில் கீர்த்தி யேற்பன்.

12. ஜாதகருடைய சகோதரர் படித்தவராவர். சிவப்பான நிறத்தை உடையவராவர். கால்நடை வேலைக்காரர்களை உடையவராக இருப்பார். இவர் குடும்பத்திலிருந்து வாழ்ந்து கொண்டு குடும்ப தர்மங்களை அனுஷ்டித்து வருவார். இவரை அரசர்கள் கௌரவப் படுத்துவார்கள். கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களை இவர் காப்பாற்றுவார். எல்லோரையும் தன் பக்கமாக இருக்கும்படி கவர்ந்து கொள்ளுவார். பல நல்லோர்களால் இவர் பெருமையையும் புகழையையும் அடைவார்.

13. மானில மதிகஞ் சேர்ப்பன்
மருமத்தை வெளிக்காட் டாதான்
நன்மையைச் சிலர்க்குச் செய்வன்
திகம்பரன் பத்தி கொள்வன்
மாமிமா ரிரண்டே யாவர்
வண்டிவா கனமு முள்ளான்
காமனை விருப்பங் கொள்வன்
கட்டுவார்த் தைகளுஞ் சொல்வன்.

13. ஜாதகருடைய சகோதரர் பெரிய பெரிய நிலங்களை அதிக மாகச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் தன்னுடைய ரகசியத்தை வெளிக்குக் காட்டிக் கொள்ளாதவராக இருப்பார். இவர் சிலருக்குத் தீமையைச் செய்வார். கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவ ராக இருப்பார். இவருக்கு இரண்டு மாமியார்கள் ஏற்படுவார்கள். இவர் சவாரிக் குரிய வண்டியும் வாகனங்களும் உள்ளவராக இருப்பார். இவர் காதல் என்ற காம ஆசையை உடையவராவர். பூனைந்தவார்த்தை களையும் பொய்யான வார்த்தைகளையும் சொல்லுவார்.

14. பாரியை யொன்றே யாவள் பாலர்க ளாண்பா லிரண்டு
சீரிய பெண்பா லிரண்டு செப்புவோ மிவனுக் கேதான்
வீரியன் சிலநா ளொன்றுய் மேவிப்பின் வேறுய்ச்
[செல்வன்
ஆறுமா முகனைப் பெற்ற வம்பிகை யாளே கேளாய்.

14. ஜாதகருடைய சகோதரருக்கு மனைவி ஒருத்தியே ஆவள். இவருக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தை களும் இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். இவர் தன்னுடைய சகோதரருடன் ஏக குடும்பஸ்தராக இருந்து பின்னல் பிரிந்து வேறு குடும்பஸ்தராகப் போய்விடுவார். ஆறு பெரிய முகங்களையுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாககாலமும் மனைவியின் குணாதிசயங்களும்

15. உதித்தவன் மணத்தின் கால
முரைக்கிறே மிருபான் மூன்றில்
மதிதலம் மனைவி வர்க்கம்
மர்மமிலாள் துணைவி வர்க்கம்
அதிபதி குணத்தைச் சொல்வேன்
மாஞ்சிவப் புடைய ளாவள்
துதிசெய்தோர்க் கன்ன மீவள்
சுந்தர மூடைய ளாவள்.

15. ஜாதகருடைய யோக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபத்துமூன்றுவது வயதில் தன்னுடைய சகோதரியினுடைய பந்துக்களிலிருந்து மனைவி வந்து சேருவாள். இவளுடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மாந்துளிரின் நிறத்தைப்போல ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவள். இவள் தன்னை வணங்கிப் போற்றினவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். அழகுள்ளவளாக இருப்பாள்.

16. மாதுவும் யோக சாலி மதுரமாஞ் சொல்லு முள்ளாள்
சாதிப்பாள் சிலவே சங்கை தன்பந்து புகழ வாழ்வள்
..... விருந்தினர்க் கன்ன மீவள்
சூதுக ளில்லா ளாவள் துருசான கோப முண்டு.

16. ஜாதகருடைய மனைவி யோகத்தை உடையவளாக இருப்பாள். இவள் இனிமையான வார்த்தைகளை உடையவளாக இருப்பாள். சில விஷயங்களில் தான் சொன்னதே சரியென்று வாதித்து நிலை நாட்டுவாள். தன்னுடைய பந்துக்கள் இவளைக் கௌரவப்படுத்தும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வாள். இவள் விருந்தாளிகளுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். இவள் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகள் இல்லாதவளாக இருப்பாள். கெடுதியை விளைவிக்கக்கூடிய கோபத்தை உடையவளாக இருப்பாள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

17. புத்திர விருத்தி தன்னைப் புகல்வே பலத்தைக் காணுஞ்
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று
[சொல்வோம்
அத்திரி சொல்லும் போது வம்பிகை கேட்க லுற்றாள்
வித்தகி புத்தி ரர்கள் விளங்காத காரணஞ் சொல் ;

17. ஜாதகருடைய மனைவிக்கு சந்ததிகளின் விருத்தியைப் பற்றிச் சொல்லுவதற்கு யாதொரு பலமும் தென்படவில்லை. ஒரு

சம்யம் குழந்தைகள் பிறந்தாலும் அவை இறந்துவிடும் என்று சொல் லுகின்றேம். இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லும்பொழுது, பார்வதியம்மையார் கேட்கின்றார். இவளுக்குப் புத்திரர்கள் உயிருடன் இல்லாததற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க ;

18. அஞ்சினில் ராகு நிற்க வஞ்சவன் மூன்றில் சோதத்
துஞ்சிடுஞ் சுதர்க ளென்றேஞ் ஜயமுனி கூறு கின்றார்
தஞ்சமாய்க் குடும்போ னுச்சஞ் ஜனித்திடுஞ் சுதர்கள்
[தாமும்
மிஞ்சிய பத்தோ னீச மிலகிய தோஷ மாகும்.

18. ஐந்தாவது பாவத்தில் ராகு இருப்பதாலும் ஐந்திற் குடையவரான குரு மூன்றில் இருப்பதாலும் குழந்தைகள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றேம் என்று அத்திரி மகரிஷி சொல்லவே, ஜயமுனிவர் சொல்லுகின்றார். குடும்பஸ்தானாதிபதியாகிய புதன் இரண்டாவது வீட்டில் உச்சமாய் இருப்பதாலும் குழந்தைகள் பிறக்கும். இவ்விதமாக ஜயமுனிவர் சொல்லவே, அத்திரி சொல்லு கின்றார். பத்துக்குடையவராகிய சுக்கிரன் நீசமாக இருப்பது தோஷ மாகும்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

19. அதுவின்றிப் பூர்வந் தன்னி
லிவன்சில பவங்கள் செய்தான்
அதுவினை சொல்லு மென்ன
யவனமுன் ஜன்மந் தன்னில்
கதிதருங் கடையூர் கீழ்ப்பால்
கலந்தனன் மறையோ னாக
நிதிமிக வுடையோ னாக
நீணிலம் விருத்தி செய்து ;

19. இதுவுமல்லாமல் ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் சில பாபங்களைச் செய்திருக்கின்றார் என்று அத்திரி சொல்லவே, அந்தப் பாபங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, இந்த ரிஷி பதில் சொல்லு கின்றார். ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் மோக்ஷத்தைத் தருகின்ற கடையூர் என்ற திருக்கடையூர் க்ஷேத்திரத்திற்குக் கிழக்குத் திக்கில் ஒரு கிராமத்தில் ஒரு பிராமணருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து அதிக செல்வத்தை உடையவராகி நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்திசெய்துகொண்டு ;

20. ..... சுந்தரன் வாழு நாளில்
சதியாக வந்த வூழைச் சாற்றுவோங் கேளுந் தாயே
மதிமுக மாரி கோஷ்டம் மருவிற்று நாக மொன்று
அதுமகு டத்தா லோர்நாள் யாவருங் காணத் தோன்றி.

20. ஜாதகர் வாழ்கின்ற காலத்தில் இவருக்கு விரோதமாக வந்து சம்பவித்த பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக ஓர் அழகான மாரியம்மன் கோயிலில் ஒரு நாகப்பாம்பு இருந்தது. அது, மோடி வாசித்ததினால் அஃது எல்லோருக்கும் தெரியும்படியாக ஒருநாள் வெளியே வந்தது.

21. மறையவன் கழியி னலே
வாட்டினன் புயங்கன் தன்னை
மறலியின் பதிக்குச் செல்ல
வடைந்தது வந்தத் தோஷந்
திருமாரி தன்னி லோர்நாள்
செறிந்ததோர் நாகந் தன்னைக்
குறைசெய்தா னதனை யின்னென்
கூற்றன்தன் பதிக்குச் செல்ல.

21. இந்தப் பிராமணர் இந்தப் பாம்பைத் தடியினால் அடித்தார். இந்தப் பாம்பு இறந்து எமபட்டணத்திற்குப்போய்ச் சேர்ந்துவிடவே இதனால் இந்தப் பிராமணராகிய ஜாதகருக்கு ஒரு தோஷம் சேர்ந்தது. ஓர் அழகிய மாளிகையில் இருந்த ஒரு நாகப் பாம்பை ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் அடிக்கவே அஃதும் இறந்து எமனிடத்திற்குப்போய்விட்டது.

22. இன்னமுஞ் சிலவே யொன்று
யியம்புவோங் கேளுந் தாயே
அன்னகர் நதியின் பக்க
லரசின்கீழ் நாக நிற்க
இன்னவன் விதவை போக
மெய்தினு னதுவோர் தோஷம்
இன்னவாறு தோஷத் தாலு
மியம்புவோஞ் சிலவே தோஷம்.

22. இந்த ஜாதகர் இன்னும் சில பாபங்களைச் செய்தார். அவைகளில் ஒன்றைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. அந்த ஊரின் ஆற்றின் ஓரத்தில் இருந்த அரசமரத்தின் கீழே ஒரு நாகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. இந்த ஜாதகர் அந்த இடத்தில் ஒரு விதவை ஸ்திரீயுடன் சம்போகம் செய்தார். இதுவுமொரு தோஷமாக சேர்ந்தது. இப்படிப்பட்ட தோஷங்களினாலே இவருக்குப் புத்திரதோஷம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லுகின்றோம்.

23. அந்தியக் காலந் தன்னி லவன்சுதர் குற்ற மெய்தி
அந்தகன் பக்கல் சென்று வயனுமே வரையப் பட்டு
வந்தவ னிவனே யென்றே மாரியின் நாக தோஷஞ்
சந்தத மில்லந் தோஷஞ் ஜலக்கரை விதவை போகம் ;

23. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் தன்னுடைய பிள்ளைகளுக்குக் கெடுதிகள் ஏற்பட்டுப் பிறகு தான் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். மாரியம்மனின் கோயிலிலிருந்த நாகப்பாம்பைக் கொன்ற தோஷமும் ஆற்றங்கரையோரத்தில் விதவை ஸ்திரீயுடன் சம்போகம் செய்த தோஷமும் ;

24. பலவாறு சேர்ந்த தென்றோம் பாலர்கள் தோஷ
[மெய்துங்
குலவிய தோஷந் தீர்க்கக் கூறுவோஞ் சாந்தி தானுந்
தலைவனு மனைவி யோடு திருப்பனங் காடு சென்று
நிலவழக் குடையோ னுக்கு நிருபனு மபிஷே கித்து ;

24. ஆக, இவ்விதம் பலவிதமான தோஷங்கள் ஜாதகரை வந்தடைந்ததால் இவருடைய குழந்தைகளுக்குத் தோஷம் ஏற்படும். இவ்விதமான தோஷங்களை நிவிர்த்தி செய்ய ஒரு சாந்தியைச் சொல்லுகின்றோம். ஜாதகர் தன்னுடைய மனைவியோடு திருப்பனங் காடு க்ஷேத்திரத்திற்குச் சென்று சிவபெருமானுக்கு அபிஷேகம் செய்து ;

25. சகஸ்திர யர்ச்சனை செய்து
தன்னக ரடைந்து யின்னேன்
திகம்பரன் தமக்கு நாகஞ்
செய்துமே சிரம ணிந்து
தகைமையா யவன்சேய் மட்டுஞ்
சாற்றிய தீப மொன்று
பகையது விலகி யேதான்
பாலர்கள் தோன்று மென்றோம்.

25. ஸகஸ்ர நாமத்தைச் சொல்லி அர்ச்சனை செய்வித்துப் பிறகு தன்னுடைய கிராமத்திற்குப் போய்ச் சிவபெருமானுக்கு ஒரு நாகப் பாம்புபோல பிம்பமொன்றைச் செய்து அதை இவருடைய தலையில் அணிவித்து நல்லவிதமாக இவருடைய குமாரர்களுக்காக மாத்திரம் ஒரு தீபத்தை ஏற்றி வைத்தால் இந்தத் தோஷங்கள் விலகி ஜாதகருக்குக் குழந்தைகள் பிறப்பார்கள் என்று சொல்லுகின்றோம்.

26. சொற்படிச் செய்யா ஞகில்
துலங்காவே துலங்கில் தீதாம்
சொற்படிச் செய்வா ஞகில்
தோன்றிடுஞ் சுதனு ணொன்று
மறுபடி பெண்பா லிரண்டு
வறைகிரேந் தீர்க்க மாக
அப்பணி சடையோன் தேவி
யருளிய மொழிகுன் ருவே.

26. நாங்கள் சொல்லிய பிரகாரம் ஜாதகர் செய்யாவிட்டால குழந்தைகள் பிறக்கா. ஒரு சமயம் பிறந்தாலும் அவை இறந்து விடும். நாங்கள் சொல்லிய பிரகாரம் செய்தால் ஓர் ஆண் குழந்தை யும் இரண்டு பெண் குழந்தைகளும் பிறந்து இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். சர்ப்பத்தைத் தன்னுடைய ஜடையில் அணிந்திருக்கின்ற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய பிரகாரம் பலாபலன்கள் தவ றிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்கள்

27. அன்னைமாஞ் சிவப்ப ளாவ
ளழகுளா ளுணச்சல் தேகி
கன்னென மொழியே சொல்வள்
கபடிலாள் விரதமே பூண்பள்
பன்னியே பேச வல்லாள்
பஞ்சைக்கு வன்ன மீவள்
தன்வரன் மனம்போல் வாழ்வள்
சாதிப்பாள் சிலவே வார்த்தை.

27. ஜாதகருடைய தாயார் மாந்துளிரின் நிறமாகிய ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவள் ஆவள். இவள் அழகுள்ளவளாக இருப்பாள். மெலிந்த தேகத்தை உடையவள். இவள் சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தைகளையே சொல்லுவாள். கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவள் அல்லள். விரதங்களை அனுஷ்டிப்பாள். இவள் விமரிசையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுந் திறமையை உடையவள். ஏழைகளுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். இவள் தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல் ஒற் றுமையாக இருந்து வாழ்வாள். தான் சொல்லுகின்ற சில வார்த்தை களைச் சரியானவை என்று வாதித்து நிலைநாட்டுவாள்.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

28. ஆண்துணை காணு ளாவ
எம்பிகை யொன்று வென்றேங்
காணவே துணையா ணின்றிக்
காரணஞ் சொல்லு மென்னப்
பான்மையாய் மதிக்கு மூன்றில்
பணிகிற்கத் துணையாண் தோஷங்
(காதலிபூர்வந் தன்னில் வேணது) வினைகள் செய்தாள்
மேவிற்று வந்தத் தோஷம்.

28. ஜாதகருடைய தாயாருக்குக் கூடப்பிறந்தவர்களில் சகோதரன் இல்லை. ஒரு சகோதரி இருப்பாள் என்று சொல்லுகின்றோம். சகோதரன் இல்லாமல் இருப்பதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, அத்திரிமகரிஷி பதில் சொல்லுகின்றார். மதி என்ற சந்திரனுக்கு மூன்றுவது பாவத்தில் பணி என்ற இராகு இருப்பதால் ஆண் துணைக்குத் தோஷம் ஏற்படும். இவள் தன்னுடைய முன்ஜன்மத்தில் அனேக பாபங்களைச் செய்ததால் இவ்விதமான தோஷம் இவளுக்கு ஏற்பட்டது.

29. வினையது சொல்லு மென்று
விருதருங் கேட்கும் போது
சினமிலா வத்திரி சொல்வார்
செல்வியு முன்ஜன் மத்தில்
கனமுள காஞ்சி மேற்கில்
காதலி வைசியச் சேயாய்த்
தனமிக வுடையா னுக்கு
ஜனித்தவ ளென்று சொல்வோம்.

29. ஜாதகருடைய தாயாருக்கு நேரிட்ட பாபங்களைச் சொல்லுவீர் என்று விருதர் என்ற முனிவர் கேட்கும்பொழுது, அத்திரி மகரிஷி கோபமில்லாமல் சொல்லுகின்றார். இவள் தன்னுடைய முன் ஜன்மத்தில் மேன்மையான காஞ்சிமாநகரத்திற்கு மேற்கில் ஒரு வைசியருடைய குலத்தில் பெருந்தனவானை ஒருவருக்குப் பெண் குழந்தையாகப் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம்.

30. மங்கையுஞ் சுதர்க ளுண்டாய்
வாழ்நாளில் வினையைச் சொல்வேன்
துங்கமா மனத்தா னந்தச்
சுருதியோர் தன்பால் சென்று

தங்கைபோல் முறைகொண் டாடித்
தன்சுதர் தாபத்துக் கேதான்
நங்கையே யுதவி சொல்லு
நாயகன் தன்பால் பொன்னை ;

30. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன்ஜன்மத்தில் மக்களை உடையவளாகி வாழ்கின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த பாபத்தைச் சொல்லுகின்றேன். மேன்மையான சிறந்த மனத்தை உடைய ஒரு பிராமணர் இவளிடம் வந்து இவளிடத்தில் தன்னுடைய சகோதரியைப்போல பாத்தியதையைக் கொண்டாடி தன்னுடைய பிள்ளையின் ஆபத்துக் காலத்தில் இவளுடைய புருஷன் பண உதவியைச் செய்வதற்குப் புருஷனிடம் சொல்லும்படி இவளைக் கேட்க ;

31. வரனுடன் கலகஞ் சொல்லி
மறையோனுக் கீயா வென்றுள்
சுருதியோ னதனைக் கேட்டுச்
செப்புவார் மனவெ றுப்பால்
மறுஜன்மந் துணைவி யின்றி
வளமிலாக் குடும்பி யாகி
யுறைகுவா யென்று சொல்லி
யொதுங்கினன் வேதத் தோனும்.

31. ஜாதகருடைய தாயார் தன்னுடைய புருஷனிடம் கலகத்தை மூட்டி இந்தப் பிராமணருக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டாம் என்று சொல்லி விட்டாள். இந்தப் பிராமணர் இதைக் கேட்டுத் தன்னுடைய மனத்தில் கஷ்டத்தை அடைந்து சாபத்தைக் கொடுத்தார். "நீ உன்னுடைய மறுபிறப்பில் சகோதரர்கள் இல்லாமலும் செழிப்பான குடும்பினியாக இராமலும் ஆகக்கடவது" என்று இவளைப் பார்த்து இந்தப் பிராமணர் சொல்லி விட்டுப் போய் விட்டார்.

32. இன்னமு மொன்று சொல்வே னிகபர னடியார் வந்து
கன்னியே பசியால் வந்தேன் கழறுவாய் சாத மென்ன
அன்னவள் கோப முற்று வணுகாது சாத மென்னப்
பின்னையுஞ் சுருதி சொல்வார் பேதையே கோபம்
[வேண்டாம் ;

32. இன்னொரு தோஷத்தையும் சொல்லுகின்றேன். ஒரு சிவனடியார் ஜாதகருடைய தாயாரிடம் போய் "நான் பசியுடன் இருக்கின்றேன்; எனக்குச் சாப்பாடு கொடு" என்று இவளைக் கேட்க, இவள் கோபத்தை அடைந்து சாதம் கிடையாது என்று சொல்லவே, இந்தச் சிவனடியார் "அம்மையே! கோபத்தை அடைய வேண்டாம் ;

33. உதவுவா யன்ன மென்ன யொதுங்குவாய் வேறு யில்லம்
அதிதியுங் கோப முற்று வறைகுவார் மனவெ றுப்பால்
அதிபதி பின்ஜன் மத்தில் வரனில்லம் வாழா ளாகிச்
சதியாகுந் துணையா ணுந்தான் சஞ்சல மாதி யில்தான்.

33. சாதத்தைக் கொடுத்து உதவி புரிவாய்" என்று கேட்க, இவள் இன்னொரு வீட்டிற்கு நீர் போகவேண்டும் என்று சொல்லவே, இந்தப் பரதேசி இதைக் கேட்டுக் கோபத்தை அடைந்து தன்னுடைய மனவெறுப்பால் சாபத்தைக் கொடுக்கின்றார். "நீ உன்னுடைய மறுஜன்மத்தில் உன்னுடைய புருஷனுடைய வீட்டிலிருந்து வாழாமல் இருக்கக்கடவது. உன்னுடைய ஆண் சகோதரர்கள் இறந்து போகக் கடவது; உன்னுடைய வாழ்நாளின் முற்காலத்தில் கஷ்டங்களையும் துன்பங்களையும்;

34. அடைகுவா யென்று சொல்லி
யதிதியுஞ் சென்ற ரென்றேங்
திடமதா யந்தத் தோஷஞ்
சேர்ந்தது விவளுக் கேதான்
மடமயி லந்தி யத்தி
லறமதி லிச்சை யாயும்
உடன்காலன் பக்கல் சென்று
ளுத்தமி மேலுங் கேளே.

34. நீ அடையக்கடவது" என்று ஜாதகருடைய தாயாரைப் பார்த்து சொல்லி விட்டு இந்தச் சிவனடியார் போய் விட்டார் என்று சொல்லுகின்றோம். இந்தத் தோஷங்கள் இவளை வலிவாக வந்து அடைந்தன. இவள் தன்னுடைய முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் தருமத்தில் பிரியமுடையவளாகி இருந்து பிறகு இறந்து எம னிடத்திற்குப் போய் விட்டாள். பார்வதியம்மையே! இன்னும் நாங்கள் அதிகமாகச் சொல்லுவதைக் கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

35. தலைநான்கோன் வரையப் பட்டு ஜனித்தன ளிந்த மாது
உலவிடு முன்னூழ்ச் சாப முத்தமி தன்னைப் பற்றி
நிலையது துணையா ணுந்தான் நிகழ்த்துவோ மிவள்பின்
[ஜன்மந்
தலமதி லுயர்வ தான தில்லையி லிக்கு லத்தில்;

35. ஜாதகருடைய தாயார் பிறகு நான்கு தலைகளையுடைய பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். முன்ஜன்மத்திய சாபங்கள் இவளுக்கு வந்து சம்பவிக்கும் இவளுக்குச் சகோதரர்கள் இருக்கமாட்டார்கள். இவ

ளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஸ்தலங்களுக்குள்ளே மிகவும் சிறந்ததான தில்லை என்ற சிதம்பர க்ஷேத்திரத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்தில் ;

36. பிறப்பளாம் வறுமை யின்றிப் பராசருங் கேட்க லுற்றூர்
திருமக ளிச்சென் மத்தில் செய்தபுண் ணியங்க ளென்ன
மருமமில் லாதா ளாயும் வரன்மனம் போலே வாழ்ந்து
மருகர்தன் பத்தி கொண்டு மவளிள மனத்த ளாயும் ;

36. ஜாதகருடைய தாயார் மறுஜன்மத்தில் பிறப்பாள். தரித்திரத்தையும் கஷ்டத்தையும் அடையமாட்டாள். இவ்விதமாக அத்திரி முனிவர் சொல்லவே, பராசரமுனிவர் கேட்கின்றார். இவள் இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணியங்களைச் செய்திருக்கின்றாள் என்று கேட்க, இவள் கள்ளம் கபடம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவளாக இல்லாதவளாயும் தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருந்து வாழ்ந்ததாலும் அருகரிடத்தில் அன்பும் ஆசையும் உடையவளாகி இரக்கமான தயாள குணத்தை உடையவளாகியும் ;

ஜாதகருடைய தாயாரது மரணமும் தாய்ப்பாட்டியின் மரணமும்

37. இருப்பதா லுதிப்பா ளென்றே
மியம்புவோம் நாற்ப தாண்டில்
மறலியின் பதிக்குச் செல்வள்
மைந்தனுக் கீரா றுறில்
பெருந்தாயின் தாயின் கண்டம்
பேசிய மொழிகுன் றுவே
அருமறை முடிவ லாடு
மம்பிகை யாளே கேளாய்.

37. இருப்பதால் ஜாதகருடைய தாயார் இவ்விதமாகப் பிறப்பாள் என்று அத்திரிமுனிவர் பதில் சொன்னார். ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் இவருடைய தாயார் இறந்து எமபட்டணத்திற்குப் போய் விடுவாள். இவருக்குப் பதினெட்டாவது வயதில் இவருடைய தாய்ப்பாட்டியார் இறந்துவிடுவாள். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். அருமையான வேதங்களின் முடிவு என்ற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மம்

38. தந்தையின் பூர்வஞ் சொல்வேன்
தாம்பிர பரணி பக்கல்
வந்தனள் ரெட்டி வம்சம்
வளமுள தனவா னுக்குத்

தன்மனை மதலை யுண்டாய்ச்
சான்றோர்கள் பத்தி கொண்டு
கந்தன்மேல் பத்தி கொண்டு
காலன்தன் பதிக்குச் சென்று ;

38. ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் தாமிரபரணி ஆற்றிற்கு அருகில் ஒரு ரெட்டியாருடைய குலத்தில் ஒரு செழிப்பான பணக்காரனுக்கு ஆண் குழந்தையாகப் பிறந்து மனைவி மக்களை உடையவராகி அறிஞர்கள் மேல் அன்பும் ஆசையும் உடையவராகியும் முருகக்கடவுளின்மேல் பக்தியை உடையவராகியும் வாழ்ந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய் ;

39. வேதனுல் வரையப் பட்டு விளங்கினு னருகர் வம்சங்
காதலி கேட்க லுற்றுள் காவல னில்லம் நீங்கி
மேதினில் சஞ்ச ரித்து மெல்லியா ளில்லம் வாழ
பாதகஞ் சொல்லு மென்ன பகருவா ரத்திரி தாமே.

39. பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு அருகர் என்ற சமணருடைய குலத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். இவ்விதமாக அத்திரிமுனிவர் சொல்லவே, பார்வதியம்மையார் பின் வருமாறு கேட்கின்றார். ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய தகப்பனாருடைய வீட்டை விட்டுப் பிரிந்து பூமியில் சஞ்சாரம் செய்து கொண்டு பிறகு தன்னுடைய மனைவியின் வீட்டிற்குப் போய் வாழ்வதற்கு எவ்விதமான பாபத்தைச் செய்தார் என்பதை, அத்திரி முனிவரே ! நீர் சொல்லுவீராக.

40. மனைவிமேல் விரோத முற்று மறுமனை பக்கல் சேர்ந்து
வினைசெய்தான் பாரிக் கேதான் விளம்புவா ளந்த மாது
கனமுள பின்ஜன் மத்தில் காதலி யில்லம் வாழ்ந்து
தமயன்தம் பிகளில் லாமல் தன்தந்தை யில்லம் நீங்கி ;

40. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மனைவியின்மேல் கோபத்தை அடைந்து இன்னொரு வீட்டிற்குப் போய் சேர்ந்து தன்னுடைய மனைவிக்குக் கெடுதியைச் செய்தார். அதன்மேல் இவருடைய மனைவி சொல்லுகின்றாள். "நீர் உன்னுடைய மறுஜன்மத்தில் மனைவியினுடைய வீட்டில் வாழ்ந்து அண்ணன் தம்பிகள் இல்லாமல் தன்னுடைய தகப்பனாருடைய வீட்டை விட்டுப் பிரிந்து ;

41. மேதினி லலைச்ச லாகி விளங்குவா யென்று சொல்லிக்
காதலி வருத்த முற்றுக் கழறினு ளந்தத் தோஷந்
தீதாக விவனைச் சேர்ந்து செல்வனு மிச்சென் மத்தில்
மாதவர் போல்தி ரிந்து மனைவியி னில்லம் வாழ்வான்.

41. பூமியில் அலைந்து திரியக்கடவது" என்று இவரைப் பார்த்து இவருடைய மனைவி தன்னுடைய மனவருத்தத்துடன் சாபத்தைக் கொடுத்தாள். அந்த சாபமானது இவரை வந்து அடைந்தது. இந்த ஜன்மத்தில் இவர் முனிவர்களைப் போல திரிந்து கொண்டு பிறகு மனைவியின் வீட்டில் வந்து வாழ்பவராவார்.

ஜாதகருடைய தகப்பனுரது மறுஜன்மம்

42. மறுஜன்மம் வடமேல் திக்கில் வளமுள பெரும டத்தில்
உறைவனு மிக்கு லத்தி லுதித்தவ னிருபா னேழில்
மறலியின் பதிக்குத் தந்தை வாங்குவா னென்று
[சொல்வோம்
பெருவயி ரோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

42. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய மறுஜன்மத்தில் வடமேற்குத் திக்கிலுள்ள செழிப்பான பெருமடம் என்ற கிராமத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய அருகர் என்ற சமண குலத்தில் பிறப்பார். ஜாதகருக்கு இருபத்தேழாவது வயதில் இவருடைய தகப்பனுர் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவார் என்று சொல்லுகின்ரோம். பெரிய வயிற்றை உடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய யோகபாவம்

43. உதித்தவன் பொதுயோ கத்தை
வுரைக்கிரோம் நாலாண் டுக்குள்
தனமது யில்லா லுவன்
சல்லியங் கொள்வ லுவன்
அதற்குமேல் வறுமை காணு
னதிகமாய்த் தனமும் பெற்று
வுதவுவான் சிலர்க்கு வென்ரே
முயர்வான குடும்ப மென்ரோம்.

43. ஜாதகருடைய பொதுவான யோகத்தைப் பற்றிச் சொல்லுகின்ரோம். இவருக்கு நான்கு வயது வரையிலும் இவர் பணம் இல்லாதவராக இருப்பார். அஃதாவது இவருடைய தகப்பனுர் இவ்விதம் இருப்பார். இவருடைய தகப்பனுர் கடன் வாங்குபவராவார். இந்த வயதிற்குமேல் இவர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அடையமாட்டார். அதிகமாகப் பணத்தை அடைந்து சிலருக்கு உபகாரத்தைச் செய்வார் என்று சொல்லுகின்ரோம். இவருடைய குடும்பம் மேன்மையான குடும்பமாக இருக்கும் என்று சொல்லுகின்ரோம்.

ஜாதகருடைய மரணகாலமும் மறுஜன்மமும்.

44. கைமுத லுடைய ரவன் கனத்திடும் பணையேர் பூமி
ஐயங்கள் செய்வா ரவ ணம்பது வாறு வாண்டில்
தைமாதஞ் ஜாத கர்க்குச் சாற்றுவோங் கண்டங் தானும்
வையமே லிவன்பின் ஜன்ம மறைகிறேங் கேளுந் தாயே.

44. ஜாதகர் தன்னுடைய கையில் பண இருப்பு உடையவராக இருப்பார். இவருக்கு நிலம் ஏர் மனை ஆகிய இவைகள் அதிகப்படும். இவர் தருமம் செய்பவராவர். இவருக்கு ஐம்பத்தாருவது வயதில் தை மாதத்தில் மரணம் நேரிடும். இவருக்குப் பூமியில் மறுஜன்மத் தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். எங்கள் தாயாராகிய பார்வதியம் மையே! கேட்பீராக.

45. உத்தர தேசந் தன்னி லுதிப்பது மிக்கு லத்தில்
பெற்றிடுந் தனவா னுக்குப் பலமான குடும்பி யாவன்
சித்தசன் ஜன்ன காலஞ் சுவாதியாம் ராகு சக்கரஞ்
சத்தியே யாண்டு வாறுந் தங்கிடுந் திங்கள் மூன்றும்.

45. ஜாதகர் வடக்கிலுள்ள ஒரு தேசத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலமாகிய சமணர் குலத்தில் மறுஜன்மத்தில் ஒரு பணக்கார ருக்குப் பிறப்பார். இவர் பலமான ஒரு குடும்பஸ்தராக இருப்பார். இவருடைய ஜனன காலத்தில் சுவாதி ஜன்ம நட்சத்திரமாகும். ஜனன தசை இராகு தசையாகும். இதில் இருப்பு ஆறு வருடங்களும் மூன்று மாதங்களும் ஆகும்.

46. ஜாதகன் தனக்குக் கண்டஞ் சார்ந்திடுஞ் செலவ னேகம்
மேதினில் துணைவர் விருத்தி மேவிடும் பந்து சூதம்
பாதகம் பலித மில்லான் பணமதால் விரோத முண்டு
ஓதுவேன் விபர மிரண்டி லுத்தமி கேட்டி டாயே.

46. இந்த இராகு தசைக் காலத்தில் ஜாதகருக்குக் கண்டம் நேரிடும். அதிகமான செலவும் ஏற்படும். இவருக்குப் பூமியில் சகோ தரர்கள் பிறந்து விருத்தியாவார்கள். இவருடைய பந்துக்களில் சூதகம் ஏற்படும். கஷ்டங்கள் நேரிடும். சௌக்கியம் கிடையாது. பணத்தால் விரோதங்கள் ஏற்படும். மற்ற விவரங்களோ இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகம் 132

ஜனனகால கிரகநிலை

1. சந்திரன் [1]சாடி ராகுவு மீனஞ்
சனிதுலாஞ் [2]சேயுமே மேடம்
[3]புந்தி[4]பான் [5]புகருஞ் [6]சீயமே யாகப்
[7]பொன்[8]வீணை கேதுவுங் கன்னி
இந்தவாறு கிரகங் கூடியே ஜன்ம
[9]மரியதாய்ப் பலனதைப் புகல்வார்
வந்தது மானிடர் ஜன்மமே யாணும்
வந்தவில் வடதென் வீதியாமே.

1. சந்திரன் கும்பத்திலும், இராகு மீனத்திலும், சனி துலாத்திலும், அங்காரகன் மேடத்திலும், புதனும் சூரியனும் சுக்கிரனும் சிம்மத்திலும், குரு மிதுனத்திலும், கேது கன்னியிலும் இருந்து இவ்விதமாகக் கிரகங்கள் இருந்து ஜன்மலக்கினம் சிம்மமானால் பலாபலன்களைச் சொல்லுகின்றார். பிறந்தது மானிட ஜன்மத்தில் ஆண் குழந்தையாகும். பிறந்த வீடு வடக்குத் தெற்குத் தெருவில் ;

கிரகநிலை

ராகு	அங்காரகன்		குரு
சந்திரன்	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன் சுக்கிரன் புதன்
		சனி	கேது

அவிட்டம் 3-ஆம் பாதம் : அங்காரகதசை ஆண்டு 2-6-0

குறிப்பு :— இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை. பொருத்தமுடையதாகும் :— மிதுனத்திற் சுக்கிரனும், சிம்மத்தில் அங்காரகனும், கன்னியில் இராகுவும், துலாத்திற் சந்திரனும் சனியும், தனுசிற் சூரியனும் புதனும், மகரத்திற் குருவும், மீனத்திற் கேதுவும் ஆகும். புதன் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்.

1. கும்பம்
2. அங்காரகன்
3. புதன்
4. சூரியன்
5. சுக்கிரன்
6. சிம்மம்
7. குரு
8. மிதுனம்
9. சிம்மம்

ஜாதகர் ஜனனமான நாட்டுச் சிறப்பும் தகப்பனுடைய சகோதரர்களும்

2. இந்திரன் வாடை கூரையா மில்லம்
யானையுங் கோஷ்டமு மேல்பால்
விந்தையா மாரி வுத்தர மாகும்
விளம்பின சிறுவூ ராகும்
தந்தைதாய்த் துணைவர் களத்திர புத்திரர்
ஜாதகன் முன்பின்ஜன் மங்கள்
சந்ததஞ் சொல்வேன் தந்தையின் துணைவர்
சதுர்த்தியா மாணது வொன்றே.

2. கிழக்கு வாடையில் கூரை வீடாக இருக்கும். யானை முகத்தையுடைய விநாயகக்கடவுளின் கோயில் மேற்குத் திக்கில் இருக்கும். ஆச்சரியமாக ஒரு மாரியம்மன் கோயில் வடக்குத் திக்கில் இருக்கும். பிறந்த ஊர் ஒரு சிறிய கிராமமாகும். ஜாதகருடைய தகப்பனார் தாயார் சகோதரர்கள் மனைவி மக்கள் ஜாதகர் ஆகிய இவர்களைப் பற்றியும் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றியும் சொல்லுகின்றேன். ஜாதகருடைய தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் நான்கு பேர் ஆவர். இவர்களில் சகோதரர் ஒருவரே ஆவர்.

ஜாதகருடைய தகப்பனரது குணாதிசயங்கள்

3. கன்னிகை யவ்வாறு கழறுவோந் தீர்க்கங்
கனக்காரே யிருவர்கள் தாழுஞ்
சொன்னதோர் தந்தை தனுசுவுத் திராட
ஜனிப்பனும் மால்நிறஞ் சமவான்
அன்னிய ருறவு வாவுகள் விருத்தி
யற்பரை யுறவுகொள் ளாதான்
கண்ணிய குடும்ப மூகவா னறிவோன்
கீர்த்திமான் கிருஷியால் பலனே.

3. சகோதரி ஒருத்தியே ஆவள். இவ்விரண்டு பேர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். மற்ற இரண்டு பேர் இறந்து விடுவார்கள். ஜாதகருடைய தகப்பனார் தனுர் ராசியில் உத்தராட நட்சத்திரத்தில் பிறந்தவராவர். இவர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தை உடையவராவர். இவரிடம் பசுக்கள் விருத்தியாகும். இவர் தாழ்ந்தவர்களிடத்தில் சினேகம் செய்துகொள்ளமாட்டார். இவர் மேன்மையான குடும்பத்தை உடையவர். இவர் விவேகமுடையவர். அறிவுமுடையவர்; புகழும் பெருமையும் உடையவருமாவர். இவருக்கு விவசாயத்தால் பலன் உண்டாகும்.

4. பலகலை யுணர்வன் பத்தினி நேயன்
பணிகவரை நகிக்கவே செய்வன்
கலகத்தைக் கூரன் காரக தேகன்
கன்னென மொழிகளுங் கூறுவன்
நிலமது விருத்தி காரியச் சமர்த்தன்
நீர்தோய்வன் சீலனு மாவன்
உலகினில் நல்லோன் காலிகள் விருத்தி
யுயர்வான புத்திமா னுவன்.

4. ஜாதகருடைய தகப்பனார் அனேக சாஸ்திரங்களை அறிந்தவராவர். தன்னுடைய மனைவியினிடத்தில் பிரியமுள்ளவராக இருப்பார். இவருடைய மனைவியும் இவரிடம் அன்புடையவளாக இருப்பாள். இவர் தன்னுடைய எதிரிகளை நாசமாக்கிவிடுவார். சண்டையை உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டார். பித்தகாரகமாகிய தேகத்தை உடையவர். சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தைகளையே சொல்லுவார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். வேலைகளைச் செய்துமுடிப்பதில் சாமர்த்தியமுள்ளவர். புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வார். நல்லொழுக்கமுடையவராக இருப்பார். இவர் பூமியில் நல்லவராக இருப்பார். இவரிடம் பசுக்கள் விருத்தியாகும். இவர் மேன்மையான புத்தியை உடையவராவர்.

5. ஆகிய துணையை யாதரிப் பானு
மவனிள மனத்தனு மென்றேரும்
பாகமாந் துணையாண் சேதியைப் புகல்வேன்
பயிர்த்தொழி லிருவித குணத்தன்
தோகையு மொன்று தென்மேல்பால் நேருஞ்
சுதர்களி லொன்றுவா னுமே
வேகமாய்ப் பெண்பா லிரண்டுமே தீர்க்கம்
வீண்செல விலாதவ னென்றேரும்.

5. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய சகோதரங்களைக் காப்பாற்றுபவராவர். இவர் இளகிய குணத்தை உடையவராக இருப்பார் என்று சொல்லுகின்றேரும். இவருடைய சகோதரர் விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இந்தச் சகோதரர் விவசாயத் தொழிலைச் செய்வார். இரண்டுவிதமான குணத்தையுடையவர். அஃதாவது நல்லகுணத்தையும் கெட்ட குணத்தையும் உடையவராவர். இவருக்கு ஒரே மனைவி உண்டு. இவள் தென்மேற்குத் திக்கிலிருந்து வருவாள். இவருக்கு ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவர் வீணுகச் செலவு செய்யமாட்டார் என்று சொல்லுகின்றேரும்.

ஜாதகருடைய குணாதிசயங்கள்

6. வயதுமே தீர்க்கம் மருவியே வாழ்வன்
மானிலஞ் சல்லியங் கொள்ளான்
நயமுட னுரைப்ப னகவிலை காணுன்
நாயகி சேதிபின் பாலில்
தயையுட னுரைப்போஞ் சாதகன் குணத்தைச்
சாற்றுவோம் மால்நிற முணச்சல்
அயலார்பொ னிச்சை யிலாதவன் கல்வி
யதிகபுத் திகளுமே யுடையன்.

6. ஜாதகருடைய தகப்பனரின் சகோதரர் நீண்ட ஆயுள உடையவராவர். இவர் தன்னுடைய சகோதரருடன் கூடி இருந்து வாழ்வார். இவர் பூமியில் கடன அடையமாட்டார். இவர் இனிமை யாகவும் நயப்பாகவும் பேசுவார். இவர் தான்யங்களின் விலையை அறியாதவராக இருப்பார். ஜாதகருடைய தகப்பனரின் சகோதரி யினுடைய விஷயங்களைப்பற்றிக் கிருபை கூர்ந்து பின்னல் சொல்லு கின்றோம். ஜாதகருடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம. இவர் மகாவிஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒருவிதமான நிறத்தை உடையவர் ஆவர். இவர் மெலிந்த தேகத்தை உடையவர். இவர் பிறருடைய தனத்தின்மேல் ஆசை இல்லாதவராவர். இவர் வித்தையும் அதிகமான புத்தியும் உடையவராக இருப்பார்.

7. உடையதை யுரைப்ப னுகைவான் பொறுமை
யுத்தமர் நேசமுங் கொள்வன்
படையினில் செல்லான் பாரது விருத்தி
பண்ணுவான் பாத்திர மறிவன்
விடவுரை பகரான் விருந்தினர்ப் பிரியன்
விடவாக்கன் சல்லியங் கொள்ளான்
நடையது மெதுவாம் நாதனுர் பத்தி
நற்கரமு ருத்திர ரேகை.

7. ஜாதகர் உண்மையைப் பேசுவார். விவேகமுள்ளவர். பொறு மையை உடையவராவர். நல்லவர்களுடைய சினேகத்தை அடைவார். சண்டைக்குப் போகமாட்டார். நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி யாக்குவார். நல்லது கெட்டது என்பவற்றைப் பகுத்தறியக் கூடியவராவர். விஷமான வார்த்தைகளைச் சொல்லமாட்டார். விருந் தாளிகளிடத்தில் அன்புடையவராக இருப்பார். விஷவாக்குடையவர். கடன்வாங்கமாட்டார். மெதுவாக நடப்பார். கடவுளின் மேல் அன்பும் ஆசையும் உடையவர். இவருடைய உள்ளங்கையில் உருத்திரரேகை என்ற ஒருவிதமான ரேகை இருக்கும்.

8. இல்லமும் புதிதாய்ச் செய்வனு மிவனே
யிளமனம் பலசகாயந் தன்னில்
சொல்லது காப்பன் துறவிகட் கன்னஞ்
சுத்தவான் செய்நன்றி மறவான்
இல்லையென் றுரையான் பழிக்கிடங் கொடாதா
னீரிரண்டு துணைவர் தோன்றும்
வல்லிமார் முன்னு லிரண்டுமே விருத்தி
யறைகிறேம் தீர்க்கமே யாகும்.

8. ஜாதகர் வீட்டைப் புதியதாகக் கட்டுவார். இளகிய மனத்தை உடையவராவர். இவர் பலருக்கு உபகாரத்தைச் செய்வார். தான் சொன்னவார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். பரதேசிகளுச் சாப்பாட்டைப் போடுவார். சுத்தமாகவும் ஆசாரத்துடனும் இருப்பார். பிறர் தனக்குச் செய்த உபகாரத்தை மறக்காதவராவர். இவர் பிறருக்கு உதவி செய்வதற்குத் தன்னிடம் ஒன்றும் இல்லை என்று சொல்லமாட்டார். இவர் அபவாதத்தையும் நிந்தனையையும் அடையமாடடார். இவருக்கு மொத்தம் நான்கு சகோதரர்கள். இவர்களில் இவருக்கு மூத்தவர்கள் இரண்டு சகோதரிகள் ஆவார்கள். இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள் என்று சொல்லுகின்றேம்,

ஜாதகருடைய தாயாரது குணதிசயங்கள்

9. பின்துணை பெண்ணெண் பேசுவோந் தாயே
பலமிலா வாணது மென்றேங்
கன்னிமார் மூவர் தீர்க்கமா மென்றேங்
கழறுவோம் பின்பாகஞ் சேதி
அன்னையின் குணத்தை யறைந்திடக் கேண்மோ
ஆளனுக் கினியளா மென்றேங்
தன்சொலு மடக்கம் மானிற முடையள்
சரசமாய் வார்த்தை யென்றேம்.

9. ஜாதகருக்கு இளைய சகோதரங்களில் ஒரு சகோதரரும் ஒரு சகோதரியும் ஆவர் என்று, பார்வதியம்மையே! சொல்லுகின்றேம். இளைய சகோதரர் நீண்ட ஆயுளை உடையவர் அல்லர். மற்ற மூன்று சகோதரிமார்களும் தீர்க்க ஆயுளை உடையவர்கள் என்று சொல்லுகின்றேம். இவருடைய விஷயங்களைப்பற்றிப் பின் பாகத்தில் சொல்லுகின்றேம். ஜாதகருடைய தாயாரது குணதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேம், கேட்பீராக. ஜாதகருடைய தாயார் தன்னுடைய புருஷனுக்குப் பிரியமுள்ளவளாக இருப்பாள் என்று சொல்லுகின்றேம். இவள் அடக்கமாகவும் சாந்தமாகவும் பேசுவாள். மாநிறத்தை உடைய

வளாவள். இனிமையாகவும் நல்ல விதமாகவும் வார்த்தைகளைச் சொல்லுவாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது முன் ஜன்மம்

10. வறுமைக ளில்லாள் தாயில்ல முள்ளூர்
அவள்துணை யாணது விரண்டு
திருமகள் போலே கன்னியவ் வாறு
தீர்க்கமாஞ் ஜனனகா லத்தில்
அரிவையர் பூர்வ மறைந்திடக் கேண்மோ
ஆலங்கா டதற்குமேல் பாலில்
சிறியவூர் தன்னி லிக்குல முதித்துச்
சேயர்கள் வரனு முண் டாகி;

10. ஜாதகருடைய தாயார் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். இவளுடைய தாயார் வீடு உள்ளூரிலேயே இருக்கும். இவளுடன் கூடப்பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்களும் இலட்சுமியைப்போன்ற இரண்டு சகோதரிமார்களும் ஜாதகர் பிறக்கின்ற காலத்தில் இருப்பார்கள். இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. ஆலங்காடு என்ற திருவாலங்காட்டு க்ஷேத்திரத்திற்கு மேற்குத் திக்கிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் இந்த ஜன்மத்தில் பிறந்த குலத்திலேயே முன்ஜன்மத்தில் பிறந்து புருஷனையும் பிள்ளைகளையும் உடையவளாகி;

ஜாதகருடைய தாயாரது மறு ஜன்மமும் மரண காலமும்

11. அறமதி லிச்சை யரிபத்தி கொண்டு
அந்தகன் நகரமே யடைந்து
பிரமனுல் வரைய வுதித்தவ னென்றோம்
பேசுவோ மஷ்டம வாண்டில்
அரிவையர் மந்தம் பேதியால் மாள்வள்
அறைகுறோம் பின்ஜன்மந் தன்னை
விரிஞ்சியில் வைசிய குலந்தனி லுதிப்பான்
வித்தகி கேட்டிடு வாயே.

11. ஜாதகருடைய தாயார் தருமத்தில் ஆசையுடையவளாகியும் மகாவிஷ்ணுவின் மேல் அன்பும் ஆசையும் உடையவளாகியும் இருந்து, இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவரால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். இவள் ஜாதகருக்கு எட்டாவது வயதில் மந்தார பேதியால் இறந்துவிடுவாள் என்று சொல்லுகின்றோம். இவள் தன்

னுடைய பின்ஜன்மத்தில் வைசியருடைய குலத்திற் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனாரது முன் ஜன்மம்

12. தந்தையின் பூர்வஞ் சாற்றவே கேண்மோ
தாமிர பரணியி லேதான்
சந்ததம் வைசிய குலமதில் தோன்றித்
தரணியில் செட்டுமே செய்து
வந்திடும் மனைவி மதலைக ளுண்டாய்
வாழ்நாளில் வினையையே கேண்மோ
நொந்திடு மேழை மதலைக்கு மணங்கள்
நேமித்து வைசியன்பால் சென்று ;

12. ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம், கேட்பீராக. இவர் தாமிரபணியில் ஒரு வைசிய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து பூமியில் வியாபாரத்தைச் செய்து கொண்டு மனைவி மக்களை உடையவராகி வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாபத்தைக் கேட்பீராக. கஷ்டத்தை அடைந்திருக்கின்ற ஓர் ஏழையானவர் தன்னுடைய பிள்ளைக்கு விவாகம் செய்வதற்காக நாளை நிர்ணயித்துவிட்டுப் பிறகு வைசியராகிய ஜாதகருடைய தகப்பனாருடைய இடத்திற்குப்போய் ;

13. முத்திரை செய்து யீகுவா யென்ன
மொழிப்படிச் சம்மதங் கொண்டு
வித்தகன் சொல்லை நம்பியே யவர்கள்
வேண்டிய வஸ்துவைச் சேர்த்துச்
சித்தமாய் மணங்கள் செய்யுகா ளிவன்பால்
செப்பின முத்திரை கேட்க
நித்தியந் திரிச்சலா லதைமறந் தேனென்று
நுகர்ந்தனன் வைசியன் தானும்.

13. மாங்கல்யம் ஒன்றை தயாரித்துக் கொடுக்கவேண்டுமென்று கேட்க ஜாதகருடைய தகப்பனார் இதற்குச் சம்மதிக்கவே இவருடைய வார்த்தையை நம்பி இந்த ஏழையானவர் விவாகத்திற்குத் தேவையான சாமான்களைத் தயார் செய்து விட்டு விவாகத்தைச் செய்யவேண்டிய தினத்தில் இவரிடம் போய் மாங்கல்யத்தைக் கேட்க இவர் தான் தினந்தோறும் அலைந்துகொண்டிருந்ததால் மறந்து விட்டதாகப் பதில் சொன்னார்.

வேறு

14. வேறொரு முத்திரை வாங்கி வித்தகர் மணமு டித்துக்
கூறுவார் சாபந் தானுங் கோதையு மரண மாகி
மாறிடு ஜன்மந் தன்னில் மனைவியு மிரண்டு மாகிப்
பாரினில் வாழ்வா யென்று பஞ்சையுஞ் சொல்லிச்

[சென்றார்.

14. அந்த ஏழையானவர் இன்னொரு மாங்கல்யத்தை வாங்கி விவாகத்தை நடத்திவிட்டு ஜாதகருடைய தகப்பனாருக்குச் சாபத்தைக் கொடுத்தார். "உனக்கு இந்த ஜன்மத்தில் உன்னுடைய மனைவி இறந்துவிடக்கடவது, உன்னுடைய மறுஜன்மத்தில் நீ இரண்டு மனைவிகளை அடைந்து வாழக்கடவது" என்று ஜாதகருடைய தகப்பனாரைப் பார்த்து இந்த ஏழையானவர் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

15. அதுவின்றி வேறு காணனந்திய காலந் தன்னில்
அதிபதி மரண மாகி மனமது சஞ்ச லத்தால்
கதியென்றோர்க் கன்ன மீந்து காலன்தன் பதிக்குப்புக்கி
விதியவன் வரையப் பட்டு விளங்கினி னிவனே

[யென்றும்.

15. ஜாதகருடைய தகப்பனார் இந்தத் தோஷத்தைத் தவிர வேறு ஒரு தோஷத்தையும் அடையவில்லை. இவருடைய முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் இவருடைய மனைவி இறந்து தன்னுடைய மனத்தில் துன்பத்தை அடைந்து அதனால் கஷ்டங்களை அனுபவிக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டுப் பிறகு இறந்து எமபட்டணத்திற்குப்போய்ப் பிரம தேவனால் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம்.

16. இந்ததோர் ஜன்மந் தன்னி லெய்திடு மேழை சாபந்
தன்மனை மரண மாவள் சார்ந்திடு மிரண்டா மாது
அன்னவள் தென்மேல் திக்கி லணுகுவள் மாஞ்சி வப்பள்
கன்னென மொழியு முண்டு கணவனுக் கினிய ளாமே.

16. ஜாதகருடைய தகப்பனாருக்குத் தன்னுடைய முன்ஜன்மத்தில் ஏழை கொடுத்த சாபமானது இந்த ஜன்மத்தில் வந்து அடையும். இவருடைய மனைவி இறந்துவிடுவாள். இவருக்கு இரண்டாவது மனைவி வந்து சேருவாள். இந்த இரண்டாவது மனைவி தென்மேற்குத் திக்கிலிருந்து வருவாள். இவள் மாந்துளிரின் நிறமாகிய ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவள் ஆவள். இவள் சர்க்கரையைப்

போன்ற இனிமையான வார்த்தைகளை உடையவள். தன்னுடைய புருஷனுக்குப் பிரியமுள்ளவளாக இருப்பாள்.

17. சுகமுள குடும்பி யாவள் துருசான கோபி யாவள்
பகையென்று மன்த்தில் வையாள் பஞ்சைமே லிரக்க
[மாவள்
தகமையாய்ச் சுதரா ணென்று சத்திமா ரிருவர் தீர்க்கம்
ஜகமதில் நல்லோ ளாவள் சேயிழை யோக சாலி.

17. ஜாதகருடைய தகப்பனாரது இரண்டாவது மனைவி கெடுதியை விளைவிக்கக்கூடிய கோபத்தை உடையவள் ஆவள். இவள் தன்னுடைய மனத்தில் விரோதத்தை உடையவளாக இருக்கமாட்டாள். ஏழைகளிடத்தில் தயாள குணத்தை உடையவளாக இருப்பாள். இவளுக்கு ஓர் ஆண்குழந்தையும் இரண்டு பெண்குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள். இவள் பூமியில் நல்ல வளாக இருப்பாள். யோகத்தை உடையவளாக இருப்பாள்.

18. ஜயமுனி யிதனைக் கேட்டுத்
திடுக்கென வுரைக்க லுற்றார்
நயமுட னிரண்டாந் தாரம்
நல்குநாள் சொல்லு மென்ன
வியமாகு முப்பான் மூன்றில்
மேவின முதல்ம னைதான்
தயையுடன் மறும னைதான்
சார்ந்திடு மறுவாண் டில்தான்.

18. ஜயமுனிவர் இந்த விஷயங்களைக் கேட்டு அவசரமாகக் கேட்கின்றார். இரண்டாவது மனைவி நேரிடுகின்ற காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்டார். முப்பத்துமூன்றுவது வயதில் முதல் மனைவி இறந்துபோய்விடுவாள். அடுத்த வருஷத்தில் இரண்டாவது மனைவி வந்து நேரிடுவாள்.

ஜாதகருடைய தகப்பனாரது மறுஜன்மம்

19. பின்ஜன்மம் வேங்க டத்துள்
பிறப்பனும் பிரம சேயாய்
பொன்பொரு ளதிக முண்டாய்ப்
பூமியில் வாழ்வா னவன்
அன்னையுங் கேட்க லுற்றா
ளவனுமிச் சென்மந் தன்னில்
என்னபுண் ணியங்கள் செய்தா
னியம்புவீர் முனியே நீர்தாம்.

19. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மறுஜன்மத்தில் வேங்கடம் என்ற திருப்பதி க்ஷேத்திரத்தில் ஒரு பிராமணருடைய குலத்தில் ஆண்குழந்தையாகப் பிறப்பார். இவர் தனம் சொத்து ஆகிய இவைகளை அதிகமாக உடையவராகிப் பூமியில் வாழ்பவராவர். இவ்விதமாக முனிவர் சொல்லவே, பார்வதியம்மையார் கேட்கின்றார். ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் எவ்விதமாகப் புண்ணியங்களைச் செய்தார் என்பதை, முனிவரே! நீரே சொல்லுவீராக.

20. மனமது விரக்க மாயு மால்பத்தி கொஞ்ச முண்டாய்
விணையிலா மனத்த னுயும் வீண்வம்பு புகலா தாலுஞ்
சினமது மில்லா தாலுஞ் சிறுத்தோர்க்கு வுதவி யாயுங்
கனமுடன் வாழ்வ தாலே கலப்பனும் பிரம சேயாய்.

20. ஜாதகருடைய தகப்பனார் தயையுமுள்ள மனத்தை உடையவராயும் மகாவிஷ்ணுவின்மேல் சிறிது அன்பும் ஆசையும் உடையவராயும் கெடுதியில்லா மனத்தை உடையவராயும் வீணான சண்டையை விலைவிக்கின்ற வார்த்தைகளைச் சொல்லாதவராயும் கோபம் இல்லாதவராயும் இருந்து ஏழைகளுக்கு உபகாரத்தைச் செய்துகொண்டும் மேன்மையுடனும் வாழ்வதால் பிராமணராகப் பிறப்பார்.

ஜாதகருடைய தகப்பனாரது மரணகாலம்

21. நாற்பது வாண்டு தன்னில் நற்றனு மாதந் தன்னில்
கூப்பிடு வானுங் காலன் குறித்ததோர் தந்தை தன்னை
ஏற்கவே காரி கால மெய்திடுஞ் சுயமாம் புத்தி
தீர்ப்பாக நடக்கு மென்றோஞ் செப்பின மொழி
[குன்றுவே

21. ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் நல்ல தனுர்மாதம் என்ற மார்கழி மாதத்தில் இவருடைய தகப்பனாரை எமன் வந்து அழைப்பார். அஃதாவது, தகப்பனார் இறந்துவிடுவார். இக்காலத்தில் காரி என்ற சனிமகாதசையில் சுயபுத்தி நடக்கும் என்று உண்மையாகச் சொல்லுகின்றோம். நாங்கள் சொல்லிய வார்த்தைகளின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய விவாககாலமும் மனைவியின் குணாதிசயங்களும்

22. உதித்தவன் மணத்தின் கால
முரைக்கிறே மிருப தாண்டி
லதிபதி யன்னை வர்க்கம்
வந்திடு மூன்னூழ்த் தன்னை

மதிமுக முடையா ளாவள்
மாஞ்சிவப் புடையா ளாவள்
துதிசெய்தோர்க் கன்ன மீவள்
தோகைபோல் சாய லுள்ளாள்.

22. ஜாதகருடைய விவாக காலத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபதாவது வயதில் உள்ளூரிலிருந்தே தன்னுடைய தாயார் பந்துக்களிலிருந்து இவருக்கு மனைவி வந்து சேருவாள். இவள் சந்திரனைப்போல அழகான முகத்தை உடையவளாவாள். மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒருவிதமான சிவப்பு நிறத்தை உடையவளாவாள். தன்னைப் புகழ்ந்து பேசினவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். இவள் மயிலைப்போன்ற நீண்ட தேகத்தை உடையவளாவாள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

23. பாலபாக்கிய முடைய ளாவள் பரவுப காரி யாவள்
சீலமு மறத்தி லிச்சை செய்நன்றி மறவா ளாவள்
பாலர்க ளெழுவர் தோன்றும் பருகாவே சிலவே
[யென்றேஞ்
சாலவே யாண்பா லிரண்டு சத்தியு மவ்வாறு தீர்க்கம்.

23. ஜாதகருடைய மனைவி பால்பாக்கியத்தை உடையவளாவாள். பிறருக்கு உபகாரத்தைச் செய்பவளாக இருப்பாள். இவள் நல்லொழுக்கம் உடையவளாக இருப்பாள். தருமம் செய்வதில் ஆசையுடையவள். இவள் தனக்குப உபகாரத்தை மறக்காதவளாக இருப்பாள். இவளுக்கு மொத்தம் ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். சிலர் உயிருடன் இருக்கமாட்டார்கள் என்று சொல்லுகின்றோம். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக இருப்பார்கள்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

24. முன்னவ னிருந்த ஜன்மம்
மொழிகேறும் பெண்ணை யோரஞ்
சின்னவூர் தன்னி லேதான்
ஜனித்தனன் தீயின் வம்சம்
இன்னவன் கிருஷி செய்து
வியல்புடன் வாழு நாளில்
அன்ன வனில்லந் தன்னி
லணுகிற்றுப் பேடை யொன்று.

24. ஜாதகருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவர் பெண்ணையாற்றின் கரையோரத்தில் ஒரு சிறிய கிராமத்தில் ஒரு

வன்னியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து விவசாயத் தொழிலைச் செய்துகொண்டு சௌக்கியமாக வாழ்கின்ற காலத்தில் இவருடைய வீட்டில் ஒரு பெண்பட்சி ;

25. குஞ்சுக ளதிக முண்டாய்க்
குலவியே வாழு நாளில்
தஞ்சமாய்த் தாயைக் கொன்றூன்
தன்குஞ்சு பிரியா முன்னம்
நஞ்சுபோல் சேர்ந்த தென்றேரும்
நல்கிற்றுச் சிலவே தோஷந்
தஞ்சமா யந்தி யத்தில்
சக்கரத் தோனும் பத்தி ;

25. அதிகமான குஞ்சுகளை அடைந்து வாழ்கின்ற காலத்தில் குஞ்சுகள் தன் தாயைவிட்டுப் பிரிந்துபோகும் காலம் நேரிடுவதற்கு முன்னே இந்தத் தாய்ப்பட்சியை ஜாதகர் கொன்றுவிட்டார். இந்தத் தோஷமானது இவரைப் பாம்பினுடைய விஷத்தைப்போல அடைந்தது. இதுவுமின்றி, இவருக்குச் சில தோஷங்களும் சம்பவித்தன. இவர் தன்னுடைய கடைசி காலத்தில் மகாவிஷ்ணுவின்மேல் அன்பும் ஆசையும் ;

26. செய்துமே கால நாடு
சேர்ந்தன னிவனே யென்றேரும்
வையவன் வரையப் பட்டு
வந்தனன் ரெட்டி வர்க்கம்
ஐயமா முன்ஜன் மத்தில்
அணுகின பறவை தோஷம்
பையவே நேரு மென்றேரும்
பத்தினி யன்னை கண்டம்.

26. உடையவராகி இறந்து ஜாதகர் எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்துவிட்டார் என்று சொல்லுகின்றேரும். பிறகு பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ஒரு ரெட்டியாருடைய குலத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். இவருடைய முன் ஜன்மத்தில் சம்பவித்த பட்சியினுடைய தோஷம் இச்சென்மத்தில் இவருக்கு வந்து சம்பவிக்கும் என்று சொல்லுகின்றேரும். பதிவிரதை யாகிய இவருடைய தாயாருக்கு மரணம் ;

ஜாதகருடைய தாயாரது மரணகாலமும் ஜாதகருடைய மரணகாலமும்

27. ஆதியில் நேரு மென்றே மணுகிடுஞ் சல்லியப் பாதை
நீதியாய்ச் சிலநாள் சென்று நீங்கிடும் ருணங்கள் தானும்
போதவே வறுபா னிரண்டில் புரட்டைமா தத்தி
[லேதான்
சூதான கால நாடு சேருவா னென்று சொல்வோம்.

ஓலைச்சுவடிகள் நூல் நிலையம்
S. MANIMALAI JOSHI
MADRAS

27. ஜாதகருடைய இளம் பிராயத்தில் நேரிடும் என்று சொல்லுகின்றோம். ஜாதகருக்குக் கடனால் உபத்திரவங்கள் ஏற்படும். இந்தக் கடன்கள் சிலகாலம் சென்று நியாயமாக நிவிர்த்தியாகிவிடும். இவருக்கு அறுபத்திரண்டாவது வயதில் புரட்டை என்ற புரட்டாசி மாதத்தில் இவர் இறந்து கெடுதியான எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவார் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—புரட்டை என்றால் பூரட்டாதி நட்சத்திரமாகும். இதற் குரிய மாதங்களாகிய மாசிமாதம் பங்குனிமாதம் என்றும், புரட்டை மாதத்திற்கு அர்த்தம் கொள்ளலாம்.

ஜாதகருடைய மறுஜன்மம்

28. மறுஜன்ம மரங்கந் தன்னில்
மறைக்குல முதிப்பா னென்றோன்
திருமகள் விலாசம் பெற்றுச்
செல்வனும் வாழ்வா னவன்
குறுமுனி யிவ்வா றுசொல்லக்
கூறுவார் பராசர் தாமுந்
திருமகன் தனக்கு வைம்ப
தாண்டினில் கண்டம் நேரும்.

28. ஜாதகர் தன்னுடைய மறுஜன்மத்தில் அரங்கம் என்ற ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் ஒரு பிராமணர் குலத்தில் பிறந்து இலட்சுமி யினுடைய கடாக்ஷத்தை அடைந்து வாழ்பவராவர். குறுகிய முனிவ ராகிய அகஸ்திய மகரிஷி இவ்விதமாகச் சொல்லவே, பராசரமகரிஷி தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்கு ஐம்பதாதவது வயதில் மரணம் நேரிடும்.

29. எப்படிச் சொல்லு மென்ன யேழிடத் தோனுங் காரி
ஒப்புடன் மூன்றில் நிற்க வுறுதசை நால தாக
அப்பவே கண்டம் நேரு மத்திரி சொல்லு கின்றார்
மெய்ப்புடன் புந்தி கால மேவிடுங் கண்டந் தானே.

29. இவ்விதமாகப் பராசரமுனிவர் சொல்லவே, எந்தக் காரணத் தினால் இவ்விதமாய்ச் சம்பவிக்கும்? என்று கேட்கவே, ஏழாவது பாவத் திற்கு அதிபதியாகிய சனி மூன்றாவது பாவத்தில் இருப்பதாலும் இந்தத் தசை நான்காவது தசையாக நேரிடுவதாலும் இந்தத் தசைக் காலத்தில் ஜாதகருக்கு மரணம் நேரிடும். இதற்கு அத்திரி மகரிஷி தடுத்துச் சொல்லுகின்றார். உண்மையாக புதமகாதசை காலத்தில் ஜாதகருக்கு மரணம் நேரிடும்.

குறிப்பு :—ஜாதகருடைய ஜன்ம நட்சத்திரம் அவ்விடம் ஆகும். அங்காரக தசை இதற்குரிய ஜனனகால தசை ஆகும். ஆகையால் அங்காரக தசையிலிருந்து சனிதசை வரையிலும் வரிசையாக எண்ணி வர சனிதசை நான்காவது தசையாகும். சனிதசை நான்காவது தசையாக வந்தால் இந்த நான்காவது தசை ஜாதகருக்கு மரணத்தை விளைவிக்கும் என்று தமிழ் ஜாதகாலங்காரத்தின் தொள்ளாயிரத்து எழுபத்தைந்தாவது பாடலாகிய கீழ்க்கண்ட பாடலால் தெரியவரும்

"மாரகத்தின் தசையறிய வருநான்காந் தசைசனியே வந்துற்றாலும்
பாரதனக்குச் சுதன்செவ்வா யைந்தாகுந் தசைதானே [பரிந்துற்றாலும்
பேருதித்த வாருகுந் தசையரச னாலும் பின்னிராகு
சீருதித்த வேழாகுந் தசையானா லுமம்மரணந் திண்ணந் தானே."

இந்தப் பாட்டின் கருத்தையே குமாரசாமீயம் மகாதசைப்பலப் படலத்தில் நான்காவது பாடலிலும் கண்டிருப்பதைக் கவனிக்கவும். மேலும் பதிப்பாசிரியராகிய சி. ஜி. ராஜன் அவர்களால் அச்சிடப்பட்ட தமிழ் பிருஹத்ஜாதகத்தில் கடைசியில் இரண்டாவது அநுபந்தத்தில் நாற்பத்து நான்காவது அயிட்டத்தில் "தசாநாதனுக்குச் சந்திரலக்கினாதி பத்தியம் வந்தால் அந்த தசாநாதன் மாரகம் செய்யமாட்டார். அஃதாவது சனிதசை நாலாவது தசையாய் வருகிற ஜாதகத்தில் ஜனனகாலத்தில் மகரத்திலாவது அல்லது கும்பத்திலாவது சந்திரன் இருந்தால் சனித்சையில் மாரகம் கிடையாது." என்று கண்டிருப்பதைக் கவனிக்கவும். இந்த ஜாதகத்தில் சந்திரன் கும்பத்தில் இருக்கின்றார். மேலும் புததசை ஐந்தாவது தசையாக வருகிறது. இந்த புதன் இந்த ஜாதகத்தில் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார். குமாரசாமியத்தில் மேலே குறித்துள்ள பாடலில் அஸ்தமனம் அடைந்தவருடைய தசையில் மாரகம் ஏற்படும் என்று கண்டிருக்கிறதைக் கவனிக்கவும். ஆகையால் சனிதசையில் மாரகம் ஏற்படாமல் புததசையில் இந்த ஜாதகருக்கு மாரகம் ஏற்படும். இதைத்தான் இந்த இருபத்தொன்பதாவது பாடலில் அத்திரிமகரிஷி சொல்லியிருக்கிறார்போல் தோற்றுகிறது.

ஜாதகருடைய யோகபாவம்

30. வந்தவன் பொதுயோ கத்தை
யறைகிறேந் தாயே யாங்கள்
சந்ததங் கிருஷி செய்வன்
தங்கிடு மூன்றூர் பூமி
விந்தையாய்த் தானியச் சேர்க்கை
வெற்றிச்சொ லுடைய னவன்
தன்தனங் கொடுக்கல் வாங்கல்
சதுஷ்பாதம் விருத்தி யுண்டு.

30. ஜாதகருடைய பொது யோகத்தைப்பற்றி, எங்கள் தாயார்ர் கிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகிறோம். இவர் எப்பொழு தும் விவசாயத் தொழிலேயே செய்வார். இவருக்கு மூன்று கிராமங் களில் நிலங்கள் இருக்கும். இவர் ஆச்சரியகரமான விதத்தில் தான் யங்களைச் சேர்த்து வைப்பார். இவர் சொல்லுகின்ற வார்த்தைகள் மேன்மையுடையனவாக இருக்கும். இவர் தன்னுடைய பணத்தை வைத்துக்கொண்டு கொடுப்பதும் திருப்பி வாங்குவதுமான லாவா தேவித் தொழிலேச் செய்துகொண்டு வருவார். இவரிடம் கால் நடைகள் விருத்தியடையும்,

31. ஈரூறு வாண்டு தன்னி லில்லமும் புதிதாய்ச் செய்வன்
பாருகள் காட்கு காளாய்ப் பரவிடு மென்று சொல்வோர்
தீரமா மனத்த னுவன் சீர்மறை யீகை யெய்தும்
காரியச் சமர்த்த னுவன் காலங்கள் சொல்லு மென்ன ;

31. ஜாதகருக்குப் பன்னிரண்டாவது வயதில் ஒரு புதிய வீடு கட்டப்படும். அஃதாவது அவரது குடும்பத்தாரால் கட்டப்படும். ஜாத கருக்கு நிலங்கள் நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே போகும் என்று சொல்லுகின்றோம். இவர் தைரியமான மனத்தை உடையவராவர். இவர் சிறந்த வேதங்களை அறிந்த பிராமணர்களுக்குக் கொடுக்கும் தன்மையை உடையவராக இருப்பார். இவர் வேலைகளைச் செய்து முடிப்பதில் சாமர்த்தியமுள்ளவராக இருப்பார். இந்தப் பலன்கள் நடக்கும் காலங்களைப்பற்றிச் சொல்லுவீராக என்று கேட்க ;

32. ஏழாண்டு முதலே யாக வெய்திடும் பகைய நேகந்
தாழ்விலா ஜயமே யெய்துஞ் சல்லிய மதனுல் நேருந்
தோழியே மறையோர் தாமுந் துன்பமே யடைவ ராவர்
ஆழியி லவர்கள் பூமி யணுகிடு மிருபா னெட்டில்.

32. ஜாதகருக்கு ஏழு வயதிற்கு மேற்பட்டு இவருடைய குடும்பத் தாருக்குப் பலவிதமான விரோதங்கள் ஏற்படும், யாதொரு குறையும் இல்லாமல் ஜயமே உண்டாகும். இதனுல் குடும்பத்தில் கடன்கள் ஏற்படும் பார்வதியம்மையே! பிராமணர்கள் கஷ்டத்தை அடைவார்கள். இவர்களுடைய நிலங்கள் ஜாதகருக்கு இருபத்தெட்டாவது வயதில் வந்து சேரும்.

33. பெரிதான குடும்பி யாவன் பிரபல கீர்த்தி யேற்பன்
திருமகள் வாச முள்ளான் சென்றிடம் பெருமை யேற்பன்
அரசர்கள் நேசங் கொள்வ னுவுகள் பணையோர் விருத்தி
நெறியதைக் காப்பா னுவன் நிமலன்மேல் பத்தி

[கொள்வன்

33. ஜாதகர் ஒரு பெரிய குடும்பஸ்தராக இருப்பார். அதிகமான புகழையும் மேன்மையையும் அடைவார். இவரிடம் இலட்சுமி வரசஞ் செய்துகொண்டிருப்பாள். இவர் தான் போகின்ற இடங்களி லெல்லாம் பெருமையையே அடைவார். அரசர்களுடைய சிநேகத் தையும் அடைவார். பசுக்களும் நிலங்களும் ஏர்களும் இவரிடம் விருத்தியடையும். இவர் நல்ல மார்க்கத்தில் இருப்பார். கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவராக இருப்பார்.

34. எண்ணேந்து விரண்டா மாண்டி லேகுவான் சிறியதந்தை
வண்ணமா யேழா மாண்டில் மடிவளே தந்தை யன்னை
திண்ணமாய் மரண மட்டுஞ் சிறப்பான குடும்பி யாவன்
கண்ணிய மணுகா வாழ்வன் கேவல மணுகாச் சித்தன்.

34. ஜாதகருக்கு நாற்பத்திரண்டாவது வயதில் இவருடைய சிறிய தகப்பனர் இறந்துபோய் விடுவார். இவருக்கு ஏழாவது வயதில் இவருடைய பிதிரு பாட்டியார் இறந்துபோய் விடுவார் இவர் தன்னு டைய மரண காலம் வரையிலும் உண்மையாக மேன்மையான குடும் பஸ்தராக இருப்பார். இவர் பருமனுகாமல் இருந்து வாழ்வார். இவர் தாழ்வான எண்ணத்தை உடையவர் அல்லர்.

ஜனன காலதசை இருப்பும் பலனும்

35. ஜனித்திடுங் காலங் தன்னிற் சேய்தசை யாண்டி ரண்டுங்
குனித்திடுந் திங்க ளாறுங் கூறுவோர் துணைவர் விருத்தி
வினைவருஞ் ஜாத கர்க்கு மேவிப்பின் நிவிர்த்தி யாகுந்
தனமது செலவு நேருஞ் சஞ்சல மனங்க ளெய்தும்.

35. ஜாதகர் பிறந்த காலத்தில் கணிதப் பிரகாரம் சேய் என்ற அங்காரக மகாதசையில் இருப்பு இரண்டு வருடங்களும் ஆறு மாதங்களும் ஆகும், இக்காலத்தில் இவருக்குச் சகோதரர்கள் பிறந்து விருத்தியாவார்கள் என்று சொல்லுகின்றோம். இவருக்குக் கஷ்டங் கள் நேரிடும். நோய் உண்டாகும். பிறகு இவை நிவிர்த்தியாகி விடும். பணம் செலவாகும். மனக்கஷ்டங்கள் உண்டாகும்.

36. பொன்லாபஞ் சேயு மொன்பான் பிறையேழி
[லிருப்ப தாலே
தென்திசைக் கீழ்பால் தன்னில் சேர்ப்பனும் விசேஷ பூமி
தன்னரில் மறையோ ராஸ்தி சார்ந்திடு மிருபான் மேலே
அன்னவ ஸ்தி யாவு மறுமூன்று வாயி ரம்பொன்.

36. பொன் என்ற குரு லாபம் என்ற பதினென்றாவது வீட்டி லும் சேய் என்ற அங்காரகன் ஒன்பதாவது வீட்டிலும் பிறை என்ற சந்திரன் ஏழாவது வீட்டிலும் இருப்பதால் தெற்குத் திசையிலும்

கிழக்குத் திசையிலும் அதிகமான நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவருக்கு, தன் கிராமத்திலுள்ள பிராமணர்களுடைய சொத்து இருபது வயதிற்குமேல் வந்து சேரும். இவருடைய சொத்துக்கள் முழுவதும் பதினெட்டாயிரம் பொன் பெறக்கூடியனவாக இருக்கும் என்று சொல்லுகின்றோம்.

37. தந்தையின் தந்தை மேலாய் ஜாதகன் வாழ்வா னவன்
இந்திர போக முள்ளான் யாரையும் வசியங் கொள்வன்
பிந்திய பாகந் தன்னில் பேசுவோம் விபர மாக
இந்திர னிறைஞ்சு மாதே யியம்பின மொழிகுன் றுவே.

37. ஜாதகர் தன்னுடைய பிதிருவழிப் பாட்டனுரைவிட அதிக மான அந்தஸ்திலிருந்து வாழ்பவராவர். இவர் தேவேந்திரனைப் போல சகல போகங்களையும் அனுபவிப்பார். இவர் எல்லோரையும் தன் பக்கமாக இருக்கும்படி கவர்ந்து கொள்ளுவார். மற்ற விஷயங்களை விபரமாக அடுத்த பாகத்தில் சொல்லுகின்றோம். இந்திரன் வணங்கித் தொழுகின்ற பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தை களின் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 133

ஜனன கால கிரகநிலை

1. [1]மதி[2]சுசன் [3]பரிதி [4]வண்டி [5]மால்[6]புகர் [7]வீணை யாக [8]விதி[9]சாடி [10]பொன்னேன் [11]தேளில் மெய்ஞ் [12]ஞானி [கன்னி யாகத் [13]கயர் மீன மாக ஐன்மமுஞ் சிம்ம மாக இதுவிதக் கோளு நின்ரு லியம்புவீர் பலனை யென்று ;

1. சந்திரனும் அங்காரகனும் சூரியனும் கடகத்திலும், புதனும் சுக்கிரனும் மிதுனத்திலும், சனி கும்பத்திலும், குரு விருச்சிகத்திலும், கேது கன்னியிலும், இராகு மீனத்திலும், ஜன்ம லக்கினம் சிம்ம மாகவும் இருந்து இவ்விதமாகக் கிரகங்களும் இருந்தால் பலாபலன் களைச் சொல்லுவீர் என்று ;

கிரகநிலை

ராகு			புதன் சுக்கிரன்
சனி	இராசி சக்கரம்		சந்திரன் அங்காரகன் சூரியன்
			லக்கினம்
	குரு		கேது

ஆயில்யம் 1-ஆம் பாதம் : புததசை ஏழு 13-4-0.

ஜனன நாட்டுச் சிறப்பு

2. .....

.....ஆண்பால் ஜன்ம மவன்தந்தை யில்லம் சொல்வேன் போதவே யுத்தர வாசல் புகலுவோந் தனித்த யில்லம் நீதியாய் சிறுவூர் தன்னில் நேருவா னென்று சொல்வோம்

---

1. சந்திரன்
2. அங்காரகன்
3. சூரியன்
4. கடகம்
5. புதன்
6. சுக்கிரன்
7. மிதுனம்
8. சனி
9. கும்பம்
10. குரு
11. விருச்சகம்
12. கேது
13. இராகு.

2. ...ஆண் குழந்தை பிறக்கும். இவருடைய தகப்பனருடைய வீட்டைப்பற்றிச் சொல்லுகின்றேன். இந்த வீடு வடக்குத் திக்கில் வாயிற்காலை யுடையதாக இருக்கும. இது தனியான வீடாகும். ஒரு சிறிய கிராமத்தில் ஜாதகர் பிறப்பார் என்று சொல்லுகின்றேரும்.

[முதல்வரி ஓலையில் சேதமேற்பட்டதால் எழுதப்படவில்லை.]

3. அந்தயில் நீங்கி யேதா னடைவனு முத்தர.....
.....லேதான் முயர்வான யில்லஞ் செய்வன்
தந்தைதாய்த் துணைவர் புத்திரர் தன்மனை யோகச் சேதி
வந்தவன் முன்பின் ஜன்ம மறைகிறே மிந்நூல்
[தன்னில்.

3. இந்த வீட்டை விட்டுவிட்டு வடக்கில் இன்னெரு வீட்டிற்குப் போய் விடுவார். மேன்மையான வீட்டைக் கட்டுவார். தகப்பனார் தாயார், சகோதரர், புத்திரர்கள், மனைவி ஆகிய இவர்களுடைய யோகங் களைப் பற்றியும் இவருடைய முன்ஜன்மம் பின்ஜன்மம் இவற்றைப் பற்றியும் இந்த சாஸ்திரத்தில் சொல்லுகின்றேரும்.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரபாவம்

4. தாதைக்குத் தார மிரண்டில்
தரித்திடும் முதல்மா தின்ற
நீதியாய் மைந்தன் தானும்
நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைவர் நான்கில்
பொருந்திடு மாண்பா லொன்று
மேதினில் கன்னி யொன்று
விளங்கிடுந் தீர்க்க மாக.

4. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய தகப்பனருக்கு முதலா வது மனைவிக்குப் பிறந்தவராவார். இவருக்கு மொத்தம் நான்கு சகோதரங்களில் ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் தீர்க்காயுளை உடையவர்களாவார்கள்.

5. துணைவன்தன் சேதி சொல்வேன்
சோர்வுறுன் வார்த்தைக் கேதான்
சினமுண்டு வெளிக்காட் டாதான்
தெவிமார் குணத்த னவன்
கனமிலாக் குடும்பி யாவன்
காரக தேக னவன்
வினையுள மனத்த னவன்
விதேசத்தில் சிலநாள் வாசம்,

5. ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர் இரக்கமில் பேசபவராவர். கோபத்தை யுடையவராவர். இதை இவர் வெளியில் காட்டிக் கொள்ளமாட்டார். மனைவியின் பேச்சைக் கேட்பவராவர். இவர் மேன்மையில்லாத குடும்பியாவர். காரகநோயையுடைய தேகத்தை யுடையவர். கெட்ட மனத்தை யுடையவர். வெளியூரில் சிலகாலம் வாசஞ் செய்வார்.

6. பாரியு மொருத்தி யாவள் பாலர்கள் தோன்றில் தீதாம்
வீரிய நாட்ட னுவன் வீணப வாத மேற்பன்
காரிய மில்லா னுவன் கல்விமான் கபடு மில்லான்
தீரமில் லாத நெஞ்சன் திருகிலாக் குணத்த னுமே.

6. ஜாதகருடைய தகப்பனரின் சகோதரருக்கு ஒரே ஒரு மனைவி தானுண்டு. இவருக்குக் குழந்தைகள் பிறந்தால் இறந்து விடும். வீரியத்தின்மேல் கண்ணுள்ளவராவர். வீணன பழிகளை அடையமாட்டார். இவர் ஒருவேலையிலும் நோக்கமில்லாதவர். படித்தவர், வஞ்சனையில்லாதவர். தைரியமில்லாத மனத்தை யுடையவர். கெடுதியில்லாத குணத்தை யுடையவராவர்.

ஜாதகருடைய தகப்பனரது குணதிசயங்கள்

7. வயதுமே தீர்க்க மென்றே
மறைகிறேரும் பின்பால் சேதி
நயமுடன் தந்தை சேதி
நாட்டுவோ மானி றத்தன்
அயலார்பொ னிச்சை யுள்ளா
னதிகார முடைய னுவன்
பயமிலா மனத்த னுவன்
பஞ்சைமே லிரக்க முள்ளான்.

7. ஜாதகரின் தகப்பனருடைய சகோதார் தீர்க்காயுளை உடையவர். மற்ற விஷ்யங்களைப் பின்னல் சொல்லுகின்றேரும். ஜாதகருடைய தந்தையின் செய்திகளைச் சொல்லுகின்றேரும். இவர் மானி றத்தை யுடையவர். பிறர்பொருளி லாசை யில்லாதவர். அதிகார முடையவர். பயமில்லாதவர். ஏழைகளின் மேல்தயை உடையவராவர்.

8. மனத்தினில் கபடு மில்லான் மங்கையர் மோக னுவன்
இனமது மெச்ச வாழ்வ னிடரென்றோர்க் குதவி
[செய்வான்
தனமது வதிகந் தேடிச் செலவுக ளுடனே செய்வன்
கனமுள கிராமச் செட்டு காவலன் செய்வா னுமே.

8. ஜாதகருடைய தகப்பனுர் கள்ளம் கபடம் வஞ்சனை இவைகளை உடையவரல்லர். ஸ்திரீகளின்மேல் காதலை உடையவர். தன் பந்துக்கள் தன்னை நெச்சும்படியாக வாழ்வார். கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர் களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் பணத்தை அதிகமாகச் சம்பாதித்து உடனே செலவு செய்து விடுவார். இவர் சிறந்த கிராம வியாபாரத்தைச் செய்வார்.

9. பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்
கண்டிடும் பெரியோர் தன்மேல் கனவிசு வாச முள்ளான்
துண்டமா யுரைக்க மாட்டான் தொடுத்ததை வெல்வா
[னுவன்
வண்டணி குழலாள் நேயன் வாஞ்சையு மெத்த வுண்டு.

9. ஜாதகருடைய தகப்பனுர் பழையகாலத்திய நிலங்களைப் பயிரிடுவார். பெரியார்களிடத்தில் அதிகமான பிரியத்தை உடையவ ராவர். இவர் கண்டிப்பாயும் கடினமாயும் பேசமாட்டார். எடுத்த காரியத்தை ஜயத்துடன் முடித்து விடுவார். ஸ்திரீகளின்மேல் காம ஆசையை யுடையவர். அதிகமான விசுவாசத்தையும் உபசரணையையும் உடையவராவர்.

10. ஊகவான் பலபேர் நேய னுண்மையா மனத்த னுவன்
ஆகம மறியா னுவ னற்பவஸ் துகளு மிஷ்டன்
நாகரீ கங்க ளுள்ளான் நல்லோர்க்கு நல்ல னுவன்
பாகமாய்ப் பேச வல்லன் பத்தினி நேயங் கொஞ்சம்.

10, ஜாதகருடைய தகப்பனுர் விவேகமுடையவர். உண்மையான மனத்தை யுடையவர். ஆகம சாஸ்திரம் தெரியாதவராவர். தாழ்ந்த வஸ்துக்களில் பிரியமுள்ளவர். நாகரிகமுடையவர். நல்லவர்களுக்கு நல்லவராவர். பக்குவமாகப் பேசுந்திறமை யுடையவர். மனைவியிடத்தில் விசுவாச முடையவராவர்.

11. சித்திர வில்லஞ் செய்வன் சிறப்பான குடும்பி யாவன்
எத்திசைப் புகழு மேற்ப னெதிரியை நாசஞ் செய்வன்
குத்ததை வெளிக்காட் டாதான் குவலயஞ் சல்லியங்
[கொள்ளான்
அத்திபோல் நடையு மாவ னரசர்பூ சிதமு மாவன்.

11. ஜாதகருடைய தகப்பனுர் சித்திரங்களால் அலங்கரிக்கப் பட்ட வீட்டைக் கட்டுவார். மேன்மையான குடும்பஸ்தராவர். எல்லாத் திசைகளிலும் கீர்த்தியை அடைவார். பகைவரை அழித்துவிடுவார். விரோதத்தையும் குறைகளையும் வெளியே காட்டிக்கொள்ளமாட்டார். கடன் வாங்கமாட்டார். யானையைப்போல கம்பீரமான நடையையுடைய ராவர். இவரை அரசர்கள் மதிப்பார்கள்.

12. கடன்கொள்வன் சுகிபு சிப்பன்
காரிய மறிந்து செய்வான்
உடன்படான் பிழைக ளுக்கு
வுபாயங்க ளதற்குச் செய்வன்
தடபுடல் செய்கை யுள்ளான்
தன்கரம் விஷ்ணு ரேகை
விடவுரை கல்வி யற்ப
மெல்லிய ரனேகஞ் சேர்வன்.

12. ஜாதகருடைய தகப்பனார் கடன் வாங்கமாட்டார். போஜன சுகத்தை யுடையவர். காரியங்களை நன்முகத் தெரிந்துகொண்டு செய்வார். குற்றங்களைச்செய்யச் சம்மதியார். இக்குற்றங்களைத் தடுப்பதற்குத் தகுந்தவழியைத் தேடுவார். இவர் இடம்பமாகவும் படாடோபமாகவும் அவசரமாகவும் காரியங்களைச் செய்வார். இவருடைய உள்ளங்கையில் விஷ்ணுரேகை யுண்டு. விஷமான வார்த்தைகளைச் சொல்லுவார். அற்பவித்தையையுடையவர். அநேக ஸ்திரீகளுடன் சம்போகஞ் செய்வார்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

13. இங்கெறி யுடையா னுக்கு விவனுமே ஜனிப்பா னுவன்
அன்னவன் குணத்தைச் சொல்வே னழகுளா
[னுணச்சல் நீட்சி
பன்னியே பேச வல்லன் பலகலை யுணர்வா னுவன்
தன்மனங் கபடு முண்டு சந்தேக மனத்த னுமே.

13, இவ்விதமான குணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவார். இவருடைய குணதிசயங்களைச் சொல்லுகின்றேன். இவர் அழகுள்ளவர். நீண்டு பெருத்த தேகத்தையுடையவர், விமரிசையாகவும் சாமர்த்தியமாகவும் பேசுவார். அநேக விதமான சாஸ்திரங்களைப் படித்தவராவர். இவர் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை இவைகளை உடையவராவர் சந்தேகத்தையுடைய மனத்தையுடையவராவர்.

14. கிராமாதி காரஞ் செய்வன் கண்ணிய முடைய னுவன்
தராதர மறிய வல்லன் நிந்தைக ளேற்கா னுவன்
புராதனம் விருத்தி செய்வன் புரவலர் நேசங் கொள்வன்
பறைபள்ளு முடைய னுவன் பணத்தின்மே லிச்சை
[யுள்ளான்.

14. ஜாதகர் கிராம சம்பந்தமான அதிகாரமுள்ள உத்தியோகத்தைச் செய்வார். மேன்மையையுடையவர். நல்லது கெட்டது என்ப

வற்றை அறியக்கூடியவர். இவர் அபவாதத்தை அடையமாட்டார். புராதனமான சொத்தை விருத்திசெய்வார். அரசர்களுடைய சினேகத்தை அடைவார். இவர் பறை பள்ளு என்கிற வாத்தியம், மேளம் தாளம் பிரபந்தம் ஆள்படை ஆகிய இவைகளை உடையவராவர். பணத்தின்மேல் ஆசையுடையவராவர்.

15. தந்தை போல் புகழு மேற்கான் சஞ்சல மனத்த னுவன்
மூந்திநாள் சல்லிய முள்ளான் விலகிடும் பின்னு லேதான்
தன்தனங் கையி ருப்புத் தனம்பரி சகடு பின்னுல்
வந்திடு மென்று சொல்வோ மன்னரால் புகழு மேற்பன்.

15. ஜாதகர் தன் தகப்பனுரைப் போலக் கீர்த்தியையடையார். துன்பமான மனத்தையுடையவர். முற்காலத்திய கடனை உடையவர். இது பிறகு நிவிர்த்தியாகிவிடும். இவர் தன்னுடைய கையில் பணத்தை இருப்பாக வைத்திருப்பார். இவர் பிற்காலத்தில் விலை யுயர்ந்த குதிரை வண்டியையுடையவர். அரசர்களால் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார்.

16. இன்னவன் துணைவர் தம்மை
யியம்பவே பலத்தை காணேங்
தன்னிலே யுதித்தா லுந்தான்
சடிதியில் நஷ்ட மெய்துந்
தன்துணை தோஷமெவ் வாறு
சாற்றுவீர் முனியே நீர்தாம்
பொன்னவன் தனக்கு வெட்டில்
புகர்கிற்கச் சேயும் நீசம்;

16. ஜாதகருக்குச் சகோதர பலம் கிடையாது. ஒரு சமயம் சகோதரர்கள் பிறந்தாலும் சீக்கிரம் இறந்துவிடுவார்கள். இவருக்குச் சகோதரதோஷத்தைப்பற்றிய காரணத்தை, முனிவரே! நீரே சொல்லு வீர். பொன்னவன் என்ற குருவிற்கு எட்டில் புகர் என்ற சுக்கிரன் இருப்பதாலும் சேய் என்ற அங்காரகன் நீசம் அடைந்து;

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணமும்

17. இருப்பதால் துணைவர் தோஷம்
இவன்தனி யாக வாழ்வன்
திருமகன் மணத்தின் காலஞ்
செப்புவோ மிருபா னிரண்டில்
வருங்கன்னி வடகீ ழாகு
மங்கையின் குணத்தைச் சொல்வேன்
அரிமனை யொப்ப ளாவள்
அன்புள மனத்த ளாவள்.

17. இருப்பதாலும் சகோதர தோஷமுண்டு. ஜாதகர் ஒருவராக வாழ்வார். இவருக்கு இருபத்திரண்டாவது வயதில் வடகிழக்குத் திக்கிலிருந்து மனைவி வருவாள். இவளுடைய குணாதிசயங்களைச் சொல்லுகின்றேன். இவள் இலட்சுமியைப்போல இருப்பாள். அன்புள்ள மனத்தை உடையவளாவாள்.

18. கல்விமான் கடவுள் பத்தி கதித்ததோர் புத்தி யுண்டு
சொல்லது சுகமே யெய்துந் தோழன்தன் மனம்போல் [வாழ்வள்
வல்லியு முணச்சல் நீட்சி மங்கைமுன் கோபங் கொஞ்சம்
புல்லிய புத்தி யில்லாள் பெரியோர்க ளுறவு பூண்பள்.

18. ஜாதகருடைய மனைவி வாசித்தவள். கடவுளின் மேல் அன்பும் ஆசையுமுடையவள். பெரியதான புத்தியையுடையவள். இனிமையாகப் பேசுவாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுதியாக விருந்து வாழ்வாள். இவள் நீண்டு மெலிந்த தேகத்தை யுடையவள். இவள் சிறிது முன் கோபத்தையுடையவள். தாழ்ந்த புத்திடையவளல்லள். பெரியார்களுடைய சினேகத்தை யுடையவளாவள்.

ஜாதகருடைய புத்திர பாவம்

19. புத்திர விருத்தி தன்னைப்
புகலுவோ மெழுவர் தோன்றுஞ்
சுத்தமா யாண்பா லொன்று
தோகையு மிரண்டு வென்றேம்
இத்தகை மூன்று தீர்க்க
மிலகாது மற்ற தெல்லாங்
குத்தமா முதலி லிரண்டு
கூறுவோந் தாயே யாங்கள்.

19. ஜாதகருக்கு மொத்தம் ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். இவர்களில் ஓர் ஆண் குழந்தையும் இரண்டு பெண் குழந்தைகளும் ஆக மொத்தம் மூன்று குழந்தைகளும் தீர்க்காயுள உடையவராவர். மற்றக் குழந்தைகள் எல்லாம் இறந்து விடுவார்கள். முதல் இரண்டு குழந்தைகளும் இறந்துவிடுவார்கள்.

20. அத்திரி சொல்லு கின்ற ரவனுக்கு முதலில் பீடை
பெத்தகா ரணங்க ளென்னப் பேசுவீர் முனியே நீர்தாம்
புத்திர தானத் தோனும் பொன்னனு நாலில் நிற்கச்
சித்தமாய்க் காரி பார்க்கச் செப்பினே மந்தச் சங்கை.

20. ஜாதகருக்கு முதலில் பிறக்குங் குழந்தைகளுக்குக் கெடுதி உண்டாவதற்குக் காரணங்கள் என்ன? அவற்றைச் சொல்லுவீர், முனிவரே! என்று அத்திரி மகரிஷி கேட்கின்றார். புத்திரத்தானாதிபதியாகிய பொன் என்ற குரு நான்கில் இருந்துகொண்டு இவரைக் காரி என்ற சனி பார்ப்பதால் இந்தத் தோஷத்தை நாங்கள் சொன்னோம்.

21. அதற்குப்பின் விருத்தி யுண்டு
அழிவுண்டோ விபரம் சொல்வாய்
குதர்க்கங்கள் வாரா தாகும்
குழவியும் தீர்க்க மெய்தும்
இதுதோஷ மெவ்வார் சொல்வாய்
இவனுமுன் பூர்வம் தன்னில்
விதவித வினைகள் செய்தான்
மேவிற்று அந்த தோஷம்.

21. முதலில் பிறக்கும் இரண்டு குழந்தைகளுக்குப் பின்னால் குழந்தைகள் உயிருடன் இருக்குமோ அல்லது இறந்து விடுமோ என்பதைப் பற்றி விபரமாகச் சொல்லுவீர் என்று கேட்க, இவைகளுக்குக் கெடுதிகள் நேரிடா. இவை நீண்ட ஆயுளை உடையனவாக விருக்கும். இப்படிப்பட்ட தோஷம் உண்டானதற்குக் காரணம் என்ன என்று கேட்கவே, இவர் தன்னுடைய முன்ஜன்மத்தில் அநேக பாபங்களைச் செய்யவே அந்தப் பாவங்கள் இவரை வந்தடைந்தன என்றார்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

22. முன்ஜென்மம் வினையைக் கேண்மோ மூலமாங் குடியி [லேதான்
மூன்குலம் தனிலு தித்து முயர்வான குடும்பி யாகி
அன்னிய கிராம செட்டு அணுகியே வாழு நாளில்
கன்னிகை மாதொ ருத்தி கணவனு மின்றி யேதான்.

22. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் மூலமாங் குடியில் பிராமண குலத்திற் பிறந்து மேன்மையான குடும்பியாகி அயலூரில் கிராம வியாபாரத்தைச் செய்து வாழுகின்ற காலத்தில் ஓர் இளமையான (விதவை) ஸ்திரீ புருஷனில்லாமல்;

23. தந்தையில் வாழும் போது சத்திமேல் வேறொ ருத்தன்
விந்தையாய் மோகங் கொண்டு வினைகளு மவளுக் கீய
அந்தவ ரிசையா ளாகி யிவ்விதஞ் சின்னுட் செல்ல
இந்தவள் ஜலமுங் கொள்ள விவள்தனி யாகச் செல்ல;

23. தன்னுடைய தகப்பனாருடைய வீட்டில் வசித்துக் கொண்டிருக்கும்போது இவள்மேல் இன்னொருவன் மோகித்து இவளுக்குக்

கெடுதியைச் செய்ய, இவள் சம்மதிக்காமே சிலநாட்கள் கழிந்த பிறகு ஒருநாள் இவள் ஜலம் கொண்டுவரத் தனியாகப் போனபொழுது ;

24. மோகித்தோன் பின்னல் சென்று
பற்றினுன் பலவந் தத்தால்
தோகையு மனது வெட்கித்
துணைவரோ டுரைத்தா ளென்றேரும்
பாகமாய்த் துணைவர் கேட்டு
வரிபோலே கோபங் கொண்டு
ஏகின ரதிகாரி பக்க
லிதுமொழி யுரைத்தா ராமே.

24. இவள்மேல் மோகித்தவன், இவள் பின்னலேயே போய் இவளை பலவந்தப்படுத்தவே இவள் வெட்கத்தையடைந்து தன்னுடைய சகோதரர்களிடத்தில் இந்த விஷயத்தைச் சொன்னுள். இதைக் கேட்ட சகோதரர்கள் சிங்கத்தைப் போலக் கோபத்தை அடைந்து ஓர் அதிகாரியாகிய ஜாதகரிடம் போய் இந்த விஷயத்தைச் சொன்னர்கள்.

25. தூதனு லழைத்துக் கேட்கச்
செய்தது நிஜமென் றெண்ணிப்
பாதகன் தன்பால் பொன்னைப்
பற்றியே பெண்மேல் குற்றம்
ஓதினு னதிகாரி தானு
முத்தமி திகில டைந்து
போதன மவனுல் பெற்றுப்
பெண்பழி சொன்ன பாவி ;

25. இந்த அதிகாரி குற்றஞ் செய்தவனை ஓர் ஆளை அனுப்பி வரவழைத்துக் கேட்கவே, இவன் செய்த காரியம் உண்மையென்று கண்டறிந்து இவனிடம் பணத்தைக் கைக்கூலியாகப் பெற்றுக்கொண்டு இந்த ஸ்திரீயின் மேலேயே குற்றத்தைச் சாட்டிவிடவே, இவள் பயத்தையுடையவளாகி "பணத்தைக் கைக்கூலியாகப் பெற்றுக் கொண்டு என் மேலேயே குற்றத்தைச் சாட்டிய பாவியாகிய நீ ;

26. மற்றொரு ஜன்மந் தன்னில் வருந்துணை காணு னெகிப்
புத்திர தோஷ முண்டாய் ....னு லேதான்
குற்றமே யடைவாய் நீயுங் கூறியே தெருத்தூள் விட்டு
வித்தகி ஜலத்தில் மாண்டாள் மேவிற்று வந்தத்
[தோஷம்.

26. இன்னொரு ஜன்மத்தில் சகோதரர்களில்லாமலும் புத்திர தோஷத்தை அடைந்தும் கெடுதிகளையடைந்தும் வாழக்கடவது"

என்று சொல்லித் தெருவிலுள்ள மண்தூளை எடுத்துத் தூவி விட்டுப் பிறகு ஜலத்தில் விழுந்து இறந்து விட்டாள். இந்தத் தோஷம் ஜாதகரை வந்து அடைந்தது.

27. இன்னமுஞ் சிலவே சாப
மெய்திற்று விவனுக் கேதான்
மன்னவன் ....
.... மாகிப்
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறந்தன னிந்தப் பாலன்
அன்னையுங் கேட்க லுற்ரு
ளவனுமுன் ஜன்மந் தன்னில்;

27. ஜாதகருக்கு இதுவுமின்றிச் சில தோஷங்கள் நேரிட்டன. இவர் முன்ஜன்மத்தில் இறந்து பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப் பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ரூர். பார்வதியம்மை யார் பின்வரும்மாறு கேட்கின்ரூர். ஜாதகர் முன்ஜன்மத்தில்;

28. குறித்தனீர் மறையோ னுகக்
குலந்தாழ்வாய் வருகுஞ் சேதி
உரைப்பீரே முனியே கீர்தா
முதித்தவன் முன்ஜன் மத்தில்
பரமனை விரும்பா னுகி
வந்தனன் குலந்தாழ் வாகப்
பரவிடும் விதவை சாபம்
பாலர்கள் தோஷ மெய்தும்.

28. பிராமணராகப் பிறந்தவர் குலம் தாழ்வாக இந்த ஜன்மத்தில் பிறப்பதற்குக் காரணத்தைச் சொல்லுவீர், முனிவரே! என்று கேட்கவே, இவர் கடவுளை விரும்பாதவராக விருந்து தாழ்ந்த குலத்தில் பிறந்திருக்கின்ரூர். விதவை ஸ்திரீயினுடைய சாபம் இவரை வந்தடையும். குழந்தைகளுக்குத் தோஷம் ஏற்படும்.

29. இதுவின்றித் துணைவர் தோஷ
மரசனுல் துன்பம் நேரும்
கிதியது மதிக முண்டு
நுவலுவோ முப்பாண் டின்மேல்
அதுகடன் கிவிர்த்தி யாகி
யறைகிரேம் பின்பால் சேதி
அதிதியை யாத ரிக்கு
மம்பிகை யாளே கேளாய்.

29. இதுவுமின்றி ஜாதகருக்குச் சகோதர தோஷமுண்டாகும். அரசரால் கஷ்டம் நேரிடும். இவருக்கு முப்பதாவது வயதிற்குமேல் பணம் அதிகமாக உண்டாகும். கடன் நிவிர்த்தியாகி விடும். மற்ற விஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றோம். பரதேசிகளைக் காப்பாற்று கின்ற பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது குணதிசயங்கள்

30. அன்னையின் குணத்தைச் சொல்வே
னழகுளாள் சிவந்த மேனி
தன்சொலு மடக்க முண்டு
சரசமாய் வார்த்தைச் சொல்வள்
அன்னியர் மெச்ச வாழ்வ
ளானன்தன் மனம்போல் வாழ்வள்
முன்கோபம் வெளிக்காட் டாதா
ளுத்தமி நடக்கை நன்மை.

30. ஜாதகருடைய தாயார் அழகுள்ளவளாகவிருப்பாள். சிவப்பு நிறத்தையுடையவள். அடக்கமாகவும் நிதானமாகவும் பேசுவாள். இனிமையான வார்த்தைகளை நல்லவிதமாகச் சொல்லுவாள். அயலார் இவளை மெச்சும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வாள். இவள் தன் புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். முன்கோபத்தை வெளியே காண்பித்துக் கொள்ளமாட் டாள். நல்ல நடவடிக்கையையும் ஒழுக்கத்தையும் உடையவளாவள்.

ஜாதகருடைய தாயாரின் சகோதரரும் முன்ஜன்மமும்

31. அவள்துணை யாண்பால் காணுள்
அழகிய கன்னி யொன்று
நவனியில் தீர்க்க மெய்தும்
நவிலுவோ மவள்தன் பூர்வம்
தவசிகள் போற்று மந்தத்
தண்டகா வனத்தி லேதான்
பவமிலாக் கங்கைச் சேயாய்ப்
பிறந்தன ளிவளே யென்றோம்.

31. ஜாதகருடைய தாயார் சகோதரர்கள் இல்லாதவளாக விருப் பாள். இவளுக்கு ஓர் அழகான சகோதரி நீண்ட ஆயுளை உடையவ ளாக விருப்பாள். ஜாதகருடைய தாயாரின் முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். தவங்களைச் செய்கின்றவர்கள், போற்றுகின்ற தண்டகாவனத்தில் இவள் ஒரு பாபமில்லாத கங்கை குலமென்ற வேளாளர் குலத்திற் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது மரணகாலம்

32. சுகமுள குடும்பி யாகிச் சோர்வோர்க்கு வன்ன மீந்து
பகையான கால நாடு பறந்துமே பிரமன் லக்கந்
தகைமையாய்ச் ..... ஜனித்தவ ளிவளே யென்றேஞ்
ஜகமதில் மூவைந் தாண்டுள் செல்லுவாள் கால நாடு.

32. ஜாதகருடைய தாயார் தன் முன்ஜன்மத்தில் சௌக்கியத்தையுடைய ஒரு குடும்பினியாகிக் கீர்த்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டு இறந்து, கெடுதியான எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் தகுந்த படியே பிறந்திருக்கின்ருள் என்று சொல்லுகின்ரோம். இவள் ஜாதகருக்குப் பதினைந்தாவது வயதிற்குள் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்து விடுவாள்.

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

33. மறுஜன்மம் வள்ளூர் தன்னில்
மறைக்குல முதிப்பா ளாவள்
திருமக ளிச்சென் மத்தில்
செய்தபுண் ணியங்க ளென்ன
வருவோர்க்கு வன்ன மீந்து
மனமது தளர்ச்சி யாயும்
பொரையது சொல்லா ளாயும்
புருடன்தன் மனம்போல் வாழ்ந்தும்;

33. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறுஜன்மத்தில் வள்ளூர் என்ற திருவள்ளூர் க்ஷேத்திரத்தில் பிராமணர் குலத்திற் பிறப்பாள. இவள் இந்த ஜன்மத்தில் எவ்விதமான புண்ணியங்களைச் செய்தாள் என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்ருர். இவள் தன்னிடம் வருகின்றவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டு இளகிய மனத்தையுடையவளாகியும் குற்றமான வார்த்தைகளைச் சொல்லாதவளாகியும் தன்னுடைய புருடனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக இருந்து வாழ்ந்து கொண்டும்;

ஜாதகருடைய தகப்பனரது முன்ஜன்மம்

34. தேவதா பத்தி யாயுந்
தேவியும் வாழ்வ தாலே
மேவுவாள் பிரம்ம சேயாய்
விளம்புவோர்க் தந்தை பூர்வம்

பவமுள வடியோன் வாழுந்
திருப்போரூர் தன்னி லேதான்
பூவைசிய குலமு தித்துப்
பூமியை விருத்தி செய்து ;

34. தெய்வங்களிடத்தில் பக்தியையுடையவளாகியும் இவள் வாழ்ந்து கொண்டிருப்பதால் பிராமண குலத்திற் பிறப்பாள் என்று சொல்லுகின்றேம். ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவர் முருகக்கடவுள் வாழுகின்ற திருப்போரூர் ஸ்தலத்தில் பூவைசிய குலம் என்ற ஒருவகை வேளாள வைசியருடைய ஜாதியிற் பிறந்து நிலங்களைப் பயிரிட்டுக் கொண்டு ;

35. வருநாளில் வினையைச் சொல்வேன்
மாமுனி கறுப்பன் தானும்
பரம்பரை யாக வேதான்
பரவிற்றுக் கொல்லை தன்னில்
....கள் தன்னில்
புகழுவார் முன்னோர் தாமுங்
கருமுனி வாழ்ம ரத்தைக்
கண்டிதஞ் செய்தா னென்றேம்.

35. வாழ்கின்ற காலத்தில் இவருக்குச் சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்றேன். இவருடைய வீட்டுக் கொல்லையில் கருக்கள் அழிக்கின்ற ஒரு முனீசுவரர் வெகுகாலமாக வசித்து வந்தார். இத்தகப்பனாருடைய முன்னோர்கள் இவரைப் புகழ்ந்து போற்றி வந்தார்கள். இந்த முனீசுவரர் வசிக்கின்ற மரத்தை இவர் வெட்டிவிட்டார் என்று சொல்லுகின்றேம்.

36. தங்குதற் கிடமே யின்றித்
தான்வேரூர் சென்று வப்போ
சங்கையாய்ப் புகன்ற தைக்கேள்
ஜனித்தயில் நீங்கி யேதான்
துங்கமாய் வேறு யில்லந்
செல்லுவா யதுவு மின்றி
மங்கையு மந்தி யத்தில்
மாண்டுநீ தனியாய் வாழ்வாய்.

36. இந்த முனீசுவரர் தான் தங்கி இருப்பதற்குக் கிடமில்லாமல் இன்னொரு கிராமத்திற்குப் போய்க் கொடுத்த சாபத்தைக் கேட்பீராக. "நீ பிறந்த வீட்டை விட்டுவிட்டு இன்னொரு வீட்டிற்குப் போகக் கடவது. இதுவுமின்றி உன்னுடைய மத்திய வயதில் உன் மனைவி இறந்து நீ தனியாய் வாழக்கடவது ;

37. உலகநிந் தைகளு முண்டா
யுத்தமன் வாழ்வாய் நீயும்
பலவாறுய்ப் புகன்ற தென்றேரும்
பரவிற்று வந்தத் தோஷந்
தலைவனும் பவமில் லாமல்
சண்டன்தன் பதிக்குப் புக்கித்
தலைநான்கோன் வரையப் பட்டு
ஜனித்தவ னிவனே யென்றேரும்.

37. மேலும் நீ ஜனங்களுடைய அபவாதத்தையடைந்து வாழக் கடவது" என்றும் இன்னும் பலவிதமாகவும் இந்த முனீசுவரர் இத்தகப்பனரைப் பார்த்துச் சொன்னர். இந்தத் தோஷம் இவரை வந்தடைந்தது. இவர் தன் முன்ஜன்மத்தில் வேரொரு பாபமும் இல்லாமல் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ரார் என்று சொல்லுகின்ரேரும்.

ஜாதகருடைய தகப்பனரது மறுஜன்மம்

38. கருமுனி சாபம் போலே கலந்தன னிச்சென் மத்தில்
வருமில்லங் காணு னுவன் மனைவியு மத்தில் மடிவள்
திருமகன் சிறையா கத்தான் சிலவேளாள்வாழ்வா னுவன்
வருஞ்ஜன்மந் துவாரை தன்னில் மறைக்குல முதிப்பா
[னுமே.

38. கருமுனிவராகிய முனீசுவரருடைய சாபத்தைப் போலவே ஜாதகருடைய தகப்பனர் இந்த ஜன்மத்தில் பலனை அனுபவிப்பார். இவருடைய பிறந்த வீடு இவரை விட்டுப் போய்விடும். இவருடைய மனைவியும் இவருக்கு மத்திய வயதில் இறந்து விடுவாள். இவர் பிறகு ஜயிலில் இருப்பதைப்போலத் தனியாக விருந்து மனைவி சுக மில்லாதவராகி வாழ்வார். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் துவாரை என்ற துவாரகாபுரிப்பட்டணத்தில் பிராமணஜாதியிற் பிறப்பார்.

39. இந்ததோர் ஜன்மந் தன்னி லிவன்செய்த புண்ணிய
[மென்ன
நொந்தவர் தம்மைக் காத்து மண்டினேர்க் குதவி யாயும்
வந்தவர்க் கன்ன மீந்து மனமது தளர்ச்சி யாயும்
சிந்தையில் கபடு மின்றிச் செல்வனும் வாழ்வ தாலே.

39. இந்த ஜன்மத்தில் ஜாதகருடைய தகப்பனர் என்ன புண் ணியங்களைச் செய்தார் என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லு

கின்றார். இவர் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றவர் களுக்கு உபகாரத்தைச் செய்து கொண்டும் தன்னிடம் வரு கின்றவர்களுக்குச் சாப்பாட்டைப் போட்டுக் கொண்டும் இளகிய மனத்தையுடையவராகியும் தன்னுடைய மனத்தில் கள்ளம் கபடம் வஞ்சனை இவைகளில்லாதவராகியும் இவர் வாழ்வதாலே ;

ஜாதகருடைய தகப்பனரின் மரணகாலமும் சிறியதகப்பனரின் மரணகாலமும்

40. உதிப்பனு மென்று சொல்வோ முரைக்கிறே முப்பா
[னறில்
சதியான கால நாடு செல்லுவா னிவனே யென்றேரும்
இதுவின்றி முப்பா னெட்டி லேகுவான் சிறிய தந்தை
அதிதியை யாத ரிக்கு மம்பிகை யாளே கேளாய்.

40. இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் பிராமண குலத்தில் பிறப்பாரென்று சொல்லுகின்றோம். இவர் ஜாதகருக்கு முப்பத்தாரு வது வயதில் இறந்து எமபட்டணத்திற்குப் போய் விடுவார் என்று சொல்லுகின்றோம். இதுவுமல்லாமல் ஜாதகருக்கு முப்பத்தெட்டா வது வயதில் இவருடைய சிறிய தகப்பனர் இறந்து விடுவார். பர தேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய மரணமும் மறுஜன்மமும்

41. அறுபது வைந்து வாண்டி லாடிமா தத்தி லேதான்
திருமகன் தனக்குக் கண்டஞ் செப்புவோம் பின்ஜன்
[மத்தில்
திருமலே வேங்க டத்துள் பிறப்பனுஞ் சத்திரியச் சேயாய்
அருமறை முடிவி லாடு மம்பிகை யாளே கேளாய்.

41. ஜாதகருக்குத் தன்னுடைய அறுபத்தைந்தாவது வயதில் ஆடி மாதத்தில் மரணம் நேரிடும். இவர் தன்னுடைய மறுஜன்மத்தில் திருமலே திருவேங்கடம் என்கிற திருப்பதிக்ஷேத்திரத்தில் சத்திரிய குலத்தில் ஓர் ஆண் குழந்தையாகப் பிறப்பார். அருமையான வேதங் களின் முடிவு என்கிற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய யோகபாவம்

42. வந்தவன் பொதுயோ கத்தை
யறைகிறேஞ் ஜனனந் தொட்டு
அந்தவன் மரண மட்டு
மன்னமுங் குறைவு றுதான்

சந்தத மிருபான் மூன்றில்
சார்ந்திடுங் கிராமச் செட்டுப்
பிந்தியு மிரண்டு வாண்டில்
பிழைவருந் தொழிலுக் கேதான்.

42. ஜாதகருடைய பொது யோகத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவர் தன்னுடைய ஜனனகாலம் முதற்கொண்டு மரணகாலம் வரையிலும் சாப்பாட்டிற்குக் கஷ்டப்படமாட்டார். இவருக்கு இருபத்துமூன்றுவது வயதில் கிராம வியாபாரம் உண்டாகும். பிறகு இரண்டு வருஷம் கழித்து இவ்ருடைய தொழிலிற்குக் கெடுதி ஏற்படும்.

43. பொருள்செ லவதனற் பின்பு
பொருந்திடுந் தொழிலு மேதான்
வருமனை வர்க்கத் தாரால்
மனமது களிப்பு மேருங்
குறை ....ப தாண்டில்
குலத்துளோர் தம்மா லேதான்
திருகிலா ஜயமே யாவன்
தீர்க்கமா மைம்பா னண்டும் ;

43. ஜாதகர் பணத்தைச் செலவு செய்து பிறகு அந்தத் தொழிலை மறுபடியும் அடைவார். இவருடைய மனைவியின் பந்துக்களால் இவருடைய மனத்திற்குச் சந்தோஷமுண்டாகும். இவருக்கு இவருடைய பந்துக்களினால் ஜயம் உண்டாகும். இவருக்கு ஐம்பது வயது வரையிலும் ;

44. அதிகார மோங்கு மென்றே
மதிற்சில வினைகள் நேரும்
எதுவிதக் கொடுமை வந்து
மிரணியன் நாலில் தங்க
உதயன்முன் பனிபோல் நீங்கு
முரைக்கிறேரும் விபர மிரண்டில்
நிதிகடன் முப்பாண் டின்மேல்
நீங்கிடு மென்று சொல்வோம்.

44. அதிகாரம் அதிகப்படும் என்று சொல்லுகின்றேரும். இதில் சில கெடுதிகள் உண்டாகும். எவ்விதமான கெடுதி நேரிட்டபோதிலும் இரணியன் என்ற குரு நான்கில் இருப்பதாலே சூரியன் முன்னே பனி மறைந்து விடுவதைப் போல இந்தக் கெடுதிகள் நிவிர்த்தியாகி விடும். மற்ற விவரங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்

ரேம். பணக்கடன் முப்பதாவது வயதிற்குமேல் நிவிர்த்தியாகி விடும் என்று சொல்லுகின்றேம்.

45. நளயோகம் வேசி யோகம்
நரிபரி யோக மூன்றுங்
குலவிடுங் குமரன் தானுங்
கோவலர் புகழ வாழ்வன்
பலபேரும் வசியங் கொள்வன்
பாருகள் விருத்தி செய்வன்
மலையிறை மகளே பின்பா
லறைகிறேம் விபர மிரண்டில்.

45. ஜாதகருக்கு நளயோகம் என்ற ஒரு யோகமும் வேசியோகம் என்ற மற்றொரு யோகமும் நரிபரி யோகம் என்ற வேறொரு யோகமும் ஆக இந்த மூன்று யோகங்களும் இருக்கின்றன. இவைகளால் ஜாதகர் அரசர்களைப்போலப் பெருமையுடன் இருந்து வாழ்வார். இவர் பலரைத் தன் வசப்படுத்திக் கொள்ளுவார். நிலங்களை விருத்தியாக்குவார். மலைகளின் அரசனுகிய பர்வதராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே! மற்ற விஷயங்களை விவரமாக இரண்டாவது பாகத்தில் பின்னல் சொல்லுகின்றேம்.

ஜாதகருடைய மனைவியின் மரணமும், ஜனனதசை இருப்பும் பலனும்

46. இவன்பின்னல் மனைவி கண்ட
மியம்புவோந் தாயே யாங்கள்
அவனுமே ஜனன கால
மாயில்ய முத்த ரத்தில்
சௌமியின் தசையி ருப்புச்
சாற்றுவோம் பதின்மூன் றுண்டும்
பவமிலாத் திங்கள் நாலும்
பகருவோம் பலனைத் தானே.

46. ஜாதகர் இறந்த பிறகு இவருடைய மனைவி இறந்து விடுவாள் என்று, பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றேம். இவர் பிறந்த காலத்தில் ஆயில்ய நட்சத்திரத்தில் முதல் பாதத்தில் சௌம்மியன் என்ற புதமகாதசையில் இருப்பு பதின்மூன்று வருஷங்களும் நான்கு மாதங்களும் ஆகும். இந்தக் காலத்தின் பலாபலன்களைச் சொல்லுகின்றேம்.

ஜாதகம் 134

ஜனனகால கிரகநிலை

1. [1]மதி[2]தேளில் ராகு [3]வீணை [4]மறைகேது [5]மேரு வாகப் புதன் [6]ரவி [7]புகர் [8]சேய் மேடம் புக்கிட [9]காரி [10]நண்டில் இதுவிதங் கோளும் நின்று லக்கினஞ் சிம்ம மாக அதுபல னெவ்வாறு சொல்வீ ரத்திரி புகலு கின்றார்.

1. சந்திரன் விருச்சிகத்திலும், இராகு மிதுனத்திலும், குருவும் கேதுவும் தனுசிலும், புதனும் சூரியனும் சுக்கிரனும் அங்காரகனும் மேஷத்திலும், சனி கடகத்திலும் இருந்து இவ்விதமாகக் கிரகங்கள் அடைந்து ஜன்மலக்கினம் சிம்மமானால் பலா பலன்கள் எவ்விதமாக இருக்குமென்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே, அத்திரி மகரிஷி பதில் சொல்லுகின்றார்.

கிரகநிலை

	புதன் சூரியன் சுக்கிரன் செவ்வாய்		ராகு
	இராசி சக்கரம்		சனி
			லக்கினம்
குரு கேது	சந்திரன்		

கேட்டை 2-ஆம் பாதம் : புததசை ஹ 9-0-0

ஜனன நாட்டுச் சிறப்பு

2. இந்தசே யாணஞ் ஜென்ம மில்லமுங் குடகு பார்வை தென்வட வீதி யாகுஞ் சிறப்புள வூரே யாகுந் தந்தியு மீச னுத்திரஞ் சக்கரத் தோனு மேல்பால் தென்மேல்பால் நதியு முண்டு சோலைகள் குண்ட முண்டு.

2. இந்தக் குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்த வீடு மேற்குத் திக்கைப் பார்த்திருக்கும். இது வடக்குத் தெற்குத்

---

1. சந்திரன்
2. விருச்சிகம்
3. மிதுனம்
4. குரு
5. தனுசு
6. சூரியன்
7. சுக்கிரன்
8. அங்காரகன்
9. சனி
10. கடகம்

தெருவில் இருக்கும். பிறந்த ஊர் ஒரு மேன்மையான கிராம்மாகும். விநாயகருடைய கோயிலும் சிவபெருமானுடைய கோயிலும் வடக்குத் திக்கிலும் ம்காவிஷ்ணுவின் கோயில் மேற்குத் திக்கிலும் ஒரு நதி தென்மேற்குத் திக்கிலும் இருக்கும். சோலைகளும் குளங்களும் இருக்கும்.

3. இன்னமும் பலதே வாச
மியம்பிலே மன்னி யில்லம்
அன்னவன் ஜேஷ்ட னாக
அருளுவா னென்று சொல்வோம்
தந்தைதாய்த் துணைவர் யோகம்
தன்மனை புத்திர யோகம்
முன்பின்ஜன் மங்கள் யாவு
முரைக்கிறே மிந்நூல் தன்னில்.

3. இந்தக் கிராமத்தில் இன்னும் அநேக தெய்வங்களும் தேசத் தார்களும் வாசஞ்செய்வார்கள். ஜாதகர் தன்னுடைய தாயாருடைய வீட்டில் முதல் குழந்தையாகப் பிறப்பார் என்று சொல்லுகின்றோம், தகப்பனார், தாயார், சகோதரர்கள், மனைவி, மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களைப்பற்றியும், முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றியும் இந்தச் சாஸ்திரத்திற் சொல்லுகின்றோம்.

ஜாதகரின் தகப்பனருடைய சகோதரர்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் துணைவர் தம்மைச்
சாற்றுவோ மெழுவ ராவர்
இந்தவன் ஜனன காலம்
இருப்பது வாண்பால் மூன்று
விந்தையாய்க் கன்னி ரெண்டு
மேவிடு மென்று சொல்வோம்
பிந்தியு மாண்பா லொன்று
பலமிலா நசிக்கு மென்றோம்.

4. ஜாதகருடைய தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் ஏழுபேர் ஆவர். இவர் பிறந்தபொழுது மூன்று சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் இருப்பார்கள் என்று சொல்லுகின்றோம். பிறகு ஓர் ஆண் குழந்தை பிறந்து ஆயுள் இல்லாமல் இறந்துவிடும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனாரது குணாதிசயங்கள்

5. பிந்திய பாகந் தன்னில்
பேசுவோ மவர்கள் சேதி
தந்தையின் குணத்தைக் கேளாய்ச்
சகலர்க்கு நல்லோ னுவன்
முந்துமால் பத்தி கொள்வன்
முனிவுண்டு வெளிக்காட் டாதான்
சிந்தையில் நல்ல னுவன்
தேவியில் சின்னுள் வாழ்வன்.

5 ஜாதகருடைய தகப்பனாரின் சகோதார்களைப்பற்றிப் பின் பாகத்திற் சொல்லுகின்றேரும். ஜாதகருடைய குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இவர் எல்லோருக்கும் நல்லவராவர். மகாவிஷ்ணுவின்மேல் பத்தியை உடையவராவர். கோபத்தையுடையவர். ஆனால் இதை வெளியே காண்பித்துக் கொள்ளமாட்டார். இவர் நல்ல மனத்தையுடையவர். தன்னுடைய மனைவியின் வீட்டில் சிலகாலம் வாசஞ்செய்வார்.

6. மானிற முணச்சல் நீட்சி மன்னராற் சிலநா ளுய்வன்
ஆனவர் நேசங் கொள்வ னவனிமேல் திரிவா னுவன்
பான்மையாய்ப் பேச வல்லன் பரவுப காரி யாவன்
ஈனரை யுறவு கொள்ளா னிரக்கமா மனத்த னுமே.

6. ஜாதகருடைய தகப்பனார் மாநிறத்தையுடையவர். மெலிந்து நீண்ட தேகத்தையுடையவர். அரசர்களால் இவர் சிலகாலம் ஜீவனஞ் செய்வார். தனக்கிஷ்டமானவர்களிடத்தில் சிநேகஞ் செய்துகொள்வார். சிலநாள் பூமியின்மேல் திரிந்துகொண்டிருப்பார். இவர் தகுதியாய்ப் பேசுஞ் சாமர்த்தியத்தை யுடையவர். பிறருக்கு உபகாரத்தைச் செய்பவராவர். இவர் தாழ்ந்த குணத்தை யுடையவர்களிடத்தில் சிநேகஞ் செய்துகொள்ளமாட்டார். இரக்கமான மனத்தையுடையவராவர்.

7. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வ னுறைப்பொடு புளிப்பி
[லிச்சை
குண்டுணி கூரு னுவன் குணமது யிரண்டு முண்டு
துண்டமாய்ப் பேசா னுவன் துறவிகட் கன்ன மீவன்
முண்டக ரேகை யுள்ளான் மேவிடும் நாபிச் சூடு.

7, ஜாதகருடைய தகப்பனார் சுகமான நல்ல உணவை அருந்துவார். இவருக்குக் காரத்தின்மேலும் புளிப்பின்மேலும் பிரியம் உண்டு. இவர் கோள் சொல்லமாட்டார். இரண்டுவிதமான குணங்களை உடையவராக இருப்பார். இவர் கண்டிப்பாயுங் கடினமாகவும் பேச

மாட்டார். பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போடுவார். இவர் தன் னுடைய உள்ளங்கையில் முண்டகரேகையை உடையவர். இவருக்கு நாபிச்சூட்டு ரோகமுண்டு.

8. செலவுக ளதிகஞ் செய்வன்
சிறுத்தோர்மேல் பிரிய னுவன்
தலவாசஞ் செய்வா னுவன்
சர்ச்சன ருறவு கொள்ளான்
புலவன்போல் வார்த்தை சொல்வன்
புகழ்ந்தோரை யாத ரிப்பன்
ஜலந்தோய்வன் சஞ்ச லத்தான்
தந்தையார் ஜிதத்தில் வாழ்வன்.

8. ஜாதகருடைய தகப்பனார் அதிகமான செலவைச் செய்வார். ஏழைகளிடத்தில் அன்புடனிருப்பார். இவர் புண்ணிய க்ஷேத்திரங் களுக்கு யாத்திரை செய்வார். கலகஞ் செய்பவர்களிடத்தில் சிநேகஞ் செய்துகொள்ளமாட்டார். இவர் பண்டிதரைப்போல வார்த்தைகளைச் சொல்லுவார். தன்னைப் போற்றினவர்களைக் காப்பாற்றுவார். புண் ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்வார். மனத்துன்பத்தையுடையவர். தன்னுடைய பிதுரார்ஜிதத்தினால் ஜீவனஞ்செய்பவராவர்.

ஜாதகருடைய குணாதிசயங்கள்

9. இன்னெறி யுடையார் னுக்கு இவனுமே யுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் மானி
[றத்தான்
உன்னதக் கலைகள் கற்ப னுறுதியில் லாத நெஞ்சம்
பின்னமில் லாத தேகன் பிறர்பொரு ளிச்சை யில்லான்.

9. இவ்விதமான குணகுணங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருடைய குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவர் அழகானவர். மானிதமானவர். மேன்மை யான சாஸ்திரங்களைப் படிப்பார், நிலையில்லாத மனத்தை யுடையவ ராவர். இவர் அவயவக் குறைவில்லாத தேகத்தை யுடையவர். பிற ருடைய சொத்தின்மேல் ஆசையில்லாதவராவர்.

10. பலருக்கும் பந்தி னர்க்கும்
பரிந்துப சாரஞ் செய்வன்
நலமுளோர் நேசம் கொள்வன்
நற்றிருப் பணியுஞ் செய்வன்

விலைமாதர் மோகங் கொள்வன்
விளைபுலம் விருத்தி செய்வன்
சொலுமொழி பிசகா ளுகும்
துறவிகட் கன்ன மீவன்.

10. ஜாதகர் அநேகருக்கும் பந்துக்களுக்கும் வலிய உபசரணையைச் செய்வார். இவர் நல்லவர்களுடைய சிநேகத்தை அடைவார், நல்ல கோயில் வேலைகளையுஞ் செய்வார். இவர் தாசிகளிடத்தில் காம ஆசையை உடையவராவர். நன்றாக விளைகின்ற நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். இவர் தான் சொல்லுகின்ற வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவார். பரதேசிக்குச் சாப்பாட்டைப் போடுவார்.

11. இருவிதக் கல்வி கற்பன் ராசபூ சிதமு மாவன்
பெருமவர் நேசம் கொள்வன் பிதாவுக்கு மேலாய்
[வாழ்வன்
பரிவண்டி யுடைய ளுகும் பண்போர்க்குப் பாவை யீவன்
திருமகள் வாச முண்டு ஜெயமுனி தடுத்துச் சொல்வார்.

11. ஜாதகர் இரண்டு விதமான வித்தையைக் கற்றுக்கொள்ளுவார். இவரை அரசர்கள் கௌரவப்படுத்துவார்கள் பெரியோருடைய சிநேகிதத்தை அடைவார். தன்னுடைய தகப்பனருடைய அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் குதிரை வண்டியையுடையவராவர். இவர் தகுதியானவர்களுக்குச் சித்திரப் பிரதிமையைக் கொடுப்பார். இவரிடத்தில் லட்சுமி வாசஞ் செய்வார். இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லவே ஜயமுனிவர் தடுத்துக் கேட்கின்றார்.

12. எப்படி யோகம் சொன்னீர் இயம்புவீ ரந்தச் சங்கை
ஒப்புடன் புகர்சேய் பானு ஒன்பதி லிருப்ப தாலே
செப்புவேன் யோகம் தானும் செகராசர் தன்னல்
[உய்வன்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுது.

12. எந்தக்காரணத்தினால் இவருக்கு யோகத்தைச் சொன்னீர்? அவைகளைச் சொல்லுவீர். புகர் என்ற சுக்கிரனும் சேய் என்ற அங்காரனும் பானு என்ற சூரியனும் ஒன்பதாவது பாவத்திலிருப்பதால் யோகத்தைச் சொல்லுகின்றேன் என்று அத்திரி மகரிஷி பதில் சொல்லுகின்றார். இவர் பெரிய அரசர்களால் ஜீவனஞ் செய்வார். நாகப்பாம்பைத் தன்னுடைய ஜடையில் அணிந்துகொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

13. தன்துணையெழுவர்தோன்றுந் தங்கிடு மாண்பால்[மூன்று
கன்னிகை யொன்றே தீர்க்கம் கனக்காவே மற்ற
வெல்லாம்
பின்பாகம் விபர மாக பேசுவோ மவர்கள் சேதி
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

13. ஜாதகருடன் கூடப் பிறந்தவர்கள் மொத்தம் ஏழுபேர். ஆவர். மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார். மற்ற சகோதரங்கள் எல்லாம் இறந்து விடுவார்கள். இவர்களைப் பற்றிப் பின்பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்றேம். மேன்மையான சிறந்த யானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயங்களும்

14. உதித்தவன் மணத்தின் காலம்
உரைக்கிறேம் ஒருபா னெட்டில்
வதிபதி கீழ்பால் தன்னில்
மாதுரு வர்க்கம் தன்னில்
சதியிலா வருவா ளாகும்
சாற்றுவோ மவள்கு ணத்தை
துதிசெய்தோர்க் கன்ன மீவள்
தோகைபோல் சாய லொக்கும்.

14. ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இவருக்குப் பதினெட்டாவது வயதில் கிழக்குத் திக்கிலிருந்தும் தாயாருடைய பந்துத்துவத்திலிருந்தும் மனைவி வருவாள். இவளுடைய குணாதிசயங்களைச் சொல்லுகின்றேம். இவள் தன்னைப்போற்றினவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். இவள் மயிலைப்போன்ற நீண்ட அழகான தேகத்தை யுடையவளாவாள்.

15. வரன்மனம் போலே வாழ்வள் மறுத்துரை கூரு ளாகும்
விரதங்கள் பூண்பா ளாகும் மெல்லியும் யோக சாலி
குறைவிலாக் குடும்பி யாவள் குவலயம் நல்லோ ளாவள்
அரிவைக்கு வயது தீர்க்கம் அத்திரி யிவ்வார் சொல்ல;

15. ஜாதகருடைய மனைவி தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். இவள் தடுத்துப் பதில் சொல்லமாட்டாள். இவள் விரதங்களை அனுஷ்டிப்பாள். இவள் யோகத்தை யுடையவளாக விருப்பாள். இவள் கஷ்டத்தை யனுபவிக்கரத குடும்பினியாக விருப்பாள். இவள் பூமியில்

நல்லவளாக விருப்பாள். இவள் தீர்க்காயுஸ் உடையவளாவள். இவ் விதமாக அத்திரி மகரிஷியானவர் சொல்லவே,

16. குறுமுனி தடுத்துச் சொல்வார் தோகைய ரிருவ ராகும்
வருமாறு சொல்லு மென்ன மந்தனு மேழோ ஞகி
குருஆறி லிருப்ப தாலும் இருப்பிடம் சரமே யாகி
அரவுமே லாபம் நிற்க அறைந்தனம் தாரம் ரெண்டு.

16. குறுகிய முனிவராகிய அகஸ்திய மகரிஷி தடுத்துச் சொல்லு கின்றார். மனைவிமார்கள் இருவர் ஆவர். இவ்விதமாகச் சொல்லவே காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, அகஸ்தியர் பதில் சொல்லு கின்றார். மந்தன் என்ற சனி ஏழிற்குடையவராகி இவருக்கு ஆறில் குரு இருப்பதாலும், சனி இருக்கின்ற ராசி சர ராசியானதாலும், இராகு லாபம் என்ற பதினோராவது வீட்டில் இருப்பதாலும் இரண்டு மனைவி கள் என்று சொன்னோம்.

17. அப்படி நடவா தாகும் அருணனும் குசனு மொன்பான்
ஒப்புடன் குருவும் பார்க்க உறையாது தாரம் ரெண்டு
மெய்ப்படி விழியாள் ஒன்று வறைந்தனந் தீர்க்க மாக
செப்புவேன் அம்மாது வுக்கு செய்குவான் முத்திரை
[ரெண்டு.

17. இவ்விதமாக இரண்டு மனைவிமார்கள் நேரிட மாட்டார்கள். அருணன் என்ற புதனும் குசன் என்ற அங்காரகனும் ஒன்பதாவது பாவத்தி லிருந்துகொண்டு இவர்களைக் குரு பார்ப்பதாலும் இரண்டு மனைவிமார்கள் நேரிடமாட்டார்கள். இவருக்கு மனைவி ஒருத்தியே ஆவள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவள். இந்த மனைவிக்கு ஜாதகர் இரண்டு மாங்கல்யங்களை அணிவார்.

குறிப்பு :—அருணன் என்ற பெயர் சூரியனுக்கும் புதனுக்கும் உரிய தாகும். இங்கு இந்தப் பெயர் புதனுக்குத்தான் பொருந்தும். பின் வரும் முப்பத்திரண்டாவது பாடலில் அருணன் என்ற பெயர் புதனைக் குறிப்பிட உபயோகப்படுத்தியிருப்பதைக் கவனிக்கவும். புதன் இரண் டிற்குடையவராகிக் களத்திரத்திற்குச் சம்பந்த முடையவராக விருக் கின்றார்.

18. காரணம் யாது வென்ன கள்ளரால் விலகி யேதான்
வேறொரு முத்திரை செய்குவான் விலகிடும் காலங்கள்
[சொல்வாய்
ஆறாறு விரண்டு வாண்டில் அறைந்தனங் களவு தானும்
கூறொணு தாரம் ரெண்டு கோமளி கேட்டி டாயே.

18. காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கத் திருடரால் இந்த மாங்கல்யம் நீக்கப்பட்டு விடவே, அஃதாவது திருடிக்கொண்டு

போய்விடவே இன்னொரு மாங்கல்யத்தை ஜாதகர் செய்து கட்டுவார். இவ்விதமாக முதல்வது மாங்கல்யம் விலக்கப்படும்படியான காலத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, ஜாதகருக்கு முப்பத்தெட்டாவது வயதில் திருடிக்கொண்டு போய்விடப்படும். ஆகையால் இரண்டு மனைவிமார்களைச் சொல்லக்கூடாது, பார்வதியம்மையே! கேட்பீராக.

குறிப்பு :—ஜாதகர் ஒரு ஸ்திரீக்கே இரண்டுதரம் விவாகச் சடங்குகளைச் செய்து இரண்டு தடவை மாங்கல்யம் கட்டுவார். இது இரண்டு விவாகம் போலக் கருதப்படும். இந்த ஜாதகத்தில் அங்காரகன் ஏழிற் குடைய சனியைப் பார்க்கின்றார். ஏழை, கேது பார்க்கின்றார். ஏழிற்கும் ஏழிற்குடையவருக்கும் இரண்டிற் குடையவருக்கும் அங்காரகன் இராகு கேதுக்கள் குரு புதன் ஆகிய இவர்களுடைய சம்பந்தம் நேரிட்டால் இரண்டு தாலிகளைக் கட்டும சம்பவம் நேரிடுவதைப்போல இங்கு கொடுத்துள்ள பல ஜாதகங்களிலிருந்து தோற்றுகிறது.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திர பாவம்)

19. சுதர்களு மிருநான் காகத் தோன்றிடும் சிலவே தோஷம்
சதமூட னெண்பால் மூன்று சத்திமா ரிருவர் தீர்க்கம்
முதற்கொண்டு ஆறும் தோஷம் மேவுகா ரணங்க [ளென்ன
பதியினுக் கைந்தில் கேது பதிந்ததால் நேரு மென்றோம்.

19. ஜாதகருக்குச் சந்ததிகள்மொத்தம் எட்டுப்பேர் ஆவார். சில குழந்தைகள் இறந்து விடும். மூன்று ஆண்குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். முதலில் இரண்டு குழந்தைகளும் ஆறுவது குழந்தையும் இறந்து விடும். இதற்குக் காரணங்கள் என்ன! என்று கேட்கவே, லக்கினத்திற்கு ஐந்தாவது பாவத்தில் கேது இருப்பதால் இவ்விதமாகச் சம்பவிக்கும் என்று சொல்லுகின்றார்.

ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்கள்

20. அன்னையின் குணத்தைச் சொல்வேன்
அழகுளான் மாஞ்சி வப்பள்
கன்னென மொழியே சொல்வள்
கணவன்தன் மனம்போல் வாழ்வள்
புன்னடை யில்லா தாகும்
புகலுமுன் கோபி யாவள்
தன்துணை ஆண்பால் ரெண்டு
தையலு மொன்றே யாகும்.

20. ஜாதகருடைய தாயாரது குணகுணங்களைச் சொல்லுகின்றேன். இவள் அழகுடையவள். மாந்துளிரின் நிறத்தைப்போன்ற

ஒருவிதமான சிவப்பு நிறத்தை யுடையவளாவள். இவள் சர்க்கரையைப் போன்ற இனிமையான வார்த்தைகளைச்சொல்லுவாள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். மந்தமான நடையை உடையவளல்லள். பேசுவதற்கு முன்னமே கோபத்தை யுடையவளாவள். இவளுக்கு இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

21. மத்தியில் மாதுரு தோஷம் மாதுரு பூர்வங் கேளாய்
அத்திவாழ் மலைநாடு தன்னில் அணுகிஞள் கோகு லத்தில்
நத்திஞேர்க் குதவி செய்து நாயகன் மதலை யுண்டாய்
பத்திமா னவர்க்கு அன்னம் பகர்ந்துமே மரண மாகி ;

21. ஜாதகருக்கு மத்திய வயதில் இவருடைய தாயார் இறந்து போய்விடுவாள். இவளுடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகின்றேன் கேட்பீராக. யானைகள் வாழுகின்ற மலைதேசத்தில் இவள் இடையர் குலத்திற் பிறந்து தன்னுடைய சகாயத்தை எதிர்பார்த்தவர்களுக்கு உபகாரத்தைச் செய்துகொண்டு புருஷனும் மக்களும் உடையவளாகியும், பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போட்டுக் கொண்டும் இருந்து பிறகு இறந்து ;

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

22. பிரமனுல் வரையப் பட்டுப்
பிறந்தன ளென்று சொல்வோம்
மறுஜென்மங் காஞ்சி நாட்டில்
வள்ளூரில் சைவச் சேயாய்
உறைகுவா ளென்று சொல்வோம்
உத்தமி சுகமாய் வாழ்வள்
கரிமத வானைப் பெற்ற
காதலி கேட்டி டாயே.

22. பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றுள் என்று சொல்லுகின்றோம். இவள் தன்னுடைய பின்ஜன்மத்தில் காஞ்சி நாட்டில் வள்ளூரில் சைவருடைய குலத்தில் பெண் குழந்தையாகப்போய்ப் பிறப்பாள் என்று சொல்லுகின்றோம். இவள் சௌக்கியத்துடன் வாழ்வாள். கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனுரது முன்ஜன்மம்

23. தந்தையின் பூர்வஞ் சொல்வேன் சீர்காழி கீழ்பா லாக
முந்தின ஊரி லேதா னுதித்தனன் சேடர் வம்சம்
நிந்தைக ளில்லா தாகி நெசவுகள் செய்து யின்னேன்
வந்தவர்க் கன்ன மீந்து மறலியின் பதிக்குச் சென்று ;

23. ஜாதகருடைய தகப்பனுரது முன்ஜன்மத்தைச் சொல்லு கின்றேன். இவர் சீர்காழி ஸ்தலத்திற்குக் கிழக்குத்திக்கில் ஒரு சிறந்த கிராமத்தில் சேடர் என்ற வேலைக்காரருடைய குலத்திற் பிறந்து யாதொரு அபவாதங்களும் இல்லாமல் நெசவுத் தொழிலைச் செய்து கொண்டும் தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போட் டுக்கொண்டும் இருந்து இறந்து எமபட்டணத்திற்குப் போய் ;

ஜாதகருடைய தகப்பனுரது மறுஜன்மம்

24. கஞ்சனுல் வரையப் பட்டுக் காவல னுதித்தா னென்றும்
மிஞ்சிய ஜன்மம் சொல்வேன் மேல்நாட்டில் வெளிகொ
[ளத்தில்
தஞ்சமாய் வைசிய சேயாய் ஜனித்துமே செட்டுச் செய்து
பஞ்சைகட் கன்ன மீந்து பாக்கிய னுகி வாழ்வன்.

24. பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத் தில் ஜாதகருடைய தகப்பனுர் வந்து பிறந்திருக்கின்றுர் என்று சொல்லுகின்றேரும். பின்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். மேல்நாட்டில் வெளிகொளத்தில் ஒரு வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து வியாபாரஞ் செய்துகொண்டும் ஏழைகளுக்குச் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டும் தனவந்தராக இருந்துகொண்டும் வாழ்வார்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

25. உதித்தவன் பூர்வம் சொல்வேன்
உயர்பாண்டிய நாட்டி லேதான்
சதிசெய்யும் வைசிய சேயாய்
ஜனித்துமே வணிபம் செய்து
மதிமுக மனைவி மைந்தர்
வளமுள குடும்பி யாகி
யதிபனும் வாழு நாளி
லறைகிறேரு மூழி தானே.

25. ஜாதகருடைய முன்ஜன்மத்தைச் சொல்லுகின்றேன். மேன் மையான பாண்டிய தேசத்தில் ஒரு வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாக ஜாதகர் பிறந்து வியாபாரத்தைச் செய்துகொண்டு

அழகான மனைவி மக்களை உடைய ஒரு செழிப்பான குடும்பியாகி வாழ்கின்ற காலத்தில் இவருக்குச் சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்றோம்.

26. மறையவர் சாப மொன்று மருவிற்று அதுவு மன்றி
அரவினைக் கொன்ற தோஷம் யணுகிற்றுப் பால னுக்கு
திருமக னந்தி யத்தில் சுதர்களுந் தோஷ மாகி
யுறைந்தனன் சேது தீர்த்தம் உத்தமி கேட்டி டாயே.

26. ஜாதகருக்குப் பிராமணருடைய சாபம் ஒன்று வந்து சம்பவித்தது. இதுவுமன்றி ஒரு பாம்பைக் கொன்றுவிட்ட தோஷமும் இவரை வந்தடைந்தது. இவர் முன்ஜன்மத்தின் கடைசிகாலத்தில் பிள்ளைகளை இழந்து சேதுஸ்தலத்திற்குப் போய் அங்கு, புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தார். பார்வதியம்மையே! கேட்பீராக.

27. சிறியவர்க் கன்ன மீந்து சேர்ந்தனன் கால நாடு
பிரமனல் வரையப் பட்டுப் பிறந்திடு வானு மென்றும்
அரவினைக் கொன்ற தோஷ மவன்சுதர் முதலில் பீடை
பெருவயி றோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

27. ஜாதகர் முன்ஜன்மத்தில் ஏழைகளுக்குச் சாப்பாட்டைப் போட்டு இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனல் .பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். பாம்பைக் கொன்ற தோஷத்தினல் இவருடைய முதல் குழந்தைகளுக்குத் தோஷம் ஏற்படும். பெரிய வயிற்றையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய யோகபாவம்

28. வந்தவன் யோகச் சேதி யறைகுறோம் தாயே கேளும்
இந்திர போக மேற்பன் இருபது ஆண்டு மேலாய்
செந்திரு கடாட்ச மெய்தும் செகராசர் தம்மா லுய்வன்
நிந்தைக ளேற்கா னுகும் நேமியில் நல்லோ னுவன்.

28. ஜாதகருடைய யோகபாவத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக. இவருக்கு இந்திரயோக முண்டாகும். இவருக்கு இருபது வயதிற்குமேல் இலட்சுமிகடாக்ஷம் உண்டாகும். இவர் பெரிய அரசர்களால் ஜீவனம் செய்வார். இவர் யாதொரு அபவாதத்தையும் அடையமாட்டார். இவர் பூமியில் நல்லவராக விருப்பார்.

29. அன்பது ஆண்டு மட்டும்
அரசரால் தொழிலும் வாய்க்கும்
துன்பங்கள் அணுகா தாகும்
திருப்பணி செய்த லுண்டு
பொன்பணி யதிகம் சேர்ப்பன்
பின்துணை தனைக்காப்பா ளுகும்
இன்பமாய் மூன்றி லெய்தி
யேகுவா னென்று சொல்வோம்.

29. ஜாதகர் ஐம்பது வயதுவரையிலும் அரசரால் தொழிலைச் செய்வார். கெடுதிகள் ஒன்றும் நேரிடா. இவர் கடவுளுக்குக் கோயில் வேலைகளைச் செய்வார். தனம் ஆபரணங்கள் ஆகிய இவைகளை அதிக மாகச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். தன்னுடைய இனிய சகோதரங்களைக் காப்பாற்றுவார். இவர் சுகத்துடன் மூன்று வீடுகளைக் கட்டி வாழ்வார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனாரது மரணகாலம்

30. ஆறஞ்சு ஆண்டு தன்னில் அவள்தந்தை கண்ட
[மென்றோம்
தீரமா யதற்குள் ளாகச் சிலசில பிணிகள் நேரும்
கூறரு மார கங்கள் குறித்தது தப்பா தாகும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

30. ஜாதகருக்கு முப்பதாவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்துவிடுவார். இதற்கு முன்னே இவருக்குச் சிற்சில நோய்கள் உண்டாகும். ஆனால் அப்போது மாரகம் நேரிடாது. நாங்கள் சொல்லியவை தவறிடா. ஆறு பெரிய முகங்களையுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது மாரகமும் ஜாதகருடைய மாரகமும்

31. நாற்பது ஆண்டு தன்னில் நற்றேரின் மாதந் தன்னில்
கூப்பிடு வானுங் காலன் குறித்ததோ ரன்னை தன்னை
ஏற்பவே அறுபான் மூன்றில் இடபமா தத்தி லேதான்
தீர்ப்பாக ஜாத கர்க்கு (சென்று) செப்புவோம்
[மார கங்கள்.

31. ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் நல்ல தேரின் மாதம் என்ற கார்த்திகை மாதத்தில் இவருடைய தாயார் இறந்து விடுவாள். இவருக்கு அறுபத்து மூன்றாவது வயதில் இடபமாதம் என்ற வைகாசி மாதத்தில் உண்மையாக மாரகம் நேரிடும் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மறுஜன்மமும் ஜனனகால தசையும் பலனும்

32. மறுஜன்மம் வான்மி யூரில்
மறைகுல முதிப்பா ஹகும்
திருமகன் ஜனன காலம்
கேட்டையி னிரண்டாம் பாதம்
அருணன்தன் தசையி ருப்பு
அறைந்தனம் ஒன்ப தாண்டும்
உரைக்கிறோம் பலனே யாங்கள்
உதித்திடுந் துணைகள் தாமே.

32. ஜாதகர் தன்னுடைய மறுஜன்மத்தில் திருவான்மியூரில் ஒரு பிராமணருடைய குலத்தில் பிறப்பார். இவர் பிறந்த காலத்தில் கேட்டை நட்சத்திரத்தின் இரண்டாவது பாதம் ஆகும். இதற்குரிய அருணன் என்ற புதமகாதசை இருப்பு ஒன்பது வருஷங்கள் ஆகும். என்று சொல்லுகின்றோம். இக்காலத்திய பலன்களை நாங்கள் சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! இவருடைய சகோதரங்கள் பிறப்பார்கள்.

33. தந்தைதாய் பிணியு மெய்தும்
ஜனபந்து வதிக மாகும்
பிந்திதாய் சேத மெய்தும்
பலவித செலவுகள்தாம் நேரும்
தந்தொழி லிலச்ச லெய்தும்
ஜன்மத்தில் லாப மெய்தும்
பிந்திய பாகம் தன்னில்
பேசுவோம் விபர மாக.

33. ஜாதகருடைய தகப்பனார் தாயார் இவர்களுக்கு நோய்கள் உண்டாகும். இவருடைய பந்துக்கள் அதிகமாவார்கள். சிறிய தாயார் இறந்து விடுவாள், பலவிதமான செலவுகள் நேரிடும், தகப்பனாருடைய தொழிலில் கஷ்டங்கள் நேரிடும். லக்கினத்தில் சனி வரும்போது லாபம் உண்டாகும். மற்ற விஷயங்களைப் பின் பாகத்தில் விபரமாகச் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 135

ஜனனகால கிரகநிலை

1. [1]பிறை [2]தேளில் [3]காரி[4]மானில்
[5]பொன்மேடம் கேது[6]சாடி
[7]தரைமகன் [8]அலவன் புக்க
[9]சர்ப்பமும் [10]சிய மாக
[11]பரிதியும் [12]வெள்ளி [13]புந்தி
[14]பாவையில் [15]அரியும் ஜன்மம்
உரைகுவீர் பலனே யென்று
உத்தமி கேட்க லுற்றாள்.

1. சந்திரன் விருச்சிகத்திலும், சனி மகரத்திலும், குரு மேஷத்திலும், கேது கும்பத்திலும், அங்காரகன் கடகத்திலும், இராகு சிம்மத்திலும், சூரியனும் சுக்கிரனும் புதனும் கன்னியிலும், ஜன்ம லக்கினம் சிம்மமாகவும், இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்டார்.

கிரகநிலை

	குரு		
கேது	இராசி சக்கரம்		அங்காரகன்
சனி			லக்கினம் ராகு
	சந்திரன்		சூரியன் சுக்கிரன் புதன்

கேட்டை 2-ஆம் பாதம் ; புதன் தசை வரு 10 0-0.

---

1. சந்திரன்
2. விருச்சிகம்
3. சனி
4. மகரம்
5. குரு
6. கும்பம்
7. அங்காரகன்
8. கடகம்
9. இராகு
10. சிம்மம்
11. சூரியன்
12. சுக்கிரன்
13. புதன்
14. கன்னி
15. சிம்மம்

ஜனன நகரச் சிறப்பு

2. அத்திரி புகலு கின்ரூர் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லம் சொல்வேன் வடவாடை கீழ்மேல் வீதி
சித்தசன் தந்தை வாழும் செழிப்பான நகர மாகும்
பத்தினி தந்தை யில்லம் பகரொணு வாடை யாகும்.

2. அத்திரி மகரிஷியானவர் பதில் சொல்லுகின்ரூர். பிறந்த குழந்தை ஆண் குழந்தையாகும். இவருடைய வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றேன். இது கிழக்கு மேற்குத் தெருவில் வடவண்டை வாடையில் இருக்கும். பிறந்த ஊர் மகாவிஷ்ணு வாழ்கின்ற ஒரு செழிப்பான பட்டணமாகும். ஜாதகருடைய தகப்பனுருடைய வீடாகும் பிறந்த வீடு. இது வாடையாக விருக்கின்ற வீடுகளில் ஒன்ருகும்.

3 உதிப்பனு மாரூஞ் ஜன்மம் உழவர்தங் குலமே யாகும்
மதிநுத லன்னை தந்தை மனைவிகள் புத்திர யோகம்
சதியிலா முன்பின் ஜன்மம் சாற்றுவோ மிந்நூல் தன்னில்
அதிதியை யாத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

3. ஜாதகர் ஆருவது குழந்தையாகப் பிறப்பார். வேளாளர் குலத்திற் பிறந்தவராவர். தாயார், தகப்பனுர், மனைவி, மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களைப்பற்றியும் முன்ஜன்மம் பின்ஜன்மம் ஆகிய இவைகளைப் பற்றியும் இந்தச் சாஸ்திரத்தில சொல்லுகின்ரோம். பரதேசிகளைக் காப்பாற்றுகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரின் சகோதரங்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் துணை ஆண் ரெண்டு
சாற்றுவோந் தீர்க்க மாக
அந்தவ ரிளையோ ராக
வறைகிரோ மொருவன் சேதி
முந்துமால் நிறத்த னுகும்
மேவிடும் நாபிச் சூடி
கந்தன்மேல் பத்தி கொள்வன்
கல்வியுஞ் சமம தாகும்.

4. ஜாதகரின் தகப்பனுருடன் கூடப் பிறந்தவர்கள் இரண்டு சகோதரர்கள் ஆவர், இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்களாவர். இவர்கள் இளைய சகோதரர்கள் ஆவர். இவர்களில் ஒருவருடைய விஷயத்தைச் சொல்லுகின்றேன். இவர் மகா விஷ்ணுவின் நிறமாகிய நீலமேக வர்ணம் என்ற ஒரு விதமான நிறத்தையுடையவராவர். இவர் நாபிச்சூட்டு ரோகத்தையுடையவர். முருகக் கடவுளின்மேல் அன் புடையவர், நடுத்தரமான வித்தையை யுடையவராவர்.

5. தரணீயில் ஜீவிப் பானுக் தந்தமும் குறைவ தாகும்
குறையென்றோர்க் குதவி செய்வன் கோதையு
[மொன்றே தீர்க்கம்
மருவிடுஞ் சுதராண் ரெண்டு மங்கையு மவ்வாறு தீர்க்கம்
திருமகன் வயது தீர்க்கம் செய்நன்றி மறவா னவன்.

5. ஜாதகருடைய சிறிய தகப்பனார் விவசாயத்தொழிலால் ஜீவிப் பார். இவருக்கும் பற்கள் குறைவாக விருக்கும். கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பவர்களுக்கு உபகாரஞ் செய்வார். இவருக்கு மனைவி ஒன்றே. இவள் தீர்க்காயுள உடையவள். இவருக்கு ஆண் குழந்தை களும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுள உடையவர்க ளாவர். இவர் நீண்ட ஆயுள உடையவர். இவருக்குப் பிறர்செய்த உபகாரத்தை இவர் மறக்காதவராவர்.

6. உடன்கூடி வாழ்வா னுகும்
உரைக்கிறோ மவன்பின் சேதி
கடன்கொடான் இரக்க மில்லான்
கந்தன்மேல் பத்தி கொள்வன்
தடபுடல் செய்கை யுண்டு
சந்தேக மனத்த னுகும்
படையின்முன் செல்லா னுகும்
பச்சைமால் நிறத்த னுகும்.

6. இவர் தன்னுடைய மூத்த சகோதரருடன் கூடிவாழ்வார். இவருடைய இளையசகோதரருடைய விஷயங்களைச்சொல்லுகின்றோம். இவர்கடன் கொடுக்கமாட்டார். தயையையுடையவரல்லர், முருகக் கடவுளின்பேரில் அன்புடையவர், இவர் அவசரமாகவும் இடம்பத்துட னும் காரியங்களைச்செய்வார், சந்தேகத்தையுடைய மனத்தையுடையவர். இவர் சண்டையில் சேனையின் முன்னே போகமாட்டார். இவர் மகாவிஷ் ணுவின் நிறமும் பச்சைநிறமும் கலந்த நிறத்தையுடையவர்.

7. யூகைவா னுணுக்கம் தேர்வன் உண்மையா மனத்த னுகும்
பாகமாய் பேசு வானும் பால்தயிர் பிரிய னுகும்
தோகையர் மோக னுகும் சொல்லது சுருக்க மாகும்
வேகமாய் நடக்க வல்லன் வெஞ்சினம் வெளிக்காட்
[டாதான்.

7. ஜாதகருடைய தகப்பனாரின் இரண்டாவது இளையசகோதரர் விவேகமுடையவராவர், நுட்பங்களை அறியுஞ் சாமர்த்திய முடையவர். உண்மையான மனத்தையுடையவர். இவர் பக்குவமாகவும் சாமர்த்திய மாகவும் பேசுவார், பால் தயிர் இவைகளின்பேரில் ஆசையுடையவர்,

இவர் ஸ்த்ரீகளின்பேரில் மையல் என்ற காமஆசை யுடையவர், கொஞ்ச மாகப் பேசுவார். இவர் வேகமாய் நடக்குஞ்சாமர்த்தியத்தை உடையவர். கொடூரமான கோபத்தை வெளியே காட்டிக்கொள்ளாதவராவர்.

8. கல்விமான் அதிக வார்த்தை
காகுத்தன் ரேகை யுண்டு
வல்லியு மொன்றே தீர்க்கம்
மைந்தர்கள் ஆண்பால் மூன்று
வில்நுதல் பெண்பால் ரெண்டு
(விருத்தியாம்) விளம்புவோம் தீர்க்க மாகத்
தல்லிபோல் குணத்த ஹகும்
சந்தேக மனத்த ஹகும்.

8. ஜாதகரின் தகப்பனருடைய இரண்டாவது இளைய சகோதரர் வாசித்தவராவர், அதிகமான வார்த்தைகளையுடையவர். காகுத்தன் என்ற விஷ்ணு ரேகையை யுடையவர். இவருக்கு ஒரே ஒருமனைவி யுண்டு, இவள் தீர்க்காயுளை உடையவளாவள், இவருக்கு மூன்று ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாவர். இவர் தாயாருடைய குணத்தைப் போன்ற குணத்தை யுடையவர், சந்தேகத்தையுடைய குணத்தையுடையவராவர்.

9. பெருமையும் புகழு மேற்பன்
புண்ணியத் தலங்கள் செல்வன்
நரைமல ரிஷ்டங் கொள்வன்
ராசபூ சிதனு மாவன்
பொரைசொலான் புகழ்ந்தோர் நேயன்
போசன சுகிய ஹகும்
திருமகன் வயது தீர்க்கம்
செல்வதி கேட்டி டாயே.

9. ஜாதகரின் தகப்பனருடைய இரண்டாவது இளைய சகோதரர் பெருமையும் கீர்த்தியையும் அடைவார், புண்ணிய க்ஷேத்ரங்களுக்கு யாத்திரை செல்வார். இவர் வாசனையுள்ள புஷ்பங்களின் மேல் பிரிய முள்ளவர், இவரை அரசர்கள் கொண்டாடுவார்கள், கௌரவப்படுத்து வார்கள். இவர்பிறர் பேரில் குற்றத்தைச்சொல்லாதவர், இவரைப்பற்றிப் புகழ்ந்து பேசுகின்றவர்களிடத்தில் இவர் சினேகஞ்செய்வார், இவர் நல்ல சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சுகத்தை யனுபவிப்பார், இவர் நீண்ட ஆயுளை யுடையவர், பார்வதியம்மையே! கேட்பிராக.

ஜாதகருடைய தகப்பனாரது குணாதிசயங்கள்

10. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சாந்தவான் சரச [வார்த்தை
தந்தமும் தாள மொக்கும் செகராசர் பேட்டி கொள்வன்.
தன்பந்து மதிக்க வாழ்வன் சத்தான வஸ்து விஷ்டன்
தந்தைசொல் கடவா ஞகும் தரியலர் வெற்றி கொள்வன்.

10. ஜாதகருடைய தகப்பனாரது குணகுணங்களைச் சொல்லுகின்றேன். இவர் சாந்தகுணத்தை யுடையவர். இனிமையாகவும் நல்லவிதமாகவும் வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். இவருடைய பற்கள் முத்தைப்போல் அழகாகவும் வெள்ளையாகவும் இருக்கும். பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைபவராவர். இவர் தன்னுடைய பந்துக்கள் மதிக்கும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் சத்துள்ள வஸ்துக்களின்மேல் (அஃதாவது மச்சம் மாமிசத்தின் பேரில்) பிரியமுடையவர். தன் தகப்பனாருடைய வார்த்தைகளுக்கு மீறி நடக்காதவராவர். தன் பகைவர்களை ஜயித்துவிடுவார்.

11. அன்னிய பாஷை மேன்மை அரசரால் தொழிலு [மேற்பன்
அன்னிய தேசம் சின்னாள் அல்பரை உறவு கொள்ளான்
அன்னிய ருறவு கொள்ளான் ஆள்கார ருடைய ஞகும்
அன்னைபோல் ஆக ரிப்பன் அறுமுகன் பத்தி கொள்வன்

11. ஜாதகருடைய தகப்பனார் அன்னிய பாஷையாகிய ஆங்கில பாஷையில் மேன்மை யடைந்தவராவர். இவர் இராஜாங்கத்தில் வேலையை யுடையவர். சிறிதுகாலம் அந்நிய தேசத்திற்குப் போயிருப்பார். இவர் தாழ்ந்தவர்களிடத்தில் சிநேகஞ் செய்யமாட்டார். அன்னியர்களிடத்திலும் சிநேகஞ் செய்யமாட்டார். வேலைக்காரர்களை உடையவராவர். இவர் தாயாரைப்போலக் காப்பாற்றுவார். ஆறுமுகக் கடவுளின்மேல் அன்புடையவராவர்.

12. உண்டியும் சுகமாய்க் கொள்வன்
உயர்வான புத்தி யேற்பன்
குண்டுணி கூரு ஞகும்
குஞ்சர நடையு மாவன்
பண்டுநாள் பூமி விருத்தி
பாரினில் சல்லியம் காணன்
வண்டிவா கனமு மேற்ப
னவரசனுக் கிவன்சொல் மேன்மை.

12. ஜாதகருடைய தகப்பனார் இனிமையான சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பார். மேன்மையான புத்தியையுடையவர்,

இவர் கோள் சொல்லமாட்டார். யானையைப்போல கம்பீரமான நடையை யுடையவர். இவர் பழைய காலத்திய நிலங்களைப் பயிரிடுவார். இவர் கடன் அடையமாட்டார். இவர் சவாரிவண்டியையும் வாகனத்தையும் உடையவர். இவருடைய வார்த்தைகள் அரசரிடத்தில் மேன்மை யுடையனவாக விருக்கும்.

13. கரமதில் விஷ்ணு ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு
குருவுப தேசம் பின்னுல் கொள்ளுவான் பெருமை [யோனும்
பெரிதான தலங்கள் செல்வன் புண்ணிய மனத்த னுகும்
மருவிடும் வாய்வு பாதை மங்கையே கேட்டி டாயே.

13. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய உள்ளங்கைகளில் விஷ்ணுரேகையையும் தாம்பர ரேகையையும் உடையவர். இவர் பிற் காலத்தில் ஒரு குருவிடத்தில் உபதேசம் பெற்றுக்கொள்ளுவார். இவர் பெருமையையுடையவர். இவர் பெரிய பெரிய புண்ணிய க்ஷேத் திரங்களுக்கு யாத்திரை செய்வார். நல்ல மனத்தை யுடையவர். இவ ருக்கு வாய்வு ரோகத்தால் துன்பம் நேரிடும். பார்வதியம்மையே! கேட்பீராக.

14. மாமிக ளிரண்டே யாகும் மன்னரால் உய்வா னுகும்
காமனே விருப்பங் கொள்வன் கண்முகம் வ்சியம் உண்டு
சேமமாங் குடும்ப மேற்பன் தீரமா மனத்த னுகும்
பூமியை அளவு செய்வன் பூவையே கேட்டி டாயே.

14. ஜாதகருடைய தகப்பனுர் இரண்டு மாமிமார்களை உடையவர், இவர் அரசரால் ஜீவிப்பார். இவர் காமாக்கினியை உடையவர். இவ ருடைய கண்களும் முகமும் அழகாக விருந்து பிறரைக் கவர்ச்சிக்குந் தன்மையுடையனவாகும். இவர் சௌக்கியமான குடும்பத்தையுடைய வர். தைரியமான மனத்தை யுடையவராவர். இவர் நிலங்களை அளப் பார். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனுரது முன்ஜன்மம்

15. முன்னவ னிருந்த ஜன்மம்
மொழிகிறேரும் புலியூர் தன்னில்
மன்னர்தங் குலமு தித்து
மனவிமைந் தருமுண் டாகி
உன்னத செட்டு செய்து
உயர்வான தலங்கள் சென்று
அன்னமு மதிதிக் கீந்து
அந்தக னுட்டைச் சேர்ந்து ;

15. ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவர் புலியூரில் க்ஷத்திரியருடைய குலத்திற் பிறந்து மனைவி மக்களை யுடையவராகிச் சிறந்த வியாபாரத்தைச் செய்துகொண்டு சிறந்த க்ஷேத்திரங்களுக்கு யாத்திரைசெய்து பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப்போட்டு இறந்து எம்பட்டணத்திற்குப்போய்;

16. சிரகான்கோன் வரையப் பட்டுச்
சனிப்பனும் கங்கை சேயாய்
வறுமையெப் போதுங் காண
னறைந்தவிக் குணத்தா னுக்குத்
திருமக னுதிப்பா னுகும்
செப்புவோ மிவன்கு ணத்தை
அரிமக னெப்ப தாகும்
அம்பிகை யாளே கேளாய்.

16. பிரமதேவரால் பிரமலிபியுடன் எழுதப்பட்டுக் கங்கைகுலம் என்ற வேளாளர் குலத்தில் இந்த ஜன்மத்தில் ஜாதகருடைய தகப்பனார் பிறந்தவராவர். இவர் எப்போதும் தரித்திரத்தை யுடையவரல்லர். இதுவரையிலுஞ் சொல்லப்பட்ட குணதிசயங்களையுடைய தகப்பனாருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருடைய குணதிசயங்களைச் சொல்லுகின்றோம். இவர் மன்மதனைப்போல் அழகாக விருப்பார். பார்வதியம்மையே! கேட்பீராக.

17. கல்வியு மூன்று கற்பன் கனராசர் பேட்டி கொள்வன்
சொல்லது சுருக்க மாகும் துருவழக்கந் தன்னில்
[செல்லான்
நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
எல்லைக ளதிக மேற்பன் ஏவலா ளுடைய னுமே.

17. ஜாதகர் மூன்றுவித வித்தைகளைக் கற்றுக்கொள்ளுவார். பெரிய அரசர்களுடைய தரிசனத்தை அடைவார். இவர் கொஞ்சமாகப் பேசுவார். கெட்ட வழிகளில் பிரவேசிக்கமாட்டார். இவர் நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். முரடர்களுக்கு இளைக்காத வலிவுடையவராவர். இவர் நிலங்களை அதிகமாகச் சேர்த்துவைப்பார். வேலையாட்களை யுடையவராவர்.

18. மன்னரால் ஜீவ னங்கள்
மருவிடும் பால னுக்கு
பொன்தனப் பணிகள் சேர்ப்பன்
பெரிதான கருமஞ் செய்வன்

அன்னிய பாஷை மேன்மை
யதிகாரத் தொழிலுஞ் செய்வன்
தன்பந்து மெச்ச வாழ்வன்
சலித்தோரை யாத ரிப்பன்.

18. ஜாதகர் அரசரால் ஜீவனஞ் செய்வார். இவர், பொன் தனம் ஆபரணம் ஆகிய இவைகளைச் சேர்த்து வைப்பார். பெரிய வேலையைச் செய்வார். இவர் அன்னிய பாஷையில் மேன்மையையடைந்தவராவர். அதிகாரத்தையுடைய வேலையைச் செய்வார். இவர் தன்னுடைய பந்துக்கள் மெச்சும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார். ஏழைகளைக் காப்பாற்றுவார்.

19. இன்னவன் செங்கை தன்னில்
யிலகிடுங் கோதுமை ரேகை
உன்னதத் தலங்கள் செல்வ
னுயர்வோர்க்கு வன்ன மீவன்
முன்னமே குடும்ப மேற்பன்
முன்கோப முடனே தாழ்வு
தன்தந்தை மேலாய் வாழ்வன்
சங்கரி கேட்டி டாயே.

19. ஜாதகருடைய சிவப்பு உள்ளங்கைகளில் கோதுமைரேகை இருக்கும். இவர் சிறந்த க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்வார். பெரியார்களுக்குச் சாப்பாட்டைப் போடுவார். இவர் மேன்மையான குடும்பியாவர். கோபத்தையுடையவர். இந்தக் கோபம் உடனே தணிந்து விடும். இவர் தன்னுடைய தகப்பனாரது அந்தஸ்திற்கு மேற்பட்ட அந்தஸ்திலிருந்து வாழ்வார். பார்வதியம்மையே! கேட்பீராக.

20. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ
ருரைப்பீர்க ளந்தச் சங்கை
ஆகமன் நவத்தி லேற
யலரியின் மகனு மாறில்
பாகனும் பளிங்கு பானு
பற்றிட மிரண்டே யாக
போகபாக் கியங்க ளேற்பன்
புறங்கூறுன் யோக மென்றோம்.

20. ஜாதகருக்கு யோகத்தை எவ்விதமாகச் சொன்னீர்? இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, ஆகமன் என்ற குரு ஒன்பதாவது பாவத்திலிருப்பதாலும், அலரி என்ற சூரியனுடைய

மகனுகிய சனி ஆருவது பரவத்திலிருப்பதாலும், பாகன் என்ற புத னும் பளிங்கு என்ற சுக்கிரனும் பானு என்ற சூரியனும் இரண்டாவது வீட்டில் இருப்பதாலும் ஜாதகர் போகபாக்கியங்களை அனுபவிப்பார். கோள் சொல்லமாட்டார். இவர் யோகத்தையுடையவர் என்று சொல்லுகின்ருேம்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

21. வடதிசை குபேரன் போலே வாழ்குவா னிந்தப் பாலன்
அடைவுடன் துணைவர் தம்மை யறிவிப்போம்
[மூன்ஞேன் காணுன்
விடவிழி மார்கள் மூன்று விளம்புவோர் தீர்க்க மாக
தடவரை மகளே யாங்கள் சாற்றின மொழிகுன் ருவே.

21. ஜாதகர் வடக்குத்திக்குக் கதிபதியாகிய குபேரனேப்போலச் செல்வத்தையுடையவராகி வாழ்வார். இவருக்கு மூன் சகோதரர்கள் இல்லை. மூன்று மூத்தசகோதரிமார்கள் நீண்ட ஆயுளை உடையவர் களாக விருப்பார்கள். விசாலமான மலேக்கு அதிபதியாகிய பர்வத ராஜனுடைய மகளாகிய பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த் தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

22. பின்துணை யாண்பால் தோஷம்
பேதையு மொன்றே தீர்க்கம்
என்னகா ரணத்தி னலே
யியம்பினீ ரந்தச் சங்கை
துன்மையாய் மூன்ருேன் நீசம்
சேய்சனி மூன்றைப் பார்க்க
அன்னவன் தனியாய் வாழ்வ
னம்பிகை யாளே கேளாய்.

22. ஜாதகர் இளையசகோதரர் தோஷத்தையுடையவராவர். இவருக்கு ஒரு இளையசகோதரி நீண்ட ஆயுளை உடையவளாக விருப் பாள். இவ்விதமாக எந்தக் காரணத்தினல் சொன்னீர் என்று கேட்க, அத்திரிமுனிவர் பதில் சொல்லுகின்ருர். மூன்றிற்குடையவராகிய சுக்கிரன் கெடுதியடைந்து நீசமாகி யிருப்பதாலும் மூன்ருவது வீட் டைச் சேய் என்ற அங்காரகனும் சனியும் பார்ப்பதாலும் ஜாதகர் சகோதரன் இல்லாமல் ஒண்டியர்க விருந்து வாழ்வார். பார்வதியம் மையே! கேட்பீராக.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணமும்

23. பாலகன் மணத்தின் காலம்
பகருவோ மீரெட் டாண்டில்
பாலிகை வடபால் தன்னில்
பரவுவா ளன்னை வர்க்கம்
சீலியின் குணத்தைச் சொல்வேன்
சிவந்தமெய் யுணச்சல் தேகி
மால்மனை யொப்ப தாகும்
வருவோரை யாத ரிப்பள்.

23. ஜாதகருக்குப் பதினேழாவது வயதில் தன்னுடைய தாயாருடைய பந்துக்களிலிருந்தும் வடக்குத் திக்கிலிருந்தும் மனைவி வந்து சேருவாள். இவளுடைய குணாதிசயங்களைச் சொல்லுகின்றேன். இவள் சிவப்பு நிறமுள்ள மெலிந்த தேகத்தையுடையவள். இவள் லட்சுமியைப் போல இருப்பாள். தன்னிடத்திற்கு வருகின்றவர்களைக் காப்பாற்றுவாள்.

24. தோகைபோல் சாய லொக்கும் துன்பங்க ளெவர்க்கு [மெண்ணுள்
நாகரீ கங்க ளுள்ளாள் நாதனுர் பத்தி பூண்பள்
ஆகம முணர்ந் தோருக்கு வன்னமு மன்பா யீவள்
போகபாக் கியங்க ளேற்பள் பூவைக்கு வயது தீர்க்கம்.

24. ஜாதகருடைய மனைவி மயிலைப்போன்ற அழகான நீண்ட தேகத்தையுடையவளாவாள். இவள் யாருக்குங் கெடுதிகளை நினைக்க மாட்டாள். இவள் நாகரிகத்தையுடையவளாவாள். கடவுளின்மேல் அன்பும் ஆசையும் உடையவளாவாள். ஆகமசாஸ்திரங்களை அறிந்த பெரியோர்களுக்குச் சாப்பாட்டைப் பிரியமுடன் போடுவாள். இவள் போகபாக்கியங்களை அனுபவிப்பாள். இவள் நீண்ட ஆயுளை உடையவள்.

25. பிருகுமே மறித்துச் சொல்வார்
புதல்வனுக் கிரண்டு தாரம்
வருகுமே யென்று சொல்வோ
மறிவிப்பீ ரந்தச் சங்கை
கரியவ னேழோ ஞகி
கலைதன்னி லிருப்ப தாலும்
திருகாக கேது யேழில்
சென்றதால் சொன்னேம் யாங்கள்.

25. பிருகும்கரிஷி தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு தாரம் நேரிடும் என்று சொல்லவே, இதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்க, சொல்லுகின்றார். கரியவன் என்ற சனி ஏழிற்குடையவராகிக் கேது என்ற மகரத்தில் இருப்பதாலும் கெடுதியாகக் கேது ஏழாவது வீட்டில் இருப்பதாலும் நாங்கள் இரண்டு மனைவிமார்கள் என்று சொன்னோம்,

26. தென்முனி புகலு கின்றார் செங்கதிர் புதனு ரெண்டில்
மன்னனு ரவத்தில் தங்க மதிபூமன் மாறி நிற்க
கன்னிகை யொன்றே தீர்க்கங் காரியின் பலத்தி னலே
அன்னிய மாது வொன்று வணுகிடும் பால னுக்கு.

26. தென்முனிவராகிய அகஸ்தியமகரிஷியானவர் சொல்லுகின்றார். செங்கதிர் என்ற சூரியனும், புதனும் இரண்டாவது பாவத்தில் இருப்பதாலும், மன்னன் என்ற குரு ஒன்பதாவது வீட்டில் இருப்பதாலும், மதி என்ற சந்திரனும், பூமன் என்ற அங்காரகனும் ஒருவருடைய வீட்டில் மற்றொருவராக மாறி இருப்பதால் (பரிவர்த்தனை என்றதை அடைந்து இருப்பதால்) ஜாதகருக்கு ஒரே மனைவியுண்டு, இவளும் நீண்ட ஆயுளை உடையவளாவாள். ஆனால் காரி என்ற சனியினுடைய பலத்தால் அன்னிய ஸ்திரீ ஒருத்தி ஜாதகருக்கு வைப்பாட்டியாக வந்து சம்பவிப்பாள்.

27. எந்தக்கா லத்தில் நேரு மியம்புவீர் முனியே நீர்தாம்
விந்தையாய் மூப்பது வாண்டில் மேவிடு மன்னிய மாது
அந்தவன் மரண மட்டு மவளுடன் கூடி வாழ்வன்
சந்ததி காண வொன் சாற்றின மொழிகுன் றுவே.

27, ஜாதகருக்கு இந்த அபிமான மனைவி எப்பொழுது வந்து சம்பவிப்பாள் என்பதை முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்க, ஜாதகருக்கு முப்பதாவது வயதில் அன்னிய ஸ்திரீ ஆச்சரியமான முறையில் வந்து சம்பவிப்பாள். இவள் ஜாதகருடன் இவருடைய மரணகாலம் வரையிலும் கூடி இருந்து வாழ்வாள். இவளுக்குக் குழந்தைகள் கிடையா. நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிப் போகா.

ஜாதகருடைய சந்ததிகளும் (புத்திரபாவமும்) முன்ஜன்மமும்

28. சுதர்களு மெழுவர் தோன்றுஞ்
சோர்வுறுஞ் சிலவே யென்றோஞ்
சதமுட னண்பா லிரண்டி
சத்திமார் மூவ ராகும்

முதலிலந்துஞ் சேத மாகும்
மொழிகிறே மிவனின் பூர்வம்
அதிதிவா ழருணை தன்னி
லணுகினன் வைசியச் சேயாய்.

28. ஜாதகருக்கு மொத்தம் ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். இவைகளில் சில இறந்து விடும் என்று சொல்லுகின்றோம். இரண்டு ஆண் குழந்தைகளும் மூன்று பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவராவர். முதலாவது குழந்தையும் ஐந்தாவது குழந்தையும் இறந்து விடுவார்கள். ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். முனிவர்களும் பரதேசிகளும் வாழ்கின்ற அருணை என்ற திருவண்ணாமலையில் ஒரு வைசியருடைய குலத்தில் ஜாதகர் முன்ஜன்மத்தில் பிறந்தார்.

29. பலவிதச் செட்டுச் செய்து பாவையு மதலை யுண்டாய்
குலவுநாள் வினையைக் கேண்மோ குடியின ளேழை மாது
வலிந்துமே வந்து சேர்ந்து வன்னமுந் தருவா யென்ன
தலைவனுங் காக்க லுற்றான் தையலுந் தங்கை போலே.

29. ஜாதகர் தன்னுடைய முன்ஜன்மத்தில் பலவிதமான வியாபாரங்களைச் செய்து கொண்டு மனைவி மக்களை உடையவராகி வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக. ஒரு ஏழை ஸ்திரீ அங்கும் இங்கும் திரிந்து இவரிடம் வந்து சாதத்தைக் கொடு என்று இவரைக் கேட்கவே, இவர் இவளைக் காப்பாற்றி வந்தார். இவள் இவருடைய இளையசகோதரியைப்போல இருந்து கொண்டு ;

30. பணிகளுஞ் செய்யும் நாளில்
பாவையு மோர்நாள் தன்னில்
துணிவுள குணமுங் கொண்டு
சொற்பொரு ளெடுத்துக் கொண்டு
பிணையாகச் சென்ற போது
புதல்வனு மறுநாள் பார்த்து
கணிகையைத் தேடிப் பார்த்து
காணமல் மனது வெட்கி ;

30. ஜாதகருடைய வீட்டில் இந்த ஏழை ஸ்திரீ வேலைகளைச் செய்து கொண்டிருக்கின்ற காலத்தில் ஒருநாள் இவள் தைரியமான துணிச்சலான மனத்தையுடையவளாகி இவருடைய சொத்துக்களைத் திருடிக் கொண்டு ஓடிப்போய் விடவே, இவர் மறுதினத்தில் இதைத் தெரிந்து கொண்டு இவளைத் தேடிப்பார்க்க இவள் அகப்படாமல்

போய்விடவே, இவர் தன்னுடைய மன்த்தில் வெட்கத்தையும் துன்பத்தையும் அடைந்து ;

வேறு

31. முன்கடனே பின்கடனே வறியேன் யானு
மூலப்பொருள் நீயறிவா யென்று சொல்லி
தன்கரத்தால் தெருத்தூளை தூத்திச் சென்றான்
சத்திக்கு வச்சாபஞ் சேர்ந்த தென்றே
மென்னகுலந் தான்புகல்வீர் முனியே நீர்தா
மிம்மாது வடுகர்குல மென்று ரைத்தோ
மன்னவனு மந்தியத்தில் சேது புக்கி
யதிதிகட்கு வன்னமீந்து மரண மாகி ;

31. ஜாதகர் "நான் முன்ஜன்மத்தில் இந்த ஸ்திரீக்குக் கடன் பட்டிருக்கின்றேனே அல்லது இந்த ஸ்திரீ எனக்குத் தன்னுடைய கடனைத் தன்னுடைய மறுஜன்மத்தில் தீர்ப்பாளோ என்பது எனக்குத் தெரியது. மூலாதாரப் பொருளாகிய கடவுளே ! நீர்தாம் இதை அறிவீர்" என்று சொல்லித் தன்னுடைய கைகளால் தெருவிலிருந்த மண்தூளை எடுத்துத் தூற்றி விட்டு இந்த ஜாதகர் போய்விட்டார். இந்த ஸ்திரீக்கு இந்தச் சாபம் வந்து சம்பவித்தது. இவள் என்ன ஜாதி ஸ்திரீ என்பதை முனிவரே ! நீரே சொல்லுவீர் என்று கேட்கவே, இவள் வடுகர் என்ற தெலுங்கருடைய ஜாதியைச் சேர்ந்தவள் என்று சொல்லுகின்றோம் என்றார் அத்திரிமுனிவர். ஜாதகர் தன் முன்ஜன்மத்தின் கடைசிக் காலத்தில் சேது ஸ்தலத்திற்குப் போய்ப் பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போட்டுப் பிறகு இறந்து ;

ஜாதகருடைய பொதுயோகம்

32. பிறப்பனு மிவனே யென்றோம்
பூருவ பொருள்ப றித்தோள்
வருகுவா ளபிமா னத்தால்
மைந்தன்தன் னுடனே வாழ்வ
ளுரைக்கிறோ மிவனின் யோக
முதித்தாள் முதலா யாக
மரணமட் டுலகி லேதான்
வறுமைக ளில்லா வாழ்வன்.

32. ஜாதகர் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவருடைய முன்ஜன்மத்தில் இவருடைய சொத்தைத் திருடின ஸ்திரீ இவருக்கு அபிமான மனைவியாக வந்து சம்பவித்து இவருடனே கூடியிருந்து வாழ்வாள். இவருடைய யோக

விஷயங்களைச் சொல்லுகின்றோம். இவர் தான் பிறந்த காலம் முதற்கொண்டு மரணகாலம் வரையிலும் தரித்திரம் இல்லாமல் வாழ்வார்.

33. இருபது வாண்டி லேதா
னிராசரால் தொழிலும் வாய்க்கும்
பிறைபோலே தொழிலு மோங்கும்
புதல்வனுக் கன்பா லலும்
அரசரால் ஜீவ னங்க
ளணுகிடு மதின்மேல் நீங்கும்
கரிமத வானைப் பெற்ற
காதலி கேட்டி டாயே.

33. ஜாதகருக்கு இருபதாவது வயதில் அரசாங்கத்தில் வேலை கிடைக்கும். இந்த வேலை வளர்பிறைச் சந்திரனைப்போல நாளுக்குநாள் விருத்தியாகும். இவருக்கு ஐம்பத்துநான்கு வயது வரையிலும் அரசாங்கத்தில் வேலை இருக்கும். இதற்குமேல் இந்த உத்தியோகம் நீங்கி விடும். கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது குணாதிசயங்கள்

34. மதிதிசை வரைக்கு யோக
மறைந்தனம் பால னுக்கு
சதியுண்டு சேயின் காலஞ்
சாற்றுவோம் பின்பால் சேதி
இதுநிற்க தாயின் சேதி
யியம்புவோம் நற்கு ணத்தாள்
துதிசெய்தோர்க் குதவு வாளாந்
தோகைபோல் சாய லொக்கும்.

34. ஜாதகருக்கு மதி என்ற சந்திரதசை வரையிலும் யோகம் உண்டாகும். இவருக்குச் சேய் என்ற அங்காரகனுடைய தசை காலத்தில் கெடுதிகள் உண்டாகும். இந்த விஷயத்தைப் பின்னால் சொல்லுகின்றோம். இந்த விஷயம் இப்படியிருக்க ஜாதகருடைய தாயாருடைய விஷயத்தைச் சொல்லுகின்றோம். இவள் நல்ல குணத்தையுடையவள். இவள் தன்னைப் போற்றினவர்களுக்கு உபகாரத்தைச் செய்வாள். இவள் மயிலைப்போல அழகான நீண்ட தேகத்தையுடையவளாவள்.

35. வந்தபின் வரன்யோ கந்தான்
மாரனு மிரண்டே யாகும்
நொந்தபேர்க் குதவி செய்வள்
நிதானமாய் வார்த்தை யுண்டு

முந்தின கோபங் கொஞ்சம்
மொழியதைக் காப்பா ளாவள்
இந்திரன் மனைபோ லொப்பா
மிரக்கமா மனத்த ளாவள்.

35. ஜாதகருடைய தாயார் தன்னுடைய புருஷனிடம் போய்ச் சேர்ந்த பிறகு இவர்களுக்கு யோகம் உண்டாகும். தாயார் கஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவள் நிதானமாகவும் சாந்தமுடனும் வார்த்தைகளைச் சொல்லுவாள். இவளுக்கு முன்னே சிறிது கோபம் உண்டாகும். தான் சொன்ன வர்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்றுவாள். இவள் தேவேந்திர னுடைய மனைவியைப்போல விருப்பாள். இவள் தயாளமான மனத்தை யுடையவளாவள்.

36. தன்துணை யாண்பா லொன்று
சாற்றுவோந் தாயே யாங்கள்
அன்னவன் வெளிதா டன்னி
லடைந்துமே பெருமை யேற்பன்
பொன்பொரு ளதிகஞ் சேர்த்து
புருவ..... தன்னூர் தன்னில்
பின்பாகம் விபரஞ் சொல்வோம்
பேதையே கேட்டி டாயே.

36. ஜாதகருடைய தாயாருக்கு ஒரு சகோதரர் இருப்பார் என்று பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகின்றோம். இவர் வெளிதேசத் திற்குப் போய் அவ்விடத்தில் மேன்மையும் கீர்த்தியையும் அடைவார். இவர் தனம், சொத்து இவைகளை அதிகமாகச் சேர்த்து வைத்துப் பிறகு தன் கிராமத்திற்குத் திரும்பி வந்து விடுவார். இதர விவரங் களைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம், பார்வதியமமையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

37. மாதுரு பூர்வஞ் சொல்வேன்
மலைநாட்டில் மறைக்கு லத்தில்
நீதியா யுதித்து வின்னேன்
நிதானமாய்க் குடும்பி யாகி
காதலி வாழு நாளில்
கன்னிமேல் காண வார்த்தை
யோதினுள் மாது வெட்கி
யுரைத்திட்ட சாபங் கேண்மோ.

37. ஜாதகருடைய தாயார்து முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேன். இவள் மலைதேசத்தில் பிராமணர் குலத்தில்

நியாயமாகப் பிறந்து நடுத்தரமான குடும்பினியாகி வாழ்கின்ற காலத்தில் இவள் கலியாணமாகாத இளம் வயதுள்ள ஒரு ஸ்திரீயின்மேல் தான் பார்க்காத அபாண்டமான அவதூறான வார்த்தைகளைச் சொல்லவே, இந்த ஸ்திரீ வெட்கமடைந்து கொடுத்த சாபத்தைக் கேட்பீராக.

38. பெண்பழி சொன்ன பாவி
பிறக்கும்பின் ஜன்மந் தன்னில்
அண்ணன்தம் பிகளு மின்றி
யழகான துணைப்பெண் ணின்றி
உன்சுதர் முதலில் நஷ்ட
மூரைத்துமே தெருத்தாள் விட்டாள்
திண்ணமா யந்தச் சாபஞ்
சேர்ந்தது வென்று சொல்வோம்.

38. "ஒரு பெண்ணின்மேல் பழியைச் சொன்ன பாவி தன்னுடைய மறுஜன்மத்தில் அண்ணன் தம்பிகள் இல்லாமலும் சகோதரி இல்லாமலும் முதலில் பிறக்கும் குழந்தைகள் நஷ்டம் அடைந்தும் வாழக்கடவது" என்று இந்தக் கன்னிகையான ஸ்திரீ ஜாதகருடைய தாயாரைப் பார்த்துச் சொல்லி விட்டுத் தெருவிலுள்ள மண்தூளை வாரி எடுத்துத் தூவினாள். இந்தச் சாபமானது உண்மையாக இவளை வந்து அடைந்தது என்று சொல்லுகின்றோம்.

39. மங்கையு மரண மாகி
மலரயன் வரையப் பட்டுக்
கங்கையின் குலமு தித்தாள்
காணாது துணைப்பெண் ணுந்தான்
சங்கையாய் முதலில் புத்திரர்
ஜயமுனி மறித்துச் சொல்வார்
துங்கமா மறைக்கு லத்தில்
ஜனித்தவ ளிச்சென் மத்தில் ;

39. ஜாதகருடைய தாயார் தன்னுடைய முன்ஜன்மத்தில் இறந்து பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டுக் கங்கை குலம் என்ற வேளாளர் குலத்தில் இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம். இவளுக்குச் சகோதரி கிடையாது. இவளுக்கு முதலில் பிறக்கும் குழந்தைகள் இறந்து விடுவார்கள். இவ்விதமாக அத்திரிமகரிஷி சொல்லவே, ஜயமுனிவர் தடுத்துக் கேட்கின்றார். உயர்ந்த பிராமணர் குலத்தில் முன்ஜன்மத்தில் பிறந்தவள் இந்த ஜன்மத்தில் ;

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

40. குலந்தாழ்வாய் வந்த சங்கை கூறுவீர் முனியே கீர்தாம்
நலமுள விரதம் தன்னை நாயகி முட்டுச் செய்தாள்
பலமது குலந்தாழ் வாகப் பகருவோ மிவன்பின் சென்மம்
தலமதி லுயர்வ தான தாம்பிர பரணி தன்னில் ;

40. குலத்தாழ்வாய்ப் பிறந்ததற்குக் காரணத்தை முனிவரே ! நீரே சொல்லுவீர் என்று கேட்கவே முனிவர் பதில் சொல்லுகின்றார். நல்ல விரதங்களை இவள் முறைப்படி செய்யாமல் தவறுதலாகச் செய்ததால் இவள் இந்த ஜன்மத்தில் பிராமணர் குலத்திற்குத் தாழ்ந்த குலத்தில் பிறந்திருக்கின்றாள். இவளுடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஸ்தலங்களுக்குள் மேன்மையான தாம்பிரபரணியில் ;

ஜாதகருடைய தகப்பனாரது மரணகாலம்

41. மறைக்குல முதிப்பா ளாகு
மறைகுவீர் கரும காலம்
இருபது வொன்ப தாண்டில்
யியம்புவோர் தந்தை கண்டம்
பிருகுதன் தசையி லேதான்
பொன்னவன் புத்தி தன்னில்
மறலியின் காட்டை தந்தை
வாங்குவா னென்று சொல்வோம்.

41. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறுஜன்மத்தில் பிராமணர் குலத்தில் பிறப்பாள். கர்ம காலங்களைப்பற்றிச் சொல்லுவீர் என்று கேட்கவே ஜாதகருக்கு இருபத்தொன்பதாவது வயதில் இவருடைய தகப்பனாருக்கு மரணம் நேரிடும் என்று அத்திரி முனிவர் சொன்னார். பிருகு என்ற சுக்கிரதசையில் பொன் என்ற குருவின் புக்தி நடக்கும்பொழுது இவருடைய தகப்பனார் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவார் என்று சொல்லுகின்றோம்.

குறிப்பு :—ஜாதகருக்கு வயது ஹ 27-2-0 முதல் வயது ஹ 29-10-0 வரையிலும் சுக்கிரதசையில் குருபுக்தி நடக்கின்றது.

ஜாதகருடைய தகப்பனாரது மறுஜன்மம்

42. வருஞ்சென்மம் வேங்க டத்தில்
வருகுவான் சத்திரிய சேயாய்
திருமக னிச்சென் மத்தில்
செய்தபுண் ணியங்க ளென்ன

பெருந்த லங்கள் சென்றும்
பெரியோருக் கன்ன மீந்தும்
அறமதி லிச்சை வைத்து
அப்பால னுதிப்பா னாகும்.

42. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய மறுஜன்மத்தில் வேங்கடம் என்ற திருப்பதி ஸ்தலத்தில் க்ஷத்திரிய குலத்தில் ஒரு ஆண் குழந்தையாகப் பிறப்பார். இவர் இந்த ஜன்மத்தில் செய்த புண்ணியங்கள் என்னவென்று கேட்கவே, அத்திரி முனிவர் பதில் சொல்லுகின்றார். இவர் பெரிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செய்து பெரியார்களுக்குச் சாப்பாட்டைப் போட்டும் தருமத்தில் ஆசையுடைவ ராகியும் இருப்பதால் இவ்விதமாக மறுஜன்மத்திற் பிறப்பார்.

43. மூப்பது வாறு வாண்டில் விளம்புவோ மன்னை கண்டம்
அப்போது புகரின் காலம் அதிதியின் பத்தி யாகும்
செப்புவோஞ் சாதர்க்கு சீர்கருங் கோளின் காலம்
தப்பித மணுகு மென்றேஞ் சடைமுனி தடுத்துச்
[சொல்வார்.

43. ஜாதகருக்கு முப்பத்தாறுவது வயதில் இவருடைய தாயார் இறந்துவிடுவாள். அந்தக் காலத்தில் புகர் என்ற சுக்கிரமகாதசையில் அதிதி என்ற கேதுவின் புக்தி நடக்கும். ஜாதகருடைய மரண காலத் தைச் சொல்லுகின்றோம். இவருக்கு இராகு மகாதசையில் மரணம் நேரிடும் என்று சொல்லுகின்றோம். இதன்பேரில் ஜடை முனிவர் தடுத்துக் கேட்கின்றார்.

குறிப்பு :—சுக்கிர மகாதசையில் கேதுபுக்தி ஜாதகருக்கு வயது ஹ 35-10-0 முதல் வயது ஹ 37-0-0 வரையிலும் நடக்கின்றது.

44. பொன்னனுக் கெட்டில் திங்கள்
பொருந்தினல் சகடை யென்றோம்
மன்னவ னெட்டாண் டுக்குள்
மாரகம் நேரு மென்றோம்
தென்முனி மறித்துச் சொல்வார்
செம்பொன்னும் நவத்தில் தங்கும்
கன்மங்கள் தாய்தந் தைக்கு
காதலன் செய்வா னாகும்.

44. பொன்னன் என்ற குருவிற்கு எட்டாவது பாவத்தில் திங்கள் என்ற சந்திரன் இருப்பதால் சகடையோகம் உண்டாகி இருக் கின்றது என்று சொல்லுகின்றோம். ஜாதகர் எட்டு வயதிற்குள்ளே இறந்துவிடுவார் என்று சொல்லுகின்றோம் என்று ஜடை முனிவர் சொல்லவே, தென்முனிவராகிய அகஸ்திய மகரிஷி தடுத்துச் சொல்லு

இன்ருர். பொன்னன் என்ற குரு ஒன்பதாவது பாவத்தில் இருப்பதால் ஜாதகர் தன்னுடைய தாய் தந்தையர்களுக்குக் கர்மங்களைச் செய்வார்.

குறிப்பு :—குருவிற்கு எட்டில் சந்திரன் இருப்பதால் ஜாதகாலங்காரம் இருநூற்றுப்பதின்மூன்ருவது பாடல் பிரகாரமும், ஜாதகபாரிஜாதம் ஏழாவது அத்தியாயம் நூற்றெட்டாவது சுலோகம் பிரகாரமும் பலதீபிகை ஆருவது அத்தியாயம் பத்தாவது சுலோகம் பிரகாரமும் சகடயோகம் ஏற்பட்டிருக்கின்றது. சந்திரன் லக்கினத்திற்குக் கேந்திரத்திலிருப்பதால் பலதீபிகையின் சுலோகம். பிரகாரம் சகட பங்கமும் ஏற்பட்டிருக்கின்றது.

ஜாதகருடைய மரண காலமும் மறுஜன்மமும்

45. ஆகையால் வயது தீர்க்கம் அறுபது யேழு வாண்டில்
தோகையின் மாதந் தன்னில் தேய்பிறைத் தசமிதன்னில்
பாகமா யுடல மேகும் பகருவோ மிவன்பின் சென்மம்
ஆகமக் குலமு திப்பான் அப்புவின் தலத்தி லேதான்.

45. ஆகையால் ஜாதகருக்கு வயது தீர்க்கமாகும். இவர் அறுபத்தேழாவது வயதில் தோகையின் மாதம் என்ற கன்னியாராசி மாதமாகிய புரட்டாசி மாதத்தில் தேய்பிறையில் தசமி திதியில் இறந்து இவருடைய தேகம் மறைந்து போய்விடும். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகின்ருேம். இவர் பிராமணர் குலத்தில் அப்பு ஸ்தலமாகிய திருவானைக்காவல் க்ஷேத்திரத்தில் தன்னுடைய பின் ஜன்மத்தில் பிறப்பார்.

ஜாதகருடைய ஜனனகால நட்சத்திரமும் தசைஇருப்பும்

46. இன்னவன் சனன காலம்
ஈட்டிநா ளிரண்டாம் பாதம்
புந்தியின் தசைபத் தாண்டும்
புகன்றனம் பூர்வ பாகம்
பின்பாகம் விபரஞ் சொல்வோம்
புதல்வனின் சேதி யாவும்
அன்னையே யாங்கள் சொல்லும்
அருள்மொழி குன்ரு தாகும்.

46. ஜாதகர் பிறந்த காலத்தில் ஈட்டிநாள் என்ற கேட்டை நட்சத்திரத்தின் இரண்டாவது பாதம் ஆகும் இதற்குரிய புந்தி என்ற புதமகாதசையின் இருப்பு பத்து வருஷங்கள் ஆகும். இவ்விதமாகப் பூர்வபாகமாகிய முதலாவது பாகத்தை முடித்துவிட்டோம். பின்பாகத்தில் ஜாதகருடைய மற்ற விஷயங்களை விவரமாகச் சொல்லுகின்ருேம். பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய அருள்வாக்கானது தவறிடாமல் நடக்கும்.

ஜாதகம் 136

ஜனனகால கிரகநிலை

1. [1]மதியும் தனுசு குரு[2]சாடி
[3]மழைக்கோள் [4]சீயம் [5]ரவி[6]வண்டி
புதன்[7]சேய் [8]காரி [9]வீணையுற
[10]புயங்கன் மேடம்[11]சிங்கி [12]கோலாம்
பதியது சிம்மம் பலனெவ்வார்
பகருவீர் முனியே விபரமதாய்
இதுவே ஆண்பால் செனனமுறும்
இல்லம் கீழ்மேல் வீதியதே.

1. சந்திரன் தனுசிலும், குரு கும்பத்திலும், சுக்கிரன் சிம்மத்திலும், சூரியன் கடகத்திலும், புதனும் அங்காரகனும் சனியும் மிதுனத்திலும், இராகு மேஷத்திலும் கேது துலாத்திலும், ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இருந்தால் எவ்விதமான பலாபலன்களைச் சொல்லுவீரோ அவைகளை முனிவரே! விபரமாகச் சொல்லுவீர். இந்தக்குழந்தை ஆண் குழந்தையாகப் பிறக்கும். பிறந்தவீடு கிழக்கு மேற்குத்தெருவில் இருக்கும்.

கிரகநிலை

	ராகு		புதன் அங்காரகன் சனி
குரு	இராசி சக்கரம்		சூரியன்
			லக்கினம் சுக்கிரன்
சந்திரன்		கேது	

1. சந்திரன்
2. கும்பம்
3. சுக்கிரன்
4. சிம்மம்
5. சூரியன்
6. கடகம்
7. அங்காரகன்
8. சனி
9. மிதுனம்
10. இராகு
11. கேது
12. துலாம்

(நட்சத்திரம் புலப்படவில்லை, தசைபுலப்படவில்லை, ஓலை உடைந்து விட்டது.)

ஜனன நாட்டுச் சிறப்பு

2. அதுவே தென்பால் வாடைதன்னில்
அணுகும் சந்து கீழ்பார்வை
பதிக்கு மேற்கில் தந்திமுகன்
பகர்ந்தோங் கன்னி வடகீழ்பால்
சதிராய் சிறுவூ ரிப்பாலன்
செனிப்பான் இந்த பாலனுமே
வதிபன் தூணவர் தாய்தந்தை
மனவி மைந்தர் தாம்யோகம்.

2. ஜாதகர் பிறந்தவீடு தெற்கு வாடையில் இருக்கும். கிழக்குத் திக்கைப் பார்த்த ஒரு சந்து இருக்கும். பிறந்த வீட்டிற்கு மேற்கில் விநாயகருடைய கோயில் இருக்கும் என்று சொல்லுகின்றோம். கன்னி மார் கோயில் வடகிழக்குத் திக்கில் இருக்கும். பிறந்த கிராமம் ஒரு சிறிய கிராமமாகும். இந்தக் கிராமத்தில் இந்த ஜாதகர் பிறப்பார். ஜாதகர் இவருடைய சகோதரர், தாயார், தகப்பனார், மனைவி, மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களை (இந்தச் சாஸ்திரத்தில் சொல்லுகின்றோம்.)

ஜாதகருடைய தகப்பனரது சகோதரர்களும் (சகோதரபாவம்)
குணங்களும்

3. தோ.....வார் தந்தை தூணகான்கில்
சோர்வே யடையுஞ் சிலகாளில்
மல்லில் செல்லான் மானிறத்தன்
வறுமை காணுன் யூகைகொஞ்சம்
தல்லி தந்தைக் கிஷ்டமூளன்
தரணி விருத்தி கிருஷிசெய்வன்
வல்லி யிஷ்டன் மறுத்துரையான்
மருவும் மேக சூடென்றோம்.

3. ஜாதகருடைய சகோதரங்கள் நால்வராவர். இவர்கள் சில காலத்திற்குள் இறந்துவிடுவார்கள். ஜாதகருடைய தகப்பனர் சண்டைக்குப் போகமாட்டார். இவர் மாநிறத்தை யுடையவராவர். தரித்திரத்தை அடையமாட்டார். இவர் சிறிது விவேகமுடையவராவர். இவர் தன்னுடைய தாய் தகப்பனருக்குப் பிரியமானவராக இருப்பார். இவர் நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தியாக்குவார். விவசாயத் தொழிலைச் செய்வார். இவர் தன்னுடைய மனைவிக்குப் பிரியமானவராவர். தடித்து வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவருக்கு மேகச்சூட்டு ரோகம் உண்டாகும் என்று சொல்லுகின்றோம்.

4. உண்டி சுகமாய் கொண்டிடுவன்
.....வித்தை அல்பமுளன்
குண்டை விருத்தி கரமதிலே
குலவும் கோதுமை ரேகையுளன்
துண்ட வார்த்தை சமயோகம்
துர்வார்த் தைகளும் தான்கூறுன்
பண்டு நாளில் வறுமையுளன்
பாவை வந்த பின்யோகம்.

4. ஜாதகருடைய தகப்பனுர் சௌக்கியமான நல்ல சாப்பாட்டைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பார். இவர் சிறிதளவு கல்வியை உடையவராவர். இவருக்கு மாடுகள் விருத்தியாகும். இவருடைய உள்ளங்கைகளில் கோதுமைரேகை இருக்கும். இவர் கண்டிப்பான வார்த்தைகளைச் சொல்லுவார். நடுத்தரமான யோகத்தை யுடையவர். கெட்ட வார்த்தைகளைச் சொல்லமாட்டார். இவருக்கு முற்காலத்தில் தரித்திரமும் கஷ்டங்களும் உண்டு. இவருடைய மனைவி இவரிடம் வந்த பிறகு இவருக்கு யோகம் உண்டாகும்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

5. இல்லமுஞ் செய்யான் பணிகாணன்
.....யம்பு .....ணத்த .....வன்
அல்ல லின்றி தானுதிப்பன்
அறைவோ மிவன்தன் குணமதனை
வெல்லுஞ் சொல்லன் மானியத்தன்
வீண்வம் பினிலே செல்லாதான்
சொல்லில் கபடு கொஞ்சமும்
தொடுத்த தையே வென்றிடுவான்.

5. ஜாதகருடைய தகப்பனுர் வீடுகட்டமாட்டார். ஆபரணங்களை உடையவரல்லர். இவர் கஷ்டமில்லாமல் பிறந்தவராவர். ஜாதகருடைய குணதிசயங்களைச் சொல்லுகின்றோம். இவர் சொல்லுகின்ற வார்த்தைகள் ஜயத்தை அடையக்கூடியனவாகவிருக்கும். அஃதாவது மேன்மையுடையன வாகும். இவர் மானிறத்தை யுடையவர். வீணுகச் சண்டையை விளைவிக்கக்கூடிய வகைகளில் பிரவேசிக்கமாட்டார். இவர் சொல்லுகின்ற வார்த்தைகளில் சிறிதளவு வஞ்சனையும் மர்மமும் இருக்கும். இவர் செய்ய வாரம்பித்த காரியங்களைச் செய்து முடித்து ஜயத்தை அடைவார்.

6. இடுவ னேழை தனக்கன்னம்
.....தோர் வார்த்தை கிருஷிசெய்வன்
திடமா மில்லம் தான்செய்வன்
சகடு முடையன் தீரனுமாம்
கடனே கொள்ளான் பிதுர்பூமி
கனக்க செய்வன் சதித்தபுத்தி
மடையோர் உறவு கொள்ளாதான்
மாமி ரெண்டு மருவிடுமே.

6. ஜாதகர் ஏழைகளுக்குச் சாப்பாட்டைப் போடுவார். இவர் விவசாயத் தொழிலைச் செய்வார். இவர் வலிவான ஒரு வீட்டைக் கட்டுவார். வண்டியையும் உடையராவர். தைரியமானவராவர். இவர் கடன் வாங்கமாட்டார். தன் தகப்பனாருடைய நிலங்களை அதிகப் படுத்துவார். இவர் அதிகமான சிறந்த புத்தியை யுடையவர். இவர் புத்தியில்லாத மூடர்களுடைய சிநேகிதத்தை அடையமாட்டார். இவருக்கு இரண்டு மாமியார்கள் நேரிடுவார்கள்.

7. மருவும் பணையேர் தானியமும்
மாற்றான் தனையே நசிக்கவைப்பன்
உறையும் பித்த சூடென்றோம்
உயர்வாய்க் குடும்பி தானுவன்
வறுமை யலைச்ச லாதியினில்
மன்னு கங்கை சூழிசெய்வன்
பொறுமை யுடையன் முன்கோபி
பிதாமே லாக வாழ்ந்திடுவன்.

7. ஜாதகருக்கு நிலங்கள், ஏர்கள், தானியங்கள் ஆகிய இவை உண்டாகும். இவர் தன்னுடைய விரோதிகளை நாசப்படுத்திவிடுவார். இவருக்குப் பித்தச்சூட்டு ரோக மிருக்கும். இவர் மேன்மையான சிறந்த குடும்பஸ்தராவர். இவர் தன்னுடைய முற்காலத்தில் தரித்திரத் தையும் கஷ்டங்களையும் அடைப்பவராவர். இவர் குளத்தை உண்டாக் குவார். இவர் சாந்த முடையவர். முன்கோபத்தையும் உடையவர். இவர் தன்னுடைய தகப்பனாரது அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்தி லிருந்து வாழ்வார்.

8. நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
புல்லிய புத்தி கொஞ்சம் போசன வறுமை காணன்
தொல்லையு முன்னு லுண்டு சுகமிகும் பின்னு லேதான்
வல்லியர் மோக னுவன் மாடுகள் பூமி விருத்தி.

8. ஜாதகர் நல்லவர்களுக்கு நல்லவராவர். முரடர்களுக்கு வலி வான எதிரியாக விருப்பார். இவர் சிறிது தாழ்ந்த குணத்தை யுடைய வர். சரப்பாடு விஷயத்தில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும்

அடையமாட்டார். இவருக்கு முன் காலத்தில் கஷ்டங்களும் கடன் களும் உண்டு. பிற்காலத்தில் சுகம் அதிகப்படும். இவர் ஸ்திரீகளி டத்தில் மையல் என்ற காம ஆசையை யுடையவராவர். இவருக்கு மாடுகளும் நிலங்களும் விருத்தி யாகும்.

ஜாதகருடைய சகோதரங்களும் (சகோதரபாவமும்) விவாக காலமும்

9. இவனுடைத் துணைவர் தம்மை யியம்பஆண் பலமு ரூது
நவனியில் பெண்பால் நான்கு நவிலுவோஞ் சிலவே
[துன்பம்
அவர்பலன் பின்பால் சொல்வே னறைகிரே
[மணத்தின் காலம்
தவசியே யிருபான் மூன்றில் சார்ந்திடும் பாரி தானும்.

9. ஜாதகருடன் கூடப் பிறந்தவர்களில் ஆண்களுக்கு வலிவு கிடையாது. அஃதாவது சகோதரர்கள் இருக்கமாட்டார்கள். இவ ருக்குப் பூமியில் நான்கு சகோதரிகள் உண்டாவார்கள். இவர்களில் சிலர் கஷ்டத்தை அனுபவிப்பார்கள். இவர்களுடைய பலாபலன்களைப் பின்னால் சொல்லுகின்றோம். ஜாதகருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். தவங்களைச் செய்கின்ற பார்வதியம்மையே! இவருக்கு இருபத்துமூன்று வயதில் மனைவி வந்து சம்பவிப்பாள்.

ஜாதகருடைய மனைவியின் குணாதிசயங்கள்

10. பாரியாள் குணத்தைச் சொல்வேன் பகையென்று
[மனத்தில் வையாள்
சீலமு முடைய ளாகும் தேவதா பத்தி பூண்பள்
காலத்தை யறிந்து ரைப்பாள் கணவனுக் கினிய ளாகும்
ஞாலமேல் வறுமை காணுள் நற்புத்தி யீகை கொஞ்சம்.

10. ஜாதகருடைய மனைவியின் குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் விரோதத்தைத் தன்னுடைய மனத்தில் வைத்திருக்க மாட்டாள். இவள் நல்லொழுக்கத்தை யுடையவளாவள், தெய்வங்களிடத்தில் அன்பும் ஆசையும் உடையவளாக விருப்பாள். இவள் காலப் போக்கை நன்றாகத் தெரிந்து கொண்டு அதற்குத் தகுந் தாற்போல பேசுவாள். இவள் தன்னுடைய புருஷனுக்குப் பிரியமான வளாக விருப்பாள். இவள் பூமியில் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்கமாட்டாள். இவள் நல்ல அறிவையுடையவள், சிறிது தயாள குணத்தையும் கொடுக்கும் குணத்தையும் உடையவளாவள்.

11. அடிசிலுக் கினிய ளாகும் அவளில்லம் கீழ்ப்பால் நேரும்
கடிவுண்டு சாந்த முண்டு காதலி சிவந்த மேனி
மடையரை யுறவு கொள்ளாள் மாதுநன் நடக்கை யுண்டு
நடையது துருசு மாவள் நாபிசூ டுடைய ளாமே.

11. ஜாதகருடைய மனைவி இனிமையாகச் சமையல் செய்பவளாவள். இவளுடைய தாயாரது வீடு கிழக்குத் திக்கில் இருக்கும். இவளுக்குக் கோபம் உண்டாகும். அது சாந்தத்தையும் அடையும். இவள் சிவப்பு நிறத்தை யுடையவள். இவள் அறிவில்லாதவர்களிடம் சினேகஞ் செய்துகொள்ள மாட்டாள். இவள் நல்ல நடவடிக்கையையும் நல்லொழுக்கத்தையும் உடையவளாவள். இவள் நாபிச்சூட்டு ரோகத்தை யுடையவளாவள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திர பாவம்)

12. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தைக் காணேம்
சித்தமா யுதித்தா லுந்தான் தீங்காகு மென்று
[சொல்வோம்
அத்திரி முனிவர் சொல்ல வறைகுவார் பராசர் தாமும்
வித்தகன் தனக்குப் புத்திரர் விளங்காத காரணஞ்சொல்.

12. ஜாதகருக்குச் சந்ததி விருத்தியைப்பற்றிச் சொல்லுவதற்கு யாதொரு பலமுங் காணப்படவில்லை. ஒரு சமயம் குழந்தைகள் பிறந்தாலுங் கூட இவை இறந்துபோய்விடும் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக அத்திரி மகரிஷியானவர் சொல்லவே பராசர முனிவர் கேட்கின்றார். ஜாதகருக்குக் குழந்தைகள் பிறக்காததற்குக் காரணங்களைச் சொல்லுவீர்.

13. அஞ்சினில் விரையோன் நின்று அருணன்சேய்
[காரி பார்க்க
துஞ்சிடும் சுதர்க ளென்றோம் ஜயமுனி தடுத்துச்
[சொல்வார்
தஞ்சமாய்ப் பொன்னே னேழில்சல்லியன் பார்த்ததாலே
கொஞ்சிய குழவி யுண்டாம் குலவாது கர்மப் புத்திரர்.

13. ஐந்தாவது பாவத்தில் விரையோன் என்ற விரையஸ்தானாதிபதியாகிய பன்னிரண்டிற்குடைய சந்திரன் இருந்துகொண்டு இவரையும் ஐந்தாவது வீட்டையும் அருணன் என்ற புதனும் சேய் என்ற அங்காரகனும் காரி என்ற சனியும் பார்ப்பதால் குழந்தைகள் இறந்து விடுவார்கள் என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக அத்திரி மகரிஷி சொல்லவே ஜயமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். பொன்னேன் என்ற குரு ஏழில் இருந்துகொண்டு இவரைச் சல்லியன் என்ற சுக்கிரன் பார்த்திருப்பதால் ஜாதகருக்குப் பெண் குழந்தையுண்டு. ஆனால் கர்மஞ் செய்வதற்குப் புத்திரன் கிடையாது.

ஜாதகருடைய முன்ஜன்மம்

14. ஒன்பதில் ராகு நிற்க
உத்தமன் பூர்வம் தன்னில்
துன்மைகள் அதிகம் செய்தான்
சேர்ந்தது வினைகள் தாமும்

என்னஊழ் சொல்லு மென்ன
யிவனுடைப் பூர்வம் கேளாய்
பெண்ணீயி னோரந் தன்னில்
பேரூரில் வைசியச் சேயாய்.

14. ஒன்பதாவது பாவத்தில் இராகு இருப்பதால் (கர்மத்திற்குப் புத்திரன் கிடையாது, மேலும்) ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் அதிகமான பாபங்களைச் செய்திருக்கின்றார். இவை, இவரை வந்து அடைந்திருக்கின்றன. இந்தப் பாவங்கள் எப்படிப்பட்டவை என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே முனிவர் சொல்லுகின்றார். இவருடைய முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. பெண்ணீயாற்றின் கரையின் ஓரமாய் ஒரு பெரிய கிராமத்தில் வைசியருடைய குலத்தில் தன்னுடைய முன் ஜன்மத்தில் ;

15. உதித்தனன் செட்டுச் செய்து உலகினில் வாழு நாளில்
சதியதைச் சொல்லக் கேளாய் சர்ப்பமு மில்லம் வாசம்
அதுமகு டத்தால் ஓர்நா ளணுகிற்று வெளியில் தானும்
வதிபனும் கழியால் வாட்ட மறலியின் பதிக்குச் செல்ல.

15. ஜாதகர் பிறந்தார். இவர் வியாபாரத்தைச் செய்துகொண்டு பூமியில் வாழ்கின்ற காலத்தில் இவருக்குக்குண்டான பாபத்தைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. ஒரு நாகப்பாம்பு தன்னுடைய வீட்டில் வசித்துக்கொண்டிருந்தது. இது மோடி வாத்தியத்தால் ஒருநாள் வெளியே வந்தது. இதை ஜாதகர் ஒரு தடியால் அடிக்கவே இது இறந்து எமபட்டணத்திற்குப் போய்விட்டது.

16. அதுஒரு தோஷ மாச்சு அதுவின்றி வேறு சொல்வேன்
நதிகுல விதவை மாது நங்கைமேல் மோகங் கொண்டு
விதவிதப் போகம் கொண்டு மெல்லிக்குக் கருவு தங்க
சதிசெய்தான் பண்டி தத்தால் சார்ந்தது அதுஓர்
[தோஷம்.

16, இது ஒரு தோஷமாகச் சம்பவித்தது. இதுவுமல்லாமல் இன்னொரு தோஷத்தைச் சொல்லுகின்றேன். நதிகுலமான கங்கை குலம் என்ற வேளாளர் குலத்து விதவை ஸ்திரீயின்மேல் ஜாதகர் தன்னுடைய முன் ஜன்மத்தில் மையல் என்ற காதலை யுடையவராகிப் பலவிதமான சம்போகங்களை இவளிடத்தில் செய்யவே இவளுக்குக் கர்ப்பமுண்டாகி இதை ஜாதகர் வைத்தியஞ் செய்து கெடுத்துவிட்டார். இது ஒரு தோஷமாக வந்து சம்பவித்தது ;

17. இன்னமும் வேறு சொல்வே
னெதிரியின் சாப மொன்று
முன்னமே சேர்ந்த தென்றேரும்
முதல்வனு மந்தி யத்தில்
தன்சுத ரில்லா தாகிச்
சஞ்சல மனத்த ஞகித்
துன்னிய கால நாடு
சேர்ந்தன னிவனே யென்றேரும்.

17. இன்னும் வேறுவிதமான தோஷத்தைச் சொல்லுகின்றேன். ஜாதகரின் பகைவருடைய சாபம் ஒன்றும் சேர்ந்தது என்று சொல்லுகின்றேரும். இவர் தன் முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் பிள்ளை இல்லாதவராகித் துன்பமான மனத்தையுடையவராகி இறந்து எம பட்டணத்திற்குப்போய்ச் சேர்ந்தார் என்று சொல்லுகின்றேரும்.

18. சிரநான்கோன் வரையப் பட்டு ஜனித்தன னிந்தப்
[பாலன்
உரகாது.....சுதர்கள் தாமும் உதிக்கினுந் தீதே யாகும்
மறுதார நேரு மாகில் மைந்தர்கள் தோன்று மோசொல்
இருமனை நேரா தாகு மெய்தினும் சுதர்கள் காணுன்.

18. ஜாதகர் பிறகு நான்கு தலைகளையுடைய பிரமதேவனுல் பிரம லிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்ரூர். இவருக்கு ஆண் குழந்தைகள் பிறக்கா. ஒரு சமயம் பிறந்தாலும் இறந்துவிடுவாகள். இவ்விதமாகச் சொல்லவே இன்னெரு தாரம் நேரிட்டால் இந்தத் தாரத்திற்குப் பிள்ளைகள் பிறப்பார்களோ இல்லையோ என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே, இரண்டு மனைவிமார்கள் நேரிடமாட்டார்கள். ஒரு சமயம் இரண்டு மனைவிகள் நேரிட்டாலும் பிள்ளைகள் பிறக்கமாட்டார்கள் என்று முனிவர் சொன்னர்.

ஜாதகருடைய மனைவியின் முன்ஜன்மம்

19. பாரியால் சிலவே தோஷம் பகருவோந் தாயே யாங்கள்
நாரிசெய்த வினைக ளென்ன நவிலுவீர் விபர மாக
காரிழை பூர்வங் கேளாய் கன்னமா புரத்தி லேதான்
தீரமா யிக்கு லத்தில் ஜனித்தன ளிவளே யென்றேரும்.

19. ஜாதகருடைய மனைவியால் சில தோஷங்கள் ஏற்பட்டன. இவைகளைப் பார்வதியம்மையே! நாங்கள் சொல்லுகிறேரும். இவருடைய மனைவி செய்த பாபங்கள் எவை? இவைகளை விபரமாகச் சொல்லுவீர் என்று கேட்கவே பதில் சொல்லுகின்ரூர் இவளுடைய

முன் ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். கேட்பீராக. இவள் கன்னமா புரம் என்ற விஷ்ணு க்ஷேத்திரத்தில் இந்த ஜன்மத்திய குலத்திலேயே பிறந்தாள் என்று சொல்லுகின்றோம்.

20. சுகமுள குடும்பி யாகி சுதர்களு மதிக முண்டாய்
தகமையாய் வாழு நாளில் சாற்றுவோம் ஊழி தானும்
இகபர னடியார் தானும் இரவினில் அன்னம் கேட்க
முகவெறி கொண்டு வின்னெள் முடுக்கினாள் அதிதி
[தன்னை.

20. ஜாதகருடைய மனைவி தன்னுடைய முன்ஜன்மத்தில் சௌக்கியமான குடும்பினியாகிக் குழந்தைகளை அதிகமாக உடையவளாகி நல்லவிதமாக வாழ்கின்ற காலத்தில் இவளுக்கு வந்து சம்பவித்த விஷயைச் சொல்லுகின்றோம். ஒரு சிவபெருமானுடைய அடியார் இராத்திரியில் இவளிடம்போய்சாதங் கேட்கவே இவள் கோபத்தையடைந்து இந்தப் பரதேசியை பயப்படுத்தி விரட்டினாள்.

21. பஞ்சையா யேழை மாது
பாலர்கள் தமக்கு அன்னம்
கெஞ்சியே இவள்பால் கேட்க
கோதைமேல் கோப முற்று
மிஞ்சிய வார்த்தை சொல்லி
விரட்டினு ளேழை தன்னை
வஞ்சியு மனவெ றுப்பா
லறைகிறாள் சாபம் தானும்.

21. பஞ்சைப்போல அலைந்து திரிந்துகொண்டிருந்த ஒரு ஏழை ஸ்திரீ தன்னுடைய குழந்தைகளுக்காகச் சாதத்தைக் கொடு என்று ஜாதகருடைய மனைவியைக் கெஞ்சிக் கேட்கவே, இவள் கோபத்தை அடைந்து கடினமான வார்த்தைகளைச் சொல்லி இந்த ஏழை ஸ்திரீயை விரட்டித் துரத்திவிட்டாள். இந்த ஏழை ஸ்திரீ தன்னுடைய மனத்துன்பத்தால் சாபத்தைக் கொடுத்தாள்.

22. பாலர்க்கு வன்ன மீயாப் பாவிக்குச் சுதர்க ளின்றிச்
சாலவே பின்சென் மத்தில் சந்ததி யுதிக்கில் தீதாம்
ஏலவே துணைக ளின்றி.....சென்றாள்
ஆலம்போ லந்தத் தோஷம் அணுகிற்று விவளுக்
[கேதான்.

22. "என்னுடைய குழந்தைக்காகச் சாதம் கொடுக்காத பாவிக்குக் குழந்தைகள் இல்லாமல் இருக்கக்கடவது. மறுஜன்மத்தில் இவளுக்கு ஒருசமயம் குழந்தை பிறந்தாலும் இறந்துவிடக் கடவது. இவள்

சகோதரங்கள் இல்லாமல் வாழக்கடவது'' என்று இந்த ஏழை ஸ்திரீ ஜாதகருடைய மனைவியைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். இந்தச் சாபம் பாம்பின் விஷத்தைப்போல இவளை வந்து அடைந்தது.

23. மாதுவு மந்தி யத்தில் மைந்தர்க ளில்லா தாகி
சூதான கால ளடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
காதலி வருவா ளாகும் கன்னிக்குச் சுதர்கள் தோஷம்
நீதியா யந்தம் தன்னில் நேர்ந்திடும் கன்னி யொன்று.

23. ஜாதகருடைய மனைவி தன்னுடைய முன்ஜன்மத்தின் கடைசி காலத்திற் பிள்ளைகள் இல்லாதவளாகி இறந்து கெடுதியான எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனுற் பிரமலிபியுடன் எழுதப் பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். இவளுக்குப் புத்திர தோஷம் ஏற்படும். இவளுடைய கடைசிகாலத்தில் இவளுக்கு ஒரு பெண்குழந்தை பிறக்கும்.

24. மாதுவும் தீர்க்க மாகும் மங்கையும் தீர்க்க மெவ்வார்
காதலி பூர்வம் தன்னில் கவுதம மாரி கோஷ்டம்
நீதியாய்த் தீபம் ஒன்று நேர்ந்தன ளந்தம் தன்னில்
ஓதுஅப் பலன்க ளாலே ஒருகன்னி தீர்க்க மெய்தும்.

24. ஜாதகருடைய மனைவிக்கு இந்த ஒரு பெண்குழந்தை நீண்ட ஆயுளை உடையவளாக இருப்பாள் என்று சொல்லவே இந்தக் குழந்தை மாத்திரம் எந்தக் காரணத்தினுல் தீர்க்காயுளை உடையதாகும், என்று கேட்கவே முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருடைய மனைவி தன்னுடைய முன்ஜன்மத்தில் ஒரு மாரியம்மன் கோயிலிலும் கௌதமரிஷியின் மனைவியின் கோயிலிலும் நியாயமாக ஒரு விளக்கைத் தன்னுடைய கடைசி காலத்தில் ஏற்றிவைத்தாள். இந்தப் புண்ணியத்தினுல் ஜாதகருடைய மனைவிக்கு ஒரு புத்திரி நீண்ட ஆயுளை உடையவளாக விருப்பாள்.

ஜாதகருடைய குமாரத்தியின் சகோதரங்களும் (சகோதரபாவமும்)
குமாரத்தியின் குணங்களும்

25. கன்னிகைமுன் மூவர் தோன்றும்
காலன்தன் பதிக்குச் செல்லுங்
கன்னிகை சேதி கேளாய்
கனத்தபுத் திகளு முண்டு
கன்னென மொழியே சொல்வள்
கலகத்தைக் கூரு ளாகும்
சொன்னசொல் சுகமே யெய்தும்
துறவோருக் கன்ன மீவள்.

25. ஜாதகருடைய குமாரத்திக்கு முன்னே மூன்று சகோதரங்கள் பிறப்பார்கள். இவர்கள் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேர்ந்துவிடுவார்கள். குமாரத்தியின் குணாதிசயங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் பெரிய சிறந்த அறிவை யுடையவளாவள். இவள் சர்க்கரையைப்போன்ற இனிமையான வார்த்தைகளையே சொல்லுவாள். இவள் சண்டையை உண்டுபண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். இவள் இனிமையான, சுகமான, நல்ல வார்த்தைகளைச் சொல்லுவாள். இவள் பரதேசிக்குச் சாப்பாட்டைப் போடுவாள்.

26. வரனுமே கீழ்ப்பால் நேரும்
மருவாளாம் வரன்தன் னில்லம்
உறைகுவாள் தன்னில் லத்தில்
உயர்வான குடும்பி யாவள்
அரிவைக்குச் சுதராண் ரெண்டு
அம்பிகை யவ்வார் தீர்க்கம்
குறைவிலாக் குடும்பி யாகி
கோதையும் வாழ்வா ளாமே.

26. ஜாதகருடைய குமாரத்திக்குத் தன்னுடைய புருஷன் கிழக்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பார். இவள் தன்னுடைய புருஷனுடைய வீட்டிற்குப் போகமாட்டாள். இவள் தன் தாயாருடைய வீட்டிலேயே இருந்துகொண்டு ஒரு மேன்மையான குடும்பினியாக விருப்பாள். இவளுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவள் கஷ்டத்தை அடைந்திராத குடும்பினியாகி வாழ்பவளாவள்.

27. சுதனுக்குக் கருமஞ் செய்வோர்
செப்புவீர் முனியே நீர்தாம்
வதிபன்தன் புதல்வி புத்திர
ரறைந்தனங் கருமத் துக்கு
அதின்சேதி பின்பால் சொல்வேன்
அதுவின்றி தவறு காணுன்
நதிசடை யணிந்தோன் தேவி
நங்கையே கேட்டி டாயே.

27. ஜாதகருக்கு யார் கர்மத்தைச் செய்வார் என்பதை முனிவரே நீரே சொல்லுவீராக. இவருடைய புத்திரியினுடைய புதல்வர் கர்மஞ் செய்வார் என்று சொல்லுகின்றோம். இதனுடைய விபரத்தைப் பின்னால் சொல்லுகின்றேன். இது தவிர, வேறே ஒன்றும் ஜாதகருக்கு நடக்காது. கங்கையைத் தன்னுடைய ஜடையில் தரித்துக்

கொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது குணநிசயங்கள்

28. மாதுரு குணத்தைச் சொல்வேன் மருமமும் பொறுமை [கொஞ்சம்
ஓதுவா ளதிக மாக உரைக்குமுன் கோபி யாவள்
மேதினில் நிந்தை யேற்பள் வித்தகி வர்க்கம் நாஸ்தி
காதலி யில்லம் மேற்கு காணியோ டொத்து வாழாள்.

28. ஜாதகருடைய தாயாரது குணநிசயங்களைச் சொல்லுகின்றேன். இவள் சிறிது இரகசியத்தையும் பொறுமையையும் உடையவளாவள். இவள் அதிகமாகப் பேசுவாள். பேசுவதற்கு முன்னமே கோபத்தை யுடையவளாவள், இவள் பூமியில் அபவாதத்தை அடைபவளாவள். இவளுடைய தகப்பன் வழிவந்த பந்துக்கள் நாசத்தை அடைந்துவிடுவார்கள். இவளுடைய தாயாருடைய வீடு மேற்குத் திக்கில் இருக்கும். இவள் தன்னுடைய சகோதரர்களுடன் ஒற்றுமையாக விருந்து வாழ்வாள்.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

29. அந்தியக் காலந் தன்னில்
அவள்வேறுய்ச் செல்வா ளாகும்
தன்சுதர் பாரி பக்கல்
சாராமல் புத்திரி மூலம்
நிந்தையாய் வாழ்வா ளாகும்
நிமலியின் பூர்வங் கேளாய்
தென்திசைப் பாண்டி நாட்டில்
சேடர்தங் குலமே தோன்றி,

29. ஜாதகருடைய தாயார் தன்னுடைய கடைசி காலத்தில் தன் சகோதரர்களை விட்டுப் பிரிந்து வேறு ஒரு குடும்பினியாகப் போய் விடுவாள். இவள் தன்னுடைய பிள்ளையின் மனைவியிடம் இருந்து வாழாமல் தன்னுடைய புத்திரியின் மூலமாக அபவாதத்துடன் வாழ்பவளாக விருப்பாள். இவளுடைய முன்ஜன்மத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இவள் தெற்குத் திக்கிலுள்ள பாண்டிய தேசத்தில் சேடர் என்ற ஒரு வேலைக்காரருடைய ஜாதியில் பிறந்து;

30. பாலர்கள் வரனு முண்டாய்ப் பாவையும் வாழு நாளில்
சாலவே நாத்தி பேரில் சந்தேக வார்த்தை யோத
நீலியுந் திகில டைந்து நுவலுவாள் மனவெ றுப்பால்
ஏலவே பின்ஜன் மத்தில் என்போலே மகவாய்த் [தோன்றி

30. ஜாதகருடைய தாயார், புருஷன் மக்கள் ஆகிய இவர்களை உடையவராகி வாழ்கின்ற காலத்தில் இவள் தன்னுடைய நாத்தனார் பேரில் சந்தேகமான அபவாதமான வார்த்தைகளைக் சொல்லவே இந்த நாத்தனார் பயத்தை யுடையவளாகி மனக்கஷ்டத்தினால் சாபத்தைக் கொடுத்தாள். "நீ உன்னுடைய மறுஜன்மத்தில் என்னைப்போலவே ஒரு பெண்ணாகப் பிறந்து."

31. நிந்தைகள் அதிக முண்டாய் நீபெற்ற சுதன்பா லின்றி
நொந்திடும் மனத்த ளாகி நேரும்புத் திரிகள் குற்றம்
இந்தவார் சொல்லிச் சென்று ளெய்திற்று வந்தத்
[தோஷம்
அந்தகன் பக்கல் சென்று அயனுமே வரையப் பட்டு;

31. "அபவாதங்களை அதிகமாக வடைந்து நீ பெற்ற பிள்ளை யுடன் வசிக்காமல் மனக்கஷ்டத்தை யுடையவளாகி வாழக்கடவது. உனக்கு உண்டாகும் புத்திரிகளும் கெடுதியை அடையக்கடவது" என்று இவ்விதமாக ஜாதகருடைய தாயாரை இவளுடைய நாத்தனார் பார்த்துச் சொல்லிவிடப் போய்விட்டாள். இந்தத் தோஷம் தாயாரை வந்து அடைந்தது. இவள் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு;

32. வந்தவ ளிவளே யென்றேரும் மருவிற்று நாத்தி தோஷம்
தன்சுதர் புத்திரி மார்கள் சலிப்புடன் வாழ்வா ளாகும்
பந்தமா தாய்கு டும்பம் பதிவிட்டு வேறாய் வாழ்வள்
கந்தனை யின்ற மாதே கழறின மொழிகுன் றாது.

32. இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் ஜாதக ருடைய தாயார் என்று சொல்லுகிறோம். இவளுடைய நாத்தனா ருடைய சாபம் இவளை வந்து அடைந்தது. இவள் தன்னுடைய பிள்ளை யின் குமாரத்தியினிடம் வாழ்பவளாவள். இவள் தன்னுடைய தாயா ருடைய குடும்பத்தாருடன் வாழாமல் வேறுகவிருந்து வாழ்வாள். முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய தாயாரது மறு ஜன்மமும் மரண காலமும்

33. மறுஜென்ம மவ்வூர் கீழ்ப்பால் வளமுள பேரூர் தன்னில்
உறைகுவாள் சத்திரியச் சேயாய் உரைக்கிறோ மன்பா
[ரூரில்
பெருஆடி மாதம் தன்னில்.....
(இதற்கு மேல் மூலமான ஓலையில் இல்லை)

33. ஜாதகருடைய தாயார் தன்னுடைய மறு ஜன்மத்தில் தன் னுடைய கிராமத்திற்குக் கிழக்குத் திக்கிலுள்ள திருப்பேரூர் என்ற கிராமத்தில் க்ஷத்திரியருடைய குலத்திற் பெண் குழந்தையாகப் போய்ப் பிறப்பாள். இவள் ஜாதகருக்கு ஐம்பத்தாருவது வயதில் ஆடி மாதத்தில் இறந்து விடுவாள்.

ஜாதகம் 137

ஜனன கால கிரக நிலை

1. [1]பிறைசனி கன்னி யாகப் [2]பூமகன் [3]துலையி லேற
குரு[4]சாடி [5]புகரும் [6]மானில் குடிபுதன் [7]ரவியு [8]மேரு
[9]கருங்கோளும் [10]நந்தி யாக கனமிலா [11]தெறுக்கால் கேது
[12]அரியது ஜென்ம மாக அறைகுவீர் பலனைத் தானே.

1. சந்திரனும் சனியும் கன்னியிலும், அங்காரகன் துலாத்திலும், குரு கும்பத்திலும், சுக்கிரன் மகரத்திலும், புதனும் சூரியனும் தனுசிலும், இராகு ரிஷபத்திலும், கேது விருச்சிகத்திலும் நின்று, ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இருந்தால் பலாபலன் கணக்குச் சொல்லுவீர்.

கிரகநிலை

		ராகு	
குரு	இராசி சக்கரம்		
சுக்கிரன்			லக்கினம்
புதன் சூரியன்	கேது	அங்காரகன்	சந்திரன் சனி

ஜனன நாட்டுச் சிறப்பு

2. தானே ஆண்பால் ஜெனனமுறும்
ஜனிக்கு மில்லந் தென்வாடை
மானே கீழ்மேல் வீதியது
மருவுங் கூரை சிற்றூராம்

(நட்சத்திரம் தென்படவில்லை; தசையும் தென்படவில்லை; ஓலையுஞ் சிதைந்துளது.)

1. சந்திரன்
2. அங்காரகன்
3. துலாம்
4. கும்பம்
5. சுக்கிரன்
6. மகரம்
7. சூரியன்
8. தனுசு
9. இராகு
10. ரிஷபம்
11. விருச்சிகம்
12. சிம்மம்

ஆனை முகத்தோன் மேற்கிலும்
அரிவாக னத்தாள் வடதிக்கில்
தேனே யிந்த வடையாளஞ்
ஜெனிப்பா னென்றேந் தேவியரே.

2. ஆண் குழந்தை பிறக்கும். பிறந்த வீடு தென்னண்டை வாடையில் இருக்கும். பிறந்த தெருவு கிழக்கு மேற்குத் தெருவாகும். பிறந்தவீடு கூரை வீடாகும். பிறந்த ஊர் சிறிய கிராமமாகும். விநாயகக் கடவுளின் கோயில் மேற்குத் திக்கிலும், காளியம்மன் கோயில் வடக்குத் திக்கிலும் இருக்கும். இவ்விதமான அடையாளங்கள் உள்ளவிடத்தில் ஜாதகர் பிறந்தார் என்று சொல்லுகின்றேரும். பார்வதியம்மையே!

ஜாதகருடைய தகப்பனருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

3. அறவே தந்தை காயோகம்
அணையும் பாரி புத்திரர்கள்
திறமாய் துணைவர் யோகமுமே
ஜெனித்தோர் மூன்பின் ஜென்மங்கள்
உரைக்கக் கேண்மோ தந்தைதுணை
ஓங்கும் ஆண்பால் மூன்றென்றேரும்
அரிவை யவ்வார் தீர்க்கமுறும்
அணுகா மற்றை யவையெல்லாம்.

3 ஜாதகருடைய தகப்பனர் தாயார் மனைவி புத்திரர்கள் சகோதரங்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும் முன்ஜன்மம் பின் ஜன்மம் ஆகிய இவைகளையும் சொல்லுகின்றேரும் கேட்பீராக. ஜாதகருடைய தகப்பனருக்கு மூன்று சகோதரர்களும் மூன்று சகோதரிகளும் நீண்ட ஆயுள உடையவராவர். மற்ற சகோதரங்கள் எல்லாம் இறந்துவிடுவார்கள்.

4. ஆமே தந்தை பின்ஆண்பால்
அறைந்தேன் அவர்கள் சேதிதனை
நேமில் முன்னேன் மானிறத்தன்
நிருப நிஷ்டன் முன்கோபி
காமன் தனையே விருப்பமுளன்
கட்டு வார்த்தை தான்புகல்வன்
பூமி விருத்தி செய்திடுவன்
பெரிதாய்ச் செட்டும் தான்செய்வன்.

4. ஜாதகருடைய தகப்பனரின் சகோதரர்கள் இளைய சகோதரர்களாவார்கள். இவர்களுடைய விஷயங்களைச் சொல்லுகின்றேன். முதலாவது இளைய சகோதரன் மானிறத்தையுடையவர். அரசர்களுக்

குப் பிரியமானவர். முன்கோபத்தையுடையவர். காமாக்கினியை உடையவராவர். புனைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தை களையுஞ் சொல்லுவார். இவர் நிலங்களைப் பயிரிடுவார். பெரிய வியா பாரத்தையுங்கூடச் செய்வார்.

5. புகழ்ந்தோர் தனக்கு வுபகாரி
பேதை தன்னுல் நிந்தையுளன்
அகமும் பின்னுல் செய்திடுவன்
அற்ப வஸ்து தான்கொள்வன்
பகையோர் தம்மை நசிக்கவைப்பன்
பாரி ஒன்றே தீர்க்கமுறும்
வகையாய்ச் சுதராண் ரெண்டென்றேம்
வார்த்தை தவறுன் யூகையுளன்.

5. ஜாதகருடைய தகப்பனுரின் முதலாவது சகோதரர் தன்னைப் புகழ்ந்து பேசினவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் தன் னுடைய மனைவியால் அபவாதத்தை யடைபவராவர் இவர் பின்னுல் ஒரு வீட்டைக் கட்டுவார். இழிவான தாழ்ந்த வஸ்துக்களை அடைவார் அல்லது சாப்பிடுவார். இவர் தன்னுடைய எதிரிகளை நாசஞ்செய்வார். இவருக்கு ஒரே மனைவியுண்டு. இவள் நீண்ட ஆயுளை உடையவ ளாவள். இவருக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு என்று சொல்லுகின் றேம். இவர் தன்னுடைய வார்த்தைகளைத் தவறிடாமல் காப்பாற்று வார். விவேகமுள்ளவராவர்.

6. வயதுந் தீர்க்க மென்றுரைப்போம்
மருவும் பின்னேன் சேதிதனை
தயவா மனத்தன் கல்வியிலான்
சதுஷ்பா தங்க ளிச்சையுளன்
கயல்மாத ராலே மனக்குறையன்
கபட மில்லான் கிருஷி யுளன்
அயலார் மதிப்புக் கொண்டிடுவன்
அன்ன மீவன் அரிநிறத்தான்.

6. தகப்பனுரின் முதலாவது சகோதரர் தீர்க்காயுளை உடையவர் என்று சொல்லுகின்றேம். இரண்டாவது சகோதரர் தயவுள்ள மனத்தையுடையவராவர். வித்தையில்லாதவர். கால் நடைகளின் பேரில் ஆசையையுடையவர். ஸ்திரீகளால் மனக்கஷ்டத்தையுடைய வர். வஞ்சனை, கள்ளம் ஆகிய இவைகளில்லாதவர். விவசாயத் தொழிலைச் செய்வார். பிறர் இவரைக் கௌரவப்படுத்துவார்கள். பிறருக்குச் சாப்பாடு போடுவார். மகாவிஷ்ணுவின் நிறத்தையுடை வர்.

7. தானே சல்லிய மில்லானும்
தந்திர வார்த்தை மனையாலே
ஈன வார்த்தை யேற்பானே
யெய்து மதலை யாணிரண்டாம்
மானேர் விழிபெண் ணென்றேயா
மறைந்த மூன்றுந் தீர்க்கமுறும்
பூனே சுதர்க ளிவன்மேலாய்
பொருந்துபல் யோகம் போற்றிடவே.

7. ஜாதகருடைய தகப்பனரின் இரண்டாவது சகோதரர் கடன் இல்லாதவர். தந்திரமான உபாயமான வார்த்தைகளை உடையவர். தன்னுடைய மனைவியால் இழிவான வார்த்தைகளைக் கேட்பவராவர். இவருக்கு இரண்டு பிள்ளைகளும் ஒருபெண்ணும் ஆக மொத்தம் மூன்று பேர்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாவர். இவருடைய பிள்ளைகள் சிலர் மேலான அந்தஸ்திலிருப்பார்கள். அதிகமான யோகத்தையும் அனுபவிப்பார்கள்.

8. இடவே யவன்பின் னிருசொல்லன்
ஈகை கொஞ்சம் தந்திரமொழி
விடம்போல் கோபம் பயிர்த்தொழிலே
விரும்புந் துருசா நடையுடையன்
கடனே கொள்ளான் சமயோகம்
கழறும் பாரி யொன்றேயாம்
திடமாய்ச் சுதரா ணிரண்டென்றேரும்
சேல்போல் விழியா ரவ்வாறே.

8. ஜாதகருடைய தகப்பனரின் மூன்றுவது சகோதரர் இரண்டு விதமான வார்த்தைகளை உடையவர். சிறிது தயாள குணமும் கொடுக்குந் தன்மையும் உடையவர். உபாயமான வார்தைகளைச் சொல்லுவார். இவர் பாம்பைப்போலக் கோபத்தையுடையவர். விவசாயத் தொழிலையே விரும்புவார். கெட்ட நடத்தையையுடையவர். இவர் கடன் வாங்க மாட்டார். நடுத்தரமான யோகத்தையுடையவர். ஒரே மனைவியை யுடையவர். இரண்டு பிள்ளைகளையும் இரண்டு பெண்களையும் உடைய வராவர்.

ஜாதகருடைய தகப்பனரது குணதிசயங்கள்

9. வாறே வயதுந் தீர்க்கமுறும்
மருவி வாழ்வர் விரோதமின்றி
பாரில் பெண்பால் சேதியெல்லாம்
பகர்வோ மிரண்டில் பிதாசேதி

கூறுஞ் சொல்லே சுகமாகும்
கோபம் காணுன் வா.....மிலான்
தீரமில் லாதான் சமயோகம்
செல்வான் சிலநாள் வெளியூரில்.

9. தகப்பனுருடைய மூன்றுவது சகோதரர் தீர்க்காயுஷு உடைய வர். தன்னுடைய சகோதரர்களுடன் விரோதமில்லாமல் ஒற்றுமையாய் இருந்து வாழ்வார். தகப்பனுருடைய எல்லா சகோதரிகளினுடைய விஷயங்களை இரண்டாவது பாகத்தில் சொல்லுகின்றோம். ஜாதக ருடைய தகப்பனரின் விஷயங்களைச் சொல்லுகின்றோம். இவர் சொல் லுகின்ற வார்த்தைகள் இனிமையானவையாகும். இவர் கோபமில்லா தவர். இவர் தைரியமில்லாதவர். நடுத்தரமான யோகத்தையுடையவர், வெளியூரில் சிலநாள் வாசஞ் செய்வார்.

10. இல்லஞ் செய்யான் தனம்சேர்க்கான்
இடர்செய் யாதா னெருவருக்கும்
நல்லோர் நேசங் கொள்ளாதான்
நாட்டில் வறுமை சுகமுடையன்
மல்லில் செல்லான் சஞ்சலத்தன்
மறவான் செய்த வுபகாரம்
அல்லல் மத்திய வயதினிலே
அணுகுஞ் சல்லியம் கொஞ்சமுமே.

10. ஜாதகருடைய தகப்பனர் வீட்டைக் கட்டமாட்டார். பணத் தைச் சேர்த்துவைக்கமாட்டார். யாருக்கும் துன்பத்தையும் இடைஞ்சலி யும் உண்டுபண்ணமாட்டார். இவர் நல்லவர்களிடத்தில் சினேகஞ் செய்துகொள்ளமாட்டார். இவர் சண்டைக்குப் போகமாட்டார். மனத் தில் கவலையுடையவர். பிறர் செய்த நன்றியை மறக்காதவராவர். இவ ருக்கு மத்திய வயதில் கஷ்டங்கள் உண்டு, சிறிது கடன் ஏற்படும்.

11. கொஞ்ச முண்டாய் நிவர்த்தியெய்தும்
கூடான் பெரியோர் மரியாதை
பஞ்சு மனமாம் வஞ்சியரால்
பகருங் குடும்ப மென்றுரைப்போம்
மிஞ்சி யுரைப்பான் குணத்தனுக்கு
விளம்புமிரண்டாஞ் ஜெனனமென்றோம்
தஞ்ச மாக விவன்குணத்தை
சாற்றக் கேண்மோ சங்கரியே.

11. ஜாதகருடைய தகப்பனருக்குக் கொஞ்சங் கடன் ஏற்பட்டு அது நிவர்த்தியாகிவிடும். இவர் பெரியோர்களிடத்தில் கௌரவத்தை

அடையார். இழிவான தாழ்ந்த மனத்தையுடையவர். ஸ்திரீகளால் குடும்ப விஷயங்கள் நடத்தப்படும். அதிகமாகப் பேசுவார். இப்படிப் பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த ஜாதகர் இரண்டாவது குழந்தையாகப் பிறப்பார். ஜாதகருடைய குணதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய குணதிசயங்கள்

12. சங்கை யாகவே தான்புகல்வேன்
சமர்த்தாய் வார்த்தை கல்வியிலான்
பங்கைய ரேகை கரத்திலுறும்
பாரி இருஷி தான்செய்வன்
அங்கம் வளர்ச்சி யில்லாதான்
அதிக வாசை யுடையோனும்
மங்கை மோக முடையவனும்
மாடா டுகள்மேல் பிரியமுளன்.

12. ஜாதகர் அச்சமாகவும் சந்தேகத்துடனும் பேசுவார். சாமர்த்தியமாக வார்த்தைகளை உபயோகப்படுத்துவார். வித்தையில்லாதவர். இவருடைய உள்ளங்கைகளில் தாமரை ரேகையுண்டு. பெரிய விவசாயத்தொழிலைச் செய்வார். பூர்ணமாக வளர்ந்த தேகத்தையுடையவரல்லர். இவர் ஆசை அதிமாகவுடையவர். இவர் தன்னுடைய மனைவியினால் யோகத்தை அடைவார். கால்நடைகளின் மேல் பிரியமுள்ளவராவர்.

13. உள்ள முரையான் தன்தொழில்மேல்
உறுதி வார்த்தை உகமைசொல்வன்
பள்ளு பறைகள் பின்சேர்ப்பன்
பசித்தோர் முகத்தைப் பாராதான்
சள்ளை யாதி லுடையவனும்
சாற்று மீரே ழாண்டின்மேல்
துள்ளும் யோகம் கடனில்லான்
துருசாய் நடையு முடையானே.

13. ஜாதகர் தன்னுடைய மனத்திலுள்ளதைச் சொல்லமாட்டார். தன்னுடைய தொழிலில் நிபுணரான வார்த்தைகளை உடையவர். உபமானம் உபமேயங்களுடன் அலங்காரமாகப் பேசுவார். இவர் தன்னுடைய பிற்காலத்தில் பள்ளுபறை என்கிற வாத்தியம், மேளம் தாளம், பிரபந்தம், ஆள்படை ஆகிய இவைகளை அடைவார். இவர் பசித்தோர்களுடைய முகத்தைப்பார்த்துச் சகிக்கமாட்டார். அஃதாவது இவர்களுக்கு உடனே சாப்பாட்டைப் போடுவார். தன்னுடைய வாழ்

ளின் முற்காலத்தில் கஷ்டத்தையுடையவராவார். இவருக்குப் பதினொன்கு வயதிற்குமேல் அதிக யோகமுண்டாகும். கடன்வாங்கமாட்டார். கெட்ட நடவடிக்கையும் உடையவர்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதர பாவம்)

14. இன்னவன் தூணவர் தம்மை இயம்பவாண் பலமு ருது
கன்னிகை யிரண்டு தீர்க்கம் கனக்காது மற்ற வென்ரேம்
மன்னிய பராசர் சொல்ல மாமுனி கேட்க வுற்ரூர்
அன்னவன் தூணையாண் காணு னச்சங்கை சொல்லு
[மென்ன,

14. ஜாதகருக்கு சகோதரங்களைப்பற்றிச் சொல்லுகின்ரோம். சகோதரர் உண்டாவதற்குப் பலம் இல்லை. இவருக்கு இரண்டு சகோதரிகள் நீண்ட ஆயுளை உடையவர்கள். இவர்கள் செழிப்பாக விருக்கமாட்டார்கள் என்று சொல்லுகின்ரோம். இவ்விதமாகப் பராசர மகரிஷியானவர் சொல்லவே, மாமுனி என்ற வசிஷ்டர் தடுத்துக்கேட்கின்ரூர். இவருக்குச் சகோதரர் கிடையா என்று சொன்னீரே இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே பராசரர் பதில் சொல்லுகின்ரூர்.

15. மங்கலன் மூன்றில் நிற்க மழைக்கோளு மாறில் சேரத்
தங்காது தூணையாண் தானும் சத்திமார் குணத்தைச்
[சொல்வேன்
நங்கையுஞ் சோடி யாகும் நல்கிடும் வரன்தென் மேல்பால்
அங்கவள் மெலிந்த தேகி அழகுளாள் பின்யோ கத்தாள்

15. மங்கலன் என்ற அங்காரகன் மூன்ருவது பாவத்தில் இருப்பதாலும் மழைக்கோள் என்ற சுக்கிரன் ஆருவது வீட்டில் இருப்பதாலும் சகோதரன் நிலைத்திருக்கமாட்டார், அ.·.தாவது இறந்து விடுவார். ஜாதகருடைய சகோதரிகளின் குணத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். முதலாவது சகோதரி விவாகஞ் செய்துகொள்வாள். இவளுக்குப் புருஷன் தென்மேற்கிலிருந்து வருவார். இவள் இளைத்த ஒல்லியான தேகத்தையுடையவள். அழகாக இருப்பாள். இவள் தன்பிற்காலத்தில் யோகத்தையுடையவளாவாள்.

குறிப்பு:—மூன்றில் அங்காரகன் இருந்தால் சகோதர தோஷமுண்டென்று பலதீபிகை பதினைந்தாவது அத்தியாயம் இருபத்தாருவது சுலோகத்திற் கண்டிருப்பதைக் கவனிக்கவும்.

16. பால்பாக்கிய முடைய ளாகும் பகருமூன் கோபி யாவள்
சாலவே சுதராண் ரெண்டு சத்தியு மூன்று தீர்க்கம்
காலத்தை யறிந்து ரைப்பள் கபடிலாள் வறுமை காணுள்
ஏலவே வயது தீர்க்கம் இயம்பின மொழிகுன் ருது.

16. ஜாதகருடைய முதலாவது சகோதரி பால்பாக்கியத்தை உடையவ்ளாவள். இவளுக்கு இரண்டு குழந்தைகளும் மூன்று பெண்களும் நீண்ட ஆயுளையுடையவராவர். இவள் காலப்போக்கை நன்றாக வறிந்து கொண்டு அதற்குத் தகுந்தாற்போலப்பேசுவாள். கள்ளம் வஞ்சனை ஆகிய இவைகளை உடையவளல்லள். தரித்திரத்தை அடைய மாட்டாள். இவள் தீர்க்காயுளை உடையவளாவள். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலங்கள் தவறிடாமல் நடக்கும்.

17. பின்துணை சேதி கேளாய்ப் பேதைக்கு வானும் கீழ்பால்
அன்னவள் யோக சாலி அன்புள மனத்த ளாகும்
தன்சொல்லே மேன்மை யாக சாதிப்பாள் யூகை சாலி
மன்னிய குழவி யாண்பால் மருவிடு மொன்றே யாக.

17. ஜாதகருடைய இரண்டாவது சகோதரியின் விஷயங்களைச் சொல்லுகின்றோம். கேட்பீராக! இவளுடைய புருஷன் கிழக்குத் திக்கிலிருந்து வருவார். இவள் யோகத்தையுடையவள். பிரியமுள்ள மனத்தை யுடையவளாவள். இவள் தான் சொல்லிய வார்த்தைகளே மேன்மையானவைகள் என்று சொல்லி வாதித்து நிலைநாட்டக் கூடியவளாவள். விவேகமுடையவள். இவளுக்கு ஒரே ஒரு பிள்ளை உண்டாகும்.

ஜாதகருடைய தாயாரது குணதிசயங்கள்

18. பெண்ணது மூன்று மாகும் பேதையுஞ் சுகமாய் வாழ்வள்
திண்ணமா யன்னை சேதி செப்புவோ மாஞ்சி வப்பள்
வண்ணமாய்ப் பணிகள் காணுள் மருவிடும் பித்த சூடு
விண்ணவர் பத்தி பூணன் வீண்வம்பு புகலா ளாகும்.

18. ஜாதகருடைய இரண்டாவது சகோதரிக்கு மூன்று பெண்கள் உண்டாவார்கள். இவள் சௌக்கியத்துடன் வாழ்வாள். ஜாதகருடைய விஷயங்களைப் பற்றி உண்மையாகச் சொல்லுகின்றோம். இவள் அழகான ஆபரணங்களை உடையவளல்லள். இவளுக்குப் பித்தசூட்டு ரோகம் உண்டாகும். இவள் கடவுள்பேரில் அன்பில்லாதவளாவள். வீணுகச் சண்டையை உண்டு பண்ணக்கூடிய வார்த்தைகளைச் சொல்லமாட்டாள்.

19. முன்கோபம் பின்பு சாந்த
முரைக்கிறேந் துணைவ ரேழில்
கன்னிமா ரைந்து வென்றோம்
காளையு மிருவர் தீர்க்கம்
அன்னவர் இல்லம் தெற்கு
அருகினி லென்று சொல்வோம்
மன்னிய மாமன் சேதி
யறைகிறோ முன்னை னுக்கு ;

19. ஜாதகருடைய தாயார் முன்கோபமுடையவள். பின்பு இது சாந்தமடையும். இவளுக்கு ஏழு சகோதரங்கள் மொத்தம் உண்டு. இவர்களில் ஐந்து பேர்கள் சகோதரிகளாவார்கள். இவர்கள் நீண்ட ஆயுளை உடையவர்கள். இவர்களுடைய வீடு தெற்கில் சமீபத்தில் இருக்கும் என்று சொல்லுகின்றோம். மாமன்மார்களுடைய விஷயத்தைச் சொல்லுகின்றோம் மூத்த மாமனுக்கு ;

20. மதலைகள் காண லுவன் மானிலங் கிருஷி செய்வன்
பதர்வார்த்தை சொல்லா லுவன் பரவுப காரி யாவன்
சதிசெய்யா மனத்த லுகும் சாந்தவா னிருஸி வப்பன்
மதிதலம் பேத மாகு மறைகிறே மவன்பின் வந்தோன்.

20. பிள்ளைகள் கிடையா. இவர் பெரியபெரிய நிலங்களைப் பயிரிடுவார். இவர் அவசரமானதாகவும் இழிவாகவும் உள்ள வார்த்தைகளைச் சொல்லமாட்டார். பிறருக்கு உதவியைச் செய்வார். இவர் கெடுதியை விளைவிக்கா மனத்தை உடையவராவர். சாந்தமானவராவர். மாநிறத்தையுடையவர். இவர் தன்னுடைய ஸ்தலத்தை விட்டு வேறு இடத்திற்குப் போய்விடுவார். இவருடைய இளைய சகோதரரைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

21. புத்தியுஞ் சபல மாவன் பேதையர் மோகங் கொள்வன்
குத்தமா மனத்த லுவன் கோதையு மொன்றே யாகும்
புத்திர ராண்பா லொன்று பெண்ணுமவ் வாறு தீர்க்கம்
வித்தகர் ஒன்றுய் வாழ்வர் விருதருங் கேட்க லுற்றார்.

21. ஜாதகருடைய இரண்டாவது அம்மான் நிலையில்லாத புத்தியையுடையவர். இவர் ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவர். கெடுதியான மனத்தையுடையவர். இவருக்கு மனைவி ஒருத்தியேயாவள். இவள் தீர்க்காயுளை உடைய்வள். இவருக்கு ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் நீண்ட ஆயுளை உடையவர்களாவர். இவர் தன்னுடைய சகோதரருடன் கூடியிருந்து வாழ்வார். இவ்விதமாகச் சொல்லவே விருதர் என்ற முனிவர் கேட்கின்றார்.

22. மாதுலன் முன்னே னுக்கு மதலைகள் காண னென்றீர்
கோதிலா வேறு மாது கொண்டதால் மதலை யுண்டோ
பாதகி காண லுகும் பத்திய குடும்பஞ் செய்வோர்
ஓதுவீர் விபர மாக உற்றதோ ரிளையோன் புத்திரன்.

22. ஜாதகருடைய முதலாவது அம்மானுக்குப் பிள்ளைகளை யாது என்று சொன்னீரே. இவர் இன்னொரு மனைவியை அடைந்தால் பிள்ளை உண்டாகுமோ இல்லையோ என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே பராசரர் பதில் சொல்லுகின்றார். இவருக்கு இரண்டாவது மனைவி சம்பவிக்கமாட்டாள். இவ்விதமாகப் பதில் சொல்லவே இவ

ருடைய குடும்ப விஷயங்களை யார் கவனிப்பார் என்பதை விபரம்சுக் சொல்லுவீர் என்று கேட்க, பதில் சொல்லுகின்றார். இவருடைய இளைய சகோதரருடைய மகன்;

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

23. செய்குவா னென்று சொல்வோம்
சேதியைப் பின்பா கத்தில்
அய்யமில் லாமல் சொல்வேன்
அன்னையின் பூர்வங் கேளாய்
பய்யர வணிந்த மாரி
பரவு.....டன்னில்
தையலும் ரெட்டி வம்சம்
ஜனித்தவ ளென்று சொல்வோம்.

23. குடும்பகாரியங்களைச் செய்வார் என்று சொல்லுகின்றோம். மற்ற விஷயங்களைப் பின்னல் சொல்லுகின்றோம். ஜாதகருடைய தாயாரது முன் ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம் கேட்பீராக. பாமபைத்தரித்துக் கொண்டிருக்கின்ற மாரியம்மன் இருக்கின்றவிடத்தில் ஒரு ரெட்டியாருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

24. சுதர்களும் வரனு முண்டாய்ச் சுகமுள குடும்பி யாகி
யதிபதி மரண மாகி மறையவன் வரையப் பட்டு
இதுகுலம் தன்னி லுதித்தாள் இவள் பின்ஜன் மங்கள்
[சொல்வேன்
அதிதிகள் வாழு கின்ற அருணைக்குத் தென்பா லாக.

24. ஜாதகருடைய தாயார் தன் முன் ஜன்மத்தில் புருஷன் மக்கள் ஆகிய இவர்களை உடையவளாகிச் சௌக்கியமான ஒரு குடும்பினியாகிப் பிறகு இறந்து பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்திய குலத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். இவளுடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகின்றேன். முனிவர்களும் பரதேசிகளும் வாழ்கின்ற அருணை என்ற திருவண்ணாமலை க்ஷேத்திரத்திற்குத் தெற்கில்;

ஜாதகருடைய தகப்பனுருடைய முன்ஜன்மம்

25. பேரூரில் கங்கை சேயாய்ப் பிறப்பளா மென்று
[சொல்வோம்
நாரியுஞ் சுகமாய் வாழ்வள் நாதனுர் பத்தி பூண்பள்
வீரியன் தந்தை பூர்வம் விளம்புவோ மவனூர் மேற்கில்
பாரிய ஊரி லேதான் பிறந்தனன் செங்குந்த னாக.

25. ஒரு பெரிய கிராமத்தில் வேளாளர் குலத்திற் போய்ப் பிறப் பாள் என்று சொல்லுகின்றோம். இவள் சௌக்கியமாக வாழ்வாள். கடவுளின்பேரில் அன்புடையவளாக விருப்பாள். ஜாதகருடைய தகப்பனரின் முன் ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். இவர் அவனூ ருக்கு மேற்கில் ஒரு பெரிய கிராமத்தில் செங்குந்தர் என்ற கைக்கோளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்தார்.

26. கலிசெய்து ஜீவித் தேதான் காதலி மதலை யுண்டாய்ப்
பலம்பாவ மின்றி யேதான் பறந்தனன் காலன் பக்கல்
தலைகான்கோன் வரையப் பட்டு ஜனித்தன னிவனே
[யென்றோம்
குலவிய மறுஜன் மத்தைக் கூறுவோம் தாயே யாங்கள்.

26. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய முன் ஜன்மத்தில் கலி என்ற சீலையை, வஸ்திரத்தை நெசவுசெய்து ஜீவித்து வந்தார். இவர் மனைவி மக்களை உடையவராகிப் பலமான பாவம் இல்லாதவராகி இறந்து எமபட்டணத்திற்குப்போய் பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம். இவருடைய பின் ஜன்மத்தைச் சொல்லுகின்றோம், பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரது மறுஜன்மம்

27. மால்மலை மேற்கி லேதான் வருகுவான் ரெட்டி வம்சம்
ஞாலங்க ளதிக முண்டாய் நற்கீர்த்தி யதிகம் பெற்று
சாலவே வாழ்வா னகும் சாற்றின மொழிகுன் றாது
ஆலத்தை யுண்டோன் தேவி யருளிய மொழிகுன் றாவே.

27. ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய மறுஜன்மத்தில் மால் மலைக்கு மேற்கில் ஒரு ரெட்டியாருடைய குலத்திற் போய்ப் பிறப் பார். இவர் அதிக நிலங்களை உடையவராகி அதிகமான நல்ல புகழை யும் பெருமையையும் அடைந்து நன்றாக வாழ்வார். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும். ஆல காலவிஷத்தை விழுங்கின சிவபெருமானுடைய மனைவியாகிய பார்வதி யம்மையே ! நாங்கள் சொல்லிய பலன்கள் தவறிடா.

ஜாதகருடைய தகப்பனரது மரணம்

28. மூப்பது ரெண்டு ஆண்டில் மிதுனமாதந் தன்னி
[லேதான்
செப்புவேன் வாய்வி னலே சேருவான் தந்தை தானும்
மூப்பது ஒன்பா னண்டில் முடிவுகள் கூனி மாதம்
தப்பித மன்னைக் கேதான் சாற்றின மொழிகுன் றாது.

28. ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில் மிதுனமாதம் என்ற ஆனி மாதத்தில் இவருடைய தகப்பனார் வாய்வு ரோகத்தினால் இறந்துவிடுவார். ஜாதகருக்கு முப்பத்தொன்பதாவது வயதில் பங்குனி மாதத்தில் இவருடைய தாயார் இறந்துவிடுவாள். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஜாதகருடைய விவாககாலமும் மனைவியின் குணங்களும்

29. உதித்தவன் மணத்தின் காலம்
உரைக்கிறேம் பத்தொன் பானில்
மதிருதல் வடகீழ் தன்னில்
வந்திடுஞ் சிவந்த மேனி
துதிசெய்தோர்க் கன்ன மீவள்
தோகைபோல் சாய லுள்ளாள்
ததிநெய்பால் பாக்கிய முள்ளாள்
தானிள மனத்த ளாமே.

29. ஜாதகருடைய விவாக காலத்தைச் சொல்லுகின்றேம். இவருக்குப் பத்தொன்பதாவது வயதில் வடகிழக்குத் திக்கில் இருந்து இவருடைய அழகான மனைவி வந்து சேருவாள். இவள் சிவப்பு நிறத்தையுடையவள். இவள் தன்னைப் போற்றினவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவாள். இவள் மயிலைப்போன்ற அழகான நீண்ட தேகத்தையுடையவளாவள். தயிர், நெய், பால் ஆகிய இவைகளை உடையவளாவள். இவள் இளகிய தயாள குணமுடைய மனத்தை உடையவளாவள்.

ஜாதகருக்குச் சந்ததிகளும் (புத்திரபாவமும்)
ஜாதகருடைய முன்ஜன்மமும்

30. புத்திர ரிருநான் காகும் போகிடுஞ் சிலவே யென்றேம்
சுத்தமா யாண்பால் ரெண்டு தோகை மவ்வார் தீர்க்கம்
வித்தகன் பூர்வஞ் சொல்வேன் வேதியன் பூசை செய்யும்
பத்திய பேரூர் தன்னில் பிறந்தனன் செக்கா ளுக.

30. ஜாதகருக்கு மொத்தம் எட்டுக் குழந்தைகள் உண்டாவார்கள். சில இறந்துபோய்விடும். இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் தீர்க்காயுளை உடையவர்களாக இருப்பார்கள். ஜாதகருடைய முன்ஜன்மத்தைச் சொல்லுகின்றேன். வேதியன் என்ற பிரமா பூஜை செய்த ஸ்தலமாகிய ஒரு பெரிய கிராமத்தில் செக்காடுகின்ற செட்டியாருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்தார்.

31. மரமாட்டுக் தொழிலி னலே மைந்தனுஞ் சீவித் தேதான்
.....(இதற்குமேல் ஓலையிலில்லை.)

31. இவர் மரத்தைக் கடாய்கின்ற செதுக்குகின்ற வேலையைச் செய்து ஜீவித்துக்கொண்டு.....

ஜாதகம் 138

ஜனனகால கிரகநிலை

1. [1]மதிகன்னி சனியும் [2]கோலாம் [3]மறை[4]சீயம் கேது[5]கண்டு புதன்[6]குச [7]னிரவி [8]வீணை [9]புகர் [10]நந்தி ராகு [11]மானில் இதுவிதக் கோளு நின்று லக்கினம் சிம்ம மாக அதுபல னெவ்வார் சொல்வாய் அத்திரி புகலு கின்றார்.

1. சந்திரன் கன்னியிலும், சனி துலாத்திலும், குரு சிம்மத்திலும், கேது கடகத்திலும், புதனும் அங்காரகனும் சூரியனும் மிதுனத்திலும், சுக்கிரன் ரிஷபத்திலும், இராகு மகரத்திலும் ஆகி, இவ்விதமாகக் கிரகங்கள் இருந்து ஐன்ம லக்கினம் சிம்மம் ஆனால் பலாபலன்கள் எவ்விதமாய் இருக்கும் என்பதைச் சொல்வீர் என்று கேட்க அத்திரி மகரிஷியானவர் பதில் செல்லுகின்றார்.

கிரகநிலை

		சுக்கிரன்	சூரியன் புதன் அங்காரகன்
	இராசி சக்கரம்		கேது
ராகு			லக்கினம் குரு
		சனி	சந்திரன்

உத்திரம் 3-ஆம் பாதம் : சூரியதசை ஹ 2-2-0.

ஜனன நாட்டுச் சிறப்பு

2. இந்தசேய் பிறந்த வீதி யியம்புவோம் கீழ்மேல் வீதி தென்வாடை தென்மேல் மாயோன் சிரமற்றோள்

[வடமேல் தங்கும்

சந்திரன் சடைய ணிந்த சங்கர னதிபாஞ் சாலி முந்திய காளி தானும் மேவிடும் வடகீழ் தன்னில்.

---

1. சந்திரன்
2. துலாம்
3. குரு
4. சிம்மம்
5. கடகம்
6. அங்காரகன்
7. சூரியன்
8. மிதுனம்
9. சுக்கிரன்
10. ரிஷபம்
11. மகரம்

2. ஜாதகர் பிறந்த தெருவு கிழக்கு மேற்குத் தெருவாகும். பிறந்த வீடு தெற்கு வாடையில் இருக்கும். மகாவிஷ்ணுவின் கோயில் தென் மேற்கில் இருக்கும். மாரியம்மனின் கோயில் வடமேற்குத்திக்கில் இருக்கும். சந்திரனைத் தன் ஜடையில் தரித்துள்ள சிவபெருமான் கோயிலும் காளியம்மன் கோயிலும் வடகிழக்குத் திக்கில் இருக்கும்.

3. தந்தியுந் தென்கீ ழாகும் சலக்கரை யருகில் தங்கும்
இந்தநல் லடையா ளத்துள் இலகிய கூரை யில்லம்
விந்தையாய் வடுகர் வர்க்கம் மேவுவா னேழாம்
[ஜென்மம்
சுந்தர நவக்கோ ளாலே சொல்லுவோம் குடும்பச் சேதி.

3. விநாயக்கடவுளின் கோயில் தென்கிழக்குத்திக்கில் இருக்கும். ஒரு ஜலாசயம் அருகில் இருக்கும். இப்படிப்பட்ட நல்ல அடையாளங் களுக்குள்ளே ஒரு சிறப்பில்லாத கூரை வீட்டில் ஜாதகர் தெலுங்க ருடைய குலத்தில் ஏழாவது குழந்தையாகப் பிறப்பார். இவருடைய குடுமபவிஷயங்களை நவக்கிரகங்களினால் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தகப்பனரின் சகோதரங்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் துணைத சத்தில்
ஆணென்று கன்னி ரெண்டு
இந்தவன் ஜனிக்குங் காலை
இதுமூன்றுந் தீர்க்க மெய்தும்
மூத்திய துணை ஆ ணைக
மொழிகிறோம் வேறுயச் செல்வன்
அந்தவன் குணத்தைச் சொல்வேன்
ஆனையின் நிறத்த னவன்.

4. ஜாதகருடைய தகப்பனருடன் கூடப்பிறந்தவர்கள் பத்துப் பேர் ஆவர். இவர்களில் ஜாதகர் பிறக்கும்போது ஒரு சகோதரனும் இரண்டு சகோதரிகளும் ஆக இம்மூன்று பேர்களும் தீர்க்காயுள உடையவர்களாக விருப்பார்கள். தகப்பனருக்கு மூத்த சகோதரன் வேறு குடும்பஸ்தராகப் பிரிந்து போய்விடுவார். இந்த மூத்த சகோ தரருடைய குணதிசயங்களைச் சொல்லுகின்றேன். இவர் யானையைப் போலக் கறுப்பு நிறத்தை யுடையவராவர்.

5. பயிர்த்தொழில் செய்வா னவன் பரஉப காரி யாவன்
நயமுள வார்த்தை கூர்வன் நல்லோர்க்கு நல்லோ னவன்
தயவுள மனத்த னவன் சல்லியங் கொள்ளா னவன்
பயமிலான் பாரி யொன்று பாலர்கள் ஆண்பால் நான்கு.

5. ஜாதகருடைய தகப்பனரின் மூத்த சகோதரர் விவசாயத் தொழிலேச் செய்வார். பிறருக்கு உதவியைச் செய்வார். நயப்பான வார்த்தைகளேச் சொல்லுவார். நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். இவர் கிருபையையுடைய மனத்தையுடையவர். கடன் வாங்கமாட்டார். இவர் பயப்படமாட்டார். இவருக்கு மனைவி ஒருத்தி யாகும். இவருக்கு நான்கு பிள்ளைகள் உண்டு.

ஜாதகருடைய தகப்பனரது குணாதிசயங்கள்

6. கன்னிகை யிருவர் தீர்க்கம்
கழறுவோம் பின்பால் சேதி
தன்தந்தை குணத்தைச் சொல்வேன்
தரணியை விருத்தி செய்வன்
அன்னியர்க் குதவி செய்வன்
அல்பவஸ் துகளு மிஷ்டன்
தன்மனங் கபடு மில்லான்
சாந்தவான் கல்வி யில்லான்.

6. தகப்பனரின் மூத்தசகோதரருக்கு இரண்டு பெண்கள் உண்டு. இவர்கள் தீர்க்காயுளே உடையவராவர். இவர்களுடைய விஷயங்களேப் பின்னுல் சொல்லுகின்றேரும். ஜாதகருடைய தகப்பனரது விஷயங்களேச் சொல்லுகின்றேரும். இவர் நிலங்களேப் பயிரிடுவார். பிறருக்கு உபகாரஞ்செய்வார். அற்பமான இழிவான வஸ்துக்களின் பேரில் ஆசையுடையவர். தன்னுடைய மனத்தில் வஞ்சனே இல்லாதவராவர். சாந்தமானவர், வித்தையில்லாதவராவர்.

7. தந்தைநாள் வறுமை யுள்ளான் தனம்பணி யதிக
[மில்லான்
பிந்தியும் பூமி சேர்ப்பன் பிதுர்மேலாய் வாழ்வா னுகும்
எந்தையே மூன்று கூவல் எய்திடுஞ் சுகபு சிப்பன்
வந்தவர்க் கன்ன மீவன் மாலின்மேல் பத்தி யுள்ளான்.

7, ஜாதகருடைய தகப்பனர் தன்னுடைய பிதுரின் காலத்தில் தரித்திரத்தை உடையவர். தனமும் ஆபரணங்களும் அதிகமாக வில்லாதவராவர். பிறகு இவர் நிலங்களேச் சம்பாதித்துச் சேர்த்து வைப்பார். இவர், தன்னுடைய தகப்பனரைவிட அதிகமான அந்தஸ்தி லிருந்து வாழ்வார். பாவதியம்மையே! இவர் மூன்று கிணறு களே உண்டுபண்ணுவார். சுகமான சாப்பாட்டையுடையவராவர். இவர் தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப்போடுவார். இவர் மகாவிஷ்ணுவின்பேரில் அன்புடையவராவர்,

8. இனபந்தை யாத ரிப்பன்
இடரென்றோர்க் குதவி செய்வன்
வினையதை யொருவர்க் கெண்ணன்
விருந்தினர் தம்மைக் காப்பன்
சினமுண்டு வெளிக்காட் டாதான்
செய்நன்றி மறவா னுவன்
நினைவதை முடிப்பா னுவன்
நீத்தோர்க்கு வன்ன மீவன்.

8. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய பந்துக்களைக் காப்பாற்றுவார். கஷ்டத்தை அனுபவிக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் கெடுதியை யாருக்கும் நினைக்க மாட்டார். விருந்தாளிகளைக் காப்பாற்றுவார். இவர் கோபத்தையுடையவர். ஆனால் இதை வெளியே காண்பித்துக்கொள்ளமாட்டார். பிறர் இவருக்குச்செய்த உதவியை மறக்காதவராவர். இவர் நினைத்த காரியத்தைச் செய்துமுடிப்பார். பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போடுவார்.

9. மாநிறஞ் சமதே கத்தோன் மறித்துரை யதிகங் கூறுன்
தேன்மொழி பகர்வா னுவன் சீர்மறை பகையு மெய்தும்
ஊனமில் லாத தேகி உறப்பொடு புளிப்பி லிச்சை
யீனமாங் குணங்க ளில்லா னீச்வரி கேட்டி டாயே.

9, ஜாதகருடைய தகப்பனார் மாநிறமானவர். நடுத்தரமான தேகத்தையுடையவர். இவர் தடுத்து அதிகமாகப் பேசமாட்டார். இவர் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவார். வேதங்களின்பேரில் விரோதத்தையும் அறுவெறுப்பையுமுடையவர். இவர் அவயவக் குறைவில்லாத தேகத்தையுடையவர். காரத்தின் பேரிலும் புளிப்பின் பேரிலும் பிரியமுள்ளவர், இழிவான குணத்தையுடையவரல்லர். பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய விஷயங்களும் சகோதரங்களும்

10. சொன்னவிக் குணத்தா னுக்குத்
தோகைய ரிருவர் தம்மில்
பின்மனை யாளுக் கின்னோன்
பிறப்பனு மிந்தப் பாலன்
தன்துணை யாண்பா லொன்று
சத்திமார் நான்கு தீர்க்கம்
முன்துணை யாண்பா லாக
மொழிகிறோங் குணத்தைச் சொல்வோம்.

10. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனருக்கு இரண்டு மனைவிமார்களில் இரண்டாவது மனைவிக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருக்கு ஒரு சகோதரனும் நான்கு சகோதரிகளும் நீண்ட ஆயுள உடையவர்களாக விருப்பார்கள். இந்தச் சகோதரர் மூத்த சகோதரராவார். இந்தச் சகோதரருடைய குணாதிசயங்களைச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மூத்தசகோதரருடைய விஷயங்கள்

11. யானையி னிறத்த னுவ னறப்பரை யுறவு கொள்ளான்
பான்மையாய்ப் பேச வல்லன் பலகலை யுணர்வா னுவன்
தானமுந் தரும மிச்சை தரணியால் ஜீவிப் பானும்
ஆனவர் நேசங் கொள்வ னுவுகள் விருத்தி யுள்ளான்.

11. ஜாதகருடைய மூத்த சகோதரன் யானை நிறத்தையுடைய வராவர். கீழ்மக்களையும் தாழ்ந்த குணத்தை உடையவர்களையுஞ் சினேகஞ் செய்து கொள்ளமாட்டார். இவர் பக்குவமாகவும் தகுதியாகவும் பேசுபவராவர். பலவிதமான சாஸ்திரங்களை அறிந்தவராவர். இவர் தானஞ் செய்வதிலும் பிரியமுள்ளவர். இவர் நிலங்களினால் ஜீவனஞ் செய்பவராவர். இவர் தனக்கிஷ்டமானவர்களுடன் சினேகஞ் செய்வார். பசுக்கள் விருத்தியை உடையவராவர்.

12. சல்லியங் கொள்ளா னுவன் சம்பத்து வுடைய னுவன்
வல்லியு மொன்றே தீர்க்க மைந்தர்க ளாண்பால் மூன்று
சொல்லுவோங் கன்னி ரண்டு சுகமுள குடும்பி யாவன்
எல்லையை விருத்தி செய்வ னெதிரிக்கு வஞ்சா னுமே.

12. ஜாதகருடைய மூத்த சகோதரர் கடன் வாங்கமாட்டார். செல்வத்தையுடையவராவர். இவருக்கு ஒரே ஒரு மனைவியுண்டு. இவள் தீர்க்காயுள உடையவள். இவருக்கு மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் உண்டு. இவர் சௌக்கியத்தையுடைய குடும்பியாவர். இவர் நிலங்களைப் பயிரிடுவார். அதிகப்படுத்துவார். பகைவருக்குப் பயப்படமாட்டார்.

ஜாதகருடைய மூத்தசகோதரியின் விஷயங்கள்

13. சிலவேநா ளொன்றுய் வாழ்ந்து
செல்லுவான் வேறு கத்தான்
வதிபதி துணைவி சேதி
யறைகிறே மூத்தோள் தானும்
அதிகபுத் திகளு மூண்டு
வன்னமுன் னன்னை பின்னென்
வதிபதி மாலை பூண்பள்
மறித்துரை கூறு ளாவள்.

13. ஜாதகருடைய சகோதரர் கொஞ்சகாலம் ஏக குடும்பஸ்தராக விருப்பார். பிறகு வேறு குடும்பஸ்தராகப் பிரிந்துபோய்விடுவார். ஜாதகருடைய முதல் சகோதரியினுடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம். இவள் அதிகமான அறிவுடையவள். இவள் தன்னுடைய தாயாருக்கு மூத்த தாயாருடைய இளைய சகோதரனை விவாகஞ் செய்து கொள்ளுவாள். இவள் தடுத்துப் பேசமாட்டாள்.

14. அந்தமான் சிலநாள் செல்வ ளவனியில் வறுமை காணுள்
தன்வரன் மனம்போல் வாழ்வள் ஜனவுப காரி யாவள்
தந்தையி னில்லந் தன்னில் தான்சில நாட்கள் வாசம்
வந்திடுஞ் சுதரா ணிரண்டு மங்கையு மவ்வா றுமே.

14. ஜாதகருடைய முதல் சகோதரி அந்தமானுக்குப் போய்ச் சில நாள் அவ்விடம் இருப்பாள். இவள் தரித்திரத்தை அடைய மாட்டாள். இவள் தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். ஜனங்களுக்கு உபகாரத்தைச் செய்வாள். இவள் தன்னுடைய தகப்பனருடைய வீட்டில் சிலகாலம் வாசஞ்செய்வாள். இவளுக்கு இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் உண்டாவார்கள்.

ஜாதகருடைய இரண்டாவது சகோதரியின் விஷயங்கள்

15. பின்பாகம் விபர மாகப்
பேசுவோந் தாயே கேளு
அந்தவ ளிளையோள் சேதி
யறிவிப்போம் நற்கு ணத்தாள்
தன்மனங் கபடு மில்லாள்
தந்தையில் ஜீவிப் பாளாம்
அன்னையின் துணைவன் தன்னை
யணைகுவாள் மாநி றத்தள்.

15. பின்பாகத்தில ஜாதகருடைய முதல் சகோதரியின் மற்ற விஷயங்களை விபரமாகச் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக. ஜாதகருடைய இரண்டாவது சகோதரியினுடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம். இவள் நல்ல குணத்தையுடையவள். தன்னுடைய மனத்தில் வஞ்சனையையுடையவளல்லள். இவள் தன் தந்தையின் வீட்டில் வசிப்பாள். இவள் தன்னுடைய தாயாருடைய சகோதரனை விவாகஞ் செய்துகொள்வாள். மாநிறமாக விருப்பாள்.

16. அன்னம்போல் சாய லொக்கும்
அடக்கம்பாட் டாளி யாகும்
கன்னிக்குப் பின்பால் யோகங்
கழறுவோம் வறுமை காணுள்

தன்சுத ராண்பா லொன்று
சத்திமார் மூவர் விருத்தி
பின்பாகம் விவர மாகப்
பேசுவோர்க் தாயே கேளும்.

16. ஜாதகருடைய இரண்டாவது சகோதரி அன்னத்தைப்போல அழகான தேகத்தையுடையவளாவள். அடக்கமுள்ளவள். கஷ்டப் பட்டு வேலை செய்பவளாவள். இவள் தன்னுடைய பிற்காலத்தில் யோகத்தையுடையவள். தரித்திரத்தை அடையமாட்டாள். இவளுக்கு ஒரு பிள்ளையும் மூன்று பெண்களும் உண்டு. இவளுடைய மற்ற விஷயங்களைப் பின் பாகத்தில் விபரமாகச் சொல்லுகின்றேம் பார்வதி யம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய மூன்றுவது சகோதரியின் விஷயங்கள்

17. அதற்குப்பின் மாது சேதி யதிககோ பங்க ளுள்ளாள்
வதிபதி மாஞ்சி வப்பள் வரன்மனம் போலே வாழ்வள்
துதிசெய்தோர்க் கன்ன மீவள் சுகதுக்க மூடைய ளாவள்
ததிநெய்பால் குறைவி லாதாள் தன்வரன் கீழ்பால்
[நேரும்.

17. ஜாதகருடைய மூன்றுவது சகோதரியினுடைய விஷயங் களைச் சொல்லுகின்றேம். இவள் அதிகமான கோபத்தை யுடைய வளாவள். இவள் மாந்துளிரின் நிறத்தைப்போன்ற ஒரு விதமான சிவப்பு நிறத்தை யுடையவள். தன்னுடைய புருஷனுடைய மனத் திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். இவள் தன்னைப் போற்றுகின்றவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவாள் இவள் சுக துக்கங்கள் ஆகிய இவை இரண்டையும் கலந்து அனுபவிப்ப வளாவள். இவள், தயிர் நெய் பால் இவைகளைக் குறைவில்லாமல் அனுபவிப்பாள். இவளுடைய புருஷன் கிழக்குத் திக்கிலிருந்து வந்து சேருவார்.

ஜாதகருடைய நான்காவது சகோதரியின் விஷயங்கள்

18. சுதர்களு மாண்பா லொன்று தோகையு நான்கு தீர்க்க
மதிபதி வயது தீர்க்கம் மாதுபின் துணைவர் சேதி
அதிகமாய்க் கோபி யாவள் ஆனையி னிறத்த ளாகும்
விதவித வார்த்தை சொல்வள் வீண்பழி யேற்கா ளாமே.

18. ஜாதகருடைய மூன்றுவது சகோதரிக்கு ஒரு பிள்ளையும் நான்கு பெண்களும் நீண்ட ஆயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவளுக்குத் தீர்க்காயுளுண்டு. ஜாதகருடைய நான்காவது சகோதரியி னுடைய விஷயங்களாவன, இவள் அதிகமான கோபத்தை யுடையவள்.

யானை நிறத்தை யுடையவள். பலவிதமான வார்த்தைகளைச் சொல்லுவாள். வீணை அபவாதங்களை அடையாதவளாவாள்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

19. வரனுமே தென்பா லாகும்
மைந்தர்க ளாண்பால் காணுள்
அரிவைய ரிரண்டு வென்றோம்
அறைகிறோம் பின்பால் சேதி
திருமகன் சேதி கேளாய்
சிவந்தமெய் சமமாங் கல்வி
நரைமல ரிஷ்டங் கொள்வன்
நற்புத்தி பின்யோ கத்தன்.

19. ஜாதகருடைய நான்காவது சகோதரியினுடைய புருஷன் தெற்குத் திக்கிலிருந்து வந்து சம்பவிப்பார். இவளுக்குப் பிள்ளை கிடையாது. இரண்டு பெண்கள் உண்டு என்று சொல்லுகின்றோம். இவர்களுடைய மற்ற விஷயங்களைப் பின்னால் சொல்லுகின்றோம். ஜாதகருடைய விஷயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். கேட்பீராக. இவர் சிவப்பு நிறத்தை யுடையவர். நடுத்தரமான வித்தையை யுடையவர். வாசனையுள்ள புஷ்பங்களின்மேல் ஆசையுடையவர். நல்ல அறிவுடையவர். பின்னால் யோகத்தை யுடையவராவர்.

20. பயிர்த்தொழில் புரிவா னாகும்
பலதானியம் செட்டுச் செய்வன்
நயமுள வார்த்தை சொல்வன்
நாற்காலி விருத்தி யுள்ளான்
அயலார்பொன் னிச்சை யுள்ளான்
அவசர மனத்த னுவன்
பயமிலா னெதிரிக் கஞ்சான்
பார்கிணறு விருத்தி செய்வன்.

20. ஜாதகர் விவசாயத் தொழிலைச் செய்பவராவர். பலவிதமான தான்யங்களும் வியாபாரஞ் செய்வார். நயப்பான வார்த்தைகளைச் சொல்லுவார். கால் நடைகள் இவருக்கு விருத்தியாகும். பிறருடைய சொத்துமேல் ஆசையுடையவராவர். அவசரமுள்ள மனத்தை யுடையவராவர். இவர் பயப்படாதவர். பகைவர்களுக்கு இளைக்க மாட்டார். பார்கிணற்றை உண்டு பண்ணுவார். அல்லது மராமத்து செய்வார்.

21. வறுமைக ளடையா னுவன்
மறித்துரை யதிகம் கூர்வன்
பொரைசொல்வன் சகடு முள்ளான்
பேதைய ரனேகம் சேர்வன்

அரிபத்தி யநேகம் கொள்வன்
அண்டினோர்க் குதவி செய்வன்
விரைவினில் நடக்க வல்லான்
விளம்புவான் தந்திர வார்த்தை.

21. ஜாதகர் தரித்திரத்தையும் கஷ்டங்களையும் அனுபவிக்க மாட்டார். தடுத்து அதிகமாகப் பேசுவார். பிறருடைய பேரில் குற்றத்தைச் சொல்லாதவர். இவர் சவாரி வண்டியை உடையவர். அனேக ஸ்திரீகளிடத்தில் சம்போகஞ் செய்வார். இவர் மகாவிஷ்ணு வின்மேல் அதிகமான அன்பை யுடையவராவர். தன்னிடம் வந்தவர் களுக்கு உபகாரத்தைச் செய்வார். இவர் வேகமாக நடக்கக் கூடியவர். தந்திரமாகவும் உபாயமாகவும் வார்த்தைகளைச் சொல்லுவார்.

22. சொல்லது மேன்மை யாகும்
துரைராசர் பேட்டி கொள்வன்
மல்லுக்குச் செல்லா னகும்
மாடுகள் விருத்தி யுள்ளான்
எல்லையை விருத்தி செய்வன்
இடரென்றோர்க் குதவி செய்வன்
நல்லவர் பலர்க ளாலே
நாட்டினில் புகழு மேற்பன்.

22. ஜாதகருடைய வார்த்தைகள் அங்கீகரிக்கக் கூடியனவாக விருக்கும். பெரிய அரசர்களுடைய தரிசனத்தை உடையவராவர். இவர் சண்டைக்குப் போகமாட்டார். இவருக்கு மாடுகள் விருத்தி யாகும். இவர் நிலங்களை அதிகப்படுத்துவார். பயிரிடுவார். கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கின்றோம் என்று சொல்லுகின்றவர்களுக்கு உப காரஞ் செய்வார். இவர் அநேக நல்லவர்களால் நாட்டில் பெருமையையும் கீர்த்தியையும் அடைவார்.

23. நல்லயில் லங்கள் செய்வன்
நன்மனம் கபடு மூண்டு
நாதனர் பத்தி பூண்பன்
.....
வெள்ளிவெங் கலமும் சேர்ப்பன்
விருந்தோர்மேல் பிரிய னவன்
அல்லல்க ளடையா னவன்
அதிசய வார்த்தை சொல்வன்
வெல்வாயன் பின்னோர் காண
னறைகிறோ மணத்தின் காலம்.

23. ஜாதகர் நல்ல வீடுகளைக் கட்டுவார். நல்ல மனத்தை யுடையவர். வஞ்சனையையும் மர்மத்தையும் உடையவர். கடவுளின்மேல் அன்புடையவராவர். வெள்ளரிச்சாமான்களையும் வெங்கலப் பாத்திரங்களையும் சேர்த்து வைப்பார். விருந்தாளிகளிடம் அன்புடையவராவர். இவர் கஷ்டங்களை அடையமாட்டார். அதிசயமான வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் அதிகமாகப் பேசுஞ் சாமர்த்தியத்தை உடையவர். இவருக்குப் பின்சகோதரர் கிடையா. இவருடைய விவாக காலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணாதிசயங்களும்

24. ஈரொன்ப தாண்டு தன்னில் இவனுக்கு.....
கூறுவோம் துணைவி புத்திரி குறித்ததோர் மாமன்
[பெண்ணை
வீரியன் மணமு டிப்பான் மெல்லியல் சேதி கேளாய்
காரிழை யோக சாலி கணவனுக் கினிய ளாகும்.

24. ஜாதகர் பதினெட்டாவது வயதில் தன்னுடைய சகோதரியின் புத்திரியும் மாமனுடைய புத்திரியுமாகிய பெண்ணை இவர் விவாகஞ் செய்து கொள்ளுவார். இவளுடைய விஷயத்தைச் சொல்லுகின்றோம், கேட்பீராக, இவள் யோகத்தை யுடையவளாவள். தன்னுடைய புருஷனுக்குப் பிரியமானவளாக விருப்பாள்.

25. பாலபாக்கிய முடைய ளாகும் பந்துவுக் கினிய ளாகும்
சீலமு மறத்தி லிச்சை ஜனவுப காரி யாவள்
ஏலவே வயது தீர்க்க மியம்புவார் வசிஷ்டர் தாமும்
நீலிக ளிரண்டு யென்றோம் நேருங்கா ரணங்கள்
[சொல்வாய்.

25. ஜாதகருடைய மனைவி பால் பாக்கியத்தை யுடையவளாவள். பந்துக்களுக்கு இஷ்டமானவளாவள். இவள் நல்லொழுக்கத்தை யுடையவள். தர்மத்தில் பிரியமுள்ளவள். ஜனங்களுக்கு உபகாரத்தைச் செய்பவளாவள். இவள் தீர்க்காயுளை உடையவள். இதன் மேல் வசிஷ்டர் தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் உண்டு என்று சொல்லுகின்றோம். இவ்விதமாக ஏற்படுவதற்குக் காரணங்களைச் சொல்லுவீர் என்று கேட்கவே வசிஷ்டர் பதில் சொல்லுகின்றார்.

26. ஏழினுக் குடையோன் மூன்றி லிருந்திடம் சரமே யாக
தாழ்விலாத் தாரம் ரெண்டு சாற்றினேம் பால னுக்கு
ஏழிடம் குருவும் பார்க்க விரண்டினில் மதியும் நிற்க
ஆழிடம் தாரம் ஒன்று அணுகிடும் தீர்க்க மாக.

26. ஏழாவது பாவத்திற்குடையவராகிய சனி மூன்றாவது பாவத்தில் சராசியில் இருப்பதால் ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் ஏற்படுவார்கள் என்று சொன்னேம். ஏழாமிடத்தைக் குரு பார்ப்பதாலும் இரண்டாமிடத்தில் மதி என்ற சந்திரன் இருப்பதாலும் மனைவி ஒருத்தியாவள். இவளும் நீண்ட ஆயுளை உடையவளாவள்.

குறிப்பு :—"ஏழ் வீட்டினிற் கதிபன் சரத்தினிற்கில் இருமனைவி திரமதிலிருக்க நன்றே" என்று தமிழ் ஜாதகாலங்காரம் அறுநூற்று நாற்பத்தெட்டாவது பாடலில் கண்டிருப்பதைக் கவனிக்கவும்.

27. அதுவின்றி யபிமா னப்பெண்
அணுகிடு முப்பான் மூன்றில்
நதிகுல மாது வென்றோம்
நாயகன் மணம்வேறு காணுன்
சுதர்களு மாண்பால் மூன்று
தோகையு மிரண்டு வென்றோம்
எதுவித மாதுக் 'கேதாம்
இயம்பினீர் புத்திர சங்கை.

27. இந்த விவாகமான மனைவியும் அல்லாமல் ஜாதகருக்கு ஒரு அபிமான மனைவியும் உண்டு. இவள் முப்பத்து மூன்றாவது வயதில் வந்து சேருவாள். இவள் கங்கை குலம் என்ற வேளாள குலத்திய ஸ்திரீயாவள். ஆகையால் ஜாதகருக்கு இன்னொரு விவாகம் கிடையாது. இவருக்கு மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் உண்டு. எந்த ஸ்திரீக்கு இந்தச் சந்ததிகளைச் சொன்னீர் என்று கேட்டார்.

28. அபிமானம் தனக்குப் புத்திர ரணுகாது வென்று
[சொல்வோம்
திபிதையே முதன்மா துக்கு செப்பினேம் புத்திர விருத்தி
அபிமான மணுகும் சேதி யறிவிப்பீர் சங்கை தன்னை
இவனுமுன் பூர்வம் தன்னு லெய்திற்று வந்த மாது.

28. ஜாதகருடைய அபிமான ஸ்திரீக்குச் சந்ததிகள் கிடையா என்று சொல்லுகின்றோம். முதலாவது ஸ்திரீக்குக் குழந்தைகளைச் சொன்னேம். அபிமான ஸ்திரீ வந்து சேருகின்ற விதத்தைச் சொல்லுவீராக. ஜாதகருடைய முன் ஜன்மத்திய வினையினாலே இவள் வந்து சம்பவிப்பாள்.

ஜாதகருடைய முன் ஜன்மம்

29. முன்னவ னிருந்த ஜன்மம்
மொழிகிறேஞ் சோழ நாட்டில்
அன்னவர் சேடர் வம்சம்
அணுகியே மனைவி மைந்தர்

உன்னதக் குடும்பி யாகி
உயர்தூசு செட்டுச் செய்து
இன்னவன் வாழு நாளில்
இயம்புவோம் ஊழி தானே.

29. ஜாதகருடைய முன்ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றேரும். இவர் சோழ தேசத்தில் சேடர் என்ற வேலைக்காரர் ஜாதியில் பிறந்து மனைவி மக்களை உடையவராகியும் மேன்மையான குடும்பியாகியும் சிறந்த சீலை (வஸ்திர) வியாபாரத்தைச் செய்துகொண்டு வாழ்கின்ற காலத்தில் இவருக்கு வந்து சம்பவித்த வினையைச் சொல்லுகின்றேரும்.

30. பஞ்சையா யேழை மாது
பணிசெய்வே னென்று சொல்லிக்
கொஞ்சியே யிவன்பால் சென்று
கோதையைக் காக்க லுற்றான்
வஞ்சியும் சிலஞள் சென்று
மணிதுணி தன்கைக் கொண்டு
மிஞ்சிஞள் வெளியூர் தன்னில்
வித்தகன் தேடிச் செல்ல;

30. ஜாதகரிடம் தன் முன்ஜன்மத்தில் ஒரு ஏழையான ஸ்திரீ போய் வேலையைச் செய்கின்றேன் என்று கெஞ்சிக் கேட்டுக்கொள்ளவே, இவளை இவர் காப்பாற்றிவந்தார். கொஞ்சகாலம் பொறுத்து இவள் திருட்டுத்தனமாக ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டு வெளியூருக்குப் போய்விடடாள். இவளை இவர் தேடிப் பார்த்து;

31. மங்கையைக் காணு தாகி யறைகிறான் சாபம் தானும்
நங்கையும் இல்லம் சென்று நற்பணி செய்த பாவி
பொங்கிய பின்ஜன் மத்தில் பேதையா யுதிப்பா ளென்று
சங்கையாய் தெருத்தூள் விட்டான் சார்ந்தது அந்தத்
[தோஷம்.

31. இந்த ஏழை ஸ்திரீ காணப்படாததால் ஜாதகர் சாபத்தைக் கொடுத்தார், "என் வீட்டிற்கு வந்து வேலைகளைச் செய்துகொண்டிருந்த பாபியாகிய ஸ்திரீ தன்னுடைய மறுஜன்மத்தில் புத்தியில்லாத ஒரு ஸ்திரீயாகப் பிறக்கக் கடவது" என்று சொல்லித் தெருவில் இருந்த மண்தூளை எடுத்துத் தூவினர். இந்தத் தோஷம் இவரை வந்து அடைந்தது.

32. அந்தவன் காலன் பக்கல் அணுகியே பிரமன் லக்கம்
வந்தவ னிவனே யென்றேரும் மாதுமுன் பொருள்ப
[றித்தோள்
இந்ததோர் ஜன்மந் தன்னில் இவளுமே வருவா ளாவள்
முந்திய கடனைத் தீர்க்க மேவுவா ளிந்த மாது.

32. இந்த ஸ்திரீ இறந்து எமபட்டணத்திற்குப் போய் பிரம தேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தவளாவள். இவள் முன்ஜன்மத்தில் ஜாதகருடைய சொத்தை அபகரித்தவளானபடியால் இந்த ஜன்மத்தில் இவள் தன்னுடைய முன்ஜன்மத்திய கடனை நிவர்த்திசெய்ய ஜாதகருக்கு அபிமான ஸ்திரீ யாக வந்து சம்பவிப்பாள்.

ஜாதகருடைய தாயாருடைய குணதிசயங்கள்

33. மாதுரு குணத்தைச் சொல்வேன்
மாநிறஞ் சமதே கத்தள்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை
உள்மனங் கபடு மில்லாள்
பாதக மனமில் லாதாள்
பரிந்துப சாரஞ் செய்வள்
தீதுக ளொருவர்க் கெண்ணுள்
செய்ங்கன்றி மறவா ளாகும்.

33. ஜாதகருடைய தாயாரது குணத்தைச் சொல்லுகின்றேன். இவள் மாநிறத்தை யுடையவள். நடுத்தரமான தேகத்தை யுடையவள். இவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லுவாள். தன்னுடைய மனத்திற்குள்ளே வஞ்சனை இல்லாதவளாவள். இவள் கெட்ட மனத்தை உடையவளல்லள். இவள் வலியவந்து உபசரணையைச் செய் வாள். இவள் யாருக்குங் கெடுதியை நினைக்கமாட்டாள். பிறர் தனக் குச் செய்த உபகாரத்தை மறக்காதவளாவள்.

34 இல்லமுந் தென்பா லாகும்
இவள்துணை யாண்பா லொன்று
வல்லியு மவ்வா றாகும்
மரித்திடு மூன்று யென்றேரும்
அல்லலாம் வெளியூர் செல்வர்
அலைச்சலாய் தன்னூர் வாழ்வள்
புல்குவோம் மாமன் சேதி
புகலுவோங் கேளுந் தாயே.

34. ஜாதகருடைய தாயாருடைய வீடு தென்திழக்கில் இருக்கும். இவளுக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உண்டு. மூன்று

சகோதரங்கள் இறந்துவிடுவார்கள். இவள் கஷ்டத்தை அடைந்து வெளியூருக்குப் போய்விடுவாள். இவ்விடத்தில்கூட கஷ்டங்களை அடைந்து மறுபடியும் தன் கிராமத்திற்குத் திரும்பிப் போய்விடுவாள். ஜாதகருடைய மாமனுடைய விஷயங்களைச் சொல்லுகின்றோம், பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய அம்மான் விஷயம்

35. மால்நிறங் கவடு மில்லான் மறித்துரை யதிகங் கூறான்
பான்மையாய்ப் பேச வல்லான் பாரினில் சீவிப் பானும்
ஈனமில் லாதா னாகும் இல்லம்விட் டேகு வானும்
ஊனமில் லாத தேகி உறுந்துணை தன்னால் கஷ்டம்.

35. ஜாதகருடைய அம்மான் மகாவிஷ்ணுவின் நிறத்தையுடையவர். இவர் வஞ்சனை இல்லாதவர். தடுத்து அதிகமாகப் பேசமாட்டார். இவர் பக்குவமாகவும் தகுதியாகவும் பேசுஞ் சாமர்த்தியத்தை உடையவராவர். நிலங்களினால் ஜீவனஞ் செய்வார். இவர் தாழ்ந்த குணத்தை யுடையவரல்லர். தன்னுடைய வீட்டைவிட்டு வெளியே போய்விடுவார். இவர் அவயவக் குறைவில்லாத தேகத்தை உடையவராவர். இவருக்குத் தன்னுடன் பிறந்தவர்களால் கஷ்டம் உண்டாகும்.

36. மனைவியால் பெருமை யேற்பன்
அவளில்லம் வாழ்வா னாகும்
கனமுள சுதரான் ஒன்று
கன்னிகை மூவர் தீர்க்கம்
இனமதை வெளிக்காட் டாதான்
சுகதுக்க மிரண்டு முள்ளான்
வினையிலாப் பின்பா கத்தில்
விளம்புவோந் தாயே கேளு.

36. ஜாதகருடைய அம்மான் தன்னுடைய மனைவியால் பெருமையை அடைவார். இவர் மனைவியினுடைய வீட்டில் வாசஞ்செய்வார். இவருக்கு ஒரு பிள்ளையும் மூன்று பெண்களும் தீர்க்காயுளை உடையவர்களாக விருப்பார்கள். இவர் தன்னுடைய கோபத்தை வெளியே காட்டிக்கொள்ள மாட்டார். சுகத்தையும் துக்கத்தையும் ஆக இவ்விரண்டையும் கலந்து அனுபவிப்பார். இவருடைய மற்ற விஷயத்தைப் பின்பாகத்தில் சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! கேட்பீராக.

37. அவனுடைத் துணைவி சேதி
அறிவிப்போஞ் சமயோ கத்தாள்
தவசிக ளுறவு கொள்ளாள்
சாந்தமுங் கோப மூண்டு

இவளுக்கு ஆண்பா லிரண்டு
வியம்புவோங் கன்னி நான்கும்
பவமில்லா வுள்ளூர் வாழ்வள்
பணிகளு மில்லா ளாமே.

37. ஜாதகருடைய அம்மானின் சகோதரியினுடைய விஷயங் களைச் சொல்லுகின்றேன். இவள் நடுத்தரமான தேகத்தையுடையவள். பரதேசிகளுடைய சினேகிதத்தை அடையமாட்டாள். சாந்தத்தையும் கோபத்தையும் உடையவள். இவளுக்கு இரண்டு பிள்ளைகளும நான்கு பெண்களும் உண்டு. இவள் உள்ளூரிலேயே யாதொரு பாவமுமில்லா மல் வாழ்வாள். இவளுக்கு ஆபரணங்கள் கிடையா.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

38. பின்பாகம் விபர மாகப்
பேசுவோம் தாயே யாங்கள்
அன்னையின் பூர்வம் சொல்வேன்
அச்சிறு வாக்கம் கீழ்ப்பால்
சின்னஊர் தன்னி லேதான்
செனித்தனள் கங்கை சேயாய்
தன்சுத ரதிக முண்டாய்ச்
சம்பத்தாய் வாழ்ந்து வின்னோள் ;

38. இவளுடைய மற்ற விஷயங்களைப் பின்பாகத்தில் விபரமாகச் சொல்லுகின்றேம், பார்வதியம்மையே! கேட்பீராக. ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மத்தைச் சொல்லுகின்றேன். இவள் அச்சிறு பாக்கத்திற்குக் கிழக்கில் ஒரு சிறிய கிராமத்தில் ஒரு வேளாளர் குலத் தில் பெண் குழந்தையாகப் பிறந்தாள். இவள் குழந்தைகளை அதிக மாக அடைந்து சௌக்கியத்துடன் வாழ்ந்து ;

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

39. மறலியின் பதிக்குப் புக்கி மால்மகன் வரையப் பட்டு
பெருமையாய் வடுகர் வர்க்கம் பிறந்தவ ளிவளே
[யென்றேம்
வருஞ்ஜன்மம் காஞ்சி தன்னில் வருகுவா ளிக்கு லத்தில்
திருமகள் விலாசம் பெற்று செல்வதி வாழ்வா ளாமே.

39. ஜாதகருடைய தாயார் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரமதேவனால் எழுதப்பட்டு ஒரு மேன்மையான தெலுங்கர் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றாள். இவள் தன்னுடைய மறுஜன்மத்தில் காஞ்சிவரத்தில் தெலுங்குருடைய ஜாதியிலேயே போய்ப் பிறப்பாள். இவள் லக்ஷ்மிகடாக்ஷத்தை அடைந்து வாழ்பவளாவள்.

ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மம்

40. தந்தையின் பூர்வந் தன்னைச் சாற்றுவோம் பட்சிதன்னில்
வந்தவன் தீயின் வம்சம் வளமுள குடும்பி யாகி
நொந்தபேர்க் கன்ன மீந்து நேமியில் நல்லோ னாகி
அந்தணர் பத்தி கொண்டு அந்தகன் பக்கல் சேர்ந்து ;

40. ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகினறோம். இவர் திருக்கழுக்குன்றத்தில் வன்னியர் குலத்திற் பிறந்து செழிப்பான குடும்பியாகி ஏழைகளுக்குச் சாப்பாட்டைப் போட்டுக்கொண்டு நல்லவராக விருந்துகொண்டும் பிராமணர்களிடத்தில் அன்புடையவராகியும் இருந்து பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போய் ;

ஜாதகருடைய தகப்பனாருடைய மறுஜன்மம்

41. வேதனால் வரையப் பட்டு விளங்கிய னிவனே யென்றோம்
ஓதுவே னிவன்பின் சென்மம் உத்திரம் துவரை தன்னில்
மாதவர் குலமு தித்து வரசர்பால் சீவிப் பானும்
சூதிலா வதிஷ்டர் சொல்வார் சுதனுமிச் சென்மம்
[தன்னில்.

41. பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் ஜாதகருடைய தகப்பனார் வந்து பிறந்திருக்கின்றார். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகின்றேன். வடக்குத் திக்கிலுள்ள துவாரகாபுரி பட்டணத்தில் பிராமணக் குலத்திற் பிறந்து அரசர்களால் ஜீவிப்பார். இவ்விதமாகச் சொல்லவே வசிஷ்டர் கேட்கின்றார்.

42. செய்தபுண் ணியங்க ளென்ன செப்புவீர் முனியே நீர்தாம்
அய்யமே லிச்சை யாயும் அதிதிகட் கன்ன மீந்தும்
பொய்யது வழுத்தாத தாலும் பிறர்பொரு ளிச்சை
[யின்றி
வையமேல் வாழ்வ தாலே வருகுவான் மறைக்கு லத்தில்.

42. ஜாதகருடைய தகப்பனார் இந்த ஜன்மத்தில் என்ன புண்ணியங்களைச் செய்தார் என்பதை முனிவரே ! நீரே சொல்லுவீர். இவர் தர்மத்தில் அன்புடையவராயும் பரதேசிகளுக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டும், பொய் சொல்லாமலும் பிறருடைய சொத்துக்களின்பேரில் ஆசை யில்லாமலும் வாழ்கின்றதால் பிராமணர் குலத்திற்பேரய்ப் பிறப்பார்.

ஜாதகருடைய தகப்பனர் தாயாரது மரண காலங்கள்

43. இருபது ஆண்டு தன்னில் இடபமா தத்தி லேதான்
வருந்தந்தை கண்டமென்றே மாறஞ்சு ரெண்டு ஆண்டில்
பெருஆடி மாதந் தன்னில் பேசுவோ மன்னை கண்டம்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

43. ஜாதகருடைய இருபது வயதில் வைகாசி மாதத்தில் இவருடைய தகப்பனர் இறந்து போவார். ஜாதகருக்கு முப்பத்திரண்டாவது வயதில் ஆடி மாதத்தில் இவருடைய தாயார் இறந்து விடுவாள். அறுமையான வேதங்களின் முடிவு என்கிற உபநிஷத்துக்களில் ஆனந்தமாக விளங்குகின்ற பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய மரண காலமும் மறு ஜன்மமும்

44. அறுபது ஆறு ஆண்டில் ஆடிமா தத்தி லேதான்
திருமக னுடல மேகும் செப்புவோம் பின்சென் மத்தில்
விருஞ்சியில் சத்திரிய சேயாய் மேவுவா னிவனே
[யென்றேரும்
குறுமுனி தடுத்துச் சொல்வார் கூறினீர் வயது தீர்க்கம்.

44. ஜாதகர் தனக்கு அறுபத்தாருவது வயதில் ஆடிமாதத்தில் இறந்து இவருடைய தேகம் மறைந்துபோய்விடும். இவருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகின்றேரும். இவர் விருஞ்சிபுரத்தில் க்ஷத்திரிய ராகப்போய்ப் பிறப்பார். அகஸ்தியர் தடுத்துக் கேட்கின்றார்.

45. இதுமத்தில் சாத கர்க்கு யெய்ததோ மார கங்கள்
வருவோர்க்கு வன்ன மீந்து மன்னவன் சென்மந் தங்க
அறுபது வாறு வாண்டும் அறைந்தனம் வயது தீர்க்கம்
பெருவயி றேரீனப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

45. இதற்கு இடையில் ஜாதகருக்கு மரணம் நேரிடாதோ? இவர் தன்னிடத்திற்கு வருகின்றவர்களுக்குச் சாபப்பாட்டைப் போட்டுக் கொண்டிருப்பதாலும் மன்னவன் என்ற குரு ஜன்மலக்கினத்தில் இருப்பதாலும் இவர் அறுபத்தாறு வருஷம் வரையிலும் தீர்க்காயுளை உடையவர் என்று சொன்னேம். பெரிய வயிற்றையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே . கேட்பீராக.

ஜாதகருடைய யோக பாவம்

46. வந்தவன் பொதுயோ கத்தை யறைகிறேஞ் சென்னம்
[தொட்டு
சந்ததம் ஆரூண் டுக்குள் சல்லிய மிகவே யுண்டு
பந்தமாய்க் குடும்பந் தானும் பலவித சல்லி யங்கள்
விந்தையாய்க் காலி பீடை வீண்செல வதிக மெய்தும்.

MAHAPHALA KOPAL

46. ஜாதகருடைய பொது யோகத்தைச் சொல்லுகின்றோம். இவருடைய ஜனனகாலம் முதற்கொண்டு ஆறுவயதிற்குள் கடன் அதிகமாகும். குடும்பம் பலவிதமான கஷ்டங்களை அடையும், பசுக்களுக்கு நோய் உண்டாகும், செலவு அதிகமாக நேரிடும்.

47. அதற்குமேல் மரண மட்டும் அம்புலி போலே யோகம்
பதியது புதிதாய்ச் செய்வன் பத்தாண்டு தன்னில் நேரும்
சதிசெய்தோ ருறவே யாகுஞ் சதுஷ்பாதம் விருத்தி
[யாகும்
நதிபல தேசம் செல்வான் நற்பந்து புகழ வாழ்வான்.

47. ஜாதகருடைய ஆறுவயதிற்குமேலே இவருடைய மரண காலம் வரையிலும வளர்பிறைச் சந்திரன்போலே யோகம் அதிகப்படும். பத்தாவது வயதில் வீட்டைப் புதியதாகக் குடும்பத்தார் கட்டுவார். விரோதிகள் சினேகிதர்களாவார்கள். கால் நடைகள் விருத்தியடையும். பலதேசங்களிலுள்ள புண்ணிய நதிகளில் தீர்த்தமாடுவார். இவர் தன்னுடையபந்துக்கள் தன்னைப் போற்றும்படியான அந்தஸ்திலிருந்து வாழ்வார்.

48. பூமியை விரையஞ் செய்யான் பிரபல குடும்ப மெய்தும்
சேமமாங் குடும்பி யாவன் செயம்செய்வா னெடுத்த வேலை
மாமன்னர் மெச்ச வாழ்வன் வண்டிவா கனமுஞ் சேரும்
காமனை விருப்பங் கொள்வன் கடவுளர் தொண்டு
[பூண்பன்.

48. ஜாதகர் தன்னுடைய நிலங்களை விற்றுவிடமாட்டார். இவர் மேன்மையான குடும்பத்தை யுடையவராவர். இவர் சௌக்கியங்களை யுடைய குடும்பியாவர். தான் எடுத்த காரியங்களைச் செய்து முடித்து ஜயத்தை அடைவர். பெரிய அரசர்கள் இவரைக் கௌரவப்படுத்துவார்கள். வண்டி வாகனங்களையும் இவர் அடைவார். இவர் காமாக்கினியை உடையவராவர். கடவுளுக்கு வேலையைச் செய்வார்.

ஜாதகருடைய சகோதரரது மரண காலம்

49. மூப்பது நாலு ஆண்டில்
விலகிடும் துணைவன் தானும்
அப்போது பாகம் மூன்றாய்
அறிவிப்போம் தாயே யாங்கள்
ஒப்புடன் துணைவிக் கேதான்
ஓர்பங்கு நேரு மென்றோம்
தப்பித மில்லை யம்மா
சாற்றின மொழிகுன் றாது.

49. ஜாதகருக்கு மூப்பத்து நான்காவது வயதில் இவருடைய சகோதரர் இறந்து விடுவார். இந்தக் காலத்தில் குடும்பச் சொத்து மூன்று பாகங்களாகப் பங்கிடப்படும் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மையே! இவருடைய சகோதரிக்குக்கூட ஒரு பங்கு கிடைக்கும், பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிப்போகா.

ஜனன கால தசை இருப்பும் பலா பலன்களும்

50. பாலகன் செனிக்கும் காலை பரிதியின் தசையி ருப்பு
சாலவே ஆண்டு ரெண்டும் சார்ந்திடும் திங்கள் ரெண்டும்
ஏலவே சல்லிய முண்டு இடர்வரும் காலி கட்கு
கோலமாம் குடும்பம் தானும் குறைமனம் நிந்தை
[யெய்தும்.

50. ஜாதகர் பிறக்கும்போது பரிதி என்ற சூரியமகாதசையில் இருப்பு இரண்டு வருஷங்களும் இரண்டு மாதங்களும் ஆகும். இந்தக் காலத்தில் கடன் ஏற்படும். கஷ்டங்கள் நேரிடும். பசுக்களுக்குக் கெடுதி உண்டாகும். குடும்பம் கலகலத்துவிடும். மனக்கஷ்டம் நேரிடும். அபவாதமும் பழியும் ஏற்படும்.

51. சாதகன் தனக்கு ரோகம் தந்தையால் பிணியு மெய்தும்
பாதக மனங்க ளெய்தும் பகைவரும் பந்து சூதம்
ஓதுவேன் துணைசு பங்கள் உற்றதோர் களவு நேரும்
நீதியாய் பின்பா கத்தில் நிகழ்த்துவோ மந்தச் சங்கை.

51. ஜாதருக்கு நோய் தன்னுடைய தகப்பனாரால் உண்டாகும். மனத்திற்குக் கஷ்டங்கள் நேரிடும். விரோதமுண்டாகும். பந்துக்களில் சூதகம் ஏற்படும், சகோதரங்களுக்குச் சுபகாரியங்கள் நடக்கும். வீட்டில் திருடுபோய்விடும். இந்த விஷயத்தைப் பற்றி நியாயமாகப் பின் பாகத்தில் சொல்லுகின்றோம்.

ஜாதகம் 139

1. [1]மதிகுரு சிம்ம மாக [2]மந்தனு [3]மேரு வாகப்
புதன் [4]ரவி கன்னி யாகப் [5]புகர் [6]வண்டி கேது [7]கோலில்
அதி [8]கயர் மேட மாக [9]ஆரலுந் [10]தேள தாக
இதுவிதக் கோளும் நின்று லக்கினம் [11]சீயமாக
[வியம்புவீர் பலனைத் தானே.

1. சந்திரனும் குருவும் சிம்மத்திலும், சனி தனுசிலும், புதனும் சூரியனும் கன்னியிலும், சுக்கிரன் கடகத்திலும், கேது துலாத்திலும், இராகு மேடத்திலும், அங்காரகன் விருச்சிகத்திலும் ஆகி, இவ்விதமாகக் கிரகங்கள் இருந்து ஜன்மலக்கினம் சிம்மமானால் பலாபலன் களைச் சொல்லுவீர் என்று;

கிரகநிலை

	ராகு		
	இராசி சக்கரம்		சுக்கிரன்
			லக்கினம் குரு சந்திரன்
சனி	அங்காரகன்	கேது	புதன் சூரியன்

ஜனன நாட்டுச் சிறப்பு

2. காதலி கேட்கும் போது கௌசிகர் கூறு கின்றார்
மேதினி லாண்பால் சென்ம மவன்தந்தை யில்லம்
[சொல்வேன்
கோதிலா வடதென் வீதி குடகுதன் வாச லாகும்
நீதியா யுத்தி ரத்தில் நீரோடை நதியு மூண்டு.

2. பார்வதியம்மையார் கேட்கும்போது கௌசிக மகரிஷி பதில் சொல்லுகின்றார். பிறந்த குழந்தை ஆணாகும். இவருடைய தகப்பனாரின்

---

1. சந்திரன்
2. சனி
3. தனுசு
4. சூரியன்
5. சுக்கிரன்
6. கடகம்
7. துலாம்
8. இராகு
9. அங்காரகன்
10. விருச்சிகம்
11. சிம்மம்

வீட்டைப் பற்றிச் சொல்லுகின்றேன். இது வடக்குத் தெற்குத் தெருவில் மேற்கு வாயிற்காலை உடையதாகும். வடக்குத் திக்கில் ஒரு கீர் ஓடையும் ஆறும் உண்டு.

3. அருகில்பாஞ் சாலி காளி
அதற்குத்தென் மேற்கி லேதான்
குறைதலை மாரி யுண்டு
குறித்தன மதற்குக் கீழ்பால்
பெருகிய ஈசன் கோஷ்டம்
பேசுவோர்ந் தென்மேல் தந்தி
திறமையாய்ச் சமவூர் தன்னில்
செப்பிலே மில்லம் தானும்.

3. சமீபத்தில் ஒரு துரௌபதையம்மன் கோயிலும் காளியம்மன் கோயிலும் உண்டு. இவைகளுக்குத் தென்மேற்கில் முருகர் கோயிலும் மாரியம்மன் கோயிலும் இருக்கும். இவைகளுக்குக் கிழக்கில் சிவபெருமானுடைய ஒரு பெரியகோயில் இருக்கும். விநாயகருடைய கோயில் தென்மேற்கில் இருக்கும். பிறந்த ஊர் ஒரு நடுத்தரமான வளமுள்ள கிராமமாகும் இவ்விதமாகப் பிறந்த வீட்டைப் பற்றிச் சொன்னேம்.

4. இன்னவன் சென்ன யோகம்
எழில்பெறுந் தந்தை யோகம்
மன்னிய வன்னை யோகம்
வரும்புத்திரர் களத்திர யோகம்
தன்னிலே முன்பின் சென்மம்
சாந்தியுங் கூறு கின்றோம்
உன்னத வாணைப் பெற்ற
உத்தமி கேட்டி டாயே.

4. ஜாதகருடைய ஜனனகாலத்திய யோகம், தகப்பனர், தாயார், மனைவி, மக்கள் ஆகிய இவர்களுடைய யோகங்களையும், முன் ஜன்மம் பின்ஜன்மம் சாந்தி ஆகிய இவைகளையும் சொல்லுகின்றோம். மேன்மையான சிறந்த யானைமுகத்தை யுடைய விநாயகக் கடவுளை பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரின் சகோதரங்களும் தகப்பனரின் குணங்களும்

5. தந்தையின் தூணவர் தம்மை
சாற்றவே நான்க தாகும்
வந்திடும் பெண்பால் ரெண்டு
வகையுடன் விருத்தி யென்றோம்

நொந்திடும் மற்ற வெல்லாம்
நுவலுவோம் பிதாகு ணத்தை
எந்தையே யிருநி றத்தான்
இன்பமாய் வார்த்தை கூறுவான்.

5. ஜாதகருடைய தகப்பனரின் சகோதரங்கள் மொத்தம் நான்கு பேர்கள் ஆவர். இவர்களில் இரண்டு சகோதரிகள் விருத்தியடைவார்கள். இறந்து விடுவார்கள். ஜாதகருடைய தகப்பனரின் குணாதிசயங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் மாநிறத்தையுடையவராவர். இவர் இனிமையாக வார்த்தைகளைச் சொல்லுவார்.

6. ஏருகள் விருத்தி செய்வன் ஈகைவான் பூமி சேர்ப்பான்
சீரிய குணத்தா னகும் செப்புவான் தந்திர மாக
நாரியர் மோக வானும் நவிலுவோ மாமி ரெண்டு
தீரமாம் சிருஷிகள் செய்வான் சனவுப கார னவன்.

6. ஜாதகருடைய தகப்பனர் ஏர்களை விருத்தியாக்குவார். இவர் பிறருக்குக் கொடுக்கும் குணத்தை உடையவராவர். நிலங்களைச் சம்பாதித்துச் சேர்த்துவைப்பார். இவர் சிறப்பான குணத்தையுடையவராவர். இவர் தந்திரமாகவும் உபாயமாவும் வார்த்தைகளைச் சொல்லுவார். இவர் ஸ்திரீகளிடத்தில் மையல் என்ற காம ஆசையை உடையவராவர். இவருக்கு இரண்டு மாமியார்கள் உண்டு. இவர் விவசாயத் தொழிலைச் செய்வார். ஜனங்களுக்கு உபகாரத்தைச் செய்பவராவர்.

7. நடையது தருசு மூள்ளான் நாயகி தனக்கு நேயன்
திடமுடன் குடும்பி யாவன் சிரசினில் சுழியு மூள்ளான்
மடையரைச் சேரா னகும் மனத்தினில் கபடு மூள்ளான்
தடபுடல் செய்கை யுண்டு தன்கரம் ருத்திர ரேகை.

7. ஜாதகருடைய தகப்பனர் கெட்ட நடவடிக்கையையுடையவராவர். இவர் தன்னுடைய மனைவிக்குப் பிரியமானவராவர். மேன்மையான குடும்பஸ்தராவர். இவருடைய தலையிற் சுழி இருக்கும். இவர் அறிவில்லாதவர்களுடன் சினேகஞ் செய்யமாட்டார். தன்னுடைய மனத்தில் வஞ்சனையை உடையவர். இவர் அவசரமாகவும் இடம்பமாகவும் படாடோபத்துடனும் காரியங்களைச் செய்வார். தன்னுடைய உள்ளங்கைகளில் ருத்திரரேகையை உடையவராவர்.

8. சுகமுளான் அலைச்ச லுள்ளான்
சொன்னசொல் லிரண்டு மூள்ளான்
பகையிலான் பக்தி கொள்வான்
பாக்கிய மதிகஞ் சேர்க்கான்

செகமதி லதிகம் பேசான்
சொல்பமாம் நாபிச் சூடு
அகமது பின்னுல் செய்வன்
அம்பிகை யாளே கேளாய்.

8. ஜாதகருடைய தகப்பனுர் சௌக்கியத்தை உடையவர். அலைச் சலை உடையவர். இரண்டு விதமான வார்த்தைகளை உடையவர். அஃதாவது உண்மையையும் பொய்யையும் சொல்லுவார். இவர் விரோதிகள் இல்லாதவர். கடவுளின்பேரில் அன்பும் ஆசையும் உடையவர். அதிகமான செல்வத்தைச் சேர்த்து வைக்கமாட்டார். இவர் அதிகமாகப் பேசமாட்டார். இவருக்குச் சிறிது நாபிச் சூட்டுரோகம் இருக்கும்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

9. இக்குண முடையோ னுக்கு விவனுமே வுதிப்பா ஞகும்
மிக்கவே யிவன்கு ணத்தை விளம்புவோ மிருநி றத்தான்
தக்கவே சமதே கத்தான் சன்மார்க்க னடக்க
[முள்ளான்
துக்கமும் சஞ்ச லங்கள் தோன்றிடும் மனத்தில் தானே.

9. இதுவரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப் பனுருக்கு இந்த ஜாதகர் பிறந்தவராவர். இவருடைய குணதிசயங் களைச் சொல்லுகின்றேம். இவர் மாநிறத்தையுடையவர். நடுத்தர மான தேகத்தையுடையவர். நல்ல மார்க்கத்தை உடையவர். அடக்க மானவர். இவருடைய மனத்தில் துன்பங்களும் விசனமும் ஏற்படும்.

10. பித்தமாம் மூலச் சூடு புராதனம் விருத்தி செய்வான்
அத்திபோல் நடையு மாவன் அவன்சுகி போச னத்தான்
சித்தமே கரப்பு முள்ளான் சேயிழை பிரிய னவன்
நித்தியம் சீல னவன் நிகழ்த்துவான் கிராமச் செட்டு.

10. ஜாதகர் பித்தச்சூட்டு ரோகத்தையும் உடையவர். இவர் பழைய சொத்துக்களை விருத்தியாக்குவார். யானையைப் போன்ற கம்பீரமான நடையையுடையவராவர். இவர் ஆகாரத்தைச் சாப்பிட்டுச் சுகத்தை அடையக் கூடியவர். இவர் கெட்ட எண்ணத்தை உடைய வர். ஸ்திரீகளிடத்தில் அன்புள்ளவர். இவர் தினந்தோறும் ஆசாரத் தையும் நல்லொழுக்கத்தையும் உடையவராவர். கிராம வியாபாரத்தை நடத்திக்கொண்டு வருவார்.

11. பிந்திநாள் யோக முள்ளான் பெருகியே யெவர்க்கு [நல்லன்
தந்தங்கள் தரள மொக்கும் தன்மனம் காவல் உள்ளான்
நி.....முடைய னுகும் நிருபர்க ளிஷ்டம் கொள்வன்
வந்தவர்க் கன்ன மீவன் வண்டிவா கனமு முள்ளான்.

11. ஜாதகர் தன்னுடைய பிற்காலத்தில் யோகத்தை உடையவராவர். இவர் எல்லோருக்கும் நல்லவராவர். இவருடைய பற்கள் முத்தைப்போல வெண்மையாகவும் அழகாகவும் இருக்கும். அரசர்களுடைய அன்பை உடையவராவர். தன்னிடத்திற்கு வந்தவர்களுக்குச் சாப்பாட்டைப் போடுவார். சவாரிவண்டியும் வாகனப் பிராணிகளையும் உடையவராவர்.

12. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிகுவா ளம்மன் தானும்
அனையவே சாத கர்க்கு அதிகார முண்டா மென்றீர்
கனமுட னெந்தக் காலம் கழறுவீர் முனியே நீர்தாம்
சினமிலா சொல்லு கின்றேன் தேவியே கேட்டி டாயே.

12. இவ்விதமாக முனிவர் சொல்லவே பார்வதியம்மையார் கேட்கின்றார். ஜாதகருக்கு அதிகாரங்கள் உண்டு என்று சொன்னீரே. அது எந்தக் காலத்தில் நேரிடும் என்பதை முனிவரே! நீரே சொல்லுவீர் என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்றார். நான் கோபமில்லாமல் சொல்லுகின்றேன். பார்வதியம்மையே! கேட்பீராக.

13. இருபது வெட்டாண் டின்மேல்
எய்திடுங் கிராமச் செட்டு
பிறைதசை சனிபு குத்தி
பேசுவோ மந்தக் காலம்
குறைமனம் நிவர்த்தி யாகும்
கோவலர் நேசங் கொள்வான்
பெருமையும் புகழு முண்டாம்
பொருள்வின யத்தால் நேரும்.

13. இருபத்தெட்டாவது வயதிற்குமேல் கிராம வியாபாரம் ஜாதகருக்கு ஏற்படும். இந்தக் காலத்தில் பிறை என்ற சந்திரனுடைய தசையில் சனிபுக்தி நடக்கும் என்று சொல்லுகின்றோம். இவருக்கு மனக்குறைவு விலகிவிடும். அரசர்களுடைய சினேகிதத்தை அடைவார். இவர் கீர்த்தியையும் மேன்மையையும் அடைவார். இவருக்கு நல்ல நடத்தையாலும் வணக்கம் மரியாதை முதலியவைகளாலும் பொருள் வந்து சேரும்.

ஜாதகருடைய சகோதரங்கள் (சகோதரபாவம்)

14. இன்னவன் துணைவர் தம்மை
யியம்பவே பலத்தைக் காணேம்
என்னகா ரணத்தி னலே
யிவனுக்குத் துணைவர் தோஷந்
தன்னிலே மூன்றில் கேது
சார்ந்துமே மூன்றோன் தானும்
பின்னமாம் வியத்தில் நிற்கப்
புகன்றனந் துணைவர் தோஷம்.

14. ஜாதகருடைய சகோதரங்களைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவருக்குச் சகோதரர்கள் இருப்பதற்கு யாதொரு வலிவும் கிடையாது. எந்தக் காரணத்தினால் இவருக்குச் சகோதர தோஷம் இருக்கின்றது என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்றார். மூன்றுவது பாவத்தில் கேது இருப்பதாலும் மூன்றிற்குடையவராகிய சுக்கிரன் வியம் என்ற பன்னிரண்டில் இருப்பதாலும் சகோதர தோஷத்தைச் சொன்னோம்.

15. இதுவன்றி நாலில் செவ்வா
யிருப்பதால் மாதிரு தோஷம்
விதியது முடிந்த பின்பு
விளங்குவா ளிரண்டா மாதா
எதுகால மாதிரு தோஷ
மியம்புவீர் முனியே யென்றாள்
வதிபர்க்கு மூணு மாண்டில்
வருஞ்சுதர் கெற்ப நோயால்.

15. இவைகளுமல்லாமல் செவ்வாய் என்ற அங்காரகன் நான்காவது வீட்டில் இருப்பதால் தாயாருக்குத் தோஷமுண்டு. இந்தத் தாயார் இறந்து விட்டபிறகு இவருக்கு இரண்டாவது தாயார் வந்து சம்பவிப்பாள். எந்தக் காலத்தில் தாயாருக்குத் தோஷம் உண்டாகும் என்பதை முனிவரே! கூறுவீர் நீரே என்று பார்வதியம்மையார் கேட்கவே முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகருக்கு மூன்றுவது வயதில் இவருடைய தாயாருக்குக் கர்ப்ப ரோகத்தால்;

16. மரணமே யாகி யேதான் வந்திடு மிரண்டா மாதா
அறைகிறே மவர்க்குப் புத்திர ராணது வொன்றே
[யாருஞ்
சதியாகு மற்ற வெல்லாந் தன்தாயின் துணைவ ரில்லாள்
நதிசடை யணிந்தோன் தேவி நவின்றது தப்பா தம்மா,

16. மரணம் நேரிட்டு இரண்டாவது தாயார் வந்து நேரிடுவாள். இந்த இரண்டாவது தாயாருக்கு ஒரு பிள்ளை உண்டு. மற்றக் குழந்தைகள் எல்லாம் இறந்து விடுவார்கள். ஜாதகனுடைய தாயார் சகோதரங்கள் இல்லாதவளாக விருப்பாள். கங்கையைத் தன்னுடைய ஜடையில் தரித்துக் கொண்டிருக்கிற சிவபெருமானுடைய மனைவி யாகிய பார்வதியம்மே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் தவறிப்போகா;

ஜாதகருடைய விவாக காலமும் மனைவியின் குணமும்

17. ஜாதகன் மணத்தின் காலஞ்
சாற்றுவோம் பத்தொன் பாண்டில்
மேதினில் தென்மேல் திக்கில்
வித்தகி வருவா ளாவள்
கோதிலா வவள்கு ணத்தைக்
கூறுவோஞ் செந்நி றத்தாள்
சூதுகள் கொஞ்ச மூள்ளாள்
தோகையும் பகட்ட மில்லாள்.

17. ஜாதகருடைய விவாக காலத்தைச் சொல்லுகின்றோம். இவருக்குப் பத்தொன்பதாவது வயதில் தென்மேற்குத் திக்கில் இருந்து மனைவி வந்து நேரிடுவாள். குற்றமில்லாத இவளுடைய குணாதிசயங் களைச் சொல்லுகின்றோம். இவள் சிவப்பு நிறத்தை யுடையவள். கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளைச் சிறிதளவு உடையவ ளாவள். இவள் பிரகாசத்தையும் பார்வையையும் வெளிவேடத்தையும் உடையவள் அல்லள்.

18. அன்னம்போல் சாய லுள்ளா
ளவள்பித்த தேகி யாவள்
தன்வரன் மனம்போல் வாழ்வள்
சற்றினில் கோப மூர்க்கம்
பன்னியே பேச வல்லாள்
பந்துவுக் கினிய ளாவள்
பொன்பணி யதிக முள்ளாள்
தோகைதன் நடக்கை யுள்ளாள்.

18. ஜாதகருடைய மனைவி அன்னத்தைப் போன்ற அழகையும் உருவத்தையும் உடையவள். பித்தரோகமுள்ள தேகத்தையுடைய வள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருந்து வாழ்வாள். இவள் சீக்கிரத்தில் கோபத்தை யும் மூர்க்கத்தனத்தையும் அடைவாள். இவள் சாமர்த்தியமாகவும் விமரிசையாகவும் பேசும் சாமர்த்தியத்தையுடையவள். இவள் பந்துக்

களுக்குப் பிரியமானவளர்வள். தனம் ஆபரணம் ஆகிய இவைகளே அதிகமாக உடையவளாவள் நல்ல நடவடிக்கையையும் ஒழுக்கத்தை யும் உடையவளாவள்.

ஜாதகருடைய சந்ததிகள் (புத்திரபாவம்)

19. சுதர்களும் விருத்தி யாகி சோர்ந்திடு மவளுக் கேதான்.
அதுகுற்றஞ் சொல்லு மென்ன வஞ்சினில் காரி கிற்க
அதனுக்கு வஞ்சில் ராகு பற்றியே யிருப்ப தாலு
மதலைகள் விருத்தி தோஷ மறைந்தன மிவனுக் கேதான்.

19. ஜாதகருடைய மனைவிக்குக் குழந்தைகள் பிறந்து வளர்ந்து பிறகு இறந்து விடுவார்கள், இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்றார். ஐந்தாவது பாவத்தில் காரி என்ற சனி இருப்பதாலும், இவருக்கு ஐந்தாவது வீட் டில் இராகு இருப்பதாலும் குழந்தைகளுக்குத் தோஷம் உண்டாகும்.

20. குருவுமே பஞ்ச மத்தைக்
குணமுடன் பார்த்த தாலே
திறமையாய்ச் சுதர்கள் தோன்றுஞ்
சுக்கிரன் விரையம் புக்க
திருமகன் முன்ஜன் மத்தில்
செய்திட்டான் சிலவே பாவம்
குறையதைச் சொல்லு மென்னக்
கூறுவார் முனிவர் தாமும்.

20. குருவானவர் ஐந்தாவது பாவத்தை வலிவுடன் பார்த்திருப் பதால் குழந்தைகள் உண்டாவார்கள். சுக்கிரன் விரையம் என்ற பன் னிரண்டாம் வீட்டில் இருப்பதாலும் ஜாதகர் தன்னுடைய முன்ஜன் மத்தில் சிலபாவங்களைச் செய்ததாலும் புத்திர தோஷம் ஏற்பட்டிருக் கின்றது. இந்தத் தோஷங்களின் விவரத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே முனிவர் பதில் சொல்லுகின்றார்.

ஜாதகருடைய முன்ஜன்மம்

21. இன்னவன் முன்ஜன் மத்தை
யியம்புவோங் காஞ்சி கீழ்ப்பால்
தன்னிலே பேரூர் தன்னில்
செங்குந்தர் மரபில் தோன்றி
அன்னவன் குடும்பி யாகி
யவனுமே நெசவு செய்து
உன்னத பந்துக் கெல்லா
முதவியாய் வாழ்ந்தா னென்றோம்.

21. ஜாதகருடைய முன்ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். இவர் காஞ்சிமாநகரத்திற்குக் கிழக்கில் ஒரு பெரிய ஊரில் செங்குந்தர் குலத்திற் பிறந்து குடும்பஸ்தராகி நெசவுத் தொழிலைச் செய்துகொண்டு தன்னுடைய பந்துக்களுக்கெல்லாம் உபகாரத்தைச் செய்துகொண்டு வாழ்ந்துவந்தார் என்று சொல்லுகின்றோம்.

22. அப்படி யிருக்குங் கால மதிதியு மோர்நாள் தன்னில்
மெய்ப்புட னன்னங் கேட்க வித்தக னில்லை யென்றான்
செப்புவா ரதிதி தாமுஞ் ஜனித்திடு மறுஜன் மத்தில்
அப்பவே மாதிரு மாண்டு யலைச்சலு மிகவே கொண்டு ;

22. அப்படியிருக்கும் காலம், ஓர் நாள் ஒரு பரதேசி ஜாதகரிடத்திற்குப் போய் உண்மையாகவே சாதத்தைக் கேட்கவே இவர் இல்லை என்று பதில் சொன்னார். பரதேசி உடனே சாபத்தைக் கொடுத்தார். "உன்னுடைய மறு ஜன்மத்தில் உன் தாயார் இறந்து நீ அதிகமான கஷ்டத்தை அடையக்கடவது.

23. ஜனித்திடு மதலை தோஷஞ் செப்பிவே றில்லஞ் சென்றார்
குனித்திடு மந்தத் தோஷங் குமரனைப் பற்றி யேதான்
இனத்தினில் விதவை மாதை யிவனுமே போகந் துய்த்து
சினத்துடன் கருவு தங்கி சிலசில வவிழ்த்த மீய ;

23. "உனக்குப் பிறக்கும் குழந்தைகளும் இறந்துவிடக்கடவது" என்று ஜாதகரைப் பரதேசி பார்த்துச் சொல்லிவிட்டு வேறு வீட்டிற்குப் போய்விட்டார். இந்த தோஷம் ஜாதகருக்கு வந்து அடைந்தது. மேலும் இவர், தன் முன்ஜன்மத்தில் தன் பந்துக்களில் ஒரு விதவை ஸ்திரீயிடத்தில் சம்போகஞ் செய்து அவளுக்குக் கருவு ஏற்பட்டு விடவே இதை இவர் சில மருந்துகளைக் கொடுத்து ;

24. கருவுமே யழித்தா னென்றோங் காவலன் தன்னைப் பற்றி
இருவித தோஷந் தானு மிவனுக்கு சூழ்ந்த தாலே
பெருமையா யந்தி யத்தில் பலபல துன்பம் நேர்ந்து
சிறுமையா யுடைய .... மரண மாகி ;

24. இந்தக் கருவை அழித்துவிட்டார் ஜாதகர் என்று சொல்லுகின்றோம். ஜாதகருக்கு இந்த இரண்டு விதமான தோஷங்கள் ஏற்பட்டதால் இவர் முன் ஜன்மத்தின் கடைசி காலத்தில் பலகெடுதிகள் ஏற்பட்டுச் சிறுமையை அடைந்து இறந்து ;

25. கஞ்சனல் வரையப் பட்டுக் கலப்பனு மிச்சென் மத்தில்
மிஞ்சிய தீயின் வம்சம் வித்தக னுதித்தா னென்றோன்
தஞ்சமா யதிதி சாபஞ் சார்ந்ததா லிப்பி றப்பில்
துஞ்சிடுந் துயர மென்றோன் துணைவர்க ளில்லா னுவன்.

25. பிறகு ஜாதகர் பிரமதேவரால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வன்னியர் குலத்தில் வந்து பிறந்திருக்கின்றார். இவருக்குப் பரதேசியின் சாபமும் வந்து சம்பவித்ததால் இவர் துன்பத்தையும் விசனத்தையும் அடைவார். சகோதரங்கள் இல்லாதவராவர்.

26. புத்திர தோஷ மாகும் புகலுவோ மதற்குச் சாந்தி
விக்தகன் மனைவி யாகு விளங்கிடும் பழனிக் கேதான்
பத்தியா யேழு கார்த்தி பகையிலா சென்று மேதான்
நித்திய மொருவ னுக்கு நிமலனு மர்ச்சித் தேத்தி;

26. ஜாதகருக்குப் புத்திரதோஷம் ஏற்படும். இதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்றோம். ஜாதகர் தன்னுடைய மனைவியுடன் ஏழு கார்த்திகைகளுக்குப் பழனி க்ஷேத்திரத்திற்குப் போய்த் தினந் தோறும் கடவுளுக்கு அர்ச்சனை செய்து தொழுது;

27. கடைநாளி லேழு பேர்க்கு
காவல னன்ன மீய்ந்து
அடைவுட னுள்ளூர் சென்று
ஐங்கரர்க் கபிஷே கித்தால்
உடனேதான் மதலை தோன்று
முதிக்கினுந் தீர்க்க மாகும்
விடமென்று செய்யா ஞகில்
வீராது மதலை தானே.

27. கடைசி தினத்தில் ஏழு பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போட்டுப் பிறகு தன்னுடைய ஊருக்குத் திரும்பிப்போய் விநாயகக் கடவுளுக்கு அபிஷேகஞ் செய்துவைத்தால் உடனே குழந்தை பிறக்கும். ஒருசமயம் (தானுகவே சாந்தியில்லாமல்) பிறந்தாலும் அது நீண்ட ஆயுளை உடையதாக விருக்கும். ஜாதகர் இந்த சாந்தி உண்மையான தல்லவென்று இதைச் செய்யாவிட்டால் குழந்தை பிறக்காது.

ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மம்

28. சொற்படி செய்வா ஞகில் துலங்கிடு மாண்பா லொன்று
மெய்ப்புடன் பேதைமா ரிரண்டு விளங்கிடுந் தீர்க்க மாகச்
செப்புவேன் தந்தை பூர்வந் திருவள்ளூ ரதற்கு மேல்பால்
ஒப்புடன் பேரூர் தன்னி லுதித்தன னிக்கு லத்தில்.

28. ஜாதகர் நாங்கள் சொன்னபிரகாரம் சாந்தியைச் செய்தால் ஒரு பிள்ளையும் இரண்டு பெண்களும் உண்டாகி நீண்ட ஆயுளை உடையவர்களாவார். ஜாதகருடைய தகப்பனாருடைய முன்ஜன்மத் தைச் சொல்லுகின்றேன். இவர் திருவள்ளூருக்கு மேற்கில் ஒரு பெரிய கிராமத்தில் இந்த ஜன்மத்திற் பிறந்த குலமாகிய வன்னியர் குலத்தில் பிறந்தார்.

29. உதித்துமே பெருமை பூண்டு வுயர்பூமி யுள்ளா ஞகி
மதித்திட பந்து மெச்ச மனைவிமைந் தருமூண் டாகி
சதியிலா வாழு நாளில் சாற்றுவோ மூழி தானு
மதிசடை யணிந்தோன் தேவி மங்கையே கேட்டி டாயே.

29. ஜாதகருடைய தகப்பனுர் பிறந்து பெருமையையடைந்து சிறந்த பெரிய நிலங்களை உடையவராகிப் பந்துக்கள் இவரைப் புகழும் படியான அந்தஸ்தி லிருந்துகொண்டு மனைவி மக்கள் ஆகிய இவர்களை உடையவராகிக் கஷ்டங்கள் இல்லாமல் வாழ்கின்ற காலத்தில் இவருக்கு ஏற்பட்ட வாபத்தைச் சொல்லுகின்றேம். சந்திரனைத் தன்னுடைய ஜடையில் அணிந்துள்ள பரமசிவனுடைய மனைவியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

30. தன்குல மாது பேரில் சந்தேகஞ் சிலர்கள் சொல்ல
இன்னவ னதனைக் கேட்டு யிவள்பேரில் ..... காட்டி
வன்னம்போல்..... .. .. விளம்புவா ளந்த மாது
பின்வருஞ் ஜன்மந் தன்னில் பேதைய ரிருவ ராயும் ;

30. ஜாதகருடைய தகப்பனுர் தன்னுடைய குலத்து ஸ்திரீயின் பேரில் சிலருடைய பேச்சைக் கேட்டுச் சந்தேகப்பட்டு இவரை விசாரித்துக் குற்றத்தைச் சாட்டவே இவள் சாபத்தைக் கொடுத்தாள், "உன்னுடைய மறுஜன்மத்தில் உனக்கு மனைவிமார்கள் இருவராகியும்,

31. எனைப்போலப் பெண்பால் தானு மிலகாமல் வாழ்வா
[யென்று
வினையாக மாது சொல்ல வித்தகன் தன்னைச் சார்ந்து
அனையவே யந்தி யத்தி லவன்பாரி முன்னே மாண்டு
தலைவனு மரண மாகி சதுர்முகன் வரையப் பட்டு ;

31. என்னைப்போல உனக்குச் சகோதரி இல்லாமலும் நீ வாழக் கடவது" என்று ஜாதகருடைய தகப்பனுரை இந்தக் குலஸ்திரீ பார்த்துச் சொன்னுள். இவளுடைய சாபம் இவரை முன்ஜன்மத்திலேயே அடைய, இவர் அந்தியகாலத்தில் மனைவியை இழந்து பிறகு தானும் இறந்து பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு ;

32. வந்தவ னிவனே யென்றே மங்கையின் சாபந் தானும்
இந்ததோர் ஜன்மந் தன்னி லிலகிடு மிவனுக் கேதான்
அன்னவன் தனக்குப் பாரி யணுகிடு மிரண்டு வென்றேரும்
வின்னமாஞ் சுதர்பெண் பாலும் பேசின மொழிகுன்
[றுவே.

32, இந்த ஜன்மத்தில் வந்து பிறந்தார், ஜாதகருடைய தகப்பனார். அந்த ஸ்திரீயின் சாபம் இந்த ஜன்மத்தில் இவரை வந்து அடையும். இவருக்கு இரண்டு மனைவிமார்கள் அதனால் ஏற்படுவார்கள். இவருக்குச் சகோதரியும் பெண்களும் பின்னப்பட்டு இறந்து போய்விடுவார். நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலா பலன்கள் தவறிப்போகாமல் நடக்கும்.

33. தந்தையின் பின்ஜன் மத்தைச் சாற்றுவோம் விருஞ்சி [நாட்டில்
அந்தவன் கங்கை சேயா யவனுமே யுதித்து மேலும்
பொன்னெடு பணிதி பெற்றுப் பூமியு மதிக முண்டாய்
இன்னவன் வாழ்வா னவன் ஈச்வரி கேட்டி டாயே.

33. ஜாதகருடைய தகப்பனாரின் பின்ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். இவர் விருஞ்சிபுரத்தில் வேளாளர் குலத்தில் ஆண் குழந்தையாகப் பிறந்து தனமும் ஆபரணங்களும் அடைந்தும், நிலங்களை அதிகமாக உடையவராகியும் இருந்து இவர் வாழ்வார். பார்வதி யமமையே ! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

34. மாதிரு பூர்வந் தன்னை யறைகிறோம் பட்சி மேல்பால்
மேதினி லிக்கு லத்தில் விளங்கியே வரனு முண்டாய்
சூதுக ளில்லா தாகி சுதர்களு முடைய தாகி
பாதக மனமில் லாமல் பாவையும் வாழ்ந்தா ளென்றோம்.

34. ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றேன். இவள் திருக்கழுக்குன்றத்திற்கு மேற்கில் இந்த ஜன்மத்திய குலமாகிய வன்னியர் குலத்தில் பிறந்து புருஷனை உடையவளாகியாதொரு வஞ்சனைகள் கபடு முதலியவைகள் இல்லாமலும் பிள்ளைகளை உடையவளாகியும், யாதொரு பாபமும் இல்லாதவளாகியும் வாழ்ந்தாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது மறுஜன்மம்

35. பேதியால் மரண மாகி
பிரமனுல் வரையப் பட்டுச்
சூதிலா விக்கு லத்தில்
தோன்றினு ளிவளே யென்றோம்
போதவே யிவள்பின் ஜன்மம்
போற்றுவோம் ..... துள்
மாதவர் குலத்தி லேதான்
வருகுவா ளென்று சொன்னோம்.

35. ஜாதகருடைய தாயார் முன்ஜன்மத்தில் பேதியால் இறந்து பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வன்னிய குலத்தில் பிறந்தாள் என்று சொல்லுகின்ரேம். இவளுடைய மறுஜன்மத்தைச் சொல்லுகின்ரேம், இவள் பிராமணர் குலத்தில் மறுஜன்மத்திற் பிறப்பாள் என்று சொல்லுகின்ரேம்.

ஜாதகருடைய தகப்பனுரது மாரகம்

36. தந்தையின் மரண காலஞ் சாற்றுவோம் நாற்பா
[னிரண்டில்

வந்திடுங் கூனி மாத மறைகிரேங் கண்டங் தானே
அந்தகோர் காலந் தன்னி லரவுதன் தசையி ரு.....
சொந்தநன் புத்தி லேதான் செப்பினேங் கர்மந் தானே.

36. ஜாதகருடைய தகப்பனுரது மரணகாலத்தைச் சொல்லு கின்ரேம். ஜாதகருக்கு நாற்பதாவது வயதில் பங்குனிமாதத்தில் இவருடைய தகப்பனுர் இறந்துவிடுவார். இந்தக் காலத்தில் அரவு என்ற இராகுமகாதசையில் தன்னுடைய சுயபுக்தியாகிய இராகு புக்தி நடக்கும். இந்தக் காலத்தில்தான் ஜாதகருக்குப் பிதுர்கர்மம் நேரிடும் என்று சொல்லுகின்ரேம்.

ஜாதகருடைய மரணகாலம்

37. ஜாதகன் மரண காலஞ் சாற்றுவோ மறுபா ஞறில்
மேதினில் கூனி மாதம் வளர்பிறை சஷ்டி தன்னில்
தீதான வயிறு கடுப்பால் தேகமும் வாடு மென்ரேம்
போதக வானைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

37. ஜாதகருக்கு மரணகாலத்தைச் சொல்லுகின்ரேம். இவர் அறுபத்தாருவது வயதில் பங்குனிமாதத்தில் வளர்பிறை சஷ்டி திதியில்வயிற்றுநோயினுல் இறந்துவிடுவார் என்று சொல்லுகின்ரேம். யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளைப் பெற்றெடுத்த புண்ணிய இளம்வதியாகிய பார்வதியம்மையே ! கேட்பீராக.

ஜாதகருடைய மறுஜன்மம்

38. இவனுடைப் பின்ஜன் மத்தை
யியம்புவோங் காளாத்தி தன்னில்
அவனியில் சத்திரியச் சேயா
யவனுமே யுதித்து மேலும்
நவமது வதிக முண்டாய்
நற்பரி சகடு முண்டாய்
இவனுமே வாழ்வா னென்ரே
மீச்வரி கேட்க லுற்ரு ள்.

38. ஜாதகருடைய மறுஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர், காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் க்ஷத்திரிய குலத்தில் ஆண் குழந்தையாய்ப் போய்ப் பிறந்து அதிக நிலங்களை உடையவராகியும் நல்ல குதிரை வண்டியை உடையவராகியும் வாழ்வார் என்று சொல்லுகின்றோம். பார்வதியம்மை கேட்கின்றார்.

39. இச்சென்மந் தன்னி லேதா
னிவனென்ன புண்ணியஞ் செய்வான்
மிச்சமாய்ச் சொல்லு மென்ன
விளம்புவார் முனிவர் தாமும்
அச்சுதன் தங்கை யாளே
யவனுமே யிச்சென் மத்தில்
.....ஜன் மில்லா தாயுந்
துறவிகட் கன்ன மீவன்.

39. இந்த ஜன்மத்தில் ஜாதகர் என்ன புண்ணியங்களைச் செய்தார் என்பதைச் சொல்லுவீர் என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்றார். மகா விஷ்ணுவின் தங்கையாகிய பார்வதியம்மையே! ஜாதகர் பரதேசிகளுக்குச் சாப்பாட்டைப் போட்டுக் கொண்டிருப்பார்.

40. தேவதாப் பணியுஞ் செய்வன்
சிறுத்தவர்க் குதவி செய்தும்
மேவியே விருப்ப தாலே
விளம்பிலேஞ் சத்திரியச் சேயாய்
மேவிய குடும்பச் சேதி
விளம்புவோங் கேளுந் தாயே
ஆவலாய் சித்திர வீடு
வவனுமே செய்வா னென்றோம்.

40. ஜாதகர் தெய்வங்களுக்கு வேலையைச் செய்து கொண்டிருப்பார். ஏழைகளுக்கு உபகாரத்தைச் செய்வார். இவ்விதமாக இருப்பதால் மறு ஜன்மத்தில் க்ஷத்திரியராகப் பிறப்பார் என்று சொன்னோம். ஜாதகருடைய குடும்ப விஷயத்தைச் சொல்லுகின்றோம். எங்கள் தாயாராகிய பார்வதியம்மையே! கேட்பீராக. இவர் ஆசையுடன் சித்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு அழகிய வீட்டைக் கட்டுவார் என்று சொல்லுகின்றோம்.

41. எந்தக்கா லத்தி லேதா னிவன்சித்திர வீடு செய்வான்
இந்தவார் மன்ன னுக்கு விருவத்தி யேழாண் டின்மேல்
சொந்தமாய் வீடு செய்வன் சுகமான குடும்பி யாவன்
முந்திய பூமி யாலே முயற்சியால் லாப மெய்தும்.

41. ஜாதகர் எந்தக் காலத்தில் இந்தச் சித்திர வீட்டைக் கட்டுவார் என்று கேட்கவே, முனிவர் பதில் சொல்லுகின்றார். ஜாதகர் தன்னுடைய இருபத்தேழாவது வயதுக்கு மேலே சொந்தமாக வீட்டைக் கட்டுவார். சௌக்கியமுள்ள குடும்பஸ்தராவார். முன்னோர்களுடைய சிறந்த நிலங்களிலும் தன்னுடைய முயற்சியாலும் லாபங் கிடைக்கும்.

42. ஐயமுனி யிதனைக் கேட்டு செப்புவார் கௌசி கர்க்கு
தயவுட னிளைய தாய்க்கு சந்ததி யொன்றே யென்றீர்
நயமுட னவன்தன் சேதி நாட்டுவீர் விவர மாகப்
பயமிலா சொல்லு கின்றேன் பார்வதி கேட்டி டாயே.

42. ஐய முனிவர் இதனைக் கேட்டுக் கௌசிக முனிவருக்குச் சொல்லுகின்றார். நீர் இளைய தாயாருக்கு ஆண் குழந்தை ஒன்றே என்று சொன்னீர். அந்தப் பிள்ளையினுடைய விஷயத்தை விவரமாகச் சொல்லுவீர் என்று கேட்டார். பார்வதியம்மையே! நான் பயப்படாமல் சொல்லுகின்றேன்.

குறிப்பு :— இதற்கு மேலே இந்தப் பாகத்தில் பாடல் கிடையாது. ஒரு சமயம் இந்தப் பிள்ளையினுடைய விஷயத்தை இரண்டாவது பாகத்தில் சொல்லுவார்போலத் தோற்றுகிறது.

ஜாதகம் 140

ஜனனகால கிரகநிலை

1. [1]பிறைபுதன் [2]பானு [3]காரி [4]புலியினில் [5]புகருங் கன்னி
[6]தரைமகன் கேது [7]தேளில் [8]சிகண்டியு [9]மான தாக
[10]அரவுமே [11]நந்தி யாக வணுகிய சிம்மஞ் ஜன்மம்
உரைகுவீர் பலனை யென்று வுத்தமி கேட்கும் போது ;

1. சந்திரனும் புதனும் சூரியனும் சனியும் சிம்மத்திலும், சுக்கிரன் கன்னியிலும், அங்காரகனும் கேதுவும் விருச்சிகத்திலும், குரு மகரத்திலும், இராகு ரிஷபத்திலும், ஜன்ம லக்கினம் சிம்மமாகவும் இருந்தால் பலாபலன்களைச் சொல்லுவீர் என்று பார்வதியம்மையார் கேட்கும்பொழுது,

கிரகநிலை

		ராகு	
குரு	இராசி சக்கரம்		லக். சந். புதன் சூரியன் சனி
	அங்காரகன் கேது		சுக்கிரன்

மகம் 2 ஆம் பாதம், கேது தசை வரு 4-3-0.

குறிப்பு :—இந்த ராசிச் சக்கர அமைப்பிற்குப் பின்வரும் அம்சைச் சக்கர கிரகநிலை பொருத்த முடையதாகும் :—மேஷத்தில் சூரியனும், ரிஷபத்தில் சந்திரனும் குருவும், சுக்கிரனும், சிம்மத்தில் சனியும் கன்னியில் புதனும் இராகுவும், மகரத்தில் அங்காரகனும் மீனத்தில் கேதுவும் ஆகும். சந்திரனும் சனியும் அஸ்தமனம் அடைந்திருக்கின்றார்கள்.

---

1. சந்திரன்
2. சூரியன்
3. சனி
4. சிம்மம்
5. சுக்கிரன்
6. அங்காரகன்
7. விருச்சிகம்
8. குரு
9. மகரம்
10. இராகு
11. ரிஷபம்

ஜனன நகரச் சிறப்பு

2. அத்திரி முனிவர் சொல்வா ராணது ஜனன மாவன்
விதத்தத னில்லஞ் சொல்வேன் மேல்வாசல் வடதென் வீதி
சித்தசன் தனையெ ரித்த தேவனுங் கீழ்ப்பால் பாழாம்
அத்தியின் கோஷ்டந் தென்கீ ழாதியில் மேல்பா லாமே.

2. அத்திரி மகரிஷியானவர் பதில் சொல்லுகின்ரூர். பிறந்த குழந்தை ஆண் குழந்தை ஆகும். பிறந்த வீட்டைப் பற்றிச் சொல்லு கின்றேன். இது வடக்குத் தெற்குத் தெருவில் மேற்கில் வாயிற்காலை உடையதாகும். மன்மதனை எரித்த சிவபெருமானுடைய பாழடைந்த கோயில் கிழக்கில் இருக்கும். விநாயகக்கடவுளின் கோயில் தென் கிழக்கில் இருக்கும். மகாவிஷ்ணுவின் கோயில் மேற்கில் இருக்கும்.

3. அறுமுக னருகில் தங்கு மறுபட்ட மாரி நிற்கும்
பெருகிய வூரே யாகும் பேசுவோம் பலதே வாசந்
திருமக னிரண்டாஞ் ஜன்மஞ் செங்குந்த வர்க்க மாவன்
உரைக்கிறேங் குடும்பச் சேதி வுத்தமி கேட்டி டாயே.

3. ஆறுமுகக் கடவுளின் கோயில் சமீபத்தில் இருக்கும். தலை யறுபட்ட மாரியம்மன்கோயில் கூட இருக்கும். பிறந்த ஊர் ஒரு பெரிய ஊராகும். இந்த ஊரில் அநேக தேவதைகளும் தேசத்தார்களும் வாசஞ் செய்வார்கள். ஜாதகர் செங்குந்தர் குலத்தில் இரண்டாவது குழந்தையாகப் பிறப்பார். இவருடைய குடும்ப விஷயத்தைச் சொல்லு கின்ரேம். பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனரின் சகோதரர்கள் (சகோதரபாவம்)

4. தந்தையின் துணையாண் நஷ்டஞ்
சத்தியு மொருத்தி தீர்க்கம்
எந்தக்கா ரணத்தி லலே
யிவன்துணை யாண்பால் நஷ்டம்
மந்திரி யாறில் தங்க
வறைந்தன மந்தச் சங்கை
இந்தவன் தந்தை சேதி
யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகருடைய தகப்பனருக்குச் சகோதரன் இறந்து விடுவார். ஒரு சகோதரி நீண்ட ஆயுளை உடையவளாவள் எந்தக் காரணத்தி தினால் இவருக்குச் சகோதரன் இறந்து விடுவார் என்று சொன்னீர் என்று கேட்கவே அத்திரி மகரிஷி பதில் சொல்லுகின்ரூர். மந்திரி என்ற குரு ஆரூவது வீட்டில் இருப்பதால் இவ்விதமான தோஷத் தைச் சொன்னேம். ஜாதகருடைய தகப்பனரின் விஷயங்களை இனி மேல் சொல்லுகின்ரேம்.

ஜாதகருடைய தகப்பனாரது குணாதிசயங்கள்

5. மாநிறஞ் சமதே கத்தோன் மருமமில் லாதா னவன்
தேன்மொழி கூறுவா னவன் தீமில் லாதா னவன்
ஊனமில் லாத தேக னுண்மையை வெளிக்காட் டாதான்
மானிலம் கொஞ்ச முண்டு வடிவுமுக முடைய னவன்.

5 ஜாதகருடைய தகப்பனார் மாநிறமானவர், நடுத்தரமான தேகத்தை யுடையவர். இரகசியத்தை உடையவரல்லர். இனிமையான வார்த்தைகளைச் சொல்லுபவராவர். தைரியமில்லாதவராவர். இவர் யாதொரு அவயவக்குறைவும் இல்லாத தேகத்தை உடையவராவர். உண்மையை வெளியே காண்பித்துக் கொள்ளமாட்டார். இவர் சிறிது நிலத்தை உடையவராவர். அழகான முகத்தை யுடையவராவர்.

6. குலத்தொழில் புரிவா னவன்
கொடுமையை யெவர்க்கு மெண்ணன்
தலமது செய்வா னவன்
சண்முகன் பத்தி பூண்பன்
பலருக்கு நல்லோ னவன்
பாரபட் சங்கள் பேசான்
நிலையதைக் காப்பா னவன்
நீத்தோர்கள் நேசங் கொள்வன்.

6. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய குலத்துத் தொழிலைச் செய்வார். இவர் யாருக்கும் கெடுதியை நினைக்க மாட்டார். இவர் வீட்டைக் கட்டுவார். ஆறுமுகக் கடவுளின்மேல் அன்புடையவர். இவர் அநேகருக்கு நல்லவராக விருப்பார். இவர் ஒரு தலையாகப் பேசமாட்டார். இவர் தன்னுடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக் கொள்ளுவார். பரதேசிகளிடத்தில் சினேகஞ் செய்வார்.

ஜாதகருடைய தகப்பனாரது முன்ஜன்மம்

7. முன்ஜன்மம் பெருமுக்கல் தன்னி
லுதித்தனள் ரெட்டி வம்சம்
பொன்பூமி யுடைய னாகி
புகழான குடும்பி யாகி
அன்னவன் வாழு நாளி
லணுகின வினையைக் கேண்மோ
தன்துணை மோசஞ் செய்தான்
சார்ந்தது வதுவோர் தோஷம்.

7. ஜாதகருடைய தகப்பனார் தன்னுடைய முன் ஜன்மத்தில் பெருமுக்கல் கிராமத்தில் ரெட்டியாருடைய குலத்திற் பிறந்தார். இவர்

தனம் நிலம் இவைகளை உடையவராகியும் மேன்மையான குடும்பி யாகியும் வாழ்கின்ற காலத்தில் இவருக்குச் சம்பவித்த பாவத்தைச் சொல்லுகின்றேன், கேட்பீராக. இவர் தன்னுடைய சகோதரரை ஏமாற்றிவிட்டார். இதனால் இவருக்கு ஒரு தோஷம் ஏற்பட்டது.

8. முதல்குலத் தோர்க ளுக்கு
மொழிந்தனன் கட்டு வார்த்தை
அதனலே யவர்க்கு வப்போ
வரும்பொருள் நஷ்ட மாக
சதியுள மனத்த னாகி
சாற்றுவார் சாபந் தானும்
வதிபன்பின் ஜன்மந் தன்னி
லண்ணன்தம் பிகளு மின்றி ;

8. ஜாதகருடைய தகப்பனார் முதல்குலத்தோராகிய ஒரு பிராமணருக்குப் புனைந்த வார்த்தைகளையும் பொய்யான வார்த்தைகளையும் சொன்னார். இதனால் இவருக்கு அருமையான சொத்துக்களுக்கு நஷ்டம் உண்டாயிற்று. இவர் துன்பமடைந்த மனத்தை உடையவராகி இந்தத் தகப்பனாருக்குச் சாபத்தைக் கொடுத்தார். "நீ உன்னுடைய மறுஜன்மத்தில் அண்ணன் தம்பிகள் இல்லாமல்,

9. தனியனாய் வாழ்வா யென்ன சார்ந்தது வந்தச் சாபம்
இதுவின்றி வேறு காண னிவனுமே யந்தி யத்தில்
கனமிலா குடும்பி யாகி காலன்தன் பதிக்குச் சென்று
புனிதனும் வரையப் பட்டு பிறந்தவ னென்று
[சொல்வோம்.

9. தனியாக விருந்து வாழக்கடவது" என்று இந்தப் பிராமணர் ஜாதகருடைய தகப்பனாரைப் பார்த்துச் சொல்லவே இந்தச் சாபம் இந்தத் தகப்பனாரை வந்து அடைந்தது. இவ்விரண்டு தோஷங்கள் தவிர வேறே யாதொரு தோஷங்களையும் இவர் அடையவில்லை. இவர் தன் முன்ஜன்மத்தின் கடைசி காலத்தில் ஒரு மேன்மை இல்லாத குடும்பஸ்தராகவிருந்து இறந்து எமபட்டணத்திற்குப் போய்ப் பிரம தேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார் என்று சொல்லுகின்றோம்.

10. ஆகையால் முன்னூழ்த் தோஷ
மணுகிடு மிச்சென் மத்தில்
பாகமா யாணும் நஷ்டம்
பகரமாம் குடும்ப மில்லான்

தோகையு மவ்வாறு தீர்க்கஞ்
சொல்லிய குணத்தா னுக்கு
நாகரீ கங்க ளுள்ள
நாயக னுதிப்பா னுவன்.

10. ஆகையால் முன்ஜன்மத்திய தோஷங்கள் இந்த ஜன்மத்தில் ஜாதகருடைய தகப்பனுருக்கு வந்து சம்பவிக்கும். இவருக்குச் சகோதரர்கள் இறந்துவிடுவார்கள். இவர் பிரகாசமான மேன்மையான குடும்பத்தை யுடையவரல்லர். ஒரு சகோதரிதான் இருப்பாள். இது வரையிலும் சொல்லப்பட்ட குணகுணங்களையுடைய தகப்பனுருக்கு இந்த நாகரிகமுடைய ஜாதகர் பிறந்தவராவர்.

ஜாதகருடைய குணதிசயங்கள்

11. பாலக னிறங்கு ணத்தைப்
பகருவோ மிருசி வப்பன்
சீலம்போல் வெளிம யக்கன்
சீக்கிர கோபஞ் சாந்தம்
ஞாலங்கள் விருத்தி செய்வன்
நடைநன்மை நல்லோர் நேயன்
காலத்தை யறிந்து வாழ்வன்
கலைத்தொழில் செய்வா னுவன்.

11. ஜாதகருடைய நிறம் குணம் ஆகிய இவைகளைச் சொல்லுகின்றோம். இவர் மாநிறமானவர். இவர் நல்லொழுக்கத்தை உடைய வரைப்போல நடித்துக்கொண்டு பிறரை மயக்கத் தக்கவராவர். இவருக்குச் சீக்கிரத்தில் கோபம் உண்டாகி அது உடனே தணிந்துவிடும். இவர் நிலங்களை விருத்தியாக்குவார். இவர் நல்ல நடத்தையை உடையவர். நல்லவர்களுடைய சிநேகிதத்தை உடையவர். இவர் காலத்தின் போக்கைத் தெரிந்துகொண்டு அதற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ளுவார். இவர் வஸ்திரத் தொழிலைச் செய்வார்.

12. சல்லியப் பாதை யேற்பன் தந்தைக்கு மேலாய் வாழ்வன்
நல்லவன் நல்ல வர்க்கு லண்டர்க்கு மிண்ட னுவன்
தல்லியால் சுகமு மேற்பன் சேத்திர மிரண்டு செய்வன்
வல்லியும் வந்த பின்பு வளர்பிறை போலே யோகம்.

12. ஜாதகர் கடனால் உபத்திரவத்தை அடைவார். இவர் தன்னுடைய தகப்பனாரது அந்தஸ்திற்கு மேலான அந்தஸ்திலிருந்து வாழ்வார். இவர் நல்லவர்களுக்கு நல்லவராக விருப்பார். மூரடர்களுக்கு வலிவான எதிரியாவர். இவர் தன் தாயாரால் சௌக்கியத்தை அடைவார். இரண்டு வீடுகளைக் கட்டுவார். இவருக்கு மனைவி

வந்தபிறகு யோகம் வளர்பிறைச் சந்திரனைப்போல நாளுக்குநாள் அதிகப்படும்.

13. வித்தையு மூடைய னவன்
விவேகியா மெவர்க்கும் நல்லோன்
உத்தம குணத்த னவன்
ஓராறு முகத்தோன் பத்தி
வெற்றிச்சொல் லுடைய னவன்
வீண்பழி யேற்கா னவன்
சத்தியங் கூறு னவன்
சந்தேக மனத்த னவன்.

13. ஜாதகர் கல்வியை உடையவராவர். இவர் புத்திசாலியாவர். எல்லோருக்கும் நல்லவராவர். இவர் நல்ல குணத்தை யுடையவராவர். ஆறுமுகக் கடவுளின்பேரில் அன்பும் ஆசையும் உடையவராவர். இவர் சொல்லுகின்ற வார்த்தைகள் மேன்மை யுடையனவாக விருக்கும். இவர் வீணாக அபவாதத்தையும் நிந்தையையும் அடையமாட்டார். இவர் சத்தியஞ் செய்யமாட்டார். சந்தேகத்தையுடைய மனத்தை உடையவராவர்.

14. உண்டியுஞ் சுகமாய்க் கொள்வ னுறுதியில் லாத நெஞ்சம்
தண்டமிழ் நுணுக்கந் தேர்வன் தையலர் வெற்றி [கொள்வன்
துண்டமாய்க் கூறு னவன் சோம்பலுங் கொஞ்ச முண்டு
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்.

14. ஜாதகர் நல்ல உணவைச் சாப்பிட்டுச் சுகத்தை அனுபவிப்பார். இவர் நிலையில்லாத மனத்தை யுடையவராவர். இனிய தமிழின் நுட்பத்தை அறிந்தவராவர். ஸ்திரீகளைத் தன்வசமாக்கிக்கொள்வார். இவர் கண்டிப்பாயும் கடினமாகவும் பேசமாட்டார். இவர் கொஞ்சம் சோம்பல் குணத்தை உடையவர். பழைய காலத்திய நிலங்களை விருத்தியாக்குவார்.

ஜாதகருடைய சகோதரங்களும் (சகோதரபாவமும்) விவாக காலமும்

15. தன்துணை யாண்பா லொன்று
சத்திமா ரிருவ ராகும்
அன்னவர் சேதி பின்பா
லறிவிப்போந் தாயே யாங்கள்
மன்னவன் மணத்தின் கால
மறைகிறே மிருப தாண்டில்
கன்னிகை வடமேல் நேருங்,
கழறுவோ மவள்கு ணத்தை.

15. ஜாதகருக்கு ஒரு சகோதரனும் இரண்டு சகோதரிகளும் உண்டு. இவர்களுடைய விஷயங்களைப் பின்னால் நாங்கள் சொல்லுகின்றோம்; பார்வதியம்மையே! ஜாதகருடைய விவாக காலத்தைச் சொல்லுகின்றோம். இவருக்கு இருபதாவது வயதில் வடமேற்குத் திக்கிலிருந்து மனைவி வந்து சம்பவிப்பாள். இவளுடைய குணத்தைச் சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மனைவியின் குணாதிசயங்கள்

16. மாந்தளிர் மேனி யாவள்
வர்க்கத்தைக் காப்பா ளாவள்
கூர்ந்துமே வார்த்தை சொல்வள்
குலமதிப் படைய வாழ்வள்
சோர்ந்தோர்க்குத் தாக மீவள்
சீலியாம் விரதமு மேற்பள்
காந்தம்போல் புத்தி யுண்டு
கணவன்தன் மனத்துக் கேத்தோள்.

16. ஜாதகருடைய மனைவி மாந்துளிரின் நிறமாகிய ஒருவித சிவப்பு நிறத்தை யுடையவளாவள். தன்னுடைய வார்த்தைகளைக் காப்பாற்றுவாள். இவள் கடினமான வார்த்தைகளைச் சொல்லுவாள். இவளுடைய பந்துக்கள் இவளை மதிக்கத்தகுந்த அந்தஸ்திலிருந்து வாழ்வாள். இவள் இளைத்துக் களைத்துப்போனவர்களுக்குத் தாகம் கொடுப்பாள். நல்லொழுக்கமுடையவள். விரதங்களை அனுஷ்டிப்பாள். இவள் காந்தத்தைப்போல வலிக்கின்ற கிரகிக்கின்ற புத்தியை உடைய வள். தன்னுடைய புருஷனுடைய மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருப்பாள்.

17. அன்னம்போல் வடிவு மொக்கு மடாவடி கூரு ளாவள்
அன்னியர் குற்றங் கூரு ளறமதி லிச்சை யுண்டு
அன்னமு மன்பா யீவ ளடிசிலுக் கினிய ளாவள்
அன்னவள் வந்த பின்பு வாளனுக் கதிக யோகம்.

17. ஜாதகருடைய மனைவி அன்னத்தைப்போல அழகான தேகத்தை யுடையவள். மூரட்டுத்தனமாகவும் அறிவில்லாமலும் பேச மாட்டாள். பிறர்பேரில் குற்றத்தைச் சொல்லமாட்டாள். தர்மத்தில் பிரியமுள்ளவள். இவர் பிறருக்குச் சாப்பாட்டைப் பிரியமுடன் போடுவாள். இனிமையாகச் சமையல் செய்வாள். இவள் புருஷனிடம் போய்ச் சேர்ந்த பிறகு புருஷனுக்கு அதிக யோகம் ஏற்படும்.

18. மங்கையுந் தீர்க்க ஜீவி மறித்துரை யதிகங் கூறுள்
இங்கிவை யத்திரி கூற யியம்புவார் பராசர் தாமும்
நங்கையு மிருவ ராக நல்கிடும் பால னுக்குச்
சங்கையைச் சொல்லு மென்ன சனியவ னேழோ ஞகி,

18. ஜாதகருடைய மனைவி நீண்ட ஆயுள உடையவள். இவள் தடுத்து அதிகமாகப் பேசமாட்டாள். இவ்விதமாக அத்திரிமுனிவர் சொல்லவே பராசரமுனிவர் தடுத்துச் சொல்லுகின்றார். ஜாதகருக்கு இரண்டு மனைவிமார்கள் நேரிடுவார்கள் என்று பராசரர் சொல்லவே காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்க, பராசர்முனிவர் பதில் சொல்லுகின்றார். சனி ஏழிற்குடையவராகி ;

19. மதிதனைக் கூடி நிற்க மனைவியு மிரண்டா மென்றும்
வதிஷ்டருங் கூடிச் சொல்வார் மங்கல னுட்சி யாக
புதன்பானு காரி யொன்றாய் பொருந்தியே யிருப்ப தாலே
அதன்பலன் தார மொன்றே யணுகிடும் பால னுக்கு.

19. மதி என்ற சந்திரனைக் கூடி இருப்பதால் இரண்டு மனைவி மார்கள் என்று சொல்லுகின்றோம், வசிஷ்டர் இதில் கலந்துகொண்டு சொல்லுகின்றார். மங்கலன் என்ற அங்காரகன் ஆட்சியாக அஃதாவது தன்னுடைய வீட்டிலேயே இருப்பதாலும், புதனும், பானு என்ற சூரியனும், காரி என்ற சனியும் ஒன்றாய்க் கூடி இருப்பதாலும் ஜாதகருக்கு ஒரே ஒரு தாரந்தான் உண்டாகும்.

ஜாதகருடைய புத்திரபாவம்

20. வேறுதா ரங்கள் வேண்டான்
விளம்புவோம் புத்திர பாவந்
தீரமா மிருநான் காக
ஜனித்திடு மாண்பா லிரண்டு
நாரியு மிருவ ராவர்
நவின்றது நான்குந் தீர்க்கங்
கூறுவோ முதலில் நஷ்டங்
குறையதைச் சொல்லு மென்ன.

20. ஜாதகர் இன்னொரு தாரத்தைக் கோரமாட்டார். புத்திர பாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். மொத்தம் எட்டுக் குழந்தைகள் பிறப்பார்கள். இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் ஆக மொத்தம் நான்கு பேர் நீண்ட ஆயுள உடையவர்களாவார்கள். முதலில் பிறக்கின்ற குழந்தைகள் இறந்து போகும். இதற்குக் காரணத்தைச் சொல்லுவீர் என்று கேட்கவே ;

ஜாதகருடைய முன்ஜன்மம்

21. அந்தண னஞ்சோ னகி யாறினில் நீச மாக
நொந்திடு முதலில் புத்திரர் நுவலுவோ மிவன்பின்
[ஜன்மஞ்
செந்திமா மலைநாடு தன்னில் ஜனித்தனன் மறவ னாக
முந்திய குடும்பி யாகி மேதினி விருத்தி செய்து ;

21. அந்தணன் என்ற குரு ஐந்திற்குடையவராகி ஆறுவது வீட்டில் நீசமாக விருப்பதால் முதலில் பிறக்கும் குழந்தைகள் இறந்து விடும் என்று அத்திரிமகரிஷி பதில் சொன்னர். ஜாதகருடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். செந்திமாமலை நாட்டில் ஜாதகர் மறவராகப் பிறந்தார். மேன்மையான குடும்பஸ்தராகி நிலங்களைப் பயிரிட்டுத் தான்யங்களை விருத்தி செய்து கொண்டு ;

22. அறமதி லிச்சை யின்றி யந்தக னகரஞ் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பது மிந்தப் பாலன்
உரைக்கிறோ மிவனின் யோக முதித்தநாள் முதலே யாக
இருபது வாண்டு மட்டு மிடுக்கமாங் குடும்ப மென்றோம்.

22. ஜாதகர் தர்மத்தில் ஆசை இல்லாதவராகி இறந்து எம பட்டணத்திற்குப் போய் பிரமதேவனுல் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றார். இவருடைய யோகத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவர் பிறந்த நாள் முதலாக இருபது வயது வரையிலும் குடும்பத்திற்குக் கஷ்டங்கள் ஏற்படும் என்று சொல்லுகின்றோம்.

23. செலவுக ளதிக முண்டு
சஞ்சல மனம தாகும்
அலைகடல் துரும்பு நெஞ்ச
மலைச்சலாம் பால னுக்கு
உலகுள்ளோர் பகைய தாகும்
குறித்தன யாண்டுமே லாக
நிலவுபோல் செல்வ மோங்கும்
நேமியோர் மதிப்புக் கொள்ளல்.

23. குடும்பத்தில் செலவுகள் அதிகமாகும். மனக்கஷ்டங்கள் உண்டாகும். அலைகளையுடைய கடலில் அகப்பட்டுக் கொண்டு அலைகின்ற துரும்பைப்போல ஜாதகருக்கு அலைச்சல்கள் ஏற்படும். உலகிலுள்ளவர்கள் விரோதிகளாவார்கள். இந்த இருபது வயதிற்குமேலே வளர்பிறைச் சந்திரனைப்போலே செல்வம் நாளுக்குநாள் விருத்தியாகும். பூமியிலுள்ளவர்கள் இவரைக் கௌரவப்படுத்துவார்கள்.

24. தரணிகள் சேர்த்த லுண்டு
தனமது பெருக்க மாகும்
திருமாளி வேறு செய்தல்
ஜயம்செய்வ னெடுத்த வேலை
உறன்முறை மதிக்க வாழ்வன்
உடன்துணை வுதவி யாகும்
அறுமுக னருளு மோங்கு
மன்னமுங் குறைவிலா வாழ்வன்.

24. ஜாதகருக்கு நிலங்கள் வந்து சேரும். தனம் அதிகப்படும். இவர் ஒரு அழகிய மாளிகையைக் கட்டுவார். எடுத்த காரியங்களைப் பூர்த்தி செய்து ஜயத்தை அடைவார். பந்துக்கள் இவரைக் கௌரவப் படுத்தக்கூடிய நிலையிலிருந்து இவர் வாழ்வார். இவருடைய சகோதரன் இவருக்கு உதவியாக விருப்பார். ஆறுமுகக்கடவுளின் கிருபையும் கடாக்ஷமும் இவருக்கு அதிகப்படும். சாப்பாட்டிற்குக் கஷ்டப் படமாட்டார்.

ஜாதகருடைய யோகபாவம்

25. யோகமெவ் விதமாய்ச் சொன்னீ ருரைப்பீர்க ளந்தச் [சங்கை
நாகமு மிடப மாக நாலவ ஞென்பா ஞட்சி
பாகனும் பரிதி காரி பற்றிடஞ் ஜன்ம மாக
வேகமா மசுவ யோகம் வீணையோ கங்க ளொன்று.

25. ஜாதகருக்கு யோகங்களை எந்தக் காரணங்களினால் சொன்னீர், அவைகளை நீர் சொல்லுவீர் என்று கேட்க, அத்திரிமுனிவர் பதில் சொல்லுகின்றார். நாகம் என்ற இராகு ரிஷபத்தில் இருப்பதாலும், நான்கிற்கும் ஒன்பதிற்கும் உடையவரான அங்காரகன் ஆட்சி வீடு என்ற சொந்த வீடாகிய விருச்சிகத்தில் இருப்பதாலும், பாகன் என்ற புதனும் பரிதி என்ற சூரியனும் காரி என்ற சனியும்கூடி லக்கினத்திலிருப்பதாலும் அசுவயோகம் என்ற ஒருவித யோகமும், வீணையோகம் என்ற இன்னொருவித யோகமும் ஏற்பட்டிருக்கின்றன.

26. இருவகை யோகத் தாலே
விப்பால னுக்குச் சொன்னேங்
தரையினுல் பூர்வ பொன்னுஞ்
சார்ந்திடும் பரிதிக் காலம்
நிறையவே குடும்பி யாவன்
நேமியோர்க் குதவி செய்வன்
கரிமத வாணைப் பெற்ற
காதலி கேட்டி டாயே.

26. இங்குச் சொல்லப்பட்ட இரண்டுவித யோகங்களினுல் ஜாத ருக்கு யோகத்தைச் சொன்னேம். இவருக்குப் பரிதி என்ற சூரிய னுடைய தசையில் பூமியிலிருந்து பழைய காலத்துப் பொன் கிடைக்கும் அஃதாவது நிட்சேபம் என்ற புதையல் கிடைக்கும். இவர் ஒரு பெரிய குடும்பஸ்தராவர். பூமியிலுள்ளவர்களுக்கு உப காரத்தைச் செய்வார். கறுப்பு மதயானை முகத்தையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தாயாரது குணதிசயங்கள்

27. மாதரு குணத்தைச் சொல்வேன்
மாந்தளிர் மேனி யாகும்
ஒதுவாள் சுகமாய் வார்த்தை
வுரகன்போல் கோபங் கொஞ்சஞ்
சீதள குணமுங் கொஞ்சஞ்
சிறுத்தோருக் குதவி செய்வள்
சூதிலாள் சொல்பிச காளாம்
தோழன்தன் மனத்துக் கேத்தோள்.

27. ஜாதகருடைய தாயாரது குணதிசயங்களைச் சொல்லுகின் றேன். இவள் மாந்துளிரின் நிறமாகிய ஒருவிதமான சிவப்பு நிறத்தை யுடையவளாவள். இவள் இனிமையான வார்த்தைகளைச் சொல்லு வாள். பாம்பிற்குக் கோபம் வருவதைப்போல இவளுக்குக் கொஞ்சம் கோபம் உண்டாகும். இவள் சிறிது சீதளமான குணத்தையுடையவ ளாவள். இவள் ஏழைகளுக்கு உபகாரத்தைச் செய்வாள். இவள் கள்ளம் கபடு வஞ்சனை ஆகிய இவைகளை உடையவளல்லள். தன் வார்த்தைகளைத் தவறிடாமல் நிறைவேற்றுவாள். தன்னுடைய புருஷனது மனத்திற்குத் தகுந்தாற்போல ஒற்றுமையாக விருப்பாள்.

28. அவசர மனமுங் கொஞ்சம்
அஞ்சின வார்த்தை கூறுள்
தவசிக ளுறவு கொள்ளாள்
சாதமு மன்பா யீவள்
நவனியில் துணையா ணென்று
நவிலுவோம் பெருமை யோளு
முவமையாய்ப் பேசு வாளாம்
உத்தமி தீர்க்க ஜீவி.

28. ஜாதகருடைய தாயார் கொஞ்சம் அவசரமான மனத்தை யுடையவள். பயப்படுத்தக்கதும் கடினமுமான வார்த்தைகளைச் சொல்லமாட்டாள். பரதேசிகள் முனிவர்கள் ஆகிய இவர்களுடன்

சிநேகஞ் செய்து கொள்ளமாட்டாள். இவள் சாப்பாட்டைப் பிரியத்துடன் போடுவாள். இவளுக்கு ஒரு சகோதரன் உண்டு. இவர் மேன்மையை உடையவராவர். தாயார் உபமானங்களுடனும் உபமேயங்களுடனும் அலங்காரமாகப் பேசுபவளாவள். இவள் நீண்ட ஆயுளை உடையவளாவள்.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மம்

29. முன்ஜன்மம் புதுவை தன்னி
லுதித்தனள் வைசியச் சேயாய்ப்
பொன்பணி யுடையா ளாகிப்
பூவையும் வாழ்ந்து மேதான்
முன்னோர்க்குத் தொண்டு பூண்டு
மேவினுள் கால நாடு
பொன்னவன் வரையப் பட்டுப்
பிறந்தவ ளென்று சொல்வோம்.

29. ஜாதகருடைய தாயார் முன்ஜன்மத்தில் புதுவை என்ற புதுச்சேரியில் வைசியருடைய குலத்தில் பெண் குழந்தையாகப் பிறந்து தனம் ஆபரணங்கள் ஆகிய இவைகளை உடையவளாகி வாழ்ந்து பெரியோர்களுக்கு வேலையைச் செய்துகொண்டு பிறகு இறந்து எமபட்டணத்திற்குப் போனாள். பிரமதேவனால் பிரமலிபியுடன் எழுதப்பட்டு இந்த ஜன்மத்தில் வந்து பிறந்திருக்கின்றாள் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய தாயாரது முன்ஜன்மமும் மரணகாலமும்

30. மறுஜன்மம் வள்ளூ ருத்திர மருவிய சிறுவூர் தன்னில்
உறைகுவாள் சைவச் சேயா யுடுபதி தசையி லேதான்
மருவுவாள் கால நாடு மாரனுக் கையேழா மாண்டில்
பெருவயி றோடுப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

30. ஜாதகருடைய தாயார் மறுஜன்மத்தில் வள்ளூருக்கு வடக்கில் ஒரு சிறிய கிராமத்தில் ஒரு சைவ குலத்தில் பெண் குழந்தையாகப்போய்ப் பிறப்பாள். இவள் உடுபதி என்ற சந்திர தசையில் ஜாதகருக்கு முப்பத்தைந்தாவது வயதில் இறந்து எமபட்டணத்திற்குப் போய்ச் சேருவாள். பெரிய வயிற்றையுடைய விநாயகக் கடவுளைப் பெற்றெடுத்த புண்ணியவதியாகிய பார்வதியம்மையே! கேட்பீராக.

ஜாதகருடைய தகப்பனாரது மரணகாலமும் ஜாதகரது மறுஜன்மமும்

31. புகர்தசை மதியின் புத்தி
பொலிந்திடுங் காலந் தன்னில்
தகைமையாய் நவமா மாண்டில்
தந்தைக்கு மரண மெய்தும்

உகமையா யிவன்பின் ஜன்ம
மூரைக்கிரேந் தணிகை தன்னில்
பகையிலா வைசியச் சேயாய்ப்
பிறப்பனு மென்று சொல்வோம்.

31. புகர் என்ற சுக்கிர மகாதசையில் மதி என்ற சந்திர புக்தியில் ஜாதகருக்கு ஒன்பதாவது வயதில் இவருடைய தகப்பனார் இறந்து விடுவார். ஜாதகருடைய மறு ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். இவர் தணிகை என்ற திருத்தணிகை க்ஷேத்திரத்தில் ஒரு வைசியருடைய குலத்தில் ஆண் குழந்தையாகப் போய்ப் பிறப்பார் என்று சொல்லுகின்றோம்.

ஜாதகருடைய மரணகாலமும் மறுஜன்மமும்

32. மாரனுக் கறுபா னேழில் மார்கழி மாதந் தன்னில்
கூறுவோ மூடல மேகுங் குறிக்கிரே மிவன்பின்
[ஜன்மந்
தீரமாய் விருஞ்சி தன்னில் ஜனிப்பனு மிக்கு லத்தில்
ஆறுமா முகனைப் பெற்ற வம்பிகை யாளே கேளாய்.

32. ஜாதகருக்கு அறுபத்தேழாவது வயதில் மார்கழி மாதத்தில் மரணம் நேரிட்டு இவருடைய தேகம் அழிந்து போய்விடும். இவருடைய மறுஜன்மத்தைச் சொல்லுகின்றோம். விருஞ்சிபுரத்தில் இந்த ஜன்மத்திய குலமாகிய செங்குந்தர் குலத்தில் பிறப்பார். ஆறு பெரிய முகங்களையுடைய முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! கேட்பீராக.

33. மைந்தனுஞ் ஜனிக்குங் காலை மகமது விரண்டாம் பாதம்
பிந்திய கேது யிருப்பு பேசுவோ மாண்டு நாலும்
விந்தையாய்த் திங்கள் மூன்று விளம்பிரேம் பூர்வ பாகம்
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழிகுன் றுவே.

33. ஜாதகர் பிறந்த காலத்தில் ஜன்ம நட்சத்திரம் மகம் இரண்டாவது பாதம் ஆகும். இதற்குரிய கேது மகாதசை இருப்பு நான்கு வருஷங்களும் மூன்று மாதங்களும் ஆகும். இவ்விதமாகப் பூர்வபாகத்தைச் சொல்லி முடித்து விட்டோம். முருகக்கடவுளைப் பெற்றெடுத்த பார்வதியம்மையே! நாங்கள் சொல்லிய வார்த்தைகள் பிரகாரம் பலாபலன்கள் தவறிடாமல் நடக்கும்.

ஸப்தரிஷிநாடி—சிம்மலக்னம் முற்றும்.

MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1


மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL
LIBRARY
MADRAS-1
சென்னை - 1